# REPRINTS

## தமிழாக்கம்

தொகுதி 5


**5/6**

Bible Students

*REPRINTS of the ORIGINAL WATCHTOWER*
*and Herald of Christ's Presence*

# மறுபதிப்புகள்

2018 டிசம்பர் வரை தமிழாக்கம்



Charles Taze Russell

1852 - 1916

# பொருளடக்கம் [INDEX]

## Reprints தமிழாக்கம் 2018 வரை


| S.No. | Reprints .No. | No. Pages | செய்தியின் தலைப்பு | Page No. |
|---|---|---|---|---|
| **வருடம் 1879 #R 03 முதல் R 62 வரை** | | | | |
| 01. | R 09 [Page -3] | 1 | சிங்காசனத்தில் அமர்த்தி விட்டார் [ Poem] He seats Her on Throne | 1 |
| 02. | R 13 ஜீலை 1879 | 3 | கிறிஸ்துவின் இரத்தம் | 2 |
| 03. | R 56 [Page-3] | 1 | ஓர் அழகுமிகு வஸ்திரம் | 5 |
| 04. | R 57[Page-3] | 4 | யோசேப்பு மற்றும் கிறிஸ்து | 6 |
| **வருடம் 1880 #R 63 முதல் R 173 வரை** | | | | |
| 05. | R 65 [Page-3] | 2 | [ Poem]உலத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்குமிகபரிச்சயமானவர். | 10 |
| 06. | R74 [Page-3] | 1 | [ Poem]சிற்பாசாரி | 12 |
| 07. | R 81 | 1 | இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டும் | 13 |
| 08. | R 84 [Page -5] | 2 | போஜன பலி | 14 |
| 09. | R 94 ஏப்ரல் 1880 | 2 | நம்முடைய பஸ்காவாகியகிறிஸ்து | 16 |
| 10. | R 114 [Page-3] | 1 | நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போகும் | 18 |
| 11 | R 125 [Page-3] | 1 | என்னுடைய தியாக பலி | 19 |
| 12 | R 144 [Page-3] | 1 | கர்த்தருடைய பர்வதம் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1881#R 175 முதல்R 310 வரை** | | | | |
| 13. | R 208<br>ஏப்ரல் 1881 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 21 |
| 14. | R 222<br>[Page -3] | 1 | வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் | 24 |
| 15. | R 225<br>மே 1881 | 2 | நம்முடைய பஸ்கா | 25 |
| 16. | R 230<br>[Page -3 &15] | 1 | தேவன் அறிவார், நானறியேனே | 27 |
| 17. | R 239<br>[Page-3] | 1 | அவரது மேலான நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் | 28 |
| 18. | R 241 | 1 | (தெரி. பத்திகள்) யார் பிரசங்கிக்கவேண்டும்? | 29 |
| 18A | R 295 | 5 | எக்ளீஷியா | 30 |
| **வருடம் 1882#R 311முதல் R 424 வரை** | | | | |
| 19. | R 325மார்ச் 1882 | 1 | பஸ்கா | 35 |
| 20. | R 348<br>[Page 3] | 1 | [Poem] முழு தத்தம் | 36 |
| 21. | R 390<br>[Page -5] | | [Poem] கர்த்தருக்காய் காத்திருப்பாய் | 37 |
| **வருடம் 1883 #R 425முதல் R 568 வரை** | | | | |
| 22. | R 427<br>[Page-3] | 1 | உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. | 38 |
| 23. | R 440<br>[Page-3] | 1 | ஓர் இலவச மீட்பு | 39 |
| 24. | R 465<br>ஏப்ரல் 1883 | 6 | பஸ்கா | 40 |
| 25. | R 485மே 1883 | 3 | பதிலாள் தொடர்புடையகேள்விகள் | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | R 490 [Page-3] | 1 | கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே. | 49 |
| 27. | R 509 ஜீலை 1883 | 2 | அப்பம் மற்றும் திராட்சரசம் | 50 |
| 28. | R 516 [Page -4] | 1 | [ Poem ] வாழ்க்கை எனும் மலை | 52 |
| 29 | R 525 [Page -3] | 1 | [ Poem ] எப்படி வாழ்திடலாம்? | 53 |
| 30. | R 536 | 3 | (தெ. பத்திகள்) சபை நிர்வாகம் | 54 |
| **வருடம் 1884#R 571முதல் R 706வரை** | | | | |
| 31 | R 573 [Page 2] | 1 | நில் | 57 |
| 32. | R 610 [Page-3] | 1 | வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே சற்றே இளைப்பாறிடுவீரே | 58 |
| 33. | R 611 | 3 | மாம்சம் மற்றும் இரத்தம் | 59 |
| 34. | R 664 R 295 | 5 | எக்ளீஷியா | 62 |
| 35. | R 664 [Page -4&41] | 3 | [ Poem ] உலகத்தோடு நடக்கும் சபை | 67 |
| **வருடம் 1885#R 707முதல் R 814வரை** | | | | |
| 36. | R 721 பிப்ரவரி 1885 | 2 | நம்முடை பஸ்காவாகிய கிறிஸ்து | 70 |
| 37. | R 732 [Page 3] | 5 | சரீரம் முழுவதும் கண்ணானால் | 72 |
| 38. | R 740 ஏப்ரல் 1885 | 4 | பஸ்கா இராப்போஜனம் | 77 |
| 39. | R 741 [Page 3] | 1 | கறிஸ்துவின் சீடன் | 81 |
| 40. | R 748 | 3 | காவல் கோபுரத்தின் ஒருகண்ணோட்டம் | 82 |
| 41. | R 761 [Page 3] | 1 | உடனுக்குடனே வருகிறதே | 85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | R 776 [Page 3] | 1 | கர்த்தவே பேசும் | 86 |
| 43. | R 786 [Page 3] | 1 | அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு. பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு | 88 |
| **வருடம் 1886 #R 817 முதல் R 898வரை** | | | | |
| 44. | R 833 [Page 1] | 1 | எங்கள் அனுசரிப்பு | 89 |
| 45. | R 839 மார்ச் 1886 | 7 | கர்த்தருடைய இராப்போஜனம் | 90 |
| 46. | R 843 ஏப்ரல் 1886 | 3 | பாதம் கழுவுதல் | 97 |
| **வருடம் 1887 #R 899 முதல் R 996வரை** | | | | |
| 47. | R 899 பிப்ரவரி1887 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 100 |
| 48. | R 910 | 1 | [ Poem] முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம் | 103 |
| 49. | R 916 [Page 3] | 1 | நம் வாக்களிக்கப்பட்ட வானவில் | 104 |
| 50. | R 936 மே 1887 | 3 | நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | 105 |
| 51. | R 943 | 1 | என் தயார் யார்? என் சகோதரர் யார்? | 108 |
| **வருடம் 1888 #R997 முதல் R1088 வரை** | | | | |
| 52. | R 1004 [Page 3] | 1 | [ Poem] தந்தை உன்னையே நேசிக்கின்றாரே | 109 |
| 53 | R 1013 மார்ச் 1888 [Page 3] | 10 | என்னைநினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள | 110 |
| 54. | R 1013 [Page 3] | 1 | (தெ. பத்திகள்) யாரைச் சேவிப்பீர்கள்? | 111 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | R 1021<br>ஏப்ரல் 1888 | 1 | அவர் வருமளவும் | 121 |
| 56 | R 1034 &<br>R 1539 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 122 |
| 57. | R 1075 | 3 | (தெ.பத்திகள்) தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே - பாகம் - 1 | 123 |
| **வருடம் 1889 #R 1089 முதல் R 1170 வரை** | | | | |
| 58. | R 1100<br>மார்ச் 1889 | 6 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | 126 |
| 59. | R 1136 | 1 | (தெ.பத்திகள்) இராஜரீகஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 132 |
| 60 | R 1159 | 2 | ஓர் உருவகக் கதை | 133 |
| **வருடம் 1890 #R 1171 முதல் R 1276 வரை** | | | | |
| 61. | R 1188 | 4 | கிறிஸ்துவினால் வரும் நிந்தனை / கிறிஸ்துவைக் குறித்த வெட்கம் | 135 |
| 62. | R 1193<br>[Page 3] | 1 | [ Poem] என்னுடைய ஒரு தாலந்து | 139 |
| 63. | R 1217<br>[Page 3] | 2 | நீங்கள் தான் கிறிஸ்துவினுடையவர்கள் | 140 |
| 64. | R 1268 | 1 | இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது (இரண்டு பத்திகள்) | 142 |
| **வருடம் 1891 # R 1279 முதல் R 1346 வரை** | | | | |
| 65. | R1289<br>[R2270 &<br>R5191<br>பார்க்கவும்] | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 143 |

| | | | | |
|---|---|---|---|---|
| 66. | R 1318 | 1 | [ Poem ] கர்த்தரின் பட்டயம், கிதியோனின் பட்டயம் | 158 |
| **வருடம் 1892 # R 1347 முதல் R 1481 வரை** | | | | |
| 67. | R 1374 | 1 | [Poem] திராட்சைஆலையில் தனித்தே இருந்தே | 159 |
| 68. | R 1382 மார்ச் 1892 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 160 |
| 69. | R 1415 | 4 | நமது கர்த்தருடைய இடத்திற்கு | 163 |
| 70. | R 1431 [Page -3] | 1 | [ Poem ] வாரி இறைப்பவனே விருத்தியடைவான் | 167 |
| 71 | R 1448 [Page 3] | 2 | துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம். | 168 |
| 72. | R 1459 | 4 | ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | 170 |
| 73 | R 1475 | 2 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 174 |
| **வருடம் 1893 #R 1485முதல் R 1604 வரை** | | | | |
| 74. | R 1504 மார்ச்1893 & R 2436 பிப்ரவரி 1899 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 176 |
| 75. | R 1521 | 22 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 179 |
| 76 | R 1539 & R 1034 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 201 |
| 77 | R 1548 | 12 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும் | 202 |
| 78 | R 1559 [Page 3] | 1 | கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக | 214 |
| 79 | R 1591 & R5882 [Page 105] | 4 | உயிர்த்தெழுந்தகிறிஸ்து | 215 |

| வருடம் 1894 # R 1605 முதல் R 1747 வரை | | | | |
|---|---|---|---|---|
| 80 | R 1611 | 1 | [ Poem] புதிய தாள் வேண்டும் (புத்தாடை வேண்டும்) | 219 |
| 81. | R 1625 மார்ச்1894 | 3 | வருடாந்தர நினைவு கூருதல் இராப்போஜனம் | 220 |
| 82. | R 1635 | 2 | பொறாமை மற்றும் விரோதம் | 223 |
| 83. | R 1636 ஏப்ரல் 1894 | 3 | அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | 225 |
| 84. | R 1639 | 4 | யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | 228 |
| 85. | R 1640 | 2 | யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | 232 |
| 86. | R 1645 | 4 | யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | 234 |
| 87. | R 1646 | 3 | யோசேப்பின் இறுதி நாட்கள் | 238 |
| 88. | R 1648 | 4 | இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? | 241 |
| 89. | R 1657 ஜீன் 1894 | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 246 |
| 90. | R 1657 ஜீன் 1894 | 1 | செங்கடலின் பாதை | 248 |
| 91. | R 1681 | 2 | எகிப்துக்குத் தப்பி ஓடுதல் | 249 |
| 92. | R 1695 | 2 | இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் | 251 |
| 93 | R 1704 [Page 3] | 1 | நான் கூட அவரைத் தெரிந்துகொள்வேன் | 253 |
| 94 | R 1710 | 4 | நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே | 254 |
| 95. | R 1720 | 4 | அறிமுகக் கடிதங்கள் | 258 |
| வருடம் 1895 # R 1749 முதல் R 1907 வரை | | | | |
| 96. | R 1761 | 2 | மறுரூபம் | 262 |
| 97 | R 1786 மார்ச்1895 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 98. | R 1793 | 1 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 267 |
| 99 | R 1794 | 3 | நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | 268 |
| 100 | R 1800 ஏப்ரல்1895 | 2 | கர்த்தருடைய இராப்போஜனம் | 271 |
| 101 | R 1801 ஏப்ரல்1895 | 4 | கெத்செமனேயில் வியாகுலம் | 273 |
| 102 | R 1806 மே 1895 | 8 | உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | 277 |
| 103 | R 1809 மே 1895 | 1 | பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | 285 |
| 104 | R 1809 மே 1895 | 2 | பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | 286 |
| 105 | R 1810 | 1 | [ Poem] பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ? | 288 |
| 106 | R 1815 மே 1895 | 3 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | 289 |
| 107 | R 1832 & R 5284 ஆகஸ்ட்1913 | 11 | தேவசமாதானம் | 292 |
| 108 | R 1836 | 4 | அந்நிய அக்கினியைப் படைத்தல் | 303 |
| 109 | R 1837 | 1 | [ Poem] ஒருநாள்தான் நமக்குண்டு என்றால்? | 307 |
| 110 | R 1847 | 4 | Tract Society -இன் அறிமுகக் கடிதங்கள் | 308 |
| 111 | R 1866 | 9 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக | 312 |
| 112 | R 1883 | 2 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 321 |
| 113 | R 1889 | 23 | நல்லொழுக்கமபயும்,கிரமமாயும் | 323 |
| 114 | R 1898 டிசம்பர்1895 | 7 | கர்த்தருடையபாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | 346 |
| 115 | R 1900 | 2 | வேதாகமம ஆராய்ச்சிக்கான டாண் [Dawn] குழுக்கள் | 353 |

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | R 1900 [Page -5] | 2 | [ Poem ] விநோதனமான ஜனங்கள் | 355 |
| 117 | R 1902 | 2 | ( தெ. பத்திகள்) உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் | 357 |
| 118 | R 1904 [Page -285 & 205] | 1 | [ Poem ] தந்தாய் உந்தன் நாமம் வாழ்க | 359 |
| **வருடம் 1896 # R 1911 முதல் R 2081 வரை** | | | | |
| 119 | R 1915 | 3 | கிறிஸ்துவின் முன்னோடி | 360 |
| 120 | R 1937 | 6 | வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல் | 363 |
| 121 | R 1942 மார்ச் 1896 | 4 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | 369 |
| 122 | R 1951 | 3 | இடுக்கமானவாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள் | 373 |
| 123 | R 1956 | 3 | கைகளை வைத்தல் | 376 |
| 124 | R 1988 ஜீன் 1896 | 2 | கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | 379 |
| 125 | R 2018 [Page 3] | 1 | இயேசு என்ன செய்திடுவார்? | 381 |
| 126 | R 2068 | 5 | சாலொமோனுடைய பாவம் | 382 |
| 127 | R 2079 | 3 | (தெ. பத்திகள்) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண்.2 | 387 |
| | | | **வருடம் 1897# R 2083முதல் R 2236 வரை** | |
| 128 | R 2099 | 4 | உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம் | 390 |
| 129 | R 2115 | 4 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 394 |

| | | | | |
|---|---|---|---|---|
| 130 | R 2156 | 3 | உன் நாளைப் பொல்லாப்புக்குவிலக்கிக் காத்துக்கொள் | 398 |
| 131 | R 2168 [Page 3] | 1 | ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள் | 401 |
| 132 | R 2220 | 4 | பரிசுத்தபவுலினுடைய இருதயம் வெளியானது | 402 |
| **வருடம் 1898 # R 2238 முதல் R 2410 வரை** | | | | |
| 133 | R 2264 | 10 | (தெ. பத்திகள்) ஏதோ புதுமையென்று திகையாமல் | 406 |
| 134 | R 2270 [ Page 54] | 1 | [ Poem ] யேசுவின் பாதம் சேரும் என்ன ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்? | 416 |
| 135 | R 2270 ( R1289 & 5191 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 417 |
| 136 | R 2278 மார்ச் 1898 | 3 | பாதம் கழுவுதல் | 432 |
| 137 | R 2278 [ R 3593] | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 444 |
| 138 | R 2282 ஏப்ரல் 1898 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 447 |
| 139 | R 2291 ஏப்ரல் 1898 | 6 | நினைவுகூருதலின் ஆசரிப்பு | 449 |
| 140 | R 2291 | 3 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 455 |
| 141. | R 2297 [ Page 128] | 1 | [ Poem ] நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார் | 458 |
| 142 | R 2312 மே1898 | 4 | பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரைநினைத்துக்கொள்ளுங்கள்" | 459 |
| 143 | R 2315 ஜீன் 1898 | 6 | சிலுவையில் அறையப்பட்டவர் மீதுஒருபார்வை | 463 |
| 144 | R 2379 நவம்பர்1898 | 6 | எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | 469 |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | R 2408 | 6 | ஓவ்வொருமனுஷனையும் பிரகாசிப்பிக்கிறமெய்யானஒளி | 475 |
| **வருடம் 1899 #R 2411 முதல் R 2552** | | | | |
| 146 | R 2417 | 1 | [Poem ]முன்பொருகாலத்தில் | 481 |
| 147 | R2418 | 1 | [Poem] சீசரின் நண்பரா? - கிறிஸ்துவின் நண்பரா? | 482 |
| 148 | R 2424 | 5 | விசுவாசத்திற்கானபலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான் | 483 |
| 149 | R 2429 பிப்ரவரி1899 | 1 | நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கானதியதி | 488 |
| 150 | R 2433 | 5 | இவைகளைப் பார்க்கிலும் பெரிதானகிரியைகள் | 489 |
| 151 | R 2436 பிப்ரவரி 1899 & R 1504 மார்ச்1893 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 494 |
| 152 | R 2436 [ Page 44] | 1 | [ Poem ] புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள் | 497 |
| 153 | R 2437 | 6 | கூடாரப்பண்டிகையின் போது | 498 |
| 154 | R 2438 | 7 | மெய்யாக வேவிடுதலையாவீர்கள் | 504 |
| 155 | R 2441 | 5 | நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | 511 |
| 156 | R 2442 | 2 | [தெ. பத்திகள்]தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 516 |
| 157 | R 2447 ஏப்ரல்1899 | 5 | விலையேறப் பெற்ற நள ததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | 518 |
| 158 | R 2449 R 4163 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 523 |
| 159 | R 2449 ஏப்ரல்1889 | 6 | நான் உங்களுக்குமாதிரியைக் காண்பித்தேன் | 524 |
| 160 | R 2453 ஏப்ரல்1899 | 6 | நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | 530 |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | R 2455 ஏப்ரல்1899 | 4 | வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | 536 |
| 162 | R 2458 | 1 | [ poem] ஒரு குவளைக் குளிர்ந்த நீர் | 540 |
| 163 | R 2464 மே1899 | 8 | நான் திராட்சச்செடி - நீங்கள் கொடிகள் | 541 |
| 164 | R 2467 மே1899 | 8 | கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | 549 |
| 165 | R 2469 மே1899 | 5 | மாபெரும் பிரதானஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | 557 |
| 166 | R 2470 மே1899 | 7 | பிலாத்துவின் முன் நல்லஅறிக்கை | 562 |
| 167 | R 2473 மே1899 | 8 | அவர் அக்கிரமக்காரரில் ஒருவராகஎண்ணப்பட்டார் | 569 |
| வருடம் 1900# R 2553முதல் R 2747வரை | | | | |
| 168 | R 2555 | 7 | அந்த வார்த்தை மாம்சமாகி | 577 |
| 169 | R 2558 | 5 | இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார் | 584 |
| 170 | R 2562 | 9 | யோவான்ஸ்நானனின் பிரசங்கம் | 589 |
| 171 | R 2565 | 11 | அர்ப்பணிப்பைப் பின் தொடர்ந்தசோதனைகள் | 598 |
| 172 | R 2574 | 6 | மொண்டுகொள்ள பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே | 609 |
| 173 | R 2585 | 13 | நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு | 615 |
| 174 | R 2589 | 7 | இராஜரீகப் பிரமாணம் பொன்னானசட்டம் | 628 |
| 175 | R 2590 | 7 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 635 |
| 176 | R 2592 மார்ச் 1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 642 |
| 177 | R 2606 | 6 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| 178 | R 2620 | 5 | நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமானபோக்கு | 650 |
| 179 | R2622 மே1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 655 |
| 180 | R 2623 | 8 | அறிவு,பொறுப்புகளைஅதிகரிக்கின்றது | 657 |
| 181 | R 2625 | 5 | இரண்டு விதமான பாவிகள் | 665 |
| 182 | R 2630 [ Page 134] | 1 | [ Poem ] சில வருடம் மாத்திரமே | 670 |
| 183 | R 2635 | 4 | அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு | 671 |
| 184 | R 2646 [ Page 168 & 259] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 675 |
| 185 | R 2651 | 7 | ஜீவஅப்பம் நானே | 676 |
| 186 | R 2654 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இனக்கமுள்ளவர்களுமாயிருங்கள் | 683 |
| 187 | R 2660 | 5 | இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் | 688 |
| 188 | R 2701 | 5 | ஏற்கமறுக்கப்பட்ட இராஜ விருந்து | 693 |
| 189 | R 2706 | 6 | காணாமல் போனவர்களுக்கானதெய்வீகஅக்கறை | 698 |
| 190 | R 2715 | 7 | அநீதியுள்ளஉக்கிராணக்காரன் | 704 |
| 191 | R 2722 | 11 | கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம் | 711 |
| 192 | R 2743 டிசம்பர்1900 | 7 | நறுமணம் வீசியதைலம் | 722 |
| 193 | R 2745 டிசம்பர்1900 | 6 | ஓசன்னாவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா | 729 |

| வருடம் 1901# R 2751முதல் R 2928வரை | | | | |
|---|---|---|---|---|
| 194 | R 2757 | 7 | கிறிஸ்துவாகியகாந்தம் - நான் எல்லோரையும்இழுத்துக்கொள்ளுவேன். | 735 |
| 195 | R 2764 | 7 | அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக | 742 |
| 196 | R 2771 பிப்ரவரி 1901 | 9 | கர்த்தருடைய இராப்போஜனம் | 749 |
| 197 | R 2773 பிப்ரவரி 1901 | 7 | கெத்செமனே - விழிப்பும், ஜெபமும் | 758 |
| 198 | R 2778மார்ச் 1901 | 6 | இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | 765 |
| 199 | R 2780 மார்ச் 1901 | 6 | நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | 771 |
| 200 | R 2785 மார்ச்1901 | 6 | இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | 777 |
| 201 | R 2787 மார்ச்1901 | 8 | பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | 783 |
| 202 | R 2793 ஏப்ரல் 1901 | 2 | பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | 791 |
| 203 | R 2794 [Page 121] | 8 | மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன் | 793 |
| 204 | R 2870 | 1 | [Poem] நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள் | 800 |
| 205 | R 2880 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 801 |
| 206 | R 2885 | 5 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | 806 |
| 207 | R 2887 | 6 | ஏனெனில், தேவன் அவனோடே கூட இருந்தார் | 811 |
| 208 | R 2890 [Page 3] | 1 | விலை மதிப்பில்லா முத்து | 817 |
| 209 | R 2893 | 7 | இரக்கமுள்ள யோசேப்பு | 818 |
| 210 | R 2895 | 6 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 825 |

| | | | | |
|---|---|---|---|---|
| 211 | R 2909 | 6 | நான் உன்னோடே இருப்பேன் | 831 |
| 212 | R 2917<br>டிசம்பர் 1901 | 4 | நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார் | 837 |
| 213 | R 2923 | 1 | [ Poem ] எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய் | 841 |
| 214 | R 2924 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 842 |
| **வருடம் 1902# R 2929முதல் R 3124வரை** | | | | |
| 215 | R 2951 | 6 | உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்த சாட்சி | 843 |
| 216 | R 2986<br>[R5875] | 8 | ஜனேயாவும், தொற்காளும் | 849 |
| 217 | R 2989<br>[ 5879] | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 857 |
| 218 | R 2995 | 2 | (தெ.பத்திகள்) யுக மாற்றங்களைக் கவனித்தல் | 863 |
| 219 | R 3000 | 9 | ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல் | 865 |
| 220 | R 3004 | 1 | (தெ.பத்திகள்) ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 874 |
| 221 | R 3011 | 4 | (தெ.பத்திகள்) நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 875 |
| 222 | R 3014 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 879 |
| 223 | R 3017<br>[R4374]<br>[R5892] | 6 | எருசலேமில் கூடின ஆலோசனைச் சங்கம் | 880 |
| 224 | R 3033 | 7 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 886 |
| 225 | R 3077 | 1 | (தெ.பத்திகள்) தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 893 |
| 226 | R 3089 | 5 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 894 |
| 227 | R 3092 | 4 | அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல் | 899 |

| | | | | |
|---|---|---|---|---|
| 228 | R 3102 [Page 3] | 2 | தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், சோளா, போன்ற குணமுடையோரே | 903 |
| 229 | R 3135 | 10 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 905 |
| 230 | R 3142 | 3 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 915 |
| 231 | R 3159 & R 5935 | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 918 |
| 232 | R 3171 | 7 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 922 |
| 233 | R 3178 ஏப்ரல்1903 | 3 | நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு | 929 |
| 234 | R 3210 | 2 | (தெ.பத்திகள்) தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 932 |
| **வருடம் 1903# R 3125முதல் R 3293வரை** | | | | |
| 235 | R 3225 [Page 221] & R 5656 [Page 88] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 934 |
| 236 | R 3243 | 4 | உங்கள் நீதி | 938 |
| **வருடம் 1904# R 3294முதல் R 3478வரை** | | | | |
| 238 | R 3300 | 8 | போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது | 942 |
| 239 | R 3307 | 6 | மனுஷரைப் பிடிக்கிறவர்கள் | 950 |
| 240 | R 3325 | 7 | விலை அதிகமுள்ள பேரம் | 956 |
| 241 | R 3337 | 7 | கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் | 963 |
| 242 | R 3354 | 7 | எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள் | 970 |
| 243 | R 3363 மே1904 | 6 | கடைசி இராப்போஜனம் | 977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 244 | R 3369 மே1904 | 10 | கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | 983 |
| 245 | R 3374 | 12 | இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் | 993 |
| 246 | R 3401 | 3 | தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள் | 1005 |
| 247 | R 3431 [Page 3] | 1 | அன்பின் பிரமாணம் | 1008 |
| **வருடம் 1905 # R 3479முதல் R 3687வரை** | | | | |
| 248 | R 3484 | 6 | நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது | 1009 |
| 249 | R 3500 | 8 | இரக்கத்தின் வீடு | 1015 |
| 250 | R 3508 | 9 | கூடாரப்பண்டிகை | 1023 |
| 251 | R 3517 | 4 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 1032 |
| 252 | R 3521 [ Page 77&39] | 1 | [ Poem ] மறைக்கப்பட்ட சிலுவை | 1036 |
| 253 | R 3525 மார்ச் 1905 | 5 | நம்முடைய "பஸ்காவிகன்" நினைவுகூருதல் | 1038 |
| 254 | R 3534 ஏப்ரல் 1905 | 11 | மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | 1043 |
| 255 | R 3537 ஏப்ரல்1905 | 10 | உன்னதத்திலே ஓசன்னா | 1054 |
| 256 | R 3542 ஏப்ரல்1905 | 6 | ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | 1064 |
| 257 | R 3544 ஏப்ரல்1905 | 11 | மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | 1070 |
| 258 | R 3548 மே 1905 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1081 |
| 259 | R 3551 மே 1905 | 10 | நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | 1084 |

| | | | | |
|---|---|---|---|---|
| 260 | R 3553<br>மே 1905 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸதர் | 1094 |
| 261 | R 3556<br>[Page 3] | 1 | இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டும் | 1102 |
| 262 | R 3560<br>மே 1905 | 9 | சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | 1103 |
| 263 | R 3593<br>R2278 | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 1112 |
| 264 | R 3606 | 2 | ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும் | 1124 |
| 265 | R 3613 | 4 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 1126 |
| 266 | R 3635<br>செப்டம்பர் 1905 | 1 | யார் நினைவுகூருவது ஏற்றது? | 1130 |
| 267 | R 3638 | 2 | (தெ.பத்திகள்) நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 1131 |
| 268 | R 3655 | 4 | மகிமையின் மேல் மகிமை | 1133 |
| **வருடம் 1906# R 3693முதல் R 3912வரை** | | | | |
| 269 | R 3700 | 6 | மகிமையான அறிவிப்பு | 1137 |
| 270 | R 3702 | 5 | நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் | 1143 |
| 271 | R 3706<br>ஜனவரி 1906 | 2 | பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | 1148 |
| 272 | R 3718<br>[Page 3] | 3 | மனதிரும்பி வந்த கெட்டக் குமாரன் | 1150 |
| 273 | R 3726 | 8 | வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் | 1153 |
| 274 | R 3728 | 8 | பாவமன்னிப்பு | 1161 |
| 275 | R 3744 | 2 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 1169 |
| 276 | R 3745 | 5 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 1171 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277 | R 3746 | 8 | நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் | 1176 |
| 278 | R 3749<br>ஏப்ரல்1906 | 8 | பஸ்காவைப் பலியிட வேண்டிய | 1184 |
| 279 | R 3751 | 4 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 1192 |
| 280 | R 3752 | 9 | ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் | 1196 |
| 281 | R 3754 | 7 | இயேசுவுக்குள் உயிர்தெழுதலின் வல்லமை | 1205 |
| 282 | R 3759<br>Page [118] | 1 | [Poem] மணவாளனின் புறா | 1212 |
| 283 | R 3759<br>ஏப்ரல் 1906 | 6 | உனக்காக வேண்டிக்கொண்டேன் | 1213 |
| 284 | R 3769 | 1 | (தெ.பத்திகள்) மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 1219 |
| 285 | R 3779 | 7 | அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் | 1220 |
| 286 | R 3795 | 2 | (தெ.பத்திகள்) பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 1227 |
| 287 | R 3800 | 2 | (தெ.பத்திகள்) அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 1229 |
| 288 | R 3803 | 8 | எனக்கு பிறன் யார்? | 1231 |
| 289 | R 3820<br>[R5909] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 1239 |
| 290 | R 3826 | 5 | (தெ.பத்திகள்) ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 1243 |
| 291 | R 3831 | 6 | பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட சம்பாஷணைகள் | 1248 |
| 292 | R 3841 | 7 | தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | 1254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 293 | R 3850 செப்டம்பர் 1906 | 7 | கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | 1261 |
| 294 | R 3864 | 11 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 1268 |
| 295 | R 3867 | 8 | புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | 1279 |
| 296 | R 3877 அக்டோபர் 1906 | 7 | அவளால் இயன்றதை அவள் செய்தாள் | 1287 |
| 297 | R 3879 அக்டோபர் 1906 | 7 | என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1294 |
| 298 | R 3885 நவம்பர்1906 | 10 | பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | 1301 |
| 299 | R 3887 நவம்பர்1906 | 6 | அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | 1311 |
| 300 | R 3895 நவம்பர்1906 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | 1317 |
| 301 | R 3900 டிசம்பர்1906 | 11 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | 1325 |
| 302 | R 3906 | 1 | (தெ.பத்திகள்) பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 1336 |
| **வருடம் 1907# R 3913முதல் R 4108வரை** | | | | |
| 303 | R 3932 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் | 1337 |
| 304 | R 3938 | 1 | (தெ.பத்திகள்) பொருளாசையின் அபாயம் | 1342 |
| 305 | R 3943 | 2 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1343 |
| 306 | R 3971 | 5 | சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | 1345 |
| 307 | R 3972 | 7 | துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | 1350 |
| 308 | R 3978 | 8 | என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் | 1357 |

| | | | | |
|---|---|---|---|---|
| 309 | R 3980 | 7 | இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 1365 |
| 310 | R 4008 | 9 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 1372 |
| 311 | R 4021 [Page 203] | 1 | [Poem] உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார் | 1381 |
| 312 | R 4022 [ Page 203 & 371 ] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 1382 |
| 313 | R 4030 | 7 | அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள் | 1383 |
| 314 | R 4033 | 3 | தேவனோடே போர்ப்புரிதல் | 1390 |
| 315 | R 4034 [ Page 229] | 1 | [ Poem ] ராஜாவின் பிரசன்னத்திலுள்ளே | 1393 |
| 316 | R 4057 [ Page 281 & 375] | 1 | [ Poem ] இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே | 1394 |
| **வருடம் 1908 # R 4109முதல் R 4300வரை** | | | | |
| 317 | R 4112 | 7 | கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் | 1395 |
| 318 | R 4115 | 9 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 1402 |
| 319 | R 4121 | 5 | போதித்தல் என்றால் என்ன? (சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்) | 1411 |
| 320 | R 4124 | 9 | மறுஜென்மகாலமும் இராஜ்யமும் | 1416 |
| 321 | R 4127 பிப்ரவரி 1908 | 7 | முதலாம் மாதத்தில் பஸ்கா | 1425 |
| 322 | R 4130 | 8 | தாகத்துக்குத் தா | 1432 |
| 323 | R 4146 மார்ச்1908 | 8 | ஜீவ அப்பம் நானே | 1440 |
| 324 | R 4148 மார்ச்1908 | 8 | நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் | 1448 |
| 325 | R 4153 மார்ச்1908 | 2 | நினைவுகூருதல், ஏப்ரல் 14 | 1456 |
| 326 | R 4157 | 8 | மேய்ப்பன், வாசல், மந்தைகள் | 1458 |

| | | | | |
|---|---|---|---|---|
| 327 | R 4160 | 9 | நான் அவனை எழுப்பப்போகிறேன் | 1466 |
| 328 | R 4163 & R 2449 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 1475 |
| 329 | R 4164 மே 1908 | 9 | வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | 1476 |
| 330 | R 4167 மே 1908 | 8 | நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | 1485 |
| 331 | R 4171 | 12 | ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்? | 1493 |
| 332 | R 4180 | 1 | [ Poem ] வரவேற்பு | 1505 |
| 333 | R 4183 | 5 | (தெ.பத்திகள்) இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா? | 1506 |
| 334 | R 4197 | 3 | (தெ.பத்திகள்) ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 1511 |
| 335 | R 4203 [Page 205] | 2 | [Poem] இவள் தன்னால் இயன்றதை செய்தாள் | 1514 |
| 336 | R 4251 | 4 | சபை என்றால் என்ன? | 1516 |
| 337 | R 4262 [ Page 311] | 1 | [ Poem ] ஓய்வு நாள் தன்னின் இனிமை | 1520 |
| 338 | R 4286 [Page 157] | 5 | சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார் | 1521 |
| 339 | R 4290 [Page 363] | 8 | விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள் | 1526 |
| **வருடம் 1909 # R 4301முதல் R 4538வரை** | | | | |
| 340 | R 4312 | 3 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 1534 |
| 341 | R 4317 | 1 | [ Poem ] களிமண் | 1537 |
| 342 | R 4345 | 1 | (தெ.பத்திகள்) உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1538 |

| | | | | |
|---|---|---|---|---|
| 343 | R 4346<br>மார்ச்1909 | 2 | (தெ.பத்திகள்) ஜெபத்திற்கு விடையாக விடுதலை | 1539 |
| 344 | R 4358 | 4 | கிறிஸ்து நமது பஸ்கா | 1541 |
| 345 | R 4359 | 1 | (தெ.பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 1545 |
| 346 | R 4363<br>[ Page 393] | 1 | [ Poem ] இன்று பெயர் சபைகளில் போதிக்கப்படும் அநேக போதனைகளில் | 1546 |
| 347 | R 4374<br>[R3017]<br>[R5892] | 6 | எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம் | 1547 |
| 348 | R 4375<br>ஏப்ரல் 1909 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1553 |
| 349 | R 4380 | 3 | (தெ.பத்திகள்) நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 1556 |
| 350 | R 4384<br>மே1909 | 3 | பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | 1559 |
| 351 | R 4417 | 5 | (தெ.பத்திகள்) தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை | 1562 |
| 352 | R 4458 &<br>R5935 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 1567 |
| 353 | R 4461 | 1 | ( தெ.பத்திகள்) எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | 1576 |
| 354 | R 4472 | 1 | ( தெ.பத்திகள்) எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 1577 |
| 355 | R 4485 | 1 | [ Poem] தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே | 1578 |
| 356 | R 4501 | 8 | சண்டைக்காரராயிருந்து | 1579 |
| **வருடம் 1910 # R 4539முதல் R 4732வரை** | | | | |
| 357 | R 4556 | 3 | கலிலேயாவின் தீர்க்கத்தரிசி | 1587 |

| | | | | |
|---|---|---|---|---|
| 358 | R 4558 | 4 | உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் | 1590 |
| 359 | R 4566 | 3 | தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் | 1594 |
| 360 | R 4577 | 3 | ஏதிரிாளியானவன் மீது வல்லமை / அதிகராம் | 1597 |
| 361 | R 4587 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பகுதி | 1600 |
| 362 | R 4587 | 3 | பாவமும், வியாதியும் தொடர்புடையவகள் | 1601 |
| 363 | R 4588 | 3 | ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் | 1604 |
| 364 | R 4590<br>ஏப்ரல்1910 | 8 | நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | 1607 |
| 365 | R 4593 | 4 | பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது | 1615 |
| 366 | R 4597 | 3 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 1619 |
| 367 | R 4602 | 2 | பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம் | 1622 |
| 368 | R 4605<br>மே 1910 | 4 | இரத்தத்தினைச் சதாரணமானதாய் எண்ணுதல் | 1624 |
| 369 | R 4608 | 3 | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் | 1628 |
| 370 | R 4618 | 3 | ஆண்டவரே என்னை இரட்சியும் பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார் | 1631 |
| 371 | R 4634 | 3 | நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் | 1634 |
| 372 | R 4635 | 3 | கோதுமை மற்றும் களைகள் | 1637 |
| 373 | R 4636 | 3 | இராஜ்யத்தின் காட்சிகள் | 1640 |
| 374 | R 4637 | 4 | இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | 1643 |

| | | | | |
|---|---|---|---|---|
| 375 | R 4642 | 1 | ( தெ.பத்திகள்) ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | 1647 |
| 376 | R 4658 | 1 | [Poem] ஊசியின் காதினிலே | 1648 |
| 377 | R 4658 | 4 | ஒட்டகமும், ஊசியின் காதும் | 1652 |
| 378 | R 4668 | 2 | பெரியவன் ஊழியக்காரன் | 1653 |
| 379 | R 4678 | 3 | தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | 1655 |
| 380 | R 4686 | 3 | ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா? | 1658 |
| 381 | R 4686 | 3 | சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | 1661 |
| 382 | R 4701 | 3 | அக்கினியைக் கட்டகளையிட உமக்குச் சித்தமா? | 1664 |
| 383 | R 4703 அக்டோபர் 1910 | 3 | என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1667 |
| 384 | R 4707 நவம்பர் 1910 | 4 | இருளான கெத்செமனே வேளை | 1671 |
| 385 | R 4709 | 1 | ( தெ.பத்திகள்) அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 1675 |
| 386 | R 4710 நவம்பர் 1910 | 5 | தேவனை தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | 1676 |
| 387 | R 4711 நவம்பர் 1910 | 4 | சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | 1681 |
| 388 | R 4712 நவம்பர் 1910 | 4 | ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | 1685 |
| 389 | R 4730 | 3 | யோசபாத்தின் ஒரு தவறு | 1689 |
| **வருடம் 1911 # R 4733முதல் R 4942வரை** | | | | |
| 390 | R 4756 பிப்ரவரி 1911 | 3 | 1911 - நினைவுகூருதல் இராப்போஜனம் - 1911 | 1692 |

| | | | | |
|---|---|---|---|---|
| 391 | R 4770 | 1 | (தெ.பத்திகள்) கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 1695 |
| 392 | R 4771 | 2 | (தெ.பத்திகள்) உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 1696 |
| 393 | R 4794 [Page 104] | 3 | மாம்சத்தில் ஒரு முள் | 1698 |
| 394 | R 4794 [ Page 105] | 4 | திராட்சத் தோட்டத்தின் பாடல் | 1701 |
| 395 | R 4802 | 6 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 1705 |
| 396 | R 4809 [Page 136] | 6 | சரீரத்தை ஒடுக்குதல் / அடக்குதல் | 1711 |
| 397 | R 4821 | 4 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 1717 |
| 398 | R 4838 | 4 | உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு | 1721 |
| 399 | R 4851 | 1 | [Poem] சிலுவையில்லையேல் கிரீடமில்லையே | 1725 |
| 400 | R 4892 | 3 | இரவின் கீதங்கள் | 1726 |
| 401 | R 4895 [Page 3] | 1 | கொஞ்சம் நேரமே | 1729 |
| 402 | R 4905 | 4 | (தெ. பத்திகள்) நமது கர்த்தருடைய ஜீவ - உரிமைகள் மீதான கேள்விகள் | 1730 |
| 403 | R 4915 [Page 413] | 2 | [Poem] ஹ! ஆசிக்கிறேன் | 1734 |
| 404 | R 4917 | 6 | அன்பைக் குறித்து சுயபரிசோதனை | 1736 |
| 405 | R 4927 | 3 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 1742 |
| 406 | R 4929 | 2 | (தெ. பத்திகள்) அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும் | 1745 |
| 407 | R 4939 | 3 | இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் | 1747 |
| 408 | R 4940 | 3 | மகா பெரிய தீர்க்கத்தரிசி | 1750 |

| | | | | |
|---|---|---|---|---|
| 409 | R4942 | 3 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 1753 |
| **வருடம் 1912 # R 4955முதல் R 5152வரை** | | | | |
| 410 | R 4968 | 1 | (தெ. பத்திகள்) வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான.... | 1756 |
| 411 | R 4971 [Page 54] | 1 | [Poem] சிலவேண்டாமே, சில வேண்டுமே | 1757 |
| 412 | R 4977 | 8 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 1758 |
| 413 | R 4979 | 4 | அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் | 1766 |
| 414 | R 4984 | 6 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான தேவவாக்கிய விதி | 1770 |
| 415 | R 4994 | 4 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 1776 |
| 416 | R 5020 | 4 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 1780 |
| 417 | R 5021 | 5 | ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் | 1784 |
| 418 | R 5047 | 4 | இராஜ்யம் ஒரு பரிசு | 1789 |
| 419 | R 5050 ஜீன் 1912 | 1 | (தெ. பத்திகள்) புளித்த மா பற்றின உவமை | 1793 |
| 420 | R 5085 | 6 | கிறிஸ்துவினுடைய பலி | 1794 |
| 421 | R 5096 | 4 | தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல | 1800 |
| 422 | R 5103 | 4 | அவர் எல்லாவற்றையும் நன்றாயச் செய்தார் | 1804 |
| 423 | R 5111 | 4 | வானத்திலிருந்து ஓர் அடையாளம் | 1808 |
| 424 | R 5120 | 4 | மாபெரும் கேள்வி | 1812 |
| 425 | R 5122 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 1816 |
| 426 | R 5122 | 2 | (தெ. பத்திகள்)சுவாரசியமான கடிதங்கள் | 1817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 427 | R 5128 | 3 | மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள் | 1819 |
| 428 | R 5128 | 3 | எல்லாம் கூடும் | 1822 |
| 429 | R 5129 | 3 | ஆவியை அவித்துப்போடாதிருங்கள் | 1825 |
| 430 | R 5131 | 1 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 1828 |
| 431 | R 5134 | 4 | ஏழெழுபது தரம் மன்னித்தல் | 1829 |
| 432 | R 5142 | 3 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 1833 |
| 433 | R 5147 [Page 387] | 5 | எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன் | 1836 |
| **வருடம் 1913 # R 5153முதல் R 5372வரை** | | | | |
| 434 | R5158 [ Page 10] | 1 | [ Poem ] நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது | 1841 |
| 435 | R 5161 | 2 | (தெ. பத்திகள்) சுவாரசியமான சில கடிதங்கள் | 1842 |
| 436 | R 5161 | 1 | (தெ. பத்திகள்) சுவாரசியமான கேள்விகள் | 1844 |
| 437 | R 5185 | 4 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 1845 |
| 438 | R 5186 & R5809 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 1846 |
| 439 | R 5191 மார்ச் 1913 ( R1289 & R 2270 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 1851 |
| 440 | R 5195 [ Page 75] | 1 | [ Poem ] கெத்செமனே | 1866 |
| 441 | R 5195 [Page 3] | 1 | சம்பிரதாய கடமை ஜெபம் | 1867 |
| 442 | R 5208 [Page 3] | 1 | கெத்செமனே | 1868 |
| 443 | R 5214 | 1 | [Poem] கெத்செமனே | 1869 |

| | | | | |
|---|---|---|---|---|
| 444 | R 5214 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 1870 |
| 445 | R 5216 | 6 | துன்பப்பட்டவர் எனினும் தேற்றுபவர் | 1875 |
| 446 | R 5225 | 6 | விதைத்தலும் அறுத்தலும் | 1881 |
| 447 | R 5231 | 6 | பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | 1887 |
| 448 | R 5232 | 6 | யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | 1893 |
| 449 | R 5234 | 6 | பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | 1899 |
| 450 | R 5241 [Page 3] | 1 | எத்தனை காலம் தேவனே? ஏத்தனை காலமோ? | 1905 |
| 451 | R 5255 | 1 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 1906 |
| 452 | R 5272 ஜீலை 1913 | 4 | இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்து போகப்பட்டது | 1907 |
| 453 | R 5284 [Page 227] R 1832 [Page 153] | 11 | தேவசமாதானம் | 1911 |
| 454 | R 5304 | 2 | (தெ.பத்திகள்) உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 1922 |
| 455 | R 5315 | 1 | (தெ.பத்திகள்) ஒரு நல்ல மனிதனின் பாவம் | 1924 |
| 456 | R 5321 | 3 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 1925 |
| 457 | R 5323 [Page 3] | 1 | அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிட்டார். | 1928 |
| 458 | R 5326 | 1 | [Poem] இடமிருக்குது, இடமிருக்குது | 1929 |
| 459 | R 5336 | 3 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 1930 |
| 460 | R 5341 நவம்பர் 1913 | 5 | நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 1933 |

| | | | | |
|---|---|---|---|---|
| 461 | R 5341<br>(தெ.ப) | 2 | (தெ.பத்திகள்)இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது | 1938 |
| 462 | R 5342<br>நவம்பர் 1913 | 3 | நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம் | 1940 |
| 463 | R 5346 | 7 | நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் | 1943 |
| 464 | R 5350 | 2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 1950 |
| 465 | R 5358 | 3 | கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் | 1952 |
| 466 | R 5362 | 4 | எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் | 1955 |
| 467 | R 5368 | 2 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 1959 |
| 468 | R 5370<br>[Page 377] | 3 | அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் | 1961 |
| 469 | R 5370<br>[Page 377]<br>R 5371<br>[Page 378] | 3 | மார்த்தாள் மற்றும் மரியாள் | 1964 |
| **வருடம் 1914 # R 5373முதல் R 5600வரை** | | | | |
| 470 | R 5374 | 4 | காலம் சமீபித்திருக்கறிது | 1967 |
| 471 | R 5375 | 6 | உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம் | 1971 |
| 472 | R 5377<br>[Page 10] | 4 | அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி | 1977 |
| 473 | R 5377<br>[Page 11] | 2 | ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர் | 1981 |
| 474 | R 5378 | 3 | யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்? | 1983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 475 | R 5379 | 6 | ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம் | 1986 |
| 476 | R 5383 | 3 | நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம் | 1992 |
| 477 | R 5384 | 6 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 1995 |
| 478 | R 5388 | 3 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 2001 |
| 479 | R 5389 | 4 | பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! | 2004 |
| 480 | R 5390 | 4 | நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை | 2008 |
| 481 | R 5391 | 1 | லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள் | 2012 |
| 482 | R 5391 | 8 | மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 2013 |
| 483 | R 5394 | 4 | தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும் | 2021 |
| 484 | R 5396 | 4 | உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ | 2025 |
| 485 | R 5399 | 4 | உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர் | 2029 |
| 486 | R 5403 | 2 | நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல் | 2033 |
| 487 | R 5404 | 2 | தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை | 2035 |
| 488 | R 5405 | 4 | ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் | 2037 |
| 489 | R 5408 | 3 | சுவாரஸ்யமான கேள்விகள் | 2041 |
| 490 | R 5409 | 3 | (தெ.பத்திகள்) சில சுவாரசியமான கடிதங்கள் | 2044 |
| 491 | R 5420 மார்ச் 1914 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | 2047 |
| 492 | R 5421 மார்ச் 1914 | 5 | உங்களால் கூடுமா? | 2050 |

| | | | | |
|---|---|---|---|---|
| 493 | R 5425 | 4 | சீஷத்துவத்திற்கான விலை | 2055 |
| 494 | R 5444 | 6 | ஐசுவாரியவான் நரகத்திற்கும் .... ஏழை பரலோகத்திற்கும் | 2059 |
| 495 | R 5445 | 6 | நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | 2065 |
| 496 | R 5453 | 5 | ஒன்பது பேர் எங்கே? | 2071 |
| 497 | R 5455 | 5 | மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | 2076 |
| 498 | R 5472 [Page 169] | 4 | ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...... | 2081 |
| 499 | R 5473 | 5 | திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | 2084 |
| 500 | R 5474 | 2 | நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 2089 |
| 501 | R 5501 | 2 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 2091 |
| 502 | R 5510 | 5 | கலியாண விருந்து | 2093 |
| 503 | R 5517 | 1 | (தெ.பத்திகள்) நாவை அடக்குவது அவசியமாகும் | 2098 |
| 504 | R 5521 | 4 | பிரதான கற்பனைகள் | 2099 |
| 505 | R 5528 | 6 | தீமைபேசுதல் என்றால் என்ன? | 2103 |
| 506 | R 5532 [Page 269] | 1 | [Poem] சிலுவையில்லாமல் கிரீடமில்லை | 2109 |
| 507 | R 5538 செப்டம்பர் 1914 | 6 | இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | 2110 |
| 508 | R 5541 செப்டம்பர் 1914 | 5 | பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | 2116 |
| 509 | R 5550 செப்டம்பர் 1914 | 6 | ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | 2121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 510 | R 5552 செப்டம்பர் 1914 | 5 | உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | 2127 |
| 511 | R 5560 செப்டம்பர் 1914 | 4 | இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | 2132 |
| 512 | R 5563 செப்டம்பர் 1914 | 3 | பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | 2136 |
| 513 | R 5570 செப்டம்பர் 1914 | 6 | இயேசு, பிலாத்துவினால் விசாரணைப் பண்ணப்பட்டார் | 2139 |
| 514 | R 5572 | 1 | [Poem] நன்றி சொல்கிறோம் | 2145 |
| 515 | R 5572 [Page 3] | 1 | நன்றி சொல்கிறோம் | 2145 |
| 516 | R 5572 [Page 3] | 1 | இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால் | 2148 |
| 517 | R 5577 | 1 | [ Poem]என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் | 2149 |
| 518 | R 5577 நவம்பர்1914 | 5 | தேவனால், வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | 2150 |
| 519 | R 5587 | 3 | [ தெ. பத்திகள்]சபையின் ஏற்படுத்துதல் | 2155 |
| 520 | R 5587 | 5 | சபையின் ஏற்படுத்துதல் | 2160 |
| 521 | R 5588 | 5 | அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு | 2163 |
| **வருடம் 1915 # R 5601முதல் R 5819வரை** | | | | |
| 522 | R 5603 [Page 3] | 4 | நீதியான கோபமும் அநீதியான கோபமும் | 2168 |
| 523 | R 5604 | 3 | முதலாம் அர்மகெதோன் யுத்தம் | 2172 |
| 524 | R 5605 | 4 | துணிவின் நாயகன் - கிதியோன் | 2175 |

| | | | | |
|---|---|---|---|---|
| 524 | R 5606 | 3 | கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள் | 2179 |
| 526 | R 5608 | 4 | சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன் | 2182 |
| 527 | R 5611 [Page 19] | 5 | கல்லறையிலிருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல | 2186 |
| 528 | R 5612 [Page 21] | 4 | சிம்சோனின் சோக முடிவு | 2191 |
| 529 | R 5613 [Page 23] | 4 | தாவீது ராஜாவஜின் கொள்ளுப்பாட்டி - ரூத் 1 | 2194 |
| 530 | R 5615 [Page 24] | 4 | கர்த்தருடைய சத்தம் | 2198 |
| 531 | R 5621 [Page 35] | 6 | நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும் | 2201 |
| 532 | R 5621 | 8 | [ தெ. பத்திகள் ] நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ - உரிமைகளின் சாற்றப்டுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | 2207 |
| 533 | R 5623 | 4 | உங்கள் பிதா அறிந்திருக்கிறார் | 2215 |
| 534 | R 5624 [Page 40] | 4 | மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது. | 2219 |
| 535 | R 5626 | 3 | பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி | 2222 |
| 536 | R 5627 [Page 41] | 4 | பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி | 2225 |
| 537 | R 5628 [Page 45] | 3 | சபை வனாந்தர நிலைமையிலிருந்து திரும்புதல் | 2229 |
| 538 | R 5630 [Page 51] | 9 | பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும் | 2231 |
| 539 | R 5633 | 4 | தூதர்களின் ஊழியம் | 2239 |

| | | | | |
|---|---|---|---|---|
| 540 | R 5635 [Page 59] | 4 | தக்க தருணம் | 2243 |
| 541 | R 5636 [Page 57] | 4 | குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி | 2247 |
| 542 | R 5638 [Page 61] | 4 | சவுலின் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம் | 2251 |
| 543 | R 5640 மார்ச் 1915 | 11 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2255 |
| 544 | R 5640 | 9 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2266 |
| 545 | R 5643 [Page 72] | 3 | தியாக அன்பும் கடமை அன்பும் | 2275 |
| 546 | R 5644 | 2 | [ தெ. பத்திகள்] தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு | 2277 |
| 547 | R 5645 | 5 | கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள் | 2279 |
| 548 | R 5647 [Page 76] | 6 | சவுல் கர்த்தரால் புறக்கணித்து | 2283 |
| 549 | R 5650 [Page 83] | 8 | பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை | 2288 |
| 550 | R 5652 | 2 | தன்னடக்கத்தின் முக்கியத்துவம் | 2295 |
| 551 | R 5653 [Page 90] | 5 | யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார் | 2297 |
| 552 | R 5655 [Page 92] | 3 | கவனத்தை ஈர்க்கிற கேள்விகள் | 2301 |
| 553 | R 5656 [Page 88] & R 3225 [Page 221] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 2304 |
| 554 | R 5660 [Page 103] | 3 | உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை | 2308 |
| 555 | R 5662 [Page 104] | 2 | · நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள் | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 556 | R 5662 [Page 105] | 4 | கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம் | 2312 |
| 557 | R 5664 | 3 | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் | 2316 |
| 558 | R 5665 [Page 108] | 3 | குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும் | 2319 |
| 559 | R 5666 [Page 109] | 4 | யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள் | 2322 |
| 560 | R 5668 [Page 115] | 2 | எல்லா கிருபைகளின் மொத்தம் | 2325 |
| 561 | R 5668 [Page 1180] | 3 | இராஜ்யத்தின் வெண்வஸ்திரம் | 2327 |
| 562 | R 5670 [Page 120] | 5 | இங்கே இலேசான உரபத்திரவம் - பின்வரும் மகிமைகள் | 2330 |
| 563 | R 5672 [Page 122] | 4 | நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே | 2334 |
| 564 | R 5673 [Page 123] | 4 | இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம் | 2338 |
| 565 | R 5676 [Page 131] | 3 | யுகங்களின் முடிவு ஒத்த நிலைமைகள் | 2342 |
| 566 | R 5677 [Page 133] | 5 | இவைகளை நாம் செய்ய வேண்டும் | 2345 |
| 567 | R 5678 [Page 135] | 2 | இயேசு அவரது சத்துருக்களை வைதாரா? | 2349 |
| 568 | R 5679 [Page 136] | 5 | தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம் | 2351 |
| 569 | R 5681 [Page 138] | 3 | நீயே, அந்த மனுஷன்! | 2356 |
| 570 | R 5683 [Page 141] | 2 | ஆவலைத் தூண்டும் கேள்வி | 2359 |

| | | | | |
|---|---|---|---|---|
| 571 | R 5684 [Page 142] | 2 | அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் - பிறகு பின்பற்றுங்கள் | 2361 |
| 572 | R 5685 [Page 147] | 7 | புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங்கொள்ளுதல் | 2362 |
| 573 | R 5688 [Page 150] | 2 | ஜீவகிரீடத்தை பெறுவது யார்? | 2367 |
| 574 | R 5688 [Page 151] | 3 | கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல் | 2369 |
| 575 | R 5690 [Page 152] | 4 | மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் | 2372 |
| 576 | R 5692 [Page 154] | 4 | கேட்கப்படுகிற ஜெபங்கள் | 2376 |
| 577 | R 5693 | 4 | மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் | 2380 |
| 578 | R 5695 [Page 163] | 7 | வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும் | 2384 |
| 579 | R 5698 | 2 | அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம் | 2391 |
| 580 | R 5698 | 3 | சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2393 |
| 581 | R 5698 | 2 | [ தெ. பத்திகள் ]சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2395 |
| 582 | R 5699 [Page 168] | 2 | எனக்கு பிறன் யார்? | 2397 |
| 583 | R 5699 | 1 | [ Poem]தேவனின் யுத்தம் | 2399 |
| 584 | R 5700 | 2 | நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம் | 2400 |
| 585 | R 5701 [Page 170] | 2 | · இஸ்ரயேல் ராஜாவாகிய சாலொமோன் | 2402 |
| 586 | R 5701 [Page 171] | 3 | சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள் | 2404 |
| 587 | R 5702 | 3 | பிதாவின் ஞானமான ஆலோசனை | 2407 |

| | | | | |
|---|---|---|---|---|
| 588 | R 5703 | 1 | [ தெ. பத்திகள் ] பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 2410 |
| 589 | R 5704 [Page 174] | 2 | சுயதேவை பூர்த்தியாகிய பாவம் | 2411 |
| 590 | R 5704 | 3 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2413 |
| 591 | R 5705 [Page 179] | 5 | ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி | 2416 |
| 592 | R 5707 | 6 | ஜெயம் - அதன் உபயோகமும் தகாத உபயோகமும் | 2421 |
| 593 | R 5710 [Page 185] | 5 | உண்மையான ஜெபத்தின் பிறப்பிடம் | 2427 |
| 594 | R 5711 [Page 190] | 3 | கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும் | 2431 |
| 595 | R 5713 [Page 188] | 3 | ஆலயத்தை அர்ப்பணம் செய்தல் | 2434 |
| 596 | R 5714 [Page 187] | 2 | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் | 2437 |
| 597 | R 5715 | 4 | காவற்கோபுரத்தின் கருத்துக்கள் | 2439 |
| 598 | R 5716 [ Page 197] | 1 | அட்டவணை | 2443 |
| 599 | R 5716 | 4 | விசுவாசத்தின் தற்கால நன்மைகள் | 2444 |
| 600 | R 5718 | 3 | சோதனைக் காலம் | 2448 |
| 601 | R 5718 | 3 | அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும் | 2450 |
| 602 | R 5719 | 2 | நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே | 2453 |
| 603 | R 5720 [ Page 201] | 2 | சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி? | 2455 |
| 604 | R 5721 [ Page 203] | 2 | இஸ்ரயேலின் ஏழத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம் | 2457 |

| | | | | |
|---|---|---|---|---|
| 605 | R 5722<br>[ Page 204] | 3 | சோபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள் | 2459 |
| 606 | R 5722<br>[ Page 205] | 3 | ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான் | 2461 |
| 607 | R 5724<br>[ Page 211] | 9 | பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம் | 2463 |
| 608 | R 5728<br>[ Page 216] | 9 | கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன் | 2471 |
| 609 | R 5732<br>[ Page 220] | 4 | அரசியல்வாதிகளும் தவறான மதமும் | 2480 |
| 610 | R 5733<br>[ Page 222] | 3 | ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை | 2483 |
| 611 | R 5735<br>[ Page 227] | 3 | துக்கத்தின் ஆரம்பம் | 2486 |
| 612 | R 5736<br>[ Page 228] | 3 | எனது இருதயம் நல்ல நிலமா? | 2488 |
| 613 | R 5737<br>[ Page 230] | 7 | நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும் | 2491 |
| 614 | R 5740 | 3 | கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல் | 2497 |
| 615 | R 5741 | 2 | எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி | 2500 |
| 616 | R 5742<br>[ Page 237] | 2 | ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு | 2502 |
| 617 | R 5744 | 4 | கிருபாசனத்தின் சலுகைகள் | 2504 |
| 618 | R 5746<br>[ Page 245] | 4 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 2508 |
| 619 | R 5747<br>[ Page2417] | 5 | நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன் | 2512 |
| 620 | R 5749<br>[ Page 250] | 3 | அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல் | 2517 |
| 621 | R 5750<br>[ Page 251] | 3 | மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும் | 2519 |

| | | | | |
|---|---|---|---|---|
| 622 | R 5751<br>[ Page 250] | 3 | எலியா திரும்பவருதலும் வெற்றியும் | 2521 |
| 623 | R 5752<br>[ Page 254] | 3 | எலியாவின் ஓட்டமும் காட்சியும் | 2524 |
| 624 | R 5754<br>[ Page 259] | 4 | யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும் | 2527 |
| 625 | R 5755 | 5 | தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம் | 2531 |
| 626 | R 5757 | 2 | தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை | 2536 |
| 627 | R 5758<br>[ Page 265] | 2 | மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும் | 2538 |
| 628 | R 5759 | 3 | பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை | 2540 |
| 629 | R 5761 | | கீழ்ப்படிதலும் அரசுரிமையும் | 2543 |
| 630 | R 5761 | 2 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 2545 |
| 631 | R 5761 | 1 | [ Poem]கொஞ்சம் நேரம் தான் | 2547 |
| 632 | R 5762<br>[Page 3] | 1 | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் | 2548 |
| 633 | R 5767 | 3 | இயேசுவின் அற்புதமான பிறப்பு | 2549 |
| 634 | R 5768 | 5 | அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை | 2552 |
| 635 | R 5770 | 2 | ஆகாபின் பாவம் - பொருளாசை, கொலை | 2557 |
| 636 | R 5771 | 3 | எலியாவின் அக்கினிரதம் | 2559 |
| 637 | R 5773 | 2 | எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் ( உண்மையுள்ளவர்) | 2562 |
| 638 | R 5774 | 6 | நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும் | 2564 |
| 639 | R 5776 | 2 | இரண்டு பெரிய வேண்டுதல்கள் | 2570 |

| | | | | |
|---|---|---|---|---|
| 640 | R 5777 | 3 | பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல் | 2572 |
| 641 | R 5789 | 1 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2575 |
| 642 | R 5793 | 5 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 2576 |
| 643 | R 5809 & R 5186 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 2581 |
| 644 | R 5815 [Page 3] | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 2583 |
| **வருடம் 1916 # R 5821முதல் R 6024வரை** | | | | |
| 645 | R 5829 [ Page 11] | 6 | அவர் பரத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களுக்கு வழிகாட்டினார் | 2584 |
| 646 | R 5830 [ Page 13] | 4 | பெந்தெகொஸ்தே நாளின் ஆவி | 2589 |
| 647 | R 5831 [ Page 14] | 4 | பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம் | 2593 |
| 648 | R 5832 [ Page 19] | 13 | கர்த்தாவே ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும் | 2597 |
| 649 | R 5836 [ Page 24] | 7 | ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுபாவ மாம்சீக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல. | 2609 |
| 650 | R 5842 - R 5844 | 8 | உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன | 2615 |
| 651 | R 5846 | 3 | உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள் | 2623 |
| | R 5849 | 4 | கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை | 2626 |
| 652 | R 5869 மார்ச் 1916 | 10 | நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | 2630 |
| 653 | R 5872 [ Page 987] | 8 | மீட்கும் பொருளும், பாவ நிவாரண பலியும் | 2640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 654 | R 5874 [ Page 94] | 2 | காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள் | 2648 |
| 655 | R 5875 & R2986 | 8 | ஐனேயாவும், தொற்காளும் | 2650 |
| 656 | R 5875 [ Page 94] | 1 | [ Poem] பஸ்காவின் நிரூபணம் | 2658 |
| 657 | R 5876 [ Page 99] | 6 | எப்படி நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்? | 2659 |
| 658 | R 5878 [ Page 101] | 5 | புயலின்மத்தியில் சமாதானம் | 2664 |
| 659 | R 5879 & R 2989 | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 2669 |
| 660 | R 5879 [ Page 107] | 7 | மீட்கும் பொருளின் விலையும், அதை நடைமுறைப்படுத்தலும் | 2675 |
| 661 | R 5882 [ Page 105] [R 1591] | 4 | உயிர்தெழுந்த கிறிஸ்து | 2682 |
| 661 | R 5885 [ Page 117] | 4 | கிறிஸ்துவோடு நுகத்தடிக்குப்பட்டோர் | 2686 |
| 662 | R 5886 [Page 118] | 2 | சிறு நரிகள் | 2689 |
| 663 | R 5886 [ Page 125] | 2 | சகோதரர்களை முறையாகவோ, முறையற்றோ நியாயந்தீர்த்தல் | 2691 |
| 664 | R 5888 | 2 | (தெ. பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் | 2693 |
| 665 | R 5888 | 2 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2695 |
| 666 | R 5889 [ Page 131] | 4 | பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின் யுத்தம் | 2697 |
| 667 | R 5890 [ Page 133] | 3 | இயேசு மரித்து எல்லோருக்காகவும் ஈட்டுத்தொகை செலுத்தினார் | 2701 |

| | | | | |
|---|---|---|---|---|
| 668 | R 5891 [ Page 134] | 6 | லிஸ்தீராவில் இருந்த சப்பாணி | 2703 |
| 669 | R 5892 & R 4374 & R 3017 | 6 | எருசலேமில் கூடின ஆலொசனைச் சங்கம் | 2708 |
| 670 | R 5892 | 3 | விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும் | 2714 |
| 671 | R 5893 | 3 | சுவிஷேத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது | 2717 |
| 672 | R 5893 | 2 | உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர் | 2719 |
| 673 | R 5896 [ Page 147] | 4 | எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது? | 2720 |
| 674 | R 5897 | 3 | தீமையோடு எதிர்த்து நில்லாமை | 2724 |
| 675 | R 5898 [ Page 150] | 3 | சத்தியத்துக்கு சாட்சிகள் | 2727 |
| 676 | R 5899 [ Page 153] | 4 | நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் | 2729 |
| 677 | R 5900 [ Page 154] | 2 | திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலொசனைகள் | 2732 |
| 678 | R 5903 | 5 | மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள் | 2734 |
| 679 | R 5905 [ Page 163] | 6 | பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல் | 2739 |
| 680 | R 5907 [ Page 166] | 5 | பிலிப்பு பட்டணத்தின் சிறை அதிகாரி | 2745 |
| 681 | R 5907 [ Page 165] | 1 | பூரண அழகு பொருந்திய ராஜா | 2750 |
| 682 | R 5908 | 2 | கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள் | 2751 |
| 683 | R 5909 [R3820] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 2753 |
| 684 | R 5912 | 3 | அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து | 2757 |

| | | | | |
|---|---|---|---|---|
| 685 | R 5913 [ Page 189] | 5 | நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம் | 2760 |
| 686 | R 5916 | 4 | ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள் | 2762 |
| 687 | R 5917 [ Page 197] | 4 | தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல் | 2766 |
| 688 | R 5918 | 2 | நல்ல மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 2769 |
| 689 | R 5919 [ Page 203] | 4 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல் | 2771 |
| 690 | R 5920 | 3 | பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை | 2774 |
| 691 | R 5921 | 4 | சபையில் அன்பு | 2776 |
| 692 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 2780 |
| 693 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2781 |
| 694 | R 5923 [ Page 211] | 5 | நாம் மறவாதிருக்க நாடுவோம் | 2782 |
| 695 | R 5926 | 5 | கொடுத்தலினால் அடையும் கிருபை | 2787 |
| 696 | R 5928 | 2 | பரிந்து பேசுபவர் மற்றும் மத்தயஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு | 2794 |
| 697 | R 5929 [ Page 221] | 2 | உங்களுக்குள் நிலவும் சமாதானம் | 2794 |
| 698 | R 5929 | 2 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 2795 |
| 699 | R 5931 [ Page 227] | 6 | புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி? | 2797 |
| 700 | R 5931 | 6 | புது சிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது? | 2803 |
| 701 | R 5931 | 1 | [ Poem] தேவனின் யுத்தம் | 2809 |

| | | | | |
|---|---|---|---|---|
| 702 | R 5933 | 3 | தத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சிறதளவு துணிகரமான பாவங்கள் | 2810 |
| 703 | R 5934 | 3 | மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே | 2813 |
| 704 | R 5935 & R 4458 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 2816 |
| 705 | R 5935 [R 3159] | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 2825 |
| 706 | R 5938 | 5 | மன்னிப்புப்பெற பாத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம் | 2829 |
| 707 | R 5939 | 2 | உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள் | 2834 |
| 708 | R 5939 | 5 | உண்மையான மற்றும் தவறான - ஏற்படுத்துதல்கள் | 2836 |
| 709 | R 5941 | 3 | பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும் | 2841 |
| 710 | R 5943 | 3 | தெய்வீக புஸ்தகச்சுரளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்? | 2844 |
| 711 | R 5943 | 4 | தெய்வீக சுரள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்? | 2847 |
| 712 | R 5946 | 5 | கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் | 2851 |
| 713 | R 5948 | 5 | உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 2856 |
| 714 | R 5950 | 4 | அறுவடை இன்னும் முடிவடையவில்லை | 2861 |
| 715 | R 5951 | 3 | மிகுதியான உபத்திரவங்கள் மேலான வெகுமதி | 2865 |
| 716 | R 5952 | 4 | தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம் | 2868 |
| 717 | R 5954 | 2 | [ தெ. பத்திகள் ]சுவாரசியமான கடிதங்கள் | 2872 |
| 718 | R 5955 | 12 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 2874 |
| 719 | R 5958 | 3 | முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு | 2886 |

| | | | | |
|---|---|---|---|---|
| 720 | R 5959 | 3 | நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி? | 2889 |
| 721 | R 5962 | 8 | பாவத்தைப் போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே | 2892 |
| 722 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள் | 2900 |
| 723 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை | 2903 |
| 724 | R 5966 [R 4083] | 5 | சுயகட்டுப்பாடே மனவலிமை | 2907 |
| 725 | R 5967 | 3 | கிறிஸ்துவின் நிருபம் | 2911 |
| 726 | R 5970 | 6 | நாம் உபதேசிப்பதும் போதிப்பதும் | 2914 |
| 727 | R 5972 | 5 | மீட்கும் பொருள் பாவநிவாரணபலி | 2920 |
| 728 | R 5973 | 3 | புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல் | 2925 |
| 729 | R 5974 | 3 | உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள் | 2928 |
| 730 | R 5977 | 5 | கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது? | 2931 |
| 731 | R 5979 | 5 | இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல் | 2936 |
| 732 | R 5981 | 12 | சோதனை காலம் | 2941 |
| 733 | R 5981 | 7 | சோதனை நேரம் | 2953 |
| 734 | R 5984 | 12 | [ தெ. பத்திகள்]உலகளாவிய மேய்ப்பரது வேலை | 2960 |
| 735 | R 5989 | 4 | பூமி அதிர்ந்தது - விழுந்தது | 2972 |
| 736 | R 5990 | 4 | நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று | 2976 |
| 737 | R 5992 | 5 | மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் | 2980 |
| 738 | | 1 | 12. யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும் | 2985 |
| 739 | | 1 | 13. அங்கே இருந்தீரோ? | 2986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 740 | | 1 | 123. கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே. | 2987 |
| 741 | | 1 | இனிமையான தருணங்கள் | 2988 |
| 742 | | 2 | 138. பெத்தானியாவின் மரியாள் | 2990 |
| 743 | | 2 | அவரின் மென்மையான கைகள் | 2992 |
| 744 | | 1 | மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம் | 2994 |
| 745 | | 2 | கடைசி இராப்போஜனம் | 2995 |
| 746 | | 8 | CR 122 பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விஷே - கூட்டம் | 2997 |
| 747 | | 1 | தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை | 3005 |
| 748 | | 33 | [ Q232 : 3 ] தேர்ந்தெடுத்தல் மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 3006 |
| 749 | | 1 | இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் | 3039 |
| 750 | | 1 | என்ன அற்புதம் | 3040 |
| 751 | | 2 | சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் | 3041 |
| 752 | | 17 | யோசேப்பும், அவரது சகோதரர்களும் | 3043 |
| 753 | | 15 | யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் | 3060 |
| 754 | | 1 | கிறிஸ்துவோடு | 3075 |
| 755 | | 20 | கூட்டங்கள் | 3076 |
| 756 | | 9 | சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும். | 3096 |
| 757 | | 6 | அந்தகாரமும், விடியல் வேளையும் | 3105 |
| 758 | | 1 | 239. நம் சோதனை எத்தனை இலகுவாக இருக்கும் | 3111 |
| 759 | | 1 | அங்கே இருந்தீரோ? | 3112 |
| 760 | | 1 | உனக்கு முன்பாக | 3113 |

| | | | | |
|---|---|---|---|---|
| 761 | | 1 | நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே | 3114 |
| 762 | | 1 | கவர்ந்திழுக்கபட்டு சோதனைக்குட்பட்டவரே | 3115 |
| 763 | | 1 | கெத்சமனே | 3116 |
| 764 | | 1 | கெத்சமனே | 3117 |
| 765 | | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 3118 |
| 766 | | 1 | பெலன் தாரும் யேசுவே | 3119 |
| 767 | | 1 | இனிமையான தருணங்கள் | 3120 |
| 768 | | 1 | ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை | 3122 |
| 769 | | 4 | மேய்ப்பரது வேலை | 3124 |
| 770 | | 1 | நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் | 3128 |
| 771 | | 9 | முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் | 3129 |
| 772 | | 1 | நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள் | 3138 |
| 773 | | 1 | நம்பிக்கையின் ஆசீர்வாதம் | 3139 |
| 774 | | 6 | நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | 3140 |
| 775 | | 1 | [ Poem 504] நறுமணத்தின் பெருவெள்ளம் | 3146 |
| 776 | | 1 | [பாடல்] அது ஒரு பூமியின் மட்கலயம் | 3147 |
| 777 | | 1 | [பாடல்] மனம் தளர்ந்த பயணியரே | 3148 |
| 778 | | 2 | [ Poem – p 215]மறைக்கப்பட்டச் சிலுவை | 3149 |
| 779 | | 1 | [ Poem - 11] கெத்செமனேயும், கல்வாரியும் | 3151 |
| 780 | | 1 | [ Poem – p- 15] பதிலாக | 3152 |
| 781 | | 1 | [ Poem – p- 33] மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி | 3153 |
| 782 | | 1 | [ Poem – p- 91] நமது உயிர்த்தெழுதல் | 3154 |
| 783 | | 1 | உபத்திரவங்களினாலே பூரணப்படுதல் | 3155 |

| | | | | |
|---|---|---|---|---|
| 784 | | 1 | [ Poem – p- 73]நாம் அங்கே இருந்திருப்போமாகில் | 3156 |
| | | 2 | [ Poem – p- 98] பெத்தானியாவின் மரியாள் | 3157 |
| 785 | | 1 | [ Poem – p- 174] நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள் | 3159 |
| 786 | | 1 | [ Poem – p- 129] அவர்கள் மட்டும் அறிந்திருந்தால் | 3160 |
| 787 | | 1 | [ Poem – p- 164] நான் அவரை அங்குக் காண்கிறேன் | 3161 |
| 788 | | 1 | [ Poem – p- 128] போதகரே, சத்தியமாவது என்ன? | 3162 |
| 789 | | 1 | பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருகே | 3163 |
| 790 | | 9 | பொதுவான கேள்விகள் | 3164 |
| 791 | | 1 | புறங்கூறுதல் | 3173 |
| 792 | | 8 | சபை | 3174 |
| 793 | | 7 | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 3182 |
| 794 | | 5 | சகோதரிகள் | 3189 |
| 795 | | 1 | சீர்பொருந்தும் பூமி | 3194 |
| 796 | | 1 | ஸ்திரீயின் ஊழியம் | 3195 |
| 797 | | 1 | என்னிடத்தில் வா | 3196 |
| 798 | | 2 | இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள்# 108] | 3197 |
| 799 | | 1 | [பாடல்] ஓ! என்னைப் போகவிடாத அன்பே | 3199 |
| 800 | | 1 | [பாடல்]இயேசுவின் சிலுவையின் கீழே | 3200 |
| 801 | | 1 | [பாடல்]நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு | 3201 |
| 802 | | 1 | [பாடல்]என் மீட்பர் | 3202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | | 1 | [பாடல் 135]சிலுவையின் அருகில் | 3203 |
| 804 | | 1 | [பாடல் 8]அங்கு நீ இருந்தாயா? | 3204 |
| 805 | | 1 | [பாடல் 48]இயேசு, என் கர்த்தர் | 3205 |
| 806 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூருவாயாக | 3206 |
| 807 | | 1 | [பாடல் 65 A]பெலன் தாரும் இயேசுவே | 3207 |
| 808 | | 2 | [பாடல் 122] கிறிஸ்து நமது பஸ்கா | 3208 |
| 809 | | 1 | [பாடல் 172]உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக | 3209 |
| 810 | | 1 | [பாடல் 335]அது சிலுவையாய் இருப்பினும் | 3210 |
| 811 | | 1 | [பாடல் 359]பழைய கரடுமுரடான சிலுவை | 3211 |
| 812 | | 1 | [பாடல் 173]சிலுவையில், இன்னும் இடமுள்ளது | 3212 |
| 813 | | 1 | [பாடல்1] **Abide, sweet, Spirit** | 3213 |
| 814 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூரும் | 3214 |
| 815 | | 1 | [பாடல் 3] என்னிடத்தில் வாருங்கள் | 3215 |
| 816 | | 1 | [பாடல் 4] கிறிஸ்துவே எனது இலக்கு | 3216 |
| 817 | | 1 | [பாடல் 5] ஐயகோ என் மீட்பர் இரத்தம் சிந்தினாரோ | 3217 |
| 818 | | 1 | [பாடல் 125]திருவிருந்து | 3219 |
| 819 | | 1 | [பாடல் 128] | 3220 |
| 820 | | 1 | மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள் | 3221 |
| 821 | | 1 | முழங்காலில் தஞ்சம் | 3222 |
| 822 | | 3 | அது ஒரு துன்பத்தின் காலம் | 3223 |
| 823 | | 1 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 3226 |
| 824 | | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 3227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 825 | | 1 | வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள் | 3228 |
| 826 | | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்கின்றோம் | 3229 |
| 827 | | 1 | பஸ்கா | 3231 |
| 828 | | 8 | ஏற்படுத்துதல் | 3232 |
| 829 | | 1 | சீயோனின் தேசிய கீதம் | 3240 |

## The Soul, not the Body, Brought from the Tomb

## கல்லறையி—ருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல

"நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு." (அப். 24:15)

நூற்றாண்டு காலமாக மக்கள் வேதத்தின் போதனைகளைக் குறித்து குழப்பத்தி—ருப்பதை நாம் கவனிக்கும்போது, மரணத்தில் நித்திரையி—ருப்பது சரீரமல்ல என்பதற்கும், இந்த காலக்கட்டத்தில் ஆத்துமா மேன்மையான ஒரு இடத்திற்கு செல்லவில்லை என்பதற்கும் என்ன ஆதாரம் நமக்கு இருக்கிறது என்ற கேள்வி, எழுவது இயற்கையானதொன்றாகும். இந்த விஷயத்தில் தேவனுடைய வசனத்தில் எந்தவித யோசனையும் காணப்படவில்லை என்பதே பதிலாக இருக்கிறது. சரீர உயிர்த்தெழுதலைக் குறித்து வேதம் ஏதும் கூறாதபடிக்கு, ஆத்துமாவைக் குறித்தே அதிகம் கூறுகிறது. மரணத்தை நித்திரை என்று வேத வசனம் அதிகம் கூறுகிறது. நல்ல நிலையில் இருக்கும்போது ஒவ்வொரு இரவிலும் சரீரம் உறங்குகிறது. சகலமும் மரிக்கிற ஆதாமின் மரண நிலைமையை விளக்குவதற்கு வேதம் இந்த சரீரத்தின் இயற்கையான நித்திரையை பயன்படுத்துகிறது.

நமது மனதில் இந்த விஷயம் குறித்து தெளிவு பெறுவதற்கு, பின்னோக்கி ஆதிக்குச் சென்று ஆத்துமா என்றால் என்ன என்பதைக் காணவேண்டும். வேதத்தில் ஆதியாகமத்தில் முதன்முத—ல் படிக்கிறோம். (ஆதி. 1:27) அதாவது தேவன் மனிதனை படைத்தார் —மனித சரீரத்தை அல்ல—என்று படிக்கிறோம். பிறகு மனிதன் என்பது என்ன என்ற கேள்வி எழுகிறது.

மனிதன் வெறும் திடப்பொருள் அல்ல, ஒரு அறிவுள்ள ஜீவி, தனிப்பட்ட ஒருவர். பூமியின் மண்ணி—ருந்து தேவன் மனிதனையல்ல, ஒரு உருவத்தை, ஒரு சரீரத்தை உருவாக்கினார்; அது மனிதனாக ஆக்கப்பட்டது; அதன் நாசியிலே தேவன் "ஜீவ சுவாசத்தை" ஊதினார். இந்த சுவாசம் எல்லா ஜீவன்களுக்கும் பொதுவானது என்று எபிரேய பதம் குறிப்பிடுகிறது. இது கீழான மிருகங்கள் பெற்றிருப்பதைக் காட்டிலும் விசேஷமானது அல்ல. மாறாக, மீனுக்கும், பறவைக்கும், மிருகங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அதே ஜீவன் தான் — ஜீவிக்கிற உரிமைதான்.

மிருகங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதே ஜீவன்தான் மனித இனத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஜீவன் தான் எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாக இருந்து உடலுக்குள் சென்று உயிரைக் கொடுக்கிறது. தாழ்வான மிருகங்களுக்கும், மனிதனுக்கும் வித்தியாசம் என்னவென்றால் அவர்கள் ஒரேவிதமாக ஜீவன் பெற்றிருந்தாலும், மனிதன் மேலான மூளையைப் பெற்றிருக்கிறான். மனிதன் மேன்மையான மூளையைப் பெற்றிருப்பதால், தாழ்வான மிருகங்கள் சிந்திக்க முடியாத விஷயங்களை மனிதன் சிந்திக்க முடியும். அவனது தலை அமைப்பு வித்தியாசமானது. பூரணத்தில் சற்று குறைவுபட்டவர்களாக இருக்கும் மனிதர்கள் சிந்திப்பதை போன்று, அபூர்ணத்தில் அதிகமாக உள்ள மனிதர்களால் சிந்திக்க இயலாது. சிருஷ்டிப்பில் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட அசலான பூரணத் தன்மையையும், அசலான அறிவையையும் சிலர் கொஞ்சமாக இழந்திருப்பார்கள், மற்றவர்கள் அதிகமாக இழந்திருப்பார்கள்.

### மெழுகுவர்த்தியைக் கொண்டு ஒரு விளக்கம்

மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமத்தின் விளக்கத்தை ஆராயும்போது, தேவன் பூமியின் மண்ணினாலே சரீரத்தை உருவாக்கி அதிலே ஜீவசுவாசத்தை ஊதியபோது, இந்த இணைப்பு ஒரு ஆத்துமாவை, உணர்ச்சியுள்ள ஒரு ஜீவியை உருவாக்கியது என்று வெளிப்படுத்துகிறது. சரீரம் என்பது ஒரு நபரல்ல, ஜீவ சுவாசத்திற்கு சக்தியில்லை, ஆனால் இரண்டும் இணையும்போது ஓர் அறிவுள்ள ஜீவியை உருவாக்குகிறது.

இந்த கருத்தின் நேர்த்தியான விளக்கத்தை ஒரு மெழுகுவர்த்தி கொடுக்கக்கூடும். மெழுகும் அல்லது மிருக கொழுப்பும் திரியும் சேர்ந்ததுதான் மெழுகுவர்த்தி. தீப ஒளி ஒரு வெளிப்புற சக்தியால் கொடுக்கப்படுகிறது. அதாவது ஒரு தீப்பொறிதான் அதைச் செய்கிறது. திரிக்கு தீப்பொறி கொடுக்கப்படும்போது காற்று, மெழுகு அல்லது மிருக கொழுப்புடன் இணைந்து தீப ஒளியைக் கொடுக்கிறது.

மெழுகுவர்த்தி சரீரத்தை குறிப்பதாக வைத்துக் கொள்வோம், காற்று ஜீவ சுவாசத்தைக் குறிக்கிறது, தீச்சுடர் உணர்ச்சியுள்ள ஒரு ஜீவியைக் குறிக்கிறது. தேவன்தான் தீப்பெட்டியை பற்றவைத்து, எரிகிற மெழுகுவர்த்தியாகிய மனிதனை உருவாக்க முடியும். இந்த ஜீவன்தான், சில கட்டுபாடுகளுடன் தேவன் ஆதியிலே ஆதாமுக்குக் கொடுத்தது. இந்த ஜீவன், மனிதன் தேவனுக்கு கீழ்ப்படிகிறவரை தொடரும், ஆனால் கீழ்ப்படியாமல் போனால் அந்த ஜீவனை தேவன்

திரும்ப எடுத்துக் கொள்வார்.

ஆதாம் கீழ்ப்படியாமற் போனான். அவனது ஆத்துமா மரண தண்டனைக்குட்பட்டது. (எசே. 18:4, 20) ஆத்துமா பரிசுத்தமாக இருக்கும்போது, சரீரம் மட்டும் பாவம் செய்து தண்டனைக்குட்படவில்லை. மாறாக "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்." ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட மரண தண்டனை அவனது ஆத்துமாவை பாதித்தது. ஜீவன் என்னும் பொறிதான் ஆத்துமாவை உண்டாக்கியது, அந்த ஜீவன் என்னும் பொறி எடுக்கப்பட்டபோது ஆத்துமா அணைந்து போனது. மெழுகுவர்த்தியை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு, தீபத்தை யாராவது ஊதி அணைத்தால் மெழுகுவர்த்தி அணைந்து பழைய நிலைக்கு வந்துவிடும்.

ஆனால் ஆதாம் மரிப்பதற்கு முன்னால், ஜீவன் என்னும் தீபம் முழுவதுமாக அணைக்கப்படுவதற்கு முன்னால், ஜீவன் என்னும் தீப்பொறியை தமது பின்ளைகளுக்குக் கொடுத்துவிட்டான். அவர்களும் அதை தன் சந்ததியாருக்கு கொடுத்தார்கள். எனவே ஜீவன் என்னும் தீப்பொறி தலைமுறை தலைமுறையாக கொடுக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. முதல் மெழுகுவர்த்தியை அணைத்தால் கூட எரிகிற மற்ற மெழுகுவர்த்திகளை அது பாதிக்காது. ஆனால் அனுப்பப்பட்ட இந்த ஜீவன் மற்றவர்களை பலவீனப்படுத்தியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் ஆதாம் மோசமான நிலைமையின் கீழ் வாழ்ந்தது தொள்ளாயிரத்து முப்பது வருடம், ஆனால் இப்போது மனிதனின் சராசரி வயது முப்பத்து மூன்றாக உள்ளது. (இது 1915—ன் புள்ளி விபரப்படி)

**மரித்தவர்கள் உறங்குகிறார்கள்**
**(எந்த அர்த்தத்தில்)**

ஆத்துமாதான் மரிக்கிறது என்று வேத வாக்கியம் எல்லா இடங்களிலும் கூறுகிறது. ஆத்துமா மரித்தால், மனுக்குலத்தின் எதிர்கால வாழ்க்கை என்ன என்ற கேள்வி எழுகிறது. ஆதியி—ருந்தே நடக்கப்போகிற அனைத்தையும் முன்னறிந்த தேவன், தம்முடைய திட்டத்தில் மரித்த மனித ஆத்துமாக்கள் உயிர்பெறும்படியான ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்று வேதம் பதில் கூறுகிறது. அவருடைய அறிவுக்கும், வல்லமைக்கும் அப்பாற்பட்டது ஒன்றுமில்லை. சரீரம் திரும்ப உயிர்பெறும் என்று எங்கேயும் அவர் சொல்லாமல் ஆத்துமாதான் உயிர்பெறும் என்று கூறுகிறார்.

கிறிஸ்துவின் காலத்தில் இருந்த சதுசேயர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுத—ல் விசுவாசம் இல்லாதிருந்தார்கள். பிரேதக் குழியிலுள்ள அனைவரும் தன்னுடைய சத்தத்தைக் கேட்டு புறப்படுவார்கள் என்று இயேசு கூறியதைக் கேட்ட சதுசேயர்கள், அவரது கூற்று அறிவீனமானது என்று வாதித்தார்கள். கிறிஸ்துவினுடைய போதகத்தில் குற்றம் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் அவர்கள் அவரிடம் வந்து, ஒரு ஸ்திரீ ஏழு கணவன்மார்களை உடையவளாயிருந்து, அவளுக்கு முன்பே அவர்கள் எல்லாரும் மரித்துப் போனார்கள், உயிர்த்தெழுத—ல் அவள் யாருக்கு மனைவியாய் இருப்பாள் என்று கேட்டார்கள் (லூக். 20:27—40)

அவர்கள் வேத வசனத்தை புரிந்து கொள்ளவும் இல்லை, சர்வ வல்லவரின் வல்லமையை சரியாக உணர்ந்து கொள்ளவும் இல்லை என்று இயேசு பதிலுரைத்தார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்று அவர் அறிவுறுத்திக் கூறினார். மேலும் "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்" என்று மோசேயிடம் தேவன் எரிகிற முட்செடியி—ருந்து கூறி இதை குறிப்பாக உணர்த்தினார் என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். தேவன் மோசேயிடம் சொன்ன விஷயமே உயிர்த்தெழுதலுக்கு ஒரு ஆதாரம். ஏனெனில் இனி என்றென்றும் உயிரோடு இருக்க முடியாதவர்களைத் தேவன் நிச்சயமாக குறிப்பிட்டிருக்கமாட்டார். உயிர்த்தெழுதலைப் பற்றிய தேவனுடைய தீர்மானம் நிலையானது, மாற்ற முடியாதது. மரித்தோர் என்று அழைக்கப்பட்ட "எல்லோரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே." தேவனுடைய கருத்தின்படி அவர்கள் நித்திரையி—ருக்கிறார்கள், அழிக்கப்படவில்லை. எனவே தேவனுடைய வசனம் மரித்தோர்களை நித்திரையி—ருக்கிறார்கள் என்று கூறுகிறது.

வெவ்வேறானவர்கள் தங்கள் பிதாக்களோடே சேர்க்கப்பட்டார்கள் என்றோ அல்லது தங்கள் பிதாக்களோடே நித்திரையடைந்தார்கள் என்றோதான் பழைய ஏற்பாடு முழுவதும் நாம் வாசிக்கிறோம். சரீரம் நித்திரையி—ருந்ததா? இல்லை, அது முற்றிலுமாக அழிந்துவிட்டது — அது எதனால் சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த மண்ணுக்கே திரும்பிவிட்டது. பிறகு வேறு எது நித்திரையி—ருந்தது? தேவன் ஒரு நபர் — ஆத்துமா என்று அங்கீகரித்த அந்த ஒன்றுதான் நித்திரையி—ருந்தது. நல்லார், பொல்லார் யாவரின் ஆத்துமாக்களும் நித்திரையடைந்தது. ஏனென்றால், "நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு" என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆபிரகாமின் பிதாக்கள் பரிசுத்த மனிதர்கள் அல்ல, ஆனால் புறஜாதியினர். அவன் தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கும் பொருட்டு தனது இனத்தாரிடத்தி—ருந்து அழைக்கப்பட்டான். ஆபிரகாம் மரித்த தன் பிதாக்களோடே சேர்க்கப்பட்ட போது, அவர்கள் இருந்த இடத்துக்கே இவனும் சென்றான். அந்த இடம் "ஷியோல்" என்று பழை ஏற்பாட்டிலும், "ஹேடஸ்" என்று புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது; அது கல்லறை அல்லது

மரித்த நிலை. நல்லவர்களும் கெட்டவர்களுமாகிய இஸ்ரயேலின் எல்லா ராஜாக்களும் மற்றும் தீர்க்கதரிசிகளும் அவர்கள் பிதாக்கள் அண்டையில் சேர்க்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். அவர்கள் மரணத்தில் நித்திரையிலிருக்கிறார்கள்.

### சாதாரணமாக கவனித்திராத சில முக்கியமான விஷயங்கள்

ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகள் இறந்திருந்த அந்த அறைக்குள் இயேசு நுழைந்த போது, "அழாதேயுங்கள், அவள் மரித்துப் போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் " என்றார். அவர் அவள் மோட்சத்தில் இருக்கிறாள் என்றோ, உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிறாள் என்றோ அல்லது நரகத்தில் இருக்கிறாள் என்றோ கூறவில்லை. அவர் லாசருவைப் பற்றி கூறும்போது கூட, "லாசரு நித்திரையடைந்திருக்கிறான் " என்றார். அதற்கு அவரது சீஷர்கள், "அவன் நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் " என்றார்கள். ஆண்டவரின் வார்த்தைகளை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை. கடைசியாக இயேசு, "லாசரு மரித்துப் போனான் " என்று வெளிப்படையாகச் சொல்லி, "இப்பொழுது அவனிடத்திற்கு போவோம் வாருங்கள் " என்றார். ஆகையால் அவர்கள் லாசருவின் கல்லறையினிடத்திற்குச் சென்றார்கள்.

இயேசு, மார்த்தாள், மரியாளை சந்தித்தபோது, லாசரு தன் கையில் இசைக்கருவி முதலானவைகளை வைத்துக்கொண்டு மோட்சத்தில் (பரலோகத்தில்) இருக்கிறான் என்பது போன்ற வார்த்தைகளைக் கூறவில்லை. "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் " என்று அவர் கூறினார். அதற்கு மார்த்தாள், "உயிர்த்தெழுதல் நடக்கும், கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் " என்று பதில் கூறினாள். கடைசி நாள் என்பது மரித்த அனைவரும் எழுந்துவரும் மகா நாளாகிய ஏழாவது ஆயிரம் ஆண்டின் நாள், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நாளாகும். அவளை உற்சாகப்படுத்தும்படியாக இயேசு, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் " என்றார். என்னாலேயல்லாமல் உயிர்த்தெழுதல் நடைபெறாது, என்னை ஏன் இப்போது கேட்கவில்லை என்று கூறினார். ஆனால் மார்த்தாள் அவர் கூறிய கருத்தை புரிந்துகொள்ளவில்லை. அவர் "அவனை எங்கே வைத்தீர்கள் " என்று கேட்டார்.

மார்த்தாளும், மரியாளும் அவரை லாசருவை வைத்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். கல்லறையின் மேலிக்கிற கல்லை எடுத்துப்போடும்படி இயேசு சொன்னபோது, மார்த்தாள், தன் சகோதரன் மரித்து நான்கு நாளாயிற்றே, நாறுமே என்று கூறினாள். இயேசு, "லாசருவே, வெளியே வா " என்று கூறினார் என்று வாசிக்கிறோம். இயேசு, லாசருவே, பரலோகத்திருந்து (மோட்சத்திலிருந்து) இறங்கி வா என்றோ அல்லது கீழேயிலிருந்து ஏறி வா என்றோ கூறவில்லை. (யோவா. 11:1–46)

லாசரு ஒரு மரித்துப்போன மனுஷன், இயேசு வருவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பே மரித்துப்போனவன். நமது ஆண்டவர் அறிவித்ததுபோல, தெய்வீக கருத்தின்படி அவன் நித்திரையிலிருந்தான். அதாவது அவனது ஆத்துமா அழியவில்லை. வேத வாக்கியங்களின்படி ஆத்துமாவை அழிக்கமுடியும். ஒரு சமயத்தில் நமது ஆண்டவர் தமது சீஷர்களிடம் கூறியதாவது, "ஆத்துமாவை கொல்ல வல்லவராயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் கெகன்னாவில் (இரண்டாம் மரணத்தில்) அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். " (மத். 10:28)

### கிறிஸ்துவின் மரணம் எதை நிறைவேற்றியது

நித்திய ஜீவனைக் குறித்த அறிவை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பானது தேவனுடைய தீர்ப்பினால் ஒவ்வொரு மனித ஆத்துமாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பவுல் கூறுகிறதாவது : "கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும், எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். " (ரோம. 14:9) மரணமென்னும் சிறைச்சாலைக்குச் சென்ற அனைவரையும் கட்டுப்படுத்தும் உரிமையை பெறத்தக்கதாக நமது ஆண்டவர் மனிதனாக வாழ்ந்து, மரித்தார். ஆகவே நிச்சயமாக மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன.

பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவரது சத்தத்தைக் கேட்டு, புறப்பட்டு வருவார்கள் என்று நமது ஆண்டவர் கூறுகிறார். (யோவா. 5:28,29) இது எப்படி நடக்கும் என்று அப். பவுல் 1 கொரி. 15ம் அதிகாரத்தில் விளக்குகிறார். நமது ஆண்டவரின் மரணம் எல்லாருக்குமானது என்று குறிப்பிடுகிறார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். " சபை வகுப்பார் முதன் முதலில் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார். மேலும், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் நமது போதகமும் விசுவாசமும் வீணாயிருக்கும் என்று கூறுகிறார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததால், உயிர்த்தெழுதல் உண்டு என்ற ஓர் உறுதிமொழி கிடைத்தது என்று அப். பவுல் முடிக்கிறார்.

### சரீரத்தின் உயிர்த்தெழுதல்

மரித்த கோடிக்கணக்கானோரின் சரீரத்தை புதுப்பித்தல் என்பது ஒரு அபத்தமான காரியம். மனித

வடிவம் ஒவ்வொரு ஏழு வருடத்திற்கு ஒரு முறை மாறுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது ஒரு மனிதன் தன் நாற்பத்து ஒன்பது வருட ஜீவிய காலத்தில் பழைய செல்கள் புதுப்பிக்கப்பட்டு ஏழு சரீரங்களை பெறுகிறான். எனினும் இந்த சரீர மாறுதல் மனிதனின் தோற்றத்தை பாதிப்பதில்லை. ஒரு காலையோ, ஒரு கையையோ அல்லது ஒரு கண்ணையோ இழந்தாலும் கூட மனித ஆத்துமா தொடர்ந்து இருக்கிறது. ஏனெனில் இந்த அறிவுள்ள மனித ஜீவி, சரீரம் மற்றும் ஜீவன் இணைந்து வந்ததாகும். இந்த ஆத்துமாவை, நபரை புதுப்பிப்பதே தேவனுடைய தீர்மானமாகும். சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி அவர் கூறுவதே இல்லை.

சரீர உயிர்த்தெழுதலைப்பற்றிய கோட்பாடு வேத சாஸ்திரிகளுக்கு பெரும் சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு செய்தித்தாளில் வெளிவந்த ஒரு கதை பிரபலமாக இருந்தது. ஒரு ஆப்பிள் மரத்தின் கீழ் ஒரு மனிதனின் சவப்பெட்டி புதைக்கப்பட்டிருந்தது. மரத்தின் கீழே தோண்டி பார்த்தபோது அதன் வேர்கள் சவப்பெட்டியை துளைத்துச் சென்று சரீரத்தை உட்கிரகித்துக் கொண்டிருந்தது. அதன் வேர்கள் ஒரு கையைப் போலவும், காலைப் போலவும், மனித அங்கத்தைப் போலவும் இருந்தது. அதாவது அந்த மரம் மனித சரீரத்தின் மேல் ஜீவித்தது. அந்த மரத்தின் ஆப்பிள் எல்லா இடங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்பட்டது. சில பழங்கள் பன்றி போன்ற விலங்குகளுக்கு கொடுக்கப்பட்டன. சரீர உயிர்த்தெழுதலைப் பற்றிய கொள்கையை உடையவர்கள் தங்களது கொள்கைகளை இந்த உண்மைகளுடன் இணைந்து தீர்ப்பது மிகவும் கடினமான பிரச்னையாக இருக்கிறது.

மரித்த அதே சரீரமே உயிர்த்தெழுத—ல் எழுந்துவரும் என்று வேதாகமத்தில் எந்த ஒரு வசனமும் கூறுவதில்லை. மாறாக "நீ விதைக்கிற போது, இனி உண்டாகும் மேனியை விதையாமல்,கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்" என்று வேதம் கூறுகிறது. தேவனுக்கு சரீரத்தை உண்டாக்குவதில் எந்தவித கஷ்டமுமில்லை, சதுசேயர்கள் தேவனுடைய வல்லமையில் சந்தேகம் உடையவராயிருந்தனர்.

### ஒரு பிரமிக்கத்தக்க அற்புதம்

ஒரு சரீரத்தை அதே மூளைத் திறமையுடன், அதே உணர்ச்சியுள்ள ஜீவியை உருவாக்குவதை நமது கற்பனைக்கெட்டாத ஒரு அற்புதமாக நாம் ஏற்றுக்கொள்கிறோம். எனினும் இதில் முக்கியமான இன்னொரு விஷயம், முழு மனுக்குலத்தையும்—கோடான கோடி ஜனங்களையும் திரும்பி உயிர்த்தெழுப்ப தேவன் தீர்மானித்திருக்கிறார் என்பதே.

தேவையற்ற காரியங்களை, அவைகள் எங்கேயிருந்து வந்தாலும், ஒதுக்கித் தள்ளிவிட்டு நாம் தேவனுடைய வார்த்தைகளை பின்பற்ற வேண்டும். "நம்மை ஞானவான்களாக்குகிற வசனத்தை நாம் சாந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்." வேதாகம அதிகாரத்தில் வராத எந்த காரியத்தையும் நாம் ஒதுக்கித் தள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் வேத வசனத்தில் காண்கிறதைக் காட்டிலும் வேறெதையும் மனிதனால் கொடுக்க இயலாது. மேன்மை, அழகு, நீதி, அன்பு ஆகியவைகளின் சாரமாக வேதாகமம் இருக்கிறது.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில், இயேசு "தம்முடைய ஆத்துமாவை ஊற்றினார் என்றும்," அவருடைய ஆத்துமாவை "குற்ற நிவாரண ப—யாக ஒப்புக் கொடுத்தார்" என்றும் நாம் வாசிக்கிறோம். (ஏசா. 53: 12,10) மேலும் நாம், "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் (ஷியோல்) விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (சங். 16:10) என்றும் வாசிக்கிறோம். இந்த தீர்க்கதரிசனத்தை அப். பேதுரு இயேசுவின் ஆத்துமாவை தேவன் பாதாளத்திலே (ஹேடஸ்) விடமாட்டார் என்று விளக்கிக் கூறுகிறார். (அப். 2:22—32) இயேசுவின் ஆத்துமா கல்லறையிலே விடப்படுவதில்லை.

தமது சொந்த உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு கூறியதாவது: "மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." (வெளி. 1:18) தேவன் அவரை மரண நிலையி—ருந்து மூன்றாம் நாள் எழுப்பினார். அவர் உயிர்த்தெழுந்த அதிகாலையிலே, மரியாளிடம், "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை.... நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" என்று கூறினார். (யோவா. 20:17) பாதாளத்துக்கு (கல்லறை) இறங்கி முதலாவது உயிர்த்தெழுந்தவர் இவர்தான்: மேலும் அவர் தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டார். (எபே. 1:20—23; பி—. 2:9—11)

நமது ஆண்டவர் இப்படிப்பட்ட அனுபவங்களை கடந்து வந்ததால், அப்போஸ்தலர் கூறுவது என்னவென்றால், நமது கர்த்தராகிய இயேசுவை கல்லறையி—ருந்துகொண்டு வந்தவரே நம்மையும் கொண்டு வருவார் என்பதாகும். நம்பிக்கையில்லாதவர்களைக் குறித்து நாம் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று அவர் நமக்கு கூறுகிறார். ஏனெனில், இயேசு மரித்தார்,

மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவாசிப்பதால், மரித்த நிலையி—ருக்கிற சகலரையும் அவர் மறுபடியும் ஜீவனுக்குள் கொண்டுவருவார் என்று விசுவாசிப்போமாக. (1 தெச. 4:13,14) "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு புறப்படுவார்கள்" என்று நாம் விசுவாசிப்போமாக (யோவா. 5:28,29) — முதலாவது சபையார். "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோட கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" என்று வேதம் கூறுகிறது. (வெளி 20:6)

இரண்டாம் மரணத்தின் அதிகாரத்திற்கு கீழ் வருகிற மற்றவர்களும் உயிர்த்தெழுத—ல் எழுந்து வருவார்கள். அவர்கள் முற்றிலுமாக எப்பொழுதும் மரணத்தி—ருந்து விடுவிக்கப்பட்டவர்களாக இருப்பார்களா, மாட்டார்களா என்பது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்ப காலத்தில் அவர்களது நடத்தையின் மூலம் தீர்மானிக்கப்படும். அந்த காலத்தில் தேவனுடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை அவர்கள் அறிவிக்கப் பெறுவார்கள். அவர்கள் தேவனுடன் முழுமையாக இசைவுக்கு திரும்பிவருகிற சந்தர்ப்பத்தைப் பெறும்போது, நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

————————————

# சிம்சோனின் சோக முடிவு

# The Tragedy of Samson

நியாயாதிபதிகள் 13: 8–16, 24,25

சிம்சோன் நசரேயனாகப் பிறந்தான்– அவனது பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது– அவனது ஊழியம் முன்னறிவிக்கப்பட்டது – ஊழியத்தின் மதிப்பு – இஸ்ரயேலை அவன் எப்படி நியாயம் விசாரித்தான்–சிம்சோனின் பலவீனம்–தேவனிடத்தில் அவனது விசுவாசம்– மரணத்தில் அவனது வெற்றி.

“நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. ” நியா. 13:4

ஒரு குறிப்பிட்ட பொருத்தனை பண்ணின சகல யூதரும் நசரேயன் என அழைக்கப்பட்டனர். நாசரேத் என்ற நகரத்தில் வசிக்கிறவர்களை இவர்களோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. இயேசு நாசரேத் என்ற ஊரில் வாழ்ந்தவர். ஆனால் அவர் நசரேய விரதம் உடையவரல்ல. நசரேய விரதம் உடையவர்கள் மதுபானம் பண்ணாமலும் தலைமுடி வெட்டப்படாமலும் இருக்க வேண்டும். சிம்சோன் தனது பிறப்பி–ருந்து இந்த நசரேய விரதம் உடையவனாயிருந்தான். இது கர்த்தருடைய தூதனால் அறிவிக்கப்பட்டு, அவனது பெற்றோர்கள் அவனுக்காக கடைபிடித்து வந்தார்கள். இந்த பொருத்தனை தேவனுக்கும், அவரது ஊழியத்திற்கும் முழுமையாக தன்னை அர்ப்பணித்தலை குறிக்கிறது.

இந்த விரதத்தின் முக்கியத்துவம் அவனது தாயின் மனதில் பதியவைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் சிம்சோன் பிறப்பிற்கு முன்னதாக இரண்டு தடவை கர்த்தருடைய தூதனானவர் அவனது பெற்றோருக்கு அறிவித்தார். ஏனெனில் அவர்களது குழந்தை அனுகூலமான மனோசக்தி உடையவனாக இருக்க வேண்டும். மனோ பலத்தையும் சரீர பலத்தையும் எந்த அளவுக்கு தங்களது குழந்தைகளுக்கு கொடுக்க முடியும் என்பதை அவனது பெற்றோர்கள் உணர்ந்திருந்தார்கள். அவர்கள் தங்களது சந்ததியினருக்கு மனோபலத்தை கொடுக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

ஜீவன் என்கிற உயிர்சக்தி தகப்பனிடமிருந்து வரும்போது, குணலட்சணத்தை தருவதில் தாய் அதிக பங்கு வகிக்கிறாள். குழந்தை பிறப்பதற்கு முன்னதாக தாயின் பலவீன நிலைமையை தகப்பன் உணர்ந்து, அறிவுபூர்வமான, ஆவிக்குரிய செல்வாக்கை தாயை சுற்றிலும் இருக்கும்படி அவனது உரிமைகளை பயன்படுத்தி செய்ய வேண்டும். இப்படியாக தகப்பன், தாயின் சிந்தனையை வார்ப்பு செய்து அவர்களை மேன்மையான வழிமுறைக்கு வழிநடத்த வேண்டும். இதனிமித்தம் தாயானவள் உயர்ந்த, சிறப்பான குறிக்கோள்களை தனது குழந்தையிடம் பதிய வைக்கிறாள். இதனிமித்தம் குழந்தையானவன் தனது குடும்பப் பெயரை மகிமைப் படுத்துகிறவனாகவும், அவனது இனத்தாருக்கு ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய ஊழியக்காரனாகும்படி தகுதியுள்ளவனாகிறான்.

தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி சிம்சோன் இஸ்ரயே–ன் நியாயாதிபதிகளில் ஒருவனாக ஆக வேண்டியவனாயிருந்தான். அதாவது இஸ்ரயே–ன் இரட்சகரில் ஒருவனாக ஆகவேண்டியவனாயிருந்தான். சந்தர்ப்பத்தை பார்க்கும்போது விடுதலை அவசியமாயிருந்தது தெளிவாக இருக்கிறது. பெ–ஸ்தர் பலஸ்தீனாவின் தென்மேற்கு பகுதியில் வசித்து வந்தனர். அவர்கள் கடற்கொள்ளையராகவும், இஸ்ரயேலரின் விளைச்சலை கொள்ளையடிப்பவர்களாகவும், கடல் பிரயாணிகளாகவும் இருந்தனர். அவர்கள் யுத்த பிரியராயும், உற்பத்தி செய்வதில் அறிவாளிகளாகவும் இருந்தனர். அவர்கள் இஸ்ரயேலரின் ஆயுதங்களை பறித்துக் கொண்டது மாத்திரமல்ல, இருப்பு ஆயுதங்களையோ, கருமான் வேலையையோ அவர்கள் செய்யாதபடி தடை செய்தனர். இப்படியாக பல வகையில் இஸ்ரயேலர்களை அடிமைப்படுத்தி, வரி வசூ–த்து வந்தனர்.

இந்த காலத்தில்கூட (1915) கடலாதிக்கம் உள்ள ஒரு நாடு இந்தியாவை அடக்கி கீழ்ப்படுத்தி வருகிறது. ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அங்கிருந்து தொழிலாளர்களை கொண்டு வருகின்றனர். பெ–ஸ்தர்கள் வெளியரங்கமான கொடூரமான, மிருகத்தனமான முறைமைகள் இல்லாமலேயே இஸ்ரயேலர்களிடமிருந்து நவீன முறைமைகளின்படி கொள்ளையடித்து அதிகமான வருமானத்தை பெற்று வந்தனர். சிம்சோன் ஒரு போர் வீரனாக பெ–ஸ்தர்களுக்கு பல வகைகளில் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்துவதும், ஒரு யுத்த தந்திரமுள்ளவனாக பெ–ஸ்தர்களின் கோதுமை வயல்களை நரிகளைக் கொண்டு அழிப்பதுமே அவன் தமது மக்களுக்கு செய்த ஊழியமாக இருந்தது. எதிரிகளின் கொடுமைகளால், உற்சாகம்

குன்றி முற்றிலும் நம்பிக்கையற்று இருந்த அவனது ஜனங்களுக்கு இப்படியாக புத்துணர்வு ஊட்டியதுதான் சிம்சோனின் வேலைகளில் மிக முக்கியமானதாக இருந்தது. தன் ஜனங்களுக்காக ஊழியம் செய்யவும், அவர்களை விரோதிகளிடமிருந்து விடுவிக்கவும் வாழ்க்கையை அர்ப்பணம் செய்த ஒரு மனிதன், தேச பக்திக்கு ஒரு பெரும் தூண்டுகோலாகவும், அதன் பலனாக தேவ கிருபையையும் செழிப்பையும் எதிர்பார்ப்பவனாகவும் இருக்க வேண்டும்.

### ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய சில காரியங்கள்

யூதர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதையும், இயேசுவினாலும் அவரது அப்போஸ்தலர்களாலும் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள் யூதர்களுக்கு பிரயோகிக்கத்தக்கது அல்ல என்பதை நாம் மறக்கக்கூடாது. வேதத்தின்படி மோசேயும், இஸ்ரேல் தேசமும் தேவனுடைய வீட்டின் பணிவிடைக்காரர்கள். (எபி. 3:5–6) அவர்கள் தேவனுடைய கட்டளைக்கு உண்மையாகவும், கீழ்ப்படிதலுடனும் ஊழியம் செய்ததால் அதற்கு ஏற்றாற்போல தேவ ஆசீர்வாதங்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டன. ஆனால் கிறிஸ்துவின் சபைக்கு பொருந்தக்கூடிய "பரிசுத்தவான்கள்" என்கிற வார்த்தை யூத விசுவாசிகளுக்குரியதல்ல.

யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் உள்ள இன்னொரு வித்தியாசம் என்னவென்றால், யூதர்களின் விசுவாசத்திற்கு அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகள் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள். ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ இம்மைக்குரிய துன்பம் மற்றும் விசுவாசம், பொறுமை, அன்பு, உண்மையின் மாறாத்தன்மை ஆகியவற்றில் ஏற்படும் சோதனைகள் மட்டுமின்றி ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. இருவித யுகங்களுக்கும், இருவித கட்டளைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் மனதில் வைக்கவில்லையென்றால் நாம் தொடர்ந்து குழப்பத்தில் தான் இருப்போம்.

தேவனுடைய பிரமாணத்தின்படி, சிம்சோன் உண்மையுள்ள பணிவிடைக்காரனாக மதிப்பிடப்பட்டான். தேவனிமித்தம் உடன்படிக்கைக்குட்பட்ட இஸ்ரயேலருக்கு இருக்கவேண்டிய தெய்வீக தேவைகள் அவனது விசுவாசத்தில் அடங்கியிருந்தது. அவனது விசுவாசம் அவனது சகல கிரியைகளிலும் தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டது. அவனது முழு வாழ்க்கையும், அவனது ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. விசுவாசத்தினால் ஜெயங்கொண்டவர்கள் மற்றும் தெய்வீக அங்கீகாரத்தைப் பெற்றவர்கள் என்ற சாட்சியம் பெற்றவர்களை பட்டிய–டும்போது பரி. பவுல் எபிரேயர் 11:32ல், சிம்சோனையும் ஆதிகால விசுவாசியாக குறிப்பிட்டிருக்கிறார்.

சிம்சோன் ஒரு கிறிஸ்தவனோ, அல்லது கிறிஸ்தவனுக்கு ஒரு முன்மாதிரியோ அல்ல. கர்த்தருடைய ஊழியத்தில் சுயத்தை தியாகம் செய்வதில் நிலைத்திராமல் அநேக விதங்களில் அவன் மாம்சத்தின்படி நடந்தான். அவன் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவன் அல்ல என்பதை நாம் நினைவு கூரவேண்டும். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகுதான் "கிறிஸ்துவின் புது சிருஷ்டிகளாக" கர்த்தருடைய ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டார்கள். சிம்சோன் மேல் கர்த்தருடைய ஆவி இருந்தது என்று நாம் வாசிக்கிறோம். தேவனுடைய தீர்மானத்தி–ருக்கிற சில காரியங்களை செய்து முடிக்கவும், அவருடைய சித்தத்தின்படி சில காரியங்களை எழுதவும் தீர்க்கதரிசி மற்றும் ஆதிகால விசுவாசிகள் மேல் கர்த்தருடைய ஆவி வந்தது. இப்படிப்பட்ட இயந்திரம் போன்ற செயலுக்கான பரிசுத்த ஆவிக்கும், சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்தவர்களுக்கு ஆவியின் ஜெநிப்பித்தலுக்காக கொடுக்கப்படுகிற பரிசுத்த ஆவிக்கும் உள்ள வேறுபாட்டையும் பெருத்த வித்தியாசத்தையும் நாம் மனதில் வைக்க வேண்டும்.

நாம் பரிசுத்த ஆவியை, புத்திர சுவிகாரத்தின் ஆவியை பெற வேண்டியவர்களாயிருக்கிறோம். அது நமது வாழ்க்கையில் அதிகதிகமாக வியாபிக்க வேண்டும், பரலோகத்திருக்கிற நமது பிதாவைப் போல அது நம்மை மென்மேலும் மாற்றுகிறது. சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகிய பரிசுத்த ஆவியின் கிருபை மற்றும் கனிகளில் அபிவிருத்தி மற்றும் வெளிப்படுத்துதல் மூலமாக அன்பிலும், அறிவிலும், கிருபையில் வளர்ந்து உதாரண புருஷர்களாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் இருப்பார்கள்.

### மரணத்தில் ஜெயம்

ஒரு ஸ்திரீயே சிம்சோனின் அழிவுக்கு காரணமாயிருந்தாள். அவன் அவளை நம்பினான். அவள் அவனைக் காட்டிக் கொடுத்தாள். மது பானத்துக்கு விலகியிருக்க வேண்டும், தலைச்சவரம் பண்ணக்கூடாது என்கிற ஒரு பொருத்தனையின் கீழ் அவன் இருந்தான் என்பதை அவளுக்குச் சொன்னான். மேலும் இந்த பொருத்தனையை மீறினால் அவனது விசேஷித்த பலம் அவனைவிட்டு நீங்கிவிடும் என்றும் சொன்னான். அவன் நித்திரை செய்த போது வஞ்சககாரியான அந்த பெண் அவனது தலையை சிரைத்து, "சிம்சோனே, பெ–ஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்" என்று கூறி அவனை எழுப்பினாள். அந்த பொருத்தனை மீறப்பட்டதால், அவனது விசேஷித்த பலம் அவனைவிட்டு நீங்கிவிட்டது.

சிம்சோனின் எதிரிகள் அவனை பிடித்து, அவன் கண்களை குருடாக்கி, சிறைச்சாலையில் மாவரைத்துக் கொண்டிருக்கும்படி அவனை அடிமையாக்கி வைத்திருந்தார்கள். அவர்கள் ஒரு

பெரிய விருந்தில் வேடிக்கைக் காட்டும்படி அவனை கொண்டு வந்தார்கள். அவன் அந்த கட்டடத்தின் கூரையைத் தாங்குகிற இரண்டு முக்கியமான தூண்களின் அருகே நின்றான். தேவனிடம் ஜெபித்து, அந்த இரண்டு தூண்களையும் சாய்த்து, முழு கட்டடத்தையும் தரை மட்டமாக்கினான். இப்படியாக பெ—ஸ்தரின் பிரபுக்களையும், தலைவர்களையும், அழித்து தமது ஜனங்களுக்கு இரட்சிப்பை ஏற்படுத்தினான். இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைக் காட்டிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகம். நாம் ஒரு சரியான கோணத்தில் பார்ப்போமானால், தேவனிடத்தில் சிம்சோன் வைத்த விசுவாசமும், அவரது சித்தத்தை நிறைவேற்ற விருப்பமுள்ளவனாயிருந்தான் என்பதும் அவனது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வெளியரங்கமாயிருக்கிறது. அவன், "விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றான்."

### கிறிஸ்தவர்களுக்குக்கான பாடம்

வாழ்க்கையில் ஒரு இலக்கு இருக்க வேண்டும் என்ற ஒரு முக்கியத்துவத்தை சிம்சோனின் அனுபவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்ளலாம். ஒருவனுக்கு நோக்கம் என்று ஒன்று இல்லையென்றால், அவனது வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது. திறமையில்லாத காரியங்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உற்சாகப்படுத்தாமல், திறமையும், தகுதியும் உள்ளவைகளில் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

"துணிச்சலுடன் ஒரு நல்ல நோக்கத்தை உடையவனாயிரு,
துணிச்சலுடன் அதை அறியும்படிச் செய்."

பன்னிரண்டு முதல் பதினாறு வயது பருவத்தில் உள்ள பிள்ளைகளை சரியானபடி வழிநடத்தினால் அவர்களை உயர்ந்த மனிதர்களாகவோ, உயர்ந்த பெண்மணியாகவோ ஆக்க முடியும். ஆனால் நெறிதவறிய வழியில் நடத்தப்பட்டால் அவர்கள் கெட்டவர்களாக ஆவார்கள். ஒவ்வொரு பெற்றோரும், காப்பாளரும் இவைகளை புரிந்துகொண்டு அதற்கேற்றாற்போல் பிள்ளைகளை வளர்க்க வேண்டும், வழிநடத்த வேண்டும்.

அது மாத்திரமல்ல, இளமைப் பருவம் உயர்ந்த நிலைக்கு செல்லும்படியாக பாடுபட்டு உழைக்கும் எண்ணமும், வாழ்க்கையை புரிந்துகொள்ளக் கூடிய ஒரு பருவமாக இருப்பதால், சரியான திசையில் அவர்களை செலுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். இந்த பருவம்தான் தீமையை எதிர்த்து நன்மைக்கும், தப்பறையை எதிர்த்து உண்மைக்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கவும், சிருஷ்டிகரை நோக்கிச் செல்லவும் பிள்ளைகளை வழிநடத்தி வெற்றிபெறவும் சரியான காலமாகும். இந்த காரியங்கள் முற்றிலுமாக கவனம் செலுத்தப்பட்டால் ஒழுக்கமுள்ள சீலர்கள் உலகில் அதிகம் பெருகுவார்கள்.

இன்னொரு பாடம் பொருத்தனையைப் பற்றியது. பொருத்தனை என்பது தானே முன்வந்து செய்யும் காரியம். பொருத்தனை பண்ணும்படி யாரும் கட்டாயப்படுத்தபடுவதில்லை. ஒரு பொருத்தனை ஒரு தடவை செய்யப்பட்டால் அது உண்மையுடன் கடைபிடிக்கப்பட வேண்டும், அதன் பலனும் கிடைக்கும். நாம் மனிதர்களிடமோ, சமூக, மத அமைப்புகளிடமோ பொருத்தனை பண்ண வேண்டும் என்று அறிவுரை வழங்கவில்லை. தேவனிடம் அவர் மேல் வைத்துள்ள விசுவாசத்தினிமித்தம் நாம் பொருத்தனை பண்ணவேண்டும் என்று கூறுகிறோம். எந்த ஒரு பொருத்தனை செய்து அதை மீறுவதைக் காட்டிலும் பொருத்தனை பண்ணாதிருப்பது நல்லது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். பொருத்தனையை மீறுவது மனசாட்சியை பலவீனப்படுத்துகிறது. அதை கடைபிடிப்பதோ, முழு வாழ்க்கையும் பலப்படுத்துகிறது. தேவனுடைய ஊழியத்தை இப்பொழுதும் எப்பொழுதும் செய்ய தயார்படுத்தி தகுதியுள்ளவனாக்குகிறது. திறமையாக ஊழியம் செய்ய நல்ல குணலட்சணம் உடையவர்களை தேவன் தேடுகிறார்.

"எழும்பு, தயங்காதே, தேவனுடைய பரிசுத்தவானே,
தடுக்கும் சுமைகள் உனது தோளி—ருந்து பறக்கட்டும்;
தைரியத்துடனும், ஞானத்துடனும் இரு,
பாவத்தையும் பூமியின் மண்ணையும் உதறித்தள்ளு,
மணவாளனுடன் உள்ளே நுழையும்படியாக,
விழித்திருந்து ஜெபம் பண்ணு!
உனது ஆயுதங்களைப் பூட்டிக்கொள்;
ஆயுதந்தரித்த பகைவனை எதிர்கொள்;
பரலோக பட்டயத்தால் மரண அடி கொடுத்து தாக்கு;
முன்னேறு, இன்னும் முன்னேறு தெய்வீக பரிசும்,
ஜெயமும் உனதாகும்வரை,
கிரீடத்தை வெற்றிக்கொள்."

---

# தாவீது ராஜாவின் கொள்ளுப்பாட்டி
# King David's Great - Grandmother
# ரூத் 1

ஒரு நல்ல கதை – இஸ்ரயேலர்களின் சொந்தநாட்டு வாழ்க்கை–மட்டத்திற்கு கீழே–நல்ல ஜனங்கள் வழிதவறி செல்லுதல் – நகோமி திரும்பி வருதல்–ரூத்தின் மனமாற்றம்–என்ன விலை கொடுத்தாள்–அவள் பெற்றது என்ன.

"உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்." ரூத். 1:16

பென்ஜமின் ஃபிராங்க்ளின் என்ற அமெரிக்க மந்திரி பாரீசில் ஒரு மாலை வேளையை இலக்கிய அறிஞர்களுடன் கழித்தார். அப்பொழுது அவர் தனது சட்டைப்பையி–ருந்து இந்த நிகழ்ச்சிக்காக தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்பு அட்டையை எடுத்துக்கொண்டு, "மிகவும் பழமையான ஒரு புத்தகத்தை படித்தபோது, என்னைக் கவர்ந்த ஒரு இலக்கிய பகுதியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அது உங்களுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் அனுமதித்தால், அதை வாசிக்கிறேன் என்று கூறினார்." உண்மையில் அது நமது பாடத்தின் கதையாகும். அதாவது ரூத் புத்தகத்தின் முழு கதையாகும். அதை அவர் கூறியபோது, ஒரு பழங்கால சரித்திரத்தில் இவ்வளவு ஓர் அழகான, இலட்சியத்தைக் குறித்த ஒரு கதை இருப்பதை மிகவும் ஆச்சரியத்துடனும், சந்தோஷத்துடனும் கேட்டார்கள். இதை வேதாகமத்தி–ருந்து எடுத்ததாக அவர் கூறியபோது மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். ஏனெனில் அந்த காலக்கட்டத்தில் பிரெஞ்சு தேசத்தின் இலக்கிய வட்டாரத்தில் கடவுள் இல்லை என்றும் அல்லது கடவுளைப் பற்றி அறிவது இயலாது என்றும் நம்புகிறவர்கள்தான் அதிகமாக இருந்தனர்.

ரூத் புத்தகத்தின் கதை இஸ்ரயேலர்களின் காரியங்களின் ஒரு கண்ணோட்டத்தை கொடுக்கிறது; மத காரியங்களில் ஆர்வம் இருந்ததையும், யுத்தங்கள், அடிமைத்தனம் முதலானவைகளைக் குறித்தும் அது நமக்கு கூறுகிறது. ஒவ்வொரு ஜனங்களின் ஒவ்வொரு சரித்திரமும் நமது கவனத்தை மிகவும் ஈர்க்கிறது. அதன் ஆரம்பம், "தாவீதின் நகரமாகிய" பெத்லெகேம் ஆகும். பல நூற்றாண்டுகளுக்கு பிறகு "தாவீதின் குமாரனும் தாவீதின் ஆண்டவருமாகிய" இயேசு அங்கேதான் பிறந்தார். அவர்களது பெயர்களின் பொருள் அவர்களது குடும்பத்தின் இறை உணர்வுகளை காண்பிக்கிறது. புருஷனின் பெயர் எ–மெலேக்கு, "என் தேவன் ராஜா" என்ற அர்த்தமுடையது, அவன் மனைவியின் பெயர் "நகோமி," அதன் பொருள் "யெகோவாவின் சந்தோஷம்," அவர்களது இரண்டு மகன்களின் பெயர், மக்லோன், கி–யோன் என்பதாகும்.

உலக காரியங்களுக்காக இறை காரியங்களை ப–யிடுவது எப்பொழுதும் நல்ல கொள்கை அல்ல என்ற காரியத்தை நாம் கற்றுக்கொள்வது பிரயோஜனமானது. சகல கிறிஸ்தவர்களின் நோக்கம் "தேவன்தான் முதலாவது" ஆக இருக்க வேண்டும். அவர்கள் மோவாப் தேசத்திற்கு சென்றது தேவனுடைய ஊழியத்தை செய்வதற்காக என்று கூறுவது சரியாக இருக்காது. ஏனெனில் மோவாபியர்கள் லோத்தின் சந்ததியினராக இருந்தாலும், அதனிமித்தம் இஸ்ரயேலர்களுக்கு உறவினர்களாக இருந்தாலும், ஏறக்குறைய ஒரே மொழியை பேசினாலும், தேவனுடைய உடன்படிக்கை ஆபிரகாமின் சந்ததியினரோடு மட்டுமே இருந்தது. எனவே மோவாபியர் மற்ற புறஜாதியினரைப் போல அந்நியரும், பரதேசிகளுமாய் இருக்கிறார்கள். மோவாபியர்களை மனமாற்றம் செய்ய முயற்சிப்பதும் சரியாக இருக்காது. ஏனெனில் தேவன் மோவாபியர்களை அழைக்காமல் இஸ்ரயேலர்களை மட்டுமே அழைத்தார். "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்." ஆமோஸ் 3:2

அநேக கிறிஸ்தவர்கள் இதே மாதிரி தவறைத்தான் செய்கிறார்கள். உண்மையிலேயே கிறிஸ்தவர்கள் எல்லா வகைகளிலும் மிகவும் பொறுப்புள்ளவர்கள். ஏனெனில் அவர்கள் தேவனிடம் மேன்மையான உறவு வைத்திருப்பவர்கள். அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றிய தெளிவான அறிவும் "தெளிந்த புத்தியுள்ள ஆவியை" உடையவர்களாயிருக்க வேண்டும். இரண்டு மகன்களையும் புறஜாதி தேசத்திற்கு அழைத்துச் சென்றது ஞானமான செயல் அல்ல, ஏனெனில் அங்கே அவர்கள் அசுத்தம் அடைய ஏதுவுண்டு. அதற்கு பதிலாக, தேவன் பேரில் உள்ள விசுவாசத்தை பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

இதை எல்லாம் நகோமியும் உணர்ந்திருந்தாள். "கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால், உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது" (ரூத் 1:13) என்று அவள் கூறியதி–ருந்து இது தெரிகிறது. இங்கே அவளுக்கு விரோதமாயிருந்த கர்த்தருடைய

கை, மறுபடியும் அவளுக்கு ஆதரவாக இருந்தது என்றும், அது அவள் மேல் சிரத்தை கொண்டு மறுபடியுமாக அவளை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு கொண்டுவந்தது என்பதையும் நாம் தெரிந்துகொள்கிறோம்.

### இரண்டு அழகான குணங்கள்

நகோமி (யெகோவாவின் சந்தோஷம்) ஒரு இனிமையான குணமுடையவளாயிருந்திருக்க வேண்டும். அவளுடைய மருமக்கள் அவள்மேல் வைத்திருந்த அன்பி—ருந்து இது தெரிகிறது. அவர்கள் இருவரும் தங்கள் சொந்த நாட்டை விட்டு அவளோடு செல்ல தயாராயிருந்தார்கள்; அவளோடே புறப்பட்டார்கள். ஆனால் நகோமி, அவர்கள் அவளோடே வந்தால், அவர்கள் அந்நியர்களாகவும், அது அவர்களுக்கு அந்நிய தேசமாகவும் இருக்கும் என்றும், இங்கே ஒரு குடும்பத்திற்காக எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பது போல் அங்கேயும் ஏங்க வேண்டியிருக்கும் என்று கூறி, அவர்களைத் தாய் வீட்டுக்கு திரும்பி போகச்சொல்—, அவர்களது பழைய பழக்க வழக்கங்களை கடைபிடிக்கும்படியும், மறு திருமணம் செய்துகொள்ளுமாறு தனது விருப்பத்தை வெளிப்படுத்தினாள்.

அவர்களுள் ஒருத்தி தன் மாமியை முத்தமிட்டுச் சென்றாள். ஆனால் ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்கொண்டாள். அவள் பேசிய வார்த்தைகள், என்றென்றும் குறிப்பிடும்படியான ஒரு நல்ல இலக்கிய மொழியில் கீழே சொல்லப்பட்டுள்ளது.

> "நான் உம்மை பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பி போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்;
> நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்;
> நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்;
> உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்,
> "உம்முடைய தேவன் என்னுடைய தேவன்,
> நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து,
> அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்;
> மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னை பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்கு செய்யக்கடவர். "

ரூத் மதமாற்றம் செய்யப்பட்டாள் என்று நாம் சொல்லும்போது, அவள் கிறிஸ்தவளாக மாறினாள் என்றோ, கிறிஸ்தவ வாக்குத்தத்தங்களுக்கு உரிமைக்காரியானாள் என்றோ அர்த்தமாகாது. இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய், மரணத்தின் மூலமாய், "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணுவதற்கு " முன்னால் அது மாதிரி யாரும் ஆனதில்லை. அவள் யூதாயிசத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டாள். நகோமியின் விசுவாசமுள்ள வாழ்க்கைக்கு இது ஒரு நல்ல சாட்சியாக இருக்கிறது. (ரூத். 1:16—17)

### உறுதியான தீர்மானத்தின் மதிப்பு

இங்கு ஒரு விஷயத்தை குறிப்பிடுவது மிகவும் பிரயோஜனமாயிருக்கும். அதாவது ரூத் எடுத்த உறுதியான, உடன்பாடான தீர்மானமாகும். இது கொஞ்ச நாள் யூதேயாவில் வாழ்ந்து பார்க்கலாம் என்று முயற்சிக்கிற ஒரு தீர்மானமல்ல, மரணம் வரையான ஒரு தீர்மானமாகும். இந்த விஷயத்தில் எல்லா மதமாற்றமும் ஒரே மாதிரி இருக்கிறது. உதாரணமாக கிறிஸ்தவர்கள் உலகத்தையும், அதன் காரியங்களையும், அதன் ஆசைகள் அனைத்தையும் விட்டு, கர்த்தருடைய ஊழியத்தில் முழுவதுமாக தன்னை அர்ப்பணிக்கும்வரை அவர்கள், உண்மையான கிறிஸ்தவர்களாகிறதில்லை. நமது ஜீவனைப் பற்றிய உறுதியான தீர்மானத்தின் மதிப்பை அரிதாக நாம் அதிக மதிப்பீடு செய்வோம். சரியான தீர்மானம் இல்லாததால் ஆயிரக்கணக்கான ஜீவன்கள் அழிகின்றன. "நம்முடைய அழைப்பையும் தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும் " நம்பிக்கைக்கு தேவனுக்கான உறுதித் தன்மையே ஒரே நிபந்தனையாகும்.

யூத ஜனங்களுக்கான தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி உண்மையினிமித்தம், நகோமியும், ரூத்தும் கர்த்தரிடத்திற்கும், அவரது பிள்ளைகளிடத்திற்கும், வாக்குத்தத்தமும் உடன்படிக்கையும் உள்ள தேசத்திற்கும் திரும்பி வந்ததால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மாம்சீக இஸ்ரயேலுக்கு அறிவிக்கப்பட்ட வாக்குத்தத்தம் பூமிக்குரியது என்பதையும், ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்டது பரலோகத்துக்குரியது என்பதையும் நாம் நினைவு கூரவேண்டும்.

உண்மையிலேயே ஏழ்மையினிமித்தம் பெத்லெகேம் வந்தபோது, அவள் அநுசரித்த காரியத்தில் நகோமியின் உயர்ந்த குணமும், ஞானமும் வெளிப்படுகிறது. அவளது கணவனுக்கும், மகன்களுக்குமுரிய நிலத்தை சீர்படுத்த முடியாமல் இருந்தாள். அவள் பிச்சை எடுக்கவோ, அல்லது தனது மருமகள் ரூத்தை பிச்சையெடுக்கச் சொல்லவோ இல்லை. ரூத்தும் மற்ற ஏழை ஸ்திரீகளைப்போல, வெளியே சென்று அறுக்கிறவர்கள் பிறகே கதிர்களை பொறுக்கும் வேலையைச் செய்தாள். தேவன் தம்முடைய பிரமாணத்தில் ஏழைகளுக்குக்கென்று ஒரு ஏற்பாட்டை செய்திருந்தார். அதாவது வய—ன் ஓரத்தில் உள்ள கதிர்களை ஏழைகளுக்கென்று அறுக்காமல் விட்டுவிட வேண்டும் என்று கட்டளை கொடுந்திருந்தார். நகோமி தனது புருஷன் எ—மெலேக்கின் உறவுக்காரனும் மிகுந்த ஆஸ்திக்காரனுமான போவாஸ் என்பவனுடைய வயலுக்கு செல்லும்படி ரூத்துக்கு யோசனை கூறினாள்.

### தாவீது ராஜாவின் கொள்ளுப்பாட்டி

நகோமி யூகித்திருந்தபடி, மிகுந்த ஆஸ்திக்காரனாகிய போவாஸ், தனது வய—ல் கதிர்

--2195--

பொறுக்குகிற அடக்கமான இளம்பெண் ரூத் யார் என்பதையும், திருமணம் மூலமாக அவள் தனக்கு உறவுக்காரி என்பதையும் புரிந்துகொண்டான். அவன் யூத சட்டமுறைமைகளை அநுசரித்ததின் மூலம் ரூத் அவனது மனைவியானாள். இவர்களது மகன் ஓபேத் ஈசாயைப் பெற்றான்; ஈசாயின் மகன்களில் இளையவன் தாவீது ஆகும். இப்படியாக புறஜாதி வம்சத்தாளாகிய ரூத் ராஜா வம்சத்தினளானாள். இதன் மூலம் தாவீதுக்கும் தாவீதின் குமாரனாகிய இயேசுவுக்கும் மூதாதையர் ஆனாள்.

வேதாகமம் மிகவும் உண்மையான புத்தகம். ராகாப் என்ற எரிகோவின் வேசி, திருமணத்தின் மூலம் யூத நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் மூலம் தாவீது, சாலொமோன், இயேசு ஆகியோருக்கு மூதாதையர் ஆனாள் என்பதை வேதம் மறைக்கவில்லை. ரூத் கூட ஒரு அந்நிய பெண், புறஜாதிக்காரி, விக்கிர ஆராதனைக்காரி என்பதையும் வேதம் மறைக்கவில்லை. வேறு எந்த புத்தகமும் இப்படி உண்மையானதாக இல்லை. அதேபோல புதிய ஏற்பாடு, தன் சொந்த குருவையே காட்டிக் கொடுத்த ஒரு சீஷனைக் குறித்தும், எல்லாரும் எப்படி அவரை விட்டுவிட்டு ஓடினார்கள் என்பதையும் பரிசுத்த பேதுரு எப்படி அவரை மறுத—த்து சபித்தார் என்பதையும் பரி. பேதுருவும், யோவானும் ஆலயத்தில் போதித்தப் பொழுது ஜனங்கள் அவர்களை படிப்பறியாதவர்கள் என்றும் பேதமையுள்ளவர்கள் என்றும் உணர்ந்து கொண்டார்கள் என்பதையும் கூறுகிறது.

அதேபோல், தாவீது ராஜா, மற்றும் இன்னும் ராஜ குடும்பத்தினரின் பாவங்களையும், பலவீனங்களையும் மூடவுமில்லை, மறைக்கவுமில்லை. அவைகளெல்லாம் வெளியரங்கமாக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டு, அந்த தண்டனைகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. குற்றம் செய்தவர்களின் மன வருத்தமும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேர்மையான எழுத்தாளர்களை நாம் நம்புகிறோம். இந்தக்கால சரித்திரத்தில் கூட இப்படிப்பட்ட ஆசிரியர்கள் மேல் நம்பிக்கை வைக்க விரும்புகிறோம். வேதாகம சரித்திரத்தின் நம்பகத்தன்மையோடு இந்த கால சரித்திரம் எதுவும் ஒப்பிடப்பட முடியுமா என்று எங்களுக்குத் தெரியவில்லை.

**ஒரு கிறிஸ்தவனாக ஆவது எப்படி?**

இந்த பாடத்தில் உணர்ச்சிபூர்வமாக வேண்டுகோள் செய்வதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபடவில்லை. இயேசுவின் வார்த்தைகளி—ருந்து, நாங்கள் யோசனையாக கூறுவது என்னவென்றால், ஆண்டவருடன் சேர்ந்து அவரது பின்னடியாராக மாற விரும்புகிறவர்கள் ஆண்டவர் கூறுவதுபோல முத—ல் அமைதியாக “அமர்ந்திருந்து செல்லும் செலவை கணக்குப் பார்க்கக்கடவன்.” லூக்கா 14:30. சரியான மன அமைதிக்கும், சரியான கிறிஸ்தவனாக அபிவிருத்தி அடைவதற்கும், சுவிசேஷயுக சட்டதிட்டங்களுக்கும் கீழாக பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கும் அவசியமான உறுதியான தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து நாங்கள் உங்களை ஊக்குவிக்கும் வண்ணமாக எடுத்துக் கூறுகிறோம். ( கொலோ. 1:12)

தன்னுடைய இருதயத்தை தேவனிடம் அர்ப்பணம் பண்ண தீர்மானிக்கிறவர்கள், “வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை” என்பதை அறிய வேண்டும். இதன் மூலம் தேவனுடைய கிருபைக்கு திரும்ப முடியும்; தேவனுடைய குமாரர்களின் வீட்டிலே நுழைவதற்கு அனுமதி கிடைக்கும். அவருடைய நாமத்தில், நாமத்தின் மூலம், நாமத்தினால் என்பதற்கு, தேவனிடத்தில் விசுவாசம் வைப்பது, அவருடைய சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவது போன்ற அர்த்தத்தைக் குறிக்கும். ஆனால், தீர்மானம் முடிவாகும்போது, “உம்முடைய தேவன் என்னுடைய தேவன்” என்ற பொருளுடையதாகும்.

கிறிஸ்து மூலம் தேவனுடைய குமாரர்களின் வீட்டில் சேருவதற்கு தீர்மானம் முடிவானது. இங்கே நாங்கள் எந்த சபை பிரிவுடனும் சேரும்படியோ, வேதாகம பிரிவுடன் சேரும்படியோ சிபாரிசு பண்ணவில்லை என்பதை கவனிக்க வேண்டும். வேத போதனை என்னவென்றால், தேவனுடைய குமாரரின் வீட்டின் அங்கத்தினராவதற்கு, கிறிஸ்துவோடு இணைக்கப்படவேண்டும். பிறகு அவர் மூலம் பிதாவோடு இணைக்கப்பட வேண்டும். இதன் மூலம் நாம் தேவனுடைய சுதந்தரராகவும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் ஆவோம். இப்படிப்பட்டவர்களின் நாமம் பூமிக்குரிய சபையின் அங்கத்தினராக அல்ல, “ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில்,” “பரலோகத்தில் அவர்கள் நாமம் எழுதப்பட்டிருக்கும்.” வெளி 21:27; லூக். 10:20

அவர்களது அடுத்தக்கட்ட செயல், “உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்” என்று கூறுவதாகும். அவர்கள் ரோமன் கத்தோ—க்க சபையி—ருந்தோ, அல்லது பேப்டிஸ்ட், மெதடிஸ்ட், பிரிஸ்பிடேரியன், லூத்தரன், ஆங்கி—கன் சபையி—ருந்தோ அல்லது இந்த சபை பிரிவுகளுக்கு அப்பாற்பட்டோ வந்திருந்தாலோ, இவர்களெல்லாம் நிச்சயமாக தேவனுடைய ஜனம், ஒரே குடும்பத்தின் சகோதரர்கள் ஆகும். தேவனுடைய ஜனங்கள் எல்லாம் ஒன்றாயிருக்கிறார்கள், ஏனெனில் கிறிஸ்து என்னும் ஒரே தலையானவரின் ஒரே ஆவிக்குரிய சரீரத்திற்குள்ளாக ஒரே ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவினுடைய ஆவி எல்லா அங்கத்தினருக்குள்ளும் பரவ வேண்டும். 1கொரி. 12:13

தேவனுடைய பிள்ளைகளை தேடுவது மாத்திரமல்ல, அவர்கள் வெள்ளையராக அல்லது கருப்பராக இருந்தாலும், படித்தவராக அல்லது படிக்காதவராக இருந்தாலும் அவர்களை அங்கீகரித்து அவர்களுடன் ஐக்கியம் கொள்ள வேண்டும். ஏனெனில், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள், " மேலும் "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார். "

கிறிஸ்துவினிடம் வந்தவர்கள் செய்ய வேண்டிய சரியான காரியம் என்னவென்றால், "பூர்வ பாதைகளை, " கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் அடிச்சுவடுகளை, அவர்களது போதனைகளை, அவர்களது அப்பியாசங்களை தேட வேண்டும். நவீன மாறுபாடனவைகளையும், தத்துவங்களையும், இருண்ட யுகத்தின் கோட்பாடுகளையும், விசுவாச அறிக்கைகளையும் விட்டு விலக வேண்டும், தேடக்கூடாது. "எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள் " என்பது விசுவாச வீட்டார் அனைவருக்குமுரிய ஒரு வாக்குத்தத்தமாகும். தேவனுடைய வசனமே "ஏற்ற வேளைக்கான போஜனமாக " இருக்கிறது. இதுவே அவர்களைப் பலப்படுத்தவும், மேம்படுத்தவும், ராஜ்யத்தில் ஒரு பங்கை பெறவும் கொடுக்கப்படுகிற பலமான ஆகாரமாகும்.

-------------

**--2197--**

# கர்த்தருடைய சத்தம்
# The Voice of the Lord
# I சாமுயேல் 3:1–13,19,20

சாமுயேல் பிறப்பிற்கு முன்னமே அவனது தாயினால் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டான்—ஊழியத்திற்கான ஓர் ஆரம்பம்—ஊழியத்தில் உண்மையாயிருத்தல்—மேலான ஊழியத்துக்கு அழைக்கப்பட்டான்—சாமுயேல் இஸ்ரயே—ன் முதலாவது தீர்க்கதரிசி—கடைசியான தீர்க்கதரிசி யோவான் ஸ்நானகன்.

"கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன் " 1 சாமு.3:9

இன்றைய பாடம் சிம்சோன் மற்றும் ரூத் இவர்களின் காலத்துக்கு கொஞ்சம் பின்னாலே இஸ்ரயேலர்களின் குடும்ப நிலைமைபற்றிய ஓர் ஆழ்ந்த அறிவு பற்றியது. இது ஆழ்ந்த மத எழுச்சி மக்களிடையே பரவுவதை நமக்கு காண்பிக்கிறது. நமது பாடத்திலே ஆலயம் என்று சொல்லப்படுவது கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்தைக் குறிக்கிறது. அது எருசலேமுக்கு வடக்கே சில மைல் தூரத்தில் சீலோவிலே வைக்கப்பட்டிருந்தது, ஏ— என்பவன் ஆசாரியனாயிருந்தான். பஸ்கா பண்டிகை நாட்களிலே மக்கள் தேவனுடைய கட்டளைப்படி வருடந்தோறும் அங்கு சென்று ப— மற்றும் காணிக்கைகளை செலுத்துவார்கள்.

சாமுயேல் பிறக்கும் முன்னர் அவனது பெற்றோர்கள் வருடந்தோறும் அங்கு சென்று ஆராதனை செய்கிறவர்களாயிருந்தார்கள். அப்படிச்சென்ற ஒரு சமயத்தில் தேவனிடத்தில் அன்னாள் ஒரு ஆண் பிள்ளைக்காக உருக்கமுடன் ஜெபித்தாள். அப்படி ஒரு குழந்தையை அவள் பெற்றெடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுப்பேன் என்று பொருத்தனை பண்ணினாள். அவளது ஜெபத்திற்கு பதில் கிடைத்தது. குழந்தை பிறந்தது, அவனுக்கு சாமுயேல் என்று பெயரிடப்பட்டது. அதற்கு "தேவனுடைய நாமத்தில் " என்று பொருள். அவன் பால் மறந்தபின் தேவனுடைய ஊழியத்திற்காக ஆசாரியனாகிய ஏ—யிடம் ஒப்படைக்கப்பட்டான். "பால் மறந்தபோது " என்ற வார்த்தை உண்மையிலேயே பால் மறந்த அந்த சிறுவயதைக் குறிக்காதபடி தாயின் உதவியில்லாமல் தனது வேலைகளை செய்யக்கூடிய வயது அதாவது சுமார் பத்து வயதைக் குறிக்கும்.

**பிள்ளைகளைக் குறித்து பெற்றோர்களின் கடமை**

ஆரோக்கியமும், அறிவும் தெய்வ பயமும் உள்ள பெற்றோர்களுக்கு நல்லவிதமாக பிறந்த குழந்தையின் மதிப்பை யூகிப்பது மிகவும் கஷ்டமான காரியம். சிலபேர் மட்டுமே பெற்றோர்களுக்குரிய பொறுப்பையும், கௌரவத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் தகப்பனிடமிருந்து பிள்ளை பெறுகிற உயிர்ச்சக்தி, சட்டப்பூர்வமான, உரிமை – அது பலமுள்ளதோ, பலவீனமுள்ளதோ – ஆகியவைகளை அநேகர் அறிந்திருக்கிறார்கள். தாய்க்கும் கூட அவளுக்குரிய பொறுப்பு இருக்கிறது. பால் மறக்கும்வரை குழந்தைக்கு பால் கொடுப்பது, ஊட்டச்சத்து ஆகியவைகளை கொடுப்பது அவளது கடமையாகும்.

ஆனால் இன்னும் குழந்தைக்குரிய முக்கிய பொறுப்புகளை சில தாய்மார்களே உணர்ந்திருக்கிறார்கள். கர்ப்பமாக இருக்கும் காலத்தில் தாயின் மனோபாவம் குழந்தை பிறப்பதற்கு முன்னமேயே அதற்கு பதிவாகிறது. தாயின் கோபம், சஞ்சலம், அதிருப்தி, அவளது சந்தோஷம், அவளது சிறந்த கொள்கை ஆகியவை அவளது சந்தோஷத்தை மாத்திரம் பாதிக்காமல், அவளது குழந்தைக்கும் நிரந்தரமாக பதிவாகிறது. இதையெல்லாம் கவனிக்கும்போது, தாய், தகப்பனுடைய பொறுப்பு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது !

மேலும், தாயினுடைய மனோநிலை பெரும்பாலும் அவளது கணவனின் செல்வாக்கிலும், கட்டுப்பாட்டிலும் இருக்கிறது என்பதையும் நாம் நினைவு கூரவேண்டும். அவனே தனது மனைவிக்கு வேண்டியதை செய்பவனாகவும், பொறுப்பானவனாகவும் இருக்கிறான். இந்த முக்கியமான காலக்கட்டத்தில் உயர்ந்த நோக்கம், உயர்ந்த மனோபாவம், உதவிகரமான யோசனைகள், அமைதியான சுற்றுப்புற சூழ்நிலை ஆகியவைகளை ஏற்படுத்தித் தருவது கணவனின் கடமையாகும். எனவே பெற்றோர்களுக்கிடையே இப்படியான புத்திசா—த்தனமான ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இவர்களைக் காட்டிலும் உயர்ந்த குணமுடைய பிள்ளைகளை பிறப்பிக்க முடியும். ஏனெனில் இவர்கள் பிறந்தபோது இருந்த சூழ்நிலையைக் காட்டிலும், மேன்மையான ஒரு நிலைமையை இவர்கள்

தங்களது குழந்தைக்கு ஏற்படுத்தித் தர முடியும். அதற்கு மாறாக, சூழ்நிலை இவர்களைக் காட்டிலும் மோசமாக இருந்தால், இவர்களைக் காட்டிலும் கீழான குழந்தைகளையே பிறப்பிக்க முடியும்.

நாமெல்லாரும் பாவத்தில் உருவானோம் என்று வேதம் கூறுகிறது. "நாம் துர்க்குணத்தில் உருவானோம்; நமது தாய்மார்கள் நம்மை பாவத்தில் கர்ப்பந்தரித்தார்கள்." விழுந்துபோன இந்த மனித இனத்தின் நிலைமை, பெற்றோர்களின் மனோபாவம் மற்றும் அவர்களது வேலையிலுள்ள மதிப்புயர்வு போன்றவைகளால், ஓரளவுக்கு முன்னேறியிருக்கலாம். அல்லது தாழ்வு அடைந்திருக்கலாம். எவ்வளவு குழந்தைகள் விருப்பமில்லாமல், வாழ்க்கையில் நஷ்டப்படும்படியாக இந்த உலகத்திற்குள் வருகின்றன! ஆனால் விருப்பத்துடன், ஜெபத்துடன், அதற்காக ஆயத்தமாக இருந்து, பெற்றோர்கள் கொடுக்கும் நல்ல மனோபாவத்துடன் வரும் குழந்தைகள் எப்படி இருக்கின்றன! இன்றைய பாடத்தின் நாயகன் சாமுயேல் இப்படிப்பட்ட ஒரு குழந்தைதான்—மனிதன்தான்.

### தேவன் ஏ-யைப் பற்றிச் சொன்ன குறைகள்

இந்த பாடம், "சாமுயேல் என்னும் பிள்ளையாண்டான் ஏ—க்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தான்" என்ற அறிக்கையுடன் ஆரம்பிக்கிறது. அதாவது, கர்த்தருடைய பிரதிநிதியும் ஆசாரியனுமாகிய ஏ—க்கு ஊழியம் செய்ததின் மூலமாக சாமுயேல் கர்த்தருக்கு ஊழியம் செய்து வந்தான். அந்நாட்களில் கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது. அதாவது அவரது செய்தி அபூர்வமாயிருந்தது. கர்த்தருடைய தூதனானவன் சாமுயே—ன் தாய், தகப்பனுக்கு சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு கொடுத்ததுதான் கர்த்தர் அவரது பிள்ளைகளுடன் கடைசியாக கொண்டிருந்த தொடர்பாகும். எந்த "பிரத்தியட்சமான தரிசனமும்" வெளிப்படுத்துதலும் இருந்ததில்லை. தேவனுடைய திட்டம் மறைவாயிருந்தது. ஊரிம், தும்மீம் மூலமாக ஜனங்களுடைய கேள்விகளுக்கு கர்த்தரிடமிருந்து பதில் வருவதும் நின்று போயிருந்தது.

அந்த சமயத்தில், ஏ—க்கு வயது எழுபதி—ருந்து எண்பதுக்குள் இருக்கலாம். அவனது கண் இருளடைந்திருந்தது. ஏ— ஒரு அறையிலும், சிறுவன் சாமுயேல் இன்னொரு அறையிலும் படுத்திருந்தார்கள். சிறுவன் சாமுயேலை மூன்றுமுறை அழைக்கும் சத்தம் வந்தது. அவன் ஏ—யிடம் சென்று கேட்ட போது, ஏ— அழைக்கவில்லை என்று சொன்னான். மூன்றாவது தடவை ஆசாரியன் ஏ— இந்த அழைப்பு கர்த்தரிடமிருந்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்து, இன்னொரு முறை உன்னைக் கூப்பிட்டால், "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று சொல் என்று சாமுயே—டம் கூறினான். அதே போல் நடந்தது. அந்த சத்தம் மறுபடியும் வந்தது. கர்த்தருடைய தூதன் சாமுயேலுக்கு தரிசனம் கொடுத்தார். கர்த்தருடைய தூதன் ஏ—யைப் பற்றிய ஒரு துர்செய்தியைக் கொடுத்தார். அதாவது ஏ—யின் மகன்களின் துயரமான முடிவையும் ஏ—யின் மரணத்தையும் குறித்து முன்னறிவித்தார். மேலும் இனி ஏ—யின் குடும்பத்தி—ருந்து யாரும் ஆசாரிய ஊழியம் பண்ணமாட்டார்கள் என்பதையும் அறிவித்தார். ஏ—யின் குமாரர் உதவி ஆசாரிய பதவியை துஷ்பிரயோகம் செய்தனர். தேவன் தமது பிரமாணத்தில் அனுமதித்திருந்ததைக் காட்டிலும் அதிகமான ப—ப்பொருட்களைப் பலவந்தமாய் பெற்றுவந்தார்கள். மேலும் கெட்ட காரியங்களை செய்து ஜனங்களை அநீதிக்கு வழிநடத்தி வந்தார்கள். தேவனுடைய ஊழியக்காரர்களும் ஆசாரியர்களும் ஜனங்களை நீதியான வழியில் நடத்தும்படி போதிக்கிறவர்களாகவும் அதன்படி நடக்கிற உதாரண புருஷர்களாகவும் இருக்க வேண்டும்.

### பலவீன குணலட்சணத்திற்கு தெய்வீக நிராகரிப்பு

ஏ—யின் குமாரரின் தவறான நடக்கைகளுக்கு தேவன் கொடுக்கிற முதலாவது கண்டிப்பு அல்ல இது. சில வருடங்களுக்கு முன்பாக இதே காரியங்கள் குறித்து ஏ—க்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. ஏ — வெளியரங்கமாக தேவனிடத்தில் உண்மையுள்ளவனாகவும், விசுவாசமுள்ளவனாகவும் காணப்பட்டாலும், தன் குமாரர்களை கண்டிக்கவில்லை; ஆகவே அவனது குமாரர்களுக்கு வந்த தண்டனையில் ஏ—க்கும் பங்கு கிடைத்தது.

காலையிலே ஏ—, சாமுயேலைக் கூப்பிட்டு கர்த்தர் என்ன சொன்னார் என்று விசாரித்தான். கர்த்தரின் வார்த்தையையும், ஏ—க்கும் அவனது குடும்பத்துக்கும் விரோதமாய் முன்னறிவிக்கப்பட்ட தண்டனையையும் குறித்து தனது தந்தையைப் போ—ருப்பவரும் தன்னை ஆதரிப்பவருமாகிய ஏ—யிடம் சொல்ல சாமுயேல் பயந்தான். ஆனால் ஏ— எல்லாவற்றையும் மறைக்காமல் கூறும்படி கேட்டான். "அப்பொழுது சாமுயேல் ஒன்றையும் மறைக்காமல் அந்த காரியங்களையெல்லாம் அவனுக்கு அறிவித்தான்." கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்களுக்கு இப்படித்தான் அடிக்கடி நடக்கும்; அவர்களது மென்மையான இருதயம், அவர்களது இரக்க குணம், அதை மறைக்கும்படி, தூண்டினாலும், அவர்கள் அதை தைரியத்துடன் கூற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்திலும் அவனது மனசாட்சி போதிக்கப்பட வேண்டும். நிச்சயமாக வேத வசனம் அவர்களை போதிக்கும்.

தனது குடும்பத்தைக் குறித்த காரியத்தை கர்த்தர் அறிவித்தார் என்பதை ஏ — கேட்டபோது, "அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதை செய்வாராக" என்று விசுவாசத்துடன் கூறினான். ஆனால்

அவன் விசுவாசமும், பணிவுமுள்ளவனாயிருந்தாலும், அவனது குணலட்சணம் தேவனுக்கு பிரியமாயில்லாதிருந்தது என்பதை நாம் அறிகிறோம். ஏ—யைப் போல அநேகர் தேவன் கொடுக்கிற தண்டனையை முணுமுணுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறார்கள். ஆனால் பலமான ஒரு குணலட்சணத்தைத்தான் தேவன் நல்லது என்று தேர்வு செய்கிறார். ஏ— இன்னும் திடமான குணலட்சணமுடையவனாயிருந்து, கர்த்தருக்கு நல்ல ஊழியக்காரனாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாகவும் இருந்து தேவனுக்கு பிரியமானவனாயிருந்திருக்க முடியும். திடமான குணலட்சணம் ஒவ்வொருவரையும் பிரியப்படுத்தும் என்பதை நாம் உறுதியுடன் நம்புகிறோம். இதை அப்பியாசப்படுத்துவதில் சிலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனினும் திடமான குணலட்சணமே ஒரு சம்பத்தை போன்றதாகவும், ஆண், பெண் எல்லாராலும், கர்த்தராலும் கூட மதிக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

சாமுயேல் தேவனுடைய கிருபையிலும், ஏ— மற்றும் சகல இஸ்ரயேலருடைய தயவிலும் வளர்ந்தான். கர்த்தருடைய ஆவி அவனிடம் இருக்கிறது என்பதையும், அவன் அவர்களுக்குள் கர்த்தருடைய பிரதிநிதியாக இருப்பான் என்பதையும் ஜனங்கள் உணர்ந்து கொண்டார்கள்.

சாமுயே—ன் காலத்தில், ஆசாரிய கோத்திரத்தாரைத் தவிர வேறு யாரும் ஆசாரியராக முடியாதிருந்தது. தேவன் தம்முடைய வாயாக இருக்கும்படி யாரைத் தெரிந்துகொள்கிறாரோ அவர்களைத் தவிர வேறு யாரும் தீர்க்கதரிசியாக இருக்க முடியாது. “தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் ” என்று பரிசுத்த பேதுரு கூறுகிறார். தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் அதை புரிந்துகொள்ளவில்லை என்றும், இந்த யுகத்தின் சபையாருக்காக அது உரைக்கப்பட்டது என்றும், அது குறித்த காலத்தில் பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்படும் (ஏற்ற வேளையிலே போஜனம்) என்றும் பரி. பேதுரு மேலும் கூறுகிறார்.

சாமுயேல் இஸ்ரயே—லே முதலாவது தீர்க்க தரிசியாக அழைக்கப்பட்டவர். யோவான் ஸ்நானன்தான் கடைசி தீர்க்கதரிசி என்று கர்த்தர் நமக்கு அறிவிக்கிறார். மேலும் “அவனைக் காட்டிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை ” என்றும் கூறுகிறார். நாம் பார்த்ததுபோல தீர்க்கதரிசி மற்றும் ஆசாரியன் போன்ற ஸ்தானங்கள் பழங்காலத்திலே கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் வருகிறவர்கள் அனைவரும் ஆசாரியர்கள் ஆகிறார்கள். மேலும் இந்த புதிய ஒழுங்கின்படி ஒவ்வொரு ஆசாரியனும் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவும் இருப்பான் என்பது நம்மை பிரமிக்க வைக்கிறது.

யூத யுகம் முடிவடைந்து, பெந்தெகொஸ்தே நாளில் சுவிசேஷ யுகம் ஆரம்பிக்கிறதை உணரத் தவறுகிற அநேக கிறிஸ்தவர்கள் மனகுழப்பத்தில் விடப்படுகிறார்கள். இது குறித்து இயேசு கூறுகிறதாவது: “யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும் பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான் என்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன். ” மத். **11:11**

சபை என்பது கரு நிலையில் இருக்கும் தேவனுடைய ராஜ்யம். முதலாம் உயிர்த்தெழுத—ன் வல்லமையால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பிறகு தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது கூட தேவனுடைய ராஜ்ய வகுப்பார் தயார்படுத்தப்பட்டு, போதிக்கப்பட்டு, விசுவாசத்திலும், கீழ்ப்படித—லும், உண்மையாயிருப்பதிலும் சோதிக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். ஜெயம்கொண்டவர்கள் மகிமையின் சபையாகவும், மகிமையின் ராஜ்யமாகவும் இருப்பார்கள். ஆனால் கரு நிலையில் கூட பரி. பேதுரு இவர்களை ராஜரீக ஆசாரியர்கள் என்று அழைக்கிறார். மதகுரு சம்மபந்தமான வகுப்பாரை ஆசாரியராக பரி. பேதுரு பேசவில்லை, பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் இணைகிற ஒவ்வொரு உண்மையுள்ள விசுவாசியையும் ஒரு ஆசாரியனாக பேசுகிறார். அவர்கள் ஒவ்வொருவரும் மகாபெரிய பிரதான ஆசாரியரின் சரீரத்தின் அங்கமாக எண்ணப்பட்டு, இந்த பொருளில் அவர்கள் ஒரு ஆசாரியனாக பேசப்படுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் ஓர் அங்கமாக ப—யின் வேலையில் ஒவ்வொரு நாளும், “தனது சரீரத்தை ஜீவப—யாக ஒப்புக் கொடுத்து ” இணைகிறார்கள்.

இதோடுகூட, ராஜரீக ஆசாரிய வகுப்பார் அனைவரும் தற்காலத்தில் தேவனுடைய தீர்க்கதரிசிகளாக, அவருடைய வாயாக இருக்கிறார்கள். கர்த்தருடைய நாமத்தில் பேச அங்கீகரிக்கப்பட்டவர்கள் இவர்களே, இவர்கள் மட்டுமே. அவர்களது அங்கீகாரம் அல்லது மத உரிமை பிஷப்போ அல்லது வேறு யாரோ கைகளை வைப்பதால் வருவதில்லை. ஆனால் வேதம் அறிவிக்கிறபடி, பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்த—னால், தேவனிடமிருந்து நேரடியாக வருகிறது. முழு சபைக்கும் பரி. யோவான் கூறுவதை உற்று கவனிப்போமாக. அவர் கூறுகிறதாவது: “நீங்கள் பரிசுத்தராலே (பரிசுத்த ஆவியினால்) அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.” பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை பெற்ற ஒவ்வொருவரும் தன் இருதயத்திலும், வாழ்க்கையிலும் அது செல்வாக்கு பெற்றிருப்பதை உணர வேண்டும். மேலும் இதுதான் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவும், ஓர் ஆசாரியனாகவும் ஊழியம் செய்வதற்குரிய அங்கீகாரம் என்பதையும் உணர வேண்டும். பரி. பேதுரு கூறுகிறார்: “நம்மை அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும். ”

**--2200--**

# Imputation and Application of our Lord's Human Life- Rights

## நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும்

"எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" என்கிற சொற்றொடர் என்ன காரியத்தை குறிப்பிடுகிறது என்பதை மிகப் பெரும்பாலான தேவனுடைய பிள்ளைகள் உணர்ந்து கொள்ள முடியாதிருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு, தமது மானிட ஜீவியத்தை ஆதாமுக்காகவும் அவனது சந்ததியினருக்காகவும் மீட்கும் பொருளாக கொடுத்திருந்தால், அவரது தயவை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்" என்று (யோவா 3:36) நாம் வாசிக்கிற பிரகாரம், நீதிமானாக்குத-ல் மானிட ஜீவியத்தை கொடுக்கும் உரிமையை இவர் எங்கே பெற்றார் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

இதற்கு பதிலாக நாம் சொல்வது என்னவென்றால், மீட்கும் பொருளைக் கொடுத்தல் என்பது பலவிதமான அம்சங்களை உடையதாயிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். முதலாவதாக நமது ஆண்டவர் முப்பது வயதாகும் போது, தண்ணீர் ஞானஸ்நானம் மூலம் செய்த அவரது அர்ப்பணம் என்பது தமது ஜீவனை தேவனிடம் சமர்ப்பணம் செய்ததை குறிப்பிடுகிறது. அவர் சமர்ப்பித்த ஜீவன் என்பது முழு உரிமைகள் உடைய ஒரு பூரண மானிட ஜீவன் ஆகும். பரி.பவுல் நமக்கு கூறுகிறதாவது: அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்." நம்முடைய ஆண்டவர் ஆதாமின் சந்ததியில் நேரடியாக வந்தவரல்ல. அதாவது மானிட தந்தை மூலம் தனது ஜீவனை பெற்றவரல்ல. உலகத்திலுள்ள மற்றவர்களைப் போல மரண தண்டனைக்குட்பட்டவரல்ல. ஆதாமுடைய ஜீவனுக்கும், பூரணத்தன்மைக்கும் முழுமையாக சமமானதை, நமது ஆண்டவர் அர்ப்பணித்தார். ஆனால், அவர் தம்முடைய ஜீவனை ஆதாமிடம் அர்ப்பணிக்கவில்லை. அதை வேறு யாரிடமும் கொடுக்காதபடி, பிதாவின் கரங்களில் ஒப்புவித்தார்.

தமது மூன்றரை வருட ஊழிய காலத்தில் தமது ஜீவனை கொடுத்தார். "முடிந்தது" என்று கூறி கல்வாரியில் அந்த வேலையை முடித்தார். அங்கே மரணத்தில் தமது ஞானஸ்நானத்தை நிறைவேற்றினார். தமது சுய அர்ப்பணிப்பை முடிவு வரை தொடர்ந்தார். தமது மானிட ஜீவனை ஆதாமுக்கோ, அவரது சந்ததியினருக்கோ இதுவரை பிரயோகிக்கவில்லை. அவர் பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். அது பறிமுதல் செய்யப்பட்ட ஒரு ஜீவனோ, அடமானம் வைக்கப்பட்டதோ, தடை செய்யப்பட்ட ஒரு ஜீவனோ அல்ல. அவர் பிதாவின் திட்டத்திற்கு இசைவாக தமது ஜீவனை ஒப்புவித்தார். (லூக்.23:46)

### இருவித சுபாவங்களில் ஜீவிக்கும் உரிமை

பிதா அவரை மூன்றாம் நாளில் எழுப்பியபோது, இயேசுவை ஒரு ஆவியின் ஜீவியாக்கினார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். ( 1 பேதுரு 3:18) புதிய சுபாவத்தில் உயிர்ப்பிக்கப்பட்ட இந்த புதிய ஜீவன், அவரது பூமிக்குரிய ஜீவனை அவரிடமிருந்து எடுப்பதற்கு அனுமதித்த கீழ்ப்படிதலுக்கான பலனாக இருந்தது. ஆனால் பூமிக்குரிய உரிமைகளை பூமிக்குரிய ஜீவனுக்காக அவர் இழக்கவில்லை. ஆகையால் ஒரு புது சிருஷ்டியாக பரிபூரண மானிட ஜீவியத்திற்கான இந்த உரிமைகளை அவர் தக்க வைத்துக் கொண்டார். பூரண ஜீவனுக்குரியவைகள் எல்லாம் அவருக்குரியது. அவரது ஜீவனை எடுத்துக் கொள்ளும்படி யூதர்களை அவர் அனுமதித்தாலும் அவரது ஜீவிக்கும் உரிமையை அர்ப்பணிக்கவோ அல்லது இழக்கவோ இல்லை. ஆகவே பிதாவினால் அவர் உயிர்ப்பிக்கப்பட்டபொழுது, ஆவிக்குரிய சுபாவத்திற்குரிய உரிமைகளை மாத்திரமல்ல, பூமிக்குரிய சுபாவத்திற்குரிய உரிமைகளையும் பெற்றிருந்தார். இந்த பூமிக்குரிய சுபாவத்திற்குரிய உரிமைகளை அவர் தமக்காக பயன்படுத்துவார் என்பதல்ல. ஏனெனில் தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருக்கிற எவரும், பூமிக்குரிய சுபாவத்தை விரும்பவோ, பயன்படுத்தவோ மாட்டார்கள். அவர் பெற்றிருந்த விசேஷித்த உரிமை, மானிட ஜீவனை ஆதாமுக்கும் அவனது சந்ததியினருக்கும் கொடுக்கக்கூடிய உரிமை ஆகும். அவர் பூமிக்கு வந்தபோது, இதுவே அவரது மனதில் இருந்த நோக்கமாகும்.

ஆகவே கர்த்தராகிய இயேசு மரித்தோரி-ருந்து எழுந்து நாற்பது நாட்களுக்குப் பிறகு பரலோகத்திற்கு சென்ற போது, அவர் இதற்குமுன் பெற்றிருந்த அனைத்து உரிமைகளையும் தக்க வைத்துக் கொண்டார். அவர் பெற்றிருந்த மானிட ஜீவனுக்குரிய உரிமையை அவர் இழக்கவே இல்லை. அவரது கீழ்ப்படிதலுக்கு பலனாக ஒரு மேன்மையான உரிமையாக, ஒரு மேன்மையான சுபாவமாக, தெய்வீக சுபாவத்தையும் பெற்றுக் கொண்டார். ஆனால் அவர் பரலோகத்திற்கு சென்ற போது, அவரது ப-யின் புண்ணியத்தை உலக மனுக்குலத்திற்காக அவர் பிரயோகிக்கவில்லை. இல்லையென்றால் உலகம் முழுவதும் இப்பொழுது பொல்லாங்கனுக்குள் இருந்திருக்காது. (1 யோவா.5:19) நமது இரட்சகர், அவர் பரலோகத்திற்கு எழுந்தருளினபோது தமது ப-யின் புண்ணியத்தை, உலகத்திற்கு பிரயோகித்திருந்தால், அது உலகத்தின் பாவங்களை நீக்கியிருக்கும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. உலகத்தின் மே-ருந்த மரண தண்டனையி-ருந்து சபை மாத்திரமே தப்பித்தது என்று வேத வாக்கியங்கள் கூறுகிறது.(ரோம.8.1) எனவே உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பது தெளிவாகிறது. சுவிசேஷ யுகத்தின் ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இந்த மரண தண்டனையி-ருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அர்ப்பணம் செய்த வகுப்பாரைத் தவிர வேறு யாரும் கிறிஸ்துவிடமிருந்து புண்ணியத்தையும் நீதிமானாக்குதலையும் பெறவில்லை.

### இளைப்பாறுதல் சபைக்கு கொடுக்கப்பட்டது

பிறகு எப்படி நமது ஆண்டவர் புண்ணியத்தை சபையின் மேல் பிரயோகித்தார்? அவரது புண்ணியத்தை அவர் சபையின் மேல் நேரடியாக பிரயோகித்திருந்தால், அது சபைக்கு மானிட ஜீவனை, மானிட பூரணத்தைக் கொடுத்திருக்கும். தேவன் சபைக்கென்று மேலான காரியத்தை வைத்திருக்கிறார். இயேசு பெற்ற அதே தெய்வீக சுபாவத்தை சபையும் பெற்றுக் கொள்ளும்படியாக தேவன் வைத்திருக்கிறார். சபையானது இயேசுவின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி இதை பெற்றுக்கொள்கிறது. இயேசு, பிதாவின் சித்தத்தின்படி தம்முடைய மானிட ஜீவனை ப-யிட்டு, அவரது பூமிக்குரிய உரிமைகளை கொடுத்தது போல, அவரது மணவாட்டி வகுப்பில் அங்கங்களாகிற அனைவரும் அதே போல அவர்களது பூமிக்குரிய ஜீவனை அர்ப்பணிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவரோடு இணைய முடியும் என்று இது குறிப்பிடுகிறது. அவரோடு கூட பாடுகளை சகித்தால் மட்டுமே, அவரோடு ஆளுகை செய்வோம். (2 தீமோ.2:11,12)

“ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.” (மத்.16:24) “நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் சீஷனும் இருப்பான்.” (யோவா.12:26) சுவிசேஷ யுகத்தில் இப்படிச் செய்கிறவர்கள் அதே தெய்வீக சுபாவத்தை, அதே மகிமையை, அதே சாவாமையை பெற்றுக் கொள்வார்கள். இதில் வித்தியாசம் என்னவென்றால் நமது ஆண்டவர் எல்லாருக்கும் தலைவராக, அவரது சரீரமாகிய சபைக்கு தலையாக எப்பொழுதும் இருப்பார். சபை அவரது அங்கங்களாக மகிமையில் இருப்பார்கள்.

இயேசு பாவமில்லாமலும், பரிசுத்தராகவும் இருப்பது அவசியமாயிருக்கும் போது, சபையினர் இழிவான மாம்சீக சுபாவத்தில் இருக்கும்போது எப்படி பிதாவுக்கு ஏற்புடையவராக இருக்க முடியும் என்ற கேள்வி வருகிறது. இதற்கு வேத வாக்கியங்கள் கூறுகிற பதில் என்னவென்றால், அவரது சீஷராகும் இந்த வகுப்பாருக்கு அவர்களது அபூரணம் மற்றும் கறைகளுக்கு ஏற்றாற்போல் அவர் தமது ப-யின் புண்ணியத்தை அவர்கள் மேல் சாட்டுகிறார் என்பதாகும். கொடுப்பதற்கும், சாட்டுகிறதற்கும் உள்ள வித்தியாசத்தை பகுத்துணர்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும். அவரது புண்ணியத்தை விரைவில் உலகத்திற்கு கொடுப்பார். ஆனால் இப்போது அவர் சபைக்கு ஒரு சாட்டுதலைச் செய்கிறார்.

உலகத்தாரைப் போல, சபை மாம்சீக சுபாவத்தில் இருந்திருந்தால், அவர்கள் உலகத்தாரைப் போல, இழிவி-ருந்து முன்னேறி மானிட பூரணத்திற்கு வருகிற உரிமையை பெறுவார்கள். அந்த எல்லா உரிமைகளையும் சபைக்கும் அதைப்போல ஆதாமின் சந்ததியினரில் மீதமுள்ளவர்களுக்கும் கொடுக்கும் சலுகையை தமது மரணத்தின் மூலம் இயேசு உத்தரவாதம் அளித்திருக்கிறார். ஆனால் சபை வகுப்பார் அந்த எல்லா மானிட உரிமைகளையும் விட்டுக்கொடுக்கிறார்கள். நாம் தேவனோடு உடன்படிக்கை பண்ணினபோது, பூமிக்குரியவைகளையும் பூமியில் ஜீவிக்கிற உரிமைகளையும், விட்டுவிட்டோம். அவைகளை அர்ப்பணம் பண்ணுகிற அர்த்தத்தில் நம்முடைய உரிமைகளை எல்லாம் விட்டுவிட்டோம்; முழு மனுக்குலத்தைப் போல இளைப்பாறுத-ன் ஆசீர்வாதங்களை குறித்த காலத்தில் நமக்கு கொடுத்திருக்கிறார் என்ற விசுவாசத்தில் நம்புகிறோம். அந்த ஆசீர்வாதங்களை விசுவாசத்தில் ஏற்றுக் கொண்டு, அந்த விசுவாசத்தில் அர்ப்பணம் செய்கிறோம். சபைக்கு அர்ப்பணம் செய்வதற்கு மீதியாயிருப்பது அவர்களது பூமிக்குரிய ஜீவன் மட்டும் தான். சிலருக்கு உற்சாகமும் பலமும் அதிகமாகயிருக்கும், சிலருக்குக் குறைவாக இருக்கும். சிலருக்கு திறமைகள் அதிகமாக இருக்கும். சிலருக்கு குறைவாக இருக்கும். சிலருக்கு ஆயுசு நாட்கள் அதிகமாக இருக்கும், சிலருக்கு குறைவாக இருக்கும். ஆனால் ஒவ்வொருவரும் பெற்றிருக்கின்றவற்றை விட்டு விட வேண்டும், அர்ப்பணிக்க வேண்டும்.

பிரதிஷ்டை பண்ணும்போது சபை வகுப்பார் பூமிக்குரிய சுபாவங்களை தாங்களே முன் வந்து அர்ப்பணம் பண்ணுகிறார்கள். இப்போது இருக்கிற பூமிக்குரிய உரிமைகளையும், பூமியிலே ஒரு அங்கமாக இருப்பதினால் பெறப்போகிற உரிமைகள் அனைத்தையும் அவர்கள் அர்ப்பணம் பண்ணுகிறார்கள். மீட்கும் பொருளின் ப-யின் எந்த ஒரு பகுதியையும் கிறிஸ்து தற்காலத்தில் சபைக்கு கொடுக்கவில்லை. ஆனால் சும்மா அவர்களுக்கு சாட்டுகிறார், கொடுப்பதாக கருதும்படி செய்கிறார். உலகில் ஒரு பங்காக இருப்பதினால் கிடைக்கக்கூடிய பங்கை சாட்டுகிறார்.

இயேசு மரித்தபோது, ஆதாமுக்காக ஒரு மீட்கும் பொருளை ஈடாக செலுத்தவில்லை. இயேசு உயிர்த்தெழுந்தபோது ஒரு மீட்கும் பொருளைக் கொடுக்கவில்லை. அவர் பிதாவிடம் பரமேறி சென்ற போது உலகிற்காக ஒரு மீட்கும் பொருளை கொடுக்கவில்லை. ஆனால் அவரது ப-யின் புண்ணியத்தை பிதாவின் கரத்தில் வைத்தார். இந்த புண்ணியத்தை சுவிசேஷ யுகம் முழுவதும் சபைக்கு மட்டும் சாட்டியிருக்கிறார். ஆனால் இப்போது சபைக்கு சாட்டுவது முடியும் தருவாயில் இருக்கிறது. மேலும் உலக இளைப்பாறுதலை கொடுக்கக்கூடிய வேலையை ஆரம்பிக்க இருக்கிறது. ஆனால் இது ஆரம்பிப்பதற்கு முன்னே சபைக்கு சாட்டப்பட்ட புண்ணியம்

உண்மையிலேயே தெய்வீக நீதிக்கு, மானிட இளைப்பாறுத-ன் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும்.

**சுவிசேஷ யுகத்தின் வேலை அடையாளப்படுத்தப்பட்டது**

யூத பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியன் முதலாவது காளையை கொல்லுகிறான். காளை பூரண மனிதனாகிய கர்த்தராகிய இயேசுவையும், ஆசாரியன் புது சிருஷ்டியாகிய நமது ஆண்டவராகிய இயேசுவையும் குறிக்கிறது. இப்படியாக புது சிருஷ்டியின் நிலைமையையும், மனித சுபாவத்தின் அர்ப்பணத்தையும் அவர் மாதிரியாகக் காண்பித்தார். மாம்சத்தில் இருந்த கிறிஸ்து, பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற ஆசாரியனால் அடையாளப்படுத்தப்பட்டார்.

நம்முடைய ஆண்டவர் தமது மூன்றரை வருட ஊழிய காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் இந்த நிலைமையில் தான் இருந்தார். அந்த காலத்தில் பொன்தூபபீடம், பொன் குத்துவிளக்கின் வெளிச்சம் (தேவனுடைய சத்திய வெளிச்சத்தினை குறிக்கிறது) மற்றும் சமூகத்து அப்பத்தின் ஆசீர்வாதங்கள் (ஆவிக்குரிய உணவு) ஆகிய சலுகைகளை அவர் பெற்றிருந்தார். மூன்றரை வருட கால முடிவில், தம்மை ப-யாக கொடுக்கிற வேலையை நிறைவேற்றி, உண்மையான தூபத்தை எரித்து, இரண்டாவது நிலையை கடந்து சென்றார்.

மூன்றாம் நாளில் நமது ஆண்டவர், இரண்டாவது திரையின் மறுபக்கத்தில் – ஆவிக்குரிய சுபாவத்தில் – புது சிருஷ்டியாக முற்றிலும் பூரணராக எழுந்திருந்தார். இனி அவர் மனிதன் என்ற வார்த்தைக்கே சம்பந்தம் இல்லாதவர். அவர் தமது சீஷர்களுக்கு பல்வேறு உருவங்களில் தரிசனம் கொடுத்தும், இங்கேயும் அங்கேயும் காற்றைப்போல போய்க் கொண்டும் தாம் இனி ஒரு மனிதனல்ல என்பதை நம்பச் செய்தார். பிறகு அவர் உன்னதத்திற்கு ஏறும்போது மகா பெரிய பிரதான ஆசாரியனாக இரத்தத்துடன் சென்றார். இரத்தமானது ப-யின் ஜீவியத்தை குறிப்பிடுகிறது. தேவனுடைய சந்நிதானத்திலே அவர் தோன்றி கிருபாசனத்தில் இரத்தத்தைத் தெளித்தார். கிருபாசனத்தில் இரத்தத்தை தெளித்தது ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு பாவநிவர்த்தி செய்வதற்காகும். பாவநிவர்த்தி செய்தது ஆசாரியர்களுக்கும் லேவியருக்கும் மாத்திரமே, உலகத்தாருக்கல்ல என்பதை நாம் பார்த்தோம். (லேவி.16:6)

பிரதான ஆசாரியன் ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் பாவநிவர்த்தி செய்த பிறகு பிரகாரத்திற்கு சென்று வேறு வேலையில் ஈடுபட்டான். நமது ஆண்டவர் உயிர்த்தெழுந்ததற்கும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கியதற்கும் இடைப்பட்ட பத்து நாட்களில் அவர் மெய்யான ஆசாரியர்களுக்கும் லேவியருக்கும் இரத்தத்தை பிரயோகித்தார். அவரது ப-யின் புண்ணியத்தை சபைக்கு பிரயோகித்தார். நாம் இதை அறிவோம். பாவத்திற்கு பரிகாரம் திருப்தி அடைந்ததால் அதைத் தொடர்ந்து பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது. அவர்களுக்கு தெய்வீக கிருபை வந்திருந்தது ரூபகாரமாயிற்று. (எபி.9:24)

முன்னடையாளத்தில் ஆசாரியன் காளையை காணிக்கையாக செலுத்திய பிறகு, கர்த்தரின் ஆட்டை கொல்லுகிற வேலைக்குச் சென்றான். ஆடு, காளையைக் காட்டிலும் கீழானது. காளையால் நமது ஆண்டவர் அடையாளப்படுத்தப்பட்டார். கர்த்தருடைய ஆடு, அவரது சரீரமாகிய சபையின் உண்மையுள்ள அங்கங்களை அடையாளப்படுத்தியது. சபையின் ப-சுவிசேஷ யுகத்தின் வேலையாக இருக்கிறது. அவர்கள் தங்களை ப-யாக அர்ப்பணிக்க இயலாது. ஏனெனில் அவர்கள் இயற்கையாக மரண தண்டனைக்குட்பட்ட ஆதாமின் சந்ததியினராக இருக்கின்றனர். அவர்கள் ஆசாரியராவதற்கு தகுதியற்றவர்களாயிருந்தனர். மகா பெரிய பிரதான ஆசாரியரின் ப-யின் புண்ணியத்தை அவர்களுக்காக சாட்டுதல் செய்யும்வரை அவர்களால் ஆசாரியராக முடியாது. ஆகையால் மகா பெரிய பிரதான ஆசாரியர் காளையை ப-யாகக் கொடுத்தது போல ஆட்டையும் ப-யாகக் கொடுத்தார்.

அதன் பிறகு அதன் முடிவைப் பார்க்கிறோம். நிழ-ல் ஆட்டின் இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தெளிக்கப்படுகிறது. இது ஆசாரியருக்காகவோ லேவியருக்காகவோ அல்ல, ஜனங்களுக்காக ஆகும். காளையின் இரத்தம்ஆசாரியருக்காகவும் லேவியருக்காகவும் தெளிக்கப்படுகிறது. ஆட்டின் இரத்தம் ஜனங்களுக்காக தெளிக்கப்படுகிறது. (லேவி.16:6,15) இந்த இரண்டு ப-களும் சுவிசேஷ யுகத்தின் சகல ப-களையும் குறிப்பிடுகிறது. கர்த்தராகிய இயேசுவின் ப-மேன்மையானது, சபையின் ப- கொஞ்சம் கீழானது.

**மீட்கும் பொருளில் சபைக்கு பங்கில்லை**

நிழ-ல் காளையின் ப- முழு உலகத்தின் பாவத்திற்கும் போதுமானதாக இருந்தது. ஆனால் சபையும் ப-யில் பங்கு பெற அனுமதிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய ஏற்பாடாக இருந்தது. ப-யில் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெறுகிறவர்கள் மாத்திரமே மகிமையிலும் பங்குபெறும் சிலாக்கியத்தை பெறுவார்கள். தேவ நீதி திருப்தியடைவதற்கு சபையின் எந்த ஒரு அங்கமும் மரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையில் பங்குபெற அது அவசியமாக இருந்தது. நமது ஆண்டவரின் ப- நமது பாவங்களுக்காகவும், நமது ப- அவரது மகிமையில் பங்கு பெறுவதற்காகவும் அவசியமாயிருந்தது. அவர் ப-கொடுக்கிறார். அது நமது ப-யல்ல. அப். பவுல் குறிப்பிடுவது போல நமது சரீரத்தை சும்மா

அர்ப்பணிக்கிறோம். (ரோம.12:1) தேவன் நமது ப-யை கிறிஸ்து மூலமாக ஏற்றுக்கொள்வதில்லை; நேசகுமாரனுக்குள் மாத்திரமே நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். (எபே.1:3-6) எனவே நமது ஆண்டவர் நம்மை ஏற்றுக் கொண்டதினிமித்தமாகவே நாம் அவரது ப-யிலும், மகிமையிலும் பங்கு பெறும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

ஆகையால் நமது ஆண்டவர் ஒரு மானிட ஜீவனை இன்னும் கொடுக்காமல் இருக்கிறார். மானிட ஜீவனை சபைக்கும் கொடுக்கவில்லை. அவர் பெற்றிருந்த மனித ஜீவனின் உரிமையின் ஒரு சிறு பகுதியைக் கூட கொடுக்கவில்லை. நமது ஆண்டவருக்கு ஒரு மாம்சீக சரீரம் தேவையில்லை; அவரது சபைக்கு கூட மாம்சீக சரீரம் தேவையில்லை. இயேசு பூமிக்குரிய உரிமைகளை வைத்து என்ன செய்யப்போகிறார்? நாமும் அதை வைத்து என்ன செய்யப்போகிறோம்? நாம் மறுபடியும் மனிதனாக வேண்டும் என்கிற எண்ணமே நமக்கு இல்லை. அவருக்கும் கூட, மறுபடியும் மனிதனாக வேண்டும் என்கிற எண்ணம் இல்லை. நமது ப- ஏற்புடையதாக இருப்பதற்காகவே கிறிஸ்துவின் ப-யின் புண்ணியம் நமக்கு சாட்டப்பட்டது. சபையின் கடைசி அங்கத்தினர் மகிமையடையும் போது இந்த புண்ணியம் மறுபடியும் விடுவிக்கப்படுகிறது. அப்பொழுது கிறிஸ்துவின் ப-யின் முழுமதிப்பும் உலகின் மனுக்குலத்திற்கு சொந்தமாக்கிக் கொள்ள தயாராக இருக்கும். அந்த சமயத்தில் சபையானது தெய்வீக சுபாவத்தைப் பெற்று, ஆதாமின் சந்ததியாயிருப்பது முடிவடையும். (2பேது.1:4)

இயேசுவின் ப-யின் புண்ணியம் உலகிற்கு சொந்தமாக்கிக் கொள்ளும் இந்த வேலை ஆயிர வருட யுகம் வரை இருக்கும். இரட்சகரின் ராஜ்யம், மனிதரின் இளைப்பாறுத-ன் சலுகைகளை, உண்மையில் ஒரு வரமாக ஆக்கும். ஆகையால் கிறிஸ்துவின் ப-யின் புண்ணியம் உலகிற்கு சொந்தமாக்கப்பட்டவுடனேயே தாம் கிரயத்துக்கு கொண்ட தமது உடைமையை பொறுப்பேற்றுக் கொள்வார். பிறகு அவர் தமது முழு அதிகாரத்தையும் ஆளுகையையும் எடுத்துக் கொள்வார். பிறகு தமது ப-யின் புண்ணியத்தை கொடுத்து மீட்டுக் கொண்டவர்களுக்கு நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுத-ன் ஆசீர்வாதங்களை வழங்குவதற்கு அவர் தயாராக இருப்பார்.

தீர்க்கதரிசி தாவீது மூலமாக யேகோவா தேவன் தமது குமாரனிடம் கூறுவதாவது : "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை (புறஜாதிகள், ஜாதிகள், ஜனங்கள்) உமக்கு சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்." (சங்.2:8) இது மிகவும் சமீபமாயிருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். சம்பத்து வகுப்பாராகிய சபையை கர்த்தர் சொந்தமாக்கிக் கொள்ள இருக்கிறார். ஆதாமின் இனத்திற்கு மனித இளைப்பாறுதல், அவர்களது பூமிக்குரிய வீடாகிய முழு உலகத்தையும் ஏதேன் தோட்டத்தைப் போல் ஆக்குவது ஆகிய ஆசீர்வாதங்களை அவர் கொடுப்பார். இந்த வேலையை தமது சரீரமாகிய சபையுடன் பகிர்ந்து கொள்வார்.

வேத வாக்கியத்தின் கருத்தில் பார்க்கும்போது, மீட்கும் பொருளின் கிரயம் என்பது இன்னும் நிறைவடையாத, முன்னேறிக் கொண்டிருக்கிற காரியமாக இருக்கிறது. இயேசு ஒரு மனிதனான போது அவர் கொடுக்க ஆரம்பித்தார், அவரது மூன்றரை வருட பூமிக்குரிய ஊழிய காலத்தில் அவர் கொடுப்பதில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார்; கல்வாரியில் கொடுப்பதை நிறைவு செய்தார். அதி-ருந்து அவரது ப-யின் புண்ணியத்தை சாட்டுத-ன் மூலம் அந்த உரிமையை சபைக்கு பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். எந்த ஒரு மனிதனும் விட்டு விடாதபடி, முழு உலகத்தின் பாவத்திற்காகவும் திருப்தியடையும் வகையில் அவர் தமது ப-யின் இந்த முழு புண்ணியத்தையும் உடையவராயிருப்பார். ஆயிர வருட காலத்தில் தமது மரணத்தினால் உத்திரவாதமளித்ததை மனுக்குலத்திற்கு கொடுத்துக் கொண்டிருப்பார். மேலும் புதுஉடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்து அவர்களுக்கு அதை பிரயோகிப்பார். சபையானது நிறைவடைந்து, திரைக்குப்பின்னால் சென்றவுடனேயே அந்த புது உடன்படிக்கை ஊர்ஜிதம் செய்யப்படும்.

## ஆவிக்குரிய சுபாவமும் மனித சுபாவமும் ஒன்றல்ல

கிறிஸ்தவ மக்களுடைய கருத்து மிகவும் குழப்பமாக காணப்படுகிறது. உலகிற்கு இயேசு வருவதற்கு முன்னதாக அவர் ஒரு ஆவியின் ஜீவி என்பதையும், மனிதனாகும் போது சில வகையான மாற்றத்தை அனுபவித்தார் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் முன்னுக்கு பின் முரணாக அவர்கள் தவறாகவும் வேதத்திற்கு எதிராகவும், அவர் மனிதனான பிறகு, மனிதனாகவே ("தேவதூதர்களுக்கும் சற்று கீழாக"-) என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்கள். "வார்த்தை மாம்சமானது," "தம்மைத்தாமே தாழ்த்தினார்," என்றென்றைக்குமாக அல்ல, "மரணத்தை உத்தரிப்பதற்காக" மட்டுமே...... "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்" என்பதை நாம் நினைவு கூர வேண்டும். (எபி.2:9)

சுபாவங்களில் வித்தியாசம் உண்டு என்றே வேதம் குறிப்பிடுகிறது. மனுஷருடைய மாம்சம் வேறே மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே என்று பரி. பவுல் குறிப்பிடுகிறார். பூமிக்குரியவைகளில் மிருகங்கள், பறவைகள், மச்சங்கள், மற்றும் மனிதர்கள் என்று இருப்பது போல ஆவிக்குரியவைகளில் தேவதூதர்கள், சேராபீன்கள் மற்றும் கேருபீன்கள் இருக்கிறார்கள். (1 கொரி.15:39-41) பிதாவுடன் அவர் பெற்றிருந்த மகிமையை அவர் விட்டதாக நமது ஆண்டவர் தெளிவாக கூறினார். அவர் தமது சீஷர்களிடம், "மனுஷகுமாரன் தாம்

முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" என்று கூறினார். (யோவா.6:62)

"தாம் முன்னிருந்த இடம்" என்ற சொற்றொடர் அவர் பெற்றிருந்த மாறுபட்ட சுபாவத்தையும் நிலைமையையும் குறிப்பிடுகிறது. இயேசு அநேக தடவை உலகில் இருந்திருக்கிறார். ஆனால் இதற்கு முன்னால் அவர் மாம்சமானதில்லை. இயேசு தேவனுடைய பிரதிநிதியாக ஏதேனில் ஆதாமுடன் ஒரு வேளை இருந்திருக்கலாம். பிதாவின் பிரதிநிதியாக மோசேயிடம் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தது நிச்சயமாக இவர்தான். கர்த்தரும் இரண்டு தூதரும் சோதோமுக்கு சென்ற போது வழியிலே நின்று இந்த காரியத்தைக் குறித்து ஆபிரகாமிடம் பேசியவர்களில் ஒருவர் நிச்சயமாக இவர்தான். அவர்கள் மனிதர்களைப் போல தோன்றி, சாப்பிட்டு, பேசியதை நினைவு கூர்ந்து அவர்கள் தேவ தூதர்கள் என்பதை முன்பு அறியாதிருந்தான். நமது ஆண்டவர் மாம்சமான பொழுது அவர் பூமியில் இருந்தது இது முதல் தடவை அல்ல. அவரது முந்தைய வருகைகளில் ஆவியின் சரீரத்தி-ருந்த அவர் தேவையான மாம்ச சரீரத்தை எடுத்துக் கொண்டு பிதாவின் பிரதிநிதியாக தேவ செய்திகளை மனிதர்களுக்கு கூறி வந்தார்.

மாம்ச சரீரத்தை எடுத்துக் கொள்ளும் இதே சக்தியையே மற்ற தூதர்களும் பயன்படுத்தினார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, நமது ஆண்டவர் பரமேறிய போது. அப்போஸ்தலர்களிடம் தேவதூதர்கள் கூறியதாவது: "க-லேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்." விழுந்து போன தூதர்கள் கூட மனித சரீரங்களை எடுத்துக் கொள்ளக்கூடிய வல்லமையை பெற்றிருந்தனர் என்பதை ஞாபகப்படுத்துகிறோம். அவர்கள் சிற்றின்பங்களுக்காக மனித ரூபமெடுத்து பூமியின் சூழ்நிலையில் வாழ விரும்பினார்கள் என்பதை வேதம் கூறுகிறது. எனவே அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தை விட்டுவிட்டு, மனிதரைப் போல பூமியிலே வாழ்ந்து, ஒரு புது இனத்தை பிறப்பிக்க விரும்பினார்கள்.

### மிகவும் தவறாக புரிந்து கொள்ளக்கூடிய ஒரு பாடம்

இயேசு தமது முதலாம் வருகையில், ஒரு ஆவியின் ஜீவியாக இருந்து கொண்டு, மாம்ச தோலைப் போர்த்திக் கொண்டு- அவதாரம் எடுத்து- தோன்றியிருந்தால் அவர் இரட்சகராகவே ஆகியிருக்க முடியாது. இயேசு ஒரு மனிதன் என்று வேதம் கூறுகிறது. "வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார்."(யோவா.1:14) அவர் ஒரு மனிதனாக பாசாங்கு செய்யவில்லை, அவர் மனிதனுடைய இரட்சகராவதற்கு ஒரு மனிதனாக ஆவது அவசியமாயிருந்தது- ஒரு மனிதனாக பாசாங்கு செய்ய வேண்டிய அவசியமில்லை. உண்மையாகவே அவர் ஒரு மனிதனாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் ஆதாமுக்கு மீட்கும் பொருளாகியிருக்க முடியாது. ஏனெனில் தெய்வீக பிரமாணத்தின் படி "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்பட வேண்டும்." (உபா.19:21)

மீட்கும் பொருள் என்ற வார்த்தை (கிரேக்க மொழியில் ஆண்டிலூட்ரான்) சரியான விலைக்கிரயம் என்று பொருள் கொடுக்கிறது. ஆகையால் இயேசு உண்மையிலேயே பரலோக மகிமையை விட்டுவிட்டார்– அதை விட்டது போல் பாசாங்கு செய்யவில்லை. ஐசுவரியவானாயிருந்த அவர் நம் நிமித்தம், தரித்திரரானார். ஆகையால் அவர் உண்மையிலேயே மனிதனானார். பூரண மனிதனாயிருந்த அவர் தம்மைதாமே யோர்தானில் ஒப்புக்கொடுத்தார். இவர் ஒருவரே ஆதாமுக்கு சரியான விலைக்கிரயமாக இருக்க முடியும். நமது ஆண்டவர் பிதாவிடம் கூறுவதைப் பற்றி வேதம் கூறுகிறதாவது: மரணத்தை ருசிபார்க்கும்படி "நீர் ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்."(எபி.10:5) இந்த சரீரம் மரணத்தை ருசிபார்க்கும்படியாக தேவனால் ஆயத்தம் பண்ணப்பட்டது என்ற உண்மையை நம்மில் அநேகர் கவனிக்கத் தவறுகிறோம். அநேகர் நினைப்பது போல அந்த சரீரம் கர்த்தராகிய இயேசுவை நிரந்தரமாக, எல்லா பரிசுத்த தூதர்களுக்கும் முன்பாக தாழ்மைப்படுத்துவதற்காக அல்ல, மேலும் பழைய கீர்த்தனைகளில் கூறப்பட்டது போலவும் அல்ல,

"கல்வாரியில் இரத்தஞ்சிந்துகிற
ஐந்து காயங்களை அவர் பெற்றிருக்கிறார்."

குறைவுள்ள சரீரத்தோடு நமது ஆண்டவர் பரலோகம் செல்லவில்லை; மேலும் சூழ்நிலைக்கு ஒத்திசைவு இல்லாமலும் செல்லவில்லை. தமது ப–யின் வேலையை அவர் முன்பே நிறைவேற்றிவிட்டார். அவரது ப–யின் புண்ணியம் தேவனின் கைகளில் இருக்கிறது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு (இந்த பாடம் 1915ல் எழுதப்பட்டது) முன்பாக நிறைவேற்றிய ப–யை தேவன் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஒரு பூரண மனிதன் பெற்றிருக்க வேண்டிய பூமிக்குரிய ஜீவனுக்குரிய உரிமைகளை நீதியின் புத்தகத்தில் நமது இரட்சகர் வரவு வைத்திருக்கிறார்.

தேவன், பிதாவாகிய ஆதாமுக்கு மானிட ஜீவனையும், மானிட ஜீவ உரிமைகளையும் அளித்தபோது, உடனே ஆதாம் பூமியின் மகாராஜாவானான். அதேபோல் இயேசு இயற்கையான மனிதனானபோது, இயற்கையான ஆட்சியாளரானார். பூமி அவருக்குரியதாயிருந்தது. பூரண மனிதன் பூமி மற்றும் அதனுடைய முழு சம்பூரணத்தின் உரிமைகளையும் உடையவராயிருக்கிறார். இந்த உரிமைகளைக்

கொண்டு இந்த பூமியின் ராஜாவாகிறதற்கு பதிலாக, இந்த பூமிக்குரிய உரிமைகளை அர்ப்பணித்து கீழ்ப்படிதலுக்கான பரிசைப் பெற்றுக்கொண்டார் – ப–யின் பரிசை அல்ல, ஆனால் கீழ்ப்படிதலுக்கான பரிசை. அவர் இன்னும் மானிட ஜீவ உரிமைகளை உடையவராயிருக்கிறார். அதை உலகின் மனுக்குலத்திற்கு கொடுக்க இருக்கிறார். தேவனோடு இசைவுக்கு வர விரும்புகிறவர்களுக்கும் கீழ்ப்படித–ன் உடன்படிக்கைக்குள் நுழைகிறவர்களுக்கும் அதை கொடுப்பார். ஏதேனில் இழந்தவைகளையும், கல்வாரியில் மீட்டவைகளையும் இயேசு தமது சொந்த இரத்தத்தால் அவர்களை முழு இளைப்பாறுதலுக்கு தகுதியுள்ளவர்களாக்குகிறார்.

நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு மாம்சத்தில் தோன்றியது, நூற்றாண்டுகளுக்கு முன்பு அவரும் மற்ற தூதர்களும் காணப்பட்டதற்கு ஒப்பானது. இது அவர் இன்னும் மனிதனாயிருக்கிறார் என்று குறிக்கவில்லை. கதவு மூடியிருக்கும் போது ஒரு மனிதனாக அவர் அறைக்குச் செல்லவில்லை, ஒரு ஆவியின் ஜீவியாக மூடியிருக்கும் அறைக்குள் சென்றிருக்கக் கூடும். ஒரு ஆவியின் ஜீவியாக ஒரு உருவத்தை எடுத்துக் கொண்டு, தரிசனம் கொடுத்துவிட்டு, திரும்பி மறைந்திருக்கக் கூடும். உருவத்தை எடுத்தல், அதை விட்டுவிடுதல், மறைதல் இதெல்லாம் மாமிசத்திற்கு மாத்திரம் உரியதல்ல, உடைக்கும் உரியதாகும், ஒரு தடவை அவர் ஒரு வழிப்போக்கனைப் போலவும், ஒரு தடவை தோட்டக்காரனைப் போலவும் தரிசனமானார்; கதவு மூடியிருக்கும்போது மேல் அறையில் தாம் முன்பிருந்ததைப் போல தரிசனமானார். இந்த பல்வேறு தடவைகளில் அவர் தேவைக் கேற்றவாறு வெவ்வேறு ஆடைகளில் தரிசனமானார். தேவைக்கேற்ப ஆடையையும், சரீரத்தையும் சிருஷ்டித்துக்கொள்வது அவருக்கு சுலபமாக இருந்தது. அநேக கிறிஸ்துவ மக்கள் எங்கே தவறான அபிப்பிராயம் கொள்கிறார்கள் என்பதைக் கூறுவது கடினமாக இருக்கிறது. தவறை கண்டிப்பதில் மிகவும் தயவுடனும், அனுதாபத்துடனும் செய்தால் நமக்கு நல்லது. நாமும் ஒரு காலத்தில் இந்த தவறை செய்தபோது, மற்றவர்கள் அதை குறைகூறும் போது நாம் எப்படி பிடிவாதமாக இருந்தோம் என்பதை நினைவுகூரவேண்டும்.

**நமது கர்த்தர் இனி மனிதனல்ல**

நமது ஆண்டவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் அல்லது ஆவியிலே உயிர் கொடுக்கப்பட்டார். முன் இருந்ததுபோல ஒரு ஆவியின் ஜீவியாக ஆனார். இந்த ஆவியின் ஜீவியைத்தான் தர்சு பட்டணத்தானாகிய சவுல் தமஸ்குவுக்கு போகிற வழியிலே பார்த்தான். சவுல் பார்த்தது மகிமையான பிரகாசம் என்று நமக்கு கூறுகிறான். அங்கே பிரகாசித்தது கிறிஸ்துவின் மாமிசமல்ல. கிறிஸ்துவை அவரது தோற்றத்தில் ஒரு நொடிப்பொழுது காட்சியை கண்டதாக அப். பவுல் கூறுகிறார். "எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்." சபையின் உயிர்த்தெழுத–ன் பிறப்பை குறிப்பிட்டு, குறித்த காலத்துக்கு முன் பிறந்த என்று கூறுகிறார்.

நாம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். பிறப்பு முதலாம் உயிர்த்தெழுத–ல் இருக்கும், மரித்தோரி–ருந்து எழுந்த முதற்பேறுமானவர் என்று இயேசுவைப்பற்றி கூறப்பட்டது போல, சபையானது ஆவியின் நிலைமையில் பிறக்கும். பிறகு "அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்." (1யோவா.3:2) அப்பொழுது நாம் மாம்சத்தில் இருக்கமாட்டோம்.

நமது மகிமையடைந்த ஆண்டவரைப் பார்க்கும்பொழுது நமது கண்கள் பாதிப்படையாது. அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்போம்! நாம் அவருடன் இருப்போம்! இதற்கு முன்னதாக நாம் "மறுரூபமாக்கப்படுவோம்" என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது."

-------------------------------

--2206--

# நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ-உரிமைகளின் சாற்றப்படுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல்

“எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்” எனும் வார்த்தைகள் குறிப்பதென்ன என்பதைப் புரிந்துகொள்வதில் தேவனுடைய ஜனங்களில் அநேகருக்குச் சிரமம் இருப்பதாகத் தெரிகின்றது. ஆதாமுக்கும், அவரது சந்ததிக்குமான மீட்கும்பொருளெனத் தமது மனுஷீக ஜீவனை நமது கர்த்தர் இயேசு கொடுத்துவிட்டாரென்றால், “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன், நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்” என்று நாம் வாசிக்கிறபடி, அவரது கிருபையினை ஏற்றுக்கொள்பவர்களை நீதிமானாக்குகையில் மனுஷீக ஜீவனுக்கான உரிமைகளைக் கொடுக்கத்தக்கதாக, எப்படி அவர் இப்பொழுது அவ்வுரிமைகள் எதையேனும் பெற்றவராய் இருக்கமுடியும்? என்று கேள்வி கேட்கின்றனர் (யோவான் 3:36).

இந்தக் கேள்விக்கான பதிலைப் புரிந்துகொள்வதற்கு, மீட்கும்பொருள் கொடுக்கப்படுகிற காரியத்திற்குப் பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். முதலாவதாக நமது கர்த்தரால் அவரது முப்பதாம் வயதின்போது தண்ணீர் ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்ட அவரது அர்ப்பணமானது, தேவனுக்கு அவரது ஜீவனை அவர் ஒப்புக்கொடுப்பதை, கையளிப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவர் ஒப்புக்கொடுத்த ஜீவனானது, பூரண மனுஷீக ஜீவனாக இருந்தது மற்றும் இதற்கான முழு உரிமையையும் உடையவராய் அவர் இருந்தார். அவர் “பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்” இருந்தார் என்று பரிசுத்த பவுல் அடிகளார் நமக்குத் தெரிவிக்கின்றார் (எபிரெயர் 7:26). நமது கர்த்தர் நேரடியான விதத்தில் - அதாவது ஒரு மனித தகப்பனிடமிருந்து தமது ஜீவனைப் பெறும் நேரடியான விதத்தில் - ஆதாமின் சந்ததியினரிலுள்ள ஓர் அங்கத்தினனல்ல; ஆகையால் அவரது ஜீவனானது, மீதமுள்ள உலகத்தாருக்கு இருப்பது போன்று ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஜீவனாக இருக்கவில்லை. இதற்குமேல் எதுவும் அவசியப்படாது. ஆதாமின் ஜீவனுக்கும், பூரணத்திற்கும் முழுக்க சமமானதை, கர்த்தர் ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆனால் அவர் தம்முடைய ஜீவனை ஆதாமின் கரங்களில் ஒப்புக்கொடுக்கவில்லை; அதை வேறு யாருக்கும் கொடுத்திடாமல், அவர் அதைப் பிதாவின் கரங்களில் மாத்திரமே கொடுத்திட்டார்.

நம்முடைய மீட்பர், அவரது மூன்றரை வருட ஊழியங்களின்போது, தம்முடைய ஜீவனைக் கொடுத்துக்கொண்டு வந்தார். அந்த வேலையைக் கல்வாரியில் “முடிந்தது” என்று கூறி நிறைவேற்றி முடித்தார். அவர் அங்கு மரணத்திற்குள்ளான தம்முடைய ஸ்நானத்தினை நிறைவேற்றி முடித்தார்; அவர் முடிவுபரியந்தம் தம்முடைய சுயத்தை ஒப்புக்கொடுத்துக்கொண்டு வந்தார். ஆனாலும் அந்த மனுஷீக ஜீவனை ஆதாமிற்கும், அவரது சந்ததியாருக்கும் அவர் இன்னமும் பயன்படுத்திடவில்லை. அவர் அதைப் பிதாவினுடைய கரங்களின் வசத்தில் கொடுத்து மாத்திரம் வைத்துள்ளார். அது பறிக்கொடுக்கப்படாத ஜீவனாகும்; அது எங்கும் அடமானம் வைக்கப்படாத ஜீவனாகும்; அது பறிமுதல்செய்யப்படாத ஜீவனாகும். அவர் பிதாவினுடைய திட்டத்திற்கு இசைவாக, தம்முடைய ஜீவனை ஒப்படைக்க மாத்திரமே செய்தார் (லூக்கா 23:46).

## இரண்டு தளங்களில் ஜீவனுக்கான உரிமைகள்

பிதா அவரை மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பின போது, அவர் இயேசுவை ஓர் ஆவிக்குரிய ஜீவியாக்கினார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் (1 பேதுரு 3:18). அவரிடமிருந்து அவரது பூமிக்குரிய ஜீவன் எடுக்கப்பட அவர் அனுமதித்ததில் காட்டின அவரது கீழ்ப்படிதலுக்கான வெகுமானமாக அவர் புதிய சுபாவத்தில் உயிர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய ஜீவனைப் பெற்றுக்கொண்டார். ஆனால் அவர் பூமிக்குரிய ஜீவனுக்கான தம்முடைய உரிமையினை இழந்துபோய்விடவில்லை/பறிக்கொடுத்திடவில்லை; ஆகையால் ஒரு புதுச்சிருஷ்டியான அவர், பூரண மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையினைத் தொடர்ந்து உடையவராய்க் காணப்பட்டார். பூரண ஜீவனுக்குரிய அனைத்தும் அவருக்கு உரியதாய் இருந்தது. தம்முடைய ஜீவனை எடுத்துப்போடுவதற்கு அவர் யூதர்களை அனுமதித்தார், ஆனாலும் ஒருபோதும் ஜீவனுக்கான தமது உரிமையினை அவர் துறந்திடவுமில்லை, இழந்துபோய்விடவுமில்லை.

--2207--

ஆகையால் அவர் பிதாவினால் ஜீவனுக்கு உயிர்த்தெழுப்பப்பட்டபோது, அவர் ஆவிக்குரிய சுபாவத்திற்கான உரிமையினை மாத்திரமல்லாமல், பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையையும்கூட உடையவராய் இருந்தார்; ஆனால் இந்தப் பூமிக்குரிய சுபாவத்தினைத் தமக்கென்று அவர் பயன்படுத்தப்போகிறதில்லை; ஏனெனில் திவ்விய சுபாவத்தையுடைய யார் ஒருவரும் பூமிக்குரிய சுபாவத்தினைப் பயன்படுத்துவதுமில்லை, அதற்காக விருப்பம் கொள்வதுமில்லை. ஆதாமுக்கும், அவரது சந்ததியாருக்கும் இலவசமாய் மனுஷீக ஜீவனைக் கொடுப்பதற்கான, அருளுவதற்கான உரிமையே அவரது உரிமையாய் இருந்தது மற்றும் இந்த நோக்கத்தினை அவர் உலகத்திற்கு வந்தபோது, மனதில் கொண்டவராய் இருந்தார்.

ஆகையால் கர்த்தராகிய இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, நாற்பது நாட்கள் கழித்து, உன்னதத்திற்கு ஏறிப்போனபோது, அவர் பெற்றிருந்த உரிமைகள் அனைத்தையும் உடையவராகவே இருந்தார். மனுஷீக ஜீவனுக்கான உரிமையினை ஒருபோதும் அவர் பறிக்கொடுக்காததால், அந்த உரிமை அவரிடத்தில் இருந்தது; தம்முடைய கீழ்ப்படிதலுக்கு வெகுமானமாகக் கிடைத்த திவ்விய சுபாவத்தையும்கூட - ஒரு மேலான உரிமையையும்கூட, ஒரு மேலான சுபாவத்தையும்கூட - அவர் உடையவராய் இருந்தார். ஆனால் அவர் உன்னதத்திற்கு ஏறினபோது, அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தினை மனுக்குலத்தின் உலகத்திற்காகப் பயன்படுத்திடவில்லை; ஒருவேளை பயன்படுத்தியிருந்தால் ஒட்டுமொத்த உலகமானது பொல்லாங்கனுக்குள் இப்பொழுது வீழ்ந்து கிடக்காது (1 யோவான் 5:19). ஒருவேளை நம்முடைய மீட்பர் பரத்திற்கேறினபோது, தம்முடைய புண்ணியத்தினைப் பயன்படுத்தியிருப்பாரானால், அது உலகத்தினுடைய பாவங்களை நிவர்த்திச் செய்திருந்திருக்கும்; ஆனால் அவர் இதைச் செய்யவில்லை. சபை மாத்திரமே உலகத்தின் மீதுள்ள ஆக்கினைத் தீர்ப்பினின்று தப்பித்துள்ளது என்று வேதவாக்கியங்களானது நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது (உரோமர் 8:1). இன்னமும் உலகமானது பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளவர்களே, இந்த ஆக்கினையினின்று தப்பித்துக்கொண்ட ஒரே ஜனங்களாகக் காணப்படுகின்றனர். வேறு யாருமல்ல, அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பார் மாத்திரம் கிறிஸ்துவிடமிருந்து புண்ணியத்தினையும், நீதிமானாக்கப்படுதலையும் பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கின்றனர்.

## சபைக்குத் திரும்பக்கொடுத்தலின் காரியங்கள் சாற்றப்படுகின்றது

அப்படியானால் எப்படி நமது கர்த்தர் சபைக்கு அப்புண்ணியத்தினைப் பயன்படுத்திடுவார்? நேரடியாக இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம். ஒருவேளை அவர் தமது புண்ணியத்தினை நேரடியாய்ச் செயல்படுத்திடுவாரானால், அது சபைக்கு மனுஷீக ஜீவனை, மனுஷீக பூரணத்தைக் கொடுத்துவிடும். தேவன் சபைக்குச் சில மேலானவைகளை வைத்திருக்கின்றார் - அதாவது இயேசு அடைந்திட்டதான அதே திவ்விய சுபாவத்தினைச் சபை அடைய வேண்டும் என்று தேவன் திட்டம் பண்ணியுள்ளார். இதனை சபை இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம் அடைந்திடும். இது குறிப்பது என்னவெனில் . . . பிதாவின் சித்தத்திற்குக் கர்த்தர் தம்முடைய மனுஷீக ஜீவனைப் பலிசெலுத்தி, தம்முடைய பூமிக்குரிய உரிமைகளைக் கொடுத்தது போன்று, அவரோடுகூடப் பங்கடைய வேண்டுமெனில், அவரது மணவாட்டி வகுப்பாரில் அங்கத்தினர்களாகும் அனைவரும்கூட இப்படியாகவே செய்திட வேண்டும். அவரோடுகூட நாம் பாடுபட்டால் மாத்திரமே, அவரோடுகூட நாம் ஆளுகை செய்ய முடியும் (2 தீமோத்தேயு 2:11, 12) என்பதேயாகும்.

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24). பின்னர் "நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் சீஷனும் இருப்பான்" (யோவான் 12:26). இப்படியாக யாரெல்லாம் இந்தச் சுவிசேஷ யுகத்தில் செய்வார்களோ, அவர்கள் அதே திவ்விய சுபாவத்தையும், அதே மகிமையையும், அதே அழியாமையையும் அடைவார்கள் - ஆனால் வித்தியாசம் என்னவெனில் நமது கர்த்தர் எப்போதுமே அவர்கள் அனைவருக்கும் தலையாக இருப்பார்; தம்முடைய சரீரமாகிய சபையின் மீது பிரதானமானவராய் இருப்பார் மற்றும் அவர்கள் எப்போதும் அவரது அங்கத்தினர்களென, மகிமையில் காணப்படும் சபையாக இருப்பார்கள்.

இயேசு பரிசுத்தமானவராகவும், மாசில்லாதவராகவும் காணப்படுவது அவசியமாய் இருந்ததானால், சபை சீரழிந்த மனித சுபாவத்தில் காணப்படுகையில், சபை எப்படிப் பிதாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாகிட முடியும்? என்ற அடுத்த கேள்வி எழும்புகின்றது. இயேசுவின் சீஷர்களாகும் இந்த வகுப்பாருடைய குறைவுகளையும், பூரணமின்மைகளையும் மூடப்படத்தக்கதாக, அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தினை

இவர்களுக்குத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார் என்று வேதாகமம் பதிலளிக்கின்றதாய் இருக்கின்றது. Give/**கொடுப்பதற்கும்,** impute/**சாற்றுவதற்கும்** இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் எதிர்காலத்தில் தம்முடைய புண்ணியத்தினை உலகத்திற்குக் கொடுத்திடுவார். ஆனால் இப்பொழுதோ அவர் அதைச் சபைக்குச் சாற்றுகின்றார்.

சாற்றப்படுதல் என்று சொல்லுகையில், ஒருவேளை சபையானது பூமிக்குரிய சுபாவத்திலேயே, உலகத்தாரைப்போன்று இருந்துவிட்டால், அவர்களும் போகப்போக உலகத்தைப் போன்று, சீர்க்கெட்ட நிலைமையினின்று மனித பூரணத்திற்கு வந்திடுவதற்கான உரிமையினை உடையவர்களாய் இருப்பார்கள். இயேசு தம்முடைய மரணத்தின் வாயிலாக சபைக்கும், மீதமுள்ள ஆதாமின் சந்ததிக்கும் அந்த உரிமைகள் யாவற்றையும் கொடுத்திடும் சிலாக்கியத்தினைப் பெற்றுக்கொண்டவரானார். ஆனால் இந்த வகுப்பார், அதாவது சபை மனித பூரணத்திற்கான அந்த உரிமைகள் அனைத்தையும் துறந்துவிடுகின்றனர். நாம் நம்மையே தேவனுக்கு அர்ப்பணிக்கையில், பூமியின் மற்றும் பூமிக்குரிய காரியங்களின் சுதந்தரவாளிகளாகுவதற்கான நம்முடைய உரிமைகளை நாம் துறந்துவிட்டோம்; அதாவது அவற்றைக் கையளித்துவிடும் விதத்தில் மாத்திரமே நாம் துறந்துவிடுகின்றோம். விசுவாசத்தில், இயேசு ஏற்றகாலத்தில் மனுக்குலத்தின் ஒட்டுமொத்த உலகத்திற்கும் உரியதான திரும்பக்கொடுத்தலின் அதே ஆசீர்வாதங்களை நமக்கும் கொடுத்திருந்திருப்பார் என்று நாம் நம்புகின்றோம். விசுவாசத்தினாலே அந்த ஆசீர்வாதங்களை நாம் ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தினாலே அவற்றைக் கையளித்தும் விடுகின்றோம். சபை செய்ய வேண்டிய மீதிக் காரியம், அவர்கள் தங்கள் பூமிக்குரிய ஜீவியங்களைக் கையளிப்பதேயாகும். சிலருக்கு மிகுதியான பெலன் காணப்படலாம் மற்றும் சிலருக்குக் கொஞ்சம் பெலன் காணப்படலாம்; சிலருக்குத் தாலந்துகள் அதிகமாய்க் காணப்படலாம் மற்றும் சிலருக்குக் கொஞ்சமாகக் காணப்படலாம்; சிலருக்கு ஜீவியக் காலம் அதிகமாய் இருக்கலாம் மற்றும் சிலருக்குக் கொஞ்சமாக இருக்கலாம்; எப்படியிருப்பினும், ஒவ்வொருவரும் பெற்றிருக்கும் எக்காரியமும் கையளிக்கப்பட வேண்டும், ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

ஆகையால் அர்ப்பணிப்பின்போது, சபை வகுப்பார் தங்களது பூமிக்குரிய சுபாவத்தினை மனமுவந்து கையளித்து விடுபவர்களாகக் காணப்படுகின்றனர். தற்காலத்தில் தங்களுக்குரியதான பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் மற்றும் ஒருவேளை அவர்கள் உலகத்தோடு தொடர்ந்து காணப்பட்டிருந்தார்களானால், அவர்களுக்கு உரியதாய் இருந்திருக்கும் அந்த உரிமைகளையும்கூடச் சேர்த்து அவர்கள் கையளித்துவிடுகின்றனர். இயேசு தற்காலத்தில் சபைக்கு மீட்கும்பொருள் - பலியில் எதையும் கொடுக்கிறதில்லை, மாறாக அவர்கள் ஒருவேளை உலகத்தில் ஒரு சாராராய் இருந்திருந்தார்களானால், அவர்கள் பெற்றிருக்க வாய்ப்புள்ளதை, அவர்களுக்குச் சாற்ற மாத்திரமே செய்கின்றார்.

இயேசு மரித்தபோது, அவர் ஆதாமிற்காக ஒரு மீட்கும்பொருளினை **(pay) விலையாகச் செலுத்தித் தீர்க்கவில்லை.** இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டபோதும் அவர் மீட்கும்பொருளினை **(paid) விலையாகச் செலுத்தித் தீர்க்கவில்லை**; மேலும் அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்ற போதும்கூட அவர் உலகத்திற்காக மீட்கும்பொருளை **(pay) விலையாகச் செலுத்தித் தீர்க்கவில்லை.** அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தினைப் பிதாவின் கரங்களில் **(laid) கொடுத்து** வைத்தார். இந்தப் புண்ணியத்தினைச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் சபைக்கு மாத்திரமே அவர் **சாற்றிக்கொண்டிருந்திருக்கின்றார்**; ஆனால் இப்பொழுதோ சபைக்குச் சாற்றும் காரியத்தினை அவர் முடிக்கவிருக்கின்றார் மற்றும் திரும்பக்கொடுத்தலை உலகத்திற்குக் கொடுத்திடும் வேலை துவங்க இருக்கின்றது; மற்றும் அது துவங்குவதற்கு முன்னதாக, சபைக்குச் சாற்றப்பட்ட (கடனாகக் கொடுக்கப்பட்ட) புண்ணியமானது, மனிதனுக்கான திரும்பக்கொடுத்தலுக்கு அடிப்படையாகத் **திவ்விய நீதிக்கு நிஜமாய் (paid over) விலையாகச் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.**

## சுவிசேஷ யுகத்தின் வேலை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

யூத பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியனால் முதலாவதாக காளை கொல்லப்படுகின்றது. அந்தக் காளை பூரண மனுஷனாகிய நமது கர்த்தர் இயேசுவையும், ஆசாரியன் புதுச்சிருஷ்டியாகிய நமது கர்த்தர் இயேசுவையும் குறிக்கிறது. இப்படியாக இவர் நிழலில் மனுஷீக சுபாவத்தின் அர்ப்பணத்தை அடையாளப்படுத்திக் காண்பிக்கின்றார்; மேலும் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற ஆசாரியனால் மாம்ச சரீரத்தில் காணப்படும் புதுச்சிருஷ்டியின் நிலைமையும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

நமது கர்த்தர் தமது மூன்றரை வருட ஊழியக்காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் இந்த நிலைமையில்தான் இருந்தார். அந்தக் காலத்தில் பொன் தூபபீடம் மற்றும் (தேவனுடைய சத்திய வெளிச்சத்தினைக் குறிக்கும்) பொன் குத்துவிளக்கின் வெளிச்சம் என்ற சிலாக்கியங்களையும் மற்றும் (ஆவிக்குரிய உணவாகிய) சமூகத்து அப்பத்தின் ஆசீர்வாதங்களையும் அவர் பெற்றிருந்தார். மூன்றரை வருடகால முடிவில், தம்மைப் பலியாகக் கொடுக்கிற வேலையை நிறைவேற்றி, உண்மையான தூபத்தை எரித்து, இரண்டாவது திரையைக் கடந்து சென்றார்.

மூன்றாம் நாளில் நமது கர்த்தர் இரண்டாம் திரைக்கு அப்பால் - ஆவிக்குரிய தளத்தில் - புதுச்சிருஷ்டியாக முற்றிலும் பூரணராக - மனிதன் என்ற வார்த்தைக்கே சம்பந்தம் இல்லாதவராக எழுந்திருந்தார். அவரால் காற்றுபோன்று வந்துபோய் இருக்க முடியும். பல்வேறு தோற்றங்களில் தோன்றி, இங்கேயும் அங்கேயும் காற்றைப்போலப் போய்வந்து, தாம் இனி ஒரு மனிதனல்ல என்பதை தம் சீஷர்கள் நம்பச் செய்திட்டார். பிறகு அவர் உன்னதத்திற்கு ஏறும்போது மகாபெரிய பிரதான ஆசாரியனாக இரத்தத்துடன் சென்றார். இரத்தமானது பலியின் ஜீவனைக் குறிப்பிடுகின்றது. தேவனுடைய சந்நிதானத்திலே அவர் தோன்றி கிருபாசனத்தில் இரத்தத்தைத் தெளித்தார். கிருபாசனத்தில் இரத்தத்தைத் தெளித்தது, ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு பாவநிவர்த்தி செய்வதற்காகும். இந்தப் பாவநிவர்த்தி செய்யப்பட்டது ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் மாத்திரமே, உலகத்தாருக்கல்ல என்று நாம் காண்கின்றோம் (லேவியராகமம் 16:6).

பிரதான ஆசாரியன் ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் பாவநிவர்த்தி செய்த பிறகு பிரகாரத்திற்குச் சென்று வேறு வேலையில் ஈடுபட்டார். நமது கர்த்தர் பரமேறினதற்கும், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கியதற்கும் இடைப்பட்ட பத்து நாட்களில் அவர் நிஜமான ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் இரத்தத்தைப் பிரயோகித்தார். தம் புண்ணியத்தைச் சபைக்குப் பிரயோகித்தார். நாம் இதை அறிவோம்; பாவத்திற்கான இப்பரிகாரத்தினால் இதைத் தொடர்ந்து பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட காரியமானது, அவர்களுக்கு தெய்வீகக் கிருபை கடந்து வந்துள்ளதை ரூபகாரப்படுத்திற்று (எபிரெயர் 9:24).

நிழலில் ஆசாரியன் காளையின் பலியை ஏறெடுத்த பிறகு, கர்த்தரின் ஆட்டை கொல்லுகிற வேலையைத் தொடர்கின்றார். காளையைக்காட்டிலும் ஆடு வலுக்குறைந்தது. காளை நமது கர்த்தருக்கு அடையாளமாயிருக்கின்றது. கர்த்தருடைய ஆடு, அவரது சரீரமாகிய சபையின் உண்மையுள்ள அங்கங்களை அடையாளப்படுத்துகின்றது. சபையின் பலியை ஏறெடுப்பதே சுவிசேஷ யுகத்தின் வேலையாக இருக்கின்றது. இவர்கள் தங்களைப் பலியாக ஏறெடுத்திட இயலாது; ஏனெனில் இவர்கள் சுபாவத்தின்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆதாமின் சந்ததியினராக இருப்பதினால் ஆசாரியராய்ச் செயல்படுவதற்குத் தகுதியற்றவர்களாயிருந்து, மகாபெரிய பிரதான ஆசாரியன் தம்முடைய புண்ணியத்தை இவர்களுக்குச் சாற்றிடும்வரை இவர்களால் ஆசாரியராகிட முடியாது. ஆகையால் காளையின் பலியை ஏறெடுத்ததுபோலவே, மகா பிரதான ஆசாரியன் ஆட்டின் பலியையும் ஏறெடுத்தார்.

அதன்பிறகு அதன் முடிவைப் பார்க்கிறோம். நிழலில் ஆட்டின் இரத்தம் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தெளிக்கப்படுகிறது; மற்றும் இது ஆசாரியருக்காகவோ லேவியருக்காகவோ அல்ல, ஜனங்களுக்காகத் தெளிக்கப்படுகிறது. காளையின் இரத்தம் ஆசாரியருக்காகவும், லேவியருக்காகவும் தெளிக்கப்படுகிறது; ஆட்டின் இரத்தம் ஜனங்களுக்காக தெளிக்கப்படுகிறது (லேவியராகமம் 16:6, 15). இந்த இரண்டு பலிகளும் சுவிசேஷ யுகத்தின் சகல பலிகளையும் அடையாளப்படுத்துகின்றது. கர்த்தராகிய இயேசுவின் பலி மேன்மையானது, இதற்கு அடுத்தபடியானது சபையின் பலியாகும்.

## மீட்கும்பொருள் வழங்கப்படுவதில் சபை பங்குவகிப்பதில்லை

முழு உலகத்தின் பாவத்திற்கும், நிஜமான காளையினுடைய பலியின் புண்ணியமானது போதுமானதாகும். ஆனால் சபையும் பலியில் பங்குபெற அனுமதிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய ஏற்பாடாக இருந்தது. பலியில் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெறுகிறவர்கள் மாத்திரமே மகிமையிலும் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். தேவ நீதி திருப்தியடைவதற்கு சபையின் எந்தவொரு அங்கமும் மரிக்கவேண்டிய அவசியமில்லை; ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையில் பங்குபெற அது அவசியமாக இருந்தது. நமது கர்த்தரின் பலி நமது பாவங்களுக்காகவும், நமது பலி நாம் அவரது மகிமையில் பங்குபெறுவதற்காகவும் அவசியமாயிருந்தது. அவர் பலியானார்; அது நமது பலியல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவதுபோல நமது சரீரங்களை நாம் அர்ப்பணிக்க

மாத்திரமே செய்கிறோம் (ரோமர் 12:1). தேவன் நமது பலியைக் கிறிஸ்து மூலமாக ஏற்றுக்கொள்வதில்லை; நேசக் குமாரனுக்குள் மாத்திரமே நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் (எபேசியர் 1:3-6) எனவே நமது ஆண்டவர் நம்மை ஏற்றுக்கொண்டதினிமித்தமாகவே நாம் அவரது பலியிலும், மகிமையிலும் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

ஆகையால் நமது கர்த்தரிடம் இன்னமும் கொடுக்கப்படாத/பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள மனுஷீக ஜீவன் ஒன்று காணப்படுகின்றது. அவர் சபைக்கு மனுஷீக ஜீவனைக் கொடுக்கிறதில்லை. அவர் தாம் பெற்றிருக்கும் மனுஷீக ஜீவனுக்கான உரிமையின் ஒரு பாகத்தைக்கூடப் பங்குபோடுவதில்லை. கர்த்தருக்குப் பூமிக்குரிய சரீரம் அவசியமில்லை; அவரது சபைக்கும் பூமிக்குரிய சரீரங்கள் அவசியப்படுவதில்லை. பூமிக்குரிய உரிமைகளைக்கொண்டு இயேசுவுக்கு என்ன பயன் இருக்கிறது அல்லது நாம் அவற்றைக்கொண்டு என்ன செய்யப்போகின்றோம்? மறுபடியுமாக மனிதர்களாகிடுவதற்கு நாம் ஒருபோதும் நோக்கம்கொண்டிருக்கிறதில்லை; கர்த்தரும் மறுபடியுமாக மனிதனாகிட நோக்கம் கொண்டிருக்கவில்லை. நம்மை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பலிகளாக்கிடும் நோக்கத்திற்காக மாத்திரமே கிறிஸ்துவின் புண்ணியமானது நமக்குச் சாற்றப்படுகிறது; மேலும் சபையின் கடைசி அங்கத்தினன் மகிமையடைகையில், அந்தப் புண்ணியமானது மீண்டுமாகத் திரும்பிவிடுகின்றது. அப்போது மனுக்குலத்தின் உலகத்திற்கெனப் பயன்படுத்தத்தக்கதாகக் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் முழுமையாய் ஆயத்தமாய்க் காணப்படும்; ஏனெனில் சபை அப்போது திவ்விய சுபாவமுடையவர்களாகி இருப்பதினால், அவர்கள் அதற்குமேல் ஆதாமின் சந்ததியராய் இருப்பதில்லை (2 பேதுரு 1:4).

அந்த வேலை, அதாவது இயேசுவின் புண்ணியத்தினை உலகத்தின் சார்பாய்ப் பயன்படுத்துவது என்பது, ஆயிரவருட யுகத்திற்குரியதாகும்; அப்போது மீட்பரின் இராஜ்யமானது, மனிதனுக்கான திரும்பக்கொடுத்தலை மெய்யான ஆசீர்வாதமாக்கிடும். ஆகையால் கிறிஸ்துவின் புண்ணியமானது உலகத்திற்காகத் திரும்பினவுடனே, அவர் தாம் விலைக்கொடுத்து வாங்கின தமது இந்தச் சொத்தின்மீதான பொறுப்பினை உடனே எடுத்துக்கொள்வார். அவர் தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் திரும்பக் கையில் எடுத்துக்கொள்வார். பின்னர்த் தம்முடைய பலியின் புண்ணியத்தினை அவர் யாருக்குப் பயன்படுத்தவிருக்கின்றாரோ அந்த மீட்கப்பட்டவர்கள் அனைவருக்கும், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ளதான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைக் கொடுத்திடுவதற்கு அவர் ஆயத்தமாய்க் காணப்படுவார்.

தீர்க்கதரிசியாகிய தாவீது மூலம், யேகோவா தேவன் தம்முடைய குமாரனை நோக்கி: "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை (புறஜாதிகளை, ஜாதிகளை, ஜனங்களை) உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" என்று கூறியிருக்கின்றார் (சங்கீதம் 2:8). இது சமீபித்துள்ளது என்று நாம் நம்புகின்றோம். கர்த்தர் உலகத்திலிருந்து சம்பத்து வகுப்பாராகிய சபையைச் சீக்கிரம் எடுத்துக்கொள்ளவிருக்கின்றார். பிற்பாடு அவர் ஆதாமின் சந்ததிக்கு மனுஷீக சீர்ப்பொருந்துதலை அருளுவதும், ஒட்டுமொத்த உலகை, அவர்களது பூமியை ஏதேன் தோட்டத்தினுடைய சீருக்குக் கொண்டுவருவதும்தான் அவர் அருளப்போகும் ஆசீர்வாதங்களாய் இருக்கின்றன. இந்த வேலையினை அவர் தம்முடைய சரீரத்தோடு, தம்முடைய மணவாட்டியோடுகூடச் சேர்ந்து செய்வார்.

இந்த வேதவாக்கிய கண்ணோட்டத்தின்படி, இயேசு கொடுத்திடும் மீட்கும்பொருள் விலைக்கிரயமானது படிப்படியாய் நடைபெறும் காரியமாயிருக்கின்றது மற்றும் அது இன்னும் நிறைவடையவில்லை. அவர் மனிதனான போது, அதைக் கொடுக்கத் துவங்கினார்; அவர் தமது மூன்றரை வருட பூமிக்குரிய ஊழியத்தின்போது, அதைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வந்தார்; அவர் கொடுப்பதைக் கல்வாரியில் வைத்து நிறைவேற்றி முடித்தார். அதுமுதற்கொண்டு தாம் உரிமைப்பெற்றிருக்கிறவற்றை, சபைக்காக சாற்றுவதன் மூலம் பயன்படுத்திக்கொண்டு வருகின்றார். தமது பலியினுடைய இந்தப் புண்ணியம் அனைத்தையுமே, ஒட்டுமொத்த உலகத்தின் பாவத்தை நிவிர்த்திச் செய்யத்தக்கதாகப் பெற்றிருப்பார் - ஒரு நபர்கூடத் தவிர்க்கப்படுவதில்லை. தம்முடைய மரணத்தின் வாயிலாக அவர் பெற்றுக்கொண்டவைகளை, ஆயிர வருடங்களின்போது மனுக்குலத்திற்குக் கொடுத்திடுவார் மற்றும் புதிய உடன்படிக்கையினை முத்திரிப்பதன் மூலம், அதை அவர்களுக்குச் செயல்படுத்துவார். சபை நிறைவடைந்தவுடனே, சபை திரைக்கு அப்பால் கடந்துபோனவுடனே, புதிய உடன்படிக்கையானது முத்திரிக்கப்படும்.

## ஆவிக்குரிய சுபாவமும், பூமிக்குரிய சுபாவமும் ஒன்றல்ல

கிறிஸ்தவ ஜனங்களின் கண்ணோட்டங்களானது மிகவும் குழப்பமானவைகளாகக் காணப்படுகின்றன. உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக இயேசு ஓர் ஆவியின் ஜீவியாக இருந்தார் என்றும், மனிதனானபோது அவர் சுபாவ வகையான மாற்றத்தினை அடைந்தார் என்றும் இவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அவர் மனிதனாகிவிட்டப்படியால், அவர் சதாகாலமும் மனிதனாகவே - "தேவ தூதரிலும் சற்று சிறியவனான" - மனிதனாகவே காணப்பட வேண்டும் என்று வேதவாக்கியங்களுக்கு முரணாகவும், தவறுதலாகவும், முன்னுக்குப்பின் முரணாக எண்ணிக்கொள்கின்றவர்களாய் இவர்கள் காணப்படுகின்றனர். லோகோஸ் நித்தய காலத்திற்கென்று . . . "மாம்சமாக்கப்படாமல்" . . . "தம்மைத்தாமே தாழ்த்திக்கொள்ளாமல்" . . . மாறாக "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்க்கத்தக்கதாக" மாத்திரமே "மாம்சமாக்கப்பட்டார்" என்று நாம் நினைவில்கொள்ள வேண்டும் (எபிரெயர் 2:9).

சுபாவங்களில் வித்தியாசங்கள் காணப்படுகின்றதென வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றது. பரிசுத்த பவுல் அடிகளார் சுட்டிக்காட்டுவதுபோன்று, மனிதனுடைய மாம்சம் வேறே, விலங்குகளுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. இதுபோலவே, அதாவது பூமிக்குரிய தளத்தில் விலங்குகள், பறவைகள், மீன்கள் மற்றும் மனிதர்கள் இருப்பதுபோல ஆவிக்குரிய தளத்திலும் - தேவதூதர்கள், கேரூபின்கள், சேராபின்கள் காணப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 15:39-41; திருவிவிலியம்). பிதாவோடு தமக்கிருந்த மகிமையை விட்டுவந்ததாக நமது கர்த்தர் தெளிவாய்க் கூறியுள்ளார். அவர் தமது சீஷர்களை நோக்கி: "மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" (யோவான் 6:62) என்று கூறியுள்ளார்.

"தாம் முன்னிருந்த இடத்திற்கு" எனும் வார்த்தைகளானது அவர் முன்பு பெற்றிருந்த சுபாவத்தில், நிலைமையில் ஒரு மாற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு இதற்கு முன்னதாக அநேகந்தரம் உலகத்திற்கு வந்திருக்கின்றார், ஆனால் அவர் அப்போதெல்லாம் மாம்சமானவராக்கப்படவில்லை. அநேகமாக இயேசுதான் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய பிரதிநிதியாக ஆதாமிடம் பேசியிருந்திருக்க வேண்டும். நிச்சயமாகவே அவர்தான் பிதாவின் பிரதிநிதியென மோசேக்கு நியாயப்பிரமாணத்தினைக் கொடுத்தவராவார். கர்த்தரும், இரண்டு தூதர்களும் சோதோமுக்குச் செல்கையில், அவர்கள் காரியத்தைக்குறித்து ஆபிரகாமிடம் கூற வந்தபோது, இயேசுதான் ஆபிரகாமோடு பேசினவராவார். முதலில் வந்தவர்கள் ஆபிரகாமுக்கு மனிதர்களாகத் தோற்றமளித்தனர், மனிதர்கள் போன்று புசித்தனர், மனிதர்கள் போன்று பேசினார்கள்; ஆனால் பிற்பாடே அவர்கள் தூதர்கள் என்று அறிந்துகொண்டார். நமது கர்த்தர் மாம்சமானவராக்கப்பட்டபோது, இது அவர் பூமியில் காணப்பட்ட முதலாம் தருணமாய் இருக்கவில்லை. அவர் முந்தின தருணங்களில் வந்தபோதெல்லாம், பிதாவின் பிரதிநிதியென மனிதர்களோடு தொடர்புகொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களின்போது, மாம்ச சரீரத்தை எடுத்து மாத்திரம் கொள்கிற ஓர் ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார்.

மனித சரீரம் எடுக்கும் இதே வல்லமையானது மற்றத் தூதர்களினாலும் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். உதாரணத்திற்கு நமது கர்த்தர் பரமேறின போது தேவதூதர்கள்: "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்போஸ்தலர் 1:11). விழுந்துபோன தூதர்களுக்கும் மனித சரீரம் எடுத்துக்கொள்ளும் வல்லமை முன்பு இருந்தது என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். இவர்கள் உடல் வேட்கையின் காரணங்களுக்கு மனிதர்களாகக் காணப்படுவதற்கும், பூமிக்குரிய தளத்தில், பூமிக்குரிய நிலைமையில் காணப்படுவதற்கும் விரும்பினார்கள் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இப்படியாக இவர்கள் தங்கள் வாசஸ்தலத்தை விட்டு, மனிதர்களாக ஜீவித்து, புதிய சந்ததி ஒன்றினைக் கொண்டுவர நாடினார்கள்.

## மிகவும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள ஒரு காரியம்

ஒருவேளை இயேசு தம்முடைய முதலாம் வருகையின்போது மனிதனாகத் தோற்றம் மாத்திரம் எடுத்துக்கொண்டு, மாம்சம் எனும் திரைக்குப் பின்னாக உண்மையில் ஓர் ஆவியின்

--2212--

ஜீவியாகத்தான் இருந்து வந்திருப்பாரானால் - "incarnate" - அவரால் மீட்பராய் இருந்திருக்கவே முடியாது. இயேசு மனிதனாகக் காணப்பட்டார் - "அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்றுதான் வேதவாக்கியங்கள் சொல்லுகின்றதே ஒழிய, அவர் மனிதனாகக் காணப்படுவது போன்று நடித்துக்கொண்டார் என்பதாகச் சொல்லுகிறதில்லை (யோவான் 1:14). மனிதனுக்கான மீட்பராகுவதற்கு, அவர் ஒரு மனிதனாகுவது அவசியமாயிருந்தது; அவர் மனிதன் போன்று நடிப்பவராக இருக்கமுடியாது. அவர் உண்மையிலேயே ஒரு மனிதனாகிட வேண்டும்; இல்லையேல் அவரால் ஆதாமிற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகிட முடியாது; ஏனெனில் திவ்விய நியாயப்பிரமாணமானது "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்பட வேண்டும்" என்று முன்வைக்கின்றதாய் இருக்கின்றது (உபாகமம் 19:21).

மீட்கும்பொருள் (கிரேக்கில் - *antilutron*) எனும் வார்த்தையானது சரிநிகர் சமான விலையினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இயேசு உண்மையிலேயே பரலோக மகிமையினை விட்டுவந்தார் - விட்டுவந்தது போல் அவர் நடிக்கவில்லை. ஐசுவரியவானாய் இருந்த அவர், நம் பொருட்டுத் தரித்திரரானார்; ஆகையால் அவர் உண்மையிலேயே மனிதனாகத்தான் காணப்பட்டார். அவர் தம்மை யோர்தானில் அர்ப்பணித்தபோது, அவர் பூரணமான மனிதனாகக் காணப்பட்டார் - ஆதாமிற்கான ஒரே சரிநிகர் சமான விலையாகக் காணப்பட்டார். மரிப்பதற்காய் "நீர் ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" என்று நமது கர்த்தர் பிதாவை நோக்கிக் கூறினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (எபிரெயர் 10:5). இந்தச் சரீரமானது ஒரு நோக்கத்திற்காக - அதாவது மரிப்பதற்காகத் தேவனால் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது; பரிசுத்த தேவதூதர்கள் முன்னிலையில் நித்திய காலமும் சிறுமைப்படுத்தப்பட்ட நிலையில் கர்த்தர் இயேசுவை வைப்பதற்கு என்று ஆயத்தம்பண்ணப்பட்ட சரீரம் என்று அநேகர் எண்ணிக்கொண்டிருப்பதுபோன்று இல்லை என்றுமுள்ள காரியங்களை நம்மில் அநேகர் கவனிக்கத் தவறிவிட்டோம்.

நமது கர்த்தர் (தாம் வாசம்பண்ணும்) தம்முடைய சூழ்நிலைகளுக்கு இசைவற்ற ஒரு சரீரத்திலும் மற்றும் ஒரு சுபாவத்திலும் மற்றும் இந்த ஒவ்வாத சுபாவத்தின் அசௌகரியங்களுடனும் பரலோகத்தில் வலம் வந்துகொண்டிருக்கிறதில்லை. அவர் ஏற்கெனவே பலியின் வேலையினை நிறைவேற்றிவிட்டார் மற்றும் அவரது பலியினுடைய புண்ணியமானது, தேவனுடைய கரங்களில் காணப்படுகின்றது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக ஏறெடுக்கப்பட்டுள்ளதான பலியானது, தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது மற்றும் நீதியினுடைய புஸ்தகத்தில் நமது மீட்பருடைய கணக்கில், பூரண மனிதனாக அவர் பெற்றிருந்த பூமிக்குரிய ஜீவனுக்கான அந்த உரிமைகள் காணப்படுகின்றது.

ஆதியில் தகப்பனாகிய ஆதாமிற்கு மனுஷீக ஜீவனையும், மனுஷீக ஜீவ-உரிமைகளையும் தேவன் கொடுத்தபோது, அவர் உடனே பூமியின் மகா இராஜனானார். அதுபோலவே இயேசு மாம்ச மனுஷனான போது, அவர் இயல்பாகவே அதன் அதிகாரியானார். அவருக்கு மாத்திரமே பூமி உரியதாயிருந்தது; மேலும் பூரண மனிதனுக்குப் பூமியின்மீதும், அதன் நிறைவின் மீதும் உரிமையுண்டு. இந்த உரிமைகளைத் தமக்கென்று வைத்துக்கொண்டு, மகா பூமிக்குரிய அதிகாரியாகிடுவதற்குப் பதிலாக, இயேசு அந்தப் பூமிக்குரிய உரிமைகள் யாவற்றையும் ஒப்படைத்துவிட்டு, கீழ்ப்படிதலுக்கான பலனைப் பெற்றுக்கொண்டார் - பலிக்கான பலனையல்ல, கீழ்ப்படிதலுக்கான பலனைப் பெற்றுக்கொண்டார். அவர் இன்னமும் அந்த மனுஷீக ஜீவனுக்கான உரிமைகளை உடையவராய் இருக்கின்றார் மற்றும் தேவனுடன் இசைவிற்கு வந்து, கீழ்ப்படிதலின் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தல் எனும் நிபந்தனைகளின் கீழ் மனுக்குலத்தின் உலகிற்கு அந்த உரிமைகளைக் கொடுக்க இருக்கின்றார். ஏதேனில் தொலைந்துபோனதும், கல்வாரியில் மீட்கப்பட்டதுமான யாவற்றையும் திரும்பப்பெறுவதற்கு மனுக்குலத்தின் உலகத்தினைத் தம்முடைய இரத்தத்தின் வாயிலாக இயேசு தகுதியாக்கிடுவார்.

நமது கர்த்தர் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு காட்சியளித்துத் தோன்றினது என்பது, அவரும் சரி, தேவதூதர்களும் சரி பல நூற்றாண்டுகள் முன்னதாகக் காட்சியளித்துத் தோன்றினது போன்றதேயாகும் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் அவர் கொடுத்திட்ட காட்சிகளானது, அவர் இன்னமும் மனிதனாக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காண்பிக்காது. அவர் மனிதனாகக் காணப்பட்டபோது, அவர் கதவு பூட்டப்பட்டிருக்கும் அறைக்குள்ளாக இப்படிப் போனதில்லை; ஓர் ஆவியின் ஜீவியாக இருக்கையில், அவரால் கதவு பூட்டப்பட்டிருக்கும் அறைக்குள் சென்றிட முடியும். ஓர் ஆவியின் ஜீவியாக அவரால் உருவம் எடுத்துத் தோன்றமுடியும், பின்னர் அவர்கள் பார்வையினின்று அவரால் மறைந்து

போய்விட முடியும். இப்படி உருவம் எடுப்பதும், மறைந்து போய்விடுவதும் சரீரத்தின் விஷயத்தில் மாத்திரமல்லாமல், வஸ்திரங்களின் விஷயத்திலும்கூடச் செய்யப்பட முடியும். ஒருமுறை அவர் வழிபோக்கராகத் தோன்றினார் மற்றும் ஒருமுறை தோட்டக்காரராகத் தோன்றினார்; ஒருமுறை கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் நிலையில், மேல்வீட்டறையில் தம்முடைய வழக்கமான உருவத்தில் உள்ளே தோன்றினார். இந்தப் பல்வேறு சந்தர்ப்பங்களில், அவர் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்றபடி வெவ்வேறு வஸ்திரங்களில் காட்சியளித்துத் தோன்றினார். ஒருவகை வஸ்திரத்தை உருவாக்குவதும், இன்னொரு வகை வஸ்திரத்தை உருவாக்குவதும் மற்றும் வெவ்வேறு உருவத்தில் சரீரத்தை உண்டுபண்ணுவதும் அவருக்குச் சுலபமான காரியமாகும். எங்கிருந்து இது விஷயத்தில் அநேகம் கிறிஸ்தவ ஜனங்களுக்குத் தவறான கருத்துக்கள் தோன்றினது என்று சொல்வது கடினம். தப்பறைகளைச் சுட்டிக்காண்பிக்கும்போது நாம் மிகவும் இரக்கத்தோடும், அனுதாபத்தோடும் காணப்பட வேண்டும் மற்றும் நாமும் ஒரு காலத்தில் அத்தப்பறைகளில் காணப்பட்டிருந்தோம் என்பதையும், மற்றவர்களைப் போன்று நாமும் அத்தப்பறைகளைத் தீவிரமாய்ப் பற்றிக்கொண்டு காணப்பட்டிருந்தோம் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

## நமது கர்த்தர் இனிமேலும் மனிதனல்ல

நமது கர்த்தராகிய இயேசு மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார் மற்றும் அதுமுதல் அவர் ஓர் ஆவியின் ஜீவியாகவே இருக்கின்றார். இந்த ஆவியின் ஜீவியையே தமஸ்குவுக்குப் போகிற வழியில் தர்சு பட்டணத்துச் சவுல் கண்டார். தான் கண்டது மகிமையான ஒளியாக இருந்ததென அவர் நமக்குத் தெரிவிக்கின்றார். இயேசுவின் மாம்சம் ஒன்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கவில்லை. இயேசுவின் மெய்யான நிலைமையின் ஒரு கணத்தோற்றத்தினைக் கண்டதாக அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்; "எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார்" (1 கொரிந்தியர் 15:8; திருவிவிலியம்); அதாவது இங்குச் சபையின் உயிர்த்தெழுதலின் பிறப்பிற்குரிய காலத்திற்கு முன்னதாகப் பிறத்தல் என்ற விதத்தில் அப்போஸ்தலன் கூறியுள்ளார். நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம் மற்றும் பிறப்பு முதலாம் உயிர்த்தெழுதலில் காணப்படும்.

---

R5623

## "Your Father Knoweth"

# உங்கள் பிதா அறிந்திருக்கிறார்

"உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பிதா அறிந்திருக்கிறார்." மத்.6:8

நமது ஆண்டவரின் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே மலைப்பிரசங்கம் என்று பொதுவாக அறியப்பட்டிருக்கிற பிரசங்கத்தை அவர் கொடுத்தார். சீஷர்கள் அதுவரை முழுமையாகதேவனுடைய பிள்ளையாக ஆகவில்லை. உண்மையில், பிள்ளைக்குரிய அங்கீகாரத்தை பெந்தெகொஸ்தே நாள் வரை பெறமுடியவில்லை. மரண தண்டனைக்குட்பட்ட மற்ற மனிதர்களைப் போலவே இவர்களும் விழுந்துபோன மனுக்குலத்தின் அங்கங்களாக இருந்தார்கள். யூதர்களைப்போல தேவனுடைய ஊழியக்காரர்களாக தங்களை கூறிக்கொள்வதே அதிகபட்ச உரிமை கொண்டாடுதல் ஆகும். ஆனால் இப்பொழுது "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்."(யோவா1:12)

இந்த ஆவியினால் ஜெநிப்பித்தல் என்பது, அதனது சரியான, முழு அர்த்தத்தில், இயேசு உலகத்தின் பாவங்களுக்காக, சமாதானத்தை ஏற்படுத்தும் வரை அல்லது குறைந்த பட்சமாக தமது சொந்த மரணத்தினால் சமாதானத்துக்கான வழியை ஏற்படுத்தும் வரை, சாத்தியமானதல்ல. ஒரு வகையில், அவரது மரணம் முன்னமேயே நிறைவேறிவிட்டது; அதாவது அதில் தம்மை ஜீவ ப-யாக ஒப்புக் கொடுத்திருக்கிறார். அவரது ப-யை தேவனும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் அந்த மரணம்நிறைவடைய வேண்டும், இயேசு, தேவனுடைய சந்நிதானத்துக்கு எழுந்தருளி, தமது ப-யின் புண்ணியத்தை சமர்ப்பிக்க வேண்டும். பிறகு தேவ ஆசீர்வாதம் அவர்கள் மேல் இறங்கி அவர்களை தேவனுடைய பிள்ளைகளாக அனுமதிக்கும்.

### சபையின் பிதா

எனவே தேவனோடு அவர்களுக்குரிய உறவை இயேசு தீர்க்கதரிசன பொருளில் பேசினார் என்று நாம் பார்க்கிறோம். அவர்கள் அவரில் விசுவாசம் வைத்து, அவரது சித்தத்தை நிறைவேற்ற நாடினார்கள். அவர்கள் பிள்ளைகளாகும்படி அவரது திட்டத்திற்கு முழுமையாக இசைந்திருந்தார்கள். ஒருவர் ஒரு குழந்தையை தத்து எடுத்த பிறகு, சட்டப்பிரகாரம் அந்த குழந்தையை மகன் என்றும், தத்தெடுத்தவர்களை அப்பா, அம்மா என்றும் கூறலாம். அதைப்போல இவர்கள் தேவனை, அப்பா, பிதாவே என்று கூறக்கூடிய சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள். இந்த சிலாக்கியம் அவர்களது விசுவாசத்தை சார்ந்து இருக்கிறது. பெரும்பாலான யூதர்கள் இப்படிப்பட்ட விசுவாசத்தைப் பெற்றிருக்கவில்லை. இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறிய போது, தேவதூஷணம் சொல்லுகிறதினால் அவர் மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இயேசு தாம் மாத்திரம் தேவனுடைய பிள்ளை இல்லை, அநேகரை தேவனுடைய பிள்ளைகளாக்குவேன் என்று கூறினார். இந்த கூற்றுக்கு இசைவாக சங்கீதத்தி-ருந்து ஒரு வசனத்தை குறிப்பிட்டார். யோவா.10:31-40; சங்.82:6

சில நாளுக்குள்ளே, பெந்தெகொஸ்தே நாளில் உண்மையாக தாங்களே பெற்றுக் கொள்வார்கள் என்று, அவர் அவர்களிடம் சொன்ன பிரகாரம், அந்த நாள் வரை இது முழுமையாக நிறைவேறாது என்பதை அவரும் அவர்களும் அறிந்திருந்தாலும் இவ்வாறாக, நமது கர்த்தர் அவரது சீஷர்களிடம், அவர்கள் புது சிருஷ்டிகளாகவும், தேவனுடைய பிள்ளைகளாகவும் ஆகிவிட்டார்கள் என்றும், பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார்கள் என்றும் கூறினார். இந்த கருத்தில் ஆண்டவர் தமது சீஷர்களிடம் கூறினதாவது: "உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பிதா அறிந்திருக்கிறார்." இந்த வார்த்தைகள் அவரது மலைப் பிரசங்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. நாம் வாசிக்கிறதாவது: "அவர் உட்கார்ந்த போது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:" ஜனங்கள் தேவனை, பிதா என்று அழைக்கக்கூடாது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவரை பிதா என்று அழைக்கலாம் என்று அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

பிதா என்ற வார்த்தையை பிற வேத வசனத்தோடு சேர்த்துப் பார்க்கும் போது அது அதிகமான காரியத்தை உணர்த்துகிறது. ஆதாமுக்கு ஜீவனைக் கொடுத்தார் என்ற அர்த்தத்தில் தேவன் ஆதாமுக்கு பிதாவாக இருந்தார். ஆதாமுக்கு ஜீவனைக் கொடுப்பதில் முக்கிய பங்காற்றியதில் ஒருவராக வார்த்தையானவர் ( லோகாஸ்) இருந்தால் கூட இயேசு ஆதாமுக்கு பிதாவாக இல்லை. ஆதாமின் கீழ்ப்படியாமையினால், ஆதாமும் அவனது அனைத்து பிள்ளைகளும் இந்த ஜீவனை இழந்தார்கள். ஜீவனை மட்டுமல்ல, தேவனுடைய ஆவியையும். பிள்ளைகள் என்கிற உறவையும் இழந்தார்கள்.

## மனுக்குலத்தின் பிதா

ஆதாமுக்கு பிறகு இயேசுவின் காலம் வரை தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுபவர்கள் யாருமில்லை. ஆதாமுக்கு பிறகு இயேசுவே தேவனுடைய முதல் குமாரனாக இருந்தார். நமது ஆண்டவரின் காலத்தி-ருந்து சபையார் தேவனுடைய பிள்ளைகளாக அழைக்கப்படுகிறார்கள். (1யோவா.3:2) நாம் தேவனுடைய பிள்ளைகளாக அழைக்கப்படுகிறோம் என்கிற உண்மை ஒரு புதிய ஜீவனின் ஆரம்பத்தை உணர்த்துகிறது. பிதாவாகிய ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்துக்கொண்ட பழைய ஜீவன் போய்விட்டது. இந்த புதிய ஜீவனை நாம் இயேசுவிடம் இருந்து பெறவில்லை. ஆனால் பிதாவிடமிருந்து இந்த ஜீவன் இயேசுவின் மூலமாக நமக்கு வருகிறது. “நம்முடைய கர்ததராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்........நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.” (1 பேது.1:3) உலகத்திற்கான ஏற்பாடு சற்று மாறுபட்டது என்று நாம் காண்கிறோம். சபையைப் போல உலகத்தாரையும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கும் எண்ணம் தேவனுக்கு இல்லை, மாறாக, குறித்த காலத்தில் கர்த்தராகிய இயேசு உலகத்தின் நித்திய பிதாவாகப் போகிறதை நாம் காண்கிறோம்.(ஏசா.9:6) அந்த குறித்த காலம் என்பது மேசியாவின் ராஜ்யமாகிய மகா ஆயிர வருட நாளாக இருக்கும்.

அந்த ஆயிரவருட நாளில் கிறிஸ்து மகா ராஜாவாகவும், தேவனுக்கும், மனிதருக்கும், மத்தியஸ்தராகவும் இருந்து மனுக்குலத்திற்கு ஜீவனை அளிப்பார். அவர் மனுக்குலத்தின் பிதாவாக இருப்பார். ஏனெனில் அவர் மனுக்குலத்திற்கு கொடுக்கக் கூடிய அந்த மானிட ஜீவன்,அவருடைய சொந்த ஜீவனைப் போல இருக்கும். தேவனுடைய திட்டத்திற்கு அவர் கீழ்ப்படிந்ததின் மூலமாக மானிட ஜீவனை கொடுப்பதற்குரிய உரிமையை வாங்கிக் கொண்டார். அவரது சொந்த விலைக்கிரயத்தால் அந்த ஜீவனைக் கொடுப்பதால், மனுக்குலத்தின் பிதா என்று அழைக்கப்படுகிறார். இது உலகம் தேவனுடைய பிள்ளைகளாக கருதப்படமாட்டார்கள் என்று பொருள்படாது. இனி ஒரு பேரன் அப்பாவுக்கு மகனாகவோ அல்லது தாத்தாவுக்கு மகனாகவோ இருக்க முடியாது. மனுக்குலம் பிதாவாகிய தேவனிடமிருந்து நேரடியாக ஜீவனைப் பெறாது. ஆனால் நேரடியாக கிறிஸ்து மூலமாக பெற்றுக் கொள்ளும். கிறிஸ்து பிதாவாகவும் பிதாவாகிய தேவன் பாட்டனாகவும் இருப்பார்கள். தேவன் மனம் போனபடி பேசாமல், மிகவும் சரியாக பேசுகிறார். இது உண்மையாக இருப்பதால் நாம் அவரது வசனத்தில் மிகவும் நம்பிக்கை வைக்கிறோம்.

## இஸ்ரயேலர்களுடனான தேவனுடைய உறவு

ஆதாமும் அவனது குடும்பத்தினரும் பாவிகளான போது, அவர்களில் சிலர் தேவனை அலட்சியம் செய்து இன்னும் தூரமானார்கள். தேவனுடனான தொடர்பை துண்டித்ததற்கு காரணம் அவர்களுடையது அல்ல. அவர்கள் தேவனை தங்கள் மனதில் இருத்திக் கொள்ளவில்லை. ஆகையால் தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார். அவர்கள் சாத்தானின் பிள்ளைகளானார்கள். அதாவது அவர்கள் அவனுக்கு கீழ்ப்படிகிறவர்களானார்கள். அவன் அவர்களை தனது குடும்பத்தில் தத்தெடுத்துக் கொண்டான். அவர்கள் தெரிந்தே அவனை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தார்கள். சாத்தான் நிச்சயமாக உலகிற்கு ஜீவனை கொடுக்கவில்லை, ஆனால் அவர்கள் அவனுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, அவனது குடும்பத்தின் அங்கங்களாகி அவனை தங்களது பிதாவாக ஏற்றுக்கொணடார்கள். சில மனித குடும்பத்தினரிடம் நமது ஆண்டவர் கூறினதாவது: “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்.” (யோவா.8:44)

ஆதாம் தள்ளப்பட்டபோது, மரண தண்டனைக்கு கீழாக வந்தான். மாற்றத்திற்காக விடப்பட்டான். அறிக்கை சொல்லுகிறதாவது: மரணம் என்கிற சாபத்திற்குள்ளாக நீ இருக்கிறாய். மரணத்தை உன்னால் தவிர்க்க இயலாது - “நீ சகாவே சாவாய்.” கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும் உண்டாகும். நீங்கள் பாவிகளாக இருப்பதால், இவைகளுக்கு உட்படுவீர்கள். மனுக்குலம் மரண தண்டனைக்குள்ளாக இருந்ததால், தேவன் ஏதாவது செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் பாவிகளாயிருந்ததால் தேவன் அவர்களுக்கு அதிகமாக செய்திருக்கிறார். அவர் நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி, மழையைப் பெய்யப் பண்ணுகிறார். (மத்.5:45)

யூதர்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழாக தேவனால் அழைக்கப்பட்டபோது, அது அவர்களை தேவனுடன் பணிவிடைக்காரர்களாக ஒரு விசேஷித்த உறவுக்குள் கொண்டு வந்தது. “மோசே பணிவிடைக் காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்.” இந்த பணிவிடைக்காரர்கள் சில பாதுகாப்பிற்குள்ளாக வந்தார்கள். பெரிய வீட்டின் காப்பாளராக இருந்தாலும், வீட்டின் பணிவிடைக்காரர்களையும் , குமாரர்களையும், கவனித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள். குமாரர்கள் அதிகமாக கவனிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தாலும், பணிவிடைக்காரர்களும் கவனிக்கப்பட வேண்டியவர்களாயிருந்தார்கள்.

இப்படியாக யூதர்கள் தேவனுடைய பாதுகாப்பிற்குள்ளாக வரும்படி அழைக்கப்பட்டார்கள். ஒவ்வொன்றும் அவர்களது நன்மைக்காக இணைந்து கிரியை நடப்பிக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், தேவன் அவர்களது ஆடு, மாடுகளை ஆசீர்வதிப்பார், அவர்களுக்கு நன்மை

செய்வார். அப்படி அவர்கள் கீழ்ப்படியாமல் போனதால், தங்கள் மேல் தண்டனையை வரப் பண்ணினார்கள். நாம் இஸ்ரயேலர்களின் சரித்திரப் பதிவுகளை வாசித்தோமானால் அவர்கள் தான் அதிகமாக தண்டிக்கப்பட்ட மக்களாகவும் வினோதமான அனுபவங்களையும் ஒழுங்குகளையும் கடந்து வந்தவர்களாகவும் இருந்தார்கள் என்பதையும் இதன் மூலம் ஒரு பெரிய மத நடத்தைகளுக்கு கொண்டு வரப்பட்டவர்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். நமது ஆண்டவர் உலகத்திற்கு வந்த போது, மனித குலத்திலேயே யூதர்கள்தான் அதிகபட்ச மதஉணர்வும் அர்ப்பணிக்கிற உணர்வும் உடையவர்களாக இருந்தனர். இயேசு வந்து, தேவனுடைய பிள்ளைகளாகும்படி கொடுத்த சலுகையை யூதர்களில் அநேகர் பெற்றுக்கொள்ள தயாராயிருந்தனர்.

**சபையுடன் தேவன் கொண்டிருந்த தொடர்புகள்**

இதே போல சுவிசேஷ யுகத்திலும் தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய விசேஷித்த சலுகைகள் மற்றும் அவருடனான உடன்படிக்கைக்குக் கீழாக இருக்கிறார்கள். தேவன் அவர்களை புத்திரர்களாக எண்ணி நடத்துகிறார். ஊழியக்காரர்களாக அல்ல; எதிராளிகளாக அல்லது விரோதிகளாக அல்ல, பிள்ளைகளாக எண்ணி நடத்துகிறார். "தேவன் உங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார்."(எபி.12:7) இப்படி தேவன் தம்முடைய ஜனங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார் என்ற உத்தரவாதம் இருக்கும்போது, உலக ஜனங்கள் பணம், உடல்நலம் மற்றும் இம்மைக்குரிய செல்வ செழிப்பு ஆகியவைகளில் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது போல, பரிசுத்த ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவில்லையே என்று நாம் ஆச்சரியப்படலாம். ஏன் இப்படி நடக்கிறது என்று விசாரிக்கிறோம். அவர்களை பிள்ளைகளாக, நடத்துகிறேன் என்று வாக்குத்தத்தம் செய்துவிட்டு, தமது பங்கை தேவன் அலட்சியப்படுத்துகிறாரா? நாம் மாம்சத்தின்படி தேவனுடைய பிள்ளைகள் அல்ல, ஆவியின்படி தான் அவருடைய பிள்ளைகள். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, புது சிருஷ்டியின் பிரகாரம் நாம் தேவனுடைய பிள்ளைகள். இவர்களது நலனை முன்னிட்டு, அடிக்கடி கொடுக்கப்படுகிற அனுபவங்கள், மாம்சீகத்திற்கு அனுகூலமாக இருக்காது.

தேவனுடைய இந்த பிள்ளைகளுடன், புதுசிருஷ்டி தேவனுடைய பார்வையில் விசேஷித்தவர்கள். மாம்சீக காரியங்கள் மிக சொற்பமானது. இந்த பிள்ளைகள் தகுதியான அனுபவங்கள் மூலம் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய தேவையான வளர்ச்சியை அடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். முடிவாக அவர்கள் மாமிச பிரகாரம் மரிக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகிறது. மாமிச பிரகாரம் மரித்தால் ஒழிய ஆவிக்குரிய சுபாவத்திற்கு செல்ல முடியாது. நாம் எல்லோரும் நமது ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்ற வேண்டும். இடுக்கமான வாசல் சோதனைகள் புது சிருஷ்டிக்கு விசேஷித்த பரீட்சையாக இருக்கிறது. இந்த சோதனைகள் மற்றும் கஷ்டங்களின் கீழ் புது சிருஷ்டி எப்படி நடந்து கொள்வான்? மாமிச பிரகாரம் அவனுக்கு சகாயமற்ற சூழ்நிலை காணப்படும்போது அவன் தேவனிடம் விசுவாசத்தை நிரூபிப்பானா? அப்படி நிரூபித்தால் புது சிருஷ்டி வளர்ந்து பலப்படுவான். மாமிசம் மற்றும் ஆவி ஆகிய இரண்டுக்கும் உள்ள போராட்டம் புது சிருஷ்டிக்கு வெற்றியாக முடியும். உன்னதமான உயிர்த்தெழுதலாகிய தெய்வீக சுபாவத்தில் பிறப்பான்.

**ஜெபத்தில் சரியான மனோபாவம்**

இந்த பாடத்தின் தலைப்பு வசனம் புது சிருஷ்டிக்கு மட்டுமே பொருந்தக் கூடியது. "உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பிதா அறிந்திருக்கிறார்." புறஜாதிகளைப் போல பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக மறுபடியும் மறுபடியும் தேவனிடம் ஜெபிப்பது வீணாயிருக்கும். நமக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். அதாவது நாம் புது சிருஷ்டிகளாக செல்வம் அபரிமிதமாக இருந்தால் நமக்கு அதிக நன்மையாக இருக்குமா அல்லது குறைவாக இருந்தால் நன்மையாக இருக்குமா; நாம் புது சிருஷ்டிகளாக, ஆரோக்கியம் இருந்தால் அதிக நன்மையாக இருக்குமா குறைவாக இருந்தால் நன்மையாக இருக்குமா. நாம் எதை விரும்புகிறோம் என்பதை நாம் தேவனிடம் சொல்லக் கூடாதவர்களாயிருக்கிறோம். அவரது சித்தத்தை நிறைவேற்றுவதற்காக நமது சித்தத்தை விட்டுவிட வேண்டும். ஆகவே இயேசு, "என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபித்ததுபோல நாமும் ஜெபிக்க வேண்டும். ஏனெனில், "உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பிதா அறிந்திருக்கிறார்." புறஜாதி ஜனங்களுக்கு தகப்பனைப் போன்ற தேவன் இல்லை. அந்த தேவன் அவர்களது காரியங்களை கண்காணிப்பதும் இல்லை. சூரிய வெளிச்சம், மழை போன்ற பொதுவான ஆசீர்வாதங்களை தேவன் எல்லாருக்கும் கொடுத்து வருகிறார்.

தேவனுடைய பிள்ளைகளின் ஜெபம் பூமிக்குரிய காரியங்களுக்காக இருக்கக்கூடாது. தேவனுடைய பிள்ளைகள் பூமிக்குரிய காரியங்களுக்காக தேவனிடம் ஜெபித்து பெற்றுக்கொண்டதாக எந்த வசனத்தையும் நாம் அறியவில்லை, பரிசுத்த பவுல் மூன்று தடவை தனது பார்வைக்காக மிகவும் ஊக்கமாக ஜெபித்தார் என்பதை நாம் நினைவுகூருகிறோம். தேவன் அவர் கேட்டதைக் கொடுக்கவில்லை. ஆனால் புது சிருஷ்டிக்கு பிரயோஜனமானதை தேவன் அவருக்குக் கொடுத்தார். இந்த பார்வைக்குறைவு, நீரொழுகும் கண்கள், அவர் ஒரு காலத்தில் தேவனுடைய பிள்ளைகளை துன்பப்படுத்தினவர் என்பதை ஞாபகப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும், தேவன் இந்த குறையை நீக்கவில்லை, ஆனால் தேவையான கிருபைகளை

கொடுத்திருந்தார். அந்த பாடத்தை பவுல் கற்றுக் கொண்ட பிறகு, அதற்காக அவர் மறுபடியும் ஜெபிக்கவில்லை. தகாத மூன்று ஜெபத்தை அவர் ஜெபித்த பிறகே இதை அவர் உணர்ந்து கொண்டது நமக்கு பிரயோஜனமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. "தேவனே, எனக்கு என்ன தேவை என்பதை நீர் அறிந்திருக்கிறீர். சிறந்தவைகளை கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று ஜெபிக்கக்கூடிய மனோபாவத்தில் நாம் இருக்க வேண்டும் என்பதை இதன் மூலம் நாம் கற்றுக்கொண்டோம்.

**மாதிரி ஜெபம்**

ஜெபிப்பதற்கு இது சரியான முறையில்லை என்று சிலர் கூறலாம். அதாவது நாம் உறுதியாக தேவனிடம் சில காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று கூறலாம். உதாரணமாக ஒருவருக்கு ஒரு கோட் வேண்டும் என்றால், அவர் தேவனிடம் கோட்டிற்காக ஜெபிக்க வேண்டும். ஆனால் குறிப்பிட்ட ஒன்றிற்காக நாம் ஜெபிக்க தேவையில்லை என்று தேவன் நமக்கு சொல்-யிருக்கிறார். நமக்கு உணவு தேவை என்பதை தேவன் அறிந்திருக்கிறார். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும்" என்று நாம் ஜெபிக்கும் போது, தேவன் அதை மறந்து விடுவார் என்று நாம் நினைப்பதாக அர்த்தமாகாது, இன்னும் சரியாக, நாம் பெறும் உணவு போன்றவைகள் தேவனிடமிருந்து வருகிறது என்பதை நாம் அங்கீகரிப்பதாக அர்த்தமாகும். நமக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நாம் கேட்பதோடுகூட அதையும் சேர்த்து தருகிறார். நமது பாவ மன்னிப்பிற்கான ஏற்பாடுகளை தேவன் முன்னமேயே செய்து வைத்திருக்கிறார் என்பதையும் நாம் மற்றவர்களிடம் இரக்கம் காண்பித்தால்தான், நமது பாவங்களை இரக்கத்துடன் தேவன் கவனிப்பார் என்பதையும் உணர்ந்து, நாம் நமது பாவங்களுக்காக தேவனிடம் சென்று மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நமது உணவைப் பொருத்தவரை, தேவன் நமக்கு செய்யும் ஒவ்வொரு நன்மைக்காகவும் நாம் நன்றி செலுத்துகிறோம்.

நமது ஜெபத்தில், நமது சிந்தைனையில் அவரது நாமத்தை முதலாவது கனப்படுத்துகிறோம், மகிமைபடுத்துகிறோம். நாம் எந்த அளவுக்கு மகிமையடைவோம் என்பதற்காக அல்ல. முதலாவதுநமது பிதாவையும் அவரது நாமத்தையும் அறிக்கையிடுகிறோம்.அவரது நாமத்தை கனப்படுத்துகிறோம்,புனிதப்படுத்துகிறோம். பிறகு அவரது ராஜ்யம் வரவேண்டும் என்கிற நமது விருப்பத்தை தெரிவிக்கிறோம். ஏனெனில் அகில உலகத்திற்கும் அவரது ராஜ்யம் முக்கியமாக தேவை என்பதையும் அது வரும் என்று அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். நாம் அவரை நம்பியிருக்கிறோம் என்பதையும், நாம் அவருடைய ராஜ்யத்திற்காக அவர் வாக்குத்தத்தம் செய்து ஏற்பாடு பண்ணியிருக்கிறவைகளுக்காகவும் நாம் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் அவருக்கு சொல்லுகிறோம். "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று உதட்டளவில் சொல்லாமல், அதை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறோம். அதன் பிறகு நமது தேவைகள் வருகிறது. நமக்கு என்ன தேவை என்பதை அதாவது ஒரு முழு ரொட்டியா, அரை ரொட்டியா, கால் ரொட்டியா, ஒரு சிறு பகுதியா அல்லது பெரிய ரொட்டியா என்பதை அவர் அறிந்திருக்கிறார். பிறகு தீமையி-ருந்து பாதுகாப்பை நாம் கேட்கிறோம்.

"எனது பழைய காலணிக்கு பதிலாக புதிய காலணி தேவைப்படுகிறது" என்பது போன்ற வேண்டுகோள் இல்லை. புற ஜாதியார், உலகத்தார் இது போன்ற பொருட்களுக்காக கேட்பார்கள். ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகள், தேவன் கூறியுள்ளபடி நமது ஜெபம் இருக்க வேண்டும். இயேசுவின் ஜெபத்தையும், நமது அப்போஸ்தலர்கள் ஏறெடுத்த ஜெபங்களையும் நாம் உதாரணமாக எடுத்துக்கொள்கிறவர்களாயிருக்கிறோம். இந்த ஜெபங்களில் அதிகமாக தேவனிடம் கேட்காமல், நாம் அவரை சார்ந்திருக்கிறோம் என்பதையும், நமது சுய சித்தத்தை தேடாமல், அவரது சித்தத்திற்குள் அமிழ்ந்து போகுதலையும் அவரிடம் சொல்லுவதாகும். அவரது சித்தம் நமது எல்லா காரியங்களிலும் நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகும்.பிறகு அந்த சித்தத்துக்கு இசைவாகவும் அந்த ஜெபங்களுக்கு இசைவாகவும் நாம் வாழ வேண்டும், நடக்க வேண்டும்.

-----------------------------------------------

# மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது

# More Convincing Evidence Demanded

"அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு." யோவா.20:27

மேலே கூறப்பட்டுள்ள தலைப்பு வசனம் பதினோரு சீஷர்களில் ஒருவனாகிய தோமாவும் மேல் அறையில் இருந்தபோது, நமது கர்த்தர் தரிசனமான போது தொடர்புடையது ஆகும். ஒரு வாரத்திற்கு முன்பாக நமது ஆண்டவர் தமது சீஷர்களுக்கு தரிசனம் அளித்தபோது பரிசுத்த தோமா அவர்களுடன் இருக்கவில்லை என்பது இந்த கூற்றி-ருந்து நமக்குத் தெரிகிறது. பத்து சீஷர்கள் பரிசுத்த தோமாவிடம், நாங்கள் கர்த்தரைக் கண்டோம் என்று கூறியபோது, பரிசுத்த தோமாவினால் நம்ப இயலவில்லை. அவர்கள் கூறியதெல்லாம் கட்டுக்கதையாக தோமா வுக்குத் தோன்றியது. அவர்கள் மிகவும் சுலபமாக நம்பிவிட்டார்கள் என்றும், தான் நம்புவதற்கு மிகவும் உறுதியான ஆதாரம் தேவை என்றும் தோமா கூறினார். நம்முடைய கர்த்தரின் கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை தான் கண்டு, அந்த காயத்திலே தன் விரலை விட்டு, தன் கையை அவருடைய விலாவிலே உள்ள காயத்திலே போட்டாலொழிய நம்பமாட்டேன் என்று தோமா கூறினார்.

இது சிலருக்கு மிதமிஞ்சிய அவிசுவாசத்திற்கு உதாரணமாகவும் பத்து பேர் கடந்து சென்ற அனுபவத்தின் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாதிருப்பதாகவும் காணப்படுகிறது. ஆனால் இன்னும் சிலருக்கு இது வினோதமாகக் காணப்படவில்லை. மூன்று நாட்களுக்கு முன்னதாக மரித்து, கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட்ட ஒருவர், தான் உயிரோடு இருப்பதாக பிரசன்னமாகி வெளிப்பட்டார் என்று சொல்லுகிறதை நம்மில் சிலர் நம்புவது கடினமான காரியமாக இருக்கும். இன்னும் விசேஷமாக அறைக்கதவுகள் மூடப்பட்டிருக்கும்போது தோன்றினார் என்பதும், அறைக்கதவுகள் இன்னும் மூடப்பட்டிருக்கும் போது மறைந்து விட்டார் என்பதும் நம்பமுடியாததாக இருக்கும். நாம் தோமாவின் இடத்தில் இருந்திருந்தோமானால்,"இது எப்படி முடியும் என்பதைக் காண்பியுங்கள்" என்று கூறியிருப்போம். இப்படிப்பட்ட அனுபவத்தை நாம் பெற்றிருந்தோமானால், "ஏதோ ஒன்றை பார்த்ததாக நீங்கள் நினைக்கிறீர்கள்; நீங்கள் உண்மையைச் சொல்வதாக நினைக்கிறீர்கள், ஆனால் நீங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம்" என்று நாம் சொல்-யிருப்போம். நாம். மாறுபட்ட மனம் சார்ந்த குணமுடையவர்களாக இருக்கிறோம். மற்றவர்களைக் காட்டிலும் சிலருக்கு நம்புவது சுலபமாக இருக்கிறது.

## பரிசுத்த தோமா கண்டிக்கப்படவில்லை

எனினும் இந்த சமயத்தில் இயேசு விரும்பத்தக்க விளக்கத்தைக் கொடுத்தார். சீஷர்கள் கூடியிருக்கும்போது நமது ஆண்டவரின் முதல் தரிசனம் வாரத்தின் முதலாம் நாளில் இருந்தது என்றும் இரண்டாவது தரிசனம் அதே சூழ்நிலையில் எட்டு நாட்களுக்குப் பின்பு வாரத்தின் முதலாம் நாளில் இருந்தது என்றும் நாம் நம்புகிறோம். தோமா இருந்தபோது, இயேசு அவரிடம் கூறியதாவது: "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு." (யோவான் 20:27) இவைகள்தான் தோமா எதிர்பார்த்த ஆதாரங்களும் ரூபகாரமுமாகும். இந்த வார்த்தைகளில் எந்தவித விசேஷித்த கண்டனத்தையும் நமது ஆண்டவர் தோமாவிடம் கூறவில்லை. தோமாவை நம்பவைப்பதற்கு தேவையான ரூபகாரங்களை கர்த்தர் அவனுக்கு கொடுத்ததாக தெரிகிறது. மற்ற பத்து சீஷர்களின் கூற்றை நம்புவதற்கு உறுதியான ஆதாரம் தேவை என்று கேட்ட தோமாவுக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என்றும் தெரிகிறது. தோமாவின் விருப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால், மறுப்பு தெரிவிக்கப்பட்டிருக்கும்.

எனினும் நமது கர்த்தர் கூறினதாவது: "கண்டு விசுவாசிப்பவனைக் காட்டிலும் காணாமல் விசுவாசிப்பவனே பாக்கியவான்." இதுதான் நமது நிலைமை. காணாமல் விசுவாசிக்கிறவர்களுக்கும் கர்த்தர் ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தை குறிப்பிடுகிறார். பரிசுத்த தோமா இப்படிப்பட்ட விசுவாசத்தை பெற்றிருக்கவில்லை என்பதை சாட்சியங்களையும் ரூபகாரங்களையும் கொண்டு நாம் ஞாபகத்தில் வைக்கிறோம். பத்து பேர் சில காரியங்களை ஒரு இரவிலே பார்த்ததாகக் கூறினால். நாம் மறுரூப மலையில் ஒரு தரிசனத்தை பார்த்ததுபோல இதுவும் ஒரு தரிசனமாக இருக்காதா என்று நாம் ஆச்சரியப்படுவோம். அவர்களுக்கு ஒரு கனவோ அல்லது பிரமையோ ஏற்பட்டிருக்கக் கூடும் என்று நமக்குத் தோன்றும். எனினும் இங்கே பரிசுத்த தோமா நம்மில் சிலர் இருக்கிறது போல புத்திசா-யானவராகவும் நடைமுறைக்குரியவராகவும் இருந்தார். ஆனால் நிரூபணம் கொடுக்கப்பட்டபோது, விளக்கம் காண்பிக்கப்பட்டபோது, அது ஒரு மாயத் தோற்றம் அல்ல, ஒரு மாமிச சரீரத்தில் கர்த்தர் தனக்கு முன்பாக நின்றார் என்பதை உணர்ந்து கொண்டார். இந்த சம்பவம் நம்மில் அநேகரது விசுவாசத்தைப் பலப்படுத்துவதாக இருக்கிறது.

--2219--

நமது ஆண்டவரின் முதலாவது தரிசனத்தில் பரி.தோமா இல்லாதிருந்தது, ஒரு செயல் விளக்கம் காண்பிக்கப்படுவதற்கும், அதனிமித்தம் நம்மில் சிலர் சுலபமாக நம்புவதற்கும் ஏதுவாயிருந்தது. சீஷர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட விசுவாசம் எல்லாவற்றிலும் முக்கியமானது என்று இதன்மூலம் காண்கிறோம். “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.” (எபி.11:6) நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதல் குறித்து சீஷர்களுக்கு சந்தேகம் இருந்திருந்தால், அவர்கள் நமக்கு ஒரு தெளிவான சாட்சியத்தை இந்த காரியத்தில் கொடுத்திருக்க முடியாது. நாமும் உண்மைகளை அறிந்திருக்க முடியாது. இசைவான சாட்சியமும் நிரூபணமும் நமக்கு கிடைக்காதிருந்தால் அவர் பரலோகத்திற்கு சென்றுவிட்டார் என்று சிலரும் வேறு மாதிரியாக சிலரும் நினைத்திருப்பார்கள். பதினோரு சீஷர்களும் முழுவதுமாக நம்பவேண்டும் என்பது நமது ஆண்டவரின் குறிக்கோளாக இருந்தது. அவர்கள் அவரை பரலோகத்திற்குச் சென்ற இரட்சகர் என்றும் பரிந்து பேசுகிறவர் என்றும் முழுமையாக நம்பியிருக்காவிட்டால், பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள தயாராயிருந்திருக்க மாட்டார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்காவிட்டால், ஊழியத்திற்கு தகுதியுடையவர்களாக இருந்திருக்க மாட்டார்கள்.

நமது கர்த்தரின் ஊழியத்தில் இந்த நாற்பது நாட்கள் மிகவும் முக்கியமான பகுதியாக காணப்படுகிறது. ஏனெனில் சுவிசேஷ செய்தியின் வெற்றி அனைத்தும் அவர்களையே சார்ந்திருந்தது. இந்த செய்தி தேவ தூதர்களால் அல்ல, மனிதர்களாலேயே ஆரம்பிக்கப்பட இருந்தது. இந்த மனிதர்களுக்குத்தான் அவர் தரிசனம் கொடுத்தார். அவர்கள் கண்டதையும் நம்பினதையும் அவர்கள் சொல்ல வேண்டியவர்களாயிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் தங்களது விசுவாசத்தை இழந்து தங்களது சொந்த வாழ்க்கைக்கு சென்றிருப்பார்களேயானால், அது தெய்வீக ஏற்பாட்டிற்கு முற்றிலுமாக மாறானதாக இருந்திருக்கும்.

இயேசு நான்கு தடவை தரிசனமானார் – ஒரு தடவை ஸ்தீரீகளுக்கு காலையில் உயிர்த்தெழுந்தபோது, இன்னொரு தடவை அதே நாளில் அவரது இரண்டு சீஷர்கள் எம்மாவூருக்குச் சென்றபோது; பிறகு அதே மாலையில் பத்து பேர் மேல் அறையில் இருந்த போது; அதன் பிறகு ஒரு வாரம் கழித்து, பரி. தோமாவும் மற்ற பத்து சீஷர்களும் இருந்த போது இந்த தரிசனம். அதன் பிறகு இரண்டு மூன்று வாரம் அவரைக் காணாமலும் அவரது குரலைக் கேட்காமலும் கடந்தன. அவர்களது விசுவாசத்தை வளர்ப்பதற்கு இயேசு அவர்களுக்கு சில காலத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் இங்கேயும் அங்கேயும் காற்றைப்போல் செல்வதற்குரிய ஆவிக்குரிய வல்லமையை பெற்றிருந்தார் என்ற இந்த நிரூபணத்தை அவர்கள் பெற்றிருந்தனர். இப்படியெல்லாம் இருந்தும் கூட, அவர் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று எதுவும் கூறாததால், தங்களது மீன் பிடிக்கிற தொழிலுக்கு செல்வதுதான் சரியானது என்று அவர்கள் நினைத்தார்கள்.

இந்த ஒரு நேரத்திற்காகத்தான் இயேசு காத்துக்கொண்டிருந்தார். அவர்கள் ஆச்சரியங்களையும் சந்தோஷங்களையும் பெறுவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர்கள் மீன் பிடிக்கிற தொழி––ருந்து திரும்பியவுடன் அவர்களுக்கு தேவையான பாடத்தை அவர்களுக்கு போதிப்பதற்கு அவர் அவர்களுடன் காணக்கூடாதபடி இருந்தார். இதனிமித்தம் அவர்கள் ஒரு மீனைக் கூட பிடிக்க முடியவில்லை. எந்த மீனும் அவர்களது வலைக்குள் (அகப்படவில்லை) போகும்படி அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் இரவு முழுவதும் கஷ்டப்பட்டு ஒரு பிரயோஜனமும் இல்லை.

காலையிலே இயேசு கடற்கரையில் நின்று கொண்டிருந்தார். மூன்று வார காலமாக அவர்கள் அவரை பார்க்கவில்லை. முத–ல் அவர் இயேசு என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். படகுக்கு அந்தப்பக்கமாக வலையைப் போடும்படி அவர்களுக்கு அவர் கூறினார். படகுக்கு ஒரு பக்கத்தில் மீன் கிடைக்கவில்லையென்றால் அடுத்தப்பக்கமும் சாதாரணமாக மீன் கிடைக்காது. இந்த கொஞ்ச தூர வித்தியாசத்தில் எந்த வேறுபாடும் இருக்காது. இரவு முழுவதும் முயற்சித்தும் ஒன்றும் கிடைக்காததினால். அவர்கள் எதையும் செய்ய தயாராக இருந்தார்கள். ஒரு சில அடிகள் தூரத்தில் வலையைப் போடுவது விவேகமான செயலாக இல்லாதிருந்தாலும் நம்பிக்கையை முற்றிலும் இழந்திருந்ததால், அந்த அந்நியரின் யோசனையை பின்பற்ற தயாராக இருந்தார்கள். அவர்கள் அப்படியே வலையைப் போட திரளான மீன்கள் கிடைத்தது. அது ஒரு அற்புதம், ஏனெனில் வலை முழுவதும் நிரம்பியிருந்தது. தெய்வீக வல்லமையினால் ஒரு ஆவிக்குரிய ஜீவி திரளான மீன்களை ஒன்று சேர்த்தது ஒரு குறிப்பிடத்தகுந்த செயல் அல்ல.

இந்த அனுபவத்தினால், சீஷர்களுக்கு இரண்டு பெரிய பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. அதாவது தெய்வீக ஆசீர்வாதம் இல்லாமல் அவர்கள் வாழ்க்கை முழுவதும் செய்து வந்த மீன் பிடிக்கும் தொழி–ல்கூட வெற்றிபெற முடியாது. மனிதர்களை பிடிக்கக்கூடியவராகிய அவர், அவர்களுக்கு தேவையானதைக் கொடுக்க தெய்வீக வல்லமையுடையவராக இருக்கிறார் என்பது இரண்டாவது பாடம். அதாவது அவர்களுக்கு மீன்களை கொடுப்பதற்கான வல்லமையை பெற்றிருக்கும்போது, அவர்களது தேவைகளையெல்லாம் நிறைவு செய்வதற்குரிய வல்லமையை பெற்றிருந்தார். இன்னும் அவர்கள் கரைக்கு வந்தபோது, அவர் சில மீன்களை சமைத்து வைத்திருந்தார். அதாவது அவர் வலையில் பிடித்த மீன்களை நம்பியிருக்கவில்லை. அந்த வல்லமை, தெய்வீக வல்லமையாக, அபரிமிதமான வல்லமையாக இருந்தது என்பதை நாம் நிச்சயமாக அறியவில்லை. இந்த அனுபவம் சீஷர்களுக்கு கிட்டத்தட்ட ஒரு கடைசியான சான்று விளக்கமாக ஆனது. அவர் இயேசு என்று சீஷர்கள் அறிந்தபடியினால், அவர் யார் என்று அவர்களில் யாரும் கேட்கவில்லை. அவர்கள் இதுவரையில் செய்து கொண்டிருந்தது என்ன என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதையும் அவர்களுக்கு

ஆசீர்வாதத்தைக் கொடுக்கவும் எடுக்கவும் தமக்கு முழுமையான அதிகாரம் உண்டு என்பதையும் அவர் அவர்களுக்கு காண்பித்தார். அவர்களுக்கு எந்த இடத்திலும் எதையும் கொடுக்கக்கூடியவராக இருக்கிறார் என்பதை உணர்வதற்கு பெரிய ஊக்கமூட்டக் கூடிய ஒன்றாக அது இருந்திருக்க வேண்டும். அவர்கள் இனி உலகத்திற்கும் அதன் தொழிலுக்கும் திரும்பி போக வேண்டாம் என்பதையும் உணர்த்தக்கூடியதாக இருந்தது. ஏனெனில் அவர் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் அவர்களுடனே கூட இருப்பார். (மத்.28:20)

பின்னும் கர்த்தர் இன்னும் இரண்டு முறை அதாவது மொத்தத்தில் ஏழு முறை அவரது சீஷர்களுக்கு தரிசனமானார். பிறகு அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனார். பின்னொரு சமயத்தில் அவர் பரி. பவுலுக்கு தரிசனமானார். இந்த பல்வேறு செயல்முறை விளக்கங்களின் மூலம் இயேசு தமது சீஷர்கள் இரண்டு பெரிய காரியங்களை நம்பும்படிச் செய்தார். முதலாவது இனி அவர் மரித்தவர் அல்ல, அவர் உயிரோடிருக்கிறார் என்பது; இரண்டாவது அவர் உயர் பேரளவான வல்லமை உடையவராயிருந்தார் என்பது. “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.” (மத்.28:18) இந்த மகாபெரிய ஜீவி அவர்களது ஆண்டவர் ஆகும். அவர் எதையும் இழக்கவில்லை. அவர் மரணத்திற்குள் சென்று வெளியே வந்ததால் அநேகமானவைகளைப் பெற்றுக் கொண்டார். ஆகையால் அதிக நம்பிக்கையை அவர்மேல் அவர்கள் பெற்றிருக்கக் கூடும். அவர்கள் போய், அவரது மரணத்தைக்குறித்தும், அவர் உயிர்த்தெழுந்த உண்மையைக் குறித்தும், தேவனிடத்திற்கு, பரலோகத்திற்கு அவர் எழுந்தருளிப் போனது குறித்தும் பரிசுத்த ஆவியின் வெளிப்படுத்துத-னால் சொல்லக்கூடும். அவர்கள் முழுமையாக நம்பச் செய்யப்பட்டிருக்காவிட்டால் இந்த காரியங்களில் எதையும் அவர்கள் செய்திருக்க முடியாது.

பரி.தோமாவின் சந்தேகத்தை இயேசு குறை கூறினார் என்று நாங்கள் நினைக்கவில்லை. பரி.தோமாவைப் போல் மனோபாவம் உடையவர்களுக்கு இது மிகவும் திருப்திகரமான காரியமாக இருக்கிறது. சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான ரூபகாரம் தேவைப்படுகிறது. இந்த நேரத்தில் பரி. தோமாவின் செய-னால் முழு சபையும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. நாமும் சீஷர்களில் ஒருவராக இருந்து, இயேசு தரிசனமானபோது நாம் இல்லாதிருந்தோமானால், மற்றவர்கள் சொல்லும் போது, நாம், “பண்பாளர்களே, நீங்கள் கனவு காண்கிறீர்கள். உங்களுடைய குழப்பத்திலும், ஆச்சரியத்திலும் நீங்கள் ஒரு மந்திர தந்திர கதையை சொல்லுகிறீர்கள்” என்று கூறியிருப்போம். திருப்தியான ஒரு நிரூபணத்தை நாம் கேட்டிருப்போம். இப்போது கர்த்தர் இந்த ரூபகாரத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். இது நமக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது.

**ஆவியின் ஜீவிகள் பெற்றிருக்கும் வல்லமை**

மேல் அறையில் காற்றைப்போல இங்கேயும் அங்கேயும் போகக்கூடிய வல்லமையுடன், தான் இனி மரித்தவர் இல்லை என்று மெய்ப்பிக்கும்படியாக ஒருவர் இருந்தார் என்ற உண்மையே இயேசு மரிதோரி-ருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. பரி.தோமாவும் மற்ற சீஷர்களும் பார்த்த சரீரம், சிலுவையிலே அறையப்பட்டு, யோசேப்பின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட சரீரம் அல்ல, ஆனால் இயேசுவின் சரீரத்தைப் போன்று அதே முகபாவம், அதே கைகள், அதே கால்களுடன் உருவாக்கப்பட்ட ஒரு சரீரமாகும். இயேசு, “எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே” என்று கூறி தமது சரீரத்தைக் காண்பித்தார். அவர் மாம்சமும் எலும்புகளும் உடையவராகயிருந்தார்.

பரி.தோமாவும் மற்றவர்களும் எப்படி ஒரு ஆவி ஒரு சரீரத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்தறிய முடியவில்லை. உண்மையிலேயே நமக்கு தெரிந்திருக்கிறபடி பதினெட்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு இது எப்படி நடக்கக்கூடும் என்பது நமக்கு புரியவில்லை. எனினும் தேவ தூதர்கள் மனிதர்களைப் போல தோன்றி, நடக்கவும், புசிக்கவும், பேசவும் முடியும் என்பதை நாம் அறிவோம். பலவிதமான கெட்ட ஆவியின் ஜீவிகள் நோவா காலத்தில் தோன்றி மனிதர்களைப் போல வாழ வாஞ்சித்தார்கள் என்பதை நாம் அறிவோம். இதை சீஷர்கள் அறிந்திருந்தும், இதை கர்த்தருக்கு பொருத்திப் பார்க்க தோன்றவில்லை. இந்த காரியங்களை கர்த்தருக்கு, பொருத்திப் பார்க்க, அதாவது எப்படி ஒரு ஆவியின் ஜீவி அவர்களுக்கு முன்பாக மாம்ச சரீரத்தை எடுத்துக்கொள்ள முடியும் அல்லது விட்டுவிட முடியும் என்பதனை கற்றுக்கொண்டிருந்தார்கள். இது கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு காரியமாக இருந்தது.நாம் புரிந்து கொண்டது போல, அவர்களும் பரிசுத்த ஆவியை பெற்ற போது. இந்த காரியத்தைக் குறித்து பின்னாலே நன்றாக புரிந்து கொண்டிருப்பார்கள். ஒரு நல்ல அறிவுக்கு நாம் வரும் போது இந்த அளவிற்கு பரிசுத்த ஆவி நமது புரிந்து கொள்ளுதலுக்கு வழி நடத்தியிருக்கிறது.இன்னும் நாம் அதை புரிந்து கொள்ளாமல் இருந்தாலும், இவைகளை நாம் விசுவாசிக்கக் கூடிய மனோநிலைக்கு வந்திருக்கிறோம். ஏனெனில் இது எப்படி நடக்கிறது என்பதை புரிந்து கொள்ள தத்துவ காரியங்களில் புக வேண்டியிருக்கும். அப்போஸ்தலர்கள் கர்த்தரின் சரீரத்தை உயிர்த்தெழுத-ல் கண்டதாக நாங்கள் நினைக்கவில்லை. அவர் இனி மானிட ஜீவியல்ல, ஒரு ஆவியின் ஜீவி என்பதற்கான ரூபகாரத்தைக் கண்டார்கள். உயிர்த்தெழுதலைச் சார்ந்த எந்த ஒரு காரியத்தைக் காட்டிலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தேவையான சரீரத்தை உருவாக்குவது ஒரு பெரிய அற்புதம் அல்ல.

--------------------------

# God's Ark in Wicked Hands
# பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி
**( 1 சாமு 4:1-18)**

**ஒரு நேர்மையற்ற ஆசாரியத்துவம்– ஓர் ஒழுங்கற்ற ஜனம் –யுத்தத்திற்குள் தேவனை கொண்டு வரும் முயற்சி– தேவனுடைய உடன்படிக்கை பெட்டி பிடிபட்டது– சத்துருக்களின் கைகளினால் தண்டனை– அதே ஒழுங்கு இன்றும் வழக்கத்தில் இருக்கிறது– ஏ– மற்றும் அவனது குமாரர்களின் சோக மரணம்– எந்த நாடுகள் தேவனுடன் உடன்படிக்கை உறவைக் கொண்டிருக்கிறது?**

**"நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." யாக்.1:22**

ஏ– மற்றும் அவனது குடும்பத்தின் மேல் வரக்கூடிய அழிவைக்குறித்து தேவன் முன் அறிவித்தபடி இருபது வருடங்களுக்குப் பிறகு நிகழ்ந்த சோகத்தைப்பற்றியதுதான் இந்த பாடம். அந்த இருபது ஆண்டுகள் முழுவதும் வெளிப்படையான எந்த வித சீர்திருத்தமும் நடக்கவில்லை. வயது முதிர்ந்த ஏ–, இப்போது தொண்ணூற்றி எட்டு வயது, தேவனுடைய ஊழியத்தையோ அல்லது ஊழியர்களையோ தூய்மைபடுத்தவில்லை. அவன் தன் குமாரர்களின் கைகளில் காரியங்களை தொடர்ந்து விட்டுவிட்டான். அவர்கள் தங்களது ஒழுக்கமின்மையிலும், கெடுதலுண்டாக்கும் உதாரணத்திலும், தேவனுடைய காரியத்தில் அயோக்கியத்தனத்திலும் தொடர்ந்தார்கள். இந்தபாடத்தின் காலத்தில் சாமுயேல் வெளியரங்கமாக வராதிருந்தான், ஒரு வேளை சில வருடங்களாக. அவன் எங்கே இருந்தாலும், தேவனுடைய உண்மையான ஊழியக்காரனாகவும், அப்படியே ஜனங்களால் மென்மேலும் அங்கீகரிக்கப்பட்டவனாகவும் இருந்தான் என்று நாங்கள் நிச்சயப்படுத்துகிறோம்.

அந்த இருபது வருடங்களில் ஜனங்களின் நீதி மற்றும் மத நிலைமைகளை நாங்கள் அதிக மதிப்பீடு செய்வதற்கில்லை. ஆனால் ஏ-யுடன் ஆசாரிய ஊழியத்தில் ஈடுபட்டிருந்த அவனது குமாரர்கள் கெட்டவைகளுக்கு உதாரணமானவர்களாயும், ஜனங்களுக்கு ஒழுக்கச் சிதைவையும், தீங்கிழைக்கும் விளைவையும் உண்டாக்குகிறவர்களாகவும் இருந்தார்கள். இஸ்ரயேலர்களோடு தேவனுடைய உடன்படிக்கையின்படி, ஏ– அவர்களை கண்டிக்கவும் தண்டிக்கவும் கூடியவனாகவும் இருந்தான். பெ–ஸ்தர் புதிதாக படையெடுத்திருந்தார்கள். இஸ்ரயேலரும் அவர்களுக்கு விரோதமாக சென்று முறியடிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் ஏமாற்றத்தில் உதவிக்காக தேவனை தேடினார்கள், தற்காலத்தில் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் உதவிக்காக வீணாக தேவனை நோக்கியிருப்பதைப் போல.

அப்படிப்பட்ட நிலைமைகளில் வழக்கங்கள் அப்பொழுது இருந்தது போலவே இன்றைக்கும் இருக்கிறது. அதாவது தேவனையும் யுத்தத்திற்குள் கொண்டு வரும் முயற்சி, மத அடையாளங்களை உதவிக்காக வேண்டுவது போன்றவை. உண்மையிலேயே தற்காலத்தில் யுத்தத்தில் ஈடுபடும் ராஜ்யங்களைக் காட்டிலும் இஸ்ரயேலர்கள் அதிகமான காரணங்களை கொண்டிருந்தனர். ஏனெனில் தேவன் தம்மை இஸ்ரயேலர்களின் பாதுகாவலர் என்றும் அவர்கள் அவரது குழந்தை என்றும், அவர்கள் அவருக்கு உண்மையாய் இருக்கும் வரை அவர்களை அவர் பாதுகாப்பார் என்றும் அறிவித்திருந்தார். இந்த உலகின் ராஜ்யங்கள் இப்படிப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தங்களை பெற்றிருக்கவில்லை. இப்படிப்பட்ட தெய்வீக உதவியை எதிர்பார்ப்பதற்கான காரணங்களும் இல்லை. அவர்கள் தங்களை தவறாக "கிறிஸ்தவம்" என்றும் கிறிஸ்தவ தேசங்கள் என்றும் கூறிக் கொள்கின்றனர். அவர்களுக்கு தேவனுடன் எந்தவித பங்கும் பாத்தியமும் கிடையாது. தேவன் கடந்த காலத்தில் மாம்சீக இஸ்ரயேலரையும் தற்காலத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலரையும் தவிர வேறுயாரையும் தேவன் அங்கீகரிக்கவில்லை. "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்த ஜனமாகவும் இருக்கிறீர்கள்." 1 பேது.2:9

பெட்டியானது எப்படி வனாந்தர பிரயாணத்தில் அவர்களுக்கு முன்பாக சென்றது என்பதையும், அவர்கள் கால் நனையாமல் யோர்தானைக் கடந்தபோது எப்படி பெட்டி யோர்தான் ஆற்றின் நடுவிலே இருந்தது என்பதையும், எரிகோ பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழுந்தபோது, பட்டணத்தை சுற்றி வந்தபோது எப்படி பெட்டியானது கூட சுற்றி வந்தது என்பதையும் இஸ்ரயேலர்கள் நிச்சயமாக அறிந்திருந்தார்கள். ஆகையால் கர்த்தருடைய பெட்டியை கொண்டுவந்து யுத்தத்தில் இஸ்ரயேலர்கள் நடுவிலே வைக்க தீர்மானித்தார்கள். எனவே அது வெற்றியை உறுதி செய்யும் என்று நினைத்தார்கள். தேவன் உடன்படிக்கை பெட்டியை சேதமடையவும் பிடிபடவும் அனுமதிக்கமாட்டார், ஆகையால் அது அவர்களுக்கு இரட்சிப்பையும் வெற்றியையும் கொண்டு வரும் என்று முடிவு செய்தார்கள்.

நமது மனக்கண்களுடன் அந்த காட்சியை நாம் பார்க்கிறோம். தேவனுடைய பரிசுத்த பெட்டியை லேவியர்கள் சுமந்து செல்ல, தேவனுடைய பரிசுத்தத்தின் பிரதிநிதியாக ஏ–யின் இரண்டு

மகன்களும் அணிவகுத்து செல்கிறார்கள். ஜனங்கள் தேவனுடைய பெட்டியின் மூலம் வெற்றி கிடைக்கும் என்ற எண்ணத்துடன் தங்களது வழக்கமான போர்ப்பாடலை உற்சாகத்துடன் பாடினார்கள். "எழுந்தருளும் கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக; உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக." எண்.10:35

ஜனங்கள் தேவனுடைய உடன்படிக்கையை மீறி, தெய்வபக்தியில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதை அவர்கள் மறந்தார்கள். அந்த உடன்படிக்கை அவர்களை எதிரிகளின் கைகளினால் தண்டிக்க வேண்டியிருந்தது என்பதையும் மறந்தார்கள்; பிரதிநிதிகளான இரண்டு ஆசாரியர்களும் தேவனையும் அவருடைய நீதியையும் எந்த விதத்திலும் குறிக்கவில்லை என்பதையும், அவர்கள் தேவனுடைய ஆசாரியர்களின் உடையணிந்த திருடர்கள், கொள்ளைக்காரர்கள் என்பதையும் மறந்தார்கள்; அவர்கள் ஒழுக்கங்கெட்டவர்கள், களங்கமானவர்கள், தெய்வீக பரிசுத்தத்தின் பிரதிநிதிகளாக பாவனை செய்பவர்கள் என்பதையும் ஜனங்கள் மறந்தார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் தேவனுடைய ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க முடியாது என்பதையும் ஜனங்கள் மறந்தார்கள்.

**தற்காலத்திற்கான ஓர் ஒப்புமை**

ஐயகோ! அவர்களது காலத்திற்கு பிறகு நூற்றுக் கணக்கான வருடங்கள் கடந்தோடியிருந்தாலும், இன்றைக்கும் கூட இதே நிலைமையை நாம் பார்க்கிறோம். தேவனுடைய பிரதிநிதிகளாக ஊழியம் செய்பவர்கள் வெட்கத்திற்குரியவர்களாக, பாசாங்கு செய்பவர்களாக, தேவனை தவறாக பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். இதோ, தற்கால யுத்தத்தைப் பார்க்கிறோம். லூத்தரன் சபை தலைமையில் ஜெர்மனியின் கெயிசர் போரிட வருகிறார், போப்பு சபையின் தலைமகனாக ஆஸ்திரியா-ஹங்கேரியின் சக்கரவர்த்தி பிரான்சிஸ் ஜோசப் வருகிறார்; இங்கிலாந்து சபையின் தலைமையில் மன்னர் ஜார்ஜ் வருகிறார்; கிரேக்க கத்தோ-க்க சபையின் தலைமையான பிரதிநிதியாக, ரஷ்யாவின் "சிறிய தந்தை" சார் மன்னர் வருகிறார். இவர்களெல்லாம் தேவனுடைய எண்ணத்துடன் தங்களது வீரர்களை அணிவகுத்து போரிட வருகிறார்கள். ஒவ்வொருவரும் சமாதான பிரபுவின் விலையேறப்பெற்ற நாமத்தை புழுதியில் போட்டு மிதிக்க வருகிறார்கள்; தங்களது ராஜ்யத்தையும் பொருளாதார செழிப்பையும் மேம்படுத்தவும் சுய நோக்கத்துடன் வாளை எடுக்கிறார்கள்; கடந்த கால முறைமைகளைப் பற்றிக்கொண்டு தங்களது அதிகாரத்தால் தேவனுடைய ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்கும் எண்ணத்துடன் வருகிறார்கள்.

ஏ-யின் குமாரர்களின் காலத்தைப்போல இன்றைக்கும் ஜனங்கள் தங்கள் நாட்டின் திட்டங்களுடன் தேவனுடைய காரியத்தையும் இணைத்து கூச்ச-டுகிறார்கள். இந்த இரண்டும் வெவ்வேறானது என்பதை அவர்கள் மறுபடியும் மறக்கிறார்கள்; தேவனுடைய காரியங்கள் தெய்வீக வழிநடத்துத-ல் நடக்கிறது என்பதையும் மறந்துவிடுகிறார்கள். மனிதர்களின் இந்த எல்லா முறைமைகளையும் தோல்வியுறச் செய்வதின் மூலம் தேவனுடைய காரியங்கள் செழிப்படையும். மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறும். இது வேதாகமத்தின் அர்மகெதோன் யுத்தத்திற்கு பிறகு உலகத்தை தாழ்மைப்படுத்தி, சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்ட ராஜா இம்மானுயேலையும் அவரது ராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்ள தயார்படுத்தும்.

கர்த்தரின் நாமத்தில் அழைத்ததினாலேயோ, தேவனுடைய பெட்டியை யுத்தத்தில் வைத்திருந்ததினாலேயோ இஸ்ரயேலர்களுக்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. அதே போல ரஷ்ய வீரர்கள் கிறிஸ்துவின் உருவப்படத்தை எடுத்துச் செல்வதினாலேயோ அல்லது ஜெர்மானியர்கள் தங்கள் கச்சைகளில் தேவனுடைய நாமத்தை அணிந்திருப்பதினாலேயோ அல்லது ஆங்கில படைகள் பரி.ஜார்ஜின் சிலுவையை எடுத்துச் செல்வதினாலேயோ அவர்களுக்கு வெற்றி கிடைக்கப்போவதில்லை.

இஸ்ரயேலரில் மகா சங்காரம் உண்டாயிற்று; இஸ்ரயே-ன் படை சிதறுண்டு போனது. ஏ-யின் இரண்டு குமாரர்களும் கொல்லப்பட்டனர். தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது. இருபது வருடங்களுக்கு முன்னதாக தேவனால் முன்னறிவிக்கப்பட்ட அழிவைக் குறித்து நினைத்துக்கொண்டு ஏ- யுத்தத்தின் முடிவுக்காக ஆசனத்தில் உட்கார்ந்து வழியைப் பார்த்துக் கொண்டிருந்தான். படையி-ருந்து ஒருவன் சீலோவுக்கு ஓடிவந்து, ஏ-யிடம் யுத்தத்தின் முடிவு இஸ்ரயேலருக்கு விரோதமாக சென்றது என்பதையும், ஏ-யின் இரண்டு குமாரர்களும்

கொல்லப்பட்டதையும் தேவனுடைய பெட்டியை பெ-ஸ்தர் பிடித்ததையும் அறிவித்தான்.

## இஸ்ரயேலர்கள் மற்ற ஜாதியினரைக் காட்டிலும் மாறுபட்டவர்கள்

ஏ- இவைகள் எல்லாவற்றையும் கேட்டான். தெய்வீக ஏற்பாட்டினால் தான் பாதுகாவலனாக வைக்கப்பட்டிருந்த தேவனுடைய பெட்டி பெ-ஸ்தர்களால் பிடிக்கப்பட்டது என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே ஆசனத்தி-ருந்து மல்லாந்து விழுந்து, பிடறி முறிந்து இறந்தபோனான். தொண்ணூற்று எட்டு வயதில் மரிக்கும் வரை உள்ளத்தில் உண்மையுள்ளவனாயிருந்தும் கூட ஏ-, தனக்கு கொடுக்கப்பட்டிருந்த வேலையை சரியாய் செய்யமுடியாதபடி குறுக்கீடு செய்த தனது குடும்பத்தாரை கண்டிக்காமல் விட்டுவிட்டான். அவனது விசுவாசம் போதுமான அளவு இல்லாதது தனது பொறுப்பி-ருந்து பின்வாங்கும்படி செய்தது. "எந்த விலைக்கொடுத்தாவது சமாதானம்" மற்றும் நீதியினிமித்தம் மரிக்க தயாராயிருக்கிற அளவுக்கு தைரியம் இல்லாத குணத்தை உடையவராக ஏ- இருந்தார்.

தேவனுடைய உடன்படிக்கையின் மக்கள் இஸ்ரயேலருக்கு, பாடம் கற்றுக்கொடுக்கப்பட்டது. கர்த்தர் அடுத்தபடியாக பெ-ஸ்தருக்கு தண்டனை கொடுத்து பெட்டியை தேவனுடைய பிள்ளைகளிடம் திரும்பி கொடுக்கும்படி செய்தார். தேவனுடைய பெட்டி பெ-ஸ்தரிடம் இருக்கும்வரை தேவன் அவர்களை எ-களினாலும் மூலவியாதிகளினாலும் வாதிக்கிறார் என்று கூறினார்கள். அவர்கள் அந்த பெட்டியை இஸ்ரயேலர்களிடம் ஒப்படைத்தபோது, வாதைகள் நிறுத்தப்பட்டன. இவைகளெல்லாம் வினோதமான வாதைகள் என்று பெ-ஸ்தர்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. அவைகள் கர்த்தரிடத்தி-ருந்து வந்தன என்ற எண்ணத்தை வேத வாக்கியங்கள் உறுதி செய்கிறது.

தற்காலத்தில் வருகிற ஒவ்வொரு வாதையும் கர்த்தரால் வருகிறது, அதாவது கொள்ளை நோய் மற்றும் தொற்று நோய்கள் தேவனிடத்தி-ருந்து வருகிற விசேஷித்த தண்டனைகள் என்று நாம் யூகிப்பதற்கு இது நமக்கு அதிகாரமளிக்கவில்லை. இந்த காரியத்தை நாம் கவனிக்கும்போது, இஸ்ரயேலும் அதைப்பற்றிய அனைத்துக் காரியங்களும் தேவனுடன் விசேஷித்த தொடர்பு உடையவைகள் என்பதையும், தேவனுடைய மேற்பார்வையில் உள்ளவைகள் என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும். இஸ்ரயேலையோ அல்லது அடையாளமான முறைமையைச் சார்ந்த எதையாவது யாராவது தொட்டால் அது கர்த்தருக்கும் அவருடைய காரியத்திற்கு, விருப்பத்திற்கு விரோதமானது, அவரது அனுமதியுடன் தான் இதைப் பண்ண முடியும். அவருடைய பெட்டியை திரும்ப கொண்டு வர கர்த்தர் விரும்பியபொழுது அல்லது தமது மக்களை விடுவிக்க விரும்பியபோது, அதற்கு தேவையான நிலைமைகளை அந்த பக்கம் ஏற்படுத்துவது அவருக்குரிய வேலையாக இருந்தது.

இப்படிப்பட்ட எந்தவொரு நிலைமையும் இப்போது நேரிடவில்லை. இஸ்ரயேல் ஜாதி தெய்வீக பாதுகாப்பி-ருந்து தற்கா-கமாக நீக்கப்பட்டிருக்கிறது. இது புறஜாதிகளி-ருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு கொண்டுவரப்படுகிறவர்களின் தொகை நிறைவாகும் வரை நீடிக்கும். அதன்பிறகு இஸ்ரயேலரின் கடின மனதும் விரோதமும் நீக்கப்படும். அது இப்படியாக எழுதப்பட்டுள்ளது: "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை." (ரோம.11:26-32)

தற்போது, வேதத்தின்படி தேவனுடன் உடன்படிக்கை உறவு கொண்டுள்ள ஒரே ஜனம், ஒரே ஜாதி ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய "பரிசுத்த ஜாதி, சொந்த ஜனம்" ஆகும். ஆவிக்குரிய இஸ்ரயேலரைப் பொருத்தவரை அவர்களுடைய நோக்கமெல்லாம் ஆவிக்குரியவைகள். அவர்களுக்குரிய தெய்வீக வாக்குத்தத்தங்கள் எல்லாம் பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும் பாதுகாப்பையும் பற்றியதல்ல; மாறாக, துன்பமும் எதிர்ப்புமேயாகும். தேவன் கொடுத்திருக்கிற உத்தரவாதம் எல்லாம் ஆவிக்குரிய நன்மைகளைப்பற்றியதாகும். தற்கால வாழ்க்கையில் அவர் அனுமதிக்கிற துன்பமெல்லாம், அதை அவர்கள் சரியானபடி அப்பியாசப்படுத்தினால், நித்திய ஆவிக்குரிய நன்மைகளுக்கு கிரியை செய்யும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர்:

சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண்: 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,

சென்னை- 600 019. கைபேசி: 97909 00030. மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

## Confession of Sin, Forgiveness, Victory
## பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி

I சாமுயேல் 7:3−17

தீர்க்கதரிசியும் நியாயாதிபதியுமாகிய சாமுயேல்−மேலானவைகளில் அவனது செல்வாக்கு− இஸ்ரயேல் தவறுக்கு வருந்துகிறவர்களானார்கள் − மிஸ்பாவில் ஒரு கூட்டம் − காவற் கோபுரம் − உபவாசமும் ஜெபமும் − தேவனுடைய கிருபை திரும்பியது − பெ−ஸ்தர் கண்டிக்கப்பட்டனர் − சாமுயே−ன் நியாயம் விசாரிப்பில் இஸ்ரயேலர் ஆசீர்வதிக்கப்பட்டனர் − சுற்றுப்பிரயாண நியாயாதிபதி.

"இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்." I சாமு. 7:12

தீர்க்கதரிசி சாமுயேல், ஆசாரியன் ஏ−யிடம் ஊழியம் செய்தாலும், ஆசாரிய குடும்பத்தை சேர்ந்தவனாக இராததால் அவனால் ஏ−க்கு பிறகு ஆசாரியனாக முடியவில்லை. அவன் குறிப்பிட்ட வளர்ச்சி அடைந்த பிறகு, மற்ற ஊழியங்களில் ஈடுபட்டான், ஆகையால் குறைந்த பட்சம் இருபது வருட இடைவெளி ஆசாரிய சரித்திரத்தில் காணப்பட்டது. எனினும் அவன் தேவனிடம் விசுவாசம் உள்ளவனாகவும், ஜனங்களின் மேல் அக்கரை உள்ள வனாகவும் இருந்ததால், ஜனங்கள் அவனை தேவனுடைய ஊழியக்காரனாக நம்பினார்கள். எனவே அவன் சும்மா இராமல் சில நல்ல வேலைகளில் ஈடுபட்டான். ஜனங்களின் தவறான நிலைமைகள் குறித்தும், விக்கிரக ஆராதனை, தேவனை அலட்சியம் செய்வது முதலானவைகளைக் குறித்தும் ஜனங்களுக்கு புத்திமதி கூறி போதிக்கிற காரியங்களில் ஈடுபட்டு வந்தான்.

ஜனங்கள் புனிதத்தை இழந்து, தேவனும், ஒருவருக்கொருவர் உதவி செய்தலும் தேவைப்படுகிற ஏற்ற காலத்தில் எழும்பிய ஒரு தலைவனாக இந்த பாடம் சாமுயேலைக் குறித்து நமக்கு கூறுகிறது. ஜனங்களும் தேவனிடம் திரும்ப வேண்டியவர்களாக இருந்தார்கள். இந்த நிலைமைக்கு ஜனங்களை கொண்டுவந்த பிறகு மிஸ்பா என்கிற சிறிய மலையிலே அதாவது காவற் கோபுரத்திலே ஜனங்களை கூட்டிச் சேர்த்தான். தாங்கள் பாவிகளாயிருந்ததையும் தேவ கிருபையை இழந்தவர்களாயிருந்ததையும் உணர்ந்து வருந்தி, தலை வணங்கி தேவனிடம் திரும்புகிற உள்ளத்தோடு குறிப்பிட்ட தொகையில் ஜனங்கள் மிஸ்பாவிலே கூடினார்கள். அவர்கள் தேவனை தேடி வந்தார்கள், தேவனும் அவர்கள் மேல் பிரியமாயிருந்தார்.

### ஒரு பெரிய சீர்திருத்தம் நிகழ்ந்தது

தீர்க்கதரிசி சாமுயேல் இஸ்ரயேல் ஜனங்களை நோக்கி கூறியதாவது: "நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவி−ருந்து விலக்கி, உங்கள் இரு தயத்தை கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்; அப்பொழுது அவர் உங்களை பெ−ஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கிவிடுவார்." பெ−ஸ்தரின் அதிகாரத்தி−ருந்து ஜனங்களை விடுவிப்பார் என்று சாமுயேல் அவர்களுக்கு உத்தரவாதம் அளித்தான். ஏனெனில் இது தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆகும். அதாவது அவர் அவர்களுடைய தேவனாகவும், அவர்கள் அவருடைய ஜனங்களாகவும் இருப்பார்கள்; அவர்களை அவர் ஒரு ஜாதியாகவும் தனிப்பட்ட நபராகவும் வழிநடத்தி நன்மை செய்வார்; ஆனால் அவர்கள் அவருக்கு கீழ்ப்படியாமலும், அவருக்கு உண்மையாகவும் இல்லாதிருந்தால், அவர் அவர்களை அவர்களது சத்துருக்களின் கைகளில் ஒப்புக் கொடுத்து ஏழத்தனையாய் அவர்களை தண்டிப்பார். தேவன் அந்த உடன்படிக்கையின் தமது பங்கை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். இஸ்ரயேலர் அதை நிறைவேற்றாதிருந்தார்கள். சாமுயேல் இந்த காரியங்களையெல்லாம் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களை மனம் வருந்தச் செய்தான்.

"அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்தையும் விலக்கிவிட்டு, யேகோவா ஒருவருக்கே ஆராதனை செய்தார்கள்." பாகால்கள் என்பது பாகா−ன் பன்மைப் பெயராகும். பாகால் என்றால் மேற்பார்வையாளர், பாதுகாப்பாளர் என்று பொருள்படும். இஸ்ரயேலர்கள் எந்த ஒரு விக்கிரகத்தையும் செய்யக் கூடாது என்றும், அதி−ருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் அவர்களது தேவன் யேகோவாவுக்குக் கூட உருவத்தை செய்யக் கூடாது என்றும் முன்னெச்சரிக்கை பண்ணப்பட்டிருந்தார்கள். அவரது ஜனங்களுக்கு முன்னால் அவருக்கு எந்தவித அடையாளமும் கிடையாது, ஆனால் அவரை அவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். ஆனால் அவர்களை சுற்றிலும் கானானியர்கள் இருந்தார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும் கானானியர்களை துரத்த முடியவில்லை. இந்த கானானியர்கள் தங்கள் நகரங்களிலும் வீடுகளிலும் பாகால் சிலைகளை வைத்திருந்தனர். அவைகளை தங்களை பாதுகாக்கும் தெய்வங்களாக நம்பினார்கள்.

அஸ்தரோத் என்பது ஒரு பெண் தெய்வம். பாபிலோனியர்கள் இதை இஸ்டார் என்றும் கிரேக்கர்கள் ஆஸ்ட்ரேட் என்னும் அழைக்கிறார்கள். இது குழந்தை பேறுக்கும் பால் உறவுக்கும் உரிய தெய்வமாக

கருதப்பட்டது. மனித இனத்தை பெருக்குவதற்கும் வரம்பு மீறிய செயல்களுக்கும் உரிய தெய்வமாக ஆராதித்து வந்தனர். சாமுயே—ன் இருபது வருட ஊழியத்தினால் இஸ்ரயேல் ஜனங்கள் அவர்களது அஸ்தரோத் தெய்வங்களை ஒதுக்கிவிட்டு, யேகோவா தேவனை மட்டுமே ஆராதிக்கும்படி தீர்மானித்தார்கள். உண்மையிலேயே சாமுயேல் நிறைய காரியங்களை முடித்திருக்கிறார். இந்த வெளியரங்கமான வெளிப்பாடுகளுக்கு சில மனித செயல் இணைந்திருக்க வேண்டும் என்று நாம் நிச்சயிக்கிறோம். இந்த சீர்திருத்தம் சந்தர்ப்ப வசத்தினாலோ அல்லது ஒரு அற்புதத்தினாலோ நடைபெறவில்லை.

இஸ்ரயேல் ஜனங்களுக்காக சாமுயேல் ஜெபித்தார். "அவர்கள் அப்படியே மிஸ்பாவிலே கூடி வந்து, தண்ணீர் மொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றி, அன்றைய தினம் உபவாசம் பண்ணி, கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தோம் என்று அங்கே சொன்னார்கள்." பாவ அறிக்கை ஜனங்களின் நம்பகத் தன்மையை மாத்திரமல்ல, அவர்களது நேர்மையையும் நாணயத்தையும் வெளிப்படுத்துகிறது. அவர்கள் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்திருந்தார்கள், தேவன் அவர்களை மறுபடியும் உடன்படிக்கையின் உறவுக்குள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கேட்ட பொழுது, இந்த பாவ அறிக்கை பாராட்டுக்குரியதாக இருந்தது. பாவ அறிக்கை ஆத்துமாவுக்கு நல்லது என்று சங்கீதக்காரன் சொல்—யிருக்கிறான். அது நல்லது என்று நிரூபணமாகியிருக்கிறது. அது அவர்களை உறுதியளிக்கும்படி கிரியை செய்திருக்கிறது. இப்படிப்பட்ட பாவ அறிக்கை செய்தவருக்கு தாழ்ச்சி மிகவும் தேவைப்படுகிறது. அது அவர்களது குணநல அபிவிருத்திக்கு அனுகூலமாயிருக்கும்.

தண்ணீரை மொண்டு ஊற்றியதை பல்வேறு கோணங்களில் கவனிக்கலாம். அவர்கள் மறுக்க முடியாத சத்தியத்தை அது குறிப்பிடலாம் என்று நாம் யூகிக்கிறோம்; தரையிலே ஊற்றிய தண்ணீரை திரும்ப பெற முடியாதது போல சத்தியத்தை திரும்ப பெற முடியாது. இன்னொரு யூகம் என்னவென்றால், தண்ணீர் பூமியின் ஆழங்களி—ருந்து எடுக்கப்பட்டது போல, அவர்களது பாவ அறிக்கை அவர்களது இருதயத்தின் ஆழங்களி—ருந்து வந்தது. இன்னொரு காரியம் என்னவென்றால் தேவனிடம் உண்மையாயிருப்பதற்காக எடுத்துக் கொண்ட பிரதிக்கினை, ஊற்றப்பட்ட தண்ணீர்போல திரும்ப எடுக்க முடியாதது.

### ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு ஒரு பாடம்

"மிஸ்பாவிலே சாமுயேல் இஸ்ரயேல் புத்திரரை நியாயம் விசாரித்துக் கொண்டிருந்தான்."நியாயம் விசாரித்தான் என்று சொல்லும்போது, அவன் யோசனை கூறினான்; புத்திமதி கூறினான்; அவர்களது விவகாரங்களில் தீர்மானம் எடுப்பது, தகராறு, எந்த காரியத்தைக் குறித்தும் சரி எது, தவறு எது என்று கூறுவது, நடக்கக் கூடிய முறை குறித்து வழிமுறை கூறுவது போன்றவை. எனவே இஸ்ரயேலர் ஒரு புது ஆரம்பத்தை ஏற்படுத்தினார்கள். யோசுவாவின் காலத்திற்கு பிறகு எப்பொழுதும் இருந்ததைவிட அதிகமாக கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். அந்த நேரம் அவர்களது விசுவாசத்திற்கு சோதனையாக இருந்தது. நீதிக்குரிய காரியங்களை அவர்கள் தீர்மானித்தபோது, அவர்களது சத்துருக்களாகிய பெ—ஸ்தர்கள், இவர்கள் கூடியிருப்பதை கேள்விப்பட்டு, இந்த கிளர்ச்சியை (கலகத்தை) முளையிலேயே கிள்ளியெறியும் பொருட்டு ஒரு கணிசமான அளவு இராணுவத்துடன் இஸ்ரயேலருக்கு விரோதமாக வந்தார்கள்.

இஸ்ரயேலர்கள் போருக்காக கூடி வரவில்லை, ஆராதனைக்காக கூடினார்கள். எனினும் அவர்களிடம் கொஞ்சம் ஆயுதம் இருந்தது. ஆனால் அவர்கள் பெ—ஸ்த சேனையை சந்திக்க முற்றிலுமாக தயாரற்ற நிலையில் இருந்தார்கள். அவர்கள் சாமுயே—டம் கூறியதாவது: "நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களை பெ—ஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும்படிக்கு, எங்களுக்காக அவரை நோக்கி ஓயாமல் வேண்டிக் கொள்ளும்.'' முறைப்படி உதவியைப் பெற அவர்கள் கற்றுக் கொண்டிருந்தார்கள். இருபது வருடங்களுக்கு முன்னதாக தங்கள் பாவங்களுக்கு வருந்தாமலும், குணத்தில் சீர்திருத்தம் இல்லாமலும் தேவனுடைய பெட்டியை யுத்தத்திலே கொண்டு வந்ததைக் காட்டிலும் இப்பொழுது அவர்களது மனோபாவம் மாறி, தங்களது விக்கிரகங்களை தூக்கி எறிந்துவிட்டு, தேவனுக்கு உண்மையாயிருக்க பிரதிக்கினை செய்தார்கள்.

இங்கே அனைத்து தேவனுடைய பிள்ளைகளுக்கும் ஒரு பாடம் இருக்கவில்லையா? தேவனுடன் செய்த உடன்படிக்கையையும் அதற்கான கடமைகளையும் மீறி பாவத்தில் வாழ்ந்து கொண்டு, உதவிக்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் எவ்வளவு பேர் வீணாக தேவனிடம் வேண்டுகிறார்கள் என்பது எவ்வளவு உண்மையாக இருக்கிறது. எல்லாருக்கும் முதல் பாடமானது தாங்கள் பாவத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து வருந்தி, தேவனுடன் உண்மையாயிருக்க பிரதிக்கினை செய்து, அவரது இரக்கத்திற்காக வேண்டுதல் செய்ய வேண்டும் என்பது. இப்பொழுது கிறிஸ்தவனாக தேவனிடம் கிறிஸ்து மூலமாக வருபவர்களுக்கு தெய்வீக இரக்கமும் ''ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையும்'' நிச்சயம் கிடைக்கும்.

நம் மேல் வருகிற பெ—ஸ்தர்கள், நமது உணர்ச்சிகளும் பலவீனங்களும், சாத்தான் மற்றும் உலகத்தின் எதிர்ப்புகளும் ஆகும். இவைகள் நமது விரோதிகள். இவைகளுக்கு விரோதமாகத்தான் தெய்வீக வல்லமை நம்மை நல்ல பேராட்டத்தை போராடி ஜெயிக்க வைக்கிறது.

**--2226--**

ஜனங்களின் வேண்டுகோளைக் கேட்டு, சாமுயேல் பால் குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியை சர்வாங்க தகனப–யாக செலுத்தினான். இது தான் ''உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டிக்கு'' முன்னடையாளம் என்பதை சாமுயேல் அறியவில்லை. இந்த நிழலான ப–யுடன் கூட, சாமுயேல் அவனது ஜனங்களுக்காக தேவனிடம் வேண்டினான், தேவனும் அவனுக்கு செவி கொடுத்தார். மெய்யான ப–க்கு இது முன்னடையாளமாக இருந்தது. இந்த மெய்யான ப–யின் புண்ணியத்திலும், அவரது நாமத்திலும் தேவனுடன் உடன்படிக்கை உறவு கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகள், தங்களால் இயன்றவரை பாவத்தையும் பலவீனத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு தேவனிடம் சென்றோமானால் நிச்சயமாக தெய்வீக உதவியும் விடுதலையும் கிடைக்கும்.

**தெய்வீக கிருபையின் தெளிவான அடையாளம்**

ப–பீடத்தின் மேல் ப– இன்னும் இருக்கும் போது, நெருங்கிக் கொண்டிருக்கிற பெ–ஸ்தரின் சேனைகளின் சத்தம் கேட்கப்படும்போது, எப்படி தேவன் தமது ஜனங்களுக்கு உதவுவார்? அவர்கள் பயந்து ஓடுவார்களா அல்லது தேவனுடைய வல்லமை அவர்களுக்கு உதவிட வெளிப்படுமா? மகா பெரிய இடிமுழக்கங்கள், புயல் மூலம் விடுதலை வந்தது. இந்த புயல் சீக்கிரமாக மிஸ்பா மலைமுழுவதும் அடித்து, நெருங்குகிற பெ–ஸ்தரின் சேனைகளை கலங்கடித்தது. பெ–ஸ்தர்கள் கட்டுக்கடங்காத புயலைக் கண்டு திரும்பி ஓடினார்கள். இஸ்ரயேலர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புயலுடன் தொடர்ந்து ஓடி, பெ–ஸ்தர்களை முறிய அடித்து வெற்றி கொண்டார்கள். அவர்கள் வெற்றிபெற்ற இடம் இருபது வருடங்களுக்கு முன்னதாக பெ–ஸ்தர்கள் தேவனுடைய பெட்டியை பிடித்த அதே இடம் ஆகும். சாமுயேல் ஒரு கல்லை எடுத்து, ஒரு அடையாளமாகவும் தூணாகவும் நிறுத்தி, "இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்'' என்று சொல்– அதற்கு எபெனேசர் என்று பேரிட்டான். 1 சாமு. 7:12

இதேபோல் கிறிஸ்தவர்கள் தேவனுடைய உதவியுடன் வெற்றிபெறும்போது செய்ய வேண்டும். தேவனுடைய கிருபையின் மூலம் வெற்றிபெறும் போது, அவர்கள் தங்கள் உள்ளத்திலே, இருதயத்திலே ஒரு ஞாபக சின்னத்தை பதிய வைக்க வேண்டும். பரத்தி–ருந்து வருகிற உதவியால் பெற்ற வெற்றியின் ஆசீர்வாதத்தை கடந்து செல்லவோ, மறக்கவோ கூடாது. ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும், அவனுடைய சத்துருக்களாகிய உலகம், மாமிசம் மற்றும் சாத்தானை, தெய்வீக உதவியுடன் வெற்றி பெறும்போது தனது எபெனேசரை, ஞாபக சின்னத்தைக் கொண்டிருந்து இவைகளில் களிகூர வேண்டும். இந்த உணர்வு ஓர் அழகான கீழ்க்கண்ட கீர்த்தனை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆங்கிலம் அறிந்த அனைவருக்கும் தெரிந்த ஒரு கீர்த்தனை ஆகும்.
"

இங்கே என் எபெனேசரை நாட்டுவேன்,
இந்த இடத்திற்கு உம் உதவியால் வந்திருக்கிறேன்;
இல்லத்தில் பாதுகாப்பு வந்து சேரும்,
உமது விருப்பத்தால் என்று நம்புகிறேன்."

**சரியான மற்றும் தவறான தீர்மானங்கள்**

சாமுயேல் தான் "உயிரோடிருக்கும் நாளெல்லாம்" இஸ்ரயேலருக்கு ஒரு நியாயாதிபதியாகவும், தெய்வீக பிரமாணங்களுக்கு விளக்கம் அளிப்பவராகவும், ஒரு ஆலோசனைக்காரனாகவும் இருந்தான் என்று வேதம் கூறுகிறது. இஸ்ரயேலர்கள் தேவனுடைய பிரமாணங்களை ஏற்றுக் கொண்டு, அதன் கட்டளைகளில் நிலைத்திருப்போம் என்று ஒத்துக்கொண்டிருந்தார்கள். ஆகையால் தெய்வீக பிரமாணங்களுக்கு பொருள் விளக்கம் கூறும் நம்பிக்கை உடையவர்கள் நல்ல மனநிலையில், தேவனுடைய கட்டளைகளுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய தயாராக இருக்க வேண்டும். இதே போல தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிற ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் தங்களது சொந்த சித்தத்தை அல்ல, தேவனுடைய சித்தத்தை தேடவும் அதன்படி செய்யவும் வேண்டும். தன்னை "உத்தம இஸ்ரயேலனாக" காண்பித்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்த எந்த மனிதனும் தேவனுடைய ஆலோசனைக்காரனாகவும் அவரது வாயாகவும் ஆகின்றான். எனவே தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் தங்களை தாங்களே நியாயந் தீர்த்துக் கொள்ள உதவி செய்யவும், மகா பரிசுத்த விசுவாசத்தில் ஒருவரையொருவர் உறுதிப்படுத்திக் கொள்ளவும் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி செய்யவும் ஒருவருக்கொருவர் வழி நடத்துகிறார்கள்.

இந்த வேலை ஊழியக்காரர்களுக்கோ, ஆசாரியர்களுக்கோ அல்ல, எல்லாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த பவுல், கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் ஆசாரியர்கள் என்று அறிவிக்கிறார் – "நீங்கள் ராஜரீக ஆசாரிய கூட்டமாய் இருக்கிறீர்கள்." உண்மைதான், இந்த ஆசாரியர்கள் இன்னும் அவர்களது ராஜரீகத்துக்குள் நுழையவில்லை; ஆசாரிய வேலைக்குள்ளும் இன்னும் முழுமையாக நுழையவில்லை. இந்த மகிமையான வேலைகள் எல்லாம் விசேஷமாக வருங்காலத்துக்குரியது. தற்போது ப–கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த ஆசாரியர்கள் உயிர்த்தெழுத–ன் மாற்றத்தினால் மகிமையில் ஆசாரியர்களாகவும், உலகத்தை கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆளுகை செய்கிறவர்களாகவும் நியாயந்தீர்க்கிறவர்களாகவும், உலகத்திற்கு உதவிபுரிகிறவர்களாகவும், ஆலோசனை சொல்பவர்களாகவும் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி கிரியை செய்ய அவர்களுக்கு போதித்து உதவுபவர்களாகவும் இருப்பார்கள்.

--2227--

ராஜரீக ஆசாரியர்கள் தற்காலத்தில் இருதயத்தை நியாயந்தீர்க்கிறவர்களாக அல்ல, நடத்தைகளை மட்டும் நியாயந்தீர்க்கிறவர்களாக இருக்கிறார்கள் என்பதை நினைவு கூர வேண்டும். இருதயத்தை நியாயந்தீர்க்க அவர்கள் தற்காலத்தில் தகுதியுள்ளவர்கள் அல்ல என்று கர்த்தர் அவர்களுக்கு போதித்திருக்கிறார். அப்.பவுல் கூறுகிறதாவது: "காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்பு சொல்லாதிருங்கள்." நமது இரட்சகரைப் போன்று உயிர்த்தெழுதலுக்கு பிறகு பூரணம் அடைந்தபிறகு இருதயத்தை குறித்து தீர்ப்பு சொல்லுகிற வேலை கொடுக்கப்படும். அப்பொழுது மனுக்குலத்தின் இருதயங்களை அறிகிற தகுதியைப் பெறுவார்கள். அவர்கள் உலகத்தை நீதியாகவும், இரக்கத்துடனும் தயவுடனும் நியாயந்தீர்ப்பார்கள்.

தற்போது தேவனுடைய பிள்ளைகள் ஒருவரை ஒருவர் நியாயந்தீர்ப்பது குறித்து கர்த்தர் கூறுகிறதாவது: "அவர்களது கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்." நல்ல நீருற்று கசப்பான நீரைக்கொடுக்காது. நீதியின் கொள்கைக்கு இசைவாக நமது நடத்தைகள் இருக்கிறதா இல்லையா என்பதை நமக்கு நாமே நிதானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகவே வெளியரங்கமான நடக்கைகளை நியாயந்தீர்க்க ஒருவருக்கொருவர் நாம் உதவுகிறவர்களாயிருக்கிறோம். இருதயத்தை நியாயந்தீர்ப்பதை கர்த்தருக்கும் தனிப்பட்ட நபரிடத்திலும் விட்டு விடுவோமாக.

தீர்க்கதரிசி சாமுயேல் ஒரு புது ஒழுங்கு முறையை ஏற்படுத்தினார். அவரது தேசத்திலே, தேவனுடைய ஜனங்கள் மத்தியிலே ஒரு சீர்திருத்தத்தை ஏற்படுத்தினதை நாம் பார்க்கிறோம். இவருக்கு முன் இருந்தவர்கள் செய்தபடி இவர் செய்யவில்லை. மற்றவர்கள் எல்லாம் அவர்களுடைய வீட்டுக்கு வந்து ஜனங்கள், புத்திமதியையும் ஆலோசனையையும், நியாயத்தீர்ப்பையும் பெறும்படி செய்துவந்தார்கள். இவர் சுற்று பிரயாண நியாயாதிபதியாக இருந்து, ஒவ்வொரு இடத்திற்கும் சென்று நியாயத்தீர்ப்புக் கூறி யாரையும் அதிகமாக கண்டிக்காதபடி தகுந்த புத்திமதிகளை கூறிவந்தார். எனவே இஸ்ரேல் தேசம் ஒரே ஜாதியாக ஐக்கியப்பட ஆரம்பித்தது; தங்களது நோக்கம் ஒன்றே என்பதை உணர ஆரம்பித்தார்கள். அவர்களது நோக்கமெல்லாம், தேவன், அவரது பிரமாணங்கள், அவருடன் அவர்கள் செய்த உடன்படிக்கை ஆகியவையாகும். தேவனால் அனுப்பப்படுகிற பிரதிநிதிகள் அவரது பிரமாணங்களை விளக்கிச் சொல்வார்கள். இப்படிப்பட்டவர்களில் சாமுயேல் தீர்க்கதரிசியும் ஒருவராக இருந்தார்.

---------

**--2228--**

# சபை வனாந்தர நிலைமையி—ருந்து திரும்புதல்
# The Return of the Church from the Wilderness

ஒரு வனாந்தர நிலைமை என்பது நாகரீக உலக ஆசீர்வாதங்களி—ருந்து பிரிந்திருத்தல் ஆகும். இது உலகி—ருந்து ஒரு பிரிக்கப்படும், துண்டிக்கப்படும் நிலைமை. சபையின் காரியத்தில், அது 1260 அடையாளமான நாட்களுக்கு வனாந்தரத்திற்கு செல்லும்படி இரண்டு செட்டைகளை தேவன் அதற்கு கொடுத்தாக வேதத்தில் நாம் படிக்கிறோம். சபையானது தனது சொந்த விருப்பத்தின்படி, உலக சமுதாயத்தின் சலுகைகள் மற்றும் அனுகூலங்களை நிராகரித்து வனாந்தர நிலைமைக்குச் சென்றது என்று தெரிகிறது; ஒரு பொதுவான ஒதுக்கி வைக்கப்பட்ட நிலைமைக்குச் சென்றது.

நிழலான பாவநிவாரண நாளின் ப—களைப் பற்றிய வர்ணனையில் போக்காடு வனாந்தரத்திற்கு சென்றதாக நாம் பார்க்கிறோம். ஆனால் நிஜத்தில், உண்மையுள்ள மற்றும் அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பார் தானாகவே வனாந்தர நிலைமைக்குச் செல்கிறார்கள், மற்றவர்களோ நிர்ப்பந்தத்தால் செல்லுவார்கள். எனினும் இரண்டு வகுப்பாரும் ஒரே வித அனுபவங்களையே பெறுவார்கள். சபை கர்த்தரிடத்திலும், சத்தியத்திலும் உண்மையுள்ளவர்களாயிருப்பதினிமித்தம் உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் உலகக் காரியங்களால் சூழப்பட்டிருக்கும்போது அவர்கள் வனாந்தர நிலையில் இருக்க முடியும். நாம் உலகத்தில் இருந்தாலும், உலகத்தி—ருந்து பிரிந்திருக்கிறோம். அதன் காரியங்களி—ருந்து தனித்து இருக்கிறோம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில், சபையானது 1260 வருடங்கள் வனாந்தர நிலைக்கு சென்றது என்றும், அந்த காலக்கட்டத்தில் உலகக் காரியங்கள் ஒரு பெரிய முறைமையின் கீழ் இருந்தது என்றும் நாம் வாசிக்கிறோம். இந்த காலப்பகுதி கிபி. 539ல் ஆரம்பித்து 1799ல் முடிவடைந்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சமூகத்தி—ருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட இந்த காலம், வனாந்தர நிலைமை என்று அழைக்கப்படுகிறது. இந்த வனாந்தர நிலைமைக்கு ஒருவன் சென்றுவிட்டால், துன்புறுத்தப்படவேண்டும், சுடப்படவேண்டும், அல்லது தூக்கி—டப்படவேண்டும் என்பதல்ல, எனவே வனாந்தர நிலைமை என்பது துன்பப்படுவதைக் குறிக்காமல், பிரிந்திருப்பதை மட்டுமே குறிக்கிறது.

உருவக மொழியில் நகரம் என்பது, உலகத்தில் மகிமை, மேன்மையான ஸ்தானம் மற்றும் முக்கியத்துவத்தை குறிக்கிறது. ஆனால் வனாந்தர நிலைமை என்பது அதற்கு எதிரான (மாறுபட்ட) நிலையை அதாவது அசட்டைபண்ணப்பட்ட, ஒதுக்கித்தள்ளப்பட்ட நிலையை குறிக்கிறது. 1260 தீர்க்கதரிசன நாட்களில் சபையானது ஒதுக்கப்பட்ட நிலைமையில் இருந்தது. அரசாங்கங்கள் சபையை கண்டுகொள்ளவில்லை. ஆனால் தன்னைத்தானே உயர்த்திக்கொண்டு "பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற நகரமாகிய" —இரகசியமாகிய பாபிலோனை, மகாபெரிய முறைமையை மிகவும் சிரத்தையுடன் அவர்கள் கவனித்தார்கள்.

### வனாந்தர நிலைமையி-ருந்து திரும்புதல்

அந்தக்காலத்தின் முடிவில், அதாவது 1799—ருந்து போப்பரசின் வல்லமை முறிக்கப்பட்டு, போப், பிரான்சு நாட்டுக்கு கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட பொழுது, பொதுவாக உலகில் சபையைக் குறித்து ஒரு எண்ணம் அங்கீகாரத்திற்கு வந்தது. போப்பை கிறிஸ்துவின் பிரதிநிதியாக தவறாக நினைத்துக்கொண்டிருந்தோம் என்பதை தேசங்கள் உணர்ந்தன. மகாபெரிய ஸ்தாபனமாகிய போப்பரசிடமிருந்து மற்றவர்களை தண்டிக்கிற அதிகாரம் நீக்கப்பட்டு, மற்றவர்களோடு போராடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. பேப்டிஸ்ட் சபை, மெதடிஸ்ட் சபை முதலானவைகள் இந்த காலத்தில்தான் அபிவிருத்தி அடைந்தன. போப்பரசை அங்கீகரித்திருந்ததைப் போல இவைகளையும் உலகம் அங்கீகரித்தது.

எனினும் போப்பரசு வனாந்தரத்துக்கு செல்லவில்லை. புரட்டஸ்டன்ட் சபை வனாந்தர நிலைமையி—ருந்து வெளியேறி, ஜனங்களாலும், அரசாங்கங்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிலைமை சிலகாலம் தொடர்ந்தது; வேதாகமம் முந்தைய நாளைக் காட்டிலும் அதிகமாக அங்கீகரிக்கப்பட்டது. 1799க்கு பிறகு குறைந்த காலத்திலேயே வேதாகம சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வேதாகமத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தேவனுடைய இரண்டு சாட்சிகளாகிய பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் வானத்துக்கு உயர்த்தப்பட்டன. வேதாகமத்தை ஆதரிக்கிறவர்கள் வெளிச்சத்துக்கு வந்தார்கள். வேத மாணவர்களும் வேதாகம படிப்பும் எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் மிக அதிகமாக அங்கீகாரத்தைப் பெற்றனர். வேதாகமம் அச்சடிக்கப்பட்டு, வேதாகம படிப்பை ஒவ்வொருவரும் விரும்பினர்.

சபையானது மறுபடியும் வனாந்தர நிலைமைக்குச் செல்லும் என்று வேதாகமத்தில் எந்தவித அறிவிப்பும் இல்லை. எ—யா

--2229--

தீர்க்கதரிசியின் அனுபவத்தில் இரண்டாவது வனாந்தர அனுபவம், அடையாள பாஷையில் நமது நாட்களைப்பற்றி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய உண்மையான சபையைக் குறிக்கிற எ–யா ஒரு உண்மையான தீர்க்கதரிசியாக இருந்தார். யேசபேல் ராணி எ–யாவை வெறுத்து அவனுக்கு விரோதமாக ஆகாப் இராஜாவை தூண்டிவிட்டாள். எ–யா, ராஜாவுக்கு பயந்து ஓடி வனாந்தரத்தில் 1260 நாட்கள், மூன்றரை வருட காலம் இருந்தான். இது 1260 வருடம் சபையானது வனாந்தர நிலைமையில் இருந்ததற்கு அடையாளமாக இருக்கிறது.

எ–யா 1260 நாட்களுக்கு பிறகு வனாந்தரத்தி–ருந்து திரும்பி வந்து ஒரு பெரிய காரியத்தை செய்து காண்பித்தான். ஆகாப் ராஜாவினாலும் யேசபேல் ராணியினாலும் சகாயம் பெற்றிருந்த பாகா–ன் தீர்க்கதரிசிகளை பொது மக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தான். இந்த வெளிப்பாட்டினால் தேவனுடைய வசனத்திற்கு மகா உயர்வும், பாகா–ன் தீர்க்கதரிசிகளுக்கு வீழ்ச்சியும் ஏற்பட்டது. ஜனங்கள் எல்லாரும் "யேகோவாவே தெய்வம்" என்றார்கள்.

இவைகளெல்லாம் எப்படி உண்மையான சபை, 1799ல் உலகின் ராஜாக்களுக்கு முன்பாக வெளிப்பட்டு, தேவனுக்காகவும் வேதாகமத்திற்காகவும் நின்றது என்பதை குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். எ–யா உண்மையான சபையையும், யேசபேல் போப்பு சபை மற்றும் அதோடு சேர்ந்த சபைகளையும் குறிக்கிறார்கள். ஆகாப் ராஜா அரசாங்கத்தையும், இஸ்ரேல் ஜனங்கள் உலகத்தையும் குறிக்கிறார்கள். வேதாகமம் யேசபேல், ஆகாப் மற்றும் ஒவ்வொருவர் மீதும் கட்டயப்படுத்தப்பட்டது. ஜனங்கள் அந்த இரு சாட்சிகளையும் கவனித்ததால் அவர்கள் உயர்த்தப்பட்டார்கள்.

### எ-யாவின் இரண்டாவது வனாந்தர அனுபவம்

மறுபடியும் நாம் எ–யாவின் காட்சிக்கு வரும்போது: யேசபேல் அவளது குமாரத்திகள் மற்றும் அவளது குடும்பத்தையும் குறிப்பிடுகிறாள். தீர்க்கதரிசி எ–யா தற்காலத்தில் உள்ள உண்மையான தேவனுடைய பிள்ளைகளை குறிப்பிடுகிறான். ராணி அவனை துன்புறுத்தவில்லை, ஆனால் மிரட்டினாள். ஆகையால் எ–யா மறுபடியும் வனாந்தரத்திற்கு ஓடினான். – எனினும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்ல. பொதுவாக ஜனங்கள் முன் இருந்ததைப் போல் அதேபோன்ற ஒரு கட்டுப்பாட்டில் இல்லை. பாகா–ன் தீர்க்கதரிசிகள் தங்களது செல்வாக்கை மறுபடியும் பெறவில்லை. எ–யா மறுபடியும் வனாந்தரத்திற்கு சென்றான். அங்கே சில காலம் போஷிப்பிக்கப்பட்டான். கடந்த முறை காகத்தால் போஷிப்பிக்கப்பட்டது போல் அல்ல. விசேஷித்த உணவு கொஞ்ச காலத்துக்கு கொடுக்கப்பட்டது.

நம்முடைய புரிந்துகொள்ளுத–ன்படி, எ–யா பாகா–ன் தீர்க்கதரிசிகளை வெட்டிப்போட்ட பிறகு, யேசபேலுக்குப் பயந்து ஓடிப்போன பிறகு, எ–யாவுக்கு கொடுக்கப்பட்ட விசேஷித்த உணவு என்பது தேவனுடைய ஜனங்களுக்கு கொடுக்கப்படுகிற விசேஷித்த செய்தியைக் குறிக்கிறது. எ–யா வனாந்தரத்திற்கு சென்ற பிறகு அவனிடத்தில் ஒரு சரிவு காணப்பட்டது, ஒரு அதைரியம் காணப்பட்டது. "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்ற வார்த்தை அவனது அதைரியத்தைக் காண்பிக்கிறது, ஆனால் தேவன் அவனை திடப்படுத்தி ஒரு விசேஷித்த உணவைக் கொடுத்தார். அந்த பலத்தைக் கொண்டு ஓரேப் பர்வதம் வரை சென்றான். இந்த பர்வதம் தேவனுடைய ராஜ்யத்தை, மேசியாவின் ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. இந்த விசேஷித்த உணவின் மூலம் நாம் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தி–ருக்கிறோம் என்ற விசுவாசத்திற்குள் வந்திருக்கிறோம்.

எ–யா ஓரேப் பர்வதம் வந்தபோது, கர்த்தர் மூன்று சாட்சியங்களை கொடுத்தார். (1 ராஜா. 19:1–18) பலத்த பெருங்காற்று தற்கால போரைக் குறிப்பிடுகிறது. பூமி அதிர்ச்சி சமூக புரட்சியைக் குறிக்கிறது. இது இதற்குமுன் நடந்திராதது. அது சீக்கிரத்தில் வரும் என்று நாம் விசுவாசிக்கிறோம். இது போர் ஆரம்பித்தவுடன் வராது; ஆனால் இந்த பூமி அதிர்ச்சி வரும்போது போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். இதுவே முடிவு அல்ல. மூன்றாவது அனைத்தையும் அழிக்கிற அக்கினியாகும். இது அராஜகத்தை குறிக்கிறது. இது சமூக புரட்சியைத் தொடர்ந்து உலகெங்கும் பரவும். அக்கினிக்கு பிறகு, "அமர்ந்த மெல்–ய சத்தத்தை" எ–யா கேட்டான். இது உலகிற்கு ஆசீர்வாதங்களை கொண்டுவருகிற தெய்வீக வல்லமையை குறிக்கிறது.

---------------------------------

# பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும்

## Present Duty and Privilege of the Saints

"சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே; எக்காளத்தைப் போல உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு

அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி. தங்கள் தேவனுடைய நியாயத்தை விட்டு விலகாமல் நீதியைச் செய்து வருகிற ஜாதியாரைப்போல அவர்கள் நாடோறும் என்னைத் தேடி, என்

வழிகளை அறிய விரும்புகிறார்கள்; நீதி நியாயங்களை என்னிடத்தில் விசாரித்து, தேவனிடத்தில் சேர விரும்புகிறார்கள்."

ஏசா. 58:1–2

கர்த்தர் இங்கே ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக பெயரளவுக்கு தேவனுடைய பிள்ளைகளாயிருக்க கூடியவர்களின் நிலைமையைக் குறித்து விவரிக்கிறார் என்று நாம் புரிந்து கொள்கிறோம். இந்த வார்த்தைகள் தீர்க்கதரிசியின் காலத்துக்கு பொருந்தக் கூடியதாக இருந்தாலும், நமது காலத்திற்கு இது மிகவும் விசேஷித்த விதமாக பொருந்தக் கூடியதாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். இந்த வார்த்தைகளை எந்தக் காலத்துக்கும் உரிய ஒரு பொதுவான கூற்றாக நாம் கவனித்தாலும், இது உண்மையாக தேவனுடைய பிள்ளைகளாயிருக்கக் கூடிய சிலரையும், யாக்கோபின் வீட்டாரையும் குறிப்பதாக காணப்படுகிறது. இங்கே தீர்க்கதரிசி தேவனுடைய பிள்ளைகளின் நிச்சயமான மீறுதல்களையும் யாக்கோபின் வீட்டாரின் (மாம்சீக இஸ்ரயேல்) பாவங்களையும் குற்றங்களையும் பற்றி கூறுகிறார்.

இதை தற்காலத்திற்கு பொருத்திப் பார்க்கும் போது, தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறவர்களே உண்மையான தேவனுடைய பிள்ளைகள், மற்றவர்கள் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்வோம். தேவனுடன் உடன்படிக்கையின் மூலம் உறவுக்குள் இருப்பவர்கள் மிகவும் குறைவானவர்களே. தங்களை தேவனுடைய பிள்ளைகளாக உரிமை பாராட்டிக் கொள்கின்ற திரளானவர்கள், தெய்வீக பிரமாணத்திற்கும் சித்தத்திற்கும் எதிராக அநேக மீறுதலுக்குட் பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் அறியாமல் குருடான தலைவர்களையும் கடந்த இருண்ட கால விசுவாச பிரமாணங்களையும் பின்பற்றுகிறார்கள். "யாக்கோபின் வம்சத்தார்" என்ற சொற்றொடர் தேவனுடைய பழங்கால உடன்படிக்கையின் மக்களாகிய யூதர்களை விசேஷித்த விதமாக குறிப்பிடுகிறது.

தேவனுடைய வசனத்தி–ருந்து பிரகாசிக்கிற சத்திய வெளிச்சத்தைப் பெற்றிருக்கிற தற்கால தேவனுடைய பிள்ளைகள், தகுந்த சந்தர்ப்பம் அவர்களுக்கு இருப்பதால், தற்கால கிறிஸ்தவர்களுக்கு விசேஷமாக தங்களை தேவனுடைய பிள்ளைகளாக உரிமை பாராட்டுகிறவர்களுக்கு, அவர்களது குற்றங்களையும், தேவனுடைய வார்த்தைகளி–ருந்து எங்கே விலகியிருக்கிறார்கள் என்பதையும், பொன்னான பிரமாணம் முதலானவைகளுக்கு எதிராக எங்கே இசைவின்றி இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டு கூற வேண்டும். இன்னும் அவர்களுக்கு தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தால் யூதர்களுக்கு, அவர்கள் தேவகிருபையி–ருந்து நீக்கப்பட்டிருக்கிற தற்கால நிலைமைக்கு காரணம் என்ன என்பதையும் கூறலாம். ஆனால் அவர்களை தூற்றுவதோ, அல்லது மற்றவர்களை தூற்றுவதோ நல்லதல்ல.

இப்படிப்பட்ட செய–னால் ஒரு சிறு நன்மைதான் செய்யப்படுகிறது. சத்தியமே ஒரு பட்டயமாக இருக்கிறது, தேவனுடைய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை ஒதுக்கிவிட்டு வேறு எந்த வேலை செய்தாலும் அது குழப்பமானதாக இருக்கும். இது இப்படியிருக்க, "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." தகுந்த சமயத்தில் தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை நாம், "சத்தமிட்டு கூப்பிட வேண்டும், அடக்கிக் கொள்ளக் கூடாது." இதற்கு மற்றவர்களை அவமரியாதை செய்ய வேண்டும் என்று அர்த்தமல்ல. யாரையும் அவமரியாதை செய்வது தேவனுடைய ஸ்தானாதிபதியின் வேலையல்ல. தற்கால நிலைமையையும், உலகத்துக்கு முன்னே இருக்கக் கூடிய ஆபத்தையும், கர்த்தரை முழுவதுமாக பின்பற்றுகிறவர்கள் எடுக்க வேண்டிய சரியான நிலைமையையும் நாம் குறிப்பிட்டு சொல்ல வேண்டும்.

### பலனற்ற தேவபக்தியின் வேஷம்

நாம் கவனித்துக் கொண்டிருக்கிற வசனம் ஏசாயா தீர்க்கதரிசி அதிகாரம் 29:13–ல் சொல்லப்பட்டதற்கு இசைவாக இருக்கிறது. நமது ஆண்டவரும் இதை குறிப்பிடுகிறார். ஏசாயா கூறுகிறதாவது: "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது." நமது ஆண்டவர் இதை "

கீழ்க்கண்டவாறு கூறுகிறார். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.” மத். 15:9

நமது பாடத்தின் இரண்டாவது வசனத்தின் மொழி பெயர்ப்பு தெளிவாக இல்லாதது போல் இருக்கிறது. அதன் கருத்து காணப்படுகிறவிதமாவது: அனுதினமும் என்னை வெளியரங்கமாக தேடுகிறார்கள், என்னுடைய வழிகளை அறிந்து கொள்ள வெளியரங்கமாக விரும்புகிறார்கள், அவர்கள் அதிக செலவில் உயரமான கோபுரங்களையும் பகட்டான தோற்றங்களையும் உடைய ஆலயங்களை கட்டுகிறார்கள். அநேக ஆலயங்களை புனிதர்களின் கம்பீரமான சிலைகளையும் அல்லது வர்ண சித்திரங்களையும் வைத்து வெளியரங்கமாக அழகுபடுத்துகிறார்கள். துதிப்பாடல்களை இனிமையான ஒ—க்கின்ற விலையுயர்ந்த மணிகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பாட்டு குழுக்களை பெற்றிருக்கிறார்கள். நன்கு படித்த பிரசங்க திறமையும் கட்டுரைகளை எழுதும் திறமையும் உடைய ஊழியர்களை பெற்றிருக்கிறார்கள். வெளியரங்கமாக நீதியின் மேல் அதிக வைராக்கியம் உடையவர்களாக இருக்கிறார்கள். மேலோட்டமாகப் பார்க்கும் போது சிறப்பாக செயல்படுவதாகக் காணப்படுகிறார்கள். வருடாந்திர நன்றி செலுத்தும் நாளை நியமித்து ஏழைகளுக்கு அதிகமாக நிதியை திரட்டுகிறார்கள். அவர்களது போதகர்களுக்கு அதிகமான சம்பளத்தைத் தருகிறார்கள். ஊழியத்துக்கென அதிகமான நிதியை திரட்டுகிறார்கள். நமது ஆண்டவர் முதலாம் வருகையில் வந்த போது அவர் கூறினதற்கு இசைவாக இது இருக்கிறது. அவர் போதித்தாவது: “உங்கள் மார்க்கத்தானாகும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்.” மத். 23:15

பலவகையான உபாய தந்திரங்களால் உலகை கவர்ச்சிக்கவும், ஜனங்களின் செல்வாக்கையும், நிதி உதவியையும் பெறவும், சபையை வளர்ப்பதற்காகவும் மனிதருடைய பாரம்பரியங்களுக்கும், மனிதரின் கொள்கைகளை பரப்புவதற்கும், அதிகமான வைராக்கியம் காண்பிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு நன்றி செலுத்தும் நாள், இங்கிலாந்து சபையின் ஆரம்ப காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. வெகு காலத்துக்கு முன்பே இது ஒரு பாரம்பரியமாக அமெரிக்காவில் ஆனது. ஆண்டின் அறுவடைக்கு தேவனுக்கு நன்றி செலுத்தும் நாளாக நவம்பர் மாதம் கடைசி வியாழக்கிழமை ஏற்படுத்தப்பட்டது. மாஸ் சூசெடஸின் கவர்னர் முதலாவது இதை ஆரம்பித்தார். அவரைத் தொடர்ந்து அடுத்த கவர்னர் செய்தார். அடுத்த கவர்னர், பிறகு அமெரிக்க ஜனாதிபதி அதை செய்தார். கடைசியாக அமெரிக்கா முழுவதற்கும் அது ஒரு பாரம்பரிய பழக்கமானது. முதலாவது, அமெரிக்க ஜனாதிபதி இதை அறிவிப்பார், அவரைத் தொடர்ந்து மற்ற கவர்னர்கள் அறிவிப்பார்கள். அந்த நாள் சட்டப்பூர்வமாக விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. பேங்க் மற்றும் வியாபார ஸ்தலங்கள் மூடப்பட்டன. ஜனங்கள் எல்லாரையும் சந்திக்கவும், வருடத்தின் ஆசீர்வாதத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்தவும் பிரயோஜனமாக இருந்தது. இந்த பழக்கம் இன்றும் தொடர்ந்து விடாப்பிடியாக கடைபிடிக்கப்படுகிறது. மற்ற நாட்டினர் இதை அறிய வரும்போது, இது அமெரிக்க நாட்டின் பரிசுத்தவான்களால் ஏற்படுத்தப்பட்டது போல் தோன்றும். அமெரிக்க அரசாங்கமே இப்படி செய்யும்போது, ஒவ்வொரு நாட்டிலும் இப்படிப்பட்ட நாளை நியமிக்க வேண்டும் என்று அவர்கள் கூறுவார்கள். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கடைபிடிப்பார்கள்.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஒரு நாத்திகராக இருந்தால் அவர் இந்த பழக்கத்தை கடைபிடித்து, அதே அறிவிப்பை கூற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவார். ஒருவேளை ஒரு மாகாணத்தின் கவர்னர் ஒரு கத்தோ—க்கராகவோ, அல்லது புரட்டஸ்டண்ட் சபையை சேர்ந்தவராகவோ, அல்லது நாத்திகராகவோ இருந்தால், அவரும் இதையே செய்யும்படி எதிர்பார்க்கப்படுவார். கடிகார முள் சுற்றிவருவது போல, இது ஒரு பழக்கமாகியிருக்கிறது. ஆனால் வெகு சிலரே இந்த நாள் குறித்து வேறு மாதிரியாக சிந்திக்கிறார்கள். மற்றவர்கள் இதை ஒரு சந்தோஷமான விடுமுறை நாளாக நினைத்து நல்ல விருந்து சாப்பிடவும், நல்லபடியாக நேரத்தைக் கழிக்கவும் செய்கிறார்கள். உண்மையில் பார்த்தால் யாருமே உண்மையான தாற்பரியமாகிய தேவனுக்கு நன்றி செலுத்துவதை செய்வதில்லை. மிகவும் சொற்பமானவர்கள் தான் செய்கிறார்கள்.

இதே போல் தான் மற்ற நாடுகளில் மற்ற பழக்க வழக்கங்கள் இருக்கிறது. முகமதிய நாடாக இருந்தால், பன்னிரண்டு மணிக்கு, ஒவ்வொரு முகமதியனும் அவன் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் உடனே அதை நிறுத்திவிட்டு அல்லாவிடம் ஒரு நிமிடம் ஜெபிக்க வேண்டும். இதை அறியாத ஒருவன் முகமதியர்கள் மிகவும் புனிதமானவர்கள் என்றும் எல்லா காரியங்களிலும் அவர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பார்கள் என்றும் நினைப்பான். எல்லா காரியங்களிலும் உங்கள் கண்களை மிகவும் திறந்து வைத்திருப்பது மிகவும் நல்லது. தற்காலத்தில் நடக்கிற ஒவ்வொரு பெரிய வியாபாரமும் வெறும் இயந்திர முறையில், பலனற்ற தேவ பக்தியின் வேஷமாக இருக்கிறது.

### இன்றைய கிறிஸ்தவ தேசங்களில் வெளியரங்கமான உண்மைகள்

நமது தலைப்பு வசனத்தில் தேவனுடைய உண்மையான பிள்ளைகள், தங்களை கிறிஸ்தவர்கள் என்று உரிமை பாராட்டுகிறவர்களிடம் அவர்களது மீறுதலைகளை சத்தமிட்டு கூற வேண்டும் என்று தீர்க்கதரிசி கூறுகிறார். மதத்தின் பேரால் ஒரு பெரிய வஞ்சகம் நடைபெறுகிறது என்ற ஒரு காரியத்தை இது நமக்கு உணர்த்துகிறது. நாம் பிரிட்டிஷ் மக்களையோ, ரஷ்யர்களையோ, ஜெர்மானியரையோ கவனித்தோமானால் அவர்கள்

எல்லாரும் மிகவும் கடுமையான மத சட்டங்களை பெற்றிருக்கிறார்கள். தற்கால சத்தியத்தை அங்கு அறிவிக்க முடியாத அளவுக்கு கடுமையானவைகள். அப்படிச் செய்தால் அங்கு வாழ முடியாது. எனினும் இந்த நாடுகளில் எத்தனைபேர் தேவனுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அவருடைய வார்த்தைகளைக் கைக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்கிறார்கள்? இவைகளில் எந்த அரசாங்கம் இரட்சகரின் பொன்னான கட்டளையை இப்பொழுது கைக்கொண்டு வருகிறது? இதைக்குறித்து கடந்த கால, நிகழ்கால சரித்திரங்கள் என்ன காண்பிக்கின்றன?

தற்போது வீதிகளில் நின்று உரத்த சத்தமாய் அறிவிப்பது சரியானதும் அல்ல, அவசியமானதும் அல்ல. பொதுமக்கள் இன்னும் அறியாதவர்கள் அல்ல. நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்த மீறுதல்களைக்குறித்து செய்தித்தாள் போன்றவை குறைகூறிக் கொண்டிருக்கின்றன. மத சகிப்புத்தன்மை இல்லாததால் கிட்டதட்ட எல்லா மத பிரிவினர்களும் மற்றவர்களை துன்புறுத்தியிருக்கிறார்கள். தற்காலத்தில் கொடுமையான துன்புறுத்துதல் அபூர்வமாயிருந்தும் கூட முற்காலத்தில் இருந்ததுபோல தற்காலத்தில் இருதய பூர்வமான விசுவாசம் காணப்படுவதில்லை. இதைக் குறித்து சரியான கருத்து நமக்கு இருக்குமேயானால், ஊழியர்களில் பத்தில் ஒரு பங்கினர் மட்டுமே வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நம்புகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்வோம். இது அப்படி இருக்குமானால் அவர்கள் மிக உயர்வான நீதிநெறிமுறை தளத்தில் சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், உண்மையான ஊழியக்காரர்களைப் போல அல்ல, பொதுவாக உலகத்தார்களைப் போல. ஆனால் மத சம்பிரதாயங்களில் அதிகமாக ஈடுபடுகிறார்கள். முற்காலத்தில் அவர்கள் செய்ததுபோல. அந்த ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ஊழியர் இன்னும் வேதாகமத்தி—ருந்து குறிப்புகள் எடுக்கின்றனர். தெய்வீக வெளிப்பாட்டின் அந்த அம்சங்களை அவர்கள் வெறும் ஆதாரத்திற்காக வைத்துக் கொள்கின்றனர். மேலான விமர்சனத்திலும் பொதுவான அறிவிலும் நன்றாக நடந்துகொள்வதாக நினைக்கிறார்கள். இந்த நிலைமைகளைக் குறித்துதான் கர்த்தர் தீர்க்கதரிசி மூலம் குறிப்பிடுகிறதாக காணப்படுகிறது.

தகாத விதமாக நாம் உரக்க சொல்ல வேண்டும் என்றோ, ஆலயங்களுக்குச் சென்று உரக்க சொல்ல வேண்டும் என்றோ நாம் புரிந்து கொள்ளவில்லை. ஆலயத்தில் உள்ளவர்கள் அங்கு கூடுவதற்கு சட்டப்படி உரிமை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விருப்பம் போல் நேர்மையாக இருக்கவோ, கபடமாக இருக்கவோ உரிமை பெற்றிருக்கிறார்கள். தெருக்களில் சென்று தகாதவிதமாக உரக்க சொல்வதும் அல்ல. எச்சரிப்பதற்கு தகுதியான முறையும் சக்திவாய்ந்த முறையும் இருக்கிறது.

பேர் கிறிஸ்தவ ஊழியர்களின் தற்கால மனோபாவத்தை மேற்கோள் காட்ட பாதிரியார் டாக்டர் ஆக்கெட் என்பவரின் காரியத்தை இங்கு குறிப்பிடுகிறோம். நாங்கள் இங்கு குறிப்பிடுவது தனிப்பட்ட ஒரு காரியத்தை அம்பலப் படுத்துவதற்காக அல்ல. டாக்டர் ஆக்கெட் தனிப்பட்ட முறையில் இதை செய்தித்தாளில் வெளியிட்டிருந்தார். நமது கர்த்தராகிய இயேசுவின் கன்னிப்பிறப்பை மறுத்து, அதை செய்தித்தாளில் வெளியிட்டிருந்தார். டாக்டர் ஆக்கெட் தகுதிவாய்ந்த மனிதர். ஜனங்களிடமும் கல்லூரிகளிலும் ஊழியக்காரர்களிடமும் மிகவும் செல்வாக்கு வாயந்தவர். சான் பிரான்சிஸ் கோவில் கிறிஸ்தவ சபை ஐக்கியத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவரது அறிக்கைக்கு எதிராக அவரை தாக்கி சிலர் செய்தித்தாளில் எழுதியிருந்தனர்; அவரை சபை நீக்கம் பண்ண வேண்டும், அவரது பாதிரியார் அங்கியை கழற்ற வேண்டும் முதலானவைகளை எழுதியிருந்தனர். ஒவ்வொருவரும் தனது நிலைமையை அறிந்திருப்பார்கள் என்று அவர் கூறினார். கிறிஸ்தவ சபை ஐக்கியத்தின் தலைமை பொறுப்பை ராஜினாமா செய்ய முன் வந்தார். அவரது கூற்றுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று கூறியவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு, டாக்டர் ஆக்கெட் கிறிஸ்தவ சபை ஐக்கியத்தின் தலைமை பொறுப்பை மறுபடியும் ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார். எனினும் அவர், இயேசு தெய்வத் தன்மை வாய்ந்தவர் என்பதையும், மனுக்குலத்தின் மீட்பின் போதனையின் ஒரு வார்த்தையையும் தான் நம்பவில்லை என்றும் அறிவித்தார். இந்த நிலையில் அவரது சக ஊழியக்காரர்களால் அவர் ஆதரவு அளிக்கப்பட்டார். சிலரைத் தவிர அந்த சபையின் அனைத்து ஊழியர்களும் விழுந்து போனார்கள். இப்பொழுது அவர்கள் “குருடருக்கு வழிகாட்டுகிற குருடர்களாக” ஆனார்கள்.

### திரைக்கு முன்னால் ராஜ்ய வேலை

இந்த நிலைமையைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வில்லை. ஏனெனில் வெகு காலத்துக்கு முன்பே தேவனுடைய வார்த்தைகள் இது குறித்து முன்னறிவித்திருந்தது. இதற்கு இசைவாயிருக்கிற தீர்க்க தரிசனங்கள் எல்லாம் தற்காலத்தில் நிறைவேறுவதை நாம் காண்போம். நாம் எந்த கோணத்தி—ருந்து பார்த்தாலும், சமூக, மத மற்றும் பொருளாதார நிலையில் பார்த்தாலும், தற்கால முறைமைகள் உடைக்கப்படுவதை நாம் காண்கிறோம். இந்த உலக ராஜ்யம் குத்தகைக்கு விடப்பட்ட காலம் முடிவடைந்து விட்டது. இது குறித்து தானியேல் தீர்க்கதரிசி முன்னறிவித்தது என்னவென்றால், “அந்த ராஜாக்களின் நாட்களிலே” அவர்கள் முற்றிலுமாக நீக்கப்படுவதற்கு முன்பே, பரலோகத்தின் தேவன் ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார். அது மனிதர்களின் ராஜ்யங்களை அடித்து, நொறுக்கி நிர்மூலமாக்கும். இந்த ராஜ்யங்கள் “உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு” (தானி 7:27) கொடுக்கப்படும்போது, “அவர்கள் அவர்களை குயக்கலத்தைப் போல நொறுக்கிப் போடுவார்கள்.” அவர்கள் முற்றிலுமாக நீக்கப்படுமுன் இவர்கள் இந்த ராஜ்யத்தை உரிமையாக்கிக் கொள்வார்கள்

என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு தெரிவிக்கிறது. அந்த புறஜாதியார் சிலையில், சில ராஜ்யங்கள் அந்த நேரத்தில் இன்னும் இருக்கும் என்பதையும் தேவனுடைய வார்த்தை நமக்குத் தெரிவிக்கிறது.

''அந்த ராஜாக்களின் நாட்களிலே'' என்ற சொற்றொடர் தான் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தைக் குறிக்கிறது. நமக்கு தெரிந்தவகையில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்காக செய்யப்படும், முதலாவது காரியம் சுவிசேஷ யுகத்தின் நித்திரையி–ருக்கும் பரிசுத்தவான்களை எழுப்புவதாகும். இது 1878 வசந்தகாலத்தில் நடந்தது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அதன் பிறகு சபை மகிமையடைதல் ஆரம்பிக்கும். ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வேலை அந்த நாளி–ருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சபையின் கடைசி அங்கங்கள் மட்டுமே குறைவாயிருக்கிறார்கள். மகிமையடைந்த சபையில் இவர்களும் அவர்களுக்கான இடத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது ராஜ்யமானது முழுமையாக ஸ்தாபிக்கப்படும்.

கிறிஸ்துவின் சரீரத்தின் சில அங்கங்கள் இன்னும் மாமிசத்தில் இருக்கும்போது, ராஜ்ய வேலையின் ஒரு பகுதி ஆரம்பிக்கப்படாது என்பதை இது குறிப்பிடவில்லை. உண்மையிலேயே சில வேத வாக்கியங்கள் திரைக்கு மறுபக்கம் ராஜ்யவேலை பெரிய அளவிலும் அதிகாரத்துடனும் நடந்து கொண்டிருக்கும்போது, திரைக்கு இந்தப்பக்கம் ராஜ்ய வேலை நடக்கும் என்று பொருள்படுவதாக காணப்படுகிறது. "பரிசுத்தவான்கள் மகிமையோடேகளிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்களாக" (சங். 149:5) என்று நாம் வாசிக்கிறோம். நாம் முன்பு குறிப்பிட்டது போல இந்த பரிசுத்தவான்களுக்கு இன்னும் படுக்கைகள் இருக்கும் பொழுது, இளைப்பாறும் நிலையில் இருக்கும்போது அவர்களுக்கு விசேஷித்த வேலை இருக்கிறது என்று பொருள்படுவதாகக் காணப்படுகிறது. அவர்கள் "போதகமாகிய பலவித காற்றினாலே அலைகிறவர்களாயிராமல்" தேவனுடைய மகாபெரிய திட்டத்தில் முழுவதுமாக ஓய்ந்திருப்பார்கள். அவர்கள் தங்கள் கைகளிலே இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய தேவ வசனத்தைப் பெற்றிருப்பார்கள் என்று வேத வசனம் கூறுகிறது. அதை அவர்கள் ஆவிக்குரிய பட்டயமாக பயன்படுத்துகிறார்கள். ஆனால் திரைக்கு மறுபக்கத்தில் உள்ளவர்களுக்கு இது உண்மையாக இருக்காது. அங்கே ஆவியின் பட்டயத்துக்கு அவசியமில்லை. அவர்களின் உதடுகளில் தேவனை உயர்த்தும் துதிகள் இருக்கும் என்று வேதவாக்கியம் அறிவிக்கிறது. திரைக்கு இந்தப்பக்கம் இருக்கிறவர்களுக்கும் இது பொருந்துவது போல் காணப்படுகிறது.

கடைசி சொற்றொடர், ''எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்துவார்கள்'' என்பது திரைக்கு இந்தப் பக்கம் உள்ள பரிசுத்தவான்களுக்கானது என்றும், ஜாதிகள் மேல் நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவார்கள் என்றும் பொருள்படுவதாகக் காணப்படுகிறது. இதன் பொருள் என்ன என்பதை இன்னும் முழுவதுமாக கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தேவனுடைய ராஜ்யம் செயல்பட ஆரம்பித்துவிட்டது என்பதற்கும், தற்போது ராஜ்யங்கள் நொறுக்கப்படுதல் ராஜ்யத்தின் அதிகாரத்தின் கீழாக நடைபெறுகிறது என்பதற்கும் மாறுபாடான கருத்து இங்கே இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். ராஜ்ய வகுப்பினரின் அங்கங்களில் சிலர் இன்னும் மாம்சத்தில் இருக்கிறார்கள் என்ற உண்மை இந்த கருத்துக்கு எதிராகவே இல்லை. இந்த உலக ராஜ்யங்கள் இப்போது அடித்து நொறுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த வேலை, அவை நொறுக்கப்பட்டு தூளாகி ஒன்றுமில்லாமல் போகும் வரை தொடரும் என்று எதிர்பார்க்கிறோம். அவை கோடைகாலத்தில் போரடிக்கிற களத்தி–ருந்து பறந்து போகிற பதரைப்போலாகி, காற்று அவைகளை அடித்துக் கொண்டு போகும். அவைகள் இனி எங்கும் காணப்படாமற் போகும். (தானி . 2:35)

### தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது

சில முக்கியமான காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால், மனித கொடுமைகள் என்று மற்றவர்களுக்கு காணப்படுகிறவைகளை தேவன் அனுமதித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். ஒரு ஞானமான நோக்கத்திற்காக, சட்ட ஒழுங்கின்மையின் ஆளுகையை தேவன் அனுமதித்திருக்கிறார். இந்த நிலைமை உலகளாவிய பகைமையை எழும்பப்பண்ணும். புறஜாதி ராஜ்யங்கள் முடிவதையும் தேவனுடைய ராஜ்யம் அதன் வேலையை ஆரம்பித்திருக்கிறது என்பதற்கான இன்னும் அதிகமான காரணங்களை ஒவ்வொரு நாளும் நாம் கவனிக்க வேண்டும் என்பது எங்களது கருத்தாகும். நாம் ராஜ்ய அதிகாரத்திற்கான பன்முகமான ரூபகாரங்களை பாா்ப்பதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உலகமானது இன்னும் கொஞ்ச காலத்திற்குள் வரவிருக்கிற ஜ்வா–த்து எரிகிற அக்கினியாகிய அராஜகம் வரும்வரை உணர்ந்து கொள்ளாது. தற்போதுள்ள முதலாவது நிலை நாடுகளுக்கிடையேயான யுத்தம். அடுத்த நிலை சோச–சம் – முயற்சிபண்ணப்பட்ட சோச–சம். அடுத்த மூன்றாவது நிலை அராஜகம், அது படிப்படியாக வரும். இந்த அடையாளமான அக்கினி பரவும் போது, உலகத்தார் நாம் இப்பொழுது அவர்களுக்கு சொல்ல முயற்சி செய்வதை உணர்ந்து கொள்ளுவார்கள். அதாவது தேவனுடைய ராஜ்யம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும், நமது கர்த்தர் அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்ற ரூபகாரத்திற்கான செயல் விளக்கத்தையும் உணர்ந்து கொள்ளுவார்கள். ஆனால் பெரும்பாலோர் பற்றி எரிகிற அக்கினி வெளிப்படும் வரை இதை கவனிக்க மாட்டார்கள். நாம் இப்போது அவர்களுக்கு சொல்ல முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அழிக்கும் அக்கினியாகிய அராஜகத்தை பார்க்கும் பொழுதுதான் முற்றிலுமாக

நம்புவார்கள்.

இஸ்ரேல் ராஜ்யம் அழிக்கப்படுவதற்கும் புறஜாதியார் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும் ஒரு இடைக்காலம் இருந்தது. புறஜாதியார் ஒரு நீதியான அரசாங்கத்தை பூமியில் ஸ்தாபிக்க அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை பார்க்க தேவன் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தார். இப்பொழுது அந்த ராஜ்யங்களை நீக்கி, தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் காலம் வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் தானாகவே முன்வந்து ராஜினாமா செய்யமாட்டார்கள். அவர்கள் பணிய மறுக்கும் நிலையி–ருக்கிறார்கள். ஆகையால் அவர்களை அழிப்பதற்கு சக்தி தேவைப்படுகிறது. அவர்களது 2520 வருடகால ஆளுகை முடிந்துவிட்டது. அவர்கள் இப்போது நீக்கப்படவேண்டும். அவர்களை நசுக்குகிற வேலை முழுவதுமாக நிறைவேறும் வரை தொடரும் என்று நாங்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். "கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" என்று வேதம் கூறுகிறது. ரோமர் 9:28

ஏழாம் எக்காளம் ஊதப்படும்போது, மேசியா அவரது அதிகாரத்தையும் ஆளுகையையும் எடுக்க வேண்டியிருந்தது. அந்த எக்காளம் இப்போது ஊதப்படுகிறது! "ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உமது கோபம் மூண்டது." (வெளி 11:18) நிச்சயமாக இப்போது ஜாதிகள் கோபமாக இருக்கிறார்கள்! பொதுவான அறிவை இழந்தவர்களைப் போல செயல்படுகிறார்கள். சுயநல ஆவி அங்கு வெகுவாக பரவியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் சில தடைகள் அல்லது பயம் இதுவரை அவர்களை நிறுத்தி வைத்திருக்கிறது. ஆனால் கடைசியாக, அதை அனுமதிக்கும் கர்த்தரால் "குறித்தகாலம்," வரும்பொழுது, அந்த தடைகளை அவர்கள், உடைத்துப் போடுவார்கள். இந்த குறிப்பிட்ட நேரத்தில் தான் கர்த்தர் ஜாதிகளின் விவகாரங்களில் தலையிட வேண்டியவராயிருக்கிறார். இந்த யுத்தம், இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப் போடும் தகுந்த காலத்தில் (சங். 2:6–12), புறஜாதியாரின் கால முடிவில் தேவனால் அனுமதிக்கப்பட்டது. இந்த இருப்புக் கோலாட்சியையும், அது செல்வாக்கை, ஜாதிகளின் மேல் உள்ள செல்வாக்கை மட்டுமல்ல சமூகத்தின் மேல் உள்ள செல்வாக்கையும் உடைத்துப் போடுவதை இன்னும் அதிகமாக காண்போம் என்பதே நமது கருத்தாக இருக்கிறது. இப்பொழுது கர்த்தரின் இந்த மகா நாளிலே, அநீதியானது எதுவும் நிற்கக் கூடாதபடி அசைக்கப்பட வேண்டியதெல்லாம் அசைத்து நொறுக்கப்படும். தேவன் தாமே இந்த அசையப் பண்ணுதலை செய்கிறார்.

### நிதி தொடர்பான அசைவுகள்

நிதி தொடர்பான காரியங்களில் அதிகமான அசைவுகளை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த யுத்தம் உலகத்தை அசையப் பண்ணினது போல் இதற்கு முன் எந்த யுத்தமும் அசையப் பண்ணினது இல்லை. இந்த விளைவு அதிகப்படியாக நிதிநிலைமையினால் ஏற்பட்டிருக்கிறது. தங்கம் மட்டும் தான் உபயோகத்தில் இருக்கிறது. வெள்ளி நாற்பது வருடத்திற்கு முன்பே செல்லாததாக்கப்பட்டது. அதன் பலன்களை நாம் இப்போது உணர்ந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது பங்கு பத்திரம், கடன் பத்திரம் மற்றும் பாதுகாப்பான திட்டங்கள் அதிக நம்பிக்கையை பெற்றிருக்கின்றன. நம்பிக்கை அசைய ஆரம்பிக்கும்போது, இந்த பாண்டு, பத்திரங்கள், பாதுகாப்பான திட்டங்கள் எல்லாம் மதிப்பில் சரியும். ஜனங்களிடையே நம்பிக்கையின்மை ஏற்படும் போது, வங்கியாளர்கள் திகிலடைவதை நாம் காண முடிகிறது. "மனிதருடைய இருதயம் சோர்ந்துபோம்." லூக். 21:25,26

யுத்தம் ஆரம்பித்ததி–ருந்து, பங்குகளும், பத்திரங்களும் கடந்த ஜூலை மாதத்தைச் காட்டிலும் முப்பது விழுக்காடு குறைவாக விற்கப்பட்டது, ஆனால் பங்கு தாரர்கள் அதை அங்கீகரிக்கவில்லை, ஏன்? அவர்கள் விலையை அதிகமாக வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். வங்கிகள் தங்கள் கஜானாவை பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களினால் நிரப்பியிருக்கின்றன. அரசாங்கத்தி–ருந்து அதிகாரிகள் சோதனை செய்ய வந்தால் அங்கு இருக்கும் பங்கு பத்திரங்களை கடைசியாக விற்ற விலையின் பிரகாரமே மதிப்பீடு செய்வார்கள். அடுத்த நாள் வியாபாரம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக இவைகளை அரசாங்கத்திற்கு கொடுக்கும்படி கேட்டால், "அதற்கு பதில் எங்களுக்கு உத்தரவாதம் தேவையில்லை; தங்கம் தான் வேண்டும்" என்தாகும். கடன்களை திருப்பி அளிப்பதற்கு தேவையான தங்கம் உலகில் கையிருப்பில் இல்லை. இந்த கடன்கள் எல்லாம் தங்க பத்திரத்தில் வைக்கப்பட்டுள்ளது. அனைத்து கடன்களுக்குரிய வட்டிகளும் தங்க பத்திரத்தில் தான் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொருவரும் இப்படியாக சொல்லப் போகிறார்கள், "எனக்கு பங்குகளோ, கடன் பத்திரங்களோ தேவையில்லை; எனக்கு தங்கம் தான் வேண்டும்."

இந்த நெருக்கடியை உணருகிற தற்கால வியாபார முதலாளிகளில் பெரும்பாலோர் பணக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் பங்குகளும் கடன் பத்திரங்களும் அதிகமாக உண்டு. ஆனால் அவர்களிடம் தங்கமோ, பணமோ கிடையாது. வங்கிகளில் ஏதாவது ஒன்றுக்கு மாற்றாக தங்கத்தைக் கேட்டால், அதை விருப்பமில்லாமல் கொடுப்பார்கள். தங்க நோட்டுகள் எல்லாம் தங்கத்துக்கு சமமானவைகள் தான். சட்டப்பிரகாரம், அரசாங்க கஜானாக்கள், தங்க நோட்டுகளை மாற்ற வருபவர்களுக்கு தங்கத்தை கொடுக்க தங்கத்தை கைவசம் வைத்திருக்க வேண்டும்.

இந்த காரியத்தின் மூலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு மாத்திரமல்ல, மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவுக்கும் கஷ்டம் தான். அவர்கள் பொருட்களை வாங்க விரும்புவார்கள். "உங்களிடம் பணம் இருக்கிறதா? உங்களிடம் தங்கம் இருக்கிறதா" என்ற கேள்வி வருகிறது. "எங்களிடம் தங்கம் இல்லை, இதற்குமுன் எப்படிவிற்றீர்களோ அப்படியே கொடுங்கள்"

--2235--

என்று பதில் வருகிறது. "இல்லை, இல்லை, அப்படி நாங்கள் செய்ய முடியாது. ஏதோ ஒன்று நின்றுவிட்டது. என்ன காரியம் என்று எங்களுக்கு தெரியவில்லை." சக்கரங்கள் நின்றுவிட்டன. எல்லா வழிகளிலும் ஜனங்களுக்கு கஷ்டம்தான். பணம் போதுமான அளவு இல்லை. நாற்பது வருடங்களுக்கு முன்னதாக வெள்ளியின் மதிப்பை யார் அழித்தார்களோ, அவர்களே இப்போது கஷ்டப்படுகிறார்கள்.

### நியாயத்தீர்ப்பிற்கு காலம் கனிந்திருக்கிறது

வேதாகம பாடங்கள் தொகுதி 2ல் காண்பிக்கப்பட்டது போல, புறஜாதியார் காலம் இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். நீதியின் கரங்கள் நொறுக்குகிற வேலையை செய்து கொண்டிருக்கிறது. ஜாதிகள், "குயக்கலத்தைப் போல" உடைக்கப்படுவார்கள். இந்த ஆபத்து இன்னும் பத்துமாதம் உலகின்மேல் இருக்கும் அல்லது இன்னும் கூட நீடிக்கலாம். ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான காலம் செப்டம்பர் 14, 1914 என்று நாங்கள் நம்புகிறோம். அந்த சமயத்தில், நமது கர்த்தர் அதிகாரத்தையும் ஆளுகையையும் எடுத்துக் கொள்ள வேண்டிய குறித்த காலம் வந்தபோது, ஜாதிகள் முன்னமேயே கோபத்தில் இருந்தார்கள். அவர்கள் குறித்த காலத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்னமேயே யுத்தத்தில் இருந்தார்கள், ஏனெனில் அந்த அளவுக்கு கோபமாக இருந்தார்கள்.

"கோபாக்கினைக்கு" குறித்த காலம் செம்டம்பர் 21 ஆகும். இந்த கோபாக்கினையை அதிக அளவில் பார்க்க நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜாதிகள் இதே அன்பற்ற ஆவியில் இன்னும் சில வருடங்கள் இருப்பார்கள். ஆனால் அவர்கள் வெளியரங்கமான சில தடையில் இருக்கிறார்கள். தேவனுடைய நேரம் இன்னும் வரவில்லை என்று நாங்கள் நம்புகிறோம். அவர்களது கோபம் இவ்வளவு நீண்ட காலம் எப்படி தடை செய்யப்படுகிறது என்று நாங்களும் மற்றவர்களும் ஆச்சரியப்படுகிறோம். இது குறித்து அநேக காரியங்கள் செய்தித்தாள்களில் எழுதப்படுகிறது. ஜாதிகளின் கோபத்தினால் பால்கன் யுத்தம் வந்தது. இந்த கலக நிலைமைக்கு அதுதான் வழி நடத்தியது. அந்த சமயத்தில் ஆஸ்திரியா இந்த அமைதியற்ற நிலையை துரிதப்படுத்த முயற்சித்தது. ஆனால் ஜெர்மனியின் கெய்சர் அதை தடை செய்தார். இப்பொழுது தடை செய்யும் கரங்கள் நீக்கப்பட்டிருக்கிறது, காலம் கனிந்திருக்கிறது.

### "எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்?"

இந்த காரியங்களையெல்லாம் இவ்வளவு தெளிவாக பார்க்கிற நாம், இவையெல்லாம் சபைக்கு எவற்றை அர்த்தப்படுத்துகிறது என்பதையும், எந்த அளவுக்கு விழித்திருக்கிறவர்களாயும், ஜாக்கிரதையுள்ளவர்களாயும் உண்மையுள்ளவர்களாயும் நாம் வாழ வேண்டும் என்பதையும் உணருகிறோம். "விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்" என்கிற அப்.பவுலின் வார்த்தைகள் தற்போது மிகவும் பொருத்தமுள்ளதாக இருக்கிறது. புது யுகத்தை முன்றிவிக்கிற மறக்க முடியாத இந்த நிகழ்வுகள் உலகத்திற்கு மாத்திரமல்ல, சபைக்கும் விசேஷித்த சோதனையாகவும் துன்பமாகவும் இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலுள்ளவர்கள் அல்லவே." ஆனால், "பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும்." சகோதரர்களைத் தவிர மற்ற அனைவரும் ஆச்சரியப்படுவார்கள், ஏமாற்றமடைவார்கள், மன வருத்தமடைவார்கள், தயாரற்ற நிலையில் இருந்து மேற்கொள்ளப்படுவார்கள். சகோதரர்கள் கர்த்தருடைய பந்தியிலே போஷிக்கப்படுவதால் அவரது வல்லமையில் பலத்திருப்பார்கள். அவர்கள் அறியாதபடி பிடித்துக் கொள்ளப்பட மாட்டார்கள். அப்.பவுல், சகோதரர்கள் "வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின்பிள்ளைகளுமாயிருக்கிறார்கள்" என்றும் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்கள் அல்ல என்றும் கூறி உற்சாகப் படுத்துகிறார்.

இப்பொழுது தான் விடிந்து வருகிற புதிய நாளில் நாம் "நீதியின் ஆளுகையைப்" பெற்றிருப்போம். நாம் புதிய யுகத்துக்குரியவர்களாயிருப்போம். நாம் மாம்சத்திலே வாழ்ந்தாலும், நாம் மாம்சத்துக்குரியவர்கள் அல்ல; நாம் உலகத்திலே வாழ்ந்தாலும், நாம் உலகத்துக்குரியவர்கள் அல்ல; புதிய நாளின் வெளிச்சத்திலே, நமது சிந்தைகள் தெளிவடைந்திருக்கிறது. நாம் உலக காரியங்களில் விருப்பமுடையவர்கள் அல்ல; கர்த்தருடைய காரியங்களில் விருப்பமுள்ளவர்கள். கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக, அவருடன் விசேஷித்த உறவில் இருப்பதால், நாம் உலகின் இருளில் விடப்படவில்லை.

மற்ற எல்லாரைக் காட்டிலும் நாம் தெளிந்த புத்தியுடையவர்களாயிருக்க வேண்டும். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் என்று அப்போஸ்தலர் வற்புறுத்திக்கூறும் போது, போதை கொடுக்கும் மதுபானத்தைக் குறிப்பிடவில்லை. கர்த்தரின் ஆவியை உடையவர்கள், கர்த்தரின் சிந்தையை உடையவர்கள், சத்தியத்தை உடையவர்கள் இஷ்டப்படி செல்ல விடக் கூடாது. நாம் வருத்தம் தோய்ந்த முகத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார் என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனெனில் வெளிச்சத்தின் பிள்ளைகள் எப்பொழுதும் சந்தோஷமாகவும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும். ஆனால் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பது கருத்தான சிந்தையுடனும் எண்ணத்துடனும் இருந்து அற்பமானவைகளுக்கும் விளையாட்டானவைகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது; நமது சிந்தனையிலும், வார்த்தைகளிலும், செயல்களிலும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எல்லா வகையிலும் இராஜாவுக்கு மகிமையை கொண்டு வர வேண்டும். ஏனெனில் நாம் அவரது நாமத்தை உடையவர்களாயிருக்கிறோம். எப்படி

--2236--

பாவமும் பாவத்தின் ஆளுகையும் முடிவுக்கு வரப்போகிறது என்பதை பார்க்க நமது கண்ணை திறந்து வைத்திருக்கிறோம். தேவனுடைய ஏற்பாடுகளை நாம் பார்க்கிறோம். நாம் தேவனுடன் உடன்படிக்கை செய்த பிறகு, வெளிச்சத்துக்கும், இருளுக்கும் சத்தியத்துக்கும் தவறுக்கும் இடையே யுத்தம் இப்போது நடந்து கொண்டிருப்பதை உணர்ந்து நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். இந்த "தீங்கு நாளில்" நாம் தெளிந்த சிந்தையையும் மன பலத்தையும் பெற்றிருக்க வேண்டும். பரத்தி—ருந்து தொடர்ந்து நமக்கு ஞானம் தேவைப்படுகிறது. "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக். 1:5) முன்னமே தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள திறமையையும், சக்தியையும் தாலந்துகளையும் தங்களால் முடிந்த அளவுக்கு பயன்படுத்துகிறவர்கள் மட்டுமே தேவனிடம் இன்னும் ஞானத்தைக் கேட்க தகுதி உள்ளவர்களாயிருப்பார்கள்.

### தப்பறையான போதக "ஸ்திரீயின்" பாத்திரம்

அநேக விதமான குடிவெறிகளைக் குறித்து வேதம் கூறுகிறது. உலக ஆவியினால் நாம் போதை உண்டாக்கப்படக்கூடும். பரலோக ராஜாவின் உண்மையான பிள்ளைகளை இப்படியாக போதை உண்டாக்குவது கூடாதகாரியம். கர்த்தர் கொடுக்கிற புது திராட்சரசத்தை நாம் பெற்றிருக்கிறோம். இதனைக் கொண்டு நாம் திருப்தியடைய வேண்டும். உலக போதையை நாம் தேடக் கூடாது. வஞ்சக ஆவியின் ஆவிக்குரிய போதையும் அங்கே இருக்கிறது. உலகம் முழுவதும் இந்த ஆவியினால் போதை கொண்டிருக்கிறது, எல்லா கிறிஸ்தவ தேசங்களும், வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள பொற்பாத்திரத்தின் மதுவால் போதை கொண்டிருக்கிறார்கள். தப்பறையான போதக ஸ்திரீயே இதை குடிக்கக் கொடுத்தாள். அந்த பாத்திரம் தப்பறையான போதகத்தால் நிறைந்திருந்தது. இந்த தப்பறையான போதகம் தான் அவள் கொடுத்த கலவை. இந்த போதை இப்பொழுது கடந்து போகிறது, தேவனுக்கு ஸ்தோத்திரம். நாம் இப்போது முற்காலத்தைக் காட்டிலும் மிக தெளிவாக காண முடிகிறது. ஆனால் இன்னும் அநேகர் போதையில் இருப்பதை காண்கிறோம்.

அதிகமாக திகைப்பூட்டும் குடிபோதை நரகத்தைப் பற்றிய போதகமே. ஜனங்களுக்கு அது கொடுக்கக் கூடிய எண்ணம் என்னவென்றால், அவர்கள் கிறிஸ்துவை கேள்விப்பட்டு, வெளியரங்கமான பாவத்தைவிட்டு திரும்பி அவரது நாமத்தை உரிமை கொண்டாடியபின், செய்ய வேண்டியது அவ்வளவு தான் என்று நினைத்து, வெளியே சென்று மற்றவர்களை பாவத்தி—ருந்து திருப்ப முயற்சிப்பதே ஆகும். இதற்குமேல் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று மெய்யாகவே நினைக்கிறார்கள். அவர்களது சொந்த இருதயத்தில் கிருபையை பெறுகிற முக்கியமான வேலை இருக்கிறது என்பதையும், தேவனைப்பற்றிய அறிவில் வளர வேண்டும் என்பதையும், அவரது சித்தத்துக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் அறிவதில்லை. "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1 தெச. 4:3) இதன் பலனாக அவர்கள் கிறிஸ்துவுக்குள் வெறும் குழந்தைகளாக இருக்கிறார்கள். அநேகர் தங்களை முழு அர்ப்பணம் செய்யாததால், இன்னும் அவர்கள் நீதிமானாக்கப்படாத நிலையில் இருக்கிறார்கள்.

பரந்த மனப்பான்மையும் நல்ல செல்வாக்கும் உடைய, தங்களை கிறிஸ்தவர்கள் என்று உரிமை பாராட்டிக் கொள்ளும் அநேகர், தப்பறையான போதகம் என்கிற இந்த மதுவினால் முற்றிலுமாக குழப்பமடைந்திருக்கிறார்கள். தரும காரியங்களில் ஈடுபடுவதிலும், சபைக்கு பணம் கொடுப்பதிலும் தங்களை திருப்திபடுத்திக் கொள்கிறார்கள். மென்மேலும் தேவனைப் பற்றி அறிவதையோ, அவருக்கு ஊழியம் செய்வதையோ தேடுவதில்லை. அவர்களது கைகளையும் கால்களையும் கட்டுகிற இந்த அடிமைப்படுத்துகிற செல்வாக்கி—ருந்து எவ்வளவாய் விடுதலை தேவைப்படுகிறது பாருங்கள்! வெகு சீக்கிரத்தில் இந்த அடிமைத்தன சங்க—கள் உடைக்கப்பட்டு, சிறைப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பதினால் நாம் எவ்வளவு சந்தோஷமும் நன்றியுள்ளவர்களுமாயிருக்கிறோம்! எனினும் வெளிச்சத்தின் பிள்ளைகள் எப்பொழுதும் விழித்திருக்கிறார்கள். மயக்குகிற மற்றும் தப்பறையான போதகங்களினால் அவர்கள் கவரப்படுவதில்லை. காலை விடியப்போகிறதினால் நாம் களி கூருகிறோம். எல்லாரும் விழித்து, நீதியின் சூரியன் உதிக்கப்போகிறதையும், அதன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கிறதையும் பார்க்கிறதற்கான நேரம் வரப்போகிறதினால் நாம் களிகூருகிறோம்.

இப்போது விழித்திருக்கிற நாம் தேவனுடைய ஊழியத்தில் சுறுசுறுப்புடனும் சக்தியுடனும் இருக்க வேண்டும். ஏனெனில் நமக்கு கடந்த காலத்தைக் காட்டிலும் தந்தி, தொலைபேசி, தபால், செய்தித்தாள், ரயில் வசதி மற்றும் அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் முத—யவைகளில் நாம் நூறு மடங்கு வசதிகளையும் சந்தர்ப்பங்களையும் பெற்றிருக்கிறோம். "பகலுக்குரியவர்களாகிய" கர்த்தருடைய பிள்ளைகள் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும், ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டிய சிறப்பான காலம் இது.

நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் எதை கவனிக்க வேண்டும்? தற்கால கண்ணிகளில் அகப்படாதபடி கவனமாய் இருக்க வேண்டும். ஏனெனில் இந்த காலம் அதிக ஆபத்தில் விழும் காலமாக இருக்கிறது. தேவனுடனான சமாதானத்தையும் அறிவு ஒளியையும் இழந்து விடாதபடி நாம் மிகவும் கவனமாக இருக்க

வேண்டும். எதிராளியானவன் நம்மை கவனித்துக் கொண்டு வருகிறான். எனவே தேவனுடைய பிள்ளைகள் மிகவும் ஜாக்கிரதையுடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. கடந்த காலத்தில் தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் கவனிக்க முடியவில்லை. ஏனெனில் நிறைவேறும் காலம் மிகவும் தூரத்தில் இருந்தது. இந்த நிலையில் கவனிக்க இது நமக்கு சரியான காலமாயிருக்கிறது. புறஜாதியாரின் காலம் முடிவடைந்திருக்கிறது. இப்போது ஜாதிகள் பிரிந்து கொண்டிருக்கின்றன.

தற்காலத்தில் கர்த்தர் தமது ஜனங்களுக்காகவும் கவனமாயிருக்கும் அவரது பரிசுத்தவான்களுக்காகவும் செய்ய வேண்டிய ஒரு பெரிய வேலை இருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. நாம் ஜாக்கிரதையாக இருக்கவில்லையென்றால், உறங்க சென்று விடுவோம். கர்த்தரின் காலத்தில் சீஷர்கள், அவர் சொன்ன காரியத்தை செய்வதற்கு பதிலாக உறங்க செல்வதற்கும், மீன் பிடிக்கிற தொழிலுக்கு செல்வதற்கும் முடிவு செய்கிறவர்களாக இருந்தார்கள். நாம் அனைவரும் இந்த நேரத்திற்கான நமது கடமை என்ன என்பதை காணவும் அதை செய்வதற்கு ஊக்க முடையவர்களாக இருப்பதற்கும் நாம் மிகவும் விழித்திருந்து ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### முன்பு இருந்ததைக் காட்டிலும் ஊழியம் செய்வதற்கு இப்போது அதிகமான சந்தர்ப்பம் இருக்கிறது

''கதவு அடைபட்டுவிட்டது'' என்றும் ஆகையால் ஊழியம் செய்ய சந்தர்ப்பம் இல்லை என்றும் நினைக்கிற சில தேவனுடைய பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் தேவனுடைய ஊழியத்தில் சோம்பலுள்ளவர்களாக ஆகிவிட்டனர். கதவு அடைபட்டுவிட்டது என்று நினைத்து நாம் காலத்தை இழந்து விடக் கூடாது. சத்தியத்தை தேடுகிற ஜனங்கள் இருக்கிறார்கள், இருளில் இன்றும் இருக்கிறார்கள். இப்பொழுது உள்ளது போன்ற காலம் இதற்கு முன் இருந்ததில்லை. நல்ல செய்தியைக் கேட்க இதற்கு முன் இவ்வளவு பேர் தயாராக இருந்ததில்லை, இப்பொழுது சத்தியத்தை அறிவிக்க சந்தர்ப்பம் இருப்பது போன்று நாற்பது வருட அறுவடையில் இருந்ததில்லை. பெரிய யுத்தங்களும், கெட்ட கால அடையாளங்களும் ஜனங்களை எழுப்பி விடுகின்றன. இப்போது அநேகர் இது குறித்து விசாரிக்கிறார்கள். எனவே கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் கைகளுக்கு நேரிடுகிறது எதுவோ, அதை செய்ய ஊக்கமுடன் இருக்க வேண்டும்.

வியாபாரிகள் மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள். தற்காலத்தில் ஆயிரக்கணக்கான வியாபாரிகள் இரவில் தூங்க முடியாம—ருக்கிறார்கள். "பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்." (லூக். 21:26) என்ன செய்வதென்றே அவர்களுக்கு தெரியவில்லை. அவர்கள் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தனர்; ஏனெனில் வங்கி கணக்குகளில் பணமும், பங்குகளும், பாண்டு பத்திரங்களும் அதிகமாக இருந்தன. இதற்கெல்லாம் எந்த அளவுக்கு மதிப்பு இருக்கும் என்று தெரியவில்லை. "சில காப்பீடுகளையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். ஆனால் காப்பீட்டு கம்பெனிகள் எங்களுக்கு பணம் கொடுக்க முடியுமா என்று தெரியவில்லை" என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் பங்குகளையும் பாண்டுகளையும் விற்க முடியாம—ருக்கின்றனர். அவர்கள் பங்குதாரர்கள் எல்லாம் கலக்கத்தில் இருக்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பாதுகாப்பை பெற்றிருக்க வில்லை. அவர்கள் நம்பிக்கை வைப்பதற்கானது ஒன்றுமில்லை. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவரது வார்த்தைகளின் முழு உறுதிமொழி இருக்கிறது. "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.'' தேவனை முழு இருதயத்தோடு அன்பு செய்ய வேண்டும்.

தங்கள் கால்களுக்குக் கீழ் எல்லாமே நழுவிப் போகிறதைக் காணும் போது, திகைப்பிலும் கஷ்டத்திலும் இருந்து எந்த வழியில் போவது, எங்கே ஆறுதல் கிடைக்கும் என்று தேடி, நம்பிக்கை வைப்பதற்கு பெரிதும் விரும்புகிறவர்களுக்கு, கர்த்தருக்கு உண்மையாகவும், தற்கால சத்தியத்தினால் கண்களுக்கு க—க்கம் போடப்பட்டவர்களாகிய நாம், நமது குரலை உயர்த்தி நல்வழியை காண்பிப்போமாக. அவர்களது மத போதகர்கள் தங்கள் உறுதிமொழியில் தோற்றுவிட்டார்கள். அவர்கள் இருளில் தடவிப்பார்க்கும்படி விடப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் நமது முயற்சியால், காரிருளான இரவு முழுவதுமாக உலகின் மேல் வருவதற்கு முன்னதாக "புல்லுள்ள இடங்களுக்கும்," "அமர்ந்த தண்ணீர்கள் அண்டைக்கும்'' வழிநடத்தப்படக்கூடும்.

--------------------------------

R5633

## The Ministry of Angels

# தூதர்களின் ஊழியம்

"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்". சங். 34:7

யேகோவா தேவனைப்பற்றியும், அவரது சிறப்பியல்புகளைப்பற்றியும் சிந்திக்கும் எல்லா முயற்சிகளிலும் சங்கடமே இருக்கிறது. தேவன் தம்முடைய வல்லமையை தமது ஜனங்களாகிய யூதர்களுக்கு யூத யுகத்திலும், கிறிஸ்தவ சபைக்கு சுவிசேஷ யுகத்திலும் வெளிப்படுத்துவதற்கு பல்வேறு வழிகளை பயன்படுத்தினார் என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தேவன் தமது ஊழியத்துக்கு பயன்படுத்த விரும்புகிற ஒரு பிரதிநிதியை அது உயிரற்றதாகவோ அல்லது உயிருள்ளதாகவோ இருந்தாலும், தூதன் என்று கூறுவது சரி என்று நாங்கள் நினைக்கிறோம். தேவன் காற்றையோ அல்லது அக்கினிஜுவாலையையோ தமது தூதனாக ஆக்க முடியும். அவர் தமது மகா பிரதான தூதனையோ, அல்லது கீழான தூதனையோ தமது செய்தி அறிவிப்போனாக ஆக்க முடியும். சொந்த திறமையைப்பற்றி கவலைப்படாமல் ஒருவரை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தூதராக வேறு ஒரு நாட்டுக்கு அனுப்புவது போல தேவன் யாரையாவது, எதையாவது தமது தூதனாக தகுந்த வல்லமையைக் கொடுத்து பயன்படுத்த முடியும்.

தேவன் நமது ஜெபங்கள், எண்ணங்கள், வார்த்தைகள், தேவைகள் ஆகியவைகளை எப்படி தெரிந்து கொள்கிறார் என்பது பற்றி வேதத்தில் எதுவும் கொடுக்கப்படவில்லை. இவைகளையெல்லாம் நாம் வெளியரங்கமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. எல்லைக்குட்பட்ட எந்த ஒரு மனமும் தேவனை அறிந்து கொள்ள முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. நமது புரிந்து கொள்ளுதலுக்கு அவர் மகா பெரியவர். அவரது வல்லமையையும் திறமையையும் முழுவதுமாக புரிந்து கொள்வதற்கு அவர் மகா வல்லமையுடைவர். எனினும் தேவனைப்பற்றிய சில காரியங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். அவருடைய வெளிப்படுத்துத—ன்படி அவரை அறிந்து கொள்ள வேத வாக்கியங்களை நாம் ஆராயும்படி அழைக்கப்படுகிறோம். தேவன் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார், அண்ட சராசரங்களில் எங்கும் இருப்பார் என்று யூகிப்பது அபத்தமானது, வேத போதனைக்கு மாறானது. தேவன், சிறு கிருமி, தலைப்பிரட்டை போன்ற ஒவ்வொரு ஜீவராசியையும், அல்லது மனித குடும்பத்தார் ஒவ்வொருவரையும் அவர்களது கிரியைகளையும் அறிந்திருக்கிறார் என்று கூறுவது நமது புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் உலகில் கோடான கோடி பேர்களும் ஜீவராசிகளும் இருக்கிறார்கள்.

தேவனுடைய கவனத்தை சபையோடு நாம் கட்டுப்படுத்தினால் கூட, சபையில் ஆயிரக் கணக்கானோர் இருக்கிறார்கள். பத்தாயிரம், இருபதினாயிரம் பேர்களை ஒரே சமயத்தில் புரிந்து கொண்டு அவர்களை கவனிப்பது என்பது நமக்கு கூடாத காரியம். எப்படிப்பட்ட ஏற்பாட்டை தேவன் வைத்திருக்கிறார் என்பதை அறிவதும் நமக்கு கூடாத காரியம். ஒரு மனிதன் ஒரு நூறு பேரை தனது கட்டுப்பாட்டில் வைத்து அவர்களை கவனிப்பது என்பது ஞானமற்ற செயலாக இருக்கும். அவன் பலவிதமான பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு, எப்படி தனது வேலை நடக்கிறது என்பதை கண்காணித்து வருவான். ஒரே சமயத்தில் ஒவ்வொரு அறையிலும் இருந்து அங்கிருக்கும் ஒவ்வொருவரையும் அவனால் கண்காணிக்க இயலாது.

நமது தலைப்பு வசனத்தில் சங்கீதக்காரன் பயன்படுத்துகிற "தூதன்" என்கிற வார்த்தை ஒரு ஆவியின் ஜீவியைக் குறிக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம். இப்படி நினைப்பதற்கு காரணம் என்னவென்றால், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக தேவன் பெரும்பாலும் ஆவியின் ஜீவிகள் மூலமாகவே எல்லாவற்றையும் வெளிப்படுத்திவந்தார். அவர்கள் திடீரென்று தோன்றி பின் மறைந்து போவார்கள். தேவன் முற்காலத்தில் தம்முடைய பிள்ளைகளுடன் தேவதூதர்கள் மூலமாகவே தொடர்பு கொண்டார் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. மாம்சீக இஸ்யேலர்களுடன் கொண்டிருந்த தொடர்பைக் காட்டிலும் தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுடன் அதிக கவனத்துடன் முடியப் போகிற இந்த சுவிசேஷ யுகத்தில் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவரது வீட்டின் குமாரர்களாக, அவரை நெருங்கி வருகிறார்கள்; ஆனால் மாம்சீக இஸ்ரயேலர்கள் அவரது வீட்டின் ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். தேவன், வீட்டின் குமாரர்கள், கண்டு அல்ல, விசுவாசத்தின்படி மேன்மையான நடக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எனவே அவர்களுக்கு தேவன் வெளிப்படுத்துகிறவைகள் எல்லாம் மாம்சத்திற்குரியவைகள் அல்ல. எனினும் அவைகள் எல்லாம் உண்மையானவைகள்.

### கர்த்தரின் கண்கள்

"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது,"

என்றும் "கர்த்தரின் கண்கள் எவ்விடத்தி–லிருந்தும் நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது" என்றும் வேதத்தில் நாம் வாசிக்கிறோம். (2 நாளா. 16:9; நீதி.15:3) இது தேவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுடைய ஒவ்வொரு கிரியையையும் அவரே பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தைக் கொடுக்காமல், அவர் தமது வல்லமையினாலும் தூதுவர்கள் மூலமாகவும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தைக் கொடுக்கிறது. இந்த "கண்கள்" என்பது கர்த்தரின் செல்வாக்கை, எதன் மூலமாவது அறிந்து கொள்ளும் வல்லமையை குறிக்கிறது. நாம் நமது விருப்பங்களை நிறைவேற்றுவது போல, தேவன் தமது வல்லமையை அப்பியாசப்படுத்தி, அவரது சித்தத்தை தேவ தூதர்கள் மூலமாகவோ அல்லது மற்ற தூதுவர்கள் மூலமாகவோ நிறைவேற்றுகிறார். பிலதெல்பியாவில் சில காரியங்களை தெரிந்து கொள்ள நாம் விரும்பினால், நாம் கற்றுக் கொள்வதற்கு அநேக முறைமைகள் இருக்கும். நாம் குறிப்பிட்ட நபருக்கு அவருக்கு தொலைபேசி இருந்தால், நேரடியாகப் பேசி தெரிந்து கொள்ளலாம் அல்லது தந்தி மூலமாக செய்தியை அனுப்பலாம்.

செய்தி தொடர்புக்கு மானிட வர்க்கத்தில் இப்படிப்பட்ட பலவிதமான முறைகள் இருக்கும்போது, பல்வேறு செய்தி தொடர்பு முகவரிகளையும், தம்முடைய பிள்ளைகளோடு தொடர்புகொள்ள முழுத்திறமையையும் பெற்றிருக்கிற நமது பரலோக பிதாவைப்பற்றி சிந்திக்கும்போது நாம் அவரை சரியாக கணிக்க முடியும். நம்மைக் காட்டிலும் மேன்மையான இடை நிலைகளை தேவன் பெற்றிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. உலகத்தைக் குறித்த காரியங்கள் மற்றும் நம்மைக் குறித்த அனைத்துக் காரியங்களும் அவருக்கு அறிவிக்கப்படுகிறது என்பதைத் தவிர வேறு காரியங்கள் எதையும் தேவன் நமக்கு வெளிப்படுத்தவில்லை. தேவதூதர்கள் அவருடைய ஊழியக்காரர்கள் என்பதையும் அவருடைய ஜனங்கள் மேல் அவர்களுக்கு பொறுப்பு உள்ளது என்பதையும் நமக்கு அவர் கூறுகிறார். "இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபி. 1:14) நமக்கு நேரடியாக உணவு கொடுத்தல், நமது உணவை சமைத்து தருவது, நமது வீடுகளை கட்டித்தருவது போன்ற ஊழியங்களை அவர்கள் நமக்கு செய்வதில்லை. பிறகு எப்படி அவர்கள் நமக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் நமக்கு எப்படி ஊழியம் செய்கிறார்கள் என்பதை அறிய நமக்கு வழியே இல்லை. ஆனால் ஆண்டவர் இயேசு "சிறியவர்களுக்குரிய" தேவதூதர்கள் பரலோகத்தில் பரமபிதாவின் சமூகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று நமக்கு கூறுகிறார்.

சிறியவர்களுக்குரிய இந்த தேவதூதர்கள் தேவனிடம் செல்லும் வழியாகவும் உடனடி கவனம் செலுத்துகிறவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை இது உணர்த்துகிறது. பரமபிதாவானவர் தமது சமூகத்திற்கு அந்த தூதர்கள் வர அனுமதிக்கிறார் என்றால் செய்தி தொடர்பு தவிர வேறு எந்த பயனுக்காக இருக்க முடியும்? தேவன் நம்மைப்பற்றி அறிந்து கொள்ள பயன்படுத்தும் முறைமை நமக்கு பரிச்சயம் இல்லாதது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம் எனினும் அதற்காக தேவன் பயன்படுத்துவது அதிகப்படியாக தேவ தூதர்களைத்தான் என்பதை நாம் யூகிக்க முடியும். வியாபார ஸ்தலங்கள் மற்றும் வங்கிகளை சரியானபடி நிர்வகிப்பதற்கு அதற்கான சில சட்டங்களும், ஒழுங்கு முறைகளும் இருக்கின்றன. இதே போல, தேவனும் இயற்கையான சில பிரமாணங்களை உடைய வராயிருக்கிறார். அடுத்த நாள் வருவதற்காக பூமியை சுற்றச் சொல்– தேவனிடம் நாம் ஜெபிக்க வேண்டும் என்று அவசியமில்லை. சரியான நீதியையும் எல்லையற்ற ஞானத்தையும் உடையவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவன் அவரது அண்ட சராசரங்களையும் அடக்கி ஆள்வதற்குரிய பிரமாணங்களை உடையவராயிருக்கிறார் என்று நாம் நிச்சயிக்கிறோம்; மேலும் தேவ தூதர்கள் இந்த பிரமாணங்களை குறித்து நுண்ணறிவு உடையவர்களாக இருக்கிறார்கள் என்றும், பூமியிலே நீதிமன்றங்கள் சில செய்திகளை சேகரிக்க, ஒருவரை பிரதிநிதியாக நியமிப்பது போன்று தேவதூதர்கள் யேகோவா தேவனுடைய பிரதிநிதிகள் என்றும் நாம் நிச்சயிக்கிறோம்.

### நமது கர்த்தராகிய இயேசு பிரதான தூதன்

நமது ஆண்டவர் பரமேறுவதற்கு முன்னதாக, "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று கூறிய வார்த்தைகள் நமது பாடத்தின் தலைப்பு வசனத்திற்கு இசைவாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு, யேகோவா தேவனின் தூதனாக, பிரதான தூதனாக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். நிச்சயமாக அவர்தான் சுவிசேஷயுக சபையின் பிரதான தூதனாக இருக்கிறார். தேவன், தூதர்கள் மற்றும் மற்ற முகவர்கள் மூலமாக உலகத்தை நிர்வகித்தும், அவரது பிள்ளைகளை பராமரித்தும் வருகிறார் என்று நாம் நினைக்கிறோம். தெய்வீக ஆவிக்குரிய வல்லமைகள் அனைத்திற்கும் தலையாயிருக்கிற நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிர்வகித்து வருகிறார்; யேகோவா தேவனின் எல்லா காரியங்களுக்கும் அவரே பொறுப்பானவர். நாம் கிறிஸ்துவின் பள்ளிக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து தான் நமது போதகர். நாம் ஜெபத்தில் தேவனிடம் செல்லும்போது, இந்த போதகரை புறக்கணியாமல் அவரது நாமத்தில் செல்கிறோம். பரமபிதா அவரை புறக்கணிப்பதாக நாம் நினைக்ககூடாது. நாம் தொடர்பு கொள்வதற்கு அவரே பிதாவின் பிரதிநிதியாக இருக்கிறார். உலகின் ஒவ்வொரு

காரியமும் கர்த்தராகிய இயேசுவின் சொந்த மேற்பார்வையின் கீழேயே நடக்கிறது என்று நாம் யூகிக்கக் கூடாது. தேவையானவைகளைச் செய்ய அவருக்குக் கீழே தூதர்கள் இருக்கிறார்கள். எனவே அங்கே சில ஒழுங்குகள் நடைமுறையில் இருக்கின்றன. இந்த தெய்வீக செயல்பாடுகள் நியாயமான, காரண காரியத்திற் கிசைவான ஏற்பாடாக நமக்கு காணப்படுகிறது. இந்த காரியத்தை மற்றவர்களிடம் நாங்கள் திணிக்கவில்லை, எங்கள் மனதிற்கு இப்படி தோன்றுகிறது என்று கூறுகிறோம்.

சபையானது கர்த்தராகிய இயேசுவின் விசேஷித்த வழிகாட்டுத—ன் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது. தேவன், இயேசுவின் மூலமாக அவரது ஜனங்களை சுற்றி பாளையமிறங்குகிறார் என்பதும், தூதர்கள் அவருக்கு கீழாக இருக்கிறார்கள் என்பதும் எவ்வளவு இசைவாக இருக்கிறது. சாத்தான் அவனது தூதர்களுக்கு தலைவனாக இருந்தால், நமது கர்த்தரும் தமக்கு கீழாக தூதர்களை பெற்று அவர்களுக்கு பிரபுவாக இருப்பார். மகா அலெக்ஸாண்டரும், நெப்போ—யன் போன பார்ட்டும் எப்படி தங்களுக்கு கீழாக ஆயிரக்கணக்கான வீரர்களை வைத்துக் கொண்டு தங்களது சித்தத்தை நிறைவேற்றினார்கள் என்பதை சரித்திரத்தில் வாசிக்கிறோம். அதே போல எல்லா ஆவியின் ஜீவிகளும் இயேசு கிறிஸ்துவின் வழி காட்டுத—ன் கீழ் இருக்கிறார்கள். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கிறிஸ்துவின் கைகளுக்கு கீழாக தேவன் வைத்திருக்கிறார். எல்லா தூதர்களும் அவருக்கு கீழாக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் மூலமாக தூதர்கள் அனைவரும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளின் நலன்கள் எல்லாம் நமது ஆண்டவரின் மேற்பார்வையில் இருக்கிறது. இது எங்களது எண்ணமாக இருக்கிறது. மேலும் இப்படி நினைக்க நாங்கள் விரும்புகிறோம்.

**பல்வேறு வழிகளில் விடுதலை**

கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சுற்றி பாளயமிறங்கி அவர்களை விடுகிறார் என்று நமது தலைப்பு வசனம் கூறுகிறது. பழங்காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் சில சமயங்களில் அற்புதமாக விடுவிக்கப்பட்டார்கள்; சிலர் சிறைச்சாலையி—ருந்து விடுவிக்கப்பட்டார்கள்; மற்றவர்கள் அல்ல. சிலர் பட்டயத்தி—ருந்து விடுவிக்கப்பட்டனர்; மற்றவர்கள் அல்ல. தேவனுடைய சித்தம் எதுவாக இருந்தாலும் நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது ஆவிக்குரிய நன்மைக்காக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக எந்த நிபந்தனைகளுக்கு கீழாக நாம் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டோம் என்பதையும் நாம் நம்மை அர்ப்பணம் செய்தோம் என்பதையும் உணர வேண்டும். தேவனிடம் உள்ள ஒரு தகுதியான பயம், பயபக்தி முற்றிலுமாக அவரது கட்டுப்பாட்டுக்குள்ளும் வழிகாட்டுதலுக்குள்ளும் நிச்சயமாக நம்மை வழி நடத்தும். நம்மை நாமே சரியாக வழிநடத்திக் கொள்ள இயலாது என்பதை நமது வாழ்க்கையின் அனுபவம் நமக்கு காண்பித்திருக்கிறது. அதிகபட்சமான ஆசீர்வாதங்களை கொண்டு வரத்தக்கதான வழியில் நம் ஒவ்வொருவரையும் தேவன் விடுவிப்பார்.

அப்போஸ்தலர் காலத்தில் ஒரு மனிதனைப் போல தோன்றிய ஒரு கர்த்தருடைய தூதன் சிறைச்சாலையி—ருந்து பரி. பேதுருவை விடுவித்தார். இது அப்போஸ்தலர் மேல் உள்ள சிரத்தையினால் மாத்திரமல்ல, முழு சபையின் மேலுள்ள சிரத்தையினாலாகும். மேலும் தகுந்த பாடத்தை கொடுக்கவும், கர்த்தர் முழுவதுமாக அவர்களை கவனித்துக் கொள்வார் என்பதை காண்பிக்கவும் இப்படி நடந்தது. தற்காலத்தில் இப்படிப்பட்ட வெளியரங்கமான வெளிப்பாடுகள் நமக்கு கொடுக்கப்படாவிட்டாலும் வேறு விதமான ஆசீர்வாதங்களை சபையின் நன்மைக்காக கொடுத்திருக்கிறார். தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அப்போஸ்தலருடன் சேர்ந்து சொல்ல முடிந்தவர்களாக இருக்கிறோம். எப்பொழுதும் தேவனுடைய மேன்மையான பராமரிப்பின் கீழ் இருக்கிறோம் என்று அவர்மேல் முழு நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

**ஊழியம் செய்யும் தூதனை ஒவ்வொரு பரிசுத்தவானும் பெற்றிருக்கிறான்**

நாம் பார்த்துக் கொண்டிருக்கிற இந்த பாடத்தைக் குறித்து நமது விளக்கம் மிகவும் உறுதியானதாக இல்லாதிருந்தாலும், ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளையும், அவன் தேவனுடைய உண்மையான பிள்ளையாக இருப்பதினால், அவனது காரியங்களை கவனித்து கொள்ளும்படியாக ஒரு ஊழியம் செய்யும் ஆவியை, ஒரு நபரை, ஒரு தூதனை பெற்றிருக்கிறான் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். இந்த தூதன் தமது அறிக்கையை கர்த்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அது மாதம் ஒரு முறையா, வாரம் ஒரு முறையா, மணிக்கொரு முறையா என்பதை நாம் அறியோம். இது ஞானமானதாக சரியான முறையாக தேவன் காண்கிறதால், நாம் அவரது ஞானத்தில் மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறோம். இந்த காரியத்தில் தேவன் எப்படிப்பட்ட ஏற்பாடு செய்திருந்தாலும் அது நமக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. மேலும் அது முழுவதும் சரியானதாகவும், தெய்வீக பண்பிற்கு இசைவானதாகவும் இருக்கிறது.

இந்த ஒழுங்கு தீர்க்கதரிசி தானியே—ன் புத்தகத்தில் விளக்கப்பட்டிருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். தானியேல் ஜெபித்துக் கொண்டிருந்திருக்கிறார். அவரது ஜெபம் உடனே பதிலளிக்கப்பட்டது. காபிரியேல் தூதன் தேவனுடைய தகவலறிவிப்பவராக வந்து சில காரியங்களை அவருக்கு விளக்கினார். தானியேல் வேண்டுதல் செய்த

ஆரம்பத்திலேயே கர்த்தர் அதற்கு பதிலளிக்க தீர்மானித்தார். அதை அறிவிக்கும்படி காபிரியேல் தேவனால் அனுப்பப்பட்டார். ஆனால் மற்ற காரியங்களுக்காக நிறுத்தப்பட்டிருந்தார். காபிரியேல் தூதன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, தானியேலையோ மற்ற தேவனுடைய மனுஷரையோ அலட்சியம் செய்வதற்காக என்று நாம் நினைக்கக் கூடாது. முழு அதிகாரம் பெற்ற தூதனாக காபிரியே–டம் சில முக்கியமான வேலைகள் கொடுக்கப்பட்டிருந்ததால், தானியே–ன் சிறிய காரியங்கள் வேறு ஒரு தாழ்ந்த தூதனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. தாமதத்திற்கு காரணம் என்ன என்பதை காபிரியேல் தூதன் அறிவித்தான். அதாவது, பெர்சியா ராஜா இருபத்தோரு நாள் மட்டும் அவரை எதிர்த்து நின்றான். (தானி. 10:13)

சுவிசேஷ யுகம், யூத யுகத்திற்கும், வரப்போகிற யுகத்திற்கும் முற்றிலும் மாறுபட்டது என்று இதுவரை நாம் குறிப்பிட்டு கூறியிருக்கிறோம். சுவிசேஷயுகம் ஆரம்பித்த பிறகு, வெளியரங்கமாக காணப்படுகிற பரிசுத்த ஆவியின் வரங்களாகிய அற்புத சுகமளித்தல், பலபாஷை பேசுதல், பாஷைகளுக்கு விளக்கம் சொல்லுதல், ஆவிகளை பகுத்துணர்தல் மற்றும் தேவதூதர்கள் தரிசனம் கொடுத்தல் ஆகியவை ஒழிந்து போயின. மேலும் சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் கண்டு அல்ல, விசுவாசித்து நடக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால் சபை ஸ்தாபகம் ஆன பிறகு தூதர்கள் தோன்றுவதையும், வெளியரங்கமாக அவர்கள் தங்களை காண்பிப்பதையும் எதிர்பார்ப்பது பொருத்தமற்றதாக இருக்கும்.

ஆனால் உலக சரித்திரத்தில் கடந்தகாலத்தில் தேவனுடைய ஜனங்களிடத்தில் இருந்ததைக் காட்டிலும் சுவிசேஷ சபையின் மேல், தேவனுடைய தூதர்களின் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடத்தில் தேவன் அதிக சிரத்தை உள்ளவராக இருக்கிறார். இந்த தூதர்கள், நம்மேல் அக்கறை உள்ளவர்களாகவும், நமது காரியங்களை மேற்பார்வையிடுகிறவர்களாகவும், தேவனுடைய சித்தத்தின்படி நமக்கு இணைப்பு வழி தூதுவர்களாகவும் இருக்கிறார்கள். இணைப்பு வழி என்பது நமக்கு கிடைக்கிற நன்மைகளை குறிக்கிறது.

### பரிசுத்த தூதர்கள் நமது புலன்களுக்கு வெளிப்படுவதில்லை

தூதர்கள் நமது தூதுகளில் ரகசியமாக பேசுகிறார்கள் என்ற எண்ணத்தை நாங்கள் கொடுக்கவில்லை. காதுகளில் ரகசியமாக பேசுகிற தூதர்கள் எல்லாம், மேஜை மூலமாக, ஆவியுலக பலகை மூலமாக, விரலைக் கொண்டு எழுதுகிறது, ஆவியின் மீடியம் மூலமாக, கண்கள், காதுகள் மூலமாக தகவல் அறிவிப்பது எல்லாம் கெட்ட, விழுந்துபோன தூதர்களின் செயல்களாகும். இப்படிப்பட்ட காரியங்களை பரிசுத்த தூதர்கள் செய்யமாட்டார்கள் என்று நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். தற்காலத்தில் தேவனுடைய பிள்ளைகள் அவரது வசனங்களின் மூலம் உபதேசத்தை அறிந்து கொள்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆவி உலகத்தைப்பற்றிய புத்தகமோ, புது எண்ணங்களோ, ஞான திருஷ்டி சக்தியோ தேவையில்லை. இவையெல்லாம் சாத்தான் மற்றும் பிசாசுகளின் கண்ணியாக இருக்கிறது.

கிறிஸ்துவின் சீஷர்களுக்கு வேதாகமும், அவர்களை பாதுகாக்கவும், அவர்களது காரியங்களில் வழி நடத்தவும் ஊழியம் செய்யும் காணக் கூடாத பரிசுத்த தூதர்களும் இருக்கிறார்கள். இது நமக்கு உண்மையான ஒரு பெரிய ஆறுதலாக இருக்கிறது. இவை எல்லாவற்றையும் தேவனே நேரடியாக செய்தார் என்று நாம் நினைத்திருந்தோமானால், அவர் நம்மை மறந்திருந்தார் என்று நாம் நினைக்க கூடும். ஆனால் பிதாவுக்கு தெரியாமல் நமது தலையி–ருந்து ஒரு மயிரும் விழாது என்ற உறுதிமொழி அவரது வசனத்தில் இருக்கிறது. தேவன் தம் பிள்ளைகளுக்கான தமது தீர்மானத்தை கிறிஸ்துவுக்குள்ளாக ஊழியம் செய்யும் பரிசுத்த தூதர்களால் நிறைவேற்றுகிறார் என்ற உண்மை நமது மனதை இளைப்பாறப் பண்ணுகிறது.

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

<u>வெளியிடுபவர்:</u>

சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண்: 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை– 600 019. கைபேசி: 97909 00030. மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

## The Psychological Moment

## தக்க தருணம்

I சாமுயேல் **11:1–15**

சவுல் ராஜா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டும் ஜனங்களின் அங்கீகாரத்திற்காக காத்திருந்தான் – அவனது சரியான சந்தர்ப்பமும் அவன் அதை பயன்படுத்திக் கொண்ட விதமும் – ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டான் – சந்தர்ப்பங்கள் எல்லாருக்கும் திறந்திருக்கிறது – சவு–ன் அனுபவத்தில் எல்லாருக்குமான பாடம் – சபைக்கும் ராஜாவாக அழைக்கப்பட்டவர்களுக்கும் விசேஷித்த பாடங்கள் – ராஜரீக ஆசாரியத்துவம் –மேசியாவின் ஆட்சியில் எல்லாரும் ராஜாவாக ஆக்கப்படுவார்கள் – அநீதியை விரும்புகிறவர்கள் அழிக்கப்படுவார்கள்.

''பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன், உத்தமன்.'' நீதிமொழிகள் 16:32

இஸ்ரயேலர்கள் ஒரு ராஜாவைக் கேட்டிருந்தார்கள். தேவன், தீர்க்கதரிசி சாமுயேல் மூலமாக சவுலை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். இஸ்ரயேல் ஜனங்கள் கூடியிருந்தார்கள், தேவனுடைய தீர்க்கதரிசி சாமுயேல் தேவனுடைய தெரிந்தெடுத்தலை சுட்டிக்காட்டினான். இந்த தெரிந்தெடுத்தலை சிலர் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டனர்; ஆனால் சில பண்படாதவர்கள், இவன் யார்? இவனால் இரட்சிப்பு வரும் என்று நம்புவதற்கு இவன் என்ன செய்திருக்கிறான் என்று அலட்சியமாக கூறினார்கள்.

தேவனும் அவரது திட்டமும் தோற்றுப்போனது போல் காணப்பட்டது – அவரது தெரிந்து கொள்ளுதல் திருப்தியற்றதைப் போலவும் பயனில்லாததைப் போலவும் காணப்பட்டது. ஜனங்களிடமிருந்து அரைகுறையான ஆதரவு இருந்ததால் சவுல் தனது அதிகாரத்தை பிரயோகிக்க முயற்சிக்கவில்லை. அவன் தனது வீட்டுக்கு வந்து தனது விவசாய வாழ்க்கையை தொடர்ந்தான்; ஆனால் சவுல் தேவனுடைய ஆசீர்வாதத்துடன் வரக் கூடிய தக்க சமயத்துக்காக பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தான் என்று நாம் நிச்சயிக்கிறோம். அப்பொழுது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்த அந்த ராஜாவுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் எடுத்துக் கொள்ளுவான்.

சவு–ன் விவசாய வாழ்க்கை ஒரு மாதம் மட்டுமே தொடர்ந்தது. அந்த சந்தர்ப்பம் அவனை எல்லாராலும் ராஜாவாக ஏற்றுக் கொள்ள வைத்தது, இஸ்ரயே–ன் கிழக்குப் பக்கத்திலே குடியிருந்த அம்மோனியர்கள், இஸ்ரயே–ன் ஒரு கோத்திரத்தாரோடே போர் தொடுத்தார்கள். கீலேயாத்தி–ருக்கிற யாபேசை முற்றிகை போட்டார்கள். அவர்கள் உணவுப் பஞ்சம் வந்து சரணடையும் வரை இது தொடர்ந்தது. யாபேசின் மனுஷர் சரணடைவதற்கான நிபந்தனைகளைக் கேட்ட போது, அம்மோனிய சேனாதிபதி, இஸ்ரயேலர் ஒவ்வொருவரின் வலது கண்ணைபிடுங்கி நிந்தைவரப் பண்ணுவதே ஒரு நிபந்தனை என்றான்.

இது குறித்து தீர்மானம் செய்ய ஏழு நாட்கள் தவணை கேட்கப்பட்டது. அந்த சமயத்தில் எந்த உதவியும் அவர்களுக்கு கிடைக்கவில்லை யென்றால் அவனது நிபந்தனைக்கு ஒத்துக் கொள்வோம் என்றார்கள். செய்தி அறிவிப்பவர்கள் நாடெங்கும் அனுப்பப்பட்டனர். அப்பொழுது சவு–ன் ஊருக்கும் செய்தி வந்தது. ராஜாவாக தெரிந்து கொள்ளப்பட்டு சிலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சவுல் மூலம் இரட்சிப்பு கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் செய்தி அறிவிக்கப்பட்டது. இந்த அவமான நிலைமை சவு–ன் இருதயத்தை தாக்கியது. தேசத்தின் உரிமையையும் தேவனுடைய ஆதரவையும் வாக்குத்தத்தமாக பெற்றிருந்த இஸ்ரயேலர்கள் விசுவாசத்திலும் தலைமை தாங்கி நடத்தும் திறமையிலும் குறைவுபட்டிருந்தார்கள்.

சவுல் தேவனால் நியமிக்கப்பட்ட தலைவன், தலைமை தாங்கி நடத்த தகுந்த தருணம் சவுலுக்கு வந்திருந்தது, அவன் ஓட்டி வந்த ஓரிணை மாட்டை துண்டித்து, அதை எல்லா கோத்திரத்திற்கும் அனுப்பி, தங்களுக்கு வந்த அவமானத்தை துடைக்க யாரெல்லாம் முன்வரவில்லையோ அவர்களது மாடுகளுக்கு இப்படியேச் செய்யப்படும் என்று சொல்– அனுப்பினான். இது ஒரு ராஜாவினுடைய ஒரு வினோதமான கட்டளையாக இருந்தது. எனினும் இது அவர்களது இருதயத்தை தொட்டதினால் மூன்று லட்சத்து முப்பதினாயிரம் பேர் ஒருமனப்பட்டு புறப்பட்டு வந்தனர். அடுத்த நாள் முற்பக–லேயே அவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்ற உறுதி மொழியுடன் செய்தி அறிவிப்பாளர்கள் கீலேயாத்தின் யாபேசுக்கு வந்து சேர்ந்தனர். பின்பு யாபேசின் மனுஷர் அம்மோனியர்களிடம் நாளைக்கு உங்களிடத்தில் வருவோம், அப்பொழுது உங்கள் இஷ்டப்படியெல்லாம் செய்யுங்கள் என்றார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு இரட்சிப்பு கிடைத்திருக்கும் என்று எதிர்பார்த்திருந்தார்கள்.

சவுல் ராஜா தனது படையை மூன்று பிரிவாக பிரித்து, மூன்று திசையி–ருந்து பாளயத்திற்குள் வந்து அம்மோனியரை முறியடித்து இஸ்ரயேல் ஜனங்களை இரட்சித்தான். இதன் காரணமாக திரளான ஜனங்கள், தேவன் அவர்களுக்கு ஒரு ஞானமுள்ள ராஜாவைக் கொடுத்திருக்கிறார் என்று உணர்ந்து கொண்டார்கள். இப்படியாக தாமதமாக சவுலை ராஜாவாக அங்கீகரித்தார்கள். பிறகு ஜனங்கள், சவுலுக்கு விரோதமாக

**--2243--**

பேசினவர்கள் யார், அவர்களை முதலாவது கொல்ல வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் ராஜா ஞானமாகவும் பெருந்தன்மையாகவும் கூறியதாவது: “இன்றைய தினம் ஒருவரும் கொல்லப்படலாகாது; இன்று கர்த்தர் இஸ்ரயேலுக்கு இரட்சிப்பை அருளினார்.” (I சாமு) 11:13

### தெய்வீக குணாதிசயம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது

இந்த போரும் அம்மோனியர்களின் அழிவும் தெய்வீக அங்கீகாரத்துடனும் ஆசீர்வாதத்துடனும் நடந்தாலும் தூக்கத்திலோ, எழுந்திருக்கும் போதோ அழிக்கப்பட்ட அந்த ஆயிரக்கணக்கான அம்மோனியர்கள் உடனே நரகத்திற்குச் சென்று நித்திய வேதனையில் இருப்பார்கள் என்பதை இது குறிக்கிறது என்று நினைக்கக் கூடாது என்று வாசகர்களுக்கு மறுபடியும் நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். மாறாக, அவர்கள் மகா பெரிய மரண சிறைச் சாலையாகிய, கல்லறைக்குச் சென்று உறங்குகிறார்கள். தேவனுடைய திட்டத்தின்படி இயேசு உலக இரட்சகராக மரித்து, இரண்டாம் வருகையில் வந்து அவரது மகா அதிகாரத்தையும் ஆளுகையையும் எடுத்துக் கொண்டு, பிரேதக்குழிகளிலுள்ள அனைவரையும் எழுப்புகிற வேலையை ஆரம்பிக்கும் வரை நித்திரையி–ருப்பார்கள். (யோவா 5:28,29)

இந்த நிலைமையை புரிந்து கொள்ளத்தக்கதாக, மானிடர்கள் அனைவரும் மரணதண்டனைக்குட் பட்டவர்களாக, நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவு கூர வேண்டும். எல்லாரும் எப்படியாவது மரிக்க வேண்டும்; அவர்கள் மரிப்பது வறுமையினாலாவது அல்லது வியாதியினாலாவது அல்லது கொள்ளை நோயினாலாவது அல்லது பட்டயத்தினாலாவது இருக்கலாம். தீர்ப்பு கூறுகிறதாவது: ‘‘நீ சாகவே சாவாய்’’ – எங்கேயாவது எப்படியாவது ஜீவிக்காதே. இந்த கருத்தில் பார்க்கும் ஒவ்வொரு காரியத்திலும் அதாவது போர்கள், பஞ்சம், வியாதி முதலானவைகளில் தேவனுடைய அதிகாரம் சம்பந்தப்பட்டிருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்கிற தண்டனையை தேவன் அமுலுக்கு கொண்டு வரும்போது, அவரது நீதியை வெளியரங்கமாக்குகிறார்; அதோடு கூட அவரது அன்பை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். தமது அன்பை வெளிப்படுத்துவதற்கான முதல் படி தமது குமாரனை மனிதரின் மீட்பராக ஆதாமின் பாவத்துக்கு மரிக்கும்படியாக அனுப்பியது தான். இந்த ஆதாமின் பாவத்தினால் தான் மனுக்குலம் முழுவதும் மரணதண்டனைக்குள்ளாக இருக்கிறது.

தெய்வீக திட்டம் இன்னும் உலகிற்கு பொதுவாக மறைவாகவே இருக்கிறது. மனுக்குலத்தின் மேல் உள்ள அன்பினால் தேவன் அளித்திருக்கிற வேதாகமத்தின் மூலமாகவே அர்ப்பணம் செய்துள்ள தேவனுடைய பிள்ளைகள் இதை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தேவன் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்து, அதன்மூலம் சாத்தானை கட்டி, சாபத்தின் பலனாகிய நீதி, ஒழுக்கம் மற்றும் உடற்சார்ந்த பலவீனத்தி–ருந்து மனுக்குலத்தை விடுவிப்பார் என்பதையும், கீழ்ப்படிகிற அனைவருக்கும் முழு பூரணத்தையும் தேவனுடனான உறவையும் புதுப்பிப்பார் என்பதையும் புரிந்து கொள்வார்கள் என்பதை இது நமக்கு அறிவிக்கிறது.

### எல்லாருக்கும் பெரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது

உலகத்தைக் கவனிக்கும்போது, முன்னேற்றத்திற்கும் புகழுக்கும் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் எல்லாருக்கும் சமமாக இருப்பதில்லை என்பதை உணர்கிறோம். எனினும் சில ஆண்களும், சில பெண்களும் மட்டுமே, தங்களது சொந்த முன்னேற்றத்திற்கும் தங்களை சார்ந்தவர்களுக்கான பிரயோஜனத்திற்காகவும் கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றனர். அப்படிப்பட்ட அனைவரும் சவு–டமிருந்து ஒரு நல்ல பாடத்தை கற்றுக் கொள்ளக்கூடும். ஏனெனில் அவன் இயற்கையாக பெற்றிருந்த விசேஷித்த குணத்தை பின்வரும் காலத்தில் தவறாக பயன்படுத்தினான்.

சவுல் அடக்கமுடையவன் என்பது, அவன் ராஜாவாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் என்ற செய்தி வந்தவுடன் தனது கோத்திரம் இஸ்ரயேல் கோத்திரங்களிலேயே மிகவும் சிறியது என்றும், தனது கோத்திரத்திலேயே தனது குடும்பம் மிகவும் அற்பமானது என்றும் கூறியதி–ருந்து தெரிகிறது. தீர்க்கதரிசி சாமுயேல் ஜனங்களை அழைத்து தேவனால் ராஜாவாக தெரிந்து கொள்ளப்பட்டவனை காண்பிப்பதற்காக சவுலை தேடின போது, அவன் வந்திருந்தவர்களின் தளவாடங்கள் இருந்த இடத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். தேவன் என்னை தெரிந்து கொள்வார் என்று கூறிக் கொண்டு, ஜனங்களுக்கு முன்பாக தன்னை காண்பித்துக் கொண்டு கர்வத்துடன் நடக்கவில்லை. சிலர் சவுல் தகுதியுள்ளவன் அல்ல என்று கூறிய போது இவன் அமைதியாக வீட்டிற்குச் சென்று தனது விவசாய தொழி–ல் ஈடுபட்டான். இப்படியாக இந்த விஷயத்தை ஆறவிட்டான். இப்படியாக அவன் தனது பொறுமை, ஞானம் மற்றும் தாழ்ச்சியை காண்பித்தான்.

அதன் பிறகு அவனது கிரியை மற்றும் இஸ்ரயே–ன் படையை நடத்தின விதமானது, அவனது தைரியத்தையும், தேவன் பேரில் அவனது விசுவாசத்தையும் காண்பித்தது. இந்த பண்புகளை சவுல் பிற்காலத்தில் காண்பிக்காமல் அவனது குணம் மறுபாடாயிருந்தது. சவு–ன் அனுபவத்தி–ருந்து வா–ப பிள்ளைகள் தங்கள் இளம்

பிராயத்திலும் பிறகு வயதான பருவத்திலும் நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

தேவனிடம் அர்ப்பணம் செய்த கிறிஸ்தவர்கள் சவு-ன் அனுபவங்களி-ருந்து நல்ல பாடங்களை கற்றுக் கொள்ள முடியும் என்று நாம் சொல்லும் போது, சிலர் ஆச்சரியப்படக்கூடும். அர்ப்பணம் செய்தவர்கள், சவுலைப் போல தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ராஜாவாக மாத்திரமல்ல ஆசாரியர்களாவும், ''ராஜரீக ஆசாரியர்களாக'' தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். சவுல் எண்ணையால் அபிஷேகம் பண்ணப்பட்டது போல, ராஜரீக ஆசாரியர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். சவுலை ஜனங்கள் நிராகரித்த போது, அவன் கர்த்தருடைய நேரத்திற்கு பொறுமையோடே காத்திருந்தான். அதே போல இயேசு தலையாக இருக்கக் கூடிய ராஜரீக ஆசாரிய கூட்டாத்தாரின் இராஜ்யத்திற்கு உலக ஜனங்கள் இன்னும் ஆயத்தமாகவில்லை; ராஜ்ய ஸ்தாபகத்திற்கான தேவனுடைய நேரம் இன்னும் வரவில்லை. பொறுமை, தாழ்ச்சி மற்றும் தேவன் பேரில் நம்பிக்கை ஆகியவைகளில் நிலைத்திருந்தால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளலாம், (எபி 6:12)

மகா அர்மகெதோன் சமீபமாயிருக்கிறது. பயங்கரமான பாடங்களை பெரும் விலை கொடுத்து உலகம் கற்றுக் கொள்ளும். அதன் பிறகு மேசியாவின் ராஜ்யம் பிரபலமடையும். சவுலை எதிர்த்ததைப் போல இதை எதிர்ப்பவர்கள் மரணத்துக்கு செல்வார்கள். எனினும் தலையாகிய இயேசுவும் சபையாகிய அவரது அங்கங்களும் சேர்ந்த மகிமையடைந்த கிறிஸ்து, ராஜ்யத்துக்கு இசைந்து வருகிறவர்களுக்கு பொது மன்னிப்பு அளிப்பார்கள்.

இரட்சகரை துன்பப்படுத்தினவர்கள் மன்னிக்கப்படுவதோடு கூட, இவர் மூலம் தேவனுடன் இசைவுக்கு வருவதற்கு உதவி செய்யப்படுவார்கள். அவர்கள் மாத்திரமல்ல ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரை அறியாமல் துன்பப்படுத்தினவர்களும் கூட இரக்கத்துடன் கவனிக்கப்படுவார்கள். ''என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்.'' ஏசா. 66:5

ஆண்டவருடைய சந்தர்ப்பத்தை எதிர்த்த அவரது ராஜ்ய வகுப்பார் தகுந்த தண்டனையடைந்து வெட்கப்பட்டுப் போவார்கள். அவமானமும் தேவனுடைய மன்னிப்பையும் பெற்ற பிறகு, கீழ்ப்படிய விரும்புகிற அனைவருக்கும், ''உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்த இளைப்பாறுத-ன்'' ஆசீர்வாதங்களை கிறிஸ்து கொண்டு வருவார். (அப் 3:21)

## ராஜாக்கள் நிறைந்த ஒரு உலகம்

பூமியின் ராஜாவாகிய ஆதாமை தேவன் சிருஷ்டித்தார். தனது தேவனுக்கு அவன் உண்மையாய் இருந்திருந்தால் அவன் தமது ஜீவன், சுகம், சந்தோஷத்தை மாத்திரமல்ல, மிருகங்களையும், பறவைகளையும் மற்ற ஜீவராசிகளையும் ஆளுகிற அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொண்டிருப்பான். தேவனுடனான உடன்படிக்கையை ஆதாம் மீறியதால், மரணத்தை பெற்று தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டதோடு, கீழான ஜீவராசிகளை ஆளுகை செய்யும் அதிகாரத்தையும் இழந்தான். இயேசுவின் மரணத்தினால் இரட்சிப்பு நிறைவேறி, ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சென்றடைந்ததோடு கூட, அவர்களது சிந்தை மற்றும் சரீரம் மனித பூரணத்திற்கு திரும்ப கொண்டு வரப்படும்; ராஜரீக அதிகாரமும் கூட திரும்ப கிடைக்கும்.

ஒரு குடியரசில், சட்டத்திற்கு முன் ஒவ்வொரு குடிமகனும் சமம் என்கிற உண்மை அங்கீகரிக்கப்படுகிறது. ஒரு குடியரசில் ஒவ்வொருவரும் ஒரு ராஜா. இந்த ராஜாக்கள், ஒரு ஜனாதிபதியையோ, அரசாங்கத்தில் உயர்ந்த பதவிக்குரியவரையோ தங்களது ஓட்டு மூலம் தேர்ந்தெடுத்து, அவர் எல்லோருக்காகவும் ஊழியம் செய்வார். இது ஒரு கோட்பாடு, ஒரு உயர்வான இலட்சியம். ஆனால் இது குறையுள்ளது என்று நம் எல்லோருக்கும் தெரியும். எல்லா மனிதர்களும் சமமாகவும் சுதந்தரத்துடனும் பிறக்கிறார்கள் என்று கூறிக் கொள்வது வீணானது. ஏனெனில் மனிதர் பிறக்கும்பொழுது குணத்திலும், திறமையிலும், மனோ சக்தியிலும் ஏற்றத் தாழ்வு காணப்படுகிறது என்பதை நாம் அறிவோம். ஆகையால் குடியரசு என்பது மனிதர்கள் பூரணராக இருக்கும்பொழுது, உயர்ந்த இலட்சியமாக இருக்கிறது. மனிதர் அபூரணராக இருக்கும் வரை தேவைகளை ஒரு பகுதி மாத்திரமே பூர்த்தி செய்கிறது.

மேசியாவின் ராஜ்யம் ஒரு குடியரசாக ஸ்தாபிக்கப்படாது. மனுக்குலத்திற்கு அதிக அதிகாரம் கொடுத்து தங்களது விருப்பத்தின்படி வாக்களித்து ஒவ்வொன்றும் தீர்மானிக்கப்படுவதற்கு மாறாக மேசியாவின் ராஜ்யத்தில் நடக்கும். அது சட்டங்களை வைக்கும், சட்டங்களை மீறுபவர்களை தண்டிக்கும், தங்களை தாங்களே ஆண்டு கொள்ள தகுதியில்லை என்பதை மனிதர்களுக்கு உணர்த்தும். ஆகையால் மனுமக்கள் அபூரணத்தில் இருக்கும்போது மேசியாவின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி தேவன் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். மறுசீரமைப்பின்

மூலம் மனுமக்கள் பூரணத்திற்கு கொண்டு வரப்படுவார்கள். அங்கே அவர்கள் ஆதியிலே திட்டமிட்டபடி, ராஜாக்களாக ஆவார்கள். இந்த நிலைக்கு வர முடியாதவர்கள், திருந்த முடியாதவர்கள், மற்றும் அநீதியை விரும்புகிறவர்கள் அழிக்கப்படுவார்கள்.

மனுக்குலத்திற்கான தெய்வீகதிட்டம் நிச்சயமாக அழகாகவும், எளிமையானதாகவும் சிறப்பானதாகவும் இருக்கிறது! மேலும் விரும்புவதற்கு எதுவும் விடப்படுவதில்லை. அது ‘‘சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக’’ இருக்கும். வேதாகமத்தின் இந்த செய்தியை புரிந்து கொள்வதற்காக யாருடைய கண்களும், காதுகளும் திறக்கப்பட்டதோ அவர்கள் தற்கால சாதாரண மனிதர்களைக் காட்டிலும் அதிகமான நன்மைகளை பெறுவார்கள். இந்த அறிவு அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். பாவத்தினால் இழந்ததும் கல்வாரியில் மீட்கப்பட்டதுமான யேகோவாவின் ஆசீர்வாதங்களை மனுக்குலத்திற்கு கொண்டு வருவதற்கு வருங்காலத்தில் இயேசுவோடு கூட ராஜரீக ஆசாரியர்களாய் தயாராகும்படி பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுதலை உணருவார்கள்.

---

# குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி
# Preferred Monarchy to Republic

1 சாமுயேல் 8:1-10

இஸ்ரேல், ஒரு இறையாட்சி - ஒரு மானிட குடியரசு - ஒரு விருப்பப்பட்ட இராஜ்யம் - சாமுயேல் புண்படுத்தப்பட்டான் - வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது - கீஸின் குமாரன் சவுல் - அவனுடைய அபிஷேகம் - சீட்டின் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டான்.

“தேவனுக்கு பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள்.” 1 பேது 2;17

இஸ்ரயே-ன் அரசாங்கம் ஒரு இறையாட்சியாக இருந்தது. அதாவது தேவன் அவர்களது ராஜாவாகவும் அவரது கட்டளைகள் சட்டங்களாகவும் இருந்தன. ஒவ்வொரு கோத்திரத்தின் மூப்பர்கள் அவர்களது காரியங்களை கண்காணித்து வந்தனர். தேவன் ஒரு ஆசாரிய கோத்திரத்தைக் கொடுத்தார். அவர்கள் ஜனங்களின் மத காரியங்களுக்கு பிரதிநிதியாக இருந்தனர். தேவனுடைய விசேஷித்த தூதர்களாக தீர்க்கதரிசிகளும் நியாயாதிபதிகளும் அவ்வப்போது அவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தனர். ஆனால் அவர்கள் அதிகாரம் இல்லாமல் அனுப்பப்பட்டனர். அவர்களது நியாயம் விசாரித்தல் மிகவும் ஞானமாக இருந்ததாக ஜனங்கள் நம்பினார்கள். எனவே இஸ்ரேல் தேசம் பூமிக்குரிய காரியங்களைப் பொருத்த வரையில் ஒரு குடியாட்சியாக, தேவனுடன் உடன்படிக்கை உறவு கொண்டதாக இருந்தது.

குடியரசு தான் அரசாங்கத்திலேயே உயர்ந்தது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். குடியரசில் ஒவ்வொரு குடிமகனும் ராஜாவாக இருக்கிறான். இந்த ராஜாக்கள் தனது ஓட்டுரிமை மூலம் சிலரை தங்களது பிரதிநிதிகளாகவும் ஊழியர்களாகவும் நியமிக்கிறார்கள். இந்த உயர்ந்த வகையான அரசாங்கம் அறிவுள்ள ஜனங்களால் மாத்திரமே முற்றிலுமாக உயர்வாக பேசப்படும். இந்த அரசாங்கம் அறிவு, கடமையுணர்வு மற்றும் தெய்வீக ஒழுங்குகளுக்கு கீழ் உள்ளவர்களின் கையில் இருந்தால் மட்டுமே நன்மையானதாக இருக்கும்.

வீழ்ச்சி அடையாதிருந்தால் இந்த உயர்ந்த வகையான மானிட அரசாங்கம் பரவியிருக்கும். மேசியாவின் ராஜ்யம் பாவத்தை கீழ்ப்படுத்தி, மனுக்குலத்தை உயர்த்தும் என்று வேதம் கூறுகிறது; மேலும் தெரிந்தே குற்றம் செய்பவர்களை முற்றிலுமாக அழித்துவிடும்; மீதமுள்ள மனுமக்களை மானிட பரிபூரணத்திற்கு கொண்டுவரும்; மேசியாவின் ஆட்சியின் முடிவில் உலக முழுவதும் குடியரசாக, அதிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ராஜாவாக இருப்பார்கள்.

இஸ்ரயேலர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குடியரசை விரும்பாததை இந்த பாடம் நமக்கு காண்பிக்கிறது. அவர்களை சுற்றிலுமுள்ள நாடுகள் எல்லாம் வேறு விதமான அரசாங்கமாக இருந்ததே அவர்களுக்கு குறையாக இருந்தது.

ஒரு சிறந்த சீர்திருத்தம் சாமுயேல் மூலம் ஏற்படுத்தப்பட்டு அதை தன் காலம் வரை பராமரித்து வந்ததால், ஜனங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். அவர்களது தேசபக்தி பலப்படுத்தப்பட்டது. சாமுயேல் தீர்க்கதரிசிக்கு வயதானதால் அவருக்கு பிறகு அவரது குமாரர்கள் நியாயந்தீர்ப்பார்கள் என்று நினைத்து ஜனங்கள் பயந்தார்கள். ஏனெனில் அவர்கள் நம்பத்தகாதவர்களாயிருந்தார்கள் என்று இந்த வேத பகுதி கூறுகிறது. “ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள்.”

இஸ்ரயே-ன் மூப்பர்கள் எல்லாம் கூட்டங்கூடி, சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி அவர்களி-ருந்து ஒரு ராஜாவை ஏற்படுத்தினால் நலமாயிருக்கும் என்று நம்பினார்கள். அவர்கள் இந்த காரியத்தைக் குறித்து சாமுயே-டம் பேசுவதற்கு, ஒரு குழந்தை ஒரு தகப்பனிடம் வருவது போலவும், சாஸ்திரிகள் அசாதாரண ஞானமுடைய ராஜதந்திரியிடம் வருவது போலவும் வந்தார்கள். அவர்களுடைய விருப்பத்தை சாமுயே-டம் சொன்னார்கள். சாமுயேல் மனமுடைந்து போனார். அவர் தேவனிடம் ஆலோசனை செய்யும்வரை அவர்களுக்கு பதில் சொல்லவில்லை. தேவன் சாமுயே-டம், அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, என்னையும் எனது அரசாங்கத்தையும் தான் தள்ளினார்கள் என்று கூறினார். அவர்கள் ராஜாவின் ஆட்சியின் அனுபவங்களை தெரிந்து கொள்ளட்டும் என்று தேவன் விரும்பினார். எனினும் ராஜாவின் ஆட்சியினால் வரும் விளைவுகள் என்ன என்பதையும், ராஜாவின் நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பதையும், அதனால் மக்களுக்கு வரக் கூடிய கஷ்டங்கள் என்ன என்பதையும், முழுமையாக விளக்கிக் கூறும்படி தேவன் சாமுயே-டம் கூறினார். மேலும் அவர்களது சுதந்திரம் குறைவாக இருக்கும் என்பதையும், ராஜாக்கள் கிட்டதட்ட எதேச்சாதிகாரத்தை அப்பியாசப்படுத்துவார்கள் என்பதையும், அவர்களது குமாரர்கள் ராஜாவின் வேலைக்காரர்களாகவும், வீரர்களாகவும் பொது வேலை செய்பவர்களாகவும் கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்பதையும் ஜனங்களுடைய சொத்துக்கள் எல்லாம் ராஜாவிடம் போய் சேரும் என்பதையும், செழிப்பான

**--2247--**

நிலங்களும் மற்றவைகளும் ராஜாவுக்கு சொந்தமாகும் என்பதையும் சாமுயேல் ஜனங்களிடம் விளக்கிக் கூறினார். ஒவ்வொருவரும் ராஜாக்களாக இருப்பதற்கு பதிலாக, எல்லாரும் ராஜாவுக்கு அடிமைகளாக இருப்பார்கள், அவர்களுக்கு சில உரிமைகள் மட்டுமே இருக்கும் என்பதையும் விளக்கிக் கூறினார்.

எனினும் ஜனங்கள் ராஜா வேண்டும் என்பதிலேயே பிடிவாதமாக இருந்தார்கள். ராஜா தங்களை அழைத்துச் சென்று யுத்தங்கள் நடத்துவதையும், தங்களுக்கு பெரும் பதவி கொடுப்பதையும் எதிரிகளுக்கு ராஜா பயத்தை ஏற்படுத்துவார் என்பதையும் தங்கள் மனதில் கற்பனை செய்து வைத்திருந்தார்கள்.

### தெய்வீக முன்னறிவு விளக்கப்பட்டது

தெய்வீக ஏற்பாட்டின்படி, சாமுயேல் குறித்த நேரத்தில், தேவனுடைய உத்தரவைப் பெற்று வருங்கால ராஜாவாகிய கீஸின் மகனாகிய சவு-டம் தொடர்பு கொண்டார். இந்த கதை மாந்திரீகம், இரகசியமாக செய்தல் போன்றவைகளை ஞாபகப்படுத்துகிறது. கீஸின் கழுதைகள் காணாமல் போய்விட்டது, அதைத் தேடும்படி சவுல் அனுப்பப்பட்டான். அதைத் தேடி கண்டுபிடிக்க முடியாமல், சவுலும் அவனது வேலைக்காரனும் கழுதைகள் இருக்கும் இடத்தை கண்டு பிடிக்க தீர்க்கதரிசியை சென்று பார்த்தனர். காணாமற்போன கழுதைகள் கிடைத்துவிட்டன என்ற பதில் கிடைத்தது. ஆனால் சவுல் தீர்க்கதரிசியுடன் கூட முன்னமேயே அநேகர் அழைக்கப்பட்டிருந்த, உணவும் தயார் செய்யப்பட்டிருந்த ஒரு விருந்தில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது.

விருந்தில் பிரதானமான இடம் சவுலுக்கு ஒதுக்கப்பட்டது. நாட்டுப்புறத்தி-ருந்து வந்த இந்த இளம் வா-பன், இஸ்ரயேலுக்கு தலைவனாகக் கூடிய சந்தர்ப்பத்தை தீர்க்கதரிசி மூலம் கேள்விப்பட்டு திகைப்புக்குள்ளானான். தான் இஸ்ரயேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்தவன் என்று சவுல் மிகவும் பணிவுடன் கூறினான்; பென்யமீன் கோத்திரத்திலேயே தனது குடும்பம் அற்பமானது என்றும் கூறினான். ஆனாலும் தீர்க்கதரிசி சாமுயேல், சவுலுக்கு எதிர்காலத்தில் வரப்போகிற கீர்த்தியைக் குறித்து உறுதியாகக் கூறினார்.

அடுத்த நாள் அதிகாலையில் சவுலை அழைத்து, அவனது பிரயாணத்தில் நடக்கப்போகிற நிகழ்வுகளை எல்லாம் கோர்வைபடுத்தி முன்கூட்டியே சாமுவேல் அறிவித்தார். சில குறிப்பிட்ட ஜனங்கள் அவனை சந்திப்பார்கள் என்றும் விருந்தில் பங்கு கொள்ள சிலரால் அழைக்கப்படுவான் என்றும் இன்னும் சில காரியங்களையும் அவனுக்கு அறிவித்தார். மேலும் இன்னும் சில குறிப்பிட்ட அனுபவங்கள் அவனை மாற்றம் அடைந்த ஒரு மனுஷனாக மாற்றும் என்றும் கூறினார். சவு-ன் வேலைக்காரனை முன்னே நடந்து போகச் சொல்-, இருவரும் தரித்து நின்றார்கள். அப்பொழுது சாமுயேல் தைலக் குப்பியை எடுத்து சவு-ன் தலையின் மேல் வார்த்து, தெய்வீக நியமனத்தின்படி அவனை இஸ்ரயே-ன் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். எனினும் இந்த காரியங்கள் சில நாட்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

சவுலைக் குறித்து சாமுயேல் முன்னமே சொல்-யிருந்தபடி நேரிட்ட அனுபவங்கள் எல்லாம் சவு-ன் விசுவாசத்தைப் பலப்படுத்தின. தீர்க்கதரிசிகளின் கூட்டத்தை சவுல் சந்தித்தபோது தேவனுடைய ஆவி அவன் மேல் இறங்கினதினால், அவனும் அவர்களோடே தீர்க்க தரிசனம் சொல்-, அவர்களோடு பாடுவதிலும் தீர்க்கதரிசனம் கூறுவதிலும் சேர்ந்து கொண்டான். நாம் வேதத்தில் வாசிக்கிறதாவது: ''தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார்; தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்க தரிசனம் சொன்னான்.'' 1 சாமு 10: 9,10

### பரிசுத்த ஆவியின் பலவிதமான செயல்கள்

தேவனுடைய ஆவி என்பது, தேவனிடத்தி-ருந்து வருகிற கண்ணுக்குத் தெரியாத சக்தி என்பதை நாம் நினைவு கூர வேண்டும். இந்த சக்திக்கு கீழாக வருகிறவர்கள் ஒரு சமயத்தில் ஒரு விதமாகவும் மற்ற சமயத்தில் வேறு விதமாகவும் செயல்படுகிறார்கள். யேகோவா தேவனுடைய வல்லமை அவர்களை இயக்குவதற்கு ஏற்ப சில சமயம் பேசுகிறார்கள், சில சமயம் எழுதுகிறார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக மனிதர்கள் மேல் பரிசுத்த ஆவி செய்கிற கிரியைக்கும் பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு செய்கிற கிரியைக்கும் உள்ள வித்தியாசத்தை வேதாகமம் மிகவும் தெளிவாக கூறுவதை நாம் மறந்துவிட கூடாது. பெந்தெகொஸ்தே நாளி-ருந்து பரிசுத்த ஆவி கொடுக்கப்படுதல் என்பது கிறிஸ்துவுக்குள் அர்ப்பணம் செய்த விசுவாசிகளுக்கு தேவன் கொடுக்கிற ஜெநிப்பிக்கும் நிலையை குறிப்பிடுகிறது. இதன்மூலம் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு தேவனுடைய குமாரர்களாக தேவனுடைய வீட்டிற்கு கொண்டு வரப்படுகிறார்கள். மேலும் தீர்க்கதரிசிகளாலும் வேதாகமத்திலும் சொல்லப்பட்டபடி தேவனுடைய சிந்தையை பகுத்துணரக்கூடியவர்களாகவும் ஆகிறார்கள்.

ஆனால் முற்காலத்தில் பரிசுத்த ஆவி என்பது சாதாரணமாக ஒரு பரிசுத்த வல்லமையை குறிப்பதாக இருந்தது; பிள்ளையாக ஜெநிப்பிக்கப்படுதலை குறிப்பதாக இல்லை. இயேசு மகிமையடையும் வரை பரிசுத்த ஆவி

ஜெநிப்பிக்கப்படுதலுக்காக கொடுக்கப்படவில்லை என்று வேதம் கூறுகிறது. (யோவா. 7:39) கிறிஸ்துவின் ப-யின் புண்ணியத்தில் முழு நம்பிக்கை வைத்து தேவனுடன் முழுவதுமாக அர்ப்பணம் செய்து கொண்ட பரிசுத்த நபர்கள் மட்டுமே இப்பொழுது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் வேறு நபர்கள் சில சமயங்களில் தேவனால் ஒரு குமாஸ்தாவைப் போல் எழுதுவதற்காகவோ அல்லது இதர ஊழியக்காரனைப் போல் செய்வதற்காகவோ அல்லது சொல்வதற்காகவோ தேவன் விரும்புகிறதை செய்ய எப்பொழுதுதாவது, எங்கேயாவது பயன்படுத்தப்படலாம்.

சவுல் மேல் வந்த ஆவி குமாரனாகிறதற்குரிய ஆவி இல்லை. அவனது மனமாற்றம் அவன் கிறிஸ்துவுக்குள்ளாக புது சிருஷ்டியாக ஆகியிருக்கிறான் என்பதை குறிப்பிடவில்லை. சபையின் தலையாகிய கிறிஸ்து, அவரது அங்கங்களுக்கு முன்னோடியாக வந்து புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை திறப்பதற்கு முன்னால் புது சிருஷ்டி யாரும் இருந்திருக்க முடியாது. சவுல் புதிய இருதயத்தை பெற்றான் என்பது விவசாயிக்குரிய மனநிலை, நோக்கம், சிந்தை மாற்றப்பட்டு தெய்வீக மனநிலை, சித்தம், நோக்கம், தீர்மானித்தல் மற்றும் ஞானம் கொடுக்கப்பட்டது. அதாவது தேவன் அவனை ராஜாவாக தெரிந்து கொண்ட அந்த நிலைக்கு ஏற்ற பண்புகள் அவனுக்கு கொடுக்கப்பட்டது. அதாவது நாம் வாசிக்கிற பிரகாரம் ஆசரிப்புக் கூடாரத்தை தயாரிப்பதற்கு சில நபர்களுக்கு தேவன் பரிசுத்த ஆவியினால் ஏற்ற திறமையை கொடுத்தது போல, தேவனுடைய பரிசுத்த ஆவி சவுலை ஒரு ராஜாவுக்கு தகுதியுள்ளவனாக்கிற்று. சில குறிப்பிட்ட வேலைக்காக தகுதியுள்ளவர்களை தெரிந்து கொள்ளும்படி தேவன் மோசேயிடம் கூறினார். தேவன் தமது ஆவியை அவர்கள் மேல் வைத்து அந்த வேலையை முடிப்பதற்குரிய திறமையை தாம் தருவதாக தேவன் கூறினார். எந்த ஒரு குறிப்பிட்ட வேலைக்காக ஒருவனை தேவன் அழைத்தால், அதை முடிப்பதற்குரிய திறமையை தேவன் அவனுக்கு அளிக்க வல்லவராயிருக்கிறார் என்று நாம் நிச்சயப்படுத்துகிறோம். அது ஒரு மத வேலையாக இருக்கலாம், சிலசமயம் அர்ப்பணம் செய்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையாக இருக்கலாம், அல்லது பொது ஜனங்களுக்கு அனுகூலமானதாக இருக்கலாம்; உதாரணத்திற்கு புதிய யுகம் உதயமாவதால் அதற்குரிய நவீன கண்டுபிடிப்புகளைக் கூறலாம்.

### மறைவான கெட்ட சக்திகளின் கிரியைகள்

சாமுயேல் மற்றும் அவரிடமிருந்த மறைவான சக்திகளுக்கும் இன்றைக்கு மற்றவர்களிடம் இருக்கும் சக்திகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்; சாமுயே-டம் இருந்த வல்லமை தெய்வீக வழிநடத்துத-ன் கீழ் கொடுக்கப்பட்டது; தேவன் தமது இஸ்ரயேல் மக்களிடையே இப்படிப்பட்ட சக்திகளை பயன்படுத்த விரும்பினார். உலக வழி நடத்துதலுக்காக ஆயிர வருட யுகத்திலும் இந்த வல்லமையை தேவன் பயன்படுத்தக் கூடும். ஆனால் தீய சக்திகளின் செல்வாக்கைக் குறித்து வேதம் கூறுகிறது. தேவன் இஸ்ரயேலர்களை மந்திரவாதிகள், இறந்தவர்களிடம் குறி கேட்பவர்கள், மீடியா மூலமாக பேசுபவர்கள் போன்றோர்களுக்கு எச்சரிக்கையாய் இருக்கும்படி கட்டளையிட்டிருந்தார்.

விழுந்துபோன தூதர்கள் இறந்தவர்களைப் போல ஆள்மாறட்டம் பண்ணுவதைக் குறித்து வேதம் கூறுகிறது. மரித்தோரெல்லாம் மரித்தவர்கள் தான் என்றும், அவர்கள் உயிர்த்தெழும் வரை ஒன்றும் அறியார்கள் என்றும், வேதம் கூறுகிறது. இந்த கெட்ட ஆவிகள் இறந்து போனவர்களைப் போன்று தோன்றி இஸ்ரயேலர்களை சத்தியத்தைவிட்டு தப்பறைகளுக்கு செவி சாய்க்கவும் தேவனை விட்டு விலகவும் செய்வார்கள் என்று தேவன் இஸ்ரயேலர்களை எச்சரித்தார். அதே போல சுவிசேஷ யுகம் முழுவதிலும் கெட்ட ஆவிகளாகிய விழுந்துபோன தூதர்கள், ஆவி சார்ந்த சக்திகளுடனும், மீடியா சக்திகளுடனும், மெஸ்மெரிசம், ஹிப்னாட்டிசம் போன்ற சக்திகளுடனும் சேர்ந்து கிரியை செய்து, சத்தியத்தை விட்டு விலகவும், தப்பறையை சத்தியம் போல் காணப்படவும் செய்கிறார்கள். இன்னும் விசேஷமாக, மரித்த நண்பர்கள் உண்மையில் மரிக்கவில்லை என்றும், மரிப்பதற்கு முன்னிருந்த நிலையைக் காட்டிலும் இன்றும் உயிரோடிருக்கிறார்கள் என்றும் நம்பச் செய்கின்றனர்.

இந்த சுவிசேஷ யுகத்தில் தேவன் இப்படிப்பட்ட ஹிப்னாட்டிச சக்திகளை பயன்படுத்துவதில்லை என்று நாம் நம்புகிறோம். ஆனால் பவுல் சொல்வது போல, இந்த கடைசி நாட்களில் தேவன் ''குமாரன் மூலமாய் திருவுளம்பற்றினார்.'' மேலும், தமது வேதத்தை ''தேவனுடைய மனுஷன் எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாயிருக்கும்படி'' நமக்கு தந்தருளியிருக்கிறார். எனவே மறைவான கெட்ட சக்திகள் எதுவும் நமக்கு தேவையில்லை. ஆகையால் நாம் அவைகளை நல்ல மறைவான சக்திகள் என்று நினைக்காமல் அவைகள் சத்துருவின் வஞ்சகங்கள் என்று பகுத்தறிய வேண்டும். இதற்கு விரோதமாகத்தான் தேவனுடைய பிள்ளைகள் போராடி வருகிறார்கள்.

ஏற்ற காலத்தில் இஸ்ரயே-ன் மூப்பர்களுடன் சேர்ந்து ஜனங்கள் அவர்களுக்குள்ளே ஒரு ராஜாவை தீர்மானிக்க சாமுயே-டம் தேவனுடைய சித்தத்தை அறிய வந்தார்கள். மறுபடியும் சாமுயேல் அவர்களுடன் வாதாடி, தேவனின் ஏற்பாடுகளை ஒதுக்கிவிட்டு, முடியாட்சிக்கு போவதினால்

--2249--

வரக்கூடிய ஆபத்துகளை எடுத்துக் கூறினார். ஆனால் ஜனங்கள் ஒரு ராஜாவையே விரும்பினார்கள். சாமுயேல் அவர்கள் விருப்பத்தின்படியே அவர்கள் கோத்திரங்களை எல்லாம் கூட்டிச் சேர்த்து சீட்டுப் போட்டார், பென்யமீன் கோத்திரத்தின் மேல் சீட்டு விழுந்தது. பிறகு பென்யமீன் கோத்திரத்தின் குடும்பங்களின் பேரில் சீட்டுப்போட்டு, அது சவுல் பேரில் விழுந்தது. இது முன்னமேயே சாமுயேலுக்கும் சவுலுக்கும் தெரியும். இது தேவனுடைய சித்தம் என்று ஜனங்கள் நம்பினார்கள்.

இஸ்ரயேலர்கள் சீட்டுப் போட்டு தேவனுடைய சித்தத்தை அறிந்தது போல தற்காலத்திலும் நாம் அதைப் பின்பற்றலாம் என்று எண்ணக் கூடாது. ஏனெனில் நாம் இப்பொழுது வித்தியாசமான பள்ளியின் கீழ் இருக்கிறோம். இப்போது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களோ மாம்சீக இஸ்ரயேலர்களோ அவர்களது காரியங்களை சீட்டுப் போட்டு தீர்மானிக்கிற நிலைமையில் அவர்களது உறவு இல்லை

சீட்டு சவுல்மேல் விழுந்த போது, அனைத்து கோத்திர மூப்பர்களும் சவுலைத் தேட ஆரம்பித்தார்கள். கடைசியாக அவர்கள் வந்திருந்தவர்களின் தளவாடங்கள் இருந்த இடத்தில் அவன் ஒளிந்து கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் அவனை அழைத்துக் கொண்டு வந்த போது, இந்த வா-பன் கட்டு மஸ்தான உடலுடன் ஏழு அடி உயரமுள்ளவனாக இருந்தான். தேவன் தெரிந்து கொள்ளுதலை அவர்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். சவுல் தனது கீழப்படிதலையும் விசுவாசத்தையும் உண்மையுள்ளவனாயிருத்தலையும் தேவனிடம் நிரூபித்ததால் அவன் ஒரு சிறந்த ராஜாவாக இருக்கும்படி தேவன் அவனை முன்னமேயே தகுதிபடுத்தியிருந்தார்.

------------------------------

**--2250--**

## Lessons from Saul's Failures
# சவு-ன் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம்

I சாமுயேல் 14:1–46

கீழப்படித-ன் ஆவி இல்லாததே சவுலுக்கு கஷ்டத்தை உண்டாக்கியது – ராஜ்யபாரம் சவு-ன் குடும்பத்தி-ருந்து நீக்கப்பட்டு ''தேவனுடைய இருதயத்துக்கு பிரியமான'' தாவீதுக்கு கொடுக்கப்பட்டது – சவுல் தனது தவறுகளினால் குறைவாகவே பலனடைந்து அதற்கேற்றாற்போல் ஆசீர்வதிக்கப்பட்டான் – ஒவ்வொருவருக்குமான பாடங்கள் – விசேஷமாக அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு.

''ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்.'' ரோம 13:12

சென்ற பாடத்தில் பார்த்த, சவு-டம் கூடிச் சேர்ந்து வெற்றியைக் கொடுத்த அந்த ராணுவம் கலைக்கப்பட்டது. அதன்பின் ராஜா மூவாயிரம் பேர் கொண்ட ராணுவத்தை நிலையாகக் கொண்டிருந்தான். இதில் ஆயிரம் பேர் அவனது மகனாகிய யோனத்தான் கீழ் இருந்தனர். மீதியுள்ள வீரர்கள் ஒரு அரச காவலராக சவுல் ராஜாவின் கீழ் நேரடியாக இருந்தனர். இஸ்ரேல் தேசம் முழுவதும் பெ-ஸ்தர்களின் அதிகாரத்தில் இருந்து ஆங்காங்கே பாதுகாப்பு படைகளை வைத்திருந்தனர். இந்தியாவை பிரிட்டிஷ்காரர் ஆளுகை செய்தது போல பெ-ஸ்தர்கள் இஸ்ரயே-டம் வரி வசூ-ப்பதில் திருப்தியடைந்திருந்தார்கள்.

இஸ்ரயேலர்களிடம் ஆயுதம் குறைவாகவே இருந்தது. ஏனென்றால் இஸ்ரயேலர்கள் தங்களை எதிர்க்காதபடி பெ-ஸ்தர்கள் அவர்கள் ஆயுதம் தயாரிக்க அனுமதிக்கவில்லை. இதே காரணத்துக்காகத் தான் யுத்த தளவாடங்கள் இந்தியாவுக்குள் செல்வதை பிரிட்டிஷ்காரர் தடுத்தார்கள். ஆகையால் யோனத்தான் பெ-ஸ்தரின் பாதுகாப்பு படையை அழித்தபோது அமளி ஏற்பட்டது. அதே போல் இந்தியாவில் கூட பிரிட்டிஷ் பாதுகாப்பு படைக்கு விரோதமாக எழும்பினால் அங்கு அமளி ஏற்படும். அதாவது போர் மூளும். இப்படிப்பட்ட காரியம் நடக்கும்போது பிரிட்டிஷ்காரர்கள் என்ன செய்வார்களோ என்று இந்தியர்கள் நடுங்குவதைப் போல் இதன் முடிவு என்னவாகுமோ என்று எபிரேயர்கள் (இஸ்ரயேலர்) நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

பெ-ஸ்தர்கள் இராணுவ ஆக்கிரமிப்புகளை அதிகப்படுத்தினார்கள். இஸ்ரயேலர்கள் ஆயுதமில்லாதிருந்தார்கள். அவர்களிடம் விவசாய கருவிகள் மாத்திரமே இருந்தன. யுத்த வெறி கொண்ட பெ-ஸ்தர்களால் இஸ்ரயேலர்கள் அச்சுறுத்தப்பட்டனர். மூவாயிரம் பேர் கொண்ட சவு-ன் ராணுவம் அறுநூறாக சுருங்கி போனது. ஏழு நாட்கள் காத்திருக்கும்படி தீர்க்கதரிசி சாமுயே-டம் இருந்து செய்தி வந்தது. ஜனங்கள் தங்களது பலவீனத்தை உணர வேண்டும், தேவனிடம் உதவிக்காக மன்றாட வேண்டும் என்பதற்காகவே இப்படி ஏழு நாட்கள் காத்திருக்கும்படி செய்தி கொடுக்கப்பட்டது. சவுல் தனக்கு சொல்லப்பட்டது போல ஏழு நாட்கள் காத்திருந்தான். ஏழு நாள் ஆனபிறகு சாமுயேல் வராததையும், தமது ராணுவம் சுருங்கி போனதையும் பார்த்து, சவுல் தேவனுடைய அதிகாரம் இல்லாமல் தானே ஆசாரியனாக தேவனுக்கு ப-செலுத்தினான்.

அவன் ப-யை செலுத்தி முடித்த போது தீர்க்கதரிசி சாமுயேல் அங்கு வந்தார்; சவுலை கண்டித்தார். தேவனுடைய கட்டளைக்கு சவுல் கீழ்ப்படியாமல் போனதினால் இஸ்ரயே-ன் ராஜ்யபாரம் அவனது குடும்பத்தாருக்குக் கொடுக்கப்படாது என்று தீர்க்கதரிசி கூறினார். சவுல் மன்னிப்பு கேட்டான்; நிலைமையை எடுத்துக் கூறினான்; அந்த நிலைமையில் அதைத்தான் செய்ய வேண்டும் என்று தனக்குத் தோன்றியதாகக் கூறினான். சவுல் செய்ததுபோல் செய்யாதபடிக்கு தேவனுக்கு பிரியமானதைச் செய்ய சில அதிபதிகள் மட்டுமே தற்காலத்தில் இருக்கிறார்கள். மிகவும் சொற்பமான பேர்கள் தான் தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேட்டு ஏழு நாட்கள் வரை காத்திருப்பார்கள். தேவனுக்கு ப- கொடுத்ததற்கான காரணத்தை விளக்கி மிகவும் சொற்பமானவர்கள் தான் மன்னிப்பு கேட்டிருப்பார்கள்.

சவுலுக்கு மேலும் சந்தர்ப்பங்கள் கொடுத்திருந்தால் படிப்படியாக அவன் பூரண கீழப்படிதலுக்கான பாடத்தை கற்றுக் கொண்டிருப்பான் என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால் நமது அடுத்தபாடம் இதே நிலைமையில் மறுபடியும் அவன் தவறு செய்தான் என்று நமக்கு காண்பிக்கும். தேவன் பேரில் முழு நம்பிக்கை வைக்கவும், முழுமையாக தேவனுக்கு கீழ்ப்படியவும் கற்றுக் கொள்ள நம்மில் சிலருக்கு அநேக அனுபவங்கள் தேவைப்படுகிறது. ஒரு வேளை தேவன் இதே நெறி முறையில் ஒரு விசேஷித்த பாடத்தை கற்றுக் கொடுக்க விரும்பியிருக்கலாம். அதாவது தேவனுடைய நிழலான சிங்காசனத்தில் உட்காருகிற எந்த ஒரு ராஜாவும் முழுமையாக கீழ்ப்படிகிறவனாக, வெறும் வார்த்தையினால் மாத்திரமல்ல, ஆவியிலும் கீழ்ப்படிகிறவனாக இருக்க வேண்டும். ஏனெனில் இஸ்ரயே-ன் ராஜாக்கள், கிறிஸ்து மற்றும் சபையாரின் ராஜ்யத்துக்கு நிழலாக காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள். மேசியா மற்றும் அவரது மகிமையான ராஜ்யத்தின் உடன் சுதந்தரராக இருக்கப் போகிறவர்கள் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ராஜ்யத்தின் கனத்திற்கு பாத்திரராக எண்ணப்பட மாட்டார்கள். அவர்கள் வெளிப்படையாக கீழ்ப்படிகிறவர்களாக மாத்திரமல்ல, தேவனுடைய கட்டளைக்கு, உள்ளாக, ஆவியின்படி கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும்.

### ஆசாரியர்கள் மட்டுமே ப- செலுத்த வேண்டும்

சவுல் ராஜா செலுத்திய தகன ப-கள் ஏன் ஒரு பாவமாக கண்டிப்புக்குள்ளானது என்பதை நாம் நன்றாக கவனிக்க

வேண்டும். ஆசாரியர்கள் மட்டுமே ப- செலுத்த வேண்டும் என்று குறிப்பாக தேவன் கட்டளை கொடுத்திருந்த தினாலேயே அது பாவமாக எண்ணப்பட்டது. தேவன் ஏன் ப-களை ஆசாரிய கோத்திரத்தாருக்கு மட்டுமே கொடுத்தார் என்ற கேள்வி எழுகிறது. இந்த கோத்திரத்தார், முழுவதும் தங்களை தேவனுக்கு அர்ப்பணித்து, தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சபையை அடையாளப்படுத்துகிறார்கள் என்பதே அதற்கான பதிலாகும், இவர்கள் இஸ்ரயே-ன் ராஜாக்களுக்கு மாத்திரமல்ல, ஆசாரியர்களுக்கும் உண்மைப் பொருளாக இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அப்.பேதுரு குறிப்பாக குருமார்களை அல்ல, பொதுவாக சபையை, நீங்கள் ராஜரீக ஆசாரியக் கூட்டமாயிருக்கிறீர்கள் என்று கூறுகிறார்.

உண்மைப் பொருளில் அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் எதிர்கால ராஜாக்களும் ப-செலுத்தும் ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பூமிக்குரிய ஆசாபாசங்களையும் தற்கால ஜீவியத்தையும் அர்ப்பணிக்காததால், மகா பெரிய ஆசாரியராகிய கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராகும் மகா பெரிய பரிசை பெறமாட்டார்கள். நாம் அவரோடு கூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் என்று வாசிக்கிறோம். மேலும் பரி. பவுல், "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை தேவனுக்கு பிரியமான ஜீவப-யாக ஒப்புக் கொடுக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

இப்போது கிறிஸ்தவ குருமார்கள் குருத்துவ அதிகாரத்தை பெற்றிருக்கும் போது, நாம் ஒரு வேளை, ஆராதனையையும் பூஜைப-யையும் செய்தால் அது தவறானதாக இருக்கும். கர்த்தராகிய இயேசு மாத்திரமே மகா பெரிய ஆசாரியராக, அவர் மாம்சத்தி-ருந்த நாட்களில் தம்மையே ப-யாக ஒப்புக் கொடுத்தார் என்பதையும், மேலும் அவர் திரைக்கு அப்பால் மகிமைக்குள் சென்றிருக்கிறார் என்பதையும், அதி-ருந்து அவர், சுயப- மற்றும் கீழ்ப்படிகிற ஆவியுடன் தங்களை அவரிடம் அர்ப்பணிக்கிறவர்களை, ப-யாக செலுத்தி வருகிறார் என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும்.

தேவனுடைய ஜனங்களை குருக்கள் என்றும் பொது ஜனங்கள் என்றும் வேறுபடுத்துவதை வேதம் அங்கீகரிக்கவில்லை. இது மூன்றாம் நான்காம் நூற்றாண்டில் எதிரியானவன் படிப்படியாக புகுத்திய ஒரு கண்ணி ஆகும். ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் உண்மையான ராஜரீக ஆசாரிய அங்கங்களாகவும், அவர்கள் எல்லோரும் சகோதரர்களாகவும் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் எல்லாரும் தேவனுடைய வசனத்தில் கூறப்பட்டுள்ள அவருடைய கிருபையை பிரசங்கிக்க அதிகாரம் பெற்றவர்கள் என்றும் வேதம் போதிக்கிறது. மேலும் அவர்கள் பூமியில் யாரையும் பிதா என்று அழைக்கக் கூடாது என்றும், தேவன் ஒருவரே பிதா என்றும், கரத்தராகிய இயேசு அவர்களது மூத்த சகோதரர் என்றும் போதிக்கிறது.

### வேறொரு மாறுதலுக்கான ஏக்கம்

மரண படுக்கைக்கு சென்ற பிறகு, மறுபடியும் வாழ்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் தங்களது வாழ்க்கைப் பாடம் மிகவும் விலையுயர்ந்ததாகவும் இன்னும் சிறப்பாய் செய்ய பயனுள்ளதாகவும் இருக்கும் என்று எத்தனை மனித குடும்பத்தினர் உணர்ந்திருக்கின்றனர்! இந்த தோல்வியின் நிலையிலும் இன்னும் சிறப்பாக செய்யவும், ஜெயம் பெறவும் அதற்கான முயற்சியிலும் அனுபவம் பெறாத ஆணும் பெண்ணும் தங்களது வாழ்க்கையை வீணாக வாழ்ந்திருக்கின்றனர்.

ஆகையால் உயர்ந்த இலட்சியத்தை அடைய கஷ்டப்பட்டு முயற்சிக்கவும் அறியாமல், பெற்ற தோல்விகளுக்காக உற்சாகத்தை குறைக்கச் செய்யாதபடி நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவோமாக. சிறுபிராயத்தி-ருந்தே நாம் அறிந்திருக்கிற கீழ்க்கண்ட சொற்றொடர் மூலமாக இது வெளிப்படுத்தப்படுகிறது. "முதல் முயற்சியில் உனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்றால் மீண்டும் மீண்டும் முயற்சி செய்." அந்த சிறிய செய்தி நமது குழந்தை மனதுக்கு மிகவும் மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. அநேக ஊக்கக் குறைவில் நமக்கு அது உதவியிருக்கிறது.

பிறவியிலேயே நமக்கு இருக்கிற பலவீனங்களினாலும் மனது, சரீரம் மற்றும் ஒழுக்கம் ஆகிய பலவீனங்களுடைய மற்றவர்களினாலும் நாம் சூழப்பட்டிருக்கிறோம். மேலும் வேதம் கூறுவதுபோல நம்மை தேவனிடமிருந்தும் நீதியி-ருந்தும் வழிவிலக செய்ய சாத்தானும் விழுந்து போன தூதர்களும் நம்மை தாக்குகிறார்கள். ஆகையால் நாம் நமது சொந்த இலட்சியத்தை அடைவதி-ருந்தும், வேதம் கூறுகிற அந்த பூரண நிலையை அடைவதி-ருந்தும் நாம் தோல்வியடைவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை அல்லவா?

தேவனுடைய பிரமாணத்தில் மிகவும் எளிமையான கூற்று பொன்னான கற்பனை ஆகும். இந்த பொன்னான கற்பனையையும் அதன் தத்துவத்தையும் பூரணமாக புரிந்து கொண்டவர்களில் எத்தனை பேர் அதற்கேற்றாற்போல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் வாழ்கிறேன் என்று கூற முடியும்? "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக." நம்மால் செய்யக் கூடியதெல்லாம் என்னவென்றால், சிந்தனையிலும், வார்த்தையிலும்,

--2252--

செய-லும் மென்மேலும் தெய்வீக நிலையை அடைய கஷ்டப்பட்டு முயற்சிசெய்வதும் கடமை தவறும் போது பாவஅறிக்கை செய்வதும், நேர்மையாக இருப்பதுமேயாகும்.

கிறிஸ்தவர்கள் மட்டுமே கற்றுக் கொண்டிருக்கிற மேலும் ஒரு பாடம் இருக்கிறது. அதாவது இந்த கற்பனையின்படி நம்மால் வாழ இயலாது, கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடப்போம் என்று நமக்குரிய எல்லாவற்றையும் அவரிடம் அர்ப்பணித்திருந்தாலும், நமது குறைகளை மூடவும், தேவனுடன் இருக்கும் நமது உறவை தொடரவும், இரட்சகரின் புண்ணியம் தேவை என்பதை நாம் அறிந்திருக்கிறோம் என்பதாகும். கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கிற இன்னொரு பாடம் என்னவென்றால், தேவனுடனான உறவை தொடருகிறவர்கள், அறியாமல் செய்த மீறுதல்களுக்கு மன்னிப்பை மாத்திரமல்ல, இரட்சகர் மூலமாக ஏற்ற சமயத்தில் உதவியையும் சகாயம் செய்யும் கிருபையையும் காண்கிறார்கள் என்பதாகும்.

எனவே கிறிஸ்தவர்கள் தங்களது பலவீனங்களையும் தேவனுடைய கிருபையையும் அறிந்து கொண்டு, ஒவ்வொரு நாளும் உரிமைக்காக போராடி பலம் பெறுவதில் வளருகிறார்கள். அவர்கள் இன்னொரு சந்தர்ப்பத்தை மாத்திரமல்ல, ஒவ்வொரு நாளும் இன்னும் அநேக சந்தர்ப்பங்களையும், பாவ மன்னிப்பையும் பெற்று, கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலமாக, தடுக்க--ருந்து ஒரு புது ஆரம்பத்தை செய்கிறார்கள்.

நமது பாடத்தில் சவுல் ராஜா இப்படிப்பட்ட அனுபவங்களை பெறவில்லை. இரட்சகர் அப்பொழுது மரித்திருக்கவில்லை. ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்காகவோ, அல்லது பிராயச்சித்த ப-யை கொடுக்கவோ தேவனிடம் இன்னும் பிரவேசிக்கவில்லை. நிழலான ஆசாரியத்துவத்தின் மூலமாக அனைத்து ஜனங்களின் பாவங்களுக்காக வருடாவருடம் பாவ நிவாரண நாளில் பாவ நிவாரண ப- செலுத்தப்பட்டு வந்தது. அனைத்து யூதர்களுக்குமான இந்த ஏற்பாடு மட்டும் தான் சவுலுக்கு அப்போது இருந்தது. சவுலே ஒரு நிழலாக இருந்து, சவுல் ராஜா இந்த சரியான நீதியின்படி நடத்தப்படுவது அவசியமாயிருந்தது. அங்கீகரிக்கப்படாத ஒரு ப-யை கர்த்தருக்கு சவுல் செலுத்தினபடியால் ராஜ்யபாரம் அவனது குடும்பத்தாரை விட்டு நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### எதிர்காலத்தில் உலகம்

கிறிஸ்தவர்களின் பல்வேறு விசுவாச அறிக்கைகள் தவறு என்று படிப்படியாக வேதமாணவர்கள் அறிந்து கொண்டார்கள். இந்த விசுவாச அறிக்கைகள் எல்லாம், புறஜாதியாரும் அதே போல யூதர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காதபடியால் நித்தியமாக வதைக்கப்படுவார்கள் என்று கூறுகிறது; நாகரீக நாடுகளில் மரித்துப் போன அனைத்து ஜனங்களும், இயேசுவின் சீஷராக மாறாததால் நித்திய வாதைக்குச் சென்றிருக்கிறார்கள் என்று கூறுகிறது. இந்த பயங்கரமான போதனை, ஜனங்களுக்கு பயமூட்டுவதாகவும், அநீதியானதாகவும் இருந்ததால், அவர்களை தேவனிடமிருந்தும் அவரது வேதாகமத்தை விட்டும் விரட்டியது.

மனுக்குலம் அனைத்திற்கும் இரண்டு விதமான சோதனைகள் உண்டு என்பதை வேதமாணவர்கள் பார்க்கிறார்கள். முதல் சோதனை ஏதேன் தோட்டத்தில் இருந்தது. அதில் ஆதாம் தனக்கும் மனுக்குலத்திற்கும் ஒரு பிரதிநிதியாக இருந்தான். அந்த சோதனை எல்லாரையும் பொறுத்தவரை ஒரு கேடுநாசத்தில் முடிந்தது. தேவன் இரண்டாவது சோதனைக்கு ஏற்பாடு செய்திராவிட்டால், மனுக்குலத்தில் யாரும் நித்திய ஜீவனை பெற முடியாது அல்லது ஏதேனி-ருந்து வந்த தண்டனைக்கு தப்பித்திருக்க முடியாது. ஆதாமுக்கும் அவனது சந்ததிக்கும் இரண்டாவது சோதனை கொடுப்பதற்காகவே கிறிஸ்துவின் மரணம் இருந்தது. அப்.பவுல் தெரிவிக்கிறதாவது: ‘‘மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்.’’ 1 கொரி 15:21-23

இந்த சுவிசேஷ யுகத்தில், சுவிசேஷ செய்தியை விசுவாசித்து, கர்த்தருக்கென்று தங்களை முற்றிலுமாக அர்ப்பணிக்கிறவர்களை பரிசுத்த ஆவியினால் அவர் ஜெநிப்பித்து ஏற்றுக் கொள்கிறார். இவர்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகின்றனர். இந்த புது சிருஷ்டிகள் இரண்டாவது சோதனைக்குள் செல்கின்றனர். இதில் அவர்களுக்கு ஆவிக்குரிய சுபாவத்தில் நித்திய ஜீவனோ அல்லது நித்திய மரணமோ கிடைக்கும். உலகத்தில் மீதம் உள்ளவர்கள் மரணதண்டனைக்குள்ளாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் கூறுவதுபோல, உலகத்தின் மேல் இருக்கிற தண்டனையி-ருந்து அவர்கள் இன்னும் தப்பித்துக் கொள்ள வில்லை. அதி-ருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரே வழிதான் உள்ளது. அதாவது சீஷத்துவத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது தான்.

எனினும், சுவிசேஷத்தை கேட்காமலோ அல்லது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமலோ, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமலோ இருக்கிற மனுக்குலத்தில் உள்ள மற்றவர்களுக்கு இரண்டாவது சோதனைக்குரிய ஒரு ஏற்பாட்டை தேவன் வைத்திருக்கிறார் என்பதை நாம்

பார்க்கிறோம். பொதுவாக உலகத்திற்கு பரீட்சைக்குரிய காலம் ஆயிரம் வருட யுகம் ஆகும். பிறகு, "பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." "அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் அவரை அறிந்து கொள்வார்கள்." அப்பொழுது சாத்தானுடைய எதிர்ப்பு அவர்களுக்கு இருக்காது; ஏனெனில் அவன் அந்தக் காலத்தில் கட்டப்பட்டிருப்பான். அவர்களுக்கு கிறிஸ்துவின் உதவி மற்றும் ராஜரீக ஆசாரியர்களாகிய மகிமையடைந்த சபையாரின் உதவியும் கிடைக்கும்.

ஆயிரவருட அரசாட்சியின் நோக்கம் உலகத்தை உயர்த்துவதாகும். கீழ்ப்படிகிறவர்களுக்கும் விருப்பமுள்ளவர்களுக்கும் மானிட பரிபூரணமும் நித்திய ஜீவனும் அளிக்கப்படும். முழுமையாக இரண்டாவது சந்தர்ப்பம் பெற்றும் கீழப்படிய மறுக்கிறவர்கள், திருத்த முடியாதவர்கள் அழிக்கப்படுவார்கள். இதற்கிசைவாக, ஒரு கவிஞரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது.

"மறுபடியும் ஆரம்பிக்கும் இடம் என்று அழைக்கப்படும்
அருமையான இடம் ஒன்று இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்,
அங்கே நமது எல்லா குற்றங்களும் நெஞ்சு வ-களும்
நமது எல்லா ஏழ்மையும் துக்கங்களும் போய்விட வேண்டும்,
கிழிந்த ஒரு பழைய கோட்டை தூக்கி எறிந்துவிட்டு
மறுபடியும் அதை போடாததை போல."

கவிஞர் வார்த்தைகள் உண்மையாக இருக்கிறது. காலம் சமீபித்து இருக்கிறது. தற்கால ஐரோப்பிய போர் மகா பெரிய அராஜகத்திற்கு முன்னோடியாக இருக்கிறது என்று வேதமாணவர்கள் உணருகிறார்கள். இது மேசியாவின் ராஜ்யத்திற்கு நுழைவு அறையாக இருக்கிறது. அதுவே "பழைய கிழிந்த கோட்டாகிய" மனுக்குலத்தின் அபூரணத்தை தூக்கியெறியும் காலம் சமீபமாயிருக்கிறது. அசிங்கமான கந்தையாகிய தங்களது சுயநீதியை தாங்களாகவே கழற்றிவிட்டு, கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை தரித்துக் கொள்கிறவர்கள் களிகூருவார்கள். அதாவது தேவனுடைய அன்பும் இரக்கமும் கல்வாரியில் கொடுத்த மகாபெரிய ப-யின் மூலமாக, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களை நல்ல சந்தர்ப்பத்திற்கு கொண்டு வருவதற்காக களி கூருவார்கள். "தேவனுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்." அதாவது அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் இப்பொழுதோ அல்லது எதிர் காலத்திலோ, கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான்.

தம்மிடம் வருகிற அனைவருக்கும் கிருபையான சந்தர்ப்பத்தை இயேசு தருகிறார். அதனால் அவர்கள், மறுபடியும் மறுபடியும் முயன்று படிப்படியாக தங்கள் விசுவாசத்தை தேவனுக்கும் நீதிக்கும் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். ஆகவே, பொதுவாக உலகத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுமென்று வேதம் கூறுகிறது. ஒரு ஆயிர வருடம் மறுபடியும் மறுபடியும் முயல சந்தர்ப்பத்தைப் பெறும். ஒருவேளை அநேக பாடங்கள் மூலமாக நீதியைக் கற்றுக் கொண்டு மகா பெரிய நித்திய ராஜாவுக்கும் அவரது பொன்னான கற்பனைக்கும் இசைவாக வருவார்கள். ஆயிர வருட யுகத்தைக் குறித்து வேதம் கூறுகிறதாவது: "உம்முடைய நியாயத் தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்து குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்." ஏசா 26:9

## யோனத்தானின் விசுவாசத்திற்கு வெகுமானம் அளிக்கப்பட்டது

எப்படி யோனத்தானும் அவனது ஆயுததாரியும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு, எதிராளியை வெற்றிக் கொண்டார்கள் என்பதையும், எப்படி பெ-ஸ்தியர்கள் மூன்று பிரிவாக பிரிந்து, ஒருவருக்கொருவர் எபிரேயன் என்று தவறாக புரிந்து கொண்டு ஒருவரையொருவர் அழித்தார்கள் என்பதை தொடர்ந்து நாம் பார்க்கலாம்.

---------------------------

# பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம்

***"அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்." யாத்திராகமம் 12:23***

யூதர்கள் ஆசரிக்கும் பஸ்கா பண்டிகைக் காலம் நெருங்குகிறது. அது இந்த வருடம் (1915) மார்ச் 30-ஆம் தேதி வருகிறது (நீசான் மாதம் 15-ஆம் தேதியானது, மார்ச் 29-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது). இந்தப் பஸ்கா பண்டிகைக்கு முன்னால் வருகிற ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதலில் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த கவனம் இருக்கிறது. நீசான் மாதம் 14-ஆம் தேதி பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. அது இந்த வருடம் மார்ச் 28-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய நமது ஆண்டவராகிய இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல் அதே நாளில் ஆசரிக்கப்பட வேண்டும். ஆகையால் நாம் அதை மார்ச் 28-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஆசரிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான யூதர்களும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்களும் இந்த ஒரு காலக்கட்டத்தில், இந்த மிகவும் முக்கியமான நிகழ்வைக் கடமையான விதத்திலும், சடங்காச்சாரமான சம்பிரதாயங்கள் சிலவற்றினாலும் ஆசரித்தாலும், இவ்விரண்டு மதத்தாரிலும், எவருமே இவ்வாசரிப்பினுடைய உண்மையான அர்த்தத்தினை உணராதவர்களாகவே இருக்கின்றனர் என்பதின் நிமித்தம் நாம் மிகுந்த மனவருத்தம் அடைகின்றோம்.

## பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

இவர்களுடைய மனங்களானது, அதன் உண்மையான அர்த்தத்தின் விஷயத்தில் விழித்துக்கொள்ளுமானால், உலகம் அறிந்திராத அளவுக்கான ஒரு மத மறுமலர்ச்சி ஏற்படக்கூடும். ஆனால் பரிசுத்த பவுல் குறிப்பிடுவதுபோல, "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அநேகருடைய மனதைக் குருடாக்கினான்" மற்றும் பகுதி திறக்கப்பட்ட புரிந்துகொள்ளுதலின் கண்களையுடைய சிலரும் குருடர்களாகவும், தொலைவில் பார்க்கமுடியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்று பரிசுத்த பேதுரு விவரிக்கின்றார். இவர்கள் 3500 - வருடங்களுக்கும் மேலாக, ஆசரிக்கப்பட்டதான இந்த அனுசரிப்புச் சார்ந்த தேவ ஆழங்களைப் பார்க்கமுடியாதவர்களாய் இருக்கின்றனர். குறைகூறி விமர்சிப்பவர்களாலும்கூட, ஒரு சடங்காச்சாரம் மிக நீண்டகாலமாக ஆசரிக்கப்பட்டு வருகிறது என்றால், உண்மையிலேயே அதற்கு ஓர் அடிப்படை இருக்க வேண்டுமென்று ஒத்துக்கொள்ளப்படுகின்றது. எகிப்தில் அப்படிப்பட்ட நிகழ்வு நடந்திருக்க வேண்டும்; பத்தாவது வாதையில் எகிப்தின் முதற்பேறானவர்கள் எல்லாம் அழிந்திருக்க வேண்டும்; இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் எல்லாம் காக்கப்பட்டிருக்க வேண்டும் (அதாவது இரத்தத்திற்குக்கீழாக இருக்க வேண்டுமென்ற கட்டளையை ஆசரித்தவர்கள் அனைவரும் காக்கப்பட்டிருக்க வேண்டும்) — இல்லையென்றால் விஸ்தாரமாகப் பரவியுள்ள இந்தச் சடங்காச்சாரம் ஒரு மாயமானதாக இருந்திருக்கும்.

இதன் நிறுவுதல் தொடர்புடைய விஷயத்தில் அனைத்துக் காரியங்களையும் நாம் சொல்லாமல், பின்வருபவைகளை மாத்திரமே சொல்வது போதுமானதாகும்: இஸ்ரயேலர்கள் எகிப்தியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தனர்; அவர்கள் அடிமைத்தனத்தினின்று விடுதலையாகும்படியான தேவனுடைய ஏற்பாட்டின்படி வேளை வந்தபோது, அவர்களது எகிப்திய எஜமான்கள் அவர்களை அடிமைகளாகவே வைத்திடசுயநலமாய் நாடி, அவர்கள் கானான் தேசத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்க மறுத்தனர். அந்த வருடத்தில் தேவன் ஒன்றன்பின் ஒன்றாக ஒன்பது வாதைகளை எகிப்தியர்கள்மேல் அனுப்பினார் மற்றும் எகிப்திய இராஜா, இஸ்ரயேலர்களை விடுவிப்பேன் என்று வாக்குக்கொடுத்து, வாதைகளை நீக்க தேவனிடம் கேட்டபோது, அவரும் அதை நீக்கினார். ஆனால் எகிப்திய இராஜா அந்த வாக்கைக் காப்பாற்றவில்லை. இறுதியில் தேவனுடைய ஊழியக்காரன் மோசே உச்சக்கட்டமாக ஒரு பெரிய அழிவைத் தெரிவித்தார் — அதாவது ஒரே இரவிலே எகிப்தியரின் ஒவ்வொரு குடும்பத்திலும் தலைச்சன் பிள்ளைகள் இறந்துவிடும் என்றும், அதினிமித்தம் எகிப்து முழுவதும், இராஜாவின் வீட்டிலும், ஏழையின் வீட்டிலும் மாபெரிய துக்கம் ஏற்படும் என்றும், இதன் பலனாக இஸ்ரயேலரைப் போக அனுமதிப்பதில் பிரியமாய் இருப்பார்கள் என்றும், ஆம் அவர்கள் போவதற்கும், அவர்களைச் சீக்கிரம் போகும்படிக்கும் துரிதப்படுத்துவார்கள்

என்றும், தங்கள் இராஜா இன்னும் தனது இருதயத்தைக் கடினப்படுத்தித் தேவனுடைய கட்டளையைத் தொடர்ந்து எதிர்த்தால், இது எகிப்தின் முழு ஜனங்களுக்கும் மரணத்தைக்கொண்டுவருமென ஜனங்கள் பயப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

முதல் மூன்று வாதைகள் எகிப்தியருக்கும், இஸ்ரயேலர் வாழும் பகுதிகளிலும் பொதுவாக வந்தது. அடுத்த ஆறு வாதைகள் எகிப்தியர் வாழும் பகுதிகளை மட்டும் வாதித்தன. கடைசி பத்தாவது வாதையானது எகிப்தின் முழுமைக்கும் பொதுவாக இருந்தது மற்றும் இஸ்ரயேலர்களுக்கான இடங்களையும்கூட உள்ளடக்கினது; ஆனால் இஸ்ரயேலர்கள் தங்கள் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் காண்பிக்கும்பொருட்டு ஒரு வயதுக்குரிய ஆட்டுக்குட்டியை அடித்து, அதன் இரத்தத்தை வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளித்து, அந்த இரவிலே அதன் மாம்சத்தை, கசப்பானக் கீரையோடும், புளிப்பில்லா அப்பத்தோடும், கையிலே தடிபிடித்துக்கொண்டும், அரையிலே கச்சைக் கட்டிக்கொண்டும் பிரயாணத்திற்குத் தயாராக இருந்து புசிக்க வேண்டும். இன்னும் அந்த இரவிலே எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளின் மரணத்தையும் முழுமையாக எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். யார் வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்படவில்லையோ அவர்கள் வீட்டிலும், இந்தச் சங்காரம் எதிர்ப்பார்க்கப்பட வேண்டும்.

## நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி

இஸ்ரயேலர்கள் பஸ்காவை நியாயப்பிரமாணத்தினுடைய முதலாவது அம்சமாகவும், தங்கள் ஜாதிக்கான மாபெரும் நினைவுகூருதல்களில் ஒன்றாகவும் ஆசரிப்பதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். ஆகையால் உலகமெங்குமுள்ள யூதர்களாலும் மற்றும் கடவுளைக் கண்டறிவது அசாத்தியம் எனும் கொள்கை உடையவர்களாலும் (agnostics) கூடப் பஸ்காவானது ஓரளவுக்கு ஆசரிக்கப்படுகின்றது என்று நாம் பார்க்கின்றோம். இவர்கள் இன்னமும் பஸ்காவை, முற்காலத்து வழக்கமெனக் கொஞ்சம் மதிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஆனால் அறிவுகூர்மையுள்ள மனங்களை உடையவர்களான நமது யூத நண்பர்கள், இந்த அனுசரிப்பினுடைய அர்த்தமென்ன என்று ஒருபோதும் விசாரியாதது விநோதமாய்க் காணப்படுகின்றதல்லவா? பஸ்கா ஆட்டுக்குட்டியானது ஏன் அடிக்கப்பட்டு, புசிக்கப்படுகின்றது? ஏன் இரத்தமானது வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுகின்றது? இப்படிச் செய்வதற்குத் தேவன் கட்டளையிட்டுள்ளார் என்பது உண்மைதான்; ஆனாலும் தெய்வீகக் கட்டளைக்குப் பின்னாக உள்ள காரணம், நோக்கம் என்ன? என்ன பாடம், என்ன அர்த்தம் உள்ளது? விவேகமுள்ள தேவன், விவேகமான கட்டளைகளைத்தான் கொடுப்பார் என்பது உண்மையே; ஏற்றக்காலத்தில் யேகோவா தேவன் தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் அனைத்துக் காரியங்களினுடைய அர்த்தங்களைப் புரிந்துகொள்ளச் செய்வார். ஏன் இந்தக் காரியத்தில் எபிரெயர்கள் சிரத்தை இல்லாமல் இருக்கிறார்கள்? ஏன் தவறான எண்ணம் அவர்களை ஆட்கொண்டிருக்கிறது?

கிறிஸ்தவ மதத்தில் அந்தக் கேள்விக்கான பதில் இருந்தால்கூட, சிரத்தையின்மையால் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இதைக்குறித்த சரியானக் காரணத்தையும், தாற்பரியத்தையும் சொல்லமுடியாதவர்களாய் இருக்கின்றனர். யூதனால் தனக்கான ஓய்வுநாள் என்பது இளைப்பாறுதலுக்கான, ஆசீர்வாதத்திற்கான, மற்றும் வேலைகளிலிருந்து, கவலைகளிலிருந்து, மரணத்திலிருந்து விடுதலைக்கான வரவிருக்கிற காலப்பகுதிக்கு நிழலாய் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடியுமானால், இதுபோலவே மோசேயின் வாயிலாகக் கொடுக்கப்பட்ட அம்சங்கள் அனைத்தும், "ஏற்றக்காலத்தில்" அருளப்படப்போகின்றதான பல்வேறு ஆசீர்வாதங்களுக்கு நிழலாய்க் காணப்படத்தக்கதாகக் கர்த்தரினால் வடிவமைக்கப்பட்டுள்ளது என அவனால் ஏன் காண முடியவில்லை? பஸ்கா ஆட்டுக்குட்டி, தேவ ஆட்டுக்குட்டியை அடையாளப்படுத்துகிறது என்பதையும், அதன் மரணம் மேசியாவாகிய இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது என்பதையும் ஏன் எல்லாராலும் பகுத்துணர முடியவில்லை? மேலும் இரத்தம் தெளிக்கப்படுதல் இயேசுவின் மரணத்தின் புண்ணியத்தை விசுவாச வீட்டாருக்குத் தரிப்பித்தலை அடையாளப்படுத்துகிறது என்பதையும் ஏன் பகுத்துணர முடியவில்லை?

இயேசுவே "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருக்கின்றார் என்றும், மனுக்குலத்தார் யாவருடைய பாவங்களுக்காக ஏற்றவேளையில் இயேசுவினுடைய பலியின் புண்ணியம் செயல்படுத்தப்படுவதின் வாயிலாக, மனிதனுக்கான தண்டனை சந்திக்கப்படுதலின் மூலம் உலகத்தின் பாவம் தள்ளுபடியாவது சாத்தியமாகும் என்றும் காண்கிற கண்களை உடையவர்கள் பாக்கியவான்களாவர். இதுவரையிலும் சபை மாத்திரமே இயேசுவினுடைய மரணத்தினாலான புண்ணியத்தினைப் பெற்றிருக்கின்றனர். முழு உலகமும் தெய்வீகத் தயவை இழந்து, துன்பம், வலி ஆகியவற்றுடனுள்ள மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின்

கீழ் வந்துள்ளபடியால், இந்தத் தண்டனைத் தீர்ப்பானது (அ) சாபமானது மாற்றிப்போடப்படுவதற்கு முன்னதாக, நீதியானது திருப்திப்படுத்தப்படுவது அவசியம் என்றும், அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக" — நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி, "அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார்" என்றும் காண முடிந்தவர்கள் மிகுந்த தயவு பெற்றவர்களாய் இருக்கின்றனர். இப்படியாக அவர் ஒரு புதிய வழியை, நித்திய ஜீவனுக்கான ஒரு வழியைத் திறந்து வைத்தார்.

## முதற்பலன்கள்

வேதவாக்கியங்களானது கிறிஸ்துவின் சபையை, "முதற்பேறானவர்களின் சபை" என்றும், "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்றும், தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்கள்" என்றும் அழைக்கின்றது (எபிரெயர் 12:23; யாக்கோபு 1:18; வெளிப்படுத்தல் 14:4). இவ்வார்த்தைகளானது இறுதியில் தேவனுடைய குடும்பத்தில் பிற்பிறப்புகள் என்ற மற்றவர்கள் இருப்பார்கள் என்று, சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; பிற்பலன்கள் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றது. பொதுவாய்க் கிறிஸ்தவ ஜனங்கள் இந்த வேதவாக்கியங்களைக் கவனிக்கத் தவறிப்போனவர்களாக, அதுவும் இவைகளுக்கு அர்த்தம் பொருத்தும் விஷயத்தில் தவறிப்போனவர்களாக இருந்து, வேதாகமத்தில் முதற்பலன்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், பிற்பலன்கள் இல்லை என்றும் நம்புகிறவர்களானார்கள். ஆனால் பஸ்கா நிழலானது, இஸ்ரயேலர்கள் அனைவரையும் இரட்சிப்பதே தேவ நோக்கமாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இஸ்ரயேல் ஜாதியானது, தேவனுடன் இசைவிற்குள் வந்து, வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நித்திய ஜீவனை அருளப்பெறுகின்றவர்களாகிய மனுக்குலம் யாவருக்கும் அடையாளமாய் இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

இரண்டு கடந்துபோகுதல்கள் இருப்பதை நாம் கவனிப்போமாக — முதற்பேறானவர்களை மாத்திரமே கடந்துபோகுதல் என்பது முதலாவதாகும்; தெய்வீக வல்லமையின் மூலமாக ஒட்டுமொத்த இஸ்ரயேல் ஜாதியும் அற்புதகரமாக விடுவிக்கப்பட்டு, செங்கடலின் வழியே நடத்திச்செல்லப்பட்டபோது, மற்றொன்று நிகழ்ந்தது; செங்கடலில் வழியானது காற்று மற்றும் அலைகளின் அழுத்தம் காரணமாக அவர்களுக்கென்று விசேஷமாக ஆயத்தப்படுத்தப்பட்டது. அவர்கள் வெட்டாந்தரையில் நடந்து, கடந்துசென்றனர் மற்றும் இரட்சிக்கப்பட்டனர்; ஆனால் இரண்டாம் மரணத்திற்குள் இறுதியில் போகப்போகிறவர்களுக்கு அடையாளமாக பார்வோனின் சேனைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். செங்கடலில் நடந்த கடந்துபோகுதலானது, கர்த்தருடன் இசைவிற்குள் வருவதற்கும், அவரைத் தொழுதுகொள்வதற்கும் விரும்புகிற ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும், அதாவது இஸ்ரயேலின் பாகமாகும் அனைவரும், பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையினின்று இறுதியில் விடுவிக்கப்படுவதைச் சித்தரிக்கின்றதாயிருக்கின்றது; ஏனெனில் இஸ்ரயேலரில் ஒருவர்கூட, எகிப்திய அடிமைத்தனத்தில் விட்டுவரப்படவில்லை.

செங்கடலில் நடந்த அந்தக் கடந்துபோகுதலை நாம் இங்கு ஆராயவுமில்லை; இதன் நிஜத்தையும் நாம் இப்பொழுது ஆசரிக்க இருக்கவுமில்லை. இல்லை; முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கான (அ) தப்புவிக்கப்படுதலுக்கான நிஜத்தையே நாம் ஆசரிக்கிறோம். எல்லாருடைய விடுதலையும், இந்த முதற்பேறானவர்களின் இரட்சிப்பைச் சார்ந்திருந்தாலும், முதற்பேறானவர்கள் மட்டுமே ஆபத்தில் இருந்தார்கள். இதற்கு இசைவாய் இருக்கிற அனைத்து வேதவாக்கியங்களோடு இதைப் பொருத்திப்பார்க்கும்போது, தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாகிய, முதற்பேறானவர்களின் சபை மாத்திரமே தற்காலத்தில் காக்கப்படுகின்றனர் - இரத்தத்தின் கீழிருக்கும் இவர்கள் கடந்துபோகப்படுகின்றனர். பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று உண்மையான மகாபெரிய மோசே விடுவிக்கும்போது, அவரைப்பின்பற்ற விரும்புகிறவர்களாகிய மீதமுள்ள மனுக்குலத்தார், இப்போது ஆபத்தில் இல்லை; பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்கள் மாத்திரமே இப்போது ஆபத்தில் இருக்கிறார்கள்.

## முதற்பேறானவர்களின் சபை

மனுக்குலத்திலிருந்த முதற்பேறானவர்களாகிய சபை, சந்ததியிலுள்ள மீதமானவர்களுக்கு முன்னதாகவே தங்கள் அடிமை நிலைமைக்குறித்தும், விடுதலைக்கான தங்களுக்குள்ள அவசியத்தைக்குறித்தும், தேவன் தமது நல்வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் தங்களுக்கு

நிறைவேற்ற விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்பது குறித்துமான உணர்ந்துகொள்ளுதலின் விஷயங்களில், தங்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்றவர்களாய் இருக்கின்றனர். இன்னுமாக இவர்கள் தேவ கிருபைக்கு இணங்கி, அவருக்கும், அவரது ஊழியத்திற்குமெனத் தங்களையே முழுமையாய் அர்ப்பணம்பண்ணி, இதன் பலனாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படுகின்றார்கள். இவர்கள் விஷயத்தில் ஜீவனா (அ) மரணமா அல்லது விசுவாச வீட்டிற்குள்ளாக, அதாவது தெளிக்கப்பட்ட இரத்தத்திற்குப் பின்பாக இருப்பதா (அ) இல்லையா என்பதுதான் காரியமாய் உள்ளது. இந்த வகுப்பார் இரத்தத்தின் கீழிருந்து வெளியேறுவது என்பது, தெய்வீக இரக்கத்தினை அவமதிப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும். அது இவர்கள் தெய்வீகக் காருண்யத்தினை வெறுப்பதை/இகழ்வதைக் குறிக்கின்றதாயிருக்கும்; இன்னுமாக ஆட்டுக்குட்டியினுடைய இரத்தம் அடையாளப்படுத்துகின்றதான தேவனுடைய இரக்கத்தில் தங்கள் பங்கினை அனுபவித்தப்பிற்பாடு, அதை இவர்கள் மதிக்காததையும் குறிக்கின்றதாயிருக்கும். இப்படியாய்ச் செய்கிறவர்களைக்குறித்து வேதவாக்கியங்களானது, "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்" என்றும், "கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று" என்றும் குறிப்பிடுகின்றது (உரோமர் 6:9; எபிரெயர் 10:26). இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய எதிராளிகளாகக் கருதப்படுவர் மற்றும் இவர்களது அழிவுக்கு, எகிப்தினுடைய முதற்பேறானவர்களின் அழிவானது அடையாளமாய்க் காணப்படுகின்றது.

அந்த இரவில் மரித்த எகிப்தியரின் தலைச்சன்களும், கட்டளைக்கு விரோதமாக வீட்டைவிட்டு வெளியே சென்றதினால் மரித்த இஸ்ரயேலர்களும் இரண்டாம் மரணத்திற்குச் சென்றுவிட்டார்கள் என்று நாங்கள் சொல்வதாக அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டாம். அதற்கு முற்றிலும் மாறாக, இந்தக் காரியங்கள் எல்லாம், சுவிசேஷ யுகத்தில் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இருக்கிற கிறிஸ்துவின் சபையின் நிஜங்களுக்கும், உயர்தளத்திலுள்ள காரியங்களுக்கும் முன்னடையாளங்களாகவும், உருவகங்களாகவும், நிழல்களாகவும், விளக்கங்களாகவும் இருக்கின்றன என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பும், தேவனுடைய நல்வார்த்தையை ருசிப்பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், இப்படியாக முதற்பேறானவர்களின் சபையின் அங்கத்தினரான பிறகும் மனப்பூர்வமாய்ப் பாவம்செய்தால், மறுதலித்துப்போனால் மனந்திரும்புகிறதற்கேதுவாக நம்மை மறுபடியும் புதுப்பிப்பது கூடாதகாரியமாகும். இதற்குமேலும் தேவன் நமக்காக எதையும் வைத்திருக்கவில்லை. நாம் அவரது இரக்கத்தை அசட்டை செய்தால், நாம் இரண்டாம் மரணத்தில் மரிப்போம். (2 பேதுரு 2:12; யூதா 12)

முதற்பேறானவர்களாகிய சபையானது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதினாலும், எல்லா விதத்திலும் அதிகமான அறிவையும், சிலாக்கியங்களையும் அனுபவிப்பதாலும் இவர்கள் உலகத்தைக்காட்டிலும் மிகவும் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் இவர்கள் மாத்திரமே இப்பொழுது இரண்டாம் மரணத்திற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். இதுவே பஸ்கா நிழலினுடைய படிப்பினையாக இருக்கின்றது மற்றும் இது உண்மை கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

பாவம் மற்றும் மரணத்தின் இரவு கடந்துபோய், விடுதலைக்கான மகிமையான காலை வருகையில், கிறிஸ்துவாகிய நிஜமான மோசே, தேவனுடைய ஜனங்கள் அனைவரையும், அதாவது தேவசித்தத்தை அறியவரும்போது, அதற்குக் கீழ்ப்படிய, அதைக் கனப்படுத்த, அதை மதித்திட மகிழ்கிற யாவரையும் வழிநடத்திடுவார், இரட்சித்திடுவார். அந்த விடுதலையின் நாளானது, முழு ஆயிரவருட யுகமாகக் காணப்படும் மற்றும் ஆயிரவருட யுகத்தின் முடிவில் எகிப்தின் சேனைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான பொல்லாத செய்கைக்காரர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அழிவிற்குள்ளாக அறுப்புண்டுப் போவார்கள்.

## இதை நீங்கள் செய்யும் போதெல்லாம்

அப்போஸ்தலனாகிய பவுல், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று கூறி, நமது கர்த்தர் இயேசுதான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தெளிவாயும், உறுதியாயும் அடையாளம் கண்டுகொண்டார். நமது வீடுகளின் மீதல்ல, மாறாக நமது இருதயங்கள் மீது இரத்தம் தெளிக்கப்படுவது நம் அனைவருக்கும் அவசியமென அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். நாம் ஆட்டுக்குட்டியில் பங்குகொள்ள வேண்டும்; கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினை, அவரது பலியின் புண்ணியத்தினை நாம் நமதாக்கிக்கொள்ள வேண்டும்; புதிய யுகமாகிய காலையின்போதான விடுதலைக்கு நாம் பலத்துடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டுமானால், நாம் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிக்க வேண்டும். இப்படியாக நாம் கிறிஸ்துவை விசுவாசத்தினால் மாத்திரம்

தரித்துக்கொள்ளாமல் மாறாக நாம் அதிகமதிகமாக அவரது குணலட்சணத்தைத் தரித்து, நமது இருதயங்களிலும், ஜீவியங்களிலும் அவரது மகிமையான சாயலுக்கு மறுரூபமடைகின்றோம்.

யூதர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசித்ததுபோன்று, நாம் கிறிஸ்துவைப் புசிக்க வேண்டும். யூதர்களுடைய பசியினைத் தூண்டினதும், பசிக்கு உதவினதுமான கசப்பான கீரைகளுக்குப்பதிலாக, நமக்குக் கர்த்தர் ஆயத்தம் பண்ணினதும், பூமிக்குரியவைகள் மீதான நமது விருப்பங்களை மறந்துபோவதற்கு உதவுவதும், ஆட்டுக்குட்டி மற்றும் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிப்பதற்கான தீவிரப் பசியை நமக்குக் கொடுக்கிறதுமான கசப்பான அனுபவங்களையும், சோதனைகளையும் நாம் பெற்றிருக்கின்றோம். நமக்கு எந்த நிரந்தரமான தேசமும் இல்லை என்று நாமும் நினைவில்கொள்ள வேண்டும்; பரதேசிகள் போலவும், யாத்திரிகர்கள்போலவும், கையில் தடி பிடித்துக்கொண்டவர்களாகவும், பரம கானானுக்கும், நமது மீட்பரோடுகூட, தேவனுக்கான இராஜாக்களாக, ஆசாரியர்களாக, இருக்கப்போகிற முதற்பேறானவர்களாகிய சபைக்குத் தேவன் வைத்து வைத்துள்ளதான மகிமையானவைகள் அனைத்தினிடத்திற்குமான நமது பிரயாணத்திற்காக, நாம் அரைக்கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும்.

நமது கர்த்தராகிய இயேசுவும் தாம்தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அடையாளம் கண்டுகொண்டார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, அவர் தம்முடைய சீஷர்களுடன் மேல்வீட்டறையில் கூடி, "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்றார். யூதர்களாக அவர்கள் காணப்பட்டப்படியால், அந்த இரவில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது; அதாவது எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கும், நிழலான பார்வோனிடமிருந்து (இவ்வுலகத்தின் அதிபதியிடமிருந்து) நிழலான முதற்பேறானவர்கள் காப்பாற்றப்பட்டதற்குமான ஆண்டுநிறைவு நாளினுடைய இரவில் மற்றும் உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படப்போகிறதுமான அதே நாளில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது. மேலும் நிழலின் விஷயங்கள் நிறைவடைந்தவுடன், நமது கர்த்தர் இயேசு, பழையவைகளின்மீதே புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி (பஸ்கா காலத்திற்கான நினைவுகூருதலை வருடந்தோறும்) இதைச் செய்யுங்கள்" என்றார். (1 கொரிந்தியர் 11:24-25) அதாவது அறிவுக் கண்கள் திறக்கப்படாத உங்கள் அயலாரான யூதர்கள் இதனை நிஜத்தின் கோணத்தில் புரிந்துகொள்ளமாட்டார்கள். ஆனால் என்னை தேவனுடைய திட்டத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகவும், உலகின் இரட்சிப்பின் விலைக்கிரயமாக நான் எனது ஜீவனைக் கொடுக்கப்போவதையும் அறிந்த நீங்கள், மற்றவர்களால் உணரப்படாத விதத்தில், இந்தப் பஸ்கா காலத்தைச் சிறப்பானதாக, புனிதமானதாகக் கருதுவீர்கள். இதுமுதல் நீங்கள் இந்த நிழலை ஆசரிக்க மாட்டீர்கள் — ஆனால் நிஜத்தை நினைவுகூருவீர்கள்; ஏனெனில் நான் தேவ ஆட்டுக்குட்டியாக மரிக்க இருக்கிறேன் மற்றும் இப்படியாக, தெளிக்கப்படும் இரத்தத்தை முதற்பேறான சபைக்கும் மற்றும் மாம்சத்தை முழு விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்போகிறேன் என்ற விதத்தில் கூறினார்.

## இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது

எகிப்திலிருந்து விடுதலையானதை நினைவுகூரும்பொருட்டு, பஸ்கா ஆட்டுக்குட்டியை யூதர்கள் புசித்து வந்ததைப்போல, ஆண்டவரின் பின்னடியார்கள் இனிச் செய்யக்கூடாது என்பதை நமது ஆண்டவர் தம்மை ஆட்டுக்குட்டியாகக் குறிப்பிடுவற்குரிய புதிய அடையாளங்களாகிய புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் தேர்ந்தெடுப்பதன் மூலம் காண்பித்தார். அதுமுதல் அவரது பின்னடியார்கள் அவர் கட்டளையிட்டபடி, தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய அவரது மரணத்தினை அப்போஸ்தலரின் மரணம்வரை ஆசரித்துவந்தனர். அதன்பிறகு ஒரு விசுவாச வீழ்ச்சியின் மூலம் பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு, இருண்ட யுகம் என்று சொல்லக்கூடிய காலம் வந்தது. இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட பஸ்கா இராப்போஜனத்தில் அவரது மரணத்தை ஆசரிப்பது உபயோகத்தில் இல்லாமல் போனபோதிலும், இந்த இருண்ட யுகத்திலும்கூட, இயேசுதான் நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி என்ற போதனை காணவேபட்டது. ஆனால் இதுவும் உரோமன் கத்தோலிக்க சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட பூசை பலி (Mass) என்னும் பயங்கரமான தேவதூஷணத்தினால் புதைக்கப்பட்டுப்போனது மற்றும் இலட்சக்கணக்கான பெயர்க் கிறிஸ்தவர்களை வஞ்சித்துக் குழப்பியது. இந்தப் பூசைபலியைத்தான் "பாழாக்கும் அருவருப்பு" என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன, காரணம் கர்த்தரின் பிள்ளைகளுடைய விசுவாசம் மற்றும் பழக்கம் மீதான இதன் நாசகரமான செல்வாக்கேயாகும். பூசைபலியானது புராட்டஸ்டண்ட் சபையாரால் கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதகங்களுக்கு எதிரானது என்று

பொதுவாக புறக்கணிக்கப்பட்டப்போதிலும், இதினின்று பகுதியளவே தப்பித்துள்ளவர்களான இந்தப் புராட்டஸ்டண்ட் சபையார் இந்தப் பயங்கரமான தப்பறையின் செல்வாக்கினைப் பெரிதும் தங்கள்மீது பெற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

## பூசைபலி என்பது இறுதிவிருந்து அல்ல

அநேக புராட்டஸ்டண்ட் சபையார், பூசைபலி என்பது இறுதிவிருந்து என்ற வேறொரு பெயரில் காணப்படும் கர்த்தரின் இராப்போஜனம்தானே என்று கபடமின்றி கேட்கிறார்கள். ஓ! இல்லை, இது முற்றிலும் மாறானது என்று பதில் கூறுகிறோம். கர்த்தரின் இராப்போஜனம் என்பது கல்வாரியில் நிறைவேறிய கர்த்தரின் மரணத்தை ஆசரிப்பதாகும். பூசைபலி செய்யப்படும் ஒவ்வொரு தடவையும், அது பாவத்திற்கான ஒரு புது பலியைக்குறிக்கிறது. குருவானவர் அப்பத்தை ஆசீர்வதிக்கும்போது, அது கிறிஸ்துவைப் புதிதாகப் பலியிடத்தக்கதாக அவருடைய உண்மையான சரீரமாக மாறுகிறது என்று உரோம சபை நண்பர்கள் நம்புகிறார்கள். பாடல் பூசை என்பது ஒரு குறிப்பிட்ட நபரின் ஒரு குறிப்பிட்ட பாவத்திற்காகக் கிறிஸ்துவின் ஒரு குறிப்பிட்ட பலியாக இருக்கிறது. சாதாரண பூசை என்பது ஒரு சபையாரின் பொதுவான பாவங்களுக்காக ஏறெடுக்கப்படும் கிறிஸ்துவின் பலியாக இருக்கிறது. கிறிஸ்து கல்வாரியில் செலுத்திய பலி, ஆதி மற்றும் கடந்தகால பொதுவான பாவங்களுக்கான பலியென உரோம சபையார் நம்புகின்றனர்; ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் அனுதினமும் செய்கிற பாவங்கள், தவறுகள், களங்கங்கள் ஆகியவைகளைப் போக்குவதற்குக் கிறிஸ்துவின் புதிய பலி அவ்வப்போது தேவைப்படுகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். இப்படியாக அவர்களுடைய இந்தக் கருத்தின்படி, பூசைபலி குறிக்கிறபடி, உரோமன் கத்தோலிக்கர், கிரேக்க கத்தோலிக்கர் மற்றும் குருமாரைச் சேர்ந்தவர்களும் அனுசரிக்கிறபடி, உலகெங்கிலும் கிறிஸ்து புதியதாக ஒவ்வொரு நாளும் பலியிடப்பட்டுக்கொண்டிருக்கிறார். தேவனுடைய பார்வையில் இதுதான் "அருவருப்பு" என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றது. ஏனெனில் கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்றும், "கிறிஸ்து தம் மூலமாக பிதாவினிடத்திற்கு வருகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் கூறுகிற வேதவாக்கியங்களைப் பூசைபலி அவமதிக்கின்றது. (உரோமர் 6:9; எபிரெயர் 10:14)

நினைவுகூருதல் இராப்போஜனம் மற்றும் பஸ்காவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட கல்வாரியின் மகாபெரிய பலியின் மதிப்பை, பூசைபலியில் அடிக்கடி செலுத்தப்படுகிற பலிகள் குறைக்கின்றன அல்லது செல்லாததாக்குகின்றன என்பதை உடனடியாகக் காணமுடிகின்றது. தங்களுடைய பாவங்களை நீக்குவதற்காகப் பூசைபலியைக் காண வந்திருந்தவர்களை, மெய்யான பஸ்காவின் ஆழ்ந்த கருத்துக்களைக் கவனிக்கும்படி நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? புனித வெள்ளி ஆசரிக்கப்படுதல் அறிமுகமாகவே, அதற்கு முன் ஆசரிக்கப்பட்டுவந்த நினைவுகூருதல் இராப்போஜன காரியங்கள் வெகு காலத்திற்கு முன்பே ஓய்ந்துபோனது.

புராட்டஸ்டண்ட் சபையாரைப் பொறுத்தவரை, பூசைபலியை வேதத்திற்கு விரோதமானது என்று ஒதுக்கியபடியால், கர்த்தரின் இராப்போஜனத்தை ஆசரிக்கும்படி திரும்பினார்கள். எனினும் பூசைபலியை அடிக்கடி செய்து பழகி இருந்தபடியால், கர்த்தரின் இராப்போஜனத்தை அடிக்கடி ஆசரிக்கப்படும்போது நன்மை பயக்கும் என்று எண்ணினவர்களானார்கள். ஆகையால் சிலர் நான்கு மாதத்திற்கு ஒருமுறையும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறையும், சிலர் மாதம் ஒருமுறையும், சிலர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஆசரிக்கிறார்கள். இதை எத்தனை தடவை ஆசரிக்க வேண்டும் என்பதில் ஒத்தக் கருத்து வராததற்கான இரண்டு காரணங்கள்: (1) நமது கர்த்தரின் மரணம் நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணம் என்பதையும், அதன் ஆசரிப்பு நிஜமான பஸ்கா இராப்போஜனம் என்பதையும் கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கவனிக்கத் தவறுகிறார்கள். (2) "நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம்" என்று நமது கர்த்தர் சொன்ன வார்த்தைகளை உங்கள் விருப்பத்தின்படி அடிக்கடி செய்யுங்கள் என்று அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் அவரோ, "(யூதர்களாகவும், பஸ்காவை ஆசரிக்கும் பழக்கமுடையவர்களாகவும் காணப்படும்) எனது சீஷர்களாகிய நீங்கள் இத்தருணத்தை ஆசரிக்கும்போதெல்லாம் என்னை — சொல்லர்த்தமான பஸ்கா ஆட்டுக்குட்டியையும், நிழலான முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலின் மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்துள்ள நிழலான விடுதலையையும் நினைவுகூரும்படி இல்லை — மாறாக என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற விதத்திலேயே கூறினார்.

வாரம் ஒருமுறை கர்த்தரின் இராப்போஜனத்தை ஆசரிப்பவர்கள் வேதவசனத்தை மேற்கோள் காட்டுகிறார்கள். ஏனெனில் ஆதிக்கால சபையில் வாரத்தின் முதலாம்நாள் கூடி அப்பம் பிட்டார்கள் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். நினைவுகூருதலான இராப்போஜனத்தை அப்பம் பிட்குதலோடு குழப்பிக்கொள்வது ஒரு பெரிய தவறாக இருக்கிறது; ஏனெனில் அப்பம் பிட்குதல் என்பது சாதாரண உணவு சாப்பிடுதலைக் குறிக்கிறது. அது இராப்போஜனம் என்பதாக,

குறிப்பிடுவதாக வேதத்தில் எந்தப் பதிவும் இல்லை. திராட்சரசம் எதுவும் இதனுடன் குறிப்பிடப்படவில்லை. அப்பமானது, நமது கர்த்தரின் பிட்கப்பட்ட சரீரத்தைக் குறிப்பிடுவதாகச் சொல்லப்படவில்லை. ஆதிக்கால சபையில் வாரத்தின் முதலாம்நாள்கூடி நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுவது ஓர் உற்சாகமுள்ள சமூக வழக்கமாக இருந்தது. இந்தப் பொதுவான சமூக வழக்கம் சகோதரர்களை இணைக்கவும், சகோதர ஐக்கியத்திலும், அந்நியோனியத்திலும் வளர்க்கவும் உதவியாக இருந்தது. அநேக இடங்களில் கர்த்தரின் ஜனங்கள் இந்த வழக்கத்தை இன்னமும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் பிற்பகல் மற்றும் மாலை ஆராதனைகளுக்கிடையே அப்பம் பிட்குதலைப் புரூக்லின் கூடாரத்தின் சபையார் செய்துவருகிறார்கள்; இது தூரத்தில் வசிக்கிற சகோதரர்கள் கர்த்தரின் ஜனங்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு அருளத்தக்கதாகவும் மற்றும் அவர்களின் சௌகரியத்திற்காகவும் செய்யப்படுகின்றது.

## நினைவுகூருதல் இராப்போஜனத்தின் தேதி

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி யூதர்கள் சந்திர காலக்கணக்கைப் பயன்படுத்தி வந்தார்கள். ஒவ்வொரு அமாவாசையும் அவர்களுக்கு ஒரு புது மாதப்பிறப்பாக இருந்தது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்கு அருகாமையிலான அமாவாசைதான் நீசான் அல்லது ஆபீப் மாதம் முதல் தேதியாகும். அந்த மாதம் 15-ஆம் தேதிதான் பஸ்காவின் புளிப்பில்லா அப்பப் பண்டிகை ஆரம்பித்து, ஒரு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. அந்த ஏழுநாள் பண்டிகையானது, இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அடையாளப்படுத்தினதாய் இருக்கின்றது மற்றும் ஒவ்வொரு உண்மை கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவின் மீட்பின் பலியின் புண்ணியத்தினால் தங்களது பாவங்கள் கடந்துபோகப்படுகிறதை உணருகிறதினால் ஏற்படக்கூடிய முழுமையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அடையாளப்படுத்தினதாய் இருக்கின்றது. ஆகையால் உண்மையான எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்கள் இருதயங்களில் இந்தப் பஸ்கா பண்டிகையின் தொடர்ச்சியான சந்தோஷத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஏழுநாள் என்பது பூரணத்தை, முழுமையைக்குறிக்கிறது. இந்தக் காரியத்தை இதே கருத்தில் கவனிக்காமல் யூதர்கள், தொடர்ந்து வருகிற வாரத்தின் செய்கைகளைக்காட்டிலும், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்டுவதற்கும், அதன் மாம்சம் புசிக்கப்படுவதற்கும் குறைவாகவே கவனம் செலுத்தினார்கள். ஆனால் நமது ஆண்டவர் தம்மை பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிஜம் என்று அறிவித்தபோதும் மற்றும் அவரது இரண்டாம் வருகைவரை அவரது மரணத்தை அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும்படி நம்மை அழைத்தபோதும், அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக்கூறினார். நாம் அவரது இராஜ்யத்தில் நுழையும்போது, அது நமது ஆசீர்வாதம் முழுமையாய் நிறைவேறுவதைக் குறிக்கிறதாயிருக்கும்.

கிறிஸ்துவின் மரணத்தின் வருடாந்தர ஆசரிப்பை, மற்றப் பலவித காலங்களிலும், வேளைகளிலும், ஒழுங்கற்றும், எந்தவித முக்கியக் கருத்து இல்லாமலும் ஆசரிப்பதற்குப்பதிலாக, அநேகக் கிறிஸ்தவர்கள் இந்தப் பாடத்தை சத்திய வெளிச்சத்தில் பார்ப்பார்களேயானால், மேலும் கிறிஸ்துவின் மரணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை இருதயப்பூர்வமாக ஆசரிப்பார்களேயானால், அது அவர்களுக்கு சந்தேகத்திற்கிடமின்றி ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். வருடத்திற்கொருமுறை, இதை நீங்கள் செய்யும்போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி செய்யுங்கள் என்று நமது கர்த்தர் கட்டளையிட்டபடி, இந்தக் காரியத்தில் அதிகக் கவனம் செலுத்தி ஆண்டவரின் மரணத்தை ஆசரிப்பதில் சந்தோஷப்படுகிற கர்த்தரின் ஜனங்களில் சிறிய வகுப்பார் உலகெங்கிலும் எழும்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஓர் ஆசரிப்பு மனதிற்கும், இருதயத்திற்கும் விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்று நாங்கள் நம்புகிறோம். தெய்வீக நிபந்தனைகளுக்கு எவ்வளவு அருகே வருகிறோமோ, அந்த அளவிற்கு நமது ஆசீர்வாதம் அதிகமாக இருக்கும் மற்றும் நமது ஆண்டவரும், தலையுமானவரிடத்திலும், அவரது சரீரத்தின் மற்ற அங்கத்தினர்களிடத்திலும் நாம் நெருங்கி வருவோம்.

இந்த ஆசரிப்பின்நாள் இந்த வருடம் (1915) மார்ச் 28-ஆம் தேதி, 6 மணிக்குமேல் வருகிறது; ஏனெனில் யூதக் கணக்கீட்டின்படி நீசான் மாதம் 14-ஆம் தேதி அப்பொழுதுதான் ஆரம்பிக்கிறது. ஆண்டவரின் மகா பெரிய பலியை நினைவுகூரும்படி ஆங்காங்கே இருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் சிறுகூட்டமாக, குடும்பமாகக் கூடும்படி வலியுறுத்துகிறோம். அது அவருடைய மரணத்தின் வருடாந்தர ஆசரிப்பாக இருக்கின்றது என்ற காரியமே அக்காரியத்தினை, தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக்குகின்றது.

## ஆண்டவரே, நானோ?

முதலாம் நினைவுகூருதலின் சந்தர்ப்பங்களை நாம் மீண்டும் நினைவுகூருகின்றோம் . . . அப்பம் மற்றும் திராட்சரசமுள்ள பாத்திரம் ஸ்தோத்திரிக்கப்பட்டது; இவைகள் அவரது பிட்கப்படுகிற சரீரத்தையும், சிந்தப்படுகிற இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றது என்றும், அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரைப் புசிப்பதன் மூலம் மாத்திரமல்ல, அவரோடுகூடப் பிட்கப்படுவதன் மூலம் பங்குகொள்ள வேண்டுமென்றும், அவரது இரத்தத்தின், பலியின் புண்ணியத்தில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், தாங்கள் பிற்பாடு இராஜ்யத்தில் அவரது கனத்திலும், மகிமையிலும் பங்கடையத்தக்கதாகத் தங்களது ஜீவியங்களை அவரது ஊழியத்திலும், எல்லா விதத்திலும் அவரோடு ஒத்துழைப்பதிலும் ஒப்புக்கொடுப்பதன் மூலம் பங்குகொள்ள வேண்டுமென்றும் நமது கர்த்தர் கூறினார். இந்தக் கருத்துக்களானது, நமது கர்த்தருடன் ஒத்து இசைந்திருப்பவர்களுக்கு எத்துணை விலையேறப்பெற்றதாய்க் காணப்படும்!

இந்தச் சிந்தனைகளைச் சிந்தித்தவர்களாக, அவர்கள் யூதாசின் செயல்களை நினைத்துப்பார்க்கலாம். யூதாஸ் அதிகமாய்த் தயவு பாராட்டப்பட்டும், இழிவான ஆதாயத்திற்காக தனது ஆண்டவரை விற்கத்துணிந்தான். மேலும் ஆண்டவருக்குத் துரோகம் இழைக்க தைரியங்கொண்டு, "ரபீ நானோ" என்றும் கேட்டார். ஆண்டவரோடுகூட இருந்தவன் அவரை மறுதலித்து எதிரிகளிடம் காட்டிக்கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட செயல், அருவருக்கத்தக்கதாகவும், எச்சரிக்கையுடன் நமது இருதயத்தை நிரப்பக்கூடியதாகவும் இருக்க வேண்டும் மற்றும் கனத்திற்காகவோ, செல்வத்திற்காகவோ, வேறு எதற்காகவோ, சத்தியத்தையோ அல்லது கிறிஸ்துவின் சரீர அங்கமாகிய எந்த ஊழியக்காரரையோ விற்க நாம் துணிந்திடக்கூடாது.

நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பின்தொடர்ந்ததான துக்கம் நிறைந்த வேளையுள்ள சம்பவங்களைக் கவனிக்கத்தக்கதாக, நாம் மீட்பரைக் கெத்செமனேவுக்குப் பின்தொடர்ந்துபோய், "அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணுவதை" பார்க்கின்றோம். பிதாவின் திட்டத்தினை நிறைவேற்றுவதில், ஏதாகிலும் விஷயத்தில் தவறிப்போய் மற்றும் அதன் நிமித்தமாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரமற்றவராகக் கருதப்பட்டு விடுவாரோ என்று நமது ஆண்டவர் மரணப் பயத்தை வெளிப்படுத்துவதைப்பார்க்கின்றோம். நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை உண்மையாய்க் காத்துக்கொண்டுள்ளார் என்றும், வாக்களிக்கப்பட்டுள்ளதுபோல உயிர்த்தெழுதலை அடைவார் என்றுமுள்ள வாக்குறுதியினால் அவர் ஏதோ ஒரு விதத்தில் ஆறுதல்படுத்தப்பட்டதாக நாம் கவனிக்கின்றோம்.

இதற்குப்பிற்பாடு அவர் பிரதான ஆசாரியன் மற்றும் பிலாத்து மற்றும் ஏரோது மற்றும் மீண்டுமாகப் பிலாத்துவின் முன்னிலையில் எவ்வளவு அமைதியுடன் காணப்பட்டார் என்று நாம் கவனிக்கின்றோம். "தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்திமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தற்காத்துக்கொள்வதற்கெனத் - தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." அவர் முடிவுபரியந்தம் உண்மையாயும், தைரியமாகவும் இருந்ததாகப் பார்க்கின்றோம்; தம்முடைய பாதுகாப்பிற்கெனத் தம்மால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமானத் தூதரைப் பிதாவிடம் கேட்டிருக்கவும், பெற்றிருக்கவும் முடியும் என்றுமுள்ள அவரது நம்பிக்கையையும் நாம் பார்க்கின்றோம். ஆனால் தம்முடைய பலியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு உதவி வேண்டி விண்ணப்பிப்பதற்குப்பதிலாக, அவர் அவைகளை உண்மையாய்ச் சகிப்பதற்கு வேண்டிய உதவியையே விண்ணப்பித்தார். இங்கு அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களுக்கு எத்தகையதொரு படிப்பினைக் காணப்படுகின்றது!

## சுயபரிசோதனைக்கு ஒரு சந்தர்ப்பம்

இன்னொரு பக்கத்தில், அவரது உண்மையுள்ள சீஷர்கள் மத்தியில், மிகுந்த தைரியமானவர்கள்கூட, ஆண்டவரைவிட்டு, ஓடிப்போனார்கள் என்றும், அவர்களில் ஒருவர் தனது துணிவின்மையினால், தனது கர்த்தரையே மறுதலித்தார்! என்றும் நினைவுகூருகின்றோம். நம்மை மீட்டுக்கொண்டவருடன் பாடுபடுவதற்கான நமது விருப்பத்தின், நமது தைரியத்தின், நமது விசுவாசத்தின் அளவுத் தொடர்புடைய விஷயத்தில், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்துபார்ப்பதற்கான எத்தகையதொரு தருணமாய் இது காணப்படுகிறது! எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் (அ) சூழ்நிலையிலும் நமது ஆண்டவரை மறுதலிக்கமாட்டோம் என்றும், நம்முடைய உதடுகளினால் மாத்திரமல்லாமல், நம்முடைய நடத்தையினாலும் அவரை அறிக்கைப்பண்ணுவோம் என்றுமுள்ளதான தீர்மானங்களினால் மனதைத் தாங்கி ஆதரிப்பதற்கு எத்தகையதொரு சிலாக்கியம் இப்படியாக நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

யேகோவா தேவனுடைய ஜனங்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணினவர்களே ஜீவாதிபதியைச் சிலுவையில் அறைந்துப்போட்டார்கள் என்ற எண்ணத்தினால் நாம் அதிர்ச்சியடைகின்றோம்! இது மாத்திரமல்லாமல் இவர்களது மதத் தலைவர்கள், இவர்களது பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளே இந்தப் பயங்கரமான செய்கைக்குப் பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர். "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்பட வேண்டாம்; அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூருகின்றோம்.

## அதே பாத்திரத்தில் பானம்பண்ணுங்கள்

சத்தியத்திற்கான எதிர்ப்பும், ஒளியைச் சுமப்பவர்களுக்கான துன்புறுத்தலும் இன்று கிறிஸ்தவம் என்று அழைக்கப்படும் உலகத்தின் மிக முக்கியமான பிரதிநிதிகளிடமிருந்து வருவதைக் காண்கையில், நாம் ஆச்சரியமுற வேண்டாம். இந்த உண்மையானது நம்மை எதிர்ப்பவர்களையோ (அ) நமது கர்த்தரை மரணத்திற்கு ஏதுவாய்த் துன்புறுத்தினவர்களையோ பகைப்பதற்கு நம்மை வழிநடத்திடக்கூடாது. இக்காரியம் தொடர்புடையதான அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளாகிய "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆ, ஆம்! (மத உலகத்தாரின்) இருதயம் மற்றும் மனதின் குருட்டுத்தன்மையும், அறியாமையுந்தான் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்திற்குமான அடிப்படையாகக் காணப்படுகின்றது. இவைகள் தங்களினுடைய தலையானவருடைய உபத்திரவங்களில் குறைவானதை, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் நிறைவேற்றுவதுவரையிலும், இப்பொழுது காணப்படுவதற்குப் பிதா அனுமதித்துள்ளார் (கொலோசெயர் 1:24). சீக்கிரமாகவே நமது அருமை கர்த்தர் கூறியுள்ள பிரகாரமாகவே, இப்பொழுது அவரது பிட்கப்பட்ட சரீரத்தில் பங்கெடுத்து, அவரோடுகூடச் சத்தியத்தின் ஊழியத்தில் பிட்கப்படுகிறவர்களும், இப்பொழுது பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் எனும் அவரது பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களும், திரைக்கு அப்பால், இராஜ்யத்தில் அவரோடுகூடச் சந்தோஷத்தின் புதிய திராட்சரசத்தைப் பருகுவார்கள். (மத்தேயு 26:29)

## பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

அந்த மகிமையான காலையில், உலகைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கும் மாபெரும் வேலை ஆரம்பமாகும்; சீர்த்தூக்குதலின் மாபெரும் வேலை, "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" ஆரம்பமாகும் (அப்போஸ்தலர் 3:21). நினைவுகூருதலின் அனுசரிப்பில் பங்கெடுப்பவர்கள் ஒவ்வொருவரின் மனதிற்கு முன்பாகக் காணப்பட வேண்டிய சிந்தையானது, பரிசுத்த பவுல் அடிகளாரின் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அதாவது, "அவரோடுகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;" "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;" "ஏனெனில் அவை அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவமாய் இருக்கின்றது;" "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (உரோமர் 8:1-8) என்பதேயாகும்.

விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால் முதற்பேறானவர்களான நம்முடைய பாவங்களைக் கடந்துபோகுதல் குறித்தும், நமது பாக்கியமான கர்த்தருடன், அவரது பாடுகளின், மகிமையின் அனுபவங்களில் நாம் பங்கடைவது குறித்துமான இந்தச் சிந்தனைகளுடன், சோதனைகளும், கஷ்டங்களும் இருந்தாலுங்கூடச் சந்தோஷத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிப்போம். இப்படியாக அவரது பின்னடியார்களென உண்மையாய்த் தொடர்ந்து செய்துவருவோமானால், வெகு சீக்கிரத்தில் கர்த்தரால் ஆதரிக்கப்படுபவர்களை, அதாவது இறுதியில் மகா இராஜாவுக்குச் செவிக்கொடுத்து, அவரை அறிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்படியும் யாவரையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையிலிருந்து, எகிப்திலிருந்து, கானானுக்கு நேராய் வழிநடத்திடும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றுக்கொள்வோம். ஆம், சகோதரர்களே, அப்போஸ்தலரின் வசனத்தின்படி, "நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் . . . பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."

# இராஜ்யத்தில் சந்தோஷத்தின் பாத்திரம்

தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவின தருணத்தின்போது, ஆண்டவர் அப்போஸ்தலர்களுடனான தம்முடைய சம்பாஷணையில் கூறினதாவது: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29). இங்கு நமது கர்த்தர் இரண்டு மகா நாட்களை — பாடுபடுகிற நாளையும் மற்றும் மகிமையின் நாளையும் வித்தியாசப்படுத்துகின்றார். இந்தச் சுவிசேஷ யுகமானது பாடுபடுகிற நாளாய்க் காணப்படுகின்றது. ஆயிரவருட நாளானது, மகிமையின் நாளாகக் காணப்படும் மற்றும் இது விசேஷமாக "கிறிஸ்துவினுடைய நாள்" என்று பேசப்படுகின்றது.

திராட்சப்பழரசமானது, சொல்லர்த்தமான பாத்திரமானது, இரண்டு கருத்துக்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. திராட்சரச பாத்திரமானது, திராட்சப்பழமானது அதன் ஜீவனை இழந்துபோவதன் காரணமாக உண்டாகுகின்றது. திராட்சப்பழமானது, அதன் தனித்துவத்தை இழந்துபோகின்றதாய் இருக்கின்றது. சாறுபிழிந்தெடுக்கப்படுகின்றது மற்றும் இப்படியாகத் திராட்சப்பழரசமானது பயன்பாட்டிற்கென ஆயத்தம் பண்ணப்படுகின்றது. திராட்சரச பாத்திரமானது . . . திராட்சச்சாறானது திராட்சப்பழம் பிழியப்படுவதை மாத்திரமல்லாமல், இரசத்தின் காரணமாக உண்டாகும் மகிழ்ச்சியையும்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே அடையாளமான பாத்திரத்தில், நாம் பானம்பண்ணும் விஷயத்திலும் காணப்படும். நமக்கு அது நமது இரட்சகருடைய பாடுகளையும், மரணத்தையும் மற்றும் இந்தப் பாடுகளில் அவரோடுகூட நாம் பங்கடைவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆனால் திராட்சரசமானது, சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையுங்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்தில் வேதவாக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் முந்தின பத்தியில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டதான வார்த்தைகளாகிய திராட்சப்பழரசத்தின் விஷயத்தில், பாத்திரமானது இராஜ்யத்தின் சந்தோஷங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இயேசுவுக்கான பூமிக்குரிய அனுபவங்களினுடைய விஷயத்தில், பிதா அவருக்கு ஒரு குறிப்பிட்ட பாதையை அமைத்து வைத்திருந்தார். இந்தப் பாதையானது, பாடுகள் மற்றும் மரணம் எனும் அவருடைய பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அவர் இந்தப் பாத்திரத்தில் உண்மையாய்ப் பானம்பண்ணிட்ட பிற்பாடு, அவருக்கு வித்தியாசமான/வேறே பாத்திரம், வேறே அனுபவம், அதாவது கனம், மகிமை மற்றும் அழியாமை கொடுக்கப்படும் என்று பிதா அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மேலும் அவருடைய பின்னடியாளர்களாகுவதற்கு விரும்புகிறவர்களுக்கும் இதே செய்தியை, அதாவது அவரோடுகூடப் பாடுபட்டார்களானால், அவரோடுகூட மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணினார்களானால், அப்போது அவர்கள் சந்தோஷமாகிய அவரது வருங்கால பாத்திரத்திலும் பங்கடைவார்கள் என்று இரட்சகர் முன்வைக்கத்தக்கதாக, பிதா அவருக்கு அதிகாரம் அளித்தவரானார்.

# சிலுவையின் பாதையில்

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான்." திராட்சரச ஆலைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான சோதனையான அனுபவங்கள் வாயிலாக நாம் அனைவரும் கடந்துபோக வேண்டும். தெய்வீக ஊழியத்தில், நாம் நமது ஜீவியங்களை ஒப்புக்கொடுத்திட வேண்டும். மனிதன் எனும் விதத்தில் நாம் தடையம் இல்லாமல் போவதற்கும் மற்றும் புதிய சிருஷ்டிகளாகுவதற்கும் வேண்டி, நாம் நம்மை நொறுக்கும் அனுபவங்களுக்குள் ஒப்புக்கொடுத்திட வேண்டும். "அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோமே" ஒழிய, மற்றப்படியல்ல. ஆகையால் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கான அழைப்பை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளோம். பாத்திரமானது அதன் கடைசிவரை குடித்து முடிக்கப்படாததுவரையிலும், நாம் அடுத்தப் பாத்திரத்தை, அதாவது இராஜ்யத்தினுடைய சந்தோஷங்களாகிய பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. நமது கர்த்தர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது, அது அவருக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொணர்ந்ததாய் இருப்பினும், அது அவருக்கு இறுதி தருணம் வரையிலும், அதாவது "முடிந்தது" என்று சத்தமிட்டது வரையிலும், சோதனையான/துயரம் நிறைந்தவேளை போன்றதாகவே இருந்தது. இப்படியாகச் சபையின் விஷயத்திலும் காணப்படும். நாம் பாத்திரத்திலுள்ள அனைத்தையும் பானம் பண்ணிட வேண்டும்; பாத்திரத்திலுள்ள எதுவும் மீதியாய் வைக்கப்படக்கூடாது.

கிறிஸ்துவினுடைய சரீரமானது, அவர்களுடைய ஓட்டத்தை நிறைவுபண்ணும்போது, கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்துமே நிறைவடைந்துவிடும். நமது கர்த்தர் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவருக்குச் சந்தோஷத்தினுடைய புதிய பாத்திரமானது கொடுக்கப்பட்டது. அப்போது தேவனுடைய தூதர்கள் அனைவரும் அவரைத் தொழுதுகொண்டார்கள். சீக்கிரத்தில் நமக்கான சந்தோஷத்தின் பாத்திரமானது, நமக்குக் கொடுக்கப்படும். நித்திரையிலிருந்த பரிசுத்தவான்கள் விழித்தெழுந்து, தங்களுடைய பலனுக்குள் பிரவேசித்து, ஆசீர்வாதத்தின் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது, அது மகிமையானதொரு வேளையாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை (வேதாகம பாடங்கள், தொகுதி 3, பக்கங்கள் 290-301; தொகுதி 4, பக்கங்கள் 865-866 பார்க்கவும்). மேலும், ஆண்டவருடைய வருகையின்போது, உயிரோடிருப்பவர்களாய்க் காணப்பட்டவர்கள் ஒவ்வொருவராய், வீட்டிற்குள் சேர்க்கப்படுகின்றார்கள். நாமும் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டால், சீக்கிரத்தில் அவர்களோடுகூட இந்தச் சந்தோஷத்தின் பாத்திரத்தில் பங்குபெறுகின்றவர்களாய் இருப்போம் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்துவினுடைய அங்கத்தினர்கள் அனைவரும் திரைக்குப் பின்னாக வருவதுவரையிலும், பூரண ஆனந்தம் அடையப்படாது என்று நாம் நம்புகின்றோம். அப்போது அவரது சிங்காசனத்தில் நாம் பங்கடைந்து, அவரது மகிமையிலும் பங்குபெறுவோம். அப்போது நமது அருமை கர்த்தருடன் இராஜ்யத்தில், புதிய இரசத்தை நாம் பானம்பண்ணுவோம்; ஏனெனில் இதுவே அவரது உண்மையுள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்குமான வாக்குத்தத்தமாக இருக்கின்றது.

"யூத பலிபீடத்தில் கொல்லப்பட்ட
எல்லா மிருகங்களின் இரத்தமும்
குற்ற மனசாட்சியைத் தணித்திடாது
அல்லது கறைகளை முற்றும் கழுவாது.

"ஆனால் பரம ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து
நமது பாவங்கள் அனைத்தையும் நீக்குகிறார்;
உயர்ந்த நாமமுடையவரின் ஒரு பலி
அவைகளைக் காட்டிலும் விலையேறப்பெற்ற இரத்தம்.

"எனது ஆத்துமா திரும்பிப்பார்க்கிறது
அவர் சுமந்த சுமையை,
அவரது ஜீவனை எனக்காக ஊற்றும்பொழுது
அங்கே பார்க்கிறது அதன் மீட்கும்பொருளை."

*****

**R5640** 

## The Blood of Sprinkling of The Passover
## பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம்

''அந்த இரத்தத்தைக் காணும் போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்து போவார்.'' யாத் 12:23

யூதர்கள் ஆசரிக்கும் பஸ்கா காலம் நெருங்குகிறது. அது இந்த வருடம் (1915) மார்ச் 30ந் தேதி வருகிறது. (நீசான் மாதம் 15ம் தேதி உண்மையாக மார்ச் 29ந் தேதி திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கிறது. பஸ்கா விருந்துக்கு முன்னால் வருகிற ஆடு அடிக்கப்படுத-ல் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த முக்கியத்துவம் இருக்கிறது. நீசான் மாதம் 14ந் தேதி பஸ்கா ஆடு அடிக்கப்பட்டது. அது இந்த வருடம் மார்ச் 28ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கிறது. உண்மையான பஸ்கா ஆடாகிய நமது ஆண்டவராகிய இயேசுவின் மரணத்தை நினைவு கூருதல் அதே நாளில் ஆசரிக்கப்பட வேண்டும். ஆகையால் நாம் அதை மார்ச் 28ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஆசரிக்க வேண்டும். சரித்திரத்தின் பெரிய நிகழ்வாகிய இதை இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களும் யூதர்களும் சம்பிரதாய சடங்காகவும் கடனுக்காகவும் ஆசரிக்கிறார்கள், ஆனால் இந்த இரு மதத்திலும் மிகச் சிலரே இதன் உண்மையான தாற்பரியத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்பதில் நாம் எவ்வளவு வருத்தப்படுகிறோம்!

### பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

இதன் உண்மையான தாத்பரியத்தை இதுவரை அறிந்திராத உலகத்திற்கு ஒரு மத மறுமலர்ச்சி மூலம் எல்லாருடைய மனதையும் முற்றிலுமாக விழித்தெழ செய்திருக்கக்கூடும். ஆனால் ஐயகோ! அப்போஸ்தலர் கூறுவது போல இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அநேகருடைய மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான். அப். பேதுரு கூறுவது போல கொஞ்சம் மனக்கண்கள் திறக்கப்பட்ட சிலர் கூட, கடந்த 3500 வருடங்களாக இந்த உலகத்திலே ஆசரித்து வருகிற இந்த சடங்காச்சாரங்களில் தேவன் வைத்திருக்கிற ஆழ்ந்த கருத்துக்களை அறியக் கூடாதபடி இருக்கிறார்கள். குறை கூறி விமர்சிப்பவர்களும், ஏற்றுக் கொண்ட பிரகாரம், ஒரு சடங்காச்சாரம் மிக நீண்ட காலமாக ஆசரிக்கப்பட்டு வருகிறது என்றால் உண்மையிலே அதற்கு ஒரு அடிப்படை இருக்க வேண்டும். எகிப்தில் அப்படிப்பட்ட நிகழ்வு நடந்திருக்க வேண்டும். பத்தாவது வாதையில் எகிப்தின் தலைச்சன்கள் எல்லாம் அழிந்திருக்க வேண்டும், இஸ்ரயே-ன் தலைச்சன்கள் எல்லாம் காக்கப்பட்டிருக்க வேண்டும் (அதாவது இரத்தத்திற்கு கீழாக இருக்க வேண்டும் என்ற கட்டளையை ஆசரித்தவர்கள் அனைவரும்) இல்லையென்றால் விஸ்தாரமாக பரவியுள்ள இந்த சடங்காச்சாரம் ஒரு மாயமானதாக இருந்திருக்கும்.

இஸ்ரயேலர்கள் எகிப்தியர்களால் ஒருகுறிப்பிட்ட காலம் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தனர். அவர்கள் அடிமைத்தனத்தி-ருந்து விடுதலையாகும்படியான தேவனுடைய கிருபையின் காலம் வந்தபோது, எகிப்தியர்கள் அவர்களை கானான் தேசத்திற்கு போகவிடாமல் இன்னும் அடிமைப்படுத்தி வந்த போது இந்த சடங்காச்சாரம் ஏற்படுத்தப்பட்டது. இதைத் தவிர வேறு எதையும் நாங்கள் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அந்த வருடத்தில் தேவன் ஒன்றன்பின் ஒன்றாக ஒன்பது வாதைகளை எகிப்தியர்கள் மேல் அனுப்பினார். அப்பொழுது எகிப்திய ராஜா, இஸ்ரயேலர்களை விடுவிப்பேன் என்று வாக்கு கொடுத்து, வாதைகளை நீக்கச் சொல்- தேவனிடம் கேட்ட போது அவரும் அதை நீக்கினார். ஆனால் எகிப்திய ராஜா அந்த வாக்கை காப்பாற்றவில்லை. கடைசியாக தேவனுடைய ஊழியக்காரன் மோசே உச்சக்கட்டமாக ஒரு பெரிய அழிவை தெரிவித்தான். அதாவது ஒரு இரவிலே எகிப்தியரின் ஒவ்வொரு குடும்பத்திலும் தலைச்சன் பிள்ளைகள் இறந்துவிடும், அதனிமித்தம் எகிப்து முழுவதும் ராஜாவின் வீட்டிலும் ஒரே புலம்பலாக இருக்கும். இதன் பலனாக இஸ்ரயேலரை போக அனுமதிப்பார்கள். அவர்களை சீக்கிரம் போகும்படி துரிதப்படுத்துவர்கள். அப்படியில்லாமல் ராஜா இன்னும் தனது இருதயத்தை கடினப்படுத்தி தேவனுடைய கட்டளையை தொடர்ந்து எதிர்த்தால் எகிப்தின் முழு ஜனங்களுக்கும் தேவன் மரணத்தை கொண்டு வருவார்.

முதல் மூன்று வாதைகள் எகிப்தியருக்கும் இஸ்ரயேலர் வாழும் பகுதிகளிலும் பொதுவாக வந்தது. அடுத்த ஆறு வாதைகள் எகிப்தியர் வாழும் பகுதிகளை மட்டும் வாதித்தன. கடைசியாக பத்தாவது வாதை எகிப்தின் முழுமைக்கும் பொதுவாக இருந்தது. ஆனால் இஸ்ரயேலர்கள் தங்கள் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் காண்பிக்கும் பொருட்டு ஒரு ப-க்குரிய ஆட்டை அடித்து, அதன் இரத்தத்தை வாசற்கால்களிலும் மேல் சட்டத்திலும் தெளித்து, அந்த இரவிலே அதன் மாம்சத்தை கசப்பான கீரையோடும் புளிப்பில்லா அப்பத்தோடும் கையிலே தடி பிடித்துக்

கொண்டும், அரையிலே கச்சைக் கட்டிக் கொண்டும் பிரயாணத்துக்கு தயாராக இருந்து புசிக்க வேண்டும். இன்னும் அந்த இரவிலே எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளின் மரணத்தையும் முழுமையாக எதிர்பார்த்திருக்க வேண்டும். யார் வீட்டின் வாசற் கால்களிலும், மேல் சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்படவில்லையோ அவர்கள் வீட்டிலும் இந்த சங்காரம் எதிர்பார்க்கப்பட வேண்டும்.

### உண்மையான பஸ்கா ஆடு

இந்த பஸ்காவை இஸ்ரயேலர்கள் யூத பிரமாணங்களில் முதலாவது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் முழு இஸ்ரயேலருக்கும் ஒரு பெரிய ஞாபகார்த்தம் வாய்ந்ததாகவும் ஆசரிக்க கட்டளையிடப்பட்டார்கள். உண்மையைச் சொல்லப் போனால், இந்த பஸ்காவை ஏதோ ஒரு கோணத்தில் இஸ்ரயேலர்கள் உலகமெங்கும் கடவுளை நம்பாதவர்களாக, கடவுளை மறுப்பவர்களாக தங்களை கூறிக்கொள்பவர்களும் கூட ஆசரிப்பதை நாம் காண்கிறோம். அதை ஒரு பழங்கால சடங்காச்சாரமாக அவர்கள் மதிக்கிறார்கள். நமது யூத நண்பர் அநேகர் பிரகாசமான அறிவை உடையவர்களாக இருந்தும் கூட இந்த ஆசரிப்பின் அர்த்தம் என்ன என்பதை அறிய ஆவல் இல்லாதவர்களாக இருப்பது விநோதமாக இல்லையா? ஏன் ஆடு அடிக்கப்பட்டு புசிக்கப்பட்டது? ஏன் அதன் இரத்தம் வாசல் நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்டது? ஏனெனில் அது தேவனால் நிச்சயமாக கட்டளையிடப்பட்டது. ஆனால் என்ன காரணத்திற்காக, அதன் முக்கியத்துவம், நோக்கம் என்ன அல்லது தெய்வீக கட்டளையில் மறைந்திருக்கிற பாடம் என்ன? ஒரு உண்மையான தேவன் நியாயமான கட்டளைகளை கொடுக்கிறார். மேலும் குறித்த காலத்தில் அந்த கட்டளைகளின் உண்மையான தாற்பரியத்தை அவரது உண்மையுள்ள ஜனங்கள் புரிந்து கொள்ள விருப்பம் உள்ளவராக இருப்பார்கள். ஏன் இந்த காரியத்தில் எபிரேயர்கள் சிரத்தையில்லாமல் இருக்கிறார்கள்? ஏன் தவறான எண்ணம் அவர்களை ஆட்கொண்டிருக்கிறது?

கிறிஸ்தவ மதத்தில் அந்த கேள்விக்கான பதில் இருந்தால் கூட, சிரத்தையின்மையால் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இதைக் குறித்த சரியான காரணத்தையும் தாற்பரியத்தையும் சொல்ல முடியாதவர்களாயிருக்கின்றனர். ஓய்வு நாள் என்பது கடின உழைப்பு, வருத்தம் மற்றும் மரணம் போன்றவைகளி-ருந்து விடுவிக்கப்பட்டு, ஓய்வும் ஆசீர்வாதமும் இருக்கும் வரப்போகிற ஒரு யுகத்தின் நிழலாக அல்லது முன்னடையாளமாக இருக்கிறது என்பதை ஒரு யூதன் உணர்ந்து கொள்ளக் கூடுமானால், அதே போல மோசேயின் பிரமாணத்தின் எல்லா அம்சங்களும், குறித்த காலத்தில் கொடுக்கப்படப் போகிற பல்வேறு ஆசீர்வாதங்களுக்கு முன்னடையாளமாக தேவனால் திட்டமிடப்பட்டவை என்று ஏன் அவனால் காண முடியாது? பஸ்கா ஆடு, தேவ ஆட்டுக்குட்டியை அடையாளப்படுத்துகிறது என்பதையும், அதன் மரணம் மேசியாவாகிய இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது என்பதையும் ஏன் எல்லாராலும் பகுத்துணர முடியவில்லை? மேலும் இரத்தம் தெளிக்கப்படுதல் இயேசுவின் மரணத்தின் புண்ணியத்தை விசுவாச வீட்டாருக்கு சாட்டுதலை அடையாளப்படுத்துகிறது என்பதையும் ஏன் பகுத்துணர முடியவில்லை.

''உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' இயேசுதான் என்பதை காண்கிற விசுவாசகண்களை உடையவர்கள் பாக்கியவான்கள். அதாவது ஆதாமின் தண்டனைக்கு கொடுக்கப்பட்ட விலைக்கிரயம் தான் உலகத்தின் பாவத்தை நீக்குகிறது. ஆதாமின் பாவத்தினால் அகில உலகமும் தேவகிருபையை இழந்து, தெய்வீக தண்டனையாகிய மரணத்திற்குள்ளாக வந்து வேதனையும் வருத்தமும் பரவியிருக்கிறது. இந்த தண்டனையையோ அல்லது சாபத்தையோ நீக்குவதற்கு முன் நீதி திருப்திபடுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகையால் அப்போஸ்தலர் கூறுவது போல், நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார். இப்படியாக அவர் ''புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை'' அதாவது நித்திய ஜீவனுக்கான ஒரு மார்க்கத்தை திறந்தார்.

### ''முதற்பலன்கள்''

கிறிஸ்துவின் சபை, ''முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை'' என்றும், ''தேவனுடைய சிருஷ்டிகளில் முதன்பலன்கள்'' என்றும் வேதம் குறிப்பிடுவதை வேதத்தில் அதிக பழக்கமுள்ளவர்கள் கவனித்திருப்பார்கள். (எபி 12:23; யாக் 1:18; வெளி 14:4) இது தேவனுடைய வீட்டில் மற்றவர்கள் பிற்பலன்களாக இருக்கிறார்கள் என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. கிறிஸ்தவ ஜனங்கள் இந்த வசனங்களை கவனிக்கிறதில்லை. பொதுவாக அவர்கள் முதற்பலன்களானவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும் பிற்பலன்களானவர்கள் யாரும் இல்லை என்றும் நம்புகிறார்கள், நாம் இந்த பஸ்காவின் அடையாளத்தைக்

கவனிப்போம். இஸ்ரயேலர்கள் அனைவரையும் இரட்சிப்பதே தேவனுடைய திட்டம் என்பதை நாம் கவனிப்போமாக. இஸ்ரயேலர் ஒரு ஜாதியாக, எப்பொழுதும் தேவனுடன் இசைவாயிருக்கும்படியாகவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நித்திய ஜீவனை பெறப்போகிற மனுக்குலம் அனைத்தையும் குறிக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

அங்கே இரண்டு பஸ்காக்கள் இருந்ததை நாம் கவனிப்போமாக. இதில் பெரிய பஸ்கா என்பது முழு இஸ்ரயேல் ஜாதியையும் தெய்வீக சக்தியால் விடுவித்தபோது ஆசரித்தது. அவர்கள் செங்கட-ன் மணல் மேடுகளில் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட காற்று மற்றும் கட-ன் ஏற்ற இறக்கத்தின் மூலமாக வழி நடத்தப்பட்டார்கள். கடைசியாக தேவனுக்கு ஆராதனை செய்யும் விருப்பத்தோடு அவருக்கு இசைந்து வருகிறவர்களை பாவத்தி-ருந்தும் சாத்தானிடமிருந்தும் விடுவிக்கிறதை இந்த முன்னடையாளம் காண்பிக்கிறது. இதில் ஒரு இஸ்ரயேலன் கூட விடப்படவில்லை.

செங்கட-ல் நடந்த அந்த பஸ்காவை நாம் இந்த சமயத்தில் ஆராயப்போவதில்லை. இப்பொழுது நாம் ஆசரிக்கப்போகிற பஸ்கா இதன் உண்மைப்பொருள் அல்ல. முதற்பேறானவர்களை இரட்சித்த அந்த பஸ்காவின் உண்மைப் பொருளைத் தான் நாம் ஆசரிக்கிறோம். முதற்பேறானவர்கள் மட்டும் ஆபத்தில் இருந்தார்கள். எல்லாருடைய இரட்சிப்பும் இந்த முதற்பேறானவர்களையே சார்ந்திருந்தது. இதற்கு இசைவாயிருக்கிற அனைத்து வேதவாக்கியங்களோடு இதை பொருத்திப்பார்க்கும் போது, தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பேறானவர்கள் மாத்திரமே தற்காலத்தில் காக்கப்படுவார்கள். இந்த முதற்பேறானவர்கள் சபையை, இரத்தத்திற்கு கீழ் இருக்கிறவர்களை குறிப்பிடுகிறார்கள். மீதமுள்ள மனுக்குலத்தில், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத் தனத்தி-ருந்து உண்மையான மகா பெரிய மோசே விடுவிக்கும் போது அவரை பின்பற்ற விரும்புகிறவர்கள் இப்போது ஆபத்தில் இல்லை; பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்கள் மாத்திரமே இப்போது ஆபத்தில் இருக்கிறார்கள்.

### “முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை”

முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை என்பது, மனுக்குலத்தில் முன்னதாகவே மனக்கண்கள் திறக்கப்பட்டு, தங்களது அடிமைத்தனத்தையும், மீட்பின் அவசியத்தையும், தேவனுடைய நல்ல வாக்குத்தத்தங்கள் தங்களில் நிறைவேற வேண்டும் என்கிற அவருடைய விருப்பத்தையும் உணர்ந்திருக்கிறவர்கள் ஆகும். இதற்கும் மேலாக, அவர்கள் தேவனுடைய கிருபைக்கு மதிப்பளித்து, தங்களை முற்றிலுமாக அவருக்காகவும் அவரது ஊழியத்திற்காகவும் அர்ப்பணித்ததினிமித்தம் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் ஆகும். இந்த முதற் பேறானவர்களுக்கு ஜீவனா, மரணமா அல்லது தெளிக்கப்பட்ட இரத்தத்திற்கு பின்னால் விசுவாசிகளின் வீட்டில் தரித்திருப்பார்களா என்ற நிலைதான் இப்போது இருக்கிறது. இந்த நிலைமையி-ருந்து அவர்கள் சென்றால், அவர்கள் தெய்வீக இரக்கத்தி-ருந்து நீக்கப்பட்டவர்களாக பொருள்படும். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் குறிக்கப்பட்டுள்ள தேவனுடைய இரக்கத்தில் தங்களது பங்கை அனுபவித்துவிட்டு தேவனுடைய நன்மையை வெறுப்பதையும் அவர்கள் அதை பாராட்டுகிறவர்களாக இல்லாதிருப்பதையும் அது குறிப்பிடுகிறது. அப்படிப்பட்டவர்களைக் குறித்து வேதம் கூறுகிறதாவது; ‘‘அவர்களது பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு ப- இனி இராது.’’ அவர்கள் தேவனுடைய சத்துருக்களாக கருதப்படுவார்கள். அவர்களது முடிவு எகிப்தியரின் முதற்பேறானவர்களின் அழிவின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த இரவில் மரித்த எகிப்தியரின் தலைச்சன்களும், கட்டளைக்கு விரோதமாக வீட்டைவிட்டு வெளியே சென்றதினால் மரித்த இஸ்ரயேலர்களும் இரண்டாம் மரணத்திற்கு சென்றுவிட்டார்கள் என்று நாங்கள் சொல்வதாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம். அதற்கு முற்றிலும் மாறாக, இந்த காரியங்கள் எல்லாம், சுவிசேஷ யுகத்தில் பெந்தெகொஸ்தே நாளி-ருந்து இருக்கிற கிறிஸ்துவின் சபையின் நிஜங்களுக்கும், உயர்வானவைகளுக்கும் முன்னடையாளங்களாகவும், உருவகங்களாகவும், விளக்கங்களாகவும் இருக்கின்றன என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பும், தேவனுடைய நல்வார்த்தையை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், இப்படியாக முதற்பேறானவர்களின் சபையின் அங்கத்தினரான பிறகும் மனப்பூர்வமாய் பாவம் செய்தால், மறுத-த்துப் போனால் மனந்திரும்புகிறதற்கேதுவாக அவர்களை மறுபடியும் புதுப்பிப்பது கூடாத காரியம். இதற்கு மேலும் தேவன் நமக்காக எதையும் வைத்திருக்கவில்லை. நாம் அவரது இரக்கத்தை அசட்டை செய்தால், நாம் இரண்டாம் மரணத்தில் மரிப்போம். 2 பேது 2 :12 ; யூதா 12

இந்த கருத்தில் பார்க்கும்பொழுது முதற்பேறானவர்களாகிய சபையார் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, அதிகமான அறிவையும், சலுகைகளையும் எல்லா வழிகளிலும் அனுபவித்திருக்கிறபடியால், அவர்கள் உலகத்தாரைக் காட்டிலும் அதிகமான பொறுப்புடையவர்களாக இருப்பதால், இவர்கள் மட்டுமே இரண்டாம் மரணம் என்கிற ஆபத்தில்

இருக்கிறார்கள். இந்த முன்னடையாளத்தின் பாடம் இது தான். இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே பொருத்தக் கூடியதாக இருக்கிறது.

விரைவில் இரவு சென்று, விடுதலையின் மகிமையான காலை வரும். தலையும் சரீரமும் இணைந்த கிறிஸ்துவாகிய உண்மையான மோசே, இஸ்ரயேலர்கள் அனைவரையும் – தேவனுடைய பிள்ளைகள் அனைவரையும் – வழி நடத்தி விடுவிப்பார். இதை அறியும்போது அவர்கள் தேவனுடைய சித்தத்துக்கு கீழ்ப்படிவதிலும், தேவனை கனப்படுத்தி மகிமைப் படுத்துவதிலும் சந்தோஷம் அடைவார்கள். இந்த விடுதலையின் நாள் முழு ஆயிரவருட யுகமாகும். இதன் முடிவில், எகிப்திய சேனைகளால் அடையாளப்படுத்தப்பட்ட தீமையும், தீங்கு செய்பவர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

### "இதை நீங்கள் செய்யும் போதெல்லாம்"

நமது கர்த்தராகிய இயேசுதான் பஸ்கா ஆடு என்று அப்போஸ்தலர் தெளிவாகவும், உறுதியாகவும் கூறுகிறார். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக ப–யிடப்பட்டிருக்கிறாரே. ஆகையால்..... பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்." (1 கொரி 5:7,8) நம் எல்லோருக்கும் "தெளிக்கப்படும் இரத்தம்" தேவைப்படுகிறது. நமது வீடுகளின் மேல் அல்ல, நமது இருதயங்களில் ஆகும். (எபி 12:24;1 பேது 1:2) புளிப்பில்லா அப்பத்தை (சுத்தமான, கெட்டுப்போகாத) சாப்பிட வேண்டும். ஏனெனில் புதிய யுகத்தின் காலை வேளையில் விடுதலைக்கு தயாராகவும் பலமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் ஆட்டின் மாமிசத்தையும் சாப்பிட வேண்டும். அதாவது நமக்குள்ளும், கிறிஸ்துவிலும் இருக்கும் அவரது மதிப்பை நாம் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். இப்படியாக நாம் கிறிஸ்துவை தரித்துக் கொள்ள வேண்டும். வெறும் விசுவாசத்தினால் மாத்திரமல்ல, அவரது பண்புகளில் நாம் மென்மேலும் வளர்ந்து, ஒவ்வொரு நாளும் நாம் நமது இருதயங்களில் அவரது மகிமையின் சாயலாக மறுரூபமடைய வேண்டும், இஸ்ரயேலர்கள் சொல்லர்த்தமான ஆட்டின் மாமிசத்தால் போஷிப்பிக்கப்பட்டது போல நாமும் அவரால் போஷிப்பிக்கப்பட வேண்டும். பசியை தூண்டுகிற, உதவி பண்ணுகிற கசப்பான கீரைகளுக்கு பதிலாக தேவன் நமக்கு கொடுக்கிற கசப்பான அனுபவங்களும் சோதனைகளும் நமக்கு இருக்கிறது. இது நமது பூமிக்குரிய ஆசைகளை வெறுக்கச் செய்யும்; சத்தியம் என்னும் புளிப்பில்லா அப்பத்தையும் ஆட்டு மாமிசத்தையும் புசிக்கும்படி ஆசையை தூண்டும். நாம் தொடர்ந்து செல்வதற்கான பட்டணம் இல்லை என்பதை நினைவு கூர வேண்டும். ஆனால் யாத்ரீகர்களாக, பிரயாணிகளாக, பரதேசிகளாக கையில் தடிபிடித்துக் கொண்டு இடுப்பில் கச்சையுடன் பரம கானானுக்கும், முதற் பேறானவர்களின் சபைக்கும் தேவன் ஆயத்தம் பண்ணியிருக்கிற மகிமையான காரியங்களுக்கும் நாம் பிரயாணப்படுகிறோம்.

நமது கர்த்தராகிய இயேசு கூட தம்மை பஸ்கா ஆடாக முழுமையாக அடையாளப்படுத்திக் கொண்டார். அவர் சிலுவையிலறையப்படுவதற்கு முன்னால், அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே, மேல் அறையிலே தமது அப்போஸ்தலர்களை கூடிவரச் செய்து அவர் கூறிய தாவது "நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்." அன்று இராத்திரியிலே யூதர்களாக பஸ்காவை ஆசரிக்க வேண்டும் – நிழலான "இந்த உலகத்தின் அதிபதியிடமிருந்து" நிழலான முதற்பேறானவர்களை காப்பதற்காக. ஆனால் நிழலானவைகள் நிறைவேறின உடனே நமது கர்த்தர் பழைய அஸ்திபாரத்தின் மேல் புதிய ஞாபகார்த்தத்தை ஏற்படுத்தினார். அப்பொழுது அவர் கூறியதாவது: "நீங்கள் இதை (வருடம் ஒருமுறை இந்த பஸ்கா நினைவு கூருதலை) செய்யும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி செய்யுங்கள்." (1 கொரி 11:24, 25)ஆனால் அறிவுக்கண்கள் திறக்கப்படாத உங்கள் அண்டை வீட்டாரான யூதர்கள் இதன் உண்மைப் பொருளை அறியாததால் அதை அவர்கள் உயர்வாக நினைக்கமாட்டார்கள். ஆனால் நீங்கள் என்னை தேவனுடைய திட்டத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகவும், உலகின் இரட்சிப்பின் விலைக்கிரயமாக நான் எனது ஜீவனை கொடுக்கப் போவதையும் அறிந்த நீங்கள் இந்த பஸ்கா காலத்தை சிறப்பானதாக, புனிதமானதாக கவனிப்பீர்கள். மற்றவர்கள் இதை உணரமாட்டார்கள். இதுமுதல் நீங்கள் இந்த நிழலானதை ஆசரிக்க மாட்டீர்கள். ஆனால் உண்மைப் பொருளை ஞாபகப்படுத்துவீர்கள். ஏனெனில் நான் தேவ ஆட்டுக்குட்டியாக மரிக்க இருக்கிறேன். இப்படியாக, முதற்பேறான சபைக்கு தெளிக்கப்படும் இரத்தத்தையும் மாமிசத்தையும் முழு விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப் போகிறேன்.

### "இது உங்களுக்காக மீட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது"

எகிப்தி–ருந்து விடுதலையானதை நினைவு கூரும் பொருட்டு, பஸ்கா ஆட்டை யூதர்கள் புசித்து வந்ததைப் போல, கர்த்தரின் சீஷர்கள் இனி செய்யமாட்டார்கள். ஏனெனில் நமது ஆண்டவர் புதிய அடையாளங்களாக புளிப்பில்லா அப்பத்தையும், திராட்ச ரசத்தையும்

தேர்ந்தெடுத்து இது தம்மை குறிப்பிடுவதாக காண்பித்தார். அதுமுதல் அவரது சீஷர்கள் அவர் கட்டளையிட்டபடி, அவரது மரணத்தை பஸ்கா ஆடாக அப்போஸ்தலர் மரணம் வரை ஆசரித்து வந்தனர். அதன் பிறகு ஒரு விசுவாச வீழ்ச்சியின் மூலம் பேர் கிறிஸ்தவ சபையில் குழப்பங்கள் ஏற்பட்டு இருண்ட யுகம் என்று சொல்லக் கூடிய காலம் வந்தது. அந்த இருண்ட யுகத்திலும் கூட இயேசுதான் உண்மையான பஸ்கா ஆடு என்ற போதனை உறுதியாக இருந்தது. ஆனால் இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட பஸ்கா இராப்போஜனத்தில் அவரது மரணத்தை ஆசரிப்பது உபயோகத்தில் இல்லாமல் போனது. ரோமன் கத்தோ–க்க சபையால் ஏற்படுத்தப்பட்ட பூஜைப– **(Mass)** என்பது இலட்சக்கணக்கான பேர் கிறிஸ்தவர்களை வஞ்சித்து குழப்பியது. தெய்வ நிந்தனையான அநேக காரியங்கள் புகுத்தப்பட்டன. இந்த பூஜை ப–யைத்தான் ''பாழாக்கும் அருவருப்பு'' என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. இதன் நாசகரமான செல்வாக்கு கர்த்தரின் பிள்ளைகளுடைய விசுவாசமும் பழக்கமும் ஆனது. புரட்டஸ்டண்ட் சபையார் பொதுவாக இந்த பூஜை ப–யை ஒதுக்கி வைத்திருக்கின்றனர். ஏனெனில் இது கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதகங்களுக்கு எதிராக இருக்கிறது. எனினும் இந்த புரட்டஸ்டண்ட் சபையார் இந்த பயங்கரமான தப்பறையினால் வசீகரிக்கப்பட்டு இருக்கிறார்கள், ஆனால் கொஞ்சமாக தப்பியிருக்கிறார்கள்.

### பூஜை ப- புனித அப்பமல்ல

அநேக புரட்டஸ்டண்ட் சபையார், பூஜை ப– என்பது புனித அப்பம் என்ற வேறொரு பெயரில் கர்த்தரின் இராப்போஜனம் அல்லவா என்று வெகுளித்தனமாக கேட்கிறார்கள். இல்லை, இது முற்றிலும் மாறானது என்று பதில் கூறுகிறோம். கர்த்தரின் இராப்போஜனம் என்பது கல்வாரியில் நிறைவேறிய கர்த்தரின் மரணத்தை ஆசரிப்பதாகும். பூஜை ப– செய்யப்படும் ஒவ்வொரு தடவையும், அது பாவத்திற்கான ஒரு புது ப–யைக் குறிக்கிறது. குருவானவர் அப்பத்தை ஆசீர்வதிக்கும்போது, அது கிறிஸ்துவின் உண்மையான சரீரமாக மாறுகிறது. ஏனெனில் அவரை புதிதாக ப– யிடுவதற்காக ஆகும். இப்படியாக ரோம சபை நண்பர்கள் நம்புகிறார்கள். பாடல் பூஜை என்பது ஒரு குறிப்பிட்ட நபரின் ஒரு குறிப்பிட்ட பாவத்திற்காக கிறிஸ்துவின் ஒரு குறிப்பிட்ட ப–யாக இருக்கிறது. சாதாரண பூஜை என்பது ஒரு சபையாரின் பொதுவான பாவங்களுக்காக கிறிஸ்துவின் ப–யாக இருக்கிறது. கிறிஸ்து கல்வாரியில் செலுத்திய ப–, முதலாவதான மற்றும் கடந்த கால பொதுவான பாவங்களுக்கான ப– என ரோமச் சபையார் நம்புகின்றனர். ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் அனுதினமும் செய்கிற பாவங்கள், தவறுகள், களங்கங்கள் ஆகியவைகளை போக்குவதற்கு கிறிஸ்துவின் புதிய ப– அவ்வப்போது தேவைப்படுகிறது என்று அவர்கள் கூறுகின்றனர். இப்படியாக அவர்களுடைய இந்த கருத்தின்படி, பூஜை ப–குறிக்கிறபடி, ரோமன் கத்தோ–க்கர், கிரேக்க கத்தோ–க்கர், மற்றும் குருமாரைச் சேர்ந்தவர்களும் அனுசரிக்கிறபடி, உலகெங்கிலும் கிறிஸ்து புதியதாக ப–யிடப்பட்டுக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பார்வையில் இது தான் ''அருவருப்பு'' என்று வேத வாக்கியங்கள் கூறுகிறது. ஏனெனில் கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்றும் ''கிறிஸ்து தம் மூலமாக பிதாவினிடத்திற்கு வருகிறவர்களை ஒரே ப–யினாலே என்றென்றைக்கும் பூரண படுத்தியிருக்கிறார்'' என்று கூறுகிற வேத வாக்கியங்களை அவர்கள் அவமதிக்கிறார்கள், பயனற்றதாக செய்கிறார்கள், ரோமர் 6:9; எபி 10;14

ஞாபகார்த்த இராப்போஜனம் மற்றும் பஸ்காவில் குறிப்பிட்டு காட்டப்பட்ட கல்வாரியின் மகா பெரிய ப–யின் மதிப்பை, பூஜை ப–யில் அடிக்கடி செலுத்தப்படுகிற ப–கள் குறைக்கின்றன அல்லது செல்லாததாக்குகின்றன என்பதை உடனடியாகக் காண முடிகிறது. தங்களுடைய பாவங்களை நீக்குவதற்காக பூஜை ப–யை காண வந்திருந்தவர்களை, மெய்யான பஸ்காவின் ஆழ்ந்த கருத்துக்களை கவனிக்கும்படி நாம் எப்படி எதிர்பார்க்க முடியும். பெரிய வெள்ளி தொடர்ந்து ஆசரிக்கப்படுவதால் அதற்கு முன் ஆசரிக்கப்பட வேண்டிய ஞாபகார்த்த இராப்போஜனக் காரியங்கள் வெகு காலத்துக்கு முன்பே உபயோகப்படாமல் போனது.

புரட்டஸ்டண்ட் சபையாரைப் பொருத்தவரை, பூஜை ப–யை வேதத்திற்கு விரோதமானது என்று ஒதுக்கியபடியால் கர்த்தரின் இராப் போஜனத்தை ஆசரிக்கும்படி திரும்பினார்கள். எனினும் பூஜைப–யை அடிக்கடி செய்து பழகியிருந்தபடியால், கர்த்தரின் இராப்போஜனத்தை எத்தனை தடவை செய்ய வேண்டும் என்பதில் மிகவும் கவனம் செலுத்தினார்கள். ஆகையால் சிலர் நான்கு மாதங்களுக்கு ஒரு முறையும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் சிலர் மாதம் ஒரு முறையும், சிலர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஆசரிக்கிறார்கள். இதை எத்தனை தடவை ஆசரிக்க வேண்டும் என்பதில் ஒத்த கருத்து வராததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 1) நமது கர்த்தரின் மரணம் மெய்யான பஸ்கா ஆட்டின் மரணம் என்பதையும் அதன் ஆசரிப்பு மெய்யான பஸ்கா இராப்போஜனம் என்பதையும் கிறிஸ்தவர்கள் பொதுவாக கவனிக்க தவறுகிறார்கள். 2) ''நீங்கள் இதை செய்யும் போதெல்லாம்'' என்று நமது கர்த்தர் சொன்ன வார்த்தைகளை உங்கள் விருப்பத்தின்படி அடிக்கடி செய்யுங்கள் என்று அவர்கள் தவறாக புரிந்து

கொண்டிருக்கின்றனர். ஆனால் அது ''நீங்கள் செய்யும் போதெல்லாம்'' என்றே குறிக்கிறது. இதைச் செய்யும் போதெல்லாம் எனது சீஷர்கள் (அவர்கள் எல்லாரும் யூதர்கள், பஸ்காவை ஆசரிக்கும் பழக்கமுடையவர்கள்) என்னை நினைவு கூரும்படி இதைச் செய்வார்கள்; சொல்லர்த்தமான பஸ்கா ஆட்டையும் நிழலான முதற்பேறானவர்களை கடந்து சென்றதின் மூலம் எகிப்தின் அடிமைத் தனத்தி-ருந்து நிழலான விடுதலையையும் நினைவு கூரும்படி அவர்கள் இதைச் செய்யமாட்டார்கள்.

வாரம் ஒரு முறை கர்த்தரின் இராப்போஜனத்தை ஆசரிப்பவர்கள் வேத வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்கள். ஏனெனில் ஆதிகால சபையில் வாரத்தின் முதலாம் நாள் கூடி அப்பம் பிட்டார்கள் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். நினைவு கூருதலான இராப்போஜனத்தை அப்பம்பிட்குதலோடு குழப்பிக்கொள்வது ஒரு பெரிய தவறாக இருக்கிறது. ஏனெனில் அப்பம் பிட்குதல் என்பது சாதாரண உணவு சாப்பிடுதலை குறிக்கிறது. இதைத் தவிர வேறு எதையும் குறிப்பிடுவதாக வேதத்தில் எந்த பதிவும் இல்லை. திராட்சைரசம் எதுவும் இதனுடன் குறிப்பிடப்படவில்லை. அப்பம், பிட்கப்பட்ட கர்ததரின் சரீரத்தை குறிப்பிடுவதாக சொல்லப்படவில்லை. ஆதிகால சபையில் வாரத்தின் முதலாம் நாள் கூடி நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலை கொண்டாடுவது ஒரு உற்சாகமுள்ள சமூக வழக்கமாக இருந்தது. இந்த பொதுவான சமூக வழக்கம் சகோதரர்களை இணைக்கவும் சகோதர ஐக்கியத்திலும் அந்நியோந்நியத்திலும் வளர்க்கவும் உதவியாக இருந்தது. அநேக இடங்களில் கர்த்தரின் ஜனங்கள் இந்த வழக்கத்தை இன்னமும் கடைபிடித்து வருகிறார்கள். கர்த்தரின் நாளில் பிற்பகல் மற்றும் மாலை ஆராதனைகளுக்கிடையே அப்பம் பிட்குதல் என்பது புரூக்-ன் ஆசரிப்புக் கூடார சபையில் செய்து வருகிறார்கள். தூரத்தில் வசிக்கிற சகோதரர்கள் கர்த்தரின் ஜனங்களோடு ஐக்கியம் வைத்துக் கொள்வதற்கு இது வசதியாக இருக்கிறது.

### நினைவு கூருதலான இராப்போஜனத்தின் தேதி

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி யூதர்கள் சந்திர கால கணக்கை பயன்படுத்தி வந்தார்கள். ஒவ்வொரு அமாவாசையும் அவர்களுக்கு ஒரு புது மாத பிறப்பாக இருந்தது. வசந்த காலத்தில் பூமத்திய ரேகைக்குமேல் சூரியன் வருகின்ற (மார்ச் 20) (Spring Equinox) தேதிக்கு அருகே வரக்கூடிய அமாவாசை தான் நீசான் அல்லது ஆபீப் மாதம் முதல் தேதியாகும். அந்த மாதம் பதினைந்தாம் தேதி தான் பஸ்காவின் புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆரம்பித்து ஒரு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. அந்த ஏழு நாள் பண்டிகை இஸ்யேலரின் முதற்பேறானவர்களை கடந்து சென்றபோது ஏற்பட்ட சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் குறித்தது, இது, உண்மை கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மீட்பின் ப-யின் புண்ணியத்தினால் தமது பாவங்கள் கடந்து போகிறதை உணருகிறதினால் ஏற்படக்கூடிய முழுமையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் நிழலாக குறிப்பிட்டது. ஆகையால் உண்மையான எல்லா கிறிஸ்தவர்களும் தங்கள் இருதயங்களில் இந்த பஸ்கா பண்டிகையின் தொடர்ச்சியான சந்தோஷத்தை பெற்றிருக்கிறார்கள். ஏழுநாள் என்பது பூரணத்தை, முழுமையை குறிக்கிறது. இந்த காரியத்தை இதே கருத்தில் கவனிக்காமல் யூதர்கள், தொடர்ந்து வருகிற வாரத்தின் செய்கைகளைக் காட்டிலும் பஸ்கா ஆட்டை அடிப்பதையும் அதன் மாமிசத்தை புசிப்பதையும் குறைவாக நினைத்தார்கள். ஆனால் நமது ஆண்டவர் தம்மை உண்மையான பஸ்கா ஆடாக அறிவித்தபோது, பஸ்கா ஆட்டை அடிப்பதின் முக்கியத்துவத்தை வ-யுறுத்திக் கூறினார். அவரது இரண்டாம் வருகை வரை அவரது மரணத்தை வருடம் ஒருமுறை ஆசாரிக்கும்படி நம்மை அறிவுறுத்தினார். நாம் அவரது இராஜ்யத்தில் நுழையும் பொழுது தான், நமது ஆசீர்வாதம் முழுமையாக நிறைவேறுவதை குறிக்கும்.

கிறிஸ்துவின் மரணத்தின் வருடாந்திர ஆசரிப்பில், மற்ற பலவித காலங்களிலும் வேளைகளிலும், ஒழுங்கற்று எந்தவித முக்கிய கருத்தும் இல்லாதபடி இருப்பதற்கு பதிலாக, அநேக கிறிஸ்தவர்கள் இந்த பாடத்தை சத்திய வெளிச்சத்தில் பார்ப்பார்களேயானால், மேலும் கிறிஸ்துவின் மரணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை இருதய பூர்வமாக ஆசரிப்பார்களேயானால், அது அவர்களுக்கு சந்தேகத்திற்கிடமின்றி ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். வருடத்திற்கொரு முறை, இதை நீங்கள் செய்யும் போதெல்லாம், என்னை நினைவு கூறும்படி செய்யுங்கள் என்று நமது கர்த்தர் கட்டளையிட்டபடி, இந்த காரியத்தில் அதிக கவனம் செலுத்தி ஆண்டவரின் மரணத்தை ஆசரிப்பதில் சந்தோஷப்படுகிற கர்த்தரின் ஜனங்களில் சிறிய வகுப்பார் உலகெங்கிலும் எழும்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஆசரிப்பு மனதிற்கும் இருதயத்திற்கும் விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த தெய்வீக தேவைகளுக்கு எவ்வளவு அருகே வருகிறோமோ அந்த அளவிற்கு நமது ஆசீர்வாதம் அதிகமாக இருக்கும், மேலும் நமது ஆண்டவரும் தலையுமானவரிடத்திலும், அவரது சரீரத்தின் மற்ற அங்கங்களிடத்திலும் நாம் நெருங்கி வருகிறோம்.

இந்த ஆசரிப்பின் நாள் இந்த வருடம் (1915) மார்ச் 28, 6 மணிக்குமேல் வருகிறது. ஏனெனில் யூத கணக்கீட்டின்படி

நீசான் மாதம் 14ந் தேதி அப்பொழுது தான் ஆரம்பிக்கிறது. ஆண்டவரின் மகா பெரிய ப-யை நினைவு கூரும்படி ஆங்காங்கே இருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளை சிறு கூட்டமாக குடும்பமாக நல்ல உடையில் கூடும்படி துரிதப்படுத்துகிறோம். அவருடைய மரணத்தின் வருடாந்திர ஆசரிப்பு நமது மனதில் நன்றாக பதியக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

### "ஆண்டவரே, நானோ"

நாம் முதலாவது இராப்போஜனத்தின் சூழ்நிலைகளை ஞாபகத்திற்கு கொண்டு வருவோம். நமது ஆண்டவரின் போதனைப்படி, ஆசீர்வாதத்தின் அப்பமும், திராட்ச ரசமும் நமது ஆண்டவரின் பிட்கப்பட்ட சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் குறிக்கிறது. அவரது சீஷர்கள் அதை புசிப்பதில் மாத்திரமல்ல, அவருடன் பிட்கப்பட்டு, அவரது ப-யின் இரத்தத்தில் பங்குபெற வேண்டும். மேலும் எதிலும் எந்த விதத்திலும் அவருக்கு ஒத்துழைத்து, அவரது ஊழியத்திற்காக தங்கள் ஜீவனை கொடுக்க வேண்டும். ஆண்டவரோடு மிகவும் சரியாக ஒத்திசைவோடு இருக்கிறவர்களுக்கு இந்த சிந்தனைகள் எவ்வளவு விலையேறப்பெற்றது!

இந்த சிந்தனைகளைத் தொடர்ந்து, அவர்கள் யூதாசின் செயல்களை நினைக்கலாம். அவன் அதிகமான ஆதரவு காட்டப்பட்டும் இழிவான ஆதாயத்துக்காக தனது ஆண்டவரை விற்கத் துணிந்தான். மேலும் ஆண்டவருக்கு துரோகம் இழைக்க தைரியம் கொண்ட போது, ''ரபீ நானோ'' என்று கேட்டான். ஆண்டவரோடு கூட இருந்தவன் அவரை மறுத-த்து எதிரிகளிடம் காட்டிக் கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட செயல், அருவருக்கத் தக்கதாகவும், எச்சரிக்கையுடன் நமது இருதயத்தை நிரப்பக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பயத்துடன் இல்லாவிட்டால், எந்த அர்த்தத்திலும் இல்லாதவாறு, கனத்திற்காகவோ செல்வத்திற்காகவோ வேறு எதற்காகவோ, சத்தியத்தையோ, அல்லது கிறிஸ்துவின் சரீர அங்கமாகிய எந்த ஊழியக் காரரையோ விற்க பயப்பட வேண்டும்.

பிறகு நமது சிந்தை நமது ஆண்டவருடன் கெத்செமனே தோட்டத்திற்கு செல்லட்டும். இதோ, அவர் அங்கே தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்தார், மரணத்திற்கு பயந்து அவர் அப்படிச் செய்யாமல், பிதாவின் திட்டத்தில் தாம் கடைபிடிக்க வேண்டியதில் ஏதாவது ஒரு காரியத்தில் தவறியிருப்போமோ, அதனிமித்தம் தாம் உயிர்த்தெழுதலுக்கு அபாத்திரராகிவிடுவோமோ என்று பயந்து அப்படி ஜெபித்தார். நமது ஆண்டவர் தமது அர்ப்பணத்தின் உறுதி மொழியை உண்மையுடன் கடைபிடித்திருந்தார் என்பதையும் அதனிமித்தம் முன்னுரைக்கப்பட்டபடி அவருக்கு உயிர்த்தெழுதல் நிச்சயம் உண்டு என்பதையும் நிச்சயப்படுத்தி தேவதூதர்களைக் கொண்டு அவருக்கு ஆறுதல் அளித்ததையும் நாம் கவனிக்கிறோம். அதன் பிறகு அவர் எப்படி அமைதியாக இருந்தார் என்பதையும் நாம் கவனிக்கிறோம். அவர் பிரதான ஆசாரியன் மற்றும் பிலாத்து முன்பும், மேலும் ஏரோது மற்றும் பிலாத்து முன்பும், ''மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.'' அவர் எப்படி கடைசி வரை உண்மையுடனும் தைரியத்துடனும் இருந்தார் என்பதைப் பார்க்கிறோம். அவர் பிதாவை கேட்டிருந்தால், பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதர்களை பாதுகாப்பிற்காக அனுப்பியிருப்பார் என்ற உறுதிமொழியை நாம் பெற்றிருக்கிறோம். அவர் தமது ப-யி-ருந்து தப்பிப்பதற்கான உதவியை கேட்பதற்கு பதிலாக, அதை உண்மையுடன் சகிப்பதற்கு உதவியை கோரினார். அவரது அடிச்சுவட்டில் நடக்கிற அவரது சீஷர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு பாடம்!

### சுய பரிசோதனைக்கு ஒரு சந்தர்ப்பம்

அவரது தைரியசா-யான உண்மையுள்ள சீஷர்கள் கூட ஆண்டவரை விட்டு ஓடிப்போனதை நாம் நினைவு கூருகிறோம். அவர்களில் ஒருவன் பயத்தில் தனது ஆண்டவரை மறுத-க்கவும் செய்தான்! நமது இரட்கரோடு பாடுபடுவதற்குரிய நமது சம்மதம், தைரியம், விசுவாசம் ஆகியவற்றில் நமது இருதயத்தின் அளவை சோதிப்பதற்கு எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம்! நமது ஆண்டவரின் கிருபையால் எந்த சூழ்நிலையிலும், சந்தர்ப்பத்திலும் அவரை மறுத-க்கமாட்டேன் என்கிற தீர்மானத்தோடு நமது மனதை தூக்கி நிறுத்துவதற்கு எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. உதட்டினால் மாத்திரமல்ல நமது கிரியைகளினாலும் பாவ அறிக்கை செய்வோம் என்று தீர்மானிக்கிறோம்.

அடுத்து, ஆண்டவரின் இனத்தாராகிய யூதர்களே ஜீவாதிபதியை சிலுவையில் அறைந்தார்கள் என்பது நம்மை அதிர்ச்சியடைய வைக்கிறது. அது மாத்திரமல்ல, பொது ஜனங்களைக் காட்டிலும், மதத்தலைவர்களாகிய பிரதான ஆசாரியர்கள், பரிசேயர்கள், வேத பாரகர்கள் மற்றும் நியாய சாஸ்திரிகளே அவரை சிலுவையிலறைந்தார்கள். ''உலகம் உங்களைப் பகைத்தால் அது ஆச்சரியமல்ல; அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்ததென்று அறியுங்கள்'' என்று கூறிய நமது ஆண்டவரின் வார்த்தைகளை உற்றுக் கவனிக்கிறோம். நமது விஷயத்திலும் கூட அவர் மத உலகத்தைப் பற்றியே

குறிப்பிடுகிறார் என்று நாம் பார்க்கிறோம்.

### அதே பாத்திரத்தில் பானம் பண்ணுங்கள்

சத்தியத்திற்கு எதிர்ப்பும், இயேசுவின் அடிச் சுவட்டில் நடக்கிற ஒளியையுடையவர்களுக்கு கொடுமையும் கிறிஸ்தவ மதத்தில் மிகவும் பிரபலமானவர்களிடமிருந்து வந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற பாடம் நமக்கு இருக்கிறது. எனினும் இது, நமது எதிரிகளையோ, நமது ஆண்டவரை கொலை செய்தவர்களையோ வெறுக்கச் செய்யக் கூடாது. இன்னும் சரியாக சொல்வோமேயானால் அப்.பேதுரு, "நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்று கூறியதை நினைவு கூர வேண்டும். ஆம், கிறிஸ்துவின் (தலையும் சரீரமும்) பாடுகளுக்கு காரணம் அறியாமையும் மனம் மற்றும் இருதய கடினமுமேயாகும். கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை சரீர அங்கங்கள் நிறைவு செய்யும் வரை பிதாவானவர் இதை அனுமதிக்கிறார். தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் பூர்த்தியடைதலும், மரணபரியந்தமும் அவர்கள் உண்மையுள்ளவர்கள் தானா என்பதற்கான சோதனை பூர்த்தியடைதலும் சுவிசேஷயுக முடிவில் வரும். சபையானது தனது ஆண்டவரோடு இருக்கக் கூடிய உயிர்த்தெழுத-ன் மறுரூபமடைதலும் அப்பொழுது வரும். பிறகு நமது ஆண்டவர் கூறியதுபோல, இப்பொழுது அவரது பிட்கப்பட்ட சரீரத்தில் பங்குபெறுகிறவர்களும், சத்திய ஊழியத்தில் அவரோடு பிட்கப்பட்டவர்களும், மேலும் தன்னைத்தான் வெறுத்தல் மற்றும் அவரது பாடுகளாகிய பாத்திரத்தில் பங்கு பெறுகிறவர்களும் விரைவில் திரைக்கப்பால், ராஜ்யத்தில் சந்தோஷம் என்னும் புதிய திராட்சரசத்தை அவருடன் குடிப்பார்கள். (மத் 26:29)

### "பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்"

புதிய யுகத்தின் மகிமையான காலையில் உயர்த்துகிற மகா பெரிய வேலையாகிய பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தி-ருந்து உலகத்தை விடுவிக்கிற மகா பெரிய வேலை ஆரம்பமாகும். இந்த மகா பெரிய யுகத்தை அப்.பேதுரு, "உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" என்று கூறுகிறார். (அப் 3:19-21) அப்போஸ்தலர் மூலமாக சொல்லப்பட்ட வசனங்களே இந்த ஞாபகார்த்த இராப்போஜனத்தில் பங்குபெறுகிறவர்களுக்கு மனதில் இருக்க வேண்டும். "அவரோடு கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்." "நாம் அவரோடு கூட மரித்தோமானால், அவரோடுகூடப் பிழைத்துமிருப்போம்." "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல." (ரோம 8:17; 6:8; 2 தீமோ 2:11,12)

விலையேறப் பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தின் மூலமாக, முதற்பேறானவர்களின் பாவங்களை கடந்து போகிறதைக்குறித்ததான இந்த சிந்தனையுடன், பாடுகளும் சோதனைகளும் இருந்த போதிலும் இந்த பஸ்கா பண்டிகையை சந்தோஷத்துடன் ஆசரிக்கலாம். இப்படி இயேசுவின் உண்மையுள்ள சீஷர்களாக தொடர்ந்து செய்தால், சீக்கிரத்தில் கர்த்தரின் சேனைகளை வழிநடத்தக் கூடிய பெரிய சலுகையைப் பெறுவோம். முடிவாக இந்த சேனைகள் பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சியி-ருந்து வெளியேறி, எகிப்தைவிட்டு கானானுக்கு வந்து, மகா பெரிய ராஜாவை கேள்விப்பட்டு, அறிந்து, கீழ்ப்படிவார்கள். ஆம், சகோதரர்களே, அப்போஸ்தலரின் வசனத்தின்படி, "நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக ப-யிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால்... பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்."

### ராஜ்யத்தில் சந்தோஷத்தின் பாத்திரம்

நமது ஆண்டவர் தமது மரணத்தின் நினைவு கூருதலை ஏற்படுத்திய போது, அவர் அப்போஸ்தலருடன் சம்பாஷித்து கூறியதாவது: "இது முதல் இந்தத் திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடு கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத் 26:29) இங்கே நமது ஆண்டவர், பாடுபடும் நாள் மற்றும் மகிமையின் நாள் ஆகிய இரண்டு பெரிய நாட்களுக்குரிய வேறுபாட்டை குறிப்பிடுகிறார். சுவிசேஷ யுகம் பாடுபடும் நாளாக இருக்கிறது. ஆயிர வருட யுகம் மகிமையின் நாளாக இருக்கிறது. இது விசேஷமாக கிறிஸ்துவின் நாள் என்று பேசப்படுகிறது.

திராட்ச ரசத்தின் சொல்லர்த்தமான பாத்திரம் இரண்டு சிந்தனைகளை குறிப்பிடுகிறது. திராட்ச பழத்தின் ஜீவனி-ருந்து திராட்ச ரசம் தயாரிக்கப்படுகிறது. திராட்சப்பழம் அதன் தனித்தன்மையை இழந்துவிடுகிறது. பழங்கள் பிழியப்பட்டு திராட்ச ரசம் பயன்பாட்டுக்கு தயாராகிறது. பாத்திரம் - திராட்சபழ ரசம் பிழியப்படுதலை மாத்திரம் குறிப்பிடாமல் அதனால் கிடைக்கக் கூடிய உற்சாகப்படுத்துதலையும் குறிப்பிடுகிறது. இது சொல்லர்த்தமான பானம் பண்ணும் பாத்திரத்தை குறிப்பிடுகிறது. இது நமக்கு நமது இரட்சகரின் பாடுகளையும், மரணத்தையும், இவைகளில் நாம் பங்கு பெறுவதையும் அடையாளப்படுத்துகிறது. ஆனால் திராட்ச ரசம் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கூட குறிக்கிறது. இப்படி வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த

அர்த்தத்தில் நமது ஆண்டவர் குறிப்பிட்ட திராட்ச பழரசம் ராஜ்யத்தின் சந்தோஷத்தை குறிப்பிடுகிறது.

நமது ஆண்டவரின் பூமிக்குரிய அனுபவத்தில் பிதா, ஒரு குறிப்பிட்ட விசேஷித்த மார்க்கத்தை குறித்திருக்கிறார். இந்த மார்க்கத்தில் அவரது பாடுகளும் மரணமும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பாத்திரத்தில் நமது ஆண்டவர் உண்மையுடன் பானம் பண்ணினால், ஒரு மாறுபட்ட பாத்திரத்தை, கனம், மகிமை, சாகாமை என்கிற ஒரு மாறுபாடான அனுபவத்தை தருவதாக பிதாவானவர் அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். தம்மை பின்பற்ற விரும்புகிறவர்களுக்கு இதே வாக்குத்தத்தத்தை தரும்படி இரட்சகருக்கு பிதா அங்கீகாரம் அளித்திருக்கிறார். அதாவது அவர்கள் அவரோடு கூட பாடுபட்டால், அவரது மரணத்தின் பாத்திரத்தில் பானம் பண்ணினால், பிறகு எதிர்கால சந்தோஷத்தில் அவருடன் கூட பங்கு பெறுவார்கள்.

### சிலுவையின் வழியில்

''தன் ஜீவனை காக்கிறவன் அதை இழந்தபோவான்.'' நாம் அனைவரும் திராட்சை ஆலையால் குறிப்பிடப்படுகிற சோதனையான அனுபவத்தை கடந்து செல்ல வேண்டும். தெய்வீக ஊழியத்திற்காக நமது ஜீவனையும் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் பிழியப்படும் அனுபவத்திற்கும், மனிதனாக துடைத்தழிக்கப்படுவதற்கும் புதுசிருஷ்டி ஆவதற்கும், நம்மை நாமே அர்ப்பணிக்க வேண்டும். ''அவரோடுகூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்.'' இல்லாவிடில் கிடையாது. ஆகையால் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கான அழைப்பை மிகவும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்கிறோம். இந்த பாத்திரத்தில் முழுவதுமாக பானம் பண்ணி முடித்த பிறகுதான், ராஜ்யத்தின் சந்தோஷமாகிய மற்ற பாத்திரத்தை நாம் பெற முடியும். நமது ஆண்டவர், பிதாவானவரிடம் காட்டிய அந்த கீழ்ப்படித-ல் தான் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை அவர் பெற்றிருந்தார். ''முடிந்தது'' என்று கூறிய அந்த கடைசி நொடிவரை அவருக்கு சோதனை காலமாக இருந்தது. அதே போல் தான் சபையாகிய நமக்கும். நாம் பாத்திரத்தில் உள்ள முழுவதையும் பானம் பண்ண வேண்டும். எல்லா அனுபவங்களையும் நாம் பொறுமையோடு சகிக்க வேண்டும். பாத்திரத்தில் கொஞ்சம் கூட விடப்படக் கூடாது.

கிறிஸ்துவின் சரீரம் தனது ஓட்டத்தை முடிக்கும் பொழுது தான் கிறிஸ்துவின் பாடுகள் அனைத்தும் நிறைவடையும். நமது ஆண்டவர் மகிமையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது சந்தோஷத்தின் புதிய பாத்திரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. சீக்கிரத்தில் நமது சந்தோஷத்தின் பாத்திரம் நமக்கு கொடுக்கப்படும். நித்திரையி-ருந்த பரிசுத்தவான்கள் எழுந்திருந்து, பரிசுக்குள்ளாக நுழைந்து ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை பெற்ற நேரம் தான் நிச்சயமாக ஒரு சந்தோஷமான நேரம்! (பார்க்க வேதாகம பாடங்கள், தொகுதி 3, பக்கங்கள் 290–301; தொகுதி 4 பக்கங்கள் 865–866) ஆண்டவர் வந்தபோது உயிரோடிருந்தவர்கள் ஒவ்வொருவராக வீட்டிலே கூட்டிச் சேர்க்கப்பட்டு கொண்டு வருகிறார்கள். நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், சீக்கிரத்தில் இந்த சந்தோஷத்தில் நாம் அனைவரும் அவர்களோடு பங்குபெறுவோம். கிறிஸ்துவின் அனைத்து அங்கங்களும் திரைக்கு பின்னால் சென்றபிறகுதான் சந்தோஷத்தின் முழுமையை நாம் அடைய முடியும். பிறகு அவரது சிங்காசனத்தில் பங்கு பெற்று அவரது மகிமையிலும் பங்குபெறுவோம். பிறகு நமது பிரியமான ஆண்டவருடன் புதிய திராட்ச ரசத்தை ராஜ்யத்தில் பானம் பண்ணுவோம். ஏனெனில் வாக்குத்தத்தம் அவரது அனைத்து பரிசுத்தவான்களுக்கும் உரியது.

''யூத ப– பீடத்தில் கொல்லப்பட்ட
எல்லா மிருகங்களின் இரத்தமும்
குற்ற உணர்வற்ற மன அமைதியை தராது,
அல்லது கறைகளை முற்றும் கழுவாது.

''ஆனால் பரம ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து
நமது பாவங்கள் அனைத்தையும் நீக்குகிறார்;
உயர்ந்த நாமமுடைய ஒரு ப–
அவைகளைக் காட்டிலும் விலையேறப் பெற்ற இரத்தம்.

''எனது ஆத்துமா திரும்பி பார்க்கிறது
அவர் சுமந்த சுமையை,
அவரது ஜீவனை எனக்காக ஊற்றும் பொழுது
அங்கே பார்க்கிறது அதன் மீட்கும் பொருளை.''

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

**வெளியிடுபவர்:**

சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண்: 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை– 600 019. கைபேசி: 97909 00030. மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

# தியாக அன்பும் கடமை அன்பும்
## Sacrificial Love Vs Duty Love

"உன்தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக.. உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக." (மத் 22:37-39) "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருலர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." யோவா 15:12,13

ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை போன்ற குணங்கள் நமது சிருஷ்டிகராகிய பரம பிதாவின் பண்புகளில் இசைவாயும் இணைந்துமிருக்கிறது. இந்த குணங்கள் அவரிடத்தில் ஒன்றுக்கொன்று நிறைவானதாகவும் முழுமையாக இசைவானதாகவும் இருக்கின்றன. இதே குணங்களை நமது பண்புகளில் இணைப்பதற்கு நாம் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டும். இந்த குணங்களை யெல்லாம் மனுக்குலத்தோடு பொருத்திப் பார்க்கும் போது, இவைகளை மனுக்குலம் எவ்வளவு குறைவாக பெற்றிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளக் கூடும்.

நாம் குணங்களாக குறிப்பிடுகிற நீதி, அன்பு, ஆகியவைகள் அனைத்து மனுக்குலத்தாரிடமும் அபூரணமாகவே இருக்கின்றன. தருமம், உதார குணம் ஆகியவை குறித்து நாம் பேசுகிறோம். இது அன்பின் ஒரு சிறந்த வெளிப்பாடு ஆகும். இது வெறும் நீதியைக் காட்டிலும் அதிகமாக செல்கிறது. நாம் ஒரு டாலர் கடன் பட்டிருக்கிற ஒருவர் இங்கே இருக்கிறார். அந்த ஒரு டாலரை அவருக்குக் கொடுப்பது தருமமல்ல, அது கடமை மற்றும் நீதியாக இருக்கிறது, ஒரு குறிப்பிட்ட மார்க்கம் சரியானதாக இருக்கும். அதற்கு குறைவான எதுவும் சரியானதாக இருக்காது. சில காரியங்கள் கட்டாயமானதாக இருக்கிறது. இதற்கும் (கட்டாய மானதிற்கும்) மேலானது இரக்கமாக, மனதுருக்கமாக, அன்பாக இருக்கும்.

அண்டை வீட்டுக்காரனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்ன? ஒருவேளை அந்த அண்டை வீட்டுக்காரர் கடன் பட்டிருக்கிறார் அல்லது அவரது ஜீவன் பறிபோகிறது. நாம் அவருக்கு என்ன செய்ய வேண்டும்? அவருக்காக நமது ஜீவனை கொடுக்கலாமா? அவரது கட்டாய கடமைகளை நாம் செய்யலாமா? அப்படிச் செய்வது ஒரு மிகப் பெரிய அன்பான செயலாக இருக்கும். இது நீதியாகக் கூட இருக்கும். ஆனால் இது வெறும் நீதிக்கும் மேலாகவே செய்கிற காரியமாகும். நாம் அண்டை வீட்டாருக்கு. செய்ததை, நமது நிலைமை மாறியிருக்கும் போது, அவர்கள் நமக்கு செய்வதே நீதிக்கு தேவையாக இருக்கிறது. நமது அண்டை வீட்டாருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை பொன்னான கற்பனை அளவிடும். நாம் இதை செய்த பிறகு இன்னும் அதிகமாக செய்ய விரும்பினால் அது நீதியின் தேவைக்கு மேலானதாக இருக்கும். இது அன்பாக, உபகாரமாக இருக்கும்.

ஆனால் தேவனுடைய கற்பனை நீதியை மாத்திரமல்ல அன்பையும் சேர்த்து செய்யும்படி கூறுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடம் அன்பு செலுத்த வேண்டும், சகமனிதர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். அதற்கு இரக்கமும் தயவும் தேவைப்படுகிறது. இதே வரிசையில் நியாயப் பிரமாணத்தின் கீழாக கட்டளைகளை தேவன் மாம்சீக இஸ்ரயேலருக்கு கொடுத்தார் என்பதை நாம் கவனிப்போமாக. இது எந்த அளவுக்கு அவர்களுக்கு தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம். உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப் போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டு போய் விடுவாயாக. உன்னை பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவி செய்வாயாக. உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின் மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்கு பலனளிப்பார். (யாத் 23:4,5; நீதி 25: 21,22) அன்பானது இவ்வளவு பரந்தும் விசாலமாகவும் தேவனுடைய பிரமாணத்தால் கேட்கப்படுகிறது. மேலும் மாம்சீக இஸ்ரயேலர் மேல் அது கட்டாயமாக இருக்கும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் எந்த அளவுக்கு இந்த உயர்ந்த குணத்தை பெற்றிருந்து வெளிப்படுத்த வேண்டும்?

### மனிதனுடைய தண்டனையில் நீதியான தீர்ப்பு கூறப்பட்டது

பாவ மனுக்குலத்திற்கு தேவன் அளித்த தண்டனையாகிய துக்கம், வருத்தம், மரணம் ஆகியவற்றால் மனிதாபிமானம் உட்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவிக்கப்பட்ட மரண தண்டனையில் அன்பு அப்பியாசப் படுத்தப்படவில்லை. நீதி அங்கே அப்பியாசப்படுத்தப்பட்டது. எனினும் அந்த மரண தண்டனையில் அன்பின் கொள்கை மீறப்படவில்லை; அது அன்புடன் மிகவும் இசைவாக இருந்தது. தேவன் தமது உயர்ந்த பொக்கிஷமாகிய ஒரே பேறான குமாரனை, குறித்த காலத்தில், மனுஷரின் விழுந்து போன நிலையிலும் கூட, பரிசாக கொடுத்து மனிதர்மேல் தமது அன்பை வெளிப்படுத்தினார். அவர் தமது குமாரனை பூமிக்கு அனுப்புவதற்கு முன்னான அந்த நான்காயிரம் வருடங்களில் அவர் அன்பில் குறைவுள்ளவரா யிருக்கவில்லை. அவருடைய பண்புகளில் அன்பை பொருத்தவரை பூரணமாக இணக்கத்துடன் தொடர்ந்து இருந்தது. அது இனிமேலும் ஒரு பூரண ஜீவியுடனான தோழமையான அன்பாக இராமல், இரக்கத்துடன், மனதுருக்கத்துடனான அன்பாக இருக்கும்.

விழுந்துபோன மனிதனுக்கு இரட்சிப்பை கிடைக்கச் செய்வது அன்பிற்கு கடமை, பொறுப்பு எதுவும் இருக்கவில்லை. அந்தச் செயல் முற்றிலும் ஒரு கிருபையாக

**--2275--**

இருந்தது. இரட்சிப்பு கிருபையினால் இருக்குமானால். அது நீதியினாலானது இல்லை. தேவன் தமது குமாரனை மனிதனுக்கு இரட்சகராக அனுப்ப எடுத்த நடவடிக்கை நீதிக்கு தேவையானதற்கும் மேலாக இருக்கிறது. இதில் தேவனுடைய கடமைக்கும் மேலான அன்பு, மனதுருக்கம் வெளிப்படுத்தப்பட்டது. மனிதன் எந்த உரிமையையும் கோர முடியாது, ஏனெனில் தனது அனைத்து உரிமைகளையும் தண்டனையால் இழந்துவிட்டான். மேலும் தேவனுடைய நீதியான பிரமாணத்திற்கு முன்னால் ஒரு குற்றவாளியானான். ஆனால் குற்றவாளி இனத்தின் இரட்சிப்புக்கு ஏற்பாடு செய்த தேவனுடைய மகா பெரிய இரக்கம், அவரது மகிமை மற்றும் நன்மை செய்யும் குணத்தை விளக்குகிறது. நாம் இன்னும் பாவிகளாக இருக்கும் போது. கிறிஸ்து நமக்காக மரித்தது, தேவன் நம்மேல் வைத்த அன்பை வெளிப்படுத்தியது. இது தேவனுடைய சொந்த திட்டம். எனவே அன்பானது நீதிக்கும் மேலாக செல்லக் கூடும்; பூரண பண்புகளுக்கு தேவையான அன்பின் அளவைக் காட்டிலும் அதிகமாக செல்லக் கூடும்.

மகா பெரிய இரட்சிப்பின் திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பு ஒரு தியாக அன்பு. ஆகையால் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட அன்பை உடையவர்களாக இருக்க வேண்டும். பல்வேறு சுபாவங்களில் உள்ள ஜீவிகளில் வைக்கப்பட்டுள்ள இந்த அன்பு, தேவனுடைய பூரண பிரமாணம் கேட்கிற அன்பல்ல, அதற்கும் மேலான அன்பாகும். கிறிஸ்துவின் மரணத்தில் விலை கொடுத்து வாங்கப்பட்ட இந்த ஜீவனை கொடுக்கிற ஒரு அன்பாக இது இருக்கிறது. தங்கள் கர்த்தரும் தலையுமானவரோடு ஒரு ப-யாக இந்த ஜீவன் கொடுக்கப்படுகிறது. ஊழியத்தில் சகோதரருக்காக நமது ஜீவனை கொடுக்கிறோம். கிறிஸ்துவின் ப-யின் புண்ணியம் நம்மேல் சாட்டப்பட்டு, நாம் தேவனுக்கு முன்பாக பூரணராக எண்ணப்படும்படி செய்யப்படுவதால் இந்த ப- ஏற்புடையதாக இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுவது போல், ''நாம் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்.'' சகோதரர்கள் நமது ஜீவனை கேட்கமாட்டார்கள், நாமும் அவர்களது ஜீவனை கேட்க மாட்டோம்; ஆனால் நமக்கு சந்தர்ப்பம் இருப்பதால் நாம் இதை எல்லாரும் சந்தோஷமாக செய்ய வேண்டும். (1 யோவான் 3:16)

**நாம் கிறிஸ்துவின் சிந்தனையுடையவர்களாக இருப்போமாக**

ஒரு மனவிருப்பத்தின் ப-யாக தம் ஜீவனைக் கொடுத்து கிறிஸ்து நம்மை மீட்டிருக்கிறார். அதே சிந்தையை, அதே மனச்சார்பை, அதே சித்தத்தை உடையவர்களாக நாம் இருப்போமாக. இது சபையின் விசேஷித்த உடன் படிக்கையாகிய ப-யின் உடன்படிக்கை. (சங் 50:5) இது நமது ஆண்டவர் பிதாவோடு செய்த உடன்படிக்கை, நாம் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய பிரமாணம் கேட்கிற நீதியின் திட்ட அளவுக்கு உலகத்தார் வந்தால், அவர்கள் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வார்கள். ஆனால் நம்மை பொருத்தவரை, நாம் இதைவிட அதிக திட்ட அளவை உடையவர்களாக இருக்க வேண்டும்.

ஆகையால் அப்போஸ்தலர், ''அன்பு நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது'' என்று கூறும் போதும், தேவனுடைய சித்தத்தை மரணபரியந்தம் நிறைவேற்றும்படி அன்பினால் ஆளப்படுகிறவர்களை, இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட, வெறும் நியாயப் பிரமாணத்தை மட்டும் கடைபிடிக்கச் சொல்- அவர் கட்டுப்படுத்தவில்லை. இந்த தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாயிருப்பதற்கும், தங்கள் ஜீவனை கொடுப்பதற்கான உடன்படிக்கையில் ராஜரீக ஆசாரிய அங்கமாவதற்கும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கும் மேலாக தேவைப்படுகிறது. ஒரு சுய ப-க்களவான அன்பு தேவைப்படுகிறது. எனவே நமக்கான தேவனுடைய சித்தத்தை சந்தோஷத்துடன் நிறைவேற்றி, ''முற்றும் ஜெயங்கொள்கிற'' – ஜெயங் கொள்ளுகிற வகுப்பாருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கனம், மகிமை, சாகாமை, தெய்வீக சுபாவத்தை பெற்றுக் கொள்ளப் பாத்திரர் என்பதை நாம் நிரூபிப்போம்.

*அன்பு என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவர் பாத்திரத்தில் நிரப்புவதாகும்;*

*அன்பு என்பது தினமும் கொடுத்து எடுப்பதாகும்;*

*ஒவ்வொரு புதிய நாளிலும் கல்லான பாதையை தேர்ந்தெடுப்பது,*

*மற்றவர்கள் கால்கள் ஒரு மிருதுவாக பாதையில் நடப்பதற்காக.*

அன்பானது குருடல்ல, ஆனால் மற்றவர்கள் கண்கள் மூலம் தொலைவில் பார்க்கிறது;

''நான் கொடுக்க வேண்டுமா'' என்று கேட்காமல் ''நான் ப- கொடுக்கட்டுமா?'' என்று கேட்கும்.

அன்பானது தனது துக்கத்தை மறைக்கும், மற்றவர்களது இதயமும் உதடுகளும் பாடுவதற்காக.

மேலும் அது சுமையுடன் நடக்கும், மற்றவர்களது வாழ்க்கை உல்லாச இறக்கையுடன் இருப்பதற்காக "சகோதரனே, இப்படிப்பட்ட ஒரு அன்பை உன் ஆத்துமாவிலே வைத்திருப்பாயா?

இந்த இலக்கை நீ அடையும் போது, அது உனது நாமத்தை பரிசுத்தவான் என்று மாற்றிவிடும்.''

-----------------------------

# தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு

*"ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்." (1 தெசலோனிக்கேயர் 5:15)*

## *கிறிஸ்தவன் பொதுக் காவல்துறையாளன் அல்ல*

ஒருவேளை நீங்கள் காயப்படுத்தப்பட்டிருப்பீர்களானால், அதைச் சரி செய்துகொள்ள நீங்கள் விரும்புகிறதற்குக் காரணமும் காணப்படும். சரி செய்துகொள்ளும் விருப்பம் காணப்பட்டாலும், பழிக்குப்பழி வாங்கும் விஷயம், எவ்விதத்திலும் காணப்படக்கூடாது. நாம் தீமைக்குத் தீமை செய்யக்கூடாது, நாம் எவருக்கும் தீமை செய்யக்கூடாது என்ற கடமையின் கீழ்க் காணப்படுகின்றோம். "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்" என்ற வார்த்தைகளானது, கிறிஸ்தவன் பொதுக்காவலன் போன்று இருந்து, தனது சகோதர சகோதரிகள், அயலார்கள் மற்றும் அனைவரும் தீமை செய்யாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது எனத் தவறாக சிலரால் புரிந்து கொள்ளப்படுகிறது. இது தவறான கருத்தாகும். குடும்பத்தின் தலைவர்கள் மாத்திரமே, இவ்விஷயத்திற்கு விதிவிலக்காகக் காணப்படுகின்றனர். குடும்பத்தாரின் தலைவராக இருக்கும் ஒருவர், தனது வீட்டாரின் நடத்தைகளைக் கவனிப்பதற்கு, சட்டத்தின் கீழும், தெய்வீகப் பிரமாணத்தின் கீழும் கடமைப்பட்டுள்ளார்.

சிலர் அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகள், ஒவ்வொரு சபையாரின் மூப்பர்கள், தங்களுடைய சபையாரின் அங்கங்கள் தவறு செய்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமாகின்றது என எண்ணுகின்றனர். இதுவும் சரியான கருத்தல்ல. மற்றொருவன் தீமைக்குத் தீமை செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வேதவாக்கியங்கள் மூப்பர்களுக்கு எங்கும் அதிகாரம் கொடுப்பதில்லை. அவ்வசனத்தின் அர்த்தமாவது: உங்களில் ஒவ்வொருவரும், நீங்கள் தீமைக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்பதேயாகும்.

குடும்பத்திலுள்ள ஒரு நபர் தவறு செய்யும்போது, அக்குடும்பத்திலுள்ள மற்ற நபர், தவறு செய்தவருக்கு உதவி செய்யும் சில சரியான வழிமுறைகள் உள்ளன. உதாரணத்திற்கு, ஒருவேளை C என்ற நபருக்கு, B என்ற நபர் அநீதி செய்வதை A என்ற நபர் கண்டால், A என்ற நபர் அதை..., விளக்கி எடுத்துக்கூறலாம். A என்ற நபர்: சகோதரனே (சகோதரியே) என B என்ற நபரை அழைத்து, நீங்கள் இவ்விஷயத்தைக் குறித்து இப்படி, இப்படியாகச் சிந்திக்கவில்லையா? என்று சொல்லலாம். இப்படியாகவேதான் சபையிடத்திலும் செயல்பட வேண்டும். சபையின் நலனுக்கடுத்த விஷயங்களைப் பார்க்கவே மூப்பர்கள் விசேஷமாகப் பொறுப்பேற்றுள்ளார்கள். ஒருவேளை மூப்பர்கள், சபையில் ஒருவர் வேதவாக்கியங்களின் நியமங்களின்படி ஜீவிக்கவில்லை என்பதைக் கண்டால், அவ்விஷயத்தைக் குறித்த யோசனைகளைக் கொடுப்பது சரியான முறையாகும். ஆனால் மற்றவர்களின் விஷயங்களில், வீண் அலுவல்காரராய் நாம் காணப்படக்கூடாது.

நாம் ஒருவரையொருவர் கட்டியெழுப்பிட வேண்டும், ஏனெனில் இவ்விதத்திலேயே, மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்கிறாள். நாம் நன்மையை அல்லாமல், தீமையைச் செய்துவிடாதபடிக்கு, ஜெபத்தில் வைத்த பின்னர், இவ்விஷயங்கள் கூடுமானமட்டும் ஞானமான முறையிலேயே அணுகப்பட வேண்டும். நாம் அனைவரும், நம்மை நீதிக்கு அர்ப்பணித்திருக்கின்றோம் என்றும், நன்மையானவைகளைச் செய்வதற்கும் அர்ப்பணித்திருக்கின்றோம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் அனைத்துச் சந்தர்ப்ப, சூழ்நிலைகளிலும் நன்மையானவைகளைச் செய்வோம் என நம்முடைய ஜீவியத்தை அர்ப்பணித்துள்ள காரணத்தினால், நாம் சபையார் மத்தியில் மாத்திரமல்லாமல், சகல ஜனங்கள் மத்தியிலும், அவர்கள் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளில் உள்ள நியமங்களின்படி, கிறிஸ்துவின் சீஷர்கள், சகல ஜனங்களின் மத்தியில் மிகவும் மெருகூட்டப்பட்டவர்களாகவும், மிகவும்

நேர்த்தியானவர்களாகவும், மிகுந்த நற்பண்புகள் உடையவர்களாகவும், மிகுந்த அன்பும், கரிசனையும் கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும். இந்தப் பண்புகள், உலகத்தாரிடம் காணப்படுவது போன்று வெளித்தோற்றமாகக் காணப்படாமல், இவர்களிடம் கர்த்தருடைய ஆவியும், நீதியின் ஆவியும், இரக்கம் மற்றும் அன்பின் ஆவியும் காணப்படுவதால், இருதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் அன்பும், தயவும் காணப்பட வேண்டும். இவ்விதமாக இவர்கள் தங்களிடத்திலுள்ள ஒளியை, தங்கள் ஜீவியத்தில் பிரகாசிப்பிக்க வேண்டும்.

---

# கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள்

# God's Mercies To Disobedient Israel

நெகேமியா 9:26-31

நியாதியாதிபதிகளின்காலம் - தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்கள் - அவர்களது கடமைகளும் பொறுப்புகளும் - பிரமாணத்தை கொடுத்தவரும் ஒருவரே, பிரமாணமும் ஒன்றே - நியாயாதிபதிகளின் கீழாக இஸ்ரயேல் தேசத்தாரின் இருவித வாழ்க்கையின் வருணனை - தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கு தேவனுடைய அன்பு பராமரிப்பின் வெளிப்பாடுகள்-ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான பாடம்.

நீதி ஜனத்தை உயர்த்தும், பாவமோ எந்த ஜனத்துக்கும், இகழ்ச்சி." நீதி 14:34

இஸ்ரயேலரின் சரித்திரத்தில் தேசம் பிரிக்கப்பட்டதி-ருந்து சவுல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படும் வரையுள்ள 450 வருட காலப்பகுதி (அப். 13;19-21) நியாயாதிபதிகளின் காலம் ஆகும். இதில் முதல் நியாயாதிபதி யோசுவா, கடைசி நியாயாதிபதி சாமுயேல். இந்த நியாயாதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படாமல் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் எந்த அதிகாரத்தையும் வல்லமையையும் பெற்றிருக்கவில்லை. அவர்கள் எந்தவொரு அலுவலகத்தையும் வைத்திருக்கவில்லை, எந்தவித வருமானத்தையும் வசூ-த்து பெறவில்லை. ஏதாவது வல்லமையை அவர்கள் பெற்றிருந்தார்களேயானால் அது அவர்களது சொந்த வல்லமையாகும். அவர்களுக்கு முக்கியத்துவம் அல்லது செல்வாக்கு கொடுக்கப்பட்டிருந்ததானால் அது தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் அல்லது "எழும்பப்பண்ணப்பட்டவர்கள்" என்பது ஆகும்.

இந்த ஏற்பாடு, சொந்த நோக்கமும் வெகுமதிகளும் ஆதிக்கம் செலுத்துகிற அரசியல் ஏற்பாட்டைக் காட்டிலும் ஜனங்கள் தங்களுக்கு உதவிகளுக்காகவும், தலைவர்களுக்காகவும் தேவனை நோக்கியிருக்கும்படி இருந்தது, தேவன் நியமனம் செய்தார். ஜனங்கள் தேவனுடன் இணக்கமாக அவரால் நியமிக்கப்பட்ட நியாயாதிபதியை அங்கீகரித்தார்கள். சில சமயங்களில் ஒழுங்குப்படுத்தப்பட்ட சில முறைமைகளை பெற்றிருந்தார்கள். ஏனெனில் யோசுவாவின் சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரயேலுக்காகச் செய்த அவருடைய பெரிய கிரியைகளையெல்லாம் கண்டவர்களும். யோசுவாவுக்குப்பின்பு உயிரோடிருந்தவர்களுமாகிய மூப்பர்கள் தங்கள் நாட்களில் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் நியாயாதிபதிகளை ஏற்படுத்தியிருந்ததைப் பார்க்கிறோம். (நியா 2:7)

தேவன் இஸ்ரயேலருக்கு நியாயாதிபதிகளை கொடுத்திருந்த இந்த ஏற்பாடு, சுவிசேஷ யுகத்தில் தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களோடு கொண்டிருந்த தொடர்புக்கு இசைவாக இருந்தது. அதாவது அந்தந்த காலத்தில் விசேஷித்த ஆலோசனைக்காரர்களையும், விடுவிப்பவர்களையும், ஊழியர்களையும் ஏற்படுத்திவந்தார், அதேபோல ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தலைவர்களை ஏற்படுத்துகிறவர்களோ, அவர்களை ஆட்டுவிப்பவர்களோ, ஆவிக்குரிய தலைவர்களை தீர்மானிப்பவர்களோ அல்ல. ஆனால் கர்த்தரே அவருக்கு பிரியமானவர்களை அவ்வப்போது எழும்பப்பண்ணுவதற்கு அவரை நோக்கியிருப்பவர்களாகவும் அவரை மகா பெரிய தளபதியாக மதிக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்று ஏற்றுக் கொள்வதற்கு அவர்களை ஓட்டுப்போட்டு தேர்தெடுக்க வேண்டும் என்பதல்ல, கர்த்தருடைய வசனங்களுக்கு இசைவாக இருக்கிற அவர்களது போதனைகளை காது கொடுத்து கேட்பதே போதுமானதாகும்.

இப்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஆவிக்குரிய தலைவர்களை அவர்களது ஆவிக்குரிய வெற்றிகள் மூலமாகவும், தேவனுடைய பிள்ளைகளை தங்கள் இதய பூர்வமான நெருக்கத்துக்கு கொண்டு வருவது மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட கனிகளை கொடுக்காத எந்த தலைவரும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவரல்ல என்பது நிரூபணமாகிறது. ஏனெனில் கர்த்தரின் ஆவி அடிமைத்தனத்திற்கும், அறியாமைக்கும் சச்சரவுக்கும் வழிநடத்தாமல், அன்புக்கும், சந்தோஷத்திற்கும் மன அமைதிக்கும் மன சுதந்திரத்திற்கும் வழி நடத்தும்.

இஸ்ரயேலுக்கு மகா சபையோ, சட்டசபையோ தேவையாக இருக்கவில்லை. அவர்களுக்கு நியாயப் பிரமாணிகராக கர்த்தர் இருந்தார். சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணம் அவர்களது தேசத்திற்கு நிலையான சட்டமாக இருந்தது. ஆசாரியர்களும் லேவியர்களும், தேவனுக்கடுத்த காரியங்களில் நியமிக்கப்பட்ட உதவியாளராக இருந்தனர். நியாயப் பிரமாணத்தைப் போதிக்கவும் நிழலான ப- மற்றும் பாவ நிவாரண வேலை முதலானவைகளில் அவர்களுக்கு பிரதிநிதிகளாகவும் இருந்தனர். ஒவ்வொரு கோத்திரத்திலும் மூப்பர்கள் அவர்களது தகுதிக் கேற்றபடி அந்த கோத்திரத்தின் சமூக காரியங்களில் பொறுப்பாளர்களாக இருந்தனர். படை வீரர்கள், இராணுவம் போன்ற எதுவும் இல்லை. தெய்வீக சட்டம் அவர்களை மற்ற ஜாதிகளி-ருந்து பிரிக்கக்கூடியதாக இருந்தது. அவர்கள்

கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர் அவர்களை அனைத்து எதிரிகளிடமிருந்தும் காப்பவராக இருந்தார்.

அதே போல ஒவ்வொரு சபையிலும் உள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், தேவையான ஊழியத்திற்கு தங்களில் தகுதியுள்ளவர்களை கண்டுபிடித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய பிரமாணம் அவர்களை உலகின் சதித்திட்டம், யுத்தம், சிக்கல் போன்றவைகளி-ருந்து பிரித்துவைக்கக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் அவருக்கு உண்மையாய் இருக்கும் வரை, அவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்கிற வாக்குத்தத்தத்தை கொடுக்கிறார். ஆகையால் அவர்கள் பாவத்திற்கு எதிராக போரிடுவோம் என்கிற உறுதிமொழியைக் கொடுத்த சிலுவை வீரர்களாக இருந்தாலும், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் ஜீவனை கொடுக்கும் உறுதி மொழியை கொடுத்தாலும் அவர்களுக்கு சரீர சம்பந்தமான ஆயுதத்துடன் கூடிய ராணுவம் தேவையில்லை.

**தேசிய வாழ்க்கையின் இரண்டு சித்திரங்கள்**

நியாயாதிபதியின் புத்தகத்தை இஸ்ரயே-ன் நானூற்றைம்பது வருட கால முழு சரித்திரமாக படித்தோமானால் அது ஒரு ஊக்கத்தைக்குறைக்கும் ஒரு சித்திரமாக இருக்கும். அவர்கள் பாவத்திலும் விக்கிரக ஆராதனையிலும் தொடர்ந்து இருந்து அதனிமித்தம் தண்டனையை அனுபவித்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஓரளவிற்கு காண்பிக்க கூடியதாக இருக்கும். ஆனால் இது ஒரு நியாயமற்ற கருத்தாக இருக்கும். மாறாக, அவர்கள் செழித்திருந்த சந்தோஷமான காலத்தையும், அவர்கள் தேவனை விட்டு விலகியதையும், அவர்களது, அந்த மீறுதலுக்கான தண்டனைகளையும் தேவன் அவர்களுக்காக எழும்பப்பண்ணின நியாயாதிபதிகளின் மூலமாக அவர்களது துன்பத்தி-ருந்து விடுவித்ததையும் அது பதிவு செய்திருப்பதைக் காண்பிக்கிறது. "உன் நியாயாதிபதிகளை முன்னிருந்தது போலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் திரும்பக் கட்டளையிடுவேன்." (ஏசா 1:26) இந்த தேவனுடைய வாக்குத்தத்தத்தில் குறிப்பாக சொல்லுகிறபடி இந்த நியாயாதிபதிகளின் காலம் அநேக காரியங்களில் மிகவும் அனுகூலமான காலமாக இருந்தது.

ரூத்தின் சரித்திரமும், சாமுயே-ன் பெற்றோர்களின் சரித்திரமும் காரியங்களின் மறுபக்கத்தின் கணநேர காட்சியைக் கொடுக்கிறது, அதாவது அநேக மக்களின் மத்தியில் சந்தோஷமும், மனதிருப்தியும், தெய்வ பக்தியும் பரவியிருந்ததை காண்பிக்கிறது. நமது நாட்களில் முழு உலகத்தில் நடக்கக்கூடிய காரியங்களையும் செய்தித்தாள்களையும் பார்த்தோமானால் குற்றங்கள், வேலை நிறுத்தங்கள், விபத்துக்கள் மற்றும் சிறைக்காவல் போன்றவைகளையே பார்க்க முடிகிறது. மக்களின் இயல்பான வாழ்க்கை அபூர்வமாகவே குறிப்பிடப்படுகிறது.

இதற்கு இசைவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிஞர் ஒயிட்டியர் **(Whittier)** அவர்களின் வரிகள் உள்ளன. அனுதினமும் எதிரிடையான செய்திகள் பத்திரிக்கைகள் மூலமாக உலகிற்கு சென்றால் கூட, சுதந்திரமும் ஆசீர்வாதமும் உள்ள இந்த தேசத்தில் அவர் களிகூருகிறார்.

"என்னதான் முட்டாள்தனமும், அவமானமும், குற்றங்களும்,
உமது எல்லைக்குள் வெளியானாலும்,
வேகமான சவாலுடன் கூடிய
குற்றச்சாட்டுகள் எங்களிடம் வந்தாலும்,
உம்முடைய உயர்ந்த செய்கைகளான சம்பத்துகளும்,
உம்முடைய சமாதான வீடுகளும் தேர்வுகளும் சொல்லப்படுவதில்லை.
மனித தேவைகளுக்காக பரிந்துபேசும் உமது அன்பும்
தவறுகள் திருத்தப்படுதலும் பாதிகூட சொல்லப்படுவதில்லை."

கடந்த பாடத்தில் புறஜாதிகளை கானான் தேச ஜாதிகளை பூண்டோடு அழிக்கும்படி இஸ்ரயேலர்கள் கட்டளையிடப் பட்டதை நாம் பார்த்தோம். இது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம் விழுந்துபோன மாம்சீக சுபாவத்தை வெற்றிக்கொள்ளுதலை நிழலாக காட்டுகிறது. ஆனால் இஸ்ரயேலர்கள் தண்டனைக்குட்பட்டவர்களை முற்றிலுமாக அழிக்காமல் வாக்குத்தத்தம் பண்ணபட்ட பூமியை அனுபவிக்கும்படியாக அதிலே குடியேறினார்கள். பிற்காலத்தில் இந்த புறஜாதிகளோடு ஐக்கியமும் நட்பும் கொண்டதால் புறஜாதியாரின் மதம் இஸ்ரயேலர்களைக் கெடுத்துப்போட்டது. அவர்களை தேவனிடமிருந்து முற்றிலுமாக பிரித்து பெரும்பாலானவர்களை விக்கிரகாராதனை செய்பவர்களாக வழி நடத்தியது.

தங்களது விழுந்துபோன மாம்சீக சுபாவத்தின் விருப்பங்களுக்கு எதிராக போராடாத ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், சீக்கிரத்தில் தங்களது ஆவிக்குரிய வாழ்க்கையை இழந்து மாம்சீகம் செழிப்பதை காண்பார்கள். மேலும் மாம்சீகத்துடனான சண்டை நிறுத்தத்தால். தேவனுடனான அன்பு படிப்படியாக தணிந்து ஒரு வகையான விக்கிரகாராதனைக்கு செல்வார்கள். அதாவது தேவனுடனான இருதய பூர்வமான அன்பு, பயபக்தி போன்றவைகளி-ருந்து நீங்கி, பண ஆசை, மனிதரை புகழ்தல், தற்புகழ்ச்சி போன்றவைகளுக்குச் செல்வார்கள்.

எல்லா இஸ்ரயேலர்களும் விக்கிரக ஆராதனையில் விழுந்து போனார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர் அடிக்கடி கொஞ்ச காலத்துக்கு தேவனுடைய அன்பி-ருந்தும் அவரை ஆராதிப்பதி-ருந்தும் பிரிந்து அதன் மூலம் தேவனுடைய கிருபையை இழந்தார்கள் என்று இன்னும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு இதை பொருத்திப் பார்க்கும்பொழுது, அவர்கள் முழுவதுமாக, தற்புகழ்ச்சி, பொருளாசை அல்லது புகழ் போன்ற விக்கிரகாராதனைக்கு போகும்வரை தேவன் கோபப்படமாட்டார் என்று நினைக்கக் கூடாது. அதைக்காட்டிலும், மற்றவைகளில் இருதயம் ஈடுபாடு கொள்ள ஆரம்பிக்கும்போதே, இன்னும் நமது இருதயம்

**--2280--**

கொஞ்சம் அவரது அன்பிலும் கீழ்ப்படித-லும் இருக்கும்போதே, நமது எதிராளிகளாகிய உலகம், மாமிசம் மற்றும் சாத்தான் நம்மை முற்றிலுமாக பிடித்துக் கொள்ளும் முன்பே, கர்த்தருடைய தண்டனை நம்மை கண்டிக்கவும் சீர்திருத்துவதற்கும் அனுப்பப்படும்.

பதிவு செய்யப்பட்டிருக்கிற இந்த தெய்வீக தண்டனையும் இஸ்ரயேலர்களின் மனவருத்தமும் கர்த்தருடைய இரட்சிப்பும், அர்ப்பணம் செய்த ஜனங்களின் மேல் தெய்வீக அன்பையும் அவரது கவனிப்பையும் நிரூபணம் செய்கிறது. நமக்கு தெரிந்த வரையில் மற்ற ஜாதிகளை கண்டிப்பதற்கோ, சீர்திருத்துவதற்கோ தெய்வீக வல்லமை உபயோகிக்கப்படவில்லை. அவர்கள் தேவனுக்கும் அவரது வாக்குத்தத்தத்துக்கும் அந்நியரைப் போலவும் புறதேசத்தாரைப் போலவும் இருந்தார்கள்.

ஆகவே, நீதியினிமித்தம் தேவனுடைய சீர்திருத்துதல், அவரது கடிந்துகொள்ளுதல் முதலானவை வீட்டின் குமாரர்கள் மேல் உள்ள விசேஷித்த பாதுகாப்பையும், கவனிப்பையும் உறவையும் சாட்சி கூறுகிறது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தேவனிடம் அர்ப்பணம் செய்ததால், தேவன் நம்மை குமாரர்களாக ஏற்றுக் கொண்டு, நமது பரீட்சைக்கும், நற்பண்புகளில் அபிவிருத்தி அடையவும் தேவையான அனுபவத்தையும் சோதனைகளையும் கஷ்டங்களையும் தருகிறார். நமது விழுந்துபோன சுபாவத்தின் வஞ்சகம் போன்ற செல்வாக்குகளை உணரவும் இது கொடுக்கப்படுகிறது. இது அமலேக்கியர், கானானியர் மூலமாக குறிப்பிடப்படுகிறது. நாம் இதை முற்றிலுமாக அழித்து, அர்ப்பணம் செய்தவர்கள் எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாக இருக்கிறோம் என்று அப்.பவுல் கூறுகிற நிலைமைக்கு வரவேண்டும். (2 கொரி 10:5)

மாம்சீக இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு பாடமாக எவ்வளவு சீக்கிரம் கற்றுக்கொண்டார்களோ அவ்வளவு சீக்கிரமாக தேவனை நோக்கி கூக்குரல் இட்டபோது, தேவன் அவர்களுக்கு இரட்சிப்பை கட்டளையிட்டார். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் இதே போல தான். அவன் உண்மையான நிலைமையை உணர்ந்து தனது தவறுக்காக மனம் வருந்தி, தேவனிடம் திரும்பி, தனது சொந்த பலவீனத்தி-ருந்தும், அபூரணத்தி-ருந்தும் விடுவிக்கும்படி கதறினால், அவனது ஜெபம் கேட்கப்பட்டு, கர்த்தருடைய கிருபை போதும் என்கிற உத்திரவாதத்துடன் அவனுக்கு விடுதலை கொடுக்கப்படுகிறது. இப்படி தேவனிடம் கூக்குரல் இடுதல், பாவம் மற்றும் மாம்சீக பலவீனங்கள் எல்லாம் தேவனுடைய சித்தத்திற்கு எதிரிடையானது என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. இந்த உலகமோ, மாம்சமோ அல்லது சத்துருவோ அவனை சிக்கவைத்துள்ளார்கள் அல்லது நெறிதவறச் செய்துள்ளார்கள் என்பதை உணர்த்துகிறது. ஆனால் அவனது இருதயம் இன்னும் தேவனுக்கும் சத்தியத்துக்கும் உண்மையுள்ளதாக இருக்கிறது. உண்மையுடனும் விசுவாசத்துடனும் தேவனிடம் செல்லுகிற இப்படிப்பட்ட கூக்குரல் எல்லாம் கேட்கப்பட்டு விடுவிக்கப்படுகிறார்கள்; ஏனெனில் அவரது கிருபை நமக்கு போதுமானதாக இருக்கிறது.

**இஸ்ரயேலரின் தவறான மார்க்கம்**

இஸ்ரயேலரின் அரசாங்கம் உலகின் மற்ற அரசாங்கங்களைக் காட்டிலும் மாறுபாடானது. தேவன் அவர்களது ராஜா; அவரது உடன்படிக்கையின் பிரகாரம் அவர்களது காரியங்களை மேற்பார்வையிடுகிறார். அவர்கள் அவருக்கு கீழ்ப்படியாமல் போனதால் தற்கா-க சிறையிருப்புக்கு அனுமதிப்பதாயிருந்தாலும், அவர்கள் அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தபோது அவர்கள் தேசத்தை செழிப்பாக்கி அவர்களது முயற்சிகளுக்கு அனுகூலம் உண்டாக்குவதாயிருந்தாலும் அவரது சித்தத்தின்படியே நடந்தது. அநேக விஷயங்களில் அவர்களது நிலைமை மிகவும் சந்தோஷமானதாகவே இருந்தது.

ஆனால் சாமுயேல் தீர்க்கதரிசியின் காலத்தில், மூப்பர்கள், சாமுயே-ன் குமாரர்கள் தங்கள் பிதாவின் வழியை பின்பற்றாமலும் உண்மையாய் நடவாமலும் அநீதியாய் நடப்பதாக உணர்ந்ததால், தேவன் தான் அவர்களது நியாயாதிபதி, அவர்களது ராஜா என்பதையும் சாமுயேல் அவரது பிரநிதி மற்றும் வாயாக இருந்தார் என்பதையும் மறந்தார்கள், அல்லது முழுவதுமாக உணராமல் போனார்கள். சாமுயேல் வயது முதிர்ந்தவராய் ஆனால் கூட கர்த்தர், "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்பதை மறந்தார்கள். மேலும் அவரது குறித்த காலத்தில் அவர்களை தேவைக்கேற்ப தகுந்த நியாயாதிபதியை ஏற்படுத்த தேவன் வல்லவர் என்பதையும் மறந்தார்கள். மேலும் அவர்கள் தனிப்பட்ட முறையிலும் ஒரு தேசமாகவும் அவர்களை சுற்றியுள்ள ராஜாவைப் பெற்றிருந்த ஜாதியினரைக் காட்டிலும் மேலான நிலையில் அவர்கள் இருந்தார்கள் என்பதையும் உணரவில்லை. மாறாக, தங்களை நாகரீகம் இல்லாதவர்களாக, பழைமையானவர்களாக நினைத்துக் கொண்டார்கள். ஜனங்கள் தகுந்த முடிவெடுக்க நினைத்து, பெரும்பான்மையானவர்களின் முடிவே சரியானது என்று தீர்மானித்தார்கள்.

இந்த அடிமைத்தன வழக்கத்தினால் வசீகரிக்கப்பட்டு இஸ்ரயே-ன் மூப்பர்கள், சாமுயே-டம் சென்று, அவர் தேவனுடைய பிரதிநிதியாக இருந்து அவர்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம் பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இப்படிப்பட்ட அகௌரவமான உணர்ச்சிகளுக்கும் அவர்களது சொந்த சீரழிவுக்குமான வேண்டுகோளுக்கும் நாம் அனுதாபம் காட்ட இயலாது. இதே கோணத்திலேயே சாமுயேலும் இந்த விஷயத்தை நோக்கினார். மேலும் இதை தனக்கு அவமரியாதைக்குரிய ஒரு காரியமாகவும் கருதினார். எனினும் இந்த காரியத்தை அவர் தேவனிடம் தனது ஜெபத்தின் மூலம் எடுத்துச் சென்றார். இது சாமுயேல் தீர்மானிக்க வேண்டிய காரியமல்ல. அவர் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட செய்திகளை இஸ்ரயேலர்களுக்கு சொல்ல வேண்டிய

தேவனுடைய பிரதிநிதியாகவும், வாயாகவும் மட்டுமே இருந்தார்.

பரலோக ஞானத்தின் இயக்கத்தில் ஊழலற்ற பூமிக்குரிய நியாயாதிபதிகள் தெய்வீக செய்திகளை அறிவித்துக் கொண்டும், தெய்வீக கட்டளைகளை அமுல்படுத்திக் கொண்டும், நடைபெறும் இப்படிப்பட்ட ஆட்சி உலகம் முழுவதும் இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! இதுவே இறுதியாக நிறைவேறப் போகிற காரியம் என்று வேதம் நமக்கு கூறுகிறது. (ஏசா 1:26) எனினும் இப்படிப்பட்ட சிறப்பான நிலையை அடைவதற்கு முன்னதாக, மேசியா தமது மகாபெரிய அதிகாரத்தையும் ஆளுகையையும், எடுக்க வேண்டியது அவசியமாக இருக்கும். அப்பொழுது தேவனுடைய வாயாக அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்களின் மூலமாக கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க ஜனங்கள் தயாராக இருப்பார்கள். வேதத்தில் இப்படியாக எழுதப்பட்டிருக்கிறது: "உமது பராக்கிரமத்தின் நாளில் உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் அலங்காரமுள்ளவர்களாயிருப்பார்கள்."

**மேசியாவின் ஆட்சி ஏகாதிபத்தியம்**

ஒரு ராஜாவினுடைய நடத்தையை இஸ்ரயேலுக்கு விவரிக்கும்பொழுது, தேவனோ அல்லது சாமுயேல் தீர்க்கதரிசியோ ஒரு எடுத்துக்காட்டான ராஜா எப்படி இருக்க வேண்டும் என்று விவரிக்கவில்லை; மாறாக பழைய காலங்களில் எந்த ஒரு மனிதனும் ராஜாக்களாக அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்ட பிறகு அவன் பொதுவாக எவ்வாறு நடந்துகொள்வான் என்பதனை விவரிக்கும்படியாய் உள்ளது. ராஜாக்களின் தவறான வழிமுறைகளை மூன்று விதமான நிலைகளில் நாம் காணலாம். 1. எல்லா மனிதர்களும் அபூரணர்கள், அதினால் எந்த ஒரு ராஜாவும் எந்த அளவிற்கு அபூரணர் என்பதும், பெருமை, சுயநலம் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எவ்வளவாக தன்னை சாய்த்துக் கொண்டார் என்பதும் ஒரு முக்கிய கேள்வியாக இருந்தது. 2. ஆளுகை செய்யப்பட்டவர்களின் அபூர்ணமானது, ராஜா தான் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டதை ஒரு குறிப்பிட்ட அளவு நியாயப்படுத்தினது. 3. எதிராளியானவன் பூமியின் ஏற்பாடுகளை புரட்டி, ஒளிக்கு பதிலாக இருளை ஏற்படுத்தி, அதிகார துஷ்பிரயோகமானது, ஆளுகை செய்பவர்களுக்கு சாதகமானது என்பதை ஆளுகை செய்பவர்களும், ஆளுகைக்குட்பட்டவர்களும் அறியும்படி செய்தான்.

இப்பொழுது கேள்வி எழுகிறது. மேசியாவின் ராஜ்யத்தில் எப்படி இருக்கும்? அவரது ஆளுகை எதேச்சாதிகாரத்தின் உச்சக்கட்டமாக இருக்கும் என்று வேதம் போதிக்கிறது என்று நாம் பதிலளிக்கிறோம். எனினும் காரியத்தை புரிந்து கொள்கிற யாரும் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் உலகின் சிங்காசனத்தை எடுக்கப்போகிறவர் உலகத்தின் மீது அன்பு செலுத்தி தம்மையே மனுக்குலத்திற்காக மீட்கும் பொருளாகத் கொடுத்தவர் ஆவார். தமது சொந்த உயர்வுக்காக குடிமக்களை அழிக்கிற சுயநலம் அவரது ராஜ்யத்தில் இருக்காது. இதற்கு எதிர்மாறாகவே தமது ஆவியை காண்பித்திருக்கிறார். அதில் அவர் பரலோக மகிமையை விட்டு, கீழான சுபாவத்திற்கு தம்மைத்தாமே தாழ்த்தி, மனிதனுக்கு ஈடாகி அவர், "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்." எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு, எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தங்களுடைய ஆண்டவரும் தலையானவருமானவருடன் ஒத்துழைத்து, தங்களது ஜீவனை கொடுப்பதில் சந்தோஷப்பட்டு தங்களது ஆண்டவரின் ஆவியை பெற்றிருக்கிறவர்கள் இணைந்தது தான் சபை என்பதை நாம் நினைவு கூருவோமாக. இது இப்பொழுது உலகத்தி-ருந்து தெரிந்து கொள்ளப்பட்டு வருகிறது. தேவனுடைய முன்தீர்மானம் இல்லாமல், தேவனுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கிற இந்த வகுப்பாராக யாரும் தெரிந்து கொள்ளப்பட முடியாது என்பதையும் நினைவு கூருவோமாக. தங்களது அன்பையும் விசுவாசத்தையும் தேவனிடமும், கிறிஸ்துவினிடமும், தங்களது சகோதரர்களிடமும் உலகத்தாரிடமும், ஆம், தங்களுடைய சத்துருக்களிடமும் கூட நிரூபித்து காண்பிப்பதே சீஷத்துவத்திற்கு உரிய பரீட்சையாக இருக்கிறது என்பதையும் நினைவு கூருவோமாக.

இப்படிப்பட்ட ஒரு மகிமையின் ராஜாவின் கைகளில் இருக்கும் ஒரு எதேச்சாதிகார அரசுக்கு யார் பயப்படுவார்கள்? உண்மையிலேயே, இப்படிப்பட்ட ஒரு அரசாங்கம் மிகவும் உதவிகரமாயும், அதிக நன்மையானதாகவும் இருக்கும். அது ஞானமும் நீதியும், அன்பும் நிறைந்ததாயும் உதவிகரமானதாயும் இருக்கும். ஆகையால் அழைக்கப்பட்டவர்களாகிய நாம், பாரமான யாவற்றையும் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, ஆண்டவரின் கிருபையினால் மேசியாவின் ராஜ்யத்தில் அவருடன் உடன் சுதந்தரராகக் கூடிய பரிசைப் பெறுவோமாக. பாவத்தி-ருந்தும் மரணத்தி-ருந்தும் மீட்டு பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரையும் ஆசீர்வதிப்பதில் நாம் பங்கு பெறுவோமாக.

---------------------------------

**--2282--**

# சவுல் கர்த்தரால் புறக்கணித்து தள்ளப்பட்டான்
# Saul Rejected by The Lord

## 1 சாமு 15:10-23

கீழப்படியாமையினால் சவுல் சிங்காசனத்தை இழந்தான் – அவனது கடினமான முதலாவது சோதனை – ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான பாடம் – சவு-ன் இரண்டாவது கடினமான சோதனை – அமலேக்கியர் ஏன் அழிக்கப்பட்டனர் – அவர்களது தண்டனை நீதியானதா? – சவு-ன் தவறான மனப்போக்கு – சாமுயே-ன் குணத்தின் பலமும் அழகும்.

“ப-யைப் பார்க்கிலும் கீழப்படிதலே உத்தமம்.” 1 சாமு 15:22

இந்த பாடத்தின் தலைப்பு வசனம் தேவன் சவுல் ராஜாவைக் கண்டித்ததைப்பற்றி சாமுயேல் கூறியதாகும். பரம ராஜாவுக்கு சவுல் கீழப்படியாததால் தேவனின் பிரதிநிதியாக இஸ்ரயே-ன் சிங்காசனத்தை இழந்ததைப் பற்றிய அறிவிப்புக்கு தொடர்புடையதாகும். சவு-டமிருந்து ராஜ்யபாரத்தை நீக்குதல் என்பது அவனை நீக்கியதைக் காட்டிலும் அதிகப்படியான அர்த்தமுடையது. அதாவது அவனது மகனும் சந்ததியினரும் தேவனுடைய பிரதிநிதியாக சிங்காசனத்தில் தொடரக் கூடாது என்று பொருள் தந்தது.

அநேக வருடங்கள் அவன் ராஜ்யபாரத்தில் நன்முறையில் செழிப்படைந்தான். அவனோடு கூட இஸ்ரயேல் ஜனங்களும் செழிப்படைந்தார்கள். அவன் முடிசூட்டப்பட்ட பல வருடங்களுக்குப் பிறகு அவனது கடினமான முதலாவது சோதனை அவனுக்கு வந்தது. அந்த சமயத்தில் பெ-ஸ்தருக்கு விரோதமாக ஒரு யுத்தம் ஆரம்பித்திருந்தது. பெ-ஸ்தர் இஸ்ரேல் மேல் அதிகாரம் செலுத்தினார்கள். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் தேவனுக்கு சர்வாங்கதகன ப-யை செலுத்துவதற்காக அநேக நாட்கள் சாமுயேல் தீர்க்கதரிசிக்காக காத்திருந்தான். சாமுயேல் தேவ கட்டளைப்படி தடையாயிருந்தார். சாமுயேல் குறித்த ஏழு நாட்கள் ஆகியும் வராததால் சவுல் தெய்வீக ஏற்பாட்டிற்கு மாறாக ப-களை செலுத்தினான். அதன் பிறகு யுத்தத்தை நடத்தினான். முடிவு அவனது படைகளுக்கு கணிசமான தோல்வி கிடைத்தது.

சவுல் ராஜா வேண்டுமென்றே பாவம் செய்வில்லை என்பது தெளிவாக இருக்கிறது. தேவனிடமும் அவரது ஏற்பாடுகளின் மேலும் மரியாதையும் கனமும் செலுத்துவதில் சவுல் குறைவுபட்டிருந்தான். இந்த சம்பவம் சவுல் தேவனால் புறக்கணித்து தள்ளப்படுவதற்கு ஆரம்பமாக இருந்தது. சாமுயேல் தீர்க்கதரிசி சவுலைப் பார்த்து கூறிய வார்த்தைகளாவன: “உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற் போனீர்... இப்பொழுதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது. கர்த்தர் தம்முடைய இருதயத்துக்கு ஏற்ற ஒரு மனுஷனை தேடியிருக்கிறார்.” 1 சாமு 13:13, 14

### ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு பிரயோகித்தல்

இந்த சம்பவத்தின் பாடம், சவுல் ராஜாவுக்கும் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கும் அவர்களது காலத்தில் பொருந்தக் கூடியதாக இருந்தது போல், தற்காலத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு பொருந்தக் கூடியதாக இருக்கிறது– “ப-யைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம்.” தேவனுடைய நாமத்தில் ஊழியம் செய்கிற இதே நிலைமையி-ருக்கிற அநேகருக்கிடையே இப்படிப்பட்ட எத்தனை வசனங்களை நாம் காண முடிகிறது! கிறிஸ்தவ மண்டலங்களில் அநேக சபைப்பிரிவுகளில் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் அநேகர் தங்கள் நேரத்தையும் பணத்தையும் அர்ப்பணிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாததால் அவர்கள் பெறக் கூடிய ஆசீர்வாதங்களை இழந்துவிடுகிறார்கள்; பெரிய சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இழந்துவிடுகிறார்கள்; ஆம், அவர்களில் பெரும்பாலோர், தங்களை தாங்களே தேவனுடைய ராஜ்யத்தி-ருந்தும், அந்த ராஜ்யத்தில் தேவனிடமிருந்தும், உடன் சுதந்தரத்தி-ருந்தும் மகிமையி-ருந்தும் துண்டித்துக் கொள்கிறார்கள் என்று நாங்கள் பயப்படுகிறோம்.

சவுல் ராஜாவின் அனுபவங்களின் மூலம் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த பாடத்தி-ருந்து தேவனுடைய வார்த்தைகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்பதை பரமபிதா விரும்புகிறார் என்பதையும், அதைக்காட்டிலும் இன்னும் மேலானதை ஒரு நொடி கூட நாம் நினைக்கலாகாது என்பதையும் அல்லது அந்த நேரமும் சூழ்நிலைகளும் அவருக்கு நாம் கீழ்ப்படியும் குணத்தை மாற்றும் என்பதையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். சவுல் ராஜா கீழ்ப்படிதலுடன் இருந்து பலன் நாசகரமானதாக இருந்திருந்தால், அவனது மனசாட்சியாவது சமாதானமாக

இருந்திருக்கும்; நான் தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தேன், விளைவுக்கு நான் பொறுப்பல்ல என்று சொல்லக் கூடும். அவன் கீழப்படிந்திருந்தால் விளைவுக்கு தேவன் பொறுப்பேற்றிருந்திருப்பார். தெய்வீக வல்லமை சரியான விளைவை கொடுத்திருக்கும் என்பதை நாம் அறிவோம். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு நாள் நடக்கையிலும் இந்த பாடத்தை நாம் அப்பியாசப்படுத்துவோமாக. தேவனுடைய வார்த்தையை உன்னிப்பாக கவனித்து அதற்கு நெருக்கமாக இருந்து, விளைவைக்குறித்து பயப்படாமல், நம்மை வழி நடத்துபவர் தூங்கவோ, உறங்கவோ மாட்டார் என்று நம்பிக்கை வைப்போமாக; நமது கீழ்ப்படித-ன் விளைவினால் நமக்கு வரக்கூடிய எந்த ஒரு அவசரத் தேவையையும் சந்திக்க வல்லவராகவும் எந்த தவறும் செய்யாத அளவுக்கு மகா ஞானமுள்ளவராகவும் தேவன் இருக்கிறார் என்றும் நாம் நம்பிக்கை வைப்போமாக.

இந்த பாடத்தின் போதனையை பின்பற்றுவதினால் பாபிலோனில் உள்ள தேவனுடைய பிள்ளைகள் எத்தனை பேர் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க கூடும்! மறுபடியும் மறுபடியும் அவர்கள் சொல்-க்கொள்கிறதாவது:'' ஆதி சபையின் வழக்கத்திற்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் எளிமைக்கும் தற்கால ஸ்தாபனங்களும் ஏற்பாடுகளும் மாறுபாடாக இருக்கிறதாக நான் காண்கிறேன்; ஆனால் நான் என்ன செய்ய முடியும்? இந்த முறைமையுடன் ஈடுபாடு கொண்டு அதன் முன்னேற்றத்திற்காக நான் தியாகம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறேன். இப்போது அதி-ருந்து நான் விலகிக் கொண்டால் ஏறக்குறைய அழிவுக்காக செல்வதைக் குறிக்கும். நான் மனித ஸ்தாபனங்களி-ருந்து விடுபட விரும்புகிறேன். மேலும் நான் தேவனுடைய வசனத்திற்கிசைவாக கர்த்தருடைய வேலையில் ஈடுபட்டிருக்கிறேன். என்னால் இதை விட்டு போக இயலாது, ஏனெனில் எனது தேவை அவசியமாக காணப்படுகிறது, நான் ஒரு தியாகத்தைச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்வதற்கு இதுவே மிகவும் சௌகரியமான இடமாகக் காணப்படுகிறது.''

இப்படிப்பட்ட விவாதங்களில் தேவன் சந்தோஷப்பட வில்லை. ப-யைப்பார்க்கிலும் கீழப்படிதலே உத்தமம் என்பதே அவர் நமக்கு கொடுக்கும் செய்தி, நமது ப-யை அவர் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், நமது ப- வீணாகிவிடும். யார் முதன் முத-ல் கீழப்படிகிறார்களோ அவர்களது ப-யைத் தான் தேவன் ஏற்றுக்கொள்கிறார். ''என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.'' வெளி 18:4

சவுல் ராஜா புறக்கணித்து தள்ளப்பட்டது தேவனால் அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட அது பல வருடங்களாக – ஒருவேளை பத்து வருடங்களாக நிறைவேறாதிருந்தது. இந்த உத்தரவு அமலாக்கப்படாத சட்டத்தைப் போல இருந்தது. சவுல் தள்ளப்பட்டதால் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறவனாகவும் உன்னிப்பாக கவனிக்கிறவனாகவும் சரியானபடி அப்பியாசப்படுத்துகிறவனாகவும் இருந்தான். இந்த காலக்கட்டத்தில் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது, ராஜ்யத்தில் சவுலுக்குப் பதிலாக தேவனுடைய பிரதிநிதியாக இருக்கும்படியாக போதுமான அளவுக்கு அபிவிருத்தி பண்ணப்படவில்லை.

**சவுல் ராஜாவின் இரண்டாவது சோதனை**

சவுல் ராஜாவுக்கு வந்த இரண்டாவது கடினமான சோதனை அமலேக்கியருக்கு தொடர்புடையது. இந்த கொடூரமான நாடோடி ஜனங்கள் அநேக சந்தர்ப்பங்களில் இஸ்ரயேல் ஜனங்களுக்கு தீங்கிழைத்திருக்கிறார்கள். சவுல் ராஜாவுக்கு தேவன் கட்டளை கொடுத்தபோது, அமலேக்கியர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும் என்று விசேஷித்த விதமாக கூறியிருந்தார். ''அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன் மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய்.'' இங்கே அமலேக்கியரின் மற்ற மீறுதல்கள் குறிப்பிடப்படவில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டு வெளியேறிய போது இஸ்ரயேலர்களை அமலேக்கியர் துன்புறுத்தியதால் இந்த அழிவு என்று தேவன் குறிப்பிடுகிறார்.

இந்த நிகழ்வு நம்பத்தகாததாக, கீழ்க்கண்ட இரண்டு காரியங்களில் ஒன்றை நிரூபிப்பதாக இருக்கிறது. (1) அது சாமுயேல் அல்லது சவு-ன் கற்பனையாக இருந்தது. அல்லது அவர்கள் பேரில் எழுதப்பட்ட போ-யானதாக இருந்தது; அல்லது (2) இது தேவனுடைய கட்டளையாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாக இருந்தால், அவர் ஒரு அரக்கன் என நிரூபிக்கக் கூடியதாக இருக்கிறது. அதாவது நீதி, இரக்கம், தயவு, அன்பு ஆகியவைகளில் குறைவுபட்டிருப்பதாக நிரூபிக்கிறது. ஏனெனில் அவர் அனைத்து மானிட ஜீவிகளையும், வாயில்லாத பிராணிகளையும் கொன்று போடச் சொல்-யிருக்கிறார். இந்த காரியத்தில் எல்லோரும் புரிந்து கொண்டு திருப்தியடையக் கூடிய பதில் ஒன்று இருக்கிறது. அது கீழே கொடுக்கப்படுகிறது.

--2284--

(1) அமலேக்கியரின் சங்காரம் என்பது சாதாரணமாக யூகிக்கிறதுபோல, மறுப்புக்கு இடமில்லாதபடி அவர்கள் துன்மார்க்கராக இருந்து நித்திய ஆக்கினைக்குச் செல்கிறார்கள் என்று பொருளல்ல. மரணம் என்பது அமலேக்கியருக்கும் அவர்களது கால் நடைகளுக்கும் ஒரே மாதிரியாகவே இருந்தது. அதாவது தற்கால வாழ்வின் விருப்பங்கள் அனைத்தும் முடிவடைதல் ஆகும். தற்கால வாழ்வின் விரும்பத்தக்க காரியங்கள் அமலேக்கியருக்கு அவர்களது மந்தைகளுக்கானதைக் காட்டிலும் அதிகமானது அல்ல, அமலேக்கியர் பஞ்சத்துக்கோ, கொள்ளை நோய்க்கோ உட்பட்டிருந்தாலோ, பசியினாலோ, வியாதியினாலோ இறந்திருந்தாலோ, வாளால் சங்கரிக்கப்பட்டதை காட்டிலும் அதிகமாக துன்பப்பட்டிருப்பார்கள். அதாவது வாளால் சங்கரிக்கப்பட்டு வாழ்வு முடிவுக்கு வரும்போது வேதனை குறைவாக இருக்கும். தாழ்ந்த உயிரினங்களுக்கும் எவ்வகையிலேனும் வாழ்வு முடிவுக்கு வருகிறது.

அவர்கள் எல்லாரும் மரணம் என்கிற மகா பெரிய சிறைச்சாலைக்குச் சென்றார்கள். அதாவது ஷியோல், **(Sheol)** ஹேடிஸ் **(Hades),** கல்லறைக்குச் சென்றார்கள். இதை முன்னறிந்த தேவன், மகா பெரிய இரட்சிப்பை அவர்களுக்கு மாத்திரமல்ல, அனைத்து மனுக்குலத்திற்காகவும் முன்னமேயே ஏற்பாடு செய்திருந்தார். அவர்களது மரணத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு பின்னர் கிறிஸ்துவின் மகா பெரிய ப-யினால் உறுதி பண்ணப்பட்டது. உறுதி பண்ணப்பட்டபடி, விரைவில் அவர்கள் சிறைச்சாலையி-ருந்து விடுவிக்கப்படுவார்கள். அதாவது நித்திரை என்கிற மரணத்தி-ருந்து விழித்து எழும்புவார்கள். அவர்கள், நமது ஆண்டவரால், “பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள்” என்று கூறப்பட்ட வகுப்பினரிடையே இருப்பார்கள். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபையை கற்றுக்கொள்ளவும், பூமியின் சகல வம்சங்களுக்குள் இருக்கும்படியாகவும் மிகவும் அனுகூலமான நிலைமைக்கு எழுந்து வருவார்கள். பூமியின் சகல வம்சங்களும் ஆபிரகாமின் சந்ததியாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அமலேக்கியர்கள் பிரதான உயிர்த்தெழுத-ல் இருக்க மாட்டார்கள், ஆனால் நியாயத்தீர்ப்பின் மூலம் இழந்ததை பெறுகிற சலுகைக்கும், நீதியில் சீர்திருத்தப்படுதலுக்கும் எழுந்து வருவார்கள்.

(2) எமோரியரைப்போல அமலேக்கியர்களுக்கும் இது உண்மையாக இருக்கிறது. சீக்கிரத்தில் அவர்கள் சங்கரிக்கப்படுவார்கள், ஆனால் அவர்களது பாவங்கள் இன்னும் நிறைவடையவில்லை. இதி-ருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதாவது அவர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் விசேஷித்த உறவுக்குள் இல்லாதிருந்தாலும், தெய்வீக மேற்பார்வை அவர்கள்மேல் இருந்து அவர்களது மீறுதல்கள் அதிக அளவு போகாதபடி பார்க்கிறது. இந்த மீறுதல்கள் நிறைவடையும் போது தண்டனை எதிர்பார்க்கபடவேண்டும். அமலேக்கியரைப்பற்றிய விபரங்களை நாம் அறியோம். ஆனால் தேவனுடைய நற்பண்புகளையும், அவரது நீதி, தயவு போன்றவைகளையும் அறிந்து, ஏதோ ஒரு வகையில் அவர்களது மீறுதல்கள் மிதமிஞ்சி போனதால் அவர்களது மரணதண்டனையை நிறைவேற்றும் கட்டளை சவுல் ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது என்று நாம் நிச்சயிக்கிறோம்.

**சவுல் ராஜாவின் தெரிந்தே செய்த கீழ்ப்படியாமை**

இந்த சோதனையில் தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் சவு-ன் தோல்வி தெளிவாக தெரிகிறது. அவன் அமலேக்கியர் அனைவரையும் கொன்று போட்டு ராஜாவை உயிரோடே வைத்தான். ஒரு வேளை தனது வெற்றி விழாவில் அவனை காண்பிப்பதற்காக இருக்கலாம். ஆனால் ஆடுமாடுகளில் நலமானவைகளை அவனது ஜனங்களுடன் இணங்கி அழித்துப்போடாமல் தப்ப வைத்தான்.

இந்த காலக்கட்டத்தில் சாமுயேல் தீர்க்கதரிசி சவு-டம் வந்தார். அப்பொழுது நடந்த சம்பாஷணையில் தான் நமது பாடத்தின் தலைப்பு வசனம் சொல்லப்பட்டது. இந்த சரித்திரம் – தேவனுடைய உறுதியான கட்டளையும் சாமுயே-ன் கோபமும் – தேவன் கூறியதை சவுல் தவறாக புரிந்து கொள்ளவில்லை என்பதையும் அவரது கட்டளையை தெரிந்தே மீறினான் என்பதையும் தெளிவாக குறிப்பிடுகிறது. சவுல், சாமுயேல் தீர்க்கதரிசியிடம் கூறின வார்த்தைகள் எவ்வளவு மகா கபடமான வார்த்தைகள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சவுல் முதலாவது தீர்க்க தரிசியிடம் வாழ்த்துதல் கூறி பிறகு தேவனுடைய கட்டளையை வெற்றிகரமாக நிறைவேற்றினதாகக் கூறினான்.

உடனே தீர்க்கதரிசி பதில் கூறியதாவது: “அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்கு கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன**?**” சங்காரம் செய்யும் வேலை நிறைவடையவில்லை என்பதை தீர்க்கதரிசி புரிந்து கொண்டார். சவுல் ராஜாவும் இஸ்ரயேலர்களும் கொள்ளைப் பொருளை எடுத்துக் கொள்வதில் ஆர்வமாய் இருந்தார்கள். இது தேவ கட்டளைக்கு முற்றிலும் எதிரானதாக இருந்தது. அவர்கள் தங்களது சொந்த இலாபத்திதற்காக எதிரிகளை

அழிக்கக் கூடாது, ஆனால் நீதியின் தீர்ப்பை, தேவனுடைய கட்டளையை ஒரு பிரதிநிதியாக இருந்து, நிறைவேற்ற வேண்டும். கொள்ளைப் பொருளை எடுத்துக் கொண்டு இலாபம் அடைகிற அவர்களை சுற்றிலும் இருக்கிற நாட்டினரைப் போல இஸ்ரயேலர்கள் இருக்கக் கூடாது. அவர்கள் தேவனுடைய எதிரிகளுக்கு தண்டனையளித்து, பலனடைகிற ஒரு கொள்ளைக்கார நாட்டைப் போல இருக்கக் கூடாது. முன்னே சொல்லப்பட்ட விளக்கமும் இதுவும் தேவனுடைய குணநலத்திற்கு முழுவதும் இசைவாக இருக்கிறது.

சவுல் தேவகட்டளையை மீறினதை தீர்க்கதரிசி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் கண்டு, அவன் தான் எதிரியிடமிருந்து பிடித்த ஆடுகளும் மகா தேவனுக்கு ப–பிடுவதற்காக என்று கபடமாக சொல்ல ஆரம்பித்தான். ஏனெனில் இப்படி ப–யிடப்பட்ட மிருகங்களின் மாமிசம் அவர்களால் உண்ணப்பட்டன. இது தானாக ஏற்படுகிற ஒரு விருந்தாக இஸ்ரயேலருக்கு இருக்கும். தீர்க்கதரிசி சவு–ன் விளக்கத்தை நிறுத்தி, இன்று ராத்திரியிலே தேவன் அவரிடம் சொன்ன வார்த்தைகளை கூறினார். ''இந்த ராத்திரி'' என்பது நாளின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. ஏனெனில் யூதர்களுக்கு ஒரு நாள் என்பது மாலையில் ஆரம்பிக்கிறது.

சவுல் சிங்காசனத்தில் தேவனுடைய பிரதிநிதியாக தெரிந்தெடுக்கப்பட்டபோது அவன் தாழ்மையாகவும் பரலோக சத்தத்திற்கு மிகவும் கண்டிப்பாக கீழ்ப்படிய விரும்புகிறவனாகவும் இருந்தான்; ஆனால் அவன் அதிக தன்னம்பிக்கையில் வளர்ந்து, தேவனுடைய நம்பிக்கையிலும், அவரது கட்டளைகளில் கவனம் செலுத்துவதிலும் குறைவுபட்டான் என்ற உண்மையில் நமது கவனத்தை தேவ செய்தி ஈர்க்கிறது. சவுல் தவறான மனநிலைக்குச் சென்று, மிகவும் தெளிவான, விசேஷித்த ஒரு கட்டளையை நிறைவேற்றவில்லை. தேவன் எல்லாவற்றையும் சங்காரம் செய்ய கட்டளையிட்டிருந்த போது, சவுல் வேண்டுமென்றே அதை மீறி கொள்ளைப் பொருளை பிரித்து வைத்தான்.

இந்த பாடத்தின் கோட்பாடுகளை தற்கால தேவனுடைய பிள்ளைகளுக்கு பொருத்தினால், அமேலேக்கியர்கள் பாவங்களை குறிப்பிடுகிறார்கள். தேவனுடைய கட்டளை பாவங்களை முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளுதல் என்று நாம் நினைக்கிறோம். நல்ல ஒரு பாடத்தை நாம் பெறுவோம். சவுலைப்போல பலர் பாவத்தோடு தொடர்புடைய இழிவான வைகளை அழிக்க முடிவு செய்வார்கள். ஆனால் பாவத்தின் ராஜாவை பாதுகாக்க அவனை வெறும் கைதியாக மட்டும் ஆக்குவார்கள். தேவன் அழிவுக்காக தீர்ப்பிடப்பட்டவைகள் என்று உணருகிறவைகளை அநேகர் அழிக்க தேடுவார்கள். அடிக்கடி சவுலைப் போல குறைவாக வெறுக்கத்தக்க இந்த பாவங்களை, தேவனுக்கு மகிமையாக ப–யிடுவதற்காக வைத்திருப்பதாக கூறுகிறார்கள். எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயம் எப்படி திருக்குள்ளதாக இருக்கிறது! தேவனுடன் இசைவாய் இருப்பவர்கள் முற்றிலும் சுத்தமான இருதயம் உள்ளவர்களாகவும், முற்றிலும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது! தேவனுடைய வழிநடத்துத–ன் கீழ், வாழ்வின் ஒவ்வொரு பாவம் நிறைந்த கொள்கைகளையும், தீய போதனைகளையும் தப்பறையான போதகங்களையும், பாவமுள்ள சிந்தனைகளையும், வார்த்தைகளையும் செயல்களையும் நீக்க முயற்சிப்பது எவ்வளவு அவசியமாக இருக்கிறது!

### கீழ்ப்படிதலும் ப–யும்

சவுல் ராஜா தான் செய்த காரியத்தை சரியானது என்று வாதிடுவதற்கு முயற்சித்தான். இஸ்ரயே–ன் சேனைகளும் அவனும் தேவனுக்கு ப–களை செலுத்தவதற்கு மிகவும் விருப்பம் உள்ளவர்களாக இருந்ததாகக் கூறி, கொள்ளைப் பொருட்களை காத்ததற்கு பொறுப்பை அவர்கள் மேல் வைக்க முயற்சித்தான். தீர்க்கதரிசியின் பதில் இந்த பாடத்தின் முக்கியமான சாராம்சமாகவும் பொன்னான வாக்கியமாகவும் இருக்கிறது. ராஜா எதை அறிந்திருக்க வேண்டும் என்பதையும் எல்லாரும் எதை அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் அவர் தெளிவாக குறிப்பிட்டார். அதாவது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதைக் காட்டிலும் அவருக்கு ப–யிடுவது அவருக்கு பிரியமில்லாதது. தன் இருதயத்தில் கீழ்ப்படிதல் இல்லாமலும், ப–யானது அந்த கீழ்ப்படிதலை குறிக்காமலும் இருந்து, தேவனுக்கு ஏற்புடைய ப–யை ஒருவனாலும் செலுத்த இயலாது.

இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகளுக்கும் அப்படியே இருக்கிறது. நாம் தேவனுக்கு செலுத்துகிற ப–, தீய வழிகளில் சம்பாதித்த செல்வமாக இருக்கக் கூடாது. தவறான கிரியைகளினால் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பாதித்தவைகள் தேவனுக்கு ஏற்புடைய ப–யாக

இருக்காது. நமது ப-யானது நமது இருதயத்தி-ருந்து இருக்க வேண்டும். முதலாவது அது சித்தமாக இருக்க வேண்டும். தனது சித்தத்தையும் தனது இருதயத்தையும் தேவனுக்கு கொடுக்கிறவன் எல்லாவற்றையும் கொடுக்கிறான். தனது சித்தத்தை கொடுக்காதவனும், இருதய பூர்வமான கீழ்ப்படிதலுடன் தேவனிடம் வராதவனும், தேவனுக்கு பிரியமான ப-யை செலுத்த முடியாது. ''ப-யைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம்'' என்ற பாடமே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவரின் உள்ளத்தில் ஆழமாக பதிய வைக்கப்பட வேண்டும்.

கீழ்ப்படித-ன் ஆவியை பெறுவதும் அவசியமாக இருக்கிறது. இந்த ஆவியை பெற்றிருப்பவர்கள், தெய்வீக சித்தத்திற்கு கீழ்ப்படிவது மாத்திரமல்ல, தேவனுடைய சித்தத்தை மென்மேலும் அறிந்து கொண்டு கீழ்ப்படியத்தக்கதாக தேடுவார்கள். ''உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்'' என்று வேதம் சொல்கிற வகுப்பார் இவர்களே. மேலும் நமது இரட்சகரின் வார்த்தைகள் கூறுகிறதாவது: ''என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது.''

சவுல் ராஜா இஸ்ரயேல் தேசம் முழுவதும் பில்- சூனியம் மற்றும் விக்கிரக ஆராதனையை எதிர்ப்பதில் ஊக்கமுடைய வனாயிருந்து வந்தான். இப்படி செய்ததின் மூலம் தெய்வீக திட்டத்திற்கும், தெய்வீக சித்தத்திற்கும் இசைவான நல்ல வேலைகளை நிறைவேற்றி வந்தான். இந்த காரியங்களில் அவனது ஊக்கம், தேவ கட்டளையை வேண்டுமென்றே, தெரிந்தே அசட்டை செய்ததை ஈடு செய்ய முடியாது என்ற உண்மைக்கு அவனது கவனத்தை தீர்க்கதரிசி சாமுயேல் இழுத்தார். பாவத்திற்கும் ஒவ்வொரு தீய காரியத்திற்கும் விரோதமான தேவகட்டளையும் அதன் ஒவ்வொரு எழுத்தும் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த பாவம், நமது விழுந்து போன சுபாவத்திற்கு, எவ்வளவு மேலாக உயர்த்தப்பட்டதாக இருந்தாலும், மேலான ஸ்தானத்திலும் இடத்திலும் செய்யப் பட்டதாக இருந்தாலும், அது எவ்வளவு விலையேறப் பெற்றதாக, மதிப்புடையதாக இருந்தாலும் எவ்வளவு ருசியுள்ளதாக இருந்தாலும், தேவ கட்டளை நிறைவேற்றப் பட வேண்டும். அது நமது வலது கையைப் போல அல்லது வலது கண்ணைப் போல பிரியமானதாக இருந்தாலும் தேவனுடைய சீடர்களுக்கு கீழ்ப்படிதலைத் தவிர, மரணபரியந்தம் கீழ்ப்படிதலைத் தவிர எந்த ஒரு மார்க்கமும் திறந்திருக்காது.

சவுல் ராஜா முற்றிலுமாக புறக்கணித்துத் தள்ளப்பட்டாலும், குறித்த காலம் வரை அவன் நீக்கப்படவில்லை. அமலேக்கியரை வெற்றிக் கொண்டதை கொண்டாடும் படியான ஒரு பகிரங்கமான ப-யில் சாமுயேல் தீர்க்கதரிசி, சவுல் ராஜாவோடு கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியில் அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகை தன் கையாலே தீர்க்கதரிசி சாமுயேல் கொன்றுவிட்டு தன் வீட்டுக்குச் சென்றார். அதன்பிறகு சவுலை அவர் பார்க்கவில்லை. எனினும் வேத வாக்கியம் கூறுகிறதாவது: ''சாமுயேல் சவுலுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான்.'' இது மறுபடியும் தீர்க்கதரிசியின் குணலட்சணத்தின் அழகையும் பலத்தையும் நமக்கு காண்பிக்கிறது. தேவனுடைய கட்டளையின் ஒவ்வொரு அம்சத்தையும் நிறைவேற்ற எப்பொழுதும் அவர் தயாராக இருந்தார். எனினும் வழியை விட்டு விலகினவர்கள் மீது மனதுருக்கம் உடையவராகவே இருந்தார். அந்த மனதுருக்கம் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்வதற்காகவும், அவர்களது தவறான வழியில் ஒத்துழைப்பு கொடுப்பதற்காகவும் அல்லாமல் நீதியான வழியில் எந்த நேரத்திலும் ஒத்துழைக்க சந்தோஷப்படுகிற மனதுருக்கமாக இருந்தது.

---------------------------------

# பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை
## Patient Endurance The Final Test

"நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது." யாக்கோபு 1:4

பொறுமையானது குணலட்சணங்களில் முக்கியமான ஒன்று என்று வேதாகமம் எல்லா இடங்களிலும் குறிப்பிடுகிறது. மானிட அனுபவத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அதன் அவசியத்தை நாம் காண முடிகிறது. தற்கால நிலைமைகளில் நேர்மையாயிருப்பதற்கு ஒருவன் பொறுமையாயிருக்க வேண்டும், மூர்க்கமாக அல்ல. ஏனெனில் பொறுமையின்மையுடன் குரூரமாக இருத்தல் தவிர்க்க இயலாத அபூரணமும் பலவீனமும் உள்ள சகமனிதர்களுக்கு தீங்கிழைக்கக் கூடியதாக இருக்கும். ஆகையால் சக மனிதர்களுடன் நாம் தொடர்பு கொள்ளும்போது நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று தெளிந்தபுத்தியுள்ள ஆவி விரும்புகிறது. தேவனே பொறுமை என்கிற இந்த குணத்தை உடையவராகவும் நீண்ட காலமாக அதை அப்பியாசப்படுத்துகிறவராகவும் இருக்கிறார். அடுத்த யுகத்தில் உலகத்தோடு தொடர்புகொள்ளும் போது அதிக பொறுமை சபைக்கு தேவைப்படுகிறது. நமது ஆண்டவருடன் சிங்காசனத்தில் ஒரு இடம் பெற தேவையான குணலட்சணத்தை அபிவிருத்தி செய்ய பொறுமை நமக்கு எப்பொழுதும் தேவைப்படுகிறது.

பொறுமையானது, அன்பு, மற்றும் தயையுடன் நெருங்கி இணைந்து நிற்கிறதாக இருக்கிறது. தேவன் அன்பில்லாதவராக, தயவு இல்லாதவராக இருந்திருந்தால், அவர் பொறுமையில்லாதவராக இருந்திருக்க வேண்டும். மனிதனின் தற்கால களங்கமுள்ள, விழுந்து போன நிலைமையில் பொறுமையானது பரிதவிக்கப்படத்தக்கதாக குறைவுபட்டிருக்கிறது. ஆனால் இது அடிக்கடி கொள்கைக்காக வெளிப்படையாக அப்பியாசப்படுத்தப் படுகிறது. இந்த தெய்வீக குணம், தேவனிடத்திலும், அவரது சாய-ல் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளிடத்திலும் இருக்கிற மற்ற குணங்களைப் போல முதல் மனித ஜோடியின் விழுகையினால் மனுக்குலத்தி-ருந்து அழிக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் இரண்டு கிரேக்க வார்த்தைகள் பொறுமை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவைகளில் ஒரு வார்த்தை பொறுமையை, நீடிய பொறுமையை குறிக்கிறது. மற்ற வார்த்தை உற்சாகமுள்ள அல்லது நம்பிக்கையுடனான பொறுமையை குறிக்கிறது. பின்னால் சொல்லப்பட்ட வார்த்தை தான் நமது பாடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பொறுமை என்கிற அர்த்தத்தைக் காட்டிலும் அதிக ஆழமான பொருளைப் பெற்றிருக்கிறது. தீமையை விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் சகிக்கின்ற இந்த மாறாத நிலையானது, உணர்வையும் செயலையும் தற்கா-கமாக கட்டுப்படுத்துவதில்லாமல் குணலட்சணத்தின் ஒரு மூலக்கூறாக உள்ளது. இது இருதயம் மற்றும் குணத்தின் வளர்ச்சியினை முக்கியப்படுத்துகின்றது. தீமையை சகிப்பதில் அல்லது பாடுகளில் போதுமானதாயிருப்பதில் விருப்பத்திற்கு எதிராக போராடாமல், தெய்வீக ஞானம் மற்றும் அன்பிற்கு முழுவதும் கீழ்ப்படிவதிலும் அந்த வளர்ச்சியினை வெளிப்படுத்துகின்றது. இந்த ஞானமும், அன்பும் இப்பொழுது தற்கால தீமைகளை அனுமதித்து, பிறகு அவைகளை ஏற்றகாலத்தில் தூக்கியெறிவதென வாக்களித்துள்ளது.

கிறிஸ்தவ குணத்தின் இந்த பொறுமையை ஜாக்கிரதையுடன் அபிவிருத்தி செய்வது நமக்கு நிச்சயமாக நன்மை பயக்கும். இதைக் குறித்து நமது ஆண்டவர் தமது பிரசங்கத்தில் அளிக்கிறது. இந்த பொறுமை இல்லாமல் நமது குணம் பூரணமடையாது என்று அவரது வசனம் நமக்கு உறுதி அளிக்கிறது. தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தையும் மிகவும் உறுதியாக தரித்துக் கொள்ள கிறிஸ்தவனுக்கு பொறுமை தேவைப்படுகிறது. மற்றவர்களோடு தொடர்பு கொள்வதற்கு மாத்திரமல்ல, நம்மையும் நம்முடைய குறைபாடுகளையும் கவனிப்பதற்கும் இந்த பொறுமை நமக்கு தேவைப்படுகிறது. நம்மைச் சுற்றிலும் மற்றவர்களைச் சுற்றிலும் இருக்கிற சுற்றுச் சூழ்நிலைகளையும் நிலைமைகளையும் நாம் எப்பொழுதும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் சுற்றிலும் கவனிக்கும் போது உலகம் பாவம் என்னும் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். இந்த அறிவு நமக்கு மனுக்குலத்தின் மீது பெரும் இரக்கத்தை உண்டாக்கும். இந்த அறிவு இல்லாமல் நாம் பொறுமையை நாம் பெற முடியாது. நம்மைப் போலவே கிறிஸ்துவுக்குள்ளான நமது அனைத்து சகோதரர்களும் விழுந்துபோன மனுக்குலத்தின் இயற்கையான அங்கத்தினராக இருக்கிறார்கள். ஆகையால் நாம் கர்த்தரின் பிள்ளைகளிடத்தில் பொறுமையை அதிகமாக கையாள வேண்டும். ஏனெனில் அவர்கள் இந்த கிருபையை நம்மிடத்தில் அப்பியாசப்படுத்துகிறார்கள்.

### தேவனுடைய பொறுமை

நீதி என்கிற குணம் எப்பொழுதும் உறுதியாய் நிலைத்து இருப்பதுபோல, பொறுமை என்கிற குணமும் உறுதியாய் நிலைத்து இருக்கும். பொறுமை என்பது தீமையை சகித்துக் கொள்வதில் என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. தேவன் தமது சொந்த மகிமையின் திட்டங்களை மனதின் பூரண சம நிலையில் செயல்படுத்துகிறார். தற்கால தீமை, மற்றும் பாவ நிலைமையில் பொறுமையை அப்பியாசப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. வரவிருக்கிற மகிமையான யுகத்தில் தமது திட்டங்களை

மனிதன் குடியறோத உலகங்களில் பூரண பொறுமையுடன் தேவன் இன்னும் செயல்படுத்துவார் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் தற்கால தீமையின் சூழ்நிலைகளில் பொறுமையை அப்பியாசப்படுத்த ஞானம் அத்தியாவசியமாக இருக்கிறது. உலகத்தின் மீது பொறுமையை அப்பியாசப்படுத்துவது எப்பொழுது முடிவுக்கு வரும் என்பதை தேவன் தமது ஞானத்தால் அறிவித்திருக்கிறார். அதாவது உலகின் தற்கால பாவம் மற்றும் அபூரண நிலைமையை நீண்ட காலம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார். அதற்குரிய காலம் கிட்டதட்ட வந்து விட்டது. தற்போது வரவிருக்கிற ஆபத்திற்கான மகா புரட்சி முழுவானங்களின் கீழாக தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆயத்தத்தை செய்ய தற்காலத்து அனைத்து ஒழுங்குகளையும் நீக்கிப் போடும். தேவன் மனுமக்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக தம்முடனும் நீதியுடனும் அவர்கள் இசைவுக்கு வருமளவும் அவர் அவர்களுக்கு முழு சந்தர்ப்பத்தை கொடுப்பார்.

பாவமே இல்லாத காலம் வரப்போகிறது. ஒரு சுத்தமான பிரபஞ்சத்தை தேவன் சீக்கிரத்தில் தருவார். ஆனால் அவர் முதலாவது, பாவத்தி–ருந்து எழும்புவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஒவ்வொருவருக்கும் கொடுப்பார். இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் தேவனுடைய பொறுமை, நீடிய பொறுமை செயல்படுத்தப்படுவது நின்றுவிடும். இதன் பொருள் தேவனுடைய பொறுமை என்ற குணம் இல்லாதுபோகும் என்பதல்ல, ஆனால் அது செயல்படுவது நின்று போகும் என்பதாகும்.

தேவனுடைய பொறுமை மனிதனுடைய ஆசீர்வாதத்திற்காக மேசியாவின் ஆயிரவருட ராஜ்யத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. தீமையை நீக்குவதற்கு அந்த ஆயிரம் வருடம் போதும் என்று அவரது ஞானம் முடிவு செய்திருக்கிறது. இந்த அனுகூலமான சூழ்நிலைகளில் நீதியாக வாழ கற்றுக் கொள்ளாதவர்கள் எவரும் இனி கற்றுக்கொள்ளமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது தேவ ஞானம், பொறுமையை காட்டப்போவதில்லை. இதே போல, நாம் நம்மிடமும் மற்றவர்களிடமும் தொடர்பு கொள்ளும்போது பொறுமை, நீடிய பொறுமையை சரியாக அப்பியாசப்படுத்துவதில் ஒரு எல்லை இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் நாம் நம்மிடம் பொறுமையாக இருக்கக் கூடாது. நாம் செய்ததைக் காட்டிலும் இன்னும் நன்றாக அறிந்திருக்க வேண்டும், இன்னும் நன்றாக செய்திருக்க வேண்டும் என்று சரியாக உணரக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

### நம்மை நாமே நியாயந்தீர்ப்போமாக

தான் கைவிடப்பட்ட நிலைமையில் இருப்பதாக ஒரு தேவனுடைய பிள்ளை உணர்வானேயானால் இதை குறித்து எனக்கு நானே பொறுமையாக இருக்க மாட்டேன் என்று கூற வேண்டும். இந்த பலவீனத்தை நானே கையில் எடுத்துக் கொண்டு அதை ஜெயங்கொள்வேன். என்னுடைய குணத்தை பலவீனப்படுத்துவதற்கு நான் இதை அனுமதித்து விட்டேன். இது பிறருக்கும் வேதனையையும் துன்பத்தையும் தரக் கூடியதாக இருந்தது. உதவியற்ற எனது சொந்த பலத்தால் இதை மேற் கொள்ள முடியாது, ஆனால் தேவனுடைய கிருபையால் இதை மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளேன்.

பெற்றோர்களுக்கு பிள்ளைகள் விஷயத்தில் பொறுமையும் சகிப்புத் தன்மையும் தேவைப்படுகிறது. வெவ்வேறு பிள்ளைகள் விஷயத்தில் பொறுமையின் அளவு வேறுபடுகிறது. ஞானமுள்ள பெற்றோர்கள், ஒவ்வொரு பிள்ளையும் எந்த அளவுக்கு நல்ல காரியங்களை செய்கிறார்கள் என்பதையும் எந்த அளவுக்கு புத்திமதியைப் பெற்று பயன் அடைகிறார்கள் என்பதையும் நிதானிக்கிறார்கள். எந்த குழந்தையாவது வேண்டுமென்றே குற்றம் செய்தால், பொறுமையை தொடர்ந்து கையாளாமல், பிரம்பை பயன்படுத்த வேண்டும். இதற்கு பெற்றோர்கள் பொறுமை என்ற குணத்தையே விட்டு விட்டார்கள் என்று பொருளல்ல. அடுத்த நாள் அந்த குழந்தையிடம் பொறுமையைக் காட்ட வேண்டும். தேவைப் பட்டால் பிரம்பை நாடலாம். நாம் இன்னும் அதிக அளவு பொறுமையையும், அனுதாபத்தையும் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.நமது பலவீனத்தை நினைவு கூர்ந்து, தங்களது அபூரணத்தை ஜெயங் கொள்ள முயற்சிக்கிறவர்களிடம் பொறுமையை அப்பியாசப்படுத்த வேண்டும். ஏனெனில் நாமும் கூட நமது சொந்த பலவீனத்தை மேற்கொள்ள முயற்சிக்கிறோம். நம் மீது காண்பிக்கப்பட்ட பொறுமையும் சகிப்புத் தன்மையும் நம் அனைவருக்கும் தேவைப்படுகிறது.

### பொறுமையைக் குறித்து நமது ஆண்டவரின் பாடங்கள்

நமது தலைப்பு வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பொறுமை என்ற வார்த்தையைக் குறித்து, நமது ஆண்டவர் லூக்கா 8ம் அதிகாரத்தில் விதைக்கிறவன் உவமையில் கூறியதைக் குறித்து நாம் ஒரு கண்ணோட்டம் விடலாம். நாம் வசனம் 15–ல், “நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே (உறுதியுடனே) பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்” என்று வாசிக்கிறோம். பலன் கொடுக்கிற வகுப்பாராக இருக்க வேண்டும் என்பதே இங்கு முக்கிய கருத்தாக இருக்கிறது. இந்த வகுப்பாரைத் தான் ஆண்டவர் தமது ராஜ்யத்தில் அங்கீகரித்து ஏற்றுக் கொள்வார். அவரது சாட்சியத்தின் வசனத்தை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டாலும், அதை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் அதிகமாக நாம் செய்ய வேண்டும். இன்னும் அதிகமாக இது பொருள்படுகிறது. ஏனெனில் கற்பாறை வகுப்பார் அதை உடனே ஏற்றுக் கொண்டார்கள். கொஞ்ச காலம் அவர்கள் உற்சாகத்துடனும் பலன் கொடுக்கிறவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஆனால் சோதனையாகிய சுட்டெரிக்கும் சூரியன் எழும்பிய

போது, வேர் ஆழம் இல்லாதபடியால் உலர்ந்து போகிறார்கள்.

இந்த உவமையில் ஆண்டவர், பொறுமையை குணலட்சணத்தின் கடைசி சோதனையாக காண்பிக்கிறார். விதையை (வசனத்தை) ஏற்றுக் கொண்டு துளிர்த்ததற்கு பிறகு இது தொடர்கிறது. அன்பு, நம்பிக்கை, சந்தோஷம், விசுவாசம் ஆகியவை மூலம் அது துளிர்த்து வளர்ந்து பலன் கொடுக்க ஆரம்பித்தது. அந்த பலன் வளர்ச்சியடைந்து முழுமை பெறுவதற்கு பொறுமை தேவைப்படுகிறது. அதன் பின்பே வயல் சொந்தக்காரனுக்கு தானியம் தயார் நிலையில் இருக்கும், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் இந்த கிருபை எவ்வளவு முக்கியத்துவம் உள்ளதாகக் காணப்படுகிறது! ஆனால் பொறுமை உற்சாகம் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் திருப்தியில்லாத, சந்தோஷமில்லாத, பொறுமையற்ற மனோபாவத்துடன் அவருக்காக அதை தாங்குவதாக அவர் கண்டால், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் மதிப்பீடு செய்கிற அவர் அவர்கள் மேல் சந்தோஷப்படுவார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

இப்படிப்பட்டவர்கள், "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" என்ற வசனத்தின்படி உணர்வை உடைய தேவனுக்கு பிரியமுள்ள குமாரனுடைய சாயலாக இருக்க மாட்டார்கள். அனைத்து ராஜரீக ஆசாரியர்களும் நமது மகா பிரதான ஆசாரியரைப் போல தியாகப- செலுத்துபவர்கள். நமது பிரியமான இரட்சகரின் புண்ணியத்தால் நமது ப-களை ஏற்றுக் கொள்கிற தேவன், முழுமனதுடனும், சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் ப- செலுத்தகிறவரையே நேசிக்கிறார். இதற்கு நமது சரீரங்கள் தளர்ச்சியடையாது என்று பொருளல்ல. இப்படியான உயர்ந்த ஆச்சரியமான ஒரு ஊழியத்தில் நமது சரீர தளர்ச்சியை அனுபவிக்கிற சிலாக்கியத்தில் நமது ஆவி களி கூருகிறது. நமது இருதயம் இன்னும் ஊழியம் செய்ய விரும்பும் போது, சில காலம் நம்மை ஊக்கமான ஊழியத்தி-ருந்து ஒதுக்கி வைப்பது நல்லது என்று நமது பிதாவானவர் கண்டால், அவரது சித்தம் நம்மில் நிறைவேற நாம் உற்சாகத்துடன் பொறுமையாயிருப்பது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும். இது கூட நமது சித்தத்தை அவருக்கு முழுவதுமாக ஒப்புக் கொடுப்பதற்கான ஒரு சோதனையாகக் கூட இருக்கலாம். இப்படியாக ராஜ்யத்தின் மகிமைகள் மற்றும் சலுகைகளை பெறுவதற்கு இது ஒரு முக்கியமான படிக்கல்லாக இருக்கும்.

பொறுமை என்கிற இந்த வார்த்தையை ஆண்டவர் பயன்படுத்துகிற மற்றொரு உதாரணம் லூக் 21:19ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாவம் பெருகியிருக்கிற, சாத்தான் உலகத்தின் அதிபதியாயிருக்கிற தற்காலத்தில், அவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பதினால் அவர்கள் சோதனைகளை எதிர்பார்க்க வேண்டும் என்று தமது சீஷர்களிடம் கர்த்தர் கூறிக்கொண்டிருந்தார். பல்வேறு பகுதிகளி-ருந்து அவர்கள் எதிர்ப்பை எதிர்பார்க்க வேண்டும். அவர்களை நெருக்கும்படி சோதனைகள் அனுமதிக்கப்பட்டாலும், அவர்கள் முழுவதும் தெய்வீக பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் இருக்கிறார்கள் என்ற உறுதியை அவர்களுக்கு கொடுத்தார். அதைத் தொடர்ந்து, "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்" என்கிற வசனம் வருகிறது. (லூக் 21:19)

கர்த்தரிடத்திலும் அவரது மகிமையான வாக்குத் தத்தங்களிலும் நமது நம்பிக்கையும் விசவாசமும் மிகவும் பலமானதாகவும் உறுதியானதாகவும் இருக்க வேண்டும். அதாவது இந்த உலகம், கள்ள சகோதரர்கள் மற்றும் சாத்தானால் குருடாக்கப்பட்ட ஊழியக்காரர்களின் எதிர்க்கும் சக்தியை மிகவும் ஈடுகொடுக்கத் தக்கதாக இருக்க வேண்டும். தேவனுடைய அன்பிலும் பராமரிப்பிலும் நமது விசுவாசம் முழுமையாக இருக்க வேண்டும். தேவன் தற்போது கட்டிக் கொண்டிருக்கின்ற மகிமையின் ஆலயத்திற்கு நம்மை ஜீவனுள்ள கற்களாக செதுக்குவதில், உருவகப்படுத்துவதில், மெருகேற்றுவதில் அவரது அனுக்கிரகத்திற்கு இந்த முன்னெச்சரிக்கைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டு களி கூரப்படும். அந்த மகிமையின் ஆலயம் சீக்கிரத்தில் நிர்மாணிக்கப்படும் என்று நாம் நம்புகிறோம்.

நமது சோதனைகளை இந்த நிலையில் கண்ணோக்கினால், நமது ஆத்துமாவை, ஜீவனை, புதுசிருஷ்டியை பெரும் சோதனையிலும் உற்சாகமான பொறுமையுடன் வைத்திருக்க முடியும், களி கூர முடியும், நமது நன்மைக்காகவும் தேவனுடைய மகிமைக்காகவும், அவர் நமக்கு வரும்படி அனுமதிக்கிற ஒவ்வொரு அனுபவத்தையும் ஏற்றுக் கொண்டு நாம் தேவனிடம் விசுவாசமுள்ளவர்களாயிருக்கும் வரை நம்மை காயப்படுத்த முடியாது; ஆம், "மகா மேன்மையும் அருமையுமான (எதிர்கால) வாக்குத்தத்தங்களை" பெற்றிருக்கிற நமது ஆத்துமாவை அல்லது உண்மையான ஜீவியை, மாம்சீக தொந்திரவுகளினாலோ அல்லது மனிதனால் நமக்கு செய்யக் கூடிய எந்த காரியத்தினாலோ காயப்படுத்த முடியாது என்பதை நாம் உணர முடியும்.

### பொறுமைக்கான அவசியம்

பொறுமை என்கிற இந்த பண்பை நாம் ஏன் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்கான அவசியத்தை நாம் இங்கு ஜாக்கிரதையாக ஆராய்வோமாக. ராஜ்யத்தில் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராவதற்கான அழைப்பிலேயே இந்த பண்பை அபிவிருத்தி பண்ணுகிற ஒரு நிபந்தனையை தேவன் இணைத்திருப்பதாகக் காணப்படுகிறது. தேவனுடைய ஆயிர வருட ராஜ்யத்தில் நமது மகா பெரிய இரட்சகரும் தேவனுடைய ஒரே பேறான குமாரனுமானவரோடு உடன் சுதந்திரராக பூமியின் சகல கோத்திரங்களையும் ஆசீர்வதிக்கிற வேலைக்கு அழைக்கப்பட்டிருக்கிற நாம் இந்த வேலையை கவனிக்கும்போது இதைக் குறித்த ஞானம் வெளிப்படுகிறது. இது ஒரு வல்லமையான செயல், யேகோவா தேவன் எவர்களையெல்லாம் இந்த மேலான

நிலைக்கு தகுதியானவர்களாக கருதியிருக்கின்றாரோ, அவர்கள் அவருடைய நன்மையானவைகளையும், அவருடைய மகிமையான குணாதிசியத்தையும் பாராட்டுவதோடு, பாவத்திற்கும், மீறுதலுக்கும் உண்டான அவருடைய செயலை தெரிந்து கொள்வது மட்டுமில்லாமல், அவருடைய நீதிக்குரிய கோட்பாடுகளில் தங்களுடைய முழுமையான விசுவாசத்தையும், அந்த கோட்பாடுகளுக்காக, மிகவும் மகிழ்ச்சியான உடன்பாடுடன் பாடு அனுபவிப்பதையும் வெளிப்படுத்த வேண்டும் என்று யேகோவா எதிர்பார்ப்பது மிகவும் பொறுத்தமானதாகும். ஒன்று அல்லது, இரண்டு அல்லது மூன்று கொஞ்ச கால சோதனைகளில் கொஞ்ச காலம் காண்பிக்கப்படுகிற பொறுமை ஒரு தனிப்பட்ட நபரின் நீதிக்கான பண்புகளை நிலை நிறுத்திவிட்டார் என்பதை நிரூபணம் செய்யாது. ஆனால் அதாவது பொறுமை, உற்சாகமான பொறுமை, மரணம் வரை உள்ள பொறுமையே இப்படிப்பட்ட பண்பை மெய்ப்பித்துக் காண்பிக்க அவசியமாக இருக்கிறது.

இதை ஒரு வைரத்தின் மூலம் விளக்கலாம். நாம் பிளாஸ்டிக் மூலமாக ஒரு வைரத்தை செய்வதாக எடுத்துக் கொள்வோம். அது கடினத்தன்மை உடையதாக இருக்கும், ஆனால் உண்மையான வைரத்தின் கடினத்தன்மையை பெற்றிருக்காது. இந்த போ–யான வைரங்கள் உண்மையான வைரத்தின் மதிப்பைப் பெற்றிருக்குமா? நிச்சயமாக இல்லை. தீவிரமான அழுத்தத்திற்கு இவைகள் உட்படுத்தப்பட்டால் நொறுங்கிவிடும். இதே போல் தான் கிறிஸ்தவர்களுக்கும் ஆகும். இப்படிப்பட்ட ஒருவன், தேவனுடைய குமாரர்களுக்குரிய குணலட்சணங்களை பெற்றிருக்கிறான் என்று நாம் நினைப்போமானால், இப்படிப்பட்ட கடினத்தன்மையை, பொறுமையை காத்துக் கொண்டிருப்பானானால், அவன் தேவனுடைய சம்பத்தாக இருப்பதற்கு தகுதியுள்ளவனாக இருக்க மாட்டான். எனவே பொறுமை, உற்சாகமான சகிப்புத் தன்மை, ராஜ கீரிடத்தில் ஒரு இடத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு தேவையான ஒரு பண்பாக தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை நாம் காண்கிறோம்.

அப் பவுல், கிறிஸ்தவ பண்புகளில் இது முக்கியமானது என்பதை வ–யுறுத்துகிறார். அவர் தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் முதிர்வயதுள்ள கிறிஸ்தவனுக்கான குணலட்சணத்தைக் குறித்து விவரிக்கும் போது அவர்கள், “ஜாக்கிரதையுள்ளவர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும், அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்” என்று கூறுகிறார். நாம் முற்றிலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பு கடைசி சோதனையாகிய பொறுமையில் நாம் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

இதே அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, “நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்” என்று ஞாபகப்படுத்துகிறார். நமது ஓட்டத்தில் வேகமாக ஓடும்போது முடிவை நெருங்கும்போது இந்த முக்கியமான பண்பு அதிகமாக தேவைப்படுகிறது. கால்கள் தளர்வடைகிறது. துன்பங்களும் சோதனைகளும் பெருகுகிறது; ஆகையால் தேவையான ஊக்கத்திற்கும் பலத்திற்கும் நமது மகா பெரிய முன்னோடியானவரை நோக்கிப் பார்ப்பதற்கு “நமது மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருப்பது” நமக்கு அவசியமாயிருக்கிறது.

**சோதனைகள் முற்றிலும் அத்தியாவசியமானது**

இடுக்கமான பாதையில் நாம் முன்னேறுவதால் பொறுமையாக சகிப்பதில் நமது திறமையும் பலமும் மேம்பட வேண்டும். நாம் “கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட வேண்டும்.” சோதனைகள் இல்லாமல் குணலட்சணத்தின் முக்கியமான பண்பில் நாம் அபிவிருத்தி அடைய முடியாது. உற்சாகமான சகிப்புத் தன்மையை அப்பியாசப்படுத்தவே இந்த அனுபவங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நம்மை கடந்து செல்கிற சோதனைகளை நாம் ஏதோ புதுமை என்று நினைக்கக் கூடாது, நாம் தாங்குவதற்கான மனோ பாவத்திற்கு அது அவசியமாயிருக்கிறது.

தாங்குவதில் மாத்திரம் இந்த நற்குணம் இல்லை என்று மறுபடியும் நாம் கூறுகிறோம். ஏனெனில் உலகம் தாங்குவதற்கு இன்னும் அநேகம் இருக்கிறது. ஆனால் நாம் எந்த வகையில் அதைச் சகிக்கிறோம் என்பதே விசேஷமாக இருக்கிறது. இருதயத்தில் நாம் இன்பமானவர்களாகவும் பணிவுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நம்மை அபிவிருத்தி பண்ணுகிற இந்த கர்த்தரின் செய–ல் நாம் இணக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இது சில சமயங்களில் மிகவும் கடினமானதாக இருக்கும். ஆனால் நாம் தொடர்ந்து முயற்சித்தால் அவருடைய கிருபை நமக்கு போதுமானதாக இருக்கும். “எல்லாவற்றையும் செய்து முடித்தவர்களாக,” நாம் “நிற்போமாக.”

ஆம்! தீமையின் சூழ்நிலையில் நமது ஆண்டவர் சோதனைகளைப் பெற்றது போல் நாமும் பெற வேண்டும் என்பதற்கான ஒரு புதிய காரணத்தை நாம் பார்க்கலாம். அதாவது கிறிஸ்தவ குணலட்சணங்களை நாம் பெற்றால் மட்டும் போதாது. அவைகள் வேர்விட்டு, முளைவிட்டு, நிலைநிறுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆகும்.

அப்போஸ்தலர் யாக்கோபு இந்த பண்பின் முக்கியத்துவத்தைப் பற்றிய நமது கவனத்தை ஈர்க்கிறார். அவர் கூறுகிறதாவது; “உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்.” (1:3) அதாவது நமது விசுவாசம் சோதனையில் நிலைத்திருக்குமானால். அது நமக்கு பொறுமை என்கிற குணலட்சணத்தை உண்டாக்கும். இந்த அபிவிருத்தியை நாம் அடையவில்லையென்றால், நமது விசுவாசம் சோதனையில் திருப்திகரமாக நிற்கவில்லை என்று பொருள்படுகிறது. ஆகையால் நாம் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவர்களாக இருக்க மாட்டோம். எனவே பொதுவாக கிறிஸ்தவர்கள் மத்தியில் என்ன ஒரு பெரிய தவறு செய்கிறார்கள் என்று நாம் தெளிவாக காண

முடிகிறது. அதாவது மதம் என்பது ஜெபம் செய்தவுடனேயே பதில் கிடைக்க வேண்டும். அல்லது துக்கங்கொண்டாடும் பெஞ்சுக்கு செல்வதினால், அல்லது ஜெபத்திற்காக நிற்பதினால், அல்லது தெய்வீக அல்லது மனித வேண்டு கோளுக்கு இணங்க ஒருவர் ஒரு டாலரைப் பெற்று சட்டைப் பையில் போட்டுக் கொள்வதைப் போல பதில் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள், மாறாக, பாவத்திற்கு வருந்துவதும், திருந்ததுலும் கிறிஸ்தவ பாதையில் ஒரு ஆரம்பமே ஒழிய முடிவில்லை. அடுத்தபடி நம்மையும் நமக்குண்டான யாவற்றையும் தேவனிடம் அர்ப்பணம் செய்தல், இது கூட முடிவி-ருந்து வெகு தூரத்தில் இருக்கிறது. விசுவாசம், மனோபாவம், சுயக்கட்டுப்பாடு, சாந்தம் மற்றும் அன்பு ஆகிய குணங்களை அடைய முயற்சித்துக் கொண்டே இருப்பது மாத்திரமல்ல. அவைகளை அடைந்த பிறகு நாம் பொறுமையாகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் "நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும்." வேறு மாதிரி சொல்ல வேண்டுமென்றால் கிறிஸ்துவின் பள்ளியில் இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறோம் அல்லது ஒரு மாணவனாக தேவனைப்பற்றி போதிக்கப்பட பள்ளியில் பெயரை பதிவு செய்துள்ளோம்.

**"சோதனை காலம்"**

பிலதெல்பியா கால சபை உண்மையாய் இருந்ததற்காகவும், "பொறுமையைக் குறித்து அவர் சொல்-ய வசனத்தைக் காத்துக் கொண்டதற்காகவும்," சீக்கிரத்தில் பூமியில் குடியிருக்கிறவர்கள் மேல் வரப்போகிற "சோதனை காலத்திற்கு" தப்புவிக்கும்படியாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். லவோதிக்கேயா சபைக்கு – நமது கால சபை – சோதனை நாளில் நுழைவதி-ருந்து காத்துக் கொள்ளப்படாது. ஆனால் நாம் இதில் இருக்கும்போது நாம் விசுவாசமுள்ளவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருந்தால் நாம் அதி-ருந்து தப்புவிக்கப்படுவோம் என்று நிச்சயிக்கிறோம். லவோதிக்கேயா சபைக்கு நமது அன்பான ஆண்டவரின் செய்தி. "இதோ, நான் வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான், ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." வெளி 3:20,21

நாம் சோதனை நாளி-ருந்து ஒதுக்கி வைக்கப்படாதிருந்தாலும், நாம் நமது ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னத்தின் (பரோஷியா) காலத்தில் வாழ்கிற ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறோம். இதற்கு முன் அவரது பரிசுத்தவான்கள் பெற்றிராத அளவிலும், வகையிலும், நாம் அவரது போதனைகளை, அவரால் பகிர்ந்தளிக்கப்படுகிற ஆவிக்குரிய உணவை, "ஏற்ற வேளைக்குரிய போஜனத்தை" பெறுகிறோம். இந்த மகா பெரிய கிருபை, இந்த விசேஷித்த "சோதனை நாளின்," நுண்ணிய மற்றும் தீவிரமான சோதனைகள் மற்றும் பரீட்சைகளால் ஈடுகட்டக் கூடியதாக இருக்கிறது. கர்த்தருடைய விசுவாசிகளுக்கு எப்பொழுதாவது பொறுமை தேவைப்படுகிற காலம் இருக்குமேயானால் அது இப்பொழுது ஆகும். "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களை காத்துக்கொள்ளுங்கள்" என்கிற புத்திமதி தேவையான காலம் இதுவேயாகும். பொறுமையுடன் சகிப்பவர்களே இந்த தீங்கு நாளில் நிலைத்திருப்பார்கள். மற்ற அனைவரும் விழுந்து போவார்கள். இந்த நாளின் தீவிரமான சோதனையானது "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையானது என்று பரிசோதிக்கும்" என்று அப்போஸ்தலர் நம்மை முன்னெச்சரித்திருக்கிறார்.

தற்காலத்தில் கிறிஸ்தவ தேசங்கள் முழுவதும், கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்று வெளிப்படையாக சொல்-க் கொள்கிற பெரும்பாலானாவர்கள் இடையே கூட, இந்த பொறுமை என்கிற குணம் குறைவுபட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். இது மென்மேலும் அரிதாகிக் கொண்டிருக்கிறது. சிலர் நீதியின் நிமித்தமாக, கிறிஸ்துவின் நிமித்தமாக, வேறு யாரின் நிமித்தமாவது பொறுமையாயிருக்க விரும்புவார்கள். விரும்பத்தகாத எதற்கும் பொறுமையானது முற்றிலுமாக தேவையாக இருக்கிறது. சோதனையானது அதிகமாக பொறுமையின்மை, கோபம் மற்றும் குறைகூறுதல் மூலமாகவே வருகிறது. மேலும் சுயத்தை வெறுத்தல் அல்லது சகிப்புத்தன்மை ஆகியவற்றிற்கு விரோதமான ஆவியும், கடுமையான விரோதத்தின் ஆவியும் மனுக்குலத்தின் இருதயத்தில் அனுதினமும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

பொறுமையின்மை, சகிப்பின்மை மற்றும் தேவையான கட்டுப்பாட்டிற்கு விரோதமான எதிர்ப்பு ஆகியவைகளைக் குறித்த தற்கால நாகரீக உலகின் இந்த பொதுவான மனப்போக்கு இடுக்கமான வாசல் வழியாய் நடக்க நாடுகிறவர்களின் மேல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தெய்வீக கிருபையினால் மட்டும் தான் இந்த மனோபாவத்தை வெற்றிகரமாக தடுக்கமுடியும். மேலும் தேவனுடைய பிள்ளை கிறிஸ்துவின் சாயலை அபிவிருத்தி பண்ணுவதற்கான முயற்சியில் முன்னேற முடியும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தற்போது தேவையான இந்த விசேஷித்த கிருபை, இயேசுவின் அடிச் சுவடுகளில் கர்த்தருக்கு நெருக்கமாக நடக்காதவர்களுக்கு நிறுத்தப்படும். ஏனெனில் கிறிஸ்துவின் ஊழியர்களாக தங்களை பாராட்டிக் கொள்கிறவர்கள் அவரிடமிருந்து வெகு தூரத்தில் வாழ்கிறார்கள். நாம் குறிப்பிட்ட இந்த மனோபாவம் அவர்களிடம் அபிவிருத்தி அடைந்து வருவதை தற்காலத்தில் பார்க்கிறோம்.

இந்த ஆவி, நாம் அடிக்கடி கேள்விப்படுகிற சட்டம், ஒழுங்குக்கு விரோதமாக கலகம் பண்ணுகிறவர்களுக்கிடையே சாதாரணமாகக் காணப்படுகிறது. இந்த கலகம் இராணுவத்தினால் அடக்கிவைக்கப்படுகிறது. இந்த ஆவி மென்மேலும் தொடர்ந்து வளரும் என்று எதிர்பார்க்கலாம். திரளான ஜனங்கள், தாங்கள் கடந்த காலத்தில் தீவிரமாக இராதபடி மிகவும் பொறுமையாக இருந்துவிட்டோம்; இந்த

**--2292--**

காரியங்களை நீண்ட காலத்திற்கு முன்பே எங்கள் கைகளில் எடுத்துக் கொண்டிருந்தால், தற்கால இந்த நிலைமையை தவிர்த்திருக்கலாம் என்கின்றனர். "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாத தாயும், மாயமற்ற தாயுமிருக்கிற" பரத்தி-ருந்து வருகிற ஞானத்தை தேவனிடமிருந்து தேடுகிறவர்களும் அவரது வசனத்தை பொறுமையாய் காத்துக் கொண்டவர்களும், தேவன் தமது திட்டத்தை நிறைவேற்ற குறித்த காலத்தை வைத்திருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறார்கள்; அவரது காலத்திற்காக காத்திருப்பதுதான் நல்லது என்பதை அறிந்து அதற்காக காத்திருக்கிறார்கள். அவர்கள் அறிந்து கொண்டிருப்பதாவது;

*"தேவனுடைய திட்டங்கள் லீ- புஷ்பத்தைப் போல் மலர்கிறது;*

*நாம் அதன் இதழ்களை பிரித்தெரியக் கூடாது,*

*மறைந்திருக்கும் தங்கத்தின் இருதயத்தை காலம் வெளிப்படுத்தும்."*

**சாத்தானின் விசேஷித்த வஞ்சகங்களில் ஒன்று**

இப்பொழுது நம் மே-ருக்கிற இந்த "சோதனை நாளைக்" குறித்து அப்போஸ்தலர் நமக்கு ஆலோசனை கூறுகிறார். அதன் துன்பங்களும் சோதனைகளும் அதிகமாக இருக்கும். அவைகளில் சில தந்திரமானதாகவும் வஞ்சகமானதாகவும் இருக்கும். சத்தியத்தில் ஊன்றி வேர் விடாதவர்கள் அனைவரும், உலகெங்கிலும் வாழ்கிறவர்களை வருத்தும்படி இப்பொழுது சாத்தானால் அனுமதிக்கப்படுகிற அவனது பிரநிதிகளின் தப்பறையான விவாதங்களினால் எடுக்கப்பட்டுப் போவார்கள்.

கிறிஸ்தவ விஞ்ஞானம் என்று தவறாக அழைக்கப்படுகிறதைக் காட்டிலும் சாத்தானின் தந்திரமான கொள்கைகளில் அதிக வஞ்சகம் உடையதாக காணப்படவில்லை; ஏனெனில் அது விஞ்ஞான பூர்வமானதும் அல்ல கிறிஸ்தவ பூர்வமானதும் அல்ல. கெட்ட சக்தியால் ஆதரவு அளிக்கப்படுகிறது. ஒரு தப்பறையை (அசத்தியத்தை) உறுதிப்படுத்தி, அதி-ருந்து வழுவாம-ருந்தால், சில வியாதிகளி-ருந்தும் உட-ன் தொல்லைகளி-ருந்தும் விடுதலையும் சுகமும் கிடைக்கும் என்று ஏமாறுகிறவர்களிடம் அதனால் உறுதிகூற முடிகிறது. வ- மற்றும் வியாதி மூலமாக அனுபவிக்க தேவன் அனுமதிக்கிறவைகளை பொறுமையோடு சகித்துக் கொள்ள கற்றுக் கொள்ளாதவர்கள், சாத்தான் அவர்களது கவனத்தை திருப்புகிற எந்த ஒரு நோயை அகற்றுகிற முறைமையையும் ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பார்கள். நோய் மற்றும் வ- குறித்த காரியங்களில் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்ள கற்றுக் கொள்கிறபடியால், படிப்படியாக வசனத்தை தவறாக அர்த்தப்படுத்திக் கொள்ளவும், உண்மைகளை மறுக்கவும் அசட்டை செய்யவும் அவர்கள் மனதில் குழப்பம் ஏற்பட்டு உரிய காலத்தில் சத்தியம் தப்பறையானதாகவும், தப்பறைகள் சத்தியமாகவும் காணப்படும்.

**சத்தியத்தின் மூலம் சிலர் விடுதலையை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்**

ஏமாற்றத்திற்கு உள்ளான இவர்கள் சிறிதளவு ஆர்வத்தினால வஞ்சகத்திற்கு வழி நடத்தப்படுகிறார்கள். அங்கே மரணமில்லை; எல்லோரும் ஜீவனோடிருக்கிறார்கள்! அங்கே வ-யில்லை; எல்லாரும் நலமுடனிருக்கிறார்கள்! அங்கே தீமையில்லை, எல்லாம் நன்மையாக இருக்கிறது!! என்ற இந்த கூற்று கேட்பதற்கு அவர்களுக்கு விநோதமாக இருக்கிறது. அவர்கள் சொல்-க்கொள்கிறதாவது: "இந்த கூற்றுகள் எல்லாம் முன்னுக்குப் பின் முரணானதாக இருக்கிறது. இதை ஜனங்கள் எப்படி நியாயப்படுத்துகிறார்கள் என்பதை அறிய நான் ஆவல் உள்ளவனாயிருக்கிறேன். அவர்களது தத்துவம் என்ன? சத்துருவானவன் விரும்புகிறது இதைத்தான். இப்படியாக அவன் அவர்களது கவனத்தை இழுத்து, அவர்களை ஒரு தப்பறையி-ருந்து மற்றொரு தப்பறைக்கு அவர்களது மூளையும் மனசாட்சியும் முழுவதுமாக கெடுக்கப்படும் வரை வழிநடத்துவான் அவர்கள் வெளிச்சத்திற்கு பதிலாக இருளையும் சத்தியத்திற்கு பதிலாக பொய்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக அவர்களுக்கு உடலளவினான துயரம் நீக்கப்படுதல் – சிறு பிரதியுபகாரம் கொடுக்கப்படுகிறது.

இது அவர்களது சுயநலத்திற்கும், துனபப்பட விருப்பம் இல்லாதிருத்தலுக்கும், எந்த வழியிலாவது தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திற்குமான பரிசாகும். அவர்களது விழுந்துபோன மாமிசத்திற்கு அவர்களது சொந்த வழியே மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கிறது. அவர்களது மாம்சீகத்திற்கு ஈர்ப்புடையதாக இல்லாதிருந்த சத்தியத்தைத் காட்டிலும் இதை தேர்ந்தெடுத்தார்கள். சரீர சௌக்கியத்திற்காகவும் அல்லது நோயை சரிபடுத்தவும் கர்த்தருடைய சாட்சியத்தை மாற்றிக் கொள்ள தயாராக இருந்தார்கள். இப்படியாக அவர்கள் கஷ்டங்களி-ருந்தும் வ-களிலுமிருந்து தப்பித்துக் கொண்டார்கள். இதை அவர்கள் பொறுமையோடும் சந்தோஷத்தோடும் சகித்திருந்தால், அது அவர்களது ஆசீர்வாதத்திற்கும் குணத்தை வ-மைபடுத்துவதற்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும். இப்படியாக சத்துருவால் அடிமையாக்கப்பட்டவர்களில் சிலர் மட்டுமே இந்த நேரத்தில் சத்தியத்தின் வல்லமையால் விடுவிக்கப்படுகிறார்கள். ஆனால் முழுவதுமாக நிறைவேற்றப்படுவதற்கு இது ஒரு கஷ்டமான வேலையாக இருக்கிறது. நீண்ட நாட்களாக அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிற தீயசக்தி மற்றும் அவனது சேனைகளிடமிருந்து போராடி அவர்களை பிரித்துக் கொண்டு வரும் அனுபவம் சிலரது விஷயத்தில் மிகவும் வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இந்த போராட்டமும் வேதனையும் இப்படிப்பட்ட எல்லா அடிமைத்தனத்தி-ருந்தும் விடுவிக்கப்படுவதற்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது.

### தற்கால நிலைமையைப் பற்றி அப்.பவு-ன் வருணனை

சோதனை நாள் எல்லார் மேலும் ஒரே மாதிரி வருவதில்லை. ஏனெனில் எல்லா கிறிஸ்தவர்களும் ஒரே நிலையில் சரீரபிரகாரமாக, ஒழுக்கம் பிரகாரமாக, மனம் பிரகாரமாக இருப்பதில்லை. சோதனையானது கிறிஸ்தவ தேசங்களில் பொதுவாக வருகிறது. இதைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் 2 தீமோத்தேயு 3:1–5ல் விளக்குகிறார். இந்த சோதனை நாளுக்குரிய சில குணலட்சணங்களை அவர் இங்கே விளக்குகிறார். அவர் கூறுகிறதாவது: “மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும். வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும். தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும் பரிசுத்தமில்லாதவர்களாயும். சுபாவ அன்பு இல்லாதவர்களாயும் அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கம் இல்லாதவர்களாயும். கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரை பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும் இறுமாப்பு உள்ளவர்களாயும், தேவபிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுத-க்கிறவர்களாயும் இருப்பார்கள்.”

கிறிஸ்தவ உலகம் என்று அழைக்கப்படுகிறதில் உள்ள தற்கால நிலைமையின் படமாக இது இருக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அதன் அன்பினால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததினால், “அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்.” அதன் மூலம் அவர்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவார்கள். இந்த சோதனை நாளின் உச்சக் கட்டம் இன்னும் வரவில்லை என்றும் ஆனால் சீக்கிரத்தில் வரும் என்றும் நாம் நம்புகிறோம். “உன்னதமான கர்த்தரை தாபரமாகக் கொண்டவர்கள்” பாக்கியவான்கள். அவர்கள் அசைக்கப்படுவதில்லை. எனினும் அதில் பெரும் பாலானவர்கள் பெரிய உக்கிரமான சோதனையிலும் துன்பத்திலும் வெற்றி பெறுவார்கள். அநேக தேவனுடைய பிள்ளைகளின் போராட்டத்தையும், ஜெபங்களையும் கடிதம் மூலமாக நாம் அறிகிறோம். இதற்கு காரணம் அவர்களது அபூரணமும் பலவீனமும். மற்றவர்களது அபூரணம், இன்னும் மற்றவர்கள் பூமிக்குரிய கவலையினாலும் சுமைகளினாலும் அவர்கள் முற்றிலுமாக ஜெயங்கொள்ள முடியாததால் அல்லது பாரத்தை தேவனிடம் வைக்காததால் சோதிக்கப்படுகிறார்கள்.

### ஏற்ற பயம் நமக்கு இருப்பதாக

“இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்” (லூக்கா 6:21) என்ற ஆண்டவருடைய வசனத்தை நினைவு கூர்ந்து, இப்படிப்பட்ட அன்பானவர்களுக்காக அனுதாபம் காட்டி நம்மால் முடிந்தவரை ஆலோசனை கூறுகிறோம். சோதனையில் இருப்பதாக கடிதம் அனுப்பியவர்களுக்காக விசேஷமாக நமது இருதயம் அக்கரை கொண்டிருக்கிறது. உயரிய நோக்கம் அல்லது வேலை அல்லது “உலகக் கவலை மற்றும் ஐசுவரிய மயக்கத்தினால்” விழுங்கப்பட்டவர்கள் சத்தியத்துக்கான அவர்களது அன்பு அனலாகாமல் குளிராகிக் கொண்டிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னதாக அவர்கள் செய்ததைக் காட்டிலும் குறைவாக உணருகிறதாகவும் பார்க்கிறதாகவும் காணப்படுகிறார்கள். இவர்கள் விழித்திருந்து ஜெபிப்பதற்கு பதிலாக உறங்கிக் கொண்டிருப்பதாக காணப்படுகிறார்கள். மேலும் இந்த சோதனை நாளுக்கு அவர்கள் தயாரற்ற நிலையில் இருப்பதாக நாம் பயப்படுகிறோம். ஆனால் சிலர் அழுதுகொண்டும் ஜெபித்துக் கொண்டும் பாடுபட்டுக் கொண்டும் நமது ஆண்டவர் கெத்செமனேயில் இருந்தது போல இருக்கிறார்கள். அவரைப் போல கடைசி சோதனைக்கு பலப்படுத்தப்படுவார்கள்.

சகோதரர்களே, நமக்காகவும், ஒருவருக்கொருவரும் மிகவும் அக்கறை உள்ளவர்களாக இருப்போமாக. நமக்காக வைக்கப்பட்டிருக்கிற விலையேறப்பெற்ற பரிசுக்காக நம்பிக்கையுடன் எதிர்பார்பபோமாக. “அவருடைய இளைப்பாறுத-ல் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கக் கடவோம்.” கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரையும் நாம் நேசிப்போமாக. அவர்களது நலமே நமது பிரதான அக்கறையாக இருப்பதாக. இது நமது சொந்த ஆவிக்குரிய ஆரோக்கியத்தை குறிக்கிறது. ஆண்டவருடைய மணவாட்டியாகும் தேர்வில், ஆண்டவருடைய அன்பிலும் ஞானத்திலும் உள்ள நமது முழு நம்பிக்கையை நமது சகோதரர்கள் மேல் செலுத்தும் அன்பு தடங்கல் செய்ய அனுமதிக்கக் கூடாது. நாம் வாஞ்சையுடன் ஐக்கியம் வைத்திருந்த சிலருக்கு நம் மூலமாக தூற்றுதல் நடந்தாலும் நாம் அனுமதிக்கக் கூடாது.

இந்த ஆசீர்வாதமான நமது வழியை பொறுமையுடன் பற்றிக் கொண்டிருப்போமாக! செய்யும்படி நமது கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை நம் பெலத்தோடே செய்வோமாக. அறுவடை வீடு சீக்கிரத்தில் வரும்! நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், சீக்கிரத்தில் ஒரு மகிமையான கூட்டமாக என்றென்றைக்கும் இங்கு இராதபடி வெளியேற கூட்டிச் சேர்க்கப்படுவோம். நமது கதிர்கட்டுகளை களிப்புடன் கொண்டு வருவோம்!

ஆனால் “நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.” எபிரேயர் 10:36

*“நமது சோதனை பிறகு எவ்வளவு இலகுவாக காணப்படுகிறது!*
*நமது யாத்திரை பாதை எவ்வளவு குறைவாக இருக்கிறது!*
*பூமியின் வாழ்வு ஒரு சுறுசுறுப்பான கனவு,*
*விடியும் நாளால் அகற்றப்பட்டது.!*
*“பிறகு அமைதி எனது இருதயத்தில்! நிசப்தம் என் நாவில்!*
*கஷ்டப்பட்ட எனது இருதயமே அமைதியாயிரு;*
*கடந்து செல்கிற ஒவ்வொரு மணியும் உன்னை தயார்படுத்துகிறது*
*நித்திய இளைப்பாறுதலுக்கு!”*

**--2294--**

--------------------

# தன்னடக்கத்தின் முக்கியத்துவம்

## The Importance of Self - Control

தன் ஆவியை அடக்காத மனுஷன் மதி–டிந்த பாழான பட்டணம் போ–ருக்கிறான்.” நீதி.25:28

“ஆவி” என்ற வார்த்தை பல வழிகளில் பயன்படுத்தபடுகிறது. நாம் குதிரையைப் பற்றி பேசும் போது அது உக்கிரமான ஆவியை உடையது என்றோ அல்லது ஆவியில்லாதது என்றோ கூறுகிறோம். தேவ தூதர்களை ஆவியின் ஜீவிகள் என்று கூறுகிறோம். சில சமயம் நாம் உயிரின் ஆவியைப் பற்றி பேசுகிறோம். நாம் மனிதனின் மனதின் ஆவியைப் பற்றியும் பேசுகிறோம். இதே கருத்தில் தான் இந்த வசனம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனம், தனது மனதை, சிந்தையை கட்டுப்படுத்தாத மனுஷன் பாழான பட்டணத்துக்கு ஒப்பாக இருக்கிறான் என்று பொருள்படுகிறது.

பாழான பட்டணம் எப்படி இருக்கும்? பழங்காலத்தில், தற்காலத்தைப் போல நாகரீகம் வளர்ச்சியடையாத போது, போலீஸ் பாதுகாப்பு குறைவாகவும் கொள்ளைக்காரர்கள் அதிகமாகவும் இருந்தனர். கொள்ளையடித்து வாழ்க்கை நடத்த முடிவு செய்தவர்களுக்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்தது. விரோதிகளிடமிருந்து பாதுகாப்பிற்கு பட்டணத்தைச் சுற்றி மதிற்சுவர்கள் அவசியமாக இருந்தது. மதிற்சுவர்கள் பாழாயிருக்கிற பட்டணத்தில் இப்படிப்பட்ட கொள்ளைக்காரர்கள் பயம் அதிகமாக இருக்கும். சில சமயங்களில் அது தாக்கப்பட்டு அழிவை சந்திக்கும்.

இங்கே இப்படிப்பட்ட பட்டணத்துக்கு ஒப்பாக பாழான சித்தத்தை உடையவனாக ஞானமுள்ள மனிதன் இருக்கிறான். இந்த சித்தம் மனதிலே ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். மனசாட்சி மற்றும் பகுத்துணர்வு என்கிற வாயிலைத் தவிர வேறு வழியாக எதுவும் சிந்தனையில் நுழையக்கூடாது. தேவனுடைய வார்த்தைக்கு இசைவான, தீமைபயக்காத, நன்மையான, ஞானமானவைகள் மட்டுமே நுழையக்கூடிய அளவுக்கே அந்த வாயில்கள் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு சித்தம் இருக்கவேண்டும். அது சரியானபடி நன்னிலையிலும் அது பாழாகாமலும் உடையாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் கப்பல் சேதத்திற்கு ஒத்த குணலட்சணக்கேடு வந்து சேரும்.

சித்தம் என்பது ஒரு விருப்பத்தை மாத்திரம் அர்த்தப்படுத்தாது. ஒரு விருப்பத்திற்கும் ஒரு சித்தத்திற்கும் தீர்மானிக்கப்பட்ட ஒரு வேறுபாடு உண்டு. சிலர் பத்து லட்சம் டாலர் பெற்றிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், ஆனால் அதைப் பெறுவதற்கான முயற்சிக்கும் சிந்தை இல்லாதிருக்கிறார்கள். சிலர் காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்; ஆனால் அந்த விருப்பம் அவர்களை எழுந்திருக்கச் செய்வதில்லை, ஏனெனில் சிந்தை பழுதற்ற நிலையில் இருக்கிறது. அவர்கள், “இன்னும் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும்” என்று கூறிக்கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் மேல் கட்டுப்பாடு இல்லாதிருக்கிறார்கள். மணி அடிக்கும் கடிகாரத்தை பயன்படுத்தி இந்த கட்டுப்பாட்டை பெற அவர்கள் நினைக்கலாம். விரைவில் அந்த கடிகாரமும் நன்மை பயக்காது, அதன் சத்தம் அவர்கள் காதிலேயே விழாது.

### சிறிய காரியங்களில் உள்ள கட்டுப்பாடு பண்பை அளவிடுகிறது

காலையில் எழுந்திருப்பதில் தனது சிந்தையை பழுதடைய அனுமதிப்பவர்கள் ஏறக்குறைய எல்லா காரியங்களிலும் பலவீனமுள்ளவர்களாக இருப்பார்கள். நாம் எழுந்திருப்பதற்கும் ஓய்வு எடுப்பதற்குமான நேரங்களை சரியானபடி ஒழுங்குபடுத்தவேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஞானமாக தீர்மானம் செய்து, அது செய்து முடிக்கப்பட்டதா என்று பார்க்கவேண்டும். அந்த செயல் நமக்கோ, மற்றவர்களுக்கோ தீங்கு பயக்காத பட்சத்தில், அது செய்து முடிக்கப்பட வேண்டும். ஊசலாடும் குணலட்சணத்தை உடையவராக இராத படிக்கும், சித்தத்தில் மிகவும் உறுதியுடன் இருந்து மேலான தீர்மானத்தின்படி காரியங்களை நிறைவேற்றுவது மிகவும் முக்கியமாகும். நாம் உணவை தெரிந்தெடுப்பதிலும் இதே முறையே உகந்தது. சிலர், “இந்த உணவு எனக்கு ஒத்துக்கொள்ளாது என்பதை நான் அறிவேன்; இது மேஜைக்கு வந்திருக்கிறது. மேலும் இது மற்றவர்களுக்கு ஏற்றதாக இருக்கும். இதை அசௌகரியம் இல்லாமல் நான் சாப்பிடமுடியாது; ஆனால் அதை விரும்புகிறேன், இந்த உணவு மேஜைக்கு வரக்கூடாது என்று நான் விரும்புகிறேன்”என்று கூறுவார்கள். ஆகவே அவர் அதில் பங்கு பெற்று அதன் விளைவினால் கஷ்டப்படுவார். உணவைப்பற்றிய விருப்பம் அவரிடம் உள்ளது. ஆனால் அதை சாப்பிட எதிர்க்கக்கூடிய சித்தம் அவரிடம் இல்லை. தனக்கு கேடுவிளைவிக்கக்கூடிய உணவை சாப்பிடாமல் இருப்பதே சரியான செயலாகும். மற்றவர்கள் அதை விரும்பி சாப்பிடக்கூடியதாக இருக்கலாம்.

சிறிய காரியங்களில் தவறான தீர்மானமும் குணலட்சணகுறைவும் வாழ்க்கையில் அனைத்து பெரிய காரியங்களையும் பாதிக்கச் செய்யும். காலையில் விழித்து எழுவதில் முறையற்று இருக்கும் ஒருவர் தனது வேலையிலும் ஒழுங்கற்று இருக்கக்கூடியவராக இருப்பார். தான் என்ன சாப்பிட வேண்டும் என்பதை கண்டுபிடிக்க இயலாதவர், சபலத்திற்கு ஆளாகின்றவராகவும் தனது எல்லா தீர்மானங்களிலும் பலவீனமுள்ளவராகவும் இருப்பார். சிலர் மற்றவர்களது கட்டுப்பாட்டுக்கும் கீழ் அதிகமாக வருகிறவர்களாக இருக்கிறார்கள்.

### ஒரு உறுதியான தீர்மானம் - பிடிவாதமானதல்ல - முக்கியமானது

“ஒரு ஞானமுள்ள மனிதன் சில சமயங்களில் தனது எண்ணத்தை மாற்றிக் கொள்வான் – ஆனால் ஒரு முட்டாள்

மாற்றிக் கொள்ளவே மாட்டான்"என்ற ஒரு பழமொழி உண்டு. தன் ஆவியை அடக்குதல் என்பது உச்சக்கட்ட நிலைக்குச் சென்று, "நல்லது, நான் முடியாது என்று சொன்னேன்; முடியாதுதான்!"என்று சொல்வதல்ல. நமது எண்ணத்தை மாற்றிக் கொள்வதற்கு நல்ல காரணங்கள் இருக்கலாம். அதை மாற்றிக் கொள்வது ஒரு சரியான செயல்முறையாக இருக்கும். சரியாக தமது ஆவியை அடக்குகிற ஜனங்களைத்தான் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். தேவனுடைய வீட்டிற்கு வருவதற்கு முன்னமேயே தமது ஆவியை அடக்குவதற்கு கற்றிருப்பார்களேயானால் அது அவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும். எப்படியிருந்தாலும், அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவதற்கு குணலட்சணங்களை அபிவிருத்தி செய்வதே ஒரே வழியாகும்.

மாமிசத்துக்குரியவைகள் எவை என்பதையும் தேவனுடைய பரிசுத்த சிந்தனைக்குரியவைகள், பரிசுத்த ஆவிக்குரியவைகள் எவை என்பதையும் குறிப்பாக வேதாகமம் நமக்கு கூறுகிறது. எப்படிப்பட்ட பரிசுத்த பண்புகளை நாம் உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதையும் அது கூறுகிறது. நாம் கோபத்தையும், குரோதத்தையும் பகையையும், கசப்பையும், மூர்க்கத்தையும். சண்டையையும் ஒதுக்கி தள்ள வேண்டும் என்றும் சாந்தம். தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகியவைகளை தரித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அது நமக்கு கூறுகிறது. இந்த பாடங்கள் கற்றுக்கொள்ளப்படவேண்டும். மாம்சத்தை எப்பொழுதாவது முழுகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்று நாம் கூற முடியாது; ஆனால் சித்தம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தெய்வீக உதவியைப் பெற்று முடிந்தவரை மாம்சத்தை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும்.

உறுதியான குணலட்சணங்களையும், உறுதியான சித்தத்தையும் உடையவர்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். ஆகையால் முதலாவது தேவனிடம் ஆக்கப்பூர்வமான திரும்புதலும் அவருடன் உறுதியான உடன்படிக்கையும் வேண்டும். இல்லையென்றால் பிதாவால் ஏற்றுக்கொள்ள இயலாதவர்களாயிருப்போம், நாம் தேவனுடைய வீட்டிற்குள் வந்த பிறகு, நல்லது என்று நாம் நினைத்திருந்த சில காரியங்கள். தவறானது என்று கண்டால், நாம் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். முந்திய வாழ்வில் எந்த விகிதாச்சாரத்தில் நமது மனத்தை கட்டுப்படுத்தினோமோ, நமது மாம்சீக ஆசைகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தினோமோ அதே விகிதாச்சாரத்தில் புதிய வழியில் வேகமாகவோ அல்லது மெதுவாகவோ நாம் முன்னேற வேண்டும். அர்ப்பணம் பண்ணப்பட்ட நேரத்தில் எவ்வளவு நேரம் வேலைக்காகவும் சந்தோஷத்திற்காகவும் அல்லது வெவ்வேறு வழிகளில் நாம் பயன்படுத்துகிறோம்? அர்ப்பணம் பண்ணப்பட்ட பணத்தில் எவ்வுளவு நமக்காக பயன்படுத்துகிறோம். நாம் தேவனோடு செய்த உடன்படிக்கைக்கு ஏற்ப நாம் இதையெல்லாம் முறைப்படுத்த வேண்டும். நாம் முதலாவது தேவனையும் அவருடைய ராஜ்யத்தையும் தேட வேண்டும். நமது ஏற்பாடுகளில் இது முத–டத்தைப் பெறவேண்டும். அதன் பிறகுதான் பூமிக்குரிய காரியங்கள் இடம்பெற வேண்டும். ஆகையால் தேவனுக்கு, உறுதியான குணலட்சணமும், உடனடியான, பின் வாங்காத தீர்மானமும் முக்கியத்துவம் வாய்ந்தது.

----------------------------

**--2296--**

# யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார்

## Jehovah is my Shepherd

சங்கீதம் 23

சங்கீதங்களின் செல்வாக்கு – அவையனைத்திலும் அதிகமாக உள்ளத்தை தொடுவது – தாவீது ஒரு மேய்ப்பன் – அவனது ஆடுகளின் மேல் அவனது அக்கரை – சிந்திக்க வைக்கக் கூடிய பரலோக மேய்ப்பனது ஆடுகளின் மேல் உள்ள அக்கரை – அவரது ஆடுகள் தாழ்ச்சியடையாது – அவர் அவைகளுக்கு ஓய்வளிக்கிறார் – அவைகளை போஷிப்பிக்கிறார் – அவர் ஜீவத்தண்ணீர் மூலம் அவைகளை களைப்பாற்றுகிறார். அவர் எனது ஆத்துமாவை தேற்றுகிறார் – என்னை வழி நடத்துகிறார் – நான் இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன் – அவரது கோலும் தடியும் – அவரது ஜனங்களுக்கான அவரது பந்தி – அவர் கொடுக்கிற அபிஷேகம் – என்றென்றைக்குமான நன்மையும் கிருபையும். "யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார்." சங்கீதம் 23:1

சங்கீதங்களின் புத்தகத்தைப் போல வேறு எந்த செய்யுள் தொகுப்பும் சிறந்ததாக இருக்க முடியாது என்று கூறுவது சரியானதாக இருக்கும். சந்தோஷத்திலும் துக்கத்திலும் ஒவ்வொரு திருப்பத்திலும் அது நமது உள்ளத்தை தொடுவதாக, இளகச் செய்வதாக காணப்படுகிறது. இருபத்தி மூன்றாம் சங்கீதத்தைக் குறித்து, பீச்சர் (Beacher) என்பவர் எழுதினதாவது: "சங்கீதப் புத்தகங்களில் அது ஒரு நைட்டீங் கேல். அது ஒரு சிறிய எளிய அலங்காரமானது. ஒதுங்கியிருந்து புகழ் பெற்றிராதபடி இனிமையாக ஒ–க்கிறது. அது இனிமையான சந்தோஷத்துடன் முழு உலகின் காற்றையும் நிரப்புகிறது." ஸ்பர்கியோன் (Spurgeon) கூறியதாவது: "அது சங்கீதங்களின் முத்து. அது ஒவ்வொரு கண்ணையும் தனது மென்மை மற்றும் பரிசுத்த காந்தியினால் மகிழ்விக்கிறது."

தேவனுடன் உடன்படிக்கை உறவுக்குள் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் மட்டுமே இந்த சங்கீதத்தின் மதிப்பை சரியாக உணர்ந்து அதன் கிருபையுள்ள உணர்வுகளை அப்பியாசப்படுத்தக்கூடும். சங்கீதக்காரன் தாவீது இதை செய்திருக்கக் கூடும். ஏனெனில் அவன் சீனாய் மலையில் ஏற்பட்ட உடன்படிக்கை மூலம் தேவனுடன் உறவுக்குள் வந்திருந்த கிருபை பெற்ற இஸ்ரயேல் இனத்தை சேர்ந்தவனாயிருந்தான். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும், அவரது வழிகளில் நடக்கவும் இஸ்ரயேலர்கள் தேவனுடன் உடன்படிக்கை செய்திருந்தார்கள். அதற்கு பதிலாக தேவனும் அவர்கள் எந்த அளவுக்கு அதைக் கடைபிடிக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு ஆசீர்வாதத்தை அளிப்பதற்கு உடன்படிக்கை செய்திருந்தார். அந்த உடன்படிக்கைக்கும் அவரது கட்டளைகளுக்கும் சரியானபடி கீழ்ப்பட்டிருந்தால் நித்திய ஜீவன் கிடைக்கும். இப்படிப்பட்ட முழுமையான கீழ்ப்படிதல் இயலாது என்று அப்போஸ்தலர் விளக்குவதை நாம் காண்கிறோம். "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை."

சில யூதர்கள் தங்களால் இயன்றவரை நியாயப்பிரமாணத்திற்கிசைவாக வாழ்ந்தார்கள். இப்படிப்பட்டவர்களில் தீர்க்கதரிசி தாவீதும் ஒருவனாக இருந்தான். எனினும் பூரணத்திற்கு கொஞ்சம் குறைவாகவே இருந்தார். தேவன், தாவீதைக்குறித்து "என் இருதயத்துக்கு ஏற்ற மனுஷன்" என்று கூறியிருக்கிறார். அவர் பாவம் செய்திருந்தாலும், வருந்தி, மன்னிப்புக்கேட்டு தண்டனையையும் பெற்று, தேவனுடைய கிருபையைப் பெற்று சந்தோஷம் அடைந்தார்; எதிர்காலத்தில் தேவனுடைய ஐக்கியத்தில் தொடர்ந்து இருப்பதற்கு கடுமையாக முயற்சி செய்தார். தேவனுக்கு பிரியமான மனுஷனைப்பற்றி – மகா பெரிய மேய்ப்பருக்கு பிரியமான ஆட்டைப்பற்றி அறிந்து கொள்வது நமக்கு ஆவலான காரியமாக இருக்கிறது. தெய்வ பக்தியுடன் வாழ முயற்சி செய்த மற்ற அனைவரும் – தீர்க்கதரிசிகள் மற்றும் அதிக பிரசித்தம் பெறாதவர்கள் – இதே வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

### மகா பெரிய மேய்ப்பரும் அவரது மந்தையும்

இந்த சங்கீதம் ஒரு முக்கியமான கருத்தில் நமது கர்த்தராகிய இயேசுவுக்கும் அவரது சபைக்கும் பொருத்தமாக இருக்கிறது. இந்த சங்கீதத்தின் எல்லா அம்சங்களும் நமது இரட்சகருக்கும், அவரது மந்தையின் ஆடுகள் என்று கூறிக் கொள்கிற அவரது சீஷர்களுக்கும் பொருந்துவதாக இருக்கிறது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று உண்மையுடன் சொல்லக் கூடிய இயேசு தான் முற்றிலுமாக, முழுமையாக அவருடைய சபைக்கு பிதாவினுடைய பிரதிநிதியாக இருக்கிறார். வேதம் சொல்லுகிறது போல, எந்த மனிதனும் பரலோகப் பிதாவைக் கண்டு உயிரோடு இருக்க முடியாது. இயேசுவைக் கண்டு, அவரை தேவனுடைய குமாரனாக புரிந்து கொண்டவர்கள் பரம பிதாவை ஒரு சிறந்த கண நேர காட்சியாக கண்டவர்கள் ஆகும். ஆகையால் நாம் எல்லோரும் இயேசுவை பிதாவின் பிரதிநிதியாகவும், மகா ராஜாவும், மகா மேய்ப்பருமாகிய யேகோவா தேவனின் குமாரனாகவும் பார்க்கிறோம்.

யூத யுகத்தில் இஸ்ரயேலர்கள் யேகோவாவின் மந்தையாக இருந்ததைக் காட்டிலும் இயேசுவும் அவரது சபையும் மிகவும் விசேஷித்தவிதமாக யேகோவாவின் மந்தையின் ஆடுகளாக இருக்கிறார்கள். ஏனெனில் தேவனுடனான யூதர்களின் உறவு மோசே மூலமாக இருந்தது. இயேசுவை மையமாகக் கொண்ட மேலான உடன்படிக்கையின் மூலமும் கிறிஸ்துவின் மூலமும் சபையானது தேவனுடன் உறவு கொண்டிருக்கிறது. இதை நாம் தெளிவாக பார்ப்பது நல்லதாக இருக்கிறது.

இல்லையென்றால் இந்த சங்கீதத்தின் உணர்வுகளை நமக்கு ஒப்பிட்டு பார்க்கலாமா, வேண்டாமா என்று எப்படி நாம் அறிந்து கொள்ள முடியும்? உலகப் பிரகாரமான மனிதன் இதை தனக்கு ஒப்பிட்டு பார்ப்பது சரியாக இருக்காது. அவன் தன்னையே வஞ்சித்துக் கொள்கிறவனாக இருப்பான். ஏனெனில் அவன் யேகோவா தேவனின் மந்தையில் உள்ள ஆடுகளில் ஒன்று அல்ல. இதைக் காட்டிலும் தெளிவானது எதுவுமில்லை. ஆட்டுத் தொழுவத்துக்குள் ஒரே ஒரு வாசல் வழியாகத்தான் நுழைய முடியுமென்று இயேசு கூறியிருக்கிறார். மேலும் தான் தான் அந்த வாசல் என்று கூறியிருக்கிறார்.

இயற்கையாகவே நாம் யேகோவா தேவனுடைய மரண தண்டனைக்குள்ளான பாவிகளாக இருக்கிறோம். அவருடைய ஆடுகளல்ல. அவர் உலகத்திற்காக ஒரு பொதுவான பெரிய திட்டத்தை தீர்மானித்திருக்கிறார். அது மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் கிரியை செய்ய ஆரம்பிக்கும். எனினும் இந்த சுவிசேஷ யுகத்தில் விசேஷித்த ஆடுகளை பெற்று வருகிறார். எப்படி என்று இயேசு கூறுகிறார். "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் (என்னுடைய சீஷனாக, என்னுடைய பின்னடியாராக, என்னுடைய ஆடாக வர விரும்பினால்) அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்." சுயத்தை வெறுத்தல் முதலாவது படி – சுயத்தை விட்டு விடுதல், சித்தத்தை தேவனிடம் விட்டுவிடுதல். உடன்படிக்கை கூறகிறதாவது:

"ப–யினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்." கர்த்தருடைய ஆடாக விரும்புகிறவர்கள் அனைவரும் இந்த ப–யின் உடன்படிக்கையை எடுக்க வேண்டும். இந்த நிபந்தனைக்குக் கீழாகதான் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் படுவார்கள்.

யூதர்கள் அவர்களது நியமிக்கப்பட்ட மத்தியஸ்தராகிய மோசே மூலமாக வந்தது போல, நாமும் இந்த பெரிய ஆட்டுத் தொழுவத்திற்கு உண்மையான மோசேயாகிய இயேசு மூலமே வரமுடியும். வேறு நாமம் ஏதும் கொடுக்கப்படவில்லை. இந்த முதல் படியை எடுத்து வாசல் மூலமாக ஆட்டுத் தொழுவத்திற்குள் வந்த பிறகு, தேவனுடைய இந்த செய்தியை நாம் பெறுகிறோம். "எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்." 1 கொரி 3:22,23. இந்த கருத்தே இந்த சங்கீதத்தில் விளக்கப்படுகிறது.

### எல்லா தேவைகளும் அபரிமிதமாக கொடுக்கப்படுகிறது

தேவனுடன் முழு ஐக்கியத்தில் தரித்திருக்கும் தேவனுடைய ஆடு எதிலும் குறைவுபடாது, தாழ்ச்சியடையாது. அவர்களது அனைத்து தேவைகளும் நிறைவேற்றப்படும். இதற்கு பூமிக்குரிய செல்வமோ, பேரோ, புகழோ அல்லது சொகுசோ என்று அர்த்தமல்ல. கர்த்தருடைய ஆடுகள், புது சிருஷ்டிகளாக ஆவியின் ஜீவிகளாக, தற்கா–கமாக மற்றவர்களைப் போல மாம்சீகத்தில் வாழ்கிறார்கள். முதலாம் உயிர்த்தெழுத–ல் பங்கு பெறுகிற அவர்களது மாற்றத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் பூமிக்குரியவைகள். அவர்களது பூமிக்குரிய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அவரது ஆசீர்வாதம் ஆவிக்குரிய கிருபைகள் ஆகும். அவர்களுக்கு "நன்மையை வழங்காதிரார்." ஆம், அவர்களது ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு தண்டனைகள், துக்ககரமான அனுபவங்கள் தேவைப்படுகிறது.

கர்த்தரின் ஆடுகளாக நமக்கு பசுமையான புல்லும் குளிர்ந்த நீருமாகிய சத்தியம் கொடுக்கப்படும் என்கிற உறுதி மொழியை சங்கீதம் நமக்குத் தருகிறது. மேலும் ஆடுகளை புல்லுள்ள இடங்களில் மேய்ப்பார் என்று சொல்லப்பட்ட பிரகாரமாக நாம் ஆவிக்குரிய விதமாக போஷிப்பிக்கப்பட்டு, களைப்பாற செய்யப்பட்டு, தேவனுடைய சமாதானத்தை பெற்றிருப்போம். ஆனால், அந்தோ பாவம்! எல்லா ஆடுகளும் மேயப்பரில் முழு நம்பிக்கை வைப்பதில்லை. அவரது சித்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதில்லை. சிலர் தொடர்ந்து சங்கடத்தில் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தேவனுடைய வசனத்தில் காணப்படுகிற பசுமையான புல்லும், குளிர்ந்த, களைப்பாற்றுகிற தண்ணீராகிய சத்தியத்தை ஒதுக்குகிறார்கள். ஏனெனில் அவர்கள் சில சமயங்களில் வெள்ளாட்டைப் போல மேய்ப்பறை விட்டு வெகு தூரம் பிரிந்து வனாந்தரத்தில் அலைந்து திரிந்து தற்கால ஜீவியத்திற்காக தாங்களே உணவைத் தேடுகிறார்கள். இந்த உணவு ஆவிக்குரிய சுபாவத்தின் செழுமைக்கு பிரயோஜனமாக இருக்காது.

எனினும் இப்படிப்பட்ட ஆடுகள் உண்மையிலேயே மேய்ப்பரின் ஆடுகளாக ஆகியிருந்தால். மேய்ப்பரை விட்டு செல்லமாட்டார்கள். சங்கீதம் குறிப்பிடுவதுபோல அதன் பின்னே மேய்ப்பன் அவைகளை தேடிச் செல்வார். அவரது கோலும் அவரது தடியும் அவைகளை தேற்றுபவைகளாக இருக்கின்றன. அவைகளது விரோதியாகிய ஓநாய்கள் அவைகளுக்கு தீங்கு இழைக்காதபடி அவர் தமது தடியைக் கொண்டு அடிக்கிறார். அவர் தமது கோ–ன் துரடு மூலமாக துன்பத்தில் சிக்கிக் கொண்ட ஆட்டை மிகவும் ஞானமாகவும் ஜாக்கிரதையுடனும் விடுவிக்கிறார். இந்த துன்பம் என்பது இந்த ஜீவியத்தின் கவலைகள், ஆஸ்தியின் மூலம் வருகிற வஞ்சகம் துன்பம் மற்றும் சாத்தானாலும் பாவத்தினாலும் வரக்கூடிய துன்பம் ஆகியவையாகும். தேவனுடைய தொழுவத்தைச் சேர்ந்த ஆடுகள் இவ்விதமாக பாடலாம்; "அவர் என் ஆத்துமாவைத் தேற்றுகிறார்." என்னை அவர் திரும்ப அவரிடத்தில் கொண்டு வருகிறார். நானே எனக்கு தேடிக்கொண்ட எந்த உணவைக் காட்டிலும் அவர் எனக்கு அளித்தது எவ்வளவு மேன்மையானது என்பதைக்

காணும்படியும், அவர் எனக்கு அளித்தவைகளை அனுபவிக்கவும் அதன் மதிப்பை சரியாக உணர்ந்து கொள்ளவும் மறுபடியும் அறிந்து கொள்ளவும் செய்கிறார். மேலும் ஒரு அனுபவம் நமது கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது. அதாவது மேய்ப்பனின் வழி நடத்துதல். "அவர் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்." வேறு எந்த வழியும் விரும்பத்தகாதது என்பதையும் அவரது வழியே விரும்பத்தக்கது என்பதை பகுத்துணர்ந்து அறிந்து கொள்ளவும் நமது சொந்த தடுக்கலையும் துன்பத்தையும் எனக்கு உண்டுபண்ணுகிறார். அவரது வழிகளெல்லாம் பூரணமானவைகள், நீதியானவைகள். முதலாவது நம்மை நமது சித்தங்களுக்கு மாறாக வழிநடத்துவதில்லை. ஆனால் அதன்பிறகு தேவனுடைய நன்மையும் பிரியமும் கடைசியாக அவரது பரிபூரணமுள்ள சித்தம் இன்னதென்று பருத்தறிய தக்கதாக வழி நடத்துகிறார். ரோமர் 12:2

### மரண பள்ளத்தாக்கு

நமது எல்லாருடைய வாழ்வும் மரண பள்ளத்தாக்கின் பயத்திலே இருந்து வருகிறது. நமது ஆதிபிதாவாகிய ஆதாம் மட்டுமே மலை உச்சியில் இருந்தவர். அவர் கால் வழுக்கி, சரிவில் படிப்படியாக இறங்கி மரண பள்ளத்தாக்கை அடைந்தார். அவரது பிள்ளைகளாகிய நாம் அங்கே பிறந்தோம் நாம் தினமும் சாகிறோம்; மரிக்கும் நிலைகளே நம்மை சூழ்ந்திருக்கிறது. தேவன் தமது ஆடுகளை மீண்டும் ஜீவனின் மலை உச்சிக்கு வழிநடத்துவார் என்று நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த சுவிசேஷ யுகத்தில் தமது ஆடுகளை, சபையை, கிறிஸ்துவின் சரீரத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். சீக்கிரத்தில் இந்த உலகை ஆயிர வருட யுகத்தில் வழி நடத்துவார். அவர் கூறுகிறதாவது: "இந்த தொழுவத்திலுள்ள வைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும்... அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." யோவான் 10:16

*"ஓ, சில சமயங்களில் ஆழமாகவும் கரடுமுரடாகவும் இருக்கிற பயமே இலக்குக்கு பாதையாக காணப்படுகிறது!."*

இந்த பயத்தின் பள்ளத்தாக்கின் முடிவு அருகாமையில் இருக்கிறது. வாழ்க்கைப் பயணத்தின் முடிவுக்கு சீக்கிரத்தில் வருவோம் என்ற பொருளில் இது கூறப்படவில்லை. ஆனால் புதிய நாள், யுகம் விடியப் போகிறது என்ற பொருளில் கூறப்படுகிறது. இதைக் குறித்து நமது மேய்ப்பர், கர்த்தர் கூறுகிறதாவது: "நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்." மல்கியா 4:2 இதனுடைய கடைசி பலன் இனிதுக்கமுமில்லை, அலருதலுமில்லை, மரணமுமில்லை, முழு உலகமும் மரண பள்ளத்தாக்கி-ருந்து வெளிப்பட ஆரம்பிக்கும். அந்த ஆயிரம் வருடத்தில், ஆதாம் இழந்து போன அந்த மனித பூரண நிலைமையாகிய மகிமையின் உயரத்திற்கு மறுபடியும் உயருவார்கள். அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய் மரித்த இயேசுவின் மரணத்தினால் திரும்ப வருவதற்கான இந்த உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.

### சபையின் மேலான பந்தி

ஆனால் நாம் கூறியுள்ளது போல, இந்த விலை யேறப் பெற்ற சங்கீதம் விசேஷித்தவிதமாக சபைக்கு பொருந்தக் கூடியதாக இருக்கிறது. தற்கால தேவனுடைய பிள்ளைகளுக்காக ஒரு பந்தி விசேஷித்த விதமாக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. அவர்களது சத்துருக்களுக்கு முன்பாக அதில் பங்கு பெறலாம் என்று வாசிக்கிறோம். எதிர்காலத்தில் இது உண்மையாக இருக்காது. ஏனெனில் தீங்கு செய்யவோ, கேடு செய்யவோ கூடிய சத்துருக்கள் இருக்க மாட்டார்கள். (ஏசாயா 11:9) கர்த்தருடைய பந்தியில், தப்பர்த்தம் செய்கிறவர்களும், தவறாக அறிவிப்பவர்களும், அவதூறு செய்கிறவர்களும் விரோதமானவர்களும் எப்படி இன்னும் உரிமை பெற்றிருக்க முடியும்! பந்தி என்பது அவர்களது தேவைகளை நிறைவேற்றுவது – தேவனுடைய வாக்குத்தத்தங்கள், அவரது கிருபைகள் முத-யன.

இந்த சங்கீதம், விசேஷித்தவிதமாக இந்த யுகத்தின் சபைக்கு உரியது என்பதற்கு மற்றொரு ரூபகாரம். "என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்" என்பதாகும். இயேசு, சபையின் தலையானவர், அவரது தோழர்களுக்கு மேலாக ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். இஸ்ரயே-ன் ராஜாக்களையும் ஆசாரியர்களையும் அபிஷேகம் பண்ணின தைலம் பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்தியது. இந்த ஆவிதான் இயேசுவை பிரதிநிதித்துவப்படுத்தும்படி சபைக்கு கொடுக்கப்பட்டது. சங்கீதம் 133:2ல் நாம் வாசிக்கிறது போல, இதே அபிஷேக தைலம் தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்களின் மேல் இறங்கியிருக்கிறது.

### இனிப்பும் கசப்புமான பாத்திரம்

"என் பாத்திரம் நிரம்பிவழிகிறது." வேதத்திலே பாத்திரம் என்பது ஒரு அனுபவத்தை குறிப்பிடுகிறது. சில சமயங்களில் இனிமையானது. சில சமயங்களில் கசப்பானது. சில சமயங்களில் இரண்டும் சேர்ந்தது. கர்த்தருடைய பாத்திரம் கசப்பான அனுபவத்தையும் தற்கால சோதனைகளையும் குறிப்பதாக அறிவிக்கப்படுகிறது. இயேசு கூறியதாவது: "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" இது தான் அந்த பாத்திரம் – அவரது பாத்திரம் – அவரது சீஷர்களாகிறவர்களுக்கு அவரோடு பங்கு பெறும்படி அவர் கொடுத்த பாத்திரம். இது ஐக்கியத்தின் பாத்திரத்திற்கு அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. (1 கொரி 10 : 15–17)

கர்த்தருக்காகவும் அவரது எந்த ஒரு ஊழியம் அல்லது ப-களுக்காகவும் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறும் சலுகை அநேக அர்த்தத்தில் விலையேறப்பெற்றதும் இன்ப மானதும் ஆகும். இன்பமானது கசப்புடன் தடையின்றி கலக்கிறது. தற்கால கசப்புக்கு ஈடுகட்டுவதற்கு மேலாக எதிர்காலத்தில் தேவனுடைய ராஜ்யத்தில் புதிய திராட்சரசத்தை கர்த்தர் வாக்குத் தத்தம் செய்கிறார். நமது பாத்திரம் நிரம்பியிருக்கிறது. ஆனால் அதில் ஒரு சொட்டு குறைவாக இருக்க வேண்டும் என்று விரும்பக் கூடாது.

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும்

என்னைத் தொடரும்.'' தேவனுடைய நன்மையும் தேவனுடைய இரக்கமும், கிறிஸ்துவுக்குள் உண்மையிலேயே அவருடையவர்களாயிருக்கும் நம் எல்லோருடனும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் தொடருவதும், வேதவாக்கியங்களின்படி எல்லாம் சேர்ந்து நமது நன்மைக்காக கிரியை செய்வதும் எவ்வளவு மேன்மையானது! கடைசியாக இந்த சங்கீதம் கூறுகிறதாவது: ''நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.'' பரலோக வீட்டில், ''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு.... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்.... நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்'' என்று ஆண்டவர் கூறுகிற வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், மாம்சமும் இரத்தமும் சுதந்தரிக்க முடியாத பிதாவின் வீட்டில் நமது மகிமைப் பெற்று ஆவியின் சுபாவத்தில் நுழைவோம்.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சபையாருக்கு இது தான் நித்திய பங்காக இருக்கும். இதைத் தொடர்ந்து பெரிய மாம்சீக ஆசீர்வாதங்கள் உலகத்திற்கு வரும். சபையின் மகிமையோடு இது எந்த விதத்திலும் தலையீடு செய்யாது. ஆனால் சபையின் மகிமையை உயர்த்தும். ஏனெனில் சபையானது அதன் ஆண்டவ ரோடு பூமிக்குரிய ஆடுகளுக்கு ஆசீர்வாதங்களை பகிர்ந்தளிப்பதில் பங்கு பெறும். கலா 3:29

--------------------------

--2300--

# கவனத்தை ஈர்க்கிற கேள்விகள்
## Interesting Questions

### "அவர் வந்து ஜனங்களை ஆசீர்வதிப்பார்"

கேள்வி : ''தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரண்டாம் தரம் தரிசனமாவார்;'' நமது கர்த்தருக்காக காத்துக் கொண்டிருக்கிற இவர்கள் யார்?

பதில் : இங்கே (எபிரேயர் 9:28) அப்போஸ்தலர். மகா பிரதான ஆசாரியராக கிறிஸ்துவின் வேலையை படிப்படியாக விவரிக்கிறார். நமது ஆண்டவர் பாவ நிவாரண நாளில் இரண்டு பாகமாக – காளை மற்றும் ஆட்டுகடா – பாவநிவாரண ப–யை செலுத்தி இப்பொழுது மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறார். அவர் தமது வேலையை நிறைவேற்றிய பிறகு, அவர் மறுபடியும் இரண்டாம் தரம் – பாவ நிவாரண ப–யாகவோ அல்லது சுவிசேஷ யுகத்தின் எந்த ஒரு ப–யை மறுபடியும் செலுத்தவோ அல்ல – தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி தரிசனமாவார். அவரது வசனம் சபையை குறிப்பதாக நாம் காணலாம். அவரது இரண்டாவது பிரசன்னத்தை அவர்கள் அறிவார்கள். அவர் உலகத்திற்கு வெளிப்படுத்துவதற்கு முன்னமேயே அந்த உண்மையை அறிந்திருப்பார்கள். தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு தரிசனமாவார்.

உண்மையான பாவநிவாரண நாளில் நமது ஆண்டவர் ஆட்டுக் கடா வகுப்பாரின் இரத்தத்தோடே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் போது ஆட்டுக்கடாவின் மரணம் நிகழ்ந்து விட்டது என்பதை நாம் நினைவு கூர வேண்டும். அப்போது உதவி ஆசாரியர்கள் அவருடைய அங்கமாக அவருடன் இருப்பார்கள். இரண்டாம்தரம் இரத்தத்தை அளித்த பிறகு மறுபடியும்–ப– செலுத்துவதற்கு மீண்டும் அவர் வராமல், ஏனெனில் ப–யாக ஒப்புக் கொடுக்கும் காலங்கள் முடிந்திருக்கும் – ஜனங்களை ஆசீர்வதிப்தற்காக வருவார்.

அவருக்காக காத்துக் கொண்டிருப்பவர்கள் யார், யாருக்காக அவர் இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் தரிசனமாவார்? ஆபத்து நாளிலும் அதன் பிறகும் அகில உலகமும் இரட்சகருக்காக காத்துக்கொண்டிருக்க ஆரம்பிக்கும். சகல ஜாதிகளும் அவரை விரும்புவார்கள்– மறுபடியும் பாவநிவாரண ப–யை செலுத்த அல்ல, அவர்களது இரட்சிப்பிற்காக. மனுக்குலம் இரட்சகர் தேவை என்பதை அறிந்து கொண்டு, இந்த இரட்சிப்புக்காக மகிமையில் இருக்கும் கிறிஸ்துவுக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். அவரை விசுவாசக் கண்களால் காண்பார்கள்.

### அவர்கள் "முகங்குப்புற விழுவார்கள்"

அப்பொழுது திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து. "நாம் கர்த்தரின் பர்வதத்துக்கு போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்." (ஏசாயா 2:3) அவர் தரிசனம் ஆகும்போது, மணவாட்டி வகுப்பாராகிய நாமும் மகிமையில் அவரோடு தரிசனமாவோம் என்பதை வேறொரு வசனம் நமக்கு உறுதியளிக்கிறது. எல்லா ப–களும் முடிந்து சபை மகிமையடைந்த பிறகு, அவர் இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் வந்து ஜனங்களை ஆசீர்வதித்தல் நடக்கும். நிழ–ல் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு திரும்பி வருவதில்லை. ஆனால் அவர் தன் கைகளை உயர்த்தி ஜனங்களை ஆசீர்வதித்தார். அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது. ஜனங்களெல்லாரும் ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள். (லேவியராகமம் 9:23,24) ஆகவே உலக ஜனங்கள் மகா மேசியாவுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து வணங்குவார்கள். மனுக்குலத்தை உயர்த்தி பாவ நிவாரண ப–யின் பலனை அவர்களுக்கு கொடுப்பதே ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்துவின் வேலையாக இருக்கும்.

### அநேக கிறிஸ்தவர்கள் இன்னும் அறிவுபெறவில்லை

கேள்வி : தற்கால சத்தியத்திற்கு வெளியே இருக்கிற யாராவது பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறார்களா?

பதில் : தேவனுடைய பிள்ளை தனது அனுபவத்தின் பல்வேறு காலக் கட்டத்தில் பல்வேறு அளவிலான பரிசுத்த ஆவியை பெற்றிருப்பான். நாமே கூட இதற்கு முன் நாம் பெற்றிருந்த பரிசுத்த ஆவியைக் காட்டிலும் இப்போது அதிகமாக பெற்றிருப்போம். அதாவது இந்த அளவிலான ஆவியை நாம் இதற்கு முன் நாம் பெற்றிருந்த பரிசுத்த ஆவியைக் காட்டிலும் இப்போது அதிகமாக பெற்றிருப்போம். அதாவது இந்த அளவிலான ஆவியை நாம் இதற்கு முன் வெற்றிருக்க வில்லை என்பதை இது உணர்த்துகிறது. சிலர் பரிசுத்த ஆவியை குறைவாக பெற்றிருப்பார்கள். இது அவர்கள் ஆவியில் வளரவில்லை என்பதை உணர்த்துகிறது. முத்திரைப்போடப்பட்ட பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துகிறார்கள்.

பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப் பட்ட நாம்

அனைவரும் ஆவிக்குரிய ஆவ-லோ தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறிவிலோ ஒரே நிலையில் இருப்போம் என்று நாம் நினைக்கலாகாது. நாம் அறிவில் வளர்ந்திருக்கிறபடி கிருபையிலும் வளர்வோம். நமது கிருபையின் அளவு குறையுமானால், அறிவும் மங்க ஆரம்பிக்கும். கிருபை பெருகினால் நமது புரிந்து கொள்ளுதலும் அதிகரிக்கும். அகில உலகமும் இப்படிப்பட்ட மாயைக்கு கீழாக பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் எழுந்திருந்து எவ்வளவு குறைவாக நாம் அறிந்திருந்தோம். தேவன் நமக்கு கொடுத்திருக்கிற விலையேறப்பெற்ற சில செய்திகளை எப்படி அறியாமல் இருந்திருக்கிறோம் என்பதை பார்க்கும்பொழுது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

நாம் முழு அறிவையும் பெறுவதற்கு முன்னரே தேவனுடைய பிள்ளைகளாக இருந்ததினால், மற்றவர்களும் முழு அறிவைப் பெறாமல் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க முடியும் என்று நாம் நம்புகிறோம். நாம் அறுவடையின் முடிவில் இருக்கிறோம் என்றும் கர்த்தர், சத்திய அறிவு உலகத்தை சூழ்ந்து கொள்ளும்படி செய்கிறார் என்றும் நாம் நம்புகிறோம். ஆனால் எதிரியானவன் அதை ஜனங்கள் உணர்ந்து கொள்ளாதபடி அவதூறான “புழுதியை” கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறான்.

தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்பவனிடம் நண்பகல் சூரிய வெளிச்சத்தைக் காட்டிலும் அதிகமான வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்தது தேவன் அபூர்வமாக செய்த காரியங்களில் ஒன்று. சத்தில்லாத பாலுடனும் உமியுடனும், வாழ இன்னும் தேவனுடைய பிள்ளைகள் முயற்சிக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். கிறிஸ்துவுக்குள்ளான இப்படிப்பட்ட சகோதரர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. நாங்கள் அவர்களுக்கு உதவ முயற்சித்து வருகிறோம். இல்லையெனில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டவுடனே எல்லாருக்கும் சாதகமான சூழ்நிலை இருக்கும் என்பதை அறிந்து, எல்லா சத்திய பிரபல்ய வேலையை நிறுத்த வேண்டியிருக்கும்.

வேதாகமம் திரள் கூட்ட வகுப்பாரை திரளான கூட்டமாகிய ஜனங்கள் என்று கூறுகிறது. புத்தியில்லா கன்னிகைகளின் வகுப்பார் புத்தியுள்ள கன்னிகைகளின் வகுப்பாரைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறார்கள். பாபிலோன் கவிழ்க்கப்படுவதற்கு முன்னதாக திரள் கூட்ட வகுப்பார் அதை விட்டு வெளியேறமாட்டார்கள் என்று அநேக வேத வசனங்கள் குறிப்பிடுகின்றன. “என் ஜனங்களே, நீங்கள் அவருடைய பாவங்களுக்கு உடன்படாமலும். அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.” இந்த அழைப்பு கடந்த முப்பத்து ஏழு ஆண்டுகளாக (இந்த கட்டுரை 1915-ல் எழுதப்பட்டது) கொடுக்கப்பட்டு வருகிறது. இது தேவனுடைய அழைப்பு.

சிலர் வெளியே வருவார்கள் என்றும், மற்றவர்கள் வரமாட்டார்கள், என்றும் பாபிலோனின் விலங்கி-ருந்து விடுவிக்கப்படமாட்டார்கள் என்றும் வேத வாக்கியங்கள் நமக்கு காண்பிக்கின்றன. இந்த புத்தியில்லா கன்னிகை வகுப்பார் அன்பிலும் வைராக்கியத்திலும் குறைவுபட்டிருப்பதால் தாங்கள் மணவாட்டி வகுப்பாரின் இடத்தை இழந்து விட்டோம் என்பதை காண்பார்கள். ஆனால் அவர்கள் கன்னிகைகள், எனினும் மணவாட்டியின் தோழி வகுப்பாரில் ஒரு இடத்தைப் பெறுவார்கள். அவர்கள் மணவாட்டியை தொடர்ந்து ராஜாவின் அரண்மனைக்குச் செல்வார்கள். அவர்கள் தோழியாக இருப்பார்கள், குறைவான மகிமையுடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். ஆகவே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் குறிப்பிட்ட அளவில் இன்னும் பாபிலோனில் இருக்கிறார்கள் என்று நாம் நம்புவதற்கு காரணமிருக்கிறது. நாம் அவர்களது இடத்திலும், அவர்கள் நம்முடைய இடத்திலும் இருந்தால், நாம் பாபிலோனைவிட்டு வெளியே வருவதற்கு அவர்கள் தீரமான முயற்சிகளை செய்வார்கள். அதே போல் நாம் செய்கிறோம்.

**நாம் எவ்வளவு தூரம் நியாயமான சந்தோஷங்களை தியாகம் செய்ய வேண்டும்**

கேள்வி : பாவமில்லாத மாம்சீக சலுகைகளும் உரிமைகளும் என்னென்ன? கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டி எவைகளை தியாகம் செய்ய வேண்டும்?

பதில் : அனைத்து மானிட ஜீவிகளுக்கும் உரிய சில குறிப்பிட்ட உரிமைகளும் சலுகைகளும் இருக்கின்றன. பாவமில்லாத விருப்பங்களும் சுவைகளும் இருக்கின்றன. ஆரோக்கியமான சத்துள்ள உணவை சாப்பிட்டு அனுபவிப்பது பாவமல்ல. என்ன சாப்பிடலாம் என்று முன்னுரிமை கொள்வது பாவமான காரியமல்ல. குளிர் காலத்தில் விலை அதிகமாக இருக்கும் ஸ்ட்ராபெர்ரியை ஒருவர் எடுத்துக் கொள்வது பாவமல்ல, அதை வாங்க தம்மிடம் பணம் இருந்து, அந்த பணம் நேர்மையான வழியில் சம்பாதிக்கப்பட்டிருந்தால் அது பாவமல்ல. ஒரு பெட்டி ஸ்ட்ராபெர்ரிக்கு ஐம்பது சென்டோ அல்லது ஒரு டாலரோ கொடுத்தால் அது பாவமாக இருக்காது. நல்ல ஒரு வீட்டையோ, வேலைக்காரர்களையோ, ஒரு உல்லாச படகையோ, கார் முதலானவைகளை பெற்றிருந்தால் அது பாவமான காரியமல்ல. பொழுது போக்குகள், இசை கச்சேரி, இசை நாடகம் ஆகியவை மனதுக்கு உற்சாகம் தரக்கூடியவை. அதை ஐந்து டாலர் கொடுத்து இருக்கையை ஏற்பாடு செய்து வாடகைக் காரை அமர்த்தி செல்வது ஒருவருக்கு முழு உரிமை இருக்கிறது. உலகப்பிரகாரமான ஒரு மனிதனுக்கு இதில் ஏதாவது ஒன்றை செய்ய முடியுமென்றால் அது பாவமான காரியமல்ல. பாவமான காரியங்கள் எப்பொழுதும் தவிர்க்கப் படவேண்டும்.

ஒருவர் கிறிஸ்துவின் சீடராக மாறிய பின், அவர் தனது சித்தத்துக்குப் பதிலாக தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்கிறார். கிறிஸ்து தமது சந்தோஷத்திற்காக எதையும் செய்யாமல், தமது நேரம், செல்வாக்கு, தமது வாழ்க்கை அனைத்தையும் பிறரது நன்மைக்காக பயன்படுத்தினார். அதே போல அவரது சீடர்கள் தங்களது உரிமைகளையும் சலுகைகளையும், தேவனுடைய ஊழியத்திற்கு முரண்பாடாக இருந்தால், விட்டுவிட வேண்டும். ஒரு கிறிஸ்தவன் தன்னை அர்ப்பணம் செய்வதற்கு முன் செய்த அதே காரியங்களை செய்ய நியாயப்படுத்த முடியாது. இசை கச்சேரிக்கு செல்ல ஐந்து டாலரை பயன்படுத்துவேன் என்று சொல்ல முடியாது. எனக்குரியவைகள் எல்லாம் தேவனுக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன் என்று அவன் கூற கடமை பட்டிருக்கிறான். இதே முறைமையே ஒரு காரை பெறுவதா வேண்டாமா என்பதற்கும் அவனை கட்டுப்படுத்துகிறது. ஒரு நல்ல வீட்டை பெறலாமா அல்லது ஏதாவது ஒரு வீட்டை பெறலாமா என்பதற்கும் சிறப்பான உயர்ந்த உணவை பெறுவதற்கும் நல்ல ஒரு உயர்ந்த ரக ஆடையை அல்லது எளிய ஆடையை பெறலாமா என்பதற்கும் இதே ஒழுங்கையே பின்பற்றவேண்டும். அவனது நேரத்தை பயன்படுத்துவதற்கும் அவனை கட்டுப்படுத்தும்.

தேவனுடைய உக்கிராணக்காரனாக இருக்கும் ஒருவரது நேரத்தையும் பணத்தையும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்க வேறொருவருக்கு உரிமை இல்லை. இவைகளை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை தனிப்பட்ட ஒருவரே முடிவு செய்ய வேண்டும். அவர் உண்மையுள்ள உக்கிராணக்காரனா அல்லது பொல்லாத உக்கிராணக்காரனா என்பதை கர்த்தரே தீர்ப்பு செய்கிறவர். இயேசுவைப் போல பூமிக்குரிய சுக போகங்களை ப–யிடுபவர்கள் யார் என்பதையும் அதன் மூலம் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தக் கூடும் என்பதையும் யார் அதற்கு ஈடாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெறுவார்கள் என்பதையும் யார் ராஜ்யத்தின் பரிசையும் அதன் மகிமையையும் பெறுவார்கள் என்பதையும் தேவனே முடிவு செய்வார்.

-------------------------

**--2303--**

# தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா

## David Anointed King

## (கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார்)

## (The Lord Looketh on the Heart)

1 சாமுயேல் 16:4-13

"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்."

கீழ்ப்படியாமையினால் சவுல் தேவனால் ஒதுக்கி தள்ளப்படுதல் என்பது அவர் ராஜ்ய பாரத்தி-ருந்து தள்ளப்படுவது மாத்திரமல்ல, அவருக்கு பிறகு அவரது குடும்பத்தார், அவரது மகன்கள் யாரும் ராஜ்ய பாரத்திற்கு வரமாட்டார்கள் என்று பொருள்படுகிறது. சிங்காசனத்தில் தேவனுடைய பிரதிநிதியாகவும், இஸ்ரயே-ன் ராஜாவாகவும் வேறொரு குடும்பத்தி-ருந்து தேவன் வேறொரு மனிதனை தெரிந்தெடுத்ததையும் இது அர்த்தப்படுத்துகிறது. சாமுயேலால் மறைமுகமாக குறிப்பிடப்பட்ட தாவீதுதான் தேவனுடைய தெரிந்தெடுத்தலாக இருந்தார். சாமுயேல் கூறியதாவது; "கர்த்தா தம்முடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷனைத் தமக்குத்தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு (சவுல்) விதித்த கட்டளையை நீர் கைக் கொள்ளவில்லையே." (1 சாமுயேல் 13:14) இந்த பாடத்தின் காலத்தில் தாவீதுக்கு ஏறக்குறைய இருபது வயது இருக்கும். அதன் காரணமாக, இப்பொழுது குறிப்பிடப்பட்ட தீர்க்க தரிசியின் வார்த்தை தாவீது பிறந்த சமயத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும். தமது ஊழியத்திற்கு விசேஷித்த விதமாக பயன்படுத்துகிறவர்களின் ஆரம்ப காலத்தைப்பற்றிய தேவனுடைய முன்னறிவையும், திட்டத்தைப்பற்றிய மற்றொரு விளக்கத்தையும் நாம் இப்படியாக பெற்றிருக்கின்றோம். இதே போல் யாக்கோபின் தெரிந்தெடுத்தல் அவரது பிறப்பிற்கு முன்னமேயே அறிவிக்கப்பட்டது. அதேபோல பவுல் அப்போஸ்தலர் கூட அவர் தன் தாயின் கர்ப்பத்தி-ருக்கும்போதே தெரிந்து கொள்ளப்பட்டதாக நமக்கு கூறுகிறார். இந்த தெய்வீக தெரிந்து கொள்ளுதலைப் பொருத்தவரை, தெரிந்து கொள்ளப்பட்ட இவர்கள் எல்லாரும் நித்திய ஜீவனுக்காக அல்ல, ஆனால் விசேஷித்த ஊழியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். இதைக்குறித்த தப்பறையான எண்ணத்தை நம்மைவிட்டு நீக்க வேண்டும். ஒரு மனிதனின் பிறப்பிற்கு முன்னமேயே அவனது இயற்கையான விருப்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, தந்தை வழியான மற்றும் தாய் வழியான செல்வாக்கிற்கான சாத்தியக்கூறுக்கான ஒரு எண்ணத்தை இது நமக்கு கொடுக்கிறது. அவனுக்கு ஒரு அனுகூலமான பேறு அளிக்கப்பட்டாலும், அவனுக்கென்று ஒரு சித்தம் இருக்கிறது. இந்த சித்தம் அவனோடு கூட இருந்து, தேவனுடைய வழிகளில் நடப்பதா அல்லது வேண்டாமா, எந்த அளவுக்கு அவன் கீழ்ப்படிதல் உள்ளவனாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமையை பெற்றிருப்பான், தேவனை ஆவியோடும் உண்மையோடும் (விருப்பத்துடனும் மனப்பூர்வமாகவும்) தொழுதுகொள்ள அந்த சித்தத்தில் பலவந்தம் ஏதும் இல்லை.

நற்குண சா-யான ரூத், தாவீதின் பாட்டியாவாள், இவள் வயல்களில் கதிர்பொறுக்குபவள். இதில் தாவீதும் பழக்கமானவராக இருந்தார். அவரது பாட்டனாகிய போவாசின் சரித்திரத்தைக் குறித்து ரூத் என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவனது தந்தை ஈசாய் அவனது பாட்டனைப் போலவே பெத்லகேம் பட்டணத்தின் மூப்பர்களில் ஒருவனாகவும் கனம் பொருந்தினவனாகவும் மதிப்பிற்குரியவனாகவும் இருந்தான். அவனது தாயைக்குறித்து "தேவனடியாள்" என்று இரண்டு தடவை குறிப்பிடப்பட்டதை தவிர வேறு எதுவும் நமக்கு தெரியாது.

சவுல் பெரிய காரியங்களை செய்வான் என்றும், அவன் மூலமாய் இஸ்ரேல் செழுமையடையும் என்றும் எதிர்பார்த்திருந்த சாமுயேல் துக்கித்து, ஜெபித்தான். அவன் புறக்கணித்து தள்ளப்பட வேண்டியவனாக இருந்ததால். ஏமாற்றம் அடைந்திருந்தான். ஒரு புதிய ராஜாவை நிலை நிறுத்துவதற்கு ஒரு உள்நாட்டு போர் என்ற ஒரு கெட்ட அறிகுறி தீர்க்கதரிசியின் மனதை குழப்பிக் கொண்டிருந்தது. தேவனுடைய ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிவதில் ஒரு பெரும் அடக்கத்தை கடைப்பிடித்ததின் மூலம் எடுத்துக்கொண்ட செங்கோலை அமைதியாக சவுல் அர்ப்பணித்து விடமாட்டான் என்று சாமுயேல் அறிந்திருந்தான். அவரது மனக்கண் ஒரு உள்நாட்டு சச்சரவு ஏற்பட்டு நாட்டை பிளவுபடுத்தி பெரிய ஆபத்தை உண்டாக்கும் என்று கண்டது, சர்வ வல்லவருடைய வல்லமையிலும் ஞானத்திலும் இவர் அதிக நம்பிக்கை வைத்திருக்கக் கூடும். தற்காலத்தில் தேவனுடைய பிள்ளைகளை தாக்கிக் கொண்டிருக்கிறதைப் போலவே அவரது வருத்தம் இருந்தது. தேவன் தம்முடைய காரியங்களை நிர்வகிப்பதற்கு வல்லமையுள்ளவர் என்று நம்பிக்கை வைப்பதே இந்த பாடத்தின் மூலம் நமது இருதயத்திற்கு கிடைக்கும் பாடமாகும். மேலும் அவரை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும்போது, நாம் அவரை நம்புவோம். அவரது வழிகாட்டுதலுக்கு கீழ்ப்படிவோம், தேவனிடத்தில் அன்பு

கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்பதை அறிந்து அவரது திட்டத்தை நிறைவேற்றும்போது, நாம் வருத்தப்படாமல் களி கூருவோம். தேவனுக்கு இசைந்து இருக்கிறவர்களுக்கு நடக்கிறவை எல்லாம் ஆசீர்வாதமாக இருக்கிறது. தற்கால ஆசீர்வாதமாக அல்ல, எதிர்கால ஆசீர்வாதமாக இருக்கிறது.

தாவீதை அபிஷேகம் பண்ண சாமுயேல் அனுப்பப்பட்டபோது, அவரது குணலட்சணத்தில் எங்கும் காணமுடியாத ஒரு வல்லமையை காண்பித்தார். தனது ஜீவனுக்கு ஆபத்து என்று தெரிந்தும் தேவனுடைய உத்தரவை நிறைவேற்ற சாமுயேல் தயங்கவில்லை. ராஜ்யபாரத்திற்கு அடுத்த ராஜாவை அபிஷேகம் பண்ணினால் சவுல் தன்னை கொன்றுவிடுவான் என்பதை சாமுயேல் தெளிவாக அறிந்திருந்தார். இந்த காரியத்தை உடனே அறிவிக்க வேண்டும் என்பது தமது நோக்கமல்ல என்பதை தேவன் சாமுயேலுக்கு தெளிவாக அறிவித்திருந்தார். பெத்லகேமுக்கு சென்று ஒரு ப-யை செலுத்தி, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தற்செயலாக, குறித்த காலத்தில் அறியச் செய்து சிங்காசனத்திற்கு உயர்த்தப்போகிறவனை அபிஷேகம் பண்ணும்படி சாமுயேலுக்கு கட்டளை கொடுத்தார். தாவீதின் தகப்பனும் சகோதரர்களும் புரிந்து கொள்ளாதபடியும், ஒரு வேளை அந்த அபிஷேகம் ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் என்றோ, அல்லது தீர்க்கதரிசிகளின் பள்ளியில் அங்கத்தினரில் ஒருவராக ஆக்குவதற்காகவோ அல்லது இதே போல வேறு எதற்காகவோ என்று எண்ணும்படியாக ஒரு ஆரம்ப வேலையை சாமுயேல் செய்ய வேண்டியிருந்தது. எனினும் சாமுயேல் சவுலை ராஜாவாக ரகசியமாக அபிஷேகம் பண்ணினபோது தனிப்பட்ட முறையில் சாமுயேலுக்கு அறிவித்தது போல, தாவீதுக்கும் ஒருவேளை அபிஷேகத்தின் பொருளை அறிவித்திருப்பார்.

சாமுயேல் பெத்லகேமை அடைந்தபொழுது, இந்த பாடம் முக்கியமான இடத்தை பிடித்துக்கொள்கிறது. பெத்லகேமின் மூப்பர்கள் சாமுயேலை பார்த்தவுடனேயே, தாங்களோஅல்லது தங்களது ஊர்க்காரர்களோ பாவம் செய்திருப்பதினால், தேவன் அவர்களை நிந்தித்து தண்டிக்கும்படி சாமுயேலை அனுப்பியிருப்பார் என்று நினைத்து பயந்தார்கள். ஆகையால் அவர்களது கேள்வி, அவரது வருகை சமாதானமா என்பதாகும். அதாவது அவரது பிரசன்னம் ஆசீர்வாதத்திற்காகவா அல்லது தண்டிக்கிறதற்காகவா என்று கேட்டார்கள். அவரது பிரசன்னம் சமாதானந்தான், அங்கே தேவனுக்கு ப-யிட வந்தேன் என்ற பதிலை கேட்ட பொழுது அவர்களது பயம் நீங்கிற்று. கொஞ்ச காலத்திற்கு முன்னே ஆசரிப்புக் கூடாரத்தை பெ-ஸ்தர்கள் பிடித்து வைத்திருந்தார்கள்; அதனால் ஆசரிப்புக் கூடார ஊழியங்கள் நிறுத்தப்பட்டிருந்தது; அது இன்னும் திரும்ப ஸ்தாபிக்கபடாதிருந்தது. இதற்காகவே இந்த ப- தேவனால் விசேஷித்தவிதமாக நியமிக்கப்பட்ட தீர்க்கதரிசியினால் செலுத்தப்பட்டது. இந்த ப-யின் ஆசீர்வாதத்தில் பங்கு பெற வேண்டும் என்றால் பெத்லகேமின் ஜனங்கள் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது ஜலத்தினால் ஸ்நானம் பண்ணி, சுத்தமான ஆடைகளை அணிந்து, இருதயத்தில் தேவனிடத்தில் நெருங்க வேண்டும். எனவே அவர்கள், நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தப்படுதலையும் அனுபவிக்கிற சுவிசேஷயுக சபையை நிழலாக குறிப்பிடுகிறார்கள். ஈசாயின் குடும்பத்தை மேற்பார்வையிட்டு. வெளியரங்கமாக தெரியாமல், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதனை கண்டுபிடித்து, அவனை தயார்படுத்த அவனை அபிஷேகம் பண்ணி, தெய்வீக ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் வேலையில் சாமுயேல் ஈடுபடுவதாக காணப்படுகிறார். ஈசாய் தன்னுடைய குமாரர்களை அவர்களது பிறப்பின்படி முதலாவது தனது மூத்தமகனை தீர்க்கதரிசிக்கு அறிமுகம் செய்து வைத்தான். சாமுயேல் அவனது நல்ல தோற்றத்தைப் பார்த்தவுடனே, இவன்தான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனோ என்று இயல்பாக யூகித்தார். ஆனால் தேவனிடம் கேட்டபோது, இந்த பாடத்தின் தலைப்பு வசனமே பதிலாகக் கிடைத்தது. தோற்றம், வயது, திறமை முதலானவைகளை மனித நோக்கில் பார்க்கும் போது ஈசாயின் குடும்பத்தில் எ-யாப்பே அந்த தேசத்தின் ராஜாவாக இருப்பதற்கு தகுதியுள்ளவனாக இருந்தான். ஆனால் தேவனுடைய பார்வையில் அப்படியில்லை. தேவனோ இருதயத்தைப் பார்த்தார். தமது இருதயத்துக்கு ஏற்ற மனுஷனாக, தாவீதை முன்னமேயே தேர்வு செய்திருந்தார். ஆனால் ஈசாய், தாவீது மிகவும் சிறியவன் என்று நினைத்து அவனுக்கு ஆள் அனுப்பி அவனை விருந்தில் கலந்துகொள்ள செய்யவில்லை. ஈசாய் தன் குமாரர்களை ஒருவர் பின் ஒருவராக சாமுயேலுக்கு முன்பாக கடந்து போகப் பண்ணினான். ஆனால் தேவன் அவர்களில் யாரையும் தெரிந்து கொள்ளவில்லை என்று பரிசுத்த ஆவி தெரிவித்தது. "உன் பிள்ளைகள் இவ்வளவுதானா" என்று சாமுயேல் கேட்டதற்கு, ஈசாய் உடனே, "இன்னும் எல்லாருக்கும் இளையவன் இருக்கிறான்; அவன் வயல்களில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" என்று பதில் கூறினான்.

சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்புக்கு சம்பந்தமாக நமது தலைப்பு வசனம் எல்லாருடைய கவனத்தையும் ஈர்க்கிறது. ஒவ்வொரு வருட அனுபவமும் அதன் பொதுவான பொருத்தத்தைக் காண்பிக்கிறது. நாமும் கூட தேவனுடைய தூதர்களாக, சந்தோஷத்தின் எண்ணெயாகிய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு நாடுகிறோம். இதன் மூலம், தற்கால ராஜ்யங்களை நீக்குகிற, தேவன் ஸ்தாபிக்கப்போகிற ராஜ்யத்தில் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்போம். சாமுயேலைப்போல நாமும் கூட தற்கால ஸ்தாபனத்திற்கு பின்வருபவர்களை அபிஷேகம் பண்ணுவதற்கு நாம் பயப்படுகிறோம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை முத்திரை போடுகிற வேலை இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதையும், இது உலகம் புரிந்து கொள்ள முடியாதபடி இரகசிய வேலையாக இருக்கிறது என்பதையும் நாம் உணரவில்லையா? உண்மையிலேயே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதை, முத்திரை போடும் இந்த காரியத்தை, பரிசுத்த ஆவியை

பெற்றவர்களும், தாவீது வகுப்பாரையும் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ளமாட்டார்கள். தாவீது என்ற பெயர் "பிரியமானவன்" என்று அர்த்தமுடையது. இது விசேஷித்த விதமாக நமது கர்த்தரும் இரட்சகருமானவரை குறிக்கிறது. யேகோவா தேவனால் "இவர் என் நேச குமாரன்" என்று சொல்லப்பட்டிருக்கிறார். அதோடுகூட அவரது சரீர அங்கங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. அவருக்கு பிரியமானவர்களாக இருக்க வேண்டும், இல்லையென்றால் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட இயலாது. தலையானவர் சொல்லுகிறதாவது: "பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்." மேலும் அவர், அவர் நம்மை சிநேகிக்கிறது போல் நீங்களும் ஒருவரையோருவர் சிநேகிக்க வேண்டும் என்று கூறுகிறார். தேவனுடைய இந்த அபிஷேகத்தைப் பெற்றவர்கள் தாவீதைப்போல பிரியமானவர்களாக இருக்கவேண்டும் என்று கூறுவது பெரிதான காரியமல்ல. அன்பின் ஆவி அவர்களிடம் இருக்க வேண்டும். தேவனை சிநேகிக்கிறவர்களாக ஒருவரையொருவர் சிநேகிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவருடையவர்களாக இருக்க முடியாது.

விரைவில் ஆயிர வருட மகிமையில் உலகை ஆசீர்வதிப்பதற்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்படுகிறவர்களை தேடுவதில் தாவீது ஒரு நிழலாக இருக்கிறான். தாவீது இந்த காரியத்தில் மிகவும் அற்பமாய் எண்ணப்பட்டது போல, தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்கு தெரிந்து கொள்ளப்பட்டு அபிஷேகம் பண்ணப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு அவரது சகோதரர்களிடையே நன்மதிப்பற்றவராக இருந்தார். அவர்தான் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று கூறப்பட்டபோது, அவரது ஜனங்கள் தங்கள் முகத்தை மறைத்துக் கொண்டனர் – அலட்சியம் செய்தனர், வெறுத்தனர், எந்த மேன்மைக்கும், மகிமைக்கும் நம்பிக்கையற்றவராக "வறண்ட நிலத்தி–ருந்து துளிர்க்கிற வேரைப்போல"எண்ணினர். அவரது சரீரமாகிய சபைக்கும் இது உண்மையாக இருந்தது. அவர்கள் மனிதரால் வெறுக்கப்பட்டனர், ஒதுக்கப்பட்டனர். இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது; உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவும் எண்ணப்படுகிறோம்; நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் நாள் முழுதும் அறிவீனராக எண்ணப்படுகிறோம். 1 கொரி.4:13

மேலும் அவர் கூறுகிறதாவது; "தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை; இந்த உலகத்தின் தரித்திரரை, விசுவாசத்தில் ஐசுவரிவான்களை ராஜ்யத்தின் சுதந்திரர்களாகவும் தெரிந்து கொண்டார்." மனிதர்களில் மதிப்புக்குரியவர்களை ஒன்றுமில்லாமல் ஆக்குவதும், ஒன்றுமில்லாதவர்களை மதிப்பிற்குரியவர்களாக ஆக்குவதுமான இந்த தெய்வீக தெரிந்து கொள்ளுத–ன் ஒழுங்கே சுவிசேஷ யுகம் முழுவதும் காணப்படுகிறது. நாமும் கூட சாமுயேலைப் போல சமூகத்திலும், அறிவிலும், குணத்திலும், படிப்பிலும் மேன்மையான நிலைமையில் உள்ள மனிதர்கள் உயர்வாக உள்ள இவர்களை தேவன் ஆனந்த தைலத்தினால் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக காணப்படுகிறவர்களை அடிக்கடி பார்த்திருக்கிறோம். மனிதர்களில் உயர்வாக உள்ள இவர்களை தேவன் ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவார் என்றும், தேவனுடைய ராஜ்யம் முதலானவைகளைக் குறித்த அறிவை வழங்குவார் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நாம் அப்படி எதிர்பார்ப்பது தவறு என்று காண்கிறோம். ஏனெனில் தேவன் வெளிப்படையான தோற்றத்தை பார்க்காமல் இருதயத்தை பார்க்கிறார் என்கிற புதிய பாடத்தை பெறுகிறோம். நாம் இருதயத்தை அறிய முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்த காரியங்களில் தெய்வீக தீர்மானத்தை முழு திருப்தியுடன் ஏற்றுக் கொள்கிறோம். ஏற்ற காலத்தில் தேவன் தற்கால சத்தியத்தை வெளிப்படுத்துவார் என்பதை நம்புகிறோம். அப்பொழுது, இப்பொழுது தெரிந்து கொண்டதைக் காட்டிலும் தேவனுடைய தெரிந்து கொள்ளுத–ன் அர்த்தத்தை முழுமையாக புரிந்து கொள்ளுவோம். அப்பொழுது தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களின் இருதயத்துக்கும், ராஜ்ய அழைப்புக்கு தகுதியில்லாதவர்களாக, ஆனால் வெளியரங்கமாக தாழ்மையாக இருப்பவர்களின் இருதயத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் காண முடியும். இடைப்பட்ட காலத்தில் சாதாரணமாக நாம் காத்திருந்து அவரது தீர்மானத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமது இரட்சகர் கூறுகிறதாவது: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்வி: மான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது."(லூக் 10:21)

தேவனுடைய முறைமைகளை போதிக்கப்பட்ட நாம் "கேட்கிறதற்கு காதுள்ளவர்களாகவும்" அவருடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாகவும் காணப்படுகிற படிக்காதவர்களை, அற்பமானவர்களை இழிவுபடுத்தக்கூடாது, அவர்கள் தேவனிடத்தில் பரிசுத்தத்தையும் நேர்மையையும், காண்பிக்கிறார்கள், நமக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சத்தியத்தை எல்லாருக்கும் கூறும்போது, தேவனுடைய சலுகை வெளிப்படுத்தப்பட்டவர்களோடு நாம் களி கூரவேண்டும்; அவர்களது பூமிக்குரிய சூழ்நிலைகள் பற்றி கண்டுக்கொள்ளக்கூடாது. தேவன் தம்முடையவர்களை அறிவார். அப்படிப்பட்டவர்களை நமது கர்த்தரின் பிரதிநிதிகளாகவும் ஸ்தானாதிபதிகளாகவும் அங்கீகரித்து, கனப்படுத்தி, ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் அடங்கிய ஒரு சபையை நாம் கவனிக்கும் போது, சிலர் மனதை கவருகிற தோற்றம் இல்லாதவர்களாகவும், சிலர் நன்கு படிக்காதவர்களாகவும், நாகரீகம் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய அபிஷேகத்தின் அடையாளத்தைப் பெற்று இருக்கிறார்கள்; சத்தியத்தின் ஒளி அவர்கள் முகத்தில் பிரகாசிக்கிறது; சத்தியத்தின் நம்பிக்கை அவர்களுக்கு எழுச்சியூட்டுகிறது; அவர்களது வாழ்க்கை இருளின்

ராஜ்யத்தி–ருந்து தேவனுடைய குமாரனுடைய ராஜ்யத்திற்கு ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது. கர்த்தர் நம்மை தமது மணவாட்டியை தேட அனுப்பும்போது, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சம்பத்துகளான சிலரை நாம் அறியாமல் கடந்து சென்று, வேறு சிலரை கூட்டிச்சேர்க்கும்போது அவர்களை அவர் தகுதியற்றவர்கள் என்று ஒதுக்குகிறார். நாம் இப்படி அடிக்கடி நினைப்பதுண்டு. அதற்கு காரணம் நம்மால் இருதயத்தை அறிய முடிவதில்லை. இந்த எண்ணம் நம்மை எல்லாரிடமும் தாழ்மையுள்ளவர்களாகவும் நற்குணமுள்ளவர்களாகவும், சாதுவானவர்களாகவும் ஆக்க வேண்டும். தாவீதை அபிஷேகம் பண்ணுவதில் சாமுயேல் தேவனை நோக்கி பார்த்தது போல, நாமும் அவருடைய ஊழியர்களாக, நமது ஊழியத்தில் அவரை நோக்கி பார்க்கும் மனப்பாங்கு உள்ளவர்களாகவும் அவர் மீது நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

அவர்கள் பந்தியிருக்க உட்காரப்போகும் போது, "அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்கமாட்டேன்" என்று சாமுயேல் கூறினார். ப–யிட்ட பிறகு பரிசுத்தம் பண்ணப்பட்டவர்களும் ப–யில் கலந்து கொண்டவர்களும் அந்த விருந்தில் கலந்து கொள்வது ஒரு வழக்கமாக இருந்தது. இப்படியாக அந்த மாமிசத்தை புசித்து தேவனுடன் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும். தாவீது தேவனால் அபிஷேகம் பண்ணப்படுகிறவனாக இருந்தபடியால், தாவீது வரும்வரை அந்த விருந்து ஆரம்பிக்கப்படக்கூடாது என்று சாமுயேல் முடிவு செய்தார். அநேகமாக இதில் கூட தெய்வீக திட்டத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்தின் ஒரு குறியீட்டை நாம் பார்க்கமுடிகிறது. அகில உலக மனுமக்களுக்காகவும் ஒரு கொழுமையானவைகளின் விருந்து ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தம் பண்ணப்பட்ட ப–கள் கொல்லப்படும் வரை, இதைக் காட்டிலும், முதன்முதலாக அபிஷேகம் பண்ணப்பட்டவர் வந்து அபிஷேகத்தை பெறும் வரை இந்த விருந்து ஆரம்பிக்கப்பட முடியாது. சபையின் தலையானவரான நமது கர்த்தரிடத்தில் அபிஷேகம் ஆரம்பிக்கப்பட்டு, சுவிசேஷ யுகமுழுவதும் சபையாகிய அவரது சரீர அங்கங்கள் அனைவர் மேலும் வழிகிறது. ப– கொல்லப்படுகிறது, நாம் கிறிஸ்துவின் அங்கமாக இருந்து அந்த ப–யில் பங்கு பெறுகிறோம். சீக்கிரத்தில் இந்த காரியங்கள் எல்லாம் நிறைவேறும். அப்பொழுது கொழுமையான பதார்த்தங்களின் விருந்து விரிவுப்படுத்தப்படும். அந்த உண்மையான விருந்தில் தலையும் சரீரமும் சேர்ந்த அபிஷேகம் பண்ணப்பட்டவரே பிரதானமானவராக இருப்பார்.

தாவீதின் அபிஷேகத்தில் தேவனுடைய ஆசீர்வாதமும் வல்லமையும் ஏதோ ஒரு விதத்தில் உடன் சென்றது. இதை நாம் புரிந்து கொள்ள இயலாது. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளி–ருந்து சபையாகிய நம்மிடம் இருக்கிற பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகள் அந்த காலத்தில் இல்லை. இது குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை. (யோவான் 7:39) தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட உத்தியோகத்திற்கு அவரை தகுதிப்படுத்தி தயார்படுத்துவதற்கு எந்தவிதமாகவோ தேவனுடைய ஆசீர்வாதமும் வல்லமையும் அவன் கூட இருந்தது. சபை, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதி–ருந்து வருகிற அபிஷேகத்திற்கு இதை ஒரு நிழலாக நாம் கவனிக்கக் கூடாதா?அபிஷேகம் வெளிப்படையானது அல்ல. நம்முடைய இம்மைக்குரிய ஆசீர்வாதத்தைக் கொடுக்கக் கூடியது அல்ல. ஒரு புது சிருஷ்டியாக நாம் அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறோம்; புது சிருஷ்டியாக நாம் கிருபையிலும், அறிவிலும் அன்பிலும் வளருகிறோம்; புது சிருஷ்டியாக விரைவில் நாம் முதலாம் உயிர்த்தெழுத–ல் பூரணமடைந்து, நமது கர்த்தரும் ஆண்டவருமானவருடன் சிங்காசனத்திற்கு வருவோம்.

---------------------------------

--2307--

# உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை
## Why the World has not Received Restitution

பாவத்தினால் இழந்த ஆதாமின் ஜீவனுக்கு ஈடாக நமது கர்த்தர் தமது ஜீவனைக் கொடுத்தபோது, அகில உலகத்தின் பாவத்திற்காகவும் அவர் மரித்தார் என்று வேதாகமம் கூறுகிறது. நமது இரட்சகரின் மரணம் அகில உலகத்திற்கும் போதுமானதாக இருக்கிறது. ஏனெனில் அகில உலகமும் மரபு வழியாக ஆதாமின் தண்டனையில் பங்குதாரர்களாக இருக்கிறார்கள். இயேசுவின் மரணத்தின் புண்ணியம் ஆதாம் மற்றும் அகில உலகத்தின் பாவங்களுக்கும் போதுமானதாக இருக்கிறது. அது இன்னும் ஆதாமுக்கோ, அகில உலகத்திற்கோ பயன்படுத்தப்படவில்லை. அது யாருக்கும் பயன்படுத்தப்படாமல் பிதாவின் கைகளில் வைக்கப்பட்டிருக்கிறது.

எதற்காக அது பயன்படுத்தப்படபோகிறது என்பதை வேதம் நமக்கு காண்பிக்கிறது. நமது கர்த்தர் இரண்டாம் வருகையில் வந்து தமது ராஜ்யத்தை ஸ்தாபித்தப்பிறகு ஆதாமுக்காகவும் அவரது சந்ததியினருக்காவும், அவரது ப-யின் முழு புண்ணியத்தையும் தெய்வீக நீதியின் தேவையை திருப்திப்படுத்துவதற்காக அவர் பயன்படுத்துவார். இப்படியாக ஆதி பாவத்திற்கான முழு விலைக்கிரயம் கொடுக்கப்படும். ஆதாம் தண்டனையி–ருந்து விடுவிக்கப்பட்டு, உடனே இழந்ததை திரும்ப கொடுக்கும் வேலை தொடரும். கிறிஸ்துவின் இரத்தத்தை உலகிற்கு பிரயோகிக்க காத்திருக்கும்போது, கிறிஸ்துவின் புண்ணியத்தை சபைக்காக பிதாவிடம் சாட்டுகிறார்.

### கிறிஸ்துவின் புண்ணியம் சபைக்கு சாட்டப்படுகிறது

இந்த பாடத்தை தியானிக்கும்போது சாட்டுதல் என்கிற வார்த்தையை நாம் கவனிக்க வேண்டும். சாட்டுதல் என்பது கொடுப்பது அல்ல. கிறிஸ்துவின் புண்ணியத்தை கொடுத்தல் என்பது ஆதாமுக்கும் அனைத்து சந்ததிக்கும் பிரயோகித்தல் என்று பொருள்படும். இயேசு இன்னும் அதை ஆதாமுக்கும் அனைத்து சந்ததிக்கும் கொடுக்க தயாராக இல்லை. ஏனெனில் தற்கால நிலைமையில் அதை ஆதாமுக்கும் அவரது சந்ததிக்கும் கொடுப்பது நல்ல திட்டமாக இருக்காது.

வர்த்தக சம்பந்தமான பயன்பாட்டில் சாட்டுதல் என்ற வார்த்தை, சம்மதத்திற்கு ஒத்த ஒரு கருத்தை கொடுக்கிறது. ஒருவர் ஒரு காகித நாணயத்தை ஒரு ஆயிரம் ரூபாய்க்கு சம்மதம் தெரிவிக்கிறார் என்றால், அவர் ஒரு பைசா கூட தருவதில்லை. ஆனால் அவர் அந்த பணத்தின் மதிப்பை சாட்டுகிறார். இந்த பரிமாற்றம், சபைக்கு கிறிஸ்துவின் புண்ணியத்தை சாட்டுகிற ஒரு வேலையை விளக்குகிறது. தேவனுடன் ஒரு ப–க்குள் நுழைவதற்கு சபை தகுதியற்றதாக இருக்கிறது. பூரணமில்லாத எந்த ஒரு ப–யையும் ஏற்றுக்கொள்ள தேவன் விரும்பவில்லை. ஆனால் இயேசு தேவனுடைய கையில் பற்று வைத்திருப்பதினால், அந்த புண்ணியத்தின் ஒரு பகுதியை, தங்களை அர்ப்பணம் செய்கிறவர்களுக்கு சாட்டுகிறார். அந்த புண்ணியத்தின் பலத்தால் அவருடைய சீஷர்களாக விரும்புகிறவர்களுக்கு அவர் ஒரு ஜாமீன் கொடுப்பவராக அல்லது ஒரு உத்திரவாதியாக ஆகிறார். இதற்கு மேல் எதுவும் தேவையில்லை. ஏனெனில் அவர்களது அர்ப்பணம் ப–செலுத்தவேயாகும்; தங்களிடம் உள்ளதை ப–யிடவே அவர்களுக்கு தேவைப்படுகிறது. நம்முடைய கர்த்தர் தமது புண்ணியத்தை சபைக்கு சாட்டுவதால், அவர்களிடம் இல்லாததை மரபு வழியில் குறைவுபட்டிருப்பவைகளை யெல்லாம் ஈடு செய்கிறது. அவர்கள் தங்கள் ஒப்பந்தத்தை நிறைவு செய்யும் போது, இந்த புண்ணியம், அந்த காகித நாணயத்துக்கான பணத்தை கொடுப்பதுபோல், கொடுக்கப்படுகிறது.

### அந்த புண்ணியத்தை வெளியிடுதல்

தேவனிடத்தில் உடன்படிக்கை செய்கிற அனைவருக்கும் நமது கர்த்தராகிய இயேசு உத்திரவாதியாக அல்லது சாட்டுகிறவராக ஆகிறார். இதில் சிறுமந்தை மாத்திரமல்ல, தங்களது உடன்படிக்கையை நிறைவு செய்ய இந்த சாட்டுதல் தேவைப்படுகிறவர்களும், விசுவாசத்தில் குறைவுள்ளவர்களுமாகிய திரள் கூட்டத்தாரும் இதில் இருக்கிறார்கள்; மேலும் பிற்காலத்தில் தெரிந்தே அவிசுவாசிகளாகி இரண்டாம் மரணத்திற்கு செல்கிறவர்களும் இதில் அடங்குவர். இந்த அனைத்து காரியங்களும் நிறைவேறும்போது, கிறிஸ்துவின் இந்த புண்ணியம் சாட்டுத––ருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டு, கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கும் புதிய உடன்படிக்கையை ஊர்ஜிதப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்படும், பிறகு அவரது ராஜ்யம், உலகை உயர்த்தவும், ஆசீர்வதிக்கவும் ஒரு மத்தியஸ்த அரசாங்கமாக இருக்கும்.

கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கு உத்தேசிக்கப்பட்ட காரியம் என்னவென்றால், இயேசுவைப்போல இவர்களும் தங்களது மானிட ஜீவனை ப–யாகக் கொடுப்பார்கள். தேவன் அவர்களுக்கு குறிப்பிட்டு இருக்கிற வழியில் அதை கொடுப்பார்கள். ஆனால் பிரதிஷ்டை மூலமாக தங்களை தேவனிடம் அர்ப்பணிக்கிறவர்கள் ஆதாமின் பாவ சந்ததியினரின் அங்கங்களாக இருக்கிறார்கள். எனவே தேவன் பாவிகளோடே தொடர்பு வைத்துக் கொள்ள மறுக்கிறார். மேலும் தேவனுடைய பிள்ளைகளும், ஆதாமின் பாவ சந்ததியாக இருப்பதால் அவர்கள் தங்களைத் தாங்களே ப–யாக ஒப்புக் கொடுப்பதில் நான்கில் மூன்று பங்கை ஏற்கெனவே இழந்து விட்டபடியால் அவர்கள் நான்கில் ஒரு பங்கு ப–யை மட்டுமே செலுத்தும் நிலையில் இருக்கிறார்கள். இந்த நான்கில் ஒரு பங்கு ப– மட்டுமே தேவனுக்கு தேவைப்படுகிறது. எனினும் ப–யில் கிறிஸ்துவின் அடிச்சுவட்டை பின்பற்ற விரும்புகிறவர்களுக்கு இயேசு உத்திரவாதியாக ஆகும்படி

தேவனுடைய திட்டம் வழி செய்திருக்கிறது. அவரது கணக்கில் அவர்களது ப–கள் அவரது ப–யின் ஒரு பங்காக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவர்கள் அவரது மகிமையில் பங்கு பெறுவார்கள்.

### விசுவாசத்தினால் நீதிமானாகும் தத்துவம்

இந்த காரியத்தின் தத்துவம் இதுதான், தெய்வீக விருப்பத்திற்கு கீழ்ப்படிந்து இயேசு தமது மானிட ஜீவனை ப–யாக கொடுத்ததின் மூலமாக ஒரு சிறப்பான வரவை முன்பே பரலோக பிதாவின் கரங்களில் அதாவது நீதியின் கரங்களில் வைத்திருக்கிறார். ஆதாமுக்கும் அவனது சந்ததிக்கும் போதுமானதாக இருக்கும். அந்த ப– குறித்த காலத்தில் பிரயோகிக்கப்படும்படியாக தேவனுடைய கரங்களில் காத்துக் கொண்டிருக்கிறது. உலகத்தை ஆசீர்வதிக்கவும், உயர்த்தவும் இழந்ததை திரும்ப கொடுக்கக்கூடிய கிறிஸ்துவின் ஆயிரவருட யுக ராஜ்யத்தின் ஆரம்பத்தில் அது பிரயோகிக்கப்படும். அந்த ஆசீர்வாதத்தின் அல்லது கிறிஸ்துவின் புண்ணியத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதி, இளைப்பாறுத–ல் ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் வருவதற்குரிய ஏற்ற காலமாயிருக்கிறது. ஆகையால் ஒரு குறிப்பிட்ட பகுதி ஆதாமின் பிள்ளைகளில், மரணபரியந்தம் அர்ப்பணம் செய்து, பாவத்தை விட்டுவிட்டு கிறிஸ்துவின் அங்கங்களாகிறவர்களுக்கு ஏற்ற காலத்தில் பிரயோகிக்கப்படும்.

இயேசு தன் பின்னடியார்களாக ஆக விரும்புகிறவர்களுக்கு ஒரு பரிகாரியாக இருந்து, தேவனுடைய கரங்களில் வரவு வைத்திருக்கிற அவரது புண்ணியத்தை பிரயோகிப்பார். ஆயிர வருட யுகத்தில் அவர்கள் பெறப்போகிற இளைப்பாறுத–ன் ஆசீர்வாதத்திற்கு சமமாக இந்த புண்ணியத்தை பிரயோகித்தல் இருக்கும். பிரயோகிக்கப்படுகிற இந்த புண்ணியம் அவர்களது அனைத்து பாவங்களி–ருந்தும் தண்டனைகளி–ருந்தும் அது அவர்களை விடுவிக்கிறதாக இருக்கும். இப்படியாக விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிற இவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களது ப–கள் அவர்களது இரட்சகரின் ப–யின் ஒரு பாகமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இப்படியாக இந்த சுவிசேஷ யுகத்தில் அர்ப்பணம் பண்ணியிருக்கிற பல்வேறு நபர்களுக்கு பிரயோகிக்கப்படும் வரை, கிறிஸ்துவின் முழு புண்ணியமும், ஆதாமுக்கும் அவனது சந்ததியினருக்கும் விடுவிக்கப்படாது. கிறிஸ்துவின் சீடர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் மரிக்கும் போது, இந்த புண்ணியத்திற்கு ஒரு பாகம் சாட்டப்படுகிறது. ஏனெனில் இந்த சாட்டுதல், ப– கொடுப்பவர்களின் ப– தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக செய்யப்படுகிறது. ப– கொடுப்பவர்கள் தங்களது பூமிக்குரிய நம்பிக்கைகளையும் பலன்களையும் முதலாவது விட்டுவிடுகிறார்கள். இளைப்பாறுத–ன் சலுகைகள் எல்லாருக்கும் இயேசுவினால் உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. அவர் அர்ப்பணம் (பிரதிஷ்டை) செய்த கணநேரத்தில் அந்த அளவுக்கு தியாகம் செய்திருக்கிறார், மேலும் அதை முடித்திருக்கிறார். எனினும் அவரது அர்ப்பணம் மரண பரியந்தம் அவரது மற்ற திறமைகள், வல்லமைகள், உயிர், பலம் ஆகியவைகளையும் உள்ளடக்கியிருக்கிறது. சபைக்கு நமது இரட்சகரின் ஆதரவு மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தின் மூலம் ஒரு உத்திரவாதமாக செயல்படுகிறது. இந்த விலைக்கிரயம் மானிட இளைப்பாறுத–ன் சலுகைகளுக்கு முழுமையாக நீதியின் கரங்களில் கொடுக்கப்படவேண்டும்.

### புண்ணியத்தை சாட்டுதல் விளக்கப்படுகிறது

ஒரு விளக்கம் : 'அ' என்பவர் வங்கியில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பத்து இலட்சம் ரூபாய் போட்டு வைத்திருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்த காலக்கட்டத்தில் அவரது நண்பர்களுக்கு கடனாக பணம் தேவைப்படுகிறது. 'அ' என்பவர் வங்கியாளரிடம், 'நான் போட்டு வைத்திருக்கிற பத்து லட்சம் ரூபாயை ஒன்றும் செய்யாமல் இதன் பலத்தில் கடன் தேவைப்படுகிறது. எனது நண்பர்களுக்கு நான் உத்தரவாதம் கொடுத்தால், கடன் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறுகிறார். வங்கியாளரும் ஆம் என்று கூறுகிறார். கடன் வாங்கிய நண்பர்கள் குறித்த காலத்தில் கடனை திருப்பி செலுத்தவில்லையென்றால், உத்திரவாதம் கொடுத்த தொகை முழுவதும் 'அ' என்பவரின் தொகையி–ருந்து கழிக்கப்படும். அதாவது 'அ' என்பவரின் பத்து லட்சம் தொகைக்கு அவர் நண்பர்களுக்கு உத்திரவாதம் கொடுத்த தொகை தடையை ஏற்படுத்துகிறது. ஆனால், நண்பர்கள் வாங்கிய கடன் தொகை முழுவதும் திருப்பி செலுத்தப்படும் பொழுது, அந்த பத்து லட்சம் தொகைக்கு எந்த தடையும் இல்லை. கடனுக்கு எந்தவித உத்திரவாதமும் கொடுக்கப்படாதது மாதிரியும் யாருக்கும் சாட்டுதல் பண்ணாதது போலவும் இருக்கும்.

கிறிஸ்துவின் சீடர்களாக ஆகும் நமக்கு இப்படித்தான் இருக்கிறது. நமது ஜீவனை கொடுப்போம் என்கிற உடன்படிக்கையை நிறைவேற்றுவோம் என்பதற்கு கிறிஸ்து நமது உத்திரவாதியாகிறார். நமது ஜீவன் கொடுக்கப்படும் வரை, உலகத்திற்கு பயன்படுத்தும் பொருட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அவருடைய புண்ணியத்தின் மீதான தடையாக சாட்டுதல் தொடர்கிறது. ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் மரிக்கும் பொழுது, அந்த ஒருவருக்காக சாட்டுதல் பண்ணப்பட்ட அனைத்து புண்ணியமும் முடிவுக்கு வருகிறது. ஏனெனில் உடன்படிக்கை நிறைவு பெறுகிறது. உடன்படிக்கையின்படி தமது ஜீவனை தாங்களே முன் வந்து கொடுக்காதவர்களுக்கு இயேசு தாமே உத்தரவாதியாக இருந்து அவர்கள் தங்கள் ஜீவனை அளிக்கும்படி செய்கிறார். அவர்களில் சிலர் மகா உபத்திரவத்தின் காலத்தில், மிகுந்த உபத்திரவத்தின் வழியாக வருவார்கள். அவர்களது மரணம் அவர்களுக்கு ஓரளவுக்கான ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். மற்றவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

-------------------------------------

**--2309--**

# நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள்
## Victories over Modern Giants
1 சாமுயேல் 17:1–54

*பழங்கால அரக்கர்கள் – தாவீதும் கோ–யாத்தும்–மானிட பலத்தினால் அல்ல, ஆனால் தேவனுடைய ஆவியினால் அல்லது வல்லமையினால் – நல்ல போராட்டத்தை போராடுதல்–மாம்சீக ஆயுதங்களுடன் அல்ல – சத்தியம் என்னும் கூழாங்கல்–ன் பலம்.*

ஆதியாகமம் ஆறாம் அதிகாரத்தில் இராட்சதர்களை பற்றி வேதாகமத்தில் முதன் முதலாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் மனுஷ தாய்மார்களுக்கும், மனுஷ ரூபமெடுத்து வந்த விழுந்து போன தூதர்களாகிய தகப்பனார்களுக்கும் பிறந்தவர்கள். எனினும் இவர்கள் எல்லாரும் நோவா காலத்தில் வந்த ஜலப்பிரளயத்தினால் அழிந்துவிட்டார்கள். அந்த காலத்தி–ருந்து அவ்வப்போது ஆசியாவில் இராட்சதர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவனின் இருப்புக்கட்டில் பதின்மூன்று அடி நீளமுள்ளது. கானான் தேசத்தை வேவு பார்க்க சென்றவர்கள் அங்கே இராட்சத பிறவியாக ஏனோக்கின் குமாரரை பார்த்தோம் என்று கூறினார்கள். தாவீது கொன்ற காத் ஊரின் இராட்சதனான கோ–யாத் ஒரு வேளை இந்த வம்சத்தில் வந்தவனாக இருக்கலாம்.

சமீப காலத்தில் கூட இராட்சதர்கள் இருந்திருக்கிறார்கள்; ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த பைர்னே (Byrne) என்பவன் எட்டு அடி நான்கு அங்குலம் உயரம் உடையவன்; ஒரு ஆங்கிலேயன் மிடில்டன் (Middleton) என்பவன் ஒன்பது அடி, மூன்று அங்குலம் உயரம் உடையவன்; லஸ்கின் (Lushkin) என்ற ரஷ்யன் எட்டு அடி, ஐந்து அங்குலம் உயரமுடையவன்; சாங் (Chang) என்ற சீனன் ஏழு அடி, எட்டு அங்குலம் உயரமுடையவன்; காப்பராஸ் (Gabbaras) என்பவன் ஒன்பது அடி, ஒன்பது அங்குலம் உயரமுடையவன் என்று பி–னி (Pliny) அறிவித்தார், ஆகையால் தாவீது கோ–யாத் சம்பவத்தில் சந்தேகத்திற்கு முகாந்தரம் ஏதுமில்லை.

தாவீது என்ற இருபது வயதுள்ள ஒரு வா–பன் இஸ்ரயே–ன் ராணுவத்தில் இருக்கிற தனது மூன்று சகோதரர்களுக்கு உணவையும் தின்பண்டங்களையும் கொடுக்கச் சென்றான்; மேற்கி–ருந்து படையெடுத்து வந்த பெ–ஸ்தர்களின் இராணுவத்திற்கு எதிராக இஸ்ரயே–ன் இராணுவம் அணிவகுத்து நிற்பதைக் கண்டு திகைத்தான்; ஒருவரைப் பார்த்து ஒருவர் பயந்து அவர்கள் சண்டை போடாதிருந்தார்கள். பெ–ஸ்திய வீரன் ஒருவன், உருவத்திலும் பலத்திலும் இராட்சதனைப் போ–ருந்து, இருநூற்றி இருபது பவுண்டு எடையுள்ள கவசங்களைப் போட்டுக் கொண்டு, இருபத்தி ஐந்து பவுண்டு எடையுள்ள அலகையும் மூன்று அங்குல கனமுமுள்ள ஒரு ஈட்டியை கையில் பிடித்துக் கொண்டு அனுதினமும் காலையில் வந்து நிற்பான், அவன் இஸ்ரயேலரை நிந்தித்து, தன்னை யாராவது தனித்து நின்று போரிட்டு ஜெயித்தாலோ அல்லது தோற்றாலோ, அதுவே போரின் முடிவு என்று கூறி சவால் விட்டான். அவன் இஸ்ரயேல் தேசத்தை மாத்திரமல்ல, இஸ்ரயே–ன் தேவனையும் நிந்தித்தான்.

இளைஞனான தாவீது இப்படி நீண்ட நாட்களாக நடந்து வருவதைக்குறித்து ஆச்சரியப்பட்டான். அவனது சவாலை யாரும் ஏற்க முன் வரவில்லை. மெய்யான தேவனிடத்தில் விசுவாசமுள்ள தாவீது தேவனுக்கும் அவனது நாட்டிற்கும் உள்ள உடன்படிக்கையை உணர்ந்தான். தெய்வீக வாக்குத்தத்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிற அளவுக்கு அவனது விசுவாசம் சர்வவல்லவர் மேல் இருந்தது. தனது சகோதரர்களும் தனது நாட்டினரும் விசுவாசத்தில் குறைவு பட்டிருப்பதைக் கண்டு தாவீது ஆச்சரியப்பட்டான், தேவனுடைய வாக்குத்தத்தத்தால் ஊக்குவிக்கப்பட்ட அவன் கோ–யாத்தை எதிர்த்து போரிட தான் தயார் என்று அறிவித்தான்.

இந்த சவாலை ஏற்று அந்த பெ–ஸ்தியனை கொன்று போடுகிறவன் தகுந்தபடி கனப்படுத்தப்படுவான் என்று சவுல்ராஜா எல்லாருக்கும் தெரியும்படி பிரகடனப்படுத்தியிருந்தான். இளைஞனான தாவீது, சவுல் ராஜாவுக்கு முன் நிறுத்தப்பட்டான். தாவீது ஒரு வீரனாக இல்லாமல் ஒரு இளைஞனாக இருந்தபடியால் இவன் கோ–யாத்தை எதிர்க்க தகுதியுள்ளவனாக இருக்க மாட்டான் என்று சவுல்ராஜா நினைத்தான். ஏனெனில் கோ–யாத்தின் ஈட்டியின் ஒரே குத்திலே இவன் இறந்து போவான் என்று நினைத்தான். பிறகு தாவீது, சவுலைப் பார்த்து, தான் தகப்பனது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு தடவை சிங்கமும், ஒரு தடவை கரடியும் ஆட்டைப் பிடித்துக் கொண்டபோது அவற்றிடமிருந்து ஆட்டை தப்புவித்ததாகக் கூறினான். அவன் தைரிய முள்ளவனாக இருந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் தேவனிடம் விசுவாசம் வைத்திருந்தான். கடந்த காலத்தில் அவனது அனுதின வேலையில் தேவன் அவனை ஆசீர்வதித்து வந்ததினால், யேகோவா தேவனை நிந்தித்த, அடங்காத ராட்சதனை எதிர்கொள்ளவும் தற்கால கடமையில் வெற்றி பெறவும் தேவையான பலத்தை தேவன் கொடுப்பார்.

ராஜா நம்பிக்கையடைந்தான். இஸ்ரயே–ல் மிகச் சிறந்தவைகளான தமது ஆயுதங்களை தாவீதுக்கு கொடுத்தான். தாவீது அதைப்போட்டு பார்த்து, பழக்கமில்லாததால், அதை களைந்து போட்டு, அது இல்லாதிருந்தால் நல்லது என்று கூறினான். வழக்கமான தனது தடியையும் கவணையும் எடுத்துச் சென்றான். போருக்கு பெ–ஸ்தியர்களிடம் சென்றபோது, ஐந்து கூழாங்கற்களை தெரிந்து கொண்டான். தேவனுடைய ஆசீர்வாதத்தோடு கூடிய இந்த சிறிய ஆயுதமே போதுமானதாக இருந்தது. ஏனெனில் ஒரே ஒரு கூழாங்கல்லே தேவையானதாக இருந்தது.

கோபமும் வெறுப்பும் கொண்ட அந்த இராட்சதன் தாவீதைப்பார்த்து "நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் என்ன நாயா" என்று கேட்டான். தாவீது அந்த இராட்சதனை நெருங்கிய போது, அவன் தலையை பின்னுக்கு தள்ளி சிரித்தபோது, அவனது தலைக்கவசம் கீழே விழுந்துவிட்டது.

இப்படியாக கோ–யாத், தன்னால் இகழப்பட்டவனும், குறி வைத்து தாக்குவதில் வல்லவனான தனது எதிரியிடம் தன்னை காண்பித்தான். அந்த காலத்தில் செய்தித்தாள்களோ பொது நூல் நிலையமோ கிடையாது. இந்த காலத்தில் உள்ள துப்பாக்கிக்கு இணையாக அந்த காலத்தில் கைதேர்ந்தவர்களின் கையில் உள்ள தங்கள் கல் எந்த அளவுக்கு யுத்த களத்தில் முக்கியத்துவம் பெற்று இருந்தது என்பதை கோ–யாத் அறியாதிருந்தான். தாவீது சீக்கிரத்தில் தன் கவணிலே ஒரு கல்லை வைத்து சுற்றி அதை கோ–யாத்தின் நெற்றியில் பட எறிந்தான். பெ–ஸ்தன் நிலைகுலைந்தான், அவனது ஆயுததாரி ஓடிப்போனான், அவனது ஆயுதமே தாவீதின் வெற்றிச்சின்னமானது. பெ–ஸ்தியர்கள் திகைத்தார்கள்; பயமும் திகிலுமடைந்து ஓடினர். இஸ்ரயேலர்கள் அவர்களை தங்கள் அரணான பட்டணம் மட்டும் துரத்தினர்.

**நவீன ராட்சதர்களை சந்திப்பது எப்படி?**

இயேசுவின் மரணத்தை தொடர்ந்து ஒரு புதிய தெய்வீக ஒழுங்கு ஆரம்பமானது, தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவர்கள் ஜெயங்கொள்ள வேண்டிய போர்கள் இன்னும் உள்ளன, ஆனால் உலகப் பிரகாரமான ஆயுதங்களைக் கொண்டு அல்ல. எனினும் அவர்களது வெற்றிகளெல்லாம், தாவீதுக்கு அனுகூலமாக செயல்பட்ட அதே கொள்கையின் அடிப்படையிலேதான் இருக்கிறது. தேவனிடத்தில் உள்ள விசுவாசமே அடிப்படையாக அமைந்திருக்கிறது. அவர்களது போராட்டதிற்கான காரணம் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. அவர்களது விசுவாசத்திற்கேற்ற ஒரு தைரியம் – சிறிய சத்துருக்களை மேற்கொண்ட முந்தைய வெற்றிகளின் மூலம் அவர்களது படிப்படியாக அபிவிருத்தி யடைந்த ஒரு விசுவாசம் தாவீதின் காரியத்தைப் போல நாம் எதிர்கொள்ளப்போகிற ராட்சதர்களுடன் போரிடுவதற்கான தைரியத்தையும் பலத்தையும் கொடுக்க உதவுகிறது.

இதை நினைவில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு கிறிஸ்தவனும், சுயநலம், கோபம், துர்குணம், பொறாமை, தூஷணம் போன்ற சிறிய போராட்டங்களில் ஜெயம் கொள்வதற்ம் மற்றும் சிறிய பலவீனங்கள், சிறிய குறைகள் ஆகியவைகளை ஜெயம் கொள்வதற்கும் ஒவ்வொரு நாளும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இவைகள் மேல் பெற்ற வெற்றிகள், இவைகளை வெற்றி கொள்ள தேவனுடைய உதவி மூலம் பெற்ற அனுபவங்கள், பெரிய சோதனைகளுக்கும் பெரிய வெற்றிகளுக்கும் படிப்படியாக நம்மை தயாராக்குகிறது.

“ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள் செய்வேன்” என்கிற வாக்குத்தத்தத்தை அறியும்போது, தேவன் சபையை எந்த மகிமைக்காக அழைத்தாரோ, அந்த மகிமைக்கு பாத்திரராவதற்கு நாம் ஒரு பெரும் வெற்றியை ஜெயிக்க வேண்டும் என்கிற எண்ணத்தை அது நமக்கு தருகிறது. கற்றுக் கொள்வதில் நாம் சந்தோஷப்படுகிற இந்த வெற்றி எப்போதுமே பலமுள்ளதாக இல்லாதிருந்தாலும், தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார்.

நண்பர்கள் அல்லது அண்டை வீட்டார்களோடு உள்ள சண்டை, சச்சரவுகள் அவை நியாயமானதாக இருந்தால் கூட அதை தேவன் அங்கீகரிப்பதில்லை, பரிசு வழங்குவதில்லை. ஆனால் அநீதி, பாவம மற்றும் தெய்வீக சட்டம் எதிர்க்கிற எந்த ஒரு காரியத்துடனான பூசலை தேவன் அங்கீகரித்து பரிசளிக்கிறார். இந்த பூசலும் வெற்றியும் முதலாவது நமது இருதயத்துக்கும் சிந்தைக்கும் உரியதாகும். இரண்டாவதாக, பொது மக்கள் தீமைக்கு எதிராகவும் சமூக நீதியின் ஆதரவுக்காகவும் போராடுவதில் தேவ கிருபை விரிவடையும்.

தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக நூற்றாண்டு காலங்களாக துணிவு கொண்ட மகா பெரிய இராட்சதனாகிய பாவமும் அநீதியும் தேவனால் குறித்த காலத்தில் உண்மையான தாவீது மூலமாக அடித்து நொறுக்கப்படும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தாவீது என்ற வார்த்தைக்கு பொருளே “பிரியமானவன்”ஆகும். உண்மையான பிரியமானவர் கிறிஸ்துவாகும் – தலையும் அவரது சரீரமாகிய சபையும் சேர்ந்தது ஆகும். சுருக்கமாக, சத்தியம் என்னும் கவண் கல் மகா பெரிய சத்துருவை நொறுக்கிப்போடும், உண்மையான தாவீது ஆயிர வருட யுக ஆளுகையை ஆரம்பிப்பார், இந்த ராஜ்யம் உலகை உயர்த்தி ஆசீர்வதிக்கும். தாவீது வகுப்பாரில் ஒரு அங்கமாக இருக்கிற நாம் ஜெயங்கொள்ளுகிற ஆவியையும், தேவனுடைய வாக்குத்தத்தத்திலும் வல்லமையிலும் நம்பிக்கையும் விசுவாசமும் உடைய ஆவியையும் பெற்றிருக்க வேண்டும்.

--------------------------------

**--2311--**

# கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம்

## The Faith of One Persecuted

1 சாமுயேல் 19

*தாவீது மேல் சவு–ன் பொறாமை – அவனுக்கு தீங்கிழைக்கும் முயற்சிகள் – அடிக்கடி நிகழ்ந்த இரட்சிப்புகளெல்லாம் தெய்வாதீனமானது – நமது எதிராளியாகிய சாத்தான் நமக்கு தீங்கிழைக்கவே நாடுகிறான் – தேவனிடத்திலும் நீதியினிடத்திலும் நமது அர்ப்பணம் நமது இரட்சிப்பை உறுதிப்படுத்துகிறது – இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏன் அனுமதிக்கப்படுகின்றன – வா–பனான தாவீதை இஸ்ரயேல் இராணுவமும் ஜனங்களும் போற்றி புகழ்ந்தனர்.*

*"கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்." நீதிமொழிகள் – 29:25*

பெ–ஸ்தரோடே யுத்தம் தொடர்ந்தது. தாவீது ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அதிகாரியாக்கப்பட்டு சவுல் ராஜாவிடம் நேரடி தொடர்பு வைத்திருந்தான். தாவீது போன இடமெல்லாம் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. சவுல் ராஜா ஜனங்கள் தம்மைவிட தாவீதை அதிகம் மதிப்பதை கண்டான். தாவீது தனது வெற்றிகளில் ஒன்றில் திரும்பி வரும்போது ஸ்திரீகளும் பெண்களும்,

"சவுல் கொன்றது ஆயிரம்
தாவீது கொன்றது பதினாயிரம்"

என்று பாடிக்கொண்டு வந்தபோது, சவு–ன் இந்த பொறாமை உச்சக்கட்டதை அடைந்தது.

பொறாமைத் தீ முற்றிலுமாக அவனை ஆட்கொண்டது. அது முதல் அவன் தாவீதை கொல்லும் எண்ணத்தில் இருந்தான். சவுலுக்குப்பின் அடுத்த ராஜாவாக சாமுயேலால் தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட காரியம் சவுலுக்கு தெரியாமல் ரகசியமாக இருந்தது. அமலேக்கியரைப் பற்றிய காரியத்தில் சவுல் தெய்வீக கட்டளைகளை நிறைவேற்றாததால், ராஜ்யபாரம் அவனிடமிருந்தும் அவனது குடும்பத்தினரிடமிருந்தும் நீக்கப்பட்டு வேறொருவனுக்கு கொடுக்கப்படும் என்ற காரியத்தை சாமுயேல் தீர்க்கதரிசி அவனிடம் கூறியிருந்ததை மட்டும் அவன் அறிந்திருந்தான். ஆனால் இது நடக்காது என்றும் தனது மகனாகிய யோனத்தான் தனக்குப்பின் ராஜாவாக ஆவான் என்றும் நம்பியிருந்தான்.

பொறாமை என்பது சுயநலம் என்கிற கசப்பான கனியின் விதை வரை செல்கிறதாயிருக்கிறது. அது காரணத்தை சமநிலைப்படுத்தாமல், சந்தோஷத்தை அணைத்து விடுகிறது. பொறாமை கொண்டவனை அது பயங்கரமான துக்கத்தில் ஆழ்த்தி, அவனை உண்மையிலேயே பித்து பிடித்தவனாக்குகிறது. இது சவு–ன் காரியத்தில் மாத்திரமல்ல ஏறக்குறைய ஒவ்வொரு மனிதனுடைய அனுபவங்களிலும் விளக்கப்படுகிறது. பொறாமை என்பது என்ன என்பதை யார் தனது வாழ்க்கையில் அறியாமல் இருக்கிறார்கள்? எந்த அளவுக்கு அறிந்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது. அது அநேகரை குழந்தைகளையும் பெரியவர்களையும் கொலை செய்கிறவர்களாக்குகிறது. அது குடும்பங்களையும் வியாபார ஸ்தாபனங்களையும் அழித்திருக்கிறது. அது சுயநலத்தின் பயங்கரத்தையும், அதே சமயம் முட்டாள்தனத்தையும் வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது. பொறாமை என்பது ஒவ்வொருவருக்கும் எரிச்சலை உண்டு பண்ணுகிறது என்பதை உணர்ந்து மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதை சரியானபடி நெரித்து, ஜாக்கிரதையாக இருந்து ஜெயங் கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவனாக இருந்தால், ஜெபம் மூலம் ஜெயங் கொள்ள வேண்டும்.

### சவு–ன் பொறாமை தந்திரமானதாக இருந்தது

பொறாமை என்னும் இந்த வ–ப்புகளின் கட்டுப்பாட்டில் சவுல் இருக்கும்போது, தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி அவன் மேல் இறங்கினதாக விவரிக்கப்படுகிறது. தயவு, நியாயம் மற்றும் அன்பு என்கிற தேவ ஆவிக்கு எதிரான பொல்லாத ஆவி என்று நாம் சொல்லலாம். பெ–ஸ்தியர்களின் போர் நிறுத்தத்திற்கு பிறகு, ராஜா இந்த வ–ப்பு என்கிற துன்பத்தினால் கஷ்டப்படும்போது, தாவீது சுர மண்டலத்தை வாசித்து அவனை அமைதிப்படுத்துவான், தாவீது சவு–ன் துரோக எண்ணத்தை அறிந்திருந்தான். சவுல் எப்பொழுதும் தன் கையில் வைத்திருக்கிற ஈட்டியைக் கொண்டு தாவீதை கொல்ல நினைத்த இரண்டு தடவையும் தாவீது தப்பித்துக் கொண்டான்.

தாவீதுடன் சண்டையை ஏற்படுத்தி அவனை சரியான காரணத்துடன் கொல்வதற்கு முகாந்தரம் உண்டாகும்படி அவனது மூத்த மகளை தாவீதுக்கு திருமணம் செய்து தருகிறேன் என்று வாக்கு கொடுத்துவிட்டு, அவளை வேறு ஒருவனுக்கு மனைவியாக கொடுத்தான். எனினும் தாவீது மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாக தான் இராஜாவுக்கு மருமகனாகிறதற்கு தான் உயர்ந்த குடும்பத்தை சேர்ந்தவனல்ல என்றான். மேலும் ராஜாவின் மகளுக்கு போதுமான அளவிற்கு வரதட்சிணை கொடுப்பதற்கு தகுதியுள்ளவனும் அல்ல என்று கூறினான். அடுத்து தாவீதுக்கு ஒரு கண்ணியை ஏற்படுத்த, அவன் தாவீதுக்கு தனது இளையமகள் மீகாளை கொடுப்பேன் என்று கூறினான். மறுபடியும் தான் அதற்கு தகுதியானவன்

அல்ல என்றும், அவருக்கு வரதட்சிணை கொடுக்க தன்னால் இயலாது என்றும் கூறினான். ஆனால் சவுல் வரதட்சிணை என்பது நூறு பெ-ஸ்தியர்களை கொன்றதற்கான அத்தாட்சி என்று கூறினான். இந்த வரதட்சணையை கொடுப்பதற்கான முயற்சியில் தாவீது சந்தேகத்திற்கிடமில்லாமல் இறந்து போவான் என்று சவுல் நினைத்தான். ஆனால் அதற்கு பதிலாக இருநூறு பெ-ஸ்தியர்களைக் கொன்று சவு-ன் மகளாகிய மீகாளை மனைவியாகப் பெற்றான்.

ராஜா இன்னும் தாவீதிடம் அதிக பொறாமை கொண்டு, தன் குமாரனாகிய யோனத்தானோடும் தனது ஊழியக்காரர்களோடும் பேசி, தாவீதை கொன்றுபோடும்படி கூறினான். தனது தந்தை கொடூரமானவராகவும், பொறாமையுடையவராகவும் சுயநலம் உடையவராகவும் இருந்தபடியால் யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்து சகோதர அன்பு கொண்டான். தாவீது ராஜ்ய பாரத்தை பெற்றுக் கொண்டால், உண்மையான இழப்பு யோனத்தானுக்குத்தான், எனவே யோனத்தானின் அன்பு ஒரு பழமொழியாயிற்று. அதோடு கூட அவன் நல்ல ஆண்மகனுக்கான மற்றும் சகோதரத்துவத்திற்கான நல்ல ஆவியையும், சமாதானத்தை ஏற்படுத்துகிற ஆவியையும் உடையவனாக இருந்தான். அவன் தாவீதுக்காக தனது தகப்பனிடம் பரிந்து பேசினான். யோனத்தானின் வார்த்தைகள் பெற்றோரிடம் காட்டும் மரியாதைக்கும், தனது நண்பன் தாவீதிடம் காண்பிக்கும் அன்புக்கும் ஒரு உதாரணமாக இருந்தது. அவன் கூறியதாவது: “ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்யவில்லை. அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாக இருந்ததே. அவன் தன் பிராணனைத் தன் கையிலே பிடித்துக் கொண்டு, அந்த பெ-ஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரயேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பை கட்டளையிட்டதைக் கண்டு சந்தோஷப்பட்டீரே, இப்பொழுதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ் செய்வானேன்.” (வச.4,5)

சாமாதானம் செய்பவனின் இந்த வாதம் வெற்றிகரமாக இருந்தது. ராஜா சாந்தமடைந்தான். தாவீது மறுபடியுமாக அழைத்து வரப்பட்டு வீட்டின் ஒரு அங்கத்தினன் ஆனான். ஆனால் அது கொஞ்ச நாளைக்கு மட்டும்தான் நீடித்தது. ராஜா சில உயர்ந்த எண்ணங்கள் உடையவனாக இல்லாமல் இல்லை. ஆனால் அது ஆழமாக இல்லை. அது அவனது வாழ்க்கையை கட்டுப்படுத்தவில்லை. மாறாக அவன் தீய சிந்தை, சுயநல சிந்தை மற்றும் பொறாமை சிந்தையின் கட்டுப்பாட்டில் உள்ளவனாக தேவனுடைய ஆவிக்கு விரோதமானவனாக தூரமாக விலகியிருப்பவனாக இருந்தான்.

மறுபடியுமாக சவுல் பொறாமை கொண்டவனாக, தாவீதை ஈட்டியினால் அவன் உட்கார்ந்திருக்கிற இடத்திலேயே சுவரோடே சேர்த்து உருவக் குத்திப் போடப்பார்த்தான். ஆனால் தாவீது விலகி தன்னை தப்புவித்துக் கொண்டான். தாவீது தனது வீட்டிற்குச் சென்றான். ஆனால் அங்கே வந்தவுடன் அவனைக் கொல்லும்படி சேவகனை அனுப்பியிருந்தான். தாவீதின் மனைவி இதை அவனுக்கு அறிவித்து, தாவீதை ஜன்னல் வழியாக இறக்கிவிட்டு அவனை தப்புவித்தாள். பரிசுத்த பவுல் தப்புவிக்கப்பட்டது போல், அந்த வீடு சுவரினால் கட்டப்பட்ட ஒன்றாக இருந்திருக்க வேண்டும்.

### ஒரு மனைவிக்காக இருநூறு கொலைகள்

இந்த பாடத்தில் மனிதர்களை கொலை செய்கிற ஒரு அம்சத்தை வேதாகமம், ஊக்குவிப்பதால், ஏளனத்திற்கும் இகழ்ச்சிக்கும் ஆளாகிறது. மேலும் அது நீதிக்கும், நீதியான தேவனுக்கும் முரணாக இருக்கிறது. அவர்கள் கூறுகிறதாவது: “இங்கே தீர்க்கதரிசி தாவீதை, புத்திசா-த்தனமானவனாகவும் தேவனுடைய ஆவியை உடையவனாகவும் தெளிந்த புத்தியுள்ள ஆவியை உடையவனாகவும் நாம் காண்கிறோம். ஆனால் ஒரு மனைவிக்காக இருநூறு மனிதர்களை கொல்லுவதைக் குறித்து வேதத்திலே எந்தவித கண்டனமும் இல்லையே.”

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளும், வாதங்களும், நியாயமானபடி சிந்திக்கப்படவேண்டும். “நீங்கள் நாத்திகர்கள், உங்களோடே வாதம் பண்ணி பிரயோஜனம் இல்லை” என்று கூறி அவர்களை மதிக்காமல் இருக்கக்கூடாது. அவர் செய்வது நீதியானது என்றால் நீதியானது தான்; அவர் செய்வது அநீதியானது என்றால் அநீதியானதுதான். வேதாகமத்தின் இந்த கூற்று தேவனுக்கும். தாவீதுக்கும் அதே போல் மற்றவர்களுக்கும் பிரயோகிக்கப்படவேண்டும். இது குறித்து நாம் விசாரிக்கும்போது, நடுநிலையான நமது மனதுடன் கருத்தை ஆராய வேண்டும். தப்பான எண்ணத்துடன் கண்டிப்பதைவிட, வேதாகமம் எல்லா இடங்களிலும் ஊர்ஜிதம் செய்கிற நீதியின் கொள்கைகளுக்கு இதை எப்படி இசையச் செய்வது என்பதை நாம் விசாரிக்க வேண்டும்.

முதலாவது நியாயப்பிரமாணத்திற்கு கீழ் இருக்கிற ஒரு யூதனுக்கும் கிறிஸ்துவின் தலைமையின் கீழ் இருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கும் உள்ள வேற்றுமையை நம் மனதில் வைக்க வேண்டும். இரண்டாவதாக வேதாகமம் மரித்தவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்றும் உடனே நித்திய ஆக்கினைக்கும் செல்கிறார்கள் என்றும் போதிக்கவில்லை என்பதையும் நாம் நினைவு கூரவேண்டும். மரித்தோர்கள் உண்மையிலேயே மரித்துவிட்டார்கள் என்றும், தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிற ஒரு நம்பிக்கை, மிகவும் சாதகமான சூழ்நிலைகளிலும், மேசியாவின் ராஜ்யத்தில் ஆசீர்வாதமான செல்வாக்கின் கீழும் எதிர்காலத்தில் மரண நிலையி-ருந்து ஒரு உயிர்த்தெழுதல் ஆகும் என்று வேதம் போதிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் – நித்திய ஆக்கினை அல்ல என்று வேதம் போதிக்கிறது. தகப்பன் ஆதாம் தனது அறிவைக் கொண்டு, தெரிந்தே பாவம்

செய்ததால் இந்த தண்டனை அவன் மேல் நீதியாக சுமத்தப்பட்டது என்று வேதம் கூறுகிறது. வழிவழியாக வந்த கட்டளைகளால் மனுக்குலம் மரிக்கிறது என்றும், நமது பிறப்பி–ருந்தே வியாதியின் விதைகள், அபூரணம், மரணம் ஆகியவை நம்மிடம் இருக்கிறது என்றும் வேதம் போதிக்கிறது.

இந்த கருத்தில் நமது உலகம் முழுவதும் மரண தண்டனைக்கு உட்பட்ட ஒரு உலகமாக இருக்கிறது. சந்தோஷம், சமாதானம், ஜீவன், பரிபூரணம் போன்றவைகளை தேவன் தூதர்களுக்கு கொடுகிறதற்கு இசைவாக மனுக்குலத்திற்கும் பல்வேறு முறைகளில் கொடுக்கிறார் என்று இது நமக்கு கூறுகிறது. மேலும் பஞ்சம், கொள்ளை நோய், பூமியதிர்ச்சி, புயல் முதலான மரணத்தை ஏற்படுத்தும் பல்வேறு சூழ்நிலைகளை தேவன் அனுமதிக்கிறார் என்று அது நமக்கு கூறுகிறது. ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமையினாலே எல்லாரையும் மரண தண்டனைக்குள்ளாக நீதியாக தீர்ப்பு செய்த அதே தேவனே, கிறிஸ்துவின் மரண பரியந்தமான கீழ்ப்படித–னாலே எல்லாரையும் நீதிமானாக்குகிற ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார் என்கிற காரியத்தை காணவரும்போது, காரியங்களை நாம் ஒரு புது வெளிச்சத்தில் காண்கிறோம். வெளிச்சத்தையும், தேவனை அறிகிற அறிவையும் அவரது ஆதரவையும், நித்திய ஜீவனையும் பெறுவதற்கான முழு சந்தர்ப்பத்தையும் கொண்டு வருவதற்காக மேசியாவின் ராஜ்யம் அமைக்கப்படப்போகிறது என்பதை நாம் அறியும் போது நமது இருதயம் களி கூருகிறது.

மறுபடியும் நமது முதலாவது கூற்றுக்கு வரும்போது, இந்த சுவிசேஷ யுகத்தில் நம்மை நாமே நியாயந்தீர்க்கிறது போல, தாவீதையும் அவனது காலத்து ஜனங்களையும் நாம் நியாயந்தீர்க்கிறவர்கள் அல்ல என்பதை உணருகிறோம். “கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், ஒரு மனிதனுடைய ஜீவனுக்கு ஒரு மனிதனுடைய ஜீவன்” என்கிற கட்டளையை சீனாய் மலையில் பெற்று அவனும் (தாவீது) அவனது ஜனங்களும் கீழாக்கப்பட்ட அந்த நியாயப் பிரமாணத்தின்படி அவன் நியாயந்தீர்க்கப்படவேண்டும். கானான் தேசத்தின் ஜனங்களின் அநீதி நிறைவடையும்படி அனுமதிக்கப்பட்டார்கள் என்று இஸ்ரயேலர்கள்அறிவிக்கப்பட்டார்கள். (1 சாமுயேல் 15:2,3) அந்த தேசம் முழுவதும் ஆபிரகாமின் பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டது. தெய்வீக அங்கீகாரத்துடன் அதை அவர்கள் முடிந்தவரை சீக்கிரத்தில் சுதந்தரித்துக் கொண்டார்கள். அவர்களது அனைத்து சத்துருக்களையும் (கர்த்தருக்கும் அவர்கள் சத்துருக்களாக இருந்தார்கள்), அழிக்கும்படி கட்டளை பெற்றிருந்தார்கள், மேசியாவின் ராஜ்யத்தில் அவர்கள் அனைவருக்கும் ஒரு எதிர்கால சந்தர்ப்பம் கிடைக்கும் என்பது கூட அவர்களுக்கு சொல்லப்படவில்லை.

பெ–ஸ்தியர்கள் கானான் தேசத்தில் இருந்தார்கள். அவர்கள் தங்களது பகுதிகளை மாத்திரமல்ல, இஸ்ரயேலர்கள் முன்னமேயே ஜெயங் கொண்டிருந்த பகுதிகளையும் பிடித்துக் கொண்டார்கள். இஸ்ரயே–ல் அநேகர் மரிக்க காரணமாயிருந்தார்கள், பெ–ஸ்தியர்களும் மற்ற கானானியர்களும் முற்றிலுமாக அழிக்கப்படவேண்டும் என்ற கட்டளையை தேவனுடைய முழு அங்கீகாரத்துடன் பெற்றிருந்தார்கள். தேவனுடைய திட்டப்படி தெய்வீக கட்டளையை இஸ்ரயேலர்கள் நிறைவேற்ற வேண்டும். இதன்படிதான் தாவீதும் நிறைவேற்றினான். இந்த கருத்தின்படிதான் தேவனுடைய கட்டளைகளும் இஸ்ரயேலர்களின் கடந்த கால நடத்தைகளும் சரியானது என்று ஏற்றுக்கொள்ளப்படமுடியும்.

முந்திய காலங்களில் யூதர்கள் தேவ நீதியின் கொள்கைகளை வார்த்தைகளாலும், உதாரணங்களாலும் விளக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அதுபோல நமது ஆண்டவரின் மீட்பின் வேலையும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதமும் ஆரம்பித்த புதிய யுகத்தின் கீழ் இருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய சபையின் வார்த்தை மூலமும் உதாரணம் மூலமும் தேவனுடைய இரக்கத்தை விளக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நம்மை வெறுத்து, துன்பப்படுத்தி, பலவிதமான தீமையான மொழிகளையும் நம் பேரில் பொய்யாய் சொல்கிற நமது சத்துருக்களை நாம் நேசிக்க வேண்டியவர்களாயும் நன்மை செய்ய வேண்டியவர்களாயும் இருக்கிறோம். இப்படியாக நாம் பரலோகத்தில் இருக்கிற நமது பிதாவின் பிள்ளையாக இருப்போம் என்பதையும் அவருடைய பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் என்பதையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். ஆனால் யூதர் தேவனுடைய பிள்ளைகள் அல்ல. அவர்கள் “வீட்டின் பணிவிடைக்காரர்கள்.” (எபி. 3:5) அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக தங்களை கூறிக்கொள்ள நினைத்ததேயில்லை. இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று அறிவித்த போது, அவர்கள் கோபங்கொண்டு தேவ தூஷணம் சொன்னார் என்று அவரை கல்லெறிய கற்களை எடுத்துக் கொண்டார்கள்.

ஆதாம் தான் தேவனுடைய முதல் மானிட குமாரன். அவன் பாவம் செய்த போது தேவனிடம் இருந்த உறவு துண்டிக்கப்பட்டது. ஆதாமின் காலத்தி–ருந்து இயேசு கிறிஸ்துவின் காலம் வரை யாரையும் தேவனுடைய குமாரனாக வேதாகமத்தில் அங்கீகரிக்கப்படவோ, சொல்லப்படவோ இல்லை. அவர்கள் பாவிகளாக, அந்நியர்களாக புறம்பானவர்களாக. புற தேசத்தானாக, மரண தண்டனை

**--2314--**

கொடுக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் இயேசு புதிய போதனையோடு மாத்திரமல்ல, புதிய உறவோடும் வந்தார். “மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ள வராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும். தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்.” (எபிரேயர் 3:5,6)

-----------------------------------

--2315--

R5664

## A Friend in Need - A Friend Indeed

# ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்

சாமுயேல் 20

*தாவீதின் மீதான யோனத்தானின் அன்பு – நட்புக்கு இலக்கணம் – அதன் சோதனை – அதன் சகிப்புத்தன்மை – அதன் அடிப்படை–நட்பு இழக்கப்படுதல் – சுயநலம் நெருங்கி வருகிற ஒரு ஆபத்து – “ஒவ்வொருவனுடைய கையும் பிறனுக்கு விரோதமாக இருக்கிறது” – பரலோக உதாரணம்.*

*“சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்.” நீதிமொழிகள் 17:17*

நட்பின் உயர்ந்த உதாரணங்களை சரித்திரம் பதிவு செய்கிறது. ஆனால் அவைகளில் மிக உயர்ந்தது நமது பாடத்தின் கதையாகும். இஸ்ரயே–ன் அரியணைக்கு வருங்கால வாரிசும், சவு–ன் மகனுமாகிய யோனத்தான், தெய்வீக திட்டத்திலும் இஸ்ரயேலரின் இருதயத்திலும் உள்ளவனும் அவனது போட்டியாளனுமாகிய தாவீதுடன் கொண்ட நட்பைப் பற்றியதுதான் நமது பாடம். புனித தன்மை கொண்டதும் தன்னலமற்றதுமான அவனது நட்பு அந்த காலத்தில் சிலர் உயர்ந்த குணமுடையவர்களாயிருந்ததை நமக்கு மெய்ப்பிக்கிறது. இது சந்தேகத்திற்கு இடமில்லாததாகவும் பரிணாம கொள்கைக்கு முற்றிலும் முரண்படுவதாகவும் இருக்கிறது.

யோனத்தானின் தகப்பனாகிய சவுல் ராஜாவின் பொறாமையின் ஆவிக்கு எதிரிடையாக அவனது அன்பின் ஆவி எல்லாவற்றிற்கும் மேலாக நிற்கிறது. கோ–யாத்தை தாவீது வெற்றி கொண்ட பிறகு தாவீதை சந்தித்ததே அவனது முதல் சந்திப்பாகும். தாவீதை போட்டியாளனாக, நசுக்கப்பட வேண்டியவனாக நினைப்பதற்குப் பதிலாக உயர்ந்த குணமுடைய யோனத்தான், தனது ராஜகுமாரனுக்குரிய சால்வையை கழற்றி, அதையும் தன் பட்டயத்தையும் வில்லையும் கூட தாவீதுக்கு கொடுத்தான்.

ரெவரெண்டு அலெக்ஸ் வைட் (Rev. Alex Whyte) என்பவர் கூறுகிறதாவது: “யோனத்தான் சவு–ன் மூத்த மகன். ஆகையால் அவன் இஸ்ரயே–ன் அரியணைக்கு வருங்கால வாரிசு. அவன் அழகானவனும், உயர்ந்த மனோதிடமும், ராணுவத்தில் பெருமைக்குரியவனும் ஜனங்களுக்கு பிரியமானவனும், மனபலமும் உடல் பலமும் உள்ளவனாக இருந்தான். அவனது அழகுக்காகவும், கால் வேகத்திற்காகவும் அவனது தோழர்கள் அவனை கேஸில் (Gazelle – ஒருவகை அரேபிய மான்) என்று அழைப்பது வழக்கம். அவனது தகப்பன் பெரிய விபரீதமான மீறுதலை செய்யாதிருந் திருப்பானேயானால், சவுலுக்கு அடுத்தபடியாக அவனே இரண்டாவது ராஜாவாக இருந்திருப்பான். ஆனால் அரியாசனத்திற்கு ஸ்திரத்தன்மையையும், கிரீடத்திற்கு ஒளியையும் கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட உயர்ந்த குணலட்சணமும், சிந்தையும் இருதயமும் உள்ள யாரும் அரியாசனத்தில் அமரவில்லை.”

“நல்ல கருத்தான ஒரு நண்பனைப் போல வாழ்க்கையில் ஓர் ஆசீர்வாதமில்லை” என்று பழங்காலத்தினர் ஒருவர் நன்றாக எழுதியிருக்கிறார். ஒரு கவிஞர் இப்படியாக எழுதியிருக்கிறார். *‘‘வாழ்க்கை ஒரு நண்பனைப்போல இன்பத்தைக் கொடுக்காமல் தீர்க்க தரிசனங்களையும், நிறைவேறுதலையும் இருதயத்தின் ஆழத்தில் நிறைந்து இருக்கும்.”*

### “ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்”

யோனத்தானின் அன்பு, நட்பு நுரைத்தெழுகிற தன்மையுடையது அல்ல. அது உண்மையான ஒன்று. அவன் சும்மா வார்த்தைகளில் மாத்திரம் நேசிக்கவில்லை, ஆனால் செய–லும் உண்மையாக நேசித்தான். அவனது தகப்பன் தாவீதை ஆதரிக்கும் போதும், ஜனங்கள் ஆரவாரிக்கும் போதும், மற்றவர்களால் ஆதரிக்கப்படும்போது மாத்திரம் அல்ல, ராஜா அவனது நண்பனின் சத்துருவான போதும் அவனது உயிரை வாங்க தேடிய போதும் அதே போல் நேசித்தான். நட்பு சோதிக்கப்படும் வரையோ, அதற்கு முன்போ உண்மையானதாக கருதப்பட முடியாது. பரீட்சையையோ, சோதனையையோ சகிக்காத மற்றும் எந்த தியாகமும் செய்யாத நட்பு மாதிரியான (Model) நட்பாக இருக்க முடியாது.

யோனத்தான் பெற்றிருந்த அப்படிப்பட்ட அன்பை கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். இந்த அன்பு ஒருவருக்கொருவர் கனப்படுத்துவதில் முந்திக்கொள்கிற அன்பு

மற்ற அன்பெல்லாம் பெரிதானதாக இருந்தாலும், இதுதான் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் மற்ற அன்பெல்லாம் மதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏனெனில் தாவீது தேவனை நேசித்தான். அவர் சித்தம் தம்மில் நிறைவேற நாடினான். வேதத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுபோல, அவன் காத்திருக்க வேண்டும் என்கிற அவருடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டது. அவனும் ஞானத்துடன் நடந்து கொண்டான். மேலும் யோனத்தான் இந்த ஞானத்தின் ஆவியை பகுத்துணர்ந்து கொண்டான். ஏனெனில் தாவீது நீதியின் ஆவியால் வழிநடத்தப்பட்டான் என்பதை அவன் உணர்ந்து கொண்டு அவனை நேசித்தான்.

நாம் எந்த அளவுக்கு வேதத்தை புரிந்து கொண்டு சத்திய ஆவியை பெற்றிருக்கிறோமோ அந்த அளவுக்கு அதன் கொள்கைகளை புரிந்து கொண்டு, அதன் பிரதியாக, எடுத்துக்காட்டாக இருக்க முடியும்; அது நட்பாக இருந்தாலும், ராஜாவின் கடமையாக இருந்தாலும், நமது குடும்ப உறவு முறையாக இருந்தாலும், நமது தேவனைக் குறித்த கடமையாக இருந்தாலும் அதைச் செய்ய முடியும். தேவனிடமிருந்து வரும் செல்வாக்குகள் உண்மையான நட்பையும், அன்பையும், இருதய மற்றும் தலையின் மேலான எல்லா குணலட்சணங்களையும் ஏற்படுத்துகிறது. இன்றும் பல செல்வாக்குகள் சுயநலத்தின் ஆவி, பேராசை, பொறாமை போன்றவைகளை நோக்கி கிரியை செய்கிறது.

எப்படி யோனத்தான் ராஜாவாகிய தனது தகப்பனுக்கும். தாவீதுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்துகிறவனாக நடந்து கொண்டான் என்பதை கடந்த பாடத்தில் நாம் பார்த்தோம். யோனத்தான் எப்படி ஒரு உண்மையான நண்பனாக நடந்து கொண்டான் என்பதற்கான நமது கவனத்தை இந்த பாடம் ஈர்க்கிறது. தாவீது தனது ஜீவன் ஆபத்தில் இருந்ததை உணர்ந்து, தனது பயத்தை யோனத்தானிடம் கூறினான். யோனத்தான், தன் தந்தை வாக்கு மாறுவாரோ என்று நம்பிக்கை இழந்தான், எனினும் தாவீதின் மனோபாவம் யோனத்தானிடம் நல்லெண்ணத்தை ஏற்படுத்தியது. அமாவாசை விருந்து சமீபத்தி-ருந்தது. தாவீது ராஜாவோடே பந்தியி-ருந்து சாப்பிட வேண்டியிருந்தது. சவுல் ராஜா தலைமையான இடத்திலும் வலது பக்கத்தில் யோனத்தானும் இடது பக்கத்தில் இராணுவ தளபதியும் நான்காவது இடத்தில் ராஜாவுக்கு எதிர்ப்பக்கம் தாவீதும் உட்கார வேண்டியிருந்தது. நண்பர்களுக்கிடையே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, யோனத்தான் ராஜாவின் நோக்கத்தை அறிந்து அதை தாவீதிடம் தெரிவிக்கவேண்டும். விருந்தின் முதல் நாளில் ராஜா ஏதும் சொல்லவில்லை. எனினும் யோனத்தான் ராஜாவின் கவனத்தை திருப்புவதற்கு ஏற்ற சமயத்தில் தாவீதின் இருக்கையில் அமர்ந்தான். முடிவாக ராஜா, தாவீதின் பேரை உச்சரிக்க விரும்பாமல், ஈசாயின் மகன் எங்கே என்று கேட்டான். தாவீது தன் குடும்பத்தார் நடத்தும் ப-யில் கலந்து கொள்ள தன்னிடம் உத்திரவு பெற்று பெத்லகேம் மட்டும் சென்றிருக்கிறான் என்று யோனத்தான் பதில் கூறினான்.

இந்த சமயத்தில் தாவீதை கொல்லும் தனது நோக்கம் முறியடிக்கப்பட்டதை அறிந்து, தன் கோபத்தை தனது மிகவும் அன்பான மகனிடம் காண்பித்தான். சவுல் அவனை, அடங்காதவனே, தாய்க்கு பிரயோஜனமற்றவனே என்று கூறி அவன் தனக்கு மகனே அல்ல என்று பொருள்படும்படி கூறினான். அவன் தன் கோபத்தில் ஒரு ஈட்டியை எடுத்து யோனத்தான் மேல் எறிந்தான். அவனை தாக்கும் எண்ணத்தோடு அல்ல, அவனது கொடூரமான பொறாமையை வெளிப்படுத்துவதற்காக ஆகும். யோனத்தானின் பதிலானது, அவன் தனது நண்பனுக்காக தான் எந்த அளவுக்கு ஆபத்தில் இருக்கிறான் என்பதை குறைவாகவும், நண்பனுக்கு அநீதி செய்யப்படுவதை அதிகமாகவும் நினைத்துக் கொண்டிருந்தான். யோனத்தான் "கோபதாபமாய் பந்தியைவிட்டு எழுந்திருந்துபோய், அமாவாசையின் மறுநாளாகிய அன்றைய தினம் போஜனம் பண்ணாதிருந்தான்; தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்கு மன நோவாயிருந்தது."

மன அழுத்தத்தில் தன்னை மறந்து நண்பனைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிற ஓர் அழகான நட்பாக அது இருக்கிறது. அனைத்து மானிட அன்புக்கும் நட்புக்கும் எதிரிடையாக இருந்தாலும், இயேசு கூறுகிறதாவது; "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனை கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." எனினும் இயேசுவின் விஷயத்தில் எந்தவொரு பூமிக்குரிய அன்பையும் நட்பையுங்காட்டிலும் அதிகமானது. ஏனெனில்,"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்." ஆண்டவர் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உதாரணமாக இருக்கிறார் என்று அப்போஸ்தவர் அறிவிக்கிறார்." மேலும் அவர் "அவர்கள் சகோதரர்களுக்காக ஜீவனை கொடுக்க கடனாளிகளாக இருக்கிறார்கள்" என்றும் ஒருவருக்கொருவர்

ஜீவனைக் கொடுக்க தயாராக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இதுதான் பரலோக அன்பு, தெய்வீக நட்பு. யோனத்தானுடைய அன்பு, கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களது உதாரணத்திற்கு அடுத்தபடியாக மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

**“உனக்கு இன்னும் அப்பால் இருக்கிறது அல்லவா?”**

அடுத்த நாள் காலையில் தாவீது வீட்டி–ருந்து திரும்பி வந்து, ராஜாவின் மனோபாவத்தைப் பற்றிய யோனத்தானின் தீர்மானத்தை அறிய வேண்டியவனாயிருந்தான். ஒரு பெரிய பாறைக்கு அருகாமையில் உள்ள வயலுக்குள் யோனத்தான் தனது வில், அம்பு எய்யும்போது, அம்புகளுடன் செல்ல வேண்டும் என்று அடையாளமாக அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தார்கள். அம்பு எய்யும்போது, “அம்பு இன்னும் உனக்கு அப்பால் இருக்கிறது அல்லவா? நீ தீவிரித்து பொட்டெனப்போ”என்று யோனத்தான் கத்தினால், தாவீது தப்பி ஓட வேண்டும். ஆனால் நேரடியான தொடர்பு இனி இராதபடி பிரிவதை இரு நண்பர்களும் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. யோனத்தான், தாவீது ஒளிந்து கொண்டிருந்த பாறைக்குப் பின்னால் சென்றான். உயர்ந்த மனித அன்புடைய இருவரும் ஒருவரையொருவர் முத்தஞ்செய்து, கட்டித் தழுவிக் கொண்டு பின் பிரிந்தார்கள்.

இங்கே யோனத்தான், தாவீதுக்கு தேவனுடைய அருள் இருக்கிறது என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினான். மேலும் தாவீதை தன்னோடும் தனது குடும்பத்தோடும் உடன்படிக்கை பண்ணும்படி கேட்டுக் கொண்டான். அதாவது என்ன நடந்தாலும் தன்னையும் தன் குடும்பத்தையும் தயவாய் நடத்தும்படி கேட்டுக் கொண்டான். அவன் தாவீதிடம் கூறியதாவது: “நீர் சமாதானத்தோடே போம், கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும் என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும் நடுநிற்கும் சாட்சி என்று சொல்–, கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக் கொண்டதை நினைத்துக் கொள்ளும்.” பின்பு அவன் எழுந்து புறப்பட்டுப் போனான். யோனத்தானோ பட்டணத்திற்கு போய்விட்டான்.

தாவீது, சவு–ன் குடும்பத்திற்கு ஒரு நண்பனாக எடுத்துக் கொண்ட உபகார பந்தத்தை மறக்கவேயில்லை என்று வேதாகம சரித்திரம் நமக்கு காண்பிக்கிறது. அந்த காலத்தில் கிழக்கத்திய தேசத்தில் ஒரு புது ராஜவம்சம் அரசாட்சிக்கும் வரும்போது கவிழ்க்கப்பட்ட ராஜ வம்சத்தில் உள்ள ஆண்களையெல்லாம் முற்றிலுமாக அழிப்பது வழக்கத்தில் இருந்தது. ஆனால் தாவீதின் விஷயத்தில் அப்படி நடக்கவில்லை.

பெ–ஸ்தரோடு நடந்த சண்டையில், யுத்த களத்தில் யோனத்தானும் அவனது தந்தையும் இறந்த பிறகு தாவீது அவர்களைக் குறித்து புலம்பல் பாடினான்.

*“யோனத்தானே, உயரமான ஸ்தலங்களில் வெட்டுண்டு போனாயே! என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்! நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்! உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது. ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது!”*

நட்பைக் குறித்த சாதகமான தாக்கம் இல்லாமல் இந்த சம்பவத்தை யாரும் படிக்கமாட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர் உண்மையுள்ளவராக உயர்ந்தவராக, மிகவும் உண்மையுள்ள நண்பனாக இருக்க வேண்டும். ஆனால் யோனத்தானின் அன்பைப்பற்றிய இந்த சம்பவம் விசேஷமாக கிறிஸ்தவர்களுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருக்கும்; கிறிஸ்துவின் அன்புக்கும் தேவனின் பிரியமுள்ள குமாரனின் சாயலுக்கு ஒப்பாக வேண்டும் என்கிற கட்டளைக்கும் வழி நடத்தும். மேலும் அவர்களது நட்பு விசேஷமாக ஒருவருக்கொருவர் விசுவாசத்துடனும், உண்மையுடனும் நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்போஸ்தவர் கூறுகிறதாவது; “நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்.”

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர்:

சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண்: 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,

சென்னை– 600 019. கைபேசி: 97909 00030. மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

# குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும்
## Seed time and Harvest of Character

*''மோசம் போகாதிருங்கள்.........தன் மாமிசத்திற்கென்று விதைக்கிறவன் மாமிசத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்." கலாத்தியர் 6:7,8*

இங்கே அப்போஸ்தலர் சில தேவனுடைய பிள்ளைகள் வஞ்சிக்கப்படுவதற்கான ஆபத்து இருக்கிறது என்கிற உண்மையை நமது கவனத்திற்கு கொண்டு வருகிறார். சிலர் அவர்கள் பூமிக்குரிய விருப்பத்தின்படியும் மாம்சீக விருப்பத்தின்படியும் வாழலாம் என்றும் பிறகு கூட்டங்களில் கலந்து கொள்ளலாம், மற்ற மதக்காரியங்களை கடைப்பிடிக்கலாம் என்றும் இவைகள் தேவனுக்கு ஏற்புடையவராக்கும் என்றும் நினைக்கலாம். மற்றவர்கள், தாங்கள் மாம்சீக பிரகாரம் வாழலாம், அதன்பிறகு தேவனிடம் ஜெபத்தில் கேட்டால், எல்லா காரியங்களும் மன்னிக்கப்பட்டு, சரிசெய்யப்படும் என்ற எண்ணத்தில் தங்களையே வஞ்சித்துக்கொண்டு, அனுதினமும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்கிறவர்களி–ருந்து ஆவிக்குரிய வகையில் மிகவும் தூரமாகவே இருக்கிறார்கள். பாவ வழிகளில் மாம்சீக பிரகாரமாக வாழ்ந்துவிட்டு, பிறகு குருவானவரிடம் சென்று மன்னிப்பு பெற்றால், இது அவர்களை சரிசெய்துவிடும் என்ற போதனையின் மூலமாக அநேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

இவைகளெல்லாம் வஞ்சகங்கள். சபைக்கும் உலகத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான ஒழுங்கு முறையை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இந்த ஒழுங்குமுறை விதைத்தல், அறுத்தல் என்ற முறையில் செயல்படுகிறது. ஒருவேளை விதையைப்பற்றி தெரியாத ஒரு மனுஷன் முட்செடி அல்லது களையின் விதையை விதைக்கலாம். சில நாட்கள் கழித்து அவன் தனது வயலைப் பார்த்து, இத நல்ல விதை போல் இருக்கிறது. இதில் தவறு ஏதுமில்லை. இது எந்த விதத்திலும் மண்ணை பாதிக்கவில்லை. நான் புல்லையோ அல்லது பூச்செடியையோ விதைத்திருக்கிறேன். பயிர்கள் எல்லாம் பச்சையாகவும் செடியாகவும் இருக்கிறது. உண்மையிலேயே பார்க்க மிகவும் நன்றாக இருக்கிறது'' என்று கூறுவான். ஆனால் பிறகு தகுந்த பருவத்தில், விதையை தெரிந்தெடுத்தது எவ்வளவு தவறானது என்பது வெளிப்படும்.

இயற்கையின்படி ஒரு மனிதன் எதை விதைத்தானோ அதையே அறுப்பான் என்பது நிச்சயம். அவர்கள் களையை விதைத்துவிட்டு, கோதுமையை அறுக்க எதிர்பார்க்க மாட்டார்கள். காரணமும் விளைவும் என்கிற சட்டம் ஆவிக்குரியவைகளுக்கும் பொருந்தக்கூடியதாகவே இருக்கிறது. ஆகையால் தான் அப்போஸ்தலர் "தேவன் பரியாசம் பண்ண வொட்டார்'' என்று கூறுகிறார். அதாவது தீமையை விதைத்துவிட்டு நன்மையை அறுக்க எண்ணாதிருங்கள் என்று கூறுகிறார். "காற்றை விதைக்கிறவன் எவனோ, அவன் சூறைக் காற்றை அறுப்பான்;'' மாமிசத்தை விதைக்கிறவன் மாமிசத்தை அறுப்பான், ஆவியை விதைக்கிறவன் ஆவியை அறுப்பான்.

### எண்ணமே குணலட்சணத்தில் ஆரம்பம்

ஆவிக்குரிய காரியங்களைக் குறிப்பிடும்போது "விதைத்தல்'' என்ற வார்த்தை என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது? ஒரு வாழ்க்கை முறையை அல்லது நடத்தையை இது அர்த்தப்படுத்துகிறது; நல்ல பலன்களை அல்லது கெட்ட பலன்களைக் கொடுக்ககூடிய நடத்தை, "அந்த இளைஞன் தனது காட்டுதானியத்தை விதைக்கிறான்'' என்ற பழமொழியை நாம் சில சமயங்களில் கேள்விப்படுகிறோம். அவனது நடத்தை தீயதாக இருக்கிறது; ஒரு தனிமனிதனின் நடத்தை அவனது குணலட்சணத்தில் பிரதிப–க்கிறது என்பதே அதன் பொருள். மேலும் நாம், எல்லா நடத்தைகளும் முந்திய எண்ணத்தால் தூண்டப்படுகிறது என்று கூறலாம். வேறு விதமாக சொல்வோமானால், நமது எண்ணமே நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. இதை இப்படியாக விளக்கலாம்; தேவன் உலகத்தை சிருஷ்டித்த போது, முதலாவது அதைக் குறித்த ஒரு திட்டத்தை வைத்திருந்தார். அவர் முன்னமேயே வைத்திருந்த திட்டத்தின்படி ஒவ்வொன்றையும் செயல்படுத்தினார். தேவனுடைய நல்ல எண்ணம் நல்ல பலனைக் கொடுத்தது என்று நாம் சொல்லலாம்.

சாத்தானுடைய காரியத்திலும் அதுபோலவே இருக்கிறது. சாத்தான் உலகத்தில் தீயவைகளை, களைகளை விதைத்தான். அது அவனுக்கு மரண ஆபத்தையும் மற்றவர்களுக்கு தீங்கையும் கொடுத்தது, அவன் பாவம் செய்வதற்கு முன் அவன் கொண்டிருந்த எண்ணத்தின் பலனாக இது இருந்தது. "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். . . . நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்'' என்று அவன் தன் உள்ளத்திலே சொன்னான், (ஏசா14:13,14) அவன் ஒரு பேராசையின் ஆவியை, சுயநலத்தின் ஆவியை, தேவனுக்கு எதிரிடையான ஆவியை பெற்றிருந்தான்.

தேவனுடைய ஆவியும் எதிராளியானவனின் ஆவியுமாகிய இந்த இரண்டு ஆவிகளும் இன்னும் உலகில் செயல்படுகிறது. மனுக்குலத்தைச் சார்ந்த காரியங்களை குறிப்பிடும்போது, அப்போஸ்தலர் எதிராளியானவனின் ஆவியை மாம்சத்தின் ஆவி என்று கூறுகிறார்; ஆரம்பத்தில் இருந்த பரிபூரண மாம்சத்தின் ஆவி என்று கூறாமல் விழுந்துபோன மாம்சத்தின் ஆவி என்று கூறுகிறார். இதுதான் சாத்தானின் ஆவி, இது மானிட குடும்பத்தில் அதிக செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. நமது தலைப்பு வசனத்தை அப்போஸ்தலர் முக்கியமாக சபைக்கும், ஆனால் பொதுவாக உலகத்திற்கும் பிரயோகிக்கிறார். போதிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியில் பங்கு பெற்றிருக்கிற தேவனுடைய பிள்ளைகளில் யாரும் பிரதானமாக மாம்சத்தின்படி வாழ்ந்தால், அவர்கள் பரம அழைப்பின் பந்தயப்பொருளை பெறமாட்டார்கள். அவர்கள் கனம், மகிமை, சாகாமையை பெற விரும்பினால், தேவனுடைய ஆவிக்கு, தேவனுடைய பிரமாணத்தின் ஆவிக்கு, நீதியின் ஆவிக்கு, இசைவாக வாழ வேண்டும். அவர்களது முன்னோடியான கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு

இசைவாக அவர்களது வாழ்க்கை இருக்கவேண்டும், இல்லையென்றால் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை பெற்றுக்கொள்வோம் என்று நம்பிக்கை கொள்ள இயலாது.

மாம்சீக அபூரணத்தை பிதாவாகிய ஆதாமின் மூலம் பெற்றிருக்கிறபடியால், தேவனுடைய பிள்ளைகள் இந்த வாழ்க்கையில் பெற விரும்புகிற பூரணத்தை அடைய இயலாது. புத்தியிலும், எண்ணத்திலும், முழு சரீரத்திலும் குறைகளும் பலவீனங்களும் இருக்கும். ஆனால் அவர்கள் தங்களால் இயன்றவரை உயர்ந்த நிலையில் வாழ வேண்டும். அவர்கள் அறியாது செய்த குறைகளை தேவன் ஈடுசெய்வார். அவர்கள் ஜெயம் கொள்ளுவதற்கு தேவனுடைய கிருபை போதுமானதாக இருக்கிறது. ஆனால் அவர்கள் மாம்சத்திற்கென்று விதைத்தால் மாம்சத்தை, தீமையை அறுப்பார்கள். ஆனால் அவர்கள் இன்னும் உண்மையுள்ளவர்களாக இருந்து, தங்கள் தவறுகளுக்கு வருந்தி, ஜெயங்கொள்ளுகிறதற்கு பாடுபட்டால், தேவன் அவர்களது நன்மைக்காக அவர்களது செய்கைகளை மன்னிப்பார்.

### உண்மையான உள்ளமே முதல் தேவை

ஆகையால் சபையானது, நீதியுள்ள தேவனுடைய ஆவிக்கு இசைவாக, நடந்து கொள்ளுவதற்கு ஆவிக்கென்று விதைக்கவேண்டும். இதை செய்வதற்கு, நமது இருதயமானது சரியானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். நமது இருதயத்தை சரியானதாக வைத்திருப்பதையே முதலாவது காரியமாக தேவன் நமக்கு முன் வைத்திருக்கிறார். நமது இருதயமானது நல்லதாக ஆகும்வரை நாம் அவரது பிள்ளைகளாகக்கூட ஆக முடியாது. நாம் பாவத்தை விட்டு திரும்பி, பாவத்தை சுமப்பவரின் ஒப்புரவாகுதலை ஏற்றுக்கொள்ளவேண்டும். பிறகு "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால். அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவன்"என்கிற அவரது வார்த்தையில் கவனத்தை செலுத்த வேண்டும். இப்படிச் செய்வதால் நாம் ஆவிக்காக விதைப்பவர்களாக இருப்போம். இப்படியாக நாம் தொடர்ந்து விதைப்போமானால், சுவிசேஷ யுகத்தில் தேவனுக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற அனைத்து ஆவிக்குரிய மகிமைகளை, பெரிய பரிசை அறுவடை செய்வோம்.

நாம் எந்த அளவுக்கு கைவிடப்பட்டவர்களாக, தீமையை விதைப்பவர்களாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு நாம் அழிவுக்கென்று விதைக்கப்படுவோம். இது இரண்டாம் மரணத்தைத் தான் குறிக்கிறது என்று அல்ல; ஆனால் தகாத காரியங்களுக்கு அடிகளும் திருத்துதலும் இருக்கும், ஆகையால் மாம்சத்திற்கென்று குறைவாக யார் விதைக்கிறார்களோ அவர்கள் அதற்கேற்றாற் போல் அறுப்பார்கள். தொடர்ந்து மாம்சத்திற்கென்று விதைத்தால் அந்த அளவுக்கு பெரிய அழிவை அறுப்பார்கள். அவனது வாழ்க்கை பாவத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட்டால் ஆவிக்குரிய வாழ்க்கை முற்றிலுமாக விட்டுவிடப்பட்டிருக்குமேயானால், அதன் பலன் இரண்டாம் மரணமாகும். தெரிந்தே தேவனை எதிர்ப்பவர்களுக்கு இதுவே உச்சக்கட்ட தண்டனையாகும்.

எனவே மாம்சத்திற்கு விதைப்பது, இரண்டாம் மரணத்தை அறுக்கக்கூடியதாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். எந்த அளவுக்கு தீமை விதைக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு துன்பத்தை அறுக்கக்கூடியதாக, தேவனை விட்டு விலகக் கூடியதாக இருக்கும். ஆவியினால் ஜெநிப்பிக்கப் பட்டவர்களுக்கு, பாதை மாற்றப்படவில்லை என்றால், அது இரண்டாம் மரணத்திற்கே வழி நடத்தும், இந்த காரியம் அநேக கிறிஸ்தவ ஜனங்களிடம் தெளிவாக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்கள், ஓரளவுக்கு தேவனுடைய ஆவிக்கு இசைவாக வாழ்கிறார்கள். எப்பொழுதாவது மாம்சீக காரியங்களுக்கு இடங்கொடுத்து ஏறக்குறைய மாம்சீக சிந்தைக்கு ஊக்கமூட்டுகிறார்கள். உடனடியாக பலனை அவர்கள் உணருவதில்லை. ஆனால் தீமையான விதைகள் விதைக்கப்படுகின்றன. இந்த தீய விதைகள், மனதின் தீய எண்ணங்கள், இது பிற்காலத்தில் அதற்காக மனம் வருந்தினாலும், மீதமுள்ள வாழ்நாளில் மனதை களங்கப்படுத்தக்கூடும். இது தேவனைவிட்டும், பரலோக காரியங்களை விட்டும் பிரித்து அதற்கு எதிராக போரிடவும் செய்யும். வாழ்க்கையின் எல்லா காரியங்களும், எண்ணங்களும், விருப்பங்களும் தெளிந்த புத்தியுள்ள ஆவிக்கு, தேவனுடைய ஆவிக்கு, பரிசுத்த ஆவிக்கு இசைவாக இருக்கும்படி கிறிஸ்தவன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆவிக்கென்று விதைப்பது மற்றும் மாம்சத்திற்கென்று விதைப்பது என்பது, தேவனுடைய வழிக்கு இசைவாக வாழ்வது அல்லது எதிரியானவனின் ஆவிக்கு இசைவாக வாழ்வது என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். விதையை விதைப்பது தேவனுடைய பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதமான கனிகளைக் கொடுக்கும், அல்லது விழுந்துபோன மாம்சத்தின் கனிகளை, களங்கப்பட்ட சாத்தானின் ஆவி மற்றும் அதன் எல்லாக் காரியங்களோடு அதன் கனிகளை கொடுக்கும், நாம் மாம்சத்தின்படி வாழ்ந்தால், அது களங்கத்தை, நீதி மற்றும் ஆவியின் சிதைவை அர்த்தப்படுத்துகிறது. ஏனெனில் நாம் அழியக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

### தற்கால உலகத்தின் நிலை, எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கிறது

தற்கால உலகத்தின் நிலை, நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில் சபை அறிந்திருக்கிறபடி, முழு மனுக்குலத்திற்கும் நித்திய ஜீவனை கொடுக்க தேவன் கிருபை செய்திருக்கிறபோதும், அது ஜீவனை அளிப்பவருடன் உறவுக்குள் வரவில்லை. உலகமானது இந்த நித்திய ஜீவனுக்கான பரீட்சையில் இன்னும் இல்லாதிருந்தாலும், அவர்களது நடத்தை எதிர்கால தாக்கத்தை ஏற்படுத்தும், அவர்கள் சுயநலத்தின் வழியில் – சுய மனதின்படி – வாழ்ந்தால் அதற்கேற்றாற்போல், அவர்களிடத்தில் கிரியை செய்கிற செல்வாக்கிற்கிசைவாக அவர்கள் அறுப்பார்கள், பலனை அடைவார்கள். இது அவர்களை மென்மேலும் சீரழிந்த நிலைக்கே கொண்டுபோகும். இப்படிப்பட்ட வாழ்க்கையில் இன்னும் தொடர்ந்தால், அடுத்த யுகத்தில் நித்திய ஜீவனை அடைய இன்னும் அதிகமதிகமானவைகளை ஜெயங்கொள்ள வேண்டியிருக்கும். அவர்கள் நேர்மையான காரியங்களை

கடைப்பிடித்தால், அன்பு மற்றும் நீதியின் ஒழுங்குகளை விருத்தி செய்தால் அதிக அளவு முன்னேறினவர்களாகவும், பயனுடையவர்களாகவும் இருப்பார்கள். ஒழுங்கீனத்தையும் சுயநலத்தையும் கடைபிடித்தால், அதிக அளவு இழிவானவர்களாகவும் அவமரியாதைக்குரியவர்களாகவும் இருப்பார்கள்.

இந்த காரியத்தை ஏதேனில் இருந்த நிலைமையோடு ஒப்பிட்டு பார்க்கலாம். ஆதி தகப்பனாகிய ஆதாம் தனது சுய மனதின்படி விதைத்த போது, விலக்கப்பட்ட கனியை சாப்பிட்டபோது, அவர் தவறான வழியை தெரிந்து கொண்டார். அவர் தனது மனசாட்சியை, உயர்ந்த தீர்மானத்தை கடைபிடிக்கவில்லை. தன் மனவிருப்பத்தைக் கடை பிடித்தார். அதன் விளைவாக அவர் மரண தண்டனைக்கு கீழாக வந்தார். அது அவரை படிப்படியாக ஜீவனற்ற நிலைக்கு கொண்டு சென்றது. அவரது சந்ததியினர் அனைவரும் அவரது தண்டனையில் பங்கு பெற்றிருக்கின்றனர். வருத்தம் விதைக்கப்பட்டது. அதிகமான கசப்பும், அடைய முடியாத தூரமுமே அறுக்கப்படுகிறது. ஆனால் தேவனுடைய இரக்கத்தின் மூலம், பாவத்துடனான மனிதனின் பயங்கரமான அனுபவம் தேவதூதர்களுக்கும் தேவனுடைய அனைத்து அறிவுள்ள ஜீவிகளுக்கும் எக்காலத்திற்குமுரிய உயர்ந்த பாடத்தை போதிக்கும்.

-------------------------------

**--2321--**

## யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள்
## Choose Ye This Day whom ye will serve

*"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது. . . . தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது." மத்தேயு 6 : 24*

இரண்டு எதிரிடையான எஜமான்களுக்கு முழுமையான ஊழியத்தை ஒருவனால் செய்ய இயலாது என்ற ஊழியத்தைப்பற்றிய அடிப்படைக் கொள்கை இருக்கிறது என்பதை நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு மனதில் பதிய வைக்க விரும்பினார். ஒருவருக்கு ஊழியம் செய்யும்போது மற்றவர் நிச்சயமாக கவனிக்கப்படாமல் போகக்கூடும். அங்கே ஏறக்குறைய ஒரு முன்னுரிமை காண்பிக்கப்படும். இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய இயலாது என்பதை பொதுவாக கவனித்துவிட்டு, அந்த கொள்கையை பிரயோகித்து

"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது" என் அங்கே கூறுகிறார். அதாவது தேவனுக்கும் சுயநலத்திற்கும், நேர்மைக்கும் அநீதிக்கும் கர்த்தர் ஊழியம் செய்ய இயலாது. மனிதன் முதலாவதாக தேவனுக்கு ஊழியக்காரனாக இருந்தான். தெய்வீக குணலட்சணம் மற்றும் ஏற்பாடுகளை மதித்துணர்ந்து, அவருக்கு ஊழியம் செய்ய விரும்புவது என்பது அவனுக்கு இயற்கையானது. ஆனால் மகா எதிராளியாகிய சாத்தானால் மனுக்குலம் வஞ்சிக்கப்பட்டு அவனது கட்டுப்பாட்டிற்குள் வந்து தீமையான சக்திகளினால் தாக்கத்தைப்பெற்று அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் சுயநலம் போன்றவைகளில் ஈர்க்கப்பட்டு போனார்கள்.

தற்கால நிலைமையில் வருந்தத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால், பிறப்பி-ருந்தே ஒருவன் சுயநலத்தினால் பலவந்தப்படுத்தப்படுகிறான். தனது நேரத்தையும் தனது செல்வாக்கையும் சுயநல நோக்கத்திற்காகவும் திட்டத்திற்காகவும் பயன்படுத்த கற்கிறான். தேவன் என்பவர் எப்படியாவது ஊழியம் செய்யப்பட வேண்டியவர் என்பதை காண்பதில் தோல்வியுறுகிறான். ஆனால் மனிதர்கள் பிறந்து அநீதியில் உருவாகிறார்கள். அவர்கள் பாவத்தின் ஊழியர்களாகவும் அடிமைகளாகவும் இருக்கிறார்கள். ஆனால் நமது கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய அறிவினாலும், அவரது சீஷராவதற்குரிய நிபந்தனைகளின்படி செய்வதினாலும் அந்த அடிமைத்தனத்தி-ருந்து விடுதலையாகி நீதியின் பக்கம் செல்வதற்காக சந்தர்ப்பம் வருகிறது என்பதை நமது கர்த்தர் குறிப்பிடுகிறார்.

நமது கர்த்தரின் நாளுக்கு முன்னதாகவே சரியான நிலையை எடுப்பதற்கான சந்தர்ப்பம் வந்தது. தேவனைப்பற்றிய அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்பட்டதால், அவர்கள் தங்களை நீதியின் பக்கம் உறுதிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை பெற்றிருந்தனர். நியாயப்பிரமாண சட்டம் கொடுக்கப்பட்ட சமயத்தில் அந்த பிரமாணத்தில் தேவன் நீதியின் கொள்கைகளை வைத்தார். இஸ்ரேல் தேசம் முழுவதும் தேவனை அவர்களது இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர்கள் அவருடைய விசுவாசமுள்ள ஜனங்களாக இருப்பார்கள் என்கிற உடன்படிக்கைக்குள்ளாக சென்றார்கள். இதை அவர்கள் செய்த பிறகும் அவர்களது மாம்சத்தி-ருந்து தீயசக்திகள் வெளிப்பட்டன. அவர்கள் தேவனுடைய ஊழியர்களாக ஆகும்படி நாடினார்கள். ஆனால் அதே சமயத்தில் தேவனுக்குரிய காரியங்களையும் தங்களுக்குரிய காரியங்களையும் பிரித்து தங்களுக்கே ஊழியக்காரர்களாக ஆகும்படி நாடினார்கள்.

### ஒரு தகுதியான உதாரணம் வைக்கப்பட்டது

இயேசு இந்த குறிப்பிட்ட உண்மையை தெளிவுப்படுத்தி, அவரது நாளில் இருந்த ஜனங்களுக்கு, இந்த அரைகுறையான ஊழியம் செய்வது இயலாத காரியம் என்று கூறினார். அதாவது, இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் பண்ண இயலாது, ஏனெனில் யாரும் அதில் சந்தோஷப்படமாட்டார்கள். உலகப்பொருளுக்கு அவர்கள் ஊழியம் பண்ண விரும்பினால் தற்கால ஒழுங்குகளுக்கு ஊழியம் பண்ணுங்கள், ஆனால் தேவனை அவர்கள் சந்தோஷப்படுத்த முடியாது. அவர்கள் தேவனுக்கு, நீதிக்கு ஊழியம் செய்ய விரும்பினால், எந்த அளவுக்கு இதை செய்கிறார்களோ அந்த அளவுக்கு உலகத்தை வெறுப்பூட்டுவார்கள். ஏதாவது ஒன்றுக்கு அவர்கள் ஊழியர்களாக இருக்க வேண்டும். இரு ஊழியத்தையும் இணைந்து செய்வது இயலாத காரியம்.

நமது கர்த்தராகிய இயேசு பூமிக்கு வந்தபோது அவரது உதாரணம் இந்த நிலைக்கு இசைவாக இருந்தது. ஏனெனில் அவர் இந்த உலகை முழுமையாக உதறித்தள்ளிவிட்டு, அவரது வாழ்க்கையை முற்றிலுமாக தேவனுக்கும் அவரது ஊழியத்திற்கும் அர்ப்பணம் செய்தார். இப்படியாக நமக்கு ஒரு உதாரணத்தை அவர் ஏற்படுத்தினார். அதே ஆவியை உடையவர்கள் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும்.

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப்பலத்தோடும் அன்பு கூறுவாயாக" என்கிற யூத பிரமாணத்திற்கு இசைவாக இது இருந்தது. இந்த பிரமாணத்தை ஆசரிக்கிறவர்கள், தனக்காக ஊழியம் செய்யாமல் தேவனுக்காக முழுமையாக ஊழியம் செய்பவர்கள்.

தங்களது ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்கள் எல்லாம் தேவனுக்கென்று இருப்பவர்கள். சில சமயங்களில் நாம் "எல்லாம் இயேசுவுக்காக" என்று பாடுவதற்கு ஒப்பாக இது இருக்கிறது. இயேசுவை முன் உதாரணமாகக் கொண்டு நாம், அவர் நடந்தபடி நடந்தால், நாம் முழு மனதோடு தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களாக இருப்போம். இந்த ஊழியத்தின் பலனாக ஒரு பெரிய பரிசு இருக்கும். "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."

சபையும் அவரைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் எல்லா வகைகளிலும் முழு இருதயத்தோடும், முழுமனதோடும், முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும். இதுதான் நமது வேலை, இதை நாம் பூமிக்குரிய எல்லா ஆசைகளையும் ப-யிடுமாறு செய்ய வேண்டும். மேலும் நமது ஜீவனை சகோதரர்களுக்கென்று கொடுக்கும்படியும் செய்ய வேண்டும். இந்த நடைமுறையை கடைசி வரை உண்மையாக கடைப்பிடித்தால் இயேசு பெற்ற அதே கனம், மகிமை, சாகாமை என்கிற பரிசை நமக்கு கொண்டு வரும்.

### இராயனுடையதை இராயனுக்கு கொடுத்தல்

ஒருவன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும்போது அடிமையாக இருந்தால், தான் அழைக்கப்பட்ட நிலையிலேயே நிலைத்திருக்கக்கடவன் என்கிற அப்போஸ்தவருடைய யோசனை இந்த மூலவாக்கியத்திற்கு எப்படி ஒத்திருக்கிறது என்று கேட்கப்படலாம். (1கொரி 7:20-22) சத்தியம் நமக்கு கிடைத்தபோது அது நமது பூமிக்குரிய உறவுகளை மாற்ற வேண்டும் என்ற அவசியமில்லை என்று பரிசுத்த பவு-ன் வார்த்தைகள் நமக்கு வெளிப்படுத்துகிறது. உதாரணமாக ஒருவன் அடிமையாக இருக்கும்போது தேவனுடைய சத்தியம் அவனுக்கு கிடைத்திருந்தால், அவன் தனது பூமிக்குரிய எஜமானனை எதிர்க்கக்கூடாது. "கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகைதேடாதே" என்று அப்போஸ்தலர் கூறும்போது, அவர் இருதயத்தைப்பற்றிக் கூறாமல், சரீரத்தைப் பற்றி கூறுகிறார். நமது சரீரங்கள் ஏதாவது ஒரு வகையில் கட்டப்பட்டிருக்கக்கூடும். இது பழங்காலத்தைப் போன்ற அடிமைத்தனமாக இருக்கலாம் அல்லது நமது ஊழியத்திற்கு ஊதியம் தர விரும்புகிறவர்களுக்கு நாம் ஊழியர்களாக ஆகி இருக்கலாம். நாம் தெய்வீக சட்டத்திற்கு விரோதமாகவோ, அல்லது நமது மனசாட்சிக்கு விரோதமாகவோ எதுவும் செய்யக்கூடாது. நாம் நமது பூமிக்குரிய எஜமானர்களுக்கு உண்மையாக ஊழியம் செய்ய வேண்டும். அவர்கள் நமது நேரத்தை விலைகொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அல்லது அதிகப்படியான நமது நேரத்தை வாங்கியிருக்கிறார்கள். ஒப்பந்தத்தின்படி அவர்களுக்குரியதை மனசாட்சியின்படி நாம் கொடுக்க வேண்டும். ஒருவர் இராணுவத்தில் இருந்தாலும் வேறு எங்கு இருந்தாலும் அவர் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

ஒருவர் தேவனுக்கு செய்யும் ஊழியத்தை இது தடை செய்யாது. ஏனெனில் நமது கர்த்தர் "இராயனுடையதை இராயனுக்குச் செலுத்துங்கள்'' என்று கூறியிருக்கிறார். இந்த காரியத்தில் உண்மையாயிருப்பவர்கள் பரலோக எஜமானனின் சித்தத்தை செய்கிறார்கள். இதில் எந்தவித முரண்பாடும் இல்லை, எல்லாம் முழுவதுமாக இசைவாகவே இருக்கிறது. நமது பூமிக்குரிய எஜமானன், பரலோக எஜமானுடைய பிரமாணத்துக்கு விரோதமாக ஏதாவது செய்ய சொன்னால்தான் அங்கே முரண்பாடு உண்டாகும். நமது பரலோக எஜமானன் அங்கீகரிக்காத எந்த காரியத்தை நாம் செய்தாலும் நாம் துன்பத்தை அனுபவிக்க வேண்டும். எனவே நமது மனசாட்சியும் அசுசிபடுகிறது.

எதிர்காலத்தைப்பற்றி கவனிக்கும்போது, தற்கால எஜமானனும், இந்த பழைய முறைமைகளின் ஆட்சியாளனுமாகிய சாத்தான், ஜனங்களை மோசம் போக்காதபடி ஆயிர வருஷமளவும் கட்டப்பட்டிருப்பான் என்றும், உலகின் புதிய எஜமானனாக, புதிய ராஜாவாக கிறிஸ்து (இயேசுவும் சபையும்) இருப்பார் என்றும் நாம் பார்க்கிறோம். அப்பொழுது இந்த கொள்கை எப்படி பிரயோகிக்கப்படும் என்று நாம் கேட்கிறோம். அங்கே கீழ்ப்படிவதற்கு ஒரே ஒரு எஜமான் மட்டுமே இருப்பார் என்பதே பதில், அங்கே இராயனுக்கு கொடுக்க வேண்டியது ஏதும் இருக்காது. இவர் ஒருவரே கட்டளையிட வல்லமையும் அதிகாரமும் உடையவர் என்பதை எல்லாரும் அறிந்திருப்பார்கள். தேவனுடைய அன்பு, ஞானம், வல்லமை, நீதி ஆகியவைகளைப் பற்றிய அறிவினால், தேவனைப்பற்றிய மகிமையின் அறிவினால் பூமி நிறைந்திருக்கும். அவர் என்ன கட்டளையிட்டாலும் அது சரியானதாகவும், ஒவ்வொருவரும் அதை முழுவதுமாக புரிந்து, கற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

### வேதத்தின்படி "பொல்லாதவர்கள்"

வேதத்தில் சாத்தான்தான் மனுக்குலத்தின் வஞ்சகனாக குறிப்பிடப்பட்டிருக்கிறான். அவன் இருளுக்குப்பதிலாக வெளிச்சத்தையும், வெளிச்சத்திற்கு பதிலாக இருளையும் வைக்கிறான். தேவன் கிறிஸ்து மூலமாக முழு உலகத்தையும் ஆயிர வருட யுகத்தில் தேவனைப் பற்றிய சரியான, உண்மையான அறிவுக்கு கொண்டு வருவார். வஞ்சகம் இனிமேலும் அனுமதிக்கப்படாது. நீதியானது உண்மையிலேயே என்ன என்பதையும், அதன் பரிசு என்ன என்பதையும், அது எப்படி விரும்பத்தக்கதாக இருக்கிறது என்பதையும் உலகம் அறிந்துகொள்ளும். அதன் விளைவாக, பெரும்பாலானவர்கள் ஒரே எஜமானனிடம் கவனத்தை செலுத்துவதில் சந்தோஷம் அடைவார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். இதற்கு மாறானவர்கள் சாத்தானின் மனோபாவத்தை உடையவர்களாக இருப்பார்கள், அப்படிப்பட்டவர்கள் அழிக்கப்படுவார்கள். ஒருவன் நன்மையானதை அறிந்து கொள்ளும்பொழுது, அந்த நன்மை நியாயமானதாகவும் கிடைக்கக்கூடியதாகவும் செய்யப்படும் பொழுது அவன் நன்மையை செய்வதற்கு பதிலாக தீமையை தேர்ந்தெடுத்தால், அவன் மரணத்தில் அழியட்டும். இது தான் தன்டனையாக இருக்கும். இப்படிப்பட்டவன் "பொல்லாதவனாகவும்" திருத்த முடியாதவனாகவும் கருதப்படுவான்.

"பொல்லாதவன்" என்ற வார்த்தை வேதத்தின் கண்ணோட்டத்தில் தெரிந்தே தீமை செய்கிறவனையே குறிக்கிறது. எனவே பொல்லாதவர்கள் எல்லோரும், தீமை என்பதை தீமை என்று அறிந்து, வேண்டுமென்றே, தெரிந்தே அதை செய்கிறவர்கள், இரண்டாம் மரணத்தில் சாவார்கள். உண்மையான ஒரே எஜமானனுக்கு ஊழியம் செய்கிறவர்களைத் தவிர வேறு யாரும் குறித்த காலத்தில் உயிரோடு இருக்கமாட்டார்கள். தற்காலத்தில் மனுக்குலத்திற்கு இருக்கும் கஷ்டம் அறியாமை தான், தேவன் இன்னும் அதை உலகத்தி-ருந்து நீக்கவில்லை. தற்காலத்தில் உலகத்தை நிறைவான பாவத்தின் பாடத்தை கற்றுக்கொள்ளவும், அதைத் தொடர்ந்து வரக்கூடிய பாடங்களுக்கு தயாராயிருக்கும்படிக்கும் தேவன் அறியாமையையும், இருளையும்

--2323--

அனுமதித்திருக்கிறார். "கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான்." ஆனால் குருடாக்கப்பட்ட இந்த மனங்கள் காணும்படி தடைகள் சீக்கிரத்தில் நீக்கப்படும்.

வெளிச்சத்தின் பிள்ளைகளானவர்களுக்கும், கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரது சீஷர்களானவர்களுக்கும், தெய்வீக திட்டத்தையும் சித்தத்தையும் மிகவும் தெளிவாக காண்கிறவர்களுக்கும், அதைக் காணாதவர்களைக் காட்டிலும் மிக அதிகமான பொறுப்பு இருக்கிறது. பெரிய ஆசீர்வாதம் நமக்கு இருக்கிறது – தற்கால சந்தோஷமும், ஆறுதலும், சமாதானமும் அறிவும் மாத்திரமல்ல, "நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும்" உறுதிப்படுத்தும் நம்பிக்கையையும் எஜமானனின் உடன் சுதந்திரராகும் நம்பிக்கையையும் நாம் பெற்றிருக்கிறோம், இருளை சிதறடிக்கும் வேலையை கிறிஸ்துவிடம் தேவன் விட்டுவிடுவார். தேவன் உலகத்தை அதன் வழியில் செல்லவிட்டிருக்கிறார். இந்த இடைக்காலத்தில் அவர் உலகத்திற்கு, இரட்சகரை, மீட்பரை அதாவது கிறிஸ்துவை கொடுத்திருக்கிறார். இந்த கிறிஸ்து சீக்கிரத்தில் முழு உலகத்தின் அதிகாரத்தை எடுத்துக் கொள்வார். அவர் வெளிச்சத்தை, சத்தியத்தை பிரகாசிக்கப் பண்ணி, பூமியை அறிவினாலும் ஆசீர்வாதத்தினாலும் நிரம்பப்பண்ணுவார், பிறகு சத்திய வெளிச்சம் எல்லா இடங்களிலும் பிரகாசிக்கும். அதில் நடக்காதவர்களுக்கு மன்னிப்பு இருக்காது. கடைசியாக உண்மையான எஜமானனுக்கு ஊழியம் செய்வதா வேண்டாமா என்று ஒவ்வொருவரும் தீர்மானிக்க வேண்டும்.

--------------------------------------------

## The sum of all Graces

## எல்லா கிருபைகளின் மொத்தம்

*"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." 1 கொரிந்தியர் 13:13*

புதிய சுபாவத்திற்கு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு அப்பொழுது அளிக்கப்பட்ட பல்வேறு ஆவியின் அற்புத வரங்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறிக் கொண்டிருக்கிறார். அந்த காலக்கட்டத்தில் இந்த விசேஷித்த வரங்களில் யாராவது குறைவுபட்டிருந்தால், அவர் இன்னும் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராகவில்லை என்று அனைத்து விசுவாசிகளுக்கும் வெளியரங்கமாகும். இந்த தெய்வீக வரங்கள் ஆதிகால சபை ஆவியில் வளருவதற்கு உதவிகரமாயிருந்தன. அந்நாட்களிலே வேதாகமம் இல்லை. அப்படி அதை பெற்றிருந்தாலும் மிகச் சிலரே அதை படித்திருப்பார்கள். எனவே விசேஷித்த உதவி அவர்களுக்கு தேவையாயிருந்தது. அதன் பிறகு அவை சபைக்கு தேவைப்படவில்லை. பிறகு அவைகள் நீக்கப்பட்டன.

அப்போஸ்தலர் கொரிந்து சபைக்கு எழுதிய இந்த நிரூபத்தில் இந்த பல்வேறு வரங்களைக் குறித்து எழுதிய பிறகு"இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்"என்று கூறுகிறார். பிறகு அன்பு என்னும் ஆவியின் கனியின் மிகச் சிறந்த மேன்மையைப் பற்றி குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் யாராயிருந்தாலும், இந்த கனியில் கொஞ்ச அளவாவது பெற்றிருக்க வேண்டும். அது சிறு பூ அளவில் மொட்டாகவோ, கொஞ்சம் பழமாகவோ, முழுவளர்ச்சியடைந்த பழமாகவோ அல்லது பழுத்த பழமாகவோ இருக்கலாம். இருதயத்தை பார்க்கிற நமது பிதாவாகிய தேவன், இருதயததில் அவரது பரிசுத்த ஆவி மாம்சத்தை கட்டுப்படுத்தவும். சிந்தை, வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றை வழிநடத்தவும் எப்படி நாடுகிறது என்பதையும் அறிவார். நாம் ஒருவருக்கொருவர் நமது இருதயங்களை நியாயந்தீர்க்க இயலாதவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலர், தன்னைத்தானே சரியாக நியாயந்தீர்க்க இயலவில்லை என்றும் ஆனால் நியாயத்தீர்ப்பை தேவனிடம் விட்டுவிட்டதாகவும் கூறினார். தனது இருதயம் உண்மையுள்ளதாய் இருக்கிறது என்பதையும், தேவன் அவர் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியிருக்க தான் முயன்றதையும் அவர் அறிந்தவராக இருந்தார். அவர் செய்யாதிருக்க வேண்டியதை செய்ய தனது இயலாமையை அவர் உணர்ந்திருந்தாலும். அவரது இருதயத்தின் உண்மைத் தன்மையை ஆண்டவர் ஏற்றுக் கொள்வார் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகையால் அவரால் முடிந்ததை செய்துவிட்டு, மற்றவைகளை தேவனிடம் விட்டுவிடுவார்.

தேவனிடத்தில் நாம் வைத்திருக்கிறது விசுவாசமும் நம்பிக்கையும் அன்பு என்னும் கனியை அதன் எல்லா மாறுபட்ட அழகான அம்சங்களிலும் ஆர்வமுடன் அபிவிருத்தி செய்ய நம்மை வழி நடத்தும். தயவு என்பது அன்பின் ஒரு பாகமாக இருக்கிறது; சாந்தம் என்பது அன்பின் ஒரு பாகமாக இருக்கிறது; அதே போல் மனத்தாழ்மையும் சகோதர அன்பும் பாகமாக இருக்கிறது. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையினிடத்திலும் இருக்கும் பிரச்னை, நான் எவ்வளவு உயரமாக உடல் கட்டோடு இருக்கிறேன் என்பதல்ல; பார்க்க அழகாக இருக்கிறேனா அல்லது நன்கு படித்திருக்கிறேனா அல்லது தசையோடு நன்கு இணைக்கப்பெற்றிருக்கிறேனா என்பதல்ல; எத்தனை அல்லது எத்தனை நல்ல பிரசங்கங்களை நான் செய்திருக்கிறேன் என்பதல்ல; அல்லது எத்தனை பேரை நான் சத்திய அறிவுக்குள் கொண்டு வந்திருக்கிறேன் என்பதல்ல; ஆனால் மிக முக்கியமான கேள்வி, அன்பின் குணலட்சணங்களில் நான் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறேன் என்பதாகும். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக நான் எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறேன் என்பதாகும்.

### அன்புதான் அடிப்படையானது

அன்பு என்கிற இந்த குணம் ஏன் தேவனுடைய வசனத்தில் அவ்வளவு முக்கியமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது**?** நாம் பதிலளிக்கிறோம், இதுதான் முதலாவது காரியம், மிகவும் முக்கியமான காரியம், அடிப்படையானது. இது தேவனுடைய பிரமாணங்களை நிறைவு செய்கிறது. மேலும் இந்த யுகத்தில் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிற ப–யின் அன்பு, பூரண பிரமாணத்தின் தேவைகளுக்கு மேலாக செல்கிறது. ஆனால் ஏன் அன்பு முதலாவதாக வைக்கப்படுகிறது**?** தேவன் தன்னிச்சையாக அதை வைத்ததினால் அல்ல, தமது அதிகாரத்தில் அதை அப்பியாசப்படுத்தினதினாலோ அல்லது அது முதலாவதாக இருக்க வேண்டும் என்று அறிவித்ததினாலோ அல்ல. காரணம் என்னவெனில், வேறு எந்த குணத்தைக் காட்டிலும் இது காண்பிக்கப்படுகிற அனைவருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறதோடு, இது அவ்வளவு வசீகரமானதாகவும், அவ்வளவு இனிமையானதாகவும் அழகானதாகவும் இருக்கிறது. இது தேவனுடைய குணலட்சணத்தின் நிஜமான சாரம்சமாக இருக்கிறது. "**தேவன் அன்பாக இருக்கிறார்**!" இந்த குணலட்சணம் தேவனுடைய தனித்தன்மையை குறிப்பிடுகிறது. தேவன் சர்வ நீதியும் சர்வ வல்லமையும், உடையவராயிருக்கும் போது, தேவன் நீதியாயிருக்கிறார் என்றோ, தேவன் வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்றோ நாம் கூறாமல், தேவன் அன்பாயிருக்கிறார் என்றே கூறுகிறோம். அன்பின் உத்திரவின்படியும், அங்கீகாரத்தின்படியும், தேவன் தமது மகா வல்லமையை

பயன்படுத்துகிறார். தமது அன்பின மகிமையான பண்பிற்கு இசைவாகவே தேவன் தமது நீதியை பயன்படுத்துகிறார். அவரது எல்லா செயல்களுக்கும் அன்பே முக்கிய உற்பத்திஸ்தானமாயிருக்கிறது.

தேவனைப் போன்று இருப்பவர்கள். அன்புடையவர்களாயிருக்க வேண்டும்; அவர்களது வாழ்க்கையிலும் குணலட்சணத்திலும் அன்பே ஆதிக்கம் செலுத்த வேண்டும். அன்பும் நீதியும் பிரிக்க முடியாதது. அன்பு முடிவற்றதாய் நித்தியமாய் தொடர வேண்டியதாயிருக்கிறது. இந்த கிருபையின் குணலட்சணத்திற்கு உற்சாகமாக தன்னுள் கொண்டிருப்பவர்கள் மட்டுமே நித்தியமாய் வாழ்வார்கள். எனவே ஒவ்வொரு வாழ்க்கையிலும் இதன் அபிவிருத்தியின் அதிமுக்கியத்துவத்தை நாம் காண்கிறோம்.

---------------------------------

**--2326--**

## The White Raiment of The Kingdom
# இராஜ்யத்தின் வெண்வஸ்திரம்

*"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுத்தகத்தி-ருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்." வெளி 3:5*

கனம், மகிமை, ஆசீர்வாதத்தைப் பெறப்போகிற தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் ஜெயங்கொள்ளுத-ன் மூலம் தங்களது விசுவாசத்தை காண்பிக்க வேண்டும் என்கிற கருத்தை, வேதாகமம் முழுவதும் சொல்லப்பட்டுள்ள கருத்தை நமது தலைப்பு வசனம் கூறுகிறது. கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்தில் சித்தத்தை ஜெயங்கொள்ளுதல் போதாது, அதைத் தொடர்ந்து சோதனைகளும் பரீட்சைகளும் சகிக்கப்படவேண்டும், ஜெயங்கொள்ளும் விதத்தில் இவைகள் சந்திக்கப்படவேண்டும். அர்ப்பணம் செய்யப்பட்டு, சோதனைகளும் பரீட்சைகளும் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு தனிப்பட்ட நபர் அந்த சோதனைகளாலும் பரீட்சைகளாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டால், அவன் போதுமான விசுவாசத்தில் இல்லை என்பதை நிரூபிக்கும். தேவையான ஒவ்வொரு சமயத்திலும் கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற அவரது கிருபை போதுமானதாக இருக்கும். 2கொரி 12:9

தேவனுடைய கிருபை நமக்கு போதுமானதாக இருந்தாலும், நாம் சில சமயங்களில் சோதனைக்குள் விழமாட்டோம் என்று பொருளல்ல. அஜாக்கிரதையினிமித்தம் நம்மை அறியாமல் நாம் சோதனைக்குட்படக்கூடும், மேலும் "குற்றத்தில் அகப்படக்கூடும்." ஆனால் அவைகளை நாம் வெற்றிகொள்ள முடிந்தவர்களாக, அந்த சோதனைகளி-ருந்து நம்மை ஜெயங்கொண்டவர்களாக வெளியே கொண்டு வருவதற்கு கர்த்தருடைய கிருபை போதுமானதாக இருக்கிறது. சோதனைக்குள் விழுதல் என்பது சோதனையில் விழுதல் என்று பொருள்படாது – சோதிக்கப்படும்போது விழுதல் என்று பொருள்படாது. ஆனால் ஒருவன் தற்கா-கமாக ஜெயங்கொள்ளும்போது, அது மாம்சீக தூண்டுதலுக்கு இடம் கொடுப்பதாக இருந்தாலும் சரி, ஆவி அல்லது மனதின் யோசனையுடனானதாக இருந்தாலும் சரி, பாவம் எத்தன்மையானது, எந்த அளவிலானது என்பது முக்கியத்துவம் பெறுகிறது. நாம் எப்பொழுமே, மாம்ச பிரகாரமாக முழுமையாக, முற்றிலுமாக ஜெயங்கொள்ள முடிந்தவர்களாக இருக்க முடியாது, ஆனால் சிந்தையில் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் சிந்தையில் ஜெயங்கொள்ள வேண்டும், இல்லையென்றால் நாம் ஜெயங்கொண்டவர்களாக முடியாது.

இந்த ஜெயங்கொள்ளுதல் என்பது நமது அர்ப்பணம் செய்ததி-ருந்து முதல் மரணம் வரையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் படிப்படியாக தொடர்ந்து முன்னேறுகிற ஒரு வேலையாகும். ஆனால் நமது தலைப்பு வசனம், ஆரம்பம் அல்லது இடையிலான வேலையைக் குறிக்காதபடி, ஒரு தனிப்பட்ட நபர் தனது சோதனையின் முடிவில், தனது ஓட்டத்தின் இறுதியில் ஜெயங்கொள்ளுகிறதை குறிப்பிடுகிறது. ஆகையால் இந்த நீதியின் ஜெயங்கொள்ளுத-னால் அவன் ஜெயங்கொண்டவனாக பிரிக்கப்படுகிறான். ஆகையால் இப்படி ஜெயங்கொண்ட ஒருவன் வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படுவான்.

### வெண்வஸ்திரம் நமக்கு கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறது

நமது கிறிஸ்தவ அனுபவத்தின் மிக ஆரம்பத்தில், நாம் அடையாளமான வெண்வஸ்ரத்தினால் தரிப்பிக்கப்படுகிறோம் என்று வேதம் கூறுகிறது. இந்த வெண்வஸ்திரம் நீதிமானாகுதலைக் குறிக்கிறது. நாம் எல்லாவற்றிலுமிருந்தும் இலவசமாக நீதிமானாக்கப்படுகிறோம். அது ஒரு கறையற்ற வஸ்திரம். சில சமயங்களில் இது கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது கிறிஸ்து மூலம் நமக்கு கிடைக்கிறது. இது அவர் மூலமாக மட்டுமே பெறக்கூடியதாக இருக்கிறது. இந்த வஸ்திரத்தை அவரால் நமக்கு சாட்ட முடிகிறது. கடனாக கொடுக்க முடிகிறது, தற்கா-கமாக கொடுக்க முடிகிறது. இது க-யாண வஸ்திரம் என்று கூட அழைக்கப்படுகிறது. கிழக்கு தேசத்து திருமணங்களில் ஒவ்வொரு விருந்தாளியும் திருமண வஸ்திரத்தினால் தரிப்பிக்கப்படுவது ஒரு வழக்கமாக இருந்தது. க-யாண விருந்துக்கு வந்தவுடனே இந்த க-யாண வஸ்திரம் விருந்தளிப்பவனால் விருந்தாளிக்கு கடனாக கொடுக்கப்பட்டது.

மெல்-ய வெண்வஸ்திரம் பரிசுத்தத்தை குறிக்கிறது. ஆகையால் கிறிஸ்து தமது புண்ணியத்தை நமக்கு கொடுக்கும் போது, அது நமது அபூரணங்களை மூடுகிற ஒரு வெண்வஸ்திரமாக இருக்கிறது. அது நம்மை நீதிமானாக்கும் பொருட்டு அவர் நீதியை நம்மேல் சாட்டுதலாக இருக்கிறது. நமது வஸ்திரத்தை உலகத்தினால் கறைபடாதபடி பாதுகாக்க எச்சரிக்கப்படுகிறோம். நம்மீது சாட்டப்பட்ட நீதியை நாம் பாதுகாத்து பராமரிக்க வேண்டும். ஆனால் நாம் அதை நமது முழு பலத்தால் பராமரிக்க முடியாது, சில சமயங்களில் நாம் சொல்லக்கூடாது என்று நினைக்கிற காரியங்களை நமது நாவு பேசும், நாம் விரும்பாத காரியங்களை சில சமயங்களில் நமது கைகள் செய்யும். எனவே நாம் தெரிந்தே செய்யாத களங்கங்களையும் மீறுதல்களையும் நீக்குவதற்கு தேவன் ஒரு வழியை ஏற்பாடு செய்திருக்கிறார். நாம் அறியாமல் செய்த மீறுதல்களை விலையேறப்பெற்ற இரத்தத்தினால் பரிசுத்தம் செய்வதற்கு நாம் அனுதினமும் ஏறெடுக்கிற ஜெபமே அந்த வழி. இப்படியாக நாம் அனுதினமும் உலகத்தினால் கறைபடாதபடி நமது வஸ்திரங்களை காத்துக்கொள்கிறோம். இப்படியாக நமது வெண்வஸ்திரம் பராமரிக்கப்படுகிறது – பராமரிக்கப்படவேண்டும்.

## நமக்கே உரிய வெண்வஸ்திரம்

ஆனால் நமது இரட்சகரின் நீதி நம்மேல் சாட்டப்பட்டிருப்பது நமக்கு போதாது. இந்த சாட்டுதல் ஒரு தற்கா–க ஏற்பாடுதான். நாம் நமது சொந்த நீதியை பெறுவதற்குரிய இடத்திற்கு வர வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது மாம்சம் அபூரணமானது. பரிசுத்த பவுல் கூறுவதுபோல் நாம் செய்ய முடிந்த காரியத்தை செய்ய முடியாமல் போகும். நாம் எவ்வளவு தான் முயன்றாலும் தவறு நடந்துவிடுகிறது. ஆனால் நாம் ஜெயங்கொண்டவர்கள் என்பதை – “முற்றும் ஜெயங்கொண்டவர்கள்” என்பதை நிரூபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தற்கால ஜீவியத்தில் சோதனையின் முடிவில் ஜெயங்கொண்டவர்கள் அனைவரும் புதிய சரீரத்தை பெறும்படி தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். புதிய சரீரம் உண்மையான பரிசுத்தமுள்ளதாக இருக்கும். இப்படியாக அப்போஸ்தலர் கூறுவதுபோல, நாம் “நம்முடைய பரலோக வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ளுவோம்.”

ஆகையால் நமது வஸ்திரம் சாட்டபபட்ட பூரண வஸ்திரத்தி–ருந்து உண்மையான பூரணத்தை குறிக்கிற விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறதற்கு மாற்றப்படும். உயிர்த்தெழுத–ல், இங்கே “வெண் வஸ்திரம்” என்று சித்தரிக்கப்பட்டிருக்கிற கறை திரையற்ற பரிசுத்தத்தை சுதந்தரித்துக் கொண்டிருக்கிற சரீரத்தை நாம் பெற்றுக் கொள்ளுவோம்.

## “இராஜாவுக்கு முன்பாக நிற்க வேண்டும்”

மேலும் நாம் “ஜீவபுத்தகத்தி–ருந்து அவனது நாமத்தை கிறுக்கிப்போடமாட்டேன்” என்று கர்த்தர் கூறுவதையும் நாம் வாசிக்கிறோம். அந்த ஜீவ புத்தகத்திலே, உண்மையான தேவனுடைய பிள்ளைகளானவர்கள், தேவனோடே “ப–யினால் உடன்படிக்கை பண்ணினவர்கள்” தங்களது சித்தத்தை அர்ப்பணித்தவர்கள் மற்றும் ஜீவப–யாக தங்களது சரீரங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் ஆகியோரின் நாமங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இப்படி எழுதப்பட்டவர்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும்போதும், தமது விசுவாசத்தை மெய்ப்பித்து காண்பிக்க ஆரம்பிக்கும் போதும் ஆட்டிக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் அவர்களது நாமங்கள் எழுதப்பட்டன. இவர்களது விசுவாசம் சோதிக்கப்படுவதற்கு முன்னமேயே இவர்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் தரிப்பிக்கப்பட்டவர்கள். ஆகையால் அவர்களது நாமங்களும் சோதிக்கப்படுவதற்கு முன்னமேயே எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் உண்மையுள்ளவர்களாக நிலைத்திராவிட்டால், அவர்களது நாமம் ஜீவபுத்தகத்தி–ருந்து கிறுக்கப்படும். ஆனால் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர்களது நாமங்கள் ஜீவ புத்தகத்தி–ருந்து கிறுகிப்போடப்படாது. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை அன்பு செலுத்துகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற மகிமையான காரியங்களை அவர்கள் அடைவார்கள். வெளி 21:7

இதற்கும் மேலாக ஆண்டவர் கூறுகிறதாவது: “என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.” இப்படிப்பட்ட குணலட்சணங்களையுடைய ஜெயங்கொண்டவர்களின் நாமங்களை பிதாவுக்கு முன்பாகவும் அவரது தூதர்களுக்கு முன்பாகவும் அறிக்கையிடுவதில் அவர் வெட்கப்படாமல் சந்தோஷப்படுவார் என்று இதன் மூலம் நமக்கு சொல்லப்படுகிறது. நாம் “மகிமையின்மேல் மகிமையடைந்து” கர்த்தருடைய சாயலுக்கு மறுரூபமடைய வேண்டியவர்களாயிருக்கிறோம். (2 கொரி 3:18) முடிவில், கர்த்தர், என்னுடைய சீஷன் இங்கே ஒருவன் இருக்கிறான். அங்கே ஒருவன் இருக்கிறான், இவர்கள் எனது அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஜெயங்கொண்டவர்கள் என்று அறிக்கையிடுவதில் வெட்கப்படாத அளவுக்கு சிறப்பாக அபிவிருத்தி அடைந்தவர்களாக ஜெயங்கொண்ட இவர்கள் அனைவரும் இருப்பார்கள். ஆனால் அவரைப்பற்றி வெட்கப்படுகிறவர்களைக் குறித்து அவர் வெட்கப்படுவார். அப்படிப்பட்டவர்களைத் குறித்து அவர் கூறுகிறதாவது: “என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைத் குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.” லூக் 9:26

இது பாரபட்சம் காட்டுகிற ஒரு காரியமல்ல, ஆனால் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடைகிற காரியம். முடிவு வரை அவர்கள் சகிக்கவில்லையென்றால், ஜெயங்கொண்டவர்களாக நிரூபிக்கப்படவில்லையென்றால், அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கும் அவர்களுடைய ஆண்டவரோடு இணைவதற்கும் தகுதியற்றவர்களாக இருப்பார்கள்.

சிறுமந்தைக்கு வேறுபட்ட, திரள் கூட்டம் என்று அழைக்கப்படுகிற மற்றொரு வகுப்பார் வேதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப்பற்றிய ஒரு சிந்தையை இது கொண்டு வருகிறது. இது நிழலான ஆசாரிய வகுப்பாருக்கு வேறுபட்ட, நிழலான லேவி வகுப்பார் இருப்பதற்கு ஒப்பாக இருக்கிறது. இந்த திரள் கூட்டத்தாரின் நாமங்கள் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையான பொருளில் அவர்கள் ஜெயங்கொண்டவர்கள் அல்ல. அவர்கள் உண்மையுள்ளவர்களாக நிற்கவில்லை. உண்மையுள்ளவர்கள் என்று அவர்கள் நிரூபிக்காததால், மணவாட்டி வகுப்பாரைப் போல் இவர்கள் பிதாவின் முன்பாகவும் பரிசுத்த தூதர்கள் முன்பாகவும் அறிக்கைப் பண்ணப்படமாட்டார்கள்.

பிதாவுக்கு முன்பாக மணவாட்டி கொண்டு வரப்படுவாள், “அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகளும்” அங்கே இருப்பார்கள். ஆனால் பின்னாலே சொல்லப்பட்டவர்கள் மணவாட்டியாக அறிக்கை பண்ணப்படமாட்டார்கள்.

அவர்களது நாமங்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தி–ருந்து கிறுக்கப்படும் என்று நாங்கள் சொல்லமாட்டோம். அவர்களது நாமங்கள் அங்கே இருக்கும். ஆனால் இரண்டாம் மரணத்திற்கு போகிறவர்களின் நாமங்கள் அந்த புத்தகத்தி–ருந்து நிச்சயமாக கிறுக்கப்படும். அவர்கள் நித்திய அழிவினால் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்.

### "மகா உபத்திரவத்தில்" வஸ்திரம் வெளுக்கப்பட்டது

சிறுமந்தைக்கு கொடுக்கப்பட்டது போன்ற "வளமான வாசல்" திரள் கூட்டத்தாருக்கு கிடைக்காது. வெண் வஸ்திரத்தை பொருத்தவரை இரு வகுப்பாருக்கும் இதே வேறுபாடே இருக்கிறது. கிறிஸ்துவின் சாட்டப்பட்ட நீதியின் வஸ்திரத்தை அனைவரும் பெற்றபோது, சிலர் தங்கள் வஸ்திரங்களை "உலகத்தால் கறைபடாதபடிக்கு" காத்துக் கொள்ளவில்லை. அவர்கள் உலகத்தோடு தொடர்பு கொண்டதால் அவர்களது வெண் வஸ்திரம் கறைபட்டு அழுக்கடைந்திருக்கிறது. அவர்களது நீதி அல்லது கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் ஒப்புக்கொடுக்க முடியாதபடி ஆயிற்று. ஒரு கறை அதில் பட்டவுடனேயே அதை சுத்தப்படுத்தாமல் அப்படியே விட்டதினாலும், மேலும் கறைகள் படிய அனுமதித்ததாலும், அவர்களது வஸ்திரமானது மிகவும் அழுக்கடைந்துவிட்டது. அவர்களது ஓட்டத்தின் முடிவிலே, சோதிக்கப்படும் நாள் வந்த போது, அது கறையுள்ளதாக காணப்படுகிறது. இன்னும் அதை அவர்கள் அணிந்திருக்கிறார்கள். நீதியின் வஸ்திரத்தை இன்னும் நீக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரை விடவில்லை, அவரும் அவர்களை கைவிடவில்லை. ஆனால் அவர்களை சுத்தப்படுத்துவதற்கு ஆண்டவர் கொடுத்திருந்த உபாயத்தை பயன்படுத்த தவறிவிட்டார்கள்.

வெளிப்படுத்தினாகமத்தில் இந்த வகுப்பார் "திரளான கூட்டம்," திரளான சேனை என்று சொல்லப்படுகிறது. இவர்கள் "மிகுந்த உபத்திரவத்தி–ருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்கள்" என்று நாம் சொல்லப்படுகிறோம். அனுதினமும் சுத்திகரிக்கும் வேலையை செய்து, தேவனுடனான அவர்களது நீதியை பராமரித்து மாறுதலுக்கு தயாராவதற்கு பதிலாக (உண்மையாக இருப்பதின் மூலம்) அந்த உயர்ந்த ஸ்தானத்திற்கு தகுதியற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்களது வஸ்திரம் அவர்களைவிட்டு நீக்கப்படுவதில்லை. ஆனால் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தில் வேதனைப்பட்டு, பரிசுத்தப்படுத்தும் இரத்தத்தினால் தங்கள் வஸ்திரங்களை வெளுக்க தயாராயிருப்பார்கள். அதனிமித்தம் அவர்கள் வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு, அவர்களின் உயிர்த்தெழும் சரீரங்கள் பரிசுத்தமானதாக இருக்கும். ஆனால் அவர்கள் இதை "மிகுந்த உபத்திரவத்தின்" மூலமே அடைவார்கள். வெளி 7:9–14 பார்க்கவும்.

--------------------------------

## "Light Afflictions" Here - "Glory to Follow"

## "இங்கே இலேசான உபத்திரவம்" - "பின்வரும் மகிமைகள்"

*"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்."*
*2 கொரி 4:8-10*

அப்போஸ்தலர் பவுல் இங்கே கொரிந்து சபைக்கு எழுதுகிறார். இன்னும் விசாலமான அர்த்தத்தில் அவர் சுவி சேஷயுக முழு சபைக்கும் எழுதுகிறார். அவர் தன்னுடைய மற்றும் தன்னோடு சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடைய அனுபவங்களை தெளிவாக ஓரளவுக்கு விவரிக்கிறார், இடம் விட்டு இடம் அவர் பிரயாணம் செய்தார்; ஆனால் இப்பொழுது நமது சகோதரர்கள் செய்கிற பிரயாண ஊழியம் போல அல்ல. ஏனெனில் அவர் சில சமயங்களில் ஒரே பட்டணத்தில் ஒரு முழு வருடம் அல்லது ஒரு வருடத்திற்கு மேலாக கூட கழித்தார். எனினும் அவர் பிரயாணியாக, ஆண்டவருடைய மற்ற ஊழியர்கள் சென்றிராத இடங்களுக்கு செல்பவராக, யூதர்களுக்கும் சத்தியத்தை கேட்க ஆவல் உள்ளவர்களாக இருக்கிறவர்கள் இடத்திற்கும் செல்லக்கூடியராக இருந்தார். இந்த பிரயாணங்களில் சில உதவிக்காரர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார், ஆகையால் தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் அப்போஸ்தலரை மாத்திரமல்ல (ஏனெனில் அவரது குழுவில் அவர் மட்டும்தான் அப்போஸ்தலர்) அவரோடு இருந்த மற்றவர்களையும் குறிப்பிடுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் இந்த நிரூபம், ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள் எல்லாம் கர்த்தரால் திட்டமிடப்பட்டு கிறிஸ்தவ யுக முழுவதிலும் உள்ள அனைத்து பரிசுத்தவான்களின் பயன்பாட்டுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலருடைய உதவிக்காரர்கள் எல்லாம், கர்த்தரின் பொதுவான ஊழியர்களாகவும், அவரவர்களுக்கு உரிய ஒரு ஊழியத்தை செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிற அனைத்து ஊழியக்காரர்களுக்கும் இது எழுதப்பட்டதாக காணப்படுகிறது. இந்த நிரூபத்தில், செய்யப்படுகிற ஊழியத்தில் வித்தியாசங்கள் உண்டு என்று குறிப்பிடுகிறார், "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்." மேலும் கிறிஸ்துவின் சரீரத்தின் பல்வேறு அங்கத்தினர்களின் அனுபவங்கள் வெவ்வேறு விதமாக இருக்கிறது. அவர்களில் சிலர் துன்பப்படுவதே நோக்கமாகவும் மற்றவர்கள் அப்படி துன்பப்படுகிறவர்களோடு கூட அவர்களது துன்பத்தில் பங்கு பெறுகிறவர்களாவும் இருந்தார்கள் என்று பவுல் கூறுகிறார். அப்படிப்பட்ட ஒரு சம்பந்தம் இருந்து, துயரப்படுகிறவர்களோடு ஐக்கியத்தில் இருப்பதை கர்த்தர் அங்கீகரித்து, மெச்சுகிறார்.

பரிசுத்த பவுல் எபிரேயருக்கு எழதின நிரூபத்தில் கூட (10:32-34) இதே கருத்தை கொண்டு வந்திருக்கிறார், தேவனுடைய ஊழியத்தில் மிகவும் உற்சாகத்துடன் ஈடுபடாதவர்கள், தங்கள் கைகளுக்கு நேரிடுகிறவைகள் அனைத்தையும் உண்மையுடன் செய்தால், ஆண்டவர் அதை மெச்சுகிறார். அதிக பலத்தாலும், திறமையாலும், சந்தர்ப்பங்களாலும் அதிகமாக நிறைவேற்றுகிறவர்களைப் போல எண்ணி அவர்களை பாராட்டுகிறார். ஒவ்வொருவரும் தங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஊழியம் செய்கின்றனர். தானும், தன்குழுவினரும் மற்றும் ஆண்டவரின் ஊழியத்தை செய்கிறவர்கள் எல்லாரும் "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிறோம்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அநேக கஷ்டங்கள் மனிதகுலம் முழுமைக்கும் பொதுவாக இருக்கின்றன; வேலையின்மை, வியாதி, மரணம், வறுமை முத-யன. உலகத்திற்கு வருகிற கஷ்டங்கள் திரளானவைகளாக இருக்கின்றன. இங்கே அப்போஸ்தலரும் அவரது உதவிக்காரர்களும் மற்ற மனுஷரைப் போலவே இந்த துன்பங்களுக்கு உட்படுகிறார்கள். வாழ்க்கையின் இந்த சோதனைகள் அநேகருக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றன. ஆனால் பரிசுத்த பவுலும் அவருடனிருந்தவர்களும் வியாதிகள் கஷ்டங்கள் துன்பங்கள் சோதனைகளோடு கூட சத்திய அறிவையும், கர்த்தருடைய தொடர்ச்சியான கிருபைகளையும் பெற்றிருந்தனர். ராஜாதிராஜாவின் சேனையில் அவர்கள் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்களது துன்பங்களில் அவர்கள் வருத்தமடையவில்லை. ஆனால் இவைகளெல்லாம் அவர்களது நன்மைக்கேதுவாய் நடக்கிறது என்று கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

### "அவரைப் போலவே நாமும் இந்த உலகத்தில் இருக்கிறோம்"

ஆகையால் வாழ்க்கையின் துன்பங்கள் மற்றவர்களை வருத்தமடையச் செய்வது போல, நம்மை வருத்தமடைய அனுமதிக்கக்கூடாது. மற்றவர்களுக்கு இல்லாததை நாம் பெற்றிருக்கிறோம். நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால். நமது வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொன்றும் நமது ஆசீர்வாதத்திற்குரியதாக இருக்கும் என்ற நமது ஆண்டவரின் உறுதிமொழியை பெற்றிருக்கிறோம். பிதாவின் வார்த்தையிலுள்ள இந்த வாக்குத்தத்தத்தை நாம் உண்மையில் விசுவாசித்தால், துன்பத்தில் நம்மை களிகூரச் செய்யும், உலகத்திற்கு வராத வேறு சில துன்பங்கள் தேவனுடைய

பிள்ளைகளுக்கு வருகிறது. சத்தியத்தை பிரசங்கிக்கிறவர்களுக்கும் அவர்களோடு இணைந்திருக்கிறவர்களுக்கும் விரோதமாக இந்த உலகம் இருக்கிறது. நீதிக்கும் அநீதிக்கும், வெளிச்சத்திற்கும் இருளுக்கும் ஒரு போர் இருக்கிறது. உலகமானது இருளோடு இணைந்திருந்து, வெளிச்சத்தின்மீது ஒரு விரோதத்தை உணருகிறது; அதை வெறுக்கிறது; ஒரு குறிப்பிட்ட விதத்தில் அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளுக்கு விசேஷித்த துன்பத்தை கொடுக்க அடிக்கடி முடிவு செய்கிறார்கள்.

நல்ல காரியங்களுக்கு உதவி செய்யும் விருப்பத்தை உடைய சில நல்ல இருதயமுடைய உலகத்தாரை எப்பொழுதாவது நாம் காணமுடிகிறது. ஆனால் இவைகளெல்லாம் விதிவிலக்கு. நமக்கு பலமான எதிர்ப்பு, நமது ஆண்டவருக்கு வந்ததுபோல, பேரளவான நமது சகோதரர்கள் மூலமாக வருகிறது. விசேஷமாக நமக்கு விரோதமாக ஒரு எதிரி இருக்கிறான். அகில உலகிற்கும் அவனால் எதிர்ப்பு இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அவன் விசேஷமாக ஆண்டவருடைய பொது ஊழியத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு எதிராக சுறுசுறுப்பாக செயல்படுகிறான். சாத்தான் இப்படிப்பட்ட விசேஷித்த சோதனைகளை கொண்டு வருகிறான். இதுவே அவனது மூர்க்கத்திற்கும் வஞ்சகத்திற்கும் விசேஷித்த பொருட்களாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் இப்படியாக தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடுகிறவர்கள் விசேஷித்த ஆசீர்வாதங்களையும், அதிகப்படியான பாதுகாப்பையும் தேவனிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு எதிரியிடமிருந்து அதிகமான சோதனைகள் வந்தாலும் அதை சமாளிப்பதற்கு அதிகப்படியான கிருபை தேவனிடமிருந்து கிடைக்கும் என்று நாம் நிச்சயிக்கிறோம்.

## நமது மரணமே ஜீவனுக்கு வழியாயிருக்கிறது

பரிசுத்த பவுல் கூறுகிறார்: ''கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை.'' அப்போஸ்தலரும் அவரது குழுவும் மாத்திரம் என்ன செய்வதென்று கலக்கத்தில் இல்லை. முழு உலகமும் கலக்கத்தில் இருக்கிறது. அதுவும் குறிப்பாக இன்றைய நாளில் அப்படி இருக்கிறது. நமது நாட்களின் கவலையளிக்கிற நிச்சயமற்ற பொதுவான நிலைமை அதிகமாக இருக்கிறது. தற்கால கலக்கமூட்டுகிற அனுபவங்களி-ருந்து அது காணப்படுகிறது. ஜனங்கள் தங்களது தொழில், வீடு மற்றும் சொந்த காரியங்களில் சரியான முடிவு எடுக்க அறிந்திருந்தால், அவர்கள் சந்தேகத்திலும் கலக்கத்திலும் இருக்க மாட்டார்கள். ஆனால் தடுமாற்றம் இல்லாமல் தொடர்ந்து செல்வதற்கு யாருமே ஞானமுள்ளவர்களாக இல்லை. உலகத்தின் தற்கால நிலைமை அதிகமான வருத்தத்தையும் எதிர்கால கெட்ட அறிகுறிகளையும் ஏற்படுத்துகிறது. தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களிடத்தில் சில குழப்பம் இருக்கிறது. ஆனால் இந்த கவலையளிக்கிற நிச்சயமற்ற நிலைமை அவர்களை நம்பிக்கையற்ற நிலைமைக்கு நிச்சயம் கொண்டு போகாது. உலகத்தை சார்ந்தவர்கள், வேலையை இழந்து, பல்வேறு கஷ்டங்களில் இருந்து, மிகவும் மனச்சோர்வு அடைந்திருக்கிறார்கள். தற்கொலைகளை நாம் அதிகமாக கேள்விப்படுகிறோம். தன் உயிரையே மாய்த்து கொள்கிறவர்களுக்கு எல்லாம் ஒரே இருளாக காணப்படுகிறது.

தேவனுடைய பிள்ளைகளுக்குக்கூட காரியங்கள் இருளாய் காணப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் நம்பிக்கையற்ற நிலைமைக்கு செல்லமாட்டார்கள். என்ன வந்தாலும் அவர்கள் நம்பிக்கையை இழக்க மாட்டார்கள். ஏனெனில் கர்த்தர் நம்மை விட்டுவிடவோ, கைவிடவோ மாட்டார். இந்த கிருபையான வாக்குத்தத்தம் நிச்சயமான, உறுதியான, ஒரு நம்பிக்கையை நமக்கு தருகிறது. நமது நம்பிக்கை என்னும் நங்கூரம் நிலைத்திருக்கவேண்டும். ஆகையால் நம்பிக்கையற்ற உலகத்தினரைக் காட்டிலும் நமது நிலைமை முற்றிலும் வேறானதாக இருக்கிறது. உலகத்திற்கு பலமாக பிடித்துக்கொள்வதற்கு திடமான நங்கூரமோ, மேலான வாக்குத்தத்தமோ இல்லை. நிலைமை மிக மிக மோசமடைந்தாலும், பட்டினியால் இறந்தாலும் நமது நம்பிக்கை திரைக்கும் பின்னால், மரணத்திற்கும் பின்னால் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகையால் தற்கால பரிசுத்தவான்கள் மரணத்தை நமது எல்லா நம்பிக்கைகளும் சந்தோஷங்களும் முழு வடிவம் பெறுகிற ஜீவனின் முழுமைக்குள் நுழைகிற ஒரு வழியாக பார்க்கிறார்கள். ஆகையால் அங்கே நம்பிக்கையற்ற நிலைமை இருந்தால். நமது நங்கூரம் அறுந்து தளர்ந்து விட்டது என்பதை நிரூபிக்கும். நம்பிக்கை இழந்ததாகவும், விசுவாசம் குறைவதாகவும் காண்கிறவன் உடனே தேவனுடைய வசனத்தி-ருந்தும் விசுவாசத்தில் பலமுள்ளவர்களிடமிருந்தும் ஆலோசனையை தேடவேண்டும். மேலும் அவன் தேவனிடம் அடிக்கடி ஊக்கமுடன் ஜெபித்து, தமது விசுவாசம் புதுப்பிக்கப்படுகிற, நம்பிக்கை இழந்த நிலை போகிற ஒரு நிச்சயத்தை பெற வேண்டும்.

## "நான் உன்னை கைவிடுவதில்லை"

"துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை." உலகத்தில் உள்ளவர்களுக்கு குறிப்பிட்ட சில துன்பங்கள் உண்டு. சில சமயங்களில் அவர்களது அண்டைவீட்டார் அவர்கள் மேல் விரோதங்கொண்டிருக்கலாம். அதனிமித்தம் அவர்கள் துன்பத்தைக் கொடுக்கலாம். இதை சமாளிப்பதற்கு ஏற்ற உபாயங்கள் இல்லாததினால் அவர்களை ஆறுதல் படுத்த முடியாது. சில சமயங்களில் அவர்கள் கொடுக்கிற அளவுக்கு நன்மையை திரும்ப பெறுவார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளில் ஒருவனுக்கு நிலைமை வேறாக இருக்கிறது. நீதியின்படி நாம் பதிலுக்கு பதில் செய்ய வேண்டும் என்று உணர்ந்தாலும், பழிவாங்குதல், தீமைக்கு தீமை செய்தல் நமக்குரியதல்ல என்பதை நினைக்கவேண்டும். நீதிக்குரிய எல்லா காரியங்களையும் தேவனிடம் விட்டுவிடவேண்டும் என்று அவர் நமக்கு போதித்திருக்கிறார். "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." துன்பங்களை விட்டு ஓடிவிடவேண்டும் என்று அவர் நமக்குச் சொல்லவில்லை. ஆகையால் தவறான வழியை பின்பற்றிவிட்டு ஓடிப்போகிறவர்களை நாம் நிந்திக்கக்கூடாது. "ஒரு

பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" என்று நமது ஆண்டவர் கூறியிருக்கிறார். ஆகையால் ஒரு அண்டைவீட்டான் தேவனுடைய பிள்ளையை துன்பப்படுத்தினால், அவனை விட்டு வேறு இடத்திற்கு போனால் நல்லது.

நீதியின் நிமித்தம் துன்பப்பட்டால் தேவனுடைய பிள்ளைகள் கைவிடப்படுவதில்லை. உலகத்தாரும் உலக ஆவியை உடையவர்களும் அவர்களை சதா தொந்திரவு செய்து அடித்தால், தேவன் அவர்களை கைவிடமாட்டார். எனினும் நமக்கு துன்பங்கள் வந்தால், நாம் விசாரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். "இந்த எதிர்ப்புக்களும், துன்பங்களும் நான் கர்த்தரிடம் கொண்டிருக்கும் விசுவாசத்தினாலா அல்லது என்னுடைய நடத்தையினால் ஏற்பட்டதா என்று நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். பின்னானது காரணமாயிருந்தால், நாம் நமது தவறை ஜாக்கிரதையுடன் திருத்திக் கொள்ள முயல வேண்டும். நாம் நம்மையும் நமது நடத்தையையும் ஜாக்கிரதையாக ஆராய்ந்து பார்த்து, நாம் மிகவும் நன்றாக செய்து கொண்டிருக்கிறோம் என்று கண்டால், இதனிமித்தமே நமக்கு துன்பங்கள் வருகிறதென்பதை அறிந்து இந்த துன்பத்தினிமித்தம் நாம் களிகூர வேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாம் "கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை." இந்த கூற்று அப்போஸ்தலரும் அவரது குழுவினரும் நம்பிக்கையிழக்கவில்லை என்பதையும், கைவிடப்பட்ட நிலைமையை உணரவில்லை என்பதையும், சில சமயங்களில் ஆவியின் கனத்தை உணர்ந்தார்கள் என்பதையும் காண்பிக்கிறது. இந்த ஆவியின் கனமும் அல்லது தனிமையும் மனச்சோர்வும் மோசமான நிலைமை பூமியில் நிலவும் போது எல்லா மனு மக்களிடமும் காணப்படுவது இயற்கையான ஒன்றாகும். இந்த கீழே தள்ளப்படுத—ன் கனம் உடல் நலத்தைப்பொறுத்து கருத்தை ஈர்க்கச் செய்கிறது. பலவீனமுள்ளவர்களும் உட—ல் வ— உள்ளவர்களும் மனத்தொந்திரவுக்கு ஆளாவதை உணருவார்கள். கிறிஸ்தவர்கள் இதற்கு எதிராக போராட வேண்டும். ஏனெனில் நமக்கு இடுக்கண்களும், குறைபாடுகளும் கர்த்தரிடத்தி—ருந்து அல்ல, வெளியி—ருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம், அவரும் அதை நமது அபிவிருத்திக்காக, இராஜ்யத்தில் நமது எதிர்கால வேலைக்காக அனுமதிக்கிறார். ஆகையால் நாம் தைரியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் துன்பத்தை பெறும்படி தேவன் அனுமதித்தாலும், நாம் பொறுமையை அப்பியாசப்படுத்த வேண்டும்; பொறுமையோடு சகிக்க வேண்டும்; நமது விசுவாசமும், நமது சந்தோஷமும், நமது விசுவாசத்தின் ஆவியும் அழிந்து போகாதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் அவரிடம் உடன்படிக்கை பண்ணியிருக்கிறோம்.

நமது பிதா எதை அனுமதித்தாலும் நமது இனிய மனோபாவத்தோடு, நாம் சகிக்கிறவர்களாக இருக்கிறோம். நாம் இப்படியாக சொல்—க் கொள்ள வேண்டும்; "இது எனக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கும். இந்த மனச் சோர்வுகளும் மனமடிவான உணர்வுகளும் மற்றவர்களிடம் அதிகமாக இரக்கம் காண்பிக்க உதவி செய்யும்." ஒரு கவிஞன் இப்படி கூறுகிறான்:

"ஒவ்வொரு வாழ்க்கையிலும், சிலமழை பெய்ய வேண்டும், சில நாட்கள் இருளும் மந்தாரமுமாயிருக்க வேண்டும்." ஆகையால் இந்த மனச் சோர்வு நமது விசுவாசத்தையும், சக்தியையும் வெற்றிக் கொள்ள அனுமதிக்கக்கூடாது. ஆனால் இன்னும் உதவியின் கிருபைக்காக கர்த்தரை நோக்க வேண்டும். அவரது மேன்மையான வாக்குத்தத்தத்தை உரிமை கொண்டாடி, கஷ்டங்களுக்கு மேலாக நம்மை உயர்த்தி, தைரியத்துடன் நாம் முன்னேற வேண்டும்.

## நமது "ப।யின் உடன்படிக்கை"

நாம் "கிறிஸ்துவின் மரணத்தை எப்பொழுதும் நமது சரீரத்தில் சுமந்து திரிகிறோம்." தேவனுடைய பிள்ளைகள் தங்கள் ஊழியத்திலும் மரணத்திலும், அவர்கள் அவரது ஊழியத்தில் வைத்திருக்கிற விசுவாசத்திற்கேற்றவாறு அவரது சாயலை பெற்றிருக்கிறார்கள். நமது ஆண்டவரின் இடுக்கமான வழியில் அவரது அனுபவம் மூன்றரை வருடகால மரணமாக இருந்தது. தமது ஜீவனை அர்ப்பணித்து ஒவ்வொரு நாளும் அதை ஒப்புக் கொடுத்தார். நமது ஜீவனை எப்படி அர்ப்பணிக்க வேண்டும் என்பதற்கு நமது ஆண்டவரே நமக்கு உதாரணமாயிருக்கிறார். உலகத்தின் ஊழியத்திற்காக அவர் தன் ஜீவனை கொடுக்காமல் கர்த்தருடைய ஊழியர்களுக்காக கொடுத்தார். அவரது ப—யின் புண்ணியம் தேவனால் உலகத்தின் ஜீவனுக்காக பயன்படுத்துவதற்காக இருந்தபோது, நேரடியான ஊழியத்தில் தமது யூத சகோதரர்களுக்கு கொடுத்தார்.

எபிரேய ஜனங்களே தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர். தேவனுடைய சித்தத்தை அறிந்து, உண்மையிலேயே அவரை சந்தோஷப்படுத்த விரும்புகிறவர்கள், ஏழை மற்றும் தாழ்ந்தவர்களில் இருந்தாலும், ஐசுவரியவான்கள் மற்றும் செல்வாக்குள்ளவர்களில் இருந்தாலும், விசேஷமாக இவர்களோடு நமது ஆண்டவர் தமது வாழ்க்கையை கழித்தார். இயேசு, ஆயக்காரரையும் பாவிகளையும் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்காக தமது ஜீவனை கொடுத்தார். இந்த தாழ்மையான வகுப்பாரிடத்தில் கோதுமை வகுப்பாரை அதிகமாகக் காணக்கூடும் என்று அவர் அறிந்திருந்தார். அவர் தமது மூன்றரை வருட பூமிக்குரிய ஊழியத்தில் தமது ஜீவனை கொடுத்து, கல்வாரியில் அதை நிறைவேற்றினார்.

இதே போலவே அனைத்து தேவனுடைய உண்மையான பிள்ளைகளிடத்திலும் இருக்கிறது. அவர்கள் "ப—யினாலே ஒரு உடன்படிக்கையை" செய்திருக்கிறார்கள். அவர்கள் அர்ப்பணம் செய்து, தம்முடைய ஜீவன்களை கர்த்தருக்காகவும் அவரது ஊழியத்திற்காகவும் தத்தம் செய்திருக்கிறார்கள். இயேசு அவர்களது ஆண்டவர், ஏற்ற கால சத்தியத்தை அறிவிக்கவும், நன்மை செய்யவும் தமது ஜீவனை கொடுத்தது போல, அவர்களும் அதேபோல அவர்களது ஊழிய காலம் மூன்றரை வருடமாயிருந்தாலும், இருபது வருடமாக இருந்தாலும், எத்தனை

வருடமாயிருந்தாலும் பிதாவினுடைய ஆசீர்வாத காலம் அவர்களது இரட்சிப்புக்காக வரும்வரை, தங்கள் ஜீவனை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆண்டவரோடு முற்றிலுமாக இசைந்திருப்பார்கள். தங்கள் தலையானவரின் பாடுகளோடு சந்தோஷமாக ஐக்கியப்பட்டிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் அவரது சரீரத்தின் எதிர்கால அங்கங்கள். இப்படியாக இந்த அங்கங்கள் எல்லாம் அவர்களது ஆண்டவரின் மரணத்தை தங்கள் சரீரங்களில் தொடர்ந்து சுமந்து திரிகிறார்கள். "தங்களது ஜீவனைக் கொடுத்து" ஆண்டவர் மரித்தது போல அவர்களும் அனுதினமும் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### "ஆகையால் உங்கள் சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்"

இவையனைத்தும் புது சிருஷ்டியின் வேலையாக இருக்கிறது. பழைய சிருஷ்டி, புது சிருஷ்டியின் வழியை பின்பற்றும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது. மாம்சத்தின் சித்தத்தை ஒதுக்கி வைத்தலே, நமது இறப்பின் அடிப்படை அம்சமாக இருக்கிறது. நமது மரணம் நிறைவு பெறும்போது, நமது ஜீவன் உண்மையாக கொடுக்கப்பட்டு "நன்றாய் செய்தாய்!" என்கிற நமது ஆண்டவரின் குரலை கேட்கும் நிலைமைக்கு அது நம்மை கொண்டு வரும்.

"இயேசுவினுடைய ஜீவன்," "நமது சரீரத்திலே விளங்க வேண்டும்" என்றும் பரிசுத்த பவுல் கூறுகிறார். இங்கே மாம்சீக சரீரத்தை அவர் குறிப்பிடுகிறார் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். இந்த சரீரத்தை புது சிருஷ்டி சொந்தமாக்கிக் கொள்ளுகிறது. உலக மக்களிடம் இரு தன்மைகள் இல்லை, ஆனால் வெறும் ஒரே ஒரு சிருஷ்டிதான் இருக்கிறது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவருக்கு மட்டும்தான் இந்த தன்மையின் குணம் பொருந்துவதாயிருக்கிறது. பழைய சரீரம் துன்பப்படுகிறது; ஆனால் புது சிருஷ்டி களி கூருகிறது, ஊழியத்தில் சந்தோஷப்படுகிறது. அதன் பெருந்துன்பத்திற் கேற்றாற்போல் அனுதினமும் தேவனுக்கு நன்றி சொல்கிறது, ஏனெனில் "மிகவும் அதிகமான நித்திய கனமகிமைக்கு" இது கிரியை செய்கிறது என்பதை அறிந்திருக்கிறார்கள்.

இப்படியாக இயேசுவின் ஜீவன் நமது மூலமாக உலகுக்கும் சகோதரர்களுக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. உலகம் அதை அறியாது, "இப்படிப்பட்ட சோதனையில் உங்கள் இடத்தில் நாங்கள் இருந்திருந்தால் நாங்கள் பரிதாபகரமான நிலைமையில் இருந்திருப்போம். ஆனால் நீங்கள் களி கூருகிறீர்கள்!" என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால் அவர்களால் புரிந்து கொள்ள இயலாது. ஆனால் நாம் புதிதான ஒரு ஜீவனை பெற்றிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள இயலாது. இதை உணர்ந்து கொள்ளக்கூடிய அனைவரும் கிருபையிலும் அறிவிலும் அனுதினமும் வளர வேண்டும். ஆண்டவரின் ஜீவனை நமது குணலட்சணத்திலும் சரீரத்திலும் மென்மேலும் காண்பிக்க வேண்டும். இப்படியாக இயேசுவைப் போலாகி, அவரது ஊழியத்தை அதிகமாக செய்து இன்னும் அதிகமதிகமாக அவரது ஆவியை நாம் வெளிப்படுத்துவோம். இவையெல்லாம் பின்வரும் மகிமைகளுக்கு நம்மை தயார்படுத்தும். புது சிருஷ்டி முழுமை அடையும்பொழுது, புது சிருஷ்டியின் அனைத்து பரிபூரணமும் மகிமைகளும் நமக்குரியதாகும்.

---------------------------------------

--2333--

# “Touch Not mine Anointed”

## ‘‘நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே

*1 சாமுயேல் 26.*

*தாவீது ராஜாவின் கடுமையான அனுபவங்கள் – அதுல்லாம் என்னும் கெபி – தாவீது ராஜாவின் சகோதரியின் மகன்கள் – பெத்லகேமி–ருந்து தண்ணீர் – தாவீது, சவுல் ராஜாவை இரண்டு தடவை கொல்லாமல் விட்டான் – தற்காலத்திற்குரிய பாடங்கள்.*

*“உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.” லூக் 6:27*

சவுல் ராஜாவால் துரத்தப்பட்டு பின்தொடரப்பட்ட இளைஞனான தாவீதுக்கு மாறுபாடான ஒரு வாழ்க்கைப் பயணம் இருந்தது. சீக்கிரத்தில் அவனோடு சமூகத்தி–ருந்து நீதியாகவோ அநீதியாகவோ ஒதுக்கப்பட்ட ஜனங்கள் சேர்ந்தார்கள். அவர்களில் சிலர் சந்தேகமில்லாமல் குற்றவாளிகள்; சிலர் கடன்பட்டவர்கள்; சிறைக்குச் செல்ல வேண்டிய இவர்கள் சுதந்தரமாயிருக்க வந்தவர்கள், முதலானோர், இந்தப் பிரகாரமாக, தாவீது ஏறக்குறைய நானூறு பேருக்கு தலைவனான். அவர்கள் ஏறக்குறைய ஆயுதம் உடையவர்களாகவும் துணிச்சலானவர்களாகவும் இருந்தார்கள்.

பிற்காலத்தில் அவனது ராஜ்யபாரத்திற்கு அவனை தயார்படுத்த அவனுக்கு ஒரு பெரிய பயிற்சியாக இருந்தது. அது அவனுக்கு சமூகத்தில் நன்மை செய்ய தகுதியற்றவர்களின் உள்ளான நிலைமையை பற்றிய அறிவை கொடுத்தது. அவனும் அவனது சிறு ராணுவமும் தீவனங்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து பெற்ற வரிகள் மூலமே ஜீவித்தார்கள். அதற்கு ஈடாக கொள்ளையர்களிடமிருந்தும், பெ–ஸ்தியர்கள் மட்டுமல்ல, யோர்தானுக்கு மறுகரையி–ருந்து வந்த மோவாபியர்களிடமிருந்தும் அவர்களை பாதுகாத்தார்கள். அந்தக் காலக்கட்டம் வரை சவுல் ராஜாவின் அரசாங்கம் தேவையான போலீஸ் பாதுகாப்பை அவர்களுக்கு கொடுக்கவில்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. ராஜா அவனுக்கு கீழாக இருக்கும் மக்களை சரியாக பாதுகாக்கும் வேலையை செய்வதற்கு பதிலாக, அவனது உண்மையான ஊழியக்காரனாகிய தாவீது மேல் பொறாமை கொண்டு, காட்டில் மிருகங்களை துரிதமாக வேட்டையாட பின்தொடருவது போல, அவ்வப்போது அவனை பின் தொடருகிற வேலையை செய்து வந்தான்.

தாவீது கூட வந்தவர்களில் அவனது சகோதரியின் மகன்கள் மூன்று பேர் இருந்தார்கள். பிற்காலத்தில் அவர்கள் தாவீதின் எல்லா வேலைகளிலும் பிரபலமானவர்கள் ஆனார்கள். அதில் ஒருவன், பிற்காலத்தில் சேனைத்தலைவனான யோவாப் என்பவன். மற்ற இருவர் அபிஷாய் மற்றும் ஆசகேல் என்பவர்கள். அவர்கள் பிற்காலத்தில் ராஜ்யத்தில் கீர்த்தி பெற்றவர்களானார்கள்.

### தாவீதின் பெருந்தன்மையான குணம்

தாவீதுக்கும் அவனது படையினருக்கும் அதுல்லாம் என்னும் கெபி தற்போதைக்கு ஒரு பாதுகாப்பான இடமாக இருந்தது. அவன் உள்நாட்டுப் போரை நடத்த தகுதியுள்ளவனாயிருந்தும் கூட அவன் அதை செய்ய மறுத்தது அவனது நன்மதிப்பை உயர்த்தியது. ஆரம்பத்தி–ருந்தே பெரும்பாலான மக்கள் தாவீதுகூட சேர்ந்திருக்கக்கூடும். அதன் மூலம் சுலபமாக சவுல் ராஜாவை வென்றிருக்க முடியும். இதுதான் தேவனுடைய சித்தம் என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும். சாமுயேல் தீர்க்கதரிசி மூலமாக தேவன் தன்னை ராஜாவாக அபிஷேகம் பண்ணியிருந்தார் என்பதை அவன் நினைவு கூர்ந்தான். மேலும் அவன், தெய்வீக வல்லமையினால் சவு–ன் ராஜ்யபாரத்தை நீக்கிவிட்டு, சவுலுக்குப்பின் அந்த அதிகாரத்தை தனக்கு கொடுப்பார் என்று, தேவனுடைய நேரத்திற்காக காத்திருந்தான்.

இப்படி தேவனுக்காக அவரது பிள்ளைகள் எல்லாம் காத்திருந்தால், அது எப்படி ஆசீர்வாதமாக இருக்கும்! “நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” தேவனுடைய காலங்களும் வேளைகளும் நமக்கு மிகவும் சிறந்ததாக இருக்கிறது. தேவனுடைய சித்தத்துக்கு மாறாக, அதற்கு முந்திக் கொண்டு செய்யும் எந்த முயற்சியும் நமக்கு எதிரிடையாக இருக்கும். இப்படியாக தாவீது தேவனிடத்தில் முழுவதும் விசுவாசம் உள்ளவனாகவும், கீழ்ப்படித–ன் ஆவியை உடையவனாகவும் இருந்தான். அவன் பரிபூரணமானவனாக இருந்தான் என்பதினாலல்ல, தேவனுடைய சித்தத்தை எப்பொழுதும் நிறைவேற்றபவனாக இருந்தான் என்பதினாலல்ல. அவன் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதனாக இருந்தான். மாம்சீக பலவீனத்தினால் சில சமயங்களில் தவறான வழியை பின்பற்றினான். தவறை அறிந்து கொண்ட பிறகு உடனடியாக வருந்துகிறவனாகவும் தேவனுடைய மன்னிப்பை வேண்டுகிறவனாகவும், தனது தவறான வழியைவிட்டு மாறுகிறவனாகவும் இருந்தான்.

ஜோசப் பார்க்கர் என்பவர் விமரிசித்து கூறுகிறதாவது: “உலகில் கிறிஸ்துவின் நிலைமையைப்பற்றி ஒரு நிழலான காட்சியை கண்டுபிடிப்பதில் சிரமமேதுமில்லை. அவர் அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்ட வருமாயிருந்தார்; அவரது தலையை சாய்க்க இடமில்லை; அவரைச் சுற்றியிருந்த ஜனங்களால் விவரிக்க இயலாத

அளவுக்கு வர்ணிக்கப்பட்டார், சொந்த தாழ்வு நிலை, சமூகத்தில் இழிவு நிலை, ஒவ்வொன்றினாலும் வர்ணிக்கப்பட்டார். அதுல்லாம் கெபி என்கிற இந்த பூமியிலே குடியிருந்த போது தேவகுமாரனைச்சுற்றியிருந்தவர்கள் நிச்சயமாக அறிவாளிகளோ, தைரியசா–களோ இல்லை.''

தாவீது தன்னுடையவர்களோடு அதுல்லாம் கெபிக்கு பிரயாணம் செய்தபோது வீட்டு நினைவான வியாதியினால் பாதிக்கப்பட்டான். பெத்லகேமின் கிணற்று நீர் இங்கே இருந்தால் அது எவ்வளவு சுவையாக இருக்கும் என்று கூறினான். உடனே அவனோடே இருந்த விசுவாசமுள்ளவர்களில் மூவர், அவர்களில் அவனது சகோதரியின் மகனும் ஒருவன், தாவீதுக்கு தெரியாமல் ஆபத்தான பிரயாணத்தை மேற்கொண்டார்கள். இரண்டு காரணங்களால் அது ஆபத்தானது. ஒன்று அவர்கள் சவுல் ராஜாவால் நாடு கடத்தப்பட்டவர்கள்; இரண்டாவது பெத்லகேம் அந்த சமயத்தில் பெ–ஸ்தியர் வசம் இருந்தது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் மூன்று தைரியமுள்ள மனிதர்கள் தங்களது தலைவனுக்கு அன்பையும் விசுவாசத்தையும் காண்பித்து, பெத்லகேமிலுள்ள அந்த கிணற்றின் தண்ணீரை ஒரு தோல் பையில் கொண்டு வந்தார்கள்.

அதை அவர்கள் கொண்டு வந்து தாவீதிடம் கொடுத்த போது தாவீது தனது அதிசயத்தக்க விசுவாசமுள்ள இருதயத்தைக் காண்பித்தான். அவர்கள் காண்பித்த பக்தியை அவன் புகழ்ந்ததோடுகூட, அவர்கள் ஆபத்தையும் பொருட்படுத்தாமல், ஓடி தண்ணீரை கொண்டு வந்ததால், அது விலையேறப்பெற்ற, மதிப்பு வாய்ந்ததாக இருந்தபடியால் அதை சாதாரணமாக பயன்படுத்தக்கூடாது என்று அறிவித்தான். அதை தேவனுக்கு ஸ்தோத்திர ப–யாக தரையிலே ஊற்றினான். ஏனெனில் தேவன் அவர்களை ஆசீர்வதித்து வந்திருக்கிறார். மேலும் இப்படிப்பட்ட விசுவாசமுள்ள தோழர்கள் மூலமாக ஆதரவையும் தேறுதலையும் சந்தோஷத்தையும் கொடுத்திருந்தார். தாவீதின் உயர்ந்த குணமும் தேவன் பேரில் அவனுக்கிருந்த பக்தியும் விசுவாசமும் இந்த செய–ன் மூலம் மிகவும் நேர்த்தியாக வெளிப்படுத்தப்பட்டது! இது அவனை சாதாரண மனிதனைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவனாக ஆக்கியது.

### ராஜரீக வேலைக்கு பயிற்சி

இந்த சமயத்தில் தாவீதும் அவனது ஊழியர்களும் நோப் என்ற இடத்திலே இருந்தார்கள். அங்கேதான் ஆசாரியனாகிய அகிமேலேக்கு தனது அன்பைக் காண்பித்தான். சவுல்ராஜா இதை வேவுக்காரர் மூலம் அறிந்து, எண்பத்தைந்து ஆசாரியர்களையும் அவர்களது வம்சத்தார் அனைவரையும் கொன்று போட்டான். ஏபோத்துடன் தப்பி வந்த அகிமேலேக்கின் குமாரன் ஒருவன் மூலம் இந்த செய்தி தாவீதுக்கு வந்து சேர்ந்தது. தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தாவீதுகூட சேர்ந்து கொண்டான். இதெல்லாம் சேர்ந்து தாவீதுக்கு அதிக உறுதியான பாதுகாப்பையும், எல்லாவற்றிற்கும் மேலாக சவுலைவிட்டு தேவனுடைய கிருபை நீங்கிற்று என்பதையும் வெளிப்படுத்தியது. எனினும் சவுல் தொடர்ந்து தேவனுக்கும் அவருடைய திட்டத்திற்கும் விரோதமாக போராடினான்.

இந்த சூழ்நிலைகளின் கீழ் தாவீதின் இராணுவம் படிப்படியாக அறுநூறு பேரானது. அவனது அனுபவங்கள் வருங்கால அவனது வேலைக்கு தயார்படுத்தும்படி மென்மேலும் பெருகியது. இதைப்பற்றிய பிஷப் வில்பர்போர்ஸ் என்பவரின் குறிப்புகள் கூறுகிறதாவது: “காட்டுக்கு நாடுகடத்தப்பட்ட இந்த வாழ்க்கை அறிவுக்கும் அரசாங்க மனிதர்களுக்கும் பலமான ஒரு பயிற்சியைக் கொடுத்தது. கட்டுக்கடங்காத இப்படிப்பட்டவர்களையெல்லாம் மகா மேன்மையான ஆளுமை குணம் இல்லாமல் கட்டுப்படுத்த முடியாது. மனிதர்களை அடக்கி யாளும் இரகசியங்களையும் இணக்கமில்லாத இருதயமுடையவர்களை ஒற்றுமைக்கும் இசைவுக்கும் கொண்டு வரவும் தாவீது கற்றுக்கொண்டான்.''

அவ்வப்போது சவுல்ராஜாவுக்கு தாவீதை கொல்ல வேண்டும் என்கிற எண்ணம் வரும். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் தாவீதும் அவனது ஊழியர்களும் சவக்கடலுக்கு மேற்கேயுள்ள கற்பாறை கெபியில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது சவுல்ராஜா நல்ல பலமுள்ள ஒரு படையுடன் தாவீதை துரத்திச் சென்று அதே கெபியில் ஓய்விற்காக நுழைந்தான், எவ்வளவு காலம் என்பது தெரியாது. கிட்டோ (Kitto) என்பவர் அந்த கெபி ஆயிரத்து ஐந்நூறு பேர் தங்கும் அளவுக்கு பெரியதாக இருந்தது என்று கூறுகிறார். இன்னொரு எழுத்தாளர் குறிப்பிடுகிறதாவது;'' என்கேதியி–ருந்து இருபது மைல் துரத்திலுள்ள இந்த கெபிகளில் ஒன்றில் ஒரு தடவை முப்பதாயிரம் பேர் ஒளிந்திருந்ததாக ஒரு யாத்ரீகர் நம்மிடம் கூறுகிறார். இந்த கெபிகள் நடு இரவில் மிகவும் இருட்டாக இருக்கும். ஒருவன் வெளியில் நன்கு தெளிவாக பார்க்க இயலும், ஆனால் உள்ளே நான்கு அடிக்கு மேல் பார்க்க இயலாது.''

தாவீதும் அவனது குழுவினரும் கெபியில் இன்னும் பின்னே இருந்தார்கள். சவுலும் அவனது ஆட்களும் அங்கே ஓய்வெடுக்க நுழைந்த பொழுது, தாவீதின் குழுவினரின் விருப்பம் என்னவென்றால், சவுல் கொல்லப்பட வேண்டும். அதனால் அவர்கள் கஷ்டமான அனுபவங்கள் முடிவுக்கு வரவேண்டும். ராஜா செய்திருந்த, செய்து கொண்டிருந்த தீமைகளுக்கு ஒரு நீதியான ஈடாக, அது இருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் தாவீது அதற்கு சம்மதிக்கவில்லை. எனினும் அதற்கு பதிலாக சவுல்ராஜாவின் சால்வையின் தொங்கலை அறுத்ததின்மூலம், ராஜா, தாவீதின் கைக்குள் இருந்தான் என்பதையும் அவன் நினைத்திருந்தால் ராஜாவை கொன்றிருக்க முடியும் என்பதையும் ஆனால் அப்படிச் செய்யாமல் ராஜாவுக்கு தனது விசுவாசத்தையும் விளங்கச் செய்யும்படி செய்தான்.

பிறகு சவுல்ராஜாவும் அவனது ஆட்களும் ஆபத்தில்லாத ஒரு குறிப்பிட்ட தூரம் சென்ற பிறகு, தாவீதும் அவனது ஆட்களும் தாங்கள் அங்கே இருப்பதாகக் காண்பித்தார்கள். ராஜாவை கொல்லாமல் விட்ட அவனது குடிமக்களின் விசுவாசத்தை மெச்சிக் கொள்ளாமல் அவர்களது உயிரை வாங்க தேடுகிறீர்களே என்று ராஜாவை இடித்துரைத்தார்கள். சவு–ன் நல்ல சுபாவம் எழும்பியது. அவன் அழுதுகொண்டே “நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்'' என்று கூறினான். அதன் பிறகு நாடு கடத்தப்பட்ட தாவீதை வேட்டையாடுவது, மறுபடியும்

அதை செய்யமாட்டான் என்று ஆணையிட்டு கொடுத்ததோடு, கைவிடப்பட்டது. எனினும் இப்படிப்பட்ட இன்னொரு அனுபவத்தை நமது பாடம் கொஞ்சம் பின்னே சொல்கிறது.

இந்த சமயத்தில் தாவீதும் அவனது தங்கை மகனும் தனியாக சவு–ன் பாளையத்திற்குச் சென்று அவனது தலைமாட்டில் இருந்த அவனது ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துச் சென்றார்கள். இவைகளுடன் எதிரேயுள்ள மலைக்குச் சென்றார்கள். இடையே ஒரு கணவாய் இருந்தது. அங்கேயிருந்து சவுலுடனும் அவனது சேனைகளுடனும் பேசவும் கேட்கவும் முடியும். தாவீது அங்கேயிருந்து, தான் சவு–ன் வீரர்களைக்காட்டிலும் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாக இருந்ததையும் ராஜாவுக்கு மிகவும் விசுவாசமாக இருந்ததையும் குறிப்பிட்டுச் சொன்னான். மேலும் ஒரு வீரனை அனுப்பினால் தான் அவனது ஈட்டியையும் தண்ணீர் செம்பையும் திரும்பத் தருவதாகக் கூறினான். தான் சவுலுக்கு எந்தவித தீங்கையும் செய்ய விரும்பவில்லை என்பதையும், தான் ராஜாவுக்கு எவ்வளவு உண்மையுள்ளவனாக இருக்கிறேன் என்பதையும் நிரூபிக்கவே இப்படி செய்ததாகக் கூறினான். எனவே சவுல் தன்னை ஒரு எதிரியைப் போல பின் தொடருவது தவறு என்பதை சுட்டிக் காட்டினான்.

இப்படி ஒரு ராஜாவின் பாளையத்துக்குள் நுழைவது என்பது தற்காலத்தில் இயலாத காரியம். ஏனெனில், காவற் காப்பாளர்களை வைத்தல், வே–கள் போன்ற முறைமைகள் தற்காலத்தில் உள்ளன. பழங்காலத்தில் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் கிடையாது. தற்காலத்தில் கூட பெரிய அளவில் கிழக்கத்திய நாடுகளில் இப்படி இல்லை. கிதியோனும் அவனது ஆட்களும் இந்த விதமாக ஒரு பாளையத்துக்குள் நுழைந்ததை நினைவுபடுத்துகிறோம். ஆபிரகாம் கூட ஐந்து ராஜாக்களை பின் தொடர்ந்து சென்று, அங்கே ராணுவகாவற்படை இல்லாததால் இரவிலே தூக்கத்திலே அவர்களை முறிய அடித்தான் என்பதை நினைவுபடுத்துகிறோம். கிழக்கத்திய தேசங்களில் அதிக அனுபவமுள்ள ஒரு யாத்ரீகன் கூறுகிறதாவது:

"களைப்பான போது அரேபியர்கள் அதிகமாக தூங்குவார்கள். பிரயாணத்தில் அடிக்கடி எனது கோவேரிகழுதை ஓட்டிகளும் ஊழியர்களும், ஆபத்தானது என்று நினைக்கும் இடங்களில் விழித்திருந்து காவற் காக்கும்படி ஒத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் அவர்கள் தூங்குவதை நான் பார்ப்பேன். பொதுவாக அவர்களது உறக்கம் மிக ஆழ்ந்த உறக்கமாக இருக்கும். அதாவது அவர்கள் விழிக்காமல் என்னால் நடக்க முடியும். ஆனால் அவர்களிடமிருந்து போர்வையை மட்டும்தான் எடுத்துக் கொள்ள முடியாது."

### ஒரு பிரயோஜனமுள்ள பாடம்

தாவீது, அவனது எதிரியை கொல்லாததற்கு அவன் தந்த விளக்கம் என்னவென்றால், சவுல் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன், அவனை தாக்குவது, தேவனுடைய ஏற்பாடுகளை தாக்குவது போ–ருக்கும் என்பதாகும். இந்த தாவீது அதை மனசாட்சியுடன் செய்திருக்க முடியாது. "நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்."

இந்த கொள்கையை தற்காலத்திலே நமது மனதிலே வைத்துக் கொள்வது நல்லது. எனினும் தற்காலத்தில் ராஜாக்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. அவர்கள் தாங்களாகவே அபிஷேகம் பண்ணிக் கொண்டவர்கள். அவர்களது ராஜ்யம் இந்த உலகத்தின் ராஜ்யம். மாறாக இஸ்ராயேல் தேவனுடைய விசேஷித்த ராஜ்யம். ஒரு விசேஷித்த உடன்படிக்கை மூலமாக தேவன் அதை அங்கீகரித்திருந்தார். தெய்வீக அதிகாரத்தால் சவுல் ராஜா ஒரு விசேஷித்த அபிஷேக தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தான். அந்த அபிஷேக தைலம் பரிசுத்த ஆவிக்கு நிழலாக இருந்தது. அதே தைலத்தால் தாவீதை அபிஷேகம் பண்ணியது, சவு–ன் மேல் செய்யப்பட்டிருந்த தேவனுடைய அபிஷேகத்தை குறுக்கீடு செய்யும் உரிமையை கொடுப்பதற்காக அல்ல. ஆனால் சவுலுக்கு பிறகு அவன்தான் ராஜா என்பதற்காகவும், தேவன் அந்த உரிமையை தமது திட்டத்தின்படியான நேரத்திலும் முறையின்படியும் கொடுப்பதற்காகவும் ஆகும்.

பூமியின் ராஜ்யங்களின் நாணயம், அவர்கள் பூமியை ஆளுகை செய்தார்கள் என்பதை குறிப்பிட்டாலும், அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தின் பிரதிநிதிகள் அல்ல என்பதை நாம் அறிவோம், மேசியாவின் ராஜ்யம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்றும் இன்னும் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

### பூமியின் ஐந்து உலகப் பொது ராஜ்யங்கள்

தேவன் தம்முடைய நிழலான ராஜ்யத்தை இந்த பூமியி–ருந்து நீக்கியபோது, கடைசி ராஜாவாகிய சிதேக்கியாவுக்கு கொடுத்த செய்தியாவது: "அது இனி முன்போ–ராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்." இந்த உலகத்தில் தேவனுடைய ராஜ்யத்தை பொருத்தவரை சிதேக்கியாவின் காலத்தி–ருந்து மேசியாவின் ஆயிர வருட ராஜ்யம்வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் ஒரு இடைப்பட்ட ராஜ்யங்களைப் பற்றிய செய்தி நமக்கு கொடுக்கப்படுகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் தேவன் புறஜாதியாருக்கு இந்த ராஜ்யத்தை கொடுத்து எப்படிப்பட்ட ஆளுகையை உலகத்தில் அவர்களால் கொடுக்க முடியும் என்பதை காண்பிக்க விரும்பினார். சிதேக்கியாவின் நாட்களாகிய கி.மு.606 முதல் தற்காலம் வரை நான்குவிதமான ராஜ்யங்களை நாம் பெற்றிருந்தோம். அதில் நான்காவது ராஜ்யம் வஞ்சகத்துக்குரியதாக மாற்றப்பட்டிருந்தது. இந்த ராஜ்யங்களாவன: (1) பாபிலோன் (2) மேதிய–பெர்சியா (3) கிரேக்கர் (4) ரோம். ஐரோப்பாவில் உள்ள தற்கால அரசாங்கங்கள் ரோம ராஜ்யத்திற்கு கீழான ஒரு புதிய மேற்பூச்சு பூசப்பட்டதாக இருக்கின்றன. அவர்களது சட்டங்கள், முறைமைகள், நோக்கங்கள், அனைத்தும் ரோம ராஜ்யத்தை ஒத்து இருக்கிறது. வஞ்சித்து, வஞ்சிக்கப்பட்டு, தங்களை கிறிஸ்தவ ராஜ்யங்களாக கூறிக்கொள்கின்றன. பொதுவான உடன்பாடு மூலம், அகில உலகமும் அவைகளை கிறிஸ்தவ தேசங்கள் –அதாவது கிறிஸ்துவின் ராஜ்யம் என்று கூறி பழக்கப்பட்டுவிட்டன.

--2336--

வேதாகமம் இதை சித்தரித்து காண்பிக்கிறது. ஒரு அடையாளமான சிலையில் இந்த ராஜ்யங்களையெல்லாம் காண்பிக்கிறது. கால்களும் பாதங்களும் இரும்பு மற்றும் களி மண்ணினால் செய்யப்பட்டதாக, கல்–னாலான பாதத்தைப் போல காண்பிக்கப்பட்டது. கல் என்பது தேவனுடைய ராஜ்யத்திற்கு அடையாளமாக இருக்கிறது. தற்கால இந்த ஐரோப்பிய ராஜ்யங்கள் போரில் கிறிஸ்தவ ஆவியில்லாதவற்றை வெளிப்படுத்துகின்றன– அதாவது கோபம், துர்க்குணம், பொறாமை, பகைகள் மற்றும் வாக்கு வாதங்கள். இவைகள் எல்லாம் "மாம்சம் மற்றும் சாத்தானின் செயல்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த ராஜ்யங்கள் தான் தங்களை மேசியாவின் ராஜ்யங்கள் என்றும் சிலையின் பாதங்களாக குறிப்பிடப்பட்டவை என்றும், சீக்கிரத்தில் பூமியை நிரப்பப்போகிற கல்லாலான ராஜ்யம் என்றும் திரித்துக் கூறுகின்றன. (தானியேல் 2:31–45)

மனித சக்தி இல்லாமல், "கையால் பெயர்க்கப்படாமல் மலையி–ருந்து பெயர்ந்து உருண்டு வந்த ஒரு கல்லாக" மேசியாவின் ராஜ்யம் சித்தரிக்கப்படுகிறது. சிலையில் பாதங்கள், கால் விரல்கள் என்று குறிப்பிடப்பட்ட ராஜாக்களின் நாட்களிலே, அந்த கல் சிலையின் மேல் மோதி, அதை நொறுக்கி தூளாக்கியது, அந்த கல்லோ ஒரு பெரிய பர்வதமாகி, அல்லது கர்த்தரின் ராஜ்யமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று; இந்த மோதுதல் சமீபித்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். தற்போது (1915) ஐரோப்பாவில் நடக்கும் போர்கள், நாடுகளை பலவீனப்படுத்தவும், மகா பூமியதிர்ச்சி என்று குறிப்பிடப்பட்டுள்ள புரட்சியாகிய அடுத்த நிலைமையாகிய ஆபத்து காலத்திற்கு தயார்படுத்தும்.

புரட்சியைத் தொடர்ந்து சீக்கிரத்தில், அடையாளமான மகா அக்கினி வந்து தற்கால பூமியின் முறைமைகளை முற்றிலுமாக அழிக்கப்பட இருக்கிறது. இந்த அக்கினி என்பது அராஜகத்தை குறிப்பிடுகிறது. இது எல்லா ஆளுகையையும் அதிகாரங்களையும் கவிழ்த்துப் போடும். இப்படியாக தேவன், மனிதனால் அதிகபட்சமாக அடையக்கூடியது போ–யானதும், அழிவுக்கு வழி நடத்தக் கூடியதுமாகும் என்பதை நிரூபிக்க அனுமதித்திருக்கிறார். மனுக்குலம் அனைத்தும் மேசியாவின் ராஜ்யத்திற்காக தயாராகும் என்றும், "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்ட" அந்த ராஜ்யம் அறிவிக்கப்படும் என்றும் இந்த பாடத்தின் மூலம் அறிந்து கொள்கிறோம். (ஆகாய் 2:7)

---------------------------------------

# இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம்

[2 சாமுயேல் 2:5]

"கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்."
சங்கீதம் 28:7.

இஸ்ரயேலின் வரலாற்றிலும், தேவனுடைய பிரிய மான தாவீதின் அனுபவங்களிலுமுள்ள ஒரு சுவாரஸ்சியமான காலப்பகுதியை நாம் இன்று ஆராயப்போகின்றோம். இராஜாவாகிய சவுல் கொடுத்த துன்பங்களினாலும், வேட்டையி னாலும், தாவீதுக்கு பாதுகாப்பான இடம் இல்லாமற்போயிற்று. பெலிஸ்தியர்கள் தாவீதை சத்துருவாகக் கருதுவதற்குப் பதிலாக, நண் பனாகக் கருதி தாவீதுக்கும் அவருடன் இருப்பவர்களுக்கும் சிக்லாக் என்னும் பட்டணத்தைக் கொடுத்தார்கள். தாவீது இங்கே தங்கியிருந்து அமலேக்கியரை கைப்ப ற்றினாரே ஒழிய, இஸ்ரயேலர்களுக்கு எதிராக போர்தொடுக்கவில்லை. இஸ்ரயேல் ஜனங்க ளின் பொல்லாப்பினிமித்தமும், அப்பொல்லாப்பு நிறைவடையும்போது அவர்கள் அழிக்கப்படு வார்கள் என கர்த்தர் கூறியுள்ள ஜனங்களுக்கு எதிராக தாவீது போர் புரிவதற்கான உரிமை அவருக்கு இருப்பினும், அவரால் கர்த்தருடைய ஜனங்களுக்கு எதிராக விருப்பத்துடன் யுத்தம் மேற்கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் சவுலின் ஆளுகைக்குரிய முடிவும் நெருங்கினது. பெலிஸ்தியரிடமிருந்து புது தாக்கு தல் வந்தது. இதன் முடிவைக் குறித்து சவுல் ஐயம் கொண்டிருந்தார். தெய்வீக ஒழுங்குக ளுக்கு இசைவாக வாழ்ந்த இராஜாவாகிய இவர் அனைத்து அஞ்சனக்காரிகளையும், அஞ்சனக்காரரையும் மரித்தவரோடு தொடர்பு வைத்திருக்கிறோம் என்று கூறின அனைவ ரையும் இஸ்ரயேல் தேசத்தைவிட்டுப் புறப்படுமாறு கட்டளையிட்டிருந்தார். என்றாலும் சிலர் இங் கொன்றாய், அங்கொன்றாய் காணப்பட்டார்கள். இப்படியான சூழ்நிலைகளில் கர்த்தர் தனக்கு பதில் கொடுக்காதபோது, இராஜா வாகிய சவுல் எந்தோரின் அஞ்சனக்காரியிடம் சென்றார். இவள் இராஜாவின் பிரதான தளப தியாகிய அப்நேரின் தாயாக சிலரால் கருதப் படுகின்றாள்.

அஞ்சனம் பார்த்துக் கூறினால் தனக்கு எவ்வித பாதிப்பும் நேராது என்று அஞ்சனக்காரிக்கு உறுதி அளிக்கப்பட்ட பின்னர், இறந்தவர்களின் ஆவி என கருதி, விழுந்துபோன ஆவிகளுடன் தொடர்புக்குள் சென்றாள். அவள், சாமுயேலை தான் அழைத்தேன் என்று நம்பினாள். ஆனால் வேதமோ, "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்றே கூறுகின்றது. (பிரசங்கி 9:5) சாமுயேல் தனது பிதாக்களோடு நித்திரை பண்ணி உயிர்த் தெழுதலின் காலைக்காக காத்திருந்தார். அவரால் ஆலோசனை கொடுக்க முடியாது. என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பது கூட அவரால் அறிந்துகொள்ள முடியாது.

பொல்லாத ஆவிகள் அன்றும், இன்றும் ஊடகங்கள் வாயிலாக மரித்தவர்கள் போன்று பாவனை செய்து தங்களுடைய மேலான அறிவின் மூலம் மரித்தவர்களுக்குப் பதிலாக பேசினார்கள். இந்த சம்பவத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது, இராஜா, நாளை யுத்தத்தில் தோற்பான் எனவும், அவனும், அவனுடைய குமாரர் களும் வெட்டப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது.

நம்முடைய இனத்தின் விஷயங்களை இவ்வளவாக எப்படி விழுந்துபோன தூதர்கள் அறிந்திருந்தார்கள் என்று நமக்கு தெரியவில்லை. ஆனால் இவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வது சரியல்ல என்றும், கர்த்தர் அதை செய்யக்கூடாது என்றும் கட்டளையிட்டார் என்பதை நாம் அறிவோம். இவர்களுடைய முக்கிய நோக்கம், ஜனங்களை வஞ்சிப்பதாகும். பரிசுத்தவானாகிய பவுலை பொருத்தமட்டில், இவர்கள் சொப் பனங்கள் வாயிலாகவும், வெளிப்படுத்தல்கள் வாயிலாகவும், சபைக்குள் அநேக பேய்களின் உபதேசங்களைக் கொண்டுள்ளனர்.
(1 தீமோத்தேயு 4:1)

"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளத்தைலத்தை நாறி கெட்டுப்போகப் பண்ணுகிறது" போல, இவர்கள் விசுவாசங்களைக் கெடுத்தார்கள்.
(பிரசங்கி 10:1)

மரித்தவர்கள் இறந்துவிட்டனர் எனவும், அவர்களால் எவ்வித விஷயங்களையும் தெரிவிக்க முடியாது எனவும், அவர்களால் சந்தோஷப்படவும் முடியாது, துக்கிக்கவும் முடியாது மாறாக கல்வாரியில் செலுத்தப்பட்ட ஈடுபலியின் விளைவாக, சகலருக்கும் மேசியா, தேவனுடைய மகிமை குறித்ததான அறிவு வரும் மேலான நாளின் விடியலுக்காக இவர்கள் காத்திருக்கிறார்கள் என்று வேதம் மிகவும் தெளிவாக போதிக்கின்ற விஷயங்களை ஜனங்கள் உணர்ந்து கொண்டால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். மரிப்பவர்கள் உயிரற்று இருக்கையில், அவர்கள் உயிரோடு இருக்கின்றார்கள் என்று போதிப்பது, கர்த்தருடைய

வார்த்தைகளுக்கு எதிரானவைகளாகும். மேலும் இதுவே கிறிஸ்தவ ஜனங்களை சிந்திக்க வைக்காதபடிக்கு அடக்கி வைத்துள்ள பல்வேறு வருத்தத்திற்குரிய தப்பறைகளுக்கு அஸ்திபார மாக இருக்கின்றது. தங்களுடைய மரித்த நண் பர்கள் உயிர்த்தெழுதலின் விடியல் வரை நித்திரை பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் என ஜனங்கள் அறிந்தால், எவரும் மரித்தவ ர்களுக்காக ஜெபம் பண்ணமாட்டார்கள். அல்லது, அவர்களை உத்தரிக்கும் ஸ்தல த்திலிருந்து விடுவிக்கும்படி பூசையும் பண் ணமாட்டார்கள். மரித்தவர்கள் உயிரோடிரு க்கின்றார்கள் என்ற இந்த கோட்பாடு, தேவனுக்கு எதிரான வன்மையான தூஷணத்தின் அஸ்திபாரமாக சகல பிரிவு களிலுமுள்ள விசுவாசங்களில் காணப்ப டுவதே மிகவும் சீர்கேடான விஷயமாகும்.

## "வில்பாட்டு"

தாவீது யுத்தத்தின் முடிவை அறிந்தபோது, சவுலுக்கும் யோனத்தானுக்குமான அவருடைய அனுதாபங்கள் ஒரு அருமையான பாடலில் வெளிப்படுகின்றது. இப்பாடலின் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், அதில் சவுல் எவ்வாறு தன்னை துன்பப்படுத்தினார் என்றோ, தன்னுடைய ஜீவனை எடுக்க அவர் நாடினதையோ குறித்து ஒரு வரி கூட காணப்படுவதில்லை என்பதே ஆகும். அப்பாடல் சவுல் செய்த நல்ல காரிய ங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் அப்பாடல் ஸ்திரீகளின் நேசத்தைப் பார்க்கிலும் அதிகமாய் இருக்கும் யோனத்தானின் நேசத்தைக் கூறுகி ன்றது. இப்பாடல் 2 சாமுயேல் 1:17-27 - வரையிலான வசனப்பகுதிகளில் இடம் பெறுகின்றது.

யுத்தத்தில் யோனத்தான் உட்பட சவுலின் புத்திரர்கள் கொல்லப்பட்டார்கள். சவுலும் காயம் அடைந்திருந்தார். தான் ஒருவேளை பெலிஸ்தியரின் கரங்களில் அகப்பட்டால், தன்னை மரணத்ததிற்கு ஏதுவாக துன்பப்படுத்துவார்கள் என சவுல் அஞ்சின படியால், தன்னை கொன்று போடும்படிக்கு, தன்னுடைய ஆயுததாரியைக் கேட்டுக்கொண்டார். இறுதியில் சவுல் தன்னுடைய பட்டயத்தினாலே தற்கொலை செய்து கொண்டார்.

வாலிபனான அமலேக்கியன் ஒருவன், தாவீதின் தயவைப் பெற்றுக் கொள்ளலாம் (தாவீதிடம் நற்பெயர் வாங்கிக் கொள்ளலாம்) என்று எண்ணி, தாவீதை எவ்வாறெல்லாம் சவுலால் துன்பப்படுத்தப்பட்டார் என்பதில் கொஞ்சம் அறிந்திருந்தப டியால், சவுலின் மரண செய்தியையும்,சவுலின் தலையின் மேல் இருந்த முடியையும், அவர் புயத்திலிருந்த அஸ்தகடகத்தையும், தாவீதினிடத்திற்குக் கொண்டு வந்தான். மேலும் இராஜாவாகிய சவுல் தன்னிடம் கேட்டுக் கொண்டதின் பேரில், சவுலை தான் கொன்று போட்டதாகவும் கூறினான். தனக்கு கனம் உண்டு பண்ணும் வகையிலே இக்கற்பனைக் கதையைக் கூறினான். ஆனால் இவன் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் எதிராக தாவீது இந்த சங்கதிகளை ஏற்றுக்கொண்டு நடந்தார். தாவீது அவனை நோக்கி:

"கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை கொன்றுபோடும்படி நீ உன் கையை நீட்ட பயப்படாமற் போனது என்ன" என்றார். தாவீது அந்த அமலேக்கியனைக் கொன்று போடும்படிக்குக் கட்டளையிட்டார். தாவீது இராமுழு வதும் சவுலுக்காகவும், யோனத்தானுக்காகவும் புலம்பி அழுதார்.

தாவீது, அநேக வருடங்களாக கர்த்தரை நோக்கி, தான் இறுதியில் இஸ்ரயேலின் இராஜாவாக நிறுத்தப்படுவேன் என்ற முழுமை யான நம்பிக்கையில் காத்திருந்தார். தான் இராஜாவாகும் நிகழ்வை அவர் எவ்விதத்திலும் துரிதப்படுத்தாமல், கர்த்தர் தன்னை அமர்த்தப் போகிற அதிகாரத்திற்கும், பொறுப்புகளுக்கும் ஆயத்தமாக நின்று கொண்டிருந்தார். தாவீதுடைய வாழ்க்கை நமக்கு எத்துணை அருமையான மாதிரியாக உள்ளது ! கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஜீவியத்தின் சகல விஷயங்களிலும், கர்த்தருடைய வேளைக்காக பொறுமையுடன் காத்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று ஜெபித்து, இராஜ்யத்திற்காக காத்திருப்பது மாத்திரமல்லாமல் கிறிஸ்தவர்கள் தங்களுடைய சகல விஷயங்களிலும், தங்களுடைய நன்மைக்கு ஏதுவான அவருடைய வழி நடத்துதல்கள், முன் ஏற்பாடுகளுக்காகவும் காத்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்களிடம் பெரும்பாலும் காணப்படும் தவறுக ளில் ஒன்று, கர்த்தருடைய வழிநடத்துதலையும், தங்களுடைய நன்மைக்கு ஏதுவாக அவர் வாக்களி த்துள்ள பராமரிப்பையும் கவனியாமல், அதற்கு காத்திராமல் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் தங்கள் விஷயங்களை தாங்களே வழிநடத்திவிடுவார்கள்.

தாவீது, தானும் தன்னோடு இருப்பவர்களும் பெலிஸ்திய பட்டணத்தைவிட்டு புறப்படும் நேரம் வந்துவிட்டது என்று உணர்ந்தபோது, ஆசாரியர்கள் மூலமாயும், ஏபோத்தின் மூலமாயும் கர்த்தரிடத்தில்

--2339--

விசாரித்தார். தாவீது, யூதேயாவுக்குப் போகவேண்டும் என்ற பதில் வந்தது. எந்த பட்டணத்திற்கு செல்ல வேண்டும் எனவும் தாவீது விசாரித்தார். தாவீது எப்ரோனுக்குப் போகும்படி பதில் பெற்றுக் கொண்டார். தாவீதும், அவரோடு இருந்தவர்களும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு போனார்கள். தாவீதின் சொந்த கோத்திரமாகிய யூதா கோத்திரம் தாவீதை தங்களுடைய இராஜாவாக ஏற்றுக் கொண்டனர். இதற்கிடையில் சவுலின் குமாரர்களில் ஒருவனான இஸ்போசேத் உயிரோடு இருந்தபடியால், சவுலின் பிரதான படைத்தலைவனான அப்நேர் இஸ்போசேத்தை இஸ்ரயேலின் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார். யூதாவின் இராஜாவாகிய தாவீது, மற்ற கோத்திரங்களின் ஆதரவை கேட்க முயற்சியாமல், கர்த்தருடைய ஏற்ற வேளைக்காகக் காத்திருந்தார். தாவீது முழு இஸ்ரயேலுக்கும் இராஜாவாகுவதற்கு முன்பு, ஏழு வருடங்கள் கடந்தோடியது.

பின்னர் தாவீதின் ஊழியர்களுக்கு எதிராக அப்நேர், பெரும் படையை திரட்டி, கடுமையான போராட்டம் நடத்தினார்கள். இதில் தாவீதின் படைகளே ஜெயம் கொண்டது. கடைசியாக, அப்நேருக்கு இஸ்போசேத் இராஜாவின் மீது கோபம் மூண்டபோது, அப்நேர் தாவீதுக்கு நேராக அனைத்து இஸ்ரயேலர்களின் இருதயங்களையும் திருப்ப உதவுவேன் என்றும், தாவீதுக்கு வேலையாளாக இருப்பேன் என்றும் தாவீதிடம் கூறினார். இது கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு இசைவாய் இருக்கிறபடியால், இது கர்த்தருடைய சித்தம் என்று கருதி தாவீது ஏற்றுக் கொண்டார். ஆனால் காரியங்கள் இதன்படியாக சம்பவிக்கவில்லை. காரணம், தாவீதின் உடன்பிறப்புடைய மகனும், யுத்தத்தில் முக்கியமான நபருமாகிய யோவாப், அப்நேரை வஞ்சகமாக சங்காரம் பண்ணினான். இந்த இடத்திலும் தாவீது நடந்து கொண்டவிதம் வித்தியாசமாக இருந்தது. அப்நேரின் மரணத்தைக் குறித்து சந்தோஷப்படுவதற்குப் பதிலாக, தாவீது துக்கித்து, யோவாபின் இந்த தவறான செய்கைக்கு வெளிப்படையாக கண்டித்தார்.

2 சாமுயேல் 3-ம் அதிகாரம் பார்க்கவும்.

## முழு இஸ்ரயேலுக்கும் இராஜா

சில காலத்திற்குப் பின், சிலர் இஸ்போசேத் இராஜாவைக் கொன்று, அவன் மரித்ததற்கு அடையாளமாக, அவன் தலையை தாவீதிடம் கொண்டுவந்து, தாங்கள் பரிசளிக்கப்படுவார்கள் என்று எண்ணினார்கள். இவர்கள் தாவீது இராஜாவின் மனநிலையை தவறாக எண்ணி இருந்தனர். ஆனால், இவர்களும் தண்டிக்கப்பட்டனர். இவர்கள் இராஜாவைக் கொன்று போட்டுள்ளனர். ஆகவே, இவர்களும் அதே கொன்று போடுதலையே தண்டனையாகப் பெற்றுக் கொண்டனர். இவ்வாறாக, அன்றும் இன்றும் அறிதாயுள்ள நீதியின் கொள்கையை ஜனங்கள் தாவீதின் வாழ்க்கையில் கண்டனர். இந்த அனைத்து விஷயங்களும் ஜனங்களை அவர்/இராஜா மீது பிரியம் கொள்ள செய்தது. தாவீது நீதியின்படி செயலாற்றினார். அதேசமயம் தனது சத்துருக்களுக்கு அனுதாபமும் காட்டினார்.

இறுதியாக, மீதி கோத்திரங்களும் தாவீதை முழு இஸ்ரயேலுக்கும் இராஜாவாக ஏற்றுக்கொள்ள விரும்பி, அவரிடத்திற்கு பிரதிநிதியை அனுப்பினபோது, தாவீது 37 வயதாய் இருந்தார். இச்சம்பவம், சவுல் இராஜா மரித்த ஏழரை ஆண்டுகளுக்குப் பின்பும், முதலில் சாமுயேலால் அபிஷேகிக்கப்பட்டு 17 வருடங்களுக்குப் பின்பும் சம்பவித்தது. இந்த ஒவ்வொரு வருடத்திலும் விசுவாசமும், பொறுமையும் தாவீது இராஜாவினிடத்தில் காணப்பட்டது. இதன் மூலம் இராஜாவாகிய தாவீதின் குணலட்சணங்களும் வெளிப்படுகின்றது. அவருடைய குணலட்சணங்கள், தேவனுக்கான அவருடைய பயபக்தியையும், தெய்வீக சித்தத்திற்கு அவர் கீழ்ப்படுத்தி ஒப்புக் கொடுத்ததையும் காட்டுகின்றது.

அனைத்து இஸ்ரயேலின் கோத்திரங்களுக்கு இராஜாவாக, தாவீது ஏற்றுக்கொள்ளப்பட்டது, அவருடைய தலையில் மூன்றாம் முறையாக ஊற்றப்பட்டு, அவர் அபிஷேகிக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கிடையில் தாவீது இராஜா அழிக்கப்படுவார்கள் என தேவனால் கூறப்பட்ட கர்த்தருடைய சத்துருக்களாகிய தனது சத்துருக்களை ஜெயம் கொள்வதில் பெலம் கொண்டு பெறுகினார். எமோரியரின் அக்கிரமம் நிறைவடையும்போது, அது அவர்கள் பூமியில் இராதபடிக்கு அழிக்கப்படுவதற்கான கர்த்தருடைய சித்தத்தை சுட்டிக்காட்டுகின்றது என்பதை நம்முடைய வாசகர்களுக்கு நினைவுப்படுத்துகின்றோம். (ஆதியாகமம் 15:16) யுத்தத்தின் மூலமாகவோ அல்லது கொள்ளை நோயின் மூலமாகவோ அல்லது பஞ்சத்தின் மூலமாகவோ அழிக்கப்பட்டாலும், எதுவாயினும் சரி, மரணத்தின் தெய்வீக தீர்ப்பு நிறைவேற வேண்டும்.

தேவன், நோய், யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய், மரணம் ஆகியவைகள் உலகை ஆளுகை செய்யும்படிக்கு அனுமதித்துள்ளார். தேவன், மாபெரும் மீட்பர் மூலமாக மனுஷருக்குரிய மீட்பையும், மனுஷருக்குரிய இரட்சிப்பையும் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிறா மேசியா

2340--

இராஜ்யம் விரைவில் பூமியின் மீதான ஆளுகையை எடுத்துக்கொண்டு, பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை நிறுத்தி, சாத்தானை கட்டி, பூமியின் மீது தெய்வீக சத்தியத்தின் சூரியனைப் பிரகாசிக்கப்பண்ணுவார். அப்போது சகல குருடான கண்களும் திறக்கப்படும். சகல செவிடான செவிகள் திறக்கப்படும். உண்மையான தேவனையும், அவருடைய உண்மையான செய்தியையும் புரிந்துகொள்ளவும், அறிந்து கொள்ளவும், தடையற்றுக் காணப்படும்.

இதற்கிடையில் இஸ்ரயேலின் பட்டயத்தினால் மரித்தவர்கள் எவரும் காலம் கடந்துள்ளதை அறிய மாட்டார்கள். அவர்கள் பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிற அனைவரும், விழிக்கும் ஆயிரவருட அரசாட்சியில் விழித்தெழுவார்கள். இவர்கள் அப்பொழுது மிகவும் சாதகமான சூழ்நிலைகளில் காணப்படுவார்கள். இவர்கள் அறியாமை மற்றும் மூட நம்பிக்கையின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். மேசியாவின் ஆயிரவருட இராஜ்யத்தில் இவர்கள் தங்களுடைய பெலவீனங்கள் மற்றும் குறைவுகளிலிருந்து ஏதேனில் இழந்ததும், கல்வாரியில் மீட்டுக் கொள்ளப்பட்டதுமாகிய மனித பரிபூரணத்திற்குத் திரும்புவார்கள். ஆமென்!

-----------------------------------

**--2341--**

## "The End of the Ages" - Condition Similar
## யுகங்களின் முடிவு" - ஒத்த நிலைமைகள்

"உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்." யோவான் 15:18

"உலகம்" என்ற வார்த்தையின் மூலம் ஆண்டவர் புற ஜாதியை குறிப்பிடவில்லை. இல்லையென்றால் புறஜாதி என்றே குறிப்பிட்டிருப்பார். புற ஜாதிகள் என்று கூறியிருந்தால், தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லாதிருக்கிற அனைத்து மக்களையும் அது குறிப்பிட்டிருக்கும். ஆனால் அவர் "உலகம்" என்ற வார்த்தையை பயன்படுத்தும் போது, தற்கால ஒழுங்குமுறைகளை குறிப்பதாக காணப்படுகிறது. ஆகையால் தற்கால முறைமைகளின் ஜனங்களை குறிப்பிடுகிறார். ஏனெனில் ஜனங்கள் மூலமாக மட்டுமே தற்கால முறைமை இருக்க முடியும். மத செல்வாக்கு உள்ளவர்களை, மக்களின் பிரதிநிதிகளை அர்த்தப்படுத்தியிருப்பார்.

அந்த காலத்தின் முறைமைகள் வேதபாரகர்கள், சதுசேயர்கள், பரிசேயர்கள், பிரதான ஆசாரியர்கள் மற்றும் நியாய சாஸ்திரிகள் – பிரமாணத்தை வியாக்கியானம் பண்ணுகிறவர்கள் மூலமாக ஏற்படுத்தப்பட்டன. பிரமாணத்திற்கு பிரதிநிதியாக இருந்தவர்களே ஜனங்களுக்கும் பிரதிநிதியாக இருந்து குறிப்பாக ஒழுங்கு முறைமைகளை ஏற்படுத்துகிறவர்களாக இருந்தார்கள். அவர்கள் கர்த்தரை வெறுத்தார்கள் என்பதை நாம் அறிவோம். கர்த்தர் வேதத்தில் சொல்–யபடி, அவர்கள் ஒளியை வெறுத்தார்கள். அவர்கள் அவரை வெறுத்ததற்கு காரணம், அவர் அவர்களுக்கு தீங்கு செய்தார் என்பதினாலல்ல, ஆனால் அவரது போதனைகள் மற்றும் அவரது வாழ்க்கையி–ருந்தும், அவரது போதனைகளி–ருந்தும் பிரகாசித்த ஒளி அவர்களுக்கும், அவர்களது திட்டங்கள், முறைமைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு முரண்பட்டதாக இருந்தது. அவரது வார்த்தைகள் உண்மையாயிருந்தால், அந்த அனைத்து வருடங்களிலும் அவர்கள் ஏற்படுத்திய அனைத்து திட்டங்களும் பயனற்றதாக ஆகிவிடும். அந்தப்படி அவர்கள் தங்கள் திட்டங்களில் நம்பிக்கையாக இருந்தபடியால், கிறிஸ்துவும் அவரது சீடர்களும் அவர்களுக்கு அறிவீனர்களாகவும், நடைமுறைக்கு ஒவ்வாத சில காரியங்களை செய்ய முயல்பவர்களாகவும் காணப்பட்டார்கள்.

நமது கர்த்தருக்கு பிரதானமான எதிர்ப்பு, மத ஆளுநர்கள், போதகர்கள் மற்றும் யூத அரசியல்வாதிகளிடமிருந்து வந்தது. அங்கே சதுசேயர் மற்றும் பரிசேயர்கள் இருந்தார்கள். சதுசேயர்கள் தங்கள் கண்களால் பார்ப்பதைத் தவிர வேறு எதையும் நம்பமாட்டார்கள். அவர்கள் அசாத்தியமான கருத்துடையவர்கள், பரிசேயர்கள் மிகவும் கண்டிப்பான மத வகுப்பார். யூதர்களில் மிகச்சிறந்த பரிசுத்தமான ஜனங்கள், அவர்கள் வெளியரங்கமான தோற்றங்களிலும், சடங்காச்சாரங்களிலும் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் மிகவும் அகந்தையுள்ளவர்களாகவும் சுயநீதி மற்றும் அநீதியுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இயேசுவின போதனைகளை ஏற்றுக் கொண்டவர்கள் யாராயிருந்தாலும், இந்த வகுப்பார்களிலும் அல்லது அவர்களது போதனைகளிலும் எந்தவித விருப்பத்தையும் பெற்றிருக்கமாட்டார்கள். மேலும் அவர்களை மதிக்கவோ, அவர்களை தங்கள் நாட்டின் மாமனிதர்களாகவோ கருதமாட்டார்கள். அவர்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்தாலும், இந்த மத ஆளுநர்களும் இயேசுவை எதிர்த்தவர்களில் ஒருவராக இருந்தனர்.

இந்த வகுப்பார்கள்தான் வேதபாரகர்கள் மற்றும் நியாய சாஸ்திரிகளுடன் சேர்ந்து கொண்டு இயேசுவை சிலுவையில் அறையும்படி ஜனங்களை தூண்டிவிட்டவர்கள். ஓரளவுக்கு படித்து, கற்றறிந்து அறிவுள்ளவர்களாயிருந்த இந்த மனிதர்கள் ஜனங்களோடு தெருக்களில் இறங்கி பரபாசுக்கு ஜெயகோஷமும், இயேசுவுக்கு எதிராக கூச்சலும் இட்டார்கள் என்று நாம் நினைத்துக் கொள்ளக்கூடாது, ஆனால் கும்பலை தூண்டிவிட்டார்கள். ஆனால் தங்களை மிகவும் கௌரவமான நடத்தை உடையவர்களாக பாவனை செய்தார்கள். எல்லா நிகழ்வுகளிலும் அவர்களது நடத்தைகள் கர்த்தரின் மரணத்திற்கு கொண்டு விடுகிறதாக இருந்தன. அவர்கள் ஆண்டவரை வெறுத்ததுமாத்திரமல்ல அவரை அழிக்கிற அளவுக்கு அவ்வளவு கசப்புடனும் ஆத்திரத்துடனும் அவரை வெறுத்தார்கள். அவரை கொல்வதற்கு அநேக தடவைகள் சதி செய்தார்கள். ஆனால் குறித்த காலம் வராததால் அது நிறைவேறவில்லை. லாசருவை இயேசு உயிர்த்தெழுப்பிய அற்புதத்தை பரிசேயர்கள் அங்கீகரித்தார்கள். ஆனால் இந்த அற்புதத்தினிமித்தம் அவரை அழிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஏனெனில் இந்த அற்புதத்தினால் ஜனங்களிடம் அவர் அதிக செல்வாக்கு பெற்றுவிடுவார், அதே அளவுக்கு தாங்கள் செல்வாக்கு இழந்து ஜனங்களுக்கு அந்நியர் ஆகிவிடுவோம் என்று எண்ணினார்கள்.

பிரதான ஆசாரியனாகிய காய்பா கூறியதாவது, "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன், ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்."(யோவான் 11:47–53) இயேசுவின் போதனைகளினால் ஜனங்கள் கவரப்பட்டால் நாட்டின் தலைவர்கள் செல்வாக்கு இழந்துவிடுவார்கள் என்றும், "ரோமர்கள் வந்து நம்முடைய ஸ்தானத்தையும், ஜனத்தையும் அழித்து போடுவார்கள்" என்றும் தேசத்தின் தலைவர்கள் பயந்தார்கள். அவர்கள் கூறியதாவது: "நாங்கள் இந்த நாட்டின் பாதுகாவலர்கள், ரோமிலுள்ள அரசாங்கம் இங்கேயுள்ள இந்த குழப்பங்களையெல்லாம் கவனிக்கமாட்டார்கள். நாம் இதை செய்யவில்லையென்றால், தேவனினிமித்தம் இந்த பூமி அழிக்கப்படும். ஆகையால் இந்த

மனிதனை அழிப்பது தகுந்ததாக இருக்கும்.'' இதில் கஷ்டம் என்னவென்றால், தேவனைப்பற்றியும் அவர்களது தேசத்தைப்பற்றியும் அவர்கள் தவறான கருத்தை பெற்றிருந்ததே ஆகும். தேவனை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவேயில்லை. எல்லாமே தாங்கள்தான் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். தேவன் சர்வவல்லமையுள்ள ஒருவர் என்பதையும், தலைமையான ஸ்தானத்தில் இருப்பவர் என்பதை அவர்கள் மறந்திருந்தார்கள்.

**சத்தியத்தின் பிரகாசம் தவறுகளை வெளிப்படுத்துகிறது**

நமது தலைப்பு வசனத்திலே, "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்ததென்று அறியுங்கள்" என்று உண்மையான தேவனுடைய பிள்ளைகளிடம் நமது ஆண்டவர் கூறினார். கர்த்தராகிய இயேசுவின் சீடர்களாக அவர்களது விசுவாசத்திற்கேற்றபடி, கர்த்தரின் ஜனங்கள் வெறுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள் என்பதை நாம் காண்கிறோம். ஆரம்பத்திலே சபையானது நீண்டகாலமாக முத-ல் நீரோ, பிறகு தியோகிளேத்தியன், இன்றும் மற்ற ரோம ராஜாக்களால் துன்புறுத்தப்பட்டது. அதன் பிறகு அந்திக் கிறிஸ்து எழும்பி, கி.பி.539-ல் தேவனுடைய ராஜ்யத்தின் போ-யாக, தவறானதாக ஸ்தாபிக்கப்பட்டது. இவர்களும் உண்மையான சபையை வெறுத்து அவமதித்தனர். இவர்கள் கற்பனையில் மிதப்பவர்களாகவும், மெய்யான சபையைக் குறித்து தப்பறையான எண்ணம் உடையவர்களாகவும் அதாவது சபை சிந்தனை சக்தியற்றது என்றும், இயேசுவின் வார்த்தைகளை சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் தற்கால ராஜ்யத்தைக் குறித்து யோசிக்காமல் எதிர்கால ராஜ்யத்தைக் குறித்து அதிக மாக சிந்திக்கிறார்கள் என்றும் நினைக்கிறார்கள். அதன் பிறகு கொடிய துன்பங்கள் நிறைந்த நீண்ட இரவு போப்பின் ஆயிர வருட காலத்தில் (கி.பி.799 to 1799) வந்தன. உண்மையான சீடர்கள் அதிகமானோர் இல்லை. அவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாகவும், உயர்ந்தவர்களோ, படித்தவர்களோ, ஐசுவரியவான்களோ அதிகம் இல்லாதவர்களாகவும் இருந்தனர். "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை," "தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை, விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களாகவும், தெரிந்து கொள்ளவில்லையா**?**" (1 கொரிந்தியர் 1:26; யாக்கோ 2:5)

தற்காலத்திற்கு நாம் வருவோம், கர்த்தரின் பிள்ளைகள் எந்த அளவிற்கு இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றுகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களது வெளிச்சம் மற்றவர்களுக்கு பிரகாசமாயிருக்கும்படி விரும்புவார்கள். எந்த அளவுக்கு தங்கள் வெளிச்சத்தை பிரகாசிக்கப் பண்ணுகிறார்களோ, அந்த அளவுக்கு இந்த உலகத்தின் தப்பறையான அபிப்பிராயங்களையும் தவறான முறைமைகளையும் அது காண்பிக்கும், இயேசுவின் நாட்களைப்போலவே இங்கே நமது நாட்களிலும் சத்தியம் வெளிப்பட்டு, தப்பறைகளை கண்டனம் செய்கிறது. இதனிமித்தம் சத்தியத்தை வெளிப்படுத்துகிறவர்கள் வெறுக்கப்படுகிறார்கள். நமது ஆண்டவரின் முதல் வருகையின் காலத்தில் இருந்ததுபோல, தற்காலத்திலும் மத ஸ்தாபனமும் அரசியலும் இணைந்திருக்கிறது. எல்லாவித சீர்த்திருத்தமே அவர்களது திட்டம், அவர்கள் சொல்கிறதாவது: "வெள்ளையரின் அடிமை வியாபாரத்தையும், மதுவியாபாரத்தையும் நம்மால் அழிக்க முடிந்தால் ஆயிர வருட யுகத்தை சமீபமாக்குவோம். ஞானமுள்ள ஆட்சியாளர்களை தேர்ந்தெடுத்தல், புது முறைமைகளை கொண்டுவருவதற்கு உதவிடும்." இந்த நல்ல முயற்சிகளுக்கு நாம் இரக்கம் காண்பித்தால், இப்படிப்பட்ட முழுதிட்டங்களும் எதிர்கால ராஜ்யத்தைப்பற்றி தேவனுடைய திட்டமல்ல என்பதை நாம் உணர்கிறோம். தற்கால ஸ்தாபனங்கள் பழுதுபார்க்கப்படவேண்டியவைகள் அல்ல, "புதிய வானம் மற்றும் புதிய பூமியின்" முறைமைகளால் நீக்கப்படவேண்டியவைகள்.

சீர்திருத்தம் பண்ணுகிறவர்களை நாம் குறை கூறக்கூடாது. எனினும் அவர்கள் செய்கிற முயற்சி பழைய ஆடைகளுக்கு ஒட்டுபோடுகிற வேலையாக இருக்கிறது. நன்மைக்காகவும் நீதிக்காகவும் செய்கிற எந்த வேலைக்காகவும் நாம் அனுதாபம் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம். உலகம் தன்னால் முடிந்ததை செய்ய நாம் விட்டுவிடவேண்டும். தேவனுடைய திட்டத்திலும் அவர் கொண்டு வர இருக்கிற மகா சீர்த்திருத்தத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவுரை என்னவென்றால், ராஜ்யத்திலே ஒரு இடத்திற்கு நாம் தயாராக வேண்டும் என்பதும், அதே போல மற்ற தேவனுடைய பிள்ளைகளை அவர்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தவும் ராஜ்யத்திற்கு தயாராயிருக்கவும் நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதாகும். இப்போது சமீபித்திருக்கிற அந்த ராஜ்யம் பாவத்தை அழிக்கவும். நீதியை உயர்த்தவும் தேவனுடைய ஏஜெண்ட்டாக இருக்கும்.

**வெளிச்சத்திற்காக இருளை வைத்தல்**

இதெல்லாம் உலகத்திற்கு ஒரு முட்டாள்தனமான கதையாக காணப்படுகிறது. ஏனெனில், இது அவர்களது திட்டங்களுக்கு தோல்வியாக இருக்கும். அனைத்து பேர் சபைகளின் திட்டங்களை தலைகீழாக்கும். நாம் செய்வது அனைத்து சபை பிரிவுகளுக்கும் பெரிய அழிவை அர்த்தப்படுத்தும் என்று ஜனங்கள் நினைப்பார்கள். இந்த முறைமைகளை உயர்த்தவோ அல்லது, உலகத்தில் கர்த்தரின் வேலையை செய்வதற்கு நிதியை சேகரிக்கவோ அந்த அளவுக்கு அக்கரை உள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். நமது கருத்து உண்மை

என்று நிரூபணம் ஆக வேண்டுமானால் ஜனங்களின் நம்பிக்கையை பெறவேண்டுமானால் அந்த அளவுக்கு மனிதர் ஏற்படுத்திய முறைமைகள் ஜனங்களால் வெறுக்கப்படக்கூடியதாக இருக்கும். சத்தியத்தை ஒப்பிட்டு பார்க்கும்போது அவைகளெல்லாம் வெட்கக்கேடானவைகளாக ஆகும். அவைகளை ஏற்படுத்தியவர்கள் அவர்களது இருளை மறைப்பதற்கும், அவர்களது செழுமைக்கும் வெளிச்சம் அவசியம் என்று அழைக்கிறார்கள். நமது புத்தகங்களை எரிக்க வேண்டும் என்பதும், நமது பிரசங்கங்களை செய்தித்தாள்கள் போன்றவற்றில் பிரசுரிக்கக்கூடாது என்பதும் அவசியமானது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இவைகளெல்லாம் ஞானமான செயலாக அவர்களுக்கு காணப்படுகிறது. நமது போதனைகள் பொதுவாக ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்களும் அவர்களது முறைமைகளும் முற்றிலுமாக விழுந்துபோகும் என்று உணர்கிறார்கள்.

### "இறுமாப்பானவைகள்"

இந்த சபை ஸ்தாபனங்கள் பதினெட்டு நூற்றாண்டுகளாக கிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக ஊழியம் செய்ததாக கூறிக் கொள்கிறார்கள். ரோமன் கத்தோ-க்க சபையார் கூறுகிறதாவது; "நாங்கள் ஒரு பெரிய ஸ்தாபனத்தை உருவாக்கியிருக்கிறோம்! கோடிக்கணக்கான பணத்தை நாங்கள் முதலீடு செய்திருக்கிறோம் பாருங்கள்! பற்பல அரசாங்கங்களுக்கு நாங்கள் எவ்வளவு உதவியிருக்கிறோம்; சீக்கிரத்தில் நாங்கள் அனைத்து அரசாங்கங்வளையும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம் என்று நம்புகிறோம். பிறகு உலகத்தை ஜெயங்கொள்ளுவோம்!" இது போலவே மெதடிஸ்ட், பேப்டிஸ்ட் இன்னும் மற்ற சபையாரும் கூறுகிறார்கள்: "நாங்கள் உலகத்தை ஜெயிக்க வேண்டும்! இந்த முறையில்தான் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும்!''

இப்படியாக தங்களது திட்டங்களின்படி ஸ்தாபிக்க போகிறார்கள். தேவனுடைய வசனத்தை அவர்கள் படிக்கும் போது கண்களில் தமது சபையின் கண்ணாடியுடன் தான் படிக்கிறார்கள். சீக்கிரத்தில் ஒவ்வொரு முழங்காலும் முடங்கும், ஒவ்வொரு நாளும் பாவ அறிக்கை செய்யும் நிலைமையில் "சபை" இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் கூறுகிறதாவது; "இந்த ஆயிர வருட அதிகாலையின் ஜனங்கள், உண்மையான சபையில் ஒரே ஒரு "சிறு மந்தையே" இருக்கிறது என்று போதித்தால். நாம் நமது பெரிய மந்தையைக் குறித்து நாம் பெருமையடித்துக் கொண்டிருப்பதாக ஜனங்கள் ஞாபகப்படுத்துவார்கள். ரோமன் கத்தோ-க்க மந்தையே, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? லுத்தரன் மந்தையே, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? உலகில் நாற்பது கோடி (கி.பி.1915ல்) கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ளவில்லையா? ஓர் அற்பமான ஜனங்கள் வந்து உண்மையான சபையாராக கொஞ்சபேர் மட்டுமே இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் மோசமானவர்கள் என்று கூற நாம் அனுமதிக்கலாமா? நமது பெரிய ஸ்தாபனங்கள் எல்லாம் தவறானவைகள் என்று அது அர்த்தப்படுத்துகிறது. இந்த ஜனங்கள் போய் உலகத்தை தலைகீழாக மாற்றி, நமக்கு கெட்ட பெயரை ஏற்படுத்துவார்களானால், நாம் அதற்கு முன்னதாக அவர்களை நசுக்க வேண்டும். நிச்சயமாக ஏதாவது செய்யப்படவேண்டும்!''

### நமது அக்கினி ரதம்

ஆகையால் அங்கே வெறுப்பு இருப்பதை நாம் காண்கிறோம். தேவனுடைய உண்மையான ஜனங்களை பரிபூரண சிறப்பிற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக, கர்த்தரின் சாயலை அடைவதறகு அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதப்பற்றுள்ள ஜனங்கள் இந்த அளவுக்கு வெறுப்பது இதுவல்ல. அவர்களது ஸ்தாபனங்களுக்கு உபத்திரவம் கொடுப்பதாகும்– அவர்களது படகை குலுக்கி அலைக்கழிப்பதாகும். அவர்கள் கட–ல் கவிழ்க்கப்பட்டுவிடுவார்கள் என்று பயப்படுகிறார்கள். அவர்களிடத்தில் இருக்கிற உலகின் ஆவிதான் கர்த்தருடைய உண்மையுள்ள ஸ்தானாதிபதிகளை வெறுக்கிறது. உலகின் உயர்ந்த குணமுடைய சிலர் இப்போது சத்தியத்தை கொஞ்சம் பார்க்கிறார்கள். இது சபை மக்களில் கர்த்தரோடு முழுவதுமாக இசைவில்லாதவர்களாக இருப்பவர்களுக்கு அதிக எரிச்சல் உண்டாக்குவதாக இருக்கிறது.

கடைசியாக இது எதற்கு வழி நடத்தும் என்பதை நாம் அறியோம். ஆனால் இந்த ஒரு துன்பம் உண்மையான சபையின் ஊழியம் முடிவடைகிறது என்பதை குறிப்பதாக வேதாகம வசனங்கள் காண்பிக்கிறது. எ–யா சபைக்கு ஒரு நிழலாக இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் கடைசியாக அக்கினிரதத்திலே ஏறிச் சென்றார். அதன் மூலமாக அவர் உலகத்தி–ருந்து எடுத்துக் கொள்ளப்பட்டார். ஆகையால் இந்த உலக (யுக) முடிவில் கர்த்தர் தமது ஜனங்களை அக்கனி போன்ற துன்பத்தில் எடுத்துக் கொள்வார். ஆனால் அது கனம், மகிமை, சாகாமைக்கும் தெய்வீக சுபாவத்தில் இயேசுவுடன் பங்கு பெறுவதற்கும் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் இரதமாக இருக்கும். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரிமாயிருக்கிறார்." "அவரோடே கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்."

ரோமர் 2:7;8:17; லூக்கா 12:32; 2 தீமோத்தேயு 2:12

R 5677 [Page 133]

# "These Things" That We must Do

# "இவைகளை" நாம் செய்ய வேண்டும்

"இவைகளை செய்தால், நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை." 2 பேதுரு 1:10

வேதாகமத்தில் மேலே சொல்லப்பட்ட வசனத்திற்கு முன்பதாக உள்ள பகுதியில் அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியின் கனிகளை நமது இருதயத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் அதன் மூலமாக வாழ்க்கையிலும் அதாவது வார்த்தை, செயல் மற்றும் எண்ணம் ஆகியவைகளிலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார். இந்த காரியத்தில் அவரது புத்திமதியை கேட்டு இந்த குணங்களை ஒவ்வொன்றாக சேர்த்து அவர்களது கிறிஸ்தவ குணலட்சணங்களை பெருக்குபவர்கள் "ஒருக்காலும் இடறி விழுவதில்லை" என்று, தான் எடுத்துக் கூறியவைகளின் முக்கிய கருத்துக்களை சுருக்கமாகக் கூறுகிறார். சில சோதனைகளில் விழுந்து போகக் கூடிய சுபாவம் இருக்கும் என்று இது அர்த்தப்படுத்துகிறது. இந்த சோதனைகளில் விழாமல் நிற்பதற்கு இந்த குணலட்சண அபிவிருத்தி ஒவ்வொருவருக்கும் அவசியமாக இருக்கிறது. ஆகையால், எல்லா சோதனைகளிலும் விழாமல் நிற்பவர்களுக்கு, "நம்முடைய கர்த்தரும் இரட்கருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" என்று அப்போஸ்தலர் உறுதிப்படுத்துகிறார். இதற்காகவே, இதில் பங்கு பெறவே கர்த்தருடைய அனைத்து ஜனங்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அறிவின் கண்களில் ஒளியைப் பெற்றிருக்கிற நாம் அப்போஸ்தலரின் போதனைகளின் பலத்தையும் விவேகத்தையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. எனினும் இவைகளெல்லாம் காரண காரிய முறையில் அதிகமாக போதிக்கப்படவில்லை. இருண்ட யுகத்தின் தப்பறைகள் அப்போஸ்தலர்களின் போதனைகளை தடைசெய்து ஒன்றுமில்லாததாக்கிவிட்டிருக்கின்றன. கடந்த காலத்தின் விசுவாச கோட்பாடுகள் எல்லாம் மிகவும் சொற்பமானவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், உலகத்தின் மற்ற ஜனங்கள் எல்லாம் நித்திய சித்திரவதையிலும் சொல்லொனா துயரத்திலும் விடப்படுவார்கள் என்றும் கூறுகின்றன. உலகில் அநேகர் இதை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள். அது நம்ப முடியாததாகவும் இருக்கிறது. தங்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வோம் என்கின்றனர். தேவனுடைய பிள்ளைகளாயிருந்த மற்றவர்கள், அநேகரை நித்திய ஆக்கினையி-ருந்து தங்களால் முடிந்தவரை அதிகப்படியானவர்களை காக்க வேண்டும் என்று மூர்க்கமாக முயற்சிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வகுப்பையோ அல்லது சபை பிரிவையோ சேராமலோ ஒரு குறிப்பிட்ட வகையான ஞானஸ்நானத்தை பெறாமலோ, பாவத்தைவிட்டு மனந்திரும்பாமலோ இருந்தால் அவர்கள் நிச்சயமாக இந்த வாழ்க்கைக்குப் பிறகு நித்திய மற்றும் சொல்லொனா துன்பத்தில் இருப்பார்கள் என்று நம்பினார்கள்.

இப்படிப்பட்ட ஒரு எண்ணத்துடன் அவர்கள் தேவனுடைய வசனம் உண்மையிலேயே என்ன போதிக்கிறது என்பதை சரியாக படிக்க முடியாமல் மிகவும் சுறுசுறப்பாக இருப்பதால், உலகத்தை இரட்சிக்க தங்களது சொந்த திட்டங்களை கைக்கொண்டதில் எந்தவித விசித்திரமுமில்லை, தவறான நம்பிக்கை கொண்டு ஏமாறுகிற இப்படிப்பட்ட சிலர், ஆத்துமாவை இரட்சிக்கிற வேலை என்று அவர்கள் கூறிக்கொள்கிற வேலையில் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதாக காணப்படுகிறார்கள். இது அறிவுக்கேற்றபடி இல்லாதிருந்தாலும், அவர்களது இந்த தைரியத்தையும் வைராக்கியத்தையும் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை. அவர்கள் முன்னால் கூறியது உண்மையாயிருந்தால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகத்தை இரட்சிக்க வேகமாக போகவேண்டும்.

நமது வீட்டிற்கு கொஞ்ச தூரத்தில் ஒரு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். தீயணைப்புத் துறை அங்கு வரமுடியாமல் இருக்கிறது. நமக்கு அந்த தீயினால் எந்தவித ஆபத்தும் இல்லை. ஆனால் நூற்றுக்கணக்கானோர் அந்த தீ விபத்தில் சாகும் ஆபத்து இருக்கிறது. இந்த நேரத்தில் ஒருவர் வந்து "நாம் பைபிள் ஆராய்ச்சி பண்ணலாம், வாருங்கள்" என்று அழைத்தால், நாம் "நிச்சயமாக முடியாது, தீயில் அகப்பட்டுக் கொண்டிருக்கிற அநேகரை நாம் காப்பாற்ற வேண்டும். இல்லையென்றால் அவர்கள் இறந்துவிடுவார்கள்" என்று பதிலளிப்போம், வேறு எந்த வேலையையும் செய்யாமல் ஆபத்தில் இருக்கிற உயிர்களை காப்பாற்ற நாம் துரிதமாகவும் தீவிரமாகவும் ஈடுபடுவோம்.

### அநேக கிறிஸ்தவர்களின் போதனைப்பற்றிய குழப்பம்

உலகமானது அதிசீக்கிர ஆபத்தில் இருப்பதாகவும், அக்கினியில் மரிக்காமல், அவியாத அக்கினியில், நித்தியமாக யுகாயுகமாக வெந்துகொண்டேயிருக்கக்கூடிய, நினைத்துப்பார்க்க இயலாத மகா அச்சத்திலும் பயத்திலும் இருப்பதாக பெரிய சத்துருவாகிய சாத்தான் அநேக கிறிஸ்வர்களின் மனதில் பதிய வைத்திருக்கிறான். ஆகையால் ஆத்துமாக்களை நித்திய ஆக்கினையி-ருந்து காப்பதற்கு சாத்தானின் மேல் கற்பனையான ஒரு தாத்தத-ல்

கிறிஸ்தவர்களை அவன் ஈடுபட வைத்திருக்கிறான். நமது கண்கள் திறக்கப்பட்டு, இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு புறஜாதிகளுக்கோ அல்லது வேறு யாருக்கோ கொடுக்கப்படவில்லை என்பதை நாம் காணும் வரை, தெளிந்த புத்தியுள்ள ஆவியை நாம் அப்பியாசப்படுத்த முடியாது, தேவனுடைய ஏற்பாடுகளை நாம் புரிந்துகொள்ளும்போது, ஒவ்வொன்றும் நமது மனக் கண்களுக்கு முன்பாக மாறுகிறது. தேவன், புறஜாதிகளுக்கும் மற்றும் எல்லாருக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை நாம் காணும்போது, "என்ன வந்தாலும், விசுவாசமானது தேவனிடம் திடமான நம்பிக்கை வைக்கும்" என்பதை நாம் உணர்ந்து கொள்ளுவோம். சபை வகுப்பாரின் இரட்சிப்புக்காக நாம் தேவனுடன் ஒத்துழைப்பதே கிறிஸ்தவனின் வேலை என்று நாம் காண்கிறோம். நித்திய ஆக்கினையி-ருந்து இரட்சிக்க அல்ல, மரணத்தி-ருந்து இரட்சிக்கவும், வரவிருக்கிற கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவருடன் மகிமையின் சுதந்தரத்தை பெற்றுக்கொள்ளவும் நாம் ஒத்துழைக்கவேண்டும். இந்த மாபெரும் வேலை சுவிசேஷ யுகத்தில் ஒரு ஒழுங்கான முறையில் முன்னேற்றமடைந்து வருகிறது என்பதை நாம் காண்கிறோம்.

ஒரு க-யாண விருந்து மூலமாக தேவன் ஏற்பாடு செய்திருக்கிற கிறிஸ்துவுடன் சபையின் ஆசீர்வாதமான இணைப்பு சீக்கிரத்தில் நிறைவேறும். அதன்பிறகு, வானங்களின் கீழாக ஸ்தாபிக்கப்படயிருக்கிற இராஜ்யத்தில் சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக அவருடன் இருந்து, விழுந்துபோன மனுக்குலத்தை, ஆதாமின் முழு சந்திதியினரையும் உயர்த்தி இரட்சிக்கும் ஆசீர்வாதமான சந்தர்ப்பத்தை பெறும். ஆதாமினால் இழந்த, இயேசு தமது சிலுவையின் இரத்தத்தால் மீட்டுக் கொண்ட மகிமையின் நிலையை விருப்பமுள்ள மானிடர்களுக்கு திரும்ப கொடுக்கிற வேலையை பெறும். தேவனுடைய ஆச்சரியமான இரட்சிப்பின் திட்டத்தில் எல்லாரும் இருக்கிறார்கள் என்பதை உணரும்போது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. இந்த கிருபையான திட்டம் உயிரோடு இருக்கிறவர்களுக்கு மாத்திரம் அல்ல. கல்லறைக்கு போயிருக்கிற அனைவருக்குமானதாக இருக்கிறது! நமது புரிந்து கொள்ளுத-ன் கண்கள் மூலமாக அறிவைப் பெற்று, மாயைகள் நமது மனத்தி-ருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டு, உலகத்தோற்றத்திற்கு முன்னேயிருந்து தேவன் திட்டமிட்டிருந்த அழகான, ஆச்சரியமான காரியங்களை காண்பதற்கு நமது விவேகத்தை பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறோம்.

## பரிசுத்தமாகுத￼ன் போதனை அநேகாிடம் இல்லை

முதலாவதாக நாம் நம்மிடத்தில் கவனிக்க வேண்டியது நமது பரிசுத்தமாகுதலாகும். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே (உங்களைப்பற்றிய) தேவனுடைய சித்தமாயிருக்கிறது." "உலகத்தின் இரட்சிப்பு நமது தாழ்ந்த மாம்சீக முயற்சியைப் பொறுத்தே இருக்கிறது என்று நாம் நினைத்தபோது, வேதாகமத்தை நாம் படிக்கவோ அல்லது நமது பரிசுத்தமாகுதலைப்பற்றி சிந்திக்கவோ நமக்கு நேரம் கிடைக்கவில்லை. உண்மையிலேயே பரிசுத்தமாகுத-ன் சிந்தை பெரும்பாலான கிறிஸ்தவ ஊழியக்காரர்களில் மனதி-ருந்து மங்கிப்போயிற்று. ஏனெனில் இந்த போதனையின் முக்கியத்துவத்தை வற்புறுத்துவது, ஒரு கிறிஸ்தவன் தன்னை மத வைராக்கியமுள்ளவன் என்பதை அடையாளப்படுத்துவதற்கு அவசியமானது. பரிசுத்தமாகுதல் சபைக்கான தேவனுடைய திட்டமாக இருக்காது என்று ஒதுக்கி வைத்தவர்கள் உண்மையிலேயே சொற்பமானவர்களாக இருப்பார்கள் என்பது ஒரு பொதுவான எண்ணமாகக் காணப்படுகிறது. சத்தியத்தை விட்டுவிலகிய அநேகர், மிகக்கொடிய பாவங்கள் செய்தவர்கள் மட்டும்தான் நித்திய ஆக்கினையை அடைவார்கள் என்றும் மற்றவர்கள் எப்படியாவது பரலோகத்திற்கு செல்வார்கள் என்றும் நினைத்தனர். ஒருவன் ஒரு கொலைகாரனாகவோ, சட்டங்களுக்கு கீழ்ப்படியாதவனாகவோ அல்லது இழிந்த குணமுடையவனாகவோ இல்லாமல் மரித்தால் அவன் எப்படியாவது இரட்சிக்கப்படுவான் என்கிற எண்ணம் ஜனங்களிடையே தற்காலத்தில் அதிகமாக பரவி வருகிறது.

"ஒருவன் எந்தவித பரிசுத்தமுமில்லாமல், பரலோகத்திற்குள் நுழைய முடியுமென்றால், அதுதான் மிக மேன்மையானது. இதுதான் அந்த எண்ணம், "பெரிய இடத்தை பிடிக்கவேண்டும் என்று முயற்சிக்காதே. பரலோகத்தில் பிரதானமான இடங்களில் ஒன்றை பிடிப்பதற்கு முயற்சி செய்யாதே. தாழ்ந்த இடத்தைப் பிடித்துக்கொள்" – ஒருவேளை வாசல்வழியாக ஊர்ந்து செல்! இப்படியாக அநேக ஜனங்களும் அவர்களது நண்பர்களும் பரலோகத்திற்கு செல்வார்கள் என்று நம்பிக்கை கொள்ள முயற்சித்திருக்கிறார்கள். நமது கத்தோ-க்க நண்பர்கள் கொஞ்ச காலம் உத்திரிக்கும் ஸ்தலத்திற்கு செல்ல வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் எல்லாரும் உடனே பரலோகத்திற்கு செல்வார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். பரிசுத்தமாகுதல் என்ற கருத்து, நமது கர்த்தரைப் போல நாமும் பரிசுத்தமாகவேண்டும் என்பது, இயேசுவின் அடிச்சுவட்டில் நடப்பது என்பது வேத போதனை அல்ல என்பது அவர்களது எண்ணம். அவர்கள் வேதாகமத்தின் போதனையை அறியாததால் அது வேதத்தின் போதனை என்று கவனிக்கவில்லை.அவர்கள் இடுக்கமான வாசல் வழியாக செல்ல விருப்பங்கொள்ளாமல் மாம்சத்திற்கு மிகவும் விருப்பமான, விசாலமான, சுலபமான வழியில் செல்ல விரும்புகிறார்கள். தேவன் ஒவ்வொருவரையும் தீயில் போட்டு வாட்டுவார் என்று அவர்களால் நம்ப முடியவில்லை. ஆனால் புற ஜாதியினரையும் மிகவும் மோசமான குணமுள்ள கிறிஸ்தவர்களையும் தீயில் போடுவதில் நிச்சயமாக தேவன் திருப்தியடைவார் என்று நம்புகிறார்கள்.

## நமது "புத்தியுள்ள ஆராதனை"

வேதாகமம் எதை "புத்தியுள்ள ஆராதனை"என்று கூறுகிறது என்பதை கண்டுபிடிக்க முயற்சிசெய்யாமல், எது புத்தியுள்ள ஆராதனை என்று அவர்களுக்கு தோன்றுகிறதோ, அதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய அப்போஸ்தலராகிய பவுல் ரோமாபுரியிலுள்ள சபைக்கு எழுதிய அவரது நிருபத்தில்,"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவப-யாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று கூறுகிறார். (ரோமர் 12:1) இந்த தப்பறையான எண்ணங்களையும் கருத்துக்களையும் நீக்கிவிட்டு தெளிந்த

**--2346--**

புத்தியுள்ள ஆவியை பெறும் பொழுது, தேவனுடைய ஆச்சரியமான திட்டங்களையும், அவரது அன்பு, நீதி, ஞானம், வல்லமையையும், அவரது பிள்ளைகளைப்பற்றிய அவரது நோக்கங்களையும், அடுத்து இந்த உலகத்திற்கான அவரது ஏற்பாடுகளையும், அதிகமாக நாம் பார்க்க ஆரம்பிப்போம்.

உள்ளத்தில் வெளிச்சம் தோன்றவும், தேவனுடைய கிருபையான இரட்சிப்பின் திட்டத்தின் கணநேர காட்சியை காணவும் ஆரம்பிக்கும் போது, சுயநலம் உள்ளவர்களும் நன்றியறியாதவர்களாய் இருப்பவர்களும் பெரிய உலகத்தனத்திலே விழக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது. மேலும் அவர்கள் ஆவியின் கனிகளின் அபிவிருத்திக்காக வேதாகம ஆராய்ச்சியில் ஈடுபடவும் மாட்டார்கள். இதையெல்லாம் பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று தொழி-லும், பணம் பண்ணுவதிலும் சந்தோஷம் முதலானவைகளிலும் மிகவும் ஆழ்ந்து ஈடுபடுவார்கள். ஆனால் மற்றவர்களோ அதற்கு மாறாக, யுகங்களைப்பற்றிய தேவனுடைய மகிமையான திட்டங்களையும் வெளிப்படுத்திய அவரது அன்பிற்கும் தயவிற்கும் தங்களது மனப்பூர்வமான நன்றியை செலுத்துவதற்கு விரும்புவார்கள். மேலும் தாங்கள் செய்ய வேண்டியது மற்றும் தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ள நாடுவார்கள். மேலும் அவர்கள் "தேவன் தமது எந்த சிருஷ்டியையும் நித்தியமாய் வேதனைப்படுத்துவதற்கு அவர் அப்படிப்பட்ட ஒரு பேய் அல்ல என்றும், எல்லாருக்கும் மிகவும் ஆச்சரியமும் அன்பும் உடைய ஒரு திட்டத்தை அவர் வைத்திருக்கிறார். இது எல்லா வழிகளிலும் அவருக்கு ஊழியம் பண்ண விரும்பும்படி செய்கிறது" என்றும் கூறுகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் கூறுவது போல, சத்தியமானது, "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்" இருக்கிறது. மேலும் இது உண்மையான மன உணர்வை வெளிப்படுத்துகிறது. (2 கொரி 2:16)

**இந்த தீங்கு நாளில் கிறிஸ்தவனுக்கு தேவையானது**

இப்படியாக அதன் அன்பில் சத்தியத்தை பெற்றுக்கொள்ளுகிறவர்கள் வேதத்தின் மாணவர்களாக ஆகிறார்கள். அவர்கள் வேதத்தை ஆராய்வதினால், உண்மையான சபையின் ஒவ்வொரு அங்கமும் எப்படி சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்பதையும் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்திலே பங்கடைவதற்கு நம்மை தகுதியுள்ளவர்களாக்குகிறது" என்பதையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். சபையானது, தேவனுடைய பரிசுத்தவான்களாகும்படி இப்பொழுது அழைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் உலகத்தி-ருந்து பிரிக்கப்படவேண்டும் என்பதையும், ஆசீர்வாதத்திலும், மிகவும் சமீபமாயிருக்கிற யுகமாகிய ஆயிர வருட யுகத்தில் அகில உலகத்தையும் உயர்த்துவதில் கிறிஸ்துவின் உடன் சுதந்தரராக வேண்டும் என்பதையும் உணருகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு அப்போஸ்தலர் கூறுகிற புத்திமதியாவது: "உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், (மனோபாவம்) தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் (சுயகட்டுப்பாடு) இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும் தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும் சகோதர சிநேகத்தோடே அன்பையும், (அகில உலகத்துக்கான, இன்னும் நமது சத்துருக்களுக்கான பரந்த, பெருந்தன்மையான அன்பு) கூட்டி வழங்குங்கள்." 2 பேதுரு 1:5-7

மேலும் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் (மந்தமாக) கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது." இந்த சந்தர்ப்பத்தில் தங்களை தேவனுடைய பிள்ளைகளாக கூறிக்கொள்ளுகிறவர்களின் மேல் உலகத்தின் ஆவியின் மாறுபாடான விளைவுகளை காண்பிக்கிறார், அதாவது வேத ஆராய்ச்சியையும் அதற்கு இசைந்திருப்பதையும் ஒதுக்குகிறதற்கான விளைவை காண்பிக்கிறார். அவர் கூறுகிறதாவது: "இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களற தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்." பிறகு எல்லாருக்கும் அவர் கூறுகிற புத்திமதியாவது: "ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2 பேது.1:8-11)

**"தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தின்" அவசியம்**

தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி செய்ய நாடுவதின் மூலம், தேவனுடைய பிள்ளைகள் விசுவாசிகளுக்கான மகிமையின் சுதந்தரத்திற்காக தங்களை தாங்களே தயார்படுத்திக் கொள்ளுகிறார்கள். குணலட்சண அபிவிருத்தியினால் பலப்பட்டவர்கள் கர்த்தர் எப்படிப்பட்ட சோதனைகளை அனுமதித்தாலும், அவர்கள் விழுந்துபோகமாட்டார்கள். அப்போஸ்தலர் பவுல் எபேசியருக்கான தனது நிரூபத்தில் "தீங்கு நாளில்" நிலைநிற்கிற சிலரைப்பற்றி கூறுகிறார். அநேகர் அந்த நாளிலே நிலை நிற்கமாட்டார்கள் என்றும் கூறுகிறார். நிலைநிற்க விரும்புகிறவர்கள் "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும்" தரித்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவ ஆயுதங்களில் ஒவ்வொன்றும் அத்தியாவசியமானதாக இருக்கும். முழு சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொண்டவர்கள்தான் அந்த நாளின் பலமான தாக்குதலுக்கு தயாராயிருப்பார்கள்.

**--2347--**

"தீங்கு நாள்" எப்பொழுது வரும் என்பதை கர்த்தர் அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தவில்லை. அந்த நாள் எதிர் காலத்தில் வரும் என்பதை அறிந்திருந்தார்கள். ஆனால் எவ்வளவு காலத்திற்கு பிறகு என்பதை அறியாதிருந்தார்கள். அவர்களது மரணத்திற்கு முன்பாக அதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்களில் சிலர், தற்கால சரீரத்தை மரணத்தில் நீக்கிவிட்டு, முதலாம் உயிர்த்தெழுத-ல் எழுந்திருப்போம் என்று எதிர்பார்த்ததாக கூறினார்கள். மேலும் அவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இன்னும் கொஞ்ச காலத்தில் வரும் என்று நம்பினார்கள். குறித்த காலம் வரும் வரை, கர்த்தரின் நாளின் சரியான நேரத்தை தமது பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தாமல் இருப்பது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால் தீங்கு நாள் வரும் போது, ஜாக்கிரதையுடன் அவர்கள் சர்வாயுதத்தை தரித்துக்கொண்டால் அவர்கள் நிற்கத்தக்கதாக தேவையானவைகளை அவர் வழங்குவார்.

இப்போது நாம் அந்த "தீங்கு நாளுக்கு" வந்திருக்கிறோம். நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அவசரமான செய்தியாவது: "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்." பெரிய பரீட்சை வரும்போது நீங்கள் நிற்கத்தக்கதாக உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்! தயாராகுங்கள்! இப்போதிருக்கிற இந்த "சோதனை காலத்திற்கு," "இந்த சோதனை நாளுக்கு" தயாராவதற்கு ஆயுதத்தின் ஒவ்வொரு பகுதியும், ஆவியின் ஒவ்வொரு கனியும் அவசியமானதாக இருக்கிறது. ஆகையால் இவையெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாக சேர்க்கப்படவேண்டும். எபேசியர் 6:13–18; 2 பேதுரு 1:4–11: கலாத்தியர் 5:19–26 படிக்கவும்.

### ஏன் ஆயிரக்கணக்கானோர் விழுந்து போகிறார்கள்

"உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உனது வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்துபோவார்கள்" என்று வெகு காலத்திற்கு முன்னுரைக்கப்பட்ட காலம் இதுதான். இவர்களெல்லாம் ஏன் விழவேண்டும்? ஏனெனில் குணலட்சணத்தின் அபிவிருத்தியின் அவசியத்தை அவர்கள் அசட்டை செய்கிறார்கள்; தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ள தவறிவிட்டார்கள். பாபிலோன் மற்றும் உலகத்தின் ஆவியினாலும், நம்முடைய சத்துருவானவனின் மாயையின் கீழும் அவர்களது சிந்தையில் மாற்றம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் நேர்த்தியான ஆலயம் கட்டவோ அல்லது புற ஜாதிகளுக்காகவோ நிதி திரட்ட முயற்சித்திருக்கிறார்கள்; பேர் சபையின் களியாட்டங்களிலும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்; தங்களது சொந்த குணலட்சணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. கிறிஸ்துவின் ராஜ்யத்தில் நுழைவதற்கு தேவனுடைய வசனத்தின் போதனைக்கேற்ப குணலட்சணத்தை வளர்ப்பதின் அவசியத்தை உணரவில்லை. ஆகையால்தான் இவர்களெல்லாம் நம்மைச் சுற்றி விழுகிறார்கள்.

அப்போஸ்தலரின் காலத்தில் தேவனுடைய சர்வாயுதவர்க்கமும் அவசியமாக இருந்திருக்குமானால், தற்காலத்தில் இன்னும் அதிக அவசியமுள்ளதாக இருக்கிறது. நமக்கு தேவையானது எல்லாம் நீதியென்னும் மார்க்கவசத்திலும், விசுவாசம் என்னும் கேடகத்திலும், இரட்சணியம் என்னும் தலைச்சீராவிலும், சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையிலும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்திலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. சத்தியம் என்னும் கச்சை நமது அரைக்கு அவசியமாயிருக்கிறது. இப்படியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அறிவிலும், கிருபையிலும் அனுதினமும் வளர்வதற்கும், கர்த்தரோடும் அவரது வீட்டோடும் நமது முக்கியமான உறவை பாதுகாக்கவும் நம்மால் சாத்தியமாகிறது.

"கடைசி நாட்களில்" அப்போஸ்தலர் கூறியதாவது, "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." ஆகையால் கர்த்தரிடத்தில் முழுவதும் நம்பிக்கை வைக்கவும், விசுவாசத்தில் முழுவதும் நிலை நிறுத்தப்படவும் அவசியமாகிறது. நம்மை தற்காத்துக் கொள்ளவும். மற்றவர்களை பாதுகாக்கும் ஊழியத்திற்கும் தயாராகும்படிக்கும் நல்ல கருக்குள்ள ஆவிக்குரிய பட்டயத்தை நாம் கையில் வைத்திருப்போமாக, நமது மாம்சீக பலவீனங்களைக் குறித்தும், துன்பங்கள் குறித்தும் நாம் தொடர்ந்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அதன் மூலம் வெற்றிகரமான போராட்டம் பண்ணி, கிறிஸ்துவின் ராஜ்யத்திலும் அவரது கிரீடத்திலும் இப்படியாக பங்கு பெறுவோம்.

*"ஆபத்துக் காலத்தை நான் நெருங்குவதால்,*
*உம்மில் எனது விசுவாசம் பெருக கட்டளையிடும்;*
*சுற்றிலும் ஆயிரம்பேர் விழும்போது,*
*என்னை பூரண சமாதானத்தில் வையும்.*
*என் அடைக்கலமே! என் கோட்டையே, என்னிடத்தில்*
*அன்பாயிரும்!"*

--2348--

## Did Jesus Revile His Enemies?
## இயேசு அவரது சத்துருக்களை வைதாரா?

"அவர் வையப்படும்போது பதில் வையவில்லை." I பேதுரு 2:23

இயற்கையாகவே இந்த கேள்வி எழுகிறது. நமது கர்த்தர், பரிசேயர், வேதபாரகர் மற்றும் நியாய சாஸ்திரிகளை நோக்கி, மாயக்காரர், விரியன் பாம்புக் குட்டிகள் முதலான வார்த்தைகளை கூறி பகிரங்கமாக குற்றஞ்சாட்டின இந்த உண்மையை பரிசுத்த பேதுருவின் கூற்றோடு எப்படி இசைவுபடுத்துவது?

சுவிசேஷங்களில் கொடுக்கப்பட்டுள்ள சாட்சியங்களை நாம் நினைவுக்கு கொண்டு வருவோம். பரிசுத்த பேதுரு பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இருந்தார். ஆகையால் அவர் நமது கர்த்தருடன் அவரது பூமிக்குரிய ஊழியத்தில் தொடர்ந்து இருந்தார். ஆகையால் ஆண்டவர் வையப்படும் போது திருப்பி வையவில்லை என்கிற உண்மைக்கு அவர் ஒரு நல்ல சாட்சியாக இருந்தார். அப்போஸ்தலருடைய வசனத்தின் கருத்து இயேசு பதிலுக்கு பதில் செய்யவில்லை என்பது. தீய காரியங்கள் அவரைப்பற்றி சொல்லப்பட்ட பொழுது, அவருக்கு தீங்கு செய்தவர்களிடம் தீயவைகளை அவர் பேசவில்லை. அவர் அவர்கள்மேல் வசைமொழியை கூறவில்லை, ஆனால் தம்மை தெய்வீக நீதியின் கைகளிலும் தேவனிடமும் ஒப்புக்கொடுத்தார்.

வேத ஊழியர்கள் நமது கர்த்தருக்கு விரோதமாக சில வசைகளை பதிவு செய்கிறார்கள். "இவன் பிசாசு பிடித்தவன், பைத்தியக்காரன்'' என்று அவரது எதிரிகள் ஒரு தடவை அவரைப்பற்றி சொன்னார்கள். மேலும் இயேசு, தாம் "பெயல்செபூல்"-பிசாசுகளின் தலைவன் என்று அழைக்கப்பட்டதாக கூறினார். வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவரது கிரியைகளை ஒத்துக் கொண்டார்கள், ஆனால் அவரது நல்ல கிரியைகள் சாத்தானுக்கு என்று குற்றஞ்சாட்டினார்கள். அவரது பிறப்பு முறைதவறானது என்று கூறினார்கள். இந்த ஆலயத்தை இடித்துப்போட்டால் நான் மூன்று நாளைக்குள் எழுப்புவேன் என்று அவர் கூறியதை வேத தூஷணம் என்று நிரூபிக்க முயற்சித்தார்கள். அவரது போதனையின் ஆவியை புரிந்துகொள்ளவில்லை. அவரது கூற்றுக்களில் குற்றம் கண்டுபிடிக்கவே முயற்சித்தார்கள். அவரது வார்த்தைகளில் அவரை சிக்க வைக்க முயற்சித்தார்கள். அவர் உண்மையிலேயே ஒரு பெரிய மனிதனாக இருந்தால், அவர் பாவிகளுடனும் ஆயக்காரருடனும் ஐக்கியம் கொள்ளாமல் தங்களுடன் ஐக்கியம் வைத்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். கடைசியாக அவரை இரு கள்ளர்களுக்கிடையே சிலுவையில் அறையும் அளவுக்கு அவரை தூஷித்தார்கள்.

அந்த காலத்தில் இயேசு எப்படி வேதபாரகர், பரிசேயர்கள் மற்றும் பிரதான ஆசாரியர்களிடம் மிகவும் கடுமையான காரியங்களை கூறினார்? உதாரணமாக, அவர் அவர்களை "விரியன் பாம்புகுட்டிகளே,'' "வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களே,'' "மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தங்களினாலும்'' நிறைந்திருக்கும் கல்லறைகளே" என்று அழைத்தார். இன்னுமொரு சந்தர்ப்பத்தில், "மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?" என்று கூறினார். மறுபடியும் அவர், "சர்ப்பங்களே, விரியன்பாம்புக்குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?" என்று கூறினார். "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவின் இச்சையின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்'' என்று அறிக்கையிட்டார்." இன்னொரு சமயத்தில் அவர் "மதிகேடரே, குருடரே!" என்றும், "குருடரான வழிகாட்டிகளே!" என்றும் "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, அதில் பிரவேசிக்கப்போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை... மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்... மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் ஜீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்.இவைகளையும் செய்ய வேண்டும். அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே. குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள், மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறீர்கள், உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே! போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு," இவைகளெல்லாம் நிந்தனைகளா? நாம் கவனித்துக்கொண்டிருக்கிற வசனத்தை பரிசுத்த பேதுரு, எழுதும்போது தவறு பண்ணவில்லையா? மாறுபாடு எங்கே வருகிறது?

### இயேசு திருப்பி அடிக்கவில்லை

நாங்கள் பதிலளிக்கிறோம். நமது கர்த்தர் அவர்களை திருப்பி அடிக்கவில்லை, அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அவர் முன்னமேயே செய்துவிட்டார்; ஆகையால் அவருக்கு எதிராக அவர்கள் பேசியவைகளுக்கு அவர் பதில் பேசவில்லை. பிசாசை அவர்கள் பெற்றிருப்பதாக அவர்களில் யாரிடமும் அவர் சொல்லவில்லை. பொதுவாக அவர்கள் வைத்திருந்த முறைமைகள் கேடு உண்டாக்கும்

முறைமைகள் என்று பேசினார். இஸ்ரயே-ன் ஆட்சியாளர்கள் மாயக்காரர்கள் என்று கர்த்தர் அறிவிக்கவில்லை என்றால், அவர்கள் வெளிப்பார்வைக்கு பிரமாணத்தை கடைப்பிடிப்பவர்களாக காணப்பட்டபோது, அவர்கள் மாயக்காரர் என்பதை நாம் அறிந்திருக்க முடியுமா? ஜனங்கள் கூறியவைகள்; "இந்த பரிசுத்த மனிதர்கள் எப்படி சுற்றித்திரிந்து தெருமுனைகளில் ஜெபம் பண்ணுகிறார்கள் பாருங்கள்! அவர்களது பெரிதான வஸ்திரங்களின் தொங்கல்களைப் பாருங்கள்! அவர்கள் ஜெபம் பண்ணுகிற நேரத்தில் பாதி அளவு இயேசு ஜெபம் பண்ணுவதை நாங்கள் பார்க்கவில்லை. பிரமாணத்தை கைக்கொள்ள எப்பொழுதும் கவனமாக இருக்கிறார்கள்." ஆகையால் அவர்கள் கவனம் செலுத்துவது, தசமபாகம் செலுத்துவது, நீண்ட ஜெபம் செய்வது எல்லாம் மாய்மாலமானது என்று நமது கர்த்தர் குறிப்பிட்டு சொன்னது மிகவும் சரியானதே. அவர்கள் ஒற்தலாமிலும் ஜீரகத்திலும் தசமபாகம் கொடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள், ஆனால் விதவைகளின் வீடுகளை பட்சித்துப்போடுவதில் தயங்குவதில்லை. விதவைகளின் சொத்துக்களை தக்கவைத்துக்கொள்ள உதவி செய்து, பிறகு அவர்கள் இதை எடுத்துக்கொள்வார்கள்.

வெளிப்படையான இந்த பரிசுத்த மனிதர்களை உண்மையிலேயே வெளியரங்கமாக எப்பொழுதும் வெண்மையாகவும், சுத்தமாகவும் அழகாகவும் இருந்தார்கள். ஆனால் உள்ளேயோ அருவருப்பும் அசுத்தமும் நிறைந்திருக்கும். அவர்கள் அவர்களது பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், அவனது ஆவியை அவர்கள் உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் சுத்தமான இருதயத்தோடு நன்மைகளையோ தேவனுக்கு ஊழியத்தையோ செய்யவில்லை. அவர்களது ஊழியமெல்லாம் வெளியரங்கமானது மட்டுமே. அவர்களது முறைமைகள் எல்லாம் மாயையுடனான தேனடையாக இருந்தது. இந்த கால மொழியில் சொல்வோமேயானால் அது "அழுகிப்போனதாக"இருந்தது. அவர்களது மாய்மாலத்தை வெளிப்படுத்தவேண்டியதும் சுத்தமான இருதயமுடையவர்களை அவர்களது கேடுகளி-ருந்து காக்கப்படவேண்டியதும் அவசியமாயிருந்தது. இயேசு தனிப்பட்ட யாரையும் பேர் சொல்- அழைத்து கண்டிக்காமல் ஒரு வகுப்பாராக அவர்களை கண்டித்தார். அவர் அவர்களுக்கு தீங்கு செய்ய நாடாமல், நன்மை செய்யவே, முடிந்தால் அவர்களையும் அவர்களது தீமையான செய்கைகளையும் எச்சரிக்கவே விரும்பினார். நமது கர்த்தர் ஜனங்களை இரட்சிக்க விரும்பினார்; ஆகையால் இவைகளை ஒரு வகுப்பாருக்கான காரியங்களாக பேசினார். அந்த வகுப்பாரைக் குறித்து சில தீமையான காரியங்களையும் சொன்னார். அந்த வகுப்பாரில் ஒவ்வொருவரும் தனது வஸ்திர தொங்கலை சரிபடுத்தவும், இரண்டுவிதமான வாழ்க்கையை வாழவில்லை என்று காண்பிக்கவும் வேண்டியதாயிருந்தது, ஆகையால் நமது கர்த்தரின் வார்த்தைகள் தீமைகளை பேசுத-ன் கீழ் வராது. அவர் ஓர் ஒழுங்கைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார். அவர் ஜான் ஸ்மித் என்பவரைப்பற்றிய இரகசியத்தையோ அல்லது திருமதி பிரஷன் இப்படிப்பட்டவர், இதைச் செய்தார், அதைச் செய்தார் என்று தனிப்பட்ட வாழ்க்கை முதலானவைகளைப் பற்றியோ பேசவில்லை.

ஆகையால் தற்கால தெளிவான பிழைகளை கவனத்திற்கு கொண்டு வருகிற ஒரு பூரணமான உரிமையை நாம் பெற்றிருக்கிறோம் என்று நம்புகிறோம், நமது கர்த்தர் செய்ததுபோல் நாம் கண்டிப்பது சரியாக இருக்காது. நமது கர்த்தரின் காலத்தில் இருந்த யூதர்களை காட்டிலும் தற்காலத்தில் ஜனங்கள் மிகவும் அதிகமாக கோபம் கொள்வார்கள். அவர்களது தலைவர்கள் செய்த இந்த காரியங்களில் சிலவற்றை நமது கர்த்தர் கண்டித்திருக்கவில்லையென்றால் பரிசேயர்கள் கர்த்தரின் ஆதரவை பெற்றிருந்திருப்பார்கள். அங்கே அவர்கள் பக்திமானைப்போல நடிக்கிற முகத்தை வைத்துக் கொண்டு அநேக ஜெபங்கள் முதலானவைகளை கூறி வந்தார்கள். உண்மையிலேயே அவர்கள் பரிசுத்தமான ஜனங்களா? இயேசு அங்கே தேவனுடைய பிரதிநிதியாக இருந்து கொண்டு, தமது கருத்துக்களை கூறிவந்தார். ஆகையால் இந்த பரிசேயர்கள் தேவனை சந்தோஷப்படுத்தும் காரியங்களை செய்யவில்லை என்பதை இயேசு ஜனங்கள் அறியும்படி செய்தார். அவர் அவரது கடமையை மட்டுமே செய்தார்.

# City of David - City of God

# தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம்

2 சாமுயேல் 6:1–19; சங்கீதம் 24

*எருசலேம் புதிய தலைநகரம் – தேவனுடைய பிரசன்னம் விரும்பப்பட்டது – உடன்படிக்கைப் பெட்டி கொண்டுவரப்படவேண்டும் – ஊசா கொல்லப்பட்டான்–ஓபேத் ஏதோம் ஆசீர்வதிக்கப்பட்டான் – பாடம் கற்றுக்கொள்ளப்பட்டது – உடன்படிக்கைப்பெட்டி சரியான விதத்தில் கொண்டுவரப்பட்டது – களிப்புடன் கூடிய சமாதானம் – தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம்–தேவனுடைய பிள்ளைகளுக்கான பாடங்கள்.*

*"யேகோவாவின் ஆலயத்துக்கு போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்." சங்கீதம் 122:1*

தாவீது சமஸ்த இஸ்ரயேலுக்கும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பிறகு, தேவகிருபையால் வழிநடத்தப்பட்டு, ஒரு புதிய தலைநகரைத் தேடினான். எபூசியர்கள் எருசலேம் பட்டணத்தை அசைக்க முடியாத கோட்டையாக அநேக நூற்றாண்டுகளாக வைத்திருந்தார்கள். அதற்கு எதிராக வரும் எந்த எதிரியையும் குருடர்களும் சப்பாணிகளுமே காப்பாற்றி விடுவார்கள் என்று அவர்கள் கூறுகிற அளவுக்கு அந்த பட்டணம் அநுகூலமான இடத்தில் அமைந்திருந்தது. ஆனால் காலம் வந்தபோது, அது தாவீதின் கைகளுக்கு வந்து, இஸ்ரயே–ன் தலைநகரமாக ஆனது. புதிய ராஜாவின் முதல் காரியம் தேசத்திற்கு பெருமை தரக்கூடிய ஒரு அரண்மனையையும் முற்றத்தையும் கட்டினதுதான். அரண்மனையை கட்ட தீருவின்ராஜா கேதுரு மரங்களை மாத்திரமல்ல தச்சரையும் கல்தச்சரையும் அனுப்பினான்.

சீக்கிரத்தில் தாவீது ராஜாவின் ஆவிக்குரிய குணம் அவனது சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல், இஸ்ரயே–ன் அரசாங்கத்தைப் பொருத்தவரை, அது தானே உறுதிப்பட ஆரம்பித்தது. தேவனுடைய உடன்படிக்கையின் மக்களிடையே விக்கிரக ஆராதனை அனுமதிக்கப்படாமல் இருப்பது மட்டும் போதாது. தேவனுடைய பிரசன்னத்தின் அறிகுறிகள் மறுபடியுமாக கனப்படுத்தப்படவேண்டும். தாவீதுக்கு ஆசாரியர்கள் ஆதரவு தந்ததால், சவுல்ராஜா அவர்களை அழித்துவிட்டான். அதனிமித்தம் நோபி–ருந்த ஆசாரிப்புக்கூடாரம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. சவுல்ராஜா அதை கிபியோனுக்கு அனுப்பியிருந்தான். ஆனால் உடன்படிக்கைப்பெட்டி ஆசரிப்புக் கூடாரத்தில் இல்லை, நீண்ட நாட்களாக அப்படி இருந்தது.

ஏ–யின் துன்மார்க்கமான குமாரர்கள் உடன்படிக்கை பெட்டியை பெ–ஸ்தியரோடு யுத்தம் செய்த யுத்தகளத்திற்கு எடுத்துக் சென்றிருந்தார்கள் என்பதையும் அதிலே அவர்கள் தோற்றுப்போனதால், அந்த உடன்படிக்கைப்பெட்டி பெ–ஸ்தியர்களால் எடுத்துக் கொல்லப்பட்டது என்பதையும், இந்த உடன்படிக்கை பெட்டியின் பிரசன்னத்தினால் பெ–ஸ்தியரின் விக்கிரகமாகிய தாகோன் கீழே விழுந்து உடைந்தது என்பதையும், இந்த உடன்படிக்கை பெட்டியை பெ–ஸ்தியர்கள கீரியாத்யாரீமின் என்ற இடத்திற்கு அனுப்பும் வரை அந்த வாதை இருந்தது என்பதையும் நாம் நினைவுக்கு கொண்டு வருகிறோம். அது எழுபது வருடம் வரை, நாம் இப்பொழுது கவனித்துக் கொண்டிருக்கிற நிகழ்வு வரை அங்கேயிருந்தது, தாவீது ராஜா உடன்படிக்கை பெட்டியை புதிய கூடாரத்தில், ஆசரிப்புக் கூடாரத்திலே கொண்டு வந்து வைக்கும்போது ஒரு பெரிய விழாவை ஏற்பாடு செய்தான். தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தகவல் அனுப்பினான். முப்பதினாயிரம் வீரர்களும் திரளான ஜனங்களும் அதிலே கலந்து கொண்டார்கள். இந்த காரியம் முற்காலத்தில் இருந்ததுபோல தேசத்திற்கு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்று நம்பினார்கள்.

**பயபக்தியில் ஒரு பெரிய பாடம்**

தாவீது ராஜா தேவனை கனப்படுத்தவதில் கவனமாய் இருந்தான். எனினும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச் செல்வது, யார் தொடலாம் போன்ற காரியங்களில் தேவனுடைய பிரமாணத்தை கவனிக்காமல் விட்டிருந்தான். தேவனுடைய பிரமாணத்தில் ஜாக்கிரதையாய் இருப்பதற்கும், சர்வ வல்லமையுள்ளவரிடத்தில் பயபக்தியாய் இருப்பதற்குமான ஒரு பெரிய பாடத்தை கொடுத்தார். உடன்படிக்கை பெட்டிக்கு தாவீது ராஜா மரியாதை கொடுத்தாலும் தேவையான மரியாதையை கொடுக்கவில்லை. ஏனெனில் ஆசரிப்புக்கூடாரத்தின் பொருட்களில் இந்த

உடன்படிக்கை பெட்டிதான் மிகவும் முக்கியமானது.

ப–பீடமும் தண்ணீர் தொட்டியும் பிரகாரத்தில் இருந்தன. சமூகத்து அப்பங்களுள்ள பொன்தகட்டால் மூடப்பட்ட மேஜையும், பொன் குத்துவிளக்கும் மற்றும் பொன்னாலான தூபபீடமும் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தன. ஆனால் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த ஒரே பொருள் உடன்படிக்கை பெட்டிதான். உருவத்தில் அது நான்கு அடி நீளமும் இரண்டு அடி அகலமும் இரண்டு அடி உயரமுள்ள ஒரு பெட்டியைப் போல் இருந்தது. அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு தண்டு இருந்தது. அதைத் தோளில் வைத்துதான் லேவியர்கள் அதை சுமக்க வேண்டும். அது பொற்தகட்டால் பொதிந்திருக்கப்பட்டிருந்தது. அந்த பெட்டியின் உள்ளே பத்து கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளும், வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது எடுத்து வைத்த மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், அற்புதங்கள் நடப்பித்த ஆரோனின் துளிர்த்த கோலும் இருந்தன. உடன்படிக்கை பெட்டியின் மேல் மூடி விசேஷ அம்சம் உடையதாக இருந்தது. அது தங்கத்தால் அடிக்கப்பட்டதாகவும், மேலே இரண்டு கேருபீன்கள் அதன் முகங்கள் ஒன்றையொன்று பார்ப்பது போலவும் அதன் சிறகுகள் முன்பக்கம் விரிந்ததுபோலவும் இருந்தன.

ஆசாரியர்கள் அந்த உடன்படிக்கை பெட்டியை குறிப்பிட்ட காரியங்களை அடையாளப்படுத்தும்படி ஒரு குறிப்பிட்ட விதமாக மூடவேண்டும் என்ற கட்டளையை தேவன் கொடுத்திருந்தார். அப்பொழுதுதான் வேவியர்கள் அதை தங்கள் தோள்களில் சுமக்கும்போது மிகவும் பொறுப்புடன் இருப்பார்கள். இதையெல்லாம் கவனியாதபடி தாவீது ராஜா, வேறு எந்தவிதத்தைக் காட்டிலும் தேவனுடைய பெட்டியை கொண்டுவர இதுதான் மிகவும் உன்னதமான முறைமை என்று நினைத்து புதியதான ஒரு மாட்டு வண்டியை செய்தான். ஆனால் இது தேவனுடைய முறை அல்ல. தேவனுடைய குணலட்சணங்களையும் அவரது கிருபாசனத்தையும் அடையாளப்படுத்துகிற உடன்படிக்கை பெட்டிக்கும் அவருக்கும் காண்பிக்கப்படவேண்டிய பயபக்தியைப் பற்றிய ஒரு பாடம் கொடுக்கப்படவேண்டும்.

ஒரு வழவழப்பான சாய்வான கற்பாறையுள்ள இடத்திற்கு வண்டி வந்த போது மாடுகள் வண்டியை கொஞ்சம் அசைத்தது. அப்போது ஊசா தேவனுடைய பெட்டி சாயாதபடி தனது கையை நீட்டி அதைப் பிடித்தான். உடனே ஒரு இடிமின்னல் அவன்மேல் விழுந்து அவன் செத்தான். இந்த தேவகோபத்தினால் தேவனுடைய பெட்டியை கொண்டு வருகிற வேலையை உடனே நிறுத்தினார்கள். வேறு நாசமோசம் ஏதும் வராதபடி தனது இடத்திற்கு தேவனுடைய பெட்டியை கொண்டு செல்ல தாவீது ராஜா பயந்தான். அந்த ஊர்வலம் நிறுத்தப்பட்டது; தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோம் என்ற லேவியன் வீட்டில் வைக்கப்பட்டது. ஒரு வேளை அந்த ஓபேத் ஏதோம் ஒரு ஆசாரியனாக இருந்திருக்கக் கூடும்.

இப்படியாக அனைத்து ஜனங்களும் பயபக்தியின் பாடத்தை கற்றுக் கொண்டார்கள். அந்த பாடம் தற்காலத்திற்கு மிகவும் அவசியமானதாக காணப்படுகிறது; எக்காலத்திற்கும் அவசியமானது. அவமரியாதை உலகத்தால் அடிக்கடி வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் இது நம்மை திகைக்க வைக்கிறதில்லை. ஆனால் தங்களை தேவனுடைய பிள்ளைகளாகவும் அவரது நாகரீக ஆசாரியர்களாகவும் கூறிக்கொள்ளுகிறவர்கள் அவமரியாதை செய்யும்போது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. அந்த அவ மரியாதை சில சமயங்களில் நடத்தையில் இருக்கலாம், சில சமயங்களில் பேச்சில் இருக்கலாம். சில சமயங்களில் மத காரியங்களைக் குறித்தோ அல்லது வேதவாக்கியங்களைக் குறித்தோ கே–யாக பேசும்போது இருக்கலாம். எந்த வகையில் இந்த அவமரியாதை இருந்தாலும் அந்த தனிப்பட்ட நபருக்கும் அவனோடு கூட சேர்ந்து இவற்றை செய்த மற்றவர்களுக்கும் நிச்சயமாக தீமையாக இருக்கும்.

ஊசா நித்திய வேதனைக்கு அனுப்பப்படவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவன் மரண நித்திரைக்கு சென்றான். அவனது தவறு அந்த காலத்தில் ஒரு நல்ல பாடத்தை கற்றுக் கொடுத்தது. அது அவனுக்கு எதிர்காலத்தில் தீமை பயக்காது. இந்த காலக்கட்டத்தில் இன்னொரு பாடம் போதிக்கப்பட்டது; தேவனுடைய பெட்டி இருந்த ஓபேத் ஏதோமின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. அவர்களது குணலட்சணத்தைக் குறித்து நமக்கு ஏதும் சொல்லப்படவில்லை. ஆனால் இப்படிப்பட்ட ஆசீர்வாதம் அநேகரது கவனத்தை ஈர்த்தது. அவர்களில் தாவீது ராஜாவும் ஒருவன். மறுபடியும் மனம் மாறி, எருசலேம் தாவீதின் நகரமாக மட்டுமல்ல, தேவனுடைய நகரமாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். தேவனுடைய பிரசன்னம் அவர்களது ஜனங்களாகிய இஸ்ரயேலோடு, உடன்படிக்கை பெட்டியின் கேருபீன்கள் மத்தியில் செகினா ஒளியில் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

### தேவனுடைய சொந்த பரிசுத்த தேசம்

தாவீதும் இஸ்ரயேலர்களும் இருந்ததுபோல, நாம் இல்லை. தேவனுடைய ராஜ்யம் என்று சொல்லக் கூடிய தேசம் ஏதும் இப்போதில்லை. கி.மு.606ல் சிதேக்கியாவிடமிருந்து கிரீடத்தை தேவன் எடுத்துப்போடும்போது, தீர்க்கதரிசி மூலமாக அவர் அறிவித்தாவது: “அதைக் கவழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்.” (எசேக்கியேல் 21:25-27) ராஜ்யத்தை மேசியாவிடம் கொடுப்பதற்கும் “உம்முடைய ராஜ்யம் வருவதாக” என்று

ஜெபிக்கிற நமது ஜெபம் நிறைவேறுவதற்கும் காலம் சமீபமாயிருக்கிறது என்று நாம் நம்புகிறோம். பரிசுத்த பேதுரு சபையை பரிசுத்த ஜாதி, சொந்த ஜனம் என்று கூறுகிறார். இதைத்தவிர இந்த காலக்கட்டத்தில் பூமியிலே தேவனுடைய ராஜ்யம் என்று ஏதுமில்லை. ஒரு குறிப்பிட்ட சபை பிரிவைப் பற்றி பரிசுத்த பேதுரு கூறவில்லை. பேப்டிஸ்ட் சபையையோ, மெதடிஸ்ட் சபையையோ, பிரிஸ்பிடேரியன் சபையையோ, லுத்தரன் சபையையோ, ஆங்கி–கன் சபையையோ, ரோம சபையையோ குறிப்பிடவில்லை. கிறிஸ்துவின் உண்மையான சபை எல்லையில்லாமல் இருக்கிறது. உண்மையிலேயே அந்த சபை கத்தோ–க்காக இருக்கிறது. கத்தோ–க் என்றால் பொதுவானது, பிரபஞ்சத்திற்கு உரியது என்று பொருள்.

கிறிஸ்துவின் சபை என்பது உலகம் முழுவதும் இருக்கக்கூடிய ஒரு சபையாகும். அதன் அங்கத்தினர்கள் எல்லாம் அர்ப்பணத்தினால் கிறிஸ்துவிடம் இணைக்கப்பட்டவர்கள். பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலால் அங்கத்தினரில் சிலர் ரோம சபையில் காணப்படலாம். சிலர் ஆங்கி–கன் சபையிலும், சிலர் மெதடிஸ்ட் சபையிலும், சிலர் பேப்டிஸ்ட் சபையிலும் சிலர் லுத்தரன் சபையிலும், இன்னும் சிலர் இவைகளில்லாமல் வேறு சபையிலும் இருக்கலாம். ஆனால் தேவன் அங்கீகரிக்கிற ஒரே பரிசுத்த ஜாதி இதுதான். திரைக்குப் பின்னால் கர்த்தருடன் அவரது ஜனங்கள் முதலாம் உயிர்த்தெழுத–ல் மகிமையடையும் வரை அவர்கள் ஒரு புது ஜாதியாக முழுவதுமாக அமைக்கப்படமாட்டார்கள். வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதுபோல, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம், அவரது மகிமையில் பங்கு பெறுவோம்.

ஒரு பக்கம் பெ–ஸ்தியர்களும் மறுபக்கம் மோவாபியர்களும் கர்த்தரை ஏற்றுக் கொள்வார்கள் என்று இஸ்ரயேலர்கள் எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும், தேவனுடைய சத்தியத்தையும் அவரது பிரசன்னத்தையும் உலகத்தார் உணர்ந்து கொள்ள நாம் எதிர்பார்க்கவே முடியாது. தேவனுடைய உடன்படிக்கையின் மக்கள் மட்டுமே அவரை உணர்ந்துகொள்ள முடியும். அவர்கள் நடுவே மட்டுமே அவர் இருக்கிறார்.

இது ஒரு குடும்ப விவகாரம் என்று நாம் கூற முடியாது. இன்னும் சொல்லப்போனால், வேதாகமம் காண்பிக்கிறதுபோல, இது ஒரு தனிப்பட்ட நபரின் விவகாரம். இங்கொன்றும் அங்கொன்றுமாக கிறிஸ்துவின் சபை உலகமெங்கும் சிதறி இருக்கிறது. அர்ப்பணம் செய்தவர்கள் மட்டுமே அதற்கு உரியவர்களாக இருக்கிறார்கள் அல்லது அதன் சலுகைகளுக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். உடன்படிக்கை பெட்டி, குறிப்பாக உணர்த்துகிற பிதா மற்றும் குமாரனுடைய ஐக்கியத்திற்கு உரியவர்களாக இருக்கிறார்கள். இந்த விதியில் ஒரு விதிவிலக்கை மட்டும் நாம் கவனிக்க வேண்டும். பரிசுத்த பவுல் கூறினதுபோல, விசுவாசிகளின் குழந்தைகள், தங்கள் பெற்றோர்களுடன் தேவனுடைய சலுகைகள் மற்றும் ஆசீர்வாதங்களில் பங்கு பெறுகிறவர்களாக கருதப்படுகிறார்கள். அவர்கள் தாங்களாக தீர்மானிக்கிற அளவுக்கு மனது அபிவிருத்தி அடைந்த நிலைக்கு வரும்வரை, அதாவது தேவனுடன் முழு அர்ப்பணத்திற்குள்ளாக வந்து அவரால் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை அல்லது மனம் மாறி உலகத்தாரில் ஒருவனாக ஆகும் வரை.

தேவனுடைய பெட்டியை கொண்டுவர தாவீதுராஜா முதல் முயற்சியில் தோல்வியடைந்த மூன்று மாதத்திற்கு பிறகு, அதை மறுபடியும் கொண்டு வர தயாராக இருந்தான். இந்த தடவை காரியங்களை ஜாக்கிரதையாக ஆராய்ந்து அறிந்திருந்தான். இந்த தடவை புது மாட்டுவாண்டி ஏதுமில்லை. தெய்வீக வழி நடத்துதலுக்கு ஏற்ப லேவியர்கள் உடன்படிக்கை பெட்டியை தங்கள் தோளில் சுமந்து கொண்டு வந்தார்கள். தேவனுடைய முறைமைகளை மற்றும் ஊழியங்களில் நமது நூதன கண்டுபிடிப்புகளுக்கோ, நமது சாமார்த்தியத்துக்கோ, இடமில்லை. வேதமாணவனாக இருந்து, வேத வாக்கியங்களை ஆராய்ந்து, தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து அதைச் செய்யவேண்டும். தாவீது ராஜா ஏற்றுக்கொண்ட இந்த பாடத்தை தேவனுடைய ஜனங்கள் அனைவரும் மனதில் நன்றாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

### கர்த்தருக்கு முன்பாக நடனமாடுதல்

தேவனுடைய பெட்டி திரும்பி வருவது, தேவனே தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவதாக நினைத்து இந்த மாபெரும நிகழ்வாகிய ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான யுத்த வீரர்கள் பாதுகாப்பிற்காகவும் ஊர்வலத்துக்கு கௌரவம் கொடுப்பதற்காகவும், வழியில் கிராமங்களில் இருந்த திரளான ஜனங்களும், எக்காளம் ஊதுகிறவர்களும் கீதவாத்தியங்கள் வாசிப்பவர்களும் இன்னும் ஆர்ப்பரிப்பவர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் வந்தார்கள். இந்த நிகழ்வுக்காக தாவீதுராஜா இயற்றிக் கொடுத்த சங்கீதத்தின் வெவ்வேறு பகுதிகளை லேவியர் ஒருவருக்கொருவர் ஓதிக்கொண்டு வரக்கூடிய ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இந்த பாடத்தின் ஒரு பகுதியாக அது செய்யப்பட்டிருக்கிறது–சங்கீதம் 24.

தாவீதுராஜா மற்றவர்களோடு சேர்ந்து கொண்டு கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணிக்கொண்டு வந்து தனது சந்தோஷத்தை வெளிப்படுத்தினான். இசைக்கு இசைவாக பாதங்களை அசைக்கும் வழக்கம் இன்றைக்கும் தூர தேச கிழக்கத்திய நாடுகளில் ஒரு வழக்கமாக இருக்கிறது. இந்தியாவில் கிறிஸ்தவ முயற்சியாளர்களின் கூட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு நடன நிகழ்ச்சி எவ்வளவு அழகாகவும்

உன்னதமானதாகவும் காணப்பட்டது என்று திரு. கிளர்க் என்பவர் நமக்கு கூறுகிறார்.

மகா பெரிய ஊர்வலம் எருசலேம் நகரத்தை நெருங்கும்போது, நகரத்தின் பெண்கள் சந்தோஷத்துடன் அதை வரவேற்றார்கள். அந்த கூட்டத்தின் தலைவியாக தாவீதின் மனைவியும் சவு-ன் மகளுமான மீகாள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை. அவள் குற்றம் கண்டுபிடிக்கிற, பெருமையான மனோநிலையில் இருந்தாள். அவள் சவுல்ராஜாவின் மகளில்லையா? அவனது கணவன் தாவீது அற்பமான ஆட்டிடையனும் கொஞ்ச காலம் நாடு கடத்தப்பட்டவனுமாக இருந்தான் அல்லவா? அவன் வீட்டிற்கு வந்தபோது, தேவனுடைய பெட்டியை கொண்டு வந்தபோது அவன் தனது சந்தோஷத்தை வெளிப்படுத்தி காண்பித்தபடியினால், அவள் தாவீதை குறை கூறினாள். அது அவமானமாக இருந்தது என்று கூறி அவனை கண்டித்தாள். அதற்கு தாவீதுராஜா, அவளுடைய தகப்பனிடமிருந்து ராஜயபாரத்தை எடுத்து தேவன் தனக்கு கொடுத்ததை நினைவு படுத்தி, இப்படியாக தான் தேவனுடைய கிருபையை பெற்றதாகவும் அதனால் தான் அவர் மேல் பற்று வைத்திருந்ததாகவும் கூறினான். தற்பெருமை கொண்ட அந்த ஸ்திரீ தன் வாழ்நாள் முழுவதும் பிள்ளையில்லாதிருந்தாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**சங்கீதம் தீர்க்கதரிசனமாக இருந்தது**

உடன்படிக்கை பெட்டி கிறிஸ்துவைக் குறிக்கிறது. தேவனுடைய வல்லமை, ஞானம் எல்லாம் அவருக்குள் மறைந்திருக்கிறது. மனிதர்களின் ஆசீர்வாதங்கள் அவருக்குள் மையப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் தேவனுடைய பெட்டியை நகரத்திற்குள் கொண்டு வருவது நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் எல்லாம் "பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையவைகள்" என்பதையும் நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பிதாவினிடத்தி-ருந்து குமாரன் மூலமாக இறங்கி வருகிறது என்பதையும் உணருகிறார்கள். உலகமும் அதில் வாசம் செய்கிற அனைவரும் இந்த ஆசீர்வாதத்திற்குள்ளாக இருக்கிறார்கள்.

தேவன் தமது புதிய முறைமைகளை, திருப்தியற்ற சமுத்திரங்களின் நடுவே அதாவது தேவனோடு ஒழுங்குக்கும் இசைவுக்கும் வராதிருக்கிற அமைதியற்ற ஜனங்களின் மத்தியிலே ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார். அவர் நம்மை அவரது பரிசுத்த பர்வதத்திற்கு, அவரது பரிசுத்த ராஜ்யத்திற்கு ஏறும்படியும் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஆவிக்குரிய தெய்வீக சுபாவத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்கும் அழைக்கிறார். சில குறிப்பிட்ட நிபந்தனைகளில்லாமல் யாரும் இந்த வகுப்பினராக முடியாது என்று அவர் நிர்ணயம் பண்ணுகிறார். அதாவது ஒரு பரிசுத்தமான இருதயம், ஒரு நேர்மையான இருதயம், சுத்தமான கைகள், தன்னால் முடிந்தவரை நீதியாக வாழ்தல் போன்றவைகள் அந்த நிபந்தனைகளாகும். இவைகளெல்லாம் விசுவாச உடன்படிக்கைக்கு எதிர்பார்க்கப்படுபவைகள். இது தேவனுடனான அவர்களது உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது.

இந்த உடன்படிக்கையாளர்களில் முதலாவது இருந்தவர் இயேசு ஆகும். சபை அங்கங்கள் அவரது பரிசுத்த ராஜ்யத்தில் அவரோடு இருக்கவேண்டும் என்றால், அவர்கள் அவரது அடிச்சுவட்டில் நடக்க வேண்டும். இவர்கள் சூதாக உடன்படிக்கை செய்யவோ, வஞ்சகத்திற்கோ தங்களது ஆத்துமாவை உயர்த்தக்கூடாது. தேவனோடு உடன்படிக்கை செய்த அனைத்தையும் தேவன் அவர்களிடம் கேட்பார். இப்படிப்பட்டவர்கள் மட்டும்தான் கர்த்தரிடத்தி-ருந்து ஆசீர்வாதத்தை பெறுவார்கள்; இப்படிப்பட்டவர்களுக்கு மட்டும்தான் தங்களது நீதிக்கு கிறிஸ்து மூலமாக சாட்டுதலை பெறுவார்கள்.

தற்காலத்தில் இந்த பாடம் இதற்கும்மேலாக மனதில் பதிய வைக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடன் ப-யின் உடன்படிக்கையும் உறுதிமொழியும் செய்தவர்களில் எத்தனை பேர் இன்றைக்கும் இதை கவனிக்காமலும், உறுதிமொழியை கடைபிடிக்காமலும் இருப்பதை ஒத்துக்கொள்கிறார்கள்! வெளியரங்கமாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, அந்தரங்கத்தில் அதை மறுத-த்து, தங்களது விசுவாசக் கொள்கைகளைப்பற்றி தவறாக பேசுகிறவர்களில் எத்தனை பேர் உண்மையிலேயே ஒத்துக்கொள்கிறார்கள்! இப்படிப்பட்ட செயல்களெல்லாம் தேவனுடைய பார்வையில் நிச்சயமாக குற்றமாகக் காணப்படும். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குரியவர்களாக நம்பிக்கை கொள்ள முடியாது.

பிறகு சங்கீதம் ஒரு அறிவிப்புடன் தொடர்கிறது. அதாவது பாவத்தின் வல்லமையாகிய மரணத்தி-ருந்தும் பாவத்திலும் மீட்கக்கூடிய வல்லமையும் அதிகாரமும் உள்ள கர்த்தராகிய மகிமையின் ராஜா வரவேண்டும் என்று அவரைத் தேடுகிற இஸ்ரயே-ன் பிள்ளைக்ள வேண்டுதல் செய்கிறார்கள். வசனத்தின் முழு அர்த்தத்தின்படி இந்த மகிமையின் ராஜாவின் பிரவேசத்திற்காக நாம் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறோம். உலகத்தைப் பொருத்தவரை ஜுவா-த்து எரிகிற அக்கினியில் அவர் வெளிப்படுத்தப்படுவார் என்று அவர் அறிவிக்கிறார். "யாதொரு ஜாதி யாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத" (தானியேல் 12:1) ஆபத்து காலத்தில் அவர் வெளிப்படுத்தப்படுவார். இந்த ஆபத்து முன்னமே ஆரம்பித்து

--2354--

பயங்கரமான யுத்தமாக பரவிக் கொண்டிருப்பதை அநேக வேத மாணவர்கள் காண்கிறார்கள். மேலும் அவர்கள் அதன் பலனாக கொடிய அராஜகம் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். பிறகு மிகவும் மெல்-ய சத்தம் சீக்கிரத்தில் வரும். அதுதான் இரட்சகரின் வல்லமையுள்ள அதிகாரம், தெய்வீக ஆதிக்கம். அதுதான் ஆயிரம் வருடம் கட்டப்படப்போகிற சாத்தானிடமிருந்தும், மரணம் மற்றும் பாவத்தி-ருந்தும் இரட்சிக்கும்.

----------------------------------

**--2355--**

## Thou Art The Man!

# நீயே, அந்த மனுஷன்!

*சாமுயேல் 11:1 – 12:7*

*வேதாகமத்தின் நேர்மை – தாவீது ராஜாவின் ஸ்தானம் அவனது குற்றத்தை மறைக்கவில்லை – செல்வ செழிப்பின் சபலம் – தாவீது ராஜாவின் பயங்கரமான பாவம் – தீர்க்கதரிசி நாத்தானின் உவமை – ராஜாவின் நீதியின் உணர்வு – தனது சொந்த வார்த்தையினாலே குற்றவாளி என்று தீர்க்கப்பட்டான் – அவனது வருத்தம் – மன்னிக்கப்பட்டான் ஆனாலும் தண்டிக்கப்பட்டான் – எல்லாருக்குமான பாடம்.*

*"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்." சங்கீதம் 51:10*

வேதாகமம் உலகத்திலுள்ள மற்ற புத்தகங்களைப் போல அல்ல. இது எல்லா புத்தகங்களைக் காட்டிலும் நேர்மையானதும் வெளிப்படையானதும் ஆகும். தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷன் என்று அங்கீகரிக்கப்பட்ட ஒருவன் பாவம் செய்த போது மிக அதிகமாக கண்டிக்கப்பட்டு மிகக் கடுமையாக தண்டிக்கப்பட்டான். "உமக்கு பயப்படும் படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு" (சங்கீதம் 130:4) என்கிற இந்த வேத வாக்கியத்தில் ஒரு பாடம் இருக்கிறது. நமது மாம்சீக பலவீனங்கள் கண்டிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டாலும் நமது மனதின் நோக்கத்தை தேவன் மதிக்கிறார். இந்த உண்மை நாம் அவரை இரக்கமற்றவர் என்று சும்மா நினைப்பதைக் காட்டிலும், அவரிடத்தில் அதிக பயபக்தியை உண்டாக்குகிறது.

இந்த பாடத்தில் உயர்ந்த குணத்தை வெளிப்படுத்திய ஒருவன் விபச்சாரம், கொலை போன்ற பலவீனங்களை வெளிப்படுத்தியிருப்பதில் நாம் ஆச்சரியப்படுவதில் அதிசயம் ஏதுமில்லை. நாம் இளைஞனான தாவீதின் தேவனிடத்தில் உள்ள பயபக்தி, அவனது விசுவாசம், அவனது மதவிசுவாசம், அவனது சோதனைகள், கஷ்டங்கள் ஆகியவைகளை நாம் நினைக்கிறோம். இவ்வளவு சீக்கிரத்தில் அவன் எப்படி மாறினான் என்று நாம் மிகவும் ஆச்சரியப்படுகிறோம். அதன் ரகசியத்தை கண்டுபிடிப்பது முடியாததல்ல. செல்வமும், சந்தோஷங்களும் பழக்கங்களும் மற்றும் சுதந்திரங்களும் சூழ்ந்திருக்கும்போது முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்வது, வறுமையில் இருக்கும்போது வாழ்வதை காட்டிலும் கஷ்டமானது. தேவனுடைய கிருபையையும் பிரசன்னத்தையும் அடையாளப்படுத்துகிற தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி அவனது நகரத்தில் தற்போது இருக்கிறது என்பதை ராஜா தற்கா–கமாக மறந்து விட்டான். கர்த்தருடைய கண்கள் ஒவ்வொரு இடத்திலும் உள்ள நன்மைகளையும் தீமைகளையும் பார்க்கிறது என்பதை உண்மையாகவே அவன் உணர்ந்து கொண்டான். "நீர் என்னை காண்கிற தேவன்" என்கிற எண்ணம் உள்ளத்தில் ஆசரிப்புக் கூடாரத்தை பார்த்ததினால் புதிதாக வந்திருக்க வேண்டும்.

எனினும் தாவீது ராஜா பாவம் செய்கிற நிலைமைக்கு அவனது இருதயமும் உள்ளமும் திடீரென்று வந்திருக்காது என்று நிச்சயிக்கிறோம். இந்த காரியம் பல மாதங்களாக சிந்தையில் வந்து, படிப்படியாக அது உச்சத்தை அடைந்திருக்க வேண்டும் என்று இந்த சரித்திரம் நமக்கு காண்பிக்கிறது. அவனது நடத்தையைப் போலவே அவனது இருதயமும் தவறானது என்று யூகிப்பது சரியானதாக இருக்காது. பின்வரும் வெளிப்பாடுகளி–ருந்து, அவனது இருதயம் இன்னும் தேவனுக்கும் மற்றும் நீதியின் ஒழுங்குகளுக்கும் விசுவாசமாக இருந்தது என்றும், ஆனால் எப்படியோ அவனது இருதயம் விழித்திராமல் தூங்கிவிட்டது என்றும், அவனது மாம்சம் சுறுசுறுப்பாக இருந்தது என்றும் நாம் அனுமானிக்கலாம். நீதிக்கு தூங்கினவனாகவும் பாவத்திற்கு விழித்திருந்தவனாகவும் இருந்தான். அவனுக்கு முன்னதாக மற்ற ராஜாக்களின் அநுகூலமற்ற உதாரணங்களும், அப்பியாசப்படுத்தின சுதந்திரங்களும் இருந்தன. அவனது தேவனுடனான உறவு அவனை புத்திகூர்மையுள்ளவனாக்கியது. இப்போது சபலத்திற்கு இடங்கொடுப்பதில் இந்த புத்தி கூர்மை எல்லா வகையிலும் தீய செயல்களில் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

### ஒரு தைரியமான ஊழியக்காரன்

தாவீது முத–ல் அண்டை வீட்டாரின் மனைவியை விரும்பினான். இந்த பாவ மனநிலையை கண்டிக்காமல், அண்டை வீட்டானின் மனைவியை திருடும் வரை அது தொடரும்படி அனுமதித்தான். அவனது கணவன் ஒரு விசுவாசமுள்ள இராணுவ வீரனாக இருந்தான். அவமானத்தி–ருந்து ராஜாவை காப்பாற்ற அந்த வீரனின் மரணம் அவசரமாக காணப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் போரிடும் போது, அந்த விசுவாசமுள்ள இராணுவ வீரனை மிகவும் முன்னாலே இருக்கும்படி செய்து அவனை எதிரிகள் கொல்ல விட்டு விடும்படி தனது இராணுவ தளபதிக்கு தாவீது சொல்–யனுப்பியபோது அவனது மனசாட்சி நிச்சயமாக தூங்கிவிட்டது.

இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டது. அங்கே ப–யானது குற்றமற்ற கணவன் மட்டுமல்ல. இன்னும் அநேகர் இறந்தனர். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நீதி, நியாயங்கள் மேல் பற்றுதல், உள்ள தாவீது ராஜா எப்படி செய்தான் என்றோ அல்லது இந்த சூழ்நிலைகளின் கீழ் எப்படி சமாதானத்தை பெற்றிருக்க முடிந்தது என்றோ நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஒன்பது மாதம் அல்லது அதற்கு மேலான இந்த கால கட்டத்தில் அவனது அழகான சங்கீதங்கள் நிச்சயமாக எழுதப்பட்டிருக்க முடியாது. ஆனால் உரியா இறந்து விட்டான்;

திருடப்பட்ட அவனது மனைவி தாவீதின் மனைவியாக்கப்பட்டாள். சீக்கிரத்தில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

பிறகு தீர்க்கதரிசி நாத்தான் ராஜாவிடம் வந்தான். ஒரு உவமை மூலமாக அவனது கண்டனத்தை ஞானமாக தெரிவித்தான். ஒரு ஏழையான மனிதன் ஒரு பெண் ஆட்டுக் குட்டியை வைத்திருந்தான். அவனது பணக்கார அண்டை வீட்டான் அந்த ஆட்டுக் குட்டியை ஏமாற்றி எடுத்துக் கொண்டான். இப்படியாக அந்த உவமையை சொன்னான். தாவீது ராஜா கோபமூண்டவனாகி, இந்த காரியத்தை செய்தவன் மரணத்திற்கு பாத்திரன், அந்த ஆட்டுக் குட்டிக்காக நாலத்தனையாக திரும்ப கொடுக்க வேண்டும் என்றான் அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி, **"நீயே அந்த மனுஷன்!"** என்று கூறி சரியானபடி பாடத்தை புகட்டினான். அதற்கு தைரியம் தேவைப்பட்டது. யாராவது தேவனிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றால் அதை ஞானமாகவும் உண்மையுடனும் அறிவிக்க தைரியம் வேண்டும்.

உடனே தாவீது ராஜாவின் இருதயம் உணர்ச்சிவசப்பட்டது. உடனே அவனது மனசாட்சி எழுச்சியடைந்தது. அவனே தனது நடத்தையை பார்த்தான். மற்ற ராஜாக்களின் செயல்பாட்டின்படியல்ல. தயவு இரக்கம், சத்தியம், நீதி ஆகிய தெய்வீக நிலைப்பாட்டின்படி பார்த்தான். தானே ஒரு பாவி என்பதை கண்டான். உண்மையிலேயே நியாயப் பிரமாணத்தின்படி விபச்சாரம் மற்றும் கொலை குற்றத்திற்கு மரணமே தண்டனையாகும். ராஜா உடனே தனது பாவத்தை உணர்ந்தான், ஜெபித்தான், உபவாசித்தான், வருந்தினான். தாவீது தனது பாவத்தை அறிக்கையிட்டு, வருத்தப்பட்டதினால் தேவன், அவனுக்கு மரண தண்டனை கொடுக்கவோ, அவனுக்கு அன்பானவர்கள் அனைவரையும் எடுத்துக் கொள்ளவோ மாட்டார் என்று தெய்வீக வழிநடத்துத–ன்படி தீர்க்கதரிசி அவனுக்கு அறிவித்தான். எனினும் அவனது பாவ குழந்தை உயிரோடிராது என்றும் சில காலத்திற்கு பிறகு அவனது மீறுதலுக்காக கடுமையான தண்டனை அனுபவிப்பான் என்றும் அறிவித்தான்.

இங்கே நாம், தேவனுடைய ஜனங்களாகவும் அவருடன் உடன்படிக்கை உறவுக்குள் இருக்கிறவர்களுக்கான தெய்வீக அரசாங்கத்தின் ஒரு அடிப்படை கொள்கையை உணர்ந்து கொள்கிறோம். பாவங்களைப் பொருத்தவரை நீதி தேவைப்படுகிறது. எனினும் தனது பாவத்திற்காக வருந்துகிறவனுக்கு தேவ கிருபை கொடுக்கப்படுகிறது. அநேக கிறிஸ்தவர்கள் இதே நெறியை அனுபவித்திருக்கிறார்கள். தேவன் அவர்களை தொடர்ந்து பாவிகளாக கருதமாட்டார். ஆனால் அவர்களது மன வருத்தத்தை ஏற்றுக் கொண்டு அவர்களை மன்னிக்கிறார். "ஒரு மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்கிற அவரது வார்த்தையின்படி உண்மையாயிருக்கிறது. இந்த தெய்வீக ஏற்பாட்டில் பாவத்தை ஊக்குவிக்கிற காரியம் ஏதுமில்லை. ஆனால் மாறாக, ஒவ்வொன்றும் நீதியை ஊக்குவிக்கிறதாக இருக்கிறது. பாவம் நீக்கப்பட்டுவிட்டால், ஒவ்வொன்றும் பாவியை தெய்வீக மன்னிப்பை ஏற்றுக் கொள்ளவும். அவனது வாழ்க்கையை சீர்திருத்தவும் உற்சாகப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. எனினும் சில கடுமையான தண்டனையை தனது மரணத்திற்கு தாங்க கடமைபட்டிருக்கிறான்.

## மனந்திரும்புதலைப்பற்றிய சங்கீதம்

ஐம்பத்தி ஒன்றாம் சங்கீதத்தினால் அநேக கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதலுக்காக உற்சாகப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக யாரும் இதன் மூலம் பாவம் செய்ய தூண்டப்படவில்லை. நாத்திகராகிய வால்டேர் என்பவர் இந்த சங்கீதத்தைக் குறித்து கே–ச்சித்திரம் எழுத முற்பட்ட போது, அதன் பயபக்தியான நயத்தினால் மிகவும் அச்சமடைந்து முழுமையான மனவியாகுலத்துடன் தனது பேனாவை தூக்கி எறிந்துவிட்டு தனது இருக்கையில் சாய்ந்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது. "இப்படியாக ஒரு பரிசுத்தவான் விழுந்ததையும் எழும்பியதையும் நாம் காணும் போது, எப்படி நாம் பாவம் செய்யாதிருப்பதை நினைத்து பார்க்க முடியும்" என்று பிஷப் ஹால் என்பவர் இதைக் குறித்து விமர்சனம் செய்கிறார். புதிய ஏற்பாட்டின் அர்த்தத்தின்படி, தாவீது ராஜா உயர்ந்தவனாக இருந்த போதிலும், அவன் ஒரு பரிசுத்தவான் அல்ல. அவன் மனத்தளவில் பரிசுத்தவானாக இருந்தாலும், அவன் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை, தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் நாம் யோவான் 7:39ல் வாசிப்பது போல, "பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படாதிருந்தது."

பரிசுத்த ஆவி கொடுக்கப்படுதலும் அதனால் புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுதலும் பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பித்து தொடர்ந்தது. தாவீது ராஜா இப்படிப்பட்ட தவறுகளால் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவோமேயானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான் யாராவது சத்துருவானவனால் இப்படி ஒரு கண்ணியில் அகப்படப்பண்ணும்போது நாம் எவ்வளவு ஆச்சரியப்படுவோம். ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அதிகமான அனுகூலம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தெய்வீக வாக்குத்தத்தம், தெய்வீக திட்டம் மற்றும் தெய்வீக குணலட்சணத்தைப் பற்றிய அதிகமான அறிவினால் மகா அறிவு ஒளியை பெற்றது மாத்திரமல்ல, "அவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாய் நடக்கிறது என்கிற" (ரோமர் 8:28) உறுதிமொழியுடன், உதவியாய் கர்த்தராகிய இயேசுவைப் பெற்றிருக்கிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுவதற்கு இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (1 கொரி 10:13)

"தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னை சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது." இந்த உண்மையான வார்த்தைகள் ராஜா மாதக்கணக்கில் தனது மனத்தளவில் குழப்பத்தில் இருந்தான்

என்பதைக் உறுதிபடுத்துகிறது. பூமியில் உருவான மேகமும், மாம்சீக பலவீனமும் அவனுக்கும் தேவனுக்கும் இடையே ஒரு திரையைப் போல எழுப்பி, தேவனுடைய ஆதரவு என்னும் வெளிச்சத்தை மூடியது.

இந்தப்பாடம் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கும் அனைவருக்கும் பொருத்தமானது. சங்கீதக்காரன் தனக்கும் தேவனுக்கும் இடையேயான சிறிதளவான நிழலை உணர்வதில் எப்படிப்பட்ட மனோபாவம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறான்.

*என்பிரியமான பிதாவே, என் ஆத்துமாவின் சூரியனே, நீர் அருகேயிருக்கும்போது, இரவே இல்லை என்பதை அறிவேன். உமது ஊழியக்காரரின் கண்களி-ருந்து உம்மை மறைக்கும்படி பூமியி-ருந்து உருவாகும் மேகம் எழும்பாம-ருப்பதாக!*

நாம் தேவனுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்பதே இதில் உள்ள முக்கியமான பாடமாகும். தேவனுடைய பிள்ளை தனது அலுவல்களில் தேவனுடைய மேற்பார்வைக்காகவும், சரியான பாதையில் நடப்பதற்கான அவரது உதவிக்காகவும் காலையில் அவரிடத்தில் ஜெபிக்காமல் போகக் கூடாது. பரலோக வீட்டிற்கு அருகாமையில் செல்வதற்கான வழியில் எந்த அளவுக்கு இன்று சென்றிருக்கிறோம் என்பதை உணர்வதற்காக அந்த நாளின் செயல்களை நினைவுபடுத்தி பார்க்காமல் தேவனுடைய பிள்ளை படுக்கைக்கு செல்லக் கூடாது. ஒருவேளை வெட்கப்படக் கூடிய செயல் ஏதாவது நடத்தியிருந்தால், எதிர்காலத்தில் சகாயம் பெற தேவையான உதவிக்காக கிருபாசனத்தண்டைக்கு உடனே அவன் செல்ல வேண்டும்.

இப்படியாக தேவனுடைய பிள்ளை பிதாவாகிய தேவனோடும் இரட்சகரோடும் அனுதினமும் தொடர்பு வைத்துக் கொண்டு, அவர்களது அன்பில் நிலைத்திருக்கவும், இந்த பாடத்தில் நாம் பார்த்தது போன்று இப்படிப்பட்ட எந்த வித பெரும் பாவத்தில் விழுந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும். தாவீது ராஜா கூட, தேவனுக்கும் அவனுக்கும் இடையே மாம்சீக சாயல்களாகிய பூமியில் உருவாகும் மேகம் படிப்படியாக எழும்ப அனுமதிக்காதிருந்திருந்தால், அவன் இப்படிப்பட்ட பாவங்களில் விழுந்திருக்க மாட்டான் என்று நாம் நிச்சயிக்கிறோம்.

“என் பாவங்களை பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்தி-ருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.”

சபைக்கு பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டிருப்பது போல, பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளுக்கு அது கொடுக்கப்படவில்லை. எனினும் இங்கே தாவீது ராஜா கூறுவது போல. அது தேவனுடைய கிருபை அவர்களது காரியங்களில் வெளிப்படுத்தலாக இருந்தது. மோசேயி-ருந்து யோவான் ஸ்நானகன் வரை, மோசேயின் கீழாக தேவனுடைய வீட்டின் பணிவிடைக்காரர்கள் இருந்தார்கள் என்பதையும், ஆனால் சுவிசேஷ யுகத்தில் பிரதான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் கீழாக, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட வீட்டின் குமாரர்கள் இருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவு கூர வேண்டியவர்களாயிருக்கிறோம். எபிரேயர் 3:5,6

---------------------------

## Interesting Question

# ஆவலைத் தூண்டும் கேள்வி

*"தனது சொந்த இடத்திற்கே அவன் சென்றுவிட்டான்."*

***கேள்வி***: *காவற் கோபுரத்தில் வந்த ஒரு கட்டுரையில் யூதாஸ் இரண்டாம் மரணத்தில் மரித்து விட்டான் என்று எழுதியிருந்ததை நான் படித்தேன். ஒரு தடவை தண்டனையி-ருந்து விடுதலை பெற்று, மரணத்தி-ருந்து ஜீவனுக்கு சென்று, கிறிஸ்துவுக்குள் இருந்து பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒருவன் இரண்டாம் மரணத்தில் மரிக்கக்கூடுமா?*

**பதில்**: யூதாசும் மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் அவர்கள் காலத்தில் இருந்த மற்ற யூதர்களைக் காட்டிலும் ஒரு விசேஷித்த இடத்தில் இருந்தனர். ஏனெனில் அவர்கள் மகா பெரிய ஒளியாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் தொடர்பு வைத்திருந்தார்கள். அந்த ஒளியை பார்த்தார்கள். அதை அவர்கள் பார்த்ததினால் அந்த அளவுக்கு பொறுப்புடையவர்களாயிருந்தார்கள். அவர்களில் யாராவது யூதாஸைப் போல் ஒளிக்கு விரோதமாக பாவம் செய்தால், அது மிகவும் கண்டிக்கப்படத்தக்கதாக இருக்கும். உண்மைதான், யூதாஸ் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் வரை யாரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்க முடியாது. ஆனால் இது அவன் இரண்டாம் மரணத்தில் மரித்திருக்க முடியாது என்று நிரூபிக்காது. மாறாக, ஆயிரம் வருட யுகத்தில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பெற்றிராதவர்கள் இரண்டாம் மரணத்திற்கு, முற்றிலுமாக அழிக்கப்படுதலுக்கு செல்வார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் சத்திய அறிவுக்குள் கொண்டுவரப்பட்டு, தேவனோடு கூட இணக்கத்திற்கு வரும்படி சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிற இந்த காரியத்தில் அவர்களுக்கு முழுபொறுப்பும் இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். இல்லையென்றால் அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் யூதாசுக்கு கொடுக்கப்பட்டது. நீண்ட காலம் அவன் அதற்கிசைவாக நடந்தான். ஆனால் அதன்பிறகு அவனுக்காக வைக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்களை விலக்கினான். தன்னை ஆதரித்தவருக்கு துரோகம் இழைப்பவன் என்பதை நிரூபித்தான். இந்த விஷயத்தில் இயேசுதான் நியாயாதிபதி. "கேட்டின் மகன்" (யோவான் 17:12) என்று அவனைக் கூறுகிற அவரது வசனம் நமக்கு இருக்கிறது. மேலும் அவர், அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும் என்று அவர் கூறினார்.(மத்தேயு 26:24) யூதாசுக்கு ஆயிர வருட யுகத்தில் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் இந்த வசனம் உண்மையாக இருக்காது, அவன் தன் சொந்த இடத்திற்கே சென்றுவிட்டான் என்று வேதம் கூறுகிறது. (அப் 1:25) அவனது இடம் பரலோகம் அல்ல; ஏனெனில் இன்னும் யாருக்கும் அது திறக்கப்படவில்லை; அவனது இடம் திரும்ப கொடுக்கும் காலம் அல்ல, ஏனெனில் இன்னும் அது வரவில்லை. அவனது சொந்த இடம் என்பது அப்பொழுது திறக்கப்பட்டிருந்த ஒரே இடமாகிய இரண்டாம் மரணம்தான்.

### சபையின் தற்கால நிலை

இயேசுவின் மீட்கும் ப-, மீட்கும் விலைக்கிரயம் இன்னும் கொடுக்கப்படவில்லை அல்லது உலகின் முழு மனுக்குலத்திற்கும் இன்னும் உபயோகிக்கப்படவில்லை. அகில உலகமும் மீட்கப்படுவது அவரது கைகளில் இருக்கிறது.அகில உலகமும் இன்னும் நமது கர்த்தரின் கைகளில் வரவில்லை. எனினும் அந்த காலம் சமீபமாயிருக்கிறது என்று நாம் நம்புகிறோம். அப்பொழுது அந்த ப-யின் பலத்தின் மூலமாக அவர் பிதாவிடம் கேட்பார். பிதாவானவர் "அப்பொழுது ஜாதிகளை சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை சொந்தமாகவும்" கொடுப்பார். (சங்கீதம் 2:8) அதுவே மீட்கும் விலைக்கிரயத்தை அவர் கொடுக்கும் காலமாக இருக்கும். அவர் மரித்தபோது மீட்கும் விலைக்கிரயத்தை அவர் அளித்தார், ஆனால் இன்னும் அதை பிரயோகிக்கவில்லை. உலகம் இன்னும் தண்டனைக்குக் கீழாகவே இருக்கிறது. சபை மட்டுமே அந்த தண்டனையி-ருந்து இதுவரை தப்பித்துக்கொண்டிருக்கிறது.

இன்னும் பிரயோகிக்கப்படாத மீட்கும் பொருளின் புண்ணியங்களின் சாட்டுத-ன் மூலம் சபையானது அந்த தண்டனையி-ருந்து தப்பித்திருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளி-ருந்து சுவிசேஷ யுகம் முழுவதும், சபையானது கிறிஸ்துவின் புண்ணியத்தின் சாட்டுதலை பெற்றிருக்குமேயானால். அதே புண்ணியம் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பே சாட்டப் பட்டிருக்கக் கூடும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில் நமது கர்த்தர் முன்னமேயே தம்மை அர்ப்பணம் பண்ணியிருந்தார். நிழ-ல் உள்ளதுபோல அவர் முன்னமே காளையை ப-யிட்டிருக்கிறார். யோர்தானில் நமது கர்த்தரின் அர்ப்பணம், பாவநிவாரண நாளில் காளை கொல்லப்படுவதை குறிக்கிறது; பூமியின் வாழ்க்கையை விட்டு விடுவதாக இருந்தது. இது அவர் முப்பது வயதாகும் பொழுது தமது சீஷர்களை அழைப்பதற்கு முன்னதாக செய்யப்பட்டது. அப்பொழுது தான் பிதாவானவர் அவரது ப-யை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார். ஏனெனில் பிதாவானவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நமது கர்த்தரை கொடுத்தார். அந்த ப- ஏற்றுக் கொள்ளப்படாதிருந்தால், நமது கர்த்தரை பரிசுத்த ஆவியினால் பிதாவானவர் ஜெநிப்பித்திருக்க மாட்டார்.

### நமது கர்த்தரின் ஊழிய காலத்தில் அப்போஸ்தலர்களின் நிலை

பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது, கிறிஸ்து கொடுத்திருந்ததை பிதாவானவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதற்கு ரூபகாரமாக இருக்கிறது. அவர் கல்வாரியில் முடித்த காரியம் யோர்தானில் ஆரம்பித்ததாகும். நமது கர்த்தர் இந்த காரியத்தை இதே முறையில் கருதி, தமது பிரசங்கத்தில் தமது சீஷர்களிடத்தில், தேவனிடத்தில் அவரை தங்களது பிதாவாக நினைத்து அவரிடம் ஜெபிக்க வேண்டும் என்று போதித்தார். எந்த யூதனும் இந்த மாதிரி இதுவரை செய்ததில்லை. கிறிஸ்து

தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொண்டது தேவதூஷணம் என்று நினைத்து யூதர்கள் அவரை கல்லெறிவதற்கு கற்களை எடுத்துக்கொண்டார்கள். (யோவா 10:31-33) "எங்கள் பிதா" என்று சொல்லுகிறவர்கள் தேவனுக்கு தன்னை குமாரனாக ஆக்கிக் கொண்டவர்கள். யூதர்கள் யாரும் இந்த சொற்றொடரை பயன்படுத்தியதாக நாம் வேதத்தில் எங்கும் பார்த்ததில்லை; அவர்கள் எல்லோரும் வீட்டின் பணிவிடைக்காரர்களாக இருந்தார்கள்.

இயேசு சீஷர்களிடம் பேசும்போது தம்முடைய பின்னடியார்களை, தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக கருதியே பேசினார். அவர் பிதாவினுடைய பிரதிநிதி, அவர்களை அவர் தேவனுடைய ஏற்பாட்டிற்கு இசைவாக பெற்றுக்கொண்டார். "தேவன் ஒருவனை தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளாவிட்டால், ஒருவனும் என்னிடத்தில் வரான்"என்றும், "அவர்களை என் பிதாவின் கையி-ருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது"என்றும் கூறினார். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியை பெறுவதற்கு முன்பே அவர் இந்த வார்த்தைகளை கூறினார். அவர்கள் தெய்வீக குடும்பத்தில் முழுமையாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களாகவே இந்த கூற்றை சொன்னார். மேலும் அவர் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு" என்று அறிவித்தார். (யோவான் 6:47) இந்த சீடர்கள் அனைவரும் குமாரன் மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள். வேதத்தின்படி அவர்கள் அவரை பற்றிக் கொண்டிருக்கும் வரை- விசுவாசத்தினால் சுவிசேஷ யுகத்தின் நிபந்தனைகளின்படி, விசுவாசம், அர்ப்பணம் முத-யவைகளினால் பற்றிக் கொண்டிருக்கும் வரை, உண்மையான சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஜீவனை பெற்றிருந்தவர்களாக கருதப்பட்டார்கள். யூதாஸ் செய்தது போல, யாராவது அவரை விட்டுவிட்டால், மறுபடியும் சாட்டுதல் மூலம் பெற்றிருந்த ஜீவனி-ருந்து மரண நிலைமைக்கு சென்றுவிடுவான்.

**அறிவை விலக்குதல் ஒரு ஆபத்தான காரியம்**

யூதாஸ் சாட்டுத-ன்படி ஒரு புது சிருஷ்டியாக கருதப்பட்டான். இதன்படி எல்லா சீஷர்களும் மரணத்தில் இருந்து ஜீவனுக்குள் சென்றவர்களாகச் சொல்லப்பட்டார்கள். திரும்ப கொடுத்த-ன் காலத்தின் ஜீவனுக்குள் சென்றவர்களாக அல்ல, ஒரு புதிய ஜீவனுக்குள் சென்றவர்களாக சொல்லப்பட்டார்கள். ஏனெனில் கர்த்தர் இந்த சீஷர்களிடம் , அவரைப் பின்பற்றினவர்கள் பன்னிரெண்டு சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்கள் என்று சொன்னார். (மத்தேயு 19:28) அதாவது அரியாசனத்தில் அமரக்கூடிய நிலைமைக்குரிய ஜீவனுக்குள் சென்றார்கள் என்று குறிப்பாக உணர்த்துகிறது. அவர்கள் புதுசிருஷ்டி என்ற கருத்தில் பேசப்படுகிறார்கள். இது முடியும், ஏனெனில் நமது ஆண்டவரின் மரணம் வரைக்குமான அர்ப்பணத்தில் ஞானஸ்நானத்தின் மூலம் நுழைந்தார். உண்மையிலேயே பூமிக்குரிய அவரது உரிமைகளை விட்டுக்கொடுத்தார். பரீஷார்த்தமான உருவத்தில் இது நடக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் உன்னதத்தி-ருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவதற்கு இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளி சென்ற பிறகு அதிக நாட்கள் காத்திருக்கும்படி தேவன் தீர்மானிக்க வில்லை.(லூக்கா 24:29) எபிரேயர் 6:4-8 வசனங்கள் உண்மையிலேயே சபையை குறிக்கிறது. ஆனால் இரண்டாம் மரணத்தில் மரிப்பதற்கு இந்த நிலைமை மட்டும்தான் என்று விவரிக்கவில்லை. சபையினர் அனைவரும் இந்த தண்டனைக்கு உட்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே, தெரிந்தே பாவம் செய்தால், தேவனுடைய கிருபையின் அஸ்திபாரமாகிய கிறிஸ்துவின் மீட்கும் பொருளின் ப-யை மறுத-த்தால் இரண்டாம் மரணத்திற்கு செல்வார்கள். இரண்டாம் மரணத்திற்கு செல்லக்கூடிய நிலைமை வேறு எதுவும் இல்லை என்று இந்த வசனம் குறிப்பிடவில்லை. ஆயிர வருட யுகத்தில் சிலருக்கு இரண்டாம் மரண தண்டனை கொடுக்கப்படும் என்பதை நாம் காண்கிறோம்.

----------------------------------

## "Consider Him" - Then Follow

# "அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்" -பிறகு பின்பற்றுங்கள்

*"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்." (எபிரேயர் 12:3)*

நமது கர்த்தராகிய இயேசுவின் விசுவாசத்தை அப்போஸ்தலர் குறிப்பிட்டு கூறினார். பரம பிதா தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவர் சகித்த அவமானத்தையும் இழிவானவைகளையும் சபைக்கு ஞாபகப்படுத்தினார். இயேசுவே நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார் என்று அறிவிக்கிறார். இயேசுவின் போதனைகளுக்கும் அவர் செய்த ஒவ்வொரு செயலுக்கும் விரோதமாகவும், எதிராகவும் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களையும் எதிர்ப்புகளையும் பொறுமையோடு சகித்த நமது ஆண்டவரின் அனுபவத்தை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமது சோதனைகளிலும் கஷ்டங்களிலும் நினைவுகூர வேண்டும். அப்போஸ்தலர் நம்மை ஊக்கப்படுத்துகிறார். இயேசுவுக்கான இந்த எதிர்ப்பு அவர் கொலை செய்யும்படியாக கடைசி வரை தொடர்ந்தது.

இயேசு செய்தது போல "பாவத்திற்கு விரோதமாக போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்க்கவில்லை" என்று சபைக்கு அப்போஸ்தலர் கூறுகிறார். உண்மையைச் சொல்வோமானால், நாம் உண்மையிலேயே கஷ்டப்படுவதும் விட்டுவிடுவதும் மிகவும் சொற்பமே. விழுந்துபோன ஒரு இனத்தின் அங்கமாக இருக்கும் நமது ஜீவியகாலம் மிகவும் குறைவுதான். கொஞ்ச காலமே அது நீளுகிறது. தேவனிடம் அர்ப்பணம் செய்ய நம்மிடம் இருப்பதும் குறைவானவைகளே. அந்த சிறிய ஜீவியகாலம் போகும்போது, அற்பமானதாக இருக்கிறது என்பதையும், நமது ஆண்டவர் என்ன பெரிய காரியங்களை பெற்றிருந்தார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர் தமது பூமிக்குரிய வாழ்க்கையில் அவர் பெற்றிருந்த பரிபூரணத்தை மாத்திரமல்ல, அதற்கு முன் அவர் பெற்றிருந்ததையும், அவர் எப்படி தெய்வீக சித்தத்துக்கு கீழ்ப்படிந்து தமது மகிமையை விட்டு, மனிதனாகி, இன்னும் அவர் தம்மை மரண பரியந்தம், சிலுவை மரண பரியந்தம் தாழ்த்தினார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். "ஆகையால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."

அவரது அடிச்சுவட்டில் நடக்கவும், அதே அனுபவங்களை சகிக்கவும், தேவன் நமக்கு அளித்த பாத்திரத்தில்–அவரது பாத்திரத்தில் பானம் பண்ணவும் சந்தோஷப்பட வேண்டும். இப்படியாக நமது பிரியமான ஆண்டவரின் அனுபவங்களையும், விசுவாசத்தையும் கவனிப்பதால், நமது அனுபவங்கள் அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவம் ஆகவும் காணப்படுகிறது. "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அது அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்."(2கொரி 4: 17,18). "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் சகோதரரே, நீங்கள் நிலைகொண்டிருங்கள்" (2தெச 2:14,15) என்பதை நினைவுகூருவோமாக.

---------------------------------

**"The New Creature's Conquest of his Flesh"**

# புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங் கொள்ளுதல்

*"பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே."*

*கொலோசெயர் 3:9,10*

புது சிருஷ்டியின் வாழ்க்கைக்கு முன்னேற்றம் அவசியமானது. முன்பு மனிதன் மேல் அதிகாரம் செலுத்திய மனித சிந்தைதான் "பழைய மனுஷன்" என்று நமது தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ளது. வேதாகமத்தின் கருத்தில் கிறிஸ்தவர்களாக ஆகிற அனைவரும், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவரை தங்களது இரட்சகராக விசுவாசிக்கிறது மாத்திரமல்ல, தங்களது பழைய சித்தத்தை, பழைய சுபாவத்தை மரணத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். அதி–ருந்து பழைய சுபாவம் தள்ளப்படுகிறது; அதன் பிறகு அந்த தனிப்பட்ட நபரின் வாழ்க்கையை அது கட்டுபடுத்துவதில்லை. ஆனால் பழைய சித்தம் நீக்கப்பட்டு, புதிய சிந்தை வந்த பிறகு, "பழைய மனுஷனின்" சரீரமாகிய மாம்சீக கூடாரம் இன்னும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. புது சிருஷ்டி, புதிய நோக்கத்துடன், புதிய உத்வேகத்துடன், அழியக் கூடிய சரீரத்தை அதன் ஊழியக்காரனாக பயன்படுத்துகிறது. புதிய சிந்தை தான் இப்போது எஜமானன்.

இந்த புதிய சிந்தை தான் தேவனுடைய சிந்தை, அதாவது தேவனுடைய சித்தத்தை செய்கிற சிந்தை. நமது அர்ப்பணம் என்பது தேவனுடைய சித்தத்தை செய்தவற்கான ஒரு அர்ப்பணம் ஆகும்; வேறு எந்த சித்தத்தையும் அது நமது சுபாவமான சித்தமாகவோ அல்லது வேறு ஒருவருடைய சித்தமாகவோ இருந்தாலும் அதை அழிக்கிற அர்ப்பணம் ஆகும். நாம் ஒரு மானிட ஜீவியாக பெற்றிருக்கிற அல்லது பெற்றிருந்ததாக நம்புகிற அனைத்தையும் அர்ப்பணிப்பதும் இதில் அடங்கியுள்ளது. அதாவது நமது ஒவ்வொரு வல்லமையையும், திறமையையும், பலத்தையும், நேரத்தையும். நமது குறிப்பேடையும். நமது செல்வாக்கையும் ப–பீடத்தில் வைப்பது என்று பொருள்படும். ப–யின் உடன்படிக்கையை செய்தவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையோடே ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் மரணம் வரை உண்மையுள்ளவர்களாயிருந்தால், அவர்கள் புதிய சரீரத்தை உயிர்த்தெழுத–ல் பெறுவார்கள்.

## அறிவே முன்னேற்றத்தின் அடிப்படை

நமது தலைப்பு வசனத்தில் இதை எப்படி களைந்து போடுவது, எப்படி தரித்துக் கொள்வது என்பது குறித்து அப்போஸ்தலர் விளக்குகிறார். இந்த "புதிய மனுஷன்" ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த புது சிருஷ்டி, தான் பெறுகிற அறிவின்படி கிரியை செய்து முன்னேற வேண்டியவனாயிருக்கிறான். அர்ப்பணத்திற்கு முன்னதாக சில அறிவைப் பெற்றிருந்தோம் அல்லது இப்படிப்பட்ட முயற்சி செய்ய சிந்தித்திருக்க மாட்டோம். முதலாவது, நமது கர்த்தர் ஒரு குறிப்பிட்ட அளவான அறிவை பெற அனுமதித்தார். பிறகு நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு நம்மை ப–க்கு அர்ப்பணித்த போது, நமது இரட்சகரின் புண்ணியம் நமக்கு சாட்டப்பட்டது; நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவரது வல்லமை மற்றும் அவரது ஆவியால் புது சிருஷ்டியாக ஜெநிப்பிக்கப்பட்டோம். முன்னேற்றத்துக்கு தேவையான நிலையை அடைந்தவர்கள் அனைவருக்குமான நல்ல வேலைகள் நடந்து வருகிறது.

அன்பில் நாம் வளர வேண்டும். நாம் எல்லா அறிவையும் பெற்று ஒன்றுமில்லாதவர்களைப் போல இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அறிவு மட்டுமே போதுமானதல்ல. எனினும் அறிவுதான் விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் அடிப்படையாக இருக்கிறது. அறிவு இல்லாமல் நாம் எதையும் நிறைவேற்ற இயலாது. ஒருவகையில் அறிவு தேவனுடைய சித்தத்தை காண்பிக்கிறது. இன்னொரு வகையில் விழுந்துபோன மானிட சுபாவத்தில் சுய நலத்தை ஏற்படுத்துகிறது; அன்பும், உதார குணமும் புதிய சுபாவத்திற்கு சொந்தமானது என்று இது காண்பிக்கிறது. அது கர்த்தரின் குணலட்சணத்தைக் காண்பிக்கிறது. இந்த குணலட்சணத்தின் மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். "சிருஷ்டிகளின் சாயலுக் கொப்பாய் புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்ட பிறகு பூரண அறிவடைய வேண்டும்." புது சிருஷ்டியாக நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் மறுரூபமாக வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலர் வேறு ஒரு இடத்தில் கூறுகிறார். ஆரம்பத்தி–ருந்து நாம் ஒரு புது சிந்தையை பெற்றிருக்கிறோம். ஆனால் நமது மனம் மறுரூபமடைய சில காலம் தேவைப்படுகிறது. பழைய சுபாவமாகிய மாம்சத்திற்கிசைவாக நமது மனம் பழக்கப்பட்டிருக்கிறது. தெய்வீக நோக்கில் காரியங்களை சிந்திக்க, நமது மனம் முழுவதும் புதிதாக்கப்பட சில காலத்தை எடுத்துக் கொள்கிறது. இப்படியாக நாம் முன்னேறினால் மட்டுமே கிறிஸ்துவைப் போன்ற குணலட்சணத்தை நாம் உருவாக்க முடியும்.

## சபையையும் உலகத்தையும் புதுப்பிப்பது வெவ்வேறானது

நாம் நமது மனதை புதுப்பிப்பது மட்டும் போதாது, நமது சரீரமும் நமது புதிய மனதுக்கு, நமது புதிய சித்தத்துக்கு கீழாக்கப்பட வேண்டும். நமது சரீரங்கள் விழுந்துபோனதின் மூலம் அபூரணமாகவும் பூமிக்குரியதாகவும் இருப்பதால், அவற்றை முழுவதுமாக புதிய சித்தத்துக்கு பணிய வைக்க இயலாது. எப்போதுமே முரண்பாடு வரும். இந்த சீரழிந்த

மாம்சத்தின் உத்வேகம், மற்றும் விருப்பங்களை மந்தமாக்கி, ஒன்றுமில்லாததாக கருத வேண்டும். இப்படியாக நமது தேவன் மற்றும் அவரது பிரியமுள்ள குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக அனுதினமும் மறுரூபமாகி நாம் முன்னேற வேண்டும். ஆண்டவருடைய சாயலான இந்த குணலட்சணத்தை அடைந்தவர்களுக்கு ஏற்ற காலத்தில் தெய்வீக சுபாவம் அளிக்கப்படும்.

ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த மனம் மாறுதல் வரும். அது உலகத்திற்கு வராது. வரப்போகிற யுகத்தில் தான் கர்த்தர் உலகத்தோடு தொடர்பு கொள்வார். மனுக்குலமும் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கும். ஆனால் அவர்களது புதுப்பித்தல் சபைக்கு கொடுக்கப்பட்ட புதுப்பித்தலைப் போல் இராது. உலகத்திற்கு புதிய சிந்தை தேவைப்படுகிறது. மேலும் அவர்களது விழுந்துபோன சுபாவங்கள் அனைத்தையும் ஜெயங் கொள்ள கற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் பாவ காரியங்களை மட்டும் அவர்கள் விட்டுவிட வேண்டும். அவர்களது புதுப்பித்தல் பூரண மனிதனின் பழைய நிலைமைக்கு திரும்ப கொடுத்தலுக்கு, இளைப்பாறுதலுக்கு இசைவாக இருக்கும். அவர்கள், சபை பெறுகிறது போல, மனித சுபாவத்திற்கு மாறுபாடான புதிய சிந்தையை பெற மாட்டார்கள். உலகம் அவர்களது மனித சுபாவத்தை விட்டுவிடமாட்டார்கள். அப்பொழுது கொடுக்கப்படுகிற தெய்வீக உதவியால் அவர்களது மனித சுபாவம் பூரணத்திற்கு வர பாவத்தை மட்டுமே விட்டு விட வேண்டும்.

## எல்லாரும் தேவ சாயலை அடைய வேண்டும்

முடிவாக, ஒவ்வொரு ஜீவியும் ஏதாவது ஒரு சுபாவத்தில் நித்திய ஜீவனை தேவசாய-ல், தேவசுபாவத்தில் பெறுவதை நாம் பார்க்கிறோம். தகப்பனாகிய ஆதாம் அவனது பூரணத்தில் இந்த ரூபத்தை பெற்றிருந்தான். பரிசுத்த தூதர்கள் இந்த ரூபத்தை பெற்றிருக்கிறார்கள். இயேசுவும் பிதாவின் ரூபத்தை பெற்றிருந்தார். சபையும் இந்த ரூபத்தை பெற வேண்டும். உலகமும் சீக்கிரத்தில் இந்த தேவனுடைய ரூபத்தை பெற வேண்டும். எல்லாரும் அன்பு செலுத்த வேண்டும். நீதிக்கு ஊழியம் செய்ய வேண்டும். தவறுதான் எப்பொழுதும் அருவருப்பானதாக இருக்க வேண்டும். நித்திய ஜீவனை அடைகிறவர்கள் தெய்வீக ஞானத்தையும் நீதியையும் அன்பையும் வல்லமையையும் காண்பார்கள். மேலும் அவர்கள் தங்கள் சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களில் அந்த திட்ட அளவுக்கு தங்களை முழுவதுமாக உறுதிசெய்வார்கள். அடுத்த யுகமாகிய கிறிஸ்துவின் ஆளுகையின் ஆயிர வருட யுகத்தின் முடிவில் தேவனுடைய ரூபத்தை அடையாதவர்கள் அனைவரும் பரிகாரம் இல்லாமல் தறிப்புண்டு போவார்கள்.

நமது கர்த்தராகிய இயேசு கூறியதாவது: “ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.” (யோவான் 17:3) தேவனை அறிவது என்றால், தேவனோடு நெருக்கத்தையும் அவரை போன்ற குணலட்சணத்தையும் உடையவர்களாகவும் எந்த காரியத்தையும் அவர் பார்ப்பது போல பார்க்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். தேவனுடைய சிந்தையை பெறுகிறவர்கள் மட்டும் நித்திய ஜீவனை பெறுவார்கள் – தற்கால சபையாக இருந்தாலும் சரி, அடுத்த யுகத்தின் உலகமாக இருந்தாலும் சரி.

## சிந்தைக்கும் சரீரத்திற்கும் இடையேயான முரண்பாடு

உண்மையான கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டிகள் (2 கொரி 5:17), ஆகையால் அவர்கள் அவர்களது அழிந்து போகிற சரீரத்தி-ருந்து வேறுபடுத்தி பேசப்படுகிறார்கள் என்கிற உண்மையை சபையின் கவனத்திற்கு பரிசுத்த பவுல் கொண்டு வருகிறார். (அதே அதிகாரத்தில் வசனம் 1-4ஐ பார்க்கவும்) உலகத்திற்கு இது பொதுவான உண்மையாக இருக்காது; பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே இது உண்மையாக இருக்கிறது. கர்த்தர் இந்த புது சிருஷ்டிகளை அவர்களது மாம்சத்தின் அபூரணத்தின்படி நியாயந்தீர்க்க மாட்டார்கள், ஏனெனில் அவைகள் மூடப்பட்டுள்ளன. பாவத்திற்கும், மாம்சீக ஆசைகளுக்கும், முக்கியமாக அவர்களது சொந்த மாம்சத்தில் இருக்கும் ஒரு கலகத்தின் ஆவிக்கும் விரோதமாக அவர்கள் செய்யும் போராட்டத்தின் மூலம் தங்களது அன்பு மற்றும் விசுவாசத்தின் அளவை அவர்கள் நிரூபிப்பார்கள்.

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தனது சொந்த சரீரத்தில் ஒரு விரோதியை பெற்றிருக்கிறான். நாம் விழுந்து போனதினிமித்தம் நமது சரீரங்கள் பாவத்தினால் சுமை ஏற்றப்பட்டிருக்கிறது. புது சிருஷ்டியின் சித்தம் தேவனுடைய சித்தம். ஆகையால் புது சிருஷ்டி பிறந்த நேரத்தி-ருந்து புது சிருஷ்டிக்கும் பழைய சரீரத்திற்கும் ஒரு முரண்பாடு இருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் தனது சரீரத்தை அடக்கி, புதுசிருஷ்டியின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதாக அறிவிக்கிறார். கர்த்தராகிய இயேசுவை பின்பற்றுவதற்கு இதுதான் ஒரே வழி என்றும் கூறுகிறார். 1 கொரிந்தியர் 9:27

## மாம்சம் முற்றிலுமாக அடக்கப்பட வேண்டும்

சரீரத்தை கட்டுப்படுத்துகிற இந்த காரியம் ஒரு ஆரம்பத்தை பெற்றிருந்தது. நம் அனைவரது முந்தைய வாழ்க்கையில் நமது சரீரத்தை உனது சித்தம் என்ன? உனது விருப்பம் என்ன? எது உன்னை சந்தோஷப்படுத்தும்? என்று நாம் கேட்டிருந்தோம். ஆகையால் புதிய சித்தத்துக்கு கீழாக சரீரத்தை கொண்டு வருவதும், பிதாவே, “என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின் படியே ஆகக்கடவது” என்று கூறுவதும் கொஞ்சம் கடினமான காரியம் தான். ஒரு குதிரை அடக்கப்பட்டு, நமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வரப்படுவது போல நமது மாம்சமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அது முழுவதுமாக அடக்கப்பட்டால், அது நமது கட்டுப்பாட்டில் இருக்கும். அவ்வப்போது அது தனது உரிமையை நிலை நிறுத்த முயற்சிக்கும், அப்பொழுது அது மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அது முற்றிலுமாக அடக்கப்பட்டு, மேற்கொள்ளப்படவில்லை. கிட்டத்தட்ட அதன் சொந்த வழியில் செல்ல அனுமதிக்கப்பட்டால் எப்பொழுதும் தப்பித்துச் செல்லும் ஆபத்தோ அல்லது வேறு ஏதாவது கஷ்டமோ, கடைசியாக பெரும் ஆபத்தோ வரும்.

அப்போஸ்தலர் தனது சரீரத்தை அடக்குவதைப் பற்றி சொல்வதை நாம் மிகவும் சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவரது எண்ணம், நாம் நமது சரீரத்தை முரட்டுத் தனமாக கையாள வேண்டும் என்பதோ, சிலர் நினைப்பது போல மோசமாக நடத்த வேண்டும் என்பதோ, நல்ல ஒரு பாடத்தை கற்பிக்க வேண்டும் என்பதோ அல்ல. சரீரமானது புது சிருஷ்டியின் ஒரு நல்ல ஊழியக்காரனாக ஆவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் இதன் நோக்கமாகும். மரிக்கக் கூடிய நமது சரீரத்தை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரை, கர்த்தரின் ஆவியால் ஊக்கமளிக்கப்பட இயலாது. புது சிருஷ்டியின் வெற்றி என்பது சரீரத்தின் சீக்கிரமான மரணமாக இருந்தாலும், அது பணிய வைக்கப்பட வேண்டும். ஏனெனில் நமது சொந்த சித்தம் நமது கட்டுப்பாட்டில் இருக்கக் கூடாது என்று தீர்மானித்த பிறகு, தேவனுடைய சித்தமே அதை கட்டுப்படுத்த வேண்டும். அவரது ஊழியத்தில் நமது சரீரத்தை ஈடுபடுத்துவதே நாம் செய்ய வேண்டிய ஒரே காரியமாகும். நாம் ஏறக்குறைய முழுமையாக புது சிருஷ்டியாக வளர்ச்சியடைந்த பிறகே இது செய்யப்படும். அதே அளவில் போராட்டம் போகும்போது, உண்மையான போராட்டமாக இருந்தால், நமது மாம்சம் பலவீனமடைகிறது. நமது புதிய சிந்தை நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகிறது. நமது சரீரத்தை புதிய சித்தத்துக்கு கீழ் கொண்டு வரவும், அதற்கு ஊழியம் செய்யவும் இன்னும் அதிகபடியாக கற்றுக் கொள்கிறோம். தேவனுடைய சித்தத்தை செய்ய நாம் நாடுகிறோம் என்பதும் மாம்சத்தின் சித்தம் இறந்துவிட்டது, அது சந்தோஷப்படுத்தப்படக் கூடாது என்பதும் எல்லாருக்கும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### விசுவாசியின் சோதனை

அப்போஸ்தலர் பவுல் தனது சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவதற்கான ஒரு காரணத்தைக் கூறுகிறார். மற்றவர்கள் எப்படி செய்ய வேண்டும் என்று போதிக்கிற அவரே தோல்வியுற்று ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு அப்படிச் செய்தார். இதே போல இது ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனுக்கும் மிகவும் முக்கியமான ஒரு காரியமாக இருக்கிறது. சபையில் போதகராயிருக்கிற ஒவ்வொருவராலும் விசேஷித்தவிதமாக கவனிக்கப்பட வேண்டும். பிதாவானவர் தமது குமாரனுக்கு ஒரு மணவாட்டியை தேர்ந்தெடுக்கும்போது, சுவிசேஷ செய்தியை ஏற்றுக் கொண்டு தம்மிடத்தில் இழுக்கப்படுதலை விரும்புவர்களி-ருந்து தேர்ந்தெடுக்கிறார். அவர்கள் தேவனிடம் ஒரு முழுமையான அர்ப்பணிப்பை செய்கிறார்களா இல்லையா என்பது முதலாவது சோதனையாக இருக்கிறது. இரண்டாவது சோதனை, அவர்கள் அர்ப்பணம் செய்த பிறகு, மாம்சத்தை ஜெயங் கொண்டு அதைக் கீழ்ப்படுத்துகிறார்களா என்பது. மூன்றாவது சோதனை, மாம்சத்தை எப்பொழுதும் முடிவுபரியந்தம் கீழ்ப்படுத்த பாடுபடுகிறார்களா என்பது.

நமது ஓட்டத்தை கர்த்தர் தொடர்ந்து கவனிக்கிறார். நமது மாம்சத்தை சிலுவையில் அறைய எந்த அளவுக்கு நாம் வைராக்கியம் உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை பார்க்க அவரது கண்கள் எப்பொழுதும் திறந்தே இருக்கிறது. இந்த காரியத்தில் மிகவும் ஆவலாய் இருப்பவர்களைத் தான் அவர் தேடிக் கொண்டிருக்கிறார். எஜமானருடைய குணத்தை பெற்றிருக்கிற பக்தியுள்ள விதைகளைத் தான் தேவன் தேடுகிறார். எஜமானனுடைய குணம் பாவமான எதற்கும் எப்பொழுதும் விரோதமாக இருக்கக் கூடியது. “நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்” என்று நமது கர்த்தராகிய இயேசுவின் பிதாவானவரால் சொல்லப்பட்டது. இன்னும் பிதாவின் சித்தத்தை செய்யவும், உலகத்தை இரட்சிக்கவும் ஆண்டவர் தமது ஜீவனை சந்தோஷமாக ப-யாக கொடுத்தார்.

எல்லாவற்றையும் விட நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுத்து, ஜீவப-யாக இருக்கவும், தேவனுடைய ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவும் சந்தோஷப்படுகிறவர்களை பிதாவானவர் இந்த சுவிசேஷ யுகத்தில் தம்முடைய குமாரனுக்கு மணவாட்டியாக தேடிக் கொண்டிருக்கிறார். நாம் எந்த அளவுக்கு நமது கர்த்தரை இயக்கின ஆவியை – அதாவது நியாயமான அன்பையும், நம்மில் இருக்கிற எல்லா பாவங்களையும் எதிர்த்து போராட தயாராயிருக்கிற அன்பின் ப-யின் ஆவியை – வெளிப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு தேவனுடைய பிரியமான குமாரனுடைய சாயலாயிருப்போம். இந்த காரியத்தில் சரியான வைராக்கியத்தையும் சக்தியையும் பெறத் தவறினால். வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட வெகுமதியாகிய பரம அழைப்பின் பந்தயப் பொருளை பெறத் தவறிவிடுவோம். நாம் ஆகாதவர்களாக தள்ளப்படுவோம்.

மரணம் வரை பாவம் செய்தவர்கள் ஆகாதவர்களாகிவிடுவார்கள். திரள் கூட்ட வகுப்பார் கூட, பந்தயப் பொருளுக்கு, ஆகாதவர்களானால் கூட, இருதயத்திலும் சிந்தையிலும் தங்களது விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும். மாம்ச பலவீனத்திற்கெதிராக போராடுவதில் நாம் வெளிப்படுத்துகிற அன்பு மற்றும் வைராக்கியத்தின் அளவுதான் நமது ஆண்டவருடன் மகா மேன்மையான சுபாவமாகிய தெய்வீக சுபாவத்தை சுதந்தரித்துக் கொள்ளுவோமா இல்லையா என்பதை நிர்ணயிக்கிறது. நமது மாம்சம் உன்னத நிலைக்காக போராடுதல் மற்றும் மரித்ததாக எண்ணப்படுதல் என்ற நிலையி-ருந்து மாறுகிற சுபாவத்தை உடையதாயிருக்கிறது என்பதைக் நாம் காண்கிறோம். எனவே சொல்-யிருக்கிறபடி “ஜீவ கிரீடத்தை” நாம் அடைவதற்கும், புது சிருஷ்டி உயருவதை பராமரிக்கவும், புது சிருஷ்டியானது தொடர்ந்து மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜெயங் கொள்ளுத-ன் உயர்ந்த நிலையாகிய “முற்றும் கொள்ளுகிறவர்களாவதற்கு” நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் மிகவும் பொறுப்பான நிலைமையில் இருக்கிறோம்.

தற்காலத்தில் மாம்சத்திற்குரிய மற்றும் ஆவிக்குரிய இரண்டு வகுப்பார் உலகத்தில் இருக்கிறார்கள். மாம்சத்திற்குரியவர்கள் தங்களது மாம்சீக சுபாவத்தின்படி வாழ்கிறார்கள்; ஆவிக்குரியவர்களோ மாம்சத்திற்கு மாறாக, விசுவாசத்தின்படி

வாழ்கிறார்கள். இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்களாக மாறுகிறவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் மற்ற மனுக்குலத்தாரைக் காட்டிலும் மேலான நிலைமைக்கு உயர்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களது கடந்த கால வாழ்க்கையின் பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின, அவைகள் கைவிடப்பட்டு எல்லாம் புதிதாயின.

இவர்களது வாழ்க்கை மாம்சீக பிரகாரமாக இருந்தால் –அதாவது மாம்ச சுபாவத்துக்கும் உலக ஆசாபாசங்களுக்கும் இசைவாக இருந்தால் – அவர்கள் மறுபடியும் உலக நிலைமைக்கு இறங்கி விட்டார்கள் என்று பொருள்படும், அவர்கள் மரிப்பார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். நாம் உண்மையுடன் சகித்தால் மட்டுமே உயரமுடியும். நாம் கிறிஸ்துவுடன் பாடுபட்டால், அவருடன் ஆளுகையும் செய்வோம். ஒரு குறிப்பிட்ட வகையில் சிகை அலங்காரம் செய்தல், உடை அணிதல் போன்ற அறிவீனமான சில காரியங்கள் கிறிஸ்துவுடன் பாடுபடுதல் ஆகாது. தீமையை தீவிரமாக எதிர்ப்பதும். உலக ஆவியி–ருந்து விலகி ஜீவித்தலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி சத்தியத்தை பரப்புவதில் பலத்துடனும் உண்மையுடனும் இருத்தலுமே கிறிஸ்துவுடன் பாடுபடுதல் ஆகும். எல்லாவற்றிலும் நாம் தேவனுடைய பக்கமே இருக்க வேண்டும். இது நம்மை உலகத்திற்கும், நமது சொந்த மாம்சத்தின் சுபாவத்திற்கும் விருப்பத்திற்கும் எதிராக கொண்டு வருகிறது. ஏனெனில் நாம் இயற்கையான சுபாவத்தின்படி உலகம் சிநேகிக்கிறதையே சிநேகிக்கிறவர்களாக இருக்கிறோம்.

### நமது பொறுப்பும் நமது ஆபத்தும்

மாம்சத்தின்படி வாழ்வதற்காக நாம் உலகத்தை குறைகாணக் கூடாது; ஏனெனில் இது விழுந்து போன சுபாவத்தின் இயற்கையான சுபாவமாக இருக்கிறது நம்மிடத்தில் அது வேறானதாக இருக்கிறது. காரணம் என்னவெனில் ஆவிக்குரியதை பெறுவதற்காக பூமிக்குரியதை நாம் ப– கொடுத்திருக்கிறோம். நாம் ஆவிக்கென்று விதைக்கிறதற்கு பதிலாக மாம்சத்திற்கென்று விதைத்தால், மாம்சத்தின்படி வாழ்ந்தால் அது நமக்கு கேடானதாக இருக்கும். நாம் முழுமையாக ஆவியின்படி வாழ முடியாது, ஆனால் ஆவியின்படி வாழ தொடர்ந்து முயற்சி செய்ய முடியும். நாம் ஆவியின்படி வாழ முடிந்தாலும் அதை பூரண அளவின்படி அளவிட முடியாது. நம்மால் முடிந்ததை செய்ய முடியும், தேவன் நமக்கு பகுத்துணரக் கூடிய ஞானத்தை கொடுக்கிறபடியால், தேவ ஆவி நமக்கு உணர்த்துகிறதற்கும் மற்றும் அனுமதிக்கிறதற்கும் இசைவாக நாம் திட்டமிட்டு ஏற்பாடு செய்யலாம். விசுவாசமுள்ள சபைக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள மகிமையையும் நித்திய ஜீவனையும் அடைய இது தான் ஒரே மார்க்கமாக இருக்கிறது.

ஆவிக்குரிய ஜீவனை அடைகிறவர்களில் உண்மையிலேயே இரண்டு வகுப்பார் உண்டு என்று நாம் அறிந்து கொள்கிறோம். ஆனால் அதில் ஒரு வகுப்பாருக்கு மட்டுமே ராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசம் அபரிமிதமாக அளிக்கப்படும். ஆவிக்கென்று அபரிமிதமாக விதைப்பவர்கள் அதிகமான பரிசை அறுப்பார்கள். குறைவாக விதைப்பவர்கள் சிறிய பரிசை அறுப்பார்கள். ஜெபம் மற்றும் தேவனுடைய சித்தத்தை ஆராய்ந்து அறிய அவரது வார்த்தைகளை ஆராய்வதன் மூலமும் தேவனுடன் முழு இசைவுடனும் தேவனுக்கு விரோதமான அனைத்திற்கும் விரோதமாகவும் வாழ்வதற்கு முழு முயற்சி செய்பவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசை வெல்வார்கள். பி–ப்பியர் 3:14

ஆனால் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, மாம்சத்தின்படி ஜீவிப்பவர்கள் எந்த பரிசையும் எதிர்பார்க்க முடியாது, இளைப்பாறுதலையும் கூட அடைய முடியாது, இரண்டாம் மரணத்தை தவிர வேறு எதுவும் அவர்களுக்கு கிடைக்காது. அவர்கள் ஜீவனுக்கான சந்தர்ப்பத்தை பெற்று அதை சரியானபடி பயன்படுத்தாதவர்கள். கிறிஸ்து ஒரு முழுமையான சந்தர்ப்பத்தை ஒரே ஒரு சந்தர்ப்பத்தை ஒவ்வொருவருக்கும் கொடுக்க வந்தார். தேவன் ஆதாமுக்கு நித்திய ஜீவனுக்கான ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். அப்பொழுது ஆதாம் பாவம் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றிய அனுபவம் இல்லாதிருந்தார். ஆகையால் உலகத்திற்கு கொடுக்கப்படக் கூடிய சந்தர்ப்பத்தைப் போன்று ஆதாம் உயிர்த்தெழுந்து வரும்போது கொடுக்கப்பட வேண்டும். எல்லாரையும் மீட்பதற்காக இயேசு மரித்தார். இயற்கையான சுபாவம் மற்றும் பாவத்தின் விளைவுகளைப் பற்றிய அனுபவத்தைப் பெற்ற பிறகு, மனுக்குலம் அனைத்திற்கும் ஏற்ற காலத்தில் ஒரு முழுமையான, சரியான சந்தர்ப்பத்தை கொடுப்பதற்காகவும் அவர் மரித்தார்.

சபையானது இப்போது தனது பரீட்சையை பெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது தனது சந்தர்ப்பத்தை பெறுகிற வகுப்பாரின் தொகை மிகவும் சொற்பமே. மிகவும் குறைவானவர்களில் விசேஷித்த சந்தர்ப்பத்தையும் தெளிவான அறிவையும் பெற்றிருக்கிறவர்களைத் தவிர வேறு யாரும் ஒரு முழுமையான பொறுப்பிற்கு வர முடியாது. பரிசுத்த ஆவியினால் ஒரு முறை ஜெநிப்பிக்கப்பட்ட இவர்கள் ஆவிக்குரிய ஜீவனைப் பெற வேண்டும், இல்லையென்றால் ஒட்டு மொத்தமாக தோல்வியடைந்து இரண்டாம் மரணத்திற்கு செல்ல வேண்டும்.

அடுத்த யுகத்தில் உலகம் கல்லறையி–ருந்து, மரணநிலையி–ருந்து அபூரண, களங்கப்பட்ட நிலையில் கொண்டு வரப்படும். மகா பெரிய மத்தியஸ்தர், அவர்களின் சார்பாக நீதியை திருப்திபடுத்தி உலகக் காரியங்களுக்கு பொறுப்பாளராக இருப்பார். மனுக்குலத்தில் விருப்பமுள்ள அனைவருக்கும் பூரணத்தை அடைய உதவி புரிவதே அவரது வேலை. தங்களது விழுந்துபோன மாம்சத்தின் பாவம் நிறைந்த தீராத ஆசையுடன் ஜீவிக்க தொடர்ந்தாலோ அல்லது முயற்சித்தாலோ அவர்கள் முடிவிலே அழிக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேறுபாட்டை மிகவும் தெளிவாக அறிந்த பின்பும், விழுந்துபோன நிலையி–ருந்து உயருவதற்கான எல்லா உதவிகளையும் அடையும் வழியை பெற்ற பிறகும் அவர்கள் பாவத்தை தேர்ந்தெடுத்ததால், அவர்கள் பூமியை கெடுத்தவர்களாகவும், வருத்தினவர்களாகவும் இருந்ததால் அழிக்கப்படுவார்கள். வருகிற யுகத்தில் தேவனுடைய

பிரமாணத்திற்கும் நீதிக்கும் இசைவாகவும் வாழும்படி முயற்சிக்கிறவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள். இப்படியாக அவர்கள் மேசியாவின் வழி நடத்துதல் மற்றும் உதவிகளின் கீழ் முழுமையான பூரணத்தையும் இழந்ததையும் திரும்பப் பெறுவார்கள்.

### சபையின் விசேஷித்த போராட்டங்கள்

சபைக்கு கொடுக்கப்பட்டிருந்த பரம அழைப்பின் பந்தய பொருளுக்காக இப்பொழுது விசுவாசத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறவர்களுக்கு மிகவும் அதிகமான மகிமையான எதிர்கால பலன் இருக்கிறது. எனினும் நாம் கிரீடத்தை பெறுவதற்கு சத்துருக்கள் இன்னும் முற்றிலும் முறியடிக்கப்பட வேண்டும், ஜெயங்கொள்ளப்பட வேண்டும். கடைசிப் போர் முடியும் வரை ஜாக்கிரதையாக கவனித்தலை நாம் விட்டு கொஞ்சம் அசதியாய் இருக்கவோ நமது சர்வாயுதத்தில் ஒன்றை எடுத்து அப்பால் வைத்துவிடவோ கூடாது.

புதுசிருஷ்டியின் போராட்டங்களை நாம் கவனிக்கும் போது, அவைகளில் பெரும்பாலானவைகள் பரம்பரையாக வருகிற மாம்சீக பலவீனங்களைச் சார்ந்ததாகும். பாவமானது நமது அழிவிற்குரிய சரீரத்தில் கிரியை செய்து நம்மை அடிமைத்தனத்திற்கு கொண்டுவரப் பார்க்கிறது. நாம் புது சிருஷ்டியான பிறகு, ஒரு காலத்தில் அடிமைப்பட்டிருந்த ஒட்டு மொத்த மாம்சீக பாவங்களில் படிப்படியாக விருப்பம் குறைந்து வரும். இவைகளை ஜெயங்கொள்ளும் போது, ஒரு பெரும் வெற்றி கிடைத்திருக்கும். ஆனாலும் கர்த்தருக்கு உரியவர்களானவர்களின் மாம்சத்தில் எளிதில் கண்டுணர முடியாத பாவங்கள் பதுங்கியிருக்கும். இந்த இயற்பண்புகள், புது சிருஷ்டியின் சிந்தையை வஞ்சிக்கும் வண்ணமாக தங்களை மறைத்துக் கொள்ளும். புதுசிருஷ்டி நீதியின் கொள்கைகளை தெளிவாக உணர்ந்து கொள்ளும்படியாக போதிக்கப்பட வேண்டும்.

ஒரு சகோதரனை பகைக்கிறவன் கொலைபாதகன் என்பது கிறிஸ்துவின் பள்ளியில் ஓர் உயர்தரமான பாடம். கொலைபாதக செயலை நாம் வெறுப்பது மாத்திரமல்ல. கொலைபாதக ஆவியையும் நாம் வெறுக்க வேண்டும். இந்த ஆவியை முற்றிலுமாக நம்மை விட்டு போக்க வேண்டும். நம் இருதயத்திலே பிறரிடத்தில், சத்துருக்களிடத்தில் கூட அன்பையும் தயவையும் காண்பிக்கிற சிந்தை மட்டுமே, நம் இருதயத்தில் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் பள்ளியில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டு மிகவும் முன்னேறிய மாணவர்கள் மட்டுமே அப்போஸ்தலரின் வசனத்தில் கூறிய கோபம் (மாம்சீக கோபம்), குரோதம், பகை, சண்டை, பொறாமை, சாத்தானின் வார்த்தைகளாகிய தீயவைகளை பேசுதல் போன்றவைகளை தெளிவாகவும் நன்றாகவும் காண்கிறார்கள். முடிவு வரை அவர்கள் போராட வேண்டும்.

“அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது” என்பதையும் பொல்லாங்கை விரும்பாது என்பதையும் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் காண வேண்டும். இப்படிப்பட்ட பொல்லாங்கான எண்ணம் மனதில், இருதயத்தில் தோன்றுவதை நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட பாவ வெளிப்பாடுகள் வெளியரங்கமாகவோ உள்ளூறவோ வருவதை உணருகிற உண்மையான ஒரு சிலுவை வீரன், உடனே அதற்கு எதிராக தீவிரமான போராட்டத்தை தொடங்க வேண்டும். மேலும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் இரக்கத்தைப் பெறவும் கிருபாசனத்தண்டையில் சேர வேண்டும். இப்படியாக மட்டுமே தேவனுடைய பிள்ளை தம்மை பரிசுத்தமாக வைத்துக் கொள்ளவும், தேவனுடைய தயவையும், ஆசீர்வாதங்களையும் தக்க வைத்துக் கொள்ளவும் கூடும்.

மிகவும் பிரியமானவர்களே, இந்த பாடங்களை ஆர்வத்துடன் நாம் ஒவ்வொருவரும் அப்பியாசப்படுத்த வேண்டும். நமது அன்புக்குரிய அப்போஸ்தலர் பவு–ன் உதாரணத்தை நாம் பின்பற்றுவோமாக. நாம் ஆகாதவர்களாய் போகாதபடிக்கு நமது சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துவோமாக. “பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும், களைந்து போட்டு, புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறோம்” என்பதை நம் மனதில் எப்பொழுதும் வைத்துக் கொள்வோமாக.

நாம் இப்போது நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்ற சோதனையில் இருக்கிறோம். நாம் இப்போது சோதிக்கப்பட்டுக் கொண்டும் தேவனுடன் செய்த அர்ப்பணத்தின் ஆழத்தையும் நேர்மையையும் நிரூபிக்கும்படியான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்டும் இருக்கிறோம். நிச்சயமாக இது தூண்டுகோலாகவும். உண்மைத் தன்மைக்கு சக்தியூட்டுவதாகவும் இருக்கும். நாம் அர்ப்பணம் செய்த நேரத்தை ஒவ்வொரு சிந்தனைக்கும் வார்த்தைக்கும் செயலுக்கும் செலவழிக்கிறதைப் போல நமது சரீரத்திற்கு உணவு, தண்ணீர், நமது ஆடை போன்றவைகளுக்கும் செலவு செய்ய வேண்டும் என்பதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக.

மாம்சத்திற்கு எதிரான புதிய சிந்தையின் இந்த போராட்டங்கள், “நல்ல போராட்டம்” ஆகும். நல்ல போராட்டம் என்பது விழுந்துபோன சுபாவத்தின் பலவீனங்களுக்கு எதிராகவும் ஒரு மானிடனாக உள்ளேயும் வெளியேயும் கவனத்தை ஈர்க்கிற சபலத்திற்கு எதிராகவும் போராடுகிற போராட்டம் ஆகும். அவைகள் ஒரு “விசுவாச போராட்டமாக” இருக்கிறது. ஏனெனில் புதுசிருஷ்டியின் முழு ஓட்டமும் விசுவாசத்திற்கு உரிய ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் “நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.” இந்த போராட்டத்தில் உதவி இல்லாமல் வெற்றிபெற முடியாது. ஆகையால் நாம் தேவனிடம் மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டும். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் நாம் சரியாக பொருத்திக் கொண்டு “விழித்திருந்து ஜெபிக்க” வேண்டும். இந்த வேலை நம்மிடத்தில் முடிவடைவதற்கு காலம் குறைவாக இருக்கிறது. நாம் தளராத ஊக்கமுடையவர்களாக இருப்போமாக!

-----------------------

--2366--

## The "Crown of Life" - Who will Receive it?

## "ஜீவகிரீடத்தை" பெறுவது யார்?

"சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்." யாக்கோபு 1:12

மேலே சொல்லப்பட்ட இந்த வசனமானது உலகெங்கும் பரவியிருக்கிற சபை அனைத்திற்குமான அப்போஸ்தலர் யாக்கோபின் நல்ல புத்திமதியின் ஒரு பாகமாக இருக்கிறது. சோதனையை (பொறுமையுடன்) சகிக்கிறமனுஷன் பாக்கியவான். கர்த்தரை முழு இருதயத்தோடு அன்பு செலுத்தாதவர்களும் சுயநலத்தையோ அல்லது வேறு ஏதாவது விக்கிரகத்தையோ முதலாவதாக வைத்திருக்கிறவர்களும். ஏதாவது சில முறைகளில் தெய்வீக வார்த்தைக்கும் தெய்வீக கிருபைக்கும் எதிராக, உலகம், மாம்சம் மற்றும் சாத்தானால் துர்செயலுக்கு உட்படுத்தப்படுவார்கள். தேவனுடைய திட்டத்திற்காகவும் வழிக்காகவும் அவர்கள் சிறந்தது என்கிற திட்டங்களையும், கோட்பாடுகளையும் விருப்பங்களையும் பெற்றிருப்பார்கள். அவர்களது சொந்த கோட்பாடுகளும், திட்டங்களும் வழிகளும், ஆராய்ந்து பார்த்தால், சுயநலத்தையும் லட்சியத்தையும் அல்லது பொறாமை, பகை, பெருமை முதலானவைகளின் தீய ஆவியை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படும். இப்படிப்பட்ட சோதனைகளையும் துன்பங்களையும் பொறுமையுடன் தேவகிருபையினால் மாம்சீக சிந்தையை அடக்குவதின் மூலமும் சகிக்கிறவர்கள் மட்டுமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிரீடத்தை பெறுவார்கள்.

இங்கே அப்போஸ்தலர் ஜீவ கிரீடம் என்று முடிவான பரிசை கூறுகிறார். இந்த ஜீவ கிரீடத்தின் காரியத்தை பல்வேறு கோணத்தில் பார்க்கலாம். உதாரணமாக, எந்த சுபாவத்தின் ஜீவியாக இருந்தாலும் ஜீவனை ஆசீர்வாதத்தின் ஒரு கிரீடமாக நினைத்தால், ஆயிரவருட யுகத்தில் தேவனுடைய சலுகைக்கு கொண்டுவரப்படுகிறவர்கள், அந்த யுகத்தின் முடிவில், தகுதியுள்ளவர்களாக நிரூபிக்கப்பட்டால் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

வேறு விதமாகக் கூறினால் முடிவில்லாத ஜீவனால் முடிசூட்டப்படுவார்கள். பழங்கால விசுவாசிகள் இந்த நித்திய ஜீவனைப் பெறுவார்கள். அவர்கள் ஜீவனால் முடிசூட்டப்படுவார்கள். முடிவில்லாத பூரண ஜீவனே தேவன் அளிக்கக் கூடிய பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது. சிறுமந்தையானது விசேஷித்தவிதமாக ஜீவனால் முடிசூட்டப்படும். யேகோவாவின் சுபாவமாகிய தெய்வீக சுபாவத்தின் ஜீவனால், உன்னதமான நிலைமையின் ஜீவனால் முடிசூட்டப்படுவார்கள். மிக உயர்ந்த நிலையின் ஜீவனே அவர்களது கிரீடமாக இருக்கும். எல்லாரும் தங்களது ஓட்டத்தின் முடிவிலே சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்படும் பொழுது இவைகளை யெல்லாம் ஜீவனின் கிரீடங்களாக நாம் நினைக்கிறோம்.

### மற்ற எல்லாவற்றிற்கும் மேலான கிரீடம்

ஆனால் அப்போஸ்தலர் யாக்கோபு, சபையை, கிறிஸ்துவின் மணவாட்டியை மனுக்குலத்திலே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக குறிப்பிடுவதற்கு காரணம் இருக்கிறது. சபையானது இப்போது விசேஷித்த சோதனையில் இருக்கிறது. நமது அன்பு, சகிப்புத்தன்மை, விசுவாசம், பொறுமை ஆகியவற்றின் இந்த சோதனையானது அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் முதன்மையானதாகிய தெய்வீக சுபாவத்திற்கு தகுதியுள்ளவர்களாக காணப்படுவது எது என்பதை மெய்ப்பிப்பதற்கானதாகும். தங்கள் வீடுகள், நிலம், பத்திரம், மனைவி அல்லது கணவன் அல்லது பெற்றோர்கள், அல்லது பிள்ளைகள் அல்லது தான் அல்லது வேறு எந்த ராஜாவைக் காட்டிலும் தேவனை நேசிப்பவர்களுக்கு தேவன் இந்த தெய்வீக சுபாவத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். மற்றவர்களுக்கும் தேவன் பரிசுகளைக் கொடுப்பார், ஆனால் அது இந்த உயர்தரமான கிரீடத்துக்கு ஒப்பாகாது. இதை அவர் தமது குமாரனின் மணவாட்டிக்கு மாத்திரமே கொடுக்கிறார்.

நமது தலைப்பு வசனத்தில் பேசப்பட்டுள்ள சோதனையானது எதை உருவாக்குகிறது? கர்த்தர் தம்முடையவர்களை ஒழுக்கத்தில் பயிற்றுவிக்கவும். அவர்களது குணங்களில் அபிவிருத்தி செய்யவும், அவர்களது உக்கிராணத்துவத்தையும் விசுவாசத்தையும் நிரூபிக்கவும் அவர்களுக்கு சோதனைகளும் பரீட்சைகளும் வரும் என்று கர்த்தர் சொல்–யிருக்கிறார் என்பதே இந்த வசனத்துக்கான பதிலாகும். சோதனைகளும் பரீட்சைகளும் இல்லாமல் நமது பக்தி விசுவாசத்தை காண்பிக்க இயலாது. சுய அன்பு நமது இருதயத்திலே ஆளுகை செய்யலாம். அது மெய்ப்பித்து காண்பிக்கப்படவில்லை என்றால் நாம் அதை அறிந்து கொள்ள முடியாது. கர்த்தரை நாம் எவ்வளவாய் நேசிக்கிறோம், நாம் அவருக்காக எவ்வளவாய் கிரியை நடப்பிப்போம் என்று நினைப்பது மிகவும் சுலபமான காரியம், அதன்பிறகு தான், சோம்பேறித் தனத்திற்கும் கர்த்தருக்கென்று செய்வதற்கு பதிலாக தனக்கென்று சில காரியங்களை செய்வதற்குமான சோதனை வருகிறது. அவரது சித்தத்தை நேசிக்க நினைப்பதும்,

"ஓ, தேவனே, உமது சித்தத்தை நேசிக்கிறேன்" என்று பாடுவதும் சுலபமானது. அதன்பிறகு தான் அந்த வழியில் தீவிரமாக நாம் சோதிக்கப்படுகிறோம். சில சமயங்களில் அவரது சித்தத்தை நேசிப்பதில் இன்றும் நமக்கு அதிக அபிவிருத்தியும் உறுதியும் தேவை என்பதை நாம் காண்கிறோம்.

கர்த்தரை நமது முழு இருதயத்தோடும், முழுமனதோடும் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் அன்பு செலுத்துவது மற்றும் தன்னைத் தான் நேசிப்பது போல் பிறரையும் நேசிப்பதுதான் நாம் அவரோடு செய்த நமது உடன்படிக்கையாக இருக்கிறது. தவிர்க்கயியலாத

குறைவுகளில் விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தால் மூடப்படுவதில் நம்பிக்கை வைத்து, தெய்வீக உதவியுடன் நம்மால் முடிந்தவரை நமது உடன்படிக்கைக்கு இசைவாக நாம் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆம், "நமது ஜீவனை சகோதரர்களுக்காக கொடுக்க வேண்டியவர்களாக" இருக்கிறோம். தேவனையும் சகோதரர்களையும் நேசிக்கிறதற்கு மேலாக தன்னையும் மற்றவற்றையும் நேசிக்கும்படியான சோதனை வருகிறது. இந்த சோதனைகளும் பரீட்சைகளும் கஷ்டங்களும் நமக்கு வரும்படி தேவன் அனுமதிக்கிறார். இவற்றை எல்லாம் நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதை நாம் உன்னதமான ஜீவகிரீடத்தைப் பெற தகுதியுள்ளவனா என்பதை தீர்மானிக்கிறதில் பெரும் பங்கு வகிக்கிறது.

## சோதனைக்குப் பிறகு ஜீவகிரீடம்

"அவன் சோதிக்கப்பட்ட பின்பு ஜீவகிரீடத்தைப் பெறுவான்." "சோதிக்கப்பட்ட பின்" என்கிற சொற்றொடர் வெறும் சோதனையை மட்டும் குறிக்கவில்லை; ஆனால் நமது முழு அனுபவமும் ஒரு சோதனையாக, விசுவாசத்தின் ஒரு பரீட்சையாக பேசப்படுகிறது. நமது வாழ்க்கை முழுவதுமே, நமது உடன்படிக்கைக்கு இசைவாக எவற்றை ப–யிட விரும்புகிறோம், எந்த அளவுக்கு முழுமையாக தேவனிடம் அன்பு செலுத்துகிறோம், எந்த அளவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதற்கான ஒரு சோதனையாக, ஒரு பரீட்சையாக இருக்கிறது. சோதிக்கப்பட்ட பின்பே, ஜீவகிரீடத்தைப் பெறுவான். சோதனைக்கு முன்பு அவன் அதை பெற மாட்டான். சோதனை முடிந்தவுடனேயே, அவனது ப–மரணத்தில் முடிவடைந்த உடனேயே என்று அது பொருள்படாது. இயேசு தமது கிரீடத்தை பெறுமுன் மூன்று நாட்கள் மரண நித்திரையி–ருந்தார். அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் அவர்களுக்கானதை பெறுமுன் பல நூற்றாண்டுகள் நித்திரையி–ருந்தார்கள்.

கிறிஸ்தவர்கள் முழுமையாக தங்களது கர்த்தரிடத்திலான விசுவாசத்தை மெய்ப்பித்து காண்பித்த அந்த நிமிடமே அல்லது அந்த நாளிலேயே நித்திரைக்கு செல்வார்கள் என்றோ அல்லது முதலாம் உயிர்தெழுத–ன் மகிமையான மாற்றமாகிய கனத்தையும் சாகாமையையும் பெற்றுக் கொள்வார்கள் என்றும் பொருள்படாது. கர்த்தருடைய பிள்ளைகளின் ப–முடிவடைவதற்கு முன்னதாக அவர்கள் அநேக காரியங்களுக்கு பயனுள்ளவர்களாக இருக்கக் கூடும்.

எனவே நமது சோதனை மற்றும் பரீட்சையின் ஒவ்வொரு கட்டத்திலும் நமது விசுவாசத்தை மெய்ப்பித்துக் காண்பிக்க வேண்டும். சோதனைகள் வரட்டும், மேலும் அவைகள் வருவது தொடரட்டும். நமது இயற்கையான சுபாவம் எவ்வளவு பலவீனமுள்ளதாக இருந்தாலும் நமக்கு தேவையான கிருபை கொடுக்கப்படும். நாம் எல்லா நேரத்திலும், எல்லா நிலைமைகளின் கீழும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

----------------------------

# Development as New Creatures in Christ

# கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல்

"பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்." எபிரேயர் 5:14

இங்கே அப்போஸ்தலர் கிறிஸ்துவுக்குள் குழந்தையாக இருக்கிற சிலரையும், தேவனைப்பற்றியும் அவரது திட்டத்தைப் பற்றியும் முழுவளர்ச்சியடையாத கருத்துக்களை உடைய சிலரையும், ஆவிக்குரிய வளர்ச்சியில் குறைவுபட்டவர்களையும், இவர்களுக்கு மாறாக முழுவளர்ச்சியடைந்தவர்களையும், கிறிஸ்து இயேசுவுக்குள் மனிதனானவர்களையும், பூரண வயதுள்ளவர்களையும், கிறிஸ்தவனாக முதிர்ச்சி அடைந்தவர்களையும் தம் மனதில் கொண்டுள்ளதாக காணப்படுகிறது. பலமான ஆகாரமானது, பூரண வயதுள்ளவர்களுக்கே உரியது. அப்போஸ்தலர், சிலர் கிறிஸ்துவுக்குள் இருந்த காலத்தை கவனித்து, அவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும், போதனையிலும் விசுவாசத்திலும் பலமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்றும் மற்றவர்களுக்கு போதிக்க தகுதியுள்ளவர்களாக ஆக வேண்டும் என்றும் கடிந்து கொள்ளுகிறார். அவர்கள் இன்னும் குழந்தைகளாக, கிறிஸ்துவின் அடிப்படை சத்தியத்தை போதிக்க தேவைப்படுபவர்களாக இன்றும் பாலாகாரம் தேவைப்படுபவர்களாக, பலமுள்ள ஆகாரத்தை ஜீரணிக்க முடியாதவர்களாக இருந்தார்கள்.

நீண்ட காலமாக கிறிஸ்துவை அறியாதிருந்தவர்கள் தேவனுடைய திட்டங்களைப்பற்றிய சத்தியங்களுக்கு புதிதானவர்கள் பலமுள்ள ஆகாரத்தை ஜீரணிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அடிப்படை சத்தியங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அதை அவர்கள் ஜீரணிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் வளரும்படி திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால் அவர்களுக்கு தேவைப்படுகிறது. நீண்ட காலம் சத்தியத்தில் இருக்கிற சில தேவனுடைய பிள்ளைகள் புதிதாக ஞானஸ்நானம் எடுத்தவர்களிடம் விவேகமில்லாமல், அவர்களால் ஜீரணிக்க முடியாதபடி சாகாமை, திருத்துவம் முதலான சத்தியங்களை சொல்ல ஆரம்பித்துவிடுகிறார்கள். இவர்கள் குழந்தைகளுக்கு பலமுள்ள ஆகாரத்தை கொடுத்து கர்த்தருடைய பந்தியி–ருந்து வெளியேறும்படி செய்கிறார்கள். இப்படியாக ஆவிக்குரிய அஜீரணத்தைக் கொடுத்து, கர்த்தரால் கொடுக்கப்படுகிற சாதாரண உணவைக் கூட சாப்பிட முடியாமல் செய்கிறார்கள்.

நல்ல பாதையில் இப்பொழுதுதான் ஆரம்பிக்கிறவர்களுக்கு தேவனுடைய வார்த்தையில் சுலபமாக ஜீரணிக்கக் கூடிய நிறைய உணவு இருக்கிறது. இடுக்கமான பாதையில் நடக்க ஆரம்பித்திருக்கிற கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிகளுக்கு, இந்த உணவு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். எனினும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஜீவிப்பதற்கு பாலை மட்டுமே கொடுக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளக் கூடாது. பாலாகாரத்தில் அவர்கள் வளர்ந்து அபிவிருத்தி அடைய ஆரம்பிக்கும் பொழுது, கொஞ்ச காலத்திற்கு பிறகு கொஞ்சம் பலமுள்ள சத்திய ஆகாரத்தை கொடுத்து அதன் சத்தை பெற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். சிலர் வளர்ச்சியடைந்து மற்றவர்களைக் காட்டிலும் வெகுசீக்கிரத்தில் பலமுள்ள ஆகாரத்தை ஜீரணிக்க தகுதியுள்ளவர்களாகிறார்கள். சத்திய போதனைகளை தவறாக போதிக்கப்படாதவர்களும், இருண்ட காலத்தில் சபைக்குள் கொண்டுவரப்பட்ட தப்பறைகளில் வருடக்கணக்காக அமிழ்ந்திராதவர்களும், தப்பறையான போதகங்களினால் நீண்ட காலமாக குருடாக்கப்பட்டிருந்தவர்களைக் காட்டிலும் வெகு சீக்கிரத்தில் இந்த பாடங்களிலான சத்தியத்தை கிரகித்துக் கொள்ள தயாராகிறார்கள்.

## கிரமமான வேத ஆராய்ச்சி அவசியம்

தாழ்மையும், கற்கும் மனதும், கர்த்தர் சொல்லுகிற அனைத்தையும் ஏற்றுக் கொள்ள நாடுகிறவர்களும், தங்களது எந்த ஒரு சொந்த கொள்கைகளையும் ஆதரிக்காமல், கர்த்தரை மட்டுமே பின்பற்றுகிறவர்களும், வேதத்தையும் **வேதாகம பாடங்களையும்,** அதிக உறுதியான தேவனுடைய வசனத்திற்கு இசைவாக அதில் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களை முறைப்படி, கிரமமாக, படிப்படியாக கற்பவர்கள் அதிக சிரமமில்லாமல் அடிப்படை சத்தியத்தை அறிந்து கொள்கிறார்கள். இந்த வழியில் தேவனுடைய முழுதிட்டத்தின் விசாலமான காட்சியை காண்கிறார்கள்; மேலும் அதன் பல்வேறு அம்சங்கள் எப்படி ஒன்றிற்கொன்று பொருந்தி இசைவாக இருக்கிறது என்பதைக் காண்கிறார்கள்; அந்த திட்டத்தின் மற்ற பகுதிகளை விட்டுவிட்டு ஒரு பகுதியை மட்டும் கேட்கிறவர்களால் இது கூடாத காரியமாக இருக்கும்.

இந்த காரணத்திற்காகவே புதிதாக சத்தியத்தை அறிய ஆவலுள்ளவர்கள் தாங்களாகவே வேதபாடத்தை படிக்காமலும் உரையாடல் மூலம் விளக்கம் பெற முயற்சியாம–ருப்பதும் நல்லது என்று கூறுகிறோம். நல்ல நண்பர்களால் அவர்களது ஆர்வத்தின் மூலமாக எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் கூறுவதால் சத்தியம் அறிய ஆரம்பிக்கிறவர்களுக்கு அதை கிரகிக்க முடியாமல் தீங்கிழைக்கப்படுகிறது. இதனால் பெரும்பாலும் சத்தியத்தை அறிய ஆவலுள்ளவர்களின் மனதில் குழப்பமே ஏற்படுகிறது.

## ஆவிக்குரிய பார்வையே வளர்ச்சிக்கு முக்கியமான காரியம்

ஒரு சிறிய குழந்தையை நாம் பார்க்கும் பொழுது அது வளருகிறதையும் கொஞ்சம் உதைக்கிறதையும், கொஞ்சம் அழுகிறதையும் சில குறிப்பிட்ட அளவுக்கு பொருட்களை

பார்க்கிறதையும் நாம் காண்கிறோம். அது அழகான பொருட்களையும் பயங்கரமான பொருட்களையும் ஓரளவு கண்டுணர்ந்து கொள்ள முடிகிறது. ஆனால் அது பொருட்களை தெளிவாக பார்க்கவோ முழுமையாக புரிந்து கொள்ளவோ முடியாது. அதன் கண்களுக்கு முன்பாக நமது கைகளை கொண்டுபோனால் அது எதையும் பார்க்க முடியாமல் போகிறது. சிறிய பூனைகுட்டிகளுக்கு பக்கத்தில் உள்ளவைகள் எவை, தூரத்தில் உள்ளவைகள் எவை என்பதை கூற முடியாததைப் போல, சத்தியத்தை புதிதாக கற்பவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் குழந்தைகளாக இருக்கிறார்கள். புதியவர்கள் தேவனுடைய வசனத்தை படிக்க முயற்சிக்கையில் அதிலே தடுக்கி விழவும் இதுவா அல்லது அதுவா என்று சிந்திக்கவும் ஏதுவிருக்கிறது. முக்கியமான சத்தியங்களை முத–ல் அவர்கள் சொல்லப்படக் கூடாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் இடறுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது.

ஆனால் இவர்கள் வளர்ந்தபோது, அவர்கள் “சத்திய வசனத்தை நிதானமாக பகுக்க” கூடியவர்களாகவும், சத்தியத்தையும் தப்பறையையும் அடையாளம் காணக் கூடியவர்களாகவும் எது உதவிகரமானது எது தீங்கிழைக்கக் கூடியது என்பதை கூறக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். ஒரு குழந்தை நெருப்பினால் புண் உண்டாகும் என்பதை அறிந்த பிறகு, அந்த நெருப்புடன் அது மிகவும் ஜாக்கிரையாகவும் விவேகத்துடனும் இருக்கும். இவைகளெல்லாம் இவ்வுலக காரியங்களில் உண்மையாக இருக்கிறது. கண்டுணர்ந்து கொள்வதிலும் முழுமையாக புரிந்து கொள்வதிலும் குழந்தை வளர்கிறது. அதே போல கிறிஸ்துவில் குழந்தையாக இருப்பவர்கள் தேவனுடைய ஞானம், அன்பு ஆகியவைகளின் அகலம், ஆழம் மற்றும் நீளத்தைப் பற்றியும் அவரது மகா பெரிய திட்டம் மற்றும் அதன் பல்வேறு அம்சங்களைப் பற்றிய முழுமையையும் சிறப்பையும் உணர்ந்து கொள்வதிலும் புரிந்து கொள்வதிலும் வளர்கிறார்கள்.

## “காலத்திற்கேற்ற” உணவு எப்பொழுதும் தேவைப்படுகிறது

சத்தியத்தை வாசிக்கவும், அதைப்பற்றி சிந்திக்கவும், அதை நமது வாழ்க்கையில் உறுதிப்படுத்த மிகவும் உற்சாகத்துடன் பாடுபடவும் இந்த காலத்திற்கேற்ற உணவு தேவைப்படுகிறது. பிரயோஜனமற்ற சிலவற்றை படிப்பதைக் காட்டிலும் வேதாகமத்தின் அத்தியாயங்களில் சிலவற்றை சும்மா படிப்பதே மேலானது, ஆனால் வேதாகமத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு புரியாமல் படிப்பது மிகக் குறைவானதைத் தான் நிறைவேற்ற முடியும். வேதாகமத்தை கற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அவர்களது விருப்பத்திற்கு ஏற்றபடி போதகர்கள் இல்லாமல் விடமாட்டார். அந்த போதகர்கள் மகா பெரிய மேய்ப்பரின் மந்தையி–ருக்கிற ஆடுகளை வழிநடத்துவார்கள். அந்த காலத்திற்கேற்ற உணவை பெறும்படி அவர்கள் புல்லுள்ள இடங்களில் மேய்ப்பார்கள். அதனதன் காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ப படிப்படியாக வெளிப்படுத்தப்படும் சத்தியங்கள் தேவையான அளவுக்கு பல்வேறு வகைகளில் தேவையான போஷாக்கு கொடுக்கப்படுகிறது. அதனதன் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப தேவன் எழுப்பும் கருவிகள் (ஊழியங்கள்) மூலமாக அது வழங்கப்படுகிறது.

தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் ஒவ்வொரு காலத்திலும் தேவையான எல்லா உணவும் வழங்காமல் விடப்பட்டதில்லை. நமது இந்த காலத்திலும், சபை சரித்திரத்தில் இதற்கு முன் இருந்ததைக் காட்டிலும் அதிகமான சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தற்கால சோதனை மற்றும் விநோதமான நிலைமையில் சபையை பலப்படுத்த அதிகமான பலமுள்ள ஆகாரம் தற்போது தேவைப்படுகிறது. அதிகமான ஆகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் காண்பித்திருக்கிறது போலவும், நாம் கூறியது போலவும் கிறிஸ்துவின் சபையில் பல்வேறுவிதமான வளர்ச்சிகள் இருக்கிறது. இந்த கடைசி நாட்களில் உண்மையற்ற தன்மையினால் தங்களது கிரீடத்தை இழந்துபோன சிலரது இடத்தை அடைவதற்கு சிலர் உலகத்தி–ருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த பலவீனமுள்ளவர்களை சரியானபடி போஷிப்பதற்கு பரத்தி–ருந்து வரக்கூடிய ஞானம் தேவைப்படுகிறது.

## பள்ளியில் முதலாவது பாடங்கள்

மாணவர்களின் திறமைக்கும், புரிந்து கொள்ளும் தன்மைக்கும் ஏற்ப, ஒரு பள்ளியில் முறைப்படுத்தப்பட்ட பாடங்கள் இருக்கிறது. வார்த்தையின் எழுத்துக்கள் பற்றிய ஆரம்ப பாடத்தில் பெரிய வார்த்தைகளுக்கு பதிலாக சிறிய எழுத்துக்களையே ஆசிரியர் ஆரம்பிப்பார். அ–ம்–மா, அம்மா, ஆ–டு, ஆடு போன்ற வார்த்தைகள் முதலாவது கொடுக்கப்படுகிறது. தனது வேலையை சரியாக புரிந்து கொண்ட ஞானமுள்ள ஒரு ஆசிரியை சிறிய குழந்தைகளுக்கு அங்கப்பிரதட்சிணம் போன்ற பெரிய வார்த்தைகளை ஆரம்பிக்கமாட்டார்கள். மாணவர்கள் மிகவும் சாதாரண மற்றும் மிகவும் சுலபமாக புரிந்துகொள்ளக் கூடிய வார்த்தைகளையே முதலாவது கொடுப்பார்கள். பொருட்கள் பற்றிய பாடங்கள், படங்கள், கண்களை கவருவதற்கும் குழந்தை மனதிற்கு உதவுவதற்கும் முதலாவது கொடுக்கப்படுகிறது.

இதே போல்தான் மத காரியங்களிலும் கூட மற்றவர்களுக்கு சரியாக கற்பிப்பவர்கள் போதிக்க தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். “தேவன் தமது சித்தத்தின்படி” கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் ஒவ்வொன்றையும் வைத்திருக்கிறார். சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை அற்புதங்கள் செய்கிறவர்களாகவும் வைத்திருக்கிறார்; மற்றவர்களை சுவிசேஷகனாகவும் ஊழியர்களாகவும் போதகர்களாகவும் வைத்திருக்கிறார். சபையின் ஆதி சரித்திரத்தில், அதன் குழந்தைத்தனமான நிலைமையில், பொருள் பாடல்களும், கண்களுக்கான நிரூபணமும் காதுக்கு வெளியரங்கமான உணர்வுகளும் தேவையாயிருந்து அவைகள் வழங்கப்பட்டன. சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, சத்தியத்திற்கு தொடர்பான இந்த வெளியரங்கமான அடையாளங்கள் ஒழிந்து போயின.

அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: “நான் குழந்தையாயிருந்தபோது, குழந்தையைப் போல பேசினேன்,

குழந்தையை போல சிந்தித்தேன், நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.” (1 கொரி 13:11) கிறிஸ்துவைப்பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இப்படியே இருக்கிறது. படிப்படியாக அவன் நன்மை, தீமை இன்னதென்று பகுத்துணர வளர்ந்து அபிவிருத்தி அடையும்போது – சத்தியம் எது, சரியானது எது, நன்மை பயக்கக் கூடியது எது, மகிமையான சபையின் பரம அழைப்பில் புரிந்து கொள்ள வேண்டியது எது, கிறிஸ்துவுக்கு முழுமையாக அர்ப்பணிப்பில் எது சேர்ந்திருக்கிறது – அவன் தனது குழந்தைத்தனமான கருத்துக்கள், முழு வளர்ச்சியடையாத எண்ணங்கள் ஆகியவைகளை அதிகமதிகமாக நீக்கிவிட்டு, தேவனுக்குரிய காரியங்களில் அதாவது ஆழமான காரியங்களில் அறிவடைந்து முன்னேற்றத்தை அடைகிறான். தேவனுடைய வசனத்தை படிக்க கற்றுக் கொள்ளாத ஒரு புதியவன் தனக்கு தீமை தரக்கூடிய காரியங்களி–ருந்து விடுபட முடியாதவனாயிருக்கிறான். ஒருவர் வேதாகம சத்தியங்களை அது அமைக்கப்பட்ட விதத்தில் ஏற்றுக் கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது அதன் பொருள் என்ன, எப்படி பொருந்துகிறது. யாருக்கு பொருந்துகிறது என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் எல்லாம் குழப்பமாகவும், முரண்பாடாகவும் இருக்கும். ஒரு இன்னிசை கருவியின் சுருதிக்கட்டையை சரியானபடி பயன்படுத்த கற்றுக் கொண்டால் மட்டுமே இனிமையான இசையை தரமுடியும். இல்லையென்றால் பலன் முரண்பாடாகத்தான் இருக்கும்.

### நீண்ட காலம் இந்த வழியில் இருப்பவர்களுக்கான பொறுப்பு

வேதத்தில் குறிப்பிட்ட கொள்கைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த கொள்கைகளை நாம் புரிந்து கொண்டு நமது அனுதின வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த வேண்டும். நீதியின் கொள்கை ஒரு அடிப்படை கொள்கையாக இருக்கிறது. தேவனுடைய பிள்ளையாக நமது குணலட்சணங்களில் நமது வாழ்க்கைகளில் அன்பு, இரக்கம், தயவு போன்றவைகளை இணைத்து அடிப்படை கொள்கையின்மேல் கட்டுவதற்கு முன்னால் இந்த நீதியின் அடிப்படை கொள்கையை அங்கீகரித்து அப்பியாசப்படுத்த வேண்டும். நீதி என்றால் என்ன? உண்மையான அன்பு என்றால் என்ன? என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இவைகளில் உலகத்தின் நிலை நெறிதவறி போனது. அதிகார பூர்வமான மூலமாகிய தேவனுடைய வசனத்தி–ருந்து மட்டுமே நாம் முறைப்படி போதிக்கப்பட முடியும். இந்த கொள்கைகளை எப்படி அப்பியாசப்படுத்துவது என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

சுத்தமான, கலப்படமில்லாத, சத்தான உணவை வழங்குகிற தேவனுடைய பந்தியில் போஷிப்பிக்கப்பட்டு, சத்திய நீருற்றை நீண்ட காலமாக பருகினவர்கள் கிறிஸ்துவின் போதனையாகிய இந்த முதலாவது கொள்கையில் முழுவதுமாக நிலைநிறுத்தப்பட வேண்டும். பொன், வெள்ளி மற்றும் விலையேறப் பெற்ற இவைகளால் முன்பே கட்டப்பட்ட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படுகிற குணலட்சண கட்டுமானத்தை ஒவ்வொரு நாளும் உறுதியாக அபிவிருத்தி செய்ய வேண்டும். எதுவும் நம்மை அசைக்க இயலாதபடி நாம் கிறிஸ்துவில் உறுதியாக வேர் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு முக்கியமான காரியத்திலும் சத்தியத்தையும் தவறையும் பகுத்துணரக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒவ்வொரு சமயத்திலும் தேவனுடைய சத்தியத்தை அறிவிக்கும் மகிமையான சலுகைக்காக நாம் களிகூர வேண்டும். நாம் கர்த்தருக்கும் அவரது வசனத்திற்கும் உண்மையாயிருக்க வேண்டும். நமது இருதயத்துக்கும் வாழ்க்கைக்கும் மிகவும் ஆசீர்வாதமாய் இருக்கக் கூடிய சத்தியத்தை அறிவிப்பதில் உறுதியாகவும் தைரியமாகவும் இருக்க வேண்டும். நாம் என்னத்தை விசுவாசிக்கிறோம், ஏன் விசுவாசிக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

---------------------------

## “Forgiveness is Blessed”
# மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான்

சங்கீதம் 32

பாவங்கள் மன்னிக்கப்படுதல், மூடப்படுதல், அகற்றப்படுதல் – மீறுதல்கள் – அக்கிரமம் எண்ணப்படவில்லை – கபடமில்லாத ஆவி–மன்னிப்பிற்காக ஜெபிக்கிறவன் – கிருபையின் உடன்படிக்கையின் கீழ் – புதிய உடன்படிக்கையின் கீழ் – சில பாவங்கள் மன்னிக்கப்படக் கூடியவைகள் அல்ல, நிவாரணம் கொடுக்கப்பட வேண்டியவைகள் – “அவனுக்காக அவர்கள் ஜெபம் பண்ணக்கடவர்கள்” – மரணத்துக்கேதுவான பாவம் அல்லது மரண பரியந்தமான பாவம்.

“எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.” சங்கீதம் 32:1

பாவங்கள் மன்னிக்கப்பட்ட பிறகு, நம்மை தேவன் தொடர்ந்து பாவிகளாக கருதமாட்டார் என்றும் மற்றவைகள் மூடப்பட்டதாக கருதப்படும் என்ற எண்ணத்தை வேத வசனங்கள் நமது கவனத்துக்கு கொண்டு வருகின்றன. பாவங்கள் முற்றிலுமாக அகற்றப்படுவது இப்பொழுது அல்ல, எதிர்காலத்தில் தான் என்பதையும் அவைகள் காண்பிக்கின்றன. தேவனுடைய பிரமாணத்தை முழுவதும் அறியாமலும் வழி வழியாக வந்த பலவீனத்தினாலும் மீறின கிறிஸ்தவர்கள் தேவனிடம் இரட்சகர் மூலமாக செல்வானேயானால் அவனது பாவங்கள் மூடப்படும் என்கிற நிச்சயத்தைப் பெறுகிறான். மேலும் தேவன் அவைகளை அவனுக்கு விரோதமாக நினையாமலும் அவனை ஒரு பாவியாக கருதாமலும் இருப்பார். ஏனெனில் இயேசு கிறிஸ்து அப்படிப்பட்ட பாவத்திற்கு நீதியாக முழுமையாக பிராயசித்தம் பண்ணியிருக்கிறார்.

இன்னொரு வகையான பாவம் அதாவது கொஞ்சம் பரம்பரையான பலவீனம், கொஞ்சம் மன சம்மதம் இரண்டும் சேர்ந்து செய்யக் கூடிய பாவம் இருக்கிறது.

இதை நாம் கலப்பான பாவம் என்று கூறலாம். இந்த பாவத்தை கர்த்தர் மன்னித்து, தமது ஆதரவின் மூலம் தமது பிள்ளைக்கு சந்தோஷத்தை திரும்ப தருகிறார். அறியாமை மூலமாக பிரியமில்லாமல், தற்செயலாக செய்த அளவுக்கு ஏற்ப பாவங்களை முழுவதுமாக மூடுகிறார். ஆனால் தெரிந்தே மனசம்மதத்துடன் செய்த பாவத்தின் அளவிற்கு ஏற்ப தேவன் தண்டிக்கிறார்.

இன்னும் அறிவிற்கும் ஒளிக்கும் எதிராக வேண்டுமென்றே தெரிந்து செய்கிற இன்னொருவிதமான பாவத்தைக் குறித்து வேதம் விளக்குகிறது. சத்தியம் மற்றும் அறிவின் ஒளி என்பது தேவனுடைய சத்திய ஆவியின் ஒளியாக இருக்கிறது. இப்படிப்பட்ட பாவம் இந்த யுகத்திலோ அல்லது வரப்போகிற யுகத்திலோ மன்னிக்கப்படாது என்று இயேசு கூறியிருக்கிறார். (மத்தேயு 12:32) ஆனால் அந்த தனிப்பட்ட நபர் சதாகாலமும் தண்டிக்கப்படுவார் என்று அதன் பொருளல்ல. அதாவது இப்படிப்பட்ட பாவம் மன்னிக்கப்பட முடியாது, பிராயச்சித்தம் பண்ணப்பட வேண்டும் என்று தான் அதன் பொருள். எனினும் அது முழு ஒளிக்கும் விரோதமான பாவமாயிருந்தால், பிராயச்சித்தம் என்பது இரண்டாம் மரணம் என்று பொருள்படும். நமது பாரம்பரிய பலவீனத்தினாலும் பரிசுத்தமற்ற சூழ்நிலைகளினாலும் தேவனுடைய பிள்ளைகளினால் கிட்டத்தட்ட எல்லா பாவங்களும் கலப்பான பாவங்களாக, கொஞ்சம் மட்டுமே தெரிந்தே செய்யப்படுபவைகளாக இருக்கின்றன.

எந்த நிகழ்விலும், ஒரு மனிதன் தனது மீறுதல்கள் மன்னிக்கப்பட்டதாகவும், தனது பாவங்கள் மூடப்பட்டதாகவும் உணருகிறவன், தேவனுடன் மகா சமாதானத்தையும் சந்தோஷத்தையும் ஆசீர்வாதங்களையும் சொல்லமுடியாத அளவுக்கு பெற்றிருப்பான். எனினும், அதே சமயத்தில், மன்னிக்கப்பட்ட பாவங்களின் அடையாளங்களை தனது சரீரத்தில் சாகும் நாள் வரை பெற்றிருப்பான். அவன் ஒரு வேளை மன்னிக்கப்பட்ட பாவத்தின் பலனாக இறக்கும் தருவாயில் நோவுகளையும், வ–களையும் பலவிதமான வியாதிகளையும் பெற்று துன்பமடையக் கூடும். ஆகையால் அந்த பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தாலும். முற்றிலுமாக நீக்கப்படவில்லை. அவைகளின் அடையாளங்கள், எந்த வகையில் அவர்களை மாசு கற்பித்திருந்தாலும், அவர்களது மாம்சம், அல்லது அவர்களது மனதிலோ காணப்படுகின்றன.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நமது பாவங்கள் முற்றிலுமாக நீக்கப்படும் என்று பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறார். இது எப்படி இருக்கும் என்று உடனே நாம் கண்டுகொள்ளலாம்; ஏனெனில் உயிர்த்தெழுத–ல் பரிபூரண சரீரம் கொடுக்கப்படும் என்பது சபைக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாக இருக்கிறது; மேலும் குறைவாகவும் அபூரணமாகவும் உள்ள சரீரங்கள் நீக்கப்படும். உயிர்த்தெழுத–ன் சரீரம் என்றென்றும் அவர்களுக்குரிய பூரண சரீரமாக இருக்கும். அதாவது, “கனவீனமுள்ளதாக விதைக்கப்படும், மகிமையுள்ளதாக எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.” 1 கொரிந்தியர் 15:43,44.

### மன்னிப்பதற்கான சூழ்நிலைகள்

பாவமன்னிப்பை எதிர்பார்ப்பதற்கான சூழ்நிலைகளைப் பற்றிய கருத்தில் அதிகமான குழப்பம் இருக்கிறது. இது வேதாகமத்தின் தவறு இல்லை, ஏனெனில் வேதாகமம் இது குறித்து தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறுகிறது. இது

நமக்காக கலப்படம் செய்யப்பட்டிருக்கிற நமது குழப்பமான வேதாகம சாஸ்திரங்களின் தவறாகும். இந்த காரியத்தை புரிந்து கொள்வதற்கு நாம், அகில உலகமும் ஆதாமின் பிள்ளைகளாக, தெய்வீக மரண தண்டைனைக்கு கீழாக இருக்கிறார்கள் என்பதையும் எந்த நம்பிக்கையும் நேரடியாக கொடுக்கப்படாமல் இருந்தது என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். மேசியாவின் ராஜ்யத்தின் மூலமாக விரைவில் இந்த உலகிற்கு பெரிய காரியங்களை செய்ய தேவன் தீர்மானித்திருக்கிறார் என்பதைப் பற்றிய வெளிப்பாடை கர்த்தருடைய பிள்ளைகள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் இது உலகிற்கு பொருந்தக் கூடியதாக இல்லை. தேவனுடைய சலுகைகளும் தயையும் பாவமன்னிப்பும் சேர்ந்து தற்போது தேவனுடன் உடன்படிக்கை உறவுக்குள் வந்திருக்கிறவர்களுக்கு மட்டுமே உட்பட்டதாயிருக்கிறது.

உடன்படிக்கை உறவு என்றால் என்னவென்று சிலர் கேட்கலாம். தேவன், யூத ஜாதியோடு அவர்களது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய மோசே மூலமாக உடன்படிக்கைக்கு உள்ளாக சென்றார். இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாக பாவங்களுக்கான ப–கள் – ஆடு மற்றும் காளை இவைகளின் ப–கள் இருந்தன. எல்லா யூத ஜனங்களும் தேவனுடன் உறவுக்குள் இருக்க வேண்டும் என்பதற்காகவும், அந்த வருடத்தின் பாவ நிவாரண நாளின் ஆடு, காளை இவைகளின் ப–கள் அந்த வருட பாவ மன்னிப்புகளுக்கு சாட்டுதலாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் செய்யப்பட்டன. இப்படியாக தாவீதின் காரியத்தைப் போல, பாவமன்னிப்பைக் குறித்த காரியத்திற்காகவோ அல்லது தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்த காரியத்திற்காகவோ, தேவனிடம் ஜெபத்தின் மூலம் வரக் கூடிய உரிமையைப் பெற்றார்கள்.

ஆனால் புறஜாதிகளுக்கு இந்த உரிமை கொடுக்கப்படவில்லை. இது யூதர்களோடு மட்டுமே உள்ள ஒரு ஏற்பாடாக இருந்தது. யூதர்களோடு கூட இது ஒரு நிழலான ஏற்பாடாக இருந்தது. மோசேயால் நிழலாக காண்பிக்கப்பட்ட இயேசுவின், “மேலான ப–களின்” அடிப்படையில் சுவிசேஷயுக நிலையான ஏற்பாடுகளுக்கு இது நிழலாக காண்பிக்கப்பட்டது.

தற்காலத்தில் நியாயப்பிரமாண உடன்படிக்கை பலனில்லாமல் போனபோது, கிறிஸ்துவின் காலத்தி–ருந்து வேறொரு உடன்படிக்கை திறக்கப்பட்டிருக்கிறது. தற்போது கிறிஸ்தவர்களுக்கு பொருந்துகிற உடன்படிக்கை ப–யின் உடன்படிக்கை (சங்கீதம் 50:5) அல்லது கிருபையின் உடன் படிக்கை என்று வேதாகமத்தின்படி அழைக்கப்படுகிறது. தேவனுடனான இந்த உடன்படிக்கைக்குள் நுழைகிற அனைவரும் அவர்களது பூமிக்குரிய உரிமைகளையும், நன்மைகளையும் ப– கொடுப்பதால் இது ப–யின் உடன் படிக்கை என்று அழைக்கப்படுகிறது. அவர்கள் அதற்கு பதிலாக விசுவாசக் கண்களால் பார்க்கக் கூடிய, தேவனால் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ஏற்றுக் கொள்கிறார்கள்.

ப–யின் உடன்படிக்கையை முதலாவது செய்தவர் இயேசுதான் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான இவர், “தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது” என்று கூறி தமது சரீரத்தை ஜீவ ப–யாக ஒப்புக் கொடுத்தார். இப்படியாக அவர் தமது சித்தத்துடன் தாம் பெற்றிருந்த அனைத்து சக்திகளையும் அர்ப்பணித்தார். அவரது மூன்றரை வருட ஊழிய காலத்தில் இந்த உடன்படிக்கையை மரணபரியந்தம், சிலுவை மரணபரியந்தம் வைராக்கியத்துடன் செய்து முடித்தார். இதனிமித்தமாக தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி ஆவிக்குரிய சுபாவத்தில் பரிபூரணத்தை கொடுத்தார். இயேசு தமது உயிர்த்தெழுத–ல் என்றென்றைக்குமான கனம், மகிமை மற்றும் சாகாமையை பெற்றுக் கொண்டார். பி–ப்பியர் 2:8–11

இயேசு பெற்றிருந்த அதே ஆவியை அல்லது சிந்தையை பெற்றிருக்கிறவர்களை பாவ இனத்தி–ருந்து அழைப்பது இந்த சுவிசேஷ யுகத்தின் வேலையாக இருக்கிறது. அவரைப் போல பரிசுத்தரும், குற்றமற்றவரும் மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவர்கள் யாரும் இல்லை. இவர்கள் எதில் குறைவு பட்டிருக்கிறார்களோ, அதை இயேசுவின் புண்ணியத்தினால் சாட்டுதல் செய்து, அப்போஸ்தலர் அறிவிப்பது போல, அவர்கள் தேவனால் பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, இயேசு நுழைந்த அதே ப–யின் உடன்படிக்கையில் நுழையக் கூடிய சலுகையைப் பெறுகிறார்கள். அவருடன் அவர்கள் பிதாவிடம், “இதோ, மரணபரியந்தம் உமது சித்தத்தின்படி செய்ய உமது புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும், அனைத்திற்கும் இசைவாக ஒப்புக் கொடுக்கிறோம்” என்று கூறுகிறார்கள். இது அதே உடன்படிக்கை! அப்போஸ்தலர் இதை விளக்கும் வண்ணமாக, நாம் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்து கிறிஸ்துவில் குறைவானதை நிறைவேற்றுகிறோம் என்று அறிக்கையிடுகிறார். 1 பேது 2:21; கொலோ 1:24

இப்படி தேவனுடன் உடன்படிக்கை உறவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே, ஜெபத்தில் தேவனிடம் செல்லவும், பாவத்தை மன்னிக்கும்படியோ அல்லது வேறு எதையோ கேட்பதற்கான உரிமையைப் பெறுகிறார்கள் என்பதை அநேகர் அறியாதிருக்கிறார்கள். எனினும் இந்த காரியத்தைக் குறித்து சிந்திக்கிறவர்கள் இதில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். தேவன் பாவிகளுக்கு செவி கொடுப்பதில்லை என்றும், அவரிடத்தில் வருவதற்கு ஒரே ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார் என்றும் அவர் அறிவிக்கிறார். இயேசுவே

வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று அவர் அறிவிக்கிறார். (யோவான் 14:6) அவருக்கு சீஷர்கள் ஆகிறவர்களுக்கும் அவரது அடிச்சுவட்டில் நடக்க தங்களை ஈடுபடுத்தி கொள்கிறவர்களுக்கும் மட்டுமே அவர் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். ஏற்ற காலத்தில், இந்த யுக முடிவிலும் ஆயிர வருட யுக ஆரம்பத்திலும் முழு உலகத்திற்கும் மத்தியஸ்தராவார். அவர்களது அனைத்து பாவங்களுக்கும் ஈடுசெய்து, இந்த இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் அவரது தெய்வீக மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவார். இந்த நோக்கத்தில் தான் அவரது மத்தியஸ்த இராஜ்யம் ஏற்படுத்தப்படும். அப்பொழுது கூட உலகமானது பாவத்துடனோ, ஜெபத்துடனோ பிதாவிடம் செல்லமாட்டார்கள், ஆனால் தேவனுக்கும் மனிதனுக்கும், தேவனுக்கும் உலகத்திற்கும் மகாபெரிய மத்தியஸ்தரிடமே செல்வார்கள். அப்பொழுது தரப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் ஆசீர்வாதங்களும் சலுகைகளும் அவர்களுக்கு மிகுதியாயிருக்கும். ஆனால் தற்போது அவர்களுக்கு எதுவும் கிடைக்காது. நியமிக்கப்பட்ட வழியினால், ப-யின் உடன்படிக்கை மூலமாக வருகிறவர்கள் மட்டுமே தற்காலத்தில் தேவனுடைய சலுகைகளை பெற முடியும்.

### பரிந்து பேசுகிறவரின் ஒரே நிபந்தனை

அநேகர் பாவத்திற்கான தண்டனையைக் குறித்த தவறான எண்ணங்களை மனதில் வைத்துக் கொண்டு, அதாவது நித்திய வேதனை என்று எண்ணங்கொண்டு, கர்த்தராகிய இயேசு கண்ணீருடனும், விசனத்துடனும், பாவிகள் வருந்துவதற்கான லேசான அறிகுறிக்காகவும் எந்தவித நிபந்தனையுமின்றி அவர்களை காப்பாற்றி ஏற்றுக் கொள்ளலாம் என்றும் காத்துக் கொண்டிருப்பதாக கற்பனை செய்கிறார்கள். வேத போதனையி-ருந்தும் சத்தியத்தி-ருந்தும் அப்படியேதுமில்லை. மாறாக, ஒரு பாவி பாவத்தி-ருந்து திரும்பி தேவனிடம் வர தீர்மானித்து இயேசுவிடம் அவரை தனக்கு பிதாவிடம் பரிந்து பேசுகிறவராக இருக்கும்படியும் தன்னை அவருக்கு ஏற்புடையவராக மாற்றும் படியும் கேட்டால், உடனே அவருக்கு இந்த சலுகை சில குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் தான் கிடைக்கும் என்று பதில் கிடைக்கும்.

சில நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவன் கிறிஸ்துவினுடைய சீஷனாக வேண்டும். இதன் பொருள் என்னவென்று ஆண்டவர் கூறுகிறதாவது. "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." (மத்தேயு 16:24) குறுக்கு வழி ஏதுமில்லை. வேறு நிபந்தனைகள் ஏதுமில்லை. இயேசு இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்துகிறதில்லை.

தவறாக போதிக்கப்பட்ட சுவிசேஷகர்கள், கர்த்தரின் நாமத்தில் அநேக நிபந்தனைகளை கூறுகிறார்கள். ஆனால் அவைகள் அதிகார பூர்வமான தேவனுடைய வசனத்திற்கு மிகவும் தூரமாய் இருக்கிறது. மாறாக, இயேசு அவரது காலத்தில் சிலரிடம் கூறுகிறதாவது; "அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவை கணக்குப் பார்க்கக் கடவன்." அவசரப்படக் கூடாது, நாம் என்ன செய்கிறோம் என்பதை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். சீஷத்துவத்தின் பொறுப்புகளை எடுத்துக் கொள்ளும் முன்பு, அதை முழுவதுமாக ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். பயபக்தியான உறுதிமொழியை எடுத்து, அதை மீறுவதைக் காட்டிலும், உறுதிமொழியை எடுக்காமல் இருப்பது மேலானதாகும். இந்த பயபக்தியான உறுதிமொழியை எடுத்து ஊழியத்தில் ஈடுபட்டபிறகு அரை மனதான ஊழியத்தை குறிக்கும்படியாக திரும்பிச் செல்வதை அல்லது திரும்பிபார்ப்பதைக் காட்டிலும், கர்த்தருடைய ஊழியக்காரனாகும்படி கையை கலப்பையில் வைக்காம-ருப்பது மேலானதாகும்.

இந்த கருத்துக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் உலகத்தில் கிறிஸ்தவ ஊழியர்கள் மிகவும் சொற்பமானவர்களே இருந்திருப்பார்கள் என்று சிலர் சொல்லக்கூடும். நாம் இதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் கிறிஸ்தவர்கள் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரு மேன்மையான நிலையில் இருக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். கர்த்தர் அறிவிக்கிறதாவது: "(தற்காலத்தில்) ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்க முமாயிருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்." இந்த சிலர்தான் ராஜ்ய வகுப்பாராக, மணவாட்டி வகுப்பாராக இருப்பார்கள். கிறிஸ்துவின் ஆயிரவருட யுகத்தில் பூமியிலுள்ள வம்சங்களை யெல்லாம் கிறிஸ்துவின் கூட இருந்து ஆசீர்வதிக்கிற தெய்வீக பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

நாம் முதலாவது கர்த்தரிடம் வரும்போது ஆரம்ப பாவங்களை மன்னிக்கும்படி ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை கவனிப்பது பிரயோஜனமாகயிருக்கும். அவருடைய சீஷனாகும்படியும் அவரது நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும்படியும் விரும்புகிறவர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக அவர் நமக்கு அறிவிக்கிறார். ஆகையால் நாம் அனைவரும் கர்த்தரிடம் புத்திசா-த் தனத்துடனும் கவனத்துடனும் சென்று, அவர் செய்த இந்த ஏற்பாடுகளில் எந்த அளவுக்கு நாம் சந்தோஷப்படுகிறோம் என்பதை கூற வேண்டும். மேலும் அவரது கிருபை நமக்கு போதுமானதாக இருக்கிறது என்ற வாக்குத்தத்தத்திலும் அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்ற அவரது உறுதி

மொழியிலும் நாம் சந்தோஷப்படுகிறோம் என்பதையும் கூற வேண்டும்.

இவர்கள் தேவனோடு உடன்படிக்கை உறவுக்குள் வந்த பிறகு அவர்களது மீறுதலுக்கான மன்னிப்பை பெற அவர்கள் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதாவது தேவனுடைய தேவைக்கு விரோதமாகவும் அவர்களது அர்ப்பண உடன்படிக்கைக்கு மாறாகவும், செய்த பாவங்களை மன்னிக்கும்படி ஜெபிக்க வேண்டும். இப்படியாக இந்த வகுப்பார் கர்த்தருடைய ஜெபமாகிய, ‘‘எங்களுக்கு பாவம் செய்தவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் பாவங்களை மன்னியும்‘‘ என்று ஜெபிக்க சலுகை பெற்றிருக்கிறார்கள். இப்படியாக மன்னிக்கப்பட வேண்டிய இந்த பாவங்கள் ஆரம்ப பாவங்களை உள்ளடக்கியது அல்ல. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, புதிய உடன்படிக்கைக் குள்ளாக வருகிற அனைவருக்கும் இந்த ஆரம்ப பாவங்கள் இலவசமாக மன்னிக்கப்பட்டது. ஆதிகால பாவங்களி-ருந்து கர்த்தர் தமது கிருபையால் நம்மை விடுவித்த பிறகு, கர்த்தருக்கு தேவைப்படுகிற திட்ட அளவிற்கு வரத்தவறிய பாவங்களாக இவைகள் இருக்கின்றன.

கிருபாசனத்தண்டைக்கு தாங்களாகவே வரத்தெரியாமல் பாவ வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிற சில கர்த்தருடைய பிள்ளைகளினிடத்திற்கு நமது கவனத்தை பரிசுத்த யாக்கோபு திருப்புகிறார். அக்கரையற்ற வாழ்க்கையினாலும், கடமைகளையும், சலுகைகளையும் அலட்சியம் செய்து, தங்களது உடன்படிக்கையின் கடமைகளை புறக்கணிக்கிறவர்களுக்கும், பிதாவுக்கும் இடையே ஒரு பெரிய இருண்ட மேகம் வருகிறது. அவர்களால் இந்த மேகத்தை ஊடுருவி செல்ல இயலவில்லை, அவர்கள் ஜெபங்கள் பிதாவை சென்றடையாததாகக் காணப்படுகிறது. அவர்களுக்கு தமது முகத்தை அவர் மறைக்கிறார். இவர்களுடையது ஒரு மிதமிஞ்சிய காரியமாக இருக்கிறது. ஒரு தவறான நிலைக்குச் சென்ற ஒரு கிறிஸ்தவனை – ஒருபாவியை திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவான் என்று அப்போஸ்தலர் மூலமாக கர்த்தர் கூறுகிறார்.

அப்போஸ்தலர் செயல் முறையை கூறுகிறார். பாவவியாதிபட்டவன் தன் தேவையை உணர்ந்து, சபையின் மூப்பர்களை, மூத்த கிறிஸ்தவர்களை அழைக்க வேண்டும். தான் செய்த தப்பிதங்களை அல்லது கர்த்தருடைய கிருபையி-ருந்து தான் விலக்கப்பட்டதற்கு காரணமாக தான் நம்புகிறவைகளை அவன் அவர்களிடம் சொல்ல வேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருந்து, கர்த்தருடைய நாமத்தில் அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபிக்க வேண்டும். அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். கர்த்தர் அவனை ஆவிக்குரிய சுகத்திற்கும் பலத்திற்கும் எழுப்புவார்.

----------------------------------

## Prayers That Are Heard

# கேட்கப்படுகிற ஜெபங்கள்

*சங்கீதம் – 141*

*அநேகர் ஆராதிப்பார்கள், சிலரே ஜெபிப்பார்கள்–கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மட்டுமே–அவர்களுக்கு அடிக்கடி வரும் தேவைகள்–"தேவனுடைய காது திறந்திருக்கிறது"–அவர்களது ஜெபங்கள் தூபமாக எழும்புகிறது–ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுதல்–எதற்காக ஜெபிப்பது–பதிலுக்காக காத்திருத்தல்–ஆவியின் ஜீவசுவாசம்.*

*"அவர்கள் எனக்கு வைத்த கண்ணியின் சிக்குகளுக்கு விலக்கி இரட்சியும் "வச.9*

வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள அனைத்தையும் உண்டாக்கின சிருஷ்டிகரின் மகிமையையும், நமது பலவீனத்தையும், அற்பத்தன்மையையும், அபூரணத்தையும் நாம் நினைக்கும்பொழுது, நமது தேவன் தமது சிருஷ்டிகள் தம்முடன் ஜெயத்தில் தொடர்பு கொள்ளும்படி ஏற்பாடு செய்திருப்பது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது, யாரும் கர்த்தருக்கு செலுத்தக்கூடிய ஆராதனைக்கும், அர்ப்பணம் செய்திருக்கிற தேவனுடைய ஜனங்களும், அவர்களது மைனராக இருக்கும் பிள்ளைகளும் ஏறெடுக்கும், ஏற்றுக்கொள்ளக் கூடிய ஜெபத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம் கவனிக்காமல் இருக்கக்கூடாது.

ஒரு கவர்னரை அல்லது ராஜாவை பொது ஜனங்கள் வரவேற்று ஆர்ப்பரிக்கும் போது அவர்கள் தங்களது தொப்பிகளை கழற்றி தலைவணங்குவார்கள். ஆனால் அதே பொது ஜனங்களை ராஜாவோ அல்லது கவர்னரோ, நண்பர்களாக அல்லது கருத்து பரிமாற்றத்திற்கோ வழிநடத்துதலுக்கோ அல்லது ஆலோசனைக்கோ அழைக்கும்போது அது வேறு விதமாக இருக்கும். அதேபோல தேவன் முழு மனுக்குலத்தின்மேல் அக்கரை எடுக்கும்போது, அது அவர் தமது சபையின் மேல் கொண்டுள்ள அக்கரை போல் இருக்காது. அவரது சபை என்று சொல்லும்போது, எந்த சபை பிரிவையோ அல்லது வகுப்பையோ குறிக்காமல், தங்களது சொந்த சித்தத்தை அர்ப்பணித்து கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி தேவனுடன் ஒரு இருதயப் பூர்வமான உடன்படிக்கைக்குள் வருபவர்கள். இவர்கள் தான் வேதாகமத்தின்படியான சபை, இவர்களது நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (எபிரேயர் 12:23) இவர்களைத்தான் வேதாகமத்தில் தேவனுடைய பரிசுத்தவான்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் இவர்களைப் பற்றி, "எல்லாம் உங்களுடையதே...... நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" என்று அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

தேவனுடைய இந்த சபை உலகமனைத்திலும், எண்ணிக்கையின்படி பலமானதல்ல. வேதாகமம் கூறுவது போல அதில் ஐசுவரியவான்கள் அநேகரில்லை, ஞானிகள் அநேகரில்லை, கற்றவர்கள் அநேகரில்லை, ஆனால் விசேஷமாக இதில் தரித்திரரும், விசுவாசத்தில் ஐசுவரியவான்களும் ராஜ்யத்தின் சுதந்திரராக இருக்கிறார்கள். (1கொரி 1:26: யாக் 2:5) அவர்கள் உயிர்த்தெழுத–ன் மாறுதலை அடையும் வரையும் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரையும் அவர்களது ஆளுகையும். உலகக் காரியங்களும் அவர்களது கட்டுப்பாட்டுக்குள் வராது. பிறகு அவர்கள் கிறிஸ்துவுடன் ஜீவித்து ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். (வெளி 20:4)

### யார் ஜெபிக்கலாம்

யார் வேண்டுமானாலும், எந்த சமயத்திலும் சர்வ வல்லமையுள்ள தேவனிடம் வேண்டுகோள்களை கொண்டு செல்லலாம் என்று அநேகர் எண்ணங் கொண்டிருப்பதாக காணப்படுகிறது. மேலும் ஜனங்கள் அவரிடம் ஜெபிக்க வராததால் தேவன் சந்தோஷமாக இல்லை என்றும் எண்ணுவதாக காணப்படுகிறது. இப்படிப்பட்ட கருத்துகள் எல்லாம் வேதாகம ஆராய்ச்சியிலும், செய்தியிலும் குறைவுப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறது. ஜெபம் என்பது ஒரு பெரிய சலுகை என்று வேதாகமமம் போதிக்கிறது.

இயேசு அறிவிக்கிறதாவது: "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." மேலும் அவர் சில கட்டுப்பாடுகளையும் அவர் குறிப்பிடுகிறார். அதாவது அவர்கள் அவரது சீஷர்களாயிருக்க வேண்டும். அதற்கு அவர்கள் குறிப்பிட்ட உறுதிமொழி அல்லது பிரமாணங்களை எடுக்க வேண்டும். அவர்கள் தங்கள் சுயசித்தத்தை விட்டுவிட்டு இயேசுவின் சித்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அனைத்தையும் அவர்கள் ப–பீடத்தில் வைக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். தேவனிடம் அறிக்கை பண்ணப்படமாட்டார்கள், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட மாட்டார்கள், தேவனுடைய பிள்ளைகளாக கருதப்பட மாட்டார்கள், வரவிருக்கிற ராஜ்யத்தில் அவர்கள் கிறிஸ்துவின் உடன் சுதந்திரராக மாட்டார்கள். தற்கால வாழ்க்கையில் கூட தேவனுடைய பிள்ளைகளுக்குரிய சலுகைகளை பெறமாட்டார்கள். அதாவது ஜெபிப்பதற்கான சலுகை, தெய்வீக ஐக்கியம் தொடர்பு மற்றும் போதனைகள் எதையும் பெற முடியாது.

இந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் தேவனுடைய பிள்ளைகளாகிறவர்களுக்காக வேதாகமம் விசேஷித்த விதமாக வைத்திருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாகிறவர்களுக்குக் கூட ஜெபிக்கும் சலுகையை இழக்கக்கூடிய அபாயம் இருக்கிறது என்று இயேசு அறிவிக்கிறார். அவர்

கூறுவதாவது:"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்" இல்லையென்றால் கிடைக்காது. (யோவான் 15:7)

இந்த ஜெபம் என்கிற பாடத்தைப் பற்றிய தவறான தகவல் அநேகருக்கு தீமையாக செயல்பட்டிருக்கிறது. பெரும்பாலானவர்கள் கர்த்தருடன் எந்தவித உடன்படிக்கைக்குள்ளும் செல்லாமல், குமாரர்கள் என்கிற அங்கீகாரத்தையும் பெறாமல், அதை விரும்பாமல் தீயவைகளுடன் தொடர்பு வைத்திருந்து, எப்பொழுதாவது துன்பம்வரும்போது கர்த்தரிடம் ஓடுகிறவர்களாக இருக்கிறார்கள். சரியானபடி அவர்கள் போதிக்கப்பட்டிருந்தால் ஆரம்பத்தில் அவர்களது மனதில் திகைப்பை உண்டாக்கி இருக்கும். உடனே இந்த உலகில் தேவனற்றவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து விழித்துக்கொள்வார்கள். மேலும் அவர்களது காரியங்கள் தேவனுடைய மேற்பார்வையின் கீழ் இல்லை என்பதையும், தாங்கள் உலகத்தின் ஒரு பகுதியாக இருந்து சாபம் அல்லது மரண தண்டனைக்கு கீழாக இருக்கிறோம் என்பதையும் உணருவார்கள்.

நமது கபாலத்தின் (மண்டை) மேற்பகுதியில் மனிதனின் உயர்ந்த குணங்களாகிய ஆராதனை, பயபக்தி, தொழுகை மற்றும் ஆன்மீகம் போன்றவைகள் இருக்கின்றன. சில சமயங்களில் துன்மார்க்கர்கள் கூட ஜெபத்தின் மூலம் தேவனை சந்தோஷப்படுத்தி சில உதவிகளை கேட்கும்படி உணருவார்கள். தேவன் அவர்களுக்குச் சொன்னதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். தேவன் துன்மார்க்கனை நோக்கி, "நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும் என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு? சிட்சையை நீ பகைத்து என் வார்த்தைகளை உனக்கு பின்னாக எறிந்து போடுகிறாய்." சங்கீதம் 50:16,17

சபைக்கும் உலகத்திற்கும் உள்ள வேறுபாட்டை மிகவும் நன்றாக உணரவும், சபைக்கான சலுகைகளுக்காக பாராட்டவும் இதுவே சரியான நேரம். மற்றவர்கள் தேவனுக்கான அவர்களது தேவையை உணரச் செய்வதே இதன் பலனாக இருக்கும். அவர்களது துன்ப நேரத்தில், தங்களுக்கு தேவன் இல்லை என்பதை உணர்ந்து, ஆர்வத்தோடு தேவனை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாகவும் முழு அர்ப்பணிப்பின் மூலமாகவும் தேவனை தேடமாட்டார்களா? இந்த நிபந்தனையின் பேரில் மட்டுமே, இயேசு அவர்களை ஏற்றுக் கொண்டு, தாம் அவர்களுக்கு பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராகவும் இருந்து, தற்கால வாழ்க்கைக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் தகுதியுள்ளதாக இருக்கக் கூடிய தேவனுடைய குமாரர்களுக்கான சலுகைகளையும் பெயரையும் உறுதிப்படுத்துவார்.

### தேவனுக்கு முன்பாக ஜெபதூபம்

இந்தப் பாடத்தில் தீர்க்கதரிசி தாவீது, கிறிஸ்தவர்கள் தங்களது துயரத்தில் தேவனிடம் அவர் நியமித்த வழியில் வருவதை படம் பிடித்து காட்டுகிறார்: "கர்த்தாவே, உம்மை நோக்கி கூப்பிடுகிறேன், என்னிடத்திற்கு வரத்தீவிரியும்; நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், என் சத்தத்திற்கு செவிகொடும். என் விண்ணப்பம் உமக்கு முன்பாக தூபமாகவும்,.....இருக்கக்கடவது." இந்தக் கருத்து வேதத்தில் வேறொரு இடத்தில் "பரிசுத்தவான்களின் ஜெபங்களாகிய தூபவர்க்கம்" என்று சொல்லப்பட்டதற்கு இசைவாக இருக்கிறது. (வெளி 5:8) பரிசுத்தவான்களின் ஜெபத்தை நிழலாக காண்பிக்கிற தூபம் பழங்காலத்தில் அரிதான நறுமணப் பொருட்களின் கலவைகளால் செய்யப்பட்டது என்பதையும், விநோதமான நறுமணத்தை கொடுக்கக் கூடியதாக இருந்தது என்பதையும் நினைவு படுத்துகிறோம். மேலும் இதை செலுத்தக் கூடிய ஆசாரியரைத் தவிர வேறு யாரும் தயாரிக்க அனுமதிக்கப்படவில்லை. (யாக் 30:34–38; 37:29) பரிசுத்த பேதுருவால் ராஜரீக ஆசாரிய கூட்டம் என்று அழைக்கப்பட்ட உண்மையான ஆசாரியர்களுக்கு மட்டுமே கர்த்தரை அணுகி அவருக்கு பிரியமான வகையில் ஜெபத்தை ஏறெடுக்கும் சலுகை கொடுக்கப்பட்டிருப்பதாக கர்த்தர் நமக்கு மறுபடியும் காண்பிக்கிறார். (1 பேதுரு 2:9)

தங்கள் ஜீவனை மரணபரியந்தம் அர்ப்பணம் செய்திருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் மட்டுமே ப–யிடும் ஆசாரியத்துவத்தின் அங்கங்களாக குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் எழுதினதாவது:"அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ ப–யாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்." (ரோமர் 12:1) இந்த குறிப்பிட்ட வகுப்பாரின் வேண்டுதலைக் கேட்டு, பதிலளிப்பேன் என்று கர்த்தர் உறுதியளித்திருக்கிறார்–அவர்களது மாம்சீக விருப்பத்தின்படி அல்ல, அவர்களது ஆவிக்குரிய சத்தத்தைக் கவனிப்பார். அவரது ஞானத்தின்படி அனுபவங்களும் ஆசீர்வாதமும் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

### எதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்

நமது ஜெபங்கள் நமது முயற்சிகளுக்கு இசைவாக இருக்க வேண்டும். இந்த பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல கிறிஸ்துவின் சபை தங்கள் உதடுகளுக்கு காவல் வைக்கும்படி ஜெபிக்கிறார்கள். தங்களது உதடுகளையும் வாய்களையும் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்கள் என்பதே இதன் கருத்து, அதாவது வார்த்தைகளினால் மற்றவர்களுக்கு தீங்கிழைக்காதபடி கட்டுப்படுத்துகிறார்கள். மனுக்குலத்திற்கு உதவியாகவும் தேவனுக்கு மகிமையாகவும் இருப்பார்கள்.

ஏனெனில் அவர்கள் இருதயத்தை பரிசுத்தப்படுத்துவதற்கும், தீயவர்களோடு தீய வார்த்தைகளை அப்பியாசப்படுத்தாத படிக்கும் முயற்சிக்கிறார்கள். ஆகையால் அதற்கு இசைவாக அவர்கள் ஜெபிக்கிறார்கள். "அக்கிரமஞ் செய்கிற மனிதரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும், அவர்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக." இவையெல்லாவற்றிற்கும் எதிரான எனது தீர்மானத்திற்கு எனக்கு உதவிபுரியும்.

அர்ப்பணம் செய்த கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் பிதாவிடம் ஜெபிக்க வரும்போது தங்கள் வாழ்க்கையை மிகவும் ஜாக்கிரதையாக பரிசோதிக்க வேண்டும் என்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது.! **பொன்னான கற்பனைக்கு** விரோதமாக எந்த அளவுக்கு அவர்களுக்கு ஆசீர்வாதங்களும், ஆடம்பரங்களும், ருசியுள்ள பதார்த்தங்களும் வந்து சேர்த்திருக்கின்றன என்பதை அவர்கள் கவனிப்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! இப்படியாக ஞானமாக ஜெபம் பண்ணுகிறவர்கள் தங்கள் உத்தியோக உறவுகளை சரிபண்ணுவதற்கு தங்களது வாழ்க்கையை பரிசோதித்து பார்ப்பார்கள். இப்படி செய்வதால் அநீதியான முறையில் வருகிற ருசியுள்ள பதார்த்தங்களை புசியாதிருப்பார்கள். இதற்கு மாறாக, அன்பு மற்றும் நீதியின் கொள்கைகளுக்கு இசைவாக சம்பாதிப்பவைகளைக் கொண்டு களிகூருவார்கள்.

## "நீதிமான் குட்டட்டும்"

தேவனுடைய ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்க நாடுவதின் மூலமும், ஜெபத்தின் மூலமும் தேவனுடன் ஐக்கியத்துடன் இருக்கும் வகுப்பார், முழுவதுமாக ஈடுபட்டு, சங்கீதத்தில் கூறப்பட்டுள்ளதுபோல சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதாவது நீதிமான் தங்களை கடிந்துகொண்டால் அதை குற்றமாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அந்த கடிந்துகொள்ளுதல் அவர்களுக்கு பழங்காலத்தில் விருந்தாளி விருந்தளிப்பவனிடமிருந்து பெறுகிற எண்ணெயைப் போல இருக்கும். ஜெபத்தின் மூலம் தேவனிடம் ஐக்கியத்தைப் பெற்றிருக்கிற வகுப்பாராகிய உண்மையான கிறிஸ்தவர்கள், ஆவியின் கனிகள் என்று அப்போஸ்தலர் கூறியுள்ள குணங்களைப் பெற்றிருப்பார்கள். அதாவது சாந்தம்,தயவு,பொறுமை,நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகியவை. (கலாத்தியர் 5:22,23; 2பேதுரு 1:5-8) இந்த குணங்களை பெற்றிருப்பதால், எளிதில் குற்றமிழைக்க மாட்டார்கள். அதற்கு பதிலாக, கர்த்தர் தரக்கூடிய இப்படிப்பட்ட அனுபவங்களையும் பாடங்களையும் பெறுவதில் சந்தோஷப்படுவார்கள். அதுவும் விசேஷமாக கிறிஸ்தவ முறைப்படி சகோதரர்களிடமிருந்து வருகிற கடிந்துகொள்ளுதலை பெறுவதில் சந்தோஷமடைவார்கள். ஏனெனில் ஆவிக்குரியவர்களாகிய அவர்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களைச் சீர் பொருந்த செய்து அவர்களும் சோதிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.(கலாத்தியர் 6:1)

இப்படிப்பட்ட காரியத்தில், ஆவியின்படி கொடுக்கப்பட்டாலும், பெறப்பட்டாலும் அந்த கடிந்து கொள்ளுதல் கர்த்தரிடமிருந்து வருகிற ஒரு ஆசீர்வாதமாக இருக்கும். இப்படிப்பட்ட வேதாகம கடிந்துகொள்ளுதலால் அவர்களது இருதயமோ அல்லது தலையோ உடைந்துபோவதில்லை. இதே போல மற்றவர்களை நடத்துவதற்கு கற்றுக்கொள்கிறார்கள். அவர்களுக்கு தீங்கு செய்வதற்கு அல்ல, உதவி செய்வதற்காகும். ஆபத்தில் ஒருவருக்கொருவர் ஜெபித்துக்கொள்கிறார்கள், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக ஆபத்தாக காணப்படுகிறவைகளும் வாழ்க்கையின் அனைத்து காரியங்களும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருபவர்களுக்கு நன்மைக்கேதுவாக நடக்கிறது.

அமெரிக்கன் திருத்திய மொழிபெயர்ப்பு வேறு விதமாக இவ்வாறு கூறுகிறது: "தலையில் மேலுள்ள எண்ணெயை என் தலை மறுக்காம-ருப்பதாக; அவர்களது பொல்லாங்கில் கூட எனது ஜெபம் தொடரும்."

சபையின் துன்பம் மரணம் வரை பாதிப்பை கொடுக்கிறது என்று தீர்க்கதரிசி மிகைப்படுத்திக் கூறுகிறார். "பூமியின்மேல் ஒருவன் மரத்தைவெட்டி பிளக்கிறது போல, எங்கள் எலும்புகள் பாதாள வாய்க்கு நேராய் சிதறடிக்கப்பட்டிருக்கிறது." அதாவது மரம் வெட்டும்போது சிதறுகிற தேவையற்ற மரத்துகள்கள் போல இருக்கிறது. ஆனால் உலகம் இப்படி தேவனுடைய பரிசுத்தவான்களை மதிப்பிட்டாலும் தேவனுடைய மதிப்பீடு அப்படியல்ல என்பதை கீழ்க்கண்ட வேதவசனம் அறிவுறுத்துகிறது. "ஆனாலும் ஆண்டவராகிய கர்த்தாவே, என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது; உம்மை நம்பியிருக்கிறேன்; என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும்."

தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் எப்படிப்பட்ட பெருந்துன்பத்தை தற்கால வாழ்வில் அடைந்தாலும், தங்கள் அனுபவத்தில் இந்த உலக அதிபதியால் எப்படிப்பட்ட தள்ளிவிடுதலைப் பெற்றிருந்தாலும் அவர்கள் எதிர்காலத்தில் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கனம், மகிமை, சாகாமையைப் பெறுவார்கள். அவர்கள் அவரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களை அவர் வெறுமையாக விடமாட்டார். அவர் கூறுகிறதாவது: "பாதாளத்தின் வாசல்கள் அவர்களை மேற்கொள்ளுவதில்லை." அதாவது பாதாளத்தின் வல்லமை கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவையும் சபையையும்

மேற்கொள்ளுவதில்லை. அவர்கள் ஆயிரம் வருடம் ஆளுகை செய்ய முதலாம் உயிர்த்தெழுத-ல் கல்லறையி-ருந்து மகிமையுடன் எழுந்து வருவார்கள். (வெளி 20:6)

### "கண்ணியின் சிக்குகளுக்கு என்னை விலக்கி இரட்சியும்"

பூமியிலே வேட்டைக்காரர்கள் வண்ணப் பறவைகளை வேட்டையாட தேடிக்கொண்டிருப்பது போல சாத்தான் ஒரு வேடனைப்போல, ஒரு வேட்டைக் காரனைப் போல கர்த்தருடைய பிள்ளைகளை தேடிக்கொண்டிருக்கிறான். பவுடர் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு வேட்டைக்காரர்கள் கண்ணிகளையும் சிக்குகளையும் பயன்படுத்தி தங்கள் இரைகளை அதில் சிக்க வைத்தார்கள். சாத்தான் கூட மகா பிரதான சத்துருவாக இருந்துகொண்டு முகவர்களை (ஏஜென்ட்களை) பயன்படுத்துகிறான். வேதாகமத்தின்படி விழுந்துபோன தூதர்கள் தான் அவனது ஏஜென்டாகவும் சாத்தான் அவர்களது தலைவனாகவும் –"பிசாசுகளின் தலைவன்–" இருக்கிறார்கள். அக்கிரமஞ் செய்யும் அநேக மனிதர்களை அவன் பெற்றிருக்கிறான். அவர்கள் அறிந்தோ அறியாமலோ சாத்தானின் ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள்.

இயேசு கூறுகிறதாவது: "அவனது ஊழியக்காரர்களுக்கே நீங்கள் ஊழியம் செய்கிறீர்கள்." இதன்படி தங்களை தேவனுடைய ஊழியக்காரர்களாக கூறிக்கொள்பவர்கள், தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொண்டு, உண்மையிலேயே துஷ்டனுக்கு ஊழியர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் இயேசு கூறுவதுபோல, அவர்கள் செய்வது சாத்தானுடைய வேலையாக இருக்கிறது. அவர்கள் அநீதி, அநியாயம் மற்றும் அக்கிரமத்தை உயர்த்தவும் சத்தியத்தை தாழ்த்தவும் ஜனங்களை தவறாக வழிநடத்துவதிலும் உடன் ஊழியர்களாக இருக்கிறார்கள்.

கர்த்தர் தமது ஜனங்களுக்கு உதவுவார், எதிராளியின் பல்வேறு கண்ணிகளி–ருந்து அவர்களை விடுவிப்பார், இறுதியாக சாத்தானும் அவனது குழுவினரும் அவர்களது கண்ணியிலேயே விழுவார்கள். பழங்காலத்தில் எகிப்தியர்கள் இஸ்ரயேலர்களை சிவந்த சமுத்திரத்தில் பிடிக்க நினைத்த போது, கர்த்தர் இஸ்ரயேலர்களுக்கு வழியை திறந்தார், அவர்கள் தப்பினார்கள்; அவர்களது எதிராளிகள் அவர்களை பின் தொடர்ந்த போது அவர்கள் சிக்கி அழிந்தார்கள்.

அதேபோல மகா ஆபத்தின் காலத்தில் சாத்தானும் அவனது ஊழியர்களும் அவர்கள் எதிர்பாராத வகையில் அந்த ஆபத்தில் அழிக்கப்படுவார்கள். உலகத்தின்மேல் வருகிற ஆபத்தில் தப்பித்து, முதலாம் உயிர்த்தெழு–ல் மறுரூபமடைந்து மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்பவர்கள், ராஜ்ய வகுப்பார் என்று அழைக்கப்படுவார்கள். ஆனால் உலகமானது அந்த மகா ஆபத்தின் நாளில் சிக்கிக்கொள்ளும். எனினும் தேவனுக்கு நன்றி. கர்த்தருடைய வழிகளை அவர்கள் முழுவதுமாக அறிந்துகொள்வது அவர்களுக்கு இலாபகரமாக இருக்கும். சர்வ வல்லவரிடமிருந்து அவர்களுக்கு வருகிற ஆசீர்வாதம் பெரியதாக இருக்கும்.

-----------------------------------

R5693

## "Prophecy Against The Shepherds"

# மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம்

எசேக்கியேல் 34

சுயத்தைத் தேடும் மேய்ப்பர்கள்–தங்களையே மேய்க்கிறார்கள்,மந்தையை மேய்க்கவில்லை–மெய்யான மேய்ப்பர் வருகிறார்–சிதருண்டுபோன ஆடுகளை தேடுதல்–மந்தையை மேய்த்தல்–நசல் கொண்டவைகளையும் பலவீனமானவைகளையும் கவனித்தல்–மந்தையின் சுயநலக்காரர்களை கண்டித்தல்–தாவீது புதிய மேய்ப்பனாக இருப்பார்–ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன்–"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்."

"என் ஆடுகளுக்கு நானே மேய்ப்பனாயிருப்பேன்." வசனம் 15

இந்த பாடம் தற்காலத்திற்கு பொருந்தக்கூடிய ஒரு உவமையாக இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இது கர்த்தருடைய மந்தையின் மேய்ப்பர்களை, போதகர்களை குற்றஞ்சாட்டுத–ல் ஆரம்பிக்கிறது. அது தங்களுக்கு சாதகமாக ஆடுகளை அசட்டை பண்ணுவதை குற்றஞ்சாட்டுகிறது. ஆட்டுமயிரை தாங்களே பயன்படுத்திக் கொண்டு, கொழுமையானவைகளை அடிக்கிறதாக அது அறிவிக்கிறது. மந்தையை மேய்க்காமலும் தேவனுடைய வசனமாகிய "புல்லுள்ள இடத்திற்கும்," தெய்வீக சத்தியமாகிய "அமர்ந்த தண்ணீரண்டைக்கும்" கொண்டுபோய் விடாமலும் இருக்கிறார்கள். கர்த்தருடைய ஆடுகள் சிதறடிக்கப்பட்டும் சில காயப்பட்டும், சில மிருகங்களால் கிழிக்கப்பட்டும், சில மெ–ந்தும் பட்டினியாயும் இருக்கின்றன என்று உவமை படம் பிடித்து காட்டுகிறது. பொல்லாத மேய்ப்பர்கள் அவைகளை கவனிக்கவில்லை.

இது பேர் கிறிஸ்தவர்களை குறிப்பிடுகிறது என்று நாம் புரிந்து கொள்ள முடியாது, ஆனால் இது தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்களை குறிப்பிடுகிறது. பேர் கிறிஸ்தவர்கள் நன்றாக செய்தால்கூட, அவர்களை தமது மந்தையாக கர்த்தர் அங்கீகரிப்பதில்லை. அவர்கள் கோதுமை அல்ல, களைகள்; அவர்கள் செம்மறியாடுகள் அல்ல, வெள்ளாடுகள். மேய்ப்பர்கள் செம்மறியாடுகளை கவனியாமலும்,ஆவிக்குரிய உணவை கொடுக்காமலும், அதைக் கண்டடைவதற்கு உதவாமலும் இருந்து வெள்ளாடுகளுக்கு உதவுவதிலேயே எப்பொழுதும் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். அதாவது அவர்களது சபையின் உலகக் காரியங்களிலேயே கவனமாக இருக்கிறார்கள். அவர்களது சபையின் ஏற்பாடுகள் எல்லாம் பெரும்பாலும் விசேஷமாக வெள்ளாடு அல்லது களை வகுப்பாருக்காகவே இருக்கிறது. ஆவிக்குரிய உணவைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. அவர்கள் மகிழ்ச்சியான பொழுதுபோக்குகள், சாப்பாடு, சமூக காரியங்கள், அரசியல் பற்றிய பிரசங்கங்கள், தீங்கற்ற தமாஷான கட்டுரைகள் முதலானவைகளை தருகிறார்கள். பெரும்பாலான பணத்தை அதற்கு கொடுப்பதில்லையா? ஆவிக்குரிய உணவு கொடுக்கப்பட்டால் சபையி–ருந்து பின்வாங்க மாட்டார்களா? இவர்களுக்காக சிலர் புகை பிடிக்கும் இடங்களையும், விளையாட்டு முதலானவைகள் அடங்கிய சபை வீடுகளையும் கொடுக்கிறார்கள்.

ஆனால் கர்த்தர் வெள்ளாடுகளையும், களை வகுப்பாரையும் கவனிப்பதற்காக மேய்ப்பர்களை ஏற்படுத்தவில்லை, கோதுமை மற்றும் கர்த்தரின் செம்மறியாடுகளை கவனிப்பதற்கேயாகும். அவர்கள் உண்மையில்லாத போதகர்கள் அல்லது மேய்ப்பர்கள்; இந்த தீர்க்கதரிசனம் அவர்களுக்கு ஒரு கண்டனம் ஆகும். தேவனுடைய உண்மையான மந்தை சில இங்கேயும், சில அங்கேயும் அநேக சபைப் பிரிவுகளிலும், இவை எல்லாவற்றிற்கும் வெளியேயும் சிதறிக்கிடக்கின்றன. அவர்கள் உலகின் மிருகத்தனமானவர்களுக்கு இரையாகின்றனர்; பலவிதமான தப்பறையான போதகங்களில் சிக்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் "என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற் போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள். ஆகையால் மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் தேடுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: இதோ நான் மேய்ப்பருக்கு விரோதமாக வந்து, என் ஆடுகளை அவர்கள் கையில் கேட்டு, மேய்ப்பர் இனி தங்களையே மேய்க்காதபடி, மந்தையை மேய்க்கும் தொழிலை விட்டு அவர்களை விலக்கி, என் ஆடுகள் அவர்களுக்கு ஆகாரமாயிராதபடிக்கு, அவைகளை அவர்கள் வாய்க்குத் தப்பப்பண்ணுவேன்."

### மேய்ப்பர் தன் மந்தையை கூட்டிச் சேர்க்கிறார்

வேத வாக்கியங்கள் தற்போது நிறைவேறிக் கொண்டிருக்கின்றன என்று அநேக வேதமாணவர்கள் நம்புகிறார்கள். அதாவது நாம் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் (பரோஷியா) இருக்கிறோம் என்றும், சில வருடங்களுக்கு முன்னதாகவே அவர் உலகில் பிரசன்னமாகி, பல்வேறு சபை பிரிவுகளி–ருந்தும் உலகத்தி–ருந்தும் உண்மையாகவே அர்ப்பணம் செய்திருக்கிற தமது ஜனங்களைத் தேடி தம்மிடம் கூட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிறார் என்றும் நம்புகிறார்கள். மேய்ப்பர்கள் மந்தையை மேய்ப்பதை நிறுத்திவிட்டார்கள் என்பது நிச்சயமாக உண்மைதான். கர்த்தரின் அர்ப்பணம் செய்த ஜனங்களாகிய மந்தையில் மிகச்சிலர் மட்டுமே அவர்களது கையில் ஆவிக்குரிய உணவை தேடுவார்கள். பட்டினி நிலைமையில் அவர்கள் திரிந்து கொண்டிருக்கிறார்கள்; எதிராளியின் பல்வேறு கண்ணிகளில் விழக்கூடிய பெரிய ஆபத்தில் இருக்கிறார்கள்.

எனினும் மகா பெரிய மேய்ப்பர் அவரது மந்தையுடன் இருந்து அவரது சத்தத்தை அவைகளுக்குக் கேட்கும்படி செய்கிறார். ஒவ்வொரு தேசத்தி–ருந்தும் சபைப்

பிரிவுகளி–ருந்தும் ஆடுகள் (செம்மறியாடுகள்) அவரிடம் கூட்டிச் சேர்க்கப்படும். இயேசு கூறுகிறதாவது: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்கு பின்செல்கிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம்." (யோவான் 10:27,5) மகா பெரிய மேய்ப்பராகிய கர்த்தரின் சத்தம் இப்பொழுது கேட்கப்படுகிறது, ஏனெனில் இது அவரது இரண்டாம் வருகையின் பிரசன்ன காலமாயிருக்கிறது. இந்த சுவிசேஷ யுகத்தின் அவரது மந்தையை நிறைவு செய்து, முதலாம் உயிர்த்தெழுத–ல் அவர்களை தம்முடன் மகிமைப்படுத்தும் தறுவாயில் இருக்கிறார். நிச்சயமாக நன்மையும் இரக்கமும் அவர்களை தொடரும். அவர்கள் கர்த்தரின் வீட்டிலே என்றென்றைக்கும் வாசம் செய்வார்கள்.

"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ நான் நானே என் ஆடுகளை விசாரித்து. அவைகளைத் தேடிப்பார்ப்பேன். ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக் கொண்டிருக்கிறது போல, நான் என் ஆடுகளைத் தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டு போன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளை தப்பிவரப்பண்ணி, அவைகளை ஜனங்களிடத்தி–ருந்து புறப்படவும் தேசங்களி–ருந்து சேரவும் பண்ணி, அவைகளுடைய சுய தேசத்திலே அவைகளைக் கொண்டு வருவேன்." (வசனம் 11–13)– இந்த சுவிசேஷ யுகத்தின் கர்த்தரின் மந்தையின் சுயதேசம் என்பது பரலோகமாகும். அவர்களை கொண்டு வருவது என்பது அவர்களது உயிர்த்தெழுத–ல் மறுரூபமடைதல் ஆகும். பிறகு இயேசுவுடன் கூட ராஜ்யத்தில் இருப்பார்கள்–அவரது ஆடுகளாக, அவரது மந்தையாக, அவரது மணவாட்டியாக, அவரது அங்கங்களாக இருப்பார்கள். மேலும் அவர் அறிவிப்பதாவது: "இந்தத் தொழுவத்திலுள்ளவை களல்லாமல் வேறே ஆடும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும், அவைகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." (யோவான் 10:16)

### வேறே ஆடுகளும் அதன் மந்தையும்

கர்த்தரின் வேறே ஆடுகள் என்பது அனைத்து மனுக்குலமும் உள்ளடக்கியது என்று நாங்கள் நம்புகிறோம். இவர்கள் ஆயிர வருட ராஜ்யத்தில், கர்த்தர் தமது திட்டத்தில் ஏற்பாடு செய்திருக்கிற மகா பெரிய ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதில் சந்தோஷமடைவார்கள். வேறே ஆடுகள் என்று சொல்லும்போது, சுவிசேஷ யுகத்தில் கர்த்தர் தெரிந்து கொள்ளுகிற மந்தையை காட்டிலும் ஒரு மாறுபாடான சுபாவத்தை உடையவர்களாக இருப்பார்கள். இப்பொழுது அழைக்கப்பட்டு, கூட்டிச்சேர்க்கப்படுகிற மந்தையானது தெய்வீக சுபாவத்திற்காக ஒரு ஆவிக்குரிய சுபாவத்திற்காக ஜெநிப்பிக்கப்படுகிறார்கள். அவர்கள் இந்த ஆவிக்குரிய சுபாவத்தை உயிர்த்தெழுத–ன் மூலம் அடைவார்கள். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது" என்று எழுதப்பட்டுள்ளது. 1கொரி:15:50

வேறே ஆடுகள் இயேசுவினால் விலைக்கிரயமாக வாங்கப்பட்ட ஆதாமின் பெரிய குடும்பமாகிய கர்த்தரின் பெரிய மந்தையாக இருக்கும். மத்தேயு 25:31–46ல் சுருக்கமாக வருணிக்கப்பட்டுள்ளபடி, மனுக்குலத்தை அழைத்து கூட்டிச் சேர்க்கிற வேலையும், செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிக்கிற வேலையும் ஒரு ஆயிர வருடத்தில் நடைபெறும். அகில உலகமும் தாங்கள் செம்மறியாடாக இருக்கப் போகிறார்களா அல்லது வெள்ளாடாக இருக்கப் போகிறார்களா என்பதை தீர்மானிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படும். எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது செம்மறியாடா அல்லது வெள்ளாடா என்பது குறித்து, வேதம் ஏதும் நமக்கு கூறவில்லை. செம்மறியாடாக ஆவதற்கும் அவரது மேய்ச்ச–ன் கீழ் வருவதற்கும் அவர்கள் அனைவரும் அழைப்பை பெறுவார்கள். இப்படி செய்து, அவர் மேலுள்ள விசுவாசத்தை நிரூபித்து, அவரது குணநல சாயலுக்கு ஒப்பான அவரது ஆவியில் அபிவிருத்தி அடையும்போது பூமிக்குரிய சாய–ல், மானிட சாய–ல் அவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும்.

அங்கே கர்த்தர் அப்.பேதுரு குறிப்பிடுகிற இளைப் பாறுதலை கொண்டு வருவார். சுவிசேஷ யுகத்தில் அழைப்பு பெறாத ஆதாமுக்கும் அவனது சந்ததியினருக்கும் இந்த இளைப்பாறுதல் கொடுக்கப்படும். அவர்களுக்கானது உயர்ந்த அழைப்பாக இல்லாதிருந்தாலும், சந்தேகத்திற்கிடமின்றி ஒரு மகிமைக்குரிய ஒன்றாக இருக்கும். அகில உலகத்திற்கும் ஒரு பரதீசு, பூமிக்குரிய பரலோகம் அவர்களது நித்திய வீடாக இருக்கும். ஆனாலும் இது சபை அழைக்கப்பட்ட பரம வீட்டைப் போல இருக்காது. மானிட பூரணத்திற்கும் மாம்சத்தில் தேவனுடைய சாயலுக்கும் ரூபத்திற்குமான உலகத்தின் இளைப்பாறுத–ன் ஆசீர்வாதம், இந்த யுகத்தின் சபையாருக்கு கொடுக்கப்படுகிற ஆவிக்குரிய சுபாவத்திற்கு சமமாக இருக்காது. ஆனாலும் அது அதிசயிக்கத்தக்க சிறப்பானதாக இருக்கும்.

அந்த காலத்தின் வெள்ளாடுகளைப் பொறுத்தவரையில் நம்மில் அநேகர் ஒரு காலத்தில் நினைத்திருந்தது போல, துன்புறுத்தப் பட மாட்டார்கள், தேவனுக்கு ஸ்தோத்திரம். மாறாக, அவர்கள் அழிக்கப்படுவார்கள். கொலாசின் (Kolasin) என்ற கிரேக்க வார்த்தையின் மூலம் இது சுட்டிக்காட்டப்படுகிறது. "இவர்கள் (வெள்ளாடுகள்) நித்திய அழிவை அடையவும், நீதிமான்களோ (செம்மறியாடுகள்) நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்." (மத்தேயு 25:46) இந்த சுவிசேஷ யுகத்தின் தமது மந்தையை கூட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிற பெரிய மேய்ப்பர், ஆயிர வருட யுகத்தின் தமது மந்தை முழுவதையும் கூட்டிச் சேர்த்து தமது மந்தையை தவிர மற்ற அனைத்தையும் முற்றிலுமாக அழித்துவிடுவார். நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற அனைவரும், பகுத்துணர்ந்து தமது நிலையை எடுக்க சந்தர்ப்பம்

கொடுக்கப்படும்போது, சரியானதைத் தெரிந்து கொண்டு கர்த்தரின் ஆடுகளாவார்கள். துன்மார்க்கமாக இருக்கும் மற்ற அனைவரும், "துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்" (சங் 145:20) என்று எழுதப்பட்டுள்ளது போல அழிவார்கள்.

"என் ஆடுகளை நான் மேய்த்து. அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நான் காணாமற் போனதைத் தேடி, துரத்துண்டதை திரும்பக் கொண்டு வந்து, எலும்பு முறிந்ததை காயங்கட்டி, நசல் கொண்டதை திடப்படுத்துவேன்; நியாயத்துக்கு தக்கதாய் அவைகளை மேய்த்து புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன்"–ஒரு நீதியான பிரதிபலனாக இதை செய்வேன். வசனம் 15,16

**மந்தையும் கூட குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது**

மேய்ப்பர்கள், போதகர்கள், ஊழியர்கள் மாத்திரமல்ல அதிகார நிலைமையில் இல்லாத தமது சில ஆடுகளும் கர்த்தரால் கண்டிக்கப்படுகிறது. இவைகளும் கர்த்தரின் பிரசன்ன நாளில் தீர்க்கப்படும். "என் மந்தையே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ ஆட்டுக்கும் ஆட்டுக்கும் ஆட்டுக்கடாக்களுக்கும் வெள்ளாட்டுக் கடாக்களுக்கும் நான் நியாயந் தீர்ப்பேன். நீங்கள் நல்ல மேய்ச்சலை மேய்ந்து உங்கள் மேய்ச்சல்களில் மீதியானதை உங்கள் கால்களால் மிதிக்கலாமா? தெளிந்த தண்ணீரைக் குடித்து, மீதியாயிருக்கிறதை உங்கள் கால்களால் குழப்பிப் போடலாமா? என் ஆடுகள் உங்கள் கால்களால் மிதிக்கப்பட்டதை மேயவும், உங்கள் கால்களால் குழப்பப்பட்டதைக் குடிக்கவும் வேண்டுமோ? ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் அவைகளை நோக்கி: இதோ, நான், நானே கொழுத்த ஆடுகளுக்கும் இளைத்த ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பேன். நீங்கள் பலவீனமாயிருக்கிறவைகளை யெல்லாம் புறம்பாக்கிச் சிதறப்பண்ணும்படி, அவைகளை பக்கத்தினாலும் முன்னந்தொடையினாலும் தள்ளி உங்கள் கொம்புகளைக் கொண்டு முட்டுகிறபடியினாலே, நான் என் ஆடுகளை இனிச் சூறையாகாதபடிக்கு இரட்சித்து, ஆடுகளுக்கும் ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பேன்." (வசனம் 17–22)

மேசியாவின் ராஜ்யத்தின் தற்செயலான புதிய ஒழுங்கு முறைகள் இங்கே நமது கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது, சுவிசேஷயுக சபையைப் பொறுத்த வரையில் இது முன்னமேயே ஆரம்பித்திருக்கிறது. கிறிஸ்தவ தேசங்களில் பிரபலமானவர்களாக கருதப்படுகிற சிலர், அதன் காரியங்களை நிர்வகித்துக் கொண்டு, கர்த்தருடைய உண்மையான ஆடுகளை விநோதமான ஜனங்களாக குறைவாக மதிப்பீடு செய்கிறார்கள். இவர்களும் இந்த நாளிலே கர்த்தரால் கண்டிக்கப்படுவார்கள். எளிய, ஒதுக்கப்பட்ட விநோதமானவர்களே அவரது மந்தையாக பெயரிட்டு அழைக்கப்பட்டவர்கள். அவர்களை அவர் விசேஷமாக கூட்டிச் சேர்த்து, போஷித்து, குணமாக்குகிறவராக இந்த நாளிலே இருந்தார். அது இப்படி இருக்கவில்லையா? அவர்கள் எந்த தேசத்தில் எந்த சபைப் பிரிவில் இருக்கிறார்கள் என்று கருதாமல் கர்த்தர் தமது மந்தையை போஷித்து ஆசீர்வதிக்கவில்லையா? மெய்யாகவே, அவர்களைத் தேடி கண்டுபிடித்து, போஷித்து வருகிறார்.சீக்கிரத்தில் அறுவடை காலம் முடியும். இவர்கள் எல்லாம் பரலோக தொழுவத்தில் சேர்க்கப்படுவார்கள். சுவிசேஷ ஆடுகளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நல்ல வேலை மனுக்குலம் முழுவதற்கும் விரிவாக்கப்படும்.

கர்த்தர் தமது ஆடுகளை இனி பராமரிப்பு இல்லாமல் மறுபடியும் விடமாட்டார். இதன்மூலம் அவர் தவறு செய்தார் என்று புரிந்து கொள்ளக்கூடாது. "நான் போனால் திரும்பி வருவேன்" என்று அவர் கூறினார். அவர் தமது மந்தையை விட்டு கொஞ்ச காலம் சென்றதற்கான காரணம் அவர்களது சோதனை, நிரூபித்தல், அபிவிருத்தி போன்றவைகளுக்கும் ஆகும். மேலும் அவர்கள் சிதறடிக்கப்பட்டிருந்தாலும் நீதியின் கொள்கைகளுக்கும் அவரது வசனத்தின் போதனைகளுக்கும், கர்த்தருக்கும் அவர்களது விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறதற்கும் ஆகும். மற்றவர்கள் தங்கள் அவிசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கக் கூடும். எனினும் ஆயிர வருட யுக முழுவதும் ஆடுகளை பூரணப்படுத்தும் அனைத்து வேலைகளும் நிறைவேறும் வரைக்கும் மேய்ப்பர் அவர்களுடன் கூட இருப்பார் என்பதை அறியும்போது புத்துணர்வு பெறுகிறோம். நாம் வாசிப்பதாவது:

"அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை நான் அவர்கள் மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பராயிருப்பார். கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன். நான் அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்து, துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; அவர்கள் சுகமாய் வனாந்தரத்தில் தாபரித்து, காடுகளில் நித்திரை பண்ணுவார்கள்."

இதன்மூலம் நாம் பழைய கால தாவீது, யேகோவா தேவனின் பிரதிநிதியாக ஏற்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் ஆடுகளின் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்படும் என்று புரிந்து கொள்ளக் கூடாது. தாவீது என்ற வார்த்தை பிரியமானவன் என்று பொருள்படுகிறது. ஆகையால் இதன் கருத்து தாவீதுக்கு ஒப்புமையானவரைக் குறிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இயேசு தான் பிதாவினுடைய ஒப்புயர்வற்ற பிரியமானவராயிருக்கிறார், சபையாகிய மணவாட்டி வகுப்பார், அவர்களது தலையானவராகிய கிறிஸ்துவின் அங்கங்களாக பிரியமானவரின் அங்கங்களாக இருக்கிறார்கள். ஆகவே கர்த்தராகிய இயேசு தமது ஜனங்களிடம் கூறினார். "பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்."

இயேசுவும் சபையும் சேர்ந்த.(தலையும் சரீரமும் சேர்ந்த) முழு கிறிஸ்துவை தாவீதுக்கு ஒப்புமையானவராக தேவனுக்கு பிரியமானவராக நாம் காண்கிறோம். அவரது ஆடுகளையெல்லாம் அல்லது அவரது ஆடுகளாக விரும்புகிறவர்களையெல்லாம் ஆயிரவருட யுகத்தில் இவரது பொறுப்பில் விடுவார் என்பதே உறுதிமொழியாய் இருக்கிறது. ஆடுகளை துன்பப்படுத்துகிற, விழுங்குகிற, அழிக்கிற காட்டு மிருகங்களாகிய துன்மார்க்கர்கள் இல்லாமல் போவார்கள். முழு உலகமும் “தொழுவமாக” ஆகும். ஒரு விசேஷமான தொழுவமோ. எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வே–யோ, இனி தேவைப்படாது. ஏனெனில் ஆடுகள் “காடுகளில்” அமைதியாக இளைப்பாறும் நிலைமையில் இருப்பார்கள்.

வேறுவகையில் சொல்வோமேயானால், அவரது பரிசுத்த ராஜ்யத்தில் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை என்று கர்த்தர் அறிவித்திருக்கிறது போல் ஆயிர வருட யுக முடிவில் இருக்கும். (ஏசாயா 11:9). மேலும் இயேசு கூறுவது போல, இனி அங்கே, தவிப்பும் இராது, அழுகையுமிராது, மரணமுமிராது, சாபமுமிராது. ஏனெனில் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. “சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர், “இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்.” மேசியா மந்தையை முழுவதுமாக பூரணப்படுத்தும் வேலை முடியும் வரை உலகத்தை மோசம் போக்காதபடி சாத்தானும் கட்டப்படுவான்.

## The Coming Storm and its Glorious Outcome

# வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும்

*"கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதன் அலைகள் அடங்குகிறது. அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறார்;....எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்; ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள்." சங்கீதம் 107:29,30,43*

சங்கீதம் 107, இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்துவின் சபையின் அனுபவங்களை குறிப்பிடுகிற தீர்க்கதரிசனமாக காணப்படுகிறது. அது தனிப்பட்டவர்களுக்கும் உலகளாவிய முறையிலும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது, உலகத்திலுள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம் பாவம்தான், இந்த கஷ்டங்களை தீர்ப்பதற்கு அநேக வழிமுறைகள் இருக்கலாம். ஆனால் தேவன் ஒரு திட்டத்தை தமது ஞானத்தினால் ஏற்பாடு செய்தார். வாழ்க்கையில் சிரமங்களையும் கொந்தளிப்புகளையும் கொண்டுவரும்படி அவர் பாவத்தை அனுமதிப்பார். இதன் மூலம் மனுக்குலம் தூக்கி எறியப்படும். இப்படியாக தேவன் சபைக்கும் உலகிற்கும் கொடுத்திருக்கிற மகா பெரிய இரட்சகரை பாராட்டுவதற்கு கற்றுக் கொள்வார்கள். முழுகாரியமும் சட்ட சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்ற காலத்தில் கிறிஸ்து எல்லா கொந்தளிப்புகளை ஒழிப்பதற்கும், குழப்பத்தி-ருந்து ஒழுங்கை கொண்டு வருவதற்கும், உத்தரவிடுவதற்கான முழு உரிமையை பெற்றிருப்பார். தெய்வீக நியமனத்திற்கு காத்திருக்க வேண்டும். இந்த யுகத்தில் சபையானது தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. வாழ்க்கையின் கஷ்டங்களும், கொந்தளிப்புகளும் விசுவாசம், நம்பிக்கை, பொறுமை ஆகியவைகளை அவர்கள் அபிவிருத்தி செய்யவும், ராஜ்ய மகிமைகள், சலுகைகள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கும் தங்களை தயார்படுத்திக் கொள்ளவும் மதிப்பு வாய்ந்ததாக இருக்கின்றன.

வேதவாக்கியங்களின்படி, உலகின் கொந்தளிப்புகள் பலதரப்பட்டதாக இருந்து பல்வேறு காலக்கட்டத்தில் மனுக்குலத்தின் நிலைமைக்கேற்ப நடந்திருக்கிறது. அதாவது பாவம், சுயநலம் போன்றவை எப்பொழுதும் ஒரு கொந்தளிப்பை ஒவ்வொரு காலத்திலும் தூண்டிவிடுகிறது. கடந்த காலத்தில் போர்கள், படையெடுப்புகள், கலகங்கள் முதலானவைகள் நடந்திருக்கின்றன. எல்லாமே பொறாமை, சுயநல நோக்கம் அல்லது மற்றவர்களது அநீதி நிமித்தமே ஆரம்பித்திருக்கிறது, வல்லரசுகள் தங்களது செல்வப் பெருக்கினால் பொறாமை கொண்டு, பலவீனமானவைகளை கொள்ளையடித்தன. கோபம், பகைகள், சண்டைகள், சாத்தான் மற்றும் மாம்சத்தின் வேலை ஆகியவைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படியாக சுயநலத்தை விதைத்து, மனுக்குலமானது ஒரு பெரிய சுழல் காற்றை தற்போது சமூக சமுத்திரத்தில் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த மகா பெரிய கொந்தளிப்பு அதன் உச்சக்கட்டத்தை இன்னும் அடையவில்லை. கர்த்தர் வந்து, "இரையாதே அமைதியாயிரு!" என்று கூறினால் நன்றாக இருக்கும் என்று நாம் நினைக்கிறோம். இந்த மிக மோசமான கொந்தளிப்பை அவர் அனுமதித்திருக்கிறார். ஏனெனில் அது மனுக்குலத்திற்கு நன்மை பயக்கும்படி அதை எப்படி செய்வது என்பதை அவர் அறிவார்.

அமைதி மற்றும் நீதியை ஆதரித்து வாழ்வதும், இந்த நிலைமைகளுக்கு இசைவாக வாழ்வதும் தேவனுடைய ஜனங்களாகிய நமக்குரியதாக இருக்கிறது, ஆனால் இன்றும் அதிகமாக உலகின் மேல் வருவது என்ன என்பதையும் அதன் பலன் என்ன என்பதையும் தேவனுடைய சத்தியத்தையும் அறிந்து கொள்வது நம்முடையதாகும். கர்த்தர் நமக்கு உள்ளான சமாதானத்தை முன்னமேயே கொடுத்திருப்பதால் வெளியரங்கமான கொந்தளிப்பு அதை ஒன்றும் செய்ய முடியாது. அவர் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தை நாம் நம்புகிறோம். தற்கால நிலைமை என்ன என்பதை நாம் உணருகிறோம். மேலும் சபையானது சீக்கிரத்தில் மகிமையடையும் என்று களிகூறுகிறோம். திரைக்கப்பால் நமது நித்திய சமாதானமும் சந்தோஷமும் எப்படிப்பட்டதாயிருக்கிறது! இந்த உணருதல் நமது இருதயத்துக்கு இப்போது எப்படிப்பட்ட ஒரு ஆத்தும இளைப்பாறுதலையும் ஒரு பெரிய அமைதியையும் கொண்டு வருகிறது.! தேவனால் சகலத்தையும் நமது நன்மைக்கேதுவாய் நடத்த முடிகிறது என்பதையும் இப்படி செய்வதாக அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதையும் நினைவுகூருகிறோம். இந்த கொந்தளிப்பான நேரங்களிலும் வாழ்க்கையின் சோதனைகளிலுமிருந்து நாம் ஆசீர்வாதமான அனுபவங்களைப் பெறுவோம்.

கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு விநோதமான முறையில் சமாதானத்தை கொண்டு வருகிறவராயிருக்கிறார்– உலக ஜனங்களின் குறுக்கீடு இல்லாமல். வாழ்க்கையின் கொந்தளிப்புகள் எப்பொழுதும் போல போய்க் கொண்டிருக்கும்; நமது வழி எப்பொழுதும் போல் முட்கள் நிறைந்ததாக இருக்கும், ஆனால் கர்த்தர் சமாதானத்தை நம்மிடம் பேசுகிறார்! தேவனுடைய வார்த்தையாகிய அவரது சத்தத்தைக் கேட்கிறோம்! அவர் நமக்கு கொடுக்கிற அறிவின் மூலமாகவும்

அவரது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மூலமாகவும் அவரது ஞானத்தையும் அவரது அன்பையும் அவரது வல்லமையையும் அவரது ஜனத்தின் மேல் அவர் வைத்திருக்கிற அன்பின் நோக்கத்தையும் நமக்கு உறுதியளிக்கிறார், வெளியரங்கமான சோதனைகள் மற்றும் பிரச்னைகளின் மத்தியில் இந்த காரியங்கள் இருதய சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் நமக்குத் தருகிறது. உலகத்திற்கான அவரது மகா பெரிய திட்டத்தை நாம் அறியும்படி செய்கிறார். தற்கால நிலைமைகளின் முக்கியத்துவத்தையும் முழு உலகத்தின் மேலும் வரவிருக்கிற மகா ஆபத்தினால் வரவிருக்கிற மகிமையையும் நமக்கு அவர் அறிவிக்கிறார்.

### கடைசியான மகாநாள்

அப்போஸ்தலர் குறிப்பிடுகிற "கடைசி நாட்களில்" நாம் இருக்கிறோம். அவர் கூறுகிறதாவது: "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. ஏனெனில் மனுஷர்கள் ......பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும்.....துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுக போக பிரியராயும்.... இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. (2தீமோத்தேயு 3:1–5) நமது கர்த்தராகிய இயேசுவும் "கடைசி நாளைக்" குறித்து அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார். மேலும் சில குறிப்பிட்ட காரியங்கள் கடைசி நாளில் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார். அவரது ராஜ்யமாகிய ஏழாவது ஆயிர வருட நாளை, மகா ஏழாவது நாளை அவர் குறிப்பிடுகிறார் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். உதாரணத்திற்கு, அவர் தமது சீஷர்களிடத்தில் தனியாக பேசும்போது, "நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன்" என்று கூறினார்.

தீமை ஆளுகை செய்யும் இந்த தற்கால யுகத்தின் முடிவுதான் கடைசி நாள் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. இந்த யுகத்தின் கடைசி நாட்களைக் குறித்து நமது ஆண்டவர் குறிப்பிடுகிறதாவது: "நோவாவின் நாட்களில் நடந்தது போல, மனுஷ குமாரனுடைய நாட்களிலும் நடக்கும்." இந்த நாளைப் பற்றி குறிப்பிடுகிற எல்லா வேத வாக்கியங்களும் இந்த காலத்தில் பெரிய குழப்பம் வரும் என்று குறிப்பிடுகிறது. தீர்க்கதரிசி தானியேல் கூட இந்த யுகத்தைக் குறித்து, "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம்" என்று கூறுவதாகக் காணப்படுகிறது. "முடிவு காலத்தில்" என்று இதைக் குறித்து அவர் அறிவிக்கிறார். நமது கர்த்தர் இது குறித்து கூறுகிறதாவது: "ஏனெனில் உலக முண்டானது முதல், இது வரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்." (மத்தேயு 24:21–25) அந்த நாளின் அக்கினியானது அவனுடைய வேலைப்பாடு எத்தன்மையானது என்று பரிசோதிக்கும் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். அப்போஸ்தலர் பேதுரு தனது இரண்டாம் நிரூபத்தில் இது குறித்து தெளிவாக விவரிக்கிறார். இந்த ஆபத்தின் நாளும் அதைத் தொடர்ந்து வருகிற மகிமையுமே எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகள் எழுதும் முக்கிய காரியமாக இருக்கிறது.

இந்த நாளின் கஷ்டங்கள் எல்லாம் ஒரே மாதிரியானது அல்ல, இயேசுவின் சில பின்னடியார்கள் உலகத்திற்கு வரக்கூடிய துன்பங்களி–ருந்து தப்பித்துக் கொள்ளப் பாத்திரராக எண்ணப்படுவார்கள் என்று அவர் நமக்கு சொல்கிறார். பரிசுத்த பேதுரு, இது அகில உலகத்தையும் உட்படுத்தும் என்று கூறுகிறார். அந்த நாளின் அக்கினியில் தேவனுடைய பிள்ளைகளில் சிலர், கிறிஸ்து என்னும் உண்மையான அஸ்திபாரத்தின் மேல், மரம், புல், வைக்கோல் போன்றவைகளால் கட்டப்பட்டதாக காணப்படும். அவர்கள் கட்டினது எல்லாம் வெந்து போகும், அவர்களோ "அக்கினியி–ருந்து தப்பினது போல்" இருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளில் மற்றவர்களுடையதோ உண்மையான அஸ்திபாரத்தின்மேல் "பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்" போன்றவைகளினால் கட்டினதாக காணப்படும். ஆகையால் அவைகள் நிலைத்திருக்கும். அவர்கள் சத்தியம், மற்றும் கர்த்தரின் மேல் விசுவாசம் போன்ற அஸ்திபாரத்தின் மேல் கட்டியிருந்ததால் அது வெந்து போகாது.அவர்கள் கட்டினது இந்த மகா நாளின் "அக்கினியில்" நிலைத்திருக்கும்.

அப்போஸ்தலர் பவுல், இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தவான்களுக்கு எழுதிய எல்லா நிரூபங்களின் மூலம் நாம் இவைகளை புரிந்து கொள்கிறோம். அவர், கிறிஸ்துவின் சபையை, கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணம் செய்த ஊழியர்களை மட்டுமே குறிப்பிடுகிறார் என்று இந்த வசனங்களின் மூலம் (1கொரி 3:11–15) புரிந்து கொள்கிறோம். உண்மையான பரிசுத்தவான்கள் அனைவரும் துன்பப்பட வேண்டும். ஏனெனில் பரிசுத்த பவுல் முன்னெச்சரிக்கையாக கூறினது போல, "நாம் அநேக உபத்திரவங்கள் வழியாகத் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்." (அப் 14:22) பரிசுத்த பேதுரு "இதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறுகிறார்.(1பேதுரு 2:21) நாம் சரியாக அப்பியாசப்படுத்தினால், அவைகளெல்லாம் மகா மேன்மைக்கு மகிமையான அனைத்திற்கும் கிரியை

செய்யும்.

### இன்றைய பேர் கிறிஸ்தவ முறைமைகள்

பேர் சபைகளின் எண்ணங்களின்படி தேவனை ஆராதிக்க லட்சக்கணக்கான பணம் செலவு செய்யப்பட்டுக் கொண்டிருப்பதையும் ஒரு பெரும் வகுப்பார் கிறிஸ்துவின் சபைக்காக ஊழியம் செய்து கொண்டிருப்பதையும் நாம் இன்றைக்கு காண்கிறோம். நேர்த்தியான சபை கட்டடங்கள் கட்டப்பட்டு, கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்படுகின்றன. மகா வாத்தியங்களும் பாடகர்கள் குழுவும் அமைக்கப்படுகின்றன. உடற்பயிற்சிக்கூடம், புகைபிடிக்குமிடம், சமையல் அறைகள் மற்றும் சாப்பாட்டு அறைகள் கொடுக்கப்படுகின்றன. அநேக வகைகளில் உயர்ந்தவர்களாயிருக்கக் கூடிய அநேக ஜனங்களால் இந்த சபைகள் ஆதரிக்கப்படுகின்றன.

ஒரு வகையில் பார்க்கும் பொழுது, ஒவ்வொரு வருடமும் சபை காரியங்களுக்காக இவ்வளவு பணத்தை செலவு செய்பவர்கள் தேவனுடைய சித்தத்தை செய்ய மிகவும் ஆவலாகவும் முற்றிலும் மத பக்தி உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒவ்வொரு வருடமும், நியூயார்க் சபையானது அதன் ஊழியர்களுக்காகவும், சபைக்காகவும், இன்னும் பிற காரியங்களுக்காகவும் எவ்வளவு லட்சம் டாலர்களை செலவு செய்கிறது என்பதை நாம் வாசிக்கிறோம். உண்மையிலேயே இந்த எல்லா சபைகளிலும் சம்பிரதாயங்கள் அதிகமாக இருக்கிறதை நாம் காண்கிறோம். அவர்களது கீர்த்தனைகளை பாடுபவர்கள் எல்லாம் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள். அவர்களைக் கேட்டால் தங்களுக்கு மதத்தில் எந்த ஒரு ஆர்வமும் இல்லை, பணத்திற்காக இதை செய்கிறோம் என்கின்றனர். அவர்களது ஊழியம் பெரும்பாலும் இதே மாதிரியானதாகத்தான் இருக்கிறது என்பதை அநேக ஊழியர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் இதே மாதிரியான ஒரு ஊழியத்தைத்தான் செய்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழியத்தை கர்த்தர் அங்கீகரிப்பாரா? (ஆமோஸ் 5:20-23; ஏசாயா 1:13-15 ஐப்பார்க்கவும்) இருதயத்தை நியாயந்தீர்ப்பது நம்முடைய வேலையல்ல: ஆனால் ஒவ்வொரு பக்கத்திலும் நாம் துணிகரத்தையும், வீம்பையும் அகந்தையையுமே காண்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல், தற்காலத்தில் இங்கே வாழ்ந்தது போல, எப்படி தற்கால நிலைமைகளை மிகவும் நேர்த்தியாக விவரிக்க முடிந்தது என்று நமக்குத் தெரியவில்லை. நமது காலத்தின் பேர் சபையின் வைராக்கியமுள்ள ஊழியர்களிடம் உலகத்தனம், பெருமை, சபைகளின் தப்பறைகள் முத-யவைகள் பற்றி கூறினால், தலையை திருப்பிக் கொண்டு, சிலர் இதை அங்கீகரித்தாலும் பெரும்பாலோர் அங்கீகரிப்பதில்லை. சபைகளில் பணம் பண்ணுவதற்கு சங்கீத கச்சேரி, தேநீர்கள், விளையாட்டுகள் முதலானவைகள் தேவைப்படுகிறது. இவையெல்லாம் இல்லாதிருந்தால் சபைக்கு போதகர்களும், பொறுப்பாளர்களும் தவிர வேறு யாரும் வரமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு சபை அதிகாரி, காவற் கோபுர ஆசிரியரிடம், "நான் சபைக்கு அடிக்கடி போக கடமைப்பட்டுள்ளேன். ஆனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை விட்டு வெளியே வந்து விடுவேன்" என்று கூறினார். அவர் மேல் அழுத்தம் அதிகமாக இருப்பதால் முடிந்தவரை சீக்கிரத்தில் அதைவிட்டு வெளியேற விரும்பினார்.

### கிறிஸ்தவ மண்டலத்தின் தற்கால விக்கிரகம்

பண ஆசை, ஆதாயம் அடைதல் போன்றவையே தற்காலத்தில் கட்டுப்படுத்தும் காரணிகளாக இருக்கின்றன. பண நிர்வாகத்தில் அதிகமாக ஈடுபடுகிறவர்கள் இலட்சக்கணக்கான பணத்தை கொடுக்கிறார்கள். நமது காலம் பண ஆசை உள்ள காலமாக இருக்கிறது. பணக்காரர்கள் மட்டுமே பணப்பிரியராய் இல்லாமல் இதை எங்கும் நாம் காண முடிகிறது. உயர்ந்த விருப்பம், பணத்தை பெறுவது அதை வங்கிகளில் போடுவது அல்ல, செலவழிப்பது ஆகும். பணம் தரும் சந்தோஷத்தை பெறுவதே ஜனங்களின் விருப்பமாக இருக்கிறது. இது பணம் செலவழிக்கும் காலமாகவும், அதை நேசிக்கும் காலமாகவும் இருக்கிறது. சுகபோகம் கலகத்தை ஏற்படுத்துகிறது. பணம் எவ்விடங்களிலும் கனப்படுத்தப் படுகிறது, நாடப்படுகிறது. மற்றவர்களிடம் உள்ள "நீல இரத்தத்தைக்" காட்டிலும் மேலான இரத்தம் என்கிற பழைய மூட நம்பிக்கைகளி-ருந்து, அமெரிக்காவிலுள்ள நாம் அதிகமாக விடுவிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் நாம், "உயர்ந்த பிறப்பு" என்று அழைக்கப்படுவதிலும், உயர் குல வம்ச ஆட்சியிலும் விருப்பம் கொள்ளவில்லை. முந்தைய காலங்களில் ஜனங்கள் ராஜாக்களும் பிரபுக்களும் பொதுவான ஜனங்களி-ருந்து மாறுபட்ட வேறு இனத்தி-ருந்து வந்தவர்கள் என்று நம்பி வந்தனர். ஆனால் இப்போது பண ஆசையும், பணம் தருகின்ற சுகபோகம், வல்லமை, செல்வாக்கு போன்றவைகள் உலகத்தை பைத்தியமாக்கியிருக்கிறது. பணம் விக்கிரகமாக ஆராதிக்கப்படுகிறது. ஒருவனிடம் பணம் இருந்தால் கிட்டதட்ட அவனுக்கு தேவையான அனைத்தையும் அவனால் பெற முடியும். இப்படிப்பட்ட ஜனங்களில் பெரும்பாலோர், தேவ

பக்தியின் வேஷத்தை தரித்து அதன் பெலனை மறுத–க்கிறவர்களாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் "இப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்படி" கூறுகிறார். (2தீமோத்தேயு 3:4,5)

இந்த நிலைமை படிப்படியாக வளர்ந்திருக்கிறது. இந்த பொய்யான தெய்வங்களை வணங்குகிறவர்களிடமிருந்து நாம் விலகுவது எப்படி? நாம் விலக வேண்டும் என்று சொல்வது, இந்த மார்க்கத்தை நாம் கடைப்பிடிக்கக் கூடாது என்று பொருள். சுகபோகத்தையும், உலகத்தையும், ஆதாய ஆசையையும் நமது இருதயத்தை விட்டு விலக்க வேண்டும். இவையெல்லாவற்றிலுமிருந்து விலகி மாறுபாடான ஒரு வழியில் நாம் செல்ல வேண்டும். இது கர்த்தர் வெளி18:2,4ல் சொல்வதற்கு ஒத்திருப்பதைப் போல காணப்படுகிறது, தற்காலத்திய பேர் கிறிஸ்தவ சீயோனின் நிலைமையைக் குறித்து அப்போஸ்தலர் யோவானிடம் வெளிப்படுத்தும்போது அவர் கூறுகிறதாவது: "மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது!......என் ஜனங்களே................ அவளை விட்டு வெளியே வாருங்கள்"–அவள் செல்வாக்கின்கீழ் இருப்பதை விட்டு வெளியே வாருங்கள்! இங்கே கர்த்தருடைய உண்மையான பிள்ளைகள் கர்த்தரின் வழிகாட்டுதலை பின்பற்ற வேண்டும். அவர்கள் தப்பறை மற்றும் உலகத்தனத்தின் அடிமைத்தனத்தி–ருந்து விலகினவர்களாயிருந்து மற்றவர்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். பிறகு அவர்கள் கர்த்தரின் அடுத்த புத்திமதிக்கும் அவரது மகிமையான நோக்கங்களை நிறைவேற்றவும் காத்திருக்க வேண்டும். எல்லாரும் அவளை விட்டு திரும்புவார்கள் என்று நம்பிக்கை வைக்க வேண்டியதில்லை. ஒருவரோ, ஆயிரத்தில் ஒருவரோ இலட்சத்தில் ஒருவரோ இன்றைக்கு பாபிலோனை விட்டு திரும்பலாம். அவள் விழுந்து போனாள்; ஆகையால் அவளை விட்டு விடுங்கள்!–எரேமியா **51:6–9**

### நமது அமைதி, நம்பிக்கையான பலம்

தேவன் தமது சிருஷ்டிப்பின் வேலையை பூமியில் முடித்தப்பிறகு ஓய்ந்திருந்தார். அதே போல சபையாகிய நாம், திரைக்கு பின்னால் உள்ள பூரண இளைப்பாறுதலுக்குள் சீக்கிரத்தில் நுழைவோம். தேவன் முழு காரியத்தையும் குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு கிறிஸ்துவின் கரங்களில் ஒப்படைத்திருக்கிறார். நாம் கர்த்தரின் காலங்களிலும் வேளைகளிலும் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆகையால் நாம் ஓய்வுக்குகந்தவர்களாக இருக்கிறோம். மற்றவர்கள் பாபிலோனை விட்டு வெளியேறுவதைக் குறித்து கவலைப்படவோ, ஆவலாகவோ, வேதனைப்படவோ தேவையில்லை. தேவன் இப்பொழுது நிலவுகிற அனைத்து குழப்பங்களிலுமிருந்தும் அமைதியை கொண்டு வருவார். நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள பாத்திரராக நிரூபணம் செய்கிற அனைவரும் கர்த்தர் இயக்குகிற வழியில் வேலை செய்ய சந்தோஷப்படுகிறவர்களாக இருப்பார்கள்.

உலகமானது இன்றைக்கு குறிப்பிட்ட தப்பறையான போதகங்கள் என்கிற மயக்கத்தில் இருக்கிறது. அவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். உல்லாசமும் மதுமயக்கமும் உள்ளவர்களோடு நாம் இருப்போமானால் அவர்களது மதுமயக்கத்தை தெளிவிக்க முயலாமல், அவர்களோடு ஐக்கியம் கொள்வதை நிறுத்திவிடுவது நல்லது. எனினும் இன்னும் அந்த குழுவில் சிலர் நம்மைப்போல் அன்பு செலுத்துகிறவர்களாகவும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய தடையற்றவர்களாக இருக்கலாம். சத்திய வசனத்திற்கு எந்த அளவுக்கு இணக்கமுள்ளவர்களாகவும் கர்த்தருக்கடுத்த சிந்தை உள்ளவர்களாகவும் இருக்கிற ஒவ்வொருவருக்கும் உதவுவது நமது கடமையாகும். நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், "விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கும்" நாம் நன்மை செய்யக்கடவோம். (கலாத்தியர் 6:10) நாங்கள் வேதாகம பாடங்களையும் வேதமாணவர்களின் மாதாந்திர பத்திரிக்கை ஆகியவைகளின் பிரதிகளை விநியோகித்து வருகிறோம். சிருஷ்டிப்பின் பட–நாடகத்தை (Photo Drama of Creation) காண்பித்து கூட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறோம். இதன் மூலம் ஆவலுள்ள ஆத்துமாக்கள் நம்மைப்போல் உள்ளவர்கள், தற்கால பொதுவான போக்கி–ருந்து நிலைத்து நிற்கவும் ப–யின் ஜீவியத்தை ஜீவிக்கவும் இப்படியாக தேவனிடம் உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களுக்கு வருகிற பெரிய உயர்த்தப்படுதலுக்கும் தயாராகிறார்கள். இந்த பரிசு சமீபத்தி–ருக்கிறது. இப்படி தயாராயிருந்து தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்து கொள்கிறவர்கள், அழுத்தம், குழப்பம் மற்றும் அசைக்கப்படுதலும் உள்ள இந்த மகா நாளில் மற்றவர்கள் அறியாத அமைதியிலும் நம்பிக்கையிலும் வைக்கப்பட்டிருப்பார்கள்.

### தற்கால "மனுஷ குமாரனின் அடையாளம்"

உலகத்தின் தற்கால நிலைமைகளையும் கிறிஸ்துவின் மகிமையான ஆளுகை நெருங்குவதையும் கர்த்தர் விழித்திருந்து உண்மையுள்ளவர்களாயிருக்கிற தம்முடைய பிள்ளைகளுக்கு வேதாகம காலக்கணக்கு குறிப்பிடுகிற

வெளியரங்கமான அடையாளங்கள் மூலமாகவே அறிவிக்கிறார். ஒரு அடையாளம் என்பது ஒரு குறிப்பாக இருக்கிறது. ரொட்டி செய்பவரின் அடையாளம் அங்கே இருந்தால், அங்கே ரொட்டி கிடைக்கும் என்று பொருள், கசாப்புக்காரன் அடையாளம் இருந்தால் அங்கே மாமிசம் கிடைக்கும் என்று பொருள். இப்பொழுது நாம் வரக்கூடிய கொந்தளிப்பையோ அல்லது தெளிவான கால நிலையையோ பெற்றிருக்கிறோம். கர்த்தரின் பிரசன்னத்தை குறிப்பிடும்படியாக வானத்தின் குறுக்கே பிரகாசிக்கிற எழுத்துக்களையோ அல்லது அது மாதிரியான ஒரு குறிப்பையோ, நாம் எதிர்பார்க்க முடியாது. சபையில் இப்பொழுது சில காலமாக – நாற்பது வருட காலமாக – ஒரு அடையாளம் இருக்கிறது – கோதுமை நன்றாக விளைந்திருக்கிறது. மனுஷ குமாரனின் பிரசன்னத்திற்கு இதுவே ஒரு அடையாளமாக இருக்கிறது. இந்த அடையாளத்தை உலகத்தால் கண்டுணர முடியாது. அத்திமரமாகிய இஸ்ராயேல் தேசம் இலைகளும் துளிர்விட்டிருக்கிற அடையாளத்தையும் நாம் பெற்றிருக்கிறோம். முன்னுரைக்கப்பட்ட சபை முறைமைகளின் உலகத்தனத்தை நாம் காண்கிறோம். ஜாதிகள் நொறுக்கபடுகிறதின் ஆரம்பத்தை நாம் காண்கிறோம்.

மகா ஆபத்தின் நாள் முடிவுறும் போது ஒரு புது முறைமை எப்படியோ வருகிறதை உலகமானது காண ஆரம்பிக்கும்; அதாவது ஒரு பெரிய மாற்றம் நேரிட போவதை காண ஆரம்பிக்கும். நிலைமைகள் முந்திய நாட்களைப் போல இருக்கவில்லை. மனுஷ குமாரன் தமது மகா வல்லமையை எடுக்கப் போவதையும், மேசியாவின் ராஜ்யம் வரப்போவதையும் மனுஷர்கள் காண்பதால், இந்த ராஜ்யமானது எல்லாருடைய ஆசீர்வாதத்திற்காகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று மெச்சுவதற்கு பதிலாக, அவர்கள் திகிலடைவார்கள். கொஞ்ச காலத்திற்கு முழு நிலைமையையும் அவர்கள் கிரகிக்க முடியாது. அவர்கள் துன்பத்தையும், வியாபாரங்கள் ஸ்தம்பித்து போகிறதையும், ஜாதிகளின் வருத்தத்தையும் சோச–சம், அராஜகம் ஆகியவற்றையும் காண்பார்கள். பயங்கரமான காரியங்கள் நெருங்குவதால் அவர்கள் இருதயம் சோர்ந்து போகும்.

ஆனால் இந்த காரியங்கள் எல்லாம், கர்த்தர் புறஜாதி ராஜ்யங்களை நீக்கவும், தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார் என்பதற்கு அடையாளங்களாக இருக்கின்றன. எனினும் உலகத்திற்கு பொதுவாக ஜ்வா–த்து எரிகிற துன்பத்தை ஆரம்பத்தில் அடையாளம் காண முடியாததாக இருக்கும். எதற்காக இதெல்லாம் நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள மாட்டார்கள். பெரும்பாலான ஜனங்கள் தற்காலத்தில் கொஞ்சம் குழம்பியிருக்கிறார்கள். சமூக, பொருளாதார மற்றும் மத காரியங்களில் செல்வாக்குள்ள மனிதர்கள் பெரும் குழப்பத்தில் இருக்கிறார்கள். பெரும்பாலானோர் தேவனுடைய ராஜ்யம் நெருங்குகிறதா என்பது குறித்து விவாதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

கடந்த இலையுதிர் காலத்தில் நியூ யார்க்கில் நடந்த மகா சமாதான கூட்டத்தில் பிரபலமான பேச்சாளர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அமெரிக்க நாட்டின் உதவி ஜனாதிபதியும் ஒருவர். சமாதான பிரபு வாசலருகே வந்திருப்பதற்கான கணக்கற்ற குறிப்புகளை அதில் கலந்து கொண்ட நமது சில நண்பர்கள் மூலம் அறிந்தோம். ஆயிர வருட யுகம் இந்த வகையில் குறிப்பிடப்பட்டது. மனுஷ குமாரன் தமது ராஜ்யத்தில் வருகிறார் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதைத் தவிர இதற்கு வேறு காரணம் என்ன என்பது எங்களுக்கு தெரியவில்லை. இன்னும் அதிகமான சமூக மற்றும் பொருளாதார அழுத்தத்தை அவர்கள் காணும் பொழுது அவர்களது குழப்பம் இன்னும் அதிகரிக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். மேலும் "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலமாகிய" மகா ஆபத்தின் நாட்களில் நாம் நுழைந்திருக்கிறோம் என்று நாங்கள் நினைக்கிறோம். யூதர்கள் எருசலேமில் பட்டினியால் சாகிறார்கள் என்று ஒரு எபிரேய கனவான் நமது ஆசிரியரிடம் கூறிக்கொண்டிருந்தார். ஆஸ்திரியா மற்றும் குளுசியாவில் வாழ்கிற நாற்பது இலட்சம் யூதர்களுக்கு, தேசத்தின் வழியாக ஒரு படையோ அல்லது வேறு படையோ கடந்து சென்றால், எந்த வித்தியாசமும் காணப்படுவதில்லை. எப்பொழுதுமே யூதர்கள் தான் பாதிக்கப்படுவார்கள். எந்த இடத்தில் படைகள் நடத்தப்பட்டாலும் வீடுகள் பாழாக்கப்பட்டு, நிலங்கள் வீணாக்கப்படுகின்றன. சமீபத்தில் குளுசியா மற்றும் பலஸ்தீனாவில் வாழ்கிற யூதர்களுக்கு நிதி திரட்டுவதற்காக நியூ யார்க்கில் ஒரு பெரிய கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். (1915 ஆம் வருடம்)

உங்களில் யாராவது ஒரு வங்கியாளரை சந்தித்தால், அவரோடு சம்பாஷித்தால், அவரது முகம் கூர்ந்து கவனிக்கிறதைப் போல மாறுகிறதைப் பார்க்கலாம். சில சந்தர்ப்பங்களில் தற்கால மிக மோசமான நிதி நிலைமையைக் குறித்து பேசும்போது அவரது கண்களில் கண்ணீர்கூட வரும். பெரும் பணக்காரர்கள் போர் ஆரம்பிக்கும் பொழுது தங்களது நூறாயிரம் மதிப்புள்ள சொத்து, எந்த அளவுக்கு மதிப்பு

இருக்கும் என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள். அவர்களது பங்குகளும், பாண்டு (Bonds) களும் விற்க முடியாமல் இருக்கிறது. ஆகையால் இன்றைக்கு ஒரு ஆபத்து வந்து பூமி முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது. இது அனைத்து கிறிஸ்தவ தேசங்களை மாத்திரமல்ல, புறஜாதியார் தேசங்களையும் பாதித்துக் கொண்டிருக்கிறது.

### பாறையின் வெடிப்பி□ருந்து கருத்து

புரிந்து கொள்ளுத-ன் நமது சொந்த கண்கள் திறந்திருப்பதால், யுகங்களைப் பற்றிய மகா தெய்வீக திட்டம் மனிதனின் எந்த திட்டத்தையும் விட எவ்வளவு, அழகானதாக, மேன்மையானதாக இருக்கிறது என்பதை முடிந்தவரை சபைக்கும் உலகிற்கும் காண்பிக்க நாடுகிறோம்! உலகெங்கிலுமுள்ள வேதமாணவர்கள் புதிய வெளிச்சத்தில் வேதாகமத்தையும் காலத்தின் அடையாளங்களையும் ஆராய்ந்து வருகிறார்கள். ஏனெனில் சாத்தான் நமது கண்களுக்கு முன்பாக அறியாமை மற்றும் இருள் என்கிற திரையை வைக்க தேவன் அனுமதித்திருந்ததை நீக்கும் தேவனுடைய காலம் வந்திருக்கிறது. நமது புரிந்து கொள்ளுத-ன்படி தற்கால போர் 1914ல் ஆரம்பிக்க வேண்டியதை வேதாகமம் சித்தரித்து காட்டுகிறது. இது ஒரு "பெருங்காற்று."

மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஒரு பெரிய பூமியதிர்ச்சி–சமூக புரட்சி–வரும் என்று வேதாகமம் கூறுகிறது, இந்த பூமியதிர்ச்சியை முன்னிட்டு, கத்தோ–க்க மற்றும் புரட்டஸ்டண்ட் மதப் பிரிவுகள் உயர்த்தப்படுதலும் வரும். அதாவது அரசியல், சமூகம், பொருளாதாரம் மற்றும் மத காரியங்களில் ராஜாக்கள் மற்றும் பிரபுக்கள் பக்கம் உயர்த்தப்படுதல் நடைபெறும். அடுத்து, தற்கால அனைத்து மத முறைமைகளும் வீழ்ச்சியடையும். உடனடியாக வேதாகமம் "அக்கினி" என்று அடையாளப்படுத்துகிற அராஜகம் பூமியை விழுங்கும். இந்த அராஜகத்தைத் தொடர்ந்து உடனடியாக நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதும் கிறிஸ்தவர்கள், "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபித்து வந்ததுமாகிய தேவனுடைய ராஜ்யம் வரும். ஆனால் இந்த ஜெபத்தின் உண்மையான பொருளை சிலர் மாத்திரமே அறிந்திருந்தார்கள். ராஜ்யத்தின் ஆளுகை காலத்தில் "ஒரு மெல்–ய சப்தம்" ஆகிய சத்தியம் மற்றும் கிருபை என்னும் செய்தி அனைத்து மனுக்குலத்திற்கும் வரும். உலகம் உயர்த்தப்படுதல் அபிவிருத்தியடையும். கர்த்தரின் மகிமையின் அறிவு படிப்படியாக உலகெங்கும் நிரம்பும். "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்ட" நீண்ட நாட்களாக விரும்பப்பட்ட பரலோக இளைப்பாறுதல் பெறப்படும்.

### "என் ஆடுகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கிறது"- எனக்கு பின் செல்கிறது

இயேசுவின் உண்மையான அனைத்து சீஷர்களும் இந்த தற்கால "குறித்த காலத்தை" காண்பார்கள் மற்றும் கேட்பார்கள். "என் ஆடுகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கிறது" என்று ஆண்டவர் கூறுகிறார். ஆகையால் யாராவது பாபிலோனில் இருந்து கொண்டு, விசுவாச துரோக முறைமைகளி–ருந்து வெளியே வரும்படி கர்த்தர் அழைக்கிற சத்தத்தை கேட்கவில்லை யென்றால், அவர்கள் அவரது உண்மையான ஆடுகள் அல்ல என்பது எங்களது தெளிவான தீர்மானமாகும். ஆனால் அவர்கள் அவரது உண்மையான ஆடுகளாக இருந்தால் நிச்சயமாக அவரது சத்தத்தைக் கேட்பார்கள். அவரது அடிச்சுவட்டை பின்பற்ற அவர்கள் தெளிவாகக் கேட்டு உடனடியாக கீழ்ப்படிவார்கள். சீக்கிரத்தில் ஒரு பிரளயத்தைப் போல் பாபிலோன் மேல் வரயிருக்கிற வாதைகள் வரும் முன் அவளை விட்டு வெளியே வருவதற்கு ஆவலாய் இருப்பார்கள். இப்பொழுது வெளிச்சத்தை பெற்றிருக்கிற நாம், கர்த்தரின் செய்தியை நிறுத்தி, தற்கால காரியங்களின் நிலைமையை சுட்டிக் காட்ட வேண்டும்.

அவர்கள் கர்த்தரின் சத்தத்தை கேட்பார்களாக, அதன்பின் அவர்கள் தீர்மானிப்பார்களாக.

### பாபிலோன் மேலான "வாதைகள்"

விசேஷமாக கிறிஸ்தவர்கள் மேல் வரவேண்டிய "கடைசியான ஏழு வாதைகள்" ஒரு குறிப்பிட்ட வியாதியையோ, கொள்ளை நோய் அல்லது காலராவையோ குறிக்காது. ஆனால் அது ஆபத்தை குறிக்கிறது. இவைகள் எல்லாம் என்ன என்பதை வேதம் குறிப்பிடுகிறது–மரணம், பஞ்சம், புரட்சி, துயரம், கவிழ்த்தல் போன்றவை. இந்த துயரங்கள் மனதளவிலும், உடலளவிலும் இருக்கும். தனது சுவர்கள் விழுந்துவிட்டன என்று பாபிலோன் உணரும்பொழுது அது அவளுக்கு ஒரு பெரிய துயரமாகவும் ஆபத்தாகவும் இருக்கும். அழியக்கூடிய ஆபத்து இது என்பதை சில காலத்தில் அவள் உணர்ந்து கொண்டு, தனது சுவர்களுக்கு தீங்கு நெருங்கும் போது அதை எதிர்க்க நாடிச் செல்கிறாள். தற்கால ஸ்தாபனங்கள் மூலமாக தங்களை இணைத்துக் கொண்டு, தாங்கள் கர்த்தரின் மக்கள் என்று நினைத்துக் கொண்டு இந்த பேர் சபைகளுக்காக பல நல்ல ஜனங்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சுவிசேஷ யுகம் செப்டம்பர் 1914ல் முழுவதுமாக முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைக்கவில்லை, ஆனால் புறஜாதிகளின் காலம் மட்டுமே முடிந்திருக்கிறது. சுவிசேஷ

செய்தி முடிவடையும் வரை சுவிசேஷ யுகம் முழுவதும் முடியாது என்று நாங்கள் நம்புகிறோம். கதவு அடைக்கப்படும் போது, தெரிந்து கொள்ளப்பட்ட கடைசி அங்கத்தினன் திரைக்குப் பின்னால் செல்லும்பொழுதுதான் சுவிசேஷ யுகம் முடிவடையும். மணவாட்டியாகிய கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, உலகிற்கு போதிப்பதற்கு மாம்சத்தில் இருக்காது என்பதும், ஆனால் மகா ஆபத்தின் நாட்களிலோ அல்லது அதற்கு முன்போ ராஜ்யத்தில் மகிமைப்படும்; ஆவியின் சுபாவத்தில் இருந்து கொண்டு பூமிக்குரிய போதனைகளை மேற்பார்வையிடும். நமக்கு முன்னே பெரிய போராட்டம் இருக்கிறது. இந்த நேரத்திலும் வரக்கூடிய நாட்களிலும் ஜாதிகளிடையே நமது கர்த்தராகிய இயேசுவின் வேலையை ஏசாயா தீர்க்கதரிசி (63:1–6) மிகவும் பலமான வார்த்தைகளினால் விவரமாக விளக்குகிறார். "அவர் ஒருவராய் ஆலையை மிதித்தார். அவர் தமது உடுப்பை எல்லாம் இரத்தத்தினால் கறைப்படுத்திக் கொண்டார்." தேவனின் கோபாக்கினை (வேதாகம பாடங்கள் தொகுதி 4, பக்கங்கள் 9–11,51,1ஐ பார்க்கவும்.) தற்கால ஐரோப்பிய போரில் இந்த வேலை முன்னமேயே ஆரம்பித்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அதன் தீவிரமும் பயங்கரமும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது.

சபையானது திரைக்கிப் பின்னால் மகிமையடைந்த பிறகு, பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள் சபையின் பிரதிநிதியாக இருந்து கொண்டு மானிட காரியங்களை ஆளுகை செய்து மனிதர்களுக்கான போதனைகளை மேற்பார்வையிடுவார்கள்; மேசியா கோபித்த ஜாதிகளுக்கு அமைதியை கட்டளையிட்ட பிறகு, அழைக்கப்பட்ட பொங்கி எழும் அலைகள் அமைதியடையும். ஆனால் இன்னும் கொஞ்சம் காலம் செல்லலாம், ஆனால் எவ்வளவு காலம் என்பதை நம்மால் உறுதியாக அறிய இயலாது.ஆபத்துக் காலம் முழுவதுமாக நிலைகொள்ளும் முன்பு அல்லது அதன் ஆரம்ப காலத்தில் சில வேலைகள் உலகிற்கு சபையால் செய்யப்பட வேண்டியிருக்கலாம். அப்படியிருக்குமானால் உலகிற்கான இந்த போதனைகள் இப்போது நடந்து கொண்டு இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளை கவனிக்கக் கடவன்; ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள் எனினும் இன்னும் கொஞ்ச காலத்தில் அவரது நீதியான பட்டயம், அநீதிமான்களை தண்டிக்கவும், சாத்தானின் மகா சாம்ராஜ்யத்தை நீக்கிப் போடவும் செயல்பட தயாராகும்.

------------------------------------------

# சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும்
# Gentleness a Characteristic of Christ

*"கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கிறவர்களுமாயிருக்க வேண்டும்." (2 தீமோத்தேயு 2:24,25)*

இந்த நமது தலைப்பு வசனத்தை அப்போஸ்தலர் பவுல், சபையின் மூப்பர் தீமோத்தேயுவுக்கு எழுதினார். கிறிஸ்துவின் சரீரத்திற்குரியவர்களாகிய அனைத்து கர்த்தருடைய ஜனங்களும் தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள். எனினும் அவர்களெல்லாம் ஊழியர்கள் – பந்தத்தில் கட்டப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் ஊழியர்கள். ஒவ்வொரு உண்மையான மகனும் நீதியான, அன்பான தனது பிதாவின் விருப்பத்தின்படி ஊழியம் செய்ய விரும்புவான். உண்மையுள்ள எந்த ஒரு ஊழியக்காரனும், தன்னுடைய எஜமானின் விருப்பத்திற்கிசைய அதுவும் விசேஷமாக ஒரு உயர்ந்த தகுதியுள்ள எஜமானனுக்கு ஊழியம் செய்ய விரும்புவான். பரமபிதாவுக்கு விசேஷித்த குமாரனாயிருந்த நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிதாவின் விருப்பத்தின்படி அவரது சித்தத்தை நிறைவேற்றும்படி தம்மைத்தாமே எல்லாருக்கும் அடிமையாக்கினார்.

நமது வசனம் எந்தவொரு தேவனுடைய ஊழியக்காரனுக்கும் அவர் சபையில் பொறுப்புடையவராக இருந்தாலும் இல்லாதிருந்தாலும், எந்த ஒரு கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினருக்கும் பொருந்தும். இது சபையில் உள்ள எல்லாருக்கும் பொருந்தக்கூடிய ஒரு கட்டளையாக இருக்கிறது. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் வேத வாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள பா–னம் முதலான எல்லைக்குட்பட்டு போதிக்கவேண்டும். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் அவர் என்னை அனுப்பினார்." (ஏசாயா 61:1) தீர்க்கதரிசியின் இந்த வசனங்கள் தலை மற்றும் சரீரம் அடங்கிய கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருந்தும்.

### சத்தியத்தை கொடுக்கும் சரியான முறை

கர்த்தர் அறிவிக்கும்படி நமக்கு கொடுத்திருக்கிற நற்செய்தி ஜனங்கள் மேல் திணிக்கக்கூடிய ஒன்றல்ல. கர்த்தருடைய உண்மையான ஊழியர்களாக அவரது ஏற்பாடுகளுக்கு இசைவாக இருப்பதற்கு நாம் வாதிடவோ, சண்டையிடவோ, போட்டியிடவோ கூடாது. நாம் சாந்தத்துடன் போதிக்க வேண்டும். உயர்ந்த மனப்பான்மையுடனோ, நமக்கு அதிகமாக தெரியும் என்பதை காண்பிக்கும்படியாகவோ போதிக்கக்கூடாது. நமது செய்தி "கேட்க காதுள்ளவர்களுக்கு" மட்டுமே. அவர்களை கேட்கப் பண்ணுவதற்கு ஜனங்களிடம் நம்மை நாம் பலவந்தம் பண்ணவோ, அழைக்காமல் தலையிடவோ கூடாது. நமது விசுவாசத்தின் செய்தியை அறிவிக்க நாம் நமது நன்மைகளை விட்டுக்கொடுக்க, தயாராயிருந்தாலும், நாம் அதை செய்யும்போது நாம் சச்சரவு செய்பவர்களாகவோ, சண்டையிடுகிறவர்களாகவோ, வன்மம் உடையவர்களாகவோ இருக்கக்கூடாது.

சத்தியத்தை சர்ச்சைக்குரியதாக அளிக்கிறவர்களை நாம் கிறிஸ்துவின் சபையின் அங்கங்கள் அல்ல என்று நாம் கூறவேண்டாம். ஆனால் அவர்கள் சரியானபடி கற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அவர்கள் அன்பு என்கிற குணத்தை தேவையான அளவுக்கு அபிவிருத்தி செய்யவில்லை. இந்த விஷயத்தில் அவர்கள் பரம ஞானத்தில் குறைவுபடுகிறார்கள். ஒரு சமயத்தில் நமது ஆண்டவரின் சீஷர்களில் இருவர் சமாரியா பட்டணத்தி–ருந்து திரும்பி வந்து ஆண்டவரிடம் அந்த பட்டணத்தார் தங்களுக்கு உணவு (விலைக்கு) தரவில்லை, ஆகையால் வானத்தி–ருந்து அக்கினி இறங்கி அவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிடலாமா என்று கேட்டார்கள். அவர் மறுமொழியாக, "நீங்கள் இன்ன ஆவி உடையவர்கள் என்பதை அறியீர்கள்; மனுஷ குமாரன் மனுஷனுடைய ஜீவனை அழிப்பதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" என்றார். (லூக்கா 9:55,56) இன்றைக்கும் கூட சிலர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சச்சரவு பண்ணுகிறவர்கள் இருக்கிறார்கள். எனினும் இந்த சுபாவம் அவர்களை தேவனுடைய பிள்ளைகள் இல்லை என்று நிரூபிக்காது. அவர்கள் சரியான மனோபாவம் உள்ளவர்கள் அல்ல என்பதையும் இதில் முன்னேற்றம் தேவை என்பதையும் நிரூபிக்கிறது.

தேவனை சந்தோஷிப்பிக்கும் காரியங்கள் வேதத்திலே பதிவு செய்யப்பட்டுள்ளன. கர்த்தரின் சீடர்கள் எல்லாரிடமும் சாந்தமாய் இருக்கவேண்டும். சபையில் உள்ள சகோதரர்களிடம் மாத்திரமல்ல, மற்ற எல்லாரிடமும் சாந்தமாய் இருக்கவேண்டும். அவர்கள் சச்சரவு பண்ணுகிறவர்களாயும், வாக்குவாதம் பண்ணுகிறவர்களாயும் இல்லாமல் நீடிய பொறுமையுடன் மற்றவர்களது கருத்துக்களை கவனித்து முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவனுக்கு விளக்கமளித்து தன்னை தற்காத்துக்கொள்ள கட்டாயப்படுத்தப்படுவதற்கான நேரங்கள் இருக்கும். தனது கருத்து சரியானது என்று வாதம் செய்ய நியாயமான ஒரு வழி உண்டு. இதற்கு முற்றிலும் மாறானது சச்சரவும் வலுச்சண்டைக்கு முனைகிறதும் ஆகும்.

சத்தியத்தை மற்றவர்களிடம் எடுத்துச் செல்ல முயற்சிக்கும்போது ஒவ்வொருவரிடமும் நமது விசுவாசத்தை சொல்ல வேண்டியதில்லை என்பதை நாம் நினைவு கூறவேண்டும். "உங்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடாதேயுங்கள்." உங்கள் முத்துக்களை அவர்கள் மதிக்கமாட்டார்கள். அவைகளை மதிக்காததால், உங்களுக்கு தீங்கு செய்ய விரும்புவார்கள். ஆனால் சச்சரவு பண்ணாமல் இருக்கும்போது ஜீவ வார்த்தைகளை பற்றிக்கொள்ள நாம்

எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சத்தியம் தாக்கப்பட்டு, ஆத்துமா ஆபத்தில் இருக்கும்போது, அப்போஸ்தலர் கட்டளையிட்டதுபோல, நாம் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராட வேண்டும்."(யூதா 3) அதற்காக நாம் சண்டையிடு கிறவர்களாகவோ சர்ச்சைக்குரியவர்களாகவோ இருக்க வேண்டும் என்பதல்ல. நாம் தகுதியான சமயத்தில் சத்தியத்தை நிதானமாகவும் சாந்தத்தோடும் தாழ்மையோடும் அறிவிக்க தயாராயிருக்கவேண்டும். மிகுந்த ஆர்வத்துடனும் வைராக்கியத்துடனும் செய்யவேண்டும். ஏனெனில் இது நமது கடமையாய் இருக்கிறது. சத்திய செய்தியை யாருக்கு அளிக்கிறோமோ, அவர்கள் சரியான மனோபாவத்தில் இருந்தால் அவர்கள் அதை விரும்புவார்கள். ஆகையால் சத்தியத்திற்காகவும் அதன் நன்மைக்காகவும் நமது ஜீவனை கொடுக்கவும் தயாராயிருப்பது சரியானதாக இருக்கிறது.

நாம் எதிர்க்கப்படும்போது, மிகவும் சாந்தமாகவும், அமைதியாகவும் சுய கட்டுப்பாட்டுடனும் இருந்தோமானால், நாம் பெற்றிருக்கிற செய்தியை சிறப்பாக பாதுகாக்கவும் கொடுக்கவும் முடியும். எதிராளி உண்மையானவராகவும் நேர்மையானவராகவும் இருந்தால் நமது ஆவிக்கும் எதிராளியின் ஆவிக்கும் வித்தியாசம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு சத்தியத்திற்கான நமது வாதம் அதைக் கேட்கிறவர்களின் மனதில் பலமாக இருக்கும். ஒருவர் சுய கட்டுப்பாட்டை இழந்து வாக்குவாதம் பண்ணுகிறவராகவும், சண்டை பண்ணுகிறவராகவும் மாறினால், தன் காரணத்தினாலேயே தோல்வியடைவார். ஒருவர் தன் தலைமையானவரை இழக்கவே கூடாது. சொல்லாமல் விடப்பட்ட நல்ல காரியங்களையும், குரல் மற்றும் பேசும் தன்மை மூலமாக, தான் ஆண்டவரின் ஆவியின் மூலம் இயக்கப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தி, உறுதியாக கூறுவார். இப்படிப்பட்ட தவறுகளினால் நன்மையைவிட தீமையே பயக்கும். நாம் எப்பொழுதும் செய்தியை கனிவுடனும், தயவுடனும் உறுதியுடனும் கொடுக்க வேண்டும். நமது கூற்று எப்பொழுதும் ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும். தனியாக பேசினாலும் பொது இடத்தில் பேசினாலும் நமது செய்தி கனிவுடன் இருக்க வேண்டும்.

### ஒரு உண்மையான போதகரின் தகுதி

கர்த்தரின் ஊழியக்காரன் "போதக சமர்த்தனாக" இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (1 தீமோ. 3:2;2 தீமோ 2:24) பரிசுத்த பவுல் ஒரு சபையின் மூப்பரைக்குறித்து விசேஷமாக கூறுகிறார். போதக சமர்த்தனாக இருக்க வேண்டும் என்பது போதிக்கக் கூடிய திறமையை குறிக்கிறது. எல்லாரும் மற்றவர்களிடம் காரியங்களை தெளிவாக பேசும் வரத்தை உடையவர்களாக இல்லை. சிலர் அதிகமாக பேசி குறைவாக புரிய வைக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் இந்த நிலைமையில் இருப்பதாக கண்டுகொண்ட சிலர், அச்சிடப்பட்டவைகளை நன்கு படித்து, அதைப் பயன்படுத்தி மற்றவர்கள் மனதில் நன்கு பதியும்படி தெளிவாகவும், காரணகாரியத்துடனும் வழங்கவேண்டும். செய்தியை மற்றவர்களிடம் வழங்குவதற்கு பொறுமை மிகவும் அவசியம். நீங்கள் இருளி–ருந்து வெளிச்சத்திற்கு வருவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்து, போதிக்கப்படுகிறவர்கள் மேல் இரக்கம் வைத்து ஒரு குறிப்பிட்ட காரியத்தை மறுபடியும் மறுபடியும் பேச விருப்பங் கொள்ளவேண்டும்.

சத்தியத்தை வழங்கும்போது, பொது இடமாக இருந்தாலும் தனிப்பட்ட இடமாக இருந்தாலும். உயர்ந்த மனப்பான்மையுடன் ஆணவத்தை வெளிப்படுத்தக்கூடாது. நீங்கள் எரிச்சல் உண்டாகி, "நீங்கள் ஒரு வருடத்தில் அறிந்து கொள்வதை நான் ஐந்தே நிமிடத்தில் அறிந்து கொள்வேன்" என்று பேச உங்களை அனுமதிக்கக்கூடாது. இதை உங்கள் முகபாவத்திலோ, பேசும் விதத்திலோ, குர–லோ காண்பிக்கக்கூடாது. ஒரே சமயத்திலே இந்த நான்கு வெவ்வேறு வழிகள் மூலமாக உங்களை வெளிப்படுத்திக் காண்பிக்கலாம். ஆனால் இவைகளில் ஏதாவது ஒன்று இருந்தாலே உங்களுக்கும் சத்தியத்தில் ஆவலை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறவருக்கும் இருக்கும் தடையை நீக்க போதுமானதாக இருக்கும். நீங்கள், சாந்தம் உடையவர்களாகவும், மனத்தாழ்மை உடையவர்களாகவும் அடக்கம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

யாராவது ஒருவர் உங்களிடம் ஒரு வாதத்தையோ ஒரு வசனத்தை உங்கள் கருத்துக்கு மாறுபாடானதாக இருக்கிறது என்று வைத்தால், நீங்கள், "நல்லது, சகோதரரே, இது வேத போதனைக்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்கலாம். எல்லா வசனத்தையும் ஆராய்ந்து பார்த்து எல்லாம் இசைவாய் இருந்தால் மட்டுமே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் அதை நிரூபிக்கலாம்" என்று கூறவேண்டும். அவர் கர்த்தருடைய உறுதியான வசனத்தைக் கொண்டு உங்களுக்கு போதிக்கக் கூடுமானால், மிக சாந்தத்துடன், போதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்து அதை ஏற்றுக்கொள்ள விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்படியாக எல்லா நியாயங்களுடன் அதை அவர் அகற்றிவிட்டு, நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதை கேட்க மிகவும் ஆவலாய் இருப்பார்.

சந்தேகத்திற்கிடமில்லாமல் கர்த்தருடைய ஜனங்களை நமது தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ள, "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாயிருக்க வேண்டும்" என்ற பாடத்தை மென்மேலும் கற்றுக் கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இது மூப்பர், உதவிக்காரர் மற்றும் சபையின் ஒவ்வொரு அங்கத்தினர் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாக இருக்கிறது. நமது குணலட்சணத்தை அபிவிருத்தி செய்யவும், ஆண்டவருக்கு சிறப்பாக ஊழியம் செய்யவும் இது அவசியமாக இருக்கிறது. முத–ல் நாம் சர்வாயுதத்தை தரித்து, ஆவியின் பட்டயத்தை எடுக்கும் போது, கொஞ்சம் வளர்ச்சியடைந்து ஒருவேளை அடிக்கடி நன்மையை விட தீமையை செய்தவர்களாக இருந்தோம். நம்மிடம் யாரும் விவாதிக்க இயலாது என்று நினைத்திருந்தோம். ஆனால் நாம் அதிகமான கனிவையும், அதிகமான ஞானத்தையும், அதிகமான அன்பையும் கற்றுக் கொள்கிறோம். இப்படியாக மற்றவர்களுக்கு போதிப்பதற்கு மிகவும் தகுதியுள்ளவர் களாகிறோம். நாம் சத்தியத்தை தவறாக வழங்கி எப்படி கர்த்தரினிமித்தம் தீங்கிழைக்கக் கூடும் என்பதையும் சரியாக வழங்குவதினால் எப்படி கர்த்தரின் ஊழியத்தை செம்மையாக செய்ய முடியும் என்பதையும் பார்த்தோம். பசிதாகமுடையவர் களை கண்டு ஊழியம் செய்வதன் மூலம் நாம் எல்லோரும் நேசிக்கிறவரும் ஊழியம் செய்ய விருப்பப்படுகிறவருமான மகா ராஜாவுக்கு அதிக சந்தோஷத்தையும் கொடுக்கிறோம்.

**2392**

-----------------

# அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம்

## Faith the Mainspring of Consecration

*"நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே." எபிரேயர் 10:23*

அப்போஸ்தலர் பவுல், ஆதிகால சபையில் நம்பிக்கையில் உறுதியில்லாமல் இருந்தவர்களுக்கும், ஒழுங்காக பற்றிக்கொள்ளாதவர்களுக்கும் இங்கே எழுதுகிறார். கர்த்தர் மற்றும் கிறிஸ்தவ வழியை பொறுத்தவரை ஒரு சமயத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தவர்கள் குறைந்த பட்சமாக அனலுமின்றி, குளிருமின்றி ஆகிவிட்டார்கள் என்று அவர் அவர்களிடம் கூறுகிறார். தேவனுடைய பிள்ளையினிடத்தில் விசுவாசத்தில் உறுதியும், நம்பிக்கையை அறிக்கையிடுவதில் உறுதியும் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரே சீராய் இருப்பதற்கு அவசியமாயிருக்கிறது என்று அறிவிக்கிறார். நாம் ஒவ்வொருவரையும் கர்த்தரிடம் அர்ப்பணம் செய்ய வழிநடத்துவதற்கு நமது விசுவாசமே உந்துவிசையாயிருக்கிறது. தேவன் பாவ மன்னிப்பிற்காக இரட்சகரை ஏற்பாடு செய்திருந்தார் என்று நாம் விசுவாசித்தோம். நாம் ஏற்புடையவர்களாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதாகவும் நாம் நம்பினோம்; மேலும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், அவரது சுதந்தரராகவும் கர்த்தராகிய இயேசுவின் உடன் சுதந்தரராகவும் ஆக்கப்படுவோம் என்றும் நம்பினோம். இவைகளெல்லாம் நம்மை முத-ல் தேவனிடத்திற்கு ஊக்கமளிக்கும் தூண்டுதலாக இருந்தன. அவைகள் நம்மை தீர்மானம் எடுக்க வழிநடத்துகிற ஒரு நல்ல காரியத்தை செய்தன.

அப்போஸ்தலர் பவுல், இந்த எபிரேய கிறிஸ்தவர்கள் நல்ல ஊழியம் செய்ததாக கூறுகிறார்; ஆனால் அவர்களில் சிலர் குறைந்த பட்சமாக சிரத்தையின்மையை வளர்த்திருந்தார்கள். காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய அவர்களுக்கு "தேவனுடைய மூல உபதேசங்களை" மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருந்தது என்று அறிவிக்கிறார். அவர்கள் தங்களது விசுவாசம் மற்றும் கர்த்தருக்குள்ளான தங்களது உறுதியின் ஒரு பகுதியை இழந்திருந்தார்கள்.

நமது அனுபவத்தின் மூலம், காரியங்கள் நமது மனதிற்கு முன்பாக எப்படி இருந்தது என்பதையும், பிறகு எப்படி அவை மங்கின என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். ஆவிக்குரிய காரியங்கள் இப்படியாக மங்கும் பொழுதும், ஒரு காலத்தில் நம்மால் செய்ய முடிந்ததுபோல ஆவிக்குரிய சத்தியங்களை இப்பொழுது கிரகிக்க முடியாமல் போகும்போதும், கிறிஸ்துவுக்குள்ளான மரியாதையும் சந்தோஷமும் சிறிது சிறிதாக மங்கும்பொழுதும், நாம் நமது அர்ப்பணத்தின் இந்த உந்து விசையி-ருந்து வெளியே செல்கிறோம். நமது விசுவாசத்தை இழக்கிறோம். ஆகையால் நாம் அலைந்து திரிந்து பாறையில் மோதிவிடாதபடி நமது ஆத்துமாக்கள் என்னும் இந்த நங்கூரத்தை ஆர்வமுடன் பிடித்து கொள்வோமாக. நாம் விசுவாசத்தில் உறுதியாயிராவிட்டால், நாம் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம்; ஏனெனில், "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்." விசுவாசமில்லாமல் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொண்டு நல்ல போராட்டத்தை போராட போகவே முடியாது. ஒரு போராட்டம் உண்டு என்று நாம் விசுவாசிக்காததால், போராட்டத்திற்கு செல்லமாட்டோம். அல்லது இந்த போராட்டத்தின் பலனால், வாழ்க்கைப் பிரச்சனை மற்றும் துன்பங்கள் அதில் இருப்பதால் எந்த பரிசையும் நம்பாததால் போராட செல்லமாட்டோம்.

### நமது சொந்த பொறுப்பு

நமது கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பிப்பதும் முடிப்பதுமாகிய விசுவாசத்தில் நாம் உறுதியாய் இருக்க வேண்டும் என்பதை அப்போஸ்தலரின் வாதமாக இருக்கிறது. நாம் விலகி போகாதிருந்தால், கர்த்தர் நம்மை தாங்கவல்லவராயிருக்கிறார். அவர் தாங்குவார், நாம் உண்மையுள்ளவர்களாய் அவரில் நிலைத்திருப்போம் என்ற ஒரு நிபந்தனையின் பேரில் தான் கர்த்தர் நம்மை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எனவே எந்த சந்தேகத்திற்கும் பயத்திற்கும் இடங்கொடுக்காமல். அசைவுமில்லாமல், நாம் ஒப்புக்கொண்டிருக்கிற இந்த விசுவாத்தை உறுதியாய் பற்றிக் கொண்டிருப்பதில்தான் எல்லாம் சார்ந்திருக்கிறது, "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ள வராயிருக்கிறார்" என்ற உறுதிமொழியே இறுதியான வெற்றியில் நமது நம்பிக்கைக்கு அடிப்படையாக இருக்கிறது. "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" நமக்காக வேதாகமத்தில் உள்ளது என்பதை நாம் அறிவோம். நம்மை சார்ந்திருப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று கர்த்தர் நம்மிடம் சொல்லும் பொழுது, அவரது கிருபை நமக்கு போதும் என்றும் நமது பலவீனத்தில் அவரது பலம் பூரணமாய் விளங்கும் என்றும் நமக்கு உறுதியளிக்கிறார். நாம் அதை பற்றியிருப்பதை மட்டுமே செய்ய வேண்டும். நாம் நமது நம்பிக்கையில் உறுதியாய் இருப்போமாகில், தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகள் அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்வோம். அவர் உண்மையுள்ளவராயிருப்பார். அவர் தமது வாக்குத்தத்தத்தை புறக்கணிக்கமாட்டார். அவர் சொல்-யிருக்கிற அனைத்தையும் அவர் செய்வார்.

நாம் தயக்கமும் அசைவும் உள்ளவர்களாயிருந்தால், நாம் நமது விசுவாசத்தையோ அல்லது அன்பு மற்றும் கீழ்ப்படித-ன் ஆவியையோ இழப்போம். ஆகையால் இந்த நிலைமைகளில் ஏதாவது ஒன்று நம்மிடம் இருப்பதாக உணர்ந்தால், உடனே தேவனுடைய வசனம் மற்றும் ஜெபத்திற்கு, நமது விசுவாசம், அன்பு மற்றும் வைராக்கியம் புதுப்பிக்கப்படும்படியாக செல்லவேண்டும். நாம் கர்த்தரிடம் என்றும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறோமா என்பதை உறுதி செய்யவும், நமது உடன்படிக்கைக்கு இசைவாக நமது ஜீவனை கொடுக்க நாடுகிறோமா என்பதைக் காணவும், பரிசுத்த ஆவியின் கிருபைகளிலும் கனிகளிலும் அபிவிருத்தி அடைகிறோமா என்பதைக் காணவும் நாம் அனுதினமும் நமது இருதயத்தை பரிசோதிக்க வேண்டும். இப்படியாக நமது பிரதிக்கினைகளை நிறைவேற்றுவோம், அப்பொழுது, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம்" (2பேதுரு 1:11) நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்.

*"விழித்துக்கொள், என் ஆத்துமாவே விழித்துக்கொள்!*
*விலையேறப்பெற்ற நாட்கள் பறந்துகொண்டிருக்கிறது!*
*இளைப்பாறுதலுக்கோ, சோம்பேறித்தனத்துக்கோ இடம் தராதே*
*கடந்த கழிந்த நாட்களெல்லாம் அஸ்தமிக்கின்றன.*

*"எழும்பு, உன் பட்டயத்தைக் கட்டிக்கொள்!*
*யுத்தம் முடிந்தவிட்டது என்று கனவு காணாதே!*
*கடைசி யுத்தம் துவங்கியது இப்படிப்பட்ட காரணம்*
*இதுவரை வந்ததில்லை!*

*"இன்னும் இல்லை, பரிசு, ஆனால் சீக்கிரத்தில் –*
*இன்னும் ஒரு கடைசி முயற்சி*
*உன்னுடையது, அதன் பிறகு கிரீடம்*
*ஆனந்தம், களிப்பு என்றென்றுமே!"*

---------------------------------

**--2394--**

# சாந்தகுணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும்

*"கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், எதிர்ப்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கிறவர்களுமாயிருக்க வேண்டும்." (2 தீமோத்தேயு 2:24, 25)*

இந்த நமது ஆதார வசனத்தை அப்போஸ்தலர் பவுல், சபையின் மூப்பராகிய தீமோத்தேயுவுக்கு எழுதினார். கிறிஸ்துவின் சரீரத்திற்குரியவர்களாகிய அனைத்துக் கர்த்தருடைய ஜனங்களும் தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள். எனினும் அவர்களெல்லாரும் ஊழியர்கள் - இயேசு கிறிஸ்துவின் அடிமைகள் ஆவர். ஒவ்வொரு உண்மையான புத்திரனும் தனது பிதாவுக்கு, விசேஷமாக நீதியான, அன்பான ஒரு பிதாவுக்கடுத்தக் காரியங்களுக்கு ஊழியஞ்செய்ய விரும்புவான் மற்றும் உண்மையுள்ள ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னுடைய எஜமானுக்கடுத்த காரியங்களுக்கு - அதுவும் விசேஷமாக சிறந்தவரும், பாத்திரருமான ஓர் எஜமானுக்கு ஊழியஞ்செய்ய விரும்புவான். பரமபிதாவுக்கு விசேஷித்த குமாரனாயிருந்த நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிதாவுக்கடுத்தக் காரியங்களுக்கு ஊழியஞ்செய்யவும், அவரது சித்தத்தை நிறைவேற்றவும் வேண்டி, தம்மைத்தாமே எல்லாருக்கும் ஊழியக்காரனாக்கினார்.

நமது ஆதார வசனமானது, சகோதரர் மத்தியில் பொறுப்புடையவராக இருக்கும் அல்லது இல்லாதிருக்கும் கிறிஸ்துவின் சபையிலுள்ள எந்தவொரு அங்கத்தினருக்கும், எந்தவொரு தேவனுடைய ஊழியக்காரனுக்கும் பொருந்தும். இது சபையிலுள்ள யாவருக்குமுரிய கட்டளையாக இருக்கிறது. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாலினம் முதலான எல்லைக்குட்பட்டு, தனது வாய்ப்பு மற்றும் திறமைக்கேற்ப போதிக்க வேண்டும். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் அவர் என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1). தீர்க்கத்தரிசியின் இந்த வார்த்தைகள் தலை மற்றும் சரீரம் அடங்கிய கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருந்தும்.

## ஓர் உண்மையான போதகரின் தகுதி

கர்த்தரின் ஊழியக்காரன் "போதகசமர்த்தனாக" இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார் (1 தீமோத்தேயு 3:2; 2 தீமோத்தேயு 2:24). இங்குப் பரிசுத்த பவுல் ஒரு சபையின் மூப்பருக்கு விசேஷமாகப் பேசுகின்றார். போதகசமர்த்தனாக இருத்தல் என்பது போதிக்கக்கூடிய திறமையைக்குறிக்கிறது. மற்றவர்களுக்குக் காரியங்களைத் தெளிவாகப் பேசும் வரம், திறமை என்பது எல்லாருக்கும் உரியதல்ல. சிலர் அதிகமாகப் பேசியும், குறைவாகவே புரியவைக்க முடிகிறவர்களாக இருக்கின்றனர். தாங்கள் இந்த நிலைமையில் இருப்பதாகக் கண்டுகொள்பவர்கள், அச்சிடப்பட்டவைகளைப் பயன்படுத்திட வேண்டும் மற்றும் பிற்பாடு செய்தியானது - மற்றவர்கள் மனதில் நன்குப் பதியும்படி தெளிவாகவும், காரணகாரியத்துடனும் வழங்கிட கற்றுக்கொள்ள முயற்கிக்க வேண்டும். செய்தியை மற்றவர்களிடம் வழங்குவதற்குப் பொறுமை மிகவும் அவசியம். நீங்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்து, நீங்கள் போதித்துக் கொடுப்பவர்கள்மேல் இரக்கம் கொண்டு, எந்த ஒரு கருத்தையும் மறுபடியும் மறுபடியுமாகக் கூறித் தெளிவுபடுத்திடுவதற்கு ஆயத்தமாய் இருங்கள்.

பொதுக் கூட்டங்களிலோ அல்லது தனியே சந்தித்தோ சத்தியத்தை வழங்குகிறபோது, இறுமாப்பாய் நடந்துகொள்ளாதீர்கள், ஆணவத்தைக் காட்டாதீர்கள். ஒருபோதும் நீங்கள் எரிச்சலடைந்து: "நீங்கள் ஒரு வருடம் எடுத்துக்கொண்டு அறிந்துகொள்வதை, நான் ஐந்தே நிமிடத்தில் அறிந்துகொள்வேன்" என்று பேசிடாதீர்கள்; இதை உங்கள் முகபாவனையிலோ அல்லது தொனியிலோ அல்லது பாணியிலோ காண்பிக்காதீர்கள்; பாருங்கள் உங்களின்

இவ்வுணர்வுகளை நீங்கள் ஒரே சமயத்தில் இந்த நான்கு வெவ்வேறு வழிகள் மூலமாக வெளிப்படுத்திடக்கூடும்; ஆனாலும் இவைகளில் ஏதாவது ஒன்றுகூட, உங்களுக்கும் மற்றும் சத்தியத்தில் ஆவலை ஏற்படுத்த நீங்கள் முயற்சித்துக் கொண்டிருப்பவருக்கும் இடையே வேலி ஏற்படுத்த போதுமானதாக இருக்கும். நீங்கள் சாந்தமுடையவர்களாகவும், மனத்தாழ்மையுடையவர்களாகவும் அடக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஒருவர் தன்னுடைய கருத்தானது, உங்கள் நிலைப்பாட்டிற்கு முரண்படுகின்றது என்று நம்பும் ஒரு வாதத்தையோ, ஒரு வசனத்தையோ உங்களிடம் முன்வைத்தால், நீங்கள்: "நல்லது, சகோதரரே, இது வேதப்போதனைக்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்கலாம். தேவவசனங்கள் யாவற்றுடனும் இசைவாய் இருப்பவைகளை மட்டுமே, நாம் சத்தியமென ஏற்றுக்கொள்ள வேண்டும். வாருங்கள் நாம் அதைச் சோதித்துப்பார்க்கலாம்" என்று கூறிட வேண்டும். ஒருவேளை அவர் கர்த்தருடைய உறுதியான வசனத்தைக்கொண்டு உங்களுக்கு எதையாகிலும் போதிக்கக்கூடுமானால், அதைக் கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவராக இருப்பதை வெளிப்படுத்தும் வண்ணமாய்ச் சாந்தமானவராகவும், போதிக்கப்படத்தக்கவராகவும் நடந்துகொள்ளுங்கள். இப்படியாக - ஒருவேளை தான் நியாயமாய் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பும்பட்சத்தில், நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதைக் கேட்க மிகவும் ஆவலாய் இருப்பார்.

சந்தேகத்திற்கிடமில்லாமல் கர்த்தருடைய ஜனங்களை நமது ஆதார வசனத்தில் கூறப்பட்டுள்ள, "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைப்பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாயிருக்க வேண்டும்" என்ற பாடத்தை மென்மேலும் கற்றுக்கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இது மூப்பர், உதவிக்காரர் மற்றும் சபையின் ஒவ்வொரு அங்கத்தினர் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக இருக்கிறது. இது - நமது குணலட்சணத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் ஆண்டவருக்கு நாம் மிகவும் சிறப்பாக ஊழியஞ்செய்வதற்கும் அவசியமாக இருக்கிறது. ஆரம்பத்தில் நாம் சர்வாயுதத்தைத் தரித்து, ஆவியின் பட்டயத்தை எடுக்கும்போது, கொஞ்சம் வளர்ச்சியடைந்தும், அநேகமாக அடிக்கடி நன்மையைவிடத் தீமையைச் செய்தவர்களாகவும் இருந்திருந்தோம். நம்மிடம் யாரும் விவாதிக்க இயலாது என்று நினைத்திருந்தோம். மேலும் நாம் அதிகமாக கனிவாகவும், அதிகமாக ஞானமாகவும், அதிகமாக அன்பாகவும் காணப்படுவதற்குக் கற்றுவந்து கொண்டிருக்கின்றோம் மற்றும் இப்படியாக மற்றவர்களுக்குப் போதிப்பதற்கு மிகவும் தகுதியுள்ளவர்களாகிறோம். நாம் சத்தியத்தைத் தவறான விதத்தில் முன்வைப்பதினால் எப்படிக் கர்த்தரின் காரணங்களுக்குத் தீங்கிழைக்கக்கூடும் என்பதையும் மற்றும் எப்படிச் சரியான விதத்தில் முன்வைப்பதினால் - கர்த்தரின் ஊழியத்தைச் செம்மையாகச் செய்ய முடியும் என்பதையும், பசிதாகமுடையவர்களைக் கண்டடைய முடியும் என்பதையும் மற்றும் நாம் எல்லோரும் யாரை அன்புகூர்ந்து, யாருக்கு ஊழியஞ்செய்ய ஏங்குகின்றோமோ, அந்த மகாராஜாவுக்கு மிகப் பிரியமாயும் காணப்பட முடியும் என்பதையும் பார்த்தோம்.

---

# "எனக்கு பிறன் யார்?"

## "Who is my Neighbour?"

"உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக." மத்.22:39

பத்து கட்டளைகளை சுருக்கி நமது கர்த்தரால் இந்த வார்த்தைகள் குறிப்பிட்டிருந்தன. அவர் பத்து கட்டளைகளை இரண்டாகப் பிரித்து, அதில் ஒரு பகுதி தேவனிடத்தில் மனிதனுடைய கடமையாகவும், மற்றொன்று சக மனிதனிடத்தில், பிறனிடத்தில் காண்பிக்கும் கடமையாகவும் இருக்கிறது என்று காண்பித்தார். முதல் பகுதி கர்த்தரிடத்திலும் அவரது ஊழியத்திலும் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு செலுத்த வேண்டும் என்று கூறுகிறது. மனிதனைப் பற்றிய இரண்டாவது பகுதி, நாம் நம்மிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூற வேண்டும் என்று கூறுகிறது.

யூதர் விசேஷித்த வகையில் தங்களை தேவனுடைய ஜனங்களாக கண்டுணர்ந்தனர். ஆகையால் பிரமாணத்தின் கீழ் தாங்கள் ஒவ்வொருவரும் பிறன் என்று உணர்ந்தனர். ஏனெனில் அவர்கள் அனைவரும் தேவனுடைய பிள்ளைகள், ஆனால் அவர்கள் பிறனிடத்தில் உள்ளன்போடு அன்பு செலுத்த வேண்டும் என்றும் சத்துருவை பகைக்க வேண்டும் என்றும் நினைத்தனர். வெளியிலுள்ள அனைத்து ஜாதிகளையும் தேவன் அங்கீகரிக்கவில்லை. எனினும் சுற்றிலுமுள்ள ஜாதிகளை அடிமைப்படுத்த வேண்டும் அல்லது வெளியேற்ற வேண்டும் என்று தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டிருந்ததற்கான காரணம் யூதர்கள் அவர்களை வெறுக்க வேண்டும் என்பதோ அல்லது தீங்கிழைக்க வேண்டும் என்பதோ தேவனுடைய விருப்பமல்ல. யூதர்கள் காரியங்களை தவறான கருத்தில் எடுத்துக் கொண்டதாக நமது கர்த்தர் காண்கிறார். சத்துருக்களை சிநேகிக்க வேண்டும் என்றும் அவர்களை துன்பப்படுத்தினவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும், இதுவே நல்ல வழி என்பதையும் அவர் அவர்களுக்குப் போதித்தார். பரந்த எண்ணம் வேண்டும் என்பதையும் உலகம் அனைத்திலும் தரும சிந்தை காண்பிக்கப்படும் என்பதையும் காண்பித்தார்.

இதற்காக ஒரு சமயத்தில் அவர் அவர்களுக்கு நல்ல சமாரியன் என்கிற உவமையை கூறினார். அந்த உவமையில் காயப்பட்டிருந்த ஒரு யூதனுக்கு யூதனல்லாத ஒரு மனிதன் ஊழியம் செய்தான் என்று அவர் சித்தரித்திருந்தார். ஒரு யூத ஆசாரியன் காயப்பட்டிருந்த அந்த மனிதனைப் பார்த்து பக்கமாக விலகிப்போனான். அதேபோல, ஆசாரியனைப் போல இல்லாமல் தேவனுடன் குறைவான உறவுடன் இருக்கும் லேவியனும் காயப்பட்டிருந்த அந்த மனிதனைக் கண்டு பக்கமாக விலகிப்போனான். பிறகு அந்நியனாகிய ஒரு சமாரியன், தேவனோடு உறவே இல்லாதவன் வந்தான். அவன் உடனே காயப்பட்டிருந்த மனிதனைக் கண்டு எண்ணை வார்த்து காயங்கட்டினான். அந்த மனிதன் கள்வர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, திருடப்பட்டிருந்தான். சமாரியன், "அவனை தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்திற்கு கொண்டு போய் அவனைப் பராமரித்தான்;"இரவிலே அவனோடு தங்கியிருந்துவிட்டு, காலையில் புறப்படும்போது, கொஞ்சம் பணத்தை சத்திரத்தான் கையில் கொடுத்து, "இவனை நீ விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்" என்றான். (லூக்கா 10:29–35) இந்த உவமையில் இந்த சமாரியன்தான், ஒரு நல்ல பிறனுக்கு, உதாரணம் என்று இயேசு அறிவித்தார்.

இந்த உவமை இன்றைக்கு நமக்கு ஒரு நல்ல போதனையாக இருக்கிறது. நமது கர்த்தர் கொடுத்த ஒரு நல்ல பிறன் என்கிற கருத்தை நாம் உணர்ந்து கொண்டால், நமக்கும் இதே கருத்துதான் என்று கூறி இந்த "**பொன்னான கற்பனையை**"பின் பற்றுவோமாக: நீ எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ அதையே நான் உனக்கு செய்வேனாக. நீ வழியிலே சென்று கொண்டிருக்கும்போது வழிப்பறி கொள்ளையர்கள் உன்னை கொள்ளையிட்டு, உன்னை காயப்படுத்தினால், அப்பொழுது மற்றவர்கள் உனக்கு உதவ வேண்டும் என்று நீ விரும்பினால், சந்தர்ப்பம் கிடைக்கும்போது இதையே மற்றவர்களுக்கு செய்வாயாக. இந்த கருத்தில் அகில உலகமும் பிறன்தான். அவர்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. பூமியின் நமது பக்கம் அவர்கள் வாழ்ந்தாலும் சரி, எதிர்பக்கம் வாழ்ந்தாலும் சரி. இந்த பரந்த பொதுவான கருத்து அனைத்து உலகத்திற்கான நமது உறவையும் கடமையையும் ஒருவரைப்போல மற்றவர்களுக்கு காண்பிக்கிறது. எல்லாரும் நமக்கு பிறர்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் பிறன் என்ற முறையில் எல்லாரும் நடத்தப்படவேண்டும். இதில் விதிவிலக்கு இல்லை. ஒருவன் தன்னிடத்தில் அன்பு கூறுகிறவர்களிடம் மட்டும் அன்பு கூருவானானால், அந்த செயல் பிறனுக்குரிய ஒரு பகுதியை மட்டுமே செய்கிறவர்களாயிருப்போம். அந்த நிகழ்ச்சியில் சமாரியன் பிறனாக இருந்திருக்கமாட்டான். வழியில் கிடந்த அவனை யாரும் கண்டு, எதுவும் செய்யவில்லை என்று அவன் நினைத்திருந்தால் இவன் கூட எதுவும் செய்திருக்கமாட்டான். நமது கர்த்தர் இந்த உவமையிலும் சக மனிதர்கள் தொடர்பான ஆவியின் பிரமாணத்தில் ஒரு அடிப்படை கொள்கையை கொடுக்கிறார். அதாவது எல்லாருமே பிறர்தான் என்றும் ஒருவரையொருவர் அன்பாக பிறனுக்குரிய விதத்தில் நடத்த வேண்டும் என்றும் இது மட்டுமே மனுக்குலத்திற்கிடையே

சரியான கட்டளை என்றும் கூறுகிறார். பிறரது நன்மையிலும் நலத்திலும் அக்கரையும் சிந்தையும் உடையவர்களாயிருந்து நமது அன்பை நமது பிறனிடம் வெளிப்படுத்த வேண்டும். மேலும் நமது சக்திக்கு ஏற்றாற்போல் உதவுபவர்களாக இருக்க வேண்டும். மற்ற கடமைகளும் கவனிக்கப்படவேண்டும்.

நாம் சபைக்கு வரும்போது, அதன் அங்கங்களுக்கிடையே ஒரு விசேஷித்த உறவும் பந்தமும் இருக்கிறது. இயேசு நம்மை நேசித்தது போல நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இது ஒரு புதுகட்டளை. பொன்னான கற்பனை ஒரு புது கட்டளையல்ல. ஏனெனில் தேவன் மனிதனை சிருஷ்டிக்கும் போதே இது மனிதனுக்குரியதாக இருந்தது. மேலும் அது வாழ்க்கையின் சட்டமாயிருக்கும்படி திட்டமிடப்பட்டிருக்கிறது. இஸ்ரயேல் ஜனங்களின் ஒருவருக்கொருவரைப் பற்றிய மனோபாவத்தை சம்பந்தப்படுத்திய யூத பிரமாணம் பொன்னான கற்பனையின் சாராம்சத்தை உடையதாக இருந்தது. ஆனால் இயேசு தமது சீஷர்களிடம், "புதிதான கட்டளையைக் கொடுக்கிறேன்" என்றார். அவர் சொன்னதின் பொருள்: புது சிருஷ்டியானவர்கள் ஒரு புதிய உறவைப் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் ஒரு புது குடும்பத்தை, தேவனுடைய குடும்பத்தை உடையவர் களாயிருக்கிறார்கள்.

நமது சகோதரர்கள் ஆவியின் நிலையில் யாரையும்விட நமக்கு மிகவும் நெருங்கியிருக்கிறார்கள். அனைத்து புது சிருஷ்டிகளுக்கும் ஒரு சகோதரராயிருக்கக்கூடிய ஒரு புது சிருஷ்டி பொன்னான கற்பனையை கைக்கொண்டால் மட்டும் போதாது; ஆனால் இயேசு செய்தது போல எந்த ஒரு அல்லது அனைத்து சகோதரர்களுக்கும் செய்ய தயாராயிருக்க வேண்டும். அதாவது அவர்களுக்கு தனது ஜீவனையும் கொடுக்க தயாராயிருக்க வேண்டும். "நான் அவனுக்காக என் ஜீவனை கொடுக்கிறேன், ஆகையால் எனக்காக அவன் தன் ஜீவனைக் கொடுக்க விருப்பம் உள்ளவனாயிருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்" என்று அவர் கூறக் கூடியவர் அல்ல. அவர் தமது நன்மை மற்றும் ஜீவனைப் பற்றியோ மற்றவர்கள் தமக்கு என்ன செய்ய வேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்பது பற்றியோ கவலைப்படாமல், சகோதரர்களின் ஆசீர்வாதத்திற்காக தான் என்ன செய்யலாம் என்ன செய்யப்படலாம் என்பதில் விருப்பம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அவன் பொன்னான கற்பனைக்கு மேலாக ப–யின் அன்பு உடையவனாயிருக்க வேண்டும். இப்படியாக நாம் உண்மையான சீஷர்களாய் இருக்க வேண்டும்.

------------------------------

**--2398--**

R 5699

# தேவனின் யுத்தம்

எருபகால்என்ற கிதியோனின் படையே,போருக்கு ஆயத்தமாய்எழுந்து நிற்பீரே.
பயந்தாங்கொள்ளிகள் அனைவருமே, வீட்டிற்குச்செல்லட்டும் இப்பொழுதே.
தேவவைராக்கியம் உள்ளவரையே, யேகோவாதேவன்வேண்டுகின்றாரே.
சத்தியம் உள்ளத்தில் அனலாக உள்ளவர்மட்டும் நிற்கட்டும்,உங்களின்பட்டயம்,
ஆவியின்பட்டயம்.உங்களின்பந்தமோ, அவரது வார்த்தையே.
உங்களின்பாண்டங்கள் இந்தப் பூமியின்வலுவிலாமட் பாண்டங்களே.(பானை-உடல்)
உம் ஆண்டவர் குரலொலிகேட்கும் போதினிலே, பானைகள்யாவும் உடையட்டுமே,
பானையிலே எரிபந்தங்கள் நன்றாய் எரியுதாபாருங்கள்,உங்கள்கையில் எக்காளம் குறிப்பிட்ட
தொனியினையே, தவறாது ஒலிக்குதா சோதியுங்கள்,கர்த்தரின்பட்டயம் கிதியோனின்
பட்டயம், என்றே முழங்கி ஆர்ப்பரிப்பீரே.ஏதிரிகள்படையோகுழப்பத்திலாழ்ந்தே
வாக்களிக்கப்பட்டவெற்றிநமக்கே கிட்டிடுமே,நமக்குக்கொடுக்கும் சமாதானமோ,
ஐனிலமீதினில்பெரிதாகும்,(ஐந்து நிலங்கள்:-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)
விசுவாசமிக்க மாபெரும் வீரரே, உங்கள்நிலைதனில்நிலை நிற்பீரே,
இதுஉங்கள்யுத்தமல்ல, யுத்தம்செய்வதும் நீங்களல்ல.தேவனின் யுத்தம்அறிவீரே,
உங்களுக்காகத்தேவன்தாமே போர்செய்வார்,போரைஅவரேநடத்திடுவார்,
வெற்றியும்கொடுப்பார்,காண்பீரே.

## Thankless, Rebellious Absalom
# நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம்

2 சாமுயேல் 18:1–15

*அப்சலோமின் கதை– தன் தந்தையிடமிருந்து எப்படி மாறுபட்டிருந்தான் – வீணாக்கப்பட்ட அவனது சந்தர்ப்பங்கள்– தனது தந்தையின் உயிரை வாங்கத்தேடிய கீழ்ப்படியாத மகனும் ராஜதுரோகியுமான அவனது இகழத்தக்க முடிவு – மனிதன் உருவாக காரணமாகும் பையன்–பெற்றோர்களின் பொறுப்பு–பெற்றோர்கள் உருவாக்குவதுதான் குழந்தை– குழந்தையை பெற்றால் மட்டும் போதாது.*

*"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழப்படியுங்கள், இது நியாயம்." எபேசியர் 6:1*

*"நன்றிகெட்ட பிள்ளையை பெற்றிருப்பது, பாம்பின் பல்லைக் காட்டிலும் எவ்வளவு கூர்மையானது!"*

இன்றைய நமது பாடம் அப்சலோமின் மரணத்தைக் குறித்து விவாதிப்பது ஆகும். போதுமான அளவு வெளிப்படையானதும் விமர்சனம் இல்லாததுமாகும். எனினும் இந்த இளம் இராஜகுமாரனின் வாழ்க்கையை திரும்பிப்பார்ப்பதும், அவனது சிலதோல்விகளை கவனிப்பதும் நமக்கு முக்கியத்துவம் உள்ளதாக இருக்கும். முதலாவது பார்க்கும்போது, அவனது பிறப்பு நற்பிறப்பு அல்ல. அவனது தாய், தாவீது ராஜாவின் மனைவி, அருகிலுள்ள ஒரு புறஜாதிராஜாவின் மகள். ஒருவேளை அவனது தாய் மிகவும் அழகானவளாக இருந்திருக்கலாம். ஏனெனில் அவன் அழகான பையனாகவும், அழகான வா–பனாகவும் பண்பாளனாகவும் எல்லாராலும் விரும்பப்படுகிறவனாகவும் இருந்தான் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவன் ராஜகுடும்பத்தில் ஒரு அங்கமாக இருப்பது அவனுக்கு அனுகூலமற்றதாக இருந்தது. முகத்தில் வேர்வை சிந்த உழைக்க வேண்டிய அவசியமில்லை.

அப்சலோம் தனது சகோதரியினிமித்தம் தனது ஒன்றுவிட்ட சகோதரன் அம்னோனை கொன்றுபோட்ட காரியத்தினால்தான் அப்சலோம் நமது கவனத்துக்கு முதன்முதலாக கொண்டுவரப்பட்டான். இதனிமித்தம் பாதுகாப்புக்காக தனது தாத்தாவிடம் ஓடிப்போனான். இப்படியாக தனது தந்தையின் செல்வாக்கி–ருந்தும், உண்மையான மதத்தி–ருந்தும் இன்னும் விலகிப் போனான். பல வருடங்களுக்குப் பிறகும் அவனது தந்தை அப்சலோமின் மேல் அன்பு செலுத்தவோ, வருத்தப்படவோ இல்லை. தூண்டுத–ன் பேரில் தாவீது, அப்சேலாமை எருசலேமுக்கு கொண்டு வரச் சொன்னான். ஆனால் தாவீது அவன் முகத்தை பார்க்க விருப்பமில்லாமல் இரண்டு வருடங்களுக்கு மேல் இருந்தான். இவைகளெல்லாம் அப்சலோமுக்கு விரோதமாகவே இருந்தன. இந்த துரோகத்தை இஸ்ரயே–ன் ராஜாவாகிய அவனது தந்தையால் மன்னிக்க முடியாதிருந்தது.

### அப்சலோமின் சதி

சாதாரண குறைகளை தீர்க்க இஸ்ரேல் தேசம் முழுவதும் நியாயாதிபதிகள் இருந்தனர். ஆனால் அவர்களது தீர்ப்பு திருப்தியில்லாதிருந்தால் உச்ச நீதிமன்றமாகிய ராஜாவிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது. தாவீது ராஜா ஆலயத்துக்கு தேவையான பொருட்களை சேகரிப்பதில் மிகவும் மும்முரமாய் இருந்து ஓய்வில்லாதிருந்தான். ஆனால் அவனது மரணம் வரை ஆலயம் கட்டப்படவில்லை. இதனால் ஜனங்களுக்கான அவனது உச்சநீதிமன்ற வேலைகளில் ஓரளவுக்கு தடை ஏற்பட்டது. ஆகையால் அநேக முறையீடுகள் தாமதம் அடைந்தது. ஆகையால் விரும்பப்பட்ட பலன்களுக்காக அவர்கள் காத்திருந்ததாகக் காணப்பட்டார்கள்.

எனினும் தாவீது ராஜாவின் நீதி பரிபாலன காரியங்களில் தொய்வு இருந்ததாக நம்மால் உறுதியாக கூற இயலவில்லை. சூது நிறைந்த அவனது மகன் அப்சலோம் தன்னை மிகவும் பிரபலப்படுத்திக்கொண்டான் என்பதை மட்டும் நாம் அறிவோம். அவன் ஜனங்களிடம் மிகவும் கிருபை உள்ளவனாகவும், அந்நியோன்னியம் உள்ளவனாகவும் இருந்து அவர்களது குறைகளை கேட்க எப்பொழுதும் தயாராயிருந்தான். ஜனங்களிடம் மிகவும் தந்திரமாக பதிலுரைத்தான். அவர்களது காலதாமதத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்தான். "நான் ராஜாவாயிருந்தால் வேற மாதிரியாக இருக்கும்"என்று ஜனங்களிடம் கூறினான். இப்படியாக வஞ்சகத்தினாலும், சதியாலோசனையினாலும் கபடத்தினாலும் தனது தந்தையிடமிருந்து "இஸ்ரயேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்" என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஜனங்களும் இப்படிப்பட்ட மனுஷன் ராஜாவாயிருந்தால் எவ்வளவு மேன்மையானதாக இருக்கும் என்று நினைக்க ஆரம்பித்தார்கள். தேவன்தான் இஸ்ரயே–ன் ராஜா என்ற உண்மையை கவனியாது விட்டதுபோல் ஜனங்கள் காணப்பட்டார்கள். வேதாகமம் கூறுவது போல தாவீது ராஜா கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தான். (1 நாளாகமம் 29:23)

அப்சலோம் கண் கவருகிறவனாகவும் அழகான ராஜகுமாரனாகவும் அடர்த்தியான முடி உள்ளவனாகவும் இருந்தான். அவன் இரதத்திலே சென்றான். தனக்கு முன் ஓட ஐம்பது சேவகர்கள் இருந்தார்கள். தனது வருகையை முன் அறிவிப்போனும் இருந்தான். யோசனையற்ற ஜனங்கள் இதை போற்றுகிறவர்களாக இருந்தார்கள். இந்த மினுமினுப்பான தொற்று நோயி–ருந்து ஒரே ஒரு ஞானவான் மட்டும் இழுக்கப்படாமல் விலகியிருந்தான்.

அப்சலோம் தனது தந்தையின் மத உணர்வை அறிந்திருந்தான். அதில் அவனால் வெளிப்படையாக பங்கு பெறமுடியவில்லை. தனது தந்தைக்குப் பிறகு தன்னை அவர் ராஜாவாக்கமாட்டார் என்பதை அவன் உணர்ந்திருந்தான். தாவீது ராஜா வயது சென்றவனாயிருந்தபடியால் அடுத்த ராஜாவுக்குரிய காலம் வெகு தூரத்தில் இல்லை. சாத்தானின் ஆசை மற்றும் துரோகமான வழியை பின்பற்றி அப்சலோம் தனது தந்தைக்கு துரோகியாக ஆனான். அவன் ஒரு படையை ஏற்படுத்தி, தன்னை ராஜாவாக பிரகடனப்படுத்தினான். இந்த காரியத்தையெல்லாம் சீக்கிரமாகவும் செவ்வையாகவும், இவனால் கவரப்பட்ட அநேக ஜனங்களின் அனுதாபத்தோடு செய்தான். தாவீது ராஜாவும் அவனது படையினரும் அவனுக்கு உண்மையாயிருந்தவர்களும் தப்பிப்பிழைக்க ஓட தீர்மானித்தார்கள். நமது பாடம் அப்சலோமின் பெரிய படைக்கும் தாவீது ராஜாவின் சிறிய படைக்கும் நடந்த போரை விவரிக்கிறது. தாவீது ராஜாவின் படை நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்களாக இருந்தது. வெற்றி தாவீது ராஜாவுக்கு கிடைத்தது. தாவீது தனது மகனாகிய அப்சலோமை கொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கொல்லப்பட்டான்.

தனது தந்தையை கொல்ல விரும்பிய, ஜனங்களால் கவரப்பட்ட, கலகக்கார, வஞ்சகமுள்ள, பிரகாசமான பகட்டான, பேராசையுள்ள மனிதனுக்கும் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதனுக்கும் இடையே இங்கே எப்படிப்பட்ட ஒரு வேறுபாடு! தேவனுடைய மனிதன் ஒரு புறம் பலவீனமுள்ளவனாயிருந்தாலும், அவைகள் ஒப்புக் கொள்ளப்பட்டு, வருத்தப்பட்டதாலும், தேவனிடம் உண்மையுள்ள இருதயத்தை பெற்றிருந்தான். அவன் தன் மகனிடம் அனுதாப அன்பைக் கொண்டிருந்தது அவனது புலம்ப–ல் காணப்படுகிறது. "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும்!"

### ஒரு மிக முக்கியமான கொள்கை

மனித சித்தம் அதிசயத்தக்கது. ஒவ்வொரு பையனும் அவனது எதிர்காலத்திற்கு அவனே பொறுப்பாகிறான் என்று நாம் சொல்லுவோம். ஆகையால் நமது கூற்று, சுயமுயற்சியால் உயர்ந்த மனிதன், அவ்வளவு அதிக மோசமில்லை.

எனினும் இது பெற்றோர்களை மன்னிக்காது. ஓரளவுக்கு திறமையுள்ள தகுதியான குழந்தையை பிறப்பிக்கச் செய்வது பெற்றோரின் கடமையாகும். வெளியரங்கமான அழகில் மட்டுமில்லாமல், மனசாட்சியுள்ள, நீதியான தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்கும் உண்மையாய் இருக்கக் கூடியவனாக பிறப்பிக்க வேண்டும். வாழ்க்கையின் சரியான எண்ணத்தை உருவாக்குவதும், சரியாக புத்திமதி கூறுவதும் பெற்றோரின் கடமையாகும். ஏனெனில் வேதாகமம் கூறுகிறதாவது; "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." (நீதிமொழிகள் 22:6)

அநேக நூற்றாண்டுகளாக போதிப்பிக்கப்பட்டும், கற்பிக்கப்பட்டும் இருந்தாலும் வெகு சில பெற்றோர்களே குழந்தைகளை பிறப்பிக்கும்போது தங்களது கடமைகளை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது பரிதாபகரமானதாக காணப்படுகிறது. எனவே சில தகப்பன்மார்களே தங்களது மனைவிகளையும், குழந்தைகளையும் பாதுகாத்து பராமரிப்பது தமது கடமை என்பதை உணர்ந்திருக்கிறார்கள்; மனசாட்சியும் உயர்ந்த குணமும் உள்ள மனைவி குடும்பத்திற்கு தாயாக இருக்கும்படி தேர்வு செய்வது அவர்களது கடமையும் உரிமையுமாகும். அது மாத்திரமல்ல, அவள் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்தில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித்தருவது அவனது கடமையாகும். அதாவது அவளது மனமும் இருதயமும் சுத்தமாக, அன்புடையதாகவும் தேவனுக்கும் நீதிக்கும் உண்மையாக இருக்கும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும். ஏனெனில் அவர்களது குழந்தைக்கு நற்குணங்கள் பதிய வைக்கப்பட்டு, பாவ குணங்கள் பதிவது குறைக்கப்படவும் இது அவசியமாக இருக்கிறது. வேதம் கூட "ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்" என்று நன்றாய் கூறுகிறது. (ஓசியா 4:6)

இனத்தை உயர்த்துகிற உந்துத–ல் நமது கவனம் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பது உண்மை. ஆனால் எதற்காக? இந்த போதனையின் முக்கியத்துவம் ஆரோக்கியமான மற்றும் சரியான வாழ்க்கை துணையை தேர்வு செய்வதைப் பற்றியது. நாம் குறிப்பிடுகிற கொள்கைகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது அது முக்கியமில்லாததில் அமிழ்ந்து போகிறது. அதாவது கர்ப்பந்தரித்திருக்கும் காலத்தில் தாயின் மனதில் இருப்பவை குழந்தைக்கு பதிவாகிறது. அனுகூலமாகவோ அனுகூலமில்லாமலோ அவளது குழந்தையின் குணலட்சணம் பதிவாகிறது. ஒரு பரிபூரண குழந்தையை உருவாக்குவது நிச்சயமாக ஒரு தாயினால் கூடாத காரியம்தான். ஆனால் அவளது சொந்த உயர்ந்த, உறுதியான, உண்மையான குறிக்கோள்கள், பரிசுத்தமான உயர்ந்த நல்ல காரியங்களில் பொருத்தப்படுகிறது. இப்படியாக அவளது குழந்தை மாமிச பிரகாரமாகவும் அறிவின் பிரகாரமாகவும், நல்லொழுக்கம் பிரகாரமாகவும் அதிகமான அனுகூலத்தை அடைகிறது. சிருஷ்டிப்பின் போட்டோ–டிராமா (Photo Drama of Creation) புத்தகத்தில் நாம் காண்பித்திருக்கிறதுபோல, பூரண தாயாகிய ஏவாள் அவளது மகன் காயீனில் பொறாமை, சந்தோஷமற்ற மனச்சார்பு போன்ற குணங்களை பதிய வைக்க முடிந்தது, பதிய வைத்தாள். இந்த குணம் அவனை தனது சகோதரனை கொலை செய்யும் அளவுக்கு கொண்டு சென்றது.

## Solomon, King of Israel
## இஸ்ரயே□ன் ராஜாவாகிய சாலொமோன்

1 ராஜாக்கள் 1:1 to 2:12

*தாவீது ராஜா வயது சென்றவனனான் – ஒரு புதிய கலகம் உருவாகுதல் – இஸ்ரயே–ன் சிங்காசனத்திற்கு சாலொமோன் அழைக்கப்பட்டான். – கர்த்தரின் விருப்பத்தின்படி அவன் அபிஷேகம் பண்ணப்பட்டான் – திரளானவர்களின் அங்கீகாரம்–அவனது பெயரின் பொருள் – அவனது இயற்கையான அனுகூலமும் அவனது நன்மதிப்பிற்கான முன்னேற்பாடும்.*

*"நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி." நாளாகமம் 28:9*

தாவீது ராஜாவுக்கு எழுபது வயதானது. அவனது மூத்த மகன் அப்சலோம் கலகம் பண்ணி கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் இறந்து போயிருந்தான். தாவீதுக்கு அடுத்த மூத்த மகன் அதோனியா என்பவன், அப்சலோம் இறந்துபோனதால் அதோனியா சிங்காசனத்திற்கு வாரிசாக ஆனான். இந்த சமயத்தில் அவனுக்கு வயது முப்பதி–ருந்து நாற்பதுக்குள் இருக்கும். நீண்ட காலமாக தாவீதின் ராணுவத்திற்கு தளபதியாயிருந்த யோவாபும் வயது சென்றவனானான். அவனும் ஓய்வு பெறும் வயதையடைந்தான். வயது சென்றது மாத்திரமல்ல, அப்சலோமை கொல்ல வேண்டாம் என்று சொன்ன தாவீதின் கட்டளையை அசட்டை பண்ணியதால் தாவீது ராஜாவின் உணர்வுகளை காயப்படுத்தியிருந்தான்.

நீண்ட காலம் படைத்தலைவனாயிருந்த யோவாபின் நட்பும், பிரபலமான ஆசாரியர்களில் ஒருவனது நட்பும் அ தோனியாவுக்கு கிடைத்திருந்ததால், தன்னை ராஜாவாக பிரகடனப்படுத்துவதற்கு இதுதான் சரியான நேரம் என்று அதோனியா நினைத்தான். இவன் ஒரு விருந்து ஏற்பாடு செய்து அதில் தாவீது ராஜாவுக்கு பிரியமாயிருந்த சாலொமோனைத் தவிர மற்ற அனைத்து ராஜகுமாரர்களையும் அழைத்திருந்தான். விருந்து எருசலேமுக்கு அருகாமையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விருந்தின் மத்தியில் அங்கிருந்தவர்களில் ஒருவன் அதோனியாவை ராஜாவாக வாழ்த்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மற்றவர்கள் அனைவரும் அதைத் தொடர்ந்து இதே மனவெழுச்சியை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்படியாக இந்த இயக்கம் வெளித்தோற்றத்தில் ஒரு கலகமற்ற பிரபலமான ஒன்றாக இருந்தது. திட்டமிட்டபடி அது அதிக அளவில் நிறைவேற்றியது

எனினும் இந்த காரியம் தேவனருளால் தாவீது ராஜாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அவன் உடனடியாக புதிய தளபதி பெனாயா, தீர்க்கதரிசி நாத்தான் மற்றும் ஆசாரியனாகிய சாதோக் ஆகியோரிடம் பேசி சாலொமோனை ராஜாவின் வெள்ளை கோவேறு கழுதையின் மேல் ஏற்றி தாவீதுக்குப்பின் இவன்தான் ராஜா என்பதை அடையாளப்படுத்த ஏற்பாடு செய்தான். பிறகு கர்த்தரின் நாமத்தில் சாலொமோன் அபிஷேகம் பண்ணப்பட்டான். உடனே ராணுவ மரியாதை அவனுக்கு அளிக்கப்பட்டது. எருசலேமின் ஜனங்கள் அனைவரும் "ராஜாவாகிய சாலொமோன் வாழ்க"என்று வாழ்த்தினார்கள். பிறகு தாவீது ராஜாவின் கட்டளைப்படி சாலொமோன் ராஜா சிங்காசனத்திற்கு அழைத்து வரப்பட்டு பகிரங்கமாக முடிசூட்டப்பட்டான்.

அதோனியாவின் திட்டங்கள் அதிர்ச்சியூட்டும்படியாகக் காணப்பட்டது. அவனோடிருந்தவர்கள், ஜனங்களின் ஆரவாரங்களையும், எக்காளம் முதலானவை ஊதுகிறதையும் கேட்டு, அதன்பிறகு சாலொமோன் முடி சூட்டப்பட்டு ராஜாவாக்கப்பட்டான் என்பதை அறிந்து கொண்டார்கள். அதோனியா தன் உயிருக்கு பயந்து ஓடிப் போனான். அவனைச் சார்ந்தவர்களும் போய்விட்டார்கள். பிற்பாடு சாலொமோன் தனது சகோதரன் அதோனியாவுக்கு சமாதானத்தை உறுதிப்படுத்தி சொல்–யனுப்பினான்.

இப்படியாக தாவீது ராஜாவின் பொது வாழ்க்கை ஒளி மங்கி அல்ல, உச்சக்கட்டத்தில் நன்கு வயது சென்ற பிறகு முடிவுக்கு வந்தது. தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட மகனை சிங்காசனத்தில் நிலைத்திருக்கும்படி செய்தான். புலவரின் வார்த்தைகள் அவனுக்கு நன்கு பொருத்தமாக இருக்கிறது:

*"விடிவெள்ளி நட்சத்திரம் ஸ்தாபிக்கப்படுவதுபோல அவன் ஸ்தாபிக்கிறான்,*
*மேற்கின் இருளின் பின்னே அது மறைவதில்லை.*
*வானத்தின் கடும்புயலுக்கு நடுவே தன்னை மறைத்துக் கொள்வதில்லை,*
*ஆனால் வானத்தின் ஒளியிலே அது உருகுகிறது."*

### சாலொமோன், சமாதானத்தின் மகன்

சாலொமோனின் பெயர் ஞானத்தை குறிப்பதாக இருந்தாலும், ஆரம்பத்தில் முக்கியமாக சமாதானத்தை அர்த்தப்படுத்துவதாக இருந்தது, அது நிச்சயமாக அவனது அதிசயதக்க வாழ்க்கையின் தீர்க்கதரிசனமாக இருந்தது. அதில் போர் என்பதே இல்லை.

சாலொமோன், பத்சேபாளுக்கு, அவள் தாவீதுக்கு சட்டப்படி மனைவியானதற்கு பிறகு பிறந்த மகனாக இருந்தான். தேவன் தாவீதுக்கு பிறகு ராஜாவாக வேண்டியவன் சாலொமோன் என்று தாவீதுக்கு வெளிப்படுத்தியிருந்தார். எப்படியோ இது விளக்கப்படவில்லை. தாவீதும் பத்சேபாளிடம் வாக்குக் கொடுத்திருந்தான். தாவீது அநேக போர்களை நடத்தி அதை முடிக்கும் தருவாயிலும், தனது வாழ்க்கையில் இரண்டு பாவங்களை செய்து அதற்காக வருத்தப்படுகிற காலத்திலும்

சாலொமோன் பிறந்தான். இது அவனை ஆச்சரியத்தக்கவிதமாக நிதானமானவனாக, தூய்மைப்படுத்தியது என்று நாங்கள் நம்புகிறோம். இந்த முக்கியமான காரியத்தில் தேவனிடத்தில் அவனது விசுவாசமும், பாவமன்னிப்பிற்காக தாவீது ராஜாவின் ஊக்கமான ஜெபமும், தேவனிடமிருந்து சமாதானத்தை உணர்ந்து கொண்டதும் அவனை வெளியரங்கமான ஒரு புது மனிதனாக்கியிருந்தது. இதற்கு முன்னால் கூட அவன் விசுவாசமுள்ளவனாக இருந்தான். ஆனால் இப்போது இன்னும் பக்தியுள்ளவனாக ஆனான். அவன் கேட்டுக்கொண்டபடி கிடைத்த சமாதான, தெய்வீக மன்னிப்புக்கு அடையாளமாக இது இருந்தது. இது சாலொமோன் ராஜாவை நற்குணமுள்ளவனாகவும் சிந்தனாசக்தி உள்ளவனாகவும் ஆக்கியது. அவனது பெயருக்கும் கூட அது காரணமாயிருந்திருக்கும். அவனது பெற்றோர்கள் தேவனுடன் பெற்ற சமாதானத்தை அவனது பிறப்பு குறிப்பிடும்படியாகக் கூட அவனுக்கு இந்த பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

எந்த ஒரு நிகழ்ச்சியிலும், சரித்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள அவனது எந்த சகோதரனின் குணலட்சணத்தைக் காட்டிலும் சாலொமோனுடைய குணலட்சணம் வித்தியாசமுள்ளதாக இருந்ததாக நாம் காண்கிறோம். அவன் மற்றவர்களைக் காட்டிலும் அவனது தந்தை தாவீதின் மத விருப்பங்களில் ஈடுபட்டான். இப்படியாக அவன் அதிக ஆதரவு பெற்றவனாக, அதிக திறமையுள்ளவனாக இருந்தான். நாம் சுதந்தரித்துக் கொண்ட குணலட்சணங்களிலும் மனச் சார்புகளிலும் நாமும் மற்றவர்களும் எந்த அளவுக்கு குறையுள்ளவர்கள் அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை நாம் மதிப்பீடு செய்ய இதுவே தக்க தருணம்.

இன்னுமொரு அனுகூலமான காரியம் சாலொமோனுக்கு இருந்தது. அதாவது அவனது தாய் புறஜாதி பெண்ணல்ல, இஸ்ரயேல் வம்சத்தை சேர்ந்தவள், ஆகையால் தெய்வீக ஏற்பாடுகள், பிரமாணங்கள், முதலானவைகள் தாவீதின் மற்ற மனைவிகளைக் காட்டிலும் இவளுக்கு ஒரு பரிவை காண்பித்தது.

இன்னும் கூடுதலாக, தாவீது தனது மனதில் அரியாசனத்திற்கு தனது வாரிசை சிந்தித்து வைத்திருந்ததை குறிப்பு காண்பிக்கிறது. ஒரு வேளை தாவீது அந்த சமயத்தில் மற்ற பிள்ளைகளுக்குரிய கடமைகளை செய்யவில்லை, அதாவது நியாய ஸ்தலம் போன்ற காரியங்களில் அவர்களை பயிற்றுவித்து வளர்க்கவில்லை என்பதை உணர்ந்து, சாலொமோன் விஷயத்தில் அதை சீர் செய்து சிறிய வயதிலேயே சாலொமோன் கொஞ்ச காலம் தாயின் பராமரிப்பில் இருந்தாலும், தீர்க்கதரிசி நாத்தானிடம் அவன் ஒரு சீஷனாக, மாணவனாக இருக்கச் செய்தான். இந்த மிகச் சிறந்த ஆரம்பம் சாலொமோனின் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்திருக்கும். இதை நாம் அடுத்த பாடத்தில் ஆராய்வோம்.

---------------------------------

# சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள்
# Temptation Different Phases of the Word

*"சோதிக்கப்படுகிற எவனும், தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல, அவனவன் தன்தன் சுய இச்சையினாலே, இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்." யாக்கோபு 1:13,14*

அநேக ஜனங்கள், அதுவும் குறிப்பாக கிழக்கத்திய நாட்டினர். ஆபத்தான ஒரு சுபாவத்தை உடையவர்களாக இருக்கின்றனர். உதாரணத்திற்கு முகமதியர்கள், தங்கள் மேல் வருகிற இயற்கையான அழிவை "இது கடவுளால் வந்திருக்கிறது" என்று கூறி எதுவும் செய்யாமல் தங்களை ஒப்புவிக்கின்றனர். இந்த ஜனங்கள் பாவத்தைக் குறித்தும் இதே மாதிரி மனோபாவத்தை உடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் கூறுகிறதாவது, "நான் பாவம் செய்யவேண்டும் என்பது கடவுளின் சித்தமாக இருக்கிறது. ஆகையால் நான் குறை கூறத்தக்கவன் அல்ல. நான் பாவம் செய்ய வேண்டும் என்பது அவரது சித்தமானால், நான் பாவம் செய்வேன். பாவத்தின் அடையாளங்களை நாம் சுமக்க வேண்டும் என்பது அவரது சித்தமானால் பாவத்தின் அடையாளங்களை நாம் சுமப்போம்." இது மிகவும் தீங்கான தவறு. தேவன் எந்த மனிதனையும் பாவம் செய்ய தூண்டுகிறவர் அல்ல. நம்முடனான தேவனுடைய செயல் தொடர்புகளை நாம் உணர்ந்து, அதற்கு நம்மை தாழ்த்துவது மிகவும் முற்றிலும் சரியான செயல்தான். ஆனால் அப்போஸ்தலர், சோதனைகள் தேவனால் வருகிறதல்ல, ஒருவன் தானே சோதனைக்குள் சிக்கிக்கொள்கிறான் என்று கூறுகிறார். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கிழக்கத்தியவர்களின் மனோபாவத்திற்கு எதிராக, "சோதனைகள் தேவனிடமிருந்து வருகிறதல்ல, நமது சோதனைகள் எல்லாம் சத்துருவிடமிருந்து வருகிறது" என்று கூறுகிறார்கள்.

ஆனால் அப்போஸ்தலர் யாக்கோபு, சோதனைகள் எல்லாம் நமது சுய இச்சையினாலும், பலவீனத்தினாலும் வருகின்றன என்று குறிப்பிடுகிறார். இவைகளெல்லாம் நம் வாழ்க்கையில் நம்முடன் இணைந்தவர்கள், நண்பர்கள் மூலமாக தூண்டப்படுகின்றன. பல்வேறுவிதமான கவர்ச்சிகள் நம்மை தீமைக்கு இழுக்கின்றன என்பதற்கான உதாரணங்கள் நம்மைச் சுற்றி இருக்கின்றன. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் சாத்தான்தான். எல்லாப் பாவங்களும் உலகத்தில் அவன் மூலமாகவே நுழைந்தன. நமது ஆதி பெற்றோர்களை வஞ்சித்ததின்மூலம் சாத்தான் இதை செய்திருந்தான். இப்படியாக பாவத்தை நுழைத்திருந்தான். சாத்தானும் அவனது சேனைகளும் நமது பலவீனங்களுடன் சேர்ந்து முடிந்தவரை கிரியை செய்து வருகின்றன. ஆனால் இவைகள் நமது சொந்த பொறுப்பி–ருந்து நம்மை விடுவிக்க முடியாது. ஏனெனில் இவர்களில் யாருக்கும் நமது சித்தத்தில் பலவந்தம் பண்ண எந்த சக்தியும் கிடையாது. நமது இயற்கையான குணலட்சணத்தின் பலம் மற்றும் பலவீனத்தைப் பொருத்து நமது பொறுப்பு மாறுபடலாம். ஆகையால் நாம் "காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லக்கூடாது." இது தேவன் மட்டுமே முழுவதுமாக தீர்ப்புச் செய்யக்கூடிய காரியமாக இருக்கிறது. ஒருவன் எந்த அளவுக்கு ஜெயம் கொள்ள முடியும் என்பதை அவர்தான் தீர்ப்பு செய்ய முடியும்.

ஆகையால் சோதனை தேவனால் வருவதில்லை என்பதை தேவனுடைய ஜனங்கள் உணரவேண்டும். சோதனையை கட்டுப்படுத்த அவர்கள் தேவனுடைய பக்கம் இருப்பார்கள். சோதனை தங்களிடமிருந்து வந்தாலும், அல்லது சத்துருவிடமிருந்து வந்தாலும், அல்லது மற்றவர்களின் பலவீனத்தினால் வந்தாலும் அவர்கள் அதை ஜெயிக்கிறவர்களாக, எதிர்க்கிறவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அது அவர்களை பாவத்திற்கும், தேவனுடைய சித்தத்துக்கு மாறுபாடான காரியங்களுக்கும் வழி நடத்தும்.

தேவன் எந்த மனிதனையும் சோதிப்பதில்லை என்று அப்போஸ்தலர் கூறுகிறார். தேவன் பாவம் செய்ய நம்மை தூண்டுகிறார் என்று நாம் நினைப்போமானால் அது ஒரு பயங்கரமான சிந்தனை. ஏனெனில் அவரது வல்லமையினால், அவர் நம்மேல் கொண்டு வருகிற எதையும் எதிர்க்க முடியாது, நிச்சயமாக நாம் ஜெயம் கொள்ளப்படுவோம். ஆனால் சோதனை தேவனிடமிருந்து வரவில்லை என்பதை நாம் அறியும் பொழுது, அவர் நமக்கு உதவுவார் என்பதையும், நமது திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதற்கு இடங்கொடுக்கமாட்டார் (1 கொரி.10:13) என்பதையும் ஒவ்வொரு சோதனையி–ருந்தும் தப்பித்துக் கொள்ளும்படியான வழியையும் ஏற்படுத்துவார் என்பதையும் நாம் அறிகிறோம். நமக்கு பாதுகாப்பும் உதவியும் தேவைப்படுவதால், அவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறபடி அவர் நம்மை பாதுகாப்பார். நமது மனதில் இப்படிப்பட்ட எண்ணத்துடன் நாம் பலமுள்ளவர்களாக இருக்கக்கூடும்.

### தேவன் ஆபிரகாமை எப்படி சோதித்தார்

நாம் பழைய ஏற்பாட்டை பார்க்கும் போது, நாம் "தேவன் ஆபிராமை சோதித்தார்" (ஆதி 22:1) என்றும்,"உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை ....அவனை தகன ப–யாகப் ப–யிடு என்றார்"என்றும் வாசிக்கிறோம். இங்கே கேள்வி எழும்புகிறது. "தேவன் ஆபிராமை சோதித்தார்" என்ற கூற்றை எப்படி நாம்

அப்போஸ்தலரின் கூற்றாகிய தேவன், "ஒருவரையும் சோதிக்கிறவர் அல்ல" என்ற கூற்றோடு ஒத்து போகப்பண்ண முடியும்? அப்போஸ்தலர் யாக்கோபு தனது கூற்றில் தேவன் பொல்லாங்கினால் யாரையும் சோதிக்கிறவர் அல்ல என்று கூறுகிறார் என்பதே பதிலாகும். தேவன் நன்மை செய்ய நம்மை சோதிக்கிறார். அவர் நமக்கு முன்பாக "மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களான"(2 பேதுரு 1:4) ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறார். அவைகள் நம்மை காந்தத்தைப் போல இழுக்கிறது என்று நாம் சொல்லலாம். இந்த வார்த்தைகளினால் நாம் தேவனால் சோதிக்கப்படுகிறோம். ஆனால் தேவன் நம்மை தீமை செய்யவோ, பாவம் செய்யவோ தூண்டவில்லை. தேவன் ஆபிரகாமை சோதித்தது, பரீட்சித்தது, அவருக்கு தீங்கு செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல, அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக ஆகும். ஆபிரகாம் அந்த பரீட்சையில் நின்றதால், பெரிய ஆசீர்வாதங்களை தேவன் அவருக்கு உடன்படிக்கை செய்ய முடிந்தது, ஆபிரகாமும் அதன்படி செய்தார்! தேவன் ஆபிரகாமுக்கு இந்த வாழ்க்கையில் அநேக ஆசீர்வாதங்களை கொடுத்தார். வரவிருக்கிற வாழ்க்கையில், உயிர்த்தெழுத-ல் பெரிய ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணினார்.

ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட சோதனை அவனது மகனாகிய ஈசாக்கை ப-யாக செலுத்த வேண்டும் என்பது, இந்த ஈசாக்கை மையமாக வைத்தே ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தன. ஆபிரகாம் உடனடியாக கீழ்ப்படிந்து தனது விசுவாசத்தை நிரூபித்தான். தேவன் கொடுத்த வாக்குத்தத்தம், நிறைவேறும்படியாக, தேவன் தனது மகனை மரித்தோரி-ருந்து எழுப்ப வல்லவராயிருந்தார் என்று ஆபிரகாம் அறிக்கையிட்டார். (எபிரேயர் 11:18,19) ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்பட்டபோது, தனது மகனை வெட்ட கத்தியை ஓங்கிய போது, கர்த்தர் தூதன் மூலம் ஆபிரகாமின் கையை நிறுத்தச் செய்து, ப-க்காக ஒரு ஆட்டைக் கொடுத்தார்.

## ஏன் தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல

நமது தலைப்பு வசனத்தின் அடுத்த பகுதி தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவர் அல்ல என்பதாகும். இது எப்படி என்று ஆராய்ந்து பார்க்கிறோம். நமது கர்த்தராகிய இயேசு, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்" என்பதையும் ஆனால் "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருந்தார்"என்பதையும் நாம் நினைவு கூருகிறோம். (எபிரேயர் 7:26; 4;15) இயேசு இப்படியாக பரிசுத்தமுள்ளவராகவும், பிதாவோடு முற்றிலுமாக இசைந்தவராயிருந்தால், பிதாவானவரும் சோதிக்கப்படுவராயில்லாதிருக்கும்போது, எப்படி இயேசு சோதிக்கப்படுகிறவராக இருக்கக்கூடும்? நமது கர்த்தர் மாமிசத்தில் பூரணமுள்ளவராகவும் ஒரு மனிதராகவும் இருந்தார். ஆனால் மனுக்குலம் அறிவிலும் சகிப்புதன்மையிலும் ஒரு எல்லைக்குட்பட்டிருக்கிறது. மனித மூளையும் மனித சரீரமும் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளவோ, எல்லாவற்றையும் தாங்கவோ முடியாததாக இருக்கிறது. தேவன் எல்லாவற்றையும் நம்மிடம் சொல்லாததற்கு இது ஒரு காரணமாக இருக்கிறது. நாம் விசுவாசத்தின்படி நடக்க வேண்டும். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, தேவனுக்கடுத்த அநேக ஆழ்ந்த காரியங்களை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மனிதன் நித்திய காரியங்கள் அனைத்தையும் சரியாக உணர்ந்து கொள்ள முடியாது. ஏனெனில் அவைகள் அவனது கிரகித்தலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றன.

விளக்கத்திற்காக, ஒரு நாயை, நாம் சொல்லுகிறதை ஓரளவுக்கு நிறைவேற்றுகிற மிகவும் ஞானமுள்ள ஒரு நாயை எடுத்துக் கொள்ளுவோம். நாம் அதனிடம் திரிகோணவியலைப் பற்றியோ, உயர் கணிதத்தை எந்த முறையிலோ, வானயியலைப் பற்றியோ பேச முயற்சி செய்தால், குழம்பும் என்று சொல்லமுடியாது, முற்றிலுமாக புரிந்து கொள்ளவே முடியாது.

ஆகையால் மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே பெரிய பிளவு இருக்கிறது. தெய்வீக திட்டத்தின் அனைத்து பகுதிகளையும், அனைத்து விவரங்களையும் கிரகிக்க இயலாது. பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலால் கூட "கண்ணாடியில் நிழலாட்டமாய் பார்ப்பது போல" நாம் பார்க்கிறோம், அப்போஸ்தலர் நமக்கு கூறுவது போல முகமுகமாய் பார்க்கவில்லை. தெய்வீக சுபாவத்தில் நாம் பூரணமடையும் போது, தேவனுடைய நிலையி-ருந்து, முழுவதுமாக முற்றிலுமாக நாம் பார்ப்போம்.

## நமது கர்த்தரின் சோதனை

ஆகையால் நமது கர்த்தராகிய இயேசு, இயற்கையாகவே பூரண மனிதராக இருந்து ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஒரு புது சிருஷ்டியாக ஆனார். ஆனால் புது சிருஷ்டி மனித சரீரத்தின் மூலமாக ஜீவித்து கிரியை நடப்பித்தார். இயேசு மாமிசத்தில் இருந்ததுவரை அவர் ஒரு எல்லைக்குட்பட்டிருந்தார். அவர் அபூரண ஜீவிகளாலும், அவர்களது ஆசைகள், அவர்களது கருத்துக்கள், அவர்களதுஅபூரணம் ஆகியவற்றால் சூழப்பட்டிருந்தார். பூமிக்குரிய ஆசைகளை ப-யிடுவதற்கு அவருக்கு அதிகமான விசுவாசம் தேவைப்பட்டிருக்கும். ஆகையால் தேவன் பேரில் உள்ள விசுவாசத்திலும், அவருக்கு கீழ்ப்படித-லும் இயேசு தீவிரமான சோதனையைப் பெற்றிருந்தார். அவர் பாவத்தினாலோ. பலவீனத்தினாலோ சோதிக்கப்படவில்லை, ஏனெனில் அவரிடம் பாவமோ அல்லது பலவீனமோ இல்லை. ஒரு இயற்கையான சுபாவமுள்ள மனிதனைப் போல அவர் சோதிக்கப்படவில்லை. ஏனெனில் அவர் இயற்கையான மனிதனைப் போ-ராமல், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவராயிருந்தார். அவர் தேவனுக்கு கீழ்ப்படித-லும், தெய்வீக கவனிப்பில் நம்பிக்கை வைப்பதிலும் சோதிக்கப்பட்டார். நமது முன்னேற்றத்திற்காக நாமும் இதேபோல் சோதிக்கப்படுகிறோம். நாம் சந்தோஷத்துடன் காண்கிறவைகளை விட்டு, நமது ஜீவனை உண்மையாக கொடுப்பதற்கும் காணப்படாதவைகளை அடைவதற்கும் நாம் சோதிக்கப்படுகிறோம்.

பலத்திலும் அறிவிலும், நமது கர்த்தர் ஒரு மனிதனைப்போல, பிதாவி-ருந்து வெளிப்படையாக

மாறுபட்டவராக இஒருந்தார். பிதாவானாவர் எப்பொழுதும் நன்மை, தீமையை உடனே அறிந்து கொள்ளக்கூடியவராகவும், எந்த விதத்திலும் பலவீனம் இல்லாதவராகவும், எதனாலும் சோதிக்கப்படக் கூடாதவராகவும், தமது சொந்த சித்தத்தை நிறைவேற்றுவதில் பலமுள்ளவராகவும், பாவத்திற்குரிய எதற்கும் சாயாதவராகவும், அதன்மேல் வெறுப்புள்ளவராகவும் இருக்கிறார். எல்லையற்ற வல்லமை அவரிடத்தில் இருக்கிறது. நமது கர்த்தராகிய இயேசுவும் பாவத்தைக் குறித்து இதே மனோபாவத்தை பெற்றிருந்ததைக் குறித்து நாம் வாசிக்கிறதாவது: “நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர், ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.”(சங்கீதம் 45:7; எபிரேயர் 1:9) கர்த்தராகிய இயேசுவின் சகோதரர்களாகிய நாம் அனைவரும், பாவத்தைக் குறித்து நம்மில் இருக்கிற சுபாவத்திலும், விசேஷமாக நம்மில் இருக்கிற பாவத்திலும், பாவத்தைக் குறித்து எங்கும் இதே நிலைப்பாட்டையே எடுக்க வேண்டும். அவரது முன்மாதிரியை பின்பற்ற முயற்சிப்பதால் கர்த்தருடைய சீஷர்களில் தொடர்ச்சியான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

ஆகையால் தேவன் ஒருவனையும் சோதிக்கிறவருமல்ல, அவரும் எதினாலும் சோதிக்கப்படுகிறவருமல்ல. அவர் தீமையினால் சோதிக்கப்படக்கூடியவரல்ல. தீமையானது அவரிடம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. நமது கர்த்தராகிய இயேசுவும இதே நிலைமையில் இப்போது இருப்பதால் அவரும் சோதிக்கப்படமுடியாது. அவர் தெய்வீக சுபாவம் உடையவராகவும், வல்லமையில் பூரணராகவும் இருக்கிறார். உயிர்த்தெழுத-ன் “மறுரூபத்தினால்” அதே நிலைமையை நாம் அடையும்போது நாம் தீமைக்கோ, சோதனைக்கோ உட்படமாட்டோம். நாம் பரிபூரண வல்லமையுடையவர்களாகவும், தேவனுக்குரிய நன்மையானவைகளுடன் முழு இசைவாய் இருப்போம்.

--------------------------------------------

**R5702**

## The Father's Wise Counsel

# பிதாவின் ஞானமான ஆலோசனை

*"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக." நீதிமொழிகள் 23:26*

ஞானமுள்ள மனிதனாகிய சாலொமோனுக்கு அநேக மனைவிகள் இருந்தார்கள். ஆகையால் அவனுக்கு அநேக மகன்கள் இருந்திருக்கக்கூடும் என்று நாம் நினைக்கலாம். இந்த வசனங்களை அவர்களில் ஒருவனுக்கோ அல்லது வாரிசுகளாக இருக்கக்கூடிய ஒவ்வொருவருக்குமோ அவன் கூறியிருக்கலாம் என்று நாம் தீர்மானிப்பது நியாயமானதாக காணப்படுகிறது. சாலொமோன் தன் சொந்த வழிகளில் விசேஷித்த கவனத்தை செலுத்த விரும்பினான் என்று நாம் நினைக்கலாம். "உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக." அவன் ஒரு மகனால் பின்பற்றப்படுவதற்கு நல்ல ஒரு உதாரணமாக எப்பொழுதும் அவன் இருந்ததில்லை. இதன் உண்மை பொருளுக்காக இன்னும் நாம் கவனிக்க வேண்டும். ஆரம்பத்தில் சாலொமோனுக்கு விசேஷித்த ஞானம் கர்த்தரால் கொடுக்கப்பட்டதை நாம் நினைவுப்படுத்துகிறோம். ஏனெனில் அவன் ராஜாவானவுடன் அதற்காக தேவனிடம் ஊக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் ஞானத்தை பயன்படுத்தி வந்தான் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். ஞானம் கூறுகிறதாவது, "என் மகனே (ஞானத்திற்கு மகனாக இருக்க விரும்புகிறவர்கள் யாராயிருந்தாலும்) உன் இருதயத்தை எனக்குத் தா." ஞானம் என்பது சிருஷ்டிகளுக்கு இன்னொரு பேராக இருக்கிறபடியால், தேவன் தம் பிள்ளைகளுக்கு அவர்களது இருதயத்தை தமக்கு தரும்படி அழைப்புக் கொடுத்து தமது வழிகளை கைக் கொள்ளும்படி கூறுகிறார். இந்த வசனத்தி–ருந்து நாம் பெறுகிற ஒரு நல்ல பாடமாக இது இருக்கிறது.

### மகனுக்குரிய உரிமை எப்படி இழக்கப்படுகிறது அல்லது பராமரிக்கப்படுகிறது

நமது இனத்தின் பிதாவாகிய தேவன், முதன்முத–ல் நமது தகப்பனாகிய ஆதாமில் நமது ஜீவனை பூரணமாக உண்டாக்கினார். மேலும் அவர் தேவதூதர்களுக்கு பரிபூரண ஜீவனையும் வாழ்வையும் கொடுத்து, அவர்கள் அனைவரும் தங்களது இருதயங்களை தமக்கு தரவேண்டும் என்று விரும்பினார். அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட நேரத்தி–ருந்து அவர்கள் அவரது குமாரர்களாக இருந்தார்கள். லூசிபரும் தேவனுடைய மகனாக இருந்தான். ஆதாம் தேவனுடைய மகனாக இருந்தான். தேவனுடைய மகனுடைய சரியான மார்க்கம் தன்னுடைய பிதாவின் சித்தத்தை முழுவதுமாக நிறைவேற்றும்படியாக தன்னை மாற்றிக் கொள்வதேயாகும். ஆனால் லூசிபரின் விஷயத்தில், பிதாவின் சித்தத்துக்கு இசைவாக தனது இருதயத்தை திருப்புவதற்கு பதிலாக, தனது சுயசித்தத்தை செய்ய நாடி, முயற்சி செய்து அதில் பரிதாபகரகமாக தோற்றுப் போனான் என்று நாம் காண்கிறோம். தங்கள் ஆதி மேன்மையை காத்துக்கொள்ளாத சில தூதர்களும், தேவனுடைய குமாரர்களாக இருந்தும் தங்களது இருதயத்தை கர்த்தருக்குக் கொடுக்கவில்லை; அவர்களும் பரிதாபகரமாக தோற்றுப்போனார்கள். இவர்களெல்லாரும் பாவம் செய்து தங்களது மகனுக்குரிய உரிமையை இழந்தார்கள். தொடர்ச்சியான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமே மகனுக்குரிய உரிமையை பராமரிக்க முடியும்.

மனுக்குலம் மறுபடியும் தம்மிடம் வரும்படியான ஏற்பாடுகளை தேவன் செய்திருக்கிறார். அதேபோல விழுந்துபோன தூதர்களும் மகா நியாயத்தீர்ப்பின் நாளில் வருந்தி மனத்திரும்பினால் மறுபடியும் தேவனுடனான ஐக்கியத்திற்கு வரமுடியும் என்று நாம் புரிந்து கொள்கிறோம். தேவனிடத்தில் திரும்பி வர விரும்புகிறவர்களுக்கு குறித்த காலத்தில் அவரது செய்தி என்னவென்றால், "நீ என் மகனாக இருந்தால், உன் இருதயத்தை எனக்குத்தா, உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக" என்பதாகும்.

நமது கர்த்தராகிய இயேசுவின் முதலாம் வருகையின் காலம் வரைக்கும், விழுந்துபோன ஜீவிகள் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான சந்தர்ப்பம் இல்லாதிருந்தது. அதன்பிறகு ஆதாமின் விழுந்துபோன இனத்தில் ஒரு வகுப்பாருக்கு மாத்திரம் இந்த சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் தெய்வீக சுபாவத்தில் உள்ள ஜீவிகளான குமாரர்கள் ஆவதற்கு அழைக்கப்பட்டார்கள். இதற்கு முன் யேகோவா தேவனால் இப்படிப்பட்ட அழைப்பு மனுக்குலத்தில் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு ஒரு மகனாக தமது இருதயத்தை முழுவதுமாக தேவனிடம் கொடுத்திருந்தார். எனினும் அவர் பூமிக்கு வந்தபோது, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் என்கிற இந்த மார்க்கம், உபத்திரவத்தின் மூலமாக கனம், மகிமை, சாகாமைக்கு வழி நடத்தியது. அது முதல் தேவனுடைய குமாரர்களாகும்படி நாடுகிறவர்கள், அவரது குமாரனாகிய இயேசுவை தங்களது இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாக பிதாவிடம் வருபவர்களை மட்டுமே தேவன் ஏற்றுக்கொள்வார் என்கிற செய்தியை கேட்டு, அதன் பிறகு தங்களை முழுவதுமாக தேவனுடைய சித்தத்துக்கு அர்ப்பணம் செய்கிறார்கள்.

தேவனுடைய ஜனங்களாகும்படி முயற்சிக்கிறவர்கள்

இந்த நிபந்தனைகளை நிறைவேற்றாமல் போனால், ஆபத்தான தவற்றை செய்கிறார்கள் என்பதையும், அவர்கள் அடைய விரும்பியதை அடையாமற் போகிறார்கள் என்பதையும் நாம் காண்கிறோம். நாம் எதையும் வைத்துக் கொள்ளக் கூடியவர்கள் அல்ல. தேவன் நமது இரட்சிப்புக்காக செய்திருக்கிற ஏற்பாடுகளுக்கு நாம் முற்றிலுமாக விசுவாசத்துடன் கீழ்ப்படிய வேண்டும். முழு அர்ப்பணத்திற்கான மனோபாவத்திற்கு நமது இருதயம் கொண்டு வரப்பட்டு, நிலைநிறுத்தப்பட வேண்டும்.கர்த்தருக்கு நியாயமாக தேவைப்படுகிற இந்த அனைத்து தேவைகளிலும் தங்கள் இருதய விசுவாசத்தை காண்பிப்பவர்களுக்கு அவர் கூறுவதாவது: "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." (வெளி 2:10)

## இயற்கையில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் தேவனுடைய வழிகள்

கர்த்தரிடம் தங்களது இருதயத்தை கொடுக்கிறவர்கள் அவரது வழிகளை கடைபிடிப்பதற்கு இன்னும் ஊக்கமளிக்கப் படுகிறார்கள். இதற்கு என்ன பொருள்? தேவன் செய்கிறதாக காண்கிற அனைத்தையும் நாம் செய்ய முயற்சிக்க வேண்டுமா? வழியை விட்டு விலகி, தண்டனை தேவைப்படுகிறவர்களுக்கு தண்டனையையும் தீர்ப்பையும் தேவன் நிறைவேற்றுவது சரியானதாக இருக்கிறது. இதே வழியில் நாமும் தண்டனை விதிப்பதோ, நியாயந்தீர்ப்பதோ சரியானதாக இருக்குமா? இல்லை. யார் மேலாவது தண்டனை விதிப்பதோ, தீர்ப்பு கூறுவதோ நமது வேலையல்ல. நாம் பாவத்தை கண்டிக்கலாம், கிரியையிலேயோ, வார்த்தையிலேயோ பாவமாயிருப்பதை நாம் ஆட்சேபிக்கலாம். அது பாவம் என்பதற்கான சரியான காரணமாக நாம் நம்புவதை அன்புடன் குறிப்பிடலாம். நாம் அன்புடன் கண்டனம் செய்யலாம். ஆனால் இப்படிப்பட்ட காரியங்களில் நாம் தவறுகள் செய்ய ஏதுவிருக்கிறது. கர்த்தரின் வீட்டிற்கு தகுதியற்றவர்கள் போன்ற கண்டனங்களை ஒருவரிடம் கூறுவது நமது அதிகாரத்தில் இல்லை. ஆகையால் இந்த காரியத்தில் கர்த்தரின் வழியை பின்பற்றக்கூடாது. ஆனால் நாம் கர்த்தரின் வழிகளின் விளக்கங்களில் அவரது குணங்களாகிய ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகியவைகளை காண்கிறோம். கர்த்தரின் வழிகளை நாம் உற்றுநோக்கும் போது அவரது இந்த குணலட்சணங்களை நாம் கவனிக்க முடியும். நாம் அவைகளை போற்றவும் பயபக்தியை காண்பிக்கவும் வேண்டியதாக இருக்கிறது. தேவனுடைய எல்லா வழிகளும் சில காலத்தில் நம்முடையதாக இருக்கும், ஆனால் இன்னும் இல்லை. ஏனெனில் நாம் இன்னும் அவரைப் போல பூரணராகவோ ஒரு பொறுப்பான நிலையிலேயோ இல்லை.

உலகமானது கர்த்தரின் வழிகளை மிக அதிகமாக பின்பற்றுகிறது என்பதையும், இந்த அதிசயிக்கதக்க நாளில் அவர்கள் விசை பம்புகளையும், இயந்திரங்களையும், மின்சாரம் போன்றவைகளையும் உற்பத்தி செய்கிறார்கள் என்பதையும் அநேகமாக அறியாதிருக்கிறார்கள். தேவனுடைய வழிகளை பின்பற்ற முயற்சிக்கிறோம் என்பதை வெகு சிலரே உணருகிறார்கள். உதாரணத்திற்கு, மானிட சரீரத்தில் இரத்தமானது தமனிகள் மற்றும் சிரைகள் மூலமாக உந்தப்படுகிறது (Pumped). இதன் மூலம் இரத்தம் சோதிக்கப்படுகிறது. இந்த நுட்பம் உலகின் உயர்ந்த இயந்திரங்களில் பின்பற்றப்படுகிறது. சரீரத்தின் நரம்பி–ருந்து நுட்பத்தை பின்பற்ற மனிதன் அறிந்திருந்தால், நீண்ட நாட்களுக்கு முன்பே மின்சாரம் முத–யவைகள் மூலமாக எப்படி தொலைபேசியை பயன்படுத்துவது என்பதை அறிந்திருந்திருப்பான். தேவனுடைய வழியை கவனிப்பவர்கள், இப்படி செய்யாதவர்களைக் காட்டிலும் மிகவும் ஞானமுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனால் உலகம் தேவனை அறியவில்லை. தேவனுடைய ஜனங்கள் கண்டுபிடிப்பவர்களாக (விஞ்ஞானிகளாக) இல்லாதிருந்தாலும் இயற்கையில் தேவனுடைய வழிகளை கவனிப்பதின் மூலம் பெரும் ஆசீர்வாதங்களை பெறுவார்கள்.

மனித சரீரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உயர்ந்த ஆச்சரியமான ஞானத்தை இன்னும் கவனியுங்கள். அது சிறிய அளவிலான மின்சாரத்தை இடைவெளி விட்டு எடுத்துக் கொள்வதின் மூலம் பலத்திற்கும் ஜீவனுக்குமுரிய சக்தியை வைத்துக் கொள்ள சாத்தியமாகிறது. குதிரையைக் கவனியுங்கள், இது ஓட்ஸ் என்ற தானியத்தையும், வைக்கோலையும் குறைவாக சாப்பிடுகிறது. ஆனால் இது உண்டாக்குகிற பலமும் சக்தியும் ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. ஆனால் மனிதரிடத்தில் இதன் மூலம் பலம், அறிவுடன் செயல்படுதல் மற்றும் காரண காரியத்துடன் சிந்தித்தல் போன்றவை கிடைக்கிறது என்பது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. இன்னும் அதிகமாக ஆராய்ந்தால் இன்னும் அநேக ஆச்சரியமான காரியங்களை காண முடியும்.

## தேவனுடைய வசனத்தில் காணப்படுகிற அவரது வழிகள்

நாம் தேவனுடைய குமாரர்களாகிய அவரது வழிகளை கடைப்பிடிக்க ஆரம்பித்தால், விசுவாசம், அறிவு, கீழ்ப்படித–ன் ஆவி மற்றும் அதிக தேவபக்தி ஆகியவைகளையும் பெற ஆரம்பிக்கலாம். தேவனுடைய குமாரர்களாயிருக்கிற அனைவரும் அவரது வழிகளை ஆராய்வார்கள். அவரது வசனங்களை ஆராய்வதி–ருந்து நாம் அவரது வழிகளை கற்றுக் கொள்கிறோம். இதற்கு வேதாகமத்தை சும்மா

படிப்பதோ, மனப்பாடம் செய்வதோ பொருளல்ல. வேதாகமத்தின் புத்தகங்களையோ அல்லது முழு அதிகாரத்தையோ மேற்கோள் கொடுக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எனினும் அவர்கள் படித்ததை புரிந்து கொள்ளவில்லை. பல அதிகாரங்களை படிப்பது புகழுக்குரிய காரியம் என்று நினைத்து படிப்பதால் நாம் தவறு செய்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வேதத்தை சும்மா படிப்பது பலனளிக்காது. நம்மில் கிரியை செய்கிற புதுப்பித்தல் மற்றும் பலமூட்டும் சக்தியுடன் விருப்பத்துடனும் நல்ல சந்தோஷத்துடனும் படிக்கும்போது நல்ல பலனளிக்கும்.

# பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள்

பல்வேறு திசைகளிலிருந்து, பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளானது பெருகிவருகின்றதென நாம் கேள்விப்படுகின்றோம். இது மிகுந்த மனநிறைவைக் கொடுக்கின்றது; ஆனால் அதே சமயம் இது சில குறிப்பிட்ட சிரமங்களுக்குள்ளும் வழிநடத்துகின்றது. சபையின் எண்ணிக்கை இருபதுக்கு மேலாகக் காணப்படுகையில், இவ்வகுப்புகளானது சமாளிக்க முடியாதவைகளாகக் காணப்பட்டு, குறைவான ஆசீர்வாதத்தையும், உதவியையுமே அளிக்கின்றதாகுகின்றது. எவ்வளவுதான் திறமிக்கவராக வழிநடத்துபவர் காணப்பட்டாலும், குறைவான மணி நேரங்களில் பெரிய எண்ணிக்கையிலுள்ள சபைக்குப் பிரயோஜனம் உண்டுபண்ணிட முடியாது. நாம் அளிக்கும் யோசனை என்னவெனில்: முழுச்சபையாருமே ஞாயிற்றுக்கிழமைகளில் கூடிடுவதற்கான விசேஷித்த ஒரு நேரத்தை அல்லது பல நேரங்களை ஒதுக்கி, அதில் திறமைகளை வெளிப்படுத்தும் சகோதரர்கள் பலரால் ஒன்று அல்லது அநேகம் சுருக்கமான உரைகள் அளித்திட ஏற்பாடு பண்ணப்படலாம். பின்னர் வாரப் பகுதிகளில், வகுப்புகளை வழிநடத்துவதற்கான திறமைகளை வெளிப்படுத்துகிற பல்வேறு சகோதரர்களின்கீழ்ப் பட்டணத்தினுடைய பல்வேறு பாகங்களிலுள்ள இல்லங்களில் வகுப்புகளை நடத்திடுங்கள். பத்து முதல் பதினைந்து பேரைக் கொண்டிருக்கும் இந்தப் புதிய வகுப்புகளானது, வளர்வதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் காலப்போக்கில் பிற்பாடு தனிச் சபைகளாகிடுவார்கள். இப்படியாகச் சத்தியத்தின் சாட்சியானது, அநேகம் எண்ணிக்கையானவர்களிடம் கடந்துசென்றிடும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் ஊழியம் நடைபெறும்; ஒவ்வொருவரும் எல்லாக் கூட்டங்களிலும் பங்கெடுப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பார்கள்.

இதே விதியானது புதன்கிழமை மாலை நடைபெறும் ஜெபம், துதி மற்றும் சாட்சிக் கூட்டத்திற்கும் பிரயோஜனமாய் இருக்கும். அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு சகோதரனுக்கும், சகோதரிக்கும் ஆராய்ச்சி வகுப்புகளிலும், சாட்சிக்கூட்டங்களிலும் பங்கெடுப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுப்பதன் முக்கியத்துவத்தினை நாம் ஒருபோதும் மறந்துபோக வேண்டாம். "உந்தன் இருதயத்தில் நீ விசுவாசிப்பாயானால், அதை நீ உன் வாயினாலே அறிக்கையிடு" என்பதே தகுதியான உண்மைதன்மைக்கான கர்த்தருடைய ஆலோசனையாக இருக்கின்றது. இப்படியாய் உண்மையாய்க் காணப்படுபவர்களே பொதுவாக மிகுதியான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்பார்கள்.

---

# சுயதேவை பூர்த்தியாகிய பாவம்

## Sin of Self - Sufficiency

*"மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்." நீதிமொழிகள் 16:5*

பெருமை என்பது அதிகப்படியான மற்றும் மிகையான சுயகௌரவமும் அல்லது ஆணவமுமாக காணப்படுகிறது. தன்னிடத்தில் என்ன திறமை உள்ளது என்பதை அறிந்து கொள்ளத்தக்கதாக ஒவ்வொருவரும் நியாயமான அளவுக்கு சுய மதிப்புடையவர்களாக இருக்க வேண்டும். இதன் மூலம் அந்த திறமையை பயன்படுத்த அலட்சியம் உள்ளவராக இருக்கமாட்டார். ஒருவருக்கு திறமை இருக்கும்போது தனக்கு திறமையில்லை என்ற உணர்வு அடக்கம் என்ற குணத்திற்கு தீங்கு விளைவித்து அதிகப்படியான அடக்கத்திற்கு கொண்டு சென்றுவிடும். உண்மையிலேயே திறமைகளில் வேற்றுமைகள் உண்டு. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான மற்றும் மதிப்புமிக்க திறமைகளையும் பெற்றிருக்கிறார்கள். இவைகள் மதிப்பிற்குரியவைகளாகவும் பாராட்டுதற்குரியவைகளாகவும் இருக்கின்றன. ஆனால் பெருமைக்குரிய ஒரு காரியமல்ல.

சிலர் பெருமை என்ற வார்த்தையை தவறாக பயன்படுத்துகிறார்கள். "நான் என் குடும்பத்தைக் குறித்து பெருமைப்படுகிறேன்" என்று அவர்கள் சொல்லும் பொழுது, "நான் எனது குடும்பத்தில் களி கூருகிறேன்" அல்லது "நான் எனது குடும்பத்தில் மகிழ்ச்சியடைகிறேன் – எனது குடும்பம் இருக்கும் விதத்தில் நான் சந்தோஷப்படுகிறேன்" என்று பொருள்படுகிறது. அசாதாரணமான தப்பெண்ணம் கொண்டிருத்தல் ஒருவர் குடும்பத்தில் அல்லது நண்பர்களால் செய்யப்பட்ட அனைத்தையும் பாராட்டவும், மற்றவரது குடும்பத்தில் அல்லது நண்பர்களால் செய்யப்பட்டதை தவறு என்று சிறுமைப்படுத்தவும் செய்யும். பெருமைக்கு மன்னிப்பு கிடையாது. அதுவும் விசேஷமாக இறுமாப்பு உள்ளவர்களுக்கு கிடையாது. இது பொதுவாக அறியாமையினால் இருக்கிறது. எனினும் இது அறியாமையின் காரணத்தினால் இருந்தால், அது அதிக மன்னிப்புக்குரியது.

நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெருமை அறியாமையினால் உண்டானதல்ல. சுய புகழ்ச்சி அதிக பெருமைக்குரியதாகும். இப்படிப்பட்ட அனைத்து பெருமைகளும் தமது பார்வைக்கு அருவருப்பானது என்று கர்த்தர் நமக்கு கூறுகிறார். தேவன் அதை சும்மா வெறுக்கவில்லை. அதை அவர் அருவருப்பாய் நோக்குவதற்கு காரணம் இருக்க வேண்டும். எந்த ஒரு சிருஷ்டியும் பெருமைகொள்வதற்கு எந்த உண்மையான காரணமும் கிடையாது. "நமக்கு உண்டாயிருக்கிறவைகளில் கர்த்தரிடத்தி–ருந்து பெற்றுக் கொள்ளாதது யாது? என்று அப்போஸ்தலர் கேட்கிறார். நம்மிடத்தில் எதுவும் கிடையாது. ஒன்றுக்கு பதிலாக பத்து திறமைகளை நாம் பெற்றிருப்போமானால் அதில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் இந்த திறமைகளை நாம் உண்டாக்கவில்லை. மாறாக, இவைகள் நமக்கு கொடுக்கப்பட்டிருந்தன. அந்த திறமைகளை விளம்பரப்படுத்துவதோ அல்லது அவைகளைப் பற்றி ஜம்பம் அடித்துக் கொள்வதோ, அவைகள் நமக்கே உரியது என்று நினைப்பதாகவும், நாம் அவைகளை பெற்றிருப்பதால் நாம் பெருமையடித்துக் கொள்வதாகவும் காண்பிக்கும்.

மனமேட்டிமையாய் இருப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. ஏனெனில் எதையோ மற்றொருவரிட மிருந்து பெற்றிருக்கிறார்கள். அவன் ஒரு கடனாளி, பெறுபவன். மனுக்குலத்தைப் பொருத்த வகையில் நாம் அனைவரும் பிதாவின் சலுகையை பெறுபவர்கள். வாழ்க்கையின் அனைத்து ஆசீர்வாதங்களும்–ஆவிக்குரிய மற்றும் மாம்சத்துக்குரிய இரண்டும் – நமக்கு தேவனால் கொடுக்கப்பட்டவை. இந்த ஆசீர்வாதங்களில் அநேகத்தை நாம் பெற்றிருந்தாலும், பெருமைப்படுவதற்கான காரணமில்லை, பெருமை சுயதேவை பூர்த்தியை குறிப்பாக உணர்த்துகிறது.

சாத்தான் தனது திறமையையும், ஞானத்தையும் விளம்பரப்படுத்த சந்தர்ப்பத்தைப் பெற விரும்பி சொன்னதாக வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தன்னால் ஏதாவது செய்ய முடியும் என்று அவன் நம்பிக்கையாயிருந்தான். அவன் பெற்றிருந்த அனைத்தும் தேவனிடமிருந்து அவன் பெற்றது என்பதையும், ஆசீர்வதிக்கப்பட்டவன் ஆசீர்வாதங்களுக்கெல்லாம் ஊற்றாயிருக்கிறவரைக் காட்டிலும் உயர முடியாது என்பதையும் அவன் உணரவில்லை. அவனது ஞானமும் வல்லமையும் தேவனுடைய ஞானத்திற்கும் வல்லமைக்கும் கீழானது என்பதை அவன் உணரவில்லை. ஆகையால் சாத்தான் ஒரு மீறுதலுக்குட்பட்டவனானான்.

கர்த்தருடைய பிள்ளைகள் மனமேட்டிமையை வளர்த்தால், அவர்கள் தேவனுடைய பார்வையில் நல்லவர்களாக இல்லை என்பதை நாம் நிச்சயப் படுத்துகிறோம். அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக ஆவதற்கு முன்பே, அவர்கள் மனமேட்டிமை உள்ளவர்களாக இருந்தால் தேவன் அவர்களை தம்முடைய குடும்பத்தில் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றும் அவர்களை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கமாட்டார் என்றும் நிச்சயப்படுத்திக் கூறியிருக்கிறார். மனுக்குலம் எல்லாவற்றிலும் முக்கியமானது. ஏனெனில் அவர்கள் கர்த்தருடைய குடும்பத்தினராவார்கள். "ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6; மத்தேயு 23:12)

### பெருமை அழிவுக்கு வழிநடத்தும்

பெருமையின் ஆவி இன்னும் உலகத்தில் இருக்கிறது. சிலர் தங்கள் மூதாதையர்களைக் குறித்து பெருமை கொள்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் திறமை முதலானவைகளைக் குறித்து பெருமை கொள்கின்றனர். தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறவர்கள், தேவ ஆசீர்வாதத்தை

பெற்றவர்களாயிருந்து நன்றியுணர்வைக் காட்டிலும் வேறு எதையாவது பெற்றிருந்தால் அது நன்றாக இருக்காது. உண்மையிலேயே, பெருமையின் பலனாக காலமும் பிரச்சனையும் நமக்கு மேலே இருக்கிறது. எல்லா ஜனங்களுமே பெருமையுடைவர்களாக காணப்படுகிறார்கள். இருதயத்தை நாம் தீர்மானிக்க முடியாதவர்களாயிருக்கிறோம். நாம் அவர்களது மனோபாவத்தை அறியாதவர்களாயிருக்கிறோம்– அவர்களது சுயதேவை பூர்த்தியின் உணர்வை அறியாதவர்களாயிருக்கிறோம். ஒவ்வொரு நாடும் தங்களது நாடுதான் மகா திறமை பெற்றிருக்கிறது என்று உணர்கிறார்கள். தங்களது துப்பாக்கிகள் மகா நேர்த்தியானது, எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது என்று நினைக்கிறார்கள். இந்த சுய தேவை பூர்த்தியின் உணர்வுதான் தேசங்களை தற்கால போருக்கு வழி நடத்துகிறது. அவர்களில் சிலர் கர்த்தர் தங்கள் பக்கம் இருக்கிறார் என்று நம்புவதாக கூறுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு எப்பொழுதும் சாதகமாகவே இருக்கிறார் என்று நினைக்கிறார்கள். தாங்கள் நல்லவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் இருப்பதால் தேவன் தாங்கள் ஜெயம் கொள்ள உதவாமல் இருக்க முடியாது என்று நினைக்கிறார்கள். இந்த மாயைக்கு கீழாகத்தான் இந்த மகா போருக்குள் அவர்கள் நுழைந்திருக்கிறார்கள்.

இந்த மகா யுத்தத்தைக் குறித்தும் மற்றும் அனைத்து பிரச்சனைகள் குறித்தும் வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: “அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களை சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.” (மல்கியா 4;1) பெருமையானது எல்லாவிதமான தீங்குகளுக்கும் வழி நடத்துகிறது. ஆயிர வருட யுகம் முடிவதற்கு முன்னால் முழு பூமியிலும் பெருமையின் வேர் இல்லாதபடி பார்த்துக் கொள்வார். ஆகையால் ஆயிர வருட யுக முடிவில் பூமியில் ஜீவிக்கிறவர்களிடையே பெருமை என்பதே இல்லாமற்போகும். ஆனால் மனுக்குலத்திற்காக தேவன் செய்திருக்கிறவைகளுக்காக அவரை பாராட்டுவது இருக்கும். பரலோகத்தில் இருக்கும் என்று நாம் நம்புவது போல பூமியிலும் நன்றியறிதலுக்கான ஆவி இருக்கும்.

-------------------------------------

# சுவாரசியமான கடிதங்கள்

## *சரிப்படுத்தப்பட வேண்டிய கடுமையான தவறுகள்*

அருமை சகோதரர் ரசல் அவர்களே:--

சில சபைகளில் நடந்துகொண்டிருக்கும் சில காரியங்கள் குறித்து உங்களுக்கு எழுதிட வேண்டுமென்று நீண்ட நாட்களாக விருப்பங்கொண்டிருந்தேன்; எனினும் நான் தவறாய்ப் புரிந்திருப்பேனோ என்னும் அச்சத்தினால், எழுதுவதற்கான தைரியமற்று இருந்தேன். இக்காரியமானது மிகவும் அடிக்கடி எனது கவனத்திற்கு வந்துள்ளது மற்றும் இது கர்த்தருடைய காரணங்களுக்கு மிகவும் பாதகமானவையாகத் தோன்றுகின்றதினால், சில விஷயங்களை எழுதும்படிக்கு ஏவப்பட்டுள்ளேன் மற்றும் எனது சார்பிலான மோசமான கணிப்பாய் உங்களுக்குத் தோன்றிடும் எதற்காகவும், நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

சில அருமையான சகோதரர்கள் மூப்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இவர்கள் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வைராக்கியமுடையவர்களாய்க் காணப்பட்டனர். பெரோயா கூட்டங்கள் நடத்தலாம் என்று முன்வைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளவும்பட்டது. இந்த அருமையான சகோதரர்களில் சிலர் வெளியில் காணப்படுபவர்களைப் "போஷிப்பதுதான்" முக்கியமானது என்றும், "தேவனுடைய மந்தையை மேய்ப்பது" அவ்வளவுக்கு முக்கியமல்ல என்றுமுள்ள கருத்துக்களை உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஆகையால் பெரோயா கூட்டத்திற்கு வரும்போதெல்லாம், கூட்டத்தைத் துவங்குகையில் வழிநடத்துபவர்: "அருமையான நண்பர்களே, இன்று பாடத்தை நான் பார்த்து வரமுடியாததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்" அல்லது "நான் இன்னென்ன காரியங்களில் மிகவும் ஈடுபட்டுக்காணப்பட்டிருந்தபடியால் (Busy) இன்றையப் பாடம் எதிலிருந்துத் துவங்குகின்றது என்று நான் அறியேன்" என்று சொல்லிவிடுவார். இன்னுமாக "சபையாருக்கு இப்பாடங்கள் அனைத்தும் நன்கு தெரியும், ஆகையால் இதைக்குறித்து அதிகம் அறிந்திருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் பரவாயில்லை" என்று வழிநடத்துபவர்கள் கூறுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கின்றேன்.

இச்சிந்தனைகளானது அவர்களைக் கவனமற்றவர்களாகவும், அக்கறையற்றவர்களாகவும் மாற்றுகின்றது. நல்ல ஒரு சபையில், வழிநடத்துபவர் தனது அறியாமையைத் தெரிவிப்பதைக் கேட்கையில் எனக்குப் பெரும் வேதனையளிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் விளைவென்ன? கூட்டம் துவங்குகின்றது; ஒரு கேள்வி கேட்கப்படுகின்றது; சகோதரர் A தனது கண்ணோட்டத்தைத் தெரிவிக்கின்றார், பின்னர்ச் சகோதரர் B, பின்னர்ச் சகோதரர் C, பின்னர்ச் சகோதரி D தங்கள் கண்ணோட்டங்களைத் தெரிவிக்கின்றனர். கண்ணோட்டங்கள் முரண்படவும் செய்கின்றது. தனக்கு அனைத்தும் நன்றாய்த் தெரியுமென எண்ணுகின்ற சகோதரன்: "இதெல்லாம் தவறு; இன்னென்னவை தான் சரி" என்கிறார்; பின்னர்ச் சில கலந்தாய்வுகள் நடைபெறுகின்றன; பின்னர்த் தனக்கு அனைத்தும் நன்றாய்த் தெரியுமென எண்ணுகின்ற அதே சகோதரன் மறுபடியுமாக "இவைகள் சரியல்ல" என்று கூறுகின்றார். வழிநடத்துபவர் தர்மசங்கடத்திற்குள்ளாகின்றார் மற்றும் தனது பாடங்களை அவர் படித்து வராததினால், அவர் ஒரு வார்த்தைக்கூடச் சொல்வதில்லை மற்றும் இறுதியில் எந்தத் திட்டவட்டமான பதில் கிடைக்காத நிலையில் கேள்வியானது கடந்து செல்லப்படுகின்றது.

சில கூட்டங்களில் அருமையான நண்பர்களில் சிலர் தங்கள் வாயைத் திறக்காமலேயே வீட்டிற்குத் திரும்புகின்றனர்; காரணம் அவர்கள் பேசிடுவதற்கு ஊக்கமூட்டப்படுகிறதில்லை. நன்கு திறமையுடையவர்களாய்க் காணப்படும் சிலர் அனைத்து உரையாடலையும் பண்ணுகின்றனர் மற்றும் சில சமயங்களில் மூன்று அல்லது நான்கு பேருக்கு இடையிலான சிறு உரையாடல் வாதங்களைச் சபையார் அமர்ந்து, கேட்க மாத்திரமே முடிகின்றது.

இன்னொரு காரியம் என்னவெனில்: வாட்ச் டவரில் எத்தனை தரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில வழிநடத்துபவர்களும், சபையாரும் கூட்டத்தைத் துவங்குகையில் கேள்வி புத்தகத்தை ஒரு கரத்திலும், வேதாகமப் பாடங்களை (volume) இன்னொரு கரத்திலும்

வைத்திருக்கின்றனர். வாசிப்பதே அதிகமாய் இருப்பதினால், கலந்தாய்வு காணப்படுகிறதில்லை மற்றும் சில காரியங்கள் "பாடங்களில் மிகவும் தெளிவாய்க் கொடுக்கப்பட்டிருப்பதினால், கலந்தாய்ந்திட அவசியமில்லை" என்றும் அவ்வப்போது கூறி கலந்தாய்வுபண்ணுகிறதில்லை.

உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவந்திருப்பவைகள் சரியாய் இல்லை என்றால், சகோதரர் ரசல் அவர்களே இக்கடிதத்தை உங்களது குப்பைத்தொட்டியில் எறிந்துவிடுங்கள். எனினும் அருமையான சகோதரர்களாகிய மூப்பர்கள் இவ்வகையான கர்த்தருடைய ஊழியத்திலுள்ள - மந்தையைப் போஷிப்பதிலுள்ள தங்களது பொறுப்பினை உணர்ந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்கும் உதவியாக இருக்கும் மற்றும் இந்நிலைமைகளைச் சரிப்படுத்தும் எதையேனும் தேவனால் வழிநடத்தப்படுகின்ற உங்களது பேனாவானது எழுதிடும்படிக்குக் கர்த்தரிடம் நான் ஊக்கமாய் ஜெபம் ஏறெடுக்கின்றேன்.

உங்களது சோதனைகளிலும், சந்தோஷங்களிலும் தேவனுடைய ஆறுதலும், பலமும் காணப்படத்தக்கதாக, உங்களை ஜெபத்தில் நான் தினந்தோறும் நினைவுகூருகின்றேன்.

ஒரே நம்பிக்கையில் உங்கள் சகோதரன், -------

[**பதில்:-** மூப்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகோதரர்கள் திறமையற்றவர்களாய்க் காணப்படுவார்களானால், மற்றவர்களை தேர்ந்தெடுப்பது சபையாருடைய கடமையாக இருக்கின்றது -அதாவது ஒருவேளை குறைவான திறமை இருந்தும், ஆராய்ச்சி செய்வதன் மூலம், மிகவும் உதவிகரமாகக் காணப்படும் ஒருவரை - தேர்ந்தெடுப்பது சபையாருடைய கடமையாக இருக்கின்றது. ஒரு நல்ல வழிநடத்துபவர் என்பவர் - அதிகமாய்ப் பேசுபவரல்ல, மாறாக தன்னம்பிக்கையற்றிருப்பவர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம், அவர்கள் சரியாய்ப் பதில் சொல்லிடுவதற்கு அவர்களுக்கு உதவுபவர் ஆவார் அல்லது ஒரு நல்ல வழிநடத்துபவர் என்பவர் - ஒருவரால் கொடுக்கப்பட்ட பதில் தனது கணிப்பில் தவறாய் இருக்க, முன்வைக்கப்பட்டுள்ள தவறான கண்ணோட்டத்தினைக் குறிப்பிட்டுக் கூறாமல், சரியான கருத்தினை அன்பாய்க் கூறி, தனது கருத்துக்களுக்கு ஆதரவான வேதவாக்கியங்களையும், "வேதாகமப் பாடங்களிலிருந்தும் மேற்கோள்களையும் குறிப்பிடுபவர் ஆவார்.]

## *பிரயோஜனமான பெரோயா ஆராய்ச்சிகள்*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:--

இந்நாட்டிலுள்ள இவ்விடத்திலும், மற்றப்பாகங்களிலும் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை நடத்திடும் சகோதரர்களில் சிலர், தாங்கள் அவ்வாராய்ச்சிகளில் அதிகமாய்ப் பேசிட வேண்டும் என்ற எண்ணத்தில் காணப்படுவதை நான் கவனித்துள்ளேன். ஓர் ஆராய்ச்சி வகுப்பினை நடத்தும் ஒருவர் ஒவ்வொரு கேள்விக்கு அல்லது கருத்திற்கு ஐந்து நிமிடங்கள் செய்திக்கொடுப்பது என்பது தவறாகும்; மாறாக ஆராய்ச்சியானது முறையான விதத்தில் நடத்தப்படுகின்றதா என்று பார்த்துக் கொள்வதும், முடிந்தமட்டும் அநேகரிடமிருந்து கருத்துக்களை வரவைப்பதற்குப் பிரயாசம் எடுப்பதும், பின்னர்த் தனது சுருக்கமான விளக்கத்துடன் கேள்வியினை நிறைவுபண்ணுவதும்தான் தனது காரியமாய் இருக்கின்றது என்று வழிநடத்துபவர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சபையில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான திறமையுள்ள ஒரு சகோதரர் சபையில் காணப்படுவதை நான் சிலசமயம் கவனித்திருக்கின்றேன். இவர் ஒவ்வொரு கேள்விக்கும் மற்றும் கருத்திற்கும் நீண்ட நேரம் விளக்கம் கொடுப்பவராய் இருப்பார். அதிகம் திறமையில்லாதவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கத்தக்கதாக, இத்தகைய திறமிக்கவர் தனது வைராக்கியத்தினைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வது ஞானமாய் இருக்குமல்லவா? "சுருக்கமே பகுத்தறிவின் ஆன்மா" என்று நாம் சிலசமயம் சொல்வதுண்டு. நம்முடைய பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளில் சுருக்கமாய்ப் பேசுதல் என்பது உதவியாய் இருக்கும். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன், நம்முடைய கர்த்தருக்குள் உங்கள்,

F.H. HARRISON.

**பதில்:**

[பெரோயா வகுப்பை வழிநடத்துபவர் மிகவும் உதவிகரமாய்க் காணப்பட்டு, சபையாரிடமிருந்து பதில்களை வரவழைக்க முடிகிறவராகக் காணப்பட வேண்டும் என்று நாம் ஒப்புக்கொள்கின்றோம் - இல்லையேல் சகோதரர் அவரவர் தங்களுக்காக இல்லங்களிலேயே இருந்து வாசித்துக்கொள்ளலாமே. இது குறித்தக் கருத்துக்களை வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் முன்வைத்திட பிரயாசம் எடுத்துள்ளோம். எனினும் வழிநடத்துபவரின் விளக்கமானது எப்போதுமே மிகச் சுருக்கமாகக் காணப்பட வேண்டுமென்ற கருத்துக்கு, மேலே இடம்பெறும் கடிதத்தை எழுதியுள்ளவருக்கு, நாங்கள் ஒப்புக்கொள்கிறதில்லை. மிகவும் சாமார்த்தியமான வழிநடத்துபவரால்கூடப் பதில்களைச் சரியாய்ச் சபையாரிடமிருந்து வரவழைக்க முடியாத சில கேள்விகள் காணப்படும். இம்மாதிரியான தருணங்களில் தன்னால் முடிந்தமட்டும் பதில்களை வரவழைத்தப் பிற்பாடு, வழிநடத்துபவர் அக்கேள்விக்கு மிகவும் முழுமையான விதத்தில், அதே சமயம் முடிந்தமட்டும் சுருக்கமாகப் பதிலைக்கொடுத்திடுவது சரியான காரியமேயாகும். உண்மைதான் அனைத்துப் பதில்களும் அல்லது கருத்துக்களும் சுருக்கமாகவும், குறிப்பாயும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் நீண்ட நேரம் எடுத்துப் பதில் கொடுக்கும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் ஆரம்பத்திலேயே வழிநடத்துபவரால் தனிப்பட்ட விதத்தில், சரியாய் நடந்துகொள்வது குறித்து அன்புடன் நினைப்பூட்டப்பட வேண்டும்; ஒருவேளை தேவைப்படும் பட்சத்தில் அன்பான விதத்தில் சபையார்முன்பும் நினைப்பூட்டப்படலாம். ஒருவேளை அவர் தொடர்ந்து அப்படியே காணப்பட்டால், மாற்றுவழி என்னவெனில் - பொதுவான விதத்தில் யார்வேண்டுமானாலும் பதில்கொடுப்பதற்குக் கேட்டுக்கொள்வதைத் தவிர்த்துக்கொண்டு, மாறாக நியாயமான வாய்ப்புகளை மாத்திரமே கொடுத்து, சபையாரிலுள்ள பல்வேறு அங்கத்தினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கேள்விக்கேட்பதாகும். ஒருவேளை இப்படிச் செய்வது தவிர்க்கப்பட வாய்ப்பிருக்குமானால், அப்போது இது விரும்பத்தகுந்ததாய் இராது.

---

## Our Conquest of the Antitypical Canaanites

# ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி

*"மிகவும் பலங் கொண்டு திடமனதாயிரு."யோசுவா 1:7*

மோசேயின் மரணத்திற்கு பிறகு, யோசுவா இஸ்ரயேலர்களின் தலைமை பொறுப்பை பெற்றபொழுது யேகோவா தேவன் யோசுவாவிடம் சொன்ன இந்த வார்த்தைகளை யோசுவா பதிவு செய்கிறான். அந்த சமயத்தில் இஸ்ரயேலர்கள் நாற்பது வருட வனாந்திர அனுபவத்தை பெற்றிருந்தார்கள். மேலும் அவர்கள் யோர்தானைக் கடந்து கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள இருந்தார்கள். யோசுவா மோசேக்குப்பின் வந்தவராக இருந்தார். ஜனங்கள் தங்கள் வனாந்திர அனுபவத்தில் அநேக பாடங்களை கற்றிருந்தார்கள். இப்பொழுது மோசே மரித்துவிட்டார், அவர்கள் தங்கள் தலைவராக யோசுவாவை நோக்கியிருந்தார்கள்.

யோசுவா, மோசேயின் இடத்தில் ஊழியம் செய்ய தனது இயலாமையை தேவனிடம் வெளிப்படுத்தினான். இந்த மோசேயிடம் தான் தேவன் தம்மை அடையாளங்களின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். தேவன் யோசுவாவிடம், மோசேயை ஆசீர்வதித்தது போல், உன் வாழ்நாள் அனைத்திலும் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று உறுதியளித்தார். யோசுவா தனது அனுபவம் முழுவதிலும் உண்மையுள்ளவனாகக் காணப்பட்டான். வனாந்திர பிரயாணத்தில் உயிரோடிருந்த இருவரில் இவன் ஒருவனாக இருந்தான். எகிப்தி−ருந்து புறப்பட்டபோது அவன் இருபது வயதுடையவனாயிருந்தான். யோசுவாவும் காலேபும் உண்மையுள்ளவர்களாயிருந்ததால் எகிப்தி−ருந்து புறப்பட்ட வயது வந்தவர்களில் இவர்கள் இருவருக்கு மட்டுமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நுழைவீர்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மற்ற வயது வந்த அனைவரும் வனாந்திரத்திலே மரித்துவிட்டார்கள். ஆரோன் ஓர் என்னும் மலையிலும் கொஞ்ச காலத்திற்கு பிறகு ஜனங்கள் யோர்தானைக் கடக்கும் முன் மோசே நெபோ என்னும் மலையிலும் மரித்தார்கள்.

இஸ்ரயேலர்கள் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்வதற்கும் அதில் குடியிருந்தவர்களை அழிப்பதற்குமான கட்டளைகள் யோசுவாவுக்கு தேவன் கொடுத்தபோது அவைகள் பலமாகவும் தைரியமானதாகவும் இருந்தன. தேவனுடைய இந்த கட்டளைகள் அநேகருக்கு ஒரு தடுக்க−ன் கல்லாக இருந்தது. வேதாகமம் இப்படிப்பட்ட கட்டளைகளை தாங்கியிருக்கும் போது இது தேவனுடையதாக இருக்காது என்று அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். இஸ்ரயேலர்கள் கானானுக்குச் சென்று அதை சுதந்தரித்துக் கொள்ளுவது ஒரு அநீதியான செயல் என்று அவர்கள் உணர்ந்தார்கள். அந்த ஜனங்களைக் கொன்று அவர்களது தேசத்தை சுதந்தரித்துக் கொள்வது நீதியானதா என்று அவர்கள் கேட்கிறார்கள். முன்னரே அதை பெற்றிருந்தவர்களுக்குத் தான் அது சொந்தமே ஒழிய வேறு யாருக்கும் அல்ல. அவர்களது தேசத்தை தாக்கி, அவர்களது ஜீவனை அழித்து அவர்களது தேசத்தை பறிமுதல் செய்வது அநீதியானது. இஸ்ரயே−ன் இந்த மார்க்கம் சாதாரண மனிதனின் "தேசத்தை பிடித்துக் கொள்ளுகிற குணத்திற்கு" உதாரணமாக இருக்கிறது. எவ்வளவுதான் நாகரீகமும் நீதிக்குரிய காரியங்களும் வளர்ந்திருந்தாலும் அதையெல்லாம், மீறி இந்த குணம் நூற்றாண்டு காலமாக வளர்ந்துள்ளதாக காணப்படுகிறது.

இதே கருத்தையே அநேகர் கொண்டிருக்கின்றனர். அது அவர்களுக்கு தீங்கையே பெரும்பாலாக கொடுக்கிறது. ஏனெனில் அவர்கள் விவாதிக்கிற காரியத்தை புரிந்து கொள்ளவில்லை என்று நாம் சொல்லும்போது, அது அவர்கள் அறிவில் குறைவுள்ளவர்கள் என்று பொருள்படாமல், அவர்கள் தேவனுடைய கருத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்றே பொருள்படுகிறது. சரியான கருத்தி−ருந்து வேறுபட்ட எந்த கருத்தி−ருந்தும் இந்த காரியத்தில் இஸ்ரயே−ன் முழு பாதையும் அநீதியானதாக பாவகரமானதாக காணப்பட வேண்டும். எனினும் சரியான கருத்தி−ருந்து இந்த காரியம் மொத்தத்தில் நீதியானதாக, நியாயமானதாக, சரியானதாக காணப்படுகிறது. இந்த புறஜாதி ஜனங்களின் பாவங்களும், அருவருப்புகளும் அவர்களது அழிவு விரும்பத்தக்கதாக இருந்தது. அவர்கள் குடியிருந்த கானான் தேசத்தைக் குறித்து ஒரு ஆச்சரியமான எண்ணத்தை தேவன் உடையவராயிருந்தார். மேலும் இந்த யூத யுகமானது ஒரு முன்னடையாள யுகமாக இருந்தது. இஸ்ரேல் மற்றும் இழிவான குணமுடைய புறஜாதியாரும் நிழலாக இருந்தனர்.

### கிறிஸ்தவர்கள் எதிர்த்து நிற்காதவர்களாக இருக்க வேண்டும்

தற்காலத்தில் கர்த்தரின் பிள்ளைகள், பிறரது சொத்துக்களையோ பிறருக்குரியவைகளையோ எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் எந்த சூழ்நிலையிலும் உயிரை அழிக்கக் கூடாது. மாம்சீக ஆயுதங்களைக் கொண்டு சண்டையிடக் கூடாது. அவர்கள் எதிர்த்து நிற்காதவர்களாக இருக்க வேண்டும். இந்த வழியிலான மார்க்கத்தை ஆதரிக்கிற நவீன கால கிறிஸ்தவ தேசத்தார்களாக நாம் இருக்கக் கூடாது. நாம் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் உதாரணம் மற்றும் போதனையின் வழிகாட்டுத−ன்படி சமயம் கிடைக்கும் போதெல்லாம் எல்லாருக்கும் நன்மை செய்ய நாட வேண்டும். அவர்களது சொத்துக்களையும் வீட்டையும் சமாதானத்தையும் பெற்றிருக்கும்படி நாம் விட்டுவிட வேண்டும். தற்காலத்தில் உண்மையான கர்த்தருடைய பிள்ளைகளின் ஊக்கமூட்டும் சக்தியாகிய அன்பு என்கிற தெய்வீக கட்டளைக்கும், திரளான மனுக்குலத்தினராலும், பெரும்பாலான கிறிஸ்தவ தேசங்களினாலும் இன்றும் அப்பியாசப்படுத்தப்படுகிற சுய நலத்திற்கும் ஒரு பெரிய வேற்றுமை இருக்கிறது. தெய்வீக வல்லமையால் அறிமுகப்படுத்தப்படப் போகிற புதிய யுகம்வரை இந்த சுயநலம் அப்பியாசப்படுத்தப்படும்.

எனினும் சபையுடனான கர்த்தரின் திட்டங்களும் தொடர்புகளும் உலகத்தைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறதை பார்த்து, நீதியும் நேர்மையும் உலக ராஜ்யங்களால் புறக்கணிக்கப்படுகிறதை நாம் கவனிக்க முடியும். மேலும் கர்த்தர் விசேஷமாக தற்காலத்தில் போரிடுதல், வெற்றி கொள்ளுதல், ராஜ்யத்தை பெருக்குதல் போன்ற அவர்களது இயற்கையான குணத்தை பயன்படுத்திக் கொள்ளுகிறார். மனித கோபத்தை தமது திட்டங்களின் சில குறிப்பிட்ட அம்சங்களுக்கு தேவன் தூண்டுவார். இது தற்போது கல்லறையில் இருக்கிற மற்றும் உயிரோடு இருக்கிற அகில உலகத்தினருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை பிற்காலத்தில் நிரூபிக்கும்.

திரைக்குப்பின்னால் இருக்கும், நமது பரமபிதாவின் கிருபையின் நோக்கங்கள் அனைத்தையும் பார்க்க இயலாமலும், இந்த நோக்கங்கள் எப்படி நிறைவேற்றப்படும் என்று அறிய போதுமான ஞானம் இல்லாமலும் பூமியின் ஜனங்கள் இருட்டில் தடவிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது காரியங்களை தாங்களே நிர்வகிக்கிறோம் என்று நினைக்கிறார்கள்; எல்லாவற்றிலும் தமது மகிமையான திட்டங்களும் நிறைவேற்றப்படும்படி தேசங்களின் காரியங்களை வேறொரு கை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் அவரது நோக்கங்களை யாரும் தடை செய்ய முடியாது என்பதையும் அறியாதிருக்கிறார்கள். இந்த உலகத்தின் மார்க்கங்களாகிய அதன் கொள்கைகள், அரசியல், வெற்றிகள் மற்றும் அதன் சுயநல திட்டங்களை நிறைவேற்ற மேற்கொள்ளும் பைத்தியகாரத்தனமான முயற்சிகளையும் கர்த்தரின் பிள்ளைகள் பெரும்பாலாக கவனிக்கிறார்கள். (யோவான் 17:16)

நாம் உலக காரியங்களில் ஈடுபட்டால், அது எந்த பகுதியினருக்கு உதவியாக இருந்தாலும், நாம் தெய்வீக திட்டத்திற்கு மாறாகவே கிரியை செய்பவர்களாக இருப்போம். தற்போது போரிடுகிற இரு கூட்டத்திற்கும் வெற்றி தராமல் இருப்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. நாம் உலகத்தி–ருந்து பிரிந்தவர்களாக இருந்து, நமது சிந்தை, கவனம், சிரத்தை, அனுதாபம், அனைத்தையும் பரலோக ராஜ்யத்தின் காரியங்களில் செலுத்துகிறவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட பிரச்சனையில் நமது குரல் எழும்புவதாக இருந்தால், அது நீதி, தயவு, சமாதானம் போன்றவைகளுக்காகவே இருக்க வேண்டும். உலகத்தில் நடக்கிற எந்தவித நிகழ்வுகள், மாற்றங்கள் அனைத்தையும் மகா பெரிய தொகுப்பாளருடன் சேர்ந்து காண வேண்டும். இந்த காரியங்களை ரத்து செய்யவும் முடிவாக மனுக்குலத்திற்கு நன்மை பயக்கும்படியாக அனைத்து வல்லமைகளையும் உடையவராக நமது பரம பிதா இருக்கிறார் என்பதை நாம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

### கடந்த காலத்துக்குரிய ஒரு சாட்சி

ஆனால் நாம் மிகவும் சமாதானமாக இருப்பதாக உலகம் கூறுகிறது. மனுக்குலமானது ஒரு குறிப்பிட்ட போர் இல்லாமல் போக இயலாது என்று அவர்கள் கூறுகிறார்கள். தேவனுடைய வார்த்தையினாலும், சத்திய ஆவியினாலும் வழி நடத்தப்படுகிறவர்களைத் தவிர வேறு யாரும், தேவனுடைய முறைகளை புரிந்து கொள்ள முடியாது என்று பதிலளிக்கிறோம். தேவனுடைய தொடர்புகள் வெவ்வேறு யுகத்திலும், வெவ்வேறு நோக்கங்களிலும் வெவ்வேறாக இருக்கிறது. சரியான கருத்தில் நியாயமானதாகவும் இணக்கமுடையதாகவும் இருக்கும் தேவனுடைய சித்தம் முரண்பட்டதாக காணப்படுகிறது.

நாம் பார்க்கலாம், ஏதேனில் ''நீ சாகவே சாவாய்'' என்ற தீர்ப்பு ஆதாம்மேல் கூறப்பட்டது. ஏனெனில் இது தேவ கட்டளைக்கு, தெரிந்து கீழ்ப்படியாததாக, தேவ கட்டளையை மீறினதாக இருந்தது. அது மரணத்தை கொண்டு வந்தது. இந்த விழுகைக்கு பிறகு மனுக்குலம் படிப்படியாக தேவனுடனான தொடர்பற்ற நிலை அதிகமானது. தேவதூதர்களில் பலர் மனித சரீரத்தை எடுக்க வல்லமையுள்ளவர்கள், தங்கள் பரிசுத்த நிலையி–ருந்து விழுந்துவிட்டார்கள். விசித்திரமான மாம்சத்தை இச்சித்த இந்த தூதர்களுக்கு மனுக்குலம் ஒரு இரையானது. (ஆதியாகமம் 6:1–4; யூதா 6,7; 2 பேதுரு 2:4, டயக்லாட்) இந்த நிலைமைகளெல்லாம் கடைசியாக நோவாவின் நாளின் மகா பெரிய ஜலப்பிரளயத்தால் நீக்கப்பட்டது.

ஆனால் உலகமானது குறித்த காலத்தில் மிகுந்த பாவ நிலைக்குச் சென்றது. பிறகு தேவன் மனுக்குலத்தி–ருந்து ஆபிரகாம் என்ற ஒரு மனிதனை தெரிந்து கொண்டார். ஆபிரகாம் அவரது வழிகளில் நடந்தால் அவனது காரியங்களெல்லாம் நன்மையாகும்படி வழிநடத்தி அவனை ஒரு பெரிய ஜாதியாக்கி அவனது சந்ததியை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். ஆகையால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்களை தேவனுடைய விசேஷித்த ஊழியர்களாக நாம் பெற்றிருக்கிறோம். யாக்கோபின் சந்ததியினருடன் மோசே காலத்தில் தேவன் ஒரு உடன்படிக்கையை செய்தார். மோசேயை மத்தியஸ்தராகக் கொண்டு, தேவன் அவர்களது தேவனாக இருப்பதாகவும், அவர்களை தமது ஜனங்களாக அங்கீகரிப்பதாகவும் தேவன் வாக்குத்தத்தம் செய்தார். அவர்கள் அவரிடத்தில் உண்மையாயிருந்தால் அவர் அவர்களை ஆசீர்வதிப்பார். அவருக்கு அவர்கள் உண்மையாயிராமல் அண்டை ஜாதியினரில் விக்கிரக ஆராதனைக்குச் சென்றால் அவர்களது பாவங்களுக்காக அவர்களை அடித்து தண்டிப்பார்; ஆனால் அவர்களை கைவிடமாட்டார்.

கானானின் ஜனங்கள் ஒழுக்கத்தில் மிகவும் இழிவானவர்களாக இருந்தார்கள். கானானை அவர்கள் தொடர்ந்து சுதந்தரித்துக் கொள்ள பயனற்றவர்களாக ஆகும் அளவுக்கு அவர்கள் பாவத்தில் மிகவும் பெருகியிருந்தார்கள். இஸ்ரயேலர்கள் இந்த ஜனங்களை துரத்த வேண்டியவர்களாக இருந்தார்கள். தேவைப்படும்போது அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். குறிப்பிட்ட சில ஜாதிகளை முற்றிலுமாக அழிக்கும்படி இஸ்ரயேலுக்கு தேவன் கட்டளை கொடுத்திருந்தார். (உபாகமம் 20:10–18)

தேவனுடைய இந்த கட்டளைகளை நினைக்கும் பொழுது, கடந்த கால மூட நம்பிக்கைகளை நமது மனதை விட்டு நீக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். முற்றிலுமாக அழிக்கப்பட்ட இந்த ஜனங்கள் நித்திய ஆக்கினைக்குப் போகாமல் மரணத்திற்கு, ஷியோலுக்கு, **(Sheol)** ஹேடீஸுக்கு **(Hades)** கல்லறைக்குச் சென்றார்கள். இது உணர்ச்சியற்ற ஒரு நித்திரை, பட்டயத்தினால் அழிக்கப்பட்டவர்கள் இன்னும் நித்திரையி–ருக்கிறார்கள்; அவர்களுக்கு எந்தவித வ–யோ, வேதனையோ கிடையாது. பொதுவான உயிர்த்தெழும் நாள் வரை அவர்கள் ஜீவனி–ருந்து எடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் அவர்களது நித்திரையி–ருந்து அழைக்கப்பட்டு ஜீவனுக்கு திரும்பக் கூடிய ஒரு ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார். நித்திய ஜீவனின் அனைத்து ஆசீர்வாதங்களையும் மேசியா மூலமாக கொடுக்க தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். மேசியா ஒரு ராஜ்யத்தை பெற வேண்டியவராயிருக்கிறார். இந்த ராஜ்யம் பூமியை நீதியாய் (சங்கீதம் 96, 97, 72) ஆளுகை செய்யும். இது உயிரோடிருக்கிறவர்களை மாத்திரமல்ல, மரணத்தில் நித்திரையி–ருப்பவர்களையும் ஆசீர்வதிக்கும். (ஏசாயா 25:6–9; ஓசியா 13:14; ரோமர் 14:9 ; 8;20, 21, டயக்லாட்) இதை அநேக வேத வாக்கியங்கள் தெளிவான விசேஷ வார்த்தைகளினால் அறிவிக்கிறது. உண்மையிலேயே

இதுதான் தேவனுடைய வார்த்தையின் முழு நோக்கமாக இருக்கிறது. தெய்வீக திட்டம் ஒரு தங்க சங்கி–யைப் போல, பழைய மற்றும் புதிய ஏற்பாடு அடங்கிய முழு வேதாகமம் மூலமாக ஓடுகிறது.

இந்த மகா மேசியா, ஆதாமின் சந்ததியினர் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டியவராயிருக்கிறார். வேதம் கூறுவது போல அவர் ஜனங்களின் உரிமைக் காரராகவும் காப்பாற்றுபவராகவும் இரட்கராகவும் தேவைப்படுகிறார். “மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோலை உடையவராயிருக்கிறேன்” (வெளி 1:18) என்று கூறுவது போல, மனிதருக்கான தமது ப–யினால் அவர் நமக்காக இதை பெற்றிருக்கிறார். தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்கு ஈடாக தமது ஜீவனைக் கொடுத்தார். இந்த விலைக்கிரயம் பொதுவாக உலகத்திற்கு இன்னும் பிரயோகிக்கப்படவில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் அது பிரயோகிக்கப்படும் என்று நாம் நம்புகிறோம். ஆதாமின் பிள்ளைகள் இயற்கையின் அனுபவத்தையும், பாவத்தின் பலன்களையும் பெற்ற பிறகு ஆதாமின் பிள்ளைகள் அனைவருக்கும் கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யம் நித்திய ஜீவனுக்கான முழு சந்தர்ப்பத்தையும் கொடுக்கும். ஆதாமுக்குக் கூட இது முன்பு வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த பரந்த கருத்தி–ருந்து பழங்கால பாலஸ்தீனிய ஜனங்களாகிய கானானியர், எமோரியர், கிர்காசியர், ஏத்தியர், பெர்சியர், ஏபூசியர் போன்ற ஜாதிகள் அந்த நேரத்திலே மரித்தது அவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. நீதி, நெறி முறைகளில் இழிவானவானவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் இருந்த அவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜன மில்லாதவர்களாக இருந்தனர். கூஷ ரோகம், கபவாதம், காலரா போன்ற வியாதியினாலும் இன்னும் வேறு ஏதாவது முறையில் அவர்கள் இறந்திருந்தாலும் எல்லாம் ஒன்றுதான்.

இந்த ஜனங்கள் வியாதியினால் மரிக்காமல் போரில் அழியும்படியாக ஏன் தேவன் தெரிந்து கொண்டார் என்று சிலர் கேட்கலாம். இஸ்ரயேலரின் நீதி நெறி முறைகளுக்கு இந்த தேசத்தின் ஜனங்கள் அபாயகரமானவர்களாக இருந்திருப்பார்கள் என்பதே எங்கள் பதில், அவர்கள் விக்கிரக ஆராதனையை மாத்திரமல்ல, விபசாரம், குறிசொல்லுதல் போன்றவைகளிலும் ஈடுபட்டிருந்தனர். மேலும் தேவன் இந்த தேசத்தை முற்றிலும் வேறுபட்ட காரியத்துக்கு பயன்படுத்த தேவன் திட்டங் கொண்டிருந்தார். அவர் ஒரு பெரிய திட்டம் வைத்திருந்தார். அதில் இந்த கானான் தேசம் முக்கிய பங்கு வகிக்க வேண்டியிருந்தது. இந்த தேசமும் அதில் வாழ்ந்த இஸ்ரயேலர்களும் சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய இஸ்ரயேலரோடு தேவன் தொடர்பு கொண்டிருந்ததற்கு முன்னடையாளமாக இருந்தது. இந்த கானான் தேசத்தில் வாழ்ந்த புறஜாதியாரை துரத்தாமலோ அல்லது அழிக்காமலோ விட்டிருந்தால், இந்த கானான் தேசத்தை முன்னடையாளமாக்க தேவன் போட்டிருந்த திட்டம் நிறைவேறியிருக்காது.

### ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் கானானியர்களை வெளியேற்றுதல்

இங்கு என்ன வகையான முன்னடையாளம் காண்பிக்கப்படுகிறது? பாவம் நிறைந்த ஜாதிகள் இஸ்ரயேலரால் துரத்தப்படுதலும் அழிக்கப்படுதலும், எப்படி தற்காலத்தில் தேவனுடைய பிள்ளைகள், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், புது சிருஷ்டிகள் அவர்களது மாம்சீக சரீரங்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கு அடையாளமாக இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். புது சிருஷ்டியாகிய நாம் இந்த மாம்சீக சரீரத்தை ஜெயங்கொள்ள வேண்டும். அல்லது அழிக்க வேண்டும், இல்லையென்றால் அது நம்மை அடிமைப்படுத்திவிடும். நாம் அவைகளை ஜெயங்கொண்டு அழிக்கவில்லையென்றால், அவைகள் நம்மை ஜெயங்கொண்டு அழித்து விடும். நமது மனதில் வாசம் செய்கிற கெட்ட குணங்கள், கெட்ட பழக்கங்கள், தீய ஒழுக்கங்கள், எண்ணங்கள், விருப்பங்கள் ஆகியவைகளை வெற்றி கொள்ள வேண்டும். புதிய சிந்தை முழு கட்டுப்பாட்டையும் எடுத்துக் கொண்டு அவைகள் முன்பு இருந்த இடத்தில் புனிதமான பரிசுத்தமான எண்ணங்கள், விருப்பங்கள், நோக்கங்கள், பழக்கங்கள் ஆகியவைகளை நிரப்ப வேண்டும்.

இந்த மனித சரீரங்கள் தற்போது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டியின் சொத்து மற்றும் உடைமை. புது சிருஷ்டிக்கும் அவனது சரீரத்துக்கும் சமாதானம் இல்லை. இந்த விஷயத்தில் மாம்சீக இஸ்ரயேலரிடமிருந்து எச்சரிக்கையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். தேவன் கட்டளையிட்ட பிரகாரம் சத்துருக்களை முற்றிலுமாக வெளியேற்றாமலும் அழிக்காமலும் தோல்வியடைவது இஸ்ரயேலர்களுக்கு சத்துருக்களிடமிருந்து தொடர்ச்சியான தொந்திரவுக்கும், சிக்கவைப்பதற்கும், விக்கிரகாராதனைக்கும் பாவத்திற்கும் காரணமாயிருந்தது. அவர்களது அனுபவங்கள் எல்லாம், நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய சத்துருக்களுக்கு விரோதமான நமது போராட்டங்கள் எல்லாம் மாம்சீக சிந்தையை முற்றிலுமாக அழிப்பதில் முடிவடைய வேண்டும். இது மனித சரீரத்தின் மரணத்தை அர்த்தப்படுத்தும்.

இஸ்ரயேலர்களின் அவர்களது சத்துருக்களுக்கு விரோதமான போராட்டம் ஆயிர வருடயுகத்தின் நிலைமையை ஒரு படமாகவும் காட்டுகிறது. ஆயிர வருட யுகத்தில் உலகமானது கிறிஸ்து மற்றும் சபையின் வழிநடத்துத–ன் கீழ் முழு பூமியும் அவர்கள் சுதந்தரித்துக் கொள்ள தகுதியுள்ள நிலைமைக்கு கொண்டு வரப்படும். ஆயிரவருடமளவும் சாத்தான் கட்டப்பட்டிருப்பான். மனுக்குலத்தின்மேல் இப்பொழுது இருக்கும் ஆதாமின் மரண சாபமும் பாவமும் அதோடு கூட நீதிக்கும் விரோதமாயிருக்கும் அனைத்தும் அழிக்கப்படும். இவைகளெல்லாம் நீண்ட காலமாக உலகத்தை ஒடுக்கி வந்த “பலவானின்” ஆளுகையாக இருக்கிறது. பிறகு ஆவிக்குரிய யோசுவாவாகிய கிறிஸ்து அதிகாரத்துக்கு வந்து இந்த பாவ காரியங்களை எப்படி பூண்டோடு அழிப்பது என்பதையும், இப்படியாக முடிவில் தேவனுடைய ஏதேனாகிய இந்த பூமியை எப்படி சுதந்தரித்துக் கொள்வது என்பதையும் எப்படி ஒவ்வொரு மனிதனும் ஒரு ராஜாவாக, அரசனாக இருப்பது என்பதையும் காண்பிப்பார்.

மாம்ச இஸ்ரயேலர்கள் போரிட்டு தேசத்தை சத்துருக்களிடமிருந்து உடையமையாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. அது போல அப்படிப்பட்ட எந்த காரியத்தையும் நாம் இங்கே காண முடியவில்லை. உதாரணத்திற்கு, இஸ்ரயேலர்கள், தாங்கள் சென்று கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. தேவனே கானான் தேசத்தை அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்தார். இந்த புறஜாதி ஜனங்கள்மேல் தேவன் அக்கறை காட்டாமல் இருந்தார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. அவர்களது அக்கிரமங்கள் முழுமையடைந்தது என்று தேவன் அறிவிக்கிறார். அவர்களது வாழ்நாளை நீடிப்பதினால் எந்தவித பயனுமில்லை. அந்த தேசத்தை இஸ்ரயேலருக்கு நித்திய காலமாய் கொடுத்ததினால்

--2418--

எந்தவித அநீதியும் இழைக்கப்படவில்லை என்பதை இப்படியாக நாம் காண்கிறோம். இது முன்னரே தேவனால் முன்னுரைக்கப்பட்டிருந்தது. தேவன் வாக்குத்தத்தத்தை கொடுத்த போது அதன் நிறைவேறுதலுக்கு ஏற்றகாலமாக அது இருக்கவில்லை. இந்த தேசங்களின் அக்கிரமங்கள் நிறைவாகும் வரை அங்கே ஒரு இருளான காலம் முதலாவது இருக்க வேண்டியிருந்தது.

### ஆவிக்குரிய இஸ்ரயே□ன் இன்றைய போராட்டம்

சுவிசேஷ யுகத்திற்கு வந்தால், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஒரு மகா போராட்டத்தை உடையவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். அது முழு உலகத்திற்கும் எதிரான ஒரு போராட்டம். இப்படிப்பட்ட வல்லமையான முக்கியமான போராட்டம் இதுவரை நடந்ததில்லை. எனினும் கர்த்தராகிய இயேசுவினாலும் அவரது பின்னடியார்களாலும் நடத்தப்பட்ட போராட்டம் துப்பாக்கி அல்லது மற்ற மாம்சீக ஆயுதங்களுடனானது அல்ல. இன்றைக்கு ஒருவரையொருவர் அழிப்பதற்கு இலட்சக் கணக்கானவர்கள் இராணுவ முகாம்களில் இருக்கிறார்கள். அவர்களது ஆட்சியாளர்களால் அவர்கள் தூண்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக தேவனிடம் தன்னுடைய இருதயத்தை உண்மையாகக் கொடுத்த கிறிஸ்தவர்கள் இருக்கலாம். ஆனால் இவர்கள் எல்லாம் விதிவிலக்கு, உலகின் திரளான ஜனங்கள் தேவனிடம் அர்ப்பணம் போன்ற காரியங்களை செய்யவில்லை என்கிற உண்மையை ஒத்துக் கொள்கிறார்கள். எனினும் அவர்களது ஆட்சியாளர்கள், அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்றும் அவரது போரையே நடத்துகிறோம் என்றும் அவர்களிடம் கூறுகிறார்கள்.

வேதாகமத்தின்படி, ஆண்டவர் அவரது சீஷர்களுக்காக கொடுத்திருக்கிற குறிப்பிட்ட படிகளை எடுத்திருக்கிறவர்கள் மட்டுமே கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படையாக சொல்–க் கொள்கிற மற்ற அனைவரும் போ–யானவர்கள், “களைகள்” ஆகும். பழங்கால பரிசுத்தவான்களின் வாழ்க்கையை ஆராய்வதின் மூலம் உண்மையான கிறிஸ்தவர்கள், தேவனுடைய எண்ணத்தையும், தேவனுடைய சித்தத்தையும் தெளிவாக காண முடிகிறது. மோசே, யோசுவா தீர்க்கதரிசிகள், இன்னும் மற்ற கடந்த கால விசுவாசிகள் போன்ற இவர்களது விசுவாசம், தைரியம், வைராக்கியம் என்ற பாடங்களின் மூலம் அவர்கள் பலனடைகிறார்கள். இந்த வேதாகம பதிவுகள் எல்லாம் சுவிசேஷ, சபையின் அறிவுரைக்காகவும் நிழலாகவும் கொடுக்கப்பட்டிருப்பதாக அவர்கள் போதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதன் மூலமாக அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள், பலப்படுத்தப்படுகிறார்கள் மற்றும் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

கர்த்தரின் ஜனங்கள் தங்களை பலமுள்ளவர்களாகவோ, பெருமைக்குரியவர்களாகவோ உணராதபடி, மாறாக, யோசுவா செய்ததைப் போல மிகவும் தாழ்மையானவர்களாக பற்றாக்குறையுள்ளவர்களாக உணர வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் தங்கள் பற்றாமையை தங்களது பலமாக உணர வேண்டும். தேவன் அவர்களை பெரிய வேலைக்கு அழைத்திருக்கிறார் என்பதையும், அவரது ஆசீர்வாதம் இல்லையென்றால் முழுமையான தோல்வியை அடைவார்கள் என்பதையும் உணர வேண்டும். அவர்கள் கர்த்தரை நோக்க வேண்டியவர்களாகவும் அவரது வாக்குத்தத்தங்களை தங்களது நல்ல, நேர்மையான இருதயத்துக்குள் பெற வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அவரிடத்தில் விசுவாசமாகவும், உண்மையாகவும் இருக்கும்வரை இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் அவர்களுடையது என்பதை விசுவாசிக்க வேண்டும். இப்படியாக செய்து அவர்கள் பலமுள்ளவர்களாக மிகவும் பலமுள்ளவர்களாகவும் மிகவும் தைரியமுள்ளவர்களாகவும் ஆக இயலும்.

### கடந்த கால சிறந்த உதாரணங்கள்

ஒரு முழு தேசமும் அவருக்கு விரோதமாக இருக்கும் போது, நமது கர்த்தராகிய இயேசுவின் தைரியத்தை நாம் கவனித்திருக்கிறோம். அவரது உண்மையான சீஷர்களிடத்திலும் இப்படியாகவே இருந்திருக்கிறது. இவர்களில் பெரும்பாலோர் இந்த உலகத்தில் தரித்திரராகவும், மிகவும் சொற்பமான ஐசுவரியத்தையோ செல்வாக்கையோ அல்லது மனிதரிடத்தில் கனத்தையோ பெற்றிருந்தவர்களாகவும் இருந்தார்கள். சுவிசேஷயுகம் முழுவதும் தேவனுடைய உண்மையான ஜனங்கள் தாழ்மையான வகுப்பாராக இருந்திருக்கின்றனர். எனினும் பலம் பொருந்தியவர்களாகவும் தைரியமுள்ளவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அப்போஸ்தலர் காலத்து ஜனங்கள் “அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் என்று அறிந்து கொண்டார்கள்.” அவரைப் பற்றியும் அறிந்து கொண்டார்கள. அந்த இயேசுவின் சீஷர்கள் அவர் தமது பிதாவின் ஊழியத்தில் தமது ஜீவனையும் கொடுக்க தயாராயிருந்ததை கண்டிருக்கிறார்கள். கொடூரமான மரணத்தை சந்தித்த போதும் “பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?” என்று கூறியபோதும் அவரது தைரியத்தை அவர்கள் கண்டிருக்கிறார்கள். ஆகையால் நமது ஆண்டவரை அதி–ருந்து பின்தொடர்ந்து வந்தவர்கள், கடினமான அனுபவத்தின் கீழும் அதிக சோதனையின் கீழும் நமது கர்த்தர் வெளிப்படுத்திக் காண்பித்த ஆவியை அதிகமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது நமக்கு ஓர் ஆச்சரியமான உத்வேகத்தை நிரூபித்திருக்கிறது.

விசுவாசிகள் எல்லாம் தொடக்கத்தி–ருந்தே ஒரு விதியாக உலகில் சிறிதளவு மாத்திரமே அறியப்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். சாதாரணமாக அவர்கள் உயர்ந்தவர்களாகவோ, படித்தவர்களாகவோ, ஐசுவரியவான்களாகவோ இருப்பதில்லை, கடந்த காலத்தில் சில பிரபலமானவர்கள், உயர் குடியில் பிறந்தவர்கள், தேவனுடைய பரிசுத்தவான்களாக இருந்து அந்த காலத்தில் அவர்கள் பெற்றிருந்த வெளிச்சத்திற்கு ஏற்ப வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் விதிவிலக்காக இருந்தார்கள். அநேக பரிசுத்தவான்கள் அமைதியாக, விசேஷ சம்பவங்கள் இல்லாத வாழ்க்கை வாழ்ந்து, மரண நித்திரைக்கு செல்லும் வரை தேவனுடன் நடந்து, தாங்கள் பெற்றிருந்த வெளிச்சத்தின்படி வாழ்ந்ததாக காணப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த தேவனுடைய பரிசுத்தவான்கள், தீவிரமாக துன்புறுத்தப் படாதிருந்தும் அவர்களை இந்த உலகமானது பொதுவாக புறக்கணித்தது, ஆனால் யாரெல்லாம் உள்ளத்தில் உண்மையுள்ளவர்களாகவும் விசுவாசமுள்ளவர்களாகவும் இருந்தார்கள் என்பதை நாம் நிச்சயமாக அறிய இயலாது.

ஆனால் கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" என்பதை நாம் நிச்சயிக்கலாம்.(2 தீமோத்தேயு 2:19)

### இந்த "சோதனை நாளில்" தைரியம்

நமது காலத்திற்கு வரும்போது, இந்த வேளையைக் காட்டிலும் அதிகமாக குணநல பலமும் அதிகமாக தைரியமும் தேவைப்பட்டதில்லை. முழு உலகத்தின் அக்கிரமங்கள், விசேஷமாக கிறிஸ்தவ தேசங்களின் அக்கிரமங்கள் இப்பொழுது ஓரளவுக்கு நிறைவடைந்திருக்கிறது. தற்போது அனைத்து அரசாங்கங்களும் நீக்கப்படும் வேளையில் இருக்கிறது. இது ராஜாதிராஜாவின் மகிமையான ஆளுகைக்கு வானத்தின் கீழெங்கும் தேவனுடைய மகிமையான ராஜ்யத்துக்கு இடங்கொடுக்கும். தங்களை கிறிஸ்துவின் சபை என்று கூறிக்கொள்கிற மத முறைமைகள் அனைத்தும் தவறுகளின் பக்கம் அணி வகுத்து நிற்கின்றன. மேலும் அவைகள் சத்தியத்திற்கு எதிராகவும் அதன் பரிந்து பேசுகிறவர்களுக்கு எதிராகவும் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவரது வல்லமையின் சக்திக்குள்ளும் பலமாயிருப்பது அவசியமாயிருக்கிறது.

இந்த தவறுகளின் கோட்டைக்கு எதிராக யார் தனது சொந்த பலத்தில் போரை துவக்கினாலும் தோல்வியடைவது நிச்சயம். ஆனால் அவன் சேனைகளின் கர்த்தரின் பலத்தில் சென்றால். அவன் என்ன செய்ய வேண்டும், என்ன சொல்ல வேண்டும். என்கிற தெய்வீக வழி நடத்துதலைப் பெற்று நல்ல தைரியம உள்ளவனாக இருக்கக்கூடும். அநேக ஊக்கமுள்ள இருதயங்கள் ஜீவ அப்பத்திற்காக மன்றாடி கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாபிலோனில் அடிமைப்பட்டு இருக்கிறார்கள் அல்லது உலகம் என்கிற "வய-ல்" கொடும் பட்டினியாய் கிடக்கிறார்கள். இவர்களுக்கு நமது உதவி தேவைப்படுகிறது.

நம்முடைய பலம், தேவனிடத்திலும் சத்தியத்தின் மேலும் உள்ள நமது பற்றுதல் மற்றும் சத்தியத்தை காப்பதில் நமது தைரியம் ஆகியவை சோதிக்கப்படும். இவைகளெல்லாம் நிச்சயமாக பரீட்சையில் வைக்கப்படும்; ஏனெனில் பாபிலோன் நமது வழியை எதிர்த்துக் கொண்டிருக்கிறது. உண்மையுடன் சகிக்காதவர்களை தேவன் ராஜ்யத்தில் பெற்றுக் கொள்ளமாட்டார். கர்த்தருடைய வார்த்தைக்கு எதிர்த்து நிற்பவர்களுக்கு நாம் சாந்தத்துடன் போதிக்க நாடுவோமாக. மேலும் பசியாயும் தாகமாயும் இருப்பவர்களை நாம் கவனிப்போமாக.

நமது சோதனைகளும் உபத்திரவங்களும் எந்த ரூபத்தில் வரும் என்பதை நாம் அறியோம். ஆனால் இந்த "தீங்கு நாளில்" ஆம், இந்த நாளின் மிகவும் முடியும் வேளையில், "சோதனை காலத்தின்" கடைசியில் ஜீவிக்கிற நமக்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கம் நிச்சயம் தேவைப்படுகிறது. சத்தியம் என்னும் கச்சையை நமது அரையிலே கட்டிக்கொள்வது அவசியம்; நமது மனதையும் அறிவாற்றலையும் தவறுகளின் கணைகளி-ருந்து பாதுகாக்க தலைச்சீரா நமக்கு அவசியம்; நீதியென்னும் மார்க்கவசமும் நமக்கு அவசியம்தேவை. இருபுறமும் கருக்குள்ள ஆவியின் பட்டயம் நமக்கு அவசியமாக இருக்கிறது. "சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் "என்னும் பாதரட்சையும் நமக்கு தேவைப்படுகிறது. இவைகளெல்லாம் நமது இருதயத்தின் கானானியர்களையும் சுற்றிலுமுள்ள அனைத்து இடையூறுகளையும் ஜெயம்கொள்ள நமக்கு தேவைப்படுகிறது.

இப்படியாக சர்வாயுதத்தை தரித்துக் கொண்டு அனுதினமும் பெருகி வருகிற மகா போராட்டங்களில் "முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக" உண்மையிலேயே நாம் பிரிந்து வருவோம். "தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டு அன்பு செலுத்தினவர் மூலமாக" நாம் ஜெயங்கொள்ளுவோம். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள் செய்வேன்" என்கிற நமது ஆண்டவரின் வாக்குத்தத்தமே நமது அனுதின உத்வேகமாக, தூண்டுதலாக இருப்பதாக.

"ஓ கிதியோனின் படையே எழும்பு!
பயத்துடன் அவன் திரும்பி வரட்டும்;
வைராக்கியமானவர்களைத்தான் யேகோவா விரும்புகிறார்.
அவர்களது இருதயம் சத்திய அன்பினால் எரிகிறது!

"உன் பட்டயம் ஆவியின் பட்டயமாயிருக்கிறது;
அவரது வார்த்தையின் வெளிச்சமே உனது விளக்கு;
உனது பானை எளிய மண்பாத்திரம்
உனது கர்த்தரின் சத்தத்தில் பிரிகிறாய்.

"உனது பானைக்குள் உனது தீவட்டி எரிகிறதா?
உனது எக்காளம் தொனி கொடுக்கிறதா?
சீக்கிரத்தில் கிதியோனின் பட்டயமாகிய கர்த்தரின் பட்டயம்
சத்துருக்களின் சேனையை நாசமாக்கும்.

"வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெற்றி நிச்சயம்,
அவர் அளிக்கும் சமாதானம் மகாபெரிது;
விசுவாசிகள் அனைவரும் உங்கள் இடத்தில் தரித்து
நில்லுங்கள் -யுத்தம் கர்த்தருடையது, உங்களுடையது அல்ல!"

---

**Prayer - Its Úse And Abuse**

# ஜெபம்-அதன் உபயோகமும் தகாத உபயோகமும்

*"சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்."*
*"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்." லூக்கா 18:11, 1 தெசலோனிக்கேயர் 5:17.*

முதல் தலைப்பு வசனத்தில் நமது கர்த்தர் கொடுக்க விரும்பிய பாடங்களுக்கு ஒரு உவமையை பயன்படுத்தினார். உவமை என்பது சில உண்மைகளை விளக்க வடிவமைக்கப்பட்ட ஒரு வார்த்தை – படவிளக்கம். ஆனால் உண்மையாக நடந்த காரியமாக இருக்க வேண்டும் என்பதில்லை. மாறாக உண்மையான அறிக்கையாயிருப்பது மிகவும் அரிது. ஆனால் வெறும் யூகமான காரியம். இதுவுமில்லாமல் ஒரு உவமையில் அது சொல்லார்த்தமான பொருளை உடையதாய் இராது. கிறிஸ்துவின் உவமைகளில் ஒன்றில் கோதுமையும் களையும், உண்மையான கோதுமையையும் களையையும் குறிக்கவில்லை, ஆனால் அவைகள் ராஜ்யத்தின் பிள்ளைகளும் சத்துருவின் பிள்ளைகளும் ஆவர். இங்கே உவமையானது நீதியை மதித்திராத அநீதியான நியாயாதிபதியைப் பற்றியது ஆகும். இப்படியிருந்தும் ஒரு ஏழை விதவை அடிக்கடி அவனிடம் வந்து உதவி கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் அடிக்கடி வந்து அவனை அலட்டாதபடி கடைசியாக அவளுக்கு விரும்பின தீர்ப்பைக் கொடுத்தான்.

பரம பிதாவிடம் நாம் வருவதைக் குறித்த ஒரு விளக்கத்திற்காக இந்த உவமையை கர்த்தர் பயன்படுத்துகிறார். ஆனால் பிதாவை அநீதியான நியாயாதிபதியாகவும் சபையை ஒரு விதவையாகவும் கூறாமல், இந்த உவமை விடாமல் தொடர்ந்து ஜெபிப்பதற்கான ஒரு விளக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது. ஸ்திரீயின் தொடர்ச்சியான பிடிவாதம் நியாயாதிபதியிடம் வந்ததை இயேசு முக்கியப்படுத்த விரும்பினார். உவமையை முடிக்கும்போது, இந்த எழை விதவை தொடர்ந்து கேட்டதால் ஒரு அநீதியான நியாயாதிபதி நியாயம் செய்யும் போது, நமது பரம பிதாவிடம் நாம் என்ன எதிர்பார்க்கலாம் என்று நமது ஆண்டவர் கேட்கிறார். அவரது பிள்ளைகள் இரவு பகலாக அவரைக் கேட்கும்போது அவர்களது ஜெபத்தை அவர் கேட்பது நிச்சயம், ஜெபங்கள் கர்த்தரால் பதிலளிக்கப்படுவதற்கு சரியானவைகள் என்பதை வ–யுறுத்துகிறது. தேவன் எதையும் செய்வார் என்று நாம் நினைக்கக்கூடாது. ஆனால் சரியானதும். நீதியானதும், தகுதியானதுமானவைகளை செய்வார். இந்த கருத்துக்கு இசைவாக நமது ஆண்டவரின் ஜனங்களுக்கு போதனை என்னவென்றால் நாம் ஜெபத்தில் கர்த்தரிடம் வரும் போது அவருக்கு பிரியமான காரியங்களை கேட்கிறோம் என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். ஆகையால் தேவனிடம் நெருங்கி வாழ்கிற கிறிஸ்தவர் தான் ஜெபத்தை ஏறெடுக்க மிகவும் தகுதியானவர்கள். இந்த ஜெபங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பதிலளிக்கப்படும்.

### "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்"

சரியான ஜெபத்தைப்பற்றி நமது கர்த்தராகிய இயேசு திரும்பட தெரிவித்திருக்கிறார். "நீர் எப்பொழுதும் எனக்கு செவி கொடுக்கிறீர் என்று நான் அறிவேன்" என்ற நமது ஆண் டவரின் சாட்சியம் நமக்கு இருக்கிறது. எப்பொழுதுமே அவர் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக கேட்டதால் அவர் மறுக்கப்படவேயில்லை. நமது ஜெபம் கேட்கப்படுவதற்கு இரண்டு நிபந்தனை இருக்க வேண்டும். முதலாவது இயேசுவை நமது இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். பிறகு தேவன் குறிப்பிட்டுள்ளபடி அவரிடம் அர்ப்பணம் செய்திருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதாக இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். பரம பிதாவினால் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக் கொள்ளப்படும் போது நாம் அவருக்குள் புது சிருஷ்டிகளாகிறோம். இந்த புது சிருஷ்டிக்குத்தான் தேவனுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு புது சிருஷ்டிகளாக ஆகாதவர்கள் இந்த ஆசீர்வாதங்களுக்கு வெளியே இருப்பார்கள். ஆனால் நம்பிக்கையற்றவர்களாக அல்ல. ஏனெனில் தேவனுடைய திட்டத்தில் அகில உலகிற்கும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் "இந்த அனுக்கிரக காலத்தில்" இந்த விசேஷித்த குறிப்பிட்ட முறையிலல்லாமல், ஏற்புடைய ஜெபங்களை ஏறெடுக்க முடியாது.

தற்காலத்தில் ஒரே ஒரு மந்தையே இருக்கிறது. இந்த மந்தையி–ருப்பவர்கள் மட்டுமே தேவனுடைய கிருபையில் இருக்கிறார்கள். இவர்கள் தான் ஜெபிக்கும் உரிமையை பெற்றிருக்கிறார்கள். ஆனால் அர்ப்பணம் செய்த பிறகு இரண்டாவது கவனிக்க வேண்டிய காரியம் இருக்கிறது. அதாவது இவர்கள் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறார்களா அல்லது அவர்கள் அவரோடு இணக்கமில்லாமல் இருக்கிறார்களா என்பதாகும். தேவனுடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருக்க வேண்டும். வேதத்தை ஒரு முறை முழுவதுவாக வெறுமனே வாசிக்க வேண்டும் என்பதல்ல அல்லது ஒவ்வொரு நாளும் இவ்வளவு அதிகாரத்தின் வசனங்களை வாசித்தோம் என்பதல்ல, ஆனால் வசனம் நம்மில் இருக்க வேண்டும். அதன் போதனைகளும் கொள்கைகளும் நமது வாழ்வில் இணைக்கப்படவும் ஒன்றிப் போகவும் வேண்டும். இப்படியாக தேவனுடைய மனம் என்ன என்பதையும் அவருக்கு பிரியமானது என்ன என்பதையும், அவரது நிபந்தனையின் கீழ் நாம் கேட்க வேண்டியது என்ன என்பதையும், கேட்கக் கூடாதது என்ன என்பதையும் காணக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இப்படியாக கிறிஸ்துவிலும் அவரது வார்த்தைகளிலும் நிலைத்திருக்கிற அனைவரும் அவர்கள் விரும்பியதைக் கேட்கலாம். தேவனுடைய வார்த்தையில் உறுதி மொழியாகக் கொடுக்கப்பட்டுள்ள எதையும் கேட்கலாம். இதன் பொருள் என்னவென்றால் அவர்களது சித்தம் எதுவோ அதைக் கேட்கலாம். ஏனெனில் அவரது வார்த்தைகள் அவர்களிடத்தில் முற்றிலுமாக வாசம் செய்கிறது. அதில் அங்கீகரிக்கப்படாத எதையும் கேட்க அவர்கள் நினைக்கக் கூடாது.

### சுலபமாக கிடைத்த ஆசீர்வாதங்கள் கனம் பெறாது

தொடர்ந்து ஜெபிப்பதைக் குறித்தே நமது பாடம் போதிக்கிறது. அதாவது ஒரு முறை ஜெபித்துவிட்டு, "நான்

இந்த காரியத்தைக் குறித்து ஜெபித்துவிட்டேன், இப்பொழுது நான் அதை விட்டு விடுவேன்"என்று சொல்லக்கூடாது, "தொடர்ந்து ஏன் ஜெபிக்க வேண்டும். ஒவ்வொரு தேவையையும் தேவன் அறிவார். முழு காரியத்தையும் ஏன் தேவனிடம் விட்டு விடக் கூடாது?" என்கிற கேள்வி எழுகிறது. நமது சொந்த நன்மைக்கு நாம் கேட்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்றும் அதற்கு பதில் கிடைக்கும் போது நாம் அதை சொந்தமாக்கிக் கொள்ள தயாராயிருக்க வேண்டும் என்றும் வேதவாக்கியம் இந்த கேள்விக்கு பதில் அளிக்கிறது. நமக்கு தேவை என்பதை உணராமல் நாம் அவைகளை பெற்றால், நமது விழுந்துபோன நிலைமையில் அவைகள் சுலபமாக நம்மை வந்து அடைந்தால் அவைகள் மதிப்படையாது.

உண்மையிலேயே பெரும்பாலான ஜனங்கள் அனுதினமும் அநேகமான ஆசீர்வாதங்களை பெறுகிறார்கள் என்பது உண்மை. அதற்கு அவர்கள் நன்றியுடைவர்களாக இருப்பதில்லை. அவர்கள் அதை போற்றுவதில்லை. நமது கர்த்தர் கூறுவது போல, தீயோர் மேலும் நல்லோர் மேலும் தேவன் சூரியனை உதிக்கப்பண்ணி, மழையை பெய்யப்பண்ணுகிறார். இவைகளெல்லாம் தேவனிடம் இருந்து வருகிற பெரிய ஆசீர்வாதங்கள் என்று அவர் நமக்கு அறிவிக்கிறார். எனினும் வெகு சிலரே மழையானது தேவனிடமிருந்து வருகிற ஆசீர்வாதம் என்று போற்றுகிறார்கள்! சூரியன் உதிப்பதை பார்க்கும் பொழுது எப்படி சிலர் தேவன் சூரியன் உதிப்பதின் மூலம் தங்களுக்கு அனுப்புகிற ஆசீர்வாதம் என்று போற்றுகிறார்கள்! ஏனெனில் இந்த ஆசீர்வாதங்கள் மிகவும் பொதுவானதாகவும் யாரும் கேட்காமல் வருகிறதாகவும் இருக்கிறது. பெரும்பாலனவர்கள் இதை போற்றுவதில்லை.

ஆனால் கிறிஸ்தவர்கள், புரிந்து கொள்ளும் கண்கள் திறக்கப்பட்டு, இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் கர்த்தரிடமிருந்து வருகிறது என்று அதிகதிகமாக போற்றுகிறார்கள். ஆகையால் அவனது தேவைகளையும் கர்த்தருடைய வார்த்தையில் என்ன வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது என்பதையும் உணர வரும் போது, அவன் அனுகூலமான நிலையில் கர்த்தரிடம் ஜெபத்தின் மூலம் சென்று இந்த தேவைகளை பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறிகிறான். அவன் தேவனுடைய ஆசீர்வாதங்களை நன்றியுடனும் அதன் மூலம் பலனடையும்படியாகவும் பெற்றுக் கொள்ள தயாராகும் மனோ நிலைக்குள் அவனது இருதயம் வருகிறது.

பிறகு தேவனுடைய பிள்ளை என்ன கேட்க வேண்டும்? என்ன கேட்க வேண்டும் என்பதைக் குறித்து வேதம் நமக்கு என்ன சொல்லுகிறது? முதலாவது "வீண் வார்த்தைகளை அலப்ப வேண்டாம் என்று கூறுகிறது, நாம் எப்படி இதை புரிந்து கொள்ள வேண்டும்? "அஞ்ஞானிகளைப் போல" வீண் வார்த்தைகளை அலப்ப வேண்டாம் என்று நமது கர்த்தர் விளக்குகிறார். ஏனெனில் அதிக வசனப்பினால் ஜெபம் கேட்கப்படும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். உதாரணத்திற்கு சீனர்கள் ஒரு நிமிடத்தில் நூறு ஜெபங்களை ஏறெடுக்கும் படியான ஜெப சக்கரங்களைப் பெற்றிருக்கிறார்கள். இப்படியாக அவர்கள் நேரம், குரல் முதலானவைகளை மிச்சப்படுத்துகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஜெபங்கள் எல்லாம் வெறும் வீண் வார்த்தைகள். கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிற பலர் வீண் வார்த்தைகளை அப்பியாசப்படுத்துகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அநேக ஜெபங்களை அவர்கள் ஏறெடுக்கிறார்கள். ஆனால் அவைகள் பெரும்பாலும் இருதயத்தி-ருந்து வருவதில்லை என்று நாங்கள் பயப்படுகிறோம். ஆனால் அவைகள் கடமை உணர்ச்சியிலோ அல்லது கட்டாயத்தினாலோ மென்மேலும் சொல்லப்படுகிறது.

### பழைய சிருஷ்டிக்காக அல்ல ஆனால் புது சிருஷ்டிக்காக

கர்த்தருடைய ஆசீர்வாதம் மற்றும் உதவியின் அவசியத்தை உணர்ந்து, நம்பகமான மனோபாவத்துடன் அவரிடம் சென்று நமது ஜெபத்தை ஏறெடுத்து, அவரது பதிலுக்கான ஏற்ற காலத்திற்கும் வழிக்கும் காத்திருப்பதே சரியான மனநிலையாகும். நாம் என்ன கேட்க வேண்டும் என்பதைக் குறித்து நமது ஆண்டவர் தமது பிரசங்கங்களில் ஒன்றில் குறிப்பிடுகிறார். அதாவது அஞ்ஞானிகள், பொதுவாக உலக ஜனங்கள், விசுவாசமில்லாத அனைவரும் என்னத்தை உண்போம்? என்னத்தை குடிப்போம்? என்னத்தை உடுப்போம்? என்று பூமிக்குரிய ஆசீர்வாதங்களை கேட்கிறார்கள். ஆகையால் ஒரு குழந்தையானது அதன் அறியாமையினால் பூமிக்குரிய காரியங்களை கேட்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள், பூமிக்குரிய ஆசீர்வாதங்களை புது சிருஷ்டியின் பயன்பாட்டுக்கோ அல்லது வளர்ச்சிக்கோ தேவையான அளவுக்கு மட்டுமே கேட்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் கிருபையிலும் அறிவிலும் வளருவதால் தாம் புதுசிருஷ்டி என்கிற உணருதலுக்கு மென் மேலும் வந்து, புதுசிருஷ்டி தனக்காக ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள், பழைய சிருஷ்டிக்காக அல்ல என்பதை உணர வேண்டும்.புது சிருஷ்டி தனது கூடாரமும் ஊழியக்காரனுமாகிய அழிவுக்குரிய சரீரத்தை கவனிக்க வேண்டும். இந்த சரீரத்திற்காக, புது சிருஷ்டி சரியானபடி அபிவிருத்தி அடையவும், செய்யும்படி கர்த்தர் கொடுத்துள்ள வேலையை நிறைவேற்றவும் தேவையான அளவுக்கு கேட்க வேண்டும். பழைய சிருஷ்டியை சந்தோஷப்படுத்துவதற்காக மட்டும் அவன் கேட்கக் கூடாது. ஏனெனில் பழைய சிருஷ்டி மரித்ததாக கருதப்படுகிறது. அவன் கர்த்தரிடம் தனது தவறிழைக்காத ஞானத்தின்படி அவனது உண்மையான தேவைகளை கேட்கலாம்.

மாம்சத்தை ஜெயம் கொள்ள பலத்திற்காகவும், நம்மை செயலாற்றுவிப்பதற்கு தேவையான ஞானத்திற்காகவும், குணலட்சண பலத்திற்காகவும், பரிசுத்த ஆவியின் கிருபை மற்றும் கனிகளில் அபிவிருத்திக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும். ஆவிக்குரிய உணவிற்காகவும் நமது வஸ்திரங்கள் உலகத்தினால் கறைபடாதபடி பார்த்துக் கொள்ள ஞானம் மற்றும் கிருபைக்காகவும் தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கங்களை தரித்துக் கொள்வதற்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும். தேவனுடைய வசனத்தை புரிந்து கொள்வதற்கும் சத்திய ஆவியை போற்றுவதற்கும் தேவையான ஞானத்திற்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும். இவைகள் அனைத்தும் ஜெபிப்பதற்கான சரியான காரியங்களாகும்.

ஏனெனில் அவைகளெல்லாம். புதுசிருஷ்டியை ஒப்பனை செய்ய முக்கியமானவைகளாகும்.

மேலான காரியங்களுக்கான இந்த ஜெபத்தில் சரீரத்தையும் அதன் தேவைகளையும் நாம் புறக்கணிக்கவில்லை. எனினும் அஞ்ஞானிகள் (அஞ்ஞானிகள் என்பது தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வராத அனைவரையும் குறிக்கும்) தேடுகிறதை நாம் தேடவில்லை, தேவனுடன் உறவுக்குள் வராதவர்கள் கேட்கிறதை தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிறவர்கள் கேட்கக் கூடாது. தேவன் தமது குடும்பத்துக்குள் வராதவர்களின் ஜெபத்தை கேட்பதேயில்லை, ஜெபிக்கும்படி அவர்கள் போதிக்கப்படவில்லை. அவர்கள் கேட்பதற்கு மாறானவைகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நல்ல காலணி வேண்டும் என்றோ, நல்ல ஆடை வேண்டும் என்றோ அல்லது நல்ல வீடு வேண்டும் என்றோ அல்லது அடமானம் வைத்ததை மீட்க வேண்டும் என்றோ சீஷர்கள் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு தாம் பேசிய வார்த்தைகள் எதிலும் கூறவில்லை. இயேசுவும் அப்போஸ்தலர்களும் இப்படிப்பட்டவைகளுக்காக எப்பொழுதும் ஜெபித்ததேயில்லை. தாங்கள் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்ற ஆலோசனைக்காகவே ஜெபித்தார்கள்.

தேவனிடம் ஜெபிப்பதற்கும் (விண்ணப்பிப்பதற்கும்) அவரை ஆராதிப்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிய வேண்டும். யாரும் தேவனை ஆராதிக்கலாம், கீழே குனிந்து வணங்கலாம். ஆனால் ஜெபத்தைப் பொருத்தவரை அங்கே ஒரு வரையறை உண்டு. குறிப்பிட்ட சில நபர்கள் மட்டுமே கேட்கப்படும் என்ற உறுதிமொழியோடு ஜெபிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தான் ஒரு திட்டமான உடன்படிக்கையின் மூலமாக அவருடைய ஜனங்களானவர்கள் தேவனோடு இப்படிப்பட்ட ஒரு உடன்படிக்கையின் உறவுக்குள் வந்தவர்கள் தான் அவரிடம் ஜெபிக்கும் சலுகையை பெற்றவர்கள். நியாயப்பிரமாண உடன்படிக்கையின்படி யூதர்களிடம் இது உண்மையாய் இருக்கிறது. தேவனுடன் இயேசு கிறிஸ்து மூலமாக உடன்படிக்கை செய்த நமக்கும் கூட இது உண்மையாய் இருக்கிறது. ஜெபிக்கும் சலுகையை பெற்றிருந்தால் கூட, ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஜெபத்திற்கான நிபந்தனைகளை நாம் கவனிக்க வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக நாம் ஜெபிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனைகள். தெய்வீக சித்தத்தை நமது சித்தத்திற்கு வளைக்க நாம் முயற்சிக்கக் கூடாது. தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ந்து அதன் மூலம் அவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணினவைகள் எவை என்பதையும் தெய்வீக வாக்குத்தத்தத்திற்கு புறம்பாக நாம் எதையும் கேட்கக் கூடாது என்பதையும் கண்டுகொள்ளவும் இது நம்மை வழி நடத்தும்.

## சரீரம் புதுசிருஷ்டியின் உடைமையாக கவனிக்கப்படுகிறது

கர்த்தர் சுவிசேஷயுக முழுவதும் தம்முடைய பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக தொடர்புகொள்கிறார் என்பதையும், அவரது வாக்குத்தத்தங்கள் அனைத்தும் புதுசிருஷ்டிக்குரியது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். புது சிருஷ்டி பழைய சரீரத்தின் மீது அக்கறை கொள்கிறது. ஏனெனில் இந்த சரீரம் அதன் உடைமையாக இருக்கிறது. சரீரத்தின் அக்கறை புது சிருஷ்டியாகிய நமக்குரியது. நமது பரலோக சுதந்தரத்திற்கு நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த நன்மை பயக்கும் வரை இந்த அக்கறை நமக்குரியது, நமது ஆவிக்குரிய அனுகூலத்தில் குறுக்கீடு பண்ணாதிருக்கும் வரை இந்த அக்கறை நமக்குரியது – அதற்கு மேல் இருக்காது. ஆகையால் இது தான் எனக்கு பிடித்தமானது என்று தேவனிடம் சொல்லலாகாது; ஆனால் எது மேன்மையானது என்று அவர் கொடுக்கிறாரோ அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இதுதான் நமக்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். ஆகையால் நமது சரீர பிரகாரமான தேவையை நாம் தேவனிடம் சொல்லக் கூடாது என்று இதற்கு பொருளல்ல. மாதிரி ஜெபத்தில் நமது ஆண்டவர் நமக்கு குறிப்பிடுவது போல நாம் செய்ய வேண்டும். எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். நமது அனுதின தேவைகள், அனுதின உணவு அவரிடமிருந்தே வருகிறது. அது நல்ல உணவாகவோ, சாதாரண உணவாகவோ, தாராளமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். இவை அனைத்தும் புது சிருஷ்டியின் சிறந்த நன்மைக்காகவே ஆகும்.

கர்த்தருடைய வசனத்திற்கு இசைவாக கேட்கிற ஜெபம் நிச்சயமாக பதிலைப் பெறும். பூமிக்குரிய நல்ல பெற்றோர்கள் நல்ல பரிசுகளை தங்களது பிள்ளைகளுக்கு கொடுப்பதில் சந்தோஷமடைகிறார்கள். பரிசுகளை தங்கள் பிள்ளைகள் மேல் உள்ள உண்மையான அக்கறையாக பார்க்கிறார்கள். பெற்றுக் கொண்ட அனுகூலங்களுக்கு குழந்தைகளை நன்றியற்றவர்களாக அவர்கள் கண்டால், அடுத்ததடவை அந்த அனுகூலங்களை அந்த குழந்தை தகுந்தபடி பாராட்டும் வரை கொடுக்காதிருப்பார்கள். இதே போல் தான் நமது பரமபிதாவிடமும் இருக்கிறது. தேவன் தமது மேன்மையான வெகுமதிகளை வழங்குவதை உண்மையிலேயே அவைகளுக்காக தமது பிள்ளைகள் பசியாக இருக்கும் வரை தாமதப்படுத்துகிறார். அவரது ஆசீர்வாதங்கள் நமக்கு வழங்கப்படும்பொழுது அவைகள் நமக்கு அதிக நன்மைகள் செய்யும்படி இதை அவர் செய்கிறார்.

## ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலுக்காக ஜெபித்தல் தேவையற்றது

பரிசுத்த ஆவி கொடுக்கப்படுவதைக் குறித்து சில ஜனங்கள் ஒரு தவறான எண்ணங் கொண்டிருக்கிறார்கள் அர்ப்பணம் செய்யாத அநேகர் தங்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுக்கும்படி ஜெபிக்கிறார்கள். ஆனால் அவர்கள் போதுமான அளவுக்கு வேத வாக்கியங்களை ஆராயவில்லை. பிரத்தியேகமாக நாம் கேட்காமலேயே கர்த்தர் பரிசுத்த ஆவியை பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்களுக்கு கொடுத்தது போல நமக்கு கொடுக்கிறார். கர்த்தருக்கு முன்பாக தங்களை பிரசன்னப்படுத்தி காத்திருந்தார்கள். அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பற்றியும், அதற்காக ஜெபிக்கவும் போதுமான அளவுக்கு அறியாதிருந்தார்கள். ஆனால் கர்த்தர் சரியானவைகளை சரியான நேரத்தில் வழங்கினார். நமக்கும் அதே போல் தான் வழங்குகிறார். பரிசுத்த ஆவிக்காக கேட்கும் ஜெபத்தை இதை கருதாமல் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றினால்

அதை கர்த்தர் அருளுகிறார். நாம் தேவனுடன் கிறிஸ்து மூலமாக அர்ப்பணம் செய்யும் பொழுது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கும்படி நாம் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஒரு குழந்தை இயற்கையாக ஜெநிப்பிக்கப்படுவதுபோல நாம் ஜெநிபிக்கப்படுகிறோம். ஒரு குழந்தை ஜெநிப்பிக்கப்படுவதற்காக அது கேட்பதில்லை, அது எப்படி முடியும்? ஆனால் நாம் ஆவியின் ஜெநிப்பித்தலை பெற்ற பிறகு தேவனுடைய மனோபாவத்தை தேவனுடைய சிந்தையை, தேவனுடைய சித்தத்தை, நமது மனோபாவமாக, நமது சிந்தையாக, நமது சித்தமாக பெறுவதற்கு நாம் ஜெபிக்க வேண்டும்.

தேவன் நீதியை சிநேகித்து அநீதியை வெறுக்கிறார். ஆகையால் நாம் தீமையினாலும் சுயநலத்தினாலும் சூழப்பட்டிருப்பதை உணர்ந்து அன்பின் ஆவியை வளர்க்க வேண்டும்.அது அன்பையும் நீதியையும் போற்றும் பெரிய காரியங்களிலும் சிறிய காரியங்களிலும் நீதியை சிநேகிக்கவும் அநீதியையும், அக்கிரமத்தையும் வெறுக்கவும் படிப்படியாக நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் யாருக்கும் தீங்கையோ அநீதியையோ செய்வதை வெறுத்து ஒதுக்கிற அளவுக்கு நாம் அநீதியை வெறுக்க வேண்டும். புதுசிருஷ்டியானது ஆரம்பத்தில் எது நீதி, எது அநீதி, எது நேர்மை எது அநியாயம் என்பவைகளை மங்கலாக பார்க்கிறது. எல்லா காரியங்களிலும் கர்த்தருடைய மனோபாவமே நமது மனோபாவமாக இருக்கும் படியாக விரும்ப வேண்டும். வேத வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி தேவனுடைய குண லட்சணத்தை ஆராய்ந்து அதே போ-ருக்க அநுதினமும் கஷ்டப்பட்டு உழைத்து “கர்த்தருடைய ஆவியினால் அந்த சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறு ரூபப்படுகிறோம்.” இப்படியாக மென்மேலும் ஆவியினால் நிரப்பப்படுகிறவர்களாகிறோம்.

### பரிசுத்த ஆவியை பெற்றிருப்பதற்கான ஆதாரங்கள்

தேவனுடைய பிள்ளை அபிவிருத்தியடைவதால் அவர்களது சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகியவைகளினால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருப்பது மென்மேலும் நிரூபணமாகிறது. இவைகள் எல்லாம் நாம் பெற்றிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிற நற்குணங்கள் ஆகும். இவைகள் நமது இருதயத்தை, நமது எண்ணத்தை மென்மேலும், நமது வெளியரங்கமான வாழ்க்கையை ஆட்சி செய்ய வேண்டும். கோபம், பொறாமை, வெறிகள், சண்டைகள், தூஷணம், வன்மம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லாம் சத்துரு மற்றும் உலகத்தின் ஆவியாகிய அசுத்த ஆவிக்கான ரூபகாரங்கள், பரலோக ராஜாவின் பிள்ளைகளாகிய நாம் இவைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ள வேண்டும். அவைகள், மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகள்.

நாம் எல்லாரும் நமது மாம்சத்தில் ஓர் அளவு அசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம். சிலர் கொஞ்சமாகவும் சிலர் அதிகமாகவும் பெற்றிருக்கிறோம். அதிக அளவான கர்த்தருடைய ஆவிக்காகவும், அவரது பரிபூரண சித்தத்துக்கு இசைவாக மென்மேலும் அதிகரிக்கக் கூடிய ஆவிக்காகவும் அவரிடம் அநுதினமும் ஜெபிப்பது சரியானது. ஆனால் இந்த ஜெபத்துடன் நாம் ஒத்துழைக்க வேண்டும். ஏனெனில் ஜெநிப்பித்தல் நடந்தபிறகும் கூட, தமது ஆவியின் மூலமாக தேவன் எந்த இருதயத்தையும் நிரப்புவதில்லை. இந்த ஆசீர்வாதங்களுக்காக தொடர்ச்சியான உண்மையான ஜெபத்தின் மூலம் கர்த்தரிடம் வந்தும், இதை முறையாக கேட்டும் நமது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் ரூபகாரங்களை காண்பதற்காக நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோம். இதற்கு முன் நாம் பெற்றிருந்ததைக் காட்டிலும் நாம் அதிகமான சாந்த குணத்தை நாம் பெற்றிருக்கிறோமா அல்லது இன்னும் சாந்த குணத்தில் பின் தங்கியிருக்கிறோமா என்பதைக் காணக்கூடும். நாம் அதிக கனிவாகவும். அதிகமான பொறுமையுடனும், அதிகமான சுய கட்டுப்பாடுடனும் இருக்கிறோமா, ஆவியின் கனிகளில் அதிகமாக அபிவிருத்தியடைய எந்த காரியத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை உணருவோம். சந்தேகத்திற்கிடமில்லாமல் இந்த குணங்களால் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ குறைவு பட்டிருக்கிறோம். ஆனால் இதை நாம் கவனித்து ஜெபித்தால், ஜெபத்தில் பதிலைக்காண கற்றுக் கொள்வோம். அறிவிலும் அன்பிலும், கிறிஸ்துவின் சாய-லும், பரலோகத்தில் இருக்கிற நமது பிதாவின் சாய-லும் வளருவோம்.

### ஜெபத்தினைப்பற்றிய முறையற்ற கருத்துக்கள்

ஜெபமானது நாம் காண்பித்திருக்கிறது போல, கிறிஸ்துவனின் வளர்ச்சிக்கும்; ஆம் ஆவியில் நிலைத்திருப்பதற்கும் மிகவும் முக்கியமானதும் முற்றிலும் அத்தியாவசியமானதுமாகும். எனினும் சிலர் பண்ணுவதுபோல மட்டுமீறிய வழியில் ஜெபித்தலைப் பற்றி நாம் சிந்தித்ததேயில்லை. கர்த்தரிடம் அவரது திட்டத்தைக் குறித்தோ, அவர் இந்த பிரபஞ்சத்தை எப்படி நிர்வகிப்பார் என்பது பற்றிய நமது விருப்பத்தையும், நமது சொந்த சித்தத்தை எப்படி எப்பொழுது நேரிடப்பண்ணுவார் என்பது குறித்தும் அவரிடம் சொல்வது குறித்து நாம் நினைக்கவேயில்லை. இந்த முறையில் மிகவும் அதிகமாக ஜெபிப்பதும் நமது சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. சீக்கிரமாக அதை நிறுத்துவது நல்லது. ஆண்டவர் தமது சீஷர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு, மாதிரி ஜெபத்தை கொடுத்தார். ஆனால் பெரும்பாலான ஜனங்கள் ஏறெடுக்கும் ஜெபத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இதை அவர்கள் கவனிக்கிறதேயில்லை.

கர்த்தருடைய வசனத்தை கவனிப்பதும், அவரிடம் அதிகமாக பேசாமல் இருப்பதுமே சரியான காரியம். நம்மிடம் அவர் பேசும் போது நாம் மிகவும் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். கவிஞர் இந்த முக்கியமான கருத்தை பாட-ல் நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

*“ஆண்டவரே, பேசும்! உமது ஊழியன் கேட்கிறேன்.*
*உமது கிருபையான வசனத்திற்கு காத்திருக்கிறேன்.*
*உற்சாகமூட்டும் உமது குரலுக்கு ஆசைப்படுகிறேன்*
*ஆண்டவரே, இப்போது அது கேட்கப்படுவதாக!*
*நான் கவனிக்கிறேன், ஆண்டவரே உமக்காக!*
*எனக்காக நீர் என்ன சொல்-யிருக்கிறீர்!”*

வேதாகமமானது தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மைக் குறித்த தெய்வீக சித்தம், நோக்கம், திட்டம் ஆகியவைகளின் தெய்வீக வெளிப்பாடு என்று நாம் புரிந்து

கொண்டிருக்கிறோம். சத்தியமே நம்மை பரிசுத்தப்படுத்தும் படியாக கர்த்தர் திட்டமிடுகிறார். "உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தப்படுத்தும்; உமது வசனமே சத்தியம்." ஜெபத்தின் மூலம் அவர்களை பரிசுத்தபடுத்தும்! என்று நமது ஆண்டவர் கூறவில்லை. நாம் வசனத்தை ஆராய்ந்து அதன் மூலமே பரிசுத்தமடைய வேண்டும் என்று ஆண்டவரது நியமமாக இருக்கிறது. அவரைக் காட்டிலும் ஞானமுள்ளவர் யார்? ஜெபத்தில் நாம் ஒரு தொகுதியை எழுதாதற்கு காரணம், அப்படி செய்தவற்கு நாம் வேத ஆதாரத்தை நாம் காண்பதில்லை.

நாம் கூறியிருப்பதுபோல, ஜெபமானது கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் பொழுது, தேவனுடைய வசனமே தேவனுடைய சித்தம், திட்டம் மற்றும் நாம் எந்த வழியில் போக வேண்டும் என்கிறதையும் நமக்கு போதிக்கிறது. இதில் தோல்வியை காண்பதற்கான காரணம் தேவனுடைய பிள்ளைகளாக கூறிக் கொள்பவர்களின் விசுவாசக் குறைவே ஆகும். எப்படிப்பட்ட ஜெபமும் கர்த்தருடைய வேதத்தை ஆராய்வதை புறக்கணிக்காது. பாவம் ஆளுகை செய்கிற இந்த உலகின் நீண்ட கால இருளுக்கு இந்த வேதம் மட்டுமே நமது கால்களுக்கு தீபமும், நமக்கு வழிகாட்டியாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. "உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." சங்கீதம் 119:105

நாம் "இடைவிடாமல்" ஜெபம் பண்ண வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நன்மைகளும் கேட்டுக் கொண்டவைகளும் சீக்கிரமாக வரவில்லை என்று ஊக்கம் குன்றியதால் இப்படிச் செய்ய வேண்டும் என்ற கருத்தில் இது சொல்லப்படவில்லை. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வசனம் நிச்சயம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்த வாக்குத்தத்தங்களில் நாம் நம்பிக்கை வைத்து, தொடர்ந்து கேட்டு, அதன் நிறைவேறுதலுக்காக பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் காத்திருக்க வேண்டும். இப்படியாக நாம் இடைவிடாமல் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கிறோம். நாம் ஒவ்வொரு கணத்திற்கு அல்லது ஒவ்வொரு மணி நேரத்திற்கு அந்த வார்த்தைகளை தொடர்ந்து கூறாமல், அந்த எண்ணத்தை, அந்த எதிர்பார்க்குதலை, அதற்காக காத்திருத்தலை தொடரவும் அந்த ராஜ்யத்திற்காக உழைக்கவும், அந்த ராஜ்யத்தில் சுதந்தரராவதற்கான குணலட்சணத்தில் தயார்படுத்திக் கொள்ளவும் செய்கிறோம். சிலர் தேவனோடு ஐக்கியப்படுகிறோம் என்று எண்ணிக் கொண்டு, ஒரு கா–யான நாற்கா–யில் கர்த்தர் உட்கார்ந்திருக்கிறார் என்று கற்பனை செய்து கொண்டு அதற்கு முன்னே முழங்கா–ல் உட்கார்ந்து கஷ்டத்தில் விழுகிறதை நாம் அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்ட வேதத்திற்கு மாறான செயல்களினால் அவர்கள் சத்துருவானவனின் கண்ணியில் அகப்படும் ஆபத்தில் இருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

கர்த்தர் அநேக ஆசீர்வாதங்களை நமக்கு முன்னமேயே கொடுத்திருக்கும்போது இன்னும் அநேக ஆசீர்வாதங்களுக்காக அவரிடம் மன்றாடுவது வெட்கத்திற்குரியதாக நாங்கள் உணர்கிறோம். ஆகையால் நமது சொந்த மன்றாட்டுகள் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். பரம கிருபாசனத்திற்கு முன்பாக நமது ஆசிரியரின் மன்றாட்டுகள் என்னவென்றால் நன்றியை ஏறெடுத்தல், துதியை ஏறெடுத்தல், கர்த்தருக்கு தன்னை அர்ப்பணித்தலையும் அவர்மேலுள்ள விசுவாசத்தையும் வெளிப்படுத்தல், வாழ்க்கைக்குரிய காரியங்களில் அவரது கிருபைக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் ஜெபித்தல் ஆகியவையாகும். தெய்வீக வாக்குத்தத்தங்களை நாம் முழங்கா–ல் இருக்கும்போது மாத்திரமல்ல எப்பொழுதும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். நாம் நமது ஜெபத்திற்கு இசைவாக வாழ நாட வேண்டும். இதையே செய்ய மற்றவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும். எனினும் நாம் அனைவரும் ஒரே மாதிரி உண்டாக்கப்படவில்லை. இந்த காரியத்தை வேதாகம கண்ணோட்டத்தின் பிரகாரமாகவும். வேதாகம பாடங்கள் மற்றும் காவற் கோபுர கட்டுரைகளிலும் கூறப்பட்டுள்ள கருத்தின் பிரகாரமாகவும், கர்த்தருடைய கிருபை அவரது பிள்ளைகளை சரியாக வழிநடத்தும் என்று நம்பி நாம் விட்டுவிட வேண்டும்.

### பரிசுத்த ஆவி ஜெபத்தின் முக்கிய நோக்கம்

அநேக கிறிஸ்தவர்களின் ஜெபம் கேட்கப்படாததற்கு காரணம் தேவன் சொல்லாத காரியங்களுக்காக ஜெபிப்பது அல்லது உண்மையாக ஜெபிக்கவில்லை. அவர்கள் செல்வத்திற்காகவும், பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபித்திருக்கிறார்கள் அல்லது ஒரு வேளை அவர்களது மறுமலர்ச்சி கூட்டத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆத்துமாக்களின் மதமாற்றத்திற்காக ஜெபித்திருப்பார்கள் அல்லது அனுமதியற்ற வேறு எதையாவது கேட்டிருக்கலாம். அல்லது அவர்கள் கேட்டது அவர்களுக்கு தேவையற்றதாக இருந்திருக்கலாம். கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருப்பவர்கள், அவர்களது அறியாமையினாலும் சரியாக போதிக்கப்படாததாலும் அவர்கள் கேட்ட பூமிக்குரிய காரியங்களை தேவன் கொடுத்திருக்கக் கூடும். ஆனால் முன்னேற்றமடைந்த கிறிஸ்தவர்களுக்கு இது வேறாக இருக்கும். சிறிய குழந்தை மேஜையில் தகாத மற்றும் கோட்பாடுக்கு மீறினவைகளை குற்றமில்லாமல் கேட்கலாம். பண்பட்ட கல்வியிலும் கோட்பாடுகளைப் பற்றிய அறிவிலும் முன்னேறியவர்கள் இன்னும் அதிகமாக தெரிந்திருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளை விசேஷமாக எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பது அவரது வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய பிள்ளைகளுக்கு பரிசுத்தஆவிதான் அவரது விசேஷித்த வரமாக இருக்கிறது.

பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமை, மனச்சார்பு என்பதை நாம் அறிய வரும்போது, நாம் எதற்காக ஜெபிக்கிறோம் என்பதை அறிவோம். தேவனுடைய பரிசுத்த ஆவியை நாம் மென்மேலும் விரும்புகிறோம். அது நம்மை அதிக கனிவானவர்களாகவும். அதிக தயவுள்ளவர்களாகவும், அன்பானவர்களாகவும் ஆக்குகிறது. கிறிஸ்துவின் சிந்தையை நாம் மென்மேலும் விரும்புகிறோம். இந்த கிறிஸ்துவின் சிந்தையை பெறுவதற்கு கஷ்டப்பட்டு முயற்சிக்க வேண்டும் என்பதை நாம் உணருகிறோம். ஒவ்வொரு நாளும் நாம் பிசாசின் ஆவியை வளர்த்தால் கிறிஸ்துவின் சிந்தையை எப்பொழுதுமே அடைய முடியாது. நாம் ஆவியை, கிறிஸ்துவின் சிந்தையை தீர்மானத்துடன் வளர்த்தால், சத்துருவானவனின் ஆவி நமது இருதயத்தில் நுழைய முடியாது. நாம் மென்மேலும் தெளிந்த புத்தியுள்ள ஆவியை

உடையவர்களாவோம். தேவனுடைய ஆவியினால் நாம் நிரப்பப்பட்டிருப்பதால் நாம் மென்மேலும் அவருடைய பரிபூரண சித்தத்தை அறிந்து கொள்வோம். இப்படியாக நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசத்திற்கு நாம் தயாராகிறோம்.

**சந்தேகமில்லாமல் விசுவாசத்துடன் ஜெபியுங்கள்**

நாம் பார்க்கிற இந்த பாடத்தில் கர்த்தர் நமக்கு நாம் "சோர்ந்து போகக்கூடாது" என்று கூறுகிறார். சோர்ந்து போகக்கூடாது என்ற வார்த்தை மனம் தளர்வடையக்கூடாது என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது. "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு..... அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்;" "நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்." (எபிரேயர் 12:3; கலாத்தியர் 6:9) இதே வழியில் நமக்கு கிருபை தேவையாயிருப்பதாக உணர்ந்தால் இன்னும் அதிகமாக பரிசுத்த ஆவியை கேட்கலாம். உதாரணத்திற்கு நமக்கு இன்னும் அதிகமான பொறுமை தேவை என்று உணரலாம். நாம் பொறுமைக்காக ஜெபிக்கும் போது, "நான் பொறுமையாக இருக்கவே மாட்டேன்; அந்த வழியில் நான் பிறக்கவில்லை!" என்று கூறக்கூடாது. பதில் கிடைக்கும்படியான விதத்தில் நமது ஜெபம் இருக்க வேண்டும். நமது ஜெபத்திற்கு இசைவாக நாம் கஷ்டப்பட்டு முயற்சித்தால், தொடர்ந்து ஜெபித்து, பொறுமை வரும் என்று அறிந்து நாம் மன்றாடி பிறகு பொறுமைக்காக காத்திருக்க வேண்டும். ஒவ்வொரு பொறுமையின்மைக்கும் நம்மை நாமே தண்டித்துக் கொள்வது ஒரு மிகச் சிறந்த அப்பியாசிக்கக் கூடிய வழி.

"உம்முடைய ராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று கர்த்தருடைய ஜனங்கள் நீண்டகாலமாக ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். பதினெட்டு நூற்றாண்டுக்கு மேலாக இந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டும், தேவனுடைய பிள்ளை அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதை இன்னும் பார்க்கவில்லை. அப்படியென்றால் நாம் ஜெபிப்பதை நிறுத்திவிடலாமா? ஐயோ, இல்லை! அது நிச்சயம் வரும் என்று நாம் உறுதி கூறப்பட்டிருக்கிறோம். இப்போது கூட அது வாசலருகே இருக்கிறது! தேவனுடைய ராஜ்யம் முழுவதுமாக ஸ்தாபிக்கப்படும். பூமியெங்கும் விசுவாசமின்மை இல்லாத காலம் வரும். அப்படிப்பட்டவர்கள் தற்போது பரலோகத்தில் இல்லை. நமது ஜெபங்கள் தேவனுடைய ராஜ்யத்தை அவர் திட்டமிட்டிருக்கிறதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்னதாகக்கூட கொண்டு வராது. ஆனால் நாம் ராஜ்யத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் கர்த்தருடைய உறுதியான வாக்குத்தத்தத்திற்கு இசைவாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நமது ஜெபத்தின் மூலம் உறுதி செய்கிறோம். இப்படி சோர்ந்து போகாமல் ஜெபித்து கர்த்தருடைய பிள்ளைகள் தங்களைத் தாங்களே பலப்படுத்திக் கொள்கிறார்கள். தேவனுடைய மகிமையான ராஜ்யம் சீக்கிரத்தில் வெளிப்படுத்தப்படும்! அப்பொழுது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான குணலட்சணத்தை அடைந்தவர்கள் அவரோடுகூட இந்த ராஜ்யத்தில் ஆளுகை செய்ய உயர்த்தப்படுவார்கள்.

# உண்மையான ஜெயத்தின் பிறப்பிடம்

## The Source of True Promotion

"*கிழக்கிலும், மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது; தேவனே நியாயாதிபதி, ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்.*" *சங்கீதம் 75:6,7*

ஒருவர் ஒவ்வொரு இரவிலும் நட்சத்திரங்களை கவனித்தால், ஒவ்வொன்றிற்கும் நகர்தல் உண்டு என்பதையும், எனினும் அனைத்தும் ஒரு நிலையான புள்ளியைக் கொண்டு சுற்றுகின்றன என்பதையும் பார்க்கலாம். இந்த புள்ளியை துருவ நட்சத்திரம் என்று நாம் அழைக்கிறோம். இந்த நிலையான நட்சத்திரம் நகருவதில்லை. ஆகையால் இந்த புள்ளியைக் கொண்டு ஒரு மனிதன் தனது பாதையை அளவிடலாம். மாலுமியின் கருவியின் காந்த முள் எப்பொழுதும் வடக்கு திசையை நோக்கிக் கொண்டிருக்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

நமது நாளின் தெளிவான வானசாஸ்திர அறிவின் மூலம், நமது சூரிய குடும்பத்தின் கோள்கள் எல்லாம் சூரியனை சுற்றி வருகிறது என்பதையும், எண்ணிலடங்கா மற்ற சூரியன்கள் இருக்கின்றன என்பதையும் அவற்றின் கிரகங்கள் அவைகளை மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன என்பதையும் ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கின்றனர். மேலும் தொலைவில் ஒரு வல்லமையான மையத்தில் எண்ணிலடங்கா கோடிக்கணக்கான சூரியன்கள் அவற்றின் கோள்கள் மற்றும் உபகிரகங்களுடன் சுற்றி வருகின்றன என்று விஞ்ஞானம் அறிவிக்கிறது. இந்த மகா மையம் துருவ நட்சத்திரம் இன்னும் குறிப்பாக யாவரும் அறிந்த மைய நட்சத்திரமாகிய அல்சியோன் (Alcyone) உடன் இணைப்பை பெற்றிருக்கிறதாக காணப்படுகிறது. இந்த காரணத்தினால்தான் அறுமீன் நட்சத்திரம் யேகோவா தேவனின் இருப்பிடமாக இருக்கலாம் என்று குறிப்பாக சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் இருந்து தான் அவர் அண்ட சராசரங்களையும் ஆளுகை செய்கிறார். இந்த கருத்து, சர்வவல்லமையுள்ளவர் முற்பிதாவாகிய யோபுவை, "அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக் கூடுமோ? அல்லது மிருக சீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதனதன் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவ சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ?" என்று கேட்கிற கேள்விக்கு புது சக்தியைத் தருகிறது.(யோபு 38:31,32)

வானத்தின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் வடபுறத்திலேயே சில நட்சத்திரங்கள் காணப்படுகிறது. ஆகையால் வடக்குதிசை ஒரு முக்கியத்துவத்தைப் பெறுகிறது. மாலுமியின் கருவி கூட அந்த திசைக்கு மரியாதை செலுத்துவது போல அதை நோக்கியிருக்கிறது. தீர்க்கதரிசி யோபு அறிவிக்கிறது போல, இந்த உண்மை ஆதிகாலத்தில் அனுசரிக்கப்பட்டு வந்தது, "அவர் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்." (யோபு 26:7) வேதாகமம் முழுவதும் வடக்கு திசையானது யேகோவாவின் பூமியின் அரசாட்சியுடன் மிகுந்த நெருக்கத்தை பெற்றிருக்கிறதாகக் காணப்படுகிறது.

### பாவத்தின் விளைவால் கிடைக்கும் பாடங்கள்

கடந்த ஆறாயிரம் வருடங்களாக பூமி என்கிற இந்த கிரகம் தேவனின் பிரபஞ்சத்தில் கலகஞ் செய்யும் மாகாணமாக இருந்திருக்கிறது. தேவனும் மனுக்குலம் தங்கள் சுய திட்டத்தின்படி செயலாற்றி அவர்களால் என்ன முடியுமோ அதை வெளிப்படுத்த அனுமதித்திருந்தார். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரயேலருக்கு குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் கொடுத்தார். அது மட்டுமல்ல, அதன் பிறகு, உலகின் பல்வேறு ஜாதிகளுக்கு மகா வல்லமையை அப்பியாசப்படுத்தும்படியும், புறஜாதிகளின் பிரதிநிதியாக உண்மையில் உலகின் மகா சாம்ராஜ்யமாக ஆகவும், ஒழுங்கு, பிரமாணம், செழுமை, ஆசீர்வாதங்கள் மற்றும் சமாதானம் ஆகியவைகளை மனிதருக்கு மனம் திருந்தாத இருதயத்தால் எப்படி கொடுக்க முடியும் என்பதை காண்பிக்கவும் சந்தர்ப்பம் கொடுத்தார். வேதவசனங்களின்படி இப்படி புறஜாதிகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்ட காலப்பகுதி "புறஜாதியாரின் காலம்" என்று அழைக்கப்படுகிற 2520 வருடங்களாகும். இது பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் காலத்தில் ஆரம்பித்தது. அப்பொழுது தேவனுடைய சொந்த நிழலான ராஜ்யமாகிய இஸ்ரயே-ன் ராஜ்யம் நீக்கப்பட்டிருந்தது. மேசியாவின் காலம் வரை அது அப்படியே விடப்பட்டது. (லூக்கா 21:24; எசேக்கியேல் 21:25-27).

இந்த இடைக்காலத்தில் உலகததில் நான்கு மகா உலக சாம்ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன. இந்த உலக சாம்ராஜ்யங்கள் மனுக்குலத்திற்கு பல்வேறு ஆசீர்வாதங்களை கொடுக்க முயற்சித்து, நீதியின் காரியங்களில் அவைகள் பலவீனமானவைகள் என்பதையும் தீங்குகளிலும் துன்மார்க்கத்திலும் பலமுள்ளவைகள் என்பதையும் நிரூபித்தன. மனுக்குலம் அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருந்த பாடம் இதுதான். மேலும் விழுந்து போன நிலையில் மானிட அரசாங்கம் வெற்றிகரமானதாக இருக்க முடியாது என்பதையும், தெய்வீக சட்டத்திற்கு பரிபூரண இசைவும் பரிபூரண மனுக்குலமும் மட்டும்தான் உண்மையான சந்தோஷத்தைக் கொடுக்க முடியும் என்பதையும் மனுக்குலம் கற்றுக்கொள்ள திட்டமிட்டிருந்தார். மேலும் மனுக்குலம் இந்த பாவ நிலைமையில், மரிக்கும் நிலைமையில் முடிவாக தோல்வியையும், அழிவையுமே சந்திக்க முடியும். இப்படியாக மனுக்குலம் உண்மையான அனுபவங்களின் மூலம் அவர்களது உதவியற்ற நிலைமையையும் அவர்களுக்கு தேவனின் அவசியத்தையும் உணர வைக்கும்.

மனிதன் தன்னுடைய பலவீனத்தை நிரூபிக்க தேவன் அனுமதித்திருக்கிறபொழுது, தமது வசனங்களில் முன் அறிவித்திருக்கிறதுபோல, அகில உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்கு தயார் பண்ணி கொண்டிருக்கிறார். மேசியாவின் ராஜ்யத்தின் மூலமாக மனிதனுடைய காரியங்களை அவர் பொறுப்பெடுத்துக்கொள்ளும் நேரமே உண்மையான மற்றும் நிரந்தர ஜெயம் உணர்ந்து கொள்ளப்படும் நேரமாக இருக்கும். அப்பொழுது அனைவரும் தேவனுடன் இணக்கத்திற்கு வந்து இந்த உண்மையான ஜெயத்தை பெற்றுக் கொள்வார்கள். அதாவது ஆதியிலே தேவனுடைய திட்டத்தில் கொடுக்கப்பட்டதும், நமது ஆதி பெற்றோர்களாகிய ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமையினால் இழந்து போனதுமாகிய அனைத்து நன்மைகளையும் அடைவார்கள்.

"தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்." உலகை ஆளுகை செய்ய மகா அபகரிப்போனாகிய சாத்தானின் முயற்சியை கர்த்தர் கீழே தள்ளிப்போடுவார். ஆரம்பத்தில் லூசிபராயிருந்த சாத்தான், "வடபுறத்திலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்" என்றும் "உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றும் எண்ணங்கொண்டான். (ஏசாயா 14:12-17) ஆனால் விரைவில் அவன் ஆயிரம் வருடம் கட்டப்பட்டு முடிவில் அழிக்கப்படுவான்.

பூமியின் ராஜ்யங்களைப் பொறுத்தவரையில், தேவன் ஒரு பொதுவான மேற்பார்வையை வைத்திருக்கிறார் என்று நாம் சொல்லலாம். இல்லையென்றால் அவர்கள் அவரது திட்டத்தை தடைசெய்திருப்பார்கள். சில சமயங்களில் அவர் ஒருவனை தாழ்த்தி வேறொருவனுக்கு வல்லமையை கொடுத்து உயர்த்தி தயவு பண்ணுகிறார். இந்த தாழ்த்துதலும் உயர்த்துதலும் பாவத்திற்கான தெய்வீக தீர்ப்பா என்று சொல்ல இயலவில்லை. ஏனெனில் தாழ்த்தப்பட்டவர்களில் சிலர் யோக்கியதை இல்லாதவர்களாக இல்லை. மேலும் அதிகாரத்துக்கு உயர்த்தப்பட்டவர்கள் உயர்ந்தவர்களாகவும் இருந்ததில்லை, ஆனால் பெரும்பாலும் தீயவர்களாக இருந்திருக்கிறார்கள். தேவன் இப்படி தமது அதிகாரத்தால் நீக்குவது தாம் ஏற்பாடு செய்திருக்கிற திட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்காகவே ஆகும். ஆனால் மேலும் நிறைவான பாவத்திற்கு தேவையான பாடங்களை மனிதருக்கு போதிப்பதற்குமாகும்.

### "வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்"

உலகத்துடனான தேவனுடைய விசேஷித்த தொடர்புகள் எதிர்காலத்தில் இருக்கும், அதுவும் முதல் ஆயிரம் ஆண்டுகள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யம் மூலமாக இருக்கும். சகலமும் பிதாவினுடையதாகவும் குமாரனால் உண்டானதாகவும் இருக்கின்றன. உலகத்தை நியாயந்தீர்க்கிற இந்த மகிமையான வேலையில், கிறிஸ்து தாமே நியாயாதிபதியாய் இருப்பார். அவரது சரீரமாகிய சபை, உடன் நியாயதிபதிகளாக இருப்பார்கள். அவர்கள் எல்லாவற்றிலும் நீதியாய் நியாயந்தீர்ப்பார்கள். அவர்கள் தேவனுடன் முழு இசைவுக்கு வருகிறவர்களை மட்டுமே ஆசீர்வதித்து மற்றவர்களை வீழ்த்தி முடிவில் அழிப்பார்கள்.

இதற்கிடையில் தேவன், இந்த உலகத்தைவிட்டு வந்து, தங்களது ஜீவன்களை அவரிடம் அர்ப்பணம் செய்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக எண்ணப்பட்ட வர்களுடன் ஒரு விசேஷித்த தொடர்பை கொண்டிருக்கிறார். இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக, முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக ஜெயத்தின் வழியில் இருக்கிறார்கள். சாத்தானின் நோக்கம் தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதாக இருந்தது. மாறாக, கிறிஸ்துவின் நோக்கமோ பிதாவை சந்தோஷப்படுத்துவதாக, நன்மை செய்வதாக இருந்தது. ஆகையால் இதேபோல, ராஜ்யத்தில் கிறிஸ்துவின் உடன் பங்காளிகளாக அழைக்கப்பட்ட வகுப்பார், அதே மாதிரியான நோக்கத்தையும், அவர்களது கர்த்தரும் தலையாகவும் இருக்கிறவரின் ஆவியையும் பெற்றிருக்கிறார்கள். அவர்களும் பரலோக பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்ய நாடுகிறார்கள். அவர்கள் தங்கள் சுய நன்மையை உயர்த்தவோ, தங்கள் மாம்சீகத்தை சந்தோஷப்படுத்தவோ இயக்கப்படாமல், தேவனுடைய மகாதிட்டத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்ற தங்களது ஜீவனையும் கொடுக்க இயக்கப்படுகிறார்கள்.

இந்த வகுப்பார்தான் வானம், பூமி மற்றும் எல்லா ஸ்தலங்களிலும் உள்ள எல்லா வகுப்பாரைக் காட்டிலும் மிகச் சிறப்பானவைகளை பெற்றுக்கொள்வார்கள். அவர்களுடைய கர்த்தருடன் கனம், மகிமை, சாகாமையை பெற்றுக்கொள்வார்கள். அவர்களது ஆண்டவரும் முன்னோடியுமானவரைப் போல தூதர்களுக்கும் மேலாக அவர்கள் உயர்த்தப்பட்டு, அவர்களுக்கு தெய்வீக சுபாவம் அளிக்கப்படும். (ரோமர் 2:7; 1 கொரிந்தியர் 15:53,54; 1 யோவான் 3:2,3; 1 கொரிந்தியர் 1:26,27; 2 தெசலோனிக்கேயர் 2:14;2 பேதுரு 1:4) இவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகிய முதலாம் உயிர்த்தெழுத-ல் பங்கு பெறுவார்கள். (வெளி 20:5,6; பி-ப்பியர் 3:10) இப்பொழுது புது சிருஷ்டியின் கருவியாய் இருக்கக்கூடிய அவர்களது அழிவுக்குரிய சரீரங்கள் மரணத்தில் என்றென்றைக்குமாக அழிக்கப்படும். அவர்கள் "பலவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டு பலமுள்ளதாய் எழுப்பப்படுவார்கள்;" "கனவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டு மகிமையில் எழுப்பப்படுவார்கள்;" அவர்கள் "ஜென்ம சரீரத்தில் விதைக்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்தில் எழுப்பப்படுவார்கள்."

கிறிஸ்துவின் சபையின் பரம அழைப்பைப் பற்றிய ஆராய்ச்சியில் புதிதாய் இருப்பவர்கள் மேற்கூறப்பட்ட வசனங்களை மிகவும் கருத்தாய் ஆராய்ந்தால் அவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். இது பொதுவாக கிறிஸ்தவர்களால் மிகவும் குறைவாக புரிந்துகொள்ளக்கூடிய ஒன்று. இந்த சுவிசேஷ யுகத்தில் தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு கொடுக்க திட்டமிட்டிருக்கிற ஒரு பெரிய உயர்வாக இது இருக்கிறது. தேவனுடைய சொந்த நிபந்தனையின் கீழ் அவரைத் தவிர வேறு எங்கேயும் இந்த உயர்வை பெற இயலாது. இதுதான் சீயோனின் மகிமையான சுதந்தரம். இப்படியாக அவன் தனது ஆண்டவருடன் உயர்த்தப்பட்டு மகிமைப்படுத்தப் படும்போது அவனைப்பற்றி கீழ்க்கண்டவாறு சொல்லப்படும்: "வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியு மாயிருக்கிறது. அதுவே மகா ராஜாவின் நகரம்." (சங்கீதம் 48:2) இப்படியாக லூசிபர் தனது பெருமையினாலும் கர்வத்தினாலும் எடுத்துக்கொள்ள நினைத்து "வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்" என்ற கூறிய இடம் தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவுக்கு பரிசாக அளிக்கப்படும்.

### சபையில் தாழ்த்துதலும் உயர்த்துதலும்

தேவனுடைய ஜனங்கள் இந்த மகா மேன்மையான ஸ்தானத்திற்குத்தான் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அவர்கள் விசுவாசத்தினாலும், தாழ்மை, அன்பு மற்றும் கர்த்தருடைய ஊழியத்தில் உள்ள ஆர்வத்தின் மூலமும் தேடவேண்டும். இந்த உயர்த்தபடுத்தலுக்கு தற்கால வாழ்வில் அபிவிருத்தி மற்றும் பரீட்சையின் அனுபவங்கள் அவசியமாயிருக்கிறது. புது சிருஷ்டியாக பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட அனைவரும் இப்பொழுது கிறிஸ்துவின் சபையாக அழைக்கப்படுகிறார்கள். எனினும் தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் ஒழுங்குப்படுத்தலும் நிறைவடைதலும் முதலாம் உயிர்த்தெழுதல் வரை நடக்காது. அதுவரை மகிமையின் சபையின் அங்கங்கள் வெளிப்படுத்தப்படமாட்டார்கள். ஆனால் தேவன் தற்போது ப-யின் உடன்படிக்கை செய்த அனைவரோடும் தொடர்புகொள்கிறார். (சங்கீதம் 50:5) அவர்களில் இரண்டு அல்லது மூன்று பேராவது கூடும்போது கர்த்தருடைய பிரசன்னம்

அவர்களது மத்தியில் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆவியை பெற்றிருக்கிற அளவுக்குத் தக்கதாக அவருடைய ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறார்கள். தேவன் தற்போது தமது குமாரன் மூலமாக சபையை நியாயந்தீர்க்கிறார். தற்போது அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பதில்லை.

நமது தலைப்பு வசனத்தில் சொல்லப்பட்டுள்ள, ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிற அடிப்படை நியதி இப்பொழுது சபையில் நடந்துவருகிறது. கர்த்தர் சபையின் காரியங்களில் முக்கிய பங்கு எடுக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். "தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18) என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். இது நிச்சயமாக சபையில் தெய்வீக மேற்பார்வையை சுட்டிக்காட்டுகிறது. இந்த கோணத்தில் காரியங்களை கவனிப்பதில் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் தவறுவதால், பெரிய கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். கர்த்தர் தமது நிமித்தம் எடுத்து வருகிற மேற்பார்வையும் கண்காணிப்பையும் மறந்திருக்கிறார்கள். ஆகையால் சிலர் சபையில் ஒரு மூப்பராகவோ, உதவிக்காரராகவோ தேர்ந்தெடுக்கப் படாதிருந்தால் மிகவும் வருத்தம் அடைகிறார்கள். இந்த காரியத்தை இந்த கண்ணோட்டத்தில் பார்க்காமல், கர்த்தரே சபையின் காரியங்களை மேற்பார்வையிடுக்கிறார் என்று நினைக்க வேண்டும். அந்த சகோதரர்தான் என்னை எதிர்த்தார் அல்லது இந்த சகோதரர்தான் இதை செய்தார் போன்றவைகளை சிந்திக்க அதிக ஏதுவாயிருக்கிறது.

இது ஒரு தவறான கண்ணோட்டம் என்று நாங்கள் நம்புகிறோம். ஒருவேளை தேவன் அவர்களது தாழ்ச்சியை சோதிக்கக்கூட இப்படிப்பட்ட முடிவை அவர் அனுமதித்திருக்கலாம். இப்படிப்பட்ட காரியத்தை அப்போஸ்தலர் யாக்கோபு அறிவிக்கிறார். "தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டும். ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன்." (யாக்கோபு 1:9,10) அந்த நேரத்தின் வெறும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கப்பால் நாம் பார்க்கவேண்டும். எல்லா மேன்மையும் எல்லா ஜெயமும், சபையின் அனைத்து கட்டுப்பாடுகளும் கர்த்தரின் கரங்களில் இருக்கிறது என்பதை ஆழ்ந்து யோசித்து ஞாபகத்தில் வைக்க வேண்டும். யார் விசுவாசமுள்ள ஒரு மூப்பனாக அல்லது விசுவாசமுள்ள ஒரு உதவிக்காரனாக இருக்கக்கூடும் என்று ஒரு சகோதரனுக்கு ஒரு பாடத்தை கொடுக்க மாத்திரம் கர்த்தர் விரும்பாமல், அது ஒரு நல்ல பாடமாக அந்த வகுப்பாருக்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். இந்த சகோதரன் என்ன ஆர்வம், சக்தி மற்றும் திறமை உடையவராயிருந்தார் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள தவறியிருக்கலாம். அப்படியானால் அந்த சகோதரனை அந்த பதவிக்கு மறுபடியும் அவர்கள் தேர்ந்தெடுக்காமல் உதாசீனப்படுத்தியதற்கு அவர்களுக்கு குறித்த காலத்தில் ஒரு பாடத்தை ரூபகாரப்படுத்தும். சக்தியும், ஆர்வமும் மற்றும் ஆன்மீகத்துடனான திறமையும் உடைய ஒரு சகோதரனை மூப்பருக்கு தேர்ந்தெடுக்காத காரியத்திலும் கூட இது உண்மையாயிருக்கிறது.

எந்த ஒரு நிகழ்ச்சியிலும் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவதும், உண்மையான மேன்மையும் உண்மையான உயர்த்துதலும் கர்த்தருடையது என்பதை ஞாபகத்தில் வைப்பதும், ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளையினுடையதாகும். அப்போஸ்தலர் பவுல் காண்பிக்கிறதுபோல, "கண்காணிப்பை விரும்புகிறவன் (ஊழியம் செய்ய வேண்டும் என்கிற உண்மையான விருப்பதோடு) நல்ல வேலையை விரும்புகிறான்." (1 தீமோத்தேயு 3:1) ஆகையால் நாம் மூப்பராக தெரிவு செய்யப்படும்போது நாம் அதன் மதிப்பை உணரவேண்டும், ஏனெனில் இப்படியாக ஊழியம் செய்வதற்கும் சகோதரர்களுக்காக ஜீவனை கொடுப்பதற்கும் விசேஷித்த சந்தர்ப்பத்தை பெறுகிறோம். ஆனால் இந்த காரியத்தில் சுயநலக்காரராக இருக்கக் கூடாது.

மூப்பராகவோ, உதவிக்காரராகவோ ஊழியம் செய்த சகோதரர்கள் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படாத பொழுது மனக்கசப்பு அடையாமல், "நான் இன்னொரு இடத்தில் ஊழியம் செய்ய சந்தோஷப்படுகிறேன்" என்று கூறி, வேறு எந்த ஊழியம் அவர்களுக்கு திறக்கப்பட்டிருக்கிறதோ அதில் மிகவும் உற்சாகத்துடன் நுழைய வேண்டும். இது அவர்களது சொந்த இருதயத்துக்கான ஆசீர்வாதத்தையும், கிறிஸ்துவுக்கு ஒப்பான அவர்களது ஆவியை கவனிக்கிற சபையாருக்கும் ஆசீர்வாதத்தை நிரூபிக்கும். ஆகையால் இப்படிப்பட்ட சகோதரர்கள், "என்னால் கர்த்தருக்காக செய்ய முடிந்த எதையும் செய்வேன். சபையார் எனக்கு பொறுப்பை கொடுக்கவில்லை. ஆனால் கர்த்தருடைய வேலையையும் வேறு வழியில் எனது உதவியை என்னால் முடிந்த அளவுக்கு சிறப்பாக செய்வேன்" என்று தங்களுக்குள்ளே சொல்-க் கொள்ள வேண்டும். இப்படியாக சபையின் தீர்மானத்தில் தேவனுடைய சித்தத்துக்கு தங்களை ஒப்புக்கொடுத்தல் மற்றும் சரியான தாழ்ச்சியின் ஆவியையும் காண்பிப்பார்கள்.

### "அவர் தமது ஆடுகளை பெயர் சொல் கூப்பிடுகிறார்"

நமது தலைப்பு வசனத்தின் அடிப்படை கோட்பாடு கர்த்தருடைய ஜனங்கள் அனைவராலும் தமது அநுதின வாழ்க்கையில் கவனிக்கப்பட வேண்டும். தம்முடையவர்களாக இருக்கிற ஒவ்வொருவர் பேரிலும் அவர் எடுக்கிற குறிப்பிட்ட அக்கறையை சிலர் கவனிக்க தவறலாம். ப-யின் உடன்படிக்கைக்குள் நுழைந்திருக்கிற ஒவ்வொரு உண்மையான தேவனுடைய பிள்ளையும் கர்த்தருடையவர்கள். நாம் எப்பொழுதும் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் நாம் கிருபையில் வளருவதால், "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார்" என்பதையும், "அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" என்பதையும் நாம் சந்தேகத்திற்கிடமில்லாமல் காண்போம். (சங் 37:23; 34:20) இப்படிப்பட்டவர்களின் பாதையை கர்த்தர் நிச்சயம் இயக்குவார். ஆண்டவர் தமது ஒவ்வொரு சீஷனின் மேல் தமது பிரத்தியேகமான மற்றும் சொந்த அக்கறையை முக்கியப்படுத்தி கூறினார். தம்மை அவர்களது மேய்ப்பன் என்று கூறிக் கொள்கிறார். அவர் கூறுவதாவது; "அவன் தன் ஆடுகளை பேர் சொல்- கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான்." (யோவான் 10:3) இது தமது உண்மையான ஒவ்வொரு சீஷனின் காரியங்களின் மேல் அவர் வைத்திருக்கிற அக்கறையையும் மிகவும் விசேஷித்த மேற்பார்வையையும் அர்த்தப்படுத்துகிறது. இவர்களுக்கு வருகிற எதுவும் சந்தர்ப்ப வசத்தினாலோ, அதிர்ஷ்டத்தினாலோ அல்ல.

உலகத்தாரின் நடைகள் கர்த்தரால் கட்டளையிடப்படவில்லை. ஆனால் தேவனுடைய ஜனங்கள் எந்த அளவுக்கு விசுவாசத்தின்படி நடக்கிறார்களோ, எந்த அளவுக்கு, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு "

--2429--

கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை உணர்கிறார்களோ அந்த அளவுக்கு தங்களுக்கு வருகிற அனுபவங்களில் சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் பெறக் கூடும். இதை செய்யத் தவறுகிற தேவனுடைய பிள்ளைகளில் சிலர் எரிச்சலும் கோபமும் அடைந்து, அவர்களுக்கு எல்லாம் தவறாக நடக்கிறது என்றும், தேவன் தங்களை மறந்துவிட்டார் அல்லது சகோதரர்கள் தங்களை மறந்துவிட்டார்கள் என்றும் அவர்களது விஷயத்தில் எல்லாம் தகாததாய் நடக்கிறது என்றும் உணருகிறதை நாம் தொடர்ந்து காண்கிறோம். தேவன் அனைத்து பின் ஏற்பாடுகளையும் செய்யவேண்டியவராயிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள தவறுகிறார்கள். அவர்களை உயர்த்தாதிருப்பதும், கொஞ்ச காலத்திற்கு அவர்களது திறமையை பயன்படுத்தாதிருப்பதும் நல்லது என்று அவர் கண்டால் அவர்கள் அடக்கம், தாழ்மை, பொறுமை மற்றும் நம்பிக்கை பற்றிய ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளட்டும். அவர்கள் உயர்த்தப்படுதலுக்கான தேவனுடைய நல்ல நேரம் வரும்வரை அவர்கள் உற்சாகத்துடன் காத்திருப்பார்களாக.

நமது தலைப்பு வசனத்தின் நமக்கான பெரிய பாடமானது ஜெயம், உயர்த்தப்படுதல் கிழக்கி–ருந்தோ, மேற்கி–ருந்தோ, தெற்கி–ருந்தோ வராமல், ஒருவரே நியாயாதிபதியாக இருக்கிறவரும், ஒருவனை தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறவருமான யேகோவா தேவனிடமிருந்து, எல்லாம் அன்பினால் வருகிறது என்பதேயாகும். தாழ்த்தப்படுதலானது சில சமயங்களில் சகோதரர்களின் தவறுகள் அல்லது மதிப்புயர்வில் குறைவுப்படுதலால்தான் என்று காணப்பட்டால், அது கர்த்தரிடமிருந்து வருகிறது என்பதை நாம் நினைவுப்படுத்திக் கொள்வோமாக. மேலும் அது நமது நன்மைக்காகவும் ஏதாவது ஒருவகையில் மற்றவர்களது நன்மைக்காகவும் கர்த்தரால் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்வோமாக, நல்ல மனநிலையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால், அந்த அனுபவம் ஒரு ஆசீர்வாதம் என்பதை காட்டும். “உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.” (சங்கீதம் 84:11) நாம் கர்த்தருக்கு நெருங்கியிருந்தால் எதுவும் எந்த காரணத்தினாலும் நம்மை புண்படுத்தாது. பிறகு குறித்த காலத்தில், கிறிஸ்துவுடன் அவரது சிங்காசனத்தில் உட்காரும்படி உயர்த்தப்படுவோம்.

------------------------

## How we are to wait on the Lord

# கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும்

*"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்;"*
*திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு." சங்கீதம் 27:14*

"கர்த்தருக்கு காத்திரு" என்ற சொற்றொடர், கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்காக, நமக்கான அவரது சித்தம் என்ன என்பதை காண்பதற்கு அவருக்கு முன்பாக காத்திருத்தல் என்று பொருள்படாது. அவருக்கு ஊழியம் செய்வதற்காக ஒரு ஊழியக்காரன் ஒரு எஜமானனுக்கு காத்திருப்பதுபோல நாம் காத்திருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளாமல், நாம் என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்பதை கற்றுக்கொள்ளும் வரை நாம் பொறுமையுடன் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் அவரால் வழிநடத்தப்பட காத்திருக்க வேண்டும். அவரது நோக்கம் என்ன என்பதை கவனியாமல் அவருக்கு முன் ஓடக்கூடாது." உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்." (நீதிமொழிகள் 3:5,6) தேவனுடைய பிள்ளைகளில் அநேகர் இந்த காரியத்தில் தவறு செய்திருக்கிறார்கள்.

நமது வழிகளில் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்த பிறகு அவரது வழிநடத்துத–ன்படிதான் நாம் செல்லவேண்டும். அவரது சித்தத்தைக் குறித்து நாம் தெளிவாக இல்லையென்றால், நாம் மிகவும் அவசரப்படாமல், நம்மை நாமே வழிநடத்திக்கொள்ள முயலாமல், எங்களுக்கென்று தனிச்சித்தமோ, வழியோ கிடையாது. உமது சித்தத்தில் மட்டுமே எங்களை வழிநடத்தும் என்று கர்த்தரிடம் ஊக்கமாக ஜெபத்தில் கேட்க வேண்டும். அவர் கொடுக்கிற குறிப்புக்காக நாம் கவனித்து காத்திருப்போமாக. அதன் விளைவுகளை நாம் விட்டுவிட்டு அவர் வழிநடத்துகிறதாக காணப்படுகிறதை நாம் பின்பற்ற வேண்டும். இது தேவனுடைய சித்தம்தான் என்பதற்கான ஆதாரங்கள் இல்லாமல் நமது சொந்த சித்தத்தை பின்பற்றக்கூடாது. "இப்படி செய்யப்போகிறாயா அல்லது அப்படி செய்யப்போகிறாயா? இந்த இடத்திற்கு போகப் போகிறாயா அல்லது அந்த இடத்திற்கு போகப்போகிறாயா" என்கிற கேள்வி நம்மிடையே எழும். இதுதான் தேவனுடைய சித்தம் என்பதை உறுதிப்படுத்தவில்லை என்றால் "நான் இன்னும் முடிவு செய்யவில்லை" அல்லது "நான் அவரது சித்தத்தை அறிந்து கொள்வதற்காக காத்திருக்கிறேன்; அவரது சரியான வழிநடத்துதலுக்காக இந்த காரியத்திற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேன்" என்பதே நமது பதிலாக இருக்க வேண்டும். சரியான எண்ணத்தைக் குறித்து கவிஞன் கூறுகிறதாவது;

"நான் தொட பயப்படுகிறேன்
சம்பந்தப்பட்டவைகள் இவ்வளவாய் இருக்கிறதே."

கர்த்தருக்காக காத்திருப்பவர்கள், வெளியரங்கமான தோற்றத்தில் நன்கு மேன்மையடைவதாக எப்பொழுதுமே காணப்படமாட்டார்கள். ஆனால் சங்கீதக்காரன், தேவனுக்காக காத்திருப்பதில் நல்ல தைரியம் இருக்க வேண்டும் என்று கூறுகிறான். நாம் சரியான வழியை தொடர்ந்து பின்பற்றி அவரது ஆசீர்வாதத்தை பெறுவோம். அவருக்காக காத்திருக்கும்போது நாம் தவறு செய்யமாட்டோம். ஆரம்பத்தில் "மற்றவர்கள் நம்மைக் காட்டிலும் முன்னேறுவதாகக் காணப்படுகிறார்கள், ஆனால் நாம் "கர்த்தருக்காக காத்திருக்கிறவர்களாக" இருக்கிறோம்.

கர்த்தர் நம்மை இயக்குகிறார், வழி நடத்துகிறார் என்பதை உறுதியாக உணராமல் நாம் அடி எடுத்து வைக்கக்கூடாது. தேவ பராமரிப்பை கவனியுங்கள், அவரது வசனத்தை ஆராயுங்கள். அதன் பிடிப்புகளி–ருந்து நாம் பிரிந்து போகக்கூடாது. "திடமனதாயிரு!" திடமனது என்பது லேசான தைரியம் அல்ல, பலமுள்ள தைரியமாகும். நல்ல தைரியத்துடன் இருக்கவேண்டும். "அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; கர்த்தருக்கே காத்திரு." இங்கே மனது என்பது ஆத்துமாவை, ஜீவியை விசேஷமாக நமது அறிவுப்பகுதியை குறிக்கிறது. கர்த்தர் நமக்கு ஆதரவளிப்பார். அவர் நம்மை பலமூட்டுவார், அதைத் தாங்குபடி நம்மை பலப்படுத்துவார். அவரது சித்தத்தை செய்ய நம்மை பலப்படுத்துவார். ஏனெனில் அவரது சித்தத்தை நமக்கு அறியப்பண்ணியிருக்கிறார். கர்த்தருக்காக காத்திருப்பவர்கள் எந்த நன்மையிலும் குறைவுபடமாட்டார்கள்.

### ஜெயங்கொள்ள தேவையான நற்பண்புகள்

கர்த்தருடைய ஊழியத்தில் தேவனுடைய பிள்ளைக்கு மனோதிடம், மனோபலம், உறுதி ஆகியவை அதிகமாக தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட நற்பண்புகள் உலகுக்கும் தேவைப்படுகிறது. இந்த நற்பண்புகளில் குறைவுபடுகிறவர்கள் நிச்சயமாக வாழ்க்கையில் தோல்வியடைவார்கள். மனோதிடத்திலும் நம்பிக்கையிலும் குறைவுபட்டிருப்பதே உலகின் தோல்விக்கு முக்கிய காரணம். நமது தலைப்பு வசனம் உலகத்தின் கவனத்தை அல்ல, கர்த்தரை சார்ந்தவர்களின் கவனத்தையே ஈர்க்கிறது. முழுவதுமாக தேவனுக்கே உரியவர்களாயிருக்கிற, அவருடைய பிள்ளைகளுக்காக மாத்திரமே இருக்கிற அவரது வசனத்தின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் அவர்களுக்கு நம்பிக்கையை அளிக்க காரணமாயிருக்கிறது. அவர்கள் மனோதிடமும், நல்ல மனவ–மையும் உடையவர்களாயிருக்க முழு அதிகாரம் உடையவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் உலகத்தாரைப் போன்ற சோதனைகளையும் அனுபவங்களையும் பெறுவார்கள்; அதோடுகூட அவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாயிருப்பதால் சோதனைகளும் அனுபவங்களும் வினோதமாக இருக்கும். எனினும் இவைகள் உலகத்தாரைப்போல எதேச்சையாக நமக்கு வராது; ஆனால் கர்த்தருடைய நேரடியான மேற்பார்வையின் கீழ் வருகிறது.

ஆண்டவருடைய ஊழியத்தில் புதிதாக இருப்பவர்கள், தங்களுக்கு காரியங்கள் எல்லாம் நல்ல விதமாக போகும் என்றும், உலகத்திற்கு வரக்கூடிய பொதுவான கஷ்டங்கள் தங்களுக்கு வராது என்றும், தாங்கள் இப்பொழுது தேவனுடைய

பிள்ளைகளாக இருப்பதால் அவர்களை துன்புறுத்தப்படுவதி-ருந்தும், பெருந்துன்பத்தி-ருந்தும் தேவன் காப்பார் என்றும் கொஞ்சம் காலம் அவர்கள் நினைக்க கூடும். ஆனால் அவர்கள் வேதத்தை ஆராயும்பொழுது, இது உண்மையல்ல என்று காண்பார்கள், தாங்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்களாக இருக்கிறோம் என்பதைக் காண்பார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய வெளியரங்கமான, தெளிவாய் தெரிகிற கிருபையை எதிர்பார்க்கக்கூடாது என்பதையும் அவர்கள் கிறிஸ்துவுடன் பாடுபடவும், அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ளுகிறார்கள். (1 பேதுரு 2:20,21; அப்.14:22) கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதை கற்றுக் கொள்கிறார்கள். கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதையும் புரிந்துகொள்ளுகிறார்கள். "தாம் பட்ட பாடுகளினாலே" கீழ்ப்படிதல் என்ன என்பதைக் ஆண்டவர் கற்றுக் கொண்டார். இடுக்கமான வாசல் ஒரு சுலபமான வழியல்ல. கர்த்தர் தம்முடைய வசனத்தை முழுவதுமாக ஏற்றுக்கொண்ட வகுப்பாரை, தம்மில் விசுவாசம் கொண்டிருக்கிற வகுப்பாரை அவர் அழைக்கிறார் என்பதை அவரது சீஷர்கள் கற்றுக் கொள்கிறார்கள். குறித்த காலத்தில் அவர்களும் வந்து, "தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்" என்பதை புரிந்து கொள்கிறார்கள். காரியங்கள் அவர்கள் எதிர்பார்த்த விதமாக போகவில்லை என்றால், சோதனைகள் வந்தால், "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறுவார்கள்.

ஆகையால் இவர்கள் கர்த்தருடைய வசனத்தால் வழி நடத்தப்படுகிறோம் என்பதையும், அவர்கள் தங்கள் பாதையில் தொடர்ந்து முன்னேறுவதால் நல்ல மனோதிடம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஜெயங்கொள்ளக்கூடிய அநேக கஷ்டங்கள் இருக்கிறது. கஷ்டங்களை வென்றெடுக்க திடமனது தேவைப்படுகிறது. தேவனிடத்திலும் மற்றும் அவரது "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களிலும்" உள்ள விசுவாசத்தினால் இந்த திடமனது பிறக்கிறது. இல்லையென்றால் அவர்கள் நசுக்கப்படக் கூடும்.

### நாம் காணக் கிடைக்காத நம்பிக்கை

தேவனுடைய ஒரு பிள்ளை உற்சாகத்தையும் நம்பிக்கையையும் பலத்தையும் இழந்தால் அதற்கு காரணம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் அவன் நம்பிக்கையை இழந்திருப்பதுதான். உற்சாகத்தை இழப்பது என்பது விசுவாசத்தை இழப்பது ஆகும். விசுவாசத்தையும் உற்சாகத்தையும் இழப்பது தேவனுடைய பிள்ளையை அவனது சத்துருக்களுக்கு முன்பாக பலமற்றவனாக ஆக்குகிறது.

தேவனுடைய கிருபை நமது கண்களுக்கு மறைவாக இருக்கும் பொழுதும், நாம் அவருக்கு செய்யும் ஊழியம் தடைப்பட்டதாகக் காணப்படும் பொழுதும், நாம் அவர் மேல் நம்பிக்கையாக இருக்க வேண்டும். நாம் அப்போஸ்தலர்களையும் அவர்களது அனுபவங்களையும் நாம் பின்னோக்கிப் பார்க்கிறோம். சுவிசேஷ செய்திகளை மற்றவர்களிடத்தில் எடுத்துச் செல்வதில் அப்போஸ்தலர் பவுல் மிகவும் விருப்பம் உள்ளவராயிருந்தார். அநேகந்தரம் ஆசியாவுக்கு செல்ல முயற்சி செய்தார், ஆனால் அவர் அனுமதிக்கப்படவில்லை. ஏன் இப்படி நடக்கிறது என்றும், அவரது முயற்சி ஏன் தோற்றுப்போகிறது என்றும் அவர் வியக்க ஆரம்பித்தார். ஆனால் அவர் கிரேக்க நாட்டிற்கு செல்ல வேண்டியவராயிருந்தார் என்று கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்தினார். தெசலோனிக்கேயர் சபைக்கு அவர் எழுதிய முதலாம் நிரூபத்தில், "ஆகையால் நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம். பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களை தடைபண்ணினான்" என்று எழுதுகிறார். (1 தெச.2:18) ஆனால் கர்த்தர் சாத்தானின் சதிகளை முறியடித்து, தமது சொந்த மகிமைக்கான வேலைகள் நடக்கும்படி செய்கிறார். அவரது பிள்ளைகளுக்கு பொறுமையும், தாழ்மையும் ஆசீர்வாதத்திற்குரியது என்கிற பாடத்தையும் கற்றுத் தருகிறார்.

கெத்செமனே தோட்டத்தில் நமது கர்த்தர் தேவன் பேரில் உள்ள நம்பிக்கையை இழக்கவில்லை. ஆனால் கொஞ்ச நேரம் பயத்தில் இருந்ததை நாம் காண்கிறோம். அவர் தமது பூமிக்குரிய வாழ்வின் கடைசி நேரத்தில் இருந்ததால் பிதாவின் எல்லா தேவைகளையும் உண்மையுடன் செய்து முடித்துவிட்டோமா அல்லது இல்லையா என்று அறிய ஆவலுடன் இருந்தார். அவர் தேவனுடைய கட்டளையை கொஞ்சம் மீறியிருந்தால்கூட அவருக்கு மரணம் சம்பவிக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் தமது ப-யை பிரியமானதாக நிறைவேற்றியிருந்தாரா? அவர் மரணத்தி-ருந்து ஒரு உயிர்த்தெழுதல் மூலம் பரலோக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்படுவாரா? பிறகு அவர் மொத்தத்தில் உண்மையுள்ளவராயிருந்தார் என்ற உறுதிமொழியை பிதாவிடமிருந்து பெற்றார். தமது ஜீவனை கொடுப்பதில் அவர் அனுபவித்த சோதனைகளும் துன்பங்களும் இனிய தூபமாக, ஒரு விலையேறப்பெற்ற சுகந்த வாசனையாக திரைக்குப் பின்னால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நிழ-ல் காட்டப்பட்டது போல முன்னே சென்றது. (லேவியராகமம் 16:12,13)

### ஒரு தகுந்த பயம்

யூத மகா பிரதான ஆசாரியன் பொன்னாலான தூப கலசத்தின் நெருப்புத் தன-ல் பொடியாக்கப்பட்ட சுகந்த தூப வர்க்கத்தை போட்டு, அதன் தூப மேகம் இரண்டாம் திரைக்குப் பின்னால் சென்று உடன்படிக்கை பெட்டியையும் கிருபாசனத்தையும் மூடிய பிறகு திரைக்கு கீழாக உள்ளே நுழைவான். ஒவ்வொரு தடவையும் பிரதான ஆசாரியன் திரையை தூக்கி நுழையும் பொழுது பயப்படுவான்; ஏனெனில் ஒரு வேளை ப-யை தேவனுக்கு ஏற்கும்படி செய்யாதே போனால் திரைக்கு கீழே அவன் நுழைந்தவுடனே மரித்து போவான். எனவே நமது கர்த்தராகிய இயேசு, தமது எல்லா காரியங்களும் தேவனுக்கு பிரியமானதாக இருக்க வேண்டும், இல்லையென்றால் அவர் என்றென்றைக்கும் ஜீவிக்க முடியாது என்பதை அறிந்திருந்தார். அவர் இல்லாதவராகி எல்லாவற்றையும் இழந்திருப்பார்.

இந்த கோணத்தில் நமது கர்த்தரை உற்சாகப்படுத்த பூமிக்குரிய ஜீவிகள் யாருமே இல்லை, நீர் எல்லாவற்றையும் நேர்த்தியாக செய்து முடித்துவிட்டீர் அல்லது சரியாக செய்யவில்லை என்று சொல்லுவதற்கு யாருமே இல்லை. ஆகவே நமது ஆண்டவர், இந்த உறுதிமொழிக்காகவும், பலத்திற்காகவும் தைரியத்திற்காகவும் பிதாவிடம் தனியாகச் சென்றார். அவர், "என் சித்தத்தின்படியல்ல, உமது

சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபித்தார். பிதாவானவர் அவரது ஜெபத்தைக் கேட்டு, அவருக்கு தேவையான பலத்தையும் உறுதிமொழியையும் கொடுத்தார். எதைக் குறித்து அவர் பயந்தாரோ, அந்த வேண்டுதல் கேட்கப்பட்டது. அந்த இரவு முழுவதும், அடுத்த நாள் அவர் சிலுவையில் அறையப்படும் நேரம் வரையிலும் அவர் அமைதியாகவும் தைரியத்துடனும் இருந்தார்.

ஆகையால் கர்த்தரின் பிள்ளைகள் தகுந்த பயம் உடையவர்களாக இருக்கவேண்டும். தகுந்த பயம் அவர்களுக்கு நல்லது. ஆனால் அது அவர்களது முயற்சிகளை தடைசெய்யவோ அவர்களது தைரியத்தை சிதறடிப்பதாகவோ இருக்கக்கூடாது. பரிசுத்த பவுலால் கட்டளையிடப்பட்ட பயம் அவர்களிடம் இருக்க வேண்டும். "அவருடைய இளைப்பாறுத-ல் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின் வாங்கிப் போனவனாக காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம். (எபிரேயர் 4:1) இந்த தகுதியான பயத்தைத்தான் நமது ஆண்டவர் பெற்றிருந்தார். அவர் உற்சாகம் அற்றவராக ஆகவில்லை. பிதாவானவர் அவர் செய்யும்படி கொடுத்த வேலைகளி-ருந்து பின்வாங்கவுமில்லை. அவரது பயம் கடமைக்குரிய ஒரு பயமாக இருந்தது. இது அக்கறையையும் கவனத்தையும் விழிப்புள்ள நடக்கையையும் வாழ்க்கையையும் உண்டாக்கியது. இதை எல்லா கிறிஸ்தவர்களும் பெற்றிருக்க வேண்டும். நாம் சில சலுகைகளையோ, கடமைகளையோ செய்யத் தவறிவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

இந்த தகுந்த பயமானது நம்மை நாமே ஜாக்கிரதையாக சோதித்துக் கொள்ள வழிநடத்துகிறது. "நான் எதை நம்ப வேண்டும்?. ஏன் அதை நம்ப வேண்டும்?" என்று நாம் நம்மையே கேட்டுக் கொள்ளவேண்டும். காரணத்தை மறுபடியும் நாம் ஆராய வேண்டும். நமது விசுவாசம் சரியானது என்பதற்கான ரூபகாரங்களை நமது மனதிலே மறுபடியும் ஆராய வேண்டும். இப்படி செய்வதினால் கர்த்தர் நமது விசவாசத்தை பலப்படுத்துவார், நமது இருதயத்தைப் பலப்படுத்துவார். அவர்களுக்குள்ளே எந்த ஒரு நம்பிக்கையிருந்து, முக்கியமாக அது அவர்களது பலத்தையே சார்ந்திருக்குமானால், அவர்களது பிரயோஜனத்திற்காக கர்த்தர் அவர்கள் உற்சாகமற்ற நிலைக்கு வரும்படியாகவும், அதிக கோழையாகும்படியாகவும் சுய நம்பிக்கையை இழக்கும்படியாகவும் அனுமதித்து, இதன் மூலம் தங்களது பலவீனத்தையும், உதவியற்ற நிலைமையையும் உணர்ந்து, முழுமையாக கர்த்தரையே சார்ந்திருக்கும் அவசியத்தையும், வழி நடத்துதலுக்கும் ஆதரவுக்கும் அவரையே நோக்கியிருக்கும் அவசியத்தையும் அறியம்படிச் செய்வார். இப்படியாக கர்த்தருடைய பிள்ளை அவருக்காக காத்திருக்க கற்றுக்கொள்வதினால், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" என்கிற வாக்குத்தத்தம் அவர்களுக்கு நிறைவேறுகிறது. (ஏசாயா 40:31).

----------------------------------

# ஆலயத்தை அர்ப்பணம் செய்தல்
## Dedicating the Temple

*(1 ராஜாக்கள் 8:22–30)*

*ஆலயம் எதை அடையாளப்படுத்துகிறது–இரண்டு வித ஆவிக்குரிய அடையாளங்கள்–அவர்களது அர்ப்பணம் – சாலொமோன் ராஜாவின் ஜெபம் – தேவனுடைய பண்பு–அவர் தங்கியிருக்கும் ஸ்தலம் பரலோகம்– "கர்த்தரின் மகிமை ஆலயத்தை நிரப்பிற்று"–அதன் உண்மை பொருள்*

*"என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்." ஏசாயா 56;7*

கர்த்தரிடம் பயபக்தியைப் பெற்றிருந்து, அவரிடம் முழு வைராக்கியத்துடன், தாவீது ராஜாவுக்கு பின் வருகிறவன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுவான் என்கிற தெய்வீக வாக்குத்தத்தத்தை மதிக்கும் பொருட்டு, தாவீது அதற்கு பணத்தையும், பொருட்களையும் வருடக்கணக்காக சேர்த்து வைத்தான். இந்த காரியத்தில் சாலொமோன் ராஜா விரைவாக கவனம் செலுத்தினான் என்று நாம் காண்கிறோம். அவனது ராஜ்யபாரத்தின் நான்காம் வருடம் கட்டுவதற்கு தேவையானவை எல்லாம் சேகரிக்கப்பட்ட பொழுது, ஆலயம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. ஏழரை வருடங்களுக்குப்பிறகு, நமது பாடத்தின் காட்சியாகிய ஆலயம் பிரதிஷ்டை செய்தல் அரங்கேறியது. அது முழுவதுமாக கட்டி முடிக்கப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அது பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது ஆச்சரியப்படத்தக்கது. சந்தேகத்திற்கிடமில்லாமல், இது சில முக்கியமான நிழலான பாடங்களை கொண்டிருக்கிறது. சில நாட்களில் இதை முழுமையாக புரிந்து கொள்ளலாம்.

மெருகேற்றப்பட்ட கற்களால் கட்டப்பட்ட அந்த ஆலயம் உயரமாக இல்லாதிருந்தாலும், அது கம்பீரமானதாக இருந்திருக்கவேண்டும். அது மாடியில்லாத ஒரு அடுக்கு கட்டிடமாக இருந்தது. எனினும் மலை உச்சியில் அதன் நிலை மிகவும் கம்பீரமாகவும், அதன் பளபளப்பான வெள்ளை சுவர்கள் முழு நிலத்தோற்றத்தில் கம்பீரமான தோற்றத்தைக் கொடுத்தது. வேறு எந்த கட்டிடத்தைக் காட்டிலும் சாலொமோன் கட்டிய இந்த ஆலயத்தில் நாம் மிகவும் ஆவல் உள்ளவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் அது உண்மையானதும் நிழலானதுமாக இருந்தது. இதன் உண்மைப்பொருள் தேவனுடைய பரிசுத்த ஜனங்களாகிய சபையில் காணப்படுகிறது என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டு கூறுவதை நாம் கவனிப்போமாக. நாம் வாசிப்பதாவது; "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாம–ருக்கிறீர்களா?" "நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே." (1 கொரிந்தியர் 3:16; 2 கொரிந்தியர் 6:16)

### ஜீவனுள்ள கற்களை தயார்படுத்துவது

சபையானது ஆலயத்தைக் காட்டிலும் ஆசரிப்புக்கூடாரத்தை ஒத்ததாக இருக்கிறது என்பதை அப்போஸ்தலர் நமது கவனத்திற்கு கொண்டு வருகிறார். இஸ்ரயே–ன் பிள்ளைகள் தேவனுடன் உடன்படிக்கையில் நுழைந்ததி–ருந்து, சாலொமோன் ஆலயத்தை பிரதிஷ்டை செய்யும் வரை தேவன் ஆசரிப்பு கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஷகினா வெளிச்சத்தில் தமது பிரசன்னத்தை வெளிப்படுத்தினார் என்று அவர் குறிப்பிடுகிறார். இப்பொழுதும் கிறிஸ்தவர்களாகிய நம்மிடத்திலும் அது இப்படியேயிருக்கிறது. நாம் தேவனுடைய பிள்ளைகளாவதி–ருந்து – அதாவது நமது அர்ப்பணம், நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுத––ருந்து நமது சரீரங்கள் கூடாரமாக, தேவனுடைய பரிசுத்த ஆவியின் தற்கா–க தங்கியிருக்கும் ஸ்தலமாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக, புது ஜீவிகளாக ஆன ஆரம்பத்தில் நாம் ஜெநிப்பிக்கப்படுத–ன் மூலமாக அவரது ஆவியை பெறுகிறோம். அந்த வெளிச்சம் அல்லது பரிசுத்த தீபாலங்காரம், தேவனுடைய மகிமையின் அறிவின் ஒளியுடன் நம்மில் தொடர்ந்து பரவுகிறது. நம்மை நிரப்புகிறது. கூடாரம் என்ற வார்த்தை ஒரு அர்த்தத்தில் ஆலயம் என்று பொருள்படுகிறது. அதாவது தேவன் இருக்கிற பரிசுத்த ஸ்தலமாகிய ஆலயம் என்று பொருள்படுகிறது. ஆனால் சொல்லப்பட்டபடி நமது மாம்சீக சரீரங்களை தேவனுடைய கூடரமாக, அவரது தற்கா–க தங்கியிருக்கும் ஸ்தலமாக நினைக்க வேண்டும். முழு அர்த்தத்தில், சீக்கிரத்தில் பெரிய மறுரூபமடைதல் நடைபெறும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் முதலாம் உயிர்தெழுத–ன் வல்லமையால் மாம்சத்தி–ருந்து ஆவியில் மாற்றப்படுவார்கள். இப்படியாக சாலொமோன் கட்டிய அழகான ஆலயம் தேவனுடைய பரிசுத்தவான்களை மிகவும் சரியாக குறிப்பிடும்.

ஆனால் இன்னும் ஓர் அழகான எண்ணத்தை பரிசுத்த பேதுரு நமது கவனத்துக்கு கொண்டு வருகிறார். பரிசுத்தவான்களாகிய கிறிஸ்துவின் சபையின் பல்வேறு அங்கங்களும் ஜீவனுள்ள கற்கள் என்று அவர் கூறுகிறார். இவர்களெல்லாம் திரைக்கப்பால் இருக்கிற பிரமாண்டமான தேவனுடைய மகிமையான ஆலயத்தில் இணைக்கப்படுவதற்கு தயார் செய்யக் கூடிய செதுக்குதல் மற்றும் மெருகேற்றுதல் போன்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. (1 பேதுரு 2:5,9) செதுக்குதல் மற்றும் மெருகேற்றுதலை யார் சகிக்கவில்லையோ அவர்கள் மகிமையான ஆலயத்திற்கு தகுதியற்றவர்கள் என்று ஒதுக்கப்படுவார்கள்.

இந்த ஜீவனுள்ள கற்களெல்லாம் உயிர்த்தெழுத–ன் வல்லமையால் திரைக்குப் பின்னால் ஒன்று சேர்க்கப்படும். இது சாலொமோன் ஆலயத்தின் கட்டுமானத்தினால் அழகாக விளக்கப்பட்டது. அதில் கற்கள் கற்சுரங்கத்தி–ருந்து

வெட்டியெடுக்கப்பட்டு, உருவேற்றப்படுத்தப்பட்டு ஆலயத்தில் இணைக்கப்பட்டது என்றும், அவைகள் அவ்வளவு நேர்த்தியாக உருவாக்கப்பட்டு, அவைகளின் பல்வேறு இடங்கள் குறிப்பிடப்பட்டு, எந்தவித சுத்தியல் ஒ–யும் கேட்கப்படாமல் ஒன்றாக இணைக்கப்பட்டன என்றும், கட்டுமான சமயத்தில் எந்தவித செதுக்குதலும், அவைகள்மேல் எந்தவித வேலைகளும் தேவைப் படவில்லை என்றும் நாம் வாசிக்கிறோம். ஆகையால் சபையானது தேவனுடைய வேலைப்பாடு என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். (எபேசியர் 2:10) அவரது வேலைப்பாடு திரைக்கப்பால் எந்தவித திருத்துதலும் மாற்றம் பண்ணுதலும் தேவைப்படாதபடி மிகவும் நேர்த்தியாக செய்து முடிக்கப்படும்.

இந்த கருத்து கர்த்தருடைய ஜனங்களுக்கு முக்கியமானதாகவும் ஆவலுக்குரியதாகவும் நன்மையானதாகவும் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள், இந்த பரம அழைப்புக்கு ஆலயத்தின் அங்கமாக தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணருவார்கள். அதன் பிறகு பரலோகத்துக்குரிய கனம், மகிமை, சாகாமைக்கு தங்களை செதுக்குவதற்கும் தகுதிப்படுத்துவதற்கும் சோதனைகளும் கஷ்டங்களும் அவசியம் என்பதை முழுவதுமாக சரியாக உணர்ந்து கொள்வார்கள். இவைகள்தான் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கிற "சகலமுமாக" இருக்கிறது; எதிர்கால ஊழியங்களுக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும் அவர்களை தயார்ப்படுத்துவதாக இருக்கிறது. (ரோமர் 8:28)

### மகிமையடைந்த சபையின் வேலை

நாம் சபையை கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு ஆலயமாக நினைக்கும்பொழுது, நிறைவேற்ற வேண்டிய ஒரு எதிர்கால வேலை இருக்கிறது என்பதை அது நமது மனதில் பதிய வைக்கிறது. ஒரு ஆலயத்தைக் கட்டி அதை பிறகு ஏன் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்? பழங்கால பல்வேறு தப்பறைகள் மூலமாக ஆபத்தான தீங்குகள் நமக்கு வந்தது. உதாரணமாக, சபை மட்டுமே இரட்சிக்கப்படும், மற்ற மனுக்குலம் அனைத்தும் இரட்சிப்பை இழந்துபோவார்கள் என்பதாகும்.

இன்னும் ஒரு கருத்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உலகம் அக்கினியினால் எரிக்கப்படும், மேலும் தேவனுடைய திட்டம் அவமானகரமாக முடிவுக்கு வரும் என்பதாகும். இப்படிப்பட்ட ஒரு கருத்துடன், ஒரு பெரிய ஆலயமாக சபையை கட்டுவது ஒரு வீணான செயலாக இருக்கும். ஏனெனில் அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்படுகிறவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்.

எனினும் நமது புரிந்துகொள்ளுத–ன் கண்கள் தெளிவாக திறந்திருப்பதால், தெய்வீக திட்டம் மற்றும் ஏற்பாடுகளின் அழகை காண ஆரம்பித்திருக்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய திட்டம் முடிவுக்கு வந்துவிடும் என்பதற்கு மாறாக, உலகத்தைப் பொருத்தவரை, அது அப்பொழுதுதான் ஆரம்பிக்கிறது. சபையானது ஒரு வடிவில் பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கக்கூடிய ராஜரீக ஆசாரியர்களாக இருப்பார்கள். (கலாத்தியர் 3:29) இன்னொரு வடிவில் சபையானது உலகின் அனைத்து மனுக்குலமும் தேவனுடன் இணக்கத்திற்கு திரும்பவும், தேவனை தேடும் வழியாக இருக்கவும் ஒரு மகாபெரிய ஆலயமாக இருப்பார்கள்.

இப்படியாக கடைசியில் இந்த மகிமையடைந்த சபை அல்லது ஆலயம் சகல ஜனங்களுக்கும், சகல வம்சங்களுக்கும் ஜெபவீடாக இருக்கும். அதாவது அவர்கள் ஜெப ஆலயத்திடம் ஜெபிப்பார்கள் என்று அல்ல, மகிமையடைந்த சபை மூலமாக அவர்கள் தேவனை அணுகுவார்கள். அங்கேதான் தேவனுடைய பிரசன்னம் வெளிப்படுத்தப்படும், அவரது இரக்கமும் கிடைக்கும். இந்த கருத்தில் ஷகினா மகிமையுடனான ஆலயம், எதிர்காலத்தில் கிறிஸ்துவுடன் மகிமையடைந்த சபையை குறிக்கிறது. தேவன் அங்கே வாசம் செய்வார். அங்கேயிருந்து கொண்டு மகிமையடைந்த சபையின் மூலமாக உலகை ஆசீர்வதிக்கும் கிரியை நடப்பிப்பார். இங்கே உலகம் என்பது தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தை நோக்கி ஆராதிக்கப்போகிற அனைவரையும் குறிப்பிடுகிறது.

### தேவனுடைய ஆலயத்தை அர்ப்பணம் செய்தல்

அர்ப்பணத்தை சார்ந்த ஒரு முக்கியமான எண்ணத்தை சிலர் கண்டுகொள்ளாது விடுகிறதாக காணப்படுகிறது. தேவன் ஆசரிப்புக் கூடாரத்தை அங்கீகரிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் முன்னதாக அது தேவனிடம் அர்ப்பணம் செய்யப்படவேண்டும் அல்லது சமர்ப்பிக்கப்படவேண்டும். இதேபோல்தான் தேவனுடைய ஜனங்கள் அனைவரோடுங்கூட இருக்கிறது. தேவனால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னதாகவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கு முன்னதாகவும் அவர்கள் தங்களை உறுதியாகவும் முறையாகவும் தேவனிடமும் அவரது ஊழியத்திற்காகவும் அர்ப்பணம் செய்ய வேண்டும். தேவனைப்பற்றியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் அறிந்தால் மட்டுமோ, அதற்கான தூண்டுதல் இருந்தால் மட்டுமோ போதாது; தேவனுடைய வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வரக்கூடிய யுகத்தின் மகிமையைப் பற்றி அறிந்தால் மட்டும் போதாது. முறையாக தங்களை தேவனிடம் அர்ப்பணம் செய்வதும், தங்களது சுய சித்தத்தை தேவனிடம் சமர்ப்பணம் செய்வதும், அதனிமித்தம் அவர்களது ப–களை தேவன் ஏற்றுக்கொண்டு, அதன்பிறகு அவர்களை அவரது ஆசரிப்புக் கூடாரமாக அமைத்து தமது பரிசுத்த ஆவியினால் அவர்களுக்குள் வருவதும் அவசியமாயிருக்கிறது.

ஆலயமானது அர்ப்பணத்திற்கு தயாரானபோது, சாலொமோன் இன்றைய பாடத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள ஜெபத்துடன் தேவனுக்கு அதை சமர்ப்பித்தான். அந்த ஜெபம் எளிமையில் அழகாகவும், தேவன் எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கவில்லை, பரலோகமே அவரது வாசஸ்தலம் என்கிற மகாபெரிய சத்தியத்தை சாலொமோன் அறிந்திருந்தான் என்பதை வெளிப்படுத்துகிறதாகவும் இருந்தது. சாலொமோன் கட்டிய அந்த ஆலயம், முன்பிருந்த ஆசரிப்புக் கூடாரத்தைப் போல் இருந்தது என்பதையும் அது தேவனுடைய ஜனங்களிடையேயான அவரது கிருபையையும் வல்லமையும் காண்பிக்கிறது என்பதையும் அவன் முழுவதும் புரிந்துகொண்டிருந்தான் என்பதை நமக்கு காண்பிக்கிறது. ஆலயத்தின் தோற்றம் அங்கே பாவிகள் இருந்தார்கள் என்பதையும், ஆலயத்தின் ஏற்பாடுகளின் மூலம் அவர்களுக்கு இரட்சிப்பு தேவை என்பதையும் குறிப்பிட்டது. மேலும் இரக்கமும், பாவ மன்னிப்பும் தேவை என்பதையும் தேவனை நோக்கிய ஜெபம் மெச்சத்தக்கது என்பதையும் குறிப்பிட்டது. "பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக."

ஆயிர வருட யுக காலத்தில், இயேசுவை மூலைக்கல்லாகவும், அவரது தலைமையின் கீழிருக்கிற சபையானது ஜீவனுள்ள கற்களாகவும் இருக்கிற மகாபெரிய

ஆலயத்தின் மூலமாக தேவனை நெருங்கும்படி அகில உலகமும் சந்தர்ப்பத்தை பெற்றிருக்கும். இப்படியாக முறைப்படி ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை தேவன் கேட்டு, ஜனங்களின் பாவத்தை மன்னிப்பார். இதன் விளைவாக இளைப்பாறுத–ன் வேலையானது ஒரு மகா இறுதி கட்டத்துக்கு முன்னேறும்.

சாலொமோன் ஆலயத்தை அர்ப்பணம் செய்தது போல், கிறிஸ்துவின் சபையானது அர்ப்பணம் செய்யப்பட்டு முறைப்படி பிதாவிடம் சமர்ப்பிக்கப்படும். மகா ஆவிக்குரிய சாலொமோன் இதைச் செய்வார். அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மூன்றாம் நாளில் – அவரது மரண நேரத்தி–ருந்து மூன்றாவது ஆயிர வருட நாளில் – மகா ஒய்வு நாளின் அதிகாலையில் நம் அனைவரையும் அவரது அங்கங்களாக, அவரது சரீரமாக இருக்கிற ஆலயமாக சமர்ப்பிப்பார். (யோவான்2:18–22) இந்த அர்ப்பணத்தின் விளைவாக கர்த்தருடைய மகிமை வீட்டை நிரப்பும், நிழலான ஆலயமானது அது கட்டி முழுமையடையும் முன்னரே, கர்த்தரின் மகிமையால் நிறைந்தது என்கிற உண்மை தற்காலத்தில், சபையின் கட்டுமானம் முழுமையடையும் முன்னரே தேவனுடைய சலுகையானது அவரது சபைக்கு வெளிப்படும் என்பதை உணர்த்துவதாக காணப்படுகிறது. எனினும் தீர்க்கதரிசனத்தை அதன் நிறைவேறுதலுக்கு முன்னரே அறிந்துகொள்ளுவது கடினமாக இருக்கிறது. இந்த அம்சத்தின் நிறைவேறுதல் என்ன என்பதைக் காண நாம் காத்திருக்க வேண்டும்.

“தேவனுடைய அற்புதங்களை நிறைவேற்ற ஒரு இரகசியமான வழியில் அவர் இயங்குகிறார்.”

--------------------------------

--2436--

# "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்"

## "Ask What I Shall Give Thee"

*1 ராஜாக்கள் 3:4-15*

*சொப்பனங்கள் என்றால் என்ன? எப்பொழுது அவைகள் பின்பற்றப்பட்ட வேண்டும் - சாலொமோனின் சொப்பனம் - அவனது இருதய நிலைமை பிரதிப-த்தது - அவனது பொறுப்புகளை அவன் உணருதல் - அவனது பணிவு - அவனது வேண்டுகோள் - தேவனின் அங்கீகாரமும் சந்தோஷமான பலனும்.*

*"யேகோவாவுக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்." நீதிமொழிகள் 9:10*

சாலொமோன் கர்வமும் பெருமையும் உடையவனானான் என்று நாம் குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. எனினும் அவன் நிச்சயமாக அவனது மகா ஞானத்தையும் கனத்தையும் பெற்று குழந்தையைப் போன்று எளிமையை தனது சொப்பனத்தில் கர்த்தரிடத்தில் வெளிப்படுத்தினான் என்பது இன்றைய பாடம். இது சாலொமோனின் உண்மையான குணலட்சணத்தை ஆழமாக காண்பிக்கிறது. தற்செயலாக இது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு ஸ்திரீக்கும், குறிப்பாக வாழ்க்கையின் ஆரம்பக்கட்டத்தில் அல்லது ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிப்பது தொடர்பாக மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது; மேலும் அந்த தொழில் முக்கியமான அல்லது ஒரு கஷ்டமான ஒன்றாக இருக்கும்போது அல்லது தேவனுடனும் அவரது வார்த்தைகளுடனும் நேரடியாக தொடர்பு கொண்டுள்ள ஒருவருக்கும் இது மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது.

சாலொமோன் தனது நண்பர்களுக்கும் தனது ராஜ்யத்தில் பிரசித்தி பெற்றவர்களுக்கும் ஒரு விருந்து ஏற்பாடு செய்து தனது ராஜ்யத்தை ஆரம்பித்தான். அதற்கு கிதியோன் என்ற இடத்தை தேர்வு செய்தான். அதற்கு அவன் கர்த்தருக்கு செலுத்திய தகனப- ஓர் ஆயிரம் என்று கணக்கீடு நமக்கு கூறுகிறது.

இது ஆயிரம் மிருகங்களை முற்றிலுமாக எரித்ததாக நமக்கு குறிக்கவில்லை. எனினும் அவற்றின் சில பாகங்கள் குறிப்பாக கொழுப்பு, முதலானவை கர்த்தருக்கு ப-யாக எரிக்கப்பட்டன. சாப்பிடக்கூடிய பாகங்கள் விருந்துக்குரியவைகளாகின. இப்படிப்பட்ட விருந்துகளைத் தவிர மற்ற நேரங்களில் இப்பொழுதைக் காட்டிலும் அந்த காலத்தில் மாமிசம் குறைவாகவே சாப்பிடப்பட்டது. ஒரு புது ராஜாவின் தொடக்க விழா மற்றும் தேவனுடைய பொதுவான அங்கீகாரத்தில் நாம் ஞானத்தை காணமுடிகிறது. ஜனங்களுக்கான விருந்து ராஜாவின் நல்லெண்ணத்தையும் அவனது ஆளுகை எல்லாருக்கும் செழுமையையும், ஆசீர்வாதத்தையும், சந்தோஷத்தையும், அனுகூலத்தையும் முன்னடையாளமாக குறிப்பதாக இருந்தது. இந்த காரியத்தின் தெய்வீக கட்டளை இஸ்ரயேலர்களால் அனைத்து காரியங்களும் தேவனுடைய அங்கீகாரத்தால் நடக்கின்றன என்று உணர்ந்து கொண்டார்கள்.

### சொப்பனங்கள் அர்த்தமுடையவைகளா?

பல நாட்கள் நடந்த இந்த விருந்து காலத்தில்தான் இங்கே சொல்லபடுகிற சாலொமோனின் ஆச்சரியமான சொப்பனம் வந்தது. இது இயற்கையை மீறிய செயல்தான். சந்தேகமேதுமில்லை. அதேபோல தேவன் பழங்காலத்தில் தம்மைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கிறார். விசேஷமாக அவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருந்த அவரது ஜனங்களாகிய இஸ்ரயேலரிடம் சீனாய் மலையில் மோசேயின் மூலமாக வெளிப்படுத்தினார். மற்ற ஜனங்களுடன் தேவன் இப்படிப்பட்ட உறவை வைத்திருக்கவில்லை. அவர்கள் நாம் வாசிக்கிறபடி அந்நியர்களும் அயல் நாட்டினரும், தீயவர்களும் அவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வராதவர்களும் இருந்தார்கள். யூதர்கள் தங்கள் பிரமாணத்திற்கு கீழாக தேவனிடம் கொண்டிருந்த உறவைக் காட்டிலும் கிறிஸ்தவ சபையானது தேவனிடம் தனிப்பட்ட உறவைக் கொண்டிருந்தாலும், தேவனிடம் அர்ப்பணம் செய்த கிறிஸ்தவர்கள் பெறுகிற சொப்பனங்கள் அனைத்தும் தேவனால் வெளிப்படுத்தப்பட்டது என்று நாம் யூகிக்கக்கூடாது. பெரும்பாலான நமது சொப்பனங்கள் எல்லாம் நமக்கு ஆழ்ந்த உறக்கம் இல்லாததால் மனதில் அலைபாய்கிற எண்ணங்களாகவே இருக்கின்றன. ஏனெனில் தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுடன் சொப்பனங்கள் மூலம் குறைவாக கொண்டிருக்கிற தொடர்பு கூட அவர்களது சொந்த காரியங்களை குறித்ததானதல்ல. ஆனால் அவர் அவர்களது வழி நடத்துதலுக்காக வேதாகமத்திலே கொடுத்திருக்கிறார். மேலும் அவர் கண்டு அல்ல, விசுவாசத்தின்படி நாம் நடக்கவேண்டும் என்று விரும்புகிறார் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் சொப்பனங்கள் மூலம் அவர் தொடர்ந்து இயக்கினால், விசுவாசத்தின்படி நடப்பதில் குறுக்கீடு செய்வதாக இருக்கும்.

தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகும்படி (2 தீமோத்தேயு 3:16) "தேவனுடைய வசனமே போதுமானதாக இருக்கிறது" என்று அப்போஸ்தலர் பவுல் இந்த காரியத்தில் நமக்கு பதிலளிக்கிறார். ஆனால் ஒரு சொப்பனம் மூலமாக தேவன் தமது ஆவிக்குரிய பிள்ளைக்கு கட்டளையிடுவது தகுந்ததாக கண்டால் அதை கடைபிடிக்க தேவனுக்கு தடையேதுமில்லை. கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் இப்படிப்பட்ட பிரயோஜனமுள்ள சொப்பனங்கள் மூலம் தேவையான கட்டளை அல்லது யோசனைகளை பெற்றிருப்பதாக காணப்படுகிறது. எனினும், சொப்பனங்களை பெறுவதற்கு நிச்சயமான ஒரு வழி உண்டு; அதாவது அதை வேதவாக்கியங்களுக்கு இசைவாக அதற்கு அர்த்தம் சொல்லவேண்டும். இதைக்காட்டிலும் வேறு ஏதாவது சுவிசேஷத்தை ஒரு தேவதூதன் வந்து சொன்னால் கூட அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று அப்போஸ்தலர் நமக்கு யோசனை கூறுகிறார். கிறிஸ்தவர்களுக்கு எதற்கும் தெய்வீக வசனமே மகா வல்லமையானதாக, சோதனையாக, அளவீடாக இருக்க வேண்டும்.

### சாலொமோனின் ஞானமான தெரிவு

கர்த்தர் சாலொமோனின் சொப்பனத்தில் தோன்றி "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்று கூறினார். ஆகையால் தம்முடைய பிள்ளைகளாகப் போகிறவர்களை தேவன் கேட்கிறார். அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்

என்று விரும்புகிறார். ஆனால் அவர்கள் தங்களுக்கான தேவையை உணர்ந்து அதற்கேற்றாற்போல் விண்ணப்பம் பண்ண வேண்டும் என்று விரும்புகிறார். இந்த கோணத்தில் அப்போஸ்தலர் "ஒருவன் ஞானத்தில் குறைவுள்ள வனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரிடத்தில் கேட்கக் கடவன்" (யாக்கோபு 1:5) என்று ஆலோசனை கூறுகிறார்.

சாலொமோனுடைய சொப்பனத்தில் அவனுடைய பதில், அப்பொழுதுதான் அரியணைக்கு வந்திருக்கும் இளமையான இராஜகுமாரனது அழகான எளிமையான குணலட்சணத்தை காண்பிக்கிறது. தனது தந்தை தாவீது மீதிருந்த தேவனது இரக்கத்தை அவன் விவரிக்கிறான். இது அவனது தந்தை எந்த அளவுக்கு தேவனுடன் நீதியான இருதயத்துடன் விசுவாசமாய் நடந்தானோ அந்த அளவுக்குத்தக்கதாக இருந்தது என்று அறிவித்தான். அவனது தந்தை தாவீதை தேவன் பாராட்டினதினிமித்தமே தேவன் அவனை அரியாசனத்திற்கு கொண்டு வந்த உண்மையை அவன் அறிவித்தான். மேலும் இந்த பெரிய பதவிக்கான தனது குறைவை, பலவீனத்தை குழந்தைதனத்தை தேவனிடம் விவரித்தான். "நானோ போக்குவரவு அறியாத சிறுபிள்ளை" என்று இருதயத்தை தொடும்வண்ணம் கூறினான். "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தையை இது நினைவுபடுத்துகிறது. உண்மையிலேயே இது சாலோமோனுடைய பலமான குணலட்சணமாக இருக்கிறது. அதாவது அவன் சாந்தமுள்ளவனாகவும், கற்கக் கூடியவனாகவும், ஒரு குழந்தையைப் போலவும் இருந்தான். அவன் பெருமையடித்துக் கொள்பவனாகவோ, சுய நம்பிக்கை உடையவனாகவோ, தனது கடமைகளையும் உரிமைகளையும் அறியாதவனாகவோ இருக்கவில்லை.

ராஜ்யத்தின் மீது உள்ள அவனது பொறுப்பின் காரணத்தால் அதற்கு தான் பலவீனமுள்ளவன் என்று உணர்ந்து சாலோமோன், "உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும்" என்று ஜெபித்தான். சொப்பனத்தில் அவனது விண்ணப்பத்தைக் கேட்டு கர்த்தர் தமது சந்தோஷத்தை வெளிப்படுத்தினதை நாம் கீழ்க்கண்டவாறு வாசிப்பதில் ஆச்சரியம் ஏதும் இருக்கிறதா?

"ஆகையால் தேவன் அவனை நோக்கி: நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்த காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக் கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வும் உள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்கு சரியானவன் உனக்கு முன் இருந்ததில்லை; உனக்குச் சரியானவன் உனக்குப் பின் எழும்புவதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை."

*"உமது மகிமையான சிங்காசனத்திற்கு முன்பாக நான் மண்டியிடுகிறேன்,*
*மண்டியிட்டு சமாதானத்திற்காக மன்றாடுகிறேன்;*
*சமாதானம் அருளப்பட்டது; சமாதானம் மாத்திரமல்ல,*
*ஆனால் அன்பு, சந்தோஷம் மற்றும் பெரும் மகிழ்ச்சியும் அருளப்பட்டது."*

------------------------

**--2438--**

Views from the Watch Tower

# காவற்கோபுரத்தின் கருத்துக்கள்

## இந்த நாளின் அக்கினி

மகா ஐரோப்பிய யுத்தத்தை தேவன் நிறுத்த வேண்டும் என்கிற ஜெபங்கள் கேட்கப்படவில்லை. மாறாக, கடந்த ஒரு வருடத்திற்கு முன்னதாக இந்த ஆசிரியர் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி அகில உலகமும் அதில் ஈடுபட்டு துன்பமடைந்திருக்கிறார்கள். சகல ஜாதிகளும் யோசபாத்தின் பள்ளத்தாக்கில் கூடுவார்கள் என்று வேதம் முன்னறிவித்தது உண்மை என நிரூபணமாகிறது. (யோயேல் 3:9–14) யோசபாத்தின் பள்ளத்தாக்கு என்பது எருசலேமின் சுவர்களுக்கு வெளியேயுள்ள கல்லறையின் பெயராகும். சகல ஜாதிகளின் இராணுவமும் ஒரு பெரிய கல்லறையாக கூட்டப்படும் என்பதை தீர்க்கதரிசனம் குறிப்பிடுகிறது. ஆயிரத்தி அறநூறு மைல் யுத்த முனையில் பயங்கரமான யுத்த எந்திரங்கள் மூலம் ஐரோப்பிய இளைஞர்கள் மரணத்திற்கு போகிறார்கள். பங்கு பெறும் அனைத்து நாடுகளும் வருந்துகின்றன. ஏனெனில் ஒவ்வொருவரும் பெரும் வெற்றியை எதிர்பார்த்து இன்னும் அதை அடையவில்லை. வேதாகமமானது அனைத்து நாடுகளின் ஏமாற்றத்தை குறிப்பிடுகிறது. யாருக்கும் பெரிய வெற்றியில்லை, மாறாக, அவமானமும் வறுமையுமே கிடைத்தது. முன்னரே போரிடும் சக்திகளின் பந்தம் மிகவும் குறைந்திருக்கிறது. அனைத்து தேசிய கடன்களும் மிகவும் அதிகமாயிருக்கின்றன. சிந்தனை சக்தியுள்ள அநேக ஜனங்கள் போரின் விளைவாக அனைத்து தேசிய கடன்களும் மறுக்கப்படும் என்றும் ஒரு பெரும் சமூக புரட்சி வரும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். பெரும் வெற்றிகளும் இறுதி சாதனைகளும் பெரும் நஷ்டத்திற்கு ஜனங்களுக்கு ஆறுதல் கூறுகின்றன. அதேபோல மகா தேசிய பேரழிவுகள் எதிரிகளின் மேல் அடைந்த வெற்றிகளினால் தேசிய சக்தியை இணைக்கச் செய்கிறது. ஆனால் வேதாகமத்தின்படி பயங்கரமான போர், பெரும் இழப்புகளுடன் சமாதானமானது திருப்தியுற்றதாகவும், புரட்சியையும் மொத்தத்தில் அராஜகத்தை ஏற்படுத்துகிறது. எப்படிப்பட்ட ஒரு ஆறுதலான எண்ணம் இயேசுவின் வார்த்தைகளால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன! அதாவது தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தம் அந்நாட்கள் குறைக்கப்படும். இல்லையென்றால் சுயநலமும் விரோதத்தன்மையும் பெருகி மனுக்குலம் முழுவதும் அழிந்திருக்கும்.

இயேசுவும் அவரது மகிமையடைந்த பரிசுத்த சீஷர்களுமே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை நாம் அறிந்திருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! இவர்களே தேவனுடைய பிரியமான குமாரனின் ராஜ்யத்தை அமைப்பார்கள் என்பதிலும் நீதியின் ஆளுகை அமைக்கப்படுவதில் பரலோக வல்லமையின் ஆதரவு இருக்கும் என்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டிருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! மேசியாவின் ஆளுகையின் பலனாக "பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்ற வாக்குத்தத்தம் உலகலாவிய ஏதேனில் நிறைவேறும் என்பதில் நாம் முழு நம்பிக்கை கொண்டிருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! விழுந்துபோன இனத்தை பாவம் மற்றும் மரணத்தி–ருந்து உயர்த்துவதிலும் யாரெல்லாம் விரும்புகிறார்களோ அவர்களை தேவனுடைய சாயலுக்கும் ரூபத்திற்கும் திரும்ப கொண்டுவருவதிலும் மேசியாவின் ராஜ்யம் வெற்றி பெறும் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! இப்படிப்பட்ட மீட்படைவதற்கு முழு சந்தர்ப்பம் கிடைத்த பிறகும் தெரிந்தே தீமை செய்கிறவர்கள் இரண்டாம் மரணத்தில் முற்றிலும் அழிக்கப்படுவார்கள், இதனிமித்தம் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!.

யுத்தமானது இராணுவத்தில் இல்லாதவர்களால் ஆழமாக உணரப்படவோ, ஈர்க்கப்படவோ இல்லை என்று நாம் இதுவரையில் கூறப்பட்டுள்ளோம். போரில் ஈடுபட்டுள்ள அனைத்து நாடுகளின் வியாபாரம் ஓரளவுக்கு நன்றாக இருக்கிறது. போர் தளவாடங்களை உற்பத்தி செய்யப்பட்டு கொடுக்கப்படுவதின் மூலம் பணம் புழக்கத்தில் வைக்கப்படுகிறது. இதுவரையில் முக்கிய தாக்குதல் ராணுவ வீரர்கள், விதவைகள் மற்றும் அனாதைகள் போன்றவர்கள் மேலேயே விழுகிறது. இராணுவ உடையில், எங்கும் இருக்கும் ஆண்களும் மற்றும் துக்கம் ஆசரிக்கும் உடையில் இருக்கும் பெண்களும்தான் போருக்கு முக்கிய ரூபகாரமாக இருக்கிறார்கள். பணமதிப்பு குறைவதாலும், தங்கமானது அரிதாகிக் கொண்டிருப்பதாலும், ஒவ்வொரு பொருளின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் சம்பளங்களும் உயர்த்த வேண்டி கட்டாயத்தி–ருப்பதால் இதன் மூலம் தொழிலாளர் சச்சரவு வந்து, பூமியதிர்ச்சி என்று முன்னுரைக்கப்பட்ட புரட்சிக்கு வழிவகுக்கிறது.(வெளி 16:18) மேலும் இது மோசமாகி அக்கினி என்று முன்னுரைக்கப்பட்ட சொல்லர்த்தமான அக்கினியல்ல–தற்கால நாகரீகத்தின் சுவடு இல்லாமல் அழிக்கக் கூடிய அராஜகத்திற்கு கொண்டு செல்கிறது.

மத விசுவாசத்தைப் பொருத்தவரை இந்த அக்கினியானது முன்னமே ஆரம்பித்துவிட்டது. "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையானது என்று அந்த நாளின் அக்கினியானது பரிசோதிக்கும்" என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். யாரெல்லாம் விசுவாசத்தையும் குணநலன்களையும் தெய்வீக வாக்குத்தத்தங்களாகிய பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கற்களைக் கொண்டு கட்டியிருக்கிறார்கள் என்பதையும் யாரெல்லாம் தங்கள் நம்பிக்கைகளை மரம், புல், வைக்கோல் ஆகியவைகளைக் கொண்டு கட்டியிருக்கிறார்கள் என்பதையும் அது நிரூபணம் பண்ணும். பின்னாக கூறப்பட்டவர்களின் வேலைப்பாடு முற்றிலுமாக அடையாளமாக சொல்லப்பட்ட இந்த நாளின் அக்கினியினால் அழிக்கப்படும். முன்னாக சொல்லப்பட்டவர்களின் வேலைப்பாடு நிலைத்திருக்கும் முன்னமே இதை நாம் பார்க்கவில்லையா? கல்லூரிகளின் பெரிய பேராசிரியர்களும் பல்வேறு சபைகளின் ஊழியர்களும் வேதாகமத்தில் தங்களது விசுவாசத்தை இழந்திருக்கிறார்கள் என்பதை நாம் காணவில்லையா? நமது நாளின் மகாவெளிச்சம் அனைத்து மதப்பிரிவுகளின் விசுவாச அறிக்கைகளை (கோட்பாடுகளை) அவர்களது

ஆதரவாளர்களுக்கும் முழு மனுக்குலத்திற்கும் அபத்தமாக்கிக் கொண்டிருப்பதை நாம் காணவில்லையா? வேதாகமத்தை விட்டுவிட்டவர்கள், உண்மையிலேயே தங்களது சொந்த யூகத்தின் செயல்பாடுகளையே விட்டிருக்கிறார்கள் என்பதை நாம் காணவில்லையா? பரிணாமவாதிகளின் யூக செயல்கள் திருப்திகரமாக இல்லை என்பதையும் அவர்கள் தேவன் என்கிற ஒருவரிடம் அனைத்து நம்பிக்கைகளையும் இழந்துவிட்டார்கள் என்பதையும், அழியாமை ஒன்று உண்டு என்பது அவர்களது வெறும் யூகம் என்பதையும், அதற்கு எந்தவித ரூபகாரமும் இல்லை என்பதையும் நாம் காணவில்லையா? அப்போஸ்தலர் குறிப்பிட்டபடி விசுவாசத்தையும் தெய்வீக வெளிப்பாட்டின் பொன், வெள்ளி விலையேறப்பெற்ற கல் இவைகளால் குறிப்பிடப்பட்டுள்ள குணலட்சணத்தையும் பெற்றுள்ளவர்களின் ஆத்துமா மட்டுமே நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டிருந்தார். இது திரைக்குள்ளாக நுழைந்து, மகா இரட்சகரின் ப-யின் புண்ணியத்தின் ஆதரவுக்காக இணைகிறது. இந்த மகா இரட்சகர், “தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்.” மேலும் தேவனுடைய கிருபையினால் இவர் மகா ராஜாவாக ஆகி, இவரது ராஜ்யத்தினால் ஆதாமையும் அவனது சந்ததியினரையும் பாவம், மரணம், அறியாமை, மூடநம்பிக்கைகள் ஆகியவற்றி-ருந்து விடுவித்து தேவனுடைய பிள்ளைகளின் சுயாதீனத்திற்குள் வழி நடத்தும்.

### கர்த்தரின் சகோதரர்கள் இருளில் இல்லை

சத்தியத்தை பிரபல்யப்படுத்த தற்கால நிலைமை மிகவும் அனுகூலமாக இருக்கிறது. ஜனங்கள் எல்லா இடங்களிலும் எப்பொழுதைக் காட்டிலும் மத காரியங்களை மதிக்க சிந்தித்து கொண்டிருக்கிறார்கள்; பெரிய தேசங்கள் தங்களை கிறிஸ்துவின் ராஜ்யம் என்று கூறிக்கொண்டு எப்படி பயங்கரமான விரோதங்களில் இப்படி அடைபட்டிருக்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது குழப்பங்களும் கேள்விகளும் வேதத்தின் நம்பிக்கைகளையும் போதனைகளையும் கொடுப்பதற்கு நல்ல சந்தர்ப்பத்தை கொடுக்கிறது. இந்த ராஜ்யங்களெல்லாம் தங்களை கிறிஸ்துவின் ராஜ்யம் என்று நினைத்து வஞ்சிக்கப்படடுக் கொண்டிருக்கின்றன என்பதையும் ஆனால் வேதமோ இவைகளை “இவ்வுலக ராஜ்யங்கள்” என்றும் புறஜாதி ராஜ்யங்கள் என்றும் கூறுகிறது என்பதையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கிறார்கள்; மேசியாவின் ராஜ்யம் உலகின் எல்லா தீமைகளுக்கும், மனுக்குலத்தை அறியாமை, மூட நம்பிக்கைகள், பாவம் மற்றும் மரணத்தினின்று உயர்த்தி விமோசனத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது என்ற செய்தியை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கிறார்கள்; பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக கிறிஸ்து ராஜாவாகிறதற்கு பாத்திரராக அறிவிக்கப்பட்டாலும், இன்றும் உலகின் முழு கட்டுப்பாட்டையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக சபை அங்கங்களை அழைத்து, ஒழுங்குபடுத்தி, மெருகூட்டி முழுமையடைவதற்காக, காத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கிறார்கள். கிறிஸ்து தமது மகா அதிகாரத்தை தற்போது எடுத்துக் கொண்டு அவரது ஆளுகையை ஆரம்பிக்கிறார் என்பதையும், வெளிப்படுத்தின விசேஷத்தில் விளக்கப்பட்டுள்ள, ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது தேவனுடைய கோபம் மூண்டது முதலானவைகள் ஐரோப்பாவின் தற்கால குழப்பத்தை குறிப்பிடுகிறது என்பதையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராயிருக்கிறார்கள். (வெளி 11:18)

இந்த அனுகூலமான காரணிகளின் நோக்கில், நாம் யூபி-யின் வெற்றி எக்காளத்தின் நிச்சயமில்லாத தொனியை கொடுக்க நாம் தொடரலாம் என்று உணர்கிறோம். அநேக தேவனுடைய ஊழியர்கள் தங்கள் நெற்றிகளில் வெளியரங்கமாக இந்த அறிவினால், இந்த தற்கால சத்தியத்தினால் முத்திரையிடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; “சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களை பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்லவே.” (1 தெச 5:4) எனினும் அது முழு உலகத்தின் மேலும் ஒரு திருடனைப் போலவும் கண்ணியைப் போலவும் வரும். இரட்சகர் கூறியதுபோல, இவைகள் உலகின் மேல் வருவதை காண்பதினாலும் பயத்தினாலும் மனிதர்களின் இருதயம் சோர்ந்து போகிறது. இன்னும் எதிர்காலத்தில், தேவனுடைய ஊழியர்க்காரர்களின் நெற்றிகளில் கூர்மையான அறிவினால் முத்திரை போடப்பட்டால், தற்கால முன்னேற்றங்களை உணர்ந்து, தங்களது இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது என்றும், சபையின் உயிர்த்தெழுதலும், அது ராஜ்யத்தில் மேசியாவின் மணவாட்டியாக மகிமையாக அடைவதும் அருகில், மிக அருகில் இருக்கிறது என்றும் அறிந்து தங்களது தலையை உயர்த்தி களிகூறுவார்கள்.

### போராகிய காற்றுகள் அவிழ்த்துவிடப்படுகிறது

கடந்த நாற்பது வருடகாலமாக எப்படி போராகிய காற்றுகள் உண்மையான வேதாகம பாடங்களை எல்லா மொழிகளிலும் பிரபல்யம் பண்ணுவதற்காக தேவனுடைய பிள்ளைகளின் நெற்றிகளில் முத்திரைப்போடுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டது என்பதை கடந்த காலத்தைக் காட்டிலும் தற்போது நாம் தெளிவாக காண முடிகிறது. தற்கால போரானது தேசங்களின் மேல் தீடீரென்று திணிக்கப்பட்டது என்று யாராவது நினைப்பார்களானால் அது நிச்சயமாக கிட்டப்பார்வையாக இருக்கும். நாற்பது ஆண்டு காலமாக உலக செய்தித்தாள்கள் இந்த போர் உடனடியாக நிகழும் என்று முன்னறிவித்து வந்திருக்கின்றன; ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும் அது வசந்த காலத்தில் வர வேண்டும் என்றும், ஒவ்வொரு கோடைகாலத்திலும் அது இலையுதிர் காலத்தில் வரவேண்டும் என்றும் அவர்கள் கூறுவார்கள். ஒருவேளை போரானது முடிவாக தவிர்க்கப்படுமோ அல்லது இல்லையோ என்று ஆச்சரியப்படுகிற அளவுக்கு தெய்வீக தலையீட்டினால் இவ்வளவு காலம் தடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அப்படியல்ல, மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு போர் ஒன்றுதான் ஒரே வழி. ரஷ்யாவின் ராஜா சாருக்கோ (Zar), கெய்சருக்கோ, ஃபிரான்ஸ் சக்கரவர்த்தி ஜோசப்புக்கோ அல்லது பிரிட்டிஷ் இராஜாவுக்கோ மேசியா தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க நேரம் வந்துவிட்டது. பூமியின் அனைத்து ராஜ்யங்களும் அவருக்காக கவிழ்க்கப்படும் என்ற செய்தியை அனுப்பினால் அது வீணாயிருக்கும்.

இப்படிப்பட்ட ஒரு கூற்றை ஏளனம் செய்து, எந்த விலை கொடுத்தாவது அதை தடுப்பார்கள். அதற்கு பதிலாக தேவன் போராகிய காற்றுகளை விட்டுவிடுகிறார். அதை இனி தடுத்து நிறுத்தமாட்டார்; மானிட சுயநலத்தை அதன் அறிவின போக்குக்கு செல்ல அனுமதிப்பார். இந்த போரினால் தங்களை உறுதியாக நிலை நிறுத்திக் கொள்வோம் என்றும், தங்களது ராஜ்யத்தை விரிவுபடுத்துவோம் என்றும் இது எதிர்கால செழுமைக்கு வழிவகுக்கும் என்றும் அனைத்து நாடுகளும் நினைக்கும்படி தேவன் அனுமதிப்பார். இந்த கருத்தில்தான் அனைத்து தேசங்களும் நாற்பது வருட காலமாக சக்தி வாய்ந்த போர்க்கப்பல்கள், பலமுள்ள மகா ராணுவம் முதலானவைகளையும் தங்கள் செல்வாக்குக்கும் வல்லமைக்கும் ஏற்றாற்போல் தயார்படுத்தி வருகிறார்கள். கிறிஸ்துவின் ஆவியின் சுவடு கூட இல்லாமல் தங்களை கிறிஸ்துவின் ராஜ்யம் என்று கூறிக்கொள்கிறார்கள், ஒருவருக்கொருவர் வல்லமையை அழிக்கவும் ஒருவருக்கொருவர் பலவீனப்படுத்திக் கொள்ளவும் அனுமதிப்பது தெய்வீக ஞானத்தில் ஒரு பெரிய அடி இல்லையா? ஏனெனில் அப்போஸ்தலர் "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல" என்று கூறுகிறார். இந்த அடிப்படை உண்மை ஒரு தேசத்திற்கும் தனிப்பட்டவர்களுக்கும் பொருந்தும். அதே சமயத்தில் ஒவ்வொரு நாட்டிலும் தேவனுடைய பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்பதையும் ஒவ்வொரு ராணுவத்திலும் தேவனுடைய பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்பதையும் – இந்த ராணுவங்களில் கட்டாயத்தினால் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் – அரசாங்களின் தேவையை பூர்த்தி செய்யவுமே இருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஆனால் அதே சமயத்தில் அன்பின் ராஜ்யத்தில் அதிகப்படியான ராஜ பக்தி உடையவர்களாயிருக்க அவர்கள் தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள் என்பதையும், யாரையும் கொல்லமாட்டோம் என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. மேலும் அவர்கள் தேவ வாக்கியங்கள் போதிக்கிற பிரகாரம், வேதாகம பாடங்களில் ஆறாவது தொகுதியில் குறிப்பிட்டுள்ளபடி வாழ நாடுகிறார்கள் என்பதையும் இப்படி செய்வதினால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்பதையும் நாம் யுத்த முனையி-ருந்து கேள்விப்படுகிறோம். இன்னும் என்னத்தை நாம் கேட்கக்கூடும்?

### "எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்"

பிற்காலத்தில் கட்டாய இராணுவ சேவையைக் காட்டிலும் மருத்துவ கம்பெனிகளில் வேலை செய்ய விரும்பமுடையவர்களின் பெயர் பட்டிய-ல் சேரலாமா என்று நமக்கு கேள்விகள் வருகிறது. நமது ஆலோசனை என்னவென்றால் கர்த்தரின் அருளுக்காக காத்திருந்து, அவர்களது விரும்பத்திற்கு முழு உறுதிமொழி கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்பதாகும். "எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்ற கர்த்தரின் வார்த்தைகளை நினைவுப்படுத்துவதற்கு இதுதான் சரியான நேரம். எனினும் கர்த்தருடைய ஜனங்கள் இராணுவத்தில் சேருவது போன்ற உலகக் காரியங்களில் தலையிட நினைப்பது ஒரு தவறாக ஆகலாம். உலக பயன்பாடுகளை தாங்களே முடிவு செய்யட்டும். ஆனால் அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருக்காக காத்திருப்பது நல்லது. "உண்டாயிருக்கிற அதிகாரங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்" என்பது கட்டாயப்படுத்தப்படும்போது நாம் கீழ்ப்படிய வேண்டும் என்பதை மாத்திரமில்லை, பூமியின் அரசாங்கங்களை நாம் வெளியரங்ரமாக எதிர்க்கக்கூடாது என்பதை குறிக்கிறது. பொதுவான கண்டனமும் கவிழ்த்துப் போடுதலும் கர்த்தரிடமிருந்து வரும். சிலையை உடைத்து அதை தூளாக்குதல், மாம்சீக சபையி-ருந்து வராமல், தெய்வீக வல்லமையால் ஆதரிக்கப்படுகிற ராஜ்ய மகிமையில் உள்ள சபையி-ருந்து வருகிறது. (தானியேல் 2:45)

"உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்கிற அப்போஸ்தலரின் கட்டளையை தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் நினைவுப்படுத்துவதற்கு இதைக் காட்டிலும் சரியான நேரம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆபத்து நாளைக் குறித்து நாம் விவாதிக்கும்போது கூட அது மகிமையின் ராஜ்யத்தின் மேல் வந்ததாக முக்கியப்படுத்தாதபடி, இந்த ஆபத்தின் மூலமாக மகிமையின் ராஜ்யம் ஆரம்பிக்கப்படும் என்பதை முக்கியப்படுத்தவேண்டும். இந்த நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் ஜெபத்தில் நினைவு கூருவோமாக, இன்னும் விசேஷமாக நம்பிக்கையிழந்து இருக்கிறவர்களுக்கு ஜெபிப்போமாக. ஒருவருக்கொருவர் ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருக்கும்படியாக கர்த்தர் பிரார்த்தனையை ஒரு உபகரணமாக கொடுத்திருப்பதாக காணப்படுகிறது. ஏறக்குறைய 15000 பேர் பிரார்த்தனைக்கான உறுதிமொழியை எடுத்திருப்பதாக முன்னரே நமக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் உலகளாவிய ஜெபக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்து ஒருவருக்கொருவரும் கர்த்தருடைய ராஜ்யத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் அனுதினமும் கிருபாசனத்தண்டையில் ஜெபித்து வருகிறார்கள்.

### கொல்லப்பட்டவர்கள், காயம்பட்டவர்கள் மற்றும் கைதிகள்

செஞ்சிலுவை சங்கத்தின் அறிக்கை, மார்ச் 1, 1915 பிரபலமான செய்தித்தாள்கள் கீழ்க்கண்டவைகளை பிரசுரித்துள்ளன; ஐரோப்பிய போரில் இந்த வருடம் (1915) மார்ச் 1 வரை கொல்லப்பட்டவர்கள் 2,136,000 பேர்; மிக மோசமாக காயமடைந்தவர்கள் 1,150,000 பேர்; லேசாக காயமடைந்தவர்கள் 3,781,100 பேர்; கைதிகள்1,764,000 பேர்; மொத்தத்தில் 8,831,000 பேர்.

இந்த பயங்கரமான தொகை செஞ்சிலுவை சங்கத்தின் மூலமாக திரட்டப்பட்டு, ஜெர்மன் நாட்டு பிரதிநிதியின் மூலமாக டென்வரில் இன்று கொடுக்கப்பட்டது.

இழப்புகள் கீழே அட்டவணைப்படுத்தி காண்பிக்கப்படுகிறது:

| | இறந்தவர்கள் | லேசாக காயமடைந்தவர்கள் | பலமான காயமடைந்தவர்கள் | கைதிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஜெர்மனி | 482,000 | 760000 | 97000 | 233000 | 1572000 |
| ஆஸ்திரியா | 341,000 | 618,000 | 83000 | 183000 | 1225000 |
| பிரான்ஸ் | 464000 | 718000 | 439000 | 495000 | 2116000 |
| இங்கிலாந்து | 116000 | 185000 | 49000 | 83000 | 433000 |
| ருஷ்யா | 733000 | 1500000 | 482000 | 770000 | 3485000 |
| மொத்தம் | 2136000 | 3781000 | 1150000 | 1764000 | 8831000 |

நேச நாடுகளாகிய பெல்ஜியம், செர்பியா மற்றும் போன்டேனேகிரின்யாவை தவிர மொத்தம் 6,034,000 பேர். ஜெர்மனியர்களும் மற்றும் ஆஸ்திரியர்களும், 2,797,000 பேர்.

## Killed,wounded and prisoners chart

| | இறந்தவர்கள் | லேசாக காயமடைந்தவர்கள் | பலமான காயமடைந்தவர்கள் | கைதிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஜெர்மனி | 482,000 | 760000 | 97000 | 233000 | 1572000 |
| ஆஸ்திரியா | 341,000 | 618,000 | 83000 | 183000 | 1225000 |
| பிரான்ஸ் | 464000 | 718000 | 439000 | 495000 | 2116000 |
| இங்கிலாந்து | 116000 | 185000 | 49000 | 83000 | 433000 |
| ருஷ்யா | 733000 | 1500000 | 482000 | 770000 | 3485000 |
| மொத்தம் | 2136000 | 3781000 | 1150000 | 1764000 | 8831000 |

நேச நாடுகளாகிய பெல்ஜியம், செர்பியா மற்றும் போன்டேனேகிரின்யாவை தவிர மொத்தம் 6,034,000 பேர்.
ஜெர்மனியர்களும் மற்றும் ஆஸ்திரியர்களும், 2,797,000 பேர்.

--2443--

# விசுவாசத்தின் தற்கால நன்மைகள்
# The Present Advantages of Faith

*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும், விசுவாசிக்க வேண்டும்.'' எபிரேயர் 11:6*

அப்போஸ்தலர் பவுல் இந்த வசனத்தில் தெய்வீக சந்தோஷத்திற்கான ஒரு பொதுவான கொள்கையை கூறுகிறார். தேவன் முரட்டுத்தனமான மிருகங்களிடம் தொடர்பு கொள்வதுபோல மனுக்குலத்தோடு தொடர்பு கொள்வதில் சந்தோஷமடைவதில்லை. தேவன் மனிதனை மிருகங்களைப்போல வெறும் உடல் பிரகாரமான சந்தோஷத்தை மாத்திரம் அனுபவிக்கும்படி உண்டாக்கவில்லை. மனிதன் தன் சிருஷ்டிகரை மகிமைப்படுத்தவும், அவரைப்பற்றிய அறிவைப் பெறவும், தேவன் கொடுத்த இயல் திறன் மூலம் முழுமையான சந்தோஷத்தையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கவும் உண்டாக்கப்பட்டான்.

மனிதன் ஏற்ற காலத்தில் தனது சிருஷ்டிகரின் மகிமையான குணலட்சணத்தையும் தான் உண்டாக்கப்பட்டதின் நோக்கத்தையும் காண வருவதினாலும், இவைகளை எல்லாம் பாராட்டும் திறமையில் வளர்வதினாலும், அவன் மிக அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவான். நேர்மையான இருதயத்தை உடையவர்களாக ஆனவர்களுக்கும் தங்களை சிருஷ்டித்தவரின் மகா நோக்கத்தை உறுதிப்படுத்த விருப்பம் உடைய அனைவருக்கும் பெறப்பட்ட அறிவு தேவனிடம் முழு நம்பிக்கையைக் கொண்டு வரும். சாத்தான் மற்றும் அவனது ஆட்சியின் அடிமைத்தனத்தில் மனுக்குலம் இப்போது பாவம் மற்றும் யுகங்களின் அனைத்து பலவீனங்களுக்கும் அடிபணிகிறார்கள். மனிதன் அண்ட சராசரத்தின் விந்தை காட்சியாக இருக்கிறான். தேவனுடைய எல்லையற்ற ராஜ்யத்தில் அனைத்து பரிசுத்த ஜீவிகளுக்கும் மனிதன் திகைப்பு மற்றும் வருத்தத்தின் உற்பத்தி ஸ்தானமாக இருக்கிறான். நூற்றாண்டுகளாக பாவத்தின் கீழாக அவனது அனுபவங்கள், அவனது பலவீனங்கள், அவனது சீரழிவு மற்றும் அவனது பாடுகள் மிகவும் சக்தி வாய்ந்த போதனையை கொடுத்து வருகிறது. மேலும் தேவனுக்கு கீழ்ப்படியாததின் பலனாக மனதில் பதிகிற பாடங்களை கொடுத்து வருகிறது.

மகா யேகோவா, மேசியாவின் யுகத்தில் மேசியாவின் மூலம் வல்லமையுள்ள ஒரு வேலையை செய்வார். அந்த வேலை நீண்ட காலமாக குருடாயிருந்த அனைத்து கண்களையும் தேவனுடைய தேவத்துவத்தின் மகிமையின் ஒளியை காணும்படி திறப்பதாகும். நீண்ட காலமாக செவிடாயிருந்த அனைத்து காதுகளையும் சத்தியக்குரலை கேட்கும்படி திறப்பதாக இருக்கும். மனித குமாரர்கள் அவர்களது மாசுகளி-ருந்து கழுவப்படுவார்கள். அவர்களது காயங்களும் அழுகிப்போன புண்களும் மகா மருத்துவரால் எண்ணை வார்த்து, கட்டப்பட்டு படிப்படியாக குணமாக்கப்பட்டு அவர்களது கந்தலான வஸ்திரத்துக்கு பதிலாக நீதியின் வஸ்திரம் கொடுக்கப்படும். ஆசீர்வாதத்தின் பொற்காலத்தின் முடிவில் மனிதன் வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு, நீதியான இருதயத்துடன் மகிமையான சிருஷ்டிகரின் சாய-ல் மாம்சீக சரீரத்தில் நிற்பான்.

மனிதன், தேவனின் முழு சாயலை அடைந்த பிறகு, இனி விசுவாசத்தின் விசேஷித்த வளர்ச்சி தேவைப்படாது; ஏனெனில் விசவாசம் அவனில் இயற்கையாகவே இருக்கும். அவனது சிருஷ்டிகரோடு தொடர்பை பெறுவான்; மறுபடியும் அவன் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருப்பான். அவன் தன் சிருஷ்டிகரை அறிந்து கொள்வான். ஆதாம் கூட தனது பூரண நிலையில் தேவனை அறியவில்லை. அவன் பாவத்தின் பலன், அதன் பயங்கரத்தன்மை அவனை பாவத்தி-ருந்து இரட்சிக்க தேவனது ஆச்சரியமான அன்பு ஆகியவைகளை அறிந்திருப்பான். அவன் நீதிக்காக நிலை நிறுத்தப்பட்ட குணலட்சணத்தையும், பாவத்தின்மேல் ஒரு வெறுப்பையும் பெற்றிருப்பான். இந்த வெறுப்பு நித்தியமாக அவனை பாதுகாக்க போதுமானதாக இருக்கும். நீதிக்கும் அநீதிக்கும் தேவனுடைய அன்பின் மகிமையான பிரசாரத்திற்கும், குழியின் (இதி-ருந்துதான் அவர்கள் உயர்த்தப்பட்டார்கள்) பயங்கரம் மற்றும் இருளுக்கும் இடையேயான வித்தியாசம் வெளிகாட்டப்பட்ட பிறகும் களங்கத்தின் அடிமைத்தனத்தை விரும்பி, தேர்ந்தெடுத்தால் அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

மனிதன் முதன்முத-ல் தனது பரிபூரண நிலையி-ருந்து விழுந்து மரண தண்டனை அறிவிக்கப்பட்ட போது அந்த நிலைமை யேகோவா ஒரு அன்பான தேவன் என்று வெளிப்படுத்தவில்லை; அவன் தேவனைப்பற்றி அறியாமலேயே இருந்திருந்தால், தனது பிரிக்கப்பட்ட, பாவ நிலைமையிலேயே சந்தோஷமாக இருந்திருப்பேன் என்று நினைத்தான். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் பொழுது, திரும்பக் கொடுக்கும் காலம் வருவதுபற்றி தேவன் ஒரு குறிப்பை கொடுத்தார்; ஆனால் அந்த அறிக்கை தெளிவாக இல்லை. ஆகையால் மனிதன் சில விதிவிலக்கைத்தவிர, தேவனை மறக்கவும், அவர்களது சிந்தனையிலும் அன்பிலும் அவருக்கு இடம் கொடுக்காதிருக்கவும் முயற்சித்தார்கள். படிப்படியாக அவர்கள் அவரை விட்டு மென்மேலும் அவருக்கு தூரமாக சென்றனர்.

### “தேவனற்றவர்களும் நம்பிக்கையில்லாதவர்களும்”

பரிசுத்த பவுல் இது குறித்து கூறும்போது, தேவன் மனுக்குலத்தை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் என்று அறிவிக்கிறார். அவர்கள் தேவனை தங்கள் மனதில் நிறுத்த விரும்பாததால், தீய வழிகளுக்கும் இழிவான சிந்தைக்கும் ஒப்புக்கொடுத்து, துக்ககரமான அனுபவத்தினால், பாவத்தின் கசப்பான கனிகளையும், அது கொண்டு வருகிற துன்பம், சோகம், கர்வம் ஆகியவற்றினால் கற்றுக்கொள்ளவும் ஒப்புக்கொடுத்தார். “நம்பிக்கையில்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்கள்” என்று அப்போஸ்தலர் அறிக்கையிட்டபடி மனிதன் தனது நிலையை உணருவதற்கு முன்பாக அவனது வக்கிரமான இருதயம் உடைக்கப்படவேண்டும். மனுக்குலம் கசப்பான

அனுபவங்களை பெற்றிருக்கிறது. மேலும் ஒன்றைக்காட்டிலும் இன்னும் ஒரு படி கீழே துன்மார்க்கத்திற்கு சென்றிருக்கிறது. இதுவரை தேவன் இருக்கிறார் என்று அநேகர் அறியாமல் சுயசித்தம் மற்றும் தீய செயல்களினால் மனுக்குலம தேவனைவிட்டு மிக அதிகமாக விலகியிருக்கிறது. மற்றவர்கள் பேயை தங்கள் மனதில் வைத்து தேவனாக வழிபடுகிறார்கள். ஆகையால் பரிதாபகரமான உலகம் இன்றைக்கு துர்நடத்தையிலும் வருத்தத்துடனான குழப்பத்திலும் இருக்கிறது.

அநேகர் இயற்கைச் சட்டம், முன்னேற்றம் மற்றும் தொடர்ந்து முன்னேற்றத்துக்கான சட்டம் இருப்பதாக நம்புகிறார்கள். இப்படியாக இயற்கையை ஆள்தத்துவ மில்லாத தேவனாக பேசுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தேவனை அவர்கள் ஆராதிக்க முடியாது; ஏனெனில் ஆள் தத்துவமில்லாத தேவன் அவர்கள் மீது இரக்கப்பட்டு அவர்களது துன்பத்தி-ருந்து அவர்களை விடுவிக்க முடியாது. ஆனால் வேதாகமமானது புத்தியுள்ள ஒரு தேவனை, இரக்கமுள்ள ஒரு தேவனை, தமது சிருஷ்டிகளின்மேல் அக்கறை கொண்ட, தமது சொந்த மகிமையின் சாயலுக்கு அவர்களை திரும்பிக் கொண்டு வருகிற ஒரு தேவனை தருகிறது. இந்த அன்பான, ஜீவனுள்ள தேவனை நாம் அறிந்திருப்பதால் நாம் எவ்வளவு சந்தோஷம் அடைகிறோம்! அவர் தமது மகா பெரிய வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னரே, அவரது ஆச்சரியமான திட்டத்தையும் அவரது இரகசியமான ஆலோசனைகளையும் நம்மை அறியப்பண்ணினதால் நாம் எவ்வளவு சந்தோஷம் அடைகிறோம்! இந்த மகா திட்டத்தில் நமது இடத்தையும், மகிமையான பங்கையும் அறிகிறதால் மாத்திரமல்ல, தவித்து வேதனைப்படுகிற பரிதாபகரமான சிருஷ்டிகளுக்கும் ஆசீர்வாதம் உண்டு என்று நாம் அறிகிறதால் மாத்திரமல்ல, தவித்து வேதனைப்படுகிற பரிதாபகரமான சிருஷ்டிகளுக்கும் ஆசீர்வாதம் உண்டு என்று நாம் அறிகிறதால் நமது இருதயம் எப்படி களி கூருகிறது!.

### விசுவாசத்திற்குத்தக்கதான ஆசீர்வாதங்கள்

தேவனுடைய பிள்ளைகள் தேவனுடன் இருதய பூர்வமாக நெருங்கிவருவதற்குத் தக்கதாகவும், அவரது சத்தத்தை பழங்கால தீர்க்கதரிசிகள், இயேசுகிறிஸ்து, அப்போஸ்தலர்கள் மற்றும் அவர் அளித்து வருகிற அனுதின அருள் மூலமாகவும், கேட்கிற அளவுக்குத்தக்கதாகவும் அவர்கள் நல்ல ஒரு செய்தியை, மகிமையான ஒரு செய்தியை, அவரது அன்பான தயவை உறுதிப்படுத்துகிற செய்தியை கேட்கிறார்கள். அவரது வல்லமையையும், முழு உலகத்தையும் இரட்சித்து ஆசீர்வதிப்பதற்குத் தமது வல்லமையை அப்பியாசப்படுத்துகிற அவரது நோக்கத்தின் செய்தியையும் கேட்கிறார்கள். வேதாகமமே உறுதிப்படுத்துவது போல அது "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்" செய்தியாகும். சிலர் இந்த நல்ல செய்தியை மற்றவர்களைக் காட்டிலும் உடனடியாக விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறார்கள். எந்த அளவிற்கு இதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறானோ அவன் அந்த அளவுக்கு முழுமையாக ஆசீர்வதிக்கப்படுவான். அறிவு மற்றும் விசுவாசம் இரண்டும் அந்த ஆசீர்வாதத்துக்கு அவசியமாக இருக்கிறது. தற்போது சிலருக்கு விசுவாசம் இருப்பதில்லை, சிலருக்கு அறிவு இருப்பதில்லை. விசுவாசம் இல்லாதவர்கள் அடுத்த யுகம் வரை காத்திருக்க வேண்டும்.

சிலர் நவீன கருவிகளையும் கணித கணக்கீடுகளையும் கொண்டு விண்வெளியை ஆராய்ந்து நமது சூரிய மண்டலத்தின் மையமாகிய சூரியனின் தூரத்தை கணக்கிடுகிறார்கள். தொலை நோக்கியைக் கொண்டு அண்ட சராசரங்களையும் ஆராய்ந்து அதன் அழகான தோற்றதையும் அதன் மகிமையையும் அவர்கள் காண்கிறார்கள். கிரகங்களின் இயக்கங்களையும் அதன் பல்வேறு நியமப்பாதைகளையும் ஆராய்ந்து, அதன் எதிர்கால நிலைகளை அவர்கள் முன்னறியக்கூடும். மகா அண்டசராசரத்தில் கணக்கற்ற மண்டலங்கள் இருப்பதை அவர்கள் ஆராய்ந்து அறிந்து கொள்ளக்கூடும். உண்மையிலேயே, "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்கு பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவை தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது." சங்கீதம் 19:1-4

சர்வ வல்லவரின் ஆச்சரியமான வேலைகளை ஆராய்கிற ஞானவான்கள், தேவனுடைய அன்பு அவரது குமாரனாகிய நமது இரட்சகரில் வெளிப்பட்டதை உணரவோ அல்லது மெச்சவோ செய்யவில்லை. தேவனுடைய வல்லமையின் ஒரு குறிப்பிட்ட அறிவு அவர்களிடம் இருக்கிறது, ஆனால் அவர்களில் வெகு சிலர் மட்டுமே தேவனுடைய குணலட்சணங்களை சரியாக உணருகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் உண்மையாக கூறியிருப்பதாவது: "தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியவில்லை." (1 கொரிந்தியர் 1:21) யாரும் தன் சுயமான குறிப்பிட்ட வழியில் தேவனை அறிந்து காக்கப்பட தேவன் திட்டம் பண்ணவில்லை. மனித ஞானத்தினால் தேவனை காண இயலாது.

"

தேவன் இப்போது உண்மையான ஞானம் உள்ளவர்களை மட்டுமே தேடிக்கொண்டிருக்கிறார். இந்த ஞானத்தில் தங்களது குறைவையும் தங்களுக்கு போதனையும் வழிநடத்துதலும் தேவை என்பதையும் உணருகிறார்கள். தேவனைப்பற்றிய செய்தி அவர்களிடம் கொண்டு வரப்படும்போது தேவையான விசுவாசத்தை அவர்கள் அப்பியாசப்படுத்துவார்கள். மற்ற அனைவரும் வரப்போகிற ஆசீர்வாதமான யுகத்தில் மட்டுமே உணருவார்கள். இப்போது சுய கர்வத்தினால் அதிக ஞானமாய் இருப்பவர்கள் அவமான அனுபவங்கள் மூலமே தாழ்மையான மனோபாவத்திற்கு கொண்டு வரப்படுவார்கள். பேதமையுள்ளவர்களுக்கு உண்மையான விசுவாசத்திற்கு வழி நடத்தக்கூடிய உண்மையான அறிவு கொடுக்கப்படும்.

உயர் குடும்பத்தை சேர்ந்தவர்களில் உலக ஞானமே நிறைந்திருக்கிறது. அவர்கள் எல்லையில்லா விண்வெளியில் கோடான கோடி சூரியமண்டல உலகங்கள் சுற்றிக் கொண்டிருக்கிற அண்ட சராசரங்களையும் சிந்திக்கிறார்கள். அவர்கள் பூமியைக் கவனிக்கிறார்கள். நாம் வசிக்கிற சிறிய கிரகத்தின் அற்பமான அளவைப்பற்றி சிந்திக்கிறார்கள். பூதக்கண்ணாடி (மைக்ரோ ஸ்கோப்) மூலம் தாவரம் மற்றும் பூவின் அமைப்பை ஆராய்கிறார்கள். அவர்கள் பொருளின் அணு, அணு மூலக்கூறு, சிறுபொருள், நுண்ணுயிர், பேக்டீரியா (வியாதிக்கிருமி) ஆகியவைகளை ஆராய்கிறார்கள். அவர்கள் தங்கள் தலையை குலுக்கி கூறுகிறதாவது; "இப்படிப்பட்ட எல்லையற்ற வல்லமையுள்ள ஒரு தேவனானவர் மனிதனைப்பற்றி எப்படி அக்கறை கொள்வார்! நம்மை பற்றி சிந்திக்க தூரத்திலேயும், நேரமே

இல்லாமலும் இருக்கிறார்!" இப்படிப்பட்டவர்கள் அறிவு பெற இன்னும் அனுகூலமான நேரத்திற்கு காத்திருக்க வேண்டும். இயற்கையாகவே கொஞ்சம் விசுவாசததை பெற்றிருக்கிறவர்கள் மற்றும் தேவனது அன்பில் விசுவாசம் வைக்கவும் அவருடனான அந்நியோந்நியத்திலும் ஐக்கியத்திலும் வர விருப்பங்கொள்ளவும் அவரைப்பற்றியும் அவரது குணலட்சணம் பற்றியும் போதுமான அறிவைப் பெற்றிருக்கிறவர்களிடம் மட்டுமே அவர் தொடர்பு வைக்க முடியும்.

### தற்போது கையாளப்படும் ஒரு விஷேித்த வகுப்பார்

தேவனிடம் வருவதற்கு விசுவாசமே முக்கியமானது என்பதே நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலரின் அடிப்படை வாதமாக இருக்கிறது. விசுவாசத்தை அப்பியாசப்படுத்தாத யாரையும் தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார். விசுவாசத்தின் மூலமாக இப்படிப்பட்ட வெற்றிகளைப் பெற்று, தேவனை அவர்கள் சந்தோஷப்படுத்தினார்கள் என்ற சாட்சியத்தைப்பெற்ற பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்வான்களை பரிசுத்த பவுல் விவரிக்கிறார். தேவனிடம் வர விரும்புகிறவர்கள் இப்பொழுது அவரை விசுவாசிக்க வேண்டும். கர்த்தரிடம் வர விரும்புகிறவர்கள் சிலர் அவரிடம் இழுக்கப்பட்டிருக்கிறார்கள். அவரை விட்டுப் பிரிந்து தூரமாய் சென்ற மற்றவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தேவனைப்பற்றிய உண்மையான அறிவு இல்லாமல் இப்பிரபஞ்சத்தின் தேவனால்" மொத்தமாக குருடாக்கப்பட்டவர்கள். (2 கொரிந்தியர் 4:3,4)

நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனிடம் வருகிற அல்லது வர வாஞ்சிக்கிற வகுப்பார் அவர்களது சிருஷ்டிகரிடம் இருதய பசி உள்ளவர்கள். அவருக்கான ஏக்கத்தை வேறு எதுவும் திருப்திப்படுத்தாது. அவர்கள் தங்களிடமே கூறிக்கொள்கிறதாவது: "என்னை உண்டாக்கின தேவன் ஒருவர் இருக்கிறார். பரந்து விரிந்த அண்ட சராசரத்தையும் எனது சொந்த உடற்கூறையும் எந்த அளவுக்கு அறிகிறோனோ அந்த அளவுக்கு தேவனுடைய வல்லமை மற்றும் ஞானத்தை பார்க்கிறேன்; அந்த அளவுக்கு எனது சிறுமையையும் பலவீனத்தையும் தேவையையும் உணர்கிறேன். இந்த மகா தேவனுக்காக எனது ஆத்துமா கூக்குர-டுகிறது. அவர் தமது மானிட சிருஷ்டிகளுக்காக அக்கறை கொள்கிறார் என்கிற உண்மையை பழங்கால தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தினார் என்றும் தம்மைப்பற்றிய ஒரு வெளிப்படுதலை ஏற்படுத்தினார் என்றும் நான் அறிவிக்கப்பட்டிருக்கிறேன். அவரது அதாவது இந்த ஊழியர்கள் மூலமாக தேவன் அறிவித்திருக்கிறவைகளை ஆராய வேண்டும் என்று கூறுகிறேன். மேலும் அவர் தம்மையும் தமது அன்பையும் தமது குமாரன் இயேசு கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும் நான் அறிவிக்கப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த தேவகுமாரன் பூமிக்கு வந்து, பாவம் நிறைந்த மனிதன் ஜீவிக்க வேண்டும் என்பதற்காக மரித்தார் என்றும் நான் அறிவிக்கப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே தேவன் தமது செய்தியை மனிதனுக்கு கொடுத்திருப்பாரேயானால் அந்த செய்தியை நான் விரும்புகிறேன்; நானும் அவரது ஆசீர்வாதத்தை பெறும்படியாக அவரிடம் நான் இழுக்கப்படுவேன்."

கர்த்தர் தமது வசனத்தின் மூலம் இப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர் சொல்கிறதாவது: "என்னிடத்தில் சேருங்கள், அப்பொழுது நான் உங்களிடத்தில் சேருவேன். அவரது சித்தத்தை அறியும்படி தேடுகிற இவர்களுக்கு, தேவன் அவர்களது விசுவாசத்திற்கு பரிசளிப்பவராகிறார். அவரிடம் வருகிறவர்கள் அனைவருக்கும் பாவபரிகாரம் பண்ணுகிறவர் யார் என்பதை குறிப்பிடுகிறார். அவரால் ஏற்படுத்தப்பட்ட வழியின் மூலம் அவரிடம் வருகிறவர்களுக்கு இரட்சகர் அவர்களது பரிந்து பேசுகிறவராக இருப்பார் என்று அறியப் பண்ணுகிறார். அதற்கான நிபந்தனை தங்களது ஜீவனை அவரோடு ப-யிடுவதற்கான அர்ப்பணமும், விசுவாசமுமாகும். இப்படியாக படிப்படியாக அவர்கள் இரட்சிப்பின் முழுமைக்குள் வந்து, சிலுவையின் இரத்தத்தின் மூலம் மகா பரிசுத்தத்திற்குள் நுழைகிறார்கள். அவர்கள் பிரியமானவரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்.

### எளிதில் நம்பும் குணம் விசுவாசமல்ல

பலர் தங்களிடம் விசுவாசம் இருப்பதாக எண்ணுகிறார்கள், ஆனால் உண்மையில் பார்க்கும் போது எளிதில் நம்பும் குணமாகவே இருக்கிறது. அவர்கள் சொல்லுகிற விசுவாசமானது தேவனுடைய வசனத்திலும் அவரது வாக்குத்தத்தங்களிலும் உருவானதல்ல. இத்தகைய எளிதில் நம்பும் குணம் மகா சோதனை காலம் வரும்போது நிச்சயமாக விழுந்துபோகும். எளிதில் நம்பும் குணம் என்பது எதையும் நல்ல காரணம் இல்லாமலும் உறுதியான ஆதாரம் இல்லாமலும் ஏற்றுக் கொள்வதாகும். மாறாக விசுவாசம் என்பது ஒன்றை மறுக்கமுடியாத ஆதாரத்துடனும், நம்பகத் தன்மையுடனும் உண்மைத் தன்மையுடனும் இருப்பதை ஏற்றுக் கொள்வதாகும். தேவனில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவதால் நாம் அவரிடம் நெருங்கி நெருங்கி வருகிறோம்.

"உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்பது ஆண்டவருடைய வார்த்தை. விசுவாசத்தின் ஒவ்வொரு அப்பியாசமும் உண்மையானதும் வெளியரங்கமாக தெரிகிறதுமான ஒன்றின் அடிப்படையின்மேல் இருக்கிறது. விசுவாசம் மனத்தளவில் உணரக் கூடியதும், வெளிப்படையாகவும் சரீர பிரகாரமாகவும் தெரிகிறதுமாக இருக்கிறது. உண்மையான ஞானம், விசுவாசிப்பதற்கு இரண்டு ஆதாரங்களைத் தேடுகிறது. "கர்த்தருடைய இரகசியம் அவருக்கு பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்கு தமது உடன்படிக்கையைத் தெரியப்படுத்தினார்." (சங்கீதம் 25:14)

அவர்கள் கீழ்ப்படித-ன் பாதையில் செல்வதால் இந்த விசுவாசத்தின் பெருக்கம் வருகிறது. விசுவாசமும் கீழ்ப்படிதலும் நமது இரண்டு பாதங்களை போன்றவை. நாம் ஒன்றை முத-ல் முன் வைக்கிறோம். மற்றொன்றை அடுத்து வைக்கிறோம். பிறகு முதலாவதை முன் வைக்கிறோம். இப்படியாக நாம் தேவன் குறிப்பிடுகிற பாதையை பின்பற்றி கீழ்ப்படித-ன் ஆவியில் தொடர்வதின் மூலம் விசுவாசத்தில் அபிவிருத்தி அடைகிறோம். "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்." நமது பரலோக பிரயாணத்தின் தொடக்கத்தி-ருந்தே நாம் நல்ல, வெளியரங்கமான ஆதாரங்களைப் பெற்றிருக்கிறோம். வெளிப்புறத்திலுள்ள அனைத்து ஆதாரங்களைக் காட்டிலும் நமது பிதாவின் அன்பு மற்றும் அக்கறைக்கு ஒரு உண்மையான கிறிஸ்தவனுக்கு தனது சொந்த அனுபவங்களிலேயே அபரிமிதமான ஆதாரங்களைப் பெற்றிருக்கிறான். ஆண்டவர் கூறினதாவது: "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது....அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள்

விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.” (மத்தேயு 10:29,31) தேவனுடைய பிள்ளை நெருக்கமான பாதையில் முன்னேறுவதால் அவன் நமது கர்த்தரின் வார்த்தைகளின் முழு பொருளை அறிந்து கொள்ளுகிறான்.

ஆகையால் ஆண்டவருடன் நெருங்கி நடக்கிற கிறிஸ்தவன் “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” (எபிரேயர் 11:1) என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகளின் சத்தியத்தை கண்டுபிடிக்கிறான். விசுவாசமானது நமது நம்பிக்கைக்கு ஒரு அடிப்படை அல்லது அடித்தளம் மட்டுமல்ல, அது உண்மையான பொருள் –மனதின் பொருள், சொல்லப்போனால் அது உள்ளத்தை தூண்டி, தெளிவுப்படுத்துகிறது. விசுவாசமானது நமது கையில் பிடித்துக் கொள்ளக்கூடிய ஒரு பொருளோ அல்லது நமது காலோடு நடக்கக்கூடிய பொருளோ அல்ல. தேவனை எல்லாவற்றிற்கும் மேலாக சிநேகித்து தனது அன்பான ஊழியத்தை கொடுக்க தேடுகிறவர்களுக்கு தேவன் கொடுக்க இருக்கிறவைகளை பற்றியும் தேவனைப்பற்றியும் அறிவில் முன்னேறுவதால் விசுவாசமானது நமது மனத்திற்கு பலமாகிறது. விசுவாசமானது எந்த ஒரு உலோகப் பொருளைப் போல நமக்கு உண்மையானதும் வெளியரங்கமாக தெரிகிறதுமானதாகிறது, அதைக் காட்டிலும் இன்னும் மேலானதாகிறது. ஏனெனில் நாம் எவைகளின்மேல் விசுவாசம் வைத்திருக்கிறோமோ அவைகள் நித்தியமானவைகளாயிருக்கின்றன.

-----------------------------------

--2447--

# சோதனைக் காலம்
# The Hour of Temptation

*“என் பொறுமையைக் குறித்துச் சொல்-ய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.” (வெளிப்படுத்தல் 3:10)*

நமது கர்த்தர் “பிலதெல்பியா சபையின் தூதனுக்கு சொன்ன வார்த்தைகள், அதன் (பிலதெல்பியா சபையின்) முடிவு காலத்தில் அதாவது இந்த யுகத்தின் அறுவடை ஆரம்பித்தபொழுது நிறைவேறிவிட்டது என்று நாம் புரிந்து கொள்கிறோம், பல்வேறு சபைக்கான செய்தியில் ஒவ்வொரு சபையின் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியும் முடிவில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதை வெவ்வேறு சகாப்தம் என்று நாம் எண்ணலாகாது, அதைக் காட்டிலும் ஒவ்வொன்றும் பொதுவான காலப்பகுதி என்று புரிந்து கொள்ள வேண்டும். அது ஒன்றின் மேல் ஒன்று ஏறியிருக்கின்றது. நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்படுகிற கர்த்தரின் வசனத்திற்கு உண்மையாய் உள்ள இந்த காலப்பகுதி நாம் இப்போது இருக்கக்கூடிய லவோதிக்கேயா காலப்பகுதியைப் போல இருப்பதாக காணப்படுகிறது. இந்த லவோதிக்கேயா காலப்பகுதியில் அதிகமான காலத்தை கழித்துவிட்டோம், அது இப்போது கிட்டதட்ட முடியும் தருவாயில் இருப்பதாக நாம் நினைக்கிறோம்.

நீண்ட காலமாக தேவனுடைய வசனத்திற்கு மதிப்பு குறைவாக இருந்தது. மோசமான புரிந்து கொள்ளுத-ருந்து நல்ல புரிந்து கொள்ளுதலுக்கு வருவது படிப்படியாக நிகழ்ந்தது. தேவனுடைய இரண்டு சாட்சிகளாகிய பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் உயிரற்ற நிலையில் இரட்டு வஸ்திரம் உடுத்தியிருந்து படிப்படியாக பரலோகத்திற்கு கனத்திற்கும் வல்லமைக்கும் எழுந்தருளியது. இதை வேத வாக்கியங்கள் அடையாளமாக குறிப்பிடுகிறது. (வெளி 11:3–2) அதன்பிறகு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய பொதுவான அறிவிப்பு வந்தது. இது சில சமயம் உல்ஃபு (wolf) இயக்கம் என்றும் சில சமயம் மில்லர் இயக்கம் என்றும் அழைக்கப்பட்டது. ஏனெனில் அதன் தலைவர் உலகின் ஒரு பகுதியிலும், மற்றவர் உலகின் மற்ற பகுதியிலும் இருந்தனர். இந்த நேரத்தில் அமெரிக்காவானது உலகின் மேம்பட்ட சிந்தனைக்கு பிரதிநிதியாக இருந்தது. கிறிஸ்துவின் ராஜ்யத்தைப் பற்றிய அறிவிப்பு ஒரு குறிப்பிடத்தகுந்த இயக்கமாக இருந்தது. நமது கர்த்தர் தீவட்டிகளை பிடித்திருந்த பத்து கன்னிகைகளைக் குறித்த உவமையில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் அது ஒரு தவறான எச்சரிப்பு – மணவாளன் வரவில்லை.

## மில்லர் இயக்கத்தின் ஏமாற்றம் ஒரு தூற்றுதல்

தேவனுடைய ஜனங்களாக ஒப்புக் கொள்ளப்பட்டவர்களிடையே இந்த ஏமாற்றம் ஒரு தூற்றுதலுக்கு காரணமானது. சிலர், வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நினைத்து அதில் அதிக ஆர்வம் உள்ளவர்களானார்கள், அவர்கள் சந்தேகங் கொள்ளவில்லை. ஆனால் மற்றவர்கள் அகந்தையுள்ளவர்களாகவும் நாத்திகனாகவும் மாறி வேதாகமத்தை பழைய முட்டாள்தனமான புத்தகம் என்றும் இந்த தீர்க்க தரிசனங்களில் கவனம் செலுத்துகிறவர்கள் எல்லாம் முட்டாள்தனமானவர்கள் என்றும் அறிவித்தனர். ஆகையால் இவர்கள் தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளவில்லை, அதனால் அதன் பிரகடனத்தை ஒதுக்கினார்கள். நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றிய வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களும் தீர்க்கதரிசனங்களும் அதிகமாகவும் நிச்சயமானதாக இருந்தும் பெரும்பாலான பெரிய போதகர்களால் அலட்சியம் பண்ணப்பட்டது. அதன் காரணமாக ஜனங்கள் மிகக் குறைவாகவே வேதாகமத்தைப் பற்றி அறிந்தனர். நிச்சயமாக அவர்களது அறிவைப் காட்டிலும் அவர்களது விசுவாசம் அதிகமாக இல்லை.

மில்லர் இயக்கத்தின் ஊழியத்தின் பலனாக தேவனுடைய வசனத்தை பொறுமையுடன் கைக்கொண்டவர்களுக்கும் அவரது வசனத்தில் நம்பிக்கை இழந்தவர்களுக்கும் இடையே ஒரு பிரிவினை உண்டாயிற்று. தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்களின் இந்த உறுதியும் பொறுமையுடனான விசுவாசமுமே, “என் பொறுமையைக் குறித்து சொல்–ய வசனத்தை” காத்துக் கொள்ளுதல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம். ஆகையால் பொதுவான சோதனைக் காலம் அவர்கள் மேல் வரவில்லை. ஆனால் அவர்களுக்கு பின் வந்தவர்கள் மேல் லவோதிக்கேயா சபைமேல் வந்தது. பிலதெல்பியா சபையின் விசுவாசத்தின் மேல் வந்த தீவிரமான ஒரு சோதனையானது, அமைதியாக கடந்து சென்றது; பின்னர் வருகிற சோதனையில் அது கீழ்ப்படுத்தப் படாது.

“சோதனைக்காலம்” இப்போது நம்மேல் வந்திருக்கிறது. இந்த சோதனைக்காலம் அறுவடை காலமாக இருக்கிறது. பல வகைகளிலும் இந்த கர்த்தருடைய பிள்ளைகளை சோதித்து யார் தேவனுடைய வசனத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள், யார் உண்மையுள்ளவர்களாக இல்லை என்பதையும் நிரூபித்திருக்கிறது. ஆகையால், பெரும்பாலான அதாவது நான்கில் மூன்று பங்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்–க் கொள்பவர்கள் வேதாகமத்தில் தங்கள் விசுவாசத்தை இழந்திருக்கிறார்கள்; பரிணாமம், அதிக கண்டனம், கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்ப ஞானம், ஆவியுலகம், புதிய சிந்தை முதலான நமது கால தப்பறையான, பொய்யான கொள்கைகளில் விழுந்திருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையின் விசுவாசத்திலும் உண்மைத்தன்மையிலுமிருந்து விழுந்துவிட்டார்கள். இந்த

தீங்கு நாளில்" அவர்களால் நிலைநிற்க இயலவில்லை.

**கொஞ்ச காலம் விசுவாச வீழ்ச்சி**

இந்த "தீங்கு நாளின்" சோதனைகள், சபையில், "தேவனுடைய வீட்டில்" ஆரம்பித்தாலும் அதோடு அது முடிவடைவதில்லை. இந்த சோதனைக்காலம் "பூமியில் குடியிருக்கிறவர்களை சோதிக்கும்படியாக பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரும்." இந்த சோதனை, பரீட்சை ஒவ்வொரு தேசத்தின் மேலும், விசேஷமாக கிறிஸ்தவ தேசங்களின் அனைத்து பகுகளிலும் செல்லும். இந்த கடுமையான அனுபவங்கள் அநேகரை கடந்து செல்லும் போது தேவன் இருக்கிறார் என்பதிலே சந்தேகத்துக்கு ஆளானார்கள். முன்னரே வந்திருக்கிற இப்படிப்பட்ட கடுமையான பேரிடர்களை இன்னும் வரப்போகிற இன்னும் அதிகமான பேராபத்துகளை அனுமதிக்கிற தேவனை அவர்களால் மனதில் சிந்திக்க முடியவில்லை. தேவனுடைய மகா திட்டங்களை அறியாமலும் தற்கால நிலைமையின் மகிமையான விளைவையும் அகில உலகத்தின் மேலும் இருண்ட மேகத்தில் தங்கக் கம்பியையும் காணாமலும் ஜனங்கள் உயர்ந்த அரசாங்கத்தின்மேல் அனைத்து நம்பிக்கைகளையும் இழப்பார்கள். பரிதாபகரமான மனுக்குலம் தேவனுடைய வசனத்தினால் அறிவு பெறாமல், அறியாமை மற்றும் குருட்டுத்தனத்திலும் இருந்து, வருகின்ற ராஜ்யத்தையும் அது எவ்விதமாக ஆரம்பிக்கப்படும் என்பதையும், அது ஆரம்பிக்கப்படுவதின் நோக்கமும் இலக்கும் என்ன என்பதையும் அறியாமல் இருக்கிறார்கள்.

ஆகவே தற்கால ஆபத்து நிச்சயமாக உலகத்தின் மீதான மகா சோதனைக்காலம். "இவர்களில் பெரும்பாலோர் ஒரு பெயரளவான சபையை அமைத்திருக்கிறார்கள். இந்த சோதனை மற்றும் அசைக்கப்படும் காலத்தில் அனைத்து பேர் சபை அமைப்புகளும் நொறுக்கப்படும். பாபிலோன் விழுந்து போகும், ஏனெனில் இந்த மகா சோதனை காலத்தில் நிலைநிற்க அவளுக்கு திராணியோ தகுதியோ இல்லை. அவளது விழுகை மகா பெரிதாயிருக்கும்! கொஞ்சம் காலம் அது விசுவாசிகளின் பொதுவான அழிவாக, விசுவாசிகளின் விழுகையாக இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். அது, "கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்யவும், தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும் அவர் பெராத்சீம் மலையிலே எழும்பினது போல எழும்பி, கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபங்கொண்டது போல கோபங்கொள்வார்"என்ற தீர்க்கதரிசனத்தின் அர்த்தத்தைப் போல காணப்படுகிறது. (ஏசாயா 28:21) வசனத்தை கவனியாமலும் புரிந்து கொள்ளாமலும் இருப்பவர்கள் கவிழ்க்கப்படுவார்கள்.

**பிலதெல்பியா சபை தப்பித்து**

பிலதெல்பியா சபையானது சோதனை நாளில் காக்கப்பட்டு, அந்த சபையின் காலத்தினர் சிலர் தற்காலப்பகுதி வரைக்கும் ஜீவிப்பார்கள். இந்த காலத்தின் விசேஷித்த சோதனையில் அவர்களை கர்த்தர் கீழ்ப்படுத்தமாட்டார் என்று நாங்கள் நினைக்கிறோம். உதாரணமாக, நாம் குறிப்பிடுகிற இந்த காலத்தில் ஒரு வயதான கனவான் தொண்ணூறு வயதுள்ளவர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஒரு சபையின் போதகராக இருந்தார். அவர் தற்கால சத்தியத்தை மிகவும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு அதிக வைராக்கியத்துடன் பேசுகிறதாகக் காணப்பட்டார், ஆனால் அவரது வீட்டில் அதிகமான எதிர்ப்பு இருந்தது. அவர் ஊழியராக இருக்கும் அவரது சபையிலும் அவரது மனதின் தீர்மானத்தை நம்புவதாகக் காணப்படவில்லை. அவர் தெளிவாக இப்படியாக சிந்திக்கிறார்; "எனக்கு தொண்ணூறு வயதாகிறது. எனது சொந்த தீர்மானத்தை என்னால் நம்ப முடியவில்லை. நான் தெருவில் போக வேண்டும் என்றால் யாராவது என் கையை பிடித்துக் செல்லவேண்டும். எதற்கும் மற்றவர்களை நம்பி இருக்க வேண்டி உள்ளது. இதுதான் தேவனுடைய சித்தமானால் எந்த அளவான எதிர்ப்பையும் நான் சகித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் என்னால் உறுதியாக சொல்ல முடியவில்லை."

சில சமயம் அந்த வயதான கனவானை, ஒரு பெரிய சபையின் பிரதிநிதியாக இருப்பவரை நினைக்கிறோம். அவர் தமது நிலையை உறுதிப்படுத்தி பாபிலோனை விட்டு வெளியே வரமுடியவில்லை என்று நாம் பரிதாபப்படுகிறோம். அவர் மற்றும் அவரைப் போன்ற மற்றவர்களைப்பற்றியும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிற வசனம் நமது மனத்திற்கு ஆறுதலை தருகிறது. இவைகள் கர்த்தருடைய வசனத்திற்கு விசுவாசத்தையும், அதை அவர்கள் புரிந்து கொள்கிற அளவுக்கான உண்மைத்தன்மையையும் நிரூபிப்பதாகக் காணப்படுகிறது. இவர்களில் யாராவது ஒருவர் அறுவடை காலத்திற்குள் வருவதாக இருந்தால், அவர்கள் அறுவடை காலத்தில் இருப்பதாக எண்ணப்படமாட்டார்கள். ஆனால் நாம் இதை உறுதியாக சொல்லமுடியாது. ஆனால் பிலதெல்பியா காலத்தை சேர்ந்தவர்கள் லவோதிக்கேயா சபையின் மேலும் உலகத்தின் மேலும் வருகிற சோதனைகளி-ருந்து அவர்கள் தப்பிப்பார்கள் என்பதே கர்த்தரின் வாக்குத்தத்தம் என்பதை மட்டுமே நாம் அறிவோம்.

------------------------------------------

## அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும்

## His Servents We are to Whom we Render Service

*"முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள்; இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்." எபேசியர் 5:8*

இயேசுவின் அன்பான அப்போஸ்தலனாகிய யோவான், "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை" என்று எழுதினார். இதே கருத்தே வேதாகமம் எங்கும் பரவியிருக்கிறது. எங்கும் ஒளியானது சத்தியத்துக்காகவும் நீதிக்காகவும் நிற்கிறது; இருளானது பிழை, மூடநம்பிக்கை, பாவம் போன்றவைகளை குறிப்பிடுகிறது. நமது கர்த்தராகிய இயேசு, பிதாவுடன் முழு இசைவுடன் இருந்து உலகிற்கு ஒளியாயிருந்தார். இதற்காகத்தான் உலகிற்கு வந்தார். அவர் ஏற்றுக்கொண்ட பெயர்களில் ஒன்று, "உலகின் ஒளி" (யோவான் 8:12) என்பதாகும். அவர் உலகத்தில் இருந்தும், உலகம் அவரை அறியவில்லை. அவர்கள் ஒளியைக் காட்டிலும் இருளை நேசித்தார்கள், ஏனெனில் அவர்களது செயல்கள் எல்லாம் தவறாக இருக்கின்றன.

உலகத்தைப் பொருத்தவரை இருளானது நேரடியாகவோ, மறைமுகமாகவோ சத்துருவிடமிருந்து வருகிறது என்று அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறார். அவர் கூறுகிறதாவது; "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவிசுவாசிகளின் மனதை குருடாக்கியிருக்கிறான்."ஏன் இது இப்படி இருக்கிறது என்று தொடர்ந்து நமக்கு சொல்கிறார். "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசியாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு" சாத்தான் இதை செய்கிறான். மனுக்குலம் தேவனிடமிருந்து விலகியிருக்கும்படி சாத்தான் இருளை வெளிச்சம் என்றும் வெளிச்சத்தை இருள் என்றும் கூறுகிறான். பெரும்பாலும் நல்ல ஜனங்களை அவர்கள் அறியாமலேயே சாத்தான் தனது கருவிகளாக பயன்படுத்தி வருகிறான். உண்மையைச் சொல்வோமானால், உலகத்தில் இருளே அதிகமாக இருக்கிறது. ஒரு சிலரே ஒளியை பார்த்திருக்கிறார்கள். இப்படியாக, அப்போஸ்தலர் அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளின் கண்கள் கூட முழுமையாக ஒளியை பெறவில்லை, முழுமையாக திறக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு சபையாரின் அறிவின் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறார். அனைத்து புரிந்து கொள்ளுதலையும் கடந்து செல்கிற தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை புரிந்து கொள்ள இயலும்படி அப்போஸ்தலர் ஜெபிக்கிறார்.

பிறகு, தேவனை காணும்படி, சத்தியத்தை காணும்படி, தேவனுடைய ஆழமான காரியங்களை அறியும்படி, சர்வ வல்லவரின் குணலட்சணம் மற்றும் அவரது திட்டத்தின் மகிமையான கருத்தை பெறவும் நாம் உணர்கிறோம். சத்துருவானவன் நம்மை இருளில் வைக்கும்படி முயற்சிக்கிறான் என்பதை நாம் காண்கிறோம். தேவனும் கொஞ்ச காலத்திற்கு மனுக்குலத்தை சூழ்ந்து கொண்டிருக்கும் அறியாமை, மூடநம்பிக்கை, பாவம், இருள் ஆகியவற்றை அனுமதிக்கிறார் என்பதை நாம் காண்கிறோம். தேவன் கொடுத்த இரட்சகரைப் பற்றி அறிந்து கொள்கிறவர்களும், அவரது கைகளில் தங்களை ஒப்புக் கொடுக்கிறவர்களும், தேவனுடைய வசனத்தை ஆராய்கிறவர்களும், இப்படியாக, தவறாக இருள், மூட நம்பிக்கை, பலவீனம் ஆகியவைகளுக்கு எதிராக போராடுகிறவர்கள் தங்கள் கண்களை மிக விரிவாக திறக்கப் பெறுகிறார்கள். இதை அவர்கள் செய்வதால் குண லட்சணத்தில் அவர்கள் பலமுள்ளவர்களாகிறார்கள். ஆகவே இந்த போராட்டங்களில் நல்ல நோக்கத்தை பெறுகிறார்கள். ஆகையால் நாம் பாவம் மற்றும் சுயநலத்திற்கெதிராக ஒரு நல்ல போராட்டத்தை போராட வேண்டும்.

### இருளி□ருந்து ஒளிக்கு மாறுதல்

ஒரு வகுப்பி-ருந்து இன்னொரு வகுப்பிற்கு எப்படி கடந்து சென்றோம். இருளின் பிள்ளைகளாயிருந்து எப்படி வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாறினோம் என்ற கேள்வி கேட்கப்படலாம். நாம் ஒரு காலத்தில் இருளின் வகுப்பில் இருந்தோம். நாம் ஒரு காலத்தில் அவிசுவாசத்திலும் தேவனைப்பற்றி அறியாமையிலும் தவறாக புரிந்து கொள்ளுத-லும் இருந்தோம். நாம் இருண்ட யுகத்தின் மனச்சோர்வில் குழப்பத்தில் இருந்தோம். ஆனால் நாம் இப்பொழுது ஒளியை அனுபவிக்கிறோம். நம்மில் யாரும் முழு ஒளியை பெறவில்லை. ஆனால் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அன்பிலும் அறிவிலும், கிருபையிலும் அதிக வேகமாக வளர்கிறார்கள். நாம் ஆவியின் ஜெநிப்பித்தலை பெற்ற பிறகு ஆவியின் கனிகளில் நாம் முன்னேறுகிறோம். நாம் மனதில் மாறுதல் அடைந்து கடைசியாக முதலாம் உயிர்த்தெழுத-ல் பூரணமடைகிறோம்.

இருளி-ருந்து வெளிச்சத்துக்கு மாறுதல் கிட்டத்தட்ட படிப்படியான வழியில் நிறைவேறுகிறது. சிறு ஒளியை ஓர் அளவானதைப் பெற முத-ல் நமக்கு அறிவு தேவைப்பட்டது. இயற்கையான மனிதர்களையும் ஸ்திரிகளையும் போல நாம் அதிர்ஷ்டம் உள்ளவர்களாக இருந்தால், பிறப்பில் சாதகம் இருக்கிற அளவுக்கு தேவனுடைய நற்குணத்தின் சிறு ஒளியையும், எது உண்மை, எது தவறு, எது நியாயமானது, எது நியாயமற்றது என்பதை அறிய அறிவு தேவைப்பட்டது. எல்லாரும் அழைக்கப்படவில்லை,எல்லாரு இழுத்துக் கொள்ளப்பட வில்லை என்று கர்த்தர் கூறுகிறார். (யோவான் 6:37,44; 1 கொரி 1:26-29) கிறிஸ்து மூலமாக தேவனிடம் நமது அர்ப்பணத்திற்கு முன்பாக இந்த சிறு வெளிச்சத்தைப் பெற சூழ்நிலைகள் நமக்கு சாதகமாக இருந்திருக்கிறது. நமது பிறப்பின் சூழ்நிலைகளோ அல்லது நமது வாழ்க்கையின் சூழ்நிலைகளோ நமக்கு சாதகமாக இருந்திருக்கிறது. இந்த சாதகமான செல்வாக்கின் கீழ் நமது கண்கள் ஓரளவுக்கு திறக்கப்பட்டிருக்கிறது.

**--2450--**

வெளிச்சத்தைப் பெறுவதற்கு ப-யிட இன்னும் அதிகமதிகமாக தயாராகிறோம்.

சரியான மனநிலையில் நாம் இல்லாதிருப்போமானால், சிறு ஒளியை நாம் பெறும்போது, அந்த ஒளியில் நடந்து, அதற்கு உண்மையாயிருப்பதினால் அது கொண்டு வருகிற கஷ்டங்களையும் சோதனைகளையும் பெறுவதற்கு பதிலாக, இருளில் திரும்ப விழுவதற்கே விரும்புவோம். அதிக ஒளிக்கு நாம் பாத்திரராவதற்கு காணப்பட்ட ஒளியை பின்பற்றுவதற்கான குணலட்சணத்தை நாம் பெற வேண்டும். “ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்” என்று ஆண்டவர் சொன்னார். அவன் தன் சொந்த சித்தத்தைவிட்டு, தன்னை வெறுத்து தானே மரித்து தன்னை கர்த்தரின் கரங்களில் ஒப்புக் கொடுப்பானாக.

**“ஒளியின் பிள்ளைகள்” நிரூபிக்கப்படவேண்டும்**

மங்கலாக பார்க்கிறவர்களுக்கு இது ஒரு பெரிய ஒப்பந்தம். ஆனால் நீதியை சிநேகித்து, அக்கிரமத்தை வெறுக்கிறவர்கள் என்ன விலைகொடுத்தாவது ஒளியைப் பின்பற்றுவார்கள். கர்த்தர் அவர்களுக்கு கிருபையுள்ளவராக இருக்கிறார். அவரது நிபந்தனைகளின்படி அவரிடம் அர்ப்பணம் பண்ணும்போது, அவர்களை அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கிறார். இது புது வெளிச்சத்தின் வருகையின் ஆரம்பமாக இருக்கிறது. சாதாரண மனிதனுக்கு தேவனுடைய ஆழ்ந்த காரியங்களை பெற்றுக் கொள்ள இயலாது. ஏனெனில் இவைகள் ஆவிக்குரிய பிரகாரமாக நிதானிக்கப்படுகின்றன. ஆவிக்குரிய மனிதனே இதை உணர்ந்து கொள்ள முடியும். (1 கொரிந்தியர் 2:9–14) தேவனுடைய ஆழ்ந்த காரியங்களாகிய இவைகளை சபையாகிய நாம் தான் புரிந்து கொள்ள முடியும் என்று அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார். ஏனெனில் நாம் புதிய சுபாவத்திற்கு புது சிருஷ்டியாக தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். ஆரம்பித்தி–ருந்தே எல்லாவற்றையும் நாம் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் நாம் இடுக்கமான பாதையில் முன்னேறுவதால் மென்மேலும் இவைகள் வெளிப்படுத்தப்படும். இந்த ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதல் நீதிக்கு ஒரு உத்வேகமாக, ஒரு வழிகாட்டும் ஒளியாக இருக்கிறது. இது நீதிக்கு ஒரு உற்சாகத்தை உருவாக்குகிறது. இப்படியாக நாம் ஒளியின் பிள்ளைகளாகிறோம்.

நாம் ஒளியின் பிள்ளைகளான பிறகு, சோதனை, மெய்ப்பித்தல் ஆகியவைகின் கீழ் நாம் போக வேண்டியுள்ளது. நாம் ஒளிக்கு உண்மையாயிருக்க வேண்டுமானால், பரலோகத்திலுள்ள பிதாவுக்கு மகிமையாக நமது ஒளியை பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று நமது கர்த்தராகிய இயேசு கூறுகிறார். அவரது நாமத்தினிமித்தம், அநேகர் தீமையான மொழிகளை நம்பேரில் பொய்யாய் சொல்வார்கள் என்றும் நமது நல்ல செயல்களை, புகழமாட்டார்கள் என்றும் அவர் நம்மை முன்பாகவே எச்சரிக்கிறார். இருளின் பிள்ளைகள் வெளிச்சத்தின் பிள்ளைகளை வெறுப்பார்கள் என்றும்,

“இந்த அனுபவத்தில் நாம், “சந்தோஷப்பட்டு களிகூரவேண்டும். பரலோக ராஜ்யத்தில் நமது பலன் மிகுதியாயிருக்கிறது” என்றும் நமக்கு புத்திமதி கூறுகிறார். வெளிச்சத்தின் பிள்ளைகள் துன்புறுத்தப்படுவதிலும் சோதனைகளிலும் களிகூருவதே அவர்களது மனோபாவமாக இருக்கிறது. அவர்கள் வெளிச்சத்தை, சத்தியத்தை பிரகாசிக்கப்பண்ணுவதால், சரியான புரிந்து கொள்ளுதல் மற்றும் உயர்ந்த இருதயம் உள்ளவர்களுக்கும் தவறுகள் வெளியரங்கமாக்கப்படும். இருளின் பிள்ளைகள், தவற்றின் பிள்ளைகள் சூழப்பட்டுள்ள தவறுகளை நாம் காண்பிப்பதால், அவர்கள் நம்மேல் கோபமடைந்து, நமது ஆண்டவரை துன்பப்படுத்தினதுபோல நம்மையும் துன்பப்படுத்துவார்கள்.

**சபையின் கடைசி சோதனை**

நமது கர்த்தரைப்போல, கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ள அனைவரும் நடத்தப்படுவதற்கு இன்னும் காலம் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதாக இருக்கிறது. உண்மையிலே அது முன்னரே வந்திருக்கிறது. எதிராளியானவனின் குருடாக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து வருகிற துன்பம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் அதைத் தாங்கும்படியாக வெளிச்சத்தின் சர்வாயுத வர்க்கங்களை தரித்துக் கொள்ள வேண்டும் என்று நம்மை அது தனித்தனியாக எச்சரிக்கிறது. சாத்தானுடைய கருவிகளாக இருப்பவர்கள் கொலைகாரர்களாகவோ, குண்டர்களாகவோ இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நமது ஆண்டவரின் முதலாம் வருகையை நாம் திரும்பிப் பார்க்கும் பொழுது, நமது கர்த்தருக்கு விரோதமாக சத்துருவானவால் பயன்படுத்தப்பட்டவர்கள், மத தலைவர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாய சாஸ்திரிகளாகிய தேவனுடைய வெளிப்படையான மனிதர்களும் அவரது ஜனங்களின் தலைவர்களுமேயாகும். ஆனால், “அவனுடைய ஊழியர்களாகிய நீங்கள் யாருக்கு ஊழியம் செய்வீர்கள்” என்று கர்த்தர் கேட்கிறார். ஆகையால், ஆண்டவரை துன்பப்படுத்தி, கடைசியில் சிலுவையிலறைந்து, ஊழியம் செய்தவர்கள் சாத்தானுடைய ஊழியர்கள், அவர்கள் தங்களை யாருடைய ஊழியர்கள் என்று நினைத்திருந்தார்கள் என்பது முக்கியமல்ல.

ஆனால் இதன் காரணமாக அவர்கள் நித்திய ஆக்கினைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று நாம் நினைக்கலாகாது. அறியாமையினாலே அவர்கள் ஓரளவு சாத்தானின் ஊழியர்களாக இருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர் பேதுரு யூதர்களிடம், “நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள்” என்று கூறினார். அப்போஸ்தலர் பவுல் கூட இந்த உண்மைக்கு சாட்சி கூறும் விதமாக, “அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே” என்று கூறுகிறார். அவர்கள் சாத்தானின் குருடாக்கப்பட்ட ஊழியர்களாக இருந்ததால் இதைச் செய்தார்கள். அவர்கள் இருதயம் உண்மையும் தாழ்மையுமாய் இருந்திருந்தால், “உத்தம இஸ்ரயேலர்கள்” விசுவாசமுள்ள “மீந்திருந்த” இஸ்ரயேலரைப் போல அவர்களும் பார்த்திருப்பார்கள். இயேசுவை சிலுவையிலறைந்த யூதர்கள் அதற்காக மிக மோசமான தண்டனை காலத்திற்குள் சென்றார்கள். ஆனால் இப்போது சீக்கிரத்தில், “தாங்கள் குத்தின அவரைப் பார்த்து (விசுவாச கண்களால்) ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங் கசந்து துக்கிப்பார்கள்” என்றும், தேவன், “அவர்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்” என்றும் நாம் நம்புகிறோம். (சகரியா 12:9,10).

ஆகையால் இன்றைக்கு நல்ல மனிதர்கள் தங்களை அறியாமலேயே சாத்தானுடைய ஊழியர்களாக இருக்கிறார்கள். அதில் யாராவது தெரிந்து இப்படிப்பட்ட தீய செயல்களை செய்வார்களேயானால், அவர்களுக்கு தண்டனை மிக அதிகமாக இருக்கும். ஒவ்வொருவருடைய தகுதியையும் தேவன் ஒருவரே அறிவார். அவர்கள் ஒளியைப் பெறுதல் சமீபத்தி–ருக்கிறது. இயேசு கிறிஸ்துவைப் போல உண்மையுடன் சத்தியத்தை அறிவித்த உண்மையான தேவனுடைய பிள்ளைகளை, சாத்தானுடைய ஊழியர்களாயிருந்து, துன்பப்படுத்தி அவதூறு செய்தவர்கள் உண்மையில்லாதவர்களானதால் அவர்கள் வெட்கத்திற்கு உரியவராவார்கள்.

-----------------------------------

**--2452--**

# நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே
# Our Standing Only in Christ

*"நீர் ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்." எபிரேயர் 10:5*

தாயாகிய ஏவாள் ஆதாமின் விலாவிலிருந்து எடுக்கப்பட்டதால் அவள் ஆதாமின் சரீரத்தின் ஒரு பாகம் என்பதைத் தவிர அவள் தேவனோடு உறவாடுதலை பெறவில்லை. சபையானது தானே தேவனோடு உறவாடுதலைப் பெறவில்லை என்பதை இது குறிக்கிறது. சபையானது தேவனோடு உறவாடுதலைப் பெறுவதற்கு அவளது கர்த்தராகிய இயேசுவின் பலி தேவையாயிருந்தது. அதாவது அவள் அவரது விலாவிலிருந்து வந்தாள். இரண்டாம் ஆதாம், மரித்தோரிலிருந்து முதற்பேறானவர், நீதிமானாக்குகிறவர், உலகிற்கு ஜீவனை அளிப்பவர். இந்த சுவிசேஷ யுகத்தில் தேவன் சபையை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும்படி தெரிந்து கொண்டு வருகிறார். அவள் அபிவிருத்தி அடைவதில் முன்னேறிக் கொண்டிருக்கிறாள். மணவாட்டியாக, ஆட்டுக் குட்டியானவரின் மனைவியாக அவள் இரண்டாம் ஏவாள் என கருதப்படலாம். "வானத்திலிருந்து வந்த கர்த்தராகிய" இரண்டாம் ஆதாமினால் மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்ட அவளது வேலை, வரக்கூடிய யுகத்தில் ஆதாமின் சந்ததியினரை பொறுப்பெடுத்துக் கொள்வதாகும். (1 கொரிந்தியர் 15:45–47)

இந்த முழு சித்திரமும், விழுந்துபோனதின் பொறுப்பு ஆதாம் மேல் இருந்தது என்று நமக்கு காண்பிக்கிறது. தாயாகிய ஏவாள் தான் வஞ்சிக்கப்பட்டாள். அதுதான் முதலாவது மீறுதல் என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகிறார். மேலும் அவர் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் தான் பாவமானது உலகத்தில் நுழைந்தது என்று குறிப்பிடுகிறார். இப்படியாக மரணமானது எல்லா மனிதர்கள் மேலும் வந்தது. ஆதாமின் விழுகையின் பலன் பரம்பரையாக அவனது பிள்ளைகள் மேல் வந்ததால், "எல்லா மனுஷரும் பாவம் செய்தார்கள்" என்று குறிப்பிடுகிறார். "பாவத்தின் சம்பளம் மரணம்" ஆக இருக்கிறபடியினாலும், மரணத்தை கொண்டு வந்தது ஆதாமின் பாவமே ஒழிய, ஏவாளின் பாவம் அல்ல என்பதாலும், அதற்கான மீட்டுக்கிரயம் ஆதாமுக்கு ஒத்ததாக இருக்க வேண்டுமே ஒழிய ஏவாளுக்கு ஒத்ததாக அல்ல.

### பலியின் சரீரம்

ஒரு பலியாக, "எனக்காக ஒரு சரீரத்தை நீர் ஆயத்தம் பண்ணினீர்" என்று நாம் வாசிக்கும் போது, இது சபையை, கிறிஸ்துவின் சரீரத்தை பலிக்காக ஆயத்தம் பண்ணினார் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. பலிக்காக ஆயத்தம் பண்ணப்பட்டது,இயேசுவின் மானிட சரீரமாகும். அதிசயதக்கவிதமாக அது அவருக்கு ஆயத்தம் பண்ணப்பட்டது. அது பரிசுத்தமும் குற்றமற்றதும், மாசில்லாததும், பாவிகளுக்கு விலகினதுமாயிருந்தது. இயேசு மாத்திரமே இப்படி ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரத்தைப் பெற்றிருந்தார்.

நமது கர்த்தராகிய இயேசு, மெல்கிசெதேக்கின் முறைமையின்படி தேவனுடைய ஆசாரியராக நியமனம் செய்யப்பட்டார். ஏனெனில் பலியிடுதல் சம்பந்தமாக இவர் ஆதாமின் உண்மைப் பொருளாக இருந்தார். இவர்தான் தம்மை முதன்முதலாக ஒப்புக் கொடுத்தவர். அதைத் தொடர்ந்து தமது சீஷர்களை ஏற்றுக் கொண்டு தமது பலியின் மூலமாக அவர்களை நீதிமான்களாக்கி, அதன்பின் அவர்களை தமது பலியின் அங்கங்களாக்குகிறார். நிழலில் பாவ நிவாரண நாளின் பாவ நிவாரண பலியை கொடுப்பவர் பிரதான ஆசாரியன் என்பது வெளியரங்கமாக இருக்கிறது. உதவி ஆசாரியர்களில் யாருக்கும் இப்படிப்பட்ட உரிமை கிடையாது. அதேபோல உண்மையான (ஆவிக்குரிய) உதவி ஆசாரியர்களாகிய கிறிஸ்துவின் பின்னடியார்களுக்குப் தங்களை பலியாக ஒப்புக்கொடுக்க தகுதியுள்ளவர்கள் அல்ல. நம்மால் செய்ய முடிந்ததெல்லாம், நமது ஜீவனை மரணபரியந்தம் அர்ப்பணித்து நம்மை நீதிமானாக்குகிற நமது இரட்சகரிடம் நம்மை ஒப்புக் கொடுப்பதுதான். அவர் நம்மை ஏற்றுக் கொண்டு அவரது புண்ணியத்தை நமக்கு சாட்டி, நம்மை அவரது மாம்சீக சரீரத்தின் அங்கங்களாக எண்ணுகிறார். பிறகு தேவன் கிறிஸ்து மூலமாக தமது ஆவியைக் கொண்டு மரணபரியந்தம் சுயபலியின் கிரியையை நிறைவேற்ற "தமது விருப்பத்தையும் செய்கையையும்" நம்மில் உண்டாக்குகிறார். ஆனால் இதுநாள் வரை சபையானது பிரதான ஆசாரியனைப் போல பலியிடப்பட்டு பிதாவிடம் நமது சொந்த நாமத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. பிதாவின் தொடர்பு நமது பரிந்து பேசுகிறவரிடம் மட்டுமே. நாம் குமாரனுடையவர்களாக இருப்பதால் மட்டுமே நாம் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம்.

இவை எல்லாம் பாவநிவாரண நாளின் பாவ நிவாரணபலியில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பிரதான ஆசாரியன் தனது சொந்த பலியாக, தன்னை தனித்து குறிக்கும்படியாக காளையை முதலாவது பலியிட்டார். அடுத்தபடியாக, பிரதான ஆசாரியன், உதவி ஆசாரியன் அல்ல, கர்த்தரின் ஆட்டை ஒரே ஒரு ஆட்டை, அநேக ஆடுகளை அல்ல, பலியிட்டார். இந்த ஆடானது உதவி ஆசாரியர்களின் பலியாக அல்ல. ஆனால் பிரதான ஆசாரியனின் பலியாகவே செலுத்தப்பட்டது. ஆவிக்குரிய பொருளிலும் அப்படியே இருக்கிறது. இயேசு நம்மை தமது சரீரத்தின் ஒரு அங்கமாக தத்தெடுக்கும்போது, அவர் தமது

**--2453--**

புண்ணியத்தை நம்மேல் சாட்டுவதால் மட்டுமே நமது அர்ப்பணம் பிதாவினால் ஏற்புடையதாக இருக்கிறது.

இது ஒரு கேள்விக்கு பதிலாக இருக்கிறது. நாம் இங்கே விளக்கியதற்கு மேலாக இந்த காரியத்தை நாம் விளக்க முடியாது. நாம் இதையே வேதாகம பாடங்களிலும், காவற்கோபுரத்திலும் கூற முயற்சித்திருக்கிறோம். கர்த்தருடைய சிந்தை புரிந்து கொள்ளப்பட்டு, நீங்கள் ஆசீர்வாதத்தைப் பெறும்படி நாங்கள் ஜெபத்திற்கு ஊக்கமளிக்கிறோம்.

--------------------------------

--2454--

# சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி?

## How to Proclaim the Truth

*"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்." எபேசியர் 4:15; எபிரேயர் 10:5*

சத்தியமானது எப்பொழுதும் தாழ்மையாகவும், ஆனால் பயமில்லாமலும் போதிக்கப்படவேண்டும். கிறிஸ்தவர்களுக்கு சத்தியத்தை தவிர வேறு எதையும் பேச அவர்களுக்கு உத்தரவில்லை. ஒருவன் சுவிசேஷத்தின் ஒப்புக் கொள்ளப்பட்ட ஊழியனாக இருந்தால், சத்தியம் அவனுக்கு கிடைத்தபோது, சபையானது அவனை நியமித்து இருந்து, சத்தியத்தை விரும்பவில்லை என்பதற்காக தப்பறையை அவன் போதிக்கக் கூடாது. உலக ஆசையுள்ளவர்கள் பிரசங்க மேடையில் மனசாட்சியுடன் இருக்கமாட்டார்கள். "இந்த ஜனங்கள் எதை விரும்புகிறார்களோ அதையே கொடுக்கிறேன். அவர்கள் எனக்கு சம்பளம் தருகிறார்கள். இது முற்றிலும் தொழில் காரியமாக இருக்கிறது" என்று அவர்கள் காரணம் கற்பிக்கலாம். தன்னை கிறஸ்துவின் ஊழியன் என்று கூறிக்கொள்கிற இவரது உலக ஆசை இந்நிலையை எடுக்கிறது. ஏனெனில் இவர் ஆவியை, சத்திய ஆவியை பெறவேயில்லை, பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை பெறவேயில்லை.

ஆனால் அன்பின் சத்தியத்தை பெற்றுக் கொள்கிற ஒருவன், அதை கிரகித்துக் கொள்கிற ஒருவன் இப்படியாக சொல்லுவான்: "வருடக்கணக்காக நான் போதித்து வந்தவைகளில் பெரும்பாலானவைகள் ஜனங்களை ஓரளவுக்கு சத்தியத்தைவிட்டு விலக்குகிறவைகளாகவும், தேவனுடைய குணலட்சத்தை தவறாக சித்தரித்து, அவரை கனவீனப்படுத்தி தீங்கிழைப்பவைகளாகவும் இருந்தன என்பதை நான் இப்போது பார்க்கிறேன். நான் செய்ய விருப்பினதற்கு இது மாறாக இருக்கிறது. இனி தப்பறையை நான் கொடுக்க முடியாது. நான் ஒரு சபைக்கோ, சபை பிரிவுக்கோ ஸ்தானாதிபதியே அல்ல, நான் தேவனுடைய ஒரு ஸ்தானாதிபதி, நான் இந்த சபைப் பிரிவின் ஊழியக்காரனல்ல, கர்த்தருடைய ஊழியக்காரன், நான் சத்தியத்தை அறிந்த பிறகும் தப்பறையை போதிப்பேனாகில், நான் தேவனுக்கு முன்பாக குற்றவாளியாக இருப்பேன்."

### நமது ஸ்தானாதிபதித்துவத்தின் கீர்த்தி

சத்தியத்தை விட்டுக் கொடுக்காத இப்படிப்பட்ட மனோபாவத்தை உடைய தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரன் மனிதருக்கிடையே கீர்த்தியையும் நல்ல நிலையையும இழப்பார்கள். ஆனால் இவைகளெல்லாம் கவனிக்கப்படவேண்டியவைகள் அல்ல. ஏனெனில் அதற்கு பதிலாக தேவனுடைய ஆசீர்வாதத்தையும் ஆதரவையும் பெறுவான். பிரதான அப்போஸ்தலர் எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணுகிறதாக அறிவிக்கிறார். கிறிஸ்துவில் ஜெயங்கொள்ளவும். "கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படவும்" மேசியாவின் நித்திய ராஜ்யத்தில் ஒரு இடத்தை பெறும்படிக்கும் இப்படி எண்ணுவதாக அறிவிக்கிறார். இப்படி செய்து ஜெயங்கொள்ளுகிறவர்கள் "விலையுயர்ந்த முத்தை" பெறுவார்கள். ஆகையால் சத்தியத்தை பேசுவது கிறிஸ்தவ வாழ்க்கையில் முற்றிலும் அத்தியாவசியமானது. தேவனுடைய வசனத்தின் சத்தியம் தேவனுடைய பிள்ளையின் இருதயத்தில் புனிதப்படுத்தபட்டதாக இருக்கிறது. அதை பேசுவது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தனிப்பட்ட சலுகையாக அவன் மதிக்க வேண்டும்.

நமது பேசும் சக்தி, நமது எண்ணங்களை மற்றவர்களிடம் சொல்லுவது நாம் பெற்றிருக்கிற மிக அதிகமான வல்லமையாகும். இது நன்மைக்கோ அல்லது தீமைக்கோ, சத்தியத்திற்கோ அல்லது தப்பறைக்கோ ஆற்றல் வாய்ந்த காரணியாக இருக்கிறது. சத்தியத்தை பேசுவதற்கான சந்தர்ப்பம், மனிதர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவது, பொதுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ, ஒரு பெரிய சலுகையாக இருக்கிறது. கர்த்தருக்கு சந்தோஷத்தை தருகிற ஒரு ஊழியக்காரனாயிருப்பதற்கு, அவரால் நன்றாக பயன்படுத்தப்படுவதற்கு ஒருவன் சத்தியத்தை அன்புடன் பேசவேண்டும். ஒருவன் தேவனுடைய குடும்பத்தில் நுழைந்தபோது அவனிடமிருந்து எதிர்பார்ப்பதைக் காட்டிலும், குடும்பத்தில் சில காலம் இருந்த பிறகு அதிகமாக எதிர் பார்க்கப்படும். நாம் தேவனுடைய பிரியமான பிள்ளைகளாக நமது மூத்த சகோதரனும், மாதிரியுமாகிய தலையானவரின் சாயலுக்கு ஒப்பாக வளர வேண்டும். நாம் "எல்லாவற்றிலும் வளருகிறவர்களாயிருக்க" வேண்டும். அவர்தான் சபையின் தலைவர் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். மகிமையில் நாம் அவரது சரீரத்தின் அங்கமாக வேண்டுமென்றால் நாம் அபிவிருத்தி அடைய வேண்டும். பரிசுத்த ஆவியின் கனிகளைப் பெற்றிருக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் பூமியை ஆசீர்வதிக்கிற மகிமையான ராஜ்யத்தில் ஒரு பங்கை பெற தகுதியுள்ளவர்களாவோம்.

### கருத்தைக் கூறுதல் கருத்துப்பதிவை ஆழப்படுத்துகிறது

நமது ஸ்தானாதிபதியின் வேலையை நாம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்மை இருளி–ருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவரை நாம் புகழவேண்டும். அவரது கிருபையின் செய்தியை நாம் அறிவிப்பதின் மூலம் நாம் ஆவியில் வளருவோம். "எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும்." சத்தியத்தை நாம் நேர்மையுடனும், ஆவலுடனும் அன்புடனும் பிரகடனப்படுத்தினால் நாம் அதில் அதிகதிகமாக நிரப்பப்படுவோம். "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு." (நீதி 11:24) நாம் மற்றவர்களுக்கு கொடுப்பதால் ஆசீர்வாதத்தின் சேமிப்பு அதிகமாகிறது. இந்த அன்பின் குணத்தை நாளுக்கு நாள் நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏன் இப்படி செய்ய வேண்டும்? அது நம்மை தேவனை போலாக்கும், அது விரும்பப்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது, தேவையான ஒன்றாகவும் இருக்கிறது.

நமது தேவன் அன்பு என்கிற பண்போடு கூட மற்ற மகிமையான பண்புகளை பெற்றிருந்தாலும் இந்த அன்பு என்கிற பண்புதான் மேன்மையானதாக எல்லாவற்றையும் ரத்து செய்வதாக

இருக்கிறது. தேவனுடைய நீதி அவரது அன்புக்கு ஒத்துழைப்பு தருகிறது. அவரது அன்பு அங்கீகரிக்காத எந்த திட்டத்தையும் அவரது ஞானமானது நிறைவேற்ற முயற்சிக்காது. ஆகையால் நாம் வளரும்போது அன்பு என்கிற குணம் அதிகதிகமாக வெளிப்படவேண்டும். நமது வார்த்தைகளெல்லாம் அன்புடையதாகவும் தயவானதாகவும் கனிவானதாகவும் இருக்க வேண்டும். நாம் தேவனுடைய மகாதிட்டத்தை மற்றவர்களிடம் சொல்லும் போது நமது சுய மகிமையைப் பற்றி கூறுவதை கட்டுப்படுத்த வேண்டும். சத்தியத்தின் அழகு காணப்படும்படியாக நமது சுயத்தை மறைப்போமாக. செய்தியை மற்றவர்களுக்கு நாம் கொடுக்கும்போது அது மிகவும் திறமையாக செய்யப்படவேண்டும். சத்தியத்தை அன்புடன் பேசுதல் மற்றவர்களுக்கு அதிக பிரயோஜனமாயிருப்பது மாத்திரமல்ல நமது மனதிலும் அது அதிகமாக பதியப்படும்.

தேவனுடைய இந்த குணங்களை பாராட்டி, அன்புடனும் நேர்மையுடனும் பேசுபவர்கள் தங்களது மனதிலும் இருதயத்திலும் ஓர் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். மேலும் சத்தியமானது மிகவும் தெளிவாகவும் இனிமையாகவும் இருக்கும். மற்றவர்களுக்கு உதவும் போது நமக்கே அது உதவியாக இருக்கும். இப்படியாக தேவனுடைய திட்டத்தின் பல்வேறு அம்சங்கள மிகவும் உறுதியாக அவனது மனதில் பதிவாகும்.

### கட்டுப்பாடு தேவைப்படுகிற சுபாவ குணங்கள்

கிறிஸ்துவுக்குள் வருகிற பலமான குணலட்சணத்தை பற்றிய காரியத்தில், சத்தியத்தை பிரகடனப்படுத்துவதில் விழித்திருத்தல் ஒரு முக்கியமான தேவை என்பதைக் காண்கிறோம். இயற்கையாகவே எதிர்தாக்குத–ல் பின்தங்கியவர்கள், சத்தியத்தை கொடுக்கிற விஷயத்தில் பலமான அழுத்தத்தை மற்றவர்களிடம் கொண்டு வருவதில் பலத்துடன் இருக்க மாட்டார்கள். அவர்களது செய்தி சாதகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக காணப்படாவிட்டால், அவர்கள் மனம் வருந்த செய்வார்கள். நான் சொல்வதை அவர்கள் கேட்க விரும்பவில்லை. ஆகையால் இந்த பாடத்தை குறித்து இனிமேல் பேசமாட்டேன். அவர்கள் மிகவும் சுலபமாக உற்சாகத்தை இழந்து விடுவார்கள். ஆனால் எதிர்தாக்கும் குணமுடைவர்கள் சத்தியத்தை கொடுக்கும் விஷயத்தில் இந்த குணத்தை வெளிப்படுத்துவார்கள். அவர்கள் சத்தியத்தை கொடுப்பதை ஒரு கடமையாக எண்ணி மிகவும் பலத்துடன் இருக்கிறார்கள்.

ஆனால் இது தற்போது ஒரு கட்டாயமான விஷயம் அல்ல என்பதை நினைவில் வைக்க வேண்டும். இப்போது நாம் போதிக்கக்கூடியவர்களாகவும் சாந்தம் உடையவர்களாகவும் இருக்கும்படியான ஓர் அழைப்பாக இருக்கிறது. விரைவில் பலமானது தேவைப்படும், பயன்படுத்தப்படும். கேட்கும் காதுள்ளவர்களுக்கு தற்போது வசனத்தின் போதனையும் ஆலோசனையுமே தேவைப்படுகிறது. பலம் தேவைப்படுகிறவர்களை கர்த்தர் இப்போது தேடவில்லை. கர்த்தருடைய ஸ்தானாதிபதிகளில் யாராவது செய்தியை மற்றவர்களிடம் திணிக்க முயற்சித்தால், அது பகையை உண்டாக்கி, நமது சக்தியையும் விரயம் பண்ணும். இப்படியாக நமது ராஜா நல்ல ஊழியத்தை பெறமாட்டார், ஆகையால் நல்ல சந்தோஷத்தை அடையமாட்டார்.

மற்ற கர்த்தருடைய பிள்ளைகள் மகா பாராட்டும் குணமடையவர்களாக இருக்கலாம். அவர்கள் பெருமை உடையவர்களாகவும், வசனத்தை கையாள்வதில் தங்கள் திறமையை அல்லது தங்களது ஆற்றலை காண்பிக்க விரும்புவார்கள். மற்றவர்களிடத்தில் ஒரு எழுச்சியை உணடு பண்ணும் எண்ணத்துடன் செய்தியை கொடுப்பார்கள். "எந்த அளவுக்கு அவன் அறிந்திருக்கிறான் பாருங்கள்! வேதத்தை கையாள்வதில் அவன் ஒரு வல்லவன்!" பாராட்டும் குணம் அநேகரிடம் நுட்பமான சலனத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது. இந்த மாம்சீக சுபாவம் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்பட்டு அடக்கப்படவேண்டும். இல்லையென்றால் கிறிஸ்தவனின் உபயோகத்தன்மையை அழிந்துவிடும். மேலும் அவனது சொந்த வளர்ச்சியை அதிகமாக தடைசெய்யும். சிலர் இயற்கையாகவே பெரும்புகழ் பெற விரும்புகிறார்கள். ஆனால் மற்றவர்கள் அதில் விருப்பமில்லாமல் இருப்பார்கள். ஒருவர் ஒரு ஸ்தானதிபதியைப் போல் சத்தியத்தை பொது ஜனங்களிடையே பேச உந்துதலைப் பெற்றிருப்பார். மற்றவர்கள் அதுபோலல்ல. பின்னானவர்கள செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவென்றால், தாழ்மையாகவும் அன்புடனும் சத்தியத்தை பேச கற்றுக்கொள்ள வேண்டும். சகோதரர் மேலுள்ள அன்பினாலும் தேவன் மேலுள்ள அன்பினாலும் இதைச் செய்ய வேண்டும். யுகங்களைப்பற்றிய திட்டம் தேவனுடைய திட்டம். இதனால் நாம் பெருமை கொள்ள ஒன்றுமில்லை. ஆகையால் நாம் அந்த திட்டத்தை சாந்தத்துடனும் சகோதர அன்பு மற்றும் தயையுடனும் தரவேண்டும்.

**--2456--**

# இஸ்ரயே□ன் ஏழுத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம்
## Israel's "Seven Times" of Chastisement A Blessing

**கேள்வி :** ஆபே-ன் காலத்தி-ருந்து நமது கர்த்தரின் காலம் வரை நீதியான இரத்தம் சிந்துதலுக்கான தண்டனை கி.பி.70ல் இஸ்ரலேயர்கள் மேல் வந்ததென்றால், சுவிசேஷ யுகத்தில் அவர்கள் கடந்து சென்ற தண்டனையை நாம் எப்படி விளக்குவது?

**பதில்:** நமது ஆண்டவரின் மரண நேரத்தில் யூதர்கள், "இவனது இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று சொன்னதை நிச்சயம் நாம் அறிவோம். இயேசுவின் மரணத்திற்கான பழியை தாங்கள் மாத்திரமல்ல, தங்களது பிள்ளைகளும் சுமக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இந்த ஜனங்கள் என்ன செய்வார்கள் என்பதையும் அவர்களது இருதய நிலையையும் முன்னறிந்த தேவன் ஆரம்பத்தி-ருந்தே அவர்களது "ஏழத்தனையான தண்டனையை" திட்டம் பண்ணியிருந்தார். இதுவே மோசே, லேவியராகமம் புத்தகத்தில் பதிவு செய்ய காரணமாயிருந்தது. (லேவியராகமம் 26:18-45) இஸ்ரயேலர்கள் தங்களது உடன்படிக்கையை மீறியதற்கு வருந்தாமலும் இப்படியாக தேவன் அவர்களைத் தண்டித்தும் அவர்கள் மனந்திருப்பவில்லையென்றால், அவர்கள் மேல் "ஏழுத்தனையான (ஏழுகாலங்கள்) தண்டனையை" கொண்டு வருவேன் என்று கர்த்தர் அறிவித்திருந்தார்.

வேதாகம காலக்கணக்கில் ஒரு "காலம்" என்பது ஒரு அடையாளமான வருடம். யூதர்களின் கணக்கின்படி ஒரு வருடம் என்பது 360 நாட்களைக் கொண்டதாகும். ஆகையால் ஒரு வருடம் என்பது 360 வருடங்களை குறிப்பதாக இருக்கும். ஆகையால் ஏழு காலம் (ஏழு வருடம்) என்பது 2520 உண்மையான வருடங்களாக இருக்கும். இந்த ஏழு காலங்கள் அல்லது ஏழு அடையாளமான வருடங்கள் கி.மு.606ல் எருசலேமின் அழிவில் ஆரம்பித்து, அது தொடர்ந்து முழு தேசத்தையும் பாபிலோனுக்கு கொண்டு சென்று முன்னுரைக்கப்பட்ட 70 வருட பாழாகுதல் ஆரம்பித்தது. (எரே.25:8-12; 2 நாளாகமம் 36:14-22) அது கடந்த 1914 செப்டம்பர் 21 வரை தொடர்ந்திருக்கிறது என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம்.

இஸ்ரயேல் மேலான இந்த நீண்ட பெருந்துன்ப காலத்தில் தேவன் புறஜாதிகளுக்கு அவர்களால் என்ன செய்யக்கூடும் என்பதை காண்பிக்க உலக அரசாங்கத்தை ஆள அவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தார். இந்த "காலங்களில்" தேவன் தம்முடைய உடன்படிக்கையின் மக்களோடு வேறு விதமாக தொடர்பு வைத்திருப்பார் என்பதை அறிவித்திருந்தார். அவர்களுக்கு எதிராக இவர் நடந்து, அவர்களை புறஜாதி தேசங்களெங்கும் சிதறப்பண்ணுவார். அவர்கள் சத்துருக்கள் முதலானவர்களின் கீழாக இருக்க வேண்டும். கர்த்தரால் முன்னுரைக்கப்பட்டதற்கு இசைவாக, "ஒரு ராஜா இல்லாமல்" யூதர்கள் மற்ற தேசங்களால் ஒடுக்கப்பட்டது ஒரு சரித்திரமாக இருக்கிறது. இந்த அனுபவம் இஸ்ரயேலருக்கு அனுகூலமற்று இருந்தது போல அனுகூலமாகவும் இருந்திருக்கிறது. அவர்களது நன்மைக்காக தேவன் அவர்களுக்கு கொடுத்த அனுபவமாக அது இருந்திருக்கிறது.

### "நான் உபத்திரவப்படுவதற்கு முன் நான் வழிதப்பி நடந்தேன்"

இந்த "ஏழத்தனையான காலத்தில்" மிகவும் துன்பத்தையும் பயிற்சியையும் பெற்றிருந்தார்கள். தேவனுடைய அனைத்து ஜனங்களும், ஒவ்வொரு யுகத்திலும் அவர்களது சீர்திருத்துதலுக்கும் அபிவிருத்திக்கும் தண்டனையானது கொஞ்சம் அதிகமாகவும் குறைவாகவும் தேவைப்படுகிறது. தேவன் ஆவிக்குரிய " இஸ்ரயேலருக்கு கூறுவதாவது; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கு கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே." (எபிரேயர் 12:8) இது வீட்டின் பணிவிடைக்காரர்களாகிய மாம்சீக இஸ்ரயேலுக்கும் பொருந்தும். அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாக இருந்தபடியால் அவர்களை கையாண்டு வந்தார். இந்த 2520 வருடங்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அனுகூலமாக இருக்கும்படியாகவும், நன்மையானதை செய்யும்படியான அனுபவங்களை உண்மையிலேயே கொடுத்தார். அந்த கசப்பான அனுபவங்கள் மிகவும் அனுகூலமாக இருந்தது. இயேசு வந்தபோது உலகிலேயே இவர்கள்தான் பரிசுத்தமுள்ள ஜனங்களாக இருந்தார்கள். அந்த சமயத்தில் அவர்கள் "ஏழத்தனையான காலத்தின்" குறைவான பகுதியையே அனுபவித்தார்கள்.

நமது கர்த்தரும் அப்போஸ்தலர்களும் போதித்த சுவிசேஷம் ஏறக்குறைய ஐந்நூறு யூதர்களை இயேசுவை மேசியா என்று நம்ப வைத்தது என்று நாம் காண்கிறோம். அதன் பிறகு, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஆயிரக்கணக்கானவர்கள் விசுவாசித்தார்கள். அவர்கள் உண்மையான இஸ்ரயேலர்களாக, வஞ்சனையற்றவர்களாக இருந்தார்கள் என்று நமக்கு சொல்லப்படுகிறது. மேசியாவை ஏற்றுக் கொள்ள இஸ்ரயே-ல் அதிக எண்ணிக்கையானவர்கள் தயாராகியிருந்தார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. நல்லொழுக்க சம்பந்தமான அனுபவங்களை அவர்கள் கடந்து வராதிருந்தால் நிலைமை இப்படி இருந்திருக்காது. இந்த அனுபவங்கள் அவர்களை புற ஜாதி ஜனங்களி-ருந்தும் பிரித்து, பூமியின் எந்த ஜனங்களுடனும் கலக்காமலும் இருக்கச் செய்தது.

பாபிலோன், மேதோ பெர்சியா, கிரேக்க மற்றும் ரோம அரசாங்கங்களின் கீழ் யூதர்கள் செழுமையாக இருந்திருந்தால் அவர்கள் மற்ற ஜனங்களுடன் கலந்து மொத்தத்தில் யூதர்கள் என்ற தனித்தன்மையை இழந்திருப்பார்கள். கி.பி. 70ல் தீத்து ராயனால் அவர்களது தேசம் கவிழ்க்கப்பட்ட பிறகி-ருந்துகூட இது அவர்களது சந்ததியினருக்கு உண்மையாயிருக்கிறது. சுவிசேஷ யுகம் முழுவதும் இப்படிப்பட்ட பெருந்துன்பத்தை தேவனால் தொடர்ந்து பெற்று வந்தார்கள். இதன்மூலம் அவர்கள் உலக ஜனங்களி-ருந்து பிரித்து வைக்கப்பட்டார்கள். இப்படியாக அவர்கள் மனம் பணிவான நிலைமையில் வைக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் கிருபையின் காலம் திரும்ப கிடைக்கும்போது கர்த்தரின் ஊழியத்திற்கு நன்கு தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பார்கள்.

தகுந்த காலம் வரும்போது இஸ்ரயேலர்கள் மற்ற ஜாதியாரைக் காட்டிலும் தேவனுடைய ராஜ்யத்திற்கு மிகவும் தயாராயிருப்பார்கள் என்பது எங்களது எண்ணமாக இருக்கிறது. அவர்கள் கடந்து வந்த பெருந்துன்பம், பிரமாணத்துக்கு கீழ்ப்படிதல் முதலானவை அவர்களை ராஜ்யத்துக்கு தயார்படுத்தும். ஆகையால் நாம் இந்த நீண்டகால துன்பத்தையும் கஷ்டத்தையும் வெறும் தண்டனையாக நினைக்கக்கூடாது. யூதர்களின் நன்மைக்காகவே அவர்கள் புறஜாதியார் காலம் முழுவதும் புறஜாதியாரால் மிதிக்கப்பட வேண்டும்.

### இஸ்ரயேலரின் திரும்ப கூட்டிச் சேர்க்கப்படுதல்

சுவிசேஷ சபை நிறைவடைந்தவுடனே தேவகிருபை திரும்ப கிடைக்கும் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார்.

“புறஜாதியாருடைய நிறைவு (புறஜாதியாரி-ருந்து சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் தொகை நிறைவு) உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேயரில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் (இயேசுவும் அவரது மணவாட்டியும், தலையும் சரீரமாகிய சபை) சீயோனி-ருந்து (மகிமையடைந்த சுவிசேஷயுக சபையாகிய ஆவிக்குரிய சீயோன்) வந்து அவபக்தியை யாக்கோபை (மாம்சீக இஸ்ரயேல்) விட்டு விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது.” (ரோமர் 11:1-33)

தேவன் எல்லாருடைய பாவங்களையும்-இஸ்ரயேலரின் பாவங்கள், சுவிஷே யுக சபையை அமைக்கிறவர்களின் பாவங்கள் மற்றும் முழு உலகத்தின் பாவங்கள்-நீக்கிப் போட தீர்மானம் பண்ணியிருந்தார். இதற்காகவே கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார், இதற்காகவே அவர் மரித்தார். இந்த நீக்குதல், அல்லது அகில உலகத்தின் பாவங்களை நீக்கிப் போடுதல், ஒவ்வொருவரும் பரலோக பரிசாகிய பாவ மன்னிப்பை உணர்ந்து அரசாங்கத்திற்கு கீழ்ப்படிவதால் முன்னேறும்.

தேவனிடம் நம்பிக்கை வைத்து, பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளை இன்னும் பற்றிக் கொண்டிருக்கிற புராதன யூதர்கள் புதிய யுகத்தின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதில் முதலாவதாக இருப்பார்கள். “சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் (சபை) நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளுதலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ” யூதர்களின் தேசம் கி.பி.70ல் கவிழ்க்கப்பட்டதோடுகூட சுவிசேஷ யுக முழுவதும் அவர்கள் இருந்த துன்ப நிலைமை உண்மையிலே தேவனிடமிருந்து வருகிற கிருபையாக இருக்கிறது. **“ஏழத்தனையான”** தண்டனையின் காலத்தில் அவர்கள் கடந்து வந்த துன்பங்கள் அனைத்தும் அவர்களது நன்மைக்காகவும் அவர்களை மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்கு தயார்படுத்துவதற்காகவும் இருக்கும். ராஜ்யத்தில் சபையானது முதலாவதாகவும் மாம்சீக இஸ்ரயேலர்கள் பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகளின் தலைமையில் இரண்டாவதாகவும் இருப்பார்கள். அதைத் தொடர்ந்து அனைத்து தேசங்களும், இஸ்ரயே-ன் அங்கங்களாகி தேவ கிருபைக்கும் ஆசீர்வாதங்களுக்கும் வருவார்கள். அனைவரும் நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்படுவார்கள்.

## “கதவானது” அநேகமாக இன்னும் மூடப்படவில்லை

**கேள்வி:** இந்த காலத்தில் அர்ப்பணம் செய்கிற ஒருவனுக்கு “மணவாட்டி” வகுப்பாராகிற வாய்ப்பு ஏதாவது உண்டா அல்லது இப்போது அழைப்பு முடிந்துவிட்டதா?

**பதில்:** நாம் பொதுவான அழைப்புக்கும் கதவு அடைப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தை காண்கிறோம். 1881-இல் போதுமான எண்ணிகையிலானவர்கள் அழைக்கப்பட்டு, அந்த அழைப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டபோது பொதுவான அழைப்பு முடிந்துவிட்டது என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். இப்படியாக அழைக்கப்பட்டு, அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இன்னும் பரீட்சை இருந்தது, கடைசிவரை உண்மையுடன் சகிப்பவர்கள் மட்டுமே கடைசியில் ஜெயங்கொண்டவர்களாக எண்ணப்படுவார்கள். தங்களது அனுதின வாழ்க்கையில் தங்களது உடன்படிக்கைக்கு விசுவாசத்தை நிரூபிக்கவில்லையென்றால் அவர்கள் பட்டிய--ருந்து நீக்கப்படுவார்கள். அதாவது விசுவாசத்துடன் ஓடவில்லை என்றாகிறது. இது தொடர்ந்து நிறைவு செய்யப்படவேண்டிய கா- இடத்தை உண்டாக்கும். இப்படி கா-இடத்தை நிரப்புவதற்கு புதிய அழைப்பு தேவைப்படாது. ஒருவர் வெளியேறும் போது இன்னொருவரை நுழைய அனுமதிப்பதாகும்.

1881-க்கு முன் அர்ப்பணம் செய்தவர்களில் அநேகர் “நன்மை செய்வதில்” தோற்றுவிட்டார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். பரலோக அனுக்கிரகங்களுக்காக பூமிக்குரிய ஆசைகளை ப-யிடுவதில் வைராக்கியமான விசுவாசத்தின் மூலம் உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும் நம்பிக்கையுடனும் நீங்கள் அர்ப்பணம் செய்யும் காலத்தில் நீங்கள் இன்னும் இருக்கிறீர்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். நமது அபூரணத்தையும் கர்த்தரின் நிறைவையும் உணர்ந்தவுடனேயே எந்த காரியத்திலும் நம்மை முற்றிலுமாக கர்த்தரிடம் ஒப்புக் கொடுப்பதே மிகவும் நியாயமான காரியமாக இருக்கும். அவர் நமக்கு என்ன பரிசு கொடுக்கப்போகிறார் என்பது பற்றி அக்கறையில்லாமல் நாம் அவரை பாதுகாவலராக பெற்றிருக்கிறோம் என்பதில் நாம் சந்தோஷம் அடைய வேண்டும். மிகவும் பெரியவராகவும் மிகவும் உதாரகுணமுடையவராகவும் தேவன் இருப்பதால், தம்முடையவர்களுக்கு நல்ல வெகுமானங்களை கொடுப்பார் என்று நாம் நிச்சயப்படுத்துகிறோம். வேறு வகையில் சொல்லுவோமேயானால், சிறுமந்தை முடிவடைந்த பிறகு, கீழ்ப்படிதலும் மற்றும் ப-யின் ஆவியை உடைய மற்றவர்களை வேறுவிதமாக ஆசீர்வதிப்பதில் கர்த்தர் சந்தோஷமடைவார்.

-------------------------

# சேபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள்
# Queen of Sheba Visits Solomon

*1 ராஜாக்கள் 10:1–10,13*

*சாலொமோன் ராஜாவின் கீர்த்தி – ஒரு கௌரவமான பார்வையாளர் – சாலொமோனின் இயந்திரக்கலைவன்மை மற்றும் கட்டிடக்கலையின் விந்தை–அவனது இலக்கிய திறமை – "இவைகளின் பாதியாகிலும் அறிவிக்கப்படவில்லை" - "சாலொமோனைக் காட்டிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" - தெய்வீக அனுகூலத்தின் செழிப்பு.*

*"முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே சிறந்தது." நீதிமொழிகள் 8:11*

ஞானத்திற்காக ஜெபித்த சாலொமோனுக்கு அவன் உலகப் புகழ் அடையும்படியான ஞானத்தையும் ஐசுவரியத்தையும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். சாலொமோன் ராஜா தனது ஆளுகை காலத்தின் மத்தியில் தனது நாட்டிற்கு ஆச்சரியமானவைகளை செய்து முடித்திருந்தான். ஒவ்வொரு தேசத்திற்கும் அவனது புகழ் பரவியது. அவன் ஞானமுள்ள ராஜாவாக, சமாதானமுள்ள ராஜாவாக, ஐசுவரியமுள்ள ராஜாவாக அறியப்பட்டான்.

சேபாவின் ராணி சாலொமோன் ராஜாவைப் பார்த்தது. அவனது ஆளுகை காலத்தின் மத்தியில் என்று நாம் கூறலாம். அவனது இருபது வருட கால ஆளுகைக்கு பிறகு அவள் பார்க்க வந்திருக்கலாம். அவள் 1500 மைல் பிரயாணம் செய்து, மிகுந்த பரிவாரங்களுடனும், கந்த வர்க்கங்களையும் மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களுடனும் எருசலேமுக்கு வந்தாள். சாலொமோனின் ஞானத்தைக் குறித்தும் அவனது ராஜ்யத்தின் செழுமை மற்றும் செல்வம் குறித்தும் சொல்லப்பட்ட காரியங்கள் மற்றும் அவள் எதிர்பார்த்தவைகளைக் காட்டிலும் உண்மையிலேயே அது இரண்டு பங்குக்கும் மேலாக இருப்பதை அவள் கண்டதைக் குறித்த அவளது அறிக்கையை நமது பாடம் கொடுக்கிறது.

### சாலொமோனின் அதிசயங்கள்

சாலொமோனின் தகப்பன் தாவீதினால் பல வருடங்களுக்கு முன்பாக சேகரிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு சாலொமோனால் கட்டப்பட்ட கர்த்தருடைய ஆலயம் அவனது ஆளுகையின் ஆச்சரியப்படத்தக்கவைகளில் முதலாவதாக இருந்தது. அதன் அழகும் அதற்கான செலவும் ஒரு மத கட்டடத்தில் ஒரு உலக அதிசயமாக இருந்தது. பிறகு அவனது அரண்மனையும் அவனது அரண்மனையி–ருந்து ஆலயத்துக்கு செல்லும் பாதையும் ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தது. கடந்த நூற்றாண்டின் (இது 1915ல் எழுதப்பட்டது) இயந்திரக்கலை மற்றும் கட்டடக்கலையின் அதிசயங்கள் வரும்வரை அது அதிசயத்தக்கதாக இருந்தது. கடந்த நூற்றாண்டு கட்டட அதிசயங்களெல்லாம் தேவனால் மேசியாவின் இராஜ்யத்திற்காக ஆயத்தம் பண்ணப்பட்டவைகள் என்று வேதாகமம் கூறுகிறது. (நாகூம் 2:3)

சாலொமோனின் இன்னொரு இயந்திரகலைவண்ண அதிசயம் சாலொமோனின் குளங்கள்–அதாவது அவனது தலைநகரமான எருசலேமுக்கு தண்ணீர் வழங்கும் முறைமை. குளத்தி–ருந்து தண்ணீர் இணைப்பு குழாய்கள் மூடப்பட்டிருந்தன. இது சரித்திரத்திலேயே முதலாவதாக அறியப்பட்டது. அதோடுகூட தங்கள் ராஜ்யத்தின் மீது படையெடுப்பவர்களிடமிருந்து பாதுகாக்க கோட்டையைக் கட்டினான். மேலும் அவனது ராஜ்யபாரத்தின் எல்லைகளை தேவன் நீண்ட காலத்திற்கு முன்பு தீர்க்கதரிசனமாக சொல்–யிருந்தபடி விரிவுபடுத்தினான். (ஆதியாகமம் 15:18) இது அவனது ராஜ்ய எல்லையை கடற்கரை வரை கொண்டு வந்தது. யோப்பாவுக்கு அருகிலே கப்பல்களுக்காக ஒரு துறைமுகத்தை வைத்திருந்தான். அது தற்போது கட––ருந்து பிரிந்து மண்ணால் நிரப்பப்பட்டு ஒரு அழகான ஆரஞ்சு தோப்பாக இருக்கிறது.

அவனது பெரிய துறைமுகமாக தீரு பட்டணம் இருந்தது. அது அவனது எல்லைக்குட்பட்டது அல்ல. தீரு ராஜாவின் மூலமாக அவன் தனது வியாபாரத்தைக் செய்தான். கூட்டாக அவர்களது கப்பல்கள் சிவந்த சமுத்திரம், மத்திய தரைக்கடல் முதலானவைகளை கடந்து உலகின் அனைத்து பகுதிகளிலும் வணிகம் செய்து பாலஸ்தீனாவில் கிடைக்காத பொருட்களை இறக்குமதி செய்தார்கள். இந்த உபாயங்கள் மூலமாக சாலொமோன் பெரிய செல்வந்தனானான். விலையுயர்ந்த உலோகங்கள் எல்லாம் எருசலேமில் சாதாரண கற்களை போல ஆனது.

### ஒரு இராஜரீக பார்வையாளர்

அந்த வியாபாரங்களில், சுறுசுறுப்பாக இருந்து, இருதயத்தில் தேவனுக்கு மிகவும் உண்மையானவனாக இருந்து சாலொமோனின் ராஜ்யபாரம் சேபா ராணியின் வருகை சமயத்தில் மிகவும் ஆச்சரியப்படத்தக்க ஒன்றாக இருந்தது. பிற்பாடு தற்கால வாழ்க்கையின் ஆசீர்வாதத்தினால் திருப்தியடைந்து ஞானத்தில் குறைவுள்ளவனாகவும், தேவனுடைய இருதயத்திற்கு குறைவுள்ள மனிதனாகவும், தனது ஜனங்களைப்பற்றிய சிந்தனையில் குறைவுள்ளவனாகவும் காணப்பட்டான். ஐசுவரியவானின் சபலம் எவ்வளவு பெரியது என்பதையும் ஞானிக்கு தனது மன ஆசையின் திருப்தியினால் எப்படி முட்டாளாகக் கூடிய ஆபத்து இருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்ள, விசேஷமாக ஏழைகளுக்கு கடினமாக இருக்கிறது. அதே சமயத்தில் நாம் சாலொமோனின் இலக்கிய சாதனையை மறந்துவிடக் கூடாது. அவன் மூவாயிரம் நீதிமொழிகளையும் ஆயிரம் சங்கீதங்களையும் எழுதினான். தேவன் வாக்குத்தத்தம் பண்ணின அனைத்தையும் அவர் அவனிடத்தில் செய்தார்.

பொன் மற்றும் வாசனை திரவியங்கள் போன்ற பரிசு பொருட்களுடன், அவனது ஆச்சரியத்தக்க ஞானத்தையும் திறமையையும் அறிந்து உறுதிப்படுத்தும்படி இந்த மகாராஜா சாலொமோனைத்தான் பார்க்கும்படி சேபாவின் ராணி வந்தாள். அவனது உண்மையான வர்த்தமானங்கள் மற்றும் ஞானத்தை பற்றி அவள் கேள்விப்பட்டது பாதி கூட இல்லை என்று அவள் அறிக்கையிட்டாள். தேவனைப்பற்றியும் எதிர்கால வாழ்வைப்பற்றியும் கேள்விகள் அவளிடமிருந்தன. அவனிடம் மனித ஞானத்திற்கு மேலான ஞானம் இருந்ததையும் அது பரத்தி–ருந்து வந்தது என்பதையும் உணர்ந்து கொண்டாள். அவள் ஆச்சரியத்துடன் கூறியதாவது: "உம்மை இஸ்ரயே–ன் சிங்காசனத்தின்மேல் வைக்க, உம் மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய யேகோவா ஸ்தோத்திரிக்கப்படுவாராக!

யேகோவா இஸ்ரயேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார்." "ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததுமல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டுக் கொண்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுத்தான்." பின்பு அவள் பரிவாரத்துடன் தன் தேசத்திற்கு திரும்பிப் போனாள்.

### "சாலொமோனிலும் பெரியவர்"

நமது பாடத்தில் இயேசு குறிப்பிடுகிறார். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவரது பாடங்களையும் அவரையும் புகழுவதற்கு அங்கே யாருமில்லை என்று ஆச்சரியப்பட்டார். (மத்தேயு 12:42) ஏனெனில் சாலொமோன் போன்றோர் பெற்றிருந்த தேவனுடைய ஞானத்தை அறிய ஜனங்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்தனர். அவனைக் காட்டிலும் அதிக ஞானமுள்ளவரோடு நாம் விவாதிக்க முடியும் என்பதை அறிந்திருந்தால் அவர் தேடப்பட்டிருப்பார். மேலும் இந்த ஞானமுள்ளவர் உலகின் உரிமைக்காரர் என்பதையும் அவர் தம்முடன் உடன் சுதந்திரராகும்படி ஒரு மணவாட்டியை தேடிக் கொண்டிருந்தார் என்பதையும் அறிந்திருந்தால் எவ்வளவு பேர் மேலான விவாகத்தை ஏற்றுக் கொள்ள விரைந்திருப்பார்கள்!

இதுதான் இந்த காரியங்களின் உண்மையான நிலை. தேவனுடைய குமாரன் தெய்வீக திட்டத்தின்படி ஒரு மணவாட்டி வகுப்பாரை தேடிக்கொண்டிருக்கிறார். இந்த வகுப்பில் ஒரு அங்கமாவதற்கு, தேவனுடைய ஞானம் இயேசுவில் எப்படி மையப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், அவர் எப்படி தேவனுடைய பிரதிநிதியாக அவரது அனைத்து கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால சிருஷ்டிப்பின் வேலையிலும் இருப்பார் என்பதையும் நாம் அறிய வேண்டும். அதோடுகூட நாம் இதை நிரூபிப்பதற்கும் அவரிடம் செல்வதற்கும் நாம் எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டும் என்கிற இந்த காரியத்தினால் நாம் ஈர்க்கப்படவேண்டும். சாலொமோனிடம் ராணி சில காரியங்களை கேட்டது போல, சில ஆசீர்வாதங்களுக்காக நாம் கேட்க வேண்டியது இல்லை. இப்படியாக நாம் இயேசுவிடம் வரும்போது நாம் ஏற்றுக் கொள்ளப்படுவோம் என்று நிச்சயப்படுத்துகிறோம். ராஜா திருமண உடன்படிக்கைக்குள் நுழைவார்.

அனைவரும் கர்த்தரிடம் இழுக்கப்படவில்லை என்பதே நமது சந்தர்ப்பத்திற்கு அடிப்படையாக இருக்கிறது. ஏனெனில் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி தேவனால் முன் குறிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வேதவாக்கியம் அறிவிக்கிறது. இந்த தெரிந்துகொள்ளப்படும் வகுப்பாருக்கு முதல் சந்தர்ப்பம் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினருக்குக் கொடுக்கப்பட்டது. அந்த சலுகையை அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால், இயேசுவின் காலத்திலேயே சபையானது நிறைவடைந்திருக்கும். அவர்களது சந்திக்கும் காலத்தை யூதர்கள் அறியவில்லை என்றும் அவர்களுடன் இருந்தவர் சாலொமோனிலும் பெரியவர் என்பதை அறியவில்லை என்றும் வேதாகமம் கூறுகிறது. (லூக்கா 19:44) அவர்கள் ராஜ்யத்தைக் குறித்தும், அதில் அங்கமாவதற்கான நிபந்தனைக்களைக் குறித்தும் விசாரிக்கவில்லை. அவர்கள் ஜீவாதிபதியை அறியாமல் சிலுவையில் அறைந்தார்கள்.

எனினும் அந்த சிறிய நாட்டில் " உ ண் மை ய ா ன இஸ்ரயேலர்" இயேசுவை ஏற்றுக் கொண்டு தங்களையும் தங்கள் சித்தத்தையும் முற்றிலுமாக அர்ப்பணித்தார்கள். பிறகு கிறிஸ்துவுடன் அங்கமாகிறதற்கான இந்த பரம அழைப்பிற்கான கதவு புறஜாதிகளுக்கு திறந்துவிடப்பட்டது. தேவனுடைய இந்த செய்தியை பெற்றுக் கொள்ள புறஜாதியினர் தயாராக இல்லை என்பது, தெரிந்து கொள்ளப்பட்ட இந்த வகுப்பார் நிறைவடைய பதினெட்டு நூற்றாண்டு காலம் பிடித்ததி–ருந்து தெரிகிறது. இப்படி "சகல ஜாதிகளிலும், தோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிடமிருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,44,000 பேர் ஆகும்.

--------------------------------------------

--2460--

# ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான்
# The Wisest King Misled

*1 ராஜாக்கள் 12:1–24*

*இஸ்ரயே–லேயே ஞானமுள்ள ராஜா மிகுந்த புத்தியற்றவனானான் – ஜனங்களுக்கிடையயேயான அதிருப்தி–நாட்டை இழந்து எருசலேம் அனுகூலமடைந்தது – சாலொமோன் ராஜாவின் மகனும் வாரிசும் – பத்து கோத்திரத்தாரின் கலகம் – பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பிறகு ராஜ்யங்கள் இணைக்கப்பட்டன.*

*"அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை." நீதிமொழிகள் 16:18*

மகாராஜாவாகிய சாலொமோனின் ராஜ்யபாரத்தின் பிற்பகுதி மதிப்பு குன்றியதாக இருந்தது. அவனது காலப்பகுதியில் கலகம் ஏற்படாவிட்டாலும், அதிருப்தி உணரப்பட்டது. ராஜா தனது ராஜ்ய பாரத்தின் முற்பகுதியின் மகிமையில் அமர்ந்திருந்து, வெளிநாட்டு காரியங்களில் விருப்பங்கொண்டு மனைவிகளின் எண்ணிக்கையையும் அவனது கஷ்டங்களையும் பெருக்கினான். நாட்டின் ஐசுவரியம் பொது முன்னேற்றத்தில் குறிப்பிடப்பட்டது. இது பொது சொத்தாக இருந்து, ஜனங்கள் அனைவரும் அதில் விருப்பங் கொண்டிருந்தனர். தொடர்ந்து சுயநல பெருக்கத்தில் நாட்டம் அதிகமாக இருந்து, நீதி குறித்த விஷயங்களில் பொது ஜனங்களுக்கு அக்கறை காட்டாமல், ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு அனுகூலம் செய்யப்பட்டது.

வேதாகம பதிவின்படி சாலொமோன ராஜாவுக்கு எதிராக கலகம் மற்றும் எதிர்ப்பு ஏற்படுத்தப்படாமல் இருந்தால் கூட, சாலொமோனுக்குப்பிறகு ராஜாவான அவனது மகன் ரெகொபெயாம் காலத்தில் ஒரு மாற்றம் ஏற்படும் என்று ஜனங்கள் முடிவு செய்தார்கள்.அதிருப்தி பத்து தோத்திரங்களில் இருந்தது. தலைநகரத்தை தங்கள் வசம் பெற்றிருந்த இரண்டு கோத்திரத்தார் தங்களுக்கு கிடைத்த முன்னேற்றங்களில் திருப்தியடைந்திருந்தனர். சாலொமோனுடைய தலைநகரம் தேசத்தின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் பொதுவான முன்னேற்றங்களில் அனுகூலத்தை பெற்றிருந்தது. மற்ற கோத்திரத்தார் அனைவரும் பொதுவான கட்டாய இராணுவசேவையில் தகுந்த ஊதியம் கிடைக்கவில்லை என்றும் தங்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் உணர்ந்தனர்.

### இராஜ்யம் பிரிக்கப்பட்டது

இந்த காரணங்களால் ரெகொபெயாம் அரியணைக்கு வருவதற்கு எதிர்ப்பும், ஜனங்களுக்கு எதிரான ஒடுக்குதலுக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்பதும் இருந்தது. இது பிரிட்டிஷ் பொதுமக்களுடன் தொடர்புடைய மேகன சார்டா (Magna Charta) என்கிற உரிமை சாசனத்திற்கு ஒத்து இருந்தது. எல்லா கோத்திரத்தாரும் ராஜாவுக்கு தங்களது விசுவாசத்தை காண்பிக்கும்படி கூடுகிற நேரமாகிய ராஜாவின் பட்டாபிஷேக நேரத்தில் இந்த கோரிக்கை இஸ்ரயேலர்களால் வைக்கப்பட்டது. பிறகு பத்து தோத்திரத்தாரின் பிரதிநிதியாக யெரொபெயாம் வந்து, அவன் கூறியதாவது: "உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்பொழுதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள் மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம்."

அதற்கு வா–பனான ராஜா, அவர்களைப் போகச் சொல்–மூன்று நாட்கள் கழித்து வரும்படி கூறினான். அப்பொழுது ராஜாவாகிய, ரெகொபெயாம் தன் சமூகத்தில் இருந்த முதியோரோடே ஆலோசனை பண்ணினான். அப்பொழுது அவர்கள் கூறியாதாவது: "நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாக, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால் எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள்." இந்த ஆலோசனை ராஜாவுக்கு திருப்திகரமாக இல்லாததினால், தன்னோடே வளர்ந்து தமது சமூகத்தில் நிற்கிற வா–பரோடே ஆலோசனை பண்ணினான். அவர்கள் எதிரான ஆலோசனையைக் கூறினார்கள். அவர்கள் கூறினதாவது: "இந்த ஜனத்திற்கு நீர் சொல்ல வேண்டியது என்னவென்றால்; என் சுண்டு விரல் என் தகப்பனாருடைய இடுப்பைக் பார்க்கிலும் பருமனாயிருக்கும். இப்பொழுதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள் மேல் வைத்தார். நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களை சவுக்குகளினாலே தண்டித்தார். நான் உங்களை தேள்களினால் தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்லவேண்டும் என்றார்கள்." தேள்கள் என்பது சவுக்குகளின் நுனியிலுள்ள உலோக துண்டுகளாகும்.

ரெகொபெயாம் ராஜா மற்றும் அவனது வா–பர்களின் எண்ணம் என்னவென்றால் ஜனங்களுக்கு வளைந்து கொடுத்தால் இது அவர்களது கலகத்திற்கான கோரிக்கைகளின் ஆரம்பமாக இருந்து எதிர்காலத்தில் தாங்க முடியாததாக இருக்கும் என்பதாகும். ஜனங்களை பயமுறுத்தி, கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைக்க வேண்டும் என்பதே அவர்களது எண்ணம். ஆனால் யெரொபெயாம் தலைமையில் வந்த பத்து கோத்திரத்தாரை பணிய வைக்க முடியவில்லை. ரெகொபெயாம் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுகிற விழாவில் அவர்கள் பங்கு பெறாமல் திரும்பிப் போனார்கள். யூதா மற்றும் பென்யமீன் கோத்திரத்தின் பிரதிநிதிகள் மட்டும் இராஜாவுக்கு விசுவாசமுள்ளவர்களாக மீந்திருந்தார்கள்.

இப்படியாக இஸ்ரயேல் ராஜ்யம் பிரிந்தது, அதன் பிறகு பத்து கோத்திரத்தார் இஸ்ரயேல் ராஜ்யம் என்றும், இரண்டு கோத்திரத்தார் யூதா ராஜ்யம் என்றும் ஐந்நூறு வருடங்களுக்கு மேலாக அழைக்கப்பட்டனர். தெய்வீக வாக்குத்தத்தத்தை மதித்து அனைத்து இஸ்ரயேலர்களும் பாபிலோனின் சிறையிருப்பி–ருந்து திரும்பிய காலம் வரை இப்படியாக இருந்தது.

சிறையிருப்பின் காலத்திருந்து பன்னிரண்டு தோத்திரத்தாருக்கும் இஸ்ரயேல் என்றே பெயர் இருந்தது. இயேசுவும் அப்போஸ்தலரும் கூட இப்படியாக பயன்படுத்தினர். அதேபோல் யூதா என்ற பெயர் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்த அனைவருக்கும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் பெரும்பாலானவர்கள் பாபிலோனின் சிறையிருப்பி–ருந்து வராமல் உலகெங்கிலுமுள்ள பாபிலோனின் பல்வேறு மாகாணங்களில் வாழும்படி தொடர்ந்தனர். அவர்களில் சிலர் தேவன் பேரிலுள்ள நம்பிக்கையை விட்டு, விருத்தசேதனத்தை மறுத்து, தேவனை கைவிட்டு உலகின் மற்ற புறஜாதியாரைப்போல ஆனார்கள். ஆனால் அவர்களில் மற்றவர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருந்து தேவனால் கட்டளையிட்டப்படி வருடங்தோறும் எருசலேமுக்குச் சென்று பண்டிகையை

ஆசரித்தார்கள். இவர்கள் "சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரத்தார்" என்று தொடர்ந்து அறியப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் அப்போஸ்தலர் காலத்தில் சத்தியத்துடன் தொடர்புக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர்.

### "அழிவுக்கு முன்னானது அகந்தை"

கடந்த கால பாடங்கள் தற்காலத்தில் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. முடிவில் தீங்கு விளைவிக்கிற பெருமையே உலகிற்கு பொதுவான ஒரு உபாத்தியாய் இருக்கிறது. ஐசுவரியவான்களும் அதிகாரத்தில் இருப்பவர்களும் ஏழைகளை எப்பொழுதும் பயமுறுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். ஏழைகள் பெற்றுக் கொண்ட பெரும்பாலான ஆசீர்வாதங்கள் எல்லாம் கடுமையான கோரிக்கைகளாலும் பயமுறுத்துத-னாலும் ஆகும். கொஞ்சம் மட்டுமே தானாக வருகிறது. இந்த விஷயத்தில் உலக ஞானம் எப்பொழுதுமே தவறு செய்கிறது என்று சொல்வதற்கு நாம் ஞானமுள்ளவர்கள் அல்ல. ஏழைகளும் குறைந்த அனுகூலம் பெறுகிறவர்களும் நியாயமில்லாத கோரிக்கைகளை வைக்கிறவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மையாயிருக்கிறது. பணக்காரர்களில் உள்ள மிகுந்த நம்பிக்கை அவர்களால் பொதுவான அனுகூலத்திற்கு வேலை செய்திருக்கமுடியாது என்று யார் சொல்லக்கூடும்? உலகமானது மேலும் முன்னேறி இருக்காது என்றும் ஜனங்கள்மேல் நம்பிக்கையை வெளிப்படுத்தாது என்றும் ஒரே மாதிரியான நீதியையும் வாழ்க்கையின் கனிகளில் அதிக பங்கை கொடுக்காது என்றும் யார் சொல்லக்கூடும்?

தற்காலத்தில் படித்த மற்றும் ஐசுவரியம் உள்ளவர்களில் பெரும்பாலோர் பொது ஜனங்களிடம் காண்பிக்கும் மனோபாவத்தைத்தான் ரெகொபெயாம் ராஜா பத்து தோத்திரத்தாருக்கு கூறிய பதில் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. தங்களால் மற்றவர்கள் நன்மையடைவார்கள் என்று நினைப்பதாக அவர்கள் காணப்படுகிறார்கள். பொன்னான கற்பனையின்படி ஜனங்களின் உரிமைகளை அங்கீகரிப்பது, வெள்ளைக்கொடி காண்பிப்பதாகவும், முற்றிலும் தாங்க முடியாத விபரீதமான கோரிக்கைகளுக்கு வழிநடத்தும் என்றும் நினைக்கிறார்கள்.

### நீதி பொன்னான கட்டளை

ஆட்சியாளர் ஜனங்களின் ஊழியனாக இருக்க வேண்டும் என்கிற ஒரு கொள்கையில்தான் ஞானிகள் ரெகொபெயாம் ராஜாவுக்கு ஆலோசனை கூறினார்கள் என்று எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். இதை உண்மையுடன் அவன் செய்திருந்தால். அவனது ராஜ்யம் நிலைத்திருந்திருக்கும் மற்றும் அவனது ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அவர்களது ஆலோசனை ராஜா பொன்னான கற்பனையை கடைபிடிக்கவேண்டும் என்பதாக இருந்தது. அதாவது ராஜா ஜனங்களிடம் இதை கடைபிடிக்க வேண்டும் என்றும், அவர்களும் ராஜாவிடம் இதை கடைபிடிக்க வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது. ஆனால் அதெல்லாம் மாறிவிட்டது. கிறிஸ்தவத்தின் மகா தலைவரால் கொடுக்கப்பட்ட பொன்னான கற்பனை சாத்தியப்படாது என்று வெறுத்து ஒதுக்கப்பட்டது. ஆனால் அது சோதனையாக கொடுக்கப்படவில்லை என நாம் கருதுகிறோம். அதிகாரத்தைப் பெற்றிருந்தவர்கள் ஜனங்களுடனான விவகாரங்களில் பொன்னான கற்பனையை நம்புவதற்கு எப்பொழுதும் பயப்பட்டார்கள். அரசியல் கட்சிகள் பொன்னான கற்பனை போன்ற சிலவற்றை உயர்த்திக் கத்தி, நேரத்தை பெற்று மறுபடியும் அதிகாரத்தில் ஏறி. சந்தர்ப்பத்தை பெற்று அந்த கற்பனையை பயன்படுத்த மறுக்கவே செய்கிறார்கள். நிலைமை அதை முடியாதபடி செய்துவிட்டது என்று வாதிடுகிறார்கள்.

எனினும் சீக்கிரத்தில் பொன்னான கற்பனை உலகளாவிய சோதனையாக இருக்கும். இந்த கட்டளையினால் மட்டுமே மானிட சந்தோஷம் நிரந்தரமாக உறுதி செய்யப்படும் என்று மெய்ப்பிக்கும். மேசியாவின் ராஜ்யம் ஆயிர வருட காலமாக, இந்த பொன்னான கற்பனையின் நோக்கில் கட்டாய கல்வியை கொடுக்கும் என்பதே வேதாகமத்தின் வாக்குத்தத்தமாக இருக்கிறது. கர்த்தர் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் இயேசு மூலமாகவும், இந்த பொன்னான கற்பனையை வெற்றி என்று நிரூபித்திருக்கிறார். மேலும் அது நித்திய நீதியையும், சமாதானம், சந்தோஷம் மற்றும் ஆசீர்வாதங்களையும் கொண்டு வரும் என்றும் நிரூபித்திருக்கிறார். தேவனுடைய கட்டளைக்கு சம்மதம் தெரிவிப்பவர்கள் மேல் அவரது கிருபை இருந்து, பாவம், வியாதி, வேதனை மற்றும் மரணத்தி-ருந்து அவர்களை மகிமைக்கு கொண்டு வந்து, பொன்னான கற்பனைக்கு கீழ்ப்படிய மறுக்கிறவர்களை முற்றிலுமாக அழித்துவிடும்.

முடிவானது தகப்பனாகிய ஆதாமுக்கு தேவன் கொடுத்திருந்த மகிமையான நிலைமையாக இருக்கும். இதைத்தான் ஆதாம் அசட்டை பண்ணி கீழ்ப்படியாமையினால் இழந்தான். ஆதாம் மற்றும் அவனது சந்ததியினர் மேல் இந்த மரண தண்டனை நமது அனைத்து வியாதிகள், வேதனைகள் மற்றும் மரணத்தை கொண்டு வந்தது. இந்த தண்டனை இரட்சகரின் அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராக பட்டபாடுகளால் ஈடு செய்யப்பட்டிருக்கிறது. முன்னரே சொல்லப்பட்ட பிரகாரம் மகிமையின் ராஜ்ய ஏற்பாடுகளே முடிவானதாக இருக்கும்.

---------------------------

# பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம்

*(சகோதரர் ரசல் அவர்கள் சமீபத்தில் ஒக்லேண்டு மாநாட்டில் கொடுத்த பிரசங்கம்)*

# Love of the Father and the Son our Pattern

***(Discourse deliverd by Brother Russell at the recent convention at Oakland, Cal.)***

நமது ஆண்டவர் தமது பூமிக்குரிய ஊழியத்தின் முடிவில் கூட இன்னும் தமது சீஷர்களை நேசித்தார் என்று நாம் உறுதிபண்ணப்படுகிறோம். நாம் வாசிக்கிறதாவது; "இயேசு..... தம்முடையவர்களிடத்தில் அன்பு கூர்ந்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." (யோவா 13:1) வேதாகமம் குறிப்பிடுகிற அனைத்து மனுக்குலத்தின் மேலும் தேவன் வைத்த அன்பிற்கும், தேவன் சபையின்மேல் வைத்த அன்பிற்கும் உள்ள எல்லைக்கோட்டை நாம் வரைய வேண்டும். வசனத்தின் பரந்த அர்த்தத்தில் வேதாகமம் நமக்கு உறுதி கூறுகிறதாவது: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோவா 3:16) விழுந்துபோன மனிதனிடத்தில் அன்பு வைக்க, அதாவது அவனிடம் ஐக்கியம் கொள்ள அவனிடத்தில் ஒன்றுமில்லை. உண்மையிலேயே தேவனுடைய அன்பை தன்னிடம் இழுப்பதற்கு அவனிடம் ஒன்றுமேயில்லை – எல்லாம் எதிரிடையாக இருந்தது. ஆதாம் விழுந்துபோனவுடனேயே, அவன் தேவனுடைய அன்பையும் தயவையும் தொடர்ந்து பெற தகுதியற்றவன் என்று கூறி அவனுக்கு மரண தண்டனை அளித்தார். ஆதியாகமம் 3:17-19

தேவன் இடையில் தமது மனதை மாற்றிக் கொண்டு ஆதாமை அவர் நேசித்ததால் மரண தண்டனை கொடுக்க விரும்பவில்லை என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு எளிமையான நாயின்மேல் காண்பிக்கும் அனுதாப அன்பைத்தான் தேவன் உலகத்தின்மேல் காண்பித்தார் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாயின் பாதம் காயமடைந்தால், அதன் பாதத்தில் கட்டு போடுகிறோம். நாம் அனுதாப அன்பைப் பெற்றிருப்போம். உண்மையிலேயே நாம் நாயிடம் அன்பு செலுத்தி அதற்காக நாம் இரக்கம் காண்பித்தோம் என்பதல்ல. ஆகவே தேவன் உலகத்திடம் காண்பித்தது இரக்கமான மனோபாவத்தைத்தான். தயவையும் பெருந்தன்மையையும் எல்லா மனிதர்களிடமும் மிருக ஜீவராசிகளிடம் கூட காண்பிக்கக்கூடிய ஜனங்களை அவர் பெற்றிருப்பார். இதற்கிசைவாக அப்போஸ்தலர், நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்தாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யக்கூடவோம் என்று கூறுகிறார். (கலாத்தியா 6:10)

கர்த்தர் ஒரு திட்டமான கட்டளையை கொடுக்கிறார். நாம் விசுவாச வீட்டாரை உலத்தாரோடு சேர்க்கக்கூடாது. விசுவாச வீட்டாருக்கு நாம் காண்பிக்கும் அன்பையோ, பிரியத்தையோ, அக்கறையையோ உலகத்தாருககு நாம் காண்பிக்க நினைக்கக் கூடாது. தேவனும் இப்படி செய்வதில்லை.

"பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்" (யோவா 16:27) என்று இரட்சகர் குறிப்பிடுகிறது போல இந்த அன்பு தேவன் உலகத்தை சிநேகிக்கிறதைக் காட்டிலும் வித்தியாசமானது. மகாதேவன் நம்மை சிநேகிக்கிறார் என்கிற இது வேதாகமத்தின் வாக்கியங்களில் மிகவும் ஆச்சரியப்படத்தக்க ஒன்றாக எனக்கு காணப்படுகிறது. நாம் அவரது அன்பிற்கும் கவனிப்பிற்கும் மிகவும் தகுதியற்றவர்கள், அற்பமானவர்கள்! பரம பிதாவின் இதே மனோபாவம் தான் நமது தலைப்பு வசனமாகிய, "இயேசு தம்முடையவர்களிடத்தில் அன்புகூர்ந்தபடியே முடிவு பரியந்தமும், அவர்களிடத்தில் அன்பு கூர்ந்தார்" என்பதிலும் பிரதிப-த்துக் காட்டுகிறது. அதில் எந்த சந்தேகமும் இல்லை, விசேஷமாக அவருடையவர்களாக இருந்தவர்கள், அவரிடம் வந்த அவருடைய சீஷர்களாவனர்கள், யூதர்களில் மிகவும் திறமைசா-களாகவும், இப்போது அவரது சீஷர்களாக இருக்கிறவர்களைக் காட்டிலும் திறமைசா-களாகவும் இருந்தார்கள் என்று நாம் நினைக்க இயலாது. அவர்கள் மிகவும் படிப்பாளிகளாக இருந்ததால் அவருடையவர்களாயிருந்தார்களா? அவர்கள் பண்பட்டவர்களாயிருந்ததாலா? இல்லை. உலகம் அவர்களை பாராட்டி, தங்களுக்கு பொறுப்பானவர்களாக்கினதாலா அல்லது உலகத்தாரின் கண்களில் அவர்கள் பொறுப்பான நிலைமைக்கு உயர்த்தப்படகூடியவர்களாக இருந்ததாலா? இல்லை.

### தன்னுடையவர்களை ஏன் இயேசு நேசிக்கிறார்

"இயேசு தம்முடையவர்களிடத்தில் அன்பு கூர்ந்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." இயேசு ஏன் இந்த விசேஷித்த அன்பை அவர்கள் மேல் வைத்தார். அதில் ஏதோ முக்கியத்துவம் இருக்கிறது. நீங்களும் நானும் கூட இரட்சகர் நம்மை நேசிக்கிறாரா என்று அறிய விரும்புகிறோம். அவருடையது தற்செயலான ஒரு அன்பு அல்ல. அதில் ஒரு கொள்கை அடங்கியிருக்கிறது. அவர்கள் அவருடையவர்களாயிருந்தபடியால் அவர் அவர்களை நேசித்தார். ஒரு மனிதன் தனது வீட்டை, தனது நாயை மற்றும் தனது பூனையை நேசிப்பது போன்ற சுயநல எண்ணத்தோடு அல்ல, ஏனெனில் அவர் அவர்களைப் பெற்றிருந்தார், அவர்களை சொந்தமாக்கிக் கொண்டிருந்தார். இயேசு அவர்களை தமக்காக அழைத்தார் என்ற அர்த்தத்திலல்ல. அவர் அவர்களுக்கு ஏதேனும் ஒன்றை செய்ய தீர்மானித்தார்.

இயேசு அவரது சீஷர்களை நேசித்து, அழைத்து அவர்களை தம்முடையவர்களாக்கிக கொள்ள காரணமென்ன? காரணத்தை நீங்கள் என்னுடன் சேர்ந்து ஒத்துக்கொள்வீர்கள் என்று நான் நினைக்கிறேன். அவரது கருத்துக் கோணத்தி-ருந்து பார்க்கும்போது நேசிக்கக்கூடிய குணங்களை அவர்கள் பெற்றிருந்ததனாலேயே அவர் அவர்களை நேசித்தார். அந்த குணங்களைத்தான் நீங்களும் நானும் பெற்றிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். இந்த கோணத்தில் நீங்களும் நானும் சிந்தித்து பார்த்து அறிகிறோம். இயேசு தம்முடையவர்களை நேசித்தார் என்று வேதாகமம் சொல்வதால் நான் சந்தோஷப்படுகிறேன். நான் அவருடையவர்களில் ஒருவனாயிருப்பதினால் நான் சந்தோஷப்படுகிறேன். ஆகையால் அவர் என்னை நேசிக்கிறார் என்று நம்புகிறேன். அவர் உலகத்தை நேசிக்கிற பரிதாபப்படுகிற எண்ணத்தில் அல்ல. ஆனால் தலைப்பு வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்தில் அவர் என்னை நேசிப்பதால் நான் சந்தோஷப்படுகிறேன்.

அவர்களது நேர்மையே இயேசு அவர்களை முதலாவது நேசிக்க வைத்தது என்று நான் நம்புகிறேன். நேர்மையைத் தவிர வேறு எந்த குணமும் தேவனுடைய பார்வையில் மதிப்புள்ளதாக

இல்லை என்று நான் கருதுகிறேன். ஒவ்வொருவரும் நேர்மையாக இருக்க முடியாதா? முடியும் என்று நான் பதிலளிக்கிறேன். ஒவ்வொருவரும் நேர்மையாக இருக்கிறார்களா? நிச்சியமாக இல்லை. தங்களிடம் எதுவுமில்லை என்று இந்த சீஷர்கள் அறிக்கையிட தயாராயிருந்ததே அவர்களது நேர்மையை வெளிப்படுத்தியது. தேவனுடைய கட்டளையை அவர்களால் கடைப்பிடிக்க முடியவில்லை. யாரேனும் ஒருவரைப்போல அவர்களால் சிந்திக்க முடியவில்லை. தேவன் அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தை கட்டளையாக கொடுத்திருந்தார் எனபதை எல்லாரும் அறிந்திருக்க வேண்டியதுபோல, யூதர்கள் எல்லாரும் அறிந்திருந்ததைப்போல இவர்களும் அறிந்திருந்தார்கள். அவர்களால் அந்த கட்டளையைக் கைக்கொள்ள முடியவில்லை. அதை ஒத்துக்கொள்வதில் நேர்மையாய் இருந்தார்கள். நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் மேலான ஒன்றை தேவன் தங்களுக்கு கொடுப்பாரா என்று எதிர்பார்க்கிற மனோபாவத்தில் அவர்கள் இருந்தார்கள், (ரோமர் 7; 8;1–4)

### கபடம் ஒரு பெரிய பாவம்

யூத தேசத்தின் பெரியவர்களும், பரிசுத்தவான்களும் மதவாதிகளுமாகிய வேதபாரகர், பரிசேயர் மற்றும் ஆசாரியர்களை கவனியுங்கள். அவர்கள் நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டார்கள். ஆனால் இயேசு குறிப்பிட்டது போல அவர்கள் பிரமாணத்தை கைக்கொள்ளவில்லை. அது அவர்களை வஞ்சகர்கள் என்று அர்த்தப்படுத்தியது. பிரமாணத்தை கடைபிடிப்பதற்காக இருந்தவர்கள், அவர்களது வஞ்சகத்தை வெளியரங்கமாக காட்டினார்கள். மனிதர்கள் காண்பதற்காக நீண்ட ஜெபம் பண்ணினார்கள். இயேசு அவர்களை தொடர்ந்து கண்டனம் பண்ணிக் கொண்டேயிருந்தார். பாலஸ்தீனாவில் சந்தேகமில்லாமல் கொலைகாரர்களும், திருடர்களும், சோம்பித்திரிபவர்களும் அநேகர் இருந்தனர். அவர்களது அனைத்து குற்றமுடைமை, கபடத்தை ஒப்பிடும்போது மிகவும் அற்பமானது என்று இயேசு குறிப்பிடுவதை நாம் கவனிக்கிறோம். இந்த வகுப்பாரைக் குறித்துதான் ஆண்டவர் அதிகமான குற்றஞ் சுமத்தி கண்டனம் பண்ணினார். நீங்களும் நானும் இந்த மதம் சார்ந்த கபடத்தி–ருந்து விலகியிருப்பது நல்லது. இயேசுவை போதிக்கிற அனைத்து மத வகுப்பாரும் இந்த கபடத்தைவிட்டு விலகினால் உலகத்தில் அது ஒரு பெரிய எழுச்சியை ஏற்படுத்தும். சில குறிப்பிட்ட மத செயல்பாடுகளை குறிப்பிட்டு சில குறிப்பிட்ட பெயர்களில் பெரிய வியாபாரம் செய்யப்படுகிறது. ஆனால் இந்த விஷயத்தில் பெயர் ஒத்துவரவில்லை.

நல்லதை செய்யமுடியவில்லை, தேவனுடைய கட்டளையை கடைபிடிக்க முடியவில்லை என்று தாங்களே அறிக்கையிட்டு சீஷர்கள் நேர்மையாக இருந்தார்கள். தேவனுடன் சமாதானத்தை பேசி, அவர்மூலம் பாவமன்னிப்பை பெறுவோம் என்று சொல்–, இப்படியாக தேவனுடைய செய்தியை ஏற்றுக் கொண்டதால், இப்படிப்பட்ட மனோபாவத்தை பெற்றிருந்ததால் இயேசு அவர்களை சீஷர்களாக ஏற்றுக் கொண்டார். அவர் ராஜ்ய வகுப்பாரை தெரிந்தெடுத்துக்கொண்டிருந்தார், மனுமக்களை ஆசீர்வதிக்கும்படி அவர்களை மேலாக உயர்த்துவார் என்கிற அவரது செய்தியை நம்புவதில் சந்தோஷமடைந்தார்கள். அவரை பின்பற்ற அனைத்தையும் விட்டார்கள். அவரும் அப்படிப்பட்ட மார்க்கத்தையே எடுத்திருந்தார். தேவனுடைய சித்தத்தை செய்ய எல்லாவற்றையும் துறந்திருந்தார். உலகம் உண்டாகிறதற்கு முன்னே தேவனுடன் பெற்றிருந்த மகிமையான நிலைமையை விட்டுவிட்டார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவேன் என்று சந்தோஷத்துடனும் விருப்பத்துடனும் ஞானஸ்நான சமயத்தில் ஒரு மானிட ஜீவியாக தம்மை அர்ப்பணம் செய்தார். அவரது பரிசுத்தத்தை கவனித்து, அவரது செய்தியை ஏற்றுக் கொண்ட சிலர் அங்கே இருந்தார்கள். அவரைப்போல பிதாவின் சித்தத்தை செய்யும்படி அவரது அடிச்சுவட்டில் நடக்க சந்தோஷமாக இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தமது தாயாகவும், சகோதரனாகவும், சகோதரியாகவும் இருந்தார்கள் என்று அறிவித்தார். அங்கே இதன் இரகசியம் இருந்தது.

### கர்த்தருடையவர்களைப்போல விலையேறப் பெற்றவர்கள் யாருமில்லை

நமது கர்த்தர், தமக்கு மிகவும் நெருங்கின உறவினர்களைப் போல இந்த சீஷர்களைப் பெற்றிருந்தார். உலகமனைத்திலும் அவர்கள் விலையேறப் பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் அவரது மாம்சீக பிரகாரமான சகோதரரர்களோ அல்லது சகோதரிகளோ இல்லை. ஆனால் அவர்கள் பிதாவின் ஆவியை பெற்றிருந்ததால், அவரது சொந்த ஆவியை பெற்றிருந்ததால் அவர்கள் மிகவும் பிரியமானவர்களாக இருந்தார்கள். தம்முடையவர்களிடத்தில் அன்பு கூர்ந்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு கூர்ந்தார்.

அவரது பூமிக்குரிய வாழ்வு முடியும் தருவாயில் அவர்களைப் பற்றியும் அவர்களை விட்டுச் செல்வது பற்றியும் நினைத்து அவர்களுக்காக பிதாவிடம் ஜெபித்தார். அவர் கூறியதாவது: “உலகத்துக்காக நான் வேண்டிக் கொள்ளவில்லை.” அவர் உலகத்திற்காக மரிக்க இருந்தார்; ஆனால் உலகத்திற்காக அவர் வேண்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் தேவனுடைய திட்டத்தில் உலகத்தின் இரட்சிப்பு இன்னும் தூரமாக இருந்தது. அவரது சீஷர்களாயிருக்கும்படி விருப்பத்துடன் அர்ப்பணித்து அவரது அடிச்சுவட்டில் நடக்க இருந்தவர்களுக்காக வேண்டிக் கொண்டார். அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக் கொண்டார். ஆனால் அவர்கள் எல்லாரும் ஒரே ஆளாயிருக்கும்படி அல்ல. அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஆளாக இருப்பார்கள்; ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே ஆவியை, ஒரே சிந்தையை, ஒரே இருதயத்தை, ஒரே விருப்பத்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் அனைவரும் உண்மையான சீஷர்களாகவும் பிதாவுடன் ஒன்றித்தும் இருப்பார்கள்.

இதுதான் அவர்களுக்கான அவரது ஜெபமாக இருந்தது. அவர் அவர்களை நேசித்தது போல, அவரது சீஷர்களை ஒருவரையொருவர் அன்பு செலுத்தவேண்டும் என்று அவர் கூறினார். இது உங்களுக்கும், எனக்கும் சொல்லப்படுகிறது. இதில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்று என்னவென்றால் நமக்கான கர்த்தராகிய இயேசுவின் அன்பு; அடுத்து நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், பிதா தாமே நம்மை நேசித்தார் என்பது. ஏனெனில் நாம் உலகத்தைவிட்டு பிரிந்து, பாவத்தை விட்டு திரும்பியிருக்கிறோம். நாம் நமது அனைத்து பலவீனங்களையும் மரிக்கும் நாள் வரை ஜெயங்கொள்ள இயலாது. கர்த்தர் இருதயத்தை, சித்தத்தை நியாயந்தீர்க்கிறார். நீங்கள் பாவத்தை விட்டு திரும்பியிருக்கிறீர்களா என்று அவர் அறிவார். இயேசுவின் அடிச்சுவட்டில் தாழ்மையுடன் நடக்கும்படி, அவரது சித்தத்தை செய்யும்படி நாம் நமது இருதயத்தை ஒப்புக் கொடுத்துவிட்டோமா என்பதை அவர் அறிவார். “பிதா தாமே உங்களை நேசித்தார்!” என் அன்புச் சகோதரர்களே, தமது பிள்ளைகளாக தேவன் நம்மேல் வைத்த அன்பைப் பற்றி நமது தலைப்பு வசனத்தி–ருந்து நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்? உலகத்தின்மேல் அவர் அன்பு கூறுகிறார். ஒரு தேவனாக, ஒரு சிருஷ்டிகராக, எல்லா ஜீவராசிகளின் மேலும் அவர் கண்காணிப்பு செய்கிறார். தேவன் எல்லா ஜீவராசிகளுக்கும், குருவிக்குக் கூட உணவளிக்கிறார். ஆனால் இப்படிப்பட்ட உண்மையான மனோபாவத்துக்கு வருகிற அனைவரிடமும் அவர் அன்பு செலுத்துகிறார் – இரக்கத்திற்கும் மேலான மதிப்பை தருகிறார்!

--2464--

## தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்

தேவனுடைய அன்பிற்குள் நாம் இருக்கிறோம் என்பதை நாம் அறிந்தோமானால், அப்போஸ்தலர் யூதா கூறுவது போல் தேவனுடைய அன்பிலே நாம் நம்மை காத்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைப்போமாக. (யூதா 21) "நம்மால் காத்துக் கொள்ளக்கூடுமா? பரிசுத்த பவுல் தப்பு செய்யவில்லையா?" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இல்லை, என் அன்பு சகோதரரே, அவர் தவறு செய்யவில்லை. தேவனுடைய அன்பில் நம்மை காத்துக் கொள்ளவேண்டும். "நம்மை காத்துக்கொள்ள முடியாதா முடியுமா?" முடியும், காத்துக் கொள்வது நம்மிடத்தில் உள்ளது. தேவன் நமது சித்தத்தை பலவந்தபடுத்துவதில்லை. கட்டாயப்படுத்த தேவைப் படுபவர்களை தேவன் இப்போது தேடவில்லை. விரைவில், அடுத்த ஆயிர வருட யுகத்தில் கட்டாயப்படுத்த, வற்புறுத்த தேவைப்படுகிறவர்களை அவர் பார்த்துக் கொள்வார். நன்மையையும் அதன் பலன்களையும், தீமைகளையும் அதன் பலன்களையும் ஒப்பிட்டு பார்க்கும் இவர்களை தேவன் பார்த்துக் கொள்ளுவார். இப்பொழுது பிதாவானவர், அவரிடம் நெருங்கி, அவரை அன்பு செலுத்தி, ஆவியில் அவரை ஆராதிக்கிறவர்களை தேடுகிறார்.

நாம் அவரை முத-ல் நேசிக்கவில்லை. ஆனால், அவர் நம்மை முத-ல் நேசித்தார். இந்த அன்பு நமது மனுக்குலத்தை உயர்த்தும் அவரது மகாதிட்டத்தில் எதிரொ-த்ததை நாம் பார்க்கிறோம். நாம் பெற்றிருக்கிற மகா தேவனைப்பற்றி இது கூறுகிறது. நாம் நமது சித்தத்தை அவரிடம் அர்ப்பணித்து அவரது குடும்பத்திற்குள் வந்த பொழுது, அவர் நம்மை தமது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்த போது நாம் ஓர் உயர்ந்த உறவுக்குள் வந்தோம். அண்ட சராசரங்களில் இதுபோல வேறொன்றுமில்லை. பரிசுத்த தூதர்கள் உண்மையில் தேவனுடைய அன்பு மற்றும் ஆதரவில் இருக்கிறார்கள். அவர்கள் அதைவிட்டு வெளியே போகவில்லை. ஆனால் ஒரு காலத்தில் பாவிகளாயிருந்த நாம், இப்பொழுது அவருடைய குடும்பத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டு எல்லா சுபாவத்திற்கும் மேலானத்திற்கு அவருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறோம். என் அன்பு சகோதரர்களே, எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! தேவன் நம்மை, மிக மிக அதிகமாக நேசிக்கிறார் அல்லது இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிற நமக்கு அவருடைய கிருபையின் ஐசுவரியத்திலும், அவரது தயவுள்ள அன்பிலும் இப்படிப்பட்ட ஆச்சரியமானவைகளை கொடுக்கவில்லை என்று நானும் அதேபோல நீங்களும் நினைக்கிறீர்கள். எதிர்காலத்திற்குரியது மட்டும் தேவனுடைய கிருபையின் ஒதுக்கீடு அல்ல. அவரை சந்தோஷப்படுத்தவும் அவரது சிந்தத்தின்படி செய்யவும் இப்போது விரும்புகிற நம்மை முடிவில் மாற்றி மறுரூபப்படுத்துவார் என்பதல்ல, ஆனால் பிதாவானவரின் இந்த அன்பினால் நாம் இன்று மறுரூபப்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருடமும் இவைகளைப் பற்றி நாம் நினைப்பதால் தேவனுடைய ஆச்சரியமான திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது மகா அன்பை நாம் கற்று புரிந்து கொள்கிறோம் என்று நான் நம்புகிறேன். எந்த அளவுக்கு "பிதா தாமே நம்மை நேசிக்கிறார்" என்கிற ஆச்சரியமான உணர்வை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். எந்த ஒரு பிதாவும் இப்படிப்பட்ட ஆச்சரியமான காரியங்களை எந்த ஒரு பிள்ளைக்கும் செய்கிறார் என்ற உண்மை அன்பு என்கிற ஒரு மகா அன்பை கையாள்வதை குறிக்கிறது.

தேவதூதர்களை தேவன் உண்டாக்கினபோது அவர்களை அவர் நேசித்தார். அவர் சேராபீன்களையும் கேரூபீன்களையும் உண்டாக்கினபோது அவர்களை நேசித்தார். அவர்கள் எப்பொழுதும் பெருங்குணமுடையவர்களாக இருப்பார்கள். ஆகையால் அவர்கள் தேவனுடைய அன்புக்கு பாத்திரர். ஆனால் தேவனுடைய அன்பைப்பற்றிய மிகவும் ஆச்சரியமான ஒரு சொற்றொடர் இங்கு உண்டு. அதை விசுவாசத்தினால் நம்பலாம். அதாவது எந்த வகையிலும் ஒழுங்கற்ற ஒரு இனமாகிய நம் மேல் இப்படிப்பட்ட அன்பை கொண்டிருக்கிறார் என்பதாகும். பிதாவானவர். கீழே பார்த்து, இந்த இனத்தில் சில சம்பத்துக்களை கவனித்தார். இந்த சம்பத்துக்களை எடுத்து இரட்சகரின் புண்ணியத்தின் மூலம் பாவமற கழுவினார். பிறகு, அவர்களது அர்ப்பணத்தின் மூலம் இந்த சம்பத்துக்களை மெருகேற்ற ஆரம்பித்தார். பிறகு உயிர்தெழுங் காலையில் பிரகாசமான மகிமையில் பொருத்த தயார்படுத்துகிறார். அப்பொழுது தெய்வீக சுபாவமாகிய பொன்னில் இந்த சம்பத்துக்களை பொருத்துவார். நிச்சயமாகவே பிதா தாமே நம்மை நேசிக்கிறார்!

## "கர்த்தருக்கு நான் என்னத்தை செலுத்துவேன்?"

பிதா நம்மை நேசிக்கிறபடியால், இரட்சகரும் நம்மை நேசிக்கிறார் என்கிற உறுதியான வார்த்தையையும் நாம் பெற்றிருக்கிறபடியால், பதிலுக்கு இப்பொழுது நாம் என்னத்தை செலுத்துவோம்? என் தேவனாகிய கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? நாம் சொல்லக்கூடியதில் இது மிகவும் அற்பமானது. நீங்கள் இந்த உலகத்தில் அநாதையாக இருக்கும்போது, செல்வாக்கு உள்ள பணக்காரர் ஒருவர் உங்களை கையிலெடுத்து தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று, தத்தெடுத்து தனது குடும்பத்தில் சேர்த்துக் கொண்டால், "இவர் எப்படிப்பட்ட ஒரு தருமவான்" என்று கூறுவீர்கள். நன்றியுள்ள உள்ளம் உங்களுக்கிருத்தால், "என்னிடம் அவர் காண்பித்த அன்பிற்காக, நான் எனது முழு நேரத்தையும் திறமையையும் அவருக்கே சமர்ப்பிக்கிறேன்" என்று கூறுவீர்கள். உங்களுக்கு ஒரு நல்ல இருதயம் இருந்தால் நீங்கள் இப்படித்தான் உணருவீர்கள்.

இப்பொழுது கர்த்தர் செய்த அனைத்து உபகாரங்களுக்காகவும் நாம் என்னத்தைச் செலுத்துவோம்– அவரது அன்பு, அவரது தயவு, உலகத்துடன் நாம் பங்கு பெறப் போகிற மகா இரட்சிப்புக்காவும், மேலும் நாம் உலகத்தி-ருந்து வெளியே வரும்படி நாம் பெற்ற பரம அழைப்புக்காகவும், இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராகப் போகிறதற்காகவும் நாம் என்னத்தை செலுத்துவோம். நமது பரலோக சுதந்திரம், அழிவில்லாதது, மாசில்லாதது, மங்காதது. கடைசி நாளில் வெளிப்படுத்தப்பட தயாராயிருக்கிற, இரட்சிப்பு வரை விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய வல்லமையினால் வைக்கப்பட்டிருக்கிற, நமக்காக ஒதுக்கப்பட்டுள்ள சுதந்தரமாகும். இவைகளெல்லாம் நமக்குரியது. இப்படியாக தேவன் நிச்சயித்திருக்கிறார். தவறேதுமில்லை. இது ஒரு புது சிருஷ்டி, சுவிசேஷயுகம் வரை இப்படி பேசவோ, அவரது நிலைமையில் பங்குபெறுவதோ இல்லை. நமது வழிகாட்டியை பின்பற்றும்போது நமது வழியை இழக்க இயலாது. தேவன் உங்களுக்கும் எனக்கும் செய்திருக்கிறவைகளுக்கு தக்கதாக நாம் அவருக்கு நிச்சயம் ஏதாவது செய்ய வேண்டும்.

நாம் என்ன செய்யக்கூடும்? நீங்கள் உங்களைப் பாருங்கள். நான் என்னைப் பார்க்கிறேன். நாம் உண்மையாகவும் நேர்மையாகவும் கூறுவதாவது. "நாம் அபூரணத்தின் வெறும் கட்டுகளாக இருககிறோம். தேவனிடம் சமர்ப்பிக்க தகுதியானது நம்மிடம் ஒன்றுமில்லை." ஆனால் நீங்கள் சமர்ப்பித்தது ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீங்கள் பெற்றிருந்த அனைத்தையும் கொடுத்துவிட்டீர்கள், கர்த்தர் உங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்; இல்லையென்றால் நீங்கள் இந்த வகுப்பிற்குரியவர்களாகியிருக்கவே முடியாது. இந்த அர்ப்பணிப்பை செய்தவர்களை மட்டுமே தேவன்

**--2465--**

நேசிக்கிறார். பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிறவர்கள் மட்டுமே சபையில் இருக்கிறார்கள். கொடுப்பதற்கு உங்கள் சித்தத்தைப் பெற்றிருந்தீர்கள். மொத்தத்தில் உங்களில் சிறியதை கொடுத்தீர்கள். பிதாவானவர் உங்களை ஏற்றுக்கொண்டு, அவர் தமது ஆவியால் ஜெநிப்பித்தார். நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருப்பதற்கு அதுதான் காரணம். “தேவன் தாமே உங்களை நேசிக்கிறார்” என்று நீங்கள் முழுவதும் உணருவதற்கு அதுதான் காரணம்.

நாம் என்னத்தைக் கொடுப்போம்? நீங்களும் தேவனிடம் அர்ப்பணித்து கொடுத்தவைகளும் நான் தேவனிடம் அர்ப்பணித்து கொடுத்தவைகளும் ஒன்றேதான். அவைகளெல்லாம் உங்களுடைய மிகச்சிறியதும் என்னுடைய மிகச் சிறியதுமாகும். ஆனால் நமக்குரிய அனைத்தையும் எப்படிக் கொடுப்போம்? பிதாவானவரின் சித்தம் என்ன என்பதை அறிய நாம் தேடவேண்டும். நாம் புசித்தாலும், குடித்தாலும் நாம் என்ன செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்காக செய்ய வேண்டும். (1 கொரி 10:31) வேறு வார்த்தையில் சொல்வோமானால், என் அன்பு சகோதரரே, தேவனுடைய குடும்பத்துக்குள் வருவதிலும், கர்த்தருடன் இந்த உடன்படிக்கை செய்வதிலும் நாம் கடமைப்பட்டுள்ளோம். எந்த விஷயத்திலும் நமது சொந்த சித்தம் கிடையாது. அவரது சித்தத்தை மட்டுமே செய்ய கடமைப்பட்டுள்ளோம்.

### கிறிஸ்துவின் அடிமைகளாயிருந்தாலும் சுயாதீனம்

நாம் விரும்புவதை அணிய முடியாது. நாம் விரும்புவதை நாம் சாப்பிடக்கூட முடியாது. நாம் விரும்பக்கூடிய இடத்திற்கு போகக்கூட முடியாது. நாம் விரும்பியதை நினைப்பதற்குக்கூட அனுமதிக்கப் படுவதில்லை. “நல்லது, இப்படிப்பட்ட ஒரு அடிமைத்தனத்தை நான் கேள்விப்பட்டதேயில்லை” என்று ஒருவர் கூறலாம். என் அன்பு சகோதரரே, அது உண்மை தான். நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிமைகள். “இந்த அடிமைத்தனத்தி-ருந்து நாம் விடுபட முடியாதா? எந்த நிமிடத்திலும் நாம் விடுபட முடியும். இயேசு கிறிஸ்துவின் அடிமைகள் அனைவரும் தன்னிச்சையான அடிமைகள், நீங்கள் தன்னிசையாக வந்தீர்கள். நீங்கள் விரும்பினால் அதி-ருந்து உடனே விலகிக் கொள்ளலாம். அப்படிச் செய்ய விரும்புகிறீர்களா? ஓ, இல்லை! நீங்கள் வந்திருப்பது மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட அடிமைத்தனம்! நீங்கள் உங்கள் சொந்த சித்தத்தை விடுகிற ஒவ்வொரு சமயத்திலும், ஈடு இணையற்ற ஒரு பெரிய ஆசீர்வாதத்தை பெற்றதை காண்பீர்கள். எல்லாம் நன்மைக்கேதுவாய் நடக்கிறதை நீங்கள் கண்டீர்கள். ஏனெனில் கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கும்படி உங்கள் சித்தத்தை விட்டுவிட்டீர்கள். விலையேறப்பெற்ற அடிமைத்தனம்! உடுத்துவதிலும் உண்பதிலும் இன்னும் மற்ற காரியங்களிலும் உங்கள் சித்தத்தை செய்ய முயன்றபோது எவ்வளவு தப்பிதங்களை செய்யக் கண்டீர்கள். மிகவும் ஞானமுள்ள ஒருவரிடமிருந்து சில பொதுவான வழிகாட்டுதலை நீங்கள் பெறுவதில் எவ்வளவு சந்தோஷப்படுகிறீர்கள். இந்த வழிகாட்டுதலால், இந்த வகுப்பார் “தெளிந்த புத்தியுள்ள ஆவியை” பெற்றிருப்பதாக அப்போஸ்தலர் கூறுகிறார். (2தீமோ.1:7)

நமது சிந்தைகளெல்லாம் அபூரணமானதும் ஆரோக்கிய மற்றதாகவும் இருக்கின்றன. நாம் நமது சித்தத்தால் வழி நடத்தப்படாமல், கர்த்தரின் சித்தத்தால் வழி நடத்தப்படும்போது, அவரது வசனத்தில் நமக்கு சொல்லப்பட்டிருப்பது போல, நாம் தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற வருகிறோம். அதிக அதிகமான ஆசீர்வாதத்தை அது கொண்டு வந்திருக்கிறது! இங்கு பிரசன்னமாகி இருக்கிற, அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளின் மனோபாவத்தை நான் சொல்வதாக நான் நிச்சியிக்கிறேன்.

படிப்படியாக நாம் கர்த்தரின் வழியை நேசிக்க வருகிறோம். கடைசியில் நாம் ஒரு காலத்தில் விரும்பினவைகளை வெறுக்கவும், வெறுத்தவைகளை விரும்பவும் தேவனுடைய கிருபையிலும், அறிவிலும் அன்பிலும் நாம் வளருகிறோம். அப்போஸ்தலர் கூறுவது போல, இப்படியாக நாம் நமது சித்தத்தை புதுப்பித்து நாம் மறுரூபமடைகிறோம். (ரோமர் 12:2)

இந்த அடிமைத்தனம் ஒரு முக்கியமான காரியத்தில் சுயாதீனமாக இருக்கிறது. (1 கொரிந்தியர் 7:22) பாவத்தின் அடிமைத்தனத்தி-ருந்து நாம் ஒரு வெற்றியைப் பெறுகிறோம். நமது மாம்சத்தின் பலவீனத்தின் அடிமைத்தனத்தி-ருந்து அனுதினமும் ஜெயம் கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம். ஆனால் கர்த்தரின் சித்தத்துக்கான இந்த அடிமைத்தனம் அனுதினமும் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது. இறுதியாக அது, “முதலாம் உயிர்த்தெழுத-ல் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தமுள்ளவனுமாயிருக்கிறான்.... இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடே கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்” என்று இயேசு கூறுவது போல அவர்களை முதலாம் மற்றும் பிரதானமான உயிர்த்தெழுதலுக்கும் கொண்டு வரும். (வெளி 20:6) நமது திறமைக்குத் தக்கதாக நாம் கர்த்தரின் சித்தத்தை செய்வதில் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் இவைகளெல்லாம் உங்களுக்கும், எனக்கும் வரும், தேவன் எந்த ஒரு மனிதனின் திறமைக்கு மேலாக எதிர்பார்ப்பதில்லை. தேவனுடைய மகிமையான திட்ட அளவை நாம் பெற்றிருக்க வேண்டும். மேலும் நம்மால் முடிந்தவரை இந்த திட்ட அளவுக்கு இசைவாக வாழ வேண்டியவர்களாயிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு அவரால் முடிந்ததற்கும் மேலாக செய்ய முடியவில்லை. அவர் பூரணராக இருந்து, பூரணமாக அவரால் செய்ய முடிந்தது. நாம் அபூரணராக இருந்து பூரணமாக நம்மால் செய்ய முடியாது. ஆகையால் நாம் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கும்போது இயேசுவின் இரத்தம் நம்மை கழுவி சுத்தப்படுத்துகிறது.

### கர்த்தருக்கு எப்படி நாம் ஊழியம் செய்யலாம்

இங்கே இன்னொரு முக்கியமான விஷயத்துக்கு வருகிறோம். நீங்களும் நானும் எதையும் கர்த்தருக்காக செய்ய முடியாது என்பதை அவர் அறிவார். நான் எதை குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்த வேண்டும் என்று அவர் கூறுகிறார். நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்துவதினால், அவர் மே-ருக்கிற அன்பை வெளிப்படுத்துகிறோம். ஆகையால் அப்போஸ்தலர் யோவான் இதே காரியத்தைக் குறித்து இதே கோணத்தில் பேசும்போது, கிறிஸ்து நமக்காக தமது ஜீவனைக் கொடுத்தது போல, நாமும் நம் சகோதரர்களுக்காக நமது ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார். நாம் நமது ஜீவனை புறஜாதியாருக்கோ அல்லது பொதுவாக உலகத்தாருக்கோ கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை. சகோதரர்களுக்காக மட்டுமே நமது ஜீவனைக் கொடுக்க வேண்டும். இப்படியாகத்தான் நாம் வாசிக்கிறோம். இது எப்படி எழுதப்பட்டிருக்கிறது என்பதை கர்த்தர் அறிவார். இயேசு நேசித்தவர்களுக்காக நாம் ஜீவனை கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

தேவனுடைய பிரியமான பிள்ளைகளில் சிலர், சபைக்கு ஏதாவது செய்வதைக் காட்டிலும் உலகிற்கு செய்வதையே சுலபமாக காணப்படுவதாக நான் பார்த்திருக்கிறேன். அது சரியான மனோபாவம் அல்ல. முதலாவது தேவன், பிறகு கர்த்தராகிய இயேசு, அதன் பிறகு சகோதரர்கள், அதற்கு பிறகுதான் கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக மற்ற எல்லாரும். இதற்கு பிறகு மிருக ஜீவிகள். கிடைக்கும் சமயத்திற்கும் தக்கதாக மனிதர்களுக்கு ஆதரவாக மிருகங்களை ஒதுக்கலாம். சபைக்கு ...ாக

உலகத்தை ஒதுக்கலாம். நாம் அவரது ஆவியை பெற்றிருந்தால் நாம் அவருடையவர்களை நேசிப்போம்.

இப்படி நான் பேசும்போது, கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக, பாரபட்சமாக பேசுவதாக நீங்கள் புரிந்து கொள்ளக்கூடாது. வேதத்தில் மிகவும் பரந்திருக்கிறவைகள் உண்டு. அகில உலக வேத மாணவர் சபையின் அங்கத்தினர் அதிக அதிகமாக இந்த அன்பை அடைகிறார்கள் என்று நான் நம்புகிறேன். கர்த்தராகிய இயேசு நாம் இதை அடைய வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் பிரிஸ்பட்டேரியனாக இருந்தால் அவர்களை பிரிஸ்பட்டேரியனாக நேசிக்க வேண்டும், அல்லது மெதடிஸ்ட் ஆக இருந்தால் நாம் அவர்களை மெதடிஸ்ட் ஆக நேசிக்க வேண்டும், அல்லது லூத்தரனாக இருந்தால் அவர்களை நாம் லூத்தரனாக நேசிக்க வேண்டும் என்பதல்ல. பிரிஸ்பட்டேரியன்கள் பிரிஸ்பட்டேரியனை சிநேகிக்கிறார்கள்; மெதடிஸ்ட் மெதடிஸ்ட்களை சிநேகிக்கிறார்கள்; லூத்தரன் லூத்தரனை சிநேசிக்கிறார்கள்; மொர்மோன்கள் மொர்மோன்களை சிநேசிக்கிறார்கள். ஆவி உலக நம்பிக்கை உடையோர், ஆவி உலக நம்பிக்கை உடையோரை சிநேக்கிறார்கள். விநோதமானவர்கள் விநோதமானவர்களை சிநேக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் சபையில் இப்படிப்பட்ட வேறுபாடுகள் கிடையாது. ஒரு மனிதன் கொத்தனராக இருந்தாலும், கொத்தனராக இல்லாத்திருந்தாலும், மெதடிஸ்ட்டாக இருந்தாலும் மெதடிஸ்ட்டாக இல்லாதிருந்தாலும், அவன் கர்த்தரின் பிள்ளையாக இருக்கிறானா என்பதுதான், வேறெதுவும் இல்லை. தேவனை சேர்ந்தவர்களை நாம் சிநேகிக்கவேண்டும். பிதாவானவர் அவனை சிநேகித்தால், இரட்சகர் அவனை சிநேசித்தால், நாமும் கூட அவனை சிநேக்கிக்க வேண்டும். நான் அவனை சிநேகிக்கவில்லை என்றால் என்னுடைய மனோபாவத்தில் ஏதோ தவறு இருக்கிறது என்று பொருள். பிதா சிநேகிக்கிறவர்களை, இரட்சகர் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

### "தேவனிடத்தில் அன்பு கூறுகிறவன் அவனது சகோதரனிடத்தில் அன்பு கூறுகிறான்"

"சகோதரர் ரசல் அவர்களே நீங்கள் அனைத்து சகோதரர்களையும் சிநேகித்தால், முரட்டு சுபாவம் உள்ளவர்களை நீங்கள் சிநேகிக்கிறீர்கள், அறியாமை உள்ளவர்களை நீங்கள் சிநேகிக்கிறீர்கள். மனிதர்களில் நன்மதிப்பு இல்லாதவர்களை சிநேகிக்கிறீர்கள்." அதற்கு நான்ஒன்றும் செய்ய முடியாது. தேவனை சிநேகிக்கிற அனைவரையும் நான் சிநேசிக்கப்போகிறேன். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் பரிசுத்த பவுலைத் தவிர, மற்றெல்லாரும் சாதாரணமானவர்கள். பரிசுத்த பேதுருவும், பரிசுத்த யோவானும், பன்னிரெண்டு பேரில் இவர்கள் இருவரும் மிகவும் புத்திசா-யானவர்கள். இவர்கள் தேவாயலத்தில் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, ஜனங்கள் இவர்களை படிப்பறியாதவர்கள் என்றும் பேதமை உள்ளவர்கள் என்றும் கூறியதை நீங்கள் நினைத்துப்பாருங்கள். அதை நினையுங்கள்! "சாதாரண ஜனங்கள்" அதை பார்க்க முடிந்தது. இயேசு சிநேகித்தது இவர்களைத்தானா? ஆம் சில சமயங்களில் கடினமான எபிரேய வார்த்தைகளை பயன்படுத்தி அவர்களது கடின இருதயத்தைக் கூட நெகிழப் பண்ணினார்கள் என்று நான் நம்புகிறேன். இது மற்றவர்களை காட்டிலும் ஆங்கிலத்தில் சிறப்பாய் பேசுகிறவர்களை நாம் அதிகமாக நேசிக்க வேண்டும் என்று பொருளல்ல. ஆனால் எந்த ஒரு சகோதரனுக்கும் அல்லது சகோதரிக்கும் நமது அன்பிற்கும் இடையில் அறியாமை இருக்கும்படி நாம் அனுமதிக்கக்கூடாது. நமது கர்த்தருடன் ஐக்கியத்தில் உள்ள அனைவரிடமும் நாம் அன்பு செலுத்தும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் சமூகத்தின் உயர்ந்த நிலையிலோ அல்லது தாழ்ந்த நிலையிலோ இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவரது ஆவியை பெற்றிருப்பதால் அவர்கள் நமது அன்பை மெச்சுகிறார்கள். பிதாவானவர் தாமே தமது குடும்பத்தில் அவர்களை ஏற்றுக் கொண்டிருந்தால், பிதாவானவர் அவர்களை நேசித்தால், நீங்களும் நானும் அவர்களை நேசிப்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்கிறது. எந்த அளவுக்கு? அப்போஸ்தலர் நமக்கு முன்பாக ஒரு பெரிய முன்மாதிரியை வைத்திருக்கிறார். சகோதரர்களுக்காக நமது ஜீவனையும் கொடுக்கவும் நாம் விருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டும். தேவனை அறிய விரும்புகிறவர்களுக்கும் "கேட்க காதுள்ளவர்களுக்கும்" போதிப்பதே நமது வேலையே ஒழிய உலகத்துக்கு போதிப்பது நமது வேலையல்ல. பொது ஜனங்களிடையே உரையாற்றும் போது ஒவ்வொரு சமயத்திலும், தேவனுடைய பிள்ளைகள் சிலரை, நல்ல வழியில் உதவி தேவைப்படுகிறவர்களை அல்லது தேவனைப்பற்றிய உணர்வு பெற்று, அவரது பிள்ளைகளாக விருப்பம் உடையவர்களை நாம் நிச்சயம் காண்போம். எப்படியிருந்தாலும் உலகத்தின் ஆவலைத் தூண்ட வெறும் ஆடம்பரமான பிரசங்கத்தை செய்வது நமது வேலையல்ல. நமது வேலை சபையை, கிறிஸ்துவின் மணவாட்டியை கூட்டிச் சேர்ப்பதுதான்.

தேவனிடம் அர்ப்பணம் செய்திருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறவர்களில் சிலர் உண்மையிலேயே ஒவ்வொரு வழியிலும் மிக மிக பலவீனமாக இருக்கிறார்களா? சரி, என் அன்பு சகோதரரே, கர்த்தர் ஒருவேளை நீங்கள் பலவீனமாக இருப்பதாகவும், கஷ்டத்துக்குள் போகிறீர்கள் என்பதையும் காணலாம். அவர் உங்களிடத்தில் கவனியாதுவிட அநேக காரியங்கள் உண்டு என்பதை நீங்கள் அறியீர்களா? நாம் முடிந்தவரை மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுக்காதவர்களாகவும், அவர்களது பலவீனத்தையும், குறைவுகளையும் தாங்குகிறவர்களாக இருக்க வேண்டும். நம்மை சந்தோஷப்படுத்துகிறவர்களாக மாத்திரமல்ல. நான் மறுபடியும் சொல்கிறேன். நம்மையே சந்தோஷப்படுத்துகிறவர்களாக அல்ல, அவர்களது பலவீனங்களையும் குறைகளையும் தாங்குகிறவர்களாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு இது அர்த்தம் கொடுக்கிறது! இதை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம் என்று நான் நம்புகிறேன். நீங்கள் அறிந்திருக்கிறதையே நான் குறிப்பிடுகிறேன். அதாவது தேவனுடைய அன்பு தெய்வீக தேவையின் நிறைவேறுதலாக இருக்கிறது; தேவன் தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கிறவர்கள் மற்றும் தமது குடும்பத்திற்குள் ஏற்றுக் கொண்டவர்களிடம் வெளிப்படுத்தக்கூடியதாக இந்த அன்பு இருக்கிறது. எந்த மனிதனாவது தேவனுடைய ஐக்கியத்தை பெற்றிருப்பதாக நான் கண்டால், அந்த மனிதரிடம் எனது ஐக்கியத்தை மறுக்க எனக்கு துணிச்சல் கிடையாது.

### தேவன் ஐக்கியம் கொள்கிறவர்களிடம் நாம் ஐக்கியம் கொள்ள வேண்டும்

இதை விளக்குவதற்காக ஒரு நியூயார்க் வங்கியாளரைப் பற்றி சொல்லப்பட்ட ஒரு கதை எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர் ஒரு நேர்மையான மனிதர். இவருக்கு தொலை தூரத்தில் வாழ்கிற ஒரு நண்பருண்டு. அவர் தனது மகனுக்கு ஒரு வாழ்க்கையை ஆரம்பிக்க தனது நண்பரான வங்கியாளரிடம் ஒரு அறிமுக கடிதத்தை கொடுக்க விரும்பினார். அவர் எழுதினதாவது; "என் மகனை உங்களால் வியாபாரத்தில் அறிமுகப்படுத்த முடிந்தால், அது எனக்கு செய்த பேருதவியாக இருக்கும்." வால் தெருவில் (Wall Street) இருக்கக்கூடிய இந்த செல்வந்தர் தனது நண்பர் மேல் மிக அதிகமான நம்பிக்கை வைத்திருந்தார். இளைஞனை அவர் பார்த்தபோது, உயர்ந்த குணமுடையவனாக உணர்ந்தார். அவனை வியாபாரத்தில் ஈடுபடுத்த தான் என்ன செய்ய முடியும் என யோசித்தார். அந்த இளைஞனிடம் அவர் "கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வரலாம் வா" என்று கூப்பிட்டார். இருவரும் கைக்கோர்த்துக் கொண்டு, வால்தெரு, பாண்டு தெரு மற்றும் புது தெரு சென்று அலுவலகத்திற்கு திரும்பினார்கள். அந்த இளைஞன் கொஞ்சம் நேரம் பதட்டமாக எதிர்பார்க்குதலுடன் காத்திருந்தான்.

அந்த வங்கியாளர் அதன்பிறகு ஏதும் செய்ய விரும்பாததை கவனித்த இளைஞன், "என்னை அறிமுகம் செய்கிறீர்களா?" என்று கேட்டான். அதற்கு வங்கியாளர் கூறிய பதிலாவது: "அதற்கு அவசியம் இருக்காது. இந்த தெருக்களில் நான் உன்னை கை கோர்த்து அழைத்துச் சென்றேனே, அதுவே இந்த பகுதியிலுள்ள வியாபாரிகளுக்கு போதுமான அறிமுகமாகும்." அந்த இளைஞனும் கூட அப்படியே கண்டான்.

ஆகையால் தேவன் ஒரு மனிதனை பிடித்துக் கொண்டால், நாம் அவரை தேவனுடைய சபையில் பார்க்கிறோம். தேவன் அவரை நம்மிடம் அறிமுகம் செய்ய விரும்புகிறார் என்பதை நாம் அறிகிறோம். இது அவரது நிலையான உத்தரவை நமக்கு கொடுக்கிறது. அந்த மனிதர் நமது சகோதரரில் ஒருவர், ஏனெனில், "பிதா தாமே அவரை நேசிக்கிறார்." பிதா தாமே அவரை தமது குடும்பத்தில் ஒருவராக அங்கீகரிக்கிறார். நீங்களும் நானும் நம்மால் முடிந்த எதையும் அவருக்குச் செய்ய நாம் விருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டும். சகோதரர்களுக்கு முடிந்த எந்த வகையிலும் உதவி செய்ய நாம் தேவனுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்பது பிதாவானவரின் சித்தமாக இருக்கிறது. இந்த சகோதரர்களுக்கு பலவிதமான சோதனைகளும் துன்பங்களும் வரும் என்பதை நீங்களும் நானும் அறிவோம். சிலுவை வீரர்கள் அனைவருக்கும் இடுக்கமான வழியும், உலகம், மாம்சம் மற்றும் சத்துருவானவுடனும் போராட்டமும் உண்டு. நமது சொந்த மாம்சத்தின் விழுந்து போன நிலைமையால் நாம் போராட்டம் உடையவர்களாக இருக்கிறோம். போராட்டத்தில் இருக்கிற மற்ற அனைத்து வீரர்களுக்கும் நமக்கும் என்ன அனுதாபத்தை அது தரவேண்டும்! இரண்டு சேனாதிபதிகள் இருக்கிறார்கள். கர்த்தர் பக்கம் இருக்கிற அனைவரும் அல்லது இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கும்படி தேடுகிறவர்கள் நமது சேனையை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் படித்தவர்களாக இருந்தாலும் அல்லது படிக்காதவர்களாக இருந்தாலும், கருப்பராக அல்லது வெள்ளையராக இருந்தாலும், பணக்காரராக அல்லது ஏழையாக இருந்தாலும் நமது சகோதரர்களை நேசிப்பது நமது சலுகையாக இருக்கிறது.

### நீங்கள் நேசிக்கிறீர்களா? அப்படியானால் இப்பொழுது அதை காண்பியுங்கள்

இந்த நல்ல சிந்தையோடு இந்த மாநாட்டை முடிக்கலாம் என்று நான் நம்புகிறேன். ஆண்டவர் சொன்னதாவது. "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." (மத்தேயு 28:20) நாம் இப்போது யுக முடிவில் இருக்கிறோம்; "அதிகாலையின் இன்னும் கொஞ்ச வெளிச்சத்திற்காக காத்திருக்கிறோம்;" திரைக்கு பின்னால் செல்லவும், திரைக்குப் பின்னால் நமது இரட்சகருடன் இணையவும் மட்டுமே காத்திருக்கிறோம். "அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்." அதன்பிறகு சகோதரர்களுக்கு உதவி செய்ய சந்தர்ப்பமிராது! அனைத்து சகோதரர்களும் உதவி செய்யப்பட்டிருப்பார்கள்; உதவி தேவைப்படாத இடத்திற்கு அவர்கள் சென்றிருப்பார்கள். ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்திக்கொள்ளவும். உதவிகரமான பார்வையை செலுத்தவும், கனிவாக கைகோர்க்கவும், தற்கால பாடுகளில் நமது ஐக்கியத்தைக் காண்பிக்கவும் சரியான நேரம் இப்பொழுதுதான்.

இந்த அன்பின் பாடத்தை நாம் அனைவரும் இப்பொழுது கற்றுக் கொண்டிருக்கிறோம். நமது பிதா மற்றும், நமது இரட்சகரின் மகிமையான குணலட்சணங்களை பார்க்கவும், நமது ஆண்டவரின் சாயலை பெறவும், மென்மேலும் நம்மில் பிரதிப-க்கவும் நாம் வருவதால் நமது இருதயம் மென்மேலும் விரிவாக திறக்கிறது. தற்கால வாழ்க்கையில் இயேசுவைக் கவனிப்பதால் மகிமையி-ருந்து மகிமையடைந்து நாம் மறுரூபமடைகிறோம். இப்படியாக திரைக்கு இந்த பக்கம் நாம் இருதய அபிவிருத்தியின் ஒரு நிலையி-ருந்து இன்னொரு நிலைக்கும், மகிமையின் ஒரு படியி-ருந்து இன்னொரு படிக்கும் செல்வதால் தேவையான முன்னேற்றத்தை நாம் செய்கிறோம்; பெரிய கடைசி படிக்கும் கடைசி கட்டத்திற்கும் நாம் தயாராகி, நாம் அவரை இருக்கிற வண்ணமாக அவரை தரிசித்து அவரது மகிமையில் பங்கு பெறுவோம்.

என அன்பு சகோதரர்களே, இது மிக அருகாமையிலே, மிகவும் கிட்டே இருப்பதாக நம்பாதிருப்போமாக. நமது ஆண்டவர் கூறியதாவது: "அப்படியே, இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்." (லூக் 21:28) நாம் சரியானபடி களிகூறுகிறோமா? நமது தேவனுடைய அன்பு மற்றும் இரட்சகரின் அன்பைப் பற்றிய இனிமையான காரியத்தை உலகிற்கு சொல்வதில் நாம் நமது தலைகளை உயர்த்தி களிகூருகிறோமா? வரக்கூடிய துன்பத்தைக் குறித்து அவர்களிடம் அதிகமாக சொல்ல வேண்டாம். மேகத்தின் மேலுள்ள ஒரு சிறு ஒளிக்கீற்றைப்பற்றி அவர்களுக்குச் சொல்லுங்கள், "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தில் உள்ளவர்களல்லவே." (1 தெச 5:4)

### உலகமானது விழிக்கிறது

நாம் இதுவரை அறியாத ஆச்சரியமான விசாரணைகள் வருகின்றன. ஜனங்கள் எல்லா இடத்திலும் கூறுகிறதாவது: "இவைகளுக்கெல்லாம் என்ன பொருள்? வேத மாணவர்களாகிய நீங்கள் வருடக்கணக்காக சொல்- வருவதெல்லாம் இவைகள்தான்." அவர்கள் "அறிந்து கொள்ள ஆரம்பிக்கிறார்கள்." எல்லாரும் இப்பொழுது தங்கள் இருதயத்தை கர்த்தருக்கு கொடுக்காம-ருக்கலாம். கேட்கிறவர்களுக்கு நாம் சொல்ல வேண்டியது என்னவென்றால், இப்பொழுதோ, பிற்காலத்திலோ எந்த ஒரு சலுகையை பெற வேண்டுமானால் கர்த்தருடன் உடன்படிக்கைக்குள் வர வேண்டும் என்பதாகும். அர்ப்பணம் பண்ணாதவர்களிடம் சர்ச்சை பண்ணும் போதும், வாதம் பண்ணும்போதும் நாம், காலம் குறைவாக இருக்கிறது, அப்போஸ்தலர் கூறுவது போல அவர்களது சரீரங்களை தேவனுக்கு பிரியமான ஜீவப-யாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று கூற வேண்டும்.

இதை நாம் எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் உணருகிறேன். அனைத்து ஜனங்களும் சுவிசேஷத்தை புரிந்து கொள்ளும்படி நம்மால் செய்ய இயலாது. சகோதரர்களைத் தவிர மற்ற அனைவரும் சுவிசேஷத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய திட்டமல்ல. பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது." (மத் 13:11) இங்கே நீங்கள் என்பது தேவனுடைய குடும்பத்துக்குள் வந்தவர்களைக் குறிக்கிறது. இவைகளெல்லாம் நீங்கள் புரிந்துகொள்வதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. விருப்பமுள்ள ஜனங்களை நீங்கள் காணும்போது, அவர்களை பாதுகாப்பின் பெட்டகத்துக்குள் வரும்படியும், தேவனுடைய குடும்பத்துக்குள் வரும்படியும், தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரரும் ஆகிய கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக்கும்படியும் வற்புறுத்துங்கள்.

### விடைபெறுதலுக்கான வார்த்தைகள்

நாம் இன்றைக்கு பிரியப்போகிறோம். நாம் மறுபடியும் ஒரு (கன்வென்ஷனில்) மாநாட்டில் சந்திப்போம் அல்லது மறுபடியும்

--2468--

சந்திக்காமலும் போகலாம் என்ற எண்ணத்தோடு நாம் பிரிகிறோம். நீங்களோ நானோ சர்வாதிகாரியாவதற்காக அல்ல இது. வேதாகமம் புற ஜாதியார்காலம் முடிவடைந்து விட்டது என்று கூறுகிறது. அவர்களது ராஜாக்கள் அவர்களது காலத்தை பெற்றிருந்தார்கள். அநேக காரியங்களில் அவர்கள் நல்லவைகளைச் செய்தார்கள். இவைகளில் அநேக அரசாங்கங்கள் ஆச்சரியமானவைகளை செய்திருக்கின்றன. ஜெர்மனி அரசாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஜெர்மனியின் தற்போதைய சக்கரவர்த்தி தனது நாட்டிற்கு ஆச்சரியமானவைகளை செய்திருக்கிறார். ஆனால் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னதாக அவர்கள் முட்டாள்தனமானவர்களாக இருந்தார்கள். இன்று (1915–இல்) அவர்கள் உலகில் எந்த பிரகாசமுள்ள ஜனங்களைக் காட்டிலும் மிகவும் பிரகாசமுள்ளவர்களாகவும், அறிவாளிகளாகவும் மிகவும் படித்தவர்களாகவும் இருக்கிறார்கள். இது அவர்களது இராணுவத்திற்கும் கொஞ்சம் தொடர்புடையதாக இருக்கிறது. இராணுவ ஒழுங்குகளை அவர்கள் கற்றுக் கொள்ளும் போது, படிப்பதிலும் எழுதுவதிலும் கணக்கிலும் பாடங்களை பெற்றுக்கொண்டார்கள். இந்த புறஜாதி ராஜ்யங்களுக்கு ஆதரவாக அநேக காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களால் முடிந்த உயர்ந்ததை செய்தாலும் அவையெல்லாம் மிக சொற்பமே. இந்த நாடுகள் மனுக்குலத்தை பூரணத்திற்கு உயர்த்த முடிந்ததா? இல்லை. அமெரிக்க ஐக்கிய நாடு இதை செய்ய முடிந்ததா? இல்லை. மாறாக, இந்த அறிவு பெருக்கதிலும் கூட அரசாங்க கலைப்புக்கான தூண்டுகோலும், அராஜகமுமே வருகிறது. இந்த துன்பங்கள் எல்லாம் நீதியின் சூரியன் உதிக்கும்போது வரும் ஆசீர்வாதங்களுக்கு ஒப்பிடும்போது ஒன்றுமில்லை. ஆனால் முதலாவது இந்த துன்பக் கோட்டை கடந்து போக வேண்டும். அகில உலகத்திற்கும் இந்த அனுபவங்கள் மிகவும் உதவிகரமானதாக இருக்கும். அவர்கள் கர்த்தரை அவர்களது ஆதரவாளராக நோக்குகிற இடத்திற்கு கொண்டுவரப்படுவார்கள். மனிதனின் உச்ச எல்லையே தேவனுடைய சந்தர்ப்பமாக ஆகிறது.

என் சகோதரரே, தேவன் நமக்கு கொடுத்திருக்கிற ஒளியினிடத்திற்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமாக." உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு" ஒவ்வொரு நாளும் நாம் உண்மையுடன் வாழ்வோமாக. பிரமாணத்தை அனுதினமும் வாசிப்பதினால் ஆசீர்வாதத்தை பெற்ற அநேகரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மற்றவர்கள் காலை தீர்மானத்தை வாசிப்பதினால் பெற்றிருக்கிறார்கள். உதவிகரமான செல்வாக்கினால் நாம் முழுவதுமாக சூழப்பெற்றிருக்க இயலாது என்று நான் நம்புகிறேன். பலப்படுத்துவது நமக்கு தேவைப்படுகிறது. உள்ளான மனிதனுக்குள் இருக்கும் தெய்வீக வல்லமையால் நம்மை நாமே பலப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன் மூலம் புது சிருஷ்டிக்கு எதிரானவைகளை தடுக்கக்கூடியவர்களாக இருக்க முடியும். இந்த தீர்மானங்களை கைக்கொண்டு இப்படியாக தேவனிடம் நெருங்கி வாழ நாம் நினைப்போமாக.

அன்பைப்பற்றி சமீபத்தில் காவற் கோபுரத்தில் வெளிவந்த கட்டுரையைப் பற்றி அநேகர் எழுதியிருந்தார்கள். ஒரு சகோதரன் எழுதினதாவது: "அந்த கட்டுரையை படித்ததி–ருந்து அதிக சாந்தமாகவும், அதிக தயவுள்ளவனாகவும், மற்றவர்களிடம் பரிவு காட்டுபவனாகவும் இருக்க முயற்சி செய்தேன். இந்த கொள்கைகளை அப்பியாசப்படுத்த முயற்சி செய்து பெரிய ஓர் ஆசீர்வாதத்தை நான் காண்கிறேன். நான் வார்த்தையிலும் கிரியையிலும் சாந்தமுள்ளவனாகவும் தயவுள்ளவனாகவும், தாழ்மையுள்ள வனாகவும் இருப்பது சுலபமாக இருப்பதாகக் காண்கிறேன்." கர்த்தர் இன்று தமது ஜனங்கள் தங்களது குணலட்சணங்களை முடிந்தவரை மெருகேற்றும்படி செய்கிறார். இதனிமித்தம் தேவன் தமது ஒழுங்கு நடவடிக்கை மூலமாக அவர்களை மெருகேற்றுவதற்கு அவசியமில்லாமல் போகிறது. நாம் நம்மையே மெருகேற்றிக் கொண்டோமானால், தேவன் நம்மை மெருகேற்றவேண்டிய தேவை இருக்காது.

ஆவியின் கிருபைகளை அணிந்து கொண்டவர்கள் அனைவரும் தேவனுடைய விசேஷித்த உதவியைப் பெறுகிறார்கள்; தேவனுடன் சேர்ந்து வேலை செய்கிறார்கள். (2 கொரிந்தியர் 6:11) ஏனெனில் இது தேவனுடைய வேலையாக இருக்கிறது. வேதாகமம் கூறுவதுபோல்," நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்." தேவனுடைய சிந்தமாக அவரது வசனத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளதை செய்வதற்காக அவர் விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். ஒரு பரிசுத்தமான வகுப்பாரை மனுக்குலத்தி–ருந்து பிரித்து எடுப்பதே தேவனுடைய தற்கால நோக்கமாக இருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் சுபாவத்திலும் அவரது எதிர்கால ராஜ்யத்திலும் பங்கு பெறுவார்கள். இவர்கள் மூலம் உலகம் ஆசீர்வதிக்கப்படும்.

நமது அலுவலகத்தில் "தீர்மான அட்டைகளும்," புத்தக பக்க அடையாள அட்டைகளும் இருப்பு உள்ளன. தீர்மானம் ஒரு பக்கத்திலும் அடுத்த பக்கத்தில் ஒரு சிறிய அழகான கவிதையும் உள்ளன. இந்த தீர்மான அட்டைகளை எடுத்துக் கொண்டவர்கள் நமது சபையின் மிகவும் ஆச்சரியமான ஜெபக்குழுவில் இருப்பவர்கள். கிட்டத்தட்ட 15000 பேர்கள் தங்களது பெயரை அனுப்பியிருக்கிறார்கள், நினைத்துப்பாருங்கள்! அதை எடுத்துக்கொண்டவர்கள் தொகை இருமடங்காக இருக்கும் என்று நாம் நம்புவதற்கு காரணமிருக்கிறது. எனினும் குறைந்தது 15000 பேர் ஒருவருக்கொருவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உலகின் எந்த பகுதிக்குச் சென்றாலும் அவர்களைக் காணலாம். அது சீனா, அல்லது ஜப்பான், அல்லது கொரியா அல்லது பனாமாவின் இஸ்த்முஸ், அல்லது ஸ்கான்டிநேவியா, அல்லது பின்லாந்து, அல்லது ரஷ்யாவாக இருக்கலாம். இந்த தீர்மானம் எடுத்தவர்களை நீங்கள் எங்கேயும் காணலாம். அவர்கள் அதை தினமும் வாசித்து, ஒருவருக்கொருவர் ஜெபத்தில் நினைவுகூருகிறார்கள். அனைத்து சபைகளின் சரித்திரத்தில் உலகில் மிகவும் ஆச்சரியமானவைகளில் ஒன்றாக இது இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதற்கு முன்னர் இவ்வளவு தேவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் ஜெபித்ததில்லை.

### மிகவும் ஆவலான ஒரு கடிதம்

நான் உங்களுக்கு வாசிப்பதற்கு ஒன்று இருக்கிறது. இது கடித்தின் மொழிபெயர்ப்பு. இது அமெரிக்காவிலுள்ள அடிமை சகோதரனுக்கு ஹங்கேரியி–ருந்து எழுதப்பட்டது. அது நமக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்தின் ஒரு பகுதி பின்வருமாறு:

"ஒரு ஹங்கேரிய வீரர் போரில் காயப்பட்டு வீட்டுக்கு திரும்பினார். அங்கே அவர் நமது சகோதரர்களால் சந்திக்கப்பட்டு, பின்னர் வேதாகம போதனை கொடுக்கப்பட்டு, கடைசியாக அவர் கர்த்தருடன் அர்ப்பணம் செய்து கொண்டார். இந்த அர்ப்பணம் கடந்த ஜனவரி மாதத்தில் நமது அன்பான சகோதரர் ஷேபோ (Szabo) வினால் செய்யப்பட்டது. சில நாட்களுக்கு பிறகு கலீசியாவின் யுத்த முனைக்கு செல்ல உத்திரவு வந்தது. ஒரு பீரங்கி அவரது தலையின் தொப்பியை எரித்து, தோண்டப்பட்ட மண் அவர் மேல் விழுந்தது. அவரது தோழர்களால் அவர் மண்ணி–ருந்து எடுக்கப்பட்டு மருத்துவமனைக்கு மறுபடியும் அனுப்பப்பட்டார். இது அவரை மறுபடியும் நமது மத்தியிலே கொண்டு வந்தது. ஆனால் அது குறுகிய காலம் மட்டுமே. தற்போது அவர் போர்முனைக்கு மறுபடியும் செல்ல வேண்டியிருந்தது.

--2469--

"இந்த தடவை அவர்கள் ரஷ்ய எல்லையின் 800 அடி தூரத்திற்குள் வந்தனர். எதிரிகளை துப்பாக்கி முனையிலுள்ள கத்தியால் குத்தும்படி கட்டளை வந்தது. ஹங்கேரியன் சகோதரர் இடப்பகுதியின் கடைசியில் இருந்தார். அவர் தன்னை ரஷ்ய எதிரியிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும்படி முயற்சித்துக் கொண்டிருந்தார். அதேபோல ரஷ்ய எதிரியும் கூட இதேபோல முயற்சி செய்து கொண்டிருந்தான். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிரியை குத்துவதற்கு பதிலாக ரஷ்ய வீரன் தனது ஆயுதத்தை கீழே விழவிட்டான்; அவன் அழுது கொண்டிருந்தான். அப்பொழுது நமது சகோதரர் அவரது எதிரியை மிகவும் அருகாமையில் பார்த்தார். அப்பொழுது அவனது உடுப்பில் சிலுவையும் கீரிடமும் உள்ள அடையாளத்தை பார்த்தார். அந்த ரஷ்யனும் கூட அதே போல் கண்டான். ரஷ்யன் கூட கர்த்தருக்குள் நமது சகோதரன். ஹங்கேரியன் சகோதரர் கூட தனது தொப்பியில் சிலுவையும் கிரீடமும் உள்ள அடையாளத்தை வைத்திருந்தார்.

"இரு சகோதரர்களும் கைகோர்த்துக் கொண்டு அப்பால் சென்றனர். அவர்களது சந்தோஷம் பொங்கி வழிந்தது. நமது பரம பிதா எதிரியின் களத்தில் கூட சந்திக்கும்படி அனுமதித்திருக்கிறார்! ஆனால் அவர்களது பேச்சை ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் செய்கையால் அவர்கள் சம்பாஷனை செய்து அவர்களது வேதாகமத்தை எடுத்தார்கள். ரஷ்ய சகோதரன் வேதாகம பாடத்தொகுப்பையும் பாடல் புத்தகத்தையும் தனது பையில் வைத்திருந்தார். இதெல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தது. சகோதரர் ரச-ன் படமும் அதில் இருந்தது. ரஷ்ய சகோதரனின் ஆயுதத்தை எடுத்து போர்க்கைதியாக அவரை கொடுத்தார். இப்போது அவர் ஹங்கேரியில் இருக்கிறார். ஹங்கேரிய சகோதரன் மூன்றாவது தடவையாக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு இப்போது அங்கே இருக்கிறார்."

தேவனுடைய பிள்ளைகளில் செல்வந்தரோ, பிரபுக்களோ அதிகம் இல்லாதிருந்தாலும், உண்மையை சொல்ல வேண்டி வரும்போது அதை மிகவும் சிறப்பாக சமாளிக்கிறார்கள்!

ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் ஐரோப்பா முழுவதிலும் உள்ள நமது ஜனங்கள் இந்த போர் வரப்போவதை பல ஆண்டுகளாக அறிந்திருந்தார்கள். தாங்கள் படைக்குள் சென்றாலோ அல்லது அனுப்பப்பட்டாலோ எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து என்னிடம் கேட்டுக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருந்தார்கள். ஆறாவது தொகுதியில் உயிரைக் கொல்ல தவிர்க்கும்படி நண்பர்களுக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் படையில் சேர்ந்திருந்தால் அவர்கள் போக வேண்டும். உணவுக்கு பொறுப்பாளராக உக்கிராண அதிகாரியாகவோ, மருத்துவமனை வேலைக்கோ அனுப்பப்பட்டால் நல்லது. அப்படிப்பட்ட வேலையை பெற முயற்சிக்க வேண்டும். கொல்லுகிற வேலையை எதிர்பார்க்காதிருந்தால் நல்லது. அவர்கள் துப்பாக்கியினால் சுட வேண்டியிருந்தால் அதை எதிரியின் தலைக்கு மேல் சுடலாம்.

இப்படியாகத்தான் இந்த சகோதரர்கள் செய்தார்கள். ஒவ்வொருவரும் இதே சிந்தையை கொண்டிருந்தனர். இந்த கடிதம் சகோதரர்களின் அன்பை, யுத்தகளத்திலும் எதிரியின் தேசத்திலும் மாம்சீக ஆயுதத்துடன் காண்பிக்கிறது. ஒருவர் ஹங்கேரியனாக இருந்தாலும், மற்றவர் ரஷ்யனாக இருந்தாலும் வேறுபாடு இல்லை!

பேர் சபைகளில் எவ்வளவு வேறுபாடுகள். இந்த போரில் பிரஸ்பட்டேரியன், மெதடிஸ்ட், ஆங்கி-க்கன், ரோமன் கத்தோ-க்கர்கள் மற்றும் பிறரும் யுத்தம் செய்கிறார்கள். பிரிட்டனில் திருமணம் செய்து குழந்தை பெற்று வளர்க்கிறவர்களுக்கு சலுகை அறிவித்தார்கள். ஏனெனில் எதிர்கால போருக்கு – "தேவனுடைய ராஜ்யத்திற்கான போருக்கு" - நாட்டுக்கு உதவுவார்கள். வேதாகமத்தி-ருந்து முற்றிலும் வேறுப்பட்ட கிறிஸ்தவத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள். கேண்டர்பரியின் ஆர்ச் பிஷப் (The Archbishop of Canterbury) தான் உத்தரவுகளை பிறப்பிப்பவர். இது தனது கடமை என்று எண்ணுகிறார். ஆனால் அவரது மனதில் கொஞ்சம் குழப்பம் இருக்கிறது.

**நமது காலங்கள் தேவனுடைய கரத்தி□ருக்கிறது**

இன்று இங்கே இருக்கிற நாம் மறுபடியும் மாம்சத்தில் சந்திப்போமா அல்லது சந்திக்கமாட்டோமா என்பதை நாம் அறியோம். இது என்ன செய்தியைக் கொடுக்கிறது? ஜீவிப்பதா, மரிப்பதா, தேவனுடைய கிருபை எதுவாக இருந்தாலும் நாம் முழுவதுமாக திருப்தியடைந்திருக்கிறோம். "என் காலங்கள் உமது கரத்தி-ருக்கிறது; என் தேவனே, எனது விருப்பம் அங்கே இருக்கிறது." இது அழகாக கூறுகிறது, இல்லையா? நமது மாறுதலுக்கான நேரத்தைத் குறித்த தேவனுடைய சித்தம் நம்மில் நிறைவேற விரும்புகிறோம். நாம் அனுதினமும் சேர்ந்து அனுபவிக்கிற, அனைத்தும் அவர் வாக்குக்கொடுத்தவைகள். நமது சித்தங்களெல்லாம் முற்றிலும் மரித்துவிட்டன. அவரது சித்தம் உங்கள் சரீரத்திலும் என் சரீரத்திலும் நம் அனைவரது சரீரத்திலும் ஆட்சி செய்கிறது. அன்பு சகோதரர்களே, இந்த மாநாடு மூலமாக ஒக்லேண்டு, சேன்ஃபிரான்சிங்கோ, அலமேடா மற்றும் சுற்றுப்புற சபைகளுக்கு பெரிய ஆசீர்வாதம் வந்திருக்கிறது என்று நம்புகிறேன். அவர்கள் சத்திய ஆறுதல் நிரம்பி வழிகிற இருதயத்தோடு வீட்டுக்குச் செல்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களை எடுத்துச் செல்வார்கள். அதாவது விதவையின் பானையில் எண்ணையை எடுக்க எடுக்க எண்ணெய் குறையாமல் இருந்ததுபோல.

இங்கே கர்த்தரின் கிருபையை அனுபவித்திருக்கிற நாம் அனைவரும், ஆவி நிறைந்தவர்களாக, கர்த்தரிடம அன்பும், விசுவாசமும் பக்தியும் நிறைந்தவர்களாக மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களை எடுத்துச் செல்கிறவர்களாக செல்வோமாக. நான் சீக்கிரத்தில் கடற்கரை வழியாக பிரிட்டிஷ் கொலம்பியா, பிறகு கிழக்குப்புறமாக பிரயாணம் செய்து கடைசியாக புரூக்-ன் வந்தடைந்து, ஜுலை 4ல் நியூயார்க் கோயி-ல் இருப்பேன். நமது ஜெபக்குழு நம்மை ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக இழுத்துக் கொள்ளட்டும். இப்படியாக நாம் சத்தியத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு தகுதியுள்ளவர்களாவோமாக."

-------------------------

--2470--

# கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன்

*(சகோதரர் ரசல் அவர்களால் நடத்தப்பட்டது)*

**Question meeting-Oakland Convention**

**(Conducted by Brother Russell)**

**கேள்வி:** சபையாகிய நாம் நமது முழு பங்கையும் அபிஷேகத்தில் உடனடியாக பெற்றுக் கொள்கிறோமா அல்லது படிப்படியாக பெற்றுக் கொள்கிறோமா?

**பதில் :** "ஆவியின் அபிஷேகம்" என்ற சொற்றொடர் "ஆவியினால் ஜெநிப்பித்தல்" என்ற சொற்றொடரிலிருந்து கொஞ்சம் மாறுப்பட்டது. "ஜெநிப்பித்தல்" என்பது உடனே நேரிடக்கூடிய வேலை. ஆனால் "அபிஷேகம் பண்ணுதல்" என்பது மிகவும் படிப்படியான ஒரு வேலை. நாம் கர்த்தருடைய குடும்பத்தில் நுழைந்ததிலிருந்து, கிறிஸ்துவின் குடும்பத்தில் நாம் ஒரு அங்கமாக அங்கீகரிக்கப் பட்டத்திலிருந்து இராஜரீக ஆசாரிய மகிமையான கூட்டத்தில் ஒரு இடத்தை பெறும்வரை நாம் அபிஷேகம் பண்ணப்படுதல் என்ற தொடர் செயல்முறையின் கீழ் இருக்கிறோம். சிலர் முழு அபிஷேகம் பெறுவதில் தோல்வியடைவார்கள் என்பதை நாம் அறிவோம். பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு அதை முறைப்படி பெற்றவர்களில் சிலர் முழுவதுமாக அபிஷேகம் பண்ணப்படுவதில் தோல்வியடைந்து, அதனிமித்தம் ராஜரீக ஆசாரிய வகுப்பில் இருப்பதிலும் தோல்வியடைவார்கள். அதற்கு பதிலாக அவர்கள் திரளான சேனையில் (திரள் கூட்டத்தில்) இடம் பெறுவார்கள். ஆகையால் "ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுதல்" என்பது பக்குவமடைதல், கனிவடைதல் போன்றவற்றை கிருபையிலும், அறிவிலும் வளருவதினால் பெறுவதாகும். ஜெனிப்பித்தலினால் தேவனுடைய குடும்பத்திற்குள் வருவது போலல்ல இது.

### பாத அங்கங்கள் ஒவ்வொருவராக மாறுதல் அடைதல்

**கேள்வி :** கிறிஸ்துவின் பாத அங்கங்கள் ஒரே சமயத்தில் மாறுதல் அடைவார்கள் என்பதைக் காட்டுகிற வேத வசனம் ஏதாவது இருக்கிறதா?

**பதில் :** இதற்கு மாறாக நாங்கள் நம்புகிறோம். அதாவது பாத அங்கங்கள் ஒரே சமயத்தில் மாறுதல் அடைவதற்கு பதிலாக, அது படிப்படியான ஒரு வேலையாக இருக்கும். இன்று இரவு ஒருவர் மறு ரூபமடையலாம். இன்னொருவர் நாளைக்கு ஆகலாம். எனினும் அவர்கள் மறுரூபமடைதல் ஒரே சமயத்தில் என்று எந்த பொருளில் சொல்லலாம் என்றால் இது எல்லாம் அறுவடை சமயத்தில், யுக முடிவில் நடக்கும். சிலருடைய மறுரூபமடைதல் அறுவடை காலத்தின் முடிவில் இருக்கும். ஒரு தனிப்பட்ட காரியம் போல ஒருவருக்குப் பின் இன்னொருவர் ஆக இருக்கும். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நாமெல்லோரும் நித்திரையடைவதில்லை; நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்." ஏனெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை." நமது மறுரூபமாக்கப்படுதல் என்பது "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே" நடக்கும். ஒரு தனிப்பட்ட நபருக்கு படிப்படியான மாற்றமாக இல்லாமல் ஒரு உடனடியான மறுரூபமடைதலாக இருக்கும். கடந்த கால பரிசுத்தவான்கள் நித்திரையில் இருந்தது போல அல்லாமல், நமது மரண நேரம் வரும்பொழுது உடடினயான மறுரூபமாக இருக்கும். சங்கீதக்காரன் தீர்க்கதரிசனமாக கூறுவதாவது; "நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்து போவீர்கள்." பொதுவாக மனுக்குலத்திற்கு மரணம் வருவதுபோலவே சபையினர் அனைவருக்கும் வரும் என்று இந்த வசனம் குறிப்பதாக நாம் புரிந்து கொள்கிறோம். நாம் புது சிருஷ்டி, ஆகையால், "மனுஷரைப் போல நாம் சாவோம்" என்ற சொற்றொடர் சொல்லப்படுகிறது. எல்லா மனிதரும் சாகிறது போல நாமும் சாவோம். பொதுவாக மனிதர்கள் கூட்டமாக மரிப்பதில்லை. ஆகவே நம்மில், அநேகர் ஒரே சமயத்தில் மரிக்க வேண்டும் என்கிற எண்ணம் விநோதமாக இருக்கிறது. நமது மரணத்திற்கும் மற்ற மனிதர்களின் மரணத்திற்கும் எந்த வித்தியாசத்தையும் உலகமானது காணாது.

### பிரதான ஆசாரியனால் செய்யப்படும் பாவ நிவாரணபலி

**கேள்வி:** சபையானது எந்த பாவத்திற்காக துன்பப்படும்?

**பதில்:** சபையின் அங்கங்களானவர்கள் வருத்தப்படாத, திருந்தாத எந்த மாம்சீக பாவத்திற்காகவும் துன்பப்படுவார்கள். நாம் நம்மை நாமே நிதானித்தால், நம்மை நாமே தண்டித்துக் கொண்டால், நாமே திருத்திக் கொண்டால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த காரியங்களை நாமே திறம்பட கவனித்தால் நாம் கர்த்தரால் தண்டிக்கப்பட வேண்டிய அவசியமிராது. நம்மை கையாளுவது அவசியம் என்று அவர் காணும்போது, உலகத்தோடு நாம் தண்டிக்கப்படமாட்டோம்.

அகில உலகமும் தண்டனைக்குள்ளான நிலைமையில் இருக்கிறது. தேவன், ஆவிக்குரிய சுபாவத்தில் நித்திய ஜீவனுக்காக நீதிமானாக்கப்படவிருக்கிற சிலரை தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் நம்மை கர்த்தர் தண்டிக்க

அவசியமிராது. ஆனால் நம்மை உற்சாகப்படுத்தி உதவி செய்வார். ஆகையால் நமக்கு சோதனைகளும் கஷ்டங்களும் இருக்காது என்று அர்த்தமல்ல. நம்மை நாமே தண்டித்துக் கொண்டால் நமது பாவங்களுக்காக நாம் தண்டிக்கப்படோம் என்றும் இந்த பாவங்கள் நமது பலவீனத்தினால் செய்யப்பட்டதும், தடுத்திருக்கக் கூடியதும், அதற்கு நாம் ஓரளவுக்கு பொறுப்புடையவர்களாயிருக்கிறோம் என்றும் அர்த்தமாகும்.

புது சிருஷ்டியாகிய நாம் வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்களாக இருக்கக்கூடாது. இப்படி ஒருவன் பாவம் செய்தால், இனி அவன் ஒரு புது சிருஷ்டியாக இருக்கமாட்டான். கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது போல அவன் இருப்பான். புது சிருஷ்டி எப்படிப்பட்ட பாவங்களுக்காக துன்பப்படுவான் என்றால், அவன் தடுக்கக்கூடியதும் சீர்ப்படுத்த தவறியதுமான பாவத்திற்காக தண்டிக்கப்படுவான். இந்த பாடுகள் அவனது கடமையை அறிவுறுத்தும். மேலும் அது அவனது நன்மைக்காக அவனை ஒழுங்குப்படுத்தும்.

ஆனால் இது கேள்வி கேட்டவரின் எண்ணமாக இல்லாதிருக்கலாம். பாவ நிவாரணத்திற்காக சபை செய்ய வேண்டியது என்ன என்பது அவரது எண்ணமாக இருக்கலாம். ஒரு சபை என்ற முறையில் பாவ நிவாரணத்திற்காக சபை செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. இந்த முழு காரியத்திற்கும் கர்த்தராகிய இயேசுவே பொறுப்பானவராயிருக்கிறார். நிழலில் உதவி ஆசாரியர்கள் பாவ நிவாரண பலியை செலுத்துவதில்லை, பிரதான ஆசாரியனே அதைச் செய்கிறார். ஆகையால் கர்த்தராகிய இயேசுவே தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தார். அவரது அங்கங்களாக நம்மையும் பலியாக ஒப்புக் கொடுத்தார். ஆனால் நமது விருப்பத்துக்கு மாறாக இதை செய்யமாட்டார். "கிறிஸ்துவின் பாடுகளிலும் அவைகளுக்கு பின்வரும் மகிமைகளிலும் நாம் பங்கு பெறும்படியாக, அவர் நம்மை அவரது அங்கமாக நம்மை பலியாக ஒப்புக் கொடுப்பார் என்று நாம் விரும்புகிறோம். நமது பலிகளுக்கு பரிசுத்தத்தைக் கொடுப்பது அவரது புண்ணியம் மட்டுமேயாகும்.

ஆகையால் முழு பொறுப்பும் நமது கர்த்தராகிய மகாபிரதான ஆசாரியரின் கைகளில் இருக்கிறது. அவரது அங்கங்களாக உலகின் பாவ நிவாரண பலியில் அவரோடு கூட பங்கு வகிக்கிறோம். அவரது பாடுகளாக எண்ணப்படுகிறதில் நாமும் பங்கு பெறுகிறோம். நீங்களும் நானும் நமது பாடுகளினால் பாவங்களுக்கு–நமது பாவங்களானாலும் சரி அல்லது மற்றவர்களது பாவங்களானாலும் சரி – நிவாரணம் செய்ய நம்மால் முடியாது.

## கிறிஸ்தவர்களின் பாடுகள் தெய்வீக மேற்பார்வையில் இருக்கிறது

**கேள்வி:** தற்கால சத்தியத்திற்குள் நாம் வருவதற்கு முன்னதாக நாம் அனுபவிக்கிற பாடுகள் கிறிஸ்தவனாக நமக்கு பயன் தருமா?

**பதில்:** கேள்வியை கேட்பவர் தனது மனதில் என்ன எண்ணங்கொண்டிருக்கிறார் என்பதை நான் அறியேன். அவர் முன்னரே கிறிஸ்தவனாக இருப்பதை குறிப்பிடுகிறதாக கேள்வி காணப்படுகிறது. இது அவரது எண்ணமாக இருந்தால், நாம் தற்கால சத்திய வெளிச்சத்தை பெறுவதற்கு முன்னர் நாம் கிறிஸ்தவனாக பெறுகிற பாடுகளை அவர் குறிப்பிடுகிறார். நான் "ஆம்" என்று சொல்லுவேன். ஒரு கிறிஸ்தவனின் அனைத்து பாடுகளும் தெய்வீக மேற்பார்வையில் இருக்கிறது. தற்கால சத்தியத்திற்கு வருவதற்கு முன்னதாக நம்மில் அநேகர், பாடுகள் மற்றும் துன்பங்களின் அனுபவத்தை பெற்றிருந்தோம். அது நம்மை மகா பெரிய ஆசீர்வாதத்துக்கும் சத்தியத்தை பெறுவதற்கும் நம்மை தயார்படுத்த கிரியை செய்தது. இதே போக்கில் தங்களது அனுபவங்களை எனக்கு கொடுத்திருக்கிற அநேகரை நான் அறிவேன். சத்தியத்தை படிக்க நேரம் கிடைக்காத அளவுக்கு அவர்கள் தங்களது வியாபாரத்தில் மூழ்கி இருந்தார்கள்.

உதாரணத்திற்கு, மளிகை வியாபாரத்தில் இருந்த ஒருவரை நான் அறிவேன். அவர் ஒரு கிறிஸ்தவர் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகளை வாங்கியிருந்தார். ஆனால் அதை படிக்க அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால் உலகில் பெரிய தொழில் கர்த்தரின் தொழில்தான் என்பதை அவர் உணரவில்லை. அந்த சமயத்திற்கு மளிகை வியாபாரம் பெரிய வியாபாரமாக அவருக்கு இருந்தது. அவரது கால் உடையும்படி தேவன் கிருயை செய்தார். அவரது கால் எலும்பு கூடும் வரை அவர் ஓய்வில் இருக்க வேண்டியிருந்தது. இந்த விடுமுறை அவரது வாழ்வில் மிகவும் நல்ல காலமாக இருந்ததென்று என்னிடம் பிறகு கூறினார். ஏனென்றால் ஆறு தொகுதிகளையும் அவர் படித்தார். அதற்கு முன்னதாக அவருக்கு நேரமே கிடைக்கவில்லை. அதன் பிறகு அவருக்கு எப்பொழுதும் நேரம் கிடைத்தது.

இதே போல ஒரு குறிப்பிட்ட சகோதரிக்கும் இப்படி நடந்தது. அந்த சகோதரி ஒரு நாள் என்னிடம் சொன்னதாவது; "கர்த்தர் என்னை ஏன் வாதநோயால் என் கைகளை முடமாக்கினார் என்று ஒரு தடவை வியந்திருக்கிறேன். நான் எப்பொழுதும் தைத்துக் கொண்டும், பின்னிக்கொண்டும் ஏதாவது செய்து கொண்டும் இருப்பேன். நீங்கள் இப்போது பார்ப்பது போல எனது கைகள் முடக்கு வாதத்தால் செயலிழந்தன. எனது கைகள் பிரயோஜனமில்லாமல் போய்விட்டன. கடைசியாக நான் மிகவும் முயற்சி செய்து ஒரு புத்தகத்தின் தாள்களை திருப்ப முடிந்தது. பிறகு கொஞ்சம் படித்த பிறகு தான் தேவன் என்னை படிக்கும்படி என் கைகளை முடக்கிவிட்டார் என்ற எண்ணம் வந்தது."

இப்படியான சில வழிகளில்தான் கர்த்தரின் பிள்ளைகளில் பலர் தற்கால சத்தியத்திற்குள் வரும்படி உதவி செய்யப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள். தேவன் தம்முடைய பிள்ளைகளை கையாளும் முறை ஒன்றை வைத்திருக்கிறார். நாம் அவருடையவர்களாயிருந்தால், அடுத்த காரியம் நமது சித்தத்தை முற்றிலுமாக அவரிடம் ஒப்புக் கொடுப்பதும் அவர் கொடுத்தவைகளை சந்தோஷமாக கடைபிடிப்பதுமாகும்.

**கேள்வி:** அரங்கத்தின் மேலாளர் தனது

2472

வழக்கமான படத்தை காண்பித்த பிறகு பட காட்சியை (Photo-Drama) காண்பித்தது பாபிலோனின் ஆவியை வெளிப்படுத்துகிறதா?

**பதில்:** அப்படி எனக்குத் தோன்றவில்லை. அப்படியானால் சில கெட்ட பேச்சுகளை கேட்ட பிறகு அவரிடம் சத்தியத்தைப்பற்றி பேசுவது தவறாக இருந்திருக்கும். இது ஒரு வட்டத்தில் நியாயப்படுத்துவதாக காணப்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனது சொந்த தீர்மானத்தின்படி செய்ய உரிமையுண்டு. நீங்கள் படகாட்சியின் வேலையிலிருந்தால் உங்கள் மனசாட்சி புண்படும்படி நீங்கள் எதுவும் செய்ய மாட்டீர்கள். என்னைப் பொறுத்தவரை எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் வழக்கமான காட்சிக்குப் பிறகு 5000 பேருக்கு பட காட்சியை காண்பிப்பது எனக்கு சந்தோஷமாக இருந்திருக்கும்.

## சரியான மற்றும் தவறான விளம்பரம்

**கேள்வி :** பட காட்சி அறிவிப்புகளுக்காக வியாபாரிகளிடம் விளம்பரத்திற்காக கோருவது பாபிலோனிய ஆவியை காண்பிக்கிறதா?

**பதில் :** “எங்களிடம் விளம்பரம் செய்து ஒரு நல்ல காரியத்துக்கு உதவி பண்ணுங்கள்” என்று ஒரு வியாபாரிடம் கேட்பது சரியாக இருக்காது. இது கர்த்தருக்காக பிச்சையெடுப்பது போல் இருக்கும். இதை நாம் செய்ய அங்கீகரிக்கப்படாத ஒன்றாக இருக்கிறது. நான் ஒரு வியாபாரியாக இருந்திருந்தால், பட நாடக அறிவிப்புகளில் விளம்பரம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால் இதுவரை நான் செய்ததிலேயே விளம்பரப்படுத்துவதிலேயே இதுதான் சிறந்த சந்தர்ப்பமாக இருந்திருக்கும் என்று எண்ணியிருப்பேன். நல்ல அனுகூலத்தை பெற்றதாக நான் நினைத்திருப்பேன். ஒன்று அல்லது இரண்டு டாலர்களில் எனது வியாபார அட்டைகளை சுற்றுப்புறங்களில் நான் விநியோகித்திருப்பேன். “நாடகத்தைப் பற்றிய இந்த சிறு பிரசுரம் மக்களின் கவனத்தை இழுத்திருக்கும். படங்களைப் பற்றிய குறிப்புகளை படிக்கும் போதே எனது வியாபாரத்தை பற்றியும் படிப்பார்கள்” என்று நான் சொல்வேன். எனது பணத்திற்கு நல்ல மதிப்பு கிடைத்தாக நான் நினைப்பேன். யாராவது ஒருவர் தனக்கு நல்ல மதிப்பு கிடைக்கவில்லை என்று நினைத்தால், அவரது விளம்பரத்தை போட வேண்டாம்.

விளம்பரம் செய்வதில் ஒருவர் மத அம்சங்களை குறிப்பிடக்கூடாது. நாம் இதை செய்யவே மாட்டோம். வியாபாரிகளைப் பொறுத்தவரை இது முற்றிலுமாக வியாபாரம் ஆகும். அவர்களது விருப்பப்படி அவர்கள் விளம்பரம் செய்து கொள்ளட்டும். நாம் **காவற் கோபுரத்தில்** விளம்பரத்தை அனுமதிக்காமல் இருப்பது, அப்படி செய்வது தவறு என்று அது குறிக்காது. வியாபாரிகள் தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்துதில் நான் தவறை ஏதும் காணவில்லை. நான் ஒரு தின செய்தித்தாளை வெளியிட்டால், அதில் ஞ்சம் பகுதியை விளம்பரத்திற்கு விற்கலாம்.

ஒரு செய்தித்தாளை சொந்தமாக வைத்திருக்கும் ஒரு சகோதரர், அவரது விளம்பரத்தைக் குறித்து என்னிடம் கொஞ்சம் பேசினார். அவரது அருகாமையில் உள்ள சில வியாபாரிகள் அவரது செய்தித்தாளில் விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் அவைகளில் சில சிறந்த விளம்பரங்கள் எல்லாம் புகையிலை மற்றும் மதுவைப்பற்றியதாகும். நான் எந்தவித மதுவைப்பற்றிய விளம்பரத்தையும் நான் போடமாட்டேன் என்று கூறிவிட்டேன். நான் ஒரு செய்தித்தாளை நடத்தினால் அதில், காலணி, துணிகள், அல்லது மளிகை அல்லது மற்ற பொருட்களை விளம்பரம் செய்வேன். செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதில் தவறேதுமில்லை. காவற்கோபுரத்தில் விளம்பரம் செய்யும் பொருட்கள் ஒவ்வொருவரும் விரும்பி வாங்கத் கூடியதாக இருந்தால், ஆறு அல்லது எட்டு பக்கங்கள் விளம்பரம் செய்வதில் தவறில்லை. ஆனால் காவற் கோபுரம் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் விசேஷித்தவிதமாக என்னை பிரதிநிதித்துவப்படுத்தி செல்வதால், எல்லா பக்கங்களிலும் மத கட்டுரைகள் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் விளம்பரம் தவறு என்பதால் அல்ல.

ஒரு தடவை காவற் கோபுரத்தில் அற்புத கோதுமை குறித்து போட்டியிருந்தோம். உங்களில் அநேகர் பார்த்தீர்கள். இந்த அறிவிப்பை வெளியிட்டது சரி என்று நாங்கள் நம்புகிறோம்.ஒரு தடவை ஒரு வகையான பீன்ஸ் மற்றும் விசேஷித்த பஞ்சைப் பற்றியும் அறிவிப்பு கொடுத்திருந்தோம். இந்த அறிவிப்புகளின் மூலம் அநேக நண்பர்கள் பலனடைந்தார்கள். சமீபத்தில் புற்றுநோய்க்கு தீர்வு குறித்து ஒரு அறிவிப்பு செய்திருந்தோம். நூற்றுக்கணக்கான கடிதங்கள் சத்திய நண்பர்களிடமிருந்தும் மற்ற நண்பர்களிடமிருந்தும் வந்தன. இன்னும் அநேகர் நல்ல பலனை அடைந்ததாக அறிவித்தனர். சிலர், இது சத்தியத்தை அறிவிக்க பிரயோஜனமாக இருந்தது என்று கூறினர். அவர்கள் பணத்தை பெறுவதற்காக நாம் இதை செய்யவில்லை என்பதையும், அவர்களது நன்மைக்காக செய்கிறோம் என்பதையும் அவர்கள் அறிந்து மிகவும் ஆவலாய் இருந்தார்கள்.

**கேள்வி:** புரூக்ளினில் உள்ள அகில உலக வேதமாணவர் ஐக்கிய சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து பிரகடனப்படுத்தப்பட்ட இந்த முறைமைகளை ஆழ்ந்து பரிசோதனை செய்யாமல் ஒத்துழைத்தால் அது பாபிலோனிய ஆவியை காண்பிக்கிறதா?

**பதில் :** இந்த காரியத்தில் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த முடிவை கடைபிடிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். யாராவது ஒருவர் மிகவும் மோசமாக “கொட்டப்பட்டால்” அவர் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர் கொட்டப்படவில்லை என்றால் அவர் அவ்வளவு பாதுகாப்பாக இருக்க வேண்டியதில்லை. இந்த காரியத்தில் உங்கள் சொந்த தீர்மானத்தை கடைபிடிப்பது முற்றிலும் நல்லதாக இருக்கும். புரூக்கிளினில் உள்ள தலைமை அலுவலகத்தைப் பொருத்தவரை எல்லாம் எனது மேற்பார்வையில் நடைபெறுகிறது. எனது மனசாட்சிக்கு மாறாக அங்கு எதுவும் நடப்பதில்லை. ஆனால் நீங்கள் உங்களது சொந்த மனசாட்சியைப் பயன்படுத்த வேண்டும். [illegible]களின்

அலுவலகத்தில் அநேக நேர்மையான தகுதிவாய்ந்த சகோதரர்கள், நான் உயிரோடு இருக்கும்வரை எனது மேற்பார்வையில் இருப்பார்கள். எனது சொத்தை சில ஆண்டுகளுக்கு முன்பாக சபை பேரில் மாற்றிய போது இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் நடந்து வரும் சபையின் வேலைகளுக்கும் இது பொருந்தும்.

## பாபிலோன் என்பதின் உண்மையான வரையறை

**கேள்வி:** அகில உலக வேதமாணவர் ஐக்கிய சபை எங்களால் புரிந்து கொள்ளமுடியாததும், அங்கீகரிக்க முடியாததுமான முறைமைகளை பிரகடனப்படுத்தினால் வெளி 18:4இல் சொல்லப்பட்ட “என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்” என்பதை அப்பியாசப்படுத்தலாமா? அப்படியானால் எப்படி செய்வது?

**பதில் :** அகில உலக வேதமாணவர் ஐக்கிய சபை பாபிலோனின் ஒரு பாகமாக காண்பிக்கப்பட்டால் நாம் அனைவரும் அதைவிட்டு வெளியேற வேண்டும். நாம் அனைவரும் ஒரே பக்கமாக வெளியேறினால், நாம் பிறகு எங்கே இருப்போம்? நாம் ஒரே பக்கமாக வெளியேறினால், நாம் அனைவரும் மிகவும் நெருங்கி இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

“பாபிலோன்” என்ற வார்த்தை “குழப்பம்” என்பதைக் குறிக்கிறது. வெளி 18:4 மனிதனுக்குரியவைகளையும் தேவனுக்குரியவைகளையும் கலக்குகிறதை காண்பிக்கிறதாக இருக்கிறது. ஒரு காலத்தில் ஐரோப்பா முழுவதும் ரோமன் கத்தோலிக்க சபையின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அந்த அரசாங்கங்களெல்லாம் கிறிஸ்தவத்தின் செல்வாக்கில் அதுவும் ரோமன் கத்தோலிக்க சபையின் செல்வாக்கில் இருந்தன.

ஒரு காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபை மட்டுமே உலகத்தில் இருந்தது என்பதை அழுத்திச் சொல்வது நல்லது. அதின் உள்ளும் புறம்பும் இருந்ததை ஜனங்கள் அறியாதிருந்தார்கள். இதைவிட்டால் வேறு எங்கு செல்வார்கள்? சபையை நடத்துகிற சபை அதிகாரிகள் ரோம அரசாங்கத்துடன் கூட்டு சேருவதில் வெற்றியடையும் ஒரு காலம் வந்தது. ரோம சபை அதன் வாரிசாக ஆனது. பிறகு ரோமாபுரி தேசங்களின் மேல் அதிகாரம் செலுத்தி “உங்கள் ராஜா எங்களுடன் இசைவாக இருக்கவில்லை. நீங்கள் வேறு ஒருவரை தேர்ந்தெடுங்கள்” என்று அந்த ஜனங்களிடம் கூறும்படி ஆனார்கள். பிறகு அங்கு ஒரு புரட்சி உண்டாகும். போப்புவும் ரோமன் கத்தோலிக்க சபையும் மாற்றங்களை ஆதரிப்பார்கள். இப்படியாகத்தான் இது ஆரம்பமானது. இப்படித்தான் பேர் சபைக்கும் உலகத்திற்கும் சட்ட விரோதமான உறவு உண்டானது.

அநேக ஐரோப்பிய நாடுகளில் அது இப்போது படிப்படியாக மாற்றப்பட்டுள்ளது. சில நாடுகளில் சபையும் தேசமும் முற்றிலுமாக பிரிந்தது. ஆனால் இந்த மாற்றம் ஆஸ்ட்ரோ–ஹங்கேரியில் நடைபெறவில்லை. அந்த ஜனங்கள் முற்றிலுமாக ரோமன் கத்தோலிக்க சபையின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள். சபையானது எல்லாவற்றிலும் பங்கெடுக்க வேண்டியிருந்தது. இங்கிலாந்து சபை, பார்லிமெண்டில் சபையின் பிரதிநிதியாக உட்கார்ந்தது. சபையின் பிஷப்புகள் பிரபுக்களின் சபையில் அங்கங்களாக இருக்கிறார்கள். ஜெர்மனி மற்றும் ஸ்வீடனில் இதே நிலைமைதான். அவர்களது அரசாங்கங்களும் தேவனுடைய ராஜ்யமும் ஒன்றாகவே மக்களின் மனதில் இருக்கிறது.

இந்த நிலைமையத்தான் தேவன் பாபிலோன் என்று அழைக்கிறார். கிறிஸ்துவின் சபை என்று அறிவித்தவர்கள் உலக ராஜ்யங்களோடு திருமணம் செய்து கொள்கிறார்கள். இவைகளெல்லாம் கிறிஸ்தவ ராஜ்யங்கள் என்று தவறாக அழைக்கப்படுகின்றன. அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. ஐரோப்பாவின் தற்கால நிலைமையை பாருங்கள். போரில் ஈடுபட்டிருக்கிற அரசாங்கங்களெல்லாம் கிறிஸ்துவின் ஆவியை வெளிப்படுத்துவதில்லை. இந்த எல்லா அரசாங்கங்களிலும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கங்கள் கிறிஸ்தவ அரசாங்கமல்ல. இந்த நிலைமைக்கு பேர் கிறிஸ்தவ சபை பொறுப்பாகிறது. தற்கால காரியங்கள் சரியானது என்று அவர்கள் நினைக்கிற அளவுக்கு அவர்களது மனது மாற்றப்பட்டுள்ளது. கிறிஸ்து ராஜ்யபாரம் பண்ணுகிறார் என்றும் பார்லிமெண்ட் பூமியில் தேவனை குறிக்கிறது என்றும் நினைக்கிறார்கள். இவை எல்லாவற்றிலும் இருந்து தேவன் நம்மை பிரித்திருக்கிறார்.

இன்னொரு வழியில் பாபிலோனின் ஆவி வெளிப்படுகிறது. உதாரணத்திற்கு புரட்டஸ்டண்ட் சபைகள்– மெதடிஸ்ட், பேப்டிஸ்ட், பிரஸ்பட்டேரியன் முதலியன. உலக ஆவியின்படி அவர்கள் சிந்திக்கிறார்கள். அவர்கள் பணக்காரர்களை கவனித்து, அவர்களுடன் கிரியை செய்து, அவர்களை சபையில் நல்ல அந்தஸ்தை பெறுகிறார்கள். இப்படியாக அவர்கள் தேவ ஆவியைவிட பணத்தை மேன்மையானதாக அங்கீகரிக்கிறார்கள். பெரும்பாலான வைகளில் பணம்தான் சபையை நடத்துகிறது. உண்மையான சபை நடத்துகிற அடிப்படை இதுவல்ல. அவர்கள் எல்லோரையும் இணைக்கிற ஒருமுறை இருக்கிறது. பேப்டிஸ்ட் சபையிலும், எல்லாரைக் காட்டிலும் மிகவும் தாராளமாக இருக்கிறது.

“எங்களுக்கு அடிமைத்தனம் கிடையாது. மத சம்பந்தமான கட்டுப்பாடும் இல்லை” என்று பேப்டிஸ்ட் சபையார் கூறுவார்கள். பாபிலோனிய ஆவி சபைக்குள் புகுந்திருப்பதை அவர்கள் உணரவில்லை. இங்கே ஒரு பேப்டிஸ்ட் சபை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு சபையாக தங்களது சபையின் ஊழியர்களை அழைத்து அவர்களது சொந்த காரியங்களில் கலந்து கொள்வார்கள். ஒரு குறிப்பிட்ட ஊழியர், உதாரணமாக சகோ. ‘அ’ என்பவர் அவர்களுக்கு ஊழியம் செய்ய அழைக்கப்படுகிறார். ஆனால் அவர் சபையால் அந்த சபையின் ஒரு பாஸ்டராக நியமனம் செய்யப்படவேண்டும். ஆகையால் அவர்கள் வேறு சில

பேப்டிஸ்ட் ஊழியர்களாகிய உதாரணத்திற்கு சகோ 'ஆ' மற்றும் சகோ 'இ' போன்றவர்களை சகோ'அ' என்பவரை நியமனம் செய்ய அனுப்புகிறார்கள். ஆனால் சகோ.'அ' என்பவர் நியமனம் செய்யப்படுவதற்கு மற்ற ஊழியர்களுடன் நிற்க மாட்டார். ஆகையால் அவர்கள் "நாங்கள் சகோ.'அ' என்பரை நியமனம் செய்ய மாட்டோம். ஏனெனில் அவர் ஒழுங்கற்றவராக இருக்கிறார் என்று கூறுகிறார்கள். அப்பொழுது சபையானது கேட்பது: "நீங்கள் சகோ. 'அ' வை நியமனம் செய்யமாட்டீர்களா?" அதற்கு அவர்கள், நாங்கள் சகோ. 'அ' வுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் நாங்கள் அவரை நியமனம் செய்யமாட்டோம் என்று கூறுகிறார்கள். இங்கே பாருங்கள், போதகர்கள் சில ஒழுங்குகளை பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஜனங்கள் அதை அறியாதிருக்கிறார்கள்.

போதகர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்று பேப்டிஸ்ட் சபை கூறும். ஆனால் போதகர்களுடைய சம்மதம் இல்லாமல் சபையானது எதையும் செய்யமுடியாது. அங்கே தேவன் கொடுக்காத அதிகாரத்தை போதகர்கள் வைத்திருக்கிறார்கள். சுவிசேஷத்தை போதிக்கும்படி ஒருவரை நியமனம் செய்யும்படி தேவன் இன்னொரு மனிதனுக்கு அனுமதியளிக்கவில்லை. தேவன்தான் நியமனம் செய்கிறவராயிருக்கிறார். யாரை தேவன் பாஸ்டராக நியமனம் செய்திருக்கிறார் அல்லது அழைத்திருக்கிறார் என்பதை சபைதான் முடிவு செய்ய வேண்டும். மனிதனால் செய்யப்படுகிற இந்த அனைத்து நியமனங்களும் பாபிலோனிய முறைமையாகும். ஜனங்களை நடத்துவதற்கு இது ஒரு சாதனமாகும். இது ஒரு அரசியலைப் போல நடைபெறுகிறது.

எனினும் புராதன நம்பிக்கைகளையுடைய அனைத்து சபை பிரிவுகளிலும் இந்த பேப்டிஸ்ட் சபைதான் சுதந்திரமாக இருக்கிறது. மெதடிஸ்ட் சபையில் ஜனங்களுக்கு பணத்தை கொடுப்பதை தவிர எந்தவித சுதந்திரமும் கிடையாது. இதுதான் அவர்கள் அனுபவிக்கிற சுதந்திரம். தலைமையான மூப்பர்களின் ஒத்துழைப்புடன் பிஷப்புகள்தான் ஆளுகிறார்கள். ஒவ்வொரு வருடாந்திர மாநாட்டிலும் தலைமை தாங்கும் மூப்பரும் பிஷப்பும்தான் எந்த ஊழியர் எங்கே இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். தலைமை தாங்கும் மூப்பருடன் நிற்காத ஊழியர்கள், 400 டாலர் மட்டுமே சம்பளம் தருகிற கிராம புறங்களுக்கு அனுப்பபடுவார்கள். ஆனால் அவருடன் நிற்கிற மற்ற ஊழியர்கள் 1000 டாலர் அல்லது அதற்கு மேல் சம்பளம் தருகிற இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள். அநேக மெதடிஸ்ட் ஊழியர்கள் இதை என்னிடம் கூறியிருக்கிறார்கள். அது குறித்து அவர்கள் முறையிடுகிறார்கள். வேறு வேலை செய்யவும் விருப்பமில்லாமல் இருக்கிறார்கள். இது கிறிஸ்து அளித்த சுயாதீனம் அல்ல. இது ஒரு முறைமை என்று நான் உணருகிறேன். இது என்ன முறைமை என்று காண்பிக்கிறேன். பிஷப்புகள் தலைமையான மூப்பர்களை மேற்பார்வையிடுகிறார்கள். அவர்களுக்கு கீழாக இருந்து கொண்டு மூப்பர்கள் ஊழியர்களை மேற்பார்வை யிடுகிறார்கள். அவர்களுக்கு கீழ் சபை தலைவர்கள் அவர்களுக்கிடைய தலைவர் அல்லது தலைமையதிகாரி இருக்கிறார்கள். அவர்களுக்கு மானிட தலைவர் உண்டு. பொது மாநாடுதான் உயர்தர அதிகாரம் உடையது.

ஆகையால் பிரஸ்பட்டேரியன் சபை பொது கூடுகை மூலமாக தலைவரை பெற்றிருக்கிறது. அதுதான் காரியங்களை தீர்மானம் செய்யும். இவையெல்லாம் உலகப் பிரகாரமான முறைமைகள்தான். கிறிஸ்துவின் எளிமையானது அகில உலக வேதமாணவ நண்பர்களைத் தவிர பொதுவாக வேறு எங்கேயும் கடைபிடிக்கப்படுவதில்லை. அங்கே இது பொதுவானதாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தை அங்கே கடைபிடிக்கப்படுகிறது. எளிமை எல்லாரிடமும் காணப்படுகிறதாக இருக்கிறது.

ஒரு சமயத்தில் சீர்திருத்த சபையின் ஊழியர் ஒருவரால் நான் அழைக்கப்பட்டேன், எனது சபையை நான் எப்படி நடத்துகிறேன் என்பதை அறிய விரும்பினார். "சகோதரரே எனக்கு சபையே இல்லை" என்று கூறினேன். "நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். ஒரே ஒரு சபைதான் உண்டு என்று நாங்கள் கூறுகிறோம். நீங்கள் அந்த சபையின் அங்கமாக இருந்தால், நீங்கள் எங்கள் சபையை சேர்ந்தவராவீர்" என்று பதிலளித்தேன். அவர் ஆச்சரியத்துடன் என்னை பார்த்தார். பிறகு அவர் கேட்டதாவது: "உங்களுக்கு ஒரு அமைப்பு இருக்கிறது. அதில் எத்தனை அங்கங்கள் இருக்கிறார்கள்." நான் சொன்னேன், "என்னால் சொல்ல இயலாது. அங்கத்தினர் பெயர் பட்டியல் எதையும் நாங்கள் வைத்திருப்பதில்லை." "நீங்கள் பெயர்ப்பட்டியல் எதுவும் வைத்திருப்பதில்லையா?" இல்லை, நாங்கள் எந்த பெயர் பட்டியலும் வைத்திருப்பதில்லை. அவர்களது நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளது." "நீங்கள் எப்படி தேர்தல் நடத்துவீர்கள்" என்று அவர் கேட்டார். "நாங்கள் தேர்தலை அறிவிப்போம். அர்ப்பணம் செய்தவர்கள், அதில் பழக்கமுடையவர்கள் தங்களது சபைக்கு யார் தேவனால் மூப்பராகவும். உதவிக்காரர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்துவார்கள் என்று கூறினேன். "நல்லது, இது மிகவும் எளிமையானது" என்று அவர் கூறினார். மேலும் நான் கூறினதாவது: "நாங்கள் சம்பளம் ஏதும் தருவதில்லை. ஜனங்கள் சண்டை போடுவதற்கு அங்கு ஏதுமில்லை. நாங்கள் நிதி திரட்டுவதில்லை." "எப்படி நீங்கள் பணத்தை பெறுகிறீர்கள்" என்று கேட்டார். நான் கூறின பதிலானது: "நான் சாதாரண ஒரு உண்மையைச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். எந்தவித அழுத்தமும் அவர்களுக்கு கொடுப்பதில்லை. ஆனால் செலவுகள் உண்டு என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் இப்படியாக தங்களுக்குதானே கூறிக்கொள்வார்கள்; 'இந்த கூடத்திற்கு (Hall) கொஞ்சம் செலவாகும். கூடுகைகளுக்கிடையே தூரத்திலிருந்து வருகிறவர்களுக்கு இலவச சாப்பாடு கொடுக்கப்படுகிறது. எப்படியாவது இதற்கு நான் கொஞ்சம் பணம் கொடுக்கவேண்டும்" என்று கூறினேன். "என்னை என்ன ஏமாளி என்று நினைத்தீர்களா " என்று கேட்பதுபோல் என்னை பார்த்தார். நான் கூறினேன், "நான்

-2475-

உங்களுக்கு உண்மையைத்தான் கூறுகிறேன். "இதற்கான ஒரு சிறிய தொகையை எப்படி கொடுக்கவேண்டும்" என்று என்னிடம் அவர்கள் கேட்பார்கள். ஒருவருக்கு ஏதாவது ஒரு வழியில் பணம் கிடைத்தால் அதை கர்த்தருக்கென்று பயன்படுத்த விரும்புகிறார். அவருக்கு எந்த வழியும் இல்லை என்றால், நாம் ஏன் அவரை தார் குச்சியால் குத்த வேண்டும்?

ஒரு அமைப்பாக, ஒரு அகில உலக அமைப்பாக இருந்தால் எதுவும் வராது. நீங்கள் உள்ளே புகாத எதிலிருந்தும் நீங்கள் எதையும் பெறமுடியாது. காவற் கோபுர வேதாகமம் மற்றும் கைப்பிரதி கழகத்தில் இருப்பதின் மூலம் ஒருவர் எப்படி பாபிலோனுக்குள் சென்று எப்படி வெளியே குதித்தார் என்பதை எனக்கு காண்பித்தால் நானும் அவரோடு கூட குதிப்பேன்.

### இஸ்ரயேலின் ஆசாரியர்கள் நிழலாக மரித்தார்கள்

**கேள்வி:** எபிரேயர் 9:27 ஐ தயவு செய்து விளக்கவும், "ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது."

**பதில்:** இது வேதாகம பாடங்களில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. இங்கே இதை விளக்குவதில் அதிக நேரம் எடுக்கும். இதை மூன்று அல்லது ஐந்து நிமிடங்களில் விளக்குவது மிகவும் கஷ்டம். ஏனெனில் மக்களது தலைமையில் எல்லாம் ஒழுங்கீனமாகவும் தலை கீழாகவும் இருக்கிறது. இது ஜனங்கள் மரிக்கிற நேரத்தைக் குறிக்கிறது என்று அவர்கள் எல்லாம் நினைக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அவரது அறிக்கையில் நிழல் பொருள் பற்றி ஒரு பாடத்தை கொடுக்கிறார். அவர் யூத ஆசாரியர்களின் ஒவ்வொரு வருட வேலையையும் கிறிஸ்துவின் வேலையையும் ஒப்பிடுகிறார். இந்த பூமிக்குரிய ஆசாரியர்கள் எப்படி பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் அதன்பிறகு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் சென்றார்கள் என்பதையும் கூறுகிறார். ஆசாரியன் முதலாவது காளையின் இரத்தத்தையும் பிறகு ஆட்டுக்கடாவின் இரத்தத்தையும் எடுத்துச் சென்றான். அவன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான். தூபத்தின் புகை இரண்டாவது திரை மூலமாக சென்று கிருபாசனத்தை நிரப்பிய பிறகு அவன் பரலோகத்தை குறிக்கிற மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றான்.

நிஜத்தில் நமது கர்த்தராகிய இயேசு தம்மையே காளையாக பலி கொடுத்தார். காளையானது இயேசுவை ஒரு மனுஷனாக குறிப்பிடுகிறது. ஆட்டுக்கடாவானது சபையின் மாம்சீக நிலையை குறிப்பிட்டது. பிரதான ஆசாரியன் காளையை கொன்றது போல ஞானஸ்நானத்தில் இயேசு தமது மாம்சீகத்தை பலியாக ஒப்புக் கொடுத்தார். நிழலான ஆசாரியன், தனது இரண்டு கைகள் நிறைய தூபத்தை எடுத்து தூப கலசத்தில் உள்ள நெருப்பில் போட்டான். இது நமது கர்த்தரின் மூன்றரை வருட ஊழியத்தை குறிப்பிட்டது. தூபமானது தூப கலச நெருப்பில் விழுந்தது, இயேசுவின் மகிமையான குணங்கள் வாழ்க்கையின் சோதனைகளோடு தொடர்பானதை குறிப்பிட்டது. ஒவ்வொரு காரியத்திலும் அவரது உண்மைத்தன்மை ஒரு நல்ல சுகந்த வாசனையை கொடுத்தது.

சாத்தான் அவரை சோதிக்க வந்த பொழுது அவரது விசுவாசம் நல்ல ஒரு சுகந்த வாசனையான காணிக்கையாக தேவனுக்கு இருந்தது. அவர் கொடுக்க ஏற்றுக் கொண்டிருந்ததை மறுக்கும்படி அவருக்கு யோசனை தரப்பட்டபொழுது, அவர் சோதனையை அவரை விட்டு நீக்கி அதை ஒன்றும் செய்யமுடியாதபடி செய்தார். "என் பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" என்பதே அவரது மனோநிலையாக இருந்தது. சுகந்த வாசனையானது அவருக்கு முன்னே, அவரது ஓட்டத்தை கல்வாரியில் முடிக்கும் முன்னே, தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றியது. சிலுவையில் அவரது மரணம் நிஜத்தில் நெருப்பில் விழுந்த கடைசி துணுக்கான தூபமாக இருந்தது. பிறகு நமது பிரதான ஆசாரியர் திரைக்கு கீழாக மரணத்துக்குள் சென்றார். அவர் கொஞ்சம் குறைய மூன்று நாட்கள் திரைக்கு கீழாக இருந்து, மூன்றாம் நாள் திரைக்கு அப்பால் எழும்பினார். இதுதான் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாக இருந்தது. அவர் ஆவியின் ஜீவியாக ஆவியின் சுபாவத்தில் எழுந்தார். பிறகு நாற்பது நாட்கள் கழித்து, சபையின் சார்பாக பாவ நிவாரண இரத்தத்தை பரலோகத்தில், மகா பரிசுத்த ஸ்தலத்தின் கிருபாசனத்தின் மேல் தெளித்தார்.

யூத ஆசாரியன் நிழலில் செய்ததற்கு ஒத்த காரியங்களை சபையானது செய்யக் காணும்படி இங்கே அப்போஸ்தலர் முயற்சி செய்கிறார். யூத பிரதான ஆசாரியன் ஆசரிப்பு கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இரத்தமில்லாமல் பிரவேசிக்கவில்லை, அந்த இரத்தம் எல்லா விதத்திலும் பிரதான ஆசாரியனுடைய இரத்தத்தை, ஜீவனை குறித்தது, ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் பாவ நிவாரண நாளில் திரையின் கீழாக நுழையும் போது மரணத்திற்கேதுவான ஆபத்தில் இருந்தான். அவன் கர்த்தரின் தேவைக்கிசைவாக காரியங்களை சரியாக செய்யவில்லை என்றால் அவன் திரைக்கு கீழாக நுழைய முயற்சிக்கும் போது மரித்துவிடுவான். அதேபோல இயேசு பிதாவின் சித்தத்தை சரியாக நிறைவேற்றவில்லை என்றால் அவர் மரணத்திற்குள் செல்ல வேண்டியிருந்திருக்கும்.

பிறகு அப்போஸ்தலர் அறிவிக்கிறதாவது: "ஒரே தரம் மரிப்பதும் (நிழலாக திரைக்கு கீழாக செல்வது) பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு (மானிட ஆசாரியருக்கு) நியமிக்கப்பட்டிருக்கிறது." காளையின் பலியிலும் அதன் இரத்தத்தை திரையின் கீழாக எடுத்துச் செல்வதிலும் அவர்களது மரணத்தை நிழலாக காண்பிக்கிறார்கள். காளை ஆசாரியனைக் குறித்தது. அவன் காளையை பலியிட்ட பிறகு அதன் இரத்தத்துடன் அவன் இரண்டாவது திரையை கடந்து சென்றான். "**மரண தீர்ப்பிற்கு பிறகு.**" இங்கே மனுக்குலத்தின் மரணத்தை இது குறிக்கவில்லை. பலி செலுத்துகிற இந்த ஆசாரியர்களின் மரணத்தைத்தான குறிக்கிறது. இயேசு மரித்து, இரண்டாம் திரையின் வழியாக சென்றார். அவர் மூன்றாம் நாளில் எழுப்பப்பட்டார். நிழலில் பிரதான ஆசாரியன் இரண்டாவது திரையின் வழியாக சென்று

**-2476-**

கிருபாசனத்தின்மேல் இரத்தத்தை தெளித்து, பிறகு வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதித்தான்.

நமது கர்த்தராகிய இயேசு, மகா பிரதான ஆசாரியர், ஜனங்களை ஆசீர்வாதிக்கும்படி இன்னும் வெளியே வரவில்லை. நிஜம் என்பது ஒரு நீண்ட காலப்பகுதியாக இருக்கிறது. இயேசு திரையின் கீழாக பரலோக பரிசுத்த ஸ்தலத்திற்கு பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு சென்றார். அவர் இன்றும் உலகத்தை ஆசீர்வதிக்கும்படி தோன்றவில்லை, ஆனால், “அவர் தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.” இதுதான் இந்த குறைந்த நேரத்தில் இந்த கேள்விக்கு கொடுக்க முடிந்த விளக்கமாகும்.

**கேள்வி:** தெய்வீக சுபாவத்தை அடைவது என்பது ஆதியிலே மனிதன் சிருஷ்டிக்கப்படும்போது பெற்றிருந்த தேவ சாயலை அர்த்தப்படுத்துகிறதா**?** இதிலே சுபாவம் என்பது குணநலத்தையோ அல்லது பண்பையோ குறிக்காதா**?**

**பதில்:** குறிக்காது, மனிதன் தெய்வீக சுபாவத்தை பெறவேயில்லை. அப்போஸ்தலர் பவுல் சுபாவத்தைப் பற்றிய இந்த பாடத்தை உயர்த்தெழுதலுடன் இணைத்து விவாதிக்கும் போது, மீனின் மாம்சம் வேறே, மிருகங்களின் மாம்சம் வேறே, பறவைகளின் மாம்சம் வேறே மற்றும் மனிதனின் மாம்சம் வேறே என்று கூறுகிறார். பறவை பெற்றிருக்கிற அதே மாம்சத்தை மீன் பெற்றிருக்கவில்லை. வித்தியாசங்களை நாம் அனைவரும் அறிவோம். மீனின் மாம்சமும், பறவைகளின் மாம்சமும், மிருகங்களின் மாம்சமும் வெவ்வேறானவை.

பூமிக்குரிய ஜீவராசிகளிலேயே மனிதன்தான் உயர்ந்த நிலையில் இருக்கிறான். அப்போஸ்தலர் இன்னும் மேலான சுபாவங்கள் இருப்பதைப்பற்றி நமது கவனத்தை இழுக்கிறார். அவர் இன்னொரு சுபாவத்திற்கான நமது கவனத்தை இழுக்கிறார். மனிதன் பூமிக்குரிய ஜீவராசிகளிலேயே உயர்ந்தவன் என்றும், ஆவிக்குரிய ஜீவராசிகளுக்கு கீழானவன் என்றும் காண்பிக்கிறார். அவர் தேவதூதர்களைப்பற்றியும், வல்லமைகள், கர்த்தத்துவங்கள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலான சுபாவமாகிய தெய்வீக சுபாவத்தைக் குறித்தும் நமக்கு கூறுகிறார். தேவனுடைய மாம்சீக வெளிப்பாடுதான் பரிபூரண மனிதன். இது தெய்வீக சாயலுக்கு மிகவும் நெருங்கியிருக்கிற மாம்சீக சுபாவம். ஒரு மானிட ஜீவி முடிந்தவரை தெய்வீக சுபாவத்தை குறித்துக் காட்ட கூடியதாக இருக்கிறது. தேவதூதர்கள் கூட தேவசாயலில் அல்லது ரூபத்தில் இருக்கிறார்கள். கேருபீன்களும் சேராபீன்களும் மனித சுபாவத்தைக் காட்டிலும் மேலாக இருந்தாலும் தேவ சாயலிலும் ரூபத்திலும் இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலானது தெய்வீக சுபாவம். ஆரம்பத்தில் தேவன் மட்டுமே இதை பெற்றிருந்தார். பிறகு இயேசுவுக்கு அவரது உயிர்த்தெழுதலில் அவரது உண்மைத்தன்மைக்கு வெகுமதியாக இந்த தெய்வீக சுபாவத்தை அருளிச் செய்தார். இயேசு மனிதனாகும் முன்பு இந்த சுபாவத்தை பெற்றிருக்கவில்லை. தேவன் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருப்பது போல இயேசுவும் தம்மில் தாமே ஜீவனுடையவரானார். அதாவது உணவு, நீர், ஆகியவைகளை சார்ந்திராத ஜீவன், “குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்.” இப்படிப்பட்ட ஜீவனை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. ஜீவனை தக்க வைத்துக் கொள்வதற்கு எதுவும் அவசியமில்லாத ஜீவனை எப்படி தேவன் கொடுக்க முடிந்தது என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை நீங்கள் பெற்றிருந்ததில்லை. நானும் பெற்றதில்லை. தேவனை முழுமையாக புரிந்துகொள்ளும்படியாக நாம் அவரைப் போலாவோம்.

நாம் பற்றிக்கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை இங்கே பார்க்கிறோம். புரிந்து கொள்ளுதல் என்பது முழுமையாக எடுத்துக் கொள்ளுதல் ஆகும். பற்றிக் கொள்வது என்பது தொடுதல் அல்லது பிடித்தல், நீங்களும் நானும் தேவனை பற்றிக் கொள்ளலாம் தெளிவாக அல்ல. ஏனெனில் நாம் மிகவும் சிறியவர்கள், அவர் மகா பெரியவர். தேவனை முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. நாம் தொட்டுப் பார்க்கலாம் அல்லது பற்றிக் கொள்ளலாம்.

அப்போஸ்தலர் இந்த காரியத்தைக் குறித்து அதிகமாக பேசினார். தேவன் அவரை தொட்டதால் அல்லது பற்றிக் கொண்டதால், அவர் தேவனை தொட்டுக் கொண்டிருந்தார் அல்லது பற்றிக் கொண்டிருந்தார். தேவனிடம் நாம் தொடர்பு கொள்ளாமல் சொல்கிறதாவது: “நமது தேவனாக நாம் அவரைப் பெற்றிருப்போம்.” அவர் நம்மை பற்றிக் கொண்டு நமக்கான அவரது ஏற்பாடுகளைப் பற்றி கூறினார். நாமும் அதற்கு பதிலளிக்கிறவர்களாக இருந்தோம். இப்படியாக நம்மை கவனிக்கிற அளவுக்கு அவர் அக்கறையுள்ளவராயிருந்தது பற்றி நாம் ஆச்சரியப்பட்டோம். தேவன் நம்மை பற்றிக் கொண்டபடியால் நாமும் அவரைப் பற்றிக் கொள்ளும்படி தேடுகிறோம். மனிதன் தெய்வீக சுபாவத்தில் அல்ல தேவ சாயலில் தான் படைக்கப்பட்டான். இந்த தெய்வீக சுபாவம் என்பது கேருபீன்கள் மற்றும் சேராபீன்களைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த சுபாவம். மனிதன் சாதாரண தேவதூதர்களுக்கு சற்று கீழாக இருக்கிறான்.

**கேள்வி:** வெளிப்படுத்தின விசேஷம் 7:9–17 வசனம் திரளான கூட்டத்தைக் காட்டிலும் இரட்சிக்கப்பட்ட மனுக்குலத்துக்கு பொருத்துவது சரியாக இருக்காதா**?** ஆவியின் சுபாவத்தில் திரள் கூட்டம் ஒன்று இருக்கும் என்றும், பரம அழைப்பையும் அதற்கான அர்ப்பணிப்பையும் முழுமையாக மதிக்காமல் இருந்தும் இரட்சிப்படுவார்கள் என்று போதிப்பது மிகவும் ஆபத்தானதில்லையா**?**

**பதில்:** அப்படி நினைத்துக் கொண்டு போதிக்காமல் இருப்பது தான் மிகவும் ஆபத்தானதாக இருக்கும். கேள்வி கேட்பவர் இந்த பாடத்தை புரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவாக காணப்படுகிறது. பதிலை சுருக்குகிறது. “சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாக சொல்வானாக.” (எரே 23:28) நாம் சாகும் வரை நாம் பெற்றுள்ள சலுகை இது இல்லையா**?** **--2477--**

## “அது நிச்சயமாய் வரும்; அது தாமதிப்பதில்லை”

**கேள்வி:** ஆபகூக் 2:3 வசனத்தின் பொருளென்ன? “குறித்த காலத்துக்கு தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.”

**பதில் : காவற்கோபுரத்தின்** ஒவ்வொரு பதிப்பின் முதல் பக்கத்தில் இது விளக்கப்பட்டிருக்கிறது. தேவன் தமது வசனத்தில் ஒரு பெரும் காட்சியை, ஒரு பெரிய வெளிப்படுத்தலை கொடுத்திருக்கிறார். சொல்லப்போனால் அது ஒரு காட்சி. அவரது திட்டத்தின் படக்காட்சியை தமது தீர்க்கதரிசிகள் மூலமாகவும் பிரமாணங்கள் மூலமாகவும் கொடுத்திருக்கிறார். யூபிலியானது அகில உலகத்திற்கான திரும்பக் கொடுத்தலை முன் குறித்தது. நியாயப் பிரமாணத்தின் மற்ற அம்சங்களை பாவ நிவாரண பலிகள் முதலானவை தேவனுடைய திட்டத்தின் மற்ற அம்சங்களை படம்பிடித்து காண்பிக்கின்றன. பஸ்கா இன்னும் வேறு அம்சங்களை குறிக்கிறது. இந்த படங்களெல்லாம் பெரிய ஒரு படமாக இணைந்து உலகத்தை ஆசீர்வதிக்கிற தேவனுடைய மகா திட்டத்தை காண்பிக்கிறது. “உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” என்று தேவன் ஆபிரகாமிடம் அறிவித்தார். இவைகளெல்லாம் சேர்ந்து தேவன் தமது ஜனங்களுக்கு கொடுக்க தீர்மானித்திருந்த பெரிய காட்சியை அல்லது படத்தை கொடுத்தன.

தேவனுடைய சிந்தையை நாம் பெறுகிற அளவுக்கு இவைகளெல்லாம் எதை குறிப்பிடுகிறது என்று தெளிவாக புரிந்து கொள்ளலாம். இந்த காட்சியில் முக்கிய பகுதி மேசியா வருவார் என்பதும் தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதுமாகும். இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் அந்த மாபெரும் காட்சியின் பகுதியாகும். இவையனைத்தின் நிறைவேறுதல்கள் தாமதமாகிறதாக காணப்படுகிறது. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த அந்த வாக்குத்தத்தத்தை மறந்துவிட்டதுபோல காணப்படுகிறதா? தீர்க்கதரிசி கேட்பது போல் காணப்படுகிறது. தேவன் அதை சில சமயங்களில் மறந்துவிட்டதாக காணப்படுகிறது. “ஆனால்” தீர்க்கதரிசி கூறுகிறார்,“அது நிச்சயம் வரும், அது தாமதிப்பதில்லை.” உண்மையிலேயே அது தாமதிப்பதில்லை. நாம் காண்பதைக் காட்டிலும் காண எதிர்பார்க்கும்போது வெவ்வேறு காலங்கள் இருக்கும். இதற்கு முன்னதாக உலகத்தின் மீது அநேக உபத்திரவங்களை காண நாம் எதிர்பார்த்திருப்போம். 1915–ஆம் வருடம் பாதிக்குமேல் ஓடிவிட்டது. இந்த வருடத்தில் நாம் எதிர்பார்த்திருந்த அனைத்தையும் நாம் காண்போம் என்பது மிகவும் சந்தேகமாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தரிசனத்தின் நிறைவேறுதலை துரிதப்படுத்த நாம் முயற்சிப்பது போன்று இது காணப்படுகிறது.

ஆனால் தரிசனத்திற்கான குறித்த காலம் இன்னும் இருக்கிறது. அதை நாம் விட்டுவிடவும் கூடாது. தேவனுடைய ஏற்பாடுகளில் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். ஒவ்வொன்றும் அக்டோபர் 1914 லேயே நின்றுவிடச் செய்வது தேவனுடைய வழியல்ல. இப்பொழுதிலிருந்து அக்டோபர் 1915 வரை எவ்வளவு நடக்கும் என்பது எனக்குத் தெரியாது. இப்பொழுதிலிருந்து அக்டோபர் 1915 வரை நடக்கும் என்று நான் யூகிப்பதில் எவ்வளவு நடக்கும் என்று சொல்ல முடியாது. தேவையானால் அக்டோபர் 1915க்கு மேலும் நானும் அவர்களும் காத்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். தரிசனம் நிச்சயம். அனைத்து ஆசீர்வாதமான காரியங்களும் வருவது நிச்சயம். இது அவரது காலத்திற்கும் அவரது காலத்தை நாம் புரிந்து கொண்டதிற்குமான காரியமாகும். நீங்களும் நானும் இந்த காரியங்களின் முக்கிய அம்சங்களை முழுவதுமாக கிரகித்துக் கொள்ளும்பொழுது, நாம் நிச்சயமாக அதை நெருங்கியிருக்கிறோம். இந்த உபத்திரவ காலம் அக்டோபர் 1914க்கு அருகே ஆரம்பித்தது ஒரு வெற்றிதான். அது இப்போது நல்ல வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. போர் நிறுத்தத்திற்கான ஜெபம் எதுவும் கேட்கப்படவில்லை. இது உலகப் போருக்கான காலம் என்பது வெறும் யூகமாக இருந்தால் நிச்சயமாக இது ஒரு பெரும் வெற்றிதான். இது ஒரு அற்புதமாக இருக்கும். மிகவும் சரியாக இல்லாவிட்டாலும் நாம் அதை நெருங்கி வந்திருக்கிறோம்.

**கேள்வி:** போதகர் ரசல் கூறுகிறதாவது: “கானான் தேசத்தை நோக்கி இஸ்ரயேலர்கள் சென்ற வனாந்திர பிரயாணமானது கிறிஸ்தவர்கள் இந்த பாவ உலகின் வழியாக பரமகானானுக்கு செல்கிற பிரயாணத்துக்கு நிழலாயிருக்கிறது.” மாம்சீக இஸ்ரயேலர்கள் கானான் தேசத்திற்கு சென்றபின் அவர்கள் அநேக போர்களை நடத்தினார்கள். ஆவிக்குரிய கானான் எங்கே, ஆவிக்குரிய கானானியர்கள் யார், அவர்கள் எப்படி ஆவிக்குரிய இஸ்ரயேலரிடம் போரிடுவார்கள்?

**பதில்:** இஸ்ரயேல் சரித்திரத்தின் முழு காரியங்களும் கிறிஸ்தவ அனுபவத்திற்கு நிழலாக இருக்கிறது என்று அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறார். (1 கொரி 10:11 மார்ஜின்) ஆனால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமது சொந்த தீர்மானத்தில் சில காரியங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தாராளமாக இருக்கிறோம். கானானை நோக்கி பிரயாணம் பண்ணுவது, தேவனுடன் சரியான உறவுக்குள் நுழைய முயற்சிப்பதற்கு நிழலாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் இஸ்ரயேலர்கள் போயிருக்கக் கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் கானானுக்குள் நுழையவில்லை. அவர்கள் சீனாய் மலை வழியாக சென்றிருந்தால் சீக்கிரத்தில் கானானை அடைந்து தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள். அவிசுவாசத்தினால் அவர்கள் போகவில்லை. தேவனுடைய குடும்பத்திற்குள் வருவதற்குமுன் வானாந்தரத்தில் நம்மில் யாராவது திரிந்தால், இது அவசியமானது என்பதால் அல்ல, அவர்கள் விசுவாசத்தை சரியாக அப்பியாசப்படுத்தவில்லை என்பதினாலாகும். நாம் நாற்பது வருடங்களோ அல்லது எந்த ஒரு கால பகுதிக்கோ காத்திருக்க வேண்டியதில்லை. நாம் சீக்கிரத்தில் அர்ப்பணம் செய்வது மூலம் நாம் சீக்கிரத்தில் வரமுடியும்.

**--2478--**

ஆனால் பெரும்பாலானவர்கள் தாமதம் பண்ணினார்கள். யூதர்கள் சீக்கிரத்தில் நுழையாதது போல. ஆசீர்வாதத்திற்குள் சீக்கிரத்தில் நுழைவதற்கு பதிலாக, அதிகமாக விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவதற்காக அநேக வருடங்கள் அநேகர் திரிந்திருப்பார்கள். அங்கே யோசுவா, இயேசுவை முன்னடையாளமாகக் காண்பித்தான். யூதர்கள் யோசுவாவையும் அவனது தலைமையையும் சீக்கிரத்தில் ஏற்றுக் கொண்டதால் யோர்தானை சீக்கிரத்தில் கடந்து கானான் தேசத்தில் நுழைந்தார்கள். பிரமாணமானது நமக்காக எதையும் நிறைவேற்றாது என்பதை எவ்வளவு சீக்கிரத்தில் உணருகிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் யோசுவா (இயேசு)வின் தலைமையின் கீழ் கானானுக்குள் நுழைகிறோம். இஸ்ரயேலர்கள் கானானுக்குள் நுழைந்த பொழுது கானானியர்கள், பெரிசியர்கள், எமோரியர்கள், ஏத்தியர்கள், ஏவியர்கள், எபூசியர்கள் மற்றும் கிர்காசியர்களோடு போரிட ஆரம்பித்தார்கள். இவைகளெல்லாம் நமது மாம்சீக பலவீனங்களை குறிக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாக நாம் பெற்றிருக்கிற சலுகையாகிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு தேசத்தையும் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக இவைகளை எதிர்த்து நாம் போரிட்டு ஜெயங்கொள்ளவேண்டும்.

------------------------------------

**--2479--**

# அரசியல்வாதிகளும் தவறான மதமும்

**Politicians and False Religion**

1 ராஜாக்கள் 12:25–33

அரசியலுக்கும் மதத்திற்குமான உறவு–பத்து கோத்திரத்தாரின் கலகம் ஒரு பெரும் தவறு – யெரொபெயாமின் அரசியல் ஞானம் – நிழலான இஸ்ரலேயரிடம் தேவனுடைய தொடர்பு – ஆதி கிறிஸ்துவ சபையில் யூதர்களில் மீந்தவர்கள்– தேவதிட்டம் தோல்வியடையவில்லை– தற்கால ஜனங்களுக்கான விசேஷித்த யோசனைகள்.

“யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.” யாத்திராகமம் 20:4

யெரொபெயாம் தனது ஜனங்களை அடிமைத்தனத்திற்கு கொண்டு வர விரும்புகிற விஷயத்திலோ, துன்மார்க்கம் மற்றும் குற்றம் முதலியவைகளை விரும்புகிற விஷயத்திலோ அவன் மோசமானவன் அல்ல. மாறாக அவன் தைரியசாலியும் சுதந்திரத்தை விரும்புகிறவனுமாயிருந்தான். சாலொமோனுக்கு பின்வந்த ரெகொபெயாம் என்ற புதிய ராஜாவின் அடக்குமுறையிலிருந்து தனது மக்களை விடுவிக்க விரும்பினவன். அவனது தலைமையின் கீழ் இஸ்ரயேலின் பத்து கோத்திரத்தார் தாவீதின் வீட்டாரிடம் கலகம் செய்து பிரிந்து தனி ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். ராஜாக்களின் அடக்குமுறையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று உறுதியுடன் இதை செய்தார்கள்.

இது அநேக விஷயங்களில் ஒரு மேன்மையான செயல்பாடாக இருந்தது. ஆனால் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவர்கள் தேவனையும் அவரது ஏற்பாடுகளையும் அசட்டை செய்தார்கள். இந்த ராஜ்யம் தேவனுடைய ராஜ்யமாக தேவனுடைய பராமரிப்பின் கீழ் தாவீதின் குடும்பத்தாரால் ஆளப்பட வேண்டும் என்பது அந்த நாட்டைக் குறித்த தெய்வீக ஏற்பாடாக இருந்தது. இந்த சூழ்நிலைகளின் கீழ் எருசலேம் தேவாலயத்தின் மேல் உள்ள பற்று அதிகமாக மத காரியங்களில் ஆர்வம் படிப்படியாக மென்மேலும், அதிகரித்தது, மத பக்தியுள்ளவர்கள் தேவாலயத்திற்கு அருகாமையில் இருக்க விருப்பங்கொண்டார்கள். ஏனெனில் நியாயப்பிரமாண சட்டப்படி அவர்கள் வருஷத்திற்கு ஓரிருமுறை ஆராதனை செய்ய அங்கே செல்லவேண்டும்.

யெரொபெயாம் எவ்வளவுதான் தனது ஜனங்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதில் கருத்துடையவனாக இருந்தாலும், அவன் சீக்கிரத்தில் ஒரு அரசியல்வாதியின் ஆவியை வெளிப்படுத்தினான். ஜனங்கள் வருஷந்தோறும் ஆராதனைக்கு எருசேலமுக்கு சென்றுவந்தால் சீக்கிரத்தில் அல்லது பிற்பாடு ஜனங்கள் தாவீது வழி ராஜாக்களால் ஈர்க்கப்பட்டுவிடுவார்கள் என்ற எண்ணத்தில், யெரொபெயாம் தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும், எருசலேமுடனான மத உறவை துண்டிக்கவும் ஒரு புது மத ஆராதனை முறைமையை ஏற்படுத்தினான்.

பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை செய்து, யெரொபெயாம் ஒன்றை எல்லையின் வடபகுதியிலும் மற்றொன்றை தென்பகுதியிலும் வைத்தான். இப்படியாக ஜனங்கள் வடஎல்லையிலும் தென் எல்லையிலும் பலியிடும்படி ஏற்பாடு செய்தான். மேலும் எருசலேமில் நடக்கும் பண்டிகை காலத்திற்கு ஒரு மாத இடைவெளியில் பண்டிகைகளை ஏற்பாடு செய்தான். இது ஒரு வகையில் அநேக திறமையான அரசியல் வாதிகளின் ஞானமாகவும் அவர்களுக்கு ஈர்ப்புடையதாகவும் இருக்கிறது. ஆனால் தேவன் மேலுள்ள விசுவாசம் ஆழமாக பதியவில்லை. ஐயகோ, திரளானவர்களின் மதம் மிகவும் உண்மையானதாகக் காணப்படுகிறது. எவ்வகையிலேனும் தெய்வ பக்தியின் உருவமாக இருக்கிறது. ஜனங்கள் யெரொபெயாமின் திட்டத்தை உடனே ஏற்றுக்கொண்டு அது வெற்றிகரமாக இருந்ததின் மூலம் யெரொபெயாம் ராஜா அவன் ஆளுகை செய்த ஜனங்களிலிருந்து மாறுபாடானவன் அல்ல என்பது வெளியரங்கமானது

### தேவனுடைய திட்டம் தோல்வியடைந்ததா?

தேவனுடைய திட்டங்கள் சாதாரண மனிதன் மூலம் இப்படியாக தோல்வியடைந்தது என்று அநேகர் நினைக்கக்கூடும்; ஆனால் வேத வசனங்கள் இதற்கு எதிராக காண்பிக்கிறது. அதாவது யெரொபெயாமின் இந்த எதிர்ப்பினால் தேவனுடைய திட்டம் முன்னேறியது என்று காண்பிக்கிறது. தேவனுடைய திட்டம் என்னவாக இருந்தது என்று நாம் பார்க்கலாம்.

தேவன் இஸ்ரயேலர்களை நிழலான தமது கிருபையின் மக்களாக ஏற்றுக் கொண்டார். ஆபிரகாமின் சந்ததி மூலமாக அகில உலகமும் ஆசீர்வதிக்கப்படும் என்கிற வாக்குத்தத்தத்தை தேவன் கொடுத்திருந்தார். ஆபிரகாமின் வழியில் ஈசாக்கின் சந்ததியார் மிகவும் உயர்த்தப்படுவார்கள் என்று இது உணர்த்தியது. இந்த திசையில் இயங்க நானூறு வருடங்கள் கடந்துவிட்டன. அந்த சமயத்தில் இஸ்ரயேலர் பலுகி பெருகி, எகிப்தில் அடிமைப்பட்டிருந்தனர். அவர்களும் இப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாக இருந்தால் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்ததாக மோசே மூலம் சொல்லியனுப்பினார்.

அவர்கள் மிகவும் களிகூர்ந்து மோசேயை பின்பற்றி சீனாய் மலைக்குச் சென்றனர். அங்கே தேவன் அவர்களோடு உடன்படிக்கைச் செய்தார். அதாவது அவரது கட்டளைகளை அவர்கள் சரியானபடி கைக்கொண்டால் அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதாகவும், அவர்களை ஆபிரகாமின் சந்ததியாக

தகுதிப்படுத்துவதாகவும், அவர்கள் உலகத்தை ஆசீர்வதிக்கும் தகுதியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றும் உடன்படிக்கை செய்தார். அவர்கள் உடன்படிக்கைக்குள் சென்றார்கள், ஆனால் அவர்கள் அபூரண மனிதர்களைப் போல இருந்து பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியவில்லை. ஆகையால் நித்திய ஜீவனுக்கும், ஆபிரகாமின் சந்ததியாக இருந்து மற்றவர்களை ஆசீர்வதிக்கும் கிருபைக்கும அபாத்திரரானார்கள்.

பிற்பாடு அவர்கள் உற்சாகம் இழந்த பொழுது மேசியாவை அவர்களுக்கு அனுப்புவதாக தேவன் வாக்களித்தார். மேசியாவின் ராஜ்யம் அவர்களை ஆசீர்வதிக்கும்; ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் பங்குபெறும் சந்தர்ப்பத்தையும் தரக்கூடியதாக இருக்கும். ஆகையால் தேவன் இஸ்ரயேலர்களோடு கொண்டிருந்த தொடர்புகள் ஒரு முன்னடையாளமான குணாதிசயமாக இருந்தன. அவர்களது பாவ நிவாரண நாள், அவர்களது பிரமாணம், அவர்களது மத்தியஸ்தர், அவர்களது பலிகள் அனைத்தும் ஒரு மேலான மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் கீழ் மேலான பலிகள் முதலானவைகளை அடையாளப்படுத்தின. தேவன் இஸ்ரயேலரோடு கொண்டிருந்த அனைத்து தொடர்புகளும் அவர்களை விழுந்துபோன நிலைமையிலிருந்து முடிந்த அளவு ஓர் உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தவும், இப்படியாக மேசியா வரும்போது அவர்கள் தயாராயிருக்கவும், அவரது ராஜ்யத்தில் அவரது மணவாட்டி வகுப்பாராக அவரோடு ஐக்கியம் கொள்ளவும் தேவன் எண்ணங்கொண்டிருந்ததாலேயே ஆகும். தேவனுடைய தொடர்புகள் எல்லாம் எப்படி பொருந்தமாயிருக்கிறது என்பதை இந்த பாடத்தில் நாம் பார்ப்போம்.

பெரும்பாலான ஜனங்கள் மற்றும் யெரொபெயாமின் மாற்றம், மிகவும் விசுவாசமும் உண்மையுள்ளவர்களை பத்து கோத்திரத்தாரிடமிருந்து பிரிந்து இரண்டு கோத்திரத்தாரின் எல்லைக்கு செல்லும்படி விரட்டியது. யெரொபெயாம் ஏற்படுத்திய விக்கிரகாராதனை இவர்களுக்கு அருவருப்பாக இருந்தது. அவர்கள் தங்களது பூமிக்குரிய உரிமைகளை கைவிட விருப்பமுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் தேவனுக்கும் அவரது ஸ்தாபனங்களுக்கும் உண்மையுள்ளவர்களாயிருந்து அரசியல் ஆதாயங்களையெல்லாம் மறுத்தார்கள். அதனால் அவர்கள் நஷ்டமடைந்தார்கள். இது வருடக்கணக்காக பத்து கோத்திரத்தார் பாபிலோனில் சிறைப்பட்டு போகும் காலம் வரை தொடர்ந்தது. அந்த சமயத்தில் யூதா ராஜ்யம் என்று அழைக்கப்பட்ட யூதா மற்றும் பென்யமீன் கோத்திர பகுதிக்கு இழுக்கப்பட்டார்கள். அதன் பிறகு தேவன் யூத ராஜ்யத்தையும் கவிழ்த்துப் போட்டு, அவர்களையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைபட்டு போகப் பண்ணினார். ஆனால் அவர்கள் பாபிலோனில் இருந்தபோது தங்கள் மத வைராக்கியத்தையும் முறைமைகளையும் பாதுகாத்துக் கொண்டனர்.

## பாபிலோனிலிருந்து திரும்புதல்

பிறகு தேவன் சைரஸ் ராஜாவைக் கொண்டு ஜனங்களை பாபிலோனிலிருந்து விடுவித்தபோது, காரியங்கள் முற்றிலுமாக மாறி, பாலஸ்தீனாவுக்கு திருப்பிச் செல்லுதல் பிரயோஜனமானது என்று கொஞ்சபேர் மட்டுமே நினைத்தனர். பத்து கோத்திரத்தைச் சேர்ந்த திரளானவர்கள் புறஜாதியாரோடே மிகவும் கலந்து, அவர்களது பிதாக்களின் மதத்தையும், ஆபிரகாமிடம் செய்யப்பட்ட வாக்குத்தத்தையும் தொடர்ந்து பின்பற்றவோ மதிக்கவோ இல்லை. சிறையிலிருந்த யூதா கோத்திரத்தில் அநேகரும் அதேபோல விசுவாசத்தை இழந்து புறஜாதியாராயினர். உண்மையைச் சொல்லப்போனால் மொத்தத்தில் சுமார் 50,000 பேர் மட்டுமே பாலஸ்தீனாவுக்கு திரும்பி வந்தனர். அவர்கள் விசுவாசமுள்ளவர்களாகவும் தேவன் பேரில் நம்பிக்கையுடையவர்களாகவும் இருந்து, பாபிலோனின் அனைத்து சலுகைகளையும் இலாபகரமானவைகளையும் தியாகம் செய்து, பாழான தேசத்திற்கும் எருசலேம் நகரத்திற்கும் திரும்பி வந்தனர்.

இவர்கள் ஒரு புது ஜனத்தின் வித்தானார்கள். இவர்கள் மற்ற மனுக்குலத்தைக் காட்டிலும் இயேசுவின் நாட்களில் அவருக்காக காத்திருந்தவர்களாயிருந்தார்கள். சில வருடங்களுக்குள்ளாகவே சுமார் 25,000பேர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவரது அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களாகி மரணம் வரை முழு அர்ப்பணம் செய்தார்கள். ஜனங்களில் மீதியுள்ளவர்கள் விசேஷித்த கிருபையிலிருந்து நீக்கப்பட்டு, கதவானது புறஜாதிகளுக்கு திறக்கப்பட்டது. புறஜாதியார் சுவிசேஷ செய்தியைக் கேட்டு, இஸ்ரயேலின் அனைத்து கோத்திரங்களுக்கும் பிரதிநிதிகளான 25,000 அர்ப்பணம் செய்த இஸ்ரயேலர்களுடன் அதே சரீரத்தின் அதே கூட்டத்தின் உடன் சுதந்தரர்களாகும்படியாக கதவானது திறக்கப்பட்டது. இஸ்ரேல் தேசமானது மேசியாவை ஏற்றுக்கொள்ளும்படி தயார்படுத்த தெய்வீக தொடர்பின் மதிப்பு குறைவுபடுமானால், ஒரு குறைந்த காலத்தில் அவ்வளவு பேர் அவரை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்ததை நாம் காண்கிறோம். ஆனால் வேதப்பிரகாரம் தெரிந்து கொள்ளப்படுகிற கூட்டமாகிய 144000 பேரில் மீதமுள்ளவர் களை உலகத்தின் மற்ற தேசங்களிலிருந்து கூட்டிச் சேர்க்க 1800 வருட காலம் தேவைப்பட்டது.

இப்படியாக தேவனுடைய திட்டத்தில், யெரொபெயாம் மற்றும் பத்து கோத்திரத்தாரும் கலகம் பண்ணுவதை அனுமதிப்பதில் தோல்வி அல்ல ஞானமே காணப்படுகிறது என்று நமது பாடம் குறிப்பிடுகிறது. வேதாகமம் அறிவிப்பது போல தேவனுடைய அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்று நிச்சயம் காணப்படும். தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் அவரிடத்தில் திரும்பாமல் அது அவர் விரும்புகிறதைச் செய்து,

**--2481--**

அதை அவர் அனுப்பின காரியமாக்கும்படி வாய்க்கும். (ஏசாயா 55:11) சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட சபையும் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தும் நிறைவுபெறும். அதன் பிறகு ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேற ஆரம்பிக்கும். (கலாத்தியர் 3:8, 16,29) பூமியிலுள்ள சகல வம்சங்களும் கிறிஸ்து மற்றும் அவரது சபையின் ராஜ்யத்தில் ஆசீர்வதிக்கப்படும்.

**"கர்த்தருக்கு காத்திரு"**

நவீன யெரெபெயாம்கள் சரித்திரப்பாதையில் காணப்படுவார்கள். மனிதர்கள், உண்மையிலேயே அரசியல்வாதிகள் மதத்தின் பேரால் அவர்களது சொந்த நன்மைக்காக ஜனங்களை எந்தமத முறைமைக்கும் விற்க விரும்புவார்கள். அது அவர்களது நன்மைக்கு செயலாற்றும். அனைத்து வகையான அரசியல் சதிகளுக்கும் மதமே ஒரு போர்வையாக ஆக்கப்படுவதை சரித்திர அறிவுள்ள ஒவ்வொருவரும் உணர வேண்டும். யெரொபெயாம் விஷயத்தில் ஜனங்களுக்கு அதிகமான சுதந்திரம் கொடுக்கப்பட்டதாக பாவனை செய்யப்பட்டது.

கர்த்தருக்கு காத்திருக்க வேண்டும் என்பதுதான் பழைய பத்து கோத்திரத்தாரிடமிருந்து தற்கால ஜனங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக இருக்கிறது. கர்த்தர் தங்கள் காரியங்களை ரத்து செய்து ராஜாக்களின் அடிமைத்தனத்திலிருந்து அவரது சொந்த முறையின்படி விடுவிப்பார் என்று அவர்கள் காத்திருந்திருக்க வேண்டும். இப்போது இதுதான் கர்த்தரின் செய்தியாக நமக்கு இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் மாம்சீக ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது என்றும் மற்றவர்களது கையிலுள்ள இப்படிப்பட்ட ஆயுதங்களின் மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது என்றும் முன்னெச்சரிக்கை செய்கிறார். தேவனுடைய பிள்ளைகளின் நம்பிக்கை தேவன் பேரில் இருக்கவேண்டும். அவரது நம்பிக்கைக்குரிய தன்மையையும் அவரது வாக்குத்தத்தத்தின் சத்தியத்தையும் அவர்கள் உணர வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அந்த வாக்குத்தத்தம் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது என்று உறுதி செய்கிறது. ரோமர் 8:28

இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் பழங்காலத்தில் சொன்னது போல சொல்கிறதாவது: "நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்குக் காத்திருங்கள்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள் மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன். பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." இது சொல்லர்த்தமான அக்கினி சொல்லர்த்தமான பூமியை அழிப்பதைக் குறிக்காது. அடையாளமான அக்கினியாகிய ஆபத்து, உலகின் அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் மத முறைமைகளை விழுங்கிப் போடும் என்பதையும் அவர்களை மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்கு தயார்படுத்தும் என்பதையும் குறிக்கும். இது அடுத்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கர்த்தர் அறிவிப்பதாவது;

"அப்பொழுது (அக்கினியாகிய துன்பம் மற்றும் ஜாதிகளின் வேதனைகளுக்கு பிறகு) ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படி நான் அவர்களது பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா 3:8,9)

சுத்தமான பாஷை என்பது வேதாகமத்தில் வேறு இடத்தில் சொல்லப்பட்டது போல தேவனுடைய மெல்லிய சத்தத்தைக் குறிக்கிறது. இந்த சத்தம் மேசியாவின் ஆளுகையின் ஆயிர வருட யுகத்தில் ஜனங்களால் கேட்கப்படும். இந்த ஆளுகை ஜனங்களை அறியாமை, மூட நம்பிக்கை மற்றும் பாவத்திலிருந்து விடுவித்து தேவனுடன் இணைக்கத்துக்கு கொண்டு வரும். மகா மேசியாவின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. (அப் 3:19-23)

---------------------------------------

--2482--

# ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை

## King Asa's Reform Work

2 நாளாகமம் 15:1–15

*சாலொமோன் ராஜாவின் கொள்ளுப்பேரன்–பத்து கோத்திர ராஜ்யத்தின் எதிரிடையான செல்வாக்கு–ஆசா ராஜா விக்கிரக ஆராதனையை நீக்கிப்போடுதல் – எகிப்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டது–தேசத்தின் மகா மறுமலர்ச்சி – வெண்கலம், மரம், கல், பேனா மற்றும் மையிலாலான விக்கிரங்கள் – கோட்பாடுகளின் தேவன்–தற்காலத்தில் ஒரு ஆசாவின் அவசியம் – மற்றொரு பயபக்தியுடனான கூட்டுறவு மற்றும் உடன்படிக்கையின் அவசியம் – மேசியாவின் ராஜ்யத்தின் மூலம் வருகிற உதவி.*

*"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." (யாக்கோபு 4:8)*

யூதாவின் ராஜா ஆசா, சாலொமோனின் கொள்ளுப்பேரன் ஆகும். சாலொமோனின் ஆளுகையின் கடைசிப் பகுதியில் உலகத்தனத்தின் ஆவி அவனை ஆக்கிரமித்துக் கொண்டது, அதனிமித்தம் அவனது மகன் ரெகொபெயாமின் காலத்தில் பத்து கோத்திரம் பிரிந்து சென்றது. ஆசா ராஜாவின் காலத்தில் அந்த ராஜ்யம் சில சீர்த்திருத்தங்களை சந்தித்தது, பத்து கோத்திரம் கலகம் செய்து பிரிந்து சென்று, விக்கிரகாராதனைக்குள் சென்றபோது, யூத கோத்திரமும் இதன் செல்வாக்கினால் ஓரளவுக்கு பாதிக்கப்பட்டு விக்கிரக ஆராதனைக்குள் வந்தது. ஆசா ராஜா காலம் வரை யூதாவில் பாகால் விக்கிரகங்களும், தோப்பு விக்கிரகங்களும் அதன் ஆராதனைகளும் பெருகி வந்தன. மோசே மற்றும் நியாயப்பிரமாணத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரயேல் தேவனின் மதத்திற்கு மாற்றாக ஏற்படுத்தப்பட்டவைகளையும் அனைத்து விக்கிரக ஆராதனைகளையும் ஆசா ராஜா ஒரு சீர்த்திருத்தவாதியாக நீக்கிப்போட்டான். ஆசா ராஜா தனது தந்தை மற்றும் தாத்தாவின் முறைமைக்கு மாறுபாடான வழியை பின்பற்ற அவனை வசீகரித்தது என்ன என்பதை நாம் அறியோம். ஆனால் ஒருவேளை அவனது ஜனங்களின் அனுபவங்கள் மூலம் அவன் பாடங்களை கற்றுக் கொண்டிருக்கலாம்.

விக்கிரகாராதனையை நீக்க அவன் எடுத்த முதல் முயற்சி ஓரளவுக்குத்தான் பலன் கொடுத்தது. அடுத்து அவன் தனது நாட்டை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். அதன் பிறகு பத்துலட்சம் பேர்கள் சேர்ந்த சேனையோடும், முந்நூறு இரதங்களோடும் வந்த எகிப்திய ராஜாவாகிய சேராவோடு போர் வந்தது. அவர்கள் யூதா ராஜ்யத்தின் மேல் தெற்கிலிருந்து வந்தார்கள். அவர்களது எண்ணிக்கையும் பலமும் பயங்கரமாக இருந்தது. அவர்கள் கொள்ளையிட விரும்பினார்கள்.

இந்த சூழ்நிலையில் கர்த்தருடைய செய்தி அசரியா தீர்க்கதரிசி மூலமாக ஆசா ராஜாவுக்கு வந்தது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்தது. உண்மையான தேவனும், நியாயப்பிரமாணமும், போதிக்க ஆசாரியர்களும் இல்லாததினால் பத்து கோத்திரத்தாரின் மோசமான நிலைமையை தீர்க்கதரிசி சுட்டிக்காண்பித்தான். இதனால் யாருக்கும் சமாதானமில்லாமல் அவர்கள் ஒரு அராஜக நிலைமையில் இருந்தார்கள். அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் மனந்திரும்புவார்கள் என்று நினைத்து தேவன் அவர்களுக்கு உதவி செய்து வந்தார். தம்மோடு இணக்கமாக இருக்க விரும்புகிறவர்களை தாம் ஆசீர்வதிக்க விருப்பமாயிருப்பதை தேவன் எப்பொழுதும் காண்பித்து வந்தார். ஆசா ராஜா இப்படிப்பட்ட ஒரு மனநிலைமையை வெளிப்படுத்தினான். இப்பொழுது அவன்,

"நீங்களோ உங்கள் கைகளை நெகிழுவிடாமல் திடன் கொள்ளுங்கள், உங்கள் கிரியைகளுக்கு பலன் உண்டு" என்ற உற்சாகமான செய்தியை அவன் பெற்றான்.

இந்த செய்தி ராஜாவை விக்கிரகாராதனையை இன்னும் ஒழிக்கவும் கர்த்தருடைய பலிபீடத்தை புதுப்பிக்கவும் உற்சாகப்படுத்தியது. இதன் பலனாக அவனது நாட்டின் மிகவும் பக்தி விருத்தியுள்ள ஜனங்களின் ஆதரவு அவனுக்கு கிடைத்தது. இன்னும் அவனுக்கு பத்து கோத்திரத்தாரில் தேவனையும் அவரது வாக்குத்தத்தங்களையும் இன்னும் மதிக்கிறவர்களின் ஆதரவும் கிடைத்தது. அவர்கள் மகாதேவன் ஆராதிக்கப்படுகிற ஒரு இடத்திற்கு செல்வதற்கு மிகவும் சந்தோஷமாயிருந்தார்கள்.

சேராவும் அவனது சேனைகளும் படையெடுத்து வந்தபோது தேவன் ஆசாவையும் அவனது ஜனங்களையும் ஆசீர்வதித்தார். தேவனை ஆராதிக்கிற ஆவி அதிகமாக அபிவிருத்தி அடைந்தது. மத எழுச்சியிலும் மத மனோபாவத்திலும் ஜனங்கள் இருந்தார்கள். தேவனை எதிர்க்கிற அனைவரும் கொல்லப்பட வேண்டும் என்கிற உடன்படிக்கைக்குள்ளாக அவர்கள் நுழைந்தார்கள். "இந்த ஆணைக்காக யூதா ஜனங்கள் யாவரும் சந்தோஷப்பட்டார்கள்; தங்கள் முழு இருதயத்தோடும் ஆணையிட்டு தங்கள் முழு மனதோடும் அவரைத் தேடினார்கள்; கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு, சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாதபடிக்கு அவர்களை இளைப்பாறப் பண்ணினார்."

### இந்த பாடத்தில் நமக்கான கருத்து

இந்த பாடத்தில் இரண்டுவிதமான ஆர்வங்கள் இருக்கிறது. ஒன்று இது ஒரு பழைய ஏற்பாட்டு கால சரித்திரம். இது தேவன் தமது ஜனத்தின் மேலுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது. அதாவது அவர்கள் தம்மை தேடும்போது, அவர்களது பிதாக்கள் கொஞ்ச காலம் அவருக்கு உண்மையாயிராதிருந்தும் கூட அவர்கள் மேல் தமது கரிசனையைக் காட்டுகிறார். இரண்டாவதாக இந்த பாடத்தை தற்காலத்திற்கு பொருத்திப் பார்க்கும்போது ஜனங்கள் எல்லா இடங்களிலும் விக்கிரக ஆராதனையில் இருப்பதை நாம்

காண்கிறோம். வெண்கலம், மரம் மற்றும் கல் போன்ற விக்கிரகங்களை ஆராதிக்கிற புறஜாதிகள் மட்டுமல்ல, நாகரீகம் அடைந்தவர்களும் கூட கோட்பாடு என்றும் விக்கிரகத்தை ஆராதிக்கிறார்கள். பின்னால் சொல்லப்பட்டவர்கள் பேனா, மை மூலம் பேப்பரில் அச்சிட்டு, புறஜாதிகள் விக்கிரத்துக்கு ஒப்பாக அருவருக்கத்தக்க விதத்தில் தேவனுடைய குணத்தை விளக்குகிறார்கள். அன்பான தேவனும்," இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனும்," "நன்மையான எந்த ஈவையும், பூரணமான எந்த வரத்தையும் பரத்திலிருந்து அனுப்புகிற" பிதாவுமாகிய மெய்யான தேவன் மிகவும் குறைவாகவே அறியப்பட்டிருக்கிறார்.

நமது கோட்பாடு விக்கிரகங்கள் தேவனை ஒரு அரக்கனாகவும் ஒரு பேயாகவும் வர்ணிக்கிறது. அவர்கள் தேவனை, உலக சிருஷ்டிப்பிற்குமுன் உட்கார்ந்திருப்பவராகவும், நமது இனத்தை சிருஷ்டிக்க வேண்டுமென்றே திட்டமிடுபவராகவும், அக்கினியினால் அழியாத பேய்கள் மூலமாக மனுக்குலத்தை நித்தியமாக வதைக்கிறவராகவும் சித்தரிக்கிறார்கள். சபையை தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாகவும், பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும், பரலோக சொந்தங்களை கவனிக்கவும், புறஜாதி மற்றும் யூதர்களின் பயங்கரமான வாதைகளை சாட்சியம் கூறுவதாகவும் சித்தரிக்கிறார்கள். ஏனெனில யூதர்களும் புறஜாதிகளும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏறக்குறைய அனைத்து கிறிஸ்தவ தேசத்தார்களும் வதைக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் சுவிசேஷ போதனைகளுக்குக் கீழ் பரிசுத்தவான்களாகவில்லை.

இந்த பயங்கரமான விக்கிரகங்கள் அதிக புத்திசாலிகளால் இனி மதிக்கப்படுவதில்லை. ஆனால் அவைகள் திரளான ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டு கீழே விழுந்து வணங்கி ஆராதிக்கப்படுகின்றன. உண்மையான தேவன் இன்னும் கூட பெரும்பானவர்களால் அறியப்படாமல் ஒதுக்கப்படுகிறார். உண்மையிலேயே தேவன் அன்பானவர் என்றும், கோடிக்கணக்கான ஜனங்களை வறுத்துக் கொண்டிருக்கிறார் என்றம், அவர்களது துன்பங்களைக் குறித்து அவர் அறிவார் என்றும், இதை உலக தோற்றத்துக்கு முன்பே முன்னேற்பாடு செய்திருக்கிறார் என்றும் போதிக்கப்படுகிறார்கள். எல்லோரும் அவரது அன்பு மற்றும் நீதியைப் பற்றி பேசுகிறார்கள், ஆனால் அதற்கு முன்பே அதை குறைத்து மதிப்பிடுகிறார்கள். நூற்றுக்கணக்கான வருடங்களாக இந்த விக்கிரகங்களினால் அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் இருந்த ஜனங்கள் இன்னும் அவர்களது அறியாமையினால் துன்பப்படுகிறார்கள்.

தற்போது தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் உற்சாகப்படுத்தப்பட்ட ஒரு ஆசா எழும்பி, கிறிஸ்தவ மண்டலத்தின் கோட்பாடாகிய விக்கிரகங்களை உடைத்து நொறுக்கி ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்கு நமக்கு தேவையாயிருக்கிறது. அவர் ஆசா ராஜா பெற்றிருந்ததைப்போல தெய்வ பயம் உள்ள ஜனங்களின் ஆதரவை பெற்றிருக்கவேண்டும். விக்கிரகங்களும் அதன் ஆராதனைகளும் முடிவுக்கு வருகிறதற்கு ஏற்ப, தேவனுடைய பலிபீடம் செப்பனிடுவது முன்னேறும். அநேகர் தேவனுடைய ஊழியத்தில் தங்களது சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதில் களிகூருவார்கள். (ரோமர் 12:1,2) சரீரபிரகாரமான சக்தியினாலோ அல்லது கொடூரமாகவோ, அல்லது சொல்லர்த்தமான கோடாரியினாலோ விக்கிரங்களை உடைக்காமல், ஜீவனுள்ள தேவனுடைய வசனங்களை கொடுப்பதின் மூலம் உடைக்க வேண்டும். எந்த அளவுக்கு வேதாகமம் சரியானபடி புரிந்துகொள்ளப்படுகிறதோ அந்த அளவுக்கு அவர்களது அறிவீனமான கோட்பாடுகளும், சத்தியத்துக்கு மாறானவைகளும் அதிக அதிகமாக உணர்ந்து கொள்ளப்படும்.

## நாமெல்லோரும் உண்மையான உடன்படிக்கையாளர்கள்

அந்த காலத்தில் யூதா மற்றும் பென்யமின் ஜனங்கள் எந்த அளவுக்கு மதப்பற்றுள்ளவர்களாக இருந்து தேவனுடன் ஒரு உடன்படிக்கை அல்லது ஆணையிட்டார்கள் என்கிற விபரம் மிகவும் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது. இது ஸ்காட்லாந்தில் ஏற்பட்ட ஒரு மத அமைப்பை நமக்கு நினைவுப் படுத்துகிறது. அதில் சில தேவனுடைய பிள்ளைகள் தேவனுடன் உடன்படிக்கை செய்து தங்களது சொந்த இரத்தத்தினால் கையெழுத்திட்டு உறுதி செய்தார்கள்.

மற்ற உடன்படிக்கையாளர்கள் முன்வந்து, தேவனுக்கும் அவரது வசனங்களுக்கும் உண்மையாய் இருப்போம், தங்களது கோட்பாடாகிய விக்கிரங்களை தூக்கிப்போடுவோம் என்று தேவனுடன் உடன்படிக்கை செய்ய நாள் வந்திருக்கிறது. ஸ்காட்லாந்தின் உடன்படிக்கையாளர்களைக் காட்டிலும் நாம் அதிக அறிவைப் பெற்றிருக்கிறோம். ஆனால் கிறிஸ்தவ ஜனங்களுக்கு தேவனிடம் முழு பக்தியும் முழு அர்ப்பணிப்பின் ஆவியும் தேவைப்படுகிறது. யூதாவின் ஜனங்களைக் காட்டிலும் நாம் அதிக அறிவுள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் நாம் கர்த்தருடன் விசுவாசமாயிருக்கும்படி அவருடன் உடன்படிக்கைக்குள் நுழையவும் விக்கிரகங்களை அழிப்பதற்கான யூத ஜனங்களின் ஆவியை பெற்றிருப்பதும் நமக்கு அவசியமாயிருக்கிறது. இப்படிப்பட்ட அர்ப்பணம் செய்த கூட்டத்தார், உடன்படிக்கையாளர்களாகிய நாம் அறிவுப்பெறக்கூடிய சலுகையை பெற்றிருப்பதால் நாம் வல்லமையுள்ள சக்தியாக பலம் வாய்ந்தவர்களாக இருப்போம்.

இப்படிப்பட்ட கூற்றை அநேகர் அனுதாபத்துடன் பார்க்கிறார்கள். எனினும் அவர்கள் குற்றங்களைக் குறித்து

தைரியம் இல்லாதிருக்கிறார்கள். அவர்கள் தைரியமில்லாமலும் பயமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அதை நாம் கபடம் என்று கூறலாமா? எந்த சபையிலும் சேரும்போது அதனுடைய கோட்பாடுகளை பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதாகும் என்பதையும் தனிப்பட்ட விதத்தில் அதை மறுப்பதால் அதன் கடமையிலிருந்து, விடுபடுவதாகாது என்பதையும் அநேகர் மறந்துவிடுகிறார்கள். "அவனுடைய ஊழியர்களாகிய நீங்கள் யாருக்கு ஊழியஞ்செய்வீர்கள்" என்கிற ஆண்டவரின் வசனத்தை அநேகர் மறந்துவிடுகிறார்கள்.

அநேகர் கூறுகிறதாவது: "கோட்பாடுகளை நாங்கள் நம்புவதில்லை; அவைகள் பிரபலமடைந்திருக்கின்றன. ஆகையால் அதை நாங்கள் ஆதரிப்போம்." அவர்கள் ஏன் இதை செய்கிறார்கள் என்றால், அவர்கள் வேறு நிலைப்பாட்டை எடுத்தால் சில ஞானவான்கள், பெரிய மற்றும் பணக்காரர்களுடன், (அவர்களே கோட்பாடுகளை நம்பவில்லை), முரண்படவேண்டியிருக்கும் என்பதால் திரளான ஜனங்களோடு தங்களையும் பிணைத்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எந்த ஒரு பொதுவான சீர்த்திருத்ததை எதிர்பார்க்கவோ, தேவனிடம் விசுவாசமாயிருக்கிறவர்கள் மனிதர்களால் அங்கீகரிக்கப்பட நினைக்கவோ முடியாது. மேசியாவில் ராஜ்யம் முழுவதுமாக ஸ்தாபிக்கப்படும்போது விசுவாசமுள்ளவர்கள் அவர்களோடு ராஜ்யத்தில் ஐக்கியமாயிருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். இது பிறகு முழு அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டு தவறான முறைமைகளை நீக்கிப்போகும். இந்த தவறான முறைமை இத்தனை வருடங்களாக அறியாமை மற்றும் மூடநம்பிக்கைகள் என்னும் சங்கிலியால் மனுக்குலத்தை கட்டி, தேவனை மனிதன் நேசிக்காமலும் அவருக்கு கீழ்ப்படியாமலும், இருக்கும்படி செய்து, அவரை இரக்கமற்ற தேவனாகவும் வலிமையுள்ள எதிரியாகவும் காண்பித்திருக்கிறார்கள்.

---------------------------------

--2485--

# துக்கத்தின் ஆரம்பம்

## The Beginning of Sorrows

*“இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.” 2 பேதுரு 3:11*

இப்பொழுது இருக்கிற வானம் மற்றும் பூமியின் அழிவைக் குறித்த பரிசுத்த பேதுருவின் தீர்க்க தரிசனம் கடந்த காலத்தில் அநேகரால் தவறாக புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. சொல்லர்த்தமான இந்த வானமும் பூமியும் ஒரு மகா பெரிய தீயினால் எரிந்து போகும் என்று அவர் கூறினார் என்று தீர்மானித்திருந்தார்கள். இந்த கருத்து கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்டண்ட் சபைகளின் எல்லா கோட்பாடுகளிலும் சேர்க்கப்பட்டுள்ளது. இது மிகவும் ஒரு தப்பறையான காரியமாக இருக்கிறது. அப்போஸ்தலர் இந்த வார்த்தைகளை மறைபொருளான அர்த்தத்தில் கூறுகிறார். ஒரு மனிதன் தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வானத்தையும் பூமியையும் அசைப்பான் என்று நாம் கூறுவோமே, அது போல் இது சொல்லப்படுகிறது. வேதாகம தீர்க்கதரிசனங்கள் முழுவதிலும் மத அதிகாரங்களை வானம் என்றும் முறைப்படுத்தப்பட்ட சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரங்களை பூமி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

தற்கால முறைமைகளாகிய வங்கி ஸ்தாபனங்கள் அதன் பணம் சம்பந்தமான விவகாரங்கள், அதன் பங்கு, பத்திரங்கள், அதன் ஆட்சியாளர்கள், அதன் மகா பெரிய மத முறைமைகள் உண்மையிலேயே அதன் முழு சமூக முறைமைகள் அனைத்தும் சீக்கிரத்தில் அழிந்துபோகும். அனைத்து முறைமைகளும் இப்பொழுது உருகப்போகின்றன. முற்றிலுமாக ஒரு புதுமுறைமை வரப்போகிறது. இந்த உருகிப்போகுதல் முதலில் மத ஸ்தாபனங்களை கவிழ்ப்பதில் ஆரம்பமாகும். அகில உலகத்துக்கும் இது ஒரு எதிர்பார்க்காததும் மகா பேரழிவாகவும் இருக்கும். ஆனால் உண்மையான சபைக்கு, விழித்திருக்கும்படி கர்த்தர் அவர்களுக்கு போதித்திருப்பதால் அது ஆச்சரியமாக இருக்காது. ஏனெனில் அவர்கள் “வெளிச்சத்தின் பிள்ளைகளாக” இருக்கிறார்கள்; கர்த்தரின் இந்த நாள் அவர்களை ஒரு திருடனைப்போல பிடித்துக்கொள்ளாது.

கர்த்தரின் விசுவாசமுள்ள விழித்திருக்கும் ஜனங்கள் சத்திய வசனங்களால் வழி நடத்தப்படுவதால், உலகக் காரியங்களில் புரிந்து கொள்ளுதலைப் பெற்றிருப்பார்கள். அப்.பவுல் நமக்கு உறுதியளித்திருப்பது போல, இந்த நாள் முழு உலகத்தின் மேலும் ஒரு திருடனைப் போலவும், ஒரு கண்ணியைப் போலவும் வந்தாலும், அவர்களது சலுகைகளில் வாழ்கிற தேவனுடைய பிள்ளைகள் மேல் அப்படி வராது.“இவைகள் சம்பவிக்க தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதினால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.” (லூக்கா 21:28,31) நமது ஆண்டவர், இவைகளை நீங்கள் பார்க்கும் போது என்று சொல்லாமல், இவைகளை பார்க்க ஆரம்பிக்கும் போது, நாம் தலைகளை உயர்த்தி களிகூருங்கள் என்று கூறுகிறார்.ஆனால் ஆபத்தில் சந்தோஷப்படும்படியோ, அல்லது மற்றவர்களது துன்பத்தில் சந்தோஷப்படும்படியோ கூறாமல், இவைகளெல்லாம் தற்கால முறைமைகள் எல்லாம் நீக்கப்பட்டு ஒரு புது முறைமை, மிகவும் சிறந்த, மிகவும் அனுகூலமான, எல்லாராலும் விரும்பப்படத்தக்க முறைமை ஏற்படுவதற்கு முன்னுரைக்கப்பட்ட அடையாளங்கள் என்பதினால் சந்தோஷப்படும்படி கூறுகிறார்.

சபையே “புதிய வானமாக” இருந்து மகாமகிமைக்குள்ளும், வல்லமைக்குள்ளும், சலுகைக்குள்ளும் வரும். ஆதிகால சபையில் இந்த யுக மாற்றமெல்லாம் சீக்கிரத்தில் வரும் என்று எண்ணங்கொண்டிருந்தனர். அவர்கள் ஆண்டவரின் வருகையையும், ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும், சபை மகிமையடைவதையும் நிலையாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதும் போது அவர்களில் சிலர் கர்த்தரின் நாள் முன்னரே வந்துவிட்டது என்று தவறான எண்ணத்தில் இருந்ததாக கூறுகிறார். பாவ மனுஷன் வெளிப்படுத்தப்படும் வரை அந்த நாள் வராது என்று அவர்களுக்கு கூறுகிறார். எனவே அப்போஸ்தலர் காலத்தில் சபையானது எப்பொழுதும் விழித்திருந்து காத்திருக்க வேண்டியதாயிருந்தது. இந்த யுகம் முழுவதும் கர்த்தரின் ஜனங்கள், குறித்த காலத்தில் “இரவிலே திருடன்” வருகிற விதமாய் கிறிஸ்துவின் நாள் வரும் என்பதை அறிந்து, ஆண்டவரின் இரண்டாம் வருகையின் காலத்திற்காக காத்திருந்து தயாராயிருக்க வேண்டிய நிச்சயமற்ற நிலையில் விடப்பட்டிருக்கிறார்கள். (2 தெசலோனிக்கேயர் 5:3)

### காவலாளிகள் இப்பொழுது எதைப்பார்க்கிறார்கள்

இப்பொழுது இந்த நாளில் ஜீவித்துக்கொண்டிருக்கிற நாம், முன்னுரைக்கப்பட்ட இந்த நிகழ்வுகளின் ஆரம்பத்தை நாம் பார்க்கிறோம். மகா அர்மகெதோன் யுத்தத்தின் முன்னோடியை நாம் பார்க்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட வல்மையான “பூமியதிர்ச்சி” இந்த மகா அர்மகெதோன் தான் என்பது நமது எண்ணமாக இருக்கிறது. (வெளி.16:16–18) இந்த மகா புரட்சியிலும் அதைத் தொடர்ந்து வருகிற அராஜகத்திலும் பூமியின் அனைத்து ஸ்தாபனங்களும் தூக்கி எறியப்படும். கோபம், பகைகள், சண்டைகள், இவைகள் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டால், இதன் விளைவால் முழு மனுக்குலமும் அழிந்து போகும். ஆனால் தேவன் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிமித்தம், அவர்கள் மகிமையடைய தொடங்கும்படியாக, அதைக்குறைத்து, கிறிஸ்து மற்றும் அவரது தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் கீழாக அவரது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். கிறிஸ்துவும் அவரது மணவாட்டியும் உலக ராஜ்யங்களை எடுத்துக் கொள்வார்கள். இப்படியாக மனிதரின் சண்டைகள் உச்சகட்டத்துக்கு செல்லாதபடி தடுப்பார்கள். இல்லையென்றால் அது உச்சக்கட்டத்துக்கு போய்விடும், ஆனால் தற்கால முறைமை முற்றிலுமாக நீக்கப்படும் வரை இது நிறுத்தப்படாது.

அச்சம் தரும் இந்த ஆபத்தின் காலத்தைக் குறித்து ஒரு தெளிவான விளக்கம் தீர்க்கதரிசிகளால் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது புதிய வாசகர்கள் பயனடையும்படியாக சில தீர்க்க தரிசன மேற்கோள்களை இங்கே தருகிறோம். (ஏசாயா 24:17–22;28;21–22;33;7–14;34:18; சங்கீதம் 18; 7–19 வேதாகம பாடங்களின் நான்காவது தொகுதி பக்கம் 5–13ஐ பார்க்கவும்.

இதே கோணத்தில், ஏசாயா 13:1-13; எரேமியா 25:8-38; வெளி 18:12-21 வசனங்களை வாசிக்கவும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசன வசனத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது போலவே இப்போது ஐரோப்பாவில் நடந்து வரும் போர்கள் இருக்கிறது. மேலும் இது ஜாதிகளை குயக்கலத்தைப்போல உடைத்துப்போடுகிற மகா உபத்திரவத்தின் ஆரம்பமாக மட்டுமே இருக்கிறது. நமது சொந்த நாட்டிலேயே வேலை நிறுத்தம், தொழிலாளர் கலகம், முதலாம் உலகப்போரின் செயல் விளக்கங்கள் முதலியவைகளில் வருகிற ஆபத்தின் அத்தாட்சிகளை நாம் பார்க்கிறோம். தற்கால முழுமுறைமைகளும் பெரும் கிளர்ச்சிக்கு போகும் என்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் தவறாக கருதமுடியாதபடி அறிவிக்கின்றன. கோலொரேடோ (colorado) சுரங்கத்தின் நீண்டகால பிரச்சனைகளும், சமீபத்திய லண்டன், சிக்காகோ பிரிட்ஜ்போர்ட் மற்றும் போயொன்னே போன்ற இடங்களில் நடக்கிற வேலை நிறுத்தங்களும் இன்னும் அநேக இயற்கையின் சீற்றங்களும், வருகிற புயலின் அறிகுறிகளும் முன்னெச்சரிக்கையான கர்ஜனைகளாக மட்டுமே இருக்கிறது.

சுயநலமே உலகின் மகா நோக்கமாக இருக்கிறது. இதைச் செய்தாலும், அல்லது அதை நிறைவேற்றினாலும் அவர்களுக்கு சாதகமாகவே முடியும். ஜனங்கள் மகா பெயர் எடுக்கவேண்டும் என்பதற்காகவே, அந்த பலனை அடைவதற்கு தங்களது ஒவ்வொரு நரம்புக்கும் மிகவும் அழுத்தம் தருகிறார்கள். இதை அரசியலிலும் செய்து, எதிர்காலத்திற்கும் சொத்து சேர்க்க முயற்சிக்கிறார்கள். ஐரோப்பாவில் அவர்கள் அதை மத காரியங்களிலும் செய்கிறார்கள். அதிகாரத்தில் உள்ள பல்வேறு அமைப்புகள் ஜனங்களது கனத்தை பெற்று அதைப் பற்றிக்கொள்ள தேடுகிறார்கள். அகில உலகமும் முடிவில் உண்மையான திருப்தியை கொண்டு வராதவைகளில் தங்கள் இருதயத்தையும் மனதையும் வைக்கிறார்கள். தேவனுடையவைகளில் வைப்பதில்லை.

மனிதரின் மனதை ஆக்கிரமித்துக்கொண்டு அவர்களது சக்தியை உறிஞ்சுகிற இந்த அனைத்து காரியங்களும் ஒழிய வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவைகளில் எதுவுமே நிரந்தரமானதல்ல. இது இப்படி இருக்கிறது என்று நாம் உணர்கிறோம். இவைகள் அழிந்து போவது இந்த நமது நாட்களில் சமீபமாயிருப்பதை நாம் காண்கிறோம். மற்றவர்கள் அதை உணர்வதில்லை. சிந்திக்கக்கூடிய சிலர் தற்கால நிலைமைகள் முன்னெப்பொழுதும் இல்லாததாக இருப்பதையும் பெரும் மாற்றங்கள் சமீபத்தில் நேரிடவிருக்கிறது என்பதையும் காண்கிறார்கள். இதனிமித்தம் தங்கள் உள்ளம் சோர்ந்து போவதையும் காண்கிறார்கள்.

அற்பமான, நிலையற்ற, மயக்குகிற பூமியின் பரிசுகளைப் பற்றிய இந்த அறிவு, நம்மை இதிலிருந்து திருப்பி என்றைக்கும் அழியாத விலை மதிப்பற்ற பரம காரியங்களில் நமது நாட்டத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும். சேனைகளும் புரட்சிகளும் அழிக்கயியலாத அரசாங்கங்களையும் அழியாத அமைப்புகளையும் உடைய பரலோகத்தில் உங்கள் சொத்துக்களை சேர்த்துவையுங்கள். பெரும் மாற்றத்தை நம்புகிற அனைவரும் நமக்கு முன்பாக தற்காலத்திற்காக அல்ல, எதிர்காலத்திற்காக வாழ்கிறவர்களாக இருக்க வேண்டும். வேதாகமத்தின் போதனைகளை எந்த அளவுக்கு நாம் உணர்ந்து கொள்கிறோமோ, அந்த அளவுக்கு அதன் ஆவியை உள் ஈர்த்துக் கொள்ளுவோம்; தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு அவர் எதிர்காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகா ஆசீர்வாதங்களுக்காக அந்த அளவுக்கு வாழுவோம், நம்மை தயார்படுத்துவோம். "நான் பரிசுத்தராயிருப்பது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்பதே பரலோகத்திலிருக்கிற பிதாவின் கட்டளையாயிருக்கிறது.

### சீர்கேடல்ல, பரிசுத்த சூழ்நிலை புதுசிருஷ்டிக்காக

இந்த வழிகாட்டுதல் உலகத்திற்காக அல்ல, அவைகள் தேவனுடைய மாம்சீக பிள்ளைகளுக்காக அல்ல, ஆனால் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிய நமக்கேயாகும். பழைய சிருஷ்டிகள் அபூரணராயிருந்து தேவனுடன் நிற்கிறதில்லை. புது சிருஷ்டியில் எந்தவித தூய்மையற்ற தன்மையும் இல்லை. அவர்களது மாம்சீக அபூரணம் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர் தேவனுடன் நிற்கிறவராயிருக்கிறார். தற்கால கூடாரமாகிய மாம்சீக பலவீனத்துடன் போரிடுவதே புது சிருஷ்டியின் கஷ்டமாக இருக்கிறது. பரிசுத்தமானவைகளிலிருந்து விலக்கி, ஆசைகாட்டி தவறாக வழி நடத்தப்படும் ஆபத்தில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவன் தனது மாம்சத்தை கட்டுப்படுத்தி முழுமையாக கீழ்ப்படியப்பண்ண முயற்சிக்கிறான்.

ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டி தான் புனிதத்துடன் இருக்கவும் தமது சரீரத்தை பரிசுத்தமாக வைத்திருக்கவும் விரும்புகிறது. சுபாவமாகவே அவன் பரிசுத்தமான காற்றை சுவாசிக்கிறான். இந்த பரலோக வித்துக்கு மாறானது எதுவும் விஷமாகவே இருக்கும்.இது மிகவும் ஜாக்கிரதையாக ஊட்டி போஷிக்கப்படவேண்டும். இது சரியாக வளர்வதற்கு "உச்சிதமான கோதுமையினால்" போஷிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது. இது புது சிருஷ்டிகளுக்கு இருதயத்தின் நினைவுகளும் தியானங்களும் தேவனுடைய பரிபூரண நிலைக்கு முடிந்தவரை உறுதிப்பட்டதாய் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த நிலையை அடையும் வரை இந்த புது சிருஷ்டியை ஜெநிப்பித்த பரலோக பிதாவால் மேன்மையான உணவு கொடுக்கப்படுகிறது.

தேவனுடைய பிள்ளை உண்மையான பரிசுத்தத்தின்படி வாழாமல் தனது பூமிக்குரிய சரீரத்தை அக்கரையுடன் கவனியாதிருந்தால், அவனுக்குள் ஜெநிப்பிக்கப்பட்ட வித்தை சரியாக அபிவிருத்தி செய்யமாட்டான். இந்த புது சிருஷ்டிகள் ஒருவருக்கொருவர் முடிந்தவரை ஐக்கியமாயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் மகா பரிசுத்த விசுவாசத்தை கட்டுவதற்கு நாடவேண்டும். ஒருவரை ஒருவர் கீழே தள்ளுவதற்கு அல்ல, நம்மால் முடிந்தவரை மற்றவர்களை வளருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். "தேவனுடைய ராஜ்யம் எப்பொழுதாவது வரும், ஆபத்தின் நாள் எப்பொழுதாவது தற்கால முறைமைகளை எடுத்துக்கொள்ளும் என்று நினைத்து"இந்த பூமிக்குரியவைகளை அனுபவிக்கிறவன் தனக்குரிய உரிமையின்படி வாழமாட்டான்; அந்த நாள் "இரவிலே திருடன் வருகிற விதமாக" அவன் அறியாதபடி அவனைப் பிடித்துக்கொள்ளும். ஏனெனில் அவன் கர்த்தருடன் சரியான உறவுடன் வாழவில்லை. அவன் தனது "பரிசை" இழந்துவிட்டதை மிகவும் தாமதமாக கண்டுகொள்வான்.

"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!"

"என் பிதாவே! என் பிதாவே! இந்த இருதயம் உம்முடையதாயிருக்கட்டும்!
ஆ, அதை அலைபாயவிடாதபடி வைத்துக் கொள்ளும்!
வந்து, உமது வனாந்தர திராட்ச ரசத்தால் போஷியும், அது கசப்பான ஊற்றிலிருந்து வந்தாலும்!
எனது சோதனை மற்றும் கிளைக்கழிக்கும் காலம் [illegible] வரை,
உமது பிள்ளை நித்திய கரையில் இருக்கிறான்!"



--------------------------

# எனது இருதயம் "நல்ல நிலமா?"

## Is my Heart "Good Ground?"

*"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர் களாயிருக்கிறார்கள்." லூக்கா 8:15*

இந்த வார்த்தைகள் நமது ஆண்டவரின் விதைப்பவனைப் பற்றிய உவமையின் ஒரு பகுதியாக இருப்பதை நாம் அறிவோம். ஒருவன் தன் வயலில் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில ஒரு வகையான மண்ணிலும் சில வேறு இடத்திலும் அதாவது சில கடினமான நடைபாதையிலும், சில கற்பாறையின் மேலும், சில முள்ளுள்ள இடத்திலும், சில நல்ல நிலத்திலும் விழுந்தன. நல்ல நில்த்தில் விழுந்த விதைகள் முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் பலன் கொடுத்தன.

இந்த உவமைக்கு ஆண்டவர் கூறிய விளக்கத்தின்படி நல்ல விதை ராஜ்யத்தின் செய்தி. அது இங்கேயும் அங்கேயும் விழுந்தது என்பது ஒவ்வொருவரின் வேறுபட்ட மனநிலையைக் குறிக்கிறது. வழியருகே விழுந்த விதையானது, இதை கேட்டவர்களின் இருதயத்தில் அது நுழையவே இல்லை. அதைக் கேட்டவர்கள் வெளியே காதால் கேட்டு, மறந்துவிட்டார்கள். அது எந்த ஒரு பதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இதற்கு நமது ஆண்டவர் கூறும் காரணம், எதிரியானவன் வந்து அந்த விதையை எடுத்து போடுகிறான். அது அந்த கடினமான நிலத்தில் ஊடுருவிப் போகவில்லை. அது மனதில் நுழைவதற்கு நிலைமை சாதகமாக இல்லை. ஆகையால் அதைக் கேட்டவர்கள் கேட்ட அனைத்தையும் மறந்துவிட்டார்கள். விதையானது இருதயத்தில் நுழைந்து வேர்விடாதபடி, எதிரியின் தந்திரங்கள் எப்பொழுதும் தடுக்கிறது.

### ஒரு ஆழமில்லாத இருதயத்தை எது அமைக்கிறது.

சத்தியத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் கற்பாறை வகுப்பாரும் இருக்கின்றனர். அவர்கள் ஆரம்பத்தில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார்கள். ஆனால் குணத்தின் ஆழத்தில் குறைப்பட்டிருந்தார்கள். கர்த்தர் இப்படிப்பட்டவர்களை இப்போது தேடவில்லை. அவர்கள் கனிதரமாட்டார்கள். ஏனெனில் வேர்கொள்ள அவர்களிடம் போதுமான ஆழமில்லை. அவர்கள் ஆழமில்லாதிருக்கிறார்கள். இந்த வாழ்க்கையில் சாதகமான காற்றுக்கு இசைவாக தங்களது படகை செலுத்த விருப்பமுடையவர்களாக இருக்கிறார்கள். சத்தியம் பிரபலம் அடையாததைக் கண்டவுடன், துன்பத்தையோ அல்லது சமூக தொல்லையோ முன்னறிகிறார்கள். பிறகு அவர்களது ஆர்வம் குறைந்து, அறுவடை செய்தியில் அவர்களது ஆர்வம் மங்கி படிப்படியாக அழிந்து போகிறது. இப்படியாக அவர்கள் ஆழமில்லாத மண்ணில் விதைக்கப்பட்ட கோதுமைக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது முளைத்து, வளரும்போது சூடான சூரியன் வரும்போது அதிகம் வேர் இல்லாததால் காய்ந்து போகிறது.

முள்ளுள்ள நிலத்தைப் போல் இருக்கும் இருதயம் மிகவும் சாதகமான மண்ணாக இருக்கிறது. அது பரிசுத்த ஆவியின் கனிகளை அபிவிருத்தி செய்வதற்கு நல்ல நிலமாக இருக்கிறது. ஆனால் நீக்கப்படாத முட்கள் நிறைந்ததாக இருக்கிறபடியால் அது கோதுமையை அமுக்கிவிடுகிறது. இந்த முட்கள் வாழ்க்கையின் அற்பமான சந்தோஷத்தை, அதாவது தியேட்டர், சீட்டு, நடனம் முதலானவைகளை குறிப்பதில்லை. அவைகள் வாழ்க்கையைப் பற்றிய அக்கறை, வாழ்க்கையின் இலட்சியம், மற்றும் ஐசுவரியத்தின் மேலுள்ள ஆசையை குறிக்கிறது. ஒரு வேளை நல்ல ஐசுவரியத்தைச் சேர்த்தால் கர்த்தருடைய ஊழியத்தை இன்னும் சிறப்பாக செய்யலாம் என்ற ஒரு எண்ணம். இது கோதுமை வகுப்பாருக்கு சாதகமற்ற நிலைமைக்குபோகும்படி அனுமதிக்கிறது. இவர்கள் நல்ல வியாபாரிகளாகவும், நேர்த்தியான அரசியல்வாதிகளாகவும், ஒரு வகையான படிப்பில் மூழ்கினவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களில் மற்றவர்கள் வீட்டை நேர்த்தியாக வைப்பதிலும், பொருட்கள் எவ்வளவு நன்றாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதில் பெருமை கொள்கிறவர்களாகவும் சமூக தலைவர்களாகவும் அல்லது சமூக சீர்த்திருத்த வேலைகள் போன்றவைகளில் ஈடுபடுகிறவர்களாகவும் இருக்கின்றனர். இவைகளெல்லாம் உவமையில் சொல்லப்பட்ட முட்களாகும். இப்படிப்பட்ட இருதயமானது கனிகளைக் கொடுக்காது; ஏனெனில் இந்த நிலம் நல்லதாக இருந்தாலும் மற்றவைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ராஜ்ய செய்தி மற்றும் அதன் வேலைகளுக்கும் இடமில்லாதபடியும், கனிகள் பூரணத்திற்கு கொண்டு வர முடியாதபடியும் இருக்கிறது.

பிறகு, நாம் உவமையின் "நல்ல நிலத்தின்" வகுப்பாரிடம் வருகிறோம். அந்த நிலம் நல்லதாகவும், எந்தவித தீங்கான புல், பூண்டுகள் இல்லாமலும் இருக்கிறது. இவைகள் கோதுமையை சரியாக வளரவிடாது. இந்த நிலைமை தேவனிடம் முழு அர்ப்பணிப்பை குறிக்கிறது. தடை செய்கிறவைகள் நீக்கப்பட்டிருக்கிறது. இந்த வாழ்க்கையின் கவலைகள் இந்த இருதயத்துக்குள் நுழைந்து வசனத்தை தடை செய்யும்படி அனுமதிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஒருவர் கர்த்தரிடம் உண்மையான உடன்படிக்கையைச் செய்திருக்கிறார். அதை எப்பொழுது நிறைவேற்ற வேண்டும் என்பதை அறிந்து அதை நிறைவேற்றுவார். இவர் சரியான குணத்தை அல்லது ஆழமான பண்பையும், திறமையையும் உடையவராக இருப்பார். முழுமையான நேர்மையும், விசுவாசமும் உடைய சிறப்புத்தன்மை அங்கே இருக்கும்.

நல்ல நிலமென்று பேர்பெற்ற இந்த வகுப்பாரில் பற்பல நிலைகளை காண்கிறோம். பிரபுக்கள் அநேகரில்லை, ஆனால் சிலர் இருக்கிறார்கள்; வல்லவர்கள் அநேகரில்லை, ஆனால் சிலர் இருக்கிறார்கள்; கற்றறிந்தவர்கள் அநேகரில்லை, ஆனால் சிலர் இருக்கிறார்கள்; ஞானிகள் அநேகரில்லை, ஆனால் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் நல்ல இருதயம் உடையவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் தேவையான கனிகளை கொடுப்பவர்களாகவும் இருக்கவேண்டும். நேர்மை என்பது

இவை எல்லாவற்றிலும் மிகவும் முக்கிய அம்சமாக இருக்கிறது. அதோடு கூட புத்திசாலித்தனமும் சத்தியத்தை மதித்தலும் முக்கியமானதாக இருக்கிறது. இந்த வகுப்பார் எப்படி, சூழ்நிலைக்கும், நிலைமைக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு பல்வேறு விதமான கனிகளை கொடுக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இவர்கள் தங்களால் அதிகபட்சம் முடிந்ததை அதாவது முப்பது மடங்காகவும், அறுபது மடங்காகவும், நூறு மடங்காகவும் கொடுக்கக்கூடிய நல்ல இருதய நிலைமையில் இருக்கிறார்கள்.

உவமையில் விதை என்பது சத்தியத்தைக் குறிப்பதாக நாம் பார்க்கிறோம். மேலும் தனிப்பட்ட நபர்களும் கூட விதையினால் குறிப்பிடப்படுகிறார்கள். கருத்து என்னவென்றால், சத்தியம் என்கிற தானியம் விதைக்கப்படுகிறது. நேர்மையான இருதயம் சத்தியத்துக்கு இசைவான குணலட்சணத்தை உருவாக்குகிறது. சத்திய விதை என்பது ராஜ்யத்தைப்பற்றிய வசனமாகவும், ராஜ்யத்தைப் பற்றிய செய்தியாகவும் இருக்கிறது. இது மனிதனின் தத்துவத்தையோ அல்லது சில விஞ்ஞான உண்மையையோ குறிக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட சத்தியத்தைக் குறிக்கிறது. தேவனுடைய திட்டத்தையும் கருத்தையும் புறக்கணிக்கக்கூடிய ஒன்றை குறிக்கவில்லை. தேவன் ஏற்பாடு செய்திருக்கிறவைகளில் ஒரு குறிப்பிட்ட காரியமாகிய ராஜ்யத்தைப் பற்றிய வசனத்தை அது குறிக்கிறது.

### நாற்பது கோடி களைகள்

கிறிஸ்தவ மக்கள் என்று அழைக்கப்படுகிற நாற்பது கோடி பேர் ராஜ்யத்தை பற்றி மிகவும் குறைவாகவே அறிந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாக காணப்படுகிறது! இதில் மிகவும் பெரும்பாலானவர்கள் ஏதாவது தெரிந்திருந்தால்கூட அது மிக மிக குறைவானதேயாகும். ஐரோப்பாவை கவனித்து லட்சக்கணக்கானோர் மரணத்துடன் போரிடுவதை பார்க்கும்போதும், அமெரிக்காவில் லட்சக்கணக்கானோர் போரிட தயாராக இருப்பதை உணரும் போதும் இது வெளிப்படுகிறது. அவர்கள் புது சிருஷ்டிகளாக ஆகாததுதான் இதற்கு காரணம். இயற்கையான விதையானது நிலத்தில் விழுந்து துளிர்விட்டு மண்ணினால் போஷிக்கப்பட்டு, வளர்க்கப்படுகிறது. அது போல நல்ல சத்தியவிதை தகுந்த இருதயத்தில் நல்ல கனியை கொண்டு வருகிறது. ராஜ்யத்தைப்பற்றிய செய்தி இயற்கைக்கு இசைவாக பலன்களை கொடுக்கிறது. இது தகுந்த வகுப்பாரிடம் சென்றடைந்து, தேவன் அவர்களை புது சிருஷ்டிகளாக ஏற்றுக் கொள்வதற்குரிய மனோபாவத்தை அவர்களுக்கு கொடுக்கிறது. இந்த புது சிருஷ்டிகள்தான் இராஜ்யத்தின் பிள்ளைகள். இந்த இராஜ்யத்தின் பிள்ளைகள்தான் களஞ்சியத்தில் சேர்க்கப்படுகிற கோதுமையாக இருப்பார்கள். "அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்."

நமது கர்த்தர் இன்னொரு உவமையில் வேறு விதமான விதை மற்றும் களையைக் காண்பிக்கிறார். களையின் விதை கோதுமையைப் போல சிறியதாகக் காணப்படுகிறது. அது உண்மையான விதையல்ல–ராஜ்யத்தின் விதையல்ல. அது ஒழுக்கத்தைப் பற்றிய அல்லது பரிசுத்தமான வாழ்க்கையைப்பற்றிய, அல்லது மது, போதை வஸ்து போன்றவைகளிலிருந்து முற்றிலுமாக விலகியிருப்பதைப் பற்றிய ஒரு விதையாக அல்லது செய்தியாக இருக்கலாம். அது ஒரு விஷயமல்ல. அது ராஜ்யத்தின் வகுப்பாரை உண்டு பண்ணாது. இந்த வகுப்பாரை உண்டு பண்ணுகிற விதையே நல்ல விதையாக, உண்மையான ராஜ்யத்தின் செய்தியாக இருக்கிறது.

நாம் உலகத்தைக் பார்க்கும்போது மகா சத்துருவானவன் ராஜ்யத்தின் இந்த கோதுமை வயலில் தவறான விதையை, களையை விதைத்திருப்பதை நாம் பார்க்கிறோம். இப்படி பல்வேறு செய்திகளால் குறிப்பிடப்படுகிறவைகள் உலகமெங்கும் சென்றிருக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்த விதைகள் கெட்ட ஜனங்களை கொண்டு வரவேண்டும் என்பது அவசியமில்லை. அவர்கள் பல்வேறு காரியங்களுக்காக ஊழியம் செய்கிற ஜனங்கள், அவர்களில் சிலர் ஏறக்குறைய நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகள் அல்ல. தற்காலத்தில் இந்த களைகளில் அநேகர் செல்வாக்குள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் நாற்பது கோடி பேர், உண்மையான கோதுமை வகுப்பாருக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற போலிகள்தான், உண்மையான கோதுமை அல்ல.

இப்பொழுது முடியும் தருவாயில் இருக்கிற இந்த அறுவடை காலத்தில், உண்மையான கோதுமைக்கும் களைக்கும் இடையே பிரிவினை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. உண்மையான கோதுமை மணிகள் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. களைகளோ சுட்டெரிக்கப்படுவதற்கு கட்டுகளாக கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. சொல்லர்த்தமாக எரிக்கப்படுவதில்லை, களைகளாக, போலிகளாக அழிக்கப்படுகிறது. அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்வது சீக்கிரத்தில் முடிவுக்கு வரும். தாங்கள் எப்பொழுதுமே உலகத்தாரின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளுவார்கள். இவர்களில் அநேகர் சபை அங்கங்கள், ஆனால் அவர்கள் உண்மையான கோதுமை வகுப்பாரை குறைவாக மதிப்பிட்டு, அவர்களை ஒரு சிறிய விந்தையானவர்களாகவும் வெறியர்களாகவும் எண்ணுகிறார்கள்.

இந்த களைகளில் பெரும்பாலானவர்கள் தங்களை யார் என்று அறியாதிருக்கிறார்கள். ஆனால் நல்ல நேர்மையான இருதயத்தில் ராஜ்யத்தின் செய்தியைக் ஏற்றுக் கொண்டவர்கள், அதற்கிசைவான கனிகளை தருவார்கள். நல்ல கனிகளை அபிவிருத்தி செய்வதற்கு சில காலம் பிடிக்கும். இந்த வகுப்பார் அறிவிலும் அன்பிலும் அனுதினமும் வளர்கிறார்கள்; ஒருவருக்கொருவர் மகா பரிசுத்த விசுவாசத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக அவர்கள் எல்லாருக்கும் நன்மை செய்கிறவர்கள். இதுதான் அவர்களிடமிருந்து தேவன் எதிர்பார்க்கிற முழு வேலையாக இருக்கிறது. இவர்கள்தான் நீண்ட காலமாக பரலோக ராஜ்யத்திற்குள் திரைக்குப் பின்னால் சேகரிக்கப்பட்டு வருகிறவர்கள்.

இந்த "உக்கிரத்தின் நாளின்"அக்கினியில் "இப்பொழுதிருக்கிற இந்த பொல்லாத உலகம்" அழிக்கப்பட்டு, பெருமையின் வேர்கள் அனைத்தும் எரிக்கப்பட்ட பிறகு, மனுக்குலத்திற்கு மகா ஆசீர்வாதமான காலம் வரும். மகா ஆபத்தாகிய (உழவு) ஏரின் கொழு மனுக்குலத்தை சீக்கிரத்தில் மகா விதைப்புக்கு ஆயத்தப்படுத்தும். ஆயிர வருட யுகத்தின் மகிமையான விளைச்சலை கொண்டுவர ஆயிரம் வருடங்கள் ஆகும். அப்பொழுது சேர்க்கப்படுகிறவர்கள் கோதுமையாக

**--2489--**

இருக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள் இழந்ததை திரும்ப பெறும் வகுப்பாராக இருப்பார்கள். நமது கர்த்தரின் உவமையில் கோதுமையானது ஆவிக்குரிய வகுப்பாரை, சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களை குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

---------------------------------

**--2490--**

# நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும்
# Our cleansing - Inward and Outward

*"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும், உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தெய்வ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." 2 கொரிந்தியர் 7:1*

வேதாகமமானது உலகத்திற்காக அல்ல, சபைக்காக அவிசுவாசிகளுக்கு அல்ல விசுவாசிகளுக்காக, பாவிகளுக்காக அல்ல, பாவத்திலிருந்து முன்னரே மனந்திரும்பியவர்களுக்காக எழுதப்பட்டது என்கிற உண்மையை மறுபடியும் உங்கள் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வருகிறோம். அநேகர் இந்த உண்மையை கவனிக்கிறதில்லை. இதன் பலனால் அவர்களது மனதில் குழப்பமிருக்கிறது.

ஆனால், "கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும், அகாயா நாடெங்குமுள்ள எல்லா பரிசுத்தவான்களுக்கும் எழுதுகிறதாவது" என்று நிருபத்தில் கூறப்பட்டிருந்தாலும், சிலர் இது பாவிகளுக்கும் பரிசுத்தவான்களுக்கும், விசேஷமாக பாவிகளுக்கு எழுதப்பட்டிருப்பதாக ஒருவேளை சிலர் சொல்லக்கூடும்." இல்லை என்று நாங்கள் பதில் கூறுகிறோம். தேவனிடம் வராமலும் தங்களது பாவத்திற்காக மனம் வருந்தி மன்னிப்பு பெறாமலும் இருக்கக்கூடிய பாவிகளுக்கு பொதுவாக இது பொருந்தாது. இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் கூறுவதில்லை. தேவன் அவர்களை பாவிகளாக கண்டனம் செய்து, அவர்களது அங்கீகாரம் மற்றும் ஐக்கியம் அனைத்தையும் மறுக்கிறார். மேலும், அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட வானத்தின் கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே இயேசுவின் நாமத்தைத் தவிர வேறொரு நாமம் இல்லை, அவரது இரத்தத்தில் விசுவாசம் வைப்பதின் மூலமே இரட்சிக்கப்பட முடியும் என்பதை அவர்களுக்குக் கூறுகிறார். தேவன் கொடுத்திருக்கிற மகா பாவ நிவாரண பலியை ஏற்றுக் கொள்ளாத, ஏற்றுக் கொள்ள முடியாதவர்களிடம் அவர் எந்தவித தொடர்பும் கொள்வதில்லை. இது குறித்து இயேசு கூறுகிறதாவது: "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." யோவான் 14:6

தெய்வீக நிலையின் நம்பகத்தன்மை பிரதிபலிப்பின் மூலம் தெளிவாகிறது. தற்கால யுகத்தில் தேவன் உலகத்திலிருந்து சிறுமந்தையை கூட்டிச் சேர்த்து வருகிறார். அவர்களது விசேஷித்த குணம் அவர்மேல் வைத்த விசுவாசமும் அவரை சந்தோஷப்படுத்த விரும்புவதுமேயாகும். வருகிற ஆயிரவருட யுகத்தில் தேவன் மீதியுள்ள மனுக்குலத்தோடு தொடர்புகொள்ள தீர்மானித்திருக்கிறார். அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் கெட்டுப்போவதில்லை என்கிற அவரது தேவையை மிகவும் தெளிவாக வெளிப்படுத்துவார். (ஏசா. 35:8) அந்த ஆயிர வருட மகிமையின் நாளில் நீதியின் சூரியன் உதிக்கும்; நன்மையும் தீமையும் தெளிவாக வெளியரங்கமாகும். தெய்வீக குணங்களும் பண்புகளும் அனைத்து சிருஷ்டிகளும் பார்க்கும்படி காண்பிக்கப்படும். ஆம், தீர்க்கதரிசியினால் தெளிவாக சொல்லப்பட்டபடி குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். ஏசாயா 35.5

ஆனால் இப்போது, தற்கால யுகத்தில், கர்த்தர் தெரிந்து கொண்டு தமது சபை என்று பெயர் சூட்டப்பட்ட இந்த விசேஷித்த சிறுமந்தைக்கு விசுவாசத்தின் பரீட்சை ஒன்று இருக்கிறது. இந்த தெரிந்து கொள்ளப்பட்ட சபையில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த முடியாதவர்கள், கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சபையின் கைகளினால் ஆசீர்வதிக்கப்படும்படி காத்திருக்கவேண்டும். இந்த ராஜ்யத்திற்காகத்தான், "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கிறோம்.

### பரிசுத்தவான்கள் அனைவரும்
### இயற்கையாகவே உயர்ந்தவர்கள் அல்ல

தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு விசுவாசம் மட்டுமே அவசியமானது என்று தேவன் வைக்காமல், அதோடு கூட நீதியின்மேல் அன்பாயிருப்பதையும் சோதனைக்கு ஒரு பகுதியாக வைத்திருக்கிறார். உலகின் பாவங்களுக்காக மீட்பின்–கிரயம் கிறிஸ்துவின் மரணம் என்பதை அங்கீகரிக்கும் விசுவாசக்கண் மாத்திரமே போதுமானதாயிராமல், தெய்வீக கிருபைக்கு கீழாக வருவதற்கு நீதியின் மேல் அன்பு செலுத்துகிற இருதயத்தையும் பெற்றிருக்கவேண்டும். நீதியை நேசிக்கிற இருதயமானது, அதன் சொந்த மாம்சத்தின் பலவீனத்தையும் அதன் கீழ் நோக்கி செல்லும் சுபாவத்தையும் உணர்ந்திருக்கிறது. இருதயமானது, இயேசுவை இரட்சகர் என்று அங்கீகரித்தவுடனேயே, கடந்தகால பாவங்களை அவருடைய புண்ணியத்தினால் மூடப்படுவதற்கு மாத்திரமல்ல, தற்கால மற்றும் எதிர்கால அபூரணங்களையும், விரும்பாமல் செய்த கறைகளையும் சாட்டப்பட்ட மூடுதலைப் பெறவும் அவரிடம் ஓடிப்போகிறது. அப்பூரணங்கள் சித்தத்திற்கு எதிரானதாகவும் சுதந்தரித்துக் கொண்டிருக்கிற பலவீனங்களின் பலனாகவும் இருக்கிறது.

நமது கர்த்தர் தமது செய்தியாகிய, "வருத்தப்பட்டு பாரம் (பாவத்தையும் அதன் பலனாகிய மரணத்தையும்) சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்"என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்த வகுப்பார் இந்த உலக பாவத்தோடோ தங்களது சொந்த பலவீனங்களோடோ இசைவாயிருக்கவில்லை. கிறிஸ்துவின் பள்ளியில் மாணவர்களாக, சீஷர்களாக, கற்பவர்களாக இருக்கும் இந்த வகுப்பாருக்குத்தான் நமது பாடத்தின் தலைப்பு வசனம் எழுதப்பட்டுள்ளது. மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க உங்களை சுத்திகரித்துக் கொள்ளுங்கள் என்று உலகத்தாருக்கு பொதுவாக புத்திமதி கூறுவது பிரயோஜனம் இல்லாதிருக்கும். உலகமானது இந்த அசுசிமேல் அனுதாபம் கொண்டுள்ளது. அதை சுத்திகரித்துக் கொள்ள விருப்பம் இல்லாததாக இருக்கிறது. தேவனுடைய பார்வையில் அது எவ்வளவு அசுசியாக இருந்தாலும், அதன் மேலும் பரிசுத்தத்தின் ஆவியை பெற்றிருக்கிறவர்கள் மேலும்

எந்தவித பாராட்டுதலும் அதனிடம் இல்லை. கோபம், வன்மம், பொறாமை மற்றும் பலவிதமான இச்சைகள் போன்றவைகள் தான் உலகின் வழக்கமான, பொதுவான நிலைமை என்று கர்த்தர் விவரிக்கிறார். இச்சைகள், சுயநலம் போன்றவை செல்வத்தையும், சந்தோஷத்தையும், அதிகாரத்தையும் தேடும்போது அடிக்கடி கொடுமையே நடக்கிறது. அதோடு கூட இயற்கையான மனதை நிரப்ப தேடுவதால், அது எடுத்துக் கொள்ளப்பட்டால், மாற்றாக எதுவும் இல்லாததால், வாழ்க்கையின் வசீகரம் அனைத்தும் போய்விடும். மாற்றாக ஒன்றும் இல்லாதபோது மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசியை நீக்கிப்போட புத்திமதி சொல்வதில் சொந்தக்காரர் எங்கே இருப்பார்?

விசுவாசிகளில் மேன்மையானவர்கள் இருப்பது போல அவிசுவாசிகளிலும் மேன்மையான மக்கள் இருக்கிறார்கள் என்று சிலர் ஒருவேளை கூறலாம். ஆம்! வேதம் இதை ஏற்றுக் கொள்கிறது. இந்த உலகத்தின் மார்க்கத்தின்படி விசுவாசிகளில் பிரபுக்களோ, ஞானிகளோ, வல்லவர்களோ அநேகர் இல்லை என்று வேத வசனங்கள் அறிவிக்கின்றன. மீட்பர் மற்றும் அவரது உதவியின் அவசியத்தையும் தங்களது சீரழிவையும் குறைவாக உணருகிறவர்களைக் காட்டிலும் மனுக்குலத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்கே தேவனுடைய கிருபையின் செய்தி பதிவாகிறது. உலகத்தாரில் மேன்மையானவர்கள் சிலர் இருக்கும்பொழுது, விசுவாசிகள் தாழ்ந்தவர்களாயிருக்கும்பொழுது, தேவன் எப்படி அவிசுவாசிகளைக் காட்டிலும் விசுவாசிகள் மேல் அதிகமான விசேஷித்த அக்கறை கொண்டிருக்கிறார்? எந்த ஒழுங்கின்படி கர்த்தர் இயற்கையாகவே குறைவாக மேன்மையானவர்களை ஏற்றுக்கொண்டு, இயற்கையாகவே மிகவும் மேன்மையானவர்களை நிராகரிக்கிறார்?

தெய்வீக அங்கீகரிப்புக்கு விசுவாசமும் தாழ்மையுமான இருதயமே ஒழுங்காக அல்லது நியமமாக இருக்கிறது என்று நாங்கள் பதில் கூறுகிறோம். தங்கள் இருதயத்துடனும், தங்கள் மனதுடனும், தங்கள் சித்தத்துடனும் பாவத்திலிருந்து மனந்திருந்தி, விசுவாசத்தினால் தெய்வீக ஏற்பாட்டை ஏற்றுக் கொள்கிறவர்களை கர்த்தர் அவர்களது மாம்சத்தின்படியும் அதன் கறைகளின் படியும் அல்லாமல் அவர்களது சித்தத்தின்படியும் அவர்களது நோக்கத்தின்படியும் ஏற்றுக்கொள்கிறார். மாம்சத்தின்படியான அவர்களது விரும்பாத குறைகள், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுவதினால், தேவனுடைய பார்வையில் படுவதில்லை. இது புதுசித்தத்தின் இயலாமை இருக்கும்வரை. இந்த புதிய சித்தம் பாவத்தை இழிவாக கருதி, அவர்களது மாம்சத்திலும் மற்றும் எங்கும் இருக்கும் பாவத்திற்கு விரோதமாக நல்ல ஒரு போராட்டத்தை போராட நாடுவார்கள். இந்த வகுப்பாருக்குத்தான் நமது பாடத்தின் தலைப்பு வசனமாகிய, "பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசி நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொள்வோமாக" என்பதை கூறுகிறார்.

### தேவனுக்கு பிரியமானவர்கள் மதிப்பற்றவர்கள்

பாவத்துக்கு விலகி, தேவனுக்கு பிரியமும் ஏற்புடையவர்களாயிருக்கும்படி முயற்சிக்கிற அனைத்து விசுவாசிகளையும் கர்த்தருடைய கருவியாயிருக்கும் அப்போஸ்தலர் "பிரியமானவர்களே" என்று அழைக்கிறார். இந்த பிரியமான சகோதரர்களில் பெரும்பாலானவர்கள் மாம்சீக பலவீனங்களையும் அபூரணங்களையும் உடையவர்களாயிருந்தார்கள் என்று மேன்மையான மனிதராகிய அப்போஸ்தலரே ஒப்புக் கொள்கிறார். இந்தக் கறைகளினிமித்தம் அப்போஸ்தலர் அவர்களிடம் அன்பு செலுத்தாமல், அவர்கள் தங்களது அழியக்கூடிய மாம்சத்தின் விருப்பங்களையும் பாவத்தையும் ஜெயங்கொள்ளும்படியும், இந்த உலகத்தில் அவர்களது செல்வாக்கு போகும்படியும் முயற்சி செய்வதாலும், நீதியின் கொள்கைகளுக்கு விசுவாசமாக இருப்பதாலும் அவர்களை நேசிக்கிறார். பிதாவானவர் அன்பு செலுத்துகிற, இயேசு அன்பு செலுத்துகிற, அப்போஸ்தலர் அன்பு செலுத்துகிற இவர்களை உலகம் நேசிக்கவில்லை. நமது ஆண்டவரின் வார்த்தைகளாவன:" உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களை பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது. நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்." (யோவா. 15:16,18,19)

உலகமானது இந்த தெரிந்து கொள்ளப்பட்டவர்களை விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் பாவத்தை அறிக்கையிட்டு அதை விட்டுவிட முயற்சிக்கிறார்கள். அவர்களது முறையான பெயர்களாகிய பாவங்கள், அற்பத்தனங்கள், மாம்சத்திலும் ஆவியிலும் இருக்கும் அசுசிகள் என்று அவர்களை அழைக்கிறார்கள். இவர்கள் தங்களை சுத்திகரித்துக் கொள்ளுதல், தங்களை சுத்திகரித்துக்கொள்ள முயற்சிக்காதவர்களுக்கு ஒரு கண்டனமாக இருக்கிறது. மேலும் அவர்கள் அதிகமாக சந்தோஷம் பெறுகிற விசுவாச கோட்பாடு, சுயநலம், மிதமிஞ்சிய பாசம், சண்டைகள், பெருமை, பகட்டு ஆகியவைகளை இவர்கள் வெறுக்கிறார்கள். உலகத்துக்கு முழுவதும் திருப்தியுடையவர்களாயிருக்கிறவர்கள் கர்த்தருக்கு திருப்தியுடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம் கர்த்தரிடத்தில் திருப்தியாயிருப்பவர்கள் உலகத்துக்கு திருப்தியாயிருக்க எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஏனெனில் உலகத்துடன் சிநேகம் தேவனுக்கு விரோதம். ஆகையால் அப்போஸ்தலர் விளக்குவதுபோல உலகமான தெய்வீக திட்ட அளவிற்கு, கீழ்ப்பட்டிருக்கவில்லை, அவசியமுமில்லை. (யாக்கோபு 4:4; ரோமர் 8:7) அதனுடைய இருதயம் வேறு திசையில் இருக்கிறது.

முழு இருதயத்தோடும் தேவனை நேசி மற்றும், தன்னைத்தான் நேசிக்கிறதுபோல பிறனையும் நேசி என்கிற புது சிருஷ்டியின் பிரமாணம் உலகத்திற்கு எந்த வழியிலும் நியாயமற்றதாகவும், நினைக்கமுடியாததாகவும், விரும்பத்தகாததாகவும் இருக்கிறது. நீதியின் பக்கம் இருப்பவர்கள் இதை ஞாபகப்படுத்தினால் கூட அது அவர்களுக்கு அசௌகரியத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது. இவர்களுக்கு கர்த்தரும் அவரது அடிச்சுவட்டில் நடக்கிறவர்களும் எப்பொழுது வரவேற்கப்படாதவர்களாக, அழையாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தவறை குறிப்பிடுகிற எந்த ஒரு ஆலோசனையையும் விரும்புவதில்லை, தனியாக இருக்கவே விரும்புகிறார்கள். அவர்களில் சிலர் உதாரகுணத்தில் சந்தோஷமான பெருமையை, நல்ல பெயரை, நேர்மையிலும் நற்குணத்திலும்

ஒரு கீர்த்தியை பெறுகிறார்கள் என்பது உண்மை. தெய்வீக நியமங்களினால் தங்களது சிந்தனை, செயல் மற்றும் வார்த்தைகள் ஒரு திட்ட அளவாகவும் உதாரணங்களாகவும் எண்ணப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகையால் தெய்வீக நியமங்களை தொடர்ந்து மதித்து அங்கீகரிப்பவர்கள் அவர்களால் அவமதிக்கப்படுகிறார்கள்.

### சுத்திகரிப்புக்கான அவசியம்

தேவன் நமது கறைகளை தமது பார்வையிலிருந்து முழுவதுமாக மறைத்திருக்கிறார் என்று நாம் காணும் போது, மாம்சத்தையும், இருதயத்தையும் சுத்திகரிக்கும் வேலையை செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் சபைக்கு ஏன் ஆலோசனைக் கூறவேண்டும்? கறைகள் மறைக்கப்பட்டிருந்தால், அதைப்பற்றி தொந்தரவு ஏன் இனி வரவேண்டும்? அதற்கு மேலான காரணங்கள் உண்டு! கர்த்தரிடத்திலும் அவரது நீதியினிடத்திலும் இருதயத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்கு அவர்களது கறைகள், அவர்களது பாவங்கள், அவர்களது மாம்சீக பலவீனங்கள் அவர்களுக்கு மன உளைச்சலை தருகின்றன. அவர்களது இருதயம் அவர்களது குற்றங்களுக்கு எதிராக இருப்பதால், கர்த்தர் குற்றங்களை அவர்கள் மேல் சாட்டாமல் கிருபையாக அவர் அவைகளை மூடுகிறார் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். நீதியின் கொள்கைகளுக்கு விசுவாசத்தினால் குணலட்சணத்தை கட்டி நிர்மாணிப்பதுதான் இந்த வகுப்பாரின் விருப்பம். கர்த்தரிடத்திலும் அவரது பொன்னான கற்பனையாகிய அன்பினிடத்திலும் அவர்களது இருதயம் மென்மேலும் விசுவாசத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களது விருப்பம், மேலும், முடிந்தவரை விழுந்து போன, அபூரண மாம்சத்தை புது சிந்தையின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, அன்பு என்கிற தெய்வீக சட்டத்திற்கு கீழ்ப்படுத்தும்.

பாவங்கள் மன்னிக்கப்பட்டதால், கர்த்தரின் ஆசீர்வாதங்களை அனுபவித்த பிறகு, பாவத்திற்கு எதிராக போராட்டம் பண்ணவும் தனது அழியக்கூடிய சரீரத்தை தனது புதிய சிந்தை, வல்லமை மற்றும் திறமையினிடத்தில் கீழாக்கவும் விரும்பாதவர்களிடம் உண்மையான புத்திர சுவீகாரத்தின் ஆவி இல்லை. இதன் மூலம் அவன் உண்மையிலேயே அக்கிரமத்தை வெறுத்து உண்மையிலேயே நீதியை சிநேகிக்கவில்லை என்பதை அவன் நிரூபணம் பண்ணுகிறான். இப்படியாக அவன் ஆவியின் சுபாவத்தில் தமது பிள்ளையாகவும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி, மணவாட்டி, சிறுமந்தையின் அங்கமாகவும் கர்த்தர் விரும்புகிற வகுப்பில் அவன் இல்லை என்பதை சாட்சியமளிக்கிறான்.

நமது பாடத்தின் தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் ஏன் சகோதரர்களை கேட்டுக் கொள்கிறார் என்பதற்கான நல்ல காரணத்தை நாம் பார்க்கிறோம். அதே பரிசுத்தத்தின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட அனைவரும், நமது மீந்திருக்கும் வாழ்க்கை முழுவதும் அவரது வார்த்தையில் கவனம் செலுத்தி நமது மாம்சத்தையும் ஆவியையும் சுத்திகரிப்பதே பிரதானமான வேலை என்பதற்காக ஒரு நல்ல காரணத்தைப் பார்க்கிறோம். இதை அவர்கள் செய்யவில்லை என்றால், நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிறேன் என்று அவர்கள் பாசாங்கு செய்வதாக இருக்கும் என்பதை நாம் பார்க்கிறோம். மாம்சம் மற்றும் ஆவியின் பலவீனத்திற்கு எதிரான இப்படிப்பட்ட போராட்டத்தின் மூலம் அவர்கள் திடமான குணலட்சணத்தை உருவாக்க வேண்டும். வேத வசனம் கூறுவதுபோல அவர்கள், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு தகுதியுள்ளவர்களாக" வேண்டும். தெய்வீக ஊழியம் செய்வதற்கு இருதயத்தில் தகுதியுள்ளவர்களாக வேண்டும். இப்படிப்பட்டவர்கள்தான் ஆயிர வருட யுக ஊழியத்திற்கு இருதயத்தில் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள் என்றும் முதலாம் உயிர்த்தெழுதலில் கறைகள் எதுவும் இல்லாத புதிய சரீரங்களை பெறுவார்கள் என்றும் நாம் உறுதியளிக்கப்படுகிறோம். தங்களால் முடிந்தவரை தற்கால வாழ்க்கையில் தங்கள் மாம்சத்தை கட்டுப்படுத்தி மனதில் பூரணத்தையும் தங்கள் இருதயத்தில் குணலட்சணத்தையும் உருவாக்கினவர்கள் இருதயத்தில் தங்கள் இரட்சகரும் கர்த்தருமானவரின் சாயலுக்கு ஒப்பானவர்கள் என்று மெய்ப்பிக்கிறார்கள். இப்படியாக தேவனுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக தங்களை அபிவிருத்தி செய்தவர்கள் மட்டுமே சீக்கிரத்தில் உலகத்தை ஆசீர்வதிக்கப்போகிற ஆபிரகாமின் சந்ததியை, ராஜ்ய வகுப்பாரை, முற்றும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அமைப்பார்கள்.

### "நம்மை சுத்திகரித்துக் கொள்வோமாக"

"நம்மை சுத்திகரித்துக்கொள்வோமாக" என்கிற வார்த்தைகளில் ஆதாமிய தண்டனையிலிருந்து விடுபடுவோம் என்று குறிப்பு ஏதும் இல்லை. ஆதிகால பாவத்திலிருந்து நம்மை நமது முயற்சியால் சுத்திகரித்துக்கொள்ள இயலாது என்று அப்போஸ்தலர் வேறொரு இடத்தில் விளக்குகிறார். தேவனிடமிருந்து அதை நாம் ஒரு பரிசாக பெற்றால் ஒழிய அதை பெறமுடியாது. பிறகு நாம் எந்த அர்த்தத்தில் நாம் நம்மை சுத்திகரித்துக் கொள்வோம்? நாம் கர்த்தரால் சுத்திகரிக்கப்பட்டதாக எண்ணப்பட்டு, பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழாக கொண்டு வரப்பட்டு, அவரது வசனங்களை புரிந்துகொள்ளும்படியான அறிவுக்கு கொண்டு வரப்பட்டு, இப்போது நாம் கர்த்தருக்கு ஊழியத்தில் ஒத்துழைக்கவும், நீதியின் மேல் நமது வைராக்கியத்தை காண்பிக்கவும் அழைக்கப்படுகிறோம். அனைத்து தண்டனைகளும் நம்மை விட்டு நீங்கினதாக எண்ணப்படும்போது, நமது மாம்சத்திலும் ஆவியிலும் பாவத்துக்கு எதிராக போராடுவதன் மூலம் நமது ஆவி, நமது நோக்கம் எப்படிப்பட்டது என்பதை கர்த்தரிடம் காண்பிக்க சந்தர்ப்பத்தை பெறுவோம். இந்த சுத்திகரித்தலுக்கு தூண்டுகிறவர் நமது கர்த்தர். ஆனால் சுத்திகரித்தலை நாம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்–" நம்மை சுத்திகரித்துக் கொள்வோமாக." சுத்திகரித்தல் ஒரு கடினமான வேலை, ஏனெனில் நாம் எந்த அளவுக்கு களங்கப்பட்டிருந்தோம் என்பதையும் நமது மனதின் யோசனைகள் எல்லாம் எப்படி சுயநலமானதாக இருந்தது என்பதையும் ஆரம்பத்தில் பகுத்துணராதவர்களாயிருந்தோம்.

நமது புரிந்து கொள்ளும் கண்கள் மேலும் மேலும் அகலமாக திறக்கப்பட்டதால், கர்த்தரைப் பற்றியும், அவரது நீதியைப் பற்றியும், நமது சொந்த நிலைமையைப் பற்றியும், அவரது வஸ்திரம் நமது தேவைப்படுதல் முதலானவைகளைப் பற்றிய சரியான பார்வையைப் பெற்றோம். ஒவ்வொரு நாளும், பாவத்தையும், சுயநலத்தையும் நீக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதால்–ஆம், அன்பின்மை மற்றும் பாவத்தின் ஒவ்வொரு காரணியையும் – ஆரம்பத்தில் நமது சிந்தனை எல்லாம் வெறும் மேலோட்டமானது என்பதையும், கறையானது எவ்வளவு ஆழமானது என்பதையும் அறியும் போது நமது மனசாட்சி அதிக வலியுள்ளதாக ஆனது. அநேக கர்த்தருடைய பிள்ளைகள், மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசி நீங்க வருடக்கணக்காக உழைத்த பிறகு இப்பொழுது ஐயோ இந்த

இயற்கையான அசுசி மற்றும் சுயநலம் முதலானவை களிலிருந்து விடுபட்டும் கூட, முதலில் அவர்கள் பகுத்துணர்ந்த கறைகளைக் காட்டிலும் அதிகமான கறைகளை காண்கிறார்கள். மாம்சத்தின்படி நம்மை கவனியாமல், நமது நோக்கம், நமது முயற்சிகளின்படி கர்த்தர் நம்மை கவனிக்கிறார் என்கிற அவரது வசனத்தின் உறுதிமொழி இராவிட்டால், இது சுத்திகரிக்கும் வேலையை மிகவும் ஊக்கம் கெடுக்கும் ஒன்றாக செய்திருக்கும். நமது இயற்கையான கறைகளுக்கு எதிராக நமது நல்ல போராட்டத்தின் மூலமாகத்தான் நமது வெற்றியின் அளவு எவ்வளவாக இருந்தாலும் நம்மை ஜெயங்கொண்டவர்களாக தேவன் கருதுகிறார்.

மாம்சத்தின் அசுசிக்கும், ஆவியின் அசுசிக்கும் இடையே அப்போஸ்தலர் கூறுகிற வேறுபாடு கவனிக்கப்பட வேண்டும்.நாம் கர்த்தரை ஏற்றுக் கொண்ட பிறகு, நமது நிலையை, அதாவது அவரை நமது இரட்சிப்பின் தலைவராகவும் நம்மை சிலுவை வீரர்களாகவும், எடுத்துக் கொண்டு பாவத்திற்கும், மாம்சம் மற்றும் சாத்தானின் அனைத்து வேலைகளுக்கு எதிராகவும் ஒரு நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும். சீக்கிரத்தில் இந்த வகுப்பைச் சேர்ந்த கூட்டத்தோடு சேருகிறோம். நாம் தீய பழக்கங்களையும் வெளியரங்கமான எல்லாவித தப்பிதங்களையும் நீக்கி மாம்சத்தை இயற்கையாகவும் சரியாகவும் சுத்திகரிக்க ஆரம்பிக்கிறோம். இது மிகவும் நல்லது, வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கும், இருளின் வேலைகளுக்கும் இடையே என்ன ஐக்கியம் இருக்க முடியும்? நீண்ட காலத்திற்கு முன்பு அநேகரிடம் ஒரு கணிசமான அளவு வெளியரங்கமான மாற்றம் வெளிப்பட்டது. பொறுப்பற்ற வார்த்தைகள் தவிர்க்கப்படுகிறது. தீவிரமான உணர்ச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது; சுயநலம் வெளியரங்கமாவது கட்டுப்படுத்தப்படுகிறது. அண்டை வீட்டாரும் நண்பர்களும் ஒரு கணிசமான மாற்றத்தைக் காணமுடியும். இது நல்லது, ஆனால் போதுமானதல்ல, நாம் நமது ஆவியை, நமது மனதை சுத்திகரிக்க வேண்டும். வெளிப்படையான தப்பிதங்களை நாம் தவிர்ப்பது மட்டும் போதாது, நமது சிந்தை, சுத்திகரிக்கப் படவேண்டும். பாவத்தை வெறுப்பதற்கும் அதன் முதல் முன்னேற்றத்தை எதிர்ப்பதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நமது சரீரமும் நமது இருதயமும் கர்த்தரின் ஆலயம் என்பதையும், அவருக்கும், அவரது பிரமாணமாகிய நீதி மற்றும் அன்புக்கும் எதிரிடையான எதுவும் தடை செய்யப்படவேண்டும்.

மற்றவைகள் நமது சோதனைகளுக்கும், வெளியரங்கமான வெற்றிகளுக்கும் ஓரளவுக்கு சாட்சியங்களாக இருக்கின்றன. ஆனால் புது சிருஷ்டியின் மிக முக்கியமான போராட்டங்கள், நமக்கும் நமது தலைவரானவருக்கும் மட்டுமே அறிந்திருக்கக்கூடிய பழைய சுபாவ சிந்தை அல்லது சித்தத்தின் செல்வாக்கிற்கும் எதிரான புதிய சிந்தை அல்லது புதிய சித்தத்தின் போராகும். இந்த போர்க்களம், ஓர் உண்மையான சிலுவை வீரன் தனது எதிர்தாக்குதலையும் அழிவையும் ஈடுபடுத்திக்கொள்ளவும் தன்னை முழுவதுமாக உபயோகித்துக் கொள்ளவும் முற்றிலும் போதுமானதாக காண்பான். இப்படிப்பட்டவர்கள் தங்களது புது குணலட்சணத்தை அபிவிருத்தி செய்ய எச்சரிக்கையாக இருப்பதற்கு மற்றவர்கள் தங்களது அண்டை வீட்டாரையும் நண்பர்களையும் சகோதரர்களையும் குறைகூறுவதற்கான நேரத்தைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே இருக்கும். அவர்கள் விழித்திருத்தலும் கட்டுப்படுத்துதலும் தேவை, என்பதை தாங்களே காண்கிறார்கள்.இந்த திசையில் அவர்கள் முன்னேறும்போது, தெய்வீக நியதிக்கு எதிராக அதே அல்லது மற்ற பலவீனங்கள் மற்றும் சரிவுகளை பெற்றிருக்கிற மற்றவர்கள் மேல் மிகவும் இரக்கம் உள்ளவர்களாக ஆவார்கள். இதேபோல தங்களுடையது அனைத்தையும் கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்து, தங்களது மாம்சத்திலும் ஆவியிலும் உலகம், மாம்சம் மற்றும் விரோதியானவனுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிற புது சிருஷ்டியின் சகோதரர்களிடம் விசேஷமாக இரக்கங்கொள்வார்கள்.

### நமது படிப்படியான மாற்றம்

பிதாவினிடத்தில் முன்னரே பிள்ளைகளாக வந்தவர்கள், நாம் ஆரம்பித்த இந்த நியமங்களுக்கு நாம் விசுவாசமாக இருக்கிற அளவுக்குத்தக்கதாக மென்மேலும் அவரது ஆசீர்வாதத்தைப் பெற்று, மென்மேலும் அவரது ஐக்கியத்திற்குள்ளாக இருப்போம் என்பதே அவரது வாக்குத்தத்தம் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். உலகத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் நாம் திரும்பியிருந்தோமானால், மாம்சத்தின் குறிப்பிட்ட சில அசுத்தங்கள் நம்மிடம் இருப்பதை, காண்கிறோம். இவைகளை பாவத்தின் கறைகளாக இருந்தாலும், நாம் களைந்து போட நாடவேண்டும். இந்த திசையில் நாம் சுறுசுறுப்படைவோமானால், அந்த அளவுக்கு தேவனுடைய கிருபையை நாம் பெறுவோம், அந்த அளவுக்கு அவருக்கு சந்தோஷத்தை கொடுப்பவர்களாகவும் அவருக்கு ஏற்புடையவர்களாகவும் இருப்போம்.

மாம்சத்திலும் ஆவியிலும் இருக்கிற அசுசியைப் பற்றி அப்போஸ்தலர் குறிப்பிடுவதினால், புது சிருஷ்டி அசுசியானவர்கள் என்று அர்த்தங்கொள்ளக்கூடாது. புது சிருஷ்டியானது ஓரிடத்தில் சொல்லப்பட்டது போல மாசில்லாதது. புது சிருஷ்டியானது பரிசுத்தமானது. ஆவி என்கிற வார்த்தை அடிக்கடி மனதை, சிந்தையை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஒருவர் ஒரு புது சிருஷ்டியாக ஆவதற்கு முன்னால் சித்தம் முழுவதுமாக மாற்றப்படவேண்டும். சித்தத்தில் பின்னடைவு ஏற்படுமானால் அது அழிவுக்கு போவதாக பொருள். பாவம் செய்வதற்காக ஒரு சித்தத்தை பெறுவது என்பது நாம் பரிசுத்த ஆவியை முற்றிலுமாக இழந்து விட்டதாக பொருள். அதாவது நாம் இரண்டாம் மரணத்தில் இருக்கிறோம்.

ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள், இந்த புது பொக்கிஷத்தை ஒரு மண் பாண்டத்தில் பெற்றிருக்கிறார்கள். பாவத்தைக் குறித்த ஒரு இயற்கையான போக்கு நம்மிடம் இருக்கிறது. பாவகாரியங்கள் நீக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், பாவத்தின் அழுக்குகளை ஏறக்குறைய மீண்டும் சேர்க்கப்பட்ட பாவ காரியங்களை நாம் பெற்றிருக்கிறோம். பாவமான காரியங்களை விட்டு நாம் வெளியேறும்போது, நாம் நமது மனது பரிசுத்தமடைவதற்கு பாடுபடவும் வேண்டும். பாவத்திற்கு ஆதரவாயிருக்கிற எந்த காரியத்தையும் நம்மைவிட்டு நீக்க வேண்டும். பாவமான காரியங்களை சிந்திக்கவும் நம்மை அனுமதிக்கக் கூடாது. நாம் மேலானவைகளை நாட வேண்டும். (கொலோசெயர் 3:2)

நமது சிந்தை முழுவதையும் தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் நிரப்பினோமானால், நமது முழு குணமும், முழுவாழ்க்கையும் அதிகமாக மறுரூபமடைந்திருக்கும். “உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” என்று அப்போஸ்தலர் கூறுகிறார். பூமிக்குரிய காரியங்களுக்கும் பூமிக்குரிய சுபாவங்களுக்கும்

--2494--

இசைவாக இருந்த நமது சிந்தைகள் பாவத்திற்கு கீழ்ப்படிதலிலிருந்து விளக்கப்படுவது மாத்திரமல்ல, ஒரு புது திசைக்கு திரும்ப வேண்டும். நமது சிந்தைகள், கர்த்தர் மற்றும் அவரது ஊழியத்தைப் பற்றிய எண்ணங்களாகிய பரிசுத்த எண்ணங்களால் நிரப்பப்படவேண்டும். சிந்தையானது தேவனை நோக்கி சரியான மனோபாவத்தில் இருக்கும்போது, தேவனுடைய பிரமாணத்திற்கு ஊழியம் செய்வது சுலபமாக இருக்கிறது. பரிபூரண பரிசுத்தத்திற்கு நம்மை உற்சாகமூட்டுகிறார். நாம் தேவனுடைய ஜனங்களாக ஆன பொழுதே பரிசுத்தம் நம்மில் ஆரம்பித்திருந்தது. நாம் முழுவதுமாக நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோம்– ஒரு பகுதியை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. தேவனுடைய சித்தத்தை முழுவதுமாக செய்வதே நம்முடைய அர்ப்பணம் ஆகும். நமது சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே நமது புத்தியுள்ள ஆராதனை. நாம் பரிசுத்தவான்களாக ஆக ஆரம்பித்துவிட்டோம். பரிசுத்தவான்களைத் தவிர வேறு யாரையும் கர்த்தர் ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே நமது வார்த்தை, செயல் மற்றும் சிந்தை ஆகிய எல்லா நடவடிக்கைகளிலும் தெய்வீக நியதிக்கு இசைவாக வாழும்படி நாம் நாடவேண்டும்.

### நம்முடைய சுத்திகரித்தலும் கர்த்தருடைய சுத்திகரித்தலும்

பரிசுத்தத்தை பூரணப்படுத்துவது போய்க் கொண்டிருக்கிறது. பரிசுத்தப்படுத்திக் கொள்வது என்பது நம்மிடத்தில் அசுத்தங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை கவனித்து, அவையெல்லாவற்றையும் நமது நடக்கைகளிலிருந்து நீக்குவதாகும். இதைக்காட்டிலும் அதை நமது சிந்தையிலிருந்து நீக்குவதாகும். நாம் இதை செய்வதால், பரிசுத்தமானது நமது வாழ்க்கை நெடுகிலும் பரவும். ஒரு கிறிஸ்தவனாக நற்குணசாலிகளாக ஆக வேண்டும். ஒரு கிறிஸ்தவன் அழகான குணலட்சணத்தை பெற்றிருக்கவில்லை என்றால், தனது பரிசுத்தமாகுதலின் காரியத்தில் அவர் சரியாக கவனம் செலுத்தவில்லை என்பதை காண்பிக்கிறது. அதாவது மனுக்குலத்திடம் தனது வெளியரங்கமான உறவில் பரிசுத்தமாகுதலையும், தேவனுடனான தனது உள்ளான உறவில் பரிசுத்தமாகுதலையும் கவனிக்கவில்லை என்று காண்பிக்கிறது.

இதையெல்லாம் நாம் கர்த்தருக்கு பயப்படுதலில், கர்த்தருடைய பயபக்தியில் செய்ய வேண்டும். பயபக்தியுடனான பயத்திற்கும் அடிமைத்தனத்துடனான பயத்திற்கும் வித்தியாசம் உண்டு, பயபக்தியுடனான பயம் ஒரு நன்மைக்கான பயம். நம்மிடம் திரும்பி நம்மை கொடூரமாக நடக்கிற ஒரு பிசாசாக நினைத்து நமது பரமபிதாவிடம் பயப்படக்கூடாது. ஆனால் தெய்வ பக்தியுடனான ஒரு பயம் நம்மிடம் இருக்கவேண்டும். அவரது பார்வையில் ஏற்புடைய மற்றும் மகிழ்வூட்டும் காரியங்களை செய்வதற்கு இது சந்தோஷப்படும். ஆகையால் இந்த எல்லா சுத்திகரித்தலும், இந்த எல்லா பரிசுத்தத்தில் காணப்படுதலும் கர்த்தருக்கு பயப்படுதலில் பூரணமடைந்து கொண்டிருப்பதின் ஒரு நோக்கமாக இருக்கிறது.

அவரது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பெற்று, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் கிடைக்கப்பெற்ற நம்மை, தேவன் நமது திறமைகளை வீணாக்கவும், முன்னேற்றத்தை கொடுக்காமலும், இருக்கும்படி தேவன் விரும்பாமல் நாம் முப்பதாகவும், அறுபதாகவும் நூறாகவும் கனி கொடுக்கும்படியும் எதிர்பார்க்கிறார். இதை நாம் செய்யும்போது அதற்கேற்றாற்போல் பரிசை பெறுவோம்.

இன்னொரு வேத வசனம், கர்த்தர் சுத்திகரித்தல் வேலையை செய்வதாகக் கூறுகிறது. "மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும் (சுத்திகரியும்)." (சங்.19:12) தாவீது தீர்க்கதரிசியின் இந்த வார்த்தைகள், கர்த்தருடைய உண்மையான பிள்ளைகளின் மனோபாவமாக இருக்கிறது. தீர்க்கதரிசியின் இந்த வார்த்தைகள் தன்னைத்தானே சுத்திகரித்துக் கொள்ளும்படியான திராணி தனக்கு இல்லை என்கிற உண்மையை அவன் உணர்ந்திருந்ததாக காண்பிக்கிறது. தானே விரும்பாத, தானே பார்த்திராத மறைவான குற்றங்களை அவன் உணர்ந்திருக்கிறான்.ஒருவேளை தான் பார்த்திராத ஆனால் மற்றவர்கள் கண்களுக்கு தெரிகிற குற்றங்களை செய்திருக்கலாம். தேவன் இவைகளை சுத்திகரிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். தேவனுக்கு இசைவில்லாத எந்த காரியத்தையும் வெளியேற்ற விரும்பினான் என்பதை இது குறிப்பிட்டது.

எல்லா கிறிஸ்தவர்களின் மனோநிலையும் இதுவாகத்தான் இருக்கும். நமது வாழ்க்கையில் தேவனுக்கு ஏற்புடையதாகவும் சந்தோஷமாகவும் இல்லாதிருக்கிறவைகளை நமக்கு காண்பிக்கும் படியாகவும், மற்றவர்கள் நம்மிடத்தில் காண்கிறபடியே நாம் காணும்படியாகவும், விசேஷமாக அவர் நம்மில் காண்கிறபடியே நாமே பார்க்கும்படியாகவும் உதவி செய்ய வேண்டும் என்று நாம் அவரிடம் ஜெபிக்கவேண்டும். அநேக கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவர்களது அபூரணமும் பலவீனங்களும் (கர்த்தரின் கிருபையில்) ஒரு தீவிர அதிர்ச்சியினால் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். சங்கீதக்காரன் செய்தது போல, நாமும் கர்த்தரை நோக்கி துணிகரமான பாவங்களிலிருந்து எங்களை திருப்பும் என்றும், இவைகளிலிருந்து முற்றிலுமாக எங்களை சுத்திகரியும் என்றும் கேட்கிறோம்.

### "பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்துதல்"

மாம்சமும் ஆவியும், சரீரமும் சிந்தையும் இப்படிப்பட்ட ஒரு சுத்திகரித்தல், பரிசுத்தமாகுதலை ஒரு பூரணப்படுத்துவதாக அமைகிறது. பரிசுத்தமாகுதல் என்பது ஒரு கணநேரத்தில் அடையக்கூடியது அல்ல, படிப்படியாக அடைந்து பூரணப்படுதல் ஆகும் என்பதே இதன் கருத்தாக இருக்கிறது. இந்த காரியத்தைக் குறித்த சரியான ஒரு பார்வை, நாம் ஒரு குறிப்பிட்ட பயங்கரமான தவறுகளில் விழுவதிலிருந்து தடுக்கும். பரிசுத்தம் என்பது ஒரு தாயத்து அல்ல, நமது பைகளில் போட்டுக்கொள்வதற்கு, இது ஒரு ஆடையல்ல எப்போதாவது அணிந்து கொள்வதற்கு. பரிசுத்தம் என்பது உலோகத்துண்டு வெப்பநிலை மாற்றத்துக்கு கொண்டுவருவதற்கு ஒத்திருக்கிறது. அது ஒவ்வொரு இழையிலும் நுழைந்து பொதுவான குணலட்சணத்தை மாற்றுகிறது. அதன் செல்வாக்கிலிருந்து மறுரூபமடைகிறது. ஆம், கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தின் மூலம் கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தராகக் கருதப்படுகிறார்கள். நீதியின் வஸ்திரம், முதலில் நாம் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இரட்சகரை ஏற்றுக்கொண்டு தேவனிடத்தில் நம்மை அர்ப்பணம் பண்ணும் போது நமக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதுமானதல்ல. நாம் அர்ப்பணம் செய்திருக்கிறதுபோல, அல்லது அப்போஸ்தலர் கூறுவதுபோல, சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் அனுமதிக்கிறதற்கு ஏற்ப, நமது குணலட்சணத்திற்குள் நாம் கிரியை செய்து, பரிசுத்த சித்தமும் அதோடு கட்டாயம் இணைந்திருக்க வேண்டிய பரிசுத்த நடக்கையும் நம்மில் கிரியை செய்ய கர்த்தரை அனுமதிக்கவேண்டும்.

--2495--

ஆனால் எப்படி இந்த பரிசுத்தம் நம்மில் பூரணப்படுகிறது? தேவன் தம்முடைய சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் எப்படி உண்டாக்குகிறார்? இந்த கேள்விக்கு நமது தலைப்பு வசனமே பதில் கூறுகிறது. வாக்குத்தத்தத்தை நமக்கு கொடுப்பது தேவன் செய்ய வேண்டியதாயிருக்கிறது என்று அந்த வசனம் நமக்கு உறுதியளிக்கிறது. மேலும் இந்த வாக்குத்தத்தங்கள், நல்ல மனோபாவத்தில் இருப்பவர்களுக்கான ஊக்கத்தையும் அமைக்கிறது. தற்கால மற்றும் எதிர்கால ஆசீர்வாதத்திற்கான தெய்வீக வாக்குத்தத்தங்கள் இன்றி யார் தனது சொந்த பலவீனத்திற்கெதிராக போரிடுவார்கள்? உலகம் மற்றும் எதிராளியின் தாக்குதல்களை விடாமுயற்சியுடன் யார் எதிர்ப்பார்கள்? இன்னும் ராஜாவுக்கு ஊழியம் பண்ணவும், பாவத்துக்கு விரோதமாக போராடவும், நீதியின் பக்கம் இருக்கிற அனைவருக்கும் உதவவும் ஊக்கமளித்து சக்தியூட்டவும் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் இல்லாதிருந்தால், யார் தன்னுடைய வாழ்க்கையையும், தனது அனைத்து இயற்கையின் சுதந்திரங்களையும் கர்த்தருக்காகவும் அவரது நிமித்தமும் விருப்பத்துடன் பலியிடுவார்கள்? அப்படியிருந்தால், மிகவும் சொற்பமானவர்களே இருப்பார்கள். ஆகையால் நமது தலைப்பு வசனம், "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, நம்மை சுத்திகரித்துக் கொள்வோமாக" முதலானவைகளை கூறுகிறது. பரிசுத்த பவுலால் குறிப்பிடப்பட்டதுபோல வாக்குத்தத்தங்களானது உண்மையிலேயே நமது சுத்திகரித்தலுக்கும், நமது இரட்சிப்புக்கும் தேவனுடைய பெலனாக இருக்கிறது. (ரோமர் 1:16)

### "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்"

என்ன வாக்குத்தத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார் என்று காணும்படி அதன் சந்தர்ப்பத்தை நாம் பார்க்கும்போது, அதற்கு முந்திய வசனங்களில் அவர் அறிவிக்கிறதாவது: "ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதை தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." (2 கொரிந்தியர் 6:17,18) என்ன அற்புதமான வாக்குத்தத்தம்! எப்படிப்பட்ட ஒரு யோசனை! இயற்கையிலேயே அசுசியும் அபூரணமும் உடையவர்களாயிருக்கும் நாம், நமது வல்லமையுள்ள சிருஷ்டிகரை கவனித்தால் மட்டும் போதாது, நாம் அவரது பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்டு, நமக்கான அவரது பெற்றோருக்குரிய அன்புக்கான உறுதிமொழியைப் பெற வேண்டும். "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." எவ்வளவு ஆச்சரியமாக இது காணப்படுகிறது! அப்போஸ்தலர் வேறொரு இடத்தில் அறிவிக்கிறது போல் இது காரியத்தின் முடிவல்ல, வெறும் ஆரம்பந்தான். ஏனெனில் அவர் சொல்லுகிறதாவது:" நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்." (ரோமர் 8:17)

ஆம், தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய குமாரர்கள் என்ற வார்த்தை குறிப்பாக உணர்த்துவது இந்த கருத்தைத்தான். தற்போது மனிதர்களிடையே தெரிந்துகொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிற கிறிஸ்துவின் மணவாட்டியும், ராஜ்யத்தில் அவரது உடனிருப்பவர்களுமாகிய சிறுமந்தைக்கே பிதாவின் ஆசீர்வாதங்களும், ஆஸ்திகளும் நமது கர்த்தராகிய இயேசு மூலம் நீட்டிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. இவர்கள் உடனே தேவனுடைய ராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை, ஆனால் அது பயிற்சி காலமாக இருக்கும். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நாம் இப்போது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை." நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், தற்கால வாழ்க்கையில் நாம் தேவனுடைய பிள்ளைகளாக, அவருடைய வசனங்களின் மூலமாக அவரது குணலட்சணத்தை அறிந்து கொள்ளக்கூடிய சந்தோஷத்தை நாம் பெற்றிருக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை நாம் அறிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறோம், ஆனால் உலகமோ அதை அறிந்துகொள்ளவில்லை. தெய்வீக மேற்பார்வை நமக்கு உறுதி பண்ணப்பட்டிருக்கிறது. ஒரு சிறு காரியம் நடக்கும்படி இந்த பிள்ளைகளுக்கு அனுமதிக்கப்பட்டாலும் அது அவர்களது நன்மைக்காக என்பதை பிதா காண்கிறார். அவர்கள் சீக்கிரத்தில் இரட்சகரின் மணவாட்டியாக, முழுமையான, பூரணமான, நிறைவான அர்த்தத்தின்படி அவரது மகிமையில் பங்கு பெறுவதற்கு அவர்கள் தங்களது அன்பையும், தங்களது பக்தி, பிதாவுடனும் இரட்சகருடனுமான ஒருமைப்பாட்டின் ஆவியையும் காண்பிக்க வேண்டும்.

இந்த கிருபைகளை அவர்கள் பெற்றிருப்பதை மெய்ப்பிக்கவே, இந்த அர்ப்பணம் செய்துகொண்டவர்கள் கொஞ்ச காலத்திற்கு தீமை மற்றும் சாதகமற்ற சூழ்நிலைகளுக்கிடையே விடப்பட்டிருக்கிறார்கள். இது அவர்கள் தங்களது நீதியின் மேலுள்ள அன்பையும், அக்கிரமத்திற்கு தங்களது எதிர்ப்பையும், தேவனிடத்தில் அன்பையும், விசுவாசத்தையும், தெய்வீக ஏற்பாட்டில் பிரியம் உள்ள அனைவர் மேலும் தங்களது அன்பை நிரூபிக்கவும் ஆகும். இந்த சோதனைகளில் அவர்கள் முழுவதும் நின்றால், உலகம், மாம்சம் மற்றும் எதிரியானவனின் எதிர்ப்பை பொறுமையோடே சகித்தார்கள் என்று பொருள்படும். மேலும் இந்த அனுபவங்களினால் அதற்கேற்றாற்போல அவர்கள் பலப்படுத்தப்படுவார்கள். இந்த வகுப்பாருக்குத்தான் அப்போஸ்தலர்,"அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" என்று கூறுகிறார். அவர் நன்மை செய்து பாடுபட்டதுபோல நாமும் பாடுபடவேண்டும். ஏனெனில் அண்டை வீட்டாரும், நண்பர்களும் எது சரியானது, எது சரியான மார்க்கம் என்பதை அறியாதிருக்கிறார்கள். பிதாவானவர் அன்பில்லாதவர்களிடத்தில் மிகவும் நல்லவராகவும் தவறு செய்பவர்களிடத்தில் மிகவும் நீதியுள்ளவர்களாகவும் இருக்கிறார் என்பதை அறிந்து, என்னவிதமான பாத்திரத்தை நம்மேல் அவர் ஊற்றினாலும், நாம் சந்தோஷமாகவும் களிப்புடனும் பாடுபடவேண்டும்.

"பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." அப்போஸ்தலர் பேதுரு கூறுவது போல், "இவைகளைச் செய்தால் நாம் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய ராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2பேதுரு 1:10,11)

**--2496--**

------------------------------

## Faithfulness In Little Things

# கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல்

*“கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்.” லூக்கா 16:10*

நமது தலைப்பு வசனத்தில் உலகளவில் அங்கீகரிக்கக் கூடிய ஒரு பெரிய கொள்கையை நாம் பெற்றிருக் கிறோம்.சிறிய காரியங்களில் நம்பத்தகுந்தவர்கள் பெரிய காரியங்களிலும் நம்பத் தகுந்தவர்களாயிருப்பார்கள் என்பதை வாழ்க்கை அனுபவங்கள் நமக்கு போதித்திருக்கிறது. சிறிய காரியங்களில் நம்மை எச்சரிக்கை செய்யும் ஒருவர் பெரிய காரியங்களிலும் எச்சரிக்கை செய்வார். அனுதின வாழ்க்கையில் சிறிய செயல்களிலும் கனிவாக இருக்கும் ஒருவர் பெரிய சந்தர்ப்பங்களிலும் கனிவாக இருப்பார்.

கர்த்தர் இந்த கொள்கையை பொதுவாக தமது சீஷர்களிடம் பிரயோகித்து வருகிறார். கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய மிக முக்கியமான பாடங்களில் ஒன்றாக இது இருக்கும் என்று நாம் நம்புகிறோம். பணத்தில் பெரிய தொகைகளை மிகவும் ஜாக்கிரதையாக கையாளும் அநேகர், சிறிய தொகைகளை கையாள்வதில் மிகவும் அஜாக்கிரதையாக இருக்கிறார்கள். தனது கண்காணிப்பில் கொடுக்கப்பட்ட பெருந்தொகையை மிகவும் ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளும் ஒருவர், சிறிய தொகையை ஒன்றுமில்லை என்று நினைக்கிறார். சிறிய காரியங்களில் பொறுப்பின்மையை வளர்க்கும் ஒருவர் பெரிய காரியங்களிலும் பொறுப்பில்லாமலே இருப்பார். வேறு வகையில் சொல்வோமேயானால், ஒவ்வொரு டாலரைப் பற்றியும் ஒவ்வொரு நாணயத்தைப்பற்றியும் சிறிய கடனை அடைக்கவும் அக்கறையுள்ள ஒருவர் பெருந்தொகைகளிலும், பெரும் கடனிலும் மிகவும் அக்கறையுடன் இருப்பார்.

சிறிய காரியங்களில் பொறுப்பில்லாமலும் பெரிய காரியங்களில் பொறுப்போடும் இருப்பவர்கள் நாளடைவில் அல்லது பெரும் மன அழுத்தத்தின் கீழ் எல்லா காரியங்களில் நம்ப முடியாதவரும் உண்மையற்றவருமாகவும் இருப்பார்கள் என்பது வாழ்க்கையில் பொதுவான ஒரு நியதியாக காணப்படும். அவர்களது சுயநல சொந்த அக்கறையானது உண்மைத்தன்மைக்கு மாறாக இருக்கும். வேறுவார்த்தைகளில் கூறுவோமேயானால், வாழ்க்கையின் அற்பகாரியங்கள் நமது குணலட்சணத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. எல்லாவற்றிலும் மனசாட்சியுடன் இருக்க வேண்டும் என்பதை கற்றுக் கொள்பவர்கள், வாழ்க்கைப் பாடங்களை சரியானபடி அப்பியாசப்படுத்தி வருகிறார்கள். நமது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையில் நாம் காண்கிறோம். சிலர் பிறரது உரிமைகளில் முற்றிலும் அக்கறையின்றி இருப்பார்கள். உதாரணத்திற்கு, சிலர் பிறரது குடையை அவர்களது அனுமதியின்றி எடுத்துக்கொண்டு, “இது எனக்கு ஒரு மணி நேரத்திற்குத்தான் தேவை, நான் அதை திரும்பி கொண்டு வந்து விடுவேன்” என்று கூறுவார்கள். இப்படிப்பட்ட ஒருவர் சிறிய காரியங்களில் சரியான மனசாட்சி இல்லாதவராக இருக்கிறார். ஒரு மணி நேரத்திற்கு குடையை எடுத்துச் செல்பவர், பெரிய காரியங்களில் நம்பிக்கை வைப்பதற்கு போதுமான கொள்கை இல்லாதவர், மற்றவர்கள் பிறரது பொருளை கடனாக வாங்கி அதை சரியானபடி திருப்பிக் கொடுக்க மறந்து விடுவார்கள் அல்லது அக்கறையின்றி இருப்பார்கள். இப்படியாக அதன் சொந்தக்காரரை பெரிய அசௌகரியத்திலும் எரிச்சலிலும் வைப்பார்கள். மொத்தத்தில் கடன் வாங்குதல் ஒரு வருந்தத்தக்க விஷயம்.

நமது ஆண்டவரின் ஆயிர வருட ஆளுகையில் பூமிக்குரிய காரியங்களை கட்டுப்படுத்துவதற்கு, தம்முடன் இருக்கக்கூடிய உதவி ஆசாரியர்களையும், உதவி நியாயாதிபதிகளையும், உதவி ராஜாக்களையும் அவர் தெரிந்துகொண்டு வருவதாக வேதாகமம் நமக்கு கூறுகிறது. இந்த வேலைக்கு தெரிந்தெடுக்கப்படுவர்கள் விசேஷித்த தகுதியும், விசேஷித்த குணலட்சணமும் உடையவர்களாக இருக்கவேண்டும். முழுவதும் தங்களை அவருக்கு விட்டுக்கொடுப்பவர்கள் இந்த முக்கிய இடத்திற்கு தயார்படுத்தப்படுவார்கள். தங்களை விட்டுக் கொடுக்காதவர்கள் தயார்ப்படுத்தப்படமாட்டார்கள். ஆகையால் நமது கர்த்தர் நமது உண்மையான மனோநிலை என்ன என்பதை குறிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக கருதப்பட்டு தற்கால சந்தர்ப்பம் வெகுமதியளிக்கப்படவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளும்படி நமக்கு கொடுக்கிறார். அவர் நமது மகாபெரிய போதகராகவும் நமது அனைத்து காரியங்களிலும் அவரது சித்தத்துக்கு இசைவாக வழி காட்டும்படியும் நாம் முழு அர்ப்பணிப்பை செய்யவில்லை என்றால் நாம் அவரது சீஷர்களாயிருக்க முடியாது என்கிற ஒரு நிபந்தனையாக இதை செய்கிறார்.

வாழ்க்கையில் எவ்வளவு சிறிய காரியமாயிருந்தாலும் நமக்கு தேவைகள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது ஆண்டவர் நமக்கு கூறுகிறார்; குருவிகளுக்கும் காட்டுபுஷ்பங்களுக்கும் அவர் போஷிப்பது போல அவரது பிள்ளைகளுக்கும் நிச்சயம் போஷிப்பார் என்று கூறுகிறார். நமது கர்த்தர் நமக்கு சொல்லுகிறதாவது: “குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? அவரது தெளிவான குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு தக்கவாறு இயங்கி கீழ்ப்படிய வேண்டும் என்கிற நிபந்தனையில்தான், நாம் பாவத்தின் அடிமைகளா யிருந்தாலும், நாம் பிதாவின் கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் திரும்பும்படி அவர் ஏற்பாடு செய்தார். நாம் அவரது பிள்ளைகளாகும்படி இன்னும் நம்மேல் எவ்வளவு அக்கறை காட்டுவார்?

### அடக்கம் ஊழியத்துக்கு முக்கியமானது

வாழ்க்கையில் சிறிய காரியங்களுக்காக கூட நாம் கர்த்தருடைய சித்தத்தை கவனிக்கவேண்டும். நாம் பராமரிக்க வேண்டிய சரியான மனோபாவம் இதுதான்; நான் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறேன்; இது சிறிய வேலையா அல்லது பெரிய வேலையா என்பது முக்கியமல்ல. “ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.” (1 கொரிந்தியர் 10:31) அன்பினால்

செய்யப்படுமானால், தாழ்ந்த வகையான ஊழியமாக இருந்தாலும் அது கர்த்தருக்கு ஏற்புடையதாக இருக்கும். கர்த்தராகிய இயேசுவின் ஊழியத்தை நினைவு கூருவோம். யாக்கோபின் கிணற்றண்டையில் ஒரு ஏழை சமாரிய ஸ்திரீயிடம் பேச சந்தர்ப்பம் கிடைத்த போது, "நான் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வந்தேன்; அவள் ஒரு சமாரிய ஸ்திரீயாக இருப்பதால் நான் அவளோடு பேசமாட்டேன்" என்று சொல்லவில்லை. சீஷர்கள் திரும்பி வந்தபோது, ஏன் ஆண்டவர் ஒரு கூட்டத்தில் பேசுவதற்கு பதிலாக இந்த ஸ்திரீயிடம் பேசவேண்டும் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இயேசு, ஒரே ஒரு சமாரிய ஸ்திரீயாக இருந்தால் கூட அவர் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார். சத்தியம் அவள் மூலமாக மற்றவர்களுக்கு செல்லும் என்று அறிந்திருந்தார்; தான் அறிந்து கொண்டதை அண்டை வீட்டாரிடம் கூறுவாள் என்பதையும் ஏற்றகாலம் வரும்போது சமாரியர்களும் கேட்டு சந்தர்ப்பத்தினால் பலனை அடைய தயாராவார்கள் என்பதையும் அறிந்திருந்தார்.

சத்தியத்தை கூற எங்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ, நாம் அதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் நாம் தொடர்பு கொண்டவர்களை தொந்திரவு செய்யக் கூடாது. சந்தர்ப்பம் கிடைத்தால் நமது பிதாவின் ஊழியத்தை செய்ய வேண்டும். சந்தர்ப்பத்தைப் பொருத்து சத்தியத்தைத் பேசலாம் அல்லது அன்பான வார்த்தை முதலானவைகளை நாம் கூறலாம்."கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்." அன்பும் தயவும் பொருந்தியவர்களை, பிறருக்கு உதவ விருப்பம் உள்ளவர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார்.

நாம் எல்லா சமயங்களிலும் உற்சாகமான வார்த்தையைக் கூற சிறப்புரிமை பெற்றவர்களாய் இருக்கிறோம். துக்கமான அனுபவத்தைப் பெற்றிருப்பவர்களின் இருதயத்தில் ஒரு புழு எப்போதும் நெளிந்துக் கொண்டிருப்பதும் ஒரு நியதியே. தற்கொலை செய்து கொள்பவர்கள் கூட, தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு முன்னதாக சில சமயங்களில் சிரிக்கவும், மற்றவர்களை சிரிக்க வைக்கவும் பண்ணுவார்கள் என்பதும் அறியப்பட்ட ஒன்றாயிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களது அனைத்து துன்பங்களையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்களானால், இவ்வுலகம் மிகக் கொடிய நிலையில் இருந்திருக்கும். தங்களது கஷ்டங்களையும், தங்களது சுய உணர்வுகளையும் மறைப்பதும் நன்மையே.

"எனக்குரியதாக நான் காண்கிறதில் திருப்தியடைகிறேன்,
ஏனெனில் என் தேவனே என்னை நடத்துகிறார்."

என்று பாடுகிற ஆவியை வளர்ப்பது நல்லது.

## குணலட்சணத்திற்கான சிறிய சோதனைகள்

கைப்பிரதிகளின் மேலுறையில் விலாசத்தை ஒட்டுவதோ அல்லது இந்த நேரத்தில் கர்த்தருடைய ஊழியத்தில் என்ன வேலையாக இருந்தாலும் அதை ஒரு சலுகையாக நாம் கருத வேண்டும். "நான் போதகம் பண்ணுவதற்குத்தான் போவேன்" என்று யாராவது சொல்வாரானால், கர்த்தர் வழியை திறந்து சந்தர்ப்பத்தை கொடுப்பாரானால், அதுபோல செய்யுங்கள். ஒரு நாள் போதிக்க அநேக சந்தர்ப்பங்கள் கிடைத்தால், ஒருவருக்கோ அல்லது பத்து பேருக்கோ அல்லது ஆயிரம் பேருக்கோ போதிக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு போதிக்க எந்த சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை என்றால், மேலுறையில் விலாசம் ஒட்டுகிற வேலையை செய்யலாம். இந்த வழியில் படிக்கக்கூடிய விஷயங்களை, மற்றவர்கள் கையில் கிடைக்கும்படி செய்வதில் ஒரு கருவியாக இருக்கலாம். தபால்காரர் கூட படிக்கக்கூடிய வீட்டிற்கு அதை எடுத்துச் செல்கிறார். அல்லது நமது வேலை சமையற்கூடத்திலோ அல்லது வீட்டின் வேறு எந்த பகுதியில் இருந்தாலும், அதை கர்த்தருடைய ஊழியமாக நினைத்து அவருக்கு அதை செய்ய வேண்டும். ஆனால் அவர் சகோதரர்களுக்கு ஏதாவது செய்யும் சந்தர்ப்பத்தை நமக்கு அன்பாக தருகிறார்.

நாம் என்ன செய்தாலும் அதை நாம் கர்த்தருக்கென்று செய்கிறோம். நாம் அவருக்காக, அவர் செய்வதுபோல நாம் செய்கிறோம். நாம் சந்தோஷத்தை உணரும்படியாக பொருட்களை நோக்கக்கூடிய ஒரு வழி இருக்கிறது. நாம் எப்போதாவது நம்மை கேட்கவேண்டிய நல்ல கேள்வி இருக்கிறது. நான் என்ன தேடுகிறேன்? இதைச் செய்வதின் நோக்கம் என்ன? யாருக்காக நான் செய்கிறேன்?

நாம் கர்த்தருக்காக வேலை செய்து அவரை சந்தோஷப்படுத்த முயற்சிப்பதாலும், சிறிய காரியங்களில் ஊழியம் செய்வதில் நன்றி கூறுவதின் ஆவியை வளர்ப்பதினாலும் பெரிய காரியங்களுக்கு நாம் பாத்திரவான்கள் என்பதை நிரூபிப்போம். வீட்டில் நமது சிக்கனத்திலும், நம்மை சுற்றிலும் இருக்கிற மற்றவர்களை கவனிப்பதிலும், கர்த்தருக்கு உண்மையான ஊழியத்தை செய்வதில் நமது விருப்பத்தை வெளிப்படுத்துகிறோம். அதிகமாக உலக காரியங்களில் ஈடுபட்டு அதிகமான உலக வேலைகளை செய்பவர்கள் தாங்கள் முழுமையாக தகுதியுள்ளவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்துகிறார்கள். வீட்டைச் சுற்றி மற்றவர்களை தொந்திரவு செய்யும்படி விசில் அடிக்கிறவர்களும், அல்லது அதிகாலையில் எழுந்திருந்து, அதிக சத்தம் போட்டு மற்றவர்கள் ஓய்வெடுக்க முடியாதபடி செய்பவர்களும் அல்லது இரவு நேரத்தில் மிகவும் காலதாமதமாக வந்து சத்தத்தை ஏற்படுத்திக் கொண்டு தமது அறைக்கு போகிறவர்களும் பொன்னான கற்பனையை கடைபிடிக்கவும் மற்றவர்களது உரிமைகளை மதிக்கவும் கற்றுக் கொள்ளவில்லை என்பதை மெய்ப்பிக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நமது நடத்தைகள் அனைத்திலும் முதலாவதாக இருக்க வேண்டியது நீதியின் கொள்கைகளை கடைபிடிக்க வேண்டியது ஆகும். மற்றவர்களது உரிமைகள் என்னென்ன என்பதையும், அந்த உரிமைகளில் நாம் அத்துமீறுகிறோமோ என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அப்படி செய்வதாக நாம் கண்டால், நாம் நீதியின் சட்டத்தை நாம் மீறுகிறோம் என்பதை அறிய

வேண்டும். வாழ்க்கையின் எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் நீதி முதலாவது வரவேண்டும். அதன் பிறகு தயாள குணமும் தயையும் உள்ளவராக முடிந்த அளவு இருக்கலாம்.

### "ஆண்டவரே, நானோ?"

ஆவிக்குரிய காரியங்களில் கொள்கையெல்லாம் அதேதான். வாத்தியக்கருவியில் ஒருசிறு பிளவு இசையையே கெடுத்துவிடும். தேவன் ராஜ்யத்திற்கு ஒரு விசேஷித்த வகுப்பாரை தேடிக் கொண்டிருக்கிறார். முற்றிலுமாக அவருக்கு விசுவாசமாயிருக்கிறவர்களை, அவரது வசனத்திற்கு உண்மையாயிருக்கிறவர்களை, பெரிய காரியங்களில் உண்மையாயிருக்கிறவர்களை மாத்திரமல்ல சிறிய காரியங்களிலும் உண்மையாயிருக்கிறவர்களை அதாவது சிந்தனை, சொல் மற்றும் செயல்களில் உண்மையாயிருக்கிறவர்களை அவர் விரும்புகிறார். இப்படியாக உண்மையுள்ளவர்கள், இவைகள் சம்பந்தமான அனைத்திலும் எச்சரிக்கையை அப்பியாசப்படுத்துபவர்கள் ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாகவும் தயார்படுத்திக் கொள்கிறவர்களாகவும் இருப்பார்கள். சிறிய காரியங்களில் அக்கறையின்றியும் கவனமின்றியும் இருப்பவர்கள் முழுமையாக உண்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் வைத்துள்ள மகா கனத்திற்கு தகுதியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். அவர் நம்மை மிகவும் நெருக்கமாக, ஆனால் அன்புடன் கவனித்துக் கொண்டு வருகிறார். நாம் ஜெயம் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். அதற்கு தேவையான போதனையையும் வழிகாட்டுதலையும் நமக்குத் தருகிறார். சிறிய காரியங்களில் நாம் கவனத்தை அப்பியாசப்படுத்தும் போது நாம் நமது குணலட்சணத்தில் சரியான விதத்தில் அபிவிருத்தி செய்கிறோம். இதை செய்ய தவறினோமானால், முக்கிய காரியங்கள் நம்பி ஒப்படைக்கப்பட தகுதியுள்ளவர்களாக ஆகவே முடியாது. இந்த கேள்வியை நம்மை நாமே கேட்டுக் கொள்வோம். நாட்கள் போகப்போக நான் எப்படிப்பட்ட குணலட்சணத்தை அபிவிருத்தி செய்துவருகிறேன்?.

ஆனால் தவறு செய்கிற ஒரு கிறிஸ்தவன், அவனது தவறைக் காணும்போது, அதற்கு முடிந்த பிராயச்சித்தத்தை செய்யும்போது, அவனது அனுபவம் நன்மை பயக்கக்கூடியதாகக் காண்பான். ஒருவேளை மீதமுள்ள அவனது வாழ்க்கை முழுவதும் அது பிரயோஜனமாக இருக்கக் காண்பான். தனக்குத்தானே தண்டனையை அமல்படுத்தும் போது அதிக ஜாக்கிரதையை கற்றுக் கொள்வான். பொறுப்பும் கவனமும் மிகவும் அவசியம். அது நமது ஒவ்வொரு விவகாரத்திலும் நமது நேரத்தை, நமது திறமையை, நமது பணம் முதலானவற்றை பயன்படுத்தும்போதும் நாம் அதைப் பார்க்க வேண்டும். இவைகளில் நாம் பெற்றிருக்கிறவைகள் எல்லாம் கர்த்தரிடத்திலிருந்து வருகிறது. அவை எல்லாம் அவருக்கு உரியவைகள். இந்த சந்தர்ப்பங்களை எப்படி பயன்படுத்துவது, அதை பயன்படுத்துவதில் மனச்சாட்சியின் படியும், நமக்கு பயன்படுத்த வேண்டும், மீதியை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். இவைகளில் நமது பாதை, மகிமையான ஒரு இடத்திற்கு நாம் தகுதியுள்ளவர்களா, இல்லையா என்பதை கர்த்தருக்குக் காண்பிக்கும்.

நமக்கு ஆண்டவர் செய்யும்படி நமக்கு ஒப்புவித்த அனைத்து திறமைகளையும், அவை பெரியதாயிருந்தாலும் சிறியவையாயிருந்தாலும், சரியானபடி உபயோகிக்கிறோமா அல்லது தகாதவிதமாய் உபயோகிக்கிறோமோ என்பது, நமது உக்கிராணத்துவத்தைப் பற்றி அவரது சித்தத்தை அறியவும் அதன்படி செய்யவும் நாம் எந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருக்கிறோம் என்பதை மெய்ப்பிக்கும். கர்த்தர் உண்மையுள்ளவர்களுக்கு சீக்கிரத்தில் கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிற காரியங்கள், டாலரையும் வெள்ளி நாணயத்தைக் காட்டிலும் மேலானவை. காரியங்களின் மகா பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்படும். உண்மையுள்ள வர்களாக இல்லாதிருப்பவர்கள், நேரத்தையும், வெள்ளி நாணயத்தையும், டாலர் முதலானவைகளையும் தன்னுடையதாக நினைத்து அவ்விதமாக பயன்படுத்தியவர்கள் கர்த்தர் தேடிக் கொண்டிருக்கிற வகுப்பாராக இருக்கமாட்டார்கள். நாம் செய்திருக்கிற பலியின் உடன்படிக்கையின்படி நம்மை அவர் பார்க்கிறார். (சங். 50:5) நாம் பத்து இலட்சம் டாலரை பெற்றிருந்தால், அது அவரது பார்வைக்கு ஒரு சிறிய காரியமாகும். நாம் இந்த வாழ்க்கையில் பொருட்களை எப்படி பயன்படுத்துகிறோம் என்பது கர்த்தருக்கு நமது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் மேசியாவின் ஆயிர வருட யுகத்தில் தெய்வீக வல்லமையை பூமியின் வம்சத்தாரை ஆசீர்வதிப்பதற்கு எப்படி பயன்படுத்துவோம் என்பதையும் மெய்ப்பிக்கிறது.

நமது ஊழியத்திற்கான மகா சந்தர்ப்பங்கள் ஒப்பிடுகையில் முக்கியமில்லாததாக இருக்கிறது.ஆனால் நாம் செய்ய முடிந்த சிறு ஊழியத்திற்காக நாம் நன்றி செலுத்த வேண்டும். கர்த்தரை நேசிக்கிறவர்களுக்கு அவர் வைத்திருக்கிறவைகளை ஒப்பிடும்போது நாம் செய்கிற ஊழியம் ஒன்றுமில்லை என்பதை நாம் உணர வேண்டும். அவர்களது கர்த்தரோடு அவர்கள் ஆயிரமாண்டு ஆளுகை செய்ய வேண்டும். வரவேண்டிய யுகம் தொடரும். அதில் இயேசு கிறிஸ்துவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை விளங்கச் செய்வார். (எபேசியர் 2:7) வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்கள் சுதந்தரிக்கப்போகிறவைகளினிமித்தம், நாம் அன்பு, நீதி, பெருந்தன்மை போன்றவைகளை பெற்றிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புவதில் ஆச்சரியம் ஏதும் இருக்கிறதா? தற்கால வாழ்க்கையில் சிறிய காரியங்களில் கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் நமது சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்வதில்தான் நாம் சிறுமந்தையில் அங்கமாயிருப்பது சார்ந்திருக்கிறது.

R5741

## Elijah A Great Prophet

# எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி

1 ராஜாக்கள் 17:1–16

*மெய்யான தேவனின் ஒரு உண்மையுள்ள ஊழியன் – எலியா சபைக்கு ஒரு அடையாளம் – உண்மையான எலியா மெய்யான யேசபேலும் ஆகாபும்–1260 நாட்கள் ஆவிக்குரிய பஞ்சம்–சபைகளில் சீர்த்திருத்தம்– சமீபத்திய சீர்திருத்த அமைப்பு.*

*"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்." (1 பேதுரு 5:7)*

எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தார். இந்த உண்மை நாம் எடுத்துக் கொண்டுள்ள பழைய ஏற்பாட்டு பதிவினால் மாத்திரமல்ல, அவரைப்பற்றிய இயேசுவின் வார்த்தைகளினாலும், அப்போஸ்தலர் யாக்கோபுவின் வார்த்தைகளினாலும் ரூபகாரப்படுத்தப்படுகிது. (யாக்கோபு 5:16–18) இஸ்ரயேலின் பத்து கோத்திரத்தாரின் இராஜாவாகிய ஆகாபிடம் தேவனுடைய வாயாக நமது கவனத்திற்கு எலியா வருகிறார். பஞ்சத்தைப் பற்றிய ஒரு எச்சரிக்கையை கொடுத்தார். தேவனிடம் மழைக்காக எலியா ஜெபிக்கும்வரை இஸ்ரயேலின் தேசத்தில் மழையோ, பனியோ இராது என்று உறுதியாகக் கூறினார். இது வறட்சியை, பஞ்சத்தை, பிரச்சனையை அர்த்தப்படுத்துகிறது. எலியா தனது சுய அதிகாரத்தில் இதைச் சொல்லவில்லை. இது கர்த்தரால் கொடுக்கப்பட்ட தெய்வீகத் திட்டம். தேவனுடைய உண்மையான தீர்க்க தரிசிகள் தற்புகழ்ச்சியுடைவர்களாக இருக்கமாட்டார்கள்; கனத்தையோ அல்லது அதிகாரத்தையோ தாங்களே எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் தேவனுடைய வாயாக இருந்து மட்டும் பேசுவார்கள்.

ஆகாப் ராஜா மற்றும் இஸ்ரயேல் தேசத்தின்மேல் இந்த தண்டனை, துன்பம் வந்ததற்கான காரணம், அவர்களை திருத்துவதற்காகவும், நாம் பார்க்கப்போகிறபடி நமக்கு ஒரு நிழலாக இருக்கும்படியாகவுமே ஆகும்.

இஸ்ரயேலர்கள் விக்கிரக ஆராதனையில் விழுந்து போனார்கள். ஆகாப் ராஜா அவர்களை தலைவனாக இருந்து வழி நடத்தினான். தேவனுடைய தீர்க்கதரிசிகள் கொலைசெய்யப்பட்டார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகள் கனப்படுத்தப்பட்டார்கள். நாடுதழுவிய ஒரு தண்டனை அவர்களுக்கு நல்லதாக இருக்கும். நமது வேத பகுதியின் முதல் வசனத்தில் சொல்லப்பட்டதுபோல, எலியா ராஜாவிடம் அறிவித்தான். பிறகு எலியா கேரீத் ஆற்றண்டைக்கு செல்லும்படி கட்டளையிடப்பட்டார்.

அந்த ஆறு மலையருகே எருசலேமுக்கு போகிற சாலையருகே சென்று யோர்தான் சவக்கடலில் நுழைகிற இடத்தின் அருகே முடிகிறதாக இருந்தது. அது ஒரு தனித்த இடமாக இருந்தது. இது ஒரு பழங்கால ஆசிரமத்தினால் குறிக்கப்பட்டிருக்கிறது. எலியா தீர்க்கதரிசி யாருக்கும் தெரியாமல் மூன்றரை ஆண்டுகாலம் ஒளிந்து கொண்டிருந்தார். காகங்கள் அவருக்கு காலையிலும் மாலையிலும் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்து கொடுத்தன. அந்த ஆற்றின் தண்ணீர் அவரது தாகத்தை தீர்த்தது, மழை இல்லாததினால் ஆறு வற்றிப்போயிற்று, தீர்க்கதரிசி, இஸ்ரயேலின் எல்லையைத் தாண்டி சீதோன் தேசத்திலே சாறிபாத் என்ற ஊரிலுள்ள ஒரு விதவையின் வீட்டிற்கு செல்லும்படி கட்டளையிடப்பட்டார்.

இதைக்குறித்து இயேசு குறிப்பிட்டார். அந்த ஸ்திரீ புறஜாதி பெண் என்றும் இஸ்ரயேலிலிருந்த மற்ற விதவைகளைக் காட்டிலும் இவள் ஆசீர்வாதத்திற்கு பாத்திரமாக இருந்தாள் என்றும் குறிப்பிட்டார். (லூக். 4:25,26) அந்த ஏழை விதவையிடம் தனக்கும் தன் மகனுக்கும் சில அப்பங்கள் தரக்கூடிய கொஞ்சம் மாவு மட்டுமே இருந்தது. தீர்க்க தரிசியின் யோசனையின்படி அவள் விசுவாசத்தினால் மீதியிருந்த அந்த மாவை அவருக்கும் சேர்த்து பயன்படுத்தினாள். பஞ்சம் முடியும்வரை அந்த மாவு தீர்க்கதரிசி கூறியதுபோல குறையவில்லை. "கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மாவு செலவழிந்து போகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை."

## எலியாவின் உண்மையான தீர்க்கதரிசனம்

முன்னரே குறிப்பிடப்பட்டது போல எலியாவின் தீர்க்கதரிசனம் மிக ஆழமான அர்த்தமுள்ளது. அவரும் அவரது அனைத்து செய்கைகளும் பிற்பாடு வரவிருக்கிற அநேக காரியங்களுக்கு அடையாளமாக இருந்தது. எலியா மாம்சத்தில் இருக்கிற சபைக்கு முன்னடையாளம். அதற்கு இயேசு தலையாகவும், அவரது அனைத்து பரிசுத்த சீஷர்கள் அதன் அங்கங்களாகவும் இருக்கிறார்கள். இந்த மெய்யான எலியாவைத்தான் தேவன் அங்கே அறிவித்தார். "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்தில் எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியை சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்." (மல்கியா 4:5,6)

இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் அவரது அனைத்து சீஷர்களும் மகா எலியாவின் அங்கங்களாயிருந்து தேவ ஆவியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செய்தியை உலகிற்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாவத்தை கண்டித்துக் கொண்டும் தேவனுடைய நீதியை உலகிற்கு தெரியும்படியாகவும் செய்து கொண்டிருக்கிறார்கள். உலகமானது செய்தியைக் கவனிக்குமானால் மேசியாவின் ஆவிக்குரிய ராஜ்யம் எல்லா ஜாதியாராலும் விரும்பப்படக் கூடியதும் எந்த "மிகுந்த உபத்திரவமும்" காலமும் அல்லது "உக்கிரத்தின் நாள்" வர அவசியம் இல்லாமலும் ஆரம்பிக்கும். ஆனால் உலகமானது இயேசு மற்றும் அவரது சீடர்களின் செய்தியைக் கவனிக்கவில்லை. ஆகையால் பூமியை நொறுக்குதலும், மகா ஆபத்தின் நாளும் இப்போது ஆரம்பித்திருக்கிறது. மேசியாவின் ராஜ்யம் ஆரம்பிப்பதற்கு இதுவே ஒரே வழியாகும்.

தேசங்கள் தேவபக்தியை சும்மா ஏற்றுக் கொண்டு, ஆனால் அதன் ஆவியில்லாமல், கிறிஸ்தவ தேசம் என்று பேரளவுக்கு கூறிக்கொண்டு பொருளாதாரத்தில் மேலான நிலையை அடைய தற்கால பெரும்போரை நடத்துகின்றன. வேதாகமம் அறிவிக்கிறபடி இந்த போர் அதைத் தொடர்ந்து வரும் மகா புரட்சி, மற்றும் இந்த புரட்சியினால் ஏற்படும் அராஜகம் முதலியவற்றால் உலகின் அனைத்து ராஜ்யங்களும்

நீக்கப்பட்டு, தற்கால முறைமைகள், மற்றும் ஸ்தாபனங்கள் அனைத்தும் நொறுக்கி தூளாக்கப்பட்டு இப்படியாக மேசியாவின் ராஜ்யத்துக்கான வழியும், அதற்கான இடமும் தயார்படுத்தப்படும். "பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்கிற தெய்வீக செய்தியை கேட்டு, நிராகரித்து, தப்பர்த்தம் பண்ணி, திரித்துக் கூறியவர்கள், சத்தியத்திற்கு கீழ்ப்படிதலினால் வராமல், கவிழ்த்துப் போடுவதினால் வருவார்கள்.

### அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல்

வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள சில கூற்றுகளின் மூலம் எலியா சபையை அடையாளப்படுத்துகிறார் என்று தேவனின் அறிக்கையை உறுதிப்படுத்துகிறது. இரகசியம் என்று சொல்லப்படுகிற மகா மத முறைமை யேசபேலுக்கு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. இந்த கிறிஸ்துவின் சபை என்று கூறிக்கொள்கிற இதனோடு ஐக்கியம் வைத்திருக்கிற உலக ராஜ்யம் இஸ்ரயேலின் ராஜாவாகிய ஆகாபுக்கு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. இந்த ஒப்புமையில் எலியா மூன்றரை வருடம் யேசபேல் மற்றும் ஆகாபை விட்டு ஓடிப்போனது போல, சபையும் கூட அதற்காக ஆயத்தம் பண்ணப்பட்ட வனாந்தரத்திற்கு ஓடிப்போனது. அங்கே ஆச்சரியப்படத்தக்கதாக, மூன்றரை காலங்கள், தீர்க்கதரிசன வருடங்கள் அல்லது 42 மாதங்கள் அல்லது 1260 நாட்கள் என்று விவரிக்கப்பட்ட காலப்பகுதியில், போஷிக்கப்பட்டது. (வெளி 2:20-23; 12:6,14; 13.5; 11:2,3)

நீண்ட காலமாக உண்மையான சபை மங்கிப்போய், பாபிலோனின் செழிப்பின் காலம்தான் மகா பெரிய ஆவிக்குரிய பஞ்சம். எலியா கேரீத் ஆற்றண்டையிலும், சாறிபாத் ஊரிலும் ஒளிந்து கொண்டிருந்தபோது, மழையோ, பனியோ இல்லாதிருத்தது போல, உலகத்திலும் 1260 வருடங்கள் ஆவிக்குரிய மழையோ, வானத்திலிருந்து எந்தவித உணவோ கிடைக்கவில்லை. இந்த நீண்ட காலப் பகுதியில் தேவனுடைய வார்த்தைகள், வேதாகமம், மறைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டது. கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்டண்ட் பிஷப்புகள் வேதாகமத்தை மறைத்ததற்கு காரணம் என்னவென்றால், ஜனங்கள் இயேசு மற்றும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் (பரிசுத்த பவுல் யூதாசின் இடத்திற்கு வந்தார்) போதகங்களில் கவனம் செலுத்தினால் அதற்கேற்றாற்போல பிஷப்புகளின் போதனைகளை அசட்டை செய்வார்கள். இவர்கள் தங்களை "அப்போஸ்தல" பிஷப்புகள் என்றும், அப்போஸ்தலர்களுக்கு உரியது என்று இயேசு கூறிய அதிகாரத்தையும் வல்லமையையும் தங்களுக்குரியது என்றும் கூறிக்கொள்கிறார்கள். இந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் சபையை வழிநடத்துகிற பன்னிரண்டு நட்சத்திரங்கள் என்று நமது கர்த்தர் அறிவித்தார்; (வெளி. 12:1) மேலும் அவர்கள் மகிமையடைந்த புதிய எருசலேமின் பன்னிரண்டு அஸ்திவாரக் கற்கள் என்றும் கூறினார். இந்த புதிய எருசலேம் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது. (வெளி. 12:14)

தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது போல தேசத்தில் இருண்ட காலத்தில் பஞ்சம் இருந்தது. அது ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சமாகும். (ஆமோஸ் 8:11,12) வேதாகமத்தின்படி இந்த 1260 வருட கால பஞ்சம் கி.பி.539-இல் ஆரம்பித்து அதாவது மத அதிகாரம் துன்புறுத்தும் தகுதியை பெற்றபோது ஆரம்பித்து கி.பி.1799ல் அதன் துன்புறுத்தும் அதிகாரம் முடிவுக்கு வந்த போது, நெப்போலியனின் வெற்றியின் சமயத்தில், போப் கைதியாக பிரான்சுக்கு கொண்டு சென்றபோது முடிவடைந்தது.

இன்னொரு அர்த்தத்தின்படி 1260 வருடங்கள் கி.பி.325ல் ஆரம்பித்து கி.பி.1585-ல் முடிவடைந்தது. கி.பி.325ல் தன்னை அப்போஸ்தல பிஷப் என்று கூறிக்கொண்டவர் கான்ஸ்டன்டைன் ராஜாவின் ஆதரவுடன் நிசியா கிறிஸ்தவ ஆலோசனை சங்கத்தை (Ecumenical Council of Nice) ஏற்படுத்தி முதன் முதலாக ஒரு பெரிய விசுவாச பிரமாணத்தை, நிசியா விசுவாச பிரமாணத்தை ஏற்படுத்தினார்கள். அப்போஸ்தல பிஷப்புகள் என்று தங்களை அழைத்துக் கொண்ட இவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த விசுவாச பிரமாணம் வேதாகமத்திற்கு பதிலாகவும், அதன் போதனைகளின் சுருக்கம் என்றும், இது மட்டுமே விசுவாசிக்கப்படவேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பிறகு வேதாகமத்தை படித்து விசுவாச பிரமாணத்தில் குற்றம் கண்டு பிடித்தால் அதற்கேற்றாற்போல் தண்டிக்கப்படுவார்கள். அதன் பிறகு விசுவாச பிரமாணம் மதிக்கப்பட்டு, வேதாகமம் ஒதுக்கப்பட்டது.

அந்த 1260 வருட நீண்ட காலப்பகுதியில் அப்பட்டமான தப்பறைகள் மனுக்குலத்தோடு இருண்ட யுகத்தின் விசுவாச பிரமாணமாக பின்னி பிணைக்கப்பட்டது. அந்த 1260 வருடங்கள் முடிவடையும் போது ஒரு சீர்திருத்த அமைப்பு பரவியது. ஆனால் வேதாகமத்தின்படி ஒரு திருப்தியான சீர்திருத்தம் அல்ல, ஒரு சபை பிரிவின் சீர்த்திருத்தமாக இருந்தது. சபை என்பது ஒரு வெளியரங்கமான அமைப்பாக இருக்க வேண்டும் என்று தவறாக வழி நடத்தப்பட்டு, ஒவ்வொரு சீர்திருத்தவாதியும் உண்மையான சபை என்று கூறிக் கொண்டு ஒரு புது பிரிவை ஆரம்பித்தார்கள். துரதிருஷ்ட வசமாக எதிராளியானவன் இந்த சபை பிரிவுகளில் அதிகமாக கிரியை செய்திருந்தான். இவைகளுக்கு வேதாகமத்தில் எந்தவித அதிகாரமுமில்லை. (1 கொரி. 1:11-13;3; 3-5) இவைகளில் எதுவும் பரிசுத்தவான்கள் மட்டுமே அடங்கிய உண்மையான கிறிஸ்துவின் சபை அல்ல என்பதை சமீபத்தில் கிறிஸ்தவ ஜனங்கள் உணர்ந்து வருகிறார்கள். பரிசுத்தவான்கள் சபை பாகுபாடு இன்றி கர்த்தரிடம் சேர்க்கப்படுகிறார்கள்.

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ, **C.T.** ரசல் அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R.** செல்வராஜ். சென்னை வேதமாணவர் சபை.
எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.
சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**

## ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு

## Responsibility of the Spirit - Begotten

*"தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யானென்று அறிந்திருக்கிறோம்;*
*தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." 1 யோவான் 5:18*

ஆவிக்குரிய காரியங்களை விளக்க முற்படும்போது அது எப்பொழுதுமே கஷ்டமானதாக இருக்கிறது. ஏனெனில் நம்மை வெளிப்படுத்துவதற்கு நம்மிடம் மனித வார்த்தைகள் மட்டுமே உள்ளன. ஆகையால் ஆவிக்குரிய காரியங்களை தெளிவாக்குவதற்கு வேத வாக்கியங்கள் நமக்கு உவமைகளையும் உவமானங்களையும் கொடுக்கிறது. இந்த தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் யோவான், தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களை, தங்களது சுபாவ மாறுதலை அனுபவிக்கிறவர்களை, அதாவது ஆதாமின் பிள்ளைகளாக மாம்சத்தின்படி முதலாவது ஜெநிப்பிக்கப்பட்டு, தேவனால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களை பற்றி கூறுகிறார். (1 பேதுரு 1:3) நமது கர்த்தரின் உயிர்த்தெழுதல் முதல், சிலரை உலகத்தை விட்டு வெளியே வந்து புது சிருஷ்டிகளாகும்படி–இனி அவர்கள் மாம்ச ஜீவிகள் அல்ல, ஆனால் ஆவியின் ஜீவிகள்–அழைத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த சுபாவ மாறுதலுக்கான முதல்படி ஒரு புது சித்தத்தை பெறுதல் ஆகும். புது சித்தத்தை மட்டுமே புது சிருஷ்டி என்று கூறுவது தவறு என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். நமது பலியை செலுத்துவது இந்த புது சித்தம் தான். இந்த புது சித்தத்தை நாம் பெற்றிருக்கவில்லையென்றால் நமது சரீரத்தை ஒரு ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க முடியாது. இரண்டாவது படி இந்த பலிக்காகவும் புதிய சுபாவத்தை அடைவதற்கும் இரட்சகர் ஒரு ஜாமீனாக ஆகுதல் ஆகும். மூன்றாவதுபடி இரட்சகரால் பூமிக்குரிய சுபாவத்தை பலியிடுகிற இது பரம பிதாவால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதும், அதை அவர் ஏற்றுக்கொள்வதற்கான விசேஷித்த அடையாளத்தை கொடுப்பதும் ஆகும். ஏற்றுக்கொள்வதற்கான அந்த விசேஷித்த அடையாளம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்தல் ஆகும்.

ஆவியின் ஜெநிப்பித்தலால் நாம் பெற்ற சித்தத்தை, புதிய மனித சித்தத்திலிருந்து தனியாகவும் வேறுபடுத்தியும் வைக்க வேண்டியது மிக அவசியம். புதிய சித்தத்தை முதலில் பெற்றோம்; தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பி தீர்மானித்தோம். பிறகு அவர் ஏற்பாடு செய்திருந்த வழியில் நமது இரட்சகர் மூலம் அவரை அணுகினோம். இந்த புதிய சித்தம்தான் பலியை நிறைவேற்றும். இயேசுவின் புண்ணியம் உபயோகிப்பட்டு, காணிக்கை செலுத்தப்படும்போது, பலியானது பிதாவுக்கு உடனே ஏற்புடையதாக ஆகிறது. இந்த நிலை வரைக்கும் தனிப்பட்டவரது சித்தம் இன்னும் ஒரு மனித சித்தமாக, ஒரு புதிய மனித சித்தமாக இருக்கும். பிறகு நமது கர்த்தராகிய இயேசுவாகிய பிரதான ஆசாரியனால் காணிக்கை பலியிடப்படுகிறது. பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உடனே ஆவியின் ஜெநிப்பித்தலால் குறிக்கப்படுகிறது.

இந்த வேளையில் தேவன் செய்வதை நம்மால் முழுவதும் புரிந்து கொள்ள இயலவில்லை. இயற்கையான ஜெநிப்பித்தலை நாம் தெளிவாக புரிந்து கொள்ளாமாலிருந்தால் கூட ஆவிக்குரிய ஜெநிப்பித்தலைக் காட்டிலும், இயற்கையான ஜெநிப்பித்தலை அதிகமாக நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். ஆவிக்குரிய ஜெநிப்பித்தல் என்பது ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்தல் என்று வேதவாக்கியம் நமக்கு கூறுகிறது. அதைப் பெறுகிற ஒருவர் தெய்வீகமான ஒரு வெளிச்சத்தை பெறுகிறார். அதன் பிறகு அவர் ஒரு மாற்றமடைந்த ஒரு புதிய நபராக, ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறார். அவர் புதிய நம்பிக்கையை, நோக்கத்தை இலக்கைப் பெறுகிறார். அவரிடத்தில் கிரியை செய்கிற பரிசுத்த ஆவியின் உயர்ப்பிக்கிற செல்வாக்கினால் ஆவிக்குரிய காரியங்களை மென்மேலும் புரிந்துகொள்ளுகிறார்.

ஆனால் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்காதவர்களுக்கு இதை அனைத்தையும் குறித்து விளக்க முடியாது. "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து, நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரி. 2:9–15) இந்த பரலோக வெளிச்சத்தை நாம் பெறும் வரை அதை சரியானபடி புரிந்து கொள்ள முடியாது. இந்த ஆவிக்குரிய உணர்வு ஒரு சிறிய ஆரம்பத்திலிருந்து வளர்கிறது. "பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." இந்த பழையவைகள் உடனே அல்ல, படிப்படியாக ஒழிந்து போகிறது. "தேவனால் ஜெநிப்பிக்கப்படுதலே" இதன் ஆரம்பமாக இருக்கிறது.

### புது சிருஷ்டி பாவத்தை அப்பியாசப்படுத்துவதில்லை

தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, ஒரு புது வாழ்க்கையை ஒரு புது சுபாவத்தைப் பெறுதல் நடைபெறுகிறது. அப்போஸ்தலர் யோவான் கூறுகிறதாவது: "தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் (பாவத்தை அப்பியாசப்படுத்துவதில்லை. Diaglott (1 யோவான் 3:9) இவைகளெல்லாம் இப்படிப்பட்ட பரிசுத்த கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்வரை, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தங்களால் ஊக்கமளிக்கப்பட்டு, பரிசுத்த சித்தத்தை பெற்றிருப்பவர்கள் தெரிந்தே பாவம் செய்யமாட்டார்கள். தங்கள் வாழ்க்கையில் பாவத்தை அப்பியாசப்படுத்த மாட்டார்கள்.

தெரிந்து செய்யப்படுகிற பாவத்திற்கும், தவறுதலாக செய்யப்படுகிறதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் பார்க்க வேண்டும். நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தெரிந்தே செய்கிறபாவம், பாவத்தை அப்பியாசப்படுத்துதல் ஆகும். புது சிருஷ்டி பாவம் செய்ய முடியாது. ஏனெனில் இது பரலோக வித்தாக, புது சுபாவத்தின் வித்தாக இருக்கிறது. ஒவ்வொரு பூவும், ஒவ்வொரு மிருகமும் ஒரு ஜீவ வித்திலிருந்து உற்பத்தியாகிறது. வித்தானது எவ்வளவு நுண்ணியதாக இருந்தாலும், கருவாக இருந்தாலும், அதற்கு ஜீவன் இருக்கிறது. இதே போல்தான் கிறிஸ்தவர்களும். தேவனுடைய பரிசுத்த சித்தம் அங்கே இருக்கும்வரை, அங்கே ஜீவன் இருக்கிறது. ஆனால் அவன் தெரிந்தே பாவம் செய்தால் இந்த பரிசுத்த வித்து மரிக்கிறது. இந்த வித்து அழிந்து போனால், புது சிருஷ்டி மரித்து போகிறது.

அந்த தனிப்பட்ட நபர் இரண்டாம் மரணத்தைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் முதலாவது அல்லது ஆதாமின் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தும், அவன் மறுபடியும் மரிக்க வேண்டும் என்றால் அவன் இரண்டாவது தடவையாக தேவனுடைய பிரமாணத்தின்படி உச்சக்கட்ட மனிதனின் தண்டனைக்குட்பட்டிருக்கிறான் என்று பொருள். இது ஒரு தனிப்பட்டவரது தண்டனையாக, நித்தியமானதாக இருக்கும். இப்படிப்பட்டவன் அப்போஸ்தலர் கூறுவதுபோல,"இரண்டு தரம் செத்து, வேரற்றுப் போன மரத்துக்கு" ஒப்பாயிருப்பான். (யூதா.12)

அப்போஸ்தலர் கூறுகிறபடி நாம் பார்த்தால், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் இருப்பவன், புது சிருஷ்டியின் கரு நிலையில் இருப்பவன், தெரிந்து பாவம் செய்யமாட்டான், பாவத்தில் அவன் சந்தோஷப்படமாட்டான், பாவத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கமாட்டான். அப்படி அவன் செய்வானானால், அவன் பரிசுத்த ஆவியை இழந்துவிட்டான் என்றும், மறுபடியும் அவன் பரிசுத்தம் இல்லாதவனாக ஆகிவிட்டான் என்றும் பொருள்படும். பரிசுத்த பேதுரு விளக்குவது போல, கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது போல இருக்கும். அப்போஸ்தலர் யோவான் சொல்கிறதாவது:"பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." அவன் தெரிந்து பாவம் செய்யாமலிருப்பது மட்டுமல்ல, ஒரு காவற்காரன் கோட்டையை காப்பது போல, ஒரு நகரத்தை காப்பது போல, ஒரு வீட்டைக் காப்பதுபோல, தன்னை தொடர்ந்து காத்துக் கொள்வான். அவன் அனைத்து கதவுகளையும் வழிவகைகளையும் கவனிக்கிறான்.

### விழித்திருத்தலுக்கான அவசியம்

நம்மேல் நாம் கவனமாயிருக்க வேண்டும் என்கிற இந்த எண்ணம், பொல்லாங்கன் நம்மை தொடாமலும் தீங்கும் செய்யாமலும் நம்மை காத்துக் கொள்ளும்படியாகவே ஆகும். இன்னொரு எண்ணம்: நமது கர்த்தர்தான் நீதிக்கும் பரிசுத்தத்திற்கும், சத்தியத்திற்கும் மையமாக இருக்கிறார். நீதி, பரிசுத்தம், சத்தியம் இவைகளின் பக்கம் இருப்பவர்கள், பாவத்தை தவிர்ப்பார்கள், அதனுடன் ஐக்கியம் கொள்ள மாட்டார்கள்; பாவக்கிரியைகளில் நுழையக் கூடமாட்டார்கள். அதன் மேல் நாம் இரக்கம் காண்பித்தால், அந்த அளவுக்கு நாம் கர்த்தரிடமிருந்து விலகியிருப்போம், இணக்கமில்லாது இருப்போம். ஒரு வட்டத்தில் மையத்தின் அருகாமையில் இருப்பதுதான் அதிக பாதுகாப்பு. இதே போல யேகோவாவே நீதியின் வட்டத்திலும் மையமாக இருக்கிறார்.

பாவத்தினிடத்தில் நாம் காண்பிக்கும் லேசான அனுதாபம் கூட தேவனுடைய பிள்ளையை பரிசுத்தத்தின் மையத்திலிருந்து தூர அனுப்பும். அவனுக்கும் கர்த்தருக்கும் உள்ள தூரம் அதிகம் ஆகிறதினால், அவன் வட்டத்தின் கடைசி விளிம்புக்கு இழுக்கப்படுவான். சுற்றிலும் முதலைகள் நிறைந்த தண்ணீருள்ள ஒரு தீவை நினைத்துப்பாருங்கள். தீவின் மையப்பகுதியில் ஒருவன் இருந்தால் அவன் தன் விரோதிகளிடமிருந்து மிகவும் பாதுகாப்பாக இருப்பான். கரையை நெருங்கியிருக்கிற அளவுக்கு அவன் அதிக ஆபத்தில் இருக்கிறான். சாத்தானே இங்கே தந்திரமுள்ள விரோதியாக குறிப்பிடப்படுகிறான். நம்மில் தன்னை கவனித்துக் கொள்ளாத ஒருவன் அந்த அளவுக்கு வட்டத்தின் விளிம்பிற்கு செல்லுவான். கர்த்தருடைய சித்தத்துக்கு எந்த அளவுக்கு முழுமையான இசைவுக்கு வராதிருக்கிறார்களோ, எந்த அளவுக்கு பாவத்தில் பங்கு பெறுகிறார்களோ அந்த அளவுக்கு ஆபத்தின் இடத்திற்கு அருகே கொண்டு செல்லப்படுவார்கள். இப்படிப்பட்ட ஒருவன் மகா பெரிய சத்துருவினாலும் அவனது பொல்லாத ஆவியின் சேனைகளாலும் தொடப்படவும், பிடிக்கப்படவும் கூடிய ஆபத்திலும், தீங்கு மற்றும் ஒருவேளை அழிக்கப்பட கூடிய ஆபத்திலும் இருக்கிறான்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த ஆபத்தின் இடத்திற்கு அருகாமையில் செல்லக்கூடிய ஏதாவது ஒரு அனுபவத்தைப் மறைமுகமாக பெற்றிருப்பான். நாம் கர்த்தருக்கு அருகாமையில் இருக்கிற அளவுக்கு நாம் தெய்வீக பாதுகாப்பில் இருக்கிறோம். நாம் விசுவாசத்தைவிட்டு விலகுகிற அளவுக்கு நாம் சத்துருவை நெருங்குகிறோம். பாவம் செய்யாமலேயே ஒருவன் இப்படிப்பட்ட ஆபத்தில் அகப்பட்டுக் கொள்கிறான். அவனது இருதயம் கர்த்தருக்கு உண்மையாக இருந்தும், பாவத்தினால் தொடப்பட்டு, எப்படியோ மற்றவர்களுடன் ஈடுபடுகிறான். ஆகவே தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறதாவது: நமது கிரியைகளை, நமது நட்புணர்வை, நமது நடவடிக்கையை விழித்திருந்து கவனிக்க வேண்டும். "உன்னதமானவரின் மறைவில்" தரித்திருக்கவும், "நம் பாதங்களுக்கு வழிகளை செவ்வை பண்ணும்படியும்" பலவீனமாகவும், முடமாகவும் உள்ளவர்களும் வழியைவிட்டு விலகாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும். நாம் தேவனுடன் நெருங்கி இருப்பதால் குணமாகும்படியும் ஆபத்தின் புள்ளியிலிருந்து தூரமாயிருக்கும்படியும் எச்சரிக்கிறது.

----------------------------------

R 5744

# Privileges of the Throne of Grace

# கிருபாசனத்தின் சலுகைகள்

*"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்." (எபிரேயர் 4:16)*

அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகள் எப்பொழுதுமே தேவனுடைய பிள்ளைகளுக்கு பொருந்துவதாக இருக்கிறது. அவர்கள் விசேஷித்த விதமாக நமக்கு முக்கியமானவர்கள். ஏனெனில் அப்போஸ்தலர் எபேசியிருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிட்டதுபோல் நாம் இப்போது தீங்கு நாளில் வாழ்கிறோம் என்பதை உணர்கிறோம். அது முன்னமே வந்திருக்கிறது. தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை முறையாக தரித்துக் கொண்டவர்கள் மட்டுமே சத்துருவின் தாக்குதல்களை எதிர்க்கமுடியும் என்பதையும் உணர்கிறோம். கிறிஸ்தவர்கள் தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கங்களையும் தானே பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற அவரது புத்திமதி, ஆயுதத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இந்த நாளில் எதிர்பார்க்கக்கூடிய தாக்குதலை எதிர்ப்பதில் இருக்கக்கூடிய ஒரு கஷ்டத்தையும் முடிவில் நிலை நிற்பவர்கள் சிலரே என்பதையும் கூறுகிறது. அந்த புத்திமதி, விசுவாசம் என்னும் கேடகத்தை மாத்திரமல்ல, இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை மாத்திரமல்ல, ஆவியின் பட்டயத்தை மாத்திரமல்ல, ஆயத்தம் என்னும் பாதரட்சையை மாத்திரமல்ல, சத்தியம் என்னும் கச்சையை மாத்திரமல்ல, அனைத்தையும் எடுத்துக் கொள்ளும்படி கூறுகிறது. இந்த தீங்கு நாளில் எதிர்பார்க்கப்படுகிற தாக்குதல்கள் அனைத்தையும் எதிர்த்து நிற்க இவையனைத்தும் தேவை என்பதே இதன் பொருளாகும்.

ஐயகோ, தேவன் கட்டளையிட்டிருக்கிற இந்த ஆயுதங்களின் முக்கியத்துவத்தை அறிந்தவர்களாக எவ்வளவு சொற்பமான பேர்கள் காணப்படுகிறார்கள்! தாங்கள் வாழ்கிற காலத்தை உணர்ந்து கொள்ளாதிருப்பதும், போதுமான அளவுக்கு அவர்கள் விழிப்புள்ளவர்களாயில்லாதிருப்பதும், சத்தியத்தை தேடவும், சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளின் போருக்காக ஆயுதத்தை அணியவும் வைராக்கியம் இல்லாதிருத்தலும் இதற்கு காரணமாக இருக்கிறது.

ஆனால் அனைத்து முன்னேற்பாடுகளுடன் இருக்கும் ஆவலுள்ள கிறிஸ்தவர்கள் தனது இருதயத்துக்கும் கர்த்தருக்கும் இடையே ஒரு நேரடியான, தொடர்ச்சியான தொடர்பு இருப்பதை அவர்கள் காணவேண்டும். தேவன் வேதாகமத்தில் தமது செய்தியை, தமது வாக்குத்தத்தத்தை, தமது புத்திமதியை முன்னமே கொடுத்திருக்கிறார். பரிசுத்த பவுல் வேறு இடத்தில் இந்த வார்த்தை, "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக பிரயோஜன முள்ளவைகளாக இருக்கிறது" என்று அறிவித்திருக்கிறார். இந்த உறுதிமொழியை நாம் மெச்சுகிறோம். மேலும் நமது தகுதியின்மையை, நமது அபூரணங்களை, நமது சிறிய தன்மையை உணருகிறோம். ஆனால் இவைகளெல்லாம் இப்படி இருப்பினும், நாம் இரக்கத்தை பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் பாவ மன்னிப்பிற்காகவும் தைரியமாக கிருபாசனத்தண்டையில் சேரலாம் என்று நமது கர்த்தர் உறுதியளித்திருக்கிறார்.

பாவ மன்னிப்பைப் பற்றிய இந்த வாக்குத்தத்தம் ஆதிபாவத்தை சேர்த்துக் கொள்ளாது; ஏனெனில் நாம் கர்த்தரிடம் அர்ப்பணம் செய்யும் போது, ஞானஸ்நானம் பெறும்போது அது மன்னிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது அனுதினமும் நினைக்கப்பட தேவையில்லை. நமது சித்தத்தை கர்த்தரிடம் அர்ப்பணம் செய்து, நெருக்கமான வழியில் ஆரம்பித்திருக்கிற நாம், அவருக்கு செலுத்தத்தக்க புத்தியுள்ள ஆராதனை எது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். (ரோமர் 12:1) நமக்கு தேவையான ஒவ்வொன்றையும் அவர் அளித்திருக்கிறார். நமது அனுதின மீறுதல்களுக்கு மன்னிப்பு தேவைப்படுகிறது. ஆகையால் கர்த்தராகிய இயேசுவின் நல்ல போர் சேவகனாக இருப்பவன், தலைமையகத்துடன் நெருங்கிய தொடர்பை வைத்திருக்க வேண்டும். அனுதினமும் கிருபாசனத்தண்டைக்கு வருவதின் மூலம் இந்த சலுகையை பெறுகிறான்.

நாம் தேவனை அணுகுகிற சலுகைக்கும் பூமிக்குரிய ஆற்றலுக்கும் வேறுபாடு இருந்தால், நம்மில் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளின் ஒரு குறிப்பை நாம் காணலாம். இங்கிலாந்து ராஜா அல்லது ஜெர்மனியின் கெய்சர் அல்லது வேறு ஏதாவது பூமிக்குரிய அரசாங்கத்தை அணுகுவது மிகவும் கஷ்டம். ஏனெனில், அவர்களது அரியாசனத்தின் கௌரவம் பராமரிக்கப்படுகிறது. ஒருவர் இதை ஆவலுடன் செய்ய விரும்பவேண்டும். அவன் ராஜாவை பார்க்க வேண்டும் என்றால் ஒரு குறிப்பிட்ட ஆடையை அணிய வேண்டும், ஒரு குறிப்பிட்ட முறைமையை ஆசரிக்க வேண்டும். ஒரு சரியான அறிமுகம் இருக்கவேண்டும். ராஜா கிருபை உள்ளவராக இருந்தால் சந்திப்பதற்கு அனுமதி கொடுப்பார். ஆனால் நமது தேவன், அண்ட சராசரங்களின் மகா சிருஷ்டிகர், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், தம்மை "பிதா" என்று அழைக்கக்கூடிய உரிமையை கொடுத்து, தனது அனைத்து தேவைகளையும், தனது அனைத்து துன்பங்களையும் ஜெபத்தில் அவரிடத்தில் கொண்டு வரும்படியான சலுகையை கிருபையுடன் அருளியிருக்கிறார். எப்படிப்பட்ட ஆச்சரியமான கிருபை!

பிறகு ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் கிருபாசனத்தை அணுகும் முன்பு, எவையெல்லாம் கர்த்தரால் அங்கீகரிக்கப்படும், எவையெல்லாம் அங்கீகரிக்கப்படாது என்பதை அறிய நாட வேண்டும். பிதாவினுடைய சித்தத்தை அறிவதும் அதற்கேற்றாற்போல் தனது காரியங்களில் அவரது வழி நடத்துதலை கேட்டலும் தேவனுடைய பிள்ளையின் ஒரு நோக்கமாக இருக்க வேண்டும். நமது இருதயங்கள் முழுவதும் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறது என்று எடுத்துக் கொண்டு, கிறிஸ்தவ வீரனைப்பற்றி இங்கே விளக்குகிறார். அந்த கிறிஸ்தவ வீரன் தேவனுடைய முழு சர்வாயுத

வர்க்கத்தையும் தரித்திருக்கிறவனாகவும் அல்லது தரிக்கிறவனாகவும் உயர்ந்த நிலைக்கு வர நாடுகிறவனாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அவன் தனது சர்வாயுதங்களுடன் ஜெபிக்கும் சலுகையை பழக்கவும், பயன்படுத்தவும் வேண்டும். (எபேசியர் 6:18)

### பிரியமான ஜெபத்தை ஏறெடுக்கும் முறை

முன்னே சொல்லப்பட்ட வசனம் ஜெபம் எப்படி ஏறெடுக்கப்படவேண்டும் என்பதை நமக்கு சொல்லுகிறது. "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும், ஆவியினால் ஜெபம் பண்ண வேண்டும்." "ஆவியினால்" என்ற வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மற்றவர்கள் "ஆவியோடு" இல்லாமல் வெறும் கடமைக்காக செய்யும் ஜெபத்திலிருந்து இப்படிப்பட்ட ஜெபம் வேறுபடுகிறது. புறுஜாதிகள் அவர்களின் ஜெபங்களில் பெரும் முறைமைகளை கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். உதாரணத்திற்கு, சீனர்கள் குறிப்பிட்ட ஜெபங்கள் பதியப்பட்டிருக்கும் ஒரு சக்கரத்தை வைத்திருக்கிறார்கள். அந்த சக்கரம் எவ்வளவு அதிக தடவை சுற்றப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக தேவனிடம் ஜெபம் போகிறது என்று நினைக்கிறார்கள். இது வீணாக திரும்பத் திரும்ப சொல்லுதல். ஆனால் சீனர்கள் புறஜாதிகள், உண்மையான தேவனைப்பற்றி அவர்கள் அறியவில்லை. மற்றவர்கள் உண்மையான தேவனை அணுகி, தேவனுடைய சித்தம் என்ன என்பதையும், தங்களுக்கு எது மேலானது என்பதையும், என்ன தேவை என்பதையும் அறியாமல் பயனற்றவைகளை திரும்ப திரும்ப கேட்கிறார்கள். சில கிறிஸ்தவர்கள் அச்சடிக்கப்பட்ட வேண்டுதல்களை பயன்படுத்துகிறார்கள். இது அவர்களது உண்மையான சொந்த மனோபாவத்தை அல்லது ஆவியை குறிப்பதில்லை. அக்கறையற்ற முறையில் ஜெபத்தை ஏறெடுக்கிறவர்களாக இருக்கிறார்கள். சில ஜெபங்கள் மணிகள் மூலம் குறிப்பிடப்படுகின்றன. இவைகள் நமது ரோமன் கத்தோலிக்க நண்பர்கள் மூலம் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மணியும் ஒரு ஜெபத்தைக் குறிக்கிறது. திரும்பத் திரும்ப அதே ஜெபத்தை ஏறெடுக்க அது உதவுகிறது. ஒவ்வொரு மணிக்கும் ஒரு ஜெபத்தை ஏறெடுத்து, இப்படியாக மணியை எண்ணுகிறார்கள்.

இந்த முயற்சிகளெல்லாம், ஜெபத்தில் தேவனை அணுகுவதற்கு மனுமக்கள், புறஜாதியினர் மற்றும் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இது தேவனுடைய உதவியின் தேவையை குறிக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட வெறும் சாதாரண முறையில் தேவனை அணுக முடியாது. அவர் பரிகாசம் பண்ணக்கூடியவர் அல்ல. இப்படி ஒரு அக்கறை அற்ற முறையில் ஒரு பூமிக்குரிய ராஜாவை அணுகினால் அவன் ஒரு வெறுமையை உணர்ந்து கோபங் கொள்ளுவான். ஆகையால் வெறும் உதட்டளவில் நாம் தேவனிடம் வந்தால், நமது ஜெபம் கேட்கப்படாது. தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறவர்கள் கிறிஸ்து மூலம் ஜெபத்தை ஏறெடுத்தால் மட்டுமே ஜெபம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

"எங்கள் பிதாவே" என்று அழைத்து சர்வல்லவரிடம் வருவதற்கு உரிய உரிமையை பெறுவதற்கு வேறு எந்த வழியும் இல்லை.

மறுபடியும் நமது பாடத்திற்கு வருவோம். "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி" – நாம் ஏறெடுக்கிற ஒவ்வொரு ஜெபமும், நமது விண்ணப்பம் எதுவாயிருந்தாலும், ஆவியின் ஊக்கத்தோடு இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுவதாக நாம் புரிந்து கொள்கிறோம். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து "ஆவியினாலே" நாம் ஜெபம் செய்ய வேண்டும். இல்லையென்றால் அது தேவனுக்கு பிரியமானதாக இருக்காது. அது ஒரு ஊக்கமுடனான மன்றாட்டாக, "வேண்டுதலாக" இருக்க வேண்டும். நாம் தேவனிடம் ஜெபம் பண்ணும்போது "மிகுந்த மன உறுதியோடு விழித்துக் கொண்டிருக்க வேண்டும்." சீக்கிரத்தில் நமது ஜெபம் கேட்கப்படவில்லை என்பதற்காக நாம் சோர்ந்து போகக் கூடாது. தேவனுடைய சித்தம் என்று நாம் விசுவாசிக்கும்படியாக தேவனுடைய வசனம் கூறாத எந்த காரியங்களையும் நாம் ஜெபத்தில் கேட்கக்கூடாது. தேவனுடைய சித்தம் என்று நாம் விசுவாசிக்கிறவைகளையே நாம் கேட்க வேண்டும். நாம் கேட்பது உண்மையிலேயே நாம் விரும்புகிறதாக இருக்க வேண்டும். நமது ஜெபத்தின் நிறைவேறுதலுக்காக நாம் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படியாக இந்த ஆசீர்வாதம் வரும்போது நாம் தயாராக இருக்க வேண்டும். நாம் வேண்டிக் கொள்கிறதற்கு முன்னமே நமக்கு இன்னது தேவை என்பதை நமது பிதா அறிந்திருக்கிறார். (மத்தேயு 6:32,8)

### சுயநலமான வேண்டுதல் சரியானதல்ல

ஜெபத்தின் நோக்கம், நமக்கு அது பயன்தரக்கூடியதாகவும் பிதாவின் ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்த நிலையில் இருக்கக்கூடிய மனோபாவத்தை கொண்டு வரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். கனிதராத எந்த ஆசீர்வாதங்களையும் தேவன் நமக்குத்தர விரும்பமாட்டார். அவர் இந்த ஆசீர்வாதங்களை கொடுக்கும்போது, அதை உட்கிரகித்துக் கொண்டு கனிகளை கொண்டு வரக்கூடிய மனோபாவத்தில் நமது இருதயம் இருக்கவேண்டும் என்பது அவரது நோக்கமாக இருக்கிறது. அவரது சித்தத்திற்கு நம்மை முழுமையாக சமர்ப்பிக்கக்கூடிய மனோபாவத்தை நாம் எப்பொழுதுமே உடையவர்களாக இருக்க வேண்டும். நமது பரம பிதா நமது தேவை என்ன என்பதை முழுவதுமாக அறிந்தவராக மட்டுமல்ல, அதை நாம் பெற தகுதியானவுடன் தமது பிள்ளைகளுக்கு தமது மேன்மையான வரங்களை கொடுக்க காத்துக் கொண்டிருக்கிறார். நாம் வீணான, அர்த்தமற்ற ஒப்பித்தலை அவருக்கு முன் கொண்டு வராதிருப்போமாக.

உலகமானது, வெறும் உணவு, ஆடைகள், பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அல்லது பகைவர்களின் மேல் வெற்றி போன்றவை கேட்கும் போது, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் சித்தங்களை அவரிடம் அர்ப்பணித்துவிட்டு, நமது ஆண்டவர் கற்றுக் கொடுத்த உயர்வான ஜெபத்தின் வார்த்தைகளில் ஜெபிக்க வேண்டும்.

"பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக." பிறகு "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும்." அது சிறியதோ அல்லது பெரியதோ, என்ன வகையான உணவு என்பதைக் கேட்காமல் நமக்கு தேவை என்ன என்பதை அவர் கொடுக்கிறதை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த காரியங்கள் அனைத்தையும் கர்த்தரின் கரங்களில் நாம் ஒப்புவித்திருக்கிறோம். நாம் விசேஷமாக ஆவிக்குரிய ஆகாரத்திற்கு நாம் வேண்டுதல் செய்ய வேண்டும். நமது வேண்டுதல் மாம்சீக பிரகாரமாக அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாக இருக்க வேண்டும். பூமிக்குரிய காரியங்களை நாம் தற்செயலாக மட்டுமே கேட்க வேண்டும், ஏனெனில் நமது சரீரங்களை தேவனிடம் அர்ப்பணித்திருக்கிறோம். நமது சரீரம் மரிக்க வேண்டியிருப்பதாலும், அது பலியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாலும், நமது ஆவிக்குரிய அபிவிருத்திக்காகவும், சோதனைக்காகவும், நாம் செய்யவேண்டும் என்று அவர் நமக்கு நியமித்திருக்கிற வேலையை முடிப்பதற்காகவும், நீண்ட காலமாக நாம் கர்த்தரிடம் கொடுத்திருக்கிற சரீரத்தை என்றென்றும் நிலைத்திருக்கும்படி நாட வேண்டும். கர்த்தர் நமது பலியை நிறைவு செய்ய தயாரானவுடனேயே, நாமும் அதை அர்ப்பணிக்கக் சந்தோஷத்துடன் விருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

புது சிருஷ்டிகளாக நாம், இந்த புது சுபாவத்தின் ஆர்வத்திற்கு இசைவாக நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும். பரம ஆகாரத்திற்காக நாம் பசியுடையவர்களாயிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் கிருபைகளையும் கனிகளையும் நாம் அபிவிருத்தி செய்கிறவர்களாயிருக்க வேண்டும். பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கக் கூடிய நல்ல ஈவுகளைக் காட்டிலும் தம்மிடம் கேட்கிறவர்களுக்கு அதிகமானவைகளைக் கொடுக்க பிதாவானவர் அதிக விருப்பம் உடையவராக இருக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம். நாம் ஆவியினாலே ஜெபம் பண்ணினால் மட்டும் போதாது, கர்த்தருடைய வசனம் குறிப்பிடுவது போல புது சிருஷ்டியின் ஆவியின் வழியில் நாம் ஜெபிக்க வேண்டும். இந்த புது சிருஷ்டியின் தேவைதான் நமது பார்வையிலும் கர்த்தரின் பார்வையிலும் முதலாவது இருக்கிறது. இவர்களது ஆர்வத்தையும் இவர்களை கவனிக்கவும், அவர்களது ஜெபத்தையும் கேட்டு ஆசீர்வதிக்கவும் கர்த்தர் சந்தோஷப்படுகிறவராக இருக்கிறார்.

### கிறிஸ்தவர்களின் ஜீவ சுவாசம்

இவையெல்லாவற்றிற்கும் அறிவுக்கேற்ற முடிவாக, கர்த்தருடைய உடன்படிக்கையின் மக்கள் பூமிக்குரியவைகளுக்காக குறைவாக ஜெபிக்க வேண்டும். சபைக்கு திரும்ப கொடுத்தல் முடிவல்ல என்பதையும், மரண பரியந்தமுமான பலியும், மகிமையான உயிர்த்தெழுதலுமே முடிவு என்பதையும் உணர வேண்டும். ஆகையால், அர்ப்பணம் செய்தவர்களின் ஜெபமானது, நமது பல்வேறுவிதமான சோதனை, மற்றும் துன்பங்களை ஒரு விசுவாசமுள்ள ஆவியோடு சந்திப்பதற்கான கிருபைக்காக இருக்க வேண்டும். நாம் ஆயுதங்களை தரித்துக் கொள்ளும்போது, ஆவியின் பட்டயத்தை நாம் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும், நமது எதிரியான சத்துருவையும் நமது சொந்த மாம்சத்தை சூழ்ந்துள்ள பெலிஸ்தியர்களையும் எப்படி எதிர்கொள்வது என்பதையும் கற்றுக்கொள்வதற்காகவும் இருக்க வேண்டும். எதிரியின் தாக்குதல் மற்றும் சோதனைகளில் அப்பியாசப்படுத்துவதற்கு நமக்கு அதிகமான கிருபை தேவைப்படுகிறது. "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்" தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது என்று உணர வேண்டும். நமது "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும்" எப்படி உறுதிப்படுத்துவது என்பதையும் நாம் நாளுக்கு நாள் கற்றுக்கொண்டு வருகிறோம்.

ஜெபக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி கர்த்தரின் ஜனங்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் தனியாக அனுதினமும் கிருபாசனத்தை அணுகவேண்டும். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகிறார்களோ அங்கே அவர்கள் நடுவே இருப்பதாக நமது கர்த்தர் அறிவித்திருக்கிறார். ஒரு பொதுவான காரியத்திற்காக ஒரு வேண்டுதல் செய்யப்பட்டால், அந்த ஆசீர்வாதம் அனைவருக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் பரவும்படியாக நமது இருதயங்களை ஒன்று சேர்க்க வேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் ஐக்கியத்திலும் அந்நியோந்நியத்திலும் சேர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பது ஆலோசனையாக இருக்கிறது. ஆனால் இது நமது தனிப்பட்ட ஜெபத்திற்கு இடையூறாக இருக்கக்கூடாது. நமது பலவீனங்களையும் குற்றங்களையும் உணர்ந்து, நமது இரட்சகரின் பலியின் விலையேறப்பெற்ற புண்ணியத்திற்காக வேண்டுதல் செய்து அதன் மூலம் நமது நீதியின் வஸ்திரத்தில் உள்ள கரை திறைகளை அகற்றும்படி தேவைப்பட்டால் மணிக்கணக்காக ஜெபிக்கலாம். இப்படிப்பட்ட ஜெபமானது கிறிஸ்தவ வாழ்க்கையில் மிக முக்கியமானதாக, "ஜீவ சுவாசமாக" இருக்கிறது.

சத்துரு, உலகம் மற்றும் மாம்சத்தின் அத்துமீறல்கள் நம்மை அதைரியப்படுத்துவதாகவும், தற்கால வாழ்க்கையின் காரியங்களோடு நம்மை சிக்க வைப்பதாகவும் இருக்கிறது. ஆனால் எந்த சோதனையிலும், துன்பத்திலும் அவரிடத்தில் சென்று அணுகும்படியான ஒரு வழியை ஏற்பாடு செய்திருக்கிறார். நமது வேண்டுதல்களுக்கு தெய்வீக கவனமும் தெய்வீக உதவியும் கிடைக்கும் என்று உறுதியுடன் இருக்க வேண்டும். நமது மாம்சீக பலவீனம் சில சமயங்களில் நமது ஜெபத்திற்கு தடையாக இருக்கிறது என்பதை முன்னரே நாம் பேசியிருக்கிறோம். மனசாட்சிக்கு விரோதமாக ஏதாவது செய்து விட்டு, கொஞ்ச காலம் தேவனிடம் ஜெபித்தலை தவிர்த்தலும், போவதற்கு அஞ்சுதலும், போவதற்கு வெட்கப்படுதலும், சில காலத்திற்கு பிறகு சென்றால் கொஞ்சம் நன்றாக இருக்கும் என்றும் நினைப்பதும் அநேக கிறிஸ்தவர்களின் மனோபாவமாக இருக்கிறது. இது மிகவும் ஆபத்தான மார்க்கமாக இருக்கிறது. ஏனெனில் இது நமது ஆவிக்குரிய வளர்ச்சியை தடைசெய்வதாக இருக்கிறது. ஆகையால் இது அனுமதிக்கப்படக்கூடாது. பரலோக

கிருபாசனத்திடம் நாம் செல்வது அனைத்திலும் மிகவும் அவசியமானதாக இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். நமது பலவீனங்களை தேவன் முன்னரே அறிந்தவராயிருக்கிறார். நமது தோல்விகளை அவர் முன்னறிந்தவராயிருக்கிறார். இந்த அனுபவத்தின் மூலம் நாம் பலனடைய வேண்டும் என்று அவர் விரும்பினார். அதாவது நாம் ஜெபத்துடன் இணக்கமாயிருந்து, பாவம் மற்றும் தேவனுக்கு விருப்பமற்ற அனைத்துக்கும் விரோதமாக பலம் பெற வேண்டும் என்று விரும்புகிறார்.

### சாத்தான் நம்மை தாக்குவதற்கான பிரதான முறைமைகளில் ஒன்று

சந்தேகத்திற்கிடமில்லாமல், நமது சத்துரு நமது ஜெபத்தை, பிதாவுடனான நமது தொடர்பை குறுகிடுவதற்கு நாடுவான். நமது கீர்த்தனைகளில் ஒன்று அறிவிக்கிறதாவது:

"பலவீனமுள்ள பரிசுத்தவான் தனது முழங்காலில் இருப்பதை பார்க்கும்போது, சாத்தான் நடுங்குகிறான்."

சாத்தான் உண்மையிலேயே நடுங்குவான் என்று நாம் எண்ணத்தின் உச்சநிலைக்கு செல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் ஜெபத்தின் வல்லமையை அவன் உணருகிறான் என்பதையும், அவனது பிரதானமான தாக்குதலில் ஒன்று கர்த்தருடனான நமது தொடர்பை துண்டிக்க நாடுவது என்பதையும் நாம் அறிவோம். ஒரு யுத்த களத்தில் ஒரு திறமையான படைத்தலைவன் எதிரியின் அவர்களது தலைமையகத்துடனான தொடர்பை துண்டிக்கவும், அவர்கள் பெறுகின்ற பொருட்கள் போகாதபடி துண்டிக்கவும் முயற்சிப்பது போல சாத்தானும் செய்கிறான். பரலோகத்துடனான நமது தொடர்பை துண்டிப்பதில் அவன் வெற்றிபெற்றால், அவனது விஷமத்தனமான மற்றும் துஷ்டத்தனமான தாக்குதல்களின் கீழ் நாம் மிக அதிகமாக விழக்கூடியவர்களாக இருப்போம். அப்பொழுது நாம் உதவியற்றவர்களாக, தெய்வீக வழிகாட்டுதல் இல்லாதவர்களாக இருப்போம்.

நமது தொடர்பை துண்டிக்க சாத்தான் என்ன செய்யக்கூடும் என்று கேட்டால், நமது பதில் இதுதான்: மனித மனதில் அவன் ஊடுருவிச்செல்ல பலவிதமான வழிகள் இருக்கிறது. தேவனுடைய பிள்ளை ஜெபிக்கும் போதோ அல்லது மற்ற சமயங்களிலோ, வியாபாரத்தைப்பற்றிய அல்லது மகிழ்ச்சியான காரியங்கள் பற்றிய அல்லது பாவத்தைப்பற்றிய, உலக கவர்ச்சி பற்றிய, தொழில் முதலானவைகளைப்பற்றிய சிந்தனையை கொண்டு வருவான். கர்த்தருடைய பிள்ளைகளைப் பொருத்தவரையில் எந்த அளவுக்கு அவனுக்கு வல்லமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறியோம். அவர்களது சித்தத்தை தடுக்க அவனுக்கு வல்லமை இல்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் அவன் நமது மனதில் குறிப்பிட்ட உறுப்புகளில் தூண்டுதல் செய்ய வல்லமையுடையவனாக இருக்கிறான். ஆகையால் தேவனுடனான நமது முறையான ஐக்கியத்தை துண்டாடவிடாமல் நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். மேலும் நமது கிறிஸ்தவ ஊக்கமான தைரியம் பலவீனமாகாமல் விழிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இப்படியாக எந்த அளவுக்கு நாம் விழிப்பில்லா திருக்கிறோமோ அந்த அளவுக்கு குறைவாக உலகத்தையும், மாம்சத்தையும் சத்துருவையும் தடுக்கக் கூடியவர்களாக இருப்போம்.

ஆகையால் பரலோகப் பிதாவுடனான தொடர்புகள் துண்டிக்கப்படாதிருப்பதற்கான ஒவ்வொரு முன்னெச்சரிக்கையையும் நாம் சரியானபடி எடுக்கவேண்டும். உதாரணத்திற்கு, நமது தனிப்பட்ட ஜெபத்தில் தூக்கக் கலக்கமோ அல்லது சரியானபடி சிந்திக்க முடியாதிருந்தால், பிறகு நமது தலை கவிழ்ந்திருந்தால் அதை உயர்த்த வேண்டும்; அல்லது நமது கண்கள் மூடியிருந்தால் அதை திறக்க வேண்டும், உயர்த்த வேண்டும். நமது அனைத்து ஜெபங்கள் மற்றும் வேண்டுதல்கள் ஆவியுடன் இருக்கும்படியும், வெறும் கடமைக்காக, முறைக்காக இல்லாதபடியும் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். அவைகள் நமது இருதயத்திலிருந்து வருகிற வார்த்தைகளா என்பதை கவனிக்க வேண்டும். உதட்டிலிருந்து வருகிற அநேக வார்த்தைகளைக் காட்டிலும் இருதயத்திலிருந்து வருகிற சில வாக்கியங்களே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நல்ல நிறைவானதாக இருக்கும். ஜெபத்தில் தங்களது மனதை ஒருநிலைப்படுத்த முடியாதவர்கள், தங்களது ஜெபம் சுருக்கமாக இருக்கும்படியும், தேவனுடைய வசனத்திற்கு இசைவாக இருக்கும்படியும், புது சிருஷ்டியின் ஆர்வத்தின்படியும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று புத்தி சொல்கிறோம்.

# "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"
# "Blessed Are the Pure in Heart"

*"சுத்தமுள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாயிருக்கும், அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனசாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதளிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்." "எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்." (தீத்து 1:15,16; நீதிமொழிகள் 4:23)*

நமது முதல் வசனம் மிகவும் கடுமையான குற்றஞ்சாட்டுதலாகும். இங்கே அப்போஸ்தலர் பவுல், தேவன் பற்றிய அறிவுடையவர்களாயிருந்து, ஆனால் போதனையும், வாழ்க்கைமுறையும் சுவிசேஷ செய்திக்கு விரோதமாகவும் இருந்த சிலரைப்பற்றிக் கூறுகிறார். அவர் அவிசுவாசமுள்ள யூதர்களை குறிப்பிடுகிறாரா அல்லது வெளியரங்கமாக மட்டும் கிறிஸ்துவின் சீடர்களாக இருந்தவர்களை குறிப்பிடுகிறாரா என்பதை நம்மால் நிச்சயமாக கூறமுடியவில்லை. எப்படியிருந்தாலும், நியாயப்பிரமாணத்தின் மூலமாகவோ, சுவிசேஷத்தின் மூலமாகவோ தேவனை அறிந்திருக்கிறதாக கூறிக்கொள்கிறவர்களைத்தான் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இது குற்றம் கண்டுபிடிக்கிறவர்களை குறிப்பதாக அவர் கூறுகிற விதம் காணப்படுகிறது. அவர்கள் எல்லாவற்றிலும் குற்றம் கண்டுபிடிப்பார்கள். அதாவது யாரும் எதையும் சரியாக செய்ய முடியாது, எந்த போதனையும் சரியானது இல்லை என்று கூறுவார்கள். இப்படிப்பட்ட குணமுடையவர்களை நாம் சந்தித்திருக்கிறோம். எங்கேயும் எதையும் பரிசுத்தமாகவும் நல்லதாகவும் அவர்களால் காண இயலாது. எப்பொழுதுமே மற்றவர்களை குறை கூறிக் கொண்டிருப்பார்கள்.

அப்போஸ்தலரின் கூற்று மிகுந்த பலமுள்ளதாகவும் மிகுந்த ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கிறது; "சுத்தமுள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும், அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது." சொல்லர்த்தமாக, சுத்தமுள்ளவன் அசுத்தமுள்ளதை காணமுடியாது என்றோ, அசுத்தமானவன் சுத்தமுள்ளதைக் காண முடியாது என்றோ கூறவில்லை என்பதையும், ஆனால் பொதுவான பரந்த அர்த்தத்தில் இது உண்மை என்றும் நாம் புரிந்து கொள்கிறோம். சுத்தமுள்ளவர்கள் தெய்வீக பிரமாணத்திலும் தெய்வீக திட்டங்களிலும் நீதியைக் காண்கிறார்கள். விழுந்துபோன மாம்சத்தின் பலவீனங்களுக்கு பதிலாக, தேவனுடைய "சிறியர்களின்" உண்மையான, சுத்த இருதயத்தை அவர்களால் காணக்கூடும். ஆனால் அவிசுவாசமுள்ளவர்கள், களங்கமுள்ளவர்களாகி அவர்களது மனசாட்சி நெறிதவறினதாகி, ஒரு சரியான வெளிச்சத்தில் எதையும் யாரையும் பார்க்க இயலவில்லை. தவறான எண்ணங்கள் தங்கள் மனதில் நுழைய இடங்கொடுத்து, "ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு விலையுண்டு, எந்த மனிதனையும் வாங்க முடியும், நேர்மையானவன் யாருமில்லை" போன்ற சந்தேகத்திற்குரிய மற்றும் தீய சிந்தனைகளையும் இப்படிப்பட்ட அனைத்து காரியங்களையும் அனுமதித்திருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே மற்றவர்களை கிட்டதட்ட நியாயந்தீர்க்கிறார்கள்.

மற்றவர்களில் சுத்தத்தை, நல்லதை, சரியானதை காண முடியாத அளவுக்கு அவர்களது மனம் கெட்டு போயிருக்கிறது; அவர்களது மனசாட்சி களங்கமுள்ளதாகியிருக்கிறது. ஆரம்பத்தில் அவர்களது மனசாட்சி ஓரளவுக்கு அவர்களை கண்டனஞ் செய்யும். ஆனால் படிப்படியாக தவறான மனோபாவத்திற்கு இடங்கொடுத்தால், அவர்களது மனசாட்சி களங்கப்பட்டு கடினமடைகிறது. இதன்மூலம் அவர்கள் வளைகிறவர்களாகவும் தவறாக தீர்மானிக்கிறவர்களாகவும் மாறி, தாங்கள் எந்த அளவுக்கு அநீதியுள்ளவர்களாகவும், அசுத்தமானவர்களாகவும், குருடர்களாகவும் ஆகியிருக்கிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள். "அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கை பண்ணுகிறார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஏதோ ஓர் அறிவுப்பூர்வமான வழியில் தேவனுடைய வார்த்தையையும் திட்டத்தையும் அறிந்திருக்கிறார்கள். "ஆனால் அவர்களது கிரியைகளினாலோ அவரை மறுதளிக்கிறார்கள்." நம்மால் முடிந்தவரை நன்மையானதை செய்யவும், முடிந்தவரை நன்மையானதை பார்க்கவும், மற்றவர்களிடம் தீர்ப்பு செய்யும் பொழுது பெருந்தன்மையாக இருக்கவும் நாடவேண்டும் என்று போதிக்கிற தேவனுடைய வார்த்தைக்கு மாறாக அவர்களது வேலைகள் இருக்கின்றன.

### குற்றம் கண்டுபிடிக்கிறவர்கள், சகோதரர்களின் மேல் குற்றம் சாட்டுகிறவர்கள்

இந்த மாசுள்ளவர்கள் தேவனை மறுதளிக்கிறார்கள். கிரியைகளினாலும் அவரை மறுதளிக்கிறார்கள். பரிசுத்த பவுல் கூறுவது போல, அவர்கள் தேவனுக்கு "அருவருக்கத் தக்கவர்களும் கீழ்ப்படியாதவர்களும்" ஆக இருந்து தேவனுடைய போதனைகளுக்கு விரோதமாக நடக்கிறார்கள். கர்த்தரை அறிந்த பின்னும் எதிர்திசையில் செல்வதும் அவரது ஆலோசனையை பயனில்லாமல் பண்ணுவதும் நிச்சயமாக அருவருக்கத்தக்க காரியமாக இருக்கிறது. இவர்கள், "எந்த நற்கிரியையும் செய்ய ஆகாதவர்களாயிருக்கிறார்கள்." அவர்கள் நன்மையானது எதையும் செய்யமுடியாது, ஆனால் எதிராக செய்வார்கள்; இன்னும் அவர்கள் யாரையும் குறை கண்டுபிடிக்கிறவர்களாக இருப்பார்கள்.

இப்படிப்பட்டவர்கள் நெறிகெட்டவர்களாகவும், இழிவானவர்களாகவும் ஆகி, அவர்கள் எல்லா வகையான பாவங்களையும், குற்றங்களையும் செய்யக்கூடியவர்களாக ஆவார்கள் என்று இங்கே அப்போஸ்தலர் கூறவில்லை. அங்கே இல்லாத வார்த்தைகள் எதையும் நாம் வாசிக்கக்கூடாது. ஆனால் எந்த ஒரு நல்ல வேலையை பொருத்தவரை, அவர்கள் அதை களங்கப்படுத்துவார்கள், காயப்படுத்துவார்கள். இவர்கள் கர்த்தருடைய வேலையிலிருந்து முற்றிலுமாக விலகியிருத்தல் மிகவும் நல்லது, அவர்கள் மனதின் எண்ணம் எல்லாம் நிறைவேறும் வரை அவர்கள் கசப்பான ஆவியை அவர்களில் கிரியை செய்யும்படி அனுமதித்திருக்கிறார்கள்.

அவர்களது நடக்கையிலும், செயல்களிலும், சிந்தனைகளிலும் எதுவரை அநீதியாகவும், நேர்மையில்லாமலும் இருப்பார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. எந்த ஒரு நல்ல வேலைக்கும் அவர்கள் தீங்கை விளைவிக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

நம் அனைவருக்கும் எச்சரிக்கை செய்யும் பாடங்கள் இங்கே இருக்கிறது. நாம் வழி தவறி தீய ஆவியால் வழி நடத்தப்படக்கூடாது; குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாகவும், சகோதரர்களை குற்றம் சாட்டுகிறவர்களாகவும், ஆகக்கூடாது; நமது நேரத்தையும், நமது கைகள், கால்கள், நமது நாவையும் நமது சகோதரர்களை அழச் செய்ய பயன்படுத்தாமல் நன்மை செய்யவும், ஆசீர்வதிக்கவும், சகோதரர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் பயன்படுத்தவேண்டும். இதைச் செய்யாதிருந்தால், கர்த்தருக்கும் அவர்நிமித்தமும் அவன் பிரயோஜன மற்றவனாக, அதிலும் மோசமானவனாக இருப்பான்.

## இருதயத்தை காத்துக்கொள்ள வேண்டியதின் அவசியம்

“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்” என்று ஞானி புத்தி சொல்லுகிறான். இந்த புத்திமதியில் பதிவு செய்யப்பட்டிருப்பது மிகவும் முக்கியமானது. உண்மையில் இது ஞானமான வார்த்தைகள்! இருதயமானது மனித சரீரத்தின் ஒரு முக்கியமான உறுப்பாக இருப்பதால், இங்கே “இருதயம்” என்ற வார்த்தை மனித மனதின் மையத்தை குறிக்கும் படியாக பயன்படுத்தப்படுகிறது. இருதயம் காத்துக்கொள்ளப் படவேண்டும் என்பது அதன் கருத்தாக இருக்கிறது. தவறாக வழிநடத்துகிற அநேக காரியங்கள் திருப்பப்படவேண்டியதாக, நீக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. நமது தொழிற்சுமை மாத்திரமல்ல, உலகத்தின் பொதுவான போக்கும், நமது விழுந்து போன மாம்சமும் நமது இருதயத்தை நீதியிலிருந்தும், தேவனுடைய ஊழியத்திலிருந்தும், பரிசுத்தத்திலிருந்தும், அன்பு மற்றும் பிறரிடம் காட்டும் தயவிலிருந்தும் விலக்குவதாக இருக்கிறது.

நமது பெரிய சத்துருவும் கூட இப்படி தவறாக வழி நடத்தப்பட உதவுவதில் முயற்சி செய்கிறவனாயிருக்கிறான். ஒவ்வொரு மனிதனின் இருதயம்–சித்தம்– மனோநிலை தேவனுக்கும் நீதிக்கும் உண்மையாய் இருக்கவேண்டும். ஆதியில் இப்படித்தான் இருந்தது, காந்த முள் துருவத்தை நோக்கி இருப்பது போல் மனித இருதயமும் கர்த்தரை நோக்கி இருக்க வேண்டும். இதற்கு மாறானது எதுவும் பாவத்தை, கெட்டுப்போன, நெறி தவறிய நிலைமையைக் குறிக்கிறது. ஆனால் உண்மையிலேயே பாவமானது விழுந்துபோன மானிட சுபாவத்தில் உறுதியாக பதிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாவம் நிறைந்த நீண்ட காலப்பகுதியில் அநேகர் தங்கள் இருதயத்தை தேவனுக்கு பிரியமாக வைக்க முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் சரியான நிலைக்கு வந்த பிறகு, பெரும்பாலானவர்கள் இதே நிலைமையில் நிலைத்திருக்க தவறிவிட்டார்கள்; தவறான வழிக்குள் போகாமலும், தவறான நிலைமைக்குள் போகாமலும் இருக்க முடியவில்லை.

நமது சரீரங்களை கட்டுப்படுத்துவதில் நாம் அடிக்கடி கஷ்டப்படுகிறோம். நாம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டிய மாம்சீக ஆசைகள் உண்டு. நாவை நாம் தொடர்ந்து அடக்க வேண்டும். இவையெல்லாவற்றிலும் நாம் தொடர்ந்து எச்சரிக்கையாக இருக்கும்போது நமது இருதயத்தை கவனிப்பது மிகவும் முக்கியம். ஏனெனில் நமது எல்லா தீய மனோபாவமும் அங்கேதான் ஆரம்பிக்கின்றன. “நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்.” நமது இருதயம் எப்பொழுதும் பரிசுத்தமாகவும் உண்மையாகவும் இருக்கும்படி நாம் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அங்கே அசுத்தத்தை நாம் காண்போமானால், அதற்கெதிராக ஜெபத்துடன் போராடி நாம் அதை சரிப்படுத்தவேண்டும். நமது மனதை சுத்தத்தினாலும், பிரயோஜனம் உள்ளதாகவும், தெய்வீகம் உள்ளதாகவும் வைத்திருக்க வேண்டும்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால், நாம் நமது இருதயத்தை தேவனுக்கு சரியாக வைத்திருக்க ஒரே வழி கிறிஸ்து மட்டுமே என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் கிறிஸ்து மூலமாகவே தேவனிடம் வந்து அவரது பிள்ளைகளாகி அவரது பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம். பிறகு நாம் ஒரு புதிய செல்வாக்கை, ஒரு புது ஊற்றை பெற்றிருக்கிறோம். அது நமது இருதயத்தை திறந்து, அதன் ஓட்டத்தை மாற்றி, வெளியே வருவதை இனிப்பாக்குகிறது. அது முதல் நாம் நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிறோம். இதிலிருந்து ஏதாவது மாற்றம் ஏற்படுமானால், நாம் அதை கர்த்தருடைய ஆவிக்கு இசைவாக திருப்பிக் கொண்டு வரவேண்டும். நமது இருதயத்தை தொடர்ந்து சோதித்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படியிருந்தால் நாம் பிதாவுடனும் நமது கர்த்தராகிய கிறிஸ்துவுடனும் நெருங்கிய ஐக்கியத்தில் நிலைத்திருப்போம்.

“அதனிடத்தினின்று (இருதயம்) ஜீவ ஊற்று புறப்படும்” என்று சாலொமோன் அறிவித்தான். இருதயமாகிய இந்த உறுப்பிலிருந்து இரத்தமானது சரீரத்தின் அனைத்து பாகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இப்படியாக சரீரமானது பலத்திற்கும், தகுதிக்கும், ஜீவனுக்கும் இருதயத்தை சார்ந்திருக்கிறது. இருதயமானது இரத்தத்தை அதன் குழாய்களின் மூலம் தொடர்ந்து அனுப்ப தவறினால் சரீரமானது இறந்துவிடும். ஆகையால் சரீர ஜீவன் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் இருதயத்திலிருந்து போய்க் கொண்டிருக்கிறது. அது கொஞ்சமாகவோ அதிகமாகவோ அனுதினமும் ஜீவனை கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் இது நமது மனோபாவத்தைப் பொருத்து இருக்கிறது. நமது சித்தத்துடன் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நம்முடன் தொடர்புக்கு வருகிற அனைவரும் நாம் வெளிப்படுத்துகிற ஆவியினால் நன்மை அல்லது தீமையின் தாக்கத்தை அடைவார்கள். நமது வாழ்க்கையில் அனைத்து நடவடிக்கைகளும் ஒரு பரிசுத்தமான இருதயத்தின் சரியான வழிநடத்துதலில் இருப்பது மிகவும் முக்கியம். நாம் அந்த இருதயத்தை ஜாக்கிரதையாக கண்காணித்து, சோதிப்போமானால் இன்று நாம் போகிறது போல நல்லவைகள் நமது இருதயத்திலிருந்து மற்றவர்களுக்கு பாயும். இப்படியாக நமது கர்த்தர் நம்மிடம் சந்தோஷப்பட்டு, நம்மை “பிரியமான பிள்ளைகளாக எண்ணுவார்.” இப்படியாக நமது சிந்தையும் மனசாட்சியும் மாசற்றதாக வைக்கப்படும்.

**--2509--**

## கடைசி பலன் - ஜீவன் அல்லது மரணம்

ஆனால், ஒரு வகையில், ஜீவனின் பலன்கள் முக்கியமாக இருதயத்திலிருந்து வருகிறது. நமது இனத்திற்கு மரண தண்டனையை தேவன் அறிவித்திருந்தாலும், அனைவருக்கும் எதிர்காலத்தையும் நித்திய ஜீவனையும் ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த நித்திய ஜீவனை பெறுவதற்கான நிபந்தனைகள் வேத வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. செய்யப்படவேண்டிய சில காரியங்களைக் குறித்து அவைகள் நமக்கு சொல்கின்றன. அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்ட நமக்கு, நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வது இப்போது நமக்கு முக்கியமானதாக இருக்கிறது. ஏனெனில் நமது மாம்சத்தில் பாவமானது ஆக்கிரமித்திருக்கிறது. ஆதாமின் சந்ததியினர் அனைவரையும் போல, அவனது விழுகையினால் நாமும் சுபாவத்தில் அபூரணராக இருக்கிறோம். ஆனால் கர்த்தர், நாம் அவரது பிள்ளைகளானதால், நமது இருதயத்தின்படி, நமது சித்தத்தின்படி, நமது நோக்கத்தின்படி, நமது விருப்பத்தின்படி, நமது முயற்சிகளின்படி நம்மை நியாயந்தீர்ப்பதாக நமக்கு அறிவிக்கிறார். ஆகையால் நாம் மகிமையான பரிசை நினைத்துக்கொண்டிருக்கும் போது, இறுதி முடிவு, இந்த காரியத்தின் இறுதி பலன் மொத்தத்தில் நாம் எப்படி நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைப் பொருத்தே இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு நீதிமன்றத்தில், வாதிக்கு சாதகமாகவோ அல்லது பிரதிவாதிக்கு சாதகமாகவோ தீர்ப்பை ஒரு நீதிபதி முடிவு செய்வது போல இது இருக்கிறது. நமது காரியத்தில் ஒரு பிரச்சனை இருக்கிறது, ஒரு தீர்ப்புக்கு எதிராக நாம் மேல் முறையீட்டிற்கு செல்ல இயலாது.

உலகமானது அடுத்த யுகத்தில் சோதிக்கப்படும். ஆனால் கிறிஸ்துவின் சபையானது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதிலிருந்து இப்போது சோதனையில் இருக்கிறது. புதிய ஜீவன் சோதனையிலிருக்கிறது. நமது புதிய இருதயம் தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு முன் இருக்கிறது. நித்திய ஜீவன் அல்லது நித்திய மரணம் என்கிற காரியம் இதோடு இணைக்கப்பட்டிருப்பதால், புதிய இருதயத்திற்கு அதிகப்படியான கவனம் தேவைப்படுகிறது. நமது நம்பிக்கைகள் ஒரு பூரணமான சரீரத்தை சார்ந்து இருக்கவில்லை; சிலருக்கு நலிவுற்ற சரீரம் இருக்கலாம், சிலருக்கு விரும்பத்தக்கதாக இருக்கலாம், இன்னும் மற்றவர்களுக்கு அப்படி இல்லாதிருக்கலாம். நமது பழைய சரீரம் நாம் புது சிருஷ்டியாக ஆனதிலிருந்து மரித்ததாக எண்ணப்படுகிறது. புது சிருஷ்டி அதன் திறமைக்குத் தக்கவாறு நமது பழைய சரீரத்தை கட்டுப்படுத்துவது புது சிருஷ்டியின் பொறுப்பாக இருக்கிறது. இந்த புதிய இருதயங்கள் தேவனுக்கு, நீதியின் கொள்கைகளுக்கு, சத்தியத்துக்கு, நமது உடன்படிக்கைக்கு உண்மையாய் வைக்கப்படவேண்டும். கிறிஸ்துவைப் போன்ற குணலட்சணத்தை சரியாக வளர்ப்பதில் நாம் தவறினோமானால், தேவனோடு இணக்கமாயிருக்க தவறினோமானால், நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக அபிவிருத்தி அடையமாட்டோம். இறுதியான பரீட்சைகள் வரும்போது, நாம் குறைவுபட்டிருப்போம்.

கிறிஸ்துவைப் போன்ற குணலட்சணத்தை இந்த சுவிசேஷ யுகத்தில் அடைகிறவர்களுக்கு கனம், மகிமை, சாகாமை, கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர் போன்ற ஆசீர்வாதங்களை கொடுக்க கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். தேவனைப் போன்ற குணலட்சணம், நீதியின் கொள்கைகளுக்கும், தெய்வீக சித்தத்திற்கும் நமது விசுவாசத்தை மெய்ப்பிக்கும் நமது கர்த்தராகிய இயேசுவின் விஷயத்தில், அவர் அனைத்தையும் தேவனுடைய சித்தத்திற்கு பலியிட விருப்பத்துடனும் சந்தோஷத்துடனும் இருந்தார். கிறிஸ்துவுடன் கூட இருப்பதாக எண்ணப்படுகிறவர்கள் அனைவரும் இப்படியே இருக்க வேண்டும். நமது ஜீவனின் பலன்கள் இங்கே இருக்கிறது. தேவன் கிறிஸ்துவின் சீடர்களாகிய, கிறிஸ்துவைப் பின்பற்றகிறவர்களாகிய நம்மிடம் கூறுகிறதாவது: "நான் ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன். நீ பிழைக்கும்படி ஜீவனைத் தெரிந்துகொள்." ஜீவன் ஆசீர்வாதமாகவும் மரணம் சாபமாகவும் இருக்கிறது. வேதாகமம் முழுவதும் இதே சிந்தனையே நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது தேவனுடைய கிருபை வரமோ அவரது ஆசீர்வாதமாகிய நித்திய ஜீவன், "பாவத்தின் சம்பளம்" சாபமாகிய மரணம்– நித்திய வேதனை அல்ல.

நாம் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் கிறிஸ்தவர் களாகிய நமக்கு இங்கே நமது பூமிக்குரிய வாழ்க்கையின் பலன் நித்திய ஜீவன். இந்த நித்திய ஜீவனை அடையத் தவறினால் நாம் மரணத்திற்கு–இரண்டாம் மரணத்திற்குச் செல்வோம். ஏனெனில் நீதியின் கொள்கைகளுக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லை; சுவிசேஷ யுகத்தில் நித்திய ஜீவனுக்காக நமக்கு கொடுக்கப்பட்டிருந்த சோதனைகளுக்கான சந்தர்ப்பங்களுக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லை. எதிர்காலத்தில் இனி நமக்கு எந்த சந்தர்ப்பமும் இருக்காது. இந்த வார்த்தைகள், உண்மையிலேயே தேவனுடைய பிள்ளைகளான வர்களுக்கும், "பரம ஈவை" ருசிபார்த்தவர்களுக்கும் பொருந்தும். நாம் நமது இருதயத்தை, உண்மையாக, விசுவாசமுள்ளதாக, மாசற்றதாக வைத்துக் கொள்வது எவ்வளவு முக்கியமானது!

## இறுதி பலனான மகிமையில் மாறுபட்ட ஜீவன்

நித்திய ஜீவனை இறுதி பலனாக பெறுகிறவர்களில் கனத்தையும் ஆசீர்வாதத்தையும் பொருத்தவரையில் பல்வேறு அந்தஸ்து இருக்கும். அப்போஸ்தலர் அதை படம் பிடித்துக் காட்டுகிறார். "மகிமையில் நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்." முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் சிலர்களிலும் அப்படியே இருக்கும். ராஜ்யத்தில் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிக மகிமையுடைவர்களாக இருப்பார்கள். அதிகமான மகிமை, குறைவான மகிமை என பல்வேறு பலன்கள் இருக்கும் என்று நாம் சொல்லலாம். வேதத்தில் வேறு இடத்தில் சொல்லப்பட்டது போல, ஆவிக்குரிய சுபாவத்தில் நித்திய ஜீவனை பெறுகிற இரண்டு வகுப்பார் அங்கே இருப்பார்கள். அதில் பெரும்பாலோர் திரள் கூட்டத்தில் இருப்பார்கள்; சிலர் சிறுமந்தையில் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பார்கள். சிலர் உயர்ந்த சுபாவத்தை, சாகாமையை பெற்றுக் கொள்வார்கள்; ஆனால் பலர் தூதர்களுக்கு ஒப்பான, தாழ்ந்த ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆகையால் வேதாகம புத்திமதியின் ஞானத்தை நாம் பார்க்கிறோம். இருதயத்துக்கு தொடர்ச்சியான கவனம் தேவைப்படுகிறது. ஏனெனில் அதற்கேற்றாற்போல் முக்கியமான பலன்கள் இருக்கிறது. மனதையும்

--2510--

மனசாட்சியையும் மாசுப்பட, அசுத்தமடைய அனுமதிப்பதினால் வரக்கூடிய ஆபத்தை எச்சரிக்கிற ஞானத்தை நாம் இங்கு பார்க்கிறோம். "நான் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையிலும் நான் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பேன்" என்று சிலர் சொல்லக்கூடும். அதுவரை நல்லது. நித்திய ஜீவனைப் பெற நாவை கட்டுப்படுத்தவது மட்டும் போதாது. ஏனெனில் சில காரியங்களில் இருதயமானது, நாவிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும். சிலர் வாயினால் தேனொழுக பேசமுடியும். ஆனால் இருதயமானது வஞ்சகமும் அசுத்தமாயும் இருக்கும். மறுபடியும், ஒருவர் "பாவம் செய்யாதபடி எனது சரீரத்தை கவனித்துக் கொள்வேன்" என்று கூறலாம். ஆனால் அது போதுமானதல்ல. இன்னும் நாம் அதன் உற்பத்தி ஸ்தானத்திற்கு செல்லவேண்டும். கர்த்தர் தமது பிள்ளைகளிடத்தில் அவர்களது இருதயத்தின் நோக்கத்தை, விருப்பத்தைப் பார்க்கிறார். இருதயம் போர்க்களமாக இருப்பதாலும், அதிலிருந்து வரும் பலன் முக்கியமானதாக, ஜீவனா அல்லது மரணமா என்பதாலும் இருதயத்துக்கு விசேஷித்த கவனம் தேவைப்படுகிறது. ஜீவனானால், நாம் விரும்புவது தேவன் நமக்கு கொடுக்கவிருப்பதில் உயர்ந்த ஸ்தானமாக இருக்க வேண்டும். நிபந்தனைகளை சந்திப்பது நம்முடையதாக இருக்கிறது.

---------------------------

**--2511--**

# நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன்
## Jehovah Our God is One

*"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது." 1 கொரிந்தியர் 8:6*

திரித்தவ போதனை பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், நாங்கள் தேவன் ஒருவரே என்கிற வேதாகம போதனையில் மிகவும் நம்பிக்கை வைத்து இருக்கிறோம். இயேசு தேவனை பிதா என்றும், தம்மை தேவனுடைய குமாரன் என்றும் கூறினார். ஒரு பிதா ஜீவனை அளிப்பவர். ஒரு குமாரனானவர், ஒரு சந்ததி, ஒரு பிதாவிடமிருந்து ஜீவனை பெறுபவர். இந்த வித்தியாசம் பிதாவானவர் முன்பே இருந்தவர் என்பதை உணர்த்துகிறது. இயேசு தம்மைப்பற்றி கூறுகிறதாவது: "நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்." (யோவான் 8:42)

இயேசு, மனிதனாக வருவதற்கு முன்பாக தேவனிடத்திலிருந்து வருகிற லோகாசாக, வார்த்தையானவராக, செய்தியாக இருந்தார் என்ற வேதாகமத்தின் தெளிவான போதனையை நமது புத்தகங்களில் காண்பிக்கிறோம். மேலும் அவர் ஒரு தேவனாக அழைக்கப்பட்டார், ஆனால் பிதாவாகிய தேவனாக அல்ல. பிதாவும் குமாரனும் சமமாயிருப்பதைப் பற்றிய கேள்விக்கு, மனிதனின் சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொள்ளாமல், ஆவியினால் உந்தப்பட்ட வேதாகம எழுத்தாளர்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தெய்வீக வார்த்தைகளில் சொல்லப்பட்டுள்ள பழமொழியைக் கூட ஏற்றுக் கொள்ள வேண்டாம். நாம் இயேசுவை கேட்போம். அவர் பதிலளிக்கிறதாவது: "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்." "நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்." "என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்." "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்." "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." (யோவான் 14:28; 5:30; 10:29; 17:3; 20:17)

இயேசு, தேவனுடைய முதல் சிருஷ்டி என்றும், யேகோவாவினால் நேரடியாக சிருஷ்டிக்கப்பட்ட ஒரே சிருஷ்டி என்றும், நமது புத்தகங்களில் நாம் குறிப்பிடுகிறோம். மேலும் யேகோவா தம்முடைய குமாரனைக் கொண்டே மற்ற எல்லா சிருஷ்டிகளையும் உண்டாக்கினார். மேலும் நாம் வாசிக்கிறதாவது: இயேசு "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருந்தார்," "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்," "அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறார்." அவர் தேவனுடைய நேரடியான சிருஷ்டிக்கு ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். (வெளி.3:14; 22:13; கொலோ. 1:15; வெளி 1:8) அப்போஸ்தலர் அறிவிக்கிறதாவது: "ஆதியிலே, (யேகோவாவின் ஆதியல்ல, ஏனெனில் அவருக்கு ஆதியும் அந்தமும் இல்லை; உலகத்தின் ஆதியோ அல்லது மனிதனின் ஆதியோ அல்ல) வார்த்தை (லோகாஸ்) இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." (யோவான் 1:1-3) இந்த விஷயம் தெளிவாக்கப் பட்டிருக்கிறதல்லவா? தேவையில்லாமல் நாம் ஏன் குழப்பமடைய வேண்டும்? வேதாகம ஆதாரம் இல்லாமல் இருண்ட யுகத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டை ஆதரிப்பதற்கு தேவனுடைய வார்த்தையின் தெளிவான கூற்றுக்கு எதிராக ஏன் போராட வேண்டும்?

வேதாகமம் போதிக்கிறது போல், நாங்கள், கர்த்தராகிய இயேசு வானத்திலிருந்து வந்தார் என்றும், கன்னித்தாயிடம் பிறந்தார் என்றும், "அந்த வார்த்தையானவர் மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14) என்று கூறியதையும் போதிக்கிறோம். இயேசு இரண்டு சுபாவத்தை பெற்றிருக்கவில்லை, ஒரே சுபாவத்தையே பெற்றிருந்தார். மேலான ஆவிக்குரிய சுபாவத்திலிருந்து மாம்சீக சுபாவத்திற்கு மாறினார். வேத வாக்கியம் கூறுவது போல, "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தம் தரித்திரரானார்." (2 கொரி. 8:9) அவர் தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்து மனிதனாக வளர்ந்தார். அவர் பரிபூரணரும், "பரிசுத்தமும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கும் விலகினவருமாயிருந்தார்." (லூக்கா 2:52; எபிரேயர் 7:26)

### இயேசு ஒரு புது சிருஷ்டியானார்

முப்பது வயதில் இந்த பரிபூரணர், நியாயப்பிரமாணத்தின்படி மனித பருவத்தை அடைந்தவர், "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்." "மரணத்தை உத்தரிப்பதற்காக" போன்ற வேத வாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக அவருடைய ஜீவனை மனுக்குலத்தின் பாவத்திற்கு மாபெரும் பலியாக தேவனிடம் அர்ப்பணம் பண்ணினார். (எபி. 10:5; 2:9) மனிதனாகிய இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட பலி தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டத்திற்கு அடையாளமாக யோர்தானில் அவரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார். அதிலிருந்து அவர் ஒரு பூரண மனித சரீரத்தையும், ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட, புதிய ஜெனிப்பிக்கப்பட்ட சிந்தையையும் உடையவரானார். பிறகு அவர் ஒரு புது சிருஷ்டியாக, தமது மாம்சத்தின் பலியை நிறைவேற்ற வேண்டியவராயிருந்தார்; அவரது புதிய சிந்தை-புது சிருஷ்டி பரிபூரணப்பட வேண்டியிருந்தது. "உலகம் உண்டாகிறதற்கு முன்னே" பிதாவிடம் அவருக்கு இருந்த மகிமையை தரும்படி பிதாவிடம் ஜெபித்தார். (யோவான் 17:5) அவர் தமது அடக்கத்தில் உயர்வான மகிமையை கேட்கவில்லை. கல்வாரியில் அவரது பலி நிறைவடைந்தது; அவரது புதிய சிந்தை, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புதிய சுபாவத்திற்கு பிதாவானவர் வாக்குத்தத்தம் செய்திருந்தபடி புதிய சரீரம் கொடுக்கப்பட்டது. "கனவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டு" அவர் "மகிமையுடைவராய் எழுப்பப்பட்டார்." "பலவீன

முள்ளதாய் விதைக்கப்பட்டு” அவர் “பலமுள்ளவராய் எழுப்பப்பட்டார்.” “ஜென்ம சரீரத்தில் விதைக்கப்பட்டு” அவர் “ஆவிக்குரிய சரீரத்தில் எழுப்பப்பட்டார்.” (1 கொரிந்தியர் 15:43,44)

நமது கர்த்தர் ஆதியில் தேவதூதர்களைப் போல சிருஷ்டிக்கப்படவில்லை; ஏனெனில் அவர் பிதாவினுடைய நேரடி சிருஷ்டியாக இருந்தார், ஆனால் தேவதூதர்கள், குமாரன் மூலமாக, தேவனுடைய மறைமுக சிருஷ்டிகளாக இருந்தனர். அப்போஸ்தலர் பவுல், சகலமும் பிதாவினால் உண்டானதென்றும், குமாரன் மூலமாய் சகலமும் உண்டாயிற்றென்றும் அறிவிக்கிறார். (1 கொரிந்தியர் 8:6) இயேசு பிதாவினுடைய அனைத்து சிருஷ்டிப்பின் வேலைகளிலும், பிதாவினுடைய கனப்படுத்தப்பட்ட பிரதிநிதியாக (ஏஜெண்டாக) இருந்தார்.

நமது கர்த்தராகிய இயேசு, அவரது ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை அவர் பெற்றபோது கிறிஸ்துவாக, அபிஷேகம் பண்ணப்பட்டவராக ஆனார். அவரது உயிர்த்தெழுதலில் அவர் கிறிஸ்துவாக பூரணப்படுத்தப்பட்டார். அவர் உலகத்திற்குள் பிரவேசிக்கும் முன்னதாக ஒரு வல்லமையுள்ள தேவனாக (வல்லமையுள்ளவர்) இருந்தார். யோர்தானில் அவர் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பத்தலை பெற்றதிலிருந்து அவர் ஒரு வல்லமையுள்ள தேவனாயிருந்தார்; இன்னும் அவர் ஒரு தேவனாக (a god) பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். ஆனால் அவர் ஒரே தேவனாக (The God) இருக்கவில்லை, இருந்ததும் இல்லை, இனி இருப்பதும் இல்லை. அவர் உயிர்த்தெழுந்த பிறகு மகதலேனா மரியாளிடம் அவர் பேசின வார்த்தைகளை மறுபடியும் கவனிக்கவும்:” நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்,” (யோவான் 20:17) பரிசுத்த பவுல் சொல்வதைக் கேளுங்கள்: “பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது.....இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது.” (1 கொரிந்தியர் 8:6) மேலும் அப்போஸ்தலர் பவுல், யேகோவா தேவனை, “நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்” என்றும், “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்” என்றும், “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவன்” என்றும் குறிப்பிடுகிறார். (2 கொரிந்தியர் 1:3; எபேசியர் 1:3,17)

### ஒரு பொதுவான, ஆனால் வேத ஆதாரமற்ற கருத்து

கர்த்தராகிய இயேசு ஒரு திரித்துவ தேவனின் இரண்டாவது நபரல்ல, “திரித்துவம்” என்பது வேத ஆதாரமற்ற கருத்தாக இருக்கிறது. பரிசுத்த பவுல் மேலே குறிப்பிடப்பட்ட அவரது வசனங்களில் இந்த காரியத்தை நேராக வைக்கிறார். மேலும் அவர் அறிவிக்கிறதாவது: “அவர் கொள்ளையாடி தேவனுக்கு சமமாயிருக்க எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமை யாக்கினார்.” (பிலிப்பியர் 2:6) ஆனால் நமது பொதுவான மொழி பெயர்ப்பில் (common version) இயேசு, தான் பிதாவாகிய தேவனுக்கு சமமாக இருப்பதாகக் கருதினார் என்ற கருத்தைக் கொடுக்கிறது. ஆனால் அனைத்தும் இதற்கு மாறாக இருக்கிறது. நமது பொதுவான மொழி பெயர்ப்பு தவறானது என தெளிவாகிறது. அப்போஸ்தலர் எழுதிய அனைத்திலும் கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்தினார் என்றும், யேகோவாவோடு சமமாயிருக்க உரிமை கொண்டாடவில்லை என்றும் காண்பிக்கிறார்.

“திரித்துவம்” என்ற வார்த்தை வேதாகமத்தில் காணப்படவில்லை. திரித்துவத்திற்கு ஆதரவாக காண்பிக்கப்படும் வசனம் கூட ஐந்தாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டது என்று திரித்துவ கொள்கைக்காரர்களே ஏற்றுக் கொண்டனர். இது 1 யோவான் 5:7,8 வசனங்களின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த வசனத்தின் சேர்க்கப்பட்ட பகுதியை நாம் இங்கே அடைப்புக் குறிக்குள் காண்பிக்கிறோம். “(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே) சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.” திருத்திய மொழி பெயர்ப்பு, எம்படிக் டையக்லாட், அமெரிக்கன் ஸ்டாண்டர்டு யூனியன் மொழி பெயர்ப்பு, யங்க்ஸ் மொழிபெயர்ப்பு, கத்தோலிக்க திருத்திய மொழி பெயர்ப்புகளைப் பார்க்கவும். இந்த வசனப்பகுதி சேர்க்கப்பட்டது என்பதை பிரபலமான வேதவல்லுனர்களாகிய சர் ஐசக் நியூட்டன், பென்சன் (Benson), ஆதாம் கிளர்க் (Adam Clarke), ஹோர்னே (Horne), கிரிஸ்பெக் (Griesbach), டிஸ்சென்டார்ஸ் (Tischandors) மற்றும் ஆல்போர்டு (Alford) ஆகியோர் அறிவித்திருக்கிறார்கள்.

நமது கர்த்தராகிய இயேசு இல்லாமல் யேகோவா தவன் மட்டும் இருந்த காலம் உண்டு என்பதை நமது புத்தகங்களில் விளக்கியிருக்கிறோம். இயேசு,“தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருந்தார்” என்று எப்படி வேதாகமம் அறிவிக்கக்கூடும்? (வெளி. 3;14) இந்த வசனங்களின் வெளிப்படுத்துதலுக்கு நாம் மதிப்புத்தரவில்லையென்றால் அதற்கு முக்கியத்துவம் என்ன இருக்கிறது? எந்தவித சந்தேகத்திற்கிடமின்றி இயேசுவுக்கு ஒரு ஆரம்பம் இருந்தது. இந்த ஆரம்பம் என்பது ஆதாமுக்காகவும் அவனது சந்ததிக்காகவும் ஒரு மனிதனாக பூமிக்கு வருவதற்கு முன்பிருந்த யுகத்திற்கு முற்பட்டது. நம்மை குறை கூறுபவர்கள் அதற்கு முன்பு நாம் எழுதினவைகளை அவர்கள் படிக்க வேண்டும். பிறகு அவர்கள் குறை கூறவே மாட்டார்கள், நேர்மையானவர்களாயிருந்தால். வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக கருதகிறவர்கள், குறை கூறுவதற்கு எந்தவித காரணமும் இல்லை என்பதை அறிவார்கள்.

### லோகாஸ் வானத்திலிருந்து பூமிக்கு மாற்றப்பட்டார்

கர்த்தராகிய இயேசு பூமிக்கு வருவதற்கு முன் வானத்திற்குரிய சுபாவத்தைப் பெற்றிருந்தார். நாம் கூறினது போல அகில உலகின் பாவத்திற்கும் மீட்கும் பொருளாக தமது மாம்சத்தை கொடுப்பதற்காக, தமது சுபாவத்தை பூமிக்குரிய சுபாவமாக மாற்றினார். இந்த மகா வேலையை நிறைவேற்றின பிறகு, முந்திய நிலைமையில் யேகோவாவுக்கு அடுத்தபடியாக இருந்தாலும், முந்தின மகிமையான நிலைமையைக் காட்டிலும் இன்னும் மேலான நிலைமைக்கு பிதாவினால் உயர்த்தப்பட்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவரது நிலையைப் பற்றி பரிசுத்த பவுல் அறிவிக்கிறதாவது: “ஆதலால், எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.” (பிலிப்பியர் 2:9–11)

இயேசு பூமியில் இருந்தபோது, அவர் எந்த விதத்திலும் ஒரு பாவமுள்ள மனிதனாக இருந்ததில்லை. கன்னி

மரியாளிடத்தில் அவரது பிறப்புக்கூட அற்புதமாக இருந்தது. அவரது பரிசுத்த ஜீவன் மானிட நிலைமைக்கு மாற்றப்பட்டது. அவர், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகின" ஒரு மனிதனாக ஆக்கப்பட்டார். ஆகையால ஆதாமுக்கும் அவனது சந்ததியினர் அனைவருக்கும் பாவ நிவாரண பலியை கொடுப்பதற்கு தகுதியுள்ளவரானார். யோர்தானில் அவர் முழுகின காலம் வரை அவர் சாதாரண மனிதன் இயேசுவாக இருந்தார். ஆனால் அவர் அங்கே பெற்ற அபிஷேகம் அவரை மேசியாவாக, கிறிஸ்துவாக, தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராக ஆக்கியது.

### "தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறவராக" ஆக்கப்பட்டார்

இயேசு மனிதனாக வருவதற்கு முன்பு, ஒரு தேவனாக வல்லமையுள்ள ஒருவராக, தேவதூதர்களுக்கும் மேலானவராக இருந்தார். அவர் குழந்தையாக பிறந்தபோது அவர் ஒரு தேவனே அல்ல, ஆனால் ஒரு மனித ஜீவி; அவர் முப்பது வயதில் முழு மனிதனான போது அவர் ஒரு தேவனாக இருக்கவில்லை. ஆனால் அவர் தெய்வீக சக்தியாகிய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற போது, இந்த ஆவியின் ஜெநிப்பித்தலால் அவர் வல்லமையுள்ள ஒருவர் ஆனார். அவர் உயிர்த்தெழுந்ததிலிருந்து, அவர் ஒரு தேவனாக, இதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் பெரியவராக, "தெய்வீக சுபாவத்தில் பங்குபெற்றவராக" ஆனார். ஏனெனில் அவரது சபை இந்த மகா உயர்த்துதலுக்கு அழைக்கப்படுகிறது. அவர்கள் அவர்களது கர்த்தரின் மகிமையை அடைவதற்கும் அவரோடு அவரது மணவாட்டியாக, அவருக்கு ஒப்பாக, அவரது மகிமையான சரீரத்தின் அங்கங்களாக இருக்கும்படியாக அழைக்கப்படுகிறார்கள். (2 தெசலோனிக்கேயர் 2:14; 1 யோவான் 3:2; வெளிப்படுத்துதல் 21:2,9; 22:17; 1 கொரிந்தியர் 10:16, 17:12:12,13,27; 2 பேதுரு 1:4)

நமது கர்த்தர் அவரது சபைக்கு மகா தலையாக இருக்கிறார். சரீரமானது அதே சுபாவத்தின் மகிமையில் பங்கு பெறவேண்டும். அவர் தமது மனித சுபாவத்தை, மனுக்குலத்தை வாங்குவதற்காக மரணத்தில் விட்டுக்கொடுத்தார். மூன்று நாட்களுக்குக் கொஞ்சம் குறைவாக கல்லறையில் மரித்து இருந்தார். எந்த விதத்திலும் அவர் உயிரோடிருக்கவில்லை; ஏனெனில் மரணம் என்பது ஜீவனற்ற நிலைமை. அவர் விட்டுவிட்ட தமது மனித ஜீவியத்தை திரும்ப எடுத்துக் கொள்ளமாட்டார். அது உலகிற்காக கொடுக்கப்பட்ட விலைக்கிரயம். அவர் தெய்வீக நிலைக்கு உயிர்த்தெழுப்பப்பட்டார். தேவனுடைய சிருஷ்டிகளில் இதற்கு முன்பு யாரும் இந்த அளவுக்கு உயர்த்தப்படவில்லை. அவரது சபையும் கூட அதன் தலையானவரின் இதே மகிமையான சுபாவத்திற்கே அழைக்கப்பட்டிருக்கிறது. அவரது சுதந்தரத்தில் பங்கு பெறவே சபையானது அழைக்கப்படுகிறது. தேவனுடைய வல்லமையினால் இயேசு மரித்தோரிலிருந்து உயர்த்தெழுப்பப்பட்டார். (ரோமர் 6:4; 8:11; அப்போஸ்தலர் 2:22, 24,32,33).

### திரித்துவக்காரரின் கருத்தில் குழப்பம்

கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய வேதாகமத்தின் சாட்சியத்தை பின்பற்றியதாலும் இருண்ட யுகத்தின் கேலிக்குரிய அறிவீனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டதினாலும் நாம் ஒரு பெரிய குழப்பத்திலிருந்து காக்கப்படுகிறோம் என்பதை ஒரு கணம் கவனியுங்கள். நமது தேவனை ஒரு சரீரத்தையுடைய மூவராகவும், மூன்று சரீரங்களையுடைய ஒருவராகவும் நினைப்பதிலிருந்து நாம் காக்கப்படுகிறோம். திரித்துவக்காரர்கள் இந்த விசுவாச அறிக்கைகளில் எதை எடுத்துக் கொள்வது என்பதை அறியாதிருக்கிறார்கள். சிலர் ஒன்றையும் மற்றவர்கள் மற்றதையும் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இரண்டுமே பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. மூன்று ஒன்றல்ல, ஒன்று மூன்றல்ல. பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதைக் குறித்து நமது கர்த்தரே விளக்குகிறார். அவரும் பிதாவும் ஒன்றாயிருப்பது போல அவரது சீஷர்களும் ஒன்றாயிருக்கும்படி அவர் ஜெபித்தார். நிச்சயமாக அவர்கள் ஒரே நபராக ஆக மாட்டார்கள். ஆனால் அவர்கள் ஆவியிலும், சிந்தையிலும் நோக்கத்திலும், பிதாவும் அவரும் ஒன்றாயிருப்பதுபோல சீஷர்கள் அனைவரும் ஒன்றித்து இருப்பார்கள். யோவான் 17:20,23. ஐப் பார்க்கவும் இயேசுவின் சீஷர்கள் ஒவ்வொருவரும் தனது சித்தத்தை விட்டுக்கொடுத்து, தேவனுடைய சித்தத்தை செய்வதில் ஒரே சிந்தையும் ஒரே நோக்கமும் உடையவர்களாகிறார்கள். இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள், ஏனெனில் இயேசு தமது சித்தத்தை பிதாவின் சித்தத்துக்கு அர்ப்பணித்தார். அவர் கூறுவதாவது: "என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது;" "நான் என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தை செய்யவே வந்தேன்;" "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்." இவைகளெல்லாம் கர்த்தராகிய இயேசு பிதாவிடம் பேசிய வார்த்தைகள்.

திரித்துவக்காரர்களின் கருத்துக் குறித்து, அப்பாட் மற்றும் கோனன்ட்ஸ் மத அகராதி (Abbott and conant's Religious Dictionary) பக்கம் 944 கூறுவதாவது: "நான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் திரித்துவக்காரர்களின் கருத்து விரிவடைந்து, ஒரு போதனையாக முறைப்படுத்த ஆரம்பித்தது. "**ஒரே தேவன்**" என்கிற சபையின் விசுவாசத்திற்கு ஒத்துப்போகும்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. "இந்த பிரச்சனையை தீர்க்க முயற்சித்தும் திரித்துவம் என்கிற போதனை வெளிவந்தது." திரித்தவம் என்பது "இந்து மதத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. மேலும் பெர்சியா, எகிப்து, ரோமன், ஜப்பான் மற்றும் கிரேக்க நாடுகளின் மிகவும் பழமையான புராணங்களிலும் இது காணப்படுகிறது."

போப்பு சபையிலிருந்து புரட்டஸ்டண்ட் சபையார் பெற்ற மற்ற சில போதனைகளைப் போல இதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் படித்த அதரவாளர்களால் எந்தவித வேதாகம வசனத்தின் ஆதாரத்தையும் கொடுக்க முடியவில்லை. வேத ஆதாரமற்ற இந்த போதனையை, தங்கள் விசுவாசமாக அங்கீகரிக் காதவர்களை மத நம்பிக்கை இல்லாதவர்கள் என்று இவாஞ்சலிகல் அலையன்ஸ் (Evangelical Alliance) என்ற அமைப்பு தனது கட்டுரையில் அறிவித்தது. திரித்துவக்காரர்கள் எபிரேயர் 1:8ஐ எடுத்துக் கொண்டு இயேசுதான் யேகோவா என்று கூறுகிறார்கள். உண்மை என்னவென்றால், தேவன் என்ற வார்த்தைக்கு "தியோஸ்" என்ற அதே கிரேக்க வார்த்தையே வருகிறது என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. "தியோஸ்" என்ற வார்த்தை வல்லமையுள்ள எந்த ஒரு நபருக்கும் பயன்படுத்தப்படுகிறது இதேபோல ஏலோஹிம்

(Elohim) என்ற எபிரேயு வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

நமது கர்த்தரின் தற்போதைய மகிமை, அவர் மனிதனாக வருவதற்கு முன்பிருந்த மகிமையைக் காட்டிலும் மேலானது என்று பிலிப்பியர் 2:8,9 வசனங்கள் குறிப்பாக காட்டுகின்றன. இல்லையென்றால் அது உயர்த்தப்பட்டதாகாது. இப்பொழுது அவர் சாகாமை, தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருப்பதால் அவரால் மரிக்க இயலாது. "கிறிஸ்து இனி மரிப்பதில்லை." மனித பாரம்பரியங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது, வேதாகம விளக்கம் எப்படி நேரடியாகவும், சாதாரணமாகவும், பொருத்தமாகவும் இருக்கிறது பாருங்கள்! இயேசுவும் பிதாவும் ஒரே தேவன் என்று சொல்லுகிறவர்கள் எவ்வளவு மாறுபாடுகளையும் குழப்பங்களையும் காண்கிறார்கள்! இது இயேசுவே பிதாவாகிய தேவனாக இருந்து கொண்டு பூமியில் இருக்கும்பொழுது, தேவனிடம் ஜெபிப்பதுபோல் பாவனை செய்தது, அவரை ஒரு மாய்மாலக்காரராக காண்பிக்கிறது. தேவன் யாராலும் சோதிக்கப்படக்கூடியவர் அல்ல என்று நாம் வாசிப்பதால், சாத்தான் இயேசுவை சோதித்தது ஒரு கேலிக்கூத்துதான் என்று தீர்மானிக்க வேண்டும். மேலும், பிதாவானவர் எப்பொழுதும் சாகாமையுடைவராக இருப்பதால், அவரால் மரிக்க முடியாது. இயேசு பிதாவாயிருந்தால், அவரால் எப்படி மரிக்க முடிந்தது? அவர் மரிக்கவில்லையென்றால், இயேசுவின் மரணத்தையும் அவரது உயிர்த்தெழுதலையும் குறித்து அப்போஸ்தலர் கொடுத்த சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானதாக இருந்திருக்கும். எனினும் அவர் மரித்தார் என்றும் வேதவாக்கியங்கள் அறிவிக்கிறது. "அவர்தம் ஆத்துமாவை (அவரது ஜீவனை) மரணத்திலூற்றினார்." அநேகர் உறுதிப்பட கூறுவது போல அவர் தனது சரீரத்தை ஊற்றவில்லை. (ஏசாயா 53:12)

அவர்கள், இயேசு உண்மையிலேயே மரித்தார் என்று "ஏற்றுக்கொண்டால், இன்னொரு குழப்பத்திற்கு ஆளாகிறார்கள். மூன்று தேவர்களும், அநேகர் நம்புவது போல ஒரே நபராக இருக்கிறார் என்று நம்பினால், இயேசு மரித்தபோது மூன்று பேரும் மரித்திருக்க வேண்டும். அப்படி எல்லோரும் மரித்துவிட்டால், இயேசுவை உயிர்த்தெழுப்பியது யார்? இதெல்லாம் எப்படி மூடத்தனமாக இருக்கிறது! இன்னும் பிதாவும் இயேசுவும் ஒரே ஆளாக இருந்தால், ஒரே ஜீவியாக இருந்தால், இயேசு மரித்த பொழுது பிதாவும் மரித்திருக்கவேண்டும். இப்படியாக நாம், அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் மற்றும் இயேசுவையும் கூட மறுத்துபேசலாமா? இன்னும் இருண்ட மற்றும் மூட நம்பிக்கையின் கடந்த காலத்தின் களங்கமுற்ற விசுவாச துரோக சபையால் கொடுக்கப்பட்டவைகளை பற்றிக்கொள்ள, அறிவு பூர்வமானதையும், விவேகத்தையும், அசட்டை பண்ணலாமா? அப்படியல்ல, "வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தைகளின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை."

### பரிசுத்த ஆவி சம்பந்தமாக வேதாகம சாட்சியம்

பரிசுத்த ஆவியைக் குறித்து வேத வாக்கியங்கள் என்ன கூறுகிறது என்பதை நாம் அடுத்து பார்ப்போம். பரிசுத்த ஆவி என்பது ஆள்தத்தவமுடைய, திரித்துவத்தில் மூன்றாவது தேவன் என்று பேர்சபைகளும், புரட்டஸ்டண்ட் மற்றும் கத்தோலிக்க சபையும் உறுதியாகக் கூறுகிறார்கள். இது எல்லாம் "ஒரு பெரிய இரகசியம்" என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆம், உண்மையிலேயே இது ஒரு இரகசியம்தான். பாபிலோன் பற்றிக்கொண்டிருக்கிற மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கோட்பாடுகளின் குழப்பம் நிறைந்த குணலட்சணம் ஒரு இரகசியம்தான். ஆனால் தேவனுடைய வார்த்தையிடம் திரும்பி, அதன் சாட்சியத்தைப் பார்க்கிறவர்களுக்கு எல்லாம் தெளிவாகவும் விளக்கமாகவும் இருக்கிறது. "பரிசுத்த ஆவி" என்ற பதத்தின் விளக்கம் எதுவாயிருந்தாலும், அறியப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும், ஒத்துவருவதாகவும், அனைத்து வேத வாக்கியங்களுக்கும் இசைவாகவும் இருக்கிறதை அந்த பதத்தின் சரியான பொருள் என்று புரிந்து கொள்ளலாம் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். இந்த பதத்திற்கு சரியான பொருள் என்ன என்று நாங்கள் கருதுவதை முதலில் நாங்கள் கொடுக்கிறோம். நாங்கள் கூறுகிற கருத்து இந்த பதம் வருகிற எல்லா வேத வாக்கியங்களுடனும் இசைந்து வருகிறதா என்று சோதித்து பார்க்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்கிறோம்.

பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய சித்தம், செல்வாக்கு வல்லமை அல்லது மனச்சார்பு என்று வேதாகமம் போதிப்பதாக நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். அது எங்கேயும் எந்த நோக்கத்திற்காகவும் தெய்வீக சித்தத்தின்படி அப்பியாசப்படுத்தப்படுகிறது. தேவன் தமது ஆவியை அல்லது சக்தியை பல்வேறு வழிகளில் பலவித பிரதிநிதிகளைக் கொண்டு பல்வேறு பலன்களுக்காக அப்பியாசப்பபடுத்துகிறார். தேவன் நமது பிரதிநிதிகள் மூலமாக என்ன செய்தாலும் உண்மையிலேயே அது அவருடைய வேலையாக, அவரே நேரடியாக செயல்படுபவராக இருக்கிறார். ஏனெனில் அவரது அனைத்து பிரதிநிதிகளும் அவருடைய சிருஷ்டிகளாக அவருடைய சொந்த வல்லமையால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக ஒரு கட்டட ஒப்பந்தக்காரர், எந்த ஒரு உபகரணத்தையோ, கட்டட பொருளையோ அவர் நேரடியாக தொடாமல் இருந்தால் கூட அவர் அந்த கட்டடத்தை கட்டுவதாக சொல்லப்படுகிறார். அவர் அதை தனது பிரதிநிதிகள் மூலமாகவும் பொருட்கள் மூலமாகவும் செய்கிறார். இப்படியாக, யோகோவா தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று நாம் வாசிக்கும்போது, தேவன் நேரடியாக அவைகளை கையாண்டார் என்று யூகிக்கக்கூடாது. அவர் தமது பிரதிநிதிகளை பயன்படுத்தினார். "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்." அவரது பரிசுத்த வல்லமை அவரது ஒரே பேறானவர் மூலமாக செயல்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் அந்தந்த நேரத்தில் அவரது தீர்க்கதரிசிகள் மூலம் தேவனுடைய ஆவி செயல்படுத்தப்பட்டது. "தேவனுடைய ஆவியின்படியே அவர்கள் பேசினார்கள்." தேவனுடைய பரிசுத்த ஆவி நமது பொதுவான மொழி பெயர்ப்பில் ஆண்பாலில் அடிக்கடி சொல்லப்படுகிறது. ஏனெனில், ஆவியாயிருக்கிற தேவனுடைய பலத்தைக் குறிக்கும்படியாக ஆண்பாலில் குறிப்பிடப்படுகிறார். பரிசுத்த ஆவியை குறிப்பிடுகிற சுட்டுப்பெயர் (Pronoun) "அவர்" என்பது "அது" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். அநேக இடங்களில் அப்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்கு டயக்லாட் (Diaglott) மொழிபெயர்ப்பில் யோவான் 14:17,26ஐ பார்க்கவும். பரிசுத்த ஆவியைப் பற்றிய இந்த பாடத்தை இன்னும் அதிகமாக புரிந்து கொள்வதற்கு வேதாகம பாடங்கள் தொகுதி ஐந்தில் பாடங்கள் 8–11 வரை பார்க்கவும். அதில் இந்த பாடத்தை அதிகமாக விளக்கியிருக்கிறோம்.

"பிதாவின் கண்ணாடியைக் கொண்டு அவரது தலைக்கு
மேலாக ஒருவன் படிக்கிறான்,
அவனது பிதா கண்டது போல இவனும் காண்கிறான்;
மற்றவன் காம்பெல் மூலமாகவோ அல்லது ஸ்காட் மூலமாகவோ படிக்கிறான்.
தனது எண்ணத்தின்படியே அது கூறுவதாக நினைக்கிறான்.
சிலர் முன் ஏற்றுக் கொண்ட கோட்பாட்டை மெய்ப்பிக்க படிக்கின்றனர்.
அவர்கள் படிப்பதில் புரிந்துகொண்டது கொஞ்சமே;
அனைத்தும் நல்ல முடிவுக்கு இசைவாக்கும்படி
புத்தகத்தின் வாக்கியம் ஒவ்வொன்றையும் வளைக்கின்றனர்.
சில ஜனங்கள், நான் அடிக்கடி நினைக்கிறதுபோல
போதிக்கப்படுவதற்கு பதிலாக, புத்தகத்தை போதிப்பதற்காக படிக்கிறார்கள்."

-------------------------------

**--2516--**

# அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல்
# Making Friends of the Unrighteous Mammon

*"நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்ளும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்."*

*(லூக்கா 16:9)*

யூத ஜனங்கள் தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட சுதந்தரமாயிருந்தார்கள். மோசேயின் உடன்படிக்கைக்கு கீழாக, தேவனுக்கும் இஸ்ரயேல் ஜனங்களுக்கும் பிரதிநிதிகள் இருந்தார்கள். ஆகவேதான், இயேசு தம்முடைய சீஷர்களிடம், "வேதபாரகரும், பரிசேயரும் மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்கு சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" (மத்தேயு 23:2,3) என்று கூறினார். தேவன் அவர்களிடத்தில் இந்த விசேஷித்த பொறுப்புகளையும், ஆசீர்வாதங்களையும், சலுகைகளையும் அறிவையும் கொடுத்திருந்தார். ஜனங்களும் அவர்களை சார்ந்திருந்தார்கள்; ஆனால் ஜனங்களோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்புகள் அநீதியாக இருந்தது.

கர்த்தர் தமது குமாரன் மூலமாக பரிசேயர், வேதபாரகர்களுக்கு அவர்கள் உக்கிராணத்துவத்தைவிட்டு நீக்கப்பட வேண்டும் என்கிற செய்தியை அனுப்பினார். அவர்கள் புது யுகமாகிய சுவிசேஷ யுகம் வந்து கொண்டிருந்தது என்பதை ஒரு பொதுவான முறையில் புரிந்துகொள்ள ஆரம்பித்தார்கள். கிறிஸ்துவின் முன்னோடியாகிய யோவான் ஸ்நானன் பரலோக ராஜ்யம் சமீபமாயிருந்தது என்று அறிவித்திருந்தார். இந்த வகுப்பார் எடுக்க வேண்டிய மார்க்கத்திற்கான காரணத்தை விளக்குகிற ஒரு உவமையை இப்பொழுது இயேசு கொடுக்கிறார். அநீதியான உக்கிராணகாரனிடம் அவனது எஜமான் தனது கணக்கை ஒப்புவிக்கும்படி கூறினான். ஏனெனில் அவனது உக்கிராணத்துவம் முடிவுக்கு வர இருந்தது. தான் நீக்கப்படபோவதை அறிந்த இந்த உக்கிராணக்காரன் தனது எஜமானனுக்கு கடன்பட்டிருந்தவர்களை தனக்கு நண்பர்களாக்கிக் கொள்ள முயற்சித்தான். இந்த கடன்பட்டவர்களிடம் அவன் இதற்குமுன் எப்படி நடந்து கொண்டிருந்தாலும், இப்பொழுது அவர்கள் தனது எஜமானிடம் பட்ட கடனை குறைத்தான். ஏனெனில், அவனுக்கு அதிகாரம் இருந்தது. பழங்காலத்தில் ஒரு உக்கிராணக்காரன் தனது எஜமானனுக்காக ஒப்பந்தம் போன்றவைகளை போடுவதற்கு உரிமை இருந்தது. ஆகையால் இந்த உக்கிராணக்காரன் கடன்பட்டவர்களின் கடனை குறைத்து அவர்களது நண்பனானான். அவன் செய்ததைக் குறித்து நமது ஆண்டவர் கூறியது என்னவென்றால், உக்கிராணக்காரன் ஒரு ஞானமான காரியத்தை செய்தான் என்று கூறினார். ஏனெனில் இப்படி செய்ததினால், அவன் உதவி செய்தவர்களின் நல்லெண்ணத்தை அவன் பெறுவான். நமது கர்த்தர் இது குறித்து இது உலகப்பிரகாரமான ஒரு ஞானமான செயல் என்று கூறினார். ஆனால் உக்கிராணக்காரனின் அநீதியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை ஆனால் அவன் இதற்கு முன் அநீதியாக நடத்தியிருந்த அவர்களின் நட்பையும் தயவையும் பெறும்படி அவன் கடைபிடித்த செயலைப்பற்றி கூறினார்.

அவரது காலத்திற்கு இதை பொருத்திப் பார்க்கும்பொழுது, நமது ஆண்டவரின் வார்த்தைகள், வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் தங்களது யூத சகோதரர்களின் அன்பையும் நன்றியுணர்வையும் பெற நாடியிருக்கவேண்டும் என்று போதித்திருக்கும். அவர்கள் ஜனங்களை சந்தோஷமும், திருப்தியும் உடையவர்களாகும்படி அவர்கள் முயற்சித்திருந்தால், அது அவர்களுக்கு பின்னர் நன்மையாக இருந்திருக்கும். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. கி.பி.70–ல் தேசத்தின்மேல் மகா உபத்திரவ காலம் வந்தபோது, அந்த துன்பத்தில் இந்த மதத் தலைவர்கள் அதிக துன்பமும் வருத்தமும் அடைந்தார்கள். அந்த அநீதியான உக்கிராணக்காரனைப் போல அவர்கள் ஞானமாக இருக்கவில்லை.

### தேவனுடைய உக்கிராணக்காரனாக நம்முடைய சொந்த பொறுப்பு

பிறகு நமது கர்த்தர் இந்த உவமையை வைத்து தமது சீஷர்களுக்கு ஒரு பாடத்தைக் கொடுத்தார். "இதையே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்." இந்த உவமை வேதபாரகர் மற்றும் பரிசேயர்களுக்கு பொருந்துவதைக் காட்டிலும், அருடைய சீஷர்களுக்கு பொருந்தவது வேறுபட்டிருக்கிறது. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; அநீதியான உலகப்பொருளால் உங்களுக்கு சிநேகிதரைச் சம்பாதியுங்கள்." வேறு வார்த்தையில் சொல்வோமானால், கர்த்தருடைய பிள்ளைகள், தாங்கள் பெற்றிருக்கிற அநீதியான உலகப் பொருட்களை முடிந்தவரையில் மற்றவர்களுக்கு உதவவும் ஆசீர்வதிக்கவும் பயன்படுத்தும்படியும் அதன் மூலம் நன்றியுடைய, மதிக்கக்கூடிய நண்பர்களை ஏற்படுத்த வேண்டும் என்று இங்கு புத்தி கூறப்படுகிறார்கள்.

நமது நன்மையான செயல்களும், கர்த்தர் நமக்கு அளித்திருக்கிறவைகளை மற்றவர்களுக்கு பயன்படுத்துவதும், மற்றவர்களிடம் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்பதற்காக என்பது இதற்கு பொருளல்ல. நமது ஊழியம் வேதாகமம் காண்பிக்கிற வழியில், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டும் என்பதே. இப்படியாக கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை உண்மையிலே தேவனுக்கு பிரியமாகவும், பாத்திரராகவும் ஆக்கிக் கொள்கிறார்கள். இப்பொழுது நாம் கடைபிடிக்க வேண்டிய ஒரு நல்ல திட்டமாக இது இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். தங்களுக்கு மிகவும் எது அனுகூலமானது என்பதை தெரிந்து கொள்வதில் இந்த உலகத்தின் பிள்ளைகள் வெளிச்சத்தின்

, ,

பிள்ளைகளைக் காட்டிலும் பொதுவாக ஞானவான்களாக இருக்கிறார்கள் என்று ஆண்டவர் அறிவித்தார்.

**பிரஞ்சு புரட்சியில் ஆபத்தின் நாள் சித்தரிக்கப்பட்டது**

தற்கால மத அதிகாரங்கள் வெளியரங்கமாக கிறிஸ்துவின் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றன. பெரும்பாலான ஜனங்கள் தங்களது சபை தலைவர்கள் தங்களுக்கு சொல்வதைக்காட்டிலும் வேறு எதையும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். இப்பொழுது இந்த நியாய சாஸ்திரிகள் தற்கால யுகம் முடிவுக்கு வருகிறது என்பதைக் காண்கிறார்கள். அவர்கள் தங்கள் கடந்த கால தவறுகளில் திருத்தம் செய்யவும், தங்களது மந்தையுடன் கொண்ட தொடர்பில் செய்த தவறுகளை சரி செய்யவும் நாடவேண்டும். "அவர்கள் அறிவாகிய திறவு கோலை" மறைப்பதில் அதிகமான பங்கு வகிக்கிறார்கள். (லூக்கா 11:52) மூடக்கொள்கைகளை ஜனங்கள் மேல் திணிக்கிறார்கள். அவர்கள் தவறான பாவனை செய்து ஜனங்களின் பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். ஜனங்களிடம் உண்மையைச்சொல்லி இதையெல்லாம் சரிசெய்ய அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் மேல் வரவிருக்கிற பெரும் துன்பத்திலிருந்து தங்களை காத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இப்படி அவர்கள் செய்வார்களானால் பெரிய அழிவு வரும்போது அவர்கள் அவ்வளவு கடுமையான துன்பத்தில் விழமாட்டார்கள். ஆனால் வேதாகமம் குறிப்பிடுகிறபடி, மக்களை அதிகமதிகமாக வெறுப்படையச் செய்து, சீக்கிரத்தில் வரவிருக்கிற தங்களது கஷ்டத்தை கூட்டிக்கொள்கிறார்கள்.

நெருங்கி வருகிற மகா உபத்திரவத்தில் ஜனங்களைக் காட்டிலும் மதகுருமார்களும் ஊழியர்களும் அதிகமாக துன்பப்பட்டால் நாம் ஆச்சரியப்படக்கூடாது. ஏனெனில் அவர்கள் ஜனங்களை ஏமாற்றி வருகிறார்கள். பிரஞ்சு புரட்சியில் கத்தோலிக்க குருமார்கள் மிகவும் பயங்கரமான துன்பத்துக்கு ஆளானார்கள். இது நெருங்கி வருகிற மகா ஆபத்தை சிறிய அளவில் சித்தரிக்கிறதாக இருந்தது. பிரஞ்சு புரட்சி வெளிப்படுத்தல் 12:15,16ல் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதாக நாங்கள் புரிந்து கொள்கிறோம். மேலும் வேதாகம பாடங்களின் மூன்றாவது தொகுதியில் பக்கங்கள் 45–51 மற்றும் 65–71–ஐ பார்க்கவும். சமீபமாய் இருக்கிற தற்கால முறைமைகள் நீக்கப்படும்போது பேர்சபையின் குருமார்களும் அதிகாரிகளும் குறிப்பாக துன்பப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில் அவர்களில் சிலர் சத்தியத்தை தீவிரமாக எதிர்த்து வருகிறார்கள். சிலர் தங்களை சத்தியம், மற்றும் ஜனங்களின் ஞான உபதேசத்துக்கும் சுதந்திரத்திற்கும் பிரதிநிதிகளாக காண்பித்துக் கொண்டு, ஆனால் சத்தியம் என்று அவர்கள் அங்கீகரித்ததற்கு உண்மையாக நிற்காமல், கொள்கையின் நிமித்தம் அமைதியாக இருக்கிறார்கள். ஊழியம் செய்வோம் என்று பாசாங்கு செய்தபடி அந்த அக்கறையை பாதுகாக்க தவறிவிட்டார்கள்.

**பரிசுத்தவான்களுக்கு இந்த உவமையை பொருத்திப்பார்த்தல்**

இயேசுவின் வார்த்தைகளை நமக்கு பயன்படுத்தும்போது எந்த அளவுக்கு அநீதியான பொருட்களை, உலகப் பொருட்களை நாம் பெற்றிருக்கிறோமோ, அதை கருமித்தனமாக இல்லாமல் மிகவும் தாராளமாக, நமது தகுதிக்கு ஏற்றவாறு பயன்படுத்தவேண்டும் என்று நமக்கு போதிப்பதுபோல் காணப்படுகிறது. அவருடைய சீஷர்களாகிய நாம், பெற்றிருக்கிற வருமானம், சந்தர்ப்பம், செல்வாக்கு முதலியவைகளையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிற இந்த தாலந்துகளையும் அவருக்கென்று பயன்படுத்தவேண்டும் என்று கர்த்தர் காண்பிக்கிறதாக நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். நாம் சத்தியத்தைக் கொடுக்கும்போது ஒரு குறிப்பிட்ட அளவு எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்தால், அது கவனிக்கப்படாமல் போகும்படியாகவும், கர்த்தருக்கும் அவரது வசனத்தின் ஆவிக்கும் இணக்கமாக இருக்கும்படி பெருந்தன்மையாக இருக்க நாம் நாடவேண்டும்.

ஆண்டவர் மேலும் கூறுகிறதாவது: "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வார்கள்." நம்மை நித்தியமான வீட்டிற்குள் சேர்த்துக் கொள்பவர்கள் நமது கர்த்தரும் அவரது தூதர்களுமேயாகும். அவரது உண்மையுள்ள அனைவரையும் அவர் ஏற்றுக் கொள்வதாக அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். நமது அநீதியான பொருட்களை பயன்படுத்துவதும், பூமிக்குரிய ஆசாபாசங்களை பலியிடுவதும், சில காரியங்களில் மனிதர்களிடமிருந்து ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். ஆனால் கடைசியில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறபடி கர்த்தரிடமிருந்து கிரீட ஆசீர்வாதத்தை நிச்சயம் கொண்டு வரும். நமது மரணம் நமது பலியின் ஓட்டத்தின் முடிவை அடைவதாகும். கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் மரிக்க வேண்டும். அவர்களது அர்ப்பணத்தின் கருத்து அதுதான். இது மரண பரியந்தமுமான ஒரு பலியாகும். அநீதியான பொருட்களினால் நண்பர்களை சம்பாதிக்கிறவர்கள் இந்த வகுப்பை சேர்ந்தவர்களாயிருந்தால், இந்த பூமிக்குரியவைகளை அவர்கள் பலியிட்டால், அவர்கள் தங்கள் ஓட்டத்தை முடிக்கும் போது, அவர்கள் நித்திய வீடுகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த இடம், "கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே," "முற்றும் ஜெயங்கொண்டவர்களாகிய" உண்மையுள்ள வகுப்பாருக்காக ஆயத்தம் பண்ணப்பட்டது.

"அவர்கள்" என்ற வார்த்தையை, நாம் நண்பர்களாக்கிக் கொண்டவர்களுக்கு பயன்படுத்தக்கூடாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருந்து, சுயபலியின் வாழ்க்கையை வாழ்ந்து, பூமிக்குரிய பொருட்களை தனக்கென்று பயன்படுத்தாமல் கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்தினால், தேவன் நம்முடைய நண்பராக இருப்பார். நாம் மரிக்கும்போது நம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய நண்பர்கள், நம்முடைய பலியினால் பலனடைந்தவர்கள் மட்டுமல்ல, ஆனால் விசேஷித்த விதமாக திரைக்குப்பின்னால் இருக்கக்கூடிய பிதாவானவர், கர்த்தராகிய இயேசு, மகிமையடைந்த பரிசுத்தவான்கள் மற்றும் பரிசுத்த தூதர்கள் ஆகும். ஆசீர்வாதமான எதிர்நோக்குதல்!

-------------------------- **--2518--**

# மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும்

## Trespasses and Sins and Their Effect on Character

*“அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுண்டு.”1 யோவான் 5:17*

நாம் மீறுதல்களுக்கும் பாவங்களுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளவேண்டும். பாவம் என்பது தெரிந்தே, வேண்டுமென்றே செய்வதாக இருக்கிறது. மீறுதல் என்பதும் ஒரு வகையில் பாவந்தான், ஆனால் வேண்டுமென்றே செய்யாமல், அறியாமல் செய்வது. ஒரு பாவத்தை மீறுதல் என்று சொல்லும் போது, அது அறியாமல் செய்யப்பட்டது என்று பொருள்படுகிறது. தெய்வீக கட்டளையை நாம் கடைபிடிக்க முடிகிறதா இல்லையா என்பதற்காக அது இருக்கிறது. தெய்வீக சட்டத்தின் ஒவ்வொரு மீறுதலும் ஒரு வகையில் ஒரு பாவமாக இருக்கிறது. ஆனால் அந்த தேவ கட்டளையின் மீறுதல்கள் எல்லாம் நமது தவிர்க்கயியலாத பலவீனங்களின் பலனாகும். இவைகள் குற்றம் சாட்டப்படத்தக்க பாவங்கள் அல்ல. ஆகையால் இது தெரிந்து, வேண்டுமென்றே செய்யக்கூடிய பாவ வகையைச் சேர்ந்ததல்ல.

உலகத்தைப் பொருத்த வகையில், அது ஏற்கனவே பாவத்திற்காக தண்டனைக்குட்பட்டதாக இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவர் மூலமாக தங்களது பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக் கொண்டவர்களைப் பற்றி அப்போஸ்தலர் பவுல், அவர்களது பாவங்கள் “தேவன் பொறுத்துக் கொண்ட கடந்த கால பாவங்கள்” என்று கூறுகிறார். (ரோம.3:25)

கிறிஸ்துவின் சீடர்களாகும்படி தங்களது ஜீவன்களை அர்ப்பணம் செய்திருக்கிறபடியால், அவர்களது மீறுதல்களைப் பொருத்த வரையில், அந்த பாவங்கள் நிரந்தரமாக சென்றுவிட்டன. இந்த நேரத்திலிருந்து கர்த்தருடைய ஜனங்கள் இனிமேல் பாவிகள் அல்ல, ஆனால் அவர்கள் நீதிக்காக தங்கள் ஜீவன்களை அர்ப்பணம் செய்திருக்கிற பரிசுத்தவான்கள்.

எனினும், புது சிருஷ்டி என்னும் இந்த பொக்கிஷத்தை மண்பாண்டத்தில், நமது அழிந்துபோகக் கூடிய சரீரத்தில் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி இனி பாவத்தை அப்பியாசப்படுத்த நினைக்கமாட்டார்கள். ஏனெனில் அவன் தெரிந்தே பாவம் செய்தால், அவன் கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மறுதளிப்பதாகும். ஆனால் இதை தாங்க முடியாமல் அவன் மீறுதலுக்கு உட்படுகிறான். ஏனெனில் அவன் நல்ல சிந்தையுள்ள இருதயத்தை மட்டும் பெற்றிருக்கிறான். ஆனால் அபூரண சரீரத்தின் மூலம் இயங்க வேண்டியவனாயிருக்கிறான். அப்போஸ்தலர் இந்த உண்மையை அறிந்திருந்தார். அப்போஸ்தலர் பவுல் தனது மாம்சத்தில் பரிபூரணம் வாசமாயிருக்கவில்லை என்று அறிவிக்கிறார். ஒருவன் தன்னிடத்தில் பாவம் இல்லை என்று சொல்வானானால் அவன் வஞ்சிக்கிறவனாயிருக்கிறான் என்றும் அவனுக்குள் சத்தியம் இராது என்றும் பரிசுத்த யோவான் கூறுகிறார். அதே அப்போஸ்தலர் அதே நிருபத்தில் பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என்று அறிவிக்கிறார். இந்த கடைசி வசனத்தில் பாவத்தை அப்பியாசப்படுத்துவதையும் தெரிந்தே செய்கிற பாவத்தையும் குறிப்பிடுகிறார், தவிர்க்க முடியாத மீறுதல்களை அல்ல. ஏனெனில் அனைவருமே தேவனுடைய கட்டளையை மீறுகிறதை அறியாமல் செய்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். பரிசுத்த யாக்கோபு, நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம் என்று கூறுகிறார். (யாக் 3:2) அர்ப்பணம் செய்துகொண்ட ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையினிடத்திலும், சித்தம் இருக்கிறது. ஆனால் அதை எப்படி நடப்பிப்பது என்பதில்தான் கஷ்டம் இருக்கிறது.

### மீறுதலினிமித்தம் நமது மனோபாவம்

கர்த்தருடைய பிள்ளைகள் வார்த்தை, கிரியை மற்றும் சிந்தையினால் ஒருவருக்கொருவர் தீமை செய்வது வேதவாக்கியகளின்படி பாவமான காரியமாகும். ஆனால் இந்த உயர்ந்த நிலையை அநேகர் தேவனுடைய வீட்டிற்குள் வந்த பிறகு கூட உணரவில்லை. அவர்கள் மாதக்கணக்காக அல்லது வருடக்கணக்காகக் கூட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திற்குமான தேவனுடைய கட்டளையின் முழு பரிமாணத்தை அறியாதிருப்பார்கள். ஆகையால் அநேகர் தீயதை பேசுவதிலும் தீயதை நினைப்பதிலும் குற்றமிழைக்கிறார்கள், ஆனால் தாங்கள் தவறு செய்கிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள். தெய்வீக பிரமாணத்தின் இந்த மீறுதல்கள்தான் குற்றமாகும். தேவனிடம் நமது மனோபாவம் இப்படியாக இருக்கவேண்டும். “கிருபையுள்ள பரம பிதாவே, பூரணமாக எங்களால் செய்ய முடியவில்லை. எங்களுக்கு விரோதமாக செய்கிறவர்களை நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் பாவங்களை மன்னிக்கும்படி உம்மிடத்தில் மன்றாடுகிறோம். இந்த மீறுதல்களை எங்கள் இரட்சகரின் புண்ணியத்தால் மூடும்படி கேட்கவும், முடிந்தவரை இதை ஜெயங்கொள்ளும்படி கிருபைக்காகவும் எண்ணத்திலும், வார்த்தையிலும், செய்கைகளிலும் பரிசுத்தமாகும்படியும் உமது பரலோக கிருபாசனத்தண்டையில் நாங்கள் தைரியமாக வருகிறோம்.”

ஆனால் யாராவது பாவம் செய்தால் அது வேறு விஷயம். தேவனுடைய கட்டளையை வேண்டுமென்றே மீறினால், அதற்கேற்றாற்போல் அடிகளை பெறவேண்டும். பாவங்கள் குணலட்சணத்தில் அதன் அடையாளத்தை விட்டுச் செல்கின்றன. ஏனெனில் அவைகள் தேவனுடனான உடன்படிக்கையையும் நீதியின் கொள்கையையும் ஓரளவுக்கு வேண்டுமென்றே செய்தவைகளாக இருக்கின்றன. இந்த உடன்படிக்கையின் மூலம்தான் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் தெய்வீக கட்டளைகளுக்கு தானே கீழ்ப்படிய வேண்டியவனாயிருக்கிறான். இவர்களில் ஒருவர் வேண்டுமென்றே பாவம் செய்தால், மரணம் பரியந்தமும் பாவம் செய்தால் இரண்டாம் மரணத்தைத் தவிர வேறு எதுவும் சரியான தண்டனையாக இருக்காது என்று வேதவாக்கியங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது.

### மீறுதல்கள் ஒரு தடையாக இருக்க அவசியமில்லை

“ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்,” என்கிற வேத வசனம் தெரியாமல் செய்த மீறுதல்களை (வேண்டுமென்றே செய்த பாவங்களை அல்ல) குறிப்பது தெளிவாகிறது, ஏனெனில் அதே அப்போஸ்தலர், நாம் முன்னரே குறிப்பிட்டது போல, “பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டானவன்;” “தேவனால் பிறந்த

எவனும் பாவம் செய்யான்" என்று எழுதுகிறார். ஜெனிப்பிக்கப்பட்ட, பரிசுத்த ஆவியை உடைய எவனும், அவன் பரிசுத்த ஆவியை உடையவனாயிருக்கும்வரை முழுமையாக வேண்டுமென்றே பாவம் செய்ய மாட்டான். மாம்சத்தின் பலமான தூண்டுதல் இருந்தால் தவிர அவனால் தெரிந்தே பாவம் செய்ய முடியாது. அவன் அப்படிப்பட்ட பாவத்தை செய்வானானால், அவன் பரிசுத்த ஆவியை முழுமையாக இழந்துவிட்டான் என்பதை வெளிப்படுத்து கிறவனாயிருப்பான். பரிசுத்த ஆவி அவனில் தரித்திருக்கும் வரை அவனால் தெரிந்தே, வேண்டுமென்றே பாவம் செய்யமுடியாது. அவன் மாம்ச பலவீனத்தில் மேற்கொள்ளப்படக்கூடும். இப்படியாக தவறிழைக்க ஓரளவுக்கு சம்மதிக்கிறான்; ஆனாலும் இது ஒரு பகுதியான பாவமாக மட்டுமே இருக்கும். எனினும் அவன் இணங்கினதினால் அந்த ஒரு பகுதிக்கு அவன் இணங்கின அளவுக்கு தண்டனையைப் பெறுவான்.

நமது அறியாமல் செய்த மீறுதல்கள், அதற்கான தண்டனையை அடைந்து, குணலட்சண அபிவிருத்தியில் குறுக்கீடு செய்யாமல் இருக்கும். சரியானபடி அபிவிருத்தி அடைகிற ஒரு சிருஷ்டி எல்லா வகையான பாவங்கள் மற்றும் பலவீனங்களுக்கெதிராக கஷ்டப்பட்டு போராடி ஒரு நல்ல பேராட்டத்தை நடத்துகிறான் என்று வேத வாக்கியங்கள் உணர்த்துகிறது. அவனது பங்கில் தவிர்க்கயிலாத மீறுதல்கள் அவனுக்கு காயத்தை உண்டாக்குவதற்கு பதிலாக அவனது பலவீனத்தை குறிப்பிட்டு காட்டி அதை பலப்படுத்துவதற்காக பயன்படுகிறது. தெரியாமலோ, அறியாமலோ மீறுதலுக்குள் விழும்போதுதான் தனது பலவீனத்தை அறிந்து கொள்கிறான். தனது குணலட்சண அபிவிருத்தியில் தனது பலவீனத்தை அறிந்து கொள்வதால், அந்த திசையில் தன்னை பலப்படுத்துவதற்கு சந்தோஷமடைகிறான். அவன் "கர்த்தரிலும், அவனுடைய சத்துவத்திலும் வல்லமையிலும் பலம்" பெறுகிறவனாகிறான். (எபேசியர் 6:10)

**பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்**

எல்லாவிதமான பாவமும் தெய்வ நிந்தனையும் மன்னிக்கப்படும். ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் மன்னிக்கப்படாது என்று நமக்கு அறிவித்தார். மனிதர்கள் தீர்மானம் செய்வதில் அபூரணமாக இருப்பதால், கர்த்தரைப் பொருத்தவரையில் இப்படிப்பட்ட எல்லாவித குற்றங்களையும் மீறுதல்களையும் மன்னிக்கும்படி விருப்பம் உள்ளவராக இருப்பார்; ஏனெனில் அவைகள் அறியாமல் செய்யப்பட்டவைகள். எனவே அவர்கள் செய்த சில பெரிய மீறுதல்கள் மற்றும் குற்றங்களுக்கும் தெய்வீக மன்னிப்பு இருக்கும். நமது கர்த்தரை சிலுவையில் அறைந்தது உண்மையிலேயே வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்களைக் குறித்து அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறதாவது: "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்." பரிசுத்த பவுல் இந்த கருத்தை கூறுகிறதாவது: "அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே."

இந்த செயல் தீயவர்களைப் பொருத்தவரையில், மீறுதல் என்று இந்த அறிக்கைகள் உணர்த்துகிறது. எந்த அளவுக்கு பொறுப்பும் அறிவும் இருந்ததோ அந்த அளவுக்கு தண்டனைகளை தனித்தனியாகவும் ஒரு தேசமாகவும் பெற்றார்கள். ஆகையால், ஜீவாதிபதியை சிலுவையில் அறைந்தவர்களுக்கு ஆசீர்வாதம் பெறக்கூடிய சந்தர்ப்பம் எதிர்காலத்தில் உண்டு என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. அவர்கள் விழித்தெழும்போது அவர்களது கண்கள் திறக்கப்படும். இதைக் குறித்து நாம் சந்தோஷப்படுகிறோம். முழுமையான அறிவுடனும் வேண்டுமென்றும் பாவத்தை செய்யாததால் அவர்கள் இரண்டாம் மரணத்திற்குரியவர்கள் அல்ல. அவர்களுக்கு எதிர்கால சோதனை (பரீட்சை) உண்டு. ஆனால் அவர்கள் வெறும் ஆதாமின் சந்ததியினராக வருவார்கள் என்று நாம் புரிந்து கொள்கிறோம். அவர்களுக்கு யூதரைப் போன்று விசேஷித்த கிருபை இருக்காது. உண்மையிலேயே அவர்களுக்கு அநேக அடிகள் தேவைப்படுகிறது. சிலர் குணமடையாமல் போவார்கள்.

பரிசுத்த ஆவிக்கு விரோதமாக செய்கிற பாவம் என்பது என்ன**?** பரிசுத்த ஆவி என்பது, சத்திய ஆவியாக, நீதியின் ஆவியாக இருக்கிறது என்று நாம் பதில் கூறுகிறோம். கர்த்தரின் ஆவியை, சத்திய ஆவியை அங்கீகரித்தவர்கள், அதற்கும் அதன் தூதர்களுக்கும் கொடுமை இழைத்தால், அது பரிசுத்த ஆவிக்கு விரோதமாக செய்த பாவம். ஒருவன் எந்த அளவுக்கு இதைச் செய்தாலும், அவன் வேண்டுமென்றே தெரிந்தே செய்கிற பாவியாக இருக்கிறான். அவனது செயல் முழு அறிவோடும், முழு வெளிச்சத்தோடும் செய்யப்பட்டிருந்தால், இந்த ஜீவியத்திலோ, வருங்கால ஜீவியத்திலோ அவனுக்கு பாவ மன்னிப்பு இருக்காது. முழு அறிவுக்கும், வெளிச்சத்திற்கும் எதிரான பாவத்தின் முடிவு இரண்டாம் மரணமாக இருக்கும். பரிசுத்த ஆவிக்கும் சத்தியத்திற்கும் விரோதமாக இந்த யுகத்திலோ, வரப்போகிற யுகத்திலோ தெரிந்தே செய்யப்பட்ட பாவத்திற்கு தண்டனை கொடுக்கப்பட வேண்டும். எனினும் அறிவும் பாவமும் முழுமையானதாக, நிறைவானதாக இல்லாதிருந்தால் தண்டனை இரண்டாம் மரணமாக இருக்காது.

------------------------

R 5751 [Page 250]

# எலியா திரும்ப வருதலும் வெற்றியும்

## Elijah’s Return and Victory

*1 ராஜாக்கள் 18:16–40*

*எலியாவின் அனுபவங்கள் நிழலானது– ஆகாப் ராஜாவும் யேசபேல் ராணியும் நிழலானவர்கள் – மூன்றரை வருட பஞ்சம், ஆயிரத்திருநூற்றி அறுபது வருட ஆவிக்குரிய பஞ்சத்தை முன்னறிவித்தது – எலியாவின் விசுவாசமுள்ள ஜெபம் இயற்கையான மழையை கொண்டு வந்தது – சபையின் விசுவாசமுள்ள ஜெபம் ஆவிக்குரிய மழையையும் ஒரு பெரும் சீர்த்திருத்தத்தையும் கொண்டு வந்தது.*

நமது பாடம் வேதத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் அது நமக்கு ஆர்வமுடையதாக இருக்கிறது. ஆனால் நாம் வேதமாணவனாயிருந்து, எலியா கர்த்தருடைய ஒரு தீர்க்கதரிசி மாத்திரமல்ல, அவர் சபையின் பூமிக்குரிய அனுபவங்களுக்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறார் என்பதை அறியும்போது நமது ஆர்வம் அதிகமாகிறது. வெளிப்படுத்தினாகமம் புத்தகம் (2:20–25;18:7) யேசபேல் ராணியை சுவிசேஷயுகத்தில் சத்தியத்துக்கு பெரும் கொடுமை செய்த ஒரு மத ஸ்தாபனத்தை சித்தரித்துக் காட்டுகிறது. ஆகாப் ராஜா உலக அரசாங்கங்களை அடையாளப்படுத்தினான். அவனது மனைவி உலக அரசாங்கத்தோடு திருமணம் செய்து கொண்ட ஒரு தப்பறையான கிறிஸ்தவ சபையை அடையாளப் படுத்தினாள். கிறிஸ்துவின் ராஜ்யம் என்று தங்களை கூறிக்கொண்ட உலக ராஜ்யங்களை ஆகாப் அடையாளப்படுத்தினதுபோல, யேசபேல், கிறிஸ்துவின் ராஜ்யம் என்று தங்களைக் கூறிக்கொண்ட ஒரு தப்பறையான மத ஸ்தாபனத்தை அடையாளப்படுத்தினாள். அவள் கிறிஸ்துவின் சபையாக கற்புள்ள கன்னியாக தனது பரிசுத்தத்தை காத்துக் கொள்வதற்கு பதிலாக, உலக முறைமைகளோடு இணைந்து கொண்டாள் அல்லது கலியாணம் செய்து கொண்டாள்.

இதற்கு மாறாக, உண்மையான கற்புள்ள கிறிஸ்துவின் சபையானது தனது பரலோக கர்த்தருக்கு தனது உண்மைத் தன்மையைக் காத்துக் கொண்டு, அவரது இரண்டாம் வருகைக்கு காத்திருக்க வேண்டியவளாக இருந்தாள். அதன்பிறகே அவருடனான அவளது திருமணம் நிறைவேற வேண்டியதாயிருந்தது.

பாகாலின் தீர்க்கதரிசிகள் யேசபேல் ராணி மற்றும் ஆகாப் ராஜாவின் ஆதரவிலும் பாதுகாப்பிலும் இருந்தது போல, மகா பெரிய மத ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளும் ஆசாரியர்களும், ஆகாபும் யேசபேலும் அடையாளப்படுத்துகிற மகா தப்பறையான ஸ்தாபனங்களின் உண்மையான ஊழியர்களாக இருக்கிறார்கள். அதேபோல எலியா தீர்க்கதரிசியும், ஆகாப், யேசபேலோடும் இஸ்ரயேலின் காரியங்களோடும் அவர் கொண்டிருந்த தொடர்பும் திரைக்கு இந்த பக்கம் மாம்சத்தில் இருக்கிற உண்மையான கிறிஸ்துவின் சபைக்கு நிழலாக இருக்கிறது. உண்மையிலேயே உண்மையான சபை ஒரு ஸ்திரீயினால் அடையாளப்படுத்திக் காட்டப்பட்டாலும், சபையின் தலையாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் சேர்த்து குறிப்பிடும் போது சில சமயங்களில் ஒரு மனிதனாகவும் அடையாளப்படுத்திக் காட்டப்படுகிறது.

எலியாவின் மூன்றரை வருட அனுபவங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் நாற்பத்திரண்டு மாதங்களாகவும், 1260 நாட்களாகவும், மூன்றரை வருடங்களாகவும், அடையாள பாஷையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (வெளி. 11:2,3; 12:6,14;13:5) வெளிப்படுத்தின விசேஷத்தில் கொடுக்கப்பட்டுள்ள காலம் அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளதால், மூன்றரை வருடத்தின் ஒவ்வொரு நாளும் ஒரு வருடத்தைக் குறிப்பதால் முழு காலமும் 1260 வருடங்களைக் குறிக்கிறது. சில வேதாகம அறிஞர்கள் இந்த காலப்பகுதியின் ஆரம்பம் கி.பி.539 என்றும் முடிவு கி.பி.1798 என்றும் கூறினார்கள். கி.பி.1798ல் நெப்போலியன் போனபார்ட், போப்பை ரோமாபுரியிலிருந்து பாரீசுக்கு கைதியாக கொண்டு சென்றார்.

இன்றைய பாடத்தில் சொல்லப்பட்டதைப் போல, எலியா வனாந்தரத்தில் ஒளிந்துகொண்டிருந்த காலத்தில் அங்கே மழை இல்லாதிருந்ததைப்போல, சபையின் அனுபவத்திலும் கி.பி.1798ல் முடிந்த ஆயிரத்தி இருநூற்றி அறுபது வருடங்கள் சத்தியமாகிய மழையில்லாமல் ஆவிக்குரிய பஞ்சம் இருந்தது.

இஸ்ரயேல் தேசத்தில் பஞ்ச காலம் முடிவடைவதற்கு கொஞ்சம் முன்னதாக ஒரு பெரிய போட்டி இருந்தது (இன்றைய பாடத்திற்கு இசைவாக அதில் கர்த்தரின் பக்கமே வெற்றி இருந்தது). அதேபோல சபையின் சரித்திரத்திலும் சீர்திருத்தம் என்று சொல்லப்பட்ட காலத்தில் கத்தோலிக்க சபைக்கும் புராட்டஸ்டண்ட் சபைக்கும் ஒரு பெரிய போட்டி நடந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் சபை ஒரு ஸ்தீரியாக சித்தரிக்கப்பட்டு, பொதுவான கண்ணோட்டத்திலிருந்து விலகி, வனாந்திரத்திற்கு துரத்தப்பட்டதாக காணப்படுகிறது. எலியா, ராஜா, ராணி மற்றும் பாகாலின் தீர்க்கதரிசிகளின் பார்வையிலிருந்து ஒளிந்திருந்ததற்கு ஸ்திரீ ஒத்திருந்தாள். ஸ்திரீ உலகத்தில் இருந்தாள், ஆனால் உலகத்தானாக அல்ல. எலியா வனாந்தரத்தில் காக்கைகளால் போஷிக்கப்பட்டது போல, உலகத்தில் ஆவிக்குரிய ஆகாரமாகிய சத்தியம் கிடைக்காத பஞ்சம் இருந்தபொழுது, ஸ்திரீயாகிய சபை பொதுவான பார்வையிலிருந்து விலகியிருந்து ஆயிரத்தி இருநூற்றி அறுபது வருடங்கள் ஆவிக்குரிய விதத்தில் போஷிக்கப்பட்டாள் என்று வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது.

எலியா வகுப்பார் வனாந்தர நிலைமையிலிருந்து வெளியே வந்து மிகவும் ஒரு தைரியமான வேலையை செய்தார்கள். அபரிமிதமாக ஆவிக்குரிய உணவு வந்தது. யேசபேல் ராணி தோற்கடிக்கப்பட்டு, அவளது தீர்க்கதரிசிகள் சத்தியம் என்னும் பட்டயத்தால் கொலை செய்யப்பட்டது, அவர்களது தப்பறைகளை மெய்ப்பித்து காட்டி, தேவனுடைய சத்தியத்தையும் அதன் ஊழியர்களையும் (எலியா, உண்மையான சபை) ஒரு மேலான நிலைமையில் கொஞ்ச காலம் வைத்தது போல் காணப்பட்டது. எனினும் இது நீடிக்கவில்லை. நமது அடுத்த பாடம் எலியா வகுப்பார் யேசபேலின் அதிகாரத்திற்கு பயந்து ஓடினதைக் காண்பிக்கும்.

தற்கால தேவனுடைய வசனத்தின் வேதாகம ஆராய்ச்சி, தெய்வீக ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை ஆகியவற்றைப்பற்றிய அழகான செய்தியை கூறுகிறது என்று அநேகர், ஆச்சரியத்தை வெளிப்படுத்துகிறார்கள். கடந்த காலத்தின் போதனையிலிருந்து முற்றிலும் மாறுப்பட்டது. “கடந்த காலத்தில் இருந்த வைராக்கியமுள்ள வேதமாணவர்களைக் காட்டிலும் தற்காலத்திலுள்ள வேத மாணவர்கள் எப்படி அதிகமான வெளிச்சத்தைப் பெற்றார்கள்?” என்று அவர்கள் கேட்கிறார்கள்.

ஆயிரத்து இருநூற்று அறுபது வருட பஞ்சம் என்பதே அதற்கு விளக்கம் என்று நாங்கள் பதில் கூறுகிறோம். ஏறக்குறைய கி.பி.300ல் கிறிஸ்தவ பிஷப்புகள், தாங்கள் அப்போஸ்தலரின் அதிகாரத்தை உடையவர்கள் என்று உரிமை கொண்டாடி தங்களை அப்போஸ்தல பிஷப்புகள் என்று கூறிக்கொள்ள ஆரம்பித்தனர். ரோம சபையின் பிஷப்புகள், இங்கிலாந்து சபையின் பிஷப்புகள் முதலானவர்களை பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு சமமான அதிகாரங்களை உடையவர்கள் என்று இன்னும் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் வேதாகமம் அதற்கு மாறாக போதிக்கிறது. இயேசுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் (பரிசுத்த பவுல் யூதாவின் இடத்தை எடுத்துக் கொண்டார்) மட்டும் கிறிஸ்தவ சபையின் அஸ்திபாரங்களாகவும், அவர்களது போதகம் கர்த்தராகிய இயேசுவின் போதகத்திற்கு இணையாகவும் இருப்பதாக போதிக்கிறது. அவர்கள் வாய் வழியாகவும் நிருபங்கள் மூலமும் சபைக்கு விசேஷித்த வாயாக இருக்கிறார்கள். சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று கூறிக்கொள்ளக்கூடிய விசுவாச துரோகத்தை இயேசு தீர்க்கதரிசனமாக உரைத்தார். வெளி. 2:2ஐ பார்க்கவும் 2 பேதுரு 2:1; அப்.20:30ஐ ஒப்பிட்டு பார்க்கவும்.

பிஷப்புகளின் இந்த உயர்த்துதல் படிப்படியாக வந்தது, கி.பி.325–இல் கான்ஸ்டன்டைன் ராஜா பித்தைனியாவில் (Bithynia) உள்ள நைஸ் (Nice) என்ற இடத்தில் கிறிஸ்தவ ஆலோசனை சங்கத்தை கட்டினபோது இதற்கு அதிக பலம் கொடுக்கப்பட்டது. ஆலோசனை சங்கம் ராஜாவின் வழி நடத்துதலில் தேவனுடைய பிள்ளைகளின் விசுவாசமாக நிசேயன் விசுவாச பிரமாணம் உண்டாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த விசுவாசப் பிரமாணம்தான் சரியான நிச்சயமான விசுவாசம் என்று ஜனங்களிடம் பதிய வைக்கப்பட்டது. அதே போல் பிஷப்புகளால் பிற்காலத்தில் இந்த விசுவாச பிரமாணத்தோடு இன்னும் சேர்க்கப்பட்டன. இந்த விசுவாச பிரமாணத்தின் அங்கீகாரம், இதை ஏற்படுத்தின பிஷப்புகளுக்கு இதற்கான தெய்வீக வெளிப்பாடும், அதிகாரமும், உரிமையும் இருந்ததாக குறிப்பாக உணர்த்தியது. ஜனங்கள் இந்த விசுவாச பிரமாணத்தை படிப்படியாக அங்கீகரித்ததால், பிஷப்புகள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்ற போதனையும் அங்கீகரிக்கப்பட்டது. இந்த போதனை இதனைத் தொடர்ந்து விசுவாச பிரமாணத்தின் ஒரு அம்சமாக ஆக்கப்பட்டது.

கி.பி.325ல் நிசேயன் விசுவாசப்பிரமாணம் பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து பன்னிரண்டு நூற்றாண்டுகளாக வேத ஆராய்ச்சி என்ற செயலே இல்லாமல் போய்விட்டது. இந்த காலக்கட்டத்தில் வேத ஆராய்ச்சியே தேவையற்றது என்று கருதப்பட்டது. ஏனெனில் சபையின் சரியான விசுவாசமாக அப்போஸ்தல பிஷப்புகள் விசுவாச பிரமாணத்தை முறைப்படுத்தி கொடுத்திருந்தார்கள். வேதாகம ஆராய்ச்சி என்பது ராஜாவுக்கு விரோதமாகவும் பிஷப்புகளின் போதனைகளுக்கும் கருத்துக்களுக்கும் விரோதமாகவும் எப்படி போரிடுவது என்று ஆராய்வதாக அர்த்தப்படுத்தப் பட்டிருந்தது. மேலும் வேதாகமங்கள் அப்பொழுது தோல் சுருள்களில் எழுதப்பட்டு வெகு சிலரே அதைப் பெற்றிருந்தார்கள்.மேலும் அதைப் படிப்பதற்கான கல்வியறிவும் மிகவும் குறைவாகவும் இருந்தது.

**வேதாகம ஆராய்ச்சியின் மறுமலர்ச்சி**

அப்போஸ்தல பிஷப்புகள் என்று அழைக்கப்பட்டவர்களின் முதல் கூற்றுக்குப் பிறகு ஆயிரத்து இருநூறு வருடங்களுக்குப் பிறகு கி.பி 1526இல் அச்சுக்கலை பொதுவானதாக ஆன பொழுது நமக்கு வேதாகமத்தை கொண்டு வந்தார்கள். அந்த வருடத்தில் பேராசிரியர் டைன்டேல் **(Prof. Tyndale)** என்பவர் அவரது பிரதியை தயாரித்து, ஆங்கில மத அதிகாரிகள் எதிர்த்ததால், அதை ஜெர்மனி நாட்டில் வெளியிட்டார். அவரது புதிய ஏற்பாட்டை லண்டனில் இறக்குமதி செய்து அதை ஜனங்களுக்கு விற்க ஆரம்பித்தார். சிலர் அதை வாங்கி படித்தார்கள். அநேகர் வகுப்புகளை ஏற்பாடு செய்து, தேவனுடைய வார்த்தைகளை கேட்பதற்கு, வாசிப்பவரை வாடகைக்கு அமர்த்தினார்கள். அதே சமயத்தில் ஜெர்மனியர்கள் புதிய ஏற்பாட்டையும் அதன் பல்வேறு போதகங்களையும் லூத்தர் மற்றும் அவரது சகாக்கள் மூலம் கற்றுக் கொண்டிருந்தார்கள்.

இங்கிலாந்து சபையின் பிஷப்புகள் புதிதாக வந்த புதிய ஏற்பாட்டை கேள்விப்பட்டனர். உடனே அவர்கள் கடையில் இருந்த அத்தனை பிரதிகளையும் விலைக்கு வாங்கி, லண்டனில் பரிசுத்த பவுலின் ஆலயத்துக்கு முன்னால் எல்லாரும் அறிய பகிரங்கமாக எரித்தனர். ஜனங்கள், இயேசு மற்றும் தெய்வீக ஊக்கம் பெற்ற அப்போஸ்தலர்களின் வார்த்தைகளின் அதிக ஆர்வம் உடையவர்களாக ஆகிவிடுவார்கள் என்றும், “அப்போஸ்தல பிஷப்புகள்”என்ற பட்டத்தை கொண்டிருந்த தாங்கள் முக்கியமில்லாதவர்களாக ஆகிவிடுவோம் என்றும் பயந்தார்கள். அந்த பன்னிரண்டு நூற்றாண்டுகளாக கூட்டப்பட்ட பதினெட்டு கிறிஸ்தவ சபை ஆலோசனை சங்கத்தில் உண்மையான கிறிஸ்தவ

விசுவாசமாக அறிவிக்கப்பட்ட அநேக காரியங்கள் வேதத்தில் போதிக்கப்படாதவைகள் என்பதையும், மற்றும் அநேக வேத போதனைகளை ஒதுக்கிவிட்டார்கள் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஜனங்கள் வேத மாணவர்களாக ஆகி, இவைகளை அறிந்து கொண்டு, வேதத்தில் சொல்லப்படாத விசுவாச பிரமாணத்தில் இருக்கிற அடிப்படையான விசுவாசங்களை கவிழ்த்துப் போட்டுவிடுவார்கள் என்றும் பயந்தார்கள்.

எனினும் அவர்களது பயம் கிட்டதட்ட ஆதாரமற்றது என்பதை நாம் காண்கிறோம். பன்னிரண்டு நூற்றாண்டுகளாக பதியவைக்கப்பட்டிருந்த விசுவாச பிரமாண போதனைகள் ஜனங்களின் மனதில் ஆழமாக பதிந்திருப்பதினால், வேதாகமத்தை படித்து, மாறானவைகளையோ குறைகளையோ கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ஆகியிருக்கின்றனர். எனினும் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு வேதாகம ஆராய்ச்சியில் ஒரு பெரும் விருப்பம் அந்த காலத்தில் வந்தது. அநேக மற்ற மொழிபெயர்ப்புகள் தொடர்ந்து வெளிவந்தன. இதுநாள்வரை பிஷப்புகளும் வேதாகமத்தை ஆதரித்து வந்தார்கள் என்று ஜனங்கள் நினைக்கும்படியாக, கடைசியாக வேதாகமத்தை ஜனங்களிடம் கொடுப்பது தகுதியானது என்று கருதினார்கள். இன்னும் அவர்கள், “அப்போஸ்தல பிஷப்புகள்” என்று அழைக்கப்படுகிறவர்கள் ஏற்படுத்தின விசுவாச பிரமாணங்களின் போதனைகளுக்கு எதிராக வேதாகமத்தின் மேல் எதையும் கட்டக்கூடாது, அப்படி கட்டினால் நரக ஆக்கினைக்கு செல்வார்கள் என்றும் பயமுறுத்தினர்.

வேதாகமத்தின் மேல் உள்ள ஆர்வம் இன்னும் தொடர்ந்தது. ஜேம்ஸ் என்கிற ராஜா தன்னை பிரபலப்படுத்திக் கொள்ள கிங்ஸ் ஜேம்ஸ் பிரதி (Kings James Version) என்று சொல்லப்படுகிற வேதாகமத்தை தயாரிக்க ஒரு குழுவை ஏற்படுத்த நினைத்தார். அது தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, ரோமன் கத்தோலிக்க சபையார் துவேய் வேதாகமத்தை (Douay Bible) வெளியிட்டார்கள். இது இன்னும் புழக்கத்தில் இருக்கிறது. இது ஜனங்களுக்கு வழங்கப்பட்டது. இது அவர்களது விசுவாச பிரமாணத்திற்கு இசைவாக இருப்பதாகவும் இதற்கு எதிராக யாராவது விமர்சனம் செய்தால், அவர்கள் மத விரோதிகள் என்றும், அவர்கள் உத்திரிக்கிற ஸ்தலத்தில் கூட நிறுத்தப்பட முடியாமல் நேராக, நித்திய வேதனையாகிய நரகத்திற்கு தான் செல்வார்கள் என்றும் பயமுறுத்தினர்.

வேதாகமத்தில் ஆர்வம் நிறைந்த டைன்டேல் மற்றும் சிலர் “அப்போஸ்தல பிஷப்புகள்,” அவர்களது விசுவாச பிரமாணம் மற்றும் ஸ்தாபனங்களால் பலியானார்கள். முன்னரே குறிப்பிடப்பட்டது போல இந்த போராட்டம் 1799 வரை தொடர்ந்தது. இந்த வருடத்திற்கு பிறகு பதினைந்து வருடங்களுக்குள் நமது வேதாகம சங்கங்கள் (Bible Societies) அனைத்தும் ஏற்பட்டு வேதாகமம் பிரபலமடைந்தது. முன்னுரைக்கப்பட்ட ஆவிக்குரிய பஞ்சம் முடிந்து ஒரு பெரிய ஆவிக்குரிய மழை உலகிற்கு வந்தது, எனினும் நமது அடுத்த பாடம், ஆகாபும் யேசபேலும் மாறவில்லை என்பதை காண்பிக்கும். எலியாவின் உயிர் மீண்டும் ஆபத்தில் இருந்தது, அவர் வனாந்தரத்திற்கு ஓடிப்போனார்.

----------------------

# எலியாவின் ஓட்டமும் காட்சியும்
# Elijah's Flight and Vision

1 ராஜாக்கள் 19:8-18

*மனம் வருந்தாத யேசபேல் - ஆகாப் அவளை ஆதரித்தான் - எலியாவின் உயிர் மிரட்டப்பட்டது - அவர் ஓடினார், மனம் தளர்ந்தார்- தேவன் அவருக்கு எதிர்கால காட்சியைக் காண்பித்தார்- பெருங்காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி அதன் பிறகு மெல்லிய சப்தம் - இவைகள் ஆவிக்குரிய எலியா வகுப்பாருக்கு எதை அடையாளப்படுத்துகின்றன.*

மூன்றரை ஆண்டு கால தெய்வீக தண்டனைக்குப் பிறகு, பாகாலின் பிரதிநிதிகளுக்கு விரோதமான ஒரு விசேஷித்த தெய்வீக வெளிப்பாடு தொடர்ந்தது, அதன் பிறகு உண்மையான தேவனும் உண்மையான மதமும் ஓரளவுக்கு சுபிட்சம் பெறும் என்று எலியா எதிர்பார்த்தார். யேசபேல் ராணி எப்பொழுதும் போல இரக்கமற்றவளாகவும், கொலைவெறியுடையவளாகவும் இருப்பதையும், அவள் தனது அதிகாரத்தால் ஆகாப் ராஜாவின் மேல் முழுமையாக ஆதிக்கம் செலுத்துவதை அறிந்து மிகவும் ஆச்சரியப்பட்டார். அவர் வருத்தத்துடன் துக்கப்பட்டு ஓடினார். நீண்ட ஒரு தூக்கத்திற்கு பிறகு, மனஉளைச்சலிலிருந்து அவரை விடுவித்து, ஒரு தூதன் மூலமாக அவருக்கு ஆறுதலாக ஒரு விசேஷித்த செய்தியையும் உணவையும் கொடுத்தார். அந்த போஜனத்தின் பலம் நாற்பது நாள் இரவு பகலும் நடந்து கர்த்தருடைய பர்வதமாகிய ஓரேப் மட்டும் செல்ல போதுமானதாக இருந்தது. அங்கே கர்த்தர் தாமே வெளிப்படுத்தின அநேக தொடர்ச்சியான அனுபவங்களை எலியா கடந்து சென்றார். அவைகளையெல்லாம் நேரடியாகவா அல்லது காட்சியின் மூலமாக வெளிப்படுத்தினாரா என்பதை நாம் அறியோம். முதலாவது கன்மலைகளை உடைக்கக்கூடிய பெருங்காற்று, ஆனாலும் கர்த்தர் அதிலே இருக்கவில்லை; பிறகு அழிக்கக்கூடிய பலத்துடன் பூமியதிர்ச்சி வந்தது; பூமியதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை, அதைத் தொடர்ந்து பட்சிக்கும் அக்கினி வந்தது. அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. கடைசியாக அமர்ந்த மெல்லிய சப்தம் உண்டாயிற்று. இதை லூத்தரின் மொழி பெயர்ப்பு "ஏதேனின் சத்தம்" என்று கூறுகிறது. அந்த மெல்லிய சத்தத்திலே கர்த்தர் இருந்தார். உண்மையிலேயே அது அவரை குறிப்பிட்டது. எலியாவுக்கு நிகழ்ந்த இந்த அனைத்து காரியங்களும் மாம்சத்தில் இருக்கிற கிறிஸ்துவின் சபையின் அனுபவங்களை முன்னறிவித்தது என்பதை வேதமாணவர்கள் உணரும் போது, இந்த விவரங்கள் அவர்களது ஆர்வத்தை பன்மடங்கு பெருக்கியது.

ஆகாப் ராஜாவால் அடையாளப்படுத்தப்பட்ட பூமிக்குரிய வல்லமையால் ஆதரிக்கப்பட்ட, பக்தி விருத்தி உள்ள சபையாக பெருமையடித்துக் கொள்கிற ஒரு ஸ்தாபனத்திற்கு யேசபேல் இன்றும் அடையாளமாக இருக்கிறாள். ஒரு நூற்றாண்டிற்கு முன்னதாக ஏற்பட்ட சமூக மற்றும் மத எழுச்சி பேர் சபை மற்றும் உலகத்தின் வெளியரங்கமான மனோநிலை, எலியா தீர்க்கதரிசியால் நிழலாக குறிப்பிடப்பட்ட மாம்சத்தில் இருந்த கிறிஸ்துவின் உண்மையான சபைக்கு எந்தவித பெரிய பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை இந்த சித்திரம் நமக்கு கூறுகிறது. சீர்திருத்தம் முழுமையானது அல்ல. பெரிய ஸ்தாபனங்கள் இன்னும் கடந்த கால தீவிரமான தப்பறைகளை போதித்து வந்தன. எலியா வகுப்பார் மீண்டும் பொதுவான பார்வையிலிருந்து விலகியிருந்தார்கள். ஆனாலும் அந்நியோந்நியத்திலும் ஐக்கியத்திலும் இருந்தார்கள். அவர்களுக்கு தேவையான இளைப்பாறுதல் மற்றும் ஆவிக்குரிய உணவு தேவனால் வழங்கப்பட்டது.

"தேவனுடைய பர்வதம்" என்று அழைக்கப்பட்ட ஓரேப் பர்வதம் இந்த சித்திரத்தில் சரியானபடி மேசியாவின் இராஜ்யத்தை குறித்தது. எலியா அங்கே வந்தது, சபையானது இன்னும் மாம்சத்தில் இருக்கும் போதே இராஜ்யத்தின் நிர்வாகத்தின் கீழ் இருப்பார்கள் என்பதை வர்ணிக்கிறது. எனினும் "நாமெல்லோரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் நாமெல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்," ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதுமில்லை" என்று பரிசுத்த பவுல் குறிப்பிட்ட மகா உயிர்த்தெழுதலின் மறுரூபத்தை அனுபவிக்கும்வரை ராஜ்யத்தின் கனம் மற்றும் ஆசீர்வாதங்களில் சபையின் கடைசி அங்கத்தினர்கள் முழுமையாக பங்குபெறமாட்டார்கள். (1 கொரி. 15:50-52)

### மெய்யான எலியா காண்பது என்ன

அநேக வேத மாணவர்கள் காலக்கணக்கின்படி மேசியாவின் ராஜ்யம் 1878ல் உலகில் அதன் கிரியைகளை ஆரம்பித்தது என்று புரிந்து கொள்கின்றனர். எனினும் எலியா வகுப்பாரின் கடைசி அங்கத்தினர்கள் இன்னும் மாம்சத்தில் இருக்கிறார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் எலியா வகுப்பின் முழு குழுவினரும் திரைக்குப் பின்னால் சென்று, ராஜ்யம் மகிமையிலும் வல்லமையிலும் அறிமுகப்படுத்தப்படும் என்று வேதத்தில் அறுதியிட்டு கூறப்படவில்லை.

இந்நிலையில் வேதமாணவர்கள் எதிர்காலத்தைப் பற்றிய விசேஷித்த காட்சியை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். சொல்லப்போனால் வேதாகம ஆராய்ச்சி மூலம், உலகம் உண்டானது முதல் இதுவரை உண்டாயிராததும் இனிமேல் உண்டாகாததுமான ஆபத்துக் காலத்திலே மேசியாவின் ராஜ்யம் ஆரம்பிக்கப்படும் என்பதை கற்றுக் கொண்டிருக்கிறார்கள். (தானியேல் 12:1;மத்தேயு 24:21) விரோதம் என்றும் காற்றாகிய, தற்கால யுத்தம் தெய்வீக வல்லமையால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; இந்த காலக்கட்டத்தில் தேவனுடைய பிள்ளைகள் வேதாகம ஆராய்ச்சியில் உதவிப்பண்ணப்படுகிறார்கள். இது தேவனுடைய பிள்ளைகளின் நெற்றிகளில் முத்திரைப் போடப்படுதல் (வெளி. 7:1-4) என்று சொல்லப்படுகிறது என்று அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று நீண்ட காலமாக பரிசுத்தவான்களால் ஜெபித்த தேவனுடைய ராஜ்யத்தின் ஆரம்பத்தை அறிவிக்கிற மகா தெய்வீக நிகழ்ச்சியில் நான்கு

பாகங்களை இவர்கள் காண்கிறார்கள். அவர்கள் பெருங்காற்று என்பது யுத்தம் என்பதையும், எலியாவின் காட்சியின் பூமியதிர்ச்சி, அதைத் தொடர்ந்து வருகிற புரட்சி என்பதையும் காண்கிறார்கள். இது யுத்தத்தை தொடர்ந்து வருகிறதாயும் ஒருவேளை ஒன்றன் மீது ஒன்று (overlap) இருப்பதாகவும் இருக்கும். புரட்சியைத் தொடர்ந்து, அக்கினியினால் அடையாளப்படுத்தப்பட்ட அராஜகம் தற்கால முறைமைகளை அழிப்பதற்காக பட்சிக்கிதற்காக எதிர்பார்க்கப்பட வேண்டியது என்பதை அவர்கள் காண்கிறார்கள். இதை பரிசுத்த பேதுரு, ராஜ்யத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சமுதாயமாகிய புதிய பூமிக்கும், மேசியாவின் ராஜ்யமாகிய புதிய வானத்திற்கும் வழிவிடும் படியாக, மதமண்டலமாகிய வானத்தையும், சமுதாயம், பொருளதாரம் மற்றும் அரசியல் ஆகிய பூமியையும் அழிக்கும் என்று அடையாள மொழியில் கூறுகிறார். (2 பேதுரு 3:10–13)

பூமிக்கு வரவிருக்கிற இந்த அனுபவங்களில் தேவன் வெளிப்படமாட்டார். "அனைத்து ஜாதிகளாலும் விரும்பப்பட்ட" செய்தியாகிய ஏதேனின் சத்தத்திற்காக (அமர்ந்த மெல்லிய சத்தம்) மனிதனை தயார்படுத்தி, தகுதிப்படுத்த வரக்கூடிய பயங்கரமான, முன்னேற்பாடானவைகளாக அவை இருக்கும். இதே ஏதேனின் சத்தத்தை செப்பனியா தீர்க்கதரிசியின் மூலம் தேவன் கூறுகிறார். முதலாவது தேவனுடைய எரிச்சலின் அக்கினியினால் தற்கால முறைமைகள் எல்லாம் அழியும்; அதன் பிறகு அக்கினியைத் தொடர்ந்து, தேவன், "ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு, ஒருமனப்பாட்டு, அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு அவர்களது பாஷையை சுத்தமான பாஷையாக மாற்றுவார்." (செப்பனியா 3:8,9)

### காட்சியின் நிறைவேறுதல் ஆரம்பமாயிற்று

எலியாவுக்கு விவரிக்கப்பட்ட தேவனுடைய திட்டத்தின் இந்த நான்கு பெரிய அம்சங்கள் நிறைவேற ஆரம்பித்துவிட்டது என்பதை வேத மாணவர்கள் புரிந்து கொள்கிறார்கள். அதாவது தற்கால ஐரோப்பிய யுத்தம் (இந்த கட்டுரை 1915ல் எழுதப்பட்டது) அவிழ்த்துவிடப்பட்ட "வானத்தின் நான்கு காற்றுகள்" என்பதை புரிந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட யுத்தம் இதற்கு முன் இருந்ததில்லை என்பதை சொல்லத் தேவையில்லை. இராணுவத்தில் முன்னரே கொல்லப்பட்டவர்கள், காயம் அடைந்தவர்கள் அல்லது சிறைப்பட்டவர்கள் ஒரு கோடியே இருபது இலட்சம் பேர் என்று அதிகார பூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. கடந்த நாற்பது வருடங்களாக இந்த யுத்தத்திற்காக உலகமானது தயாராகிக் கொண்டு, இன்னும் சீக்கிரம் ஏன் இது வரவில்லை என்று வியந்து கொண்டிருக்கிறது. செய்தித்தாள்கள் அது இலையுதிர்காலத்திற்கு முன்னரோ அல்லது வசந்த காலத்திற்கு முன்னரோ நிச்சயம் வரும் என்று அறிவித்துக் கொண்டிருந்தன. இது ஏன் நிறுத்தப்பட்டிருந்தது என்பதை நாம் இப்பொழுது காண்கிறோம். அதாவது "தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றியில் முத்திரைப் போட்டு தீருமளவும்" காற்றுகளை விட வேண்டாம் என்று தூதர்களுக்கு தேவன் கட்டளையிட்டிருந்தார்.

இந்த அறிவுப்பூர்வமான தேவனுடைய திட்டத்தின் மதிப்பைப் குறித்து இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு நமது கர்த்தர் தெளிவாக முன்னறிவித்திருப்பதாவது: "இவைகள் சம்பவிக்க தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள்." (லூக். 21:28) தற்கால யுத்தத்தில் இந்த சம்பவங்கள் தொடங்க ஆரம்பித்துவிட்டதாக வேத மாணவர்கள் காண்கிறார்கள். சமீபத்தில் எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எலியா அக்கினி ரதத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு இந்த காரியங்களைப் பார்த்தது, சபையானது, "ஒரு இமைப் பொழுதில் மறுரூபமாக்கப் படுவதற்கு" முன்பே இந்த அனுபவங்களை கடந்து செல்லும் என்று அர்த்தப்படுத்தும் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால் இவைகள் எல்லாம் தேவனுடைய பர்வதத்திலே காண்பிக்கப்பட்டது, தேவனுடைய ராஜ்யம் தொடங்கப்பட்டதை குறிப்பதாக இருந்தது என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதன் பிறகு அவர் எடுத்துக் கொள்வதற்கு முன்பு இன்னும் சில அனுபவங்களைப் பெற்றார்.

இப்படிப்பட்ட ஒரு பெரிய யுத்தத்தை தேவன் ஏன் அனுமதிக்க வேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். இந்த யுத்தமும் நமது இனத்தின் மற்ற எல்லா மரண அனுபவங்களும் நிறைவான பாவத்திற்கான ஒரு பெரிய தெய்வீக பாடத்தின் பகுதிகளாக இருக்கின்றன. பரலோகத்தில் யுத்தம் இல்லை, வியாதி இல்லை. மரணமில்லை, துக்கமில்லை, வலியில்லை, புத்தி சுவாதீனமற்றவர்களின் விடுதி இல்லை, மருத்துவமனை இல்லை, மருத்துவர்கள் இல்லை, ஏனெனில் அங்கே பாவம் இல்லை. வேதாகமம் கூறுகிறது போல, ஆறாயிரம் வருடங்களுக்கு முன்னதாக உலகத்தில் பாவம் நுழைந்ததால் இந்த எல்லா பயங்கர நிலைமைகளையும் நாம் பெற்றிருக்கிறோம். ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணமாயிருக்கிறது. நாம் ஒரு காலத்தில் போதிக்கப்பட்டது போல நித்திய ஆக்கினையல்ல. "பாவத்தின் சம்பளம் மரணம்." "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்." (ரோமர் 6:23; எசேக்கியேல் 18:4) மரித்தோரின் உயிர்த்தெழுதலே உலகத்தின் நம்பிக்கையாகும். இது இயேசு பாவத்திற்காக மரித்தபொழுது அவரது மகா பலியின் மீது கட்டப்பட்டிருக்கிறது.

### ஆவிக்குரிய எலியா உற்சாகப்படுத்தப்படுதல்

இயேசுவைப் போல் பரிசுத்த பவுல் நமது நாளைக் குறித்துக் கூறுகிறார். அவர் அதை அடையாளமான பாஷையில் அக்கினியின் நாள் என்று விவரிக்கிறதோடே அல்லாமல் உண்மையான கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ளத்தக்கதாக திறக்கப்பட்ட கண்களையும் தருவார் என்பதையும் உறுதிப்படுத்துகிறார். "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும்." தங்களது விசுவாசத்தையும் குணலட்சணத்தையும், பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல் ஆகியவைகளினால் கட்டினவர்கள் அனைவரும் இந்த காலத்தின் உக்கிரமான பரீட்சையை பாதுகாப்பாக கடந்து செல்வார்கள். "தேவனுடைய பலத்தினாலே காக்கப் படுவார்கள்." தங்களது விசுவாசத்தையும் நம்பிக்கையையும், மரம், புல், வைக்கோல் ஆகிய மனித பாரம்பரியம் என்கிற இவைகளில் கட்டுகிற மற்றவர்கள் நஷ்டமடைவார்கள், எனினும் அவர்கள் அக்கினியிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள். (1 கொரி. 3:11–15) அந்த நாள் உலகத்தின் மேல் ஒரு கண்ணியைப் போலவும் திருடனைப் போலவும் வரும். "சகோதரரே, திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்."

**--2525--**

ஆகையால் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளைப் போல வெளிச்சத்தில் நடப்போமாக. (1 தெச. 5:1–6)

எலியாவுக்கு தேவன் பெருங்காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி மற்றும் அமர்ந்த மெல்லிய சத்தம் ஆகியவற்றால் தம்மை வெளிப்படுத்தும் காட்சியைத் தரும் வரை எலியா அதைரியப்பட்டிருந்ததைப் போல, சபைக்கும் இருக்கும். அதைரியத்தை உணரக் கூடிய காலம் அங்கே மேசியாவின் ராஜ்யத்தை தொடங்குகிற தேவனுடைய திட்டத்தை தெளிவாக்க ஆரம்பிக்கும் வரை இருந்தது. இயேசு போதித்ததுபோல வேதமாணவர்கள் இந்த திட்டத்தைக் கண்டு, தங்களது தலைகளை உயர்த்தி தற்போது களிகூருகிறார்கள். ஏனெனில் மகா ஆபத்தின் நாளின் மூலமாகவே அவர்களது இரட்சிப்பு ஆரம்பிக்கும் என்பதை அறிந்திருக்கிறார்கள். மகா ஆபத்தின் நாளின் ஆரம்பத்தை மட்டுமே அவர்கள் இப்போது பார்க்கிறார்கள்.

------------------------

**--2526--**

# யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும்

# Christian Duty and The War

யுத்தமானது வளர்ந்து கொண்டிருப்பதால் கசப்பும் கட்சி மனப்பான்மையும் பரவுகிறது. யுத்தம் செய்கிற ஒவ்வொரு நாட்டின் ஜனங்களும் தங்கள் பக்கம் தான் நீதி இருக்கிறது. எதிராளியின் பக்கமே தவறு இருக்கிறது என்று நம்ப வைக்கப்படுகிறார்கள். நீதியின் அறிவு மென்மேலும் குருடாவதாக காணப்படுகிறது. காரியங்களை நீதியாகக் கவனிக்கும் எந்த முயற்சியும், நம்பிக்கையின்மை, மூடத்தனம் முதலியவைகளினால் ஆட்சேபிக்கப்படுகிறது. இயற்கையான மனிதனின் உயர்ந்த காரணிகள் யுத்தத்தின் தாக்கத்தினால் ஸ்தம்பித்து போவதாக காணப்படுகிறது. ஜெர்மனியும் அதன் நேசநாடுகளும் கடந்த முப்பது வருடங்களாக உலக அமைதியை காத்து வந்தோம் என்று கூறிக் கொள்கிறார்கள். அந்த காலக்கட்டத்தில் அவர்களது வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்ட அண்டை நாட்டினர் அவர்களை அழிக்க முயற்சிப்பதற்கு தக்க சமயத்திற்காக காத்திருந்தனர் என்று கூறுகின்றனர். அவர்களது பொருளாதார வளர்ச்சியையும், தங்களது ஜனத்தொகைக்கேற்ப கடற்படையை ஏற்படுத்த முயன்றதையும் கண்ட அண்டை நாட்டினருக்கு பொறாமை எழும்பியது.

பெல்ஜியம் நடுநிலை வகிக்கவில்லை, ஆனால் எதிரிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்றும், ஜெர்மனி இராணுவம் பெல்ஜியம் வழியாக செல்வது இராணுவ அவசியமாக இருந்தது என்றும் கூறுகிறார்கள். அதேபோல அவர்களது நாட்டினரின் ஜீவனின் பாதுகாப்புக்காக, ஐரோப்பிய கூட்டுநாடுகளுக்கு எதிராக அவர்கள் விரும்பாத நீர் முழ்கி யுத்தமும் முற்றுகையும் மற்ற காரியங்களும் அவசியமாகிவிட்டது என்றும் கூறுகிறார்கள். இந்த அவசியத்தினால் சட்டத்தை பார்க்கவில்லை யென்றும், இந்த நேரத்தின் அத்தியாவசியம் என்றும் யுத்தத்தில் வெற்றி பெறுவதே நோக்கம் என்றும், முடிந்தவரை கனத்துடன் பெற முயற்சிக்கிறது என்றும் ஆனால் அடைந்தே தீரவேண்டும் என்றும் கூறுகிறது.

பிரிட்டனும் அதன் நேச நாடுகளும் இதற்கு மாறுபாடான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். நாற்பது வருடங்களாக ஜெர்மனியர்களின் முன்னேற்றத்தைக் கவனித்ததாகவும், அது அவர்களது உரிமைகளுக்கு அச்சுறுத்தலாகவும் இருந்ததாக அறிவிக்கிறார்கள். அதற்கேற்றாற்போல பிரான்சும் ஜெர்மனிக்கு இணையான ஒரு இராணுவத்தை கொண்டிருந்தது; ரஷ்யா இரண்டு மடங்கான இராணுவத்தை வைத்திருந்தது, மகா பிரிட்டன் உலகத்திலுள்ள எந்த நாட்டையும் விட பலமான கடற்படையை வைத்திருக்க முயற்சி செய்கிறது. இப்பொழுது ஜெர்மனி நசுக்கப்படவில்லை யென்றால், அது பொருளாதாரத்திலும், நிதியிலும் எல்லா நாடுகளுக்கும் மேலாக இருக்கும். அதாவது மற்ற அனைத்து நாடுகளும் குறைந்த பலம் வாய்ந்தவைகளாக இருக்கும். இதை பயங்கரமான ஒரு போர்க்கொள்கையாக பார்க்கிறார்கள். ஜெர்மனி எந்த விலைக் கொடுத்தாவது நசுக்கப்படவேண்டும், தற்காலத்திற்காக மட்டுமல்ல, எதிர்கால சந்ததிகளுக்காகவும் ஆகும்.

“அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லை என்பதே” என்று வேதாகமம் அறிவிக்கிறது. இந்த கண்டத்தில் (continent) துருக்கியைத் தவிர அனைத்து நாடுகளும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றன. அவைகளில் ஒன்று கூட தேவனிடத்தில் விசுவாசத்தை வெளிப்படுத்துவதில்லை. தற்கால மற்றும் எதிர்கால முழு பொறுப்பும் தங்கள் மேல் இருப்பதாக அவர்கள் அனைவரும் உணருகிறார்கள்.

### “மாயக்காரரை நடுக்கம் பிடிக்கிறது”

இந்த தேசங்களில் பெரும்பாலானவை பற்பலவிதமான தெய்வீக பக்தியுடன் ஆனால் அதனுடைய வல்லமையோ அல்லது விசுவாசமோ இல்லாமல், இந்த யுத்தம் மற்ற யுத்தங்களைப் போல அல்ல என்பதையும், தேவன் காற்றுகளை மேலும் பிடித்து வைக்காதபடிக்கு, அதை விட்டு விட்டார் என்று இப்பொழுதுதான் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதர்களின் கோபத்தை அனுமதித்து அதன் மூலம் பெருங்காற்றை கொண்டு வர ஏற்ற காலம் அவருக்கு வந்தவிட்டது. இதைத் தொடர்ந்து சீக்கிரத்தில் புரட்சிக்கும் அராஜகத்திற்கும் வழிநடத்தி இப்படியாக கர்த்தருக்கும் அவரது ராஜ்யத்திற்கும் தயார்படுத்தும்.

ஒரு நாளைக்கு நான்கு கோடி டாலர்களை இரண்டு கோடி இராணுவ வீரர்களை பராமரிக்கும்படி செலவும் செய்யும்படி இந்த யுத்தமானது செய்திருக்கிறது. எப்படிப்பட்ட வருந்தத்தக்க விஷயம்! ஒரு கோடியே இருபது இலட்சம் பேர் முன்னரே காயப்பட்டிருக்கிறார்கள். சிறைப்பட்டிருக்கிறார்கள் அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்கள். செலவழிக்கப்பட்ட ஆயுதங்களின் அளவு பேராச்சரியத்தால் மலைக்கச் செய்கிறது. பிரிட்டிஷ் இராணுவமானது முழு போயர் (Boer war) யுத்தத்தில் பயன்படுத்தின ஆயுதங்களைக் காட்டிலும் அதிகமானதை பெல்ஜியம் யுத்தத்தில் பயன்படுத்தியிருப்பதாக பிரிட்டிஷ் மந்திரி சமீபத்தில் அறிவித்தார்.

தேசிய கடன் முன்னரே அளவிட முடியாத தாயிருக்கிறது. யுத்தத்திற்கு முன்னிருந்த பிரிட்டிஷ் பத்திரத்தின் (bonds) மதிப்பில் 25% விலைக்கே தற்போது விற்கப்படுகிறது. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற தேசங்களின் கடன்கள் அவர்களது பத்திரங்களினால் (bonds) தீர்க்கப்படமுடியுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இதன் அர்த்தங்களையும் ஈடுபட்டிருக்கிற நிதி ஸ்தாபனங்களின் வீழ்ச்சியை இது ஏற்படுத்தும் என்பதை ஜனங்கள் உணரும் பொழுது அதன் வெளிப்பாடு மிகவும் பயங்கரமாக இருக்கும். அதைரியம் அடைந்திருக்கிற ஜனங்களின் இயல்பான பலன் வேதம் முன்னுரைக்கிறதுபோல, பூமியின் மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட அதிர்ச்சி உண்டானதில்லை – சமூக பூமியதிர்ச்சி, புரட்சி, அதன் அளவில் மிகவும் பயங்கரமாக இருக்கும் என்பதே. (வெளி. 16:18)

**--2527--**

### யுத்தத்தினால் ஏற்பட்ட ஒழுக்க சீர்கேடு

பல்வேறு சபைப் பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ ஊழியர்கள் நமது இரட்சிப்பின் அதிபதியையும் சமாதானம், அன்பு என்கிற அவரது நிலையையும் தீவிர வாதத்தோடு மென்மேலும் ஈடுபடுத்த போட்டிபோடுகிறார்கள். அரசாங்க பிரதிநிதிகளால் கேட்டுக் கொண்டபடி, சமாதான பிரபுவின் இந்த பிரதிநிதிகள் யுத்தத்தைப் போதித்து தங்களது அரசாங்கத்தோடு தங்களை பிரபலபடுத்திக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் குறைவாகவே மகா பிரிட்டனிடமிருந்து கேள்விப்படுகிறோம். ஆனால் லண்டனின் பிஷப்பின் ஆலோசனை இந்த காரியத்தில் போதுமானதாக இருக்கிறது. அவரது ஆலோசனையானது வாலிபர்களையும் பெண்களையும் சீக்கிரமாக திருமணம் செய்து கொண்டு பெரிய குடும்பங்களை ஏற்படுத்த வேண்டும் என்று தூண்டுதல் செய்வதாகும். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவை வீரர்களாகவும், ஆட்டுக்குட்டியானவரை பின்பற்றுகிறவர்களாகவும் அல்ல, பிரிட்டிஷ் கொடியை குறிக்கிற பரி. ஜார்ஜின் சிலுவை வீரர்களாக இருக்கும்படியாக இந்த ஆலோசனை இருக்கிறது.

சமீபத்தில் கனடாவின் பத்திரிக்கை ஆசிரியர் இங்கிலாந்து சபையை சேர்ந்த போதகர்களின் செயல்களினால் பிரமிக்கச் செய்யப்பட்டார். அதில் ஒன்று, ஒருவர் காக்கி சீருடையில் தொண்டர்களுடன் வீதிகளில் அணிவகுத்து சென்றதாகும். ஒரு கல்லூரி நண்பர் அவரைக் கேட்டதாவது: "உன்னை அந்த அணிவகுப்பில் பார்த்தேன் அல்லவா? அவர் அளித்த பதிலாவது: "ஆம், நான் பையன்களை உற்சாகப்படுத்த விரும்பினேன்." "நீயும் போர் முனையில் முன்னணியில் செல்ல நினைக்கிறாயா?" "இல்லை, இல்லை," மற்றவர்களை வசப்படுத்தி போர்முனைக்கு செல்ல தூண்டவே இப்படிச் செய்தார். இது எப்படி இருக்கிறது என்றால், சிகாகோவில் உள்ள மிருகங்களின் இருப்பு வைத்துள்ள இடத்தில் உள்ள ஒரு காளை கொல்லப்படவிருக்கிற மற்ற மிருகங்களைப் பார்த்து, தன் தலையை ஆட்டி, மற்றவைகளுக்கு தான் தலைவனாக ஆகி முன்னே செல்வதைக் காண்பிப்பதைப் போல் இருக்கிறது. அங்கே அது தனது ஒதுக்கிடத்தையும் அதிலே ஊர்ந்து செல்வதையும், உறைவிடத்தையும் அறிந்திருக்கிறது. ஆனால் மற்றவைகள் கொல்லப்படுவதற்கு ஒன்றையொன்று ஓட்டவும் நெருக்கவும் செய்கிறது. ஆனால் ஊழியக்காரர் பிரசங்க மேடையில் நின்று கொண்டு தாய்மார்களிடம், "ஏன் உங்கள் பையன்களை போர் முனைக்கு அனுப்பவில்லை" என்று கேட்கக் கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார்.

### இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் முகவர்களாக ஊழியக்காரர்கள்

இதற்கு மத முக்கியத்துவம் கொடுப்பதற்கு, இந்த ஊழியர்களில் சிலர் முற்றிலும் சம்பந்தமேயில்லாத வேத வசனங்களை கையாள்கிறார்கள். போரில் உயிரிழந்த கனடா நாட்டினரின் ஒரு துணிச்சலைப்பற்றி போதிக்கும்போது, பயன்படுத்தப்பட்ட ஒரு வேத வாக்கியம், "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்" (வெளி. 14:13) என்பதாகும். இராணுவத்தில் சேருவதற்கு உற்சாகப் படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட மற்றொரு வசனம், "ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே" என்பதாகும். (வெளி. 14:4)

எப்படிப்பட்ட ஒரு பயங்கரமான வக்கிர புத்தி! அதுவும் எந்த ஒரு நோக்கத்திற்காக! மனுக்குலத்தின் விருப்பத்தை தூண்டிவிட, ஜனங்களை வஞ்சிக்க, கிறிஸ்து செய்யவேண்டாம் என்று போதித்திருந்தவைகளை செய்வதற்காக ஆகும். இப்படிப்பட்ட ஊழியர்கள், உலக ராஜா, மற்றும் அவனது அரசாங்கத்தின் மந்திரிகள், பிரதிநிதிகள் ஆதரவையும், செல்வாக்கையும் பெறக்கூடும். ஆனால் தற்கால யுத்தம் வழிநடத்துகிற அர்மகெதோன் மகா யுத்தத்துடன் துவக்கியிருக்கிற இராஜ்யத்தின் ராஜாவுடன் எப்படி அவர்கள் நிற்பார்கள்? தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அவர்கள் அறிந்தால், அவர்களது பொறுப்பைப் பற்றி நினைக்க நாங்கள் பயப்படுகிறோம்.

அவர்கள் உண்மையான நிலைமையை அறியாதிருப்பது நடக்கக்கூடியதாக இருக்கிறது. தொண்ணூற்றைந்து சதவிகிதத்தினர், அநேகமாக அனைத்து பெரிய நகரங்களில் உள்ள அனைத்து படித்த ஊழியர்கள் அனைவரும் வருடக்கணக்காக வேதாகமத்தின் மேல் அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதை ஒத்துக் கொண்டிருக்கின்றனர். சில வசனங்களை தேர்ந்தெடுப்பதற்காக வேதாகமத்தை ஒரு புத்தகமாக பயன்படுத்துவதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் பொது ஜனங்கள் அதன்மேல் ஒரு வகையான மூட நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். அவர்களது செய்திகளுக்கு சம்பந்தமில்லாத வேத வசனங்களை தெரிந்து கொள்வதை ஒரு பழக்கமாக அவர்கள் கொண்டிருக்கின்றனர். அதாவது அவர்கள் தங்களையும், அவர்களை நம்புகிற ஆடுகளையும் வஞ்சிக்கிற வழக்கத்திற்குள் சென்றிருக்கின்றனர்.

அதாவது அவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலும், தேவனுடைய வார்த்தைகளை எப்படி தவறாக அறிவிக்கிறோம் என்பதை உணராமலும் இருக்கின்றனர். கர்த்தருடைய தீர்ப்பு எல்லா காரியங்களிலும் நீதியானதாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். அதற்கு நாம் கீழ்ப்படிகிறோம்.

டொரான்டோ(Toronto) வின் ஊழியர்கள் தங்களது தேச பக்தியையும் யுத்தம் கர்த்தருடையது என்பதில் அவர்களது நம்பிக்கையையும் காண்பிக்க, ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் போது அனைத்து பரிசுத்த தூதர்களும் கைதட்டி ஆரவாரிக்கிறார்கள் என்றும் மரணத்தில் அவர்கள் பரலோகத்திற்கு செல்வார்கள் என்றும் கூறுகிறார்கள். ஒரு கேட்லிங் துப்பாக்கி (Gat ling Gun) வாங்க பணம் சேர்த்திருக்கிறார்கள் என்று நாங்கள் யூகிக்கிறோம். இதை கடல் கடந்து எடுத்துச் சென்று ஜெர்மானிய கிறிஸ்தவர்களை கொல்வதற்கு பயன்படுத்தப் போகிறார்கள். ஜெர்மானியர் கிறிஸ்தவ மதத்தில் நம்பிக்கை இல்லாதவர் களாகவும், தேவன் என்ற ஒருவர் இல்லை என்பதை நம்புவதாகவும் வெளிப்படையாக தெரிகிறது. பிரிட்டன் மற்றும் ஜெர்மனியில் உள்ள ஜனத்தொகையில் 95 சதவிகிதம் பேர் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் என்று வேதமாணவர்கள் கருதுகிறார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு எந்தவித ரூபகாரமும் இல்லை. எனவே டொரான்டோ கிறிஸ்தவர்கள் கேட்லிங் துப்பாக்கியை வாங்குவது உண்மையான கிறிஸ்தவர்களை கொல்வதற்கு அல்ல என்பது முற்றிலும் சரியாக இருக்கிறது. டொராண்டோ ஊழியர்கள் அனைவரும் வேத வசனத்தின்படி கிறிஸ்தவர்கள் என்பதில் வேதமாணவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

### கிறிஸ்தவர்களின் சரியான மனோபாவம்

இந்த சமயத்தில் உண்மையான கிறிஸ்தவர்கள் எங்கே நிற்கிறார்கள் மற்றும் அவர்களது கடமை என்ன?

--2528--

தற்கால யுத்தம் என்ன என்பதை உணர்ந்து கொள்ள மென்மேலும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களது பொறுப்பைக் குறித்து அவர்கள் உண்மையிலேயே விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் யுத்த ஆயுதங்கள் உற்பத்தியைக் குறித்த காரியங்களை விசாரித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நமது யோசனை அந்த வேலையில் ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டும் என்பதே. ஏனெனில் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உணவு, உறைவிடத்திற்கு பணம் மிகவும் அத்தியாவசியமாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமையை அத்தியாவசிய தேவையாக மட்டும் எடுத்துக் கொண்டு, வாழ்க்கைக்குரிய அத்தியாவசியத்தை அது வழங்குமானால், அது குறைவான தொகையாக இருந்தால் கூட அதை வழங்க வேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

இந்த விஷயம் அதிக தாக்கத்தை விளைவிக்கக்கூடியது என்பதை நாங்கள் அறியாதவர்கள் அல்ல, இப்படிப்பட்ட ஆலோசனையைக் கூறுவதால் அநேகர் எங்களை குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்று கூறலாம். சிலர் நாங்கள் இந்த காரியத்தை ஒரு எல்லைக்கே கொண்டு செல்கிறோம் என்று கூறலாம். இதே கொள்கையின்படி, ஒரு ரயில் அல்லது நீராவி படகு தொழிலாளி, இப்படிப்பட்ட யுத்த தளவாடங்களை ஏற்ற தவிர்க்கலாம். குமாஸ்தா, சுருக்கெழுத்தாளர் முதலானவர்களும் இதை கடைப்பிடிக்கலாம். நம்மால் கூடுமானவரை அழிவை உண்டாக்குகிற எதையும் தவிர்க்கலாம் என்று நாம் கூறுகிறோம். கட்டாயப்படுத்தப்பட்டால் சரியான காரணம் கிடைக்கும் வரை நமது நிலையை பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

வேதாகம பாடங்கள், தொகுதி 6இல் கிறிஸ்துவின் பின்னடியார்கள் (சீடர்கள்) யுத்தத்தில் பங்கு பெறுவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறோம். கர்த்தருடைய சீடர்கள் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் போர் முனைக்கு செல்லாமல், மருத்துவ உதவி பகுதியிலோ, உணவு வழங்கும் பகுதியிலோ வேலை செய்ய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நாம் யோசனை கூறியிருக்கிறோம். அதையும் மீறி போர் முனைக்கு அனுப்பப்பட்டால், "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற தெய்வீக கட்டளையை மீற வேண்டிய அவசியமில்லை.

நாங்கள் கூறின ஆலோசனை உயர்ந்த ஒன்று என்று நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம். இந்த மார்க்கம் விட்டுக் கொடுக்கப்படவேண்டியதில்லை என்று நாங்கள் நினைக்கிறோம். இராணுவத்தில் ஒரு அங்கமாகி இராணுவ சீருடையை அணிவது, அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் குறிக்கிறது என்பதை நாங்கள் சிந்திக்கிறோம். ஒரு அதிகாரியிடம் எதிர்ப்பை தெரிவிப்பது சாதாரண காரியமாக இருக்குமா– பொதுவான ஜனங்கள் இதை அறியாதிருப்பார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் கிறிஸ்தவன் தனது இடத்தைவிட்டு வெளியே செல்லமாட்டானல்லவா?

ஒருவர் பதிலளிக்கிறார்: "ஆனால் ஒருவன் சீருடையையும், இராணுவ ஊழியத்தையும் மறுத்தால் அவன் சுட்டுக் கொல்லப்படுவான்."

முறைப்படி சமர்ப்பித்தல், கடமையிலிருந்து ஒருவகையான விடுதலை கிடைக்கலாம். இல்லையென்றால் நிலைமை மோசமானால், சமாதான கர்த்தருக்கு விசுவாசமாயிருப்பதினாலும் அவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாததாலும் சுட்டுக் கொல்லப்படலாம். அது நமது பரலோக ராஜாவின் போதனைகளை விட்டுக் கொடுத்து, உலக ராஜாக்களுக்கு ஆதரவு அளித்து, அவர்களுக்கு கீழாக இருந்து சுட்டுக் கொல்லப்படுவதைக் காட்டிலும் மோசமானதாக இருக்குமா? இந்த இரண்டு மரணங்களில் முதலாவதானது தான் விரும்பத்தக்கது. பரலோக ராஜாவுக்கு உண்மையாக இருப்பதினால் மரிப்பது மேலானது. ஒருவன் போர் முனையில் மரிப்பதைக் காட்டிலும், கர்த்தரின் போதனை, போதனைகளின் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதினால் மரிப்பவன் இன்னும் அதிகமானவைகளை தனது மரணத்தால் நிறைவேற்றுகிறான். கர்த்தருடைய விசுவாசிகளில் சில நூறுபேர் ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றி யுத்த தேவனை வணங்க மறுதலிக்கிறதினால் தேவனுக்கும் நீதிக்கும், சமாதானத்திற்கும் எப்படிப்பட்ட மகா செல்வாக்கு இருக்கும் என்பதை நாம் சொல்ல இயலாது. அந்த உயர்ந்த மனிதர்களைப் போல அவர்கள் இவ்வாறு சொல்லலாம்: "தேவனுக்கு சித்தமிருந்தால், அவர் நம்மை விடுவிக்க வல்லராயிருக்கிறார். ஆனால் நம்மை விடுவிக்க அவருக்கு சித்தமில்லையென்றால், நமது மார்க்கத்தை மாற்றமாட்டோம். என்ன ஆனாலும், நாம் அவருக்கு ஊழியம் செய்து அவரது வழி நடத்துதலின்படி நாம் பின்பற்றுவோம்.

அந்த எபிரேயர்கள் கடந்த காலத்தில், தேவனிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தினால் அக்கினி சூளையில் போடப்பட்டார்கள், ஆனால் உயர்ந்த ஒரு உதாரணமாக பிற்பாடு விடுவிக்கப்பட்டார்கள். உண்மையிலேயே இலட்சக்கணக்கான இராணுவ வீரர்கள் பயங்கரமான தனிமையை சகித்துக் கொண்டு, தற்கால யுத்தத்தில் பூமிக்குரிய இராஜாக்களுக்கு உண்மையுள்ளவர்களாக ஆச்சரியமான உதாரணங்களாகவும், விளக்கங்களாகவும் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வீரர்கள் இப்படியாக தாங்களாகவே நன்றாக சொல்லிக் கொள்ளமாட்டார்களா? "பழைய ஏற்பாட்டு பாத்திரவான்கள் தேவனை கொஞ்சமாகவே அறிந்திருந்தார்கள், இருந்தும் அந்த அளவுக்கு தேவனுக்கு விசுவாசமாக இருந்தார்கள்; மேலும் இந்த பூமிக்குரிய வீரர்களும் இந்த அளவு உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, ஆவியின் ஜெநிப்பித்தலினாலே தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கிறவர்களும், கிறிஸ்துவின் பள்ளிக்குள் நுழைந்திருக்கிறவர்களும், நமது இரட்சிப்பின் அதிபதியினாலே வழிகாட்டி அழைத்துச் செல்லப்படுகிறவர்களும், அவரது மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தத்தை உடையவர்களுமாகிய, நாம் எப்படிப்பட்ட நடக்கையுடைவர்களாக இருக்க வேண்டும்! அவருக்காகவும் அவரது போதனைகளுக்காகவும் நாம் எப்படி நிற்க வேண்டும்? ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தரும், நமது இரட்சகரும் தலையுமானவருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதைக் காட்டிலும் மேலான வழியில் நம்முடைய ஜீவனைக் கொடுக்க இயலுமா?"

இந்த நடைமுறையை நாங்கள் வற்புறுத்தவில்லை, இதை ஒரு யோசனையாகக் கூறுகிறோம். பொறுப்பு முழுவதும் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் உடையதாக இருக்கிறது. இந்த

காரியத்தைக் குறித்து கர்த்தருடைய சிந்தையைக் குறித்து நம்மிடத்தில் கேட்கிற அநேக வேதமாணவர்களுக்கு நமது பொறுப்பை நிறைவேற்றுகிறோம். முன்பு அவர்களுக்கு நமது உயர்ந்த கருத்துக்களை கொடுத்தோம். ஆனால் இப்போது மிகவும் பழமை வாதியாக இருந்தோமோ என்று பயப்படுகிறோம். பழமை வாதத்தை நாம் எப்பொழுதும் பரிந்துரைப்போம். தொந்திரவுக்குள் போய்விடக்கூடாது என்பதற்காகவே ஆகும். ஏனெனில் தொந்திரவு என்பது கஷ்டங்களை குறிக்கிறது. துன்பத்தை தவிர்க்கவும், எல்லாரோடும் சமாதானமாக வாழவும் நாடும்போது, கடமை அழைத்தால் அல்லது ஆபத்து வந்தால் நாம் அங்கே இல்லாதிருக்கக் கூடாது என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

---------------------------------------

**--2530--**

**R5755**

## The Ultimate Design of the Law of God
## தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம்

*"கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே." 1 தீமோத்தேயு 1:5*

மேலே சொல்லப்பட்ட வசனத்தில் தெய்வீக சட்டத்தின் தொகுப்பாக "கற்பனை" என்ற ஒரே வார்த்தையில் நாம் பெற்றிருக்கிறோம். உண்மையாகவே பல்வேறு கற்பனைகள் "பத்து கற்பனைகள்" என்று பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளன. நமது கர்த்தர் இந்த கற்பனைகளை இரண்டு பாகமாக பிரித்து, தேவனுடைய முழு கட்டளைகளையும் இரத்தினச் சுருக்கமாக, இந்த இரு பாகத்தில் அறிவித்திருக்கிறார். ஒரு பிரமாணம் என்பது ஒரு சட்டரீதியான அதிகாரியால் நாம் கீழ்ப்படிவதற்காக கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையாகும். இஸ்ரயேலின் பிள்ளைகள் கட்டளையில் கொடுக்கப்பட்டுள்ள கற்பனைகளை அறிந்துணரவில்லை. அவர்களுக்கு எதை செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பவைகள் அடங்கிய அறிக்கையாக அது இருந்தது. வேறு எதுவும் இல்லை. காரியத்தின் முக்கிய நோக்கத்தை அவர்கள் அறியவில்லை. கிறிஸ்தவ சபை கூட தெய்வீக சட்டத்தின் விசாலமான கருத்தை அறியவில்லை.

கட்டளையை நாம் அபூரணமானதாக நினைக்கக்கூடாது. ஏனெனில் பரிபூரணமான தேவன் அபூரணமான கட்டளையை கொடுக்க இயலாது. பிரமாணத்தைப் பற்றி பேசும்போது அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறதாவது: "நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும், நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது." (ரோமர் 7:12) இஸ்ரயேலர்கள் பிரமாணங்களை கைக்கொள்ள முடியாததற்கு காரணம், பிரமாணம் அபூரணமாக இருந்ததினால் அல்ல, அப்போஸ்தலர் கூறுவதுபோல அவர்கள் பாவத்திற்கு கீழாக விற்கப்பட்டதினாலேயாகும். (வசனம் 14) பிரமாணமானது பரிபூரணத்தின் நிலைப்பாடாக இருக்கிறது என்று நாம் அங்கீகரிக்கிறோம். நமது கர்த்தர் வந்தபோது, "நியாயப்பிரமாணத்தை மகிமைப்படுத்தி மேன்மைப் படுத்தினார்." பிரமாணத்தை முழுமையாக அறிந்து கொள்ளும் பொழுது அது எவ்வளவு மேன்மையானது, பரந்த வாய்ப்புள்ளது என்று அவர் காண்பித்தார்.

மாம்சத்தின் பலவீனத்தினாலும், அபூரணத்தினாலும், விழுந்து போன இனத்திலுள்ள யாராலும், தேவனுடைய பரிபூரண பிரமாணத்துக்கு இசைவாக வாழ சாத்தியம் இல்லை. சபையின் காரியத்தில் இந்த சாத்தியம் இன்மை கிறிஸ்துவினால் நீக்கப்பட்டிருக்கிறது. "நியாயப்பிரமாணத்தின் நீதி நம்மில் நிறைவேறியிருக்கிறது." ஏனெனில் நமது குறைகளையும், அபூரணங்களையும், கிறிஸ்துவின் புண்ணியம் மூடும்படி தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். இது இந்த பிரமாணத்திற்கு முழு இசைவாக நம்மை வாழ சாத்தியமாக்குகிறது. ஏனெனில் எழுத்தின்படி முழுமையாக கைக்கொள்ள முடியாவிட்டாலும் நாம் ஆவியின்படி கைக்கொள்ள முடிகிறது. மற்ற நமது விருப்பமற்ற அபூரணங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் சரிசெய்யப்படுகிறது.

### தூய, சுயநலமற்ற அன்பு

"கற்பனையின் பொருள்" பற்றி அங்கே கூறுகிறார். அது சரியாக விளங்காதது போல் காணப்படுகிறது. அதன் கருத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போல் காணப்படுகிறது. பிரமாணத்தின் ஒட்டுமொத்த நோக்கம் அன்பை ஏற்படுத்துவதற்காகவே ஆகும். அன்பையே உருவாகக் கொண்டவரும் கற்பனையை ஏற்படுத்தினவருமாகிய தேவனிடம் நம்மை முழு இசைவுக்கு கொண்டு வரவுமே ஆகும். தேவனுடைய பிரமாணத்தை பெற்றுக் கொண்ட அனைவருக்கும் இதுதான் முடிவான பலனாக இருக்கும். பூரணராயிருப்பவர்கள், பூரணத்தில் தரித்திருக்க வேண்டும் என்றும், அபூரணராயிருக்கிறவர்கள் சரியான நிலையைக் காண வேண்டும் என்றும் ஏனெனில் யேகோவாவின் அனைத்து சிருஷ்டிகளும் ஒரு நீதியான நிலையில், ஒரு அன்பான நிலையில் இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். பலவந்தத்தினால் அல்ல, தேவன் பேரிலும் அவரது நீதியான கொள்கைகளின் பேரிலும் உள்ள அன்பினால் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும் விரும்புகிறார். நித்திய ஜீவன் அளிக்கப்படப்போகிறது. அவரது அறிவுள்ள சிருஷ்டிகள் அனைவரும் பரிபூரணமாகவும், அவர்களது சிருஷ்டிகளிடத்தில் முழு இசைவிலும் இருக்கவேண்டும் என்பது அவரது ஒட்டுமொத்த நோக்கமாக இருக்கிறது.

தேவனுடைய பிரமாணத்திற்கு தேவைப்படுகிற இந்த அன்பானது ஒரு குறிப்பிட்ட பண்புடையதாக இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். ஒரு குழந்தையிடம் ஒரு பெற்றோரின் அன்பையும், ஒரு மிருகத்திடம் ஒரு மனிதனின் அன்பையும் நாம் புரிந்து கொள்ள முடியும் – இறுதி எல்லைக்கு செல்லாதிருந்தால் முற்றிலும் சரியானது. இப்படிப்பட்ட அன்பில் ஏறக்குறைய சுயநலம் இருக்கிறது. ஒரு மனிதன் ஒரு நாயை நேசிக்கலாம், ஏனெனில் அது அவனுடைய நாய் அல்லது ஒரு குழந்தையை நேசிக்கலாம், ஏனெனில் அது அவனுடைய குழந்தை. ஆகையால் இந்த அன்பு சுயநலம் அம்சம் உடையதாக இருக்கிறது. பாரபட்ச மற்ற அன்பாக இருக்காது. உதார குணமுடையதாகவோ, ஒரு உயர்ந்த வகையான அன்பாகவோ இருக்காது. தேவனுடைய பிரமாணத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்கிற அன்பானது, "சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்பாக" இருக்கும். அன்பை மனதில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அது மொத்தத்தில் தூய அன்பல்ல, அது அன்பும் சுயநலமும் கலந்த ஒன்றாக இருக்கலாம். இது மிகவும் பொதுவாக விழுந்துபோன மனுக்குலத்தின் ஒரு நிலையாக இருக்கிறது. கிறிஸ்தவர்களாக நமது அன்பு ஆரம்பத்தில் கொஞ்சம் மட்டுமே மாசற்ற அன்பாக இருக்கிறது. ஆனால் படிப்படியாக பிரமாணத்தின் ஆவி நமது இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சுயநலத்தை களைந்து தூய்மைபடுத்த வேண்டும். தெய்வீக அன்பு என்பது அவரது பரிசுத்த பிரமாணத்திற்கான அன்பாக, அவரது சிருஷ்டிகளின் மேலுள்ள அன்பாக பொருள்படுகிறது. தேவனுடைய அன்பைப் போல சுயநலமற்ற அன்பாக இருக்கிறது. தேவன் சபைக்கு செய்கிற அனைத்தின் மூலமாகவும், உலகத்திற்கு செய்ய உத்தேசம் பண்ணியிருப்பதின் மூலமாகவும் அவர் எந்த நன்மையும் பெறுவதில்லை. அவற்றிடமிருந்து என்ன பெறலாம் என்று பார்க்காமல், பரிசுத்தமான இருதயத்துடன், நல்ல உதார குணத்துடன், அன்பான இருதயத்துடன் இதை அவர் செய்கிறார்.

ஒரு தூய இருதயம் என்பது அதன் நோக்கத்தில்

எந்தவித சுயநலமும் இல்லாதது ஆகும். அது எல்லாருக்கும் நன்மை செய்ய விரும்பும், யாருக்கும் தீமை செய்ய விரும்பாது, அது மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படவே விரும்பும்; அது தன் முழு பலத்துடன் பரிபூரணமாக அன்பு செலுத்தி ஊழியம் செய்யவே விரும்பும், இந்த நிலைமையிலுள்ள இருதயத்தை குறித்து நமது கர்த்தர் "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" என்று கூறுகிறார். அந்த இருதயமுள்ளவர்கள் வெறுமனே நல்ல ஒரு நோக்கத்தோடு கிறிஸ்தவ வாழ்க்கையை ஆரம்பிக்கிறவர்கள் அல்ல என்பது மிகவும் தெளிவாக இருக்கிறது. கிறிஸ்துவ வாழ்க்கையை ஆரம்பிக்கிற அனைவரும் நல்ல ஒரு நோக்கத்தோடு அப்படிச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் போதிக்கப்பட வேண்டும், கற்பிக்கப்பட வேண்டும். அவர்கள் இந்த இருதய பரிசுத்தத்தை பூரணப்படுத்த அபிவிருத்தி செய்ய வேண்டும். ஆகையால் கிறிஸ்தவனின் அனுபவங்கள் எல்லாம் தனது இருதயத்தை இந்த தூய, சுயநலமற்ற அன்பின் இந்த நிலைமைக்கு கொண்டு வருவதற்காகவே ஆகும். கிறிஸ்துவ மார்க்கத்தின் ஆரம்பத்தில் நமது இருதயம் பரிசுத்தமாக இருக்கிறது. அதாவது உண்மையும் கீழ்ப்படிதலும் உள்ளதாக இருக்கும். நாம் சொல்வதை, நாம் ஏற்றுக் கொண்டதை நாம் கூறுகிறோம். வெறும் நமது உதடுகளினாலும், இருதயத்தினாலும் நாம் தேவனிடம் நெருங்கவில்லை. ஆனால் ஒரு சுத்தமான இருதயத்தினால் நாம் நெருங்குகிறோம். நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்தமான இருதயத்தில் பிறக்கும் பரிசுத்தமான அன்பை சுயநல காரியங்களை அதிகமதிகமாக நீக்குவதின் மூலமும், கர்த்தரின் ஆவியை அதிகமதிகமாக அணிந்து கொள்வதின் மூலமும் அடைய முடியும், கிறிஸ்தவர்கள் ஆன பிறகு சில காரியங்களை நீக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் இந்த வார்த்தைகளை கிறிஸ்தவர்களிடம் சொல்லும் போது குறிப்பாக உணர்த்துகிறார். மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளாகிய "கோபங்கள், விரோதங்கள், பொறாமைகள், பகைகள், சண்டைகள்" ஆகியவைகளை களைந்துபோடுங்கள் என்று கூறுகிறார். இவைகள் எல்லாம் ஏறக்குறைய உங்களிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. சாந்தம், இச்சையடக்கம், பொறுமை, விசுவாசம், நீடிய பொறுமை, தயவு, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகிய இவை அனைத்தையும் அணிந்து கொள்ளுங்கள். இவைகளை நாம் செய்தால் அப்போஸ்தலர் குறிப்பிடுகிற மனநிலையில் நமது இருதயம் இருக்கும், "சுத்தமான இருதயத்திலிருந்து வரும் அன்பு" என்று தேவன் திட்டமிட்டிருக்கிற குறிக்கோளை நாம் அடைய முடியும்.

### நல்மனசாட்சியின் வரையறை

அப்போஸ்தலர் நல்மனசாட்சி என்று தொடர்ந்து கூறுகிறார். மனசாட்சி என்பது நன்மை மற்றும் தீமையை பற்றிய சிந்தனையை எச்சரிக்கிற ஒழுக்க பண்பாகும். சிலர் நன்மை, தீமையை உடனே பகுத்துணரக்கூடிய நல்ல ஒரு மனசாட்சியைப் பெற்றிருப்பார்கள். மற்றவர்கள் மிகவும் மந்தமான மனசாட்சியை பெற்றிருந்து, நன்மை, தீமையை பகுத்துணர கஷ்டப்படுவார்கள், அல்லது ஒழுக்க பண்பில் மிகவும் அலட்சியம் உடையவர்களாக இருப்பார்கள். தேவன் மனிதனை சிருஷ்டிக்கும் போது நன்மை, தீமையை சரியானபடி தீர்மானிக்க தகுதியுள்ளவனாக படைத்தார்.ஆனால் இந்த மனசாட்சியை பாவமானது சீரழித்து விட்டது. எனவே தனது மனசாட்சியை சரியானபடி பகுத்துணரத்தக்கதாக மனசாட்சிக்கு போதிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடைமையாகும். தேவன் நீதியின் கொள்கைகளை தமது வசனங்களில் கொடுத்திருக்கிறார். கிறிஸ்தவன், ஒழுங்கின்படி நன்மை எது, தீமை எது என்பதை காண்பதை, இந்த ஒழுங்குகளை பகுத்துணர்வதை தேவனுடைய பிரமாணத்தின் மூலமாக செய்ய முடியும்.

பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ எதிர்ப்பார்க்கிறாயோ அதே சூழ்நிலையில் அதையே நீ பிறருக்கு செய் என்று பொன்னான கட்டளை நமக்கு போதிக்கிறது. சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறதையே நாம் பிறருக்கு செய்து மனசாட்சியானது செய்ய வேண்டிய சரியான காரியம் என்ன என்பதை காணும்படி நாம் மனசாட்சிக்கு உதவ வேண்டும். நீதியின்படி தவறானதும், தேவனுடைய கட்டளையினால் விடுக்கப்பட்டதுமான அநேக காரியங்கள் உண்டு. இந்த விஷயத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஒரு நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருப்பது போல, இவைகள் மனசாட்சியினால் அதிக விரைவாக பகுத்துணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால் துல்லியமாக பகுத்துணர மனசாட்சிக்கு பயிற்சி தேவைப்படுகிற மற்ற காரியங்கள் இருக்கின்றன. நீதியின் கொள்கைகள் நமது குணலட்சணத்துடன் உறுதியாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதால், கடமையையும் அன்பையும் பகுத்துணர அதிக கஷ்டம் இருக்கிறது.

தேவனுடைய வசனத்தினால் முறையாக பயிற்சி பெறாத மனசாட்சி உடைய ஒருவர், முழுமையாக நேர்மையாக இருந்தாலும் தவறான மார்க்கத்தையே அனுசரிப்பார். ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தை வருடக் கணக்காக பின் பற்றியிருக்கலாம். அனைத்தும் நல்ல மனசாட்சியுடனும் நேர்மையாகவும், அப்படி தொடர்ந்து பண்ணியிருக்கலாம். ஆனால் அவர் கிறிஸ்தவனான பிறகு, அவர் அப்பியாசப்படுத்தி வந்த காரியங்கள் சரியானதும் ஞானமானதும் அல்ல என்பதைக் காணக் கூடும். அவர் இப்படி சொல்லுவார்:" இந்த விஷயத்தில் நான் ஒரு தவறான கருத்தை எடுத்திருக்கிறேன் என்பதை இப்போது நான் காண்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சரியான ஒரு வழியை நான் கண்டுகொள்ளக்கூடும். தேவனுக்கு நான் மிகவும் பிரியமாயிருக்கும் பொருட்டு நீதியின் கொள்கைகள் எனக்குள்ளே ஆழமாக பதியவைக்கப்பட வேண்டும் என்பதை நான் உணருகிறேன். கிறிஸ்தவ அன்பு நீதிக்கு மேலாக போகிறது, ஆனால் நீதியானது முதலில் வர வேண்டும்." சரியாக அபிவிருத்தியடைந்த ஒரு கிறிஸ்தவன் சரியானபடி கற்பிக்கப்பட்ட ஒரு மனசாட்சியை பெற்றிருக்கிறான்.

நமது தலைப்பு வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "நல்மனசாட்சி" சரியானபடி கற்பிக்கப்பட்ட மனசாட்சியாகும். இது எப்பொழுதுமே தன்னுடையவனை குற்றம் சாட்டக்கூடியதோ, அவர் எப்பொழுதுமே தவறு செய்பவர் என்று அவர் உணரும்படி செய்யக் கூடிய ஒன்றல்ல, சரியான சமநிலை பெற முடியாத, எப்பொழுதுமே குற்றம் சாட்டக் கூடிய நோயுற்ற மனசாட்சிகள் இருக்கின்றன. உண்மையிலேயே ஒரு சரியான மனசாட்சி சரியாக சமநிலைப்படுத்தப்பட்டதாகும். சரியானபடி சரி செய்யப்பட்ட அளவுகோல் சரியானபடி நிற்கும். அது நம்பத்தகுந்ததாக இருக்கிறது. ஆகையால் ஒருவர் நல்ல மனசாட்சியுடன் தேவனுடைய பிரமாணத்திலிருந்து ஒரு சிறிய மாறுபாட்டைக் கூட கண்டு கொள்ள முடியும்.

### விசுவாசத்தை பொறுத்தவரை நேர்மை அவசியம்

கடைசியாக அப்போஸ்தலர் பவுல் கூறுவது

“மாயமற்ற விசுவாசம்.” ஆகும், மாயமற்ற விசுவாசம் என்பது மற்றவர்களிடம் சரியானபடி அடையாளமாக இருக்கக் கூடிய ஒரு விசுவாசம் ஆகும். பாசாங்கு செய்வது தவறாக அறிவிக்கக் கூடியதாக இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுவதுபோல நமது விசுவாசம் தவறாக அறிவிக்கக் கூடியதாக இல்லாமல், மாயமற்றதாக இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளில் கிறிஸ்தவர்களாக நாம் ஒரு நிலைப்பாட்டை பெற்றிருக்கிறோம். நாம் பிரமாணத்திற்கு அப்பாலும் செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் இன்னும் ஒரு உயர்ந்த பிரமாணத்திற்கு கீழாக, தியாக அன்பின் பிரமாணத்திற்கு கீழாக இருக்கிறோம். நமது விசுவாசமானது இன்னும் காணக்கூடாதவைகளை பற்றிக் கொண்டிருக்கிறது. அவை மாம்சீக கண்ணால் நாம் இப்போது காணக்கூடியதற்கும் அப்பால் கர்த்தர் நமக்காக ஏற்பாடு பண்ணியிருக்கிற வைகளாகும். கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறவைகளை அவரது சித்தமாக நமது விசுவாசம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்; உண்மையுடனும் நேர்மையுடனும் அவைகளை பற்றிக் கொண்டிருக்க வேண்டும். நமது விசுவாசத்திற்கும் நமது வாழ்க்கையிலும் நாம் நேர்மையுடையவர்களாக இருக்க வேண்டும்.

நீதியைப்பற்றி ஒரு நல்ல கருத்துடையவர்களாகவும், அநேக வழிகளில் நேர்த்தியான ஜனங்களாகவும் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் விசுவாசத்தை பொறுத்தமட்டில் அவர்கள் மாயமுள்ளவர்களாக இருக்கக் கூடும். முடிவுதான் காரியத்தை நியாயப்படுத்துகிறது என்று அவர்கள் நினைக்கலாம். அவர்கள் தங்களது விசுவாசத்தைப் பற்றிய சில காரியங்களை வெளிப்படுத்தலாம். அது யாருக்காவது நன்மையாக இருக்கலாம் என்றும் நினைக்கலாம். எனினும் அது உண்மையாக இல்லாதிருக்கலாம். தங்கள் விசுவாசத்தில் மாயம் பண்ணுகிற அநேகர் உலகெங்கிலும் இருக்கிறார்கள். தாங்கள் போதிப்பதையும், தாங்கள் நம்புவதாக வெளிப்படுத்துவதையும் அவர்கள் நம்புவதில்லை.

அநேகர் நித்திய ஆக்கினையை போதித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிய உங்கள் விசுவாசம் என்ன என்று கேட்டால், அவர்கள் “இந்த போதனையை நாங்கள் நம்புவதில்லை, ஆனால் இதைப் போதிப்பது அவசியமாகக் காணப்படுகிறது” என்று கூறுவார்கள். மற்றவர்கள் தங்களை இன்னும் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு, அதிக கண்டனத்துக்குரிய பரிணாமக் கொள்கை, புதிய சிந்தனைகள் முதலானவைகளை போதித்துக் கொண்டு, வஞ்சித்துக் கொண்டு, வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்கள் ஒரு தவறான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் தங்களை சீக்கிரத்தில் சரி செய்து கொள்ளாவிட்டால். தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவர்களாக ஆகமாட்டார்கள். ஏனெனில் உயர்ந்த மகிமையான நிலைமைக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிற வர்களுக்குள் பிரமாணம், அன்பு ஆகியவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த அன்பானது எல்லாவற்றிற்கும் முதலாவதாக தேவனிடத்தில் உயர்ந்த பக்தியை, விசுவாசத்தை அதாவது தேவனுடைய வார்த்தையில் விசுவாசத்தை விரும்புகிறது. பிரமாணம் முடிவை, அதன் நோக்கத்தை அடைய முடியாதபோது, அதன் பொருளை, அதன் முடிவான நோக்கத்தை பெற்றிருப்பதில் என்ன பயன்? கிறிஸ்து பிரமாணத்தின் நோக்கத்தை அதன் முடிவை சந்தித்தார், அடைந்தார். உண்மையிலேயே நீதியின் பிரமாணம் அவரில் நிறைவேறியது. உண்மையான சபை ஆவியின்படி இதை இப்பொழுது அடைகிறது. சொல்லப்போனால் அவர்களது சிந்தை, இருதயம் ஆகியவை இந்த பிரமாணத்திற்கு இசைவாக இருக்கிறது. இந்த பரிபூரண அன்பின் பிரமாணத்திற்கு முழுவதும் இசைவாயிருக்கும்படி தங்களது வாழ்க்கையில்–வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகளில் – ஒவ்வொரு நாளும், அதிகமதிகமாக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

## புது சிருஷ்டியின் பிரமாணம்

தேவனுடைய மதிப்பீட்டில் அன்பே, முக்கியமான காரியமாக வேதவாக்கியங்கள் எல்லா இடத்திலும் குறிப்பிடுகிறது. நீதியும் சரி, மற்ற குணங்கள், மற்ற நற்குணங்கள் எல்லாம் புறக்கணிக்கப்படுகிறன்றன. கிறிஸ்தவ கிருபைகளின் பட்டியலில் இந்த குணமே மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறது. இந்த பட்டியலிலிருந்து அப்போஸ்தலர் பவுல் முதலாவதாக கொடுப்பது அன்பு தான். அதன் பிறகுதான் சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் வருகிறது. (கலாத்தியர் 5:22,23) அப்போஸ்தலர் பேதுரு, ஆவியின் கனிகளை ஒட்டுமொத்தமாகக் கூறுகிறார். அதை ஒரு கூட்டுகிற செயல்பாடாக அனைத்து கிருபைகளின் மொத்தத்திற்கு எடுத்துச் செல்வதாகக் காண்பிக்கிறார். அவர் அஸ்திவாரமாகிய விசுவாசத்தில் ஆரம்பிக்கிறார். பிறகு தொடர்ந்து சேர்க்கப்படுபவை தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, சகோதர அன்பு அதன் பிறகு பரந்த அன்பு, அனைத்து உலகத்தையும், நமது சத்துருக்களையும் உள்ளடக்கியது.

எனினும் அன்பானது உடனே அபிவிருத்தி செய்யக் கூடியது அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது வளர்கிறது. இன்று இந்த பரிசுத்த ஆவியில் கொஞ்சமும், அதனால் கொஞ்சம் அன்பையும் பெற்றிருப்பவர்கள், நாளைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக பெற்றிருப்பார்கள், ஒரு வருடத்தில் இன்னும் அதிகமாக பெற்றிருப்பார்கள். ஏனெனில் இது அபிவிருத்தி அடைகிற ஒன்றாக இருக்கிறது. தேவனே அன்பாக இருப்பதால், இது அநேகரிடத்தில் சுயநல அன்பாக மாறியிருக்கிறது. ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பு மனுக்குலத்திலே தேவ சாயலை பதிய வைக்கும் போது, ஆதாமுக்கு அன்பு செய்கிற குணத்தைதேவன் கொடுத்தார் என்பதை தெரிவிக்கிறது. மனிதன் விழுந்துபோன நிலைமையிலும் இந்த சுபாவ அன்பின் குறைவின் வெளிப்பாட்டை நாம் காண்கிறோம். ஆனால் இது அநேகரிடத்தில் சுய நல அன்பாக மாறியிருக்கிறது. இந்த சுபாவ அன்பை குறிப்பிட்ட அளவுக்கு பெற்றிருக்கிற சில உயர்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அதிகபட்ச தேவ சாயலில் இருக்கிறார்கள். சுய நலம் உடையவர்களைக் காட்டிலும், இவர்கள் இந்த திசையில் மிகவும் குறைவாக போராடியே ஜெயம் பெறுவார்கள். பாவத்தின் மூலக்கூறுகள் எல்லாம் ஏறக்குறைய இந்த சுயநலத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறதாக காணப்படுகிறது. இப்படியாக தனிப்பட்டவரின் சொந்த அக்கறைக்கு எதிராக போராட்டம் நடக்கிறது.

அன்பைப்பற்றி வேதமானது புது சிருஷ்டிகளாக நமக்கு கூறுவது என்ன வென்றால், நமது ஆவியின் ஜெநிப்பிக்கப் படுதலில் அன்பானது அதன் ஆரம்பத்தைப் பெற்றது. தேவ ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை பெற்றிருக்கிறவர்கள், பரிசுத்த பவுல் கூறுகிற தூய, சுய நலமற்ற, அன்பில் கொஞ்சம் பெற்றிருக்கிறார்கள். ஒருவர் புது

சிருஷ்டியாக வளர்வதற்கு ஏற்றபடி அவர் அன்பில் வளருகிறார். இப்படியாக அவரது திறமைக்குத்தக்கதாக, வளர்ச்சிக் கேற்றபடி படிப்படியாக அன்பில் நிறைவுபெறுகிறார். நமது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில், முன்னிருந்ததைப் போல நாம் அன்பின் வெறும் ஒரு ஆரம்பத்தைப் பெறுகிறோம். இது பரவி நமது முழு மண்டலத்தையும் நிரப்ப வேண்டும். இந்த தேவ அன்பு நம்மை நமது நண்பர்களிடத்தில் ஒவ்வொருவரிடமும் மிருகங்களிடமும் கூட இன்னும் அன்பு, தயவு மற்றும் கனிவுள்ளவர்களாக ஆக்கும்.

ஆனால் தேவனுடைய அன்பு நம்மிடத்தில் அபிவிருத்தி அடையும் பொழுது, இதே ஆவியைப் பெற்றிருக்கிற சகோதரரிடத்தில் விசேஷித்த ஒரு அக்கறையை பெறும் என்கிற உண்மையிடத்தில் நமது கவனத்தை வேதவாக்கியங்கள் இழுக்கின்றன. ஆகையால் தேவனுடைய ஆவி எங்கே இருக்கிறதோ. அது அதே ஆவியை உடையவர்களிடத்தில் அனுதாபத்துடன் பாய்கிறது. தேவனுடைய ஆவியை பெற்றிருக்கிறவர்கள் சகோதரர்களிடத்தில் அன்பு செலுத்துவது நிச்சயம், ஏனெனில் அவர் தேவ சிந்தையை அவர்களிடத்தில் காண்பார். அவர் அபிவிருத்தி அடையும் போது அந்த அன்பும விருத்தியடையகிறது. ஏனெனில் அவர் சகோதரர்களின் வளர்ச்சியைப் பார்க்கிறார்.

எனினும் கிறிஸ்துவுக்குள் அனைத்து சகோதரர்களும் அபூரண சரீரத்தை பெற்றிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் அன்பின் ஆவியினிடத்தில் அபூரண வார்த்தைகளை கொடுக்கக்கூடும். சகோதரர்கள் தங்களது பொதுவான நம்பிக்கைகள் மற்றும் உயரிய நோக்கத்தினால் நெருக்கமாகக் கொண்டு வரப்படுவதால், அவர்கள் உலகத்தால் சோதனைக்கு உட்படுவதைப்பார்க்கிலும் சகோதரர் மூலமாகவே ஒருவருக்கொருவர் சோதனைக்குட்படுவது அதிகமாக இருக்கும். அவர்கள் சில சமயங்களில் தூண்டப்பட்டு ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ, "நீங்கள் அன்பின் ஆவியை அதிகமாகக் காண்பிப்பதில்லை!" என்று கூறுகிறார்கள். இப்படியாக குறைகூறுகிற ஆவி எழும்பி, அன்பானது சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. நாம் அன்பில் வளருகிற விகிதாச்சாரப்படி, அன்பின் ஆவி நம்முடையதாகும். சகோதரர்களின் குறைகளை நாம் கனிவுடன் பார்ப்போம். நமது அனுதின அனுபவங்கள் நமது சொந்த குறைவுகளை அதிகமதிகமாக போதிக்க வேண்டும். நமது குற்றங்களை கண்டுபிடிப்பதிலும் அதனோடு போராடுவதிலும் நம்மை தாழ்த்த வேண்டும். தனது சொந்த குறைகளை உணருகிறவர், பரலோக பாதையில் சக யாத்திரீகரிடம் இரக்க உணர்வை காண்பிக்க வேண்டும். ஏனெனில் அவர்களும் இதே மாதிரியான போராட்டத்தில் இருக்கிறார்கள். இந்த விதமாக நாம் செய்யவில்லை என்றால் நமது தேவனுக்கு பிரியமாக இருக்க மாட்டோம்.

சகோதரர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றிருந்து அன்பை விருத்திப் பண்ண நாடுகிறவர்கள், எனினும் அவர்கள் தங்களது சொந்த இலட்சியத்திலும், அவர்களுக்கான நமது இலட்சியத்திலும் குறைவுபடலாம் என்கிற உண்மை நம்மை அவர்களை நேசிக்கும்படி கோருகிறது. அவர்களுக்கான நமது இரக்கம் பரந்து ஆழமாக வேண்டும். அவர்கள் குற்றத்தினால் மேற்கொள்ளப்பட்டதை நாம் பார்க்கும்பொழுது, நாமும் இவ்விதமாக சோதிக்கப்பட்டதை நினைவில் கொண்டு வந்து அவர்கள் அன்பினால் சீர்பொருத்துவதற்கு நாம் நாட வேண்டும். நாம் வெளிப்படுத்த வேண்டிய அன்பின் ஆழத்தைக் குறித்து வேதவாக்கியங்களில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து நம்மை நேசித்தது போல நாமும் சகோதரர்களை நேசிக்க வேண்டும். இது மிகவும் பரந்து இருக்கிறது. கிறிஸ்து நமக்காக ஜீவனை கொடுக்க விரும்புகிற அளவிற்கு நம்மை நேசித்தார். கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதரர்களுக்கு உதவியாய் இருக்க விரும்பி, அவர்களிடம் முழு அன்பு மற்றும் இரக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் அவர்களுக்காக செய்வது எல்லாமே கர்த்தருக்கான நமது அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது.

சகோதரர்களுக்கான அன்பும் அவர்களுக்காக நமது ஜீவனை கொடுப்பதும் அவர்களை பாதுகாத்தல் ஆகியவை அனைத்தும் நமது கர்த்தருக்காக செய்யப்பட்டவை என்று நமது கர்த்தர் அறிவித்திருக்கிறார். இப்படியாக அதை மதிக்கிறார். அது தேவைப்படுகிற காலம் வந்தால், அவர்களுக்காக நமது ஜீவனை கொடுக்க தயாராக இருக்க வேண்டும். ஆனால் இன்னும் குறிப்பாக அவர்களது சேவைக்காக இவைகளை அங்குலம் அங்குலமாக கொடுக்க வேண்டும். அது நடைபாதையிலுள்ள பனியை நீக்குவதாக இருக்கலாம். அல்லது அவர்கள் வியாதிப்பட்டிருக்கும் போது அவர்களை கவனித்தல் அல்லது சிற்றுண்டியையோ அல்லது உணவையோ சமைத்தல், அல்லது நல்லவிதமாக அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு அனுப்புகிற கடிதங்களாகவோ இருக்கலாம். எந்த விதமான சேவை என்பது முக்கியமல்ல. இந்த மாதிரி வழிகளிலும் இன்னும் மற்ற வழிகளிலும் கார்த்தருடையவர்களுக்கு செய்யப்படுகிற ஊழியங்களாகும்– அவர்களுக்காக நமது ஜீவனை கொடுத்தல் ஆகும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற நமது நேரத்தையும் பலத்தையும் பயன்படுத்துகிற இப்படிப்பட்ட சலுகைகள் மற்றும் சந்தர்ப்பங்களில் நாம் களிகூறுகிறோம். நமது தற்கால ஜீவியம் கர்த்தருடைய மற்றும் நம்முடைய சகோதரர்களின் ஊழியத்திற்காக மட்டுமே என்பதை உணர்ந்து, கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு எல்லாருக்கும் விசேஷமாக சகோதரர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

நாம் மாம்சத்தில் இருக்கும்பொழுது அந்த இடத்தை நாம் அடைய முடியாது. அந்த இடத்தில் ஒரு சகோதரனை புண்படுத்த வார்த்தையும் இராது, செய்கையும் இராது, நாம் போராட வேண்டிய பலவீனங்களை நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம். ஆனால் "கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்," அபூரண செய்கைகளை அல்ல. அவரது, சித்தத்தை செய்ய நாம் ஊக்கத்துடன் முயற்சிப்பதை அவர் பார்ப்பாரானால், அவர் நமது குறைவுகளையும், அபூரணங்களையும் நமது இரட்சகரின் புண்ணியத்தினால் மூடுவார். நாம் ஒரு தவறு செய்வோமானால், இதை சகோதரனின் உணர்வை புண்படுத்துவதற்காக செய்யவில்லை என்பதை உறுதி செய்து, சரியானபடி மன்னிப்புக் கேட்டு, அதை சரி படுத்துவதில் நாம் சந்தோஷப்படுகிறவர்களாக இருக்கிறோம். அல்லது சோதனைக்குட்பட்டு நாம் சகோதரரை புண்படுத்தியதைக் காட்டிலும் குறைவாக கவலைப்படுவோ மேயானால், அவரிடம் நமது வருத்தத்தை தெரிவித்து மன்னிப்புக் கேட்க வேண்டும். பிறகு கிருபாசனத்தண்டையில் சேர்ந்து நமது குற்றத்தை அறிக்கையிட்டு கிறிஸ்துவின் நாமத்தில் பாவமன்னிப்பு கேட்க வேண்டும்.

கிறிஸ்துவுடன் அவரது சிங்காசனத்தில் ஒரு இடம் கொடுக்கப்படும் என்று நாம் நம்பிக்கை கொண்டிருப் போமானால், புது சிருஷ்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள

பிரமாணத்தின் முடிவை, கற்பனையின் முடிவை அவரது கிருபையினால் அடையப் பார்ப்போமாக, அது “சுத்தமான இருதயத்திலும் நல்மனசாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே” ஆகும். இது ஒவ்வொரு பூமிக்குரிய நம்பிக்கைகளையும், இலட்சியங்களையும் விரும்பி சந்தோஷத்துடன் பலியிடுவதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது. “முற்றும் ஜெயம் கொண்டவர்கள்” காத்துக் கொண்டிருக்கும் பரலோக சுதந்தரத்திற்கு பாத்திரவான்களாகும்படி அது ஜீவனையும் சகோதரர்களுக்காக சந்தோஷத்துடன் கொடுக்க கூடியதாகவும் இருக்கிறது. (ரோமர் 8:37)

# தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை
## Full Deliverance Promised to God's Saints

*"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன்." சங்கீதம் 91:15*

மேலே உள்ள வசனத்தை நாம் கவனிக்கும் போது, யார் எந்த வகுப்பார்,அந்த வகுப்பில் நாம் அங்கமாவோமோ இல்லையோ, எப்படி தேவனுடைய கிருபையை பெறுவார்கள் என்பதை அறிந்து கொள்ள இயற்கையாகவே ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். இந்த சங்கீதம் தீர்க்கதரிசனமாக கர்த்தராகிய இயேசுவும் சபையும் சேர்ந்த முழு கிறிஸ்துவையும் காண்பிப்பதாக காணப்படுகிறது. மற்றவைகள் ஒரு குறிப்பிட்ட பொருளில் சந்தேகத்திற் கிடமில்லாமல் உண்மையாக இருக்கிறது. உதாரணமாக, ஆபிரகாம் கர்த்தரை அழைத்த போது, தேவன் அவனது துன்பத்தில் அவனை கேட்டு, அவனை ஆசீர்வதித்தார், மேலும் கர்த்தர் மகா கனத்தை இன்னும் அவனுக்கு கொடுக்க வேண்டியவராயிருந்தார். ஏனெனில் அவன் தேவனை நேசித்து அன்பு செலுத்தினான். யூதயுக முழுவதும் அனைத்து விசுவாசிகளுக்கும் இப்படியே சொல்லப்பட்டது. ஆனால் சங்கீதம், முழு கிறிஸ்துவை குறிப்பதாக காணப்படுகிறது. இவர்கள் தேவனோடு நெருங்கிய உறவை உடையவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய சித்தத்திற்கு அவர்களது விசுவாசத்தின் மூலமும், அவரது நாமத்தை மகிமைப்படுத்துவதில் அவர்களது விசுவாசத்தினாலும் அவரது சத்தியத்தை உயர்த்துவதில் அவர்களது விசுவாசத்தின் மூலமும் தேவனுடைய ஊழியத்தில் மரிக்கவும் விருப்பமாயிருப்பதின் மூலமும், பரிசுத்த ஆவியின் கனிகளை அபிவிருத்தி செய்வதிலும் அவர்களது அன்பு வெளிப்படுத்தப்படுகிறது. ஏனெனில் இவையனைத்தும் அவர்களது உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகையால் அவர்கள் கர்த்தரைக் கூப்பிடும் பொழுது அவர் பதிலளிக்கிற வகுப்பார் இவர்கள் தான். ஆபத்தில் தேவன் அவர்களோடு இருந்து, தப்புவித்து, கனப்படுத்துகிற வகுப்பார் இவர்கள்தான். தேவனிடம் வருகிறவர்கள் அனைவரும் இதை செய்ய வேண்டியது அவசியம். தங்களது சித்தத்தை விட்டுவிட்டு, கர்த்தரையும் அவரது சித்தத்தையும், தங்களையும், தங்களது சித்தத்தையும் அல்லது மற்றவர்களது சித்தத்தைக் காட்டிலும் மேலாக நேசித்து, அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக, கிறிஸ்து மூலம் பலியின் உடன் படிக்கைக்குள் நுழைய வேண்டும். கிறிஸ்தவர்களாக தங்களை கூறிக்கொள்ளுகிற பெரும்பாலானவர்கள் வெறும் பேர் கிறிஸ்தவர்களாக, பேரில் மட்டும் கிறிஸ்தவர்களாக, தேவனோடு உடன்படிக்கை பண்ணாதவர்களாக இருக்கிறார்கள்.

இந்த உடன்படிக்கைக்குள் நுழைகிற கொஞ்சமானவர்கள், தங்கள் ஜீவனையும், ஒவ்வொரு நன்மையையும் தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து, நாம் கவனிக்கக் கூடியவைகளிலிருந்து தீர்மானித்து அதை விசுவாசத்துடன் செய்து முடிக்கிறார்கள். விசுவாச முள்ளவர்களுக்கு கடந்த காலத்தில் கவனிக்கப்படத்தக்க உதாரணங்கள் நமது கரத்தராகிய இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் ஆகும். இப்பொழுது முடிவடைகிற இந்த சுவிசேஷயுகம் முழுவதும் இந்த விசுவாச வகுப்பாரில் இன்னும் மற்றவர்களும் நிச்சயமாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் யேகோவா தேவனின் சம்பத்து என்றும் இவர்களைக் கொண்டு தேவன் ஒரு மகிமையான கிரீடத்தை செய்கிறார் என்றும் அதிலே கர்த்தராகிய இயேசு பிரகாசமான மேன்மையான முத்தாக இருப்பார் என்றும் சொல்லப்படுகிறது. இவர்கள் நித்திய யுகத்தில் யேகோவாவின் ஞானம், நீதி அன்பு மற்றும் வல்லமை ஆகியவற்றை காண்பிக்கிற வர்களாக இருப்பார்கள். இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் தேவன் தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும்அவர்களில் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்.

### வாக்குத்தத்தத்தை அடைவதற்கான நிபந்தனைகள்

ஆனால் தேவன் ஒருவனுடைய சொந்த சித்தத்துக்கு மாறாக எதையும் செய்யமாட்டார். கிறிஸ்துவின் போதனையிலிருந்து நாம் வெளியேற விரும்பினால் நம்மை தடுப்பதற்கு எதுவும் இல்லை. இந்த காரியத்தை தேவன் நம்மேல் திணிக்கவோ, பலவந்தப்படுத்தவோ மாட்டார். தேவன் இப்படிப்பட்டவர்கள் மட்டுமே ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்வதுபோல தம்மை தொழுதுகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். ஏனெனில் அவர்கள் அவரை நேசிக்கிறார்கள். இந்த வகுப்பார் கர்த்தருடைய சித்தத்தை உண்மையுடன் செய்ய நாடுவார்கள். ஏனெனில் அவர்கள் அவரை நேசிக்கிறார்கள். தங்களது ஒவ்வொரு துன்பத்திலும் கஷ்டத்திலும் அவரை நோக்கி கூப்பிடுவார்கள். அவரது பதில் காதால் கேட்கும்படியாக வராது; அல்லது நாம் எதிர்பார்க்கிற முறையில் வராது; ஆனால் அவரது சித்தத்துக்கும் வசனத்திற்கும் இசைவாக கேட்கப்படுகிற அவரது பரிசுத்தவான்களின் மன்றாட்டை மேன்மையான வழியில் பதிலளிப்பார். நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், எனது போதனைகளை நினைவு கூர்ந்து அதன்படி செய்தால் நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் என்று இயேசு சொன்னதற்கு இசைவாக இது இருக்கிறது. ஏனெனில் அவரில் நிலைத்திருக்கிறவர்கள் தேவன் அவர்களுக்கு கொடுத்திருக்கிறவைகளையும், அவர்களுக்கு ஏற்பாடு செய்து வைத்திருக்கிறவைகளையும், அவரது வசனங்கள் அவரது பரிசுத்தவான்கள் ஜெபிக்கும்படி அனுமதிக்கிறவைகளையும் மட்டுமே கேட்பார்கள். அவர்களது வேண்டுகோள்களை அவர் கேட்பார் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர் சுவிசேஷயுகம் முழுவதும் அவர்களை கவனித்துக் கொண்டும் ஆசீர்வதித்துக் கொண்டும் வந்திருக்கிறார். அவர்களது முயற்சிகளும் ஜெபங்களும் அவரது சித்தத்துக்கு இசைவாக இருக்கும்படி அவர்கள் தேவனுடைய வார்த்தையை தெளிவாக மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படியாக அவர்களது ஏமாற்றமே அவரது ஏற்பாடாக இருந்து கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

### சோதனையின் ஆசீர்வாதங்கள்

"ஆபத்தில் நானே அவனோடிருப்பேன்" என்பதே வாக்குத்தத்தம். இங்கே சொல்லப்படுகிற காரியம் என்னவென்றால், நாம் சோதனைக்குட்படுவதை கர்த்தர் வேண்டுமென்றே தடுக்கமாட்டார். நாம் கஷ்டம் வருவதை அறிந்து நாம் தேவனிடம் ஜெபிப்போம். ஆனால் அவர் அந்த சோதனையிலிருந்து நம்மை விடுவிக்காமல் போகலாம், அதை நாம் பெறுவது சிறந்தது என்று அவரது ஞானம் கண்டால் நாம் அந்த துன்பத்திலிருந்து விடுவிக்கக் கேட்கக் கூடாது. அந்த துன்பம் நமக்கு மிகவும் பிரயோஜனமானது என்று நிரூபிக்கும்.

கர்த்தர் தமது வசனங்களில் துன்பத்திலும் நாம் களிகூர வேண்டும் என்று முன்னரே கூறியிருக்கிறார்.

ஏனெனில் சரியானபடி ஏற்றுக் கொள்ளப்பட்ட துன்பமானது நமக்கு "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." ஆகையால் நாம் துன்பத்திலிருந்து காக்கப்படுவோம் என்று வாக்குத் தத்தம் செய்யாதிருக்கும் போது, அவர் தமது பிள்ளைகளுக்கு ஆறுதலான இருதயத்தையும், கிருபையையும் உறுதிபடுத்தி, அவர்களது சோதனைகளுக்கு இடையே களிகூரப் பண்ணுகிறார். (2 கொரிந்தியர் 4:6–18;12:9, 10; ஏசாயா 43:1, 2) இது நமது கர்த்தரிலும் அப்போஸ்தலர்களிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் அவர்களது கால்கள் தொழு மரத்தில் கட்டிவைக்கப்பட்டு, அவர்கள் பெற்றிருந்த அடிகளினால் அவர்களது முதுகில் இரத்தம் வந்துகொண்டிருந்த போது தேவனைத் துதித்து அவர்களால் பாட முடிந்தது. கிறிஸ்துவினிமித்தம் அவர்களடைந்த துன்பத்தில் களிகூர முடிந்தது.

கர்த்தர் எப்பொழுதும் தமது பிள்ளைகளோடே இருக்கிறார். ஆகையால் அவர்கள் அதைரியமடைய மாட்டார்கள். அவரது பிள்ளைகள் சத்திய ஆவியினாலும், சத்திய எழுத்தினாலும் ஆறுதலையும் உதவியையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த விரும்புகிற அளவுக்குத் தக்கதாக மட்டுமே இந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் பெறுகிறார்கள். ஏனெனில் மகிமையான வாக்குத்தத்தங்கள் இன்னும் நிஜத்தில் அவர்களுடையதாக ஆகவில்லை. இவைகள் இப்பொழுது வாக்குத்தத்தில் மட்டுமே அவர்களுடையதாக இருக்கிறது.

**நமது முழு விடுதலை**

"அவனை தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்," இந்த வார்த்தையின் முழு அர்த்தத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விடுதலை என்பது பிரதான முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்கள் பங்குபெறும் போது தான். நமது கர்த்தராகிய இயேசு அவரது துன்பங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டது அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட பொழுதுதான். நமது உயர்த்தெழுதலின் "மறுரூபம்" நமக்கு வரும் போது தான் நாம் விடுவிக்கப்படுவோம் என்பதே சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தமாக இருக்கிறது. "பலவீனமுள்ளதாக விதைக்கப்பட்டு," நாம் "பலமுள்ளவர்களாக எழுந்திருப்போம்." "ஜென்ம சரீரம் விதைக்கப்பட்டு" நாம் "ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்திருப்போம்." இதுதான் முழு விடுதலையாக இருக்கும். இத்துடன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கனமும் உயர்த்துதலும் வரும்.

தற்காலத்திலும் கூட, நமது தேவைக்கேற்றபடி தேவனுடைய பிள்ளைகளுக்கு விடுதலைகள் வரும், ஒருவகையான கனத்தை கர்த்தர் நமக்கு தருகிறார். ஆனால் உலகம் கனத்தை கொடுக்கக் கூடிய பிரகாரமாக அல்ல. இந்த கனம் இப்படிப்பட்ட துன்பத்தோடு வரும், ஆனால் அது உலகத்தின் கண்ணுக்கு விரும்பத்தக்கதாக இருக்காது. ஆனால் முடிவில் பரிசுத்தவான்களுக்கு வரக் கூடிய கனம் எல்லாரும் அறியும்படியாகவும் உணர்ந்து கொள்ளும்படியாகவும் வரும். கிறிஸ்துவின் அனைத்து அங்கங்களும் ராஜ்ய மகிமையிலும் கனத்திலும் அவர்களது தலையானவரோடு கூட பங்கு பெறுவார்கள். அவரும் அவரது மகிமையடைந்த சரீர அங்கங்களும் பிதாவின் ராஜ்யத்தில் ஆளுகை செய்வார்கள்; தேவனுடைய மகா வேலைகளில் முழு நித்தியத்திற்கும் இணைந்தே இருப்பார்கள்.

"பிரியமானவர்களே, பந்தயத்தில் தொடர்ந்திருங்கள்.
இலக்கு மிக அருகாமையில் இருக்கிறது.
தளராதீர்கள், காண்பீர்கள் அவரது முகத்தை சீக்கிரத்தில்
பிறகு, நல்ல உற்சாகம் உங்களுடையதாகும்!"

---

# மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும்

**Human Works Vs Works of the new Creature**

*"பிரியமானவர்களே, ......அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." பிலிப்பியர் 2:12,13*

நமது தலைப்பு வசனம் உலகத்திற்கு கொடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை அல்ல. அப்போஸ்தலர் சாதாரண மனிதர்களை தங்களது இரட்சிப்புக்காக பிரயாசப்படும்படி தூண்ட இந்த எச்சரிக்கை கிறிஸ்துவின் சபைக்கு மட்டும்தான். ஏனெனில் பரிசுத்த பவுல் "சகோதரர்களே" என்று அவர்களை அழைக்கிறார். வேத சாஸ்திரிகளுக்கு இந்த புத்திமதி மிகவும் விசித்திரமாக இருக்கிறது. ஏனெனில் ஒருவர் கர்த்தருடைய ஜனங்களில் ஒருவராக ஆனவுடனேயே இரட்சிக்கப்பட்டவர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கையாக இருக்கிறது. இதன் ஒரு பகுதியை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். "நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்." ஆனால் உண்மையான இரட்சிப்பை இன்னும் நாம் அடையவில்லை. முதலாம் உயிர்த்தெழுதலின் "மறுரூபத்தை" அடையும் வரை நாம் அதை அடைய முடியாது. அதுவரை நம்மைப்பற்றிய தேவனுடைய சித்தத்தை அடைவதற்காக விசுவாசத்துடன் பின்பற்ற நாடுவதிலிருந்து நாம் விலகிப் போகலாம், விசுவாசத்தை விட்டு மாறிப்போகலாம். விசுவாசத்தைவிட்டு விலகிப் போகக்கூடியது எப்பொழுதும் நடக்கக்கூடியதாக இருக்கிறது. பரம அழைப்பான இந்த இரட்சிப்புக்கு, குணலட்சண அபிவிருத்தியின் மூலம் பிரயாசப்படவேண்டும்.

குறிப்பிட்ட குணலட்சணங்கள் அவரது பரிசின் உயர்ந்த ஸ்தானத்தை, கிருபை மற்றும் உயர்த்துதலின் பிரதான இடத்தை, அவரது சொந்த தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுதலை அடையும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். குறைவான கனத்திற்குரிய பாத்திரங்களாக மற்றவர்கள் கொஞ்சம் தாழ்வான இடத்தை அடைவார்கள் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (2தீமோ.2:20,21) ஆகையால் கொடுக்கப்பட்டவைகளில் உயர்ந்ததை, தேவனுக்கு பிரியமானதை, நமக்கும் உயர்ந்ததாக இருக்கக்கூடியதை அடைய நாம் ஜாக்கிரதையாக, விழிப்பாக இருக்கவேண்டும். கர்த்தருடன் உடன்படிக்கைக்குள் நுழைந்தவர்கள், தெய்வீக நிலையிலோ அல்லது அதற்கு அடுத்த நிலையிலோ ஆவிக்குரிய சுபாவத்தை அடைய வேண்டும். இல்லையென்றால் அவர்கள் எல்லாவற்றையும் இழந்து இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். தெய்வீக சுபாவத்தை அடைவதற்கான நமது அழைப்பின் ஒரே நம்பிக்கைக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். சுவிசேஷ யுகத்தில் வேறு எந்த அழைப்பும் கொடுக்கப்படவில்லை.

நமது இரட்சிப்புக்காக நாம் கிரியை செய்யவேண்டும் என்கிற இந்த எச்சரிக்கை, "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்ற பவுலின் இன்னொரு அறிக்கைக்கு மாறாக இருக்கிறது என்று கேள்வி எழுகிறது. நாம் இல்லை என்று பதிலளிக்கிறோம். மரணத்திலிருந்து நமது இரட்சிப்பானது, முழுவதுமாக விசுவாசத்தினாலேயாகும். தேவனுக்கு முன்பாக நாம் நீதிமானாக காண்பிப்பதற்குரிய கிரியை நடப்பிக்கும் சந்தர்ப்பம் மனிதனாக நமக்கு இல்லை. தேவனுடைய குடும்பத்திற்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்படும் வரை நாம் செய்யும் எந்த வேலையும் ஏற்புடையதல்ல. பரிபூரணராயிருக்கக்கூடிய தேவனுக்கு அபூரணமான வேலையாயிருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் அவருக்கு பிரியமானதல்ல. ஆனால் நாம் கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினால் நமது பாவங்களுக்கான மன்னிப்பை பெற்று, அர்ப்பணத்தினாலும் ஆவியின் ஜெனிப்பித்தலினாலும் தேவனுடைய குமாரர்களான பிறகு, தேவனுக்கு பிரியமான வேலையை செய்வதற்குரிய காலம் வருகிறது. ஏனெனில் அப்பொழுது தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராக இருக்கிறோம். மேலும் இந்த ஜெனிப்பித்தலினால் நமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவி தன்னை காண்பிக்கவும் சில வேலைகளை செய்யவும் இப்பொழுது சந்தர்ப்பம் பெறுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வோமானால், ஒரு அபூரண மனிதனாக நமது இரட்சிப்புக்காக கிரியை நடப்பிக்க முடியாது. ஆனால் ஒரு புது சிருஷ்டியாக இதைச் செய்ய முடியும். (பிலி.4:13)

### வேலையில் நமது பங்கு

ஒரு குழந்தையானது தனது அங்க அசைவுகளை பெறும்வரை எப்படி பலம் பெறாதிருக்கிறதோ, அதே போல புது சிருஷ்டியானது அதன் ஆரம்பத்தில் சுறுசுறுப்பாக இருக்கவோ, பலம் மற்றும் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடையாமலோ இருக்கிறது. நமது அர்ப்பணத்தின்போது, கர்த்தரால் நாம் ஏற்றுக் கொள்ளப்படும்போது நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். ஆனால் இந்த புது சிருஷ்டியின் வித்து, நீண்ட நாட்களுக்கு அமைதியாக இருக்க முடியாது. அது உணவினாலும் சத்துள்ள ஆகாரத்தினாலும் வளர வேண்டும். ஆரம்பத்தில் நாம் "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்கிறோம்." புது சிருஷ்டியாக நாம் பயிற்சி செய்வதன் மூலம் நாம் பலம் பெறுகிறோம். ஆனால் புதிய ஜீவனை நம்மில் ஆரம்பிப்பவர் தேவனே. நமது ஆராய்ச்சியெல்லாம் நம்மை புது சிருஷ்டியாக மாற்றாது; நமது கிரியைகளும் நம்மை புது சிருஷ்டியாக மாற்றாது. இவைகளெல்லாம் நம்மை தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டு வராது. கர்த்தராகிய இயேசுவின் மூலம் நாம் அவரது குடும்பத்திற்குள் வந்த பிறகுதான், இந்த நல்ல வேலைகள் காண்பிக்க ஆரம்பிக்கும்.

புது சிருஷ்டியானது தனது பழைய சரீரத்தை எடுத்துக் கொண்டு அதை தனது வேலைக்காரனாக்குகிறது. பழைய சரீரமானது ஒரு பலியாக கொடுக்கப்பட்ட பிறகு, சட்டப்பிரகாரம் அது மரித்திருக்கிறது, ஆனால் நாம் போதுமான அளவு விருத்தியடைந்து, உயித்தெழுதலின் சரீரத்தை பெறுமளவும், இங்கு நமது கிரியை செய்து முடிக்கப்படும் வரைக்கும், புதிய சரீரத்தின் உரிமையாக பழைய சரீரத்தைப் பெற்றிருக்கிறது. இந்த அபூரண, பழைய சரீரத்தை நாம் பெற்றிருப்பதினாலேயே, நாம் மாம்சத்தில் இருக்கும் வரை கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அணிய வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

புது சிருஷ்டியானது அதன் பழைய சரீரத்தை வசப்படுத்தி மென்மேலும் அதை கட்டுப்படுத்துகிறது. இது நம்மிடத்தில் வெளிப்படுத்துவதைக் காட்டிலும், நமது அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் நமது சகோதரர்களிடம் அதிகமாக வெளிப்படுகிறது. பிதாவானவர் கிறிஸ்து மூலமாக நம்மில் புது சிருஷ்டிக்காக கிரியை செய்கிறார் மேலும் நாம் ஒரு புது

சிருஷ்டியாக மாம்சத்தைக் கட்டுப்படுத்தி பயிற்சி செய்வதால், நாம் பலம் பெறுகிறோம். அப்போஸ்தலர் கூறுவது போல,

இப்படியாக நாம் தேவனுடைய பிரியமான குமாரனுடைய சாயலுக்கு மென்மேலும் ஒப்பாகிறோம். "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." இப்படியாக நாம் சித்தம் கொண்டு, கிரியை செய்து நமது இரட்சிப்பை நிறைவேற்றுகிறோம். இங்கே அப்போஸ்தலர் சுபாவ மனுஷனைப் பற்றி பேசாமல், "பிரியமான" வகுப்பாரைப் பற்றி பேசுகிறார். நாம் தேவனுடைய குமாரர்கள் என்பதையும், அவரது சித்தத்தை நம்மில் நிறைவேற்ற கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் இப்பொழுது அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை அப்போஸ்தலர் விவரிக்கிறார்.

### தேவனுடைய பங்கு ஒரு பெரிய வேலை

நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்னரே நமக்காக தேவன் செய்த வேலை இருக்கிறது. அது மகா பெரிய முக்கியமான வேலை. அந்த வேலை கர்த்தராகிய இயேசுவின் தியாக பலியின் மூலம் நம்மை விலைக்கு வாங்கியது ஆகும். இந்த ஏற்பாட்டை நமக்கு அறிய பண்ணியதுமாகும். நமது வாழ்க்கையின் சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்வுகள் மூலம், ஒரு அர்ப்பணத்தின் மூலமாக அவரது பிள்ளைகளாகும்படியான வழியை நமக்கு காண்பித்தார். இதெல்லாம் தேவனுடைய வேலை. அழைத்து இழுத்துக்கொள்வதுபற்றி வேதம் கூறுகிறது. "என்னை அனுப்பின பிதா ஒருவனை தன்னிடத்தில் இழுத்துக் கொள்ளாவிட்டால் ஒருவனும் என்னிடத்தில் வரான்" என்று ஆண்டவர் கூறுகிறார். இழுப்பவர் பிதா, ஆனால் வழி குமாரன், பிறகு "பரம அழைப்புக்காக" நாம் அழைக்கப்படுகிறோம். கர்த்தரின் நிபந்தனையின் பேரில் நாம் அழைப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, நம்மில் செய்யப்படவேண்டிய ஒரு பெரிய வேலை இருக்கிறது. தேவன் இந்த வேலையைச் செய்கிறார்.

அப்போஸ்தலர் இந்த வகுப்பாரைச் குறித்து ஓரிடத்தில் கூறுவதாவது: "நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்." இவர்களைப் பற்றி இயேசு கூறுவதாவது:" நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள்." பிதா திராட்சத் தோட்டக்காரர். அதிக கனிகளை கொடுக்கும்படி திராட்சக் கொடியை அனைத்து தேவையான அனுபவங்களையும் கொடுத்து அவரே சுத்தம் பண்ணுகிறார். புது சிருஷ்டியாக நமது தகுதியை அபிவிருத்தி செய்வதற்கும், நாம் எதற்கு தகுதியுள்ளவர்களாவோம் என்பதை நிரூபிப்பதற்கும் நம் அனைவருக்கும் சுத்தம் பண்ணுதல் அவசியமாக இருக்கிறது.

ஆகையால் தேவனுடைய வேலை நம்மில் அபிவிருத்தி அடைகிறது. அவர் உலகத்தின் மூலமாகவும் சகோதரர்கள் மூலமாகவும், வாழ்க்கையின் அனைத்து பல்வேறு விதமான அனுபவங்கள் மூலமாகவும் மற்றும் அவரது விலையேறப்பெற்ற அவரது வாக்குத்தத்தங்கள் மூலமாகவும் அவர் வேலை செய்கிறார். நாம் தேவனை நேசிக்கிறதற்கு தக்கதாக நமது அனுபவங்களின் மூலம் நாம் நன்மையை பெறுகிறோம். "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." இதை நாம் அறிந்தால், கீழ்படிதலின் ஆவியை பெற்று, நமக்கு வருகிற அனைத்தையும் நாம் நம்புவோம். கர்த்தர் அவரது வார்த்தைகளின் மூலம் ஆகாரம் அளிப்பதை தொடர்கிறார். நமது முன்னேற்றம் என்பது, கிருபையில் வளர்வதிலும் அறிவில் வளர்வதிலும், தேவனுடைய சாயலுக்கு ஒப்பான குணலட்சணத்தில் படிப்படியாக வளர்வதிலும் இருக்கிறது. இப்படியாக அவர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் அவருடைய பிள்ளைகளில் உண்டாக்குகிறார். அவரது நல்ல விருப்பம் என்ன என்பதை அதிகமதிகமாக நமக்கு அவர் காண்பிக்கிறார். தேவனுடைய சித்தம்; தேவனுடைய சிந்தை என்ன என்பதை தேவனுடைய பிள்ளையாகிற ஒருவன் அர்ப்பணம் செய்தபோது உணர்வதைக் காட்டிலும் பிற்காலத்தில்தான் அதிகமாக உணர்கிறான். அவன் நெருக்கமான வழியில் நுழையும்போது காரியங்களை காண்பிப்பதைக் காட்டிலும் பின்னர் முற்றிலும் வேறுவிதமாக அதை காணும்படி ஆகிறான்.

கர்த்தர் தமது பல்வேறு அருள்பாலித்தலின் மூலமாக நம்மில் அவர் கிரியை செய்கிறார். நாமே இந்த போஷாக்கின் மதிப்பை உணர்ந்து புது சிருஷ்டிக்காக ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இதன் மூலம் நாம் குணலட்சணத்தில் பலமடைந்து இப்படியாக ராஜ்யத்திற்கு, கனம், மகிமை, சாகாமைக்கு தயாராகுவோம். கர்த்தர் அங்கீகரிக்கும்படியாக இந்த குணலட்சணங்களை நாம் பெறவில்லையென்றால் இந்த மகா ஆசீர்வாதங்களும் கனங்களும் நமக்கு நிச்சயமாக கொடுக்கப்படமாட்டாது. நாம் நினைவு கூற வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு புத்தி சொல்கிறதாவது: சாதகமற்ற சூழ்நிலைகளை ஜெயங்கொள்ளவும், மாம்சீக பலவீனங்களுக்கு எதிராகவும் ஒரு புது சிருஷ்டியாக எந்த அளவுக்கு நீங்கள் போராடியிருக்கிறீர்கள்? உங்கள் குணலட்சணத்தில் கிறிஸ்துவின் சாயலில் முழுமையாக அபிவிருத்தியடைந்திருக்கிறீர்களா?

---------------------------

## Elijah's work Before Ascension

# பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை

1 ராஜாக்கள் 20:1–21

மதுமயக்கத்தின் மூலம் தோல்வி – சிரியாவின் ராஜா இஸ்ரயேலருடன் போரிடுதல் – ஆபத்தில் இஸ்ரயேலின் தலைநகரம் – பெனாதாத் ராஜா வெற்றியில் நம்பிக்கையாயிருத்தல் – அதை முன்கூட்டியே குடிவெறி களியாட்டத்தில் கொண்டாடுகிறான் – இஸ்ரயேலின் சிறிய படை தேவனுடைய கட்டளையின் கீழ் சீரியரில் மகா சங்காரம் உண்டாக தோற்கடித்தல் – நவீன யுத்தத்தின் வித்தியாசம் – தேவன் ஏன், போர்கள், பேராபத்துக்கள், வியாதி, பைத்தியம் முதலானவைகளை அனுமதிக்கிறார்– எப்பொழுது யுத்தங்கள் ஒழியும் – கிறிஸ்தவர்கள் போரில் ஈடுபடலாமா?

நமது பாடம் சீரியர்கள் இஸ்ரயேலரின் தலைநகரான சமாரியாவை முற்றுகையிட்டதையும், அதன் ராஜா சரணடையும் பயத்தில் இருந்ததையும் விவரிக்கிறது. சீரியாவின் ராஜா, இஸ்ரயேலின் ராஜாவை சரணடைய கட்டளையிட்டு, தான் செய்யப்போவதை பெருமையுடன் கூறுகிறான். கர்த்தரின் செய்தி ஆகாப் ராஜாவின் தைரியத்துக்கு உயிர்ப்பூட்டி, எப்படி போரிடுவது என்று உத்திரவிடும் வரை எதிர்ப்பது பயனற்றது என்று குழப்பத்தில் அவன் இருந்தான். கர்த்தரின் உத்தரவை பின்பற்றியதால் இஸ்ரயேலருக்கு வெற்றி கிடைத்தது. சீரியாவின் ராஜா பெனாதாத்தும் அவனது பிரபுக்களும் மிகவும் குடித்து வெறித்து இருந்ததும் இந்த வெற்றிக்கு ஒரு காரணம். இப்படியாக அவர்களது பெரிய இராணுவத்தின் பலத்தை பயன்படுத்த முடியாமல் பெரும் தோல்வியை தழுவினர்.

தற்போது (இந்த கட்டுரை 1915ல் எழுதப்பட்டது) ஐரோப்பாவில் நடந்து வருகிற பெரும்போருக்கு முன்னால், கடந்த கால போர்கள் எல்லாம் முக்கியமற்றதாக இருக்கிறது. பிரிட்டனின் பிரபுக்களில் ஒருவர் சமீபத்தில் போர் ஆயுதம் தயாரிக்கிற தொழிலாளர்களிடம் அவர்களது திறமையை மேம்படுத்தும் படி கூறும்போது, போயர் யுத்தத்தைவிட (Boer war) அதிகமான போராயுதங்களை பெல்ஜியத்தில் அதிக பணம் செலவழித்து விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்தார். நவீன துப்பாக்கிகள் சுடுகிற வேகமும் கொன்று குவிக்கிறதும் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. ஊர்ஜிதம் செய்யப்பட்ட செய்தியின்படி ஒரு கோடியே இருபது இலட்சம் ஐரோப்பிய வீரர்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கிறார்கள், காயப்பட்டிருக்கிறார்கள் அல்லது சிறைப்பட்டிருக்கிறார்கள். தற்போது படைவீரர்கள் ஒரு கோடிபேர் இருக்கிறார்கள் என்று நாம் அனுமானிக்கலாம்.

ஒருவன் அதிவேக துப்பாக்கியை பயன்படுத்தும்போது அது இருபது பேருக்கு மேல் சமமானதாக இருக்கிறது. பழைய போர்களில் நூறு பேருக்கு ஒத்ததாக இருக்கிறது. ஆகையால் தற்கால போரின் தீவிரத்தை நாம் ஓரளவுக்கு நிதானிக்க முடியும். போரில் ஈடுபட்டிருக்கிற எந்த நாட்டிற்கும் பெரிய வெற்றி எதுவும் கிடைக்காது என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கிறதாக காணப்படுகிறது. முடிவாக இதில் ஈடுபட்டிருக்கிற அனைத்து நாடுகளும் பலவீனமடையும், திறமைசாலிகளான மனிதர்களை மாத்திரம் அல்ல, நிதிநிலைமையில் தரித்திரமும் சங்கடமும் அடைந்து தங்களது பத்திரங்களுக்குக் கூட பணம் கொடுக்க முடியாத நிலைக்கு ஆளாவார்கள்.

### போரானது போதிக்கும் பாடம்

இது நமது காலத்தின் பெருமையான நாகரீகத்தின் மேல் ஒரு துக்கமான பிரதிலிப்பாகும். தேவன் மனுக்குலத்திற்கென பரம்பரை சொத்தாக கொடுத்த இந்த பூமிக்குரிய காரியங்களினிமித்தம் பெரிய தேசங்கள் கூடிபேசி ஒரு ஒப்பந்தத்திற்குள் வருவதின் மூலமே இந்த போரை கவனித்திருக்கலாம். போரில் ஈடுபட்டிருக்கிற தேசங்கள் தங்களை கிறிஸ்தவ தேசங்கள் என்று கூறிக்கொள்வதை நாம் கவனிக்கும்போது, இந்த எண்ணம் எல்லாவற்றிலும் பயங்கரமானதாக இருக்கிறது. இதில் ஒரு ஆறுதலான காரியம் என்னவென்றால் ஏழை ஜனங்கள் கிறிஸ்தவன் என்ற வார்த்தையின் பொருள் அறியாமலும், திரளானவர் கிறிஸ்தவர்களாக இல்லாதிருப்பதுமே ஆகும். உண்மையான கிறிஸ்தவர்கள், பரிசுத்தவான்கள் அனைத்து தேச படையிலும் காணப்படுவதற்கு காரணம் கட்டாய ராணுவ சேவை சட்டம்தான்.இப்படிப்பட்ட பயங்கரமான நிலைமையிலும் கூட வேத மாணவர்கள் வெவ்வேறு படையிலிருந்து அவ்வப்போது அவர்களது சுகத்தைப்பற்றியும், வெளிச்சத்தைப் பிடிக்கவும், தேவனை மகிமைப்படுத்தவும் அவர்கள் செய்து வருகிற முயற்சிகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று பெருமையடித்துக்கொள்கிற நாற்பது கோடி பேர் தேவனுக்கும் கிறிஸ்தவ கொள்கைகளுக்கும் தூரமாக இருந்து நூற்றியிருபது கோடி புறஜாதியினரைப் போலவே இருக்கிறார்கள் என்ற உண்மையை உலகின் ஜனங்கள் உணர்ந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களது உணர்ந்து கொள்ளுதல் உண்மையான சபை என்ன என்பதையும், அதன் வேலை உலகத்தை மனமாற்றம் செய்வதல்ல என்பதையும் அது தன்னை மேசியாவின் பரலோக ராஜ்யத்தில் அவரது உடன் சுதந்திரராக, மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, மேசியாவின் ராஜ்ய வகுப்பாராக தயார்படுத்திக் கொள்ளவுமே என்பதை உணர்ந்து கொள்ள உதவி புரிய வேண்டும். இந்த போர் அநேகருக்கு இந்த பாடத்தை போதித்தால், இது வீணாவதில்லை. தேவனுடைய இந்த பரிசுத்தவான்களின் மிகவும் சரியான முறையில் கற்றுக் கொள்ளுதல், அவர்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய நிலைமைக்குரிய ஒரு பங்கைபெறச் செய்யும். பிறகு தங்களது இரட்சகருடன் இணைந்து மனித சுபாவத்தில் இருக்கிற மனுக்குலத்தை ஆசீர்வதித்து, அவர்களது சிந்தையையும் கீழ்ப்படிதலையும் மானிட பூரணத்திற்கு உயர்த்தவும் செய்வார்கள்.

### போரை தேவன் ஏன் அனுமதிக்கிறார்

ஏன் தேவன் போரை அனுமதிக்கிறார் என்று அநேகர் கேட்கிறார்கள். தேவன் போரை கொண்டு வருகிறார் என்று வேதம் கூறுகிறது? துப்பாக்கி முனையிலுள்ள கத்தியின் காயத்தினால் மரணம் வருவதிலும் குண்டு காயத்தினால்

வருகிறதிலும் க்ஷயரோகத்தினால் வருகிறதிலும், நுரையீரல் வியாதியினால் வருகிறதிலும், அம்மை நோயினால் வருகிறதிலும் பொதுவான சுகவீனத்தில் வருகிறதிலும் அதிகமான வித்தியாசம் ஏதுமில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். தனிப்பட்டவர்களுக்கு கொஞ்சம் வித்தியாசத்தை ஏற்படுத்தினாலும் சர்வ வல்லவருக்கு மிகவும் குறைவான வித்தியாசத்தையே ஏற்படுத்துகிறது என்று நாங்கள் சொல்கிறோம். தேவன் நமது இனத்திற்கு கொடுத்த மரண தண்டனை எப்படி வருகிறது. ஏனெனில் கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாக இந்த தண்டனை அமலில் இருந்து வருகிறது. முழு இனமும் "செத்துக்கொண்டே சாவாய்" என்கிற தீர்ப்புக்கு கீழாக கல்லறைக்கு சென்று கொண்டிருக்கிறது.

எல்லாருக்கும் நம்பிக்கை கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக அவருக்குள் இருக்கிறது. அவர் ஆயிர வருட யுகத்தில் நிறைவேற்றப்போகிற மரித்தோரின் உயிர்த்தெழுதலினால் இருக்கும். அவரது உண்மையுள்ள சபை, அவரது மணவாட்டி, அவரது ராஜ்யத்தில் பங்கு பெறப்போகிறவர்கள் கனம் மகிமை, சாகாமைக்குரிய சுபாவத்தில் முதலாவது உயிர்த்தெழுப்பப்படுவார்கள். வேதாகமம் அறிவிக்கிறது போல உலகிலுள்ள மற்றவர்கள் "அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்." அவர்கள் தேவனுடைய நற்குணம் ஞானம், வல்லமை மற்றும் அன்பையும் அறிந்து கொள்ளவும் இவைகள் கடந்த வாழ்க்கையில் பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையில் அவர்கள் கற்றுக் கொண்டதற்கு மாறுபாடாயிருப்பதையும் அறிந்து கொள்வார்கள். வேதாகமம் அறிவிக்கிறதாவது: தெய்வீக கருத்தில் முழு உலக மனுக்குலமும் மரணத்தில் நித்திரைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள்; மேசியாவின் ராஜ்யத்தில் எழுந்திருக்கவும் காத்திருப்பார்கள். எல்லாருக்கும் அவர் உறுதிபண்ணயிருக்கிற மகா சந்தர்ப்பம் ஆரம்பமாகும். இதன் மூலம் பாவத்திலிருந்து முடிவாக மரணத்திலிருந்தும் விடுதலையாவார்கள்.

### "இனி ஒரு சாபமும் இராது"

மேசியாவின் ராஜ்யத்தில் போரும், பேராபத்து அனைத்தும் ஒழிக்கப்படும். மனுக்குலம் மரணத்திற்கு போவதற்கு பதிலாக எதிரான நிலைமை– மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஏற்படுத்தப்படும். வியாதி, நோய் மற்றும் பைத்தியம் போன்றவைகளுக்கு பதிலாக சுகமும், பலமும், இழந்ததை திரும்ப பெறுதலும் கிடைக்கும். (அப்.3:19–21) இயேசு தமது ஆயிர வருட அரசாட்சியின் பலன்களைப் பற்றி பேசும்போது, அவர் சாபம் நீக்கப்படும் என்றும், தேவனுடைய ஆசீர்வாதம் வரும் என்றும், இனி துக்கமில்லை, மரணமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை என்று அறிவிக்கிறார். இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் இன்னும் வாக்குத்தத்தங்களாகவே இருக்கின்றன. ஆகவே சபை மட்டுமே தேவனிடத்தில் அவர்களது விசுவாசத்திற்கேற்றபடியும் அவரது வசனத்தை புரிந்து கொண்டதுக்கு ஏற்றபடியும் களிகூருகிறவர்களாகவோ புரிந்து கொள்கிறவர்களாகவோ இருக்கிறார்கள். மேசியாவின் ஆவிக்குரிய ராஜ்யம் உலக காரியங்களின் பொறுப்பை எடுத்துக் கொண்ட பிறகு, தேவனுடைய மகிமையான ராஜ்யத்தில் தீங்கும் அழிவும் அனுமதிக்கப்படாது என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது. ஒரு ஆவிக்குரிய போலீஸ் படை மனுக்குலத்தை முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்று இது பொருள்படுகிறது. ஒவ்வொரு தவறான செயலும் அது விளைவை ஏற்படுத்தும் முன்னரே தண்டிக்கப்படும். அதே போல ஒவ்வொரு நல்ல செயலும் நல்ல வார்த்தையும் நல்ல எண்ணமும் மனத்தளவிலும் உடலளவிலும் நீதியின் முறையிலும் பலத்தையும், நலத்தையும் இழந்ததை திரும்பப் பெறும் ஆசீர்வாதங்களையும் கொண்டு வரும். இப்படிப்பட்ட நிலைமையின் கீழ் உலகமானது நன்மையையும், தீமையையும் வேறுபடுத்தி பார்க்க வேகமாக கற்றுக் கொள்ளும். யுக மாறுதலையும் அவர்கள் வேகமாக அறிந்து கொள்வார்கள். அது முதல் ஒவ்வொரு பாவ எண்ணம், வார்த்தை மற்றும் செயலுக்கு தண்டனை கிடைப்பது நிச்சயம் என்பதையும் அதேபோல ஒவ்வொரு நல்ல எண்ணமும், நல்ல வார்த்தையும், நல்ல செயலும் ஆசீர்வாதத்தைப் பெறும் என்பதையும் கற்றுக் கொள்ளுவார்கள். இந்த நிலைமையைக் குறித்து வேதாகமம் கூறுவதாவது:" உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்." ஏசா.11:9; 26:9; 28:17

### கிறிஸ்தவர்கள் போரில் ஈடுபடுதல்

அநேகர் போரைக்குறித்து இயேசு மற்றும் அப்போஸ்தலரின் போதனைகளை புரிந்து கொள்வதில் குழப்பம் அடைகின்றனர். இவைகளை கர்த்தர் யூதர்களுக்கு கொடுத்த வழிகாட்டுதலையும் அவர்களது போரில் அவரது ஆசீர்வாதத்தையும் வேறுபடுத்திப் பார்க்கிறார்கள். இந்த காரியத்தை வேதாகம கருத்தில் மட்டுமே சரியாக புரிந்து கொள்ள முடியும்.

விழுந்து போன மனிதர்களுக்கு தேவனுடைய குமாரர்களாகவும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் ஆகும்படியான முதல் அழைப்பு இயேசுவின் காலத்தில் கொடுக்கப்பட்டது. அதுவும் இன்னும் குறிப்பாக, அவர் நமது பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்து, பரலோகத்திற்கு எழுந்தருளி நமது சார்பாக தேவனின் பிரசன்னத்தில் தோன்றி, இதன் பலனாக தேவனுடைய பரிசுத்த ஆவியையும் புது சிருஷ்டியாக ஜெனிப்பிக்கும் சக்தியையும் காத்திருந்த சீஷர்கள் மேல் பொழிந்தருளின போது கொடுக்கப்பட்டது. ஆதாம் பாவம் செய்த காலத்திலிருந்து இந்த பெந்தெகொஸ்தே நாள் வரை யாரும் தேவனுடைய பிள்ளையாக இருந்ததில்லை. அதிகபட்சமாக மோசே ஒரு ஊழியக்காரனாகவும் ஆபிரகாம் ஒரு நண்பனாகவும் இருந்தார்கள். தேவனுடைய பிள்ளைகளாகும் சலுகை அல்லது சுதந்தரம் இயேசு கிறிஸ்து தமது முதலாம் வருகையில் வந்தபோது, அவரை முழுவதும் ஏற்றுக் கொண்டவர்களுக்கு அவர் மூலமாக வந்தது என்று பரிசுத்த யோவான் நமக்கு நிச்சயப்படுத்துகிறார். யோவான் 1:12,13

இந்த தேவனுடைய பிள்ளைகள், கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் மணவாட்டி உலகத்தாரல்ல. ஆனால் அவர்கள் தெய்வீக அழைப்பினாலும் ஆவியின் ஜெனிப்பித்தலாலும் தெரிந்து கொள்ளப்பட்டு, உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்கள். இவர்களிடம் இயேசு கூறினதாவது: "நான் உலகத்தான்

அல்லாதது போல, நீங்களும் உலகத்தானல்ல." "நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் போய் கனிகொடுக்கும்படி நான் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் மிகுந்த கனிகளை கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்." (யோவான் 17:14; 15:16,8) இப்போது அப்போஸ்தலர் நமக்கு சொல்லுகிற ஆவியின் கனிகள் சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பு. இவைகள் நமக்கு உண்டாயிருந்து பெருகினால், நம்மை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர் களுமாயிருக்கவொட்டாது. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும். இந்த ராஜ்யத்திற்காகத்தான் நாம் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கிறோம். ஏற்ற காலத்தில் உயிர்த்தெழுதலின் மறுரூபத்தினால் அதற்குள் நாம் நுழைய வேண்டியவர் களாயிருக்கிறோம். (கலா.5:22,23; 2பேது. 1:5-11)

**வேதவாக்கியங்கள் தவறாக உபயோகிக்கப்படுகிறது.**

தேவன் அவரது ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அவருடைய பிள்ளைகளடங்கிய இந்த வகுப்பாருக்கு போரைக் குறித்து ஏதாவது விசேஷமாக கூறுகிறாரா அல்லது இந்த காரியத்தில் அவர்கள் அதிகாரத்துக்கு கீழ்ப்படிய வேண்டுமா**?** கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் சிலுவை வீரர்கள் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அப்போஸ்தலர்கள் கூட நம்முடைய போர் ஆயுதங்கள் மாம்சத்துக்குரியவைகள் அல்ல என்று நம்மை முன்னெச்சரித்திருக்கிறார். (2கொரி 10:4) போரிடவோ, சண்டையிடவோ, கொல்லவோ மற்றவர்களிடமிருந்து சொத்தையோ அல்லது உயிரையோ எடுக்க வேதாகமத்தில் எந்த இடத்திலும் தேவனுடைய அர்ப்பணம் செய்து கொண்ட பிள்ளைகளுக்கு கட்டளை ஏதுமில்லை. இந்த போரில் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிறவர்கள் கலந்து கொண்டால், அவர்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாகவும் கர்த்தருடைய போதனைகளை புரிந்து கொள்ளா தவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதையே தற்கால போர் நமக்கு மெய்ப்பிக்கிறது.

கிறிஸ்துவின் ஊழியர்கள் என்று வெளிப்படுத்திக் கொண்டு யுத்தம் பண்ணுகிற நாடுகள் அனைத்தும் ராணுவத்துக்கு ஆள் சேர்க்கிற முகவர்களாக வேலை செய்கிறார்கள் என்று நாங்கள் உணர்கிறோம். ஆண்டவரின் போதனைகளுக்கு மாறாக, நாட்டின் வாலிபர்களை போரில் ஈடுபடுத்த எல்லாவிதமான நியாயவாதங்களையும் பயன்படுத்துகிறார்கள். கடந்த போர்களில் துருக்கி வீரர்களுக்கு, அவர்கள் போரில் நாட்டுக்காக சேவை செய்தால், இறந்தால் கூட பரலோக சொர்க்கம் நிச்சயம் என்ற உறுதிமொழியைக் கேட்டுச் சிரித்த அதே ஊழியர்கள் தற்போது போரில் சேவைச் செய்ய தயார் பண்ணப்பட்டவர்களுக்கு, தன் ஜீவனைக் கொடுத்தால் பரலோக ஆசீர்வாதம் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஜெர்மனியர்களுக்கு அவர்களது அரைக்கச்சையில் (belt) "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று போட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஊழியர்கள் வேதாகம வசனத்தை குறிப்பிட்டு, அவர்கள் இளம் வீரர்களை உற்சாகப்படுத்தி, மரித்த வீரர்களுக்கு மகிமையின் வட்டத்தைக் கொடுத்தார்கள்.

*ஓதிக்கப்படுகிற இயேசுவே, நண்பர்களின் நண்பரே!*
*பாதுகாப்பான உமது கரங்களினால் எங்களை உயர்த்தும்,*
*இந்த பொல்லாத உலகின் மத்தியில் அதன் குற்றம் மற்றும்*
*தீங்கிலிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்ளும்.*

**--2542--**

**R 5761**

# Obedience and Kingship

# கீழ்ப்படிதலும் அரசுரிமையும்

சங்கீதம் 21

*மேசியாவின் ராஜ்யத்தின் மகிமை – யேகோவா தேவனுக்கு அவர் கீழ்ப்படிந்ததற்கான பரிசு– அவரது சத்துருக்களை அழிப்பது அவசியம்–ஆயிரவருட யுகத்தின் நாற்பது வருடத்தில் நாம் இருக்கிறோமா?*

*“யேகோவாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்; உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய் களிகூருகிறார்!” சங்கீதம் 21:1*

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் ராஜ்யத்தை யூதர்கள் அப்பியாசப்படுத்தி பார்த்தார்கள். இந்த மேசியாவின் ராஜ்யத்தில் அவர்கள் மகிமையான இடத்தில் இருப்பார்கள், அனைத்து தேசங்களும் இதன் மூலம் ஆசீர்வதிக்கப்படும். இரண்டு காரியங்களை அவர்கள் உணர தவறிவிட்டார்கள்: முதலாவது, ஆதாமின் பாவத்திற்கு மீட்கும் விலை ஆதாமும் அவனது சந்ததியினரும் தேவகிருபைக்கும் ஏதேனின் நித்திய ஜீவனுக்கும் திரும்பி வருவதற்கு முன் கொடுக்கப்படவேண்டும்; இரண்டாவது, யோகோவாவின் தீர்மானத்தின்படி மேசியா உயர்த்தப்படுவதற்கு முன்னதாக அவரே தமது தகுதியை, மரணபரியந்தம் பணிவு, கீழ்ப்படிதல், விசுவாசத்தின் மூலம் நிரூபிக்க வேண்டும். மீட்பராகிய இயேசு இதை எல்லாம் செய்து முடித்தார் என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். அதாவது அவர் பிதாவுடன் தமக்கிருந்த மகிமையை விட்டு, தம்மைத்தாமே தாழ்த்தி, மனிதனானார். மேலும் தம்மைத்தாமே மரண பரியந்தம், சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தினார். இதினிமித்தம் தேவன் அவரை தேவதூதர்களுக்கு மேலாக உயர்த்தி, தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறும்படியும் கனம், மகிமை, சாகாமை போன்ற அனைத்து வாக்குத்தத்தங்களையும் சுதந்தரித்துக் கொள்ளும்படி செய்தார். (பிலிப்பியர் 2:8–11)

இதை அறிந்த அநேகர், இதே போல தேவன் ஒரு சபை வகுப்பாரை மேசியாவின் மணவாட்டியாக, அவரது பாடுகளிலும் சோதனைகளிலும் பங்கு பெறுகிறவர்களாகவும், அவரது உயர்த்துதலிலும், மகிமையிலும் பங்கு பெறுகிறவர்களாகவும் இருக்கும்படி தீர்மானித்திருந்தார் என்கிற வேதவாக்கியங்களை அறிய தவறுகின்றனர். இது கவனிக்கப்பட்டால்தான் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது தாமதமாகிறது என்பதை நாம் சரியானபடி புரிந்துகொள்ளமுடியும். தேவனால் முன் தீர்மானிக்கப்பட்ட முழு சபையும் நிறைவடைந்து, சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமைப்படுத்தப்பட்டு அதன்பின் மேசியாவின் பரலோக ராஜ்யம் ஆரம்பிக்கப்படவே இது தாமதிக்கப்பட்டிருக்கிறது.

வேதவாக்கியங்களை சரியானபடி புரிந்து கொள்ளாததால் அநேக விநோதமான கருத்துக்கள் பரவியிருக்கிறது. இதனால் தான் தேவனுடைய ராஜ்யம் முன்னரே மகிமையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்ற தவறான கொள்கை பரவியுள்ளது. இந்த சங்கடங்களை மனதில் வைத்துக் கொண்டு வேத மாணவர்கள் மேசியாவின் ராஜ்யம் இப்போது மிக அருகில், இன்னும் வாசலருகே இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்கால போர்தான் ஆபத்தின் நாட்களின் ஆரம்பம் என்பதையும், இது தற்கால முறைமைகளை நீக்கி, மேசியாவின் ராஜ்யத்தை ஆரம்பிக்க செய்யும் என்பதையும் இன்னும் அதிகமதிகமாக உணர்கிறார்கள். இந்த ராஜ்யத்திற்காகத்தான் நாம் நீண்ட காலமாக, “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

இது ஆவிக்குரிய ராஜ்யமாக இருந்தாலும் தற்கால சாத்தானின் ராஜ்யத்தைக் காட்டிலும் மேன்மையானதாக இருக்கும். தேவனுடைய ராஜ்யம் மனிதனால் காணக்கூடாததாக இருந்தாலும், அது பூமியின் எந்த ராஜ்யத்தைக் காட்டிலும் அதிகாரத்தையும் வல்லமையையும் அப்பியாசப்படுத்துவதாக இருக்கும். ஏனெனில் மானிட வரம்பு மற்றும் நிலைமைகளால் குறைவுபட்டிருக்காது. மேலும் பழைய ஏற்பாட்டு கால யூத பாத்திரவான்கள் (Ancient worthies) பூரணத்திற்கு உயிர்த்தெழுப்பப்படுவார்கள். அவர்கள் பூமிக்குரிய மகிமையில், தலையும் சரீரமும் சேர்ந்த மகிமையடைந்த ஆவிக்குரிய கிறிஸ்துவுக்கு காணக்கூடிய பிரதிநிதிகளாக ஆவார்கள். இந்த கருத்தை வலியுறுத்தி இயேசு யூதர்களிடம் கூறுகிறதாவது: “நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும், சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்.” (லூக்.13:28) ஆனால் தம்மைக் குறித்து அவர் அறிவித்ததாவது: “இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது.” (யோவான் 14:19) எல்லாரும் அவரைக் காண்பார்கள். அதாவது அனைத்து புரிந்து கொள்ளும் கண்களும் திறக்கப்படும். பூமி கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கிற அறிவின் வெளிச்சத்தினால் அனைவரும் காண்பார்கள். (வெளிப்படுத்துதல் 1:7; ஆபகூக் 2:14)

## மேசியாவின் ராஜ்யம் ஆரம்பித்திருக்கிறது

தீர்க்க தரிசனங்களின்படி மேசியாவின் ராஜ்யம் 1878ல் ஆரம்பித்துவிட்டது என்று கூறுகிறார்கள். சபைக்கடுத்த முக்கியமான வேலைகளாகிய கோதுமையின் அறுப்பு, களைகள் முதலானவைகளை பிரித்தல் நடந்து கொண்டிருக்கிறது. இது உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. புதிய யுகம் ஆரம்பமாகும் காலக்கட்டத்தில் தேவன் அறியாமை என்கிற திரையை நீக்கிக்கொண்டிருக்கிறார். இப்படியாக விலையேறப்பெற்ற மிகவும் தூரமாயிருந்த இயந்திர மற்றும் இரசாயன இரகசியங்களை காண்பித்துக் கொண்டிருக்கிறார். இது இன்னும் எதிர்காலத்தில் சந்தேகத்திற்கிடமின்றி அதிகரிக்கும். ஐரோப்பாவிலும் மெக்சிகோவிலும் முன்னரே ஆரம்பித்திருக்கிற மகா ஆபத்தின் காலத்தின் முடிவில் மேசியாவின் ராஜ்யம் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

பூமியில் ராஜ்யத்தின் கிரியைகளுக்கு ஆதாரமாக வேதமாணவர்கள் குறிப்பிடுவது, மதுவிலக்கில் ஒரு குறிப்பிட்ட

சீர்திருத்தம் ஆச்சரியத்தக்க விதத்தில் முன்னேறி கொண்டிருப்பதை குறிப்பிடுகிறார்கள். அமெரிக்காவில் அநேக மாகாணங்களில் மதுவிலக்கு தன்னிச்சையாக பரவிக் கொண்டிருப்பது, வெளி நாடுகளில் போரிட அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த திசையில் நாம் அதிகமாக எதிர்பார்க்க கூடாது. அதிகமாகவோ, குறைவாகவோ விளைவுகளை நாம் எதிர்பார்க்க வேண்டும். விசேஷமாக, எதிர்பாராதவிதமாக ஐரோப்பாவின் மேல் யுத்தம் வந்ததை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

ஐரோப்பாவில் மது விலக்கின் முதல் முயற்சி எதிர்விளைவுக்கு உண்மையிலேயே ஆதாரம் தேவையில்லை. அமெரிக்காவிலும் இதே அனுபவங்களை பெற்றோம். இந்த காரியத்தில் முழு உலகமும் சரியான திசையில் போய்க்கொண்டிருக்கிறதை நாம் உணருகிறோம். ஓபியம் மற்றும் போதை பொருட்களுக்கு எதிரான இயக்கமும் சரியான திசையில் போய்க்கொண்டிருக்கிறது. போதை பொருட்களால் வரக்கூடிய நோய்களைப் பற்றி புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு அறிவுரைகள் கொடுக்கப்படுகின்றன. மேக நோய் போன்றவைகள் மூளை வளர்ச்சியை நிறுத்துகிறது. மேலும் சில வருடங்களில் இது பைத்தியம் போன்ற நோய்களுக்கு கொண்டு செல்கிறது.

"உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்க நாம் தொடரும் பொழுது, தேவனுடைய அர்ப்பணம் செய்த பிள்ளைகளாகிய நாம், ராஜ்யத்தில் ஒரு இடத்திற்கு பாத்திரவான்களாக காணப்படவும், நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவும், குணலட்சணத்தில் வளர தொடர்ந்து உழைக்கவும் வேண்டும். சபையானது திரைக்குப் பின்னால் செல்வதற்கு முன் நீதியின் சூரியன் முழுமையாக உதிக்க முடியாதிருந்தாலும், நாம் ராஜ்யத்தின் விடியலில் இருப்பதற்கான ரூபகாரங்களை கவனிப்பதை தொடருவோமாக. இதன் தொடர்பாக மதுவிலக்கு சட்டத்தைக் கொண்டு வந்த நமது மாகாணங்களில் ஒன்றின் அறிக்கையின் மேல் நமது கவனத்தை செலுத்துகிறோம். செழுமையின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதை அதன் கவர்னர் அறிக்கையிட்டார், கான்சுஸ் (Kansas) என்ற மாகாணம். "வட அமெரிக்காவின்" அறிக்கையின் சுருக்கத்தை கீழே கொடுக்கிறோம்.

**கான்சுஸில் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்**

கான்சுஸ் மாகாணத்தின் கவர்னர் சமீபத்தில் வெளியிட்ட பொது அறிக்கையில் தமது மாகாணத்தின் ஜனங்களின்மேல் யாரும் இரக்கம் காண்பிக்க வேண்டியிராது என்று நம்புவதாக கூறினார். அவர் குறிப்பிட்டதாவது:

"எங்களது மாகாண மற்றும் நாட்டின் பேங்கில் (2,00,000,000) இருபது கோடி டாலர் போட்டியிருக்கிறோம். மிக மோசமான புயல் வந்தாலும் எந்த கஷ்டமில்லாமல் நாங்கள் இருக்க முடியும். இந்த பணத்தை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகள் பேரில் சரிசமமாக பிரித்து போட்டிருக்கிறோம். இது 118 டாலரை ஒவ்வொருவருக்கும் கொடுக்கும். நாட்டின் சொத்தில் ஒவ்வொருவருக்கும் 1684 டாலர் போடப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டில் முப்பத்திரண்டு கோடியே 50 லட்சம் டாலர் மதிப்புள்ள விவசாய பொருட்களை நாங்கள் உற்பத்தி செய்திருக்கிறோம்.

"அதன் 105 நாடுகளில் 87ல் அறிவு வளர்ச்சி குன்றியவர்கள் யாரும் இல்லை; இதில் 54ல் பலவீனமான வர்கள் யாரும் இல்லை; 96 நாடுகளில் குடிகாரர் யாரும் இல்லை; மீதமுள்ள 9 நாடுகளில் கோழியின் பற்களைப் போல அபூர்வமாக இருக்கிறார்கள். 38 நாடுகளின் ஏழ்மையான வீடுகள் காலி செய்யப்பட்டு, அவைகளில் பெரும்பாலானவைகள் கடந்த பத்து ஆண்டுகளின் சிறந்தவைகளாக மாற்றப்பட்டுள்ளன.

"நாட்டின் பரம ஏழையானவர்கள் தொகை 600க்கும் கீழாக குறைக்கப்பட்டிருக்கிறது. 3000த்தில் ஒருவர் பரம ஏழையாக இருக்கிறார். அந்த வகையினர் 25 கோடியே 50 லட்சம் டாலர் சொத்துடையவர்களாக இருக்கிறார்கள். கடந்த ஆண்டில் 4 கோடியே 50 லட்சம் டாலரை வரி செலுத்தும் வருமானமாக சேர்த்திருக்கிறார்கள். நாட்டின் ஜனங்கள் 67 கோடி டாலரை சொத்தாக வைத்திருக்கிறார்கள். இது ஐந்து வருடங்களில் 500% உயர்வாகும்.

"ஒரு சமயத்தில், நீண்ட நாட்களுக்கு முன்பு அல்ல, 53 நாடுகளில் சிறைகள் காலியாக இருந்தன. 65 நாடுகளில் சீர்திருத்தும் சிறைச்சாலையிலும் யாரும் இல்லை. எழுதப்படிக்க தெரியாதவர்கள் முப்பது வருடத்திற்கு முன்பு 49% ஆக இருந்தது. இது தற்காலத்தில் 2% ஆக குறைந்திருக்கிறது. நாட்டில் இது இரண்டாவதாக இருக்கிறது. போஸ்டன் மற்றும் மாசாசூசெட்ஸ் மாகாணங்களைக் (Boston & Massachusetts) காட்டிலும் மூன்றில் இரண்டு பங்கு குறைவு.

"நாட்டின் தட்பவெப்பம் உச்சநிலையில் இருந்தும் அதை தாங்கும் அளவுக்கு அறிவும் உடல்பலமும் அதிகமதிகமாக வளர்ந்து வருகிறது. பலனளிக்காத மண்ணிலிருந்து கடந்த 20 ஆண்டுகளில் 251 கோடியே 79 இலட்சத்தி இரண்டாயிரத்து அறநூற்றி நாற்பது டாலர் மதிப்புள்ள சோளம் மற்றும் கோதுமையை விளைவித்திருக்கிறார்கள்.

"ஆகவே கான்சுஸீன் முக்கிய காரியம் இருப்பதாகக் காணப்படுகிறது.

**"ஏதோ ஒரு காரியம் அதனிடம் இருக்கிறது.**

1881ல் அமுலுக்கு கொண்டு வந்த சட்டத்தின் பதினான்கு வார்த்தைகளில் (ஆங்கிலத்தில்) அந்த காரியம் முக்கியமாக இருந்ததாக நாங்கள் நம்புகிறோம்.

**"இந்த நாட்டில் மதுபான உற்பத்தியும் விற்பனையும் என்றென்றைக்குமாக தடைசெய்யப் படுகிறது."**

"கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக போராடி, சில இடங்களில் தவிர்க்கப்பட்டது. ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக மிகவும் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டது. ஒரு பகுதி விவசாயம் பொய்த்து போனபோது, கான்சுஸ் பெருமையுடன் 20 கோடி பேங்க் கணக்கிற்கு உதவி செய்திருக்கிறார்கள். இதன் மூலம் பரம ஏழைகள், குற்றவாளிகள், பைத்தியங்கள், பலவீனமானவர்களுக்கு நேரம், பலம் மற்றும் பணத்தை செலவிடுவதை இலகுவாக்கினார்கள். இதன் மூலம் இது தமது ஜனங்களுக்கு வாழ்வதற்கு சிறந்த சந்தர்ப்பத்தையும் இறப்பதற்கு குறைவான காரணத்தையும் கொடுக்கிறார்கள்."

# அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள்
# The Two Parts of the Harvest work

தேவனுடைய பிரியமான பிள்ளைகள், பட நாடகத்திற்கும் (Photo Drama) அறுவடையின் கடைசி கால ஊழியத்துக்கும் என்ன சம்பந்தம் என்று ஆச்சரியப்படுகிறார்கள். நாடகத்தைப் பற்றி ஒருவரது அறிவு அதனுடன் அவரது தொடர்போடு கட்டுப்படுத்தப்படுகிறது. சிலர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அதைப்பற்றிய அறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இதை அறிமுகப்படுத்திய பிறகு வந்த அறிக்கைகள் மிகவும் திருப்திகரமாக உள்ளது. சில பகுதிகளில் வகுப்புகள் எண்ணிக்கையில் அதிகமாகி யிருக்கின்றன. சில குறிப்பிட்ட இடங்களில் நண்பர்கள் முதலில் ஏமாற்றத்தை அடைந்தனர். ஆனால் சில ஞாயிறுகளுக்கு பிறகு சத்தியம் ஜனங்களின் மனதில் அதிகமதிகமாக பதியும் போது, அநேகர் திருப்தியான உணவு கிடைக்காத அவர்களது சபையை விட்டு வெளியே வந்து நமது கூட்டங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு நியதியின்படி எங்கெல்லாம் நாடகம் காண்பிக்கப்பட்டதோ அங்கெல்லாம் வகுப்புகள் அதிகமாயின. மிகவும் குறிப்பிடத்தக்க குணமுடையவர்கள் தற்கால சத்திய வெளிச்சத்துக்குள் வந்திருக்கிறார்கள். அதில் சிலர் தவறான அபிப்பிராயத்தினாலும் மூட நம்பிக்கைகளாலும் முன்னர் இருளில் இருந்த கர்த்தருடைய பிள்ளைகள்; மற்றவர்கள் உலகத்தார், இப்படியாக விநியோக வேலை மூலமாக இவர்கள் வேதாகம பாடங்களை ஆராயவும் படிக்கவும் ஆர்வமுள்ளவர்களானார்கள்.

இதேபோல, கடந்த வருடம் 4,20,000 வேதமாணவர்கள் என்ற மாதாந்திர பிரதிகள் (Bible students monthly) விநியோகிக்கப்பட்டன. ஆனால் எந்தவகையிலும் அவைகள் இலட்சக்கணக்கானோரை வகுப்புகளுக்கு கொண்டு வரவில்லை. எனினும் இது நல்ல வேலையை செய்தது; அது ஜனங்களின் மனதில் எழுச்சியை ஏற்படுத்தி, சிந்திக்கும்படி விழிப்பூட்டியது. இது சில திரள் கூட்ட வகுப்பாருக்கு சென்றடைந்தது. மற்றவர்களை நமது இலவச நூல்கள் மூலமாக முழு அர்பணிப்புக்கு நேரடியாக கொண்டு வந்தது. இந்த வேலைகள் எல்லாம் அறுவடைக் குரியவைகளாக காணப்படுகிறது; ஏனெனில் இவைகளெல்லாம் கடந்த காலத்துக்கு உரியவைகள் அல்ல.

## உழுபவன் அறுவடையாளரை முந்துகிறான்

அறுவடை வேலை அதன் முடிவுறும் வேளையில் அதிவேகமாக பெருகுகிறது. அறுவடை வேலை முழுமையாக முடிந்துவிட்டது என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. ஏனெனில் இரண்டு வித வேலைகள் இருக்கிறது – ஒன்று கோதுமை மணிகளைச் சேர்த்தல், மற்றொன்று களைகளை அக்கினியில் சுட்டெரித்தல். கோதுமையை சேகரித்தல் முடிந்துவிட்டது என்று நாம் நினைத்திருக்கலாம். நமது எதிர்பார்ப்புகள் உண்மையாக இருந்தால், புற ஜாதியினர் காலம் முடிவடைவதோடு யாரும் நுழைய முடியாதபடி முற்றும் ஜெயங்கொண்டவர்களின் தொகை நிறைவடைந்திருக்கும். இதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும், அனுமானம் கூடாது. அறுவடையின் பிற்பகுதி களைகளை எரிப்பதும், திரள் கூட்ட வகுப்பாரை விழிக்கச் செய்து அவர்களது விளக்குக்கு தேவையான எண்ணெயை வாங்குவதற்கு தயார்படுத்துவதுமாக இருக்கும். இந்த காரியத்தில் நாம் சரியானபடி கவனம் செலுத்தினால் இந்த நேரம், திரள் கூட்ட வகுப்பார், புத்தியில்லா கன்னிகைகள் எண்ணெயையும் வெளிச்சத்தையும் பெறுகிற நேரமாகவும், புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே சென்றிருக்கிற அல்லது கல்யாணத்துக்கு சீக்கிரத்தில் உள்ளே போகிற நேரமாகவும் இருக்கும். அறுவடையாளரை உழுபவன் முந்துகிறதைப் பற்றி பேசுகிற வேத வாக்கியத்தில் அறுவடையாளர் கர்த்தராகவும் உழுபவன் மகா ஆபத்தின் காலமாகவும் இருப்பதை நாம் ஞாபகப்படுத்த வேண்டும். இந்த ஆபத்தின் காலம் அறுவடை வேலையை முந்திக் கொண்டு அதை முடிவுக்கு கொண்டு வரும். ஆனால் ஆபத்தின் காலம் போய்க்கொண்டிருக்கும். உழுபவன் உழுது கொண்டே போய்க்கொண்டிருப்பான். அதன் பிறகு அறுவடையில் நமது முயற்சிகள் முடிவுக்கு வரும். ஆனால் இந்த காலத்தில் இந்த இருண்ட இரவு வருவதற்கு முன் கர்த்தர் நம் கைகளில் கொடுத்திருக்கும் வேலைகளில் நாம் சரியாக செல்ல வேண்டும். சத்தியமானது திட்டமிடப்பட்டிருப்பது, முதற்பேறானவர்களில் தலைமை யானவர் களாகிய கிறிஸ்துவின் “மணவாட்டியை” பூரணப்படுத்துவதற்காக மாத்திரமல்ல, திரள் கூட்ட வகுப்பாரையும் அபிவிருத்தி செய்வதற்கும் அகில உலகத்திற்கு சாட்சியாக இருப்பதற்கும் ஆகும். இன்னும் சந்தர்ப்பம் இருக்கும்போது சத்திய ஊழிய கிரியைகளை நிறுத்துவதும் நமது பங்கில் எந்த ஒரு அக்கறையின்மையும் நமது மதிப்பீட்டில் ஒரு பெரும் தவறாக இருக்கும்.

## யுகங்களுக்கிடையே அர்ப்பணம் செய்தவர்கள்

இந்த சுவிசேஷ யுகத்தின் கதவு மூடப்படும்போது ஆவிக்குரிய சுபாவத்திற்கு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் இருக்காது என்பது நமது எண்ணமாக இருக்கிறது. திரும்பப் பெறும் காலத்தின் ஆரம்பத்திற்கு முன்னதாக அர்ப்பணத்தின் மூலமாக தேவனிடத்தில் வருகிற எவரும் அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவது ஆவியின் ஜீவியின் சுபாவத்திற்காக அல்ல. ஆனால் பூமிக்குரிய சுபாவத்திற்காக ஆகும். இப்படிப்பட்டவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் (விசுவாசிகள்) வரும் அதே நிலைமைக்கு வருவார்கள். பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகள் வந்தபொழுது எந்த அழைப்பும் இன்னும் திறக்கப்படாமல் இருந்தது. பரம அழைப்பும் திறப்பட்டிருக்கவில்லை. இளைப்பாறுதலின் சந்தர்ப்பமும் திறக்கப்படவில்லை. அவர்களது அர்ப்பணம் எந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்பதை அறியாமலே தங்களை தேவனிடம் கொடுத்தார்கள். அவர்களுக்கு எதிர்கால வாழ்வு கிடைக்கும் என்றும் உலகத்தில் மீந்திருக்கிறவர்களைக் காட்டிலும் “மேலான உயிர்த்தெழுதலை” பெறுவார்கள் என்றும் கூறப்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட நிலைமையில் இவர்களைப் போல எல்லாவற்றையும் விட்டு கர்த்தரிடம் முழு அர்ப்பணம் செய்கிறவர்கள் அவர் வழியில் நடந்து விசுவாசத்துடன் உண்மையாக ஜீவிக்கிறவர்கள், இந்த சுவிசேஷயுகத்தில் முந்தி சென்றவர்களுக்கு இணையாக எண்ணப்படும் சலுகையை பெறக்கூடும் என்பது நமது எண்ணமாக இருக்கிறது. சுவிசேஷ

யுகம் முடிவடைந்த பிறகும், ஆயிர வருட யுகம் ஆரம்பிப்பதற்கு முன்பும் அர்ப்பணம் செய்கிறவர்களை தேவன் ஏன் மறுக்க வேண்டும் என்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்று நாங்கள் அறிகிறோம்.

**களைகளை சுட்டெரித்தல்**

ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்கள் களை வகுப்பாரை சுட்டெரிப்பதில் பங்குபெறுவார்களா என்பது தெளிவற்ற ஒரு எண்ணமாக இந்த காலக்கட்டத்தில் இருக்கிறது. “எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தும் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்.” (சங் 149:9) நியாயத் தீர்ப்புகள் செலுத்தப்படும் பூமியில் ஜீவிக்கிற பரிசுத்தவான்கள், மற்றும் உயிர்த்தெழுப்பப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் அதில் அடங்கியிருப்பார்கள். எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பு செலுத்தப்படும் போது இங்கே ஜீவித்துக் கொண்டிருக்கிற பரிசுத்தவான்கள் எப்படி பங்கு பெறுவார்கள் என்பதை நாம் அறியவில்லை. ஆனால் இது இப்படி இருக்கும் என்ற எண்ணத்தில் எங்கள் கண்களை நாங்கள் திறந்து வைத்திருக்கிறோம்.

களைகளை சுட்டெரிப்பது தற்போது கொஞ்சம் காலம் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக காணப்படும். அதாவது தங்களை கிறிஸ்தவர்களாக வெளிப்படுத்திக் கொண்டும், தங்களை கிறிஸ்தவர்களாக நினைத்துக் கொண்டும் இருக்கின்ற சிலர், கர்த்தருடன் உண்மையான உறவுக்குள் செல்லாமலே கோதுமையாக ஆனவர்கள், களைகளாக சுட்டெரிக்கப்படவேண்டும். அவர்களது பிரதிஷ்டையைப் பற்றி கேள்வி கேட்டால், அவர்கள் “நான் பரிசுத்தவானல்ல, ஆனால் என்னால் முடிந்தவரை என்னுடைய காரியங்களில் நீதியாக நேர்மையாக இருக்க விரும்புகிறேன்” என்று கூறுவார்கள். இப்படியாக அவர்கள் உண்மையான கிறிஸ்தவனாக இருப்பது என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளாதிருப்பதை மெய்ப்பிப்பார்கள்.

ஐரோப்பாவில் இந்த மகா யுத்தம் இதற்குமுன் சிந்தித்தேயிராதபடி ஜனங்களை சிந்திக்கும்படி எழுப்பிக் கொண்டிருக்கிறது. உண்மையான கிறிஸ்தவ தேசங்களையும் அதற்கு எதிரானவைகளையும் வேறுபடுத்திக் காண்பிப்பது இந்த காலம்தான். இதை அநேக ஜனங்கள் ஏறக்குறைய சீக்கிரத்தில் உணர்ந்து கொள்ள வருவார்கள். அதிகமான விகிதாச்சாரத்தில் களைகள் இன்னும் எரிக்கப்படாமல் இருக்கிறது. ஜெர்மனியின் சக்கரவர்த்தி வில்லியம், இங்கிலாந்தின் ராஜா ஜார்ஜ், ரஷ்யாவின் சார் மன்னர், போப் முதலானவர்கள் உண்மையான கிறிஸ்தவத்துக்கும் போலிக்கும் உள்ள வித்தியாசத்தை இன்னும் அறிந்துகொள்ள வில்லை. இதே போலவே மற்ற அநேகர் இருக்கிறார்கள். ஆனால் சுட்டெரிப்பது அதன் முடிவு வரை தொடரும். உண்மையானதும் தப்பறையானதும் எல்லாருக்கும் முழுமையாக வெளிப்படுத்தப்படும்.

--------------------------------

**--2546--**

R 5761

# கொஞ்சம் நேரம்தான்

கொஞ்சம் நேரம்தான்; களைப்படைந்த கால்களுடன் நடைப்பயணம்.
கொஞ்சம் நேரம்தான், வாழ்க்கையின்  புயல்கள் காணும் வேளை.
கொஞ்சம் நேரம்தான்; முள்ளுள்ள பாதையில் தொடர் பயணம்.
கொஞ்சம் நேரம்தான்; பின்னர்தான் ஓர் பரிபூரண நாள் வந்துவிடும்.
கொஞ்சம் நேரம்தான ்;வெளியுலகிற்கே சத்தியம் பரப்புதற்கே.
கொஞ்சம் நேரம்தான்;தேவனுக்கேநாம் சாட்சியாய் வாழ.
கொஞ்சம் நேரம்தான் ; காலம்  வேகமாய் கடக்கிறதே, பறக்கிறதே.
கொஞ்சம் நேரம்தான்; பூமியின் வேதனையாவும் கடந்தே போகும்,
கொஞ்சம் நேரம்தான்; நம்மால் இயன்ற அளவிற்கு சிறப்பாய் செய்வோம்,
கொஞ்சம் நேரம்தான்; வாக்களிக்கப்பட்ட இளைப்பாறுதல் வந்துவிடும்,
கொஞ்சம் நேரம்தான்; எத்தனை ஆசீர்வாத வார்த்தைகள் இதுவே.
கொஞ்சம் நேரம்தான்; பரிபூரணமாய் கழிப்பேருவகை வந்திடுமே.

R 5762/(அ) 5749/250/267/510.

## கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்
அத்திமரம் துளிர் விடாமமல்போனாலும்,
திராட்சைச் செடி பழம்கொடாமற்போனாலும்,
ஒலிவ மரம் பலன் அற்றுப்போனாலும்,
வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும்,
கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும்,
தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும்,
நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்,
என் தேவனுக்குள் களிகூருவேன்.
என் விசுவாசம் எனக்குள் வெற்றி சிறக்கும்,
பூமி முழுவதும் யுத்தக்களறியாய் மாறிப்போனாலும்,
சமாதானப் புறா பூமியைவிட்டே பறந்து சென்றாலும்,
தனக்குள்ளே அடக்கம் பண்ணப்பட்டவர்களைத் தாங்கமாட்டாமல்
பூமியும் கடலும் பெருமூச்சுவிட்டே கதறினாலும்,
பெருங்குழப்பம் சூழ்ந்துகொண்ட அந்தப்பொழுதின் மத்தியிலே
நான் கர்த்தருக்குள் மகிழ்ந்து புகழுவேன்,
நான் காண ஏங்கும் காட்சிவெகு தொலைவிலிருந்தாலும்,
காத்திருக்கும் நேரம் நீண்டுகொண்டேபோனாலும்,

எதிர்மறையான கருத்துக்களால் என் விசுவாசம்
கடுமையாயும் மூர்க்கமாயும் சோதிக்கப்பட்டபோதிலும்,
நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்,
என் தேவனுக்குள் களிகூருவேன்.
அவர் என்னைக்கொன்றுபோட்டாலும்,
என் இருதயத்தை நொறுங்கும்படி செய்திட்டாலும்,
அவருக்குள் நான் விசுவாசமாயிருப்பேன்,
தம் அளவிடமுடியாத ஞானத்தினாலே அன்பினாலே,
நான் செல்லவேண்டிய பாதையை வகுத்தவர் அவரே,
என் இறக்கின்ற மூச்சும் அவரை எண்ணிக் களிகூரும்,
நான் உயிரோடு விழிக்கின்ற காலையிலே,
அவரை இன்னும் போற்றிப் பாடித் துதிடுவேன்.

R 5767

## The Miraculous Birth of Jesus
## இயேசுவின் அற்புதமான பிறப்பு

வேதாகமம் போதிக்கிற இயேசுவின் அற்புதமான பிறப்பைக் குறித்து மனிதர் கேள்வி கேட்பது விநோதமானது அல்ல. வால்டேர், பெய்னே, இங்கர்சால் இன்னும் மற்றவர்கள் அதை மறுத்தார்கள். தற்காலத்தில் ரெவரண்டு டாக்டர் ஏகெடு (**Rev. Dr. Aked**) இன்னும் மற்றவர்களும் இதே விவாவதத்தை எடுத்துக் கொள்ளும் உரிமையை நாம் கேட்க முடியாது. நாம் சுதந்திர நாட்டில் வாழ்கிறோம். நமது நாளில் கபடமின்மை யாரையும் கழு மரத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. நாம் இந்த சுதந்திரத்தில் களி கூறுகிறோம்.

ஆனால் கிறிஸ்தவ மதத்தின் மிகவும் அடிப்படையானதை மறுதளித்துக் கொண்டு டாக்டர் ஏகெடு இன்றும் கிறிஸ்தவ சபையில் பாஸ்டராகவும், தன்னை கிறிஸ்தவன் என்று கூறிக் கொண்டும் இருக்கிறார் என்பதில் நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். அவர் தனது அவிசுவாசத்தை வெளியரங்கமாக உறுதிப்படுத்திய பிறகும் அவர் சான்பிரான் சிஸ்கோவில் சபை ஐக்கிய ஸ்தாபனத்தில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமது ஆச்சரியத்தை மேலும் அதிகப்படுத்துகிறது.

இயேசு அதிசயத்தக்க விதமாக பிறக்கவில்லை என்று ஏற்றுக் கொள்கிற 75% க்கும் (78) மேலாக ஓட்டு போட்டதின் பொருளை நினைத்துப்பாருங்கள்! கால்பாகத்திற்கும் கீழானவர்கள் (22) தான் இந்த ஸ்தாபனத்தில் கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை போதனையை விசுவாசிக்கிறார்கள்!

இந்த மெத்த படித்த பெரிய கனவான்களின் ஆட்சேபனையை கேட்கும்போது, நமது காலத்தில் இரண்டு விதமான கிறிஸ்தவ மதங்கள் இருக்கின்றன என்று நீங்கள் உணர வேண்டும் என்று பாஸ்டர் ரசல் கூறுகிறார். அனைத்து கல்லூரிகளாலும் ஆதரிக்கப்படுகிற பெரிய, புதிய ஒன்றை சார்ந்தவர்களாக நாம் இருக்கிறோம். ஆகவே கிறிஸ்தவன் என்ற பெயருக்கு முதல் உரிமையை பெற்றிருக்கிறோம். தெய்வீக தண்டனையால் மனித சீரழிவு என்ற போதனையை, பழைய கருத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்த தண்டனை ஒரு பரிபூரண பாவமில்லாத மீட்பரின் மரணத்தினால் சந்திக்கப்படவேண்டும். "நவீனவாதிகளாகிய" நாம் இன்னும் கிறிஸ்துவை ஒரு பெரிய போதகராக பற்றிக் கொண்டிருக்கிறோம். ஒரு இரட்சகராக அல்ல, உங்கள் பழைய கருத்து தனிப்பட்ட பாவத்தைப் பற்றியது; அவர்களது குணமடைதல் நித்திய ஜீவனுக்கும் பூரணத்திற்கும் படிப்படியாக முன்னேறுதல்–இது தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே.

### சபை ஊழியத்தின் மேல் உள்ள பொறுப்பு

கிறிஸ்தவ மதத்தை பகுத்துணர ஒரே திட்டமான அளவு எண்ணிக்கைகளும் செல்வாக்கும் ஆக இருப்பதால், இந்த முக்கிய விஷயத்தை இணங்கச் செய்ய நாம் வற்புறுத்தப்படுகிறோம். ஆனால் அவர்கள் அல்ல. கிறிஸ்தவ மதமானது இயேசுவினாலும் அப்போஸ்தலர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது. சிலர் அல்லது பலரது அவிசுவாசம் கிறிஸ்தவ மதத்தை மாற்ற முடியாது. நமது கருத்தை நாம் நிரூபணம் செய்தால், கிறிஸ்தவ மதத்தில் கல்லூரிகளில் உள்ள 78 விசுவாசிகள் (3/4) கிறிஸ்தவ பெயர்களை தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், கிறிஸ்தவ சபைகளில் பாஸ்டர் பதவிகளை வைத்திருப்பதையும் அவர்கள் தவறான நிறத்தில் பயணிப்பதையும் உணருவார்கள். அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது அவர்களது சபைக்கு புதுப்பெயர் "மனிதாபிமானிகள்" போன்றதை வைத்துக் கொள்ள வேண்டும்.

பொன்னான பிரமாணம் போன்ற இயேசுவின் சில போதனைகளை மட்டும் ஏற்றுக் கொண்டு மற்றவைகளை மறுதளிப்பதின் மூலம் ஒருவன் கிறிஸ்தவ மதத்தின் பெயருக்கு உரிமை கொண்டாட முடியாது. பிளாட்டோ, கன்பூசியஸ் மற்றும் மற்ற ஞானிகள் நாம் அங்கீகரித்த சில போதனைகளை கூறுகிறார்கள். அவர்களது பெயர்களை ஏன் பின்பற்றவில்லை? இதற்கு காரணம் நமது காலத்தில் இது ஒரு பிரபலமாக இராததினாலா?

டாக்டர் ஏகெடு (Dr.Aked) தெய்வீக வல்லமையினால் தனது கன்னி மனைவி பெற்ற மகன் இயேசுவை வளர்ப்புப் பிள்ளையாக தத்தெடுத்துக் கொண்ட யேசேப்பின் வம்ச வரலாறை பரிசுத்த மத்தேயு கொடுப்பதாக ஏற்றுக் கொள்கிறார். பரிசுத்த லூக்கா இயேசுவின் தாயாகிய மரியாளின் வம்ச வரலாறை கொடுப்பதாக ஏற்றுக் கொள்கிறார். மேலும் பரிசுத்த யோவானின் சுவிசேஷம் இயேசு மனிதனாக வரும் முன் இருந்த நிலைமையை கூறுவதையும் ஏற்றுக் கொள்கிறார்.

இயேசு நமது தெய்வீக பிறப்பைப் குறித்து கூறுவதை டாக்டர் ஏகெடு மறுக்கிறார். பரிசுத்த பேதுரு இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்று தைரியமாக அறிவிக்கிறார். பரிசுத்த பவுல் தனது நிரூபங்களில் இயேசு இயற்கைக்கு அப்பாற்பட்டவராக இருந்தார் என்பதை போதிக்கவில்லை என்று மிகவும் களிப்புடன் குறிப்பிடுகிறார். யாராவது டாக்டர் ஏகெடு அவர்களின் அறிக்கையை படித்தால், அவர் இயேசு, பரிசுத்த பவுல், பரிசுத்த பேதுரு ஆகியோரின் போதனையை ஏற்றுக் கொள்கிறார் என்றும், இயேசுவின் அற்புதமாக பிறப்பைக் குறித்து அவர்கள் எழுதியிருந்தால் அவர் மனப்பூர்வமான விசுவாசியாகவும் ஒரு பரிந்து பேசுகிறவராயும் இருந்திருப்பார் என்று எண்ணுவார்கள். நாம் பார்க்கலாம்! நாம் டாக்டர் ஏகெடுக்கும் அவரது 78 ஆதரவாளர்களுக்கும் அவர்களது தவறுக்கு நிரூபணத்தைக் கொடுத்து வேதாகமத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வோம். "அன்பு சகலத்தையும் நம்பும்."

வேதாகமம் முழுமையாக நிற்கும் அல்லது விழும், இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளால் ஏற்படுத்தப்பட்ட அதன் இரட்சிப்பின் திட்டம், கொஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கொஞ்சம் மறுக்க முடியாது. இயேசு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக, ஒரு விசேஷித்த பிறப்பை

பெற்றிருந்தார் என்று இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் போதித்திருந்து இது தவறாக இருந்தால் அவர்கள் கெட்ட வஞ்சகர்களாக இருந்திருப்பார்கள். அப்படியிருந்தால் அவர்களது ஒரு வார்த்தை கூட ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது நம்பப்படவோ கூடாது. இயேசுவை பெரிய போதகர் என்று அழைத்துக் கொண்டு, அவரது அடிப்படை போதகமே தவறானது என்று கூறுவது ஒன்றுக்கொன்று முரணாகவும் தப்பறையின் மேல் அனுதாபம் கொள்வதாகவும் இருக்கும்.

### பரிசுத்த பேதுருவின் சாட்சியம்

இயேசுவின் போதனை பெரும்பாலும் தூண்டுதலின் மூலமாகவே ஆகும். "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று இயேசு தமது சீஷர்களிடம் கேட்பதற்கு முன்பு ஒரு வேளை இரண்டு வருடங்களாக தமது சீஷர்களுடன் அற்புதங்களைச் செய்து கொண்டு இருந்தார். "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு அறிக்கையிட்டபோது, இயேசு, "மாம்சமும் இரத்தமும் இதை வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று பதிலளித்தார். மத்தேயு 16:15-17

பரிசுத்த பேதுரு, இயேசுவை யோசேப்பின் குமாரன் என்று அல்ல, அவர் தேவனுடைய குமாரன் என்று தனது விசுவாசத்தை அறிக்கையிடவில்லையா? இயேசு இதை அங்கீகரித்து, அவர் பூமிக்குரிய பிதாவை குறிப்பிடாமல், பரலோக பிதாவை குறிப்பிடவில்லையா?

"ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்று இயேசு அறிவித்தபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்? தூண்டுதலின் மூலமாக மனிதனாக வருவதற்கு முன்னிருந்த நிலைமையை கூறினார் அல்லது அவர் வஞ்சித்தார்! அதேபோல அவர் பிதாவிடம், "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை மகிமைப்படுத்தும்" என்று ஜெபித்தார். (யோவான் 8.58; 17:5) இதற்கு முன்னதாக அவர் இல்லாதிருந்தால், ஆனால் மற்றவர்களைப் போல அவர் பிறந்திருந்தால் அவரது வார்த்தைகள் வஞ்சகமானவைகளாக இருந்திருக்கும். அவர் பெரிய போதகரா அல்லது அவர் பெரிய வஞ்சகரா?

மறுபடியும் இயேசு அவரது சீஷர்களிடம் அவர் முன்பிருந்த இடத்திற்கு மேலே எழுந்தருளி போவதைப் பற்றி கூறினார். இதற்கு முன் அவர் இருந்திருக்கவில்லையென்றால், அவருக்கு விசேஷித்த பிறப்பு இருந்திருக்கவில்லையென்றால், இந்த வார்த்தைகளை வஞ்சகம் என்று புரிந்துகொள்ளாமல் வேறு எப்படி புரிந்து கொள்ள முடியும்? இதே போலவே இயேசு தம்மை, "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று குறிப்பிட்டார். (யோவான் 6:62, 32-35,41)

இயேசு நிச்சயமாக அதிசயத்தக்க விதமாக பிறந்திருக்க வேண்டும். இல்லையென்றால் எல்லா வஞ்சகர்களைக் காட்டிலும் மகா, மிகவும் வெற்றிகரமான வஞ்சகராக இருந்திருக்க வேண்டும். ஆகையால் எல்லாரைக் காட்டிலும் மிகவும் மோசமான வஞ்சகராக இருந்திருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் அவரது அறிக்கையை எடுத்துக் கொள்ளுவோம். நடுவிலே வேறு எதுவும் இருக்காது.

### இந்த காரியத்தைக் குறித்த பரிசுத்த பவுலின் கருத்து

இயேசு மற்றும் பேதுருவிடமிருந்து நாம் கேட்ட பிறகு நாம் பரிசுத்த பவுலிடமிருந்து கேட்போம். இயேசு, "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" என்றும் "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான.........சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" என்று பரிசுத்த பவுல் அறிக்கையிட்டதின் முக்கியத்துவம் என்ன? (கொலோசெயர் 1:15-17)அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகள் இயேசு மற்றவர்களைப் போலவே ஜீவனை பெற்றார், அவர் யோசேப்பின் மகனாக இருந்தார் என்பதற்கு இசைவாக நிச்சயமாக இல்லை.

மறுபடியும் அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: "நம்முடைய கர்த்தராகிய இயேசு ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நம் நிமித்தம் தரித்திரரானார்." (2கொரிந்தியர் 8:9) மறுபடியும் அவர் கூறி அறிவிக்கிறதாவது: "அவர் தேவகுமாரனாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருக்க எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார்." (பிலிப்பியர் 2:6,7)

இன்னும், இயேசு "பரிசுத்தமும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" ஆக இருந்தார் என்று பவுல் அறிவித்ததின் பொருள் என்ன? (எபிரேயர் 7:26) இயேசு யோசேப்பின் குமாரனாயிருந்தால் பாவிகளுக்கு விலகினவருமாயிருக்கமாட்டார். அவர் மற்ற அனைவரையும் போல இருந்து அவரும் ஒரு இரட்சகர் தேவைப்படுகிறவராகவும் இருந்திருப்பார்.

### பரிசுத்த யோவானின் அறிக்கைகள்

மனிதனின் இரட்சகராக உலகத்திற்கு பிதாவானவரால் அனுப்பப்பட்ட தேவனுடைய குமாரனாக அவர் இருந்தார் என்ற இயேசுவின் அறிக்கையை ஆதி சபையில் அனைவரும் விசுவாசித்தார்கள். (யோவான் 3:17) உண்மையிலேயே ஆண்டவரின் போதனைகள் அனைத்தும் விசேஷமாக யூதர்களுக்காகவே இருந்தது. ஏனெனில் இயேசு தம்மை தேவனுடைய குமாரனென்று கூறிக்கொண்டதால் அவர் யேகோவா தேவனுக்கு போட்டியாக கனம், கவுரவம் மற்றும் மகிமையில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டார் என்று யூதர்கள் அறிவித்தார்கள். இதற்கு இயேசு கூறின பதிலாவது: "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும் உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணம் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" (யோவான் 10:36)

பரிசுத்த யோவானின் சுவிசேஷம் மற்ற சுவிசேஷங்களுக்கு பிறகு எழுதப்பட்டபடியால், இயேசுவின் அற்புதமான பிறப்பைப்

பற்றி எழுத அவசியமில்லாமல் போய்விட்டது. இருந்தாலும் இரட்சகரின் மனிதனாக வருவதற்கு முன் இருந்த நிலைமையைப் பற்றி அவர் மூலமாக தேவன் ஒரு சிறுகுறிப்பை கொடுப்பது சிறந்த முறையாக இருந்தது. அப்போஸ்தலரின் வார்த்தைகளை நன்கு கவனியுங்கள்:

“ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. . . . . அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது”. (யோவான் 1:1–14)

**மீட்கும் பொருள் என்ற போதனையின் அடிப்படை**

இயேசுவின் கன்னி பிறப்பின் போதனை இல்லாமல் வேதாகம சாஸ்திரத்தை ஒரு கணம் கூட சேர்த்து வைத்திருக்க முடியாது. ஆதாமின் பாவத்தை தொடர்ந்து தெய்வீக தீர்ப்பு ஒரு மரண தண்டனையாக இருந்தது என்று வேதாகமம் கூறுகிறது. அந்த தெய்வீக தீர்ப்பின் அடிப்படை என்னவென்றால் பாவிகள் நித்திய ஜீவனுக்கு பாத்திரர் அல்ல என்பதே ஆகும். ஆதாமிலிருந்து இந்த நாள் வரை ஆறாயிர வருட உலக சரித்திரம் பூரணத்தை திரும்ப பெற முடியவில்லை என்பதையும் பாவத்தின் சாபத்தையும், “நீ சாகவே, சாவாய்” என்கிற மரண தண்டனையையும் தடுக்க முடியவில்லை என்பதையும் மெய்ப்பிக்கிறது. (ஆதியாகமம் 2:17, மார்ஜின்)

இந்த மரண தண்டனையை தேவன் காரணத்தோடு ஏற்பாடு செய்தார் என்பதே வேத போதனை, ஏனெனில் அப்பொழுது தான் இயேசுவின் மரணத்தை அவசியமாக்க முடியும். ஆகையால் பரிசுத்த பவுல் அறிவிக்கிறதாவது: “மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்.” (1கொரிந்தியர் 15:21–23) அதாவது வேத வசனங்களின்படி தேவன் ஒரு பாவமில்லாத இரட்சகரை ஏற்பாடு செய்யாதிருந்தால், அந்த இரட்சகர் நமது பாவங்களுக்காக மரிக்காதிருந்தால், நமது நீதிமானாக்கப் படுதலுக்காக அவர் மரித்தோரிலிருந்து எழுந்திராவிட்டால், மனுக்குலத்திற்கு எதிர்கால வாழ்வு இருந்திருக்காது. மனுக்குலத்தின் மரணம் மிருகங்களைப் போல நம்பிக்கையற்ற ஒன்றாகவே இருந்திருக்கும். உயிர்த்தெழுதலே இருந்திருக்காது. மரணமானது நித்திய நித்திரையாக இருந்திருக்கும்.

பரிசுத்த பவுல், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் அனைத்து விசுவாசமும், அனைத்து நம்பிக்கையும் அனைத்து பிரசங்கமும் வீணாயிருக்கும் என்று அறிவித்து இந்த கருத்தை முக்கியப்படுத்திக் கூறுகிறார். (1 கொரிந்தியர் 15:13,14) மனுக்குலம் அனைத்தும் மீறுதலினால் உருக்குலைந்து போயிருக்கிறது என்றும் நமது தாய்மார்கள் நம்மை பாவத்தில் கர்ப்பந்தரித்தார்கள் என்றும் வேதவாக்கியங்கள் அறிவிப்பதை யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். நமது பிதாவாகிய ஆதாமும் தாயாகிய ஏவாளும் அவர்களது பிள்ளைகளாகிய நமக்கு அபூரண சிந்தையையும் சரீரத்தையும் பாவம் நிறைந்த மனோபாவத்தையும் பரம்பரை சொத்தாக கொடுத்தார்கள். கிறிஸ்து, முதல் ஆதாமின் மீறுதலுக்கு நல்லது செய்யவும், அதனிமித்தம் அவர் இரண்டாம் ஆதாமாக இருந்து வெற்றிகரமாக, கீழ்ப்படிதலான விசுவாசத்தை அப்பியாசப்படுத்துகிற அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிப்பதை தேவன் ஏற்பாடு செய்தார்.

**இளைப்பாறுதலின் போதனையின் அடிப்படை**

கிறிஸ்து மூலமாக நித்திய ஜீவன் முதலாவது கொடுக்கப்படுதல் கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் சிலரே கேட்கிற காதுகளையும் புரிந்து கொள்ளுகிற இருதயத்தையும் உடையவர்களாக இருக்கிறார்கள். இந்த சிலருக்கு உலகத்தைவிட்டு வெளியேறவும், இயேசு அடைந்திருக்கிற கனம், மகிமை மற்றும் சாகாமையில் இணையும்படி ஆகிறவர்களாகவும் அழைப்பு இப்போது வருகிறது. இயேசு தேவனுடைய சித்தத்துக்கு அதாவது பூமிக்கு வருவதிலும், அவரது பூமிக்குரிய ஊழியத்தில் சோதனைகளை சகிப்பதிலும் கடைசியாக பலியின் மரணத்தை அடைவதிலும் கீழ்ப்படிந்ததின் பலனாக அவர் தற்போது பெற்றிருக்கிற மகிமையை, “தூதர்கள், கர்த்தத்துவங்கள் மற்றும் அதிகாரத்துக்கும் மேலாக, உன்னதங்களில் தேவனுடைய வலது பாரிசத்தை ஒரு பரிசாக அடைந்தார். பரிசுத்த பவுல் அவரைப்பற்றி எழுதுகிறதாவது: “அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.” (எபிரேயர் 2:2) கேட்கிற காதுள்ளவர்கள் அனைவருக்கும் இந்த சுவிசேஷ யுகத்தில் அழைப்பு கொடுக்கப்படுவது, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றவும், அவரோடு உடன் சுதந்தரராகவும், அவரது மேசியாவின் ராஜ்யத்திலும் அவரது பரலோக மகிமையிலும் பங்குள்ளவர்களாக ஆவதற்குமாகும்.

சபையினர் அனைவரும் கூட்டிச்சேர்க்கப்படும்போது, “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று நாம் ஜெபிக்கிற மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். ஆயிரம் ஆண்டுகள் கிறிஸ்துவும் அவரது மகிமையடைந்த சபையும் மனுக்குலத்தை மானிட பூரணத்திற்கு சரீர பிரகாரமாகவும் சிந்தையின் பிரகாரமாகவும் நீதியின்படியும் உயர்த்தி ஆசீர்வதிப்பார்கள். விசேஷித்த பிறப்பின் புண்ணியத்தால், “பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாகிய” இயேசுவின் பலியின் மரணத்தால் அனைவரும் நித்திய ஜீவனை அடையும்படி உறுதி பண்ணப்படும்.

# R 5768 Apostolic Injunction Never so Significant

## அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை

"இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத தரித்துக்கொள்வோம்." ரோமர் 13:12

வேதாகம காலக்கணக்கை மிகவும் கவனத்துடன் ஆராய்வதிலிருந்து, யேகோவா தேவன் பூமியை மனிதனுக்காக தயார் செய்து, கடைசியில் மனிதனை சிருஷ்டித்த அந்த ஆறு மகா நாட்கள் ஒவ்வொன்றும் ஏழாயிரம் வருடங்கள் கொண்டது என்று காணப்படுகிறது. மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட பிறகு, தேவன் பூமியைப் பற்றின "அவரது கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தார்." அவர் ஓய்ந்திருந்த காலம் மகா ஏழாவது நாளாக ஆரம்பித்து இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஏழாம் நாளும் ஏழாயிரம் வருடமாக இருக்கிறது. அதன் முடிவில், பூமியை தயார்படுத்த ஆரம்பத்திலிருந்து 49000 வருடம் கழித்து அது பூமியின் மகிமையான யூபிலியை கட்டியம் கூறுவதாக இருக்கும்.

யேகோவா தேவனின் மகா ஓய்வு நாள் மனிதனின் கிரியை செய்யும் வாரமாக, ஒவ்வொரு நாளும் ஆயிரம் வருடத்தை உடையதாக இருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் நமது பாடத்தின் தலைப்பு வசனத்தை எழுதும்போது இதில் நாலாயிரம் வருடத்திற்கு மேலாக கடந்து விட்டது. அவர்கள் ஐந்தாவது நாளில் இருந்தார்கள். நடைமுறையில் இந்தக்காலம் அனைத்தும், மனிதனின் விழுகையால், பாவம், இருள், மரணத்தின் ஆளுகையாக இருந்தது. ஆகையால் பரிசுத்த பவுல், பின்னோக்கிப் பார்த்து இந்த இருளான மகா இரவு அதிகமாக கடந்து பகலானது சமீபமாயிருந்தது என்று சொல்லக் கூடும். பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்கள் மூலமாகவும் கர்த்தரிடமிருந்து பெற்றிருந்த வெளிப்படுத்துதல் மூலமாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனிதனுக்காக கொடுத்த பலியினால், மனிதனின் மகா வாரத்தின் ஏழாம் நாளில் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையின் ஒரு மகிமையான நாள் அவருக்கு உறுதி பண்ணப்பட்டது. அப்போஸ்தலர் இங்கே பேசுவது இந்த மகிமையான ஓய்வுநாளைப்பற்றித் தான்.

நமது ஆதி பெற்றோரின் விழுகையிலிருந்து நீண்ட காலத்தின் பாதிபகுதி, மனுக்குலத்தின் பிதாவின் கீழ்ப்படியாமைக்கு கொடுக்கப்பட்ட மரண சாபத்திலிருந்து மனிதனுடைய விடுதலையைப் பற்றி மிகவும் மங்கலான வெளிச்சமே இருந்தது. எதிர்காலத்தில் மனுக்குலத்திற்காக ஏதாவது தேவன் செய்வார் என்பது பற்றிய ஒரு வாக்குத்தத்தைப்பற்றிய ஒரு சிறு வெளிச்சம் மட்டுமே இருந்தது. மனிதனுக்கு வீழ்ச்சியை கொண்டு வந்த சர்ப்பத்தின் தலை ஸ்திரீயின் வித்தால் நசுக்கப்படும் என்றும், ஆனால் அது வித்தின் குதிங்காலை நசுக்கும் என்றும் ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. பிறகு தேவன், ஆதாம் ஏவாளின் நிர்வாணத்தை பலியிடப்பட்ட மிருகங்களின் தோலினால் மூடியது, ஸ்திரீயின் வித்தாகிய அறியப்படாத ஒரு இரட்சகரின் மரணத்தினால் எதிர்கால மூடுதல் ஒன்று சுட்டிக்காட்டப்பட்டது. பிற்பாடு ஆபேலின் மிருகபலியை ஏற்றுக் கொண்டதை தேவன் வெளிப்படுத்தினார். அதன் பிறகு ஏனோக்கின் தீர்க்கதரிசனம் வந்தது. (யூதா 14–16) இதற்கும் பிறகு ஆபிரகாமின் வித்தினால் பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் வந்தது.

அதன்பிறகு ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் அம்சங்கள் எபிரேய ஜனங்கள் மூலமாக படிப்படியாக செயல்பட்டது. அவர்கள் பாத்திரர் என்பதை நிரூபித்தால். அவர்கள் மற்ற எல்லா ஜாதிகளுக்கும் ஜனங்களுக்கும் வெளிச்சம் காண்பிக்கிற தேசமாக ஆக்குவதற்காக செயல்பட்டது. நல்லொழுக்கத்துக்குரிய அனைத்து அனுபவங்களையும் இஸ்ரயேலர்கள் பெற்றிருந்தும், இப்படிப்பட்ட விசேஷித்த தெய்வீக புத்திமதிகளுக்கு கீழாக இருந்தும், நமது கர்த்தராகிய இயேசு வந்தபோது, அவரை தேவனுடைய மேசியாவாக ஏற்றுக் கொள்ள ஒரு தேசமாக முற்றிலுமாக தயாரற்ற நிலைமையில் இருந்தார்கள். அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள். எனினும் மற்ற தேசத்தாரைக் காட்டிலும் முன்னேறியிருந்தார்கள். தேவன் மற்ற ஜாதியாருக்கு புத்திமதி ஏதும் சொன்னதில்லை. ஆனால் இஸ்ரயேலருக்கு தீர்க்கதரிசிகளையும், பிரமாணங்கள் முதலானவைகளை கொடுத்திருந்தார். (ஆமோஸ் 3:2) ஆனால் விசேஷித்த விதமாக சலுகை பெற்ற நாடு ஒளிக்கு முற்றிலும் தயாராயில்லாத போது, அவர்களில் சிலர் இஸ்ரயேலரால் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவாகவும் தேவனால் அனுப்பப்பட்டவராகவும் அவரை ஏற்றுக்கொள்ள தயாராயிருந்தார்கள். இவர்கள் தான் "உத்தம இஸ்ரயேலர்கள்."

### மணவாட்டி வகுப்பாரின் அழைப்பு

"அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை." கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட பொழுது, யோவான் ஸ்நானன் அவரது ஊழியத்தை முடித்த பிறகும், நமது கர்த்தரின் அவர்களிடையேயான மூன்றரை வருட ஊழியத்திற்கு பிறகும் ஐந்நூறுக்கும் கொஞ்சம் கூடுதலானவர்களே இயேசுவின் சீஷர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் ஆகியிருந்தனர். இன்னும் பெந்தெகொஸ்தே நாளிலும் அதற்கு பிறகும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் விழித்துக் கொண்டு, சத்திய வெளிச்சத்திற்குள் வந்து சுவிசேஷ செய்தியை ஏற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியை பெற்றார்கள். நம்மால் முடிந்த மதிப்பீட்டின்படி ஏறக்குறைய இருபத்தி ஐந்தாயிரம் பேர் இந்த மனமாற்றத்தை பெற்றார்கள். இந்த சிறிய நாட்டில் இவ்வளவு பேர் மேசியாவை ஏற்றுக் கொண்டவர்களாக காணப்பட்டது ஒரு ஆச்சரியமான காரியம் ஆகும். வேறு எந்த நாடும் இப்படிப்பட்ட நல்ல காரியத்தை செய்திருக்க முடியாது. புறஜாதியாரிலிருந்து 144000 பேர்களில் மீதமுள்ளவர்களை தெரிந்துகொள்ள 1800 வருடங்களுக்கு மேலாக தேவைப்படுகிறது என்பது சரித்திரத்தின் வாயிலாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் அவரோடு கூட இணைவதற்கு ஒரு மணவாட்டியை தெரிந்து கொள்ளுவதற்கான சுவிசேஷ அழைப்பு அந்த சமயத்தில் செய்தியாக கொடுக்கப்பட்டது. இது எல்லாருக்காகவும் திட்டமிடப்படவில்லை. கேட்கும்படியான காது உள்ளவர்களுக்கும் உணரும்படியான மனதுள்ளவர்களுக்கும் மட்டுமே அது திட்டமிடப்பட்டது. அப்போஸ்தலர்களின் காலத்தில் நம்மை வைத்துப்பார்த்தோமானால், அவர்களது வரக்கூடியதுமான மகிமைக்கு தயார்படுத்திக் கொள்வதையும், இந்த கனத்துக்குரிய கூட்டத்தாரின் முன் தீர்மானிக்கப்பட்ட தொகை சீக்கிரத்தில் நிறைவடையும் என்பதைப் பற்றிய எண்ணத்திலும் இருந்ததை நாம் நினைக்கக் கூடும். இந்த ஆயிரக்கணக்கானோர் பலஸ்தீனாவிலும், மற்ற தேசங்களிலிருந்து யூதர்களும், இன்னும் பிற்காலங்களில் புறஜாதிகளிலுமிருந்தும் சேர்க்கப்பட்டு கிறிஸ்துவின் "மணவாட்டியாகிய" சிறுமந்தையை உருவாக்குவார்கள் என்று அப்போஸ்தலர்கள் நினைத்திருக்கக்கூடும். ஆகையால் அப்போஸ்தலர்கள் இராஜ்யம் சமீபத்தில் இருப்பதாகவே தொடர்ந்து பேசி வந்தார்கள். அது உடனடியாக நிகழக்கூடியது என்று எண்ணி, ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தார்கள்.

## நமது காலம் வரை தெளிவான காலக்கணக்கு இல்லை

ஆனால் அப்போஸ்தலர் பவுல் குறிப்பிட்ட வேத வாக்கியங்கள் இன்னும் நிறைவேறவில்லை என்றும், கர்த்தரின் மகா நாள் வருவதற்கு முன்பதாக சபையில் ஒரு மகா விசுவாச துரோகம் நேரிட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். ஆதிகால சபை ஆதாமிலிருந்து எத்தனை வருடங்கள் ஆகியிருக்கிறது என்பதை கணக்கிட குறிப்பிட்ட முறைமை இல்லாதிருந்திருக்கலாம். நாம் இப்பொழுது பெற்றிருக்கிறது போல வருடங்களை எண்ணுதல் ஒரு நவீன காரியமாக இருக்கிறது. பழங்காலங்களில் ஒவ்வொரு தேசத்தாரும் தங்களது சொந்த காலக்கணக்கைப் பெற்றிருந்தார்கள். அவர்களது ராஜ்யபாரம் எப்பொழுது ஆரம்பித்தது அல்லது எவ்வளவு காலம் நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் அவர்கள் கணக்கிட்டனர். நேபுகாத் நேச்சார், கோரேஸ் முதலானவர்களின் முதலாம் ஆண்டிலிருந்து இவ்வளவு வருடங்கள் கழித்து ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடந்தது போன்றவைகள் கணக்கிடப்பட்டன.

இஸ்ரயேலரிடமும் இப்படியே இருந்தது. தாவீது அல்லது எசேக்கியா முதலானோருடைய இந்தந்த வருடத்தில் இந்தந்த நிகழ்வு நடந்தது என்று அவர்கள் சொல்வார்கள். ஆனால் இதையெல்லாம் ஒன்றாக இணைத்து ஒரு சரியான காலக்கணக்கு சங்கிலியை பெறுவது மிகவும் கடினமான காரியம். இந்த காலக்கணக்கு சங்கிலியில் இணைப்பு இல்லாததை நமது கர்த்தர் புதிய ஏற்பாட்டில் கொடுத்து குறித்த காலத்தில் அதைக் கவனித்து இணைக்கும்படி செய்திருக்கிறார். அவர்களைக் காட்டிலும் நாம் தற்போது ஒவ்வொரு வகையிலும் அதிக அனுகூலத்தைப் பெற்றிருக்கிறோம். எபிரேயு வேதாகமம் தோல் சுருளில் எழுதப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்பட்டன. அவை பெரிய சுருள்களில் எழுதப்பட்டதால் அதை கையாளுவது கடினமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்கள் முதலானவைகளை ஒருவர் படிக்க விரும்பினால் அவர் அந்த தோல் சுருளை இப்படியும் அப்படியுமாக சுற்ற வேண்டும். தற்காலத்தில் வேதாகமம் அழகாக அச்சிடப்பட்டுள்ளது மாத்திரமல்ல, அதை பக்கம் பக்கமாக திருப்ப சௌகரியமான குறிகளையும் பெற்றுள்ளது. காலக்கணக்கானது ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து இந்த வருடம் வரை இணைக்கக் கூடிய தெளிவான சங்கிலியை நமக்கு தருகிறது.

யூதர்கள் அன்னோ முண்டி (Anno Mundi) என்கிற உலக வருடத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதும் உண்மையாக இருக்கிறது. ஆனால் அது அப்போஸ்தலர் காலம் வரை ஏற்படுத்தப்படவில்லை, ஆதாம் காலம் வரை அது நீண்ட, மிகவும் நீண்டகாலம் என்றும் எண்ணினர். கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஆயிரம் வருடம் போலவும், ஆயிரம் வருடம் ஒரு நாள் போலவும் இருக்கிறது என்று அப்போஸ்தலர் பேதுரு அறிவிக்கிறார். ஆதியிலிருந்து காலக்கணக்கை சரியாக கணிக்க யூதர்களிடம் எந்தவித உபாயமும் இல்லை. இதைப்பற்றிய தகவல்களும் அவர்களிடம் இல்லை. அவர்களுக்கு தெளிவாக சொல்லப்படவில்லை என்பது ஆச்சரியமாக இல்லை. அவைகள் வெளிப்படுவதற்கான கர்த்தர் குறித்த காலம் வரும்வரை அவர் திட்டமிட்டபடி அதை தெளிவில்லாமல் வைத்திருந்தார்.

## கிறிஸ்துவின் நாள் சமீபமாயிருக்கிறது

"கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது" என்று அப்போஸ்தலர் காலத்தில் அவர்கள் உண்மையிலே அறிவித்து வந்தார்கள். உலகத்திற்குள் ஒரு பெரிய ஒளி வந்திருந்தது என்றும் உலக சரித்திரத்தில் ஒரு திருப்புமுனை வந்திருந்தது என்றும் உணர்ந்திருந்தனர். ஆனால் அது மகா ஆயிரவருட நாளின் சூரியனின் ஒளியல்ல. பரிசுத்த பவுல் இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் இன்னும் மூடிக்கொண்டிருக்கிறது என்று அறிவிக்கிறார். இயேசுவிடமிருந்து பிரகாசித்த ஒளி பிற்காலத்தில் உலகின் மேல் உதிக்கும் "நீதியின் சூரியன்" அல்ல என்று கர்த்தராகிய இயேசுவே விவரித்திருக்கிறார். கிறிஸ்துவின் சீஷர்களும் முழு உலகத்தின் மனுக்குலத்தின்மேல் சூரியனின் வெளிச்சத்தை பிரகாசிக்கவில்லை என்று கூறினர். வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்படி விளக்கை கொளுத்தி விளக்குத் தண்டின்மேல் வைக்கும்படி நமது கர்த்தர் சீஷர்களிடம் கூறினார். (மத்தேயு 5:14–16)

ஆனால் கிறிஸ்து மற்றும் மகிமையிலுள்ள அவரது சபையும் முழு உலகத்திற்கும் பிரகாசிக்க "நீதியின் சூரியன்" தேவைப்படும். சுவிசேஷயுகம் என்றும் கிறிஸ்துவ யுகம் என்றும் பொதுவாக அழைக்கப்படுகிற அப்பொழுது ஆரம்பமான அந்த யுகம் முடிவுக்கு வரும் என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார். இந்த யுகத்தின் ஆரம்பத்தில் "மணவாட்டி" வகுப்பாரை விளைவிக்கிற விதையை அவர் விதைத்தார். இவர்கள் பின் வருகிற யுகத்தில் உலகை அவரோடு கூட ஆளுகை செய்வார்கள். ஆனால் அவர், எதிரியாகிய சாத்தான் கர்த்தரின் கோதுமை நிலத்தில் தப்பறையான விதைகளை

விதைத்து அதிக அளவில் களைகளை விளைவிப்பதில் வெற்றி பெறுவான் என்று முன்னெச்சரித்திருக்கிறார். இந்த சுவிசேஷயுக முடிவில், அவரே மகா பிரதான அறுவடையாளராக பிரசன்னமாகி, களைகளை எரிப்பதற்கு கட்டுகளாக கட்டுவார், கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்க கூட்டிச் சேர்ப்பார். அந்த காலத்தைக் குறித்து ஆண்டவர் கூறுகிறதாவது: "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்." (மத்தேயு 13:43)

அந்த நேரம் இன்னும் முழுமையாக வரவில்லை. ஆனால் இந்த மகிமையான நாள் இப்பொழுது விடிந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் அங்கங்களில் பெரும் பாலானவர்கள் அவர்களது கர்த்தரோடு திரைக்கு அப்பால் இருக்கிறார்கள். விடியற்காலை வெளிச்சம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நாளானது அதன் முழு மகிமையின் பிரகாசத்தில் இருக்கும். விடியலின் வெளிச்சம் நமது கவனத்தை மிகவும் குறிப்பாக காலக்கணக்கு பக்கம் திருப்பி, காலத்துக்கு முன்னே காலக்கணக்கை கணக்கிட முயற்சித்தவர்களின் தவறுகளை காண நமக்கு உதவி செய்கிறது. நூற்றியிருபது வருடங்கள் தவறு செய்யப்பட்டிருப்பதாகவும் பிற்காலத்தில் இன்னும் குறைவான தவறுகளையும் அது நமக்கு காண்பிக்கிறது.

வேதாகம காலக் கணக்கை நமது காலம் வரை ஆராய்ந்து பார்க்கும் போது, மனிதனின் மகா வாரத்தின் மகா ஏழாம் நாளின் விடியலில் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் காண்கிறோம். இது நம்மைச்சுற்றி இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற நிகழ்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆயிரவருட யுகம் முன்னரே ஆரம்பித்துவிட்டது. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது. தற்போது இருக்கிறது. ஆகையால் நாம் தூங்காமல் மிகவும் விழித்திருக்க வேண்டும். கிறிஸ்துவின் நாள் நெருங்குவதால் சூரியன் முழுமையாக பிரகாசிக்கும் முன்பு சில பயங்கரமான காரியங்கள் நடக்க வேண்டியதாயிருக்கிறது. உதாரணத்திற்கு தற்கால மகா யுத்தம். இது நீண்ட காலத்திற்கு முன்னுரைக்கப்பட்டபடி உண்மையிலேயே பயங்கர மாயிருக்கிறது. (எரேமியா 25:15-38; யோயேல் 3:2,9-16) அனுதினமும் இதன் தீவிரமும் அளவும் அதிகரித்து கொண்டேயிருக்கிறது. சீக்கிரத்தில் அது புரட்சியில் அமிழ்ந்து போகும். அதைத் தொடர்ந்து அராஜகம் வரும், மகா சத்துருவானவன் வெளிச்சத்துக்கு பதிலாக இருளை வைக்கக்கூடியவனாக இருக்கிறான். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த நாடுகள் ஒருவரையொருவர் கொல்லுவதின் மூலம் தேவனுக்கு ஊழியம் செய்வதாக நினைக்கிறார்கள்.

இப்பொழுது ஒரு கேள்வி என்னவெனில் அமெரிக்கா இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளுமா என்பதுதான். இது நடக்கலாம் அல்லது இந்த நாடு வரக்கூடிய புரட்சி மற்றும் அராஜகத்தில் அதன் பிரதி பலனை அடையலாம். இருளுக்கான இந்த பயங்கரமான நிலைமைகளுக்கு விரோதியானவனின் குருடாக்கும் வஞ்சகமே காரணம் என்று நாங்கள் குற்றஞ்சாட்டுகிறோம். ஆனால் சுயநலத்தின் ஆளுகையை நீக்கிப் போடவும் தேவனுடைய நீதியும் அன்பும் நிறைந்த மகிமையான ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் மனிதனுடைய காரியங்களை அவர் தமது சொந்த மகிமைக்காக ரத்து செய்வார்.

"அந்தகாரத்தின் கிரியைகளை தள்ளும்படி அப்போஸ்தலர் தூண்டுகிறார். இந்த கட்டளை பரிசுத்த பவுலின் காலத்தில் ஏற்றதாயிருந்தது. இயேசுவை உலகின் ஒளியாக கண்டு, அவரது ஒளியினால் பிரகாசம் பெற்று, அவர்களே எரிகிற, பிரகாசிக்கிற ஒளியாக ஆனவர்கள். அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் தவறான புரிந்துகொள்ளுவதினால் அவர்களைச் சுற்றி மகா இருள் பரவியிருப்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. புறஜாதி தேசம் அனைத்தும் காரிருளில் இருந்தன. வெளிச்சத்தை பெற்ற சிலரைத் தவிர யூத தேசமும் இருளில் இருந்தது. யூதர்கள் எப்படிப்பட்ட இருளில் இருந்தனர்? தேவனுடைய திட்டம், ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் பொருளையும் உலகத்தை ஆசீர்வதிக்கிற அவரது வித்தைப் பற்றிய காரியங்களில் இருளில் இருந்தார்கள்.

### "முழு உலகமும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது"

ஒளியின் பிள்ளைகளானவர்களும், வெளிச்சத்தை ஆண்டவரின் போதைனைகள் அல்லது அப்போஸ்தலரின் போதனைகள் மூலமாகவோ பெற்றவர்களும், பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலினால் தேவனுடன் உடன் படிக்கையின் உறவுக்குள் வந்தவர்கள் வரவிருக்கிற யுகத்தில் உலகத்தை ஆசீர்வதிக்கிற ஆபிரகாமின் விசேஷித்த வித்தாக ஆனார்கள். ஆனால் பிரதான கிருபையைப் பொறுத்தவரை இஸ்ரயேல் தேசம் ஒதுக்கிவைக்கப்பட்டது. கி.பி.70ல் அவர்கள் தேசம் முழுவதும் அழிக்கப்பட்டு தூர தேசங்களுக்கு சிதறடிக்கப்பட்டனர். அந்த காலத்தில் மற்ற தேசங்களின் நிலைமை என்ன? இஸ்ரேல் தேசம் இருளில் இருந்த போது, புறஜாதி தேசங்கள் இன்னும் இருளில் இருந்தன. எனினும் அவர்களில் அநேகர் "தடவியாகிலும் தேவனை கண்டுபிடிக்கத் தக்கதாக தேடினார்கள்." அவரை கண்டுபிடிக்காதவர்களின் மனதை இந்த பிரபஞ்சத்தின் தேவன் குருடாக்கியிருக்கிறான். இதன் காரணமாக அவன் பெரும்பாலான தேசங்களின் மனதை அறியாமை. மூட நம்பிக்கைகள் மற்றும் "பிசாசுகளின் உபதேசங்கள்" ஆகியவற்றினால் குருடாக்கியிருக்கிறான்.

மனிதர்கள் நல்லவர்களாக இருந்து தேவனை நினையாதபடி அவர்களை செய்திருக்கிறான். "முழு உலகமும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. பொல்லாங்கனுக்குள் இல்லாதவர்கள் தேவனுடைய உண்மையான சபை, கிறிஸ்துவின் சபை மட்டுமே ஆகும். வெளிச்சத்தின் பிள்ளைகள் மட்டுமே அதில் விலகினவர்கள். தேவனுடைய வசனத்திலிருந்தே அவருடைய உண்மையான பிள்ளைகள் அவர்களது வெளிச்சத்தை பெறுகிறார்கள். பரிசுத்த ஆவியாகிய எண்ணெயை அவர்கள் தங்களுக்குள் பெற்றிருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் ஒளியினிடத்தில் உண்மையற்ற வர்களாகவும் குழப்பத்திலும் இருக்கிறார்கள். சிலர்

கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருக்கிறார்கள். சிலர் கர்த்தர் அளிக்கிற ஆவிக்குரிய ஆகாரக் குறைவினால் பல வழிகளில் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக வேதாகமத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு வேத வாக்கியங்களெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஆரம்பிக்கிற புதிய யுகத்தின் வேலைகள் தேவனுடைய வார்த்தைகளின் வெளிச்சத்தினால் உறுதிப்படுத்தப்படுகிறது. விடியற்காலை வெளிச்சம் முழுமையாக வேதாகமத்தை உறுதிப்படுத்துகிறது. நாம் "அந்தகாரத்தின் கிரியைகளை தள்ளிப்போட" வேண்டும் என்றும் "ஒளியின் சர்வாயுதங்களை தரித்துக்கொள்ள வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் கூறுகிறார். அந்தகாரத்தின் கிரியைகளெல்லாம் இருளில் நடைபெறுகின்றன. அந்த காரத்தின் கிரியைகளெல்லாம் பாவத்தின் கிரியைகளாயிருக்கின்றன. இந்த கிரியைகளெல்லாம் ஒரு நியமமாக வெளியரங்கமாக செய்யப்படுவதில்லை. வெளிச்சம் கொண்டு வருகிற வெளியரங்கத்திலிருந்து அவைகள் பொதுவாக ஒளிந்து கொள்கின்றன. அவைகள் வெளியரங்கமாக செய்யப்பட்டால் அவைகள் வெளிச்சத்தின் கிரியைகளாக காண்பிக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் சத்திய வெளிச்சம் வருகிற இடத்தில் அது அந்தகாரத்தின் கிரியைகளை கண்டிக்கிறது.

இயேசுவின் காலத்தில் இருந்த பரிசேயர் மற்றும் சதுசேயர்கள் பணத்தை சிநேகிக்கிறவர்களாக இருந்தார்கள். அவர்களது கிரியைகளெல்லாம் வெறும் பாசாங்காக இருந்ததால் இயேசு அவர்களை கண்டித்தார். அவர்கள் வீதிகளின் சந்திகள் முதலானவைகளில் ஜெபித்தபோது, விதவைகளின் வீடுகளை பட்சித்து, அவர்களது சொத்துக்களை விழுங்கினார்கள். இது யூதர்கள் மற்றும் புறஜாதிகளிடம் பொதுவாக உண்மையாக இருந்தது. அப்போஸ்தலர் காலத்தில் நடப்பிக்கப்பட்ட அநேக தீங்குகளை அவர்கள் கணக்கிட்டார்கள் – விபச்சாரம், காமவிகாரம், பேராசை, பில்லி சூனியம், பகைகள், வைராக்கியங்கள், கோபங்கள், மார்க்க பேதங்கள், தூஷணம், விக்கிரக ஆராதனை முதலானவைகள். இவைகளெல்லாம் அந்தகாரத்தின் கிரியைகள், மாம்சத்தின் மற்றும் சாத்தானின் கிரியைகள் ஆகும். இன்றைக்கும் இவைகள் அப்பியாசப்படுத்தப்படுகின்றன.

### வஸ்திரத்தின் மேல் ஆயுதம்

நாம் "ஒளியின் ஆயுதங்களை" தரித்துக் கொள்ள வேண்டும். தற்போது நீங்கள் பெற்றுக் கொண்டிருக்கிற ஒளியை கவனியுங்கள். தேவனைப்பற்றிய அறிவு, எதற்காக வாழவேண்டும், எந்த வகையான குணலட்சணங்களை அவர்கள் பெற்றிருந்தால், கர்த்தர் அவர்களுக்கு நித்திய ஜீவனை, இன்னும் மேலான ஜீவியத்தையும் தருவதற்கு விருப்பமுள்ளவராயிருப்பார் என்பதைப்பற்றிய வெளிச்சம். இந்த அறிவை எல்லாம் பெற்றுக் கொண்ட, உங்களை பாதுகாக்க ஒரு ஆயுதமாக அதை போட்டுக் கொள்ள வேண்டும். தேவனுக்கு என்ன தேவை என்பதை அறிந்து கொண்டு, இவையெல்லாவற்றையும் ஒரு ஆடையாக அல்ல, ஆடைக்குமேல் ஒரு ஆயுதமாக அணிந்து கொள்ளுங்கள். இருதயத்தை மூடும்படியாக நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். சுத்த இருதயமும் தேவனிடத்தில் முழுமையான விசுவாசமுமே கவனிக்கப்படும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். தேவன் நமக்காக இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அப்போஸ்தலர்களால் சொல்லப்பட்ட அனைத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். இவை எல்லாம் சேர்ந்துதான் ஒளியின் ஆயுதங்களை அமைக்கிறது. ஏனெனில் இது சத்திய வெளிச்சத்திலிருந்து கிடைக்கப்பெற்றது.

அப்போஸ்தலர் காலத்தில் இருந்த சபையைப் போலவே, நமது காலத்திலும் இந்த ஆயுதங்களை தரித்துக் கொள்வதும், அந்தகாரத்தின் கிரியைகளை நீக்கிப்போடுவதும் முக்கியமான காரியமாக இருக்கிறது. சர்வாயுத வர்க்கங்கள் எப்பொழுதும் அவசியமாக இருப்பது போல, இப்பொழுதும் அவசியமாக இருக்கிறது. தேவன் நம்மோடு தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்வது, அந்தகாரத்தின் கிரியைகளை நீக்கிப்போடுவதிலும் ஒளியின் ஆயுதங்களை தரித்துக் கொள்வதிலும் இருக்கிறது. இந்த ஆயுதங்களை தரித்துக் கொள்கிறவர்கள் கர்த்தரோடும் அவரோடு உண்மையாக இருப்பவர்களோடும் இசைவாக இருப்பதை தாங்களே காண்பார்கள். தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகள் கர்த்தரின் இந்த நாளுக்குள் அதிகமதிகமாக வரும்போது, அவர்கள் கண்ணோடே கண் காண்பார்கள். கலைந்து போடுகிறவைகளைப்பற்றியும், தரித்துக்கொள்கிறவைகளைப் பற்றியும் இவ்வளவான கர்த்தரின் ஜனங்கள் கண்ணோட கண் காண்கிறது இதற்கு முன் இருந்ததில்லை என்று நம்புகிறோம். இவ்வளவு வெளிச்சத்தின் பிள்ளைகள் ஒளியின் சர்வாயுதங்களை தரித்துக் கொண்டிருப்பது இதற்கு முன் இருந்ததில்லை. ஆகையால் நாம் இரவின் பிள்ளைகளைப்போல இராமல் "பகலின் பிள்ளைகளைப் போல நடக்கிற" பொறுப்பு இன்னும் அதிகமாக நமக்கு இருக்கிறது.

### முழுமையாக அர்ப்பணித்தவர்களுக்கு கூட ஆபத்து

முழுமையாக அர்ப்பணித்த தேவனுடைய பிள்ளைகள் கூட இந்த வாழ்க்கையின் கவலை அல்லது பாவம் மற்றும் தீமை ஆகியவைகளை எதிர்த்து போராடுவதால் களைப்பு அல்லது தற்கால காரியங்களினால் வஞ்சிக்கப்படுதல் போன்றவைகளால் மயக்கத்தில் சிலர் இருக்கக்கூடும். இவர்களுக்கு எழுச்சியூட்டுவது அவசியமாயிருக்கிறது. இந்த காரியத்தில் சபைக்கு எழுச்சியூட்டுவது தற்போது தேவைப்படுகிறது. "நித்திரையை விட்டு எழுந்திருக்கதக்க வேளையாயிற்று!" முடிவு வரை முழு விசுவாசத்துடன் நிலைத்திருக்கவும், பரலோக நம்பிக்கைகளை ஆபத்திற்குள்ளாக்கும் சிந்தனைகளை பரிசோதித்தலும், "இந்த பொல்லாத உலகத்தில்" எதை அனுமதிக்கக்கூடாது என்பதையும் மிகுந்த ஊக்கத்துடன் கவனித்து ஆவலாக சுயபரிசோதனை செய்ய இதுவே சரியான நேரம். நாம் இன்னும் தேவனுடன் நெருங்கி நடக்கவும், இன்றும் மிக நெருங்கிய உறவுக்கும் நாடுவதும், நம்மைக்குறித்த கர்த்தருடைய முழு சித்தத்தை பொருத்தவரை அதிக விசுவாசத்தையும் முழுமையான சுயபலியையும் உறுதிப்படுத்துவதும் மிக முக்கியமானது. கர்த்தருடைய இந்த சித்தம் நியாயமானது என்பதை நாம் அறிவோம். போதுமான அவருடைய கிருபை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு கணமும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது!

நமது இருதயத்தை மிகவும் அக்கறையுடனும்

ஜெபத்துடனும் ஆராய்வது, தேவனுடைய பூரண சித்தத்தில் எங்கே நாம் குறைவு பட்டிருக்கிறோம் என்பது தெளிவாகும். நம்மில் ஏதாவது தவறான வழியை கண்டுபிடித்தால், நாம் அதை சரி பண்ணுவோம். இப்படியாக நாம், கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிற அன்பு மற்றும் விசுவாசத்தின் ஆவியை, கிறிஸ்துவின் சிந்தையை நாம் மென்மேலும் அணிந்து கொள்வோம். மிகவும் குறைவாக நமக்கு மீந்திருக்கிற காலத்தில், நாம் மிகவும் விழித்திருந்து, தேவனைப்போன்ற, கிறிஸ்துவைப் போன்ற அன்பின் குணத்தை வளர்க்க ஊக்கத்துடன் முயற்சிப்பது எவ்வளவு முக்கியமானது. இந்த அன்பு எல்லாவற்றிற்கும் மேலாக தேவ மகிமையை நாடுகிறது; இது சகோதரர்களுடன் கனிவான பிரியத்துடன் இருக்கும். இது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தில் சார்ந்திருக்கும். இது இருளிலும் வெளிச்சத்திலும் முழுமையாக நம்பிக்கையுடன் இருக்கும். இது தேவனுடைய வசனத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள எல்லா நன்மைகளும் நிறைவேறும் என்பதில் எந்த சந்தேக நிழலையும் கொண்டிராது!

**நாம் "பரிசுத்தவான்களாகும்படி நடப்போமாக"**

இந்த வசனத்தில் பரிசுத்த பவுல், "பகலில் நடக்கிறவர்கள் போலச்சீராய் நடக்கக்கடவோம்" என்று தூண்டுகிறார். அந்த சமயத்தில் பழக்கத்தில் இருந்த கெட்ட பழக்கங்களாகிய களியாட்டு, வெறி, வேசித்தனம், காம விகாரம் ஆகியவைகளைப் பற்றி பரிசுத்த பவுல் பேசுகிறார். ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவ விசுவாசிகளை கண்டனம் செய்யும்படியாக இதை எழுதினார் என்று நாம் நினைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்த பாவங்களுக்கு விரோதமாக அவர்கள் தங்களை காத்துக் கொள்ள வேண்டும் என்கிற போதகரின் புத்திமதியாக இருக்கிறது. அங்கே பொதுவாக பரவியிருந்த காரியங்கள் கிறிஸ்தவர்களாக அவர்கள் பின்பற்றி வந்தவைகளுக்கு மாறாக இருந்தது என்பதை ஞாபகப்படுத்துவதற்காகவும் ஆகும். மிகவும் மாறுபாடான நீதிக்குரிய காரியங்கள் புறஜாதியினரிடையே பழக்கத்தில் இருந்தன. ரோமாபுரியில் இருந்த அநேக விசுவாசிகள் புறஜாதியிலிருந்து வந்ததால் ஒழுங்கீனங்களுக்கு பழக்கமாகியிருந்தனர். ஆகையால் அப்போஸ்தலரின் வார்த்தைகள் எச்சரிக்கையாக கொடுக்கப்பட்டன. ஏனெனில் இந்த காரியங்களில் பரிசுத்தவான்கள் குற்றவாளிகளாக இருக்கக்கூடாது.

"பகலில் நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் எச்சரிக்கையின் ஒளியை சிந்தின. களியாட்டும் வெறியும் இரவு நேரத்தில் நடத்தப்படுகிறது. இந்த நாட்களிலும் இந்த வழக்கம் நடந்து வருகிறது. சில காரணங்களால் பாவம் மற்றும் அந்தகாரத்தின் கிரியைகள் இரவிலே செழித்தோங்குகிறது. ஜனங்கள் பகலில் வேறு வேலைகளை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தீமை செய்பவர்கள் களியாட்டம், குற்றங்கள் ஆகியவைகளை இரவில் நடப்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களுக்கு இருள் ஒளிந்து கொள்கிறதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. இது அந்தகாரம், பாவம் போன்றவைகளின் மகா பெரிய இரவாக இருக்கிறது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் அந்தகாரத்தில் இருக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தேவனுடைய வெளிச்சத்திற்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். புதிய யுகத்தின் காலையின் முழு உதயத்துக்காக பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு இசைவாக வாழ்வதற்கு நாம் நாடிக்கொண்டிருக்கிறோம். ஆகையால் எல்லாரும் நமது வாழ்க்கையை அறிந்து கொள்ளும்படியாக நாம் சீராக நடக்கக்கடவோம் என்று இங்கே அவர் கூறுகிறார். ஒன்றை போதித்துக் கொண்டு வேறொன்றை செய்து கொண்டிராமல், எல்லாவகைகளிலும் நேர்மையாக இருப்போமாக.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பகல் என்பது ஆயிர வருட யுக நாளைக் குறிக்கிறது என்பதை கவனித்து, எந்தவிதமான பாவமும் அனுமதிக்கப்படாது என்று நாம் நன்றாக கூறலாம். "ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா 4:2) "நான் நியாயத்தை நூலும், நீதியை தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல் மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக் கொண்டு போகும்" என்று யேகோவா கூறுகிறார். (ஏசாயா 28:17) அந்த நாளில் களியாட்டம் மற்றும் வெறியிலும் அல்லது எந்தவித பாவத்திலும் வாழ முயற்சிக்கிறவர்கள் சரியானபடி தண்டிக்கப்படுவார்கள். நாம் கர்த்தரின் பரிசுத்தவான்களைப் போல வாழ வேண்டும் என்பதே அப்போஸ்தலரின் புத்திமதியாக இருக்கிறது. பகலானது முழுமையாக வந்து, நீதியின் சூரியன் தனது கதிர்களை முழு உலகத்திற்கும் கொடுக்கும்போது நாம் வாழ்வதைப் போல வாழ வேண்டும்.

பகலானது முழுமையாக வந்துவிட்டது, எல்லாம் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பது போல நமது வெற்றி வாழ்க்கையின் ஒரு பகுதியாக இது இருக்கவேண்டும். இந்த காரியத்தில் அப்போஸ்தலரின் புத்திமதியை எடுத்துக் கொள்கிறவர்கள் அதிக ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். வேறு எந்த மார்க்கமும் உண்மையிலேயே கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாகிய நமக்கு அழிவைக் கொடுப்பது நிச்சயம்.


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ, **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:



சகோ, **R. செல்வராஜ்.** சென்னை வேதமாணவர் சபை.

எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.

சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com



**FOR PRIVATE CIRCULATION ONLY**

# ஆகாபின் பாவம்-பொருளாசை, கொலை

## Ahab's Sin - Covetousness, Murder

*1 ராஜாக்கள் 21*

*ஆகாப் ராஜாவின் தந்தத்திலான மாளிகை – அவன் பெரிய தோட்டங்களில் ஆசை வைத்தான் – நாபோத் பெருந்தொகையை ஏற்றுக்கொள்ளவில்லை – ஆகாப் சலிப்படைந்தான் – அவனது ராணி நாபோத்தை கொலை செய்ய ஏற்பாடு செய்தாள் – தேவன் எலியா மூலமாக அவனைக் கண்டித்து அவனது தண்டனையை வாக்குத்தத்தம் பண்ணினார் – நமது காலத்திற்கு பொருத்துதலும் பாடமும்.*

*"உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்." எண்ணாகமம் 32:23*

இஸ்ரயேல் தேசத்திற்கு விரோதமாக வந்த சீரியா தேசத்து ராஜாவை தோற்கடித்து வெற்றியுடன் ஒரு போரை ஆகாப் ராஜா முடித்திருந்தான். ராஜாவின் கீர்த்தி அயல் நாட்டிற்கும் சென்றது. தனது சொந்த திறமைதான் அதற்கு காரணம் என்று நினைத்தான், உண்மையிலேயே ஆகாப் ராஜா இஸ்ரயேலின் பெரிய ராஜாக்களில் ஒருவனாகக் கருதப்பட்டான். உண்மையிலேயே பெரியவனாக இல்லாதிருந்தாலும் அவன் முன்னேறக் கூடிய சில குணலட்சணங்களை உடையவனாக இருந்தான். சாலொமோன் தந்தத்தினால் செய்த சிங்காசனத்தை பெற்றிருந்த முதல் ராஜா என்று பெயர் பெற்றதுபோல, ஆகாப் தந்தத்தினால் செய்யப்பட்ட அரண்மனையைப் பெற்ற முதல் ராஜா என்ற பெயரைப் பெற்றிருந்தான். அவனது ஆடம்பரமான அரண்மனைக்கு ஒரு பெரிய அழகான தோட்டம் தேவையாயிருந்தது. அவனது அண்டை வீட்டானாகிய நாபோத் ஒரு திராட்சத் தோட்டத்தை பெற்றிருந்தான். அது ஆகாபுக்கு ஏற்றதாக இருந்தது.

அந்த தோட்டத்தை நல்ல விலைகொடுத்து வாங்க நாபோத்திடம் ஆளனுப்பிக் கேட்டான். நாபோத் தனது பிதாக்களின் சுதந்தரத்தை விற்க மறுத்துவிட்டான். ஆனால் ஞானமாக தனது உரிமைக்காக நிற்காது இருந்திருக்கலாமோ என்று விளைவு காண்பிக்கிறது. பிதாக்களின் சுதந்தரத்தை விற்க யூத சட்டம் தடைசெய்கிறது, எனினும் இவனது இலாபத்திற்காகவும் ராஜாவின் சந்தோஷத்திற்காகவும் கொஞ்ச காலத்திற்கு அதை குத்தகைக்கு கொடுத்திருக்கலாம்.

மனசாட்சிக்கு விரோதமாக எதையும் செய்ய வேண்டாம் என்று கிறிஸ்தவர்களுக்கு வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. மற்றவர்களைப் போல அவர்களுக்கும் உரிமையிருக்கும்போது (தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால் இன்னும் அதிக உரிமை இருந்தாலும்) அவர்கள் தங்களுக்காக வாழாமல், முக்கியமாக தேவனுடைய சித்தத்திற்கும் அவருடையவர்களுக்காகவும் வாழ்வதே கர்த்தரோடு செய்த அவர்களது உடன்படிக்கையாக இருக்கிறது. பொன்னான கற்பனை வலியுறுத்துவதற்கு இசைவாக நீதியை நடப்பிக்க நாம் நாடவேண்டும்; முழு நீதியை எதிர்பார்க்கக்கூடாது என்று முன்னெச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மார்க்கத்தை பின்பற்றினால் அதிகமதிகமான கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெறுவார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும். இந்த நிலைமையின் கீழ் குணலட்சண அபிவிருத்தி வருகிற ராஜ்யத்தை பொருத்த வரை அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

**யேசபேல் ராணி தேவனுக்கு பயப்படவில்லை**

ஆகாபின் மனைவியாகிய யேசபேல் ராணியின் குணலட்சணத்தின் சரித்திர ஏடுகளை பார்க்கும்போது மனசாட்சியே இல்லாதவளாக இருந்தாள் என்று தெரிகிறது. ஆகாப் மனக்கவலையில் இருப்பதை அறிந்த யேசபேல், அதற்கான காரணத்தை அவனிடம் கேட்டாள். அதை தெரிந்து கொண்டு அவன் ராஜாவிடம், நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை வாங்கித் தருவதாக உறுதியளித்து, அவனை உற்சாகமாக இருக்கும்படி கூறினாள். உடனே அவள் ஆகாப் ராஜாவின் பேரில் அவனது ராஜ முத்திரையை பயன்படுத்தி கடிதங்களை எழுதினாள். ஜனங்கள் தங்கள் பாவங்களுக்காக புலம்புகிற உபவாச நாளில் நாபோத்துக்கு பிரதான இடத்தை தரும்படி அதிகாரிகளுக்கு கட்டளையிட்டாள். இரண்டு பேரை லஞ்சம் கொடுத்து நியமித்து அவர்களை நாபோத்துக்கு விரோதமாக அவன் தேவனையும், ராஜாவையும் தூஷித்தான் என்று சாட்சி சொல்ல ஏற்பாடு செய்யச் சொன்னாள். அதைக் கேட்ட அதிகாரிகள் அவனுக்கு மரண தண்டனை விதிக்கும்படி கட்டளையிட்டிருந்தாள். யூத சட்டத்தின்படி தேவதூஷணம் செய்தவனை கல்லெறிந்து கொள்ள வேண்டும். பணத்துக்கு நியமிக்கப்பட்ட சாட்சிகள் நாபோத்துக்கு விரோதமாக சாட்சி சொல்லி அதை உறுதிப்படுத்தினார்கள். உடனே ஒரு கூட்டம் எழும்பி, நகரத்துக்கு வெளியே அவனை கல்லெறிந்து கொன்றார்கள்.

கபடமான நடவடிக்கைகள் ஒருவரை பிரமிக்கச் செய்தது. உபவாசத்தை அறிவித்தது தேவனின் கட்டளைகளுக்கும் அவரது நீதிக்கும் மகிமையாகக் காணப்பட்டது. ராணியின் துரோகம் சரித்திர ஏடுகளுக்கு இசைவாக இருக்கிறது. அவளது கட்டளைக்கு கவர்னர்களின் அடிமைத்தனம் மோசமான ஒரு ஒழுக்கமின்மையை நிரூபிக்கிறது.

இந்த அனைத்து துன்மார்க்கத்தின் மூலம் பலனடைந்தது ஆகாப் ராஜா என்று காணப்படுகிறது. அவனே இதற்கு பொறுப்பானவனாகிறான். உண்மையிலேயே அவன் உயர்ந்தவன் அல்ல என்று அவனது மார்க்கமானது நிரூபிக்கிறது. செல்வமும் பதவியும் ஒருவனை உயர்ந்தவனாக்குவதில்லை, குணலட்சணமே உயர்ந்தவனாக்குகிறது. ராஜா அவனது மனைவியின் வெட்கக் கேடான செயலினால் பலனடைவதில் விருப்பம் உடையவனாயிருந்தான். நாபோத் இறந்து போனான் என்பதை அவள் மூலம் கேள்விப்பட்டவுடனே நாபோத்தின் திராட்சத் தோட்டத்திற்கு சென்று அது எந்த அளவுக்கு தனது அரண்மனை தோட்டத்திற்கு பிரயோஜனமாயிருக்கும் என்று பார்த்தான்.

அவன் தோட்டத்தில் நுழையும் போது கண்டன செய்தியைச் சொல்ல கர்த்தரால் அனுப்பப்பட்ட எலியா அவனை சந்தித்தான். ராஜா, தீர்க்கதரிசிக்கு வாழ்த்துக் கூறி, "என் பகைஞனே, என்னை கண்டுபிடித்தாயா?" என்றான். எலியா, "கண்டு பிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய நீ உன்னை விற்றுப் போட்டாய்" என்றான். பிறகு தெய்வ தண்டனையை அவன் அறிவித்தான். அதாவது நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின இடத்திலே உன்னுடைய இரத்தத்தை நாய்கள் நக்கும். யேசபேல் ராணிக்கும் நடக்கும் என்று கூறினான்.

## தற்கால யுத்தம் சுயநலத்தின் விளைவு

தேவன் கடந்த காலத்தைப் போல தற்காலத்தில் உலகத்தின் விழுந்துபோன நிலைமை ஆசை, பொருளாசை முதலானவைகளுக்கு எதிராக ஒரு போலீஸ்காரனைப் போல காப்பாற்றும் வேலையை செய்ய மாட்டார். தேவனுடைய மகாதிட்டத்தை செயல்படுத்துவதில் மனுக்குலத்தின் பாவ மார்க்கம் குறுக்கீடு பண்ணுவதைத் தவிர, அவர்கள் பாடத்தைக் கற்றுக் கொள்ளட்டும் என்று 6000 வருடங்களாக கர்த்தரே திருப்தியடைந்தாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் கர்த்தருடைய மனோபாவம், "ஒரு எல்லை வரைக்கும் போ, அதற்கு மேல் போகாதே" என்பது போல இருக்கிறது.

மனுக்குலம் தங்களுக்கு பெருந்தீங்கிழைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. சந்தேகத்திற்கு இடமில்லாமல் முக்கிய பாடங்களை புகட்டவே ஆகும். மனுக்குலம் சர்வலோக கலவரத்தில் ஈடுபடும்படியாக தூதர்கள் காற்றுகளை இன்னும் பிடித்திருக்காதபடி அதைவிடும்படி தேவன் கட்டளையிடுவதாக தெரிகிறது. இதன் பலன் பயங்கரமான யுத்தங்களை ஏற்படுத்தி அதில் ஈடுபடுகிற அனைத்து தேசங்களையும் வறுமையில் தள்ளி, கோடிக்கணக்கானவர்களை இழக்கவும், கடன் சுமை அதிகரித்து, கடனை கட்ட முடியாமல் போகும்படி ஆகும். இந்த யுத்தத்தை தொடர்ந்து ஒரு பெரிய புரட்சியும் அதைத் தொடர்ந்து எதிர்பார்க்கப்பட்ட அராஜகமும் வரும் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. இப்பொழுது அவிழ்த்து விடப்பட்டிருக்கிற சச்சரவின் காற்றுகள் உலகத்திற்கு பெரிய தீங்கை மனிதனின் உச்சக்கட்டத்திற்கு கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கப்படும். தேவனுடைய சந்தர்ப்பம் வரும். மேசியாவின் ராஜ்யம் உலகை ஆசீர்வதிப்பதற்காக ஸ்தாபிக்கப்படும்.

தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, எல்லாம் மாற்றப்படும். பாவங்கள் அனுமதிக்கப்படாது. தண்டனைகள் வரும். ஆனால் தீமையை முயற்சிக்கிறவர்களுக்கு, தீமையை செய்வதற்கு முன்னரே தண்டனை கொடுக்கப்படும். ஏனெனில் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறதாவது, "என்னுடைய பரிசுத்த பர்வதமெங்கும் (ராஜ்யம்) தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை." (ஏசாயா 11:9) அந்த மகிமையான காலத்தில் அனைத்து நல்ல நோக்கங்களும் முயற்சிகளும் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறும். அதில் பங்குபெறுகிற அனைவரும் மனதின் பிரகாரமாகவும், நீதியின் பிரகாரமாகவும் சரீர பிரகாரமாகவும் உயர்த்தப்படுவார்கள். இப்படியாக "உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியில் நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்" என்கிற வேதவாக்கியம் நிறைவேறும். (ஏசாயா 26:9)

## பொருளாசையாகிய பாவம்

பாவமும் சுயநலமும் ஒரே அர்த்தமுடைய வார்த்தைகள். தேவ சாயலில் ஆதாம் பூரணமாக இருந்தபோது, சுயநலமற்றவனாக, நீதி, தயாளம், தயவு மற்றும் தரும சிந்தனை உடையவனாக இருந்தான். இதெல்லாம் தேவனுடைய குணலட்சணமாக இருக்கிறது. மனிதன் தேவசாயலில் இருந்தபோது இந்த குணங்களை உடையவனாக இருந்திருப்பான். முதலாவது அனைத்து பாவங்களும் சாத்தானால் செய்யப்பட்டவை. அவன் சர்வ வல்லவருடைய தெய்வீக செய்தியை தவறாக அறிவித்து தனது குறிக்கோளையும் சுயநலத்தையும் முன்னே அனுப்பினான். இப்படியாக அவன் ஆதாமையும் அவனது இனத்தையும் கொலை செய்கிறவனாகவும் பொய்க்கு பிதாவுமானான். தாயாகிய ஏவாளின் மார்க்கம் சுயநலத்தினால் சொல்லிக் கொடுக்கப்பட்டது. தேவனுக்கு கீழ்ப்படியாததின் மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவுக்கு தாகமாயிருந்த அவளுக்கு சர்ப்பமானது கூறினது. பிதாவாகிய ஆதாமின் கீழ்ப்படியாமை அறியாமையினால் அல்ல. ஆனால், அவன் கீழ்ப்படியாமையினாலும் தாயாகிய ஏவாளின் அனுபவத்தில் பங்கு பெறுவதினாலுமே அவனது வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும் என்று நம்பினான்.

தற்காலத்தில் நாம் எங்கு நோக்கினாலும் அனைத்து பாவங்களுக்கும் சுயநலமே உற்பத்தி ஸ்தானமாக இருக்கிறது. பேராசைதான் சுயநலமாக, பாவமாக இருக்கிறது. அனைவரும் பாவிகளாயிருப்பதினால் இது எங்கும் பரவியிருக்கிறது. நமது சட்டங்கள் நமது நீதியான உரிமைகளில் நம்மை பாதுகாக்க நாடுகிறது. எனினும் பொன்னான கற்பனையை அநீதியாக மீறுகிறவர்களுக்கெதிராக நம்மை பாதுகாப்பதிலும் நமது உரிமைகளை பத்திரப்படுத்துவதிலும் நாம் பெரும்பாலும் தோல்வியடைகிறோம்.

அனைவருக்கும் பாடம் என்னவென்றால், தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக்கொள்ளுகிறவர்களிடமிருந்து பொன்னான கற்பனைக்கு குறைவானது எதுவும் தேவனுடைய பார்வையில் ஏற்புடையதல்ல என்பதாகும். நாம் எல்லாரிடமும் நீதியை பொன்னான கற்பனைகளின் தேவைகளையும் ஆட்சேபம் இல்லாமல் காண்பிக்கும் பொழுது, நாம் மற்றவர்களிடமிருந்து எப்பொழுதும் நீதியையும் பொன்னான கற்பனையையும் எதிர்பார்க்கக்கூடாது என்பது இரண்டாவது பாடமாகும். இன்னும் சரியாகக் கூறுவோமேயானால், ஒரு தேசத்தில் தேவனுடைய பிள்ளைகள் தங்களை அவருடைய பிரதிநிதிகளாகவும், ஸ்தானாதிபதிகளாகவும் கருதிக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதும் நீதியுள்ளவர்களாயும் தயாள குணமுடையவர்களாயும் "அந்தகாரத்திலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறவர்களாயும்" இருக்க வேண்டும். அவர்களுடைய பரலோக பிதா தயாளமுள்ளவராகவும் நீதியுள்ளவராகவும் இருக்கிறதுபோல, அவருடைய பிள்ளைகளும் அவரது குணலட்சணத்தை உடையவர்களாகவும் நீதியை ஏற்படுத்துகிற ஒவ்வொன்றிலும் உதவுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

---------------------------------------

**--2558--**

## Elijah's Fiery Chariot

# எலியாவின் அக்கினி ரதம்

2 ராஜாக்கள் 2:1–12

*எலியா–எலிசாவும் தீர்க்கதரிசிகளின் பள்ளிகளும்–எலியாவின் ரதமும் எடுத்துக் கொள்ளப்படுதலும் நிழல்–எலியாவும் மற்ற தீர்க்கதரிசிகளும் இன்றும் நித்திரையிலிருக்கின்றனர்–முதலாம் உயிர்த்தெழுதலில் சபையானது மகிமை அடையும் முன்பு அவர்கள் தங்களது பரிசை அடைய முடியாது–மறுரூபக் காட்சி–எலியாவின் பிரயாணம் மற்றும் நான்கு நிறுத்தங்களின் அடையாளம்–ஆவலான, பயனுள்ள நிழலான பாடம்.*

*"உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." சங் 16:11*

எலியாவின் வாழ்க்கை ஒரு தீர்க்கதரிசனம் என்பதையும், அவரது பூமிக்குரிய அனுபவங்களில் முழுசபையையும் நிழலாக காட்டினார் என்பதையும் வேதமாணவர்கள் தெரிந்துக் கொண்டிருக்கிறபடியால் அவரது வாழ்க்கை மிகவும் ஆவலான மற்றும் மிகவும் புரியக்கூடியதாக இருக்கிறது. அவர் ஒரு உண்மையுள்ள தேவனுடைய ஊழியக்காரன். பின்னர் கர்த்தர், "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" (மல்கியா 4:5) என்று கூறியிருந்தும் கூட, அவரது வாழ்க்கையைப் பற்றிய தீர்க்கதரிசனம் புரிந்து கொள்ளப்படவில்லை. இந்த உண்மையான எலியா, மாம்சத்தில் இருந்த இயேசுவில் ஆரம்பித்து பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக வந்து செய்தியை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இன்றைய பாடத்தில் விவரிக்கபட்டுள்ள எலியா அக்கினி ரதத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் மாம்சத்தில் உள்ள கிறிஸ்துவின் சபையில் நிறைவேறப் போகிறது என்று நாம் நம்புகிறோம். சீக்கிரத்தில் அவர்கள் மாம்சத்தில் இருக்கப் போவதில்லை; ஏனெனில் கர்த்தர் அவர்களை எடுத்துக் கொண்டு அவரோடு மகிமைப்படுத்துவார். அப்போஸ்தலர் விளக்குவது போல, அவர்கள் கர்த்தரை, ராஜ்ய வல்லமை மற்றும் மகா மகிமையில் ஆகாயத்தில் பூமியின் ஆவிக்குரிய கட்டுப்பாட்டுப் பகுதியில் சந்திப்பார்கள். (1 தெசலோனிக்கேயர் 4:17)

எலிசா, எலியாவுக்கு பின்வருபவராகக்கூடிய சந்தர்ப்பத்தை பெற்றிருந்தார். எலியாவுடன் சேர்ந்து போகவும் அவருக்கு ஊழியம் பண்ணவும் அவருடைய விருப்பத்தில் வைராக்கியத்தின் ஆவியால் வழி நடத்தப்பட்டதாக காணப்படுகிறது. எலியா அக்கினி இரதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவரது சால்வை எலிசாவின் மேல் விழுந்தது, எலியாவின் ஆவியின் விசேஷித்த ஆசீர்வாதங்களை பெற்றதையும் எலிசா, எலியாவின் பின் வருகிறவராக ஆனதையும் குறிப்பிட்டது.

எலியா மாம்சத்தில் இருக்கிற தேவனுடைய சபைக்கு அடையாளமாக இருக்கிறார் என்று நாம் நிச்சயமாயிருக்கும்போது எலிசாவும் தேவனுடைய ஜனங்களில் இரண்டாம் தர வகுப்பினரை அடையாளபடுத்துகிறார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். வேதாகமம் இவர்களை சில சமயங்களில் புத்தியில்லாத கன்னிகைகள் வகுப்பார் என்றும் சில சமயங்களில் மணவாட்டி வகுப்பாரை பின்தொடருகிற தோழி வகுப்பார் என்றும், சில சமயங்களில் ஒருவனும் எண்ணக் கூடாத திரள் கூட்டம் என்றும் குறிப்பிடுகிறது, இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இயேசுவின் உடன் சுதந்தரராக சிங்காசனத்தில் எலியா வகுப்பாரோடு ஒரு இடத்தை அடைய தோல்வியுற்று சிங்காசனத்திற்கு முன்பாக ஒரு இடத்தை பெறுவார்கள். (மத்தேயு 25:1–13; சங்கீதம் 45:14, 15; வெளிப்படுத்தல் 7:9–17)

தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் கூட ஒரு நிழலாக இருக்கலாம், அப்படியிருந்தால், அவர்கள் எலியா மற்றும் எலிசாவுடன் பயரிச்சயம் உடைய, ஆனால் தனிப்பட்ட ஐக்கியம் இல்லாத மூன்றாவது வகுப்பினரை குறிப்பதாக காணப்படலாம். தீர்க்க தரிசிகளின் புத்திரர்கள் எலிசாவுடன் விவாதித்ததை பார்க்கும் போது எலியா எடுத்துக் கொள்ளப்பட்டதை அவர்கள் விசுவாசிக்கவில்லை என்று தெரிகிறது. எலியா எடுத்துக்கொள்ளப்படுவார் என்பதை அவர்கள் அறிந்தாலும், எலியாவை சுழல் காற்று எங்கேயாவது போட்டிருக்கலாம் அல்லது எலியா எங்கேயாவது விழுந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டு தேடினார்கள். அவர்களது தேடுதலும் அவர்களது முடிவான தீர்மானமும், குறிப்பிட்ட கிறிஸ்தவ ஜனங்கள் சபையானது மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை கொஞ்ச காலம் சந்தேகப்பட்டு அதன்பிறகு முழுமையாக நம்புகிறதை குறிப்பிடுகிறது. தேடுகிற மூன்று நாட்கள் அடையாளமான நாட்களாயிருந்து மூன்று வருடங்களைக் குறிக்கலாம்.

### எலியா பரலோகத்தில் இல்லை

கடந்த காலத்தில் வேதாகம ஆராய்ச்சி எல்லாம் மேலோட்டமாகவே இருந்தது. கடந்த காலத்தின் போதனைகளும், விசுவாச அறிக்கைகளும் உண்மையென ஏற்றுக் கொள்ளப்பட்டு, வேதாகம ஆராய்ச்சியானது அது சரியானதா என்று சோதித்தறியாமல், அது சரியானது என்று உறுதிப்படுத்தவே செய்யப்பட்டது. எலியாவின் விஷயத்தையும் "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார்" என்கிற அறிக்கையையும் தவிர யாரும் பரலோகத்திற்கு போனதாக பழைய ஏற்பாடு முழுவதிலும் காணப்படவில்லை என்பதை ஜாக்கிரதையான ஆராய்ச்சி தற்போது வெளிச்சத்துக்கு கொண்டுவருகிறது. மனிதனின் இரட்சகராக இயேசு மரிப்பதற்கு முன்னர் பரலோக ஜீவியம் கொடுப்பதற்கான எந்தவித சாத்தியமும் இல்லை என்பதை வேதாகமம் மிகத்தெளிவாக குறிப்பிடுகிறது. ஜீவனும் அழியாமையும் இயேசுவின் செய்தி மூலமாகவே வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டது என்று வேதாகமம் நமக்கு

உறுதியளிக்கிறது. இதற்கு முன்னர் இந்த காரியங்களைக் குறித்து தெளிவாக அறியப்படாமல் இருந்தது. (2 தீமோத்தேயு 1:10)

இயேசுவே அவரது உயிர்த்தெழுதலின் மறுரூபத்தினால் பூமிக்குரிய நிலைமையிலிருந்து வானத்துக்குரிய நிலைமைக்கு சென்றதில் முதலாவதாக இருந்தார். "அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." (1 பேதுரு 3:18) ஆண்டவரின் அடிச்சுவடுகளில் நடக்கிற, உண்மையுள்ளவர்கள் அனைவரும் இதே போன்ற மகிமையின் மறுரூபத்தின் வாக்குத்தத்தத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது மாறுதல் இயேசுவின் இரண்டாம் வருகையில் வரவேண்டியதாயிருக்கிறது.அவர்கள் எலியா வகுப்பாரைப்போல, புத்தியுள்ள கன்னிகைகளைப் போல பூமிக்குரிய நிலைமையிலிருந்து வானத்துக்குரிய நிலைமைக்கு திரைக்குப் பின்னால் செல்வார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு இந்த மறுரூபமடைதல் அவசியமானது. ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை." (1 கொரிந்தியர் 15:50) கொஞ்ச காலத்திற்கு பிறகு மகா உபத்திரவம் எலிசா குறிப்பிடுகிற திரள் கூட்டத்தாரை தயார்படுத்தும். இதற்கும் பிறகு மேசியாவின் ராஜ்யம் மூலமாக மனுக்குலத்து அனைத்து குடும்பங்களின் மேல் கர்த்தரின் ஆசீர்வாதம் வரும்.

யாருக்கும் பரலோகத்திற்கு போகும்படியான அழைப்பைக்குறித்து பழைய ஏற்பாடு எதுவும் கூறாதிருக்கும் போது, புதிய ஏற்பாடு சபைக்கு "உன்னத அழைப்பை", "பரம அழைப்பை" நிச்சயப்படுத்துகிறது. (பிலிப்பியர் 3:14; எபிரெயர் 3:1) மற்றவர்களைக் காட்டிலும் ஒரு வித்தியாசமான ஆசீர்வாதம் சுவிசேஷ யுக சபைக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். பழைய ஏற்பாட்டு பாத்திரவான்களாகிய **(Ancient Worthies)** ஆபிரகாம், தாவீது தீர்க்கதரிசி, எலியா, எலிசா, மோசே முதலானவர்கள் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்ற முடியாததால் அவர்கள் சபை வகுப்பாராக ஆக முடியாது. அவர்கள் தேவனிடத்திலும் நீதியினிடத்திலும் அவர்கள் காண்பித்த விசுவாசம் அபரிமிதமான ஆசீர்வாதத்தைப் பெறும். ஆனால் அது உலகமனைத்திலும் மேசியாவின் ராஜ்யத்தால் ஸ்தாபிக்கப்படும் பரதீசில் பூமிக்குரிய ஆசீர்வாதமாக இருக்கும். கடந்த கால தகுதியுள்ள பண்பாளர்களை பரிசுத்த பவுல் விவரித்த பின்பு, "இவர்கள் எல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் விசுவாசத்தோடே மரித்தார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" என்று அறிவிக்கிறார். (எபிரெயர் 11:38–40) வேறு வார்த்தையில் சொல்வோமேயானால், சபையானது முதலாவது பரலோக சுதந்தரத்தை பெற வேண்டும். ஏனெனில் அது தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள் என்று பரிசுத்த யாக்கோபு அறிவிக்கிறார். (யாக்கோபு 1:18)

## மறுரூபமான மலையில்

"பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று இயேசு கூறினபோது, எலியா பரலோகத்திற்கு போகவில்லை என்று குறிப்பாக அறிவிக்கிறார். (யோவான் 3:13) தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை. அவனது கல்லறை இன்னும் எருசலேமில் இருக்கிறது என்று பரிசுத்த பேதுரு அறிக்கை செய்து இதை உறுதிப்படுத்துகிறார்.இப்படியாக பரிசுத்த பேதுரு தீர்க்கதரிசிகளில் யாரும் பரலோகம் போகவில்லை என்று குறிப்பாக உணர்த்துகிறார். (அப்போஸ்தலர் 2:34) எலியாவின் வாழ்க்கையில் சொல்லர்த்தமாக வானமண்டலத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் மாம்சத்தில் உள்ள சபைக்கு நிழலாக இருப்பதால் நமது ஆர்வம் எலியாவின் அனுபவத்தில் அதிகமாக இருக்கிறது.

இயேசு தமக்கு வரவிருக்கிற மகிமையை ஒரு விசேஷித்த காட்சியாக தமது அப்போஸ்தலர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூவருக்கும் காண்பித்தார். (மத்தேயு 17:9) வெளிப்படுத்தின விசேஷ ஆசிரியர் யோவானால் பார்க்கப்பட்ட மகிமைகள், சத்தம் மற்றும் நபர்கள் உண்மையில் உயிரோடில்லை. மூவரில் ஒருவராகிய பரிசுத்த பேதுரு, வரவிருக்கிற இயேசுவின் மகிமையை பார்த்ததாக அறிவிக்கிறார். எனினும் காட்சியைக் காட்டிலும் அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் உண்டு என்று அறிவிக்கிறார். (2 பேதுரு 1:16–21) காட்சியில் இயேசுவே மையமாக இருந்தார். மோசே கிறிஸ்துவோடு முடிகிற நியாயப்பிரமாண யுகத்தையும், எலியா கிறிஸ்துவிலிருந்து ஆரம்பிக்கிற சுவிசேஷ யுகத்தையும் குறிக்கிறார்கள்.

## கில்கால், பெத்தேல், எரிகோ, யோர்தான்

எலியா எடுத்துக் கொள்வதைப்பற்றி எலிசா அறிந்திருந்தார். இந்த எண்ணத்துடன் அவர்கள் கில்காலுக்கு சென்றார்கள். ஆனால் கர்த்தர் அங்கே எலியாவை எடுத்துக் கொள்ள வில்லை. ஆனால் அவரை பெத்தேலுக்கு அனுப்பினார். எலிசாவை எலியா கில்காலிலே இருக்கச் சொன்னது. எலிசா பிரயாணத்தில் நம்பிக்கை இழந்திருந்ததையும் அதைரியப் பட்டிருப்பதையும் தெரிவிக்கிறது. ஆனால் அவர் சென்றார். பெத்தேலிலும் அதே நடந்தது, அவர்கள் எரிகோவுக்குச் சென்றார்கள். எரிகோவிலும் அதே நடந்தது, அவர்கள் யோர்தானுக்குச் சென்றார்கள். யோர்தானைக் கடந்து இன்னும் சென்றார்கள். ஆனால் அதன் பிறகு எந்த இடமும் காணப் படவில்லை. இருந்தாலும் அவர்கள் யோர்தானுக்கு வந்ததிலிருந்து திரளான தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் அதிக ஆர்வங்கொண்டு அவர்களை கவனித்தார்கள்.

இதை சபைக்கு உண்மைபொருளுக்கு பொருத்துவோமாக, கில்கால் அறுவடையின் ஆரம்பத்தை–அக்டோபர் 1874, குறிப்பதாக காணப்படுகிறது. இந்த தேதி வெளிப்படையாக தெரியும் வண்ணம் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தானியேல் 12:12) இந்த தேதியை அநேக வேதமாணவர்கள், சபை முடிவடையும் காலத்தை அறிந்து கொள்வதில் மிகவும் ஆர்வங்கொண்டு எதிர்பார்த்திருந்தார்கள். அப்படி

தேதி எதுவும் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. அது யூகிக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் சபையின் மறுரூபமடைதல் நிறைவேறும் காலத்தைப் பற்றி எந்தவித அறிக்கையும் இல்லை. எதிர்பார்ப்புகள் நிறைவேறாததால் சில ஏமாற்றங்கள் இருந்தன. எனினும் அடுத்தபடியாக எலியா வகுப்பிலிருந்த அநேகர் எலிசா வகுப்பாருக்கு தகுதியுள்ளவர்களாக தயாரானார்கள்.

பெத்தேலின் அனுபவங்கள் ஒத்ததாயிருந்தது, பெத்தேல் 1878–ன் வசந்த காலத்திற்கு இசைவாயிருந்தது. நமது கர்த்தர் யூத யுக முடிவில் "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும் என்று சொன்ன காலத்திற்கு இணையாக கர்த்தர் தமது ராஜரீக அதிகாரத்தை எடுத்துக் கொண்டது இருந்தது. (லூக்கா 13:34,35) கர்த்தர் இதை நேரடியாக வாக்குத்தத்தம் பண்ணாதிருந்தாலும், சபை மகிமையடைவதற்கு இதை வேதவாக்கியங்கள் குறிப்பிடுகிற தேதியாக நாம் நினைப்பதில் நியாயமற்றதல்ல. எனினும் ஏமாற்றம் அடைந்த அனைவருக்கும் ஒரு சரியான ஆவியில் ஒரு ஆசீர்வாதம் வந்தது.

எரிக்கோவிற்கு சென்றதற்கு ஒத்ததாக அடுத்து 1881 ஆம் வருடத்திற்கு சென்றார்கள். இந்த தேதி புறஜாதிகளுக்கு கதவு திறக்கப்பட்டு கொர்நெலியு முதலாவது புறஜாதியானாக தேவனுடைய குடும்பத்திலே சேர்க்கப்பட்டதற்கு இணையாக இருந்தால் வேதமாணவர்களுக்கு அதில் அதிக ஆர்வம் இருந்தது. இங்கே யுக மாற்றம் நடைபெறும் தேதியாகவும் சபையானது மகிமையடையும் தேதியாகவும் நிழலாக காண்பிக்கப்பட்டதாக நாம் யூகிக்கிறோம். இந்த யூகத்தில் தவறு செய்தோம். ஆனால் மகா ஆசீர்வாதம் பெற்று போய்க் கொண்டிருந்தது.

வேதவாக்கியங்களால் குறிப்பிட்ட அடுத்த தேதி யோர்தானுக்கு ஒத்ததாக, புறஜாதியார் காலம் முடிவடைகிற அக்டோபர் 1914ஆகும். சிதேக்கியாவின் நாளிலிருந்து அக்டோபர் 1914 வரை 2550 வருடங்கள் முடிவடைந்தன என்பதிலும், புறஜாதி தேசங்களுக்கு உலகை ஆளுவதற்கு கொடுத்த காலம் முடிவடைந்து விட்டது என்பதிலும் வேதமாணவர்கள் முற்றிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். தற்கால யுத்தம் (1915) உலக ராஜ்யங்களை நீக்கவும், பூமியை கட்டுப்படுத்த மேசியாவின் ராஜ்யத்தை நிர்மாணிக்கவும் பயன்படும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

புறஜாதியார் காலம் முடிவடைவதற்கு முன்னரே சபையானது மகிமையடையும் என்று கர்த்தர் கூறவில்லை. எனினும் சில வேத வாக்கியங்களின்படி இந்த கருத்து நியாய மற்றதாக இருக்காது. குழப்பமடையாத வேத மாணவர்கள் எலியாவும், எலிசாவும் யோர்தானை கடந்து சென்றது போல தொடர்ந்து செல்கிறார்கள். எலியா வேறு இடத்திற்கு செல்ல கட்டளையிடப்படாததுபோல, வேறு எந்த தேதிக்காகவும வேத மாணவர்கள் தேடிச் செல்லவில்லை. எலியாவை கர்த்தர் தமது நேரத்தின்படியும் தமது வழிமுறைப்படியும் எடுத்துக் கொள்கிற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### அக்கினி ரதமும் சுழல் காற்றும்

எலியாவும் எலிசாவும் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமென்பதை அறியாது சென்றபோது, எலியா எலிசாவை நோக்கி, "நான் உன்னைவிட்டு எடுத்துக் கொள்ளப்படு முன்னே நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன, கேள்" என்றான். அதற்கு எலியாவிடம் உள்ள ஆவியின் வரம் இரட்டிப்பாக வேண்டும் என்று எலிசா கேட்டான். இந்த மகா ஆசீர்வாதங்களை விசேஷித்த நிலைமைகளின் கீழ்தான் எலிசா பெற முடியும் என்று எலியா பதிலளிக்கிறார். அதாவது விசுவாசத்தில் கடைசிவரை அதாவது எலியா எடுத்துக் கொள்ளப்படும் வரை அவன் தொடர்ந்து இருந்தால் மட்டுமே பெற முடியும் என்கிறார். இது ஒரு கடினமான காரியமாக இருக்கும். ஏனெனில் எலிசாவின் கவனம் அலைந்து திரிய அனுமதிக்கப்பட்டால், அவனால் இப்படியான செழுமையான ஒரு ஆசீர்வாதத்தை பெற இயலாது.

அவர்கள் இருவரும் தொடர்ந்து சென்று கொண்டிருந்த போது இதோ ஒரு அக்கினி ரதம் அவர்களை பிரித்தது. அடையாள பாஷையில், எலியா வகுப்பார் கொடிய கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து இப்படியாக தங்களது தோழர்களிடமிருந்து பிரிக்கப்படுவார்கள். எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது வந்த சூழற்காற்றும் துன்பத்தைக் குறிக்கிறது. தீர்க்கதரிசனங்கள் பொதுவாக நிறைவேறின பிறகுதான் சரியானபடி புரிந்து கொள்ள முடியும், அதற்கு முன் மங்கலாகவே தெரியும். நமது கர்த்தரின் முதலாம் வருகையைப் பற்றின தீர்க்கதரிசனங்களும் நிறைவேறினபோது இப்படியே இருந்தது.

அக்கினி ரதத்தையும் சுழல்காற்றைப் பற்றியும் முன்பாகவே முழுமையாக புரிந்துகொள்ள நாம் நம்பிக்கை கொள்ள வேண்டாம். தற்கால வாழ்விலிருந்து திடீரென்று, பலவந்தமாக, கொடிய துன்பம் முதலானவைகளால் எடுத்துக் கொள்ளப்படுகிற காரியம் சிலருக்கு பயங்கரமான எதிர்பார்ப்பாக இருக்கும். ஆனால் எலியா வகுப்பாரின் அங்கங்களுக்கு இப்படியாக இருக்காது. அனுதினமும் தயாரான உள்ளத்துடன் மாறுதலுக்கு காத்துக் கொண்டிருப்பவர்கள் நடுக்கமில்லாமல் செல்வார்கள். எப்படிப்பட்ட வழியில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டாலும், அவர்களது மீட்புக்காக, நீண்ட காலமாக ஜெபித்துக் கொண்டும் காத்துக் கொண்டும் இருந்த அவர்களது நம்பிக்கையின் உச்சக்கட்டமாக இருக்கும்.

**R 5773** **As Deceivers And yet True**

# எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் (உண்மையுள்ளவர்)

*"இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல்...... கனத்திலும் கனவீனத்திலும் துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும்." 2 கொரிந்தியர் 6:3,8*

சுறுசுறுப்பான ஒரு கிறிஸ்தவனின் அனுபவங்கள் எப்படி பலதரப்பட்டதாக இருக்கின்றன! கனம் மற்றும் கனவீனம் நல்ல அறிக்கையிடப்படுதல், கெட்ட அறிக்கையிடப்படுதல், நீதியின் நிமித்தம் துன்பப்பட்டு ஏமாற்றுக்காரன் முதலான வார்த்தைகளால் அழைக்கப்படுதல் போன்ற அனுபவங்கள். மற்றவர்களைக் காட்டிலும் சிலர் அதிக விளம்பரம் பெற்று இப்படியாக அதிக கவனத்தை இழுப்பார்கள். மற்றவர்களை காட்டிலும் சிலர் பலவகையான பரந்த ஊழியத்தையும் பெரும் சந்தர்ப்பங்களையும் பெற்றிருப்பார்கள். ஆனால் நமது தலைப்பு வசனத்திலும் அதன் சந்தர்ப்பத்திலும் விவரிக்கப்பட்டுள்ளபடி உண்மையுள்ள ஒவ்வொரு கிறிஸ்துவின் சீஷனும் ஏறக்குறைய இந்த அனுபவங்களை பெறுவார்கள். சிலர் நம்மைக் குறித்து நல்ல விதமாக பேசுவார்கள். சிலர் தீமையாக பேசுவார்கள். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்பது சுவிசேஷயுகம் முழுவதும் எப்பொழுதும் உண்மையாய் இருக்கிறது. (2 தீமோத்தேயு 3:12) இன்னும் இந்த கடைசி நாட்களில் இது மிகவும் உண்மையாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சகோதரருக்குள், கர்த்தரின் பரிசுத்தவான்கள் அனைவரும் கனம் பெற வேண்டும். சகோதரரின் கனத்தை யாரும் தேடக்கூடாது. எனினும், தேவனிடம் முழுமையாக அர்ப்பணம் செய்ய பெரும் முயற்சி எடுத்தவர்கள், மாம்ச பிரகாரமாக இழிவானவர்களாக இருந்தாலும் ஒரு பெரிய மதிப்பு அவர்களிடம் இணைந்திருக்க வேண்டும். தேவன் தமதும் ஆவியால் யாரையாவது ஜெநிப்பித்திருக்கிறார் என்கிற உண்மை நம்மை அவர்களை மதிக்க விருப்பங் கொள்ள வைக்க வேண்டும். கர்த்தர் இவர்களை இப்படியாக கனப்படுத்தியிருக்கிறார். பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் எளிமையானவர்களாக இருந்தாலும். நமது கர்த்தராகிய இயேசுவினால் மிகவும் நேசிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும், தங்களது சகோதரர்களில் சிறியவர்களில் கடைசியானவர்களைக் கூட எப்படி நடத்துகிறோம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

"எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர்." அநேக சந்தர்ப்பங்களில் மகா அப்போஸ்தலர் பவுல் அவமதிக்கப்பட்டார். மற்ற நேரங்களில் அவர் கனப்படுத்தப்பட்டார். அவரைப் பற்றிய கெட்ட அறிக்கைகளும் நல்ல அறிக்கைகளும் வெளி தேசங்களில் பரவின. தேவனுடைய ஜனங்களாக ஊழியம் செய்பவர்களால் ஏமாற்றுபவராக கருதப்பட்டார். ஆனால் எல்லா சமயத்திலும் அவர் கர்த்தருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் உண்மையுள்ளவராக இருந்தார். அவர் யூத மதத்தை விட்டு ஓடியவராக கருதப்பட்டார். ஏனெனில் நித்திய ஜீவனுக்கு ஒரே நம்பிக்கையாக இருந்த நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்படி போதிக்கவில்லை. கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தில் விசுவாசம் வைப்பதின் மூலம் கிடைக்கிற மிகவும் உன்னதமான இரட்சிப்பை போதித்துக் கொண்டிருந்தார். இந்த போதனை நியாயப் பிரமாணத்தை தாழ்ந்ததாக காணப்படச் செய்தது. ஆகையால் அவரது சக யூதர்கள், அவர்களது பிதாக்களின் பிரமாணத்திற்கு உண்மையாய் இருக்கவில்லை என்று அவரை குற்றஞ்சாட்டினார்கள். ஒரு யூதனுக்கு இது ஒரு பெரும் அவமரியாதையாய் கருதப்பட்டது.

இதன் பலனாக பரிசுத்த பவுலைப்பற்றிய கெட்ட அறிக்கைகள் எல்லா இடங்களிலும் அவிசுவாசமுள்ள யூதர்களிடையே பரம்பியது. எக்காலத்திற்கும் அவர் ஒரு பெரிய ஏமாற்றுக்காரனாக முத்திரையிடப்பட்டார். அவருக்கு எதிராக ஒவ்வொருவரும் எச்சரிக்கப்பட்டார்கள். "அந்த மனிதன் பவுல் வருகிறானா என்று கவனியுங்கள். அவனைக் கொல்லுகிறவன் தேவனுக்கு ஊழியம் செய்து அவரது நாமத்தை மகிமைப் படுத்துகிறான்!" "ஏன்," என்று சிலர் கேட்கலாம். "ஏனெனில், அவன் நசரேயனாகிய இயேசுவே மேசியா என்றும் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தால் இந்த மனுஷன் இயேசு மூலம் உயிரடைவோம் என்றும், பதினாறு நூற்றாண்டுகளாக நாம் பெற்றிருந்த நியாயப்பிரமாணத்தால் எந்த வித பிரயோ ஜனமுமில்லை என்றும் கூறி ஜனங்களை வஞ்சிக்கிறான். ஜனங்கள் அந்த நசரேயனை பின்பற்றும்படி முயற்சி செய்கிறான்."

மேலும் பரிசுத்த பவுல் தன்னைப் பின்பற்றும்படி அநேகரை இழுக்க முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டினார்கள். எனினும் அவர் ஒவ்வொரு வார்த்தையிலும் தேவனுக்கு உண்மையாயிருந்தார். அவர் இஸ்ரயேல் தேசத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும், தீர்க்கதரிசிகளுக்கும்

உண்மையாயிருந்தார். அவர் தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் உண்மையாயிருந்தார். அவர் எந்த விதத்திலும் ஏமாற்றுக்காரனாக இல்லை; இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டிருந்தவர்களால் ஏமாற்றுக்காரன் என்று அழைக்கப்பட்டார். குருடாக்கப்பட்ட யூத சகோதரர்களுக்கும் தவறான தேவர்களுக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கும் அவர் "ஒரு ஏமாற்றுக்காரனாக" காணப்பட்டார்.

## மற்றவர்களுக்காக இணங்குதல்

"ஊழியம் குற்றப்படாதபடிக்கு, யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல்" இருப்பதே அப்போஸ்தலரின் விருப்பமாகவும், முயற்சியாகவும் இருந்தது. ஊழியம் என்ற வார்த்தை அடிக்கடி இன்றைய நாளில் குருத்துவத்தை முழுமையாக குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. சபைகளின் ஊழியர்கள் அல்லது போதகர்கள் ஊழியம் என்று பேசப்படுகிறார்கள். அதாவது பிரஸ்பட்டேரியன் ஊழியம், மெதடிஸ்ட் ஊழியம் முதலியவைகள். ஆனால் பரிசுத்த பவுல் ஒரு பரந்த எண்ணத்தை உடையவராயிருந்தார் என்று நாங்கள் நினைக்கிறோம். அதாவது கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்தை அறிவிப்பது அல்லது வேறு எந்த வழியிலாவது கர்த்தருக்கு ஊழியம் பண்ணுவது சேவை என்ற அர்த்தத்தில் தான் அந்த வார்த்தையை அவர் பயன்படுத்தினார். ஒரு ஊழியன் ஒரு வேலைக்காரனாக இருக்கிறான். கர்த்தருக்கு வெளிப்படையாகவோ அல்லது தனிப்பட்டோ சேவை செய்கிறவர் ஊழியக்காரர்கள், உண்மையுள்ள ஒரு வாழ்க்கையை, கனம் பொருந்திய ஒரு வாழ்க்கையை வாழ முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் ஏமாற்றுகாரர்கள் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையான வாழ்க்கையை வாழ வேண்டும். எனினும் மற்றவர்கள் அவர்களது மேன்மையான நடக்கையை கவனிப்பார்கள். ஒவ்வொருவரும் குற்றமில்லாத முறையில், உலகம் நல்ல, சரியான வாழ்க்கை என்றும் சொல்லும்படி வாழ முயற்சிக்க வேண்டும். நிந்தனைக்கு மேலாக வாழ வேண்டும். குற்றத்திற்கு இடமளிக்கக் கூடாது. நாம் குற்றம் இழைந்திருக்கிறோம் என்று ஒருவர் சொல்லுகிறதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதே அப்போஸ்தலரின் எண்ணமாக இருக்கிறது.

யூதர்களுக்குள்ளே யாராவது பன்றி மாமிசம் சாப்பிட்டால் அது ஒரு குற்றமாக இருக்கும். அவன் கீழ்ப்பட்டவனாகவும் மத நம்பிக்கை அற்றவனாகவும் கருதப்படுவான். ஆனால் நமது காலத்தில் பன்றி மாமிசம் சாப்பிடுவதை அநேகர் குறை கூற மாட்டார்கள். ஆனால் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்கத் தவறினால், அது தேவ கட்டளையை மீறினதாகக் கருதப்படும். நமது மனசாட்சிக்கு ஏற்றவாறு இதுவரை நாம் சில காரியங்களை செய்கிறோம். ஆனால் இப்படி செய்வதால் ஊழியம், சத்திய சேவை குற்றப்படுத்தப்படும். அநேகர் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்க மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாக முடிந்தவரை, நமது நடக்கைகளில் உண்மைத் தன்மையின் உச்சத்திற்கு செல்ல ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு கட்டளையிடுகிறார். ஒரு தனிப்பட்டவரது மனசாட்சியுள்ள பண்புகள் லேசாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

உலகின் சில பகுதிகளில் வீட்டிற்குள் நுழைவதற்கு முன் காலணியை கழற்றுவது ஒரு வழக்கமாக இருக்கிறது. நாம் அந்த பகுதியில் இருந்தோமானால் அந்த வழக்கத்தை பொதுவானதாக உறுதிப்படுத்த வேண்டும். நம்மைச் சுற்றி இருக்கிறவர்களின் வழக்கத்தை நமது மனசாட்சிக்கு விரோதமில்லாமல் ஆசரிக்க நாம் விருப்பம் உள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். அவர்களது வழிமுறையை உறுதிப்படுத்துவதின் மூலம் குற்றத்தை நாம் தவிர்த்து, நன்மையான செல்வாக்கை அதிகப்படுத்துவோம்.இதைச் செய்யத் தவறினால், அன்பிலும் இரக்கத்திலும் குறைவுள்ளதாயிருக்கும். ஆகையால் எப்படியோ அது கர்த்தரினிமித்தம் ஒரு தீமையாக இருக்கும்.

## Justification - Reckoned And Actual

## நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும்

"நீதிமானாக்கப்படுதல்" என்ற வார்த்தையில் சரியானபடி நமது கவனத்தை செலுத்த, மனிதனிடம் என்ன கஷ்டம் உள்ளது, விசுவாசத்தின் மூலமாகவோ, வேறு எதன் மூலமோ நீதிமானாக்கப்படுதலை பெற வேண்டிய அவசியம் என்ன என்பதை ஆராய்ந்து கண்டு பிடிக்க நமது சிந்தை பின்னோக்கி செல்ல வேண்டும். மனிதன் பாவியாகி, சர்வ லோகத்தின் மகா நியாயாதிபதியாகிய தேவனால் மரணதண்டனை கொடுக்கப்பட்டான் என்ற உண்மையே, மனிதன் நீதிமானக்கப்படுவதற்கான அவசியம் என்பதை நாம் காண்கிறோம். ஆதாமின் விழுதலுக்கு முன் அவன் தேவனடைய குமாரன் என்று அழைக்கப்பட்டான். இயேசு வரும்வரை ஆதாமுக்கு பிறகு யாரும் அந்த பெயரால் அழைக்கப்படவில்லை. இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார், ஏனெனில் அப்படியாக அவர் பிறந்தார். அவர் உலகத்திற்கு வருவதற்கு முன், முன்–மனித நிலைமையில் அப்படி இருந்தார்.

"நீ சாகவே, சாவாய்" என்கிற தீர்ப்பின் கீழ், ஜீவனுக்கு அபாத்திரராக அவர்கள் இருந்ததினாலேயே ஆதாமும் அவனது பிள்ளைகளும் மரண தண்டனை கொடுக்கப்பட்டார்கள். அது மாத்திரமல்ல, வியாதி, ஆபூரண சிந்தை ஆகியவை தண்டனை நிறைவேறுதலோடு சேர்ந்து கொண்டது. அந்த தண்டனையின் மற்ற பகுதி, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு தேவனுக்கு அந்நியராகுதல் ஆகும். மனிதன் மறுபடியும் தேவனுடைய கிருபை மற்றும் ஆசீர்வாதத்திற்குள் வருவதற்கு பாவத்திற்கான ஒரு பலி தேவையாயிருந்தது. அந்த பலி கொடுக்கப்படும் வரை நீதிமானாக்கப்படுதல் முழு அர்த்தத்தில் இருக்க முடியாது.

இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தை, இஸ்ரயேலர் கைக்கொண்டால், தேவனோடு ஐக்கியமும், கடந்த பாவங்களுக்கான மன்னிப்பும், நீதிமானாக்கப்படுதலும் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது என்ற அப்போஸ்தலர் பவுல் குறிப்பிட்டார். பதினைந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக முயற்சித்தும் அதை அவர்களால் கைக்கொள்ள முடியவில்லை என்பதை கண்டார்கள். ஏனெனில், தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை. (கலாத்தியர் 2:16) நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள முடியாததால் இடைக்காலத்தில் யாரும் நீதிமானாக்கப்படவில்லை. ஆனாலும் சிலர் ஒரு சரியான ஆவி, ஒரு விசுவாசத்தின் ஆவி மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவைகளின் வெளிப்படுத்துதலினால் தங்களை தேவனிடம் அர்ப்பணித்தார்கள். இவர்களை பழங்கால பாத்திரர் (பழைய ஏற்பாட்டு விசுவாசிகள்) என்று நாம் அழைக்கிறோம். ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், யோபு, மோசே மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளும் இந்த வகுப்பில் அடங்குவர். எபிரெயர் 11ஆம் அதிகாரத்தை பார்க்கவும்.

பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகளுக்கு வந்த நீதிமானாக்கப்படுதல் ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் அல்ல. கிறிஸ்து மரிக்கும் வரை, பாவத்திற்கான மீட்பின் விலைக் கிரயம் கொடுக்கப்படும் வரை ஜீவனுக்கான உண்மையான நீதிமானாக்கப்படுதல் வர வாய்ப்பே இல்லாதிருந்தது. "நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக கிறிஸ்து மரித்தார்." (1 பேதுரு 3:18) இதற்காக கிறிஸ்து மரித்ததினால் கிறிஸ்து மரிக்கும் வரை யாரும் தேவனிடத்தில் கொண்டு வரப்படவில்லை பதிலுக்கு பதில் என்ற தேவனுடைய ஏற்பாட்டின்படி வேறு ஏதாவது வழியில் மனுக்குலத்தை நீதிமானாக்க முடியுமென்றால், கிறிஸ்து மரித்திருக்கமாட்டார். வேறு எந்த முறையிலாவது பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள் ஜீவனுக்காக நீதிமானாக்கப்படமுடியுமென்றால், இவர்களும் மற்ற மனிதர்களும் நீதிமானாக்கப்பட்டிருப்பார்கள். கிறிஸ்துவின் மரணத்திற்கு அவசியமிருந்திருக்காது.

### ஜீவனுக்கு நீதிமானாக்கப்படுதல்

ஆபிரகாம் மற்றும் அனைத்து பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடனான உறவுக்கும் இந்த யுகத்தில் விசுவாசத்தை அப்பியாசப்படுக்கிற நமக்கு வருகிற உறவுக்கும் உள்ள குறிப்பிட்ட வித்தியாசம் என்ன? இரண்டு வகுப்பாருக்கும் "நீதிமானாக்கப்படுதல்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான், அதேபோல் நாமும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். ஆனால் கடந்த யுகத்தில் ஆபிரகாமும் மற்றவர்களும் கடந்த யுகத்தில் சட்டப்பூர்வமான அர்த்தத்தில் அவர்கள் தேவனோடு சமாதானம் பெற்றிருந்திருக்க முடியாது. ஏனெனில் கிறிஸ்து இன்றும் உலகத்திற்கு வந்து உலக பாவங்களுக்காக மரிக்காதிருந்தார். ஆபிரகாம் தேவனோடு நண்பனாயிருக்கும்படி நீதிமானாக்கப்பட்டிருந்தான் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆதாம் பாவம் செய்த போது இழந்தவைகளில் ஒன்று சிருஷ்டிகருடனான நட்பு ஆகும். ஆகையால் மனிதன் தேவனுக்கு அந்நியனாயிருந்தான். ஆகையால் மனிதன் தேவனுக்கு அந்நியனாகவும், "துர்க்கிரியைகளினாலே சத்துருவாகவும்" இருந்தான். ஆனால் தேவன் ஆபிரகாமை அவரது நண்பனாகக் கருதினார்.

ஆபிரகாமின் விசுவாசம் அவரது கிரியைகளினாலே வெளிப்படுத்தப்பட்டது. அவர் வெறுமையாக விசுவாசத்தைக் காட்டவில்லை. அவரது அப்பியாசப்படுத்தும் முறையில் கீழ்ப்படிதலின் கிரியைகளினால் அவர் மெய்ப்பித்துக் காட்டினார். அவரது விசுவாசம் சோதிக்கப்பட்ட பிறகு, சில வாக்குத்தத்தங்களை அவர் தேவனிடமிருந்து பெற்றார். அதன் பிறகு ஒரு சத்துருவாக அவர் கருதப்படவில்லை. ஆனால் தேவனுடனான நட்புக்காக நீதிமானாக்கப்படுவதற்கும், ஜீவனுக்கு நீதிமானாக்கப்படுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. ஆபிரகாம் ஜீவனுக்காக கிறிஸ்து இல்லாமல் நீதிமானாக்கப்பட்டிருந்தால், இவருக்கோ உலகிலுள்ள மற்றவர்களுக்கோ ஒரு இரட்சகரே தேவைப்பட்டிருக்காது. அனைவரும் அதே போல நீதிமானாக்கப்பட்டிருக்கக் கூடும்.

ஆனால் நாம் இரட்சிக்கப்படும்படியாக வானத்தின் கீழெங்கும் வேறு நாமம் கட்டளையிடப்படவில்லை என்று வேத வாக்கியங்கள் நிச்சயப்படுத்துகிறது. ஆனால் இயேசுவின் நாமத்தின் மேலும் அவரது இரத்தத்தின் மேலும் விசுவாசம் வைத்து அவர் மூலம் தேவனிடம் உறவுக்குள் வருவதன் மூலமாகவேயன்றி நாம் இரட்சிக்கப்பட முடியாது என்றால், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தீர்க்கதரிசிகள் மற்றும் மற்ற பாத்திரவான்கள் வேறுவழியில் நீதிமானாக்கப்பட்டிருக்க முடியாது. அதுவரை இன்னும் வராதிருந்து, தமது கிரியைகளை இன்னும் நிறைவேற்றாதிருந்த ஒரு இரட்சகர் மேல் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த முடியாதிருந்ததால், அவர்கள் சட்டப்பிரகாரமான நீதிமானாக்கப்படுதலை பெறவே இல்லை; அதாவது ஜீவனுக்கு நீதிமானாக்கப்படவில்லை. எனினும் அவர்களது தேவனிடத்திலான கீழ்ப்படிதல் சோதிக்கப்பட்டு, மெய்ப்பிக்கப்பட்டது. மேலும் அவர்கள் தேவனுடைய நண்பர்களாக கருதப்பட்டு, தெய்வீக திட்டத்தின் சில அம்சங்களை ஓரளவுக்கு தெரிந்துகொள்ள செய்யப்பட்டார்கள். இவைகளை ஆபிரகாமுக்கு மறைக்க மாட்டேன் என்று கூறினார், ஏனெனில் அவன் அவருடைய நண்பன்.

ஆதாம் விழுந்து போனதிலிருந்து மனுக்குலத்தின் மேல் சாபம் இருந்து வந்திருக்கிறது. ஒரே சமயத்தில் உலகத்தின்மேல் தேவனுடைய ஆசீர்வாதமும் சாபமும் இருக்க முடியாது. இன்னும் ஆசீர்வாதம் வரவில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே ஜீவனுக்கு நீதிமானாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆபிரகாமின் பெரும் விசுவாசம் மற்றும் பூரண கீழ்ப்படிதலினிமித்தம், அவரது சந்ததி மூலமாக மனுக்குலத்திற்கு இந்த ஆசீர்வாதம் வரும் என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு அறிவித்தார். ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தில் விசுவாசிகள் தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க அழைக்கப்பட்டதுபோல, ஆபிரகாம் அழைப்படவில்லை. இயேசுவின் காலத்திற்கு முன் “தமது அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி”யாரும் வெளியரங்கமாக சந்தர்ப்பத்தை பெறவில்லை. (1 பேதுரு 2:21)

“ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை; ஆகிலும் தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்” என்று இயேசு கூறினபோது இதைக் குறிப்பிட்டார். (லூக்கா 7:28)

## தேவனுடைய பணிவிடைக்காரர்களும் அவரது குமாரர்களும்

பரலோக ராஜ்யத்தில் இருக்கிற அனைவரும் யோவான் ஸ்நானனைக் காட்டிலும் பெரியவர்களாயிருந்தால், அவர்கள் ஆபிரகாம், ஏனோக்கு முதலானவர்களைக் காட்டிலும் பெரியவர்களாயிருப்பார்கள். ஏன் இப்படி இருக்கிறது? இதற்கு பதில் என்னவென்றால், இயேசுவை பின்பற்றுபவர்கள் யோவான் ஸ்நானன் அல்லது மற்றவர்களைக் காட்டிலும் பாத்திரர் என்பதால் அல்ல. பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகுதான் தேவனுடைய வீட்டின் குமாரர்கள் ஆகும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. மேலும் தங்களது சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவை பின்பற்றினவர்களுக்கு மட்டுமே இந்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இவர் இந்த வகுப்பாருக்கு முன்னோடியாக இருந்ததால் இவருக்கு முன் யாரும் இருந்திருக்க முடியாது. யாரெல்லாம் குமாரர்களாக ஆக முடியும் என்பதை யோவானின் சுவிசேஷம் குறிப்பிட்டது. “அவருடைய நாமத்திலே விசுவாசமுள்ளவர்களாய் அவரை (இயேசு) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் (சலுகை) கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.” இந்த வகுப்பார் சலுகை பெற்றவர்கள்; “அனுக்கிரக காலமாகிய” குறித்த காலத்திலே அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்; சுவிசேஷ செய்தி அவர்களுக்குச் சென்றிருக்கிறது.

ஆபிரகாமுக்கு சுவிசேஷம் முன்பாகவே சொல்லப்பட்டது என்று பரிசுத்த பவுல் கூறினாலும். இதே அர்த்தத்தில் சுவிசேஷம் அவருக்கு செல்லவில்லை. தேவன் தமது நோக்கத்தை வெளிப்படுத்தினார் என்று நாம் காண்கிறோம். ஆனால் சுவிசேஷத்தின் முக்கியமான அம்சத்தை ஆபிரகாம் அறியவில்லை; ஏனெனில் பாவத்திற்கான பலி இன்னும் செலுத்தப்படவில்லை. இயேசு வந்து வழியை ஆயத்தப்பண்ணும்வரை தேவனால் யாரையும் நீதிமானாக்கி அவர்களை குமாரர்களாக ஆக்க முடியவில்லை; தேவனுடைய குமாரர்களாகும் சலுகை இயேசுவின் காலத்தில் அவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு முதலாவது கொடுக்கப்பட்டது. அதற்கு முன் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தியவர்கள் அனைவரும் நண்பர்கள் அல்லது பணிவிடைக்காரர்கள், இஸ்ரயேல் “பணிவிடைக்காரர்களின் வீடு” என்று அழைக்கப்பட்டது. “மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ள

வராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், நாமே அவரது வீடாயிருப்போம்.” (எபிரெயர் 3:1–6)

ஆகவே வீட்டின் பணிவிடைக்காரர்களுக்கும் வீட்டின் குமாரர்களுக்கும் உள்ள வித்தியாசத்தையும் அதற்கான காரணத்தையும் நாம் காண்கிறோம். சபையானது ஆபிரகாம் ஈசாக்கு, மோசே மற்றும் தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் உயர்ந்த நோக்க முடையது என்றோ சுபாவத்திலேயே குறைந்த பாவம் உடையது என்றோ நாம் நினைக்கக் கூடாது. ஆனால் இந்த சந்தர்ப்பம் நமக்கு வந்திருக்கிறது. மற்றவர்கள் தேவனுடைய “குறித்த காலத்தில்” இல்லாததால் இந்த சந்தர்ப்பம் வரவில்லை. குமாரர்களின் வீட்டில் நுழைந்து தேவனுடைய சுதந்தரராவதற்காக சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வது நமக்குரியதாகும்.

**ஜீவனுக்கு நீதிமானாக்கப்படுதலைத் தொடர்ந்து அர்ப்பணம்**

ஆகவே, பிறகு சபையானது கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தின் மூலமாக ஜீவனுக்கான நீதிமானாக்கப்பட்டது. ஏனெனில் தேவன் ஏற்றுக் கொள்ளக் கூடிய சிலவற்றை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் தங்களை தேவனுக்கு சமர்ப்பித்தார்கள். ஆபிரகாம் எந்த பலியின் புண்ணியமும் இல்லாததால் அவரால் தேவனுக்கு ஏற்புடைய பலியை செலுத்த முடியவில்லை. ஏனெனில் அவர் விழுந்து போன ஆதாமின் சந்ததியாக இருந்து, ஒரு பாவியாக இருந்தார். தெய்வீக ஏற்பாட்டின்படி எந்த குறைவுள்ள பலியும் தேவனுடைய பலிபீடத்திற்கு வரக்கூடாது. ஆனால் தற்போது, கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு எழுந்தருளி, தேவனுடைய பிரசன்னத்தில் நுழைந்து, மீட்கும் பொருளை சபைக்காக கொடுத்திருக்கிறார். நமது அர்ப்பணத்தில் அவரது நீதியை நமக்கு சாட்டி, நமது நீதிமானாக்கப்படுதலை நிறைவு செய்தார். நாம் எல்லாவற்றிலுமிருந்து இலவசமாக நீதிமானாக்கப்படுகிறோம். நாம் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறோம். நமது சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, புதிய சுபாவத்திற்கு – தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுதலை பெற்றுக் கொள்வது நம்முடையதாகும்.

இந்த முழு நீதிமானாக்கப்படுதலை பெறாமல், ஆபிரகாமோ அல்லது வேறு யாராவது நமது கர்த்தரின் காலம் வரை தனது சரீரத்தை ஒரு பலியாக கொடுக்க முடியாது. இந்த செய்தி இயேசுவின் நாட்களுக்கு முன் போதிக்கப்படவில்லை. கிறிஸ்து “ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்” என்று நாம் வாசிக்கிறோம். அவர் வருவதற்கு முன் இவைகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படவில்லை. ஜீவனுக்காக வழி திறக்கப்படாதிருந்தது. ஒரு காலத்தில் மனுக்குலத்திற்கு ஆசீர்வாதம் வரும் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு மங்கலாகவும் தெளிவற்ற நிலையிலும் இருந்தது. ஆனால் நித்திய ஜீவனோ அல்லது அழியாமையோ மேன்மையான ஜீவ நிலைமையோ அவருக்கு தெளிவாக்கப்படவில்லை. ஒரு ஆசீர்வாதம் வருகிறது என்பதை சாதாரணமாக அறிந்திருந்தார். மேலும் தேவனுக்கு இசைவாக நடக்கும்படி நாட விசுவாசம் பெற்றிருந்தார்.

சுவிசேஷ யுக சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் எப்படிப்பட்ட ஆச்சரியமானதாக இருக்கிறது! “முதலாவது கர்த்தரால் அறிவிக்கப்பட்டு, பின் அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்.” (எபி 2:3,4) இந்த “பெரிதான இரட்சிப்பு” எங்கே அறிவிக்கப்பட ஆரம்பித்தது என்பதை இங்கே அப்போஸ்தலர் தெளிவாக அறிவிக்கிறார். இதற்கு முன்னதாக இது தெளிவாக்கப்படவில்லை. நமது ஆண்டவரின் அப்போஸ்தலர்கள் அப்பொழுது அளிக்கப்பட்ட மரணத்திலிருந்து ஒரு இரட்சிப்பை, ஜீவனுக்குள்ளான ஒரு இரட்சிப்பை அறிவித்திருக்கக்கூடும். ஆனால் அவர்கள் காலத்திற்கு முன் வாழ்ந்தவர்கள் அதை அறிவித்திருக்க முடியாது. இரட்சிப்பின் சுவிசேஷத்தை முதலாவது நமக்கு கொண்டு வந்தவர் இயேசுதான். இதைப்பற்றிய அவரது வார்த்தைகளை கேட்ட அப்போஸ்தலர்கள் அதை உறுதிப்படுத்தினார்கள்.

ஜீவனுக்கு நீதிமானாக்கப்படுதலைத் தொடர்ந்து அர்ப்பணம் வரும், இது முன்னே இருக்காது. அர்ப்பணம் என்பது ஒருவர் தன்னை கர்த்தருக்கு அர்ப்பணிப்பது; ஒருவரது சித்தத்தையும் அனைத்தையும் தேவனிடம் சமர்ப்பிப்பது ஆகும். சபையோடு தொடர்புபடுத்தும்போது, அர்ப்பணிப்பது ஏற்றுக் கொள்ளப்படுவதையும் தெரிவிக்கிறது. “நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள் (பிரதிஷ்டை பண்ணுங்கள்)” நான் உங்களை பரிசுத்தப்படுத்துவேன் (பிரதிஷ்டை செய்வேன்)” என்று எழுதப்பட்டுள்ளது. சுவிசேஷ யுகத்தில் இயேசு கிறிஸ்து மூலமாக நம்மை தேவனிடம் ஒப்புக் கொடுப்பது நமது சலுகையாக இருக்கிறது. இயேசு பிரதான ஆசாரியனாக இருந்து, முன்குறிக்கப்பட்ட தொகை நிறைவாகும் வரை இந்த பலிகளை ஏற்றுக் கொள்கிறார். இப்படியாக அவரால் நீதிமானாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் பிதாவினால் ஏற்புடையவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு, பரிசுத்த ஆவி வந்து தெய்வீக சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுகிறார்கள்.

நமது ஆண்டவரின் மூன்றரை வருட ஊழியத்தில் தமது சீஷர்களிடம் அவர்கள் தம்மில் நிலைத்திருந்தால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று அவர் அறிவித்தார். இயேசு முதலில் தமது பலியை நிறைவேற்றி, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, பரலோகத்திற்கு எழுந்தருளி, தம்மை அவர்களுக்காக பிதாவினுடைய பிரசன்னத்தில் தோன்றும் வரை, அவர்கள் தேவனுக்கு முன்பாக சட்டபிரகாரமாக நிற்க முடியாது. பிறகு

அவர்கள் பரிசுத்த ஆவியை ஜெநிப்பிக்கும் வல்லமையுடன் பெற்றார்கள், இது வெளியரங்கமாக காண்பிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் இது அவர்களுக்கு வந்தது. அவர்கள் முன்னரே தங்களை அர்ப்பணம் செய்திருந்தார்கள். கிறிஸ்துவும் அவர்களை ஏற்றுக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் செய்யப்படக்கூடியவைகள் அனைத்தும் செய்யப்பட்டன. சபையை அமைக்கப்போகிறவர்களுக்காக தேவனுக்கு முன்பாகத் தோன்றி மீட்கும் பொருளை கொடுக்கும்வரை எதுவும் தேவையான நிலைக்குரியதாக இல்லை. பெந்தெகோஸ்தே நாளில் அதற்கு முன் அல்ல, அவர்கள் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட்டார்கள். இதுவே அவர்களது அர்ப்பணத்தின் நிறைவாக, அதன் பலனாக இருந்தது.

## அர்ப்பணத்தின் தற்கால நோக்கம்

முன்கூட்டி தீர்மானிக்கப்பட்ட தெரிந்து கொள்ளப்பட்ட வர்களின் எண்ணிக்கையில் கடைசி அங்கம்வரை கிறிஸ்துவின் மூலம் தேவனிடத்தில் வருகிறவர்களை அவர் ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ள வராயிருக்கிறார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு அறிவிக்கின்றன. அதன் பிறகு கதவு அடைக்கப்படும் – தயையின் கதவு அல்ல. ஆனால் சுவிசேஷ யுகத்தில் மட்டுமே, கிறிஸ்துவின் உடன் சுதந்தரராயிருக்கும்படி கொடுக்கப்பட்ட பரம அழைப்பின் கதவு அடைக்கப்படும. சுவிசேஷ யுகத்தில் இதற்காகவே அர்ப்பணம் (Consecration) செய்யப்படுகிறது. கிறிஸ்துவின் புண்ணியத்தை தேவன் நம்மேல் சாட்டுவதற்கு முன்னரே, தேவனிடம் நம்மை அர்ப்பணம் பண்ணுவதில் செய்ய வேண்டிய காரியங்களை நாம் செய்ய வேண்டும். இதைச் செய்கிறவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்பட்டு நீதிமான்களாக்கப் படுவார்கள்.

"ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, எனனை பின்பற்றக்கடவன்." இதுதான் நிபந்தனை. வேறு எந்த வழியிலும் கிறிஸ்து நமது பரிந்து பேசுகிறவராயிருக்கமாட்டார். "நமக்காக (ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்) தேவனிடத்தில் பரிந்து பேசுகிறவரை நாம் பெற்றிருக்கிறோம்." ஆனால் எந்த விதத்திலும் அவர் உலகத்திற்கு பரிந்து பேசுகிறவர் அல்ல. அவர் நமக்கு பரிந்து பேசுகிறவர். அவர் மூலம் பிதாவினிடத்தில் வருகிற அனைவருக்கும் அவர் பரிந்து பேசுகிறவர். அங்கீகரிக்கப்பட்ட வர்களைத் தவிர வேறு யாரும் மகா தெய்வீக நீதிமன்றத்தை அணுக முடியாது.

இயேசு தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தின் மூலம் மகா பிரதான ஆசாரியரானார். தேவனுடைய வீட்டில் மகா பிரதான ஆசாரியரானதினால், பிதாவுடன் ஒப்புரவுக்கு வருகிற அனைவருக்கும் அவர் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். அவர்தான் அவர்களுக்கு உத்தரவாதி (ஜாமீன்). இந்த நிலைமையில் அவர் தமது சொந்த நிபந்தனையை விதிக்க உரிமையுடைவராயிருக்கிறார். அந்த நிபந்தனை என்னவென்றால் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றுகிறவனை மட்டுமே தமது சீஷனாக அவர் ஏற்றுக் கொள்வார்.

கிறிஸ்தவர்கள் என்று தங்களை வெளியரங்கமாக கூறிக்கொள்பவர்கள் பெருந்திரளானவர்களாக 40 கோடி பேர் இருக்கிறதாக நாம் காண்கிறோம். சிலர் சிறைகளிலும், சிலர் இராணுவத்திலும், இங்கேயும் அங்கேயுமாக இருப்பார்கள்; அவர்களில் பெரும்பாலானோர் செல்வத்திற்காகவும் மிகுந்த சந்தோஷத்திற்காகவும் முயற்சி செய்கிறார்கள். வெகுசிலரே ஜீவனுக்காக நீதிமானாக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் ஆபிரகாமைப் போல கொஞ்சமாக நீதிமானாக்கப்பட்டிருக்கலாம். நன்மை செய்கிற முயற்சிக்கிற அளவுக்கு நீதிமான்களாக்கப் படுகிறார்கள். ஆனால் ஜீவனைப் பெறுவதற்கு, முழுமையாக நீதிமானாக்கப்படுதல் அவசியம். கர்த்தரிடத்தில் நம்மை முழுமையாக அர்ப்பணிப்பதால் மட்டுமே முழுமையான நீதிமானாக்கப்படுதல் நம்மிடம் வருகிறது. ரோமர் 12:1

## அகில உலகமும் இன்னும் புறஜாதியாராக இருக்கிறார்கள்

புறஜாதியினர் ஆபிரகாமின் நாட்களிலோ, இயேசுவின் நாட்களிலோ நீதிமானாக்கப்படவில்லை. உண்மையிலேயே புறஜாதியினர் இன்னும் நீதிமானாக்கப்படவில்லை. தேவனிடத்தில் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிறவர்களைத் தவிர மற்ற உலகத்தார் அனைவரும் புறஜாதியினர். இஸ்ரயேலர்கள் உலகத்தில் உள்ள மற்றவர்களை சில சமயத்தில் ஜாதிகள் என்றும் சில நேரத்தில் புறஜாதிகள் என்றும் சில சமயத்தில் ஜனங்கள் என்றும் அழைப்பார்கள். இந்த மூன்று வார்த்தைகளும் இஸ்ரயேல் அல்லாதவர்களை குறிக்கிறது.

கிறிஸ்து நம்மிடையே வந்திருந்து தமது இரத்தத்தின் மூலமாக ஜீவனுக்காக வழியை திறந்ததினால் தேவனுடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் வருவதற்கு நாம் சலுகை பெற்றிருக்கிறோம். புதிய உடன்படிக்கை இஸ்ரயேலருக்கு வைக்கப்பட்டிருக்கிறது, விரைவில் உலகத்தினரும் வருவார்கள். "பலியினாலே என்னோடு உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்ற அவரது கட்டளையில் சபைக்கு தேவன் பெற்றிருக்கிற விசேஷித்த உடன்படிக்கை காண்பிக்கப்படுகிறது. (சங்கீதம் 50:5) பலியினால் மட்டுமே, நமது சித்தத்தை விட்டுக் கொடுப்பதினால் மட்டுமே, நமக்குரிய அனைத்தையும் விட்டுக் கொடுப்பதினால் மட்டுமே இந்த உடன்படிக்கைக்குள் நாம் வரமுடியும். மகா பரிந்து பேசுகிறவர் இல்லாமல் யாரும் வரமுடியாது. அது ஒரு பலியின் உடன்படிக்கை. புறஜாதியாராகிய உலகமானது இப்படிப்பட்ட ஒரு பலியின் உடன்படிக்கைக்குள் நுழைந்ததில்லை; ஆகையால் அவர்கள் தேவனுடைய குமாரர்கள் என்ற நிலைமைக்கு வரமுடியவில்லை. அதற்கான தெளிவான நிபந்தனைகளை அறியாமல் இந்த நிலைமைக்கு யாரும் வரமுடியாது.

யூத யுகம் முடிவடைந்து சுவிசேஷ அழைப்பு புறஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்ட பொழுது, ரோம நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு முதலாவது அந்த உடன்படிக்கைக்குள் நுழைந்தான். கொர்நேலியு தேவனுடைய அழைப்பை பெறுவதற்கு முன் அவன் ஒரு நீதியுள்ளவனும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்தான் என்றும் அவன் எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவனும் தருமம் பண்ணுகிறவனுமாய் இருந்தான் என்றும் வாசிக்கிறோம். அவன் நல்ல குணமுள்ளவனாய் இருந்தான் என்று நாம் சொல்வோம். ஆனால் அவன் புறஜாதியானாக இருந்தபடியால் அவனால் அழைப்புக்குக் கீழாக வரமுடியாதிருந்தது. ஆனால் தற்போது சுவிசேஷ அழைப்பு புறஜாதிகளுக்கும் செல்லக்கூடிய காலம் வந்திருந்தது. பிதாவானவர் கொர்நேலியுவை உடனே ஏற்றுக் கொண்டாரா? இல்லை. கர்த்தர் அவனிடம் ஒரு தூதனை அனுப்பினார். அந்த தூதன் கொர்நேலியுவிடம் கூறியதாவது: “உன் ஜெபங்களும் தானதருமங்களும், தேவனுடைய சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.” இவைகளெல்லாம் முன்னமேயே கவனிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதுவரை தேவனால் ஏற்றுக் கொள்ளக்கூடாதிருந்தது.

கொர்நேலியுவுக்கான இந்த செய்தி அவனை தேவனுடனான உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டுவந்ததா? ஓ, இல்லை! கர்த்தருடைய தூதனானவன் அவன் என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் கூறினான். அவன் கூறினதாவது, “இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி: பேதுரு என்று மறு பேர் கொண்ட சீமோனை அழைப்பி, அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் தங்கியிருக்கிறான். நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்.” இந்த வார்த்தைகள் அவசியமானது; அறிவானது அத்தியாவசியமானது. அறியாமையினால் நீதிமானாக்கப்பட கூடாது. அது தேவனுடைய திட்டமுமல்ல. கொர்நேலியுவும் அவனது குடும்பத்தாரும் தயாராயிருந்தார்கள். அவன் அறிந்திருக்கிறபடி அவன் முன்னரே, அர்ப்பணம் செய்தவனாயிருந்தான். புறஜாதியினரை எப்படி கையாளுவது என்பதை பரிசுத்த பேதுரு அறியாதிருந்தார். ஆகையால் தேவன் தமது சித்தத்தை ஒரு காட்சி மூலம் அவருக்கு வெளிப்படுத்தினார்.

தேவன் தம்மிடம் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்தாலன்றி எந்த ஒரு புறஜாதியானையும் நீதிமானாக்கமாட்டார் என்ற உண்மைக்கும், இப்படிப்பட்ட உறவுக்குள் வருவதற்கு அவர் நியமித்த வழியைத் தவிர வேறு வழி இல்லை என்ற உண்மைக்கும் கொர்நேலியு விஷயத்தில் தேவன் நமக்கு ஒரு குறிப்பை கொடுக்கிறார். யூதர்களுக்கான ஒரு விசேஷித்த வழி மோசே மற்றும் நியாயப்பிரமாணம், பிறகு அங்கிருந்து கிறிஸ்துவுக்குள் செல்ல வேண்டும். புறஜாதியார் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வருவதற்கான முறை, “நல்ல ஒலிவ மரத்தோடு,” ஒட்டவைக்கபடுவதேயாகும். இந்த ஒலிவ மரத்தின் வேர் ஆபிரகாமின் உடன்படிக்கையாகும். (ரோமர் 11:16–22) கிறிஸ்துவினுடையவர்களாகிறவர்கள் ஒரு இஸ்ரயேலனாக, ஆபிரகாமின் உண்மையான வித்தின் அங்கமாக ஆக வேண்டும். இதை நாம் வித்தாகிய கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலும் அவருடைய மரணத்துக்குள்ளான ஞானஸ்நானத்தினாலும் செய்கிறோம். ஆகையால் நாம் இனி உலகத்தாரல்ல. முழு உலகமும் புறஜாதியாராக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் இல்லை. அவர்கள் புறஜாதியார். வேதவாக்கியங்களின் நிலைப்பாட்டில் புறஜாதியினர் எல்லாம் புற மதத்தினர்.

### “பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்”

ஆபிரகாமின் வித்தாயிருக்கிற கிறிஸ்து மூலம் பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள்.” “நாம் இன்னும் உலகத்தை ஆசீர்வதிக்கவில்லை”; நாம் இன்னும் உலகத்தை நியாயந் தீர்க்கவில்லை. அப்படி செய்யும்படி இன்னும் கட்டளையிடப்படவில்லை. ஆனால் பரிசுத்த பவுல் கூறினதாவது: “பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா? நாம் தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று அறியீர்களா?” (1 கொரிந்தியர் 6:2,3) இது நாம் மாம்சத்தில் இருக்கும் போது அல்ல. ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமையடைந்த பிறகு, நாம் நியாயாதிபதிகளாக இருக்க வேண்டும்.

ஆகையால் உலகத்திற்காக ஒரு மகா நியாயத்தீர்ப்பின் நாளை தேவன் நியமித்திருக்கிறார். (அப் 17:31; சங் 96:9,13;98:1–9; அப் 15:13–18) பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் நியாயாதிபதிகளாக இருப்பார்கள். உலகமானது ஆதாமுக்குள் இன்னும் தண்டனைக்குள்ளாக இருக்கிறது. அவர்கள் யாராயிருந்தாலும் நீதிமானாக்கப்படுதலை இன்னும் பெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அதற்கு முதலாவது அந்த புதிய உடன்படிக்கையில் அந்த நீதிமானாக்கப்படுதலுக்கான அடிப்படை வேலைகள் செய்யப்படவேண்டும். கிறிஸ்து கல்வாரியில் தாம் கொடுத்த பலியின் மூலமாகவே அவர் அந்த புதிய உடன்படிக்கையை இஸ்ரயேலருடன் செய்வார். அது பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் போலவே இருக்கும். ஆனால் அது மேலான மத்தியஸ்தராகிய தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவாக இருப்பார். பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கை நிழலான பலிகள் மூலமாக ஏற்படுத்தப்பட்டதுபோல, புது உடன்படிக்கையானது “மேலான பலிகளின்” அடிப்படையில் ஏற்படுத்தப்படும். இந்த சுவிசேஷ யுகத்தின் வேலை காளை மற்றும் வெள்ளாட்டுக்கடா இவைகளின் பலிகளைக் காட்டிலும் “மேலான பலிகளை” செலுத்துவதாகும். இந்த “மேலான பலிகளை” செலுத்துபவர்கள் தலையாகிய இயேசுவும் அவரது சபையாகிய சரீர அங்கங்களுமாகும். அவரது சரீரத்தின் கடைசி அங்கம் “திரைக்குள்ளாக” நுழையும் பொழுது எல்லா பலிகளையும் அவர் முடித்திருப்பார். அதன்பின்பு இயேசுவின்

அடிக்சுவடுகளை பின்பற்றுகிற சந்தர்ப்பம் கொடுக்கப்படாது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் மட்டுமே ஆசாரியராக முடியும். இவர்கள் பிரதான உயிர்த்தெழுதலாகிய அவரது உயிர்த்தெழுதலில் பங்குபெறுவார்கள். இதைப் பற்றிப் பேசும்போது அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்.” ஏனெனில் “மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.” (1 கொரி 15:50–54) இந்த வகுப்பார், ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளும் பொழுது, இந்த உலகத்தை நியாயந்தீர்க்கும்படியாக தயாராக்கப்பட்டிருப்பார்கள்.

## அடுத்த யுகத்தின் வேலை

உலகத்தின் பாவங்களுக்காக நீதிக்கு முன்னால் மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டவுடனே, அனைத்து மனுக்குலமும் தங்களை விலை கொடுத்து வாங்கியவரிடம் திரும்பும். இனி நீதி அவர்களை எதுவும் செய்ய ஏதுவிராது. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் கையிலிருப்பார்கள். பிறகு அவர் ஜீவனை அளிப்பவராகவும், நியாயாதிபதியாகவும் ராஜாவாகவும் இருப்பார். அவரது ஆயிர வருட அரசாட்சியில், யாருக்காக அவர் மரித்தாரோ அவர்களை விழித்தெழச்செய்து, அவர்களை உயர்த்துவதே அவரது வேலையாய் இருக்கும். கர்த்தரோடு இசைந்திருக்க வரும்படியும் அவரது ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணிக்கவும் சந்தர்ப்பம் கொடுக்கப்படும். அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் பரிசு நித்திய ஜீவனும் மனித நிலையில் பூரணத்துவமும் ஆகும். இப்படி தங்களை அர்ப்பணிப்பவர்கள் சீரழிவிலிருந்து முழு பூரணத்திற்கு உயருவார்கள். அவர்களது பூரணமாகுதல் அவர்களது நீதிமான்களாகுதலாக இருக்கும். ஏனெனில் இதன் பொருள் சரியாக்கப்படுதலாகும்.

இப்பொழுது சபை பெற்றிருக்கிற நீதிமானாக்கப் படுதலுக்கும், உலகம் பெறப் போகிற நீதிமானாக்கப்படுதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால், சபையானது கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுதலினால் உடனடியாக, நீதிமானாக எண்ணப்படுதலை, விசுவாசத்தினால் பெற்றிருக்கிறது, ஆனால் உலகமானது தன்னுடைய கிரியைகளினால் நீதிமானாக்கப்படும் இது உண்மையாக சரிபண்ணப்படுதல், உண்மையான பூரணத்துவம். ஆனால் இப்பொழுதும் சரி, அப்பொழுதும் சரி, விசுவாசமும் உண்மையான இருதயமும் இல்லாமல் நீதிமானாக்கப்படுதல் இருக்காது. கர்த்தருடைய தற்கால ஏற்பாட்டின்படி பூரண கிரியைகளும் முக்கியமானதாக இருக்கிறது. புது கிருஷ்டியானது உண்மையிலேயே நீதியாயும் பூரணமாயும் இருக்கிறது. பிதாவானவர் கிறிஸ்துவின் புண்ணியத்தை நமது அபூரண சரீரத்துடன் சாட்டுதல் செய்து, நமது அபூரண மாம்சத்தை மரித்ததாக எண்ணுகிறார். இப்படியாக நமது அபூரண கிரியைகள் கிறிஸ்து மூலமாக பூரணமாக கருதப்படுகிறது. பூரண புது சிருஷ்டியானது, சிறிய ஆரம்பத்திலிருந்து படிப்படியாக, மாம்ச சரீரத்தை அதன் வேலைக்காரனாக பயன்படுத்திக்கொண்டு, வளர்ந்து, பெருகி முதிர்ச்சி அடைகிறது.

ஆனால் உலகத்திற்கு இது வேறு விதமாக இருக்கிறது. அவர்களுடையது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டு, புது உடன்படிக்கையின் மூதுலின் கீழாக சிந்தையையும் சரீரத்தையும் ஒரு நீதிமானாகுதலின் நிலைமைக்கு படிப்படியாக வருகிற ஒரு வேலையாக இருக்கிறது.அவர்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும் பூரணத்தை நெருங்கி தொடர்ந்து வருவார்கள். அந்த உச்சத்தை அவர்கள் அடையும்போது அவர்கள் முழுவதுமாக நீதிமான்களாக்கப்பட்டிருப்பார்கள், அல்லது முழுவதும் நீதிமானாயிருப்பார்கள்; அவர்கள் தங்களது கடைசி பரீட்சையில் உண்மையுடன் ஜெயங்கொண்டால், ஆயிரவருட யுக முடிவில் நித்திய ஜீவன் என்கிற பரிசு அவர்களுக்குக் கொடுக்கப்படும். கிறிஸ்து மத்தியஸ்த வேலையை முடிக்கும்பொழுது, அந்த யுகம் முடியும் வரை தேவனுடைய நோக்கு நிலையில், உலகின் மரித்தவர்கள் உயிரடைய மாட்டார்கள். இந்த காலக்கட்டத்தில், தேவனுடைய ஏற்பாடுகளுக்கு இணக்கமாக வராதவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்; அவர்கள் “மிருக ஜீவன்களைப்” போல அழிக்கப்படுவார்கள். (2 பேதுரு 2:12)

இரண்டாம் மரணம் முதல் மரணத்தைப் போல் தான் இருக்கும், இது கணப்பொழுதில் நடக்கும்; இது பிதாக்களின் பாவத்தினால் அல்ல, தனிப்பட்ட ஒருவரது சொந்த பாவத்திற்காக இருக்கும்; அது நிரந்தரமாக இருக்கும். இது முதல் மரணத்தைப் போல அல்ல, இரண்டாம் மரணத்திலிருந்து மீட்பு கிடையாது; “கிறிஸ்து இனி மரிப்பதில்லை.” நீதிமான் களுக்கான பரிசு நித்திய ஜீவன். முழுவதுமாக சோதிக்கப்பட்டு, நிரூபணம் செய்யாமல் யாருக்கும் நித்திய ஜீவன் கொடுக்கப்படாது. ஆகையால் இனி எப்பொழுதும் அலருதலும், வருத்தமும், மரணமும் இராது என்று தேவன் உத்தரவாதம் தரமுடியும். ஏனெனில் அனைவரும் தேவனுடன் முழுமையாக இசைவாயிருப்பார்கள்.

உலகத்திற்கான சோதனைக் காலம் சீக்கிரத்தில் வரும் என்று நாங்கள் நம்புகிறோம். ராஜ்யத்திற்கான கதவு இன்னும் மூடப்படவில்லை என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் இதைக்குறித்த எந்தவித விசேஷித்த செய்தியும் இல்லை. ஏனெனில் புறஜாதியார் காலம் முடிந்தவுடனேயே பரம அழைப்பிற்கான கதவு மூடப்படும் என்று கர்த்தர் கூறவில்லை. கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கம் சேர்க்கப்பட்டு, உண்மையுள்ளவனாக காணப்பட்டு, அவனது ஓட்டத்தை முடித்து, திரைக்குப்பின்னால் நுழையும் பொழுதுதான் கதவு மூடப்படும். “ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.” பிறகு அது அடைக்கப்படும், ஏனெனில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எண்ணிக்கையில் யாரும் சேர்க்கப்படமுடியாது, அதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை என்று நாங்கள் நம்புகிறோம்.

## The Two Great Intercessions

# இரண்டு பெரிய வேண்டுதல்கள்

"மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லமையுள்ளவராயுமிருக்கிறார்." எபிரெயர் 7:25

இங்கு பரிசுத்த பவுல், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்துக்கும் ஆரோனின் நியாயப்பிரமாண ஆசாரியத்துவத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார். இந்த இரண்டு ஆசாரியத்துவத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விசுவாசமுள்ள எபிரெயர்களுக்கு குறிப்பிட்டு காட்டுகிறார். ஏனெனில் யூதர்கள் ஆசாரியத்துவம் எப்படி மாற்றப்பட கூடும் என்று புரிந்துகொள்வதில் கஷ்டம் இருந்தது. அவர்களது ஆசாரியத்துவம் பதினாறு நூற்றாண்டுகள் நிலைத்திருந்தது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயப்பிரமாண ஏற்பாடுகள் என்றென்றும் நிலைத்திருக்க திட்டமிடப்படவில்லை என்று எவரும் சொல்வது நியாயமானதாகவோ சரியானதாகவோ காணப்படவில்லை. ஆகையால் இதைப்பற்றி விரிவாக எழுதுவது பரிசுத்த பவுலுக்கு அவசியமாக இருந்தது. எபிரெயருக்கு எழுதின புத்தகம் முழுவதிலும் அவர் ஆரோனின் ஆசாரியத்துவம் நிழலானது என்றும் ஒரு பக்கமானது என்று குறிப்பிட்டுக் கூற நாடுகிறார். மெய்யான மகா பெரிய ஆசாரியர் பலி செலுத்துகிறவர் மாத்திரமல்ல, அவர் ஆளுகைக்குரிய ஆசாரியர். பலி செலுத்தும் காலத்தைத் தாண்டி அவர் ஒரு பெரும் வேலையை பெற்றிருந்தார். நிழலான ஆரோனுக்கு அவர் மெய்யானவராக இருந்தார். ஆனால் அவரது ஆசாரியத்தும் முற்றிலும் மாறானதாகவும் எல்லா வகையிலும் மேன்மையானதாகவும் இருந்தது.

இந்த மகா ஆசாரியர் மகிமையின் சிங்காசனத்தில் அமர்த்தப்படும்பொழுது, அது மெல்கிசேதேக் முறைமையின் படியானதாக திட்டமிடப்பட்டிருந்தது. அவர் ஆரோனின் முறைமையின்படியாக அல்ல. இந்த மகிமையின் ஆசாரியர் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருப்பதை அப்போஸ்தலர் சுட்டிக்காட்டினார். "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று யேகோவா ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்." (சங்கீதம் 110:4) அவரது சிங்காசனத்தின் மேல் ஒரு ஆசாரியர்.

ஆரோனின் முறைமையில் வருடாவருடம் செலுத்தி வந்த பல்வேறு விதமான பலிகள் எல்லாம் "விசேஷித்த பலிகளின்" நிழலாக இருந்தன. (எபிரெயர் 9:23) நிழலான ஆசாரியர் முதலாவது தனது சொந்த பாவத்திற்காகவும், பிறகு அனைத்து ஜனங்களின் பாவத்திற்காகவும் பலி செலுத்தினான். (லேவியராகமம் 9:7,8, 15:16:11, 14, 15) அதே போல மகா மெய்யான ஆசாரியர் தமக்காக (தமது சரீர அங்கங்களுக்காக) பலிசெலுத்தினார்; அதன் பிறகு அகில உலகத்தின் பாவத்திற்காக செலுத்தினார். நிழலான பலிகளில் செலுத்தப்பட்ட இரத்தம் ஆடு மற்றும் மாடுகளினுடையது. "விசேஷித்த பலிகளின்" இரத்தமானது தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவினுடையது. சுவிசேஷ யுகத்தில் இந்த இரத்தம் சிந்துகிற வேலை தொடர்ந்து நடந்து வருகிறது. சரீரத்தின் பலிக்கு பரிசுத்தத்தை தருவது, சரீரத்தின் தலையாகிய இயேசுவின் இரத்தத்தின் புண்ணியம் ஆகும்.

### "அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்"

நிழலான ஆசாரியர்கள் செலுத்தும் பலிகள் ஒரு வருடத்திற்கு மட்டுமே பயனளிக்கக் கூடியது என்று காண்பிக்கிறார். ஆகையால் அதை வருடாவருடம் செலுத்த வேண்டியவர் களாயிருந்தார்கள். ஆரோனின் முறையிலான ஆசாரியர்கள் தங்களது ஊழியத்தை தொடர்ந்து செய்ய முடியாதவர் களாயிருந்தனர், காரணம் அவர்களது மரணம், ஆனால் மெய்யான மகா ஆசாரியர் தொடர்ந்து செய்கிறார். அவருக்குப்பின் வருகிற ஆசாரியர்கள் யாரும் இல்லை. ஏனெனில் அவர் "என்றென்றும் ஜீவிக்கிறவர்." அவர் தமது அனைத்து வேலைகளையும் நிறைவேற்ற வேண்டிய வராயிருக்கிறார். அதன்பின்பு சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் உட்காருகிறார். அதன்பிறகு அவர் பாவத்திற்காக மறுபடியும் மரிக்க வேண்டிய, பலி செலுத்த வேண்டிய அவசியமே இவரது. ஏனெனில் இவர் எல்லாவற்றிற்குமாக ஒரே தடவை பலனளிக்கும் வகையில் செய்து முடித்திருக்கிறார்.

மேலும் இந்த மகா ஆசாரியரால் முடிக்கப்பட்ட வேலை, பூமிக்குரிய ஆசாரியர்களுடைய வேலையைக் காட்டிலும் எவ்வளவு திறமையானது என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். லேவியின் ஆசாரியத்துவம், ஆரோனின் முறைமையின் ஆசாரியர்களால் மக்களுக்கு இரக்கங் காண்பிக்கவோ, அவர்களது பலிகள் அவர்களது பாவங்களை உண்மையாக எடுத்துபோடவோ முடியவில்லை. (எபிரெயர் 2:17,18;4:15;10;4) ஆனால் தொடர்ந்து இருக்கக் கூடிய இந்த மெய்யான மகா ஆசாரியர் பாவத்தை முற்றிலுமாக எடுத்துப் போடுவதோட அல்லாமல், அவரது "விசேஷித்த பலிகள்" செலுத்தப்படுகிற வர்களுக்கு இரக்கங்காண்பிக்கவும் முடிகிறது. "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு, அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்." அவர்களை அவர் முற்றுமாக, முழுவதுமாக, நித்தியமாக இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

இந்த வசனமானது தற்போது சபைக்கு பொருந்துவதை புரிந்து கொள்ளலாம். அதாவது கடந்த கால பாவத்திலிருந்து மாத்திரம் நம்மை இரட்சிக்காமல்–நாம் முதலில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபோது, நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டோம்– நமது மனித சரீரத்தின் அபூரணத்தினால் வரக்கூடிய பலவீனங்கள் மற்றும் கறைகளையும் நமது ஓட்டம் முழுவதும் அவரது புண்ணியத்தின் வஸ்திரத்தினால் மூடுகிறார். வேண்டுமென்றே செய்யவில்லை என்று காண்பிக்கப்படக்கூடியவைகளை தமது பலியின் புண்ணியத்தினால் நீக்குகிறார். வேண்டுமென்றே செய்கிற அளவுக்குத் தக்கதாக அடிகள் கொடுக்கப்படுகிறது. ஆகையால் கடந்த கால மற்றும் தற்கால பாவங்களிலிருந்து மாத்திரமல்ல, எதிர்கால பாவங்களிலிருந்தும் முற்றும் முடிய இரட்சிக்கிறார். மேலும் இயேசுவின் அடிச்சுவட்டை உண்மையாக பின்பற்றுகிறவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிற தெய்வீக சிலாக்கியத்திற்கு நம்மை கொண்டு வருகிறார்.

## உலக மனுக்குலத்திற்காக வேண்டுதல்

ஆனால் சபைக்கான இந்த வேலை எல்லாருக்குமானது அல்ல என்று அப்போஸ்தலர் கூறுவதாக நாங்கள் நினைக்கிறோம். மகா பிரதான ஆசாரியராகிய இயேசுவின் வேண்டுதல்கள் எல்லாம் கடந்த காலத்தில் இருந்தால், இந்த வேண்டுதலினால் முதற்பேறானவர்களின் சபைக்கு மட்டுமே பலனடையக் கூடியதாக இருந்தால், உலகத்தின் அனைத்து மீதியானவர்களும் விடப்படுவார்கள். இயேசு தமது ஜனங்களுக்காக ஒவ்வொரு நாளும் மென்மேலும் வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார் என்று நாம் நினைக்கக் கூடாது. ஆனால் இரண்டு விதமான வேண்டுதல்கள் இருக்கின்றன. சுவிசேஷ யுகத்தில் தம்முடையவர்களாகப் போகிறவர்களுக்கு தமது பலியின் புண்ணியத்தை மகா பரிசுத்த ஸ்தலத்தில் (பரலோகத்திலேயே) சமர்ப்பித்த பொழுது முதலாவதைச் செய்தார். அதன் பயன் சுவிசேஷயுகம் முழுவதற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. சபை வகுப்பாராக வருகிற அனைவரும் இந்த யுகத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட இந்த வேண்டுதலின் பயனுக்குக் கீழ் வருகிறார்கள். அவரது புண்ணியம் பிதாவானவருக்கு முன்பாக எப்பொழுதும் அவர்களுக்குக் கிடைக்கிறது. தேவனுடைய சமூகத்தில் பிரவேசித்து பின் ஒப்புரவாகுதலை செய்த பொழுது, நமக்காக செய்த கிரியையினிமித்தம் அவர் நமக்கு பரிந்து பேசுகிறவராக எப்பொழுதும் ஜீவனோடிருக்கிறார். (எபிரெயர் 9:24)

ஆனால் இயேசு இன்னொரு வேண்டுதல் செய்ய வேண்டியவராயிருக்கிறார். இது சங்கீதம் 2:8ல் குறிப்பிடப்பட்டுள்ளது. "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகளை உமக்கு சொந்தமாகவும் கொடுப்பேன்." விசுவாச குடும்பத்தில் தற்போது அங்கங்களில்லாமல் இருக்கிற ஜாதிகள், மற்றும் புறஜாதியார் அனைவருக்கும் இயேசு வேண்டுதல் செய்ய வேண்டியவராயிருக்கிறார். ரோமர் 11:17–24 பார்க்கவும். தற்கால யுகத்தில் யுகம் முழுவதிலும் சபை வகுப்பாருக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கிற அதே புண்ணியமே, தங்கள் கல்லறைகளில் இருக்கிறவர்களுக்கும் உயிரோடு இருக்கிற முழு உலகத்திற்கும் பயனளிக்கக் கூடியதாக இருக்கிறது. அது ஒரு முடிவான, அல்லது முழுமையான வேண்டுதலாக, முற்றும் முடிய ஒரு வேண்டுதலாக இருக்கும். எந்த ஒரு மனிதனையும் அது விடாது.

நமது கர்த்தராகிய இயேசு ஆயிரவருட யுகத்தில் வேண்டுதலை செய்ய மாட்டார். அதன் ஆரம்பத்தில் எல்லா ஜனங்களுக்காகவும் தமது புண்ணியத்தை பிரயோகிக்கும் பொழுது, புது உடன்படிக்கை முத்திரையிடப்படும் பொழுது அவர் இதைச் செய்வார். ஆயிர வருடயுகம் முடியும் வரை பிதாவானவர் மனுக்குலத்தோடு நேரடியாக தொடர்பு கொள்ளமாட்டார் தமது குமாரன் மூலம் மட்டுமே தொடர்புகொள்வார். மேசியாவின் ஆளுகையில் கிறிஸ்துவும் சபையும் அனைத்து மனுக்குலத்திற்கும் திரும்பக் கொடுத்தலின் வேலையைச் செய்வார்கள். நமது ஆண்டவர் அவர்கள் சார்பாக தமது புண்ணியத்தை சமர்ப்பிப்பதால் முழு உலகமும், முற்றும் முடியவும் முழுமைக்கும் தொடர்பு கொள்ளவும், செய்யப்படக் கூடியது எதுவும் செய்யப்படாமல் விடாதிருக்கவும் கிறிஸ்துவின் கைகளில் இருக்கும். அந்த யுகத்தின் முடிவில் திருத்தமுடியாதவர்கள் அழிக்கப்படுவார்கள். பூரணத்திற்கு கொண்டுவரப்படுகிறவர்கள் ஒரு முழுமையான சோதனைக்கு பிதாவினிடத்திற்கு திருப்பப்படுவார்கள். அதில் தோல்வியடைபவர்கள், இருதயத்தில் முழுமையான விசுவாசத்தை நிரூபிக்காதாவர்கள் அதேபோல அழிக்கப்படுவார்கள், "ஜனங்களிலிருந்து அறுப்புண்டு போவான்."

## Over coming Desires For Earthly Things

## பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல்

“மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.” (1 கொரிந்தியர் 9:27)

இங்கே அப்போஸ்தலர் பவுல் ஓட்டப்பந்தய மைதானத்தை விளக்கத்துக்கு பயன்படுத்துகிறார். குறைபாடு உள்ளவார்கள் பங்கு பெறும் ஓட்டப்பந்தயங்களும் உண்டு. அதாவது பலவீனமுள்ளவர்கள் முன்னால் நிறுத்தப்படக்கூடிய சலுகையைப் பெறுவார்கள். குறித்த நேரத்தில் முடித்தால் வெற்றிபெற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள். இதில் சில பேர்தான் (பலவீனமுள்ளவர்கள்) சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் குறைபாடு (ஊனம்) உள்ளவர்கள். ஆனால் கிறிஸ்தவ ஓட்டப்பந்தயத்தில் எல்லாரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில் இதில் யாருமே பூரணர் இல்லை. எல்லாருமே தேவ மகிமையில் குறைவுள்ளவர்களாக இருக்கிறார்கள். மீட்பர் ஏற்படுத்தியிருக்கிற பரிசை நாம் பெற முடியாதவர்களாக இருந்திருப்போம்.

இந்த பந்தயத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிக சலுகை பெறுகிறவர்கள் உண்டு. அநேக பலவீனங்களைப் பெற்றிருப்பவர்கள் அதிக சலுகையை பெறுவார்கள்; சில பலவீனம் உள்ளவர்கள் குறைந்த சலுகையைப் பெறுவார்கள். “ஆகையால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்” என்று பவுல் சொன்னார். அவர் முழு உறுதியுடன் இருந்தார். அவர் திட்டவட்டமான ஒரு இலக்கை பெற்றிருந்தார். வெற்றி கொள்வதிலும் தீர்மானமாயிருந்தார். தேவன் நமக்கு வைத்திருக்கிற பரிசை பெறுவோமானால், இது ஒரு அணுகுமுறை மட்டும்தான். இந்த காரியம் முழுவதும் நமது வைராக்கியம், நமது விசுவாசம் மற்றும் நமது ஆர்வத்தை பொறுத்தே இருக்கிறது.

கிரேக்க விளையாட்டுகள் ஓட்டப்பந்தயத்தைத் தவிர மற்ற பலத்தைக் காட்டும் விளையாட்டுகளையும் பெற்றிருந்தன. காட்டு மிருகத்தோடு போட்டியிடுகிற விளையாட்டுகளும் உண்டு. அதில் ஒருவன் மிருகத்தை கொன்றுபோடுவான். இன்னும் சில விளையாட்டுகள் மனிதர்களுக்கிடையே நடக்கும். அதில் முடிந்தால், ஒருவன் தனது எதிரியை பித்தளை (Brass Knuckle) கைமுட்டியால் அடித்து கொல்லும் அளவுக்கு முயற்சிப்பான். இந்த போட்டிக்கு தயாராவதற்கு போட்டியாளர்கள் காற்றுப்பையை அடித்து அப்பியாசப்படுத்துவார்கள். ஆனால் அது உண்மையான சண்டையல்ல, வெறுமனே தயாராவது தான்.

ஆகவே அப்போஸ்தலர், பயிற்சியிலேயே தனது பலத்தை பயன்படுத்துவதில்லை என்று கூறுகிறார். அவர் வேறு ஏதோ ஒன்றை செய்ய முயற்சிக்கிறார். அவர் உண்மையான ஒரு போராட்டத்தை போராடுகிறார். என்ன போராட்டம் அது ஒரு மாபெரும் போராட்டம், சாத்தான் தேவனுடைய சத்துருவாக மாறின நாட்களிலே ஆரம்பித்தது. நமது முதல் பெற்றோர் சாத்தானிடம் சென்றார்கள், அதன் பிறகு சில தூதர்கள் விழுந்து போனார்கள். தற்போது அநேகர் போராடுகிறவர்கள். ஆனால் சிலர் தாங்கள் யாருக்காக போராடுகிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள். அநீதிக்காக போராடுகிறவர்கள் சாத்தான் பக்கம் இருக்கிறார்கள். நற்குண சீர்திருத்தலுக்காக போராடுகிறவர்கள் தேவன் பக்கம் இருக்கிறார்கள். அவர்கள் மனுக்குலத்தின் எதிரியின்பக்கம் இல்லை.

உலகமானது ஏறக்குறைய போராடிக் கொண்டிருக்கிறது. சிலர் அதிக புத்தியுடனும் சிலர் குறைவான புத்தியுடனும் போராடுகிறார்கள். எதற்காக போராடுகிறோம் என்பதை நமக்கு சொல்ல முடியாத சிலர் ஒவ்வொரு படையிலும் இருக்கிறார்கள். ஆகையால் தற்போது, நீதிக்கும் பாவத்திற்கும் போராட்டம் நடத்துகொண்டிருக்கிறது என்பதை அநேகர் அறியாதிருக்கிறார்கள். கோட்டீஸ்வரர்களுக்கு அவர்களுடைய போராட்டமும் மகிழ்ச்சியும் இருக்கிறது. சிறிய கடைக்காரர்கள் தங்களது போட்டியாளரான பெரிய வியாபாரிகளுடன் போராட்டத்தை கொண்டிருக்கிறார்கள். வழக்கறிஞர் தங்களது போராட்டத்தை பெற்றிருக்கிறார்கள் அவர் சில சமயங்களில் நீதியின் பக்கம் இருந்து வைராக்கியத்துடன் வாதிடுகிறார். இன்னும் அவர் அநீதியின் பக்கம் உள்ள வழக்கை எடுத்துக் கொண்டு, அதற்காகவும், அதே வைராக்கியத்துடன் வாதிடுகிறார். ஆனால் உலகமானது உண்மையான போராட்டத்தை கண்டுணர வில்லை. ஒரே மனிதன் ஒரு நாள் நீதியின் பக்கமும் அடுத்த நாள் அநீதியின் பக்கமும் இருக்கிறான்.

அப்போஸ்தலர் உண்மையான கொடியின் கீழ் பட்டியலிட்டிருந்தார். கிறிஸ்து சாத்தானுக்கு எதிராக ஒரு கொடியை உயர்த்தினார். ஆறாயிரம் வருடம் ஆட்சி செய்த பாவத்தை இன்னும் மகிமையான வெற்றிகொள்ள வேண்டியவராயிருக்கிறார்; இருளின் சக்திகளுக்கு எதிராக முரண்பாடு கொண்டிருக்கிறார்; அதில் அவர் வெற்றிகொள்வார். தம் சுபாவ விருப்பங்களை ஜெயங்கொண்டதினாலும், தேவனுடைய சித்தத்திற்கு தம்மை முழுதும் ஒப்புக் கொடுத்ததினாலும் அவர் தமது வெற்றியை பெற்றார். பூமிக்குரிய சுபாவத்திலிருந்து மகிமையான தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படுவதற்கு இதுவே ஒரே நிபந்தனையாக இருந்தது. அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக மரித்ததின் மூலம் இந்த தேவையான நிபந்தனையை சந்தித்திருக்கிறார்; சாத்தானையும் மகா வெற்றி கொண்டிருக்கிறார்.



நீதி, நியாயத்தைக் காட்டிலும் தீமையானது அடிக்கடி வெற்றிக் கொள்வதாக காணப்படும் பொழுது, எல்லாம் நேர்மாறாக காணப்படும்

காலத்தில், பரம பிதாவானவர் தமது திட்டங்களுக்கு இசைவாக, கர்த்தராகிய இயேசுவுக்கு, அவருடன் தங்களது ஜீவனை கொடுக்கும்படியான ஒரு வகுப்பாரை உலகத்திலிருந்து தெரிந்து கொள்ளும்படி அதிகாரமளித்திருக்கிறார்.

இவர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடந்து, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி, நீதியினிமித்தம் தங்கள் ஜீவனை கொடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

## சுயநலத்துடன் நமது முக்கியமான போராட்டம்

நாம் யார் கூட அல்லது எதன்கூட போராட வேண்டும் என்பதை நாம் கேட்போமா? ஒருவர் தனது மனதின் உணர்ச்சியை பின்பற்றினால், உண்மையான ஒரு போராட்டத்தில் அவர் நுழைய மாட்டார் என்பதே பதிலாகும். இப்படிப்பட்ட காரியத்தில் அவர் எந்த ஒரு போராட்டத்திற்கும் பங்குபெற மாட்டார். அவர் உலகத்தின் சாதாரண போராட்டத்தில் ஈடுபடலாம், சில சமயங்களில் சரியானபடி, சில சமயங்களில் தவறானபடி, ஆனால் அவர் இயேசுவினால் வழி நடத்தப்படும் இந்த வகுப்பினருக்குள் வந்தால், அவர் இயேசுவின் மூலம் தேவனிடம் வர வேண்டும்; பூமிக்குரிய நம்பிக்கைகள், ஆசைகள் ஆகியவைகளை பலியிட்டு, இயேசுவின் அடிச்சுவடுகளில், பாடுகளின் அடிச்சுவடுகளில் மரணம் பரியந்தம் நடக்க வேண்டும், “ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரண படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.” (எபிரேயர் 2:10) இப்படியாக நமது போராட்டம் நமது சித்தத்தில், நமது மனதில் ஆரம்பிக்கிறது. நமது சிந்தையை கிறிஸ்துவின் சிந்தைக்கு சமர்ப்பிக்கிறோம்.

நிழலான பாவ நிவாரண பலிகளில் கிறிஸ்துவின் சரீரம் ஆட்டுக்கடாவினால் குறிப்பிடப்படுகிறது. நிழலில் பிரதான ஆசாரியன் ஆட்டுக் கடாவை கொன்றது, உண்மையில் மெய்யான பொருளில் மிருக சுபாவம் கொல்லப்படவேண்டும், வெட்டப்பட வேண்டும், பலியிடப்பட வேண்டும் என்பதை குறிக்கிறது. பாவத்தை பிறப்பிக்கும் வரை அது விடப்படக்கூடாது, ஜெயங்கொள்ளப்பட வேண்டும். புதுசிருஷ்டியானது மனித சுபாவ ஆசைகளுடனும் சூழ்ந்திருக்கிற பாவத்துடனும் போராடக் கூடியதாக இருக்கிறது. அவர் தேவனோடு கூட தன்னை அர்ப்பணம் செய்திருக்கிறார். இதன் பலனாக, பரிந்து பேசுகிறவர் தமது சொந்த புண்ணியத்தை அர்ப்பணம் செய்தவர்மேல் வைத்திருக்கிறார். இது பண்ணப்படும் பொழுது, உடனே போராட்டம் ஆரம்பிக்கிறது. அதாவது புதிய சிருஷ்டி, பழைய சிருஷ்டியை, பழைய சிந்தையை கீழே வைக்கிறது. (கலாத்தியர் 5:17)

அப்போஸ்தவர் கூறுகிறதாவது: “மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதப்படிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.” இது உண்மையாக ஒரு போராட்டமாக, உண்மையான ஒரு சண்டையாக இருக்க வேண்டும்; ஏனெனில் யார் ஜெயங்கொள்ளுகிறார்களோ அவர்களுக்கே வெற்றி. “ஜெயங்கொண்டு......அவனுக்கு ........ ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்.”

“ஜெயம் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள்செய்வேன்.” (வெளி 2:26, 27;3:21)

நமது அர்ப்பணத்தில் ஆரம்பிக்கிற போராட்டம், முடிவுவரை, நமது மரணம் வரை தொடருகிறது. அது புது சிருஷ்டியின் மரணமாகவோ அல்லது பழைய சிருஷ்டியின் மரணமாகவோ இருக்கும். நம்முடைய பூமிக்குரிய ஆசைகளைப் பொருத்தவரை, நாம் அவைகளை முற்றிலுமாக பலியிடுகிறோம். அதற்கு மாற்றாக நாம் கனம், மகிமை, சாகாமையை, கர்த்தருடனான உடன் சுதந்தரத்தை, தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுதலை பெறுகிறோம். ஆகையால் அப்போஸ்தலர் ஆலோசனை கூறுகிறதாவது: வெறும் காற்றுப்பையில் நமது பலத்தை செலவு பண்ணாமல் ஒரு நோக்கத்திற்காக நாம் போராட வேண்டும்.

“கிறிஸ்து எனக்கு ஜீவன்”என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதில் புதுசிருஷ்டி அழிந்து போனால், இரண்டாம் மரணம் எனக்குரியதாகும் என்கிறார். கிறிஸ்தவன் என்ற நமது நிலையில் நமது நித்திய விருப்பங்கள் ஆபத்தில் இருக்கிறது நாம் ஜெயங்கொள்ளுவதில் தோற்றுப்போனால். நித்திய ஜீவனை இழப்போம் என்று பயப்படுகிறோம்.

அப்போஸ்தலர் பேதுரு எழுதுகிறதாவது: “இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்......நீங்கள் கறையற்றவர்களும் பிழையற்றவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதானத்தில் காணப்படும்படி ஜாக்கிரதையுள்ள வர்களாயிருங்கள்.” (2பேதுரு 3:11,14) இந்த எதிர்பார்க்குதலோடு நம்முடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும்!

இந்த எதிர்கால காரியங்களைக் குறித்து அறிந்து அவைகளை எதிர்பார்த்து ஜீவிக்கிற கிறிஸ்தவர்கள், இந்த உலகம் அறியாத சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றிருக்கிறார்கள். உலகம் கொடுக்கிற இப்படிப்பட்ட காரியங்களுடன் முழு வாழ்க்கை வாழ்வதைக் காட்டிலும் இப்படிப்பட்ட சந்தோஷ சமாதானத்துடன் கூடிய ஒரு வார கால வாழ்க்கையே பிரயோஜனமானது. நாம் இப்பொழுது புது வாழ்க்கையை

அனுபவித்துக் கொண்டு, கர்த்தர் நமக்காக வைத்திருக்கிற காரியங்களில் விசுவாசத்தில் நுழைவது எப்படிப்பட்டதாய் இருக்கும்!

நாம் உணர்ந்துகொண்டால், ஒரு கணம் கூட அசிரத்தையாயிராதபடி நாம் பார்த்துக்கொள்வோம். மிருகத்தோடு போரிடுகிற ஒருவன், காயப்பட்ட, அடிபட்ட அந்த மிருகம் அவனை கொல்லப்பார்க்கும் என்பதை அவன் அறிவான். ஆகையால் புதிய சுபாவமானது தனது முழு பலத்தை பயன்படுத்தி ஜெயம் கொள்ள பார்க்க வேண்டும். நமக்கு தேவையான சமயத்தில் போதுமான கிருபையை கொடுக்க கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பழைய சிந்தையால் நாம் மேற்கொள்ளப்பட்டால், அதற்கு காரணம் அதை ஜெயம் கொள்ள தேவையான பலம் இல்லாததே ஆகும். நாம் தேவனிடம் மன்றாடினால் நம்மை பலப்படுத்துவார். ஆனால் கர்த்தர் நமது உண்மைத்தன்மை, நமது விசுவாசம், நமது குணலட்சணத்தின் பலம் மற்றும் நமது மனதின் விழிப்புணர்வையும் சோதிப்பார். நாம் அவரில் உண்மையாயிருந்தால் வெற்றி நிச்சயம்!

# சுவாரசியமான கடிதங்கள்

## *வகுப்புகளைப் பிரித்தல் தொடர்பாக...*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

ஜூன் 1, வாட்ச் டவர், 1915 வெளியீட்டின், 2-ஆம் பக்கத்தில் சபையில் இருபது நபர்களுக்கு மேல் காணப்படுகையில் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளைப் பிரித்து நடத்துதல் குறித்தும், இதே விதியானது, ஜெபகூட்டங்களுக்கும் பிரயோஜனமாயிருக்குமென நீங்கள் எண்ணுவதாகப் பேசியிருந்தீர்கள். எங்கள் சபையிலுள்ள சிலர் புதன்கிழமை கூட்டத்தையும் பிரித்து நடத்திட விரும்புகின்றனர்; ஆனாலும் மற்ற வகுப்புகளைப் பிரித்து நடத்துவது குறித்து எதுவும் பேசிடவில்லை. நாங்கள் அனைவருமே நமது அருமை கர்த்தரின் சித்தத்தையே செய்ய வேண்டுமென்றிருக்கின்றோம் என்பதில் எனக்கு உறுதியே. பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாமல் வகுப்புகள் பிரிக்கப்பட வேண்டும் என்பது உங்களது கருத்தாகக் காணப்படுகின்றதா?

### இதழாசிரியரின் பதில்:

வாட்ச் டவரிலும், வேதாகமப் பாடங்கள் முதலானவைகளிலும் கொடுக்கப்பட்டுள்ள எல்லாமே, அறிவுரையாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும்; எதுவும் கட்டளையாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. கர்த்தரும், பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் (யூதாசின் இடத்தில் பரிசுத்த பவுல் இடம்பெறுகின்றார்) மாத்திரமே தேவனுடைய ஜனங்களுக்குக் கட்டளையிடுவதற்கான உரிமையினை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றே நாங்கள் நம்புகின்றோம். இதழாசிரியர் உள்பட மற்றவர்களோ, ஆலோசனை வழங்குவதற்கு மாத்திரமே உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர். மேலும் அத்தகைய ஆலோசனைகளுக்கு ஆதரவாக வேதவாக்கியம் அல்லது தெளிவான காரணம் எப்போதும் காணப்பட வேண்டும்.

இருபதுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கொண்டிருக்கையில், வகுப்புகள் பிரிக்கப்படுவதாக என்று உலகம் முழுவதிலும் காணப்பட்டதான வேதமாணவர்களின் சபைகளுக்கு நாங்கள் பரிந்துரைத்தபோது, நாங்கள் அதே விதியையே பின்பற்றுகிறவர்களாகவே இருக்கின்றோம் - அதாவது ஆலோசனையாக மாத்திரம் தெரிவித்துள்ளோம். இதற்கு எந்த வேதவாக்கிய ஆதாரம் இல்லாதபடியால், நாங்கள் எங்கள் காரணங்களை முன்வைத்திருந்தோம், அவை: பெரிய எண்ணிக்கையில் காணப்படுகின்றதான சபையார் ஆராய்ச்சிப் பாடங்களில் மிகச் சிறப்பாய்ப் பங்கெடுக்க முடியாது மற்றும் அவற்றிலிருந்து அதிக ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொள்ளவும் முடியாது. புதன்கிழமை மாலையில் நடைபெறும் சாட்சிக்கூட்டங்களில், அதில் பங்கெடுக்கும் அனைவருக்கும் ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் கடந்துவருகின்றதென நாம் நம்புகின்றோம் மற்றும் இதைப்போலவே பெரோயா வகுப்புகளில் பங்கெடுப்பதினாலும், ஆர்வம் அதிகமாகுகின்றது, பாடங்கள் ஆழப்பதிகின்றது மற்றும் இப்படியான ஆசீர்வாதங்களை அதிகமாக்குகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்.

எனினும் ஒவ்வொரு விஷயத்திலும் சபையாரே தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும் மற்றும் தங்கள் சூழ்நிலைக்கு வகுப்பைப் பிரித்திடலாமா அல்லது இல்லையா என்றும் பெரும்பான்மையானவர்களின் வாக்கினால் தீர்மானித்திட வேண்டும். பொதுவான விதியானது சில குறிப்பிட்ட விஷயங்களில் அப்பியாசப்படுத்த முடியாது, காரணம் அது சம்மந்தப்பட்ட வேறே சூழ்நிலைகளாகும். வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான திவ்விய ஏற்பாட்டின்படி, சபையே அதன் ஒவ்வொரு கேள்விகளுக்கும் தீர்மானம் எடுத்துக்கொள்கின்றது என்பது எப்போதும் புரிந்துகொள்ளப்படுவதாக. வாக்கெடுக்கப்படுகையில் கலந்துகொண்டிருக்கின்ற அர்ப்பணிக்கப்படாதவர்களின் விருப்பங்களானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டாலுங்கூட, அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மாத்திரமே சபையாராக இருக்கின்றனர்.

ஒவ்வொரு சபையாரும்/கூடுகையும், எக்ளீஷியாவாக அல்லது சபையாகக் கருதப்படலாம் மற்றும் மற்றச் சபையாரிடமிருந்து முற்றும் சுதந்தரமானவர்களாகக் கருதப்படலாம் என்றாலும், ஒற்றுமையும், ஐக்கியமும் மிகவும் விரும்பத்தக்கவையாகும் மற்றும் ஒரு பட்டணத்திலுள்ள பல்வேறு சபையார்/கூடுகைகளானது ஒரு எக்ளீஷியாவில் அல்லது சபையில், ஆவியில் ஒன்றிணைக்கப்பட்டு, இப்படியாய் அவ்வப்போதான பொதுக்கூட்டங்களின், பொது ஐக்கியத்தின் பலன்களைப் பெற்றுக்கொள்வதும், ஊழியக்காரர்களாகிய - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் தேர்ந்தெடுக்கும் கூட்டு ஏற்பாட்டில் பங்கெடுப்பதும் மிகவும் சரியானதே. இப்படியாக ஆவியில் ஒன்றிணைகையில் ஒவ்வொரு சபையாரும், தனிப்பட்ட நபர்களும் ஒத்துழைப்பின் பலன்களுக்காகச் சுதந்தரங்களைத் தியாகம்பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள்.

--2575--

R 5793

# சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை

கேள்வி: "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்று மத்தேயு 20:27-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் முதன்மையானவனாய் இருக்க விரும்புவது என்பது முறையான விருப்பம்தானா மற்றும் பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்களானது, இங்கு நம்மால் ஏறெடுக்கப்படும் ஊழியத்தினுடைய அளவின் அடிப்படையில்தான் வழங்கப்படுமா?

**பதில்:-** தம்முடைய சீஷர்களுக்கு, அவர்களுக்கு இருக்கும் குறிப்பிட்டப் பெலவீனம் ஒன்றினை - அதாவது பெரியவர்களாய்க் காணப்படுவதற்கான ஒரு விருப்பத்தினை - அதாவது மனுஷகுடும்பத்தில் பொதுவாய்க் காணப்படுகின்றதான ஒரு விருப்பத்தினை - பேராசையின்/குறிக்கோளின் ஆவியினைக் கர்த்தர் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தார். இவ்வசனத்தினுடைய முந்தின வசனங்களானது, புறஜாதிகள் மத்தியில், சிலர் அடக்கி ஆளும் அதிகாரம் செலுத்துபவர்களாய்க் காணப்பட்டு, மற்றவர்களைத் தங்களுக்குப் பணிவிடைச் செய்யப் பண்ணுகின்றார்கள் என்றும், ஆனால் இவ்விதமாய் இயேசுவின் சீஷர்கள் மத்தியில் காணப்படலாகாது என்றும் தெரிவிக்கின்றது. சீஷர்கள் வேறே ஆவியினால் இயக்கப்படுபவர்களாய் இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்களிடத்தில் - இறுமாப்பாய் ஆளுவதற்குரிய, மற்றவர்களை அடக்கி ஆளுவதற்குரிய ஆவி இருத்தல் கூடாது; மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கும், மற்றவர்களுக்காகக் காரியங்களைச் செய்திடுவதற்கும் நாடிடும் அன்பின் ஆவியானது, மற்றவர்களுக்காக ஊழியம் புரிய தனது தனிப்பட்ட நலனுக்கடுத்தவைகளைப் பலிச் செலுத்திட விரும்பும் ஆவியானது காணப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் நாம் இவ்வசனத்தினுடைய மற்ற வார்த்தைகளைப் பார்க்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சிலர் முதன்மையானவர்களாய்க் காணப்படுவார்கள்; இப்படியாகவே தாலந்துகளை அதிகமாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் மற்றும் குறைவாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் பெற்றிருக்கும் எவ்விடத்திலும் - அதாவது தாலந்துகளில் சமமாய் இராத ஜனங்கள் காணப்படும் எந்த ஒரு கூட்டத்தில் அல்லது வகுப்பில் நிச்சயமாய்க் காணப்படும். யாரோ ஒருவர் முதன்மையானவராய் நிச்சயமாய்க் காணப்பட வேண்டும். முற்றும் முழுமையான சரிசமம் என்பது கூடாத காரியமாகும்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் மத்தியில், சபையை வழிநடத்திடுவதற்குச் சிலர் காணப்பட வேண்டும் என்பதும்கூடத் தகுதியானதே. அப்படியானால் யார் முதன்மையானவராய் இருக்க வேண்டும் என்பதற்கான தகுதிநிலை என்னவாக இருக்கும்? மற்றவர்களைப் பயமுறுத்தக்கூடிய ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையல்ல. ஆதிக்க வல்லுநராகவும், இனிமையான சொற்களைப் பேசுபவராகவும், ஏதோ சில தாலந்துகளைப் பெற்றிருப்பதன் காரணமாக அல்லது சிறப்பான கல்வியோ, ஐசுவரியமோ பெற்றிருப்பதன் காரணமாக - இவ்வகையான எதையாகிலும் பெற்றிருப்பதன் காரணமாக மாத்திரம் ஆதிக்கம் பண்ணுபவராகவும் இருக்கும் ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையாக இருக்க முடியாது. அப்படியானால், சபையில் முதன்மையானவர்களென அடையாளம் கண்டுகொள்ளப்படுபவர்களுக்குரிய தகுதிநிலை என்னவாக இருக்கும்?

## சுய மகிமைக்காக எந்த ஆசையும் கொள்ளாதீர்

ஊழியம்புரிவதற்கான ஆவியினை மிகுதியாய்ப் பெற்றிருப்பவர்களை நாம் நாடித்தேடிட வேண்டும் என்பதே எங்களுடைய பதிலாய் இருக்கின்றது. பெருமளவில் ஊழியம்புரிந்து, சபையாருக்குப் பெருமளவில் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருபவன் - அதாவது உண்மையாய் ஊழியம் புரிவதற்கென மிகவும் பிரயாசம் எடுக்கிறவன் - இத்தகையவனை முதன்மையானவனாகக் கருதுங்கள். நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது, ஒரு தனிப்பட்ட நபருக்கென்று மாத்திரம் இல்லாமல், அப்போஸ்தலர்கள் அனைவருக்குமாகப் பேசப்பட்டபோதிலும், இவ்வார்த்தைகள் தனிநபருக்கும் பொருந்தும். நம்மில் எவரேனும் ஏதேனும்

விசேஷித்த விதத்தில் ஊழியம்புரிய விரும்புவோமானால், நாம் உலகப்பிரகாரமான ஜனங்கள் போன்று செய்திடக்கூடாது என்கிற சிந்தையானது நம் ஒவ்வொருவருடைய இருதயத்திற்குள்ளும் கடந்துவர வேண்டும். நாம் அவர்களுக்கு எதிர்மாறான பாதையினை எடுத்துக்கொண்டு, மனுஷரிடமிருந்து வரும் எந்தக் கனத்தையும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்குத் தகுதியற்றதென முற்றிலுமாய் விட்டுவிட வேண்டும். இக்காரியத்தினைத் தேவன் தமக்கு நலமாய்த் தோன்றும் விதத்தில் கையாளத்தக்கதாக, அவரிடமாய் நாம் விட்டு விட்டு, சகோதரருக்கு ஊழியக்காரனாய் இருப்பதற்கு மாத்திரம் திருப்தியடைந்து இருக்க வேண்டும். இப்படியான விதத்தில் ஊழியம் செய்திடுவதற்கு நீங்கள் எவ்வளவாய் விருப்பமுடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்று கர்த்தர் காண்பாராக. எந்தக் குறிக்கோளும்/ஆசையும் இல்லாதவர், எதையும் செய்யமாட்டார். நாம் விதைத்தாலும் அல்லது உழுதாலும் அல்லது நாம் எதைச் செய்தாலும் நமக்குக் குறிக்கோள்கள் காணப்பட வேண்டும் - நாம் செய்துகொண்டிருக்கின்ற எதையும், திருப்திகரமான விதத்தில் செய்யும்படிக்குத் தூண்டிடுவதற்கு நமக்குக் குறிக்கோள் தேவையாய் உள்ளது. ஆகையால் சத்தியத்திற்கு ஊழியம்புரிவதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்கையில், முடிந்தமட்டும் மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில் அதற்கு ஊழியம் செய்திட நாம் நாடிட வேண்டும். இல்லையேல் நாம் கர்த்தருக்கு ஆற்றல்மிக்க ஊழியக்காரர்களாய் இருக்க முடியாது.

ஆனால் சுய மகிமைக்காக ஆசைப்பட்டு, முதன்மையானவர்களாக விரும்பும் எந்த ஒரு விருப்பத்தினையும் நாம் புறம்பே தள்ளிட வேண்டும். நம்மால் அறிய முடிந்திருக்கும் சிறந்த விதத்தில் கர்த்தருக்கு ஊழியம்புரிந்திட நாம் நாடிட வேண்டும். என்னைக்காட்டிலும் உங்களால் சில விதங்களில் கர்த்தருக்குச் சிறப்பாய் ஊழியம்புரிய முடிகிறதாய் இருக்கும் பட்சத்தில் மற்றும் உங்களிடமிருந்து நான் சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அது நல்லது, நன்மையுமாகும். பிற்பாடு உங்களால் என்னிடமிருந்து ஏதோ சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அப்படியே காணப்படுவதாக. உண்மைதான் விசேஷமாய்ப் பாராட்டத்தக்கதாய்க் காணப்படும் எதையும் நாம் பின்பற்றுகிறவர்களாய் இருந்து, கர்த்தருடைய காரணங்களை நடந்தேற்ற நம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். மேலும் இந்த ஊழியமானது, அன்பினால் இயக்கப்பட வேண்டும். அன்பினால் இயக்கப்படாத எந்த ஊழியமும், கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

## தாழ்மை மிக முக்கியமான தேவை

கண்காணி ஊழியத்தினை விரும்புகிறவன் நல்ல ஊழியத்தை விரும்புகின்றான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். அது ஓர் உயர்வான ஊழியமாகும். இந்த ஊழியமானது, இன்றைய நாட்களில், பெயர்ச்சபை அமைப்புகளில் உயர்வான அதிகாரப்பூர்வமான பதவியாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது போன்று அப்போஸ்தலனுடைய நாட்களில் இருக்கவில்லை. அந்நாட்களில் கண்காணி என்பவர், ஆடுகளின் நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக்கொள்ளும் சபையின் பெயரற்ற மற்றும் தாழ்மையான ஊழியக்காரன் ஆவார். சபையின் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னால் முடிந்தமட்டும் தேவனுடைய மந்தையின் மீது திறமிக்க மேற்பார்வையாளராக இருக்க விரும்பிட, நாடிட வேண்டும். இந்த மூத்த சகோதரர்கள் - சபையாருக்கான மேய்ப்பர்கள் மத்தியில், வெவ்வேறு இயல்பான திறமைகளை உடையவர்களாய்க் காணப்படுவார்கள். ஒவ்வொருவரும் தனது தாலந்துகளை, தனது வாய்ப்புகளை, கர்த்தருக்கான, சகோதரருக்கான மற்றும் சத்தியத்திற்கான ஊழியத்தில் பயன்படுத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

இன்றைய நாட்களிலுள்ள கர்த்தருடைய ஜனங்களில் ஒருவர், ஆண்டவர் இங்கு முன்வைக்கின்றதான நெறிமுறைகளை மறந்துபோவது என்பது பரிதாபத்திற்குரிய காரியமாகும். இத்தகையவர்கள் தாங்கள் மூப்பர் ஊழியத்திற்குச் சபையாருடைய, கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தாருடைய vote/வாக்கினால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், கர்த்தருடைய ஜனங்களின் வாக்கானது, சபையினுடைய குரலாய் இருக்கின்றது என்றும் உணர்ந்துகொள்வதற்குப் பதிலாக, உரிமையின் காரணமாக தங்களுக்கு மூப்பர் ஊழியம் கிடைத்துள்ளது என்று எண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். பிரித்தெடுக்கப்பட்டவர்களுடைய, சபையினுடைய - vote/வாக்கினை முழுமையாய் ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ளவர்களாக, ஒவ்வொருவருடைய மனப்பான்மையும் காணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவன் மற்றவர்களோடு அனைத்திலும் பங்குகொள்வதன்மூலம், சபையாரில் ஓர் அங்கமாகியுள்ளானெனில், இவ்விதம் அவன் அதிகமான சதவீதத்தில் அல்லது ஒரு

எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படும் அதிகாரமுடைய பெரும்பான்மையானவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்குகளுக்குக் கீழ்ப்பட்டவனாகுகின்றான். இதைச் செய்த பிற்பாடு, அவன் மூப்பனாகவோ அல்லது வேறொருவர் மூப்பனாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இதே மனப்பான்மையினைத் தொடர்ந்து கொண்டிருக்க நாடிட வேண்டும்.

ஏற்ற தகுதிகளைக் கொண்டிராத ஒரு சகோதரனை மூப்பனாக தேர்ந்தெடுக்கும் தவறினை சபையார் மிக அடிக்கடி செய்துவருகின்றனர். இது அந்தச் சபையாரில் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தி, சிலர் பிரிந்துபோய், இன்னொரு சபையினை ஏற்படுத்திடுவதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. இது ஞானமான நடக்கையாய் இராது என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை அந்தச் சபையார் தவறு செய்துவிட்டார்களெனில், அதை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவதற்குக் கர்த்தர் வல்லவராய் இருக்கின்றார்; மற்றும் பிரிந்துபோய்விடுபவர்கள் தங்களுக்கு விலையேறப்பெற்றதாய்க் காணப்படுவதற்கு ஏதுவான சில அனுபவங்களை இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள்.

எனினும் சபையார் தவறு செய்துவிட்டனர் என்று நாம் எப்போதும் உறுதியாய்ச் சொல்லிட முடியாது. இவ்விஷயத்தில் கர்த்தர் படிப்பினை சிலவற்றை வைத்திருக்கிறார் என்பதை நாம் எப்படி அறிவோம்? தேர்ந்தெடுக்கப்படுபவர் யாராயிருப்பினும், அவருக்காக நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினை வேண்டியிருப்போமானால், அந்தத் தேர்வுடன் நாம் இணங்கிபோக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படாதவர் ஒருவேளை சத்தியத்தினை நன்றாய் முன்வைத்திடுவதற்கான ஆற்றல் உடையவராகவும், தான் பயன்படுத்தப்படுவதற்கும், பயனாய்க் காணப்படுவதற்கும் ஏதுவான அநேகம் இடங்களை அறிவாரானால், அச்சகோதரன் தனக்கு வரும் எந்த ஒரு வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் சபையை விட்டுப் பிரிந்து செல்ல தேவையில்லை. தன் கையில் கிட்டும் எந்த ஊழியத்தினையும் அவர் புரிந்திடலாம். அநேகமாக அவர் தனது நேரத்தையும், தாலந்துகளையும் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலையில் (class extension work) பயன்படுத்திடலாம் - இதுவிஷயத்தில் தான் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனும் காரணம் தனக்குத் தடையாக இருக்கின்றது என்று கருதிட வேண்டாம். அவர் கடந்துபோய், ஊழியங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டடையலாம். ஆகையால் மூப்பர்களாக வேறு சகோதரர் வந்திருக்கும் காரியமானது, தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு அல்லது மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு - அவர் பயனாகும் வேறொரு களத்தினைக் கர்த்தர் சுட்டிக்காட்டுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கூடுதலாய்ப் பயன்படும் விதத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலானது அவரை நடத்திடலாம்.

உலகத்தின் மனுஷர்கள் நம்மைக்குறித்து என்ன சொல்லுவார்களோ அல்லது என்ன எண்ணுவார்களோ என்ற எண்ணத்தினால் நாம் தாக்கத்திற்குள்ளாகுதல் கூடாது. இது முக்கியமற்றக் காரியமாகும்; மற்றும் சபை என்ன எண்ணுமோ என்பதும் முக்கியத்துவமற்றக் காரியமாகும். நாம் கர்த்தரைப் பிரியப்படுத்திடவே நாடிட வேண்டும். நாம் நம்மைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், நம்முடைய கணிப்பில் மற்றவர்களுக்கு முன்னுரிமைக் கொடுப்போமாக. பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்கள் அருளப்படுவது என்பது, பரிசுத்த ஆவியினுடைய கனிகளின் வளர்ச்சியினுடைய அளவின் அடிப்படையிலேயே ஆகும் என்று நாம் புரிந்திருக்கின்றோம் மற்றும் இது கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியம் கொள்வதற்கு வழிநடத்திடும் அன்பினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது

ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (vote) பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்க குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளதான தகுதிநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கின்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம்பண்ணி, அதைத் தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாக தங்களது அர்ப்பணத்தினை அடையாளத்தின் மூலமாக தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது, மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார்

தகுதியானவர்களாய் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

## வாக்குறுதி

இங்கும் அங்குமாக எழும்பி தலையிடுகிறதான இன்னொரு கேள்வி, - நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை/(vow) எடுத்துக்கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராக தேர்ந்தெடுக்கப்படலாமா? என்பதேயாகும். கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிறபோதிலும், முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கவனிக்கப்பட/கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுப்படுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமித்தக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதிநிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்துகொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயந்தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்த கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத்தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காதவர்களாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே - தங்களால் முடிந்தமட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாக தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த வாக்குறுதியைத் தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்துகொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

---

# தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம்

*"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்." (பிரசங்கி 5:1)*

ஞானி சொல்லர்த்தமான பாதங்களையோ அல்லது சொல்லர்த்தமான நடைகளையோ குறித்துப் பேசவில்லை என்பதிலும், மாறாக தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் நாம் ஏற்றுக்கொள்வது போன்று, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, ஞானமுள்ள ஆலோசனை சிலவற்றைக் கொடுக்கின்றார் என்பதிலும் ஐயமில்லை. தங்களுடைய அன்றாட ஜீவியத்தில் தாங்கள் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும் என்று அவர் கூறுவதாக, அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் புரிந்து கொண்டனர்.

"உன் நடையைக் காத்துக் கொள்." நீ போய்க்கொண்டிருக்கிற இடத்தைக் கவனி. சந்தைக்கோ அல்லது கேளிக்கை இடங்களுக்கோ செல்வது போன்று, நீ தேவாலயத்திற்குச் செல்லாதே. தேவன் தம்முடைய ஜனங்களைச் சந்திக்கிற இடத்திற்குச் செல்வது போன்று அங்குச் செல்வாயாக. மேலும் தொடர்ந்து தேவாலயத்தில் என்ன கேட்கும் என்று ஞானி கற்பனைப்பண்ணுகின்றார். "மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதற்கு" ஆயத்தமாய் இராதே என்று அவர் கூறுகின்றார். இது நகைப்பை, விளையாட்டு தன்மையை, புத்தியீனமான பேச்சை மற்றும் பரியாசத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இந்த வேதவாக்கியமானது, தற்காலத்திலுள்ள தேவஜனங்கள் யாவருடைய இருதயத்திற்குள்ளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாய் இருக்கின்றது. பயபக்தி என்பது மிகவும் தகுதியானதாகும். தேவன் நம்மை நித்தியமான சித்திரவதைக்குள் தள்ளிடுவார் என்ற பயம் நமக்கு இப்போதில்லை. இப்படிப்பட்ட தீமையான நோக்கத்தினை அவர் தம்முடைய சிருஷ்டிகள் யாதொன்றின் மீதாகிலும் கொண்டிருக்கின்றார் என்று ஊகிப்பதைப்பார்க்கிலும், நம்முடைய பரம பிதாவைக் குறித்து நாம் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனாலும் சந்தைக்குப் போவதுபோன்று, நாம் தேவாலயத்திற்குச் செல்லக்கூடாது. தேவனைத் தொழுதுகொள்ளும் எல்லா இடங்களிலும் நல்லொழுக்கம் அவசியமாய் இருக்கின்றது என்ற உண்மையினைக் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் புரிந்துகொள்வதில்லை.

நிழலான ஆலயத்தில் தேவன் காணப்படாத ஒரு விதத்தில், நாம் தேவனைச் சபையில் பெற்றிருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சபையின் அங்கத்தினர்கள் எங்கெல்லாம் கூடுகின்றார்களோ, அங்குத் தாம் காணப்படுவதாகக் கர்த்தர் உரைத்துள்ளார். சொல்லர்த்தமான கற்களினாலான ஆலயத்தைப் போலவே, ஜீவனுள்ள கற்களினாலான தேவனுடைய ஆலயமும் முழுக்க பயபக்தியுடன் பார்க்கப்பட வேண்டும்.

நாம் அறையிலோ அல்லது சபையிலோ அல்லது கொட்டகையிலோ கூடினாலும் சரி, தேவனுடைய ஜனங்கள் அங்குக் கூடியுள்ள காரியமானது, அக்கட்டடத்தினைப் பரிசுத்த இடமாக்குகின்றது. ஆகையால் அங்குக் கூடுவதற்கு வரும் எவரும், தன் நடையினைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் வரும்போது, தான் இருக்கும் இடம் யாது என்று உணர்ந்தவராய் இருக்க வேண்டும் மற்றும் கேட்பதற்கு - செவிக்கொடுப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டுமே ஒழிய, ஆரவாரம் பண்ணுவதற்கல்ல. சம்பாஷணைகள் யாவும், ஆவிக்குரிய காரியங்களின் அடிப்படையில், கட்டியெழுப்பும் - பக்திவிருத்தி உண்டுபண்ணும் விதத்தில் காணப்பட வேண்டும். இப்படியாகப் பேசமுடியவில்லையெனில், தேவ செய்தியினைக் கேட்டுவிட்டு, கூடிப்பாடி, கலைந்து செல்வது நலமாயிருக்கும்.

என்ன உரையாடல் காணப்பட்டாலும், அவ்விடத்திற்காக மாத்திரமல்லாமல், அத்தருணத்திற்காகவும் என்றுள்ள பயப்பக்தியுடன் உரையாடப்பட வேண்டும். இங்குமங்குமாக திரும்பிப் பார்த்து, "இந்தச் சகோதரர், அந்தச் சகோதரர், இந்தச் சகோதரி, அந்தச் சகோதரி வருகின்றார்; அவர்கள் பாடுவதை நாங்கள் கேட்கின்றோம்" என்று சொல்லக்கூடாது. இத்தகைய நடத்தை என்பது மிகவும் தகுதியற்றதாகும்.

பயபக்தியைவிடக் கர்த்தருடைய ஜனங்கள் கற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கும் வேறு எந்தப் பாடத்தையும் நாம் அறியோம். பயபக்தி இல்லாத எவரையும் கர்த்தர் அழைக்கிறதில்லை மற்றும் அந்தப் பண்பானது, பலமடைய அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். ஆனால் பயம் துரத்தப்படும்போது, பயபக்தி குறைவு ஏற்பட வாய்ப்பாகுகின்றது. இந்த விஷயத்திற்கு - நாம் தேவாலயத்திற்கோ அல்லது திவ்விய ஆராதனை நடைப்பெறும் எந்த

ஓர் இடத்திற்கோ செல்லுகையில் - விசேஷித்த கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## மற்றவர்களுடைய உரிமைகளைக் கருத்தில் கொள்ளுதல்

தேவாலயத்திற்குச் செல்லுகையில் நம்முடைய நடையை நாம் கவனித்துக்கொள்வது மாத்திரமல்லாமல், நாம் நம்மோடு எடுத்துச் செல்பவைகளைக் குறித்தும், நாம் கவனிக்க வேண்டும். நாம் அங்குச் சுத்தமாய்ச் செல்வதற்குக் கவனிக்க வேண்டும்; நம்முடைய வஸ்திரங்களில் பூச்சிகளைக் கொண்டுபோகாதபடிக்குக் கவனிக்க வேண்டும்; நம்மிடமிருந்து கெட்ட வாசனைகள் வராதபடிக்குக் கவனிக்க வேண்டும். சரிவர பயிற்சியளிக்கப்படாத பிள்ளைகளை அங்குக் கூட்டிச் செல்லாதபடிக்கு நாம் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்வோமானால், மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இருக்கும் அபாயத்திற்குள்ளாகாதிருப்போம்.

பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டுவரும் வாய்ப்புகள் இருக்கலாம். இப்படிச் செய்ய முடியாவிட்டால், கூடுகைகளுக்கு வரும் விஷயத்தில், பெற்றோர்கள் சுழற்சி முறையில் வருவது நலமாயிருக்கும். பிள்ளைகள் கூடுகைகளில் கலந்துகொள்வது என்பது மற்றவர்களுடைய ஆவிக்குரிய நலன்களுக்குத் தீங்கு விளைவிப்பதாய் இருக்கும் பட்சத்தில், அத்தகைய பிள்ளைகளைக் கூடுகைகளுக்குக் கொண்டுவருவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. வகுப்பிற்குத் தொந்தரவு உண்டுபண்ணாத வயதை அடைவது வரையிலும், அவர்களை வீட்டில் விட்டுவருவதற்கு வழி ஒன்று ஏற்பாடு பண்ணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடைய வழக்கங்களுக்குப் பழகிப்போனவர்களாய் இருப்பதினால், குழந்தையினுடைய ஒவ்வொரு சலனங்களினாலும் அநேகமாக மற்றவர்கள் தொந்தரவிற்குள்ளாகுகையில், பெற்றோர்கள் இதனை உணரமுடியாதவர்களாய் இருக்கின்றனர். நம்மால் உண்டாகும் இத்தகைய சோதனைகள் தவிர, மற்றப்படி மற்றவர்களுக்கு அவர்களது பொறுமையினைச் சோதனைக்குள்ளாக்கும் சொந்த சோதனைகளும் காணப்படவே செய்கின்றது.

## காலந்தவறாமை குணலட்சணத்திற்கான ஒரு சான்று

சிலர் தங்களது நடையை மாத்திரமல்லாமல், தங்கள் கைக்கடிகாரத்தினையும் கவனிப்பது அவசியமாய் இருக்கின்றது. கூடுகைக்குக் காலதாமதமாக வருதல் என்பது நீதி மற்றும் அன்பு, இரண்டின் கொள்கைகளுக்கும் முரணானவையாகும். கூடுகையில் கலந்துகொள்பவர்கள் யாவரும், மற்றவர்களுக்கு நீதியாய்க் காணப்படும் வகையில், தாங்கள் சரியான நேரத்திற்கு வரத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். நியமிக்கப்பட்ட நேரத்திற்குக் கூடுகைக்குத் தாங்கள் தாமதமின்றி வரத்தக்கதாக, தங்கள் அலுவல்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டும்.

காலந்தவறாமல் காணப்படுவதற்கும் மற்றும் மற்றவர்களுக்குத் தொந்தரவளிக்காமல் இருப்பதற்குமான நம்முடைய பிரயாசங்களானது, கர்த்தரினால் கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கான சான்றுகளாகச் சந்தேகத்திற்கிடமின்றி பார்க்கப்படும் மற்றும் இவைகள் அவரால் அங்கீகரிக்கப்படும் மற்றும் இவைகள் இராஜ்யத்திற்கு நாம் ஆயத்தமாகுவதற்கு உதவுகிறதாக இருக்கும். மற்றவர்களுடைய உரிமைகளின் விஷயத்தில் அலட்சியமாய் இருப்பவன், தான் அன்பின் ஆவியில், கிறிஸ்துவின் ஆவியில் குறைவுப்பட்டிருப்பதை வெளிப்படுத்துபவனாய் இருப்பான். கிறிஸ்துவின் ஆவியில்லாமல், நன்கு வளர்ச்சியடையாமல் இருப்பவன் எவனும், இராஜ்யத்தில் இடம் பெறான்.

ஆகையால் இவ்விஷயங்கள் - அதாவது ஒழுங்கற்ற பிள்ளைகள், கூடுகைகளுக்குத் தாமதமாய் வருதல் முதலானவைகள் - இராஜ்யத்தில் இடம்பெறுவதற்குரிய நம் தகுதி நிலையினைப் பாதிப்பவைகளாய் இருக்கின்றன. இதனிமித்தம் நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப்படுகின்றோம் அல்லது மற்றவர்களை அவர்களது கிரியைகளின் அடிப்படையில் நியாயந்தீர்ப்பதற்கு நாம் உரிமை பெற்றிருக்கின்றோம் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லுகின்றோம் என்பதாகாது. "குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று கர்த்தர் கூறியுள்ளார். கர்த்தருடைய சித்தத்தைச் செய்திடுவதற்கான நம்முடைய பிரயாசங்களானது, நம்முடைய இருதயங்களுடைய விருப்பங்களுக்குச் சமமாய் இருக்கின்றது என்பதை நாம் காட்ட வேண்டும். இப்படியாக ஜீவிப்பதற்கான தீர்மானங்களைச் செயல்படுத்துவோமானால், உயிர்த்தெழுதலில் நம்முடைய மறுரூபமடைதலை நாம் அனுபவிக்கும்போது நாம் மகிழ்ச்சியடைபவர்களாய் இருப்போம்.

---

R 5815/ 374/ 514

## என் உடன்படிக்கைக்கான அடையாளம். சங். 116/ 12, 13.

கர்த்தர் எனக்குச்செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?

What shall I render unto Thee? What praise sufficient could there be For all Thy benefits toward me, O Thou Most High?

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்,

I'll drink Salvation's cup today Which Thou hast poured. Be Thou my stay! Assist me as Thy saint to pay

தேவனே, நீரே என் புகலிடம், பரிசுத்தவானாகிய நான்,

Remembering Thy Heavenly call, I'll strive to be sincere to all. I pray for grace lest I should fall from simple Truth.

எனது பொருத்தனையை நிறைவேற்ற நீர்உதவியருளும்.
உம் கிருபைக்காக இறைஞ்சுகிறேன்,
இல்லையெனில் நான் சத்தியத்தினின்றே எளிதாக வழிவிலகிடுவே னே.
நினைவினிலும், வார்த்தையிலும், எனதெல்லா வழிகளிலும்,

In thought, in word, in all my ways Thy holy standard I would raise, Nor please, nor honor self, but praise My Worthy King.

உம் பரிசுத்த நிலைப்பாட்டைக்காத்துக்கொள்ள வேண்டுமே
நான் எனது தற்பெருமையையும் கனத்தையும் மதிப்பையும் உயர்த்திக்கொள்ளாமல்,
உம் மகிமைக்காகவே வாழவேண்டும் பேரரசே.

Today in matters small or great, I'll serve with faithfulness and wait For further joys. Oh, blessed state, Thus serving Thee!

பேரரசே, இன்று, நான் சிறியகாரியங்களிலோ, அல்லது பெரிய காரியங்களிலோ, எதுவாயினும்,
உண்மையுடனும், விசுவாசமாகவும், உமக்கு மட்டுமே ஊழியம் செய்திடவும் , பரிசுத்தமான நிலைக்கு
உயர்த்திக்கொண்டு ஊழியம் செய்திடவுமே வாஞ்சிக்கிறேனே.
மேன்மையான காரியங்கள் செய்திடவே நாடிடுவேன்,
அவ நம்பிக்கையை ஒதுக்கிவிட்டே, தகுதியாய் வாழ்ந்திடுவேன்,

I'll strive to "choose things that excel;" All anxious care I'll seek to quell, And all discouragements repel, And be content.


முறுமுறுப்பும், முறையீடும் செய்திட மாட்டேன்,
நீர் வந்து வாசம் செய்ய முடியாத என் இருதயத்தை தெய்வீகமாய் மாற்றிவிடும் எந்தன் தேவனே.

I'll neither murmur nor repine! I'll trust my heart to care Divine To make of it a sacred shrine Where Thou canst dwell.

VIRGINIA NOBLE STEPHENSON.

==================

## He Ascended,leading Captives



ஆதார வசனங்கள்: அப்போஸ்தலர் 1:1 14

### இந்த ஆய்வின் ஐந்து முக்கிய அம்சங்கள் :

1) அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை 12 ஆக வரையறுக்கப்பட்டது 2) வர விருக்கிற இராஜ்யத்தின் முக்கியத்துவம் 3) கிறிஸ்து பரத்துக்கேறும் சமயம இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தைக் குறித்து விளக்க ஏற்ற தருணம் அல்ல. 4) இராஜ்யம் வருவதற்கு முன்னதாக சீஷர்கள் பூமி முழுவதும் அதைக்குறித்து பறைசாற்றும் மாபெரும் வேலையைச் செய்யவேண்டும் 5) கர்த்தர் பரத்திற்கு ஏறினது வெகுசிலரால் அறியப்பட்டு, எவ்வித ஆரவாரங்களுமின்றி நடந்தே றினதுபோலவே, அவருடைய இரண்டாம் வருகையும், அவ்விதமாகவே, திருடன் வருகிற விதமாய் சம்பவித்து, வெகு சிலரால் மாத்திரம் அறியப்படும்.

"அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்"

எபேசியர் 4:8

நமது பாடம், முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி, பரிசுத்தவானாகிய லூக்கா எழுதின எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது(லூக்கா 1:3). இந்த ஆய்வு ஐந்து விசேஷ கருப்பொருள்களைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது கருப்பொருள், அப்போஸ்தலர் எனப்பட்டவர்கள் அந்த ஸ்தானத்திற்கு இயேசுவின்மூலம் விசேஷமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே என்பதை அறிவிப்பதாகும். தெய்வீக ஏற்பாட்டின்படி, பரிசுத்தவானாகிய பவுல் யூதாசுக்கு பதிலாக நியமிக்கப்பட்டார். இந்த நியமமானது, தற்போதைய இங்கிலாந்து, ரோமாபுரி கண்காணிகள், தாங்கள் அப்போஸ்தலர் வழிவந்த, அப்போஸ்தல அதிகாரம்பெற்ற கண்காணிகள் என்று பறைசாற்றுவதற்கு நேரெதிராக இருக்கிறது. தங்களை அப்போஸ்தலர் என்று கூறிக்கொள்கிற யாவரும் "பொய்யர்கள்" என்ற நம் போதகரின் வார்த்தைகளோடு இவர்களது வார்த்தை முழுவதும் இசைந்திருக்கிறது ·வெளிப்படுத்தல் 2:2.

இப்பாடத்தின் இரண்டாம் கருப்பொருளானது, இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை விட்டு பிரிவதற்கு முன்பு, அவர்களுக்கு தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து கற்பித்தார் என்பதேயாகும். இவ்வாறு அவர்களுக்கு கற்பித்தவைகள் , முன்பு அவர் போதித்தவைகளுக்கு இசைவாகவே இருந்தது. மேலும் அவர் போதித்த போதனைகளில் பெரும்பாலானவைகள், அவர் வல்லமையோடும் மகா மகிமையோடும் வரும்போது ஸ்தாபிக்கப்படப்போகும் அதிசயமான தேவனுடைய இராஜ்யம் குறித்தே இருந்தது. அந்த இராஜ்யத்தில் அவரால் அழைக்கப்பட்ட சீஷர்களும், பின்னடியார்களும் அங்கத்தினர்களாகி, அவரது மகிமையிலும், அவரது சிங்காசனத்திலும் உடன் சுதந்திரர்களாக பங்கடைவார்கள்.

மூன்றாவது கருப்பொருளாக நாம் கவனிப்பது, வசனங்கள் 6 மற்றும் 7ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்கள் இராஜ்யத்தைக்குறித்தும் அந்த இராஜ்யத்தில் இஸ்ரயேலை ஆசீர்வதிக்கும் காலத்தைக் குறித்தும் அவரிடம் விசாரித்தனர். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக, இராஜ்யத்தின் காலங்களையும் வேலைகளையும் அறிகிறது அவர்களுக்கு அடுத்ததல்ல என்றும், அதன் விபரங்கள் பிதாவின் கரத்தில் உள்ளது என்றும் அறிவுறுத்தினார்(அப்போஸ்தலர் 1:7). நமது ஆய்வின் நான்காம் கருப்பொருளாக, 8ம் வசனத்தின்ஆய்வு உள்ளது. அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னதாகவே அதைக் குறித்து அவருடைய சபையானது, பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்தை பெற்றதிலிருந்து உலகம் முழுவதும் சாட்சி கொடுக்கும் என்று கர்த்தர் தீர்மானமாக அறிவித்தார். விசேஷ கவனத்திற்குரிய ஐந்தாவது கருப்பொருளானது, "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று தூதர்களின் வார்த்தைகளை எடுத்துரைக்கும்

11ம் வசனத்தை மையமாகக்கொண்டுள்ளது.

## இராஜ்யத்தைக் குறித்த தவறான கருத்துக்கள்

புராட்டஸ்டண்ட் அமைப்பினர் தேவனுடைய இராஜ்யமாகிய மேசியாவின் இராஜ்யம் குறித்து விநோதமும், முரண்பட்டதுமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அவ்வாறே ரோமன் கத்தோலிக்க சபையினரது கருத்துக்களும் பகுத்தறிவுக்கு நியாயமாய்த் தோன்றினாலும், வேத வசனங்கள் அங்கீகரிக்காத கருத்தை கொண்டுள்ளனர். புராட்டஸ்டன்ட் அமைப்பினரின் குழப்பம் வருத்தத்திற்குரியதாகும். தேவனுடைய இராஜ்யம் பெந்தெகொஸ்தே நாளில் துவங்கினது என்ற கருத்தை சிலர் கொண்டுள்ளனர். வேறுசிலரோ, அது எருசலேம் அழிக்கப்பட்டபோது துவங்கினது என்று நம்புகின்றனர். அப்படியிருந்தும் தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்து இயேசுவால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தும் இனிவரும் காலங்களில்தான் நிறைவேறும் என்று இவர்கள் அனைவரும் புரிந்திருக்கின்றனர்.

தேவனுடைய இராஜ்யத்தை கிபி 800 ம் வருடம் தாங்கள் ஸ்தாபித்ததாக ரோமன் கத்தோலிக்கர் கூறுகின்றனர். இதன் முதல்கட்டமாக, பாமர மக்களிடமிருந்து கிறிஸ்தவ சமய மத குருமார் பிரிக்கப்பட்டு, பின்பு குருமார்களை ஒரு விசேஷ வகுப்பாராக உயர்த்தினர். பின்பு, ரோமன் திருச்சபை மாபெரும் வல்லமை அடைந்தபிறகு, பூமியின் இராஜாக்கள் தங்களைக்காட்டிலும் வலிமையில் குறைந்தவர்களாக இருந்ததினால், போப்பு மார்க்கம் இந்த பூமியின்இராஜாக்கள் மற்றும் பிரபுக்கள்மீது இயேசுவின் நாமத்தில் ஆவிக்குரிய ஆளுகையைச் செலுத்தியது. கிறிஸ்துவுக்கு பதிலாக அவருடைய ஸ்தானத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக போப்புகள் கருதப்பட்டு, ஆளுகை செய்தனர்.

பூமியின் இராஜாக்களும் பிரபுக்களும், போப்பு மார்க்கத்துக்கு கீழ்ப்படிந்திருக்கும் பட்சத்தில் அவர்கள் ஜனங்களை ஆளுகை செய்வதை தொடரலாம் என அறிவுறுத்தப்பட்டனர். இந்த நிகழ்வின்மூலம், தாங்கள் தேவனுடைய இராஜ்யத்தை ஆளுவதாக அறிவித்தனர். ஒருவேளை, அவர்கள் போப்பு மார்க்கத்துக்கு கீழ்ப்பட்டிருக்க தவறும் பட்சத்தில், அத்தகைய இராஜாக்கள் தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்க தகுதியற்றவர்களென்று தள்ளப்பட்டு, அவர்களுக்கு பதிலாக மற்ற இராஜாக்களும் பிரபுக்களும் நியமிக்கப்படுவார்கள் என்று போப்பு மார்க்கத்தினர் ஜனங்களிடத்தில் அறிவித்தனர். ஆளுகை செய்வதற்கான தெய்வீக அதிகாரம் பெற்றவர்களாக தங்களை ஜனங்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதால், இந்த கூட்டு முயற்சிக்கு ஐரோப்பிய ஆட்சியாளர்கள் உடனே சம்மதம் தெரிவித்தனர். கிட்டத்தட்ட ஆயிரத்தி நூறு வருட காலங்கள் காரியங்கள் இவ்வழிமுறைப்படி வளர்ந்துவந்தது. ஐரோப்பாவில் மற்ற இராஜ்யங்கள் இந்த ஒப்பந்த உடன்படிக்கையை முறித்திருந்தாலும், ஆஸ்திரியாவும் ஹங்கேரியும், போப்புமார்க்கத்தில் உள்ள தெய்வீக வல்லமையை தொடர்ந்து ஏற்றுக்கொள்கின்றன.

பிரிட்டன் பேரரசு, அதன் இராஜாவாகிய 8ம் ஹென்றியின் தலைமையில், முதன்முதலில் போப்பு மார்க்கத்துடன் இருந்த ஒப்பந்தத்தை முறித்தது.இவருக்கு போப்புவுடன் ஒரு கருத்துவேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக பிரிட்டன் ஜனங்களை தேவனுடைய இன்னுமொரு இராஜ்யமாகவும், இங்கிலாந்தின் சபையை போப்பு மார்க்கத்திலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்ட ஆவிக்குரிய இராஜ்யமாகவும் ஏற்பட வழிவகுத்தன. இதன் காரணமாக, இந்த சபைக்கும் இராஜ்யத்திற்கும், ராஜாவும் அவருக்குப் பின் வருபவர்களும் தலைவர்களாக இருந்து வழிநடத்தினர். "ஸ்கான்டிநேவியா மற்றும் ஜெர்மன் நாடுகளிலும் இம்மாதிரியான மாற்றங்களை லூதரனிசம் ஏற்படுத்தியது. இந்த நாடுகள் லூதரனிசத்தை அங்கீகரித்தனர். இதற்குபதிலாக லூதரனிசம் இந்த நாடுகளை தேவனுடைய இராஜ்யமாக அங்கீகரித்தது. இவ்விதமாக, இன்றைய இவ்வுலக இராஜ்யங்கள், உண்மையில் போப்பு மார்க்கத்தாரிடமிருந்தும், அதன்பின்பு, புராட்டஸ்டன்ட் அமைப்பினர் மூலமாகவும் வருகிற அதிகாரத்தினால் இன்றும் தேவனுடைய இராஜ்யமாக உள்ளன.

## ஒரு தவறு - கிறிஸ்துவின் இராஜ்யம் எதிர்காலத்துக்குரியது

சிந்திக்கிற யாவரும் அவர்கள் கத்தோலிக்கராகவோ, புராட்டஸ்டன்ட் அமைப்பினராகவோ இருந்தாலும், ஒரு மிகப்பெரிய தவறு அரங்கேறியிருப்பதையும், அதன்படி, இவ்வுலக இராஜ்யங்கள் ஒருபோதும் கிறிஸ்துவின் இராஜ்யங்களாக இருந்ததில்லை எனவும், கிறிஸ்துவின் இராஜ்யங்கள் என்றபெயர் தங்கள் பெயரில் தவறுதலாக பொருத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் உணர்ந்திருக்கிறார்கள்.கிறிஸ்தவ மண்டலம் என்ற பெயர், கிறிஸ்துவின் இராஜ்யம் என்ற உட்பொருளைக் கொண்டிருக்கிறது. ஒருவரோடொருவர் தரைமார்க்கமாகவும், கடல்மார்க்கமாகவும் நேருக்குநேர் மோதிக்கொள்கிற இந்த ஐரோப்பாவின் யுத்த தேசங்களுக்கு பொருத்திப் பார்ப்பது மிகவும் தகுதியற்ற செயலாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" என்றும், கிறிஸ்துவின் ஆவி என்பது "சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பு" ஆகியவற்றின்மூலம் வெளிப்படுகிறது என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார் -ரோமர் 8:9, கலாத்தியர் 5:22,23.

இந்த யுத்த தேசங்களில் கிறிஸ்துவின் ஆவியை வெளிப்படுத்துகிற பரிசுத்தமான ஜனங்கள் இருப்பதை நாம் நிச்சயமாக நம்புகிறோம். இந்த யுத்த தேசங்கள் கிறிஸ்துவின் ஆவியை வெளிப்படுத்துவதில்லை எனவும், இந்த தேசங்கள் அவருடையவை அல்ல எனவும் நிச்சயமாக நம்புகிறோம். மாறாக, அப்போஸ்தலர்கள் கூறுகிறபடி, இவர்கள் மாம்சத்தின் கனிகளும், பிசாசின் கிரியைகளுமாகிய கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, வாக்குவாதம் மற்றும் கசப்பையே வெளிப்படுத்துகின்றனர். ஐரோப்பிய தேசங்களில் தற்பொழுது ஆரம்பித்திருக்கும் யுத்தம் அர்மெகதோன் என்று வேதம் அழைக்கிற மகா உபத்திரவத்திற்கு ஆரம்பம் என்றும், இது மனுக்குலத்தை ஆயத்தப்படுத்தி, உலகம் முழுவதும் நீதியான அரசாட்சியை ஸ்தாபிக்கிறதும், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதுமான (ஆகாய் 2:7) தேவனுடைய நேச குமாரனின் இராஜ்யத்திற்குள் நடத்திச்செல்லும் என வேத மாணவர்கள் நம்புகின்றனர்.

இயேசு தன்னுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு எவ்வளவு காலம் செல்லும் என்றும், அது நீண்டகாலமாக அல்லது குறுகிய காலமாக இருக்குமா என்பது பற்றி அவருடைய ஜனங்களுக்கு பாசாங்கு செய்வதுபோல் எதுவும் சொல்லவில்லை. இந்தக் காரியம் தெய்வீக கண்காணிப்பில் உள்ளது என்றும், அதை அப்பொழுது தேவனுடைய ஜனங்களுக்கு வெளிப்படுத்துவது முறையானதல்ல என்றும் தெரிவித்தார். ஆனால் வேறே இடங்களில் ஏற்ற சமயத்தில் சில அறிகுறிகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்றும், அதன்மூலம் அவர்கள் அறிந்துகொண்டு தங்கள் இரட்சிப்பு சமீபமாய் வருகிறதை உணர்ந்து, தங்கள் தலைகளை உயர்த்தி களிகூறுவார்கள் என்று அவர்களுக்கு அவர் சொல்லியிருக்கிறார்.

அவ்விதமாகவே, அப்போஸ்தலர்களும் தங்களுடைய காலத்தில், தங்களுடைய மரணத்திற்கு முன்பாகவே, கிறிஸ்துவின் இராஜ்யத்தை எதிர்பார்த்திருந்ததாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, பரிசுத்த பவுல் தன்னுடைய மரணத்தைக் குறித்து முன்னறிவிக்கையில், கர்த்தருடைய ஜனங்களில் சிலர் மரண நித்திரைக்கு செல்லாமல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் உயிரோடிருந்து "ஒரு நிமிஷத்தில், ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவார்கள்"(1கொரிந்தியர்15:51-52) என்று கூறியதை நாம் நினைவுகூறுகிறோம். அதுபோலவே, பரிசுத்த பேதுருவும் காலங்களையும் வேளைகளையும் பற்றி சொல்ல முற்படாமல், தன்னுடைய செய்திகள் அனைத்தும் தன்னுடைய மரணத்திற்குப் பின்பு சபையின் நலனுக்காக எழுதப்பட்டு, பரிசுத்த மனிதர்களின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கிறார் - 2பேதுரு 1:15.

தம்மை பின்பற்றுகிறவர்கள் உலகம் முழுவதும் சாட்சி கொடுப்பார்கள் என்று வசனம் 8ல் நம் கர்த்தர் கூறின வார்த்தைகள், இராஜ்யமானது சில நாட்களிலோ அல்லது சில வருடங்களிலோ வராது என்றும், மாறாக எல்லா ஜனங்களுக்கும், தேசங்களுக்கும், ஜாதிகளுக்கும், பாஷைக்காரருக்கும் கர்த்தருடைய அனுக்கிரகத்தை பற்றி முழுமையான சாட்சி கொடுப்பதற்கு போதுமான காலம் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு வரும் என்பதற்கு மற்றும் ஒரு நிரூபணம் ஆகும். அப்படியே நடந்துமிருக்கிறது.

## இந்த இயேசு... எடுத்துக்கொள்ளப்பட்டவாறே .. வருவார்

வேத மாணவர்கள் முன்பைக் காட்டிலும் அதிக கவனமாக வேத வார்த்தைகளின் துல்லியமான பொருளை கவனித்துவருகின்றனர். இயேசு எப்படி பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரோ, அப்படியே மீண்டும் வருவார் என்ற வார்த்தைகள் பொதுவாக இயேசு மாம்சத்தில் அல்லது மனிதனாக வருவார் என்றே அர்த்தம் கொள்ளப்படுகிறது. இது, அவர் மாம்சத்தில் கொலையுண்டு ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற வசனத்துக்கு எதிரானதாகும்(1பேதுரு 3:18). மேலும் இது, போதகர் தாம் முன்பிருந்த ஆவிக்குரிய சுபாவத்திற்கும் அல்லது தாம் உன்னதங்களுக்கு ஏறப்போவதாக கூறிய வார்த்தைகளுக்கும் எதிரானதாகும்.மேலும், "இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னை காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள்". தீர்க்கதரிசனமான அவருடைய வார்த்தைகளுக்கும் இது எதிரானதாகும்-யோவான் 14:19.

சுருக்கமாகக் கூறுகையில், இயேசு பரலோக மகிமையை துறந்து, மாம்சமாக்கப்பட்டதன் தெய்வீக நோக்கம், அவர் என்றென்றும் மாம்சத்தில் இருக்கவேண்டும் என்பதல்ல. மாறாக, அவர் இந்த பூமிக்குரிய நிலையை எடுத்ததன்நோக்கம் மரணத்தின் பாடுகளை அனுபவிக்கவே ஆகும். மரணத்திற்கு பின்பு அந்த மாம்சீக நிலை அவசியமற்றதாகும் என்பதே அவரது முழு ஜீவியத்தின் நோக்கம் என வேதம் கூறுகிறது. ஆதாம் மாம்சீக மனிதனாய் இருந்தார், ஆதாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் மீட்பராவதற்கு இயேசு ஒரு பரிபூரண மனிதனாக, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக" இருக்கவேண்டியது அவசியமாயிற்று"(எபிரேயர் 7:26). இப்படியிருக்க, பரத்திற்குரிய நிலையோடு தொடர்பற்றவராக, மாம்சீக ஜீவியாகவே அவர் தொடர்வதற்கான காரணம் ஏதும் இருக்கவாய்ப்பில்லை.

பரிபூரண மனிதனாகிய ஆதாம் தேவதூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவராக இருந்தார் என்பதை நாம் நினைவுகூறும் வேளையில், பரிபூரண மனிதனாகிய இயேசுவும் தேவதூதர்களைக் காட்டிலும் சற்று

சிறியவராக இருந்ததை நாம் கண்டிப்பாக உணரவேண்டும். ஆனால் அவர் இந்த தாழ்ந்த நிலையை தக்கவைத்துக்கொள்ளவில்லை என்பதை பரிசுத்தவானாகிய பவுல் உறுதிப்படுத்துகிறார். இவர், இயேசு மரணபரியந்தமும் உண்மையாயிருந்ததைப் பற்றி பின்வருமாறு அறிக்கையிடுகிறார்: "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்"(பிலிப்பியர் 2:9-10). அப்படி உயர்த்தப்பட்ட இயேசு, எல்லாவற்றிற்கும் மேலாக, மிகவும் உன்னதமான நிலையில் இருக்கும் ஆவிக்குரிய ஜீவியாக, திவ்விய சுபாவத்தில் இருக்கிறார். அவர் பிதாவினுடைய சிங்காசனத்தில், பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, தம்முடைய சொந்த சிங்காசனத்திற்கு ஏறும் தருணத்திற்காகவும், ஆயிரவருட அரசாட்சியை ஸ்தாபித்து, தம்மோடு தம்முடைய சபையை சிங்காசனத்தில் தம்முடைய மணவாட்டியாக சேர்த்துக்கொள்ள காத்திருக்கிறார். "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" -வெளிப்படுத்தல் 3:2.

இயேசு உயிர்த்தெழுந்தபிறகு, 40 நாட்கள், கிட்டத்தட்ட பத்து அல்லது பதினொருமுறை, பெரும்பாலும் சில மணித்துளிகள் மட்டுமே தோன்றி மறைந்தார். இந்த சந்திப்புகளின்போது தம்முடைய உண்மையுள்ளவர்களுக்கு அவர் அறிவுரைகளைத் தந்ததாக நமது பாடம் நமக்குக் கூறுகின்றது. அவர் அவர்களுக்குக் காட்சியளிக்கையில், சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியோடு பின்னாளில் அவர் தர்சு பட்டணத்தானாகிய சவுலிடம் தோன்றியதுபோல தம்முடைய பிரசன்னத்தின் மகிமையினால் அவர்களை விழச்செய்யும்படி தோன்றவில்லை(அப்போஸ்தலர் 26:13). மாறாக,அவர் சில சமயம் மனிதன்போல காட்சியளித்து, சில சமயங்களில் தோட்டக்காரர், வழிப்போக்கர் போன்ற வேற்று ரூபத்திலும் காட்சியளித்தார். அவர் இரண்டுமுறை சிலுவையில் அறையப்பட்ட சரீரத்தில் காட்சியளித்து, ஆணி மற்றும் ஈட்டியினால் உண்டான தழும்புகளைக் காண்பித்தார். இந்த சரீரங்கள் மேல் வீட்டறையில் கதவுகள் மூடியிருக்கும்போது உருவெடுக்கப்பட்டன. அப்பொழுது அவர் நிர்வாணியாய் இருக்கவில்லை என்பதிலிருந்து, அவருடைய சரீரம் உருவெடுக்கப்பட்ட அதே நேரத்தில் அந்த உடைகளும் உருவாக்கப்பட்டது தெரிகின்றது.

இயேசுவின் இந்த தரிசனங்கள் அனைத்தும், "அவர் இனி மரித்தவர் அல்ல" என்று தம்முடைய சீஷர்களுக்கு எந்த சர்ச்சைக்கும் இடமளிக்காமல் நிரூபித்துக் காண்பிக்கும் நோக்கத்திற்காக நடந்தேறியது. அவர் வெவ்வேறான சரீரங்களில் காட்சியளித்தது, இந்த சரீரங்கள் அவருடைய உண்மையான ஆவிக்குரிய சரீரம் இல்லை என்றும், அவைகள் வெறும் தரிசனங்களே என்றும் நிரூபிக்கவேயாகும். நமது கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியாக, அதாவது அவர் மனிதனாக வருவதற்கு முன்பே தோன்றிய முந்தைய தரிசனங்களைக் குறித்தும் வேதம் சொல்லுகிறது. முன்னொரு சமயம், ஆபிரகாமின் நாட்களில் கர்த்தர் இரண்டு தேவதூதர்களோடு தோன்றி, ஆபிரகாமோடு பேசி அவரோடு போஜனம் பண்ணினார்(ஆதியாகமம் 18). இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டபோது, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டு தாம் முன்பிருந்த நிலைமைக்கு மறுபடியும் திரும்பினார். சபையார் உயிர்த்தெழுதலின்போது அடையும் மாற்றத்தைக் குறித்த வரையறை கர்த்தருக்கும் மிகச் சரியாக பொருந்தும். அவர் மரணத்தில், பலவீனத்தில் விதைக்கப்பட்டு, பலமுள்ளதில் எழுந்தார். கனவீனத்தில் (கள்ளர்களுக்கு துணைவனாக) விதைக்கப்பட்டு, மகிமையில் எழுந்தார். ஜென்ம சரீரத்தில் விதைக்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்தார்" - 1கொரிந்15:42-44.

## "அப்படியே வருவார்"

தேவதூதர்கள், "அதே ரூபத்தில் வருவார்" என்று சொல்லவில்லை என்பதை கவனிக்கவேண்டும். கர்த்தர் மாம்சத்திலிருந்த நிலையில் அவர்களைவிட்டு பிரிகையில், அவர் மேகங்கள் மேல் ஏறிப்போவதை அவர்கள் பார்ப்பதற்கு ஏதுவாக ஏதாவதொரு மாம்சீக சரீரத்தில் அல்லது ரூபத்திலிருந்து ஏறிப்போயிருக்கவேண்டும். காரணம், அவர்களால் அவருடைய ஆவிக்குரிய சரீரத்தை காணமுடியாது. இயேசு மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட தன்மையானது, அவருடைய தோற்றத்தைச் சார்ந்ததாக இல்லை. நமது கர்த்தர் அமைதலாக, உலகம் அறியாவண்ணம், இரகசியமாக, அவருடைய சீஷர்கள் மாத்திரம் அறியும்வண்ணம், ஆரவாரமில்லாமல், எக்காள சத்தம் இல்லாமல் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவ்விதமாகவே உலகம் அறியாத வண்ணம் அவர் வருவார். அவர் இரவிலே திருடனைப்போன்று வந்திருப்பார்(அ) பிரசன்னமாகி இருப்பார். அப்பொழுது அவருடைய சீஷர்களைத்தவிர ஒருவரும் அவருடைய வந்திருத்தலை (அ) பிரசன்னத்தை அறிந்திருக்கமாட்டார்கள்.

**--2587--**

நமது இரட்சகர் தங்களுடைய மேம்பட்ட நிலையில் தேவதூதர்களைக்காட்டிலும் சற்று சிறிதாக்கப்பட்ட மனிதர்களுடைய நிலைக்கு நிரந்தரமாக தாழ்த்தப்பட்டார் என்று நாம் சிந்தித்ததற்கும், ஒருகாலத்தில் நாம் கொண்டிருந்த எதிர்பார்ப்புகளுக்கும் இவையனைத்தும் முற்றிலும் முரண்பட்டு இருப்பது ஆச்சரியமே. பின்வரும் வரிகளை நாம் பாடுகையில், நாம் எந்தளவு தவறாகப் புரிந்திருந்தோம் என்பது வெளிப்படுகிறது.

"இரத்தம் சொட்டச்சொட்ட கல்வாரி சிலுவையிலே
ஐந்து காயம் பெற்றுக்கொண்டார் அவயங்கள் மீதினிலே
அவை ஊட்டின ஜெபம் தன்னை எனக்காக
அவை வேண்டுகின்றன, கெஞ்சுகின்றன எனக்காக உறுதியாக"

இப்படி நாம் பாடுகையில், "தூதர்களுக்கும் மேலான ஒரு ஆவிக்குரிய ஜீவியாக அவர் மகிமை அடைந்ததை நாம் எப்படி புரிந்துகொள்ளவில்லையோ, அப்படியே தம்முடைய பரிசுத்தவான்களுக்காக கர்த்தர் பரிந்துபேசும் முறைகளை நாம் புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம் என்பது தெரிகிறது.

இதன்மூலம், அவர் வரும்பொழுது அவரோடுகூட வருகிற ஏழாவது எக்காளம் ஒரு சொல்லர்த்தமான எக்காளமல்ல என்றும், மாறாக அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ள எக்காளமென்றும், முந்தைய ஆறு எக்காளங்களைப்போல, அது காற்றில் தொனி எழுப்புவதும் இல்லை என்றும் இப்பொழுது நாம் புரிந்துகொள்கிறோம். எனவே, போதகரின் இரண்டாம் வருகையை திருடனைப்போல் வந்திருக்கிற பாகத்திலும், பழிவாங்குகிறவராக ஜூவாலித்து எரிகிற அக்கினியோடு அவர் வெளிப்படுகிற மகா உபத்திரவ காலம் வரையிலும் உலகம் உணராது என்று அறிகிறோம் (2தெசலோனி 1:8). அப்பொழுது உலகமானது உபத்திரவத்தை சந்திக்கும். பின்பு அநீதியான அனைத்தையும் கவிழ்த்துப்போட்டு நீதியான அரசாட்சியை ஸ்தாபிப்பதற்காக ஆயத்தப்படுத்துகிற உபத்திரவத்தோடு மகா இராஜா வந்திருப்பதை அவர்கள் படிப்படியாக புரிந்துகொள்வார்கள்.

----------------------------------

**--2588--**

# பெந்தெகொஸ்தே நாளின் ஆவி

## The spirit at pentecost

ஆதார வசனங்கள்: அப்போஸ்தலர் 2:1 13



பெந்தெகொஸ்தே நாளில் பெறப்பட்ட ஆசீர்வாதம் என்ன? அன்று முதல் இன்றுவரை உள்ள சபைக்கு அதன் முக்கியத்துவம் - அது கற்பித்த பாடம் – சிலர் புரிந்துகொண்டவிதமும் மற்றவர்கள் தவறாய் புரிந்துகொண்டவிதமும்

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" 1கொரிந்தியர் 3:16

யூத காலண்டரில் பெந்தெகொஸ்தே என்பது முக்கியமாக கவனிக்கவேண்டிய ஒரு நாளாகும். அது அறுவடையில் முதற்பலனான கதிர்களை அறுத்து சேர்த்ததற்கு பின்பு வரும் ஐம்பதாவது நாளைக் குறிக்கிறது. தேவனுடைய முதற்பலனான நமது கர்த்தர், மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தில் தன்னுடைய மகிமையில் உயிர்தெழுந்தநிலையில், அந்த கதிர்கட்டிற்கு நிழலாயிருக்கிறார். அதில் முதல் நாற்பது நாட்கள், நாம் பார்த்தபடி சீஷர்களுக்கு சூழ்நிலைக்கேற்ற படிப்பினை தருவதற்கு பயன்படுத்தப்பட்டது. தாங்கள் இருந்த பிரச்சனைக்குரிய நிலையில் உதவுவதற்கும், உயிர்த்தெழுதலைப் பற்றிய சரியான விசுவாசத்தோடு ஊழியத்தைத் துவக்கி, அதன்மூலம் நற்சாட்சி கொடுத்து, கர்த்தருடைய சம்பத்தை மனுஷர் மத்தியிலிருந்து கூட்டிச்சேர்ப்பதிலும் அவர்களுக்கு அது உதவியாக அமைந்தது. ஆனால் நாற்பது நாட்கள் முடிந்து, இயேசு அவர்களை விட்டுச்சென்றபோது, அவர்கள் உடனே ஊழியத்தை துவங்கவேண்டாம் என்று சொல்லி, பரத்திலிருந்து வருகிற பரிசுத்தஆவியினால் அவர்கள் நிரப்பப்படும் வரைக்கும் காத்திருக்கவேண்டுமென்றே அறிவுறுத்தினர்.

**--2589--**

அதன்படி, பத்துநாட்கள் அவர்கள் காத்திருந்தனர். காத்திருந்ததற்கான பலனாக, பெந்தெகொஸ்தே நாளான ஐம்பதாவது நாளில் மேல்வீட்டு அறையில் இருந்தபோது அவருடைய ஆவி அவர்கள்மேல் பொழியப்பட்டது. அந்த பத்து நாட்கள் இடைவெளியில் அவர்கள் ஒரே ஒரு காரியத்தில் மாத்திரம் ஈடுபட்டனர். ஆனால் அது கர்த்தருடைய அதிகாரம் பெறாததும், அவரால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படாமலும் இருந்தது. யூதாஸ் ஸ்தானத்தில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக சீட்டுப்போட்டதே அக்காரியமாகும். அவர்கள் இருவரைக் குறித்து சீட்டுப்போட்டதினால், அந்த இருவரில் ஒருவரே சீட்டுப்போடுதலின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருப்பார் என கருதப்பட்டது. ஆனால் இந்த காரியத்தை கர்த்தர் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. மேலும், அவர்கள் தேர்ந்தெடுத்த மத்தியாசைக் குறித்து நாம் எதுவும் வாசிப்பதுமில்லை. இதற்கு பதிலாக, ஏற்ற சமயத்தில் தேவன் "அப்போஸ்தலரில் மிக பிரதானமானவராக, ஒன்றிலும் குறைவுள்ளவராய் இராத" பரிசுத்த பவுலை ஏற்படுத்தினார்.

## தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமானார்

நமது கர்த்தர் பரத்திற்கு ஏறினபோது, அவர் தேவனுடைய சமூகத்தில் நமக்காக - அவருடைய சபைக்காக, அதாவது சீஷத்துவத்தின் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு நடக்கிற யாவருக்காகவும் பிரத்தியட்சமானார் என்று அப்போஸ்தலர் பிரகடனப்படுத்தினார்(எபிரேயர் 9:24). அவர் உலகத்திற்கென்று பிரத்தியட்சமாகாமல் நமக்காகவே பிரத்தியட்சமானார்.அவர் உலகத்தில் அன்புகூர்ந்தார், உலகத்திற்காக மரித்தார்.ஆனாலும், அவர் உலகத்தை இதுவரை ஆசீர்வதிக்கவில்லை. சபையைக் குறித்த தெய்வீகதிட்டம் முதலில் நிறைவேறித்தீரும்வரை காத்திருந்தபிறகே உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான காலம் துவங்கும்.

நமது கர்த்தர் பரலோகத்தின் சிங்காசனத்திற்கு ஏறிச்செல்ல எவ்வளவுகாலம் செலவிடப்பட்டது என்பதும், பரிசுத்தஆவி இறங்கிவர, பத்து நாட்களில் எவ்வளவு நாட்கள் தேவைப்பட்டது என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் மேல்வீட்டறையில் காத்திருந்த சீஷர்கள்மீது அனுப்பப்பட்ட பரிசுத்தஆவி, இயேசுவின் பணி பிதாவிற்கு திருப்தியாய் இருந்ததற்கு சாட்சியாகவும், பிதாவானவர் சபைக்கான பரிசுத்தஆவியை இயேசுவிடம் கொடுத்தார் என்றும், அதை இயேசு சீஷர்களுக்கு பொழிந்தார் என்றும் அப்போஸ்தலருடைய வார்த்தைகளிலிருந்து அறிகிறோம் - அப்போஸ்தலர் 2:33.

பெந்தெகொஸ்தே நாளின் சம்பவங்கள் அன்றைய காலக்கட்டத்தின் சபைக்கு எவ்வளவு விலையேறப்பெற்றதாய் காணப்பட்டதோ, அவ்வாறே கர்த்தருடைய எல்லா அங்கங்களுக்கும் விலையேறப்பெற்றதாய் உள்ளது. தேவனுடைய குடும்பத்தில் சேர்க்கப்படும் யாவரும் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலை பெறுகின்றனர் என்று வேதம் கூறுகிறது. அந்த ஜெநிப்பிக்கப்படுதலே பெந்தெகொஸ்தே நாளில் மேல் வீட்டறையில் காத்திருந்தவர்களுக்கு நடந்தது. அதுமுதல் அவர்கள் தேவனுடைய புத்திரரானார்கள். மேலும் "பிள்ளைகளானால் சுதந்தரருமாமே(ரோமர் 8:17). அப்படியே பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வந்திருக்கிற நமக்கும் நடக்கின்றது. சீஷர்கள்மீது அக்கினிமயமாய் பிரிந்திருக்கும் நாவுகள் தோன்றினதுபோன்ற தெய்வீக வல்லமையின் விசேஷித்த வெளிப்பாட்டை நாம் பெற்றுக்கொள்ளாதபோதிலும், நாமும் அவர்கள்பெற்ற அதே பரிசுத்தஆவியை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம்.

## பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தின் பொருள்

நம் கர்த்தர் பிரதான ஆசாரியன் என்ற அடையாளத்தின்மூலம், இயேசு மற்றும் அவருடைய சபையை குறிக்கிறார். அந்த ஆசாரியனின் தலையாக இயேசுவும், தலைக்குக்கீழே உள்ள சரீரத்தின் முதல் அங்கங்களாக அப்போஸ்தலர்களும், அன்றுமுதல் இன்றுவரையுள்ள கிறிஸ்துவின் சபையார் அனைவரும் அந்த சரீரத்தின் அவயவங்களாகவே இருக்கின்றனர். சபையின் தலையாகிய இயேசு, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என்று நாம் அறியும்படிக்கு, அவர்மீது பரிசுத்தஆவி வெளிப்படையாய் இறங்கியது. பின்பு சீஷர்களும் அந்த சரீரத்தின் அங்கங்களாக ஒரே ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று அவர்கள் அறியும்பொருட்டு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவியானது அவர்கள்மீதும் வெளிப்படையாய் இறங்கியது.

ஆனால் இன்று நமக்கும் ஒரு வெளிப்படையான அடையாளம் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஏனென்றால், தேவனிடமிருந்து பெந்தெகொஸ்தே நாளில் பொழியப்பட்ட இந்த ஆசீர்வாதம், ஒட்டுமொத்த சபைக்கும் சேர்ந்தே பொழியப்பட்டது. கர்த்தருடைய சித்தம்செய்ய நம்முடைய இருதயத்தை முழுவதுமாக தத்தம்செய்து, இயேசு செய்தபணியில் முழு விசுவாசம் வைத்து கிறிஸ்துவின் சபைக்குள் நாம் வரும்போது, எவ்வித வெளியரங்கமான வெளிப்பாடுகளும் இல்லாமல் நாம் ஆவியை பெற்று சபையாகிய சரீரத்திற்குள் ஓர் அங்கமாக எண்ணப்படுகிறோம்.

அப்போஸ்தலர்கள் விஷயத்தில் வெளியரங்க வெளிப்பாடுகளின் அவசியத்திற்கான இரண்டு காரணங்களை நாம் காணலாம். முதலாவது காரணம், அவர்கள் யூதர்கள். மேலும் அவர்கள் இயேசுவின்மீது விசுவாசம்வைத்து தங்களை தத்தம் செய்தபோது, அவரால் சீஷர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஆனால் இயேசு மரிக்கும்வரையிலும் ஒருவரையும் பிதாவானர் புத்திரராய் ஏற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. இன்னும் சொல்லப்போனால், இயேசு பிரதான ஆசாரியனாக மரிப்பது மாத்திரம் இல்லாமல், பரத்துக்கு ஏறி, அவருடைய மரணத்தின்மூலம் வந்த விலைக்கிரயத்தை, நம்பொருட்டு பிதா ஏற்றுக்கொள்ளும் வரையிலும் பிதாவாகிய தேவன் எந்த மனுஷரையும் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, அவர்கள் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பதும், அவர்களோடு ஒப்புரவாகி அவர்களை தம்முடைய குடும்பத்தில் சேர்த்துக்கொள்ளுவதும் முடியாது. இதனாலேயே, கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பு அப்போஸ்தலரின் நிலையைக்குறித்து நாம் பின்வருமாறு வாசிக்கிறோம். "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால், பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை" -யோவான் 7:39.

தேவனுடைய முதல் மனித புத்திரனான ஆதாம் பாவம்செய்தபிறகு, அவருக்கு பின் இயேசு தேவனுடைய குமாரனாய் வரும்வரையில், தேவன் அங்கீகரித்த மனித புத்திரர் ஒருவரும் இல்லை. யூதர்களைப் பொருத்தமட்டில், பின்வரும் வசனத்தில் வாசிக்கிறபடி, இவர்கள் தேவனது வீட்டின் ஊழியர்களாக இருந்தனர். "சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருந்தார். நாமே அவருடைய வீடாய் இருப்போம்" - எபிரேயர் 3:5-6. இப்படியிருக்க, பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் என்பது இயேசுவை பின்பற்றுகிறவர்களை தேவனுடைய புத்திரர்கள் என்றும், தேவனுடைய வாக்குத்தத்தங்களின் சுதந்திரவாளிகள் என்றும் அங்கீகரிக்கப்படுவதன் துவக்கமாகும்.

## ஆவியின் வரங்களும், கனிகளும்

இரண்டாவது காரணம், பெந்தெகொஸ்தே நாளில்தான் கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள்மூலமாய் மீதியான சபை முழுவதற்கும் வரங்களை அளித்தார். இந்த வரங்கள் பலவிதமான பாஷைகளை பேசும் ஆற்றலும், வியாதியஸ்தர்களுக்கு சுகமளித்தல் போன்ற அற்புதங்களை செய்யும் வல்லமையும் உள்ளடக்கியது. இந்த வரங்கள் அனைத்தும் சபையை ஸ்தாபிப்பதற்கு அவசியமாய் இருந்தது. இருந்தாலும், அப்போஸ்தலர்கள் மற்றவர்கள்மீது கை வைப்பதன்மூலம் மாத்திரமே வழங்கப்படும். இந்த வரங்கள் அப்போஸ்தலர்களின் மரணத்தோடு முடிவிற்கு வந்திருக்கவேண்டும். இந்த வரங்களை சபைக்கு தேவன் நீடிக்காமல்போனாலும், இவைகளைக்காட்டிலும் விசேஷித்தவைகளான ஆவியின் கனிகளை அவர் வாக்களித்திருக்கிறார்.இந்த கனிகள் வெறும் வல்லமையாய் இராமல், குணலட்சணங்களை குறிப்பதால் வரங்களைக் காட்டிலும் விலையேறப்பெற்றதாய் உள்ளது - 1கொரிந்தியர் 12:31,13.

ஆவியின் கனிகள் என்பது சாந்தம், தயவு, பொறுமை, நீடியபொறுமை, சகோதரசிநேகம் மற்றும் அன்பாகும். மேலும் , இவைகளை பெற்றுள்ளோர் பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர் என்றும், கிறிஸ்துவின் சபையில் ஓர் அங்கமாக உள்ளார் என்பதையும் இவை ஆதாரப்படுத்துகின்றன. ஆகையால் அப்போஸ்தலர்கள் வரங்களைப்பெற்றிருந்து, பிற்பாடு கனிகளை பயிர் செய்தார்கள் என்பதற்காகவும் நாம் இப்பொழுது ஆவியின் கனிகளை பெற்றுக்கொள்வதற்காகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆவியின் வரங்களில் ஒன்றான, அறியாத பாஷைகளை பேசும் வல்லமையை, அப்போஸ்தலரில் ஒருவர் உடனடியாக வெளிப்படுத்தினார். இவர்கள் எல்லாரும் கலிலேயர்களாய் இருந்தபடியால், ஒரு பாஷையை மாத்திரமே பேசத் தெரிந்தவர்களாக இருந்தனர். ஆனால் இவர்களைப் பற்றின சாட்சி என்னவெனில், பரிசுத்தஆவி என்னும் தெய்வீக வல்லமையினால் இவர்கள் பல்வேறு பாஷைகளில் பேசினார்கள் என்றும், பல்வேறு தேசங்களில் அந்தந்த மொழி பாஷை பேசுகிற ஜனங்கள் இவாகள் பேசுவதை தெளிவாகப் புரிந்துகொண்டு,

"இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா, அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே" என்று ஆச்சரியப்பட்டார்கள் என்பதே.. - அப்போஸ்தலர் 2:7-8.

அவர்கள் கேட்ட விதத்தில் அற்புதம் நடந்தது என்று நாம் புரிந்துகொள்ளாமல், பேசின விதத்திலேயே நடந்தது என்று புரிந்துகொள்ளவேண்டும்.அப்போஸ்தலர்கள் எல்லாரும் ஒன்றையே பேச, அதை வெவ்வேறு தேசத்திலிருந்து வந்தவர்கள் தங்களுக்கென்று தங்களுடைய பாஷையில் பேசப்பட்டதாக

**--2591--**

புரிந்துகொண்டார்கள் என்றில்லை. மாறாக, ஒவ்வொரு அப்போஸ்தலரும் வெவ்வேறு பாஷைகளில் பேசினதை எல்லா ஜனங்களும் கேட்டு, அந்தந்த பாஷைகளை பயன்படுத்துகிறவர்களால் பாராட்டப்பட்டனர். உண்மையில், இது ஒரு அற்புதமே. மேலும், திட்டமிடப்பட்ட பலனை அளித்தது. அது அப்போஸ்தலர்களையும் அன்றைய விசுவாசிகளையும் நம்ப வைக்கும் வல்லமையாகவும், அனுபவமாகவும் மாத்திரம் இல்லாமல் உலகத்தின் எல்லா தேசங்களிலிருந்தும் எருசலேமில் கூட்டிச் சேர்க்கப்பட்டிருந்த பரிசுத்த யூதர்களுக்கு சாட்சியாய் அமைந்தது.

எருசலேமில் நடைபெற்ற இந்த வருடாந்திர கூடுகைகள், மோசே மூலம் கர்த்தர் நேரடியாய் கொடுத்த கட்டளையாக இருந்து, தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் உண்மையாயிருந்த யூதர்களால் கடைப்பிடிக்கப்பட்டது. ஒருவேளை அவர்கள் மற்ற தேசங்களுக்கு வியாபார நோக்கம் காரணமாக குடிபெயர்ந்து போயிருந்தாலும், வருடாவருடம் கர்த்தரை தொழுதுகொள்ளும்படி எருசலேமுக்கு வந்தார்கள். இந்த பயபக்தியுள்ள ஜனங்களே பெந்தெகொஸ்தே நாளில் விசேஷமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இந்த கூட்டத்தில் சம்பவித்தவைகளுக்கான காரணம், அப்போஸ்தலர்கள் மது அருந்திஇருந்ததே என்றுகூற முற்பட்டபோதும், பெரும்பான்மையான ஜனங்கள் அப்படிப்பட்ட விளக்கத்தால் கோபமடைந்து, அப்போஸ்தலர்கள் கூறவந்த காரியங்களை தயக்கமின்றி ஏற்றுக்கொண்டனர். மேலும், நின்றிருந்தவர்கள் புரியும்படி வெவ்வேறு பாஷைகளில் அப்போஸ்தலர்கள் பேசினாலும், அவர்கள் தேவனுடைய அன்பின் மகிமையான சுவிசேஷ செய்தியையே பேசினார்கள் என்று உணர்ந்துகொண்டனர்.

### தேவனுடைய ஆலயம்

ஆலயம் என்ற உருவகச்சொல், சபையை தொடர்புபடுத்தி பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலை பெற்றபிறகு, அவன் பரிசுத்தஆவியின் ஆலயமாக பேசப்படுகிறான். ஒவ்வொரு சபை கூடுகையும் தேவனுடைய ஆலயமாகக் கருதப்படலாம். மேலும், பரலோக நிலைக்கு கூட்டிச்சேர்க்கப்பட்ட முழுமையான சபையும் தேவனுடைய ஆலயமாக இருக்கும். தேவனும் அவர்களில் வாசம்செய்வார். மற்றொரு ரூபகாரத்தின்படி, ஒவ்வொரு கிறிஸ்தவனும் எதிர்காலத்தின் மாபெரும் ஆலயத்திற்கு ஆயத்தம் பண்ணப்படும் ஜீவனுள்ள கற்களாக இருந்து, அந்த ஆலயத்தில் அவனுக்குரிய இடத்தை அடையும்படி தற்பொழுது செதுக்கப்பட்டும், மெருகூட்டப்பட்டும் ஆயத்தப்படுகிறான்.

முன்வைக்கப்படும் கருத்து என்னவெனில், தேவன் முற்காலங்களில் ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஷெகின்னா மகிமையால் குறிக்கப்பட்டிருந்தது போலவும், எருசலேமின் ஆலயத்தில் குறிக்கப்பட்டிருந்தது போலவும், அவர் தற்போது தம்முடைய பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அனைவரின்மூலம் குறிக்கப்பட்டு, தங்களுடைய ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட தன்மையோடு இசைந்து நடந்து, கர்த்தருடைய அன்பிலே நிலைத்துநிற்கிற அனைவராலும் குறிக்கப்படுவர்.

----------------------------------

# பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம்

St peters Pentecostal sermon

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 2:21-29



பெந்தெகொஸ்தே நாளின் தனிச்சிறப்பு - அந்நிய பாஷைகளில் பேசுவது - இதைக் குறித்து பரிசுத்தவானாகிய பேதுருவின் விளக்கம் - தாவீது பரலோகத்திற்கு ஏறிப்போகவில்லை - அவர் தன்னைப்பற்றி பேசவில்லை, மாறாக இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து தீர்க்கதரிசனமாகப் பேசினார் - இருதயத்தில் குத்தப்படுதல் - மற்ற உருவக வெளிப்பாடுகள் - இயேசு எல்லாருக்காகவும் மரித்திருந்தாலும், அறியாமையில் ஒருவரும் இரட்சிக்கப்படுவதில்லை.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்"
-அப்போஸ்தலர் 2:21

இன்றைய பாடம் மிகவும் சுவாரசியமான வேத ஆய்வாகும். காரணம், இது பலதரப்பட்ட சத்தியத்தைக் கொண்டுள்ளது. யேகோவா தேவன் மற்றும் இயேசுவின் பிரதிநிதிகளாகவும், வாயாகவும் செயல்படும் மாபெரும் வேலையைத் துவங்கும் முன்பு அவர்களுடைய தகுதிப் படுத்தலுக்கு அவசியமாய் இருந்த பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்திற்காக, அப்போஸ்தலர்கள் இயேசுவின் அறிவுரைக்கு இணங்க மேல்வீட்டறையில் காத்திருந்தனர். அந்த ஆசீர்வாதம், பழையஏற்பாட்டு நிழலுக்கு இசைவாக இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்வந்த ஐம்பதாவது நாளில் கிடைத்தது - லேவியராகமம் 23:15-21, 1கொரிந்தியர் 15:20.

அப்போஸ்தலர்கள் பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலையும், அதோடுகூட சில அற்புத வல்லமையின் வெளியரங்கமான வெளிப்பாடுகளையும் பெற்றனர். தங்களுடைய கைகளை விசுவாசிகள் அனைவர்மீதும் வைப்பதன்மூலமாக அவ்வல்லமையை பகிர்ந்தளிக்கும் சிறப்புரிமையையும் பெற்றிருந்தனர். இந்த விசேஷித்த ஆவியின் வரங்கள் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கும், தேவனுடைய விசேஷித்த பிரதிநிதிகளாக அப்போஸ்தலர்களை அடையாளமிடவும் உதவிகரமாக இருக்கும்படி திட்டமிடப்பட்டிருந்தது தெளிவாகிறது. இவர்கள், எண்ணிக்கையில் 11பேராக இருந்தனர். அதன்பிறகு பரிசுத்தவானாகிய பவுல் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மகா பிரதான அப்போஸ்தலருக்கும் எவ்வளவும் குறைந்தவராய் இராதவராயிருந்தார்(2கொரிந் 12:11). இந்த அப்போஸ்தலர்களை பிரதிபலிக்கிற அவர்களுடைய போதனைகளின் வாயிலாக, இன்றும் அவர்களை நம்மோடு பெற்றிருக்கிறோம்.

பிற்காலங்களில் சபையின் சில கண்காணிகள் தங்களை அப்போஸ்தலர்கள் என்று உரிமைகொண்டாடினபோதிலும், அவர்கள் வேதத்தின்படி எந்த அதிகாரமும் பெறாதவர்களாகவும்,

**--2593--**

எவ்விதமான அற்புத வரங்களை மற்றவர்களுக்கு அனுப்ப முடியாதவர்களாய் இருந்து, இயேசுவின்மூலம் தாங்கள் பெற்றிராத அதிகாரத்தை தவறாக உரிமை கொண்டாடுபவர்களாக குறிக்கப்பட்டார்கள்(வெளிப்படுத்தல் 2:2). இந்த அப்போஸ்தலர்களுடைய மரணம் மற்றும் இவர்களால் வரங்கள் அளிக்கப்பட்டு பெற்றுக்கொண்டவர்களுடைய மரணத்தோடு இந்த வரங்கள் அனைத்தும் முடிவுக்கு வந்து, அவைகளின் இடத்தில் ஞானம், விசுவாசம், மற்றும் கீழ்ப்படிதலின் மூலம் பெற்றுக்கொள்ளுகிற ஆவியின் கனிகள் நாட்டப்பெற்றன.

## பரிசுத்த பேதுரு போதித்தவைகளின் சுருக்கம்

அப்போஸ்தலர் பதினோருபேரும் அந்நிய பாஷைகளில் பேசும் தங்களுடைய வரத்தை பிரயோகித்து, பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவர்கள் தவிர, உலகத்தின் மற்ற அனைத்து பகுதிகளிலுமிருந்து கர்த்தரை தொழுதுகொள்ளவேண்டும் என்ற பிரமாணத்திற்கு இணங்க, அப்பொழுது எருசலேமில் கூட்டிச்சேர்க்கப்பட்டிருந்த - யூதர்களுடைய கூட்டத்தில் பேசத்துவங்கினர். அப்போஸ்தலர்கள் அவர்களுடைய உடை அலங்காரம் போன்றவற்றின்மூலம் கலிலேயர்கள் என அறியப்பட்டனர். இப்படியிருக்க, இவர்கள் வெவ்வேறு தேசங்களின் வெவ்வேறு பாஷைகளை பேசியதால், கேட்டவர்கள் மிகுந்த ஆச்சரியமடைந்தனர். முதலில் சிலர் இவர்களை குடியினால் மதிமயங்கினவர்கள் என்றும், விநோதமாக கூச்சலிடுபவர்கள் என்றும் எண்ணினர். ஆனால் , தங்களுடைய சொந்த பாஷையில், ஒவ்வொரு அப்போஸ்தலனும் பேசக்கேட்டவர்கள், தங்கள் பாஷையில் பேசுகிற அப்போஸ்தலனை சுற்றி கூட்டமாகக் கூடத் தொடங்கினர். இது அவர்களுடைய கவனத்தை அப்போஸ்தலரிடத்திற்கு திருப்பியது மாத்திரமலலாமல், ஒரு தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி அவர்களுடைய மனதில் செய்தியை பதிவுசெய்தது.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவானவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, தம்முடைய சீஷர்கள் மீது இந்த அற்புத வல்லமையை இப்பொழுது பொழிந்தார் என்பதே அந்த உபதேசத்தின் சாராம்சமாக இருந்தது. இது "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர்"(சங்கீதம் 16:10, அப்2:27) என்ற மேசியாவின் உயிர்த்தெழுதலை குறிக்கும் தாவீதின் தீர்க்கதரிசனத்தை எடுத்துக்கூற வழிவகுத்தது. இந்த தீர்க்கதரிசனம், இயேசுவை மரித்தோரிலிருந்து தேவன் உயிர்த்தெழப்பண்ணியதில் நிறைவேறியது. மாறாக, தனது கல்லறையில் மரித்தநிலையில் இன்னமும் உயிர்த்தெழுதலுக்காக காத்திருக்கிற தாவீதினிடத்தில் ஒருபோதும் நிறைவேறவில்லை என அப்போஸ்தலர்கள் சுட்டிக்காட்டினர். தாவீது ஒரு தீர்க்கதரிசியாய் இருந்து இயேசுவின் உயிர்த்தெழுதலை முன்னறிவிக்க மாத்திரம் செய்தார்.

இயேசுவின் நீதி அவருடைய போதனைகளில் உள்ள அழகு, காரணமின்றி அவரை சிலுவையில் அறைந்தவர்களின் பகைமை, நியாயப்பிரமாண உடன்படிக்கையால் கட்டப்பட்டிருந்த காரணத்தாலும், தங்களுடைய அதிகாரிகளின் செயல்பாடுகளால், தண்டனை மற்றும் குற்ற உணர்வுக்கு ஏதுவாகி, தேவனுக்கு முன்பாக முழு யூத தேசமும் குற்றவாளிகளாக இருந்ததை விளக்குகிறதுமான பல்வேறு விவரங்களோடு பிரசங்கம் தொடர்ந்தது. மூவாயிரம்பேர் விசுவாசித்தார்கள். இயேசு தேவனுடைய குமாரன் என்று உணர்ந்து, அவரை சிலுவையில் அறைந்ததன்மூலம் மாபெரும் குற்றம் நிகழ்ந்துள்ளது என்று ஜனங்கள் உணர்ந்து, இருதயத்தில் குத்தப்படும் அளவிற்கு காரியம் மிகத்தெளிவாக இரந்தது. அவர்கள் பயத்துடனும், வருத்தத்துடனும் "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கான பதில், "மனம்திரும்புங்கள்" தேவன் கிருபையுள்ளவராய் இருக்கிறார் அவர் உங்களை மன்னிப்பார் என்பதாயிருந்தது. அல்லாமலும், அவர்களும் அவர்களுடைய அதிகாரிகளும் அறியாமையால் இந்த கேடான செயலை செய்தார்கள் என்றும், தங்களுடைய பாவங்களை உணர்ந்து தேவனிடம் மன்னிப்பு கேட்கிறவர்களை தேவன் மிகுந்த கிருபையினால் மன்னிப்பார் என்றும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அப்படியே செய்து, தங்களுடைய ஜீவனை தேவனிடத்தில் அர்ப்பணித்து இயேசுவை பின்பற்றுகிறவர்களாக மாறினர்.

## இஸ்ரயேலுக்கு திரும்பவிருக்கும் தெய்வீக கிருபை

யூதஜனங்கள் அவர்களுடைய மேசியாவை புறக்கணித்ததால், அவர்கள் தேவகிருபையினின்று விலக்கப்பட்டனர் என்று வேதம் அறிவிக்கின்றது. எனினும் அவர்கள் மறுபடியும் தேவனுடைய தயவுக்குள்ளாக கொண்டுவரப்படும் காலம் சமீபிதிதிருக்கிறது. உலகத்தாரின் கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது போல இவர்களுடைய கண்களும் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக குருடாக்கப்பட்டிருந்தது. இந்தக் காரியங்கள் தொடர்பாக சத்தியத்தைக் காணும்படி ஒருசிலரே தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்றிருந்தனர். அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாய் இராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான் - 2கொரிந்தியர் 4:4 என்று பரிசுத்தபவுல் இதை உறுதியாய் அறிக்கையிடுகிறார்.

ஆனால் ஏற்றக்காலத்தில் குருடான கண்கள் யாவும், செவிடான காதுகள் யாவும் திறக்கப்பட்டிருக்கும் என்று தேவன் நமக்கு தீர்க்கதரிசியின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார் (ஏசாயா35:5).

கிறிஸ்துவின் மூலமாக தேவகிருபையை பற்றிய முழுமையான அறிவு முதலில் யூதருக்கும், பின்பு புறஜாதிகளுக்கும் இப்படியாக வரும். அப்பொழுது அறிவுப்பூர்வமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதற்கும் அல்லது புறக்கணிப்பதற்குமான காலம் உண்டாயிருக்கும். தங்களுடைய தீமையான செயல்களுக்கு பெரும்பாலும் அறியாமை மற்றும் மூடநம்பிக்கையை அடிப்படையாக கொண்டிருக்கிற இன்றைய உலகத்தில் இருக்கும் துன்மார்க்கரைக் காட்டிலும், அப்பொழுது புறக்கணிக்கிறவர்கள் துன்மார்க்கராகக் கருதப்படுவர். முழு வெளிச்சத்திற்குள் கொண்டுவரப்பட்டதற்கு பின்பு நிறைவேறும் அவர்களுடைய நியாயத்தீர்ப்பு, கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவருக்கு கீழ்ப்படிந்திருக்கும் பட்சத்தில் நித்திய ஜீவனுக்கும் அல்லது ஆசீர்வதிக்கப்பட்ட ஆயிரமாண்டின் வாய்ப்புகள் மற்றும் வெளிச்சத்தை துணிகரமாக புறக்கணித்து அதற்கு விரோதமாக பாவம் செய்யும் பட்சத்தில் நித்திய மரணத்திற்குமாக இருக்கும்.

வரப்போகிற காலத்தில் யூதர்களை பொருத்தவரையில், அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து அவருக்காக புலம்புவார்கள் என்று எழுதியிருக்கிறது. மேலும் அப்பொழுது கர்த்தர் அவர்கள் மீது கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றுவார்(சகரியா 12:8-10). ஆனால் மாம்சீக இஸ்ரயேலருக்கு தேவனுடைய தயவு திரும்புவது என்பது, முதலாவது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் எண்ணிக்கை நிறைவேறும் வரை சம்பவியாது. நாம் ஒரு புதிய யுகத்தின் விடியலில் இருக்கிறோம் என்றும், சபை வகுப்பார் கூடிய விரைவில் இரட்சகரோடு அவருடைய இராஜ்யத்தில் நிறைவடைந்து மகிமைப்படுவர் என்றும், அதை தொடர்ந்து தேவனுடைய கிருபை யூர் பட்சமாக கிரியை செய்யத்துவங்கும் என்றும் வேத மாணவர்கள் நம்புகின்றனர். ரோமர் 11:25-32ல் பரிசுத்த பவுல் இதைக் குறித்தே போதித்தார் என்பது தெளிவாகிறது.

## சாபம் அகற்றப்படும்

இந்தப் பாடத்தில் விசேஷ முக்கியத்துவம் பெற்ற மற்றொரு காரியம், இயேசு சென்ற நரகம் என்பது எரிநரகம் அல்ல. மாறாக பாதாளமாகிய, மரண நிலை என்பதே. தேவன் அவரை அக்கினியிலிருந்து எழுப்பாமல், மரித்தோரிலிருந்தே எழுப்பினார். வேதத்தில் மனுக்குலம் அனைத்தையும் குறித்து பேசப்படும் பகுதிகளில், நரகம், ஷியோல், ஹேடிஸ் என்ற இந்த வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் நினைவுகூறவேண்டும். ஒவ்வொரு தேசத்திலும் உள்ள நல்லார் மற்றும் பொல்லார், முதியவர் மற்றும் இளைஞர், ஆண்கள் மற்றும் பெண்கள் யாவரும் வேதத்தின் நரகத்திற்கே இறங்குகின்றனர். வேதத்தின்படி ஒரே சமயத்தில் சம்பவியாமல், "அவனவன் தன் தன் வரிசையில்"(1கொரிந் 15:23) என்ற ரீதியில் சம்பவிக்கும் மரித்தோர் அனைவரின் எழுந்திருத்தலுக்காகவும், உயிர்த்தெழுதலின் விடியலுக்காகவும் காத்திருக்கிறவர்களாக அவர்கள் அங்கு நித்திரை செய்கிறார்கள்.

நாம் இப்பொழுது "இப்பிரபஞ்சத்தின் தேவனான" சாத்தான் மற்றும் பாவம் மற்றும் மரணம் ஆளுகை செய்கிற இராக்காலத்தில் இருப்பதாக வேதம் சித்தரிக்கிறது. ஆனபோதும், பாவம் சாபம் மற்றும் மரணம் அகற்றப்பட்டு, கர்த்தருடைய ஆசீர்வாதம் மேசியாவின் இராஸ்யம் மூலமாக மனுஷ சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினரையும் சென்றடைந்து, நித்திய ஜீவனுக்கான வாய்ப்பை அனைவருக்கும் தருகிற புதிய யுகமாகிய மேசியாவின் இராஜ்யத்தை, மனுக்குலத்தை ஆசீர்வதிக்கிற திவ்விய நாளில் மகிமையான விடியலாக சித்தரிக்கிறது. இது ஆவிக்குரிய நிலையில் சபை பெற்றுக்கொள்ளுகிற மகிமை, கனம் மற்றும் அழியாமையை பெற்றுக்கொள்வதற்காக தற்போது அருளப்பட்டிருக்கும் வாய்ப்பைப் போல இல்லாமல், ஏதேனில் இருந்து கல்வாரியில் மீட்டுக்கொண்ட அனைத்துமாகிய மனித பரிபூரணத்துக்கு திரும்பும் வாய்ப்பாக இருக்கும்.

## நமது பொன்னான வாக்கியம் - அதன் அழகு

இங்கு நமது பொன்னான வாக்கியமாகிய 21ம் வசனத்தின் அழகை நாம் காண்கிறோம். உண்மையான இருதயத்தோடு கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிற அனைவரும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து மீட்கப்படுவார்கள் என்பதை இயேசுவின் மரணம் உறுதியளிக்கிறது. இந்த ஆசீர்வாதத்தை விரும்பி சேர்ப்பதற்கான போதிய புரிந்துகொள்ளுதலுக்குரிய நிலைக்கு அனைவரும் கொண்டுவரப்படுவார்கள் என்றும் உறுதியளிக்கிறது. புறஜாதியாரும் நாகரீகம் அடைந்த தேசத்தின் பெரும்பான்மையான ஜனங்களும், யூதர்களும் தற்போது கேட்கும் செவிகள் பெற்றிராதவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு தேசத்திலும் உள்ள வெகுசிலரே தற்போது இந்த பெரிதான ஆசீர்வாதத்தை பெற்றுள்ளனர்.தேவனுடனான உறவிற்கு

**--2595--**

திரும்பக் கொண்டுவரப்பட்டிருக்கிற இவர்களே தங்களுடைய அந்நியப்படுத்தப்பட்டிருந்த நிலையிலிருந்து தற்போது காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள்.மேலும் இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில், மகிமைக்கும், கனத்துக்கும், அழியாமைக்கும், மேசியாவின் ராஜ்யத்தில் உள்ள பங்கிற்கும் இறுதியாக இரட்சிக்கப்படுவார்கள். இவர்கள்மூலம் உலகளாவிய ஏதேனில் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பளிப்பதற்கு மனித சந்ததியில் ஒவ்வொருவருக்கும் சத்திய வெளிச்சத்தின் ஆசீர்வாதமும், அறிவும், மேம்படுத்துகிற வல்லமையும் இறுதியில் சென்றடையும்.

## அரண்மனைகள்

படி அல்லது படிக்கட்டின்றி, அங்குமிங்குமாக மாடம் அமைத்து, காற்றில் அரண்மனையைக் கட்டுகிறவர்கள் கட்டட்டும். கால்களால் ஏறுவதற்கு பதிலாக, இறக்கைகள் எடுத்து பறக்கட்டும். தங்களுடைய மணிகோபுரங்கள் வானத்தைத் தொடவேண்டும் என நினைக்கட்டும். நானோ என்னுடைய அஸ்திவாரத்தை ஆழத்தில்வைத்து, நான் ஓடும்முன்பு தவழ கற்றுக்கொள்கிறேன். தன்னுடைய அஸ்திவாரத்தை மிகத் தாழ்வாக வைக்க கன்மலைக்குள் தோண்டுகிறவன், தாமதித்தாலும் ஏற்ற சமயத்தில் நிச்சயம் உயர கட்டுவான்

- கிறிஸ்டோபர் ஹார்வே

--------------------------------


**--2596--**

# கர்த்தாவே,ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும்

## Lord,Teach us pray

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்"- 1தெசலோனிக்கேயர் 5:17 -18

தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை சிருஷ்டித்தபொழுது, அவன் தேவனோடு கொண்ட உறவில் - அதாவது உணர்வுகளில் இசைவாக இருந்தான். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, அவன் தேவனோடு உடன்படிக்கையின் உறவின் நிபந்தனைக்குள் இருந்தான். இந்த பரிசுத்த உடன்படிக்கையை ஆதாம் முறித்துப்போட்டான் என்று வேத வசனம் வெளிப்படுத்துகிறது(ஓசியா6:7). அவன் பாவியாக மாறினான். அவனுக்குப்பிறகு பிறந்த அவனது பிள்ளைகளும், அவனோடுகூட வரும் பாரம்பரியப்படி, சுபாவத்திலேயே



பாவிகளானார்கள். ஆதாமின் சந்ததியார் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் பிறவாமல், அதற்கு மாறாக பிறப்பிலேயே அந்நியர்களானார்கள். ஆனால் விசுவாசத்தினை வெளிப்படுத்தி, தம்மோடு இசைவாக விரும்புகிற ஒருசிலரோடு தேவன் தொடர்புவைத்திருந்தார். ஆதாமின் இரண்டாவது குமாரனாகிய ஆபேல் இவர்களில் ஒருவன். இவர் மிருக பலி செலுத்தி தேவனோடு நெருக்கமாக தொடர்புகொண்டார். அது அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அவ்வாறே ஏனோக்கும் நோவாவும் சட்டத்தின்படி ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட சாபத்தீர்ப்புக்குட்பட்டிருந்தபோதிலும், இந்த சாபத்தீர்ப்பிலிருந்து நீங்கலாக்கும் ஈடுபலி இன்னும் அளிக்கப்படாதபோதிலும், விசுவாசத்தின்மூலமாக கர்த்தரோடு ஐக்கியத்தின் நிபந்தனைக்குள் வந்தனர்.

அதன்பிறகு, தேவன் ஆபிரகாமின் மாபெரும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினிமித்தம், உடன்படிக்கை செய்து உறவை ஏற்படுத்திக்கொண்டார். அதற்குப்பிறகு அவருடைய குமாரனாகிய ஈசாக்குடனும், பின்பு அவரது பேரனாகிய யாக்கோபுடனும் உடன்படிக்கை செய்துகொண்டார்.அவர்களைத் தொடர்ந்துவந்த யாக்கோபின் வித்தாகிய அவன் சந்ததியாருடன் தேவன் நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ், சீனாய் மலையில் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். கர்த்தர் யாக்கோபின் நாமத்தை இஸ்ரயேல் என்று மாற்றினார். இதற்கு "தேவனுடனான இளவரசன்"(ஆதி 32:24-30) என்று பொருள். யாக்கோபின் வழிவந்த பின்சந்ததியாராகிய இஸ்ரயேலின் முழுதேசமும், தேவ பிள்ளைகளாக

ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் ஜெபத்தில் தேவனிடத்தில் சேரும்படிக்கு சிறப்புரிமை பெற்றிருந்தனர். ஆனால் யூத தேசத்தாரது பாவங்களோ, வருடாவருடம் சம்பிரதாயமாக மட்டுமே நீக்கப்பட்டது. காளை மற்றும் ஆட்டின் இரத்தம் ஒருபோதும் பாவத்தை நீக்கக்கூடாதவை. ஆகவே யூதர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்ற உறவில் நிலைத்திருக்கமட்டுமே இது அனுமதிக்கப்பட்டது.

புறஜாதியாரோ ஒட்டுமொத்தமாக தேவனற்றவர்ளாகினர். அவர்கள் ஜெபிக்கும் சிறப்புரிமையை பெற்றிருக்கவில்லை. சுவிசேஷயுகம் துவங்கினபிறகு இந்நிலை மாறினது. நீதிமானாக விளங்கின புறஜாதியானாகிய கொர்னேலியு ஜனங்களுக்கு தானதர்மம் செய்வதிலும், எப்பொழுதும் ஜெபிப்பதிலும் தரித்திருந்தார்.ஆனால் இயேசுகிறிஸ்து மரித்தபோதிலும் அவரது ஜெபம் அங்கீகரிக்கப்படக்கூடாதிருந்தது. இயேசுவின் மரணம் கொர்னேலியுவை தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டுவரவில்லை. ஆனால் யூதருக்குக் கொடுக்கப்பட்ட அடையாளமான 70வார விசேஷ தயவு நிறைவுற்றபோது, புறஜாதியாருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் ஏற்றவேளை வந்திருந்தது. தேவன் கொர்னேலியுவை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்து, அவரிடத்தில் ஒரு தேவதூதனை அனுப்பினார். அந்த தூதன் அவரிடத்தில் கர்த்தரது செய்தியைக் கொடுத்தார். அந்த செய்தியாவது -
"உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது"

கொர்னேலியுவின் தானதர்மங்களும் ஜெபங்களும் கர்த்தருக்கு முன்பாக சுகந்த நறுமணமாக உன்னதங்களுக்கு எழும்பினது.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக, தேவன் இப்படிப்பட்ட பலிகளை ஏற்கவில்லையா? இல்லை. தேவனால் அந்த பலிகள் கவனத்தில் கொள்ளப்பட்டபோதிலும், அவைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சுவிசேஷயுகத்திற்கு முன்பு நிழலான வழிமுறைப்படி, வரம்புக்குட்பட்டு, தேவனால் ஏற்கப்பட்டுவந்தது. தேவனால் நியமிக்கப்பட்ட சில நிச்சயமான காரணங்களின் அடிப்படையில், இந்த யுகத்தில் பரிந்துபேசுபவர் மூலமாக ஏற்கப்படுகிறது. அடுத்தயுகத்தில் மத்தியஸ்தர் மூலமாக ஏற்கப்படும்.

"என் வழியாய் அல்லாமல் தந்தையிடம் ஒருவனும் வரமுடியாது" என்று இயேசு கூறினார். ஏற்றவேளை வந்திருந்தபோதிலும், தேவன் கொர்னேலியுவுக்கு வார்த்தையை அனுப்பும்வரை, அவரால் வரக்கூடாதிருந்தது.

**சத்தியத்தின் அறிவு அத்தியாவசியம்** :-

கர்த்தரது தூதன் கொர்னேலியுவிடம் கூறியதாகது - "யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு. நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான்"

அவர் இரட்சிக்கப்படவும் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டுவரப்படவும் அந்த வார்த்தைகள் அவசியமாயிருந்தது. கொர்னேலியு கீழ்ப்படிந்து, பேதுருவை வரவழைக்க ஆள் அனுப்பி, பேதுருவின்மூலம் தேவையான அறிவுரைகளைப்பெற்று, கிறிஸ்துவின்மூலம் தேவனுக்குள் கொண்டுவரப்பட்டார்.

நாம் கிறிஸ்துவின்மூலம் தேவனுக்குள் வந்திராவிடில் கொர்னேலியுவின் முந்தைய நிலையைப்போலவே நமது ஜெபங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்காது.

தேவன் மாபெரும் பாவநிவாரணபலியை ஏற்பாடுசெய்து, அதன் காரணமாக இயேசுகிறிஸ்து ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். இப்பொழுதோ, உலகத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ளுமுன்பாக, தேவன் சிறுமந்தையை உலகிலிருந்து பிரித்தெடுத்து, தெரிந்துகொண்டு, உலகை ஆசீர்வதிக்க அவர்களை கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரர்களாக்குகிறார். இப்படிப்பட்ட நற்செய்தியை கொனேலியு கேட்டபொழுது, தன் முழு இருதயத்தோடு அவர் விசுவாசித்தார். அவ்வாறே அவரோடுகூட இருந்தவர்களும் விசுவாசித்தனர். இயேசுவைப்பற்றி அவர் முன்பே கேள்விப்பட்டிருந்தார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்றாலும், தற்பொழுதுதான் அவர் அதன் விபரங்களை புரிந்துகொண்டார். அவர் தன் ஜீவியத்தின் ஆரம்பத்திலிருந்தே சரியான இருதய நிலைப்பாட்டை பெற்றிருந்தார். ஜெபித்துக்கொண்டும் உபவாசம் இருந்தும் வந்தார். இருந்தபோதிலும் இயேசுவின் மூலமாக அன்றி, அவர் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாத நிலை இருந்தது. தனக்கு வழக்காடுபவராக இயேசுகிறிஸ்துவை அவர் நிச்சயம் ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்.

**--2598--**

## இயேசு எப்படி நமக்கு வழக்காடுபவராகிறார்?

நமது வழக்காடுபவராக இயேசுவை பெற்றிருப்பது என்பதன் அர்த்தம் என்ன? இதன்பொருள், முதலாவதாக, பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் நம்மை மீட்கும்பொருளாக, அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.அடுத்ததாக இயேசு நமக்குக் கூறுகிறார் -

"ஒருவன் எனக்கு சீஷனாக விரும்பினால், அவன் தன்னையே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்"

இயேசு பரிசுத்தராயிருந்து மரித்தார் என்று விசுவாசிப்பதன்மூலம் மட்டும், ஒருவனும் அவரது சீஷனாகிடமுடியாது. "பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன". மாறாக, நாம் நம் கர்த்தர் வைத்துள்ள நிபந்தனைகளின்படி அவரை ஏற்றுக்கொள்ளும்பொழுது, ஜீவன்பெறத் தேவையான நீதிமானாக்குதல் நடைபெறுகிறது. அதன்பின்பு அவர் நம்மை ஆதரித்து வாதாடுபவராகிறார்.

கிறிஸ்துவின் சீஷனாக தன்னை முழு பிரதிஷ்டை செய்தாலொழிய, தன் ஜெபத்துக்கு பதிலை எதிர்பார்த்து காத்திருக்க ஒருவனுக்கும் உரிமையில்லை. அவர்மூலமாக பிதாவினிடத்தில் சேர்கிற எவனும் புறம்பே தள்ளப்படுவதிலலை(யோவா 6:37). ஆனால் இந்த விதிமுறைக்கு ஒரு விதிவிலக்குஉண்டு. சிறுவயதினர்களாகிய வகுப்பார், பூரண வயதுள்ளவர்களிடமுள்ள பொறுப்புணர்வு, புரிந்துகொள்ளும் தன்மை ஆகியவற்றில் குறைவுள்ளவர்களாயிருக்கின்றனர். இந்த சிறுவர்களின் பெற்றோரில் ஒருவர் அல்லது இருவர் கிறிஸ்துவின் சீஷராய் இருக்கின்றனர். பொறுப்புணர்வுள்ள வயது - ஒரு சிலருக்கு 12 முதல் 15 வயதுக்குள் ஏற்படுகிறது. சிலருக்கோ இன்னும் அதிக காலம் பிடிக்கிறது. ஆனால் முழுமையாகப் புரிந்துகொள்ளவும், தங்கள் கடமையை உணர்ந்துகொள்ளும் நிலைமையை யார் யார் அடைந்தாலும், கர்த்தரோடு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை செய்யாவிடில், ஜெபிக்கும் உரிமையை இழந்துவிடுவார். பூரண வயதையடையாத சிறுவர்களின் விஷயத்தில், அவர்களது பெற்றோரில் ஒருவர் கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருந்தால், அந்த சிறுவரது ஜெபத்துக்கு பதில்கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் உரிமையை பெற்றிருக்கிறான்.


முழங்கால் படியிட்டு சிரம் தாழ்த்தி வணங்கும் ஒருவருக்கு கர்த்தர் தடைஏற்படுத்துவதில்லை. நாகரீகமற்ற மூர்க்கர்கள் அவ்வாறு செய்வதில் உறுதியாக இருந்தாலும், அவர்களது ஜெபங்கள் இரக்கம்கேட்டு பரத்துக்கேறுவதில்லை. யூதர்களின் ஜெபங்கள் விதிவிலக்காக, ஒருகாலகட்டத்தில் கருத்திற்கொள்ளப்பட்டு ஏற்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் உருவகமான ஜனங்களாகவே இருந்தனர்.அந்த ஏற்பாடு தற்காலிகமானது என்பதோடு, விரைவில் அகன்றும்போனது. ஆனாலும் வெகுவிரைவில் மாபெரும் மத்தியஸ்தர் மூலமாக அவர்கள் ஜெபிக்கும் உரிமையை மீண்டும் பெறவிருக்கின்றனர். மேலும் இந்த சிறப்புரிமையில் முழு உலகமும் சேர்ந்துகொள்ளும். இயேசு உலகிற்கு பரிந்துபேசுபவராக இருக்கமாட்டார். இயேசுவின் பரிந்துபேசுதல் ஏற்பாடு, இன்றைய யுகத்தில் சபையாருக்கும் மட்டுமேயாகும்.

நமது ஜீவியமே ஜெபமாகவேண்டும்

சர்வ வல்லவரை நோக்கி ஜெபிப்பது மனித மனத்தின் இயல்பான நோக்கமாயிருக்கிறது. புறஜாதியாரும்கூட ஜெபிக்கும் இயல்பைப் பெற்றிருக்கின்றனர். அவர்களுக்கு ஏற்படும் பயங்கள் மற்றும் அவர்களது நம்பிக்கைகள் ஆகிய அனைத்தும், தங்களுக்கு அப்பாற்பட்ட மாபெரும் வல்லமையிடம் கருணைகோரி வேண்டுதல் விடுக்க வழிவகுக்கின்றன. ஆனால் தேவனுடைய ஜனங்கள் அவரது ஞானம், வல்லமை, மற்றும் அன்பை அறிந்திருக்கிறபடியாலும், அவருக்குப் பிரியமான ஜெபத்தின் நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றுகிறபடியினாலும், அவரது கிருபாசனத்தை நாடும் அங்கீகாரம் பெற்றிருக்கின்றனர். தேவனை நாடும் உரிமை பெற்றிருப்பதும், அண்ட சராசரங்களை ஆளும் மாவல்லவரால் ஏற்கத்தக்க காதுகளைப் பெற்றிருந்து, அவரது பிரசன்னத்திற்குள் பிரவேசிப்பதும், மாபெரும் ஆசீர்வாதங்களே என்று உணர்ந்திருக்கிறோம். இவ்வுலகின் பேரரசர்கள் மற்றும் ராஜாக்கள் பேசுவதைக் கேட்பதும், அவ்வாறே முக்கியத்தும் வாய்ந்த தலைவர்களது பேச்சை காதுகொடுத்து கேட்க குழுமியிருக்கும் கூட்டத்தில் அமர்ந்திருந்து கேட்பதும் மிகவும் அரிதான வாய்ப்பு என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆனாலும் மாபெரும் தேவன் தம் பிள்ளைகள் தம்மிடம் வரவும், தங்களது விண்ணப்பங்களை தெரியப்படுத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

மனந்திருந்தாத பாவி தேவனிடத்தில் வரமுடியாது. ஆனாலும் பாவி, தன் பாவத்திலிருந்து விடுபடவும், அதன்பிறகு ஜெபத்தின் வழியாக தம்மோடு ஐக்கியமாகவும் தெய்வீக ஞானமானது ஏற்பாடு செய்துள்ளது. கிறிஸ்துவின் தியாக பலியின் தகுதியே நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நிஜமாகவே பிதாவினால் அங்கீகரிக்கப்படும் நிலைக்கு நம்மை உயர்த்துகிறது. ஜெபத்தில் தம் பிள்ளைகள் தம்மிடத்தில் கிட்டிச்சேர அவர் பியரியமாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளவும், ஸ்தோத்தரிக்கவும் கிடைத்த

சிறப்புரிமைக்காக நாமும் நம் இருதயங்களை அவருக்கு ஒப்புக்கொடுத்து அவரை மகிமைப்படுத்துவோம்.




தொழுதுகொள்வதற்கும் ஜெபிப்பதற்கும் உள்ள சிறப்பியல்புகளை வேறுபடத்திக் காண்பிக்கவேண்டும். தொழுகை என்பது தேவனது மாட்சிமையை ஒப்புக்கொண்டு அவருக்கு மரியாதை செலுத்தவும் ஆராதிக்கவும் தலைவணங்குதல் ஆகும். ஆனால் ஜெபம் என்பது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது. தேவனுடைய பிள்ளைகள் ஜெபத்தின் மூலமாக தம்மிடத்தில் வரும்படி வசனத்தின் வழியாக உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். அவ்வாறு அவர்கள் ஜெபத்தில் அவரோடு தொடர்புகொள்வதற்கு முன்பாக, அவர்கள் எதற்காக என்னகோரிக்கைகளுக்காக அவரிடம் விண்ணப்பிக்கவேண்டும்? எது அவருக்குப் பிரியமானது என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்? முறையான ஜெபம் எது? என்று நம் கர்த்தர் தம் சீஷர்களுக்குப் போதித்தன் வழியாக, நமக்கு முன்மாதிரிகை காண்பித்திருக்கிறார்.

பரிசுத்தஆவியே தங்களுக்கு ஆசீர்வாதத்தை வருவிக்கும் என்று அறிந்து, அதை அடையதேடவேண்டும். இந்த தேவ ஆவியை பெருமளவிலோ அல்லது குறைவாகவோ பெற்றிருக்கலாம். நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, ஆவியின் அனுக்கிரகம் ஓரளவு நமக்கு கொடுக்கப்படுகிறது. அதன்பிறகு, நமது ஜீவியத்தில் அன்பின் அக்கினி பற்றிஎரிகின்ற வல்லமையாக செயல்படத் துவங்குகிறது.அது, தேவனுக்கு எதிராக நம்மிடமுள்ள அனைத்துக் காரியங்களையும் சுட்டெரிக்கிறது. இதன் காரணமாக, நமது ஜீவியம் மிளிர்கின்ற வெளிச்சமாகவும், தகனமாகவும் மாறும். நாம் நீதியின் ஆவியில் குறைவுபட்டவர்கள் என்பதை உணர்ந்திருக்கிறோம். எந்தஅளவு குறைவுள்ளவர்களாய் காணப்படுகிறோமோ, அந்தளவுக்கு ஜெபத்தில் நாம் அடிக்கடி வலியுறுத்தி, கெஞ்சிக்கேட்கவேண்டும். தனது தேவை என்னவென்று யார்யாரெல்லாம் அறிந்து உணர்ந்திருக்கிறார்களோ, எங்கிருந்து தனக்குத் தேவையான ஆற்றல்கிடைக்கும் என்று அறிந்திருக்கிறார்களோ, அவர்கள் பரலோக தயவின் சிங்காசனத்திற்கு வந்துசேர்வார்கள். ஒவ்வொரு நாளும் அதிகநேரம் முழந்தாள்படியிட்டு ஜெபிக்கவேண்டும் என்பதற்காக, நம் ஜீவியத்தின் கடமைகளையும், பொறுப்புணர்வுகளையும் உதாசீனப்படுத்தக்கூடாது.

நாம் கர்த்தரின் குழந்தைகளாக மாறின தருணத்திலிருந்து,கிறிஸ்துவின் சாயலைஅடைய, அதிகதிகமாக, கடும் முயற்சிசெய்யவேண்டும். இதற்காக நாம் தைரியமற்றவர்களாக இராமல், இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும். கர்த்தரின் ஆவியை அடைய பிரயாசைப்படவேண்டும். அவ்வாறு பிரயாசைப்படும்போது, கர்த்தரது நிபந்தனைகளை நிறைவேற்றுவதால் ஆவியில் நிரப்பப்பட்ட நிலையை அடைவோம். இந்த வார்த்தையின் பொருளை உணர்ந்தவர்களாக, இடைவிடாது ஜெபித்து, நாம் எதிர்நோக்குகிறதை அடையும்வரை தொடர்ந்து நம் விண்ணப்பங்களை கர்த்தருக்கு சமர்ப்பித்துக்கொண்டே இருக்கவேண்டும்.ஆனாலும் உயிர்த்தெழுதலில் மேலான ஜீவியத்திற்கு மறுரூபமடையும்வரை - அதாவது புதிய சுபாவத்தின் பூரணத்துக்கு உயர்த்தப்படும்வரை, நாம் எதிர்பார்ப்பதன் முழுமையை அடையமுடியாது. அந்த மேலான சுபாவத்தை அடைந்தபிறகு, ஜெபிப்பதற்கான அவசியம் எதுவுமிருக்காது. அப்பொழுது நாம் முழு நிறைவை அடைந்தவர்களாயிருப்போம். துதித்தலினால் ஜெபம் விழுங்கபபட்டுப்போகும்.

## நம் கர்த்தரின் மாதிரி ஜெபம்

நம் கர்த்தரால் கற்பிக்கப்பட்ட மாதிரிகை ஜெபத்தில் தேவனை நாம் முதலாவது மேன்மைப்படுத்தவேண்டும். அவரை நம் பரலோகத்தந்தை என அங்கீகரிக்கவேண்டும். அவரது மாட்சிமையை வெளிப்படுத்தவும்,அவரது நாமம் பரிசுத்தப்பட விரும்புவதை வெளிப்படுத்தவும்வேண்டும். தேவராஜ்யம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நாம் நினைவுகூர்ந்து, அந்த ராஜ்யம் வருவதாக என்ற நம் இருதயத்தின் வாஞ்சையை அவரிடம் கூறவேண்டும். அவரது சித்தம் இப்பூமியில் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவதாக என்று நாம் ஜெபிக்கவேண்டும். இவ்வாறு ஜெபிப்பதன்மூலம், நாம் நம் சொந்த

--2600--

சித்தத்தை விட்டுவிட மனதாயிருப்பதையும், தேவசித்தமே நம் அழிந்துபோகக்கூடிய சரீரத்தில் முழுவதும் செய்யப்பட வாஞ்சிப்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

இந்த ஜெபத்தில், நமது அன்றாட, தற்காலிகத்தேவைகளை சுருக்கமாக தெரியப்படுத்துகிறோம். "எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்" என்கின்றபோது, நிர்ணயிக்கப்பட்ட அளவிலான பழங்கள், காய்கறிகள், அருஞ்சுவை உணவுகள் போன்றவற்றை நிபந்தனையாகக் குறிக்காமல், நம்முடைய அன்றாட நாளின் தேவைகளை மாத்திரம் குறிப்பிடப்படுகிறது. இதற்கு மிகுதியாக நாம் கேட்பதில்லை, விரும்புகிறதுமில்லை. அடுத்ததாக, நாம் மன்னிக்கிறதுபோல நம்முடைய தப்பிதங்களையும் மன்னிக்கும்படியாக கேட்கிறோம். முடிவாக தீமையான ஆதிக்கங்களிலிருந்து நம்மை பாதுகாக்கும்படியான வேண்டுகோள்வருகிறது.இது நாம் தொடர்புவைத்திருப்போரிடமிருந்தும், தீமையின் வல்லமைகளிடமிருந்தும், வான் மண்டலத்தின் வல்லமைகளிலிருந்தும் மற்றும் நம்முடைய சொந்த மாம்சத்திலிருந்தும் சோதனைகள் வரும் என்றும், இதற்கு நமக்கு தெய்வீக ஒத்தாசைவேண்டும் என்றும் நாம் உணர்ந்து, எதிர்நோக்குவதை வெளிப்படுத்துகின்றது.இவ்வாறு ஜெபித்தபோதிலும் இதன்மூலம் தெரியப்படுத்தும் விண்ணப்பங்கள் மிகவும் சுருக்கமாக உள்ளது.

## ஜெபத்தில் தன்னடக்கத்தைக் கடைப்பிடித்தல்

ஜெபத்தைக் குறித்து அநேகரிடத்தில் தவறான கருத்து நிலவுவதுபோல் தோன்றுகிறது. சில மனிதர்கள், தங்களைக்காட்டிலும் கர்த்தர் நன்கு அறிந்திருக்கிற விஷயங்களை அவரிடமே எடுத்துக்கூற முயற்சிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். மனிதரோடு தொடர்புகொள்ளும்பொழுதும்கூட, நம்மைக்காட்டிலும் நன்கு கல்வியறிவு பெற்ற ஒருவரிடத்தில் நம்மைக் காட்டிலும் தேர்ச்சிபெற்றிருக்கிற காரியங்களைக்குறித்து அவரிடமே பேசுவது, முறையான செயலாகாது. பிதாவின் திட்டத்தைக் குறித்து இயேசுவோ, அப்போஸ்தலர்களோ தங்கள் கருத்தில் பிதாவுக்கு அறிவுறுத்தியதாக நாம் அறிந்தவரைக்கும் குறிப்பு எதுவுமில்லை. கர்த்தருக்கு யாராவது ஒருவன் அறிவுரை கொடுக்க முயற்சிப்பானானால், அவன் கர்த்தரையும் கேட்கிறவர்களையும் வஞ்சிக்கவில்லை, மாறாக அத்தகையவன் தேவனுக்கு அல்ல, ஜனங்களுக்கே நயவுரை ஆற்றுகிறான் என்று அவனும் அறிவான், மற்றவர்களும் அறிவார்கள். நாங்கள் சில நாட்களுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றி போஸ்டன் பத்திரிக்கையில் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்தோம். "பெயர் குறிப்பிடப்படாத மிகவும் மரியாதைக்குரிய போதகர், போஸ்டன் நகர் ஜனங்களுக்கு இதுவரை இல்லாதஅளவுக்கு மிகவும் அழகான ஜெபத்தைக் கொடுத்தார்"

வேதத்தின் கொள்கையின் ஜெபத்தைக் குறித்த முறையான கருத்தை நாம் பெற்றிருந்தோமானால், வெளியரங்கமாக ஜெபிக்கும்போது நமது ஜெபங்கள் மிகவும் சுருக்கமாக இருக்கும். வேத வாக்கியங்கள் மட்டுமே நமக்கு நிலையான விதியாகவும் ஒரே வழிகாட்டியாகவும் இருக்கின்றன. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பொதுஇடங்களில் நீண்டநேரம் ஏறெடுத்த எந்த சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் அதில் இடம்பெற்றிருக்கவில்லை. அப்போஸ்தலர் பவுல் கூறுவதுபோல் அறியாத பாஷையில் ஜெபிப்பதனால் கேட்பவர்களால் புரிந்துகொள்ள முடியாததாகையால், ஒருவர் அர்த்தத்தை விளக்கிச் சொல்லாதவரை, அறியாதபாஷையில் ஜெபிப்பது பயனற்றது. அவ்வாறே பொருத்தமற்ற வகையில் ஒருவர் ஜெபிப்பாரானால் கேட்பவர்களால் புரிந்துகொள்ளமுடியாது. ஆகையால் அந்நிய பாஷையில் ஜெபிப்பது வீணாயிருக்கும்.

"நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே"(1கொரிந்தியர் 14:16).

இதிலிருந்து, கர்த்தர் நம்மிடத்தில் விரும்புவது என்ன என்று பார்க்கும்பொழுது, கேட்பவர்களை கவனத்தில்கொண்டு, அவர்களிடத்தில் நாம் ஜெபிக்காமல், தேவனது நன்மைத்தனம், அவரது ஞானம், அன்பு மற்றும் இரக்கங்களை உணர்ந்து, அவரை நேசிக்கும்படியாக, அவர்களது எண்ணங்கள் முழுவதும் தேவனிடத்தில் திரும்பும்படியாக செய்யவேண்டும்.

அந்த தருணத்தில், ஜனங்களுக்கு என்ன கற்பிக்கவேண்டுமென்ற எல்லா எண்ணங்களையும் விட்டுவிட்டு, பரலோக கிருபாசனத்தை எல்லாரும் பயபக்தியோடு தேடும்படியாக வழிகாட்டவேண்டும். தேவனுக்கு முன்பாக தங்களை தாழ்த்திக்கொள்ளவேண்டும் என்பதை கருத்தில்கொண்டே இவ்வாறு செய்யவேண்டும். கிறிஸ்தவ ஜனங்கள், சில சமயம் ஜெபத்தில் முயற்சிக்கும் அந்தக் காரியங்கள், பிரசங்கத்தின் மூலம் செய்யப்படவேண்டும். வேத வார்த்தைகள் கூறுகிறபடி விசுவாசிகளை ஜெபத்தின்மூலம் இரட்சிக்க தேவன் பிரியம் கொள்ளாமல், பிரசங்கத்தின்மூலம் இரட்சிக்கவே பிரியம் கொள்கின்றார்(ரோமர் 10:14, 1கொரிந்தியர்1:21). இது பொது இடங்களில் பேசுவதை மாத்திரம் குறிக்காமல், தனிப்பட்ட விதத்தில் சத்தியத்தை பறைசாற்றுதலையும், அச்சிடப்பட்ட பிரசுரங்கள் மூலம் பிரசங்கித்தலையும் உள்ளடக்குகின்றது. வார்த்தை காண்பிக்கும் வழிகாட்டுதலை உணர்ந்து, எல்லாவிதத்திலும் அவற்றைப் பின்பற்றவேண்டும். **--2601--**

பொது இடங்களில் ஜெபிப்பது பற்றியும், அது முறையாகவும் சுருக்கமாகவும் இருக்கவேண்டும் என்பதை, வேதாகமம் கூறும் முன்னுதாரணங்களை வைத்து நாம் இவ்வாறு பேசும்போது, ஒருவன் தன்னுடைய தனிப்பட்ட தேவபக்திக்கேதுவான முயற்சிகளில், அளவாக இருக்கவேண்டும் என்று நாம் கருதுவதாக எண்ணக்கூடாது. தனிப்பட்ட ஜெபத்தினை பரிபூரணமாய் அனுசரித்த மாதிரிகையை அவர் நமக்குமுன் வைத்துள்ளார். நம்முடைய கர்த்தர் சில சமயங்களில் இரவு முழுவதும் ஜெபித்துள்ளார். ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் இப்படி செய்யாமல் இருந்தால் நலமாயிருக்குமென்று ஆராய்ந்துபார்க்காமல் தீர்மானிக்கிறோம். காரணம், அடுத்தநாள் செய்யும் வேலைகளுக்கு நம்மிடம் பலமிருக்காது என்றும் எண்ணுகிறோம். இவ்வாறு, நம்முடைய பெலவீனம் மற்றும் குறைபாடுகள் நிமித்தமாய் நம் கர்த்தரின் தனித்தன்மையான ஸ்தானத்தை ஒருவேளை உணர்ந்துகொள்ள முடியாமற்போக நேரிடும். இரவு முழுவதும் ஜெபத்தில் தரித்திருந்தாலும், சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்வதைத் தவிர, கர்த்தரிடம் சொல்லும்படியாக நம்மிடம் எதுவும் இருக்காது. போதகர் கூறுகிறார் -
"வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் என்றும்" "உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்"

கர்த்தருடைய பராமரிப்பின்படி நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நம் தேவைக்கேற்ப பொருத்தமானது என்று கண்டு அவர் அனுப்புவது எதுவாயிருந்தாலும், அதை ஏற்றுக்கொள்ளும் இருதயநிலையைத் தாரும் என்று நாம் கேட்கவேண்டும்.

ஆகவே சுருக்கமாகச் சொல்லப்போனால், நமது கர்த்தர், தம் சீஷர்களுக்குக் கொடுத்த மாதிரியின்படியே பொது இடங்களில் நாம் பண்ணும் விண்ணப்பங்கள் திட்டமிடப்படவேண்டும். அதாவது, வரவிருக்கின்ற தேவனுடைய இராஜ்யத்தை ஆவலோடும் ஏக்கத்தோடும் எதிர்பார்த்து காத்திருப்பதையும், பாவத்தை ஒப்புக்கொள்ளுதல் பற்றியும், தெய்வீக மன்னிப்பிற்காக வேண்டுதல் பற்றியும்,நம்முடைய தேவைகள் சந்திக்கப்படவும் மற்றும் உதவி வேண்டுதல் பற்றியும், தேவ ஆராதனை மற்றும் துதிசெலுத்துதல் என்பவற்றையும் சுருக்கமாக வெளிப்படுத்துதலாகும். இது நம்முடைய தனிப்பட்ட தேவ வழிபாட்டிலும் இருக்கவேண்டிய வரையறையாக, அதாவது நமக்கான சட்டமாக நாங்கள் எண்ணுகிறோம். தனிப்பட்ட ஜெபத்தில் கிருபாசனத்தண்டையில் சேரும்போது, நாம் ஒருவரையொருவர் நினைவுகூறுவதும், பொது இடங்களில் பொதுவான நடைமுறைப்படி நினைவுகூறுவதும் பொருத்தமானதாகும். ஆனால் வேதாகமம் அறிவுறுத்துவது என்னவெனில், நாம் பூமிக்குரிய சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது நாம் விரும்புகிறது நடக்கவேண்டுமென்று கர்த்தரிடம் கூறுவதோ அல்லது மனிதர்களால் கேட்கப்படத்தக்கதாகவோ இருக்கும்படி நாம் ஜெபத்தைப் பயன்படுத்தாமல், எந்த விஷயங்களுக்காக ஜெபிக்கவேண்டுமென்று நமக்கு கற்பிக்கப்பட்டிருக்கிறபடி, முதலாவது நாம் ஆவிக்குரிய விஷயங்களை வைக்கவேண்டுமென்பதேயாகும் என்பதில் ஐயமில்லை.

## பிரியமானதும், ஊக்கமுள்ளதுமான ஜெபத்திற்குரிய நிபந்தனைகள்

இயேசு தம் சீஷர்களிடம் கூறினார் : "ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" - மத்தேயு 7:11

இயேசு பரலோக பிதாவைக் குறித்த ஒரு மகிமையான நிலைப்பாட்டை அவர்கள்முன் வைக்கிறார். ஆனால் பிற்பாடோ, இந்த நிலைப்பாடு பெருமளவில் தொலைந்துவிட்டது. இருண்ட யுகங்களில் அன்பின் தேவன அன்பும் இரக்கமும் உள்ள ஏதோ ஒன்றைப்போல தோற்றமளிப்பவராகவும் மற்றும் அவருக்கு அவருடைய சிருஷ்டிகளில் பெரும்பாலானவர்கள் மீது உண்மையான அக்கறை இல்லாததுபோலவும் காண்பிக்கப்பட்டார். மேலும், அவர் அக்கறை காட்டுகின்ற சில ஜனங்கள் தங்கள் கூட்டத்திற்கு புறம்பே இருக்கும் யாவருடனும் இரக்கமற்றவர்களாகவும், கொடுமைப்படுத்துகிறவர்களாகவும் , மற்றும் பிறருக்கு தீங்கு விளைவிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக தோற்றமளிப்பவர்களாக காண்பிக்கப்பட்டது.

நம்முடைய தேவன் அவருடைய விசேஷமான பிரதிநிதிகள் என்று தங்களை உரிமை பாராட்டிக்கொண்டவர்களால் எவ்வளவு பயங்கரமாக இழிவாக பேசப்பட்டுள்ளார். ஆனால் அவரை நன்கு அறிந்திருந்த குமாரனோ, எவ்வளவு மாறுபட்ட கோணத்தில் அவரை வெளிப்படுத்தியுள்ளார். அவர் கூறுவதைக் கேளுங்கள்:

**--2602--**

"நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே…"

அப்போஸ்தலர்கள் இயேசுவிடம், தங்களுக்கு அப்பத்தை விற்க மறுத்த சமாரியர்கள்மீது பரலோகத்திலிருந்து அக்கினியை வரப்பண்ணவேண்டும் என்று கேட்டபோது, குருவின் பதில் என்னவாக இருந்தது?
"நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்கள் என்பதை அறியீர்களா?"
"மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்"என்றார்.

அவர் பிதாவுடைய சாயலாயிருந்தவராதலாலும், அதோடுகூட அவருடைய சொந்த சித்தத்தை செய்யும்படியும் வரவில்லை.

மனிதன் விழுந்துபோன நிலையில் கவலைக்கிடமாக உள்ளான். அவனை தேவனுடைய சாயலுக்கும் தேவனுடைய இயல்புகளுக்கும், தேவனுடைய பண்புகளான அன்பு, கருணை, பரிவிரக்கம் ஆகிய நிலைக்கு திருப்பிக்கொண்டுவரப்படுவது அவசியமாய் உள்ளது. நமது விழுந்துபோன நிலையிலும்கூட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க விரும்புகின்றனர். எந்த பெற்றோர், தன்னுடைய பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பான்? அல்லது அவன் அப்பத்தைக் கேட்டால் கல்லைக் கொடுப்பான்? நாம் இந்த குணாதிசயங்களை கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டபடியாலும் அது நம்முடைய கறைபட்ட நிலையிலும் ஓரளவாவது நம்முள் நிலைத்திருக்கிறபடியாலும், பூரணமானவரும், நித்திய ஜீவியுமானவர், தம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுப்பதில் பிரியம் கொள்வார் என்ற கருத்தை நம்முள் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? மேலும் அவருக்கு மேன்மையானதும், சிறந்ததுமான விஷயங்கள் ஆவிக்குரியவைகளே ஆகும்.

## பெந்தெகொஸ்தே முன்புவரை நம்பிக்கை நிலையில் புத்திரர்கள்

நம்முடைய கர்த்தர் பூமியில் இருந்தபோது, அவர் முழுக்கமுழுக்க பிதாவிற்கு பிரதிநிதியாக மாம்சத்தில் இருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்பது அவர் விஷயத்தில் உண்மையே. மேலும் செம்மையான இருதயத்தைப் பெற்றிருந்தவர்கள் பிதாவினுடைய குணநலன்களை குமாரனிடத்தில் கண்டுகொண்டனர். இயேசுவை விசுவாசித்தவர்கள் ஏற்கனவே பிதாவினால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் போல் நடத்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஆனாலும் அவர்கள்மேல் பரிசுத்தஆவி இன்னும் வரவில்லை என்று வேதாகமம் கூறுகின்றது. இயேசு மரித்து, தேவனுடைய சந்நிதியில் சென்று சபையினுடைய பாவத்திற்கான ஒப்புரவாகுதலை உண்டாக்கும்வரையிலும், ஆவியில் ஜெனிப்பித்தலை வல்லமையாக கொடுக்கமுடியாது என்று நாம் பார்க்கின்றோம்.கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு 40 நாட்கள் பின்பு தம்முடைய ஈடுபலியின் பலன்களை ஒப்படைக்கவும், பரம அழைப்பின் காலமான சுவிசேஷ யுகத்தின்போது அவருடைய சீஷர்கள் ஆகுபவர்கள் எல்லாரின் பொருட்டு அதை செலுத்தும்படியாக அவர் பரத்திற்கு ஏறினார்.

இயேசு தம்முடைய சீஷர்களிடம், அவர்களுக்கு பரிசுத்தஆவி இன்னமும் வழங்கப்படாதநிலையிலும், "எங்கள்பிதாவே" என்று ஜெபிக்கலாம் என்று கூறினார். அவர்கள் வெகு சீக்கிரம் வழிநடத்தப்படவிருக்கும் புத்திரர் நிலையின் நிபந்தனையின் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு அனுமதிக்கப்பட்டது. தேவன் நியமித்த வழியில் வருபவர்களுக்கு அதாவது, அவரது குமாரனின் ஈடுபலி மூலமாய் தங்களையும் தங்களுடைய எல்லாவற்றையும் தேவனுக்கு முழுமையாக தத்தம் செய்தவர்களுக்கே அல்லாமல், வேறு எவருக்கும் அவர் பிதா இல்லை. நம் கர்த்தர் மாம்சத்தில் இருந்தபோது, அவருடைய உண்மையான பின்னடியார்கள் வருங்கால வாய்ப்பினை எதிர்நோக்குகின்ற புத்திரர்களாக இருந்தனர். எனினும் தங்கள் குருவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு பரத்திலிருந்து வரும் பலத்தினால் தரிப்பிக்கப்படும்வரையில் அவர்கள் எருசலேமிலேயே காத்திருக்கும்படியாக அவர்களிடம் கூறினார். அவர்களுடைய ஜெபங்களில் சிலவற்றிற்கு பிதா உடனடியாக பதிலளிக்காமல், காலம் தாமதிப்பார். கேட்கப்பட்ட சமயத்திலேயே அவர் அவர்களுக்கு ஆசீர்வாதம் கொடுப்பதில்லை. ஜெனிப்பிக்கப்படுவதற்காக அவர்களுக்கு பரிசுத்தஆவியை தாமதித்து அளித்த விஷயம்போன்று வருங்காலத்திற்கு என்று அவர் நிறுத்தி வைத்திருப்பதில் சில நன்மையான காரணங்கள் இருக்கும். எனினும், ஆசீர்வாதம் பரத்திலிருந்து வரும்போது அதற்கு ஆயத்தமாய் இருக்கத்தக்கதாக அவர்கள் விசுவாசத்தின் சரியான நோக்கத்தில் தங்களை நிலைநிறுத்தவேண்டும்.

**--2603--**

அவர்களுடைய ஜெபம் முறையானதாக இப்படி இருந்திருக்கும்: "பரலோகத்திலுள்ள பிதாவே, நீர் எங்களுக்கு பரிசுத்தஆவியை சரியான நேரத்தில் அளிப்பீர் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். நீர் ஏற்கனவே எங்களுடைய குருவாகிய இயேசுவுக்கும், உம்முடைய ஆவியை கொடுத்துள்ளீர் என்றும், அவருடைய ஞானஸ்நானத்தின்போது அவர் பரத்திலிருந்து திருமுழுக்கு பெற்றுக்கொண்டார் என்றும் கூர்ந்து கவனித்துப் புரிந்துகொண்டோம். மேலும், நாங்களும் பரிசுத்தஆவிக்காக காத்திருக்கிறோம். உம்மிடத்திலிருந்து வருகிறதான இந்த ஆசீர்வாதமான இந்த திருமுழுக்கைப் பெற்றுக்கொள்ளும்படியாக நாங்கள் காத்திருக்கிறோம்". கர்த்தர் பரத்திற்கு ஏறினபின்பு, மாடியறையில் காத்திருந்தவர்கள் இந்த ஆசீர்வாதமான பரிசுத்தஆவியை அதன் ஏற்றகாலத்தில் பெந்தெகொஸ்தே நாளில் பெற்றுக்கொண்டனர்.

## இயேசுவே ஒரே வழி

இக்காலகட்டத்தில் நாம், எவற்றிற்காக ஜெபம்பண்ணவேண்டும் என்று வினவுவோமானால், கர்த்தர் தம்முடைய வார்த்தைகள் மூலம் இதற்கான பதில்களை தந்துள்ளதை காண்கிறோம். இந்த நிபந்தனைகளின்றி நாம் ஜெபிக்கக்கூடாது என்றும் உரைத்துள்ளார். அந்த நிபந்தனைகளாவன : நம் மீட்பராக அவரது குமாரன்மேல் விசுவாசம் வைப்பது, இதற்காக தன்னை முழுமையாக தத்தம்செய்து, தேவபக்தியோடு நல்ல முன்மாதிரிகை காண்பித்த நம் குருவின் அடிச்சுவடுகளில் நடப்பது. அவர் மூலமாய் அல்லாமல் ஒரு மனுஷனாலும் பிதாவினிடத்திற்கு வரமுடியாது. இப்படி வருகின்றவர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான எண்ணிக்கையில் ஏற்றுக்கொள்ளப்படுவர்.

ஆகவே, ஞானஸ்நானத்தின் மூலம் தன்னை முழுமையாக தத்தம்செய்து, அவரது குடும்பத்தின் அங்கமாகும்வரைக்கும், பிதாவிடம் ஜெபத்தில் அண்டிவருவதற்கு உற்சாகமூட்டுவது முறையானதல்ல.

இந்த பத்திரிக்கையில் நாம் மேற்கோள் காட்டியிருக்கிற ரோமானிய அரசாங்கத்தின் நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியு விஷயத்தில் அவர் நீதிமான் என்றும், ஒரு நல்ல மனுஷன் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் இவர் யூத தேசத்தாரல்ல. ஏனெனில், தேவன் தம்முடைய பிரமாணங்களை அவர்களுக்கு மட்டுமே கொடுத்துள்ளார். சிலுவைக்குப் பின் மூன்றரை ஆண்டுகள் கழித்து என்று நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன்பு, கொர்நேலியு தேவனுடைய கிருபைக்குள் வருவதற்கான ஒரே வழி, அவர் யூத சமயத்திற்குள் மதம்மாறி வருவதன்மூலமே ஆகும்.

ஆனால் காலக்கணக்கின்படி சுவிசேஷமானது புறஜாதிகளுக்கும் செல்லவேண்டிய ஏற்றவேளை வந்தபோது, இந்த உத்தம மனிதனுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது.மேலும் இவர் நிபந்தனைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின்மூலம் தேவனுடைய புத்திரர் ஆனார். யூதர்கள் முன்கூட்டியே பெற்றுக்கொண்டதுபோல, இவரும் பரிசுத்தஆவியினாலே அபிஷேகம் மற்றும் ஜெனிப்பித்தலைப் பெற்றுக்கொண்டார். எவரேனும் தம்முடைய பிள்ளையாக வேண்டுமானால், தேவன் ஒரு குறிப்பிட்ட வழியை வகுத்துள்ளார் என்று இவைகள் எல்லாம் நமக்கு காட்டுகின்றது. சரியான வழியில், அதுவும் ஏற்றகாலத்தில் வராதவரையிலும், ஒருவரும் உன்னதமானவரின் புத்திரர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.

## நினைவுகூறுதலாக எழும்பும் ஜெபங்கள்

யாரேனும் இப்பொழுது தேவனிடத்திற்கு வரவிரும்பி, அவரால் நியமிக்கப்பட்ட வழியை அறியாமலேயே அவரிடம் ஜெபம்பண்ணினால் , இவர்களுடைய ஜெபங்கள் கொர்நேலியுடையது போன்று தேவன் முன்பு நினைவுகூறுதலாக எழும்பும் என்று தேவன் கொர்நேலியுவிடம் தொடர்புகொண்டவிதம் சுட்டிக்காட்டுகின்றது. கர்த்தர் கொர்நேலியுவின் ஜெபங்களையும், தேவனுக்கு ஊழியம் செய்யவும், தொழுதுகொள்ளவும் அவருக்கிருந்த வாஞ்சையையும் கவனத்தில் கொண்டதுபோலவே, அவரை நெருங்கிச்சேர விரும்பும் நமது ஜெபங்களையும் தேவன் நோக்கிப் பார்க்கிறார் என்று நாமும் அனுமானிக்கலாம். பேதுருவை அனுபிப அவர்களுக்கு அறிவுறுத்தியதுபோலு, இக்காலத்தில் அவர் யாரையும் அனுப்பமாட்டார். அப்படிப்பட்ட காரியம் தற்காலத்தில் அவர் தீர்மானித்திருக்கிற நோக்கத்திற்கும், ஞானத்திற்கும் பொருத்தமாயிருக்குமா என்று தீர்மானிப்பது, அவரது கரத்தில் உள்ளது. ஆனால் உண்மையாய் ஏறெடுக்கப்பட்ட எந்த ஜெபங்களும் கவனிக்கப்படாமல் கடந்துபோவதில்லை. மாறாக, இப்பொழுதோ அல்லது வருங்காலத்திலோ, ஏற்றசமயத்தில் அதற்குரிய பலனைப் பெற்றுக்கொள்ளும்.

**--2604--**

கிறிஸ்துவை அறிந்திராத அஞ்ஞானிகளுடைய தேசத்தில் ஒருவர் வாழ்ந்துகொண்டிருந்தார் என்று வைத்துக்கொள்ளுவோம். மேலும், இவர் தன் வெளிச்சத்தைக்கொண்டு தேவன் மீது வாஞ்சையாக இருந்து ஜெபித்துக்கொண்டிருக்கிறார் என்றும் வைத்துக்கொள்வோம். இத்தகைய நிலையில் அவரை கர்த்தர் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனால், அவருடைய ஞானம் அங்கீகரிக்கும் பட்சத்தில், கண்ணியமாக தம்மை நாடும் அவரை கிறிஸ்துவைப் பற்றின அறிவிற்குள் கர்த்தர் நடத்தலாம். அஞ்சல்மூலம் வந்த கைப்பிரதி மூலமாகவோ, போதனையின் மூலமாகவோ அல்லது இவரிடம் தொடர்புகொள்ளும்வகையில் இவரது மொழியறிந்த கர்த்தருடைய ஸ்தானாதிபதிகளில் ஒருவரை சந்திப்பதன் மூலமாய் கிறிஸ்துவைப் பற்றின அறிவிற்குள்ளாய் அவரை நடத்தலாம். கர்த்தருக்குரிய நன்மையான காலங்களில் பசியாய் உள்ள ஒவ்வொரு ஆத்துமாவும் தன்னுடைய இரட்சிப்புக்கு அத்தியாவசியமான வெளிச்சம் மற்றும் அறிவைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தேவனைக் குறித்தும் கிறிஸ்துவின் மூலமாய் அவருடைய அன்பு வெளிப்பட்டதையும் அறிந்தபிறகு, அந்த நற்செய்தியை ஏற்றுக்கொள்வதோ அல்லது நிராகரிப்பதோ அவரவரிடமே விடப்படுகிறது. வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, அவன் தன்னை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்ய மறுத்தாலோ அல்லது அதில் தவறினாலோ, அவன் ஏறெடுக்கும் எந்த ஜெபமும் ஏற்றுக்கொள்ளப்படாது.

### எல்லா நல்ல ஈவுகளிலும் பிரதானமானது

பரலோகப்பிதா, தம்மிடம் கேட்கிறவர்களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுப்பார் என்று நாம் வாசிக்கிறோம். அதாவது, அவர்களுக்கு நன்மையானதை அவர் கொடுப்பார். தனக்கு என்னென்ன ஆசீர்வாதங்கள் தரவேண்டுமென்று நாம் அவருக்கு ஆணை பிறப்பிக்கக்கூடாது. எல்லாவகையிலும் பூமிக்குரிய தன்மையுள்ள காரியங்களை நாம் கேட்கக்கூடாது. யூதர்கள் விஷயத்தில் அவர்கள் பிரதானமாக பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவே வேண்டிக்கொண்டனர். ஏனெனில் பரலோக ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்படவில்லை. தேவனுடைய புத்திரர்கள் என்ற உறவிற்குள் வந்துள்ள நாம், அவர் நமக்கு விசேஷமாக வாக்களித்துள்ள பரிசுத்தஆவிக்காக ஜெபிக்கவேண்டும். பரலோக இராஜ்யத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தவும், தகுதிப்படுத்தவும் தேவையான மிகச்சிறந்தவைகளை பரலோகத்திலுள்ள நம்முடைய பிதா நமக்கு கொடுப்பார்.

புது சிருஷ்டியின் அத்தியாவசியமான நன்மைக்காக, பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் எதுவாயினும் அதை கர்த்தர் கொடுப்பார். அவர் கொடுக்கிற எல்லாமே நன்மையான ஈவுகளாகத்தான் இருக்கும். நமக்கு எது சிறந்தது என்று நம்மால் எப்பொழுதும் அறிந்திருக்கமுடியாது.குழந்தையை வழிநடத்துகிற பெற்றோர் சிலசமயங்களில் குழந்தைக்கு உணவிற்கு பதிலாக மருந்து அவசியம் என்று கண்டுணர்வர். பிள்ளையின் நலம் கருதியே இதை பெற்றோர் கொடுக்கின்றனர். இதைப்போலத்தான் நம்முடைய பரலோகப்பிதாவும்கூட சிலசமயம் நமக்கு விசுவாச பரீட்சைகளையும், அன்பின் பரீட்சைகளையும் கொடுக்கின்றார். குணலட்சணங்களில் பெலப்பட்டு, வளர்ச்சியடைவதற்காகவே இந்த அனுபவங்கள் திட்டமிடப்படுகின்றன. இதன்மூலம் இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற நம்மை தகுதிப்படுத்துகின்றன.

கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிகளாக பிதா நம்மை நடத்துகின்றார். உதாரணமாக, அவருடைய பிள்ளைகளில் ஒருசிலர் தற்காலிக ஆசீர்வாதங்களால் அல்லது லௌகீகக் கவலைகளில் அதிகமாக மூழ்கினவராய்க் காணப்பட்டால் பூமிக்குரிய விஷயங்களில் தொடர்புடையதாய் உள்ள ஏதோ வகையிலான தூய்மைப்படுதலை தேவன் இத்தகையவர்களுக்குக் கொடுப்பார். இத்தகையவருக்கு கால் முறிவோ அல்லது வேறுவிதமான பூமிக்குரிய பெருந்துன்பத்தையோ, அதாவது புது சிருஷ்டியாகிய அவரின் நன்மைக்கு ஏதுவாய் வினைபுரியும் ஏதோ ஒன்றை அனுமதிக்கிறார். கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்ட அனைவரும் தங்களின் பிரதானமான நோக்கமாகவும், தங்களின் உயர்ந்த குறிக்கோளாகவும் இவர்களது அனைத்து ஜெபங்களின் பாரமாகவும் காணப்படுவது, அவருடைய சித்தத்தை அறியவும், செய்யவும் தக்கதாக அவர்கள் தேவனுடைய ஆவியினாலும், சத்தியத்தின் ஆவியினாலும் தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியினாலும் நிரப்பப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டுக்கு வந்தால் அது எவ்வளவு பெரிதான ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். ஆசீர்வாதங்களனைத்திலும் பிரதானமான இந்த ஆசீர்வாதத்தைப் பெருமளவில் அவருடைய பிள்ளைகள் பெற்றிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தமாக உள்ளது. ஆனால் அவர் அதை சில நிபந்தனையின் பேரிலேயே வழங்குகின்றார். அதன் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் அவர்கள் அறிந்துணர்ந்து, அதை ஏக்கத்தோடும், ஊக்கத்தோடும் வாஞ்சித்து, அதின் நிபந்தனைகளுக்கு தங்களை தகுதிப்படுத்துவதற்காக கடுமையாக முயற்சித்து, பதில்வரும் சந்தர்ப்பம் வரும்வரையிலும் பணிவுடன் ஜெபித்துநிலைத்து நிற்பது போன்றவற்றைக் கற்றுக்கொள்ளும் வரையிலும் அவர் அதை தடுத்து நிறுத்திவைப்பார்.

--2605--

## ஜெபத்தின் வாக்குக்கடங்காத சிலாக்கியம்

"எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியில் ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு ஸ்திரத்தன்மையோடு விழித்துக்கொண்டிருங்கள்" என்று அப்போஸ்தலர் பவுல் பரிசுத்தவான்களுக்கு புத்திமதி கூறுகின்றார். இதனால் நாம் எப்பொழுதும் முழங்காலில் நிற்கவேண்டும் என்றோ அல்லது முழு நேரமும் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும் என்றோ இந்த வார்த்தைகள் குறிப்பிடப்படவில்லை. ஆனால், நாம் ஜெபம் பண்ணுவதற்கு முற்றுப்புள்ளிவைக்க ஒருபோதும் எண்ணக்கூடாது.மேலும் நம்முடைய ஜெபங்கள் ஆவியிலும், உண்மையிலும் ஊக்கமுள்ளதாய் இருக்கவேண்டும். தேவனுடைய பிள்ளைகள், "ஜெபங்கள் சொல்பவர்களாக இருக்கக்கூடாது.மாறாக அவர்கள் ஜெபிக்கவேண்டும். அநேக சடங்காச்சாரமான ஜெபங்கள் உண்டு.ஜெபங்களைப்பற்றியும் ஏராளமாக பிரசங்கிப்பதுண்டு. திரும்பத்திரும்ப இப்படிப்பட்ட ஜெபங்களை ஒப்புவிக்கிறவர்களின் தலைக்கு மேலாகக்கூட இவை எழும்புவதில்லை. இத்தகையவர்கள் தங்கள் உதடுகளின் மூலம் தேவனிடம் நெருங்குகின்றனர் என்றும், இவர்களது இருதயமோ தேவனைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறது என்றும் வேதாகமம் கூறுகின்றது. பொருத்தமற்ற முறையில் செய்வதைக்காட்டிலும் நாம் கர்த்தரை நெருங்காதிருந்தாலே நலமாயிருக்கும்.

வானத்துக்கும் பூமிக்கும் கர்த்தரும் மகா சிருஷ்டிகருமானவரிடம் நாம் கிட்டிச்சேர்வது என்பது மிகவும் மேலானதும், அதிசயமுமான சிலாக்கியமாகும். இதில் தேவபக்தி மற்றும் அர்ப்பணிப்பின் ஆவியோடு நாம் அவரிடம் செல்லவேண்டும். தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் தம்மைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று பிதா பிரியமாயிருப்பதாக நம் கர்த்தர் கூறுகிறார். கிறிஸ்துவின் நாமத்தின் மூலமாகவே நாம் பிதாவிடம் வரவேண்டும். நெருங்கிச்சேர்வதற்கான ஒரே வழி அவரே. மேலும் கருத்துடனும் உள்ளார்வத்தோடும் நாம் அவரிடத்திற்கு வரவேண்டும். வெறும் சடங்காச்சார முறையில் வார்த்தைகளை அடுக்கி கூறுவதன்மூலம் தங்களுக்கே கெடுதலை அநேகர் உருவாக்கிக்கொண்டனர் என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறு ஜெபிப்பது ஜெபமாகாது. உண்மையான ஜெபம் என்பது இருதயத்தின் மொழியாகும். ஆகையால், நம்முடைய வாஞ்சை எவ்வளவு பெரிதாக இருக்கின்றதோ, அவ்வளவாக நம்முடைய ஜெபமும் ஏற்றுக்கொள்ளப்படும். நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதமும் பெரியதாயிருக்கும்.

விசுவாசம் இல்லாமலும், அவருடைய ஆசீர்வாதத்தின்பேரில் உள்ளான வாஞ்சையில்லாதவர்களாய் நாம் தேவனிடத்தில் வரக்கூடாது. நாம் எந்தக் காரியத்திற்காக கர்த்தரை அணுகுகிறோமோ அக்காரியங்களைக் குறித்த நம் இருதயத்தின் உள்ளான வாஞ்சையை கர்த்தர் அறியும்வண்ணமாக, விண்ணப்பத்தின ஆவியோடு அணுகவேண்டும். ஜெபித்தலுக்கும் ஸ்தோத்திரம் செலுத்துவதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. நாம் ஏற்கனவே சொன்னதுபோல, ஜெபம் என்பது விண்ணப்பத்தைத் தெரிவிப்பதாகும். கிறிஸ்துவுக்குள்ளாய் வந்துசேர்ந்தவர்களேயல்லாமல் வேறு யாராலும் கர்த்தரிடம் அங்கீகாரம் பெற்ற நிலையில் அணுகமுடியாது. மற்றவர்கள் அந்நியரும் புறத்தாருமாயிருக்கிறார்கள். ஆனால் யார் வேண்டுமானாலும் தேவனுக்கு நன்றியை வெளிப்படுத்தவோ, அல்லது வணக்கம், பக்தி மரியாதையையே செலுத்தலாம்.

## ஜெபத்தில் விடாமுயற்சி அவசியம்

ஜெபத்திற்கும், கெஞ்சிகேட்பதற்கும் இடையேகூட வித்தியாசம் உள்ளது. ஜெபம் என்பது பெரியதான அல்லது சிறியதான எந்த விண்ணப்பமாகவும் இருக்கலாம்.கண்ணீரோடு விண்ணப்பித்தல் என்பது ஒன்றிற்கான விசேஷமான வாஞ்சையாகும். அதாவது உள்ளார்வமுடன் கெஞ்சிக்கேட்டலாகும். சாதாரணமான ஜெபமோ அல்லது கண்ணீரோடு விண்ணப்பித்தலோ எதுவாயினும் அது தீர்மானமான நோக்கத்தோடு ஆவியில் எப்பொழுதும் ஜெபக்கவேண்டும்.நாம் மாபெரும் யேகோவாவின் சந்நிதிக்குள் வந்திருக்கிறோம் என்றும், இந்தக் காலத்தில் வெகு சிலருக்கு மாத்திரமே அளிக்கப்பட்ட சிலாக்கியம் இதுவென்றும், இந்த உண்மையை எப்பொழுதும் உணர்ந்தவர்களாகவும் அவரிடத்தில் அணுகவேண்டும்.

மேலும் நாம் "இடைவிடாத முயற்சியோடு விழித்துக்கொண்டிருக்கவேண்டும்" நாம் ஜெபிக்கும்படி கர்த்தர் அறிவுறுத்தியுள்ளார் என்பதையும் , நமக்கு தேவையானவைகளை தருவது அவரது சித்தம் என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய பரிசுத்தஆவியை நமக்குக் கொடுப்பதே அவருடைய சித்தம் என்றும் நாம் உண்மையாகவே விசுவாசித்தால் நம்முடைய விண்ணப்பத்திற்கான பதிலை நாம் பெறும் வேளையில் நாம் உன்னிப்பாய் கவனிப்பதில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நாம் ஜெபம் ஏறெடுத்தபின், நாம் விண்ணப்பித்த காரியங்கள்மீது எந்த கவனமும் செலுத்தாமலும், அவைகளுக்குப் பதில் கொடுக்கப்பட்டதா

**--2606--**

என்றும் கவனிக்காமலும் இருந்தால், நாம் நம் தேவையை உண்மையாய் உணரவில்லை என்பதைத்தான் இது சுட்டிக்காட்டுகின்றது. இதுவே நம்மில் அநேகருடைய ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் கிடைக்காததற்குக் காரணம் என்று தோன்றுகின்றது. மேலும் இதன்மூலம் அவர் நம்முடைய வேண்டுகோள்களை நிறைவேற்றியுள்ளார் என்று உணரும்போது, அவருக்கு நன்றி உடையவராய் இருத்தல் மற்றும் அவரைப் போற்றுதல் குறித்ததான பாடத்தையும் கற்றுக்கொள்கிறோம்.

அடுத்ததாக நாம் விண்ணப்பம் பண்ணின ஜெபம் நிறைவேறுவதற்கு சில மணிநேரங்களோ, சில நாட்களோ , சில வாரங்களோ மட்டும் விழிப்பாய் கவனிப்பவர்களாயிராமல், தொடர்ந்து விடாமுயற்சியோடு நிலைத்திருக்கவேண்டும். நம் விசுவாசத்தை சோதிப்பதற்காகவோ அல்லது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவோ இன்னும் மேன்மையான நிலைக்கு நம்மைக் கொண்டுவருவதற்காகவே நம் விண்ணப்பங்களை நிறைவேற்றுவதில் கர்த்தர் காலதாமதம் செய்யக்கூடும். இவ்வாறு ஜெபத்துக்கு பதில்வந்தபோது, அந்த பதிலை எதிர்நோக்கி, மிகவும் பசிதாகத்தோடு இருந்த அனுபவங்களை ஒருவேளை நாமும் அடைந்திருக்கலாம். கர்த்தர் அவருடைய பிள்ளைகளின் கூக்குரலுக்கு அக்கறை காட்டாதவராய் ஒருபோதும் இருப்பதில்ல என்றும், எப்படி உண்மையுள்ள ஆசிரியர் தன்னுடைய மாணவனுக்கு செய்வாரோ, எப்படி அன்பான பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு செய்வார்களோ அப்படியே அவரும் நமக்கு எது நன்மையானதோ அந்த வழிமுறையின்படி செய்துமுடிக்க தொடர்ந்து ஈடுபடுவார் என்று நாம் நம்பவேண்டும். பரலோகத்திலுள்ள நம்முடைய பிதா நமக்கு அவரிடமுள்ள மேன்மையானவற்றையே கொடுக்கவிரும்புகின்றார். மேலும், "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்"(சங்கீதம் 84:11). சிலசமயம் நாம் குறிப்பிட்ட காலம் காத்திருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். மற்ற சமயங்களிலோ நம்முடைய விண்ணப்களுக்கு உடனடியாக பதிலை எதிர்பார்க்கலாம்.

நாம் முழங்கால் பணிந்தாலும், அல்லது ஜீவியத்தில் ஓய்வின்றி பரபரப்பான சூழ்நிலையிலிருந்தாலும் நம் வாழ்வின் எல்லா நடவடிக்கைகளிலும், அனுபவங்களிலும் அவருக்கு பிரியமான விதமாகவும், ஏற்புடைய விதமாகவும் ஊழியஞ்செய்யும்படிக்கும், நாம் சகிப்பதற்கும் அதிகமாக நமக்கு நேரிடும் உபத்திரவங்களில், நம்மை கேடகமாக காக்கும் அவரது உதவிவேண்டி, நம் இருதயத்தில் கர்த்தரிடத்திற்கு தொடர்ந்து நாடவேண்டும். இதனால் அவருடைய ஏற்றகாலத்தில் நம்மை எல்லா தீமை மற்றும் அபூரணங்களிலிருந்து விடுவித்து, அவருடைய பரலோக ராஜ்யத்தில் ஓரிடத்தை நமக்காக அளிக்கவும் முடியும். அன்பான சகோதரர்களே, நம்முடைய போதகர் அதிகாரத்துடன் ஆணையிட்டபடி,
"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற கட்டளையை தொடர்ந்து நாம் செயல்முறைப்படுத்துவோம்(மாற்கு 14:38).

## ஜெபத்தில் நாம் போராடவேண்டுமா?

ஜெபத்தில் நாம் தரித்திருக்கவேண்டுமென்று வேதாகமம் நமக்கு கட்டளையிடுகிறபோதிலும், விடாமல் தொந்தரவு செய்த விதவையின் உவமையும் இதையே போதித்தாலும், "தேவனோடு ஜெபத்தில் போராடுதல்" என்று சிலர் பின்பற்றும் காரியத்தை நாம் பின்பற்றுவதற்கான உத்தரவாதம், நாம் அறிந்தவரை, தேவனுடைய வார்த்தையில் கூறப்படவில்லை. நமக்கு நன்மையானவற்றை கொடுக்க நம் தேவன் சித்தம் உள்ளவராய் இருக்கின்றார் என நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் தேவன் ஏதாகிலும் நமக்குத்தர சித்தம் இல்லாமல் இருந்தால், நாம் அதை விரும்பக்கூடாது. கர்த்தருக்கு சித்தம் இல்லாத ஒன்றை செய்யும்படியாக அவரை தூண்ட கடுமையாக முயற்சிக்கக்கூடாது. மாறாக அவருடைய சித்தம் மாத்திரம் செய்யப்பட விரும்பவேண்டும். யாக்கோபு, தேவதூதனோடு போராடினபோது அவர் சரியானதும் நேர்த்தியானதுமான காரியத்தையே செய்துள்ளார் என்று நாம் புரிந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட நிலைமையில், இன்று நம்மில் யாராகிலும் அவரது வழிமுறையைப் பின்பற்றியிருந்தால், நாம் அதைக்காட்டிலும் நன்றாகச் செய்திருப்போம். அது ஒரு அரிதான சம்பவம். தன் சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பி, பதான் அராமிற்கு ஓடினபின்பு, யாக்கோபு முதன்முறையாக தன்னுடைய வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தான். ஏசா இன்னும் தன்னுடைய ஜீவனைக் கொல்ல நாடுவான் என்று அவன்பயந்திருந்தபொழுது, கர்த்தர் தேவதூதரில் உருவில் யாக்கோபுக்கு தன்னை வெளிப்படுத்தினார். தேவதூதன் தொடரவிடாமல் யாக்கோபை துண்டங்களாக்கியிருக்கலாம். ஆனால், "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்" என்று கூறத்தக்கதான உள்ளான நோக்கத்தை நிறைவேற்ற யாக்கோபை தூதன் அனுமதித்தார்.

தேவனுடைய விசேஷமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள அவருடன் போராடும் அவசியம் நமக்கு இல்லை. நாம் ஏற்கனவே இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளோம். சிறு துணுக்குக்காக கூக்குரல் இடும் பணிவிடைக்காரர்களைப்போன்று நாம் இல்லை. கர்த்தர் நம்மீது சிறந்த மேலங்கியை உடுத்தியுள்ளார். **--2607--**

தமது பரிசுத்தஆவியையும் நமக்கு அளித்துள்ளார். குறிப்பிட்ட சில காரியங்களை அவர் நிபந்தனையோடுகூட நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். மேலும் நாம் விசுவாசத்திலும் தாழ்மையிலும் ஊக்கமான ஜெபத்துடனும் அவரிடம் தொடர்ந்துவரவேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் ஜெபத்தில் போராடுவதை அவர் விரும்புவதில்லை.

## இராஜ்யம் வாசலருகே உள்ளது

பாவத்தின் காரணமாக உலகம் முழுவதும் துன்பத்திலும் மிகப் பரிதாபகரமான நிலையிலும் உள்ளது. மேலும், நம்முடைய இருதயமோ, "எத்தனைக்காலம் ஓ கர்த்தாவேஉம்முடைய ஜனங்களை விடுவிக்கவும் பூமியில் நீதியை ஸ்தாபிக்கவும் இன்னும் எத்தனைக்காலம்? என்று கூக்குரலிடுகிறது". ஆகையால், "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" என்று ஒவ்வொரு நாளும் நாம் ஜெபிக்கவேண்டும். இதில் நாம் சோர்ந்துபோகலாமா? கூடாது. காரணம், அதையே தொடர்ந்து விரும்பவும் அதற்காக ஜெபிக்கவுமே கர்த்தர் நமக்கு உத்தரவிட்டுள்ளார்.

இராஜ்யம் வரும் , இராஜ்யம் வந்துகொண்டிருக்கிறது என்ற இந்த சிந்தையையே நாம் பெற்றிருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். இந்த ஜெபத்தைக் கைவிடுவது என்பது நம்முடைய விசுவாசத்தை விட்டுவிடுவதாகும். தொடர்ந்து எதிர்பார்த்திருங்கள், தொடர்ந்து விசுவாசியுங்கள், இடைவிடாமல் தொடர்ந்து ஜெபியுங்கள். "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று தொடர்ந்து சொல்லுங்கள். பூமியின் குடிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படப்போகும் அந்த இராஜ்யத்தின் காலத்திற்காக, தொடர்ந்து ஏக்கத்தோடு காத்திருங்கள்.

இது, போராட்டம் என்ற நம்முடைய கண்ணோட்டத்தின்படியான அர்த்தத்தில் பார்க்கும் வார்த்தையிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் உள்ளது. இது, இடைவிடாமல் கேட்பதாகும். இது, ஸ்திரமாய் நிற்பதாகும். இது தொடர்ந்து நிலைத்திருத்தல் ஆகும். மேலும், நாம் எல்லாவற்றிற்காகவும் நன்றிசெலுத்தவேண்டும். கர்த்தருடைய நேரங்களில் ஒரு நிமிடத்தைக்கூட நாம் துரிதப்படுத்த எண்ணக்கூடாது. "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று நாம் ஜெபித்தாலும் பிதா குறித்த காலத்துக்கு முன்பாகவே இராஜ்யம் வரவேண்டும் என்று விரும்புவதாக அர்த்தமாகிவிடாது. ஆனால் அபிஷேகம் பண்ணப்பட்ட நம்முடைய கண்களுக்கு காலம் இன்னும் நீண்ட காலத்துக்கு தாமதிக்காது என்றும், அது சமீபத்தில் உள்ளது என்றும் தெரியும்.

ஜெபத்தில் ஒரே சீராக இருப்பதுபற்றியும், தீர்மானமாக இருப்பதுபற்றியும் நமது சுபாவத்தின்படியான விருப்பம் எதுவாக இருந்தாலும், நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்தே நமக்கான அறிவுரைகளை எடுக்க வேண்டும்.இந்த விஷயத்தில் நமது சுபாவத்தின்படியான போக்கை ஜெயித்தாகவேண்டும். நம் பரலோகப்பிதா நமக்கு கொடுத்துள்ள அறிவுரை வார்த்தைகளுக்கு இசைவாக, நம் கண்ணோட்டங்களும், நமது நடக்கையும் இருக்க, நாம் உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ள பிள்ளைகளாயிருப்போமாக. "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" என்ற நம் குருவின் வாக்குத்தத்தத்தை நினைவில் கொள்வோமாக யோவான் 16:24.

தேவனே உமது மூச்சுக்காற்றை எங்கள் மீதே வீசச்செய்யும்
உமிழும் உந்தன் ஒளியிழைதனையே எந்தன் கண்கள் கூசச்செய்யும்
பரலோகத்தின் இரகசியமனைத்தும் புதைக்கப்பட்டே மறைந்தே கிடக்கும்
ஆச்சர்யம் நிறைந்த பக்கங்கள் அனைத்தின் மீதும் வீசிவிடும் - அவை
எங்கள் இளைஞரை ஆசீர்வதித்தே முதியோர்களுக்கே வழிகாட்டும்
புயலின் ஆழத்தில் கால்தடம் பதிக்கும் விசுவாசத்தை அங்கீகரியும்
உந்தன் தொனியே எமை கூவியழைக்கும், வைராக்கியம் கொண்டே மலையில் ஏற்றும்
நாடோடி தன்னைத் தேடிப்பிடித்தே, வீட்டிற்குள்ளே கொண்டே வாரும்
உந்தன் ஆற்றல் எந்தன் உள்ளத்தில் ஒளிரச் செய்யும் ஆற்றல் தாரும்
இரட்சகா நாங்கள் உந்தன் சாயலாய் மாறி பிரகாசிக்க, போதிக்க, அன்புசெய்ய
உம்மைப்போலவே வாழ்ந்திட வேண்டி தேவனே எமக்கே கற்றே தாரும்

--------------------------------

**--2608--**

# ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு,சுபாவ மாம்சிக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல

# Natural Israel,Heirs to Spirituals promises

"இஸ்ரயேல் தேடுகிறதை அடையாமல் இருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள். மற்றவர்கள் இன்றையதினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" - ரோமர் 11:7

"வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது"(அப் 2:39) என்ற அப்போஸ்தலர் பேதுருவின் வார்த்தைகள், இஸ்ரயேலருடனான கர்த்தருடைய அனைத்து செயல்பாடுகளுக்கும், தன்னுடைய ஊழியக்காரன் ஆபிரகாமின் சந்ததியாராக, அவர்களோடு செய்த உடன்படிக்கைக்கும் முழுவதும் இசைந்திருக்கிறது. ஆபிரகாமோடு கர்த்தர் பண்ணின "சந்ததியானது," ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் மாம்சீக சந்ததியை அதாவது, மோசேயின் பிரமாணத்திற்கு கீழானவர்களான யூத தேசத்தையே குறிப்பதாக பல நூற்றாண்டுகளாக கருதப்பட்டது. ஆனால், சுதந்தரராவதற்கான இந்த வாக்குத்தத்தை அடைய ஒரு நிபந்தனை காணப்பட்டது, தேவன் இஸ்ரயயேலருடனான உடன்படிக்கைக்குள் பிரவேசித்திருந்தபோது, அவர்கள் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் பட்சத்தில், நித்திய ஜீவனை பெற்று, பூமியின் எல்லா வம்சங்களான அனைவரையும் ஆசீர்வதிக்கும் உரிமையை சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதையும், பிரமாணத்தைநிறைவேற்றாத பட்சத்தில் இந்த அனைத்து கிருபைகளிலிருந்தும் அவர்கள் நீக்கப்படுவார்கள் என்பதை புரிந்துகொண்டனர்.

இஸ்ரயேலைச் சார்ந்த ஒருவராலும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றக்கூடாது என்று தேவன் அறிந்திருந்தார். மேலும், நம் கர்த்தருடைய நாட்களுக்கு முந்தைய காலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருந்த (சுபாவத்தின்படியான) மாம்சீக இஸ்ரயேலர்களில் ஒருவரும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீர அங்கங்களாக ஆவார்கள் என்ற எந்த ஒரு சிந்தையையும் அவர் கொண்டிருக்கவில்லை. இயேசுவானவர் முதலாவதாக வந்திருந்து வழியைத் திறந்துவைக்கும் வரையிலும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஒருவனும் அங்கமாக முடியாது என்று அவர் அறிந்திருந்தார். எனினும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட வெறுமையான சலுகையாக இது இருக்கவில்லை. இஸ்ரயேலர் அனைவரும் ஆவிக்குரிய சந்ததியான கிறிஸ்துவின் சபையில் அங்கங்களாவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. சில நிபந்தனைகளின்பேரில் அவர்கள் பூமியின் ஜாதிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்கள் என்று மட்டுமே அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். ஆவிக்குரிய சந்ததி குறிப்பிடப்படாததால் உலகத்தை ஆசீர்வதிப்பவர்களாக அவர்களுக்கு குறிப்பிடப்பட்டிருந்ததை அடைவதில் (சுபாவ)மாம்சீக சந்ததியார் நியாயமான வரிசையில் உள்ளனர்.

## கிறிஸ்துவுக்கு முன் ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் இல்லை

இஸ்ரயேல் நித்திய ஜீவனுக்கான உரிமையைப் பெறவும், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஏதாகிலும் ஒன்றில் பங்கடையவும், நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவது இன்றியமையாததாக இருந்தது. ஆனால் அவர்களால் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதன் விளைவாக அவர்களில் ஒருவரும் ஜீவனை ஆதாயப்படுத்தவில்லை. ஆயினும், ஒருசிலர் தேவனிடம் தங்களுடைய அங்கீகரிப்பிற்கு உரியவர்கள் என்று அவர் அறிவ்கும் அளவிற்கு, தேவனிடம் இருதயபூர்வமான உண்மையை வெளிப்படுத்தினர். தேவன் ஏற்றகாலத்தில் அளிக்கப்போகும் மீட்பர் மூலம், "பூமியின் அனைத்து வம்சங்களையும்" ஆசீர்வதிக்கப்போகிற "சந்ததியில்" இந்த உண்மையும், கீழ்ப்படிதலுமுள்ளவர்கள் தங்களை ஒரு பாகமாக்குவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றினர். ஆவிக்குரிய சந்ததியை குறித்ததான தேவனுடைய நோக்கம் பற்றின அறிவு இவர்களுக்கு இல்லாததால், மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிக்கும் மாம்சீக சந்ததியில் ஓர் இடத்தைப் பெற்றுக்கொள்வது மாத்திரமே இவர்களுடைய எதிர்பார்ப்பாக இருந்தது. முற்பிதாக்களாகிய இவர்கள், இராஜ்யத்தில் மகிமையான இடத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் சுட்டிக்காட்டுகின்றார். "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், விசுவாசத்தோடே மரித்தார்கள்... அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" -எபிரேயர் 11:13,40.

**--2609--**

இயேசு அவருடைய நாட்களிலிருந்த விசுவாசமற்ற யூதர்களிடம், "நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும் யாக்கோபையும், சகல தீர்க்கதரிசிகளையும், தேவனுடைய இராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காண்பீர்கள்" என்று அறிவித்தார். (லூக்கா 13:28). கிறிஸ்துவுக்கு முன்பாக வாழ்ந்த உண்மையுள்ள பரிசுத்தவான்கள், இராஜ்யத்தின் மனித பிரதிநிதிகளாக இருப்பார்கள். இவர்கள் தீர்க்கதரிசியான தாவீது மூலம் கர்த்தர் அறிவித்ததுபோல, "பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்"(சங்கீதம் 45:16). இவ்விதமாக அவர்கள் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

கிறிஸ்து வரும் வரையிலும், ஆவிக்குரிய சந்ததி குறித்ததான தம்முடைய திட்டத்தை புரிந்துகொள்ளத்தக்கதாக, யூதர்களை தேவன் வழிநடத்தவில்லை. அவருடைய திட்டத்தில் உள்ள இந்த அம்சத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதற்கும், இந்த சந்ததி வகுப்பாரில் இடம்பெறும் நபர்களை அழைப்பதற்குமான அவருடைய காலம் இன்னும் வந்திருக்கவில்லை. இந்த அழைப்புக்கு முன்பு வாழ்ந்தவர்கள் எவ்விதத்திலும் வஞ்சிக்கப்படவும் இல்லை, எதிலும் ஏமாற்றப்படவும் இல்லை. உலகத்தை ஆசீர்வதிக்கிறவர்களாக்குவதற்காக அவர்கள் முன்பு வைக்கப்பட்டிருந்த வாய்ப்புகள் பற்றி மாத்திரமே தேவன் அவர்களிடம் கூறியிருந்தார். இந்த வாய்ப்புகளை ஏற்றுக்கொண்டு, தங்களால் முடிந்தஅளவில் முழு கீழ்ப்படிதலை கர்த்தருக்குக் காட்டினவர்கள், இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்திற்கும், அதனுடன் வரும் வாக்குத்தத்தங்களுக்கும் சுதந்திரர்களானார்கள்.

நமது கர்த்தராகிய இயேசு வந்தபோது, யூதருக்கான கிருபையில் மீதமிருந்த "எழுபது வாரங்களின்" (அடையாளமான) முடிவுகாலம் வரையிலான அவருடைய ஊழியம் மற்றும் அப்போஸ்தலர்களுடைய ஊழியமும் இஸ்ரயேலருடனான தேவனுடைய ஒப்பந்தப்படி, யூதருக்கே வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும் யாரெல்லாம் செம்மையான இருதய நிலையில் காணப்பட்டார்களோ அவர்கள் அனைவரும் சந்தேகமின்றி செய்தியை ஏற்றுக்கொண்டார்கள். தம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாக இருந்து, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக யூதர்கள் இருந்ததினிமித்தம், ஆவிக்குரிய சந்ததியை அழைப்பதற்கான காலம்வந்தபோது, அந்த சந்ததியாகும் வாய்ப்பு முதலில் இஸ்ரயேலுக்கே போகவேண்டும். பின்பு, புறஜாதிகளின் மத்தியிலிருந்து போதுமான எண்ணிக்கையை தெரிந்தெடுத்து, சுவிசேஷ சபையான ஆவிக்குரிய சந்ததியை நிறைவாக்கும் பொருட்டு அழைப்பானது புறஜாதிகளிடம் சென்றது.

சபை மகிமையடைந்தபின்னர், பூமிக்குரிய சந்ததியின் ஆசீர்வாதம் தொடரும். இந்த பூமிக்குரிய சந்ததியின் பிரதானமானவர்கள், "பூமியெங்கும் பிரபுக்களாக" இருக்கும் முற்பிதாக்களாக இருப்பார்கள். பின்பு புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் வருபவர்கள் எல்லோரும், இஸ்ரயேலோடு இணைந்து ஆபிரகாமின் சந்ததியாவார்கள். விளைவாக, கர்த்தரால் முன்னுரைக்கப்பட்டதுபோல, ஆபிரகாமின் சந்ததி, "கடற்கரை மணலைப்போல" திரளாகக் காணப்படுவார்கள். "உன் சந்ததியாக மாறுவதன்மூலம் பூமியின் வம்சங்கள் அனைத்தும் தங்களை ஆசீர்வாதத்திற்கு உட்படுத்திக்கொள்வார்கள்" என்பதே தேவன் ஆபிரகாமோடு பண்ணின உடன்படிக்கைக்குத் தொடர்பான ஒரு வாக்கியத்தின் வெளிப்படையான பொருளாகும். ஆனால் அனைவருக்குமான ஆசீர்வாதம், தலை மற்றும் சரீரமாக மகிமையடைந்த சபையாகிய ஆவிக்குரிய சந்ததியின் மூலமாகவே வரும். ஆகையால், தேவனுடைய திட்டம் ஆவிக்குரிய சந்ததிக்கு அதிக ஆசீர்வாதங்களைக் கொடுத்து, மாம்சீக சந்ததிக்கு குறைவாகக்கொடுப்பது போன்று தோன்றலாம். ஆயினும், அவருடன் இசைந்து காணப்படுகிற யாவருக்கும் மிகவும் பெரிதான ஆசீர்வாதங்களே பங்காக இருக்கும்.

## தேவனால் மேலான ஸ்தானத்துக்கு அழைக்கப்படுதல்

மாம்சீக இஸ்ரயேல் ஒருபோதும் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் எந்த ஒரு பாகத்திற்கும் நிபநதனையின்றி சுதந்தரரார்கள் ஆகவோ, அந்த வாக்குத்தத்தத்தின் பிரதானமான, முதன்மையான ஆவிக்குரிய பாகத்திற்கு ஒரு ஜாதியாக சுதந்திரர்களாகவோ ஆக்கப்படவில்லை. அவர்கள் நித்திய ஜீவனுக்கு தகுதியானவர்களா இல்லையா என்று சோதித்துப்பார்க்க, அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையில் வெளியாக்கப்பட்டிருந்த தேவனுடைய பிரமாணத்திற்கு முன்பாக சோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தார்கள். அப்படியே, நம் கர்த்தராகிய இயேசுவும் மாம்சமாக்கப்பட்டபோது நியாயப்பிரமாணத்திற்கு உட்படுத்தப்பட்டவராக - கீழானவராக பிறந்தார்(கலாத்தியர் 4:4). அவர் பரிபூரணராயும், நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினவராகவும் காணப்பட்டதே தேவனுடைய ஏற்ற சமயத்தில் ஆதாமுக்கு பதிலாக தம்முடைய சரீரத்தை அவரால் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க முடிந்தது. அவர் உண்மையாய் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியது, நித்திய ஜீவனுக்காக அவர் பெற்றிருந்த உரிமையை

--2610--

உறுதிப்படுத்தியது. மேலும் தேவனுடைய ஏற்பாட்டில் அந்த ஜீவனை மனுஷனாக இருந்து அவர் பலிசெலுத்தியது, அவரை அண்டசராசரத்தில் யேகோவாவுக்கு அடுத்த உயர்ந்த ஸ்தானத்திற்கு - உலக மனுக்குலத்திற்கான யேகோவாவின் இரட்சிப்பின் திட்டத்தை அதிகாரத்துடன் செயல்படுத்த உயர்த்தியது. இவ்விதமாக, அவர் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததிக்குத் தலையானார்.

இயேசு தன்னை அர்ப்பணித்தபோது, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார். அவர் தம்முடைய உயிர்த்தெழுதலில் ஆவியில் பிறந்து, ஆவியில் முழுமையடைந்தார். மேலும் இத்தகைய நிலைக்கு அவரே முதற்பேறுமானவர். ஆனால் இதைத்தொடர்ந்து செம்மையான இருதயம் கொண்டிருந்த யூதர்களும், இதே நிபந்தனைகளின்பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஆனால் ஆவிக்குரிய சந்ததியாக அழைக்கப்பட்டவர்களை நமது கர்த்தராகிய இயேசுவைப்போல - பூரணமானவராக, தேவன் உண்மையிலேயே நீதிமானாக்காமல், அவர்களை விசுவாசத்தினால் நீதிமானாக்குகிறார். இயேசு எவ்வித குறைவும் இல்லாத பரிபூரணராக இருந்தார் - அவரைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" என்று கூறுகின்றார்(எபிரேயர் 7:26). இயேசுவின் பின்னடியார்கள் நீதிமான்களாக எண்ணப்படத்தக்க - அதாவது பரிபூரணர்களாக கருதப்பட, தேவன் அவர்கள்மீது இயேசுவின் விலைக்கிரயத்தினால் உண்டாகும் தகுதியை சுமத்துகிறார்.

இந்த எண்ணப்படுதலின் முழுநோக்கம், பலிசெலுத்துவதன் மூலம் ஆவிக்குரிய இஸ்ரயேலராகும் சிலாக்கியத்தை நமக்குத் தரவேண்டும் என்பதே. ஆகையால் பிதாவினுடைய ஏற்பாடு என்னவெனில், நாம் இயேசுவின் சீஷர்களாக விரும்பும் பட்சத்தில்,நாம் நமது சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்றிச்சென்று, மாம்சத்திற்கும் சுயத்திற்கும் உலகப்பிரகாரமான யாவற்றிற்கும் மரிக்கவேண்டும் என்பதே. அப்பொழுது கிறிஸ்து நமக்கு பரிந்துபேசுகிறவராகிறார். அப்படிப்பட்ட அனைவரையும் பிதா தம்முடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்கிறார். கிறிஸ்துவுக்குள்ளாய் இருக்கும் மீட்பை ஏற்றுக்கொண்ட யாவருக்கும், "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"(ரோமர் 12:1) என்று அப்போஸ்தலர் பவுல் புத்திமதி கூறுகிறார்.

## அழைக்கப்பட்டவர்கள் - இலட்சத்து நாற்பத்தி நாலாயிரம் பேர்

நம்முடைய பலியின் பரிசுத்தம் என்பது நம்மால் உண்டானதல்ல. ஆனால் நமது இரட்சகரின் பலியினால் சுமத்தப்படும் பரிசுத்தத்தின்மூலம் அது நம்முடையதாகிறது. நம்முடைய குறைபாடுகள் அனைத்தும் அவருடைய விலைக்கிரயத்தின்மூலம் தள்ளப்பட்டு ரத்து செய்யப்படுகிறது. மேலும் தங்களையே பலியாக அர்ப்பணிக்கிறவர்கள் மாத்திரமே ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கங்களாக முடியும். மற்றவர்களைப்பொருத்தமட்டில், அதாவது ஒருவேளை முழு உலகமும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினாலும், அவர்களால் ஆவிக்குரிய சந்ததியாக முடியாது. காரணம் தேவனுக்கு 1,44,000பேர் மாத்திரமே அவசியம்(வெளிப்படுத்தல் 14:1,3). எனவே ஆவிக்குரிய சந்ததியில் ஒருவராகும் இந்த சிலாக்கியம் என்பது யூதர்கள் வாக்குத்தத்தத்தின் சுதந்திரர்களாக பெற்றிராத ஒன்றாகும். இந்த வாய்ப்பு, "முதலாவது யூதர்களுக்கு" என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகிறார். இப்படி கூறியிருப்பது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான சுவிசேஷ அழைப்பு முதலில் யூதர்களுக்கே சென்றது -நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கான கட்டளையாக அல்ல, மாறாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கான அழைப்பாகவே கொடுக்கப்பட்டது என்றே அப்போஸ்தலர் குறிப்பிட்டதாக நாம் எண்ணுகிறோம். இந்த வாய்ப்பு, சுவிசேஷ சிலாக்கியங்கள் துவங்கியபோது வாழ்ந்துகொண்டிருந்த யூதர்களுக்கு முதலில் அளிக்கப்பட்டது. இவர்களில் யாரேனும், கிறிஸ்துவோடுகூட பலியின் உடன்படிக்கைக்குள் பிரவேசிக்க விருப்பமுற்றால், அவர் அவர்களை தம்முடைய சீஷர்களாக ஏற்றுக்கொள்வார்.

அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் ரோமர் 11ம் அதிகாரத்தில் தேவன் சித்தரித்துள்ள காட்சியில், ஒலிவ மரத்தின் அடிமரம் மற்றும் கிளைகளை இஸ்ரயேலும், மரத்தின் வேரானது உலகத்தை ஆசீர்வதிக்கும்படியாக தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் குறிக்கிறது. தேவன் அவர்களுக்கு தம்முடைய திட்டத்தை விளக்காமல், "நீங்கள் என்னுடைய சொந்த ஜனமாக இருப்பதற்கு என்னுடனான உடன்படிக்கைக்குள் பிரவேகிக்க விரும்புகிறீர்களா? என்றே கூறினார். இதற்கு "ஆம்" என்பதே பதிலாக இருந்தது. "எப்போது நீங்கள் ஆயத்தமாயிருப்பீர்கள்" அவர்கள், "நாங்கள் இப்பொழுதே ஆயத்தமாயிருக்கிறோம்" என்று பதிலளித்தனர். இப்படியாக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு, வாக்குத்தத்தம் என்னும் வேரிலிருந்து வளர்கிற மரமாக அல்லது ஜாதியாக ஏற்படுத்தப்பட்டது. **--2611--**

வாக்குத்தத்தமானது ஆவிக்குரியதாகவே இருந்தது. ஆயினும் , இந்த உண்மை நெடுங்காலமாய் மறைக்கப்பட்டிருந்தது.

ஆவிக்குரிய சந்ததி மூலமாய் அல்லாமல் தேவன்எந்த ஒரு காரியத்தையும் செய்ய விரும்பவில்லை. ஆனால் இதை மாம்சீக இஸ்ரயேலோ அறிந்திருக்கவில்லை. தங்கள் தகப்பனாகிய ஆபிரகாமுக்குப் பண்ணின வாக்குத்தத்தத்தை தாங்கள் பெற்றுக்கொள்வார்களேயானால், தேவன் தங்களிடத்தில் எதிர்பார்த்ததையெல்லாம் நிறைவேற்றுவோம் என்று அவர்கள் வாக்களித்தார்கள். அவர்கள் அறிந்திராத ஒன்றை,தாங்கள் அறிந்திருக்கிறோம் என்று நினைத்திருந்தனர். எப்படியாகிலும், விசேஷித்தவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் ஆவல் கொண்டிருந்தனர். மேலும் இந்த எண்ணம் மற்றும் நம்பிக்கையை பரிசுத்தவானாகிய பவுல் சொல்லியிருக்கிறபடி, அவர்கள் இயேசுவின் நாட்கள் வரையிலும் கொண்டிருந்தனர். "இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள்" (அப் 26:7). மேலும் அப்போஸ்தலர் கூறுவது, "இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள். மற்றவர்கள் இன்றைய தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" அதாவது, யூதர்கள் மத்தியிலிருந்து கிறிஸ்துவுக்குள்ளாக வந்தவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஆனார்கள் - ரோமர் 11:7.

## தங்களுக்கான பரீட்சையின் காலத்தில் இஸ்ரயேலின் தோல்வி

யூதர்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கும்படியாக வைக்கப்பட்டிருந்த நிபந்தனை என்ன? அது, அவர்கள் தங்கள் ஜீவனை பலியாக செலுத்தவேண்டுமென்பதே. மேலும், வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளம்படி தேவனுக்குக் கீழ்ப்படிவோம் என்று அவர்கள் கூறியதில் எந்தளவு உண்மையாயிருக்கிறார்கள் என்று அவர்கள் பரீட்சிக்கப்படுவார்கள். ஆனால், நாசரேத் ஊரானாகிய இயேசுவை உங்கள் மேசியாவாக ஏற்றுக்கொண்டு, உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றுவீர்களா? என்ற செய்தி அவர்ளிடம் வந்து, இந்த கேள்விக்கு அவர்கள் பதிலளிக்கவும் அழைக்கப்பட்டனர். இப்படியாக அவர்கள்மீது சோதனைவந்தது. தேவனுடைய சொந்த ஜனமாக இருந்து அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாகத் தங்களை அறிக்கைசெய்த விஷயத்தில், அவர்களுடைய உண்மையின் அளவு நிரூபிக்கப்படும் இக்கட்டான சூழ்நிலைக்கு முகமுகமாகக் கொண்டுவரப்பட்டார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் பரீட்சையில் தோற்றுப்போனார்கள். "அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள்(லூக்கா 14:18). தேவனுடைய நிபந்தனைகளையும், அவருடைய திட்டத்தை அவர் நிறைவேற்றும் வழியையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமா? என்று உறுதியான முடிவெடுக்கவேண்டிய தருணம் வந்தபோது வெகுசிலரே ஆயத்தப்பட்டிருந்தனர். அவர்கள் கவனித்துக்கேட்டு, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்குமாக கடந்துசென்றனர். விலை மிகவும் அதிகமாய் இருந்தது.

இந்த மனநிலையில் காணப்படுபவர்கள், தாங்கள் வெளிப்படையாக அறிக்கை பண்ணின பிரகாரம் வாழாதவர்கள் ஆவர். ஆனால் தேவன் ஒன்றுமில்லாததற்கு அந்த வாக்குத்தத்தத்தை பண்ணவில்லை. ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு சுதந்திரர்களாவதற்கு இஸ்ரயேலர்கள் பாத்திரவான்கள் அல்லாதது நிரூபணமானதும், இவர்கள் முறிக்கப்பட்டு, புறஜாதியார் இவர்களின் இடத்தை எடுக்கவும், "ஒலிவமரத்தின் வேருக்கும், சாரத்துக்கும்" உடன் பங்காளிகளாகும்படிக்கு ஒட்டவைக்கப்பட்டனர்(ரோமர் 11:17). தேவனுடைய வார்த்தையின் பிரகாரமாக தேவனுடைய சித்தத்தைச் செய்ய விருப்பம் கொண்ட யூதர்கள் மாத்திரம் ஒலிவ மரத்தின் கிளைகளாக இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரம் ஆவிக்குரிய சந்ததியின் அங்கங்களாக வாக்குத்தத்தத்தின் சுதந்திரர்களாக ஆக்கப்பட்டனர். சுபாவத்தின்படியான சந்ததியின் எல்லா "உத்தம இஸ்ரயேலர்களும்" கூட்டிச்சேர்க்கப்பட்ட பின்னர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முழு எண்ணிக்கை நிறைவடையும்படி செய்தியானது புறஜாதிகளிடம் சென்றது. ஆயினும், "அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால்" தேவனுடைய முந்தைய ஜனங்கள் தாங்கள் முறிக்கப்பட்ட ஒலிவமரத்தில் மறுபடியும் ஒட்டவைக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் கர்த்தர் நமக்கு ரோமர் 11ம் அதிகாரத்தில் கூறுகின்றார். "புறஜாதியாருடைய நிறைவு உண்டான" பின்பு, "இந்தப் பிரகாரம் இஸ்ரயேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" ஆ, தேவனுடைய அன்பு மற்றும் நன்மையின் ஐசுவரியம்"

**1,44,000 வளர்ச்சி அடைய நீண்டகாலம் பிடித்தது**

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த யூதர்கள் அனைவரும், ஒருவேளை தேவனை தங்கள் முழு இருதயத்தோடும், தங்களின் முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்புசெய்து முழுமையான அர்ப்பணிப்பை செய்திருப்பார்களேயானால், அவர்களின் பலியை தேவன் ஏற்றுக்கொண்டிருப்பார் என்றே நாம் உணர்கிறோம். அது சம்பவித்திருந்தால், கிறிஸ்துவின் சரீரத்தில் எத்தனைபேர் இருந்திருப்பார்கள் என்று நமக்குத் தெரியாது. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையை தேவன் ஒருவேளை கூட்டியிருப்பார். ஆனால் இருக்கிற பிரகாரம், சரீரம் நிறைவடைய போதுமான எண்ணிக்கையானவர்களை கண்டுபிடிக்க - கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டுகள் நீண்டகாலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களுடைய எண்ணிக்கையை கர்த்தர் 1,44,000 ஆக நிர்ணயித்துள்ளார்.

## அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள் - மத்தேயு 27:36

அங்கே அமர்ந்து காவல் காத்தனர்,
அழகின் அழகையே காவல்காத்தனர்
பற்கள் கடித்தே கூட்டம் கடந்தும்
இரக்கமில்லா கண்கள் கொண்டும்
உறைந்துபோன பார்வையுடனே,

அங்கே அமர்ந்தே காவல் காத்தனர்.
அவரது ஆடை விலைமிகுந்தது
கறைகளும் தையலுமில்லாதிருந்தது.
உலகின் மாபெரும் பாவம் சுமக்கும்
துன்ப மனிதனை காவல் காத்தனர்

காரிருள் கதிரை மூடியபோதும்,
எல்லாம் முடிந்தது என்றபோதும்
அங்கே அமர்ந்து காவல் காத்தனர்
அழகின் அழகையே காவல்காத்தனர்

துன்புறும் உந்தன் பிள்ளைதன்னை
இரக்கம் இல்லா கண்கள்கொண்டே
நான் உற்றுப்பார்க்கத் தடைகொண்டு வாரும்,
பரலோகத்தின் தேவனே இன்றே.
எதிரிகள் அவரை தூற்றியபோதும்
உயிரின் இரத்தம் சிந்தியபோதும்,
இருண்ட நாளும் முடிந்தபோதும் அங்கே
அமர்ந்தே காவல்காத்தனர்.

எனது மரணம் நிகழும் வரைக்கும்
அவருக்கு வலிமை அமைதி சேர்க்க
தேவனே எனக்கு அன்பு இருதயம்
அளித்தே சமாதான புறாவாய் மாற்றும்
**- ஜி.டபள்யூ. செய்பர்ட்.**

கொடுமையாய் தீ(மை)யின் ஜூவாலைகளூடே,

**--2613--**

கொளுத்தும் போதே வேற்றெண்ணம் வேண்டாம்
மாறுபட்ட எண்ணம் கொள்ளாமல்,
அவரது நாமப் புகழ்பாடு.

அவருக்காக பாடுபடும்
துன்பம் தன்னில் தோள்கொடுக்கும்
உறுதிதன்னை எண்ணுகிறார்,
உண்மையாய் கணக்கீடு செய்கின்றார்

சத்தியம் மறுத்து செய்திகள் எதிர்த்து,
புறக்கணித்தே உம்மிடமே
அன்பிற்குரியவர் பதிலுக்காய்,
முள்ளாய் திருப்பிக் குத்துகையில்,

இந்தப் பாதையில் பயணித்து,
அழியாமைக்கே சென்றுவிட்ட
அவரையே நீயும் எண்ணிப்பார்த்து,
நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்

------------------------

**--2614--**

# உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன

"ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்."--பிலிப்பியர் 2:3

பணிவு, தாழ்மை என்ற மனதின் பண்பு, அதனைப் பெற்றிருப்பவரை தேவனிடத்தில் மாத்திரமல்லாமல், பூமிக்குரிய ஜீவிகளிடத்திலும், அவர்களின் நற்பண்புகளை உணர்ந்தவர்களாக மதிப்புடன் பார்க்க உதவுகின்றது. இந்த பணிவு, தேவனுடைய ஜனங்களாகிய அனைவரிடத்திலும் இருக்க வேண்டும் என அப்போஸ்தலர் பரிந்துரைக்கிறார். இந்த உண்மையானது, இது கவனமாக பயிர் செய்யப்பட வேண்டிய ஒரு பண்பு என்பதை உறுதிபடுத்துகின்றது.

கர்த்தருடைய ஜனங்களில் அனைவரும், மனதில் பணிவு கொண்டவர்கள் அல்லவே. சிலர் தங்களைப் பற்றி நியாயமாக எண்ணவேண்டிய அளவை விட அதிகமாகவே எண்ணுகின்றனர். சிலர் சத்தியத்தைப் பெற்றிருப்பதால் அல்லது சத்தியத்திற்கு ஊழியம் செய்வதில் தங்களுக்கு உண்டான திறமையைக் குறித்து பெருமை அடையலாம். இத்தகைய பெருமை, கர்த்தருடைய பார்வையில் மிகவும் விரும்பத்தகாததாய் இருக்கும். மேலும் இதனைப் பெற்றிருப்பவர், மிகவும் குறுகிய மனதைக் கொண்டுள்ளார் என்பதை சுட்டிக்காட்டுகின்றது; ஏனெனில், சரியாக விஷயங்களை மதிப்பிடுவோமேயானால், நம்மில் உயர்ந்தவர்கள், நம்மிடம் பெருமை கொள்வதற்கும், தற்பெருமையாய் பேசுவதற்கும் எதுவும் இல்லை என்பதை கண்டு கொள்வர். நாம் ஏதாகிலும் ஒன்றை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டிருப்போமேயானால், நாம் எதையும் சுயமாய் சாதித்து விட்டது போல் பெருமை கொள்வதற்கு பதிலாக, நாம் பெற்றுக்கொண்டதைக் குறித்தே பெருமை கொள்ள வேண்டும்.

ஆகவே, கர்த்தருடைய ஜனங்கள் தாழ்மையை ஊக்குவிக்கவும், தூண்டிவிடவும் ஊக்கமாய் முயற்சி செய்ய வேண்டும். சிலர் இந்த பண்பை இயல்பாகவே பெற்றிருக்கின்றனர்; ஆனால் பெரும்பாலானவர்கள் இதற்கு எதிர்மறையான பண்புகளான--தன்னைப்பற்றி தானே உயர்வாக எண்ணுதல், தன்னைத்தான் புகழ்வது, மற்றவர்களை விட தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற உணர்வு--பெருமை ஆகியவற்றை எதிர்த்துப் போராட வேண்டியவர்களாகவே உள்ளனர்.

## சுய பரிசோதனைக்கான யோசனை

பரிசுத்தவானாகிய பவுல், "தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" என்று கட்டளையிட்டுள்ளதை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், அப்போஸ்தலர் எதைக் குறிப்பிடுகின்றார் என்ற கேள்வி வருகின்றது. கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் வளர்ச்சியடைய வேண்டும், மேலும் கிறிஸ்துவுக்குள் தாங்கள் வருவதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும், தாங்கள் நன்றாக இருப்பதை உணர வேண்டும். கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் மற்ற அனைவரைக் காட்டிலும் தாங்கள் கீழானவர்கள் அல்ல என்று அறிவர். கர்த்தருடைய ஜனங்கள் மற்ற மனிதர்களை விட தங்களை அற்பமானவர்கள் என்று மதிப்பிட வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடவில்லை என்பது உறுதி. அவருடைய சொந்த விஷயத்தில், அவர்தான், பாவிகளிலேயே பிரதான பாவி என்று உணர்ந்தார், காரணம் அவர் சத்தியத்தை வெளிப்படையாய் எதிர்த்திருந்தார்; மேலும் தன்னுடைய சீஷர்களில் சிறியவரான ஒருவரை யாரேனும் துன்பப்படுத்தினால் ஆபத்தான மீறுதலுக்குள்ளாவர் என இயேசு கூறியிருந்தார். ஆகையால், அனைத்து பாவிகளிலும் நாம் பிரதானமான பாவி என்று நம்மால் சொல்ல முடியாது. கர்த்தருடைய ஜனங்களில் வெகு சிலரே, கடுமையான குற்றம் செய்ததின் அல்லது சபையைத் துன்பப்படுத்தியதின் அடிப்படையில், "நான் பாவிகளிலேயே பிரதான பாவி" எனக் கூற முடியும் என நாம் எண்ணுகின்றோம். நாம், நமக்கு எதிராகவே பொய் சாட்சி கூறக்கூடாது.

பிறகு, எவ்விதமாய் நாம் அப்போஸ்தலரின் கட்டளையைப் புரிந்துகொள்ள வேண்டும்? இவ்விதமாய்: அதாவது, கர்த்தருடைய ஜனங்களில் இருவராகிய யாரேனும் ஒன்றுபோல்

இருப்பதில்லை என்பதையே நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் சரியான பார்வை இருக்கும் பட்சத்தில், நாம் நம்முடைய சொந்த தாலந்துகளைக் குறித்து தாழ்மையாகவே எண்ணுவோம். நாம் இவ்வாறாகவே எண்ணலாம், அதாவது, "என்னிடம் இந்த பண்பில் அல்லது அந்த தாலந்தில் அல்லது கிருபையில் ஏதோ உள்ளது; ஆகையால் நான் கர்த்தருக்கு அதிகமாக கடமைப்பட்டுள்ளேன். என்னுடைய சகோதரன் அல்லது என்னுடைய அயலானைக் காட்டிலும் எனக்கு அதிகமாய் உள்ளது என நான் எண்ணும் தாலந்தை என்னால் முடிந்த மட்டும் உண்மையாய் பயன்படுத்துகிறேனா என நான் சிந்திக்கிறேன். என்னிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அவர்களிடம் குறைவாக இருந்தாலும், என்னிடம் இருப்பதை நான் பயன்படுத்துவதைக் காட்டிலும், அவர்கள் தங்களிடம் இருக்கும் அனைத்தையும் வெற்றியடைய வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தோடு பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். இப்படியாக இருந்தால், இந்த விஷயத்தில் அவர் என்னைவிட சிறந்தவராவார்."

## சகோதரரிடத்தில் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மை

கர்த்தருடைய குடும்பத்தை நாம் கவனிக்கும் போது, அதன் வெவ்வேறு அங்கங்களின் பலவீனம் மற்றும் குறைபாடுகளையே நாம் பார்க்க நேரிடுகின்றது. அவர்களிடம் காணப்படுகிற விரும்பத்தகாத பண்புகள் மீது நம்முடைய கவனம் அதிகமாக செலுத்தப்பட நாம் அனுமதிக்காமல், அவர்களுடைய அனைத்து நற்பண்புகளையும், அதிலும் விசேஷமாக அவர்களின் இருதயத்தின் உண்மையையே நினைவில் கொள்ள வேண்டும். தேவன் அவரை அழைத்திருக்கிறார் மற்றும் ஏற்றுக் கொண்டும் இருக்கிறார் என்பதை நாம் நமக்கே பரிந்துரைக்க வேண்டும். எப்போதெல்லாம் சத்தியத்திற்குள் வந்திருக்கிற ஒருவரை நாம் காண்கிறோமோ, நாம் நம்மிடமே கூற வேண்டியது, "சரி, மாம்சத்தின் படி அவர் என்னவாக இருந்தாலும் அது முக்கியமல்ல, தேவன் அவருடைய இருதயத்தில் நன்மையான, உயர்தரமான, உண்மையான ஏதோ ஒன்றைக் கண்டுள்ளார்; மேலும் தேவன் அவரை ஒரு புத்திரர் போல நடத்துவதால், அவர் சகோதரராக மேன்மையாய் கருதப்பட வேண்டும்" என்பதே. அந்த மனுஷனுடைய சுபாவத்தின் படியான பண்புகளின் அடிப்படையில் அவரை நம்மால் மேன்மையாக எண்ணமுடியவில்லை என்றாலும், சமயம் வாய்க்கும் போது நாம் அவருக்கு நன்மை செய்கிறவர்களாய் இருப்போம். நாம் நமக்கு கூட்டாளியாக தெரிவு செய்யும் ஒருவராக அவர் இல்லாமல் இருக்கலாம்; என்றாலும், தேவன் நம்மை மேன்மையாகக் கருதுவதைக் காட்டிலும் அந்த சகோதரரை மிக மேன்மையாகக் கருதலாம். இதை உணருகையில், இது நம்மை மிகவும் மனத்தாழ்மைக் கொள்ளவும், மேலும் அந்த சகோதரரிடமிருந்து நாம் என்னென்ன உதவிகரமான பாடங்களைப் பெற முடியுமோ, அதை கற்றுக் கொள்ளவும் செய்யும்.

அனைவரிடமும் மதிக்கப்படுவதற்கும், பாராட்டப்படுவதற்குமான சில பண்புகள் காணப்படும். ஆகவே தான் சாத்தானிடம் உள்ள விடாமுயற்சி போன்று மற்ற எல்லோரிடமும் விடா முயற்சியை காண விரும்புகிறேன் என ஒரு மூதாட்டி கூறினார். நாம் மற்றவர்களிடம் எப்போதெல்லாம் நற்பண்புகளைப் பார்க்கிறோமோ அப்போதெல்லாம் அதை நாம் பாராட்ட வேண்டும். கர்த்தருடைய பார்வையில் அவர்கள் நம்மைக்காட்டிலும் மிகுந்த பணிவு, அதிகமாக சுயத்தைப் பலி செலுத்துதல், மிகுந்த பெருந்தன்மை உடையவராய் இருக்கின்றார்களா என்பது நமக்கு தெரியாது. நம்முடைய கடமை எளிதானதே. நம்மால் இருதயத்தில் இருப்பதை அறிய முடியாது. ஆகவே தேவன் தம்முடைய குடும்பத்திற்குள்ளாய் அழைத்துக் கொண்டு வந்த அனைவரையும் குறித்து அன்புடனும், பரந்த மனப்பாண்மையுடனும் நாம் எண்ண வேண்டும். "அன்பு சகலத்தையும் தாங்கும், . . . . சகலத்தையும் சகிக்கும்." "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்."--1 கொரிந்தியர் 13:7; கலாத்தியர் 6:10.

## தாழ்மை மகிமைக்கான பாதை

அப்போஸ்தலர்களான பேதுருவும், யாக்கோபும் கூட கர்த்தருடைய ஜனங்களைப் பொருத்தமட்டில், அவர்கள் மனத்தாழ்மையை அணிந்திருப்பதின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த பண்பு பிதாவின் கிருபையில் தரித்திருப்பவர்களுக்கு இன்றியமையாதது எனவும், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் எனவும், தாழ்மையான ஆவி உள்ளவர்களுக்கு தொடர்ந்து தமது கிருபையை அருளுகின்றார் எனவும் அவர்கள் நம்மிடம் கூறுகின்றனர். இவ்வாறாக, அவர் மனத்தாழ்மையை ஊக்குவித்து பெருமை

எதிர்க்கின்றார். (1 பேதுரு 5:5; யாக்கோபு 4:6) இந்த வழிமுறைக்கான காரணத்தை நாம் பார்க்கலாம். பெருமை கொள்வதற்கோ (அ) தற்பெருமை அடித்துக்கொள்வதற்கோ யாதொன்றும் நம்மிடத்தில் இல்லை என்று சர்வவல்லமையுள்ளவர் காண்கின்றார். நாம் எதையெல்லாம் பெற்றிருக்கிறோமோ அவை யாவும் கர்த்தருடைய வழிநடத்துதல் அல்லது சாதகமான சூழ்நிலைகளினால் பெற்றதேயாகும்.

வேத வசனங்கள் பெருமையின் தீமையான விளைவுகள் பற்றின சில குறிப்பிடத்தக்க உதாரணங்களை கொடுக்கின்றது. ஆவிக்குரிய ஜீவிகளில் மிகவும் உயர்ந்தவர்களில் ஒருவரான லூசிபர், தன்னுடைய நினைவுகளில் அகந்தையும், தற்பெருமையும் கொண்டு, இந்த தீமையான பண்புகளை ஊக்குவித்தபோது, தன்னுடைய மேலான நிலையை இழந்து, தேவனுடைய எதிராளியான சாத்தானாக மாறினார். தாயாகிய ஏவாளும் சரியான மனத்தாழ்மையை உடையவராய் இருந்திருப்பாரானால், அவர் சர்ப்பத்தினால் சோதிக்கப்பட்ட போது, "என்னுடைய சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாமற்போக, இந்த ஆலோசனைக்கு நான் செவி சாய்க்க மாட்டேன்; என்னுடைய மேலான நன்மைக்கு ஏதுவானது எதுவாக இருக்கும் என அவர் அறிந்திருப்பதினால், சகலத்தையும் அறிந்த அவரிடம் நான் என்னை ஒப்புக் கொடுக்கின்றேன்" என்று அவர் கூறியிருப்பார். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை."--நீதிமொழிகள் 16:18.

இதற்கு முரணாக, முற்றிலும் எதிர்மாறான சிந்தை--தாழ்மை--பற்றி ஒரு அருமையான உதாரணத்தை வார்த்தையானவரின் விஷயத்தில் நமக்குத் தந்திருக்கிறார். அவர் எவ்வாறு தம்மைத்தாமே தாழ்த்தினார் என்பது பற்றியும், தேவன் எவ்வாறு அவரை மிகவும் உயர்த்தினார் என்பது பற்றியும், அதாவது சாத்தான் பேராசைக் கொண்ட அதே ஸ்தானத்திற்கு உயர்த்தியது பற்றியும் நமக்கு காண்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் கர்த்தருக்கு முழுதும் கீழ்ப்படிந்தவர்களாக இருப்போமானால், நமக்கான பலன் கர்த்தர் இயேசுவிடம் காணப்பட்டதுபோல ஒரு மாபெரும் ஆசீர்வாதமும், ஒரு மேலான உயர்த்தப்படுதலும் உண்டாயிருக்கும். இந்த காரணகாரியத்தை முன்வைத்த பின்னர் அப்போஸ்தலர், "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்கிறார்.--1 பேதுரு 5:6.

மனத்தாழ்மை உள்ளவர்களிடம் பரலோகப்பிதா ஆழமான அன்பு கொண்டுள்ளார். இதுவே நாம் மனத்தாழ்மையாய் இருக்க வேண்டியதற்கான காரணம் ஆகும். "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்" என்றும், தாழ்மை என்பது தகுந்த முறையில் தெளிவும், உறுதியுமடைந்த குணலட்சணத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று என்றும் நாம் காண்பதால், இப்பண்பை விருத்தி செய்வதற்கும், தேவன் நமக்கு அதிகப்படியான ஆசீர்வாதத்தைக் கொடுப்பதற்கேதுவான மனப்பான்மையை அடைவதற்கும் அதிகமதிகமாக நாம் நாட வேண்டும்.

## "தெளிந்த மனது" மனத்தாழ்மையாய் இருக்கும்

நாம் நம்மை தாழ்மைப்படுத்த வேண்டும் என்பது நமக்கு எவ்விதமான தாலந்தோ, ஆற்றலோ, திறமையோ இல்லை என்று எண்ண வேண்டும் என்று அர்த்தம் கொள்வதாக நினைக்கத்தேவை இல்லை. அத்தகைய எண்ணம் புத்தியீனமாய் இருக்கும். மாறாக, நம்மை குறித்து தெளிந்த எண்ணம் உடையவர்களாய் நாம் எண்ண வேண்டும். நம்முடைய ஆற்றல்கள் அனைத்தும் தேவனிடத்தில் இருந்து வருகின்றது என நாம் எண்ண வேண்டும். எனவே, நம்முடைய அயலகத்தார் அல்லது நம்முடைய சகோதரன் அல்லது நம்முடைய சகோதரியை விட ஏதோ சில ஆசீர்வாதங்கள் நமக்கு அதிகமாய் உள்ளது என்று நாம் காணும் போது, நாம் நன்றி உடையவர்களாய் இருக்கக்கடவோம்; மாறாக பெருமை கொள்வதற்குரிய ஏதோ ஒன்று நம்மிடம் உள்ளது என்று ஒரு கணம் கூட நினைக்காமல் இருக்கக்கடவோம். இது ஓர் ஈவு. நாம் இந்த ஈவை உணர்ந்து மகிழ்ச்சியடைய வேண்டும். மாறாக அதைப் பெற்றிருப்பதினிமித்தம் தற்பெருமையினால் பெருமிதம் அடையக்கூடாது. நாம் ஈவை பெற்றுக்கொண்டோம் என்பது நாம் அதில் குறைவுப்பட்டிருந்தோம் என்றும், அது நமக்கு தேவையாய் இருந்தது என்பதையுமே காட்டுகின்றது.

இயல்பாகவே பெருமையுள்ள இருதயத்தைக் கொண்டுள்ள ஒருவர், தன்னைக் கீழ்ப்படியும் நிலைக்குக் கொண்டு வரும்போது மனத்தாழ்மையை வெளிப்படுத்துகிறார். இதற்கு நேர்மாறாக ஒருவர் இயல்பாகவே தன்னைப்பற்றி மிகவும் கீழான மதிப்பு கொண்டிருந்து, தன்னை தேவனுக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுக்கும் போது பிதா அவருக்கு சரியான மனப்பான்மையைக் காண்பிப்பார்.

அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களைக் குறித்து கூறுகையில், அவர்கள் "தெளிந்த புத்தியின் ஆவியை" உடையவர்கள் என்கிறார். தேவனிடத்தில் நெருங்கிப் பழகுவதற்கும் அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதற்கும் நாம் எவ்வளவாய் நாடுகின்றோமோ அதே அளவில் நாமும் நம் மனதில் உறுதியாய் சமநிலையோடு இருப்போம். இவ்விதம் இசைந்திருந்தால் நாம் அதிகத் தெளிந்தவர்களாய் காணப்படுவோம். கிறிஸ்துவின் சிந்தையை, தேவனின் சிந்தையை, பரிசுத்தமான சிந்தையைப் பெற்றிருப்பவர் தேவனுடைய வார்த்தையினால் நிறைவாய் போதிக்கப்பட்டிருப்பார். இவ்விதமாக நாம் தெளிந்த புத்தியின் நிதானத்தையும், தெளிந்த புத்தியின் ஆவியையும் பெற்றுக் கொள்கிறோம். நாம் கிருபையிலும், சத்திய அறிவிலும் வளரும்போது நம்முடைய பகுத்தறிவும் அதிகமதிகமாய் விருத்தியடையும்.

## உண்மையான கீழ்ப்படிதலுக்கான எடுத்துக்காட்டு

முழு அர்ப்பணிப்பு இல்லாமல் ஒருவரும் பிதாவினிடத்தில் வரமுடியாது. நமக்குப் போதகர் தேவை என்றும், அவரில்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்றும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையால் நாம் பின்வரும் நிலைக்கு வர வேண்டும், அதாவது: "நான் பாவியே அல்லாமல், வேறொன்றும் என்னிடத்தில் இல்லை; நான் அபூரணமானவன் என்பதையும், நான் பெற்றுக்கொள்ளாதது எதுவும் என்னிடத்தில் இல்லை என்பதையும் நான் அறிவேன். தேவனே அனைத்தையும் அருளுகின்றார்; என்னிடத்தில் இருப்பதெல்லாம், அவரிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஈவு தான். இவைகளை அறிந்து கொள்வதின் மூலம் இவைகளை நன்றியோடு ஏற்றுக்கொண்டு அவருடைய வல்லமையான கரங்களின் கீழ் என்னையே தாழ்த்துகின்றேன்."

உலகம் கூறுகிறதாவது, "இல்லை! நான் என்னைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க மாட்டேன்; இதற்கான தண்டனை எனக்கு வருமென்றால், எது வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளுவேன்" என்பதே. இப்படிப்பட்ட ஆவியே, தன்னுடைய தேவை மற்றும் தன்னுடைய வலுவற்ற நிலையை உணராத உலகப்பிரகாரமான இருதயத்தின் ஆவியாய் உள்ளது. ஆனால் தத்தம் செய்துக்கொண்ட இருதயத்தின் ஆவியோ, கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கிறதாய் உள்ளது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய உதவிக்கான ஒரே ஆதாரம், இரட்சகரான கர்த்தர் இயேசு கிறிஸ்து மூலம், சர்வ வல்லமையுள்ள தேவனே என உணர்ந்து கொள்கின்றனர். ஏனெனில், அவருடைய சீஷர்களாகிறவர்களுக்கு மாத்திரமே நம்முடைய கர்த்தர் பரிந்து பேசுகிறவராக இருக்க முடியும். மேலும் அவர் பரிந்து பேசுகிறவராக இருக்காத வரையில், ஒருவரும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. ஒருவேளை திரும்பக்கொடுத்தலின் காலங்களில் நாம் ஓர் ஆசீர்வாதத்தைப் பெறலாம், ஆனால், பரிந்து பேசுகிறவர் இல்லாமல் ஒருவரும் தற்போது தேவனிடத்தில் வரமுடையாது.

சீஷத்துவத்தின் நிபந்தனையானது, நாம் உலகப்பிரகாரமான அனைத்து விருப்பங்களை, உலகப்பிரகாரமான அனைத்து உரிமைகளை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே ஆகும். பிதா நம்மை கிறிஸ்துவின் சீஷர்களாக ஏற்றுக் கொள்வதற்கு முன்பும், அவர் நம்மை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவதற்கு முன்பும், அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அங்கமாக நாம் வருவதற்கு முன்பும், அனைத்தையும் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் உண்மையான முன்னேற்றத்தை அடைவோமானால், நம்முடைய இருதயத்திலிருந்து, "என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" எனக் கூறவேண்டும். தேவனுடைய சித்தத்தை நாம் புரிந்து கொண்டாலும் அல்லது புரிந்து கொள்ளாவிட்டாலும், அவருடைய சித்தமே சிறந்தது என்பதை நாம் அறிவோம். தன்னைப்பற்றி அதிஉயர்வான எண்ணங்களைக் கொண்டுள்ள ஒருவர், ஒரு ஜென்மசுபாவ மனுஷனாக அவருடைய சுயசித்தமே மேலானது என்று நினைத்திருக்கலாம். ஆனால், அவர் சத்தியத்தை அறிய வரும்போது, "நான் முன்பு தவறுகள் செய்திருக்கிறேன்; ஆனால் இப்பொழுதோ என்னுடைய கருத்து எதுவாக இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் நான் கர்த்தருடைய வழியில் செயல்படுவேன்" என்றே கூறுவார்.

இத்தகைய போக்கு, ஒருவர் இயல்பாகவே பெருமையின் ஆவி உள்ளவராய் இருந்திருந்தாலும் அவரிடத்தில் உண்மையான மனத்தாழ்மைக்கு ஆதாரமாய் உள்ளது. மேலும் அவர் சரியான பாதையில் வளர்ந்து முன்னேறுகையில், தான் எங்கெல்லாம் தவறுகள் செய்திருக்கிறார் என்று தெளிவாகக் கண்டுணரும் பொழுது அவருடைய மனத்தாழ்மை அதிகரிக்கும். ஆகையால், நாம் நம்மை கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கவும்; நம்மை நாமே தாழ்த்தவும்;

நம்முடைய சொந்த சித்தம் என்று எதையும் வைத்துக் கொள்ளாமல் கர்த்தருடைய சித்தத்தை மாத்திரமே நாடித்தேடவும் வேண்டும்.

## போலியான மனத்தாழ்மைக்கான எடுத்துக்காட்டு

போலியான கீழ்ப்படிதல் என்ற ஒன்றும் உண்டு, அது அதை பெற்றிருப்பவரையும் கூட வஞ்சிக்கக்கூடும். ஒருவர் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பது பற்றி அதிக அளவில் பேசலாம், ஆனால், உண்மையில் அவர் பெயரளவில் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தவராய் இருந்து, தன் சொந்த சித்தத்தையே செய்கிறவராய் இருக்கலாம். ஆகையால் நாம், கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தலை தொடருகிறோமா என்று கவனிக்கிறவர்களாய் இருந்து, நம்முடைய அனுதின வாழ்க்கை பாதையில், "நான் நடக்கும் படி கர்த்தர் விரும்பும் பாதை இது தானா? தேவனுடைய சித்தம் இதுதானா?" என்று கேட்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

அதிகமாக கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கிறவர்கள், மிகப் பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள். தேவன் நம்முடைய கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் மற்றும் நம்முடைய தாழ்மையை பரீட்சித்துப் பார்ப்பார். பரிபூரணரான நமது கர்த்தர் இயேசு, தம்மிடம் பரிபூரண வல்லமைகள் உண்டு என்று அறியாமல் இருந்தார் என நாம் அனுமானிக்க முடியாது. ஆனாலும் தம்முடைய சொந்த கருத்து எதுவாக இருந்தாலும், அதை அவர் பொருட்படுத்தாமல் தம்மை பிதாவிற்கு கீழ்ப்படுத்தி, "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று கூறினார். விருப்பம் அல்லது விருப்பத்தின் அடிப்படையிலான தேர்வு இல்லாத ஒருவர் மதிப்பு ஏதும் இல்லாதவராய் இருப்பார். நாம் நமக்கென்று எதை விரும்புவோம் என்று அறிந்தவர்களாக இருக்கலாம். இதை அறிந்தவர்களாக இருந்தாலும், "இந்த விஷயத்தில் உன்னுடைய சொந்த விருப்பத்தை நாடாமல்; இந்த விஷயத்தில் உன்னைக் குறித்த கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அறியவும், உன்னால் முடிந்த மட்டும் அதை செய்யவுமே நீ நாட வேண்டும்" என்று நம்மிடம் கூறுகிறவர்களாக இருக்க வேண்டும்.

## கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் என்பது உண்மையாய் இருப்பதற்கான ஒரு பரீட்சை

சில சமயம், கர்த்தருடைய கரம் மிகவும் பாரமானதாய் இருக்கும். அது நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் விஷயத்தில் பாரமானதாயும், கீழே அமிழ்த்தப்பட்டதாயும் இருந்தது. ஆனால் பிதாவின் கரம் தம்மை கீழே அமிழ்த்துகிறதை கர்த்தர் உணர்ந்தபோது, யாருடைய நோக்கத்தை நிறைவேற்ற வந்தாரோ அவருடைய சித்தத்திற்குத் தாழ்மையாக ஆட்சேபனையின்றி ஒப்புக்கொடுக்க, பாரத்தின் கீழ் தன்னை சாந்தத்துடன் தாழ்த்தினார். அவருடைய கரம் அவரை நொறுக்கிப் போடுவது போன்று தோன்றினாலும் அவரை நொறுக்கிப் போடவில்லை. நொறுக்கிப் போடுகிற கரமாய் இருக்கிறதற்குப் பதிலாக அது அன்பின் கரமாய் இருந்து முடிவுவரை அவருடைய கீழ்ப்படிதலைப் பரீட்சித்து பார்க்கிறதாய் இருந்தது. அவருடைய கீழ்ப்படிதலை முழுவதும் பரீட்சித்த பின்னர் அதே கரம் அவரை உயர்த்தி, "அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தது; எல்லா துரைதனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரம் அல்லாமல், மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவரை உயர்ந்திருக்கச் செய்தது."--எபேசியர் 1:20-23.

நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், நமக்கும் இவ்வாறே இருக்கும். ஏற்றக்காலத்தில் தேவன் நம்மை உயர்த்துவார். ஆனால், மனத்தாழ்மையாய் இல்லாத எவரையும் அவரால் உயர்த்த முடியாது. கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் என்பது விசுவாசத்தைக் காட்டுகின்றது. தேவனிடத்தில் முழுமையான நம்பிக்கை நமக்கு இல்லாத வரையில், நம்மை நாம் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க மாட்டோம். மேலும், விசுவாசம் மாத்திரம் அல்ல, உண்மையாக இருப்பதும் அவசியமே. ஆகையால், பிதா நம்மை இந்த இரண்டு பண்புகளிலும் பரீட்சித்துப் பார்க்கின்றார். இவைகள் இல்லாத பட்சத்தில் நாம் இராஜ்யத்திற்கு தகுதியற்றவர்களாய் இருப்போம். ஆகையால், இக்காலக்கட்டத்தின் பல்வேறு பரீட்சைகள், தேவனிடத்தில் விசுவாசம் மற்றும் உண்மை மற்றும் அவருடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தலுக்கான பரீட்சைகளாய் உள்ளது. "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும், கனத்தையும்,

அழியாமையையும் தேடுகிறவர்களுக்கே" தேவன் "நித்தியஜீவனை" வாக்களித்துள்ளார்.--ரோமர் 2:7.

நாம் தெய்வீக வழிநடத்துதல்களை அடையாளம் கண்டு, அவைகளை நாட வேண்டும். நம்முடைய வாழ்வின் அனைத்து விஷயங்களிலும் தேவனுடைய வழிநடத்தல்களை எதிர்ப்பார்க்க வேண்டும். நாமே இதை நடத்துகின்றோம் அல்லது அதை சீர்படுத்துகின்றோம் என்ற எண்ணத்தில் நம்முடைய வாழ்க்கையை கடக்கக்கூடாது. குழந்தை ஒன்று அதன் பெற்றோரிடத்திலும் அல்லது மாணவன் ஒருவன் தன்னுடைய ஆசிரியரிடத்திலும் அல்லது பணி பயில்பவர் ஒருவர் அவருடைய எஜமானிடத்திலும் அல்லது வேலைக்காரி ஒருவள் அவளுடைய எஜமானியினிடத்திலும் ஏறெடுத்துப் பார்ப்பதுபோல, நம்முடைய கண்களும் கர்த்தரை ஏறெடுத்துப் பார்த்து அவருடைய வழிநடத்துதலுக்காக வேண்டிக் கொண்டிருக்க வேண்டும்.--சங்கீதம் 123:1, 2.

## சோதனையில் நம்முடைய மனப்பான்மை

இந்த தெய்வீக வழிநடத்துதலை நாம் அனைத்து காரியங்களிலும் நாட வேண்டும். வியாபாரத்தில் ஏதோ ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளது என வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை, தன்னுடைய நிலையை ஒருவர் இழந்து விடுகின்றார். கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதை கற்றுக் கொள்ளாத ஒரு தேவனுடைய பிள்ளை, உடனடியாக மற்றவர் மேல் குற்றம் சாட்டுவதும் அல்லது தன்னுடைய வேலையாட்களிடம் குற்றம் கண்டுபிடிப்பதுமாக இருப்பார். ஆனால், கர்த்தருடைய ஜனங்களுக்கு சரியான மனப்பான்மை என்பது இவ்விதமாய் கூறும், அதாவது, "இந்த விஷயம் குறித்த யாவையும் பிதா அறிவார்; என்னுடைய மேலான நன்மையின் பொருட்டு அவர் அதை தடுத்து, இவ்வாறு நடக்கச் செய்துள்ளார். இதிலிருந்து நான் கற்றுக் கொள்வதற்கான பாடம் ஏதோ ஒன்று உள்ளது, அதை நான் கண்டு பிடிப்பேன்" என்பதே. அவர் தன் பட்சத்தில் ஏதேனும் கவனக்குறைவு இருந்திருப்பதை கண்டுபிடிப்பாரேயானால், அதனுடைய எதார்த்தமான விளைவு அவர் தன்னுடைய ஸ்தானத்தை இழப்பதே என்று உணர வேண்டும்.

ஆனால் விஷயங்களைக் கவனமாக ஆராய்ந்த பின்னர், இதைக் காட்டிலும் அவரால் கடமையில் உண்மையாய் இருந்திருக்க முடியாது என்று உணர்வாரேயானால், அப்பொழுது அவர் இன்னும் கவனிப்பவராக இருந்து, பின்னர் கூற வேண்டியதாவது, "கர்த்தாவே, எந்த வகையில் இந்த இழப்புக்கு பாத்திரனானேன் என்று என்னால் உணர முடியவில்லை; ஆகையால் இந்த விஷயத்தில் உம்முடைய வழிநடத்துதல் என்ன என்று காண நான் உம்மை ஏறெடுத்துப் பார்க்கின்றேன்; ஏனெனில் எனக்கு ஏதேனும் வேலை இருக்க வேண்டும் என்று நீர் அறிவீர்; ஆகவே இந்த நாளுக்குரிய என்னுடைய அன்றாட அப்பத்தை தர வேண்டும் என்று மாத்திரம் நான் ஜெபிக்கிறேன். இது தற்செயலாய் நடந்தது என்று என்னால் எண்ண முடியவில்லை. நிச்சயமாக இந்த அனுபவத்தில் எனக்கான படிப்பினை வைத்துள்ளீர் என்பது உண்மையே. உம்முடைய வழிநடத்துதல் என்னவாய் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. உம்முடைய சித்தம் என்னவென்பதை உணரத் தேவையான கிருபை மற்றும் ஞானத்தை எனக்குக் கொடுக்கும்படி நான் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்பதே.

அவர் இவ்வாறு ஜெபிக்கும் அதே வேளையில், கர்த்தருடைய முன்னேற்பாடுகளையும், வழிநடத்துதல்களையும் எதிர் நோக்கியிருக்க வேண்டும். இவ்விதமாக கர்த்தரை ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் அனைத்து விஷயங்களிலும் அவருக்கு உண்மையுள்ளவராய் இருக்கிற தேவனுடைய பிள்ளையே, ஜெயம் கொள்ளுகிறவராகவும், இராஜ்யத்தில் போதகரோடு பங்குக் கொள்ளுகிறவராகவும் இருப்பார். இந்த மாபெரும் உயர்த்துதல், தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கிறவர் அனைவருக்கும் அவர்களின் ஆற்றல் மற்றும் தாலந்துகள் அநேகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பினும் கொடுக்கப்படும்.

## கீழ்ப்படிதலின் உயர் தரம்

நம்முடைய ஆய்வுப் பகுதியில், சபையானது கிறிஸ்துவின் சிந்தையை பயிர் செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் பவுல் பரிந்துரைக்கின்றார். அவர், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" என்று கூறுகின்றார். அவர், சபை பிதாவினதும்

ஏற்றுக்கொள்ளப்பட தேவையான பண்புகளை விவரமாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். இவர்களிடத்தில் தேவனைப் பிரியப்படுத்துவதற்கான பேராவல் காணப்பட்டது. அப்படிப்பட்ட அனைவரையும், நம்முடைய கர்த்தர் ஏறெடுத்த வழிமுறையான தாழ்மை மற்றும் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் என்பவைகளையே போதகரின் அடிச்சுவடுகளில் நடக்கும் பின்னடியார்களுக்கான ஒரே சரியான பாதை என அப்போஸ்தலர் புத்தி கூறுகின்றார். பரிசுத்தவானாகிய பவுல், கிறிஸ்துவின் சிந்தை பின்பற்றுதலுக்கும், வருந்தி உழைத்து பயிர் செய்வதற்கும் உகந்தது என்பதை மனதில் பதியவைக்க முயற்சி செய்கின்றார்.

போதகரின் மாபெரும் தாழ்மைக்கு கூடுதல் ஆதாரமாக, இயேசு மனிதனாக வருவதற்கு முன் அவர் இருந்த தன்மையை குறித்து அப்போஸ்தலர் வலுவாக அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். வார்த்தையாக இருந்த போது அவர் தேவனுடைய சாயலில் இருந்தார்--ஆவிக்குரிய நிலையில். எனினும் அவர் பேராசை உடையவராய் இருக்கவில்லை; அவர் சுயத்தை நாடுபவராக இருக்கவில்லை. மாறாக அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி--பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக அவருடைய முந்தைய கனம் மற்றும் மகிமையைத் துறந்தார். அவருடைய ஆவி சாத்தானிடமிருந்ததற்கு நேர் எதிர்மாறானதாக இருந்தது. வார்த்தையானவர், பிதாவின் ஸ்தானத்தை அபகரிக்கவோ அல்லது பிதாவிற்கு சமமானவர் என்று உரிமைக்கோரவோ எண்ணங்கொள்ளாமல், அதிலிருந்து மிகவும் வேறுபட்ட பண்பை--தாழ்மை என்னும் மனப்பான்மை கொண்டிருந்தார். பின்னர், "இந்த சிந்தை உங்களில் இருக்கக்கடவது" என்று அப்போஸ்தலர் பரிந்துரைக்கின்றார். "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." அவர் பிதாவின் வலது பாரிசத்தில் ஓர் இடத்தைப் பெற்றதுபோல, நீங்களும் கிறிஸ்துவின் வலது பாரிசத்தில் ஓரிடத்தைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அதே பரம அழைப்பினால் நீங்களும் தேவனால் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். இதை உணர்ந்து கிறிஸ்துவின் இந்த சிந்தையை உங்களிடத்தில் அனுமதியுங்கள்.

தேவன் இந்த சிந்தையை கிறிஸ்துவினிடத்தில் திணிக்க முற்படவில்லை, அதுபோல அவர் நம்மிடத்திலும் அதை திணிக்க முற்படவில்லை. நமது கர்த்தர் மனுஷனுடைய மீட்பராகும் பொருட்டு, இந்த தாழ்மையின் நிலையை எடுத்தார். மேலும் பொறுமையில், ஆசீர்வாதமான விளைவை உண்டுபண்ண இந்த சிந்தையை அவர் தொடர்ந்து காத்துக் கொண்டிருப்பது அவசியமாய் இருந்தது. இயேசுவுக்கு தன்னுடைய வேலையை முடிக்க மூன்றரை வருடங்கள் தேவைப்பட்டது. பின்னர் சிலுவையை அடைந்து "எல்லாம் முடிந்தது" என்று அவர் கூறின பின்பே அவர், "பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடேகூட உட்கார்ந்தார்." நாம் இயேசுவின் சீஷர்களாக மாறியிருந்தால் நாம் பரம அழைப்பின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டிருந்தால், இந்த சிந்தையை நாம் பெற்றிருந்தால், பின்னர் இந்த சிந்தையானது நம்முடைய தலைக்கு ஒத்த குணலட்சணத்தை நம்மில் உருவாக்க நாம் அனுமதிக்க வேண்டும்.

## கீழ்ப்படிதலின் உலகளாவிய தரம்

வார்த்தையானவர் தேவனுக்குச் சமமான நிலையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மனதில் திட்டமிடாமல் தம்மைத் தாழ்த்தினார் என்று நாம் பார்த்திருந்தோம். லூசிபரோ எதிர்மாறான வழியை தேர்ந்தெடுத்தார். அவர் தன்னைத்தானே தாழ்த்துவதற்குப் பதிலாக, "நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றார். (ஏசாயா 14:14) இங்கு நாம் என்ன செய்யக்கூடாது என்பதற்கான ஓர் உதாரணம் உள்ளது. தெய்வீக இராஜ்யத்தின் கொள்கையானது, "தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்பதே. "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்தக் கைக்குள் அடங்கியிருங்கள்."--லூக்கா 14:11;
1 பேதுரு 5:6.

தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்தும், தூதரோ அல்லது மனிதரோ இருந்தாலும் அவர்கள் இந்த தாழ்மையான சிந்தையைப் பெற்றிருக்க வேண்டும். இதுவே சரியான ஒரே மனப்பான்மை ஆகும். இந்த பரீட்சையானது சுவிசேஷ யுகத்தில் கர்த்தருக்கும், சபைக்கும் மாத்திரமே வருகின்றது. இது மற்றவர்களுக்கு எந்த அளவில் வரக்கூடும் என்பது கேள்விதான். இந்த பரீட்சை அனைவருக்கும் வருவது என்பது சாத்தியமற்றதாகவே தோன்றக்கூடும். சரியான மனநிலையில் இருப்பவர்களே எவ்விதத்திலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற ஆவல் கொண்டிருப்பர். ஒருவேளை பரிசுத்த தூதர்களில் ஒருவருக்கு ஓர் இனத்தின் மீட்பராகும் சிலாக்கி

கொடுக்கப்பட்டிருக்குமாயின், அவர் அதை நிறைவேற்றுவதில் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை. எனினும், பிதாவினுடைய சித்தத்திற்கு வார்த்தையானவர் கீழ்ப்படிந்ததால், வந்த விளைவை பார்க்காத தூதர்கள் எப்படி செயல்பட்டிருந்திருப்பார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை.

உலகமானது ஆயிரவருட அரசாட்சியில் பரீட்சைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும். பிதாவிற்கு ஊழியம் செய்வதற்கு அனைத்தையும் இழப்பதற்கு தயாராக இருப்பதே அனைத்து சிருஷ்டிகளின் சரியான மனப்பான்மையாய் இருக்கும்; இதுவே முடிவில் நித்தியஜீவனை அடையும் அனைவரின் நிலையாக--மனுக்குலத்தின் நிலையாயிருக்கும். ஆயினும், தெய்வீக நீதியானது சுயத்தை பலி செலுத்துவதை ஒருபோதும் எதிர்ப்பார்ப்பதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது கீழ்ப்படிதலையே எதிர்ப்பார்க்கின்றது. மேலும் சபையின் கீழ்ப்படிதல் என்பது, உச்சகட்ட கீழ்ப்படிதல் ஆகும். அதாவது, "மரணபரியந்தம்." பிதாவானவர் மாபெரும் சன்மானம் அளித்திருப்பதால், அத்தகைய கீழ்ப்படிதல் பிரபஞ்சம் அனைத்திலும் முதற்தரமாய் மாறிவிட்டது.--வெளிப்படுத்தல் 2:10.

---

[R5846]

# உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள்

பிப்ரவரி 13,--பிலிப்பியர் 2:1-11

தாழ்மை, அனைவருக்குமான மாபெரும் பாடம்--ஒரே பேறானவர் ஓர் உதாரணமாய் உள்ளார்--அவர் எப்படி ஐசுவரியவான்--அவர் எப்படி ஏழையானார்--எதற்காக அவர் உயர்த்தப்பட்டார்--எப்படி அவர் உயர்த்தப்பட்டார்--சபை அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கின்றனர்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; that though He is tramping out the winepress where His grapes of wrath through his poverty might become rich."--2 கொரிந்தியர் 8:9

பரிசுத்தவானாகிய பவுல், ரோமாபுரியில் சிறைக்கைதியாக இருந்தபோது, நம்முடைய பாடத்தின் இந்த வார்த்தைகளை அவர் மிகவும் நேசித்தவர்களாகிய பிலிப்பியர் பட்டணத்தின் சகோதர சகோதரிகளுக்கு எழுதியுள்ளார். இவர்மேல் இவர்கள் கொண்டுள்ள அன்பின் அநேக ஆதாரங்களை இவர்களிடமிருந்து இவர் பெற்றுள்ளார். பரிசுத்தவானாகிய பவுலின் தேவைக்கான நேரங்களில் உதவினவர்கள் என்று வேறு எந்த சபையும் குறிப்பிடப்படவில்லை. அவருக்கு அவர்கள் செய்த விசேஷமான உதவி தெசலோனிக்கேயாவில் இருமுறையும் (பிலிப்பியர் 4:16), கொரிந்துவில் ஒரு முறையும் (2 கொரிந்தியர் 11:9), இப்பொழுது ரோமாபுரியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிலிப்பியர்களுக்கு எழுதின நிரூபம், சந்தோஷத்தின் நிரூபமாகக் குறிப்பிடப்படுகின்றது. காரணம் அங்குள்ள சகோதரர்களின் உண்மையின் நிமித்தம், அப்போஸ்தலரின் இருதயம் மிகுதியாய் உள்ளுணர்வை வெளிக்காட்டியது. அவர்களின் அன்பை அவர் பாராட்டுகின்றார் எனவும், அத்தகைய அன்பு ஒருவரோடொருவரிலும், அனைவர் மேலும் நிரம்பிவழிய வேண்டும் எனவும், அவர்கள் அறிந்திருக்க அவர் விரும்பினார். அவருடைய சந்தோஷமானது, சகோதரர்கள் சரியான கிறிஸ்துவின் சிந்தையை, அதன் அன்பு மற்றும் இணக்கத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்று அவர் அறிந்து கொள்வதைப் பொறுத்துதான் முழுமை அடையும். ஆகையால், அத்தகைய குணலட்சணத்தை வளர்த்துவதற்குத் தேவையான நிபந்தனைகளை அவர்கள் நினைவில் கொள்ளும்படி அவர் புத்தி கூறுகின்றார். ஒன்றையும் அவர்கள் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யக்கூடாது. அவர்களுடைய அனைத்து நடக்கைகளிலும் பணிவு, மனத்தாழ்மை மற்றும் மற்றவர்களின் நற்பண்புகளை உய்த்துணர்வதற்கான (கண்டு கொள்வதற்கான) விருப்பம், அதாவது மற்றவர்கள் தங்களைவிட மேன்மையானவர்களா என்று கவனிப்பது காணப்பட வேண்டும்.

இது அவர்கள் தங்களைத் தாங்களே வாஞ்சித்துக் கொள்ளவேண்டும் என்று அர்த்தம் கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் உண்மையான பண்பு மற்றும் குணலட்சணம் எங்கெல்லாம் காண்பிக்கப்படுகின்றதோ, அதன் மதிப்பை உணர்ந்து கொள்வதிலும்--மற்றவர்களிடம் உயர்தரமானப் பண்புகளைக் கவனிப்பதிலும் மற்றும் அந்த பண்புகள் உய்த்துணராதப் போது அவைகள் காணப்படும் என்றும் பெருந்தன்மையாய் எதிர்ப்பார்ப்பதிலும்--கர்த்தருடைய நோக்கத்தின் நலத்தைக் கருதி, சுயசித்தம் அல்லது பெருமையைப் புறக்கணித்தலும், விழிப்பாய்/எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஆகையால், அவர்கள் தங்கள் சொந்த விஷயங்களை அல்லது நலன்களை மாத்திரம் கவனிக்கிறவர்களாய் இருக்காமல், மற்றவர்களுடையதையும் அதாவது மற்றவர்களின் உரிமைகள் மற்றும் மற்றவர்களின் திறமைகளையும் கவனிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். இதுதான் பரிசுத்த ஆவியின் அடையாளமாகவும், தெளிந்த புத்தியுடைய ஆவியின் அடையாளமாகவும் இருக்கும் எனவும், இது கிறிஸ்துவின் பின்னடியார்களிடம், அவர்கள் கிருபையிலும் போதகரின் குணலட்சணங்களுக்கு ஒத்து வளரும்போதும், வரும் என்றும் அப்போஸ்தலர் நமக்க உறுதியளிக்கின்றார்.

இந்த சிந்தை அல்லது பண்பு, இயேசுவில் முழுமையாக எடுத்துக்காட்டி விளக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். அவர் மனிதனாக வருவதற்கு முன்பிருந்த நிலையில் அதாவது, தேவனுடைய சாயலில், ஆவிக்குரிய ஜீவியாக இருந்தபோது, இயேசு மனத்தாழ்மையுடன் இருந்தார். அவர் சாத்தான் செய்தது போல தன்னை உயர்த்துவதற்கும் தன்னுடைய சொந்த நாமத்தைவிட உயர்ந்த நாமத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதற்கும் வேண்டி தெய்வீக அதிகாரத்தை வன்முறையாகப் பறித்துக்கொள்ள எண்ணம் கொள்ளவில்லை. பிதாவாகிய தேவனுக்குத் தன்னை சமமாக்குவதன் மூலம் திவ்விய மகிமை மற்றும் கனத்தைக் கொள்ளையாடுவதற்கான எந்த எண்ணமும் அவரிடம் காணப்படவில்லை. மாறாக அவர், "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்றும், "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வந்தேன்" என்றும், "பிதா எல்லாரிலும் பெரியவராய் இருக்கிறார்" எனக்கூறின பின்பும், அவரிடம் அதே ஆவியே காணப்பட்டது.--லூக்கா 22:42; யோவான் 6:38; 10:29; 14:28.

போதகர், பிதாவின் மேல் இந்த பயபக்தியான பண்பையே எப்போதும் கொண்டிருந்தார். மேலும் தெய்வீக ஞானம், அன்பு, நீதி மற்றும் வல்லமையின் மேல் முழு நம்பிக்கையும், உறுதியும் கொண்டிருந்தார். ஆகையால் பிதா திட்டமிட்ட நேரம் வந்தபோது--அதாவது, உலகத்தை முதலில் மீட்கவும் பின்னர் அதன் இராஜாவாகுவதற்கும் விடுவிக்கிறவராகுவதற்கும் ஓர் இரட்சகரை அவர் அனுப்பும் நேரம் வந்தபோது--இந்த மாபெரும் ஊழியத்தை தேவனுக்கும் மனுஷருக்கும் செய்யும்படியான கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படியாக மாபெரும் லோகாஸிடம், அதாவது, "பிதாவுக்கு ஒரே பேறானவரிடம்" வந்தபோது அது உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்!" என்பதே தேவனுடைய அனைத்து சிருஷ்டிகளிலுமே பிரதானமானவரின் பதிலாக இருந்தது. ஆவிக்குரிய தளத்திலேயே பிரதானமான நிலையின் மேன்மையை விட்டுவிட்டு, ஒரு மனுஷனாக--மனுஷர்கள் மத்தியில் ஒரு மனிதனாக வருவது மாபெரும் அவமானம்/இழிவை உள்ளடக்குகின்றது. "மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" என்று சொல்லும்போது, அவர் பாவி அல்ல மாறாக அவர் ஆதாம் முதலில் காணப்பட்டது போல தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் பரிபூரணமாய் காணப்பட்டார்--அதாவது, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" காணப்பட்டார்.

## "மனுஷனாகிய கிறிஸ்து இயேசு"

இயேசு தன்னை மனுஷர் மத்தியில் ஒரு மனிதனாக சுபாவம் மாற்றப்பட்டதைக் கண்ட பின்பும், அவர் பிதாவிடம் காட்டின அதே உண்மையை இன்னமும் தக்கவைத்துக் கொண்டிருந்தார். "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?" (லூக்கா 2:49) என்று அவர் கூறினதை நாம் கேட்கும்போது, அவர் ஒரு சிறு பிள்ளையாகத் தான் இருந்தார். சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதை அடையும் வரையிலும் அவரால் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க முடியாது என்று அறிந்த அவர் முப்பதாவது வயது நெருங்கும் வரையிலும் வீட்டில் அமைதியாக இருந்தார். பின்னர் காலம் தாழ்த்தாமல் அவர் யோர்தானில் யோவான் ஸ்நானகரிடம் சென்றார், மேலும் வெளிப்படையான முழுக்கின் மூலம் பிதாவின் சித்தத்திற்கு தன்னுடைய முழுமையான கீழ்ப்படிதலை--மரணம் வரையில் அவருடைய வாழ்க்கையை முழுமையாய் அர்ப்பணித்தலை அவர் சாட்சி பகர்ந்தார்.

யோவான் சாட்சி கொடுத்தது போல, அவர்மீது பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தல் வந்தது. பின்னர், "வானங்கள் (மேலான விஷயங்கள்) அவருக்குத் திறக்கப்பட்டது" என்று நாம் வாசிக்கின்றபடி தேவன் அந்த ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவருக்கு ஒரு விசேஷமான மனரீதியான வெளிச்சத்தைக் கொடுத்தார். எகிப்திலிருந்து விடுதலைப் பெறுவதற்கும், பெலப்படுவதற்கும் இஸ்ரயேலர்களால் அடித்து புசிக்கப்பட்ட பஸ்கா ஆட்டின் நிஜமும், ஆரோனால் பாவநிவாரணபலியாக அடிக்கப்பட்ட காளையின் நிஜமும், மோசேயால் உயர்த்தப்பட்ட சர்ப்பத்தின் நிஜமுமான தன்னுடைய சொந்த மரணம் தேவனுடைய ஜனங்களை சாத்தானின் அடிமை நுகமாகிய பாவத்தினின்று விடுவிக்கும் என்பதை உள்ளடக்கிய தெய்வீகத் திட்டம் தெளிவானது.

இவ்வணைத்து அனுபவங்களிலும் போதகர் தேவனிடம் உண்மையுள்ளவராகவும், கடமை தவறாதவராகவும், அவருடைய உடன்படிக்கைக்கு கடமை தவறாதவராகவும், நீதியின் கொள்கைகளுக்கும் கடமை தவறாதவராகவும் இருந்தார் என்று நாம் பார்க்கின்றோம். ஆகையால் தான், அவரைக் குறித்து இவ்வாறாக எழுதப்பட்டுள்ளது. அதாவது, "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்." (சங்கீதம் 45:7) ஆனந்த தைலம் என்பது நமது கர்த்தரின் பரிசுத்தமான சந்தோஷங்களையும், அவர் தமக்கென்று எந்த புகழையும்/நற்கீர்த்தியையும் தேடாத போதும், அவர் உண்மையிலேயே தரித்திரரானபோதும்--முடிவில் தம் ஜீவனைக் கூட இழந்த போதும்--வேதாகமத்தில் வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் தேவனுடைய சித்தத்திற்கும் கடமை தவறாமல் இருந்த போதும் அவரை உறுதியாய் நிலைநிறுத்தின பரிசுத்தமான எதிர்கால நம்பிக்கையையும் குறிக்கின்றது.

"எல்லாம் முடிந்தது!" என்பது தான் கல்வாரியில் அவருடைய கடைசி கூக்குரலாக இருந்தது. அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் நிறைவடைந்தது--தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் பலியின் ஊடே, அவர் செய்ய வேண்டும் என்று பிதா அவருக்குக் கொடுத்துள்ள அனைத்திற்கும் கீழ்ப்படிந்து இருப்பேன் என்று அவர் முழுமையாக ஏற்றுக்கொண்டது நிறைவேறி முடிந்து விட்டது. ஆ, இனி (செய்ய) வினைப்புரிய வேண்டியது தேவனே! அவர் தன்னுடைய உண்மையுள்ளவரை மரணத்திலேயே விட்டுவிடுவாரோ? இல்லை, "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்" தன்னுடைய உண்மையான/விசுவாசமான குமாரனுக்கு தன்னுடைய நலமான வாக்குத்தத்தங்களை நிறைவேற்றினார்.

இதைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது, "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." ஒரு மதிப்புள்ள பெயருக்கும், ஒரு கனத்திற்கும், ஒரு தனித்தன்மைக்கும், மற்ற அனைவரையும்விட மேலான ஓர் ஸ்தானத்திற்கு ஆகும். (வசனம் 9-11). அவர் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டார். மேலும் பிதாவினால் தன்னுடைய சொந்த வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டு, மகிமை மற்றும் அழியாமையாகிய திவ்விய சுபாவமும்

கூட்டிக்கொடுக்கப்பட்டவரை, தேவனுடைய அனைத்து தூதர்களும் வணங்கினர். "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்" என்ற பரலோக ஜீவிகளின் மகா சத்தத்தை நாம் நன்றாய் புரிந்து கொள்ளலாம்--வெளிப்படுத்தல் 5:12.

## மேசியாவின் மகிமையான இராஜ்யம்

ஆனால் மாபெரும் மீட்பருக்கு இன்னமும் வரவேண்டிய அதிகமான மகிமையும் உண்டு. அவரை சிலுவையில் அறைந்தவர்கள், ஆம், அவர் யார் பொருட்டு மரணத்தை ருசிபார்த்தாரோ, அந்த மனுக்குலம் முழுவதும், அவர்கள் பொருட்டு அவர் ஏறெடுத்த அவரின் பலியைக் குறித்தும், அதன் விளைவாக அவருக்குக் கிடைத்த மேலான மகிமையையும், மேலாக உயர்த்தப்பட்டதைக் குறித்தும், மேற்கொண்டு தெரிந்து கொள்வர். அவர் உலகத்தின் மகிமையான இராஜாவாக இருக்கப்போகிறார், மேலும் ஓர் ஆயிரம் வருடங்கள் அரசாளவும் போகிறார். வசனம்-10 தெரிவிக்கிறப்படி முடிவில், பூமியின் முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கைப்பண்ணும். மேலும் இவ்வாறாக அவரை அடையாளம் கண்டு கொள்ளவும், அவருக்குக் கீழ்ப்படியவும் விரும்பாத மற்ற அனைவரும் "புத்தியற்ற மிருகஜீவன்கள்" என ஜனத்தின் மத்தியிலிருந்து அழிக்கப்படுவர். (2 பேதுரு 2:12; யூதா 1:10) "அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்." (அப்போஸ்தலர் 3:23) மேலும் குமாரனின் இத்தகைய அனைத்து மகிமையும் நேரிடையாகப் பிதாவை மகிமைப்படுத்துவதாகும், காரணம், இரட்சிப்பின் முழுத்திட்டமும் பிதாவுடையதென்றும், அதை குமாரன் மூலம் செயல்படுத்துகின்றார் என்றும், நமக்கு அப்போஸ்தலர் உறுதியளிக்கின்றார்.--1 கொரிந்தியர் 8:6.

இப்பொழுதும் நம்முடைய பொன்னான வாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அப்போஸ்தலரின் பாடத்தை நாம் கவனியாமல் விட்டுவிடக் கூடாது. உலகமானது அடுத்தடுத்து மீட்பரின் மாபெரும் பலி மற்றும் பின்வருகிற இராஜ்யத்தினால் நன்மை பெற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்றாலும், மனித பரிபூரணத்திற்குள் மீண்டும் வருவதற்கான வாய்ப்பை அனைவரும் பெற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்றாலும், உலகளாவிய ஓர் இராஜ்யமும், தேவனிடத்திலிருந்து ஒரு விசேஷமான ஆசீர்வாதமும் இப்பொழுது மீட்பரை ஏற்றுக்கொண்டு, தங்கள் வாழ்வை அவர் போலவே பிதாவின் சித்தத்திற்கும் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கும், அர்ப்பணிக்கும் சபைக்கே உள்ளது. இவர்கள் இராஜ்யத்தில் அவரோடு உடன்பங்காளிகள் ஆகப்போகின்றனர், மேலும் அவருடன் ஒரு ஆயிரம் வருடங்கள்--ஆம், அதன் பின்பும் ஆட்சி செய்யப் போகிறார்கள்.

இந்த பாடத்தின் சாரம் அப்போஸ்தலர் பேதுருவாலும், வேறு ஓர் இடத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6) தாழ்மையான இருதயம் உள்ளவர்களால்தான் தங்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் மாபெரும் பாடங்கள் என எவைகளை கற்க வேண்டுமோ, அதை தாங்கள் உயர்த்தப்படுதலுக்கு ஆயத்தமாகுவதற்கு முன்பு கற்றுக்கொள்ள ஆயத்தமாக இருப்பர். தோற்றவரும் முடிவில் அழிக்கப்படப் போகிறவருமான சாத்தானிடம் சுயத்திற்கு நாடுதல் மற்றும் சுயநலத்தின் வழிமுறை உதாரணமாய் உள்ளது. இந்த சமயத்திற்காக நாடுதலின் ஆவிதான் உலகத்தின் ஆவி என்று குறிப்பிடப்படுகின்றது, மேலும் இது வேதத்தில் முன்னமே உரைக்கப்பட்டப்படி, உலகத்தை மாபெரும் அழிவிற்குள் நடத்திச் செல்லப்போகின்றது. எனினும், இதிலிருந்து இவர்கள் மேசியா மற்றும் அவருடைய இராஜ்யத்தினால் காப்பாற்றப்படுவர், மேலும் தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் என்னும் மாபெரும் பாடத்தை கற்கவும், பலனைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பு கொடுக்கப்படும்.

மாறாக இயேசுவோ நமக்கு மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கு நடத்திச் செல்லும் வழிமுறைக்கு உதாரணம் அளித்துள்ளார், அதாவது, தெய்வீக சித்தம் என்னவாக இருப்பினும், அதற்கு முழுமையாக கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தலின் மற்றும் முழுமையாக சுயத்தை தாழ்த்துவதின் வழிமுறையாகும். இரட்சகர், அவருடைய கீழ்ப்படிதலின் பலனாக தனக்கான மகிமையில் பிரவேசித்ததுப்போல, அவருடைய ஜனங்களில் உண்மையுள்ளவர்களாகிய சபையும், தங்களின் தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலே நிரூபிப்பதன் மூலம் அவருடைய எதிர்கால மகிமையின் இராஜ்யத்தில் பங்கு கொள்ளுகிறவர்களாகவும், உடன் சுதந்திரர்களாகவும் இருப்பார்கள்.

---

[R5849]

# கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை

பிப்ரவரி 20.--அப்போஸ்தலர் 4:32-5:16.

கிறிஸ்துவின் ஆவி இரக்கமுடையது, அன்புடையது--இது ஆரம்பகால சபையிலும், இன்றும் எடுத்துக்காட்டப்பட்டது--அன்பு பரந்த மனப்பான்மையுடையது--"தற்பொழிவை மாத்திரம் நாடாது"--பொதுவுடைமைக் கொள்கை சோதிக்கப்பட்டது/முயற்சிக்கப்பட்டது--ஏன் தோல்வியுற்றது--ஏன் அது அனுமதிக்கப்பட்டது--அனனியா மற்றும் சப்பீராள்--அவர்களின் தண்டனை எவ்வளவு கடினமாய் இருந்தது.

"*சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்.*"--1 பேதுரு 1:22.

தேவன் அன்பாகவே இருக்கின்றார்; மேலும் அனைவரும் தாங்கள் எந்த அளவிற்கு தேவனோடு ஐக்கியம் கொண்டுள்ளார்களோ, அந்த அளவிற்கு அவரைப் போன்ற குணலட்சணத்தையும் பெற்றிருந்து, அன்புடனும், பெருந்தன்மையுடனும், இரக்கத்துடனும் இருக்க வேண்டும். சுயநலம் எதிராளியான சாத்தானுடையதாகும். இவர் தான் வழிவிலகிப்போகத்தக்கதான பெருமையையும், பேராசையையும் அனுமதித்தது முதற்கொண்டு இவரிடத்தில் அந்த (சுயநலம் என்னும்) ஆவி உருக்கொண்டுள்ளது. உலகமானது, இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதியான சாத்தானின் தாக்கத்தினாலும், வீழ்ச்சியின் தாக்கத்தினாலும், சுயநலமான உலகமாகவும், தேவபக்தியற்றதாகவும் உள்ளது.

ஆயிரவருட அரசாட்சியின் வேலை என்பது மனுக்குலம் அனைத்திற்கும் பிசாசின் கண்ணியிலிருந்து மீட்கப்படுவதற்கான ஒரு முழுமையான வாய்ப்பை அளிப்பதாகும்--அதாவது, திரும்பக்கொடுத்தலை அளிப்பதாகவும், ஆதாமுக்குள் இழந்துவிட்டதும், அவருக்காகவும் அவருடைய சந்ததிக்காகவும் இயேசுவால் மீட்கப்பட்டதுமான அனைத்தையும் திரும்பப் பெருவதாகவும் இருக்கும். அது ஒரு மகிமையான ஆயிரவருடமாம். விருப்பமுள்ளவர்கள் மற்றும் கீழ்ப்படிதலுள்ள அனைவருக்கும் அது உதவுவதாகவும், சீர்தூக்கிவிடுவதாகவும் இருக்கும். அக்காலத்தில் சபை இயேவுவோடு ஆவிக்குரிய தளத்தில் மனுஷர்களின் பார்வைக்கு மறைவாகவும், தேவனுடைய வல்லமைகள் அனைத்தையும் தரித்தவர்களாகவும் காணப்படுவார்கள். அவளுடைய வேலையும், அவளுடைய கர்த்தரைப்போன்றே விவரிக்கப்பட்டுள்ளது. அவள் தன் கர்த்தருடன் அவருடைய இராஜ்யத்தின் ஆளுகையிலும் அவருடைய ஆசாரியத்துவத்திலும், அவருடைய நியாயத்தீர்ப்பிலும்--அதாவது மனுக்குலத்திற்கு சிட்சைகளையோ அல்லது பலன்களையோ அளிப்பதிலும் பங்கு கொள்வாள். மேலும் இவர்கள் மனுக்குலத்தைப் போதிக்கவும் அவர்களை பரிபூரண நிலைக்கு சீர்த்தூக்கவும் வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் நியமிக்கப்படுவர்.

சுவிசேஷ யுகம் என்னும் காலப்பகுதியில்தான் தேவன் இந்த சபையை மனுக்குலத்திலிருந்து தெரிந்து கொண்டு வருகின்றார். தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரும் எந்த பிரிவினர்களை சார்ந்தவர்களாய் இருந்திருந்தாலும் இவர்கள் பரிசுத்தவான்களே. குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருக்கிறவர்களைத் தவிர வேறு எவரும் இந்த வகுப்பினராக முடியாது என தேவன் முன் குறித்துள்ளார். (ரோமர் 8:29) சபை, விசேஷமான பரீட்சைகளையும் படிப்பினைகளையும் தனக்கென்றே நியமிக்கப்பட்டுள்ள மகிமையான வேலைக்கே--அதாவது, உலகத்தை நியாயந்தீர்க்கும் ஆசீர்வாதத்திற்கென பெற்றிருக்கிறாள். சபை, மற்றவர்களுக்காக அனுதாப/இரக்கப்படுகிறவர்களாய் மாத்திரம் இராமல், இருதயத்திலும், முடிந்தவரையில் வெளிப்புற ஜீவியத்திலும், சிந்தையிலும், கிறிஸ்துவை ஒத்திருக்கும் தன்மையை அடைய இந்த பண்பை பயிற்சி செய்யவும் வேண்டும்.

பதிவு பண்ணப்பட்டிருக்கும் விஷயங்கள் குறுகிய காலத்திலேயே விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகிற்று என்று நமக்கு தெரிவிக்கின்றது. அன்பின் ஆவி அவர்களின் இருதயங்களில் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது--அதாவது தேவனிடத்தில் நன்றியுடைமை, அவருடைய கிருபையை உணருதல், அவருக்கு ஊழியம் புரிவதற்கான வாஞ்சை மற்றும் சகோதரர்பால் அன்பும் இரக்கமும் கொள்வதாகும்.

சிலர் ஏழ்மை நிலையில் இருக்கின்றனர் என நாம் உணர்கின்றோம். மேலும் அன்பின் ஆவியினால் ஆளப்படுகின்ற போதிய வசதிபடைத்தவர்களும், தங்களைப் போன்றே அனைத்து ஏழை சகோதரர்களும் நன்மைகளை பெற்றிருக்க வேண்டுமென தாங்கள் விரும்புவதை உணர்ந்துள்ளனர். முதலில் அவர்கள் தேவைகளை உணர்ந்த போது தனிப்பட்ட விதத்தில் ஒருவருக்கொருவர் கொடுத்தனர். இது இன்னும் முன்னேற்றம் அடைந்தபோது ஒரு சிறு சமுதாயத்தை (community) அவர்கள் அமைத்தனர். திரளாக ஆஸ்தியுடையவர்கள் தங்களுடைய ஆஸ்திகளை விற்று, அந்த பணத்திலிருந்து தங்களுக்கும் (community) சமுதாயத்திலுள்ள மற்ற அனைத்து அங்கங்களுக்கும் குறிப்பிட்ட அளவு கிடைக்க வேண்டும்--அதாவது, மற்றவர்களுடன் சமபங்கு என்ற விருப்பத்துடன் அந்த பணத்தை கர்த்தருடைய நிதி இலாக்காவிடத்தில் ஒப்படைத்தனர்.

மிக அருமையான ஆவி ஒன்றை இது வெளிப்படுத்துகின்றது. மேலும் பரிபூரணமான சூழ்நிலைகளில் இது விவேகமும்/ஞானமும் தகுதியும் உள்ள வழிமுறையாக இருந்திருக்கும். இப்படி இருக்கவே சமுதாய (முறை) தோல்வியில் முடிவடைந்தது. எப்படியிருப்பினும் கர்த்தர் அந்த சோதனையையும், தோல்வியையும் நல் நோக்கத்திற்காகவே அனுமதித்தார்--அதாவது, தற்காலத்தில் இத்தகைய எந்த சமுதாயமும் தமது ஜனங்கள் மத்தியில் சாத்தியப்படாது என்று நமக்கு காட்டுவதற்கே சமுதாயக்கோட்பாடு மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் சமயத்தில் அருமையாக வெற்றிபெரும். ஆகிலும் அது அப்போஸ்தலர்களின் நாட்களில் சாத்தியப்படாதது போன்று/நடைமுறைப்படுத்தமுடியாதது போன்று தற்காலத்திலும் இயலாது/சாத்தியப்படாது.

## அப்போஸ்தலனல்லாத பர்னபா

இந்த பாடம் நமக்கு தேவ பக்தியுள்ள மனுஷனும், சபையில் விவேகம்/ஞானமும் அதிகாரமுமுள்ள பர்னபாவை அறிமுகப்படுத்துகின்றது. அவருடைய நாமம் ஆறுதலைக் குறிக்கின்றது. மேலும் இது உண்மையிலேயே மிகவும் பொருத்தமான பெயரே/நாமமே. இவருடைய இயற்கையான பெயர் யோசே ஆகும். மேலும் இவருக்கு பர்னபா என்னும் புதுப்பெயரை அப்போஸ்தலர்கள் வழங்கின போது இவர் மிகவும் நல்ல பாத்திரமாக/குணச்சித்திரமாக இருந்திருக்க வேண்டும். பர்னபா என்பது இவர் அருமையான ஆவியைப் பெற்றிருந்தவர் எனவும், இவருடைய அன்றாட ஜீவயத்தில் சகோதரர்களுக்கும் தான் தொடர்பு கொண்ட அனைவருக்கும், "ஆறுதலின் மகனாகவே" இருந்தவர் எனவும் குறிப்பிடுகின்றது.

பர்னபாவிடம் ஒரு சொத்து அல்லது நிலம் இருந்தது. அதை விற்று அதன் கிரயத்தைக் கொண்டு அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார். இவர் அப்போஸ்தலர் அல்ல. இவர்களுக்கு பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மாத்திரம்தான் இருந்தனர். ஆனால், இந்த சமயத்தில் யூதாஸின் இழப்பின் காரணமாக பதினொரு பேரே இருந்தனர். பரிசுத்தவான் பவுல் பன்னிரெண்டாவது அப்போஸ்தலர். கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம். மற்றும் "மகாபிரதான அப்போஸ்தலரிலும், ஒன்றிலும் குறையுள்ளவனல்லாதவர்." இன்னமும் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு தன்னுடைய கண்கள் திறக்கப்படாத நிலையில் இருந்தார். (2 கொரிந்தியர் 11:5)

பர்னபா பொதுவான உதவித்தொகையிலிருந்து மற்றவர்களோடு தன்னுடைய பங்கையும் பெற்றுக்கொள்ள முழு விருப்பத்துடன் காணப்பட்டார்; இந்த திட்டத்தின் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டவர்களின் கூட்டத்தில்தான், அனனியா மற்றும் அவருடைய மனைவி சப்பீராளும் காணப்பட்டார்கள். இவர்களுக்கு நிலம் இருந்தது. அதை விற்று கிரயத்தில் ஒரு பங்கை தங்களுக்கென்று வஞ்சித்து வைத்து, மீதத்தை முழுக்கிரயத்தைக் கொடுப்பதுபோன்று அப்போஸ்தலர்களிடத்தில் கொண்டுவந்தனர். இவர்கள் தங்களுக்குள் இரகசிய திட்டம் தீட்டி, நிதி இலாக்காவிடத்தில் தாங்கள் கொடுத்த பணமே நிலத்தை விற்ற போது கிடைத்த முழு தொகை என்று சொல்வதற்குத் தீர்மானித்திருந்தார்கள். நம்முடைய பாடம் பரிசுத்தவான் பேதுரு எவ்வாறு இந்த விஷயத்தை கையாண்டார் என்று கூறுகின்றது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால் அவர், "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" என்றார். அவர் அனனியாவிடம் அந்த நிலம் அவருக்கு சொந்தமானது என்றும், அதை இந்த சமுதாயத்திற்கென்று நன்கொடையாக கொடுக்க வேண்டுமென்றும், அவர் கட்டாயப்படுத்தபடவோ அல்லது வற்புறுத்தப்படவோ இல்லை என்றும், அது சொந்தமாகத்தானே விரும்பிக் கொடுக்கும் நன்கொடை

மாத்திரமே என்றும், இதினிமித்தம் சமுதாயத்தாரிடத்தில் மாத்திரம் பொய் கூறாமல், தேவனிடத்திலும் பொய் கூறியுள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் கீழே விழுந்து செத்தார்--அதாவது, கர்த்தரால் அடிக்கப்பட்டார், பிறகு அவருடைய மனைவிக்கும் இதுவே சம்பவித்தது. இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று.

## ஏன் மனந்திரும்புதல் பிரசங்கிக்கப்படவில்லை

பரிசுத்தவானாகிய பேதுரு, தான் ஒரு காலத்தில் கர்த்தரை மறுதலித்த போது, தனக்குண்டான சோகமான/வருத்தம் நிறைந்த அனுபவங்களை மனதில் கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை. நம்முடைய கேள்வி, அவர் அவர்கள் மீது மரண தண்டனையை அளிப்பதற்கு பதிலாக, அனனியா மற்றும் சப்பீராளுக்கு இரக்கம் காட்டி, அவர்கள் எதில் தவறியிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி, அவர்கள் மனந்திரும்பவும் தங்களுடன் ஜெபத்தோடு இணையவும் ஏன் பரிந்துரைக்கவில்லை?

நம்முடைய கருத்து என்னவெனில், இந்த இரண்டு குற்றவாளிகளும் உண்மையில் தேவனுடைய பிள்ளைகள் அல்ல--இவர்கள் ஒருபோதும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்தலைப் பெறவில்லை, மேலும் கர்த்தர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஒரு மாபெரும் படிப்பினையைக் கொடுத்தார். சபைக்கு--அதாவது, அவர்கள் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் தொடர்பு வைக்காமல் பிதாவாகிய தேவனோடே தொடர்பு கொள்கிறோம் என்று அவர்களுக்கு நினைப்பூட்டுவதற்கே ஆகும். இந்த கோணத்தில் பார்க்கும்போது, கர்த்தருடைய பார்வையில் வஞ்சகம் அதுவும் விசேஷமாக தேவபக்தி சார்ந்த விஷயத்தில் என்பது எவ்வளவு பிரியமற்றது என்று அப்போது இருந்த சபைக்கும் எதிர்கால சந்ததியாருக்கும் போதிக்கும் நோக்கத்தில் இவ்விருவரும் தெய்வீக நியாயத்தீர்ப்பின் கீழ் பலியாக்கப்பட்டது தகுதியானதே/உகந்ததே ஆகும்.

ஒருவேளை அவ்விருவரும் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்களானால், அப்போது இவர்களுக்கான தண்டனை இரண்டாம் மரணமாகத்தான் இருக்கும், மேலும் இவர்கள் ஏதேனும் உயிர்த்தெழுதல் பெறுவார்கள் என்றோ அல்லது வருங்காலத்தில் கர்த்தரிடத்தில் கருணைப் பெறுவார்கள் என்றோ இவர்களைக் குறித்து எதிர்பார்க்க நமக்கு எவ்வித வேதவாக்கியங்களின் ஆதாரமும் இல்லை. ஆனால் ஒருவேளை இவர்கள் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளாக மாத்திரம் இருந்து ஆவிக்குரிய விஷயங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளாதவராக இருப்பார்களேயாகில், இவர்களுக்கான எதிர்கால நன்மைகள் அளிக்கப்படவில்லை. இவர்கள் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த மாபெரும் உலகமாகிய மனுக்குலத்திற்கு இன்னமும் உரியவர்கள். மேலும் இவர்கள் கர்த்தர் இயேசுவின் மூலம் தேவனுடன் ஒப்புரவாகும் ஆசீர்வாதத்தை முழுமையாய் இன்னும் பெறாதவர்கள். அத்தகைய மகிமையான கிருபையை/வாய்ப்பை பொதுவாக உலகத்திற்கென்று ஆயிரவருட அரசாட்சியில், "பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும்" போதும், சத்தியத்தின் அறிவிற்குள் கொண்டுவரப்படும்போதும், சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்பிற்குள் வரும் போதும் எதிர்பார்க்கப்படலாம்.

ஒருவேளை நம்முடைய அனுமானம் சரியாக இருக்குமாயின், நமது கர்த்தரோடு வருடக்கணக்காக இருந்து அவருடைய அற்புதங்களுக்கு சாட்சியாகவும் இருந்து, அவருடைய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு, அந்த வல்லமையினால் பிசாசுகளைத் துரத்தி, பிணியாளிகளைக் குணமாக்கி, யூதாஸிடமிருந்து மிகவும் வேறுபட்ட நிலையில் அனனியா மற்றும் சப்பீராள் உள்ளனர். அனனியா மற்றும் சப்பீராளுக்கான நம்முடைய அன்பான எண்ணம் என்னவெனில், ஒருவேளை அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லையென்றால், தாங்கள் செய்வதை முழுமையாக அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் தாங்கள் வஞ்சனை பண்ணுகிறோம் என்று அறிந்திருந்தாலும், அந்த விஷயத்தைக் குறித்த தெளிவான பார்வை அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்களைக் குறித்து நம்முடைய எதிர்பபார்ப்பு என்னவெனில், அவர்கள் மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்யவில்லை, மேலும் அவர்கள் இழந்த ஜீவனை உயிர்த்தெழுதலின் வேளையில் எல்லாவற்றையும் சரி செய்துக் கொள்வதற்கான முழு வாய்ப்பாகும். அப்போது அவர்களுக்குக் கிடைக்கும் வெளிச்சத்தில், அவர்கள் தேவனுக்கு உண்மையாய் இருக்கின்றார்களா? அல்லது இல்லையா? என்று இறுதியில் தீர்வு செய்யப்படவும், மீண்டும் பெற்றுக்கொள்வார்கள் என்பதே.

திட்டமிடப்பட்ட (செயலின்) விளைவு உணரப்பட்டது. தேவன் மீதும், மனரீதியாக அவருக்கு உரியதாகும், அனைத்தின் மீதும் மிகுந்த பயமும் மதிப்பும் அனைவருக்கும் வந்தது/உண்டானது. ஏதிர்காலத்தில் இவர்களின் ஆசீர்வாதத்திற்காக ஆயத்தம் பண்ணும் நோக்கத்திலும் இவர்களின் அனுபவம் சபையில் மற்றவர்களுக்குப் படிப்பினையைக் கொண்டுவரும் நோக்கத்திலும் பார்க்கும்போது, ஒரு தம்பதியர் கடுமையாக தண்டிக்கப்படுவது தகுதியானதே/உகந்ததே ஆகும்.

## இப்பொழுதும் அதே வஞ்சிக்கிற ஆவி

மற்றவர்களை நியாயந்தீர்க்கும் கர்த்தருடைய விஷயத்தை அடையாளப்படுத்துவதற்கான அதிகாரம் பரிசுத்தவானாகிய பேதுருவிடத்தில் இருந்தது போன்று நாம் வரம் பெற்றவர்கள் அல்ல. நம்மால் அறிய முடிந்த அனைத்தையும் வைத்து நாம் பார்க்கும்போது, இன்றும் அநேகர் இதைப்போன்று வஞ்சகமான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்பது போல தோன்றுகின்றது. நாம் அவர்களை நியாயம் தீர்க்க அனுமதிக்கப்படவில்லை, ஆனால் அவர்கள் நம்மிடம் கூறுவதிலிருந்து தங்களைத்தாங்களே நியாயம் தீர்த்துக் கொள்கின்றனர். கர்த்தருக்கும்--பிதாவாகிய தேவனுக்கும் தங்களை அர்ப்பணித்தவர்களாகக் கூறுகின்றனர்--அதாவது, தெய்வீக நோக்கத்திற்காக பலி செலுத்தியதாகக் கூறுகின்றனர். இயேசுவின் முழுமையான அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்கள் என்று கூறியும், சுயசித்தத்தின் மூலம் அதிகமாக வஞ்சித்து வைக்கின்றனர்.

இவர்களில் சிலர் சந்தேகத்திற்கு இடமின்றி அனனியாவைப் போன்ற வகுப்பினரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் கிறிஸ்தவர்களோடு பழக்கம் கொண்டுள்ளனர். ஆகிலும் பரிசுத்த ஆவியினால் ஒருபோதும் ஜெனிப்பிக்கப்படாதவர்களும், கிறிஸ்துவோடு எந்த பங்கும் இல்லாதவர்களும் ஆவார்கள். மற்றவர்கள் உண்மை கிறிஸ்தவர்களாகவும் இருந்து தாங்கள் அர்ப்பணித்ததில் ஒரு பகுதியை வஞ்சித்தும் உள்ளனர். இப்படியாக இருக்குமாயின் இரண்டாவதாகக் கூறப்பட்டவர்களே தங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் உறுதி கொள்ளலாம். ஆகையால்தான் அப்போஸ்தலர் கூறுகின்றார். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்." (1 கொரிந்தியர் 11:31, 32) கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவின் மீது கட்டும் அத்தகைய, கிறிஸ்தவர்கள் வேதம் காட்டுகின்ற பயங்கரமான சோதனையைக் கடந்து, மகா உபத்திரவத்தில், "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுக்க" வேண்டும். காரணம் இவர்கள் முழுமையாக பலிசெலுத்துவோம் என்ற தங்களின் உடன்படிக்கையின் படி வாழ, ஜீவிக்கத் தவறிவிட்டனர்.--வெளிப்படுத்தல் 7:9-17.

வேதம் தெரிவிக்கும் வஞ்சனை தேவனுடைய பார்வையில் விசேஷித்த விதமாய் பொல்லாங்கானது எனவும், இயேசுவின் பெயரளவிலான பின்னடியார்களிடத்தில் இது மிகப்பெரிய அளவில் செயல்படுத்தப்படுகின்றது என உண்மையாகவே தோன்றலாம். ------ "உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" என்பதே நமக்கான பாடமாகும்.

நம்முடைய ஆதார வாக்கியம் இங்கு பொருத்தமானதே. நாம் ஒருவரையொருவர் அன்பு கூற வேண்டும்--முதலாவது--நம்முடைய பரலோகத்தின் பிதாவையும், பின்னர் நம்முடைய பரலோகத்தின் கர்த்தர் இயேசுவையும், இறுதியாக சகோதரர்களையும் நாம் அன்பு செய்து வாய்ப்பு வரும்போது அவர்களுக்கு ஊழியமும் செய்ய வேண்டும். இவ்விதமாக நாம் விழிப்பாய் ஈடுபடும்போது, வஞ்சனையிலிருந்து காக்கப்பட்டு பரலோக இராஜ்யத்தில் நம்முடைய பங்கை அடைவதற்கு ஆயத்தமாயிருப்போம்.

# நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள்

***"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." 1 கொரிந்தியர் 11:26***

யூதர்களால் ஆசரிக்கப்படுகின்றதான பஸ்கா காலமானது சமீபித்திருக்கின்றது; இந்த வருடத்தினுடைய ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி துவங்குகின்றது. ஆனால் இந்த ஒரு காலப்பகுதிகளில் கிறிஸ்தவர்களுடைய கவனமானது, பஸ்கா பண்டிகைக்கு முன்பு இடம்பெறுகின்றதும், தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகின்றதுமாகிய, ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதல் மீதே விசேஷமாய் மையம் கொண்டுள்ளது. ஆகையால் நாம் ஆசரிக்கின்றதான இந்தப் பஸ்கா காலமானது, மாபெரும் நிஜம் தொடர்புடையதாகும். இந்த ஒரு காலப்பகுதியில், கிறிஸ்தவர்களாகிய நாம் சரித்திரம் அனைத்திலும் பெரியதொரு நிகழ்வாகிய, உலகத்தினுடைய இரட்சகரின் தியாக மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம்.

ஆயிரக்கணக்கான யூதர்களும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்களும் இந்த ஒரு காலக்கட்டத்தில், இந்த மிகவும் முக்கியமான நிகழ்வைக் கடமையான விதத்திலும், சடங்காச்சாரமான சம்பிரதாயங்கள் சிலவற்றினாலும் ஆசரித்தாலும், இவ்விரண்டு மதத்தாரிலும், எவருமே இவ்வாசரிப்பினுடைய உண்மையான அர்த்தத்தினை உணராதவர்களாகவே இருக்கின்றனர் என்பதின் நிமித்தம் நாம் மிகுந்த மனவருத்தம் அடைகின்றோம். இவர்களுடைய மனங்களானது, அதன் உண்மையான அர்த்தத்தின் விஷயத்தில் விழித்துக்கொள்ளுமானால், உலகம் அறிந்திராத அளவுக்கான ஒரு மத மறுமலர்ச்சி ஏற்படக்கூடும். ஆனால் பரிசுத்த பவுல் குறிப்பிடுவதுபோல, "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அநேகருடைய மனதைக் குருடாக்கினான்" மற்றும் பகுதி திறக்கப்பட்ட புரிந்துகொள்ளுதலின் கண்களை உடைய சிலரும் குருடர்களாகவும், தொலைவில் பார்க்கமுடியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்று பரிசுத்த பேதுரு விவரிக்கின்றார். இவர்கள் 3000 வருடங்களுக்கும்மேலாக, நிழலிலும், நிஜத்திலும் ஆசரிக்கப்பட்டதான இந்த அனுசரிப்புச் சார்ந்த தேவ ஆழங்களைப் பார்க்கமுடியாதவர்களாய் இருக்கின்றனர்.

இஸ்ரயேலர்கள் பஸ்காவை நியாயப்பிரமாணத்தினுடைய முதலாவது அம்சமாகவும், தங்கள் ஜாதிக்கான மாபெரும் நினைவுகூருதல்களில் ஒன்றாகவும் ஆசரிப்பதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். ஆகையால் உலகமெங்குமுள்ள யூதர்களாலும் மற்றும் கடவுளைக் கண்டறிவது அசாத்தியம் எனும் கொள்கை உடையவர்களாலும் (agnostics) கூடப் பஸ்காவானது ஓரளவுக்கு ஆசரிக்கப்படுகின்றது என்று நாம் பார்க்கின்றோம். இவர்கள் இன்னமும் பஸ்காவை, முற்காலத்து வழக்கமெனக் கொஞ்சம் மதிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஆனால் அறிவுகூர்மையுள்ள மனங்களை உடையவர்களான நமது யூத நண்பர்கள், இந்த அனுசரிப்பினுடைய அர்த்தமென்ன என்று ஒருபோதும் விசாரியாதது விநோதமாய்க் காணப்படுகின்றதல்லவா?

பஸ்கா ஆட்டுக்குட்டியானது ஏன் அடிக்கப்பட்டு, புசிக்கப்படுகின்றது? ஏன் இரத்தமானது வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும்தெளிக்கப்படுகின்றது? இப்படிச் செய்வதற்குத் தேவன் கட்டளையிட்டுள்ளார் என்பது உண்மைதான்; ஆனாலும் தெய்வீகக் கட்டளைக்குப் பின்னாக உள்ள காரணம், நோக்கம் என்ன? என்ன பாடம், என்ன அர்த்தம் உள்ளது? விவேகமுள்ள தேவன், விவேகமான கட்டளைகளைத்தான் கொடுப்பார் என்பது உண்மையே; ஏற்றக்காலத்தில் யேகோவா தேவன் தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் அனைத்துக் காரியங்களினுடைய அர்த்தங்களைப் புரிந்துகொள்ளச் செய்வார். யூதனால் தனக்கான ஓய்வுநாள் என்பது இளைப்பாறுதலுக்கான, ஆசீர்வாதத்திற்கான, மற்றும் வேலைகளிலிருந்து, கவலைகளிலிருந்து, மரணத்திலிருந்து விடுதலைக்கான வரவிருக்கிற காலப்பகுதிக்கு நிழலாய் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடியுமானால், இதுபோலவே மோசேயின் வாயிலாகக் கொடுக்கப்பட்ட அம்சங்கள் அனைத்தும், "ஏற்றக்காலத்தில்" அருளப்படப்போகின்றதான பல்வேறு ஆசீர்வாதங்களுக்கு நிழலாய்க் காணப்படத்தக்கதாகக் கர்த்தரினால் வடிவமைக்கப்பட்டுள்ளது என அவனால் ஏன் காண முடியவில்லை?

## முதற்பலன்கள் மற்றும் பிற்பலன்கள்

இயேசுவே "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருக்கின்றார் என்றும், மனுக்குலத்தார் யாவருடைய பாவங்களுக்காக ஏற்றவேளையில் இயேசுவினுடைய பலியின் புண்ணியம் செயல்படுத்தப்படுவதின் வாயிலாக, மனிதனுக்கான தண்டனை சந்திக்கப்படுதலின் மூலம் உலகத்தின் பாவம் தள்ளுபடியாவது சாத்தியமாகும் என்றும் காண்கிற கண்களை உடையவர்கள் பாக்கியவான்களாவர். இதுவரையிலும் சபை மாத்திரமே இயேசுவினுடைய மரணத்தினாலான புண்ணியத்தினைப் பெற்றிருக்கின்றனர். முழு உலகமும் தெய்வீகத் தயவை இழந்து, துன்பம், வலி ஆகியவற்றுடனுள்ள மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் வந்துள்ளபடியால், இந்தத் தண்டனைத் தீர்ப்பானது (அ) சாபமானது மாற்றிப்போடப்படுவதற்கு முன்னதாக, நீதியானது திருப்திப்படுத்தப்படுவது அவசியம் என்றும், அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக" — நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி, "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார்" என்றும் காண முடிந்தவர்கள் மிகுந்த தயவு பெற்றவர்களாய் இருக்கின்றனர். இப்படியாக அவர் ஒரு புதிய வழியை, நித்திய ஜீவனுக்கான ஒரு வழியைத் திறந்து வைத்தார்.

வேதவாக்கியங்களானது கிறிஸ்துவின் சபையை, "முதற்பேறானவர்களின் சபை" என்றும், "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்றும், தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்கள்" என்றும் அழைக்கின்றது (எபிரெயர் 12:23; யாக்கோபு 1:18; வெளிப்படுத்தல் 14:4). இவ்வார்த்தைகளானது இறுதியில் தேவனுடைய குடும்பத்தில் பிற்பிறப்புகள் என்ற மற்றவர்கள் இருப்பார்கள் என்று, சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; பிற்பலன்கள் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றது. பொதுவாய்க் கிறிஸ்தவ ஜனங்கள் இந்த வேதவாக்கியங்களைக் கவனிக்கத் தவறிப்போனவர்களாக, அதுவும் இவைகளுக்கு அர்த்தம் பொருத்தும் விஷயத்தில் தவறிப்போனவர்களாக இருந்து, வேதாகமத்தில் முதற்பலன்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், பிற்பலன்கள் இல்லை என்றும் நம்புகிறவர்களானார்கள்.

ஆனால் பஸ்கா நிழலானது, இஸ்ரயேலர்கள் அனைவரையும் இரட்சிப்பதே தேவ நோக்கமாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இஸ்ரயேல் ஜாதியானது, தேவனுடன் இசைவிற்குள் வந்து, வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நித்திய ஜீவனை அருளப்பெறுகின்றவர்களாகிய மனுக்குலம் யாவருக்கும் அடையாளமாய் இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இரண்டு கடந்துபோகுதல்கள் இருப்பதை நாம் கவனிப்போமாக — முதற்பேறானவர்களை மாத்திரமே கடந்துபோகுதல் என்பது முதலாவதாகும்; தெய்வீக வல்லமையின் மூலமாக ஒட்டுமொத்த இஸ்ரயேல் ஜாதியும் அற்புதகரமாக விடுவிக்கப்பட்டு, செங்கடலின் வழியே நடத்திச்செல்லப்பட்டபோது, மற்றொன்று நிகழ்ந்தது; செங்கடலில் வழியானது காற்று மற்றும் அலைகளின் அழுத்தம் காரணமாக அவர்களுக்கென்று விசேஷமாக ஆயத்தப்படுத்தப்பட்டது. அவர்கள் வெட்டாந்தரையில் நடந்து, கடந்துசென்றனர் மற்றும் இரட்சிக்கப்பட்டனர்; ஆனால் இரண்டாம் மரணத்திற்குள் இறுதியில் போகப்போகிறவர்களுக்கு அடையாளமாக பார்வோனின் சேனைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். செங்கடலில் நடந்த கடந்துபோகுதலானது, கர்த்தருடன் இசைவிற்குள் வருவதற்கும், அவரைத் தொழுதுகொள்வதற்கும் விரும்புகிற ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும், அதாவது இஸ்ரயேலின் பாகமாகும் அனைவரும், பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையினின்று இறுதியில் விடுவிக்கப்படுவதைச் சித்தரிக்கின்றதாயிருக்கின்றது; ஏனெனில் இஸ்ரயேலரில் ஒருவர்கூட, எகிப்திய அடிமைத்தனத்தில் விட்டுவரப்படவில்லை.

## முதற்பேறானவர்களின் பொறுப்பு

இந்த (இரண்டாவது) கடந்துபோகுதலை நாம் ஆசரிக்கப்போவதில்லை. எகிப்து தேசத்தில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களை தூதன் கடந்துபோனதின் நிஜத்தையே நாம் ஆசரிக்கின்றோம். முழு [இஸ்ரயேல்] ஜாதியின் விடுதலையானது இந்த முதற்பேறானவர்களின் கடந்துபோகுதலை, இரட்சிப்பைச் சார்ந்திருந்தாலும், எகிப்தில் அந்த இரவின்போது இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே அபாயத்தில் காணப்பட்டனர். ஆகையால் சுவிசேஷ யுகமாகிய இந்த இரவில், மனித தளத்திலுள்ள தேவ புத்திரர்களிலுள்ள முதற்பேறானவர்கள் மாத்திரமே இப்பொழுது கடந்து போகப்படுகிறவர்களாக இருக்கின்றனர்; இவர்கள் மாத்திரமே சங்காரத் தூதனால் அழிக்கப்படுவதற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்படுகின்றனர்.

வேதவாக்கியங்கள் அனைத்தும் சொல்லுகிறபடி "சிறு மந்தையினர்," "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்," "முதற்பேறானவர்களாகிய சபை" மாத்திரமே தற்கால யுகத்தில் தப்புவிக்கப்படுகின்றனர், கடந்து போகப்படுகின்றனர் என்று நாம் பார்க்கின்றோம். இந்த யுகத்தைத் தொடர்ந்துவரும் யுகத்தில், மீதமான மனுக்குலமானது, மாபெரும் நிஜமான மோசேயைப் பின்தொடர விரும்புகையில், அவர் ஜனங்களைப் பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து வெளியே நடத்திடுவார்; ஆனால் அவர்கள் இப்பொழுது நித்தியமான அழிவுக்கான அபாயத்தில் இல்லை; முதற்பேறானவர்கள் மாத்திரமே அபாயத்தில் இப்பொழுது காணப்படுகின்றனர்.

மனுக்குலத்திலிருந்த முதற்பேறானவர்களாகிய சபை, சந்ததியிலுள்ள மீதமானவர்களுக்கு முன்னதாகவே தங்கள் அடிமை நிலைமைக்குறித்தும், விடுதலைக்கான தங்களுக்குள்ள அவசியத்தைக்குறித்தும், தேவன் தமது நல்வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் தங்களுக்கு நிறைவேற்ற விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்பது குறித்துமான உணர்ந்துகொள்ளுதலின் விஷயங்களில், தங்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்றவர்களாய் இருக்கின்றனர். இன்னுமாக இவர்கள் தேவ கிருபைக்கு இணங்கி, அவருக்கும், அவரது ஊழியத்திற்குமெனத் தங்களையே முழுமையாய் அர்ப்பணம் பண்ணி, இதன் பலனாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படுகின்றார்கள். இவர்கள் விஷயத்தில் ஜீவனா (அ) மரணமா அல்லது விசுவாச வீட்டிற்குள்ளாக, அதாவது தெளிக்கப்பட்ட இரத்தத்திற்குப் பின்னபாக இருப்பதா (அ) இல்லையா என்பதுதான் காரியமாய் உள்ளது.

இந்த வகுப்பார் இரத்தத்தின் கீழிருந்து வெளியேறுவது என்பது, தெய்வீக இரக்கத்தினை அவமதிப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும். அது இவர்கள் தெய்வீகக் காருண்யத்தினை வெறுப்பதை/இகழ்வதைக் குறிக்கின்றதாயிருக்கும்; இன்னுமாக ஆட்டுக்குட்டியினுடைய இரத்தம் அடையாளப்படுத்துகின்றதான தேவனுடைய இரக்கத்தில் தங்கள் பங்கினை அனுபவித்தப்பிற்பாடு, அதை இவர்கள் மதிக்காததையும் குறிக்கின்றதாயிருக்கும். இப்படியாய்ச் செய்கிறவர்களைக்குறித்து வேதவாக்கியங்களானது, "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்" என்றும், "கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று" என்றும் குறிப்பிடுகின்றது (உரோமர் 6:9; எபிரெயர் 10:26). இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய எதிராளிகளாகக் கருதப்படுவர் மற்றும் இவர்களது அழிவுக்கு, எகிப்தினுடைய முதற்பேறானவர்களின் அழிவானது அடையாளமாய்க் காணப்படுகின்றது. முதற்பேறானவர்களாகிய சபையானது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதினாலும், எல்லா விதத்திலும் அதிகமான அறிவையும், சிலாக்கியங்களையும் அனுபவிப்பதாலும் இவர்கள் உலகத்தைக் காட்டிலும் மிகவும் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் இவர்கள் மாத்திரமே இப்பொழுது இரண்டாம் மரணத்திற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். இதுவே பஸ்கா நிழலினுடைய படிப்பினையாக இருக்கின்றது மற்றும் இது உண்மை கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

பாவம் மற்றும் மரணத்தின் இரவு கடந்துபோய், விடுதலைக்கான மகிமையான காலை வருகையில், கிறிஸ்துவாகிய நிஜமான மோசே, தேவனுடைய ஜனங்கள் அனைவரையும், அதாவது தேவசித்தத்தை அறியவரும்போது, அதற்குக் கீழ்ப்படிய, அதைக் கனப்படுத்த, அதை மதித்திட மகிழ்கிற யாவரையும் வழிநடத்திடுவார், இரட்சித்திடுவார். அந்த விடுதலையின் நாளானது, முழு ஆயிரவருட யுகமாகக் காணப்படும் மற்றும் ஆயிரவருட யுகத்தின் முடிவில் எகிப்தின் சேனைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான பொல்லாத செய்கைக்காரர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அழிவிற்குள்ளாக அறுப்புண்டுப் போவார்கள்.

## நமது பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு

அப்போஸ்தலனாகிய பவுல், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று கூறி, நமது கர்த்தர் இயேசுதான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தெளிவாயும், உறுதியாயும் அடையாளம் கண்டுகொண்டார். நமது வீடுகளின்மீதல்ல, மாறாக நமது இருதயங்கள் மீது இரத்தம் தெளிக்கப்படுவது நம் அனைவருக்கும் அவசியமென அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். நாம் ஆட்டுக்குட்டியில் பங்குகொள்ள வேண்டும்; கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினை, அவரது பலியின் புண்ணியத்தினை நாம் நமதாக்கிக்கொள்ள வேண்டும்; புதிய யுகமாகிய காலையின் போதான விடுதலைக்கு நாம் பலத்துடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டுமானால், நாம் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிக்க வேண்டும். இப்படியாக நாம் கிறிஸ்துவை விசுவாசத்தினால் மாத்திரம் தரித்துக்கொள்ளாமல் மாறாக நாம் அதிகமதிகமாக அவரது குணலட்சணத்தைத் தரித்து, நமது இருதயங்களிலும், ஜீவியங்களிலும் அவரது மகிமையான சாயலுக்கு மறுரூபமடைகின்றோம்.

யூதர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசித்ததுபோன்று, நாம் கிறிஸ்துவைப் புசிக்க வேண்டும். யூதர்களுடைய பசியினைத் தூண்டினதும், பசிக்கு உதவினதுமான கசப்பான கீரைகளுக்குப்பதிலாக, நமக்குக் கர்த்தர் ஆயத்தம் பண்ணினதும், பூமிக்குரியவைகள் மீதான நமது விருப்பங்களை மறந்துபோவதற்கு உதவுவதும், ஆட்டுக்குட்டி மற்றும் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிப்பதற்கான தீவிரப் பசியை நமக்குக் கொடுக்கிறதுமான கசப்பான அனுபவங்களையும், சோதனைகளையும் நாம் பெற்றிருக்கின்றோம். நமக்கு எந்த நிரந்தரமான தேசமும் இல்லை என்று நாமும் நினைவில்கொள்ள வேண்டும்; பரதேசிகள் போலவும், யாத்திரிகர்கள்போலவும், கையில் தடி பிடித்துக்கொண்டவர்களாகவும், பரம கானானுக்கும், நமது மீட்பரோடுகூட, தேவனுக்கான இராஜாக்களாக, ஆசாரியர்களாக, இருக்கப்போகிற முதற்பேறானவர்களாகிய சபைக்குத் தேவன் வைத்து வைத்துள்ளதான மகிமையானவைகள் அனைத்தினிடத்திற்குமான நமது பிரயாணத்திற்காக, நாம் அரைக்கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும்.

நமது கர்த்தராகிய இயேசுவும் தாம்தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அடையாளம் கண்டுகொண்டார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, அவர் தம்முடைய சீஷர்களுடன் மேல்வீட்டறையில் கூடி, "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்றார். யூதர்களாக அவர்கள் காணப்பட்டப்படியால், அந்த இரவில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது; அதாவது எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கும், நிழலான பார்வோனிடமிருந்து (இவ்வுலகத்தின் அதிபதியிடமிருந்து) நிழலான முதற்பேறானவர்கள் காப்பாற்றப்பட்டதற்குமான ஆண்டுநிறைவு நாளினுடைய இரவில் மற்றும் உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படப்போகிறதுமான அதே நாளில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது. மேலும் நிழலின் விஷயங்கள் நிறைவடைந்தவுடன், நமது கர்த்தர் இயேசு, பழையவைகளின்மீதே புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார்.

## அப்பம் மற்றும் பாத்திரத்திற்கான அடிப்படையான அர்த்தம்

முதலாம் நினைவுகூருதலின் சந்தர்ப்பங்களை நாம் மீண்டும் நினைவுகூருகின்றோம் . . . அப்பம் மற்றும் திராட்சரசமுள்ள பாத்திரம் ஸ்தோத்திரிக்கப்பட்டது; இவைகள் அவரது பிட்கப்படுகிற சரீரத்தையும், சிந்தப்படுகிற இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றது என்றும், அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரைப் புசிப்பதன் மூலம் மாத்திரமல்ல, அவரோடுகூடப் பிட்கப்படுவதன் மூலம் பங்குகொள்ள வேண்டும் என்றும், அவரது இரத்தத்தின், பலியின் புண்ணியத்தில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், தாங்கள் பிற்பாடு இராஜ்யத்தில் அவரது கனத்திலும், மகிமையிலும் பங்கடையத்தக்கதாகத் தங்களது ஜீவியங்களை அவரது ஊழியத்திலும், எல்லா விதத்திலும் அவரோடு ஒத்துழைப்பதிலும் ஒப்புக்கொடுப்பதன் மூலம் பங்குகொள்ள வேண்டும் என்றும் நமது கர்த்தர் கூறினார். இந்தக் கருத்துக்களானது, நமது கர்த்தருடன் ஒத்து இசைந்திருப்பவர்களுக்கு எத்துணை விலையேறப்பெற்றதாய்க் காணப்படும்!

நினைவுகூருதலாகப் புளிப்பில்லாத அப்பத்தினை சீஷர்களுக்கு முன்வைக்கையில் இயேசு, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். அவரது வார்த்தைகளினுடைய அர்த்தமாவது, "இது என் சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது" என்பதாகும். அப்பமானது உண்மையில் அவரது சரீரமாக இருக்கவில்லை; ஏனெனில் அவரது சரீரம் எந்த விதத்திலும், அதுவரையிலும் பிட்கப்படவில்லை. பலி இன்னமும் நிறைவேறி முடியாததினால், அவர்களாலும், எந்த விதத்திலும், அவரில் நிஜத்தில் (அ) உண்மையில் பங்கெடுக்க முடியாது. எனினும் (தூய்மையான, புளிப்பற்ற) புளிப்பில்லாத அப்பமானது, நமது கர்த்தருடைய பாவமற்ற மாம்சத்தைக் குறிக்கின்றதென நாம் அடையாளம் கண்டுகொள்ளும்போதும் அடையாளம் முழுமையாய் உள்ளது; புளிப்பானது, நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பாவத்திற்கான அடையாளமாகவும், பஸ்கா காலங்களில் புறம்பாக்கிப்போடுவதற்கு விசேஷமாய்க் கட்டளையிடப்பட்டுள்ளதாயும் காணப்படுகின்றது. வேறொரு தருணத்தின்போது, இயேசு கொடுத்திட்ட பாடமானது, இந்த அடையாள சின்னத்தினை நமக்கு விளக்குகின்றதாய் இருக்கின்றது. அவர் "வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்;" "ஜீவ அப்பம் நானே;" "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவான் 6:33, 35, 51)

இந்த ஜீவ அப்பத்தை நாம் எவ்வாறு புசிக்க வேண்டும் (அ) சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அப்பம் எதைக் குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வது நமக்கு அவசியமாய் இருக்கின்றது. இக்காரியம் தொடர்பான நமது கர்த்தருடைய விளக்கத்தின்படி, அது அவர் நமக்காகப் பலிச்செலுத்தின அவரது மாம்சத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் நமது மனித சுபாவத்தில் வரத்தக்கதாக, தாம் மனிதனாகுவதற்கு முன்னதாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவியின் நிலையினையும், அதன் மகிமையினையும் துறந்து வந்திருந்தாலும், அவர் மனிதனாகுவதற்கு முன்பாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவி நிலையானது, பலிச் செலுத்தப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும், அதாவது தகப்பனாகிய ஆதாமினால் கறைப்படுத்தப்படாதவராகவும், மற்றும் இதனால் பாவமற்றவராகவும் காணப்பட்டக் காரியமே, அவரை ஆதாம் மற்றும் இவர் சந்ததிக்கான மீட்பராக்கிற்று மற்றும் "ஏற்றக்காலங்களில் விளங்கிவந்ததான, அனைவருக்குமான மீட்கும் பொருளாக" அவர் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்கும் அனுமதித்தது (1 தீமோத்தேயு 2:3-6).

பாவிகளுக்காக நமது கர்த்தராகிய இயேசுவின் தூய, கறையற்ற சுபாவமே கொடுக்கப்பட்டது என்று நாம் காண்கையில், நாம் எதைச் சொந்தமாக்கிடுவதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம் என்று நாம் காண்கின்றோம். அவர் எதை நமக்காக ஒப்புக்கொடுத்தாரோ, அதையே நாம் "புசிக்க" வேண்டும், சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்; அவரது பரிபூரண மனுஷீக ஜீவனானது, மனுக்குலம் முழுவதையும் மரணத் தண்டனையிலிருந்து மீட்பதற்காகவும், அவர்கள் இணங்குகையில் அவர்களை மனித பூரணத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திருப்புவதற்காகவும் கொடுக்கப்பட்டது; நாம் இதை உணர்ந்துகொண்டு, மரணத்திலிருந்து நம்மை இரட்சிப்பவராக, அவரை ஏற்றுக்கொண்டிட வேண்டும். நம்முடைய கடந்தக்கால பாவங்கள் யாவற்றையும் இரத்துச் செய்ததாக ஒருவேளை தேவன் கருதினாலும், மனித பூரணத்தினை அடைந்திடுவதற்கான உரிமையை நாம் உடையவர்களாக இருக்கின்றோமெனத் தேவன் ஒருவேளை கண்டுகொண்டாலும், இது நம்மைப் பூரணமும் படுத்தாது, நித்திய ஜீவனுக்கான உரிமையையும் தராது என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆதாமின் சந்ததியிலுள்ள எவரேனும் இயேசுவின் பலியில் நன்மையடைய வேண்டுமானால், அவர் பிதாவின் சந்நிதியில் பிரவேசித்து, நீதியின் கரத்தில் தம்முடைய மரணத்தினால் உண்டான தியாகப் புண்ணியத்தினை வைத்து, பிதாவிடமிருந்து, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தினைப்" பெற்றுக்கொள்ளத்தக்கதாக, கல்லறையினின்று, ஜீவனுக்கான திவ்விய தளத்திற்கு எழும்புவது அவசியமாகும். உலகம் தொடர்புடைய விஷயத்தில், பிதாவின் ஏற்றக்காலங்களில் முழு உலகத்திற்கான மத்தியஸ்தராக, தீர்க்கத்தரிசியாக, ஆசாரியனாக, இராஜாவாக கர்த்தர் இயேசு இருந்து, அக்காலத்தில் அருளப்படுகின்றதான அருமையான சிலாக்கியங்களைப் பயன்படுத்துகின்றதான அனைவரையும் பரிபூரணத்திற்கும், தேவனுடன் இசைவான நிலைக்கும் திருப்புவதற்கு உதவத்தக்கதாக — ஏற்றக்காலங்களில் கர்த்தர் இயேசு மகிமைப்பொருந்தின திவ்விய ஜீவியாக மீண்டும் திரும்புவதும் அவசியமாய் இருக்கின்றது.

இதே ஆசீர்வாதத்தை இந்த யுகத்தின் சுவிசேஷ சபையானது, தங்கள் மீட்பரிலான விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனர்; அதாவது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்கின்றனர்; நாம் ஒருபோதும் பெற்றிராததும், ஒருபோதும் இழந்துபோகாததும், கிறிஸ்து மீட்டுக்கொள்ளாததுமான, ஆவிக்குரிய சுபாவத்திற்கு நீதிமானாக்கப்படவில்லை; மாறாக தந்தையாகிய ஆதாம் பெற்றிருந்ததும், அவரால் இழந்துபோகப்பட்டதும், கிறிஸ்து தம்முடைய பாவமற்ற சொந்த மாம்சத்தை, தமது பரிபூரண மனுஷீக ஜீவனை நமக்கான மீட்கும் பொருள் பலியாகக் கொடுத்து, அவர் மீட்டுக்கொண்டதுமான மனுஷீக சுபாவத்திற்கு நீதிமானாக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நினைவுகூருதலின்போது புளிப்பில்லாத அப்பத்தில் பங்கெடுத்தல் என்பது விசுவாசத்தினால் மாம்சத்தின் ஜீவிக்கும் உரிமைக்கான — மனுஷன் ஜீவிக்கும் உரிமையும் மற்றும் கர்த்தர் தம்மைக் கொடுத்துப் பெற்றுத் தந்ததான, அதனோடுகூட உள்ள சிலாக்கியங்கள் அனைத்திற்குமான — நீதிமானாக்கப்படுதலை நமதாக்கிக்கொள்ளுதலை நமக்கு முதலாவது குறிக்கின்றதாய் இருக்கின்றது. இதுபோலவே திராட்சப்பழரசமானது நமக்காகக் கொடுக்கப்பட்டதான நமது இரட்சகரின் ஜீவன் — அவரது மனுஷீக ஜீவன், அவரது ஆத்துமா நம் பொருட்டாக மரணத்திற்குள் ஊற்றப்பட்டதை முதன்மையாகக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இதை நாம் நமதாக்கிக் கொள்ளுதல் என்பதும், நமது கர்த்தருடைய பலியானது பெற்றுத் தந்ததான திரும்பக்கொடுத்தலுக்கான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் நாம் ஏற்றுக்கொள்வதை முதன்மையாகக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

# அப்பம் மற்றும் பாத்திரத்திற்கான ஆழமான அர்த்தம்

ஆயிரவருட யுகத்தின்போது உலகமானது கிரியையினாலும், கீழ்ப்படிதலினாலும் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது சபையை விசுவாசத்தினால் நீதிமான்களாக்குவதிலுள்ள தேவனுடைய நோக்கமானது — இப்பொழுது காண்கிறவர்களும், கேட்கிறவர்களும், மனிதனுக்காக அன்பானது ஏறெடுத்துள்ளதான மாபெரும் பலியை இப்பொழுது உணர்ந்துகொள்பவர்களுமான இந்த வகுப்பார், தங்கள் சரீரங்களை ஜீவப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும், மற்றும் இவ்விதமாய்க் கர்த்தர் இயேசுவோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில் பங்கடைவதற்கும் அனுமதிக்கப்படுவதற்கேயாகும் என்பதை இப்பொழுது நாம் கவனிப்போமாக. நினைவுகூருதலுக்கான இந்த ஆழமான அர்த்தத்தினை அவர் வெளிப்படையாய்க் குறிப்பிடவில்லை. இது "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவர் குறிப்பிட்டவைகளில் ஒன்றாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. (யோவான் 16:12, 13)

கிறிஸ்து வாயிலாக அருளப்பட்டதான பிதாவின் இந்த வல்லமையானது, செல்வாக்கானது, சத்தியத்தின் ஆவியானது அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகப் பேசி, நினைவுகூருதலின் மிக உயர்வான அர்த்தத்தினைத் தெளிவாய் விவரிக்கின்றது; ஏனெனில் அர்ப்பணித்துள்ள சபைக்கு அவர் எழுதுகையில் அவர், "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!"; அதாவது கிறிஸ்து தம்முடைய உண்மைக்கான பலனாகப் பெற்றுக்கொண்டதான மகிமையில், நாமும் அவரோடுகூடப் பங்காளிகளாகக் கருதப்படத்தக்கதாக, உடன் பலிச் செலுத்துபவர்களெனக் கிறிஸ்துவோடுகூட உள்ள மரணம்வரையிலுமான நம்முடைய பங்குகொள்ளுதலாய் இருக்கிறதல்லவா?—"ஏனெனில் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாய் இருக்கிறோம்" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:16, 17).

இந்த அடையாளமான கட்டளையினுடைய இரண்டு கண்ணோட்டங்களும் மிகவும் முக்கியமானவைகளாகும். நமது கர்த்தருடைய பலியின் மூலமான நமது நீதிமானாக்கப்படுதலை, நாம் முதலாவதாகப்பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. முழுக்கிறிஸ்து, அபிஷேகம் பண்ணப்பட்ட முழுக்கூட்டத்தாரும் தெய்வீக கண்ணோட்டத்தின்படி இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, அநேக அங்கத்தினர்களை உடைய ஒரு சரீரமாக இருக்கின்றது என்றும், இந்தச் சபை, இந்தச் சரீரம் முழுவதும் பிட்கப்பட வேண்டுமென்றும், அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் இயேசுவின் சாயலாக வேண்டும் மற்றும் அவரது பலியின் அடிச்சுவடுகளில் நடக்க வேண்டுமென்றும் நாம் உணர்ந்துகொள்வதும் ஏற்றக் காரியமாயிருக்கின்றது (1 கொரிந்தியர் 12:12-14). இதை நாம் நம்முடைய ஜீவியங்களைச் சகோதர சகோதரிகளுக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் செய்கின்றோம்; அதாவது இயேசு தம்முடைய ஜீவியத்தை நேரடியாய்த் தமது யூத சகோதரர்களுக்காய், ஆனால் உண்மையில் பிதாவின் நோக்கத்தின்படி முழு உலகத்திற்காய் ஒப்புக்கொடுத்ததுபோல், நாமும் செய்வதின் மூலம் செய்கின்றோம்.

இயேசு தம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுக்காததுபோன்று, நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. அவர் தம்முடைய உண்மையான பூரண மாம்சத்தை, தம்முடைய மனுஷீகத்தைப் பலிச் செலுத்தினதுபோன்று, நாமும் உண்மையாய்ப் பூரணமாய் இராததும், ஆனால் இயேசுவினுடைய புண்ணியத்தினால், பூரணமானதாகக் கருதப்படுகிறதுமான நீதிமானாக்கப்பட்ட நம்மைப் பலிச்செலுத்திட வேண்டும். இதுபோலவே அப்பமும், பாத்திரமும் பாடுகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கோதுமை மணிகளானது, மனிதனுக்கான அப்பமாகுவதற்கு முன்னதாக நொறுக்கப்பட்டு, மாவாக்கப்பட வேண்டும்; அவைகளால் அதன் ஜீவனையோ, மணியாக அதன் தனித்தன்மையையோ தக்கவைத்துக்கொள்ளமுடியாது. திராட்சப்பழங்களானது, உலகத்திற்கு ஜீவனளிக்கும் மருந்தாக வேண்டுமானால் அதன் சாறு அனைத்தையும் பிழிந்தெடுக்கப்படுகிறதான அழுத்தத்திற்கு அது அதனை கீழ்ப்படுத்தி, ஒப்புக்கொடுத்திட வேண்டும் மற்றும் திராட்சப்பழங்கள் எனும் அதன் அடையாளத்தை இழந்துபோய்விட வேண்டும். இப்படியாகவே கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரம் எனும் கூட்டத்தாரின் விஷயத்திலும் ஆகும். இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்கெடுப்பவர்களாய் இருக்கின்றார்கள் என்ற பரிசுத்த பவுல்

அவர்களுடைய வார்த்தையினுடைய அருமையையும், அழுத்தத்தையும் நாம் பார்க்கின்றோம். அவரது இரத்தமே, அவரது பலியினுடைய புண்ணியமே முக்கியமானதாகும்; அவரது புண்ணியமானது நமக்குச் சாற்றப்படுவதினாலும் மாத்திரமே, நாம் அவரது சரீரத்தின் அங்கங்களாகக் காணப்படுவதினால் மாத்திரமே, நமது இரத்தத்திற்குத் தகுதி உள்ளது.

பாத்திரமானது, திராட்சப்பழரசமானது, இரத்தத்தை அதாவது ஜீவனைக் குறிப்பதாக நமது கர்த்தர் குறிப்பாய்த் தெரிவித்துள்ளார்; அது தக்கவைக்கப்பட்ட ஜீவனை அல்ல, மாறாக சிந்தப்பட்ட, விட்டுக்கொடுக்கப்பட்ட, ஒப்புக்கொடுக்கப்பட்ட, பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றது என்று தெரிவித்துள்ளார். ஊற்றப்பட்டதான இந்த ஜீவனானது, பாவ மன்னிப்புண்டாகும்படிக்கு என்றும், அவருடையவர்கள் அனைவரும் அதைப் பருக வேண்டும் மற்றும் அவரது பலியினை ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் அவர் நம்மிடம் கூறுகின்றார். அவர்கள் ஜீவனை இந்த ஆதாரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவிற்குப் புறம்பே அழியாமையைப் பெறமுடியுமென யார் ஒருவராலும் கூறப்படுவது ஏற்றதாயிருக்காது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் விளைவாக ஜீவன் கிடைக்குமெனக் கூறுவதும் ஏற்றதாயிருக்காது. ஏதோ ஒரு மாபெரும் போதகர் மீதான விசுவாசமும், அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதும் நித்திய ஜீவனைக் கொண்டுவருமென்று கூறுவதும் ஏற்றதாயிருக்காது. முழு உலகத்திற்கான மீட்கும்பொருளாக ஒருமுறை சிந்தப்பட்டதான இரத்தத்தின் மூலமே அல்லாமல், மற்றப்படி வேறெந்த வழியிலும் நித்திய ஜீவனை அடையமுடியாது. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12). இதுபோல அவரது பாத்திரத்தில் பானம்பண்ணிடுவதற்கும், ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்தானத்தில் அவரோடுகூட அடக்கம் பண்ணப்படுவதற்கும் மற்றும் இப்படியாக மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் நேரான அவரது உயிர்த்தெழுதலில் அவரோடுகூடக் காணப்படுவதற்குமான கர்த்தருடைய அழைப்பினை ஏற்றுக்கொள்வதின் மூலமாக மாத்திரமே ஒழிய மற்றப்படி புதிய சுபாவத்தினை அடைவதற்கு வேறு வழியில்லை (உரோமர் 6:3-5; 8:17).

## இராஜ்யத்தில் கொண்டாடுதல்

நினைவுகூருதலுக்கான இராப்போஜனம் நிறுவப்பட்ட தருணத்தின்போது, நமது அருமை கர்த்தர் எப்போதும்போல், அவரது போதனைகள் அனைத்தினுடைய முக்கிய அம்சமாகிய இராஜ்யம்குறித்துச் சிலவற்றைப் பேசவேண்டும் என்றிருந்தார். உண்மையுள்ளவர்களாகக் காணப்படும் பட்சத்தில், இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைவார்களென அவர் வாக்களித்தவர்களிடம், தாம் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதற்கெனப் புறப்பட்டுப்போக வேண்டும் என்றும், தாம் திரும்பிவந்து, அந்த இராஜ்யத்தில் அவர்கள் பங்கடையத்தக்கதாக, தம்மோடுகூட அவர்களை ஏற்றுக்கொள்ளவார் என்றுமாக தாம் கூறியிருந்தவைகளை, அவர்களுக்கு நினைப்பூட்டினார். இன்னுமாக தம்மால் நிறுவப்படுகின்றதான இந்த நினைவுகூருதலானது, இராஜ்யத்தில் அதன் நிறைவேறுதலைக் காணும் என்றும், அவர்களோடுகூடப் பிதாவின் இராஜ்யத்தில் திராட்சப்பழரசத்தை நவமானதாய்ப் பானம் பண்ணும் நாள்வரைக்கும், அதைத் தாம் பானம்பண்ணுவதில்லை என்றும் இப்பொழுது கூறுகின்றார்.

என்ன அர்த்தத்தில் இவ்வாக்கியத்தினைக் கர்த்தர் கூறினார் என்பதைத் துல்லியமாய்த் தீர்மானிப்பது சிரமமானக் காரியமாக இருப்பினும், அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதான பாடுகள் மற்றும் சோதனைகளின் விளைவாக, இராஜ்யத்தில் பெருமகிழ்ச்சிக் காணப்படும் என்று அர்த்தப்படும் வகையில் அவர் பேசியுள்ளார் என்று புரிந்து கொள்வது முரண்பாடாய்க் காணப்படாது. "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்." பிதாவினுடைய சித்தத்திற்கான உண்மையானக் கீழ்ப்படிதலின் காரணமாகச் சகிக்கப்பட்ட சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் திரும்பி நோக்கிப்பார்த்து, இவைகளின் பிரம்மாண்டமான பலனை, அதாவது மனுக்குலம் அனைத்தின்மீது கடந்துவரும் ஆசீர்வாதங்களை அவர் காண்கையில், இவைகளில் களிகூருவார். முதலாவது நீதிமானாக்கப்பட்டதிலும், பின்னர் அர்ப்பணிப்பிலும், அவரோடுகூடப் பலியிலும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணினவர்களாகிய அவரது சீஷர்கள் அனைவரும் இந்தப் பெரு மகிழ்ச்சியில் பங்கடைவார்கள். இவர்கள், அவரோடுகூட ஆளுகைச் செய்வதற்கான, அவரது வாக்குத்தத்தத்தினைப் பெற்றிருக்கின்றனர், மற்றும் ஆளுகை ஆரம்பித்து, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், இவர்கள் தங்கள் பூமிக்குரிய ஓட்டம் நிறைவடைவதுவரையிலும் நாளுக்குநாள் தேவன் தங்களை வழிநடத்தின வழியினை, அது "இடுக்கமான வழியாக," சுயத்தைப்

பலிச்செலுத்தும் வழியாக, சுயத்தை வெறுக்கும் வழியாக இருப்பினும், அவ்வழியினைத் திரும்பி நோக்கிப்பார்த்து, துதிப்பார்கள்.

தாம் கைது செய்யப்படுவதற்கும், மரிப்பதற்குமான வேளை அருகாமையில் இருப்பதை அறிந்திருந்த நமது அருமை ஆண்டவரின் விசுவாசமானது, அந்தத் துயரமான வேளைகளினுடைய பரீட்சைகளில் நிலைநின்றது. அப்பத்திற்கும், பாத்திரத்திற்கும் அவர் பிதாவுக்கு ஸ்தோத்திரம் ஏறெடுத்ததானக் காரியமானது, அப்பம் பிட்கப்படுதலும், திராட்சப்பழம் நசுக்கப்படுதலும் குறிக்கின்றதான பாடுகள் யாவற்றிலும், சந்தோஷத்தோடே உடன்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏற்கெனவே அவர் பிதாவின் ஏற்பாட்டில் திருப்தியடைந்தவராய் இருந்தார். இந்த ஒரு மனநிலைக்கு இசைவாகவே, அவர்கள் புறப்படுகையில், பாட்டுப்பாடினார்கள் . . . சந்தேகத்திற்கிடமின்றி பூமியில் அவரது ஓட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்ததற்காகவும், இதுவரையிலும் தமக்குத் தேவையான கிருபை போதுமானதாய் இருந்ததற்காகவும் துதி மற்றும் ஸ்தோத்திரப்பாட்டு ஏறெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பின்தொடர்ந்ததான துக்கம் நிறைந்த வேளையுள்ள சம்பவங்களைக் கவனிக்கத்தக்கதாக, நாம் மீட்பரைக் கெத்செமனேவுக்குப் பின்தொடர்ந்துபோய், "அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணுவதை" பார்க்கின்றோம். பிதாவின் திட்டத்தினை நிறைவேற்றுவதில், ஏதாகிலும் விஷயத்தில் தவறிப்போய் மற்றும் அதன் நிமித்தமாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரமற்றவராகக் கருதப்பட்டு விடுவாரோ என்று நமது ஆண்டவர் மரணப் பயத்தை வெளிப்படுத்துவதைப்பார்க்கின்றோம். நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை உண்மையாய்க் காத்துக்கொண்டுள்ளார் என்றும், வாக்களிக்கப்பட்டுள்ளதுபோல உயிர்த்தெழுதலை அடைவார் என்றுமுள்ள வாக்குறுதியினால் அவர் ஏதோ ஒரு விதத்தில் ஆறுதல்படுத்தப்பட்டதாக நாம் கவனிக்கின்றோம்.

இதற்குப் பிற்பாடு அவர் பிரதான ஆசாரியன் மற்றும் பிலாத்து மற்றும் ஏரோது மற்றும் மீண்டுமாகப் பிலாத்துவின் முன்னிலையில் எவ்வளவு அமைதியுடன் காணப்பட்டார் என்று நாம் கவனிக்கின்றோம். "தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்திமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தற்காத்துக்கொள்வதற்கெனத் - தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." அவர் முடிவுபரியந்தம் உண்மையாயும், தைரியமாகவும் இருந்ததாகப் பார்க்கின்றோம்; தம்முடைய பாதுகாப்பிற்கெனத் தம்மால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமானத் தூதரைப் பிதாவிடம் கேட்டிருக்கவும், பெற்றிருக்கவும் முடியும் என்றுமுள்ள அவரது நம்பிக்கையையும் நாம் பார்க்கின்றோம். ஆனால் தம்முடைய பலியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு உதவி வேண்டி விண்ணப்பிப்பதற்குப்பதிலாக, அவர் அவைகளை உண்மையாய்ச் சகிப்பதற்கு வேண்டிய உதவியையே விண்ணப்பித்தார். இங்கு அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களுக்கு எத்தகையதொரு படிப்பினைக் காணப்படுகின்றது!

இன்னொரு பக்கத்தில், அவரது உண்மையுள்ள சீஷர்கள் மத்தியில், மிகுந்த தைரியமானவர்கள்கூட, ஆண்டவரைவிட்டு, ஓடிப்போனார்கள் என்றும், அவர்களில் ஒருவர் தனது துணிவின்மையினால், தனது கர்த்தரையே மறுதலித்தார்! என்றும் நினைவுகூருகின்றோம். நம்மை மீட்டுக்கொண்டவருடன் பாடுபடுவதற்கான நமது விருப்பத்தின், நமது தைரியத்தின், நமது விசுவாசத்தின் அளவுத் தொடர்புடைய விஷயத்தில், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்துப்பார்ப்பதற்கான எத்தகையதொரு தருணமாய் இது காணப்படுகிறது! எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் (அ) சூழ்நிலையிலும் நமது ஆண்டவரை மறுதலிக்கமாட்டோம் என்றும், நம்முடைய உதடுகளினால் மாத்திரமல்லாமல், நம்முடைய நடத்தையினாலும் அவரை அறிக்கைப்பண்ணுவோம் என்றுமுள்ளதான தீர்மானங்களினால் மனதைத் தாங்கி ஆதரிப்பதற்கு எத்தகையதொரு சிலாக்கியம் இப்படியாக நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

## நமக்கு எதிர்ப்பு மத உலகத்திலிருந்தே வரும்

யேகோவா தேவனுடைய ஜனங்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணினவர்களே ஜீவாதிபதியைச் சிலுவையில் அறைந்துப்போட்டார்கள் என்ற எண்ணத்தினால் நாம் அதிர்ச்சியடைகின்றோம்! இது மாத்திரமல்லாமல் இவர்களது மதத் தலைவர்கள், இவர்களது பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளே இந்தப் பயங்கரமான செய்கைக்குப் பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர். "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்பட வேண்டாம்; அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூருகின்றோம். அவர் மத உலகத்தைக் குறிப்பிட்டார்

என்று பார்க்கின்றோம் மற்றும் இதை உணர்ந்துகொள்ளுகையில், மத உலகமே, அவரது பின்னடியார்களாகிய நம்மையும் பகைக்கும் என்று அறிந்துகொள்கின்றோம். சத்தியத்திற்கான எதிர்ப்பும், ஒளியைச் சுமப்பவர்களுக்கான துன்புறுத்தலும் இன்று கிறிஸ்தவம் என்று அழைக்கப்படும் உலகத்தின் மிக முக்கியமான பிரதிநிதிகளிடமிருந்து வருவதைக் காண்கையில், நாம் ஆச்சரியமுற வேண்டாம். இந்த உண்மையானது நம்மை எதிர்ப்பவர்களையோ (அ) நமது கர்த்தரை மரணத்திற்கு ஏதுவாய்த் துன்புறுத்தினவர்களையோ பகைப்பதற்கு நம்மை வழிநடத்திடக்கூடாது. இக்காரியம் தொடர்புடையதான அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளாகிய "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

ஆ, ஆம்! (மத உலகத்தாரின்) இருதயம் மற்றும் மனதின் குருட்டுத்தன்மையும், அறியாமையுந்தான் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்திற்குமான அடிப்படையாகக் காணப்படுகின்றது. இவைகள் தங்களினுடைய தலையானவருடைய உபத்திரவங்களில் குறைவானதை, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் நிறைவேற்றுவதுவரையிலும், இப்பொழுது காணப்படுவதற்குப் பிதா அனுமதித்துள்ளார் (கொலோசெயர் 1:24). சீக்கிரமாகவே நமது அருமை கர்த்தர் கூறியுள்ள பிரகாரமாகவே, இப்பொழுது அவரது பிட்கப்பட்ட சரீரத்தில் பங்கெடுத்து, அவரோடுகூடச் சத்தியத்தின் ஊழியத்தில் பிட்கப்படுகிறவர்களும், இப்பொழுது பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் எனும் அவரது பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களும், திரைக்கு அப்பால், இராஜ்யத்தில் அவரோடுகூடச் சந்தோஷத்தின் புதிய திராட்சரசத்தைப் பருகுவார்கள். அந்த மகிமையான காலையில், உலகைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கும் மாபெரும் வேலை ஆரம்பமாகும்; சீர்த்தூக்குதலின் மாபெரும் வேலை, "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" ஆரம்பமாகும் (அப்போஸ்தலர் 3:21).

நினைவுகூருதலின் அனுசரிப்பில் பங்கெடுப்பவர்கள் ஒவ்வொருவரின் மனதிற்கு முன்பாகக் காணப்பட வேண்டிய சிந்தையானது, பரிசுத்த பவுல் அடிகளாரின் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அதாவது, "அவரோடுகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;" "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;" "ஏனெனில் அவை அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவமாய் இருக்கின்றது;" "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (உரோமர் 8:1-8) என்பதேயாகும். விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால் முதற்பேறானவர்களான நம்முடைய பாவங்களைக் கடந்துபோகுதல் குறித்தும், நமது பாக்கியமான கர்த்தருடன், அவரது பாடுகளின், மகிமையின் அனுபவங்களில் நாம் பங்கடைவது குறித்துமான இந்தச் சிந்தனைகளுடன், சோதனைகளும், கஷ்டங்களும் இருந்தாலுங்கூடச் சந்தோஷத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிப்போம். இப்படியாக அவரது பின்னடியார்களென உண்மையாய்த் தொடர்ந்து செய்துவருவோமானால், வெகு சீக்கிரத்தில் கர்த்தரால் ஆதரிக்கப்படுபவர்களை, அதாவது இறுதியில் மகா இராஜாவுக்குச் செவிக்கொடுத்து, அவரை அறிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்படியும் யாவரையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையிலிருந்து, எகிப்திலிருந்து, கானானுக்கு நேராய் வழிநடத்திடும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றுக்கொள்வோம்.

## வரவிருக்கிற நினைவுகூருதலின் நாள்

வழக்கத்தின்படியே நியூயார்க் (New York) மற்றும் புரூக்கிலின் (Brooklyn) சபையார் இந்த வருஷமும், தற்காலச் சத்தியத்தினை உணர்ந்துள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்கும் விலையேறப்பெற்ற அர்த்தங்கள் நிரம்பப்பெற்றுள்ளதான இந்த மகா பெரும் நிகழ்வை ஆசரிப்பதற்கு ஒன்றுகூடுவார்கள். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றதான அருமையான நண்பர்கள் இந்தப் பாக்கியமான நினைவுகூருதலை அலட்சியப்படுத்திட வேண்டாம் என்று நாம் பரிந்துரைக்கின்றோம். சிறு கூட்டத்தாராய் இருப்பவர்கள், பெரிய கூட்டத்தாருடன் இணைந்து ஆசரிக்கத்தக்கதாகச் செல்லுங்கள் என்று நாம் அறிவுரைக் கூறுவதில்லை, மாறாக ஒவ்வொரு சிறு கூட்டத்தாரும் தங்கள் வழக்கத்தின்படி ஒன்றுகூடிட அறிவுறுத்துகின்றோம்; ஏனெனில் இப்படியாகச் செய்வதே ஆதித் திருச்சபையின் வழிமுறையாக இருந்தது. சந்தோஷமான இருதயத்தோடு, நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்; அதுவும் நமக்கான நமது கர்த்தருடைய பலித் தொடர்புடையது மாத்திரமல்லாமல், அவரோடுகூட மரிப்பதற்கான நமது உடன்படிக்கைத் தொடர்புடையதுமான

அதற்கே உரிய பயபக்தியுடன் ஆசரிக்கக்கடவோம். ஒவ்வொரு சபை கூட்டத்தாரிலுமுள்ள வழிநடத்துபவர்கள் புளிப்பில்லாத அப்பத்தையும், ஒன்றில் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை/grape juice (அ) உலர்ந்த திராட்ச ரசத்தை/raisin juice (அ) திராட்சப்பழரசத்தைப்/fruit of the vine பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தங்கள் பண்ணிடவேண்டும். (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராகவே நம்முடைய பரிந்துரை காணப்படுகின்றது; ஏனெனில் இது மாம்சத்தில் பெலவீனமாய்க் காணப்படும் சிலருக்குச் சோதனையாக அமையலாம்; எனினும் புளிப்பேற்றப்பட்ட திராட்சரசமே (wine) பயன்படுத்தப்படும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்று யார் மனசாட்சியில் நம்புகின்றார்களோ, அவர்களுக்கு ஏற்பாடுகள் பண்ணப்படலாம்.

இந்தச் சிறு கூடுகைகளானது ஆரவாரமில்லாமல் காணப்படுவதற்குப் பரிந்துரைக்கின்றோம். ஒழுக்கமாயும், கிரமமாயும், அமைதியாயும், நாம் ஆசரிக்கப்போகின்றதான மாபெரும் செய்கை தொடர்புடையதான விலையேறப்பெற்ற நினைவுகளினால் நிரம்பினவர்களாக, ஒன்றுகூடுவோமாக. ஆசரிப்புகளிலும், சடங்குகளிலும், நம்முடைய கவனம் அதிகமாய்க் காணப்படாதிருப்பதாக. மற்ற விஷயங்களில் செய்வதுபோல, இதிலும் நமது கர்த்தரைப் பிரியப்படுத்துபவைகளைச் செய்திடுவதற்கு நாடுவோமாக; மற்றும் இப்படியாகச் செய்யப்படும் பட்சத்தில் பங்கெடுக்கும் யாவருக்கும், இவ்வனுசரிப்பு நன்மை பயக்கின்றதாயிருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே.

விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை அறிக்கைப் பண்ணுகிறவர்களும், கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பும் பண்ணியுள்ளவர்களுமான எவருமே இந்த அடையாளங்களில் பங்கெடுப்பதற்குத் தடைப்பண்ணப்படக்கூடாது என்று இதற்கு முன்பும் நாம் கருத்துத் தெரிவித்திருக்கின்றோம். உண்மையான இருதயமற்றோர், இந்த ஐக்கியத்தின் சிலாக்கியத்தினை ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக்குறித்தத் தவறான கண்ணோட்டங்களின் காரணமாக, சிலர் உற்சாகப்படுத்தப்பட வேண்டியுமுள்ளது (1 கொரிந்தியர் 11:29). இந்த மாபெரும் செய்கையை, நினைவுகூருதலை ஆசரிப்பதான சிலாக்கியத்தினை கைவிடமாட்டார்கள் என்று நாம் நம்புகின்றதான இந்தப் பயப்படுகிறவர்களுக்காக, அப்போஸ்தலனால் இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாரைக்குறித்து நாம் இங்கு விவரிக்கின்றோம்; பலியினுடைய உண்மையான முக்கியத்துவத்தினை உணர்ந்துகொள்ள தவறுகின்றவர்களும், இந்த ஆசரிப்பை வெறுமனே சடங்காச்சாரமாகக் கண்டுகொள்பவர்களும்தான் அப்போஸ்தலனால் அவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாரில் இடம்பெறுவார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது. இவ்வாசரிப்பானது குறிப்பிடுபவைகளை ஆராய்வதற்கும், தெரிந்துகொள்வதற்கும் தவறுவது என்பது ஆக்கினைத்தீர்ப்பை, கண்டனத்தைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது.

இவ்வருஷத்தில் இந்நிகழ்வானது, பரிசுத்தவான்கள் அனைவருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதாகவும், நன்மை பயக்கின்றதாகவும் இருக்குமென நாம் நம்புகின்றோம். நம்முடைய ஓட்டத்தின் முடிவை நாம் நெருங்குகையில், நம்முடைய அழைப்பு, அதன் பொறுப்புகள் மற்றும் சிலாக்கியங்களின் மகா முக்கியத்துவமானது, நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் அதிகமதிகமாகப் பதிய பெற்றிருக்க வேண்டும். நாம் அருமையான காலப்பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாளும் என்னென்ன வரப்போகின்றது என்பதை நாம் அறியோம். ஆகையால் மிகுந்த ஜாக்கிரதையுடனும், மிகுந்த தெளிந்த நிலையிலும், அதேவேளையில் நம்முடைய இரட்சிப்புச் சமீபமாயிற்று என்றும், நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், சீக்கிரத்தில் நம்முடைய நேச மணவாளனுடன், அவரது இராஜ்யத்தினுடைய சந்தோஷ திராட்சரசத்தில் பங்கெடுத்து, என்றென்றும் அவரோடு காணப்படுவோம் என்றும் அறிந்து சந்தோஷத்தோடே, களிகூருதலோடே நடப்போமாக.

*****

# மீட்கும் பொருளும்,பாவ நிவாரண பலியும்
# Ransom and the sin-offering

மீட்கும்பொருளைக் குறித்தும், பாவநிவாரண பலியைக்குறித்தும் நாம் வேதாகம விளக்கவுரைகளிலும், காவற்கோபுரம் மற்றும் ஆசரிப்புக்கூடார நிழல்களில் எழுதியுள்ள அனைத்து கட்டுரைகளையும் படித்து, அக்கருத்துக்களைப் பற்றிக்கொள்ளாதபடியால், நம் அன்பு வாசகர்களில் சிலர் இந்தக் காரியங்களில் இன்னும் தெளிவடையவில்லை என்று தோன்றுகிறது. சகோதரர் ரஸ்ஸல் தன் கருத்துக்களை மாற்றிக்கொண்டார் என்றும், காவற்கோபுரம் பத்திரிக்கையின் கருத்துக்கள், வேதாகம விளக்கவுரையில் கூறப்பட்ட கருத்துக்கு முரணாக இருப்பதாகவும் மறைமுகமாகக்கூறி, சிலர் தங்களையும் பிறரையும் குழப்புகிறார்கள். இவைகள் தீங்கு விளைவிக்கின்ற தவறுகள், நமது கருத்துக்கள் மாற்றப்படவேண்டுமானால், அந்த மாற்றங்களை உறுதியான வழிமுறையின்படி எடுத்துச் சொல்வோம். ஆகவே, நாம் முயற்சிகளை புதுப்பித்து, இந்த பாடங்களைக் குறித்த நமது நம்பிக்கையை முறையான விளக்கங்களோடு தெளிவாக்கியிருக்கிறோம்.

மீட்கும் பொருளின் விலையானது தன்னில்தானே மதிப்பு மிக்கதாக இருப்பதைக் கூறுகிறது. அது கிறிஸ்துவின் மரணம் அல்லது இரத்தமேயாகும். இந்த மீட்கும்தொகையானது மனுக்குல குடும்பத்தில் வந்த ஒரு நபருக்கோ அல்லது அனைவருக்குமோ, அவர்களது அபராதத்துக்கான தொகையாக பொருந்தக் கூடியதாக உள்ளது.

மனிதன் பாவம் மற்றும் மரணத்தினின்று மீட்கப்படுவதற்கு மீட்கும்பொருளைக் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டான். மீட்கப்படும் பொருளைக்குறித்த இக்கருத்துக்கு தெய்வீகப்பிரமாணமே ஆதாரமாக உள்ளது;

“உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம். ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்பட வேண்டும்” ——உபா19:21

பாவம் மற்றும் அதன் தண்டனையின் விளைவாக, ஆதாமும் அவன் முழு சந்ததியாரில் பலகோடி ஜனங்கள் பயங்கரமான மனக்கவலையில் அமிழ்ந்து கிடக்கின்றனர். ஈடுபலியின் மூலம் ஏற்படுத்தின வழிமுறையின்படி, விழுந்துபோன நிலைமையிலிருந்து அவர்களைவிலைகொடுத்து வாங்கி, மீண்டுவருவதற்கு தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார்.

ஆதாமின் சந்ததியார் ஒவ்வொருவரும் ஜீவனுக்கான மனித உரிமைகளைப் பெறும்பொருட்டு மீட்கப்பட அல்லது விலைகொடுத்து மீட்டுக் கொண்டுவர, பரிசுத்தமும் குற்றமற்றவரும் தீங்கு விளைவிக்காதவருமாயிருக்கிற மற்றொருவரது ஜீவனைக்கொண்டு வாங்கப்படுவதே நமது இயல்பானதும் முதன்மையானதுமான கருத்தாக உள்ளது. ஆனால் தேவதிட்டத்தினை ஆழமாகப் பார்க்கும்பொழுது, ஒரே மனுஷனாயிருந்த ஆதி தகப்பனாகிய ஆதாம் மட்டுமே தெய்வீக நீதிமன்றத்திற்கு முன்பாக பரிசோதிக்கப்பட்டு மரணதண்டனை பெற்றார். ஆதாம் மட்டுமே மரணத்தீர்ப்பு பெற்றார். இதனால் அவரது பிள்ளைகள் அனைவரும் மரணத்திற்குள் செல்கின்றனர். ஆதாமின் பிள்ளைகள் மரணத்திற்குச் செல்வது அவர்களது தனிப்பட்ட நியாயத்தீர்ப்பிலும், மரணத்திலுமல்ல. மாறாக ஆதாமின் நிமித்தமாகவே. ஆதாம் தன் பரிபூரண நிலையை பாதுகாக்கத் தவறினதாலேயே ஆகும். தான்



பெற்றிருந்தவற்றைக் காட்டிலும், அதிகமான உரிமைகளையோ, அதிக ஜீவனையோ தன் பிள்ளைகளுக்கு கொடுக்க முடியாமற்போயிற்று. இவ்வாறாக ஆதி தகப்பானாகிய ஆதாம் நியாயத்தீர்ப்பை அடைந்த காலத்திலிருந்து 6000 வருடங்களாக இந்த நிலைமையே இன்றுவரை நீடித்துவருகிறது.

இங்கு அதிசயமான தெய்வீகத்திட்டத்தின் சிக்கனமான அம்சம்(Economic feature) தொடர்புபடுத்தப்படுவதை நாம் காண்கிறோம். மனுக்குலத்தில் ஒரு நபருக்கும் கூடுதலாக பரீட்சிக்கப்பட்டு மரணத்தீர்ப்படைய

தேவன் அனுமதிக்கவில்லை. ஏனெனில் ஒரு ஜீவனை பலியிடுவதன்மூலம் முழு மனுக்குலத்தையும் மீட்கவேண்டும் என்பதே அவர் ஆதியில் கொண்டிருந்த அவரது தீர்மானமாகும். ஒரு மனிதனாலேயே முழு துன்பமும் வந்தது, மற்றொரு மனிதனால் அந்த முழு துன்பமும் சரிசெய்யப்பட்டது. அப்போஸ்தலர் இதை சுட்டிக்காட்டி கூறுகிறார்

''மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்'' –1கொரிந்தியர்15:21–23

இவ்வாறாக, நாம் கிறிஸ்துவின் மரணத்தின் மதிப்பைக் காண்கிறோம். இது ஆதாமுக்கு மாத்திரமல்ல, அவரது முழு சந்ததியாருக்கும் உள்ளடக்கியது. அதோடுகூட, இயேசு பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் , பாவிகளுக்கு விலகினவருமாயிருக்க வேண்டியது எத்தனை அவசியமானது! அவ்வாறு இருந்திராவிடில், அவர் மீந்திக்கிற மனுக்குல சந்ததியாரில் ஒருவராக, தெய்வீக மரணத்தீர்ப்புக்கு உட்பட்டவராக இருந்திருப்பார். ஏனெனில் ஆதாமின் சந்ததியார் அனைவரும் பாவத்திற்கும், அதன் தண்டனைக்கும் உட்பட்டவர்களாதலால், உலக மீட்பராக, வெளியிலிருந்து ஒருவரை கண்டடைவது அவசியமாயிற்று. அவ்வாறு வெளியிலிருந்து தெரிந்தெடுக்கப்படுபவர், ஒரு தூதனாகவோ, கேரூபாகவோ அல்லது மாபெரும் மிகாயேலாகவோ, லோகோஸாகவோ இருந்து, முதல் மனிதனாகிய ஆதாமை மீட்கும் பொருளாக, ஈட்டுக்கிரயம் செலுத்துவதற்கு, ஆவிக்குரிய சுபாவத்திலிருந்து மனுஷ சுபாவத்திற்கு மாறுவது அவசியமாய்க் கண்டது.

பாவம் செய்தது ஒரு தேவனல்ல, ஆதலால் ஒரு தேவன் மரிப்பதன்மூலம் மீட்பளிக்கமுடியாது. பாவம் செய்தது ஒரு கேரூப் அல்ல, ஆதலால் கேரூப் மரிப்பதன்மூலம் மீட்பளிக்கமுடியாது. பாவம் செய்தது ஒரு மனிதன், ஆகவே ஒரு மனிதன் மரிப்பதன்மூலமே மீட்கும்பொருளை கொடுக்கமுடியும். இதற்காகவே மாபெரும் லோகோஸ் மனிதனை மீட்பதற்கான தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்ற, உலகத் தோற்றத்துக்கு முன், பிதாவிடம் தாம் கொண்டிருந்த மகிமையை விட்டுவிட்டு, தன்னையே தாழ்த்தி மனிதரானார். தேவதூதர்களைக் காட்டிலும் சற்று தாழ்ந்த நிலைமையை எடுத்து(பரிபூரண மனிதசுபாவம்) மரணத்தை சகித்து, மகிமை கனத்தை கிரீடமாக பெற்றார். அவர் தேவகிருபையினால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்க்கவேண்டியதாயிற்று – எபி 2 : 9.

## மீட்கும்பொருளின் விலையும், மீட்கும்பொருளின் வேலையும் : –

மீட்கும்பொருள் என்றால் என்ன என்று நாம் தெளிவாக காண்பித்திருப்போமானால், இயேசுவே ஆதிபிதாவாகிய ஆதாமுக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கூடிய பொருத்தமான ஒரே நபர் என்று இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்குமானால், வேதத்தின்படியான அடுத்த நமது கருத்து, அவர் தம்மையே மீட்கும்பொருளாக்கினார் என்பதேயாகும். இப்பாடத்தைப்பற்றி இயேசுவே கூறியிருப்பதை நாம் காணலாம்(மத் 20:28). மேலும் பவுல் அப்போஸ்தலனின் சாட்சியமும் இதுவே. "எல்லோரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த குமாரனாகிய கிறிஸ்துஇயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கிவருகிறது" - 1தீமோத் 2:6. இதன்மூலம் நிரூபணமாவது என்னவெனில், இயேசுவின் கல்வாரி மரணத்தின் மூலம் ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் கொடுக்கப்பட்ட விலையானது போதுமானஅளவு மீட்கும்பொருளாக நிறைவேற்றி முடிக்கப்பட்டது என்பதேயாகும்.

ஆனால் ஆதாமுக்கும் அவனது சந்ததியாருக்கும் கொடுக்கப்பட்ட மீட்கும்பொருளின் விலையோடு ஈடுபலியின் பணி நின்றுவிடாமல், இன்னும் அதிக காரியங்களை உள்ளடக்கியுள்ளது. மீட்கும்பொருள் என்ற வார்த்தையோடு தொடர்புடைய உட்கருத்தானது, ஈடுபலி கொடுத்ததோடு நின்றுவிடாமல், அதை பொருந்தச் செய்வதையும் உள்ளடக்கியுள்ளது. ஆதாமும் அவன் சந்ததியாரும் பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து மீண்டு, சீர்பொருந்துவதை இது உள்ளடக்கியுள்ளது. இந்தப் பணியானது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மெய்யாகவே இப்பணி துவங்கப்பட்டுள்ளது வெளியரங்கமாகிறது. மீட்கும் பொருளின் இயல்பான பண்புகள் மற்றும் புண்ணியம் சபைக்கு விசுவாசத்தின் மூலமாக மட்டுமே அருளப்பட்டு வருகிறது. சபையானது இன்னும் முழுமைபெற்று மகிமையடையவில்லை. இ[illegible] 2641 [illegible]வம் மற்றும்

மரணத்திலிருந்து முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மீட்கும்பொருளை பொருந்தச்செய்து, ஆதாம் மற்றும் அவரது குழந்தைகள் அனைவரையும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து மீட்கவும், விடுதலைபெறவும் மேசியாவின் ராஜ்யத்தின் ஆயிரமாண்டுகள் தேவைப்படும் என்பது வெளியரங்கமாகிறது. இதன் நிறைவேறுதலாக, மீட்கும்பொருளின் பணியானது 19நூற்றாண்டுகளுக்குமுன்பே துவங்கினது இன்னும் நிறைவேற்றப்படவேண்டியுள்ளது.


செலுத்தப்பட்ட ஈடுபலியின் தொகையில் எந்த சிக்கலும் இல்லை. அந்தத் தொகை 19 நூற்றாண்டுகளாக நீதியின் கரங்களில் இருந்துவருகிறது. ஆனால் அது உலக ஜனத்துக்கு இன்னும் பொருத்தப்படவில்லை. இச்சுவிசேஷயுகத்தில் உலகிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட திருச்சபையாருக்கு மட்டுமே இது விசுவாசத்தின் மூலமாக அளிக்கப்பட்டுவருகிறது. ஈடுபலியின் முழுபணியும் முழுமையாக நிறைவேறுவதைக்குறித்து வேதாகமம் கூறுவதாவது;

“அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்” – ஓசியா 13:14.

படுகுழியின் வல்லமையிலிருந்து மனுக்குலத்தின் கடைசி அங்கம் விடுதலையாக்கப்படும்வரை ஈடுபலியின் பணி முழுமையாக நிறைவடையாது. இன்னும் மாபெரும் உயிர்த்தெழுதலின்பணி நிறைவேற்றப்படவேண்டியுள்ளது. ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்துபோன அபூரண சிந்தை, ஒழுக்கங்கள், மற்றும் சரீரத்திலான அபூரணம் இவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டு, கல்வாரியில் சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டு, தேவனது முழுமையான சாயலுக்கும் ரூபத்துக்கும் ஒப்பாக எழுப்பப்படும்.

### பாவ நிவாரணபலி வேறு வகைப்பட்டது :–

நம் சிந்தையில் ஈடுபலியின் கருத்தை நிறுத்திக்கொண்டு, இரண்டு பாடங்களும் (பாவநிவாரணபலி, மீட்கும்பொருள்) தனித்தன்மையுள்ளது, பிரிக்கப்பட்டுள்ளது என்று நினைவுகூர்ந்து, பாவநிவாரண பலியைக் குறித்த பாடத்தை ஆய்வுசெய்வோம். ஈடுபலியின் விலைக்கிரயம் முழு மனுக்குலத்தின் பாவத்தை நீக்க போதுமானதாகவும், பொருந்தக்கூடியதாகவும் உள்ளதை பாவநிவாரணபலி காண்பிக்கிறது. மீட்கும்பொருளைப்போல, பாவநிவாரணபலி




நிறைவேறுவதற்கு நீண்டகாலம் தேவைப்படாது. மீட்கும்பொருளின் பணியானது 19 நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடைபெற்றுவருவதை நாம் ஏற்கனவே அறிந்தோம். இது இன்னும் 10 நூற்றாண்டுகள் வருங்காலத்தில் தொடர்ந்து நடைபெறும். அல்லது மொத்தமாக 29 நூற்றாண்டுகள் நடைபெறும். ஆனால் பாவநிவாரணபலியானது மகிமைநிறைந்த கிறிஸ்துவின் ஆளுகை துவங்குமுன் முடிவடைந்துவிடும். அவ்வேளையில் அவரது திருச்சபை அவரோடுகூட மகிமைப்பட்டிருக்கும்.

இயேசுவின் பலியானது மீட்கும்பொருளின் விலையை ஏற்படுத்தினதை இஸ்ரயேலரது ஒப்புரவாகும் நாளின் பாவநிவாரண பலி எடுத்துரைக்கிறது. ஆனால் அது ஒரு வேறுபட்ட உருவகக் காட்சியாகும். மனிதரது பாவங்களின் நிமித்தமாக கிறிஸ்துவின் பலியின் தகுதியை தேவன் எவ்வாறு பொருந்தச்செய்தார் என்று இது காண்பிக்கிறது. ஒப்புரவாகுதலின்நாளில் ஏற்பாடுசெய்யப்பட்ட பிரமாணத்தின் பண்பாக, இந்தக் காரியம் அடையாளமாக சொல்லப்பட்டுள்ளது. பாவநிவாரண பலிகளே இதன் அடிப்படைப் பண்புகளாயிருந்தன. அங்கே இரண்டு மிருகங்கள் பலியாகின. முதலாவதாக பாவநிவாரணபலியாக காளையை ஆசாரியன் பலியிட்டு, அதன் இரத்தம் ஆசாரியனின் சொந்த குடும்பத்துக்கு பொருந்துவதற்காக கொடுக்கப்பட்டது. இது கர்த்தராகிய இயேசுவின் மரணத்தை குறிக்கிறதாக நாம் காண்கிறோம். மேலும் அவரது ஈடுபலியின் தகுதியானது முதலாவதாக முதற்பேறான சபைக்கு அருளப்படுகிறதையும் நாம் காண்கிறோம்.

இந்த திருச்சபை இரண்டுவகுப்பாரை உள்ளடக்கியது. முதலாவதாக, ஆசாரிய வகுப்பாரை உள்ளடக்கியது. இந்த

**--2642--**

ஆசாரிய வகுப்பார், பிரதான ஆசாரியரைப்போலவே தேவனுக்கும் அவரது ஊழியத்துக்குமென்று தங்களை விசேஷமாக அர்ப்பணித்துக்கொண்டவர்கள். இவர்கள் தங்களது சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பதே புத்தியுள்ள ஆராதனையாகும்(ரோமர் 12:1).

இது நிழலில் , ஆரோன் தலையாகவும் அவரது குமாரர்கள் சரீரமாகவும் சித்திரமாக காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அப்போஸ்தலர் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய நாம் அவரது சபையாக இருக்கிறோம் என்று கூறுகிறார் – 1கொரிந்12:27.

இரண்டாவதாக, சபையில் இன்னுமொரு வகுப்பார், அதே பலியின் உடன்படிக்கை செய்துகொண்டபோதிலும், கர்த்தருடைய ஊழியத்தில் தங்கள் ஜீவியத்தை கீழ்ப்படிதலோடு அர்ப்பணிக்கத் தவறுகிறார்கள். இவர்கள் பாவத்திற்கோ மரணத்திற்கோ பின்னிட்டுப்போகாமலும், பலி ஒப்புக்கொடுக்கும் நிலைமைக்கு முன்னேறிச்செல்லாமலும் இருக்கின்றனர். இதன் காரணமாக, இவர்கள் இரண்டாம் வகுப்பாராக தங்களை உருவாக்கிக்கொண்டு, முதலாம் வகுப்பாருக்கு ஊழியக்காரராகின்றனர். இவர்கள் ஆசாரியர்களுக்கு ஊழியர்களாக இருந்த நிழலான லேவியர்களுக்கு நிஜமாக உள்ளனர். இவர்கள் ராஜரீக ஆசாரியர்களாக, பலிசெலுத்தும் ஆசாரியர்களோடு சிம்மாசனத்தில் உட்காராமல், தேவனுக்கு ஊழியர்களாக அவரது ஆலயத்தில் பணியாற்றுவர். இவர்கள் மகிமையின் கிரீடத்தை பெறுவதில்லை. மாறாக, குருத்தோலையை ஏந்தி, வெற்றி பெற்றவர்களாக நிற்கின்றனர். மேலும் இந்த வகுப்புக்கும் தகுதியடையாதோர் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

கர்த்தரோடு உடன்படிக்கை செய்தவர்களின் பாவங்களுக்கு மட்டும், ஈடுபலியின் புண்ணியங்களை விசேஷமாக கொடுப்பதாக, இந்தக் காட்சியில் கர்த்தர் காண்பிக்கிறார். இதனால் இவர்கள் இயேசுவின் புண்ணியத்தினால் நியாயந்தீர்க்கப்பட்டு, மகிமையான ஆசாரியர்க்குரிய கடமைகளை, அவரோடுகூட நிறைவேற்றும் தகுதியடைகிறார்கள்.

## இரண்டாந்தரமான பாவநிவாரணபலி

:–

நிழலான ஒப்புரவாக்கும் நாளின் இரண்டாந்தரமான பாவநிவாரண பலியானது கர்த்தருடைய ஆடு என்றழைக்கப்பட்டது. அடையாளமான பிரதான ஆசாரியனால் காளை பலிசெலுத்தப்பட்டதுபோல், இது ஏற்பாடு செய்யப்படாமல், ஜனங்களிடமிருந்தே தெரிந்துகொள்ளப்பட்டது. மெய்யாகவே, இரண்டு ஆடுகள் ஒரேசமயத்தில் தெரிவுசெய்யப்பட்டது. இவை சபையின் இரண்டுவகுப்பாரை குறிக்கின்றது. கர்த்தருடைய ஆடு என்பது பலிசெலுத்தும் வகுப்பார் அல்லது ஆசாரிய வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது. உருவகத்தில் லேவியர்களாக விளங்கும் இவர்கள், சபையில் குறைந்த வைராக்கியமுடையோராக இருந்து, போக்காடாகிய இரண்டாம் வகுப்பாருக்கு அடையாளமாக உள்ளனர். கர்த்தருடைய ஆடுவகுப்பார், உடன் ஆசாரியர்களாக இருந்து, இரண்டாந்தரமான பாவநிவாரணபலியை உண்டாக்குகிறார்கள்.

காளை பலிசெலுத்தப்படும்பொழுது ஒவ்வொரு படியிலும் என்ன நிகழ்ந்ததோ அதே தன்மையில் அதைத் தொடர்ந்து கர்த்தருடைய ஆடும் பலிசெலுத்தப்பட்டது. இவ்வாறு அடையாளமாக நமக்கு கூறப்பட்டபடி, சபை அவளது கர்த்தரது அடிச்சுவடுகளில் பலியின் ஜீவியத்தில் மரணபரியந்தம் நடக்கவேண்டும். சபைக்கு முன்னடையாளமாக உள்ள காளையின் இரத்தம் ஜனங்களின் பாவங்களுக்காக பொருத்தப்படவில்லை. மாறாக, பிரதான ஆசாரியரின் குடும்பத்துக்கும் கோத்திரத்துக்கும் மட்டுமே செலுத்தப்பட்டதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கர்த்தரின் ஆடாகிய இந்த இரண்டாம் பட்சமான பாவநிவாரணபலியானது அதே நபர்களுக்காக பலியிடப்படவில்லை. ஏனெனில் அவர்களுக்கு இன்னும் அதிகமான பலி தேவைப்படவில்லை என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். கர்த்தரின் ஆடு இரண்டாந்தரமான பலியாக, பிரதான ஆசாரியரது சொந்த பலியாக பலியிடப்பட்டது. இந்த பலியின் தகுதிகள் அல்லது புண்ணியங்கள் எல்லா ஜனங்களுக்கும் பொருந்தும்படியாக ஏற்படுத்தப்பட்டு, எல்லோரையும் ஒப்புரவாகுதலின்கீழ் கொண்டுவந்தது.

இந்த கர்த்தரின் ஆட்டுக்கு நிஜமாக, பிரதான ஆசாரியராக இயேசு தம் சொந்த பலியை கல்வாரியில் நிறைவேற்றினார். நாற்பது நாட்களுக்குப் பிறகு உன்னதங்களுக்கு ஏறி, கிருபாசனத்துக்கு முன்பாக

பிரவேசித்து, தம் பலியின் தகுதிகளை ஒப்புக்கொடுத்தார், உலகத்தாருக்காக அல்ல, சபையாருக்காகவே இவ்வாறு பிரவேசித்தார். அப்போஸ்தலர் எழுதியிருப்பதுபோல்,

"அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" – எபிரேயர் **9:24**

நாம் தற்போது அடையாளமாக கண்டதற்கு முழு இசைவாக இது இருக்கிறது. பெந்தெகோஸ்தே நாள் துவங்கி, கர்த்தர் தம்மோடு உடன்படிக்கை செய்தவர்களை ஏற்றுக்கொண்டுவருகிறார். இது நிழலாக இரண்டு ஆடுகளுக்கு ஒப்பிடப்படுகிறது. இவர்களுள் போதுமான அளவு வைராக்கியமுள்ளவர்களை அவர் தம் அங்கங்களாக ஏற்றுக்கொள்கிறார். அவர்களை தம் சொந்த பலியில் ஒருபகுதியாக எண்ணி, அவர்களை பலி செலுத்திவருகிறார். அவரது சரீரத்தின் இறுதிஅங்கம் மரணபரியந்தம் உண்மையாய்க் காணப்பட்டவுடன் விரைவில் இந்த பணியை நிறைவேற்றி முடிப்பார். அதன்பிறகு அடுத்த கட்டமாக, பிரதான ஆசாரியன் நிஜமான கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தை தம் சொந்த இரத்தமாக கருதி எடுத்துக்கொண்டு, கிருபாசனத்தின் முன்பாக மீண்டுமாக ஒப்புக்கொடுப்பார். வேறுவகையில் சொல்வோமேயானால், அவரது சபையின் பலி, தம் சொந்தபலியின் ஒரு பகுதியாக கருதப்பட்டு ஒப்புக்கொடுக்கப்படும். இது எல்லா ஜனத்தின் பாவத்துக்காக அதாவது, எல்லா ஜனங்களின் பாவத்துக்கான அடிப்படை ஆதாரத்தை நீக்கும் நிவாரணமாக இதை அவர் பொருந்தச்செய்வார்.



அத்தருணத்தில், பிதா தம் குமாரனிடத்திற்கு எல்லா ஜனங்களையும் திருப்புவார் ஆதியில் செய்த அவர்களது மீறுதலைப் பொறுத்தவரையில் பாவங்கள் முழுமையாக மன்னிக்கப்படும். அது கூடியவிரைவில் நடைபெறும் என்று நாம் நம்புகிறோம். உடனடியாகத் துவங்கும் மேசியாவின் ராஜ்யம், வல்லமையிலும் மாபெரும் மகிமையிலும் ஸ்தாபிக்கப்படும். இது பாவம் மற்றும் மரணத்திலிருந்து உலகை விடுதலையாக்கும் பணியைத் துவங்கும். அவரது ராஜ்யத்தின் சட்டதிட்டங்களுக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிகிற அனைவரும் பரிபூரண மனித சுபாவத்துக்கு உயர்த்தப்படுவர்.

## வெளிச்சத்துக்கு எதிராக பாவம்செய்தோருக்கு தண்டனை : –

இதற்கு இடைப்பட்ட நேரத்தில், ஆதாமின் மீறுதலுக்குள் சேராத உலகத்தின் வேறு பாவங்களும் உண்டு. பாவநிவாரணபலியானது ஆதி பாவத்திலிருந்து ஊற்றெடுக்கின்ற ஆதாமின் பாவத்துக்கும் அதன் பல்வேறு பலவீனங்களுக்கும், அபூரணங்களுக்கும் மட்டுமே ஆகும். இவை அறிவுக்கும் வெளிச்சத்துக்கும் எதிரான பாவமாக ஏறத்தாழ(more or less) கருதப்படுகிறது. முழு வெளிச்சத்திற்கெதிராக செய்த மனப்பூர்வமான பாவம் அந்த பாவிக்கு இரண்டாம் மரணத்தை வருவிக்கும். ஆனால் ஒரு சிலரே முழு வெளிச்சத்தையும் முழு அறிவையும் முழு வாய்ப்பையும் பெற்றிருக்கின்றனர். ஆதலால், ஒருசிலரே மரணத்துக்கேதுவான பாவத்தை செய்வர்.

சுவிசேஷ வெளிச்சம் எங்கெல்லாம் சென்றிருக்கிறதோ, அங்கெல்லாம் குறிப்பிட்ட அளவு அறிவுசென்றடைந்திருக்கிறது. அதோடு, குறிப்பிட்ட அளவு பொறுப்புணர்வும் சிறுகச்சிறுக சேர்ந்திருக்கிறது. மேலும் வெளிச்சம் சென்றடைந்த அனைவரிடமும் தேவன் மிகத் துல்லியமாக கணக்கீட்டை வைத்திருக்கிறார். ஒவ்வொரு பாவமும் நியாயந்தீர்க்கப்படும்போது, வெகுமதியை இழக்கநேரிடும். ஆதாம் செய்த பாவத்தின் தண்டனை முழு மனுக்குலத்திற்கும் **6000** ஆண்டுகளாக பொதுவாக சென்றடைந்துள்ளது. ஆனால் மற்ற பாவங்களுக்கான தண்டனை கண்டிப்பாக நிறைவேற்றப்படவேண்டும். அவைகளுள் சில மனம்வருந்தி மன்னிப்பைப்பெறாத முந்தைய மனப்பூர்வமான பாவங்களும், வெளிச்சத்திற்கெதிரான, சத்திய அறிவுக்கெதிரான பாவங்களும் இருக்கலாம். இவைகள் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின்பு சிறிதுசிறிதாக சேர்ந்தவைகள்.

**--2644--**

புதிய யுகம் அதன் எல்லா ஆசீர்வாதங்களுக்குள்

நடத்திச்செல்வதற்கு முன்பாக, உலகத்தாரின் பாவக்கணக்கு பாரபட்சமின்றி சரி செய்யப்படவேண்டும். உலகத்துக்கெதிரான தண்டனையை நிறைவேற்றுவதற்கு, தேசம் தோன்றினதுமுதல், இதுவரை சம்பவித்திராத மாபெரும் உபத்திரவக்காலம் அனுமதிக்கப்படும். தற்போதைய யுத்தத்தில் உபத்திரவக்காலம் துவங்கிவிட்டது என்று நாம் நம்புகிறோம். இது மாபெரும் குழப்பமாகிய திடீர் அழிவை நோக்கி படிப்படியாக வளர்ந்து, இனிவருகின்ற நாட்களில் முழுமையாக தண்டனையை நிறைவேற்றிமுடிக்கும். இவ்வாறு மகா உபத்திரவக்காலத்தில் நீதிநியாயத்தின்படி உலகம் தீர்க்கப்பட்டபிறகு, மேசியாவின் ராஜ்யம் உடனடியாக துவங்கும்.

### போக்காடு துன்பப்படுதலின் மதிப்பு :

தேவன் மிக கண்டிப்பான கணக்கீட்டாளராக இருக்கிறார். உலகத்தார் மனப்பூர்வமாக கீழ்ப்படியாதுபோன எல்லாக் காரியங்களையும் அவர் நிச்சயமாக எண்ணிவைத்திருக்கிறார். விசேஷமாக, அவரது திருச்சபைக்கு எதிரான உபத்திரவங்களை எண்ணியிருக்கிறார். அவ்வாறே உலகத்தார் செய்த நற்காரியங்களுக்கு உரிய பலனையும் தர அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். இதனை பாவநிவாரணபலியைத் தொடர்ந்து நடைபெறுகிற பணியின்மூலம் அவர் உருவகமாக அறிவுறுத்தியிருக்கிறார் என்று நாம் நம்புகிறோம். ஜனங்களின் மீறுதல்களில் சிலவற்றை போக்காட்டின் தலைமேல்சுமத்தி, அந்த அக்கிரமங்களை சுமந்துகொண்டு, வனாந்தரத்தில் அலைந்துதிரிய அனுப்பப்பட்டது.

இந்த போக்காடு என்பது தேவனோடு உடன்படிக்கைசெய்துகொண்ட சில பிள்ளைகள் என்றும்,



அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட உரிமைகளின்படி ஜீவிக்க தவறினவர்கள் என்றும் நாம் புரிந்துகொள்கிறோம். இவர்கள் மாபெரும் உபத்திரவக்காலத்திற்குள் செல்வார்கள் என்பதை முக்கியப்படுத்துகிறது என வெளிப்படுத்தல் 7:14இல் கூறுகிறதை நாம் புரிந்துகொள்கிறோம். இவர்களுக்கு நேரிடும் மாபெரும் உபத்திரவத்தில், தங்கள் நீதியின் ஆடைகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின் மூலம் கழுவி வெண்மையாக்கிக் கொள்வார்கள் என்று மேற்கண்ட வசனத்திலிருந்து தெரிகிறோம். லேவி வகுப்பாராகிய திரள்கூட்டட்து வகுப்பார்மேல் வரும் அந்த உபத்திரவங்கள், மனப்பூர்வமாக பாவம்செய்ததால் வந்த உபத்திரவங்கள் அல்ல. மாறாக, இந்த வகுப்பார் தேவனோடு செய்துகொண்ட பலியின் உடன்படிக்கையை காத்துக்கொள்ளத் தவறியதால், அவ்வுடன்படிக்கைக்கு இணக்கமாகும்படி, மாம்சத்தை அழிவுக்குள்ளாக்குவதற்காக வரும் உபத்திரவங்கள் ஆகும். ஆகவே இந்த திரளான கூட்டத்து வகுப்பாரது உபத்திரவங்கள் உலகத்துக்கு ஆதாயமளிப்பதாக இருந்து, வெளிச்சத்திற்கு எதிராகவும், முக்கியமாக தேவபிள்ளைகளுக்கெதிராக செய்த பாவங்களை நீக்குவதற்கு உதவிபுரியும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். விசேஷமாக இந்த உபத்திரவக்காலம், வஞ்சகர்களுக்கு எதிராக இருக்கும். ஆனால் திரள்கூட்டத்து வகுப்பாரும், இந்த வஞ்சகர்களோடு தங்களது தண்டனையின் பங்கை அடைவார்கள். இவ்வாறு உலகத்தாருக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனையில் குறிப்பிட்ட அளவு பங்கை இவர்கள் அடைவார்கள்.

உலகத்தார்மேல் சுமத்தப்பட்டிருக்கிற பாவத்தின் இயல்பை நாம் தெளிவாக கவனிக்கவேண்டும். வெளிப்படுத்தல் 6:9–11 வசனங்களை நாம் நினைவுகூர்வோம் –

“அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியத்தினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள் ; பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலுமிருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம்

இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது'' அவர்களது உடன்சகோதரர்கள், அவ்வாறே உபத்திரவப்பட்டு, அந்த எண்ணிக்கை நிறைவடையும்வரை நியாயத்தீர்ப்புக்காக கொஞ்சகாலம் காத்திருக்கவேண்டும் என அவர்களுக்கு கூறப்பட்டது.

சுவிசேஷயுக இறுதியில் தெய்வீக எதிர்பார்ப்புக்கள் என்னவென்று நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. யூத யுகத்தின் முடிவில் இயேசு யூதர்களிடத்தில் இதைக்குறித்து வலியுறுத்தினதன் மூலம் நாம் அறியவருகிறோம். ஆபேல் காலத்தில் துவங்கி இன்றுவரை பூமியில் சிந்தப்பட்ட நீதிமான்கள் அனைவரின் இரத்தப்பழியெல்லாம் அவர்களை சீர்பொருந்தப் பண்ணும்படிக்கு அந்த சந்ததியாரிடம் கேட்கப்படும்(மத் 23:34–36). யூத யுகம் மாபெரும் உபத்திரவக்காலத்தோடு முடிவடைந்தபோது, யூதர்கள் செய்த தவறுக்கு தண்டனைகொடுத்து அவர்களுடைய கணக்கு முழுமையாக சரிசெய்யப்பட்டது. அவ்வாறே, நாம் வாழும் காலத்தில் ஏற்படும் மாபெரும் உபத்திரவக்காலத்தின் இறுதியில், உலகத்தார் அடையவேண்டிய எல்லா தண்டனையும், அவர்களது கணக்கும் முழுவதும் சரிசெய்யப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

## ஸ்தாபிக்கப்படவிருக்கும் புதிய உடன்படிக்கை :

பாவ நிவாரணபலியைக்குறித்த நிழலான காரியங்களுக்கும், அதன் நிஜத்திற்குமிடையே உள்ள வேறுபாட்டை அப்போஸ்தலர் கூறுகையில், இயேசுவோ காளை மட்டும் வெள்ளாடு இவைகளின் இரத்தத்தினால் அல்ல, தமது சொந்த இரத்தத்தினால் நித்திய மீட்பாகிய ஆசீர்வாதங்களை ஏற்படுத்தித்தந்தார்(எபி9:11–15). மேலும் நிஜமான பிரதான ஆசாரியரின் பலிகள், ''மேலான பலிகள்'' என பன்மையில் கூறப்படுகிறது. இது யூதரது உடன்படிக்கையின் ஏற்பாட்டை ஸ்தாபித்ததுபற்றி சுட்டிக்காட்டுகிறது. அவ்விடத்தில் மோசே, காளை மற்றும் வெள்ளாடுகளின் இரத்தத்தை எடுத்து நியாயப்பிரமாண உடன்படிக்கையை ஸ்தாபித்தார். முதலாவதாக 10 கட்டளைகளடங்கிய பலகைகள்மீது இரத்தத்தைத் தெளித்து, அதன்பிறகு ஜனங்கள்மேல் தெளித்தார் – யாத் 24:3–8.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது, ஏன் மோசே காளைகள்(பன்மை) மற்றும் வெள்ளாடுகளை(பன்மை) உபயோகித்தார் ? ஆனால் நிழலாக லேவியர் 16ம்அதிகாரத்தில் கூறப்பட்டதில் ஒரு காளையின் இரத்தமும் ஒரு வெள்ளாட்டின் இரத்தமும் உபயோகிக்கப்பட்டுள்ளதே ! நிஜமான காளையாக உள்ள ஒரே மனுஷனாகிய கிறிஸ்துயேசு நமக்காக பலியானார் என்று நாம் இதற்கு பதிலளிக்கிறோம். மேலும் நிஜத்தில் ஒரே ஆடாக விளங்கும் கர்த்தரால் தம் சரீரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே திருச்சபை, அவரோடுகூட இணைந்து, அவரது பலியில் பங்குவகிக்கிறது. ஆனால் நியாயப்பிரமாண உடன்படிக்கை ஏற்படுத்தினபோது, இஸ்ரயேலின் திரளான ஜனங்கள்மேல் தெளிக்கப்பட வேண்டியிருந்ததால் ஒரு மிருகத்தைவிட கூடுதலாக அவசியமாயிருந்தது. ஒரே காளை மற்றும் ஒரே ஆட்டின் இரத்தமும் போதுமாயிருக்கவில்லை. ஆதலால்தான் காளைகள் மற்றும் ஆடுகள் என்று பன்மையில் எழுதப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் எத்தனை எண்ணிக்கை என்று துல்லியமாக சொல்லப்படவில்லை. ஒரே காளை மற்றும் ஒரே ஆடு என்றும் துல்லியமாக சொல்லப்படவில்லை. ஒரே காளை மற்றும் ஒரே ஆட்டின் இரத்தம் ஜனங்கள் எல்லோர்மீதும் தெளிக்கப்பட, போதுமான மிருகங்களைக்கொன்று, அதன் இரத்தம் ஏற்பாடு செய்யப்பட்டது, இவையனைத்தும் ஒரே காளை மற்றும் ஒரே ஆட்டிற்கு பிரதிகளாக இருந்தது.

இதற்கு நிஜமாக, புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை மேசியாவின் ராஜ்யத்தில் ஏற்படுத்தப்படும்போது, எல்லாவற்றிற்கும் முதலாவதாக, கிறிஸ்துவின் இரத்தம்(அதாவது, இயேசுவின் இரத்தத்தோடுகூட சபையின் பலிகளும் இணைந்தநிலையில்) தெளிக்கப்படும், அல்லது தெய்வீகப்பிரமாணத்தை நிறைவுசெய்யும். இதுவே பிதாவினால் முழு உலகமும் மேசியாவின் ராஜ்யத்துக்கு மாற்றப்படுவதற்கான அடிப்படைத்தன்மையாய் இருக்கும். அதற்குப்பிறகு, எல்லா ஜனங்கள்மேலும் இரத்தத்தைத் தெளிக்கும்பணி படிப்படியாய் செயல்படுத்தப்படும், இதில் மனுக்குலத்தை சுத்திகரிக்கும் பணி நடந்தேறி, மீட்கும் இரத்தத்தால் கிடைக்கப்பெற்ற அனுகூலங்கள் எல்லா மனுஷருக்கும் கொடுக்கப்படும்.

## நிஜமான ஒப்புரவாக்கும் நாள் :

முன்பு பார்த்தவைகளின் மூலம் இயேசு கொடுத்த ஈடுபலிக்கும், அதன் நிறைவேறுதலுக்கும் இடையேயுள்ள தனிச்சிறப்பியல்புகளையும், சுவிசேஷயுகத்தின் பாவநிவாரணபலிகளுக்கும், அவை எதை முக்கியப்படுத்துகிறது என்பதையும் நம் வாசகர்கள் தெளிவாக காண்பீர்கள் என்று நாம் நம்புகிறோம். இப்பொழுது நாம் மேலும் ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறோம். அதாவது நிழலிலும் அதன் நிஜத்திலும், பாவத்துக்கான ஒப்புரவாக்கும் நாளில் பாவ நிவாரணபலிகளும் இணைந்திருந்தன. நிஜமான ஒப்புரவாக்கும் நாளானது நம்

கர்த்தராகிய இயேசுவோடும் அவரது பலிகளோடும் துவங்கும். இந்த ஒப்புரவாக்குதலின் நாளின் ஒருபகுதியே முழு சுவிசேஷயுகமாக இருந்திருக்கிறது. இந்த ஒப்புரவாக்குதலின் நாளானது பாவத்துக்கான எல்லா ஒப்புரவாக்குதலின் நிறைவடைதல் பற்றி சாட்சிபகரும். ஆயிரமாண்டு யுகம் முழுவதும் நிஜமான ஒப்புரவாக்குதலின் நாளின் ஒருபகுதியாக இருக்கும்.

ஒப்புரவாக்கும் நாளின் பலிகள் ஒரு முடிவை மட்டுமே காண்பிக்கிறது. ஆனால் அதன் முடிவோ, உலகஜனங்கள் ஆசீர்வாதத்தை அடைதலும், உலகை தேவனோடு ஒப்பு– உறவு நிலைக்கு அல்லது இசைவான நிலைமைக்கு மீண்டும் கொண்டுவருவதேயாகும். இந்தப்பணி நிறைவேற்றப்படுவதற்கு ஆயிரம் ஆண்டு யுகம் முழுவதும் தேவையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு போதித்தலும் இப்பணியில் அடங்கியுள்ளது. ஆதாமுக்குள் மனுக்குலம் இழந்துபோனபிறகு, கல்வாரியில் அவை அனைத்தும் மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்டவைகள் மனுக்குலத்துக்கு திரும்பக்கொடுக்கப்படும். ஒப்புரவாக்குதலின் பாவநிவாரணபலிகள் உலகத்தார் தேவனோடு ஒப்புரவாகுமுன்பு செய்யப்படவேண்டும். இது அப்பலி உபயோகிக்கப்படுவதன் தேவநோக்கத்தைக் குறிக்கிறது.

ஆகவே ஒப்புரவாக்கும் நாளின் பாவ நிவாரணபலிகள்மூலமும், அந்த பலிகள் உண்டாக்குகின்ற வழிமுறைகள்மூலமும், தேவன் நிறைவேற்றுகின்ற உலகத்தாரின் ஆசீர்வாதங்களை இந்நேரம் முதற்கொண்டு எல்லோரும் தெளிவாக காணலாம் என்று நாம் நம்புவோமாக. ஆனால் ஈடுபலியானது முற்றிலும் தனித்தன்மையுடையதாய் இருந்து, இயேசுவின் பணிகளை மாத்திரமே காண்பிப்பதாயும், அதன் உச்சகட்ட விளைவுகளைமுழு மனுக்குலத்துக்கும்எடுத்துக் காண்பிப்பதுமே ஆகும்.

----------------------------

**--2647--**

# காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள்

## Lessons of the Lilies

திறவு வசனம் : மத்தேயு **6:28** ''காட்டுப் புஷ்பங்களை கவனித்துப்பாருங்கள்''

நமது மனித குடும்பத்திற்கு பயமும், இனிவரும் நிலைகுறித்த கவலையும் மிகவும் பயங்கரமான எதிரிகள். அவர்கள் தங்கள் சிந்தையில் அழிவின் காரியங்களை அணிந்துகொள்கிறார்கள். இவைகள் நரம்புத் தளர்ச்சியை உண்டுபண்ணி, களைப்பை வருவிப்பதோடு, உடலுக்கு மிகவும் அபாயத்தை உண்டுபண்ணும். சுவிசேஷ சபையாருக்கு தேவன் ஏற்படுத்தியுள்ள தெய்வீகப் பாதையில் நடக்க தேடுபவர்களிடத்தில், பயமும் வருங் காரியங்களைப் பற்றின கவலையும் விசேஷித்த தடைகளாயிருக்கும். நம் இரட்சகர் தம் சீஷர்களிடத்தில் பேசினபோது, இவ்வுண்மையை மனதில்வைத்திருந்தார். தம்மைப் பின்பற்றும் பின்னடியார்கள் எவ்விதக் கவலையுமின்றி, தங்கள் இருதயத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால் அதேசமயத்தில் அவர்கள் அலட்சியமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. முறையான ஜாக்கிரதை உணர்வை நாம் காண்பிப்பது அவசியமானதே, ஆனால் அதன் உச்சநிலையான கவலைப்படுமளவு அல்ல. தற்கால நிலைமையில் ஆசீர்வாதத்தை அனுபவிக்க, நாளைய தினத்தைப்பற்றிய சிந்தனைகளும் பயங்களும் தடையாய் இருந்து, செயலற்ற தன்மையை உண்டாக்குகிறது. அப்போஸ்தலர், "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் ..'' என்கிறார்.

இங்கு, பொறுப்புணர்வு மற்றும் முறையான அக்கறை செலுத்துதலைக் குறித்து அவர் கூறாமல், கவலைப்படுதலானது ஆத்துமாவின் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் கொள்ளையாடிவிடும் என்ற தன்மையிலேயே குறிப்பிடுகிறார். மேலும் கர்த்தரிடத்திலும், அவரது பராமரிப்பிலும் விசுவாசக்குறைவு உள்ளதென்பதற்கு இது அறிகுறியாக இருக்கும். மேற்கண்ட வசனத்தில், கவலைப்படாமல் என்ற சொல்லின் கிரேக்க மூலப்பதம், அதிகப்படியான கவலை(over - anxious) என பொருள் தருகிறது.

தேவனிடத்தில் நம்பிக்கையாயிருத்தலைப்பற்றி தன் சீஷர்களுக்கு, காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளர்கிறதென்று உதாரணத்தோடு விளக்கி, அவர்களை ஊக்கப்படுத்தும்படி ஒரு பாடத்தைக் கூறினார். பாலஸ்தீனாவில் லில்லி புஷ்பங்கள் எங்கும் சாதாரணமாக பார்க்கமுடியும். இது ஓரளவு சிறிய பூவாகவும், இதன் நிறம் பெரும்பாலும் சிவப்பு நிறமாகவும் இருக்கும். அவை தடைகளைத்தாண்டி ஜீவித்து வளரக்கூடியவை. இதன் வளர்ச்சிக்கென எந்த விசேஷ பராமரிப்பும் செய்யப்படுவதில்லை. இருந்தபோதிலும் இவை எதையும் சார்ந்திராமல் வளர்கின்றன. இவைகள் வழியோரங்களில் இருப்பதால், பாதையை கடந்து செல்பவர்களால் மிதிக்கப்படுகிறது. ஆனாலும் இவை வளர்ச்சியடைந்து, முதிர்ந்து, மலர்களை தருவதோடு, மிக நேர்த்தியான உயிரினமாக, நுண்ணோக்கியில் ஆராயும்போது மிக அழகானதாய் காட்சியளிக்கிறது. சாலமோன் தன் எல்லா மகிமையிலும் இவைகளில் ஒன்றிற்கு பகட்டாக உடுத்தப்பட்டதுபோல் உடுத்தினதில்லை. புஷ்பம் உடுத்தப்பட்ட விதம் பூரணமாய் இருந்தபடியால், அற்புதமாயிருந்தது. நித்தியவாசியானவரின் கைகளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த புஷ்பத்தின் நேர்த்தியான கட்டமைப்பை, உன்னதமாய் உடுத்தப்பட்ட விதத்தை தோராயமாக மதிப்பிடமுடியாது.

இதிலிருந்து கற்கும் பாடம் என்னவெனில், புஷ்பங்கள் தயவற்ற சூழ்நிலையில் வளர்ந்தபோதிலும் தங்களையே பராமரித்துக் கொள்ள முடியாதபோதிலும், தங்களைப்பற்றி எந்தவிதத்திலும் கவலைப்பட முடியாதபோதிலும், அவைகள் செழித்துவளரவும், மிக அழகாகத் தோற்றமளிக்கவும், தேவன் அவைகளைப் பராமரிக்க ஏற்பாடுசெய்துள்ளார். இந்த புஷ்பங்கள் தாங்கள் பெரிய மரங்களாக வளரவேண்டும் என்றோ, வார்த்தையிலோ அல்லது வான **-2648-** உயரத்தில்

இருக்கவேண்டுமென்றோ விரும்புவதில்லை. அல்லது, அவைகள் திராட்சைக்கொடிபோல் படிப்படியாக, உயரமாக வளரவேண்டும் என்றும் விரும்புவதுமில்லை. இதற்கு மாறாக, தங்களது நித்திய சிருஷ்டிகர் தங்களை தெரிந்துகொண்ட நிலைமையில் நிலைத்திருப்பதில் திருப்தியடைகின்றன - மத் 6:30.

## நம்பிக்கையின் முக்கியத்துவமே வலியுறுத்தப்படுகிறது :

தேவனுடைய பிள்ளைகள் புஷ்பங்களிலிருந்து பாடம் கற்கவேண்டும். அவர்களும் கர்த்தருடைய ஏற்பாடுகளின்மேல் திருப்தியடையவேண்டும். கவிஞர் வர்ணிப்பதுபோல் –

"என் தேவன் என்னை நடத்துவதால் நான் காண்கிற வாய்ப்புகளில் மனநிறைவடைவேன் !

இந்த நிலைமையை நாம் ஏறத்தாழ அடையும்போது, அதேஅளவு சமாதானம் மற்றும் இளைப்பாறுதலை நமக்குத்தரும். நாம் கவலைப்படவோ, அசதியாகவோ இருக்கக்கூடாது. மாறாக விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும்.

''ஆவியில் அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியம்செய்யுங்கள்'' செய்யும்படி நம் கைக்கு எட்டினதுஎதுவோ அதை முழு பலத்துடன் செய்வோமாக. இவ்வாறு செய்யும்போது, அவர் நம் நன்மைக்கேதுவாகவே அனைத்தையும் செய்கிறார் என்ற நம்பிக்கையோடும், நிறைவடைந்த மனதையுடையவர்களாயும் இருக்கவேண்டும். அவர்பேரில் நம்பிக்கை வைக்க கற்கவேண்டும் என்ற இந்த முக்கியமான பாடத்தை நாம் நினைவில்நிறுத்தவேண்டுமென அவர் விரும்புகிறார்.

இந்தப் பாடத்தைக் கற்பதில் அலட்சியங் காட்டுபவர்கள், மேசியாவின் ராஜ்யத்தின்கீழ், தேவன் தம் சிந்தையில் நமது எதிர்காலத்திற்காக வைத்திருக்கிற மாபெரும் பணியை நிறைவேற்ற ஆயத்தப்படாதவர்களாவோம். முழு நம்பிக்கை வைக்காத எவரையும் தேவன் அந்த ராஜ்யத்தில் அனுமதிப்பதில்லை என்று நாம் நிச்சயித்திருக்கிறோம். தேவனது பராமரிப்பின்கீழ் புஷ்பங்கள் எவ்வாறு செழிப்படைகிறதோ அவ்வாறே அவரது ஜனங்கள் அனைவரும் அறிவிலும், ஆவிக்குரிய அழகிலும் வளர்ந்து, குணாதிசய அழகில் செழிப்படைவார்கள். அவர்கள் சில பெரிய காரியங்களை செய்வதன்மூலம் இதனை அடைந்துவிட முடியாது. மாறாக நம் வாழ்க்கையில் ஆவியின் அனுக்கிரகத்தில் சிறு காரியங்களை அணுகுவதன்மூலம் அன்றாட அனுபவங்களை அடையலாம். தேவனுடைய பிள்ளைகள் அத்துமீறாமல், ஸ்திரமாக வளர்ச்சியடையவேண்டும்.

காட்டு புஷ்பங்கள் எப்பொழுதும் தாழ்வான இடங்களையே பெற்றிருக்கும். ஒருபோதும் ஒரு பெரிய மரமாக இருக்க எண்ணாது. அவ்வாறே நாமும் மாம்சத்தில் இருக்கவேண்டும். கர்த்தர் அவருக்கேற்றபடி நம் ஒவ்வொருவரையும் வடிவமைத்த இடத்தில் நியமிக்கிறார். தற்போது தாழ்மையான நிலைமையில் வைத்திருப்பதன்மூலம், எங்கே நாம் வளர்வது ? பிதாவின் சித்தப்படி எங்கே நம் நேர்மையும் உண்மையும் பரீட்சிக்கப்படும் ? எங்கே நம் குணாதிசயத்தின் மொத்த அழகும் முழுமையாக வளர்ச்சியடையும் ? – என்று வருங்காலத்திற்கென சிறந்த பாடங்களை நம்மால் கற்கமுடியும்.

-----------------------

--2649--

# ஐனேயாவும், தொற்காளும்
# Aeneas and Dorcas
## (Visiting with Peter, the primitive saints)

திறவுவசனம் : ''இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்''

"அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம்பெற்று பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்துபெருகின" – அப் 9:31–43.

சீஷர்களுக்கு நேரிட்ட உபத்திரவம் அவர்களை எருசலேமிலிருந்து யூதா தேசமெங்கும் சிதறடித்தது. இவ்வாறு சிதறடிக்கப்பட்டவர்களுக்குள் பிரதானமானவர்களாயிருந்த அநேகருள் பவுலும் ஒருவர். பவுல் மனம் மாறினபின் நடந்த சம்பவங்கள் படிப்படியாக குறைந்தநிலையில், அதிர்ச்சி மற்றும் நோய்வாய்ப்பட்ட நிலையிலிருந்து மீண்டு, தேற்றப்பட்டபிறகு, ஒருசிலகாலம் ஓய்வுக்குப்பின், நம் ஆதார வசனங்களின் முதல் வசனத்தில் கூறப்பட்டவாறு(9:31) நடந்தது. சீஷர்களுக்கு நேரிட்ட இவ்வுபத்திரவத்துக்கு பவுல் மனம் மாறியதும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் இச்சம்பவத்துடன் சேர்ந்து இச்சமயத்தில், யூதர்களுக்கும் அவர்களது ரோம ஆட்சியாளர்களுக்குமிடையே போராட்டம் எழுந்தது.

கிபி 38ம் வருடம் பேரரசனாகிய காலிகுலா சீசர் தற்போதுதான் பதவியேற்றிருந்த நிலையில், ஒரு கட்டளையை பிரகடனப்படுத்தினான். அதன்படி, அவனது பேரரசுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், அவனது சிலை நிறுவப்பட்டு, தொழுதுகொள்ளப்பட வேண்டும். எருசலேமிலும் மற்ற பகுதிகளிலும் இந்த சிலைகளை வைக்கும் நோக்கத்தையும், ஆலயத்திலும்கூட ஸ்தாபிக்கும் இக்கட்டளையை யூதர்கள் அறிந்தபொழுது, கடும் சீற்றமும் வேதனையும் அடைந்தனர். அவர்கள் இளைஞரும் முதியோருமாக மாபெரும் ஜனத்திரளாகக் கூடி உள்ளூர் ஆளுநரை இவ்விஷயத்தில் அவர்களுக்காக நியாயம் செய்யும்படிக்கு மன்றாடிக்கேட்டு, இவர்களது தெய்வீக நிலையிலுள்ள பரிசுத்த தேவாலயமும், பரிசுத்த நகரமும், பரிசுத்த நிலமும் மாசுபடுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டனர். இந்த கண்டனக் கூட்டங்கள் ஒன்றில் நடந்தவற்றைக் குறித்து வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்:ஆறு பாகங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பரந்த மக்கள்கூட்டம் –

1. முதிர்வயதுள்ள ஸ்திரீகள் 2. விடுதிக் காப்பாளர்கள் மற்றும் வேலைக்காரப்பெண்கள் 3. இளம்பெண்கள் 4. முதிர் வயதுள்ள ஆண்கள் 5. வாலிபர்கள் 6.சிறுவர்கள் என

ரோம நிர்வாக அதிகாரியின் அரண்மனை முன்பாக ஒன்றுகூடி, அவன் மாடி முகப்பின் முன்பாக தோன்றினபோது, புறக்கணிக்கப்பட்ட நிலையில் பூமியில் புரண்டு அழுது புலம்பினர். தாங்கள் மரிக்கவும் தயாராக இருப்பதாகவும், ஆனால் ஒருபோதும் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும் அறிவித்தனர். பேரரசனுடைய பிரகடனத்தை மாற்றுவதற்கு ஆளுனர் எடுத்த ஒவ்வொரு முயற்சியும் பலிக்காமல், இறுதியில் ஆலயத்தை தொடாமல் வெளியேற கட்டளைமட்டுமே ஏற்படுத்தமுடிந்தது. ஆனால் ஆலயத்தின் வெளிப்புற நுழைவாயில்களில் பேரரசனுக்கு அநேக பலிபீடங்கள் எழுப்பப்பட்டன. மேலும் அலெக்சாந்திரியாவிலுள்ள அனைத்து யூத வழிபாட்டு ஸ்தலங்களும் சீசருடைய ஆலயங்களாக மாற்றப்பட்டதாக செய்திகள் வந்தடைந்தன. இந்தக் காரியங்கள் கிபி 41 ஜனவரி மாதம்வரை நீடித்தது, ஜனவரி 24ம்தேதி காலிகுலா சீசர் கொலைசெய்யப்பட்டான்.

இப்படிப்பட்ட வெளிப்புறமான உபத்திரவமும், குறுக்கீடும் தங்களது சொந்த சம்பிரதாயங்களிலும் சுயாதீனங்களிலும் தலையிட்டதால், யூதர்கள் கிறிஸ்தவர்கள்மேல் போரிடுவதைத் தவிர்த்து, ஓய்வாயிருந்தனர். இப்படியாக ஒரு குறிப்பிட்டகாலம் ஓய்வு கொணரப்பட்டது. உபத்திரவப்படுத்துபவர்கள் ஒருபோதும் தங்களுக்கு உபத்திரவம் வருவதை விரும்புவதில்லை. கிறிஸ்துவின் சிந்தையை பெற்றிருப்பவர்கள் பிறரை ஒருபோதும் உபத்திரவப்படுத்தமாட்டார்கள். இது தீமை என்று தீர்மானித்தவைகளுக்கு ஒத்துழையாமலும், உதவி செய்யாமலும் இருப்பது இவர்களது கடமை என்று உணர்ந்திருக்கிறார்கள். அவசியம் ஏற்படும்போது தவறை வெளிப்படையாக எதிர்க்கவும், அதன் பொருத்தமற்ற தன்மையையும் எடுத்துக் காண்பிப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் அப்போஸ்தலர்கள் பலமுறை தங்கள் நிருபங்கள் வாயிலாக

செய்ததுபோலவே இவர்களும், தவறான போதனைகள் மற்றும் தவறான செய்கைகள் செய்வோரை வெளிக்கொணருவார்கள். ஆனால் மற்றவர்களை உபத்திரவப்படுத்துவதில் கர்த்தருடைய பிள்ளைகள் பங்கேற்கமாட்டார்கள். நாம் அன்பின்ஆவியில் , கிறிஸ்துவின் சிந்தையில் மறைக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு பிறர் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அதையே பிறருக்கும் செய்யும்படி அந்த ஆவி நம்மை வழிநடத்தும். இதுவே நமது ராஜரீகப் பிரமாணம், ''பரிபூரண சுயாதீனப்பிரமாணம்.

சபைகள் குணாதிசயங்களில் மேம்பட்டன என்று பதிவுகள் கூறுகின்றன. குணங்களில் மேம்பாடு என்ற வார்த்தை ஒரு கட்டிடம் கட்டப்படுவதற்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளது. ஆகவே இதிலிருந்து நாம் அறியவேண்டிய சிந்தனையானது, இந்த சமாதானம் நிறைந்த காலகட்டமானது, பலஸ்தீனாவிலுள்ள கர்த்தரின் பிள்ளைகள் எண்ணிக்கையிலும் ஆவியின் கிருபைகளிலும் –ஆகிய இரண்டுவழிகளிலும் மேம்பாடு அடைந்தனர். குழந்தைப் பிராயத்திலிருந்த சபை எண்ணிக்கையிலும், கிருபையின் வளர்ச்சியிலும் வளர்ந்துவந்தது. கிருபையில் வளர்ந்ததை வசனம் வெளிப்படுத்துகிறது : “கர்த்தருக்கு பயப்படுதலிலும் பரிசுத்தஆவியின் தேற்றுதலிலும்” விசுவாசிகள் நடந்தார்கள்.

“கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்” என்று வேதவசனம் வெளிப்படுத்துகிறது(சங்111:10). இது சுயநலத்தின் காரணமாக வரும் பயமல்ல. மாறாக தேவபக்தியினால் வரும் பயம். கர்த்தர் நன்மைக்கு பதிலாக தீமையே உருவானவர் என்ற பயமல்ல, அவர் நித்திய தண்டனை கொடுப்பார் அல்லது தம் எதிரிகளிடத்தில் அநீதியாக நடந்துகொள்வார் என்ற பயமல்ல, மாறாக தேவபக்தியினால் வரும் பயம். அவரது மேன்மையையும், அவரது நன்மையையும் அறிந்துணர்ந்து, அங்கீகரித்து, வியந்துபாராட்டுவதே கர்த்தருக்கு பயப்படுதலாகிய தேவ பக்தியாகும். அவருக்கு பிரியமில்லாததை செய்ய பயப்படுவதும், அல்லது அவரது அன்பு மற்றும் தயவிலிருந்து பிரிப்பதாகிய எதையும் செய்ய பயப்படுவதுமே ஆகும். இப்படிப்பட்ட நியாயமான பயம், ஞானத்தின் ஆரம்பமாகஇருந்து, அந்த ஞானத்தை காத்துக்கொண்டால் ஒருபோதும் அழியாதிருக்கும். தூசியிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட நாம், மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். கர்த்தருடைய கிருபை, வல்லமை மற்றும் சத்தியத்தினால் புதுப்பிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டிருக்கிறோம். நமது சொந்த சிறுபிள்ளைத்தனத்தால், குறைபாட்டினால், நம் பார்வையை இழந்துவிடாமல், கர்த்தரது இரக்கம் மற்றும் தயவையே நாம் முழுமையாக சார்ந்திருக்கவேண்டும். இதிலிருந்து தன் பார்வையை இழப்பவன், நிச்சயமாக விழுகைக்குள்ளாவான். ''பூரணஅன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்'' என்று அப்போஸ்தலர் கூறியிருப்பது, இவ்விடத்தில் தேவபக்தியினால் வரும் பயத்தை குறிப்பிடாமல், பெரும் அச்சத்தினால் உண்டாகும் பயத்தையே புறம்பே தள்ளும் என அவர் குறிப்பிடுகிறதை நாம் உணரவேண்டும். பூரணஅன்பு பெரும் அச்சம் மற்றும் அடிமைத்தனத்தின் பயத்தை புறம்பே தள்ளும். அதோடுகூட, இது கர்த்தருக்கேற்ற நம் பயபக்தியை ஊக்கப்படுத்தி, அபிவிருத்தியடையச்செய்யும். ஆகவேதான், அப்போஸ்தலர் மீண்டுமாக வெளிப்படுத்துகிறார், தேர்ச்சியடைந்த கிறிஸ்தவர் தேவஅன்பின் மூலம் தன்னிடமிருந்த அடிமைத்தனத்தின் ஆவியை இழந்து, தேவன் அடையாளங் காண்பித்தபடி, அவரைப் பிரியப்படுத்த பேராவல்கொண்டு, அதை முடிவில் அடைவான்.

''ஆனபடியினாலே அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்''– எபிரேயர் 4:1, 1யோவா4:18.

குழந்தைப்பிராயத்து சபை தேவனுக்குப் பயப்படுகிற பயமாகிய ஒரே கிருபையில் மட்டும் வளர்ச்சியடைந்ததோடு நில்லாமல், பரிசுத்தஆவியின் தேற்றுதலும்(Pneuma – Spirit) அதற்கு கூட்டிக்கொடுக்கப்பட்டது. பரிசுத்தஆவி என்பது தேவசிந்தை அல்லது தேவனது மனமாகும். குழந்தை பிராயத்து சபையானது இதில் அபிவிருத்தியடைந்து, தங்கள் இருதயங்களில் விளையச்செய்தது, அதில் நடந்தது–அதாவது அதன்படி ஜீவித்தது. தேற்றுதல் என்ற வார்த்தை ஒருவரோடொருவர் ஒற்றுமைப்படுத்துதல், உறுதியாக இணைத்தல் அல்லது திடப்படுத்துதல் என்று பொருள்தருகிறது. இவ்வார்த்தையின் மூலம் வெளியாகும் கருத்து என்னவெனில், சபையானது எண்ணிக்கையில் பெருகினதோடு மட்டுமல்லாமல், தேவனுடைய பரிசுத்த திருச்சபையாக அல்லது ஆலயமாக கட்டப்பட்டு மேம்பாடு அடைந்தது. ஆனால் பல்வேறு ஜீவக்கற்கள் பரிசுத்தஆவியினால் ஸ்திரமாக இணைத்திருந்து, ஒருவருக்கொருவர் கட்டப்பட்டனர். மழலை சபையின்

மகிமையடைந்த நிலைமையை இது எழுத்துருவத்தில் வலியுறுத்தி விவரிக்கிறது. இன்றையநாளில் எப்புறமும் இருக்கிற கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகள், எதற்காக போராடவேண்டுமென இது தெளிவாக்குவதுடன், அப்பொழுதிருந்ததுபோலவே உண்மை கிறிஸ்துவின் சபை மெய்யாகவே இப்பொழுதும் இருக்கவேண்டும்.

ஒருவரையொருவர் கட்டி எழுப்புவதைக்குறித்த கருத்து, தனிப்பட்ட நபருக்குப் பொருத்திப் பார்க்கும்பொழுது, அவரது சொந்த விசுவாச அமைப்பை முக்கியப்படுத்துகிறது. அந்த விசுவாசஅமைப்பு பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் போன்ற தெய்வீக சத்தியங்களும், குணாதிசயங்களுமாம் என அப்போஸ்தலர் நமக்கு தெரிவிக்கிறார். இவைகளிலிருந்து மரம் புல் வைக்கோலாகிய தவறு, பாவம் மற்றும் போலிநடிப்பு ஆகியவை புறம்பாக்கப்படும். இதே கருத்தை சற்று வித்தியாசமான வழியில் சபை ஜனங்கள் கூடி வருதலுக்கு பொருத்திக் காண்பிக்கலாம். ஒவ்வொரு சிறுசபையும் ஒரு தற்காலிகமான ஆலயமாக அல்லது தேவனது வாசஸ்தலமாக, அவரது பரிசுத்தஆவி வாசம்பண்ணும் இடமாக கருதப்படுகிறது. இன்னும் விஸ்தாரமாகக் கூறுவோமேயானால், முழு சபையும் தேவனுடைய ஆலயமாக எல்லாக் காரியங்களிலும் கருதப்படுகிறது. இதில் அவர் பிரதிநிதியைப்போல் தங்கியிருக்கிறார். இதன்மூலமாகவே கேட்கும் காதுகளை உடையவர்களிடத்தில் பேசுகிறார். இதன் அடிப்படையில், வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட 7சபைகளும் முழு உலகிற்குமான கர்த்தரின் ஒரே சபையையே குறிப்பிடுகிறது. 7சபைகள் 7 வேறுபட்ட காலப்பகுதிகளையும் அதன் வரலாறுகளையும் எடுத்துரைக்கிறது. ஆனால் இவைகளில் எதுவும் ஆலயம் போன்ற வார்த்தையை முறையாக உபயோகிக்கவில்லை. இன்னும் அதிகமாக, இன்னும் துல்லியமான கருத்து, தெய்வீக ஆலயமாகிய சபையைக் குறித்து வெளிப்படவேண்டியுள்ளது என்பதை சிந்தையில் நிறுத்தவேண்டும்.

மகிமையடைந்த சபையைப்பற்றிய இன்னும் துல்லியமான கருத்து, அது கட்டுமானப்பணியின் கீழ் இருக்கவில்லை. சுவிசேஷ யுகத்தின்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கட்டப்பட்டுவருகிற அவரது பரிசுத்தவான்களை அவரிடத்தில் கூட்டிசேர்க்கும் வேலை துரிதமாக நடந்துவருகிறது. கர்த்தருடைய பின்னடியார் ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருந்து, தற்போது அக்கல் செதுக்கப்பட்டு பொருத்தப்பட்டு பளபளப்பாக்கப்பட்டு, மகிமையடைந்த ஆலயத்தில் வைக்கும்படிக்கு தயார்ப்படுத்தப்படுகிறது. இதன் கட்டுமானப்பணி இந்த யுகமுடிவு வரை நீடிக்கும். சாலமோனின் ஆலயத்தில் நிழலாக காண்பிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு பகுதியும் பூரணமாக்கப்பட்டு ஒன்றுசேர்க்கப்படும்.

சுத்தியல் ஓசை கேட்காமல் கல் சிறிதளவுகூட செதுக்கப்படும் அவசியமின்றி அல்லது பரிபூரணமாக்கப்பட்டவைகளில் ஒருசிறிதளவுகூட மாற்றம் செய்யாமல், அனைத்தும் ஒன்றுசேர்க்கப்பட்டு மகிமைநிறைந்த தேவஆலயமாக உண்டாக்கப்படும். அது கர்த்தரது நிறைவான, பரிபூரணமான பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டு, ஆயிரமாண்டு ஆட்சியின்போது, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கவும் அறிவுறுத்தவும், மையமாக ஏற்படுத்தப்படும். ''பரலோகத்திலிருந்து புதிய எருசலேம் தேவனிடமிருந்து கீழே இறங்கிவருகிறது'' 1பேதுரு2::4–7, வெளி21:27,10, 1ராஜா6:7.

## லித்தாவில் குடியிருந்த பரிசுத்தவான்கள் :

அப்போஸ்தலர்கள் எருசலேமை தங்களது ஊழியத்தின் தலைமையகமாக ஏற்படுத்தியிருந்தபோதிலும், யூதேயா முழுவதிலும் சுற்றித்திரிந்து, முன்பு நடந்த உபத்திரவத்தினால் சிதறுண்டிருந்த தேவனுடைய பிள்ளைகளை சந்தித்து, ஒன்றிணைத்து, சிறு சபைகளாக ஒவ்வொரு பகுதியிலும் உருவாக்கினர். இந்தப் பிரயாணங்களில் பேதுரு, சாரோன் சமவெளியின் பிரதான பட்டணமாகிய லித்தாவுக்கு வந்தார். இந்த பட்டணமானது, எருசலேமுக்கும் யோப்பா பட்டணத்துக்குப் போகும் வழியில் 10 மைல் தொலைவில் அமைந்திருந்தது.

பேதுருவின் இந்த விசேஷப் பிரயாணம் நாம் முன்பே கூறினதுபோல பரிசுத்தவான்களை சந்திக்கும் நோக்கத்துடன் அமைந்திருந்தது. பரிசுத்தவான் என்ற வார்த்தையை நாம் நேசிக்கிறோம். இது தூய்மையான, பிரித்தெடுக்கப்பட்ட, கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகளை குறிக்கிறது. இன்றைக்கு இந்த வார்த்தையை உபயோகித்தால் அதிக எதிர்ப்புகள் ஏற்படுகிறது. இதற்கு இரண்டு இயல்பான காரணங்கள் இருப்பதாக நாம் நம்புகிறோம். முதற்காரணம், கிறிஸ்தவத்தை பிழைப்புத்தொழிலாக கொண்டவர்களில் பெரும்பான்மையானோர், தாங்கள் பரிசுத்தவான்களல்ல, பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமல்லர் என்று அறிவர். கர்த்தரோடு

--2652--

நெருக்கமாக ஜீவிக்காமல், உலகிலிருந்தும், மாம்சம், சாத்தானிடமிருந்தும் விலகி, பிரித்தெடுக்கப்பட்ட ஜீவியம் ஜீவிக்காதிருக்கின்றனர். இப்படிப்பட்ட மனிதர்கள், பரிசுத்தவான்கள் என்ற வார்த்தையை விரும்பாததற்கு பலமான காரணங்களை பெற்றுள்ளனர். இது, அவர்களது நண்பர்கள் மற்றும் கிறிஸ்தவப் பணியில் உடன்பங்கேற்பவர்களிடமிருந்து புறம்பாக்கும் என்று புரிந்திருக்கின்றனர். பரிசுத்தவான்கள் என்ற வார்த்தையை எதிர்ப்பதற்கு மற்றுமொரு காரணம் என்னவெனில், இருண்ட யுகங்களில், ரோம மற்றும் கிரேக்க கத்தோலிக்க சபைகளில், சபை ஒழுங்குமுறைப்படி பக்திமுறைமைக்கென்று ஒருசில நபர்களை பரிசுத்தவான்கள் என்று அழைக்கும் வழக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்தது. இதனால் விசேஷமான தீமை எதுவும் நினைவுகூறப்படவில்லை. ஆனால் மேன்மை மிக்கவர்களாகவும், வணக்கத்திற்குரியவர்களாகவும் உயர்த்திக்கொண்ட ஒரேகாரியம் மட்டுமே உணரப்பட்டது. இவ்வாறாக பரிசுத்தவான்கள் என்ற வார்த்தை ஜீவிக்கும் கிறிஸ்தவர்களிடையேயிருந்து பிரித்தெடுக்கப்பட்டுவிட்டது. மெய்யாகவே சில கிறிஸ்தவர்கள் மட்டுமே பரிசுத்துவத்துக்கு பிரதிநிதிகளாக தேவனை நோக்கி உணர்வூக்கத்துடன் இருந்ததால் ஒரு வேளை இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். பரிசுத்தவான் என்ற பதத்தை சிலர் வெறுக்க இன்னுமொரு காரணம் என்னவெனில், பாசாங்கு செய்பவர் என்று சிலரால் பேசப்பட்டதால், தாங்கள் மிகைப்படுத்தப்படுவதாக எண்ணினர். ஏனெனில் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற வசனத்தினை சரியாக பொருத்திப்பார்க்காமல், எல்லா கிறிஸ்தவர்களும் துயரப்படும் பாவிகளே என்று சிந்திக்கவும் ஜெபிக்கவும் பழக்கப்படுத்திக்கொண்டனர். ஏனெனில் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பதால் நியாயப்பிரமாணத்தின் நீதி, சிலரில் நிறைவேறுகிறது என்ற உண்மையை கவனிக்கத் தவறினர். கிறிஸ்துவின் தகுதி அவர்களது மனப்பூர்வமாக செய்த எல்லா மீறுதல்களையும் மூடுகிறது– –ரோமர் 8:4.

கர்த்தருடைய ஜனங்கள் அப்போஸ்தலர்களால் உபயோகிக்கப்பட்ட எல்லா நாமங்களையும் பழக்க வழக்கங்களையும் நினைவுகூர்ந்து, அதை பொருத்திப்பார்க்கவும், அதில் பிரியப்படவும் வேண்டும். பரிசுத்தவான் என்ற பதமும் தன்னில்தானே அங்கீகாரத்தை நமக்குத் தருகிறது. ஏறத்தாழ புதிய ஏற்பாட்டின் எல்லா நிருபங்களும் பரிசுத்தவான்களுக்கே எழுதப்பட்டன. மேலும் இந்த வார்த்தையை முறையாக தங்களுக்கு பொருத்திப்பாராமல் இருந்தால், இந்நிருபங்களில் இடம்பெற்றுள்ள மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை முறையாக தங்களுக்கு பொருத்திப் பார்க்கமுடியாது. ஏனெனில் வாக்குத்தத்தங்கள் அனைத்தும் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கென்றே எழுதப்பட்டவை(ரோமர் 1:7, 1கொரிந் 1:2, 2கொரிந் 1:9, எபேசி 1:1). பரிசுத்தவான் என்ற வார்த்தை நம் கர்த்தரின் விஷயத்தில் இருந்ததுபோல உண்மையான பரிபூரணத்தைக் குறிக்காமல், அவருக்குள் பரிசுத்தர்களாக கருதப்படுகிறார்கள். பரிசுத்தவான்களாயிருந்த அப்போஸ்தலர்களும் தேவனுடைய பரிசுத்தவான் வகுப்பாராக தங்களைக்குறித்து அவர்கள் வெளிப்படுத்தினபோது, "நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே .."– அப் 14:15. சுபாவத்தின்படி மற்றவர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தபோதிலும், பரிசுத்தவான்கள் என்ற பதம் சபையில் முறையாக பொருந்தக்கூடியதாக உள்ளது. இவ்வாறு கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்த நம்மை சாபத்தீர்ப்பிலிருந்து காப்பாற்றி, கழுவி, சுத்திகரித்து, நம் பாவங்கள் மன்னிக்கப்படுதலினாலும், நம் பலவீனங்களும் கறைகளும் மூடப்படுவதாலும் தேவனோடு இசைவாக்கப்பட்டோம். தேவனது இந்த ஆசீர்வாதங்களுக்கு தொடர்புடையவர்கள், அவற்றில் பிரியப்படுபவர்கள், தங்களையே முழுமையாக தத்தம் செய்து ஜீவிக்க, கிறிஸ்துஇயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகினர், பரிபூரண ஜீவியத்தையல்ல(இது கூடாத காரியம்). மாறாக, நம்மால் முடிந்தவரைக்கும் பரிபூரணத்தை அடைய முயற்சிப்போம். பிதாவானவர் கிறிஸ்துஇயேசுவின் புண்ணியத்தின் மூலமாக பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான பலி செலுத்தும்படி கர்த்தருடைய கிருபை நம்மை தொடர்ச்சியாக உருவாக்குகிறது. ஆகவே, பரிசுத்தவான்கள் என்ற இந்த வார்த்தையை கேட்டு வெட்கப்படாதிருப்போம். பரிசுத்தவான் நிலைமை, பரிசுத்தம், உலகிலிருந்து பிரிந்திருக்கும் நிலை போன்ற வார்த்தைகள் நம் சிந்தைக்கு அளிக்கப்படும்போது, அந்த சிந்தனையை தொடர்ச்சியாக காத்துக்கொள்ளவேண்டும். இந்த சிந்தனை நமக்கு உதவிகரமாக இருந்து, உலகிலிருந்து பிரிந்த மேலான ஜீவியம் ஜீவிக்க நம்மை இயக்குவிக்கும். நம் போதகர்

அறிவுறுத்துவதுபோல்,

“நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல” - யோவான் 17:16.

## இயேசுகிறிஸ்து உங்களை குணமாக்குகிறார்:–

நமது திறவுவசனம் பேதுரு ஐனேயாவைப்பார்த்து கூறின வார்த்தைகளேயாகும். திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த இவரை லித்தா ஊரில் அப்போஸ்தலர் கண்டு குணப்படுத்தினார். ஐனேயா பரிசுத்தவான்களில் ஒருவர் என்று வசனம் கூறவில்லை. ஆனால் சில பரிசுத்தவான்களுக்கு நண்பராக இவர் இருந்தார் என்று யூகிக்கலாம். இதன் காரணமாக அப்போஸ்தலரது கவனம் இவரிடம் திரும்பினது. இவர் படுத்த படுக்கையாக உதவியின்றி, எட்டுவருடங்களாக இருந்தவரை குணப்படுத்தியது ஒரு அற்புதமான சாட்சியமாயிற்று. அதன் நற்கீர்த்தி சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கு பரவினதால், அநேகரை கர்த்தரிடத்திற்கும் திருச்சபைக்கும் திருப்பினது. இவ்வாறாக கர்த்தர் திருச்சபையை ஸ்தாபித்து, சரியான இருதய நோக்கம் உடையவர்களை அற்புதங்களின்மூலம் அதனிடத்திற்கு கவர்ந்தது. இன்றைய நாளில் கர்த்தர் வேறு காரணிகளை உபயோகிக்கிறார். முன்னரே சுட்டிக்காண்பித்தபடி, அந்த அற்புதங்கள் அதிக காலம் நிலைத்திருக்க முடியாதுபோயிற்று. குணமளிக்கும் வரமும் நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தலின் மூலமாக மட்டுமே குணமளித்தல் அருளப்பட்டது. 12 அப்போஸ்தலர்கள் வாரிசுகளை பெற்றிருக்கவில்லை. பரலோக எருசலேம் பன்னிரெண்டு அஸ்திவாரங்களையே பெற்றிருந்தது, கூடுதலாக இல்லை. அவைகளில் 12 அப்போஸ்தலர்களின் நாமங்கள் எழுதப்பட்டிருந்தன, மற்றவர்களது பெயர்கள் இடம்பெறவில்லை.

## இந்த ஸ்திரீ நற்கிரியைகளை மிகுதியாய்ச் செய்தாள்

சீஷர்களில் ஒருவளாகிய ஸ்திரீ, அதாவது, பரிசுத்தவான்களில் ஒருவள் யோப்பா பட்டணத்தில் கடற்கரை ஓரத்தில் வசித்துவந்தாள். அவள் கற்பிப்பதிலும் மற்றும் எல்லா வகைகளிலும் ஊழியம்செய்துவந்தாள். அவளதுபெயர் அவளது தோற்றத்தை வெளிப்படுத்தும்வகையில், அவள் மிகுந்த அழகுள்ளவள். சீரிய மொழியில் அவளதுபெயர் தபீத்தா, கிரேக்க மொழியில் அழகுவாய்ந்த என்று பொருள்தருகிறது. இந்த ஸ்திரீ அழகிலும் கிருபையிலும் முற்றிலும் வேறுபட்டுவிளங்கினாள். இந்த குணாதிசயங்களை இயற்கையாகவே அவள் பெற்றிருந்தபோதிலும் மற்ற எல்லோரைக்காட்டிலும் தனித்தன்மையுடையவளாய் காணப்பட்டாள். சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியும், முழு அன்பும் உதவும் குணமுமே கர்த்தரிடத்தில் அனலாயிருந்து சுடர்விடுகின்ற வெளிச்சமாய், சுற்றிலுமுள்ளவர்களுக்கு சாட்சிகரமாக விளங்கினாள். அவள் வேதாகமத்தை வாசித்ததில்லை, ஏனெனில் அக்காலத்தில் அந்த ஜனங்களது மொழியில் வேதாகமம் இல்லாதிருந்தது, அவள் சத்தியபிரசுரம் விநியோகிக்கவில்லை. அக்காலகட்டத்தில் அச்சகமும் இல்லை. ஆனாலும் அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். அவள் உதவிதேவைப்பட்ட சகோதரருக்கும், கர்த்தருக்கும் ஊழியம் செய்துவந்தாள் கர்த்தரது சகோதரர்கள் அனைவருக்கும் உதவிதேவைப்பட்டது. அவள் தான் பெற்றிருந்த தாலந்துக்கேற்ப வாய்ப்புக்களை சிறப்பாகச்செய்தாள். தரித்திரருக்கு குறிப்பாக விதவைகளுக்கு உதவிசெய்தாள். அக்காலகட்டத்தில் இந்த விதவை வகுப்பார், அதிலும் குறிப்பாக ஏழைகளாயிருந்தால், மிகவும் வேதனையான நிலைமையில், உதவிக்காக காத்திருந்தனர். தொற்காள் ஏழைகளுக்கு ஆடைகளைக்கொடுத்து உதவும் வழக்கத்தைக் கொண்டிருந்தாள். உற்சாகமூட்டும் வார்த்தைகளாலும், உதவிசெய்தும், சத்திய ஊழியம் செய்தும் வந்தாள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், அவளது மரணம் துயரத்தை வருவித்திருக்கும் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. விசேஷமாக, அவளது தர்மக்காரியங்களால் நன்மையடைந்தவர்கள் மற்றும், கிறிஸ்துவின் சாயலைக்கொண்ட அவளது ஆவியின் கருணையில் ஈர்க்கப்பட்ட ஏராளமான நண்பர்கள் நிச்சயமாக துக்கம் அடைந்திருப்பர்.

தொற்காள் அடைந்த அநேக வாய்ப்புக்கள் இன்றைய நாளில் நாகரீகமடைந்த நிலைமையில் அப்படி உதவிசெய்யும் வாய்ப்புக்கள் நமக்கு தருவதில்லை என்பது உண்மையே. ஏழை விதவைகளுக்கும் மற்ற ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் தேவையான பணிசெய்தல் போன்ற அநேக வாய்ப்புகள் இன்றைய நாகரீக உலகத்தில் இல்லை. தொற்காள் பெற்றிருந்ததுபோல கர்த்தருடைய ஆவியைப்பெற்றிருக்கிற அனைவரும், அவள் பெருந்தன்மையோடு தன் கிரியைகளால் வெளிப்படுத்தினதுபோல, ஏதாவதொரு வழியில் விசுவாச வீட்டாருக்கு ஊழியம்செய்ய தங்களுடைய ஜீவனை கையளிக்க வாய்ப்புகளை தேடும்பொழுது நிச்சயமாக கண்டடைவார்கள். அப்போஸ்தலர் இதைக்குறித்தே கூறுகிறார்

“அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்” – 1யோவான் 3:16

--2654--

தொற்காள் ஒரு இரத்த சாட்சியாக இருக்கக்கூடும் என ஒருவர் தன் ஆலோசனையை முன்வைத்தார். ஏனெனில் பிறருக்கு ஊழியம் செய்ததன் காரணமாக அவளது மரணம் நிகழ்ந்திருக்கும் என்கிறார். அவளைப் போன்றவர்களுக்கு ஒரு கிறிஸ்தவ கவிஞர் கூறுகிறார் :–

புத்தகச் சுருளில் இவர்களது நாமங்கள் இடம்பெறவில்லை
இரத்தசாட்சிகளாக தங்களது ஜீவனையே கையளித்தவர்கள்
இயேசுவின் கண்களில் இவர்கள் இரத்த சாட்சிகளுக்கு சற்றும் குறைந்தவர்களல்லர்,
அவரது பிரிய சகோதரர்களின் நிமித்தமாக ;
நோயால் வெறுப்புற்று சிறிதுசிறிதாக
அழிவுக்குள்ளாகிறவர்களை
படுக்கையில் கவனிப்பதும்
சிறைப் பட்டிருப்போரை சந்திப்பதும்
பாரச்சுமையால் போராடுவதும்.. ..
அவர்களது களைப்புற்ற ஜீவியம்
மெதுவாக மூழ்கும்வரை
சகோதரரே! இவர்களும் இரத்த சாட்சிகளே.

ஆம்! கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அனைவரும் இரத்தசாட்சிகளே.அவரது வசனத்தின் மூலமாகவும், அவரது ஏற்பாடுகளின் மூலமாகவும், அவர் நடத்துகிற வழியை இவர்கள் புரிந்துகொண்டு அதற்கு நெருக்கமாக இயன்றவரை நடந்து, கர்த்தருடைய ஊழியத்துக்காகவும், சகோதரர்க்காகவும், சத்தியத்துக்காகவும் தங்களுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதே இவர்களது பிரதிஷ்டை. நமது உடன்படிக்கையானது சுயம் அழிந்துவிடாமல் பாதுகாப்பதல்ல. மாறாக, சுயத்தை பலியிடுவதேயாகும். ஆம். நாம் நித்தியஜீவனையும் மகிமையான ஆவிக்குரிய ஜீவிகளாவோம் என்ற நம்பிக்கையையும் நாம் எதிர்நோக்கியிருக்கிறோம்.

ஆனால் பரிபூரணத்தையும் புதிதான ஜீவனையும் அடைவோம் என்ற நம்பிக்கையை அளிக்கும் வேதாகமத்தின் நிபந்தனைகளும் விதிமுறைகளும் எதிர்பார்ப்பது, மீதமுள்ள தற்கால பூமிக்குரிய ஜீவியத்தை நாம் பலிசெலுத்தவேண்டும் என்பதேயாகும். இதோடு தொடர்புடைய இன்னுமொரு கருத்து என்னவெனில், ஐயத்துக்கிடமின்றி நமது பிரதானமான ஊழியத்தின் ஆவிக்குரிய உணவு, ஆவிக்குரிய தண்ணீர், ஆவிக்குரிய ஆடையை விசுவாசவீட்டாருக்கு தருவதேயாகும். அதோடுகூட நமக்கு கிடைக்கும் சமயத்திற்கும் திறனுக்கும் தக்கதாக, நாம் எல்லா மனுஷருக்கும் நன்மை செய்யவேண்டும் என்று அப்போஸ்தலர் கட்டளையிடுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் இரங்கும் தன்மையில் தயாளகுணம் உள்ளவர்களென்று தங்கள் அயலார்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும். பணமோ அல்லது கருணை வார்த்தையாவது தருபவர் என்ற உணர்வை அடையாளமாகப் பெற்றிருக்கவேண்டும். இது அதிக ஆசீர்வாதத்தையும் அதிகதிகமாக தேவசாயலையும் அடைய வழிவகுக்கும். வாங்குவதைக்காட்டிலும் கொடுப்பதே நன்மையானது என்று நினைவில்கொள்ளவேண்டும். இந்த உலக ஆஸ்திகளில் குறைவுபட்டு தயாளகுணத்தோடு பரிசுத்தவான்களின் தேவைக்கும், மற்றவர்களது தேவைக்கும் சபையின் தற்காலிகத்தேவைக்கும் கொடுக்க இவர்கள் ஒன்றும் பெற்றிருக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் சத்தியஆவியைத் தேற்றுவதாகிய பணியைச்செய்து, எப்படிப்பட்ட தேவையுடையோராக இருப்பவர்களுக்கு இரங்கி உதவிசெய்வது அதிக விலையேறப்பெற்றது, அதிக மதிப்புமிக்கது, அதிக பயனளிப்பதும், அதிகமாக நம்பிக்கையில் மகிழ்ச்சி ஊட்டுவதுமாகும். கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் இப்படிப்பட்ட தொற்காளின் குணஇயல்பை விளையச்செய்யவேண்டும். இவ்வாறாக, கர்த்தர் முன்பாகவும், உலகத்தாரின் கண்களுக்கு முன்பாகவும் இவர்கள் அதிகதிகமான அழகு நிறைந்தவர்களாயும், கிருபையுள்ளோராயும் இருப்பர்.

இன்று யோப்பா பட்டணத்தைவிட்டு எருசலேமைநோக்கி பிரயாணம்செல்லும் ஒரு பயணியிடம், வழிகாட்டுபவர், யோப்பா பட்டணத்தின் புறநகர்ப் பகுதியின் ஒருபுறத்திலுள்ள பெரிதான பொதுவழிச்சாலையை சுட்டிக்காண்பித்து, இது ஒருகாலத்தில் மிக அழகானதும் விலையுயர்ந்ததுமான நினைவுச்சின்னமாக தொற்காளுக்கு விளங்கினதை கூறுவார். இது ஒரு நீர் ஊற்று. களைப்புற்றிருந்த அநேகர் இதில் புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றனர். நற்கிரியைகளும் கிறிஸ்துவின் சாயலும் கொண்ட தொற்காளின் கதை, நீரூற்றிலிருந்து வரும் தண்ணீரைப்போல, தேவனுடைய பிள்ளைகளை ஊக்கப்படுத்தி, உற்சாகமளித்து, புத்துணர்ச்சியூட்டி, இவ்வாறு கரடுமுரடான இடங்களைக் கடந்து வந்திருக்கிறது. இருந்தபோதிலும், அவள் வாழ்ந்த நாட்களில்

அவளைக்குறித்து தீயன பேசினர். அவளது தயவு பெற்றவர்களில் சிலரும் அவளைக்குறித்து, அவர்களில் அவள் மகிமையடையும்படிக்கு, மனிதர்களால் காணவும் அறியவும் பொருட்டாக அவள் தானதர்மம் செய்தாள், மாறாக அவர்களது அன்பைப் பெறுவதற்காக ஊழியம்செய்யவில்லை என்றனர். நமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்துக்கு தக்கவாறு எல்லா மனுஷருக்கும் நன்மை செய்ய தேடும்போது, நமது அனுபவமும் இப்படிப்பட்டதாய் இருக்கலாம். ஆனால் உங்களைக்குறித்து தீயனபேசினாலும் நன்மை பேசினாலும் அது உங்களை தடைசெய்யக்கூடாது என்பதே உண்மை. நாம் கர்த்தரை பிரியப்படுத்தவே பார்த்து நம் இருதயத்தில் அவரது ஆவியை வளரச்செய்யவும், மற்றவர்களுக்கு முன்பாக விளங்கப் பண்ணவும்வேண்டும். இவ்வாறாக நம்மிடமுள்ள வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்யவேண்டும். பொறாமைகொண்ட களை வகுப்பாராலோ, நம்பிக்கையற்ற உலகத்தாராலோ எது பேசப்பட்டாலும், இதுவே நமது ஒரே முறையான வழிமுறையாக இருக்கிறது. நமது தகப்பன் மற்றும் நமது மணவாளனின் அங்கீகாரத்தையே நாம் பிரதானமாக தேடவேண்டும். அதன்பேரிலேயே மனநிறைவடையவேண்டும்.

தொற்காள் திடீரென நோய்வாய்ப்பட்டு மரித்த அச்சமயத்தில், யோப்பாவிலுள்ள மற்ற பரிசுத்தவான்கள், பேதுரு லித்தாவில் இருப்பதையும், அங்கு குணமளித்ததையும் அறிந்து, . சிலரை அவரிடம் உடனடியாக அனுப்பினர். தொற்காளை மீண்டும் ஜீவனுக்கு கொண்டுவரும் அற்புதத்தை அவர் செய்வார் என்ற எதிர்பார்ப்புடன் அனுப்பாமல், மாறாக, அவர்கள் தங்கள் சிறு கூட்டத்தாரில் உயர்வாக மதித்த ஒருவரை இழந்ததையும், அந்த நேரத்தில் பேதுரு அங்குவந்தால் தங்களுக்கு ஆறுதல் அளிப்பார் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே அனுப்பினர். அங்கே தந்திசெய்தியோ, தொலைபேசியோ, அஞ்சல் அனுப்பும் வசதியோ அக்காலத்தில் இல்லை. சகோதரர்களில் சிலரே செய்தியாளர்களாக பேதுருவிடம் விரைந்து, அவர் தாமதிக்காமல் பிரசன்னமாகும்படி விண்ணப்பித்தனர். எருசலேம் பட்டணத்தில் பிணம் அன்றைக்கே புதைக்கப்படவேண்டும். ஆனால் சிறிய பட்டணங்கள் மற்றும் கிராமங்களில் அதிகபட்சமாக மூன்று நாட்கள்வரை புதைக்கப்படாமல் வைத்திருக்கலாம். தொற்காள் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்பாக, பேதுரு தாமதியாமல் சீக்கிரம் வந்துசேரும்படி கேட்டுக்கொண்டனர்.

பேதுரு பிரேதம் இருந்த அறைக்குள் நுழைந்தவுடன், உருக்கமான காட்சி அவருக்கு முன்பாக நடந்தது. ஏழை விதவைகளும் மற்றவர்களும் தங்களது சிநேகிதியை இழந்த துக்கத்தில் கதறிஅழுது, தொற்காள் தங்களுக்காக உண்டாக்கின ஆடைகளை அவரிடத்தில் காண்பித்தனர். நிச்சயமாக அவளது ஜீவியம் பயனுள்ளதாக இருந்தது என்பதற்கு அதுவே புகழுரையாகவும் இருந்தது. இந்த அடக்கமுள்ள ஸ்திரீ விட்டுச்சென்றதுபோல், எந்த கோடீஸ்வரரும் நீடித்த நாட்களுக்கு நிலைத்துநிற்கும் நினைவுச்சின்னங்களை ஒருபோதும் விட்டுச்சென்றதில்லை, அல்லது அது அவரது குணாதிசயத்தின் மகிமையை அதிகபட்சமாக வெளிப்படுத்தினதும் இல்லை. நம்மில் உள்ள அடக்கமுள்ளவர்களும் தரித்திரரும்கூட இந்த மாதிரிகையை ஓரளவாவது பின்பற்ற முயற்சித்து, நாம் மரிக்கும்பொழுது அவர்களை இழந்ததற்காக உண்மையாகவும், நேர்மையாகவும் அழுது புலம்புபவர்களுக்கு ஒன்றையும் விட்டுச்செல்லாதிருந்தால் அது ஒரு துக்ககரமான முடிவாகும். அவர்களது ஜீவியம் ஒன்று சுயநலம் அல்லது தவறாக புரிந்துகொள்ளுதல் என்பதையே சாட்சியமாக்கும். நமது பூமிக்குரிய பிரயாணம் முடிவடையும் வேளைக்காக காத்திருக்கிற நாம், சிலராவது மகிழ்ச்சியடையும்படியாக நமது செயல்கள் வெளிப்பட்டு, நமது ஜீவியம் நாளுக்கு நாள் அதில் பெருகும்படி காணப்படவேண்டும். இதனால் நாம் தேய்மானம் அடைவதை ஒரு சிலராவது இழப்பாக எண்ணுவார்களாக.

தொற்காளை மரணப்பிடியிலிருந்து மீட்டது பேதுருவின் மிகவும் கவனிக்கத்தக்க ஒரு அற்புதமாயிருந்தது. சபையை ஸ்தாபிப்பதற்கான விசேஷ நோக்கத்துக்காக நிகழ்த்தப்பட்ட இது, மற்ற அற்புதங்களைப்போலவே அக்காலகட்டத்தில் விநோதமாய் தோன்றினது. கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் இச்சுவிசேஷயுகத்தில், மரணத்தின் பிடியிலிருந்து மீட்கப்படுவதோ, நோயின் படுக்கைகளிலிருந்து விடுவிப்பதோ அல்லது அப்போஸ்தலர் இங்கே பிரயோகித்த வல்லமைபோல் எல்லோரும் வல்லமை பெறவேண்டும் என்பதோ கர்த்தருடைய நோக்கம் என நாம் கருதக்கூடாது. பேரழிவு, நோய், மரணம் போன்ற தீமையின் ஊழியம் இங்கே நடைபெறுகிறது, இப்படிப்பட்டவைகள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சில சமயங்களில் பல்வேறு பாடங்களை மனதில் பதியவைக்கவும், ஆவியின் பல்வேறு கனிகளாகிய சாந்தம், பொறுமை, தயாளகுணம் இவற்றில் மெய்யாகவே மதிப்புமிக்கவையாய் இருக்கின்றன. கர்த்தருக்கென்று நம்மை முழுமையாக அர்ப்பணித்தபிறகு, நாம் பிரதிஷ்டைசெய்த அனைத்தையும் நாம் பெற்ற அறிவின்படி ஞானமாக உபயோகித்து, தெய்வீக ஞானம் நமக்கு எதை

-2656-

பகிர்ந்தளித்தாலும் அதை ஏற்றுக்கொள்வோம். நம் கர்த்தரின் வார்த்தைகளை இங்கு நினைவில் நிறுத்துவோமாக—

“பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ,,— யோவான்18:11 .

-----------------------------

# பஸ்காவின் நிரூபணம்

பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்திலே நான் பானம் பண்ணாமலிருப்பேனோ?
மதிப்புமிக்க புனிதசிந்தை என்மனதில் எண்ணாதிருப்பேனோ?
அவரன்பு எனக்கு மகிழ்ச்சியைக்காட்டிலும் வலிகளை அதிகம் தந்திட்டாலும்,
என்னைவிட்டு எல்லா நண்பர்களும் பிரிந்து சென்றாலும், நான் குறைபட்டுக்கொள்வேனோ?
எதிரிகள் என்மீது தவறுதலாய் குறிவைத்துஎனக்கெதிராய்தீங்குபல செய்திட்டாலும்,
எனது தந்தை இதனை அறிந்திருக்கிறார் என்றெண்ணி அமைதியாகவே இளைப்பாறுவேனே,
என்னுடன்நெருங்கிப்பழகியநண்பன்ஒருவன் யூதாஸ் என்றே அறியப்பட்டாலும்,
இப்போதும் என் கரத்தை இயேசு பற்றிக்கொண்டுள்ளாரே,அவரன்பு எனனை சூழ்ந்து பற்றிக்கொண்டுள்ளதே,
அன்பு செய்யும், அன்புசெய்யமறுக்கும் விசுவாசமில்லாநண்பரைப்பற்றியும் அறிவாரே,
நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் அதன முடிவையும்கூட அறிந்துள்ளாரே,
அவரன்பு என்னை முழுவதுமாகவே நான்தவறிவிழாவண்ணமே கட்டியணைத்துக் கொள்கிறதே,
எனவேதான் பிதா எனக்குக் கொடுத்தப்பாத்திரத்தில் முற்றும் பானம் பணணுவேனே,
இரட்சிப்பின் பாத்திரத்தை கைகளில் எடுத்துக்கொண்டே கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வேனே. ___ சங்:116/13

# எப்படி நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்?

## How we are sanctified?

**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது – 1 தெசலோனிக்கேயர்4:3**

தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு மட்டுமே நமது திறவுகோல் வசனத்திலுள்ள வார்த்தைகளும் அப்போஸ்தலர்களின் எல்லா நிருபங்களும் எழுதப்பட்டுள்ளது. தம் ஜனங்களைப் பொருத்தமட்டில் அவரது ஊழியத்துக்–காகவும், அவருக்காகவும் உலகிலிருந்து முற்றிலும் பிரிந்திருப்பவர்களாகஇருந்து, பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவசித்தமாகவும், விருப்பமாகவும், அவரது திட்டமாகவும் இருக்கிறது. இன்னார் இன்னார் மட்டுமே பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்று அவர் தீர்மானித்திருந்தார்என்றுகருதுவது தேவசித்தத்துக்கு எதிரானது. ஆனால் அப்படிப்பட்ட வகுப்பார் இருப்பார்கள் என்பது அவரது சித்தமாக இருக்கிறது. மேலும் இந்த வகுப்புக்குரியவரா இல்லையா என்பது அழைக்கப்பட்ட ஒவ்வொருவரது கையிலிருக்கிறது.

தேவன் நிறைவேற்றவேண்டிய மாபெரும் பணி ஒன்று இருக்கிறது. அதன்பொருட்டு, ஒருமிக முக்கியமான அந்த காரணத்துக்காகவே ஒரு வகுப்பாரை தெரிந்தெடுத்துவருகிறார். சபை நிறைவடையும்போது அதன் எண்ணிக்கையில் நாமும் ஒருவராக இருக்கவேண்டுமானால், அந்த அழைப்பின் நிபந்தனைகளுக்கும், தகுதிகளுக்கும் இசைவாக மரணபரியந்தம் நடந்து, நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்வோம். கர்த்தர் தற்போது ஒரு மிகவும் விசேஷித்த ஸ்தானத்துக்காகவும், ஒரு விசேஷப் பணிக்காகவும் ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட வகுப்பாரை பிரித்தெடுத்து, தெரிவுசெய்துவருகிறார். முதலாவதாக அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடுகூட ஆயிரம் ஆண்டுகள் இணைந்து, ஆதாமின் காலத்திலிருந்து ஜீவித்த உலகின் அனைத்து மனிதரையும் பாவம் மரணத்திலிருந்து விடுவித்து, ஆதாம் இழந்துபோன பரிபூரண மனித சுபாவத்தை மீண்டும்அடைய மறுசீரமைப்பார். அதன்பிறகு, நித்தியத்துக்கும் உள்ள அவரது வருங்காலப் பணிகளை, அவர்கள் தலையாகிய கிறிஸ்துவோடுகூட இணைந்து ஆளுகை செய்வர். இதன் காரணமாகவே இந்த பரமஅழைப்பு ஒரு பரலோக அழைப்பு என அழைக்கப்படுகிறது.

திறவு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தற்கால உலகைத் தொடர்ந்துவருகிற யுகங்களில் உலகின் ஜனங்களைக் குறித்த தேவசித்தத்தை குறித்ததல்ல. மற்றும் தேவதூதர்களைக் குறித்த அவரது சித்தத்தைக் குறித்துமல்ல. அவரது சரீரத்தின் அவயவங்களாகவும், கிறிஸ்துவின் மணவாட்டியாக ஆகும்படி அழைக்கப்பட்ட சபையாரைக் குறித்த அவரது சித்தத்தையே இது கூறுகிறது. இந்த யுகத்திற்கு முன்பு, இம்மாபெரும் அழைப்பு ஒருபோதும் அளிக்கப்படவில்லை. அவ்வாறே இந்த யுகம் முடிவடைந்தபிறகு ஒருபோதும் அளிக்கப்படப் போவதுமில்லை. இந்த வகுப்பார் நிறைவடையும் வேளையில், அங்கே கிறிஸ்துவுக்கு ஒரே மணவாட்டியே இருக்கமுடியும். அவர்களுடைய எண்ணிக்கைக்கு கூடுதலாக இனி ஒருபோதும் சேர்க்கப்படப் போவதில்லை. இந்த வகுப்பார் தற்காலத்தில் கிறிஸ்துமூலம் அருளப்படும் தேவகிருபையை கேள்வியுற்றிருந்து, அந்த பந்தயச்சாலையின் பரிசைப் பெறுவதற்கான நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு நுழைந்திருக்கிறார்கள்.

நமது திறவு வசனத்தில் அப்போஸ்தலர் நடைமுறைபாணியில் பேசும்போது, நாம் தேவனால் அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக இங்கு இருக்கிறோம் என்கிறார். இப்பொழுது தேவன் என்ன ஒரே காரியத்தை நாம் செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறார் ? நாம் ஏழாம் நாளை அனுசரிக்கவேண்டுமென எதிர்பார்க்கிறாரா ? இறைச்சி உண்பதிலிருந்து விலகியிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறாரா ? சில குறிப்பிட்ட தனிச்சிறப்புப் பண்புகளை நாம் வெளிப்படுத்த விரும்புகிறாரா ?அவ்வாறு எதையும் எதிர்பார்ப்பதில்லை. நாம் பரிசுத்தராகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயுள்ளது. பரிசுத்தமாகுதல் மற்றும் தத்தம் செய்தல்(அர்ப்பணிப்பு) ஆகிய இரு வார்த்தைகளை சில சமயங்களில் ஒன்றுக்கு பதிலாக மற்றொன்று உபயோகப்படுத்தப்பட்டு வந்தாலும், இவை இரண்டிற்குமிடையே துல்லியமான வேறுபாடுகளுண்டு. தத்தம் செய்தல் (consecrate)என்பது ஒப்புக்கொடுத்தலைக் குறிப்பிடுகிறது. தத்தம் செய்தல் என்பது ஒரு குறிப்பிட்ட தருணத்தில், தீர்மானமாக எடுக்கும் ஒரு படி(step). நமது சித்தத்தையும் நம்மிடமுள்ள அனைத்தையும் தேவனுக்கென்று பணிவாக சமர்ப்பித்தல் ஆகும். யார் தன் சித்தத்தையும், தன்னுடையது அனைத்தையும் தீர்மானமாக கீழ்ப்படுத்தாதிருக்கிறார்களோ, அவர்கள் ஒருபோதும் உண்மையான அர்ப்பணிப்பு செய்யவில்லை. முழுநேரக் கிறிஸ்தவர்களாகிய தேவபிள்ளைகளுக்கு தங்களை எண்பிக்க இதைக்காட்டிலும் வேறு எந்தப் படியும் கூடுதலாக தேவைப்படாது என்று நாம் நம்புகிறோம். மேலும், மற்றவர்களிடத்தில் தங்களை அதிகப்படியாக வெளிப்படுத்தும் அவசியமுமில்லை. பரிசுத்தமாகுதல் என்ற வார்த்தை, தீர்மானமானதும் முழுமையுமான பிரதிஷ்டை– ஆரம்பத்தில் மட்டுமல்ல, மாறாக, குணாதிசயத்தில் முற்றிலும் மறுரூபமடைந்த நிலையையும், ராஜ்யத்துக்கு தங்களை ஆயத்தப்படுத்தும் முழு வழிமுறையையும் குறிக்கும். குணாதிசயம் முழுமையாக வளர்ச்சியடைந்து, முதிர்ச்சியடையும்வரை கிறிஸ்துவினுடைய

வாழ்க்கை முழுவதும் இந்த மேம்பாடு தொடர்கிறது. மேலும் அவ்வாறு முதிர்ச்சியடைந்தபிறகு அதனை மரணபரியந்தம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

## பரலோகப் பந்தயத்தில் எப்படி நுழைவது ?

ஒருவன் கிறிஸ்துவின் பின்னடியாராக மாறுவதற்கு ஆரம்பகட்டமாக, முழுமையான அர்ப்பணிப்பு அத்தியாவசியமானது என்பதை முழுநேர கிறிஸ்தவர்களில் அநேகர் காண்பதில்லை. நாம் அநேக ஜனங்களோடு உரையாடும்போது, அநேக வருடங்களாக அவர்கள் தேவபிள்ளைகளாகும்படி முயற்சித்துவருவதாகவும், அதற்காக தேவசித்தத்தை செய்யத் தேடுவதாகவும், பரிசுத்த ஜீவியம் ஜீவிக்கவும் பிரயாசைப்பட்டுவருவதாக எங்களிடம் கூறுகிறார்கள். "நீங்கள் சரியாகத் துவங்கினீர்களா ? நீங்கள் இந்த கிறிஸ்துவ பந்தய சாலையில் வெளிப்புறமாக ஓட முயற்சிக்கிறீர்களா ? அல்லது உட்புறமாக ஓட முயற்சிக்கிறீர்களா ?" என்றே அவர்களிடத்தில் நாம் எப்பொழுதும் மையப்படுத்தி காண்பிக்கிறோம். பின்பு அவர்கள் நாம் என்ன அர்த்தத்தில் பேசுகிறோம் என்று நம்மிடம் கேட்பார்கள். விஷயம் என்னவெனில், இது ஒரு ஓட்டப்பந்தய சாலைக்கு ஒப்பாக உள்ளது என்று அவர்களுக்கு கூறுவோம். எங்கு ஒரு நிச்சயமான பரிசு கொடுக்கப்படுகிறதோ, அங்கு அதற்கேற்ற தீர்மானமான விதிகளும், ஒழுங்குமுறைகளும் இருக்கும். இந்த பந்தய சாலையில் ஓடுபவர் முறையான வழியில் நுழையவேண்டும். ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு கையொப்பமிடவேண்டும். எல்லா நிபந்தனைகளையும் அந்த மனிதன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன்பிறகே அவர் போட்டியிடுபவராக நுழையவும், வடிவமைக்கப்பட்ட பாதையில் இலக்கைநோக்கி ஓடவும் முடியும்.

இனி, மற்றொருவர் , இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தத் தவறி, நியமிக்கப்பட்ட வழிமுறைப்படி பந்தயச்சாலைக்குள் நுழையாதிருப்பின், பந்தய பாதையில் ஓடாமல் வெளிப்புறத்திலேயே சுற்றிச்சுற்றி ஓடுபவராக இருப்பார். இவர் உட்புறமாக ஓடுபவர்களைக் காட்டிலும் ஒருவேளை வேகமாகவும் சிறப்பாகவும் ஓடினாலும், அந்த ஓட்டப்பதையில் ஓடும் எவரையும் என்னால் ஜெயிக்க முடியும் என்று பெருமிதங்கொண்டு கூறினாலும், இவரால் பந்தயத்தின் பரிசை அடையமுடியுமா ? நிச்சயமாக முடியாது. அவர் தன்னில்தானே திருப்தியடைந்து கொள்ளமுடியும். அல்லது தன் உழைப்பையும் ஆற்றலையும் வீணடிக்கமட்டுமே முடியும். நிஜமான பந்தய ஓட்டம் அந்த குறிப்பிட்ட பாதையில் நடந்தது. நியமிக்கப்பட்ட அந்த நிபந்தனைகளை அவர் சந்திப்பதில் தோல்வியுற்றதால், பந்தயப் பரிசைப் பெறுவதைப் பொறுத்தமட்டில் அவரது ஓட்டம் முழுவதும் வீணாக முடியும். அவ்வாறே கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்க முயற்சிசெய்யும்ஒருவர், கிறிஸ்துவின் சீஷனாகும் பொருட்டும், பிதாவினால் அவரது பிள்ளையாக ஏற்றுக்கொள்ளப்படவும் வேண்டுமானால் முதலாவதாக அதற்குத் தேவையான நிபந்தனைகளையும் விதிகளையும் கற்று, அதை சந்திக்கவேண்டும்.

கிறிஸ்தவர்களாக தங்களை அழைத்துக் கொள்ளும் அநேகர் செய்யும் தவறு இதுவே என நாம் நம்புகிறோம். நம்மிடத்தில் பேசுபவர்கள் நல்ல நோக்கங்களை வெளிப்படுத்தும்போது, நாம் மையப்படுத்துவது என்னவெனில், "தேவனிடத்தில் நீங்கள் முழு பிரதிஷ்டை செய்துகொண்டீர்களா"

என்பதேயாகும். இவ்வகையான அனுபவத்தை சமீபத்தில் அடைந்திருந்தோம். ஒரு நற்குணசாலியான மனிதன் இருமுறை எங்களை சந்தித்தார். இரண்டாம் முறை அவர் சந்தித்தபோது, நாங்கள் அவரிடத்தில் கூறினோம் – "நீங்கள் இதற்குமுன்பு இங்குவந்தபோது நாங்கள் உங்களிடம் என்ன கூறினோம் என்று ஞாபகமிருக்கிறதா ? " என்றதற்கு அவர் பதிலுரையாக, "நான் அதற்காக ஜெபித்துக்கொண்டிருந்தேன்" என்றார். அதற்கு நாங்கள், "நீங்கள் ஜெபிப்பதற்கு எந்த உரிமையும் பெற்றிருக்கவில்லை" என்றோம் – அதாவது, அவருக்கென பிதாவினிடத்தில் பரிந்துபேசுபவர் இல்லாதவரைக்கும், அவரால் முறையாக ஜெபிக்கமுடியாது என்றோம். ஏனெனில் பிதா, பாவிகளுக்கு செவிசாய்ப்பதில்லை. மேலும் நாங்கள் கூறியது : "நீங்கள் உங்கள் சித்தத்தை தேவனுக்கென்று முழு தத்தம் செய்யும்வரை உங்களால் ஜெபிக்கமுடியாது" என்றோம். பரிந்துபேசுபவர் மூலமாகவே அனைவரும் பிதாவை அடையமுடியும். "என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் ". திட்டமான ஒரு வழி அங்கே உண்டு. அதாவது, நீங்கள் உங்கள் வழியே செல்லவும், நான் என் வழியே செல்லுதலுமாகிய வழியாக அவ்வழி இல்லை. சீஷத்துவத்தின் எல்லா நிபந்தனைகளையும் கர்த்தர் தாமே ஏற்படுத்தியிருக்கிறார். "ஒருவன் என் சீஷனாயிருக்க விரும்பினால், தன்னையே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன் "என்று கர்த்தராகிய இயேசு கூறினார். நம்மை வெறுக்கின்ற படியை எடுக்காதவரைக்கும், கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்காதவரைக்கும், நாம் ஆலயங்களுக்கு போகுதல் போன்ற பலவகைப்பட்ட காரியங்களை செய்யலாம்.ஆனாலும் கிறிஸ்தவர்களாக ஆகமுடியாது. நமது மீட்பராக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் பிரதிஷ்டை செய்யும் வரைக்கும் நாம் கிறிஸ்தவர்கள் அல்ல.

## பரிசுத்தமாகுதல் இரண்டு பகுதிகளைக் கொண்டது :

வேத வாக்கியமொன்றில் நாம் வாசிக்கிறோம் : "உங்களைப் பரிசுத்தப்படுத்துங்கள், நான் உங்களைப் பரிசுத்தப்படுத்துவேன் ". இதன்பொருள் என்னவெனில், தேவனுக்குரியவர்களாக உங்களை நிலைநிறுத்துங்கள். அப்பொழுது அவர் உங்களை நிலைநிறுத்துவார். இந்தப் பணியில் நமது பங்கும் உள்ளது, தேவனுடைய பங்கும் உள்ளது. நாம் முழு பிரதிஷ்டை செய்வோமானால், தேவன் நம்மை பிரதிஷ்டை செய்வார். தமக்கென்று நம்மை அவர் ஏற்றுக்கொண்டு நிலை நிறுத்துவார். அவரது பரிசுத்தஆவியைக் கொண்டு ஜெனிப்பிக்குதலின் மூலம் இவ்வாறு நம்மை ஏற்றுக்கொண்டதற்கான அடையாளத்தை கொடுத்திருக்கிறார்.

**--2660--**

இப்படிப்பட்டவர்கள் தாங்கள் புதிய சிந்தையை, புதிய குணாதிசயத்தை , ஒரு புதிய இருதயத்தை பெற்றிருப்பதை வெகுவிரைவில் புரிந்துகொள்ளத் துவங்குவார்கள். இந்த வகுப்பாரைக் குறித்தே பவுல் அப்போஸ்தலன் நமது திறவுவசனத்தில் பேசுகிறார், “நீங்கள் பரிசுத்தராகவேண்டும் என்பதே உங்களைக்குறித்த தேவசித்தம்”. அவருக்கென்று நீங்கள் உங்களையே பிரதிஷ்டை செய்திருக்கிறீர்கள். அவரும் உங்களை ஏற்றுக்கொண்டு, பிரதிஷ்டைசெய்து, அவரது ஊழியத்துக்கென நிலைநிறுத்தியிருக்கிறார்.

நாம் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது, பரிசுத்தமாகுதலின் பணியில் துவக்கநிலை மாத்திரமே. இந்தப்பணி நம்மில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து, பூரணப்படவேண்டும் என்பதும் அவரது சித்தமாயிருக்கிறது. இந்த பரிசுத்தமாகுதலின்பணியில் கர்த்தருக்கென்று நமது சிந்தைகள், நமது கைகள், நமது கால்கள், நமது கண்கள், நமது நாவுகள்– நம்மிடமுள்ள அனைத்தும் முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டு, பாதிப்புக்குள்ளாகவேண்டும். இப்படிப்பட்ட சித்தத்தையே நாம் ஆரம்பத்தில் ஒப்புக்கொடுத்தோம், இந்த சித்தம் நம் அழிவுக்குரிய சரீரத்தினால் செய்யும் ஊழியத்தை உள்ளடக்கியது ஆகும்.

இந்த சரீரம் தனக்கென சுபாவப்போக்கை உடையது. இந்த மாம்ச சுபாவத்தின்படியான சித்தத்தை விட்டுவிடுவது என்பது, அந்த நபர் தன் ஒவ்வொரு சிந்தனை, சொல், செயல் ஆகிய அனைத்தையும் தேவசித்தத்துக்கு கீழ்ப்படுத்துவதைக் குறிக்கிறது. அந்த சித்தம் பரிசுத்தமாக்கப் படவேண்டியது ஒரு காரியம், இந்த பரிசுத்தமாகுதலின் சித்தத்தின்கீழ், நம் சிந்தையையும் சரீரத்தையும் இயங்கச்செய்வது மற்றொரு காரியமாக இருக்கிறது. அந்த சித்தம் நமக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் எப்படி நிறைவேற்றப்போகிறோம் என்பதே பிரச்சனை. நமது சித்தம் இந்த பரிசுத்தமாக்கப்பட்ட நிலைமையில் பாதுகாக்கப்பட வேண்டியது மட்டுமல்ல, நம்மைக்குறித்த கர்த்தருடைய சித்தத்தை பரந்த மனப்பான்மையில் காணவும், ஆச்சரியங்கொள்ளவும் நமது இருதயத்தை விசாலப்படுத்த வேண்டும். இவ்வாறாக பலிசெலுத்தும் ஆவியை அதிகதிகமாக பெறமுடியும்.

### சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் :–

இந்த பரிசுத்தமாகுதலின் பணியில், என்ன வல்லமைகளும், என்ன ஆவிக்குரிய சக்திகளும் நமக்கு உதவுகின்றன ? தம் மரணத்துக்கு முன்பு நம் கர்த்தராகிய இயேசு தமது பிதாவிடம் வேண்டின கடைசி ஜெபத்தில், “உமது சத்தியத்தினால் இவர்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம் என்றார்” (யோவா 17:17). இங்கு பரிசுத்தமாகுதலின் பணி எப்படி தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற திறவுகோலை நமக்கு அவர் கொடுத்திருக்கிறார். தேவனுக்கென்று தன்னை பிரதிஷ்டை செய்த ஒருவர் ஆரம்பத்திலேயே தன்னைப்பற்றியும் அல்லது பாவத்தைக் குறித்தும் முழு அறிவைப் பெற்றிருப்பதில்லை. துவக்கத்தில் அவர் ஒரு குழந்தையாகவே இருக்கிறார். ஆனால் வெளியாக்கப்படும் சத்திய செய்திகள்மூலம் வார்த்தையின் வல்லமையின் உதவியால் முன்னோக்கி நடக்கிறார்.எப்படி இந்த செய்தி பரிசுத்தப்படுத்துகிறது ? தேவனே இவ்வாறு நமக்குள் கிரியைசெய்து, அவரது தயவுள்ள விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறார் என்று அப்போஸ்தலர் பவுல் விடையளிக்கிறார். மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை அவரது வார்த்தையின் மூலம் நமக்குத் தருகிறார். ஆலோசனையும் புத்திமதியும் அவர் அளிக்கிறார். இவைகள் நம் இருதயத்தில் நுழைந்து, பரிசுத்த ஆவியை உமிழ்வதன்மூலம் நமக்குள் உத்வேகத்தை உண்டுபண்ணி, சமாதானம், நீதி மற்றும் பரிசுத்தத்துக்குரிய விலையேறப்பெற்ற கனிகளை உற்பத்தி செய்யும்படி ஏவப்படுகிறோம்.

நம் குரு நடந்ததுபோலவே குறுகலான வழியில் விசுவாசத்துடன் நடந்து, நம் தேவனைப் பிரியப்படுத்தி, மகா மேன்மையாகிய மாபெரும் வெகுமதியை அடைவோம். கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்திரருமாவோம் என்று உணர்கிறோம்.

“இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே,
அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய
சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி,
தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும்
ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட
ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கேதுவாக
விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே
காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம்
பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது” –1பேதுரு 1:4,5

இந்த பரிசுத்தமாகுதலின் செயல்பாட்டில் சத்தியவசனம் மிக அத்தியாவசியமானது என்று நாம் காண்கிறோம். வேதாகமத்தை வாசிப்பதன் மூலமாகவோ, சங்கீதங்களின் மூலமாகவோ அல்லது வேதாகம விளக்கவுரைகளின் மூலமாகவோ இந்த சத்தியத்தை பெற்றுக்கொள்கிறோம். தேவ வசனம் நம் இருதயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்போதெல்லாம், பரிசுத்தஆவியை நமக்கும் ஓரளவாவது அதிகரித்து, பரிசுத்தமாகுதலின் பணியை நடப்பிக்கிறது.

### பரிசுத்தமாகுதலின் வழிமுறை :–

நாம் எப்படி பரிசுத்தமாக்கப்படுகிறோம் என்று மற்றொரு வசனம் நமக்கு கூறுகிறது. தேவ சித்தத்தின்மூலம், “இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்” – எபி 10:10.

நாம் ஆரம்பத்தில் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கவில்லை, மாறாக, நாமும் மற்றவர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்” என்பதே இங்கு அப்போஸ்தலரின் கருத்தாக உள்ளது. நம்மை நாமே பரிசுத்தப்படுத்த நம்மால் கூடாது. இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை பலியிட்டதும், அவரது களங்கமற்ற ஜீவியம் நமக்காக பலியிடப்பட்டதுமே நாம் தேவனுடைய பரிசுத்தமாக்கப்பட்ட பிள்ளையாவதற்கு அடிப்படையாய் அமைந்தது. நாம் செய்துகொண்ட பிரதிஷ்டை நம்மை தேவனுடைய பிள்ளைகளாக்கவில்லை, இதற்கு,

முதலாவதாக, இயேசுகிறிஸ்துவின் பலி நிறைவேற்றப்படவேண்டியிருந்தது. அவரது பலியே வழியைத் திறந்தது, அவரது புண்ணியம் நம்மை சுத்திகரித்து, யேகோவாவினால் அங்கீகரிக்கும்படி செய்தது. "ஆவியின் பரிசுத்தமாக்குதலினால்" நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று மீண்டும் நாம் வாசிக்கிறோம்(1பேதுரு1:2).

ஞானஸ்நானத்தில் நம்மை ஒப்புக் கொடுக்கும் போது நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறோம். இவ்வாறு அங்கீகரிக்கப்படுதலும், ஜெனிப்பிக்கப்படுதலும் நம்மை தனியே வேறுபடுத்தி காண்பிப்பதோடு, அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தில் நம்மையும் சேர்த்துக்கொள்கிறது. சத்திய ஆவியானது நமக்கு ஊக்கமூட்டி, பரலோக வழியில் வழிநடத்திச்செல்கிறது. அது முதலாவதாக, நாம் பாவிகள் நமக்கு இரட்சகர் தேவை என்று புரிந்துகொள்ளச்செய்தது. அடுத்ததாக, எப்படி தேவனுக்கென்று நம்மை ஒப்புக்கொடுப்பது என்று காண்பித்தது. இவ்வாறு சத்தியஆவி காண்பித்தபடி நாம் நடந்து, தேவபிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட்டோம். பின்பு இந்த ஆவி நம்மை படிப்படியாக கிறிஸ்துவின் பூரண வளர்ச்சிக்குள் வழிநடத்துகிறது. இவ்வாறு வசனத்தின் மூலமாக, சத்தியஆவி, பரிசுத்தமாகுதலின் முழுமையை நோக்கி கொண்டுசெல்கிறது.

நாம் "உடன்படிக்கையின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறோம்" என்று(எபி10:29) நமக்கு கூறப்பட்டுள்ளது. எவ்வாறு இது நிறைவேறுகிறது ? தேவன் திருச்சபையுடன் மாபெரும் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இந்த உடன்படிக்கை, முதலாவது, இந்த சபைக்கு தலையாக இருப்பவருடன் ஏற்படுத்தப்பட்டது. அதன்பிறகு, அவரது சரீரமாக உருவாகக்கூடியவர்களோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது ஒரு பலியினாலான உடன்படிக்கை. யேகோவாதேவன் சங்கீதக்காரன் மூலமாக தீர்க்கதரிசனமாகக்கூறினார் :

"பலியினால் என்னோடே உடன்படிக்கை பண்ணின பரிசுத்தவான்களை(பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், தூய்மையான என்னுடையவர்கள்) என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங்50:5). இந்த வழியில் இவ்வகுப்பிற்குள் வருபவர்கள், இவ்வாறு அழைக்கப்பட்டு, ஒன்றுகூட்டப்படுபவர்கள், யேகோவா தேவனால் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். உடன்படிக்கையின் இரத்தத்தினாலன்றி, இவ்வகுப்பிற்குள் ஒருவரும் உள்ளே பிரவேசிக்கமுடியாது.

நம் கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானத்தில் தம்மையே பிரதிஷ்டைசெய்து, பிதாவுடன் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தார். இந்த உடன்படிக்கையானது நிறைவேற்றப்பட்டு, அவரது கல்வாரி மரணத்தில் முடிவுற்றது. அங்கே அவரது இரத்தம் சிந்தப்பட்டு, பலியாக்கப்பட்ட அவரது ஜீவியம் முடிவுற்றது. அவரது உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவர வேறு எந்த வழியும் இல்லை. தம் சொந்த மகிமைக்குள் பிரவேசிக்கவும், அதோடுகூட இவ்வுலகின் இரட்சகராகவும், இவை அனைத்தையும் செய்வது அவசியமாயிற்று. அவரது சரீர அங்கங்களாகியிருக்கிற நாமும் இதே உடன்படிக்கையை பிதாவோடு செய்யவேண்டும். அவரது உபத்திரவம் மற்றும் மரணத்தின் பாத்திரத்தில் நாம் பானம்பண்ணவேண்டும். அவர் தம்மை கொடுத்ததுபோல், நாமும் நமது ஜீவியத்தை அர்ப்பணிக்கவேண்டும்.நம் இரத்தம் சிந்தப்பட வேண்டும். நமது மனித ஜீவியம் அவரோடுகூட பலியாகவேண்டும். கிறிஸ்துவின் புண்ணியம் நம்மேல் பொருந்தப் பண்ணினதாலேயே நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டோம். மாறாக, நமது இரத்தத்தில் எந்த வல்லமையும் இல்லை. ஆனால் அவரது புண்ணியம் நம்மீது பொழியப்பட்டதினால் அவரது சரீர அங்கங்களாகிய நாம், அவரது பலியில் பங்குபெறுகிறோம். நமது மரணமும் அவரைப்போலவே தியாகபலியின் மரணமாக, நமது இரத்தம் அவரது இரத்தமாக எண்ணப்படும். இவ்வாறு பலியின் உடன்படிக்கைக்குரிய இரத்தமாகிய புதிய உடன்படிக்கையை முத்திரைபோடுகின்ற இரத்தத்தில், உடன்படிக்கையின் இரத்தத்தில் பங்குபெற்று, நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். நம் கர்த்தர் நிறைவேற்றி முடித்ததுபோலவே நமது ஜீவியத்தை இவ்வாறு பலியாக்குவது, ஒரு படிப்படியான செயல்பாடாகும். பரிசுத்தமாகுதலின் பணியே அந்தப் பணியாக இருந்து, மரணத்தில் முடிவடையும்வரை வளர்ச்சியடைகிறது.

ஆகவே நாம் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுகிறோம். இது பரிசுத்தஆவியின் மூலம் நம்மிடத்தில் ஒளிருகிறதுஎன்பது உண்மையே. இயேசுவின் சரீரம் பலிசெலுத்தப்பட்டு, இந்த பரிசுத்தமாகுதலின் வழி திறக்கப்பட்டது. மேலும் இந்த உடன்படிக்கையின் இரத்தத்தில் பங்குபெறும் தகுதியை நம் பலியின் உடன்படிக்கை நமக்குத்தந்தது. மரணபரியந்தம், முழுமையாக நாம் பரிசுத்தமாகுதலை இது பொருள்படுத்துகிறது. கிறிஸ்துவின் பாத்திரத்தில் பானம் பண்ணாதவர்கள் எவர்களோ, அவரது பலியின் மரணத்தில் பங்கேற்காத அவர்களுக்கு, இராஜ்யத்திலும் பங்கில்லை. பரலோகத்திலிருந்து இறங்கிவந்த அப்பத்தை புசிப்பதில் உலக ஜனங்களுக்கு பங்குண்டு. ஆனால் கிறிஸ்துவின் பலிசெலுத்தப்பட்ட சரீரத்தில் அங்கமாகப் போகிறவர்கள், அவரது இரத்தத்திலும் பானம்பண்ண வேண்டியதும், அவரது மரணத்தில் அவரோடுகூட பங்கேற்பதும் அவசியமாயிற்று. நாம் அவரது உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குகொள்ளும்படியாக, அவரது மரணத்தில் அவருக்கொப்பாக இருப்பதும் அவசியமானது. பாத்திரத்தில் பானம்பண்ணுவதில் உலகத்தாருக்குப் பங்கில்லை. உடன்படிக்கையின் இரத்தத்தைக்கொண்டு எவ்வாறு திருச்சபை பரிசுத்தமாக்கப்பட்டதோ, அவ்வாறே முழு உலகத்திற்கும் புதிய உடன்படிக்கையை முத்திரை போடவேண்டும். பலிசெலுத்தப்படுதல் இன்னும் பூர்த்தியடையாததால் முத்திரைபோடுதல் இன்னும் முடிவுறவில்லை. விரைவில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் புதிய உடன்படிக்கைக்கு நிழலாக நியாயப்பிரமாண உடன்படிக்கை உள்ளது. நியாயப்பிரமாண உடன்படிக்கை நிழலான காளை மற்றும் ஆட்டின் இரத்தத்தினால்

**--2662--**

முத்திரையிடப்பட்டது. அவ்வாறே புதிய உடன்படிக்கையானது மேன்மையான பலிகளின் இரத்தத்தால் முத்திரையிடப்படவேண்டும்.

## இரத்தம் தெளிக்கப்படுதலின் நிழலும் நிஜமும்

வெள்ளாடு வகுப்பாருக்கு இது ஒரு தகுதியை எதிர்பாராமல் தரும் தேவ ஈவு. நிழலில், நியாயப்பிரமாண உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும்போது, மோசே காளை மற்றும் வெள்ளாட்டு இரத்தத்தினை எடுத்து, முதலாவது நியாயப்பிரமாண புஸ்தகத்தின்மேல் தெளித்தார். இவ்வாறு தேவ நீதிநியாயத்தை நிழலாக திருப்திசெய்தபிறகு, எல்லா ஜனங்கள்மேலும் தெளிக்கப்பட்டது. இதற்கு நிஜமாக, காளை மற்றும் வெள்ளாட்டின் இரத்தம் முதலாவது, நியாயப் பிரமாணத்தின்மேல் தெளிக்கப்பட்டு, முழு உலகத்திற்காகவும் நீதி நிறைவேற்றப்பட்டது. அதன்பிறகு, இரத்தம் ஆதாமுக்குள் மரித்த உலகின் எல்லா ஜனங்கள்மேலும் தெளிக்கப்பட்டது. மீட்கும்பொருளின் பலியினாலும், அதன் நன்மைகளை பொருந்தச்செய்வதன் மூலமாகவும், வரவிருக்கும் யுகத்தில் உலகம் படிப்படியாக அடையப்போகிற திரும்பக் கொடுத்தலையே இது குறிப்பிடுகிறது. தலையும் சரீரமுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சியில் இது நிறைவேற்றப்படும்.

நிஜத்தில் ஒரு காளை மற்றும் ஒரு வெள்ளாடு பலியிடப்பட்டிருக்க, நிழலில் ஏன் அநேகக் காளைகள் மற்றும் வெள்ளாடுகள் பலிசெலுத்தப்பட்டன? என்று சிலர் கேட்கக்கூடும். ஏன் இந்த வித்தியாசம் நிகழ்ந்தது? ஒரு வித்தியாசமும் அங்கு நிகழவில்லை என்று நாம் பதிலளிக்கிறோம். நிழல் காளை மற்றும் வெள்ளாட்டின் பிரதி(duplicate)மட்டுமே இடம்பெற்றது. ஏன் அவ்வாறு நடந்தது? இஸ்ரயேலர் எல்லார்மீதும் தெளிக்கப்படுவதற்கு ஒரு காளை மற்றும் ஒரு வெள்ளாட்டின் இரத்தத்தைக் காட்டிலும் கூடுதலான இரத்தம் தேவைப்பட்டதன் நிமித்தமாகவே இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் கருத்தில் எவ்வித மாற்றமுமில்லை. இது நிஜமாக உள்ள ஒரு காளை மற்றும் ஒரு வெள்ளாட்டின் பணியையே அடையாளமாகக் காட்டுகிறது. கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டு, கர்த்தருடைய வெள்ளாட்டு வகுப்பாராக இருப்பதற்கான மாபெரும் பாக்கியம் இதுவாகும். இவர்கள் தற்காலத்தில் அவரோடு பாடுகளில் பங்கடைவதன்மூலம், நித்திய யுகங்கள் முழுவதும் மகிமையில் அவரோடுகூட ஆளுகை செய்வார்கள். நாம் இந்த மகிமையான அழைப்பை விசுவாசத்தோடு மரணபரியந்தம் நிறைவேற்றி, தேவனிடத்தில் இந்த மகா மேன்மையான அழைப்பை நிரூபித்துக் காட்டுவோமாக

--------------------------------

**--2663--**

# புயலின்மத்தியில் சமாதானம்

**QUIETNESS IN THE MIDST OF STORMS**

**அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப் பண்ணுவான் ?—யோபு 34:30**

யோபுவின் நாட்களில் வாழ்ந்த ஒரு வாலிபனாகிய எலிகூ பேசின வார்த்தைகளே இவைகளாகும். இச்சம்பவம் நடந்த காலம், ஆபிரகாம் வாழ்ந்த காலமாக இருக்கலாம் என உத்தேசிக்கப்படுகிறது. யோபுவின் துன்பநேரத்தில் அவரைத் தேற்றுவதற்கு அவரால் அழைக்கப்பட்டிருந்த நான்கு நண்பர்களில் எலிகூவும் ஒருவர். மற்றவர்களைக்காட்டிலும் மிக இளையவராக இருந்த எலிகூ, யோபுவின் மற்ற மூன்று நண்பர்கள் சரளமாக பேசினதைப்போல் பேச தயங்கினார். அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்து, அவர்கள் எங்கு தவறு இழைக்கிறார்கள் என்று கவனித்திருந்தார்.

வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கிற சில குறிப்பிட்ட வார்த்தைகள், தேவனால் ஏவப்பட்டவை என்று கருதமுடியாது, அல்லது அவை உண்மை என ஏற்க வேண்டிய அவசியமில்லை என்பதே நிஜம். நம் இளமைப் பிராயத்தில் சிலரோடு கலந்துரையாடும்போது, உரையாடலின் இறுதியில், மற்ற வசனங்களோடு முரண்படுகிற ஒரு வேத வாக்கியத்தை கோடிட்டுக் காண்பித்து முடிப்போம். “அது வசனமாயிருக்குமானால், நாம் அதனை அறிய

வாஞ்சையாயிருக்கவேண்டும்" என்று நாம் கூறுவோம். நம்மோடு பேசிக்கொண்டிருந்தவர் அதனைத் தேடி, கண்டுபிடித்து படிப்பார். "சாத்தான் பேசியதாவது.. என்று ஆரம்பித்து தொடர்ந்து படிப்பார். நிச்சயமாகவே சாத்தான் ஏவினான் என்று விசுவாசிக்க எந்தக் காரணமுமில்லை, சாத்தானின் வார்த்தைகள் ஊக்கப்படுத்துகிறது என, விசுவாசிக்க எந்தக் காரணமும் இல்லை.



எலிகூவால் பேசப்பட்ட இந்த வார்த்தைகள் யோபுவின் மற்ற தேற்றுபவர்கள் பேசினதைக் காட்டிலும் ஞானமாக இருந்தது. நாம் பகுத்தறிந்தவரைக்கும் மற்ற மூவர், மனித ஞானத்தையே மிகைப்படுத்திப்பேசினர். "அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப் பண்ணுவான்" என்று எலிகூ கேள்விகேட்கும்போது, யோபுவைக் குறித்த தவறான அபிப்பிராயங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்க முயல்வது தெரிந்தது. வரம்புமீறின பேச்சால் வெறுப்புற்றாலும், எலிகூவின் வார்த்தைகள் யோபுவையோ அவரது மூன்று நண்பர்களது வாதங்களை ஆதரித்தோ பேசவில்லை. யோபு மிகவும் தீயசெயல்கள் சிலவற்றை செய்திருக்கவேண்டும், இதன் காரணமாகவே அவரது ஒட்டகங்களும், அவரது ஆடுமாடுகளும் , அவரது அனைத்து உடைமைகளும், அவர் பெற்றிருந்த அனைத்தும், இவற்றோடுகூட அவரது குழந்தைகளும் அழிக்கப்பட்டன என்று யோபுவின் நண்பர்கள் மூன்றுபேரும் தர்க்கித்தனர். அவர் தனது பத்து குழந்தைகளையும் அதோடுகூட தன் மனைவியின் பாசத்தையும் இழந்திருந்தார். ஆகவே அவர் சில மாபெரும் குற்றத்தை செய்திருந்ததாலேயே, தேவன் இவர்பேரில் கோபமாக உள்ளார் என அவரது தேற்றுபவர்கள் அவரை ஒப்புக்கொள்ள வைக்க முயன்றனர். ஆனால் யோபுவோ தாம் மிக சிறப்பாகவே தேவனோடு தொடர்புகொண்டிருப்பதையும், அதேசமயத்தில் பூரணமாக அல்ல என்றும், தேவபக்தியுள்ள ஒரு நீதிமானாகவும், மேன்மையான ஜீவியம் ஜீவிப்பதையும் வலியுறுத்தினார்.

## எலிகூவின் பலமான வாத ஆதாரம் :–

யோபு தன் வாதத்தை முன்வைத்தும், அவரது மூன்று நண்பர்கள் தங்களது வாதத்தை முன்வைத்தும் ஓய்ந்தபிறகு, எலிகூ பேசத்துவங்கி, "நீங்கள் துயரத்தில் அகப்பட்டுள்ளதை நீங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். இப்பொழுது தேவன் உங்களுக்கு சமாதானத்தை அருளினாரானால், யாரால் உங்களை கலங்கப் பண்ணக்கூடும் ? இந்த உபத்திரவம் உங்கள்மேல் வரும்படிக்கு அவர் நிச்சயமாக தீர்மானித்திருக்கிறார்".

தேவன் சார்பாக எலிகூ பேசினார். யோபு சமாதானத்தையும் வளமையையும் இனி பெற்றிருக்கக்கூடாது என்று கர்த்தர் ஏற்பாடுசெய்திருந்தது வெளிப்படையாகிறது. இல்லாவிடில் இந்த இன்னல்கள் அவருக்கு நேர்ந்திருக்காது. அதற்கான காரணம் எதுவாயிருந்தாலும், யோபுவுக்கு நேர்ந்த பேரழிவு எதிர்பாராமல் நேர்ந்ததல்ல.

தெய்வீக கரம் இவ்விஷயத்தில் நிச்சயமாக இருந்திருக்கவேண்டும். ஒருவேளை சாத்தானே இந்த கஷ்டங்கள் அனைத்தையும் வருவித்திருந்தாலும், தேவன் அதை அனுமதித்திராவிடில், அவனால் அவ்வாறு செய்திருக்கமுடியாது. தெய்வீக ஏற்பாட்டையும், சித்தத்தையும் தடுக்க யாராலும் முடியாது. உம் விஷயத்தில் தீர்மானிக்க கர்த்தருக்கு உரிமையும் அதிகாரமும் உண்டு, ஆனால் யோபுவுக்கு இல்லை என்பதை அவரிடம் எலிகூ தெளிவாக எடுத்துரைத்தார். ஜீவியத்தில் எல்லாக் காரியங்களிலும் தேவனுக்கு உள்ள நியாயமான அதிகாரத்தையும் வல்லமையையும் தெளிவாய் தெரியும்படி அவர் காண்பித்ததோடு, அவரோடு இணைந்திருப்பவர்களைக் காட்டிலும் யோபு அதிக நீதிமான் என்பதை தற்செயலாக காண்பித்தார்.அவர் ஒரு பாவியாக இருந்தபோதிலும், இவ்விஷயத்தில் அவருக்கு நேர்ந்த மனத்துயரங்கள் அதன்பொருட்டு ஏற்பட்டதல்ல.

எலிகூவின் இந்த சொற்பொழிவிலிருந்து, நாம் ஆதாயமாக ஒரு கருத்தை பெறமுடியும். ஆனால் இதற்கு மாறாக, முற்காலங்களில் பரிணாமவாதிகளின் கருத்துப்படி, மனிதன் ஒருகாலத்தில் குரங்காக இருந்தான் என்ற பகுத்தறிவின் வழிமுறை மனிதனால் பின்பற்றப்பட்டது இங்கு கூறப்படுகிறது. இன்றைய நாளிலும் கல்லூரிப் பேராசிரியர்கள்கூட இதைக்காட்டிலும் அதிகமாகப் பேசாமல், இதுவே ஒரு ஞானமான கொள்கை என்று கருதுகிறார்கள்.

## உபத்திரவங்கள் தேவனது தயவற்ற நிலைமைக்கு நிரூபணமாகாது :–

யோபு ஒரு மாபெரும் பாவியல்ல என்று நாம் காண்போம். இதற்கு மாறாக, அவர் தேவனுக்கு ஒரு உண்மை ஊழியனாகவும்

உண்மை தீர்க்கதரிசியாகவும் விளங்கினார். தேவனால் விசேஷமாக நேசிக்கப்பட்டவன் என்று வேதாகமம் இவரைக்குறித்தே கூறுகிறது. எசேக்கியேல் 14:19,20 வசனங்களில் இது கூறப்பட்டுள்ளது ;

"நான் அந்த தேசத்தில் கொள்ளைநோயை அனுப்பி, அதிலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும்படி, அதின்மேல் இரத்தப்பழியாக என் உக்கிரத்தை ஊற்றும்போது, நோவாவும் தானியேலும் யோபுவும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும் குமாரத்தியையாகிலும் தப்புவிக்க மாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதை கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்".

மேலும் யாக்கோபு அப்போஸ்தலன் கூறுகிறார் ; "இதோ பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே, யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள். கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறாரே"- யாக்கோபு 5:11.

தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி, யோபுவுக்கு துன்பங்கள் நேரிட்டிருக்காது என்பது நிதர்சனமான உண்மை. தேவன் சமாதானத்தை தர விரும்பினாரானால், அதைக் குலைக்க ஒருவராலும் கூடாது. ஆனால் தம் ஊழியக்காரனை பரீட்சிக்க அவர் அனுமதியளித்தார். அவரால் நேசிக்கப்பட்ட அவரது குமாரனுக்கு துன்பங்களை எவ்விதத்தில் அனுமதித்தாரோ, அவ்வாறே அவரது சபைக்கும் துன்பங்களை நேரிட அனுமதிக்கிறார். அவரது குமாரனுக்கெதிராக எல்லா வகையிலும் தீமையை மனுஷர்மூலம் நேரிட அவர் அனுமதித்தார். அவரைப் பரியாசம் பண்ணவும், அவர்மேல் துப்பவும், அவரை அடிக்கவும், அவரை கொடுமைக்குள்ளாக்கவும், முடிவில் அவரை சிலுவையிலறையவும் அனுமதித்தார். இந்த விஷயங்களில் சமாதானத்தை தேவன் எப்பொழுதும் தரவில்லை, மாறாக துன்பங்களையே அதிகதிகமாக அடையும்படி செய்தார்.

தேவனுடைய பராமரிப்புக்கு ஒப்புக் கொடுத்தவர்களுக்கு இந்தப்பாடத்தின் மூலம் கற்பது என்னவென்றால், தெய்வீக அனுமதியின்றி ஒருவராலும் அவர்களை உபத்திரவத்துக்கு உட்படுத்தமுடியாது என்பதேயாம். இந்த சுவிசேஷயுகத்தின்போது தம் பிள்ளைகளுக்கு அனைத்தையும் நன்மைக்கேதுவாகவே நடக்கும்படியாக அவர் ஏற்பாடு செய்வதாகவும், நம் திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடுக்கமாட்டார் என்றும் கர்த்தரே நமக்கு கூறியிருக்கிறார்(1கொரிந்10:13). நம் கர்த்தரின் விஷயத்தில் அவரை நொருக்கவும், துன்பங்களையும் மரணத்தையும் அவர்மேல் வரப்பண்ணவும் யேகோவாவுக்கு பிரியமாயிற்று (ஏசாயா 53:10). அவரது நீதி, ஞானம், அவரது அன்பு மற்றும் அவரது வல்லமையை இது சிறப்பாக எடுத்துக்காட்டுகிற– படியால், உலகம் சீர்பொருந்துவதற்காக இத்திட்டத்தை செயல்படுத்த தேவன் பிரியமாயிருந்தார். அதோடுகூட, இது நம் கர்த்தராகிய இயேசுவுக்கு மாபெரும் கனத்தையும் மகிமையையும் முடிவில் கொடுத்தது.

கர்த்தருடைய ஜனங்களைப் பொருத்தவரை, யுகங்களின் மாற்றங்கள் தொடர்பான சில குறிப்பிட்ட காரியங்கள், அவர்களுக்கு நேரிடும் கடினமான பரீட்சைகள் மூலம் நிறைவேற வேண்டியிருந்தது. அதோடுகூட அவரை கண்டுபிடிக்க முடியாத நிலையில், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற அவரது பிள்ளைகள்மேல் குறிப்பிடத்தக்கதான பரீட்சைகளை வருவிக்க தேவன் சித்தங்கொண்டார். அவரிடத்தில் அவர்கள் அசைக்கமுடியாத விசுவாசம் வைத்திருக்க வேண்டுமென அவர் விரும்பினார். தேவனுடைய பிள்ளைகள் நமது திறவுகோல் வசனத்தை எலிகூ யோபுவிடம் கொடுத்த ஆலோசனையை, ஒரு வித்தியாசமான வழியில் அர்த்தங்கொள்ளவும் முடியும். "தேவன் சமாதானத்தைக் கொடுக்கும்பொழுது, யார் கலங்கப் பண்ணுவான்" என்று நாம் உண்மையாக கூறமுடியும். கர்த்தரின் பரிசுத்தவான்கள் அனைவரும் குறிப்பிட்ட அளவு சமாதானத்தையும் இருதயத்தில் ஒய்வையும் அனுபவிக்கமுடியும் என்று நாம் அங்கீகரிக்கிறோம். அவர் கடும் உபத்திரவத்தை அனுமதித்தாலும்கூட, இந்த சமாதானத்தை அடைய முடியும் என்று நாம் புரிந்துகொள்கிறோம்.

எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார்;

"விசுவாசித்தவர்களாகிய நாமோ இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம்".

நாம் விசுவாசிக்கும் மனப்பான்மையை பெறும்பொழுது, தேவனிடத்தில் முற்றிலும் நம்பிக்கை அடையும்போது நாம் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம். சில சமயங்களில் தவறான ஆவியை ஜெயங்கொள்ள வெளிப்புறமான உபத்திரவங்கள் உதவிகரமாக இருக்கும். மேலும், பிறருக்கு நேரிடும் காரியங்களில் ஆவிக்குரிய சக்தியும், உற்சாகமும் முற்றிலும் நசுங்குண்டு போவதைக்கண்டு, கர்த்தரின் பிள்ளைகள் சோர்ந்து போகக்கூடாது. அத்தகைய அனுபவங்களிலிருந்து, அவர்கள் தங்களிடமுள்ள தவறான ஆவியை கண்டடைவர். அன்பின் கரமே அவர்களை அடிக்கிறது, எத்தனைபேருக்கு, எந்த அளவு கடினமாக சிட்சை தருவது என்று கர்த்தரே அறிவார்.

## பூரண அமைதியோடு காத்துக்கொள்ளுவீர் :–

"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்"- ஏசாயா 26:3

புதியசிருஷ்டிகளாக, இந்தக் கருத்து நமக்கு மிகுந்த விலையேறப்பெற்றது. எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நமது சிந்தைகளையும் இருதயங்களையும் காத்துக்கொள்ளும்(பிலிப் 4:7). வரவிருக்கும் நித்திய மகிமையோடு ஒப்பிடும்போது, தற்காலத்துப்பாடுகள் ஒப்பிடத் தக்கவையல்ல ஆகவேதான் அப்போஸ்தலர் கூறுகிறார்;

"காணப்படுகிறவைகளையல்ல,காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது"–2கொரிந்4:17,18. நம் சிந்தை கர்த்தருக்குள் நிலைத்திருந்து, நம் அனுபவங்களை முறையான கண்ணோட்டத்தில் அணுகும்போது, கவிஞரோடு சேர்ந்து நாமும் பாடலாம் :

இந்த அடைக்கலத்தை
இறுகப்பற்றியிருக்கும்போது,
ஆழ்ந்த நம்அமைதியை
அசைக்கமுடியாது எந்தப் புயலாலும்

நாம் சமாதானம் பெற்றிருக்கிறபடியால், வெளிப்புறமான நிலைமைகள் எப்படியிருந்தாலும் அது ஒருபொருட்டல்ல. எப்படி மழையும் புயலும் அதன்பிறகு சூரியப் பிரகாசமும் வருகிறதோ, அதுபோல் கர்த்தருடைய ஜனங்களது வாழ்க்கையில் பரீட்சைகளும் கஷ்டங்களும் மகிழ்ச்சியாடு ஒன்றுசேர்ந்து வரும். அவர்களது உடன்படிக்கைக்கு இசைவாக உள்ள நீதியான எல்லா குதூகலங்களையும் அவர்கள் அனுபவிப்பார்கள். பொறுமை, அனுபவத்தை உண்டாக்கும் என்றறிந்து, அவர்கள் சோதனை வேளைகளில் பொறுமையை வெளிப்படுத்த கற்றுக்கொள்வார்கள். இவ்வாறு அனுபவத்தை அதிகதிகமாக அடையும்போது, அதன்மூலம் பிறக்கும் நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது – ரோமர் 5:3–5.

ஆகவே கிறிஸ்தவர்களுக்கே நமது திறவுகோல் வசனம் நிச்சயத்தைக் கொண்டுவருகிறது. அதன்படி, தேவன் அமரிக்கையைத் தரும்போது, ஒருவனாகிலும் கலங்கப் பண்ணமுடியாது. அவர்கள் "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி , பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்கள்.. "என்று நம் குரு கூறியிருக்கிறார். அப்பொழுது நாம் ""சந்தோஷப்பட்டு களிகூருவோமாக". "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (மத்5:11,12; யோவா 14:1). இந்த நிலைப்பாட்டின்படி திறவுகோல் வசனத்தை நாம் கண்ணோக்கும்போது, அது மிகவும் விலையேறப்பெற்றதாய் உள்ளதாக எண்ணுகிறோம்.

## நாம் உண்மையுள்ளவர்களென நிரூபிக்கப்பட துன்பம் அவசியமானது :–

நம் பரலோகப்பிதா பலவகைப்பட்ட துன்பங்கள் நம்மேல் வருவதற்கு வடிவமைத்திருக்கிறார். இவைகளில் படிப்படியாக அபிவிருத்தியடைவதன்மூலம், நமது குணாதிசயங்கள் நிரூபணமாகும். துன்பங்களாகிய அனுபவங்களை அடைய நாம் அனுமதிக்கப்படுவது, தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது(சங்119:67, 71,75; 34:19,20). ஆகவே இன்றைக்கு தேவபிள்ளைகள் துன்பத்துக்குள்ளாவது, அல்லது அவர்களுக்கு சோதனைகள் நேரிடுவதைப் பார்த்து,தேவன் அவர்களுக்கு எதிராக இருக்கிறார் என்று நாம் கூறக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் அவரது சித்தப்படி துன்பப்படுவதற்கு மனப்பூர்வமாக நம்மை செயல்பாடுகளின்மூலம் வெளிப்படுத்தவேண்டும். இதில் அடிக்கடி அநீதியினிமித்தம் துன்பப்படவும் நேரிடும். தேவசித்தத்துக்கு பொறுமையோடும் மனமகிழ்ச்சியோடும் ஒப்புக்கொடுத்தலையே நம் கர்த்தர் நமக்கு ஒரு முன்மாதிரிகையாக ஏற்படுத்தினார். நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும். மேலும் அப்போஸ்தலர்கள் கஷ்டங்களும் உபத்திரவங்ளும் அவர்கள்மேல் வந்தபோது அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று அவர்களைக் குறித்த முன்னுதாரணங்களைப் பெற்றிருக்கிறோம். அதோடுகூட, சுவிசேஷயுகத்தின் துவக்கமுதல் இறுதிவரை, எல்லா பரிசுத்தவான்களின் அனுபவங்களும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

துன்பம் என்பது தேவனுடைய தயவற்றநிலைக்கான ஒரு அடையாளமாகக் கூறமுடியாது. இதற்கு மாறாக, "நீதிமானுக்கு நேரிடும் உபத்திரவம் அநேகமாயிருக்கும்" என்று நாம் அறிவோம். மேலும் "கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருப்பவர் யாவரும் துன்பப்படுவார்கள்". சத்தியம் சிலவகைகளில் உபத்திரவத்தை வருவிக்கும். கர்த்தரிடத்தில் உண்மையாய் இருப்பவர்களுக்கு அதிக உபத்திரவத்தை உண்டாக்கும். அப்போஸ்தலர் கூறுவதுபோல்,

"எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக்
கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல்
வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே"– எபி 12:8.

தேவன் இருதயத்திற்கு சமாதானம் தருவாரானால் இவ்வாறு சமாதானம் இருதயத்தில் ஆட்சிசெய்து, தேவனோடு இசைவாயிருப்பவனை நிலைகுலையச் செய்ய யாரால் கூடும் ? இதுவே எல்லோருக்கும் மாபெரும் ஆசீர்வாதமாகும். இயேசுவின் அடிச்சுவடுகளில் உண்மையாய் நடக்க போராடுபவர்களுக்கு இந்த சமாதானத்தை அவர் அருளுகிறார். அவருடையவர்கள்

மட்டுமே தங்களுக்கென ஒரு புகலிடம் இருப்பதை அறிவர், மற்ற எவரும் அறியார். இந்த புகலிடத்திற்குள் வேறு எந்த தீங்கும் அணுகமுடியாது. நீண்டகால ஸ்திரமான பாறைகளில் நாம் நங்கூரம் பாய்ச்சப்பட்டு, பாதுகாப்பாக இருப்பதால், எந்த புயலும் நம் கப்பலை அசைக்கமுடியாது;

"தேவனிடத்தில் அன்புகூருபவர்களுக்கு அனைத்தும்
நன்மைக்கேதுவாகவே நடக்கிறது" – ரோமர் 8:28

யோபுவின் குறுகிய கால சோதனைகளுக்குப்பிறகு அடைந்த ஆசீர்வாதங்கள் அதிக கனத்தை கொணர்ந்தன.அவ்வாறே இன்றைய கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும் இருக்கிறது.

என் மகிழ்ச்சியும் தேற்றுதலும் மரிக்கநேர்ந்தாலும்,
என் கர்த்தர், என் இரட்சகர் ஜீவித்திருக்கிறார்
இருள் சுற்றி சூழ்ந்தபோதிலும்,
இரவின் கீதங்களை அவர் தருகிறார்
எந்த புயலும் உள்ளான அமைதியை அசைக்கமுடியாது,
அந்த அடைக்கலத்தை இறுகப்பற்றும்பொழுது;
கிறிஸ்துவே வானத்துக்கும் பூமிக்கும் கர்த்தா –
கீதம் இசைப்பதிலிருந்து எப்படி விலகியிருக்கமுடியும் ?

--------------------------

**--2668--**

# பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும்

## தேவன் பட்சபாதமுள்ளவரல்ல

## GOD IS NO RESPECTER OF PERSONS

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 10:34–44

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்ற அப்போஸ்தலரின் அறிக்கையை அநேகர் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இவ்வார்த்தைகளை அப்போஸ்தலர் பயன்படுத்தினதற்கு மிகவும் வேறுபட்ட வழியில் அவர்கள் பொருத்திப் பார்க்கின்றனர். தேவன் குணாதிசயங்களுக்கு மதிப்பளிக்கிறவர் என்று அப்போஸ்தலர் உணர்ந்திருக்கிறார். ஆனால் வெளிப்புறமான தோற்றங்களுக்கோ, நிலைமைகளுக்கோ, தோல் நிறம் பார்த்தோ, எந்த நாட்டைச்சேர்ந்தவன் என்றோ பொருட்படுத்துவதில்லை. இதுவே அப்போஸ்தலர் கூறவந்த கருத்து என்பது அவரது அடுத்த சொற்றொடரில் நிரூபணமாகிறது;

"எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" (அப் 10:35). நெருக்கமான உறவு மற்றும் நன்கு அறிமுகமாயிருத்தல் ஆகிய நிபந்தனைகள் மூலம் யாராயிருந்தாலும், ஒவ்வொருவரும் கர்த்தரிடத்திற்கு வரமுடியும் என்பது ஒரு தவறான எண்ணம், இது பொதுப்படையான கருத்துக்கு அப்பாற்பட்டது. இப்படிப்பட்ட தவறான அபிப்பிராயத்தின் விளைவாக, அநேகர் பரலோக கிருபையின் சிம்மாசனத்தை எவ்வித அங்கீகாரமுமின்றி, எவ்வித அழைப்புமின்றி, எவ்வித உரிமையுமின்றி அணுகுகிறார்கள். ஏனெனில் கர்த்தரிடத்தில் அவர்கள் பயப்படுவதில்லை, இவர்கள் நீதியின் ஊழியக்காரர்கள் அல்லர், அவரால் அங்கீகரிக்கப்படாதவர்கள், புத்தியின்மையும், கிறிஸ்தவர்களது தவறான ஆலோசனையுமே இப்படிப்பட்ட தவறான நிலைமை பெயர்கிறிஸ்தவ மண்டலத்தில் நிலவுவதற்கு காரணமாகும். வேதாகமத்தின் கட்டளைத் தொகுப்பையும், முன் மாதிரிகையையும் நாம் கற்று கவனமாக பின்பற்றுவோமாக. தேவன் குணாதிசயத்தை பொருட்படுத்துபவரல்ல என்று தவறான அபிப்பிராயத்தை நாம் கொடுக்காதிருப்போமாக. இதற்கு மாறாக, தேவபக்தி மிக இன்றியமையாதது என்று பேதுரு சுட்டிக் காண்பித்தபடியும், நீதியாக வாழ முயற்சிப்பது மிக முக்கியமானதும் வாழ்க்கையை மறு சீரமைப்பதுமாகும், பாவத்தை விட்டுவிலகி நீதியை செய்வதாகும். அதோடு மட்டுமல்ல, நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியத்தை விசுவாசிக்கும் இந்த நியமிக்கப்பட்ட வழியின் மூலமாகவே தேவனால் எவரும் அங்கீகரிக்கப்படுவர்.

நூற்றுக்கதிபதியாகிய கொர்னேலியு தேவனை ஏற்றுக்கொண்டதே இந்தப் பாடத்தின் மையப்பொருளாகும். இவர் இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பாகவே தேவனிடத்திற்கும், தேவநீதிக்கும் மாறினவர். ஆதாயத்தை எதிர்பாராமல் மிகுந்த தர்மங்கள் செய்தவர், நீதியை நேசிப்பதும், அவரது கண்ணியமான வாழ்க்கையும் அவரை சந்தித்தவர்களால் கண்டுணரப்பட்டவைகள். இருந்தபோதிலும் அந்த வார்த்தையின் முறையான உணர்வின்படி, அவர் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுமுன், ஒரு சில காரியங்கள் அவசியமாயிருந்தது. தெய்வீக அங்கீகாரம்பெற, தேவபக்தியும் ஒழுக்கமும் மட்டுமே போதுமானது என்று கற்பனை செய்திருப்பவர்களுக்கு ஒரு பாடம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கொர்னேலியு தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு சில காலத்துக்கு முன்பே இந்த பண்புகளை பெருமளவில் பெற்றிருந்தார். கர்த்தரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் நெருங்க ஆவலாயிருக்கிற அனைவருக்கும் கொர்னேலியுவுடன் தொடர்பு கொண்டமுறை ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

நாம் பார்த்தபிரகாரம் கொர்னேலியு தேவ பக்தியுள்ளவராயிருந்தபோதிலும் அவர் ஒரு யூதனல்ல. விசேஷ தேவதயவுக்குப் புறம்பே இருப்பதை அவர் புரிந்திருந்தார். இருந்தபோதிலும் தேவனைநோக்கி தொடர்ந்து ஜெபித்துவந்தார். அவர் என்னஜெபித்தார் என்று நமக்கு கூறப்படவில்லை. ஆனால் வேதத்திலுள்ள பதிவுகளுக்கு இசைவாக நாம் பார்க்கும்பொழுது, தெய்வீக குணாதிசயம் மற்றும் தெய்வீகத்திட்டத்தைக் குறித்த வெளிச்சம் பெறுவதற்காகவும், தெய்வீக தயவு மற்றும் அங்கீகாரத்தை புரிந்துகொள்வதற்கும், அவரோடு நெருங்கின உறவுகொள்ளவுமே ஜெபித்தார் என்று யூகிக்க முடிகிறது. இயேசுவைப்பற்றி அவர் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பினும், இக்காரியங்களில் அவர் குழப்பமடைந்திருந்தார். ஒருவேளை இதனிமித்தமாக இவரை ஊக்கமாக ஜெபிக்க தூண்டியிருக்கக்கூடும். கர்த்தர் ஒரு அற்புதமான வகையில் பதிலளிக்க விரும்பி, தம் தூதனை அவரிடத்திற்கு அனுப்பி, அவரது ஜெபமும் அவரது தர்மங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவரது சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறதை தெளிவுபடுத்தினார்(வசனம் 4). ஜெபத்தைக்காட்டிலும் இன்னும் கூடுதலாக நற்கிரியைகள் அவசியமாயிருந்ததை தூதன் அறிவுறுத்தினார், ஆனால் கூடுதலான விஷயங்களை அந்த தூதன் கூறுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படவில்லை. கர்த்தரை உண்மையான நிலைப்பாட்டின்படி அறிய கொர்னேலியுவுக்கு அவசியமேற்பட்டது. தம் மீட்பராகிய அவரிடத்தில் கொர்னேலியு விசுவாசத்தை பயிற்சி செய்ய வேண்டும். அவரது தேவபக்தி நினைப்பூட்டுதலாக தேவசந்நிதியை எட்டுமுன், தேவனுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிக்க முடியுமா என்று நிதானிக்கவும், அல்லது தெய்வீக தயவின் கீழும், உறவுக்குள்ளும் அவரை கொண்டுவரவேண்டும்.

கர்த்தரால் தேவதூதர்களை கருவிகளாகக் கொண்டு சுவிசேஷத்தை வெளிப்படுத்தமுடியும் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால் இங்கு இவ்வாறு அவர்களைக்கொண்டு நிறைவேற்றுவது தேவநோக்கமாயிராமல், தம்மோ[illegible]டை

செய்த மனித புத்திரர்களை அவரது தூதர்களாக உபயோகித்து, "மாபெரும் மகிழ்ச்சியை அளிக்கும் நற்செய்திகளை" எல்லா ஜனங்களுக்கும் அறிவிப்பதே அவருக்குப் பிரியமாயிற்று. தேவன் இவ்வாறு நமக்கு செய்தது எப்பேர்ப்பட்ட மாபெரும் கனத்துக்குரியதாக ஆதாமின் சந்ததியாரைப்போல சுபாவத்தில் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்த நம்மிடத்தில் தேவன் எப்பேர்ப்பட்ட மாபெரும் கனத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் நாமோ கிறிஸ்துவுக்குள் தெய்வீக தயவைப்பெற்று, "பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடுகூட", அழைக்கப்பட்ட மற்றவர்களுக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களையும், தயவையும் கொடுக்கும் வாய்க்கால்களாக ஏற்படுத்தினார். அவரால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளாகிய நமக்கு, இந்த தெய்வீக வழிமுறையானது கனத்துக்குரியதாக இருப்பதோடுகூட, இது ஒரு ஆசீர்வாதமாகவும் உள்ளது. பிறருக்கு சத்திய வசனங்களுக்கடுத்த உண்மையான ஊழியம் செய்பவர்கள் எல்லாருக்கும் மாபெரும் ஆசீர்வாதம் வரவிருக்கிறது என்பதை கிறிஸ்தவன் தன் அனுபவத்தில் அறிந்திரான்.

அப்போஸ்தலர் பேதுருவினிடத்தில் அனுப்பும்படி கொர்னேலியு அறிவுறுத்தப்பட்டார். ஒரு சில முக்கியமான வார்த்தைகளை அவரிடத்தில் பேசும்படி முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டார். இவைகள் மூலமாகவே தெய்வீக தயவுக்குள்பிரவேசித்தார். கொர்னேலியுவின் தயார் நிலையிலிருந்த மனது அவரது உடனடியான கீழ்ப்படிதலின் மூலம் காண்பிக்கப்பட்டது. அவர் ஜெபித்ததோடு மட்டுமல்ல, தாம் ஜெபித்த ஜெபத்திற்கான பதிலுக்கு தேவனோடு இசைவாக செயல்படுவதற்கு ஆயத்தமாயுமிருந்தார். அனுப்பப்பட்ட மூன்று நபர்கள்(இருவர் வீட்டு வேலைக்காரர்கள், மற்றவர் ஒரு படைவீரர் –அனைவருமே தேவபக்தியும், தேவபயமும், தேவனைக்குறித்த ஆர்வமும் உள்ளவர்கள்). தான் அடைந்த வெளிச்சத்தையும் விசுவாசத்தையும் மரக்காலின்கீழ் மறைத்து வையாமல், தன்னால் இயன்றளவு தேவனை கனப்படுத்தவும், அவருக்குப் பிரியமானதைச் செய்யவும் போராடுபவர் என்று சாட்சியளித்தார். இவரது வெளிச்சமும் விசுவாசமும் அவரது இல்லத்திலும், வேலையாட்களின் மத்தியிலும், அவரது கட்டுப்பாட்டிலுள்ள படைவீரர்களிடையேயும் பிரகாசித்தது. இஸ்ரயேலருக்கான விசேஷதயவு முடிந்தபிறகு, இப்படிப்பட்ட மனிதனையே தேவன் ஏற்றுக்கொள்ள பிரியமாயிருக்கிறார். அவரது தேசம், நிறம் எதுவாயிருப்பினும், இப்பேர்ப்பட்ட அனைவரையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். மற்றவர்களைக்காட்டிலும் தயவளித்து, சத்தியத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கிறார். இங்கு கர்த்தருடைய ஜனங்களில் சிலருக்கு அவசியமான பாடம் உண்டு. அவர்கள் தாங்கள் பெற்றிருக்கிற சத்திய வெளிச்சத்தை அவர்கள் சந்திப்போர் அனைவருக்குள்ளும் வெளிச்சம் கொடுப்பவர்களாக இருக்கவேண்டும். இதன்காரணமாக, தேவபக்தியின் ஆவி ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு வேலைக்காரரையும் ஊடுருவும்.

கொர்னேலியு கர்த்தரிடத்தில் முழு விசுவாசத்தோடு இருந்தது நிரூபணமாகிறது. பேதுரு வருவதற்காக அவர் காத்திருக்கவில்லை. அவர் வருவார் என்று அறிந்திருந்து, தேவதூதன் மூலமாக கர்த்தரது வாக்குத்தத்தத்தின்மேல் நம்பிக்கையாய் இருந்தார். அவர் தம் நண்பர்கள், உறவினர்கள், வீட்டார் அனைவரையும் ஒன்றுகூடச்செய்து, அவர்கள்மேல் தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தினார். அவர்கள் அவரைப்போலவே இரங்கும் சுபாவமுடையோராகவும், னூஜீவ மார்க்கத்தை அறிந்துகொள்ளவும், தேவனோடு சீர்பொருந்தவும், இணக்கமாகவும், நீதியின் கொள்கைகளுக்கு இசைவாகவும் பேரார்வம் கொண்டிருந்தனர். இதற்கிடையில்,யூதர்களுக்கு மட்டுமே பல நூற்றாண்டுகளாக இருந்த உரிமைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் தற்போது மாற்றப்பட்டு, முதன்முதலாக புறஜாதியார் ஆலயத்துக்கு கொண்டுவரப்படுதலை யூதர்கள் ஏற்றுக்கொள்ள, தங்களை ஆயத்தம்பண்ண வேண்டிய அவசியம் பேதுருவுக்கு ஏற்பட்டது. ஒரு காட்சி கொடுக்கப்பட்டதன் மூலம் இது நிறைவேற்றப்பட்டது. பேதுரு யோப்பாவிலுள்ள ஆறு சகோதரர்களுடன் அடுத்தநாள் நூற்றுக்கதிபதியின் வீட்டிற்கு எவ்வித ஐயப்பாடும் இன்றி வந்துசேர்ந்தார். ஏனெனில் கர்த்தர் தாமே இந்த விஷயத்தில் அவரை வழிநடத்தினார். இந்தப் பணிக்காக எல்லா சீஷர்களிலுமிருந்து பேதுருவே சிறந்தவராக தெரிவு செய்யப்பட்டார். ஏனெனில் கர்த்தரது வழிகாட்டுதலை சீக்கிரமாயும் மனப்பூர்வமாயும் பின்பற்றும் கட்டுக்கடங்கா வைராக்கியத்தை பெற்றிருந்ததாலேயே. இரண்டாவதாக, அப்போஸ்தலர்களிலேயே வயதில் மூத்தவராகவும், அநேக விஷயங்களில் மிகுந்த செல்வாக்கு மிக்கவராயும் இருந்ததாலேயே ஆகும். அவரது வாழ்க்கை கனம் பொருந்தியதாக மற்றவர்களால் மதிக்கப்பட்டது. ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களில், யூதரோடு புறஜாதியார் உடன் சுதந்திரர்களாவதைக் குறித்து பல நூற்றாண்டுகளாக எதிரான கருத்துக்களும் தப்பெண்ணமும் கொண்டிருந்ததை புரிந்துகொள்வது நமக்கு கடினமாயுள்ளது. தேவதயவு அவர்களது தேசத்துக்கென நிரந்தரமாக தீர்மானிக்கப் பட்டாயிற்று என்றும், ஆகவே அத்தேசத்தாரைவிட்டு வெளியே, மற்றவர்களுக்கு செல்ல வாய்ப்பே இல்லை என்றும், ஆதலால் மற்றவர்கள் தங்களைப்போல சரிசமானமாக தேவனால் ஏற்கப்படுவதுமில்லை என்றும் எண்ணினர். இந்தக் கருத்துக்கள் முதலாவதாக, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டவை. "உன் வித்துக்குள் .." என்றும் இரண்டாவதாக, இஸ்ரயேலர் புறஜாதியாரோடு கலந்துகொள்ள அனுமதிக்கப்படாததும், அவர்களோடு திருமணம் செய்யக்கூடாது என்பதுமான தேவகட்டளையை அடிப்படையாகக்கொண்டது. மூன்றாவதாக, இவையெல்லாவற்றிற்கும் மேலாக, யூதரது ஆட்சியாளர்கள் இதைத்தாண்டி ஒருபோதும் செல்லாமல், இந்த வேறுபாடுகளையே மிகைப்படுத்திக் காண்பித்தனர்.

ஆனால் ஒரு புதிய யுகம் ஆரம்பித்துவிட்டது. இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்டிருந்த 70 வார தயவு முடிந்துவிட்டது. மேலும் நாம் ஏற்கனவே கண்டதுபோல், சமாரியர்களுக்கும் எத்தியோப்பிய மந்திரிக்கும் கர்த்தர் தம் தயவை யூதரோடுகூட மற்றவர்களுக்கும் விசாலமாக்கத் துவங்கினார். இந்த புதிய முறைமைகள் அப்போஸ்தலர்களுக்கு ஆச்சரியத்தை வருவித்தாலும், புறஜாதியாருக்கு தயவை விசாலமாக்கியதை கிரகிப்பது அவர்களுக்கு எளிதாய் இருந்தது. அவர்கள் கர்த்தரது புதிய வழிமுறைக்கு உறுதியான வழி அமைத்தனர்.பேதுரு அப்போஸ்தலர் கொர்னேலியுவின் வீட்டுக்குள் பிரவேசித்து, தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரனைக் கண்டு, அவரை அங்கீரித்து, அவருக்கென்று கொண்டுவந்த தேவசெய்தியை அளித்தார். பேதுருவை தொழுதுகொள்ளும்படி அவரது பாதத்தில் விழுந்தார். பெரும்பான்மையான ரோமர்களிடமிருந்து, குறிப்பாக ரோம படைவீரர்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து கொர்னேலியு எவ்வளவு வேறுபட்டவராயிருக்கிறார். அந்த யூதனை தாழ்ந்தவனாக எண்ணிப் பார்ப்பதற்கு பதிலாக, உலகிலேயே மிகப்பெரிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக தன்னை உயர்த்திக்கொள்வதற்கு மாறாக, அந்நேரத்தில் தாழ்மையான ஆவியால் கொர்னேலியு நிறைந்திருந்தார். கர்த்தருடைய பிரதிநிதியாக அவரை சந்திக்கும்படி வந்த பேதுருவும், கர்த்தர்மேல் உள்ள பயபக்தியும் மரியாதையும் இருதயத்தில் நிறைந்தவராய், கொர்னேலியு காண்பித்த அதே தாழ்மையின் மனநிலையை வெளிப்படுத்தினர் என்பதே உண்மை.

கொர்னேலியு மனத்தாழ்மையோடும், உயர்பண்போடும் நடந்துகொண்டாரேயானால், அப்போஸ்தலர் பேதுருவும் அதே அளவு உயர்பண்பையும் தேவனிடத்தில் உண்மையையும் காண்பித்தார். ஒருமுறை நூற்றுக்கதிபதியை தூக்கியெடுத்து, "எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான்" என்றான்(26ம் வசனம்).அதிகாரப்பூர்வமில்லாத பெரும் மரியாதையைப் பெற்றுக்கொள்ள மறுத்த பேதுருவின் உயர்ந்த பண்பு நம் இருதயங்களில் அவருக்கு புகழ்ச்சியை பறைசாற்றுகிறது. இவ்வாறு ஒரு மாபெரும் பரீட்சையில் மேலான கனத்தையும், அதிகாரத்தையும் வெறுத்து, தான் ஒரு முறிவுபட்ட நிலைமையிலுள்ளதையும், காலியான பாத்திரம் என்றும், கர்த்தருடைய ஆவி இப்பாத்திரத்தில் நிரப்பப்பட்டதாலேயே இது மதிப்புள்ளதாகிறது என்ற தன் உண்மை நிலையை உணர்ந்தவராக, தம்மை இரட்சித்துக்கொண்டார். கர்த்தர் தன்னை இரக்கம் மற்றும் சத்தியத்தின் பாத்திரமாக உபயோகிக்க பிரியமாயிருந்தார் என்று பகுத்துப்பார்த்து புரிந்துகொண்டார். பெயர்சபைகளில் அநேகர், தங்கள் உடன்அங்கங்கள் தங்களுக்கு மரியாதை, வணக்கம் செலுத்தும்பொழுது, தள்ளிக்கழித்துவிடாமல் ஏற்றுக்கொள்கின்றனர். போப்பு மற்றும் பிஷப்புகள் போன்ற பெரும்மதிப்பு வாய்ந்த பட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு, மரியாதையை ஏற்க ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலர் பேதுரு இவ்விஷயத்தில் காண்பித்த முன்மாதிரிகையால் கடிந்துகொள்ளப்படுகின்றனர். இன்றைய நாளிலும் சகோதரர்களில் யாராவது மனிதரிடமிருந்து அதிக மேன்மையையும், புகழ்ச்சியையும் பெறுவாரானால், ஒருவேளை அபாயத்திற்குள்ளாக நேரிடும். நாம் வாழும் தற்காலம் நேரெதிரான வழியில் சென்றுகொண்டிருக்கிறபடியால் இவ்வாறு அபாயம் நேரிடக்கூடும். எங்கு தேவஉறவிலிருந்து துண்டிக்கும் ஆவி காணப்பட்டாலும், அந்த மேட்டிமையின் ஆவியைவிட்டு விலகவும், புகழ்ச்சியை மறுக்கவும் வேண்டியது அந்தந்த சகோதரரது கடமையாகும். மேலும் தான் கர்த்தருடைய உடன் ஊழியக்காரனாக எண்ணி, அவர் எவ்வகையில் தன்னை உபயோகிக்க விரும்பினாலும், நன்மையான எந்த வரமும், பரிபூரணமான எந்த ஈவும் அவரிடமிருந்தே வருவதை சுட்டிக்காட்டவேண்டும்.

## இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகள்:—

பேதுரு கொர்னேலியுவின் வீட்டிற்குள் பிரவேசித்தவுடன்,அங்கு தேவனுக்குப் பயந்தவர்களும் வாஞ்சையுள்ளவர்களுமாகிய புறஜாதியாரின் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு, அவரிடம், "இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் ?" என்று கேட்டார்(அப் 10:29). அதற்கு கொர்னேலியு, தம் கடந்தகால அனுபவங்களில் சிலவற்றை எடுத்துரைத்து, தேவனோடு தான் ஐக்கியங்கொள்ள விரும்புவதையும், அவருக்குப் பிரியமாக நடக்க முயற்சிப்பதையும், தாம் கண்ட தரிசனத்தையும், தற்போது அந்த தரிசனத்திற்கு செவிசாய்க்கும்பொருட்டே பேதுருவின் வருகை தற்போது நேரிட்டதையும், தற்போது தேவனால் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே கூடியிருக்கிறோம் என்றார்.

"நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்—கேதுவான வார்த்தைகளை.. " சொல்லுவான்(அப்11:14). அவன் செய்த, தானதருமங்களால் அவன் இரட்சிப்படையவில்லை. அவனது ஜெபங்களோ, பேதுரு பிரசங்கித்த செய்தியோ இரட்சிப்பளிக்கவில்லை, மாறாக, பேதுருவின் செய்தி, கொர்னேலியு மற்றும் அவரது வீட்டாரிடம் காரியங்களை விவரித்து, விசுவாசத்தினால் கிறிஸ்துஇயேசுவுக்குள் கிடைக்கும் மீட்பைப்பெற்று இவ்வாறு இரட்சிப்படையலாம் என்றார். தேவனிடமிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டு, சாபத்திற்குட்பட்டு, பாவிகளான நிலைமையிலிருந்து மீண்டு, இரட்சிக்கப்பட்டார்கள். இவ்வாறு இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அளிக்கப்படவிருக்கும் முழுமையான மீட்பை முன்கூட்டியே ருசிபார்த்தனர்.

அப்போஸ்தலரின் பிரசங்கத்தை உன்னிப்பாய் நோக்கும்போது, அவர் கொடுத்த ஜீவனளிக்கும் செய்தியிலிருந்து, கொர்னேலியுவும் அவரோடு உடனிருந்தவர்களும் அடைந்த இரட்சிப்புக்கேதுவான விசுவாசத்தை நம்மால் தெளிவாக கண்டுணரமுடியும். பேதுரு சுவிசேஷசெய்தியை முன்னர் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கித்த அதே செய்தியை, மீண்டும் நிகழ்த்தினார். அந்த செய்தி, பாவநிவாரணத்துக்காக தம்மையே சிலுவையில்

பலியாக்கின நல்லவரும் கீழ்ப்படிதலை காண்பித்தவருமாகிய இயேசுவைப் பற்றினதாகும். தேவனது மாபெரும் வல்லமையால் இயேசுவின் உயிர்த்தெழுதல் நடந்ததுபோல, அவர்மூலமாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும் நம்பிக்கையே அந்த செய்தியாகும். பாவிகளுக்கென்று கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் மூலம் நீதியை நிறைவேற்றின கர்த்தர், அவர்களால் முடிந்த அளவு விசுவாசம், தேவபக்தி, நீதியினிமித்தம் கீழ்ப்படிதல் போன்ற நிபந்தனையின்பேரில் பாவிகளை ஏற்றுக்கொள்ள தற்போது பிரியமாயிருக்கிறார். பேதுருவின் பிரசங்கம் மிகப் பழமையான கதை, இதில் அநேகர் களைப்படைந்து, வெறுக்கத்தக்க நிலையை அடைந்தனர். ஆனால் சரியான நோக்கின்படி, ஒவ்வொரு ஆத்துமாவும், தேவனுடைய குமாரனின் மரணத்தின்மூலம் பிதாவின் நற்செய்தியாகிய பாவமன்னிப்பைப்பெற்று ஒப்புரவாகவேண்டும். இதே செய்தியையே தேவன் இன்றைக்கும் தம் உண்மையான தூதர்கள்மூலம் எல்லோருக்கும் தொடர்ந்து அனுப்பிவருகிறார், இதைத்தவிர வேறு சுவிசேஷம் இல்லை, அவ்வாறு வேறொரு செய்தியை தருபவர்கள் அவர்களது ஊழியத்தில் நிலைநிற்கவில்லை. இவர்கள் தேவனுடைய தூதுவர்களல்ல, அவரது ஆவியைப்பெற்ற வாயாகவோ, செய்தியாளர்களாகவோ இருக்கமுடியாது.

அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார்; பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்கு பிரியமாயிற்று **(1கொரி1:21)**. அதாவது, மீட்பின் திட்டத்தைக் குறித்த சத்தியத்தைப் பிரசங்கிக்க, இந்த வழிமுறையை பின்பற்றுவது தேவனுக்கு பிரியமாயிருந்தது. இவ்வாறு இந்த சாட்சியத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களை நீதிமான்களாக்குவதும் அவருக்கு பிரியமாயிற்று. இன்றைய நாளின் சாட்சியங்கள், ஜனங்களுக்கு கடிதங்கள், செய்திப்பிரசுரங்கள் அல்லது புத்தகங்கள் அல்லது வாய்பிரசங்கம் வழியாக சென்றடைகின்றன. எவ்வகையில் சென்று சேர்கிறது என்பது ஒரு காரியமல்ல, மாறாக உண்மைசெய்தி கொடுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்பதே காரியமாகும். ஆனால் இந்த செய்தி தேவதூதர்கள் மூலமாகவோ, பரிசுத்தஆவியின் வல்லமையினாலோ, மனித பிரதிநிதிகளுக்கு அப்பாற்பட்டு அல்லாமல், மனிதர்களைக் கொண்டே மாறுபாடின்றி செல்கிறது. தேவனுடைய இந்த வழிமுறைகளின் பாடங்களை நம் மனதில் நாம் நிறுத்தி, வாழ்வின் நடவடிக்கைகளில் அவற்றை பொருத்தமாக கடைப்பிடிக்கவேண்டும். கர்த்தர் நம் நண்பர்களையோ, குழந்தைகளையோ, அயலாரையோ இயங்கவைப்பார், அல்லது அறிவுறுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது, அதற்குமாறாக, தமது ராஜரீக ஆசாரியர்களுக்கே இந்த கனத்தை அருளுகிறார் என்பதை நினைவுகூறவேண்டும். ஆகவே இதன்பொருட்டு நாம் ஊழியத்தில் அசதியாயிராமல், ஆவியில் உற்சாகமுள்ளவர்களாய் கர்த்தருக்கு ஊழியம்செய்யவேண்டும். எந்த வகைப்பட்ட ஊழியம் நமக்கு முன்பாக எதிர்ப்படுகிறதோ, அதை செய்து முடிக்கவேண்டும்.

பேதுரு செய்தியை கூறிமுடித்தபிறகு, கொர்னேலியுவிடம் விளக்கிக்கூற ஆரம்பித்தார். இயேசுவே, "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும்" அவர் சீஷர்களாகிய எங்களுக்கு கட்டளையிட்டார் என்றார். உலகத்தாருக்கு "வரவிருக்கிற நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை சுவிசேஷ செய்தியின் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கிறது. இதனை சுவிசேஷம் பிரசங்கிக்கும்போது புறக்கணிக்கக்கூடாது.

வருங்காலத்தில் நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை எல்லோருக்கும் வராதிருக்குமானால், கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் உலக ஜனங்கள் என்ன அனுகூலத்தை படிப்படியாக அடையமுடியும்? ஆதாமுக்குள் எல்லோரும் ஒரேதடவை நியாயந்தீர்க்கப்பட்டார்கள். அவரது சாபம் எல்லோருக்கும் சென்றடைந்தது. ஆதாமின் மீறுதலுக்காகவும், அதன் பலவீனங்களுக்காகவும் உலகத்துக்கு இனி கூடுதலான நியாயத்தீர்ப்பு தேவையில்லை. அந்த மீறுதலுக்காக தண்டனை நிறைவேற்றப்பட்டாயிற்று, அதோடு கூடுதலாக தண்டனை கொடுக்க வேறு எதுவுமில்லை. யேகோவா தேவனே நீதிபதியாக இருந்தார். அதற்கு கொடுக்கப்பட்ட தண்டனை மரணமேயாகும்.மேலும் தற்போது கிறிஸ்து உலகத்தின் நியாயாதிபதியாக இருக்கிறார் என்பதே அந்த மகிழ்ச்சியின் செய்தியில் உள்ளடங்கியுள்ள உண்மையாகும். இது ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் ஜீவனுக்கான புதிய பரீட்சையின் ஒரு ஒப்பந்தமாக ஏற்பட்டுள்ளதை இது முக்கியப்படுத்துகிறது. ஆதி மரணத்தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவதை இது உறுதிப்படுத்துகிறது. ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையிலிருந்து மீட்கப்படுவதையும், தனித்தனியே பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, மீட்கப்பட்டவர்களாக தீர்மானிக்கப்பட்டவர்களும், இனிமேல் பரீட்சைக்கு உட்படுத்தப்படுபவர்களில் மீட்கப்படப் போகிறவர்களும் நித்தியஜீவன் பெறத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவர். ஆம், இதுவே உலகத்தாருக்கான மகிழ்ச்சியின் நற்செய்தியாக இருக்கிறது. முழு உலகின் மனுக்குலமும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் வாங்கப்பட்ட பின்பு, ஆதாமுக்கு ஆதியில் அளிக்கப்பட்டிருந்த பரீட்சைபோல, புதிய பரீட்சை இருக்காது என்று மாபெரும் விரோதியாகிய சாத்தான் பெரும்பாலான ஜனங்களை, ஏன், கிறிஸ்தவர்களைக்கூட தவறாக சிந்திக்கவைத்து வஞ்சித்தான்.

இயேசு நியாயாதிபதியாக ஆகும்வரை இந்தப் பரீட்சை துவங்கியிருக்கமுடியாது என்பதற்கு எல்லாருமே சாட்சிகளாயிருக்கின்றனர். ஆதலால்4000 வருடங்களாக மரித்திருந்தவர்கள் அவரால் நியாயந்தீர்க்கப்பட்டிருக்க முடியாது. ஒருவனும் நித்தியஜீவன் பெறுவதற்கான பரீட்சையில் நின்றிருக்கமுடியாது. பொதுவாக உலகம் நம் மீட்பர் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டதுமுதல் பரீட்சைக்கு உட்படுத்தப்படவில்லை. இன்றைய நாளிலும் பரீட்சையின் கீழ்

வரவில்லை என்ற உண்மையை அனைவரும் விழிப்போடு கவனித்திருக்கவேண்டும். இதற்கு மாறாக, உலகின் பெரும்பாலான ஜனங்கள், அந்த நியாயாதிபதியை அறிந்திருக்கவுமில்லை, நியாயப்பிரமாணத்தை புரிந்துகொள்ளவுமில்லை, நித்தியஜீவன் பெறுவதற்கு அவசியமான தகுதிகளையும், நிபந்தனைகளையும் கொண்ட எந்த கருத்தையும் உருவாக்கவும் இல்லை. பேதுருவின் கூற்று இதை துல்லியமாக அங்கீகரித்திருப்பது கவனிக்கத்தக்கது. மேலும் பவுல் அப்போஸ்தலனின் வார்த்தைகளும் இதை ஆமோதிக்கிறது.

தேவன் "ஒரு நாளை நியமித்திருக்கிறார். அதில் அவர் தாம் நியமித்த ஒரு மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" **(அப்17:31)**. அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கின்ற அந்த நியமிக்கப்பட்ட நாள், அவர் வாழ்ந்த காலத்திலிருந்து பார்க்கும்போது நீண்ட நாட்களுக்கு பின்பு நிகழவிருப்பதும், நாம் வாழும் நாட்களிலிருந்து இன்னும் சிலகாலங் கழித்து நிகழவிருப்பதுமாகிறது. மற்ற வேத வசனங்களில் நாம் காண்கிறபடி, அந்த நாள் ஆயிரவருடங்களைக் கொண்ட ஒரு நாளாக இருக்கிறது.

"கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்" **(2பேது3:8)**. நம் கர்த்தர் உயிர்த்தெழுந்ததிலிருந்து நடைபெற்றுவருகிற ஒரே பரீட்சையாகிய நியாயத்தீர்ப்பு சபையாருக்கு மட்டுமே, இது ஜீவனா அல்லது மரணமா என தீர்மானிக்கும் பரீட்சையாக இவர்களுக்கு இருக்கும். ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய சபையானது, மீதமிருக்கிற மனுக்குலத்தைக்காட்டிலும் அந்தப் ஒவ்வொரு வழியிலும் அதிக அனுகூலம் பெற்றிருக்கிறது. எதற்காகவெனில், சுவிசேஷயுகத்தின்போது, இது தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டிருந்து, ஜெயங் கொள்ளுகிறவர்கள் உலகத்தின் ஜனங்களை நியாயந்தீர்க்கும் பணியை செய்வதற்காக இயேசுவோடுகூட உடன்சுதந்திரராகப் போகிறதாலும் ஆகும். "பரிசுத்தவான்கள் உலகை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா ?"

யூதருக்கு மட்டுமல்ல, கேட்க செவியுள்ள எவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பணியை என்னநோக்கத்தில் கர்த்தர் கொடுத்தார் என்று பேதுரு, கொர்னேலியுவுக்கு பிரசங்கிக்கும்போது, சிந்தையில் தெளிவாக உணர்ந்துகொண்டார். புறஜாதியாரிடத்தில் கேட்கும் செவி இருக்கும் என பேதுரு எதிர்பார்க்கவில்லை. ஆனால் தேவன் தேசங்களையோ,சிறப்புப்பண்புகளையோ பொருட்படுத்தாதவர் என்பதை தற்போது உணர்ந்து கொண்டார். இந்த செய்தி எல்லோருக்கும் உரியது என்று உணர்ந்ததால், அவரது சொற்பொழிவை மிகச்சிறப்பாகசெய்தார்.மேசியாவாகிய இயேசுவைத் தொடர்ந்து விவரிக்கையில், அவரது ஊழியத்தையும் அவரது பின்னடியார்களுடைய ஊழியத்தையும் குறித்த சாட்சியங்களை கூறியதோடு மட்டுமல்லாமல், இக்காரியங்கள் அனைத்தும் தேவனால் முன் அறியப்பட்டிருந்ததையும், அவரால் திட்டமிடப்பட்டதையும் இஸ்ரயேலின் தீர்க்கதரிசிகள் வாயிலாக முன்னுரைக்கப்பட்டதையும், இயேசு கொடுத்த ஈடுபலியின் புண்ணியத்தாலும், அவரது நாமத்தின் மூலமாகவும் மட்டுமே என்றும் எடுத்துரைத்தார். அதோடுகூட, இயேசுவின்மேல் விசுவாசம் வைப்பவர்களிடத்தில் தேவன் ஒப்புரவாக்குதலைத் தருவதற்கு பிரியமாயிருந்து, அவர்களுடைய பாவங்கள் மற்றும் அவமானங்களை போக்க மனதாயிருந்து, தம் குடும்பத்தில் அவர்களை சேர்த்துக்கொள்கிறார் என்றும் பேதுரு விளக்கினார்.

கொர்னேலியுவும் அவரோடு இருந்த தேவபக்திமிக்க அவரது வீட்டாரும், நண்பர்களும் தெய்வீக கிருபையளிக்கும் அந்த செய்திக்காகவே காத்துக் கொண்டிருந்தனர். பேதுருவின் உதடுகளிலிருந்து வார்த்தைகள் வெளிப்படுகையில், அவைகள் விரைவாயும் மகிழ்ச்சியோடும் கேட்பவரது இருதயங்களை ஆக்கிரமித்தது. பேதுரு எவ்வாறு முழுமையாகவும், அதன் மதிப்பை உணர்ந்தும் இருந்தாரோ, அவ்வாறே அவர்களும் அந்நேரத்தில் இயேசுவை ஏற்று உணர்ந்துகொண்டனர். இவ்வாறாக தேவனுக்கு முன்பாக அவர்களது இருதயம் சரியான நிலைமையில் இருந்தது. இப்போதும் சகோதரரே, அவருக்குள்ளான உங்களது விசுவாசத்தையும் அவரோடுகூட மரிப்பதற்கு ஒப்பான முழு பிரதிஷ்டை எடுக்க அடையாளமாயிருக்கிற, தண்ணீர் ஸ்நானம் பண்ணுவது சரியான வழிமுறையாக இருக்கும் என்று பேதுரு அவர்களோடு பேசுவது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் பேதுருவோ அப்படிப்பட்ட தீர்மானம் எடுக்கத் தயாரில்லை என்று நாம் நிச்சயிக்கலாம். இயேசுவுக்குள்ளான இரட்சிப்பின் அற்புதமான ஏற்பாட்டை புறஜாதியார் அறிந்து கொள்ள வேண்டும் என்ற தேவசித்தத்தை உணர்ந்த பேதுரு மிகவும் வியப்படைந்தார். அவ்வாறு அறிவதே ஒரு ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் யூதருக்குக் கொடுக்கப்பட்ட அதே நடைமுறைக்குரிய நிபந்தனைப்படியே புறஜாதியாரும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதை அவர் எதிர்நோக்க ஆயத்தமாயிருக்கவில்லை. யூதருக்கு கொடுக்கப்பட்ட அதே தெய்வீக தயவின் துல்லியமான வெளிப்பாடுகள் புறஜாதியாராகிய இவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள்மேல் பரிசுத்தஆவி அருளப்பட்டதுபோலவே, கொர்னேலியுவுக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் கைகளை வைக்காமலேயே அளிக்கப்பட்டது. இது, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், பரிசுத்தஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி கைகளை வைக்கவும் எண்ணியிருந்த பேதுருவுக்கு பாடமாக, அது சம்பந்தமான போதுமான அறிவைப் பெறாததை அவருக்கு, நன்மைக்கேதுவாக உணர்த்தினது.

பேதுருவின் தாழ்மையும், நேரிய இருதயமும் அதிகஅளவு இருந்ததாலும், கற்கும் ஆவலில் தயாராயிருந்ததினிமித்தமாகவும், பாடத்தை சீக்கிரம் கற்றுக்கொண்டார். அவர் கர்த்தரிடத்தில் முழுமையான பிரதிஷ்டை செய்திருந்தபடியால், தெய்வீக சித்தமே ஒவ்வொரு காரியத்திலும் செய்யப்படவேண்டும் என்றும் விரும்பினார். பேதுருவும் யோப்பா பட்டணத்திலிருந்து அவருடன் வந்தவர்களும் விருத்தசேதனமுடையவர்களாக இருந்ததால், புறஜாதியார்மேல் தேவதயவு பொழியப்பட்டதைக் கண்டு வியப்படைந்தனர். என்றாலும் அவர்கள் பொறாமை

கொள்ளவில்லை. கர்த்தர் தம்மோடு ஐக்கியமாகும்படி அவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொண்டதை சுட்டிக்காண்பித்ததால், சுத்திகரிக்கப்பட்டிருந்த அவர்களை சகோதரர்களாக மகிழ்ச்சிடன் வரவேற்றனர். இவ்வாறு பரிசுத்தஆவி பொழியப்பட்டதன் பலனாக ஒரு மாபெரும் சாட்சியக்கூட்டத்தை ஏற்பாடுசெய்தனர். அவர்கள் தாங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதைக் குறித்து சந்தோஷமடைந்து, தேவனை மகிமைப்படுத்தி துதித்தனர் என்று பதிவுகள் கூறுகின்றன. பிறகு உருவகமான ஞானஸ்நானத்தையும், அதை நேர்மையோடு அனுசரிக்கவேண்டியது பற்றியும் பேதுரு அவர்களது கவனத்திற்கு கொண்டுவந்தார்.

பாடத்தைக் குறித்த அவரது வாதம் நமக்கு கொடுக்கப்படவில்லை. கர்த்தரிடத்தில் செய்துகொண்ட அவர்களது பிரதிஷ்டையை இவ்வாறு வெளியரங்கமாக அடையாளங் காண்பிப்பது, அவர்களது விசுவாசத்தை பலப்படுத்தும் என்று ஒருவேளை அவர் விவரித்திருக்கலாம். கர்த்தருக்கென்று ஜீவிக்கவும், மரிக்கவும் அவர்களது சொந்த தீர்மானத்தை ஸ்திரப்படுத்தியிருக்கலாம். ஒருவேளை தண்ணீர் முழுக்குதல் கிறிஸ்துவோடு மரிப்பதையும், அவரோடு அடக்கம் பண்ணப்படுவதையும் முக்கியப்படுத்துவது எவ்வளவு அழகாயிருக்கிறது என்று அவர்களுக்குக் காண்பித்திருக்கலாம். மேலும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, உயிர்த்தெழுதலில் பரிபூரண சரீரங்களைப்பெற்று புதிதான ஜீவனடைய, தற்காலத்தில் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ள இது ஒரு அடையாளமாயுள்ளது. அல்லது கர்த்தருடைய பின்னடியார்கள் எல்லோரும் அவ்வாறே தண்ணீர் முழுக்கை பெறவேண்டும் என்று கட்டளையிட்டு, இது கர்த்தரது செயல்களின் சொந்தவழிமுறை என அவர்களுக்கு விவரித்துக்கூறுவதில் அவர் நிறைவடைந்திருக்கலாம்.

கர்த்தர்மேல் விசுவாசம் வைத்த இந்த அன்பு சகோதரர்கள், தங்களது பிரதிஷ்டை மற்றும் நற்கிரியைகள் மூலம் நற்சாட்சி கொடுத்திருந்தும், கர்த்தரையும் அவரது மகிமையின் திட்டத்தையும் முன்கூட்டியே அறிந்திருந்தபோதிலும், இப்பொழுது தேவனால் அவர்கள் அங்கீரிக்கப்பட்டிருந்து, இவர்களை அங்கீரித்ததன் அடையாளம் வெளியரங்கமாயுமிருக்கிறது. இப்படியிருக்க, பிறப்பில் புறஜாதியார் என்பதை பொருட்படுத்தாமல், தேவன் தம் உண்மையுள்ளவர்களுக்காக நியமித்திருக்கிற ஆசீர்வாதங்களையும், ஏற்பாடுகளையும்பெற ஏன் அனுமதிக்கக்கூடாது ? என்று அங்கே கூடியிருந்த, விசேஷமாக யோப்பாவிலிருந்து அவருடன் வந்திருந்த சகோதரர்களிடத்திலும் அபிப்பிராயத்தை பேதுரு கேட்டார். கர்த்தரது நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் அளிக்க கட்டளையிட்டபோது (வழிநடத்தினபோது), அங்கே கூடியிருந்தோர் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. அவர்களிடத்தில் போதிக்க அனுப்பப்பட்டவாறே, தெளிவான எக்காள சத்தத்தை பிரசங்கித்தார். அவ்விதமாகவே கவனித்துக்கேட்கும் காதுகளையும், அவரது செய்திகளை கேட்க மனதாயிருக்கிற எல்லோருக்கும் அப்போஸ்தலர் பேதுரு வழியாக, இந்தப்பாடத்தின் மூலம், கர்த்தர் தம் பிள்ளைகள் அனைவரையும் வழிநடத்துகிறார். மேலும், ஒருவரிடத்திலும் அதிகாரம் செலுத்தும் உரிமை நமக்கு அருளப்படவில்லை. நாம் அப்போஸ்தலர்களல்ல. நாம் அப்போஸ்தலர்களின் கட்டளைகளையும், எல்லா அப்போஸ்தலர்களுடைய முன்மாதிரிகையையும், நம் கர்த்தருடைய முன்மாதிரிகையையும் மட்டுமே சுட்டிக்காட்டும் உரிமை பெற்றிருக்கிறோம். மற்ற காரியங்களை கேட்கும் காதுகளை பெற்றவர்களிடத்திலேயே, அவர்கள் ஒவ்வொருவரது மனச்சாட்சிக்கே விட்டுவிட வேண்டும். மெய்யாகவே சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்துக்குள்ளாக உண்மையாக மரிக்கச்செய்வது நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ முழு ஐக்கியத்தில் இருப்பதை நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

-------------------

# மீட்கும்பொருளின் விலையும்,அதை நடைமுறைப்படுத்தலும்

# The ransom price and its application

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் மீட்கும்பொருளைக் குறித்த போதனை மையப்பொருளாக இருந்து, இந்த இணைக்கும் மையத்திலிருந்தே தேவதிட்டத்தின் வெளிப்புறத்திலுள்ள மற்ற எல்லா போதனைகளும் வெளிப்படுகின்றது. பேசப்படுகின்றது. ஆகவே கீழ்க்கண்ட பதில்கள் வெளிச்சம் தருவதாயும் உதவிகரமாயும் இருக்கும் என்று நம்புவதற்கு ஏதுவாகும்.

கேள்வி 1. மீட்கும்பொருள் என்ற வார்த்தையை சுருக்கமாக விளக்குக.

பதில் : – காவலில் வைக்கப்பட்டிருக்கிற , சிறைப்பிடிக்கப்பட்ட ஒரு மனிதனையோ அல்லது சொத்தையோ மீட்கத் தேவையான பணம் அல்லது கருணைத்தொகை மீட்கும்பொருள் எனப்படும்.

கேள்வி 2: தகுதி (புண்ணியம்) என்ற வார்த்தைக்கு சுருக்கமாக பொருள் தருக.

பதில் :– தகுதி அல்லது புண்ணியம் என்பது

i கருணை கொள்ள, வெகுமதியளிக்க தகுதியுடையதாய் இருத்தல்.

ii மதிப்பு,வெகுமதி அல்லது இழப்பீட்டை சரிக்கட்ட தகுதியோடிருத்தல்

கேள்வி 3:– சட்டப்படியான ஒப்பந்தம் என்ற வார்த்தைக்கு குறுகிய விளக்கம் தரவும்.

பதில் – சட்டப்படியான ஒப்பந்தம் என்பது சட்டம் அங்கீகரிக்கிறபடி, ஒரு கடனாளி தான் கடன் வாங்கின தொகையை செலுத்த, பணம் கொடுத்தவர் பெற்றுக்கொள்வதாகும். வேறுவழியில் கூறினால், பரிமாற்றம் செய்ய இடைத்தரகர்போல அரசாங்கம் அல்லது சட்டம் உரிமையளிப்பதைக் குறிக்கிறது.

கேள்வி 4:– செலுத்தவேண்டிய அல்லது செலுத்தப்பட்ட என்ற வார்த்தையின் பொருள்கூறுக.

பதில் :– செலுத்தவேண்டியது என்பதற்கான அர்த்தம், கடனிலிருந்து விடுவிப்பது, கடனுக்கான சரிநிகர்தொகையை கொடுத்து சரிக்கட்டுவது. முறையான சரிநிகரான ஈட்டுக்கிரயம் செலுத்தப்பட்டிருக்கிறது.

கேள்வி 5 :– சேமிப்பு(Deposit) என்பதனை சுருக்கமாக விளக்குக

பதில் :– சுருக்கமாக சேமிப்பு என்பது சேர்த்துவைக்கப்பட்ட எப்பொருளையும் குறிக்கும். பாதுகாக்கும்படி பிறர் வசம் ஒப்படைத்தவைகளைக் குறிக்கும்.

கேள்வி 6:– செலுத்தப்பட்டது, சேமிக்கப்பட்டது, பொருந்தப்பண்ணப்பட்டது – இந்த மூன்று வார்த்தைகளின் பொருள்களுக்கிடையிலான வேறுபாடு என்ன ?

பதில் :– இந்த வார்த்தைகளுக்கிடையேயான பொருள் முற்றிலும் வேறுபாடு உடையவையாகும். செலுத்தப்பட்டது என்ற வார்த்தையை உபயோகிக்கும்போது ஒரு பொறுப்பை நிறைவேற்றும்படி போதுமான அளவுக்கு கொடுக்கப்பட்டது என முக்கியப்படுத்துகிறது. பொருந்தப்பண்ணப்பட்ட என்ற வார்த்தையை உபயோகிக்கும்போது, பொருளாதார ரீதியான எதிர்பார்ப்புக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சந்தித்தலை முக்கியப்படுத்துகிறது.


சேமிப்பு என்ற வார்த்தையை உபயோகிக்கும்போது, மற்றவரின் பராமரிப்பின்கீழ் விடப்பட்டிருக்கிற, இன்னும் நடைமுறைப்படுத்தாதவைகளைக் கூறுகிறது.

கேள்வி 7:– பாவநிவாரணபலி என்ற வார்த்தையை சுருக்கமாக விளக்குக.

பதில் :– பாவத்தை ஈடுசெய்ய பாவத்தின் நிபந்தனைகளை பூர்த்திசெய்ய, பாவத்தின் பொருட்டு செலுத்தப்பட்ட ஒரு பலியையே பாவநிவாரணபலி என்ற வார்த்தை முக்கியப்படுத்துகிறது.

கேள்வி 8 :– இயேசுகிறிஸ்துவின் புண்ணியம் என்பதன் அர்த்தம் என்ன ?

பதில் :– இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தை பல்வேறு கண்ணோட்டத்தில் நம்மால் காணமுடியும். உதாரணமாக, மனிதனாக இயேசு வரும்போது கொண்டிருந்த தகுதி, அவர் தெய்வீக திட்டத்துக்குக் கீழ்ப்படிந்து, தேவனிடத்தில் தம் ராஜரீக விசுவாசத்தை நிரூபித்ததை அறிவுறுத்தும் உணர்வில் வெளிப்பட்டார், அல்லது ஒரு மனிதனாக அவரிடமிருந்த தகுதிகளைப் பேசமுடியும். பிரமாணத்தின்படியும் நீதியின்படியும் சரியானவிதத்திலும் தாம் பெற்றிருந்த சிறந்த புண்ணியங்களைக் கொடுத்தார்.



ஆனால் உலகத்தின் பாவத்திற்காக கிறிஸ்துஇயேசு ஒப்புரவாக்கினதன் புண்ணியத்தைக் குறித்து நாம் பேசும்போது, மற்றொரு காரியத்தை முழுமையாக பரிசீலிக்கவேண்டும். அதாவது, பரலோகத்தகப்பனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் இடையில் நிலைத்திருந்த ஒப்பந்தத்தின்படி, கர்த்தர் மனிதப்பிறவி எடுத்து, தம் மனித சுபாவத்தைக் கையளிக்கவேண்டும் என்பதேயாகும். இவ்வாறு ஒரு மனிதனாக அவரது ஜீவன் அவரிடமிருந்து எடுக்கப்படுவதற்கு அனுமதித்து, மரணபரியந்தம் முழுமையான கீழ்ப்படிதலை சிலுவையில் மரிப்பதன்மூலம் எண்பித்து, பிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்து தம் ராஜரீக விசுவாசத்தை நிருபித்தது முக்கியப்படுத்துகிறது.

இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தைக்குறித்து நாம் பேசும்போது, அவர் அடைந்த புண்ணியத்தின் நிமித்தமாக, பிதா தம் குமாரனை மரித்தோரிலிருந்து எழுப்பி, வெகுமதியளித்தார். அந்த வெகுமதியானது, ஆவிக்குரிய நிலைமை மீண்டும் கொடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதற்குமேலாக, உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு, தெய்வீக சுபாவத்தை அடைந்தார். இயேசுவின் இந்த தகுதி அல்லது புண்ணியத்துக்கு தேவன் அளித்த வெகுமதியானது, மற்றவர்களுக்கு கொடுக்கும்படி ஒரு குறிப்பிட்ட தொகையான மூலப்பொருளை அல்லது ஆசீர்வாதத்தை அவருக்குத்தந்தது. அவரது மனித ஜீவியத்தின் உரிமைகளே அந்த வெகுமதி. அதை அவர் பாவத்தாலோ அல்லது வேறு எந்த வழிமுறைகளின்படி நடந்தோ, இழந்துவிடாமல் காத்துக்கொண்டார். மனித ஜீவனுக்கான இந்த உரிமைகள், இயேசு தனக்கு

--2675--

சொந்தமாக்கிக்கொண்ட தகுதிகளாக இருந்து, பிதாவின் திட்டத்திற்கு முழு இசைவாக, முழு உலகின் பாவங்களைப்போக்கும்படி இயேசுகிறிஸ்துவால் பொருந்தச்செய்யப்பட்டது என்று வேதாகமம் நமக்கு அறிவுறுத்துகிறது(1யோவா2:2). முழு உலகத்தின் பாவங்களுக்கும் என்று சொல்லும்போது, ஆதாமின் பாவங்கள் மற்றும் அவருக்குள் மரித்த அவரது சந்ததியார் அனைவரையும் சேர்த்தே கூறப்பட்டுள்ளது. இந்த தகுதி அல்லது புண்ணியம் ஏற்கனவே நம் கர்த்தருடையதாகி, பிதாவினால் நியமிக்கப்பட்ட ஏற்றவேளையில் அது பகிர்ந்தளிக்கப்படும்.

கேள்வி 9 :– ஒப்புரவாகுதல் என்ற வார்த்தைக்கு சுருக்கமான விளக்கம் தருக.

பதில் :– ஒப்புரவாகுதல் என்ற வார்த்தைக்கு, இணக்கமான உறவை உண்டாக்குதல் என்று அர்த்தமாகும். நபர்களையோ அல்லது பொருட்களையோ மீண்டும் இசைவாக்குதல். ஆயினும் முழுமையான ஒத்த நிலைமைக்கு அல்ல. மனித குடும்பத்திற்கு இதை பொருத்திப்பார்க்கும்போது, இது முக்கியப்படுத்துவது என்னவென்றால், ஆதாம் மற்றும் அவரது சந்ததியார் தெய்வீக ஏற்பாட்டிற்கு கீழ்ப்படியாதிருந்து, தெய்வீக வெறுப்புக்கும் சாபத்துக்கும் உள்ளாயினர். தெய்வீக ஏற்பாட்டின்படி இந்த சாபமானது தேவனைவிட்டுஅவர்களை வழிவிலக்கியது. ஆனால் தெய்வீக நிபந்தனைகளை ஏற்று, மனப்பூர்வமாக கீழ்ப்படியும் அனைவரும், மீண்டும் தேவனோடு ஒப்புரவாகவும், இவ்வாறு முழு மனுக்குலமும் அவரோடு இசைவாயிருக்கும்படியும் கொண்டுவரப்படும். ஒப்புரவாக்குதலின் பணி என்று நாம் கூறும் இது, ஏற்படுத்தவிருக்கும் காரியங்களால் நிறைவேற்றப்படும். மேலும் இந்த ஒப்புரவாக்குதலின் பணி நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் தம் முதல் வருகையின்போது துவங்கப்பட்டது. அதுமுதல், தொடர்ச்சியாக நடைபெற்று, அவரது இரண்டாம் வருகையின்போது நிறைவடையும். ஆகவே ஒப்புரவாக்குதலின் முழு பரிமாணமானது, முதலாவதாக சபையில் ஆரம்பித்து, அதன் ஏற்பாடுகள் மனுக்குல குடும்பத்தின் எல்லா அங்கத்தினர்க்கும் சென்றடையும்வரை விரிவுபடுத்தப்படும். மனப்பூர்வமாக கீழ்ப்படிவோர் அனைவரையும் யேகோவாவுடன் முழு இணக்கமாகும்படி திரும்பவும் கூட்டிசேர்க்கும்.

கேள்வி 10:– ஒரு பரிபூரண மனிதஜீவி மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தைத் தரமுடியுமா ?

பதில் :– தர முடியாது. தெய்வீக ஏற்பாட்டின்படி ஒப்பந்தமிடப்பட்டு, உடன்படிக்கை செய்தாலன்றி, ஒரு பரிபூரண மனிதனால் மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தைத் தரமுடியாது. உதாரணத்துக்கு, உலகில் ஒரு பரிபூரண ஜீவி ஒருவேளை இருந்ததாக வைத்துக்கொள்வோம். தெய்வீக ஏற்பாட்டின்படி சிறப்புரிமை பெற்றாலொழிய, அவரால் தகப்பனாகிய ஆதாமுக்கு மீட்பராக ஆகமுடியாது. மற்றவருக்கு பதிலீடாக ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படுவதும், ஏற்றுக்கொள்ளப்படாததும், தெய்வீக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படவேண்டியதாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விஷயத்தில் ஒரு பரிபூரண மனுஷனாக, தெய்வீக ஏற்பாட்டின்படி மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தை தர பொருத்தமானவரானார். அதன்பிறகு, தெய்வீக திட்டத்தினை நிறைவேற்றும்படி தம்மையே ஒப்புக்கொடுத்தார். இந்த தெய்வீக ஏற்பாட்டின்படியே அவர் அங்கீகரிக்கப்பட்டார்.

கேள்வி 11:– மீட்கும்பொருளின் விலைக்கிரயம் எவ்வாறு ஏற்பாடுசெய்யப்பட்டது ?

பதில் :– தேவன்தாமே உலகத்தின் பாவத்தைப்போக்கும் மீட்கும்பொருளை ஏற்பாடுசெய்தார். தெய்வீக ஏற்பாட்டினால் மட்டுமே மனிதனை மீட்கும் பொருளான சரிநிகர் சமானவிலை சாத்தியமாயிற்று.

கேள்வி 12 :– மீட்கும்பொருளின் விலை எங்கிருந்து ஏற்பாடுசெய்யப்பட்டது ?

பதில் :– தெய்வீக நோக்கத்தின்படி உலகத்தோற்றத்துக்கு முன்பாகவே மீட்கும்பொருளின் விலைக்கிரயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தெய்வீக தீர்மானத்தின்படி, நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலகத்தோற்றத்துக்கு முன்பே அடிக்கப்படும் தேவ ஆட்டுக்குட்டியானார் என்று வேதாகமம் நிச்சயப்படுத்துகிறது(வெளிப்படுத்தல் 13:8). இரண்டாவது காரணமாக, யேகோவா தேவனுக்கும் அவரால் கனப்படுத்தப்பட்டிருந்த லோகோசுக்கும் இடையே ஒப்பந்தம் உண்டானபோது, மீட்கும்பொருளின் விலைக்கிரயம் ஏற்பாடுசெய்யப்பட்டது. மற்றுமொரு வகையில் கூறுவோமேயானால் , லோகோஸ் மாம்சமாகி, தம் 30வது வயதில் பரிபூரண மனிதத்தன்மையை எட்டும்வரை, மீட்கும்பொருளின் விலைக்கிரயம் கொடுக்கப்படவில்லை.

அதன்பிறகே தேவஏற்பாட்டின்படி ஒரு மீட்கும்பொருளின் விலைக்கிரயமாக ஊழியம்செய்யவும், தம்மையே மீட்கும் விலைக்கிரயமாக கையளிக்கவும் முடிந்தது. மரணபரியந்தம் தம் ஜீவியத்தை முழு அர்ப்பணிப்பு செய்வதற்கான அடையாளமாகிய ஞானஸ்நானத்தின்மூலம் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் பிரவேசிக்கும்வரை, இந்த மீட்கும்பொருளின் விலைக்கிரயமாக தம்மை தரவில்லை. நிபந்தனைகள் அதோடு இணைக்கப்பட்டிருந்ததால், அந்த மீட்கும்பொருள் அப்போது நிறைவடையவில்லை. அர்ப்பணிக்கப்பட்ட அவரது சித்தம் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், அவரது முழு கையளிப்பை காண்பிக்கும்படி ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மணிநேரமும் அவரிடமே விடப்பட்டிருந்தது. கல்வாரியில் அவர், எல்லாம் முடிந்தது என்று கதறி உயிர்விடும்போது அவரது பலி நிறைவுபெற்றது. மீட்கும்பொருளின் விலையை அவர் இவ்வாறு நிறைவேற்றிமுடித்தார். அதாவது அவர் மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தை முழுமையாக கொடுத்தார். இங்கு, மீட்கும்பொருளின் விலையை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் அல்லது நடைமுறைப்படுத்தச் செய்வதற்கும் அல்லது விடுவிப்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் புரிந்திருக்கவேண்டும். இயேசு மரித்தநேரத்தில் மீட்கும்பொருள் ஏற்பாடுமட்டுமே செய்யப்பட்டது. அது மனிதனை மரணத்திலிருந்து மீட்கும்படி பொருந்தப்பண்ணும் வண்ணமாக இன்னும் கொடுக்கப்படவில்லை.

கேள்வி 13:– மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தை ஏற்பாடுசெய்தது யார் ?

பதில் :– யேகோவாதேவன். முதலாவதாக, அவரே இந்த ஏற்பாட்டைச்செய்தார். அவரது ஏற்பாட்டினாலன்றி மீட்கும்பொருள் சாத்தியமாய் இருந்திருக்காது. இரண்டாவதாக பார்க்கும்போது, இயேசுதாமே முன்வந்து

–2676–

தம்மையே கையளித்தது. அவர் ஞானஸ்நானம் எடுத்த நேரத்தில் தம் சொந்த ஜீவியத்தை முழு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்திருந்தார். அவரது சித்தம் பலவந்தமாக கீழ்ப்படுத்தப்படவில்லை.

கேள்வி 14.:– நிழலாக, பாவநிவாரணபலி எங்கு துவங்கியது ? அது எங்கு முடிவுற்றது ?

பதில் :– பாவநிவாரணம் செலுத்தும் நோக்கத்திற்காக மிருகம் தெரிந்தெடுக்கப்பட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் கதவுநிலையருகே கொண்டுவரப்பட்டது. ஆனால் பிரதான ஆசாரியன் தம் கரங்களை அதன்மேல்வைத்து, அது கொல்லப்பட்ட தருணம்தான் பாவநிவாரணமாக ஆனது. நிழலில் கூறப்பட்ட பிரகாரம் பாவநிவாரணம் ஒரு காளை மற்றும் ஒரு வெள்ளாடு ஆகிய இரண்டு பகுதிகளாலானது. காளை கொல்லப்பட்டவுடன் பாவநிவாரணம் முற்றுப்பெறவில்லை. தெய்வீக நோக்கத்தின்படியும் ஏற்பாட்டின்படியும், மாபெரும் பிரதான ஆசாரியராகிய இயேசு, நிஜமான காளை மற்றும் கர்த்தரின் வெள்ளாடு வகுப்பார் ஆகிய இரண்டு பலிகளை செலுத்தவேண்டியிருந்தது. நிழலாக வெள்ளாடாக கூறப்பட்டிருப்பது இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோரைக் குறிக்கிறது என்றும், காளை இயேசுவையே குறிக்கின்றது என்றும் நாம் புரிந்துகொள்கிறோம். ஆகவே நிழலில் பாவநிவாரண பலியாகிய வெள்ளாடு கொல்லப்படும்வரை பாவநிவாரணபலி முடிவுறவில்லை. அங்கே பாவநிவாரணபலி என்ற தன்மையில் மட்டுமே முடிவுற்றது, இனி அங்கே பலியிட வேறெதுவும் இல்லை. ஆனால் பாவநிவாரணபலி என்ற வார்த்தை இதைக்காட்டிலும் இன்னும் பரந்தபொருளை உள்ளடக்கியுள்ளது. நிழலிலும் இது கூறப்பட்டுள்ளது.யேகோவா தேவனுக்கு இந்த மிருகங்களின் இரத்தத்தை காணிக்கையாக்கும்போது பிரதான ஆசாரியன் முதலாவதாக, காளையின் இரத்தத்தையும், அதன்பிறகு, கர்த்தரது ஆட்டின் இரத்தத்தையும் எடுத்து மகா பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசித்து, கிருபாசனப்பெட்டி முன்பாக கிழக்கு திசைநோக்கி நின்று, கிருபாசனப்பெட்டியை நோக்கி தெளித்ததில் காண்பிக்கப்பட்டுள்ளது. இது நிறைவேற்றப்பட்டவுடன் பாவநிவாரணபலி நிறைவுற்றது.

கேள்வி 15 :– பாவத்துக்கான பலிசெலுத்துதல், நிஜத்தில் எங்கு துவங்கியது ?

பதில் :– நிஜத்தில் பிதாவுடன் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு இணக்கமாக, இயேசு யோர்தானில் தம்மையே கையளித்ததுமுதல், பாவத்துக்கான பலிசெலுத்துதல் துவங்கினது. அங்கே அப்போஸ்தலரது வார்த்தையின்படி, நம் கர்த்தர் தம்மையே கொடுத்து, தம்மை அடிபணியச்செய்து, தம்மை பாவத்துக்கான பலியாக்கினார். இந்த சுவிசேஷயுகத்தின்போது அவரது புண்ணியத்தை ஏற்றுக்கொண்டு, தங்களையே பலியாக்கி, அவரது அடிச்சுவடுகளைப்பின்பற்ற தாங்களாகவே முன்வந்து, அவர்களது சித்தத்தை கிறிஸ்துவுக்குள் அடிபணியச்செய்கிறவர்களுக்கு, அவர் தமது பணியை தொடர்ந்து செய்துவருகிறார். தம் சொந்த பலியின் ஒரு பகுதியாக அவர்களை அவர் பலிசெலுத்துகிறார்.

இயேசு தம் சொந்த பலியை நிறைவேற்றி முடித்தபிறகு, உன்னதத்திற்கு ஏறி, பரலோகத்தந்தையிடம் தம் பலியின் புண்ணியத்தை சபையாரினிமித்தமாக ஒப்புக்கொடுத்தார். இது ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்தில் காளையின் இரத்தம் பிரதான ஆசாரியருக்கும் அவரது வீட்டாருக்குமென தெளிக்கப்படுவதை அடையாளம் காண்பிக்கிறது. தொடர்ச்சியாக அதன்பின் நிகழ்கின்ற பலிகள், அவரது பின்னடியார்களிடத்தில் நிறைவேற்றப்பட்டு, கிறிஸ்துவின் சரீரத்து கடைசி அங்கம் மரணத்தை ருசிபார்த்து, இரண்டாம் திரையைக்கடந்ததும், பலியின் பணி இறுதியாக முடிவுறும். அதன்பிறகு விசேஷித்த பலிகளின் தகுதிகளை யேகோவா தேவனிடத்தில் சமர்ப்பித்து, எல்லா ஜனத்திற்குமான பாவநிவாரணபலி பிரதான ஆசாரியரால் முழுமையாக்கப்படும். ஆனால் உண்மையான தகுதி அல்லது புண்ணியம் இயேசுவின் பலிக்கு மட்டுமே உண்டு.

கேள்வி 16 :– கல்வாரியில் மீட்கும்பொருளின் விலை கொடுக்கப்பட்டதா ?

பதில் :– கல்வாரியில் மீட்கும் பொருள் செலுத்தப்பட்டாயிற்று என்ற இக்கருத்தை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம். அதனையடுத்து நீதியின் கரங்களில் இது கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் காரியம் இன்னும் நிறைவேறாதிருந்தது. அது வருங்காலத்தில் நிறைவேற்றப்பட ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. பிதாவே உம் கரங்களில் என் ஆவியை (என் ஜீவனை) ஒப்படைக்கிறேன் என்று இயேசு கதறியபோது, சிலுவையினடியில் மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டாயிற்று. இவ்வாறு இயேசு மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தை உடனடியாக பொருந்தப் பண்ணும் நிச்சயமின்றி, ஒரு சேமிப்பாக ஏற்படுத்தினார்.

கேள்வி 17:– இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்றவுடன், மீட்கும்பொருள் செலுத்தப்பட்டதா ?

பதில் :– இல்லை. இதற்கான காரணங்களை நாம் முன்னரே கூறியிருக்கிறோம்.

கேள்வி 18:– மீட்கும்பொருளின் விலை இதுவரையிலும் செலுத்தப்பட்டிருக்கிறதா ?



பதில் :– இதற்கான காரணங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. அக்காரணங்களோடுகூட, கர்த்தரோடு சபை முழுமையாக மகிமையடையும்வரைக்கும் மீட்கும்பொருளின் தொகை இன்னும் முழுவதுமாக

செலுத்தப்பட்டிருக்காது. அதன்பிறகு முழு உலகத்தாரின் நிமித்தமாக, ஆதாமின் சாபத்தைப்போக்கும் மீட்பின் ஆதாரமாக அத்தொகை கொடுக்கப்பட்டு, முழு உலகையும் மரணத்தினின்று விடுதலையாக்கும்.

கேள்வி 19 :– இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்றபிறகு, மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தைக்கொண்டு அவர் என்னசெய்தார் ?

பதில் :– அவர் ஏற்கனவே நீதியின் கரங்களில் சேமிப்பாக அதை வைத்துவிட்டார். மனித ஜீவ உரிமைக்கான விலைக்கிரயம், தொடர்ந்து அவரது கட்டளைக்கே காத்திருக்கிறது. அவரது அடுத்த நடவடிக்கை, தம் சபைக்கு அந்த விலைக்கிரயத்தை பகிர்ந்தளிப்பதாகும். இது இன்னும் முழு வளர்ச்சியடையாத நிலையில்உள்ளது.

கேள்வி 20:– இயேசு பரத்துக்கு ஏறிச்சென்று நீதியை நிறைவேற்றி முடித்தாரா ? (அல்லது) நீதி எப்பொழுது, எப்படி சரிக்கட்டப்பட்டது ?

பதில் :– தனக்கு சரிநிகர் சமான அளவு சரிக்கட்டும்வரை நீதி ஒருக்காலும் ஓயாது. உதாரணத்துக்கு, ஆதாம் மீறுதலினிமித்தமாக மரண சாபத்திற்கு உள்ளாக்கப்பட்டபோது நீதி சரிக்கட்டப்பட்டது. அந்த பாவத்தினிமித்தமாக ஆதாம் மற்றும் அவரது சந்ததியாரை நீதி தன் பிடியில் தொடர்ந்து வைத்திருந்து இதுவரைக்கும் நிறைவேற்றி வந்திருக்கிறது. தற்கால நிலைமைகளின் கீழிருந்து சபையை தற்போது கடந்தோடச்செய்வதில் நீதி திருப்தியடைந்திருக்கிறது. ஏனெனில் சபைக்கு தேவைப்படும் முழு சரிநிகர் சமானவிலை, அதற்குமேலும்கூட, நீதியின் கரங்களில் சேமிப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. நீதிநியாயத்தின் கரங்களிலிருக்கும் மீட்கும்பொருளின் தொகையானது, முழு மனுக்குலத்திற்கும், முழுமையாக கொடுக்கப்பட்டு, மீட்கப்படும்வரை நீதி பூரணமடையாது. சபை நிறைவடைந்து, மகிமையடைந்த பிறகே இக்காரியம் நடைபெறும்.

21. இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிச்சென்றபொழுது, நீதிநியாயம் முழுமையாக சீர்ப்படுத்தாதநிலையில், எப்படி ஒருவர் கிறிஸ்துவுடன் பலிசெலுத்துபவராக முடியும் ?

பதில் :– கேள்வி 20க்கான பதிலில் உரைக்கப்பட்டபடி, முழு உலகத்தின் பாவங்களையும் சரிக்கட்டும்படியாக, போதுமான புண்ணியம் சேமிப்பாக கொடுக்கப்பட்டது. இந்த சேமிப்பை பலமாகக்கொண்டு, மனுக்குலத்தின் அங்கத்தினர்களில் யார் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாக தேவனோடு விசேஷித்த உடன்படிக்கையின் உறவுக்குள் வருகிறார்களோ, பலியினால் உடன்படிக்கை செய்த அவர்களை விடுவித்து, நீதியானது பூரணமாக சமரசப்படுத்துகிறது.

கேள்வி 22 :– நீதிமானாக்குதல் அல்லது ஒப்புக்கொடுத்தல் இவற்றில் எது முதலாவது இடம்பெற்றது ? ஏன் ?

பதில் :– ஒப்புக்கொடுத்தல் என்ற வார்த்தையின் பொருளைச்சார்ந்தே இது அமைகிறது. ஒப்புக்கொடுத்தலை வேதாகமம் இரண்டு வெவ்வேறு கண்ணோட்ட நிலைப்பாட்டில் விளக்குகிறது. முதலாவது, தனிப்பட்ட ஒருவரது ஒப்புக்கொடுத்தல்; இரண்டாவது அந்த ஒப்புக்கொடுத்தலை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தகுதியுள்ளதாக்கி, பிதாவினால் அது அங்கீகரிக்கப்படுதல். கர்த்தரது சித்தம் செய்யும்படி ஒரு தனிப்பட்ட நபர் தன்னை ஒப்புக்கொடுத்தல், தன் சொந்த சித்தத்தை முழுமையாக ஒப்படைப்பதை குறிக்கும். இது ஆசரிப்புக்கூடாரத்தின் நிலைக்கதவில் வெள்ளாடு பலியாவதற்கு தயாராக கட்டப்பட்டிருப்பதை, அதாவது நீதிமான்நிலையை முன்பே அடைந்ததை நிழலாக காண்பிக்கிறது. ஆனால் இரண்டாவது படியாக, ராஜரீக ஆசாரியக்கூட்டத்தின் அங்கங்களாகும்படி வாஞ்சையாயிருப்போருக்கு, பிதாவினால் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஏதுவாக, அவர்களுக்கு பரிந்துபேசுபவராக நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருக்கவேண்டியது அத்தியாவசியமாகிறது. இதுமுதல் கர்த்தராகிய இயேசுவின் தகுதி அளிக்கப்படுவதனால் அவர்களை நீதிமானாக்குதல் நிகழ்கிறது. அதனைத் தொடர்ந்து அவர்கள் தங்களையே தத்தம் செய்வதும், அது பரலோகப்பிதாவினால் உடனடியாக தத்தம் செய்யப்படுவதும், அதாவது அவர்களை தத்தம் செய்த ஜனங்களாக ஏற்றுக்கொண்டு, இந்த உடன்படிக்கையின் ஏற்பாட்டின்கீழ் அவர்களுக்கு எல்லா உரிமைகளையும், பாக்கியங்களையும் அருள்கிறார்.

கேள்வி 23 :– விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட ஒருவருக்கு அளிக்கப்படுவது புண்ணியமா ? அல்லது நீதியா ?

பதில் :– நாம் இங்கு, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற சொல்லிற்குத் தேவையான தகுதியைத் தரவேண்டியுள்ளது. ஏனெனில் வேதாகமப் பயன்பாட்டின்படி இந்த சொற்றொடரானது இரண்டு வெவ்வேறு முக்கியத்துவங்களை உடையதாயுள்ளது. உதாரணத்துக்கு, விசுவாசத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டார் என்று நாம் படிக்கிறோம். ஆனால் நிச்சயமாக சபையார் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டபடி ஆபிரகாம் நீதிமானாக்கப்படவில்லை. தேவனோடு ஐக்கியங்கொள்வதற்கும் வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ளவும், தேவன் வருங்காலத்துக்கென தீர்மானித்திருந்த சிலவற்றை அறிந்துகொள்ளவும், தெய்வீக தராதரத்தின்கீழ் அவரது நேர்மையை விளங்கப்பண்ணவுமே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டார். ஆனால் நித்திய ஜீவன் பெறுவதற்கான நீதிமானாக்கப்படுதலை அவர் அடையவில்லை. அவர் தன் சரீரத்தை ஜீவபலியாக்கும்படியான அழைப்பைப்பெறவோ, ஆதாமுக்காக மீட்பராகவோ அல்லது மற்றவருக்காக பலிசெலுத்தும் தகுதியுடையவராகவோ இருக்குமளவு அவர் நீதிமானாக்கப்பட்ட தன்மையை பெறவில்லை. இயேசுவின் மரணத்திற்குப்பிறகே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட முடிந்தது. அவர் பரத்திற்கு ஏறிச்சென்று தம் பலியின் புண்ணியத்தை சமர்ப்பிக்கும்வரை, தேவனிடத்தில் நமக்காக(சபை) பிரத்தியட்சமாய் தோன்றும்வரைக்கும் ஒருவரும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படவில்லை.

கேள்வி 24:– புண்ணியம் அளிக்கப்பட்டதெனில், யார் அதை அளித்தார் ? நீதி கொடுக்கப்பட்டதெனில், யாரால் அது கொடுக்கப்பட்டது ?

பதில் :– நம் கர்த்தராகிய இயேசு தம் சொந்த பின்னடியார்களுக்காக, அவர்களது உடன்படிக்கையின் நிபந்தனையான முழு பிரதிஷ்டையின்கீழ், தாம் பெற்ற தம் சொந்த தகுதியை கொடுத்தார். ஆனால் இவ்வாறு அவர் கொடுத்த புண்ணியமானது, தெய்வீக நீதியின்படியும், அதற்கு இசைவாகவும், தெய்வீக நீதியின் அனுமதியின்படியுமே நிறைவேற்றப்பட்டது – மற்றபடியல்ல. இந்த புண்ணியத்தை இயேசுவின் சீஷனாக விரும்பும் அபூரண மனிதருக்கு கொடுப்பது, தெய்வீக நீதியின்படியும்,

பரலோகத் தகப்பனின் நிமித்தமாகவும் நீதியை அளிப்பதாக கூறப்படுகிறது. இதை நாம் கீழ்க்கண்டவாறு வேதத்தில் வாசிக்கிறோம் ;

தேவனே நீதிமான்களாக்குகிறவர் – ரோமர் **8:33.**

கேள்வி **25:–** உயிருடன் இருப்பதற்கான உரிமைகள்(right to live) மற்றும் வாழ்வுரிமைகள்(life rights) போன்ற பதங்களின் பொருள் என்ன**?** மேலும் இந்த இரண்டு பதங்களுக்கிடையே உள்ள வேறுபாடு என்ன**?**

பதில் :– தேவனோடு இணக்கமாக இருக்கும் ஒரு மனிதன் உயிருடன் இருப்பதற்கான உரிமைகளை பெற்றிருக்கிறான். ஏனெனில் தம் அறிவுக்கூர்மையுள்ள சிருஷ்டிப்புகள் அனைத்தும், தம் தெய்வீகப் பிரமாணத்துக்கும் அதன் எதிர்பார்ப்புகளுக்கும் இசைவாக ஜீவிப்பார்களானால், தொடர்ந்து ஜீவனுக்குள் நிலைத்திருக்கலாம் என்று தேவன் நியமித்திருக்கிறார். ஆகவே உயிருடன் இருப்பதற்கான உரிமை என்பது, நம் முற்பிதாவாகிய ஆதாம் ஆதியில் பாவம்செய்வதற்கு முன்பு கொண்டிருந்த உரிமை மற்றும் சலுகைகளாகும். அவர் உயிரோடிருப்பதற்கான உரிமைகளை பெற்றிருந்தார், பாவம் செய்யாதிருந்திருப்பாரானால், அந்த உரிமைகளை இழந்திருக்கமாட்டார். இயேசுவும் உயிரோடிருப்பதற்கான உரிமைகளை அடைந்திருந்தார். இவ்வுலகிற்கு வருவதற்குமுன்பு மாத்திரமல்ல, மனிதனாக இவ்வுலகிற்கு வந்தபிறகும் ஜீவியத்தின் உரிமைகளைப் பெற்றிருந்தார். இந்த உரிமையின் நிமித்தமாகவே ஆதாமுக்காகவும் அவன் சந்ததியாருக்காகவும் அவரால் தம் ஜீவனையே பலியாகத் தரமுடிந்தது. ஞானஸ்நானத்தில் தம்மை அர்ப்பணித்தபிறகு, ஒரு மனிதனாக உயிரோடிருப்பதற்கான உரிமை நீடிக்கவில்லை, அதை விட்டுவிட்டார். ஆனால் பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட நிலையில், ஒரு புதுசிருஷ்டியாக ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவராக, ஜீவியத்தின் உரிமைகளைப் பெற்றிருந்தார். இந்நிலையில் தெய்வீகப் பிரமாணத்தை நிறைவேற்றுவதில் தவறி, அதை மீறினால் ஒழிய அல்லது தாம் தேவனோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை ஒருவேளை மீறியிருப்பாரானால், உயிரோடிருப்பதற்கான உரிமையை இழந்திருப்பார். ஆயிரமாண்டு ஆட்சிக்குப்பிறகு, உலக மனுக்குலமானது பரிபூரணத்தை எட்டினபிறகு உயிரோடிருப்பதற்கன உரிமைகளை அடைவர். அவர்கள் பிதாவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவர். மீட்கப்பட்ட இந்த மனுக்குலத்தார் தங்கள் முற்பிதாவாகிய ஆதாம் பாவம் செய்ததற்கு முன்பிருந்த அதே உயிரோடிருக்கும் உரிமையை பெற்றிருப்பர்.

வாழ்வுரிமை என்ற பதத்தை வேறுபட்ட வழிகளில் நாம் உபயோகிக்கலாம். கர்த்தராகிய இயேசு பெற்றிருந்த வாழ்க்கை உரிமைகளுக்கு பொருத்திப்பார்க்கும்போது, உதாரணத்துக்கு கூறுவோமாகில், அவர் ஒரு மனிதனாக தம் ஜீவியத்தை தத்தம்செய்த அதேவேளையில், அந்த வாழ்க்கையை கீழ்ப்படுத்தும்படி உண்மையாகவே எதுவும் அவர் செய்திருக்கவில்லை. நீதியின்படி அவருக்குச் சொந்தமாயிருந்த அதை கீழ்ப்படுத்த அவர் ஒப்பந்தம் செய்திருந்தார். அப்படி செய்திராவிடில், வேறுவகையில் தம் வாழ்க்கையை பிறருக்கென்று பயன்படுத்தும் உரிமையை மீண்டும் பெற்றிருந்திருக்கமாட்டார். அவரது சொந்த நீதியின்பொருட்டு அந்த உரிமையைக் காத்துக்கொண்டார். ஆகவேதான் அவர் மனித ஜீவியத்திற்கான உரிமையை தொடர்ந்து பெற்றிருந்தார். ஏனெனில் இந்த வாழ்க்கையை எடுத்துக்கொள்ளும்படி அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதை அவர் கீழ்ப்படுத்தியிருக்கவில்லை. ஞானஸ்நானம் பெற்றநிலையில், மனித ஜீவஉரிமைகளைக் காட்டிலும் மேன்மையானவற்றைப் பெற்றிருந்ததாலும், ஒரே சமயத்தில் இரண்டு ஜீவியத்தை உபயோகிக்கமுடியாது என்பதாலும், தற்போது மனித ஜீவியம் அல்லது வாழ்க்கை உரிமைகள் தமக்கு அவசியமாயிராதபோதிலும், ஒரு மனித ஜீவிக்குரிய மனித உரிமைகளை தொடர்ந்து அவர் பெற்றிருந்தார். தெய்வீக வாழ்க்கை உரிமைகளை அவர் பெற்றிருக்கிறார். ஆனாலும் அவர் மனித வாழ்க்கையின் உரிமைகளை கடைப்பிடிக்கிறார். ஆதாமுக்கும் அவர் மூலமாக இழந்துபோன எல்லாவற்றிற்கும் சரிக்கட்ட இந்த மனித உரிமைகளை, மீட்கும்பொருளின் விலையாகத் தந்து, கலைந்துபோடவேண்டியிருந்தது.

கேள்வி **26:–** கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாகும்படி, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட ஒருவருக்காக என்ன பலி செலுத்தப்பட்டது**?**

பதில் :– இவ்வார்த்தை வெளிப்படுத்தும் ஒரு தன்மை என்னவென்றால், மாபெரும் பிரதான ஆசாரியரைத்தவிர ஒருவரும் எந்த பலியும் செலுத்தமுடியாது. நமது சித்தத்தை தத்தம்செய்வதும், நமது சரீரங்களை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுப்பதுமே நாம் செய்யவேண்டியது. அவைகளை மாபெரும் பிரதான ஆசாரியன் பலியாக்கக்கூடும். மிருகத்தை கொல்லுவது மட்டுமே அதை பலிசெலுத்துதல் ஆகாது என்பதை எளிதில் புரிந்துகொள்ளமுடியும். நாம் இன்றைக்கு செய்வதுபோலவே, யூதர்கள் உணவுக்காக ஆயிரக்கணக்கான மிருகங்களை கொன்றனர். இந்த மிருகங்களை கொன்றதால் மட்டுமே அவைகள் பலிசெலுத்தப்படவில்லை. தேவனுடைய ஏற்பாட்டின்கீழ் அன்றி, எந்த பலியும் செலுத்தமுடியாது. ஒரு ஆசாரியன் பலிசெலுத்தவேண்டுமென்று அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். யூதரது பிரமாணத்தின்படி, பிரதான ஆசாரியனே பலிசெலுத்தவேண்டும். மற்றவர்கள் அவரது உதவியாளர்களாக இருந்து, பிரதான ஆசாரியன் மரிக்கும்பட்சத்தில் அவரது ஊழியத்தை எடுப்பர். பிரதான ஆசாரியனாக இருப்பவர் இயேசுவுக்கு அடையாளமாக இருக்கிறார். மேலும் இயேசு மட்டுமே நிஜமான பலிகளை செலுத்தும் தகுதி பெற்றிருக்கிறார். ஆகவே இயேசுவும் பின்னடியார்கள் அனைவரும் தங்களையே தத்தம் செய்யவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தின் கதவுநிலையருகே ஆடுகள் கட்டப்பட்டு தயாராக உள்ளதை இது நிழலாக சித்தரித்துக் காட்டுகிறது. மற்றொருவகையில் கூறுவோமாகில் இந்த வகுப்பார் தங்களையே அர்ப்பணித்து, தங்களை கர்த்தருக்கென்று பிரிந்திருக்கின்றவர்களாக,மனித ஜீவிகளாக தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள் இந்த தனிப்பட்ட நபரை இயேசு தாங்கிப்பிடித்து, அவரது ஒப்புக்கொடுத்தலை ஏற்றுக்கொண்டு, தம் புண்ணியங்களை அருளிச்செய்து, பிதாவினிடத்தில் அவரை ஒப்புக்கொடுக்கிறார். பிதா அவரை ஏற்றுக்கொண்டதை மாபெரும் பிரதான ஆசாரியரான தம் குமாரன் வழியாக,

பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டதன்மூலம் வெளியரங்கமாக்கினார். அப்போதிலிருந்து அப்படிப்பட்டவர் கிறிஸ்துவின் சரீர அங்கமாக ஆகிறார். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி, அவர் தன் விசுவாசத்தைக் காத்துக்கொள்வாராகில் அவரது நாமம் நீக்கப்படாது.

கேள்வி 27 :– மீட்கும்பொருளுக்கும் பாவநிவாரணபலிக்கும் இடையேயான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.

பதில் :– பாவநிவாரணபலி என்ற சொல்லானது ஒரு பொருள் அல்லது ஜீவியம்(ஜீவியங்கள்) விசேஷபலியாக, பாவத்தினிமித்தம் தேவனுக்கென்று ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கிறது. பாவநிவாரணபலியானது மீட்கும்பொருளை குறிப்பாக சுட்டிக் காண்பிக்கிறது. ஆனால் இதைமட்டும் விசேஷித்தவிதமாகவோ, நிச்சயமாகவோ குறிப்பிடுவதில்லை. பாவத்துக்கான பலியாக இது இருக்கிறது என்றாலும், முழுமையான, நிறைவான பலியாக இல்லை. மேலும் பாவ நிவாரணபலியாக அது தேவனால் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், அப்படிப்பட்ட ஒரு முழுமையான, பூரணமாக சரிக்கட்டப்பட்ட பலியாக அல்லது நிறைவளிக்கும்பலியாக இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்ட மீட்கும்பொருள் என்ற வார்த்தை, தவறான ஏதாவது ஒன்றிற்காக செலுத்தப்படும் பலி என்ற கருத்தை உள்ளடக்கியதோடு நில்லாமல், அதோடுகூட, அந்த பலி முழுமையாகவும் துல்லியமாகப் பொருந்தக்கூடியதாயும் இருக்கவேண்டும் என்பதை குறிப்பிட்டுக் காண்பிக்கிறது. மீட்கும்பொருளின் அர்த்தம் இயேசுவுக்கு பொருத்திப் பார்க்கும்பொழுது, ஒரு சரிசமானமான விலையாக இருக்கிறது.

கேள்வி 28:– மீட்கும்பொருள் மற்றும் பாவநிவாரணபலியில் சபை பங்குபெறுமா ? ஏன் ?

பதில் :– இக்கேள்வியை நாம் கவனித்துப்பார்க்கும்போது, சபையை இரண்டு பக்கங்களிலிருந்தும் நாம் நோக்கிப் பார்க்கவேண்டும். சபையார் தேவனுக்கு தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கப்படுதலைக்குறித்து நாம் சிந்திக்கும்போது, அவர்கள் மீட்கும்பொருளில் பங்கேற்பதில்லை என்று நாம் கூறுகிறோம். அவர்கள் அபூரணரானபடியால், மீட்கும்பொருளில் பங்குகொடுக்க அவர்களிடம் எதுவுமில்லை. இக்கேள்வியை வேறு நிலைப்பாட்டிலிருந்து நாம் கண்ணோக்கும்போது, சபையார் ஆவிக்குரிய ஜீவிகளாக இருந்து, அவர்களது தலையாக இருப்பவரோடு சேர்ந்து, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருந்து, எப்படி கை, தலையோடு பங்குகொள்கிறதோ, அவர் செய்கிற எல்லாவற்றிற்கும் அவரோடுகூட பங்குபெறுகிறார்கள். வேதாகமம் மனித சரீரத்தையே கிறிஸ்து மற்றும் சரீரங்கள் இணைந்த சித்திரமாக நமக்கு தருகிறது. மீட்கும்பொருளின் விலையாகிய இயேசுவின் புண்ணியம் மட்டுமே தேவனிடத்தில் பலன்பெற்றுத்தருகிறது. நாம் தேவனிடத்தில் ஞானஸ்நானத்தில் ஒப்படைக்கும்போது, நாம் அந்த புண்ணியத்தை அடையவில்லை. மாறாக, நாம் இயேசுவால் சீஷர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, தம் சொந்த தகுதியை நமக்களித்து, தம் சொந்த பலியோடு நம்மையும் சேர்த்துக்கொண்டதால்தான் அந்த புண்ணியங்களை அடைந்தோம். அதேசமயத்தில் இந்த யுகத்தின்முடிவில், அவரது சரீரமாகிய சபை அவரோடுகூட சேர்ந்து முழுமையடைந்து, மகிமையடைந்தபிறகு, தேவனிடத்தில் நம்மை ஒப்படைத்து, முழு உலகத்தின் பாவங்களுக்காக நம்மையும் பங்குபெறும்படிசெய்கிறார்.

மனிதப்பிறவியில் எவரும் மீந்திருப்பதில்லை என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். நாம் கிறிஸ்துவின் சரீரஅங்கங்களாக உண்டாக்கப்பட்ட அந்நேரத்தில், நம் சித்தத்தை விட்டுவிட்டபடியால், நாம் மனிதஜீவிய நிலையில் மரித்தவர்களானோம். ஏனெனில் நாம் புதுசிருஷ்டிகளானோம், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2கொரிந்5:17). கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமும், ஆவிக்குரிய தலையும் பலிசெலுத்தப்படவில்லை என்பதை நாம் நினைவில் நிறுத்தவேண்டும். மாம்சமே பாவநிவாரணபலியாக ஆனது. மேலும் இயேசுவின் மாம்சமே மீட்கும்பொருளை ஏற்படுத்தினது, நம் மாம்சமல்ல. ஆனால் மீட்கும்பொருளின் விலைக்கிரயமானது, நீதியின் கரங்களில் ஒரு சேமிப்பாக வைக்கப்பட்டுள்ளது. இயேசுவின் தகுதியை உடைமையாகக் கொண்டு, நாம் அந்த உடைமையின் உடன் சுதந்திரர்களாக அவரோடுகூட இணைகின்றோம். எப்படியெனில் அவரோடு கொண்டிருந்த உறவின் அடிப்படையிலும், அவர் உடைமையாக்கின அனைத்தின்மேலும் நாம் கொண்டிருந்த ஆர்வமுமே காரணமாய் அமைந்தது. இவ்வாறு சபையானது இந்த மீட்கும்பொருளின் விலையில் பங்கேற்கமுடிந்தது. நாம் அவரது மணவாட்டிகளானபடியால், அவருக்கு உடன்சுதந்திரரானோம். மேலும் மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தின் அனுகூலங்களை, அவரோடுகூட இணைந்து, உலகத்துக்கு கொடுக்கஇருக்கிறோம்.

நாம் பாவநிவாரணபலியை உண்டாக்குவதில்லை. மாறாக மீட்கும்பொருளையே கடைப்பிடித்துவருகிறோம். பிரதான ஆசாரியரால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் நமது மனித ஜீவியத்தை அவரே பலியிட்டு, நமக்காக அவரது புண்ணியங்களை அளித்ததில் இந்த ஏற்பு காண்பிக்கப்பட்டுள்ளது. முடிவில் நம்மை ஒப்புக் கொடுக்கும் போது, நாம் புதுசிருஷ்டிகளாக பங்கேற்போம். புதிய சிருஷ்டி எதையும் தானாக அடைந்திருப்பதில்லை. ஆகவே தான் அடைந்ததாக எதையும் பலிசெலுத்தமுடியாது. மாறாக, மாம்சத்தை சிலுவையிலறைவதில் புதியசிருஷ்டி இயேசுவோடுகூட பங்கேற்பதோடு, இவை ஒவ்வொன்றும் பிதாவிடம் புண்ணியங்களை ஒப்படைக்கும்போதும் அவரோடு இணைந்திருக்கும்.

கேள்வி 29:– இயேசு பரத்துக்கு ஏறிச்சென்றபோது, மீட்கும்பொருளின் விலையை செலுத்தினாரென்றால், சபையாருக்கு பரிந்துபேசுபவராகி இருக்கக்கூடுமா ? ஆம் எனில், எவ்வாறு ஆனார் ?

பதில் :– இயேசு பரத்துக்கு ஏறிச்சென்றபோது, மீட்கும்பொருளின் விலையை முழுவதுமாக கொடுத்தாரென்றால், அது ஏற்கப்பட்டிருக்குமானால் அதன் விளைவுகள் ஆதாம் மற்றும் அவனது சந்ததியாரை உடனடியாக வந்தடைந்திருக்கும். அந்நேரத்தில் வாழ்ந்துவந்த சந்ததியார், அல்லது அந்நாள் துவங்கி வாழ்ந்து வருபவர்கள் தனிப்பட்ட விதத்தில் மீண்டுமாக பரீட்சைக்குள் சென்றிருந்து, அவர்களது அபூரணத்தினிமித்தமாக மரணத்துக்கு உட்பட்டிருப்பர்.

இயேசு அவரது ஆயிரவருட ராஜ்யத்தை ஸ்தாபித்து, புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டின்படி தேவையான எல்லா உதவிகளையும் உடனடியாக அளிக்க துவங்காவிடில், இப்படிப்பட்ட சூழ்நிலையை சந்தித்து போராடி வெற்றிபெற முடியாது. ஆனால் சபையாரைப் பொருத்தமட்டில், எவ்விதமான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. மனித குடும்பத்தின் அங்கங்களாக இருந்துவருகின்ற திருச்சபையாருக்கு, விசேஷமான எந்த வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை,. மீட்கும்பொருள் செலுத்தப்பட்டிருக்கிறபடியால், மனுக்குலத்திற்கெதிரான எல்லா கடன்களும் சரிக்கட்டப்பட்டுவிட்டன. ஆகவே மற்ற மனுக்குலத்தாரிலிருந்து வேறுபட்ட விதத்தில் சபை வகுப்பார் வழிநடத்தப்படுவதற்கான அவசியமிலலாமற்போய்விட்டது. எனவே உலக ஜனங்களுக்கு ஒரு பரிந்துபேசுபவருடைய தேவை அவசியமில்லாமற்போயிற்று.

கேள்வி **30** :– எப்பொழுது மீட்கும்பொருளின் விலை முற்றிலுமாக செலுத்தப்பட்டு, இறுதிப்பணி நிறைவேறும் ?

பதில் :– சபை வகுப்பார் இரண்டாம் திரையைக் கடந்தபிறகு, மீட்கும்பொருளின் விலை முழுமையாக செலுத்தப்பட்டு, முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கும். மாபெரும் பிரதான ஆசாரியன், தலையும் சரீரமும் சேர்ந்தநிலையில்(மாபெரும் பிரதான ஆசாரியரின் மகிமையடைந்த சரீரமாக அப்பொழுது சபை இருக்கும்), ஆதாமுக்கும் அவரது முழு சந்ததியாருக்கும் புதிய உடன்படிக்கையை முத்திரையிட்டு, அதை நடைமுறைப்படுத்துவர். அப்பொழுது மீட்கும்பொருள் கொடுத்தல் முடிவடைந்திருக்கும். ஆயினும், அந்நேரத்தில் ஒப்புரவாகுதலின் பணி முடிவுபெற்றிருக்காது. ஆயிரவருடயுகத்தின் வேலைகளில் இதுவும் சேர்க்கப்படும். மனப்பூர்வமாக கீழ்ப்படியும் மனுக்குலத்தாரை, பாவம் மற்றும் தேய்மானத்திலிருந்து விடுவித்து, தேவனோடு முழு ஒப்புரவாக்கி, இசைவாக்கும். ஆனால் இந்த புது உடன்படிக்கை செயல்படுத்தப்படுமுன்பாக, மனிதரை மறுசீரமைக்கும் பணி முறையாகத் துவங்குமுன், யேகோவாவுக்கு மீட்கும்பொருளின் தொகை முழுமையாக செலுத்தப்பட்டு, அவரால் ஏற்கப்பட்டிருக்கவேண்டும். மீட்கும்பொருளின் பணியின் ஒருபகுதி, மனிதன் மரணத்திலிருந்து மீண்டுவருவது ஆகும் – ஓசியா **13:14.**

## *அவருக்குத் தெரியும் !*

நான்போகும் பாதை அவருக்குத் தெரியும்
பாதை காரிருள் ஆனால் என்ன ?
கரடுமுரடாய் இருந்தால் என்ன ?
புதர்கள் சூழ்ந்த பகுதியானாலும்
எதுவானாலும் என்ன ?
அவரது கோல் தான் என்னைத் தேற்றுமே !
அவரது அன்பை தடுக்கும் அத்தனை சக்தியும் – அது
இனிமையாயினும் அருமையாயினும் நெருக்கமாயினும்
எதுவாயிருப்பினும்
பணிவன்புடன் நான் எடுத்திடுவேனே !
அவரது பாதம் சமர்ப்பணம் செய்வேன் – இது
அவருக்குத் தெரியும் என்பதே எத்தனை ஆனந்தம் !
என்னே கரிசனம் கரம்பிடித்து நடத்தி செல்லுமே !
பரலோக தேசம் நான் சேரும் மட்டுமே !
வழிநடத்துவார்; பத்திரமாகவேச் சேர்ந்திடுவாரே !

-------------------------

# உயிர்த்தெழுந்த கிறிஸ்து
# The risen christ

(இக்கட்டுரை அக்டோபர் 15, 1893ம் ஆண்டு வெளியிடப்பட்ட உயிர்த்தெழுதல் என்று பெயரிடப்பட்ட கட்டுரையின் மறுபதிப்பு)

ஆதார வசனங்கள் :– 1கொரிந்தியர் 15:12–26

திறவுகோல் வசனம்:– நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் – 1கொரிந்தியர் 15:57

உயிர்த்தெழுதலின் போதனையைக்குறித்த மாபெரும் முக்கியத்துவம், 12–19 வசனங்களில் கூறப்பட்டுள்ளது நம் கவனத்தை ஈர்க்கிறது. அப்போஸ்தலர் எல்லாவற்றிற்கும் முதலாவதாக முன்வைக்கிற, கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் என்ற மாபெரும் போதனை உயிர்த்தெழுதலின் போதனையோடு இரண்டறக் கலந்திருக்கிறது.

இயேசு மரித்தார் என்ற இந்த அடிப்படை போதனைமேல் நிலைநின்றே மற்ற போதனைகள் கட்டப்படுகின்றன. உணர்வூக்கம் கொண்ட அப்போஸ்தலரது மதிப்பீட்டில் இந்த போதனை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இது உண்மையல்ல என்றால், பிறகு என்போமானால், எந்த மனிதனுக்கும் தற்கால வாழ்க்கைக்கு அப்பால், வேற எந்த நம்பிக்கையும் இல்லை என்று வலியுறுத்திக் கூறுகிறார். உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இல்லாவிடில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது வீணாகும். அதை பிரசங்கிப்பவர்களும் போலி சாட்சிகளாகவே இருப்பர். கிறிஸ்துவின் மரணமும் வீணாகும். கிறிஸ்தவர்களது விசுவாசமும் விருதாவாகும். அவர்களுடைய நம்பிக்கை பைத்தியமாகிவிடும். உயிர்த்தெழுதல் மற்றும் அதன் வெகுமதிகளைப் பற்றிய கண்ணோக்கில் அமைந்த அவர்களது பலியின் ஜீவியம் இவ்வுலக ஜீவியத்தின் அனுகூலங்களையும், சிறு மகிழ்ச்சிகளையும் கொடுத்து, அவர்களை கொள்ளையாடும். இவ்வாறு தற்கால வாழ்க்கையின் எல்லா அனுகூலங்களை மட்டுமே அடைவர். மேலும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் அழிந்துபோயிருப்பார்கள். உயிர்த்தெழுதல் இல்லாமற்போனால், இப்படிப்பட்ட வீணான துக்கநிலைமையே நம்முடையதாயிருக்கும். அப்படியானால் கிறிஸ்து மரித்து, தமது உடைமையாக்கினதன் பலன்கள் நமக்கு கிடைக்கும் என்ற நிச்சயமிருக்காது. இது ஏற்றவேளையில் உணர்ந்து கொள்ளப்படும். நாம் நம் பாவங்களிலும் அதன் மரண தண்டனையின் கீழும் எவ்வித நம்பிக்கையுமின்றி இருந்திருப்போம். இதற்கும் மேலாக, உயிர்த்தெழுதல் இல்லையென்றால், ஈட்டுத்தொகை செலுத்தப்பட்டு, உயிர்த்தெழுதலை உடைமையாக்கியிருந்தும், ஒப்பந்தப்படி தேவன் தம் பங்கை நிறைவேற்றவில்லை என்றாகிவிடும்.

மீட்கும்பொருள் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய இந்த இரண்டு இணைஜோடியான போதனைகளின் மாபெரும் முக்கியத்துவம் 12 முதல் 19வரையுள்ள வசனங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் உண்மைத்தன்மை 20 முதல் 26 வசனங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அநேக, மாறாத, தவறிழைக்காத ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது(வசனங்கள் 5முதல்8; அப்போஸ் 1:3). அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தால் எல்லோரும் மீட்கப்பட்டு, மரணத்திலிருந்து விழிப்பூட்டுவதோடு மட்டுமல்லாமல், விழுகையினால் இழந்துபோன எல்லா ஆசீர்வாதங்களையும் தயவையும், முழுமையான உயிர்த்தெழுதலின் வாய்ப்பையும் பெறுவார்கள். கல்வாரியில் முழு உலகத்தின் பாவத்திற்கென்றும் கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற நிச்சயத்தையே தேவன் எல்லா மனிதருக்கும் கொடுத்தார்(அப் 17:31). கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் நம் சந்ததியினருக்கெதிரான நீதியின் சரிக்கட்டுதலை முழுமையாக நிறைவுசெய்தது. ஆதலால், அவர் தற்போது நீதிபரராயும், அவரை விசுவாசிக்கிற அனைவரையும் நியாயந்தீர்க்கிறவராயும் இருக்கமுடிகிறது– ரோமர் 3:26.

கிறிஸ்தவ மண்டலங்களிலுள்ள பல்வேறு விசுவாசப்பிரமாணங்கள் எதை அலட்சியப்படுத்துகிறது என்பதையும், அவர்களது போதனையில் இருந்த நேரடி முரண்பாடு என்ன என்று கவனிக்கவேண்டுமென்றும் 20ம் வசனம் கூறுகிறது. உயிர்த்தெழுப்பப்பட்ட கிறிஸ்துவே மரித்தோரின் முதற்பலன் என்றும், பரிபூரணத்தை அடையவும், நித்தியஜீவன் பெறவுமான உயிர்த்தெழுதலின் முழுமைத்தன்மையை முதலாவது ருசிபார்த்தவர் என்றும் போதித்த போதனையை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என பவுல் கூறுகிறார். கிறிஸ்துவுக்கு முன்பாக உயிர்த்தெழுதலடைந்தோர் அனைவரும் தற்காலிகமாகவே எழுப்பப்பட்டனர். மீண்டும் பழைய நிலைமையாகிய மரணத்துக்கு திரும்பினர். இதற்கு உதாரணமாக, லாசரு, யவீருவின் மகள், நயீன் விதவையின் மகன், மற்றும் சூனேமியாளின் மகன் போன்றோரை கூறலாம். இவர்கள்அனைவரும் உயிர்த்தெழுதலின் ஒரு பகுதியை மட்டுமே அடைந்ததற்கு உதாரணமாக விளங்குகின்றனர். தேவன் நியமித்தநாளின் ஏற்றவேளையில் தெய்வீக வல்லமையால் உயிர்த்தெழுதல் நிறைவேறித்தீரும் என்பதனை மனிதர்க்கு நிச்சயப்படுத்தவே இவை நிகழ்த்தப்பட்டன(அப் 17:31). இந்த உண்மையில் மறைந்திருக்கிற காரணத்தை இப்பொழுது கண்டடையவேண்டும். கிறிஸ்து முதலாவதாக உயிர்த்தெழுப்பப்பட்டாரென்றால், அவருக்கு முன்பாக ஒருவரும் உயிர்த்தெழுப்பப்படவில்லை. மேலும் மேற்கண்ட

--2682--



வசனங்களில் காண்பிக்கப்பட்டவாறு, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுதலின் மூலம் ஜீவனுக்கு சீர்பொருந்தியிராவிடில், அவர்களும் கெட்டிருப்பார்களே. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் இயேசுவுக்குள் நித்திரையிலிருப்போர், அவர்கள் மரிக்கும்போது ஒருவரும் பரலோகத்திற்கு ஏறிச் செல்லவில்லை என்பது தெளிவான காரியம். அவர்கள் மரித்திருந்தார்கள்,இயேசுவுக்குள் நித்திரையில் இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையில் இளைப்பாறுகிறார்கள். அவர்கள் அழிவுக்குள்ளாயினர், அவர்களது உயிர்த்தெழுதலுக்கென்று நியமிக்கப்பட்ட நாள்வரைக்கும் அவர்கள் அதேநிலையில் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இயேசுவுக்குள் நித்திரையடைந்த அனைவரையும் தேவன் அவரோடுகூட கொண்டுவருவார்(1தெச 4:14). தாவீது பரலோகத்துக்கு ஏறிச்செல்லவில்லையே(அப்2:34). தானியேலும் காத்திருக்க வேண்டும். கடைசிநாட்களின் முடிவுவேளையில் அவர் தன் சுதந்திரவீதத்தைப்பெற எழுந்திருப்பார்(தானி12:13). ஆபிரகாம் தன் வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள ஏற்ற சமயத்துக்காக காத்திருக்கவேண்டும். அந்த தேசத்தில் தன் பாதங்களை பதிக்கும் தன் உடைமையாக ஒருபோதும் ஆக்கிக்கொள்ளவில்லை(அப்7:5). யோபு இந்த தீமையின் நாளின் கோபம் கடந்துபோகும் வரைக்கும் காத்திருக்க வேண்டும்(யோபு14:12–15,21). ஸ்தேவான் தான் மரிக்கும்போது கண்ட விசுவாசத்தின் தரிசனம் நிறைவேறுவதற்கு காத்திருக்கவேண்டியிருந்தது(அப் 7:56).

பவுலும் அவரோடுகூட கர்த்தரின் பிரசன்னமாகுதலை விரும்பும் எல்லோரும், எல்லாம் நிறைவேறித்தீருங்காலங்கள் வருமளவும் தங்களது விசுவாசத்தின் வெகுமதிக்காக காத்திருக்கவேண்டியிருந்தது– 2தீமோத் 4:8.

மேற்கண்ட வசனங்களின் போதனை பூரண இசைவுள்ளதாய் இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவ மண்டலங்களின் தற்போதைய இறையியல் கோட்பாடுகளுக்கு இது ஒத்திராமல், முரண்பாட்டை வருவிக்கிறது.. அவர்களது கோட்பாடுகளை பகுத்தறிவின்படி பார்க்கும்போது, உயிர்த்தெழுதலின் கருத்துக்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஒரு மனிதன் மரித்து பரலோகத்திற்கு செல்வானாகில், அங்கே அவனது சிறையிருப்பிலிருந்து சிலர் அழைக்கும்போது, அங்கு தன் அழிவுக்குரிய சரீரத்தை அடிக்கடி மாற்றிக்கொள்வதில் மகிழ்வானாகில், அதை விரும்பி அதன்மேல் நம்பிக்கையை வளர்த்து எவ்வளவுதூரம் முடியுமோ, அவ்வளவுக்கு நிலைத்துநிற்க பிரயாசப்படுவதும், பகுத்தறிவின்பெயரில் தன் சரீரத்தோடு மீண்டும் இணைவதும் நம்புவதற்கு இடமுண்டா? அந்த நிலைமை பகுத்தறிவற்றதும், வேதவசனங்களின் ஆதாரமில்லாததும்நிலைநிற்காததுமாகும்.

21ம்வசனம் பெயர்சபைகளின் தற்போதைய இறையியல் கொள்கையை சமவலிமையுடன் எதிர்க்கிறது. மனுஷனாலே மரணம் வந்தபடியால், மனுஷனால் – மனிதராகிய கிறிஸ்துஇயேசுவால் , அவர் எல்லோரையும் மீட்கும்பொருளாக தம்மையே கொடுத்ததால், மரித்தோரின் உயிர்த்தெழுதலும் வந்தது என்று அவ்வசனம் அறிக்கையிடுகிறது. அவர்களது இறையியல் கோட்பாட்டின்படி, ஒரு தேவனுடைய பலியினால் மீட்பு உண்டாக்கப்பட்டது, மனிதனாலல்ல என்கிறது. ஆனால் வேத வசனங்களோ, சரிநிகர் சமானவிலை கொடுத்ததாக மிகத் தெளிவாக விளக்குகின்றன. நமது சந்ததியின் தலையாக இருந்த ஒரு மனிதனுக்கு, ஒரு மனிதனே பதிலீடாகிறார். அவரால் உண்டாக்கப்பட்ட மீட்பு, அவரது சந்ததியாரை மீட்டெடுத்ததாகும். துல்லியமாக அதே கொள்கையின்படி, அவரது விழுகை மற்றும் சாபம் நமக்கு பாவம் மற்றும் மரணத்தை சுமத்தியது. கிறிஸ்து இயேசுவாகிய அந்த மனுஷன், தம் முந்தைய மகிமைக்குரிய ஆவியின் ஜீவியத்தை விட்டு, பாவ மாம்ச சாயலாக மாறினார். இதைக்குறித்து கூறுகையில்,

"மரணத்தால் துன்பப்படுகிறவர்களுக்காக ஒரு சரீரத்தை நீர் எனக்காக ஆயத்தம் பண்ணினீர்"

தம்மை – தம் மாம்சத்தை, தம் மனித ஜீவியத்தை பலியாக்கியதன்மூலமாக நமது மீட்பு நிறைவேற்றப்பட்டது. அந்த பலி நிறைவேற்றப்பட்டதன் பலனாக, உன்னதங்களுக்கும் மேலாக தெய்வீக சுபாவத்திற்கு அவர் உயர்த்தப்பட்டார்.

"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்.. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்".

--2683--

அவர் உயிர்த்தெழுந்தபின் கூறியதாவது; பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் பலிசெலுத்தியதற்கு வெகுமதியாக, தெய்வீக சுபாவத்திற்கு

உயர்த்தப்பட்டு, வல்லமையும் அருளப்பட்டதென்றால், அவர் மனிதனாக இப்பூமிக்கு வருமுன் பெற்றிருந்த ஆவிக்குரிய மகிமை மற்றும் வல்லமை எவ்வளவு ஐஸ்வரியமாயிருந்தாலும், தம் மனித சுபாவத்தை பலிசெலுத்தியபிறகு, உயிர்த்தெழுதலில் இன்னும் அதிக தயாளத்தைப் பெற்றுக்கொண்டார். தெய்வீக சுபாவத்திற்கு பங்காளியாக்கப்பட்டதோடு, பிதாவின் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானார்(எபி 1:3). மனிதனாகிய கிறிஸ்துஇயேசு உலகத்தின் ஜீவனுக்காக தம் மாம்சத்தை(மனித சுபாவத்தை) கொடுத்தபோது (யோவான் 6:51), அதை மீண்டும் எடுக்காதபடிக்கு ஒரேவிசை ஒப்புக்கொடுத்தார். ஏனெனில் அது நமது மீட்புக்காக செலுத்தப்பட்ட விலைக் கிரயமாயிருந்தது. இதன் தொடர்ச்சியாக, அவர் மீண்டும் எழுப்பப்பட்டபோது, ஒரு புதிய சுபாவத்தில் அவரது ஜீவியம் நிலைபெற்றது, இதனால் நமக்கு கிடைக்கும் ஆதாயங்களுக்கு எவ்வித குறுக்கீடும் நேரிடவில்லை. மேலும், அவரது மரணத்தின் மூலம் அடிமைத்தனமாகிய பாவம் மற்றும் மரணத்திலிருந்து சட்டப்பூர்வமாக விடுவித்தார். இவ்வாறு மனுக்குலம் இழந்ததை மீண்டும் அடையச்செய்வதற்குத் தேவையான அபரிதமான வல்லமையை, தெய்வீக சுபாவம் கொடுக்கப்பட்டதன் வாயிலாக அடைந்தார்.

கிறிஸ்துவினுடையவர்கள் அனைவரும், அவரது பலியின்மேல் வைக்கும் விசுவாசத்தினால், அவரது மரணத்தின் ஆதாயங்களை பெற்று, ஏதேனில் தண்டனையாக இழந்துபோன நித்தியஜீவன் மற்றும் பரிபூரணத்தை முழு உயிர்த்தெழுதல் மூலம் மீண்டும் அடைகிறோம். உயிர்த்தெழுதலின் வரிசையில் கிறிஸ்து முதற்பலனாக இருக்கிறார். கிறிஸ்துஇயேசு மட்டும் அல்ல, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற,தலையாகிய கிறிஸ்துஇயேசுவோடு– கூட, அவரது சரீரத்தின் எல்லா அங்கங்களும் உள்ளனர். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள்பரிசுத்தரும் பாக்கியவான்களுமாவர். இந்த மகிமையான சரீரம் உயிர்த்தெழுதல் அடைந்தபிறகு, அவருடையவர்கள் எல்லாரும் அவரது பிரசன்னக்காலத்தில் (கிரேக்க மொழியில் – பரோசியா– பிரசன்னம், வருகைஅல்ல). ஜீவிக்கின்ற அவருடையவர்கள் அனைவரும் மகிமையடைவர். அவர் ஆளுகைசெய்யும் ஆயிரவருடம் முழுவதும் அவரது பிரசன்னத்தின் காலமாக இருக்கும். அக்காலப்பகுதியில், பிரேதக்குழிகளிலுள்ள (நல்லோர் மற்றும் தீயோர், நீதிமான்கள் மற்றும் அநீதர்) அனைவரும் அவரது சத்தம் கேட்டு, எழுந்துவருவார்கள். நன்மைசெய்தோர் ஜீவன்பெற உயிர்த்தெழுந்தும், தீமைசெய்தோர் நியாயத்தீர்ப்படைய உயிர்த்தெழுந்தும் வருவர் – கிரேக்கமொழியில் – கிரைசிஸ் – நியாயத்தீர்ப்பு – நித்தியதண்டனையல்ல(யோவான் 5:28–29). முந்தைய வகுப்பார் முழு உயிர்த்தெழுதலை – மனித பரிபூரணத்தை வெகுமதியாக உடனடியாக பெற்றுக்கொள்வர். பிந்தைய வகுப்பாரோ நியாயத்தீர்ப்படைய அல்லது நித்தியஜீவன் பெறும் பரீட்சைக்கு விழித்தெழுப்பப்படுவார்கள். அது அவர்கள் அனுகூலமடையும்படிக்கு சிறப்புரிமையாக இருந்து, அவரது ஒழுக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் கற்றுக்கொள்ள தங்களையே முழுமையாக அர்ப்பணித்து, கிறிஸ்துவுடையவர்களாக மாற வழிவகுக்கும். அவ்வாறு தங்களை அர்ப்பணிக்காதவர்களது பரீட்சை, 100 வருட தவணைக் காலத்தோடு முடிவடைந்து, இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள், அதிலிருந்து மீள வேறுவழியில்லை(ஏசாயா 65:20). மரணத்திலிருந்து விழித்தெழுப்பப்பட்ட அனுபவத்தை எல்லோரும் அடைந்திருந்தாலும், கிறிஸ்துவையல்லாமல் ஒருவரும் பிழைத்திருக்கவோ, முழுமையாக உயிர்த்தெழவோ முடியாது. விழித்தெழுப்பப்படுவதே உயிர்த்தெழுதல் வழிமுறையின் முதல்படியாகும். மேலும், அவர்கள் முழுமையான உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்களா அல்லது தகுதியற்றவர்களா என்பதை நிரூபிக்கும். முழுமையான உயிர்த்தெழுதல் என்பது உண்மையான பரிபூரணம் மற்றும் நித்திய ஜீவன் ஆகும்.

“குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் ” – 1யோவா5:12

“குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்” – யோவா 3:36.

கிறிஸ்து அடைந்த வெற்றியை 24 மற்றும் 25ம் வசனங்கள் நிச்சயப்படுத்துகிறது. அந்த வெற்றி எதை உள்ளடக்கினதெனில், எதிர்க்கும் ஒவ்வொரு வல்லமை மற்றும் அதிகாரத்தை முற்றிலுமாக கீழ்ப்படுத்தினதையும், அவரது தீர்மானத்தின்படி எல்லா எதிரிகளையும் அழிக்கிறார். அந்த எதிரிகள் தீமையானவைகளாய் இருந்தாலும், துரைத்தனங்கள் அதிகாரங்கள் வல்லமைகள் மற்றும் தனிப்பட்ட நபர்களாயிருந்தாலும் தம் பாதத்துக்கு கீழ்ப்படுத்துகிறார். மாபெரும் உபத்திரவக்காலத்தில், முதலாவது, எல்லாத் தீமைநிலைமைகளையும் நீக்குகிறார்(தானி 12:1). மேலும் அத்தீமை நிலையை நீக்கினதற்கு பதிலாக, நீதியின் நிலைமை மற்றும் சமாதானம் ஏற்படப் பண்ணுகிறார். உலகத்திற்கு தம் வெளிச்சம் மற்றும் சத்தியத்தைக்கொண்டு உலகத்தை நிரப்பி, தீமையின் நோக்கங்களையும் கொள்கைகளையும் நீக்கி, மனப்பூர்வமாய் கீழ்ப்படிகிற அனைவரது இருதயங்களையும் முறையான ஆவியால் புதுப்பிக்கப்படச் செய்கிறார். தம் சொந்த பரலோக வல்லமையை இயக்கி, எதிர்க்கிற ஒவ்வொரு வல்லமையையும் முழுமையாக ஜெயங்கொள்வதோடு, முழுமையாகவும் இறுதியாகவும் முடிவுக்குக் கொண்டு வருகிறார். எதிர்க்கிற ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் கீழ்ப்படுத்தி, இரண்டாம் மரணத்தில் அழிக்கிறார். அதிலிருந்து அவர்கள் மீண்டுவர வழியில்லை.

“எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகைசெய்ய வேண்டியது ”.

அந்த ஆளுகையின் காலம் ஆயிரம் ஆண்டுகளாக வரம்பு விதிக்கப்பட்டுள்ளது(வெளி20:6–10). அக்காலம் முடிவடையும்போது எதிர்க்கும் தனிப்பட்ட ஒவ்வொருவரும், அவர்களை வஞ்சிக்கும்படி வழிநடத்திச்சென்ற சாத்தானும், அக்கினிக்கடலில் அழிக்கப்படுவர். இதுவே இரண்டாம் மரணம்(வெளி 20:7–15). கடைசியாக அழிக்கப்படும் சத்துரு மரணம். இது, எதிர்ப்பாளர்கள் அழிக்கப்பட்ட இரண்டாம்

மரணமல்ல, இதற்குமாறாக, ஆதாமுக்குள்ளான மரணம். இங்கு உபயோகிக்கப்பட்ட மொழிநடை, முரண்பாட்டை வருவிக்கக்கூடும். இரண்டாம் மரணத்தை அழிக்கஅல்ல, ஆதாமுக்குள்ளான மரணத்தை அழிக்கவும், அம்மரணத்தின் பிடியில் அகப்பட்டிருந்தவர்களை விடுவிக்கவுமே இயேசு வந்தார். இவ்வாறு எல்லோரையும் விடுவிக்க ஆயிரவருட அரசாட்சி முழுவதும் தேவைப்படும். நமது திறவுவசனத்தின் வார்த்தைகளை மீண்டும் நினைவுகூர்வோமாக – நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்குஸ்தோத்திரம்.

------------------

**--2685--**

# கிறிஸ்துவோடு நுகத்தடிக்குட்பட்டோர்
# YOKE-FELLOWS WITH CHRIST


திறவுகோல் வசனம் : “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்” – மத்தேயு **11:29,30**

நம் கர்த்தர் இங்கு யூதர்களுக்கே இவ்வார்த்தைகளை கொடுத்தார். அவர் புறஜாதியாருக்கு போதிக்கவில்லை. ஏனெனில் அவர்களுக்கு தயவளிக்கும் காலம் இன்னும் அப்போது வந்திருக்கவில்லை. ஆகவே புறஜாதியாருக்கென்று அவர் அனுப்பப்படவில்லை.

காணாமற்போன ஆடாகிய இஸ்ரயேல் வீட்டாரை இரட்சிக்கவே அனுப்பப்பட்டேன் என்று அறிவித்தார். இஸ்ரயேலர் ரோம தேசத்தின் நுகத்தடிக்கு கீழ்ப்பட்டிருந்தனர். ஆனால் இந்த நுகத்தடியை நம் கர்த்தர் குறிப்பிட்டதாக நாம் எண்ணுகிறதில்லை. அவர்கள் மதத்தின் நுகத்தடியாகிய நியாயப்பிரமாண நுகத்தடியின் கீழிருந்தனர். நுகத்தடி என்பது அடிமைத்தன நிலைமையை குறிக்கிறது. நுகத்தடியை தாங்குபவன் ஒரு ஊழியக்காரன். உதாரணமாக, காளைக்கு ஒரு நுகத்தடி உண்டு, அதைஅதன்மேல் சுமத்துவர். அவைகள் நுகத்தடியை சுமக்கவேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக, நுகத்தடியின் உதவிகொண்டு அதன்மேல் வைக்கவேண்டிய பாரங்களை சுமப்பதற்காகவே நுகம் வைக்கப்படுகிறது.இப்படியாக நுகத்தடி ஊழியத்தின் அடையாளமாக, பாரஞ்சுமத்தலை குறிப்பிடுகிறது. அவ்வாறே இஸ்ரயேலரிடமும் காணப்பட்டது; நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் எல்லா கடமைகளும் பொறுப்புக்களும் அவர்களால் சுமக்க வேண்டியதாயிருந்து. அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குட்பட்டு, தேவனுடைய ஊழியர்களாவதற்கு சம்மதித்திருந்தனர். ஆனால் தாங்கள் பாவத்தினிமித்தமாக பலவீனராக, சீரற்ற நிலைமையிலிருப்பதையும், இதனால் நியாயப்பிரமாணத்தின் சுமைகளை தங்களால் சுமக்கமுடியாது என்றும் கண்டுகொண்டனர். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் பாரத்தை ஒரு யூதனாலும் சுமக்கமுடியாதிருந்தது. ஒருவனும் நீதிமானில்லை, ஒருவனாகிலும் இல்லை. தேவனது பரிபூரண பிரமாணத்தின் கடமைகளை ஒருவனாகிலும் நிறைவேற்ற முடியவில்லை.

நம் கர்த்தர் நியாயப்பிரமாணத்துக்கு அப்பாற்பட்டு எக்காரியத்தையும் செய்ய வந்திருக்கவில்லை. அதற்கு மாறாக, நியாயப்பிரமாணத்தை விசாலமாக்கி, அதை கனப்படுத்தினார். அவர்களது அபூரணத்தினிமித்தமாக ஒரு மனிதனாலும் கடைப்பிடிக்கமுடியாமற்போனாலும், அதன் எதிர்பார்ப்புக்கள் புத்தியறிவில்லாததோ, அநீதியானதோ அல்ல என்று அவர் எண்பித்தார். நியாயப்பிரமாணத்தை தன்னில் பரிபூரணமாக கடைப்பிடித்ததன்மூலம், கீழ்ப்படிதலின் மூலம் ஒரு பரிபூரண மனிதனால் செய்யக்கூடாத காரியம் எதுவுமில்லை என்று நம் கர்த்தர் நிரூபித்தார். ஆனால் இது பரிபூரண மனிதனது முழு அளவிலான ஆற்றலினாலேயே கூடும். தாங்குவதற்கு மேலான சுமையை அவர் சுமக்கும்படி நியாயப்பிரமாணம் அவரை சோதிக்கவில்லை. அதன் ஒவ்வொரு தேவையையும் சந்திக்கும்படி அவர் தகுதிபெற்றிருந்தார், அவ்வாறே செய்தும் காட்டினார்.

ஆனால் தற்பொழுது, தம் சீஷர்களை வேறொரு நுகத்தடியின் கீழ் வரும்படி அழைக்கின்றார். அவருக்கு அடிமைகளாகும்படியான நுகத்தடியே அது. மகிழ்ச்சியின் நற்காரியங்களை சுவிசேஷமாக கொண்ட ஒரு புதிய நற்செய்தியை அவர் பெற்றிருந்தார். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கடமைப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுதலை இது பேசுகிறது. அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாமல், அவர்களை கிறிஸ்துவுக்குள் நடத்துகிற உபாத்தியராக இருக்க வடிவமைக்கப்பட்டது. தற்போது திறக்கப்பட்ட இந்த அற்புதமான புதிய ஏற்பாட்டில் எப்படி அவர்கள் பங்குபெறமுடியும் என்று அவர்களுக்கு அவர் கூறினார். இந்த ஏற்பாட்டுக்கு அவரே தலையாக இருக்கிறார். இந்த ஏற்பாடு ஒட்டுமொத்தமாக பிதாவினுடையது. ஆனால் அவரது குமாரன் அதற்கு விசேஷித்த பிரதிநிதியாய் இருக்கிறார். அவரது சீஷர்கள் இயேசுவில் விசுவாசம்வைத்து தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொண்டு, நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மரித்ததன்மூலம் பங்குபெற்று, அவரோடு ஐக்கியப்படுகிறார்கள். இவ்வாறாக அவர்கள் கிறிஸ்துமூலமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டு, தேவபுத்திரராகின்றனர்.




**புதியசிருஷ்டி நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்**

--2686--

நீதியின் பிரமாணத்தை கடைப்பிடிப்பதன் வழிமுறைப்படி, மேசியாவோடு பங்காளிகளாக இணைக்கப்படுவர். இந்த புதியவகையான நுகத்தடியின்மூலம், இந்த புதிய நிலைமைகளின்படியும்

தேவனுடைய பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியமாயிற்று. பழையசிருஷ்டியின்மேல் புதிய நுகம் சுமத்தப்படவில்லை. பழைய சிருஷ்டி நியாயப்பிரமாணத்தின் தேவைகளை சந்திக்கவோ, கடைப்பிடிக்கவோ முடியாது என்று ஏற்கனவே நிரூபித்தாகிவிட்டது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின்படி, புதுசிருஷ்டியாக வேண்டுமானால், அவர்கள் மரிக்கவேண்டும். நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மட்டுமல்ல, பூமிக்குரிய ஆர்வங்கள், நம்பிக்கைகள், செழுமைகள் எல்லாவற்றிற்கும் மரிக்கவேண்டும். அப்படி மரித்தவர்களைப்பற்றி, "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுவதாக"(ரோமர் **8:4**)அப்போஸ்தலர் கூறுகிறார்.

நாம் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதோடு,அதற்கும் மேலாகவே செய்கிறோம். சகோதரர்க்காக நாம் நமது ஜீவியத்தையே அர்ப்பணிக்கின்றோம். இது நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்ப்பதைக்காட்டிலும் மேலானது. ஆனால் புதுசிருஷ்டியே இதை செய்கிறது. தேவனுடைய நிலைப்பாட்டின்படி, பழையசிருஷ்டி மரித்துவிட்டது. பழைய சரீரத்தின் மூலமாக புதியசிருஷ்டி இயங்கவேண்டும். கிறிஸ்துவின் நீதியின் ஆடையால், அபூரணங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. இப்போதிலிருந்து புதியசிருஷ்டி தெய்வீகப்பார்வையின்படி நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறது. இந்த புதியசிருஷ்டி, கர்த்தரிடத்தில் உண்மையாய் நிலைத்திருந்து, கிறிஸ்துவின் இரத்தத்தின் தகுதி தொடர்ச்சியாக அருளப்படுவதனால், அதன் அபூரண சரீரம் கழுவப்பட்டுக்கொண்டே வருகிறது.

**இஸ்ரயேலின்மேலிருந்த நியாயப்பிரமாணத்தின் பாரமான நுகம்:** யூதர்களின் கவனத்துக்கு கொண்டுவரும் நோக்கத்திற்காகவே குருவாகிய இயேசு இந்த விஷயத்தை நினைப்பூட்டுகிறார். நியாயப்பிரமாணத்தின் சுமைகள் தங்களை நீண்டகாலமாக வேதனைக்குள்ளாக்கி வருவதை அவர்கள் ஓரளவு அறிந்திருந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளுக்கு பூரணமாகக் கீழ்ப்படிந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்தியஜீவனை ஆதாயப்படுத்த முடியாத நிலையிலுள்ளதை உணர்ந்திருந்தார்கள். அவர்கள் **1600** ஆண்டுகளாக நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயற்சிசெய்து வந்திருந்தும், தோல்வியையே தழுவினார்கள். தேவன் மேசியாவை தங்களுக்கென வாக்களித்திருந்ததை அவர்கள் நினைவில் நிறுத்தியிருந்தனர். மேலும், ஏதாவது ஒரு வழியில் புதிய ஏற்பாட்டை அவர் ஏற்படுத்துவார் என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் எப்படி எப்பொழுது என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. தேவன் தங்களது தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைத்திருந்தபடி, அவர்களது மாம்சத்தில் கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அளிப்பார் என்று நம்பியிருந்தனர். ஆகவே விசுவாசிகள் இந்த மேசியாவையும், அவர்மூலமாக வாக்களிக்கப்பட்டிருந்த எல்லாவற்றிற்காகவும் தவித்து, விழித்து காத்திருந்தனர். தேவபக்தியுள்ள யூதர்கள் இவ்வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காக இன்னும் காத்திருக்கின்றனர். ஆனால் இயேசு தம் முதலாம் வருகையில் வந்திருந்து, அவர் துவங்கின ஊழியத்தைக்குறித்து முன்பே தெளிவாக அவர்களால் புரிந்துகொள்ளமுடியாதிருந்தது. தீர்க்கதரிசிகள் மூலமாக வாக்களிக்கப்பட்டிருந்த புதிய உடன்படிக்கையை அப்பொழுது அவர் கொண்டுவரவில்லை.(எரேமியா**31:31–34; 32:38–41;** எசேக்கி **11:19; 36:25–30**). அப்பொழுது அவர்களது கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை தரவில்லை. இது வருங்காலத்தில் நடக்கவேண்டிய பணியாயிருந்தது. இது ராஜ்யத்தின் ஊழியம், பூமி முழுவதும் தேவராஜ்யம் வல்லமையிலும் மகிமையிலும் ஸ்தாபிக்கப்படும்போது இது நிறைவேறும்.

**புதிய சிருஷ்டி துவக்கம் :–**

ஆனால் தற்போது, எல்லாவற்றிற்கும் முதலாவதாக, ஒரு வேறொரு நோக்கத்திற்காக மேசியா வந்திருந்து ஆயத்தப்பணிகளை செய்வார். ஒரு புதிய காரியத்தை அவர் ஸ்தாபித்தார், ஒரு புதிய சிருஷ்டியை அவர் துவக்கினார். முறையான இருதயநோக்கத்தைப்பெற்றிருந்த யூதர்கள் அநேகருக்கு அவரோடுகூட சேரும்படியான அழைப்பு விடுத்தார். வருங்காலத்தில் ஸ்தாபிக்கவிருக்கிற புதிய உடன்படிக்கையை எதிர்நோக்கி காத்திராமல், இவ்விஷயத்தில் அவரோடுகூட இணையும் பங்கைப்பெற்று, தேவபுத்திரராகும்படி அழைத்தார். என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று இயேசு கூறினார். உண்மையாய் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயற்சிப்போரிடையே அவரது இந்தசெய்தி நல்மதிப்பைப் பெற்றது;

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"–மத் **11:28.**

இங்கு ஒரு புதிய ஆலோசனை கொடுக்கப்பட்டது. அவர் பேசின உருவகபாஷையை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தாலும், அவர்களுக்கு இது மிகவும் விநோதமாய்த் தோற்றமளித்திருக்கும்.

சுபாவத்தின்படி புறஜாதியாராக நாம் இருந்தாலும், ஒருபோதும் யூதரது நியாயப்பிரமாண நுகத்தின்கீழ் இருக்கவில்லை. ஆயினும், வேறொரு வழியில் நமக்கு மாபெரும் சுமை நம்மால் தாங்கிக்கொள்ளமுடியாததாய் – பாவம் மற்றும் மரண சுமைகள் இருக்கின்றன. முதலாவதாக, ஆதாம் இந்த பாவ சுமையைத் தாங்கினார். நாம் அனைவரும் பாவத்தின் பாரத்தை உணர்கிறோம், சுமக்கிறோம். அதன் எல்லா தீமையின் விளைவுகளையும் சேர்த்து சுமக்கிறோம். ஆகவே குருவின் நம்பிக்கையும் ஆறுதலுமான வார்த்தைகள் நமக்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் நம் இருதயத்துக்கு தருகின்றன. அவரது நுகத்தை தரித்தவர்களாக, அவருக்குள் அருளப்பட்ட இந்த இளைப்பாறுதலை நாம் கண்டடைந்து, நம் உண்மை தோழனாகிய அவருக்குள் இளைப்பாறுகிறோம்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்கள் அனைவரும், பாவத்தின் கசப்புணர்வையும், அதன் சுபாவத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். இவர்கள் அதன்போக்கை அறிந்து, பயப்பட்டு, அதற்கெதிராக போராடுகிறார்கள். இப்படிப்பட்ட அனைவரையும் தம்மிடத்தில் வரும்படி நம் குரு அழைக்கிறார். அவரது நுகத்தை தங்கள்மேல் சுமத்திக்கொள்ளவும் அவரைக்குறித்து கற்றுக்கொள்ளவும் அழைக்கப்படுகிறார்கள். அவரது நுகம் இலகுவானது என்றால்,அதை சுமக்க எளிதானது, இதை தவறாகவோ, குறைவாகவோ மதிப்பிடமுடியாது.

**பூரணமானதும், இணக்கமானதுமான நுகம் :–**

நுகம் பூட்டப்பட்ட காளையை நாம் பார்த்திருப்போம். அதன் கழுத்தின்மீது பெரிய மரத்தினாலான நுகம் சுமத்தப்பட்டு, தோல்கள் தற்றும் தசைகள்மேல் கடினஅழுத்தம் கொடுப்பதை நாம் பார்த்திருப்போம். அந்த நுகம் சரியாக மிருகத்தின் கழுத்தின்மேல் பொருந்தவில்லையெனில், உராய்வினால் வேதனையை ஏற்படுத்தும். ஆனால் முறையாகப் பொருத்தப்பட்ட நுகம் சௌகரியமாக இருப்பதோடு, பாரத்தை எளிதாக சுமந்துசெல்லமுடியும். தமது நுகம் இலகுவாயும், சவுகரியமாயும், மகிழ்ச்சியை அனுபவிப்பதாயும் இருக்கும் என்று நம் கர்த்தர் அறிவித்தார். அவரது நுகம் சரியாகப் சொல்வோமேயானால், வளைந்துகொடுக்குமளவில் இருக்கும். அதை அணிந்துகொள்ளும் வேறுபட்ட தனித்த நபர்களது மாறுபாடுள்ள நிலைமைகளை அது சந்திக்கிறது. பெரியஅளவில் உள்ளோர்க்கு பெரிதாகவும், சிறிய அளவிலுள்ளோர்க்கு சிறிதாகவும் இருக்கும். நடுநிலையிலுள்ளோர்க்கு நடுநிலை அளவாயும் இருக்கும். இந்த நுகத்தில் மிக மேலான, மிக உன்னதமான மற்றும் பெரும்பாலான தாலந்துகளை உடையோர் கர்த்தரோடு நுகத்திற்குட்படலாம் அல்லது மிகவும் அற்பராயிருப்போரும் இதில் உட்படலாம். சுமப்பதற்கு நம்மில் ஆற்றலில் குறைவுபடுவோமானால், அவை எல்லாவற்றையும் தாங்க கர்த்தரால் கூடும். ஒருவரால் சுமக்கமுடியும் இந்த நுகத்தைப்பேல் வேறு எந்த நுகமும் இல்லை. மெய்யாகவே இந்த நுகத்தை சுமப்பதற்கு பரிபூரணம் அவசியமாயிருக்கிறது. நாமோ பலவீனரும் அபூரணருமாய் இருக்கிறோம். நம்மிடத்தில் பத்தில் ஒரு பங்கு பரிபூரணம்இருந்து, மீதி பத்தில் ஒன்பது பாகம்அபூரணம் இருக்குமேயானால், நம்மிடம் குறைவாயிருக்கிற பத்தில் ஒன்பது பாகத்தை நம் கர்த்தர் சுமப்பார். நம்மிடத்தில் பாதி பூரணம், பாதி அபூரணம் இருக்குமேயானால், அந்த பாதி அபூரணத்தை அவர் சுமந்துகொள்வார். அந்த வகையில் சுவிசேஷயுகத்தில் மாபெரும் வாய்ப்பு அருளப்பட்டு, பலவீனர் அதை சுமக்கவும், பலமுள்ளவர்க்கு தேவையானதை பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் உள்ளது.

நம் கர்த்தராகிய இயேசு அப்போஸ்தலர் பவுலுக்கு இந்த நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறார்;

“பலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும்” **(2கொரி12:9).** நாம் அவரை நேசிப்பதால் சகலமும் நன்மைக்கேதுவாகவே நமக்கு நடக்கிறது. ஏனெனில் நாம் அவரது நுகத்தை எடுத்திருக்கிறோம், அவருடன் நுகத்தடியை சுமந்துவருகிறோம். அவரோடு துன்பப்படும் பாக்கியம் கிடைத்ததற்காக சந்தோஷப்படுகிறோம். மாம்சம் துன்பப்படக்கூடும், ஆனால் ஆவியோ சந்தோஷப்படுகிறது. நமது பெலனுக்கு மேலாக நாம் சோதிக்கப்படமாட்டோம். அவரது சுமை இலகுவாயிருக்கிறது. அவரது ஏற்பாட்டின்படி, அவரால் செய்யக்கூடுமளவு, வேறு ஒருவரும் செய்ய அவசியமிருக்காது. நாம் முறையான ஆவியைப் பெற்றிருந்தோமானால் நம்மால் கூடுமான அனைத்தையும் செய்வதில் மகிழ்ந்திருப்போம். தன் ஆற்றலைக்கொண்டு, தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ய மனதில்லாதவன், கர்த்தரால் உண்மையுள்ளவனாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டான். துப்புரவு மற்றும் உண்மையில் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நம் குருவின் சுமை இலகுவாக இருக்கும். இவ்வாறு ஏற்றுக்கொள்பவர் மட்டுமே அவரோடுகூட நுகத்தடியை சுமக்கமுடியும்.

--------------------

**--2688--**

# சிறு நரிகள்

## The Little foxes

**திறவு வசனம் : திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள். நம்முடைய திராட்சத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே**

நரிகளை, குறிப்பாக சிறுநரிகளை பிடியுங்கள் என்று மேற்கண்ட வசனம் கூறுகிறது. நரி மிகவும் தந்திரமுள்ளதாக அறியப்பட்டாலும், இது எளிதில் பழகக்கூடிய, அமைதலுள்ள சிறு மிருகமாக உள்ளது. மூர்க்கத்தனமும் தீயகுணமும் வெளிப்படுமளவு தகுதிபெற்றதல்ல, மாறாக, அதிக தீங்கு ஏற்படுத்தக் காரணமாயுள்ளது. கேடுவிளைவிக்காதவாறு தோற்றமளிக்கும் இதன் முகப்பொலிவு, அதிக அபாயத்தை உண்டுபண்ணும். சிறு நரியாகிய இது, நாய் குடும்பத்தில் சிறியதான, எல்லாவற்றையும்போலவே அதன் குணாதிசயம் மிக அழிவை ஏற்படுத்தும். இதிலும் குறிப்பாக பிறருக்கு தீங்கு விளைவிப்பதில் நரி மிகவும் தந்திரமுள்ளதும் ஏமாற்றும் குணமும் கொண்டது. ஆனாலும் இதன் தீயநோக்கங்கள் குறித்த சந்தேகம் எழும்புவது குறைவாகவே இருக்கும். இது எளிமையின் தன்மையை விநோதமாய்க் கொண்டது. கபடற்றதாய் வெளித்தோற்றத்துக்கு காணப்படுவதால் பலரை வஞ்சிக்கும்.



திறவுவசனத்தில் நமது விழுந்துபோன சுபாவத்தின் ஒழுக்கக்கேடுகளுக்கு அடையாளக்காட்சியாக சாலமோன் ராஜா விளக்குவதாக தோன்றுகிறது. இந்த ஒழுக்கக்கேடுகள் உச்சகட்டத்தை குறிப்பதாகவோ, முழுமையை குறிப்பதாகவோ பேசவில்லை. ஆனால் சில ஒழுக்கக்கேடுகள் மிகவும் தீங்கு ஏற்படுத்துபவை. அவைகள் விசேஷித்த வஞ்சனைக்குள்ளாக்கி, நமது கவனத்தை தந்திரமாக திசைதிருப்பிவிடும். இதன்காரணமாக, அதிக அக்கறையும், நிலையான விழிப்புணர்வும் தேவை. இந்த வார்த்தைகள், மணவாட்டிக்கு மணவாளன் கூறும் மொழிநடையாகத் தோன்றுகிறது. "சிறு நரிகள்" என்று அவர் வலியுறுத்தி உரைத்திருப்பதன்மூலம், அவைகள் மாபெரும் அழிவை ஏற்படுத்தக்கூடியவை என்று அறிவுறுத்துகிறது. சிறுநரி என்ற இந்த பதத்தை, பாவத்துக்கு நாம் பொருத்திப் பார்க்கும்பொழுது, உண்மையில் சிறிய பாவங்கள், வெளிப்படையான பாவங்களைக் காட்டிலும் மிகவும் அபாயகரமானவை. ஏனெனில் மாபெரும் பாவங்களுக்கு எதிராக காத்துக்கொள்வதிலேயே கவனமாயிருந்து, சிறு பாவங்களை அலட்சியப்படுத்துவோம். ஒவ்வொருவரும் இயல்பாகவே சிங்கம், கரடி, பாம்புகளைக் குறித்து கவனமாய் இருப்போம். ஆனால் சிறு நரிகள் கவர்ந்திழுக்கும் தோற்றம் உடையவைகளாதலாலும், கபடற்ற குணமுடையவைகளாக தோன்றுவதாலும், அவைகளிடத்தில் கசப்பான அனுபவம் அடைந்திருந்தால் ஒழிய, அவைகளைக் குறித்த பயம் இருக்காது அல்லது ஓரளவே பயமிருக்கும். ஆனால் இந்த சிறு மிருகங்கள் பிறாண்டும் தன்மையுடையவையாயிருந்து, பொதுவாக அவைகளோடு இடைப்படுகிற எல்லாவற்றையும் அழித்துவிடும்.

**திராட்சத்தோட்டங்களில் பூவும் பிஞ்சுமானவைகளை கவனமாய் பாதுகாத்தல் :–**

இந்த திராட்சத்தோட்டத்தை உதாரணமாகக் கொண்டு சாலமோன் ஞானி பேசுகையில், இந்த நரிகள் திராட்சை தோட்டங்கள்மேல் இயற்கையாக விசேஷவிருப்பம் கொண்டிருந்தபோதிலும், திராட்சை பரிசுத்தஆவியின் கனிகளைக் குறிக்கிறது. இந்த சிறுநரிகள் திராட்சச் செடிகளை தங்கள் கூர்மையான நகங்கள்கொண்டு பிறாண்டி, தங்கள் பற்களைக்கொண்டு அதன் வேர்கள் சிதைந்துபோகும்வரை தொடர்ந்து கடிப்பதுபோல், சிறு பாவங்கள் திராட்சச்செடியின் கிளைகளை பிறாண்டி, ஆவிக்குரிய திராட்சச்செடியின் வேர்களை தொடர்ந்து கடிக்கிறது. இவ்வாறு அதன் ஜீவனுக்கே ஆபத்தை வருவிக்கிறது. அவைகள் விலையேறப்பெற்ற திராட்சைகளை, அவை பிஞ்சும் பூவுமாயிருக்கும்போதே அழித்துவிடுகின்றன அல்லது விழுங்கிவிடுகின்றன. திராட்சச்செடிகள் உருவாகிறபோது மிக சிறியதாகவும், மென்மையாகவும், அதன் தண்டுகள் எளிதில் உடையக்கூடியதாகவும், எளிதில் கடித்துப்பிடுங்கி அழிக்கக்கூடியதாக இருக்கும். அவ்வாறே முதிர்ச்சியடையாத கிறிஸ்தவர்களது இருதயத்திலும், வாழ்க்கையிலும் ஆவிக்குரிய கனிகள் எளிதில் பாதிக்கப்படவோ, அழிந்து நாசமடையவோ நேரிடும். இதற்கு அவர்களது அக்கறையின்மை மற்றும் விழிப்பின்மை அல்லது சகோதரர்களுடைய நடக்கை காரணமாக இருக்கக்கூடும். பரலோக வழியில் நீண்ட [illegible] நடந்துவருகிற சகோதரர்கள், சற்றே ஆவிக்குரிய ஓட்டத்தை துவக்கியிருக்கிற சகோதரர்கள் முன்பாகவும், முதிர்ச்சியடையாதோர் முன்பாகவும், மந்தையின் ஆட்டுக்குட்டிகள் முன்பாகவும், தங்கள் வார்த்தைகள் மற்றும்

-2689-

நடக்கைகளில் எவ்வளவு கவனமாக பாதுகாக்கவேண்டும்! விசுவாச ஓட்டத்தை தற்போது துவங்கியிருப்பவர்கள் முன்பாக, சகோதரர்கள் அன்பற்ற முறையில் குறைகூறுவது அல்லது விமர்சிப்பது, தீங்கை ஏற்படுத்துவதோடு, அன்பில் குறைவுபட்டிருப்பதையும், கிறிஸ்தவ முதிர்ச்சியின்மையையும் வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு தேவபுத்திரனும் சிறுசிறுகாரியங்களில் தங்களை பாதுகாத்து நடக்கவேண்டும். காணப்படுகிற பெரிய காரியங்களைப் பார்க்கிலும், கேலிப்பேச்சு போன்றவை சிலசமயங்களில் சபையில் அதிக தீங்கை ஏற்படுத்தும். சிறிது சிறிதாக உட்புகும் காரியங்கள், அடிக்கடி மனக்காயத்தை நிரந்தரமாய் ஏற்படுத்தும். பரிசுத்த காரியங்களைக் குறித்த வேடிக்கையான பேச்சு, பரிசுத்த வேத எழுத்துக்களை கேலிப்பொருளாக்கும். அதேபோல் சுயநலமாய் செய்யப்படும் சிறுசெயலும் பாதிப்பை ஏற்படுத்தும். இப்படிப்பட்ட காரியங்கள் கர்த்தரது திராட்சைத் தோட்டங்களின் கிளைகளுக்கு அதிக அழிவை ஏற்படுத்துவதோடு, விலையேறப்பெற்ற கனிகளையும் அழித்துவிடும் என்பதை ஒவ்வொருவரும் கவனித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, அன்பு சகோதரரே, இப்படிப்பட்ட சிறுநரிகளை, அதிகதிகமாய் கூர்ந்து கவனித்து, பிடிக்க போராடுவோமாக. நாம் ஒவ்வொருவரும் நம் சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் நம் சொந்த கனிகளை காத்துக்கொள்வதிலும், பிறரது கனிகளை காத்துக் கொள்வதிலும் விழித்திருந்து ஜெபித்திருப்போம். நம் கனிகளுக்கும் பிறரது கனிகளுக்கும் தடை ஏற்படாதபடியும், கனிகள் குறையாதபடியும் விழிப்பாய் ஜெபித்து காத்துக்கொள்வோமாக.

நன்மை அல்லது தீமையான காரியங்களில் நமது ஆதிக்கம் எவ்வளவு வல்லமைமிக்கது என்று புரிந்துகொள்வது நமக்கு கடினமாயிருக்கிறது. கவனமாக கூர்ந்து ஆராயாவிடில் அது அற்பமான விஷயமாக தோன்றும். ஆம்! இந்த சிறு நரிகள்! கவனக்குறைவான வார்த்தைகள், அரிதாகப் பேசப்பட்ட ஒரு சிந்தனை, அல்லது பொறுமையில்லாத ஒரு நொடியில் வெளிப்படும் சிந்தை, அதிருப்தியான சிறு சிறு முனகல்கள், ஏளனம் நிறைந்த ஒரு வார்த்தை அல்லது சிரிப்பு அல்லது பார்வை அல்லது வெறுப்போடு தோள்அசைத்தல், இப்படிப்பட்ட செயல்பாடுகள் நம் அனுதின வாழ்வில், நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு எதிராக கணக்கிடப்படுவதையும், மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு வித்திடுகிறது என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். நாம் நமது குணாதிசயத்தையும், சகோதரர்களது குணாதிசயங்களையும் ஊக்கத்தோடு கட்டிஎழுப்ப தேடவேண்டும். இந்த எல்லாக் காரியங்களையும் நம் கர்த்தர் கண்காணித்து குறித்துக்கொள்கிறார். “கொஞ்சத்தில் உண்மையுள்ளவன், அதிகத்திலும் உண்மையுள்ளவனாய் இருப்பான்”

-----------------

**--2690--**

# சகோதரர்களை முறையாகவோ,முறையற்றோ நியாயந்தீர்த்தல்

## proper & improper judgement of brethren

**திறவு வசனம் : நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே; அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்; மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்? – யாக்கோபு 4:12.**

யாக்கோபு அப்போஸ்தலன் இந்த நிருபத்தில் சபையில் பட்சபாதம் காண்பிக்கப்பட்டிருக்கிற உண்மையை ஆய்வுரையாகக் கூறுகிறார். சிலர் முறையான காரணமின்றி மற்றவர்களைப்போல உயர்வாக கனப்படுத்த தகுதியற்றவர்களாக நடத்தப்பட்டனர். இரண்டாம் அதிகாரத்தில் இந்த கருத்து குறிப்பாக கொண்டுவரப்பட்டது. சபைகூடுகையில் ஐஸ்வரியவான்கள் மற்றும் ஆதிக்கம் செலுத்துவோரில் சிலருக்கு முன்னுரிமை இடங்கள் கொடுக்கப்பட்டு, பெரும் மரியாதையோடும் மதிப்புடனும் நடத்தப்பட்டனர். தாழ்ந்தவர்களும் தரித்திரருமாயிருந்த மற்றவர்கள், தங்கள் தகுதி மற்றும் அந்தஸ்தில் குறைந்தவர்களாயிருந்ததால் ஒதுக்குப்புறமான இடங்கள் கொடுக்கப்பட்டு, அலட்சியமாக நடத்தப்பட்டனர். கர்த்தரது ஆலோசனைகளுக்கு மாறாக சகோதரர்கள்மேல் நியாயத்தீர்ப்பு செய்யப்பட்டது. குணாதிசயத்தின் நிலைப்பாட்டை ஒதுக்கிவிட்டு, மனிதர்களை கனப்படுத்தி நியாயந்தீர்க்கும்போது அது பாவமாகும் என அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிக்கிறார். நியாயப்பிரமாணத்தைத் தந்தவர் யேகோவா தேவனே. ஆகவே ஒரே மாபெரும் தராதரம் மட்டுமே இருக்கமுடியும். அவர் பல்வேறு பிரதிநிதிகளை நியமித்தபோதிலும் அந்த தராதரமாகிய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவரே அதை செயலாக்கம் செய்பவராயும் இருப்பார். அவரது விசேஷித்த பிரதிநிதிகளாக கிறிஸ்துவும் அவரது சபையாரும் அவரோடுகூட மகிமையில் இணைந்து நியாயாதிபதிகளாக இருப்பர். ஆனால் இவர்கள் மாபெரும் பிரமாணம் தந்தவருடைய தராதரத்தின்படி நியாயந்தீர்ப்பார்கள். மேலும் இந்த பிரமாணத்துக்கு எதிராக வேறு எந்த பிரமாணமும் இல்லை.

இதுவே நிகழ்வாக இருந்துவருவதால், இந்த ஏற்பாட்டின்படி நாம் தேவபிள்ளைகளாக அங்கீகரிக்கப்படுகிறோம். எந்தளவுக்கு தெய்வீக தயவு அல்லது தயவின்மை இந்த வகுப்பார் ஒவ்வொருவரும் பெற்றிருப்பார்கள் என்று அளவிட யாரால்கூடும்? இந்த வகுப்பாரில், இவர் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார் என்றும், இவர் ஜீவனுக்கு இரட்சிப்படைவார் என்றும் யாரால் கூறமுடியும்? தேவன் தம் குடும்பத்தில் ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரிடமும் தனிப்பட்டமுறையில் தொடர்பு வைத்திருக்கிறார். தேவனால் ஒருவர் இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது, அந்த நபரிடத்திலிருந்த சில காரியங்கள் அவர் பார்வைக்கு பிரியமாய் இருந்திருக்கிறது என்பதற்கான ஆதாரத்தையே காட்டுகிறது. பிரமாணத்தைக் கொடுத்தவர், ஒருவர் தம்மில் போதுமான அன்புடையவராக இருப்பார் என்று தெரிந்தெடுத்து, அவரை தம் பரிசுத்தஆவியினால் அபிஷேகம் செய்திருப்பாராகில், தேவன் தமக்கு தகுதியுடையவராக அங்கீகரித்த அந்த நபரை கண்டனம்செய்ய ஒருவருக்கு என்ன உரிமையுண்டு?

**தற்போது நியாயந்தீர்க்க சபையார் ஆற்றல் குறைந்தவர்கள்**

தனிப்பட்ட நபரிடத்தில் ஒருசில குணங்கள் ஓரளவு அநீதியாகவும், நியாயமற்றதாயும் காணப்படுவதை நாம் பார்த்திருப்போம். ஆனால் நாம் நியாயந்தீர்க்கக்கூடாது. இருதயத்திற்குள் இருப்பதை நம்மால் காணமுடியாது. ஒரு குறிப்பிட்ட நபர் ஜெயங்கொள்பவராக இருப்பார் என்று நாம் யூகித்திருப்போம், அல்லது ஒருவர் ஜெயங்கொள்ளமாட்டார் என்று அனுமானித்திருப்போம், ஆனால் அந்த நபர் இரண்டில் ஒன்றாக இருப்பார் என்பது நிச்சயம். ஆகவே நாம் காலம் வருமுன் எதைக்குறித்தும் நியாயந்தீர்க்கக்கூடாது. சகோதரரை நியாயந்தீர்ப்பதை நாம் தவிர்க்கவேண்டும்.

இவ்வாறு சொல்வது, தேவனிடத்தில் நேர்மையில்லாதிருப்பவரின் செயல்பாடுகளை நம்மால் கண்டுணரமுடியாது என்று அர்த்தமாகாது. ஆனால் நம் சொந்த நிலைப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு பதிலாக, நம் கர்த்தர் கொடுத்திருக்கிற ஒரே நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு, நமக்கும் பிறருக்கும் பொருத்திப் பார்க்கவேண்டும்; அவரது நிலைப்பாடு என்னவென்றால்,

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்றார்" – லூக்கா 10:27.இதுவே தேவனது மாபெரும் பிரமாணத்தின் சாரமாகும். நாம் எந்தளவு தேவனை நேசிக்கிறோம், நமது அயலாரை நம்மைப்போல் நேசிக்கிறோம் என்று இந்த பிரமாணத்தைக் கொண்டு நம்மை நாமே நிதானிக்கவேண்டும். இதுவே நியாயந்தீர்த்தலின் நமது தலையான பணியாகும்.

குறிப்பாக சபையில் யாராகிலும் ஒருவர் தேவனது பிரமாணத்துக்கு எதிராக மீறுதல்செய்யும்படி ஜீவித்தால், சபையார் இக்காரியத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் பவுல் சுட்டிக்காண்பிக்கிறார். கர்த்தரது பிரமாணத்திலிருந்து வெளித்தோற்றமாகவே விலகிப் போகிறவர்களுக்கு மட்டுமே இந்த நடவடிக்கை பொருந்தும், மற்ற விஷயங்களுக்கல்ல. தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ள நீதியின் கொள்கைகளுக்கு ஊறு விளைவித்தாலேயே இது பொருந்தும். நம்மை நிஜமாகவே காயப்படுத்தின நபரை நாம் அறியநேரும்போது, அவரிடம் தனித்து நாம் செல்லவேண்டும். அவர் செவிசாய்க்க மறுப்பாரானால் இரண்டு அல்லது மூன்று சகோதரர்களை சபையிலிருந்து அழைத்துச்செல்லவேண்டும். அப்போதும் அவர் தவறுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பாரானால், இக்காரியம் சபையாரின் கவனத்துக்கு முறைப்படி கொண்டுசெல்லப்பட வேண்டும்.இது நடைபெறும் காலத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட

அந்த சகோதரனது அங்கீகாரத்தை துண்டிக்கக்கூடாது. அவர் தொடர்ந்து தெய்வீக ஏற்பாட்டிற்கு எதிராக செய்துவரும்போது மட்டுமே சபை ஐக்கியத்திலிருந்து விலக்கவேண்டும். அல்லது கடும் குற்றம் சுமத்தப்பட்ட நபர், அதற்கான இழப்புக்கு ஈடுசெய்ய மறுத்தால், ஐக்கியத்திலிருந்து விலக்கப்படவேண்டும்.

பிறரை நியாயந்தீர்ப்பது நமது பணியல்ல, மாறாக கூடுமானவரை நம்மை உன்னத நிலைப்பாட்டிற்குக் உயர்த்தவே நம்மை நாமே நிதானிக்கிறோம். நமது நற்கிரியைகள் பிறரால் அறியப்படும்போது, அவர்கள் பரலோகத்திலுள்ள நம் பிதாவை மகிமைப்படுத்துவார்கள். கர்த்தரே தம் ஜனங்களை நியாயந்தீர்ப்பார். கர்த்தருடைய குடும்பத்தில் அங்கமாகிய ஒருவர், தன் உடன்படிக்கைக்கு எதிராக நடந்துகொள்ளும்போது, கர்த்தர் தம் விஷயத்தை கவனித்துக்கொள்வார் என்று நாம் யூகிக்கவேண்டும். அவரது நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு, பிறரை நியாயந்தீர்க்கக்கூடாது. ஒருவரது வெளித்தோற்ற நடக்கை தவறாக இருக்கும்போது மட்டுமே நாம் கவனிக்கமுடியும். இவ்விடத்தில் நாம் தவறுசெய்ய நேரிடலாம். ஆனால் இருதயத்தினை நம்மால் நிதானிக்கமுடியாது. தேவனது ஆற்றலால் மட்டுமே இது கூடும். தேவனே பிரமாணத்தைக் கொடுத்தவர், அந்த பிரமாணத்தை அந்த நபர் கடைப்பிடிக்க தேடுகிறாரா என்று தேவனே தீர்மானிப்பார்.

**புதிய சிருஷ்டிகளுக்கான நியாயத்தீர்ப்பின் நிலைப்பாடு**

அப்போஸ்தலர் பவுல் சபையாருக்கு கூறுகிறார் ; "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது"–ரோமர் 6:14

ஆனால் நமது திறவுகோல் வசனத்தில் யாக்கோபு அப்போஸ்தலன் நாம் நியாயப்பிரமாணத்துக்கும் பிரமாணத்தைத் தந்தவருக்கும் உட்பட்டவர்கள் என்று பொருள்படும்வகையில் பேசுவதாகத் தோன்றுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வேதப்பகுதிகளையும் எப்படி நாம் இசைவாக்க முடியும் ? இதற்கு பதிலுரையாக நாம் கூறுவது; நீங்கள் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்களல்ல என்று நியாயப்பிரமாண உடன்படிக்கையை பொருள்படுத்தியே பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். தேவன் முற்காலத்து இஸ்ரயேலரோடு செய்துகொண்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையானது தேவனுடைய பிரமாணத்துக்கு வேறுபட்டது. கர்த்தருக்கும் இஸ்ரயேலருக்கும் இடையிலான ஒப்பந்தமானது,, தேவன் என்னசெய்யவேண்டும் ? இஸ்ரயேலர் எதை செய்யவேண்டுமென வலியுறுத்துகிறது. அவர்கள் இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆனால் புறஜாதியார் இந்த நியாயப்பிரமாணத்துக்கு ஒருபோதும் கீழ்ப்பட்டிருக்கவில்லை. அவர்கள் தேவனற்றவர்–களாயிருந்தனர்.

"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்"(ரோமர் 8:4) என்று பவுல் அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். தேவனுடைய பிரமாணத்தை தங்களுடைய உடன்படிக்கைக்கு உட்பட்டு கடைப்பிடிக்க சுபாவ இஸ்ரயேலரால் கூடாமற் போனபோதிலும், சுவிசேஷசபையாகிய நாம், நமது உடன்படிக்கைக்கு கீழ் அதை கடைப்பிடிக்கமுடியும். சுவிசேஷயுகத்துக்கான தேவனுடைய ஒப்பந்தத்தின்படி புதியசிருஷ்டிகள் மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றனர். இவர்களது மாம்சம் மரித்ததாகக் கருதப்படுகிறது. புதியசிருஷ்டிகள் தேவனுடைய குடும்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் அதேவேளையில், அவர்கள் தொடர்ந்து அபூரண மாம்ச சரீரத்திலேயே இயங்கும்படி அனுமதிக்கப்படுகின்றனர். இந்த சரீரத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க தன்னால் இயன்றதைச் செய்து, தேவமகிமையை விளங்கச்செய்யவேண்டும். அவன் தன் இருதயத்தில், தன் சிந்தையில், தன் முயற்சிகளில், புதிய சிருஷ்டியாக இருந்து, அதன்படிசெய்து, ஒருபுதிய சிருஷ்டியாக தேவனுடைய பிரமாணத்தை பூரணமாக கடைப்பிடிக்கலாம்.

அழிந்துபோகும் சரீரத்தின் அபூரண செயல்பாடுகள் எதையும் தீர்மானிக்கப்போவதில்லை. மாறாக, புதியசிருஷ்டியின் இருதய நோக்கங்களும் முயற்சிகளுமே தீர்மானிக்கப்படுகின்றன. பவுல் அப்போஸ்தலன் நமக்குக் கூறுவதுபோல், சரீரம் அடக்கப்பட்டு கீழ்ப்படுத்தப்பட வேண்டும். சபையைப் பொருத்தவரையிலும் தெய்வீக பிரமாணத்தின் நியாயத்தீர்ப்பின்கீழ், தெய்வீக பிரமாணத்தைக் கொடுத்தவரிடத்தில், புதியசிருஷ்டி ஜீவித்திருக்கும் அல்லது மரித்திருக்கும். நமது திறவு வசனத்திற்கு இணக்கமாக அப்போஸ்தலர் பவுல் தரும் கருத்து யாதெனில், உலகமோ, சகோதரரோ அவனை நியாயந்தீர்க்க திறனற்றவர்கள் என்பதேயாகும். கர்த்தரால் மட்டுமே இருதயத்தையும் அதன் எல்லா நிலைமைகளையும் எதிர்த்துப் போராடவேண்டிய சோதனைகளையும் பலவீனங்களையும் அறியவும், முறையாக நியாயந்தீர்க்கவும் முடியும். "நானும் என்னைக்குறித்து தீர்ப்புச் சொல்லுகிறதில்லை"(1கொரிந் 4:3) என்று பவுல் அப்போஸ்தலனும் தீர்மானமாகக் கூறுகிறார். கர்த்தருடைய குழந்தைகளாக சுத்த மனசாட்சியின்படி நடக்கிறேன் என்று கூறுவோர், நாம் இவ்வாறு நடக்க உண்மையாகவே கடும் முயற்சி செய்கிறோம் என்றால், பிறரை குறைகூறி தீர்ப்பிடவோ, நம்மைநாமே ஆகாதவனென்று தீர்க்கவோ கூடாது. அனுதினமும் இலக்கைநோக்கி ஓட நோக்கங்கொண்டு, கர்த்தருடைய கிருபையின் சகாயத்தினால் பரிசுத்தஆவியின் கனிகளை விளையச்செய்யவும் நம் குருவுக்கு ஊழியம் செய்யவும் நம்மால் இயன்ற அளவுசெய்து, முடிவுகள் அனைத்தையும் அவரிடமே விட்டுவிடுவோமாக.

**--2692--**

----------

# கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்

கர்த்தரைத் தொழுதுகொள்வதிலும், அவரது வசனத்தை ஆராய்வதிலும் பவுலும், பர்னபாவும் அந்தியோகியாவிலுள்ள சபையாரோடு அதிகமான காலம் செலவிட்டனர். இந்த வேதப்பாடங்களின் விளைவாகச் சபையார் ஒட்டுமொத்தமாக வளர்ச்சியடைந்தனர் மற்றும் சுவிசேஷத்தைப் பரப்பிடுவதற்கான வழிவகைகளைக் குறித்து ஜெபிப்பதற்கும், கருதுவதற்குமுரிய நிலைக்கு வந்தார்கள். சபையில் அநேகத் தீர்க்கத்தரிசிகள் (public orators - பொதுப் பேச்சாளர்கள்) மற்றும் போதகர்கள் காணப்பட்டனர்; மற்றும் இவர்களை எப்படித் தேவனுக்கு மகிமை சேர்க்கும் விதமாகவும் மற்றும் தாங்கள் எப்படிச் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டார்களோ, அப்படியே மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படும் விதமாகவும் பயன்படுத்திடலாம் என்று சபையார் சிந்திக்கத் துவங்கினார்கள்.

இப்படிதான் சத்தியத்தினை நல்லதும், நேர்மையுமான இருதயங்களில் ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரின் காரியமாக எப்போதும் காணப்படுகின்றது. தாங்கள் போஷிக்கப்படுவதற்கும், கர்த்தரில் பலமடைவதற்கும் விரும்புகின்றனர். சத்தியம் ஏற்றுக்கொள்ளப்படுகையில், அது ஒரு பலத்தையும் மற்றும் அந்தப் பலத்தைப் பயன்படுத்துவதற்கான வாஞ்சையையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது அன்றுபோன்று, இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது. சத்தியம் கொண்டுவருகின்றதான பரிசுத்தமாக்கப்படுதலானது, நம்முடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலோடு துவங்குகின்றது; மற்றும் ஊழியம் புரிவதற்கான ஆற்றலானது, ஆவியின் உயிர்ப்பிக்கப்படுதலுடன் தொடர்புடையதாய் இருக்கின்றது.

அந்தியோகியா சபையில், அவர்களது தேவைக்கும் அதிகமாய்ப் போதகர்கள் காணப்பட்டனர் மற்றும் ஊழியம் புரிவதற்கான பெரிய வாய்ப்புகளைத் தேடிடுவதற்கு அவர்கள் துவங்கினார்கள். அவர்கள் எந்த வழிமுறையைத் தாங்கள் பின்பற்றிட வேண்டும் என்பதைக்குறித்துத் தெளிவற்றுக் காணப்பட்டபடியால், அவர்கள் சபையின் மெய்யான தலையாகிய கர்த்தரை நோக்கிப்பார்த்தார்கள். அவர்கள் உபவாசமிருந்தனர் மற்றும் அவர்கள் ஜெபமும் ஏறெடுத்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமே. அதன் விளைவாக, கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் வேலைக்கான பிரதிநிதிகளெனத் தங்கள் மத்தியில் காணப்பட்ட பர்னபாவையும், பவுலையும் அனுப்பிவைப்பதற்கான முடிவிற்கு வந்தார்கள்.

எப்படி இந்தத் தீர்மானத்திற்கு வரக் கர்த்தர் அவர்களை வழிநடத்தினார் என்பது குறித்து நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. நாம் இன்று இதே காரியம் போன்ற காரியத்தை கருத்தில் எடுத்துக்கொண்டு, "வேதவாக்கியங்களை ஆராய்ந்து, ஜெபம்பண்ணி, கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கு நாடின பிற்பாடு, நம் மத்தியில் காணப்படும் இன்னின்ன நபர்கள் சத்தியத்திற்கடுத்த பொது ஊழியங்களுக்குச் செல்ல வேண்டும் என்பது அவரது சித்தமாயிருக்கும் என்று நாம் நம்புகின்றோம். பெருமை அல்லது பேராசை அல்லது பணநோக்கத்தினால் இல்லாமல், பரிசுத்த ஆவியினாலேயே இந்த முடிவிற்கு நேராய் நாம் வழிநடத்தப்பட்டிருக்கின்றோம் என்று நாம் நம்புகின்றோம். மற்றவர்களுக்கு வெளிச்சத்தை எடுத்துச் செல்வதற்கு இந்தப் பிரதிநிதிகளைச் சபையாராக நாம் அனுப்பிவைப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கும் என்று நாம் நம்புகின்றோம்" என்று கூறுவது போன்றே - அன்று அவர்களது காரியம் காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

இது தங்கள் கடமை மற்றும் சிலாக்கியம் என்று ஏதோ விதத்தில் அந்தியோகியாவின் சபையாருக்குப் பலமாய்த் தோன்றியுள்ளது. இந்த ஊழியத்திற்குச் சபையார் தங்கள் சிறந்த பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து, இப்படியாகச் சுயத்தைப் பலிச்செலுத்தும் ஆவியினை வெளிப்படுத்தினது கவனிக்கப்படத்தக்கது. இதற்கேற்ப கர்த்தர் சபையாரை ஆசீர்வதித்து மற்றும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் ஊழியத்திற்கென்று மிகவும் தாலந்துமிக்க இந்த இரண்டு சகோதரர்களைச் சபையார் கொடுத்ததில் அடைந்திட்ட இழப்பினைக் கர்த்தர் ஈடுகட்டியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

## ஏற்படுத்துதலும், கைகளை வைக்குதலும்

காரியம் முடிவுபண்ணப்பட்டிருக்க, சபையார் உபவாசமிருந்து, ஜெபம்பண்ணி, பவுல் மற்றும் பர்னபா மீது கைகளை வைத்து, வாழ்த்துக்களுடன் இருவரையும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் அவர்களது சுற்றுப் பயணத்திற்கு அனுப்பி வைத்தார்கள். சபையாருடைய பிரதிநிதிகளாகிய மூப்பர்கள் வாயிலாகவே அநேகமாக கைகளை வைத்தலானது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்படிச் செய்யப்பட்டது, இன்று பரவலாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றதான "ஏற்படுத்துதல்"/ordination அல்ல; ஏனெனில் பவுலும், பர்னபாவும் அந்தியோகியாவிலுள்ள சபையில் காணப்பட்ட பிரதானமான போதகர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மத்தியில் அடங்குபவர்களாக நீண்டகாலமாய் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருந்தனர். அது இன்று பல்வேறு பிரிவினர்களிலுள்ள கிறிஸ்தவர்கள் மத்தியில் *ஏற்படுத்துதல்* குறித்து புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது போன்று, பிரசங்கிப்பதற்கான அதிகாரம் வழங்குதலைக் குறிக்கிறதில்லை.

அவ்வனுசரிப்பின் எளிமையான அர்த்தமாவது: "அந்தியோகியா சபையாராகிய நாங்கள், எங்களது பிரதிநிதிகளாகிய மூப்பர்கள் இப்படிக் கைகளை வைப்பதன் வாயிலாக, பவுல் மற்றும் பர்னபாவாகிய இவ்விரண்டு மனுஷர்களையும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான சுற்றுப் பிரயாணமாக அனுப்பிவைக்கின்றோம்; அவர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளாக மாத்திரமல்லாமல், அந்தியோகியாவிலுள்ள கர்த்தருடைய சபையின் பிரதிநிதியாகவும்கூடக் கடந்துசெல்கின்றனர்; மற்றும் இவர்களுக்குரிய பராமரிப்பிற்கான வழிவகைகளை நாங்களே பொறுப்பேற்றுக்கொள்கின்றோம். அவர்களுக்குத் தேவையான ஆதரவுகளை நாங்கள் சந்தித்திடுவோம் மற்றும் இப்படியாக உடன் வேலையாட்களாக, அவர்களது பிரயாசங்களில் பங்கெடுத்து, அவர்களது சிரமங்களிலும், சோதனைகளிலும் பரிவுகொண்டு, அவர்களது தேவைகளில் உதவிபுரிந்து, அவர்களது பிரயாசங்களின் விளைவாக வரும்பலன்கள் எதிலும்கூட நாங்கள் பங்கெடுத்திடுவோம்" என்பதேயாகும்.

சமயத்தைப் பரப்பிடுவதற்கான இந்தச் சுற்றுப்பயணத்திற்குப் பிற்பாடு, இவ்விரண்டு சகோதரரும் அந்தியோகியாவிற்குத் திரும்பி, தகவல் அறிக்கையினைக் கொடுத்திட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். ஆனால் பிற்பாடு அந்தியோகியாவிலுள்ள சபையைச் சார்ந்திராமலும் - இப்படியான எந்த ஜெபித்தல்களும் மற்றும் கைகள் வைக்குதல் இல்லாமலும் மற்றும் பிரயாசங்களுக்கான பலன் குறித்த அறிக்கைகள் கொடுக்காமலும் அப்போஸ்தலன் பவுல் பிரயாணம் மேற்கொண்டார் என்பதாகத் தெரிகின்றது - ஆனாலும் நாம் நிதானிக்க முடிந்தவரை அச்சபையார் மீது அன்பும், அவர்களிடத்தில் பரிவும் அவர் தொடர்ந்து வைத்தவராகவே இருந்தார்.

---

# சுவாரசியமான கடிதங்கள்

## *தெளிந்த புத்தியின் ஆவி*

மிகவும் அன்புக்குரிய பாஸ்டர் அவர்களே:-

நான் எந்தப் பெயரையோ அல்லது முகவரியையோ குறிப்பிடுகிறதில்லை; ஏனெனில் இப்படிக் குறிப்பிடுவது ஞானமாய் இருக்கமென எனக்குத் தோன்றவில்லை மற்றும் ஒருவேளை தகுதியாய் இராது என்று நீங்கள் கருதுவீர்களானால், இந்தக் கடிதத்தை நீங்கள் குறிப்பிட வேண்டாம். இல்லையேல் டவர் வெளியீட்டில் உங்களால் வெளியிடக்கூடுமானால், நீங்கள் வெளியிடுவதற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

_________ என்ற இடத்திலிருந்து வந்த சகோதரி ஒருவர், அச்சபையில் 1925-ஆம் வருடம் வரை சபையானது மகிமைப்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட முடியாது என்றும்; இது உங்களுடைய கருத்தாகவும் இருக்கின்றது என்றும் போதிப்பதாக எங்களிடம் தெரிவித்தார்கள்; இதன் விளைவு உணர்வற்ற ஆவியினை உண்டுபண்ணுகின்றது மற்றும் அநேகர் தொழில் காரியங்களிலும், லௌகீக காரியங்களிலும் பெரிதும் நாட்டம் கொள்கின்றனர். அப்படி இருந்தாலும் சரி அல்லது இல்லாவிட்டாலும் சரி, அது என்னைப் பொறுத்தவரையில் நான் ஆயத்தமாய்க் காணப்படத்தக்கதாக நான் விழிப்பாய் இருப்பதற்கும், அரைகளில் கச்சைக் கட்டிக்கொண்டும், விளக்கை எரியப்பெற்றும், "விழித்திருந்து, காத்திருப்பதற்கும்" ஏவுகின்றதாய் இருக்கின்றது.

ஐந்து வருடங்கள் காலமாக "தற்கால சத்தியத்தினுடைய" மகிமையான செய்தியினை நான் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு காணப்படுகின்றேன் மற்றும் அது எப்போதும் மிகவும் விலையேறப்பெற்றதாகிக்கொண்டு வருகின்றது. நான் இங்கிலாந்து சபையில் வளர்க்கப்பட்டேன் மற்றும் ஆக்ஸ்போர்ட்டில் வாழ்ந்தேன்; அது மிகவும் பெரிய சபையாய் இருந்தபடியால், நீங்களே அறிவீர்கள் நான் எவ்வளவுக்கு முன்பு கற்றுள்ளவைகளை ஒழிக்க வேண்டியிருந்திருக்கும்.

அருமையான சகோதரனே, உங்களை "அந்த ஊழியக்காரனாக" தேவன் எழுப்பியுள்ளதற்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கின்றேன். நீங்கள் எங்களுக்கு "ஏற்றகால சத்தியத்தினைக்" கொடுக்கத்தக்கதாக, தேவன் உங்களை இன்னும் அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பாராக. இந்தப் பயங்கரமான போர் நடைப்பெறுவதற்கு முன்னதாக, அருமை கர்த்தர் என்னை இந்த நாட்டிற்குக் கொண்டுவந்ததற்காகவும் மற்றும் என்னுடைய ஜனங்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டு, நான் நம்பிக்கைக் குலைந்திருக்க, "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றனர்" என்று என்னைப் புரிந்துகொள்ள செய்ததற்காகவும், நான் அவருக்கு நன்றி ஏறெடுக்கின்றேன்.

நான் குறிப்பிடுவதற்கு விரும்புகின்ற இன்னொரு சிறு காரியம் இருக்கின்றது. நான் கலந்து கொள்ளும் சபையின் மூப்பர் ஒருபோதும் ஆயத்தமாய்க் காணப்படுகிறதில்லை. கூட்டங்களில் அந்நாளுக்கான மன்னா வசனம் எங்கிருக்கிறது என்பது அவருக்குத் தெரியாது மற்றும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டமாக இருப்பினும், அவர் தற்போதைய நாட்டு நடப்புகள் மற்றும் போர் ஆபத்துக்கள் குறித்த தனது கண்ணோட்டங்களைக் கொடுப்பதிலேயே அதிக நேரம் எடுத்துக்கொள்வார். வேறு யாருக்கும் நேரம் கிடைக்கிறதில்லை.

நான் குறைக்கூறுகின்றேன் என்று நீங்கள் எண்ண மாட்டீர்கள் என்று நம்புகின்றேன்; நான் பெரிதும் மதிப்பதற்குப் பழகியுள்ளதான இந்தச் சிறிய பழைய சபையில் மூப்பர் கொட்டாவி விட்டுக் கொண்டும், உறங்கிக்கொண்டும் அல்லது தனது நகங்களையும், பற்களையும் குத்திக்கொண்டும் இருப்பது - மிகவும் ஒவ்வாதவைகளாகக் காணப்படுகின்றன! இவர் தனது மூன்று வயது குழந்தையையும் தன்னோடு அழைத்துவந்து, சபையாருக்கு மிகுந்த தொந்தரவு ஏற்படுத்துகின்றவராய் இருக்கின்றார். இவர் 15 வருடங்களாகச் சத்தியத்தில் காணப்படுவதாகக் கூறுவதால், இவரிடத்தில் எதையும் கூறிட யாரும் விரும்புகிறதில்லை. இவர் விசேஷமாய் ஒரு தொழிலதிபராக இருப்பதினால், ஆவிக்குரிய விஷயத்தில் இவரால் நாங்கள் உதவப்படுவதாக எங்களுக்குத் தோன்றுகிறதில்லை. கூட்டம் துவங்குவதற்கு முன்னதாக, இவர் தொழில்குறித்துப் பேசுகின்றார் மற்றும் முடிந்த மாத்திரத்தில் கடையைக்குறித்துப் பேசுகின்றார்.

ஓ! அருமையான சகோதரனே, நான் தீமையாய்ச் சிந்திப்பதற்கோ அல்லது தீமையாய்ப் பேசிடுவதற்கோ விரும்புகிறதில்லை! இது விஷயமாக எங்களில் அநேகர் ஜெபம் ஏறெடுத்துள்ளனர். குழந்தைகளினாலும் எங்களுக்குத் தொந்தரவு ஏற்படுகின்றது; ஆனாலும் நான் கடுமையான ஆங்கில வர்க்கக்கருத்துக்களை உடையவளாய் இருக்கின்றேனென என்னிடம் சொல்லப்படுகிறதினால், இக்காரியம் குறித்துப்பேசிட நான் துணிகிறதில்லை. அவரது உணர்வுகளைக் காயப்படுத்த நான் விரும்பவில்லை; ஆகையால் நான் தவறு செய்கிறேனாகில், நான் எழுதியுள்ளவைகளைப் புறக்கணித்து விடுங்கள். நான் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிடுவதற்கும் மற்றும் எனது பெருமையினைக் கீழ்ப்படுத்தி வைப்பதற்கும் மற்றும் அருமை ஆண்டவர் செய்தது போன்று என்னையே வெறுமையாக்கிடுவதற்கும் முயற்சித்துக்கொண்டிருக்கின்றேன் என்று அருமை கர்த்தர் அறிவார். உங்கள் விலையேறப்பெற்ற நேரத்தை எடுத்துக்கொண்டதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் அருமை பாஸ்டர் அவர்களே,

அவரது கிருபையில் உங்கள் சகோதரி.

**இதழாசிரியரின் பதில்:**

தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தெளிந்த புத்தியுள்ள ஆவியினை - அவரது ஆவியினை, அவரது மனதைக் கொடுப்பதாக அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். ஆனால் இதை நமது நேர்மைக்கும், கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் செவிசாய்ப்பதற்கும் ஏற்ப நாம் பெற்றுக்கொள்வோம். எவ்வளவு அதிக காலமாய் நாம் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் காணப்படுகின்றோமோ, நாம் சரியான மாணவர்களாய்க் காணப்படுவோமானால், நாம் அவரை நன்கு அறிந்திருப்போம் மற்றும் அவரது குணலட்சணத்தையும், போதனைகளையும் மாதிரிப்படுத்த நன்கு முடிகிறவர்களாகவும் காணப்படுவோம்.

கடிதத்தை எழுதினவரின் பெயர் தெரியாதபடியாலும், யார் அந்த மூப்பர் என்பது குறித்துக் கொஞ்சமும் எங்களால் அறியமுடியவில்லை. அவர் நல்நோக்கமுடையவராகவே காணப்படுவார் என்று நாம் பாவித்துக்கொள்ளலாம். எனினும் கர்த்தருக்கு ஊழியம்புரியும் விஷயத்தில், தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியினை மாதிரித்துவப்படுத்துவதற்குப் போதுமாய் விழித்துக்கொள்ளவில்லை என்றும் நாம் பாவித்துக்கொள்ளலாம். இல்லையேல் அவர், தான் தேவனை மகிமைப்படுத்தத்தக்கதாகவும், அவரது ஜனங்களுக்கு மிகவும் உதவிகரமாகக் காணப்படத்தக்கதாகவும் இருப்பதற்கென்று தனது கிரியைகளிலும், வார்த்தைகளிலும் மிகவும் ஜாக்கிரதையாய் இருந்திருப்பாரல்லவா?

பயபக்தி குறைப்பாடானது எங்கும் வெளிப்படுகின்றது, ஆனால் அது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் கூடுகைகளில் விசேஷமாகப் பொருத்தமற்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது. நாம் ஏற்கெனவே சொன்னதுபோன்று, நாம் மறுபடியுமாகச் சொல்வதென்னவெனில், நம்முடைய தாலந்துகள் எவ்வளவு குறைவாக இருப்பினும், நம்முடைய கிரியைகள் வாயிலாகவும் மற்றும் செயல்வகை பாணியின் வாயிலாகவும், இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்துவந்தவருடைய புண்ணியங்களை அதிகமதிகமாக நாம் பேசிடலாம்.


வாட்ச் டவர் வெளியீடு என்ன கூறுகின்றது என்று தாங்கள் நம்புவதாகத் தெரிவித்தும், அதன் போதனைகள் குறித்துத் தவறாய் விவரம் கூறிக்கொண்டும் அருமையான நண்பர்களில் அநேகர் காணப்படுகின்றனர். இவர்கள் அதன் போதனைகளுக்கு அதிகம் செவிக்கொடுத்திடவில்லை என்பதே நமது அன்பான கருத்தாய் இருக்கின்றது. இல்லையேல் அதன் பத்திகளினின்று 1925-ஆம் வருடத்தையோ, வேறு ஏதேனும் வருடத்தையோ நாங்கள் எதிர்நோக்கிக்கொண்டிருக்கவில்லை என்பதை இவர்கள் அறிந்துகொண்டிருப்பார்கள். வாட்ச் டவரில் நாங்கள் விளக்கமாகத் தெரிவித்துள்ளது போன்று, நாங்கள் தொடர்ந்து கடந்துபோய்க்கொண்டிருக்கின்றோம்; எங்களால் கடைசியாக தெரிவிக்கப்பட்ட வருடமானது, கடந்துபோய் ஒருவருடத்திற்கும் மேலாகிவிட்டது.

---

# பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின் யுத்தம்
# The Christian's warfare against pride

“எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்’’ – 2கொரிந் 10:4,5.

சிலுவைவீரர்கள், உலகத்திலுள்ள நாடுகளின் போர்வீரர்களிடமிருந்து வேறுபட்ட தன்மையுடை–யவர்களாயும், வித்தியாசமான ஆயுதங்களைத் தரித்தவர்களாயும் விளங்குகின்றனர். நமது போராட்டம் உலகத்தின் ஆவிக்கு எதிராயும், மாம்சத்துக்கு எதிராயும் போராடுவது. நம் முன்சந்ததியினர் கீழ்ப்படியாமையின் மூலமாக நம் மாம்சத்தில் எழும் அபூரணங்களுக்கெதிராயும் போராடுவதோடு நில்லாமல், பலிசெலுத்துவதற்கு சுபாவத்திலேயே எதிர்த்து நிற்கும் மாம்சத்துக்கு எதிரான போராட்டமாகும். மாம்சம் அறிவின் உள்ளுணர்வுக்கு செவிகொடுக்காமல் போராடி, பலிசெலுத்துவதை தவிர்க்கப் பார்க்கிறது. எல்லாவற்றிற்கும்மேலாக, கண்ணில் காணமுடியாத ஆவிக்குரிய விரோதிகளுக்கு எதிராக நமது போராட்டம் இருக்கிறது. உலகப் போர்வீரர்கள் தங்கள் போராட்டத்துக்கு வாள்களையும் துப்பாக்கிகளையும் ஆயுதங்களாக வைத்துள்ளனர். நமக்கு கேடகமாக, நீதி என்னும் மார்ப்பதக்கத்தையும், இரட்சண்யமென்னும் தலைச்சீராவையும், விசுவாசமென்னும் கேடகத்தையும், ஆவியின் பட்டயத்தையும், சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையையும் நம் கர்த்தர் ஏற்பாடுசெய்திருக்கிறார். இவைகளில், பட்டயம் தவிர மற்றனைத்தும் பாதுகாக்கும் கேடகங்களே. பட்டயம் ஒரு தாக்குதல் நடத்தி முன்னேறுகிற ஒரு ஆயுதமாகும்– எபேசியர்6:11–18.



கிறிஸ்தவனது வாழ்க்கையின் நடவடிக்கைகளில் தேவ வசனமே ஆவியின் பட்டயமாகும். இது சாத்தானுக்கும் பாவத்துக்கும் எதிராக உபயோகித்து, நன்மையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ஆனால், உலகத்துக் கெதிராக நாம் போராட நியமிக்கப்படவில்லை, மாறாக கர்த்தருக்கு உண்மையும் நேர்மையுமாய் இருக்க போராடவேண்டும் என்பதே இந்த வசனம் வலியுறுத்தும் கருத்தாக இருக்கிறது. அதோடுகூட நம்முள் இருக்கிற பாவத்துக்கெதிராக போராடவும், நமது சட்ட வரம்புக்கு உட்பட்ட காரியங்களிலெல்லாம் முறையாக போரிடவும், விரோதியின் தாக்குதல்களை எதிர்த்துநின்று துரத்தவுமே நாம் பட்டயத்தை உபயோகிக்கவேண்டும். பலியின் ஜீவியத்தில் சுயத்தைக் கீழ்ப்படுத்துவதில் நம் வல்லமையை பிரயோகிப்பதே யுத்தத்தின் மாபெரும் பணியாக இருக்கிறது. தேவன் நமக்கு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தங்களின் முக்கியத்துவத்தை எந்தளவு உணர்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துகிறோமோ, அந்தளவுக்கு இந்த வாக்குத்தத்தங்கள் புதுசிருஷ்டிகளாகிய நம்மை பலப்படுத்தும்.

**மன ஆற்றலின் பலம் களையப்படவேண்டும் :–**

நம்மிடமுள்ள மனதின் திறன்களை அல்லது ஆற்றல்களை நமக்குநாமே களையவேண்டியதை அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கிறார். பாவம் நம் சிந்தையிலும் நம் கற்பனைகளிலும் வேரூன்றியிருக்கிறது. பல ஆயிரம் நூற்றாண்டுகளாக நம் சந்ததி பாவத்தின் பிடியில் கீழ்நோக்கி வேகமாக சரிந்துவருகிறது. பெருமை சுயநலம் மற்றும் பாவத்தின் பல்வேறு வகைகள் நம்மில் ஆழமாகப் பதிந்துகிடக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்கள் நமது அமைப்பை ஆழமான அகழிகளுக்குள் அமிழ்த்தியிருக்கின்றன. அங்கே அவைகள் ஸ்திரமாக கட்டுண்டிருக்கின்றன. ஆனால் பவுல் அப்போஸ்தலன் வலியுறுத்தும் வார்த்தைகள் இதோ;
“உங்கள் அழிந்துபோகக்கூடிய சரீரங்களில் பாவம் ஆளாதிருப்பதாக’’ என்கிறார். தேவ சித்தத்துக்கு உங்களை முழுவதும் கீழ்ப்படுத்துங்கள்.

இந்த பலம் வாய்ந்தவைகள் என்னென்ன என்று சுட்டிக்காண்பிக்கும்போது, அவை மனத்திறன்கள் அல்லது மனஆற்றல்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். “அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி...’’ நமது தர்க்கங்கள் பலவகைப்பட்டவையாயிருக்கலாம். தவறான போதனைகள் மற்றும் மூடநம்பிக்கைகள் கடந்த காலங்களின் பாதிப்புக்களாக நம்மை ஆட்கொண்டிருக்கலாம்.

கர்த்தருடைய வசனம் ஒன்றே இவைகளை நிர்மூலமாக்கவும், தேவனுடைய உண்மை குணாதி–சயத்தைக் காணவும் வழிநடத்துவதோடு, தற்போது சபைக்கான அவரது மகிமைநிறைந்த வாக்குத்தத்–தங்களையும் வருங்காலத்தில் உலகத்தின் ஜனங்கள் அடையவிருக்கும் வாக்குத்தத்தங்களையும் நாம் காணும்படி எடுத்துரைக்கிறது. கர்த்தருடைய வசனம் மட்டுமே கற்பனைகளை நிர்மூலமாக்க வல்லது. அறியாமை, மூடப்பழக்கங்கள், பெருமை, அசுத்தநோக்கங்கள், வீணான யூகங்கள் போன்றவைகளை நிர்மூலமாக்குவதுடன், நம் இருதயத்திலும் சிந்தையிலும் நடைபெறும் கிருபையின்

--2697--

பணியை தடைசெய்து, நேர்வழியிலிருந்து விலகாதபடி பாதுகாக்கிறது. தேவனுடைய ஆவிக்கும், உண்மை அறிவுக்கும் விரோதமாக சுபாவ சிந்தையை உசுப்பிவிடும் இந்த கற்பனைகளை, பெரிதான காரியங்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

நாம் பெரிதான காரியங்களின்பேரில் அக்கறைகொள்ளக்கூடாது. ஆனால் ஆவிக்குரிய பெரிதான காரியங்களில் அக்கறைகொள்ளக்கூடாது என்ற கருத்தில் அப்போஸ்தலர் பேசவில்லை. மற்றுமொருஇடத்தில் பவுல் பேசுகிறார் ;'' பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை–களையே நாடுங்கள்(கொலோ 3:2). வேறுவகையாக கூறுவோமானால், மிகவும் உன்னதமான ஆவிக்குரிய காரியங்களில் உங்கள் மனதை நிலைநிறுத்துங்கள். ஆனால் உலகிற்கடுத்த மேலான காரியங்கள் என்பவை வேறுபட்டவைகள். தேவனுக்குரியவைகளாகிய உண்மையான மேலான காரியங்களுக்கு எதிராக, உலகிற்கடுத்த மேலான காரியங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை உயர்த்திக்கொள்ளாமலும், பூமிக்குரிய குறிக்கோள்கள், திட்டங்களை ஏற்படுத்தி வெறுமையான மேன்மைகளால் இழுத்துச் செல்லாதபடியும், தாழ்ச்சியை அணிந்துகொள்ளவேண்டும். மனுஷர்களிடையே தங்களுக்கென ஒரு இடத்தை விரும்புவது மற்றும் சமுதாயத்தில் மதிப்புள்ளவனாக உயர்த்துவது, சொத்து புகழ் இவற்றை அடைய ஆசைப்படுவது, இவ்வாறு மனுக்குலத்தின் மத்தியில் உயர்வாக மதிப்பிடும் நிலைக்கு நம்மை கொண்டுசெல்பவை எதுவாயிருப்பினும், கிறிஸ்துவின் சீஷனுக்கு ஒரு சோதனையாக இருப்பதால், அவற்றுக்கு எதிராக நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்காணித்து வருபவர்களால் கவனிக்கப்பட்ட விஷயம் என்னவென்றால், கற்பனை செய்வதிலேயே மிகப்பெரிய கஷ்டங்கள் அடங்கியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். பைத்தியக்காரர் பாதுகாப்பகத்திற்கு ஒருவர்சென்று சந்தித்தாரானால், அங்கே ஒருவர் தன்னை ராஜாவாக கற்பனை செய்துகொள்வார். ஒரு பெண் தன்னை ராணி என்று கருதி அதற்கேற்றாற்போல் பாவனை செய்வதையும், மற்ற ஒருவர் தன்னை மிகப்பெரிய செல்வந்தராக கற்பனை செய்துகொண்டு, இலட்சக்கணக்கானோருக்கு காசோலைகளை வழங்குவார். தன்னை உயர்வாக கருதும் மனப்பாங்கு, விசாலமாக இருந்துவருகிறது. ஒரு தனி நபர் எந்தளவு தன்னை உயர்வாக எண்ணும் இந்த மனப்போக்கை வளர்க்க அதிக அளவிலோ, குறைந்த அளவிலோ செயல்படமுடியும் என்று கர்த்தரால் மட்டுமே அறியமுடியும். ஆனால் தன்னை ஆதிக்கம்செய்து, மாபெரும் ஆளுகை செய்யும் உயர்ந்த கற்பனைகளும், விருப்பங்களும் பெற்று, அதில் தன்னை கட்டுப்படுத்தவும், அந்தமனப்பாங்கை வளர்க்கவும் தேவையானவற்றை பெற்றிருக்கிறான்.

**சமச்சீரற்ற மனநிலைக்கு பெருமை வழிநடத்துகிறது :–**

கிறிஸ்தவர்களுக்கும் அதே காரியங்களே பொருந்தும் கிறிஸ்துவின் சபையில் சேர்ந்தபிறகு அவர்கள் மாபெரும் காரியங்களையும் மாபெரும் குறிக்கோளை உடையோராயும், சில மாபெரும் போதனைகளைக் கண்டடையவோ அல்லது பரவச்செய்யவோ, வேத வசனங்களுக்கான சில புதிய விளக்கங்களை கண்டுபிடிக்கவோ அல்லது சில புதியகாரியங்களை கண்டடையவோ அவர்கள் தொடர்ந்து கடமைப் பட்டிருக்கிறார்கள். இவைகள் அனைத்தும் உன்னத தரத்துக்கு உயர்த்தும் மேலான காரியங்களாக உள்ளன. இந்தப் பாடத்தைக் குறித்து விளக்க நம் கர்த்தர் ஒரு பாடத்தைக் கொடுத்தார். நாம் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கும்போது, உயர்வான அரியணையை எடுத்துக்கொள்ளாமல், தாழ்வான அரியணையை தெரிந்துகொள்ளவேண்டும். ஒருவேளை அமர்ந்தபிறகு உயர்த்தப்பட நேரிடலாம். இந்த உயர் ஸ்தானங்களை விரும்புவதும் அவைகளைத் தேடுவதும் பெருமை மற்றும் அசுத்தமான நோக்கங்களை கற்பனையில் பலமாய்க் கொண்டுவரவும், தன்னை உயர்த்திக்கொள்ளவும், கனத்தைத் தேடவும் வழிவகுக்கும். பிறகு நாம் பெரியவர்கள் , பிறர் விசேஷமாக கனப்படுத்துவதற்கு நாம் பாத்திரர்கள் என்ற சிந்தனை நம்முள் வரும். கர்த்தருடைய திட்டத்தை செயல்படுத்துவதற்கு நாம் அனைவருமே முக்கியத்துவமற்றவர்கள் என்பதே உண்மை.

கர்த்தரால் நம்மையன்றி, நம் ஒத்துழைப்பின்றி தம் மாபெரும் பணியை செய்திருக்கமுடியும். ஒருவேளை நம்மைக் கொண்டுசெய்வதைக்காட்டிலும், மிக எளிதாகவே செய்திருக்கமுடியும். ஆனால் நாம் ஆசீர்வாதம் பெறவும் நன்மை அடையவும் அவரது பணியைச் செய்ய நமக்கும் ஒரு பங்கை மிகவும் இரக்கத்தோடு அனுமதித்திருக்கிறார். அவர் நம்மிடத்தில் குழந்தைகள் போல் பழகி, நமக்கு பயிற்சியளிக்கிறார். பரிசுத்த ஆவியால் நம்மை ஜெனிப்பித்து நம் பலவீனங்களை ஜெயிக்க நமக்கு உதவுவதோடு, நாம் அவைகளை ஜெயித்தோமானால் நமக்கு வெகுமதியும் அளிக்கிறார். நமது வருங்கால மகிமைக்காகவும், உன்னத குணஇயல்பை அடையவும், நம்மை அனுபவப் பாடங்கள் மூலமும் பயிற்சிகளின் மூலமும் தகுதிப்படுத்துகிறார். ராஜாதி ராஜாவின் போர்வீரர்கள், தற்கால தீமை உலகத்தின் நிலைப்பாட்டின்படி தற்பெருமை, மாபெரும் காரியங்கள்மேல் பிரியம்வைத்தல், மேலானவைகளை நாடுதல் போன்றவற்றிற்கு எதிராக போராடவும், கண்டிப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஒவ்வொரு எண்ணத்தையும் சிறைப்படுத்துதல் :–**

நமது திறவுகோல் வசனத்தின் இறுதி வார்த்தைகள் அசுத்தமான மற்றும் ஆதாயமற்ற கற்பனைகளை அகற்றுங்கள் என்ற கருத்தை முன்வைக்கிறது. கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும்பொருட்டு நம் ஒவ்வொரு சிந்தையையும் சிறைப்படுத்தவேண்டும். எந்த காரியத்தை செய்வதற்கு முன்பாகவும் அதைக்குறித்து நாம் யோசிக்கவேண்டும். நான் சிந்திக்கு முன்பே செயல்பட்டுவிட்டேன் என்று நாம் சிலசமயம் கூறுவதுண்டு. அதாவது அக்காரியத்தை தீவிரமாக ஆலோசிக்காமல் செய்துவிட்டோம் என்பதே அவ்வாறு பேசியதற்கான பொருள்ஆகும். தேவ வசனத்துக்கு முழுவதும் இசைவாயில்லாத எந்தக் கருத்துக்கும் நம் சிந்தையில் அடைக்கலமளிக்கக்கூடாது. பிதாவுக்கு எல்லாவற்றிலும் கிறிஸ்து கீழ்ப்படிந்து, என் சித்தமல்ல உமது சித்தமே ஆகட்டும் என்று கூறினார். ஆகவே நம்மில் ஒவ்வொருவரும் நம் எண்ணங்களை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படுத்துபவர்களாய் இருக்கவேண்டும். நமது மீட்பர் நமக்கு நல்ல மாதிரியாக இருக்கிறார்.

கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த அதே சிந்தையே, கிறிஸ்துவின் எல்லா சரீர அங்கங்களும் பெற்றிருக்கவேண்டும். ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்– 1பேதுரு5:6. தாழ்மையின் ஆவியை அதிகமாக அடைந்திருந்தாலன்றி தன் கருத்துக்களை கர்த்தருக்கு கீழ்ப்படுத்தாதவரை, கர்த்தரை முழுமையாகப் பின்பற்ற முடியாது. நம்மையே உயர்த்தவும், எப்படி நாம் பிரகாசிக்கிறோம் என்று வெளிப்படுத்தவும் இது ஏற்ற தருணமல்ல. இதற்கு மாறாக, நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும்'' (1பேது2:9). பரலோக அழைப்புக்கென்று நம்மை அழைத்தவருடைய புண்ணியங்களை – நமது

சுயபுகழ்ச்சியை அல்ல, மாறாக அவரது மகிமைக்காகவும் மற்றவர்களது ஆசீர்வாதத்துக்காகவுமே. தேவன் மகிமையடைதலே நமது பிரதான நோக்கமாக எப்பொழுதும் இருக்கவேண்டும். நம் சொந்த பலத்திலல்ல, அவரது கிருபைமூலம் கர்த்தருக்கு நாம் திறமையுள்ள ஊழியக்காரர்களாக இருக்கவேண்டும். நாம் முடிவில் மேன்மையுள்ளோராக வேண்டுமானால், நாம் அடக்கமுள்ளவர்களாகவும், எல்லோருக்கும் ஊழியக்காரர்–களாக மனமுவந்து கையளிக்கவேண்டும். ஊழியம் செய்வதில் நாம் மகிழ்ந்திருக்கவேண்டும். அவ்வூழியத்தின்மூலம் கனம் கிடைத்தாலும், அல்லது கவனிப்பாரற்று அல்லது நீங்கள் அறியப்படாதவராக, அலட்சியப்படுத்தப்பட்டாலும் நாம் மகிழ்ந்திருக்கவேண்டும்.

நாம் சுயகட்டுப்பாட்டை அடைவதற்கும், நாமாக முன்வந்து தேவனிடத்தில் முழு கீழ்ப்படிதலை காண்பிப்பதற்கும், தேவன் சில குறிப்பிட்ட பாடங்களை நாம் கற்க ஏற்பாடுசெய்திருக்கிறார். நாம் அவரது பிரதிநிதிகளாக படிப்படியாக மாறி, அதன்பிறகு தேவனது எதிர்பார்ப்புகளுக்கு வலிந்து கீழ்ப்படியும்பொருட்டு செயல்படுத்துகிறார். கீழ்ப்படிதலைக் கற்காத ஒருவர், மற்றவர்களை ஆளுகைசெய்ய தகுதியற்றவர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுஆகும். பெரும் துன்பத்தின் மூலமாகவே நம் கர்த்தராகிற இயேசு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவர் முழுமையாகவும் முறையாகவும் தேவனிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவிலிருந்த இந்த ஆவியே நம்மில் வெளிப்படவும், வளர்ச்சியடையவும் வேண்டும். இவ்வாறு நாம் கிறிஸ்துவின் ஆயிரமாண்டு யுகத்தின் வருங்காலப் பணிக்கென்று ஆயத்தமாவோம்.

சத்தியம் எந்தளவு ஏற்றுக்கொள்ளப்பட்டு, உட்கிரகிக்கப்படுகிறதோ, அந்தளவே தெளிந்தபுத்தியும் பலமுமுள்ள ஆவியையும் நாம் அடைவோம். இது பூரணமான பலமுள்ள சிந்தையைக் கொண்டுவராது. ஆனால் முறையாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, சாந்தம், கற்கும்திறன், சிந்திக்கும் திறன், விழிப்புணர்வு ஆகிய இவைகளைக் கொண்டுவரும். நமது பரலோக வழிகாட்டியின் அறிவுரைகளுக்கு கவனமாய் செவிமடுக்க இது நம்மை வழிநடத்தும். நாம் முன்பு எப்பொழுதும் அறிந்திருந்ததற்கு மேலாக, இது நியாயந்தீர்க்கும் சமச்சீர்நிலையை இவ்வாறு இது கொடுக்கும். இது கர்த்தருடைய சிலுவைப்படையில் நன்னெறி கற்ற மாணவர்களாகி, நல்லவழியில் முன்னேறிச்செல்வதில் அபிவிருத்தியடையச் செய்யும். ஆனால் சத்தியஆவியின்படியும், அதன் அன்பிலும் சத்தியம் ஏற்றுக்கொள்ளப்படாதிருந்தால், ஆதாயத்தை வருவிப்பதில் தோல்வியே கிடைக்கும். அதோடு, பெருமை மற்றும் மனமேட்டிமைக்கு காரணமாக அமையும்.

பெருமையானது குறிப்பாக, எல்லாவகையான பேய்த்தனங்களோடும் தொடர்புடையதாக இருக்கிறது. தங்களைக்குறித்து எண்ணவேண்டியதைக் காட்டிலும் மிக உயர்வாக எண்ணுதல் மேட்டிமையை உருவாக்கி, பைத்தியக்காரத்தன்மை சார்ந்த கூட்டாளிகளையும் வரவழைக்கும். இவ்விஷயத்தில் அவர்களது சிந்தைகள் சமச்சீரற்ற நிலைமையை குறிப்பிடத்தக்கஅளவு ஏற்படுத்தும். கர்த்தரோடு நெருங்குவதற்கு தேவையான வளர்ச்சியை கவனமாய் அடைய நம்மால் முடியாது. ஏனெனில் கர்த்தரோடு நெருங்குவதற்கு எப்பொழுதும் தாழ்மையை வருவிப்பதும், நமது சொந்த தகுதியின்மையை முறையாக உணர்வதும் அவருக்கு முன்பாக நாம் அற்பர்கள் என்று உணர்வதும் அவசியமானது.

**கிறிஸ்துவோடு நெருக்கமாயிருப்பதே நமது ஒரே பாதுகாப்பு :–**

இந்த "தீமையின் நாளில்" கர்த்தருடைய பிள்ளைகளை சாத்தான் கண்ணியில் விழவைக்க விசேஷகவனத்தோடு இருக்கிறான். இதற்கு உதாரணம் நம்மால் கூறமுடியும். அதனை முன்கூட்டியே நாம் உபயோகித்திருக்கிறோம், இதில் நமது விசேஷ அபாயமும் நம் முழு பாதுகாப்பும் இணைந்துள்ளது. ஒருவேளை மிகப்பெரிய வட்டத்திற்குள் நாம் யோசித்தோமேயானால், கிறிஸ்து அந்த வட்டத்தின் மையமாக இருக்கிறார். ஒருவேளை அந்த வட்டம் ஏராளமான வெற்றிடத்தை கொண்டிருக்குமானால், அங்கே கர்த்தரோடு நெருக்கமாயிருப்பது பல மாறுபட்ட அளவுடைய தாயிருக்கும். அந்த வட்டத்தின் வெளிப்புறமுனை தன் பிள்ளைகள் மீதான மிகப்பெரிய அளவிலான வரம்பு எல்லையாக தேவனுடைய பராமரிப்பை குறிக்கிறது. இந்நிலையில் யாராகிலும் அந்த வட்டத்தின் மாபெரும் மையமாகிய நம் கர்த்தர் இயேசுவுக்கு மிகஅருகில் ஜீவிப்போர், அந்தளவுக்கு பாதுகாப்புடன் இருப்பர் என்று நாம் நம்புகிறோம். இதை நாம் நிறைவேற்றத் தவறும்போது, அவரிடமிருந்து பிரிந்து அலைந்து திரிகின்றவர்களாய், காற்றோட்டத்தில் அடித்துச்செல்பவர்களாய் இருந்து, அபாயத்தின் எல்லைக்கு அருகாமையில் இருப்போம். அதோடுகூட, வெளிப்புறமான தீமையின் ஆதிக்கத்திற்கு பணிந்துபோகவும் நேரிடும். இவ்வாறு நாம் அலைந்து திரிந்து, வெளிப்புற எல்லையையும் முற்றிலும் தாண்டி வெளியேறுவோமானால், மீண்டும் சீர்பொருந்தப்பண்ண முடியாதநிலைமைக்குள் நாம் செல்வதாயிருக்கும்.

மனுக்குலம் அபாயத்துக்குள் சென்றுவிடாதபடி தடுப்புச்சுவரை அதைச்சுற்றி ஒருவழியாக எழுப்பியிருக்கிறார். இந்த தடுப்புச்சுவர் என்பது பெருமளவில் மனிதசித்தமே. தங்களது சித்தத்தையும் சிந்தையையும் கர்த்தருக்கென ஒப்புக்கொடுத்–தவர்களிடத்தில் அவரது சித்தம் நிறைவேறவேண்டும். இவர்களே குறிப்பாக விரோதியின் கடினமான தாக்குதலுக்கு அகப்படுவார்கள். கர்த்தருடைய உண்மை பிள்ளைகளை கண்ணியில் சிக்கவைக்க அவன் விசேஷமாக வஞ்சிக்கவும், இவ்வாறு அவர்களை மீண்டும் பாவத்தின் கட்டுக்குள் கொண்டுவரவும் தேடுகிறான். அவனது ஆதிக்கத்தின்கீழ் வருபவர்கள்மேல் அவனது வஞ்சனை படிப்படியாக இருக்கும்.

நாம் அனைவருமே பலமும் தெளிந்தபுத்தியுள்ள சிந்தையின்றி பிறந்திருக்கிறோம். பலமுள்ள ஆவி எந்தளவு இல்லையோ அதற்கேற்ப நம்மால் சண்டையிட அவசியமில்லை. கர்த்தர் நமக்குக்கொடுத்த அறிவு, அந்த காலசூழ்நிலைக்கேற்ப வெளிப்படுத்தும் ஆற்றல் நல்லகாரியமே என்றாலும், வேத வசனங்களை மேற்கோள்காட்டி பேசுவதோ, மற்றும் விவாதங்களில் தங்களது ஆற்றலை பயன்படுத்துவதோ, இங்கு வாதம் அல்ல. தேவன் அதை நம் இருதயங்களில் இருக்கிறதா என்பதை பார்க்கிறார். எந்தளவு நீங்கள் அறிந்திருக்கிறீர்களென்று அவர் பார்ப்பதில்லை. அவர் அவ்வாறு விரும்பியிருந்தால் சில நிமிடங்களிலேயே நல்லறிவை உங்களுக்குள் செலுத்திவிடமுடியும். ஆனால் கர்த்தரோ, நீங்கள் எந்தளவு சாந்தம், பொறுமை, அவரது சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கிறீர்கள் என்று காண்கிறார். ஆகவே கர்த்தருடைய ஆவியை நாம் அதிகதிகமாய்ப் பெறுவோமாக. தெளிந்த புத்தியும் பலமுள்ள ஆவியை பெற்றிருந்து, ஒருவருக்கொருவர் உதவிசெய்ய பேராவல் கொள்வோமாக. "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" –எபி 10:30. போதுமானஅளவு விழிப்போடு கவனித்திராதிருந்து, உபத்திரவத்துக்குள் பிரவேசிப்பார்களேயானால், அவர்களுக்கு நன்மைக்கேதுவாக சில அனுபவங்களை கர்த்தர் கொடுப்பார். அதை அவர்கள் முறையாக சந்தித்தார்களானால் அனுகூலமாயிருக்கும். அப்போஸ்தலர் பவுலின் எச்சரிப்பூட்டும் வார்த்தைகளை நினைவுகூர்வோமாக;

"நம்மை நாமே நிதானித்திருந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1கொரிந்11:31). நம்மை நாமே நிதானிக்கத் தவறுவோமானால், கர்த்தர் நமக்காக அதை

செய்வார் என்பதே இதன்பொருளாகும். பிறகு நாம் நம்மையே சீர்திருத்துவதற்காக சிட்சிக்கப்படுகிறோம். இதனால் நாம் கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளாயிருந்து, பணிவோடும் உண்மையோடும் மரணபரியந்தம் நிலைத்திருப்போமானால் நமக்கென்று வைக்கப்பட்டுள்ள பரலோக வெகுமதியையும் தயவையும் அடையமுடியும். நாம் தொடர்ந்து சாந்தம் மற்றும் தாழ்மையின் ஆவியிலும் நிரப்பப்பட்டிருப்போமானால், தற்கால மேன்மைகளுக்கும் தற்பெருமைகளுக்கும் பேராவல்கொள்ளாமல், கர்த்தரது ஏற்றவேளைக்காக பூரண பொறுமையோடு மனதார காத்திருக்கும்போது, உயர்ந்த ஸ்தானத்துக்கு உயர்த்தப்படுவோம். இவ்வாறு நம் இரட்சகரின் சிம்மாசனத்திலும் அவரது மகிமையிலும் எப்பொழுதும் பங்குபெற்றிருப்போம்.

ஓ தாக்குதல் விழுந்தன, காயங்கள் துளைத்தன
என் இருதயம் சுருங்கினது!
அதனால் என்ன ? நீர் குருவின் கருவிகள்தானே,
தெய்வீகப் பணி நிறைவேற்றுக !
எத்தனை ஆசீர், தீமையாய்த் தோன்றுகிற இவைகளால்
அவை என் இருதயத்தை உம்மிடத்தில் சேர்க்கும்
ஒவ்வொன்றும் ஓர் சாட்சியம், நீர் ஏற்படுத்தியிருக்கிறீர்
உமது அன்பின் முத்திரை என்மீது!

------------------------

**--2700--**

# இயேசு மரித்து எல்லோருக்காகவும் ஈட்டுத்தொகை செலுத்தினார்

# JESUS DIED AND PAID TO ALL

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நம் இரட்சகரால் நம் சந்ததிக்காக கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் ஆழ்ந்த ஆர்வத்தை உண்டாக்குகிறது. இது தெளிவாகப் புரிந்துகொள்ள மிகக் கடினமாய் இருப்பதுபோல் தோற்றமளிக்கிறது. நாம் இந்தப் பாடத்தை வேறுபட்ட நிலைப்பாடுகளில் கண்ணோக்கலாம். எல்லோரும் ஒரு விஷயத்தையே கண்டாலும், எல்லோராலும் அதன் விளக்கங்களை காணமுடிவதில்லை.

மனிதன் **6000** வருடங்களுக்கு முன் கொடுக்கப்பட்ட மரணத்தீர்ப்பினின்று விடுவிக்கப்பட்ட



போதிலும், இப்பிரபஞ்சத்திலுள்ள தமது நீதிமன்றத்தில் நியாயமும் கண்ணியமும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட ஒரு வழியை ஏற்படுத்தியிருந்ததாக தேவன் நம்மிடத்தில் கூறியிருக்கமுடியும். மீட்கும்பொருளைப் பற்றி நம்மிடையே ஏதாகிலும் கூறவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. தேவன் அக்காரியத்தை முறையாக சந்தித்திருந்தார் என்று அவர் நமக்கு வெளிப்படுத்தியிருந்தாராகில், அதுவே போதுமானதாய் இருந்திருக்கும். ஆனால் அதற்கு பதிலாக, தேவன் வேதவசனங்கள்மூலம் நமக்கு காரணங்களை விளக்குகிறார். அதில் பாவிகளை நியாயந்தீர்ப்பதில் தம் அரசாங்கத்தின் செயல்முறைகளை விவரித்து, அதில் தாம் நீதிபதியாக இருக்கப்போவதையும் கூறுகிறார். இந்த மீட்கும்பொருள் என்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இயேசுவின் பரிபூரணஜீவியம், நம் ஆதி தகப்பனாகிய ஆதாம் இழந்துபோனதற்கு முழு பரிகாரமாக ஈட்டுக்கிரயமாக கொடுக்கப்பட்டது. இந்த வழிமுறைப்படி தேவன் மனிதனிடத்தில் எதையும்செய்யும் அதிகாரம் பெற்றிருக்கிறார், ஆனால் மனிதனால் எதையும் செய்யமுடியாது. இந்த கண்ணோக்கின்படி பார்க்கும்போது, இயேசுவைக் குறித்து வேதாகமம் கூறுகிறபடி, அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், மேசியாவாகவும், மகிமையின் ராஜாவாகவும் இருந்தார் என்றும், இயேசு மரித்து உலகிற்கு மீட்கும்பொருளை கொடுத்துமீட்டார் என்றும், இவ்விஷயத்தில் இன்னும் ஆழமாய்ச் சென்று பார்க்காமலேயே ஒருவரால் கூறமுடியும்.அவர் குழந்தையாக இருந்தபோதே தேவதூதர்கள், "இன்று கர்த்தராகிய கிறிஸ்து(மேசியா) என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"(லூக் **2:11**) என்று பாடினார்கள். குழந்தை பிறப்பில் முன்கூட்டியே நிறைவேறியிருந்த காரியங்களையும், அக்குழந்தையைப்பற்றி மட்டுமல்லாமல், வருங்காலங்களில் அவர் செய்யவிருக்கிற எல்லா மாபெரும் ஊழியத்தையும் உள்ளடக்கியதாக அவர்களது அறிவிக்கை இருந்தது. இந்த உண்மையின்படி, இரட்சகர் என்று அக்குழந்தை அழைக்கப்பட்டது, ஏனெனில் தம் ஜனங்களை பாவங்களிலிருந்து அவர் வருங்காலங்களில் காப்பாற்றுவார். அபிஷேகம் பண்ணப்பட்டவர்–மேசியா என்று அக்குழந்தை அழைக்கப்பட்டது. ஏனெனில் யோர்தானில் அவர் தம்மை தத்தம்செய்வார், பரிசுத்தஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டு ஜெனிப்பிக்கப்படுவார், தம் பலியின் ஊழியத்தை முடித்து பரலோக மகிமைக்கு உயர்த்தப்படுவார் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார். இந்த யுகத்தில் தம் சரீரமாகிய சபையாரை மட்டுமல்ல, ஆயிரவருட அரசாட்சியில் மனப்பூர்வமாக கீழ்ப்படிகிற உலகின் ஜனங்களுக்கும் மேசியாவாக அவர் இருப்பார். இவ்வாறாக நாம் காண்கிறபடி, பிறந்த குழந்தை இரட்சகர் அல்ல, தீர்க்கதரிசன உணர்வின்படியே, அவர் இரட்சகராக இருக்கப்போகிறார் என்பதே சரி. அவர் இவ்வுலகிற்கு வந்து பிறந்த தன்மையில் பார்க்கும்போது, அவர் ராஜா கோலத்தில் வந்திருக்கவில்லை. தம் சபையார் எல்லாரையும் இன்னும் மீட்டெடுக்காததால், அவர் இன்னும் மீட்பராகவில்லை; ஆனால் சபையார் மீட்கப்பட்டபிறகு, உலகின் ஜனங்கள் பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையிலிருந்து மீட்கப்பட இருக்கிறார்கள்.

அதுபோலவே, மீட்கும்பொருள் என்ற வார்த்தை ஆயிரவருட அரசாட்சி முழுவதுமாக நடக்கின்ற மீட்கும்வேலை தீர்க்கதரிசன உணர்வில் நம் அனைவராலும் அடிக்கடி உபயோகப்படுத்தப்படநேரிடலாம். "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்"(மீட்கும்பொருள் கொடுத்து மீட்டல்) –ஓசியா **13:14.**

**மீட்கும்பொருளின் வேலையின் சட்டரீதியான நிலை :–**

இந்த வேறுபட்ட கேள்விகளை ஆராயநேரும்போது, ஆரம்பத்தில் பிரிக்கமுடியாததாக தோற்றமளித்த காரியங்களின் புதிய அழகை, புதிய பரிமாணங்களை நம்மால் காணமுடியும். உதாரணத்துக்கு, உலகிற்கு மீட்கும்பொருளைத் தருவதற்கான முதல்படியாக, பரலோகப்பிதாவோடு மகிமையில் இருந்த லோகோஸ் தமது பரலோக மகிமையை விட்டு தன்னையே தாழ்த்தி மனிதராகி, இயேசுவாக ஆனபோது எடுக்கப்பட்டது. மீட்கும்வேலையின் முதல் தோற்றம், நம் குரு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்று, அதனைத்தொடர்ந்து தம் ஜீவியத்தை மரணபரியந்தம் ஒப்புக்கொடுத்து ஏற்படுத்தப்பட்டது. மீட்கும்பொருளின் தொகையை செலுத்தினதே அவரது பலியின் ஜீவியம் நிறைவடைந்த நிலைமையாகும். ஆனால் மீட்கும்பொருளின்வேலை நிறைவுபெற்றுவிடவில்லை. உண்மையாகவே மீட்கும்பொருளின் தொகை செலுத்தப்பட்டு, மனுக்குலத்திற்கு கொடுக்கப்படும்வரை, மீட்கும்பொருளின் வேலை --2701-- இன்னும் துவங்கப்படவேயில்லை.

இயேசு மரித்தபொழுது மீட்கும்பொருளின்

தொகையை செலுத்தினார் என்று சிலசமயங்களில் நாம் பேசியிருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட மொழிநடை துல்லியமானதல்ல. பிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிவதன் விலை மரணம். நம் கர்த்தரின் மரணம் அந்தவிலையை ஏற்படுத்தித்தந்தது. ஒருவிதத்தில்பார்க்கும்போது, இயேசு தம்ஜீவியத்தை கையளித்தபோது, அத்தொகையை செலுத்தினார். ஆனால் மற்றொருவகையில் இன்னும் துல்லியமான பார்வையில்பார்க்கும்போது, அத்தொகையை அவர் செலுத்தவில்லை. மாறாக பிதாவின் கரங்களில் பொருந்தப்பண்ணும்படி ஒப்படைத்தார், அல்லது பின்னாளில் பொருந்தச் செய்வதற்காக ஒப்படைத்தார்.

இயேசு மரித்தது முதற்கொண்டு, தெய்வீக நீதிநியாயத்தின் கரங்களில் – பிதாவின் கரங்களில் மீட்கும்பொருளின்விலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் சட்டப்பூர்வமாக அதை செலுத்த ஏற்றவேளை இன்னும் வந்திருக்காததால், சேமிப்பாக மட்டுமே தரப்பட்டிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளன்றைக்கே தம் ராஜ்யத்தை ஸ்தாபித்து, உலகை தம் உடைமையாக்குவது இயேசுவைக்குறித்த தெய்வீக திட்டமாக இருந்திருக்குமானால், மீட்கும்பொருளின் விலையை மொத்தமாகவும், முழுமையாகவும் பிதாவிடம் கொடுத்து, ஆதிபிதாவாகிய ஆதாமின் பாவத்துக்கும், அவன் சந்ததியார்மேல் உள்ள சாபத்துக்கும் பொருந்தப்பண்ணுவது முறையானதாக இருந்திருக்கும். ஆனால் அப்படி அத்தொகை செலுத்தப்பட்டிருக்குமானால், பிதா முழு உலகையும் உடனடியாக இயேசுவின் கரங்களில் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும், ஆயிரவருடாட்சியும் அப்பொழுதே துவங்கப்பட்டிருக்கும்.

**தெய்வீக நீதிநியாயத்தின் முன்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ள மீட்கும்பொருளின் விலை :–**

தெய்வீகத்திட்டத்தின் மற்றெரு அம்சமும் அங்கே இருந்தது. ஆயிரமாண்டு ஆட்சியாகிய மாபெரும் ஏழாம் நாள் துவங்கும்வரைக்கும் இயேசுவுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க தேவன் விரும்பவில்லை. 18 நூற்றாண்டுகளுக்கும் மேலான இந்த இடைப்பட்ட காலத்தின்போது, சபை வகுப்பார் உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்படவேண்டும் என்றும், அவர்கள் ராஜ்யத்தில் தம் குமாரனுக்கு மணவாட்டிகளாகவும், உடன்சுதந்திரராகவும் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆகவே முழு உலகத்தின் பாவங்களுக்காக செலுத்தப்பட்ட மீட்கும்பொருளின் தொகையானது தற்போது திருச்சபையாரிடம் மட்டுமே தொடர்புகொள்வதால், முழு உலகத்திற்கும் தற்போது பயன்படுத்தப்படாமல் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்ட திருச்சபையார் தங்களுடைய பூமிக்குரிய ஆர்வங்களை பலிசெலுத்த அல்லது ஒப்புக்கொடுக்க வேண்டும். அதற்கு பதிலாக, பரலோக ஆர்வங்களை, பரலோக சுபாவத்தை பெற்றுக்கொள்வார்கள் என்பதே சபையாருக்கான பிதாவின் திட்டமாகும். ஆதலால் உலக மனுக்குலத்தை பாதுகாக்கும் மீட்கும்பொருளின் விலைத்தொகையை சபை வகுப்பாருக்கு திரும்பக் கொடுக்கும்அவசியமில்லை. ஆதலால், மீட்கும்பொருளின் தொகையில் சபைக்கு நேரடிபங்கை தருவதற்கு பதிலாக (அதாவது திரும்பக்கொடுத்தலை தருவதைக்குறிக்கும்.) கர்த்தரது ஏற்பாடு அவர்களுக்கு வித்தியாசமாய் இருக்கும். எப்படியெனில் அவர்களது கறையை மூடுவதற்கு கொடுக்கப்படும் தகுதியாக அது இருக்கும். இவ்வாறாக, அவர்களது சரீரங்களை தேவனுக்குப் பிரியமும் பரிசுத்தமுள்ள ஒரு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கமுடிகிறது.

மீட்கும்பொருளின் தொகையைக்கொண்டு இயேசு செய்திருக்கிற எல்லாக்காரியங்களும், அவரது சீஷர்களாகவும் உடன் சுதந்திரராகவும் விரும்புவோர்க்கு ஒரு மூடலாக, குறைபாட்டை போக்குவதற்காக அந்தத்தொகையின் ஒருபகுதி கொடுக்கப்படுகிறது. உண்மையாகவே அவர் அவர்களுக்கு அதை பொருந்தச் செய்யவில்லை. திரும்பக்கொடுத்தலின் மூலம், எல்லாப் பாவங்களிலிருந்தும் அவர்களை நியாயந்தீர்த்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கச்செய்து, தேவவீட்டின் புத்திரராக பிதாவினால் அங்கீகரிக்கும்படி அனுமதியளித்தார்.

முழு உலகத்தின் பாவங்களுக்கும் மீட்கும்பொருளின் தொகையை செலுத்தினவுடன், உலகம் தான் இழந்துபோனதை திரும்பப்பெற அவரிடத்திற்கு உடனடியாக திருப்பப்படும். சபையானது தற்போது அவரது துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் பங்கு பெற்றுவருவதால், அப்பொழுது மகிமையில் அவரோடுகூட இருந்து அவரது கனம், அவரது சிங்காசனம் ஆகியவற்றில் பங்குபெறும்.

**மீட்கும்பொருளின் வேலை, செயல்படுத்தப்படும் நிலைமை :–**

மீட்கும் பொருளின் தொகை நீதி நியாயத்திற்கென்று உலக மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டவுடன் இதற்கு பதிலீடாக விலைகொடுத்து வாங்கப்பட்ட மனுக்குலம் விலைகொடுத்து வாங்கினவரிடத்தில் ஒப்புவிக்கப்படும். இதனால் இயேசுவின் மீட்கும்பொருளின்வேலை சட்டத்தின் அடிப்படையில் முழுமையடைவதோடு, மனுக்குலத்தை மரண தண்டனையிலிருந்து விடுவிக்கும் நீதிநியாயத்தை சரிக்கட்டுவதும் முழுமைபெறும். அதன்பிறகு, மீட்கும்பொருளின் அடுத்தபகுதி செயல்படத்துவங்கும். ஆதாமுக்கும் அவன் குடும்பத்துக்கும் மீட்கும்பொருளின் ஆதாயங்களைத்தருவதே அந்த அடுத்தகட்டவேலையாகும். மீட்கும்பொருளின் இந்த பணிநிலையானது மேசியாவின் ராஜ்யத்தில் ஆயிரம்ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று, மனிதனுக்கும் அவனது பூமிக்குரிய வீட்டிற்கும் இழந்துபோனதை திரும்பக்கொடுக்கப்படும். ஆதாமின் சந்ததியாரில் மனதார கீழ்ப்படிகிற அனைவருக்கும் இவ்வாறு திரும்பக்கொடுக்கப்படும். ஆனால் சீர்திருந்த மனமில்லாதவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப் படுவார்கள்.

அதன்பிறகு மீட்கும்பொருளைத் தந்தவர், மனுக்குலத்தை மீட்பதில் இரண்டுகட்டமாக தம் பணியை நிறைவேற்றுவார். முதலாவது, அதன் சட்டப்படியான நிலைமை, ஜீவனுக்கு ஜீவன்தந்து தெய்வீக நீதியை நிறைவுசெய்தல். இரண்டாவது, செயல்ரீதியாக அதனை நிலைப்படுத்தல், மீண்டும் சீர்பொருந்தச்செய்தல், முன்புஇருந்த நிலைமைக்கு கொண்டுவருதல் அல்லது பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டுக்கொண்டு, தேவனது புத்திரர்களுக்குரிய சுயாதீனத்தை அளிப்பதாகும்– ரோமர் 8:21.

---------------------

**--2702--**

# லிஸ்தீராவில் இருந்த சப்பாணி

# THE CRIPPLE AT LYSTRA

(இந்தக் கட்டுரை, "R 3011 – நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி என்ற கட்டுரையின் மறுபதிப்பாகும். இது மே 15, 1902இல் வெளியிடப்பட்டதை காண்க)

**ஆதார வசனங்கள்** : அப்போஸ்தலர் 14:8–19

**திறவுகோல் வசனம் :** "நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி"–2தீமோத்2:3.

பவுலும் பர்னபாவும் பிசிதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவைவிட்டு, ஏறத்தாழ 100 மைல்கள் தொலைவிலுள்ள இக்கோனியா பட்டணத்துக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் சத்திய வசனத்தை விசுவாசத்தோடே போதித்தார்கள். அங்கேயும் எதிர்ப்புகள் வலுத்து, உபத்திரவங்கள் அச்சுறுத்தின. இவர்களைத் தாக்க புறஜாதியாரும், யூதரும் அவர்களது அதிகாரிகளோடு சேர்ந்து அவமானப்படுத்தவும் கல்லெறியவும் அமளிபண்ணினதால், இவர்கள் எச்சரிப்படைந்து லிஸ்தீராவுக்கு ஓடிப்போயினர். சுவிசேஷத்தை திடமனதோடும், தைரியத்தோடும் பிரசங்கிக்க பய தடைபண்ண அனுமதிக்கவில்லை. மேலும்



அச்சுறுத்தலைக்கண்டு அவர்கள் பயப்படவுமில்லை. ஆனால் உபத்திரவப்படுவது ஊர்ஜிதமானதால், அவர்கள் தாமதியாமல் பக்கத்து நாடுகளுக்கு ஓடிப்போயினர். கர்த்தர் அவர்களைஆச்சரியமாக விடுவிப்பார் என்று எதிர்பார்த்து, ஏன் அங்கேயே காத்திருந்திருக்கக்கூடாது ? தேவவல்லமை அல்லது சாத்தானின் வல்லமை எது பலம்வாய்ந்தது என அவர்களது எதிர்ப்பாளிகளுக்கு ஏன் சவால்விட்டு காத்திருக்கவில்லை ? ஏனெனில் அவர்கள் தெய்வீக சித்தம் குறித்து தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தனர் என்று நாம் பதிலளிக்கிறோம். கர்த்தரது அறிவுரைகளை அவர்கள் பின்பற்றி நடந்தனர். உபத்திரவங்களைக்கண்டு பயந்திருங்கள் உங்கள் பிரசங்கங்களை நிறுத்திக்கொண்டு, உங்கள் வெளிச்சத்தை மரக்காலின்கீழ் மூடிவையுங்கள் என்று அவர் அவர்களுக்கு கூறாமல், அதற்கு நேர்மாறாக அவரது செய்தி இருந்தது. அபாயம் இல்லாதவேளையில், பயத்தோடு ஓடிப்போங்கள் என்று அவர் கூறாமல், அவர்கள் உங்களை ஒருபட்டணத்தில் உபத்திரவத்துக் குள்ளாக்கினால் வேறு பட்டணத்துக்கு ஓடிப்போங்கள் என்று கூறினார். லிஸ்தீரா சென்றுசேர்ந்தவுடன் எதிர்ப்புக்கள் ஆரம்பத்தில் அங்கு இல்லாததால், தைரியத்தோடும் புத்துணர்ச்சியோடும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் துவங்கினர். கவனித்துக்கொண்டிருந்தவர்களில் முடமான ஒரு மனுஷனும் இருந்தான். அவன் ஒரு யூதனாகவோ அல்லது யூத மதக்கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட வனாகவோ இருக்கலாம். அப்போஸ்தலரது வார்த்தையை அதிக ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தான். இதைக் கண்ணுற்ற பவுல், அந்த மனிதனிடத்தில் விசுவாசம் உண்டென்று கண்டு, தன் பிரசங்கத்தை நிறுத்தி, அவனிடத்தில்சென்று, "நீ எழுந்து காலூன்றி நில்" என்று உரத்த சத்தத்தோடே சொன்னார். அவன் உடனே எழுந்திருந்த சம்பவம் ஒருபோதும் முன்பு செய்திருக்கவில்லை. அவன் அப்போஸ்தலரது கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்குத் தேவையான விசுவாசத்தைப் பெற்றிருந்தான். இவ்வாறாக ஒரு அற்புதம் அங்கே அரங்கேறியது. இச்சம்பவம் முழு சபைக்கும் பிரமிப்பை ஏற்படுத்தியது. ஜனங்கள் மத்தியில் இதன் தாக்கம் அதிர்ச்சிஅலையை உண்டாக்கியிருந்ததால், அவர்கள் தங்களது சொந்தபாஷையில்,

"தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறர்கள்" என்று சத்தமிட்டனர். லிஸ்திரா பட்டணம் புராண இலக்கிய காட்சிகளால் நிறைந்திருந்தது. அவர்களது பாரம்பரியத்தின்படி, யூப்பித்தர் மற்றும் மொர்க்குரி இரண்டு புராண இலக்கியக் கடவுள்களாகவும், அவர்கள் ஒருமுறை அவர்களது பட்டணத்துக்கு மனித உருவெடுத்து வந்தார்கள் என்றும், அவர்கள் தங்குவதற்கு எங்கு தேடியும், யாரும் இடம் தராததால், இறுதியாக ஒரு தரித்திரன் தன் சக்திக்கேற்றாற்போல் அவர்களை வரவேற்று உபசரித்தான் என்றும் நம்புகின்றனர். அவர்கள் அந்த தரித்திரனுக்கு வெகுமதியாக, அவனது குடிசையை அழகும் ஆடம்பரமுமான ஆலயமாக மாற்றினர் என்றும், அந்த பட்டணத்திலிருந்த மற்ற அனைவரையும் ஜலப்பிரளயத்தால் அழித்தனர் என்றும் நம்புகின்றனர். இந்த பாரம்பரியங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை என்றாலும், அந்த பட்டணத்தின் பாதுகாவலராக யூப்பித்தர் சிலையை என்றென்றும் நிலைத்திருக்கும்படி பட்டணத்தின் வாயிலில் நிறுவியுள்ளனர். பவுல் மற்றும் பர்னபா வடிவில் தங்களை மீண்டும் சந்திக்க வந்திருப்பதாக திடீரென்று ஜனங்கள் ஒரு முடிவை எடுத்தது, அவர்களது அறியாமையையும், மூடப் பழக்கவழக்கங்களையும் நாம் புரிந்துகொள்ளமுடிகிறது. பாரம்பரியங்களுக்கு அவர்கள் ஆட்பட்டிருந்தனர். அவர்கள் பவுலை மொர்க்குரி என்று அழைத்தனர். ஏனெனில் மொர்க்குரி மேடைப்பேச்சாளராக, சொற்பொழிவாளராக இருந்தார். மேலும், பர்னபாவை யூப்பித்தர் என்று அழைத்தனர். உடனடியாக "பட்டணத்துக்கு முன்னேஇருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி, எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து, ஜனங்களோடேகூட மனிதர்கள் வடிவில் தங்கள் மத்தியில் வந்திருக்கிற தேவர்கள் என்னப்படும் பவுல் மற்றும் பர்னபா அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்". இந்த ஊழியக்காரர்கள் பிரசங்கிக்கவும், ஆர்வமுடன்

--2703--

ஜனங்களிடம் அமைதலாகவும் விளக்கிக்கொண்டிருந்தனர். பட்டணத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியையும், அவர்கள் பலிகொடுக்க தயாராயிருப்பதையும் அறிந்தபொழுது, ஜனங்களது அறியாமையை தங்களுக்கு அனுகூலமாக்கி பெரிய மனிதர்களாகும்படி ஒருசனப்பொழுதுகூட எண்ணாதவர்களாயும், அல்லது தேவனே யூப்பித்தர், இயேசு மெர்க்குரி , நாங்களே அந்த இருவருக்கும் பிரதிநிதி என்று கூறி, சத்திய ஊழியத்தை திசைதிருப்ப முயற்சிக்காமலும் இருந்தனர். இதற்கு மாறாக, தாங்கள் ஒன்றுமில்லை என்றும், அவர்கள் எல்லாரையும்போலவே அபூரணர்கள் என்றும் விளக்கிக்கூறி, மிகவும் ஊக்கத்தோடும் கெஞ்சியும் கேட்டு ஜனங்களைத் தடுத்தனர். தாங்கள் செய்யும் ஊழியம் அவர்கள் யூகித்திருப்பதற்கு எதிர்மாறானது என்றும், யூப்பித்தரும் மெர்க்குரியும் அவர்களது கற்பனைகள், அறியாமை மற்றும் மூடப்பழக்கங்கள் மூலமாக உருவாக்கப்பட்ட கட்டுக்கதைகள் என்றும் பெருமூச்சுடன் கூறினர். ஜனங்கள் மனஎழுச்சியுற்று, இவர்கள் கூட்டத்திற்குள் ஓடி, உரத்த சத்தமாய், தாங்கள் ஒன்றுமில்லாதவர்கள் என்று போராடி, தங்களுக்கு பலிசெலுத்தி, கனப்படுத்தும் ஜனங்களது செய்கையை தடுத்தனர். நேர்மையுள்ளவர்களாக அவர்கள் இருந்து, கர்த்தரிடத்திலும் சத்தியத்திலும் தாங்கள் உண்மையாய் இருப்பதை வெளிப்படுத்தினர். தங்களை சத்தியத்தை பிரசங்கிக்கும் ஊழியம்செய்ய அனுப்பின தெய்வீக ஞானத்திற்கும், கர்த்தருக்கும் உண்மையுள்ளவர்கள்; நேர்மையுள்ளவர்கள் என்று வெளிப்படுத்தினர். கர்த்தருடைய தூதர்களாக பிரதிநிதிகளாக சத்தியத்துக்கு போதகர்களாக இருக்கும் அவரது ஜனங்கள் அனைவருக்கும் உதவிகரமாக இந்த நிகழ்வு இருக்கும் என்ற பாடத்தை நாம் கற்கிறோம். விசேஷமாக, நம் நாளின் வெளிச்சத்திலுள்ளவர்களுக்கு சத்தியம் ஆச்சரியப் படுத்துவதாயும், அறிவுக்கூர்மையுள்ளதாயும், அந்த சத்தியத்தின் பிரதிநிதிகளாக அதை தாங்கிச் செல்பவர்களிடத்தில் அறிவுக்கூர்மை இயல்பாகவே வெளிப்படுவதையும், அதைக் காண்பவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கிப்போய், “இந்த மனிதனுக்கு இந்த ஞானம் எங்கிருந்து வந்தது ?” என்று கேட்கின்றனர். ஒருசிலசமயங்களில், இது அளவுக்குமீறிய மரியாதை கொடுக்கும்படியும், அளவுக்கு மீறிய மேன்மையை தரக்காரணமாய் அமைந்துவிடும். அடிமை போன்றிருக்கவேண்டிய கர்த்தருடைய பிள்ளைகள் கனம் மேன்மை இவைகளை பெற்றுக்கொள்வது முறையானதல்ல. லிஸ்தீராவில் உள்ள ஜனங்கள் அவர்களை கனப்படுத்த முயன்றபோது, பவுலும் பர்னபாவும் அவைகளை முற்றிலும் ஏற்கமறுத்து, தங்களது விருப்பமின்மையை தெரிவித்தனர். உலகத்தின் நிலைப்பாட்டில் பார்க்கும்போது, இது ஞானமற்றசெயலாக இருக்கிறது. முகஸ்துதி, புகழ்ச்சி மற்றும் மேன்மைகளுக்கு அளவுக்குமிஞ்சி இடமளிப்பார்களானால் இந்த வழிமுறையில் விரோதியாகிய சாத்தானால் வளமையுள்ளோர்போல ஓரளவுக்கு தோற்றத்துக்கு வழிநடத்தக்கூடும். இப்படிப்பட்ட உலகத்தின் ஆவி, உலகின் அருஞ்செயல்வீரர்களையும், ஜாம்பவான்களையும், எலியாக்களையும் வணங்குவது பொருத்தமானதே என்று விருப்பத்துடன் அவைகளை செய்யத்தூண்டும். ஜனங்கள் செய்த காரியங்களை ஒட்டுமொத்தமாக ஏற்கமறுத்து, இந்த ஊழியக்காரர்கள் நடந்துகொண்ட விதமே, இப்பாடத்தின்மூலம் கர்த்தரது ஊழியக்காரர்கள் பெறவேண்டிய ஒரே ஞானமான வழிமுறையாகும். மற்ற மனிதரைப்போலவே தாங்களும் பாடுள்ள மனுஷர் என்று அவர்கள் அறிக்கையிட்டு, தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தை உயர்த்திப்பிடித்து, அந்த வெளிச்சத்தின்கீழ் தங்களை முழுமையாக புறம்பாக்கி மறைத்துக்கொண்டனர். உலகிலிருந்து தம்மோடு சேர்த்துக்கொண்டுவரும் உண்மை தேவனுடைய பிள்ளைகளை கண்டறியவும். அவர்கள் வளர்ச்சியடையவும் இது ஆதாயமளிப்பதோடு, கர்த்தருடைய தூதுவர்களுக்கும் இது ஆதாயமளிக்கும். இந்த வழியில்தான் கர்த்தருடைய கிருபையிலும், அவருக்கு ஒப்பாகவும் வளருவார்கள், இவ்வாறு வளர தாழ்மை ஒரு மிக முக்கிய குணாதிசயமாக இருக்கிறது. இவ்வாறாக அவர்கள் அவரது அன்பில் நிலைத்திருக்கவும், தற்கால நிலைமையின்கீழ் உண்மையோடும், பணிவோடும் உள்ள அவரது பிள்ளைகள் அனைவருக்கும் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள, இன்னும் உன்னதத்துக்கு உயர்த்துதலை இறுதியில் அடைய ஏதுவாகும்.

அவர்களது கொள்கைகள், வீண்பெருமைகள் என்று லிஸ்தீராவினருக்கு அப்போஸ்தலர் சுட்டிக் காண்பித்தார். தம் பிரசங்கம் கேட்போர் இப்படிப்பட்ட கொள்கைகளை பின்பற்றுபவர்களாகில், எவ்வித தயவையும் அது கொண்டுவராது என்று நன்கு அறிந்திருந்தார். ஏனெனில் பாரம்பரியமான கட்டுக்கதைகள் பேசப்பட்டிருக்கும்போது, மனித சுபாவம் அவற்றை அங்கீகரிக்கக்கூடாது. அவர்களிடத்தில் நன் மதிப்பைப் பெறும்வழியில் பவுல் நடந்துகொள்ளவேண்டுமானால், அவர்கள் பெரிய ஞானிகள் என்றும், அவர்கள் பின்பற்றும் வழிமுறை முறையானதே என்றும் அவர்களிடத்தில் பொய் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். அவர் தாம் கபடற்றவராக அவர்கள் முன் காண்பிக்கமுயற்சிசெய்து, அவர்களது ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் துணிகரமாக சந்தித்தார். இதை எவ்வித ஐயப்பாடின்றி முன்கூட்டியே கூர்மையாய் அறிந்திருந்து, எவ்விதமான விளைவு ஏற்படும் என்றும் அறிந்திருந்தார். தேவனுடைய நாவாக இருந்து, தம்மைக்குறித்தும் தம் உயிரைக்குறித்தும் என்ன விளைவுகள்ஏற்பட்டாலும், அவற்றை பொருட்படுத்தாமல், முழு செய்தியையும் வெளிப்படுத்த தயங்கவில்லை. இங்கு கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் கற்க நல்லபாடங்கள் இருக்கின்றன. விலையேறப்பெற்ற விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் உள்ள சிலுவைவீரருக்கும், சத்தியத்துக்கு உண்மையாய் இருப்பவர்களுக்கும் இங்கே உற்சாகம் தேவையாய் உள்ளது. ஆனால் மனிதரை கனப்படுத்தும் முறையற்ற செயலை எதிர்த்துநிற்க மாபெரும் உற்சாகம் தேவைப்படுகிறது. ஆனால் இவ்வாறு எதிர்த்துநிற்பது, அவர்களது மேன்மை, நட்புறவு இவைகளுக்கு எதிர்த்துநிற்பதோடு நில்லாமல், அவர்களது பார்வையில் சிறுமையானவர்களாக காண்பித்து, பகைவராக அவர்களை மாற்றும்.

உண்மை சிலுவைப் போர் வீரர்களுக்கு தற்போதும்கூட அதேவிதமான உபத்திரவம் உண்டு. அதேவிதமான கடினமான சூழ்நிலைகள் தேவையாயிருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தில் கடினமான திட்டமிட்ட நடவடிக்கையின் அனுபவங்களை சந்தித்து, சகித்து, கர்த்தருக்குள் மகிழ்ச்சியோடு வெளிவரவேண்டும். பலவீனமானோர், சோதிக்கப்படாதோர், குணாதிசயங்களில் வளர்ச்சிபெறும் பரீட்சை மற்றும் அனுபவங்களை கடந்துபோகாதவர்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக கருதப்படுகிறார்கள். இவர்கள் கடின அனுபவங்களுக்குள் செல்லவில்லை. அப்படிப்பட்ட அனுபவங்களை சந்திக்கும் மனப்பக்குவமில்லாதவர்கள். இதன்காரணமாக, சபையில் புதிதாக பயிற்சிபெறுபவர்களை ஆராதனைக்கூட்டங்களில் முறையாக உயர்த்தி, ஊக்குவித்தல்கூடாது. அவர் இறுமாப்படைந்து தனக்குத்தானே இடையூறு வருவித்துக்கொள்வதோடு, பிறருக்கும் காயத்தை ஏற்படுத்துவார் (1தீமோ 3:6).

சகோதரர்கள் தரும் மரியாதை மற்றும் கௌரவத்தை முறையாக ஏற்றுக்கொள்ளவோ அதன் மதிப்பை உணர்ந்துகொள்ளவோ சிலகாலம் மற்றும் செயல்செய்ய தக்கதருணம் தேவைப்படுகிறது. அவ்வாறில்லாவிடில் நமக்கு கிடைக்கும் மரியாதை மற்றும் கௌரவத்தை முறையற்ற விதத்தில் அணுகுவதன்மூலம், நம்மை சரிவடையச்செய்துவிடும்.

கடந்தகாலங்களில் எல்லா தேசங்களும் தங்கள் சொந்த வழிகளில் நடக்க தேவன் அனுமதித்து வந்திருந்தார் என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டுக் காண்பிக்கிறார். அவர் குறிப்பாக, இஸ்ரயேல் தேசத்தின் விவகாரங்களில் மட்டுமே தொடர்பு கொண்டிருந்தார், மற்ற எல்லா தேசங்களும் தெய்வீகத் திட்டத்தின் சில அம்சங்களில் மட்டும் எல்லை மீறாதபடி தவிர்த்து, மற்றபடி தங்கள் சொந்த வழிமுறையை பின்பற்ற அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறாக தீர்க்கதரிசி இஸ்ரயேலருக்கு செய்தி உரைத்ததாவது :–

“பூமியிலுள்ள எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்”(ஆமோஸ் 3:2). கடந்த காலங்களில் என்று குறிப்பிடப்பட்டது, யுகமாற்றத்தை குறித்துக்கூறுவதாகவும், இயேசுவின் மரணம் மற்றும் இதனால் யூதர் பெற்றிருந்த விசேஷ தயவு அறுபட்டுப்போனதோடு தொடர்புடையதாயும், கேட்கச்செவியுள்ளோர்க்கு சுவிசேஷ அழைப்பு யூதருக்கு முதலாவதாகவும், கிரேக்கருக்கும் திறந்து வைக்கப் பட்டிருப்பதையும் கூறுகிறது. தற்போது, தேவன் அறிவுரையின் செய்தியை எல்லா தேசங்களுக்கும் அனுப்பிவந்தார். அவர்கள் தங்கள் கர்வத்திலிருந்து மனம் மாறி, ஜீவனுள்ள ஒன்றான மெய்தேவனையும், உலகை மீட்டெடுத்த அவரது குமாரனையும் ஏற்றுக்கொண்டு, அவரே ஏற்றவேளையில் ராஜாவாகவும் ஆட்சிபுரிபவராகவும் பிதாவினால் நியமிக்கப்பட்டிருப்பதையும், அவரே பாவத்தையும் மரணத்தையும் பரிகரித்து, அவரது நீதியின் ஆளுகையில் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார் என்றும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அறிவுரை செய்தியை தேவன் எல்லா தேசங்களுக்கும் கொடுத்துவந்தார். தேவன் புறஜாதி தேசங்களுக்கு தீர்க்கதரிசனத்தின் உடன்படிக்கைகளை தம் நியாயப்பிரமாணத்தின் அறிவுரைகளைத் தராமல் இருந்தபோதிலும், அவர்கள்மேல் தாம் அக்கறை வைத்திருப்பதற்கு அடையாளமாக அவர்களுக்கு அத்தியாவசியமான சில ஏற்பாடுகளை செய்திருப்பதை வெளிப்படுத்தினார்– சூரியன் மற்றும் மழையை நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும் நல்லோர்மேலும் தீயோர்மேலும் பொழியப்பண்ணுகிறார்.

அப்போஸ்தலர் கொடுத்த விளக்கத்தினாலும், சத்தியத்தை எளிமையாக முன்வைத்ததன் விளைவாகவும், அங்கே கூடியிருந்த லிஸ்தீராவினர் திடீர் மாற்றத்திற்குள்ளாகி, மிகவும் மாறுபட்ட பார்வையோடு ஊழியக்காரர்களைப் பார்த்தனர். தங்களைப்போலவே அவர்களும் சாதாரண மனிதர்களே என்று தங்களைக்குறித்து தற்போது பறைசாற்றினர். அவர்களது மூடப் பழக்கவழக்கத்தைக் குறித்து வருத்தப்பட்டிருப்பார்கள் என்று எண்ணுவதற்கும் இங்கு இடமுண்டு. ஊழியர்கள் அதை எதிர்த்து, தாங்கள் அதற்கு தகுதியற்றவர்கள் என்று ஏற்க மறுத்தாலும், தங்களது மூடப்பழக்கவழக்கம் அவர்களை உசுப்பிவிட்டிருந்தது. சில யூதர்கள் அந்தியோகியா மற்றும் இக்கோனியாவிலிருந்து வந்திருந்து, வஞ்சிக்கிற ஊழியக்காரர்கள் என்றும் ஜனங்களை எளிதில் ஏமாற்றுகிறார்கள் என்றும், இறையியல் கோட்பாடுகள் குறித்து கேள்விகளை எழுப்பி, உலகத்தை கலக்குகிறார்கள் என்றும், ஜனங்களது மன அமைதியை கெடுக்கிறார்கள் என்றும் பொது ஜனங்களில் சிலர் தேவ ஊழியர்க்கு எதிரான ஆவியை கொண்டிருந்து, ஜனங்களுக்கு விளக்கினார்கள். இந்த மனிதர்கள் உண்மையாகவே யூப்பித்தர் மற்றும் மெர்க்குரி அல்லர் என்றும், அவர்கள் பாசாங்கு செய்பவர்கள் மற்றும் பொய்யர்கள் என்றும், ஜனங்களை வஞ்சித்ததால் அவர்களை மரணத்துக்கு கையளிக்கவேண்டுமென்றும், இவ்வாறு பொது ஜனங்கள் எதிர்மாறான வழிமுறையில் நடத்தப்பட்டனர். இதன்விளைவாக, பவுல் கல்லெறியப்பட்டு, மரித்துப்போனாரென்று எண்ணி, பட்டணத்துக்கு வெளியே இழுத்துச்செல்லப்பட்டார்.



சுபாவ சிந்தை அறியாமையிலும் மூடப்பழக்க வழக்கங்களின் நிலைமையில் சீரற்றதாயிருந்து, யூப்பித்தரின் ஆசாரியர் தேவ மனிதராகும்படி தவறான வழிமுறையில், அறியாமையிலும் மூடப்பழக்கவழக்கங்களிலும் எந்தளவு நடத்திச்செல்லமுடிகிறது ? பின்பு எதிரான வழிமுறையில் அவரால் எப்படி தவறான வழிமுறையில் நடத்தமுடிகிறது ? எல்லா அப்போஸ்தலரைக்காட்டிலும் உயர்ந்தவரும், உலகம் ஒருபோதும் அறிந்திராத மிகச்சிறந்த பிரசங்கியும், தர்க்கசாஸ்திரியுமாக இருந்தவர், அவர்கள் மத்தியிலிருந்து, தேவனுக்கு கீழ்ப்படியும்படி, சத்தியத்திலும் நீதியின் சரியானபாதையிலும் அவரால் நடத்தமுடியும் என்ற நிலைமையில் இருந்தவரை, எத்தனைபேர் உணர்ந்திருந்தனர் ? விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்தும் அஞ்ஞான இருளின் துயரங்களை, நாகரீகமும் பொது அறிவுக்கூர்மையும் குறிப்பிடத்தக்க அளவு நீக்கியிருந்தபோதிலும், அப்போதிருந்த உலகத்தின் அநேக அம்சங்கள் இன்றைய நாளின் உலகத்திலும் இருக்கிறது. உலகத்தில் இஸ்லாமிய மதம், கன்பியூசிஸ மதம் மற்றும் சபைகளிலும் சில குறிப்பிட்ட வகை கிறிஸ்தவ மதக்கொள்கைகளும் வெளித்தோற்றத்துக்கு பகுத்தறிவு மற்றும் உயிரூட்டமுள்ளதாக பகட்டான தோற்றத்தைக் காண்பித்து கண்ணியமுடையவைகளாக மதிக்கப்பட்டாலும் இந்த பகட்டான மதக்கொள்கைகளுக்குள் இருக்கிற திரளான ஜனங்கள், இன்னும் தாங்கள் வஞ்சிக்கப்படும் நிலையிலுள்ளதாக அதிருப்தியிலேயே இருக்கின்றனர். தங்களை உயர்த்திக்கொள்ள விரும்புபவர்களையும், உயர்ந்தவர்களாக பாசாங்கு செய்பவர்களையும் இக்கொள்கைகள் பாராட்டுவதாக தோற்றமளிக்கிறது. தொழுகை செய்ய வலியுறுத்தும் நேரத்தில் தகுதியற்ற விதத்தில் தொழுகைசெய்வதுபோல மாயை உண்டாக்குகிறது. தேவனையும் அவரது திட்டத்தையும் தவறாக சித்தரித்துக் காண்பிக்கிறதோடு, தேவனின் அன்பின் அகலம் ஆழம் உயரம் நீளம் இவற்றின் ஆச்சரியத்தை உணராமல், சாத்தானின் நிலைப் பாட்டிலிருந்து இவைகளை யோசிக்க வழிவகுக்கிறது.

பூமியைக்காட்டிலும் வானம் எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ, அவ்வாறே மனிதனுடைய வழிகளைக்காட்டிலும் தேவனுடைய வழிகளும், தேவதிட்டங்கள் மனிதனது கருத்துக்களைக்காட்டிலும் உயர்ந்திருக்கின்றன. தேவனது அக்கறையற்ற நிலையினால் அவர் கல்லெறியப்படவில்லை, அல்லது தம் ஊழியக்காரனைப் பாதுகாக்குமளவு தேவனுக்கு வல்லமை குறைவுபட்டிருக்கவில்லை. ஆனால் தேவன் அப்போஸ்தலர் பவுலுடன் முழுதும் இருக்கவில்லை என்பதேயாகும்.

அதற்கு மாறாக, அப்போஸ்தலருக்கும், சபைக்குமான சில மாபெரும் மதிப்புமிக்க பாடங்களை அநேகமாக அவருக்கு கர்த்தர் போதித்திருக்கக்கூடும். சபையாருக்காக அவர் இன்றைக்கும்கூட இந்த அனுபவங்களைக்கொண்டு ஊழியம்செய்துவருகிறார். அப்போஸ்தலர் கல்லெறியப்படும்போது ஸ்தேவானின் மரணத்தை புத்துணர்வோடு நினைவுகூர்ந்திருக்கலாம், அதற்கு பவுலும் சம்மதித்திருந்தார். இதன் காரணமாக தாம் கர்த்தருடைய பிரதிநிதியாகவும், அவரது சத்தியத்தின் பிரதிநிதியாகவும் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த நிலைமைக்கு தான் தகுதியானவன் அல்ல என்றும், கர்த்தருக்கு முன்பாக தம் இருதயத்தைத் தாழ்த்தி, பாடத்தை கற்றுக்கொண்டதே முடிவாக நடந்தது.

இவ்வாறாக, பலிசெலுத்தும் சம்பவம், சில பரீட்சிக்கும்அனுபவங்களாக நிகழ்ந்திருக்கவில்லையா ? ஒருவரை பலமாக மேன்மைப்படுத்தும்போது அப்போஸ்தலர் சிறிதளவாவது தன்னை உயர்ந்தவராக கருதியிருக்க கூடுமல்லவா ? அவ்வாறு உயர்த்திக்கொள்வது மனிதஇயல்பு என்றாலும், அவர் தாமாக முன்வந்து அவற்றை ஏற்க மறுத்தார். அவர் தம் பலம்வாய்ந்த குணாதிசயத்தின் மூலம் மகிமையை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவரது அனுபவமோ, நேரெதிரான வழியில் நடத்திச்சென்றது. அவர்தாமே தம்மைக்குறித்து பின்னர் எழுதினதாவது; " நான் உபத்திரவத்தின்மூலம் மகிமைப்படுவேன்''. இங்கு கர்த்தருடைய உண்மை ஜனங்கள் அனைவரும் நல்ல பாடங்களை கற்கமுடியும். தங்களது அன்றாட நடவடிக்கைகள் அனைத்திலும் கர்த்தரது வழிநடத்துதல்பேரில் நம்பிக்கையாயிருக்க கற்கமுடியும். அவர்களுக்கு தயவுநிறைந்தவைகளாய்த் தோன்றுகிறவைகளில் மட்டுமல்ல, மாறாக தயவற்றதும், பேரழிவு ஏற்படுத்தும் சம்பவங்களிலும் கர்த்தரையே நம்பியிருக்க கற்கமுடியும். தம் ஊழியத்திற்காக தாம்தெரிந்துகொண்ட பாத்திரம் என்று பவுலைக்குறித்து கர்த்தர், ''என் நாமத்தினிமித்தம் அவர் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும் என்பதை அவனுக்கு காண்பிப்பேன்'' என்றார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவரது நிமித்தமாக பாடுபட அனுமதிக்கப்படும்பொழுது(தவறுசெய்ததற்காகவோ, கோபம், வெறுப்பு, பொறாமை, கலகம், தீயனபேசுதல் போன்றவற்றிற்காக அல்ல, மாறாக அவர் நிமித்தமாக) அவரது பலியை அங்கீகரிக்கும் வண்ணமாக கர்த்தருடைய தயவு அவற்றோடு இணைக்கப்படும். ஆபேலின்பலி நெருப்பினால் அங்கீகரிக்கப்பட்டது இதற்கு அடையாளமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

முகங்குப்புற தரையில் விழுந்துகிடந்த பவுலைப்பார்த்த அப்போஸ்தலர்கள், அவர் இறந்துவிட்டதாக மற்றவர்கள் எண்ணினதுபோலவே எண்ணினர். பவுலை சூழ்ந்துநிற்கையில், அவர்எழுந்து பட்டணத்துக்கு திரும்பினார். பட்டணத்தார் அனைவரும் கூட்டத்தாரோடு சேர்ந்து அவரை கல்லால் எறிந்தனர் என்று நாம் யூகிக்கவில்லை. அந்தக் கூட்டத்திலிருந்த பெரும்பான்மையானோர் பொதுவாக பவுலின்பேரில் இரக்கம் காண்பித்தனர் என்று யூகிக்க இடமுண்டு, அவ்வாறில்லாவிடில் அப்படிப்பட்ட வன்முறை நிகழ்ந்திருக்க சாத்தியமில்லை. ஆகவே அப்போஸ்தலர் மீண்டும் பட்டணத்திற்குள் வந்தது மிக அமைதலான விதத்தில் நடந்ததால், ஜனக்கும்பல் தகாதவகையில் மீண்டும் எழும்பி கலகமுண்டாக்கவில்லை. இந்த கிறிஸ்தவ ஊழியர்களின் விஷயத்தில் சில ஜனங்களை துணிச்சலின் ஆவி இயக்கி, ஒன்றுசேர்க்காதிருந்தது. கர்த்தர் அங்கீகரிக்கும் வகையில் உண்மையான திடமனதுடையோராய், நல்ல போர்ச்சேவகர்களாக தீங்கனுபவித்தும் நடந்தனர். அவர்கள் ஜனங்களை ஒருபோதும் ஆர்வத்தைக்காட்டி மோசம்போக்குகிற விதமாக உயர்த்தும் வார்த்தைகளைப் பேசவில்லை அல்லது நடந்துகொள்ளவும்இல்லை. அப்படிப்பட்ட விஷயங்களில் தெய்வீக சித்தத்தை தவறாக விளக்கும் மற்றவர்களது எதிரான வழிமுறையை பின்பற்றாமல் அப்போஸ்தலரது வழிமுறையே நமது மாதிரிகையாக நமது எடுத்துக்காட்டாக இருக்கட்டும்.

லிஸ்தீராவில் அவர்களது வெளியரங்கமான பிரசங்கம் முடிவுக்குவந்தது. அடுத்தநாள், இந்த கிறிஸ்துவின் ஊழியர்கள் 35 மைல்கள் தொலைவுலுள்ள தெர்பைக்கு சென்றனர். பவுலுக்குள் ஓர் ஆச்சரியமான அற்புதத்தை கர்த்தர் நிகழ்த்தியிருப்பதை இச்சம்பவம் சுட்டிக்காட்டுகிறது. கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு, மரணத்தருவாயிலிருந்த பவுல், அடுத்தநாள் பிரயாணத்தைத் தொடர முடிந்திருப்பது ஒரு அற்புதமே. இச்சம்பவத்தில் நடந்ததுபோல கர்த்தர் தம் பிள்ளைகளிடத்தில் சிலசமயங்களில் திகைப்புக் குள்ளாக்குகிற காரியங்களை நிகழ்த்துகிறார். மற்ற சமயங்களில் மற்ற மனிதர்களுக்கு நிகழ்வதுபோலவே பொதுவான நிலைமாற்றம் ஏற்படும்படி விட்டுவிடுகிறார். அப்போஸ்தலர் தாம் சீர்பொருந்தும்படி விசேஷித்த ஜெபம் ஏறெடுத்ததாக நமக்கு அறிவுறுத்தப்படவில்லை. ஆனால் லிஸ்தீராவில் மனமாற்றத்துக்குள்ளானோரில் ஒருவரான தீமோத்தேயுவுக்கு நினைப்பூட்டும்படி பின்னாளில் நிருபம் எழுதினார். அதில் அவருக்கு இருந்த வயிற்று உபாதை மற்றும் அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களினிமித்தம் , அற்புதங்களைச்செய்யும் குறுக்கீடுகளை பரிந்துரைக்காமல், சில இயற்கை உணவுகளை சேர்த்துக்கொள்ளும்படி அறிவுறுத்துகிறார். விசேஷ வேண்டுகோளின்றி, தாமாக முன்வந்து மற்ற எதைக் கொடுக்க கர்த்தர் விரும்புகிறாரோ அதுவே நம்மில் நடந்தேறவேண்டும். தெய்வீக வல்லமையை அலட்சியப்படுத்தாமலும், நாம் நம் உடல் ஆரோக்கியத்தை இயற்கையான முறையில் புத்தியறிவோடு பேணிக் காக்கவேண்டும். நோய்வாய்ப்படும் வேளைகளில், அதிலிருந்து குணம்பெற அவ்வாறே செய்யவேண்டும். ஆனால் தெய்வீக பராமரிப்பு நம் எல்லா நடவடிக்கைகளிலும் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நம் உடல் ஆரோக்கியமும், பலமும், ஊழியத்துக்கான வாய்ப்புகளும் நமக்காக ஆயத்தமாக்கப்பட்டிருப்பதை எண்ணி, ஒருவேளை பாதிக்கப்பட்டு துன்புறுவார்களேயானாலும், கர்த்தருடைய பராமரிப்பில் இருக்கும்போது களிகூறக் கடவோம். விசேஷமாக, சத்திய ஊழியத்தினிமித்தம் பாதிப்பு ஏற்பட்டிருக்குமானால், தேவசித்தம் அப்படியிருக்கும் பட்சத்தில், நாம் சீக்கிரமாயும் அற்புதமாகவும் குணப்படுத்தப்படுவோமானால் சந்தோஷப்படக்கடவோம். அடிக்கடி நேரிடுகிற நம் பலவீனங்களைத் தணிக்க , தீமோத்தேயுவின் விஷயத்தில் அப்போஸ்தலர் அறிவுரை கூறியவாறு, இயற்கையாகவே நாம் பலப்பட தேவைப்படுகிறவைகளை சேர்த்துக் கொள்ளவேண்டும். தேவனுடைய பிள்ளை தன் எல்லா நடவடிக்கைகளும் கர்த்தரது கரத்தில் உள்ளதையும், அவரது வழிநடத்துதலின்கீழ் உள்ளதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். அதேவேளையில், தன் சிறந்த நிதானிப்பில், தெளிந்தபுத்தியின் ஆவியின்படி, தனது ஒவ்வொரு தாலந்து மற்றும் வாய்ப்பை உபயோகிக்கத்

தேடவேண்டும். நாம் தரிசித்து நடவாதிருக்க கற்கவேண்டும் என்பதே நம்மைக்குறித்த கர்த்தரது சித்தம் என்பதை நினைவில்கொண்டு, நாம் கண்டடைகிற தயவுள்ள காரியங்களை மட்டுமே செய்யாமல், விசுவாசித்து நடக்க நாம் கற்கவேண்டும். சிலசமயங்களில் தயவற்ற நிலைமையில் காரியங்கள் நடந்தாலும், விசேஷ தெய்வீக பாதுகாப்பையோ விடுதலையையோ வெளியரங்கமாகத் தேடக்கூடாது என்பதை இச்சம்பவம் வலியுறுத்துகிறது.

தெர்பையில் நடைபெற்ற சத்திய ஊழியங்கள் குறித்து எந்த குறிப்புகளும் கொடுக்கப்படவில்லை. அங்கு விசேஷ சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று நாம் அனுமானிக்கமுடியும். இவ்வளவு தொலைதூரம் சென்றபிறகு, தங்கள் இல்லம்திரும்பவும், பவுலின் சொந்த ஊராகிய தர்சூஸ் செல்லவும் குறுகிய தொலைவிலுள்ள வழியைத்தெரிந்தெடுக்காமல், தேவ ஊழியக்காரர்கள் தங்களது பிரயாண திட்டத்தை மாற்றி அமைக்கத் தீர்மானித்தனர். இவ்வாறு அவர்கள் தீர்மானித்ததற்குக் காரணம், லிஸ்தீரா, இக்கோனியா மற்றும் பிசிதியாவிலுள்ள அந்தியோகியா ஆகியஇடங்களிலிருந்த சிறு குழுக்களாகிய விசுவாசிகளுக்கு மூர்க்கத்தனமான எதிர்ப்பு வலுத்து, உபத்திரவப்படுத்துதலும், வாதங்களும் சம்பவித்தன. இதில் புதிதாக மனமாற்றத்திற்குட்பட்டோர் இவற்றிற்குத் தீர்வுகாண தேவையான ஆற்றல் மற்றும் திறனை பெற்றிருக்காததால், அந்த நேரத்தில் அவர்களை உற்சாகப்படுத்தவும், சத்தியத்தில் பலப்பபடுத்தவும் அவசியமேற்பட்டது.

இதுமந்தைகளை மேய்க்கும் ஆயர்களுக்கான வேலையாயிருந்தது. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தாயகம் திரும்பம்வழியில், வேறு சத்திய ஊழியங்களை செய்ததற்கான எந்தகுறிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை. அவர்கள் தேவதிட்டத்தை நன்கு புரிந்திருந்ததால், இந்த பட்டணங்களிலிருந்த எல்லா ஜனங்களையும் மனந்திருப்பவேண்டுமென்ற எவ்வித எதிர்பார்ப்பும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் நவீன பெயர்கிறிஸ்தவ ஊழியர்கள் அப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளை கொண்டிருக்கின்றனர். சுவிசேஷம் பரப்பப்படுவதன் நோக்கம், உலகை மனமாற்றத்திற்குள்ளாக்கஅல்ல என்றும், உலகிலிருந்து ஒரு விசேஷித்த வகுப்பாரை தெரிந்தெடுக்கவே என்றும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்(அப் 15:14). அவர்கள் இந்த ஜனங்களிடத்தில் சத்தியத்திற்கு சாட்சி பகர்ந்ததோடு, கர்த்தர் அவர்களோடிருக்கிறார் என்ற நம்பிக்கையும் பெற்றிருந்தனர். அப்படிப்பட்டவர்களே கேட்கும் காதுகளையும், புரிந்துகொள்ளும் இருதயத்தையும் அடைந்திருந்தனர்(இவர்கள் மட்டுமே சத்தியத்தைப்பெற தகுதியுள்ளோர்). இவ்வாறு ஏற்கனவே வெளிச்சம் பெற்றிருந்தவர்கள் மூலம் அவர்களுக்கு சென்றடைந்தது. இவர்கள், சிறுமந்தை வகுப்பாரை வளர்ச்சியடையச் செய்வதில் நிறைவடைந்து, அவர்கள் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படிக்கும், வரவிருக்கும் யுகத்தில் தேவனது ஏற்றவேளையில், ஆயிரமாண்டு ராஜ்யத்தில் அவர்கள் இடம்பெறவும், மகிமைப்படுத்தப்பட்டு அதிகாரம்பெற்று, உலகத்தை மனந்திரும்பச்செய்து உயர்த்தி, உலக ஜனங்களை ஆசீர்வதிக்க கர்த்தரால் உபயோகப்படுத்தப்படும்படிக்கு உற்சாகப்படுத்துவார்கள் .

இந்த பல்வேறு இடங்களிலுமிருந்த சகோதரர்கள், சுவிசேஷம் தேவனுடையதாயிருந்தால் அதன் ஊழியக்காரரும் பணிவிடைக்காரரும் தீமையின் ஆதிக்கத்திலிருந்து இரக்கம் பெறுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கொண்டிராததால், ஆச்சரிய மடைந்தனர். ஏனெனில் தேவன் தம் ஊழியக்காரரை பாதுகாப்பார் என்பது இயல்பாகவே எழும் எதிர்பார்ப்பாயிருந்ததால், அவர்களது நம்பிக்கை குறிப்பிடத்தக்கஅளவு அசைத்தது.

பரிசுத்தவானை பூரணப்படுத்துவதற்கும் விசுவாசத்தை பரீட்சிப்பதற்கும், ராஜ்யத்தில் கிறிஸ்துவோடு உடன்சுதந்திரராகப்போவோரை சோதித்து தயார்ப்படுத்தவும் உபத்திரவம் அத்தியாவசியமானது என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். இந்த சுவிசேஷயுகத்தின்போது தீமையை அனுமதித்து, உலகத்தாரிடமிருந்து சிறுமந்தையை காத்து, அவர்களை மெருகேற்றி, அவர்களை ராஜ்யத்துக் குரியவர்களாக சுத்திகரிக்கும் நோக்கத்துடன், தான் அனுமதிக்கப்பட்ட நோககத்தை அது நிறைவேற்றி முடிக்கிறது. அதன்பிறகு, சாத்தான் கட்டப்படுவான், அப்பொழுது நீதிமான்கள் இனி உபத்திரவத்துக் குள்ளாகாமல், கிறிஸ்துவின் ராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாக ஆளுகைபுரிவர்.

அப்போஸ்தலர்கள் தாங்கள் துன்புறுத்தப்பட்ட இந்த பட்டணங்களுக்கு மீண்டும் திரும்பிவந்ததைக்குறித்து ஒரு ஆற்றல்மிக்க எழுத்தாளர் பரிந்துரைப்பதாவது :– தங்களை காத்துக்கொள்ளுதலுக்கு சிறுமைப்படுதல் அவசியமென அவர்கள் சந்தோஷமாய் எதிர்கொண்டனர். பட்டணத்திற்குள் நுழையும்போது ஒருவேளை தங்களை மூடி மறைத்துக்கொள்ளவோ, ஒருவேளை இரவு வேளையிலோ அல்லது அதிகாலை விடிவெள்ளியிலோ – இரகசியமாக சந்தித்தலையும், இரவுவேளைகளில் ஒன்றுகூடுவதும் தனித்து கவனித்து வருவதன்மூலமே அவர்களது எதிரிகளின் கடுங்கோபத்திலிருந்து நழுவிச் செல்லமுடியும். கிறிஸ்துவின் ஊழியர்கள் மற்ற எந்த அசம்பாவிதமின்றி திரும்பினர். சிரியாவிலுள்ள அந்தியோகியா சபையின் விசேஷப் பிரதிநிதிகளாக இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்ததால், அச்சபையில் தங்களது ஊழியத்தின் அறிக்கையை சமர்ப்பித்தனர்.

-------------------

# எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம்
# THE COUNCIL AT JERUSALEM

(இந்தக் கட்டுரை, Settling Doctrinal differences மற்றும் Attaining Christian Liberty என்ற கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டு, மறு பதிப்பாக வெளியிடப்படுகிறது).

**திறவுவசனம் :** "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்" – அப்போஸ்தலர் **15:11**



**ஆதார வசனங்கள் :** அப்போஸ்தலர் **15:1–35**

ஆதிகாலசபையில் சமாதானமும், முன்னேற்றமும் அறிவிலும் சகோதர எண்ணிக்கையிலும் வளர்ச்சியடைவது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அதிகரித்தது, அதைத்தொடர்ந்து வேற்றுமைகளும், தர்க்கங்களும் உள்ள காலகட்டம் அந்தியோகியாவில் காணப்பட்டது. பவுலும் பர்னபாவும் தங்கள் ஊழியப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பி, தங்களது பிரயாண அறிக்கையை அந்தியோகியா சபைக்கு சமர்ப்பித்தனர். இந்த சபையே அவர்களது பிரயாணத்துக்கான செலவுகளை சந்தித்தது. சபையும் அவர்களது மிஷினரி ஊழியர்களும் சேர்ந்து புறஜாதியாருக்காக செய்த பரஸ்பர ஊழியத்திற்காக சந்தோஷப்பட்டனர். உண்மையாகவே எப்புறமும் இதற்கான காரணவிளக்கம் செழுமையைத் தந்தது. பின்பு சபையின் தலைமையகமாகிய எருசலேமிலிருந்து சில சகோதரர்கள் வந்தனர். இவர்கள் பிறப்பில் எபிரேயர்களாயிருந்து, புறஜாதி கிறிஸ்தவர்கள் விருத்தசேதனத்தை புறக்கணிக்கிறார்கள் என்று கண்டுணர்ந்து, அந்த விஷயத்தில் பெரும்கிளர்ச்சியை எழுப்பினர். கிறிஸ்துவைஅல்லாமல் விருத்தசேதனம் மட்டுமே இரட்சிப்பை அளிக்காது என்ற புறஜாதியாரின் கருத்துக்கு எதிராக, இந்த எபிரேயர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பு விருத்தசேதனமின்றி செயல்படாது என கருத்துதெரிவித்தனர். இதனால் அநேக சகோதரர்களது மனம் கவலைக்குள்ளானது. சபையில் பிளவுஏற்படும் சூழலும் ஒருகாலகட்டத்தில் நிலவியது. ஆனால் சிறப்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அன்பு சகோதரர்களாகிய பவுலும் பர்னபாவும் விசாரணைக்குழுவாக, அங்குள்ள அப்போஸ்தலர்களோடும் மூப்பர்களோடும் கலந்தாலோசிக்க எருசலேமுக்கு அனுப்பப்பட்டனர். நாம் பார்க்கவிருக்கும் இப்பாடத்தில் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்ட காரியங்களும் அதன் முடிவுகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதிகால கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியை உடையவர்களாயிருந்தனர் என்று நாம் அவர்கள் வெளிப்படுத்தின ஞானத்தைக் குறித்து தற்செயல்நிகழ்வாக கருத்து தெரிவிக்கிறோம். பவுல் மற்றும் பர்னபாவின்மேல் அவர்கள் உண்மையாகவே மிகுந்த பற்றுறுதி கொண்டிருந்து, ஏற்கனவே அவர்களது ஊழியத்தின்மூலம் மாபெரும் ஆசீர்வாதங்களை கர்த்தரிடமிருந்து பெற்றிருப்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனால் விருத்தசேதனமின்றி தெய்வீக தயவுபெறுவதற்கான சில முறையான பாடங்களை அவர்களால் பெறமுடியும் என்ற எதிர்பார்ப்பு இராதிருந்தது.என்பது முரண்பட்ட கருத்தாயிராமல் உண்மையாயிருந்தது. ஆகவே இந்த பாடத்தைப் பொருத்தமட்டில் கர்த்தரது சித்தம் அப்போஸ்தலர்கள் மூலமாக நேர்மறையான கருத்தை அறிவுறுத்தியிருக்கிறது என்பதை ஞானமாய் வெளிப்படுத்தினார்கள். இந்த அப்போஸ்தலர்களைக் குறித்து கர்த்தர் ; "நீங்கள் பூமியில் எதைக் கட்டுவீர்களோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீங்கள் இப்பூமியில் எதை கட்டவிழ்க்கிறீர்களோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்றார்". அதன்பிறகு, இந்த அப்போஸ்தலர்கள், விருத்தசேதனம் யூதர்மேல் சுமத்தப்பட்டதுபோலவே புறஜாதியார்மேலும் சுமத்தப்பட்ட கடமையா ? அல்லது ஆபிரகாமின் முழு குடும்பத்திற்கும் இஸ்ரயேலர்மேலிருந்த அந்த கடமையிலிருந்து புறஜாதியார் விலக்கப்பட்டிருக்கிறார்களா என்று முறையாக அறிந்துகொள்ளவும், ஆலோசனை சொல்லும் ஆற்றலுடையோராயும் விளங்கினர்.

### எருசலேம் ஆலோசனைக் கூட்டம் :–

அப்போஸ்தலர்கள் இக்காரியத்தில் பணிவோடு ஆலோசனைக்கூட்டத்தின் முன்வைத்த கருத்துக்கள் உற்று கவனிக்கத்தக்கது. இப்பாடத்தின்பேரிலான அவர்களது இறுதித்தீர்மானம் தெய்வீக வழிநடத்துதலின்படியும், வேதாகமத்தில்(பழையஏற்பாட்டில்) எழுதப்பட்ட வார்த்தைகளின்படியும் இருந்தது. பல ஆண்டுகள் படிப்படியாக சத்தியம் அவர்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய அளவு அதிகரித்தது. யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட விசேஷித்த தயவு ஒவ்வொரு தேசத்து ஜனங்களுக்கும் பொது தயவு தர எவ்வாறு இடமளித்ததோ, அவ்வாறே கர்த்தரை எப்புறத்திலிருந்தும் நம்பும் எல்லா மனிதர்களும், அவரது வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொண்டு, அதற்கு இசைவாக தங்களது ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பவர்கள், இனிமுதல் எபிரேயர்க்கு சமமாக பாக்கியங்களையும் அனுகூலங்களையும் அடைவார்கள். அந்த தேசத்தோடு உள்ள தேவனது உடன்படிக்கையின் உறவை அவர்கள் அறிந்திருப்பர் என்றாலும், தெய்வீக நிகழ்ச்சிநிரலின் இன்னுமொரு படி முன்னோக்கி நகர்ந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு சிலகாலம் பிடிக்கும். அதுபோலவே சிறுமந்தை மட்டுமே

தற்போதைய பரம அழைப்பிற்குட்பட்டு அழைக்கப்பட்டிருந்து, செவிசாய்த்து, பலிசெலுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த யுகமுடிவில் அநேகர் உணர்ந்துகொள்வர். யுகமாறுதல் சமீபமாயிருக்கிறது என்பதையும், தெரிந்தெடுக்கப் பட்டோருக்கான பணியை இந்த யுகத்தில் நிறைவேற்றிமுடிக்க தேவன் நோக்கமாயிருக்கிறார் என்பதையும் பூமியின் எல்லாக் குடிகளும் ஆதாயமடையும்படிக்கு, தெரிந்தெடுக்கப்படாதோருக்காக புதிய யுகத்தில் புதிய பணியைத் துவங்கவும் தீர்மானித்திருக்கிறார் என்பதையும் கிரகித்துக்கொள்ள இவர்களுக்கு கடினமாயிருக்கும்.

ஆலோசனைச் சங்கத்தின் முடிவுகள் சில வார்த்தைகளில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தேவனைப் பொருத்தமட்டில் பிறப்பில் எபிரேயராயிருந்த விசுவாசிகளை அவர் அங்கீகரித்ததுபோலவே, பிறப்பில் புறஜாதியாராயிருந்தும் விசுவாசத்தினால் அவரது பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களை அங்கீகரிக்கிறார்.

''விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்''—அப் 15:9. இதைக்காட்டிலும் அதிகமாக என்னவிளக்கம் கேட்கமுடியும் ? நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நுகத்திற்குட்படாமலேயே புறஜாதியார் தேவதயவுகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். தேவன் அப்படிப்பட்ட நிபந்தனைகளை ஏற்படுத்தாதபட்சத்தில், ஏன் நாம் அவர்கள்மேல் நுகத்தை சுமத்தவேண்டும் ? என்று அவர்கள் ஞானமாய் கேட்டனர். மெய்யாகவே நியாயப்பிரமாண உடன்படிக்கை ஒரு நுகமாகவே இருப்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த நுகம் அதிக பாரமாயிருந்து, அவர்களாலும் அவர்களது பிதாக்களாலும் சுமக்கக்கூடாதிருந்தது. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நுகத்திலிருந்து கிறிஸ்து அவர்களை விடுவித்திருந்தார். கர்த்தர் ஒருபோதும் அவர்கள்மேல் கொடுத்திராத அந்த நுகத்தை, சகோதரர்கள்மேல் ஏன் இவர்கள் சுமத்துகிறார்கள் ?

இதற்கும் அப்பாற்பட்டு நோக்கும்போது, நியாயப்பிரமாணத்துக்கு விலக்கப்பட்டு, ஒருபோதும் நுகத்தினடியில் வராத புறஜாதியார், சில வகைகளில் தகுதியடைந்திருப்பதால், இருவரில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்துள்ளனர்; ஆகவே '' கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள்(புறஜாதியார்) இரட்சிக்கப்படுவது எப்படியோ, அப்படியே நாமும் (எபிரேயர்) இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே'' என்றார்.

**இக்காரியத்தின் முடிவு :—**

இக்கேள்விக்கு அப்போஸ்தலர்கள் எடுத்த தீர்மானம் 22 முதல் 29 வசனங்களில் நாம் காண்கிறோம். அவர்கள் எழுதிவைத்ததோடு மட்டுமல்ல, அதை, நம்பத்தகுந்த இரு சகோதரர்களாகிய யூதாஸ்—பர்னபாஸ் மற்றும்சீலாவிடம் கொடுத்தனுப்பி, அவர்கள் அத்தீர்மானங்களை பவுல் மற்றும் பர்னபாவிடம் சேர்க்கும்படி எழுத்துவடிவிலும் மற்றும் வாய்மொழி சாட்சியமாகவும் பெறும்படி ஏற்பாடுசெய்தனர். தொல்லைதரும் இந்த போதனைகள் எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களது அதிகாரம்பெற்றவைகளல்ல என்பதே அத்தீர்மானமாய் இருந்தது. அந்த கடிதத்தில் எழுதப்பட்டதன் ஒட்டுமொத்தக் கருத்தை தொகுத்து பிரமாணமாக அல்ல, அத்தியாவசியமான காரியங்களாக கொடுத்திருந்தனர். அவை :—

1. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளுக்கு விலகியிருத்தல்
2. இரத்தத்துக்கு விலகியிருத்தல்
3. நெருக்குண்டு செத்ததற்கும் விலகியிருத்தல்
4. வேசித்தனத்துக்கு விலகியிருத்தல்

இக்காரியங்களுக்கு விலகியிருத்தல் மட்டுமே அவர்களை கிறிஸ்தவர்களாக்கும் என்று அறிவுறுத்தப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசமும், அவருக்காக தங்களை தத்தம்செய்வதும், பெருமுயற்சியெடுத்து அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதுமே அவர்களை கிறிஸ்தவர்களாக உருவாக்கும் என்று இதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டவைகளிலிருந்து விலகியிருத்தலைக் குறித்து அவர்கள் பிரகடனப்படுத்தியதாவது;

''இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும்'' பரிந்துரைக்கப்பட்ட இவைகளை கடைப்பிடிப்பது ஆதாயமளிக்கும். உண்மையாகவே, அப்போஸ்தலர் பவுல் மிகவும் வலியுறுத்தி, ''அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினார். ஏனெனில் தேவனிடத்திலான அன்பு பரிசுத்தத்தை நம் ஜீவியத்தில் கடைப்பிடிக்கும்படி கட்டுப்படுத்தும், நம் அயலானிடத்திலான அன்பு பூமிக்குரிய நீதிநியாயத்தைக் கடைப்பிடிக்கச்செய்யும். வேறுபட்ட பண்புகள் அறிவு மற்றும் மனஉணர்ச்சிகள்கொண்ட யூதர் மற்றும் புறஜாதியாரால் உருவாகிய ''சரீரத்தின்'' ஐக்கியத்தைப் பாதுகாக்க, இங்கு பரிந்துரைக்கப்பட்ட விஷயங்கள் அவசியமானவை.

இறைச்சிக்கடைகளில் விற்பவைகளை வாங்குவது தீங்கு விளைவிக்குமா, விளைவிக்காதா என்று விவாதிக்காமலும், அவைகள் கொல்லப்படும்போது நடத்தப்படும் அந்நிய சடங்கு முறைமைகளை பகுத்தறியாமலும், இவைகளிலிருந்து விலகியிருக்கவேண்டும் என்பதே கொடுக்கப்பட்ட ஆலோசனையாயிருந்தது. பரந்த நிலைப்பாட்டில் பார்க்கும்போது, விக்கிரகம் என்பது மரம், இரும்பு, கல் இவைகளால் உண்டாக்கப்பட்டாலும், இவைகள் உணவை எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தவோ, ஆதாயமளிக்கவோ முடியாது என்றாலும், அப்படிப்பட்ட இறைச்சியை புசிப்பது, புறஜாதியாரின் விக்கிரக ஆராதனையில் கலந்துகொள்வதற்கு ஒப்பாக கருதப்படும். இந்தவிஷயத்தில் புறஜாதியார் பலவீனமான சகோதரர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தங்களது சுயாதீனத்தை பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கமுடியும். யூதரும் புறஜாதியாரும் மிக ஆழமாக தத்துவரீதியாக காரியங்களை அலசி ஆராயாமல், அவர்களது உணர்வுகள் காயப்படாதபடி நடந்துகொள்ளவேண்டும்.

இதுபோன்ற கருத்து, இரத்தத்தை புசிப்பதை தடைசெய்வதிலும் இணைந்துள்ளது. யூதருக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இது தடைசெய்யப்பட்டிருந்தது, அவர்களுக்கு இது வாழ்வின் சின்னமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது, இதனைப் புசிப்போரது ஜீவன் எடுக்கப்படுவதற்கு, தானே பொறுப்பாளி ஆகிவிடுகிறார். அதோடுகூட, நியாயப்பிரமாணத்தில் நிழலாக கடைப்பிடிக்கப்பட்ட சடங்குகளில், தடைசெய்யப்பட்டிருந்த இரத்தம் பாவநிவாரணபலியைக் குறிப்பதன் அடையாளமாக உபயோகிக்கப்பட்டது, இதில் பாவத்துக்கான ஒப்புரவாக்குதல் இரத்தத்தின்மூலம் ஏற்பட்டதை இது குறிப்பிடுகிறது. இந்த நிழலான பாடங்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்து. யூதர்கள் இரத்தத்தை உபயோகிக்ககூடாது என விலக்கப்பட்டிருந்தனர். மேலும் இக்காரியத்தோடு தொடர்புடைய மற்ற தூய்மையான காரணங்களும் இருக்கக்கூடும், அவைகளை நம்மால் இதுவரை அறியமுடியவில்லை. புறஜாதியார் நியாயப்பிரமாண

உடன்படிக்கைக்குள் ஒருபோதும் வராததால், இந்த தடைகள் ஒருபோதும் அவர்களுக்கு வந்ததில்லை. ஆனால் இந்தப்பாடத்தைப் பொறுத்தவரையில் யூதர்களது கருத்துக்கள் ஆழமாய் ஆணிவேராய் பதிந்திருந்தபடியால், சபையின் சமாதானத்துக்காக புறஜாதியார் இந்த முறைமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாயிற்று. நெருக்குண்டு செத்தவை என்பதன்பொருள், கண்ணியில் சிக்குண்ட மிருகங்களைஎடுத்து, அதன் இரத்தம் சிந்தப்படாமல் அல்லது வழிந்தோடாமல் மரணத்துக்குள்ளாக்குவது. யூதரது பிரமாணத்தின்படி அப்படிப்பட்ட எல்லா இறைச்சிகளும் புசிக்கப்படக்கூடாது. இந்தத் தடையானது ஆவிக்குரிய இஸ்ரயேலின் இரண்டுகிளைகள் இணக்கமாயிருப்பதற்கு அவசியமாயிருந்தது. அந்த இரண்டுகிளைகள் யூத மார்க்கத்திலிருந்து வந்தவர்களும், புறஜாதியாரிலிருந்து வந்தவர்களுமாவர். அவர்கள் சண்டையிடவும் சபையில் பிரிவினைகளை உண்டாக்கவும் விரும்பாதிருந்தால் இவ்விஷயங்களை பொருத்தமட்டில் புறஜாதி சகோதரர்கள் நிச்சயமாக கட்டுப்படுத்தப்படுவர் அல்லது அவர்களது சுயாதீனத்தை பலியிட நேரிடும்.

நான்காவது காரியம் விலகியிருத்தலைக் குறித்தது – "வேசித்தனம்" ஆகும். ஏன் ஒழுக்கரீதியான கட்டளை இவ்வாறு மற்றவைகளிலிருந்து பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மற்ற சடங்காச்சார தேவைகளோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது என்பதும் புரிந்துகொள்ள கடினமாயுள்ளது. இன்னும் சரியாய் சொல்வோமானால், ஏன் அவபக்தி, போதை, விக்கிரக ஆராதனை, விபச்சாரம், பொய்சாட்சி, கொலை போன்றவை இதோடு சேர்க்கப்படவில்லை ? என்று நாம் வினவுகிறோம். புறஜாதியார் எல்லா குற்றங்களையும் செய்ய சுதந்திரம் பெற்றுள்ளார்களா என்று இம்மாநாட்டில் நிபந்தனை விதிக்கப்படவில்லை என்று நாம் புரிந்துகொள்ளவேண்டுமா ? மேலும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட இறைச்சியை அல்லது நெருக்குண்டு செத்ததற்கும்,இரத்தம் புசிக்கவும் வேசித்தனம் பண்ணாதிருக்கவும் மட்டும் ஆலோசனை தரப்பட்டதா ? நிச்சயமாக அப்படியல்ல. நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகள் அனைத்தும் புதுசிருஷ்டியின் ஒரே பிரமாணத்திற்குள் அடங்கியுள்ளது. உன் தேவனாகிய கர்த்தரை நேசி, உன் அயலானையும் நேசி என்பதே அக்கட்டளை.

விக்கிரகஆராதனை, அவபக்தி, கொலை, களவு, பொய்சாட்சி, விபச்சாரம் போன்றவைகளை அன்பு மூடவல்லது. ஆனால் அன்பின் பிரமாணம் ஆலோசனைசங்கத்தால் கணக்கிடப்பட்ட பட்டியலை முற்றிலுமாக மூடமுடியாது. பூமியின்மேல் எவைகளை கட்டுவார்களோ அது தேவனால் அங்கீகரிக்கப்படும் என்ற அப்போஸ்தலர்கள் பெற்ற அதிகாரத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இவைகள் அத்தியாவசிய மானவைகளும், முறையானவை களுமாயிருந்தன. அவர்களும் அவ்வாறே தெய்வீக சித்தத்துக்கு முரண்படாது வழிநடத்தப்பட்டு, பூமியின்மேல் அவசியமற்றவைகளை கட்டாதபடிக்கு நிருபங்களில் வெளிப்படையாக எழுதிவைத்தனர். இந்தக் காரியங்களை எல்லா ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் தெய்வீக சித்தமாக கடைப்பிடிக்கும்படி இவ்வாறு அன்பின் பிரமாணத்தோடு கூட்டி சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லா இறைச்சிக் கடைகளிலும் யூதரது நடைமுறைக்கு இணக்கமாகவே பின்பற்றப்பட்டு, அவர்களது ரபிமார்களால் பரிசோதிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்றபிறகே உண்ணுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. ஆயினும் அநேக யூதர்கள் இதை உணரத் தவறுகின்றனர்.

இந்த ஞானமான நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு, நல்ல முடிவுகளை கொணர்ந்திருக்கிறது, அங்கங்களிடையே இணக்கம் நிலவுகிறது, ஒருமைப்பாட்டின் ஆவியும் ஐக்கியமும் ஏற்பட்டிருக்கின்றன. கர்த்தர் சபையாரது காரியங்களை இவ்வாறு மேற்பார்வையிட்டு, அவளது வழியை நியமிக்கப்பட்ட நீர்ச்சுனைகளாகிய அப்போஸ்தலர்கள்மூலம் வழிநடத்திவருகிறார் என்பதை உணர்வதே இதில் மறைந்துள்ள இரகசியமாகும். அதுபோலவே இன்றையநாளிலும், கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் நேர்மையான இருதயம்நிலவி, உட்பிளவு, பிரிவினைகள் ஆகியவை அறியப்படாதிருக்கவேண்டும். அப்போஸ்தலர்கள் மூலமாக கர்த்தர் கூறும் வார்த்தைகளால் அவரது வழிகட்டுதலும் அறிவுரையும் கண்டறியப்படவேண்டும். அதோடுகூட, அப்போஸ்தலர்கள் மரித்தபின்பு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக கூறப்பட்ட தம் வார்த்தைகளைக்கொண்டு, சரியான பாதையை காண்பிக்கும் கருவிகளாக உபயோகிப்பதில் பிரியப்படுகிறார். சுத்த இருதயமும், நேர்மையான மனசாட்சியும் பணிவுள்ள ஆவியுமே அத்தியாவசிய மானதாகும்.

**கிறிஸ்தவ சுயாதீனத்தை அடைதல் :–**

ஒரு சில காரியங்களைச்செய்ய அதிகாரமளிக்கும் சுயாதீனத்திலிருந்தும், சட்டதிட்டமற்ற நிலையினால் உண்டாகும் சுயாதீனத்திலிருந்தும், அராஜகத்தால் ஏற்படும் சுயாதீனத்திலிருந்தும், கிறிஸ்தவ சுயாதீனம் துல்லியமாக வேறுபடுத்திக் காண்பிக்கப்படவேண்டும். இவ்வுண்மையை எடுத்துக்காட்டுடன் விளக்குவதாக இப்பாடம் அமைந்துள்ளது. மோசேயின் முறைமைக்குள்ளாக இருந்துவந்த யூதர்களுக்கு உபவாசமிருத்தல், சுத்திகரித்தல், பண்டிகைகள், புதிய சந்திரன்கள், ஓய்வுநாட்கள் மற்றும் பரிசுத்தநாட்களை அனுசரிப்பது கட்டாயமாயிருந்தது. ஆனால் நியமிக்கப்பட்ட இந்த முறைமைகளை அனுசரிப்பதிலிருந்து கிறிஸ்தவனுக்குரிய சுயாதீனம் பெரும்பாலும் விடுதலை பெற்றுத்தந்துவிட்டது. இந்த முறைமைகளில் பெரும்பாலானவை தேவவீட்டின் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாகவும், கற்பிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதே, மாறாக தேவவீட்டின் புத்திரர்களுக்கு இவை பொருந்தாது.

புறஜாதியாருக்கோ தேவன் ஒருபோதும் பிரமாணங்களை கொடுத்திருக்கவில்லை. ஆகவே அவர்கள் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டோ, அதன் நிபந்தனைகளுக்குட்பட்டோ, அதன் தேவைகளைச் சார்ந்தோ இருக்கவில்லை. மாறாக, அவர்கள் குறிப்பிட்ட சில மூடநம்பிக்கைகள் மற்றும் தவறான உணவுப் பழக்க வழக்கங்களுக்கும், சடங்கு சம்பிரதாயங்களுக்கும் ஆட்பட்டிருந்தனர். கிறிஸ்தவ சுயாதீனம் என்பது தவறான எல்லா சடங்கு சம்பிரதாயங்களையும், மூடப் பழக்கவழக்கங்களையும் ரத்துசெய்வதோடுகூட, ஒரு பிரமாணத்தை கட்டாயப்படுத்தி சுமத்துகிறது – மோசேயின் பிரமாணத்தையோ அதன் ஏற்பாடுகளையோ, சடங்குகளையோ அல்ல, மாறாக, பூரண சுயாதீனப்பிரமாணத்தை, "கிறிஸ்துஇயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தையே ஆகும்(யாக்**1:25**; ரோமர் **8:2**). எதிரெதிரான திசைகளிலிருந்து வந்திருந்த யூதரும் புறஜாதியாரும் கிறிஸ்துவின் சபை மற்றும் அதன் பூரண சுயாதீனப்பிரமாணத்தின் நிபந்தனைகளையும், ஒழுக்கமுடைமைகளில் தவறாத நிலைப்பாட்டையும் கண்டு, குழப்பமடைந்து திகைப்படைந்தது நம்மை ஆச்சரியப்படுத்தவில்லை.

**--2710--**

பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு 20 வருடங்கள் கழித்து, நம் பாடத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைச்சங்கம் எருசலேமில் கூட்டப்பட்டது. கிறிஸ்துவின் பிரமாணத்தைக் குறித்த பாடத்திற்கு ஒருதீர்வை எட்டும் நோக்கத்திற்காகவே இது நடைபெற்றது. புறஜாதியாரிலிருந்து மனம் மாறியவர்கள்மேலும், யூதரிலிருந்து மனம் மாறியவர்கள்மேலும் இது ஆளுகைசெய்வது – யூதர்களைப் பொறுத்தமட்டில் மோசேயின் முறைமைப்படியான எதிர்பார்ப்புகள் எந்தளவு ஒழிக்கப்பட்டது என்றும், புறஜாதியாரிலிருந்து மனம்மாறியவர்கள்மேல் கிறிஸ்துவின் பிரமாணம் எந்தளவு கட்டுப்பாட்டை விதித்திருந்தது என்றும், இந்த இரண்டு வகுப்பாரும் முன்பு மோசேயின் பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதினிமித்தம் சமுதாயரீதியாக, மதரீதியாக பிரிந்திருந்தாலும், தற்போது யாருடைய மனசாட்சிக்கும் ஊறுவிளைவிக்காதபடி முழு சகோதர ஐக்கியத்திலும் உறவிலும் ஒன்றிணையவும், தேவையற்ற கட்டுப்பாடுகளால் யாருடைய சுயாதீனமும் பாதிக்கப்படாதபடி நடப்பதைக்குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

புறஜாதிதேசங்களில் பிறந்த யூதருக்கும் புறஜாதியாருக்குள்ளும் கிறிஸ்தவத்தின் மையமாக அந்தியோகியா சபை அமைந்திருந்தது. புறஜாதியாரால் சூழப்பட்டிருந்த அந்தியோகியாசபை, அதன் அங்கங்கள் அனைவரும் கிறிஸ்தவ சுயாதீனத்தின் பெருந்தன்மையான ஆவியை விளைவிப்பதில் கவனமாயிருந்தனர். அந்த சபையிலிருந்த சில அங்கங்கள், எருசலேமிலிருந்து வந்திருந்த சில சகோதரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதால், கிறிஸ்தவ சுயாதீனத்தின் காரியத்தில் எல்லை மீறுவதாக சபையார் பயப்பட்டனர். இதன்படி, விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புறஜாதியார், மோசேயின் பிரமாணத்தையும், யூதமார்க்கத்தையும் ஏற்றுக்கொள்ளவும், இந்த நிபந்தனையின்கீழ் முழுவதுமாக வந்து, யூதராக பிறந்திருப்பினும் விருத்தசேதனம் செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். எருசலேமிலிருந்து சமீபத்தில் வந்திருந்த சில சகோதரர்கள் இந்த காரியத்தினால் உண்டான பயத்திற்கு அதிக முக்கியத்துவமளித்ததன் விளைவாக, அந்தியோகியா சபையில் கருத்துவேறுபாடு உண்டானது. இது எந்தளவு சென்றது என்று கிரேக்க வார்த்தை குறிப்பிடுகிறதெனில், ஏறத்தாழ ஒரு உட்பிளவு அல்லது சபை உடைந்து போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனாலும் சரியான ஆவியும் பரவலாக இருந்தது தெளிவாயிற்று. ஏனெனில், வெறுப்பளிக்கும் கேள்வியினால் அதிருப்திக் குழுக்களாக பிரிந்துபோவதற்கு பதிலாக, ஒவ்வொரு பிரிவும் மற்றவரது மனசாட்சியின் உறுதியை மதித்துநடந்தனர். எருசலேமிலுள்ள சபைக்கு இச்செய்தியைக் கொண்டுசென்று, அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களிடம் ஆலோசனையும் புத்திமதியும் பெறவும், அவர்கள்தரும் பொருத்தமான ஆலோசனையை பின்பற்றவும் தயாராயினர். தேவன் அப்போஸ்தலர்களை நியமித்திருந்தார் என்றும், இவைகள் அத்தியாவசிய மானவைகளும், முறையானவை களுமாயிருந்தன.ஆதலால் அவர்கள் தரும் இறுதி ஆலோசனை சரியாகவே இருக்கும் என்றும் அந்தியோகியா சபை சகோதரர்கள் தேவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தனர். அதேசமயத்தில், எருசலேமிலுள்ள சகோதரர்கள் யூதத்துவத்தின் ஆதிக்கத்தில் சூழப்பட்டிருப்பதை அறிந்து, மோசேயின் சடங்கு சம்பிரதாயத்தில் குறுகிய பார்வை உடையோராக இருந்தார்கள். அவர்கள் தங்கள் இரண்டு பிரதானமான பிரதிநிதிகளாகிய அப்.பவுல் மற்றும் பர்னபாவை அனுப்பினர். அவர்கள் எருசலேம் ஆலோசனை சங்கத்தின்முன்பாக, பெரும்பாலான சபைகளின் சரியான கருத்துக்களை சமர்ப்பித்தனர். இவ்வாறாக, முழு பாடங்களும், முழுவதுமாகவும், உண்மையாகவும் ஆய்வுசெய்யப்பட்டு, கூடுமானவரை துல்லியமாக கர்த்தருடைய சிந்தை கண்டறியப்பட்டது.

சகோதரர்களது அறிவு வரம்புக்குமீறி எந்த வழிமுறையையும் தீர்மானிக்காதபடி, இது ஒரு முறையானதும் அழகுவாய்ந்ததுமான ஆவியாக இருந்தது. இது தேவபார்வையிலும், தெளிந்தசிந்தையுடைய மனிதரது நிதானிப்பிலும் பாராட்டத்தக்கதாக இருந்தது. பொதுவாகவே அறிவுவரம்புக்கு மீறின வழிமுறைகளை பின்பற்றுவோர், கர்த்தர்மேல் போதுமானஅளவு விசுவாசமில்லாதவர்கள். அவர் சபைக்கு நிஜமான தலையாய் இருக்கிறார் என்றும், அவரது சித்தத்தை அறியத் தேடுகிறவர்களது நடவடிக்கைகளில் அவரது பராமரிப்பு இருந்து அவர்களை வழிநடத்தும். சாந்தகுணமுள்ள மோசே வனாந்திரத்தில் இரண்டாம்விசை கன்மலையை தவறாக அடித்து கூறினதுபோலவே, இவர்கள் கட்டுக்கடங்காதவழியில் சுயநிச்சயத்தின்படி செய்பவர்கள். "உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர்புறப்படப் பண்ணுவோமோ?" – எண் 20:10.

உண்மையினிமித்தமோ வெளிப்படையாக பேசுவது மற்றும் செய்வதினிமித்தமோ, பகுத்தறிவுள்ள நடக்கையின்மூலமோ அடையக்கூடிய எல்லா வெளிச்சத்தையும் அடைவதால், சத்தியம் எதையும் இழப்பதில்லை. பவுல் மற்றும் பர்னபாவினிடத்தில் அந்தியோகியா சபை மாபெரும் நம்பிக்கை வைத்திருந்தனர். இந்த இரு மனிதர்களும் உண்மையாகவே கர்த்தரது விசேஷித்த ஊழியக்காரர்களாயும், நாவுகளுமாயிருந்ததற்கு எல்லா சாட்சியங்களையும் கொடுத்ததாக சபையார் சாட்சியமளித்தனர். இருதரப்பிலிருந்து கேட்கப்பட்ட கேள்வியின்மீது இருதரப்பினரும்கூடி அவரவர் கருத்தைக்கேட்டும், கர்த்தருடைய சித்தம் என்னவென்று முழு உடன்பாடுள்ள தீர்மானத்திற்கு வரமுடியவில்லை என்பது விநோதமாய்த் தோன்றுகிறது. பொதுவாக சபைக்கு கர்த்தரின் சித்தமே நிச்சயத்தை ஏற்படுத்தும். அன்றைக்கு கடைப்பிடிக்கப்பட்ட இந்த உன்னத நோக்கத்தை இன்றையநாளிலும் கடைப்பிடிக்கவேண்டுமென்று நாம் பரிந்துரைக்கிறோம். ஆயினும் இன்றைக்கு, ஜீவனுள்ள அப்போஸ்தலர்களிடம் கேள்விகளைக்கேட்டு ஆலோசனை பெறமுடியாது, நம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களது எழுத்துவடிவிலான போதனைகள் வழியாக தகவல் குறிப்பு பெறவேண்டும். தேவவசனத்தின்மேல் சிறந்த அறிவைப் பெற்றுள்ளோர் மற்றும் தெய்வீகத்திட்டத்தைக் குறித்த நுண்ணறிவு பெற்ற சகேதரர்களிடையே உதவிகேட்கத் தேடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளின் மத்தியில் உண்மை சுயாதீனத்தின் தரம், மிகைப்படுத்தி மதிப்பிடக்கூடாது. இது அவர்களது நிஜ வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிடுகிறது. ஏனெனில், அப்போஸ்தலர்கள் மரித்து நித்திரைக்குள்ளான உடனே வெளிப்பட்ட இருண்டயுகங்களில், இந்த ஐக்கியத்தைக்குறித்த தவறான கருத்தின் காரணமாக உண்மை சுயாதீனத்தின் ஆவி நசுக்கப்பட்டுவிட்டது. அவர்களது அறியாமை, மூடநம்பிக்கை, குருட்டுத்தனம், உபத்திரவம் இவைகளே இருண்டயுகத்தின் விளைவுகளாக வெளிப்பட்டன. 16ம் நூற்றாண்டில் துவங்கின மறுசீரமைப்பு இயக்கம், நம் ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீனத்தின்ஆவியை மறுபடியும் உயிர்ப்பிப்பதாக இருந்தது. கிறிஸ்துவின் போதனைகள் தந்த அஸ்திபாரத்தின் எல்லைக்குள் நின்று சுயாதீனத்தைப் பற்றியும் சிந்திக்கச்செய்தது. மனநிலையும் சூழ்நிலையும் அனுமதிக்குமானால், மதக்கொள்கைகளுக்கு எதிரானவர்

என்ற முத்திரையைக் கொடுக்காமல் அல்லது சகோதரர்களால் வார்த்தையாலோ செயல்களாலோ துன்புறுத்தப்படாமல், நமது சுயாதீனம் இன்னும் அதிக அளவிலா அல்லது ஓரளவா என்று விசுவாசத்தின் மூலம் சிந்திக்க வழிவகுத்தது.

இன்றைக்கு பெயர்கிறிஸ்தவ மண்டலங்களில், அதிகப்படியான சுயாதீனமும், மிகக்குறைந்த அளவிலான சுயாதீனமும் சேர்ந்த, விநோதமான கலவை படிப்படியாக நடைபெற்றுவருகிறதை ஆச்சரியமாகக் காண்கிறோம். கிறிஸ்துவின் போதனைகளைக்குறித்தும், அப்போஸ்தலர்களது போதனைகளைக்குறித்தும் சில கருத்துவேறுபாடுகள் வெளிப்படும் என்பதால், கூடி விவாதிப்பதற்கு மிகக்குறைந்த சுயாதீனம் பெற்றுள்ளவர்கள் தடைசெய்யப்படுகிறார்கள். இருதயத்தின் ஐக்கியமும், சிந்தையின் ஐக்கியமுமின்றி, வெளித்தோற்றமான ஐக்கியத்தைப்பெறும் முயற்சியே இதுவாகும். இது, தவறை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டிருப்பவர்களுக்கும், அந்த தவறுகள் வெளிப்படுத்தப்படாததால், அந்த சத்தியத்துக்கு கட்டுப்பட்டு அதைப் பற்றிக்கொண்டிருப்போருக்கும் இடையே காயத்தை வருவிக்கும். மேலும் கிறிஸ்து தம் பிள்ளைகளை விடுதலையாக்கி பெற்றுத்தந்த சுயாதீனங்களை முறையாக பயிற்சிசெய்யத் தேவையான கிருபை மற்றும் அறிவைத் தடைசெய்கிறது. இந்த விஷயங்களில் பொதுவாக அவர்கள் கடைப்பிடித்துவருபவை என்னவெனில், சத்தியத்தை மூடிமறைப்பதோடு, தவறுகளையும் மூடிமறைப்பது தயவளிப்பதுபோல் எண்ணுகின்றனர். ஐக்கியம்போல் தோற்றத்தை ஏற்படுத்துவது, நிஜமான ஐக்கியம் ஏற்படுத்தும் நோக்கத்துக்காகவே என்றும், கிறிஸ்துவின் சரீரமாகிய உண்மை அங்கங்களது வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கிறது என்றும், தவறான யூகத்தின் அடிப்படையில் இவ்வாறு செய்கிறார்கள். இப்படிப்பட்ட போலிஐக்கியம் உருவாகி, விளைவுகளை ஏற்படுத்தி, பெயர்கிறிஸ்தவ சபைகள் வளர்ச்சிபெற்றாலும், சிறிதுகாலம் மட்டுமே நிலைத்திருந்து, மகா உபத்திரவக்காலத்தின்போது அழிக்கப்பட்டுவிடும்.

மற்றொருவகையில், அதிகப்படியான சுயாதீனம் இருப்பதையும் நம்மால் காணமுடிகிறது. இவர்கள் யாரெனில், பரிணாமவாதக்கொள்கைக்காரர்களும், பகுத்தறிவு சிந்தனையாளர்களுமே. இவர்களுக்கு போதனைகள் இறையியல் கல்லூரிகளிலும், அன்றாட கருத்து பரிமாற்றம் செய்பவர்களிடமும், பிரசங்கமேடைகளிலும் கொடுக்கப்படுகிறது. இந்த போலிபோதனைகளுக்கு முரண்பாடாக பேசவோ, செயல்படவோ முயற்சித்தால், தடைசெய்யப்பட்டு சபையின் ஐக்கியத்தை அழிப்பவர்களாகவும், கலகத்தைத் தூண்டுபவர்களாகவும் எண்ணப்படுவர். இவ்வாறாக, அதிகப்படியான சுயாதீனமும், அதிகப்படியான அடிமைத்தனமும் ஒன்றிணைந்து, இன்றைக்கு பெயர்சபை அமைப்புகளில் கிரியை செய்துவருகிறது.சத்தியத்தை ஒதுக்கவும், அப்புறப் படுத்தவும், அதை நேசிப்பவர்களையும் , கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தின்படி நிற்க விரும்புவோரை வெளியேற்றவுமே இவ்வாறு நடக்கிறது. தவறை ஸ்தாபித்து, தகுதியுள்ளதாக்கி, அபிவிருத்திசெய்து, மேன்மைப் படுத்துவது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. இத்தவறுகளை அதிவிரைவாகப் பரப்புவதை மறுத்தாலும், தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தது. கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தினை ருசிபார்த்த கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும், அந்த சுயாதீனத்தில் நிலைத்துநின்று, அதைத்தடுக்க விரைவில் ஒருமுயற்சி எடுக்கும்போது கூடியவிரைவில் இல்லையென்றாலும், எல்லா மனித அமைப்புக்களின் அடிமைத்தனங்களையும் முழுமையாக அகற்றுவோமாக. இவ்வாறாக அவர்கள் நம் கர்த்தரும், நம் மீட்பரும், நம் போதகரும், நம் ராஜாவுமாயிருப்பவரோடு ஸ்திரமாகவும், உண்மையாகவும் நிலைத்திருப்பார்களாக.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பதில் விலகியிருத்தலைக் குறித்த இந்த வழிமுறையிலிருந்து, கொரிந்து சபைக்கு எழுதின அப்போஸ்தலரது பிந்தைய போதனைகள் முரண்படுகிறதா ?(1கொரிந்தியர் 8ம் அதி.). இல்லை என்று நாம் பதிலளிக்கிறோம்.விக்கிரகங்களுக்கு முன்னதாகவே படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பதை அப்போஸ்தலர் பரிந்துரைக்கவில்லை. அதற்கு மாறாக, அவ்வாறு உண்ணும் பழக்கமுடைய ஒரு சிலருக்கு பதிலளிக்கிறார். அவர்களது விவாதத்தின் காரணகாரியத்தை அவர் ஏற்றுக்கொள்கிறார், அதாவது, விக்கிரகம் என்பது, மரம் இரும்பு மற்றும் கல்லால் உண்டானது, இவை முன்பாக படைக்கப்படும் இறைச்சி எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை, நன்மையடைவதுமில்லை.ஆனால் ஒருசிலர் பகுத்தறிவில் பலவீனமாயுள்ளபடியால், அவர்களால் இவ்விஷயத்தை புரிந்துகொள்ளமுடியாமல், தங்கள் மனசாட்சியில் தங்களை கறைப்படுத்திக்கொண்டு பாவத்திற்குட்படுவர். இது அதிகமாகப்பெருகி, அதனிமித்தமாக அழிவுக்குள்ளாகிவிடாதபடி, அவர்களை காக்கவே அந்த இறைச்சியை புசிக்கக்கூடாது என்று தடைசெய்கிறோம் என்று காண்பித்தார். மனசாட்சியின் சத்தத்துக்கு கீழ்ப்படியவேண்டும். அதன் நிலைப்பாடுகள் எந்தளவு மூடப்பழக்க வழக்கமாக, தவறு நிறைந்ததாக இருந்தாலும் அது ஒருபொருட்டல்ல.– அது மீறுதலுக்குட்பட்டால் நமக்கு ஆபத்து. நமது மனசாட்சி சற்று தேர்ச்சியடையட்டும், அதன் அறியாமை ஒருபோதும் மீறுதலுக்குட்படாதிருப்பதாக. மனசாட்சியை மீறுகிற ஒவ்வொரு காரியமும் குணாதிசயத்தில் அழிவுக்கு அதிகமாக வழிவகுக்கும். எல்லோரும் அவரவரது சொந்த மனசாட்சியையும், அதோடுகூட தாங்கள் தொடர்புகொள்கிற மற்றவர்களோடும், விசேஷமாக குழந்தைகளோடும் காத்துக்கொள்ள நினைவில்கொள்ளவேண்டும்.

ஒருமித்திருப்போம் நாம் தவறை வெறுப்பதில்
ஒருமித்திருப்போம் நம் அன்பில் –
எல்லாம் இனிமையும் உண்மையுமாக;
ஒருமித்து மகிழ்ந்திருப்போம் –
அது பாடலாய் கட்டுக்கடங்காது செல்லட்டும்
ஒருமித்து துயரப்படுவோம் –
அது ஜெபத்தில் சுக்கு நூறாகட்டும்
ஒருமித்த வல்லமையை வெளிப்படுத்துவோம் –
அது உம் பிள்ளைகளை விடுவிக்கட்டும்
இப்படி சத்தியத்தைப் பின்பற்றுதல் –
உம்மைப் பின்பற்றுதலாகும்

**--2712--**

## இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன்– பிலிப் 3:13

ஏமாற்றங்கள் கடுமையாய் உணர்ந்தபோதிலும்,
உந்தன் புருவங்கள் மீதே காணும்போதும்;
நம்பிக்கை அழிந்துபோய்விட்டதாலே
உம் இருதயம் துன்பத்தால் நொறுங்கிடச் செய்திட்டாலும்;
நீர் அன்பு செய்த உம் நண்பர்கள் உம்மை விட்டே விலகிப்போயினும்,
எதிரிகள் கொடுமையாய் ஈட்டியை எறிந்து
இரக்கமின்றி இகழ்ந்து வில்லை வளைத்தாலும்
உம் இருதயத்தையே ஊடுருவக் குத்த எண்ணினாலும்;

விழிப்புடன் உறுதியாய் உண்மையாய் இருந்திடு,
ஒரு அமைதியான மனிதனாய் பொறுத்திரு;
ஜாக்கிரதையாய் தேவசித்தத்தை அறிந்திடு..
அவர் திட்டத்துக்கு ஒப்புவித்திரு;
செவிகொடாதே மனித ஆலோசனைக்கு,
அன்பாய் அவை அளிக்கப்பட்டபோதும்.
கிட்டப்பார்த்தால் அவை பொருத்தமாயிருக்கும்,
வழிவிலக்கும் தூரமாய் பரலோகப் பாதையினின்று.

தயாராயிரு கிறிஸ்துவைப் பின்பற்ற,
எங்கெல்லாம் அவர் நடத்தினாலும்;
சத்தம் அந்நியனுடையதா கேட்காதே,
சத்தம் அவருடையதா செவிகொடு.
நற்கீர்த்தியிலும் துர்க்கீர்த்தியிலும்
துளியும் அச்சமின்றி பின்பற்று;
உன் பாதம் சுயவழியை தேடாதிருக்கட்டும்,
உன் கர்த்தர் சென்றவழியோ அங்கே உண்டு.

மனிதர் சந்தேகத்தோடு பார்த்தால் என்ன
ஏளனமாய் நகைத்தாலென்ன வெறுத்து ஒதுக்கினாலென்ன ?
நீ ஒருபோதும் உணராய் திடீர்வேதனை,
உன் கர்த்தர் தாங்கியிருக்கிறார்;
சோதனைகள் தற்காலிக வாழ்வில்
ஒப்பிடத்தக்கவையல்ல – அடைவோம்
மகிமை நாம் அவரோடு பங்குபெறுவோம்,
அவரது பாடுகளை நாம் பகிர்ந்துகொண்டோம்.

– Herald Magazine

——————————

**--2713--**

R 5892

# விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும்

# FAITH DEMONSTRATED BY WORKS


''ஒருவன் உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே''– யாக்கோபு 2:18.

விசுவாசம்(Faith) என்பது ஐம்புலன்களால் நிச்சயமாக நிரூபிக்கமுடியாதவைகளின் மனஉறுதிப்பாடும், அதிகார உரிமையோடு உண்மை என்று ஏற்றுக்கொள்வதுமாகும். விசுவாசத்தோடு மிக நெருக்கமாக ஒன்றிணைந்ததாக தோற்றமளிக்கிற மற்றுமொரு குணம் உண்டு. அது எதையும் எளிதில் நம்பும் தன்மையாகும்(Credulity). இந்த இரண்டிற்குமிடையே வித்தியாசமாய் காணப்படுவது என்னவெனில், விசுவாசத்துக்கு அஸ்திவாரமாக நன்மையும் பலமான சாட்சியமும் அதிகாரமும் இருப்பதால் இதையே விசுவாசம் எதிர்பார்க்கிறது, அதையே விசாரிக்கிறது. ஒருசில ஜனங்கள் முழு உண்மையையும் அறியுமுன்னே தப்பெண்ணம்கொண்டு, எந்தக்காரியத்திலும் பகுத்தறிவின்றியே ஏற்றுக்கொள்கின்றனர். சிலசமயங்களில் அவர்கள் விசுவாசத்தில் நன்கு பலப்பட்டிருப்பதாக பாராட்டுப் பெற்றிருப்பர், ஆனால் உண்மை என்னவெனில், எவற்றையும் பகுத்தறியாமலும் உறுதிப்படுத்தாமலுமே எளிதில் நம்பி ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதேயாகும். விசுவாசம் என்பது பொறுப்போடுகூடிய தன்மையை பெற்றுள்ளதால், ஒரு கிறிஸ்தவன் அதை பயிற்சி செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறான். அவன் தேவனிடத்திலான விசுவாசத்தை செயல்படுத்துகிறான். தேவனது பிரசன்னத்திலும், அவரது குணாதிசயத்திலும் அவன் ஐயப்படுவானாகில், பிதா இக்காலத்தில் அனுப்புகிற செய்திகளைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமான உணர்வுகளைக் கொண்டிருக்கமாட்டான்.

இயற்கையின் புத்தகத்திலிருந்து போதுமானஅளவு மாபெரும் தெய்வீக குணாதிசயத்தின் தோற்றத்தை அடைந்தபிறகு, வேதாகமத்தின்மேல் உள்ள விசுவாசத்தைப் பயிற்சி செய்யும்முன், எழுத்தாளர்களின் தனிப்பட்ட ஜீவியத்தைக்குறித்து, யார் அவர்கள், அவர்களது குணாதிசயங்கள் எப்படியிருந்தன ? யாரை அவர்கள் உரிமை பாராட்டினார்கள், அவைகள் உண்மை என்பதற்கு என்ன சாட்சியத்தை வைத்திருக்கிறார்கள் ? அந்த சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளமுடியுமா ?என்று விசாரிக்கும். மற்றுமொருவகையில் கூறுவோமாகில், விசுவாசம் இறுதி தீர்மானத்துக்கு உடனே தாவி விடாது, மாறாக, அது தாபரித்திருப்பதை புத்தியறிவின் அடிப்படையில் பார்த்து, ஆராய்ந்தறிகிறது. அவ்வாறு அறியும்போது, திடமான நம்பிக்கை உருவாகுமெனில், அது அறிவுக்கேற்றதாயிருக்கும். விசுவாசம் என்பது அறிவு அல்ல, ஆகவே விசுவாசம்என்பது புத்தியறிவின் அடிப்படையில் தீர விசாரித்து, அதன்மேல் கட்டப்படுவதாகும்.

**சோதித்தறியாமல் நம்புவது விசுவாசத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டிருக்கிறது**(Faith distinguished from credulity) :–

வேதாகமம் ஒரு கிறிஸ்தவனுக்கு முன்பாக விசுவாசஅறிவுபெறும் மேய்ச்சல்நிலமாக ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவு சுபாவக் கண்களால் காணமுடியாதது. இவையனைத்தையும் அவன் தொடர்ந்து சோதித்துப் பார்க்கவேண்டும். அவன் மெய்ப்பித்துக் காட்டி வருவதில் திருப்தியடைவானாகில், தன் விசுவாசத்தை வெளிப்படுத்துவதும், நன்மையானதை நிரூபிப்பதும் அவசியமானதாகும். அவனது மனதின் செயல்பாடுகள் ஊக்கமாக இருந்து, தெய்வீகத்திட்டத்தின் ஒவ்வொரு பண்பும், மற்றதோடு எப்படி பொருந்துகிறது என்று அறிந்துணரவேண்டும். இவ்வாறாக அவனது விசுவாசம் விசாலமானதாக, ஆழ்ந்த விசுவாசமாக, உறுதியான விசுவாசமாக வளரும். அவனது விசுவாசம் குறிப்பிட்ட காலத்திற்குள் உறுதிப்பட்டதாகவும், திடநம்பிக்கை உடையதாயும் ஆவதால், தான் நம்பும் சத்தியத்தில் கூறப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தங்களுக்காக தன் ஜீவனையும் மனப்பூர்வமாய் தியாகம்செய்ய தயாராயிருப்பான். அந்த வாக்குத்தத்தங்கள் உண்மையுள்ளவை என்று ஏற்றுக்கொள்வான், தெளிவற்ற நிலைமையிலோ, திருப்தியற்ற நிலையிலோ அல்ல.




மற்றுமொரு விதத்தில் பார்க்கும்போது, முழு உண்மையையும் சோதித்தறியாமல் நம்புவது

(credulity)தப்பெண்ணமாகும். புறஜாதியார் எதையும் எளிதில் நம்பும் தன்மையுடையவர்கள். ஏனெனில் அவர்கள் குருட்டாட்டமாக, முழு உண்மையையும் அறியாமல் தவறான கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றனர். அநேக கிறிஸ்தவ ஜனங்களும் எளிதில் நம்புகிற அதே ஆவியால், குழப்பத்துக்குள்ளாகியிருக்கிறபடியால், அவர்களது விசுவாசத்தில் தவறுசெய்பவர்களாக காணப்படுகிறார்கள். தற்காலத்தில் இரண்டு மாபெரும் வல்லமைகள்– நன்மையின் வல்லமை மற்றும் தீமையின் வல்லமை இருப்பதை நாம் மறக்கக்கூடாது. இப்பூமியில், 6000 வருடங்களாக தீமையின் வல்லமையே மேலோங்கியிருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உலகில் மாபெரும் அளவில் வல்லமையை பிரயோகிக்க சாத்தானுக்கு தேவன் அனுமதியளித்திருக்கிறார். ஆனாலும் இது வஞ்சகத்தின் வல்லமையே. மனுக்குலத்தை கட்டிப்போட்டிருக்கிற மூடநம்பிக்கைகள், சாத்தானின் ஆவியின் வல்லமை தவறாக உபயோகித்ததினால் உண்டானவையே என்று நாம் அங்கீகரிக்கிறோம்.

உதாரணமாக, ஒருகாலத்தில் ஒரே கடவுள் மூன்று கடவுளர்களாக அல்லது மூன்று கடவுள்கள் ஒரே கடவுளாக இருக்கிறார் என்ற விசுவாசத்தை மாபெரும் போதனையாக எண்ணியிருந்தோம். பகுத்தறிவோடு இதை நிரூபிக்கமுடியாது, இவையனைத்தும் விசுவாசமே என்று நமது தவறான கண்ணோட்டத்தில் கூறினோம். உண்மை என்னவெனில், மூன்று கடவுளர்கள் ஒரே கடவுளாக இருக்கிறார் என்றும், ஒரே கடவுள் மூன்று கடவுள்களுக்குள் இருப்பதாகவும் சிலர் கூறிவந்தார்கள். இதற்கு விசுவாச அடிப்படைஇல்லை. ஆகவே நாம் திரித்துவத்தின்மேல் கொண்டிருந்தது விசுவாசமல்ல, மாறாக எதையும் எளிதில் நம்பும் (credulity) தன்மையாகும். அப்போது பல காரியங்களின்மேல் இந்த அடிப்படையிலேயே நம்பிக்கை வைத்தும், அவைகளின்மேல் விசுவாசம் கொண்டிருக்கவில்லை. கடந்தகாலங்களில் பெரும்பாலானவர்களிடம் எளிதில் நம்பும் தன்மையே காணப்பட்டிருக்கும். அவர்கள் அநேக காரியங்களை மனதில்வைத்து அசைபோட்டு, கற்பனையாக்கி, அதையே விசுவாச சத்தியங்களாக ஏற்றுக்கொண்டிருக்கக்கூடும். அப்படிப்பட்ட நிலைமையே இன்னும் நிலைத்திருப்பதாக நாம் நம்புகிறோம்.

கிறிஸ்தவ விஞ்ஞானம் என்ற சபையின் நண்பர்களை நாம் கவனித்து வந்திருக்கிறோம். அவர்களில் அநேகர் மிக ஒழுக்கமான ஜனங்கள். ஒருசிலவிஷயங்களில் மிக மதிக்கப்படத்தக்க ஜனங்களாவர். ஆனாலும் அவர்கள் விசுவாசத்திற்கடுத்தவைகளல்லாத சில குறிப்பிட்ட போதனைகளை எளிதாக நம்பி, பற்றிக்கொண்டுள்ளனர் என்பது நமது நிதானிப்பாக இருக்கிறது. பாவத்தைக்குறித்தும் தவறுகளைக்குறித்தும் அவர்கள் சொந்த கோட்பாடுகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.ஏனெனில் இந்தக் கோட்பாடுகள் வாழ்க்கையின் சில குறிப்பிட்ட அனுபவங்களுக்கு பொருந்துவதாக தோன்றுகிறது. இதனால் அவைகளை அடிப்படையாக அங்கீகரித்துக்கொண்டு காரணகாரியங்களை பகுத்தறியாமல், புறம்பாக்கிவிட்டு, அவைகளை ஏற்றுக்கொண்டு, விசுவாசமென்று அவர்கள் அழைக்கிறார்கள். தங்கள் விசுவாசத்தின் பலனாக,தெய்வீக சுகமாக்குதலை அடைந்ததே அவர்களது போதனைக்கான அடிப்படை ஆதாரமாக கொண்டிருக்கிறார்கள். சாத்தான் தவறுதலாக வழிகாட்டும் வல்லமையை பெற்றிருக்கிறான் என்பதை அவர்கள் அறியத் தவறுகிறார்கள் என்று நமக்குத் தோன்றுகிறது. அநேகர் சாத்தானின் வஞ்சகத்தால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என்று நாம் பயப்படுகிறோம். மார்மன்ஸ்(Mormons - பிற்கால பரிசுத்தவான்களாகிய இயேசுவின் சபை என்று அமெரிக்காவில் கிபி 1930களில் ஸ்தாபிக்கப்பட்ட சபை) சபையினரிடமும் இதுபோன்ற நிலைமையே நாம் காண்கிறோம். அவர்களும் கோட்பாடு வைத்திருந்து, தெய்வீக சுகமடைதலையே நம்புகின்றனர். செவன்த் டே அட்வென்டிஸ்ட்டுகளும் இதே நிலையை உடையோராய் இருக்கின்றனர். விரோதியானவன் இந்த ஜனங்கள் எல்லோரையும் தற்கால யுகத்தின் அழைப்பாக இதையே காண்பித்து தவறாக வழிநடத்துகிறான். அவர்கள் முக்கிய விஷயத்திலிருந்து விலகிப்போகிறார்கள். ஆகவே அவர்களால் மேலான ஆசீர்வாதங்களை அடையமுடியாது. இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கின்ற உண்மை விசுவாசிகளுக்கு மட்டுமே மேலான ஆசீர்வாதங்கள் சென்றடைகின்றன.

**ஆதிகால சபையில் தவறானவைகளை கண்டுபிடித்து அவைகளை களைவதற்கு நடந்த போராட்டங்கள் :–**

அப்போஸ்தலர் நமது திறவுவசனத்தில் கூறுகிறார் ; ‘‘நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்’’ இதை தர்க்கத்தின் ஒரு பகுதியாக அவர் முன்னிறுத்திக்கொண்டே வருகிறார். ஏனெனில் அப்போஸ்தலரின் நாட்களில், விசுவாசமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, கிரியை ஒரு பொருட்டல்ல என்ற கொள்கை எவ்விடத்திலும் நம்பப்பட்டுவந்தது. அந்தக் கருத்தை யாக்கோபு அப்போஸ்தலன் எதிர்த்துப் போராடுகிறார். விசுவாசம் அத்தியாவசியமானதே; ஆனால் அதோடுகூட கிரியையும் அவசியம்வேண்டும். ‘‘கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி; நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்’’(யாக்3:18) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். பவுலின் போதனைகளில் இருந்த சில முரண்பாடான காரியங்களை அக்காலகட்டத்தில் எல்லோரும் அறியும்படி சுற்றுமடல் அனுப்பியிருந்தனர். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மாம்சமான ஒருவனும் நீதிமானாக்கப்படுவதில்லை. யூதர்கள் நியாயப்பிரமாணத்தை பெற்றிருந்தும், அப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியாமற்போயிற்று.தேவனுடைய பார்வையில் தன்னை நீதிமானாக காண்பிக்கும்படிக்கு பரிசுத்த பவுலினாலோ அல்லது மற்ற மனித ஜீவியாலோ கூட அப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் ஒரே வழியினால் மட்டுமே இதைக் கடைப்பிடிக்கமுடியும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால்

அல்ல.

இந்தக் கருத்தின்படி பார்க்கும்போது, பரிசுத்தபவுலுக்கு எதிராக ஏதாவது ஒருவகையில் பரிசுத்த யாக்கோபு பேசியிருப்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக தவறானவைகளைக் களைவது பற்றின பரிசுத்த பவுலின் போதனைகளிலிருந்த முரண்பாட்டையே எதிர்க்கிறார். அதாவது, நகைப்புக்காக சொல்லவேண்டுமெனில்,'' நான் எந்த வகைப்பட்ட கிரியைகளை பெற்றிருக்கிறேன் என்பது ஒரு பொருட்டல்ல. நான் உறுதியான விசுவாசத்தை உடையவனாயிருக்கிறேன், தேவன் கிரியைகளை கவனத்தோடு கணக்கிடுவதில்லை. நான் மாம்சத்தின் கிரியைகளை செய்யமுடியும். தேவனிடத்தில் அபரிதமான விசுவாசம் கொண்டிருப்பதால், நான் எல்லாவிதத்திலும் சரியாய் இருப்பேன்''. இப்படிப்பட்ட வார்த்தைகள் உண்மையல்லவென்று பரிசுத்த யாக்கோபு சுட்டிக்காண்பிக்கிறார். தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருப்பதும், பாவத்திலிருந்து மன்னிப்படைதலும் முறையாக நடைபெறவேண்டும். அதோடுகூட கிரியைகளும் சேர்ந்திருக்கவேண்டும். நம்மிடத்தில் விசுவாசம் இருக்குமானால், அந்தளவு நிச்சயமாக அது ஏதாவதொருவகையில் வெளிப்படும். இந்தக் கிரியைகள் நன்மையில்லாதிருந்தால், தீய கிரியைகளாக, மாறுபாடான கிரியைகளாய் இருக்கும். ஒரு நல்லமரம் நல்ல கனியையே தரும். ஒரு நல்ல நீர்ச்சுனை சுத்த தண்ணீரையே தரும்.

இது அப்போஸ்தலரின் வாதமாகத் தோன்றுகிறது. நாம் அனைவரும் நிச்சயமாக அவரது கருத்தை ஏற்றுக்கொண்டு, நமது கிரியையை செயல்படுத்தத் விரும்புகிறோம். நமது விசுவாசத்தை உலகம் பாராட்டாது. ஏனெனில் நம் இருதயங்களை அறிய அவர்களால் கூடாது. ஆனால் தேவனோ நம் விசுவாசத்தைப் பார்த்து பாராட்டுகிறார். ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பனாக இருந்ததால் தேவன் அவரை நேசித்து, தம் சிநேகிதனைப்போல் நடத்தினார். 'தேவனுடைய சிநேகிதன்' என்று அவர்அழைக்கப்பட்டார். ஆனால் ஆபிரகாம் தம் விசுவாசத்தை சில கிரியைகள் மூலம் எண்பிக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். தாம் அடைந்திருந்த விசுவாசத்திற்கு சாட்சியமாக சில கிரியைகளை செய்வது அவசியமாயிற்று. நம் கிரியைகள்மூலம் நம் விசுவாசத்தின் பலத்தை அவர் சோதிக்கிறார்.


விசுவாசம் அருளப்பட்டது அது
புயலின் ஆழத்தில் அமிழ்த்திற்று
புயல் வரும் என்பது உம் குரலின் உத்தரவா ?
வைராக்கியமோ செங்குத்தான மலைஉச்சியிலும் ஏறச்செய்யும்
அலைந்து திரிபவரைத்தேடி, வீடுகொண்டுசேர்க்கும்
பலப்படுத்தும், ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகரே,
உம் வல்லமையால்;
பிரகாசிக்கப்பண்ணும் எங்கள் இருதயத்தை;
நாங்கள் மறுரூபமாவோம்
உம்மைப்போல், போதிக்கவும் நேசிக்கவும் ஜீவிக்கவும்
உமது சாயலின் வெளிச்சத்துக்கு !

---

**R 5893**

# சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது

## PREACHING THE GOSPEL A NECESSITY




''சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ'' – 1கொரிந்தியர் 9:16

''ஐயோ'' என்ற வார்த்தை, முன்பு உபயோகிக்கப்பட்டதுபோல், இன்றைய நாளில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை. இது பழமையான ஆங்கிலமொழியில் பயன்படுத்தப்பட்ட சாதாரண வார்த்தையாக இருந்தது. ஆனால் இன்றைய நாளில் அவ்வார்த்தைக்கு ஒரு அர்த்தத்தை

# சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது

# PREACHING THE GOSPEL A NECESSITY



"சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" – 1கொரிந்தியர் 9:16

"ஐயோ" என்ற வார்த்தை, முன்பு உபயோகிக்கப்பட்டதுபோல், இன்றைய நாளில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை. இது பழமையான ஆங்கிலமொழியில் பயன்படுத்தப்பட்ட சாதாரண வார்த்தையாக இருந்தது. ஆனால் இன்றைய நாளில் அவ்வார்த்தைக்கு ஒரு அர்த்தத்தை இணைத்துள்ளார்கள். அது மூல வார்த்தையில் இல்லை என்று நாம் எண்ணுகிறோம். "அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்" என்று நம் கர்த்தர் பேசின இந்த உவமை பெரும்பாலானோர் அறிந்ததே. அந்த வார்த்தைக்கு நித்திய வேதனை என்று பொருள்படுவதாக வெளித்தோற்றத்துக்கு காணப்படுகிறது. வேதாகமத்தில் ஐயோ என்று உபயோகிக்கப்பட்டிருக்கும்போது. அதேபொருளைத் தருவதாக சிலர் எண்ணுகின்றனர். ஆகவே இவர்கள் நம் திறவுகோல் வசனத்தை, "நான் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால், நித்திய வேதனைக்குச் செல்வேன் என்று பொருள் கொள்கின்றனர்.இதற்கான காரணம் என்னவெனில், இருண்ட யுகங்களில் ஜனங்கள் வேதாகமத்தைப் படிக்க தடை செய்யப்பட்டிருந்ததால், பாரம்பரியங்களும், தவறான விசுவாசப் பிரமாணங்களும், பழக்கவழக்கங்களும் இம்மாற்றத்துக்கு வழிவகுத்தன.

"நான் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால், மகிழ்ச்சியற்று இருப்பேன்; இது எனக்கு மிகுந்த கவலையை வருவிக்கும்" என்பதே அவரது கருத்தாயிருந்திருக்கும். "என் முந்தைய உபத்திரவத்தின் கண்ணோட்டத்தில் நோக்கும்போது, கர்த்தர் மாபெரும் இரக்கம் எனக்குக் காண்பித்தார். அவரது செய்தியை பிரசங்கிக்காவிடில் அவரது தயவையும் ஆசீர்வாதத்தையும் இழந்ததாக பொருள்படும்" என்பதே அப்போஸ்தலர் கூறுவதன் பொருளாகும் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். கர்த்தர் தம் சத்தியவெளிச்சத்தால் ஒருவரை பிரகாசிக்கச்செய்தபிறகு, இந்த மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் வாய்ப்பை அவரிடமிருந்து நீக்குவாராகில், அது மாபெரும் கவலையை உண்டாக்கும்.

ஒரு நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, அப்போஸ்தலரது வார்த்தைகள் தேவ வசனங்களை பொதுக்கூட்டங்களில் பிரசங்கிப்பதற்கு மட்டுமே பொருந்தும் என்று தோன்றுகிறது. மற்றுமொரு நிலைப்பாட்டில் பார்க்கும்போது, தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்துகொண்ட ஒவ்வொருவரும் ஒரு ஊழியக்காரரே, பிரசங்கிக்க நியமிக்கப்பட்டவர்கள் . இந்த நியமித்தல் என்பது ஊழியம்செய்யும் உரிமை, அங்கீகாரம் மற்றும் நியமிக்கப்படுதல் ஆகும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி நியமனம்செய்யப்படுதலை ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிட்டுள்ளார்(ஏசா 61:1–3). அதில் சபையின் மகா உன்னதமான தலையாக இருக்கின்ற கிறிஸ்துஇயேசுவின் மூலம், சபை நம் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. அங்கே முதன்மையாக, கிறிஸ்து ஒரு பிரசங்கியாக உள்ளார் என்று நாம் வாசிக்கிறோம்;

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்"(ஏசா 61:1–3 ஒப்பிட்டுப்பார்க்கவும்).

**சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அநேக வழிகள் உண்டு :–**

நீண்டகாலத்துக்குமுன்பே மேசியாவுக்கு கொடுக்கப்படும் பரிசுத்தஆவியின் பணியைக்குறித்து இங்கு தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேசியாவின் சரீரஅங்கங்கள், அவர்மூலமாக அதே அபிஷேகத்தை பெற்றிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் அலுவலையும் பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய தூதுவனாக தேவனுடைய செய்தியாளனாக இருக்கும் சிலாக்கியத்தை அடைவதில் கிறிஸ்துவின் சீஷன் முறையாக மதித்திருந்து, தன் வாய்ப்பையும் ஆற்றலையும் பயன்படுத்தி, அவர் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாவிடில் அது உண்மையாகவே மிகுந்த கவலையை வருவிக்கும்.

பொதுமேடைகளில் பிரசங்கிப்பதைத்தவிர, பிரசங்கிப்பதற்கு வேறு எந்த வழியுமில்லை என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இது, பிரசங்கித்தலைக்குறித்து கூறும் வேதாகமத்தின் கருத்தாக இருக்கமுடியாது. இயேசு கடற்கரையிலும் நடைபாதைகளிலும் ஜனங்களிடத்தில் பேசினார். சிலசமயங்களில் இரட்சிப்பின் செய்தியை

கிணற்றின் பாதுகாப்புச் சுவர் மேல் அமர்ந்துகொண்டே பிரசங்கித்தார். மலைமேல் ஏறி தம் சீஷர்களுக்கு போதித்தார். சிலசமயங்களில் சீஷர்களோடு பிரயாணம்செய்யும்பேது பேசினார். அவ்வாறே நம்மிடமும் காணப்படவேண்டும். மகிழ்ச்சியின் செய்திகளை பிரசங்கிக்க எவ்வித வாய்ப்பு அல்லது நேரம் கிடைத்தாலும், அவற்றை பயன்படுத்தவேண்டும்.

சுவிசேஷம் என்ற வார்த்தையின் பொருள், மகிழ்ச்சியின்செய்திகள், நற்செய்திகள் என்பதாகும். மாபெரும் மகிழ்ச்சியளிக்கும் நற்காரியங்களை நாம் அறிவிக்கவேண்டும். நம் அன்றாட வாழ்க்கையின் நடவடிக்கைகளில், இறைச்சிக் கடைக்காரரையோ, ரொட்டிக் கடைக்காரரையோ, மளிகைக்கடைக்காரரையோ அல்லது நம் அண்டை வீட்டாரையும், நண்பர்களையும் சந்திக்கும்போது இவ்வாறு பின்பற்றலாம். நற்செய்தி போதனைகளையோ, புத்தகங்களையோ அல்லது பிரசுரங்களையோ அஞ்சலகம் வாயிலாகவோ அல்லது நேரடியாக கொடுப்பதன்மூலமாகவோ அல்லது மேடைகளிலிருந்து பிரசங்கிப்பதன்மூலமாகவோ செய்யலாம். இவையனைத்தும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலும், நற்செய்திகளை அறிவித்தலுமாகும். பிரசங்கித்தல் என்பது தெரியப்படுத்துதல் மட்டுமே. மேலும் அறிவைக் கொடுக்கும் தன்மையோடு தொடர்புடையதல்ல.

**சுவிசேஷத்தின் அடிப்படையும் அதன் மேற்கட்டுமானமும் :–**

அநேக செய்திப்பிரசுரங்கள் சுவிசேஷசெய்தியைத் தாங்கிவருவதில்லை. மாபெரும் துன்பசெய்திகளையே சுமந்துவருகிறது. அப்படிப்பட்ட செய்திகளை விநியோகிக்க விரும்பக்கூடாது. அவ்வாறு அதை நாம் அதிகதிகமாகப் பரப்பும்போது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க குறைந்த வாய்ப்புக்களையே ஏற்படுத்தும். நம் கர்த்தராகிய இயேசு சுவிசேஷத்தை, விசேஷமாக, ராஜ்யத்தோடு அடையாளப்படுத்தியே பேசினார் என்பதை நம் நினைவில்கொள்ளவேண்டும். ஆகவே நாம் நற்காரியங்களாகிய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். சபையை ஒன்றுசேர்க்கும் தேவனுடைய வழிமுறை இதுவாகவே இருந்துவருகிறது. இது உலகத்துக்கு சாட்சியாயிருக்கும். ராஜ்யத்தின் நற்செய்தியை அறிவிக்க நாம் இன்னும் வாய்ப்பு பெற்றிருக்கிறோம். இந்த சுவிசேஷத்தின் அடிப்படை, பாவிகளுக்காக பலியான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணம் அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கு ஏறி, பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்ததாகும். அதன் மேற்கட்டுமானமானது, விரும்புகிற அனைவருக்கும் இரட்சிப்பு அளிப்பது – சபைக்கான இரட்சிப்பு, அடுத்து உலகத்துக்கான இரட்சிப்பு. இந்த தேவஆசீர்வாதங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் மூலமாகவே வருகின்றன.

சபைக்கும், உலகத்துக்குமான கர்த்தரது உன்னத ஆசீர்வாதங்கள் இயேசுவின் இரண்டாம் வருகையில் அளிக்கப்படும். அவ்வேளையில் சபை மகிமைப்படுத்தப்பட்டு, உயர்த்தப்படும். தேவன் வாக்களித்திருக்கிற அவரது ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டு, அக்காலத்திற்கே உரிய ஆசீர்வாதங்கள் உலகின் ஜனங்களை வந்தடையும். ஆகவே, இந்த உண்மை சுவிசேஷத்தை யாரெல்லாம் புரிந்துகொண்டு, தான் அதை பிரசங்கிப்பதற்கே திருநிலைப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்று வாஞ்சையோடிருக்கிறார்களோ, அவர்கள் அதை பிரசங்கிக்க தடைஏற்படும்போது கவலைப்படவேண்டியது அவசியமாகிறது. அநேக வழிகளில் பிரசங்கிக்க சிலரால் முடியும். மற்றவர்களுக்கோ ஒவ்வொரு வழியிலும் பிரசங்கிக்கமுடியும். சிலருக்கோ மிகச்சில வழிகளில் மட்டுமே பிரசங்கிக்கமுடியும். ஆனால் ஏதாவது ஒரு வழியில் எல்லோரும் பிரசங்கிக்கமுடியும். எவ்வளவு அதிகமாய் இதைச்செய்கிறோமோ, அவ்வளவுக்கதிகமாய் மகிழ்ச்சியோடு இருக்கமுடியும். நம் நாட்களில் – புத்தகங்கள், வேதாகம அகராதிகள் என ஏராளமான உதவிகள் நமக்கு கிடைக்கின்றபடியால், தேவனுக்கு நாம் நன்றிசெலுத்துவோம். இவை அனைத்தையும் நன்கு உபயோகித்து, மற்றவர்களது நன்மைக்காகவும், நமது சொந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் பிரயோஜனப்படுத்துவோமாக!

--------------------------------

**--2718--**

# உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர்
## YOUR BRETHREN THAT HATED YOU

‘‘என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்’’ – ஏசாயா 66:5

தேவனுடைய வசனத்தின்செய்தி எவ்வளவு நேர்த்தியாகவும், புத்தியறிவுக்கு ஏற்புடையதாயும் உள்ளது! இயேசுவின் பின்னடியார்களில் அநேகர் விசுவாசத்தில் இளைஞராயிருந்து, பரிசுத்தஆவியை சிறிதளவே பெற்றிருந்து, தங்கள் விரோதிகளை பயமுறுத்தி, தேவன் பழிவாங்குவார் என அச்சமூட்டுகின்றனர். அப்போஸ்தலர்கள் யாக்கோபு மற்றும் யோவான் கூட, சமாரியப் பட்டணத்து ஜனங்கள், இயேசுவுக்கும் அவரது சீஷருக்கும் அப்பம் விற்க மறுத்தபடியால், அழித்துவிடும் என்றனர். ஆனால் இயேசு தம்மை மரணபரியந்தம் உபத்திரவப்படுத்தினவர்களைப் பார்த்தோ அல்லது அவரது பின்னடியார்கள் தங்களை உபத்திரவத்துக்கு உள்ளாக்கினவர்களைப் பார்த்து அச்சுறுத்தினதாகவோ வேதாகமத்தில் ஒரு வார்த்தையாகிலும் காணப்படவில்லை. ‘‘அவர்களோ வெட்கப்படுவார்கள்’’ என்பதே அவர்களுக்கு சொல்லப்பட்ட எளிமையான வார்த்தையாய் இருந்தது. தானியேல் தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் பிரகடனம் பண்ணினார்;

‘‘பூமியின் தூளிலோ நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகர்... விழித்து எழுந்திருப்பார்கள்’’. சிலர் பரிசுத்தவான்களாக மகிமையடைந்த சபையாக, ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போல பிரகாசிக்கிறவர்களாகவும், மற்றவர்களோ நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்குமாக அவமானமடையும்படி எழுந்திருப்பார்கள் – தானியேல் 12:2,3.

இங்கு வேதாகமத்தின் பொதுமொழிபெயர்ப்பு, மேற்கூறப்பட்ட வசனத்தில் இன்னும் ஒரு படி மேலாகச் சென்று, ‘‘நித்திய நிந்தைக்கும் , இகழ்ச்சிக்குமாக அவமானப்படும்படி எழுந்திருப்பார்கள்’’ என்று கூறுகிறது. ஆனால் இதே வசனப்பகுதி எபிரேயமொழியில், ‘‘நிந்தையும் இகழ்ச்சியும் நீடித்திருக்கும்’’ என்று கூறுகிறது. அதாவது, தீமைசெய்தவன் கர்த்தருக்கு எதிராகவும் அவரது செய்திக்கு எதிராகவும் எதுவரைக்கும் நிந்தைக்குட்பட்டிருக்கிறாரோ, அதுவரைக்கும் இந்த அவமானம் நீடித்திருக்கும். தனிப்பட்ட நபரது செயல்பாடுகள் இகழ்ச்சியுள்ளதாய் இருக்கும்வரை, அந்த இகழ்ச்சி நீடித்திருக்கும். ஆனால் மறுசீரமைப்பு விரைவில் ஏற்படும்வேளையில் நம் தேவனுடைய குணாதிசயத்தையும், அவரது அரசாங்கத்தின் கோட்பாடுகளையும் ஏற்று அதில் பிரியப்படுபவர்கள், அந்த அரசாங்கத்தின் அறிவுரைகளைக் கற்று அதைப் புரிந்துகொள்ளுவதன் நிமித்தமாக, நிந்தையும் இகழ்ச்சியும் அகன்றுபோகும்.

ஆகவே, பிரியமான சகோதரரே! கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமாக துன்பப்பட்டோரால் மேசியாவின் ராஜ்யம் நிர்வகிக்கப்பட இருப்பதால், உபத்திரவங்களை பொறுமையோடும், மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ளுங்கள். மகிழ்ந்து களிகூருங்கள் என்று நம் கர்த்தர் இதைக்குறித்தே ஆலோசனை கூறினார். கர்த்தரின் நிமித்தமாகவும், சத்தியத்தினிமித்தமாகவும் துன்பம் அனுபவிப்பவர்களாக இருந்தால், அவையனைத்தும் நித்திய வெகுமதியை நிச்சயமாய்ப் பெற்றுத்தரும். நாம் முறையாக சத்தியத்தைப் பயிற்சி செய்வோமானால், தேவனுடைய நேசகுமாரனது குணாதிசயத்தின் சாயலை பெறுவோமானால் நித்திய ஆசீர்வாதங்களை அடைவோம்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுடைய நாமங்களனைத்தும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது

---------------------

# எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது?

## MACHINATIONS OF THE EVIL ONE -HOW TO VANQUISH HIM



"சாத்தானை எதிர்த்துநில்லுங்கள்; அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" – யாக்கோபு4:7

சாத்தான் என்ற வார்த்தை, தீயோனுக்கு அடையாளமாயிருந்து, அவன் அசுத்தநோக்கத்தோடு ஆதியில் தேவனுக்கு எதிராளியாக இருந்து, சர்வ வல்லவருக்கு எதிராக ஒரு போட்டி அரசாங்கத்தை ஏற்படுத்த முயற்சித்தான். இதனால் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதோடு, எல்லா பரிசுத்த ஜீவிகளோடும் கொண்டிருந்த உறவிலிருந்து துண்டிக்கப்பட்டான். முன்பு லூசிபராக பிரகாசமாக்கப்பட்ட அவன், சாத்தானாக மாறினான். அதாவது வெறுப்பாளன், குற்றஞ்சுமத்துபவன் என்றும் பொருள்படும். ஒருகாலத்தில் அவன் அதிகாலையின் மகன் என்று அழைக்கப்பட்டவன், தற்போது "அந்தகார லோகாதிபதிகளுக்கு" அதிகாரப்பிரபுவாக மாறினான்(ஏசா 14:12–16; எபேசி6:11,12). அவன் ஒளியின் தூதனாக, ஒரு விடிவெள்ளி நட்சத்திரமாக இருந்த நிலையிலிருந்து அறுப்புண்டுபோனதால், தனக்குத்தானே தீமையை வருவித்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், தீமை செய்யத் தூண்டுபவனாக, தீமையின் அதிபதியானான். வேதாகமம் கூறுகிறபடி நம் ஆதிப்பெற்றோரை வசப்படுத்தி, கீழ்ப்படியாமைக்குள் நடத்தினதன்மூலம் முழு மனுக்குல குடும்பத்தையும் தேவனிடமிருந்து வழிவிலக்குவதில் வெற்றிபெற்றதோடு மட்டுமல்லாமல், பரலோகத்தின் தேவதூதர் கூட்டத்தின் அதிக எண்ணிக்கையினரையும் பாவத்திற்குள் தவறாக வழிநடத்தி, யேகோவாவுக்கு எதிராளிகளாக மாற்றினான்.

இச்செயலானது சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக மாபெரும் வெற்றிபெற்றதாக வெளித்தோற்றத்துக்கு காணப்படக்கூடும், ஆனால் காரியம் அப்படியல்ல. தேவன் எல்லா நேரங்களிலும் அடக்கிஆள்பவராக சூழ்நிலைக்கேற்ப செயல்படுகிறார். மனுஷருக்கும் தேவதூதர்க்கும் மாபெரும் பாடத்தை போதிப்பதற்காகவே, இந்த வழிவிலக்கும் செயல்பாடுகள் அனைத்தையும் அனுமதிப்பது அவரது நோக்கமாயிற்று. பெருகிவருகிற பாவத்தைக்குறித்தும், நீதியை விரும்புதலையும், கீழ்ப்படிதலை காண்பிக்கவும் முறையாகக்கற்று, தம்மோடு இசைவாகும்படி சீர்பொருந்தச்செய்து, அவ்வாறு அவர் ஆயத்தம் செய்துவருகிற கூட்டத்தாரைக்கொண்டு, ஏற்றவேளையில் இந்த தேவதூதர்கள் மற்றும் மனிதர்கள் ஆகிய இருதிறத்தாராகிய பாவிகள் அனைவரையும் நியாயந்தீர்ப்பார். சாத்தான் மற்றும் தெளிவாக பிரகாசிப்பிக்கப்பட்டிருந்த சிலர், மனதார பாவத்தை நேசிக்கிறபடியால், அவர்களுக்கு இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். சாத்தான் பாவத்தோடு பிரிக்கமுடியாத பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டான். ஆகவே அவனது அழிவு, வேதத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சாத்தானின் ஆவியை மனதார ஏற்றுக்கொண்டவர்களை சுவிசேஷயுகத்திலோ, ஆயிரமாண்டு அரசாட்சியிலோ மனந்திரும்புதலுக்கேதுவாக மீண்டும் புதுப்பிப்பது கூடாத காரியம் – எபி 2:14; மத் 25:41; எபி6:4–6; 10:26–29.

சாத்தானின் வல்லமையினின்றும், மனுக்குலத்தின் மனதைக் குருடாக்கும் ஆதிக்கத்திலிருந்தும் மீட்க, தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார். குருடாக்கப்பட்ட கண்கள் எல்லாவற்றையும், கேட்காத செவிகளையும் திறப்பதாகவும் எல்லா தேசத்தாரையும் மூடியுள்ள முக்காட்டை எடுத்துப்போடுவதாகவும் வாக்களித்துள்ளார் (2கொரிந்4:4; ஏசா 35:5; 25:7,8). இந்தப் பணியானது மேசியாவின் ராஜ்யத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படும், அதனை பூமியின்மேல் தம் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் கீழ் ஸ்தாபிக்கப்போவதாக தேவன் ஏற்பாடுசெய்துள்ளார். அந்த ராஜ்யத்துக்காகவே, "உமது ராஜ்யம் வருக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்க நமக்கு கற்றுக்கொடுத்தார். இந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, கர்த்தராகிய இயேசு பழைய பாம்பென்றும், சாத்தானென்றும் சொல்லப்பட்டவனை ஆயிரம் ஆண்டுவரைக்கும் அவன் தேசங்களை வஞ்சிக்காதபடிக்கு மாபெரும் சங்கிலியினால் கட்டிப்போடுவார். கிறிஸ்து மனுக்குலம் அனைத்தையும் பாவம், தரம்தாழ்ந்தநிலை மற்றும் மரணத்திலிருந்து விடுவித்து, ஆதாம் ஆதியில் இழந்துபோன பரிபூரணநிலைமைக்கு, பூரணப்படும்படி உயர்த்துவார். மனிதன் பாவத்தில் விழுந்துபோன காலத்திலிருந்து அந்த விழுகையிலிருந்து அவன் மீட்கப்பட்டு சீர்பொருந்தும் காலம்வரையுள்ள இடைப்பட்ட காலத்தில், தேவனுடைய தெய்வீகத்திட்டத்தின் பண்புகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து, இந்த மகிமையான பலனை அடையும்படி உபயோகிக்கப்பட்டது.

**--2720--**

**தெரிந்துகொள்ளப்பட்டோரில் இரண்டுவகுப்பார் :–**

எல்லா மனுக்குலத்துக்கும் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் பணியை நிழல்களாகவும் அடையாளங்களாகவும் கர்த்தர் முன்னரே காண்பித்திருக்கிறார். அடையாளங்களாக சொல்லப்பட்ட இந்த யுகங்களின்போது, தெரிந்தெடுக்கப்பட்டவர்களை ஒரு வகுப்பாராக ஆயத்தம்செய்து, அவர்கள் ஆயிரமாண்டு ராஜ்யத்தில் பூமியின்மேல் பிரபுக்களாக ஆளுகைசெய்யும்படி ஆயத்தம் செய்துவருகிறார். தற்கால சுவிசேஷயுகத்தில், தேவன் தேர்வுசெய்து தெரிந்தெடுக்கும் முதல்தரமான வகுப்பார், கிறிஸ்துவோடுகூட தெய்வீக சுபாவத்துக்கு ஆவிக்குரிய ஜீவிகளாக உயர்த்தப்படுவார்கள். இவர்கள் முழு உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்காக ராஜ்யத்தில் அவரோடுகூட இணைந்து, ஆளுகைசெய்வார்கள். இவர்கள் தேவராஜ்யத்தின் பூமிக்குரிய நிலைமையில் பொறுப்பேற்றிருப்போருக்குத் தேவையான அறிவுரைகளைத் தருவார்கள். தற்போது இயேசுவோடு அவரது அடிச்சுவடுகளில் நடந்து, துன்பப்படுகிற இவர்கள், விசேஷித்த நிலைமைக்கு தெரிந்துகொள்ளப்பட்டோராவர். தேவன் தம் புத்தியறிவுள்ள சிருஷ்டிகளில் இவர்களைமட்டுமே உன்னதநிலைமைக்கு, கிறிஸ்துவோடுகூட உயர்த்துகிறார். மற்ற எவரையும் தேவன் ஒருபோதும் இப்படிப்பட்ட உன்னதத்துக்கு உயர்த்தினதில்லை.

உலகின் ஜனங்களது கண்கள் திறக்கப்படுமுன்பே, கிறிஸ்துவின் சபையாரது கண்கள் திறக்கப்பட்டு, நீதிக்கும் பாவத்துக்குமிடையிலான மாபெரும் வித்தியாசத்தை காணவும், தேவனுடைய குணாதிசயத்துக்கும் சாத்தானின் குணாதிசயத்துக்குமான வித்தியாசத்தை காணவும்செய்தது. அவர்கள் தகுதியற்றோராய் இருந்தாலும், அவரது கிருபையால் தேவனது பக்கத்தில் நிற்கும் நிலைமையை அடைந்தனர். ஆகவே அவர்கள் தேவனுடைய மாபெரும் எதிராளியின் ஆதிக்கத்திலிருந்து தப்பித்தனர். சாத்தான் இனி அவர்களது பிரபுவாக இருக்கமுடியாது. இவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்துவந்தவர்கள். அவர்கள் தற்போது புத்திரர் என்ற உறவுமுறையில் தேவனோடு நிற்கிறார்கள்.

ஆதாமின் விழுகைக்குப்பிறகு, மனுக்குலத்திலிருந்து வரும் எந்த நபரும் தேவபுத்திரனாக இருந்ததில்லை. இவர்களோ ஆதாமைப்போல் பூமிக்குரிய புத்திரர்களல்ல. மாறாக ஆவிக்குரிய புத்திரர்கள். இவர்களுக்கு தற்காலயுகத்தின் தனித்தன்மை வாய்ந்த ஒரு கொடையாக பரலோக அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் விழுந்துபோன சந்ததியின் அங்கங்களாக, மாம்சீகத்தின் பலவீனங்கள் சிலவற்றை தொடர்ந்து சுதந்தரித்திருந்தபோதிலும், கிறிஸ்துவுக்குள்ளான புதிய நம்பிக்கைகள், புதிய குறிக்கோள்கள், புதிய விருப்பங்களை ஏற்படுத்திக்கொண்டு, புது சிருஷ்டிகளாக மாறினார்கள். இவர்கள் தேவனுடைய பரிசுத்தஆவியினால் ஒரு புதியசுபாவத்துக்கு, ஒரு புதுசிருஷ்டியாக ஆவதற்கென ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது தவிர்க்கமுடியாத கறைகள், அவர்களது இரட்சகரின் பூரணநீதியாகிய வெள்ளைஆடையால் மூடப்பட்டுள்ளன. இவ்வாறாக அவரது பூரணம் அவர்களுக்கு ஊட்டப்பட்டு, அவர்கள் அவரது சரீரஅங்கங்களாக கிறிஸ்துவோடுகூட பிரியமானபலி செலுத்துபவர்களாகிறார்கள்.

**சாத்தானுக்கெதிரான பலமான பாதுகாப்பாக இருக்கும் சித்தம் :–**

சாத்தான் தேவனுடைய எதிர்ப்பாளனாக இருந்து, பரிசுத்ததூதர்களில் சிலரை நேர்வழியிலிருந்து விலக்கினான். அவனது இந்த அடிமைத்தனத்தை எதிர்த்து தப்பித்தவர்கள், புதிய நம்பிக்கைகளையும் விருப்பங்களையும் பெற்றுள்ளனர். உலகத்தின்மேல் இப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்த அவனுக்கு அவசியம் எதுவுமில்லை, ஏனெனில் அவர்கள் ஏற்கனவே அவனது வல்லமையின்கீழ் இருக்கின்றனர். "உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் வீழ்ந்து கிடக்கிறதென்றும்.." (1யோவா 5:19 டயக்லாட்). அவனிடமிருந்து விடுதலையடைய முயற்சிப்போரை மட்டுமே அவன் தாக்குகிறான். எட்டுக்கால்பூச்சி, தான் வைத்திருக்கின்ற கண்ணிவலையில் சிக்குகின்ற பூச்சியை, அதிலிருந்து விடுபட்டு வெளியேறப்போராடும்போது, அதனைச்சுற்றிலும் கூடுதலான வலையை துரிதமாகப் பின்னும். அவ்வாறே சாத்தானும், தன் கட்டுப்பாட்டிலிருக்கிற யாராகிலும் அவனது கண்ணியிலிருந்து விடுதலையாக முயற்சிசெய்தார்களானால், அவர்களைச் சுற்றிலும் பலமான கயிறுகளைச் சுற்றி, அவர்கள் தப்பிப்பதை தடைசெய்வான்.

ஆனால் உறுதியாய் தீர்மானம் எடுத்திருந்த மனித சித்தத்தை ஜெயிக்க சாத்தானால் கூடாது. ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தேவன் இந்த தற்காப்பை கொடுத்திருக்கிறார். தீமையின் ஆதிக்கத்திற்கு அந்த சித்தத்தை விடாப்பிடியாக கொடுத்து, இந்த தற்காப்பை இழக்காதவர்கள், பாவத்தின் வல்லமையையும், சாத்தானையும் குறிப்பிடத்தக்கஅளவு எதிர்த்துநிற்கமுடியும். ஆனாலும் தங்களை மாபெரும் விரோதியிடமிருந்தும் அவனது தீமையின் ஆதிக்கத்திலிருந்தும் முழுமையாக விடுவித்துக்கொள்ள, ஏழை மனுக்குலத்திற்கு தெய்வீக உதவி தேவைப்படுகிறது. கிறிஸ்தவன் தன் பலத்தின் ஆதாரத்தை மிக நெருக்கமாக பற்றியிருக்கும்வரை, ஊறுவிளைவிக்கமுடியாதஅளவுக்கு அவனுக்கு நிலைமை இருக்கும். நமக்கெதிராக இருக்கும் எல்லாவற்றைக்காட்டிலும் நம் பட்சத்தில் இருப்பவர் பெரியவர். சாத்தானைக் கட்டும்வேளை வந்திருக்குமானால், நம் கர்த்தர் ஒரே தடவையிலேயே அவனை கட்டிப்போட முயற்சித்திருப்பார். ஆனால் அவ்வேளை இன்னும் முழுமையாக வரவில்லை. தேவனுடைய பிள்ளைகள் அவனது கூட்டத்திலிருந்தும் சாத்தானிடமிருந்தும் கவலைப்பட அவசியமில்லை. அவர்களிடமிருந்து விடுபட போராடவேண்டியிருந்தாலும், அவர்களுக்கு அப்படிப்பட்ட வல்லமைஇல்லை. மாறாக, நமது நிலைமையில் நாம் உறுதியாக நிற்பதும், அவர்களது ஆதிக்கத்தை ஸ்திரமாக எதிர்ப்பதும் அவசியமாகிறது. ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தப்பிக்கும் வழியை தேவன் ஏற்பாடுசெய்வதாக வாக்களித்திருக்கிறார். இந்த அறிவைக்கொண்டு, நாம் விரோதியின் முன்பாக உறுதியாய் நிற்கமுடியும்.

**உலகப் பொருள்– சுயநலத்தின் வடிவம் :–**

அப்.பவுல் கூறுகிறார்; நாம் மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் எதிராக மட்டும் யுத்தம்செய்வதில்லை. மாறாக ஆவிக்குரிய பகைவர்களுக்கெதிராகவும் அல்லது மேலான நிலைமைகளிலுள்ள தீயஆவிகளோடும், அதிபதியாகிய

சாத்தானின் தலைமையின்கீழுள்ள விழுந்துபோன மாபெரும் படைத்திரளோடும் போராட்டம் உண்டு. அவன் விழுந்துபோன மனிதர்களுக்கும், விழுந்துபோன தூதர்களுக்கும் இவர்களில் யார் அநீதியின் பக்கம் இருக்கிறார்களோ அவர்களுக்கு வல்லமையுள்ள அதிபதியாக இருந்துவருகிறான். அநேகர் அவனது சார்பாக நின்று போராடுகிறார்கள், ஏனெனில் அவர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள், குருடாக்கப்பட்டார்கள். அவர்கள் அவனுக்கு அறியாமையால் ஊழியம் செய்கிறார்கள். இரண்டு தலைவர்கள் உண்டு. ஒருவர் தேவன் மற்றவரோ உலகத்தின் பொருட்கள். இயேசு கூறினார்; ''ஒருவனும் இரண்டு எஜமானர்களுக்கு ஊழியம்செய்யமுடியாது''(மத் **6:24)**. இவர்கள் யாராவது ஒருவருக்கே நாம் ஊழியம் செய்யவேண்டும்.

உலகப்பொருள்கள் என்ற பெயர் பழங்காலத்து சிரியர்களின் கடவுளுடையது(Mammon). செல்வத்தின் கடவுள், பேராசையுடையதும், உலகத்துக்குரிய தோற்றத்தை உடையதுமாகும். இன்றையநாளில் மம்மன் என்றால் உலகத்தின்ஆவி, சுயநலம் மற்றும் செல்வத்தின்மேலுள்ள நேசம் மற்றும் பேராசையை குறிக்கிறது. சாத்தான் இந்த உலகப் பொருட்கள்மேல் உள்ள ஆசையை ஊக்குவிப்பவனாக இருக்கிறான். எந்த எஜமானுக்கு ஊழியம்செய்கிறோம் என்று நாம் எப்படி அறியமுடியும் **?** பவுல் நமக்குக் கூறுகிறார்;

''எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்''(ரோமர்**6:16)** . ஐஸ்வரியம் மற்றும் உலகத்தின் மேன்மைகளால் ஈர்க்கப்பட்டு, நம் நேரத்தையும் சிந்தையையும் கொடுக்கும்போது, சுயநலத்தின் எந்த உருவத்திலும் யுத்தம் மற்றும் கலகத்தின்மீது நமது ஆதிக்கம் இருக்குமானால் நமது விருப்பங்கள், இணக்கங்கள் பரலோகத்தை நோக்கியிருப்பதைப் பார்க்கிலும் பூமிக்குரியதை நோக்கி சாயுமானால், நாம் இவ்வுலகத்தின் ஆவியாகிய மம்மனுக்கு ஊழியம்செய்கிறோம். இவ்வாறு நாம் உணர்ந்தாலும் உணர்ந்திராவிட்டாலும் சாத்தானுக்கு ஊழியம்செய்கிறோம். ஒரு கிறிஸ்தவன் தேவவசனத்தின் வெளிச்சத்தில் தன் சிந்தனையையும் வார்த்தைகளையும் செயல்பாடுகளையும், நெருக்கமாகவும் கவனமாகவும் ஆராயும்போது, அவன் தன் நீதியுள்ள எஜமானுக்கு ஊழியம்செய்கிறானா அல்லது விரோதிக்கு ஊழியம்செய்கிறானா என்று அறிந்துகொள்ளமுடியும். யார் சாத்தானுடைய ஊழியக்காரனாக இருக்கிறாரோ, அவர் அவனுடைய சேனையின் அங்கமாக இருக்கிறார். நாம் நீதியின் நிமித்தம் ஊழியக்காரராய் இருக்கும்போது, அதனால் மட்டுமே நாம் கர்த்தருடைய பக்கமாய் இருக்கிறோம்.

**சாத்தானின் தாக்குதலை எதிர்ப்பது எப்படி ?**

கர்த்தருடைய பிள்ளைகள் பாவத்தினாலும், பாவத்துக்கு ஊழியம் செய்வதிலும் வஞ்சிக்கப்படாதபடி கவனமாயிருக்கவேண்டும். அவ்வாறு நீடித்தால் தங்களது போக்கை மாற்றிக்கொண்டு தனிமைப்படுத்திக்கொண்டு, கர்த்தருக்கு எதிராளிகளாக நிற்கக்கூடும். கிறிஸ்தவர்கள் சாத்தானுக்கும் அவனது தந்திரங்களுக்கும் எதிரான தீர்மானமான நிலைப்பாட்டை எடுக்கும்போது, அவனது தாக்குதல்களிலிருந்து விடுபட்டிருப்பர். அவன் தனக்கு தீங்குவிளையும் என்ற பயத்திலிருந்து விலகிஓடுகிறான் என்று இதை கருதக்கூடாது, மாறாக அவர்களைவிட்டு விலகுகிறான். எப்படி ஒரு படைத்தளபதி ஒரு பட்டணத்தின் நுழைவாயில்கள் ஸ்திரமாக பாதுகாக்கப்பட்டிருப்பதையும், அதன்மீது தாக்குதல் நடத்துவது வீண் என்றும் அறிந்து பின்வாங்குகிறாரோ, அதுபோலவே சாத்தானுடைய எண்ணமும் இருக்கிறது. ஒருவர் நன்கு பாதுகாப்பாய் சாத்தானை ஸ்திரமாய் எதிர்க்கிறாராகில், அவரைவிட்டு சாத்தான் பின்வாங்குகிறான். ஆனால் பாவத்தோடு தர்க்கம்செய்வோமாகில், பாவம் என்று தோன்றுகிற விஷயத்தில் ஆலோசிக்க முற்படுவோமாகில், விரோதி நம்முள் அடியெடுத்து வைக்க கதவைத் திறந்துவைக்கிறோம். அவன் அந்த காரியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கச்செய்து தாக்குதலை புதுப்பிப்பான். தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும்பொருட்டு அதை மிகவும் கவர்ச்சிகரமான வெளிச்சமாக காண்பிப்பான். இப்படியாக அவன் நமது பலவீனங்களை கண்டுகொண்டு, இருதயத்தில் நுழைகிறான்.

தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் தீமையால் கவர்ந்திழுக்கப்படுவதாக உணரும்பொழுது, நேர்மறையான மற்றும் முறையான தீர்மானம்எடுப்பது மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதில் ஒரு சிறுகனம் தயங்கினாலும் மிக அபாயகரமானது. தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல் முழுமையாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர்களை, பாதுகாக்க அவர் உடன்பட்டிருக்கிறார். ஒருசிலநேரம் தீவிரமாகத் தாக்குவதற்கு அவர் அனுமதித்தாலும், அவர்கள் அவருக்கு உண்மையும் நேர்மையுமாய் நிலைத்திருக்கும்வரை, அவர் அவர்களை மீட்பார். இதனால் அவர்கள் அப்படிப்பட்ட சோதனைகளின்முடிவில் பலப்படுத்தப்படுவர்.

**எதிராளியின் தாக்கும் வழிமுறை :–**

எதிராளியின் தாக்குதல்கள் அவனது தூதர்கள் மூலமாகவே வழக்கமாக நிகழ்கிறது. சாத்தான்தானே உலகின் எப்பகுதிகளிலும் நின்று, ஒரேசமயத்தில் அல்லது உலகின் ஜனங்கள் எல்லாரது சிந்தையிலும் இருந்து, தேவபிள்ளைகள் எல்லாரது சிந்தையிலும்கூட செயல்படுகிறான் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. எங்கெங்கு சாத்தானுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் செயல்பாடுகள் நடைபெறும் என்று நாம் கருதவேண்டும். விழுந்துபோன தூதர்கள் மனுக்குலத்தின் உரிமைகள் மற்றும் சுயாதீனங்களில் நுழைந்து, அவர்களை அதிகதிகமாக அடிமைத்தனத்துக்கு உட்படுத்த எப்பொழுதும் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள், குறிப்பாக கர்த்தருடைய ஜனங்களை கண்ணியில் சிக்கவைக்க முயற்சி மேற்கொள்கின்றனர். திருச்சபையின் போர்ப்படைக்குள் நுழைய விரோதி எப்பொழுதும் ஆயத்தமாயிருந்து அதன் தகுதியின் அடிப்படையிலான வரிசையில் பேரழிவு ஏற்படுத்த முயற்சித்துவருகிறான்.

சாத்தான் மனுக்குலத்தின் மனதில் கிரியைசெய்கிறான். விழுகையின்மூலம் அபூரணமாயுள்ள மனுக்குலத்தின் மனது பாவத்தின் பக்கம் சாயும் போக்கை சுதந்தரித்துள்ளது. விரோதியின் திடீர்த்தாக்குதல் மனிதர்களுக்கு வருவது, மற்றவர்களுக்கு தவறான கருத்துக்களை ஏற்படுத்தக்கூடும். மற்ற வழிமுறைகளைச் **--2722--**

காட்டிலும் இவ்வழியிலேயே அவனது கிரியை அடிக்கடி செயல்பட்டுவருகிறது. தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் அப்போஸ்தலர் வலியுறுத்துவது என்னவெனில், நாவில் தீமையான வார்த்தைகள் எழாதபடி காத்துக்கொள்ளுங்கள். வீண்பேச்சுக்கள் குணாதிசயத்தை அழித்துவிடும் அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் சுய பாதுகாப்புக்காக மட்டுமல்ல, மற்றவர்களுடைய பாதுகாப்புக்காகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது அவசியம். ஒவ்வொரு தேவபுத்திரனும் கபடத்திலிருந்து விலக்கிக் காத்துக்கொள்வதன்மூலம் தன்சொந்த இருதயத்தை தூய்மையாக காத்துக்கொள்வதன்மூலம், பிறரைக்குறித்து தீயனபேசுதலின் அபாயத்திலிருந்து தப்பிக்கமுடியும். கவனமற்ற பேச்சால் பிறருக்கு காயம் ஏற்படாதவாறு அல்லது சத்தியத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு, நமது நடக்கையை கவனமாக காத்துக்கொள்ளவேண்டும். இந்த சத்தியத்தையே நாம் மிகவும் நேசிக்கிறோம். இதன் ஊழியத்துக்கென்றே நாம் நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோம்.

தம் சிம்மாசனத்தை உரிமையாக்க அவர் வருகிறார்
உன் ஜீவியத்தை தம் உடைமையாக மாற்ற
இதன் சத்தங்கள் பூமியெங்கும் பயணிக்கின்றன
அதன் எதிரொலியின் துதியும் மகிழ்ச்சியும்
சென்றடையாது இருதயம் செவிகொடாதபோது
பொன்னான இசை அவரது இனிமையின் வார்த்தை
இனி இதுமுதற்கொண்டு இயேசுவுக்கே அனைத்தும்!
அவருக்கென்றே ஜீவித்திடு, உனக்காக மரித்தாரே!

---------------------------------

--2723--

———————————————————

**R 5897**

# <u>தீமையோடு எதிர்த்துநில்லாமை</u>

# NON-RESISTANCE OF EVIL

''ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்''
''தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்''. – 1தெசலோனிக்கேயர் 5:15; மத்தேயு 5:39.

சீரான நடுநிலைகொண்ட ஒவ்வொரு மனிதனும் தனக்கு எதிராக காயம் வருவித்தவர்களுக்கு, துல்லியமான நீதிநியாயம் காண்பிக்கப்படவேண்டும் என்ற இயல்பான சுபாவத்தை உடையவனாய் இருக்கிறான். எல்லா ஜனங்களிடமும் நீதி நியாயத்தைக்குறித்த உணர்வு உள்ளது, அவர்கள் அநீதியாய் நடத்தப்பட்டார்களேயானால் தவறாய் நடத்தினவர்களுக்கு சில தண்டனைகள் கொடுக்கப்படவேண்டும். இவர்களது முதல் மனத்தூண்டுதல் துல்லியமான நீதிநியாயமாகும். தேவனுடைய பிரமாணம் நீதிநியாயத்தையே அடிப்படையாய்க் கொண்டது. ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்''. தக்க தண்டனை தரும் இந்தப் பிரமாணத்தை நம் சிந்தை இயல்பாகவே அங்கீகரிக்கிறது.

யூத தேசம் நடைமுறையிலிருந்தபோது, நீதிநியாயம் நிறைவேற்றப்படவேண்டுமென்று அவர்களது பிரமாணம் வலியுறுத்தியது. பென்யமீனனாகிய சீமேயின் காளை முட்டி செபலோனாகிய எலியாப்பின் காளைக்கு இரத்தம் வடியுமானால், சீமேயின் காளை கொல்லப்படவேண்டும் அல்லது முழு இழப்பீட்டுத்தொகை கொடுக்கப்படவேண்டும்.

நீதிநியாயத்தின் கொள்கை முறையானஒன்று. நீதிநியாயத்துக்கு மதிப்பளிக்காவிடில் உலகிற்கு அது பாதகத்தை ஏற்படுத்தும். உலக நீதிமன்றங்களில் நீதி வழங்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் ஒருவருடைய காளை மற்றவரை முட்டி காயப்படுத்துமானால், நீதிமன்றத்துக்குச் செல்லவும், குறைதீர்க்கவும் முடிகிறது. இந்த ஏற்பாட்டில் அடங்கியுள்ள நீதியையும் அதன் ஞானத்தையும் நம்மால் காணமுடிகிறது. ஆனால் திருச்சபையின் விஷயத்தில் நம் கர்த்தர் புதியஏற்பாட்டை உருவாக்கியிருக்கிறார். சபை உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் இனி இவ்வுலகிற்குரியவர்கள் அல்லர் என்று சபையின் அங்கங்கள் உணர்ந்திருக்கவேண்டும். இவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். அவர்கள் அநீதியாய் துன்பத்துக்குள்ளாகவேண்டும். அநீதருக்காக இயேசு துன்பப்பட தம்மை ஒப்புக்கொடுத்தார். இயேசுவின் பின்னடியார்களும் பிறரது நலனின் பொருட்டு அவரது பலியின் ஆவியைப் பெற்றிருக்கவேண்டும். இவ்விஷயத்தில் அவரது முன்மாதிரியை யாரெல்லாம் பின்பற்றவில்லையோ, அவர்கள் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களல்ல என்று வெளியரங்கமாக்குகிறார்கள். கிறிஸ்துவின்ஆவியை யாரெல்லாம் அடையவில்லையோ, அவர் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற துவங்காதிருத்தலே நலம். அப்படிப்பட்டோர் அவரது மகிமையில் பங்குபெறமுடியாது.

**கிறிஸ்தவர்கள் துல்லியமான நீதிக்கு அல்ல :–**

''கிறிஸ்துவும் தமக்குத்தாமே பிரியமாய் நடவாமல்..'' . அவர் தீமையால் சூழப்பட்டிருக்கும்போது, ''எனக்கு தீங்கு ஏற்படுத்தாதீர், இல்லாவிடில் நான் பழிக்கு பழிவாங்குவேன்'' என்று கூறவில்லை. கர்த்தருடைய ஆவி அப்படிப்பட்டதல்ல. அவர் தாம் கொடுமைப்படுத்தப்பட்டதை அறிந்திருந்தார். பிதா அவருக்கு நியமித்த பணியையும் அவர் நினைவில்கொண்டிருந்தார். யாரிடத்தில் தாம் ஊழியம் செய்கிறோமோ, அவர்கள் விழுந்துபோன நிலையிலுள்ளவர்கள் என்பதை தம் சிந்தையில் அவர் கொண்டிருந்தார். அவர்களிடமிருந்து நீதிநியாயத்தைப்பெற அவர் எதிர்பார்க்கவில்லை. பிதாவிடம் முழு விஷயங்களையும் அவர் ஒப்புக்கொடுத்தார். அவருக்கு எதிராக அவர்கள் அநீதி இழைத்திருந்தாலும் முழு உலகத்தின்பொருட்டு அவர் மரித்தார். ஆகவே படிப்படியாக அனைவரும் அவருடைய மரணத்தின்மூலம் பிதாவோடு ஒப்புரவாகுவர்.

இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், அவரைப்போலவே நமது உரிமைகளை அடைய முயற்சிக்காமல் விட்டுவிடவேண்டும். இவ்வாறு நாம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டிருப்போம். பாவம் மன்னிக்கப்படுவதற்கான தேவதிட்டத்தின் அறிவை நாம் அடைந்திருக்கிறோம். நமது தலையின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவுசெய்யும்பொருட்டு , கிறிஸ்துவின் சரீரஅவயவங்களாக நாம் துன்புறுகிறோம். மேலும் இதை நிறைவேற்ற பாக்கியம் கிடைத்ததற்காக நாம் சந்தோஷப்படவேண்டும். ஆனால் ஒவ்வொருவரிடமும் நாம் துல்லியமான நீதியை அடையும்பொருட்டு தீமைக்கு தீமை செய்வோமேயானால், நீதியின் பொருட்டு பலிசெலுத்தும் பாக்கியத்தை நாம் இழந்துபோகநேரிடும். அவர் துன்பப்பட்ட சத்தியத்தின் நோக்கத்திற்காக நாமும் இயேசுவோடு துன்புறுவோமானால், நாம் அவரோடுகூட மரித்தோமானால், அவரோடு ஜீவித்து, ஆளுகையும் புரிவோம். நாம் உலகத்தின் ஆவியை தனிப்பட்டமுறையில் பெற்றிருப்போமானால், நாமும் கூறுவோம் ; ''எனக்கு நீ காயத்தை ஏற்படுத்துவாயாகில், நிச்சயமாக நானும் உனக்கு அவ்வாறே செய்வேன்''. இந்த நிலைமையில் உள்ளோர், கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருக்கமுடியாது.

அவர் பாவநிவாரணபலியாக வேண்டுமென்பது பிதாவின் சித்தமாயிருந்தபடியால், அநீதருக்காக நீதிபரர் துன்பப்படவேண்டும் என்று இயேசு அறிந்திருந்தார். இவ்வழியிலேயே அவரோடுகூட நடக்க அவரது துன்பத்தில் பங்கேற்கும்படி நம்மை அழைக்கிறார். இவ்வாறு ராஜ்யத்தில் அவரது மகிமையில் பங்குபெறுவோம். கர்த்தருடைய பின்னடியார்கள் ஒவ்வொருவரும் தீமைக்குத் தீமை செய்யாதபடி தன்னை காத்துக்கொள்ள நாடவேண்டும். ஒருவனும் தன் உடன் சகோதரனுக்கு தீமைக்குதீமை செய்யாதிருக்கவேண்டும். ஆனால், இதையே இன்னும் விசாலமான பார்வையில், “ எந்த மனுஷனுக்கும்” என்று கூறுகிறார். நன்மையைப் பின்பற்றுகிற உங்கள் சகோதரரிடையே மட்டுமல்ல, மனுக்குலம் அனைத்திற்கும் இவ்வாறு தீமைக்குத்தீமை செய்யாதிருங்கள் என்பதே அப்போஸ்தலர் கூறவந்த வார்த்தையின் பொருள் என்று நாம் புரிந்துகொள்கிறோம்.

**சிலசமயங்களில் நீதிக்காக முறையிடுவது பொருத்தமானதே :–**

நாம் எந்த நாட்டில் வாழ்ந்துவந்தாலும், சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில், சட்டத்தின்படி முறையிடுவது சரியானதல்ல என்று பொருள்கொள்ளக்கூடாது. மாறாக சட்டம் நம் நிமித்தமாக ஒரு முடிவை எடுத்தபின்பு அதற்கு நம்மை உட்படுத்திக்கொள்ளவேண்டும். உங்கள் மேலங்கியையும் உங்கள் கடிகாரத்தையும் எடுத்துப்போட சட்டம் உத்தரவிடுமானால், அந்த சட்டத்துக்கு கீழ்ப்படியுங்கள். நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நம்மேல் சுமத்தப்படும்படிக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். அந்த வழக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மட்டும் கொண்டிருக்குமானால் எதிர்த்துநிற்க எந்தமுறையான ஆதாரமும் இல்லாமற்போகும். கர்த்தர் நிமித்தமாக அந்த வழக்கு பாதிப்பேற்படுத்தினால் அக்காரியம் முறையீடுசெய்து, விடுதலைபெற்றுத்தரும் என்று தோன்றுகிறது. ஆகவே உலகம் நமக்கு மனதார அளிப்பது, சுவிசேஷத்தின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நம் கர்த்தரின் விஷயத்தில், அவர் அநீதியாய் தண்டிக்கப்பட்டபோது, அவர் அக்காரியத்தில் நடப்பிக்கப்பட்ட நீதியைக்குறித்து வினவினார். அவர் நீதிமன்றத்தின்முன் வழக்கை வைத்தார். இது எதிர்த்து நிற்பதல்ல. பரிசுத்த பவுலின் விஷயத்தில், ஒருசில இடங்களில் அவரை உபத்திரவப்படுத்தும்போது, வேறு இடத்துக்கு ஓடிப்போனார் என்பதோடு நில்லாமல், மற்ற வழக்குகளில் அவர் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டார். அவ்வாறு செய்வது ஞானமாகத் தோன்றியது. ஒரு சம்பவத்தின்போது, அங்கு நடக்கும் முழு காரியமும் அநீதியாக இருப்பதையும், அங்கே அவரைச்சுற்றிலும் நின்றுகொண்டிருந்த கூட்டத்தாரில் சிலர் சதுசேயர் மற்றும் சிலர் பரிசேயர் ஆகிய இரண்டு வகைப்பட்டவர்கள் என்றும் , அதில் பெரும்பான்மையோர் பரிசேயர் என்றும் கண்டுணர்ந்து, அவர்களைநோக்கி, “நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்”. மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய கொள்கையின் நிமித்தம் நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன். இவ்வாறாக அங்கே கூடியிருந்த பரிசேயர் மற்றும் சதுசேயர்களிடையேயுள்ள கருத்துவேறுபாடு அவரது பேச்சின்மூலம் வெளிப்பட்டது. மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றி பரிசேயனாகிய நான் நம்புகிறேன் என்று அவர் கூறினார். அவர் சதுசேயர்களுக்கு எந்த தீமையும் செய்யவில்லை. மாறாக அங்கே கூடியிருந்தவர்களில் உயிர்த்தெழுதலைக்குறித்து ஓரளவு ஆர்வமும் நம்பிக்கையுமுடையவர்களுக்கு உதவவும், இரங்கவுமே இவ்வாறு செய்ததோடு, தம்மை அவர்கள் உபத்திரவப்படுத்துவதிலிருந்து திசைதிருப்பவும் இப்படி நடந்தது. மற்றுமொரு சம்பவத்தில், அநீதியாக கசையடி கொடுக்கும்படி அப்போஸ்தலரைக் கட்டினபோது நின்றிருந்த நூற்றுக்கதிபதியைப் பார்த்து, “ஒரு ரோம பிரஜையை நியாயம் விசாரிக்காமல் அடிப்பது உங்களுக்கு நியாயமோ ?” என்றுகேட்டார். துயர்நிறைந்த இந்த சூழ்நிலையில் இவ்வாறு வழக்காடினது, அப்போஸ்தலரை உடனடியாக விடுவித்தது. “என்னை அடித்தாயானால் உனக்கும் இன்று துயரநாளாக முடியும்” என்று அவர் வாதிடவில்லை. அவர் அநீதியாக நடத்தப்பட்டிராவிடில், இவ்விஷயத்திலும் அவர் வழக்காடியிருக்க நேர்ந்திருக்காது என்று நாம் எண்ண இடமுண்டு. மற்றுமொரு சூழ்நிலையில், அவர் அடிக்கப்பட்டு, கடுமையாக வேதனையடைந்தவேளையில், அந்த அநீதியைத் தடுக்கமுயற்சிசெய்தாரா என்று நமக்கு எந்த தகவலும் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் அனுமதித்திருக்கிறார் என்று அந்த அனுபவத்தை ஏற்றுக்கொண்டார்.

ரோமக் குடியுரிமை பெற்றிருந்ததை சுட்டிக்காட்டின விஷயத்தில் பவுல்அப்போஸ்தலன் அவர்களிடம். எனக்கு தீங்கிழைக்க சட்டம் உங்களுக்கு உரிமை அளித்திருக்கிறதா ? என்ற கேட்டார். இதுபோன்ற சூழ்நிலையை நம் வாழ்க்கை நடைமுறையில் சந்திக்கும்போது, எப்படி அணுகவேண்டும் என்பதற்கான ஒரு தடயம் இங்கே நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாமும் அவரைப்போலவே, சட்டத்திற்கு மாறாக கைதுசெய்யப்படும்போது அல்லது கர்த்தரது ஊழியம் செய்யும்போது குறுக்கிடும்போது, நீங்கள் சட்டத்தின் அறிவுரைப்படி நடக்கிறீர்களா ? நான் அதற்கெதிராக அதன் ஏற்பாடுகளுக்கெதிராக மீறுதல் செய்துள்ளேனா ? இந்த நாட்டுப்பிரஜைக்குரிய உரிமையை நான் பெற்றிருக்கவில்லையா ?”ஒருவேளை அந்த அலுவலக அதிகாரி கூடுதலான அதிகாரத்தை எடுத்தாராகில், சட்டத்தின்படியான வழிகாட்டுதல் என்னவென்று காரணகாரியத்தோடு சுட்டிக்காட்டவேண்டும், பழிவாங்கும் ஆவியை வெளிப்படுத்தக்கூடாது.

**தெய்வீகப் பிரமாணமாகிய அன்பு :–**

தீமைக்கு தீமை செய்யும் விஷயத்திற்கு வருவோம். ஒருவேளை, ஒரு திருடன் நம் வீட்டிற்குள் நுழையும்போது அவனைப் பிடித்தோமானால் அவனை சிறைச்சாலையில் அடைப்போமா ?என்று ஒருவேளை யாராகிலும் கேட்டார்களானால், அதற்கு ஒரு கண்ணோட்டம் என்னவெனில், ஆம் ! அவனை சிறைச்சாலையில் அடைப்போம் ; மற்றொரு கண்ணோட்டம் என்னவெனில், இல்லை, நாங்கள் பழிவாங்க விரும்பவில்லை. பதிலுக்கு அவனுக்கு காயமேற்படுத்த நாங்கள் விரும்பவில்லை என்பதாகும். அதேசமயம், ஒரு மனிதன் சட்டத்திற்கு எதிராக ஜனங்களுக்கு அதிகளவு பாதிப்பு ஏற்படுத்துகிறாரெனில், அவர்களது பாதுகாப்புக்கும், நலன்களுக்கும் எதிராக செயல்படுகிறாரெனில், அந்த மனுஷனைக்குறித்து அதிகாரிகளிடத்தில் முறையிட்டு, நீதியின்முன்பாக

நிறுத்தவேண்டும் என்று நாங்கள் யோசிக்கிறோம். பொதுஜனங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றவும், தீமைசெய்தவரது தவறான நடைமுறைகளை சோதனைசெய்யவும் வேண்டுமென நாம் எண்ணுகிறோம்.

நீதியினிமித்தமாக நாம் தீமையை பூரண மனதோடு சகிக்கவும், இருதயத்தில் தீர்மானம் எடுக்கவேண்டும் என்பதே வேதாகமம் கூறும் கருத்தாக இருக்கிறது. ஏனெனில் நாம் நீதியின்பொருட்டு துன்பப்படவே அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தீமைக்கு தீமை திருப்பிசெய்தல் கூடாது. நமக்கு காயமேற்படுத்தினவர்களுக்கு விரோதமாக பழிவாங்கும் விதத்தில் நாம் தீமையை எதிர்த்துநிற்கக்கூடாது. அதற்கு மாறாக, தீமை தொடர்ந்துசெய்ய விட்டுவிடு, இதுவே நம் எஜமானின் வழிமுறையாக இருந்தது; மேலும் நமது தலையின் துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பங்குபெறுவதும், கிறிஸ்துவினிமித்தம் சத்தியத்தின்பொருட்டு கடின எதிர்ப்புக்களையும் அநீதிகளையும் சகிப்பதும் நம் உடன்படிக்கையின் ஒருபகுதியாக இருக்கிறது.


சுயநலமற்ற அன்பை எந்தளவு அதிகமாக நாம் அடைகிறோமோ, அந்தளவு அதிகமாக தேவசாயலை நாம் அடைவோம். தேவன் தன்னலமற்றவராக இருக்கிறார். ஆனால் முழு உலகமும் சுயநலத்தோடே இருக்கிறது. பாவத்தோடு 6000 வருடங்களாக பழகி அனுபவப்பட்டபடியால், மனுக்குலத்துக்கு சுயநலம் சுபாவமாகவே மாறிவிட்டது. பிறர்உழைப்பில் தங்களை மேம்படுத்திக்கொள்ளும் விருப்பத்தை விட்டுவிட்டு, இப்படியாக சுயநலத்தினால் முழு உலகமும் அடையாளங் காணப்படாதிருந்தால் அது உண்மையிலும் விநோதமாய் தோன்றாதல்லவா ? ஆனால் இந்த வழிமுறை தெய்வீகப் பிரமாணமாகிய அன்புக்கு முரண்பட்டது. ஆகவே தேவ பிள்ளைகளாகிய நாம், நமது நன்மையை மட்டுமே தேடாமல், நம்மிடமுள்ள சுயநலத்தை களையப் போராடவேண்டும். ஞானத்தின் வழிமுறைப்படியும், நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தின்படியும், கூடுமானவரை ஒவ்வொருவரது நன்மைக்கேதுவானவற்றை செய்யவும், விசேஷமாக சுயத்தை பலியாக்கி, குறுகலான பாதையில் நம்மோடு பிரயாணித்துவருகிற உடன் கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்.

———————————————

**R 5892**

# சத்தியத்துக்கு சாட்சிகள்

# WITNESSES TO THE TRUTH



“அப்பொழுது பிலாத்து அவரைநோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக; நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்” – யோவான் 18:37

நம் குருவாகிய இயேசுகிறிஸ்துவை பிலாத்துவின் முன்பு குற்றவாளியாக நிறுத்தி, “தன்னை ராஜாவாக ஏற்படுத்திக்கொண்டான்” என்று யூதர்கள் குற்றம் சுமத்தினபோது பேசப்பட்ட வார்த்தைகளே இந்த திறவுகோல் வசனம். பிலாத்து அவரைப்பார்த்து; “அப்படியானால் நீ ராஜாவோ” என்றான். அதற்கு இயேசுகிறிஸ்துவின் பதில், “சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன். இந்த நோக்கத்திற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்”. மனப்பூர்வமாய் கீழ்ப்படிகிற பாவிகள் எத்தனை பேராயிருந்தாலும் அவர்களை தேவதயவுக்குள் சீர்ப்படுத்தி பாவத்தை முடிவுக்குக்கொண்டுவர, ஒரு ஆசாரிய ராஜாவாக, இம்மானுயேல் ராஜாவை தேவன் ஏற்பாடுசெய்திருந்தார். ராஜா நீதியாய் ஆளுகைசெய்யும் ஒரு காலம்வரும் என்று தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைக்கப்பட்டிருந்தது.

# சத்தியத்துக்கு சாட்சிகள்

# WITNESSES TO THE TRUTH



"அப்பொழுது பிலாத்து அவரைநோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக; நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" – யோவான் 18:37

நம் குருவாகிய இயேசுகிறிஸ்துவை பிலாத்துவின் முன்பு குற்றவாளியாக நிறுத்தி, "தன்னை ராஜாவாக ஏற்படுத்திக்கொண்டான்" என்று யூதர்கள் குற்றம் சுமத்தினபோது பேசப்பட்ட வார்த்தைகளே இந்த திறவுகோல் வசனம். பிலாத்து அவரைப்பார்த்து; "அப்படியானால் நீ ராஜாவோ" என்றான். அதற்கு இயேசுகிறிஸ்துவின் பதில், "சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன். இந்த நோக்கத்திற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்". மனப்பூர்வமாய் கீழ்ப்படிகிற பாவிகள் எத்தனை பேராயிருந்தாலும் அவர்களை தேவதயவுக்குள் சீர்ப்படுத்தி பாவத்தை முடிவுக்குக்கொண்டுவர, ஒரு ஆசாரிய ராஜாவாக, இம்மானுயேல் ராஜாவை தேவன் ஏற்பாடுசெய்திருந்தார். ராஜா நீதியாய் ஆளுகைசெய்யும் ஒரு காலம்வரும் என்று தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைக்கப்பட்டிருந்தது.

"இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்; பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள்"–ஏசாயா32:1.

அப்பொழுது, தேவனை மகிமைப்படுத்தும்படி, ஒவ்வொரு கால்களும் முழந்தாழிடும்; ஒவ்வொரு நாவும் அறிக்கைபண்ணும். ஆகவே நம் கர்த்தராகிய இயேசு, பிலாத்துவின் கேள்விக்கு பதிலளிக்கும்போது, பிரகடனப்படுத்துகிறார் ; "இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்". ஒருவேளை மீட்கப்படுவதற்கென எந்த உலகமும் இல்லாதிருக்குமானால், தேவனோடு இசைவாகும்படி எந்த உலகமும் ஒப்புரவாக்கப்பட அவசியமில்லையென்றால், லோகோஸ் பரத்திலிருந்து இறங்கிவந்து, மனுஷர்மத்தியில் வாசம்செய்யும் அவசியம் நேர்ந்திருக்காது. ஒரு ராஜ்யமும் அதற்கு ஒரு ராஜாவும் வேண்டுமென தேவன் தீர்மானித்திராவிடில், நம் கர்த்தர் மரிப்பது அவசியமற்றதாக இருந்திருக்கும். அவரது மாபெரும் பணியின்விளைவாக உலகம்ஆசீர்வதிக்கப்படவும், உயர்த்தப்படவும் அவசியம் நேர்ந்திருக்காது.

திறவுகோல் வசனத்தின் மறுபாதியில், "சத்தியத்தைக்குறித்து சாட்சிகொடுக்கவே நான் பிறந்தேன்" என்று கூறுகிறது. நம் கர்த்தர் பேசின எல்லா வார்த்தைகளிலும் ஒரு குறிப்பிட்ட, மாபெரும் சத்தியத்தைக்குறித்து சாட்சி பகர்ந்துள்ளார். சத்தியத்தை உண்மையாகப் பேசினதோடு மட்டுமல்ல, சத்தியத்தை கடைப்பிடித்தும் வந்தார். தேவன் மனிதனை சிருஷ்டித்தார், அவனோ கேவலமான நிலைமைக்கு விழுகைக்குள்போய், தன்னை சிருஷ்டித்தவருக்கு அவமதிப்பு உண்டாக்கினான். பாவம் மற்றும் மரணம் ஆளுகைசெய்வது தேவனுக்கு அவமதிப்பையும், எல்லா நல்ல அரசாங்கங்களுக்கும் இழிவாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், புத்தியறிவுக்கேற்ற ஒரு கேள்வி எழுகிறது; "ஏன் உபயோகமற்றதும் அவமதிப்பை ஏற்படுத்தும் சிருஷ்டிப்புக்களை அழிக்கக்கூடாது ?" மனுஷன்மேல் தங்கியிருக்கும் சாபம் சுருட்டப்பட்டு, அகற்றப்படும் என்று யேகோவாதேவன் பிரகடனப்படுத்தியிருக்கிறார், மேலும் ஆபிரகாமின் வித்துமூலம் மாபெரும் ஆசீர்வாதம் உலகிற்கு வரவிருக்கிறது. மேலும் தேவனுடைய தீர்மானங்களில் ஒரு புள்ளியாகிலும், ஒரு சிறுஎழுத்தாகிலும் விடுபட்டுப்போகாமல் துல்லியமாக நிறைவேறும்.

**மறைவாயிராத, வெண்மை லில்லிபுஷ்பங்களைப்போல் தேவ திட்டங்கள் :–**

தேவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தங்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் கடந்தும், எந்த ஆசீர்வாதமும் வந்திருக்கவில்லை, சாபம் அகற்றப்படவுமில்லை. ஆனால் தேவன் இன்னும் உண்மையுள்ளவராகவே

இருக்கிறார். அவரது வார்த்தை நிறைவேறாமல், ஒருபோதும் ஒழிந்துபோகாது, யாராலும் ஒழிக்கவும் முடியாது. உலகை ஆசீர்வதிக்கவே அவர் தீர்மானித்திருக்கிறார், மேலும் அவர் வடிவமைத்தபடி எல்லாவற்றையும் நிச்சயமாக நிறைவேற்றுவார். இதுவே மாபெரும் சத்தியம். பூமியிலுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் யேகோவாதேவன் இரட்சிப்பை ஏற்பாடுசெய்துள்ளார். நியாயப்பிரமாணத்தில் இவை முன்னடையாளமாக முன்னுரைக்கப்பட்டுள்ளது. தீர்க்கதரிசிகளும் வரவிருக்கின்ற ஆசீர்வாதத்தைக்குறித்து சாட்சியமளித்துள்ளனர். ஆம். ''சாமுயேல் முதல் அதற்குப்பின்வந்த அனைத்து தீர்க்கதரிசிகளும் பேசின எல்லா தீர்க்கதரிசனங்களிலும் இந்த நாட்களைக் குறித்து முன்னுரைத்திருக்கிறார்கள்''. நம் கர்த்தராகிய இயேசு மாம்சத்திலிருந்த நாட்களில் இந்த சத்தியத்தைக்குறித்து சாட்சியம் பகர்ந்தார். தேவன் தம்மையும் தம் திட்டத்தையும் குறித்து தவறுதலான கருத்தை தெரிவிக்கமாட்டார் என்ற உண்மையை கர்த்தர் பிரகடனப்படுத்தினார்.

விழுந்துபோன ஆதாமின் சந்ததியார் அனைவரையும் ஆசீர்வதிக்க, மாபெரும் ராஜாவாக வரவேண்டியதன் நோக்கத்திற்காகவே, நம் கர்த்தர் இவ்வுலகிற்கு வந்தார். இந்த ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கவே அவர் வந்தார், யூதர்கள் அவரைப்பார்த்து, ''அவர் எப்படி ஒரு ராஜாவாக முடியும் ? அவர் யாதொன்றையும் நிறைவேற்றவில்லையே!'' என்றனர். தற்போது, பிலாத்துவின் முன்பாக அவர் நின்று, தம்மை இன்னும் ராஜாவாகவே பிரகடனம்செய்தார்''.

தேவராஜ்யம் வானங்களின்கீழ் முழுமையுமாக ஸ்தாபிக்கப்படவேண்டும் என்ற தேவசித்தம் நிறைவேறுதலை மாபெரும் சத்தியமாகப் பிரசங்கித்து, மூன்றரை வருடங்களாக சாட்சி பகர்ந்தார். மகா பெரியவர் தம்மை ஒரு குற்றவாளிபோல சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுத்ததன்மூலம் இது முழுமையாக நிறைவேற்றப்படும்.

''தேவ வழி இரகசியமானது; அவர் அதிசயமாய் செய்துமுடிப்பார்''

இயேசுவை நிராகரித்தது, தேவனுடைய முழுதிட்டமும் தலைகீழாக புரட்டினாற்போல் தோற்றத்தை உருவாக்கியது. மாபெரும் யேகோவாவின்மேல் அவிசுவாச யூதர்கள் ஜெயங்கொண்டோராக தோற்றமளித்தது. ஆயினும் தேவநோக்கம் நிறைவேறுவதற்கு மேசியா சிலுவையில் அறையப்படுதல் மிகவும் அத்தியாவசியமாய் இருந்தது என்று நாம் காண்கிறோம். கிறிஸ்து மனுக்குலத்தை ஆயிரமாண்டுஆட்சியில் சீர்ப்படுத்தும் முன்பாக, தம் சொந்த மரணத்தின்மூலம் அவர்களை மீட்க வேண்டியது அவசியமாயிற்று. ஆனால் இந்த மாபெரும் சத்தியம் உலகத்தின் பெரும்பான்மை ஜனங்களுக்கு இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது. ''அவர்களுக்கோ இரகசியங்களை அறியும்படி அருளப்பட்டிருக்கிறது'' என்று தம் சீஷர்களுக்கு இயேசு வாக்குரைத்திருந்தார். ஆனால் புறம்பே இருக்கிறவர்களுக்கோ, தேவனோடு முழுவதும் இசைவாய் இராத அனைவருக்கும் இக்காரியங்கள் உவமைகளாகவும், மறைபொருள்களாகவும் இருக்கும்படி கொடுக்கப்பட்டன. அவர்கள் அவைகளைக் கேட்டும் புரிந்துகொள்ளாதிருக்கின்றனர், பார்த்தும் உணராதிருக்கின்றனர்.

**சத்திய ஜனங்கள் :–**

''சத்தியம்'' என்ற வார்த்தையும், ''சத்தியஜனங்கள்'' என்ற பதமும், நம் பங்குக்கு எந்தமுயற்சியும் செய்யாமலேயே நம்மை அடையாளங்காட்டுவது தனிச்சிறப்பு வாய்ந்தது. நாம் அடைந்திருப்பது சத்தியம், அது வேதாகமத்தின்படியான சத்தியமே தவிர வேறொன்றுமில்லை. ஆகவே இந்த ஒரே வார்த்தையே நாம் பயன்படுத்தமுடியும். பெயர்கிறிஸ்தவ சபைகள் மற்ற பெயர்களை எடுத்துக்கொண்டார்கள். நமக்கோ, சத்தியம் என்ற இந்த பதத்தை எளிதாக பயன்படுத்தும்படி விடப்பட்டிருக்கிறோம். மேலும், ''சத்தியஜனங்கள்'' என்று அழைக்கப்படுதல், முன்கூட்டியே உறுதியாய் திட்டமிடப்படாதபோதிலும், நமக்கு எல்லாவழிகளிலும் எச்சரிப்பினையூட்டுகிறது. நாம் மெய்யாகவே சத்தியத்துக்கு சாட்சியம்கொடுக்கும்படி அதைப் பெற்றுள்ளோம். இதே சத்தியத்துக்கே நம் குரு மரணபரியந்தமும் சாட்சிபகர்ந்தார்– ராஜ்யத்தைக்குறித்தும், இயேசு தம் மகிமையான மனித ஜீவியத்துக்கு முந்தையநிலைமையை(லோகோஸ்) விட்டுவிட்டு, இவ்வுலகிற்குவந்தது குறித்தும், மீண்டும் எல்லாவற்றிற்கும் மேலான பரலோக மகிமையின் நிலைமைக்கு மேலெழுந்து சென்றது குறித்தும், நம் குரு சாட்சிபகர்ந்தார். தேவன் தவறானவரோ கொடுமையானவரோஅல்ல, மனிதனை நித்திய நரகத்தால் வதைப்பதற்கு அவர் ஒருபோதும் நோக்கமாயிருந்ததில்லை. மாறாக, பாவம் மற்றும் மரணத்தின் சாபம் நித்தியத்துக்கும் அகன்றுபோகும் என்று வாக்களித்திருக்கிறார். நம் கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் பிரகடனப்படுத்திய அதே வழிமுறையே இன்றைக்கும் சாட்சியாக கூறப்படவேண்டும்.

சத்தியத்தின் ஜனங்கள், சத்தியத்தைக்கேட்டு சத்தியத்துக்கு சாட்சிபகர அவரை நேசிக்கவேண்டும். குருவின் விஷயத்தில் நடந்ததுபோலவே நம் விஷயத்திலும் உலகம் நம்மை அறியாது. ஏனெனில் அது அவரை அறியவில்லை. உலகம் விசேஷமாக மத உலகமாகிய பெயர் கிறிஸ்தவ மண்டலம், அவரை சிலுவையிலறைந்ததுபோலவே நம்மையும் சிலுவையிலறைய காத்திருக்கிறது. அன்றைய நாளின் பரிசேயர்கள், சதுசேயர்கள்,வேதபாரகர் கொடூரமாக நடந்துகொண்டதுபோல இன்றைய நாம் வாழும் நாட்கள் அதிக நாகரீகக் காலமாக இருப்பதால், ஜனங்களைத் தூண்டிவிட்டு, நம்மைஅழிக்க சூழ்நிலை மிகவும் கடினமாயிருப்பதை உணர்கின்றனர். ஆனால் தேவகிருபையினால் இராக்காலம் வரும்வரை நாம் தொடர்ந்து சத்தியத்துக்கு சாட்சிபகரமுடியும். ''ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது''. நம் ஜீவியம் அதுவரைக்கும் சேதப்படாதிருக்குமா ?

-------------------------------

**--2728--**

R 5899 [Page 153]

# நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்

## WE REAP WHAT WE SOW

"உலகத்தாரல்ல, திருச்சபையாரே இங்கு பேசப்படுகின்றனர் – சத்தில்லாத, இயல்பாகவே பாரம்பரியமாக வரும் களைகள், விதைத்தல், தன்னார்வத்துடன் செய்யும் வேலையையும் தனிப்பட்ட பொறுப்புணர்வையும் குறிக்கும் – மாம்சத்துக்கென்று விதைப்பது என்றால் என்ன ? ஆவிக்கென்று விதைப்பது என்றால் என்ன ? அறுவடை என்னவாக இருக்கும் ?

"தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" – கலாத் 6:7




ஒவ்வொரு மனுஷனும் மனதார தான் பேசின ஒவ்வொரு வார்த்தைக்கும், செய்த ஒவ்வொரு செயலுக்கும் தானே பொறுப்பாளியாகிறான் என்பது உண்மையே. ஒவ்வொரு மனுஷனுடைய வாழ்க்கையின் மனப்பூர்வமான நடைமுறையே அவன் எதை அறுக்கிறான் என்று தீர்மானிக்கும். ஆகவே ஒவ்வொரு மனுஷ ஜீவியும் நம் திறவுகோல் வசனத்திலிருந்து ஆதாயமான பாடத்தைக் கற்கவும், எந்தளவு அவ்வசனத்திலுள்ள ஆவியைப் பின்பற்றுகிறார்களோ அந்தளவுக்கு ஆசீர்வாதங்களை அடையவும் முடியும்.

ஆயினும், இங்கு அப்போஸ்தலர் உலகத்தாரிடம் பேசாமல், பரிசுத்தவான்களிடத்தில் பேசுகிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் திருச்சபையாருக்கே எழுதினார். அந்த திருச்சபையின் அங்கங்கள் இவ்வுலகை விட்டுவிட்டவர்கள் பாவத்தையும் புறம்பாக்கிப்போட்டவர்கள். நம் கர்த்தராகிய இயேசுவை அவர்கள் இரட்சகராகவும், பிதாவிடத்தில் தங்களுக்காக பரிந்துபேசுபவராகவும் ஏற்றுக்கொண்டு, தெய்வீக சித்தம் செய்யும்படிக்கு, தங்களுக்கென எதையும் வைத்துக்கொள்ளாமல், முழுமையாக அர்ப்பணித்தவர்கள். இவர்கள் பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, வேதம் அவர்களை அழைக்கிறபடி கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டிகளாக ஆனவர்கள் (2கொரிந்5:17). இவர்களிடத்தில் பழையனவைகள் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின" – புதிய நம்பிக்கைகள், புதிய இலட்சியங்கள், புதிய குறிக்கோள்கள், புதிய ஆதாயங்கள், புதிய நிலைப்பாடுகள் ஆகியவை. தேவனுடைய புத்திரர்களாக ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட இவர்களுக்கே தவிர, மற்ற எவருக்கும் அப்போஸ்தலர் எழுதவில்லை.

வேதாகமம் கூறுகின்றபடி, தேவன் உலகின் ஜனங்களுக்காக மாபெரும் விலையேறப்பெற்ற ஏற்பாடுகளை வருங்காலத்தில் செய்திருக்கிறார். ஆனால் தற்காலத்தில் அல்ல. தற்போது, கிறிஸ்துவின் சபையாகிய பரிசுத்த மணவாட்டி வகுப்பார், உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டு, வருங்காலத்தில் ராஜரீக குடும்பமாக ஏற்படுத்தப்பட இருக்கிறார்கள். இது முதலாம் அல்லது பிரதானமான உயிர்த்தெழுதலில் முழுமையும், பரிபூரணமுமாக்கப்பட இருக்கிறது(1பேது2:9). அதன்பிறகு, தேவனுடைய ராஜ்யமாக, இந்த ராஜரீகக்குடும்பம், உலகத்தின் மனுக்குலத்தோடு தொடர்புவைத்து, மனதார கீழ்ப்படிகிற அனைவர்மேலும் ஆளுகைசெய்து, அறிவுறுத்தி, உயர்த்தி, ஆசீர்வதிப்பர். அப்பொழுது உலகத்துக்கு விதைக்கவும் அறுக்கவுமான வாய்ப்பு சென்றடையும் – அப் 3:19–23.

**நிலமும் விதையும் :–**

தன்னை அர்ப்பணித்த கிறிஸ்துவ விசுவாசியின் இருதயம், ஆரம்பத்திலிருந்து தேவன் தம் புத்திரனாக ஏற்றுக்கொள்ளும்வரை, ஒரு அர்ப்பணிக்கப்பட்ட நிலத்தைக் குறிக்கிறது. தெய்வீக அறிவுரையின்படி விசேஷித்த பூக்களும் பழங்களும் உற்பத்தி செய்யப்படஇருக்கிறது. இவைகள் பரிசுத்தஆவியின் கனிகளும் கிருபைகளும் என்று அழைக்கப்படுகின்றன. பாரம்பரியமாக வரக்கூடிய குணம் அவர்களது மாம்சத்திலேயே தோன்றுவதால் எழும், பாவம் மற்றும் சுயநலத்தின் விதைகளை அழித்து ஒழிக்கவும், எல்லாக் கிறிஸ்தவர்களும் பரலோகத்தின் சத்தத்துக்கு கீழ்ப்படியவும் தேடுகின்றனர்.

--2729--

பூர்வத்தில் பூரணநிலையிலிருந்த ஆதாமின் மாம்சம் பூரணமாயிருந்தது. பாவத்தின் களைகள் இன்னும் விதைக்கப்படாதிருந்தது. ஆனால் தற்போதோ தூய்மையான மண் எங்குமில்லை. பாவக்களைகள் எங்கும் வியாபித்துள்ளன. அர்ப்பணிப்பு செய்த ஒவ்வொரு கிறிஸ்தவனது மைதானமாகிய அவனது இருதயம் கனிநிறைந்ததாக வைத்திருக்க விரும்பினால், கர்த்தரைப் பிரியப்படுத்தத் தேடினால், பாவமாகிய களைகளுக்கு எதிராக உறுதியான, தொடர்ச்சியான யுத்தம் நடத்தவேண்டும். இதன் காரணமாக, அவனது இருதயம் தெய்வீக வசனத்தின் அறிவுறுத்தும் நன்மையான விதையை ஏற்குமளவுக்கு பக்குவப்பட்டிருக்கும்.




களைகள் வளராதபடிக்கு கட்டுப்படுத்துவதற்காக மட்டுமல்ல, மண் முறையாக காக்கப்படவும் விழிப்புணர்வு அத்தியாவசியமானது. இதனால் விதைஉள்ளே நுழைந்ததும் முளைவிட்டு, நல்லகனியைக் கொடுக்கும். முட்களுக்கு எதிராகவும் ஒரு கிறிஸ்தவன் யுத்தம் பண்ணவேண்டும். இந்தமுட்கள் தற்கால உலகின் கவலைகளும், ஐஸ்வரியத்தின் வஞ்சனைகளும் என்று நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார், இவை தேவவசனத்தை நெருக்கிப்போடுவதால் கனியற்று, ஆதாயமற்றதுமான ஜீவியத்தை உருவாக்கும் – மத் 13:22.

''நன்று நல்ல ஊழியனே'' உன் கர்த்தரின் மகிழ்ச்சியில் பிரவேசி!'' என்ற குருவின் வெகுமதியைப்பெற எதிர்பார்க்கும் கிறிஸ்தவன், தன் இருதயமாகிய நிலத்தில் முறையான விதைகளை விதைக்க மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். சிந்தனை, பேச்சு, செயல் ஆகிய இவைகளே நல்ல விதைகள். அவைகள் கவனமாகவும் இடைவிடாது உறுதியுடன் முயற்சிமேற்கொண்டும் விதைக்கப்படவேண்டும். அவைகள் சமாதானத்தின் கனிகளாகிய சாந்தம், தயாளகுணம், பொறுமை, சகிப்புத்தன்மை, சகோதரசிநேகம், அன்பு போன்ற நீதியின் கனிகளை விளைவிக்கும். இந்த பரிசுத்தஆவியின் கனிகளும் பூக்களும் இருதயப் பூங்காவில் அபரிதமாகப் பெருகவேண்டும் என பரிசுத்த பேதுரு நமக்குக் கூறுகிறார். இவை ஒரு கிறிஸ்தவனுக்கு நம் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசத்தை பரிபூரணமாய் அளிக்கும்.

நாம் நல்ல விதையை விதைக்கவேண்டியது முக்கியமானது. தேவ வசனமாகிய ஒரேயொரு களஞ்சியத்திலிருந்தே இது வழங்கப்படுகிறது. அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக பேசப்பட்ட நம் கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளுக்கு மிக கவனமாக செவிகொடுப்போர் எவரோ, இந்த வித்தை தூய்மையாகக் காத்துக்கொள்வோர் எவரோ, உலக ஞானத்தால் அசுத்தமாக்கிக்கொள்ளாமல் விடுதலையாகினோர் எவரோ, மனிதரது பாரம்பரியங்களால் உண்டான விசுவாச அறிக்கைகளுக்கும் விடுதலையானோர் எவர்களோ, அவர்களே கனிகளையும் பூக்களையும் விளையச்செய்து, நன்கு ஆயத்தம்பண்ணப்பட்டவர்களாக எஜமானின் அங்கீகாரத்தைப் பெறுவர்.

கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாக, அவருக்கென்று தங்களை அர்ப்பணித்தபிறகு, இனி ஆவிக்கென்றே விதைப்பதாக ஒப்பந்தம்செய்துகொண்டபிறகு, கர்த்தருடைய ஜனங்களில் சிலர், மாம்சத்துக்கென்று விதைத்து, தவறிழைக்கிறார்கள். கர்த்தருக்கு எதிராக முழுமையாக கலகம் ஏற்படுத்துவது மாம்சத்துக்கென விதைத்தல் என்று அர்த்தமாகாது. மாறாக கெட்ட விதையை விதைத்து ஆதாயமற்ற வித்தைஅடைய முயற்சிப்பதாகும். நேரம், ஆற்றல், பணம் ஆகியவற்றை செலவழித்து, மனமகிழ்ச்சியை அடைய அல்லது பூமிக்குரிய காரியங்களை அல்லது ஐஸ்வரியங்களை அடைய நாட்டங்கொள்ளுதலேஅது. இதில் வெற்றிபெற்றாலும் வெற்றிபெறாவிட்டாலும் மாம்சத்துக்கென்று விதைத்தலாகும்.

**மாம்சத்துக்கென்று விதைத்தல் என்பது என்ன ?**

கிறிஸ்தவன் தான் தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்கையை எல்லாவிதத்திலும் அலட்சியப்படுத்தும் மனப்பாங்கு, நேர்மையற்ற தன்மையையும் மரணத்தையும் வருவிக்கும். உண்மையாகவே, அநேகர் தங்களது தாலந்துகளை தவறுதலாக செலவழித்ததை கண்டறிந்து தங்களது பாதைகளை மறுஆய்வுசெய்வர். ஆனால் அப்படிப்பட்டோரது நிகழ்வுகளில் அவர்கள் நேரத்தையும் ஆற்றலையும் வாய்ப்புக்களையும் வீணடித்திருக்கின்றனர். அவர்கள் நித்தியஜீவனை ஆதாயப்படுத்தினாலும், ஓட்டத்தை ஆரம்பித்ததுமுதல் உண்மையுள்ளோராக ஓடுகிறவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் மகிமையின் நிலையைக்காட்டிலும் குறைவாக அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தேவன் நமக்கென்று ஏற்படுத்தியுள்ள மகிமையின் வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக, ஆவிக்கென்று விதையுங்கள் என்று நமக்கும் நம் உடன்சகோதரர்க்கும் புத்திமதி கூறுவோம். அப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களையும், அதற்கான நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்கென்று நம் ஒவ்வொரு ஆற்றலையும் பிரயோகித்து, ஆவியின் கிருபைகளிலும் கனிகளிலும் வளர்ச்சியடையவேண்டும்.

--2730--

**உடன் சகோதரரை விசாரித்தல் :–**

ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் தன் சொந்த பாரத்தை தானே சுமக்கத் தேடவேண்டுமே தவிர, சகோதரர்களை சார்ந்திருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் தனக்கே உரிய சுய பொறுப்புக்களை உணர்ந்து, நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக ! அறுவடையின் நேரத்தில், அறுப்பின்நேரத்தில் இருக்கிறோம் என்பதை நினைவில்கொண்டு, எல்லோரும் உணர்விழந்துபோகாமலும், எல்லோரும் களைப்படைந்து அமிழ்ந்துபோகாமலும், விடாமுயற்சியுடன் செயல்படும்போது, அவரவரது வெகுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

அதோடுகூட, தனக்குரியதை தேடும் அதேசமயத்தில், ஒருவருக்கொருவர் இரக்க மனப்பான்மையுடன் பட்சமாக இருக்கவும், எல்லா மனிதருக்கும் உதவிசெய்யவும் வேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார்

‘‘ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்’’– கலாத்தியர் 6:10

விசுவாசவீட்டாராகிய நாம், நம் உடன் சகோதரன் தவறில் அகப்பட்டிருப்பதைக் காணும்போது, சாந்தம் மற்றும் இரக்கத்தின்ஆவியை வெளிப்படுத்தி, நமது ஆவிக்குரிய சுபாவத்தை அப்படிப்பட்டவரிடத்தில் காண்பிக்கவேண்டும். நாம் ஒருவர் மற்றொருவரது சுமையை சுமந்து, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றவேண்டும். நாமும் வருங்காலங்களில் சில சமயம் தீமையின்பிடியில் அகப்பட நேரிடும் என்பதை உணர்ந்து, சாந்தத்தின்ஆவியை வளர்த்துக்கொள்ளவேண்டும். ஒருவேளை நாம் கடந்தகாலங்களில் இவ்வாறு பிறரது தவறுகளை சாந்தத்துடன் அணுகியிராதிருந்தால், தாழ்மையை கற்றுக்கொள்ளவேண்டும். பூரணமானவைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கையில், நாம் உண்மையாகவே ஒன்றுமில்லை என்பதை உணரவேண்டும். மனித பரிபூரணத்தின் காரணமாக அல்ல, மாறாக, முறையான சித்தம், நல்ல நோக்கங்கள், முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட இருதயங்களின்மூலமே கர்த்தரோடு நாம் நிலைநிற்கிறோம்.

---------------------------------

# திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலோசனைகள்
## SOME PASTORAL COUNSEL ON MARRIAGE


தேவன்தாமே நம் ஆதிப்பெற்றோராகிய ஆதாமையும் ஏவாளையும் ஒன்றிணைத்ததன்மூலம் முதலாவது திருமணசடங்கை எளிமையாக நிறைவேற்றிவைத்தார். தாயாகிய ஏவாள் ஏற்கனவே ஆதாமின் எலும்பின் எலும்பும் அவரது மாம்சத்தின் மாம்சமுமாயிருந்தபோதிலும், தேவன்தாமே அவர்கள் இருவரையும் தனித்தனியே பிரித்துவைத்திருந்தார். அவர்கள் இருவரும் சரீரத்தில் இருவராக இருந்தாலும், இருதயத்தில் ஒன்றாகவே இருந்தனர். இந்த ஒரே ஜோடியிடமிருந்தே முழு மனுக்குலமும் பிறக்கவேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தார். பாவம் நுழைந்ததால் முழு மனுக்குலமும் அதற்குள் பிரவேசிக்கச்செய்து, இப்படியாக முழு மனுக்குலத்தையும் மீட்க ஒரு மனிதனுடைய மரணமே போதுமானதாயிருக்கும். “மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று”–1கொரிந்தியர் 15:21; ரோமர் 5:12,19.

வேதாகமம் தெளிவாக போதிக்கிறபடி, தேவனுடைய மாபெரும் திட்டம் உலகத்திற்கு இழந்துபோனதை திரும்பக் கொடுத்தலைக் கொண்டுவருவதோடு முடிவுக்கு வரும். அப்பொழுது ஆதாம் தன்னிடமிருந்து ஸ்திரியை பிரித்தெடுக்கும் முன்பு இருந்தநிலைமைக்கு, மனுக்குலம் சீர்பொருந்த செய்யப்படும். ஆகவே நாம் இயேசுவின் வார்த்தைகளின்படி “மறுமையையும் மரித்தோரிலிருந் தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை” – லூக்கா 2:35.

மற்றுமொரு வார்த்தையில் கூறும்போது, திரும்பக்கொடுக்கும் காலத்தின்போது, எல்லா ஆண்களும் பெண்களும் தங்களது ஆண், பெண்ணுக்குரிய தனித்தன்மையான பண்புகளை இழந்திருப்பர். மேலும் ஆதாம் ஆதியில் சிருஷ்டிக்கப்பட்டபோது இருந்ததுபோல, அதாவது அவருக்குள் ஒவ்வொன்றும் பூரணப்பட்டிருந்ததுபோல, பூமி முழுவதும் ஜனங்களால் நிறைந்திருக்கும். பூமியை அளவுக்குமீறி நிரப்ப தேவன் வடிவமைக்கவில்லை. மாறாக அதை நிரப்பமட்டுமே தீர்மானித்திருந்தார்.

புருஷனும் ஸ்திரியும் அன்பினிமித்தம் கூட்டுறவில் இணைந்திருக்கவேண்டும் என்றாலும், சட்டம் ஒருபடி முன்னேறிச்சென்று, அவர்களது இணைப்பை சாட்சிகள் முன்னிலையில் அங்கீகரிக்கும்படி பொருத்தமான விதிமுறை வேண்டும் என்றும், இதனால் வருங்காலத்தில் துன்பத்தைத் தவிர்க்கமுடியும் என்கிறது. இதன்விளைவாக, சில விசேஷித்த உரிமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை பொருத்தமானதே என்று நாம் நம்புகிறோம்.

### திருமணத்திலுள்ள ஒரு விசேஷித்த அர்த்தம்



கிறிஸ்தவ ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை பெற்றிருந்து, வேத மாணவர்களாக இருக்கும் அவர்கள், அந்த வசனத்தை பாராட்டுகின்றனர். தேவன் திருமண சடங்கை ஏற்படுத்தும்போது, திருமணத்திற்கான விசேஷ அர்த்தத்தை தீர்மானித்திருந்தார். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நடைபெறும் திருமணம் என்பது கிறிஸ்துவும் சபையும் இணைவதற்கு ஒரு காட்சியாக அல்லது எடுத்துக்காட்டாக உள்ளது. இவ்வாறே இருக்கவேண்டுமென தேவன் நியமித்திருந்தார். திருமணத்தை ஒரு காட்சியாக அப்போஸ்தலர் ஒப்பிட்டுக்கூறி,கிறிஸ்து சபையை நேசித்து அதற்காக தம்மையே கொடுத்ததுபோல புருஷர் தங்கள் மனைவியரை தங்களது சொந்த சரீரமாக பாவிக்கவேண்டும் என்கிறார் – எபேசியர் 5:25–32.

புருஷன் தன்னை எவ்வாறு நேசிப்பானோ, அதுபோல் மனைவியை நேசிக்கவேண்டும். இதுவே பெரிதான அன்பு. அவ்வாறே கிறிஸ்துவும் தம் சரீரத்துக்காக எல்லாவற்றையும் செய்தார். இதைக்காட்டிலும் அதிகமாகவே செய்தார், தமது ஜீவனை நமக்காக பலியாக்கினார். புருஷர்கள் தங்கள் மனைவியர்க்காக தங்கள் ஜீவியத்தை ஒப்புக்கொடுக்கவேண்டும் . அவளுக்குத்தேவையான உணவு மற்றும் உடைகளை தருவதோடு மட்டுமல்லாமல், அவளது மனநலன் மற்றும் ஒழுக்க ரீதியான நலன்களிலும் அக்கறை கொள்ளவேண்டும் என்பதையும் கூடுதலாக இது சுட்டிக்காட்டுகிறது. புருஷனின் கவனிப்பில் இவையனைத்தும் நிர்வகிக்கப்படவேண்டும். ஒரு நல்ல புருஷன் தன் மனைவியிடத்தில் நன்கு அக்கறை கொள்ளவேண்டும், சூழ்நிலைகளுக்கு தக்கவாறு, தன்னிடமுள்ள சிலவற்றை பலியாக்கவும் வேண்டும்.

பிறகு விஷயத்தை மறுபக்கத்தில் நாம் பார்க்கும்போது, சபையானது தன் கர்த்தரிடத்தில் பக்தியாய் இருக்கக்கடவள் என்றும், அவ்வாறே மனைவிகளும் தங்கள் புருஷர்களிடத்தில் பயபக்தியை காண்பிக்கக்கடவர்கள் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார். மனுக்குலம் இந்த தெய்வீகப் பாடத்திலுள்ள ஆவியை அதாவது சிந்தையைப் பற்றிக்கொள்ளமுடியும். இந்த தெய்வீகப் பாடத்திலுள்ள ஆவியை அல்லது பயபக்திக்குரிய சிந்தையை எந்தளவு பற்றிக்கொள்கிறார்களோ, அந்தளவே தங்கள் ஜீவியத்தில் நன்மைகளை அடைவார்கள். திருமணஉறவில் கர்த்தர் வைத்திருக்கின்ற ஏற்பாட்டை யார் கண்டிப்பாக கடைப்பிடிக்கிறார்களோ அவர்கள் அநேக நன்மைகளை அடைவார்கள். ஒரு புருஷன் தன் மனைவியை நேசிப்பதன்பொருட்டு, சில சமயங்களில் தன் சொந்த தீர்மானங்களை விட்டுவிடுவானாகில், அவனே அதிக பாராட்டைப் பெற்றிருப்பான். அவ்வாறே மனைவியும் தன் புருஷனின் நலனுக்காக ஊழியம்செய்ய தன்னால் இயன்றளவுசெய்ய தன்னை அர்ப்பணித்தால், அது கிறிஸ்துவுக்கு சபை ஊழியம்செய்வதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும்.

அப்போஸ்தலர் கீழ்க்கண்ட வசனத்தில்; “இப்படியிருக்க, அவளை விவாகம் பண்ணிக்கொடுக்கிறவனும் நன்மை செய்கிறான்; கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான். (1கொரிந் 7:38) என்று கூறும் ஆலோசனைக்கு முரணாக நாம் விவாதிப்பதில்லை. . அவர் இங்கு உலகத்தாருக்காக எழுதாமல், கர்த்தருக்கென்று தங்கள் ஜீவியத்தை ஒப்புக்கொடுத்தவர்களுக்காகவே பேசுகிறார். கர்த்தரிடத்தில் தங்களை ஒப்புவித்ததற்கு அவர்களது திருமணம் எவ்விதத்திலும் குறுக்கிடுவதில்லையெனில், அவர்கள் திருமணம்செய்துகொள்ளலாம். ஒருவேளை அவர்களது உடன்படிக்கைக்கு தடைஏற்படுத்துமானால், திருமணம்செய்வது அவர்களது ஜீவியத்தை அடகு வைத்ததுபோலாகும். ஆனால் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளில் அநேகர் திருமணத்தால் ஆதாயமடைந்ததும் உண்டு, தனிப்பட்டவிதத்தில்மட்டுமல்ல, கர்த்தரோடும் பிறரோடும் வைத்த அவர்களது உறவிலும் ஆதாயம் அடைந்துள்ளனர்.

ஆகவே திருமணம்செய்பவர்கள் கர்த்தருக்கு எதிராக செல்கிறார்கள் என்றபொருளில் பேசுவதாக புரிந்துகொள்ளக்கூடாது. இருந்தபோதிலும் கர்த்தரைப் பிரியப்படுத்த தீர்மானித்த அனைவரும் இப்படிப்பட்ட

காரியத்தில் மிக கவனமாயிருக்கவேண்டும். மற்றவர்களோ திருமணம்செய்வோரை விமர்சிக்க முயலக்கூடாது. இது சுயாதீனம், இந்த சுயாதீனத்தைக்கொண்டே தேவன் நம்மை விடுதலையாக்கியிருக்கிறார். இந்த உரிமையை நாம்தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ளவும் மற்றவர்களுக்கு அருளவும்கூடும்.

**நன்மைக்காக அல்லது தீமைக்காக :–**

திருமணம் செய்வோர், தான் ஒரு பூரணமனுஷனை திருமணம் செய்யப்போவதில்லை என்ற உண்மையை தீர்மானித்திருக்கவேண்டும். ஏனெனில் "பரிபூரணன் ஒருவனுமில்லை, ஒருவனாகிலுமில்லை" என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது. ஒருவனும் பூரணராயிராத நிலைமையில், அபூரணராயுள்ள ஒருவர், பூரணராக உள்ளவரே வேண்டுமென கேட்பது தவறு என்பது வெளியரங்கமாகிறது. ஆயினும் ஒவ்வொருவரும் தங்களது சொந்த பலவீனத்தை மூடிமறைக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் இந்த விஷயத்தில் ஞானமற்றோராக இருக்கிறார்கள். நமது சிந்தைகள் பூரணமாயிருந்து, அந்த உன்னத சிந்தையின் தராதரத்துக்கு நம்மால்இயன்றஅளவு ஜீவிக்கவேண்டும். ஒவ்வொரு குறைபாட்டையும் எவ்வளவுவிரைவில் முடியுமோ, அவ்வளவாக மறைக்கவேண்டும். இதனால் அங்கே எந்த ஒரு தடையும் ஏற்படாது. ஒருவர் திருமணத்திற்குள் பிரவேசிக்கும்போது, தான் பூரணராய் உள்ள ஒருவரை மணந்திருக்கிறேன் என்று எண்ணுவது தவறானது. அவர் தன் பலவீனத்தை திருமணபந்தத்தில் இணைந்தவருக்குப் பின்னால் மறைத்துக்கொள்கிறார். இவ்வாறு ஒருவருக்கொருவர் தங்கள் பலவீனத்தை மறைத்துக்கொள்வது வாழ்நாள்முழுவதும் நீடித்திருக்கக்கூடும்.

திருமணமானோர் ஒருவர் மற்றவருடைய கடந்த வாழ்க்கையை விசாரிப்பதுகூடாது. திருமணமான அத்தருணத்திலிருந்தே ஒருவர் மற்றவரை நன்மைக்கென்றோ, தீமைக்கென்றோ ஏற்றுக்கொள்கிறார். அப்போதிலிருந்து, பழைய வாழ்க்கையை திரும்பிப் பார்த்தல்கூடாது. கர்த்தர் நம்மை ஏற்றுக்கொண்டபோதும் அவ்வாறே நடந்தது. அவர் நம் கடந்த கால வாழ்க்கையை விசாரிக்கவில்லை. நாமும் அவ்வாறுசெய்யக்கூடாது. திருமணமான தம்பதியர் கடினமான சூழ்நிலைகளை அடைவார்களானால், அவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள கடினங்களை சீர்ப்படுத்தும்படி முயற்சிக்க எவரையும் இவர்கள் அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் அப்படிப்பட்ட முயற்சிகள் அனைத்தும் துன்பத்தையே வருவிக்கும். தேவன் ஒன்றிணைத்திருக்கிறதன்பேரில் ஒருவனும் பிரவேசிக்க முயற்சிக்கக்கூடாது. திருமணத்தின் இடர்ப்பாடுகள் பரஸ்பரம் பேச்சுவார்த்தையினால் நிச்சயமாக தீர்க்கப்படவேண்டியவை. இதை அறிந்திருந்து, பிறரது ஜீவியத்தின் கஷ்டங்கள் பெருகும்படியாக நம் நடவடிக்கை அமைந்துவிடாதபடி விழிப்பாய் இருக்கவேண்டும். நாம் இரக்கங்கொள்ளவும்கூடாது. நாம் அவர்களை தனித்திருக்கும்படி விட்டுவிடவேண்டும். அவர்கள் எப்பொழுதாகிலும் ஆலோசனை தரச்சொல்லி நம்மை அணுகுவார்களாகில், கொடுக்கலாம், ஆனால் நேரடியாக உட்பிரவேசித்தல்கூடாது. அவர்கள் திருமணம் செய்துகொண்டபிறகு, அவர்கள் எத்தனைகாலம் ஜீவிக்கிறார்களோ, அது நன்மையாக இருக்கும் அல்லது தீமையாக இருக்கும்.

ஆகவே திருமணம் என்பது பொறுப்புணர்வுமிக்க ஒன்று. இதை மிக தீவிரமாக கவனித்து, ஆலோசித்தபிறகே ஏற்றுக்கொள்ளவேண்டும். இது ஒரு பரிசுத்தமான பொறுப்பு. ஒப்பந்தத்தில் இணையவிருப்போரே எஞ்சியுள்ள ஜீவியத்தில் தங்களை பிணைத்துக்கொள்ளவேண்டும். இந்த சிந்தை முழுமையாக மதிக்கப்பட்டு பின்பற்றப்படுமேயானால், திருமணங்கள் அனைத்தும் அதிகநிறைவை ஏற்படுத்தும்.

குருவே பேசும்! என்னை தயார்ப்படுத்தும் –உம்
குரலை நாளும் கேட்கிறேன்
கீழ்ப்படிதலோடுகூட மகிழ்ச்சியும், ஸ்திரமும்
ஒவ்வொரு வசனத்திலும் இனியும் பின்தொடரும்
நான் செவிசாய்க்கிறேன் கர்த்தாவே, உம்மிடத்திலேயே
குருவே பேசும், பேசும் என்னிடம் தொடர்ச்சியாக..

---------------------------------

--2733--

R 5903

# மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள்

## THE MACEDONIAN APPEAL

"அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது"

– அப்போஸ்தலர் 16:9

பவுல் தம் இரண்டாவது சுற்றுப்பிரயாண ஊழியத்துக்கு துணையாக சீலாவைத் தெரிவுசெய்தார். துவக்கத்தில் பர்னபாவும், பவுலும் இணைந்து செல்லவே திட்டமிட்டிருந்தனர். ஆனால் மாற்கு பொருத்தமானவர் என்று அவரை உடன் அழைத்துச்செல்வதில் இருவருக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டது. இதன்முடிவு, பர்னபாஸ் மாற்குவை கூட்டிக்கொண்டு சைப்ரஸ் தீவில் உள்ள சகோதரர்களை மீண்டும் சந்திக்கும்படி புறப்பட்டுச் சென்றார். பவுலோவென்றால் கலாத்தியாவிலுள்ள சபைகளுக்கு தரைமார்க்கமாக சென்றார். போகும்வழியில் ஒருவேளை தம் சொந்தப் பட்டணமாகிய தர்சுஸுக்கும் சென்றிருக்கக்கூடும். வெளித்தோற்றத்தில் காணும்போது, சீலாவும் பிரயாணம் துவங்குமுன்பாக அவரது வீடாகிய எருசலேம் சென்று தம் காரியங்களை முடித்துவிட்டு பின்பு ஆசியா மைனரில் பவுலுடன் இணைந்துகொண்டதாக காணப்படுகிறது. பவுல் அப்போஸ்தலன் தன் பிரயாணத்தைத் துவங்கும்பொழுது "அவர்கள்" என்று கூறுவதற்கு பதிலாக, "அவர்" என்று ஒருமையிலும், அதன்பின்பு, பவுல் சீலா மற்றும் தீமோத்தேயு லிஸ்திரா பட்டணத்தில் ஒன்றுசேர்ந்திருந்ததை, "அவர்கள்" என்ற வார்த்தையை உபயோகித்தும், இறுதியாக, லூக்கா, துரோவா பட்டணத்தில் அவர்களோடு பிரயாணத்தில் ஒன்றிணைத்துக்கொண்டபிறகு, "நாங்கள்" என்றும் வரலாற்று ஆசிரியரான லூக்கா எழுதியிருப்பதை அடிப்படையாகக்கொண்டு நாம் அனுமானிக்கிறோம்.

ஆசியா மைனரிலுள்ள சபைகளுக்கும் அப்போஸ்தலர் பிரயாணம் செய்தார். அந்த சபைகள் அவரது முந்தைய பிரயாணத்தின்போது உருவாக்கப்பட்டவை. அங்குள்ள சகோதரர்களை உற்சாகப்படுத்தவும் பலப்படுத்தவும் அறிவில் வளர்ச்சிபெறச்செய்யவும், கிருபையில் வளர தூண்டுவதுமே, பவுல் அந்த சபைகளை சந்திப்பதன் நோக்கமாயிருந்தது. அவரது பிரயாணத்தினால் கிடைக்கப்பெற்ற கனிகளை சந்தித்ததன்மூலம், அப்போஸ்தலர் புத்துணர்ச்சியடைந்ததில் சந்தேகத்திற்கிடமில்லை. லிஸ்தீராவில் தேவனுடைய கிருபையும் சுவிசேஷத்தின் அறிவும் ஒரு இளைஞன் போதுமான அளவு வளர்ச்சியடையும்படி சென்றடைந்ததை பவுல் கண்டார். தீமோத்தேயு என்ற பெயருடைய அந்த இளைஞனுக்கு 21வயது இருக்கக்கூடும். அவரது தகப்பன் ஒரு கிரேக்கனாயும் அவரது தாய் ஒரு யூதஸ்திரீயாகவும் இருந்தனர். இக்காலகட்டத்தில் கிரேக்க நூல் கூறுகின்றபடி அவள் ஒரு விதவையாய் இருந்ததாக காணப்படுகிறது.

மதப்பற்றில் வளர்ச்சியடைந்தபோதிலும், தீமோத்தேயுவுக்கு யூத மதசட்டத்தின்படி விருத்தசேதனம் செய்யப்படவில்லை. பின்பு, அப்போஸ்தலர் பவுலுடன் பின்னாளில் வெளியூர்க்கு சத்தியஊழியம் செய்யப்போகும்போது, விருத்தசேதனம் செய்யும்படி பவுலால் தீர்மானிக்கப்பட்டு, அவ்வாறே செய்யப்பட்டது. அப்போஸ்தலர் பவுல் செல்லும் இடங்களிலும் எருசலேமில் அப்போஸ்தலர்களது ஆலோசனைக்கூட்டத்திலும் கிறிஸ்தவ சகோதரர்கள் விருத்தசேதனம் செய்யப்படுதல் அவசியமற்றது என்று வலியுறுத்திய பவுல், தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்த இச்செயல், முன்னுக்குப்பின் முரணாகவும் விநோதமாயும் உள்ளது. மேலும் புறஜாதியானாகிய தீத்துவுக்கு விருத்தசேதனம் பண்ணுவதற்கு அப்போஸ்தலர் சம்மதம் தெரிவிக்கவில்லை என்பதும் நமக்கு நினைப்பூட்டப்படுகிறது(கலாத்2:3). இக்காரியங்களை கருத்தில்கொண்டு பார்க்கும்போது, ஏன் தீமோத்தேயு விருத்தசேதனம் செய்வதற்கு பவுல் சம்மதித்தார்? முறையாகப் புரிந்துகொள்ளும்பொழுது, அப்போஸ்தலருடைய நடத்தை முழுமையாக முரண்பாடற்றதாக இருக்கிறது என்று இதற்கு நாம் பதிலளிக்கிறோம். மோசேயின் பிரமாணத்தில் விருத்தசேதனம் இடம்பெறவில்லை, பலநூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த ஆபிரகாமினிடத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது ஆபிரகாமின் பிள்ளைகள் அனைவர்மீதும் இது ஒரு முத்திரையாக அல்லது அடையாளமாக இருக்கும் நோக்கத்துடனே நியமிக்கப்பட்டது. எருசலேமிலுள்ள ஆலோசனைச்சங்கம் இதுமுதற்கொண்டு, எந்த யூதரும் விருத்தசேதனம் செய்யக்கூடாது என்று தீர்மானம் இயற்றவில்லை. மாறாக, கிறிஸ்தவனுக்கு விருத்தசேதனம் தேவை என கருதக்கூடாது என்றே தீர்மானித்திருந்தனர். இந்த விஷயத்தில் அப்போஸ்தலர் பவுலின் கருத்து மிகவும் திட்டவட்டமானது. அவர் கூறுகிறார்;

"கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது; அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" – கலாத்5:6.

மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பது, கிறிஸ்துஇயேசுவுக்குள் புதியசிருஷ்டிகளாக உருவாக்க போதுமானதாயிராது. ஆகவே மாம்சத்தின்படியான விருத்தசேதனம் புதியசிருஷ்டிக்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றாது என்பதே இங்கு கூறப்படும் கருத்தாகும். முன்பு யூதனாயிருந்தாலும் புறஜாதியானாயிருந்தாலும், ஜீவனுள்ள விசுவாசத்தின்மூலமாக கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக தேவனால் புதுசிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, ஆவிக்குரிய இஸ்ரயேலனாக இருக்கவேண்டுமானால் இருதயத்தை விருத்தசேதனம்செய்த புதுசிருஷ்டியாக இருக்கவேண்டும். இருதயத்தில் விருத்தசேதனம் என்பது மாம்சத்தின் நோக்கங்கள், நம்பிக்கைகள், விருப்பங்களை அறுத்துவிடுவதையே குறிக்கிறது. ஆகவே இந்த விளக்கங்களை அறியும்பொழுது, தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணப்பட்டதற்கு எவ்வித ஆட்சேபமும் இருக்காது என்று நாம் காண்கிறோம். இது அவருக்கு ஆவிக்குரிய உதவியை கொண்டுவரலாம், அல்லது தீமையை உண்டுபண்ணலாம். இது அடையாளம் மட்டுமே என்று தெளிவாகப் புரிந்துகொண்டு செய்யப்படுமானால், நிஜமான விருத்தசேதனம் ஒருவரை கிறிஸ்துவின் சரீர அங்கமாக, திருச்சபையாக உருவாக்கும், அப்படிப்பட்ட விருத்தசேதனத்தை தீமோத்தேயு அப்போது பெறவில்லை. தீமோத்தேயுவின் தாய் ஒரு யூதஸ்திரீயாக இருந்தபடியால், அவருடைய தகப்பன் ஒரு கிரேக்கனாய் இருந்தும், அவர் ஒரு யூதனாக வளர்ந்தார். இந்த உண்மையை யூதர்கள் அனைவரும் அறிந்திருந்தபடியால், அவர்களது பிரயாணத்தின்போது தொடர்புகொள்ளுகிறவர்கள், அவர் விருத்தசேதனம் செய்திருக்கிறாரா இல்லையா என்று கேள்விஎழுப்பக்கூடும். விருத்தசேதனம் செய்யவில்லை என்று பதில் அளிக்கப்படுமானால், அவர் ஒருபோதும் நல்ல யூதனல்ல, அவர் யூத மத கொள்கைகளை விட்டுவிலகினவர் என்று அர்த்தங்கொள்வர். விருத்தசேதனம் செய்தவர் என்றால், இந்த தடைகள் அகன்றுபோய், மாபெரும் செல்வாக்கோடு அவர்கள் மத்தியில்இருக்கவும், அவர்கள் உள்ளத்தில் நெருக்கமான உறவை ஏற்படுத்தவும் முடியும்.

அப்போஸ்தலர் பவுலின் குணதிசயங்களில் கபடற்ற தன்மையும் நேர்மையுமே ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று சிறந்ததாய் இருந்தது. தீமோத்தேயு மற்றும் தீத்துவின் விஷயத்தில் பவுலின் நடத்தையை முறையான வெளிச்சத்தில் நீதியான நோக்கில் பார்க்கும்போது, பவுலின் அணுகுமுறை தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்த விஷயத்தில், அவர்களை வஞ்சிக்கும்விதமாகவும், சமரசத்துக்காக விட்டுக்கொடுக்கும் விதமாகவும் உள்ளதாக சிலர் கருதுகின்றனர். இந்த சட்டப்படியான வழியையே பவுல்;

``யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன்'' – 1கொரிந் 9:20.

எந்தவிதத்திலும் சத்தியத்தை சமரசத்திற்கென விட்டுக்கொடுக்கும் எண்ணம் அவரிடத்தில் இல்லை. பேதுருவை ஒருமுறை எதிர்த்துநின்றது இதற்கு ஒரு நல்லசான்று. யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளோடு பழகுகையில், உள்ளுணர்வுகளை மறைத்துப் பழகினார். எப்படியெனில், பேதுரு புறஜாதியாரோடே சாப்பிட்டார், ஆனால் யூதர்கள் வந்தபோதோ பயந்து, புறஜாதியாரிடமிருந்து விலகிப் பிரிந்தார்(கலாத்2:11). கலாத்தியருக்கு எழுதிய அவரது நிருபத்திலும் இது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில், புறஜாதியாராயிருந்து சத்தியமார்க்கத்துக்கு உட்பட்டோர்க்கு விருத்தசேதனம் யூதர்களைப்போல் கட்டாயமாக்கப்படவில்லை என்றும், ஒருவேளை அவர்கள் விருத்தசேதனம் பண்ணுவார்களாகில் நியாயப்பிரமாணங்களையும் அதன் சடங்குகளையும் குறித்து ஓரளவே நம்பிக்கை உடையோராய், அவர்களது இரட்சிப்புக்கென்று தேவனால் ஏற்றுக்கொள்ளும்படிக்கு கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தின்மேல் முழுநம்பிக்கை வைக்கவில்லை என்று பொருள்படும் என்று நேரியசிந்தனையில் குறிப்பிடுகின்றார். அவர்களுக்கு பவுலின் வார்த்தைகள் இதோ; ``நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது. மேலும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்கிற எந்த மனுஷனும், நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்ற கடனாளியாயிருக்கிறான். நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாகும்படி விரும்புகிற நீங்கள் யாவரும், கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து, கிருபையினின்று விழுந்தீர்கள் – கலாத் 5:2–4. நாமும் அவ்வாறே, உடை, சடங்குகள் மற்றும் நடைமுறைத் தன்மைகள் போன்றவற்றில் சலுகை அளித்தலை தெளிவாக வகையுறுத்துக் காண்பிப்போமாக. இது நம்மைச்சுற்றிலும் உள்ளவர்களிடத்தில் உள்ள தப்பெண்ணம் அல்லது அறியாமையை முறையாக உருவாக்கும். ஆதலால், கொள்கைகளின் அடிப்படையில் சலுகைகளை ஏற்படுத்துவது, எந்த தனிநபருக்கும் எந்த சூழ்நிலையிலும் அனுமதிக்கப்படத் தக்கதல்ல.

அப்போஸ்தலர் லிஸ்திராவிலுள்ள சகோதரர்களை சந்தித்து தன் வெளியூர் பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்தபிறகு, ஆசியா மைனர்க்கு பிரயாணிக்க எண்ணங்கொண்டிருந்தார். ஆனால் கர்த்தர் அவர்களது முயற்சிகளை தடைசெய்வதை அறியும்வரைக்கும், தயவற்ற சூழ்நிலை அவர்கள் மத்தியில் காணப்பட்டது. அதன்பின்பு மற்ற இடங்களுக்கு ஊழியம்செய்வது குறித்து குழப்பம் ஆரம்பமானது. நிச்சயமற்ற தன்மையே பவுலை வழிநடத்துவதற்கு கர்த்தருக்கு சாதகமான தருணமாயிற்று. பவுலுக்கு தரிசனத்தில் ஒரு மனிதர் மக்கெதோனிய தேசத்து உடையணிந்து, அவரை நோக்கி; ``நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தான். இதை தெய்வீக வழிநடத்துதலாக அப்போஸ்தலர் ஏற்றுக்கொண்டு, ஐரோப்பாவைநோக்கி தம் பிரயாணத்தை உடனடியாகத் தொடங்கினார். இங்கு தேவன் தம் சபையின் அனைத்து நலன்களிலும் அக்கறையாயிருந்து, மேற்பார்வையிட்டு வழிநடத்துகிறார் என்பதற்கான சாட்சியத்தை நாம் அடைகிறோம். சிறியஆசியாவுக்கு சத்திய செய்தியை பிரசங்கிக்க அனுமதிக்காததால், அதன்மேல் தேவன் வெறுப்புற்றிருக்கிறார் என்று அர்த்தமல்ல, பிற்பாடு, உகந்தநேரத்தில் அங்கே செல்ல அனுமதிப்பார். ஆனால் ஐரோப்பாவுக்கு செய்திசொல்ல இதுவே சரியான சமயமாயிருந்தது.

ஐரோப்பாவிற்கு அப்பாலிருந்து, தெற்குபுறமாக ஆப்பிரிக்காவுக்கு கர்த்தர் தம் செய்தியை சொல்ல வழிநடத்தியிருக்கலாம். ஆனால் தெய்வீகத்திட்டத்தின் ஒவ்வொரு பண்பும் ஏற்றவேளையில் நிறைவேறும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது. தற்போது, தெய்வீக ஏற்பாட்டின்படி, கிறிஸ்துவுக்குள்ளான தெய்வீகக்கிருபையின் செய்தி கிரேக்கர்களுக்கு செல்லவேண்டிய தருணமாயிற்று. இந்த காலகட்டத்தில் அவர்கள் கலையிலும் இலக்கியத்திலும் உலகிலேயே மிகச்சிறந்தவர்களாக அறியப்பட்டிருந்தனர்.

மருத்துவனாகிய லூக்கா, இக்காலகட்டத்தில்தான் பவுலோடு ஊழியப்பிரயாணத்தில் இணைந்துகொண்டார் என்று கருதப்படுகிறது. கல்விமானாக விளங்கின இந்த சதுசேயன், ஒரு மருத்துவராயுமிருந்தார். பரிசுத்தபவுலின் பேச்சுக்களை எழுத்துவடிவில் கொண்டுவர, கர்த்தர் லூக்காவை ஏற்பாடுசெய்திருந்தார். இதனால் அப்போஸ்தலருடைய நிருபங்கள், அக்காலத்திலிருந்த அநேக சபைகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அதோடுகூட, ஆதிசபையிலிருந்து தற்காலம்வரை உள்ள கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் கிடைத்தது. லூக்கா சுவிசேஷத்தினை எழுதியதோடல்லாமல், அப்போஸ்தலருடைய நடபடிகளையும் மற்றும் பரிசுத்தபவுலின் நிருபங்களில் ஏறத்தாழ அனைத்தையும் இவரே எழுதினார். இங்கு கிறிஸ்துவின் பல்வேறு சரீர அங்கங்கள் பெற்ற பாக்கியங்களை நாம் மற்றொரு உதாரணமாக பெறுகின்றோம். லூக்கா, அப்போஸ்தலர் பவுலைப்போல் இருக்கமுடியாது, அல்லது பரிசுத்தபவுலின் ஊழியத்தை செய்யவும் முடியாது. ஆனால் கர்த்தரால் அவரை சத்தியத்தை பெருமளவில் பிரஸ்தாபிப்பதற்கு திறம்படவும், மேன்மையாகவும் உபயோகிக்கமுடியும்.

அவ்வாறே நம்மிடமும் காணப்படுகின்றது. நாம் அப்போஸ்தலர்களாக முடியாது. நம்மால் மாபெரும் காரியங்களை செய்யவும் முடியாது. ஆனால் கர்த்தரின்ஆவியால் நிரப்பப்படும்போது, சத்தியத்தில் சில ஊழியங்களை செய்யும் பாக்கியம் பெறுகின்றோம். கர்த்தருக்காகவும் சகோதரர்களுக்காகவும் செய்யும் எந்தஊழியமும், அற்ப ஊழியமாகிய ஒருவரது பாதங்கழுவுதலுங்கூட கனமுள்ளதும் பாக்கியமானதுமாகும்.

**தியத்தீராளாகிய லிதியாள் :–**

கிரேக்கநாட்டில் மக்கெதோனியாவின் பிரதான பட்டணங்களில் ஒன்றாக பிலிப்பி பட்டணம் உள்ளது. ஐரோப்பாவிலேயே இந்தப் பட்டணத்தில்தான் முதலாவதாக நற்காரியங்களின் செய்தி பிரசங்கிக்கப்பட்டதாக காணப்படுகிறது. அப்போஸ்தலரும் அவரது உடன்ஊழியர்களும் ஓய்வுநாளன்று என்றைக்கும்போல் தேவனை தொழுதுகொள்பவர்களைத் தேடினர். தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்த ராஜ்யத்துக்காக நம்பிக்கையோடு தேடினர். அப்படிப்பட்டவர்களே அவர் கொடுக்கவிருக்கிற சுவிசேஷ செய்தியை ஏற்றுக்கொள்ள நன்கு ஆயத்தமாயிருப்பர். இயேசு மீட்பராக தம் முதலாம்வருகையில் வந்து, தம்மையே பலியாக்கி, ஆயிரமாண்டு ஆட்சிக்கான அஸ்திவாரத்தை ஏற்படுத்திச் சென்றார். அவரது தியாகபலியின்



ஆசீர்வாதங்கள் ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும் சென்றுசேரும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார். ஆனால் பொதுவாக உலகின் ஜனங்களிடத்தில் தொடர்புகொள்வதற்கு முன்பாக, தற்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய சிறுமந்தையாரை இயேசுவோடு ஆயிரமாண்டு அரசாட்சியின் ஆசீர்வாதங்களை நிர்வகிப்பதற்காக அவரது ராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருக்க அழைத்து வழிநடத்திவருகிறார்.

பிலிப்பி பட்டணத்தில் வழிபாட்டுஸ்தலம் இல்லை என்பது விசாரணையிலிருந்து தெரியவருகிறது. இதனால் அங்கு பவுலுக்கும் அவரது உடன்ஊழியர்களுக்கும் காரியங்கள் மிகவும் தயவற்றதாகக் காணப்பட்டிருக்கக்கூடும். ஒவ்வொரு ஓய்வுநாளின்போது அங்கு பட்டண நுழைவாயிலின்வெளியே, ஆற்றின் அருகில் மதக்கூட்டம் நடைபெறுவதை அவர்கள் கேள்விப்பட்டனர். அது தெய்வீக ஐக்கியத்திற்கு முக்கியத்துவமளிக்கும் ஜெபக்கூட்டமாக இருந்தது. யூத வழிபாட்டுஸ்தலத்தில் காணப்படும் வசதிகள் அங்குஇல்லை. ஆட்டுத்தோல்களால் எழுதப்பட்ட வேதாகம் இராததால், நியாயப்பிரமாணத்தை வாசித்தலும் வழக்கத்திலில்லை. மாறாக ஜெபமும் வழிபாடுமே அங்கு செய்யப்பட்டுவந்தது. இவையனைத்தும் அப்போஸ்தலர் சுவிசேஷசெய்தியை பிரசங்கிப்பதற்கு சாதகமாக இருந்தன. அவ்விடத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தோரிடத்தில் அவர் உரையாடி, நன்மையான எந்த ஈவையும் அருள்பவரை துதித்தலின் முக்கியத்துவத்தையும், இருதயத்தால் தொழுதுகொள்வதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். அதன்பிறகு இயேசுவின் பலி மற்றும் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மற்றும் அவர் வல்லமையோடும் மாபெரும் மகிமையோடும் இரண்டாம் வருகையில் வரவிருப்பதையும் – இவைகளிலுள்ள நற்காரியங்களையும் விளக்கினார். தற்போது அவரது சரீரத்தின் அங்கமாகவும் திருச்சபையாகவும் ஆயிரவருடயுகத்தில் கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரராகும் அழைப்பு கொடுக்கப்பட்டிருப்பதையும் அவர்களுக்கு நிச்சயமாக அவர் காண்பித்திருப்பார்.

ஆயினும் அங்கே ஜெபக்கூட்டத்தில் கலந்திருந்த அநேகர் அல்லது ஒருசிலரில், ஒரு ஸ்திரீயினுடைய இருதயம் ஆயத்தமான நிலைமையில் செய்தியை கேட்டுக்கொண்டிருந்தது. அவள் பெயர் லிதியாள். அவள் இரத்தாம்பரம் விற்கிறவளாயிருந்தாள், தற்காலத்தைக்காட்டிலும் பழையகாலங்களில் சாயங்கள் அதிக விலையுள்ளதாயிருந்தது. மேலும் அவற்றை எப்படி தயாரிப்பது என்ற அறிவும் இரகசியமாயிருந்ததால், அத்தொழில்செய்து வருவாய் ஈட்டமுடிந்தது. இவ்வாறாக லிதியாள் நிதிநிலைமை போதுமானஅளவு கிடைக்கப்பெற்றிருந்ததை நாம் யூகிக்கமுடிகிறது. சத்தியம் அவளது இருதயத்தை திறந்ததோடு மட்டுமல்லாமல், அவளது புரிந்துகொள்ளும் கண்களும் பிரகாசமாயிருந்தது. இதனால் தன்னை முழுவதும் அர்ப்பணிக்க உடனே கீழ்ப்படிந்தாள். அதாவது அவளும் அவளது விசுவாசவீட்டாரும் அர்ப்பணிப்புக்கு அடையாளமாகிய தண்ணீர் ஞானஸ்நானம் மூலம் தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தனர்.

தேவபக்தியுள்ள பெற்றோர், அவ்வாறே தேவபக்தியில் விருப்பங்கொண்ட குழந்தைகளை எப்பொழுதும் அடையப்பெறுவதில்லை. வேதாகமத்தில் இத்தன்மையுள்ள 7 சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கர்த்தருக்கென்று ஊக்கமாய் தன்னை ஒப்புக்கொடுத்து, அவரது வசனத்தினால் வழிநடத்தப்படும் பெற்றோர், அவரோடு உடன்ஜீவிப்பவர்களிடத்தில் மற்றும் அவரது நேரடிப் பராமரிப்பின்கீழ் இருப்பவர்களிடத்தில் பொதுவாகவே நல்ல செல்வாக்கு உடையவராக விளங்குவார்கள் என்று நமது தனிப்பட்ட அனுபவத்தின்மூலம் அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒவ்வொரு பெற்றோரிடத்திலும் அப்படிப்பட்ட நம்பிக்கை மற்றும் ஜெபத்தின் ஆதிக்கமிருந்து, அதனை தங்கள் குடும்பங்களில் தேடவேண்டும். ஆனால் பேச்சு மற்றும் செயலில் எச்சரிக்கையாயிருந்து, சிரத்தையோடு அதை தேடாவிடில் அதை அடையமுடியாது. கிறிஸ்துவுக்குள்ளான தேவசித்தத்துக்கு நம் இருதயத்தின் நினைவுகளை சிறைப்படுத்துவதே பேச்சு மற்றும் செயலை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவது குறிக்கும். ஆயினும், தங்கள் குழந்தைகள் பெருமளவில் வளரும்வரை, பெற்றோர் தேவபக்தியின் நிலைப்பாட்டை அடையாதிருந்து, பகுத்துணரத் தவறி, தங்கள் பொறுப்புணர்வுகளை உணராதிருக்கும்போது, அவர்களது குழந்தைகள் அவர்களது தேவபக்தியின் நிச்சயத்தை அறிந்துணராது மதிப்பளிக்காதிருந்தால், பெற்றோர் குழந்தைகளை கடிந்துகொண்டு, இரக்கமின்றி நடந்து, அறிவுறுத்தக்கூடாது. இன்னும் சரியாகச் சொல்வோமானால், பெற்றோர் கர்த்தரை அறிய ஆரம்பித்தபிறகு, தங்களது சொந்தஜீவியம் மற்றும் தங்கள் குழந்தைகளை பயிற்றுவித்தல் போன்றவைகளிலும், அவரது வசனத்தின் அறிவுரைகளைப்புரிந்துகொள்ளும் வாய்ப்புஅடைந்து, அதன்பின் குழந்தைகளை கர்த்தரது புத்தியறிவின்பேரில் பேணிவளர்க்க வேண்டும். இவ்வாறு கர்த்தரது வசனங்களின் ஆழங்களை தெரியப்படுத்தினபிறகே, எதை செய்யவேண்டும், எதைசெய்யக்கூடாது என்ற அறிவைப்பெற்றபிறகே, கர்த்தரிடத்தில் பதில் சொல்வதற்கான பொறுப்பை அடைகிறார்கள்.

**"அவள் எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்"**

லிதியாள் வயதுமுதிர்ந்த குழந்தைகளுக்குத் தாயார் என்று அவளது விசுவாசவீட்டார் நம்பினதாக குறிப்பிடப்படுகிறது. பிலிப்பி பட்டணத்தில் மேலோங்கியிருந்த விக்கிரகங்களை அலட்சியப்படுத்தி, இவர்கள் மெய்தேவனை முழுமையாக அவளது செல்வாக்கின்கீழ், அவளோடுகூட தொழுது கொண்டிருந்தனர். அவளது கணவன்பெயர் குறிப்பிடப்படாததால், அவள் ஒரு விதவையாய் இருந்தாள் என்று நாம் அனுமானிக்கிறோம். ஆதலால் யாரிடமும் கலந்தாலோசிக்க இடமின்றி, தனக்கிருந்த உரிமையைக்கொண்டு, அப்போஸ்தலரையும் அவரது உடன்ஊழியர்களையும் தன் வீட்டுக்கு வந்து தங்கும்படியும் அவர்களை உபசரிக்க விருப்பமாயுள்ளதையும் கூறி அழைத்தாள். அப்படிப்பட்ட விருந்தினர் தன்வீட்டிற்கு வருவதன்மூலம் அவர்களை கனப்படுத்துவதற்கு பதிலாக, தன்னைத்தானே கனப்படுத்திக்கொள்வதாக அவள் உணர்ந்திருந்தது முறையானதாய்த் தோன்றுகிறது. தேவனுடைய ஊழியக்காரர்களும், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களுமாய் இருந்தோரை அவளது வீட்டுக்கூரையின்கீழ் உபசரிப்பதை தனக்கு மேன்மையாகக் கருதினாள். அவர்களை அழைக்கும் போது, "நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" என்று எழுதப்பட்டுள்ளது(அப் **16:15).**

இங்கு அப்போஸ்தலர் பிறரை நிர்ப்பந்தப்படுத்த ஆயத்தமாயிராமல், உனக்கு பிரசங்கித்தபடியால், நானும் என் உடன்சகோதரர்களும் தற்காலிகத் தேவைகளுக்கு நிச்சயமாக உன்னால் ஊழியங்கொள்ளமுடியும் என்று அவளிடம் வலியுறுத்திப்பேசவில்லை. அதுவே உண்மையாயும் இருந்தது. இன்னும் சரியாகக் கூறுவோமானால், அப்போஸ்தலர் தற்காலிகத் தேவைகளுக்காக வேறு எந்த குறிப்புக்களும் கொடுக்கவில்லை. மெய்யாகவே லிதியாளின் விண்ணப்பம் தெரிவிக்கப்பட்டதும் உடனடியாக ஏற்கப்படவில்லை. இயேசுவின் சீஷர்கள் மற்றவர்களுக்கு தொந்தரவு தர விருப்பமின்றி இருந்ததாக தோற்றமளிக்கிறது. அவர்கள் வற்புறுத்தப்பட்டனர் என்ற வார்த்தையிலிருந்தே, படிப்படியாக வலியுறுத்தப்பட்டபின்பே அழைப்பை ஏற்றுக்கொண்டனர் என்பது தெரியவருகிறது. இப்படிப்பட்ட விஷயங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் ஞானமாக நடந்துகொள்வதைக் காண்பது எத்தனை அழகாயிருக்கிறது! அவர்களது செல்வாக்கு, மற்றவர்கள்மேல் நன்மைக்கேதுவாக எத்தனை அதிகமாக செயல்படவேண்டும்!.

**--2736--**

தெய்வீக மேற்பார்வை உண்மை சுவிசேஷத்தின்மேலும், ஊழியக்காரர்கள்மேலும் இருப்பதற்கான ஒரு விசேஷபோதனையாக இப்பாடம் கருதப்படும். ஆயினும் தேவன் வழிகாட்டுகிறவிதம் எப்படி பலதரப்பட்டதாயிருக்கிறது என்றும், சத்தியஊழியம் செய்யும்போது அவரது பிள்ளைகள் அவரது ஞானம் அன்பு வல்லமைமேல் எவ்வளவாக முழு நம்பிக்கை வைத்திருக்கவேண்டும்! என்றும் காண்கிறோம். அப்போஸ்தலரையும், உடன்ஊழியர்களையும் இவ்விடத்திற்கு விசேஷமாக வழிநடத்திவந்தபிறகு, மிகச்சிறிய ஜெபக்கூட்டத்தில், ஒரு குடும்பம் மனமாற்றமடைந்ததாக காணப்பட்டது. அதனையடுத்து, மாபெரும் சிக்கலை தம் உண்மையுள்ள சீஷர்கள்மீது விழும்படி திடீரென்று கர்த்தர் அனுமதித்தார். இந்த சோதனை தீய ஆவிகளால் ஏற்பட்டது. ஒரு வாலிபஸ்திரீ தீயஆவியால் ஆட்கொள்ளப்பட்டு(விழுந்துபோன தூதர்களில் ஒருவன்) குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, எதிர்காலத்தைப்பற்றி கூறுதல், காணாமற்போனவைகளை பற்றி தெரிவித்தல் போன்ற குறிசொல்லுகிறதினால், செல்வாக்கு மிகுந்த தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கிவந்தாள். அவள் ஒரு அடிமைப்பெண்.


இப்படி அநேக நாட்கள் அப்போஸ்தலர்களும் அவரது உடன்வேலையாட்களும் லிதியாளின் இல்லத்திலிருந்து கர்த்தருடைய ஊழியத்தைச்செய்ய போகும்போதும் வரும்போதும் அந்தப்பெண் பின்தொடர்ந்துவந்து, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்" – அப் 16:17.

உள்ளபடியே கூறுவோமானால், அந்தப்பெண் அவர்களை அறிந்திருக்கவில்லை. ஆனால் அவளை ஆட்கொண்டிருந்த தீயஆவிகள் அவர்களை அறிந்திருந்தன. அந்த தீயஆவிகள் எந்தளவுக்கு பின்னால் நடக்கப்போகிறவைகளை முன்னறிவித்தார்களோ, நமக்கு தீர்மானமாய்த் தெரியாது. ஆனால் நடைபெற்ற காரியங்களையெல்லாம் அவைகள் முன்னதாக ஆழ்ந்து ஆராய்ந்திருந்தன.

அப்போஸ்தலர் அந்தத் தீயஆவியை வெளியேற்றினபிறகு, அவளுடைய எஜமான்களும் நண்பர்களும் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, கட்டுக்கடங்காத வெறியால் கொந்தளித்து கலகம்செய்தனர். அப்போஸ்தலர் அந்த ஸ்திரீயிடமிருந்து தீயஆவியை வெளியேற்றிவிடுவார் – என்று யோசிக்காமலேகூட, அந்த தீயஆவி உண்மை பேசியிருக்கலாம், அல்லது, எவ்விதத்திலாவது அவர்களைக் குறித்து சாட்சியமளிப்பதில் பிரியப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த சாட்சியம் நாளுக்கு நாள் அளிக்கப்படும்பொழுது பரிசுத்தபவுல் வேதனைப்பட்டார் என்று நாம் வாசிக்கிறோம். இந்த சாட்சியம் சத்தியத்தைத் தாங்கிநின்றதற்காக அவர் வருத்தப்படவில்லை, ஆனால் ஒரு தீயசக்தியிடமிருந்து வந்ததினாலேயே அவர் வருத்தப்பட்டார். ஏனெனில் அந்த தீயஆவிகள் சத்தியத்தை மதிப்பதில்லை என்று அவர் அறிந்திருந்தார். மேலும் விழுந்துபோன தூதர்களில் எவரும் தேவனைக்குறித்தும், நீதியின் கொள்கைகளைக் குறித்தும் மதிப்பளிக்கிறவைகளாயிருந்தால் மனுக்குலத்தின் மனதை கட்டுப்படுத்தத் தேடமாட்டார்கள். ஏனெனில் அந்த தீய ஆவிகள் தெய்வீக சித்தத்துக்கு விரோதமாக இருந்து, அவர்களுக்கு தேவநீதி காயமேற்படுத்தும் என்பதாலேயே.

அப்.பவுல் அந்த வாலிபஸ்திரீயைப் பார்த்து ஒருவார்த்தையும் பேசவில்லை. அவள் பதில்சொல்வதற்கான பொறுப்புடையவளல்ல என்று கருதிக்கொண்டார். இயேசுவும் அப்போஸ்தலர்களும் அவரது ஆலோசனைப்படி இந்த தீயஆவிகளை ஏற்கனவே அடிக்கடி துரத்தினதுபோலவே, அப்.பவுல் அந்த தீயஆவியுடனே பேசி, இயேசுவின் நாமத்தில் அந்தஸ்திரீயை விட்டுவெளியேறும்படி கட்டளையிட்டார்.

**குறிசொல்லுகிறஆவி**



பன்றிகள்மேல் அசுத்த ஆவிகளின் கூட்டத்தை அனுப்பினபோது, அவைகள் மடிந்துபோனதால் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக, அதன் எஜமான்கள் நம் கர்த்தர்மேல் சினங்கொண்டனர். அவ்வாறே இங்கு அப்போஸ்தலரும் மற்றும் உடன்வேலையாட்களும் நல்ல இருதய நோக்கமுடையவர்களாய், தீய ஆவிகளின் வல்லமையிலிருந்து விடுதலைபெற்ற ஸ்திரீயைப் பார்த்து சந்தோஷப்பட்டனர். ஆனால் அவளது எஜமான்களோ அவளது துயரநிலைமையால் ஆதாயமடைந்திருந்து, ஆதாயம்பெற முடியாதநிலை ஏற்பட்டபோது கோபமுற்றனர். அப்போஸ்தலர் அந்த ஸ்திரீக்கு எந்த தீங்கும் செய்திராததால், அவளது எஜமானர்களால் அவர்மேல் சட்டப்படி தாக்குவதற்கு வழியில்லாமற்போயிற்று. ஆனால் எப்படியாயினும் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு; இவர்கள் பிலிப்பி பட்டணத்தின் ஜனங்களது உரிமைகளில் குறுக்கிட்டு, நாம் ஏற்கத்தகாத புது மதத்தின் கொள்கைகளை திணிப்பதாக குற்றஞ்சாட்டினர். அப்பட்டணம் கிரீஸ் நாட்டில், ரோமரது ஆளுகைக்குட்பட்டிருந்தது.

கர்த்தரோ இவையனைத்தையும் அனுமதித்திருந்தார். அதாவது கலகம் ஒரு குறிப்பிட்ட எல்லையை அடையும்வரை அனுமதித்திருந்தார். அப்போஸ்தலர் பவுலையும் சீலாவையும்(சில்வனஸ் - Sylvanus) வணிக வளாகத்தில் அதிகாரிகள் முன், தண்டனை அளிக்கும்படி நிறுத்தினர். அந்த அதிகாரிகள் கலகத்தைத் தடுத்து ஒழுங்கை நிலைநாட்டவே விசேஷமான அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள். தங்கள் மனத்துயரையும் அதிருப்தியையும் வெளிப்படுத்துவதற்கு அடையாளமாக, அவர்களது ஆடைகளை கிழித்துக்கொண்டு, தங்களது பட்டணத்தில் இப்படிப்பட்ட அமைதிக்குலைவு கொண்டுவரப்பட்டதாக கொந்தளிப்பூட்டினர். அவர்களது கண்ணோட்டத்தின்படி, அந்த மனிதர்களுக்கு விரோதமாய் எழும்பின ஜனங்கள் அறியும்படி, அவர்கள் குற்றவாளிகளே என்றும், தண்டனையடைய வேண்டியவர்கள் என்றும் எண்பிப்பதற்காகவே இவ்வாறு செய்தனர். தீயஆவிகளே கலகம் எழும்பக் காரணம் என்பதை அந்த அதிகாரிகளும் ஜனங்களும் அறியாதிருந்தனர். பவுல் அப்போஸ்தலன் வேறொரு இடத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல்; "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மட்டுமல்ல, உயர்ஸ்தானங்களில் செல்வாக்குப்பெற்றுள்ள பொல்லாதஆவிகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்கிறார்.

ஜனக்கூட்டத்தை திருப்திப்படுத்தவும், அமைதியை மீண்டும் உடனடியாக ஏற்படுத்தவுமே தேவஊழியர்களுக்கு அநேக அடிகளை வெளிப்படையாக அடிக்கச்செய்தனர். அநேகமாக மர அல்லது உலோகபிரம்பால் அடித்திருக்கக்கூடும். அவ்வாறு அடித்தபின்பு சிறைச்சாலையில் வைத்துக் காத்தனர். ஆ! ஊழியக்காரர்களது முயற்சிகளுக்கு எப்பேர்ப்பட்ட வெகுமதி அளிக்கப்பட்டுள்ளது! சத்தியத்துக்காகவும் கர்த்தருக்காகவும் தங்கள் ஜீவியத்தையே பலியாக்கினவர்களுக்கு எப்பேர்ப்பட்ட இழப்பீடு தரப்பட்டுள்ளது! தீயனபேசுதல், தீய கருத்துக்கள், மற்றும் தீமையாக நடத்தப்படுதலே இந்த மனுஷர்களுக்கு கொடுக்கப்பட்ட இழப்பீடு.

**--2737--**

நம் தேவன் மாறாததேவன் என்பதை நாம் நினைவுகூர்வோம். ஆதிகால சபையைப்போலவே இன்றையநாளின் சபையின் நலனுக்காக மேற்பார்வையிட்டு வருகிறார். அந்த வெளியூர்ஊழியர்களைப்போலவே இன்றைய நாளில் நம்மிடமிருந்து தேவன் எதை எதிர்பார்க்கிறார்? கிறிஸ்துவுக்குள்ளான நம் ஊழியத்தில் அவரது செய்திக்கும், அவரது பிரதிநிதிகளாக நாம் மனப்பூர்வமாக இருக்கவும், கடின துன்பங்களை மனதார சகிப்பதன்மூலமாக, நமது ஊழியம் முழு சான்றுபெற்றுள்ளது என்று எண்பிப்போமாக அந்த சத்திய ஊழியக்காரர்களிடத்தில் விசுவாசம் அவசியத் தேவையாயிருந்து, அவர்களுக்கு நேரிட்ட கடின அனுபவங்களை தேவனுடைய பராமரிப்பு என்று ஏற்றுக்கொண்டனர். அதற்கு மாறாக, கர்த்தரது தயவற்றநிலை என்றோ, அவரால் புறக்கணிக்கப்பட்டதனால் ஏற்பட்ட சாட்சியங்களென்றோ அவர்கள் எண்ணவில்லை. அவ்வாறே, கிறிஸ்துவின் பள்ளியில் அம்மாதிரியான விசுவாசத்தின் பாடங்களை நாமும் கற்று, இயேசு மற்றும் அப்போஸ்தலர்களது அடிச்சுவடுகளை மகிழ்ச்சியுடன் பின்பற்றவேண்டும், அதோடுகூட வளமையிலும், உபத்திரவங்களிலும் சந்தோஷப்படக் கற்கவேண்டும்.

-----------------------------------

# பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல்

## TRAINING OUR AFFECTIONS HEAVENWARD

“பூமியிலுள்ளவைகளையல்ல,
மேலானவைகளையே நாடுங்கள்”
கொலோசெயர் **3:2**

மனிதகுலம் தன்னை முழுமைபெற்றவராக காண்பிக்கும்பொருட்டு, சுபாவப்போக்கின்படி ஒரு குறிப்பிட்ட மனப்பாங்கை கொண்டிருக்கிறது. இதை மனதைஅவமதித்தல் என்று நாம்அனைவரும் உணர்ந்திருக்கிறோம். நம்மால் இதன்மேல் தத்துவார்த்தமாக கூறமுடியாதிருக்கிறோம், அல்லது அதை விளக்கமுடியாதிருக்கிறோம். ஆண்கள்பெண்கள் ஆகிய இரு பாலருக்கும் இந்த குறிப்பிட்ட ஈர்ப்புக்களாகிய மனத்தூண்டுதல்கள் நிச்சயம் இருக்கும். மற்ற சிருஷ்டிப்புக்களிடத்தில் மற்ற காரியங்களில் சில குறிப்பிட்ட வல்லமைகள் நம்மிடமிருந்து புறப்பட்டுப்போகும். அவர்கள் நம் மனப்போக்கு எதைநோக்கிச் சாய்கிறது என்று நாம் கவனிக்கவேண்டியது மிக முக்கியமானது, இல்லாவிடில் அது விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்திச்செல்லும். எப்படி ஒரு திராட்சைச் செடியின்கொடி படர்ந்து, தன்னைச்சுற்றிலும் கிடைக்கும் பிடியைப் பற்றிக்கொண்டு வளர்வதுபோல், நமது ஈர்ப்புகளும் பல்வேறு பூமிக்குரிய ஈர்ப்புகளைப் பற்றிக்கொள்ளும். திராட்சைச் செடியை எப்படி சுத்திகரிக்கிறோமோ அவ்வாறே இவைகள் துண்டிக்கப்பட்டு அகற்றப்படவேண்டும். பயிற்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும். உங்கள் திராட்சைச்செடி ஒரு குறிப்பிட்டதிசையில் வளரவேண்டுமென்று நீங்கள் விரும்புவதற்கேற்ப, அதனை சரியான திசையில் திருப்புகிறீர்கள், தேவைப்பட்டால் கயிறுகொண்டு கட்டுகிறீர்கள். இதனால் திராட்சைக்கொடியின் இளங்கிளைகள் உதவிபெற சரியாகப் பற்றிக்கொள்கிறது.

**பல்வேறு உலகநோக்கங்களாகிய ஈர்ப்புக்கள் :–**

நம் ஒவ்வொருவரிடமும் இவ்விதமாகவே நடக்கிறது. இந்த ஈர்ப்புக்கள் அவசியமானதே. அவைகள் நன்மைக்கேதுவானவைகளே. ஆனாலும் அவைகள் பராமரிக்கப்படவும், பயிற்சிக்கு உட்படுத்தப்படவும் வேண்டும். இந்த ஈர்ப்புக்களை நாம் பெற்றிராவிடில், நம்மால் தேவனை நேசிக்கமுடியாது. நாம் சரியானதும் சமச்சீரானதுமான குணாதிசயத்தைப் பெறவேண்டுமானால், இப்படிப்பட்ட ஈர்ப்புக்களை கட்டாயம் பெற்றிருக்கவேண்டும். இவைகளையன்றி, நம்மால் ஒன்றிணைத்து தாங்கிப்பிடிக்கமுடியாது. ஒரு நாய்க்குட்டி மீது ஸ்திரீகள் பிரியம் வைத்திருந்து, அதன்மேல் அக்கறைசெலுத்தவும், உணவை தெரிவுசெய்யவும் அதிகநேரம் செலவிட்டார்களானால், அவர்களுக்கு முறையான வழிகாட்டுதல் தேவை என்பது வெளிப்படையாக தெரிகிறது. செல்வந்தர்களில் சிலர் பூடில் நாய்கள் மீது தங்கள் பிரியங்களை வைப்பர் , சிலர் கேனரி பறவைகள், முயல்கள் மற்றும் வெள்ளைஎலிகளை செல்லப்பிராணிகளாக வளர்ப்பார்கள். அந்த செல்லப்பிராணிகளை பராமரிப்பதற்கு தங்கள் விலையேறப்பெற்ற நேரம், சிந்தை மற்றும் அக்கறையை கொடுத்து, பிரயோஜனமான வழியில் சலவழித்திருக்கவேண்டிய நேரங்களை விரயமாக்குவார்கள். தங்கள் குழந்தைகளைப்போல அவைகளை நடத்துவார்கள், மனிதர்களாக இருந்தால் எப்படி பிரியமாக நடந்துகொள்வார்களோ, அதுபோல மனிதரிடத்தில் காண்பிக்கும் அதிகபட்சமான பிரியத்தைப்போல, அவைகளிடத்தில் காண்பித்து, வீண்விரயமாக்குவார்கள். பூக்களை நேசிப்பதிலும் சிலர் இவ்வாறே நடந்துகொள்கிறார்கள்.

வாய்பேசாத மிருகங்களிடத்தில் மிக கருணை வைத்தாலும், பூக்களை பெரிதும் விரும்பினாலும், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், அவைகளை மனித ஜீவிகளுக்கு முக்கியத்துவம் தருவதுபோல் நடத்தக்கூடாது. நம் பிரியத்தை அவைகள்மேல்வைத்து, முக்கியமான காரியங்களை அலட்சியப்படுத்தி, அவைகளுக்கு அதிகநேரத்தை செலவிடாமல் நமக்குநாமே காயமேற்படுத்தக்கூடாது. ஏராளமான குழந்தைகள் அன்புகாட்டவும், அக்கறைசெலுத்தவும் காத்திருக்கின்றன. அவைகளை வைக்கவேண்டிய இடத்தில், பூக்களையும், நாய்களையும், விளையாட்டு பொம்மைகளையும் வைக்கக்கூடாது. நம் பரலோகப்பிதா இக்காரியங்களை நமது சந்தோஷத்திற்காக எவ்வளவு நன்மையாக கொடுத்திருக்கிறார் என்று சிந்திப்பது மிகவும் பொருத்தமானதே என்றாலும், நாம் நம் இருதயங்களில் பெரும்பகுதியான இடத்தைக் கொடுக்காமல் காத்துக்கொள்ளவேண்டும். ஜனங்கள் இவ்வாறு அதிகப்படியான முக்கியத்துவத்தை இவைகளுக்கு கொடுக்கும்போது, அவர்களது ஜீவியத்தில் சில விலையேறப்பெற்ற பொருட்களை இழந்திருப்பர். வயதுமுதிர்ந்தோராக இருந்து ஒருவேளை அவர்களுக்கு குழந்தைகள் இருப்பின், நாய்கள் பூனைகள்மீது அன்புவைத்து தங்கள் விலையேறப்பெற்ற நேரத்தை வீணடிப்பதைப் பார்க்கிலும், தங்கள் குழந்தைகள்பேரில் பாசமாயிருப்பது நலம்பயக்கும்.

உலகின் மனிதகுலத்தை நாம் கண்ணோக்கிப் பார்க்கையில், சிலர் மற்றவர்களைக்காட்டிலும் சமச்சீர் நிலையை அதிகஅளவு அடைந்துள்ளதை நாம் காணமுடிகிறது. பெரும்பாலானோர் கர்த்தரை அறிந்திருக்கவில்லையாதலால், உலகிற்காக நாம் பரிதாபப்படுகிறோம். அவர்கள் கிறிஸ்தவர்களல்லர். இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் இருதயங்களையும், மனதின் அறிவை பெரிதாக்காமலும், நிரப்பாமலும் வெளிச்சத்திற்குட்படுத்தாமலும், தரித்திரராயும் குறைவுபட்டோராயுமே உள்ளனர். அநேகர் தங்கள் இல்லத்தின்மீதே தங்களது சிந்தையையும், பாசத்தையும் வைத்து, வளர்ப்புப்பிராணிகளோடு சொற்பநேரமோ அல்லது முற்றிலும் செலவழிக்காமல் ஜீவிக்கின்றனர். இது ஒரு மாபெரும் மகிழ்ச்சியாக இருந்து, “நான் என் சொந்தமாக நல்ல வீட்டைப் பெற்றிருக்கிறேன்” வீட்டுக்காக பிரயாசைப்படுவது மனித ஜீவிக்கு இயல்பாகவே வரக்கூடிய ஒரு ஆசையாக உள்ளது. மனித மூளைஒடு கொண்டு குணாதிசயங்களை ஆராய்வோர் இயல்பாக ஏற்படும் இந்த குணத்தைப் பற்றி கூறும்போது, “குடியிருக்கும் தன்மை – அதாவது வாழும் இடத்தை நேசித்தல்” என்கின்றனர். ஆனால் நமது ஈர்ப்புகளை இங்குகூட மையங்கொள்ள அனுமதிக்கக்கூடாது. தேவ பிள்ளைகளாகிய நாம் உலகம் கொண்டிருக்கிறவைகளைவிட மேலான இலட்சியங்களை உடையவர்களாயிருக்கவேண்டும்.

அநேகர் தங்கள் வங்கிக்கணக்கில் ஏராளமாக பணம் வைக்கவேண்டுமென்று தங்கள் இருதயங்களில் இலட்சியத்தை ஏற்படுத்திக்கொள்கின்றனர். நாம்அறிந்திருக்கிற ஜனங்களது சிந்தைகள் சீரற்றதாயிருந்து, அவர்களது வங்கிக்கணக்கில் போதுமான தொகையை பாதுகாக்க என்னவேண்டுமானாலும் செய்யத் தயாராயிருப்பர். மேலும் அவர்கள் நினைத்தபடி ஆதாயமடைந்தாலும், இன்னும் திருப்தியடையாமலேயே இருப்பர். அவர்கள் தொடர்ந்து ஆதாயமடையும்படி தங்கள் நோக்கங்களை வலுவாய்ப் பிடித்துக்கொண்டு, சந்தேகத்திற்கிடமான, நேர்மையற்ற நடைமுறைகளை அடிக்கடி பின்பற்றுவார்கள். அப்படிப்பட்ட ஜனங்கள் மனதளவிலும், ஒழுக்க ரீதியாகவும் தாறுமாறாக இருப்பவர்கள். ஆனால் மனுக்குலம் தங்களது விழுந்துபோன நிலைமையில், குறைவாகவோ அல்லது அதிகப்படியாகவோ தாறுமாறு நிலையிலேயே உள்ளதை நாம்

நினைவில் நிறுத்தவேண்டும். முழுமையான மற்றும் அடிப்படைகூறு சார்ந்த சிகிச்சை முறையினால் மட்டுமே இந்தக் கடினங்களை அகற்றமுடியும். முழு மனுக்குலத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும் இந்த புரையோடிப்போன நோயை கர்த்தர் மட்டுமே குணப்படுத்தமுடியும்.

**சட்டப்பூர்வமான உறவே தவறானநோக்கத்தை கட்டுப்படுத்தும் :–**

இவைகளும் அபாயகரமானவை என்று நாம் பட்டியலிட்டவைகள், பயிற்சிக்கு உட்படுத்தப்படவும், , வழிநடத்தப்படவும் வேண்டும்.அவைகள் ஆண் பெண் பேரிலும், பெண் ஆண் பேரிலும், ஆண்ஆணிடத்திலும், பெண் பெண்ணிடத்திலும் வைக்கின்ற பற்றாசையே ஆகும். இவையனைத்தும் முறையானவைகளே. ஆனாலும் நாம் அளவுக்குமீறின பற்றாசைகளை விலக்கிவிடவேண்டும், சரியான மற்றும் முறையானவற்றை போதுமான அளவே பெற்றிருக்கவேண்டும். உச்சஅளவுக்குப் போவதில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். தேவ வசனத்தில் தம் பிள்ளைகள் முறையான நடக்கையுள்ளோராய் இருக்க தேவையான வரையறைகள் வழங்கப்பட்டுள்ளது. அவரது வழிகாட்டுதலை கற்றால் மட்டுமே இவைகளை நம்மால் அறியமுடியும். இல்லாவிடில் நாம் தவறான வழிமுறையை நிச்சயமாய்ப் பின்பற்றுவோம்.

''பூமியிலுள்ளவைகள்மேல் அன்புகூறாதிருங்கள்''. கணவனும் மனைவியும்கூட ஒருவருக்கொருவர் பற்றாசையை அதிகப்படியாக வைக்கக்கூடாது என்பது தேவனது தீர்மானமாயுள்ளது. இவ்வாறே அப்போஸ்தலா் பவுலும் கட்டளையிடுகிறார்; ''இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும்'' – 1கொரிந் 7:29.

எல்லாவற்றைக்காட்டிலும் நம் பூமிக்குரிய உறவுகளை உன்னதமானதும் சிறந்ததுமாக கருதக்கூடாது என்பதே நமக்கு அறிவுறுத்தப்படும் கருத்தாகத் தோன்றுகிறது. வாழ்வின் உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் ஒருவர் மற்றவருடைய ஒத்தாசையைப் பெறுவது பெரிதான காரியமாகும். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பந்தத்தை பலவீனப்படுத்த விரும்பி நாம் எதையும் பேசவில்லை. ஆனால் நாம் தேவ வசனத்திற்கு இசைவாகவும், தேவ வசனத்தின் அறிவுக்கு இணக்கமாயும் உள்ளவைகளை பற்றிக்கொள்ளவேண்டும். நம் பரலோக பந்தயத்தை வெற்றிகரமாக ஓடுவதற்கு இது தடையாயிருக்க நாம் அனுமதிக்கக்கூடாது, பூமியிலிருந்து உண்டானவை எதுவாயினும், பிதாவின் முகத்தையும் அங்கீகாரத்தையும் மறைக்கும் மேகம்போன்ற திரையாக மாறிவிடக்கூடாது.

சுபாவ மனப்பாங்கின்படி, நாம் எல்லாரும் தவறுசெய்யும் சரிவுக்குள்ளாகவே இருக்கிறோம். ஆகவே மேலான காரியங்களின்மேல் நம் பற்றாசையை வைத்து, நம் செவிகளை கவனமாக அதன் புத்திமதிக்கு கொடுப்பது அவசியமாயிருக்கிறது. நாம் நம்மைச்சுற்றிலும் கவனமாக நோக்கிப்பார்த்து நம் சொந்தக்கதவுகளை நீக்கிவிடுவோம். நாம் இங்கு பொழுதை உல்லாசமாகக் கழிப்பதற்கு அல்ல. நாம் சில முக்கியமான கொள்கைகளை கற்கும் நோக்கத்திற்காகவும், குறிப்பிட்ட சில பாடங்களை கற்கும்படியும் கர்த்தர் வைத்திருக்கிறார். இவ்வாறு கற்றதை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்து, அதிகதிகமாக வனைந்து இசைவாக்கமுடியும். அதன்மூலம் நம் வாழ்க்கையின் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய நோக்கத்தை நம்மால் காணமுடியும். வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் தேவவசனம் விரிவாக வெளிச்சம் காட்டுவதில்லை. ஆனால் அதன் முக்கியமான கொள்கைகள் நம் ஜீவியத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உணர்வூட்டும்படி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கைகளை எப்படி பொருத்துவது, எதையெல்லாம் நாம் தடுத்துநிறுத்தவேண்டும், எதையெதை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை நாமே அதிகதிகமாகக் கற்கவேண்டும். நாம் புத்திக்கூர்மையுள்ள ஜனங்களாக இருப்பதையே கர்த்தர் விரும்புகிறார்.

**தேவனே முதலாவது :–**

கர்த்தரது சிந்தைக்கு இசைவாகும் நோக்கத்தை உடையவர்கள், ''முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிற'', பரத்திலிருந்து வருகிற ஞானத்தைப் பெறுகிறார்கள்– யாக்கோபு3:17. நம்மில் ஒவ்வொருவரும் நம் உறவுகளை பூமிக்குரிய காரியங்கள் மற்றும் பொருட்கள்மீதோ, அல்லது தங்களிடத்திலேயேகூட நியாயமாயும் முறையாகவும் வைத்திருக்கிறோமா என தங்கள் சொந்த வாழ்க்கையின் நடவடிக்கைகளை சோதித்தறியவேண்டும். கர்த்தருக்கு தன் இருதயத்தில் முதலிடம் கொடுத்தபிறகு, தன் மனைவியை அதிகமாக நேசிக்கமுடியாது. அவன் கர்த்தருக்கு கொடுக்கவேண்டிய இடத்தை தன் இருதயத்தில் கொடுக்காமல், அந்த இடத்தை மனைவிக்கு தர அனுமதிக்கக்கூடாது. கர்த்தரைக் காட்டிலும் தன் மனைவியை நேசித்து அவளை பிரியப்படுத்துவானாகில், அவன் தவறுசெய்கிறான். தேவனே முதலாவதாக இருக்கவேண்டும். மற்ற அனைத்தும் கீழ்ப்படுத்தப்படவேண்டும். ஒருவனது சித்தம், அவனது திட்டம், அவனது வழிகள் அனைத்திலும் தேவனே முதலாவது, மற்ற அனைத்தும் இந்த எல்லைக்குட்படுத்தப்படவேண்டும்.

கணவனாக அல்லது மனைவியாக பிதாவின் சித்தப்படி, பரலோக அன்புக்கு முழு இசைவாக குழந்தைகள் மற்றும் நண்பர்களிடத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான அன்பை வெளிப்படுத்துகிறோம். ஆனால் மற்ற உறவுகள் அல்லது உறவின் மதிப்புகள் பிதாவின் சித்தத்துக்கு இசைவாயிருப்பதில்லை. இவைகளைக்குறித்த எச்சரிக்கைகளை பின்வரும் பகுதிகளில் காணலாம். ஒவ்வொருவரும் அபூரணரே, ஒவ்வொருவரும் நேர்வழியிலிருந்து விலகும் மனப்பாங்கு பெற்றிருக்கின்றனர். நமது மாபெரும் விரோதி யாரை விழுங்கலாமோ என்று வகைதேடித் திரிகிறான். அவனால் நம்மை விழுங்கக் கூடுமானால் நம்மை விழுங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைவான். ஒரு சிறந்த கிறிஸ்தவனாக இருந்தால், சாத்தான் அவனை தன் பிடிக்குள் கொண்டுவர அதிக பிரயாசை எடுப்பான்.

தேவபிள்ளையாய் இருப்பதன்நிமித்தம் நம் பூமிக்குரிய மனப்பாங்கிலிருந்து விடுதலை அடைந்துவிட்டோம் என்று அர்த்தமாகாது. புதுசிருஷ்டிக்கு பழையசிருஷ்டியிடமிருந்து தொடர்ச்சியான யுத்தம் இருக்கும் என்று அப்போஸ்தலர் பவுல் சுட்டிக் காட்டுகிறார்(கலாத் 5:17). பரலோகத்துக்குரிய மனத்தூண்டுதல்கள் மனப்போக்கு மற்றும் விருப்பங்கள் போராடி பெறவேண்டியவை. அவைகள் கவனமாகவும் தொடர்ச்சியாகவும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். இயற்கையாகவே எழும் பூமிக்குரிய சொத்துக்களின்பேரிலான ஆசையிலிருந்து நம் சிந்தை அகற்றப்படுவதோடு, அவைகள் பரலோகத்துக்குரியவைகளை நாடும்படி பயிற்றுவிக்கப்படவேண்டும். அங்கே அன்பின் கயிறுகளாலும், தேவனிடத்திலான அர்ப்பணிப்பிலும் பிணைக்கப்படவேண்டும். மீண்டும் பூமிக்குரியவைகளை நோக்கி இழுக்கப்படும்படி அவைகளை விட்டுவிடக்கூடாது. இப்பூமியில் அழகானதும், கவர்ந்திழுக்கும் பொருட்களும் அநேகம்உண்டு, ஆனால் நம் இருதயங்களை அவைகள்பேரில் நிலைநிறுத்த அவசியமில்லை. அவைகளை நாம் காணலாம், அவைகளை வியந்துபாராட்டலாம், ஆனால் நாம் குறுகலான வழியில் சரியாக நடக்கவேண்டும். நம் இருதயங்கள் விசாலமாக மட்டுமே இருக்கிறது. அவைகளை நாம் பூக்களைக்கொண்டோ, அல்லது வளர்ப்பு மிருகங்களையோ அல்லது பூமிக்குரிய குறிக்கோள்களையோ அல்லது விருப்பங்களையோ வைத்தோமானால், நித்தியமானதும் அதிக முக்கியத்துவமுள்ள அழகான பொருட்களையும் வைக்க எங்கே இடமிருக்கிறது ?

**--2740--**

**மனம் என்கிற கூடையில் கனிகளே நிரப்பப்படவேண்டும், சிப்ஸ் அல்ல :–**




கதைப் புத்தகங்கள் படிப்பதில் தீவிர விருப்பங் கொண்டிருந்த ஒரு சிறுவனைப்பற்றிய பிரபலமான கதையை நாம் அனைவரும் அறிந்திருப்போம். அவனது தந்தை, அவன் மனதில் ஒரு விலையேறப்பெற்ற ஒரு பாடம் புகட்ட விரும்பினார். ஒரு நாள் தன் மகனிடம் அவர்; ஜான், மூலையில் வைக்கப்பட்டுள்ள கூடையில் இருக்கும் ஆப்பிளை காலிசெய்து, பின்பு கடைக்குசென்று வறுத்த சிப்ஸ்களை வாங்கி அக்கூடையில் நிரப்பு என்றார். சிறுவனும் அவ்வாறேசெய்து, வறுத்த சிப்ஸால் நிறைந்திருந்த கூடையை எடுத்துவந்தான். தந்தை அவனிடம் ; இப்பொழுது எல்லா ஆப்பிள்களையும் கூடைக்கும்போடு என்றார். சிறுவன் ஆச்சரியப்பட்டு தகப்பனிடம் கேட்டான்; அப்பா, வறுத்த சிப்ஸ் கூடையில் நிறைந்திருக்கும்போது, ஆப்பிள்களை என்னால் போடமுடியாது'' என்றான். அதற்கு அப்பா அவனிடம்; ''உன்னுடைய சிந்தையும் அந்த கூடைபோலவே இருக்கிறது. அது அந்தக் கொள்ளளவு மட்டுமே பிடிக்கும், வறுத்தசிப்ஸை நீ அதனுள் நிரப்புவாயானால், மேலான மற்ற காரியங்களுக்கு அங்கே இடமில்லாமற்போகும்'' என்றார்.

ஒரு ஞானமுள்ள தகப்பனாய் அவர் இருந்து, தன் மகனுக்கு நல்ல ஆலோசனை தந்தார். நீங்களும் நானும், கிறிஸ்துஇயேசுவுக்குள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம், நம் சிந்தைகளை மகிமையான பரலோக காரியங்களாலும், பரலோகக் குறிக்கோள்களாலும், பரலோக நம்பிக்கைகளாலும், பரலோக பற்றாசைகளைக் கொண்டும் நிரப்பவேண்டும். ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பூமிக்குரிய இவைகள் அனைத்தும் வறுத்த சிப்ஸ் போன்றவையே ஆகும். வறுத்த சிப்ஸ்களால் நிறைந்திருக்கும் இருதயமும் சிந்தையும் ஆவியின் கனிகளை உள்ளடக்கியிருக்கமுடியாது. பரலோக அன்புகளாலும், மகிழ்ச்சிகளாலும், ஆவிக்குரிய பொக்கிஷங்களாலும் நம் கூடைகளை நிரப்பினோமானால், மனித வல்லமைகளையும் தாண்டி, பூமிக்குரிய எந்த அன்பு மற்றும் மகிழ்ச்சியைக் காட்டிலும் மேலான மகா உன்னதமானவைகளை நாம் அடைந்திருப்போம்.

பூமிக்குரிய விலக்கப்பட்ட அன்பைக்குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். அது பரலோக அன்புக்கு தடையை உண்டாக்கும். இவ்விரண்டையும் கலக்கவோ குழப்பவோகூடாது. சுயநலமற்ற சுபாவஅன்பு, பரிபூரண மனித சுபாவத்தின் ஒரு கோட்பாடாக உள்ளது. இது பரலோகத்துக்குரியவைகளுக்காக பணிவோடு தாழ்த்தப்படுமானால், நமது ஆவிக்குரிய நலன்களுக்காக இயங்கும். இப்படிப்பட்ட அன்பு சட்டத்தை மீறாது அல்லது பிறரை அழிக்காது. கணவனுக்கும் மனைவிக்கும், குழந்தைகளுக்கும், பெற்றோர்க்கும் இடையே சுபாவ அன்பு இருக்கவேண்டியது அவசியம். இதைப்பெற்றிருந்து, இதில் நிலைத்திருக்கவேண்டுமென்று கர்த்தர் கூறுகிறார். ஆனால் இவை பரலோகத்துக்குரியவைகளுக்கு கீழ்ப்படுத்தப்படவேண்டும். இங்கும் தேவனே முதலாவதாக – எல்லாவற்றைக் காட்டிலும் முதன்மையானவராக இருக்கவேண்டும்.

**பரலோகத்துக்குரியவைகளில் பற்றாசை ஏற்படுத்துவது படிப்படியான பணி**



நம் திறவுகோல் வசனப்பகுதியை அப்போஸ்தலர், கிறிஸ்தவர்களுக்கே எழுதுகிறார். இந்த வகுப்பார் நாளுக்குநாள் தங்கள் பற்றாசைகளை பரலோகத்துக்குரியவைகளை நோக்கும்படி பயிற்சிசெய்கிறார்கள். ஆயினும் பரலோகத்துக்குரியவைகளில் பற்றாசை வைப்பது தொடர்ச்சியாகவும் விடாமுயற்சியுடனும் செய்யப்பட வேண்டியதாகும். ஏனெனில் பரத்தின்மீது வைத்த பற்றாசையை நழுவவிட நேரிடலாம். நமது பழைய மூளை நம் சிந்தையை இயக்குகிறது. இந்த சிந்தைகள் மாம்சத்துக்குரியவைகளில் சாயும் மனப்பாங்கு உடையவை. ஆகவே பரத்துக்குரியவைகளை நோக்கி நம்முடைய பற்றாசைகளை மீண்டும்மீண்டும், தொடர்ச்சியாகவும் நிலைநிறுத்தவேண்டிய அவசியம் எழுகிறது. அங்கே அவைகள் பாதுகாப்பாக இறுக்கக் கட்டப்பட்டு, ஸ்திரப்படுத்தப்பட்டு, நிலைநிறுத்தப்படவேண்டும். மாம்சீக நிலைமையல்ல, பூமியல்ல, பரலோகமே நமது நித்தியவீடு. எல்லா விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களும் அதை மையமாகக்கொண்டு இயங்குகின்றன. கிறிஸ்துவே அங்கு நம் நேச ராஜாவாக இருக்கிறார். நாமும் விரைவில் இரண்டாந்திரையைக் கடந்து பரலோகத்துக்குள் நுழைய ஆயத்தமாகிவருகிறோம். எல்லோரைக்காட்டிலும் மகாபரிசுத்தராக இருக்கிற நம் கர்த்தரது மகிமைகள், இனி விசுவாசத்தின் மூலம் நமக்குரியதாகிறது. தேவனுடனான நமது உடன்படிக்கையை தொடர்ந்து உண்மையுள்ளதாக வைத்திருந்து, அதையே பற்றிக்கொண்டு ஓடும்போது, நிஜமாகவே அவைகள் நமக்குரியவையாகும்.

வரப்போகிற நன்மைகளை தம் வாக்குத்தத்தங்கள் மூலமாக முன்பே ருசிபார்க்கும்படி கர்த்தர் நமக்கு தற்போது கொடுத்திருக்கிறார். நாம் ''ஊக்கத்தின் ஆவியை'' பெற்றிருக்கிறோம். இது எவ்வாறு இருக்கிறதெனில், ஒருவர் 100 டாலர்கள் கொடுத்து வீட்டை விலைக்கு வாங்குவதற்கு முன்பணம் கொடுப்பதற்கு ஒப்பாக உள்ளது. மீதமுள்ள தொகையை கொடுக்கும்வரை அவ்வீட்டை தன் உடைமையாக்கிக்கொள்ளமுடியாது. ஆனால் முழு தொகையும் கொடுக்கப்படும்வரை கொடுத்த முன்பணத்தின்மூலம் அந்த வீடு வாங்கும் உரிமை தனக்குத்தான் உண்டு என்ற ஊக்கமளித்து தாங்கி நிற்கிறது. தேவன் நமக்கு தமது பரிசுத்தஆவியைக் கொடுத்து, ஒப்பந்த பிணைப்பை உண்டுபண்ணினதால், அதன்மூலமாக அவரோடுகூட இணைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு இந்த முன்பணம்கொடுத்து கர்த்தர் கூறுகிறார்; ''எந்தளவு நாம் செய்துகொண்ட உடன்படிக்கையில் உனது பங்கை உண்மையாய் நிறைவேற்றுகிறாய் என்று தற்போது நிரூபித்துக்காட்டு. உன்பங்கை நீ நிறைவேற்று, நான் என் பங்கை செய்வேன்'' ''நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர் அவர் அவ்வாறே செய்வார்''. நாம் நமது பங்கை உண்மையாய் செய்கிறோமா என்பதே ஒரே கேள்வியாக உள்ளது. ஏனெனில் தேவன் தம் பங்கை நிச்சயமாக செய்வார்.

**மணவாட்டிக்குரிய ஆடைகளை கவனமாக ஆயத்தம்செய்தல்**

பூமிக்குரியவைகளை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது அவைகள் பரலோகத்துக்குரியவைகளோடு ஒப்பிடத்தக்க அளவுக்கு தகுதிவாய்ந்தவை அல்ல என்று நாம் காண்கிறோம். ஆனால் பிரதிஷ்டை செய்த நம் நேரங்களை பூக்கள்போன்ற மதிப்பற்றவைகளுக்காக செலவிடுவது அபாயத்தை ஏற்படுத்தும். தினசரி செய்தித்தாள்களை வாசிப்பதற்கு எவ்வளவுநேரம் செலவழிக்கவேண்டும் என நினைக்கிறீர்கள் ? அவ்வாறு வாசிக்கும் செய்திகள் எந்தளவு உங்களது ஈர்ப்புக்களை மேலானவைகளைநோக்கி நிலைப்படுத்தும் ? எப்படி ஒவ்வொரு நொடிப்பொழுதும் தன் நேரத்தை – தேவனது நேரத்தை அவன் உபயோகிக்கிறான் என்று ஒவ்வொருவரும் தன்னைக்குறித்து கர்த்தரிடத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். வேதத்தில் கூறப்பட்ட தீர்க்கதரிசன நிறைவேறுதல்களை தாங்கிவரும் முக்கியமான உலகச்செய்திகளைப் படிப்பதை இங்கு நாம் தவறு என்று தீர்க்கவில்லை. மாபெரும் போர் ஏற்படுவதற்கான அறிகுறிகள் மற்றும் அதன் முன்னேற்றங்களை கவனித்துப் பார்ப்பது, குறிப்பாக வரவிருக்கும் ராஜ்யம் தொடர்பான செய்திகளில் தொடர்ந்து கவனம் செலுத்துவது தவறானதல்ல. ஆனால் எது அவசியமானது என்று கண்டறிந்து, அதிகமாகப் படிப்பது நமக்கு தேவையற்றது.



தற்போது இயேசு மாம்சத்தில் உயிரோடிருந்தாராகில், வேதாகம சாட்சியங்களின்படி, எப்படி

உலக நிலைமைகள் நிறைவேறிவருகின்றன என்று ஆர்வமாய் கவனித்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இவைகள் நிறைவேறுவதை கவனித்துப்பார்த்து, அவ்வாறு நிறைவேறும்போது உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்று கூறிசென்றிருக்கிறார். ஆனால் அவைகள் நிறைவேறுவதை கவனிக்காமல், எப்படி நம் தலைகளை உயர்த்தமுடியும்? இந்த அத்தியாவசியமான தகவல்களை அளிப்பவைகளை நாம் படிக்காவிடில், எப்படி நம்மால் அவற்றைக் காணமுடியும்? ஆனால் பொழுதுபோக்குக்காக நாம் படிக்கக்கூடாது, அல்லது புதியசிருஷ்டிகளாகிய நமக்கு ஆதாயமளிக்காதவற்றை படிக்கக்கூடாது.

ஆகவே பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் எந்த வழிமுறையை தொடர்ந்து பின்பற்றவேண்டும் என்று பார்க்கவேண்டும். நாம் யேகோவா தேவனின் மாபெரும் குமாரனுக்கு மணவாட்டிகளாகப் போகிறவர்கள். ஆகவே விரைவில் நடைபெறஇருக்கும் திருமணத்திற்காக நாம் எல்லாவிதத்திலும் ஆயத்தமாயிருக்க ஜாக்கிரதையாய் இருப்போமாக. ஒரு பூமிக்குரிய மணப்பெண் தன் திருமணத்திற்காக எப்படி தன்னை ஆயத்தம்பண்ணுகிறாள் என்று யோசித்துப்பார்க்கும்போது, நமது அங்கிகளையும் நமது ஆடைகளை கறைப்படாமலும், சித்திரத் தையல்வேலை அனைத்தும் முடிவுற்றிருப்பதை காண்பதும், இவை அனைத்தையும் ஆயத்தமாக வைத்திருப்பதும் எவ்வளவு முக்கியமானது என்பதற்கு நமக்கு நல்ல எடுத்துக்காட்டாய் உள்ளது. இதுவரை நிகழ்ந்திராத அளவு மாபெரும் மகா மேன்மையான திருமணத்தில் பங்கேற்கும் மிக முக்கியமான பங்கு வகிக்கும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் ஆயத்தமாய் இருக்கவேண்டும். நாம் முன்பு சுபாவத்தின்படி மற்றவர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம், தற்போதோ, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் நம் எல்லாக் கறைகளும் நீங்க சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். நாம் சத்தியவசனமாகிய தண்ணீர் மூலமாக அன்றாடம் கழுவிக்கொள்ளவேண்டும். மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான சகல அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக்கொண்டு, நம் பரலோக ராஜாவுக்கு பொருத்தமான மணவாட்டிகளாவோமாக.

இந்த அழிவுக்குரிய சரீரத்தில் தங்கியிருக்கிற காலம்வரை, இவ்வாறு ஆயத்தமாகுதல் தொடர்ச்சியான பணியாக நடைபெறவேண்டும். தம் குமாரனுக்கு யார் பொருத்தமான மணவாட்டிகளாக உண்டாகிறார்கள் என்பதை மெய்ப்பித்துக்காட்டுதல் தேவனது மாபெரும் திட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. நம் விஷயத்தில் நாம் விழிப்போடிருந்து, நம்மைத் தயார்ப்படுத்துவதைப் பொறுத்தே இந்த உறுதிப்பாடு அடங்கியுள்ளது. இந்த மிக முக்கியமான பணியில் முறையாக நம் கவனத்தைச் செலுத்தும்போது, நிச்சயமற்ற இலக்குகளில் நம் நேரத்தை வீணாக்கமாட்டோம். அதற்குமாறாக, நமக்கு கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாக பிறருக்கு – விசேஷமாக நம்மோடு பரலோகவழியில் நடக்கின்ற சகோதரர்களுக்கு உதவுதலின்மூலம், நம்மை முறையாக உருவாக்கி தயார்ப்படுத்தவும் முடியும். சகோதரருக்காக நம் ஜீவனையும் அளிக்கவேண்டும். நம்மைத் தயாரித்தலில் இது ஒரு மிக முக்கிய பங்குவகிக்கிறது. மகா பரிசுத்தமான விசுவாசத்தில் சகோதரரை கட்டி எழுப்புவதோடு, நம்மைநாமே கட்டி எழுப்பவும் வேண்டும்.

பிரியமான நண்பர்களே, இவ்வாறு செய்யும்போது, நாம் ஆட்டுக்குட்டியானவருடைய திருமணத்திற்கு, ஆட்டுக்குட்டியானவருடனான நமது திருமணத்திற்கு, ஆயத்தமாகிவருகிறோம் என்ற நம்பிக்கையை பெறுகிறோம். இன்றையநாளில் செய்துவருகிற அல்லது செய்யத் தவறுபவைகள், நமது இறுதி ஆயத்தத்துக்கு நம்மை நிலைநிறுத்தும். இவ்விஷயத்தில் நம் சிந்தைகளே எல்லாவற்றிற்குமான அஸ்திவாரமாயுள்ளது. நாம் அபூரண சரீரத்தைப் பெற்றிருக்கிறோம் என்று கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆகவே நமது சரீரம் பூரணமாயிருக்கிறதா என்பதற்கான பரீட்சை நேரிடாமல், நம் இருதயங்கள் பூரணமாயுள்ளதா என்பதே பரீட்சையாய் இருக்கும். தேவனுக்கு முன்பாக நம் இருதயம் பூரணமாய் இருக்குமானால், நம் வார்த்தைகள் நம் செயல்பாடுகள் மற்றும் நம் சிந்தனைகளை நம் ஆற்றலுக்குட்பட்டு, அன்பின் பிரமாணத்துக்கு இசைவாகும்படி செய்வோம். இவ்வாறு நம் இருதயங்களை நேர்மையும் உண்மையுமாக காத்துக்கொள்ளும்போது, தேவனது நேசகுமாரனும், நம் பரலோக மணவாளனுடைய சாயலை அடையும் பாதையில் அதிகதிகமாக வளருவோம். ஏற்றவேளையில் கைகளால் கட்டப்படாத நம் வீட்டிற்குள் பரலோகங்களில் நித்தியத்துக்கும் ஜீவிக்க, மாபெரும் மகிழ்ச்சியுடன் பிரவேசிப்போம். அதன்பிறகு, பிதாவின்முன்பாக "தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த மணவாட்டியாக" குற்றமற்றவர்களாக, சொல்லடங்கா மகிழ்ச்சியுடன் நம்மை நம் கர்த்தர் ஒப்படைப்பார்.

ஓ! இந்த சிந்தனை எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதத்தைத் தருகிறது! நாம் குற்றமற்றவர்களாக நிற்கமுடியுமா? அன்பு சகோதரரே, ராஜ்யத்தில் பிரவேசித்துவிட்டோமென்றால் நாம் மெய்யாகவே குற்றமற்றவர்களாகவே இருப்போம்! அதற்கிடையில், தற்போது, நம் குணாதிசயம் குற்றமற்றதாய் இருக்கவேண்டும். நம்மால் செய்யமுடியாத காரியங்களுக்காக தேவன் ஒருபோதும் நம்மை கண்டிக்கமாட்டார். நம்மால் செய்யமுடிந்த காரியங்களில் மட்டுமே கண்டிப்பார். நாம் தவறுசெய்வோமானால், சுத்திகரிப்பின் நீரூற்றண்டையில் நாம் செல்வதற்கு தேவன் ஒரு ஏற்பாடுசெய்திருக்கிறார். நம்மால் செய்ய முடிந்தஅளவு சிறப்பாக பிரயாசைப்படுவோமானால், அவசியமானபோது அல்லது அன்றாடமும் கிருபாசனத்தண்டைசேர்ந்து மன்னிப்பும் சுத்திகரிப்பும் அடைவோமானால், பிதாவின் பார்வையில் கரையற்றோராக நிற்போம். அவரது ஏற்றவேளையில் நம் கர்த்தரைப்போலவே, நமக்கு பூரண சரீரத்தை தருவார். அப்பொழுது முழுமையான தன்மையில் காணும்போது, நாம் பூரணராய் இருப்போம்.

அபூரண சரீரத்தில் நாம் தங்கியிருக்கும்வரை நமக்கு பரலோக கிருபையின் சிங்காசனம் தேவையாயிருக்கிறது. கர்த்தரிடத்திலிருந்து ஒவ்வொருநாளும் நமக்கு இரக்கமும் உதவியும் அத்தியாவசியத் தேவையாயிருக்கிறது. நாம் இருதயத்தில் உண்மையாய் இருந்தால் நாம் செய்யும் தவறுகள் நமக்கு உதவிபுரிந்து, முன்பிருந்ததைக்காட்டிலும் அதிக கவனமுள்ளோராகவும், நேரான சிந்தனை உடையோராயும் மாற்றும். கர்த்தர் நமக்கு அவசியமான பாடங்களை கற்றுக்கொடுக்கும்படி தம் வழிகாட்டுதல்களை ஏற்பாடுசெய்திருக்கிறார். தெய்வீக சாயலில் நாம் வளரும்பொழுது, தேவனும் கிறிஸ்துவும் நேசிப்பதுபோல் நாமும் அதிகதிகமாக குணாதிசயத்தை நேசிக்கவும், நீதியின் கொள்கைகளை நேசிக்கவும் தேடுவோம். நாம் மாம்சீகக் கண்களால் தேவனையோ அல்லது கிறிஸ்துவையோ ஒருபோதும் சந்தித்ததில்லை, ஆயினும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் அவர்களை அதிகமாய் நேசிக்கிறோம்(1பேது1:8). அப்போஸ்தலர் பவுலையோ, அல்லது அப்போஸ்தலர் யோவானையோ நாம் ஒருபோதும் சந்தித்ததில்லை. ஆயினும் அவர்களை நாம் நேசிக்கிறோம். அவர்களுடைய குணாதிசயங்கள் நேசிக்கத் தூண்டுவதை நாம் அறிந்ததால், ஈர்க்கும் தகுதியைப் பெற்றுள்ளன. அவர்களது எழுத்துக்களிலிருந்து பிரகாசிக்கும் அவர்களது தனிமனிதப் பண்புகளை நாம் நேசிக்கிறோம். அவர்களது ஆவியின் உள்ளார்ந்த அழகை நாம் நேசிக்கிறோம். பரிசுத்தபவுலை நாம் நேசிக்கக்காரணம், அவர் கிறிஸ்துவுக்குள் வெற்றிசிறக்கவும், அவரால் அறியப்பட்டிருக்கவும், மற்ற எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக விட்டுவிட்டார். நன்மையானதும், உயர் பண்புடையதும், தகுதியானதுமான யாவற்றையும், அதன் சரிவிகிதப்படி நாம் நேசிக்கவேண்டும்.

நாம் ஒருவருக்கொருவர் எதை நேசிப்பது? தலையின் அமைப்பையா? முகத்தோற்றம் செவ்வையாய் இசைந்திருப்பதையா? நம் ஆடை வடிவமைக்கப்பட்ட அழகையா? அல்ல! நம் குருவின் சாயலை ஒருவரில் ஒருவர் காணும் விகிதாச்சாரப்படியே ஒருவரில் ஒருவர் அன்புகூறவேண்டும். ஒருவர் இயேசுவின் சாயலில் அதிகப்படியான தன்மையை கொண்டிருப்பாராகில், அப்படிப்பட்டவரை எல்லாருக்கும் மேலாக நேசிக்கவேண்டும். இதுவே பரலோகத்துக்குரிய மற்றும் ஆவிக்குரிய அன்பு. நாம் நாளுக்குநாள் இவ்வகையான

--2742--

அன்பை விளையச்செய்யவேண்டும். மற்ற எல்லா பற்றாசைகளையும் இரண்டாவது இடத்துக்குத் தள்ளவேண்டும். தேவ பார்வையில் மிக விலையேறப்பெற்றதாக உள்ளவைகளை நாமும் விலையேறப்பெற்றதாக எண்ணி நேசிப்போமாக. மற்றவைகளைக் காட்டிலும் இவைகள் நமக்கு அதிக நேர்த்தியாகத் தோன்றட்டும், இதனால் நாம் நம் பரலோகத்திலுள்ள பிதாவைப்போன்ற சாயலை அடைந்திருப்போம்.

**--2743--**

___________

## R 5907

### *பூரண அழகு பொருந்திய ராஜா*

உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்
அவரன்பு சபிக்கப்பட்ட மரத்தின்மீதும் கண்டதுவே,
உன் குற்றமைத் தாங்கிடுவார்,
உனைப் பெயர்சொல்லியே அழைத்திடுவார்,
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே

உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே
வல்லமையுள்ளவரை, அநேகருக்குக் கிரீடம் சூட்டியவரை
மெல்லிதான ஆடைதனை அணிவித்து மகிழ்ந்தவரை
தாம் ஜெயித்திட்ட ராஜ்ஜியத்தை சுதந்தரிக்க உத்தரவிடுவார்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே

அழிவுக்குரிய கீதத்திலே அவர் அழகுஉனை நிலைநிறுத்தும்
பூரணமாய் அழகானவர் அவர் ஒருவர் மாத்திரமே
பிரமிப்பூட்டும் மகிமையினைக் காண இன்னும் கொஞ்சதூரம்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்

ஆம்! அடையுமிடம் வெகுதூரம்
என்றெண்ணி சோர்ந்திடாதே
காலடி தொலைவில்தான், ஒருகணமே,
உனக்கான போராட்டம் முடிவுக்குவந்திடுமே
பின்போ உன் துக்கமெலாம் சந்தோஷமாய் மாறிவிடும், இரவும்கூட பகலாய் மாறிவிடும்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்.

___________________


## R 5907

# பிலிப்பு பட்டணத்தின் சிறைஅதிகாரி
# THE PHILIPPIAN JAILER

**ஆதார வசனங்கள்** : அப்போஸ்தலர் **16:16–40**

**திறவு வசனம்** : அப்போஸ்தலர் **16:31** “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் ... இரட்சிக்கப்படுவீர்கள்”

சுவிசேஷகர்களான அப்.பவுலும் சீலாவும் லீதியாளின் வீட்டில் இருந்து ஒவ்வொரு நாளும் பட்டண வாசலுக்கு வெளியே இருக்கும் தொழுதுகொள்ளும் இடத்திற்கு வரும்போது, பிலிப்பு பட்டணத்தாரால் அறிந்த குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு இளம்பெண்ணை அடிக்கடி சந்திக்கநேர்ந்தது. அவள் ஒரு அடிமைப்பெண்ணாக இருந்ததோடு, விழுந்துபோன தூதர்களில் ஒரு அசுத்தஆவியினால் பிடிக்கப்பட்டவளாய் இருந்தாள். அந்த ஆவி அவள் மூலமாக குறிசொல்லுதல், எதிர்காலத்தைப்பற்றி முன்உரைத்தல், தொலைந்துபோன பொருள்களை கண்டுபிடித்தல் மற்றும் ஆவிகளோடு தொடர்பு கொள்ளுதல் போன்ற கிரியைகளை நடப்பித்துவந்தது. மேலும் அங்குள்ள எல்லா ஜனங்களால் அறியப்பட்டதோடு, மேற்சொன்ன கிரியைகள்மூலம் அவளுடைய எஜமான்களுக்கு அதிக அளவில் வருமானத்தை ஈட்டிக்கொடுத்துவந்தாள்.



PAUL'S SECOND MISSIONARY JOURNEY
(THE PHILIPPIAN JAILER)
Acts 16:16-40.
GOLDEN TEXT:—Believe on the Lord Jesus Christ, and thou shalt be saved, and thy house. Acts 16:31.

கர்த்தரோடு ஊழியத்தை செய்யும்பொருட்டு அநேக நாட்கள் லீதியாளின் வீட்டிலிருந்து அப்.பவுலும் உடன் ஊழியக்காரரும் போக்கும்வரத்துமாக இருந்தபோது, அந்த அடிமைப்பெண், “இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்”—அப்16:17. இங்கு அசுத்தஆவிகளே அப்.பவுல் மற்றும் உடன் ஊழியக்காரரையும் அறிந்திருந்தார்களேயன்றி, நிச்சயமாகவே அந்த பெண் அவர்களைஅறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அந்தஅசுத்தஆவிகள் எந்தஅளவிற்கு நடக்கப்போகும் நிகழ்வுகளை முன்உரைத்திருக்குமென்று நாம் முழுமையை அறியாவிடினும், முன்கூட்டியே அவர்கள் யூகித்திருந்தபடி அவைகள் நடைபெற்றிருக்கலாம். எவ்வாறெனில் அப்போஸ்தலர் அந்த அசுத்தஆவியை துரத்திவிடுவர் எனவும், அதன் விளைவக அப்பெண்ணின் எஜமானர்கள் மற்றும் நண்பர்களால் கர்த்தருடைய ஊழியக்காரர்களும், அவர்களால் மனம் மாறப்பட்டவர்களும் கடுமையாக கட்டுக்கடங்காத கோபத்துடனும், வெறியுடனும் தாக்கப்படுவார்கள் என முன்கூட்டியே யூகித்திருந்தார்கள் என நாம் நம்பலாம்.

அப்போஸ்தலரால் அப்பெண்ணிடமிருந்து அந்தஅசுத்தஆவியை வெளியே வர கட்டளையிட முடியும் என்பதை கருத்தில் கொள்ளாமல் நேரடியாகவே “அவர்கள் உன்னதமான ஊழியக்காரர்” என அந்த அசுத்த ஆவியால் சொல்லியிருக்கலாம். இருந்தபோதிலும் அப்படிப்பட்ட புகழ்ந்துபேசப்படும் சாட்சியினிமித்தம் அப்போஸ்தலர் மகிழ்வடைந்து அந்தஅசுத்தஆவியை துரத்தாமல் இருப்பார் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால் நாம் வாசிக்கிறபடி அநேகநாள் இப்படிப்பட்ட சாட்சி கொடுக்கப்பட்டு வந்ததினால் பரிசுத்தபவுல் கடும் கோபமடைந்தார். கொடுக்கப்பட்டசாட்சி சத்தியமாய் இருந்ததினால் அவர் சினமடையாமல், சத்தியம் வரக்கூடாத நபர்களிடமிருந்து வந்ததால்அவர் சினமடைந்தார். ஏனெனில் அசுத்தஆவி ஒருபோதும் சத்தியத்தை மதிப்பதில்லை என்று அறிந்திருந்தார். விழுந்துபோன தூதர்களில் யாராவது தேவனையும் அவருடைய நீதியின் கொள்கைகளையும்


# பிலிப்பு பட்டணத்தின் சிறைஅதிகாரி

## THE PHILIPPIAN JAILER

**ஆதார வசனங்கள்** : அப்போஸ்தலர் **16:16–40**
**திறவு வசனம்** : அப்போஸ்தலர் **16:31**

“கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் **...** இரட்சிக்கப்படுவீர்கள்”

சுவிசேஷகர்களான அப்.பவுலும் சீலாவும் லீதியாளின் வீட்டில் இருந்து ஒவ்வொரு நாளும் பட்டண வாசலுக்கு வெளியே இருக்கும் தொழுதுகொள்ளும் இடத்திற்கு வரும்போது, பிலிப்பு பட்டணத்தாரால் அறிந்த குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு இளம்பெண்ணை அடிக்கடி சந்திக்கநேர்ந்தது. அவள் ஒரு அடிமைப்பெண்ணாக இருந்ததோடு, விழுந்துபோன தூதர்களில் ஒரு அசுத்தஆவியினால் பிடிக்கப்பட்டவளாய் இருந்தாள். அந்த ஆவி அவள் மூலமாக குறிசொல்லுதல், எதிர்காலத்தைப்பற்றி முன்உரைத்தல், தொலைந்துபோன பொருள்களை கண்டுபிடித்தல் மற்றும் ஆவிகளோடு தொடர்பு கொள்ளுதல் போன்ற கிரியைகளை நடப்பித்துவந்தது. மேலும் அங்குள்ள எல்லா ஜனங்களால் அறியப்பட்டதோடு, மேற்சொன்ன கிரியைகள்மூலம் அவளுடைய எஜமான்களுக்கு அதிக அளவில் வருமானத்தை ஈட்டிக்கொடுத்துவந்தாள்.




கர்த்தரோடு ஊழியத்தை செய்யும்பொருட்டு அநேக நாட்கள் லீதியாளின் வீட்டிலிருந்து அப்.பவுலும் உடன் ஊழியக்காரரும் போக்கும்வரத்துமாக இருந்தபோது, அந்த அடிமைப்பெண், “இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்” **–அப்16:17.** இங்கு அசுத்தஆவிகளே அப்.பவுல் மற்றும் உடன் ஊழியக்காரரையும் அறிந்திருந்தார்களேயன்றி, நிச்சயமாகவே அந்த பெண் அவர்களைஅறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அந்தஅசுத்தஆவிகள் எந்தஅளவிற்கு நடக்கப்போகும் நிகழ்வுகளை முன்உரைத்திருக்குமென்று நாம் முழுமையாக அறியாவிடினும், முன்கூட்டியே அவர்கள் யூகித்திருந்தபடி அவைகள் நடைபெற்றிருக்கலாம். எவ்வாறெனில் அப்போஸ்தலர் அந்த அசுத்தஆவியை துரத்திவிடுவர் எனவும், அதன் விளைவக அப்பெண்ணின் எஜமானர்கள் மற்றும் நண்பர்களால் கர்த்தருடைய ஊழியக்காரர்களும், அவர்களால் மனம் மாற்றப்பட்டவர்களும் கடுமையாக கட்டுக்கடங்காத கோபத்துடனும், வெறியுடனும் தாக்கப்படுவார்கள் என முன்கூட்டியே யூகித்திருந்தார்கள் என நாம் நம்பலாம்.

அப்போஸ்தலரால் அப்பெண்ணிடமிருந்து அந்தஅசுத்தஆவியை வெளியே வர கட்டளையிட முடியும் என்பதை கருத்தில் கொள்ளாமல் நேரடியாகவே “அவர்கள் உன்னதமான ஊழியக்காரர்” என அந்த அசுத்த ஆவியால் சொல்லியிருக்கலாம். இருந்தபோதிலும் அப்படிப்பட்ட புகழ்ந்துபேசப்படும் சாட்சியினிமித்தம் அப்போஸ்தலர் மகிழ்வடைந்து அந்தஅசுத்தஆவியை துரத்தாமல் இருப்பார் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால் நாம் வாசிக்கிறபடி அநேகநாள் இப்படிப்பட்ட சாட்சி கொடுக்கப்பட்டு வந்ததினால் பரிசுத்தபவுல் கடும் கோபமடைந்தார். கொடுக்கப்பட்டசாட்சி சத்தியமாய் இருந்ததினால் அவர் சினமடையாமல், சத்தியம் வரக்கூடாத நபர்களிடமிருந்து வந்ததால்அவர் சினமடைந்தார். ஏனெனில் அசுத்தஆவி ஒருபோதும் சத்தியத்தை மதிப்பதில்லை என்று அறிந்திருந்தார். விழுந்துபோன தூதர்களில் யாராவது தேவனையும் அவருடைய நீதியின் கொள்கைகளையும் மதிக்கிறவர்களாய் இருந்தால் மனுக்குலத்தின் மனதில் இடம் பிடிக்க நினைக்காமல், அது தெய்வீக சித்தத்திற்கு விரோதமானதாகவும், அவர்களை காயப்படுத்தும் என்றும் அறிந்திருப்பார்கள்.

சில போதகர்கள் இந்த பெண், பைத்தியக்காரி அல்லது மனதளவில் பாதிக்கப்பட்டவள் என்று ஆலோசிக்கிறார்கள். ஆனால் வேத வசன அடிப்படையின்படியும், அப்போஸ்தலரின் வார்த்தையின்படியும் பார்த்தால் இவ்விரண்டும் முரண்பாடாக உள்ளது. அப்.பவுல் இப்பெண்ணைப்பற்றி ஒரு வார்த்தையும்கூறாததுடன், அவளை கணக்கிலேயே எடுத்துக்கொள்ளவில்லை என எண்ணலாம். அதற்கு பதிலாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அந்தப் பெண்ணை விட்டுவெளியே வருமாறு அந்த அசுத்தஆவிக்கே கட்டளையிட்டார். இது நம்முடைய கர்த்தரும் அவருடைய அறிவுரையின்படி அப்போஸ்தலர்களும் இம்மாதிரியாகவே அசுத்தஆவிகளை அநேகமுறை துரத்தியிருக்கிறார்கள்– மாற்கு **5:1–17**; மத் **10:1**; லூக்**10:17.**

### பழிவாங்கின எஜமான்கள் :

கர்த்தருடைய காலங்களில் ஒரு மனிதனிடம் இருந்த ஒரு லேகியோனாகிய பிசாசுகளை துரத்தி அவைகள் பன்றிகளுக்குள் புகுந்து கடலில் விழுந்து அழிந்துவிட்டதால் அவைகளுடைய உரிமையாளர்கள் கர்த்தர்மேல் கோபப்பட்டதுபோல், இங்கு அடிமைப்பெண்ணுடைய எஜமானர்கள் கோபம்கொண்டனர். அக்காலங்களில் ஆவி பிடித்த அடிமைகளுக்கு வியாபார ரீதியாக அதிக விலைமதிப்பு இருந்ததால் அப்பெண்ணின்மீது அதிக முதலீடு செய்திருந்தனர். ஆனால் அவள்மூலம் பெறப்பட்ட லாபம் இனிவருங்காலத்தில் வராது என்று கண்டதால் அவர்கள் பெரும்பீதி அடைந்தார்கள் என்று யூகிக்கலாம். அதனால் அவர்கள் மூர்க்கத்தனமான கோபம் கொண்டனர்.அன்பு அல்லது அதற்கு எதிரான சுயநலமான குணங்கள் மனிதரை மிகப்பெரிய அளவில் அசைக்கும் அளவுக்கு வேறொன்றாலும் அசைக்கமுடியாது. மேலும் தற்கால நிலைமைகளில் சுயநலமே பெரும்பாலானவர்களை அதிக வல்லமையோடு அசைக்கிறது. அதேஅசுத்தஆவி மீண்டும் அப்பெண்ணை பிடிக்கச்செய்யலாம் என்ற நம்பிக்கை அந்த எஜமானர்களின் கூட்டத்திற்கு அற்றுப்போயிற்று. எனவே முழு வருமான இழப்பை அவர்களுக்கு ஏற்படுத்தியவர்கள்மீது பழிவாங்கும் எண்ணம் ஏற்பட்டது.

இம்மாதிரியான பழிவாங்கும் எண்ணம் உலகளவில் உள்ளது. சத்தியமும் அதின் ஊழியமும் தங்கள் வழியில் அமைதியாக செல்கின்றவரை உலகம் அவர்களுடைய சொந்த அலுவல்களில் மூழ்கியிருப்பார்கள். ஆனால் யாரேனும் சத்தியத்தையும் அதன் நீதியையும்

புரிந்துகொண்டார்கள் என்று தெரிந்தால் அவர்களுடைய விருப்பங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் தீங்கு விளைவிக்க நினைப்பதோடு இவ்வுலகம் அவர்களை வீரியத்துடன் எதிர்க்கும். ஆனால் உலக ஜனங்களின் கோபம் அல்லது வெறுப்பைத் தூண்டி அதனால் தங்கள்மேல் உபத்திரவங்களை வரவழைத்துக்கொள்வது கர்த்தருடைய ஜனங்களின் பிரதான வேலை என நாம் கருதக்கூடாது. முறையாகப் பார்க்கும்போது உலகம் தன்னுடையவைகளை செய்ய விட்டுவிடுவது நமக்கு மிகமிக நன்று. சுவிசேஷத்தை அறிவிக்கும்போது அதை மனிதருடைய இருதயத்தை பிளக்கும் சத்தியமாக பயன்படுத்தாமல், ஏற்கனவே இருதயம் நொருங்குண்டவர்களாக இருப்பவர்களுக்கும் தேவகிருபையின் செய்தியை கேட்கிறதற்கு காதுள்ளவர்களிடத்திலும், தெய்வீக வழிநடத்துதலின்படி அவர்களுக்கு மகிழ்ச்சி, சமாதானம், அன்பு மற்றும் ஆசீர்வாதம் கொண்டுவரும் நற்செய்தியாக இருக்கவேண்டும். இக்கோட்பாடு அனுமதிக்கும் அளவின்படியே பொதுவாக அப்போஸ்தலர்கள் சுமூகமானமுறையில் இதை பயன்படுத்தினர். இவ்விடத்திலும் அப்.பவுல் தேவனுடைய விசேஷமான வழிநடத்துதலின்படியே ஆதாரப்பூர்வமாக நடந்தார். சபைக்கான அப்போஸ்தலரின் பொதுவான அறிவுரையாகிய,“ உங்களால் கூடுமானவரை யாவரோடும் சமாதானமாக இருங்கள்“(ரோமர் 12:18). வீண் பிரச்சனைகளை தூண்டிவிடும் அளவிற்கு வழிதவறி நடக்கக்கூடாதென்பதே இவ்வசனத்தின் கருப்பொருளாகும். ஆனால் தேவனுடைய மேற்பார்வையின்படி பிரச்சனைகள் வரும் என்றால் அதை அனுமதித்த அவரிடம் முழு விசுவாசத்தோடும் உற்சாகத்தோடும் இருந்து, அது நம்முடைய நன்மைக்காகவும், பெலனுக்காகவுமே என்று உணரவேண்டும்.

குறிசொல்லுகிற பெண்ணின் எஜமானர்கள் தாங்கள் பெற்றிருந்த செல்வாக்கை பயன்படுத்தி வெகு சீக்கிரமாக அங்குள்ள ஜனங்களை தூண்டி, அப்.பவுலையும் சீலாவையும் பழிவாங்க தீர்மானித்ததோடு அதில் வெற்றியும் கண்டார்கள். அவ்விரு ஊழியரும் சந்தைவெளியில் அதிகாரிகள் முன்பாக கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். அங்கே அக்கூட்டம் நடந்த உண்மைகளை கூறாமல் பொய்யான குற்றச்சாட்டுகளை எழுப்பினர்கள். எவ்வாறெனில் இவர்கள் ரோம சட்டதிட்டங்களுக்கு எதிரான மதபேதத்தை போதித்து, அரசுக்கு எதிராக கிளர்ச்சியை தூண்டுகிறர்கள் என குற்றம் சுமத்தினர். இது நடந்த உண்மைக்கு மாறானதாகும். அவ்வூழியர்கள் அரசு சட்டவிதிகளின்படி பட்டணவாசலுக்கு வெளியேசென்று ஆராதனைசெய்து வந்தனர்.

இருந்தபோதிலும், அந்நேரத்தில் நீதிபதிகள்அவர்களை கடுமையாக தண்டிப்பதற்கு அந்த பொய்க்குற்றச்சாட்டே போதுமானதாகஇருந்தது. மேலும் கலவரங்கள் வராமல் தடுப்பதும், சட்டம்ஒழுங்கை நிலைநாட்டுவதும் நீதிபதிகளுடைய முக்கிய பணியாக இருந்ததால் தேவமனிதர்கள் நிமித்தம் அம்மாதிரியான அமைதியின்மை பட்டணத்தில் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து தங்களுடைய கவலையையும் அதிருப்தியையும் காண்பிக்கும்பொருட்டு தங்களுடைய வஸ்திரங்களை கிழித்துக்கொண்டார்கள். அங்கிருந்த மக்கள்கூட்டம் தேவமனிதருக்கு எதிராக எழும்பியிருக்கிறது என்றால், கண்டிப்பாக அவர்கள் தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தை செய்திருப்பார்கள் என்பதே அவர்களது எண்ணம். இப்பிரச்சனையை தூண்டியது அசுத்தஆவிகளே என்பதைஅவர்கள் அறியாதிருந்தார்கள். அப்.பவுல் எங்கும் கூறுகிறபடி “நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல; வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளேடும் நமக்குப் போராட்டமுண்டு.

**தேவஊழியர் சிறையில் அடைக்கப்படுதல்**

மக்கள் கூட்டத்தை திருப்திப்படுத்தவும், உடனடியாக சமாதானத்தை அப்பகுதியில் கொண்டுவரவும், நீதிபதிகள் தேவஊழியரை தடிகளால் அடிக்கவும் பின்பு சிறையில் அடைக்கவும் உத்தரவிட்டனர். ஆஹா, தேவ மனிதருக்கு கிடைத்த வெகுமதிதான் என்ன! கர்த்தருக்காகவும் அவருடைய சத்தியத்திற்காகவும் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்தவர்க்கு கிடைக்கும் பலன்தான் என்ன.. அதாவது தேவமனிதர் தீமையாக பேசப்படவும் எண்ணப்படவும் தீமையை அனுபவிக்கவும்வேண்டும். நம்முடைய தேவன் என்றென்றும் மாறாத தேவன் என்பதை நாம்



நினைவுகூறவேண்டும். எவ்வாறெனில் ஆதிசபையின் காலத்தில் அவர் சபையின் அனுபவங்களை கண்காணித்ததுபோலவே இப்போதும் கண்காணித்து வருகிறார். கிறிஸ்துவுக்காகவும் அவருடைய சுவிசேஷ ஊழியத்திற்காகவும் ஆதிகாலசபை ஊழியர்களைப்போன்றே நாமும் தற்காலத்தில் எப்போதும் தயாராக இருக்கவும் அந்த ஊழியத்திற்கு முழு சாட்சியாக துன்பங்களை சகிக்க முன்வரவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை நினைவில்கொள்ளவேண்டும். ஆக அவ்வாறான கடின அனுபவங்கள் தேவனுடைய வழிநடத்துதலின்படியே என ஏற்றுக்கொள்வதற்கும், அது தேவனுடைய ஆதரவற்ற அல்லது நிராகரிக்கப்பட்ட நிலைமைகளுக்கு ஆதாரம் என்று நினையாமல் இருப்பதற்கு அந்த ஊழியரைப்போன்றே நமக்கும் விசுவாசம் தேவையா ? ஆகவே கிறிஸ்துவின் பள்ளியில் அம்மாதிரியான பாடங்களை நாமும் கற்றுக்கொண்டு, கர்த்தருடைய மற்றும் அப்போஸ்தலருடைய அடிச்சுவடுகளை மகிழ்ச்சியோடு பின்பற்றவேண்டும். மாத்திரமல்ல வசதியாக வாழும்போது எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்கிறோமோ, அவ்வாறே உபத்திரவங்களிலும் மகிழ்வுடன் இருப்பதற்கு கற்றுக்கொள்ளவேண்டும்.

சிறைகள் அக்காலத்தில் சிறுசிறு அறைகளாக கொஞ்சங்குறைய வெளிச்சமும் காற்றோட்டம் உள்ளதாகவும் கட்டப்பட்டு இருந்தன. கடும் குற்றவாளிகளுக்கு என உட்காவலறை அல்லது இருண்ட நிலவறையாக( Dungen) கட்டப்பட்டிருக்கும். இந்த உள்ளறையில் தான் அப்.பவுலும் சீலாவும் அடைக்கப்பட்டு கால்களில் விலங்கு மாட்டப்பட்டிருந்தார்கள். இம்மாதிரியான கடினமான சூழ்நிலையின்கீழ் அவர்களுடைய முதுகு அடிபட்டதினால் ஏற்பட்ட இரத்தம் காயங்களோடு முற்றிலும் புண்களாயிருந்தன. ஆனாலும் அந்த உண்மையுள்ள சகோதரர் முற்றிலும் ஆவியினால் நிறைந்தவர்களாகி மகிழ்ச்சியோடு கீர்த்தனைகளை பாடினர். கர்த்தருடைய ஊழியத்திற்காகவும் நீதியின்நிமித்தம் வரும் துன்பங்களை சகிப்பதிலும் தங்களுக்கு கிடைத்த இந்த சிலாக்கியத்திற்காக ஸ்தோத்திர பாட்டை பாடினர்.

--2746--

அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சுவிசேஷத்திற்காக தெய்வீக அங்கீகாரிப்பை ஏற்றுக்கொள்ளும் வகையில் அந்த இரண்டு ஊழியர்களுக்கு நேர்ந்த இந்த கடினமான எதிர்ப்புகளை சகித்துக்கொள்ள அவர்களுடைய உறுதியான உயிரோட்டமான விசுவாசத்திற்கு குறைவானதை நாம் காணமுடியாது. அவர்களுக்கு ஏற்பட்ட சோதனையான அனுபவங்களை தெய்வீக அனுமதியின்பேரில் தங்களுக்கு வந்தது என்று உணர்ந்து, அவைகள் தங்களுக்கு மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது என்றும் உணர்ந்து அவைகளை இலேசான உபத்திரவங்களாக ஏற்றுக்கொண்டனர். இவையே துன்புறுத்தப்பட்ட அந்த மனிதர் துன்பநேரத்தை வெற்றி கொண்டவர்களாகவும், கிறிஸ்துவின் சரீரத்தின் பாடுகளை பெறும் சிலாக்கியத்தைப்பெற்று தேவனை துதிக்கவும், கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றும்பொருட்டு, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய மாபெரும் நிஜமான மோசேயின் அங்கத்தினர்களாக, அவருடைய சரீர அவயவங்களாக மகிமையில் பங்குபெற அந்த எண்ணமே அவர்களை உற்சாகப்படுத்தியது – கொலோ 1:24; அப் 3:22.

நாம் மற்றவர்களுடைய உண்மையான வாழ்க்கையை பற்றிக்கொண்டு உற்சாகப்படுத்தப்பட இவைகள் நமக்கு போதனையாக எழுதப்பட்டுமிருக்கிறது. நம்முடைய உடன்படிக்கையும் அவர்களுடைய உடன்படிக்கைபோன்றதே அவ்வாறே அவர்களுடையதும் கர்த்தருடைய உடன்படிக்கை போன்றதே. கிறிஸ்துவின் நிமித்தம் வரும் பாடுகளின் தன்மை ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டாலும், பாடுகள் ஒன்றே. அதுபோலவே அவைகளை தொடரும் மகிமைகளும் ஒன்றே. இருந்தபோதிலும் நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் மகிமையில் வித்தியாசப்படுவதுபோல அம்மகிமையில் பங்குபெறுபவரும் அதில் வித்தியாசப்படுவர். உண்மையோடும் முறுமுறுப்பில்லாமலும், மகிழ்ச்சியோடும் சகிக்கப்படும் பெரியபெரிய பாடுகள் அப்பாடுகளைப் பொறுத்தே நம்முடைய பிதாவினுடையதும் மற்றும் கர்த்தரும் இரட்சகருமானவருடைய இராஜ்யத்தில் வெகுமதியும் இருக்கும்.

**சரியான நேரத்தில் பூமியதிர்ச்சி**

தேவஊழியர் பாடிக்கொண்டிருக்கும்போதே அஸ்திபாரங்கள் அதிரும்வண்ணமாக ஒரு பூமியதிர்ச்சி ஏற்பட்டது. அவர்கள் கட்டப்பட்டிருந்த சங்கிலிகள், அவைகள் பூட்டப்பட்டிருந்த இடத்திலிருந்து கழன்றுபோயிற்று. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக்கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்யப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு, நீ உனக்கு கெடுதிஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.

உடனே சிறைச்சாலைக்காரன் தேவமனிதரைப்பற்றி முழு நிச்சயமடைந்து, தனதுபொறுப்பில் ஒப்புவிக்கப்பட்ட இவர்கள் உன்னதமான மனிதர்கள் என்றும், குற்றவாளிகளல்ல என்றும் அறிந்தான். அவன் ஆவிஉலகத்தைப்பற்றியும், பிசாசுபிடித்தலைப்பற்றியும் கண்டிப்பாக ஓரளவுக்கு தெரிந்திருக்கக்கூடும். இவ்விரு மனிதரில் ஒருவர் உன்னதமான வல்லமை உடையவராயிருந்து, அதன்மூலம், தெய்வீக வெளிப்பாடாக தவறாக நினைத்திருந்த பிசாசின் ஆவியை விரட்டினதை யாரோ ஒருவருடைய வாயின் வார்த்தையின் மூலமாக அறிந்திருக்கக்கூடும்.

ஆகவே தற்போது எல்லா நிகழ்வுகளிலுமிருந்து இக்கைதிகளை காப்பாற்றவும், தேவனுடைய அன்பின்செய்தியை கேட்பதற்கும் தயாராகிவிட்டான். இவ்விஷயங்களைப்பற்றி அவன் நினைத்துக் கொண்டிருக்கும்போதே அவர்கள் இருந்த சிறைச்சாலைக்கு முதலாவது பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து, அதன்பின் தன் வீட்டிற்கு கூட்டிக்கொண்டுபோனார். அவர்களுடைய காயங்களைக் கழுவி அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுத்து, அந்நேரமே உலக இரட்சகரான மேசியாவாகிய இயேசுவைப்பற்றியும் அவருடைய மரணத்தைப்பற்றியுமான அவர்களுடைய ஊழியத்தைப்பற்றியும் கேட்டறிந்தார். மேலும் அவர் தன்னை பாவி என மனதில் உறுதிசெய்தார். பொல்லாத கிரியைகளினால் குறைந்தபட்சம் முழு உலகமே தேவனைவிட்டு பிரிந்தவர்களாய் பாவிகளாய் புறம்பானவர்களுமாய் இருக்கிறார்கள் என்று உணர்ந்தார். தன்னுடைய சொந்த பாவங்கள் மன்னிக்கப்பட்டு தன் சிருஷ்டிகரோடு ஒப்புரவாகவேண்டுமென்று ஏங்கினார். அதற்கு இந்த தேவஊழியரால் தனக்கு உதவிசெய்யமுடியும் என்று உணர்ந்தார். ஆகவே அவர் அவர்களைநோக்கி, “இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்றார். உங்களைப்போன்றே தேவனோடு உறவை ஏற்படுத்திக்கொண்டு என் வாழ்க்கையின் எல்லாக்காரியங்களிலும் அவருடைய அன்பின் பராமரிப்பை உணர்ந்துகொள்வதற்கு நான் என்னசெய்யவேண்டும். மேலும் தெய்வீக வழிநடத்துதலின்கீழ் இப்போதும் இனிவரும் காலங்களிலும் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்பதைஉணர்ந்து, உங்களைப்போன்றே உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்ட நான் என்னசெய்யவேண்டும்.

“கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்” என தக்க பதில் ஊழியர்களிடமிருந்து வந்தது. இந்த வார்த்தையை ஒரு பாடமாக எடுத்து இயேசுவின் மரணத்தின்மூலம் நீதிமான்களும் அநீதிமான்களும் ஆகிய அனைவரும் தேவனோடு ஒப்புரவாகும் தெய்வீகதிட்டத்தின் கோட்பாடுகளை சிறை அதிகாரிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் அவ்வூழியர் விவரமாக போதித்தனர். மேலும் ஆதாமும் அவருடைய சந்ததியும் உயிர்த்தெழுதல் மூலம் ஏற்றகாலத்தில் ஆசீர்வதிக்கப்படுவர். அது மாத்திரமல்ல, கிறிஸ்துஇயேசுவின் உடன்சுதந்திர வாளிகளாகஆகும்பொருட்டு தற்காலத்தில் அவருடைய பாடுகளில் பங்காளிகளாவதும், அதைத்தொடர்ந்து வரும் மகிமையை அடையும்பொருட்டு, தற்காலத்தில்உள்ள தெய்வீக அழைப்பைகேட்டு ஏற்றுக்கொள்ளும் சிலாக்கியமும் உண்டு என்பதையும் போதித்தனர்.

**சிறைஅதிகாரியின் மனமாற்றம் :–**

தற்காலத்தில் விசுவாசம் உள்ளவர்களாக கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடனுபவிக்கும் சீஷத்துவமாகிய வாய்ப்பை நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்வது, நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானது. சிறைஅதிகாரியும் அவரது குடும்பத்தாரும் உலகத்திற்கும் பாவத்திற்கும் சுயத்திற்கும் மரித்து, கிறிஸ்துவின் அங்கத்தினர்களக ஒரு புது வாழ்க்கை வாழும்விருப்பத்தை அடையாளப்படுத்தும்பொருட்டு ஞானஸ்நானம் பெற்றனர். பட்டணத்துக்கு வெளியே ஆற்றங்கரையோர ஜெபகூடுகைக்கு எவ்வாறு முன்பு வழிநடத்தப்பட்டார்களோ, அவ்வாறே நீதிபதிகளுடைய அநீதியான தீர்ப்பினால் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டதிலும் தெய்வீக வழிநடத்துதல் இருந்ததை அந்த தேவஊழியர் கண்டிப்பாக உணர்ந்திருப்பர்! அதன்மூலம் அவர்களுடைய விசுவாசம் இன்னும் உறுதிப்பட்டது. சுவிசேஷ நற்செய்தியை மற்றவர்களுக்கு சொல்லும்பொருட்டு கிடைத்த மாபெரும் சிலாக்கியத்திற்காக பொறுமையோடும் மகிழ்ச்சியோடும் கடினமான அனுபவங்களை சகிப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தனர்.

சில நிலைப்பாடுகளின்படி ஊதிய உயர்விற்காகவும் மற்றும் குடியிருப்பு வசதிக்காகவும் இந்த தேவஊழியர் வேலைநிறுத்தம் செய்யவும், குறிப்பாக உபத்திரவங்களை கூடுதலாக அடையாதிருக்கவும், போதுமான அளவு சுயதியாகம் செய்துவிட்டதாகவும் கர்த்தரிடம் முறையிட ஏற்ற தருணமாக இது இருந்திருக்கலாம். ஆனால் நிலைமை முற்றிலும் எதிர்மாறானது. அவர்கள் இன்னும் உபத்திரவங்களை சகிக்கவும் அதிக உற்சாகத்தோடு சென்றனர். கிறிஸ்துவை பின்பற்றினவர்கள[illegible]டைய

–2747–

அனுபவங்களும், கர்த்தரும் மற்றும் அப்போஸ்தலருடைய அனுபவங்களும் ஒரேமாதிரியாக இருக்க நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்குமாறாக எந்த அனுபவங்களையும் நோக்கிப்பாராமலும், சத்தியத்தின் நிமித்தம் பாடுகளை அனுபவிப்பதை தவிர வேறு எந்தவித பாடுகளினாலும் நாம் திருப்தியடையக்கூடாது. காலசூழ்நிலைகள் மாறியிருந்தாலும் அப்போஸ்தலர்மூலம் கர்த்தர் நமக்கு சரியானவிதத்தில் வாக்குரைத்தபடி,

“அன்றியும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்”–2தீமோத்3:2. இம்மாதிரியான பாடுகள் தன்னுடைய வீட்டிலிருந்தோ, சொந்த குடும்பத்திலிருந்தோ அல்லது சபையிலிருந்தோ நேரிடலாம். தேவஒளியை உண்மையாக பிரகாசிக்கச்செய்யும் ஒருவர் இப்பாடுகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவே முடியாது.

ஆகவே தேவனுடைய ஜனங்களில் யாரேனும் ஒருவர் இப்பாடுகளிலிருந்து விலகியிருந்தால், அவர் தன்னுடைய இந்த நிலையைக்குறித்து பயத்தோடும் ஜாக்கிரதையோடும் எண்ணிப் பார்க்கவேண்டும். எவ்வாறெனில் தனக்கு கிடைத்த வாய்ப்புகளில் அவர் உண்மையுள்ளவராக இருந்திருக்கிறாரா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இருந்தபோதிலும் முட்டாள்தனமான காரியங்களை செய்வதாலோ அல்லது முறையாக செய்யவேண்டிய காரியங்களை முட்டாள்தனமாக செய்வதினாலோ உபத்திரவங்களை தேடிக்கொள்வது என பொருள்படாது. ஆனால் நாம் பயத்தினால் வரும் விளைவுகளினால் முறையான மற்றும் நேர்த்தியான பொறுப்புக்களை குறைத்துவிடக்கூடாது. கர்த்தரின் ஜனங்களுடைய எதிரிகளில் பயம் ஒரு மிக தந்திரமான எதிரியாகும். இதை தேவன்பேரில் வைக்கும் விசுவாசம் மற்றும் நம்பிக்கையினால் மேற்கொள்ளப்படவேண்டும்.

**பாடுகளில் உடன்செல்பவர்**

வசனத்தின்படி அப்.பவுல் மட்டுமே அசுத்தஆவியை கடிந்துகொண்டு துரத்தினார். ஆகவே அவர்மட்டுமே கலவரத்திற்கு காரணமாக இருந்தபோதிலும், அவருடன் சேர்த்து சீலாவும் சிறைப்படுத்தப்பட்டார். ஒருவேளை சீலா இதற்கு எதிராக செயல்பட்டிருக்கமுடியும் என அறிந்துஉணரலாம். அப்.பவுலை எல்லார் முன்னிலையிலும் கடிந்து கொண்டிருக்கலாம். அல்லது குறைந்தபட்சம் கூட்டத்தோடு சேர்ந்து சிறைவாசத்திலிருந்து தப்பித்திருக்கலாம். ஆனால் சீலா அவ்வாறில்லாததினால் நாம் மகிழ்ச்சியடைகிறோம், அப்.பவுலுக்கு ஒரு தகுதிவாய்ந்த உடன்ஊழியராக இருந்தார். அப்போஸ்தலர்மீது தேவஆசீர்வாதம் இருந்தது என உணர்ந்ததோடு, கர்த்தரால் விசேஷமாக பயன்படுத்தப்பட்டார் என்பதையும் உணர்ந்திருந்தார். ஆகவே எம்மாதிரியான அனுபவங்கள் அவர்களுக்கு நேர்ந்தாலும் கர்த்தர் அவர்களுக்கு அதை நன்மைக்கேதுவாகவே செய்வார் என்பதை உணர்ந்திருந்தார்.

அப்.பவுலோடுகூட அடிவாங்குவதிலும், பாடல்களை பாடுவதிலும் சிறைஅதிகாரிகள் னமாறுதலிலும், சீலாவும் பங்குபெற சிலாக்கியம் பெற்றிருந்தார். நிச்சயமாகவே கர்த்தரிடத்தில் விசுவாசமாய் இருப்பதற்கான ஆசீர்வாதத்தை கொண்டுவருவதோடு, அதிக உலகஞானமுடையவராக, ஜாக்கிரதை உடையவராக சுயத்தைத் தேடுபவராக இல்லாமல், தெய்வீக வழிநடத்துதலுக்கு கீழ்ப்படியவும் செய்தார். எபி10:32,33ல்; சிலர் அவரோடுகூட மிகுந்த உபத்திரவங்களாகிய போராட்டத்தை சகித்தார்கள் எனவும், ஆனால் சிலர் அவருடைய அவமானத்தில் வெறுமனே உடன் செல்பவராக இருந்தனரே தவிர, எந்தவிதமான இழப்பையும் பெறவில்லை என அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார். தேவன் இவ்விருதிரத்தாரிடையே உள்ள உண்மையை போற்றி அதற்குரிய வெகுமதியை அளிப்பார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோல் நாமும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாகவும், அவருடைய வழிநடத்துதல்களை பின்பற்றுபவராகவும், அதோடுகூட அவருடைய ஆசீர்வாதங்களுக்கும் பங்காளிகளாக இருப்போமாக.

**நீதிபதிகளின் சபதம்**

முந்தைய இரவில் நடந்த சம்பவங்களைப்பற்றி அதிகாரிகள் மறுநாள்காலையில் தேவஊழியரை உடனடியாக விடுதலைசெய்யுமாறு கட்டளையிட்டனர். அப்.பவுல் மற்றும் சீலா இவ்விருவரும் சரியான காரணத்திற்காக தண்டிக்கப்படவில்லை என உணர்ந்தனர். அவர்களை அடித்து சிறைச்சாலையில் அடைத்தது பொதுஜனங்களை சமாதானப்படுத்தவே. இதேபோல நம் கர்த்தருடைய விஷயத்திலும் பிலாத்து அவரை வாரினால் அடிக்க கட்டளையிட்டதும் ஜனக்கூட்டத்தின் கோபத்தைத் தணிக்கவேயன்றி, நீதியை நிறைவேற்றஅல்ல. அப்.பவுல் எந்தஒரு வகையிலும் ஒரு வக்கீல்அல்ல, ஆனாலும் முந்தைய இரவில் அவரும் சீலாவும் ரோம குடியுரிமைபெற்றவர்கள் எனவும், அதினால் தங்களுக்கு எந்தஒரு தண்டனை அளிக்கப்படும் முன்பு ஒரு நியாயமான விசாரணை அவர்களது உரிமை என அதிகாரிகளிடம் சொல்ல முயற்சித்திருக்கவேண்டும். ஆனால் ஜனக்கூட்டத்தின் கூக்குரலினால் அவர்களுடைய வார்த்தைகள் கேட்கப்படாதே போயிருக்கும்.

அவர்களை விடுவிக்கக்கூடிய ஆணை சிறைச்சாலையில் கிடைக்கப்பெற்றவுடன், தாங்கள் இருவரும் ரோம குடியுரிமைபெற்றவர்கள் என அதிகாரிகளுக்கு சொல்லிஅனுப்பினான். மேலும் அவர்களுடைய விஷயத்தில் மூன்றுவகையில் ரோம சட்டம் மீறப்பட்டிருக்கிறது எனவும் சொல்லியனுப்பினர்; 1. அவர்கள் அடிக்கப்பட்டனர் 2. இது பொதுமக்கள் முன்னிலையில் நடந்தது 3. அவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்படாததால் இது கண்டிக்கத்தக்கது.

**அப்.பவுலின் தெளிந்த புத்தியுள்ள மனது**

அதிகாரிகளுக்கு எதிராக இம்மூன்று குற்றச்சாட்டுகளும் அவர்களை எட்டியபோது அவர்களுக்கு அது கடினமாக இருந்தது. ஆகையால் உடனடியாக சிறைச்சாலைக்கு வந்தார்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. அப்போஸ்தலரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் கொண்டுவரப்பட்டு, முந்தையஇரவில் அவர்கள் அநீதியாக நடத்தப்பட்டனர் என மக்கள்முன்பு ஒத்துக்கொண்டு அதை சாட்சியாக கூறினர். இது அவருடைய விசுவாசத்திற்கு எதிரான நிந்தையை போக்கும். இதனிமித்தம் உங்கள் போதகர்கள் விசாரிக்கப்பட்டு பட்டணத்தைவிட்டு வெளியேற்றப்பட்டதுடன் மீண்டும் திரும்பிவர தடைசெய்யப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் அப்பட்டணத்தில் இருந்த சீஷர்களிடம் கூறமுடியாது.

அதேசமயம் அவருடைய சமரசத்தின் ஆவியையும் கவனிக்கவேண்டும். அப்.பவுலும் சீலாவும் தொடர்ந்து பொதுமக்கள் முன்னிலையில் போதிக்க வலியுறுத்தவுமில்லை, தங்களுடைய சுயாதீனத்தை பயன்படுத்துவதற்கு சட்டப்படியான பாதுகாப்பு தரவேண்டும் எனவும் வலியுறுத்தவில்லை. அதற்கு மாறாக, தங்களுடைய சக்திக்கேற்றவாறு அப்பகுதியில் தேவ வழிநடத்துதலின்படி ஊழியம் முடிந்தது என்ற முடிவுக்கு வந்தனர். இவ்விடத்தைவிட்டு வேறுஇடம் செல்லவேண்டியுள்ளது என்ற முடிவுக்குவந்தனர். ஒரு பட்டணத்தில் உங்களை துன்புறுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள் என்ற நமது குருவின் ஆலோசனையின்படி அவர்கள் செயல்பட்டனர்.

இவ்வகையில் ஒரு சமாதான சமரசம் ஏற்பட்டதினால், நீதிபதிகளும் தங்களுக்கு தொடர்ந்து வரவிருக்கும் சிரமத்திலிருந்து மீண்டனர். மேலும் தேவஊழியரும் எந்த தவறும் செய்யாதவராக அறிவிக்கப்பட்டு மரியாதையுடன் நடத்தப்பட்டனர். ரோம குடிமகன்களுக்கு உண்டான உரிமையின்படி அப்பட்டணத்திலேயே இருக்க அனுமதிக்கப்பட்டாலும், சமாதானம் ஏற்படும்பொருட்டு பட்டணத்தைவிட்டு வெளியேற முடிவுசெய்தனர். தேவஜனங்களில் சிலர் தங்களுடைய உரிமையை தேவைக்கேற்றபடி வலியுறுத்தாமல் தவறுசெய்கின்றனர். வேறுசிலர் இதற்கு மாறாக தங்களுடைய பூமிக்குரிய உரிமைகளை அதிகமாக

--2748--

வலியுறுத்துவதன்மூலம் தவறுசெய்கின்றனர். இங்கு அப்.பவுலின் விஷயத்தில் தெளிந்தபுத்தியின் ஆவியினால் மேற்கொள்ளப்பட்ட செயல்களை நாம் உதாரணமாக காண்கிறோம். கர்த்தருடைய சித்தம் செய்வதற்காக அவசியமான மற்றும் நியாயமான உரிமைகளை மட்டுமே வலியுறுத்தினர். சமாதானம் ஏற்படும்பொருட்டும் அவருடைய பலியின் உடன்படிக்கைக்கு இசைவாகவும் வேத வசனங்களுக்கு இசைவாகவும் மற்ற உரிமைகளை சுலபமாக விட்டுக்கொடுத்தார்.

பட்டணத்தைவிட்டு வெளியேறும் முன்பாக அந்த தேவஊழியர் லீதியாளின் வீட்டிற்குச்சென்று அங்கே சகோதரரை சந்தித்து அவர்களை தேற்றினர். எந்த வார்த்தைகளைக்கொண்டு சகோதரரைத் தேற்றினர் என நிதானிப்பதில் சிரமம் ஏதுமில்லை. அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடுகளை அனுபவித்ததினால் ஏற்பட்ட மகிழ்ச்சியை கண்டிப்பாக நினைவுகூர்ந்திருக்கவேண்டும். மேலும் அவர்களுடைய சோதனைகளிலும் கஷ்டங்களிலும் பாடுகளிலும் கர்த்தர் எவ்விதமாக நடத்தினார் என்றும் சொல்லியிருக்க வேண்டும். நன்மைக்காக சிறையில் அடைக்கப் பட்டதையும் அதினால் சிறைச்சாலைக்காரரும் அவருடைய குடும்பத்தினரும் சகோதரராக சேர்த்துக்கொள்ளப்பட்டதையும் கூறியிருப்பர்.

புதியஏற்பாட்டை முறையாக வாசிக்கும் எவரும் சகோதரத்துவத்தின் ஆவியானது விசுவாசவீட்டாரின் அங்கத்தினர்களாக கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனங்களின் மத்தியில் பரவியிருந்திருப்பது அதில் பதிவாகியிருக்கிறதை கண்டிப்பாக நோக்கிப்பார்ப்பார்கள். மேலும் தற்கால சத்தியத்தில் களிகூர்ந்திருப்போரிடம் அறிவுப்பூர்வமாக தொடர்புகொள்ளும் எவரேனும், இதேமாதிரியான சகோதரத்துவத்தின் ஆவி அசாதாரணமான அளவு இருக்கிறது என்பதை கண்டிப்பாக அறிவார்கள் ஆமென்.

------------------------------------

**--2749--**

## *பூரண அழகு பொருந்திய ராஜா*

உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்
அவரன்பு சபிக்கப்பட்ட மரத்தின்மீதும் கண்டதுவே,
உன் குற்றமைத் தாங்கிடுவார்,
உனைப் பெயர்சொல்லியே அழைத்திடுவார்,
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே

உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே
வல்லமையுள்ளவரை, அநேகருக்குக் கிரீடம் சூட்டியவரை
மெல்லிதான ஆடைதனை அணிவித்து மகிழ்ந்தவரை
தாம் ஜெயித்திட்ட ராஜ்ஜியத்தை சுதந்தரிக்க உத்தரவிடுவார்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே

அழிவுக்குரிய கீதத்திலே அவர் அழகுஉனை நிலைநிறுத்தும்
பூரணமாய் அழகானவர் அவர் ஒருவர் மாத்திரமே
பிரமிப்பூட்டும் மகிமையினைக் காண இன்னும் கொஞ்சதூரம்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்

ஆம்! அடையுமிடம் வெகுதூரம்
என்றெண்ணி சோர்ந்திடாதே
காலடி தொலைவில்தான், ஒருகணமே,
உனக்கான போராட்டம் முடிவுக்குவந்திடுமே
பின்போ உன் துக்கமெலாம் சந்தோஷமாய் மாறிவிடும், இரவும்கூட பகலாய் மாறிவிடும்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்.

R 5908

# கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள்

# FINALLY, BRETHREN, THINK

**"கடைசியாக சகோதரரே,**
**உண்மையுள்ளவைகளெவைகளோ,**
**ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ,**
**நீதியுள்ளவைகளெவைகளோ,**
**கற்புள்ளவைகளெவைகளோ,**
**அன்புள்ளவைகளெவைகளோ,**
**நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ,**
**புகழ்எதுவோ, அவைகளையே**
**சிந்தித்துக்கொண்டிருங்கள்"– பிலிப்பியர் 4:8**

நம் ஜீவியத்தின் எல்லா நிகழ்வுகளிலும் மனதின் மாபெரும் செல்வாக்கை சரியாக உணர்ந்தவர்கள்—அது கற்றறிந்தவர்களாக இருந்தாலும், விஞ்ஞானிகளாக இருந்தாலும் ஒப்பிட்டுப்பார்க்கையில் ஒருசிலரே காணப்படுகிறார்கள். தாய்மார்களுள் சிலரே கருவில் வளர்கின்ற பிறப்படையாத குழந்தைகள் உருவாவதில் தங்களுடைய சிந்தனைகள் பெரும்பங்கு வகிப்பதை உணர்ந்திருக்கிறார்கள். அந்த சிந்தனைகள் குழந்தைகளுக்கு உதவிகரமாகவோ அல்லது காயமேற்படுத்தும் பண்புகளையோ கொடுக்கிறது. இதை தகப்பன்மார்களில் சிலரே உணர்ந்திருக்கிறார்கள். அல்லது அவர்களுடைய மனைவிமார்களோடு இசைவாக இணைந்து, நேரிய குழந்தைகளை பெற்றெடுக்க தேடுகிறார்கள். அவர்களது மனைவியர் கர்ப்பந்தரிக்கும்போது, நேரிய சிந்தனைகள் மற்றும் குறிக்கோள்களை வளர்க்கவும், அழகு, இரக்கம், கலை, தூய்மை, தெய்வபக்தி மற்றும் ஆவிக்குரிய ஜீவியம் ஆகியவற்றில் உயரிய கருத்துக்களால் அவர்களின் மனஉணர்வுகளை கிளர்ச்சியுறச் செய்கின்றனர். ஒரு தாயினுடைய எண்ணங்களின் வல்லமை தன் குழந்தையிடத்தில் நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ இருக்கிறது என்பதை ஜனங்கள் அறிந்துகொள்ளும்பொழுது அது சந்தேகத்திற்கிடமின்றி பலவீடுகளில் அடிப்படைக்கூறுகளில் பெரும் மாற்றத்தை விளைவிக்கும். நம்முடைய திடநம்பிக்கை என்னவெனில், பெரும்பாலான ஜனங்கள் தவறைக்காட்டிலும் சரியானதையே பெரிதளவில் செய்கிறார்கள். அவர்களது அறியாமையே அவர்களின் இடறுதலின் கற்களாகவும், பிரதான பிரச்சனையாயும் உள்ளது.

வேதாகமம் பொதுவாகவே மனுக்குலத்தின்பேரில் அதிக ஆர்வம் காண்பித்தபோதிலும், தேவபிள்ளைகளுக்கென்றே முகவரியிட்டிருப்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இவர்களே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாக அவரோடுகூட ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் நுழைந்திருக்கின்றனர். பரிசுத்த ஆவியின் வல்லமையால் ஜெநிப்பிக்கப்பட்டதன்மூலம் புதியசிருஷ்டியாக மாறியிருக்கின்றனர். ஆயிரமாண்டு அரசாட்சியின்போது உலகின் ஜனங்கள் கற்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்திருக்கும். ஆனால் தற்போது, தற்கால ஜீவியத்தில், பரிசுத்தாவியின் ஜெனிப்பிக்கப்படுதலை அடைந்தவர்கள், வளர்ச்சியடைவதற்கான ஒரேவாய்ப்பு அவர்கள் முன்பாக உள்ளது. மேலும் இவர்களுக்கான ஒரே மாபெரும் நம்பிக்கை, நீதிமான்களுக்கான உயிர்த்தெழுதலாகிய ஆவிக்குரிய நிலைமையில் பூரணப்படுதலே ஆகும். ஆகவே அதிகதிகமாக கர்த்தரின் முன்மாதிரியை பின்பற்றுவது கிறிஸ்தவனது கடமையாயுள்ளது. விசேஷமாக, கிறிஸ்துவுக்குள்ளான தன் உடன்சகோதரரின் நலனுக்காக அர்ப்பணிப்பது அவசியமாயுள்ளது.

**சிந்தனையின் வலிமை :–**

அப்போஸ்தலரின் புத்திமதியை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனிப்பட்ட முறையில் தனக்கே உரியதாகவும்,
அதோடுகூட, திருச்சபைக்குமான பொதுவான புத்திமதியாகவும் எடுத்துக்கொள்ளலாம். இதனால் நம் திறவுவசனத்தில் சுட்டிக்காட்டின நெறிப்படி, மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் கட்டிஎழுப்ப ஆர்வங்காட்டுவர்.

ஒவ்வொரு நபர்க்கும் தன் சொந்த சிந்தையை அக்கறையோடு கவனித்துக்கொள்ளும் பொறுப்பு உண்டு. நாம் கிறிஸ்தவர்களானபிறகு நம் சித்தத்தை கர்த்தருக்கு கொடுத்துவிட்டோம். அந்த ஒப்பந்தத்தின்படி, உடன்படிக்கைசெய்தது முதற்கொண்டு இனி நாம் நமது சித்தம் கட்டளையிடுகிறவற்றை பின்பற்றக்கூடாது. அதற்கு மாறாக, இவற்றை புறக்கணித்துவிட்டு, கர்த்தரது சித்தத்தின் வழிகாட்டுதலை பின்பற்றவேண்டும். இந்த நிபந்தனையின் அடிப்படையிலேயே கர்த்தர் நம்மை அவரது குடும்பத்திற்குள் ஏற்றுக்கொண்டார். இந்த நிபந்தனைகளை பின்பற்றும்போது தோல்வியைத் தழுவினால், அது நாம் செய்த நம் உடன்படிக்கைக்கு முரண்பாட்டை ஏற்படுத்தும். நம் கர்த்தர் தம் வசனத்தின்மூலமாக, தமது சித்தம் இன்னதென்று அவசியமான அறிவுரைகளை தந்திருக்கிறார். இந்த செய்திகளை நம் நன்மையும் நேர்மையுமான இருதயத்தில் பெற்றுக்கொள்ளும்போது, கீழ்ப்படிதலின் கனிகளை விளையச்செய்வதோடு, இது ஆவிக்குரிய கனிகளில் வளர்வதற்கு வழிநடத்துகிறது.

ஒரு மனிதனது இருதயத்தின் சிந்தனை எப்படியுள்ளதோ, அப்படியே அவன் இருக்கிறான். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மாம்ச இச்சைகளுக்கு விலகி, தங்களது செயல்பாடுகளை ஆளுவதற்கு கற்றிருக்கிறார்கள். நாவினால் நாம் தேவனை துதிக்கிறோம், அதே நாவு, உடன்சிருஷ்டிகளை காயப்படுத்தவும் உபயோகிக்கக்கூடாது என்று அறிந்து, அநேகர் தங்கள்

அப்போஸ்தலர் குறிப்பிட்டிருக்கிறார்(யாக் 3:1–10). நம் சிந்தையை, சித்தத்தை கட்டுப்படுத்தாமல், தேவசித்தத்தின் கீழாக கொண்டுவராமல், நம் நடக்கை மற்றும் வார்த்தைகளை கட்டுப்படுத்துவது கடினம். ஆகவேதான் தேவன் தாம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதற்கான காரணத்தை காண்பித்து, நமக்குமுன்பாக மகாமேன்மையும் அருமையுமான விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார். இவைகள் நம் சிந்தையிலும், வார்த்தையிலும் செயல்பாடுகளிலும் நம்முள்ளிருந்து கர்த்தருக்கு பிரியமானதை மற்றும் கர்த்தருடைய சித்தத்துக்கேற்ப கிரியைசெய்யும் நோக்கத்தோடு அருளப்பட்டிருக்கிறது.

**சுய பரிசோதனைக்கான கேள்விகள் :–**

அப்போஸ்தலர் தம்முடைய ஆதாரவசனத்தில் நம்மை நம்முடைய எண்ணங்களை, நம்முடைய வார்த்தைகளை மற்றும் நடத்தையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முறையான பயிற்சியை மேற்கொள்ளும்படி சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொரு சிந்தனையும் சவாலாக இருக்கவேண்டும். அது தீய சிந்தனையாக அல்லது சீர்கேடான சிந்தனையாக இருக்கும்பட்சத்தில் அதை அனுமதித்தால் அது துளிர்விட்டு வளர்ந்து, நம்முடைய வார்த்தைகளை மற்றும் நடத்தைகளை பெரியஅளவில் கறைப்படுத்துவதோடு, அது மற்றவர்களையும் அசுத்தப்படுத்தும். இந்த பாடத்தின் அடிப்படையில் அப்போஸ்தலன் வெளிப்படுத்துகிற விசாலமான நேர்கோட்டில் தொடர்ந்துசெல்வதன்மூலம் நாம் அந்த சவாலை நிறைவேற்ற கற்கமுடியும். முதலாவதாக, தீர்மானம் எடுக்க கணிசமான நேரம் தேவைப்படலாம், அதன்பின்பு உடனுக்குடன் தீர்மானிக்குமளவு படிப்படியாக வளர்ச்சிபெறுவோம்.

**1. நம்முடைய சிந்தையில் ஆலோசித்துவருகிற கருத்து கனத்திற்குரியதா ?**

**1.**அப்படி இருக்குமானால், அது ஏற்றுக்கொள்ளக்கூடியது, மற்றும் ஊக்குவிக்கக்கூடியது. அவ்வாறில்லாவிடில் அது உடனடியாக வெறுத்து ஒதுக்கப்பட்டு, ஒரு தீமையின் ஆதிக்கமாக சிந்தையிலிருந்து உடனடியாக அகற்றிவிடவேண்டும்.

2. இந்த சிந்தை, **தூய்மையானவற்றை** பரிந்துரைக்கிறதா ? – உணர்ச்சி மற்றும் சுயநலம் சம்பந்தப்பட்டதல்ல ?

ஆம், தூய்மையானவற்றை பரிந்துரைக்கிறது என்றால், இது இந்த பரீட்சைகளில் வெற்றிபெற்று, முன்னேறி, அது மேலும் கூடுதலான ஆலோசனைக்கு நடத்தப்படலாம். அவைகளில் அதன் தூய்மை நிரூபிக்கப்பட தவறும் பட்சத்தில், மிகப்பெரிய விளைவை ஏற்படுத்தும் சிந்தனையாக கருதி, கொடிய தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒன்று நம் வீட்டிற்குள் நுழைந்தால் எப்படி விரட்டியடிப்போமோ அதுபோல உடனடியாக வெளியேற்றப்படவேண்டும்.

3. அது **அன்புடைய** சிந்தனையா ? அது அன்பு செய்பவற்றோடு சம்பந்தப்பட்டதா ? அது அன்பின் ஆதிக்கங்களை ஊக்கப்படுத்துகிறதா அல்லது அது வெறுப்பு ஆத்திரம் கோபம் பொறாமை ஆகியவற்றை அடையாளங் காண்பிக்கிறதா ?

அது அன்புடையதாக இருக்குமாயின் தொடர்ந்து முன்னேற்றமடையவேண்டும். இல்லையென்றால் அது உடனடியாக அகற்றப்படவேண்டும். அது நமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கும்படி, அதை மேலும் தொடர்ந்துசெல்ல அனுமதிக்கக்கூடாது.

4. அது **புகழ்ச்சிக்குரியதாக** உள்ளதா ? அதாவது இது உலகத்தால் புகழ்ந்து பேசக்கூடிய விஷயமா ? என்ற அர்த்தத்தில் அல்ல.

அப்போஸ்தலனும், ஏன் நம் ஆண்டவராகிய இயேசுவும் இந்த உலகத்தால் தூஷிக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிராக எல்லா விதத்திலும் தீயனவற்றை தவறுதலாகப் பேசினர். இங்கு "புகழத்தக்க" என்ற வார்த்தைக்கு, உயர்ந்த மதிப்புடைய ஜனங்களால் அறிந்து புரிந்துகொள்ளப்பட்ட சிந்தையின் பொருளையே நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

5. சிந்தையில் ஏதேனும் **புண்ணியம்** உண்டா அல்லது புகழ்ச்சிக்குரிய என்ற வார்த்தையின் உணர்வுகள் ஏதேனும் இதில் உள்ளதா ?

அப்படியிருக்குமாயின் அக்கருத்து அனுமதிக்கப்படலாம். அப்படியில்லையென்றால் அது விரட்டியடிக்கப்படவேண்டும். ஒருவேளை அது குற்றமற்றதாக இருந்தபோதிலும், எந்த மதிப்பும் இல்லாததே உண்மை நிலையாய் இருக்கும்போது, அதை தள்ளிவிடலாம். தீமையற்ற காரியங்களை மாத்திரம் நாம் எண்ணுவதற்கு நமக்கு நேரமுமில்லை, இடமுமில்லை. ஏதாவதொருவழியில் ஆதாயம் அளிப்பதும், நேர்மறையாக நன்மை தருவதும், உதவிகரமானவைகளை நம் இருதயத்திலும் சிந்தையிலும் விருப்பங்கொள்ள அனுமதிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிடில், அந்த சிந்தை நம் இருதயத்துக்கும் சிந்தைக்கும் தடங்கலை உண்டாக்குமாதலால், அதை எதிர்த்து வெளியேற்றவேண்டும். இந்த குணத்தைப்பற்றி ஆராய்தல் தீமையானதல்ல, அதேசமயம் அனுகூலமானதுமல்ல, மேல்நோக்கி கட்டப்படக்கூடியதும் அல்ல.

நாம் இயல்பாக எப்படியிருந்தபோதிலும், தேவனுடைய பிள்ளைகளாக, தெய்வீக வார்த்தை கூறும் அறிவுரைப்படி பின்பற்றுகிறவர்கள் நிச்சயமாக உதாரகுணமுள்ள ஜனங்களாக, உதவுகிற ஜனங்களாக, தெளிந்தபுத்தியும் பலமுள்ள ஆவியை பெற்றவர்களாக மாறுவர்; மேலும் இவைகள் இராஜ்யத்துக்கும் அதன் மாபெரும் வேலைக்கும் தங்களை தயார்ப்படுத்துவதின் ஒருபகுதியாக மட்டும் இருந்து, பிறகு தங்கள் தலையும் மீட்பருமானவரின் கீழ் ஒப்படைக்கப்படும் மாபெரும் ஊழியத்தை செய்யும் தேவனுடைய ஊழியக்காரர்களாவர்.

R 5909(R3820)

# அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும்

# HARVEST GATHERINGS AND SIFTINGS

**கள்ள சகோதரர்களால் வரும் மோசங்கள் –2கொரிந்தியர் 11:26**

நம் கிறிஸ்தவ அனுபவங்கள் ஒவ்வொருக்குள்ளும் வேறுபட்டவைகளாயுள்ளது. எந்த இரு சகோதரரும் ஒரே துல்லியமான பொருத்தமுடையோராக எவ்விதத்திலும் இருப்பதில்லை. ஏனெனில் நம் இயற்கையான பண்புகளும் தாலந்துகளும் நமது சுற்றுப்புற சூழ்நிலைகளும் வேறுபடுவதே காரணம். பொறுமை, விசுவாசம் மற்றும் அன்பின் சோதனைகள் எந்த ஒரு தேவபுத்திரனுக்கும் அத்தியாவசியமாய் உள்ளது. எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. மாறாக நாம் இவற்றை சார்ந்தேயிருக்கிறோம். குணாதிசயம் எவ்வளவு உறுதியானது என்பதும் அல்லது அவர் எப்படி சாதாரணமான நெருக்குதல்களால் அசையாதிருக்கிறார் என்பவைகள் ஒரு பொருட்டல்ல. மற்றவர்களைப்போலவே சிலுவைகளையும் மாபெரும் சோதனைகளையும்பெற்று அல்லது அதைவிட



அதிகமாகப்பெற்று, அதன்மேல் நம்பிக்கையாயிருந்து, ஒருவேளை அப்படிப்பட்டார் பலவீனமானவர்கள் பணிவோடு முகங்குப்புறவிழும்போது, கர்த்தர் அவர்களது திராணிக்கு அதிகமாக துன்புற அனுமதிக்காமல், நேசிக்கிறார், கிருபையளிக்கிறார் – 1கொரிந் 10:13.

ஆசீர்வதிக்கப்பட்ட நம் கர்த்தராகிய இயேசுவும், பூரணராயிருந்தபோதிலும், பரீட்சையின் மூலம் அனுபவம்பெற்று, தேவசித்தத்துக்கு தம் முழு அர்ப்பணிப்பை நிரூபித்துக்காட்டினார். நம் கர்த்தரின் சோதனையை கவனித்துப்பாருங்கள். பரிசேயரும் வேதபாரகரும் ஏளனச்சொற்களாலோ, கசப்பான வார்த்தைகளாலே பயமுறுத்தினாலும், சிறிதளவும் அசைக்கப்படாமல், உறுதியான குணாதிசயத்தை வெளிப்படுத்தினார். இதில் நாம் சந்தேகப்படமுடியாது. அதுபோலவே, சாத்தானுடைய சோதனைகளை எதிர்கொண்டு, விரைவாயும் ஸ்திரமாயும் எதிர்மறையாக தீர்வுகண்டார். மற்றவர்களுக்கு மாபெரும் சோதனையை ஏற்படுத்தியிருக்கவேண்டிய இக்காரியங்கள், அவருக்குக் கோபத்தைக்கூட வருவிக்கவில்லை. வெளிப்படையாக தாக்குதல் தொடுத்த அவரது எதிரிகளிடத்தில் அவர் அமைதியோடும் சிலேடையாகவும் பதிலளித்தார். அவர்களால் அசைக்கப்படாதவராக தோற்றமளித்தார். ஆனால் அவரோடுகூட அப்பம் புசித்த மனுஷன் அவருக்கெதிராக தன் குதிகாலைத்தூக்கினான்(சங்41:9; மத் 26:23). அவரைவிட்டு விலகிச்சென்றான். அவரது இருதயமோ கலங்கினது; வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட நண்பர்களால் காயப்பட்டார். சோர்வடைந்த உணர்ச்சிகள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவரது ஊழியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, அவரது ஊழியத்தின் முடிவுக்கட்டத்தில் சோதனை மிகமிக கடினமாயிற்று. அவரைப் பின்பற்றின சீஷரில் அநேகர் அவரைவிட்டு விலகினர். அவர்கள் அவரது போதனைகுறித்து, “இது கடினமாயிருக்கிறதே, யாரால் கேட்கக்கூடும் ?” என்றனர். கடிந்துகொள்ளாத அவரது துக்கமான வார்த்தைகள், “நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா ?” என்று தம் 12 விசேஷித்த மற்றும் உறுதியான அப்போஸ்தலரிடத்தில் இரக்கம் ஏற்படுத்தும்விதமாக வெளிப்பட்டன; அதற்கு பேதுரு, உள்ளுணர்வு பெற்றவராக உடனே கூறியதாவது ; “ஆண்டவரே, நாங்கள் யாரிடத்தில் போவோம் ? நித்திய ஜீவனளிக்கும் வார்த்தைகள் உம்மிடத்திலுண்டே” என்றார். இவ்வார்த்தைகள் நேர்மையான, நேசமுள்ள இருதயத்தைத் தேற்றும் நறுமண தைலமாக நிச்சயமாக இருந்திருக்கும். பிறருக்கு நன்மைசெய்வதும், பிறரை ஆசீர்வதிப்பதுமே அவரது ஒரே மனத்தூண்டுதலாக இருந்தது.

அவரது ஊழியம் முடியும் தருவாயை நெருங்கினபோது, அவரால் மிகஅதிகமாக நேசிக்கப்பட்டோர் மூலம் அவர் இன்னும் கூடுதலான காயங்களால் துன்பப்பட நேர்ந்தது. அவர் துக்கம் நிறைந்தவராயும், ஆவியில் கலங்கினவராயும் சாட்சியமளித்தார்; மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்”. அவர்களில் ஒருவர் எப்படி முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்க முடிந்தது ? எப்படி அவர் தம் இருதயத்தில் நேசித்திருந்த சீஷர்கள் அனைவரும் அவரை கைவிட்டு, மறுதலிக்கமுடிந்தது ? ஆச்சரியத்துக்கிடமின்றி, அவரது பலியின் ஜீவியம் எப்படி முடிவுறவேண்டியிருந்தது என்பதற்கான தெளிந்த பார்வையை நாம் இங்கு பெறுகிறோம். “நான் சாவிலும் உம்மை மறுதலியேன்” என்று பேதுரு திடமனதாய் பேசினபோதிலும், அவர்கள் அனைவரும் அவ்வாறே கூறினர். எல்லோரும் சிதறடிக்கப்படுவார்கள், அவரது மிக கடுமையான சோதனைவேளையில் கைவிட்டுவிடுவார்கள் என்பதையும்

இயேசு முன்னரே அறிந்திருந்தார். திடமனதாயிருந்த பேதுரு சாத்தானால் பயங்கரமாக புடைக்கப்பட்டு, "அவரை ஒருபோதும் அறியேன்" என்று மிக பலவீனனாக தன்னை நிரூபித்தார். அவரது சோதனைக்காலத்தின்போது இப்படிப்பட்ட பரீட்சைகள் சகோதரர்களிடமிருந்து வந்தன. அவர்களில் சிலர் பலவீனராகவும், ஒருவர் கரை படிந்த இருதயத்தையும் கொண்டிருந்தது, நம் கர்த்தரது சோதனைநேர அனுபவங்களில் கடுந்துயரம் அளித்திருக்கும். ஆயினும் இப்படிப்பட்ட சம்பவங்களால் அவர் வேறொரு வழிமுறையை தெரிவுசெய்யும்படி இயக்கவில்லை, அல்லது வேறெந்த ஆதிக்கமும் அவரை திசைதிருப்பவில்லை. அவர் மகிழ்ச்சியோடு குறுகலான பாதையில் நடந்து, மற்ற எல்லாவற்றையும் தேவனிடத்திற்கு விட்டுவிட்டார். கிறிஸ்துவின் நீதியை வெளிச்சத்தைப்போலவும், அவரது நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் தேவன் ஏற்றவேளையில் விளங்கப் பண்ணுவார்(சங்37:6).

அவர் இவ்வாறு தீய மனிதரது கரங்களில் துன்புற்றதோடு மட்டுமல்லாமல்,அவரது மிகநெருக்கமான நண்பர்கள் தவறாகப் புரிந்துகொண்டதினிமித்தமாகவும் ஆகும். அவர் சத்தியத்துக்கு உண்மையுள்ளவராயிருந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். அவர் சீரமைப்பவராகவும் ராஜாவாகவும் வருமுன், முதலாவதாக மீட்பராக வரவேண்டியது எவ்வளவு அத்தியாவசியமானது என்றும் அவர்களால் சூழ்நிலையை தெளிவாக கிரகிக்கக்கூடாதிருந்தது. முழுமையாக சத்தியத்தை கிரகிக்காத போலி சகோதரர்களால் வரும் ஆபத்து பற்றிய அதேபாடம் அப்போஸ்தலர் பவுலின் அனுபவமாயுமிருந்தது.

அவரது செய்தியை உலகம் புறக்கணித்த விதத்தைப்பற்றி அவர் குறைகூறினதாக நாம் ஒருபோதும் கேள்வியுற்றதில்லை. புறஜாதியாரின் தத்துவங்களை விசுவாசித்த உலகஞானிகளால் குருடாக்கப்பட்டிருந்த யூதர்கள், பிரபலமாயிராத கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றின உபதேசத்தை பிரசங்கித்ததை கேட்டு இடறினர். அவர்மேல் தீயனபேசி கொடுமைப்படுத்தினர். மெய்யாகவே கடந்த அனுபவங்களைக்குறித்து மனம் தளர்ந்து, அல்லது சோர்வடைவதற்கு பதிலாக, அல்லது வருங்காலத்தில் கட்டுண்டு சிறையிருப்புக்கு போக எதிர்நோக்க வேண்டும். இவைகளுக்கிடையே அவர் தைரியமாகவும், உத்வேகத்தோடும் கூறுகிறார் ;

"ஆகிலும்; அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்" – அப் 2:19–24.

கர்த்தராகிய இயேசுவைப்போலவே, பவுலும் கள்ள சகோதரர்களால் கடினமான உபத்திரவத்தை அடைந்திருந்தார். அவர்கள் சிலுவைப்போர் வீரர்களாவும், உண்மையுள்ள உடன்ஊழியராயும், நுகத்தடிக்குட்பட்டோராயும் இருப்பதற்கு பதிலாக, ஆள்வதற்கு விருப்பங்கொண்டு, அகந்தையுள்ளோராயும், தங்களையே உயர்த்திக்கொண்டனர். இவர்கள் பவுல்செய்ததைப்போல் அல்லாமல், இருதயத்தில் நேர்மையின்றி, மனப்பூர்வமாக, சத்தியத்தை முழுமையாகவும் தெளிவாகவும் காணத்தவறினர். பவுலுடன் அவர்கள் பல்வேறு பட்டணங்களுக்குச்சென்று அவரது வைராக்கியம் மற்றும் உழைப்பின் விளைவாக அடைந்தவெற்றியைக் கண்டு அவர்மேல் பொறாமை கொண்டனர். அவர்கள் அவரது போதனைகளையும் அவரது குணாதிசயத்தையும் தவறாகப் புரிந்துகொண்டு விசுவாசவீட்டாரோடு அவரை தாழ்வாக மதிப்பிட முற்பட்டனர். இவ்வாறாக, தந்திரமாக ஏமாற்றும் பல்வேறு கொள்கைகளுக்கு வழிகளைத் திறந்து, போதகர்களாக அவர்களை மேன்மைப்படுத்தினதால், அவைகளை உயர்தரமான சத்தியங்கள்(advanced truths) என்று கூறிக்கொண்டனர். ஆனால், உண்மையில் அக்கொள்கைகள் உண்மை சத்தியத்திலிருந்து அநேகரது மனதை சீர்கேடடையச் செய்தன.

கள்ள சகோதரர்களால் தாம் தவறாக சித்தரிக்கப்பட்டதைக்குறித்த தொல்லையை தம் நிருபங்களில் ஒரேயொருமுறை அப்போஸ்தலர் பவுல் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த கள்ள அப்போஸ்தலர்களது பெயர்களை அவர்கள் இவ்வாறு அறியப்பட்டும் உணரப்பட்டும் இருந்ததை குறிப்பிடுகிறார்(காண்க 1தீமோ1:19,20; 2தீமோ4:10, 14–17; 2கொரி11:2–23). அவர்கள் பெருமை, பொறாமை மற்றும் பெயர், புகழ்அடையவேண்டுமென்ற குறிக்கோள் போன்ற அசுத்தமான நோக்கங்களை உடையவர்களாயிருந்தனர். அவை சத்தியத்துக்கும் சபைக்கும் பேரழிவை ஏற்படுத்தின, அவர்களது மனசாட்சியோ உறுத்தவில்லை. குறிப்பாக ஆளுபவர்களாக தங்களை உயர்த்தமுயற்சிப்போரை, அவர்கள் வேறொரு சுவிசேஷத்தை உருவாக்கியிருப்பதாகவும், மனிதனுக்கு மீட்கும்பொருளின் விலைகொடுத்த கிறிஸ்துவின் மரணமாகிய ஒரே மெய் அஸ்திபாரத்தைக் காட்டிலும், வேறொரு அஸ்திபாரம் இட்டு, அதன்மேல் கட்டுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

பவுல் சத்தியத்தினிமித்தம் வைராக்கியமுள்ளவராய் இருந்தார். அப்படியில்லாவிடில், கள்ள அப்போஸ்தலர்கள் மிருதுவான வார்த்தைகளைப்பேசி, அவரது குணாதிசயங்களையும் தூண்டுகோலாகவைத்து, மனிதரை உண்மை சுவிசேஷத்திலிருந்து தவறாக வழிநடத்தியிருப்பார்கள். பவுல் அந்த போதகர்களைக் குறித்து அவர்களை எச்சரிக்கும்போது, தன்னை அவர்களது இருதயத்தில் மிக உயர்வாகக் கருதாதிருக்கும்படியும், மாறாக அவர்களது பாதுகாப்பாளனாக வைத்துக்கொள்ளவும், கள்ள போதகர்களது போதனைகளால் காயப்படாதபடிக்கும் எச்சரிக்கிறார். நேர்மையும் உண்மையுமான மனிதரும், போதகருமாகிய பவுலைத் தள்ளிவிட்டு, அவரிடத்தில் நம்பிக்கையை இழப்பதன்மூலம் சத்தியமாக இருந்த அவரது போதனைகளை அவர்கள் ஒதுக்கிவிட்டனர். ஆகவே, அவர் தம்மை தற்காத்துக்கொள்வதற்காக அல்ல,

சுயபுகழ்ச்சிக்காகவும் அல்ல, சத்தியத்துக்கு ஆதரவாகவே தம்மைக்குறித்து குறிப்பிடுகிறார். ஒரு உண்மை போதகராக உண்மை செய்தியை அவர்களுக்கு கொடுத்து, தகுதியோடு நடந்துகொண்டு, தம் குணாதிசயத்தையும், தன் ஊழியத்தில் வளர்ச்சிபெற பிரயாசைப்பட்டதை அவர்கள் காணவேண்டும் என்றும் முயற்சி செய்கிறார்.

மேலும் மனிதர்கள், அதே இயேசுவை அதே ஆவியை அதே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாக உரிமை பாராட்டுவர், ஆனாலும் அவர்கள் தவறான போதகர்களாயும், வஞ்சிக்கும் வேலையாட்களாகவும், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாக வேஷந்தரித்துக்கொள்வார்கள் என்றும் அவர் பயப்படாமல் சுட்டிக்காட்டுகிறார். மேலும் அவர் கூறுகிறார் ; மனிதர்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் மாபெரும் ஊழியர்களாக தற்புகழ்ச்சிக்கென தங்களை உயர்த்திக்கொள்வார்கள், இதைக்குறித்து ஆச்சரியப்படவேண்டாம் என்றார். ''அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனது வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே''

பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில், கள்ளச் சகோதரர்கள் தங்களை போலியாக வெளிப்படுத்தி சகோதரர்க்கெதிராக செயல்படுவதை பற்றி வெளியரங்கமாக எழுதியிருக்கிறார்(கலாத்1:6; 3:1). தாம் கொடுத்திருந்த சுவிசேஷ செய்தியின்மேல் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த, தம்முடைய செயல்பாடுகளை அவர்களுக்கு மீண்டும் நினைப்பூட்டுவது அவசியமாயிற்று. அவ்வாறு செய்வதற்கு, கள்ளச் சகோதரர்களை மீண்டும் சுட்டிக்காண்பிப்பது அவசியமாயிற்று(கலாத்2:4). சத்தியத்துக்கு எதிராக இருந்தபோதிலும் அவர்கள் ஒரே சரீரத்தின் அங்கங்கள் என்று உரிமை பாராட்டிக் கொள்வதன்மூலம், ஏற்கனவே தப்பித்திருந்த தேவபிள்ளைகள்மேல் தப்பறையின் அடிமைத்தனத்தை மீண்டும் ஏற்படுத்த முயற்சிப்பதை தடுக்க பவுல் முயற்சித்தார்.

**கோதுமையைப் புடைக்கிறதுபோல :–**

''கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவுபெற்றுக்கொண்டான்''– லூக்கா22:31. இங்கு ஏழாம் சபையின் தூதன் பாஸ்டர் ரஸ்ஸல் தம் அனுபவத்தைக் கூறுகிறார்; சத்தியத்தால் நாங்கள் மாபெரும் ஆசீர்வாதத்தை அடைந்திருந்தோம். ஆனால் எங்களது அன்பு மற்றும் நேர்மை இவற்றில் விசேஷமாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் கிபி1878இல் கர்த்தரது சிலுவை மரணம் நிகழும்நேரத்தில், மேற்கண்ட வசனத்தை பேதுருவுக்கு கூறினதுபோல், புடைத்தல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இது கூடியவிரைவிலோ அல்லது வருங்காலத்திலோ, தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெற்றவர்கள் அனைவரையும் பரீட்சிக்கும். உங்கள் நடுவில் பற்றி எரிகிற அக்கினி உங்களை சோதிக்கும்போது ஆச்சரியப்படவேண்டாம். அப்பொழுது சில விநோதமான சம்பவங்கள் உங்களுக்கு நேரிடும். இந்த அக்கினி, அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று பரிசோதிக்கும். ஒரே அஸ்திபாரமாகிய மீட்கும்பொருளின்மேல் ஒருவன் தேவனது விலையேறப்பெற்ற சத்தியத்தைக்கொண்டு தன் விசுவாசத்தை மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளால் கட்டினால் அதற்கேற்ற கூலியைப் பெறுவான். அந்த கற்பாறையின்மேல் கட்டுபவன் பாதுகாப்பாயிருப்பான். அதேசமயம், மற்றவர்கள், முறையற்ற விசுவாசத்தைக்கொண்டு கட்டினவைகளை அக்கினி சோதிக்கும்போது இந்த நாளின் பரீட்சை அவர்களைக் கவிழ்த்து, அவர்களது விசுவாசம் முற்றிலும் எரிந்து சாம்பலாகும் – லூக் 6:47–49; 1கொரிந் 3:11–15.

இந்த பரீட்சையின் நோக்கமும், புடைத்தலும் எதற்காகவெனில், எவரது இருதய விருப்பங்கள் சுயநலமற்றதாய் உள்ளது என்றும், யாரெல்லாம் முழுமையாக தங்களுக்கென எதையும் வைத்துக்கொள்ளாமல் கர்த்தருக்கென்று அர்ப்பணித்திருக்கிறார்கள் என்றும் நிரூபிப்பதற்காகவே. யாரெல்லாம் கர்த்தரது சித்தம் செய்வதில் மிகவும் வாஞ்சையாய் உள்ளார்களோ, யாரெல்லாம் அவரது ஞானத்தின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அவருடைய வழியையும் அவரது வார்த்தையையும் யார் மகா மேன்மையாய் எண்ணுகிறார்களோ, அவர்களை பிரித்தெடுக்கவே. இவர்கள், மற்றவர்களுடைய தந்திரமான வாக்குவாதங்களுக்கும் அல்லது மற்ற மனுஷருடைய சுய தீர்மானங்களுக்கும் திட்டங்களுக்கும் செவிசாய்த்து, கர்த்தருடைய வார்த்தைகளைவிட்டு விலகி நடக்க மறுக்கிறார்களா என்று பரிசோதிக்கவே, இந்த சோதனையும் புடைத்தலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. கோதுமை மணியைப் புடைக்கும் இந்தக் காலத்தில் இவர்களது இருபக்கங்களிலும் ஆயிரம்பேர் தவறின் பிடிக்குள் விழுவதன்மூலம் இவர்களது விசுவாசம் பரீட்சிக்கப்பட்டபோதிலும், கர்த்தரது திட்டங்களைப்பற்றிய அறிவில் பலப்பட்டு, கர்த்தருக்குள் தங்கள் மகிழ்ச்சியை பெருக்கிக்கொள்கிறார்கள்.

சத்தியத்தின் சர்வாயுதவர்க்கம் சிலகாலம்முன்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அணிந்திருக்கிறீர்களா ? அதை உங்கள் கேடகமாகவும், பாதுகாப்புக் கவசமாகவும் ஏற்படுத்தியிருக்கிறீர்களா ? பொல்லாங்கன் எய்யும்அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போட்டிருக்கிறீர்களா ?

சாத்தான் அடிக்கடி உபயோகிக்கும் அவனது ஊழியர்களால் வஞ்சிக்கப்படாதிருங்கள். அதன்மூலமாக சத்தியத்தை தவறாக விளக்கி, வஞ்சிப்பதில் தந்திரமாய் செயல்படுவான். இதில், பலவீனமான சகோதரனைப் பயன்படுத்தி, முழு உண்மையையும் பற்றிய விழிப்போடில்லாதிருக்கும்போது, கள்ள போதனையின்மூலம் காயப்படுத்தி, அநேகரை

இடறிவிழவும், வஞ்சிக்கவும் செய்வான். ஒவ்வொரு தேவபிள்ளையும் ஆவலாய் செவிகொடுக்கும்போது, இடறுதல் ஏற்படாதபடி தடுக்கலாம்.

தீர்க்கதரிசி இதை ஒரு கொள்ளைநோய் என்று பொருத்தமாக உரைக்கிறார்(சங்91:6). கொள்ளைநோய் பரவக்கூடியது. ஏனெனில் தீங்குவிளைவிக்கும் ஜனங்களது சரீரநிலைமையில் எளிதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. சரீரஅமைப்பு நல்ல ஆரோக்கியத்தோடு இருப்பவர்கள் எந்த நோயின் அபாயத்திற்கும் விலகியிருக்கிறார்கள் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அவ்வாறே ஆவிக்குரிய நோயும். கிறிஸ்துவின் போதனையை தெளிவாக தங்கள் சிந்தையில் வைத்திராதோரிடத்தில் இது செழிப்பாக விருத்தியடைந்து, அந்த இரகசியத்தை எல்லோருக்கும் அம்பலமாக்குவதுடன், மற்றொரு தீங்கையும் ஏற்படுத்தும். இருதயத்தினின்றே ஜீவஊற்று புறப்படும். எல்லோருக்கும் மிக அத்தியாவசியமானது சரியான இருதயத்தின் நிலைமையே. உங்களது இருதயம் எப்படியுள்ளது ? பெருமை, தன்னை மிகைப்படுத்துதல், தனித்து இயங்குதல் மற்றும் சுயஉணர்வுள்ளதும், சுயசித்தம் கொண்டதுமாக இருக்கிறதா ? அப்படியானால், கவனமாயிருங்கள். நீங்கள் இந்த தொற்றுநோய்க்கு உட்பட்டிருக்கிறீர்கள். எந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல.

சுய உரிமையை விட்டுவிலகும் இருதயம் –
அர்ப்பணிக்கப்பட்டது, சாந்தமுள்ளது
அது மீட்பரது சிம்மாசனத்துக்குரியது
அங்கே கிறிஸ்து மட்டுமே கேட்பார், பேசுவதை
அங்கே இயேசு மட்டுமே ஆள்கிறார்

இப்படிப்பட்ட இருதயமிருந்தால் நீங்கள் பாதுகாப்புடன் இருக்கிறீர்கள். ஆதாமின்மூலமாக சுதந்தரித்துக்கொண்ட சாபத்திலிருந்து, சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ள ஆவியால் உங்களையே மீட்டுக்கொள்ள முடியும் என்று ஒருக்காலும் எண்ணாதீர்கள். மாறாக, சிலுவையினருகே ஓடுங்கள், அங்கே கடந்தகால மற்றும் தற்காலத்து பாவம் மற்றும் அசுத்தங்களை கழுவ, தேவன்தாமே நீர்ச்சுனையை திறந்து வைத்திருக்கிறார்.

**உங்களுக்கு இது காயத்தை ஏற்படுத்துகிறதா ?**

இந்த எச்சரிப்பு யாரையும் திட்டமிட்டு காயப்படுத்தும்படி உண்டாக்கப்படாதபோதிலும், சிலருக்கு காயத்தை ஏற்படுத்தும் என்று அனுமானிக்கிறோம். தீமையின் ஏமாற்றுவாதத்துக்கு எதிராக, சாந்தகுணமுள்ளோருக்கு ஆதரவாக எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள் இதோ;

“யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான் ?(இராஜ்யத்தில் வைக்கப்பட்டுள்ள பரிசு) அல்லது யார் அவரது பரிசுத்தஸ்தலத்தில் நிலைத்திருப்பான் ?

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து(ஜாக்கிரதையாய் பரிசுத்தத்தின் கொள்கைகளில் தன் ஜீவியத்தை அமைத்துக்கொண்டவன்) தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும்(பூமிக்குரிய குறிக்கோள்களை அல்லது பெருமையை வளர்த்துக்கொள்ளாமல், தற்கால வாழ்க்கையில் சுயத்தை பலிசெலுத்தி, தன்னை பின்தொடர்கிற மகிமைக்காக பொறுமையோடே காத்திருந்து) கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே(தேவனோடு செய்த தன் உடன்படிக்கையை புறக்கணித்து அல்லது அலட்சியப்படுத்துதல்) அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும்(இராஜ்யத்தின் மகிமை மற்றும் கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரர்), தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும்பெறுவான்(பரிபூரணமடைதல் – தற்கால அக்கிரமங்களிலிருந்து முழு விடுதலை ...போன்றவை)– சங் 24:3–5.

கிறிஸ்துவிடமிருந்த எளிமையினால் உங்கள் சிந்தை கரைப்படாதபடிக்கு, நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள்‘‘ சாந்தகுணமுடையோர் அனைவரும் இவ்வேளைக்கே உரிய சோதனையில் முழு விழிப்பாய் இருப்பர். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ‘‘பாதம்’’ நடக்கும் வழியில் அநேகர் இடறுதலின் தடுக்கல்லை போடுவார்கள். ஆகவே, சிலுவை போர்வீரர் ஒவ்வொருவரும் விழிப்பாயிருப்போம், நாம் நிலைநிற்பதோடு கூட, மற்றவர்களுக்கும் உதவிசெய்து, பாதஅங்கங்களைத் தாங்குவோமாக – சங் 91:11,12.

R 5912

# அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து..

# THEY GO FROM STRENGTH TO STRENGTH

**“ஆவியினால் நிறைந்திருங்கள்” – எபேசியர் 5:18**

அப்.பவுல், பரிசுத்தவான்களாகிய கிறிஸ்து இயேசுவின் சபைக்கு எழுதிய இந்த வார்த்தைகளைக் குறித்து சுருக்கமாக ஆலோசனை செய்வோமாக. வெறுமனே தங்களை வெற்று போதகர்களாகவும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாக இருப்பவர்களோடும் இவர்களைப் பொருத்திப் பார்க்கக்கூடாது. மாறாக, அவர்கள் தேவனுடைய பரம அழைப்பின் நிபந்தனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டவர்களாகவும், தங்களை தேவனுடைய புத்திரர் என்ற ஸ்தானத்திற்கு கொண்டுசெல்லக்கூடிய முழு அர்ப்பணிப்பை செய்தவர்கள். இவர்கள் மட்டுமே தேவனுடைய ஆவியை உடையவர்கள். இவர்கள் மாத்திரமே பரத்திலிருந்து வருகிற ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். ஆனால், அப்.பவுல் இங்கு “நாம் இந்த குறுகிய பாதையில் முதன்முதலாக நுழைந்தபோது பெற்றுக்கொண்ட பரிசுத்தஆவியில் ஜெநிப்பித்தல் நமக்கு போதுமானதல்ல என்று நினைப்பூட்டுகிறார். மாறாக நம்முடைய பரலோகத்தை நோக்கிய பிரயாண மார்க்கத்தில் நாம் அதிகதிகமாக மேல்நோக்கி செல்லச்செல்ல தேவனுடைய பரிசுத்தஆவி நம்மில் அபரிதமாகப் பெருகுவதை நாம் காணவேண்டும். இந்தப்புதிய சிந்தனையில் ஒரு சிறு தீப்பொறி நாளுக்குநாள் நம்முள் பலத்தோடும் பிரகாசத்தோடும் வளரவேண்டும்.

இந்த வளர்ச்சி நடைபெறவில்லையென்றால் இன்னமும் நாம் வெறுமனே நின்றுகொண்டிருந்தோமாகில், மிகவிரைவில் நம்முடைய இடத்தை நாம் இழக்கத்தொடங்குவோம்; மாறாக நாம் முன்னேற்றம் அடைந்திருந்தோமாகில் சுபாவமனுஷன் படிப்படியாக அழிவுக்குள்ளாகி புதியமனுஷன் விருத்தியடைவான். கிறிஸ்தவ ஜீவியத்தின் முன்னேற்றம் சீராயும் தொடர்ச்சியாயும் இருக்கவேண்டும். நாம் மேன்மேலும் ஆவியினால் நிரப்பப்படவேண்டும். சிலநேரங்களில் தேவனுடைய பிள்ளைகள், “கர்த்தருடைய ஆவியில் நான் நிரம்பியிருக்கவேண்டும் என்று விரும்புகிறேன், ஆனால் என் மிகச்சிறிய உள்வாங்கும் திறனைப்போன்று, நிரப்பப்படுதலும் குறைவாகவே தோன்றுகிறது. அவருடைய ஆவியை அதிகஅளவு பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன், ஆனால் எவ்வளவுதூரத்திற்கு நான் விரும்புகிறேனோ அந்த அளவிற்கு அதை அடைய இயலவில்லை. நான் அடைந்திருக்கிற வளர்ச்சியைக்கண்டு எனக்கே மனநிறைவில்லை என்று சொல்வதுண்டு. ஆனால் கிறிஸ்துவைப்போல் மாறுவதற்கு ஊக்கத்துடனும் ஜெபத்துடனும் போராடுவோமாகில் இப்படி நாம் சோர்ந்துபோகமாட்டோம். தற்போதைய நிலையில் நம் ஆற்றலுக்கேற்ப நாம் தொடர்ந்து நிரம்பிக்கொண்டிருந்தால், இந்த அதிகப்படியான நிரப்புதல் நம் உள்வாங்கும் ஆற்றலை அதிகரிக்கும் என்பதை நினைவில்கொள்ளவேண்டும். அதன்பிறகு நம் பூமிக்குரிய பாத்திரம் பரிசுத்தஆவியை அதிகஅளவில் தனக்குள் தக்கவைத்துக்கொள்ளும். அது மறுபடியும் நம் உள்வாங்கும் ஆற்றலை இன்னும் அதிகரிக்கச்செய்யும். இவ்விதமாய் விரிவாகுதலும் நிரம்புதலும் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். இவ்வாறு தொடர்ந்து ஆவியினால் நிரப்பப்படுதல் நமக்கு சாத்தியமாகும்.

தேவஆவியினால் நிரப்பப்பட நமக்கு சாத்தியமில்லாமல் இருக்குமாகில், உள்ளுணர்வினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்தியிருக்க மாட்டார். உண்மையாக அர்ப்பணித்த தேவனுடைய பிள்ளைகளுக்கு இது சாத்தியம். சாத்தியம் மட்டுமல்ல, நம்மேல் விழுந்த கடமையாக உள்ளது. ஆனால் சமுத்திரத்தின் அலையில் பின்வாங்குதலும் நீரோட்டமும் இருக்கும். அவ்வாறே அவருடைய பிரசன்னத்தைக்குறித்த உணர்வு நம்மிடம் இருக்கும், அவருடைய தயவும் நம்மீது இருக்கும். நாம் அவருடைய பிரசன்னத்தை அதிகப்படியானஅளவில் எப்பொழுதும் உணர்வதில்லை. ஆனாலும், கர்த்தருடைய பரிசுத்தவான்கள் விசுவாசித்து நடப்பதற்கு கற்கவேண்டும். சரீரப்பிரகாரமான மோசமான உடல்நிலை இருந்தாலும், அல்லது பாதகமான சுற்றுப்புற சூழ்நிலையாக இருந்தாலும், மனஅழுத்தத்தை சில நேரங்களில் ஏற்படுத்தினாலும், அதுபோன்ற சூழ்நிலைகளில் அவரிலும் அவருடைய நிலையான அன்பு மற்றும் அவருடைய பிரசன்னத்திலும் நம்பிக்கை வைப்பதற்கும் கற்றுக்கொள்ளவேண்டும். ஆவியில் துயரத்தில் அழுத்துகின்ற நிலைமை பெருகியோ, அல்லது குறைந்தோ காணப்படும் சமயங்களிலும் நாம் நம் கர்த்தருக்குள் களிகூறவேண்டும்.

**அனுதின சுயபரிசோதனை அவசியம் :–**

அப்.பேதுரு சபையின் மகிமையான இரட்சிப்பை பற்றிப்பேசுகையில் கூறுகிறார் “இதிலே நீங்கள் சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து” **(1 பேதுரு. 1 : 6 – 8)** மேலும் இவ்வாறு நமக்கு வலிவேதனை மற்றம் கண்ணீரை விளைவிக்கும்படியான மிகுந்த சோதனையின் மத்தியிலும் களிகூறமுடியும். மற்றநேரங்களைக்காட்டிலும், குறிப்பிட்ட ஒரு சிலநேரங்களில் நாம் அதிகதிகமாக ஆவியில் நிரப்பப்பட்டுள்ளதாக மனதில் தோன்றக்கூடும். ஆனால், தேவனுக்குரிய அன்றாடவேலைகளில் நாம் ஊக்கமாக போராடினால் அந்தநிலை உண்மையாய் இருக்காது. அது ஒருவேளை வெறும் வெளிப்புற உணர்வுகளின் வேறுபாட்டால் ஏற்பட்டிருக்கக்கூடும். உண்மையான

தேவனுடைய பிள்ளை ஸ்திரமாக முன்னேற்றம் அடையவேண்டும்.

உலகத்தின்ஆவி அல்லது மனவிருப்பம் புதுசிருஷ்டியின் ஆளுமையை தாக்கக்கூடிய வழிகளையே தேடும். ஆனால், தேவனுடைய பரிசுத்தஆவியோடு முழுமையாக இணக்கம்இல்லாத எல்லாவற்றிலும் இருந்து புதுசிருஷ்டி தன்னுடைய சிந்தனையையும் சரீரத்தையும் விலக்கிக் காத்துக்கொள்ள எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தன்னைத்தானே நியாயந்தீர்த்துக்கொள்ள நாடவேண்டும். நாம் மற்றவரை நியாயந்தீர்க்கக்கூடாது. மாறாக நம்மை நாமே நியாயந்தீர்த்துக் கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஆவி நம்முடைய வார்த்தைகளிலும் சிந்தைகளிலும் நடத்தைகளிலும் வெளிப்படும்படியாக காணவேண்டும். நாம் நல்ல வழியில் நடந்துசெல்பவர்களாயும், கிருபையிலும் அறிவிலும் மேலும் வளர்பவர்களாயுமிருந்து, இவைகளை வெற்றிகரமாக செய்யும் ஆற்றலை அடையவும், தொடர்ச்சியாக செய்யவும்வேண்டும். நாம் விழித்திருந்து ஜெபித்து, போராடுவோமானால், தினந்தோறும் இதனை செய்யமுடியும்.

நம்மில் முழுமையாக வாசம்பண்ணும் கர்த்தருடையஆவி, கர்த்தருடைய வார்த்தைகளில் கொடுக்கப்பட்டுள்ள நீதியின் கோட்பாடுகளால், நம் முழுவாழ்க்கையும் கவர்ந்துஆட்கொள்ளக் காரணமாகிறது. பரலோகக் காரியங்களிலும் பரலோக நம்பிக்கைகளிலும் பரலோகத்திற்குரிய எதிர்பார்ப்புகளிலும் நேசம் வைக்கவும், மற்ற அனைத்தையும் மதிப்பற்றதாகவும் ஆக்குகின்றது. நாம் இந்த குறுகிய பாதையில் விசுவாசத் துடன் தொடருவோமானால் “கர்த்தரை அறிந்துகொள்வதில் தொடர்ந்து பின்பற்றுவோமானால், இந்தஆவி ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவங்களாக மேன்மேலும் அதிகரிக்கும்.


ஆனால் அதற்குமாறாக நாம் மாம்சத்துக்கு தேவையானவற்றை அளிப்பதிலும் உலகப்பிரகாரமான திட்டங்களை உருவாக்குவதிலும் நாம் ஈடுபட்டிருப்பதை கண்டால், பரத்துக்குரியவைகளுக்கு பதிலாக பூமிக்குரிய பொக்கிஷங்களின்மேல் நம் மனதை சாய்த்திருப்பதை கண்டறிந்தோமானால், எச்சரிக்கைகொண்டு, நாம் குறைவுபட்டுள்ளோமா, அளிக்கப்பட்ட கிருபையின் நோக்கத்தை அலட்சியப்படுத்துகிறோமா? என்று நம்மைநாமே கேட்கிறவர்களாகஇருந்து, தேவனிடத்தில் தனித்துஜெபம்செய்து, அவருடைய வார்த்தைகளை



படித்தறிந்து, நாம் அழைக்கப்பட்ட அழைப்பின் மகிமையான காரியங்களைக்குறித்து தியானம்செய்து, ஆவியின் கனிகளில் நம் வளர்ச்சியை நாமே விழிப்பாய் கவனித்துப் பார்க்கவேண்டும். நாம் சண்டைசச்சரவின் ஆவியினால் அதிகமாக கட்டுப்படுத்தப்படுவதை கண்டறிந்தோமானால் நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டியவை யாதெனில் ; “நாம் மற்றவர்களுடன் நீதியான மற்றும் பாரபட்சமின்றி நேர்மையாக செயலாற்றவும் அவர்களுக்கு உரிய உரிமைகளை தரவும், அவர்கள் அழைத்தாலொழிய அவர்கள் விஷயங்களில் தலையிடாமல் இருக்கவும் நாடுகிறோமா? நாம் சகித்துக்கொள்கிறதும், மன்னிக்கிறதும் மற்றும் தயவுள்ளதுமான அன்பை விளையச்செய்கிறோமா? என்று(2தீமோ 2:24, எபே4:31,32) நம்மை கவனத்துடன். சுயபரிசோதனை செய்தபிறகு, நாம் அன்பின் ஆவியோடு முழுஇசைவாய் பொருந்தியிருப்பதைக் கண்டறிந்தோமானால், மற்றும் இந்தஆவியின் வெற்றிகிரீடத்தின் கனியால் படிப்படியாக வளர்ச்சியடைவதை கண்டோமானால், நாம் களிகூறக்கடவோம். இல்லாவிடில் இந்தக் காரியத்துக்காக மிகவும் வருத்தப்படநேரிடும். நாம் அன்பின்ஆவியினால் கட்டுப்படுத்தப்பட்டோமானால் நாம் அந்தஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதை அறிந்துகொள்ளமுடியும். இந்த அன்பின்ஆவி நம் இருதயங்களையும் சிந்தைகளையும் விரிவுபடுத்தி நம்மை நாளுக்குநாள் பரந்த மனப்பாங்கிலும் பெருந்தன்மையிலும் உருவாக்கும்.

ஆயினும் விழித்திருப்பதிலும் ஜெபிப்பதிலும் நிலைத்திருப்பது நமக்கு அவசியமாயுள்ளது. இல்லாவிடில் நம் சுய தவறுகளினாலோ அல்லது மற்றவர்களுடைய தப்பிதங்களினாலோ நாம் இடறிவிழும்படியான தள்ளாடும்படியான, நிலையான ஆபத்து நமக்கு நேரிடக்கூடும். நாம் தொடர்ந்து அவருடைய கிருபாசனத்தண்டைக்கு செல்வதினாலேயன்றி பக்கவழியில் செல்வது ஒருபோதும் நமக்கு பாதுகாப்பைத் தராது. நம் தாகம் தீர்க்கும் அந்த மாபெரும் நீரூற்றுடன் மிகவும் அதிகமான நெருக்கம் கொண்டிருந்தாலன்றி நாம் நிரப்பப்படோம். நாம் அந்த பரலோக நீரூற்றை நோக்கி நம்முடைய பூலோகப் பாத்திரத்தை அனுதினமும் எடுத்துச்சென்றால், ஒழுகக்கூடிய ஓட்டைப் பாத்திரங்கள் நிரப்பப்படும். நாம் காணவிரும்பிய அந்த வேகமான வளர்ச்சி நம்மில் கண்டறியப்படவில்லையானால், நாம் சோர்வடையக்கூடாது. பயங்கரமான புயல் மற்றும் காற்றை எதிர்கொண்டு தாங்குகிற பலமான உறுதியான மரங்கள் ஒரேநாளில் வளர்ந்து விடுவதில்லை. அவைகளின் வளர்ச்சிம் உறுதியாகவும் நிகழும் செயல். நாம் தோல்வியுறும்

ஒவ்வொரு சமயத்திலும் நம்முடைய பிரயாசங்களை **புதுப்பிப்பதன்மூலமாக** நம்முடைய **உண்மையை நம்** கர்த்தருக்கு **காண்பிக்கவேண்டும்.**




நாம் மாம்சத்தில் பரிபூரணராக இருக்கிறோமா என்று கண்டறிய நம்மை நோக்கிப்பார்ப்பதில்லை. ஏனென்றால் நாம் பரிபூரணர் அல்ல. நம்மால் ஒருபோதும் அந்நிலையை அடையவும் முடியாது என்று அவருக்குத் தெரியும். மாறாக, நாள்தோறும், ஒவ்வொரு மணிநேரமும் நம்முடைய சரீரத்தை கீழ்ப்படுத்தி மகிழ்ச்சியோடு சிலுவையை எடுப்பதை நாடுகிற, ஊக்கமும் உண்மையுமுள்ள ஆவியை கொண்டுள்ளோமா ? இல்லையா ? என்றே அவர் நம்மிடம் பார்க்கிறார்.


**ஆவியில் நிரப்பப்படுதலின் ஆசீர்வாதமான முடிவுகள்**

தன் உபத்திரவங்களையும் துன்பங்களையும் குடிபோதையில் மூழ்கியோ உல்லாசங்களில்உழன்றோ, ஊறுவிளைவிக்கும் இன்பங்களில் ஈடுபட்டோ, அற்பமானவைகளில் மூழ்கச்செய்ய நாடுகிற உலகத்தார் போன்று ஒரு கிறிஸ்தவன் இருக்கமாட்டான். மாறாக, அவனுடைய ஒவ்வொரு உபத்திரவத்திலும் தனக்கு நிஜமான ஆறுதலும் தேறுதலும் பலமும் அளிக்கின்ற ஒரே உண்மை ஊற்றை நோக்கி பறந்துசெல்வான். அவன் எவ்வித உபத்திரவங்களின் மத்தியில் இருந்தாலும் அவனுக்கு அமைதியையும் சமாதானத்தையும் தருவதோடு, எல்லாக் கவலைகளையும் அடியோடு அகற்றிவிடும். கடலின் மத்தியில் தன் கூட்டைக்கட்டி அதில் இனவிருத்திசெய்யக்கூடிய ஒருவித பறவையான ஹேல்சியன் கதையைப்போன்று, தேவனுடைய உண்மையான பிள்ளையின் வாழ்க்கை பேரலை மற்றும் புயலின் மத்தியில் இருந்தாலும், இளைப்பாறுதலுடன் இருந்து, ஒரு புதுசிருஷ்டியாக அபிவிருத்தியடையவும், தேவனுடைய சித்தத்தை பிரியத்தோடு நிறைவேற்றவும் முடியும்.

கர்த்தருக்குள்ளான இந்த உறுதியான விசுவாசமும் ஆத்துமாவின் இந்த நிலையான இளைப்பாறுதலும் தேவஊழியத்தில் வைராக்கியமுமே வளர்ச்சியின் சாராம்சம். “அவர்கள் பலத்தின்மேல் பலமடைந்து” என்று சங்கீதக்காரன் உறுதியாகக்கூறுவது சீயோனில் வாசம்பண்ணுகிறவர்களைக் குறித்தேயாகும்(சங் 84:7). மாற்கு4:28இல், “நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும்” என்று கூறுகிறார். வாழ்க்கையின் கஷ்டங்கள் இருந்தபோதிலும் இவை அவர்களுடைய இருதயங்களை கர்த்தரைநோக்கி தொடர்ந்து இனிய கீதம்பாடச்செய்யும். வெளியுலகின் சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் அதில் அவர்கள் களிகூற எந்த விஷயமுமில்லை. அவருடைய வாக்குத்தத்தத்திற்கிணங்க, அனைத்தும் அவர்களது நன்மைக்கென்று ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்பதை அறிந்தவர்களாய், கண்ணீர்களின் மத்தியிலும் புன்சிரிப்பை வெளிப்படுத்தஅவர்களால் முடியும். இப்படிப்பட்ட வளர்ச்சியை அடைவதே ஆவியினால் நிரப்பப்படுதலாகும். மேலும், ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவின் சீஷனும் இந்த நிலையை கண்டிப்பாக அடைந்தே தீரவேண்டும்.

கிறிஸ்தவ எழுத்தாளர் சரியாக சொல்வதுண்டு, “எங்கெல்லாம் அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்தில் கர்த்தரை முழு விசுவாசத்தோடு பின்பற்றுகிறார்களோ, அங்கெல்லாம் விரைவாகவோ, காலந்தாழ்த்தியோ சில காரியங்கள் தவிர்க்கமுடியாதபடி தொடர்ந்து வருவதுண்டு. சாந்தம் மற்றும் அமைதலுள்ள ஆவி, அனுதின வாழ்வின் குணாதிசயங்களாக பிரத்தியேகமான நேரங்களில் உண்டாகும். தேவனுடைய சித்தத்தை பணிவுடன் ஏற்றுக்கொள்ளுதலானது, ஒவ்வொரு நாளிலும் எதிர்கொள்ளும் சம்பவங்களில் வெளியரங்கமாகும். அவருடைய சித்தத்துக்கு பிரியமானவற்றை செய்யவோ அல்லது துன்பப்படவோ தேவனுடைய கரங்களில் இருந்து எளிதில் வளைந்துகொடுத்து அவர் சித்தம் செய்யும்.

கோபமூட்டும் விஷயத்தில் இனிமை; கலக்கம் மற்றும் குழப்பத்தின் மத்தியில் அமைதல், மற்றவர்களின் விருப்பத்துக்கு விட்டுக்கொடுத்தல்(எங்கெல்லாம் முரண்பாடான கொள்கை சம்பந்தப்படவில்லையோ அங்கு) மற்றும் அற்பமானதும், அவமானம் ஏற்படுகிறது மானவற்றில் உணர்வற்ற வருத்தம் மற்றும் மனவிசாரத்துக்கு விலகியிருத்தல், சஞ்சலப்படுதல் மற்றும் பயத்திலிருந்து




விடுதலை, இவை மற்றும் இவைகளைப்போன்ற வேறு பல கிருபைகள் “கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கும்” அந்த உள்ளான ஜீவியத்தின் இயற்கையான வெளிப்புற வளர்ச்சியில் எப்போதும் காணப்படும்.

"இயேசுவே, என் கர்த்தரே, நீரே என் ஜீவன்
நீர் வடிவமையும் என் வாழ்க்கையை
வேலைகளில் என் ஓய்வு, போராட்டங்களில் பெலன்
உம் அன்பு ஜெநிப்பித்தது உம்மிடத்திலான என் அன்பை
உம் பூரணங்கள் என்னை நிரப்பியது

வீணானது என் முயற்சி, அறியப்பட்டது என் பலவீனம்
களைப்புற்றேன் சுயத்திலிருந்து கிறிஸ்துவாக நான் மாற
அவருடைய முழுமை என்னில் நிரம்புவது போதுமானதே